ஸ்ரீகணேசாயநம:

ஐந்தாம்வேதமாகிய

ஸ்ரீமஹாபாரதம்

வசனகாவியம்.

முதற்புத்தகம்.

ஆதிபர்வம் - சபாபர்வம்,

57/2-1901

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
20 APR. 1901
MADRAS.

இவை

வேறு பல பிரதிகளில் பலவழுஉக்கள் குழுஉக்கொண்டிருத்தலைப்

பரிகரித்துத் தரவேண்டுமென்று பூர்வம்

தஞ்சாவூர்

ஸ்ரீசின்னகண்ணையசெட்டியார்

அவர்கள்கேட்டுக்கொள்ள,

ஸ்ரீகைலாயபரம்பரை

உபசுப்பிரமணியர்மாபினரும்-சிவாத்துவிதசித்தாந்தியுமாகிய

தி. முத்துச்சாமிமுதலியார்

அவர்களால்

அவ்வாறே பரிகரித்தும் - திருத்தியும் - விருத்திசெய்துதரப் பதித்த

பிரதியின்படி,

இ, ஷண்முகப்பசெட்டியார்

அவர்களால்

தமது:

எம்பிரஸ் ஆவ் இண்டியா அச்சுக்கூடத்தில்

இரண்டாமுறை பதிப்பிக்கப்பட்டன.

MADRAS.

1900.

Revised & Enlarged Registered Copy right.

REGISTERED-COPY-RIGHT.

முகவுரைக்குமுன்வைக்கவும் - சித்திபுத்திகணேசர் —

([illegible])

சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
சுபத்திராமணம்.	௨௧௫
அருச்சுனன்சுபத்திரையை அஸ்தினபுரங்கொண்டுபோகுதல்.	௨௧௭
அருச்சுனனை விபிருதுவழிமறித்துப்போர்செய்தல்.	௨௧௮
அருச்சுனனோடு பகைத்தெழுந்த யாதவவீரர்களைஸ்ரீகிருஷ்ணதேவர் சமாதானப்படுத்துதல்.	௨௧௯
அருச்சுனன் சுபத்திராதேவியோடு இந்திரப்பிரஸ்தம் சேர்தல்.	௨௨௧
சுபத்திரைக்குக்கிருஷ்ணன்வரிசைகொண்டுவருதல்.	௨௨௨
அபிமன்யு உற்பவம்.	௨௨௩
காண்டவதகனச்சருக்கம்.	௨௨௪
கிருஷ்ணார்ச்சுனரை அக்கினிதேவன்கண்டு ஆகாரங்கேட்குதல்.	௨௨௪
அக்கினிபகவான் கிருஷ்ணார்ச்சுனர்களுக்குத் தேர்-குதிரை - வில்- அம்பறுத்தூணி - முதலியவைகொடுத்தல்.	௨௨௫
அக்கினிதேவன் காண்டவதகனஞ்செய்யக் கருதியதைப்பற்றிக்கூறிய சுவேதகிராஜன்சரித்திரம்.	௨௨௬
தேவர்கட்கும் அருச்சுனனுக்கும் நடந்த யுத்தம்	௨௨௮
காண்டவ தகனத்திற் றப்பிய சார்ங்ககர் என்னும் பக்ஷிகள்கதை.	௨௩௧
கிருஷ்ணார்ச்சுனர் தேவேந்திரனிடத்தில் வரம்பெற்றுமீளுதல்.	௨௩௯

சபாபர்வம்.

சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
இராஜசூயச்சருக்கம்.	௨
பாண்டவர்களுக்குமயன்சபாமண்டபஞ்சமைத்துத்தால்.	,,
நாரதமுனிவர் தருமராஜன் சபைக்குவருதல்.	௪
இந்திரன்சபைச்சிறப்பு.	௫
இமயன்சபைச்சிறப்பு.	,,
வருணன்சபைச்சிறப்பு.	௬
குபேரன்சபைச்சிறப்பு.	௭
பிரமன்சபைச்சிறப்பு.	௮
அரிச்சந்திரன் இந்திரசபைக்குரியனானகாரணமுரைத்தல்.	௯
இயமசபையிற்கண்டபாண்டுவின்கருத்துரைத்தல்.	௰
தருமன்கண்ணனையழைப்பித்து இராஜசூயயாகத்தைக்குறித்துஆலோசித்தல்.	௰௧
ஜராசந்தன்சரித்திரம்.	௰௩
கிருஷ்ணமூர்த்தி-வீமசேனன்- அருச்சுனன்-இம்மூவரும் ஜராசந்தனிடம்போகுதல்.	௨௨
கிருஷ்ணமூர்த்தி கிரிவிரசங்கண்டு கூறிய தீர்க்கதமன்சரித்திரம்.	௨௩
வீமார்ச்சுனருங் கிருஷ்ணனும் ஜராசந்தனைக்கண்டு அறைகூவல்.	௨௫
ஜராசந்தனுக்கு விரோதமுண்டானதைப்பற்றிக்கூறிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்திசரித்திரம்.	௨௭
ஜராசந்தன்வதை.	௨௯
அருச்சுனன் உத்தரதிக்குவிஜயம்.	௩௩
வீமன் இந்திரதிக்குவிஜயம்.	௩௮
சகாதேவன்தக்ஷணதிக்குவிஜயம்.	௪௩
நகுலன்வாருணதிக்குவிஜயம்.	௫௰
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி இந்திரப்பிரஸ்தத்திற்கெழுந்தருளல்.	௫௧
வேதவியாசர்முன்னிலையில் தருமராஜன் யாகதீக்ஷைபெறுதல்.	௫௩
அக்கிரபூசைகொண்ட கிருஷ்ணமூர்த்தியைச் சிசுபாலன்தூஷித்தல்.	௫௫
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய சற்கிருத்தியமகிமை.	௫௯
ஸ்ரீவராக அவதாரமகிமை.	௬௰
ஸ்ரீநரசிம்மாவதாரமகிமை.	,,
ஸ்ரீவாமன அவதாரமகிமை.	௬௨
ஸ்ரீபரசுராம அவதாரமகிமை.	௬௩
ஸ்ரீஇராமாவதாரமகிமை.	௬௪
ஸ்ரீகிருஷ்ணாவதாரமகிமை.	௬௬
நரகாசுரன்வதை.	௬௯
துவாரகாபுரிச்சிறப்பு.	௭௧
பாணாசுரன்வதை.	௭௨
சிசுபாலன்வீஷ்மரைத்தூஷித்தல்.	௭௪
சிசுபாலன்வீஷ்மரைநிந்தித்துக்கூறிய அன்னப்பட்சி முதலானவைகள் கதை.	௭௬
வீஷ்மர் தருமனுதியருக்குச்சிசுபாலன்வரலாறுரைத்தல்.	௭௮
கண்ணன் சிசுபாலனோடியுத்தத்திற்குச்சன்னத்தராகுதல்.	௭௯

அட்டவணை.

சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
நாரதமுனிவர் உதிஷ்டிரராஜனுக்கு உற்பாதக்குறிலக்ஷணங்களுரைத்தல்.	௮௰
சிசுபாலன்வதை.	௮௧
இயாகசமாப்தம்.	௮௪
தருமராஜனுக்கு வேதவியாசமுனிவர் பின்வருமுற்பாதங்களை எடுத்தோதல்.	௮௫
சூதுபோர்ச்சருக்கம்.	௮௬
துரியோதனன் பாண்டவர் செல்வதைக்கண்டுபொறுது சகுனியோடு முறையிடுதல்.	௮௭
துரியோதனனுஞ்சகுனியுந் திரிதராட்டிரனிடஞ்சென்று ஆலோசித்தல்.	௮௯
திரிதராஷ்டிரன் விதுரனோடு ஆலோசித்து துரியோதனனுக்கு அறிவுறுத்தல்.	௯௨
துரியோதனன் திரிதராட்டிரனுக்கு இராஜசூயம் நடந்த சிறப்புக்கூறல்.	௯௩
திரிதராட்டிரன் துரியோதனன் கருத்தைக்கடிய அவனதைக்கேளாது வாதித்தல்.	௯௬
திரிதராஷ்டிரன் விதுரனைக்கொண்டு பாண்டவரையழைப்பித்தல்.	௯௯
பாண்டவர் அஸ்தினபுரம்வருதல்.	௱௧
தருமராஜனோடு துரியோதனனுஞ்சகுனியும் சூதாடவாலோசித்தல்.	௱௨
தருமராஜனும் சகுனியும் சூதாடல்.	௱௩
திரிதராஷ்டிரனோடு விதுரன் வெறுத்துரைத்தல்.	௱௪
துரியோதனனுக்கும் விதுரனுக்கும் வாது	௱௬
தருமனுக்குஞ் சகுனிக்குநடந்த இரண்டாவதாட்டம்.	௱௮
விதுரன் துரியோதனனைக் கண்டித்தல்.	௱௰
திரௌபதி துரியோதனன்சபைக்கு வருதல்.	௱௰௧
துச்சாதனன் திரௌபதியின் கூந்தலைப்பற்றி இழுத்துவருதல்.	,,
திரௌபதி சபையாரைநோக்கிச்சொல்லுதல்.	௱௰
வீமசேனன் தருமராஜனைவெறுக்க அர்ச்சுனன்தேற்றுதல்	௱௰௪
திரௌபதிக்காகவிகர்ணன்பேசக்கர்ணன்சிதைத்தல்.	௱௰௫
துச்சாதனன் திரௌபதியின் துகிலுரிதல்.	௱௰௬
விதுரராஜன்விரோசனனுக்குஞ்சுதனுவாவுக்குமநடந்தசமவாதங்கூறல்.	௱௰௭
திரௌபதி சபையாரைப்பணிந்து கேட்டசிலவற்றிற்கு வீஷ்மர் விடைதரல்.	௱௰௯
துரியோதனன்தனதுதொடையைக் காட்டித் திரௌபதியையழைத்தல்	,,
திரௌபதிசபதம்.	௱௨௧
வீமசேனன்சபதம்.	,,
அருச்சுனன்சபதம்.	௱௨௨
நகுலசகாதேவர்சபதம்.	,,
தருமராஜன் அருச்சுனன் கோபமடங்கச் சமாதானஞ்சொல்லுதல்.	௱௨௩
திரிதராஷ்டிரன் திரௌபதிக்குவரங்கொடுத்தல்.	,,
அருச்சுனன் வீமசேனன்கோபமடங்கச் சமாதானஞ்சொல்லுதல்.	௱௨௪
திரிதராஸ்டிரன் தருமனைச் சமாதானப்படுத்தி மீட்டுமரசுகொடுத்தனுப்புதல்.	,,
துரியோதனன்திரிதராஷ்டிரனிடஞ்சென்றுமுறையிடல்.	௱௨௫
அருச்சுனன்பராக்கிரமத்தைப்பற்றித் துரியோதனன் திரிதராட்டிரனுக்குக்கூறிய கார்த்தவீரியார்ச்சுனன் சரித்திரம்.	௱௨௬
திரிதராஷ்டிரன் மறுசூதாடத் தருமனைவரவழைத்தல்.	௱௨௮
தருமராஜன்மீட்டும் அத்தினபுரம் வந்து சூதாடுதல்.	௱௨௯
துச்சாதனனுதியர்செருக்கு.	௱௩௰
வீமனுதியர்விக்கிரமம்.	௱௩௧
தருமனுதியர்வனவாசக்கோலத்தோடுவெளிப்புறப்படும்போது பட்டினத்தார்பிரலாபம்.	௱௩௨
அங்காரத்துவேதியர் திரிதராஷ்டிரனுதியரைத்தூஷித்துத் தருமனிடஞ்செல்ல அவர்சமாதானங்கூறியனுப்புதல்.	௱௩௪
திரிதராஷ்டிரனுக்கு விதுரன் பாண்டவராதியர்கருத்துணர்த்த நாரதர் அதுநிச்சயமென்றுசொல்லிமறைதல்.	௱௩௫
துரியோதனன் துரோணரை அடைக்கலம்புகுதல்.	௱௩௬
திரிதராஷ்டிரன் சஞ்சயன் கடிவதைக்கேட்டு பரிதாபித்தல்.	

முதற்புத்தகத்தின் சருக்க அட்டவணை,

முற்றிற்று.

ஸ்ரீ

சென்னைச் சருவகலாசாலைத் தமிழ்த் தலைமைப்புலமை நடாத்திய

கோமளபுரம்,

இராசகோபால பிள்ளையவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா.

பொன்மலி குவட்டுப் புறமலை புல்லிதழ்
நன்மலி யெண்கிரி நறும்பொலந் தாது
அலைகட லுருநில னடர்பூம் பராகம்
வலிதவ லருந்திறன் மணிசெழு செஞ்சூட்
டரா்வர சொருதனி யடல்சா லுளப்
பராவரு கனகப் பராரைப் பொருப்புப்
பொகுட்டினுண் மேய புதுமழ லைச்சேய்ங்
ககப்படு வியன்பொரு ளோதுநன் குறைக்குஞ்
செய்யா முதுமறை தெற்றெனத் தெருளுமா
றையுற றிரிபோ டணுகுறு தொன்ணிலாத்
தெறுவெள் ளொளிநிமிர் செந்தோ லடித்துணை
பெறுபொலஞ் சுடிகை யுறுமெகி னம்புள்
உருத்தனைப் பொறுத்தரு ளுவட்டெழீஇ முன்னர்
விரித்த பரஞ்சுடர் வீழ்நாள் படாதுபார்
நலக்கிளர் ஞானந் தலைப்பெய் துய்வான்
உராய்வரும் புந்திப் பராசர வடிகள்
தருந்தகை சாலுந் தவப்பிறங் கடையாய்ப்
பெருங்கவுட் சிறுவிழிப் பெய்மத வாரணம்
ஒற்றை மருப்பிற் பொற்றமா லடுக்கலின்
பண்டைநாள் பொறிப்பப் பளகிலா ரணமும்
எண்டகு மறனு மிமையவர் குழாமும்
உலகிய லொழுக்கு முளங்களி துவன்றி
அலகறு வின்ப வருநடங் குனிப்பச்
செப்புறு தூது சென்றவ னேற்ற
மெய்ப்பொதிந் துறைதொறு மொண்ணயம் பயந்து.
நாரதந் தோன்றப் பாரதம் பகர்ந்தனன்
ஆங்கது வடமொழி யமைதலை கண்ணு
பொப்பிறை வரலரு முயர்தமிழ்ப் பௌவம்
குப்புறு தெருட்சி கூர்நுதி விபுதருள்
தகைமை சால்பு தழைபெருந் தேவனார்
வகைமை பெறப்பா வகுத்த விருநான்கு
தலையிடு பதினா யிரம்மெனச் சாற்றுப
மலையிடு விளக்கின் வயக்கிய சீர்த்திப்
பரக்கக் கிடத்தலின் சுருக்குபு செய்கெனக்
கொங்கர் பெருமான் வங்கணத் துரைப்ப
புரைதபு மீக்கோட் புலவர் பெருமான்
கரைதபு கல்விக் கடலனன் றெய்வக்
கவிஞன் முறையிரு கவியெனுங் கடமா
வெருக்கொளூஉக் குப்புறு வீழ்ந்துலைந் தரறிப்
பெர்ருக்கென விரீயல் போம்வகை பொருசினத்
தறுகட் பேழ்வாய்த் தழற்கண்வெஞ் சீயம்
ஆமென வுலக ராய புகழ்வுறும்
நூமணக் கோதை தோற்றஞ்செய் வில்லி
புத்தூ ராழ்வான் புகல்காப் பியவியல்
வைத்த பெருநூல் வழக்குச் செய்யுள்
மரீஇய வியற்றமிழ் வல்லு ரல்லார்க்

சிறப்புப்பாயிரம்.

கோளுஉலகைத் தானு முணர்தரப் படாமை
தன்னுட் பன்முறை தான்மிக் குள்ளி
இந்நூல் கிடக்க விரும்புனல் குடைந்து
வாலாமை போக்குவான் வல்லே விரைந்துடல்
ஏலாவள்ள லினிதி னளைந்தாங்
கெழுத்து வழுச்சொ லின்வழு வேனைய
வழுத்தமக் கிடனாய் வசனகாவியம்
பதித்தனர் சிலரவை பருவந்து நோக்குபு
மதித்தின் மொழிபல வழங்கியந் தில்வளன்
விஞ்சிப் பல்கிய வீறுநா டதெனும்
தஞ்சைமா நகரத் தணப்பில்செல் வத்தன்
நவவங்க வீரா கமநெறி நண்ணுறு
சிவலிங்கப் பெயரோன் செய்தவத் துதித்த
சின்ன கன்னைய சிவாசார விற்பனன்
நின்ன கடனென நீடித் தகைநூல்
திருத்தித் தருகென வருத்தியி னறைய
மருமலி பொழில்சூழ் திருமழி சைப்பதிச்
சிவாத்து விதத்துச் சித்தாந்தி யாய்ப்புலன்
தவாத்து வரத்தான் றனித்துற வெய்திய
இயற்பெயர் வயித்திய லிங்க தேவன்
செயற்கருந் தவத்துழைச் செனித்த செம்மல்
செருக்கிய ரூனவர்ச் செருக்குமா முயலும்
அருக்கனி லொளிசெய்வே லறுமுகக் கடவுட்
குறுதுணை புரிந்த வொன்பான் வயவராம்
மறுவொரு சிறிதும் வயங்குத லொல்லார்
தங்குலஞ் சிறப்பத் தரணியிற் றாணியின்
எங்குலப் புறமென விருநிலம் புகல்சீர்
முத்துச் சாமியம் பெருமுத்துச் சாமியாம்
பெயர்புனை செந்தமிழ்ப் பெருந்தகை நாவலன்
பெருகுமாண் டவத்திற் பிருகுமா முனிவரன்
பார்க்குந் தொறும்பதி பசுபா சத்தியல்
சீர்ப்ப வருட்டுந் தெளிபொருட் பார்க்கவ
புராணம் வடசொலிற் புரிந்தன னந்நாள்
மெய்த்தவப் பயன்கொளுங் கச்சியப் பக்கவி
தெனது மொழியிற் றெரித்தன னன்னது
வினவுத லின்றி விளங்குமாட் டாமையால்
கற்றறி ஞானமின் மற்றவ ருந்தெரிந்
துணருமா தன்குலக் குரிமைசே ரன்னவன்
இயம்பிய யாப்பி னிடுபொருள் வழாமே
கயங்கலில் காணா பத்திய வொழுக்கிஃ
தெனவிசைத் தேற்ற மெய்தியாங் குலகர்
கற்குந் தொறுமுளங் கசிந்தமு தாற
சொற்றொடர் செவிப்புலன் றொடர்தொறுஞ் சுவையுற
விழுச்சொற் புணர்த்து விழுமிதா வனைந்தனன்
விச்சைகொள் வீரமா யேசர் விழைவுறும்
அச்சிலிங் கப்ப வண்ணல் பயந்த
ஒண்முக மதிபுனை சண்முகப் பக்கோன்
நிலைபா நிலமிசை நிலவுறத் தோற்றும்
உலையா வண்ண முளுற்றி
பொறியா வெழுத்திற் பொருத்தியீந் தனனே.

ஸ்ரீகணேசாயநம:

முதற்புத்தகத்தின் சருக்க அட்டவணை.

ஸ்ரீமஹாபாரதவரலாறு.

சருக்கம்.	பக்கம்.	சருக்கம்.	பக்கம்.
ஜெனமேஜெயன் அரசியற்சருக்கம்.	உ	அமுதங்கொணர்ந்தசருக்கம்.	௰அ
உதங்கமுனிச்சருக்கம்.	௩	சலற்காரமுனிச்சருக்கம்.	உக
பிருகுமுனிச்சருக்கம்.	எ	பரிச்சித்துமகாராஜன்சருக்கம்.	உ௩
கருடபகவான்சருக்கம்.	௰	சர்ப்பயாகச்சருக்கம். [கம்.	உரு
கந்தமாதனச்சருக்கம்.	௰சு	ஜெனமேஜெயனைப்பிரமஹத்தியடைந்தசருக்	உஎ

ஆதிபர்வம்.

சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
வேதவியாசர் உற்பவச்சருக்கம்.	உ
பிரபஞ்சர் உற்பவச்சருக்கம்.	சு
பாரதவீரர் உற்பவச்சருக்கம்.	கூ
குருகுலச்சருக்கம்.	௰
யயாதிராஜன்சரித்திரம். *	௰உ
துஷ்டியந்தராஜன்சரித்திரம்.	உசு
சவ்வருணராஜன்சரித்திரம்.	௩எ
சம்பவச்சருக்கம்.	௩அ
சந்தனுராஜன்சரித்திரம்.	௩கூ
வீஷ்மர் உற்பவம்.	ச௰
வீஷ்மர் வைராக்கியஞ் செய்து கொள்ளுதல். *	சசு
வீஷ்மர் சித்திரவீரியனுக்கு விவாகஞ்செய்வித்தல். *	சகூ
பரசுராமருக்கும்வீஷ்மருக்கும்போர்.	ருஉ
பரிமளகந்திக்கு வீஷ்மர் தருமசந்தானவிதியுரைத்தல்.	ருச
திரிதராஷ்டிரன்பாண்டு இவர்களுற்பவம்.	ருஅ
விதுரனுற்பவம்.	ருகூ
விதுரனுற்பவத்தைப்பற்றிக்கூறிய ஆணிமாண்டவியர்சரித்திரம்.	சு௰
காந்தாரிமணம்.	சு௩
கர்னனுற்பவம்.	சுஎ
பரசுராமனாற்கர்னன்சாபம்பெற்றது.	சுஅ
குந்திதேவிமணம்.	சுகூ
மத்திராதேவிமணம்.	,,
அமுதந்திமுனிவரால் பாண்டு சாபம்பெற்றது.	எ௰
பாண்டுராஜனுக்கு முனிவர்கள் தருமசந்தானவிதியுரைத்தல்.	எக
தருமனுற்பவம்.	எ௩

சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
துரியோதனாதியருற்பவம்.	எச
வீமனுற்பவம்.	எரு
அருச்சுனனுற்பவம்.	எசு
நகுலசகாதேவருற்பவம்.	,,
பாண்டுமரணம்.	எஎ
வாரணாவதச்சருக்கம்.	எகூ
வீமனைக்கங்கையில்வீழ்த்தல்.	அ௰
சர்ப்பத்தால்வீமனைக்கடிப்பித்தல்.	,,
வீமனைவசிட்டிக்குதிப்பித்தல்.	அக
வீமனுக்குவிஷவிருந்திடல்.	,,
வீமன் நாகலோகஞ்சென்று விஷாமுதபானஞ்செய்தல்.	அஉ
கிருபாசாரிவரலாறு.	அச
துரோணாசாரிவரலாறு.	அரு
அஸ்வத்தாமாவரலாறு.	அசு
துருபதனுக்குந்துரோணருக்கும் சமவாதம்.	அஎ
வில்லாசிரியரிருவரையும் வீஷ்மர் சன்மானித்தல்.	அகூ
குருபுத்திரர் நூற்றைவரும் வில்வித்தைபயிறல்.	கூ௰
துரோணபாவனையால் வில்வித்தைபயின்ற ஏகலைவன்கதை.	கூக
துரியோதனாதியர் ஆசாரிய நிந்தைசெய்தல்.	கூஉ
துரோணர் முதலைவாயிலகப்பட்டது.	கூ௩
குருபுத்திரர் விநோதப்பரிக்ஷை.	கூரு
குருபுத்திரர் விற்பரிக்ஷை.	கூசு
கர்னன்வாது.	கூஎ
கர்னன் மகுடாபிஷேகம்பெறல். [தம்.	கூகூ
பாஞ்சாலனொடு கௌரவபுத்திரர் உயுத்	,,

* இக்குறியுள்ள உட்பிரிவுகள் அங்ஙனம் விடுபட்டமையால் அவ்வப்பக்க முதற்பாகங்களி லமைத்துக்கொள்ளுக.

அட்டவணை.

சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
பாஞ்சாலனோடு பாண்டுபுத்திரர் யுத்தம்.	௱
பாஞ்சாலன் பற்குனனாற் கட்டுப்படல்.	௱௨
பாஞ்சாலன் புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்தல்.	௱௩
துஷ்டத்துய்மன் - திரௌபதி - இவர்களுற்பவம்.	,,
துஷ்டத்துய்மன் துரோணரை யடுத்து வில்வித்தைபயிறல்.	௱௪
பரிமளகந்தி பரமபதமடைதல்.	,,
தருமனுக்கு இளவரசுபட்டங் கட்டுதல்.	௱௫
துரியோதனன் துராலோசனை.	௱௬
திரிதராட்டிரன் துரியோதனுக்கு அறிவுறுத்தல்.	௱௮
திரிதராட்டிரன் துரியோதனன் கருத்துக்குடம்படல்.	௱௯
பாண்டவர் வாரணாவதஞ்சேர்தல்.	௱௰
துரியோதனன் அரக்குமாளிகைகட்டுதல்.	௱௰௧
பாண்டவர் அரக்குமாளிகையிற்குடிபுகுதல்.	௱௰௩
அரக்குமாளிகையைத் தீயிடுதல்.	௱௰௪
வேத்திரகீயச்சருக்கம்.	௱௰௬
இடும்பாசுரன்வதை.	௱௰௭
வீமன் இடும்பியை மணத்தல்.	௱௰௮
பாண்டவர் வேதவியாசரால் மந்திரோபதேசம்பெறல்.	௱௰௯
கடோற்கஜனுற்பவம்.	௱௨௰
பாண்டவர் வேத்திரகீயமடைதல்.	,,
பகாசுரன்வதை.	௱௨௨
சுயம்வரச்சருக்கம்.	௱௨௬
பாஞ்சாலன் அசரீரியால் பாண்டவரிருக்கையறிதல்.	௱௨௭
வியாசரனுக்ஞையாற் பாஞ்சாலன்லக்ஷியக்குறியோடுசுயம்வரஞ்சாட்டல்.	௱௨௯
ஸ்ரீகிருஷ்ணமூர்த்திபஞ்சவர்க்குச் சுயம்வரச்சேதியறிவித்தல்.	௱௩௰
பாண்டவர் வேதவியாசரைத் தரிசித்துப் பாஞ்சாலதேசத்திற்குச்செல்லுதல்.	௱௩௩
பாண்டவராக காந்தருவராஜனாகியசித்திராங்கதன்சிநேகித்தல்.	,,
பாண்டவர் காந்தருவராஜனால்வசிஷ்டர்சரித்திரங்கேட்டுவழிநடத்தல்.	௱௩௬
பாண்டவர்தவுமியமுனிவரைஆசாரியராகநியமித்துக்கொள்ளுதல்.	௱௪௬
திரௌபதிமாலையிட்டசருக்கம்.	,,
திரௌபதி சுயம்வரமண்டபமடைதல்.	௱௪௯
திரௌபதிக்குத் தாதிகள் அவ்வவ்வரசர்கள் ஊர்பெயர் முதலிய சிறப்புக்களைக் கூறிக்காண்பித்தல்.	௱௫௧
அருச்சுனன்வில்வளைத்தல்.	௱௫௪
துரியோதனன் கலகப்போர் விளைத்தல்.	௱௫௬
வியாசர்பாஞ்சாலனுக்குத் திரௌபதியின் பூர்வசனனவரலாறுரைத்தல்.	௱௬௰
வியாசர் பௌமாசுவிமுதலியபெண்களின் சரித்திரங்கூறிப் பாஞ்சாலனைத்தேற்றுதல்.	௱௬௭
திருக்கலியாணச்சருக்கம்.	௱௬௯
யாகசேனமஹாராஜன் ஸ்ரீதனவரிசைகொடுத்தல்.	௱௭௧
துரியோதனன் முதலாயினோர் ஆலோசனை.	௱௭௨
கௌரவர்க்கும்பாஞ்சாலருக்கும்யுத்தம்.	௱௭௫
திருமுடிபுனைந்தசருக்கம்.	௱௭௮
திரிதராஷ்டிரனோடு துரியோதனனுங்கர்ணனுந்துராலோசனை செய்தல்.	௱௭௯
வீஷ்மராதியோர் திரிதராஷ்டிரனாதியோர்க்கறிவுறுத்தல்.	௱௮௧
பாண்டவர்களை அஸ்தினபுரத்திற்குவரவழைத்தல்.	௱௮௪
தருமராஜனுக்குப் பாதிராச்சிய பட்டாபிஷேகம்.	௱௬௯
இந்திரப்பிரஸ்தச்சருக்கம்.	௱௯௧
கண்ணன் இந்திரனாற்காண்டவவனத்தைப்புதுப்பித்தது.	,,
பாண்டவர்குடி புகுதல்.	௱௯௨
நாரதமுனிவர் பாண்டவர்கட்குச் சிலகட்டுப்பாடுரைத்தல்.	௱௯௩
நாரதர் பாண்டவர்க்கு ஸ்திரீவிஷயத்தால்வரு மேதத்தைப்பற்றிக்கூறிய சுந்தோபசுந்தர்சரித்திரம்.	௱௯௫
உபபஞ்சபாண்டவருற்பவம்.	௨௱௩
அருச்சுனன்தீர்த்தயாத்திரைச்சருக்கம்.	,,
அருச்சுனன்நாககன்னிகையைமணத்தல்.	௨௱௫
இராவானுற்பவம்.	,,
அருச்சுனன் சித்திராங்கதையை மணத்தல்.	௨௱௬
நாரீதீர்த்தவரலாறு.	௨௱௭
பப்புருவாகனுற்பவம்.	௨௱௯
அருச்சுனனுக்குச்சுபத்திரைக்காட்சி.	,,
கண்ணன் அருச்சுனனைத் துவாரகைக்கு அழைத்துக்கொண்டுபோகுதல்.	௨௧௧
அருச்சுன சந்நியாசி சுபத்திரைகன்னிகாமாடஞ்சேர்ந்திருத்தல்.	௨௧௩
அருச்சுனன் சுபத்திரைக்குத் தன்னைவெளிப்படுத்துதல்.	௨௧௪

உ

ஸ்ரீகிருஷ்ணாயநம:

முகவுரை.

ஸ்ரீயப்பதியாய், அகிலஹேய ப்ரத்ய நீ காநந்தராய், ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபராய், ஜ்ஞான சக்தியாதி கல்யாண குணகண நிலயராய், சகல ஜகத்ஸர்க்க ஸ்திதிஸம்ஹார கர்த்தராய், ஆர்த்தோ ஜிஜ்ஞா சுரார்த்தார்த்தீஜ்ஞானி என்னுஞ் சதுர்விதபுருஷர்களுக்கும் ஆஸ்ரயணீயராய், தர்மார்த்த காமமோக்ஷாக்ய சதுர்வித பலப்ரதராய், விலக்ஷண விக்ரஹரா யிருந்தும்; தாம் அடியார்கள் பக்கல் சௌலப்பியகுண முடைமையை வெளிப்படுத்தியதோடு. தூதுசென்றதி னேற்றத்தை விளக்குகின்ற ஐந்தாம் வேதமாகிய ஸ்ரீமத் ஆரிய மகாபாரதத்தை ஸ்ரீயப்பகவதம்ச பூதராகிய ஸ்ரீவேதவியாசபகவான் அருளிச்செய் தானபின்னர், தம்முடைய சிஷியவர்க்கத்தில் ஒருவராகிய வைசம்பாயனரை நோக்கி ஜெனமேஜெய மகாராஜனுக்குச் சொல்லியருளும்படி ஆக்ஞாபித் தருளினர். ஸ்ரீவேதவியாச முனிசிரேஷ்டருடைய கட்டளையின்படி வைசம்பாயனர் ஜெனமேஜெய மகாராஜனுடைய சபாமத்தியில் உசிதாசனத்தி லெழுந்தருளியிருந்து சாங்கோபாங்கமாகச் சொல்லியருளினர்.

அநந்தரம் சூதபுராணிகர் நைமிசாரண்ணியத்தில் சத்திரயாகத்தில் சௌனகாதிமகாரிஷிகளுக்கு முற்றும் அருளிச்செய்தனர். வடமொழியில் ஆதிபர்வமுதல்அரிவம்ஸம் இறுதியாகிய ஸ்ரீமத்மகாபாரதம் சுலோகரூபமாய் இலட்சத் திருபத்தையாயிரங் கிரந்தத்தொகை யுள்ளதாயும், ஆதிபஞ்சகம்- யுத்தபஞ்சகம்- சாந்தித்திரயம் - அந்தியபஞ்சகம் - அரிவம்சம் - என்னும்ஐவகையுடையதாயும் இருக்கின்றது. இந்தவகை ஐந்தனுள் ஆதிபஞ்சகம் ஆதிபர்வம் - சபாபர்வம் - ஆரண்ணியபர்வம்-விராடபர்வம்-உத்தியோகபர்வம் - என்னும் ஐந்துபிரிவாகவும், யுத்தபஞ்சகம் வீஷ்மபர்வம் - துரோணபர்வம் - கர்னபர்வம் - சல்லியபர்வம் - சவுத்திகபர்வம் - என்னும் ஐந்துபிரிவாகவும், சாந்தித்திரயம் ஸ்ரீபர்வம் - சாந்திபர்வம் - அநுசாசனிகபர்வம் - என்னும மூன்றுபிரிவாகவும், அந்தியபஞ்சகம் அசுவமேதபர்வம்-ஆசிரமவாசபர்வம்-மௌசலபர்வம் - மகாப்பிரஸ்தானிகபர்வம்-சுவர்க்காரோகணபர்வம் - என்னும் ஐந்துபிரிவாகவும், அரிவம்சம் ஸ்ரீ கண்ணபிரானுடைய அதிமானுஷ சேஷ்டதங்களைச் சொல்லுவதில் பூர்வபாகம்- உத்தரபாகம் - என்னும் இரண்டுபிரிவாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

சேதனகோடிகள் உஜ்ஜீவனார்த்தமாகத் தமதுகருணையினால் வேதவேதாந்த வைதிகசதுர்வர்க்க புராண தர்மசாஸ்திர சாரங்களையும், இராஜவம்ச சரிதங்களையும், வருணாச்சிரம தருமங்களையும், இராஜநீதிராஜதண்டனைகளையும், சதுர்வித உபாயங்களையும், மந்திர தந்திர நித்தியநைமித்திக விரதாதிகளையும், சத்தியாசத்தியவிவரணங்களையும், தீர்த்த ஸ்நான புண்ணிய க்ஷேத்திரவாச பலங்களையும், தேவதாதரிசன ஆச்சிரமவாச ரிஷிதரிசின சோடச மகாதான விவரணங்களையும், மற்றும் பலசத்விஷயங்களையும் அடக்கி அருளிச்செய்த இதிகாச சிரேஷ்டமாகிய இந்தஸ்ரீமத் மகாபாரதத்தைத் தமது சிஷர்களாகிய பைலவமுனிவர்-வைசம்பாயனர்-சுமந்தர்-ஜயமுனிவர்- என்பவர்களுக்குப் பிரசாதித்தருளி;பைலவமுனிவரைச்சுவர்க்கலோகத்துக்கும், வைசம்பாயனரைப் பூலோகத்துக்கும், சுமந்தரை நாகலோகத்துக்கும், ஜயமுனிவரைப் பாதாளலோகத்துக்தும் உபந்நியாசிக்கும்படி ஆஞ்ஞாபித்தருளினர் வேதவ்யாசமுனிவர்.

மதுரைச் சங்கத்தாரில் சிறந்தவராகிய பெருந்தேவனாரென்பவர் திராவிடபாஷையில் எண்பதினாயிரம் பாக்களாக அருளிச்செய்தனர். எண்பதினாயிரம்பா என்பதை அறுபதினாயிரம்பா எனவும், இன்[illegible] குறைந்த தொகையாகவும் சிலர் கூ[illegible]. இந்நூல் பெரும்பாலும் வெண்பா[illegible]வால் அமைந்திருத்தல் பற்றிப் பார[illegible]வெண்பாவென்று பெயர் வழங்குகின்றது. அதில் உத்தியோகபர்வ மொன்றுமாத்திரமே கிடைக்கத்தக்க நிலைமையில் இருக்கிறது. பாரதம்பாடிய பெருந்தேவனார்க்குப் பின்பு ஸ்ரீவைஷ்ணவராகிய ஸ்ரீவில்லிபுத்தூராரென்னும் ஒரு மகாவித்துவான் [illegible]கினெட்டுபருவமாக விருத்தசெய்யுளால் அருளிச்செய்தனர். அஃது [illegible]ருக்கிறதென்று கருதிச்சிலநாள்களுக்கு முன்னிருந்த மதல[illegible] நல்லாபிள்ளை என்னும் ஒருவித்துவான் ஸ்ரீவில்லிபுத்தூரார் பாரதத்துக் கிடையிடையே கதைகளை விரித்துப் பாடினர். ஸ்ரீவில்லிபுத்தூரார் பாரத[illegible]ல்லாபிள்ளை பாரதமும் இப்பிரதே[illegible]த்தில வழங்கிவருகின்றன. பின் நல்லாபிள்ளையவர்கள் செய்த காவியத்திக்கிணங்க அவர்மரபினராகிய ஒருவர் மேற்படி பாரதச் செய்யுள்களுக்கிணங்கத் தமிழில் வசனகாவியமொன்று செய்தனர்.

இந்த வசனகாவியத்தை அச்சுயந்திர சாலைத் தலைவர்கள் சிற்சில இடங்களில் வடமொழிப் பாரதத்தோடு முரணாக உள்ளது இன்னது-முரணாதது இன்னது எனத் தெரியாமலும், கதைகள் விடுபட்டுப்போனவிடம் இன்னது-விளங்கவேண்டியவிடம் இன்னது என வறியாமலும், இப்பாரத காவியத்தைச் சேர்ந்த கதைகளுஞ் சருக்கங்களு மின்னவை-இவற்றிற்கு உட்பிரிவுகளும் உபகதைகளு மின்னவையென உணராமலும், தங்கடங்கள் கருத்துக்கிசையந்த வண்ணமெல்லாம் வரைந்து; யாவருந் துதிக்கவுஞ்சிந்திக்கவு முபயோக மாதற்பொருட்டுத் தோத்திரரூபமாகவுஞ் சாத்திரரூபமாகவு மிருக்கின்ற செய்யுட்களை டொழி

யாது, அத்துதித்தற்குஞ் சிந்தித்தற்கு முபயோகமாத லில்லாத கதாரூபமாயுள்ளசெய்யுட்களைக் கற்றுவல்லோர்க்கும் கற்று வல்லோ ரல்லார்க்கும் வெறுப்பினையுண்டாக்கத்தக்கனவாய்ப் பெரும்பாலும் இடையிடையே தழையவமைத்து அச்சிட்டிருக்கின்றனர்.

இயாமோ வப்படிக்கின்றி, ஆங்காங்கு சேர்க்கப்பவேனவும்-முறைபடுத்தப் படுவனவும் - திருத்தப்படுவனவும்-தள்ளப்படுவனவுமாகிய இவற்றை, முறையே சேர்த்தும், முறைபடுத்தியும், திருத்தியும், தள்ளியும்; முன்னர் சில வித்வான்களால் அவ்வப் பருவங்கடோறும் விருத்திசெய்திருந்த கருத்துக் கிணங்கப் பின்னு மபிவிருத்தி செய்து, பெரும்பான்மை சந்திவிகாரங்களின்றி, சிறுபான்மை ஆவசியகமாகிய திரிசொற்களையும் வடசொற்களையும் பிரயோகித்து, கல்வியின்மையையே கலனுகவுடைய வெள்ளறிவினர்க்கும் எளிதில் விளங்குமாறு மிகவுஞ் சீர்திருத்தி, ஆங்காங்குசருக்கமாதியகிரமங்கள்வகுத்து அச்சிட்டனம்.

முகவுரை - முற்றிற்று.

உ

வாசுதேவாயநம:

ஸ்ரீமகாபாரத காவியத்தைப் படிப்பவர்க்கு ஸ்ரீவேதவியாச முனிவராற் கூறிய அனுஷ்டிப்பையும் பயனையுங் காட்டும்

அட்டவணை.

ஆதிபர்வத்தை முற்றும் படித்துப் பிராமணர்களுக்குப் பாயசத்தினுல் திருப்தி செய்வித்தால், அவர்களுக்குப் புத்திரசந்தானம் உண்டாம்.

சபாபர்வத்தைப் பூரணமாகப் பக்தியோடு படித்துப் பிராமணர்களுக்குப் பசுவின்பாலால் திருப்தி பண்ணுவித்தால், அதிகபாக்கிய முண்டாம்.

ஆரண்யபர்வத்தை மனம் புறம்பே செல்லாமற் படித்து முடித்துப் பிராமணர்களுக்கு வாழைக்கனி முதலிய கனிகளால் திருப்தி ஆக்குவித்தால், வெற்றியுண்டாம்.

விராடபர்வத்தை விசுவாசத்தோடு முற்றும்படித்து வேத வித்துக்களாகிய பிராமணர்களுக்குத் ததியோதனத்தால் திருப்தி செய்வித்தால், இஷ்டபலங்கை கூடும்.

உத்தியோகபர்வத்தை முழுதும் விசுவாசித்துப் படித்துப் பிராமணர்களுக்குச் சந்தர்ப்பணஞ் செய்து நூதன வஸ்திரதானஞ் செய்தால், இஷ்டகாமிய சித்தியுண்டாம்.

வீஷ்மபர்வத்தை உள்ளன்போடு முடிய வாசித்துப் பிராமணர்களுக்குக் கருப்பஞ்சாற்றினுல் (அதாவது கருங்கழிகளைத்தந்து) திருப்தி செய்வித்தால், ஆடையாபரணங்கள் குறைவின்றிப் பெருகும்.

துரோணபர்வத்தைப் பிரீதியோடு படித்துப் பிராமணர்களுக்கு வெண்குடை கொடுத்தால், தானிய சம்பத்துண்டாம்.

கர்னபர்வத்தை அன்போடு முழுமையும் படித்துப் பிராமணர்களுக்குச் சுவர்னதானம் பண்ணினுல், ஆயுள் விருத்தியுண்டாம்.

சல்லியபர்வத்தை முற்றும்படித்துப் பிராமணர்களுக்கு ஷட்ருசிரான்னங்களால் திருப்திசெய்வித்தால், பசுவிர்த்தி யுண்டாம்.

சௌத்திகபர்வத்தைப் படித்து நிறைவேற்றிப் பிராமணர்க்குச் சந்தன புஷ்ப பலகாரங்களால் திருப்தி செய்வித்தால், திரவியலாபமுண்டாம்.

ஸ்ரீபர்வத்தை உள்ளன்போடு படித்துமுடித்து பிராமணர்களுக்குத் திவ்விய போஜனஞ் செய்வித்தால், துக்கநிவாரணமாகும்.

சாந்திபர்வத்தை முழுதும்படித்து வைதிக பிராமணர்களுக்குத் திவ்வியபோஜனஞ் செய்வித்துத் தட்சணைகொடுத்தால், வாகனலாப முண்டாம்.

அனுசாசனிகபர்வத்தைப் பக்திபூர்வமாகப் படித்து முடித்துப் பிராமணர்களுக்குக் கந்தபுஷ்ப சத்திரதானஞ் செய்தால், மகதைசுவரியமுண்டாம்.

அசுவமேதபர்வத்தைச் சம்பூரணமாகப் படித்துப் பிராமணர்களுக்குப் போசனதிருப்தி செய்தால், பெரும்பொரு ளுண்டாம்.

ஆச்ரமவாசபர்வத்தைப் படித்து முடித்தபின் பிராமணர்களுக்குச் சோடசதானஞ் செய்தால், இஷ்டசித்தி யுண்டாம்.

மௌசலபர்வத்தைப் படித்து முற்றுவித்துப் பிராமணர்களுக்குப் போசனதிருப்தி செய்தால், பாபநிவர்த்தியுண்டாம்.

மகாபிரஸ்தானிக பர்வத்தைப் பிரீதியாக முழுமையும் படித்துப் பிராமணர்களுக்குப் பட்டுக்குடை தானஞ்செய்தால், பெருஞ்செல்வ முண்டாம்.

சுவர்க்காரோகண பர்வத்தைப் பக்திபூர்வமாகப் படித்து முடித்தபின் பிராமணர்களுக்குச் சந்தன புஷ்ப தாம்பூல போசன வஸ்திர தட்சணைகளால் திருப்தி பண்ணினுல், அஷ்டைசுவரியமு முண்டாம்.

அநுஷ்டிப்பும்பயனும் - முற்றிற்று.

உ

ஸ்ரீகணேசாயநம:

விளம்பரப் பத்திரிக்கை.

இதனால் அறிவொழுக்கங்களிற்சிறந்த நல்லோர்யாவர்க்கும் விஞ்ஞாபனம்.

இவ்வுலகின்கணுள்ள ஆன்மாக்களுக்குள்ளே அறிவினாற்சிறந்த மானிடர்க்கு இம்மைப்பிரயோசனங்களையும்-மறுமைப்பிரயோசனங்களையும்-அறிவித்து, இவ்விருமைப் பிரயோசனங்களுக்கு மேதுவாகிய தருமம்-அருத்தம்-காமம் - மோக்ஷம்-என்னுஞ் சதுர்விதபுருஷார்த்தங்களி னிலக்கணங்களையும், அவற்றைத்தேடமார்க்கங்களையும், அவற்றைக்காப்பாற்று முபாயங்களையும், அவற்றை யனுபவிக்கும் வகையையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல சந்தேகம்-விபரீதம்-அறியாமை-என்னு முக்குற்றங்களுமறத் தெரிவிப்பனவாயுள்ள இதிகாசங்களுள், ஸ்ரீமகாபாரதமென்னு மிதிகாசத்தைப் பஞ்சமவேதமாகச் சிறப்பித்து ஸ்ரீவியாசபகவான் ஆரியபாடையி லருளிச்செய்தனர். அதனை மதுரைச்சங்கத்தவரு ளொருவராகிய பெருந்தேவனாராதிய புலவர்கள், திராவிடபாடையிற் பத்தியரூபமாகத் தொகுத்தும் விரித்து மொழிபெயர்த்தனர். அம்மொழிபெயர்ப்புக் கிணங்க பிற்காலத்துள்ள சிலராற் சத்தியரூபமாகச் செய்யப்பட்டுக்கிடந்ததை, (இரும்புனல்குடைந்து வாலாமைபோக்குவான் வல்லைவிரைக்துட லேலாவள்ள வினிதினளைந்தாங்கு.) என்ற ஆன்றோருரைக்குச்சான்றாக சில அச்சியந்திரசாலைத் தலைவர்கள் பின்னும் விரித்துவரையக்கருதி, வடமொழிப் பாரதத்தோடு முரணுக உள்ளது இன்னது முரணுதது இன்னது எனத் தெரியாமலும், கதைகள்விட்டுப்போன இடம் இன்னது விளங்கவேண்டிய இடம் இன்னது எனவறியாமலும், இப்பாரதகாவியத்தைச்சேர்ந்த கதைகளுஞ் சருக்கங்களும் இன்னவை இவற்றிற்கு உட்பிரிவுளும் உபகதைகளும் இன்னவையென உணராமலும், தங்கள்தங்கள் கருத்துக்கியைந்த வண்ணமெல்லாம் வரைந்து; யாவருந் துதிக்கவுஞ் சிந்திக்கவும் உபயோகமாதற்பொருட்டு தோத்திரரூபமாகவுஞ் சாத்திரரூபமாகவுமுள்ள செய்யுட்களோடொழியாது அத்துதித்தற்குஞ் சிந்தித்தற்கும் உபயோகம் ஆதலில்லாத கதாரூபமாயுள்ள செய்யுட்களையுங் கற்று வல்லார்க்கும் கற்றுவல்லோரல்லார்க்கும் வெறுப்பினையுண்டாக்கத் தக்கனவாய்ப் பெரும்பாலும் இடையிடையே தழைக்கவமைத்து அச்சிட்டிருக்கின்றனர்.

இவ்வாறச்சிட்டிருக்கும் பிரதிகளில் இவ்வகைத்தான பலவழுஉக்கள் குழுஉக்கொண்டிருத்தலை பூர்வம் எனது மைத்துனராகிய - தஞ்சாவூர் - சின்னகன்னைய செட்டியாரவர்கள் கண்ணுற்று, முன்னம் உபபுராணம் பதினெட்டி னுள்ளுஞ் சிறந்த பார்க்கவபுராணத்தில் இலைமறைகாயென வமைந்த காணுபத்திய மகத்துவத்தை யாவருக்கும் வெள்ளிடைமலைபோல் விளக்கி வெளியிட்டு உலகெங்கணும் பரவச்செய்து கீர்த்தி படைத்தவரும், ஸ்ரீகைலாயபரம்பரை உபசுப்பிரமணியர் மரபில் சிவாத்துவித சித்தாந்தியா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வயித்தியலிங்கதேவர் குமாரரும், ஆகிய மு - ா - ா - ஸ்ரீ, முத்துச்சாமி முதலியாரவர்களால் ஒருவாறு ஆங்காங்கு சேர்க்கப்படுவனவும் - முறைபடுத்தப் படுவனவும் - திருத்தப்படுவனவும் - தள்ளப்படுவனவுமாகிய இவற்றை, முறையேசேர்த்தும் - முறைபடுத்தியும்-திருத்தியும் - தள்ளியும் - புதுக்கி, முன்னர் சிலவித்துவான்களால் அவ்வப்பருவங்கடோறும் விருத்தி செய்திருந்த கருத்துக்கிணங்கப் பின்னும் அபிவிருத்திசெய்து, பெரும்பான்மை சந்திவிகாரங்களின்றி, சிறுபான்மை ஆவசியகமாகிய திரிசொற்களையும் வடசொற்களையும் பிரயோகித்து, கல்வியின்மையையே கலனுக உடைய வெள்ளறிவினர்க்கும் எளிதில் விளங்குமாறு சருக்கமாதிய கிரமங்கள் வகுத்துப்பகுத்த பிரதியை; இக்கால் நூதனமாக இக்காவியத் தலைவர்களுடைய உற்பவமாதி முக்கிய லீலைகட்கு அவ்வவ்விடங்கடோறும் அவ்வவ்வமையங்கட்கேற்றபடி ஓவியத்துறையிற் கைபோய ஒருவாரால் உயர்ந்த சித்திரப்படங்களும் எழுதுவித்தமைத்து அச்சியற்றி வெளிப்படுத்தினேன்.

இப்புத்தகம் வேண்டுபவர்கள் சென்னப்பட்டணம் பெத்துநாயகன்பேட்டை பாபம்ஸ்பிராட்வே-154 155-வது கதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்தாபித்திருக்கும் "எம்பிரெஸ் ஆவ் இண்டியா" என்னும் அச்சுக்கூடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். இஃதன்றியும்-என்னால் சில தமிழ்-தெலுங்கு - கிரந்தம் - இவ்வகையான புத்தகங்களும் விற்கப்படுவ, இவற்றை வேண்டுபவர் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளப்படுவர். தபால் செலவு முதலானவை வாங்கப்பட்டவர்களுக் குரியன. கடிதத்திற்குப் பதில் வேண்டுபவர்கள், (ஸ்டாம்புலேபில்) அல்லது (ரிடான்போஸ்ட்கார்ட்) அனுப்பல் வேண்டும். பணமனுப்பும் விஷயத்தில், (மணியார்டர்) அல்லது (ஸ்டாம்புலேபில்) அனுப்பவேண்டும். இந்தலேபில் அனுப்பும்பக்ஷத்தில் ரூபாய்க்கு ஒருஅணு வட்டஞ் சேர்த்தனுப்பவேண்டும்.

இங்ஙனம்,

அஜ்ஜி - ஷண்முகப்பசெட்டியார்.

 REGISTRED-COPY-RIGHT.

(1886 సంవత్సరం) அஷ்டபாரியாசமேதாாகியஸ்ரீகிருஷ்ணமூர்த்தி. కు.జె.సుబ్రమణ్యంరాజు వ్రాసింది)

ஸ்ரீகணேசாயநம:

ஸ்ரீருக்மிணி சத்தியபாமாசமேத ஸ்ரீவேணுகோபால பரப்பிரம்மணேநம:

ஸ்ரீமஹாபாரதம்

சிறப்புப்பாயிரம்.

கணபதிதுதி.

நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராஜன் மாபார தஞ்சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாகவங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

மும்மூர்த்திகள்துதி.

உலகமாக்கலுங் காக்கலு முண்மையால், இலகநீக்கலு மென்றுந் தவிர்கலார்
சலசவாண்மலர்த் தாள்களென் னெஞ்சினு; நிலவுசென்னி யினுநிலை யாமரோ.

கலைமகள் துதி.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யாற்றிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரோன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.

வேதவியாசர் துதி.

வேதமாதி விளங்கிய நூலெலாம், ஓதியாரு முளந்தெளி வெய்திடப்
போதியாநின்ற புங்கவ னன்புடை, வாதராயணன் றன்னை வழுத்துவாம்.

அவையடக்கம்.

முன்சொலாகிய சொல்லெலா முழுதுணர் முனிவன், தன்சொலாகிய மாப்பெருங் காப்பியந் தன்னைத்
தென்சொலாலுரை செய்தலிற் செழுஞ்சுவை யில்லாப், புன்சொலாயினும் பொறுத்தருள்புரிவரோ புலவோர்.

இந்நூல்செய்தற்குக்காரணம்.

அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங் கம்புயாதன், முகத்தினில் வாழுமந்த மொய்குழ லருளினாலே
பகைத்தெதிர் பொருத தெய்வப் பாரதகவியைமுந்நீர்ச், செகத்தினிற் கதையதாகச் செய்கெனச்செய்ததன்றே.

வாழ்த்துகவி.

ஏழ் பெருங்கடன் மாநில மெங்குநல் லறமே, சூழ்க வண்டமி ழோங்குக தேங்குக சுருதி
வீழ்க பைம்புயல் விளங்குக வளங்கெழு மனுநூல், வாழ்க வன்புடை யடியவர் மன்னுமா தவமே.

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

கணபதிதுணை.

ஸ்ரீமஹாபாரதவரலாறு.

சூதபுராணிகர் நைமிசாரணியம் வருதல்.

[நெடிய கடல்சூழ்ந்த உலகத்தில், தவத்துக் குபயோகமாக விருக்கின்ற திவ்யக்ஷேத்திரங்களெவற்றினு மிகவுஞ் சிறப்புற்றோங்கி விளங்குகின்ற நைமிசாரண்யத்தில், சௌனகர் முதலாகிய இருபத்தாறாயிர முனிவர்களுங்கூடி இருக்கிற தருணத்தில், சூதமுனிவர் வந்தார். அவரை அந்த இருபத்தாறாயிர முனிவர்களுங்கண்டவுடன் எழுந்தெதிர்கொண்டு அழைத்துவந்து, அர்க்கிய பாத்தியாதிகளைக் கொடுத்துப், பிரம்மாசனம் போட்டுச், சோடச உபசாரமுஞ்செய்து இருக்கச்சொல்லி, யோகட்சேமங் கேட்டபின்பு ஒரு வசனஞ் சொல்லுவதானார்கள். ஓமஹாநிலைபெற்ற தபோநிதியான சூதமுனிவரே! ஓ சகல புராணங்களையும் சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த மஹானுபாவா! நீர் இவ்விடத்திற்கு வந்தது, நாங்களெல்லாம் கடைத்தேறுவதற்கு மூலகாரணமேயன்றி வேறொன்றில்லை. ஆனால் உம்மை ஒரு மனுவு கேட்டுக் கொள்ளுகிறோம். அஃதென்னெனில்-முன்னந் தங்களுடைய வாக்கினாலே, மச்சியம் - கூர்மம் - வராகம் - வாமனம் - பிரமம் - வைணவம் - பாகவதம் - சைவம் - இலிங்கம் - பௌடிகம் - நாரதீயம் - காருடம் - பிரமகைவர்த்தம் - காந்தம் - மார்க்கண்டேயம் - ஆக்கினேயம் - பிரமாண்டம் - பதுமம் - ஆகிய பதினெண் புராணங்களையும் கேட்டுணர்ந்தோம். இனி ஐந்தாம் வேதமென்று கூறப்பட்ட பாரதகதையைக் கேட்க விருப்புற் றிருக்கின்றோமென ; அதைச் சூதமுனிவர்கேட்டு, ஓ முனிவர்களே ! நீங்கள்கேட்ட பாரதகதையை முன்னம் ஜெனமேஜெய மஹாராஜன் கேட்டுப் பாபரகிதனானான். அவ்வளவு சிலாக்கியமான பாரதகதையை நீங்களுங் கேட்டு ஆனந்த மடையும்படியாக யாம் சொல்லுகிறோம் கேளுங்களென ; அதற்கம்முனிவர் சூதமுனிவரை வணங்கி, இப்பாரதக்கதையைக்கேட்ட அவ்வரசன் யாவன்? முறைவழுவாமல் இக்கதையை அவ்வரசனுக்குக் கூறினவர் எவர்? யாதுகாரணத்தால் அக்கதையைக்கூறவுங் கேட்கவும் அவர்க்கேது உண்டாயின? இவைகளையெல்லாங் கிருபைசெய்து சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளல் வேண்டுமென்னலும், சூதமுனிவர் கூறத்தொடங்கினார்.]

முதலாவது.

ஜெனமேஜெயன் அரசியற்சருக்கம்

முருகார் மலர்த்தாம முடியோனை யடியார் முயற்சித்திறந்
திருகாமல் விளைவிக்கு மதயானை வதனச் செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரும்
ஒருகோடி பூதே வருங்கை தொழுங்கோவை யுறவுன்னுவாம்.

ஓ சௌனகாதி முனிவர்களே! மலர்மிசை வீற்றிருக்குந் திசைமுகனாற் சிருஷ்டிக்கப்பட்ட இந்த வுலகம் ஏழுபிரிவாகி, அவ்வப்பிரிவில் சிறந்த பொருள்களாகிய, நாவல்- இறலி - குசை- கிறவுஞ்சம்- புட்கரம்- தெங்கு - கமுகு - என்பனவற்றின் அபிதானத்தால் ஏழுதீவுகளாகி இருக்கின்றன. அவற்றுள் நாவலந்தீவாகிய இஃது, அங்கம் - அருணம் - அவந்தி - ஆந்திரம்- இலாடம் - யவனம் - ஒட்டியம் - கருசம் - கலிங்கம்- கன்னடம்- கன்னாடம் - காசம்- காஸ்மீரம்- காந்தாரம்- காம்போசம் - கிராடம் - குருகு - குடகம் - குந்தளம்- குரு - குலிந்தம் - கூர்ச்சரம் - கேகயம் - கேரளம்- கொங்கணம்-கொல்லம்- கோசலம் சகம் - சவ்வீரம் - சாலவம் - சிங்களம் - சிந்து - சீனம் - சூரசேனம் - சோழம் - சோனகம் - திராவிடம் - துளுவம்- தெங்கணம் - நிடதம் - நேபாளம் - பாஞ்சாலம் - பப்பரம்- பல்லவம் - பாண்டியம் - புலிந்தம் - போடம்- மகதம் - மச்சம் - மராடம் - மலையாளம் - மாளவம்- யுகந்தரம் - வங்கம் - வங்காளம் - விதற்பம் - என்னும் ஐம்பத்தாறு தேசத்தை யுடைத்தாகி, இகபரசுகத்துக்கு உபயோகப்பட்டிருக்கின்றது. இத்தீவிலிருக்கும் நாடெல்லாவற்றிலும் மிகவுஞ் சிறப்புற்றுப், பரமனிடப் பாகத்து விளங்கும் பார்வதியைப் பெற்று வளர்த்த இமயமலையையும், அப்பரமன் சடாடவியில் வாழ்ந்திருக்கும் மந்தாகினியையு முடைத்தாகி, அறிவுடைமை - அன்புடைமை - அருளுடைமை - பொருளுடைமை பொறையுடைமை- வலியுடைமை-ஒழுக்கமுடைமை - முதலியவற்றைப் பெற்றுத், தருமாதிகளை வழுவாது வளர்த்து வருவதில் சிலாக்கியப்பட் டிருக்கின்

REGISTEREDCOPY-RIGHT.

சௌனகாதிமுனிவர்கள்.
ஆதிபர்வம்வரலாறு-உ-வது-பக்கம்.

றது குருக்ஷேத்திரம். அக்குருக்ஷேத்திரத்தில் அஸ்தி
னபுர மென்றொரு நகருண்டு. அந்நகரோ சந்திரகு
லத் தரசருக்கு அரசு செலுத்தும் நகராகிச், சொர்க்க-
மத்திய - பாதாள லோகங்களி லிருக்கிற நகரங்களைத்
தன் வளப்பத்தினால் வென்று, அந்த மூன்று லோகங்
களில் சஞ்சரிப்பவர்கள் நிரந்தரந் தன்னைவிட்டு நீங்
காம லிருக்கத்தக்க மங்கல வோசையையும் வேதகோ
ஷ்டத்தையும் பெற்றிருக்கின்றது. அந்நகரத்துக்கு
ஓரரசனுண்டு. அவன் யாரென்றால், சந்திரவமிச பரம்
பரையிற் றோன்றிச், சக்ரவாளகிரி பரியந்தம் தன்னா
ணையைச் செலுத்திச், சத்துருக்களை நாசஞ்செய்து,
மித்துருக்களைப் பரிபாலித்து, நல்லொழுக்கத்தி னின்
றோர்க்கெல்லாம் யாதொரு குறைவுவராமல் வேண்டி
யவற்றை யுதவித், தன்னுயிர்போலக் காப்பாற்றுந்
தயாநிதியாகிய பரிட்சித்து மஹாராஜனுடைய புத்தி
ரன் ஜெனமேஜெய மஹாராஜன். அந்த ஜெனமேஜெ
யன், தன் தந்தையிலும் எண்மடங் கதிகமாக நன்
மையை விளைத்து அரசுசெலுத்தி வருகிறநாளில், ஒரு
நாள் சத்திர யாகஞ் செய்ய யத்தனித்து, அந்த யாக
த்துக்குச் சமைத்தசாலையி லினிதுவீற்றிருக்கிற தரு
ணத்தில், தேவ குலத்திற் பிறந்த குக்குரன் மனைவி
சரமை யென்பவள் பெற்ற சிறுவர்களில் சார்மேயனெ
ன்பவன், அந்த யாகசாலையிற் புகுந்தான். அவன் புகு
ந்ததை அந்த ஜெனமேஜெயமஹாராஜன் சகோதரர்
களாகிய சுதசேனன் - பீமசேனன் - உக்கிரசேனன்-
இம்மூவருங்கண்டு, அச்சார்மேய னென்பவனை யடித்
துத் துரத்திவிட்டார்கள். அச்சார்மேயன் மிகுந்த
துயரத்தை யடைந்து, தன்தாயாகிய சரமையினிடத்
துச் சொல்லித் துக்கித்தான். அதைக் கேட்டமாத்திர
த்தில் அந்தச்சரமை அதிவேகமாய்வந்து, யாகசாலையி
லிருந்த ஜெனமேஜெய மஹாராஜனைக் கண்டு, ஓ அர
சனே! யான் பெற்றமக்களில் மிகுந்த இளமைப்பரு
வத்தை யுடைய சார்மேயனென்பவனை யாதொரு கா
ரணமுமின்றி உமது தம்பிமார் அடித்தார்களாம்.
அது தருமமா? தருமசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து
என்போலிய ஏழைகளைப் பாதுகாக்கின்ற மஹாராஜ
னேயென்றுமுறையிட்டு, பொறுமையைப் பூஷணமாக
உடைய அந்தச்சரமை அந்தர்த்தானமாய்ப் போய்வி
ட்டாள். உடனே அரசன் திகிலடைந்து, இதென்ன
ஆச்சரியமென் றேங்கி, விரைவில் அந்தச்சத்திரயாகத்
தை நிறைவேற்றித், தன்னகரமாகிய அஸ்தினபுரத்தி
ற்குவந்து, பழையபடி சிலநாள் அரசுசெய்து, ஒரு
நாள் சரமைசொல்லிய வாக்கியத்தை நினைத்து புத்தி
மயங்கி, இந்தப் பொல்லாங்குக்கு என்னசெய்கிறது;
அந்த அம்மனிருந்தால் அவளிஷ்டப்படி நிறைவேற்றி
விடலாம்; அதற்கு அந்த அம்மன் அந்தர்த்தானமா
ய்ப் போய்விட்டனள். இனி இதற்குயென்னசெய்யலா
மென் றேங்கித், தனது மந்திரி முதலானவர்களை நோ
க்கி, நான்வருகிறபரியந்தம் சகல ஜீவாத்துமாக்களுக்
கும் யாதொரு குறைவும்வாராமல் விசாரணை செய்து
கொண் டிருங்களென்று கட்டளையிட்டுத், தான்காட்டு
க்குப்போய்ச் சிலநாளிருந்து, பின்பு சோமாசிரவசுவெ
ன்னும் முனிவரைக்கண்டு, மிகுந்த அன்புடனே வண
ங்கி எழுந்துநின்று, சரமையென்பவளால் தனக்கு நே
ரிட்டிருக்கிற குறையையும் யாகவிக்கினத்தையுஞ்சொ
ல்லி முறையிட, அம்முனிவர் சாந்தியாகஞ் செய்தால்
உன் மனக்குறை நீங்குமென, அவ்வாறே அரசன் அம்
முனியைக் குருவாகக்கொண்டு, அந்த யாகத்தை அவ்
வனத்திலேயே நிறைவேற்றி, அனேக தான தருமங்
களைச் செய்து தன்மனக்குறை நீங்கி, எப்போதும்
போல நற்குணமுடையவனாய்த் தன்னகரத்தில்வந்து
அரசாட்சி செய்துகொண் டிருந்தான்.

ஜெனமேஜெயன் அரசியற்சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது,

உதங்கமுனிச்சருக்கம்

ஓ சவுனகாதி முனிவர்களே! இவ்வரச னிவ்வாறி
ருக்க உதங்கனென்னும் பெயரையுடைய பிரமசாரிப்
பிராமணனொருவன், சகல சாஸ்திரங்களிலும் வல்லவ
ராகி ஞானசுரூபியாய் விளங்குகின்ற பயிலவமுனிவ
ரிடத்தில், நாலுவேதம் - ஆறுசாஸ்திரம் - அறுபத்து
நாலு கலைக்கியானம்-முதலாகிய வித்தைகளைக் கற்க
விரும்பி அவரையடுத்து, அந்தமுனிவர் தன்மேல் அன்
புடையவரா யிருக்கும்பொருட்டுப் பயபத்தியுடனே
வழிபட்டுவருகிறநாளில், அம்முனிவர் இந்த உதங்கன்
நினைத்துவந்த கருத்தின்படி, ஐயந்திரிபில்லாமலிருக்க
எல்லா நூல்களையு முணர்த்தினார். அதன்மேல் அவ்
வுதங்கன் மகிழ்ந்து, குருவாகிய பயிலவமுனிவரை
வணங்கி, என்னிமித்தந் தாங்கள் கல்வியி லெடுத்துக்
கொண்டபிரயாசைக்குக் குருதக்ஷணைகொடுக்க விருப்
புற்றேன்; அதற்குத் தங்கள்கருத்தை வெளியிட
வேண்டுமென்று பிரார்த்தித்தான். அம்முனிவர் உதங்
கனை நோக்கி, எனக்கு ஒன்றுந் தேவையில்லை என்று
மறுத்தார். மறுபடியும் உதங்கன்வேண்டினான். அம்
முனிவர்உதங்கனைப்பார்த்து, அப்பா! எனக்கொன்றும்
வேண்டுவதில்லை என்றாலும் உனதுமனந் திருப்தி
யாகாமையால், என் பத்தினியிடத்திற் சென்று கேள்;
உன் தாயாகிய என்பத்தினி எதைக்கேட்பாளோ
அதைக் கொண்டுவந்து கொடுவென்று கட்டளையிட்
டார். அவ்வுதங்கன் அக்கட்டளையைச்சிரமேற்கொண்

டு சென்று,குருபத்தினியாரைக்கண்டுவணங்கிக்,குருவினிடத்து நிகழ்ந்தவைகளைச் சொல்லிப், பய பத்தியுடனே யெதிர்நின்று, அம்மணீ! இதற்குத் தங்கள் கருத்தை வெளியிட வேண்டுமென்று கேட்க; அந்த அம்மன் இந்த உதங்கன் பக்தி விசுவாசத்துக்கு மகிழ்ந்து, ஓ உதங்கா! மனுசாஸ்திரவிதி பிசகாமற் செங்கோல் செலுத்தித், தன்னுயிர்போல மன்னுயிரனைத்தையும் புரக்கும் பௌடியந்த மஹாராஜனுடைய மனைவி செவியிலணிந்திருக்கிற கோடி சூரியப் பிரகாசமாகிய நாகரத்தினக் கம்மலைக் கொண்டு வந்து கொடுப்பாயாகில், அநுதான் குருதக்ஷணையென்று சொல்ல; உதங்கன்கேட்டு மிகுந்த களிப்படைந்து, அந்தக் கம்மலை இத்தனைநாளிற் கொண்டு வந்து கொடுக்கிறேன் என்று கெடுவிட்டு வணங்கி விடைபெற்றுக்கொண்டு, பௌடியந்தமகாராஜன் நகரத்தைக்குறித்துவருகிறபோது,தாவள்யமான வெள்ளை எருதின்மேல் ஒரு திவ்யபுருஷன் வந்து இவனை வழிமறிக்க; அதுகண்டு உதங்கன் அப்புருஷனுக்கு வந்தனைசெய்து, குருதக்ஷணை நிமித்தம் பௌடியந்த மஹாராஜன் நகரத்திற்குப் போகின்றேன். நீர் ஏன் என்னை மறிக்கின்றீரென; அப்புருஷன் இந்தவழியில் என்னுத்தரவில்லாமற்செல்லவொண்ணாது. நீகுருதட்சணைநிமித்தம் செல்லுகிறபடியால்,இவ்வெருதின் கோமயம் அருந்துவாயாகில், உன்னை இவ்வழியிற் செல்ல விடைகொடுப்பேனென; அவ்வாறே அவ்வுதங்கன் அவ்வெருதினது கோமயத்தையருந்தி, அந்தப்புருஷனுடைய உத்தரவுபெற்று, மலையைப்போலத் திரண்டதோளையும், அளவற்ற புகழையு முடைத்தாகிய பௌடியந்தமஹாராஜன் அரண்மனைக்குவந்து, தன் வரவைக்காவலாளர்களால் அவ்வரசனுக்குத்தெரிவித்து, அவ்வரசன்வந்தனைவழிபாடுசெய்ய அதனையேற்று,அவ்வரசனுக்குப் பல ஆசீர்வசனங்கள்சொல்லி,அவ்வரசனிட்ட பொற்பீடத்திலிருந்து,ஓமகாராஜனே! எனக்குக் கல்விபயிற்றியபயிலவமுனிவருக்குக் குருதட்சணைகொடுக்க யத்தனித்துவணங்கிநிற்க; அதற்கம்முனிவர் நமதுபத்தினியார் கருத்துக்கிசைந்ததைக் கொடுவென்றார். உடனே அந்த அம்மனைக்கண்டு வணங்கி, என்கருத்தினைக்கூறி, தாயே தங்கட்கு என்னவேண்டுமென்று கேட்டதற்கு உமது நாமத்தைக்கூறி, உமதுமனைவியா ரணிந்திருக்குங்கம்மலைக் கொண்டுவந்து கொடுவென்று கூறினார். அந்தஅம்மனுக்கு இத்தனைநாளில் கொண்டுவந்து கொடுக்கிறேனென்று கெடுவிட்டு, உமதிடத்துக்கு வந்தேனென; அதை அவ்வரசன்கேட்டு மகிழ்ச்சியடைந்து, அந்தப்புரத்தில் என்மனைவியிருக்கிறாள், நீர் போய் நான் கொடுக்கச் சொன்னேனென்று சொல்லி அக் கம்மலை வாங்கிக் கொள்ளுமென்று அனுப்ப, அவ்வுதங்கன் அந்தப்புரத்திற் சென்று எங்கெங்குந்தேடி, அந்த ராஜன் மனைவியாரைக் காணாமல் மறுபடியும் அவனிடத்தில் வந்து, ஓ மகாராஜனே! உமது மனைவியார் அந்தப்புரத்திலில்லையென; அரசன்கேட்டு, ஓ மகானுபாவா! என் மனைவி அசுசியாயிருக்கிறவர்கள் கண்களுக்குத் தோற்றாள். நீர் அசுசியா யிருக்கிறதாய்த் தோற்றுகிறது. சுசியாய்ச் செல்லுவீராகில் உமது கண்களுக்குத் தோற்றி நீர்கருதிய பொருளைக்கொடுப்பாளென; உதங்கன் ஆ! ஆ! நான் வெளிதிரிந்து வந்தவனாதலால் அசுசியாக விருக்கலாமென்று ஒப்புக்கொண்டு, தீர்த்தக் கரைக்குப்போய், ஸ்நான - சந்தி - செப-தப முதலியவற்றைமுடித்துக்கொண்டு,சுசியாய்மீட்டுமவ்வரண்மனையிற் சென்றான். உடனே அந்த மஹாபதிவிரதை எதிரில் வந்து வணங்கி, அவ்வுதங்கன் கேட்காததற்கு முன்னமே தானணிந்திருக்கிற கம்மலைக் கையிலேந்தி, இதோவாங்கிக்கொள்ளுமென்று கொடுத்து ஒருவசனஞ் சொல்லுகிறாள்.

சொற்கவாசியாகிய ஒரு பெரியவர் ஏதோ ஒரு காரியார்த்தமாய் நாகலோகத்திற்குச் சென்று, ஆதிசேஷனைக்கண்டு திரும்பிவருகிற தருணத்தில், அந்த ஆதிசேஷன் அந்தப்பெரியவர்க்குக் காணிக்கையாகத் தனது சிரோரத்தினங்களில் சிலது கொடுத்தான். அவைகளைப் பெற்றுக்கொண்டு அப்பெரியவர்சொற்கத்துக்குப் போகிறபோது, எனது அரசனது நல்லொழுக்கத்தைக் கேள்விப்பட்டுக் காணவந்தார். அப்போது நானும் என்னரசனும் சிங்கார வனத்திலிருந்தோம். அந்த விடத்திற்கு அவர்வந்து, எங்களால் செய்யப்பட்ட வந்தன வழிபாடுகளைப் பெற்று ஆசீர்வாதஞ்செய்து. என்னைப்பார்த்து, ஓ அம்மா! மகாலட்சுமியைப்போலே ரூபவதியாகி அருந்ததியைப்போலே கற்புடைத்தா யிருக்கின்ற உன்னை எவராகிலும் பார்ப்பாராகில் உனது ரூபத்துக்கு இச்சைகொள்வார்கள். அதனால் ஏதாகிலுங் கிஞ்சித்து வருத்தம் நேரிடும். அவ்வகைப்பட்ட வருத்த முனக்கு நேரிடாதிருக்கும்படி இதோ இந்த இரத்தினத்தைக் கொடுக்கிறேன். இந்த ரத்தினத்தைக் கம்மலி லழுத்திச் செவியில் அணிந்துகொள். நல்லொழுக்கத்தின்கண்நின்ற மகத்துக்களுக்கும் உன்புருஷனுக்குமே யன்றி, மற்ற துராத்துமாக்கள் கண்ணுக்கும் கிஞ்சித்து அசுசியாயிருக்கிறவர்களுக்கும், உன்ரூபுதெரியாது. அதனாலே உன் கற்புக் கழிவுவராதென்று வாழ்த்திக்கொடுத்துப் போயினார். அப்படியே நான் அந்த நாகரத்தினத்தை ஓராபரணமாக்கிக் காதி லணிந்திருந்தேன். பின்பு ஆதிசேஷன் இந்தச் சேதிதெரிந்து நமது லோகத்துப்பொருள் சொற்கலோகத்திலன்றிப் பூலோகத்திலிருக்கிறது தகுதியல்லவே; இதற்கென்ன செய்வோமென்று தனது மந்திரிகளோடு யோசிக்கும்போது, தக்ஷகன் எழுந்து வணங்கி, யான் எவ்விதத்திலும் அந்த இரத்தினத்தைக் கொண்டுவந்து சேர்க்கிறேனென்று உறுதிகூறிவந்து,இந்த நகையைக் கொண்டுபோக இங்ஙனேதானே வெகுசாக்ரதையாகக்காத்துக் கொண்டிருக்கிறான். ஆகையால் இந்த உடமையைமற

தியா யெங்கேயாகிலுந் தரையில் வைக்கப்போகிறீர். அப்படி வைப்பீராகில் மோசம்வருஞ் சொன்னேன். மேலும் இக்கம்மலை அணிந்து கொள்ளப்போகிற பயிலவமுனியின் மனைவியோ மிகுந்தகற்புடையவளாயிருந்தபோதிலும், இப்போது நான்சொல்லிய சங்கதியையும் கிஞ்சித்துத் தெரியப்படுத்துமென்று சொல்லி அந்தநகையைக்கொடுத்தாள். இந்த உதங்கன் அந்தக் கம்மலைப் பெற்றதைவிட அந்த அரசன் மனைவியாருடையகற்புடைமைக்கு அதிகமகிழ்ச்சியடைந்தவனாய் அரசனிடத்துவந்து, கம்மலைப் பெற்றுக்கொண்டேன் விடைதரவேண்டும் அரசனேயென, அரசன் இந்த உதங்கனைநோக்கி, ஓமஹானுபாவா! இன்றையத்தினம் என்மனையிற் புசித்துப்பின்பு உமதிடத்திற்குச்செல்லுமென்று அன்புடனே கேட்டுக்கொள்ள, உதங்கன் ஒத்துக்கொண்டு, அவ்வரசனோடு அந்தப் புரத்திற்சென்று அவ்வரசனுந் தானும் உண்கிறபோது, அந்தச் சாதத்தில் ஓர் மயிரிருக்கக்கண்டு, அவ்வுதங்கனுக்குக் கோபம்பிறந்து அரசனைநோக்கிக், கலத்திற்சோற்றையிட்டுக் கழுத்தையறுத்ததுபோல அசுசியா யிருக்கிற அன்னத்தைப் படைப்பித்து என்னைப் பசித்திருக்கச் செய்தனையே: இந்தக்குற்றத்தினாலுனது கண்ணொளி இழந்துபோகக்கடவதென்றுசாபமிட, அரசன் ஐயா! இக்குற்றம் என்னாலே நேரிட்டதல்ல. அப்படியல்லவென்று அக்குற்றத்தை என்னதாகப் பாவித்தாலும், குற்றத்துக்குத் தகுந்தசாபமிடாமல் விபரீதசாபமிடலாமா? யோசிக்காமல் சினங்கொண்டு எனக்குச்சாபமிட்டதினால், நீர்கலியாணமின்றித் தேசசஞ்சாரியாயிருக்கக்கடவதென்று அந்த உதங்கனுக்கு அரசன் மறுசாபமிட, அதனால் கோபமாறிய உதங்கன் அரசனைநோக்கி, எனக்குக்கொடுத்தசாபம் என்னை யடையாதிருக்கக் கிருபைசெய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அரசன்நகைத்து, ஐயனே! உலகத்தையாளும் அரசர்கள் இட்டசாபத்திற்கு மறுசாபங் கொடுப்பதை எங்கேயாகிலும் கேட்டதுண்டா? இல்லையே: ஆதலால்நானிட்டசாபத்திற்குமறுசாபமில்லை. தேவரீர் எல்லாநூல்களையுங் கற்றுணர்ந்து சித்தசாந்த மடைந்த பரமாத்மாவாகையால் எளியேன்மீது கிருபை கூர்ந்து, நீரிட்டசாபத்தை நீக்கவேண்டு மென்றுகேட்டுக்கொள்ள உதங்கன்மகிழ்ந்து, தான் அவ்வரசனுக்கு முன்னிட்ட சாபத்தை நீக்கி விடைபெற்றுக்கொண்டு, அந்தக்கம்மலைக் கைசோரவிடாமல், மிகுந்த சாக்கிரதையுடனே தனது குருவாகிய பயிலவமுனிவர் ஆசிரமத்தை நோக்கிச் செல்லுகையில், சூரியன் அஸ்தமித்தான். அதுகண்டு சந்தியாநுஷ்டானஞ்செய்ய இந்த உதங்கன் ஓர் கயத்தருகில் வந்து அந்நகையைப் பூமியில்வைத்துச் சந்தியாநுஷடானத்தைச் செய்துகொண் டிருக்கையில், துஷ்டனாகிய தக்ஷகன் ஒருபிராமணனாய் வேடந்தரித்துவந்து அந்நகையை யெடுத்துக்கொண்டு போக, அதனைக்கண்ட உதங்கன் அத்தக்ஷகனை விடாமற்பின்பற்றி அதிவேகமாய்ச் செல்லுகையில், அத்தக்ஷகன் தனது லோகத்திற்குச் சென்றான். இந்த உதங்கனும் அந்த நாகலோகத்திற்குச்சென்றான். இதனையுணர்ந்து தக்ஷகன் நாகலோகத்தி லிருக்கிறவர்களில் ஒருவராகிலும் இம்முனிவன்கண்ணுக்குத்தோன்றாமலிருக்க மாயஞ்செய்துமறைய, இம்முனிவன் மிகுந்ததுன்பத்தையடைந்து, எரிந்த் கோபத்தைக்கொண் டிருப்பதைவிட அதிகமகிழ்ச்சியில் மறதியைக்கொண்டிருக்கிறது கெடுதிக்கெல்லா மேலான கெடுதியென்று நூல்களாலறிந்திருக்கிறதுமன்றி, இந்நகையைக்கொடுத்த அந்த அம்மனும் நமக்குக் கியாபகப்படுத்தியிருந்தும் (விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுந்தவர்போல) ஆனேமேயென்று பலவாறு தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு, அந்த நாகலோகத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறபோது, பார்க்குமிடமெல்லாம் ரத்நமயமாகிய மாடமாளிகைகளும், சிங்காரவனங்களும், தாமரைத் தடாகங்களுமேயன்றி, வேறொருவருந் தனது கண்ணுக்குத்தோன்றினதில்லை. ஆனால் ஒருபக்கத்தில் இரண்டுஸ்திரீகள் பவளம்போன்ற தமது விரல்களில் கறுப்புநூலையும் வெள்ளைநூலையும் சுற்றிக்கொண்டிருக்கிறதையும், அதற்கப்புறம் பன்னிரண் டிதழுடன் கூடி அறுகோணம்போ லிருக்கிற ஒரு பீடத்தையும், அப்பீடத்தின் கோணங்கடோறும் பொருந்திய ஆறு குமாரர்களையும் பார்த்து வியந்து; பின்பு நாகலோகத்திலிருக்கிறவர்களைத் துதித்தாலல்லது நமதுகுறை நீங்காதென்றுகருதி, அவ்வுலகத்தாரைத் துதிக்க யத்தனித்துச் சொல்லுகிறான். ஓ மஹா தபோநிதியான காசிபமுனிவருடைய புத்திரரே! பார்வதி சமேதனாய் விளங்கும் ஸ்ரீகைலாசபதியாகிய பரமன்கைவில்லுக்கு நாணியாகித், திருமருமார்பனாகிய திருமாலுக்குப்பாயலாகி, இந்த ஏழுலோகத்தையும்பணாமுடியிற்றாங்கி, தேவர்களுக்கு அமுதத்தைக்கொடுத்துவிளங்குகின்ற உபகாரிகளே! என் குருபத்தினியார்க்காகக் கொண்டுவந்த நகையைக்கொடுத்து இரக்ஷிக்கவேண்டுமென்று பலவாறு தோத்திரஞ் செய்தும் (அபாத்திரத்திற் பிக்ஷை இட்டதுபோலப்) பயன்படாம லிருக்கக்கண்டு மிகுந்த வல்லமையையுடைய இந்த உதங்கன் மனங்கலங்கி ஒன்றுந்தோன்றாமல் விடர்வெளியில் வந்து பிராணனை விட்டுவிடுவோமென்று நிற்கிற தருணத்தில் வாயுகதியோடு கலந்த திவ்ய அஸ்வத்தின்மேல் அக்கினிசுரூபியாகிய ஒருதேவபுருஷன் இந்த உதங்கன்கண்ணுக்குத் தோற்றப்பட்டான். உடனே அவ்வுதங்கன் தரித்திரனுக்குத் தனப்புதை கிடைத்தா லெப்படியோ அப்படிபோல மகிழ்ந்து, அந்தத் திவ்யபுருஷனை வணங்கித், தான் குருநிமித்தம் வந்ததையும் வந்தவிடத்தில் நடந்ததையுஞ்சொல்லி முறையிட்டான். அந்தப்புருஷன் உன்கருத்தென்னவென்று வினவ, என்னை வஞ்சித்த இந்த நாகலோகத்தா ரெல்லாம் நடுங்கி எனக்கு வழிபடவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, ஆனாலிந்த அஸ்வத்தின்செவியில் ஊது என்றுவந்தபுருஷன்கூற, உதங்கன் அவ்வஸ்வத்தின்செவியில் ஊதி

ஞன். உடனே ஒரு அழற்சி யுண்டாயிற்று. அதனல் பஞ்சாயுதங்களுடைய திருமால் செய்யுஞ் சங்கத்தொனியைக்கேட்ட அசுரரைப்போல், பாதாளலோகத்திலிருக்கிற யாவரும் துடிதுடித்துப் பதைபதைத்து நடுநடுங்கிக் கடுகடுத்து விடவிடத்து நெஞ்சுலர்ந்து, ஆ! ஆ!இதென்ன ஆச்சரியம். இந்தச்சத்தமும்அழற்சியும் ஒருநாளும் கண்டதில்லையே: இன்றையதினம் இவ்வகைப்பட்ட கெடுதி நேரிட்டது என்னகாரணம் ஐயோ!வைதிகநிலைமைபூண்ட ஒரு மஹாத்மாவை நம்மினத்திலொருவனுகிய தக்ஷகன்செய்த கரேமானவஞ்சனையே இப்படிக்குவந்து நேர்ந்ததென்று பலவாறுநினைந்துருகி, அந்நாகலோகத்திலிருக்கிற யாவருமொருபக்கக்கூடி, எடுத்துவந்த கம்மலை அத்தக்ஷகனுலேயே யம்முனிக்குக் கொடுப்பித்தார்கள். அவ்வுதங்கன் கம்மலை வாங்கிக்கொண்டு, பரமானந்தத்தை யடைந்து, இந்நகையை நமது குருபத்தினிக்குச்சேர்ப்பிக்கவேண்டுமே, நாமோ நாகலோகத்திலிருக்கிறோம் இனி இதற்கென்ன செய்வோமென்று இடிவிழுந்தமரம்போலேங்கிநிற்கிற தருணத்தில், மறுபடியும் முன்குறித்த மஹாபுருஷன் பின்னும் அஸ்வத்துடன் தோன்றி, ஓ பிர்மசாரி! இன்னும் நீகிலேசப்படவேண்டிய காரணமென்னென்றுவினவ, ஆண்டவனே! இத்தனைநாளில் இந்த நகையைக் கொண்டுவந்து கொடுக்கிறேனென்று என் குருபத்தினிக்குக்கெடுவிட்டு வந்தேன். நான் அந்தகெடுவுதப்பாமல் நகையைச் சேர்க்கவேண்டுமென்று யோசித்து வருந்துகிறேனென்று உதங்கமுனிகூற;அப்புருஷன் இதோ இந்தக்குதிரையின்மேலேறு, ஒருநொடியில் உன்குருபத்தினியாரிடத்தில் கொண்டுபோய்விடுமென; இவ்வுதங்கன்மிகுந்த களிப்பண்டந்து அக்குதிரையின் மேலேறினுன். அக்கணம் பயிலவமுனிவர் ஆசிரமத்திற் கொண்டுவந்து விட்டு அவ்வஸ்வம் மறைந்துபோயது.

அப்பால்அந்த உதங்கன் குருபத்தினியைக்கண்டு வணங்கிக் கம்மலைக்கொடுத்தான். அந்த அம்மன் உதங்கனை வாரித்தழுவி, அப்பாமகனே! இந்நகைக்கு வெகு பிரயாசைப்பட்டுக்கொண்டுவந்த உன்பத்திக்கு மெச்சினேனென்றுவாழ்த்த, உடனே உதங்கன் அந்த அம்மன் உத்தரவுபெற்றுக்கொண்டு, தனதுகுருவாகிய பயிலவமுனிவரிடத்துக்குவந்துவணங்கிப் பயபகதியுடனே எதிர்நின்றுன். அப்படிநின்ற சிஷனைப்பார்த்து, அப்பாமகனே! குருவிசுவாசத்தில் உன்னைப்போல இவ்வுலகிலொருவருமில்லையென்று அவனைத்தழுவி, மிகுந்தஅன்புடனேநோக்கிஒருவசனஞ்சொல்லுகிறுர். ஓசகலசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவர்களிலும் சகலபற்றினையு நீக்கின மகாத்மாக்களிலும் சிறந்தசற்புத்திரனே! பௌடியந்தமஹாராஜன் மனைவிகாதிலிருக்குங் கம்மலைக் கொண்டுவந்து கொடுக்கப்போயின நீ, இத்தனைநாள் வரைக்கும் தாமசப்பட்டு வராதிருந்ததற்குக் காரண மென்னவென்றுகேட்க; உதங்கன் அரசனிடத்திற்சென்று கம்மலைப்பெற்று நாகலோகம்போய் இவடம்வந்து சேர்ந்த விர்த்தாந்தத்தை ஆதியோடந்தமாகச்சொல்லி, மறுபடியும் உதங்கன் குருவைப்பார்த்து ஒருவசனஞ்சொல்லுகிறுன். ஓ ஐயனே! நான் இவ்விடம்விட்டுப் பௌடியந்தமஹாராஜன் பட்டணத்தை நோக்கிச் செல்லுகையில், வெள்ளை எருதின்மேலேறி ஒருதிவ்ய புருஷன்வந்து என்னைமறித்து இவ்வழியே போகிறதற்கு உனக்குமனமிருந்தால் இந்த எருதின் கோமயத்தைப்புசித்தால் போகலாம் இல்லாவிட்டால் நான் உன்னைப்போகவொட்டேனென்று சொன்னுன். பின்பு நாகலோகத்திற் செல்லுகையில், இரண்டுஸ்திரீகள் தமதுவிரல்களில் கறுப்புநூலையும் வெள்ளை நூலையும் சுற்றிக்கொண் டிருந்தார்கள். மற்றோரிடத்தில் அறுகோணபீடமும் கோணத்துக்கு இரண்டிதழும் ஆறுகுமாரருமிருந்தார்கள். நான் அந்த நாகலோகத்திற்சென்றுதிக்கொன்றுந்தெரியாமல் இருக்கிறதருணத்தில் அஸ்வத்தின்மேல் ஒரு சௌந்தரிய புருஷன் வந்து என்னை இவிடத்துக்குவரும்படிசெய்வித்தான். இவர்களை எல்லாம் என்னுற்கூடியமட்டும்யோசித்துப் பார்த்தும், அவர்களின்னுரென்று என்கருத்துக்குத் தோன்றவில்லை. ஆண்டவனே! கிருபைபுரிந்து அவர்களை இன்னுரென்று யான் உணர்ந்துசொள்ளப்போதிக்கவேண்டுமென; பயிலவமுனிவர் உதங்கனைப்பார்த்துச் சொல்லுகிறுர்.

தம்பிஉதங்கா! பௌடிகராஜனைக்காணப்போகிறபோதுவழியில் வெள்ளை எருதிலேறிவந்துமறித்தவன் இந்திரன். அவ்வெருதோவெள்ளையானை. கோமயமோ அமுதம். பாதலலோகத்தில் கறுப்புநூலும் வெள்ளைநூலும் விரலிற்சுற்றிக்கொண்டு இரண்டுஸ்திரீகளிருந்தார்களே, அவர்களில் ஒருத்திதாதை. மற்றொருத்தி விதாதை. கறுப்புநூலும்வெள்ளைநூலும் இரவும்பகலுமாம். அறுகோணமும் கோணங்கடோறும் இரண்டிதழும் ஆறுகுமாரரும் என்னவென்றுல், அறுகோணம் பூமி. கோணங்கடோறும் இரண்டிதழிருந்தது பன்னிரண்டுமாதம். அந்த ஆறுகுமாரரும் ஆறுஇருதுக்கள். உன்முன்குதிரையோடு தோன்றினபுருஷன்வருணன். அக்குதிரையோ அக்கினிபகவான். நீ குருபத்தியுள்ளவனுதலால் உனக்குத்தேவரெல்லாஞ் சகாயப்பட்டார்கள். உன்னைப்போலகனவான் இவ்வுலகத்தில் யாவருமில்லை. இனி நீதவநிலைசேர்ந்து தவஞ்செய்யென்றுபயிலவமுனிவர்சொல்ல, அதனுல் உதங்கன்மகிழடைந்து குருவாக்கியத்தை சிரமேற்கொண்டு சிலநாள்தவம்புரிந்து, தன்னை வருத்தப்படுத்திய தக்ஷகனுக்கு ஒருகெடுதிசெய்யவேண்டுமென்று மனதில் நினைத்துச், சந்திரவமிசசிகாமணியாகிய ஜெனமேஜெயமஹாராஜன்சபைக்குவந்தான். உடனே அரசன்கண்டுஎதிர்கொண்டுபோயழைத்துவந்து, சோடசஉபசாரஞ்செய்து, பொற்பீடமளித்து இருக்கச்சொல்லி, யோகக்ஷேமமுங்கேட்டு, ஓ முனிசிரோஷ்டராகிய ஐயனே! தேவரீர் இவ்விடத்தி

ற்கு எழுந்தருளிய காரணமென்னமோ எளியேனுக்குத் தெரியவில்லையென்று மிகுந்தபயபத்தியுடனே வினவ, உதங்கமுனிசொல்லுகிறார்: ஓமஹாராஜனே! எனக்குக்கல்விபயிற்றியபயிலவமுனிவர்க்குக்குருதட்சணையாகப் பௌடியந்த மஹாராஜன் மனைவிதரித்திருந்த கம்மலைவாங்கி வருகிறபோது, என்னை வஞ்சித்து அந்த நகையைக்கொண்டுபோய், எனக்குமிகுந்த வருத்தத்தைக்கொடுத்த தட்சகனையும் அவனோடு சம்பந்தப்பட்டவர்களையுந் தண்டிக்கவேண்டி, சர்ப்பயாகஞ்செய்ய உம்மைநாடிவந்தேனென்ன; அரசன்முனிவனைநோக்கி, ஐயனே!சிறியோர்செய்தபிழைபொறுப்பது பெரியோர்தன்மை; அப்படியல்லவென்றுதண்டிக்கப் புகுந்தால் குற்றவாளியைத் தண்டிக்கவேண்டுமேயன்றி. அவர்களின் இனத்தாரையும் தண்டிப்பது தகுதியாவென; உதங்கன் அம்மொழியைக் கேட்டுக் குலத்திலொருவன் சிறப்படைந்தால்அச்சிறப்பைக்குலமுழுதும் அடையும்,அதுபோலக்குலத்திலொருவன் குற்றவாளியானால்அக்குலமுழுதுங்குற்றமாகும்.இது திருஷ்டாந்தமாகும்படி இங்ஙனம் ஒருகதைசொல்லுகிறேன் கேளென்று உதங்கமஹாரிஷி சொல்லுகிறார்.

உதங்கமுனிச்சருக்கம் முற்றிற்று.

மூன்றாவது,

பிருகுமுனிச்சருக்கம்.

ஓ அரசனே! ஒருவனத்தில் பிருகுமுனிதன்மனைவிபுலோமிசையோடு கூடிக்குலரவிவாழ்ந்து மகிழ்ச்சியடைந்திருக்கிற நாளில், புலோமிசை கர்ப்பவதியாயினாள். அப்படியிருக்க அம்முனிவன் வழக்கப்படி ஔபாசனாக்கினிபூசித்துவந்தான்.ஒருநாள்சூரியன் அஸ்தமனமடையக்கண்டு தன் மனைவியையழைத்து, நான் வருகிறபரியந்தம் இந்த ஓமத்தை நடத்திவாவென்று கட்டளையிட்டுத், தான்சந்தியாவந்தனஞ் செய்யப்போயினான். அந்த அம்மன் பூரணகர்ப்பமாயிருந்தபோதிலும், கணவனிட்ட கட்டளையைத்தள்ளாமல் அந்த ஓமத்தைப் பூசித்துவந்தாள். அப்படி செய்கிறதருணத்தில், ஓமகுண்டத்தெழுந்த அக்கினிதேவன் பிரசன்னமாகி, அந்த அம்மன்கொடுக்கிற ஆகுதியை ஏற்று, அக்குண்டத்தின் மத்தியிலிருந்தான். அந்தவேளையில் ஒரு அரக்கன் அவ்வனத்திற் பிரவேசித்து, அந்த ஓமவெளிச்சத்தைக்கண்டுவந்து, ஓமஞ்செய்கிற முனிபத்தினியைப்பார்த்து, துராத்மா வாகையால் கெடுதியானநினைப்பை மனதில்வைத்து, அந்த ஓமகுண்டத்தில் விளங்கும் அக்கினி தேவனைநோக்கி, அடா அக்கினி! உனக்குமுன்னிருக்கிறபெண்யார்?உனக்குத்தெரியுமாவென்று வினவினான். அக்கினிதேவன் இவன்யாரோ அரக்கன் என்றுமதித்து, ஓஅரக்கனே! இந்த அம்மன் பிருகுமுனிபத்தினியாரென்றுஉள்ளபடி சொல்லஅரக்கன்கேட்டு, இந்தப்பெண்பிருகுமுனிமனைவியா? சீ!சீ! நான்சொல்லுகிறதைக்கேள். நான்சிறுபோது இவளை விவாகஞ்செய்தேன். என்னைமோசஞ்செய்து அந்தமுனிவனெடுத்துக்கொண்டுவந்து கலியாணஞ் செய்துகொண்டான். இவளைத்தேடித்தேடி எனதுகாலுந்தேய்ந்துபோய்விட்டது. இந்தவனத்தில் இப்போதுகண்டேன். இனிவிடப்போகிறதில்லை என்றுசொல்லி அதிவேகமாய் வந்து அந்த அம்மனைத் தூக்கிக்கொண்டு சென்றான். அந்த அம்மன் அதிர்ந்துநடுங்கி மிகுந்தகூக்குரலிட்டு அலறிக்கொண்டு போகிறபோது, பூர்ணகர்ப்பவதியாகையால் அவ்வரக்கன் தோளிலேயே புத்திரனைப்பெற்றாள். அப்புத்திரன் ஞானசிகாமணியாய், தன்தாய்க்குக் கெடுதிநினைத்ததுராத்மாவைக்கோபித்து நோக்கினான். அந்த நோக்கத்தில் இரண்டு அக்கினிப் பொறிகளுண்டாகி, அவனுடலைப் பஸ்மீகரமாக்கிவிட்டன. இந்த மகத்துவத்தைக்கண்ட புலோமிசைபுத்திரன்மேல்மிகுந்த அன்புடையவளாய் வாரித்தழுவியெடுத்துக்கொண்டு தன்னாசிர்மத்துக்குவந்தாள்.

உடனே பிருகுமுனி சந்தியாநுஷ்டானத்தைமுடித்துக்கொண்டுவர, அவரைப்புலோமிசைகண்டுஅலறிக் கூக்குரலிட்டழுது சொல்லுகிறாள்: ஆண்டவனே! ஓமஞ்செய்யச்சொல்லி எனக்குக் கட்டளையிட்டுப்போனபின்பு அவ்வாறு நான் அந்த ஓமத்தைநடத்த, அக்கினிபகவான்பிரசன்னமாகிஅக்குண்டத்தின்மத்தியிலிருந்து, நான்கொடுக்கும் ஆகுதியை ஏற்றுநிற்கிறதருணத்தில், ஒருஅரக்கன்வந்து என்னைஎடுத்துக்கொண்டுபோயினான். அப்போது நான்பயந்து அலறிக்கூக்குரலிட் டழுதுகொண்டு அவன் தோண்மேற் செல்லுகையில் இக்குமாரனைப்பெற்றேன். இக்குமாரன்அந்தத் துராத்மாவைக்கோபித்து நோக்கினான். அந்தவேளையில் இவனது நேத்திரத்திலுண்டாகியதீயினால் அவ்வரக்கனுடல்சாம்பராயிற்று. உடனேகுமாரனை எடுத்துக்கொண்டு இவடம்வந்து சேர்ந்தேனென; பிருகுமுனிகோபித்து, ஓபெண்ணே! வீட்டிலிருந்த உன்னை அவன் எவ்விதத்திலுணர்ந்து எடுத்துப்போனான். அவன் எடுக்கிறபோதுஅக்கினிதேவன்சும்மாயிருந்தானோவென்றுகேட்க, அந்த அரக்கன்வந்து என்னையாரென்று அக்கினிதேவனைக்கேட்டான். அத்தேவன் தங்கள் நாமத்தைச்சொல்லி இன்னார்மனைவி என்றுசொன்னான். அதன்மேல் என்னை அவ்வரக்கனெடுத்தானென,பிருகுமுனி அந்தஅக்கினிதேவனை அழைத்து,என்மனைவியை அரக்கனுக்குக் காண்பித்தபடியினாலே நற்கந்தமாத்திரம் புசிக்கிறநீஇனிமேல் துர்க்கந்தத்தையும்புசிக்கக்கடவதென்று சாபமிட, அக்கினிதேவன் மிகுந்த வருத்தத்தையடைந்து, ஓமுனிநாதா!அவ்வரக்கனுன்

பத்தினியைப்பார்த்து இவள் யாரென்று என்னைக்கே
ட்டான். உண்மைகூறுவதேபரலோகத்தின்பமென்று
மேலோருரைத்திருக்கிறபடியாலும்,நான்எல்லாவற்றி
ற்குஞ் சாட்சியானபடியாலும், உண்மையைச் சொன்
னேன். அதற்காகஎனக்கு இவ்வகைப்பட்ட சாபமிட
லாமா? நீ பிராமணனுகையால் என்னகுற்றஞ் செய்த
போதிலும்பொறுப்பது என்போலியர்கடமையென்று
பெரியோர்கள் விதித்திருக்கிறார்களாதலால்,உனக்கும
றுசாபங்கொடாமல்பொறுத்தேனென்றுசொல்லி,உல
கமுழுதும் நிறைந்திருக்குந்தன் அமிசையைக் கிரகித்
துக்கொண்டு ஓரிடத்திற் பதுங்கியிருந்தான். பின்பு உ
லகத்தில் அக்கினியில்லாமையால் யாகாதிக்கிரமங்கள்
யாதொன்றும்நிறைவேறாமல்,எல்லாஉலகத்தார்களும்
கனவருத்தமடைந்து இந்திரனிடத்துவந்து முறையி
ட, இந்திரன் பிரமனிடத்துச்செல்ல, பிரமன்யாவரை
யுமழைத்துக்கொண்டுஅக்கினிதேவனிருக்கிறயிடத்து
க்குவந்து அவனையழைத்து,ஓஅக்கினிதேவா! பிருகு
முனிகொடுத்த சாபத்துக்குமறுசாபங்கொடுக்கிறேன்
அஃதென்ன வென்றால்,பிருகுமுனியிட்டசாபத்தின்
படி துர்க்கந்தத்தைப் புசித்தாலும் அதனால் வருங்கு
ற்றம் உன்னை யடையாதிருக்கக்கடவது. மேலும் நீ
இப்போதிருக்கிறவிதத்திலு மேலாய் இனிவிர்த்தியாக
வேண்டுவது. நீவந்துமுன்போல உலகங்களில்நிறைந்
திருவென்று கட்டளையிட்டு, அந்தப் பிருகுமுனி பத்
தினியழுதகண்ணீர் வீணாகப்போகவொட்டாமல் ஒரு
நதியாக்கி,அதற்கு வதுசரை என்றுபெயரிட்டு தனது
லோகத்துக்குப் போய்ச் சேர்ந்தான்: பின்பு பிருகுமு
னி தன் குமாரனுக்குச் சவுனகனென்று பெயரிட்டு,
அதிகவிருப்பத்துடனே வளர்த்து, நாலுவேதம் ஆறு
சாஸ்திரம் அறுபத்துநாலுகலைக்யான முதலியவற்றை
போதித்தான். அப்புத்திரனும் அவைகளைக் கற்று,
நல்லகியானஸ்தனாய் ஒருவனத்திற் சென்று தவத்தி
லிருந்தான்.

அந்தச் சவுனகமுனி நெடுங்காலந் தவத்திலிருந்
தமையால், அம்முனிவனைப் புற்றுமூடிக்கொண்டது.
இப்படிசிலநாள் சென்றபின்பு, இரவிகுலதிலகனான ய
யாதிமஹாராஜன் வேட்டையாட யத்தனித்து, மந்தி
ரிபிரதானி முதலானவர்களோடு மற்றநால்வகைத் த
ள்மும் தன்னைச்சூழ்ந்துவர, தன்மகளாகிய சுகன்னி
யோடு பிரயாணப்பட்டு ஒருவனத்தில்வந்து, விலங்கி
னங்களெல்லாங்கலங்கி நெட்டுயிர்ப்போடு மரணாவஸ்
தையடைய வேட்டையாடி, அவ்வேட்டையினாலுண்
டாகிய இளைப்பாற, நெருங்கித்தழைந்தசோலைகள்சூ
ழ்ந்த இந்தச் சவுனகமுனி தவஞ்செய்யும் வனத்தில்வ
ந்து, தனதுதண்டு தளங்களைவிட் டிறங்கியிருந்தான்.
அந்தவேளையில் அவ்வரசன் குமாரத்தியாகிய சுகன்
னி சிலதாதிமார்களுடனே, அவ்வனத்திலுள்ளவிநோ
தங்களைப் பார்க்கச்சென்றாள். அப்படிசெல்லும்வழியி
ல் இந்தச்சவுனகமுனியைமூடியிருக்கிறபுற்றிருந்தது.
அதில் முனிவன் கண்ணொளிபாய்ந்திருந்ததை யறியா
மல், இதென்னஇந்தப்புற்றில்இரண்டு ஒளிஉண்டாகி
இருக்கிறதென்று அந்தச்சுகன்னி ஒருசுப்பலெடுத்து,
அவ்வொளிவழியாகக் குத்திவிட்டு வந்துவிட்டாள். சு
ப்பலால்குத்தினகுத்து அந்தச்சவுனகமுனி கண்ணிற்
பட்டது. அதனாலே அம்முனிவனுக்குக் கோபமுண்
டாகி, முனிவரிருக்கிற இடத்துக்கு ஒருவர்வரக்கூடா
து. வந்தும் இவ்வகைப்பட்ட துஷ்டத்தனஞ்செய்கிற
தாவென்றுகொதித்து, அந்தயயாதிமகாராஜனும் அவ
ன்மந்திரியுந்தவிர மற்றவர்க்கெல்லாம் கண்ணொளிம
ழுங்கச் சாபமிட்டான். உடனே அவ்வரசன்சேனைகள
னைத்தும் தத்தித்தடுமாறிக் குருடு பரவி இதென்ன
ஆச்சரியமென்று கூக்குரலிட, அதனை அரசன்கண்டு,
ஓமந்திரி! இதென்னவிந்தை, நமதுசேனைகள்கண்ணொ
ளிமழுங்கி வருத்தப்படுகின்றன. ஐயோ ! இதுபெரிய
நிந்தை யாதலால் இதனையுணர்ந்துசொல்லென,மந்தி
ரிசற்றுநேரம் ஆலோசித்து, ஓ அரசனே! இந்தவனம்
முனீஸ்வரர்க ளுடையதா யிருக்கவேண்டும். நமது
சேனைகளாலே ஏதோ ஒருகுற்றம் நேரிட்டிருக்கவே
ண்டும். அதனாலே இத்துன்பம் வந்ததாய்த் தோன்று
கின்றதென, அரசன்தனது தளத்தைநோக்கி, இவ்வ
னத்தில் யாராவது துஷ்டத்தனஞ் செய்திருந்தால்
தெரிவிக்கிறதென்றுபறைசாற்றுவித்தான். அப்பறை
யோசையைச் சுகன்னிகேள்விப்பட்டுத், தன் தந்தை
தாளில்வந்துவணங்கி, ஒருபுற்றில் இரண்டொளிஉண்
டாயிருந்தது கண்டு அவைகளைச்சுப்பலால்குத்தினே
னென, அரசன்கேட்டுத் திகிலடைந்து, அப்புற்றைக்
காட்டச்சொல்லி, அந்த இடத்துக்குப்போய் அப்புற்
றைச் சோதிக்கும்போதில்,சவுனகமுனிவர் தோற்றப்
பட்டார். அம்முனிவரை அரசன்கண்டு, மிகுந்தபயப
த்தியுடனே வணங்கி, அநேகவிதமாய்த் தோத்திரஞ்
செய்து, என்புத்திரிசெய்த பிழையைப்பொறுத்துஇர
ட்சிக்க வேண்டுமென்றுவேண்ட, அம்முனிவர்மகிழ்ந்
து முன்னிட்டசாபத்தை நீக்கி, அவ்வரசனுக்கும் பல
ஆசீர்வாதஞ்செய்தார். அதன்மேல்அரசனுக்குமிகுந்த
மகிழ்ச்சியுண்டாகி, ஓமுனிநாதா! இந்தச்சுகன்னிஎன்
புத்திரி. இவள்செய்த குற்றத்தை மன்னித்ததற்காக
இப்பெண்ணையுமக்குக் கல்யாணஞ்செய்துகொடுக்கவி
ருப்புற்றிருக்கிறேனென,அம்முனிவர் அவ்வரசன்கரு
த்தின்படிசம்மதிக்க,உடனே அரசன் அவிடத்திலேயே
கல்யாணமண்டபமியற்றித், தன்குமாரத்தியைக் கன்
னிகாதானமாகக்கொடுத்து,அம்முனிவரிடத்துவிடை
பெற்றுத் தனது நகரத்திற்குப்போய்ச் சேர்ந்தான்.
பின்பு இந்தச்சுகன்னியை அம்முனிவர்பணிவிடைசெ
ய்யவைத்துக்கொண்டார். இப்படி சிலகாலஞ்சென்ற
பின்பு, ஒருநாள் அந்தச்சுகன்னி தனதுகணவன்பூசை
க்குச் சலந்திரட்டிவரச்சென்றாள்.

அப்போது அவ்வழியில் அஸ்வநிதேவர்கள் இரு
வரும் எதிர்வந்து, ஓ பெண்ணே! நீயார் ? உனதுபெய

ரென்ன? உனதுகணவன்யார்? அவன்பெயரென்னவென்றுகேட்க, அதற்குஅந்தச்சுகன்னி யான்யயாதிராஜன்பெண், என்கணவன் சவுனகமுனிவர், என்பெயர்சுகன்னியென, அஸ்வனிதேவர்கள் அப்பெண்ணின்கற்பிணிலையையறிய ஒருவசனஞ்சொல்லுகிறார்கள்: ஓ பெண்கள்நாயகமே! உன்னிளமைப் பருவத்துக்குத் தகுந்தகணவனைத் தேடிக்கொள்ளாமல், மிகுந்தகிழத்தனத்தையுடையவராய் ஐம்புலனுமொடுங்கினவராய்விளங்குகின்ற, சவுநகமுனிவரைக் கணவனாகக்கொண்டதில் நீகண்டபலனென்ன? ஒன்றுமில்லையே: ஆதலால் எங்களிருவர்களில் யார்பேரில் உனக்கிச்சை யிருக்கிறதோ அவர்களைக் கணவனாக்கிக்கொள். அதனாலே நீ பெற்றஅழகுக்குப்பயனடைவாயென; அக்கன்னிகை மறுவுத்தரவுசொல்லாமல், மவுனமாய்த் தனதுகணவனிடத்துவந்து வணங்கித், தன்னை இருவர்வந்து மறித்துக்கூறிய வசனங்களைப்பிசகில்லாமல் சொல்லிநின்றாள். முனிவர் தமது ஞானதிருஷ்டியினால் அஸ்வனி தேவர்களென் றுணர்ந்து, ஓ பெண்ணே! நீ அவர்களிடத்திற்சென்று, உங்களிலொருவரைமணஞ்செய்துகொள்ளுகிறேன் ஒருவர் ஏற்படுங்களென்றுசொல்லு. அவ்விருவருக்கும் வழக்குநேரிடும்; அதன்பின்பு என்னிடத்துக்கு வருவார்கள், அதன்மேல் பேசவேண்டியதைப் பேசிக்கொள்ளலாமென்று அனுப்ப, அந்தசுகன்னி மஹா பதிவிரதையாதலால், கணவன் கூறியபடி. அஸ்வனிதேவதைகளிடத்துவந்து, உங்களிருவரில் ஒருவரைக் கணவனாகக்கொள்ளுகிறேன் ஏற்படுங்களென, அதைக்கேட்ட அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் வழக்கிட்டு, இவ்வழக்குத்தீர்ப்பு சவுனகமுனிவர்தான் சொல்லவேண்டுமென்றுகருதி, அப்பெண்ணை அழைத்துக்கொண்டு சவுனகமுனிவரிடத்துக்குப்போய், தங்கள் வழக்கைச்சொன்னார்கள். அச்சவுனகர் அவ்விருவரையும் பார்த்து, இப் பெண்ணுக்கு நானுமோர் பாத்தியனாதலால், உங்களைப்போல எனக்கும்வழக்கிருக்கின்றதென்றுகூற; ஆனால்முனிவரே! நாமெல்லோரு மற்றொருவரிடத்திற்சென்று வழக்கைத் தீர்த்துக்கொண்டு, மூவரிலொருவர் இந்தச் சுகன்னியை மணஞ்செய்து கொள்வோமென்று பேசிக்கொண்டு போகிறபோது, ஒருசுனையைக்கண்டு, தங்களுக்குள்ஒருதீர்ப்புச்செய்து, அக்கன்னிகையைப்பார்த்து, ஓபெண்ணே! இச்சுனையில்மூவருமுழுகியெழுந்துவருகிறோம்; உனக்குஇஷ்டமானபுருஷனைத் தொடுவென்றுசொல்லி, அம்மூவரும் அந்தச்சுனையில் முழுகிவெளிப்பட்டார்கள். அக்கால் கிழத்தனத்தையுடையசவுனகரும் அந்த அஸ்வனி தேவர்கள் எவ் வுருவத்தோடு வெளிப்பட்டார்களோ அவ் வுருவத்தைக்கொண்டு, மூவரும் ஒருரூபமாய் நின்றார்கள். அதுகண்டு அக்கன்னிகை தன்கணவனைத்தியானித்துத், தெய்வகடாக்ஷமெப்படியோவென்று மனதில்நினைத்துக், கடவுளைச் சாஷ்டாங்கமாய்வணங்கி எழுந்துநின்று, ஒருவரைத் தொட்டாள். அப்படி தொட்ட புருஷன் சவுனகமுனிவராயிருக்கக் கண்டு, அஸ்வனி தேவர்கள் மஹா பதிவிரதையென்று மதித்து வாழ்த்தி, அவ்விருவரும் விடைபெற்றுத் தமது லோகம்போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு சவுனகமுனியும் அந்தச்சுகன்னியும் இரதியும் மதனும்போலக் கூடிக்குலாவிவாழ்ந்து, ஒருபுத்திரனைப்பெற்று, அப்புத்திரனுக்குச் சனகனென்று பெயரிட்டார்கள். அச்சனகன்சகலகலைக்கியான சுரூபியாய் மகா நிலைபெற்ற தவசிலாக்கியனாகி ஒருமகாமுனி புத்திரியைவிவாகஞ்செய்து உரூருவனைப் பெற்றான். அவ்வுரூருவன் ஒருமுனிபுத்திரியை விவாகஞ்செய்து பிரியாவிடையா யிருக்கிறநாளில், ஒருநாள் சந்தியா நுஷ்டானஞ்செய்யப்போயினான். அப்படி அவன்போய்வருகிறதற்குள், ஆசிரமத்தி லிருந்த அவன்மனைவி பாம்பினாற்கடியுண்டு விஷந்தலைக்கேறி, கைகால்களை யுதறிக்கொண்டு மரணாவஸ்தையி லிருந்தாள், அந்த உரூருவன்வந்து கண்டு, இடிவிழுந்தமரம்போலேங்கி மதிமயங்கி, யாதொன்றுந் தோன்றாமல் பிரமைகொண்டு நின்று, சற்றுநேரத்திற்குப்பின் ஒருவிதமாய்த் தேறி, அவ்விஷத்துக்குத் தகுந்த சிகிச்சைகள் செய்தும்பயன்படாமல் மனைவியிறக்கக்கண்டு, சாவுக்குச் சரியான மூர்ச்சையடைந்து, பின்பெழுந்து அழுது, ஐயோ! பெண்ணே! இதுவரைக்கும் பூவும் மணமும் போலும் பாலும் நீரும்போலும் வேற்றுமையின்றிக் கூடிக்கலந்திருந்தஉன்னை, இப்போது இறக்கவிட்டுத் தனியேபிரிந்திருக்க என்னால் சக்தியில்லையே: என்ன செய்வேனென்றுபலவாறுதுக்கித்து, தன்னுயிரையும் விட யத்தனித்தபோது, ஆகாயவாணி அதட்டினாள். உரூருவன் இந்தச்சத்த மேதென்று நாலுதிசையும் நோக்குகிறபோது, மறுபடியும் ஆகாயவாணி ஓஉரூரு வாவென்று அழைத்தாள். அதனால் ஆகாயவாணியென்று அறிந்து வந்தனைவழிபாடுசெய்துநின்றான். அப்போது ஆகாயவாணிசொல்லுகிறாள், ஓஉரூருவா! உன் மனைவி விதிகிழிந்து பாம்பின்வாயிற்பட்டாள். அவளுக்காக நீயும் உயிர்விடயத்தனிப்பது தகுதியா? அந்த மனைவியின்பேரில்மிகுந்த அன்புஉனக்குஉண்டாயிருந்தால், உனது ஆயுளில்பாதிகொடுத்தால் அவள்முன்போல் உயிர்பெறுவாளென்றுஉறுதிகூற, அந்தஉரூருவன் அக்கணம் தன்னாயுளில்பாதி தத்தஞ்செய்தான். உடனேமனைவி உயிர்பெற்று, நித்திரைசெய்து எழுந்ததுபோல எழுந்தாள். உரூருவன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தவனாய் அவளைவாரித் தழுவி, நடந்த விருத்தாந்தத்தைக்கூறி, இவ்வளவு வருத்தத்தை யுண்டாக்கினதுபாம்பல்லவோ? அப்பாம்பினத்தையெல்லாம் நிர்மூலப்படுத்துகிறேனென்று சபதஞ்செய்து, ஒருதண்டினையேந்தி, யமனைப்போலக் காட்டிற் பிரவேசித்துப் பாம்பினத்தை வதைத்து, நித்தம் நித்தம் ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் கோடி இப்படியாகக் கொன்றுவருகிறநாளில், ஒருபுற்றடியில்பெரும்பாம்பிருக்

தது. உரூருவன்அதனைப்பார்த்து, அதிவேகமாக ஓடி கையிலிருக்கிற தண்டைவீசி அடிக்கப்போம்போது, அந்தப்பாம்பு ஹரிஹரி! கோவிந்தா! பரந்தாமா! சர்ப்பசயனு! என்று ஓலமிட்டது. அதைப்பார்த்து அதிசயப்பட்டு, ஓ நாகமே! நீயேன் கடவுளைத் தியானித்தாயென்று உரூருவன்கேட்க, நாகம்-ஓ மகாநிலைபெற்ற தவசிரேஷ்டரே! யாதொருகுற்றமுஞ்செய்யாத என்னை அடித்துக் கொல்லவந்தீர். அவ்வடிக்குத்தப்பிப் பிழைத்துப்போக என்னாற்கூடியமட்டும் இப்புற்றில் நுழையலாமென்று அதிவேகமாக ஓடி வந்தும் உமதுகதைக்கு இறையாகப் போய்விட்டோமேஎனக்கருதி கடவுளை நினைத்தேனென்று சொல்லிப், பின்னும் உரூருவனைப்பார்த்து, ஓ முனிவரே! நீர் இவ்வகைப்பட்ட கொடுமையான செய்கையில்பிரவேசித்த காரணமென்னென்று கேட்டது. உரூருவன்முன்னேர்நாகத்தினால் தன்மனைவிக்கு நேரிட்ட துன்பத்தை விளம்பி, அன்றுமுதல் இந்த விரதங்கொண்டு பாம்பினத்தை நாசப்படுத்திவருகிறேனென்று சொல்லி மீட்டுங் கதையினால் மோதுகிறசமயத்தில், அந்நாகமறைந்து, காவி காம்பர சடாடவி தண்டு கமண்டலதாரியாய் எதிரில் ஒரு முனிபோல் தோன்றிற்று. உரூருவன்பார்த்து மிகுந்த ஆச்சரியமடைந்தவனாய் நிற்கிற தருணத்தில், அம்முனிவன்உரூருவனை வணங்க, உரூருவனும் அம்முனிவரை வணங்கி ஒருவர்க்கொருவர் வந்தனை வழிபாடுகள் செய்தபின்பு, உரூருவன் அம்முனிவரைவணங்கி, அகஸ்மாத்தாய் இந்தஇடத்தில் தோன்றின உமது விருத்தாந்த மென்னவென்று கேட்க, அம்முனிவர் சொல்லத்தொடங்கினார்.

ஓ முனிநாதா! முன்னம் நான் பிராமணத் திருமேனி. எனக்கு ஆயிரபாதனென்று பெயர். ஒருநாள் ஒருமகாமுனிவர் தவஞ்செய்கிறவிடத்திற்குப்போய், அவர்பேரில் ஒருதுரும்பை எடுத்துப்போட்டுப் பாம்பு பாம்பு என்று பரியாசஞ் செய்தேன். அதன்மேல் அம்முனிவருக்குக் கோபம்பிறந்து, பாம்புபாம்புஎன்று பரியாசஞ்செய்தபடியால், நீபாம்பாய்ப்போகக்கடவதென்று சபித்தார். உடனே நான் பயந்து நடுங்கி, அவரைவணங்கி, இச்சாபம்என்றைக்குத்தொலையுமென்று கேட்டுக்கொண்டேன். தேவரீருடைய நாமதேயத்தைச்சொல்லி, உமது தரிசன மானவுடன் சாபவிமோசன மாமென்றுஅருளினார். இன்றையதினம்உமதுதரிசனத்தைக் கண்டு என்சாபத்தைநீக்கிக்கொண்டேன். இனிதங்களுக்கொரு விண்ணப்பம். அஃதென்னவெனில்- இப்போது கொண்டிருக்கிற விரதம் தாங்கள் பூண்டிருக்கிற தவவேடத்துக்குத் தகுதியானதல்ல. அப்படியல்லவென்று தவவேடத்தை மதிக்காமல், அவ்விரதத்தை நிறைவேற்ற வேண்டுமென்று துணிவுகொண்டாலும், உமக்குச் சத்துருவாகியநாகங்களைப் பற்றறச்செய்வதற்கு உம்மாற்கூடுமா? ஏனென்றால், அவைகள் இந்தப் பூலோகத்தில் மாத்திரமன்றி, சொற்கலோகத்திலும் அண்டங்களிலும் நாகலோகங்களிலும்நிறைந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் எவ்விதத்தில் நாசஞ்செய்வீர்? ஆதலால்-ஓமுனிசிரேஷ்டரே! பாம்பினத்துக்கெல்லாம் அப்பாம்பினத்தைப்பெற்ற மாதாவால் இட்டசாபமொன்றிருக்கின்றது. அஃதென்னவென்றால் - சந்திரவமிசத்தில் ஜெநமேஜெய னென்றொருஅரசனுதிக்கிறான். அவன் செய்கிற சர்ப்பயாகத்தில் எல்லாருமடிவீர்களென்று சாபமிட்டிருக்கிறாள். அதற்குள்நீரேன் வீண்வருத்தமெடுத்துக் கொள்கிறீரென, உரூருவன் அதனைக்கேட்டுத் தனது கோபத்தை யடக்கி, தன்னாசிரமஞ்சேர்ந்து மனைவியோடு வாழ்ந்திருந்தான். கேட்டீரோ ஓ ஜெநமேஜெயமகாராஜனே! குலத்தில் ஒருவன் தீமைசெய்தால்அக்குலமுழுவதும் துன்பப்படுமென்று உதங்கமுனிபுகல, ஜெனமேஜெயன் அவ்வுதங்கமுனியைவணங்கி, ஓ முனிநாதா! பெற்ற மாதாவானவள் பிள்ளைகள்பேரில் இரக்கமில்லாமல் சாபமிடவேண்டியகாரண மென்னவென்றுவினவ, உதங்கமுனி சொல்லுவதானார்.

பிருகுமுனிச்சருக்கம் முற்றிற்று.

நான்காவது,

கருடபகவான்சருக்கம்.

ஓ அரசனே! சாபாநுக்கிரக சாமார்த்தியத்தையுடைய காசிபமுனிவர்க்குப் பதின்மூன்று மனைவியருண்டு. அவர்களில் விநதை-கத்துருவை என்னுமிருவரும் புத்திரரில்லையென்று மிகுந்த துன்பத்தையடைந்து, நமதுகணவனைநோக்கித் தவஞ் செய்வோமாகில்அவர்கிருபையினால் புத்திரசந்தான முண்டாகுமென்று கருதி, அவர்தவஞ்செய்யும் கந்தமாதன வெற்பின் சாரலினோரிடத்தில்வந்து தவஞ்செய்தார்கள். இப்படியவர்கள் தவஞ் செய்கிறதைக் காசிபருணர்ந்து, அவ்விருவர்க்கும் பிரசன்னமாகி, உங்கள் கருத்தென்னவென்று வினவ, விநதையென்பவள் வணங்கி, ஆண்டவனே! யாவராலும் வெல்லக்கூடாத வல்லமையுடைய இரண்டுபுத்திரரை யான்பெறக்கிருபைசெய்யவேண்டுமென்று கேட்டாள். மற்றொருத்தியாகியகத்துருவை வணங்கிச், சிறந்தபராக்கிரம முள்ள நூற்றுநாலு புத்திரரும் ஒருபுத்திரியும் யான்பெறத் தயைசெய்யவேண்டுமென்று கேட்டாள். அவ்விருவர்கருத்து மகிழ்வெய்தப் புத்திர காமேஷ்டியாகஞ்செய்து, அதிற்கிடைத்த பிண்டத்தை அவர்கட்குக் கொடுத்துத், தான் எப்போதும் போல் கந்

தமாதனத்தில் வந்து தவஞ்செய்திருந்தார். பின்பு அவ்விரண்டு ஸ்திரீகளும் அநேகநாள் கற்பவதிகளாக இருந்து, விநதை யென்பவள் இரண்டுமுட்டையும், கத்துருவை யென்பவள் நூற்றைந்து முட்டையும் பெற்றார்கள். இம்முட்டைகளில் கத்துருவையீன்ற நூற்றைந்து முட்டைகளும் ஐந்நூறு வருஷகாலஞ் சென்றபின்பு தனக்குத்தானே விரிந்து, ஆதிசேஷன் - வாசுகி - தக்ஷகன் - கார்க்கோடகன் - தனஞ்சயன்- காளியன்- நாகபுராணன் - புஞ்சன் - புரஞ்கன்- ஏலாபுத்திரன் - வாமனன் - நிலன் - அநிலன் - கல்மாஷன் - சபலன் - ஆரியகன் - புண்டிரகன் - விசாலன் - போதகன் - சுமநோகன் - ரதிமுகன் - ததிமுகன் - விமலன் - குண்டன் - பிண்டகன் - பந்தகன்- ஆப்தன் - கோடரகன் - சங்கபாதன் - சிகன் - நிஷ்டூரகன் - ஏமன் - உக்கமுகரன் - நகுஷன் - பிங்கலன்- கோகர்நன்- அவ்வியகர்நன்- அவிர்முகன் - முதக்ரன்- கம்பளாசுவன்- அஸ்வநரன்- தாளியகன் - உருத்தன்- சுவுருத்தன்- சம்வாதகன் - சங்கநகன் - பிண்டரகன்- அஜர்ன் - க்ஷேமகரன் - சமுகன் - பிண்டநகன் - ரக்ஷேமுகன்-பிடரகன் -கரவீரன் - புட்பதவுஷ்டரன்- நகரன் - பலரகன் - சாலகன் - பகன் - வில்வபாண்டூரன் - பாதகபராசிதன் - பதங்கக்கிரீவன்-ரத்தாக்ஷன் அபராதிகன் - மூஷிகாதன் - சங்கசரன் - புண்ணியதமுஷ்டரன் - அரித்திரகன் - அபானமித்திரன் - ஜோதிகன் - ஸ்ரீவகன் - பராதீதன் - அயக்கிரீவன் - கவுர்வியன் - திரிதராஷ்டிரன் - புஷ்கரன் - சல்லியன்—விரஜன் - சாலுண்டன் - கபோதவன் - வில்வகன் - சுபாகு-சலபிண்டன் - அஸ்திபத்திரன் - முகரகோணன்- நாசிகன் - குஞ்சரன் - குரங்கன் - பிரஹாரன் - தித்திரி-புரிலன் - பாலிகண்டன் - குண்டரன் — குதரன் பிரபகரசுமுதகாண்டகன் - வீரன் - குடாரன்-அருகுஷன் - காகோதரன் - அரிதி—கர்க்கரன் - அகர்க்கரன் குண்டோதரன் - மகோதரன் - என்னும் நூற்றுநாலு புத்திரரும், சலர்க்காரை என்னும் ஒரு புத்திரியும் உதித்தார்கள். இவர்களைக்கண்டு கத்துருவைமிகுந்த களிப்புடனே வளர்த்து வந்தாள்.

அப்புத்திரர்கள் சகலகலைக்கியான சுரூபிகளாகி மிகுந்த திறலுடையவராய் விளையாடிக்கொண்டிருப்பதை விநதை யென்பவள்கண்டு மனம்பொறாமல், தான்பெற்ற முட்டைகளைப் பார்த்தாள். அவை வைத்தது வைத்தாப்போலிருக்கக்கண்டு, இதென்ன ஆச்சரியம்! இம்முட்டைகள்முன்போலவே இருக்கின்றனவென்று ஒருமுட்டையையுடைத்தாள். அம்முட்டையில் எல்லா அவயவமுங்கூடிக், கால்மாத்திரங் கூடாமல் ஒருவன் தோன்றினான். அப்படி தோன்றினவன் தன் தாயைப்பார்த்துத், தாயே ! எல்லா அவயவமுங் கூடிவருகிற தருணத்தில் ஆத்திரப்பட்டு முட்டையையுடைத்து விட்டையே; ஐயோ ! நான்பராக்கிரமசாலியாயிருந்தும்பிறர்நிந்திக்கஉன்னால்முடவனானேன். ஆதலால் நீ உன்தங்கையாகிய கத்துருவைக்குத் தாதியாகக் கடவதென்று சாபமிட்டான். இச்சாபத்தைப்பெற்றும் விநதை சஞ்சலித்து வருத்தப்படாமல், புத்திராபேக்ஷையினாலே முட்டையை யுடைத்ததற்கு வருத்தமுற்று; (ஆத்திரக்காரருக்குப் புத்திமட்டு)என்றபழமொழிநம்மிடத்தில் திருஷ்டாந்தமாயிற்றென்று, தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டிருக்கிற தாயைப்பார்த்து, ஓ அம்மணி! என்னைப் பின்னப்படுத்தினதினால் கோபங்கொண்டு சாபமிட்டேன். இந்தச்சாபம் நீங்கமறுசாபங்கொடுக்கிறேன். அஃதென்னவென்றால் இதோயிருக்கிற முட்டையில் எனக்கிளையவனிருக்கிறான். அவனேமிகுந்தபராக்கிரமசாலியாயிருப்பான். அவனாலே உன்சாபம்நீங்கிமகிழ்ச்சியுடைவாயென்றுபிரதிசாபங்கூறி, நானிருந்த முட்டையையுடைத்து என்னைப் பின்னப் படுத்தினதுபோல இந்த முட்டையை யுடைக்காதே பத்திரமென்றுஉறுதிகூறினான். பின்பு அந்தவிநதை அந்தப் புத்திரனுக்கு அருணனென்று பெயரிட்டுவளர்த்து வருகிறநாளில், சூரியனானவன் தனது ரதத்தை நடாத்தத் தகுந்த வல்லமையையுடையவர்கள் யாரென்று எங்கணுந்தேடி, இந்த அருணன் வல்லமையைக் கேள்விப்பட்டுவந்து, அப்பா அருணனே ! என் இரதத்துக்குத் தகுந்த சாரதி நீயேயன்றி வேறொருவருமில்லை; ஆதலால், கிருபை கூர்ந்து எனக்குச் சாரதியா யிருவென்றுவேண்ட,அப்படியே அருணன் ஒத்துக்கொண்டு சூரியனுக்குச் சாரதியாய் அமைந்தான்.

பின்பு விநதையானவள் மூத்தகுமாரன் இட்டகட்டளைப்படி மறுமுட்டையைப் பாதுகாத்துக் கொண்டுவருகிறநாளில், சொற்கலோகத்தில் இனிதுவீற்றிருந்து மூன்று லோகத்தையும் காத்துவருகிற இந்திரன், நரை திரை மூப்பு பிணி இவையுறாதிருக்கக் கருதி, முப்பத்து முக்கோடி தேவர்களையும் நாற்பத்தெண்ணாயிர முனிவர்களையும் மற்றப் பரிசனங்களையும் அழைத்துக்கொண்டு வைகுந்தத் திற்குச் சென்று; சங்கு-சக்கரம் — வாள் - கதை - கோதண்ட தரனாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவைக்கண்டு வணங்கி, ஓபரந்தாமா! ஓ கோவிந்தா, ஓ அநாதரட்சகா ! ஓஅன்பர்க்கெளியனான நாராயணாவென்றுபலவாறு தோத்திரஞ் செய்ய, நெடுமால் அன்பு கூர்ந்து, ஓ தேவராஜனே! நீ நினைத்து வந்த கருத்தென்ன வென்று கேட்க, இந்திரன் - ஆண்டவனே ! நரை திரை மூப்பு பிணி என்னும் இவைகளை யாங்கள் அடையாதிருக்கக்கிருபைசெய்ய வேண்டுமென, திருமால் களிப்படைந்து, ஓ தேவராஜனே ! நீ கொண்ட கருத்துக்குத் திருப்பாற்கடல் கடைந்தால் அதில் அமுத முண்டாகும். அந்த அமுதத்தைப் புசித்தால் நரை திரை மூப்பு பிணி இவைகளணுகா. அதற்கு உங்களில் யாராவது சென்று மந்தரகிரியைக் கொண்டு வந்தால், அதனை மத்தாக்கித் திருப்பாற்கடல் கடையலாமென்று திரு

வாய் மலர்ந்தார். இந்திரன் முதலான தேவர்கள், இதைக்கேட்ட மாத்திரத்தில், ஆ! அந்த மந்தரகிரியென்ன சிறியதா? இவ்வுலகத்துள்ள எல்லாக்கிரிகளினுமிகவும் பெரிதாயிருக்கிறதே: அதைக்கொண்டு வருகிறவர் யாவரிருக்கிறார்களென்று திடுக்கிட்டுநின்றார்கள். அப்போது கத்துருவையின் மூத்த குமாரனான ஆதிசேஷன் இந்திரனைப் பார்த்து, ஓ தேவராஜனே! நீ யேன்கிலேசப்படுகிறாய்? இதோநான்போய் மந்தரகிரியைக் கொண்டு வருகிறேனென்று உறுதி சொல்லி அதிவேகமாய்ச் சென்று, அந்த மந்தரகிரியை வேரோடும்பிடுங்கி எடுத்துவந்தான். இதைக்கண்ட இந்திரன் முதலானவர்கள் ஆதிசேஷன் பராக்கிரமத்துக்கு மெச்சிப், பலவாறு புகழ்ந்து, பின்பு திருமாலைவணங்கி, இதோமந்தரகிரிவந்திருப்பதால், நாங்கள் கொண்ட கருத்து நிறைவேறக் கிருபைகூர்ந்து திருப்பாற்கடல் கடைந்து அமுதம் பாலியு மென்று வேண்ட, உடனே திருமால் திருப்பாற்கடலிற்சென்று, மந்தரகிரியை மத்தாக்கிச், சந்திரனைத்தறியாக்கி, ஆதிசேஷனுக்கு இளவலாகிய வாசுகியைத் தாம்பாக்கி, ஒருபக்கத்தில் தேவரும் மற்றொரு பக்கத்தில் அசுரருமாக அத்தாம்பைப்பற்றிக் கடையக்கட்டளையிட்டார். அப்படியே இருதிறத்தாரும் வலித்து வலித்துக் கடைந்தார்கள். இப்படி. சிலநாள்கடைந்துவர, வாசுகிக்கு மிகுந்த வருத்தநேரிட்டு விஷத்தைக்கக்கிவிட்டான். அவ்விஷம் வடவையைப்போற்சீறி, யாவரையும் பஸ்மீகரப்படுத்த வெளிப்பட்டது. அதுகண்டு இந்திரன் முதலாகிய தேவரும் திடுக்கிட்டு நடுநடுங்கி, இதென்னவிபரீதமென்று அலறிக் கூக்குரலிட்டு இந்த வேளையிற் பரமன் வந்து தான் இத்துன்பத்தை நீக்கவேண்டுமென்றுன்னி, ஓ கயிலாசவாசா! ஓ பார்வதி சமேதா! ஓபன்னகாபரணா! ஓ சிருட்டி. திதி சங்காரதிரோபவானுக்கிரகா! ஓஅகண்டித அலங்கிருத கிருபா சமுத்திர திரிநேத்திர பலசூஸ்திர சாஸ்திர ஸ்தோத்திர பூஜிதாவென்று பலவாறு துதிக்க, அன்பர்க் கெளியவனாகிய சாம்பசிவமூர்த்தி அங்ஙனமெழுந்தருளி அவ்விஷத்தை உண்டு,தேவர்க ளிடுக்கத்தை நீக்கிக் கயிலைக்கெழுந்தருளினார். பின்பு தேவரெல்லா மனமகிழ்ந்து வந்து முன்போலக் கடலைக்கடைகிற தருணத்தில், சங்கநிதி - பதுமநிதி - சிந்தாமணி - இரதி - இலக்குமி - அகலிகை - இந்திராணி- அறுபத் தாறாயிரம் அப்சரசுகள் - காமதேனு - கற்பகவிருக்ஷம் -அயிராவதம்-உச்சைசிரவம் - இவைமுதலாகிய பலவஸ்துக்களுந் தோன்றின. அதன் பின்பு அமுதமும் பிறந்தது. அமுதத்தைக் கண்டமாத்திரத்தில்தேவர்களெல்லாம் கடைவதைவிட்டு மிகுந்த மகிழ்ச்சி யடைந்து, திருமாலை வணங்கிப் பலவாறு துதித்து நின்றார்கள். திருமால் பாற்கடலிற் பிறந்த வஸ்துக்களை யெல்லாம் நோக்கி, இரதியை-மாரனுக்கும், காமதேநு - கற்பகவிருக்ஷம் - வெள்ளையானை, வெள்ளைக் குதிரை - ஐராணி- அரம்பாஸ்திரீகள்-சங்கநிதி -பதுமநிதி-இவைமுதலாகிய வஸ்துக்களை இந்திரனுக்கும், அகலிகையைக் கவுதமருக்கும் கொடுத்து, இலக்குமியையும் - கவுத்துவ மணியையும்- தமக்குரியதாகக் கொண்டு, அந்த அமுதத்தை யாவர்க்கும் பகுந்து கொடுக்கக் கருதித், தமக்குள் ஒன்றை நினைத்துக் கொண்டார்.

அஃதென்ன வெனில் - அசுரர்களுக்குச்சுபாவத்திலேயே அதிக வல்லமையும் துர்நடத்தையு மிருக்கின்றன. நரை திரை மூப்பு பிணி முதலாகியவற்றை நீக்குகின்ற இந்த அமுதத்தையும் புசிப்பாராகில்,நெருப்பில் நெய்யை விட்டது போல் அதிகபாபத்தைப் பண்ண வாரம்பிப்பார்கள். அதனாலே உலகத்துக்குக் கெடுதிநேரிடும். இதற்கொரு தந்திரஞ் செய்யவேண்டுமென்றுகருதி, தமது அமிசையில் ஒருமோகினியை உண்டாக நினைத்தார். அப்படி நினைத்த மாத்திரத்தில் சண்பகமலர்போலும் செம்பொன்போலும் சொலிக்கின்ற தேககாந்தியையும், முகிலையொத்த குழலையும், மூன்றாம்பிறையன்ன நெற்றியையும்,வில்லனைய புருவத்தையும், வேலைமானும் கண்களையும், வள்ளைபோன்றசெவியையும், எள்மலர்புரையும் நாசியையும், இலவம்பூநிகர்த்த வாயையும், முல்லையெனவிளங்கும் பல்வரிசையையும்,தேனைப் பாகைக் கற்கண்டைநிகர்த்தசொல்லையும், சந்திரவிம்பத்துக்கு நேரான முகத்தையும், கண்ணாடியையொத்தகபோலத்தையும்,கமுகையொத்த கழுத்தையும், வேய்புரைதோளையும், மகரயாழ் நிகர்த்த முன்கையையும்,கமலமொத்த அகங்கையையும்,கெளிற்றுமீன்போன்றவிரல்களையும்,கிளிமூக்கனைய நகங்களையும், மலையை நிகர்த்த முலையையும், வடபத்திரம்போன்ற உதரத்தையும், எறும்பூர்வரிசைபோன்ற ரோமவரையையும், பிடியினிலடங்குமிடையினையும், நீர்ச்சுழியொத்தஉந்தியையும்,அரவப்படம்போன்ற அல்குலையும், வாழையொத்ததொடையையும், ஞெண்டுபோன்ற முழந்தாளையும், சினைவராலனையகணைக்காலையும், ஆமையொத்தபுறவடியையும் தராசையொத்த பரட்டையும், பந்துபோன்ற குதிகாலையும், பவளத்துண்டனைய கால்விரல்களையும், முத்துப்போன்ற நகத்தையும், தாமரை மலர்போன்ற பாதத்தையு முடைத்தாகி; திரண்டு பரந்து நிமிர்ந்து வளர்ந்து நெருங்கி ததும்பி சுணங்கு படர்ந்த இரு முலைகளுங் குலுங்க, அன்னநடைபோல் நடந்து, பரிவளவாடைவீசச்சுராசுரர்கள்மத்தியில் அகஸ்மாத்தாய்ஜெகன்மோகினி வந்துநின்றாள். அவளைக்கண்ட சுராசுரர்கள் வியந்து, சொற்க மத்திய பாதாள மென்னும் மூன்று தலங்களில் இவ்வண்ணமான திவ்யஸ்திரீ இல்லையே யென்று தமக்குள் பலவாறு நினைத்துப், பிரமைகொண்டு நின்றார்கள். இவர்களில் தேவர்கள் மாத்திரம் அசுரரை மோசஞ்செய்ய நமது திருமாலே ஜெகன் மோகினியாய்த் தோன்றினதாகத் தோற்றுகின்றது. எல்லாம் இன்னுஞ்சற்றுநேரத்தில்வெளியா

குதென்று கருதித், தங்கள் கருத்தைக் காமத்தின்
வழி செல்ல வொட்டாமல் அடக்கி யிருந்தார்கள். அ
சுரரோ-யார் யார் எந்தெந்த அவயவங்களைக் கண்டார்
களோ, அவ்வவ்வவயவங்களிலேயே தங்கள்கருத்தை
ச்செலுத்திச், சித்திரப் பிரதிமெய்போலவும் உட்கார
வைத்தசவம்போலவும் சற்றுமசைவின்றி, நெட்டுயிர்
ப்போடு வாயைத்திறந்துகொண் டிருந்தார்கள்.

அந்தவேளையில் கபட் நாடக சூத்திராவ தாரி
யாகிய பரந்தாமன் யாவரையும் நோக்கி, ஓ சுராசுர
ர்களே ! அமுதத்தைப் பங்கிட் ஒருவர் வேண்டுமே,
இதோ யிருக்கிற ஸ்திரீயைப் பங்கிடக் கட்டளை யிடு
கிறேன் புசியுங்களென்று, ஒரு கிண்ணத்தையும் ஒ
ரு கரண்டி யையுமுண்டாக்கி,அந்த மோகினி கையிற்
கொடுத்து, ஓ பெண்ணே! இந்த அமுதத்தை யாவர்
க்கும் பங்கிடென்று கட்டளையிட்டார். அக்கட்டளை
யைச் சிரமேற் கொண்டு, அசுரர்கள் தன் கண்வலையி
ற் சிக்கி வருத்தப்பட நடைநொடி பாவனைகளைக்
காட்டித், தேவர்களுக்கு அமுதத்தைப் பங்கிட்டு
வருகிறாள். அப்படி வருகிற தருணத்தில், ஆதிசே
ஷன் சகோதரர்களில் இருவர்கள் இது ஏது சுத்த
மோசமா யிருக்கின்றது; ஐயோ! பந்தியில் வஞ்சனை
செய்யலாமா ? நியாயமாய் எல்லாரும் கஷ்டப்பட்ட
சொத்து யாவர்க்கும் உபயோகப் படவேண்டியது
தானே: அப்படிக்கு உபயோகப்படாமல் விரல் நீக்கி
மோர் குடிப்பதுபோல், கஷ்டப்பட்ட நம்மையும்
அசுரரையும் நீக்கித்தேவர்கள் மாத்திரம் அமுதம்
புசிக்கிறார்களே யென்று தங்களுக்குள் தாமே நினை
த்து, இனி நாமும் தேவர்களைப்போல வேடங் கொ
ண்டு தேவபந்தியில் சேர்ந்தால் தான் அமுதங் கி
டைக்கும்; இல்லா விட்டால் கிடைக்காதென்று தீர்
மானித்துத் தேவ ரூபங் கொண்டு, தேவ பந்தியி
லொருபக்கத்திலிருந்தார்கள். அந்த ஜெகன்மோகினி
தேவர்களுக்கு அமுதம்பங்கிட்டதுபோல இவ்விருவ
ருக்கும் பங்கிட்டாள். உடனேஅவ்வமுதத்தைஅசுசி
யாய் உட்கொண்டார்கள். அதை அருகிலிருந்த சந்
திர சூரியர் கண்டு திடுக்கிட்டு, இவ்விருவரும் உருவ
த்தில் தேவராயிருந்து, செய்கையில் அசுரரா யிருக்
கிறாரென்று கருதி,முகம்வேறுபடச் சைகைசெய்தா
ர்கள். அதைக்கண்டு அந்த ஜெகன் மோகினி தன்
கையிலிருக்கிற கரண்டியால் அவர்கள் மண்டை பிள
க்க உடைத்து விட்டு, அப்பால் அமுதத்தை முன்
போலவே தேவர் கூட்டத்துக்குப் பங்கிட்டு வந்தா
ள். தேவர்க ளெல்லாம் தாங்கள் பெற்ற அமுதத்
தை, அஷ்டாக்ஷர சுரூபியாகிய கடவுளைத் தியானஞ்
செய்து உட்கொண்டு மிகுந்த மகிழ்ச்சி யடைந்தார்
கள். மாறுரூபங்கொண்டு அமுதம்புசித்த இருவரும்,
சந்திர சூரியரால் அல்லவோ நமக்குக் கெடுதி நேரிட்
டதென்று வஞ்சினங்கொண்டு, அவ்வஞ்சினத்தைத்
தீர்த்துக்கொள்ளுமாறு தவஞ்செய்து, பரமன் கிரு
பையால் ஒருவன் சூரியனையும் மற்றொருவன் சந்தி
ரனையும் நாளது வரையில் பற்றி விழுங்கு கிறதும்
கக்குகிறதுமாகஇருக்கிறார்கள்.இச்செய்கைகளைஉல
கத்தில் சூரிய கிரகணமென்றும் சந்திரகிரகணமென்
றும் வழங்கி வருகின்றன. பின்பு பங்கிட்டு மிகுந்து
நின்ற அமுதத்தை ஒரு பொற்குடத்திற் புகட்டி ஆ
காயத்தில் வைத்து,அதற்குப் பலதிவ்யாஸ்திரங்களை
யும் தேவகணங்களையும் காவலாகவைத்துத்திருமால்
முதலானவர்களோடு ஜெகன் மோகினியும் மறைந்
து அவரவர் தலத்துக்குச்சென்றார்கள்.

இடைவிடாது மோகினியினுடைய ரூபலாவண்
யத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவ் வசுரர்க
ளோ வென்றால், (வாய்த் தவிடும் போய் அடுப்பு
நெருப்பும் போனது) என்ற பழமொழி போல் அமு
தத்தை இழந்து, இளித்த வாயராய் யாதொரு பய
னு மடையாமல் ஏமாந்து, அடடா !! திருமால் முத
லாகிய தேவர்கள் நம்மை ஏமாற்றி அமுதத்தைக்
கொடுக்காமற் கொண்டு போய்விட்டார்களேயென்று
அதிக கோபங்கொண்டு, யாவரும் ஒருமிக்கக் கூடி
யுத்தஞ்செய்யத் தீர்மானித்துத், தேவர்கள் பேரில்
படை யெடுத்துக்கொண்டுவந்து பொன் னுலகத்தி
லடர்ந்து இந்திரன் முதலான வர்களோடு யுத்தஞ்
செய்தார்கள். இந்தச்செய்தி பிரமனும் திருமாலும்
உணர்ந்து,அதிவேகமாய்வந்து,அவ்வசுரர்களையெல்லா
நாசப்படுத்தினார்கள். பின்பு இறந்த அசுரர்கள்போ
க மற்ற அசுரர்கள் யாவருங்கூடி, இனி இவ்விடத்தி
லிருந்தோ மாகில் அடிக் கடிக்கு அபாய நேரிடுமெ
ன்று நினைத்துப் பாதாள லோகத்திற் சென் றொடுங்
கி நடுங்கி யடங்கி இருந்தார்கள். அப்பால் இந்திரன்
முதலான தேவர்களெல்லாம் மிகமகிழ்ச்சி யடைந்தி
ருந்தார்கள். இப்படி யிருக்கிற காலத்தில் திருப்பாற்
கடலிற் பிறந்து திருமரு மார்பினனால் இந்திரனி
டத்திற் சேர்ந்திருக்கின்ற அயிராவதம் உச்சைசிரவ
முதலியவற்றுள்,உச்சைசிரவமெனகின்ற வெள்ளைக்கு
திரை யானது ஒருநாள் கடலோரத்தில் வந்திருந்த
து. அப்போது ஆதிசேஷன் முதலான வர்களைப் பெ
ற்ற கத்துருவையும் அருணனைப் பெற்ற விநதை
யும் வந்து, அக்கட லோரத்தில் நின்று வேடிக்கை
பார்த் திருக்கிற போது, அந்த உச்சைசிரவ மென்கி
ற வெள்ளைக்குதிரையைக் கண்டார்கள். இவர்களில்
விநதையென்பவள் தன் தங்கையாகிய கத்துருவை
யை நோக்கி, இதோ இருக்கிற குதிரையைப் பார்த்
தையா? புண்ணிய வான் புகழைப் போல சுத்த வெ
ண்மையா யிருக்கின்றதென்று சொன்னாள். அதைக்
கேட்ட கத்துருவை இந்தக்குதிரைக்கு வாற் புறத்
தில் கிஞ்சித்துக் கறுப் பிருக்கிற தென்றாள். சுத்த
வெண்மையாயிருக்கிறகுதிரைக்குக்கிஞ்சித்துக்கறுப்
பிருக்கிற தென்று ஏன் பொய்மை கூறுகிறாய்; நன்றா
ய்ப் பாரென்று விநதை சொல்லினாள். இந்த மொழி

யைக் கேட்ட கத்துருவை, ஓ அக்கா! இக்குதிரை நீ கூறியபடி முழுவதும் வெண்மையா யிருந்தால் நான் உனக்குப் பணிவிடைப்பெண்ணாயிருக்கிறேன். நானுரைத்தபடி வாற்புறத்துக் கறுப் பிருந்தால் நீ யெனக்குப் பணிவிடைப் பெண்ணா யிருக்கிறையா வென்றாள். விநதை யொத்துக் கொண்டு, அக்குதிரையை நெருங்கிப் பார்ப்போம் வாவென்று கத்துருவையை அழைக்கக் கத்துருவை நாம்வந்து வெகு நேரமாயிற்று நாளைய தினம் பார்ப்போம் வாவென்ன, விநதை அதையும் ஒத்துக்கொண்டு, இருவரும் தம திருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பின்பு கத்துருவை தன்பிள்ளையாகிய ஆதிசேஷன் முதலானவர்களை நோக்கி, ஓ புத்திரர்களே! நானும் என் தமக்கை விநதையும், கடலோரத்திற் சென்ற போது, உச்சைசிரவ மென்கிற வெள்ளைக் குதிரையைக் கண்டோம். என்தமக்கை சுத்த வெள்ளை இக்குதிரை யென்றாள். நான் அக்குதிரைக்கு வாற்புறத்துக் கறுப் பிருக்கிறதென்று சொன்னேன். என்வாக்குப்பழுதாகாமல் அக்குதிரையின் வாற்புறத்தில் கிஞ்சித்துக் கறுப் புண்டாக்குங்கள். அப்படிச்செய்தீர்களாகில் என்தமக்கையைப் பணிவிடைப் பெண்ணாக்கிக் கொள்வேன். இல்லாவிட்டால் நான் அவளுக்குப் பணிவிடைப் பெண்ணாக வேண்டுமென்று சொன்னாள். ஆதிசேஷன் முதலானவர்கள் கேட்டுத் திடுக்கிட்டு, ஆ! தாயே! அந்த உச்சைசிரவ மென்கிற குதிரை பாற்கடலிற்பிறந்தது. அதற்கொரு மறுவுண்டா? மறுவற்ற குதிரைக்கு ஒரு மறு உண்டாக்குவ மாகில் மிகுந்த பாவத்துக் காளாவோம். மேலும் தாயினளவிலேயா சூதிழைப்பது. நாங்கள் அச்செய்கைக்குப் பாத்தியப் படோமென்று மறுத்தார்கள். உடனே கத்துருவை கோபங்கொண்டு, ஜெநமேஜெய மகாராஜன் செய்கிற சர்ப்பயாகத்தில் நீங்களெல்லாம் மடியக் கடவதென்று சாபமிட்டாள். இதைக்கேட்ட புத்திரர்களில் ஒருவன் அச்சாபத்துக்குப் பயந்து, அந்தக் குதிரையின் வாற் புறத்தில் கிஞ்சித்துக் கறுப்பு தோன்ற ஒன்றியிருந்தான். மறுநாள் கத்துருவை விநதையை அழைத்துக்கொண்டு, அக்குதிரை இருக்கிற இடத்தில் வந்து, ஓ அக்கா! இதோ பார்த்தையா வாற்புறத்தில் கறுப் பிருக்கிறதென்று காட்ட; விநதை சரி தான் முன் சொன்ன வண்ணம் உனக்குத் தாதியாகிறேனென்று ஒத்துக்கொண்டு, அவளுக்குள் அடக்கமாயிருந்து, அவளிட்ட வேலையைச் செய்து வந்தாள்.

இப்படிச் சிலநாட் சென்றபின்பு, இந்தவிநதை உயிர்த்த மற்றொரு முட்டை பருவகாலம் வந்து, தனக்குத் தானே விரிந்தது. அப்படி விரிந்த மாத்திரத்தில் அழகிய சிறகினையும், பழகிய ஆற்றலையும், இளஞாயிறு போன்ற தேக காந்தியையும் பெற்று, இரணியனை வதைக்கத் தூணில் நின்று வெளிப்பட்ட நரசிங்க மூர்த்தி போல் ஒரு புத்திரன் உற்பத்தி யானான். அந்தப்புத்திரன் உடனே ஆகாயத்திலெழும்பிப் பறந்து, தன்தாயாகிய விநதையிடத்துவந்து வணங்கி நின்றான். அதைவிநதை பார்த்து, இன்றல்லவோ பெண்ணாற் பெறும்பேறு பெற்றோமென்று மிகமகிழ்ச்சியாய்ப் பரமானந்தத்தை யடைந்திருந்தாள். கத்துருவை யென்பவள் இந்தப்புத்திரனது புஜபல பராக்கிரமத்தையும் சவுந்தரியத்தையும் கண்டு, பெற்றாலும் இவ்வண்ண மான புத்திரனைப் பெற வேண்டுமே அல்லாமல், பன்றி பலகுட்டி போட்டது போல பல புத்திரர்களைப் பெற்றென்ன பயனென்று தனக்குள் தானே வருத்தப்பட்டு அப்புத்திரனைப் பார்த்து, ஒருவசனஞ்சொல்லுகிறாள். ஓ கலுழனே! நீ என் தாதி வயிற்றிற் பிறந்தவனாதலால், என்வயிற்றிற் பிறந்த மக்களுக்குப் பணிவிடைக்காரனா யிருவென்றுகூற, இப்புத்திரன் அதற்கு ஒத்துக்கொண்டு, ஆதிசேஷன் முதலானவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். இவன் செய்து வருகிற பணிவிடை என்னெனில், ஆதிசேஷன் முதலான நூற்று நால்வரையும் தீவு தீவாந்திரங் களில் எடுத்துப் போய், அவ்விடத்தி லுண்டாகிய விநோதங்களையும், இமயம் - மந்தரம் - விந்தம் - நிடதம்- ஏமகூடம் - கந்தமாதனம் - நீலகிரி - முதலாகிய பர்வத வலங்காரங்களையும் காண்பித்து வருகிறது.

இப்படி இடைவிடாமல் ஆதிசேஷன் முதலானவர்களைச் சுமந்து சுமந்து வருந்தி, மனநொந்து, ஒருநாள் தன் தாயினிடத்து வந்து பணிந்து, ஓ அம்மா! என்னுடைய ஆற்றல் முதலாகிய வற்றை அஷ்டாக்ஷர சுரூபி யாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே யல்லது மற்றொருவராலும் அளவிடக்கூடாது. அவ்வளவு ஆற்றலைப்பெற்றும், சபையைக் கண்டு அஞ்சி மெய்நடுக்கங் கொள்வோர்களுடைய கல்வியும், சபைக்கஞ்சாமற் பேசுகிற மூடனுடைய சொல்லும், பிறர்க்குதவி யில்லாத செல்வமும், தரித்திரனுக் குண்டாகிய அழகும், நற்குண நற்செய்கை யில்லாத இல்லாளை உடையவன் செய்யும் இல்லற தருமமும், எக்காலத்தும் பயன் படாத வாறுபோல, யான் யாதொரு பயனு மடையாமல், எனக்குப் பணிவிடை செய்பவர்க்கு நான் பணிவிடை செய்பவனாகி, மல்ல யுத்தத்தினால் காய்ப் பேறுந் தோள்களெல்லாம் ஆதிசேஷன் முதலானவர்களைச் சுமந்து சுமந்து காய்த்துப் போயின. இதை யுய்த்து நோக்க நோக்க மனதுபுண்ணாகிறது. இது என்தலைவிதியென்று தீர்மானித்திருந்தாலும், நீபடுகிற அவஸ்தையைப் பார்த்தால் (உகிர்ச்சுற்றின் பேரில் அம்மிவிழுந்தது போல) அதிகதுன்பத்தைக்கொடுக்கின்றது. ஆதலால்- தாயே! அந்தக் கத்துருவைக்கு நீ சுபாவத்தில் பணிவிடைப்பெண்ணானையா? அல்லது ஏதோ ஒரு காரணத்தினாலே பணிவிடைப்பெண்ணானையா? எனக்கு விளங்க உரை

க்கவேண்டு மென்று கேட்க, வினதைகேட்டு, அனலி
டுமெழுகுபோல மனமது உருகி, அப்பாமகனே! நான்
அந்தக் கத்துருவைக்குத் தமக்கை. இன்னும் என்னு
டனே பிறந்வர்கள் பதினொருபெண்கள். நாங்கள்
பதின்மூன்று பெயரும் காசிப முனியின் மனைவியர்.
ஒருகாரணத்தினாலே என் சகோதரியாகிய இந்தக்
கத்துரு வைக்குத் தாதியானேன். அக்காரண மென்
ன வென்றால், உன்தமயனாகிய அருணனிட்டசாபம்.
அஃது யாதெனில் - அவ்வருண னிருந்த முட்டை
யைப் பருவ மாகாததற்கு முன்னமே உடைத்தேன்.
அப்போது உன்தமயனுக்கு எல்லா அவயவமுங்கூடி
க் கால்மாத்திரங் கூடாம லிருந்தது. அதன்மேல்
அவன் கோபங் கொண்டு உன் தங்கைக்குத் தாதியா
கக் கடவதென்று எனக்குச் சாபமிட்டான். நான் அந்
தச் சர்பத்துக்கு வருத்தப் படாமல், அவயவப் பழு
தாயிற்றே என்று துன்பப் படுகிறபோது, உன்தமை
யன் கண்டு, என்னைப் பங்கப் படுத்தினதினாற் சபித்
தேன். இந்தச் சாபம் என் தம்பியால் நீங்கு மென்று
கூறிச் சூரியனுக்குத் தேர்ப்பாகனாகப் போய் விட்
டான். என்று சொல்லி, அச் சாபப்படி தாதியான வி
ருத்தாந்தத்தையும் விளங்க உரைக்கக் கலுழன்கேட்
டு வியப் படைந்து, தாயை வணங்கி விடை பெற்று,
முன்போலவே ஆதிசேஷன் முதலானவர் களுக்குப்
பணிவிடைக்காரனாகி யிருந்தான்.

இப்படி இருக்கிற நாளில் ஒருநாள் ஆதிசேஷ
ன் முதலானவர்கள் கலுழனைப் பார்த்து, ஓ கலுழ
னே ! மாலியபர்வதம் விநோமாயிருக்கிற தென்
று கேள்வி யாதலால் அதனைப் பார்க்க வேண்டு மெ
ன் றார்கள். கலுழன் நல்லது வாருங்கள் கொண்டு
போய்க் காண்பிக்கிறே னென்று சொல்லி, யாவரை
யும் தனதுதோளில் ஏற்றிக்கொண்டுபோய் அப் பரு
வதத்தில்விட்டுத், தான் அம்மலைச்சருவி லொருபக்க
த்திலிருந்து, அடடா!! இதென்னவிதிவசம். கத்துரு
வை தான்கிஞ்சித்தேனும் இதக்கமில்லாமல் அடிக்க
டி நமது தாய்க்கு வேலையிடுகிறாள். இந்தப் புத்திரர்
களோ மூடர்களல்ல. சகல கலைகளையுங் கற்றுணர்ந்
தவர்கள். இவர்களில் ஆதிசேஷனோ மஹா பண்டித
ன். இப்படியிருந்தும் என்னைத் தம்பியென் றெண
ணாமல், கன கடூரமான பணிவிடைகளைச் செய்யச்
சொல்லுகிறான். நல்லது பராக்கிரமத்தினாலே இவர்
களை அதமாக்குவோ மென்றால், தாய் சொல் தவறு
கின்றது. இதற்கென்ன செய்கிறதென்று தனக்குள்
தானே நினைத்து வருத்தப் படுகிற தருணத்தில்,
நாரதர் அக்கலுழன் கண்முன் தோன்றினார். அவரை
க்கண்டு யாரோ ஒரு மஹாத்துமா வருகிறாரென்று
விரைவி லெழுந்து, எதிர்கொண்டுபோய் வணங்கிநிற்
க, நாரதர் கலுழனுக்குப் பல ஆசீர்வாதஞ் செய்து
ஒரு வசனம் சொல்லுகிறார். ஓ கலுழனே! உன்னைக்
கண்டு தரிசிப்பவர்களுக் கெல்லாம் யாதொரு துன்ப
மு மடையாது. நீ துன்பப்படுகிற முகத்துட னிருக்
கிறதை நோக்கினால், மிகுந்த ஆச்சரியமாயிருக்கின்ற
து. ஆனதால் உன் மனவருத்தத்தைக் கூறென்று
வினவ, கலுழன் த்ன் தாய்க்குத் தன்தமயனிட்டசா
பமும், அச்சாபம் வந்தடைந்த விதத்தையும் சொல்
லி, ஐயா! உச்சை சிரவ மென்கிற வெள்ளைக் குதிரை
க்கு வாற் புறத்துக் கறுப்புண்டாவென்று வினவ, நா
ரதர்-ஓ கலுழனே! அந்த உச்சை சிரவம் சுத்தவெண்
மையானது தான். அதற்கு வாற்புறத்துக் கறுப்
புண்டானது; உன் சிறிய தாயாகிய கத்துருவை செ
ய்த சூதென்று அந்தச் சூதை விவரமாயெடுத் தோ
தி மறைந்து விட்டார். அதற்குள் ஆதிசேஷன் முத
லானவர்கள் அம்மாலிய பர்வதத்தின் விநோதங்களை
ப் பார்த்து விட்டுத் திரும்பினார்கள். அவர்களை முன்
போலவே யெடுத்துவந்து இருப்பிடத்திற் சேர்த்து,
கத்துருவையும் அவள் புத்திரரும் தாயையும் தன்
னையும் செய்கிற துர்நடத்தையை மனதில் நினைத்
து, நமது வல்லமையை அவர்களுக்குத் தெரிவிப்
போமாகில் அப்போது அவர்களுக்கு நம்மிடத்தில்
கிஞ்சித்துப் பயமுண்டாகி, அதிக வருத்தங் கொடா
ர்க ளென்று கருதிக் காலம்பார்த்துக்கொண் டிருக்கி
றான். அத்தருணத்தில் ஆதிசேஷன் முதலானவர்கள்
இந்தக் கலுழனையழைத்து,ஓ கலுழனே!கடல் சூழ்ந்
த நெடிய வுலகத்தி லிருக்கிற எல்லா விநோதங்களை
யுங் கண்டோம். இனி ஆகாயத்தி லிருக்கிற - வாயு
மண்டலம் - வருண மண்டலம் - சந்திர மண்டலம்-
சூரியமண்டலம் - நக்ஷத்திரமண்டலம் - அக்கினி
மண்டலம் - திரிசங்கு மண்டலம் - முதலாகிய வற்றி
ன் அலங்காரத்தைப்.பார்க்கவேண்டு மென்றுகேட்க,
கலுழன் அப்படியே பார்ப்பீர்கள் வாருங்க ளென்று
அவர்களை யெடுத்துக் கொண்டு கேசரி மார்க்கத்தில்
எழும்பி, ஒவ்வொரு மண்டலமாகக் காண்பித்துத்,
தான்கொண்ட கருத்தை நிறைவேற்றப் பருதி மண்
டலத்தில் தாவினான்.

உடனே ஆதிசேஷன் முதலானவர்கள் அந்தச்
சூரிய அழற்சியினால் சரீரமெங்குங் கண்ணி, மிகுந்த
துன்பத்தை யடைந்து, ஓ கலுழனே! (யானை தன்
தலையில் தானே மண்போட்டுக் கொள்வது போல)
எங்களாலேயே எங்களுக்கு வருத்தந்தேடிக்கொண்
டோம். சூரிய வழற்சியினாலே பிராணாவஸ்தைப் படு
கிறோம். எங்க ளிருப்பிடத்துக்குக் கொண்டுபோய்
விடென்று பலவாறு பிரியவசனஞ்சொல்லி முறையி
ட்டார்கள். அதைக் கலுழன் கேட்டு, இவ்வளவு தா
னா உங்கள்வல்லமையென்று பின்னும் சிலதூரங்கொ
ண்டுபோய், அவர்கள் கேட்டுக் கொண்டபடி இருப்
பிடத்திற் கொண்டுவந்து சேர்த்தான். அப்போது
ஆதிசேஷன் முதலானவர்க ளெல்லாம் சூரிய அழற்
சியினாலே நொந்து, பிராணா வஸ்தையி லிருந்தார்
கள். அதைக் கத்துருவை கண்டு, ஓ கலுழனே! என்

மக்களை இவ்வண்ண மாக்கு வித்தையே: இதென்ன
விபரீத மென்று வினவ; கலுழன்- ஓ அம்மா! நானெ
ன்ன செய்வேன். அவர்கள் ஆகாயத்தி லிருக்கிற மண்
டலங்களின் விநோதங்களைப் பார்க்கவேண்டு மென்
றார்கள். அவர்கள் கட்டளைப்படி கொண்டு போய்க்
காண்பித்து வந்தேனென, கத்துருவைகேட்டு வருத்
தப் பட்டு, வருண மந்திரத்தை யுச்சரித்தாள். உட
னே மிகுந்த மழை சொரிந்தது. அதனாலே அந்த
ஆதிசேஷன் முதலானவர்கள் சூரிய அழற்சியினால்
தங்களுக்கு உண்டாகிய வருத்தத்தை நீக்கி முன்
போ லானார்கள். அது முதல் இந்தக் கலுழனிடத்
துக் கிஞ்சித்தஞ்சி நடப்பார்கள். இப்படி இருக்கிற
காலத்தில், ஒருநாள் கலுழன் கத்துருவையை நோக்
கி; ஓ அம்மா! இப்போது என் தாயும் நானும் உன
க்கு அடிமையா யிருக்கிறோம். இந்த அடிமையைநீக்
கிக்கொள்ள எனக்கு மனமிருக்கின்றது. இதற்காக
நீ என்னவஸ்து கேட்ட போதிலும் கொண்டுவந்து
கொடுக்கிறேன் கேள் அம்மா வென்று வினவ; கத்து
ருவை இதைக்கேட்டு, உன் கருத்தின்படி அடிமைத்
தொழிலை நீக்கு கிறேன். என்மக்கள் சுகப்பட தேவா
முதத்தைக் கொண்டுவந்து கொடுத்தால் உன்கருத்
து நிறைவேறு மென; கலுழன் அதற்கொத்துக் கொ
ண்டு, தன் தாயிடத்து வந்து, கத்துருவைக்கும்
தனக்கும் நடந்ததைக்கூறி, மறுபடியுந் தாயைப்பார்
த்துச் சொல்லுகிறான்: ஓ அம்மா! கத்துருவை கரு
த்தின்படி அத்தேவாமுதத்தைக் கொண்டுவர ஆசீர்
வாதஞ் செய்து, என் தந்தை யிருக்கிற இடத்தை
யுஞ் சொல்லி, எனக் கிருக்கிற பசிநோயுந் தீரக் கட்
டளையிட வேண்டுமென்று வினவ, விநுதைகலுழனை
ப் பார்த்து, அப்பா மகனே! உன் தந்தையாகிய காசி
பர் கந்த மாதன பர்வதத்தி லிருக்கிறார். நீ கொண்ட
பசிக்கு இரை வடகிழக்குச் சமுத்திரத்தின் மூலையி
லொரு திட்டிருக்கின்றது. அதில் மஹாபாதகர்க ளா
கிய வேடர்க ளிருக்கிறார்கள். அவர்களைப்புசி. ஆனால்
அவர்களில் ஒரு பிராமண னிருக்கிறான். அவனைப்புசி
யாதே யென்று கூறிப் பல ஆசீர்வாதஞ் செய்தாள்.
உடனே கலுழன் மகிழ்ந்து, வேடர்க ளோடு வேட
னா யிருக்கிற பிராமணனை எப்படி யறிந்து கொள்ளு
கிறதென்று கேட்க, அப்பா மகனே! அந்தப் பிராம
ணனை விழுங்குகிற போது நெஞ்சில் அழற்சி உண்
டாயிருக்கும். அதைக் கண்டு அவனைநீக்கென்று கூற
கலுழன் கேட்டு மகிழ்ச்சி யடைந்து, கேசரிமரர்க்கத்
தி லெழும்பி, அந்த வடகிழக்கு மூலையை நோக்கிப்
பார்க்கும் போது, அவ்வேடர் கூடியிருக்கிற திட்டுத்
தோன்றிற்று. உடனே அங்குசென்று, அவர்களை யெ
ல்லாம் வாழைப்பழத்தை விழுங்குகிறதுபோல விழுங்
கத் தலைப்பட்டான். இப்படி விழுங்கிவருகிற தருண
த்தில் தந்நெஞ்சில் அழற்சியுண்டா யிருந்தது. அது
கண்டு பிராமணனென்றுகருதி, அப்பிராமணனை வெ
ளியில் வாவென் றழைத்தான். அப்பிராமணன் என்ம
னைவி வந்தால் நான் வெளியில் வருவே னென்று
கூற, கலுழன் அப்படியே அவன் மனைவியையும்அவ
னையுங் கக்கி, அவனுக்குச் சில புத்தி சொல்லிவிட்டு,
மற்றவரை யெல்லாம் புசித்த பின்பு தந்தையிருக்கிற
கந்த மாதனத்தில் வந்து சேர்ந்தான்.

கருடபகவான் சருக்கம் முற்றிற்று.

ஐந்தாவது,

கந்தமாதனச்சருக்கம்

அரிச்சந்தனம் - சந்தானம் - மந்தாரம் - பாரிசா
தம் - கற்பகம் - என்னும் ஐந்து தருக்களை யொத்தி
ருக்கின்ற சந்தனம் - அகில் - பாதிரி - மகிழம் - கோ
ங்கு - நாரத்தை - குருக்கத்தி - வாழை-வாகை-செ
ருந்தி - அழிஞ்சில் - குங்குமம் - அனிச்சை -கமுகம்
பலா - தேமா - புளிமா - கருவிளம் - கூவிளம் - அ
சோகம் - சிந்தூரம் - தேக்கு - இலந்தை - கொன்
றை - நாவல் - வேம்பு - ஆத்தி - தேக்கு - விளா -
தணக்கு - நெல்லி - பச்சிலை - பாலை - பிராய் - புளி -
புன்னை - மருதம் - வெட்பாலை - வேங்கை - வேல் -
ஆச்சா - இத்தி - இலவம் - இலுப்பை - ஈந்து - எட்
டி - எலுமிச்சை - கடவு - கடுக்காய் - தென்னை - ப
னை - சண்பகம் - நாரத்தை கச்சூரம் - வன்னி - குரு
ந்தம் - ஆல் - அரசு - கறுவிலி - முதலாகியமரங்களை
யும், வனமல்லிகை-மலைமல்லிகை-கொடிமல்லிகை-மு
ல்லை-இருவாக்ஷி-வெக்ஷி-அலரி-செவ்வந்தி- நந்தியாவ
ர்த்தம் - குன்றி - குமிழ் - நொச்சி - முதலாகிய செடி
களையும், வெண்டாமரை - செந்தாமரை-அல்லி - ஆம்
பல் - குவளை - காந்தள் - நீலோற்பலம் - முதலிய
வைகள் நிறைந்த தடாகங்களையும், சிங்கம் - யாளி -
புலி - யானை - குதிரை - பசு - எருது - ஆடு -பன்றி-
கவரிமான் - புள்ளிமான் - வேசரி - ஒட்டகம் - நரி-
சுவானம் - இற்பூனை - புநுகு பூனை - சவ்வாது
பூனை - செங்குரங்கு - கருங்குரங்கு-வெண்குரங்கு-
எலி - கரடி - எருமை - பாம்பு - இவைமுதலாகிய மி
ருகங்களையும், மயில்-அன்னம் - குக்குடம் - கழுகு
அசுணம் - கிளி-சிம்புள் - சக்ரவாகம் - வலியன் - சிச்
சிலி - சம்பங் கோழி - காடை - கவுதாரி - நாரை - வ
ண்டு - முதலாகிய பறவைகளையும், பரமன் சடாடவி
யில் நின்றிழியும் கங்கையொத்த அருவியையுமுடை
த்தாகி, வேதாக மங்களை யுணர்த்து நல்லொழுக்கத்
தின்கண் நின்றோர்க்கெல்லாம் ஆதரவாகி, சிற்றின்பத்

துக்குக் காரணம் ஸ்திரீகளுடைய கந்தமாதன மென்று சொல்லுவது போலப் பேரின்பத்துக்குக் காரணம் இந்தக் கந்தமாதனந்தானென்று யாவராலும் சொல்ல உயர்ந்து பருத்து விளங்கி யிருந்தது. வினதையின் புத்திரனாகிய கலுழன் அந்தக் கந்தமா தனத்தின் விந்தைக ளனைத்தையும் பார்வையிட்டு, முனிவர்களையும் முனிவர்க ளிருக்கிற ஆசிரமங்களையு நோக்கிப் பலவாறு புகழ்ந்து, பின்பு தன் தந்தையாகிய காசிப முனிவ ரிருக்கிற ஆசிரமத்தைக் கண்டு, மெய்-வாய் - கண் - மூக்கு - செவி - வழியாகிய, சத்தம் - பரிசம் - ரூபம் - ரசம் - கந்தமென்னும் ஐம்புலன்களையும் அடக்கி, அறிவைப் பிரமத்தி னிடத்திற் செலுத்தித் தியானஞ்செய்துகொண் டிருக்கும் காசிபரைக்கண்டு, சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்தான். உடனே காசிபர் பன்னக கேசரிக்குப் பல ஆசிகள் வழங்கித், தேககாந்தியினையும் ஆற்றலையும் நோக்கி, உடல் முழுதும் புளகம்போர்ப்பக் கலுழனை வாரித் தழுவி, அப்பா மகனே! தற்காலம் என்னிடத்தில் வந்தகாரண மென்னவென்று வினவ, கலுழன் தான் வந்தகாரணத்தைவிரித்துரைத்து, அடிமைத்தொழில் நீங்க அமுதங்கொண்டு வரவும் – தங்க ளிடத்தில் வரப் பிரசாதம் பெறவும் - எனது பசியாறவும்வந்தேனென, காசிபர்கேட்டு மகிழ்வடைந்து, நீசிறந்த ஆற்றலைப் பெற்று அமுதத்தைக் கொண்டுவரக் கடவது. உன் பசியாற ஆகாரங் காட்டுகிறேன் அதனையும் புசியென்று சொல்லிக் கூறுகிறார்.

அளகா புரியென்னும் நகரத்தில், சுக்கிரன் நதிபன் என்று இரண்டு பிராமணருண்டு. அவர்கள் ஒருவர்க்கொருவர் சகோதரர்கள். ஒருநாள் நதிபன் தன் தமயனாகியசுக்கிரனைவணங்கி, என்பாகத்தை எனக்குக் கொடு வென்று வினவ, சுக்கிரன் பாகங்கொடுக்கமனமில்லாதவனாய் நதிபனைவைய, அதன்மேல் ஒருவர்க்கொருவர் விரோதப்பட்டு, கர்ன கடூரமான வசனங்களை வழங்கினார்கள். அதில் மூத்தவனாகிய சுக்கிரன் நதிபனைப் பார்த்து, அடா துன்மார்க்கா! மரியாதையில்லாமல் என்னை இகழ்ந்ததினால், நீ ஆறுயோசனையகலமும் பன்னிரண்டுயோசனையுயரமுமாகிய யானையாகக் கடவதென்று சபித்தான். நதிபன் பார்த்து, எனக்குச் சேரவேண்டிய பிதுர்ப் பாகத்தைக் கேட்டால் எனக்குக் கொடுக்காமல் என்னைத் தூஷித்ததுமல்லாமல், என்னைச் சபிக்கிறையா? சபாசு! இதுநன்று யிருக்கின்றது. ஞாய மில்லாமல் சாபங்கொடுத்தபடியால், நீமூன்றுயோசனை அகலமும்ஆறுயோசனையுயர்வாகிய ஆமையாகக்கடவதென்று சுக்கிரனைச்சபித்தான். அப்படியே இருவரும் அவ்வுருவங்கொண்டு வடமேற்குச் சமுத்திர மூலையில் என்னேரமும் யுத்தஞ்செய்துகொண் டிருக்கிறார்கள். அதனாலே அநேக ஜீவன்கள் வருத்தப் படுகின்றன. ஆகையால் நீ அவ்விருவரையும் புசிப்பாயென்று கட்டளையிட, கலுழன் மஹா பாக்கியமென்று அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு வணங்கி விடைபெற்று, ஆகாயத்திலெழும்பிப் பறந்து, வடமேற்குச் சமுத்திர மூலையை நோக்கும்போது, யானையும் ஆமையும் தோற்றப்பட்டன. அவைகளைக்கலுழன்கண்டு, உடனே அவைகள்மேற்பாய்ந்து, அவ்விரண்டையும் தனது காலில் ஏற்றிக்கொண்டு கேசரிமார்க்கத்திலெழும்பி; இவ்விரண்டையும் ஓரிடத்தில் வைத்துப் புசிக்கவேண்டுமே, இவற்றை எவண் வைக்கலாமென்று நாலுதிசையும் உய்த்துப் பார்க்கும்போது, நூறுயோசனை விஸ்தீர்ண முள்ள அநேகங் கிளைகளை யுடைத்தாய் உயர்ந்து பெருத்திருக்கிற ஒருஆலமரத்தைக்கண்டு, அதனிடத்திற் சென்று, ஒரு கிளையில் அந்த இரண்டு செந்துக்களையும் வைத்துத் தானு மிறங்கினான். உடனே அக்கிளை கனம் பொறுக்காமல் முறிந்தது. கலுழன் முறிந்து விழுகிற கிளையைப் பார்த்தான். அதில் அங்குஷ்டப் பிரமாணமுள்ள வால்கில்யர் என்கிற முனிக்கூட்டங்கள், இலைக்கொவ்வொருவராயிருந்து தவஞ்செய்தலைக்கண்டு திடுக்கிட்டு, அடடா!! மோசம்வந்தது. வெற்றுமரமென்று நாம் வந்தோம்; இதில்மஹாநிலைபெற்ற தபசிக ளிருக்கிறார்கள். இக்கிளை பூமியில் விழுந்தால், இவர்கள் தவத்துக்குப் பின்னம் வரும். அதனால் நமக்குக் கெடுதிநேரிடும். ஆதலால் இவர்கள் தவத்துக்குப் பின்னம்வராமல் இக்கிளையைக் காலினாலிடுக்கிக்கொண்டு, நமது தந்தையிடத்துச்சென்று வினவினால் நலமுண்டாகும்; இல்லாவிட்டால் பழுதுநேரிடுமென்று யோசித்து, அந்த இரண்டு செந்துக்களுடனே அக்கிளையையும் ஏற்றுக்கொண்டு, காசிபரிடத்தில் வந்து வணங்கி இதனைச் சொல்லுவான்.

ஓ ஐயனே! தாங்கள் இட்ட கட்டளைப்படி சென்று, அந்த இரண்டுசெந்துக்களையும் ஏற்றிக்கொண்டுபோய் புசிக்க, ஓராலமரத்தின் கிளையிலிறக்கி நானுமிறங்கினேன். கனம் பொறுக்காமல் கிளைமுறிந்தது. அக்கிளையைப் பார்த்தால், அங்குஷ்டப்பிரமாணமுள்ள முனிவர்மயமா யிருக்கின்றது. இக்கிளையைப் பூமியில்விட்டால் அவர்கள் தவத்துக்குக் கெடுதிவருகிறதுமன்றி, எனக்குஞ் சாபமும் வருமென் றஞ்சிவந்தேன். இதற்கென்னசெய்வேனென்றுமுறையிட, காசிபர் விரைவி லெழுந்துவந்து, அக்கிளையி லிருக்கும் வால்கில்லியரைப் பார்த்து, ஓமஹா தபோநிதிகளே! நீங்களிருந்து தவஞ்செய்கிற கிளையை முறித்தவன், ஆதியிலே உங்களுடைய கிருபையினாலே புத்திரகாமேஷ்டியாகஞ் செய்தேனே, அந்தயாகத்தில் உதித்த எனதுபுத்திரன். அவன் நீங்கள்தவஞ்செய்கிறமரமென்று அறியமாட்டான். வெற்றுமரமென்று நினைத்து அம்மரத்தின்மேல் வந்திறங்கினான். அதனாலே கிளை முறிந்தது. நீங்கள் சினங்கொண்டு என் புத்திரனைச் சபிக்காமல் காப்பாற்ற வேண்டுமென்று வேண்ட, வால்கில்லியர் காசிபரைநோக்கி, ஓ ஐயனே! உமதுபுத்தி

லோகமெல்லாந் தத்திக்கெட்டுத் தடுமாற மிகுந்தகா
ற்றைத் தனது சிறகினு லுண்டாக்கிப், பார்ப்பவர்க
ளெல்லாம் மனந் திடுக்கிட்டுக் கலங்கிச் சித்திரப்பது
மைபோல அசைவற்று நிற்கத் தனது பராக்கிரமத்
தைக் காட்டி, மஹாவேகத்துடன் அமுதமிருக்குந்
தானத்தில் வந்தான். அந்த அமுதத்துக்குக் காவ
லாளிகளா யிருக்கிறவர்களோடுகூட, இந்திரன் கட்ட
ளைப்படி வந்திருக்கிற அஷ்டவசுக்களும் மற்றதேவ
கணங்களும் ஒருமிக்கக்கூடித், தங்கள் தங்கள் கையி
லிருக்கிற - வேல் - வாள் - கதை - சூலம் - பிண்டி -
பாலம் - சக்கரம் - தோமரம்- இருப்புலக்கை- ஈட்டி-
பாங்கு - கடாரி - சுருள்கத்தி - இவை முதலாகிய
ஆயுதங்களைக் கலுழன் மீதெறிந்து எதிர்த்து அட்ட
காசஞ்செய்து நின்றார்கள். கலுழன்கண்டு குஞ்சிரிப்
புக்கொண்டு, தனது சிறகினுலே அப்படைகளை யெல்
லாம் சிதற அடித்துச், அச்சிறகினுலும் - சிறகின்காற்
றினுலும் - காலினுலும் - கால் நகத்தினுலும் - புடை
த்து, மூக்கினுல் எவரையும் அண்டவொட்டாமற் பா
ய்ந்து கொத்தி, தேவகணங்களையெல்லாந் திக்காலொ
ருவரா யோடிப் பதுங்கும்படியாகத் துரத்தினுன்.
அதனுலே தேவகணங்க ளெல்லாம் ஒருவர் போனவ
ழி ஒருவர் போகாம லோடினுர்கள். அதுகண்ட அன
லன் - அணிலன் - ஆபச்சைவன் - சோமன் - தரன்-
துருவன் - பிரத்தியூசன் - பிரபாசன் - என்னும் அ
ஷ்ட வசுக்களும் வந்தெதிர்த்து, தங்கள் கைவில்லை
வளைத்துச் சோனை மாரிபோலச் சரவருஷஞ் சொரிந்
தார்கள். உடனே அக்கலுழன் அச்சரங்களை யெல்லா
ம் தன் சிறகினுல் தவிடுபொடியாக்கி, அந்த வசுக்கள்
பிடித்திருக்கும் வில்லுகளைத் தன் காலினு லெற்றி மு
றித்தான். அதற்கவர்கள் மிகுந்த கோபங்கொண்டு,
அவரவர்கள் தவஞ்செய்து பெற்ற - இந்திராஸ்திரம்
சந்திராஸ்திரம் - நாகாஸ்திரம் - அக்கினியாஸ்திரம் -
வாயுவாஸ்திரம் - மாயாஸ்திரம் - குபேராஸ்திரம் - வ
ருணுஸ்திரம் - அந்தகாஸ்திரம் - சூரியாஸ்திரம் - இ
டியாஸ்திரம் - பிரம்மாஸ்திரம் - முதலான திவ்யாஸ்
திரங்களை எடுத்து விட்டார்கள். அவைகளைக் கண்டு
ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைத் தியானித்து, ஒரு அ
ஸ்திரமாகிலும் தன்மேல் படாமலிருக்கத் தன் சாகசத்
தினுல் தப்பித்துக் கொண்டு, அவ்வசுக்களைத் தன்
காலால் புடைத்துத் தள்ளினுன். அவ்வசுக்கள் உட
னே திக்குத்திசை தெரியாமல் சாவுக்குச் சரியானமூர்
ச்சை யடைந்தார்கள். கலுழன்மீறி அமுத கலசத்தி
னருகில் வந்தான். அந்த அமுதகலசத்தி னருகில்
வடவா முகாக்கினிபோல அக்கினிச் சுவாலிருந்தது.
அதைக்கண்டு,அடடா!!இதற்கென்னசெய்கிறதென்று
யோசித்து உடனே ஆகாயத்தி லெழும்பி, வான நதி
யில் முழுகிச், சலத்தைச் சிறகிலேந்தி வந்து, அந்த
அக்கினியில் விட்டு, க்ஷணநேரத்தில் அவித்து அப்பு
றஞ் செல்லுகையில், ஒரு சக்கரம் சுழன்றுகொண்டு
மேல்வந்தது. அதைக்கண்டு விரைவில் தன் உடலைச்
சுருக்கி, அச்சக்கரத்துக்குத் தப்பித்துக் கொண்டு,
அமுத கலசத்தை எடுக்கிறபோது, அந்த அமுதகல
சத்தைப் பின்னிக்கொண்டிருந்த இரண்டு நாகஞ்சீறி
எழுந்தன. அந்நாகங்களை ஒரே அறையாகத் தன்கால்
நகத்தால் அறைந்து உடலைப் பிளந்துவிட்டு, அமுத
கலசத்தை எடுத்துக் கொண்டு, மிகுந்த மகிழ்ச்சியு
டன் திரும்பினுன். இந்தச் சேதியைத் தூதுவரால்
இந்திரன்கேட்டு, அதிவேகமாய் வந்து, தன்கையி லி
ருக்கிற வச்சிராயுதத்தை விட்டெறிந்தான். அந்த வச்
சிராயுதம் வந்து கலுழன்மேல் விழுந்து, ஓரிறகைப்
பறித்துக்கொண்டுபோயிற்று. அப்போது கலுழன்
இந்திரனைப் பார்த்து, ஓ தேவராஜனே! நீயார்? நா
னுர்? வேறொருவரு மல்ல, எல்லாங்காசிபருடையபுத்
திரர்தான். ஆனுல் நீ மூத்தவன். நீயே என்மேல் வச்
சிராயுதத்தை ஏவினுல் அதைப் பழுதாக்கலாமா?
அதற்காக ஓரிறகு கொடுத்தேன். இனிமேலென்னைச்
செயிக்கலாமென்னும் ஆசைவைக்காதேயென்று சொ
ல்லி, அமுதகலசத்தை எடுத்துக்கொண்டு கேசரிமார்
க்கத்திற் சென்றுன்.

இந்திரன் பார்த்து, இனிநம்மால் இக்கலுழனை
வெல்லக் கூடாது. நமக் காதாரமான அமுதத்தை
நாமடையவேண்டிய தற்கு, முன்னம் இந்த அமுத
த்தை நமக்குக்கொடுத்த ஸ்ரீமந் நாராயண மூர்த்தி
யை நினைத்தால் தான் ஒரு வழி யுண்டாகுமென்று
கருதி, ஓ ஹரிஹரி! கோவிந்தா! வைகுந்தவாசா! அ
நாத ரக்ஷகா! அன்பர்க் கெளியோனே யென்று இந்தி
ரன் பலவாறு தோத்திரஞ் செய்கிறபோது, எங்கு நி
றைந் திருக்கிற ஸ்ரீமந் நாராயண மூர்த்தி வைகுந்த
த்தைவிட்டு, அமுதகலசத்தை எடுத்துச்செல்கின்ற
கலுழன் முன் - சங்கு - சக்கரம் - வாள்-கதை - கோ
தண்டபாணியாய்த் தோன்றினுர். கலுழன் அவரைக்
கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஓ பரந்
தாமா! ஓ பரமதயாளா! ஓ பக்தரக்ஷகா! ஓ பன்னகசய
னு! ஓ கோவிந்தா! ஓ மாதவா! ஹரிஹரி! என்று துதி
க்க, திருமால் மகிழ்ந்து, ஓ கலுழனே! அருளுடை
மை-அன்புடைமை-ஒழுக்கமுடைமை-வலியுடைமை
முதலியவற்றைப் பெற்ற எல்லாரிலும் நீ மகாசிலாக்
கியவான். ஆதலால் உன்னைக்காணவந்தேன். உனக்கு
வேண்டிய வரத்தைக் கேளென, கலுழன் மகிழ்ந்து,
ஓ ஐயனே! நல்லொழுக்க வழியில்நின்று பிசகாதவனு
ய்த் தங்களிடத் தன்புள்ளவனுய், எந்நாளும் அழி
வில்லாதவனா யிருக்கக் கிருபை செய்யவேண்டுமென்
று கூற, திருமால் அவ்வாறு வரங்கொடுத்துக், கலுழ
னைப்பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறுர். ஓ ககபதீ!
நீ நமக்கு வாகனமாகவும் துவசமாகவு மிருக்கவேண்
டுமென்றுகூற, கலுழன்மகிழ்ந்து அப்படியே ஆகு
றேனென்று கூற, உடனே திருமால் வைகுந்தத்தி
ற்கு எழுந்தருளினுர். அந்தவேளையில் இந்திரன் கலு
ழனை நெருங்கி,ஓபன்னகவைரீ! நீயும்நானும்வேறல்ல.

நான் காசிபர் மனைவிகளில் அதிதி பெற்ற புத்திரன்.
நீயோ விநுதை பெற்ற புத்திரன். ஒருவர்க்கொரு
வர் சகோதரர்கள் தான். ஆதலால்எங்களுக்கு ஆதார
மாயிருக்கிற அமுதத்தைக் கொடுத்தால், உன்னால்
அமுதங் கிடைத்ததென்று நினைத்துக் கொள்வோம்
கிருபை செய்யென்றுகூற, கலுழன் இந்திரனைப்பார்
த்து, ஓ தேவராஜனே! எனது அன்னை உனது அன்
னை யல்லவா? அவள் ஒருவர்க் கடிமையாயிருக்கிறது
நலமா? ஆகையால் அவ்வடிமையை நீக்கக்கொண்டு
போகிறதை நீ யேன் மறிக்கிறா யென்றுகூற, இந்திர
ன் அதைக்கேட்டு, ஓ கலுழனே! உன்னிஷ்டப்படி
நீகொண்டுபோ. ஆனால் எனக்கொரு வாக்குச் சகாய
ஞ்செய். அஃதென்னெனில் அமுதத்தைக் கொண்டு
போய்க் கத்துருவையி னிடத்திற் சேர்த்து, எங்கள்
அடிமைத்தொழில் நீங்கிற்றாவென்றுகேட்டுக்கொண்
டு, உன் தாயும் நீயும் வெளிப்படுங்கள். அப்போது ஆ
திசேஷன் முதலானவர்கள் அமுதத்தைப்புசிக்க அந்
தக் குடத்தை மொய்த்துக் கொள்ளுவார்கள். அந்த
வேளையில் நீ ஆதிசேஷன் முதலானவர்களைப் பார்த்
து, இது தேவாமுத மாயிற்றே; ஸ்நானஞ்செய்து
சுசியாய்ப் புசியுங்களென்று கூறினால், அவர்கள் ஸ்நா
னஞ்செய்யப் போவார்கள். அப்போது நான் ஒருமா
யஞ்செய்து, அமுதத்தைக் கொண்டுபோகிறேனென;
கலுழன் அதற்குச் சம்மதித்து, அவ்வாறுசொல்லுகி
றேன், நீ எனக்கொருவரங்கொடுக்கவேண்டும். அதெ
ன்ன வென்றால்-என்னை மதியாமல் எனக்கு அதிகவே
லையிட்ட ஆதிசேஷன் முதலானவர்கள் எனக்கிரையா
க வரங்கொடுவென்று வினவ, இந்திரன் அந்தவரத்
தைக் கொடுத்து, ஒருவித மாயவேடங்கொண்டு அக்
கலுழனுடனே சென்றான். கலுழன் அமுத கலசத்
தைக் கத்துருவை யிடத்தில் சேர்த்து, அம்மா! இ
தோ அமுத கலசங்கொண்டுவந்தேன். இதைஏற்றுக்
கொண்டு எங்கள் அடிமைத் தொழிலை நீக்கென்று
வேண்ட, கத்துருவை ஒருவர்க்கும் அகப்படாத அ
முதத்தைப் பார்த்த மாத்திரத்தில் அதிக மகிழ்ச்சி
யடைந்து, ஓ கலுழனே! இன்றுமுதல் நீங்கள் கருத்
துக் கிசைந்த விடத்திற்சென்று சுகமாயிருங்கள். இ
னி யடிமையென்கிற பெயரே இல்லையென்று கூற,
கலுழன்மகிழ்வடைந்து, தன் தாயை அழைத்துக்கொ
ண்டு வெளிப்பட்டான். அப்போது ஆதிசேஷன் முத
லானவர்கள் அமுதகலசத்தைக்கண்டு, மிகுந்த ஆவ
லோடுவந்து புசிக்கமொய்த்துக் கொண்டார்கள். கலு
ழன் அதுகண்டு, ஓ கத்துருவை புத்திரர்களே! இ
தென்ன இலேசான வஸ்துவா? தேவாமுதமல்லவா?
இதனை அசுசியாய்ப் புசிக்கலாமா? சுசியாய்ப்புசியுங்க
ளென்று சொல்லித் தன் தாயும் தானும் வைகுந்தம்
போய்ச்சேர்ந்து, ஸ்ரீமந் நாராயண மூர்த்திக்கு வாகன
மும் துவசமுமாயினான். இந்தக் கலுழபகவான் சரி
த்திரத்தைக் கேட்டவர்களுக்குஇகபரசுகங்கள்மிகும்.

இங்கே ஆதிசேஷன் முதலானவர்கள் கலுழன்
கூறியபடி சுசியாய்ப் புசிப்பது நலமென் றெண்ணி,
ஸ்நானஞ்செய்துவர யாவரும் சென்றார்கள். அந்த
வேளையில் இந்திரன் ஒருவித மாயவேடங்கொண்டு,
அந்த அமுதகலசத்தை யெடுத்துக்கொண்டு தனது
லோகத்திற்சென்று, அந்த அமுதகலசத்துக்கு முன்
னிருந்த காவலைவிட அதிக காவல்வைத்து, மிகுந்த
மகிழ்ச்சியுட னிருந்தான். ஸ்நானஞ்செய்யப்போயிரு
ந்த ஆதிசேஷன் முதலானவர்கள் அதனை முடித்து,
மகா சுசியுடனே அமுதகலசம் வைத்திருந்த விடத்
துக்குவந்து பார்த்தார்கள். அவ்விடத்தில் அமுதகல
சத்தைக் காணாமல் திடுக்கிட்டுத், தாயாகிய கத்துரு
வை இடத்திற் சென்று, தாயே! அமுதகலச மெங்
கேயென்று கேட்டார்கள். ஐயோமக்களே! அங்கிருந்
ததே எங்கேபோயிற்றென்று அலறிக் கையைநெறித்
துக்கொண்டுவந்துபார்த்தாள். அங்கு அமுதகலசமில்
லாமையைக்கண்டு, ஆபுத்திரர்களே! உங்களைப்போல்
உலகத்தில் அபாக்கியவான்களில்லை. கைக்கு எட்டின
பொருள் வாய்க்கு எட்டாமற்போயிற்று. இனி அதற்
காகத்துன்பப்படுவதில் ஒரு பயனுமில்லை. மகாபலவா
னாகலுழன்அடிமையும் நீங்கிற்று. (கலையுமப்பைக்க
ண்டு கட்டி யிருந்தவிதையைவட்டிக்குவிட்டான்) என்
கிற பழமொழி நமக்குத்திருஷ்டாந்த மாயிற்றே என்
றுகூறி மனையிற் சென்றாள். ஆதிசேஷன்முதலானவ
ரும் ஏங்கி, ஐயோ! மகா பராக்கிரமசாலியாகிய கலு
ழனால் கிடைத்த அமுதம் நமக்குப் புசிக்கிறதற்குப்
பிராப்தி யில்லையென்று வருத்தப்பட்டு, அவ்வமுதக
லசத்தை வைத்திருந்த தர்ப்பை மணக்கிறதைப்பார்
த்து, இந்தத் தருப்பையில் கிஞ்சித்து அமுதம் சிந்தி
னதா யிருக்கிறதென்று நினைத்து, யாவரும் ஒன்றா
கக்கூடி, அத்தருப்பையை நாக்கினால் நக்கினார்கள்.
அப்படி நக்கின மாத்திரத்தில் அவர்கள் நாக்குகளெ
ல்லாம் இரண்டு பிரிவாகப் பிளந்தன. அதன்மேல் ஆ
திசேஷன் முதலானவர்கள் துன்பமுற்று இருந்தார்
கள். சிலநாள் சென்றபின்பு ஆதிசேஷன் தன்னந்தனி
யே இருந்து, கலுழன்பெற்றவரங்களையும், திருமாலு
க்கு வாகனமும் துவசமுமாயினதிறத்தையும் நினைத்
து, இனிநாம் கலுழனுக் கிரையாவதேயன்றிப் பிழை
க்கப்போகிற தில்லை. நமது தம்பிமார்களோ துஷ்டர்.
இந்தத் துராத்மாக்களை நீங்கி நாம் பிழைக்கும் வழி
யைத் தேடிக்கொள்ள வேண்டுமென்று பலவாறு சிந்
தித்து, ஒருவனத்திற் சென்று பிரமனை நினைத்து,
அநேககாலந் தவத்திலிருந்தான். பிரமன் அந்த ஆதி
சேஷனுக்குப் பிரசன்னமாகி, ஓ அனந்தனே! உனக்
கு வேண்டிய வரமென்ன கேள் தருகிறேனென்றான்.
ஆதிசேஷன் அநேகவிதமாய்த் துதித்து, ஐயனே!
ஜெநமேஜெய மகாராஜன் செய்கிற சர்ப்பயாகத்தில்
மடியும்படி எனக்குநேரிட்டிருக்கிற அன்னையின்சாப
த்தை நீக்க ஒருவழியும், கலுழனால் துன்பப்படாமலி
ருக்கவும், என்சகோதரர்களின் சம்பந்தம் எனக்கில்

லாம விருக்கவும் கிருபை புரியுமென்று வேண்ட, பிரமன்சொல்லுகிறான், ஓ ஆதிசேஷா! உன் சகோதரியின் வயிற்றில் ஒருபுத்திரன் உதிக்கப்போகிறான். அவனால் சர்ப்பயாகத்தின் இமிசை நீங்கும். நீ பாதாள லோகத்திற்சென்று, அங்கிருக்கிற சர்ப்பங்களுக்கெல்லாந் தலைவனாகி, இந்தப் பூமியைத் தாங்கிக்கொண்டிரு. கலுழன் பயமும் உன்சகோதரர்களின் தொடர்ச்சியு மில்லாம லிருக்குமென்று கட்டளையிட்டுப், பிரமன் தனது லோகத்திற் சென்றான். பின்பு ஆதிசேஷன் பிரமனிட்ட கட்டளைப்படி பாதாள லோகத்திற் சென்று, இவ்வுலகத்தைத்தாங்கி, அங்கிருக்கும் பாம்புகளுக்கெல்லாம் தலைவனாகி இனிது வீற்றிருந்தான். இந்த விருத்தாந்தத்தைக் கத்துருவையின் புத்திரர்கள் கேள்விப் பட்டு, மிகுந்த வருத்தத்தை யடைந்து, தாயிட்ட சாபத்தை நினைத்துத் துன்பப்படுகிறவர்களா யிருந்தார்கள். அதன்பின்பு நடந்த விருத்தாந்த மென்னெனில்.

அமுதங்கொணர்ந்த சருக்கம் முற்றிற்று.

ஏழாவது.

சலற்காரமுனிச் சருக்கம்

சலர்க்காரனென்று பெயருடைய ஒருமுனியுண்டு. அவன் இளமையிலே எல்லாவற்றையும் நீக்கி, இல்லறங் கெட்டதென்று விலக்கித், துறவறத்தையே அநுசரித்து, மனம் - புத்தி - சித்தம் - காயம் - என்பனவற்றை ஒரு வழிப்படுத்தி, சுத்தக்கியான சுரூபியாய் விளங்கிப், பிரமசரியத்தின் ஒழுக்க நெறி பிசகாமல் தனக்கிச்சையான வனங்களில் சஞ்சரித்து வருகிற நாளில், ஒருநாள் ஒருவனத்திற் சென்றான். அவ்வனத்தில் உயர்ந்து பருத்துத் தழைத்திருக்கிற ஒரு ஆலமரந் தோன்றிற்று. இந்த சலர்க்காரமுனி அந்த மரத்தருகிற் சென்று, அந்த மரத்தை நோக்கினான். அதில் அறக்கடவுளாகிய இயமன் கட்டளையின்படி இருபத் தொரு புருஷர் அம்மரத்திற் பொருந்தி, வௌவால் போல் தலைகீழாய்த் தொங்கித் துன்பப் பட்டுக்கொண் டிருக்கிறதைக் கண்டு, அடடா!! இவர்கள் யாரோ மகா முனிவர்கள். மிகுந்த வருத்தமான தவஞ்செய்கிறார்கள். இப்படி தவஞ்செய்கிறது நாம் எந்த நூலிலும் கண்டதில்லை. கல்வி கரையில்லை யாதலால், இப்படியுந் தவஞ்செய்ய சாஸ்திரங்கள் கூறியிருக்கின்றதோ? என்னமோ? எல்லாம் இவர்களைக் கண்டு வணங்கி வினவினால் தெரியுமென்று மதித்து, மரத்தடியிற்சென்று, அவர்களைப் பார்த்துவணங்கி, ஓ மகாத்மாக்களே! இவ்வகைப்பட்ட வருத்தத்தோடு தவஞ்செய்கிற காரண மென்னவென்று வினவினான். இந்த வசனத்தை அந்த இருபத்தொருபுருஷரும் கேட்டு, ஓ மகாத்மாவே! நாங்கள் தலைகீழாகத் தொங்குகிறதே யொழிய தவஞ்செய்த லல்ல. எங்கள் மரபில் சலர்க்காரன்என்றுஒருபுத்திரன் பிறந்திருக்கிறான். அவனிளமையிலேயே இல்லறத்தை வெறுத்துத் துறவறத்தை யனுசரித்து, பிரமசாரியா யிருக்கிறான். அதனாலே யமன் கோபங்கொண்டு, உங்கள் மரபு விளங்கவில்லை யாதலால் நீங்களெல்லாம் நரகவேதனைக் குள்ளாகுங்களென்று, இந்த மரத்தில் தலைகீழா யிருக்கக் கட்டளை யிட்டான். அக்கட்டளைப்படி நாங்கள் தொங்குகிறோ மென்றார்கள். சலர்க்காரன் திடுக்கிட்டு, நடுநடுங்கிச், சரீரம் வெயர்த்து, மொழிகுளறிச், சாஷ்டாங்கமாக அவர்களுக்கு நமஸ்காரஞ் செய்து, ஓ ஐயமீர்! சலர்க்கார னென்பவன் நான் தான். கோபித்துக் கொள்ளாதீர்கள். இல்லறம் நல்லபயனைக் கொடுக்காதென்று கருதித் துறவறத்தை மேற்கொண்டேன். இனி உங்கள் நிமித்தம் கிரகஸ்த னாகுகிறேன். ஆனால் எனக்கு ஒருவரம் கொடுக்கவேண்டும். அஃதென்னெனில் - என்பெயர் கொண்ட ஸ்திரீயை விவாகஞ் செய்து கொள்ளுகிறேன். அப்படி சித்திக்கும்படி கிருபை செய்யுங்களென்று வேண்ட, அவர்கள் அவ்வாறு வரங்கொடுக்க, அவ்வரத்தைப் பெற்ற சலர்க்காரன் அவர்களை வணங்கி விடைபெற்றுக், கிரகஸ்தனாகக் கருதித், தன்பெயர் கொண்ட ஸ்திரீயை நாடி எங்கணுந் தேடி, இந்தக் கத்துருவைக்குச் சலற்காரா யென்னும் பெயரால் ஒரு பெண்ணிருப்பதாய்க் கேள்விப்பட்டு, அவர்கள் இருக்கிற இடத்துக்கு வந்தான்.

கத்துருவையும் தக்ஷகன் முதலான புத்திரர்களும், விரைவிலெழுந் தெதிர்கொண்டுபோய் அழைத்துவந்து, பொற்பீடமளித்து அதிலிருக்கச் சொல்லி, வந்தனை வழிபாடு செய்தார்கள். அப்போது கத்துருவைபெற்ற சலர்க்காரா யென்னும் பெண்ணும் வந்து வணங்கி நின்றாள். இந்தச் சலர்க்காரன் யாவர்க்கும் பல ஆசிகள் வழங்கி, தக்ஷகன் முதலானவர்களைநோக்கி, ஓ நாககுமாரர்களே! இதோ நிற்கிறபெண்யார்? இவள் பெயரென்ன ? இவளை யார்க்காவது விவாகஞ் செய்து கொடுத்தீர்களாசொல்லுங்களென்று வினவ, தக்ஷகன்-ஓ ஐயனே ! இந்தப்பெண் எங்கள் தங்கை. இவள்பெயர் சலர்க்காரா. இன்னும் விவாகமில்லையென்றுகூற, சலர்க்காரன் மிகுந்த மகிழ்ச்சி யடைந்து, தன் விருத்தாந்தத்தைவிளம்பி, இப்பெண்ணை எனக்கு விவாகஞ்செய்து கொடுங்களென்றுகேட்டான். தக்ஷகன்முதலானவர்கள் திடுக்கிட்டு, இதென்ன ஆச்சரியம். நமதுதங்கையை விவாகஞ்செய்துகொடுவென்

ஆ இந்தமகாத்மா கேட்கிறார். மறுத்தோமாகில் அன்
னையிட்ட சாபத்துக்கே அவஸித்துக்கொண்டிருக்கிற
நமக்கு என்னசாபம் நேரிடுமோவென்றுபயந்து, ஒரு
வர் முகத்தை ஒருவர் பார்க்கிறபோது, அவருளொரு
நாகன் தேனில் விழுந்த ஈயைப்போல மயங்குஞ்சகோ
தரர்களை நோக்கி, ஒருவசனஞ் சொல்லுகின்றான்.
ஓ சகோதரர்களே! நீங்களேன் மயங்குகிறீர்கள், சில
நாளுக்குமுன் நான், நமக்குவந்த சாபத்தையும் கனு
ழன்பெற்ற வரத்தையும் நினைத்து நித்திரைசெய்கிற
போது, ஜெநமேஜெய மகாராஜன் சர்ப்பயாகஞ்செய்
யவும், அந்த யாகத்தில் நாமெல்லாம் இறக்கவும், நம
க்காகத் தேவர்களெல்லாம் பிரமனிடத்து முறையி
டவும், அப்பிரமன் தேவர்களே நீங்களேன் வருத்தப்
படுகிறீர்கள், தக்ஷகன் முதலானவர்களோடு ஒரு பெ
ண்பிறந் திருக்கிறாள், அவளை ஒருமுனி விவாகஞ்
செய்கிறார், அவர் கிருபையினால் அவளிடத்தில் ஒரு
புத்திரன் உதிக்கிறான், அதனால் நாகங்களுக்கு நேரி
டும் துன்பம் நீங்குமென்றுசொல்லக்கனவுகண்டேன்
அக்கனவை நினைவென்று நினைத்திருந்தேன். இப்
போது திர்ஷ்டாந்தமாயிற்று. இந்தமுனி கருத்தின்
படி நமது தங்கையை விவாகஞ்செய்து கொடுக்கிற
தே நமக்கெல்லாம் நலமென்றுகூற, தக்ஷகன் முத
லானவர்கள் மகிழ்ச்சி யடைந்து, அம்முனிவனை வண
ங்கி, ஓ ஐயனே! உமது நினைப்பின்படி எங்கள்சகோ
தரியாகிய சலர்க்காரையை விவாகஞ்செய்துக்கொள்
ளுமென் றுரைத்து, நல்ல சுபமுகூர்த்தத்தில் அம்மு
னிவனுக்குச் சலர்க்காரையை மணஞ்செய்வித்துக்
களிப்படைந்தார்கள்.

சலர்க்காரமுனி தன்மனைவியாகிய சலர்க்காரை
யை அழைத்துக்கொண்டு ஒருவனத்திற்சென்று,பன்
னகசாலை ஒன்று இயற்றி அதிலிருந்து, மனைவி பணி
விடைசெய்யத் தான் தவத்தி லிருந்தான். இப்படி
சிலநாட் சென்றபின்பு, ஒருநாள்சலர்க்கரரமுனிதன
து மனைவி செய்துவருகிற பணிவிடைக்கு மகிழ்ச்சி
யடைந்து, மனைவியை அழைத்து, ஓபெண்ணே!மண
ம் புரிந்த காலமுதல் இதுவரைக்கும் நீ செய்துவந்த
உபசாரங்களினால்,உன்மீது எனக்கு மகிழ்வுண்டாயி
ற்று. இனிஇருவருங்கூடி க்குலாவிவாழ்ந்திருக்கலாம்
ஆனால் ஒன்று சொல்லுகிறேன். அஃதென்னெனில்
நீஎனக்கொருகுற்றஞ்செய்வையாகில், அன்றையத்தி
னமேஉனக்கும்எனக்குஞ்சம்பந்தமில்லை. இந்தச்சொ
ல்லைஉறுதியாய் நினைத்துக்கொள் என்றுகூறி, அன்று
முதல் இரதியும் மதனும்போலக் கலந்து வாழ்ந்திருந்
தார்கள். இப்படி சிலநாட் சென்றபின்பு, ஒருநாள் அ
ந்திவேளையில் இந்த சலர்க்காரமுனி நித்திரைசெய்தி
ருந்தான். அந்தவேளையில்சலர்க்காரை ஓ!ஓ!சூரியன்
அஸ்தமிக்கிறானே: முனிவர்களெல்லாம் சந்தியாநுஷ்
டானஞ் செய்கிறார்களே : நமது கணவனார் நித்திரை
செய்கிறாரே: இந்தவேளையில் நமதுகணவனை நாம் எ
ழுப்பவேண்டுமென்றுகருதி, கணவ னிடத்து வந்து
நின்று, இவரை எழுப்பினால் ஒருவேளை கோபங்கொ
ள்ளுவார். எழுப்பா விட்டாலும் குற்றங்கூறுவார்.இத
ற்கென்ன செய்கிற தென்று நினைத்துத்,தெய்வச்செ
யலெப்படியோ அறியேனென்று சஞ்சலப்பட்டு,கண
வனது பாதத்தைப் பிடிப்பது போலப் பற்றினாள்.
உடனேசலர்க்காரமுனி நித்திரைவிட்டெழுந்து கோ
பங்கொண்டு, ஓ பெண்ணே! நீ நித்திரைபங்கஞ்செய்
ததினால், இனி உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை
என்றுசொல்லிவிட்டு எழுந்து,தன்கருத்துக்கிசைந்த
விடத்துக்குப் போக யத்தனித்தான். அந்தவேளையி
ல்சலர்க்காரை கணவன்காலில் விழுந்துவணங்கி, ஓஸ்
வாமி! சந்தியாநுஷ்டான காலமாயிற்றே, இன்னும்
நித்திரை செய்கிறீர்களே என்று எழுப்பினேன். (வே
ண்டாப் பெண்டீர் கைபடக் குற்றம் கால்படக்குற்ற
ம்) என்று சொல்லும் பழமொழிபோல்,குற்றமல்லாத
வற்றைக் குற்றமாகப் பாவித்து என்னைத்தூறி வெ
ளிப்பட்டீர். எனக்கொருவழி காட்டுமையாவென்றுமி
குந்த ஆறுமையோடு வேண்ட, ஓ பெண்ணே! நீயே
ன் வருத்தப் படுகிறாய். உன்வயிற்றில் ஒரு புத்திரனி
ருக்கிறான்.அவனாலே உனக்கும் உன்சுற்றத்தாருக்கு
ம் நலமுண்டாகும். ஆனதால் உன்தாய்வீடு போய்ச்
சேரென்று கட்டளையிட்டுச், சலர்க்காரன் தனக்கிஷ்
டமான விடத்துக்குச் சென்று தவத்தி லிருந்துவிட்
டான். பின்பு சலர்க்காரை தாய் வீடு வந்துசேர்ந்து,
தன் விருத்தாந்தத்தைத் தாய்க்கும் சகோதரர்களுக்
குஞ் சொல்ல, அவர்கள் கனவருத்தமடைந்து, இனி
என்ன செய்கிறது; வருத்தப்படாமல்சும்மாயிரு அம்
மாவென்று ஆதரித்து வந்தார்கள். சிலநாள் சென்ற
பின்பு சலர்க்காரை பிரசவவேதனைப்பட்டு, மாணிக்க
ம் போல் ஒரு புத்திரனைப்பெற்றாள். தக்ஷகன் முத
லானவர்கள் அப்புத்திரனை மிகுந்த அன்புடனே வள
ர்த்து, அவனுக்கு அத்திகனென்று பெயரிட்டு ஆதரி
த்து வந்தார்கள். அப்புத்திரன் சகல கலைக்கியான
சுரூபியாகிய சலர்க்காரமுனிவழியாய்த் தோன்றினவ
னாதலால் ஞான சுரூபியாகி, திரிமூர்த்திகளாலும் அள
விடப்படாத தவசிரோஷ்டனாகி யிருந்தான்.

கேட்டீரா! ஓ ஜெனமேஜெய மஹாராஜனே!
காரணங்கள் இப்படியிருக்க, நீர் ஏன் சர்ப்பயாகஞ்
செய்ய ஐயப்படுகிறீர்.விரைவில் யாகத்தை நிறைவே
ற்றுமென்று உதங்கமுனிகூற, அரசன் உதங்கமுனி
யை வணங்கி, ஓ ஐயனே! தாங்கள் இதுவரைக்கும்
கூறிவந்தது தகுதிதான். ஆனால் அந்தத் தக்ஷகன்
எனக்கொரு குற்றமுஞ் செய்யவில்லையே:நான் எப்ப
டி யாகத்தைச் செய்கிற தென்று ஆக்ஷேபித்தான்.
அதற்கு உதங்கமுனி, ஓ அரசனே! அத்தக்ஷகன்என
க்குச் செய்த குற்றம் பெரிதல்ல. உமக்குச் செய்த
குற்றந்தான் பெரிது. இதுவரைக்கும் அந்த விருத்
தாந்தம் உமக்குத் தெரியாதா? ஆ! ஆ! இதென்ன

ஆக்சரியமென்றார். அரசன் ஐயனே! அத்தக்ஷகன் எனக்கொருகுற்றமுஞ் செய்யவில்லை. யான் அறியேன். அப்படியேதாகிலும் ஒருகுற்றம்அத்தக்ஷகன்செய்திருந்தால் விவரித்துச் சொல்லுமென்றுவினவ, ஓ அரசனே! அவன்உமக்குச்செய்தகுற்றத்தைக்கூறுகிறேன் கேளுமென்று உதங்கமுனி சொல்லத் தொடங்கினார்.

சலற்காரமுனிச்சருக்கம் முற்றிற்று.

எட்டாவது

பரிச்சித்து மஹாராஜன் சருக்கம்.

கேளும் ஜெநமேஜெய மஹாராஜனே! குருகுலதிலகனான உன்பிதா பரிச்சித்து மஹாராஜன் இந்த அத்தினபுர வாசியா யிருந்து, ஐம்பத்தாறு தேசங்களையும் தன்னாணையில் நடாத்தி, நீதியுடன் அரசுசெலுத்தி வருகிறநாளில், ஒருநாள் வேட்டையாட யத்தனித்து, மந்திரி முதலாகிய தளங்களுடனே காட்டிற் சென்று, யாளி - சிங்கம் - புலி-கரடி - யானை - செந்நாய் - முதலாகிய விலங்கினங்களை நாசப்படுத்தி வருகிறபோது, ஒருவேங்கையானது வேடர்கள் போட்ட வலையைத்தாண்டி ஓடிற்று. அதனைக்கண்டு வேடர்கள் ஓடிவந்து அரசனுக்குக்கூற, அரசன் கேட்டுக் கோபங்கொண்டு, ஆ!வலையையுங் கடந்ததா?எதோ அந்தப்புலி என்று வாயுகதியோடு கலந்த குதிரையின் மேலேறிப், புலியைத்தேடிப் புறப்பட்டான். அப்புலி அதிகவேகமாய்க் காடுமலை முதலிய வற்றில் விழுந்து ஓடிற்று. அரசனும் விடாமற் பின்சென்று புலியைத் துரத்துகிறபோது, புலி ஒரு பெரிய மலையிலேறி, அருவிச்சருவில் மறைந்துவிட்டது. புலிமறையவே அரசன் நாலு திசையும் சுற்றிச் சுற்றித் தேடியுங்காணாமல், மகா உக்கிரத்துடனே அம்மலையை விட்டிறங்கி வருகிறான். அப்படி வருகிறபோது, பயிரவமுனி யென்பவர் அவ்வழியி லோரிடத்தில் விழித்த கண்ணுடனே தவஞ்செய்திருந்தார். அவரை அரசன்கண்டு வணங்கி, ஓ முனிநாதா! இவ்வழியாய் ஒரு புலிபோயிற்றா சொல்லுமையாவென்று கேட்க, அம்முனி யோகத்தி லிருக்கிறவ ராதலால், ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமா யிருந்து விட்டார். அதன்மேல் அரசனுக்குக் கோபம் பிறந்து, ப்க்கத்தி லிறந்துகிடக்கிற சர்ப்பத்தை வில்லினா லெடுத்து, அவர்கழுத்தில் மாட்டிவிட்டுப், பின்பு அப்புலிபோயின சாடையிற் சென்று தேடியுங் காணாமல், மறுபடியும் தன் சேனைகளோடு கலந்து, முன்போலவே அந்த அத்தினபுரத்தில் வந்து அரசு செலுத்தி யிருந்தான். அங்கே தவஞ்செய்திருந்த பயிரவமுனிக் கெதிரில் மற்றொரு பெரியவர் தவஞ்செய் திருந்தார். அவர் உன் தந்தையாகிய பரிச்சித்து மஹாராஜன் அம்முனிவர் கழுத்தில் இறந்த பாம்பை யெடுத்துச் சுற்றும்போது பார்த்திருந்து, உடனே அந்தப் பயிரவமுனிவர் புத்திரனாகிய சிரிங்கிமுனி தவஞ்செய்கிற இடத்துக்குப் போய், நடந்த விருத்தாந்தத்தைச் சொல்ல, அந்தச் சிரிங்கிமுனி கோபங்கொண்டு, என் தந்தைகழுத்தில் இறந்த பாம்பைச் சுற்றின அரசன் இன்றைக் கேழாநாள் தக்ஷகனென்கிற பாம்புக் கிரையாகக்கடவானென்றுசபித்துத் தன்தந்தை இடத்துவந்து, கழுத்தில் சுற்றியிருக்கிற பாம்பை எடுத்தெறிந்து வணங்கிநின்றான். பயிரவ முனிவர் யோகநிலையைவிட்டுப் பிரிந்து, ஐம்பொறிகளின் வழியாய் ஐம்புலனைச் செலுத்தி நோக்கினார். எதிரே புத்திரன் இருப்பதைக்கண்டு, ஆ மகனே! நீ தவஞ்செய் திருக்கிறவன் இவிடத்துக் கேன்வந்தாய் என்று வினவ, சிரிங்கிமுனி- ஓஐயா! யாரோ ஓரரசன் புலியைத்தேடிவந்து தங்களைக் கண்டு, இந்த வழியாய்ப் புலிபோயிற்றாவென்று வினவினதாகவும், அதற்குத் தாங்கள் உத்திரவுகொடுக்கா திருந்ததாகவும், அதன்மேல் அவ்வரசன்கோபங்கொண்டு இதோகிடக்கிற இறந்த சர்ப்பத்தைத் தங்கள் கழுத்தில் சுற்றிப் போய்விட்டதாகவும், இம்முனிவர் வந்துசொன்னார். உடனே கோபங்கொண்டு,இன்றைக்கேழாநாள் தக்ஷகனென்கிற பாம்புக்கு அந்த அரசன் இரையாகக்கடவதென்று சபித்து விட்டுத் தங்களிடத்துக்கு வந்து பார்த்தேன். இம்முனிவர் கூறியபடி கழுத்தில் பாம்பிருந்தது. அதை எடுத்தெறிந்து நின்றேனென்றார். பயிரவமுனிவர் கியான திருஷ்டியால் நோக்கி, வந்தவ னின்னானென்றுணர்ந்து, மிகுந்த வருத்தத்தையடைந்து, புத்திரனைப்பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறார்.

அப்பா மகனே! உண்டி முதலியவற்றைச்சுருக்கலும்,உயிர்க்கிடையூறு செய்யாதிருத்தலுமாகியஇவ்விரண்டுந் தானே தவத்துக்கு உருவம். இதனையுணர்ந்திருந்தும், உலகாதிபனான குருகுலசிகாமணிக்குக் கடினமான சாபத்தைக் கொடுத்தாய்.'ஐயோ! அந்தப்பரிச்சித்து மகாராஜன் இருக்கிறதினா லல்லவா தருமதேவதை நாலு பாதத்தில் நடக்கின்றது. அவ்வரசன் இறந்து விட்டால் இனி எவன்வருவானோ?உலகமெவ்வாறாமோ? "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும், தவமிலா ரில்வழியில்லை தவமும், அரசுளா ரில்வழியில்லை யரசும், இல்வாழ்வா ரில்வழி யில்" என்றுசொல்லுமேலோர் வாக்கியத்தின்படி, உலகிலிருப்பவர்களுக்குஎல்லாநலமும் மழையினாலடையவேண்டும். அம்மழை தவத்தினாற் பெருகும். அத்தவம்

அரசனால்நிலைபெறும். எல்லாநூல்களையுங்கற்று,மநு
சாஸ்திர விதிபிசகாமல் செங்கோல் செலுத்தி, நம்
போலியர்க்கெல்லாம் யாதொருகுறைவும் வாராமலி
ருக்கப் பாதுகாத்து வரும் அரசன் ஏதோ கிஞ்சித்
துப் பிசகிப்போனாலும். நாம்பிசகி விபரீத சாபமிட
லாமாவென்று சொல்லிவருத்தப்பட, சிரிங்கிமுனிதந்
தையை வணங்கி, கோபத்தினால் முன்பின்யோசிக்கா
மல் கடினசாப மிட்டுவிட்டேன். இனி அச்சாபத்தை
நீக்க மறுசாபங் கொடுப்போமென்றால், இன்னும் அ
வ்வளவு தவம்நான் அடையவில்லை. இதற்கென்னசெ
ய்வேனென்று தந்தையோடு தானும் வருத்தப்பட,
பயிரவ முனிவர் தமதருகி லிருக்கிறவர்களில் சிலரை
நோக்கி, ஓமுனிவர்களே! நீங்கள் பரிச்சித்து மகாரா
ஜனிடத்திற் சென்று அவரைக்கண்டு, சாபம்வந்தவர
லாற்றைச் சாற்றி, ஏழுநாளைக்கு மாத்திரம் பாம்புவ
ராதிருக்கிற இடத்திலிருந்து தப்பித்துக்கொள்ளச்
சொல்லுங்களென்று சொல்லி அனுப்பிவித்தார். அம்
முனிவர்கள் அவ்வாறே உனது தந்தையைக் கண்டு,
சாபம்வந்த விருத்தாந்தத்தைச் சொல்லி, ஏழுநாளை
க்கு மாத்திரம் பாம்பு வராதிருக்கிற இடத்தி லிரு
மென்று சொல்லிவிட்டுப்போயினார்கள்.அவர்கள்போ
யின பின்பு, உனது தந்தை மந்திரி முதலாகிய புத்தி
மான்களிடத்தில் ஆலோசித்து, அவர்கள் கூறிய யுக்
தியின்படி கடலில் ஒருபெரிய ஸ்தம்பத்தை நாட்டி,
அந்த ஸ்தம்பத்தின்மேல் ஒருதிவ்ய மண்டபமியற்றி,
அதில் உன்தந்தை அரவின் விஷத்தை அடக்கும்மரு
த்துவர் மந்திரவாதிகளோடு, இன்னுஞ் சிலகாவலா
ளிகள் தன்னைச் சூழ்ந்திருக்க ஆறுநாள் பரியந்தம்
யாதொரு குறைவுமில்லாமல் இனிதுவீற்றிருந்தான்.

ஏழாநாள் தட்சகனென்பவன் சிரிங்கிமுனி இட்
டசாபத்தை நிறைவேற்றக்கருதிப், பாதாளலோகத்
தைக் கடந்து, பூலோகத்தில் வந்து, இங்கே உன்த
ந்தை இருக்கிறஎச்சரிக்கையை அங்கங்கேசொல்லிக்
கொள்ளுகிறதினா லறிந்துகொண்டு, ஓராலமரத் தடி
யில் வந்துநின்று, மகா எச்சரிக்கையா யிருக்கிறஅர
சனை எவ்வாறுநாம்கொல்லுகிறது. இந்தக்காத்திரமா
ன தேகத்தோடு செல்லுவோமாகில் ஒருவீரன் நம்
மைக் கொன்றுபோடுவான். அப்படி யல்லவென்று
அரசனைவிட்டுப் போவோமென்றால் நமதுதலை ஆயிர
ஞ் சுக்கலாகப் பிளந்துபோமே: இதற்கென்னசெய்கி
றதென்று யோசித்திருக்கிற தருணத்தில், காசிபனெ
ன்று பெயரையுடைய ஒருபிராமணன் அதிவேகமாய்
ஓடிவருவதைக் கண்டான். அப்பிராமணன் சேரவரு
கிறதற்கு முன்னமே தனது தேகத்தை மறைத்
துத்,தானும் ஒருபிராமணன்போல் வேஷங்கொண்டு
தட்சகனிருந்தான். விரைவில் அந்தப்பிராமணன் அ
ருகில் வந்தான். அந்தப் பிராமணனைத் தக்ஷகன்கண்
டு, ஓ ஐயனே! அதிவேகமாய் வருகிற நீர் எவ்விடத்
துக்குப் போகவேண்டும். நீர் நினைத்துவந்த காரிய
மென்ன சொல்லுமையாவென்று வினவ, காசிபன்-ஓ
பிராமணா! சந்திரகுல திலகனான பரிச்சித்து மகாரா
ஜனை அரவு தீண்டச் சாபம் நேரிட்டிருக்கிறதாயும்,
அதற்கு மருத்துவர்களையும் மந்திரவாதிகளையும் அ
ழைப்பிக்கிறதாயும் கேள்வி. அதற்காக அந்த அரச
னிடத்திற் சென்று என்மந்திரவன்மையைக் காண்பி
த்து, என்னை யடிமையாகக் கொண்டிருக்கிற தரித்தி
ரத்தை அதமாக்கக் கருதி, அச்சாபம் நிறைவேறுகிற
து இன்றைக்குத்தானே ஆதலால், அரசன் சமுகங்
காண விரைவாகச்செல்லுகிறேனென, தக்ஷகன்-ஓ பி
ராமணா! அந்த அரசனைக் கொல்லவருகிற சர்ப்பமெ
ன்ன எளிதா? சொற்கமத்தியபாதாளலோகங்களிலிரு
க்கிற சர்ப்பங்களுக் கெல்லாம் தலைமையானசர்ப்பம்.
அதுகடிக்கிறதே இல்லை.ஒருமுனியிட்டசாபக்கட்ட
ளைப்படி கடித்துக்கொல்ல வருகிறது. அந்த விஷம்
சந்திர சடாதரனாகிய பரமன் ஒருவன்தவிர, மற்றவர்
களுக்கு அசாத்தியமா யிருக்கும். அதை நீயடக்கு
கிறேனென்று நினைத்துவந்ததை யோசிக்கும்போது,
தரித்திரக் கொடுமையென்று தோற்றப் படுகின்றதே
யன்றி, மந்திரசக்தி இருக்கிறவனென்று தோற்றப்ப
டவில்லை யென்றான். அச்சொல்லைக்கேட்டமாத்திரத்
தில் காசிபனுக்குக் கோபம்பிறந்து, ஓபிராமணா!நீசொ
ன்னசொன்னீர்? அனந்தன்-தக்ஷகன் - முதலானபே
ரோடு எல்லாப்பாம்புகளும் ஒன்றாகக்கூடி ஒருவனைத்
தீண்டினாலும், க்ஷணப்பொழுதில் அவ்விஷத்தை நீக்
கிச் சுகப்படுத்துவேனென்று உறுதியாகக்கூற, தக்ஷ
கன் பார்த்துச் சிரித்து. ஓ பிராமணா! நான்தான்தக்ஷ
கன். இதோயிருக்கிற ஆலமரத்தை என்விஷாக்கினி
யாலே பஸ்மீகரப்படுத்துகிறேன். உன்மந்திரப் பலத்
தினால் முன்போல் மரம் தளிர்த்திருக்கும்படி செய்கி
றாயாவென்றுகேட்க, பிராமணன் நல்லது அப்படி
யே என்மந்திரபலத்தைக் காண்பிக்கிறேனென, உட
னே தக்ஷகன் தனது ரூபத்தைக்கொண்டு, அந்த ஆ
லமரத்தைக்கடித்து விஷத்தைக்கக்கினான். அந்த ஆ
லமரம் பஸ்மீகரமாயிற்று. பிராமணன் பஞ்சாக்ஷரத்
தோடு கலந்த சஞ்சீவிமந்திரத்தை ஒருதரம் உச்சரித்
தான். அந்த ஆலமரம் முன்போல் தளிர்த்துத்தழை
த்துநின்றது. தக்ஷகன் இதனைப்பார்த்து, ஓ! ஓ!
மோசம்வந்தது.இதென்ன விபரீதம். இந்தமகாபுருஷ
ன் அரசனிடத்துச்செல்லுவானாகில்,நாம் கடித்தென்
னபலன். இந்த புருஷனை அரசனிடத்துச் செல்லாதி
ருக்கச் செய்யவேண்டுமென்று மனதில்நினைத்து, ஓ
மகாத்மாவே! இவ்வளவு வருத்தப்பட்டுவருகிறது தி
ரவியத்துக்குத்தானே? இருமையின்பத்திற்குங்கார
ணம்திரவியமாதலால் உமக்குவேண்டியதிரவியத்தை
க்கொடுக்கிறேன், அரசனிடத்துச்செல்லாமல் உமதி
டத்துக்குச் செல்லுகிறீராவென்று தக்ஷகன் கேட்கக்
காசிபன் எனக்குவேண்டிய பொருளைக் கொடுத்தாற்
போய் விடுகிறேனென்று சம்மதிக்க, தக்ஷகன் அந்த
க் காசிபனுக்குத் திர்ப்தியடைய திரவியத்தைக்கொ

டுத்து அனுப்பிவிட்டான். அக்காசிபன் தன்னிடத்துக்குப் போய்ச் சுகப்பட்டான்.

கேட்டீரோ ஜெநமேஜெய மகாராஜனே! இந்தச்சேதி தக்ஷகனும் அக்காசிபனு மறிந்ததேயன்றி வேறொருவரு மறியார்களே: இஃதெப்படி வெளிப்பட்டதென்றால், அந்த ஆலமரத்தில் இரண்டுபிராமணப்பிள்ளைகள் இலைபறித்திருந்தார்கள். மரம் பஸ்மீகரமாகிறபோது தாங்களும் பஸ்மீகரமாகி, மரம்தளிர்த்தபோது தாங்களும் முன்போலாகி யிருந்து, காசிபனென்கிற பிராமணனும் தக்ஷகனும் சென்றபின்பு அம்மரத்தை விட்டுவந்து, நாடுநகரங்களிற் பிரசித்தப்படுத்தினார்கள். இங்கே தக்ஷகனனவன் தனது தேகத்தோடு சென்றால் சாபம் நிறைவேறாதென்று கருதிப், பிராமணனைப்போல் வேஷங்கொண்டு, தனது விஷத்தை ஒரு எலுமிச்சங்கனியாகக் கையிலேந்தி, கடலருகில் வந்து, அரசனிருக்கும் எச்சரிக்கையைக் கண்டு வியந்து, அந்தமண்டபத்துக்குச் சென்றான். அங்கிருக்கிற காவலாளிகள் யாரோ ஒருபிராமணனென்றெண்ணி மறிக்காம லிருந்து விட்டார்கள். தக்ஷகன் காலதாமசஞ்செய்யாமல் விரைவிற்சென்று,உன் தந்தையைக் கண்டான். உடனே உன் தந்தை எழுந்து வந்தனை வழிபாடுசெய்து, ஒருபொற்பீட மளித்து இருக்க வேண்டிக்கொண்டான். அத்தக்ஷகனாகிய பிராமணன் அப்போதாயினும் மனமிரங்காமல், தான் கொண்டுவந்த எலுமிச்சங்கனியைக்கொடுத்தான். அதனை உன் தந்தைவாங்கி, அதில் வாசனை இருப்பதை நோக்கி ஆக்கிராணித்தான். உடனே இந்தத் தக்ஷகனாகிய பாவி பிராமணவேஷத்தை நீக்கிப் பூநாகத்தைப்போலுருவுகொண்டு, உன்தந்தை நாசியிற்கவ்வி மறைந்தான். தக்ஷணம் உன் தந்தைக்கு விஷந் தலைக் கேறி, ஒரு நிமைநேரத்தில் பரமபதஞ் சேர்ந்தான். இந்தச்சேதி மந்திரி முதலாகிய பலரும் அறிந்து வந்துபார்த்து, அலறிக் கூக்குரலிட்டுப் புலம்பி, அரசனுக்குச் செய்யுங் கிரியைகளைநடத்தி அடக்கஞ் செய்து, பின்பு நகரத்திற்குவந்து உனக்குப் பட்டங் கட்டினார்கள். மாபாதகனாகிய தக்ஷகன்செய்த குற்றந் தோற்றிற்றா? இவ்வகைப்பட்ட துராத்மாவையும் அவனோடு சம்பந்தப்பட்டவர்களையும் பஸ்மீகரப் படுத்தினால் குற்றமா? ஓ அரசனே! இனிதடையில்லாமல் சர்ப்ப யாகஞ்செய்ய யத்தனியுமென்று உதங்கமுனி கூற, ஜெநமேஜெய மகாராஜன் இந்த விருத்தாந்தத்தைக் கேட்டுக், காலாக்கினி ருத்திரன்போற் சீறி, ஓ ஐயனே! மகாபாதகனாகியதக்ஷகனையும், அவனோடு சம்பந்தப் பட்டவர்களையும், இன்றையத் தினத்திலேயே பஸ்மீகரப் படுத்துகிறேன். அந்தச்சர்ப்பயாகத்தின் விதியென்ன? அதற்கு என்னவேண்டுஞ்சொல்லுமையாவென்று வேண்ட, உதங்கமுனி சொல்லுகிறார்.

பரிச்சித்துமகாராஜன்சருக்கம் முற்றிற்று.

ஒன்பதாவது,

சர்ப்பயாகச் சருக்கம்

ஓ அரசனே! வேதாகமங்களில் வல்ல பிராமணர்களையும், தவசிரேஷ்டராகிய முனிவர்களையும் வருவிக்கவேண்டும். விசாலமான இடத்தில் பெரிய யாகசாலை யொன்றுஇயற்றி, அந்தயாகத்துக்குத் தகுந்த சமித்து ஓமத்திரவிய முதலானவையும் அழைப்பியுமென்று சொல்ல, அரசன் மந்திரிகளுக்குக் கட்டளையிட,மந்திரிகள் ஐம்பத்தாறுதேச அரசர்களுக்கு முனிவர்களுக்கும் அறிக்கைப் பத்திரிகையெழுதி, தூதுவர்கள் கையிற் கொடுத்தனுப்பி, யாகசாலையை சாஸ்திரவிதிப்படி இயற்றி, அதற்குவேண்டியவஸ்துக்களையும் சேகரித்து வைத்து, அரசனிடத்துவந்துவணங்கி, ஆண்டவனே! தங்கள் கட்டளைப்படி எல்லாவஸ்துவும் சேகரமாயிற்று. அரசர்க்கும் முனிவர்க்கும் அறிக்கைப் பத்திரிகை போயிருக்கிறதென்று புகல, அரசன் அவர்கள் வருகிறவழியைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அத்தருணத்தில் அரசன் தூதுவர்கள், நாடு - நகர் - காடு - மலை - முதலியவற்றிற் சென்று, அறிக்கைப் பத்திரிகைகளை அவ்வவ் விடத்திலிருக்கிற அரசருக்கும் முனிவருக்குங் கொடுத்தார்கள். கொடுத்த தக்ஷணம் விண்ணப்பத்தின் கருத்தையுணர்ந்து, அரசர்களெல்லாம் வந்து ஜெனமேஜெய ராஜனைக்கண்டு வணங்கி, அரசன் இட்ட கட்டளையின்படி அவரவர்களுக்குத் தகுந்த இடத்தி லிருந்தார்கள். பின்பு அகத்தியமுனி - அத்திரிமுனி - ஆங்கிரேசமுனி - இரணியவமுனி - உரோமமுனி - ஏரண்டமுனி-கலைக்கோட்டுமுனி-காசிபமுனி-கௌதமமுனி-சத்தகூன்முனி-சச்சிதானந்தமுனி-சனகமுனி-சனற்குமாரமுனி-சுகமுனி-துருவாசமுனி-நாரதமுனி-பதஞ்சலிமுனி-பரத்துவாசமுனி-பராசமுனி-பற்பமுனி பிருகுமுனி-பினாகிமுனி- புலத்தியமுனி - மார்க்கண்டமுனி-வசிட்டமுனி-வால்மீக முனி- விஸ்வாமித்திரமுனி-வியாக்கிரபாதமுனி- வியாசமுனி - முதலான பல முனிவர்களு மறிந்துகொண்டு, உலகாதிபனென்று செய்யக்கருதி நம்மை வருவித்தால் போகத்தான் வேண்டுமென்று நினைத்து, யாவரும் வந்தார்கள். அரசன் எதிர்கொண்டுபோய் அவர்களுக்கு வந்தனை வழிபாடுசெய்து,பொற்பீட மளித்து இருக்கச்சொல்லி சோடச வுபசாரஞ்செய்து, மஹாபயபத்தியுடனே எதிர்நின்றான். முனிவர்க ளெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியடைந்து பல ஆசீர்வாதங்கள் வழங்கி, ஓ மஹாரா

ஜனே! இனி தாமசஞ்செய்யாமல் யாகத்தை நிறைவேற்றுமென்று நவில, அரசன் வியாசர் - வசிஷ்டர் - கலைக்கோட்டு முனி - இவர்களைக் குருவாகக் கொண்டு, தானும் தன் மனைவியும் ஸ்நானஞ்செய்து, யாகதீட்சை பெற்று, பீடத்திலிருந்து, வேதவேதியர்கள் மந்திரங்களை யுருவேற்ற யாகத்தை வளர்த்தினான். மந்திரங்களைஉச்சரிக்கஉச்சரிக்க, சொர்க்க மத்திய பாதாள லோகங்களி லிருக்கின்ற சர்ப்பங்க ளெல்லாம் திரண்டுவந்து, யாகத்தில் விழுந்து மடிந்தன. கத்துருவையின் புத்திரர்களின் சந்ததிகளெல்லாம் வெந்து சாம்பராயினது மன்றி, அவள்புத்திரர்கள் அந்தமந்திர உறுதியினால் உடன்முழுதுந் தளர்ந்து மிகுந்த விருத்தத்துக் குள்ளாயினார்கள். அதில் ஆதிசேஷன் - தக்ஷகன் - அனந்தன் - வாசுகி - இவர்கள்தவிர, மற்றவர்க ளெல்லாம் யாகத்தில் வந்து விழுந்து மடிந்தார்கள். அரசன் வேதவியாசரை நோக்கித் தக்ஷகன் முதலானவர்கள் இன்னும் வரவில்லை யாதலால், விரைவில் வரும்படி செய்யுங்களென்று விதித்தான். அவர்கள் மந்திர தேவதைகளை அதிகமாகத் தூண்டினார்கள். அம்மந்திரதேவதைகள் உடனேஓடி, ஆதிசேஷன் முதலானவர்களைச் சுற்றிக்கொண்டு இழுக்க ஆரம்பித்தது. அதன்மேல் அவர்கள் மனங்கலங்கி, நிலைதளர்ந்து, நெஞ்சுலர்ந்து, திகிலடைந்து, மாதா சாபத்தை நினைத்து வருந்தித் துன்பப்பட்டார்கள். இவர்களில் தட்சகன் இந்திரபதவியிற் சென்றுஇந்திரனைவணங்கி, முறையோ!முறையோ! வென்றுகூவி, என்னை ஜெநமேஜெயமகாராஜன் கொல்லாமலிருக்கக் காப்பாற்ற வேணடுமென்று பணிய, இந்திரன் தட்சகன் முறையைக்கேட்டு, எப்போதும் உலகிலுள்ள அரசர்கள் அபயமென்று வந்து சரணடைந்தவனைக் காப்பாற்றுகிறார்கள். நாம் அவ்வரசர்களுக்கு மேலான அரசனா யிருந்தும், இந்தத் தட்சகன் நமக்குத் தோழமையா யிருந்தும், இவனைக்காப்பாற்றாமற்போனால் நமது பெருமை என்னவென்று, தனக்குள் தானே மதித்து, ஓ தட்சகா! நீ அஞ்சாதே. என்னருகிலிரு. அந்த ஜெனமேஜெய மஹாராஜனால் உனக்குக் கெடுதிவராமல் காப்பாற்றுகிறேனென்று உறுதிகூற, தட்சகன் கிஞ்சித்து மகிழ்ந்து இந்திரனிடத்தி லிருந்தான்.

இரண்டாயிரம் யோசனை யுயர்ந்திருக்கிற மந்திரகிரியை இரண்டாயிரஞ் சுற்றுச்சுற்றி எடுத்துவந்து தேவர்களுக்கு அமுதங் கொடுத்த ஆதிசேஷன் மந்திர தேவதைகளின் தொந்தரைக் குள்ளாகிச், சிந்தைநொந்து, மிகுந்த துன்பமடைந்து, எந்த விதத்தில் தப்பிப் பிழைக்கப் போகிறோமென்று மனங்கலங்கி, தன்னைப்பெற்ற தாயாகிய கத்துருவையிடத்துக்கு வந்து வணங்கி, அம்மா! நீமுன்பின் யோசிக்காமல் சாபமிட்டையே: அந்தச்சாபம்நிறைவேறுகிற காலம் வந்து, என்னுடன் பிறந்தவர்களு மடிந்தார்கள். இதோ இறக்க நானுஞ் செல்லுகிறேனென்று கோவென்று கதறித் துக்கித்தான். இதனைப்பார்த்துக் கத்துருவையும்-சலர்க்காரையும்-கையைநெரித்து, இனியென்ன செய்யப்போகின்றோம்: எல்லாரும் மடிந்தார்களேயென்று கூக்குரலிட்டுப் புலம்பினார்கள். ஆதிசேஷன் சலர்க்காரையைப் பார்த்து, ஓஅம்மா! நீயேன் வருத்தப்படுகிறாய். இந்தவேளையில் உன் புத்திரனாகிய அத்திகனை ஜெனமேஜெய மகாராஜனிடத்தி லனுப்புவித்தால், அவனாலே மடிந்தவர்கள் போக மற்றவர்கள் பிழைப்பார்களாதலால், அவ்வளவு உபகாரஞ்செய் அம்மணியென்றுசொல்ல, சலர்க்காரை களிப்படைந்து, தன் புத்திரனிடத்திற் சென்று, அப்பா மகனே! உன்மாமன்மா ரெல்லாம் ஜெனமேஜெய மகாராஜன்செய்கிற சர்ப்பயாகத்தில் மடிந்தார்கள். இன்னும்நாலைந்துபேர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களு மடிவதற்கு முன்னமே ஜெநமேஜெய மகாராஜனிடத்திற் சென்று, அந்த யாகத்தை நிறுத்தும்படி கேட்டுக்கொள் ளென்றாள். அத்திகன் நல்லது தாயே என்றுவணங்கித், தாயிடத்திலுத்திரவுபெற்றுக், காவிகாம்பர தண்டுகமண்டல தாரியாய், அநேக முனிவர்கள் தன்னைச் சூழ்ந்துவர ஜெநமேஜெய மகாராஜன் யாகஞ்செய்கிற இடத்துக்குவந்து, தன்வரவைக் காவலாளிகளால் தெரிவித்து, அரசனுத்திரவின்மேல் யாகமண்டபத்திற் சென்று, அங்கிருக்கும் முனிவர்களுக்கு வந்தனை செய்து நின்றான். உடனே அரசன்எழுந்து வணங்கிப், பொற்பீடமளித்து இருக்கச்சொல்லிச், சோடசஉபசாரஞ்செய்து, பயபத்தியுடனே யெதிரில் நின்றான். அத்திகமுனி அரசனுக்குப் பல ஆசிகள் வழங்கி ஒருவசனங் கூறுகிறார்: ஓ அரசனே! இவ்வுலகத்தில் வீரம் கோபமுதலிய கொலைத்தொழிலுக்கும், புகழுக்கும், புஜபல பராக்கிரமத்திற்கும், வாய்மைக்கும், அருளுக்கும், தருமத்துக்கும், யாகத்துக்கும், தானத்துக்கும், அரசுக்கும், செல்வத்திற்கும், அழகுக்கும், சாந்தத்துக்கும், நீயொருவனேயன்றி உனக்கு ஒப்பானவர்கள் வேறொருவரு மில்லை. மேலும்-ஸ்ரீமந் நாராயணமூர்த்தியாகிய வியாசர் உனக்குக் குருவாயமைந்தபோது, உனக்குக் குறையென்ன? நீ இந்த மூன்றுலோகத்தையும் தகிக்கக்கருதினாலும் அப்படியே செய்வாய். அவ்வளவு வல்லமையுடைய மஹாமுனிவர்களையும் தகுந்த பராக்கிரமத்தையும் பெற்றிருக்கிற நீ, உன் தந்தையைக்கொன்ற தக்ஷகனைக் கொல்லக் கருதிச் சர்ப்பங்களை யெல்லாம் வதைத்தாய். இனி உனக்கு ஒப்புவமை யாரிருக்கின்றார்கள். உங்கள் முன்னோர்களில் ஒருவனானவிஜயன் அபிமன்னனைக்கொன்ற சயிந்தவனைக் கொல்லுகிறேனென்று உறுதிகூறி, மறுநாள் அந்திவேளையிற் கொன்றான். அதுபோல நீயும்செய்தாய். உன்னைப்போல் பராக்கிரமசாலி இவ்வுலகத்திலில்லை. ஆதலால் - ஒரு காரியத்திற்காக உன்னிடத்தில் வந்தேனென, அரசன் இத்துதியைக் கேட்டுத் தனக்குள் தானே வருத்

தமுற்று,இவர் யாரோ மஹாமுனிவர். யாதுகாரியத்
தைப்பற்றி வந்தாரோவென்று நினைத்து, என்னிடத்
துக்கு வந்தகாரியத்தைத் தெரிவித்தால் அக்காரியம்
என்னுயிரா யிருந்தபோதிலும் கொடுப்பேனென்று
கூற, அத்திகமுனி - ஓ அரசனே! தற்காலத்தில் யா
கதீட்சைபெற்றிருக்கிற கோலத்தைநீக்கி,யாகத்தை
நிறுத்தவேண்டும். அதுதான் நான் நாடிவந்த காரிய
மென்ருர். அந்த யாகமண்டபத்தி லிருக்கிற முனிவர்
களும் அரசனை நோக்கி, ஓ அரசனே! இம்முனிவர்
கருத்தின்படி யாகத்தை நிறுத்தும். இம்முனிவர்யா
ரென்ருல், சலர்க்காரமுனிவருடைய புத்திரன். இவர்
மகாதவசி. திரிமூர்த்திகளும் ஸ்துதிக்கின்ற மகத்து
வத்தையுடையவர். இவர்வாக்குக் கெதிர்வாக்கு இல்
லையென்ன, அவ்வரசன் அத்திகமுனிவரை வணங்கி,
ஓ ஐயனே! தங்கள் கருத்தின்படி யாகத்தை நிறுத்
தினேனென்று சொல்லி, வேதவேதியர்களை நோக்கி
யாகத்தைப் பூர்த்திசெய்யுங்களென்றுவேண்ட, அந்த
வேளையில் இந்திரனருகிலிருந்த தட்சகனை மந்திர
தேவதைகள் போய்ச் சூழ்ந்து, தட்சகனையும் அவ
னைக் காப்பாற்றுகிறேனென்று உறுதிகூறிய இந்திர
னையும் பிடித்திழுத்துக்கொண்டு, யாககுண்டத்துக்
குச் சரியாய் அந்தரத் தானத்தில் வந்தன. இங்கே
அரசன் கட்டளைப்படி வேதவேதியர்கள் யாகத்தை
ப் பூர்த்தி செய்யவே, மந்திரதேவதைகள் ஈர்த்து
வந்த இந்திரனையும் தட்சகனையும் விட்டுவிட்டன.
உடனே இந்திரனும் தட்சகனும் இருப்பிடம்போய்
ச் சேர்ந்தார்கள். பின்பு அரசன் யாகத்தைப் பூர்த்தி
செய்து, வேத வேதியர்களுக்கெல்லாம் திர்ப்தியடை
யச் சொர்னமாரி பெய்து, கோதானம்-பூதானம்-கன்
னிகாதானம்-முதலான்வை கொடுத்து, முனிவர்களு
க்கு வேண்டியவற்றை யுதவி, அவரவர்கள் இருப்பி
டத்துக்குச்செல்ல வணங்கி விடைகொடுத்து, வந்த
அரசர்களுக்கு மகிழ்ச்சி யுண்டாக வேண்டியவற்றை
வரிசை வரிசையாகக் கொடுத்து நின்ருன். அத்திக
முனிவர் அரசனைப்பார்த்து, ஓ அரசனே! எனக்கு
நீ கொடுத்த ஒருவரத்தினுல், மான்மழுசதுர்ப்புஜகா
ளகண்ட திரிநேத்திர தரனுகிய பரமன் பூணூல் பெற்
ருன். சங்குசக்கர கதாகட்க கோதண்ட தரனுகிய
திருமால் சயனம் பெற்ருன். திசைமுகன் பெருமை
பெற்ருன். வச்சிரப்படையையுடைய இந்திரன் உயிர்
பெற்ருன். தேவர்கள் அமுதங் கடைகிற மத்துக்குத்
தாம்பு பெற்ருர்கள். உலகிலுள்ளோர் ஆதரவுபெற்ரு
ர்கள். என்ருல்- நீபெற்ற புகழுக்கு அளவில்லை. இனி
உனக்கொரு குறைவில்லையென்று வாழ்த்தி, அரசனி
டத்து விடைபெற்றுத் தன் தாயினிடத்துச்சென்று,
நடந்த விருத்தாந்தத்தை நவின்று வணங்கி விடை
பெற்று, அத்திகமுனிவர் தவநிலையைச் சேர்ந்தார்.

சர்ப்பயாகச்சருக்கம் முற்றிற்று.

பத்தாவது,

ஜெனமேஜெயனைப்பிரமஹத்தியடைந்த சருக்கம்

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இப்
பால் அரசன் உதங்கமுனியை வணங்கி, ஓ ஸ்வாமி!
என் தந்தை ஆறுநாள் பரியந்தம் என்ன கால்க்ஷேப
ம் செய்திருந்தாரென்று வினவ, உதங்கமுனி-ஓ அர
சனே! உன்தந்தை சுகமுனிவரால் ஸ்ரீமத் பாகவதத்
தைக் கேட்டிருந்தாரென்று அதனைக் கிளர்த்த, மகி
ழ்ச்சியடைந்து, அவ்வுதங்கமுனியைவணங்கி விடை
கொடுத்துப், பின்பு அரசன் கோடிசூரியப்பிரகாசமா
கிய சிங்காதனத்தில் இனிது வீற்றிருந்து அரசுசெ
லுத்திப், பிரமசாரி-கிரகஸ்தன்-வானப்பிரஸ்தன் - சந்
நியாசி - ஆதுலர் - தெய்வம் - பிதுரர் - விருந்தினர் -
சுற்றத்தார் - முதலானவர்களுக்கு, யாதொருகுறை
வராமலிருக்க அவரவர்களுக்குத் தகுந்தபடி வேண்
டியவற்றை யுதவி, தன்னுயிர்போல மன்னுயிர்களைக்
காப்பாற்றி வருகிறநாளில், ஒருநாள் மந்திரி முதலா
னவர்கள் புடைசூழச் சிங்காதனத்திலிருக்கிற தருண
த்தில், பயிலவமுனி-வைசம்பாயனமுனி - ஜயமுனி -
சுமந்தமுனி - நாரதமுனி- தேவலமுனி - சுகமுனி -
முதலாகிய மாணுக்கர்களுடனே வேதவியாசர்வந்து,
தமது வரவைக் காவலாளிகளால் தெரிவித்தார். உட
னே அரசன் எழுந்து, எதிர்கொண்டுபோய் வணங்கி
அழைத்துவந்து, பொற்பீடமளித்து இருக்கச்சொல்
லி, சோடச உபசாரமுஞ்செய்து வணங்கி எதிர்நின்ரு
ன். வியாசரும் அவருடைய மாணுக்கரும் அரசனுக்
குப் பல ஆசிகள்வழங்கிச், சிங்காதனத்தி லிருக்கக்
கட்டளையிட்டார்கள். அரசனுனவனதிலிருந்து, தவ
சிரேஷ்டராகிய வியாசமுனிவரை நோக்கி, ஐயனே!
எங்கள் முன்னோர்களாகிய பாண்டவர்களும் சுயோத
னன் முதலாகியவர்களும் ஒருவர்க்கொருவர் விரோ
தப்பட்டு வீணுய் மடிந்துவிட்டார்களாமே! அக்கால
த்தில் தாங்கள் ஒரு புத்திசொல்லித் தடுத்தால் அவர்
கள் மீறுவார்களா? (தெருச்சண்டை கண்ணுக்கின்
பம்) என்ற பழமொழிபோல வேடிக்கை பார்த்திருந்
தீர்களோ? தாங்கள் வமிசகர்த்தாவாகவும் குலகுரு
வாகவும் இருக்க,அவர்களை இவ்வாருக்குவது தரும
மாவென; வியாசர் நகைத்து, ஓஅரசனே! நீசிறுபிள்
ளை. என்னசொன்ன போதிலும் எனக்குமகிழ்வேயன்
றி இகழ்வில்லை. நீஇப்போது உரைத்தசங்கதிக்கு அந்

தத் திரிமூர்த்திகள் வந்து தடுத்தபோதிலும், பாண்டவர்களும் சுயோதனர் முதலானவர்களும் கேளார்கள். ஏனென்றால் வினைப்பயன் யாரைவிட்டது. அதை நீக்க ஒருவராலுங் கூடாது. காலகதி அப்படி யிருந்தது. அதற்காக என்னைத் தூறிக்கொள்வது தகுதியல்லவென் றிசைக்க, அரசன் சிரித்து, ஓ ஸ்வாமி! சுயோதனன் முதலானவர்கள் ஒருவர் வார்த்தையைக் கேளாதவர்களா யிருந்தபோதிலும், ப்பாண்டவர்களென்ன சொற்புத்திகேளாதவர்களா? நீங்கள் தடுத்தால் அவர்கள் மீறுவார்களா? இதுஒருஉத்தரவாவென்றான். வியாசர்-ஓஅரசனே! நீ வீண்வழக்கிடுகிறாய். உனக்கு அது திர்ஷ்டாந்தப்பட ஒன்றுசொல்லுகிறேன். அதைமாத்திரம் தப்பித்துக் கொள்வையே யாகில், அப் பாண்டவர்களுஞ் சுயோதனாதியரும் மடிந்த குற்றத்தை என்பேரில் வைக்கலாம். அதைத்தப்பித்துக் கொள்ளாவிட்டால், காலகதியென் றுணர்ந்து கொள்ளுகவென்று கழற,அரசன்மகிழ்ந்து,ஓஐயனே! அஃதென்னவென, வியாசர்- ஓ அரசனே! இன்றைக்குப் பத்தாநாள் உனக்கொரு பிரமஹத்தி வருகிறது. அதைமாத்திரம் தப்பித்துக் கொள்ளுக பார்ப்போமென்று சொல்லி,அரசனிடத்து விடைபெற்றுத், தமது ஆசிரமத்துக்கு மாணாக்கருட னெழுந்தருளினார். அரசன் சகலசாஸ்திர நிபுணராகிய வேதவேதியர்களையும் பண்டிதர்களையும் அழைப்பிக்கத் தனது மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான். மந்திரிகள் அக்கட்டளைப்படி அந்தக்ஷணம் வேதவேதியர்களையும் சாஸ்திரிகளையும் அழைப்பித்து, அரசனுக்கு அறிவித்தார்கள். அரசன் வந்தவர்களுக்கெல்லாம் வந்தனை வழிபாடுசெய்து,பொற்பீடமளித் திருக்கச் சொல்லி, அவர்களைப்பார்த்து, ஸ்வாமிகளே! இன்றைய பத்தாநாளில் எனக்கொரு பிரமஹத்தி வருகிறதா யிருக்கிறது. அது வராமலிருக்க ஒரு உபாயஞ் சொல்லுங்களென்றுவினவ, வேத வேதியர்களும் சாஸ்திரிகளும் யோசித்து, ஓ அரசனே! ஓமங்களினாலும் யாகங்களினாலும் சகலபாவமும் நிவர்த்தி ஆதலால், அவற்றில் ஒன்றை இராப்பக லொழிவில்லாமல் இந்தப் பத்து நாளுஞ் செய்தால், அந்தப் பிரமஹத்தி வந்தடையாதென்றருள, அரசன்கேட்டு மகிழ்வடைந்து, அப்படியே செய்வோமென்று அதற்குவேண்டிய கருவிகளை வருவிக்க மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான். மந்திரிகள் வேண்டிய சாமக்கிரிகைகளை வருவித்து, ஒரு ஓமகுண்ட மியற்றி அரசனுக் கறிவித்தார்கள். அரசன் அதற்குமேல் வள்ளுவனைக்கொண்டு, (பத்துநாள் வரைக்கும் இரவும்பகலும் ஒழியாமல் மந்திரமுச்சரித்து ஓமஞ்செய்யவேண்டும். அப்படி செய்வதற்கு வேண்டியவற்றைக் கொடுக்கிறது. இதற்குச்சம்மதித்தவர்கள் வருகிறது.) என்றுபறைசாற்றுவித்தான்.இவ்வோசையைக் கேட்டவர்கள்யாரும் பத்துநாள் கண்விழிக்கவேண்டுமாதலால், கனவருத்தமான வேலையென்று சும்மா இருந்து விட்டார்கள். அத்தருணத்தில் பிறவித் தரித்திரனாகிய ஒரு கிழப்பிராமணன் அவ்வோசையைக்கேட்டு, நமது தரித்திரம் அதமாகுங் காலம் இதுதானென்று தீர்மானித்து, அரசனிடத்துக்குவந்து ஆசீர்வாதஞ் செய்து, ஓ இராஜனே! நான் உமது கருத்தின்படி இரவும் பகலுமாகப் பத்துநாளு மிருந்து ஓமத்தை நிறைவேற்றுகிறேனென, அரசன் மகிழ்ந்து, அவ்வேதியனைக் குருவாகக் கொண்டு, தானும் தன்மனைவியும் ஸ்நானஞ்செய்து ஓமமண்டபத்திற்சென்று, வேதியன் மந்திரமுச்சரிக்க ஒன்பது நாள் பரியந்தம் யாகத்தைச் செய்துவந்தான். பத்தாநாள் இராத்திரி ஓமத்தை நடத்தும் வேதியன் முதிர்ந்த வயதுடையவனாதலாலும், ஒன்பதுநாள்பரியந்தம் கண்விழித் திருந்ததினாலும், மிகுந்த தளர்ச்சியுடையவனாகி, இளைப்பினால் வாயில் மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டே நித்திரை போயினான். அந்த நித்திரையில் தானொரு பெருங்காட்டிற் சென்றதாகவும், அந்த விடத்தில் தன்னை ஒருபுலி பாய்ந்து கொல்ல யத்தனித் திருப்பதாகவும் கனவுகண்டு கொண் டிருக்கையில், அரசன் இதென்ன மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டே வேதியன் நித்திரைசெய்கிறானென்று, தன்கையி லிருக்கிற தருப்பையினால் அவ்வேதியனைத் தட்டினான். உடனே வேதியன்மிகப் பயந்து அலறி, எதிரிலிருக்கும் ஓமகுண்டத்தில் விழுந்தான். உடனே அந்த ஓமத்தீ வேதியனைப் பஸ்மீகரமாக்கிவிட்டது. அரசனுக்கு வியாசரிட்ட கட்டளைப்படி கெடுவுதப்பாமல் பிரமஹத்தி வந்தடைந்தது. அரசன் பிரமைகொண்டவனாய், ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்! நாம் தருப்பையால் வேதியனைத் தட்டவும், அவ்வேதியன் திடுக்கிட்டு ஓமத்தில்விழுந் திறக்கவு நேரிட்டதே: இது வினைப்பயனே: இதை வெல்லுவதற்கு ஒருவராலு மாகாது. நமதுகுலகுருவாகிய வியாசமஹாமுனி கூறியதேசரி. இனிநாமடைந்த பிரமஹத்தியை அவ்வியாசமஹாமுனிவர்தான் அகற்றவேண்டுமென்று கருதி, அவ்வேதவியாசரைப் பலவாறு துதித்தான். அந்தவேளையில் அரசனையடைந்த பிரமஹத்தி நீங்க வியாசர் வருகிறதுபோல, உலகத்தையடைந்த இருள் நீங்கச் சூரியனுதயமானான்.

உடனே வியாசரும் முன்போலவே மாணாக்கருடன் அரசன் அரண்மனைக்குவந்து, தன்வரவைக் காவலாளிகளால் தெரிவித்தார். அரசன் அவரை எதிர்கொண்டுபோ யழைத்து வந்து, தவிசளித்தில்-கைகழு நீர்தரல் - கால்கழு நீர்தரல் - முக்குடி நீர்தரல்- முப்புரி நூல்தரல் - நீராட்டல் - ஆடைசாத்தல் -தேய்வை பூசல் - மலர் சூட்டல் - மஞ்சளரிசி தூவல்-நறும்புகைகாட்டல் - விளக்கிடல்-கற்பூரமேற்றல்-அமுதமேந்தல் - அடைக்காய்தரல் - மந்திரமலரா லருச்சித்தல் - என்று சொல்லப்பட்ட சோடச வுபசாரமுஞ் செய்து, ஓஐயனே! தங்கள்மகிமை தெரியாமல் தங்களைத் தூறிக்கொண்டேன். என்பேரில் கோபிக்

காமல் கிருபை கூர்ந்து, என்னைப் பற்றிய பிரமஹத்தி நீங்க ஒருவழி காட்டவேண்டுவது மன்றி, இந்தப் பிரமஹத்திவந்த விதத்தையும் கூறுமென்று வேண்ட, வியாசர் நகைத்து, ஓ அரசனே! ஓமஞ்செய்தவேதியன் நித்திரையில் தன்னைப் புலி அடிக்க யத்தனித்து இருப்பதாகக் கனவு கண்டான். அந்த வேளையில் நீ தருப்பையால் தட்டவே, வேதியன் திடுக்கிட்டுப் பயந்திறந்தானென்றுகூறி, இதுவிலேசப்பயன். இதை ஒருவராலும் வெல்லப்போகாது. ஆதலால் - ஐந்தாம் வேதமாகிய ஸ்ரீ மஹா பாரதத்தைக்கேள். அதனாலே இந்தப் பிரமஹத்தி நீங்குவதுமன்றி, உங்கள் முன்னோர்களின்காலகதியும் இன்னதென்று விளங்கும். இந்தப்பாரதம் நமது மூதாதைகளுடைய சரித்திரந்தானேயென்று இலேசாக நினைக்காதே. இது மஹா சிலாக்கியமானது. நான்கு வேதங்களோடு ஒப்புவமைப் பட்டு, ஐந்தாம் வேதமென்று கூறப்பட்டது. இப்பாரதத்திற்கு வகுத்துள்ள பர்வங்கள் பதினெட்டினுள், ஆதிபர்வத்தை முற்றும் படித்துப் பிராமணர்களுக்குப் பாயசத்தினால் திருப்தி செய்வித்தால், அவர்களுக்குப் புத்திர சந்தானம் உண்டாகும். சபாபர்வத்தைப் பூரணமாகப் பக்தியோடு படித்துப் பிராமணர்களுக்குப் பசுவின் பாலால் திருப்தி பண்ணுவித்தால், அதிபாக்கிய முண்டாம். ஆரண்ய பர்வத்தை மனம் புறம்பே செல்லாமற் படித்து முடித்துப் பிராமணர்களுக்கு வாழைக்கனி முதலிய கனிகளால் திருப்தியாக்குவித்தால், வெற்றி யுண்டாம். விராடபர்வத்தை விசுவாசத்தோடு முற்றும் படித்து வேதவித்துக்களாகிய பிராமணர்களுக்குத் ததியோதனத்தால் திருப்தி செய்வித்தால், இஷ்ட பலங்கள் சித்திக்கும். உத்தியோக பர்வத்தை முழுதும் விசுவாசித்துப் படித்துப் பிராமணர்களுக்குச் சந்தர்ப்பணஞ் செய்து நூதன வஸ்திர தானஞ் செய்தால், இஷ்ட காமிய சித்தியுண்டாம். பீஷ்மபர்வத்தை உள்ளன்போடு முடியவாசித்துப் பிராமணர்களுக்குக் கருப்பஞ் சாற்றினால் (அதாவது கருங்கழைகளைத் தந்து) திருப்தி செய்வித்தால், ஆடையாபரணங்கள் குறைவின்றிப் பெருகும். துரோணபர்வத்தைப்பிரீதியோடு படித்துப் பிராமணர்களுக்கு வெண்குடை கொடுத்தால், தானிய சம்பத் துண்டாகும். கர்னபர்வத்தை அன்போடு முழுமையும் படித்துப் பிராமணர்களுக்குச் சுவர்னதானம் பண்ணினால், ஆயுள்விருத்தியுண்டாம். சல்லிய பர்வத்தை முற்றும்படித்துப் பிராமணர்களுக்கு ஷட்ருசிரான்னங்களால் திருப்தி செய்வித்தால், பசுவிர்த்தி யுண்டாம். சௌத்திக பர்வத்தைப் படித்து நிறைவேற்றிப் பிராமணர்க்குச் சந்தன புஷ்ப பலகாரங்களால் திருப்தி செய்வித்தால், திரவிய லாபமுண்டாம். ஸ்ரீபர்வத்தை உள்ளன்போடு படித்து முடித்துப் பிராமணர்களுக்குத் திவ்விய போசனஞ்செய்வித்தால், துக்கநிவாரணமாகும். சாந்திபர்வத்தை முழுதும்படித்து வைதிக பிராமணர்களுக்குத் திவ்விய போசனஞ் செய்வித்துத் தட்சிணை கொடுத்தால், வாகனலாபமுண்டாம். அனுசாசனிகபர்வத்தைப் பக்தி பூர்வகமாகப் படித்து முடித்துப் பிராமணர்களுக்குக் கந்தபுஷ்ப சத்திரதானஞ் செய்தால், மகதைசுவரிய முண்டாம். அசுவமேதபர்வத்தைச் சம்பூரணமாகப் படித்துப் பிராமணர்களுக்குப் போசன திருப்திசெய்தால், பெரும்பொருளுண்டாம். ஆசிரமவாசபர்வத்தைப் படித்து முடிந்தபின் பிராமணர் களுக்குச் சோடச தானஞ் செய்தால், இஷ்ட சித்தியுண்டாம். மௌசல பர்வத்தைப் படித்து முற்றுவித்துப் பிராமணர்களுக்குப் போசன திருப்தி செய்தால், பாபநிவர்த்தி யுண்டாம். மகா பிரஸ்தானிக பர்வத்தைப் பிரீதியாக முழுமையும் படித்துப் பிராமணர்களுக்குப் பட்டுக்குடை தானஞ் செய்தால், பெருஞ் செல்வமுண்டாம். சுவர்க்காரோகண பர்வத்தைப் பக்தி பூர்வமாகப் படித்து முடித்தபின் பிராமணர்களுக்குச் சந்தன புஷ்ப தாம்பூல போசன வஸ்திர தட்சிணைகளால் திருப்தி பண்ணினால் அஷ்டைசுவரியமு முண்டாம். ஆகையால் - இதின் மகத்துவம் உனக்குத் தோன்றவேண்டுமானால், ஒருகரிய வஸ்திரத்தைக் கொண்டுவந்து பேழையி லடக்கிவைத்து இந்தப் பாரதக்கதையைக் கேட்பாயாகில், கதைநிறைவேற நிறைவேற அந்தக் கரியவஸ்திரம் வெள்ளை வஸ்திரமாகிவரும். கரியவஸ்திரமே வெள்ளை வஸ்திரமானால், அக்கதையைக் கேட்பவர்கள் அடையும் பயனுக்கு ஓரளவுண்டாவென்று சொல்ல, அரசன் - ஓ ஐயனே! தேவரீர் கருத்தின்படி அந்த ஸ்ரீமஹாபாரதத்தைக் கேட்கிறேனென்றான். வியாசர் தமதருகி லிருக்கிற வைசம்பாயனரை நோக்கி, ஓ முனிசிரேஷ்டரே! ஸ்ரீமகாபாரதத்தை இந்த அரசனுக்கு விளங்கஉரையென்று கட்டளை யிட்டு, அரச னிடத்து விடைபெற்றுத் தமது ஆசிர்மத்திற் சென்றார். பின்புவைசம்பாயனர்அரசன் செய்த வந்தனை முதலியவற்றை யேற்றுப் பல ஆசிகள் வழங்கி, ஓ அரசனே! நீயும் உன்மனைவியும் ஸ்நானஞ்செய்து சுசியாய் வாருங்களென்று விதித்தார். அரசன் அவ்வாறு தானும் தன் மனைவியும் ஸ்நானஞ் செய்து சகல நியமத்துடனேயும் வந்து வைசம்பாயனரை வணங்கி, அவர் உத்திரவின்படி நல்ல சுசியான இடத்திலிருந்து, ஓ ஸ்வாமி! இனி ஸ்ரீமஹா பாரதக் கதையை அடியேங்களுக்கு விளங்க உரைக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, வைசம்பாயனர் அப் பாரத கதாப் பிரசங்கத்தைக் குறித்துச் சங்கற்பாதி சற்கிரியாநியமபூசனைகளை யெல்லாங் கிரமப்படி நடாத்தி; தமது உபாசனா மூர்த்தியை அகத்தினும் புறத்தினும் ஆராதித்து, தம் மெதிரில் அஞ்சலி யஸ்தராய் நிற்கின்ற இருவரையும் ஆதனத்தி லிருக்கச்செய்து, அவர்களுங் கேட்போராதலால் அச்சங்கற்பாதி நியதிகளை அவர்களால் நடப்பித்து ஆசீர்வாதங்கள்செய்து, ஓ அரசனே! இந்த மேலான் காவியத்தை யாவராயினுஞ் சிரத்தையோடும் பக்தியோடும் சகலபுவ

ஞதார ஸ்வரூபியாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைப்பூசித்துவந்தனேவழிபாடுசெய்து திரிகரணங்களும் ஒருமிக்கவிருந்து கேட்பாராயின், அவர்களுக்குச்-சனனம்-மரணம்-இடர்-வறுமை-வியாதி-துக்கம்-சோகம்-மோகம் பாவம் - அரிட்டம் - பகை - பயம்-இடையூறு - முதலிய துன்பங்களில் ஒன்றேனு நெருங்காது. அன்றியும் - சூரியகிரகணமுஞ் சந்திரகிரகணமு மாகின்ற காலத்தில் உருத்திரபூமியிற்சென்று, ஆயிரபாரம்பொன்னைக் கிரமப்படி. சற்பாத்திரமறிந்து தானஞ்செய்த பயனும், போர் முகத்தினின்றுஞ் சயம்பெற்று வெற்றிமாலை சூடிவந்தவர்கள் பெறத்தக்க பயனு மடைவார்கள். வேள்வி முன்னிலையில் யானை முதலிய சகலபொருள்களையுந் தக்ஷணையோடு தானங் கொடுத்தவர்கள் அடையும்பயன், இக்காவியத்தை ஒருதரம் வாசிக்கின்றவர்கள் அடையும் பயனுக்குச் சரியாகாது. மேலும் - இக்காவியத்தைத் தன்கரத்தா லெழுதினவ்னும், ஒருவனுக்குத் திரவியந் தந்து எழுதுவித்தவனும், கோடி கன்னிகாதானங்களையுங் கோடி கோதானங்களையும் நல்ல நியமத்தோடு செய்தவன் அடையும் பயன்யாதோ,அதனைத் தடையின்றியடைவன். இக்காவியத்தை யெழுதி வைத்திருக்கின்ற வீட்டில், அஷ்ட ஐசுவரியமும்வந்து குதிகொள்ளும்.அன்றியும் - பூதங்கள் - பிரேதங்கள் - பேய்கள் - பாலக்கிரகங்கள் - முதலானவை நெருங்கா வண்ணம், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் சதாகாலமுங் குடியாயிருந்து, அவ்வீட்டி லுள்ளோர்கட் கெல்லாம் எத்துன்பமும் அணுகவொட்டாமற் பாதுகாத்து வருவார். இக்காவியத்தை அனுதினம் பாராயணஞ் செய்கிற புண்ணிய சீலர்கள், பிரமனாதி தேவர்களாலும் அகத்தியராதி முனிவர்களாலுந் தொழற் குறியவர்கள். அவர்கட்கே, அணிமா - மகிமா - கரிமா - இலகிமா -பிராப்தி - பிராகாமியம் - ஈசத்துவம் - வசித்துவம் - என்கிற அட்டமா சித்திகளுங் கைகூடும், அவர்கட்கே, கற்பக விருட்சம் - காமதேனு - சங்கநிதி-பதுமநிதி -சிந்தாமணி - முதலானவைகள் எதிர்நின் றேவல்புரியும். அவர்களே - அக்கர விலக்கணம் - இலிகிதம்-கணிதம் -வேதம் - புராணம் - வியாகரணம் - நீதிசாத்திரம் - சோதிடசாத்திரம் - தருமசாத்திரம் - யோகசாத்திரம்-மந்திரசாத்திரம் - சகுனசாத்திரம் - சிற்பசாத்திரம் - வைத்தியசாத்திரம் - உருவசாத்திரம் - இதியாசம் - காவியம்- அலங்காரம் - மதுரபாடனம் - நாடகம் - நிருத்தம் - சத்தப்பிரமம் - வீணை- வேணு மிருதங்கம் - தாளம் - அத்திரபரீக்ஷை - கனகபரீக்ஷை - இரதபரீக்ஷை - கஜபரீக்ஷை - அசுவபரீக்ஷை- இரத்தினபரீக்ஷை - பூமிபரீக்ஷை - சங்கிராம விலக்கணம் - மல்லயுத்தம் - ஆகருடணம் - உச்சாடனம் - வித்துவேடனம்- மதனசாஸ்திரம்- மோகனம் - வசீகரணம் - இரசவாதம் - காந்தருவவாதம் - பைபீலவாதம் - கவுத்துகவாதம் - தாதுவாதம் - காரூடம்- நட்டம் - முட்டி - ஆகாயப்பிரவேசம் - ஆகாயகமனம் - பரகாயப் பிரவேசம் - அதிரிசியம் - இந்திரசாலம் - மகேந்திரசாலம் - அக்கினித்தம்பம் - சலத்தம்பம் - வாயுத்தம்பம் - திட்டித்தம்பம் - வாக்குத்தம்பம் - சுக்கிலத்தம்பம் - கனனத் தம்பம் - கட்கத் தம்பம் - அவத்தைப்பிரயோகம் - என்கிற அறுபத்து நான்கு கலைஞானங்களினும் வல்லவராவார்கள். அன்றியும்- இக்காவியத்தை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சந்நிதியின் முன்னரிருந்து அன்புடன் கேட்பார்களாயின், அவர்கள் கொலை - களவு - கள்- குருநிந்தை- பொய்-ஆகிய பஞ்சமாபாதகங்களும், ஸ்திரீஹத்தி - கோஹத்தி - சிசுஹத்தி - முதலாகிய அளவற்ற தீவினைகளு நீங்கப்பெற்று, அழகு - குணம் - ஆயுள்-குலம்-சம்பத்து வித்தை - விவேகம் - தனம் - என்கின்ற அஷ்டபாக்கியங்களையும் அடைந்து, கிடைத்தற்கரிய இந்திரபதவியையும் பெற்றுவாழ்வார்கள். மேலும்இக்காவித்தை இம்மையிற்சூத்திரர் கேட்டால்,மறுமையில் வைசியராவார்கள். வைசியர்கேட்டால், க்ஷத்திரிய ராவார்கள். க்ஷத்திரியர் கேட்டால், பிராமண ராவார்கள். பிராமணர்கேட்டால், தேவராவார்கள். தேவர்கேட்டால், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியினுடைய சாரூபத்தையடைவார்கள். ஆசாரவீனர்களாயினும் இக்காவியத்தை ஆவலோடுங் கேட்பார்களாயின், பின்னர் தமக்கொருவர் நிகரில்லாத ஆசார பூசிதராவார்கள். இக்காவியத்தைக் கன்னிகை கேட்டால்,நல்லகணவனைச்சேருவள். மலடி கேட்டால், அழகியமக்களைப்பெறுவள். தரித்திரன் கேட்டால், மிக்கபாக்கிய முடையவனுவன். வித்தையில்லாதவன் கேட்டால், சிறந்த வித்துவானுவன். அன்றியும் - எவனெவன் எந்தெந்தப்பொருள்களை யடைய விச்சைகொண் டிருக்கின்றானோ, அவனவன் அந்தந்தப் பொருளை யடைந்து, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய கிருபையைப் பெற்று வாழ்ந்திருப்பன். இக்காவியத்தின் கேள்விமகத்துவத்தால், குறள் - கூன் - ஊமை- செவிடு- குருடு - முடம் - உறுப்பு மயக்கம் - உறுப்பில் பிண்டம்- ஆகிய எண்வகையுடற் குறைகளு நீங்கும்.பதினெண்புராணங்களை முழுவதுங் கேட்ட பயனும், சகல தீர்த்தங்களினுஞ் சென்றாடிய பயனும், இவ்வொருபாரதகதைகளைக்கேட்பதினலுண்டாகும். ஆதலால்எனதுகுருசுவாமிகள் இட்டருளிய கட்டளையின்படி அந்த மகாசிலாக்கியமுள்ள பாரதக்கதையைச் சாங்கோபாங்கமாகக் கூறுகிறேன்; நீங்க ளிருவரும் ஒருமனதாயிருந்து கேளுங்களென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

ஜெனமேஜெயனைப்பிரமஹத்தியடைந்த சருக்கத்தோடு,

ஸ்ரீமகாபாரதவரலாறு முற்றிற்று.

(REGISTERED-COPY-RIGHT.)

(ஆதிபர்வம்-க-வது-பக்கம்.)

ஸ்ரீராதா ருக்மணி ஸமேத ஸ்ரீகிருஷ்ண பரப்பிம்மணேநம:

ஸ்ரீமஹாபாரதம்

முதலாவது,

ஆதிபர்வம்.

கண்ணன்துதி.

ஆரணனே யாரணத்துட் பொருளேயண்ட மளந்தானே யளக்கரிய வாடலானைக்
காரணனைக் காரணங்கள் கடந்தோன் றன்னைக் கண்மணியைக் கண்மணிக்கு ளொளியாய் நின்ற
பூரணனைப் பூரணப்பொற் கலசக் கொங்கை பூமாது நாயகனைப் பொருவிற் செங்கை
வாரணனை வாரணமுன் வந்து தோன்று மாதவனைக் காதலுடன் வணங்கி வாழ்வாம்.

சூதபுராணிகர் வாக்கியம்.

[ஓ சவுனகாதி முனிவர்களே ! சந்திரகுல சிகாமணியாகிய ஜெனமேஜெய மஹாராஜனை வை
சம்பாயனர் பார்த்து, ஓ அரசனே ! இந்த ஸ்ரீமஹாபாரதம் ஆதிபஞ்சகம் - உயுத்தபஞ்சகம் - சாந்
தித்திரயம் - அந்தியபஞ்சகம் - என நான்குவகுப்புக்களாய், இந்தநான்கும் ஆதிபர்வம் - சபாபர்
வம் - ஆரண்ணியபர்வம் - விராடபர்வம் - உத்தியோகபர்வம் - வீஷ்மபர்வம் - துரோணபர்வம் -
கர்நபர்வம் - சல்லியபர்வம் - சவுத்திகபர்வம் - ஸ்ரீபர்வம் - சாந்திபர்வம் - அனுசாசநிகபர்வம் -
அஸ்வமேதபர்வம் - ஆசிரமவாசபர்வம் - மௌசலபர்வம் - மஹாபிரஸ்தானிகபர்வம்-சொற்காரோ
கணபர்வம் - ஆகிய பதினெட்டு பர்வமாக இருக்கும். இருதிறத்தார் சேனைகளும், ௰அ - அக்கு
ரோணி. ஒரு அக்குரோணிக்குத் தொகை என்னெனில், தேர்-க, யானை-க,குதிரை-௩,காலாள்-௫,
இது ஒரு பந்தி. இப்படி மூன்றுகொண்டது, தேர்-௩, யானை-௩, குதிரை-௯, காலாள்-௰௫, இது
சேனாமுகம். இப்படி மூன்றுகொண்டது, தேர்-௯, யானை-௯,குதிரை-உ௭, காலாள்-௪௫, இதுகுமு
தம். இப்படி மூன்றுகொண்டது, தேர்-உ௭, யானை-உ௭,குதிரை-அ௧,காலாள்-௱௩௫,இதுகணகம்
இப்படி மூன்றுகொண்டது. தேர்-அ௧, யானை-அ௧, குதிரை-உ௪௩, காலாள்-௪௱௫, இதுவாகினி.
இப்படி மூன்றுகொண்டது, தேர்-உ௪௩, யானை-உ௪௩,குதிரை-௭உ௯,காலாள்-௧உ௧௫, இதுபுலு
தம். இப்படி மூன்றுகொண்டது, தேர்-௭உ௯, யானை-௭உ௯, குதிரை-உ௧அ௭, காலாள்-௩௬௪௫,
இது சமுத்திரம். இப்படி மூன்றுகொண்டது, தேர்-உ௧அ௭, யானை-உ௧அ௭, குதிரை-௬௫௬௧,கா
லாள்-௧0௯௩௫, இது சமாக்கியம். இப்படி பத்துகொண்டது, தேர்-உ௧அ௭0, யானை - உ௧அ௭0,
குதிரை - ௬௫௬௧0, காலாள் - ௧0௯௩௫0, இது அக்குரோணித்தொகை. பாண்டவாதியர் இப்படி
ஏழு அக்குரோணியும், சுயோதனாதியர் பதினொரு அக்குரோணியு முடைத்தாகி ; இவ்விருதிறத்
தாரும் போர்செய்தது பதினெட்டுநாள். இந்தப் பதினெட்டு நாளில் சேனாதிபதியா யிருந்தவர்கள்
யாரெனில், பத்து நாள் வரைக்கும் காங்கேயன். ஐந்துநாள் வரைக்கும் துரோணாசாரி. இரண்டு
நாள் வரைக்கும் கர்னன். மற்ற ஒருநாள் உதயாதி பதினைந்து நாழிகைவரைக்கும் சல்லியன்.
மற்றப் பதினைந்து நாழிகைவரைக்கும் சுயோதனன். முடிவில்பாண்டவர்கள் வெற்றிபெற்று, உல
கமுழுதையும் கைக்கொண்டு அரசுசெலுத்திப் பரமபதம்போய்ச் சேர்ந்தார்கள். இதுகாலகதி :
இந்தக் காலகதியை யாவருமுணரும்படியாக அந்த ஸ்ரீமஹா பாரதத்தை இலக்ஷத்திருபத் தையா
யிரம் கிரந்தமாகச்செய்து வெளிப்படுத்தினவர் என்குருவாகிய வேதவியாசர் ஆதலால்; அவர்
பிறப்பை முன்னங்கூறுகிறேன் கேட்பாயாகவென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.]

கையிலாழி யெடுத்தருள் கண்ணனை, மையுலாமழை வண்ணனைப் பாண்டவர்
உய்யவந்துதயஞ்செய்தபாநுவை, வையமுண்டசெவ் வாயனைவாழ்த்துவாம்.

முதலாவது.

வேதவியாசர் உற்பவச்சருக்கம்

கடல்சூழ்ந்த நெடிய உலகத்தில், நீர்வளம்-நில வளம்பெற்றுக்; குடிவளமுதலிய யாவும் விளங்குகின்ற நாடெவற்றினும் சிறப்புற்றிருக்கின்றது சோதிநாடு. அந்தச் சோதிநாட்டி லிருந்து உலகமுழுதும் தன்னைவணங்கச் செங்கோல் நடாத்திவருகின்றவன் இரவிகுலதிலகனுன வசுவென்பவன். அவ்வசு மந்திரி முதலானவர்கள் தன்னைச் சூழ்ந்துவர வெளிப்பட்டுக் காட்டிற்சென்றுவேட்டையாடி, இளைப்பாறமுனிவர்கள் தவஞ்செய்கிற ஒரு பெரிய சோலையில் வந்தான். அச்சோலையில்தவஞ்செய்துகொண்டிருக்கிறமுனிவர்களை அவ்வரசன்பார்த்துத், தவத்துக்கு மிஞ்சினபொருள்யாதொன்றுமில்லை ஆதலால், நாமுந்தவஞ்செய்ய வேண்டுமென்று கருதி, மந்திரி முதலானவர்களை அழைத்து, ஓ அன்பினர்களே! இதுவரைக்கும்நான் அரசுசெய்து வந்ததுபோல் யாவர்க்கும் ஒருகுறைவு வராமல் அரசுசெலுத்துங்களென்று கூறி, தனது முத்திரை மோதிரத்தைக்கொடுத்துவிட்டான். மந்திரிமுதலானவர்கள் அரசன்முகக்குறியைக்கண்டு, தடுத்துப் பேசச் சக்தியில்லாதவர்களாய், அரசன்கட்டளைப்படி சோதிநாட்டில்வந்து, யாதொருகுறைவும்வராமல் அரசுசெலுத்தி வந்தார்கள். இங்கேவசுவென்பவன் முனிவர்களிடத்திற் சென்று வணங்கி, அவர்கள்கிருபையினுல் தவநிலை சேர்ந்து அநேகநாள் தவஞ்செய்திருந்தான். இப்படி அருமையான தவஞ்செய்கிற வசுராஜனுக்கு முன் இந்திரன் வந்து, ஓ வசுராஜனே! உலகிலுள்ள எல்லா அரசர்களிலும் நீமநுசாஸ்திரவிதி பிசகாமல் செங்கோல் நடாத்தித் தருமதேவதையை நாலுபாதத்தில் நடக்கச்செய்து, குடிகளைக் காப்பாற்றிவருகிறவன். அப்படிப்பட்ட நீதவநிலைசேர்ந்து தவஞ்செய்கிற காரண மென்னவென்று வினவ, வசுராஜன் இந்திரனை வணங்கி, ஓ ஐயனே! தவத்துக்குமிஞ்சின பொருள் வேறொன்றுமில்லையென்றுநினைத்து, சஞ்சலத்திற் கிடமாகிய உலகத்தை நீங்கி இத்தவத்தைச் செய்யக் கருதினேனென்றான். இந்திரன்-ஓ வசுராஜனே! தவத்துக்குயர்ந்த பொருள் வேறொன்றுமில்லை என்பது உண்மைதான். அத்தவம் அரசனுல் பெருக வேண்டுவதாதலால், அத்தவத்துக்கும் உயர்ந்தது அரசன்றோ? அந்த அரசை மநுநெறிவழுவாமல் நடாத்திவந்தால், அதைவிட மேலானபயன் என்னயிருக்கின்றது. ஆதலால் உனக்கென்னவரம் வேண்டுமோ அந்தவரத்தைக் கொடுக்கிறேன். அதைப்பெற்று முன் போலவே அரசு செலுத்திவருக வென்று கூற, வசுராஜன்- ஓ ஐயனே! எந்தெந்தலோகங்களைக்காண நான் விரும்புகிறேனே அந்தந்த லோகங்களைக் காணவேண்டுமென்றுசொல்ல, இந்திரன் அவ்வரசன்கருத்தின்படி ஒரு திவ்யவிமானங் கொடுத்து, சத்துருவை நாசஞ்செய்ய ஒருகாலதண்டமும்கமலமாலையும்சொர்ன நிறமும் பாலித்து, இந்திரன் தனதிருப்பிடத்திற் சென்றான். வசுராஜன் அவ்வரத்தைப்பெற்றுக்கொண்டு, தவநிலைவிட்டுத் தன்னுட்டிற் சென்று, காவிகாம்பரசடாதாரதண்டுகமண்டலங்களைநீக்கி, கங்கைமுதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, நல்லவஸ்திரங்களையுடுத்தி, மகரகுண்டல ஆரகேயூர கடக கங்கணமுதலான ஆபரணங்களை அணிந்து, மல்லிகைமுல்லைமுதலாகிய பரிமளமிகுந்த நறுமலர்மாலைகள் சூடி, சந்தனம் புநுகு கஸ்தூரி கற்பூரசவ்வாதுபூசி, நவரத்நமிட்டிழைத்த சிங்காதனத்தில் இனிது வீற்றிருந்து, தேசத்தரசர்களெல்லாம் வணங்க, வேதவேதியர்கள் பல ஆசிகள்கூற, மகுடாபிஷேகனுகி, மநுசாஸ்திரவிதிபிசகாமல் முன்போலவே அரசுசெலுத்தித், தனக்கு நாலுவரங் கொடுத்த இந்திரனுக்கு மகிழ்வுண்டாகச் சிறந்த திருவிழா நடாத்திவந்தான். அதனுலே நீர்வளம் நிலவளமிகுதியாகி, குடிவளமிகுந்தது. இச்செய்கையைமற்ற அரசர்கள்கண்டுங்கேட்டும் அவரவர்கள் தனித்தனியே இந்திரனுக்குத் திருவிழா நடத்தினர்கள். அதனுலே இந்திரனுக்கு அதிக மகிழ்ச்சி யுண்டாகி, எல்லாவளமும் பெருகும்படி நீர் வளத்தைப் பெருகச் செய்தான். இப்படி உலகமுழுதுஞ் சுகமடைந்தது.

இப்பால் அந்த வசுராஜன் இந்திரன் கொடுத்த விமானத்தின் மீதி லேறித், தன் கருத்தில் நினைத்த லோகங்களுக்கெல்லாம் சென்று, அவிடத்திலிருக்கும் அதிசயங்களைப் பார்வையிட்டுக்கொண்டு அரசுசெலுத்தி வருகிறநாளில், ஒருநாள் மந்திரி முதலானவர்கள் புடைசூழ வேடிக்கை யார்த்தமாய் வெளிப்பட்டுத், தன்னகரத்தின் மருங்கில் இருக்கிற மிகவுங் குளிர்ச்சியையுடைய சுத்தமதி யென்னும் பெயர்பெற்ற நதியருகில்வந்து, அவ்விடத்திலிருக்கிற விநோதங்களைப் பார்த்துக்கொண்டு வருகிறபோது, தனது பராக்கிரமத்தை மந்திரிகளுக்கு மற்றவர்களுக்கும் அறிவிக்க வேண்டி, அங்குயர்ந்து பருத்திருந்த கோலாகலமென்கிற வெற்பைத் தன்காலினுல் எற்றி, அந்நதியில் தள்ளித் தன்னகரத்திற்சென்றான். பின் சுத்தமதிஎன்னு நதி போகத்தை யனுபவிக்கக்கருதி ஒரு பெண் ரூபந்தரித்துக், கோலாகலமென்னும் வெற்பைக் கணவனுக்கொண்டு கூடி, வசுபதத்தனென்று ஒரு புத்திரனையும், கிரியை என்று ஒரு புத்திரியையும் பெற்றாள்.

அந்த இரண்டுமக்களையும் மிகுந்த அன்புடன்வளர்த்துவருகிறநாளில், கிரியையென்பவள் பேதைப்பருவம் பெதும்பைப்பருவங்கடந்து மங்கைப்பருவமான காலத்தில், ஒருநாள் தன்னந்தனியே அந்நதியினருகில் விளையாடிக்கொண்டிருந்தாள். அந்தத் தருணத்தில் முன்போல வசுராஜன் வேடிக்கையார்த்தமாய் அந்நதியருகில்வந்து விநோதங்களைப் பார்த்து வருகிறபோது, நதியருகில் விளையாடித் திரிகிற கிரியை என்பவளைக்கண்டு, இந்தக்கன்னிகையார்? மஹாரூபவதியாய் இரதியைப்போல் பிரகாசிக்கிறாள். இவள் வதனமோ சந்திரவிம்பம். குழலோ முகில். நெற்றியோ மூன்றாம்பிறை. புருவமோ கருப்புவில். கண்ணோ கருவிளமலர். நாசியோ குமிழம்பூ,கன்னமோ கண்ணாடி வாயோ. சேதாம்பல். பல்லோ முல்லை. கழுத்தோ கமுகு. முலையோ மலை. தோளோ வேணு. முன்கையோ மகரயாழ், அகங்கையோ தாமரை. இடையோ அந்தரம். அல்குலோ அரவப்படம், தொடையோ வாழைத்தம்பம்.முழந்தாளோ ஞெண்டு. கணைக்காலோ வரால். பாதமோ புத்தகம். இவளுக்கொப்பு இவளேயன்றி வேறொருவரில்லை. என்றதிக மையலாகிப் பிரமைகொண்டு, அந்தப்பெண் விளையாடுகிறதைப் பார்த்து அரசன்சித்திரப்பிரதிமைபோல்நிற்கிறான். அதமந்திரிகள் அறிந்து, ஓ! ஓ! நமது அரசன் அக்கன்னிகையின் மேல் மயலாகினானென்று குறிப்பினாலுணர்ந்து, அக்கன்னிகை இடத்திற்சென்று, ஓ அம்மணி! நீயார்? உன்பெயரென்னவென்றுவினவ,கிரியை- ஓ புண்ணியவான்களே! நான் இந்நதியின் புத்திரி. என்பெயர் கிரியையென்று கிளற்றி அந்நதியி லிறங்கிவிட்டாள். மந்திரிகள் அரசனிடத்தில்வந்து, ஓ அரசனே! அப்பெண் இந்த நதியின் புத்திரியாம். அந்த அம்மனுக்குக் கிரியை என்னும் பெயராம் என்று கூறினார்கள். அரசன்கேட்டுஅந்நதியருகிற்சென்றுசொல்லுகிறான்: உலகுக்குத்தாயாகி எவர்களையும் பாதுகாக்கின்றதேவதாசுரூபீ! அடியேன் மனங்களிக்க நின்னிடமாயிருக்கிற கிரியை என்னும் கன்னிகையை மணஞ்செய்துகொடுக்கவேண்டும் அம்மணி யென்று பிரார்த்தித்தான். அந்தச் சுத்தமதியென்னும் நதி ஒரு பெண் உருவந்தரித்து, இரண்டு மக்களுடன் அரசன் முன்றோன்றி, இரண்டுமக்கள் வந்த விருத்தாந்தத்தையுஞ் சொல்லி, ஓஅரசனே! நீ மஹாபுண்ணியவானும் உலோகாதிபனுமாதலால்; உன் ஸ்துதிக்கு மகிழ்ந்து இந்த இரண்டு மக்களையும் உனக்குக் கொடுத்தேன். கன்னிகையாகிய கிரியையை நீமணம்புரிந்து, இந்தப் புத்திரனைச் சேனாதிபதியாய் வைத்துக் கொளென்று கட்டளையிட்டு, முன்போல் நதி உருவமாயினாள்.அரசன் கிரியையென்னுங் கன்னிகையை ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் அறிய,வேதவேதியர் ஆசிகள்பகர, மங்கலம்புனைந்து, வசுபதத்தனுக்குச் சேனாதிபத்தியங்கொடுத்துப், பின்பு கிரியையோடு பள்ளியறை சேர்ந்து பஞ்சணை மஞ்சத்திலிருந்து, தாம்பூலந்தரித்து, ௫-வித ஆலிங்கனமும், ௰௧-வித அதரபானமும், ௭ - வித நகக்குறியும், ௭ - விதத் தொழிலும், ௮ - வித தந்தக்குறியும் புரிந்து, அமுத மிருக்கும். ௰௫ - தானத்தையுமுணர்ந்து, ௮-வித தாடனமும், ௮-வித புட்குரலுமுண்டாக, ௱௨௮-விதக் கரணங்களைப்புரிந்து, கலவிப்போரிலுண்டாகும், ௰௯ - வித நயமீயற்றி, ஆகமுமாகமும் ஆவியுமாவியும், ஒன்றெனக்கட்டி முத்தமிட்டு, அவளது வட்டமிட்டசெப்புத்தனத்தைக் கைத்தலத்திற் பற்றிப் பிடித்துக் குழைத்துக் களித்து, இரதியு மதனுமெனக் கூடிக் கலந்து, அப்பருவக்கிரியைமகிழ்வுறச் சிறந்தலீலைகள் புரிந்து, சரசவைபோக சையோகசம்போகமடைந்து வாழ்ந்துவருகிற நாளில்,கிரியையென்பவள் கர்ப்பவதியாயினாள். அரசன் கர்ப்பங்கொண்ட தன்மனைவிக்கு நல்லமாமிசங்களைக் கொண்டுவந்து கொடுக்கக்கருதி, மந்திரிமார்கள்- இரதகஜதுரகபதாதிகள்- வேடர்கள்- நாய்கள்-வலைஞர் முதலானவர்கள் புடைசூழ வெளிப்பட்டுக் காட்டிற்சென்று,யானை-கரடி- சிங்கமுதலான பெரிய மிருகங்களை அதஞ்செய்து, நல்லருசியுள்ள மாம்சமிருகங்களை வதைத்து, அதன் மாமிசத்தை எடுத்து அரண்மனைக்கு அனுப்பிவித்துச், சேனைகளோடு மஹாவிநோதமுள்ள ஒரு சோலையில் வந்திறங்கி, அவ்விடத்தில் பெரியமாளிகையைப்போல் வஸ்திரங்களினா லியற்றி, அக்கூடார மாளிகையில் சப்ரகூட மஞ்சமிட்டு, அன்றிரவில் சயனித் திருந்தான். அப்போது சந்திரோதய மாயிற்று. இளந்தென்றல் வீசிற்று. புஷ்பங்களெல்லாம் பரிமளித்தன. அரசன் அதுகண்டு மிகுந்த காமங்கொண்டு, கிரியையினது உருவத்தை மனதில் நினைத்துத், தன்னந்தனியே புரண்டு அயர்ந்து நித்திரை செய்தான். அப்படி நித்திரை செய்கிறபோது, கிரியைவந்து தன்னைக்கூடிக் கலந்ததுபோல் கனவுகண்டு, வீரியம் கலிதமாயிற்று. உடனே அரசன் விழித்து, ஓ! ஓ! மோசம்வந்தது, நாம் காமவெறிகொண்டுநித்திரைசெய்ததினால்வீரியம வெளிப்பட்டது. இதுவீணாகப்போமானால் மகாகுற்றம் நேரிடும். இதற்கென்ன செய்கிறதென்று சற்றுநேரம் ஆலோசித்துத், தன்னெதிரிலிருந்த வல்லூரு என்கிற பக்ஷியைச் சைகைசெய்தழைத்து, ஓ பக்ஷி அரசே! இதோயிருக்கிற வீரியத்தை எடுத்துப் போய் என்மனைவிக்குக்கொடு என்று கட்டளையிட்டு ஒரு இலையைப்பறித்து வட்டில்போலத்தைத்து,அவ் வீரியத்தை அதிற்புகட்டி அதனிடத்திற் கொடுத்து அனுப்பினான். அந்தவல்லூரு அவ்வட்டிலை மூக்கினாலேற்றுக்கொண்டு, கிரியையினிடத்து வரக் கருதி யமுனையாறு வரைக்கும் வந்தது. அங்கு ஒரு ஆலமரத்தில் பசியினால் கனவருத்த மடைந்து, ஒரு இராஜாளி இருந்தது. அவ்விராஜாளி யவ்வரவந்தெரிந்து பறந்துவந்து பார்த்து, இது யிரையெடுத்துப் போகின்றதால், இதைமறித்து அதைப்பறித்துப் புசிக்கலாமென்று கருதி வல்லூரைத்தடுத்தது. இந்தவல்லூரு

இராஜாளியை நோக்கி, நீயேன் என்னை மறிக்கிறாய்? நான் அரசனலுவலாகச் செல்கிறேன். வீணாய் வருத்தத்துக்கிடம் வைத்துக்கொள்ளாதே வழிவிடென்று கூற, இராஜாளி சீ-சீ-நானென்ன உன்னைவிடுவேனா? உன் மூக்கிலிருக்கிற இரையை நான்புசிக்காமற்போகிறதில்லையென்று எழும்பிப் பறந்துவந் தடித்தது. வல்லூர் அதுகண்டு, அடடா!! நீ எனக்கொரு அணுமாத்திரமென்றுஇகழ்ந்து, இதுவும் எழும்பிப்பறந்து, அந்த இராஜாளியைஅடித்தது. இப்படி யிவ்விரண்டு பக்ஷிகளும் போராடுகிறபோது, இராஜாளியினதுமூக்கு அந்தவீரியமிருக்கிறவட்டிலிற்பட்டு இலைகிழியவே, வீரியம் யமுனையாற்றில் இரண்டுதுளியாய்விழுந்தது. உடனே வல்லூர் இராஜாளியை விட்டுவிட்டு அரசனிடத்துவந்து, நடந்த விருத்தாந்தத்தைக் கூறிற்று. அரசன்கேட்டுக் கனவருத்த மடைந்து, அன்றிராத்திரி அங்கிருந்து, மறுநாள் காலமே தன்னகரம் வந்துசேர்ந்து, மனைவியைக்கண்டு மகிழ்ந்து, முன்போல் அரசுசெலுத்தி இருந்தான்.

இங்கேயமுனையாற்றில் அப்சரஸ்திரீகளிலொருத்தி, பிரமன் சாபத்தினாலே மச்சமாகிசஞ்சரித்திருந்தாள். அவள் இரண்டுபிரிவாக வீழ்ந்த அந்த வீரியத்தைப் புசித்தாள். அன்றுமுதல் அவள் கர்ப்பவதியாகிப், பிரசவகாலம் சமீபித்திருக்கிறதருணத்தில், மீன்பிடிக்கிற வலைஞர்வந்து அந்த யமுனையாற்றில் வலையைவிசினார்கள். அவ்வலையில் மீனமாயிருக்கிற அப்சரஸ்திரீ அகப்பட்டாள். வலைஞர்பார்த்து, இந்தமீன் மிகவும் பெரிதாயிருக்கிறது மன்றி இதன்வயிறும் பெருத்திருக்கின்றது. இதை நமது அரசனிடத்தில் சேர்க்கவேண்டுமென்று கருதி, அதைத் தாசராஜனிடத்திற் சேர்த்துவிட்டார்கள். தாசராஜன் அந்த மீனத்தின் வயிற்றைப் பக்குவமாய்க் கிழித்துப் பார்த்தான். அதில் ஒருபுத்திரனும் ஒரு புத்திரியு மிருந்தார்கள். புத்திரர்களில்லையென்று கனவருத்த மடைந்திருக்கிற தாசராஜன்கண்டு பரமானந்தத்தை யடைந்தவனாய், விழித்தகண் விழித்தபடி பார்த்திருக்கிற தருணத்தில், மீனமாயிருந்த அப்சரஸ்திரீ அந்தரத்தில் ஒருதிவ்ய விமானத்திற்றோன்றி, ஓ தாசராஜனே என்றழைத்து, அதோ உன்னருகிலிருக்கிற மீன்வடிவு நான்தான். அப்புத்திரர்களோ உலகமுழுதும் அரசுசெலுத்தும் வசுராஜன் வீரியத்தினால் வந்தவர்களென்று அந்த விருத்தாந்தத்தைச் சொல்லிப், பின்னு மவ்வரசனைப் பார்த்து, ஓ தாசராஜனே ! என்வரலாற்றைக் கூறுகிறேன் கேள். அந்தர வாசிகளாகிய அப்சரஸ்திரீகளில் நானு மொருத்தி பிரமனிடத்தில் பூசைக்குரியபணிவிடைப்பெண்ணாகியிருந்தேன். ஒருநாள் பூசைக்குச்சலந்திரட்டயமுனையாற்றுக்குவந்து அந்த ஆற்றி லிருக்கிற மீன்களின் விநோதங்களைப் பார்த்திருந்து, அதனால் பூசைவேளை தப்பின பின்பு பிரமனிடத்திற்சென்றேன். பிரமன் என்னைப்பார்த்து ஓ பெண்ணே ! இந்நேரவரையில் என்னசெய்தாயென்று கேட்டதின்பேரில் உண்மையைக் கூறினேன், அதன்மேல் பிரமன் சினங்கொண்டு, நீ மீன்விநோதங்களைப் பார்த்திருந்தமையால் அவ்வாற்றிலேயே மீனமாகி இருவென்று சாபமிட்டார். அதன்மேல்மிகுந்த துன்பமடைந்து பிரமனை மிகவும் வேண்டிக்கொண்டேன். பிரமன் மகிழ்ந்து, வசுராஜன் வீரியம் யமுனையாற்றில் விழப்போகிறது. அதை நீபுசிப்பாய். வலைஞர்களுன்னைப்பிடித்துத் தாசராஜனுக்குக்கொடுப்பார்கள். அவனுன்வயிற்றைக்கிழிப்பான். அப்போது நீபெற்ற சாபந் தீருமென்று கூறினார். அப்படியே இன்றையதினம் அச்சாபந் தீர்ந்ததென்று கூறி முன்போலப் பிரமனிடத்திற்சென்றாள். அதைக்கேட்டதாசராஜன் திடுக்கிட்டு, இம்மக்கள் நமதரசனாகிய வசுராஜன்புத்திரர்கள். இனிநாம் வைத்திருக்கிறது தகுதியல்ல. அரசனிடத்திற் சேர்த்து அரசனிட்ட கட்டளையின்படி நடப்பது உத்தமமென்று கருதி, அம்மக்களைப் பொற்றட்டிலேந்தி அரசனிடத்திற் கொண்டுவந்து வைத்து, அப்சரஸ்திரீ கூறியவற்றைத் தெரிவித்து நின்றான். அரசன் மகிழ்ந்து மக்களை எடுத்துக்கொண்டு புத்திரனுக்கு மச்சராசன் என்று பெயரிட்டு வளர்த்துத் தன் சேனைக்குத் தலைவனாய் வைத்துக்கொண்டு, புத்திரியைத் தாசராஜனுக்குக் கொடுத்தனுப்பினான். தாசராஜன் மிகுந்தகளிப்புடன் அந்தப் புத்திரிக்கு மச்சகந்தி என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். அந்த மச்சகந்தி பேதைப்பருவங்கடந்து பெதும்பைப் பருவத்தை அடைந்து, தந்தையாகிய தாசராஜனிடத்திற்சென்றுவணங்கி, ஐயா! எனக்கு ஒரு படவுகொடுத்தால் நமது குலாசாரப்படி யமுனையாற்றில் இருந்து, வருகிற பெரியோர்களுக்குப் படவு விட்டுக்கொண்டிருக்கிறேனென, தாசராஜன் அவ்வாறே சிறிய படவொன்று செய்துகொடுத்தான். மச்சகந்தி அப்படவை சிலபோரலெடுத்து யமுனையில் விடுத்து, வருகிற பெரியோர்களுக்கும் மற்றவர்களுக்கும் படவுவிட்டிருந்தாள். இப்படி சிலகாலஞ் சென்றபின்பு, ஒருநாளில் பிரமன்மைந்தன் வசிஷ்டன், வசிஷ்டன்மைந்தன்-சத்தி, சத்திமைந்தன்-பராசன், அந்தப் பராச மஹாமுனி தன்னாலே உலகத்துக்கு நன்மையுண்டாகவேண்டுமென்றும், அதற்கொருபுத்திரனைப் பெறவேண்டுமென்றும் கருதி, இருபத்தேழு நக்ஷத்திரங்களில் ஒருநக்ஷத்திரம் உச்சமாகிறது. அந்தநக்ஷத்திரமுச்சமாகிறகாலத்தில் ஒருஸ்திரீயைக் கூடவேண்டுமென்று யோசித்து, அந்தக்காலம்வருகிறபரியந்தம் தவத்திலிருந்தார். அந்தக்காலம் சமீபித்தது. அது கண்டு தவநிலைவிட்டெழுந்து, நகரங்களுக்குச் செல்ல அதிவேகமாய் வந்தார். குறுக்கே யமுனையைக்கண்டார். அந்தயமுனையோமிகவும்பெருக்கெடுத்திருந்தது. பராசர் அதையறிந்து, அவ்வாற்றங்கரையில் படவோடிருக்கு மச்சகந்தியருகில்வந்து, ஓ பெண்ணே! நானொருகோரிக்கையை உட்கொண்டு நகரங்க

ளூருக்குப்போக வந்தேன். வழியில் இந்த ஆறு தோன்
றிற்று. இதைக்கடந்து போவோமென்ருல் பெருக்கெ
டுத்திருக்கின்றது. தயவுசெய்து படவு விடுவையாகில்
ஆற்றைக்கடந்து என்கோறிக்கையை முடித்துக்கொ
ள்வேனென, மச்சகந்தி-ஓ ஐயா பெரியவரே! ஆறோ
பெருக்கெடுத் திருக்கின்றது. உம்மைமாத்திரம் பட
விலேற்றிச் செல்வேனுகில், படவுக்குத்தகுந்த பாரம
ல்ல. ஒருவேளை படவு கவிழ்ந்தால் மோசம்வரும். சற்
றுநேர மிருந்தால் யாராவது இன்னுஞ் சிலபேர்கள்
வருவார்கள். அப்போது தடையின்றி உம்மை அக்க
ரையிற் சேர்க்கிறேனென, பராசர் மச்சகந்தியைப் பா
ர்த்து, ஓ பெண்ணே! படவுக்குத் தகுந்த பாரம்
எவ்வளவோ அவ்வளவுக்கு நான் பாரமாயிருப்பேன்.
நீ சந்தேகப்படாமல் படவைவிடுவென்று கூற, மச்ச
கந்தி இவர் யாரோ மஹாத்மா வென்று நினைத்து, ஓ-
ஐயா! வாரும் படவிலேறு மென்ருள். பராசர் மகிழ்வ
டைந்து, தமது தவமகிமையால் படவுக்குத் தகுந்த
பாரமிருக்க நினைத்துப் படவிலேறினுர். மச்சகந்தி
படவை யாற்றிற்செலுத்தி வருகிறபோது, படகுகன
த்திருக்கிறது தெரிந்து, இவர் மஹா தவசி என்று ம
னதில் நினைத்து, மிகுந்த சாக்கிரதையுடன் படவைத்
தள்ளி வருகிருள். படவிலிருந்த பராசர் ஆகாயத்
தை நோக்கினுர். அப்போது இவர் நாடிய நக்ஷத்திர
ம் உச்சத்தில் வருகிறதருணமா யிருந்தது. அதைப்
பார்த்துக்கனவருத்தமடைந்து, ஓ! ஓ! நாம்கோரியகா
லமாகிற தருணமாயிற்றே: இனியென்னசெய்யப்போ
கிறேமென்று வருத்தப்பட்டு, இனி யிந்தப்படவை
த் தள்ளும் பெண்ணினிடத்தாவது காலந் தப்பாமல்
கூடவேண்டுமென்று நினைத்து, மச்சகந்தியைப் பார்த்
து, ஓ பெண்கள் நாயகமே! இவ்வளவு வருத்தப்ப
ட்டு வந்தும், நான் உட்கொண்ட கோரிக்கை நிறைவே
ற்றுவதற்குக் காலந்தப்பிப் போகின்றது. நான் உட்
கொண்ட கோரிக்கை யென்ன வென்ருல்,இதோவான
த்திலிருக்கிற நக்ஷத்திரம் உச்சியில் வருகிறபோது
ஒரு ஸ்திரீயைச் சேர்ந்து, உடனே ஒருபுத்திரனைப்
பெறக் கருதிவந்தேன். நக்ஷத்திரமோ இன்னும் சற்
றுநேரத்திற்குள் உச்சமாகப் போகின்றது. நானோ ஆ
ற்றி லிருக்கிறேன். ஆதலால்-நீ கிருபைகூர்ந்து, திர
ண்டு பரந்து நிமிர்ந்து வளர்ந்து வருகிற உன்குயம்
என்மார்பிலழுந்த அணைவாயாகில் என்கோரிக்கை நி
றைவேறுவது மன்றி, இவ்வுலகத்தில் நீயும் அழிவில்
லாத புகழைப் பெறுவாயென்று இனிய வார்த்தைக
ளாற் கூறினுர்.

அந்தமொழியைக் கேட்டமாத்திரத்தில் மச்சக
ந்தி நாணமுற்று, ஆ! பெரியவராயிருக்கிறயிவர் நம்
மைப் புணர அழைக்கிருர் என்று மனதில் [illegible]
ஓ ஐயனே! நீர் மஹாதவசி [illegible] மங்கை
[illegible] என்னைப் பார்த்து [illegible]
ப்பருவம[illegible]
கூடென்று சொல்வது தகுதியா? அரும்பைக் கசக்கி
முகாந்தால் பரிமளிக்குமா? அதுபோல் பருவகால ம
ல்லாத என்னைக்கூடவேண்டுமென்று கருதினது மு
றைமையா? அப்படி யல்லவென்று புணர யத்தனித்
தாலும், என் உடல் முழுது மச்சகந்தம். நீர்தான் எப்
படி சகிப்பீர். மேலும்நான் கன்னிகை. இதையோசிக்
காமல் இவ்வாறு கூறுகிறது தருமமாவென்ன,பராசர்
மச்ச கந்தியைப் பார்த்து, ஓ பெண்ணே! உன்னுட
லில் இருக்கும் மச்சகந்தம் நீங்கி,இன்றுமுதல் பரிமள
கந்தியென்று உனக்குப் பெயராகக்கடவது.நீஎன்னை
க்கூடினு முன்போல் கன்னிகையாகவே இருப்பாயெ
ன, மச்சகந்தி இவ்வசனத்தைக் கேட்டவுடன் உடல்
முழுதும் பரிமளம் வீசுகிறதைப் பார்த்து, ஓ! ஓ!
இவர் தவசிரேஷ்டர் மறுக்கக்கூடாது என்று கருதிக்
கூறுகிருள். ஓ ஸ்வாமி! தங்கள் கருத்துக்கிசைந்த
படி நானும் சம்மதித்தேன். ஆனல் நான் மங்கைப்ப
ருவமல்ல. மேலும் தாங்கள் நினைத்த நினைப்புக்கிது
தகுதியான காலமு மிடமுமன்று. பகற்காலமாகவும்
திவ்ய நதியாயு மிருக்கிறதே இதற்கென்ன செய்கிற
தென்றுகூற, பராசர் மச்சகந்திக்கு மங்கைப்பருவத்
தை அநுக்கிரகஞ் செய்து, ஆற்றின் மத்தியில் ஒருதி
ட்டு தோன்றும்படி உண்டாக்கி, திருநீற்றில் கொஞ்ச
மெடுத்து ஆகாயத்தில் ஊதினுர். உடனே ஆயிரங்கதி
ர்களோடுபிரகாசிக்கிற சூரியனைமறைக்க மூடுபனிசூ
ழ்ந்தது. அதனுற்பகல் இரவுபோலாயிற்று. அப்போ
து பராசர் மச்சகந்தியைப் பார்த்து, ஓ - பெண்கள்
நாயகமே! உன்கருத்தின்படி மங்கைப் பருவத்தை
உனக்குக் கொடுத்ததன்றித், தகுந்த இடத்தையும்
காலத்தையும் சேகரித்தேன்.இனித்தடையின்றி என்
னைக்கூடு என்று வேண்ட, மச்சகந்தி அதிகமகிழ்ச்சி
யை அடைந்து, கருத்தொத்து, அந்த நதியின்மத்தி
யில் தோன்றிய திட்டில் இறங்கி, இருவருங்கூடிக் க
லந்தார்கள். அப்போது பராசருக்கு வீரியங் கலித
மாயிற்று. உடனேபராசர் எழுந்து, யாதொன்றும்பே
சாமல் ஆற்றைக்கடந்து நடந்தார். மச்சகந்தி உடனே
கற்பவதியாகி, மூன்றே முக்கால் நாழிகைக்குள் பர
ப்பிரம வஸ்துவாகியும் என்குருவாகியும் விளங்குகிற
வேதவியாசர் உதயமாயினுர். கேளும ஜெனமேஜெய
மஹாராஜனே! இப்படி வேதவியாசர் உதயமான
போதே, மான்றோல் - புலித்தோல் - காவி காம்பர
சடாடவி தாரராய், வேதத்தைக் கையிற்பிடித்துக்
கொண்டு தோன்றினுர். மச்சகந்தி அவரைப்பார்த்து
மஹா வியப்படைந் திருக்கிறபோது, அவர் தன்தா
யை வணங்கி, ஓ அம்மணி! என்றந்தை எதோவென்
று கேட்டார். மச்சகந்தி-அப்பாமகனே! உன்தந்தை
அதோ செல்கிருரென, வேதவியாசர் தாயைநோக்கி,
ஓ-அம்மா! நீ நினைத்தபோது வருகிறேன் என்று வா
க்குத் தத்தஞ்செய்து தந்தையிடத்திற் சென்று,
அவரோடு தாமுந் தவஞ்செய் திருந்தார். அப்போ
து சிலகாலமாய் உலகத்தில் காலகதியால் வேதங்கள்
யாவு மாறிக்கலந்து, கருத்துகளு மாறிப் பலவிதமாக

வேறுபட்டிருந்தன. அக்காலந்த வேதத்தை அவ்வி யாசர் சிக்கறுத்து, இருக்கு - எசுர் - சாமம் - அதர்வ ணம்-என்று நான்குவகையாகப் பிரித்து, பதினெண் புராணங்களை வெளிப்படுத்திப், பின்பு யாவரும் புண்ணியலோகத்தை யடையுமாறு இந்த மஹாபார தத்தை நான்குவேதங்களோடு ஐந்தாம் வேதமென்று ஏற்றுக்கொள்ளும்படிக்கு, ஸ்ரீமஹா கணபதி தனது கொம்பை எழுத்தாணியாகவும் மேருவை ஏடாக வுங்கொண் டெழுதத் தாம் சொல்லி முடித்தார்.

ஸ்ரீவிநாயகமூர்த்தி இம்மஹாபாரதத்தை எழுத வேண்டிய காரண மென்னெனில், பராசரும் வேத வியாசரும் இதற்கு முன்னம் கைலாசபதியைத் தரி சிக்கச் சென்றார்கள். அப்போது கைலாசபதி பரா சரை நோக்கி உமக்குப் பின்னிற்கிறவர் யாரென்று வி னவ, பராசர்-ஓ ஸ்வாமி! என்னால் உலகத்துக்கு நல முண்டாக வேண்டுமென்று கருதி இப்புத்திரனைப் பெற்றேன். இவனுக்கு வியாசனெனப் பெயரிட்டே னென்று கூற, சாம்பவமூர்த்தி மகிழ்ச்சியடைந்து, ஓ- பராசரே! இந்த வியாசனால் உலகத்துக்கு உண்டாகு ம் நலமென்னென்று வினவ, பராசர்- ஓஸ்வாமி! இப் போது மாறுபட்டிருக்கிற நாலுவேதமும் சீர்ப்பட்டு இவனால் வழங்கப்போகிறது மன்றி, அந்நாலுவேதங் களோடு ஒப்புமைப் பட்டு ஐந்தாம்வேதமென்று பெ யர்வகிக்கப் போகிற ஸ்ரீமஹாபாரதகதையென ஒன் றுசெய்யப்போகின்றான். அதனால் உலகத்தில் தர்மா ர்த்த காமமோக்ஷம் என்கிற புருஷார்த்தங்கள் நான் கும் பரிஷ்காரமாய் விளங்கப்போகிறது என்று கூற, சாம்பவமூர்த்தி மகிழ்ந்து, இனி நடக்கப் போகின்ற ஸ்ரீமஹாபாரதத்தை இப்போதே எழுதுகிறதாய் நீர் கூறியபடியால், நமது குமாரனாகிய விநாயக மூர்த் தியை எழுதச்சொல்லுகின்றேன் உமது புத்திரனைச் சொல்லச்சொல்லுமென்றுரைக்க,பராசர்அதற்கொத் துக்கொண்டு வியாசரைநோக்கினார். வியாசர் அக்கு றிப்புணர்ந்து, ஸ்ரீ மகா பாரதத்தைக் கூறத் தொடங் கினார். விநாயகர் எழுதினார். அது தான் ஆதிபாரதம். பின்பு வியாசர் கூறியதற்கும் பாரதம் நிறைவேறினத ற்கும் ஒத்திருந்தது. அதனாற் றான் இந்த ஸ்ரீமகாபா ரதம் எல்லாநூலினும் மேலான சிறப்படைந்தது. பி ன்பு வியாசர் அந்த ஸ்ரீமகாபாரதத்தைச் சபாலக்ஷங் கிரந்தமாக்கி எனக்கும், நாரதர் - சுகர் - தேவலர்- சுமந்தர் முதலானவர்களுக்குங் கற்பித்து, சொர்க்க லோகத்துக்கு நாரதரையும், யக்ஷகருக்குச் சுகரை யும், பிதுர்த் தேவதைகளுக்குத் தேவலரையும்,பூ லோகத்துக்குச் சுமந்தரையும் நியமித்து; உமக்குச் சொல்ல இப்போது எனக்குக் கட்டளையிட்டார். அந் த ஸ்ரீ மகா பாரதம் வேதமென்று கொள்வதற்குக் காரண மென்னெனில், அந்த பாரதவீரர்களோ திரு மால் முதலாகிய தேவர்களாதலால், அப்பாரதத்தை வேதமென்று கூறப்பட்டது என்று வைசம்பாயனர் சொல்ல, ஜெநமேஜெய மஹாராஜன்கேட்டு வைசம் பாயனரை வணங்கி ஒருவசனஞ் சொல்லுகிறான்:ஓஸ் வாமி! பாரதவீரர் எங்கள் மூதாந்தகளா யிருக்கத் தேவர்களென்று உரைத்தீர்கள். அந்தக்காரணத்தை எனக்கு விளங்க உரைக்க வேண்டுமென்று வேண்ட, வைசம்பாயனர்சொல்லுகிறார். கேளும்மஹாராஜனே! பிரபஞ்ச ருற்பவஞ் சொல்லி அதன்மேல் பாரதவீரர் உற்பவஞ் சொன்னால் உமக்கு நன்கு விளங்கும் ஆத லால்,பிரபஞ்ச ருற்பவம் முன்னஞ்சொல்லுகிறேனெ ன்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

வேதவியாசர் உற்பவச் சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது,

பிரபஞ்ச ருற்பவச்சருக்கம்

கணநாதன் துதி.

உருவ மாயரு வாயகம் புறத்தினு முலாவும்
ஒருவன் மூவுல கோரடி யளந்தசே வடிகள்
வ்ருவ தாகியும் போவதா கியுந்தடு மாறுங்
கருவெ னும்பெருங் கடற்கரை யேறலாங் கலமே.

கிரேதா யுகத்தில் சூரியவமிச திலகனாகிய கார்த் தவீரியார்ச்சுனன் சமதக்னியினது சிரசைத் துணித்த காலத்தில், அந்தச் சமதக்னி மனைவி இருபத்தொரு தரம் தன்மார்பில் புடைத்தழுதாள். இந்தச்சேதி சம தக்னிக்கு மூத்தகுமாரனான பரசுராமர் கேள்விப்பட் டு, தாயிடஞ்சுவந்து வணங்கி, [illegible] அம்மணி! நீவருந் த்தமுறா யிரு. நீ அடைந்த வருத்தத்துக்கு எண் மடங்கான வருத்தம் அந்தச் சூரியவமிச ராஜஸ்திரீ களெல்லாம் அடையவும், சூரியவமிச மிவ்வுலகி லில் லாமற் போகவும் சங்கரித்து, அந்த வரசர்க ளுதிரப் பிரவாகத்தில் என்பிதாவுக்குச் செய்யுங் கர்மமுதலிய வற்றை முடிக்கிறேன். அஞ்சாதே: என்று உறுதி கூறிப் [illegible] கொண்டு,உலகிலுள்ள இரவிகு ல அரசர்களை யெல்லாம் [illegible] அவர்கள் உ திரப் பிரவாகத்தில் தந்தைக்குச் செய்யுங் கடனை நி றை வேற்றி, உலகத்தைக் காசிபருக்குத் தத்தஞ்செ

ய்து, தான் தவத்திலிருந்தார். காசிபர் உலகமுழுதையுங் கைப்பற்றி,மநுசாஸ்திரவிதிபிசகாது செங்கோல் செலுத்தி வருகிறநாளில், சூரியவமிச ராஜஸ்திரீகளெல்லாம் ஒன்றுகூடி, இனி நாம் பூமியிலிருந்து பயனென்ன? கணவனிறந்தபோது மனைவியுமிறக்கவேண்டும். எக்காலத்தும் கணவனைவிட்டிருக்கலாகாது. நமக்குக் கணவனுமில்லை. புத்திரருமில்லை.ஆகையால் நாமெல்லோரும் அக்கினிப் பிரவேசமாகிறதே உத்தமமென்று ஆலோசித்து, உடனேயக்னிப்பிரவேசமாக யத்தனித்தபோது காசிபர் அறிந்து, ஓ! ஓ! மோசம் வந்தது. நீதிதெரியாமல் சூரியவமிச ஸ்திரீகளெல்லாம் அக்னிப்பிரவேச மாகிறார்கள். அவர்களுக்குச் சில நியாயஞ்சொல்லி,முன்போல் சூரியவமிசத்தைப் பெருகச்செய்ய வேண்டுமென்று அந்தப் பட்டத்தரசிகளிடத்திற் சென்று, ஓ ராஜஸ்திரீகளே! நான் சொல்லும் வசனங்களின்படி நின்று உலகத்தை யாதரியுங்கள். அதனால் இம்மை மறுமை லாபம் சித்திக்கும். வீணாய் நெருப்பில் விழுந்திறந்தால், இம்மைமறுமை லாபங்கெட்டுப் பிசாசராவீர்கள். ஆதலால்சற்றுநில்லுங்களென்று மறுத்தார். அந்த ராஜஸ்திரீகளெல்லாம் காசிபரைநோக்கி நமஸ்காரஞ்செய்து, ஒருவசனஞ் சொல்லுகிறார்கள். ஓ ஐயனே! நாங்கள் இப்பூமியிலிருந் தென்னபயன்? கணவனிறந்தபோதே மனையாளும் இறக்கவேண்டியது தருமம். ஆதலால் எங்களுடைய கணவர்களெல்லாம் இறந்தபின்பு நாங்கள் இருந்தென்ன லாபம்? எங்கள் கருத்தின்படி உத்திரவு கொடுத்தால் நாங்கள் அக்நிப்பிரவேச மாகுகிறோமென்று கூற, காசிபர் சொல்லுகிறார். ஓ பட்டத்தரசிகளே! ஸ்திரீகளுக்கு முக்கியமான கடமை என்னெனில், புத்திரனைப் பெற்று குலத்தைப் பெருகச்செய்வது. அதைவிட்டு இறக்கிறதுதகுதியல்ல. ஆதலால் நான் வேதத்திற்கூறிய விதியைச்சொல்லுகிறேன். அவ்வாறு நீங்கள் சம்மதித்துப் புத்திரரைப்பெற்றுக் குலத்தை விர்த்தி யாக்குங்களென்று கூற, இராஜஸ்திரீகள் காசிபரை நோக்கி, ஓ ஐயனே! எங்களைக் குறித்து வேதத்தில் என்னசொல்லுகின்றது சொல்லுமென்று கேட்க, காசிபர் சொல்லுகிறார்.

ஓ இராஜமகிஷிகளே! புருஷனிருந்தாலும் புத்திரனில்லாமற் போனால், பட்டத்தரசிகள் அந்தந்தப் பட்டத்து ஆசாரியரைச் சேர்ந்து புத்திரனைப்பெற்று, குலத்தை விர்த்தி செய்யலாமென்று வேதத்தில் முறையிடுகிறது. ஆகையால்-நீங்களெல்லாம் உங்களுடைய ஆசாரியரைச்சேர்ந்து புத்திரர்களைப் பெற்றுக், குலத்தை விர்த்தியாக்குங்கள். இதனாலே ஒரு கெடுதியுமில்லை. நீங்கள்யாவரும் நெருப்பில் விழுந்து மடிவது தருமமல்ல. இனிவிருப்பமுடன் நான் சொன்னபடி சேர்ந்து கருப்பவதி யாகுங்களென்று கட்டளையிட, பட்டத்தரசிகள் சற்றுநேரம் யோசித்து, இந்தக் காசிபரோ பிரமனுடைய புத்திரர். இவர்சொல்லுக்குப் பழுதுவரக் கூடாது: இவரும் பொய்மை கூறாரென்று ஒத்துக்கொண்டு, யாவரும் காசிபரை வணங்கிச் சொல்லுகிறார்கள். ஓ மஹானுபாவா! வேதமே ஸ்வரூபமாக இருக்கிற நீர் ஒரு கட்டளையிட்டால் இந்திரன் முதலான தேவர்களே கடக்கமாட்டார்களென்றால், பூலோகத்து ஸ்திரீசாதிகளாகிய நாங்கள் கடக்கப் போகிறோமா? தங்கள் கருத்தின்படி நடக்கிறோமென்றுகூறி, அவரவர்கள் தங்கள் குலாசாரியரை அழைப்பித்துக், காசிபர் கூறிய கட்டளையைத் தெரிவித்துக் கூடிக் கலந்து, எவ்வெட்டுப் புத்திரர்களையும்இரண்டிரண்டுபுத்திரிகளையும்பெற்று வளர்த்து, சூரிய குலத்தை விர்த்தி யாக்கினார்கள். அப்போது காசிபர் தமது வசத்திலிருக்கிற பூமியை அந்தந்தப் பட்டத் தரசிகளுடைய புத்திரர் களுக்குப் பகுத்துக்கொடுத்து முடிசூட்டி, அரசுசெய்யக் கட்டளையிட்டார். அந்தந்தப் பட்டத்துப்புத்திரர்கள் மநுசாஸ்திர விதி பிசகாமல் அரசு செலுத்தி வருவதினாலே, பிணி பயம் - கள்ளர் பயம் - சத்துரு பயம்- விஷ பயம் - ஐம்பூத பயம் - முதலானவைகள் நீங்கி, தரும தேவதை நாலு பாதத்தினாலேயும் நடந்தது. அதனால் உலகில் பிரஜைகள் பெருகினார்கள்.அப்பால் பூமிதேவி பிரஜாபாரத்தைச் சுமக்கச் சக்தியில்லாமல் கனவருத்த மடைந்து, இந்தப் பிரஜாபாரத்தைத் திரிமூர்த்திகள் தீர்க்கவேண்டுமே ஒழிய மற்றொருவர் தீர்க்கார்களென்று கருதி, அந்தத் திரிமூர்த்திகள் ஒன்றாகக் கூடியிருக்கிற சமயத்தைப் பார்த்து வந்து, அந்த மும்மூர்த்திகளையும் கண்டு வணங்கிக் கூறுகிறாள். ஓ மஹா மூர்த்திகளே! பூமியில் அரசர்கள் மநுசாஸ்திர விதிபிசகாமல் அரசுசெலுத்துகிறார்கள். அதனால் பிரஜைகள் விர்த்தியாகி எனக்குப் பாரமாயிற்று. அவர்களைச் சுமக்க என்னால் சக்தியில்லையென்று முறையிட்டாள். மும்மூர்த்திகளும் ஆலோசித்துப் பூமிப் பிராட்டியைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். ஓ லோகமாதாவே! நீ வருத்தப் படவேண்டாம். இதோ விந்த நாராயண மூர்த்தியும் - தேவர்களும் - அசுரர்களும் - மானுஷதேகராய் உலகில் வந்து, உன்பாரத்தை நீக்குவார்கள். அஞ்சவேண்டாம்; உனது யிருப்பிடத்துக்கு நீபோய்ச் சேர்ந்திடுக. என்று கட்டளையிட்டுப் பின் பந்தநாராயண மூர்த்தியும் தேவர் அசுரர் முதலானவர்களும் மானுஷதேக மெடுத்துப், பூமிபாரத்தைநீங்கிப், பூமிதேவியை ஆதரித்தார்கள். அந்த விருத்தாந்தத்தை விவரமாகக் கூறுகிறேன்கேளென்று வைசம்பாயனர் சொல்லுவ தாயினர்.

சிருஷ்டித் தலைவனாகிய பிரமனுடலில், அத்திரி-அரிசி-புலத்தியன் - கிரன் - கிருத்து - புலகன்- என்னும் ஆறு புத்திரரும், அப்பிரமன் வலது பாதத்தின் பெருவிரலில் - தக்கனும், இடது பாதத்துப் பெருவிரலில்-தரணியென்னும் ஒருபெண்ணும் உதி

த்தனர். அந்தப் பிரமன் உடலி லுதித்த ஆறுபுத்திரர்களில், அரிசியின் புத்திரன் காசிபர். அக்காசிபரால் இவ்வுலகம் விர்த்தியாயிற்று. அஃதெவ்வாறெனில்- பிரமன் வலதுபாதத்துப் பெருவிரலிற் பிறந்த தக்கனென்பவன், பிரமனிடதுகாற் பெருவிரலிற் பிறந்த தரணி யென்பவளைக் கூடி ஆயிரம். புத்திரர்களைப் பெற்றான். அப்புத்திரர்கள் பிரமசரியத்தை மேற்கொண்டு தவஞ்செய்து, ஞானபதவி யடைந்தார்கள். அதைத் தக்கன் கேட்டு, மறுபடியும் தரணியென்பவளைக் கூடி ஐம்பது பெண்களைப் பெற்றான். அந்த ஐம்பது பெண்களில் - கீர்த்தி - லட்சுமி-துருதி-மேதா - புஷ்டி - சிரத்தை - கிரியை-விருத்தி- இலச்சா-மதி-என்னும் பதின்மரைத் தருமனென்கிற மநுவுக்கும், அஸ்வனி - பரணி - கார்த்திகை-ரோகணி-மிருகசீரிடம்-திருவாதிரை-புனர்பூசம் - பூசம்-ஆயிலியம்-மகம்-பூரம்-உத்திரம்-அஸ்தம் -சித்திரை-சுவாதி - விசாகம்-அநுஷம்- கேட்டை- மூலம்-பூராடம் - உத்திராடம்- திருவோணம் - அவிட்டம் - சதயம் - பூரட்டாதி-உத்திரட்டாதி - இரேவதி - என்னும் இருபத்தேழுபெண்களைச் சந்திரனுக்கும், அதிதி - திதி - தநு - காலை - ஆயு - சிங்கிகை - மநு - சுரபி - முனி-குரோதவசை - அநுகை - விநுதை - கத்துருவை - என்னும் பதின்மூன்று பெண்களைக் காசிபருக்கும் விவாகஞ்செய்து கொடுத்தான். இவர்களில் அதிதிக்குத், தாதுரு மித்திரன் - அரியமான்- சக்கரன்- வருணன் - அமிசுபகன் - தரணி- இருதுவன்-விவசுதன் - பூஷன் - சவித்திரன்-துவஷ்டரன் - விஷ்ணு - ஆகிய பன்னிரண்டு சூரியர் பிறந்தார்கள். திதியென்பவளுக்கு இரணியன் பிறந்தான். அந்த இரணியனுக்குப் பிரகலாதனன் பிறந்தான். பிரகலாதனனுக்குக், கும்பன்-நிருபன்-விரோசனன் - என்னு மூவரும் பிறந்தார்கள். இவர்களில் விரோசனனுக்குப் பலிச்சக்கிரவர்த்தி பிறந்தான். பலிக்குப் பாணுசுரன் பிறந்தான். தநுவென்பவளுக்கு, விப்பிரசித்தி - நமுகாசி - சங்கவருணன் - பலோமன் - விலோமன்-முதலான நாற்பது குமாரர்கள் பிறந்தார்கள். அந்த நாற்பது பேருக்கும் சந்ததி விர்த்தியாகி, அளவற்ற அசுரர்களுதித்தார்கள். காலை யென்பவளுக்கு, விநாசன் - குரோதன் - முதலாகிய ஐம்பது புத்திரர்கள் பிறந்து அபிவிர்த்தி யாயினார்கள். ஆயுவுக்கு, விஜயன் - விஜரன்-வீரன் -விருத்திரன் - என்னும் நாலு புத்திரர்கள் பிறந்து விர்த்தியாயினார்கள். சிங்கிகை யெனபவளுக்கு இராகு பிறந்தான். மநுவென்பவளுக்கு வீமசேனன் - உக்கிரசேனன் - முதலாகிய பதினாறு கந்திருவர் பிறந்தார்கள். சுரபி யென்பவளுக்கு மேனகை முதலாகிய அப்சரஸ்திரீகளும் தேவ சுரபிகளும் பிறந்தன. முனியென்பவளுக்கு கணன் பிறந்தான். குரோதவசைக்குமற்றொரு கணன்பிறந்தான். அநுகையென்பவளுக்குச் சித்தகணங்கள் பிறந்தார்கள். விநுதைக்கு, அருணனும் - கருடனும் பிறந்தார்கள். அருணனுக்கும் அவன் மனைவி சேதிக்கும், சம்பாதி -சடாயு பிறந்தார்கள். கத்துருவைக்கு, ஆதிசேஷன் வாசுகி முதலாகிய நூற்றுநாலு உரகபதிகளும்- சலர்க்காரை என்கிற ஒருபுத்திரியும் பிறந்தார்கள். இது காசிபர் சந்ததி.

இதுபோலவே அப்பிரமனது புத்திரர்களாலும் அப்புத்திரர் வருக்கத்தாராலும் உண்டான உற்பவங்களைச் சொல்லுமிடத்து, அங்கிரசனுக்குப் பிரகஸ்பதி முதலாகிய புத்திரர்களும் யோகசித்தி யென்னும் ஒரு புத்திரியும் பிறந்தார்கள். அதில் பிரகஸ்பதி தேவகுருவானான். அத்திரிக்கு வேத வேதியர்களும்-பிரமரிஷிகளும்-பிறந்தார்கள். புலகனுக்கு விச்சரவாகு முதலாகிய அரக்கர்கள் பிறந்தார்கள். அதில் விச்சிரவாகு வென்பவனுக்குக் குபேரன்பிறந்தான். புலத்தியனுக்கு, கின்னரர்-கிம்புருடர்- பிறந்தார்கள். கிருதுவுக்கு அழிவில்லாத நிலைமையையுடைய நாலு முனிவர்கள் பிறந்தார்கள். பிரமன்புத்திரனாகிய தேவலனென்கிற முனிக்குப் பிரசாபதி பிறந்தான். அந்தப்பிரசாபதிக்குத், தூமிறை-புத்தி-மனஸ்வநி - ரதை-சுசனை-சாண்டிலி - பிரபாசலை - என்னும் ஏழு மனைவிகளுண்டு. அவர்களில் தூமிறைக்கு வருணனும், புத்திக்குத் துருவனும், மனஸ்வநிக்குச் சோமனும், ரதைக்கு நகுஷனும், சுவசனைக்கு அணிவனும், சாண்டிலிக்கு அக்னியும், பிரபசலைக்குப் பிரபாசன்- பிரத்தியூசன் முதலாகிய வசுக்களும் பிறந்தார்கள். வருணனென்கிற வசுவுக்குத் திரவணனும், துருவனென்கிற வசுவுக்குக் காலனும், சோமனென்னும் வசுவுக்கு மனோகர மென்னும் பெண்ணுக்கும், புரோசனன்-வர்ச்சிசன் - சிசிரன் - பிராணன்-வருணன்-புரதை- என்கிற பிள்ளைகளும் பெண்ணும் பிறந்தனர். புரதையென்பவளுக்குப் பதினொரு கந்திருவர் பிறந்தார்கள். நகுஷனென்கிற வசுவுக்குச் சோதிபிறந்தான். அனிலனென்னும் வசுவுக்கும் சிவையென்பவளுக்கும், புரோஜனனும் - அவிக்யாதமதியும் - பிறந்தார்கள். அக்நியென்கிற வசுவுக்குக் குமாரனென்பவன்பிறந்தான். பிரத்யூஷனென்னும் வசுவுக்கு தேவலமுனிவன் பிறந்தான். பிரபாசனனென்கிற வசுவுக்கும் பிரகஸ்பதி சகோதரியாகிய யோகசித்திக்கும் விசுவகன்மன் பிறந்தான். தரனென்கிறவசுவுக்கு, மானச புத்திரர்களாகிய மாதேவன் - அரன் - உருத்திரன் - சங்கரன் - நீலலோகிதன் - ஈசானன் - விசயன் - வீமதேவன்-பவோற்பவன் - காபாலி - சவுமியன் - என்னு மேகாதச ருத்திரர்கள் பிறந்தார்கள். பிரமன் வலதுகையில் தருமனென்கிற மநுப்பிறந்தான், அந்தத் தருமனுக்குச், சமன்-ராமன் - அருஷன்-என்பவர் பிறந்தார்கள். அந்த மூவரும் கிரமமாய், அப்பிராப்தி - நிருதி - நந்தி - என்கிற மூன்றுமனைவியரோடு வாழ்ந்திருந்தார்கள். சவித்துவுக்கும் வடவாக்கினிரூபமாகிய துவஷ்டரைக்கும் அஸ்வனிதேவதைகள் பிறந்தார்

கள். பிரமன்மார்பிலே பிருகுமுனிவர்பிறந்தார். அந்தப்பிருகுக்குச் சுக்கிரன் பிறந்தான். அந்தச்சுக்கிரன் அசுரர்குருவாயினன். மேலுமவனுக்கு, துவஷ்டான் தாத்திரி-பத்திரன்- கன்னன் - என்கிற நாலுபுத்திரர்கள் பிறந்து, அசுரருக்குப் புரோகிதர்களாயினார்கள். மற்றுமப்பிருகுக்குச் சவுநகன் பிறந்தான். அந்தசவுனகனுக்கும் மநுவாகிய யயாதிபுத்திரிசுகன்னிக்கும், சனகன் - உருசிகன் - முதலாகிய நூறு புத்திரர்கள் பிறந்தார்கள். உருசிகனுக்குச் சமதக்கினிபிறந்தான். சமதக்கினிக்கும் ரேணுகைக்கும், புத்திரரும் புத்திரிகளுமாக நாலுபேர் பிறந்தார்கள். அவர்களில் மூத்தகுமாரன் சிரேஷ்டனாயினான். மறுபடியும் பிரமனுக்கு தாதை - விதாதை - அலக்குமி - என்னுமூன்றுஸ்திரீகள் பிறந்தார்கள். இவர்களில் அலக்குமி அனேகம் புத்திரர்களைப் பெற்றாள். வருணனென்பவனுக்கும் சேஷ்டைக்கும், தருமனென்று ஒரு புத்திரனும்-சுனகை என்று ஒருபெண்ணும்பிறந்தாகள். தருமனுக்கும் நிருதி யென்பவளுக்கும், மஹாபயன் - பயன்- மிரதநீவு-என்கிற மூவரும் பிறந்தார்கள். மற்றுமத்தருமனுக்கு- காகி- சேனை- பாசினி- திரிதராஷ்டரை சுகி-என்னும் ஐந்துபெண்கள் பிறந்தார்கள். இவர்களில் காகி யென்பவளுக்குக் காக்கைகள் பிறந்தன. சேனை என்பவளுக்குப் புறாக்கள் பிறந்தன. திரிதராஷ்டரைக்கு விச்சுளிகள் பிறந்தன. பாசினியென்பவளுக்குப் பருந்துகளும் ஆந்தைகளும் பிறந்தன. சுகியென்பவளுக்குக் கிளிகள்பிறந்தன. முன்கூறிய காசிபமுனி மனைவியாகிய முனியென்பவளுக்கு மறுபடியும், மிருகை-மந்தை -அரிணி - பத்திரமதி-மாதங்கி- சார்த்தூலி - சுவேசை-சுரசை - என்கிற எண்மரும் பிறந்தார்கள். இவர்களில் மிருகை யென்பவளுக்குப் பன்றிமுதலாகிய மிருகங்கள் பிறந்தன. மந்தை என்பவளுக்கு உயிருள்ளபலஜெந்துக்கள் பிறந்தன. அரணிக்குக் குரங்கினம்பிறந்தன. பத்திரமதிக்கு ஐராவதம் பிறந்தது. ஐராவதத்துக்குத் தேவநாகங்கள் பிறந்தன. மாதங்கி என்பவளுக்கு யானைகள் பிறந்தன. சார்த்தூலியென்பவளுக்குச் சிங்கங்களும் புலிகளும்பிறந்தன. சுவேதை யென்பவளுக்குத் திக்குக் கஜங்கள், பிறந்தன. சுரதை என்பவளுக்கு, உரோகணி - பத்திராங்கி-கந்திருவை-என்கின்ற மூன்று ஸ்திரீகள் பிறந்தார்கள். உரோகணிக்கு மான்கள் பிறந்தன. பத்திராங்கிக்கு, மரங்களும்-கொடிகளும்-புதல்களும் பிறந்தன. கந்திருவைக்குக் குதிரைகள் பிறந்தன. இதுவே பிரபஞ்சருற்பத்தி. இனி பாரதவீரர் உற்பத்தியைக் கூறுகிறேனென்று வைசம்பாயனர் ஜெனமேஜெயமஹாராஜனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

பிரபஞ்சருற்பவச் சருக்கம் முற்றிற்று.

மூன்றவது.

பாரதவீரர் உற்பவச் சருக்கம்.

கண்ணன் துதி.

இணையிலாதவ னிறப்பொடு பிறப்பெனுங் கடற்கோர்
புணையு மானவன் புநிதர்கண் மனத்துறை புநிதன்
பணைகொ டிண்புயப் பாண்டவர்க் கிகத்திநும் பரத்துந்
துணையதானவன் றுணைப்பத நமக்கினித் துணையே.

சிறப்புப் பொருந்திய வரத்தினை யடைந்தயாதவகுல சிகாமணியாகிய வசுதேவனுக்கு, தேவகியென்றும் - உரோகணி என்றும்-இரண்டுமனைவியருண்டு. அவர்களில் தேவகிக்கு கிருஷ்ணஸ்வாமி என்றும்-உரோகணிக்குப் பலராமனென்றும்-இரண்டுருவமாகத் திருமால் அவதரித்தார். அஷ்டலட்சுமிகள் அம்சையால் உருக்குமணிமுதலாகிய எட்டுபட்டஸ்திரீகள் பிறந்தார்கள். அப்சர ஸ்திரீகள் அம்சையால் கோபியர்கள் பிறந்தார்கள். சனற்குமாரர்முதலாகிய முனிவர்களும் அம்முனிவர் புத்திரர்களும், குந்திபோசன் முதலாகிய யாதவஅரசர்களாய்ப் பிறந்தார்கள். பிரபாசனரென்கிற எட்டாம் வசுஅம்சையால் காங்கேயன் பிறந்தான். அசுரர்குலகுருவாகிய சுக்கிராச்சாரி அம்சையால் துராணச்சாரி பிறந்தார். காமக்குரோதத்தின் அம்சையால் அஸ்வத்தாமன்பிறந்தான். எகாதசருத்திரர் அம்சையால் கிருபாச்சாரிபிறந்தான். சூரியன் அம்சையால் கர்னன் பிறந்தான். துவாபரயுகபுருஷன் அம்சையால் சகுனிபிறந்தான். கந்திருவர்க்கு அரசனாகிய அம்ச னம்சையால், திரிதராட்டிரன் பிறந்தான். வசுமதி என்னும் தேவதை அம்சையால் காந்தாரி பிறந்தாள். திரிதராட்டிரனுக்கும் காந்தாரிக்கும் கலிபுருஷன் அம்சையால் சுயோதனன் பிறந்தான். விச்சிரவாகு வென்னும் அசுரன்வழியிற்றோன்றிய அசுரர்கள் அம்சையால் சுயோதனன் தம்பிமார்கள் பிறந்தார்கள். இரணியகசிபன் அம்சையால் சிசுபாலன்பிறந்தான். பிரகலாதனன்அம்சையால் சல்லியன் பிறந்தான். பிரகலாதனனுக்கு இளையவனாகிய அநுகுலாதன் அம்சையால் துஷ்டகேதுபிறந்தான். சிபி அம்சையால் சுருதசேனன் பிறந்தான். பாஷக்கலன் அம்சையால் பகதத்தன் பிறந்தான். விப்பிரசித்தனென்னும் அரக்கன் அம்சையால் ஜராசந்தன் பிறந்தான். நயசிரன் அம்சையால் நஸ்வசிரன் பிறந்

தான். சங்கன் - ககன மூர்த்தி - வேகவந்தன் முதலானவர்கள், கேகயராஜர்களாகப் பிறந்தார்கள். கேதுவந்தனென்பவன் அமிசையால் சுதேரிசனன் பிறந்தான். சுவர்ப்பானு என்பவன் அமிசையால் உக்கிரசேனன் பிறந்தான்.சங்கமன்அமிசையால் சோமகன் பிறந்தான்.அஸ்வபதி அமிசையால் கிருதவன்மன்பிறந்தான். உருஷபாவன்அமிசையால் தீர்க்கபிரக்கியன் பிறந்தான். நஜரன் அமிசையால் மல்லன்பிறந்தான். அஸ்வக்கிரீபன் அமிசையால் உரோசமானன் பிறந்தான். சூக்குமனென்பவன் அமிசையால் பிருகத்திருது பிறந்தான். துருவென்பவன் அமிசையால் சேனுபிந்தன் பிறந்தான். சகரன் அமிசையால் பிரத்திவிந்தியன் பிறந்தான். விருபாக்ஷன் அமிசையால் சித்திரவன்மன் பிறந்தான். பவுத்திரன் - அசாங்கன் - அமிசையால் கிருபபாக்கிவீகர் பிறந்தார்கள். சந்திரவக்கரன் அமிசையால் பூரிசிரவன் பிறந்தான். நிகும்பன் அமிசையால் ருஷிகன் பிறந்தான். மயூரன் அமிசையால் விசுவன் பிறந்தான். சுபாரன் அமிசையால் குரோத கீர்த்தி பிறந்தான். அந்தக் குரோத கீர்த்திக்கு, நந்தகன் - கண்டகன் - வேஷன் - சித்தராத்தகீஷன்-சுவீரியபாகு - மஹாவீரியன் - குதரன் - சித்திராதன் - நீலன் - விரதாமன் - தந்தவந்தரன் - துரஜெயன் - ஜெநமே ஜெயன் - ஏகல்வயன் - எனப்பல அரசர்கள் பிறந்தார்கள். பக்தாஸ்தன் அமிசையால் நந்தகன் பிறந்தான். தீர்க்க சிகவன் அமிசையால் காசி ராஜன் பிறந்தான். விஜயன் அமிசையால் வசுமித்திரன் பிறந்தான். சித்தென்பவன் அமிசையால் பரசுராஷ்டரன் பிறந்தான். வீரன் அமிசையால் பவுவுண்டிர மச்சன் பிறந்தான்.உருத்திரன்அமிசையால் மணிமந்தன் பிறந்தான். காலபுத்திரர் அமிசையால் ஜெயசேனன்-பராசிதன் - நாதிகன் - நிஷ்காதிபன்-ஸ்ரீமங் மகோதன் - மத்தியன் - சமுத்திர சேனன்-புரகதன், என எட்டு அரசர்கள் பிறந்தார்கள். குரோதவசை புத்திரனுகிய கணன் அமிசையால் கஜபுத்திரன் பிறந்தான். அலி என்னும் அரக்கன் அமிசையால் சிகண்டி பிறந்தான். பிரகஸ்பதி அமிசையால்புருகக்கீர்த்தியென்னு முனிபிறந்தான். மருத்துவர் அமிசையால் பாஞ்சாலன்- விராடன்- சாத்தகி-பிறந்தார்கள். திரிகுணன் அமிசையால் விதுரன் பிறந்தான். யக்ஷக அரசனமிசையால் பாணடுராஜன் பிறந்தான். சித்தி-புத்தி-என்கிறதேவதைகள் அமிசையால்,குந்திமத்திரை-இவ்விரண்டுபேர்பிறந்து,அந்தப்பாண்டு ராஜனுக்கு மனைவியாயினர்.யமன் அமிசையால் தருமராஜன் பிறந்தான். வாயு அமிசையால் வீமன் பிறந்தான். இந்திரன் அமிசையால் விஜயன் பிறந்தான். அஸ்வனிதேவர்கள் அமிசையால் நகுல சகாதேவர் பிறந்தார்கள். ஸ்ரீதேவி அமிசையால் திரௌபதிபிறந்தாள். அக்கினி அமிசையால் துஷ்டத்துய்மன் பிறந்தான்.

இது பாரதவீரர் உற்பத்தி. இவர்கள்உலகத்திற் பிறந்து, பலுகிப் பெருகி, முடிவில் போர்க்கோலங் கொண்டு, பூமிபாரத்தை நீக்கி, அவரவர்கள் இருப்பிடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இந்த உற்பத்தியைக் கேட்டவர்கள் யாவராலு மளவிடப்படாத பிர்ம்மானந்தத்தை அடைவரென்று வைசம்பாயனர் சொல்ல, ஜெநமேஜெய மஹாராஜன் கேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்து வைசம்பாயனரைவணங்கிச்சொல்லுகிறுன். ஓ ஸ்வாமி ! தேவர்களும் -அரக்கரும்-இவ்வுலகத்தில் அரசர்களாகப் பிறந்தார்களென்று உரைத்தீர்கள். இவ்வுலகத்தில் பிர்ம்ம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர் - என்கிற நாலுவருணம் வந்த வரலாற்றையும், எங்கள் வமிச பரம்பரையையும் விளங்கவுரைக்கவேண்டுமென்று வேண்ட, ஓஅரசனே ! தக்கன்மகளான அதிதிக்குங்காசிபருக்கும், சூரியன்பிறந்தான். சூரியனுக்கும் சாயாதேவிக்கும், வைவசுதன்-யமன்-சனி-யமுனே-தபதி-என்னுமைந்துமநுக்கள்பிறந்தார்கள். இவர்களில் வைவசுதமநுவால்,பிர்ம்ம-க்ஷத்திரிய வைசிய - சூத்திரர் என்னும் நாலுவருண முண்டாயிற்று. இனி உன்மரபினது விருத்தாந்தத்தையும் உன்மரபினது அரசர்கள் சரித்திரத்தையும் சொல்லுகிறேன் கேளென்று, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினுர்.

பாரதவீரர் உற்பவச்சருக்கம் முற்றிற்று.

நான்காவது.

குருகுலச் சருக்கம்

கண்ணன் துதி.

சங்கமுந் திகிரியுந் தனுவுந் தண்டமுஞ், செங்கைவா ளுடனருட் செலுத்துஞ் சீரியோன்
மங்குனேர் வடிவமும் வனச வுந்தியும், பங்கயப் பதமு ।மியான் பார்க்கும் பாங்கெலாம்.

ஆதியில் திருமாலும் தேவருங்கூடித் திருப்பாற்கடல் கடைகிறபோது மந்தரகிரியாகிய மத்துச் சுழலத் தானே தறியாகியிருந்தும், விஷந்தோன்றினபோது அவ்விஷத்தின் சுவாலே அடங்க அவ்வமுதத்திற்றேன்றியும், உலகம் குளிர்ச்சிபெறத் தனதுசோடசகலேகளேவீசியும்,எங்கும்பிரகாசிக்கப்பரமன்சடா

டவியி லினிது வீற்றிருந்தும், சகலலோகங்களினு மிகவும் சிறப்புற்ருேங்கிய சந்திரன் புதனென்கிற ஒரு புத்திரனைப்பெற்ருன். புதன் புரூருவனைப்பெற்ருன். அப்புரூருவ ராஜன் ஆறுசாஸ்திரம் - நாலுவேதம் - அறுபத்துநாலு கலைக்கியான முதலானவைகளை யுணர்ந்து, தருமதேவதை நாலுபாதத்தினுலேயும் நடக்க அறத்தை நடாத்தி, மநுசாஸ்திரவிதி பிசகாமல் செங்கோல் செலுத்திச், சக்ரவர்த்தி யென்கிறபெயரை வகித்து, மஹாசிறப்புடன் அரசுசெய்திருந்தான். இப்படி சிலநாள் அரசுசெலுத்தி வருகிறகாலத்தில், ஒருநாள் சொற்கலோகத்துக் கதிபதியாகிய இந்திரனுடைய நாடகசாலைப் பெண்களில் ஊர்வசி யென்பவள், மலர்கொய்துவிளையாடப் பூங்காவனத்திற்சென்ருள். அவளை அசுரர்கள் மறித்துத், துராக்கிர்தமாகத் தங்கள் தேரிலேற்றித், தங்களிருப்பிடத்துக்குக்கொண்டுபோகிருர்கள். அப்போது அந்த ஊர்வசி மிகவும் நடுங்கி, என்னை யாதரிப்பவ ரில்லையாவென்று ஓலமிட்டிரைந்தாள். அந்த ஓசையை இந்திரன் முதலாகிய தேவர்கள்கேட்டு, அவ்வசுரரோடு போராடச் சக்தியற்றவராய்ச்சும்மாயிருந்துவிட்டார்கள். இந்த ஓசையைப் புரூருவச் சக்ரவர்த்தி கேட்டுத், தன்னருகிலிருக்கிற சாரதியை அழைத்து, ஓ சாரதி! தெய்வப்புரவியைப்பூட்டி என் இரதத்தைக் கொண்டுவா வென்று கட்டளையிட்டான். அச்சாரதி அரசன் கட்டளைப்படி தெய்வப் புரவியைப் பூட்டி இரதத்தைக் கொண்டுவந்து நிறுத்தினுன். புரூருவச் சக்கரவர்த்தி அந்த இரதத்திலேறி ஆகாயத்திற் சென்று, அந்த ஊர்வசியைக் கொண்டுபோகிறஅசுரரைமறித்துத், தன்வில்லைவளைத்துச்சரமாரிபொழிந்துஅரைநொடியில்அவர்கள்கையிலிருக்கிற வில்முதலாகியபடைகளை முறித்து அதஞ்செய்து, ஒருவர்போனவழி ஒருவர்போகாம லோட அவர்களைத் துரத்திவிட்டு, அந்த ஊர்வசியைத் தன்னிரதத்தில் ஏற்றி, அவள் விருத்தாந்தத்தைக் கேட்டான். அந்த ஊர்வசி தான்வந்ததையும், வந்த விடத்தில் அசுரர் பிடித்ததையும் சொல்லித், தனதிருப்பிடத்தையும் கூறினுள். அரசன் அந்த ஊர்வசியின் சௌந்தரியத்தைக் கண்டு மிகுந்த காதலுடையவனுய், இந்த ஸ்திரீயை நாம் கூடுவோமென்ருல், இவள் சொற்க லோகத்துக் கதிபதியாகிய இந்திரனுடைய நாடகசாலைப் பெண்ணுதலால், இந்திரனது உத்திரவில்லாமல் புணரக்கூடாதென்று கருதித், தனது ரதத்தை இந்திரலோகத்திற் செலுத்தி, இந்திரனிடத்திற்சென்று, இந்த ஊர்வசியைக் கொலுவில் நிறுத்தி இந்திரனை வணங்கிச் சொல்லுகிறான். ஓ தேவராஜனே! இங்கேநிற்கிற ஸ்திரீயை அசுரர் பிடித்துப்போயினர். இவள் முறையிட்டுச்சென்ருள். இவள்முறையிட்டதைக்கேட்டு அவ்வசுரரை அடித்துத் துறத்திவிட்டு இவளை மீட்டுவந்தேன். இவள் தங்களுடைய நாடகசாலைப்பெண்ணுதலால், என்மனதில் ஒன்றைக் கருதித் தங்களிடத்துக்கு வந்தேனென்று கூற, இந்திரன் கேட்டு மகிழ்ந்து, ஓ புரூருவச் சக்கரவர்த்தி! நீ மகா நீதியையுடையவன். மேலும் உலகத்தில் தருமதேவதையை நாலுபாகத்தில் நடக்கச் சக்கரநடாத்துகிறகனவான். அன்றியும் எங்களால் வெல்லக்கூடாத அசுரரை வென்று, இந்த ஊர்வசியை மீட்டுவந்த மகாபராக்கிரம சாலியாகிய நீ நினைத்தகாரியம் நிறைவேருமற் போகுமா? உன்கருத்திலிருக்கிறதை வெளிப்படுத்தினுல், அக்காரியத்தை நிறைவேற்றுகிறேன் வெளியிடென்று கேட்க, புரூருவச்சக்கரவர்த்தி இந்திரனை நோக்கிச் சொல்லுகிருன், ஓ ஐயனே! இந்த ஊர்வசி மிகுந்த சௌந்தரியத்தை யுடைத்தாயிருக்கிருள். இவளோடு யான் கூட மனங்கொண்டிருக்கிறேன். இவளோ தங்கள் சுவாதீனமாதலால் தங்களுத்திரவில்லாமல் புணருதல் தகுதியல்லவென்று மதித்துத், தங்களிடத்தில் அறிக்கையிட்டேன். இதுதான் என்கருத்து. தாங்கள் கிருபை கூர்ந்து என்ன கட்டளை இடுகிறீர்களோ அக்கட்டளைக் குள்ளாகுகிறேனென்ருன். இந்திரன் மகிழ்ந்து புரூருவனைப்பார்த்து, ஓ அரசனே! இந்த ஊர்வசியை அசுரர்கொண்டு போகாததற்கு முன்னம் இவள் என்சுவாதீனம். அசுரர் கொண்டு போனபோது இவள் அவ்வசுரர் சுவாதீனம். அவ்வசுரரை வெற்றி பெற்று நீ இவளை மீட்டுக்கொண்ட போது இவள் உன்சுவாதீனம். இது மநுசாஸ்திரவிதி. இந்த மனுசாஸ்திரவிதி நீ யறிந்திருந்தும், இவளை அபகரிக்காமல் என்னிடத்தில் கொண்டுவந்து விட்ட உன் புனிதமானகுணத்தை என்னுல் துதிக்கவசமல்ல. மிகுந்த பிரயாசைப்பட்டு அவளை மீட்ட உன்கருத்து மகிழ்வெய்த அவளைக்கூடிக் கலந்துவாழென்றுகட்டளையிட்டு, ஊர்வசியைப்பார்த்து, ஓ பெண்ணே! உன்னை மீட்டுவந்த இந்தப் புரூருவச் சக்கரவர்த்தியோடு உலகத்திற்சென்று, இந்த அரசனைக்கூடி வாழ்ந்து ஒருபுத்திரனைப் பெற்றுவைத்து, யதாப்பிரகாரம் என்னிடத்துக்கு வந்து சேரென்று கட்டளையிட்டான். இந்தக் கட்டளையை இருவருஞ் சிரமேற்கொண்டு தேரேறி, உலகத்தில் வந்து, இரதியும் மதனும்போற்கூடி வாழ்ந்தார்கள்.

பின்பு ஊர்வசி ஆயுவென்கிறபுத்திரனைப்பெற்றுவைத்து, முன்போல் இந்திரனிடத்திற் சென்ருள். இந்த ஆயுவென்கிறபுத்திரன்சகலகலை வல்லவனுய்த், தந்தையினும் எண்மடங் கதிகமாய்த் தருமத்தைச் செய்து, தன்னுயிர்போல் மன்னுயிரனைத்தையுங்காத்து அரசுபுரிந்தான். அந்த ஆயுவுக்கு நகுஷன்பிறந்தான். அந்த நகுஷன் மநுசாஸ்திரவிதி பிசகாமல் அரசு செலுத்தி, நூறு அஸ்வமேதயாகஞ்செய்து சொற்கத்துக்குத் தலைமையாகிய இந்திரப் பட்டம்பெற்று, பழைய இந்திரன் மனைவியாகிய புலோமிசைமேல் காதல் கொண்டு, அப்புலோமிசையை அழைத்துவரச் சில தேவதூதரைவிட, புலோமிசை யறிந்து குருவிடத்து முறையிட, பிரகஸ்பதிசொல்லுகிருர், ஓ அம்

மணி ! நீ அஞ்சாதே: உன்னிடத்துவந் தழைக்கிற
தூதருக்கு ஒரு உத்திரவு சொல்லு. அஃதென்னெ
னில்-பழைய இந்திரன் என்னிடத்துக்கெவ்வாறுவரு
வானே அவ்வாறு உங்கள் அரசனை வரச்சொல்லுமெ
ன்றால், அந்தப்புதிய இந்திரன் சப்த முனிவர்களால்
சுமக்கப்பட்ட முத்துச்சிவிகையில் வருவான். அப்
போது அவன் சும்மாயிராமல் ஏதாவதொரு வசனஞ்
சொல்லுவான். அதன்மேல் அம்முனிவர்க்குக் கோப
முண்டாகிச் சபிப்பார்கள். பின்பு உன்மனத்துயரம்
நீங்குமென்றுபுகல, புலோமிசை குருவுரைத்தசூட்சி
யை மனதில்வைத்துத் தேவதூதரை நோக்கி, ஓ தே
வதூதர்களே ! உங்கள் அரசனாகிய இந்திரனை என்
வீட்டுக்குப் பழைய இந்திரன் எவ்வாறு வருவானே
அவ்வாறு வரச்சொல்லுங்க ளென்றாள். தூதர் இந்தி
ரனாகிய நகுஷனுக்குப் புலோமிசைபுகன்றனவற்றைச்
சொல்லினார்கள். உடனே நகுஷனானவன் அகஸ்தியர்
அத்திரி-ஆங்கீரசர் - கவுதமர் - காசிபர் - புலத்தியர்-
வசிஷ்டர் - என்னும் ஏழு முனிவர்களையு மழைப்பித்
துச் சிவிகையைக் கொண்டுவரச்சொல்லி, அச்சிவிகை
யில் ஏறிச் செல்லுகிறபோது சும்மா யிருக்காமல், வி
ரைவிற்போங்கள் என்னும்பொருள்கொடுக்கும்(சற்ப)
என்னும் தேவபாஷை மொழியை அவன் கடுகடுத்
துக்கூற, இந்தக்கடினவார்த்தையை அகஸ்தியர்கேட்
டு, எங்களைமதிக்காமல்விரைவிற்செல்லச்சொன்னபடி
யால் நீ பெரும்பாம்பாய்ப் போகக்கடவதென்று சாப
மிட, அச்சாபத்தை யேற்று மிகுந்த நடுக்கமுற்றவ
னாய் அகஸ்தியரை வணங்கி, ஓஐயனே ! இந்தச்சாபம்
என்றைக்குத் தொலையுமையா வென்று வேண்ட, அக
ஸ்தியர் மனமிரங்கி, ஓ நகுஷனே! உன் சந்ததியில்
தருமன்- வீமன் - அர்ச்சுனன் - நகுலன் - சகாதே
வன் - என்னும் ஐவர் பிறக்கப்போகிறார்கள். அவர்
கள் ஒரு காரியார்த்தமாய் வனத்துக்கு வருவார்கள்.
அவர்களில் வீமனை நீ விழுங்குவாய். அப்போது உன்
சாபம் நீங்குமென்று சாபத்தீர்வு கூறி, அவ்வகஸ்தி
யர் முதலானவர்கள் அவரவ ரிருப்பிடத்துக்குச் செ
ன்றார்கள். நகுஷன் அகஸ்தியர் சாபப்படி பெரும்பாம்
பாக வனத்திலிருந்தான்.

யயாதி ராஜன் சரித்திரம்.

இந்த நகுஷன் உலகத்திலிருக்கும்போது இவ
னுக்கு- யயாதி- சங்கியாதி- பிரயாதி- என்று மூன்
று புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களில் யயாதி யெ
ன்பவன் ஒ...கிய க... வனினது திருவடியை மனதி
ல்நிறுத்தி, இம்மை மறுமை...ன்னு ...ரண்டினது
தன்மையையுணர்ந்து, சாத்துவித ராஜத தாமத மெ
ன்னு மூவகைக் குணங்களுள் சாத்துவிதத் தன்மை
யை அதிகமாகக்கொண்டு,அறம்- பொருள்- இன்பம்-
வீடென்னு நாற்பொருள்களைத்தேர்ந்து, மந்திரிகள்-
புரோகிதர் - சேநாதிபதியர் - தூதர்- சாரணர் - என்
னும் அரசர்க்குப் பொருந்திய கூட்டம் ஐந்தையும்
பெற்று,படை-குடி-பொருள்-அமைச்சு-நட்பு-அரண்
என்னும் அறுவகைப்பொருளையு மடைந்து, நாவல்-
இரலி-குசை- கிரவுஞ்சம்- புஷ்கரம்- தெங்கு- கமுகு-
என்னும் ஏழு தீவுகளும் தன் ஆணையில் நடக்க, இரா
ஜாங்கம் - மக்கள் - சுற்றம் - பொன் - மணி - நெல்-
வாகனம் - அடிமை-என்னும் அஷ்ட ஐஸ்வரியத்தை
ப்பெற்று, கீழவிதேகம் - மேலவிதேகம் - வடவிதே
கம்- தென்விதேகம் - வடவிரேபதம் - தென்னிரேப
தம் - வடபரதம் - தென்பரதம் - மத்திம கண்டம்-
என்னும் நவகண்டத்துக்கு மதிபதியாகி, செங்கோல்-
மலை-ஆறு- நாடு-ஊர் - மாலை-புரவி - யானை-முரசு-
கொடி - என்கிற தசாங்கங்களை வகித்து, கங்கை-
யமுனை – சரஸ்வதி – நருமதை - காவேரி - குமரி-
கோதாவரி - சிந்து - தாம்பிரபரணி - துங்கபத்திரி-
கிருஷ்ணி - என்னும் பதினொரு திவ்யநதி தீரங்களி
லுஞ் சத்திரங்களியற்றி. அன்னதான முதலிய தான
ங்களைநடாத்தித், தருமதேவதையை நாலு பாதத்தி
னாலேயும் நடப்பித்துத்,தன்னுயிர்போலமன்னுயிரை
யும்பாதுகாத்து, மனுசாஸதிரவிதி பிசகாமல் அரசுசெ
லுத்திவந்தான். இன்னும் யிந்தயயாதியினுடைய சிற
ப்பை என்குருவாகிய வேதவியாச மஹா முனிவரே
புகழ்வாரென்றால், என்னால் அவவரசனது சிறப்பை
யுரைக்கவசமா. அவ்வளவு சிலாக்கிய சிரேஷ்டனாகிய
யயாதி அரசுசெலுத்தி,அசுரர் குலகுருவாகிய சுக்கி
ரபகவான் பெற்ற தெய்வயானை யென்னும் ஸ்திரீயை
விவாகஞ்செய்து, அந்தத் தெய்வயானைஇடமாய் இர
ண்டு புத்திரரையும், அசுரர்குலத் தலைவனாகிய விடப்
பன்மன் மகளான சன்மிஷ்டையைக்கூடி அவளிட
மாய் மூன்று புத்திரரையும் பெற்றானென்று வைசம்
பாயனருரைக்க, ஜெநமேஜெய மஹாராஜன் கேட்டு
வியப்படைந்து, ஓ ஸ்வாமீ! மனுசாஸ்திரவிதி பிசகா
மல் அரசுசெலுத்தும் யயாதிமஹாராஜன், பிர்ம்மகு
லஸ்திரீயைமணம்புரிந்தானென்றுரைத்தீர்கள். பிராம
ணர்மாத்திரம் மற்றமூன்று குலத்து ஸ்திரீகளை மண
ம்புரியலா மென்றும், மூன்றுகுலப்புருஷர் பிர்ம்மகுல
ஸ்திரீயை மணம்புரிய லாகாதென்றும் வேதமுறையி
டுகின்றது. யயாதி பிர்ம்மகுல சுக்கிராசாரியின் மக
ளான தெய்வயானையை எவ்வாறுமணம்புணர்ந்தான்.
அசுரர்குலத் தலைவனாகிய விடப்பன்மன் மகளான
சன்மிஷ்டையி னிடமாய் எவ்வாறு புத்திரரைப்பெற்
றான். அந்தவரலாற்றை விளங்க வுரைக்கவேண்டுமெ
ன்று வேண்ட, வைசம்பாயனர் கூறுகிறார்.

கேளும் ஓ அரசனே ! முன்னம் விடப்பன்மன்
என்னும் பெயரையுடைய ஒரு அரக்கன் மிகுந்த பரா
க்கிரமசாலியாய் உலகத்தில் அரசுசெலுத்திச் சொற்க
லோகத்தையும் கைப்பற்றப் படையெடுத்து, இந்திர
னோடெதிர்த்து யுத்தஞ்செய்தான். இந்திரன் தன
து தேவப்படைகளைக்கொண் டெதிர்த்து, அந்த வி
டப் பன்மன் என்கிற அரக்கன் ஒருவன்தவிர மற்றவ
ர்களை யெல்லாம் கண்ட துண்டமாகக் கண்டித்து

வெற்றி பெற்றான். விடப்பன்மன் தன்சேனை மறிந்ததையும் இந்திரன்வெற்றி பெற்றதையு மனதில் நினைத்து அதிகதுன்பத்தை அடைந்து, தன்குருவாகிய சுக்கிர பகவானிடத்து வந்து வணங்கி, ஓ ஐயனே! என் சத்துருவாகிய இந்திரன் என்சேனைகளை அதமாக்கி என்னையும்பதாதியாக்கினான். உங்களைப்போலொத்த மஹாத்மா எனக்குச்சொந்தமா யிருந்தும்,நான் அபஜயப்பட்டால் உலகமுழுங்களைப் பழிக்குமேயன்றி என்னைப் பழிக்காது. ஆகையால் யான்வெற்றியடையும்படி ஒரு உபகாரம் செய்யவேண்டு மென்று வேண்ட, சுக்கிரபகவான் சிரித்து விடப்பன்மனைப்பார்த்துச் சொல்லுகிறார். ஓ விடப்பன்மனே! நானென்ன உயுத்தரங்கத்துக்கு யோக்கியனா? நானுன்கருத்தின்படி யுத்தரங்கத்தை மேற்கொண்டால் எனக்குக் குருவென்கிற பட்டமேது? நீ என்னிடத்து வந்து முறையிட்டதால் உனக்கு நானொரு உபாயஞ்சொல்லுகிறேன். அஃதென்னெனில்-இப்போது மடிந்த உன் சேனைகளனைத்தையும் இனிமடிகிறசேனைகளையும் எழுப்பித் தருகிறேன். அதனால் நீ தேவர்களை வெற்றி பெறுவையென்று விளம்ப,விடப்பன்மன் பரமானந்தத்தையடைந்து, ஓ ஐயனே! இவ்வளவு சகாயஞ்செய்தால் இந்திராதி தேவர்களை யெல்லாம் சண்டமாருதத்தைக்கண்ட மேகம் பறப்பதுபோல் இறக்க அடித்து வெற்றிபெறுகிறே னென்று வணங்க, சுக்கிரபகவான் தான்கூறியபடி இறந்த சேனைகளைச் சஞ்சீவி மந்திரத்தைக்கூறி எழுப்பிவிட்டார். விடப்பன்மன் அந்தச் சேனைகளைக்கொண்டு இந்திரனை எதிர்த்து, தேவப்படைகளை முறிய அடித்து வெற்றிபெற்று இனிது வீற்றிருந்தான். இந்திரன் மிகுந்த வருத்தமடைந்து, சுக்கிராசாரியரா லல்லவோ விடப்பன்மன் வெற்றிபெற்றான். நமதுகுருவால் நாம்வெற்றியடையவேண்டுமென்று நினைத்து, தன்குருவாகிய வியாழபகவானிடத்திற் சென்று வணங்கி, ஓ ஐயனே! என் சத்துருவாகிய விடப்பன்மன் சுக்கிராசாரியரால் என்னை வெற்றி பெற்றான். சந்திர சடாதர சாம்பமூர்த்திக்கு ஒப்பாகிய தாங்கள்எனக்குக்குருவாயிருந்தும், நான் வெற்றியடையாதிருந்தால் உலகம் யாரைநகைக்கும். ஐயனே! கிருபைகூர்ந்து நான் வெற்றியடைய இரட்சிக்க வேண்டுமென்றுவேண்ட,வியாழபகவான் மிகுந்த வருத்தத்தை யடைந்து, ஓ தேவராஜனே! என்னால் யுத்தஞ்செய்யச்சக்தியுண்டாஇல்லையே: சுக்கிரபகவான் மிகுந்த தவஞ் செய்து காளகண்ட திரிநேத்திரனா பரமனிடத்துச் சஞ்சீவி மந்திரத்தைப் பெற்றான். அந்த மந்திரத்தினால் இறந்தவர்களை யெல்லாம் எழுப்பி விடுகிறான். அதனாலே விடப்பன்பன் வெற்றியடைந்தான். அந்தமந்திரம் சுக்கிரபகவானொருவனுக்கேயன்றி மற்றச் சொர்க்க மத்திய பாதாள லோகங்களிலிருப்பவர்க்குள் ஒருவருக்குமில்லையே: நானென்ன செய்வே னென்ன, இவை யனைத்தையும் இந்திரன் கேட்டுச், சுக்கிராசாரி கற்றிருக்கிற மந்திரத்தை எவ்விதத்திலாவது கிரகித்துக் கொண்டுவரத்தக்க சாமர்த்தியத்தை யுடையவர் விண்ணுலகத்தி லில்லையா வென்று அங்கிருப்பவர்கள் வதனத்தை நோக்கினான். அங்கிருந்தவர்களில் வியாழபகவானுடைய புத்திரனாகிய - கஜன் - இந்திரன்முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறான்: ஓ தேவராஜனே! நீவருத்தப்பட வேண்டிய தில்லை. அந்தச் சுக்கிராசாரியா ரிடத்திற் சென்று பணிசெய்பவனா யிருந்து, அவருக்கு என்மேல் கிருபை வரும்படி நடந்து, அந்த மந்திரத்தை அவர் அநுக்கிரகம் செய்ய யான் கற்றுக்கொணடு வருகிறே னென்று உறுதிகூறி,சுக்கிராசாரியா ரிடத்துக்கு வந்து அவரைக்கண்டு வணங்கி, ஓ ஐயனே! உமதிடத்தில் பணிவிடைக்காரனா யிருக்கிறேன். என்மேல் என்றைக்கு மிகுந்த அன்பு கூருகிறீர்களோ அன்றையத் தினத்தில் மஹா அருமையான தவத்தைச் செய்து சாம்பமூர்த்தி யிடத்துப் பெற்ற சஞ்சீவிமந்திரத்தை எனக்குக் கிருபைசெய்ய வேண்டு மென்று புகல, சுக்கிராசாரி தன்மனதில் கனவருத்த மடைந்து, நாம் அந்தச் சஞ்சீவி மந்திரத்தை அருமையான தவம் செய்து பெற்றோம். அம்மந்திரத்தினா லல்லவா அசுரர்கள் நமதிடத்தில் அன்புடையவரா யிருக்கிறார்கள். அந்த மந்திரத்தை இவனுக்குச் சொல்லி விட்டால், அதன்மேல் அந்த மந்திரம் நமக்குப் பலிக்காது. அந்த மந்திரத்தைச் சொல்லா திருக்கலா மென்றால், எப்படி யாவது பணிவிடைக் காரன்மேல் சந்தோஷப்படவரும். அந்தக் காலத்தில் அகத்தியம் சொல்ல வேண்டியது தான். இவனைப்பணிவிடை செய்யவேண்டா மென்றால், தரும சாஸ்திரத்துக்கு விரோதம் ஆகின்றது. இவ்வாறு தன்மனதுக்குள் நினைத்து கஜனைப்பார்த்துச் சொல்லுகிறார்: ஓ கஜனே! நீ தேவர் குலகுருவின் புத்திரன். நீயேவந்து பணிவிடைக்காரனா யிருக்கிறே னென்றதினால், நான் ஒத்துக்கொள்ள வேண்டியது தான். ஆனால் நீ எனக்குச் சந்தோஷம்வர நடக்கிறதினம் என்றைக்கோ அன்றையத் தினம் உன்கருத்து மகிழும்படி செய்கிறேனென்று சொல்லி, அந்தக்கஜனைப் பணிவிடைக்காரனாய் வைத்துக்கொண்டார்.

அதுமுதல் கஜன் அந்தச் சுக்கிராசாரிக்கு எல்லாப் பணிவிடையும் செய்துவருகிறதுமன்றி, அந்தச் சுக்கிராசாரியின் புத்திரியாகிய தெய்வயானை யோடு நித்தம் வேதசாஸ்திரங்களைப் பாராயணஞ் செய்து வருவான். இப்படிசெய்து வருகிறதினாலேயும் நல்ல அழகுடையவனா யிருக்கிறதினாலேயும் இந்தக் கஜன் பேரில் தெய்வயானை மிகுந்த காதலா யிருப்பாள். இப்படி சிலகாலம் சென்றபின்பு, சுக்கிராசாரியாரிடத்துக் கஜன் பணிவிடைக்காரனாயிருக்கிறதை அசுரர் தலைவனாகிய விடப்பன்மன்கேள்வியுற்று, தன்தூதர்களை அழைத்து, ஓ தூதர்களே! நமது குருவாகிய சுக்கிராசாரிகற்றிருக்கிற சஞ்சீவி மந்திரத்தைக் கற்றுக்கொண்டுபோகக் கஜன் என்கிறவன் பணிவிடைக் கார

ணாய்க் காத்திருக்கிறான். ஆகையால் நீங்கள் அந்தச் சுக்கிராசாரிக்குத் தெரியாமல் அந்தக்கஜனைக் கொன்றுவிடுங்கள என்று உறுதியான கட்டளையிட்டான். தூதர் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு, கஜனைக் கொலைசெய்யச் சமயம்பார்த் திருந்தார்கள். ஒருநாள் கஜன் தருப்பை சமிதை முதலானவைகளைக் கொய்துவரக் காட்டிற் சென்றான். அந்தச் சமயம் பார்த்து அரக்கர்வந்து கஜனைச் சூழ்ந்து கழுத்தை யறுத்துப் பூமியிற் புதைத்துப் போயினர். பின்பு தெய்வயானை க்ஷணப்போதாயினும் கஜனைக்காணாமல் இருக்கமாட்டாள். அன்றையத் தினம் வருகிறவேளை தப்பியும் கஜன் வராதிருக்கவே மிகுந்த வருத்த மடைந்து, தன் தந்தையாகிய சுக்கிராசாரியரிடத்துவந்து வணங்கி, ஓஐயனே! தங்களுக்குப் பணிவிடை செய்திருக்கிற வேளைபோக மற்றவேளை என்னோ டிருந்து வேத சாஸ்திரங்களைப் படித்துவரும் கஜன் இன்றையத் தினம் இன்னும் வரவில்லை. அவனைத்தேவரீர் எங்கனுப்புவித்தீர்கள்?என்று வினவி அவனை விரைவில்வரும்படிக்குக் கிருபைகூருமையா வென்று வேண்ட, சுக்கிராசாரி தனது கியான திஷ்டியினால் நோக்கிக் கஜன் அடைந்த கதியைக்கண்டு கனவருத்த முற்று, சஞ்சீவி மந்திரத்தை யுச்சரித்து இறந்த கஜனை எழுப்பினார். உடனே கஜன் நித்திரையி லிருந்து எழுந்தவன்போ லெழுந்து, சுக்கிராசாரியரிடத்து வந்துவணங்கித் தெய்வயானை யிடத்திற் சென்றான். தெய்வயானை மிகுந்த மகிழ்ச்சியடைந்து, ஓ தேவகுரு புத்திரா! இன்றையத்தினம் எங்குற்றீர்? இந்நேரம்வரையில் வராதிருந்ததற்குக் காரணமென்னவென்றுவினவ, கஜன் நான் காட்டிற்சென்றவிடத்தில் கனநித்திரையினால் மறந்து தூங்கிவிட்டேனென்றுகூறி,முன்போல் தன்வேதமுயற்சியிலிருந்தான். இப்படிசிலநாட்சென்றபின்பு அசுரர்குலத்தலைவனானவிடப்பன்மன் கஜன் பிழைத் திருப்பதைக் கேட்டுக், கொலைத்தொழிலுக்குரிய அசுரரிற் சிலரை அழைத்து, ஓஅசுரரே! முன்னம் ஏவலாளிகளால் இறந்த கஜன் நமது குருவினால்பிழைத்திருக்கிறான். நீங்கள்சென்றுநமதுகுருவுக்குத் தெரியாமல் அந்தக் கஜனைப் பிடித்துக் கொலைசெய்து மதுவோடு சேர்த்து, நமதுகுருவுக்கே அந்த மதுவைக்கொடுத்து பானஞ்செய்யச் செய்வித்துவாருங்களென்று கட்டளையிட்டான். அசுரர் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டுசென்று, சமயம்பார்த்து அக்கஜனைப்பிடித்துக் கொலைசெய்து மதுவிற்கலந்து அந்த மதுக்குடத்தைச் சுக்கிராசாரியரிடத்துக் கொடுத்து, ஓ ஐயனே! இந்தமது திவ்யமானது. தங்களுக்குப் பாதகாணிக்கையாகக் கொண்டுவந்த எங்கள்பேரில் கிருபை கூர்ந்து இந்தமதுவைத் தாங்கள் உட்கொள்ள வேண்டுமென்றுவேண்ட, குடியருக்குக் கள் வலியக்கிடைத்தால் பரமானந்தத்தை யடைந்தவரைப்போல் அதிகமகிழ்ச்சியைக்கொண்டுமுன்பின் யோசிக்காமல் புசிப்பது வழக்கமாதலால், இந்தச்சுக்கிராசாரியு முன்பின் யோசிக்காமல் அந்தமதுக்குடத்தை யெடுத்து மடமட வென்று வாயில் விட்டுக்கொண்டார். பின்பு அசுரர்சென்று தமது இறைவனாகிய விடப்பன்மனுக்கு நடந்ததைக் கூறினார்கள்.

இங்கே சுக்கிரபகவான் மதுவினால் அதிகமயக்கமடைந் திருக்கிறார். தெய்வயானை கஜன்வாரா திருப்பதைக்கண்டு தன்தந்தை இடத்துவந்து வணங்கி, ஓ ஐயனே! கஜன் என் இன்னும் வரவில்லை? அவன் எங்கு சென்றான்?விரைவில் அழைப்பியும். என்றவள் வேண்ட, சுக்கிராசாரி தெய்வயானையைப் பார்த்துக் கள்வெறியினாற் சொல்லுகிறார். ஓ அம்மணீ! பணிவிடை செய்பவனாகிய கஜனை நீ ஏன் அடிக்கடி வந்து கேட்கிறாய்? போனவன் வருகிறான். உனக்கென்ன நீ போய் வீட்டிலிரு வென்று கடுகடுத்துச்சொல்ல,தெய்வயானை மறுபடியுந் தந்தையைவணங்கி, ஓஐயனே! சொற்க மத்திய பாதாளலோகத்திலிருக்கிறவர்களில் உங்களைச் சகலகலை வல்லவரென்று மும்மூர்த்திகளும் மதித்திருக்கத், தாங்கள் இப்போது வழங்கியசொற்களை நோக்கினால் ஏதோகிஞ்சித்து மதிமயங்கி இருக்கிறதாகத் தோன்றுகின்றது. ஏனென்றால்-எல்லாப் பொருள்களிலும் சிறந்தது உயிர். அந்த உயிரிலும் சிறந்தது சிநேகம். அந்தச்சினேகத்திலும் எனக்கு கஜன் பாலிய சினேகம். அவனைப் பிரிந்திருக்க என் மனமென்ன கல்லாவென்று மிகுந்த இரக்கத்தோடு இனியவசன முரைக்க, சுக்கிராசாரிமகிழ்ந்து தெய்வயானையைப் பார்த்து, ஓ அம்மணி! நீவருத்தப்படவேண்டாம். அந்தக் கஜன் எங்கிருந்தாலும் அழைப்பிக்கிறேன் நீ வீட்டிற்செல்லென விடைகொடுத்துக், கஜனெங்கிருக்கிறானென்றுதனதுகியானதிருஷ்டியில்நோக்கினார். அப்படி நோக்கும்போது சொற்கமத்தியபாதாளமென்னும் மூன்று தலங்களிலும் கஜனைக் காணாமல், எங்குற்றான்கஜனென்றுஐயுற்றுத்தன்யாக்கையுள் நோக்கினார். கஜன் தன்வயிற்றில் அடங்கியிருக்கிறதையறிந்து, கள் வெறியினால் புத்திமயங்கித் தனக்குக்கெடுதிவருவதை யோசிக்காமல் சஞ்சீவிமந்திரத்தை யுச்சரித்தார். உடனேகஜன்அவர் வயிற்றிற்றானே உயிர்பெற்றெழுந்தான். அதற்குள் சுக்கிராசாரியை அடிமையாகக் கொண்டிருந்த கள்வெறியு நீங்கிற்று. சுக்கிராசாரி சுயபுத்தியையடைந்து, வயிற்றில் கஜனிருப்பதை நோக்கி,அடா!மோசம்வந்தது: நமது சிஷனாகிய விடப்பன்மன் தனக்கு நன்மை கிடைக்க ஒன்று நினைத்தான். அவனுக்குக் கெட்டகாலமாதலால் அந்த நினைப்பே கெடுதியானது மன்றி, நமக்கும் கெடுதிநேரிட்டது. இனியென்செய்வதென்றொருவாறுதுணிந்து,வயிற்றிலுள்ள கஜனுக்குச்சொல்லுகிறார். ஓ கஜனே! உன் கருத்தின்படி சஞ்சீவி மந்திரத்தைக் கற்பிக்கிறேன் எனக்கொரு உபகாரஞ்செய். அஃதென்னெனில்-என்வயிற்றைக் கிழித்துத்தான் நீ வெளியில்வரவேண்டும். நீ வெளியில்வந்து சஞ்சீவிமந்தி

ரத்தைச் சொல்லி மறுபடியும் என்னை எழுப்பிவிடு. அதுதான் எனக்குச் செய்யவேண்டிய உபகாரமென்றுகூற, கஜன் அங்கிருந்த வண்ணம் சஞ்சீவி மந்திரத்தைக் கற்றுக்கொண்டு, சுக்கிராசாரியின் வயிற்றைக் கீறி வெளியில் வந்து, முன்போலவே சுக்கிராசாரியை எழுப்பி, அவர்க்கு வந்தனை வழிபாடுசெய்து தெய்வயானை யிடத்துச் சென்றான். தெய்வயானை மிகுந்த மகிழ்வடைந்து எதிர்வந்து, ஓ தேவகுரு புத்திரா! இந்நேரம் எங்குற்றீர் என்று வினவ, கஜன் தெய்வயானையைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ கன்னிகையே! நான் சென்றவிடத்தில் கிஞ்சித்து நேரமாய்விட்டதென ஒருபோக்காய் விடை கொடுத்துவிட்டுச்சில காலமுன்போற்பணிவிடைக்காரனாயிருந்து, ஒருநாள் சுக்கிராசாரியை வணங்கி, ஓ நாதனே! நான் உத்தேசித்துவந்த பொருள் தங்கள் கிருபையினால் கிடைத்தது. இனி என்னிருப்பிடம் செல்ல விடைகொடுக்க வேண்டு மென்று வினவ, சுக்கிராசாரி மகிழ்ந்து, அப்பா கஜனே! நீ சுகமாக உன்னிருப்பிடத்துக்குச் செல்லென்று விடைகொடுக்க, கஜன் சுக்கிராசாரியை வணங்கித் தெய்வயானை யிடத்துவந்து, ஓகன்னிகையே! நான் நாடிவந்த பொருள் சித்தியாயிற்று. இனி என்னிருப்பிடத்துச் செல்கிறேன் மகிழ்வுடன்விடை கொடென் றுரைக்க, தெய்வயானை திடுக்கிட்டு, ஆ! இதென்ன ஆச்சரியம்: நாம் நினைத்திருக்கிற நினைப்பென்ன? இந்தக்கஜன் தன்னிருப்பிடத்துக்குச் செல்கிறேனென்று நம்மிடத்தில் வந்து விடைகேட்கிறான். நமது கருத்தை வெளியிட்டால் அதன்மேல் இந்தக் கஜன் தன்னிருப்பிடத்துக்குச் செல்லானென்று மனதில் மதித்துக் கஜனைப் பார்த்துக் கூறுகிறாள்.

ஓ ஐயா! நீர் தேவர்குரு புத்திரன். நான் அசுரர்குரு புத்திரி. நாமிருவரும் சமம். என்னை விவாகஞ்செய்துஇவ்விடத்திலேயேயிருந்து எல்லாநலமு மனுபவியும். ஒருவேளை இந்தவிடத்தி லிருக்க உமக்கு விருப்பமில்லா திருந்தால், என்தந்தையோடுசொல்லி உமது தந்தையையும் அழைப்பித்து என்னைவிவாகஞ் செய்து கொண்டு, பின்புமதிருப்பிடத்துக்குச் செல்லுமென்று மிகுந்த பரிதாபத்துடனே இனியவசனங்களினால் வேண்டிக்கொண்டாள். கஜன் யிவ்வார்த்தைகளைக்கேட்டு, இரண்டு கரங்களினால் செவிகளை மூடிச் சொல்லுகிறான். ஓ அம்மணி! வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து என்னிலும் எண்மணங் கதிகமான விவேகத்தைப் பெற்றிருந்தும், நீ என்ன சுத்தமவுடிகர் போல வசனிக்கிறாய். உன்தந்தையிடத்து நான் அநேக சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்ததுமன்றி, யாவராலும் பெறுதற் கருமையாயிருக்கிற சஞ்சீவி மந்திரத்தையும் பெற்றேன். உலகி லருமையாகப் பெற்றோன் - இடர்தனைத் தீர்த்தோன் - அன்புடன் அன்னம் அளித்து இரக்ஷித்தோன் - நூலைக் கற்பித்தோன் - மந்திரோபதேசஞ் செய்தோன்-ஆகிய இந்த ஐந்துபேரும் தந்தையென்று வேதங்களில் முறையிட்டிருக்க, அதையுணர்ந்தும் நானுன்னைவிவாகஞ்செய்கிறதுதகுதியா? நீ என் குருபுத்திரியாகையால் எனக்குத் தங்கையாயிற்றே என்று கூற, தெய்வயானை- அடடா!! மோசம்வந்தது: நாம் இலவங்காத்த கிளிபோ லாயினோமேயென்றேங்கி, அனலிடுமெழுகுபோலமனமது உருகி, நமது மொழியை மறுத்தானென்று கோபங்கொண்டு கஜனைப்பார்த்துச் சொல்லுகிறாள்: ஓ கஜனே! என் கருத்துக்கு விரோதப்பட்டு என் மொழியை மறுத்தமையால், நீ விசுவாசகாதகன். ஆகையால் நீ என் தந்தையிடத்திற்கற்றசஞ்சீவிமந்திரம் உனக்குப் பலிக்காமற் போகக்கடவதென்று சாபமிட, கஜன் இந்தச் சாபத்தைக் கேட்டு, ஓ குருபுத்திரியே! நீ இட்ட சாபப்படிக்கு மந்திரம் எனக்குப் பலியாமற் போனாற் போகட்டும். என்னிடத்தில் கற்றுக்கொண்டவர்க்குப் பலிக்குமே அதுபோதும். நீ தருமசாஸ்திர முதலியவற்றைக் கற்றுணர்ந்தும், அந்தச் சாஸ்திரத்துக்கு விரோதமாக என்னைச் சபித்தபடியால், உன்னை மறையவர் மணம்புரியாமல் பூலோகத்தரசர் மணம்புரியக் கடவதென்று சபித்துவிட்டுத்தன்னிருப்பிடத்துக்குச்சென்று தந்தைதாளில் வணங்கி, சஞ்சீவி மந்திரத்தை அவர்க்கு உபதேசஞ் செய்து, அவரால் இந்திரனுக்கு வெற்றியடைவித்தான்.

இங்கே தெய்வயானை அசுரர்குலத் தலைவனாகிய விடப்பன்மன்புத்திரி சன்மிஷ்டையினோடு சினேகஞ் செய்து, பந்தாடல் - கழங்காடல் - மலர்கொய்தல் - முதலாகிய விளையாட்டுத் தொழில்களில் பிரியாமல் பயின்று வருவாள். ஒருநாள் தெய்வயானையும் சன்மிஷ்டையும்சோலையிற்சென்றுமலர்கொய்து விளையாடி, அச்சோலையிலிருக்கும் தடாகத்தில் நீராடினார்கள் அப்போது ஒருசுழற்காற்றுத்தோன்றி, கரையில்வைத்திருக்கும் வஸ்திரங்களை யெல்லாம் ஒன்றாகக் கலக்கச் செய்தது. அதனால் சன்மிஷ்டையினுடைய தாதிகள் தங்களுக்குக் கிடைத்த துகிலை யெடுத்து உடுத்திக்கொண்டார்கள். சன்மிஷ்டையென்பவள் தெய்வயானையின் வஸ்திரத்தை யெடுத்து உடுத்திக்கொண்டாள். தெய்வயானைக்குஅத்தாதிகள்சன்மிஷ்டையின் வஸ்திரத்தை யெடுத்துக்கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அதையவள்பார்த்து என்வஸ்திரமல்ல இது சன்மிஷ்டையின் வஸ்திரமென்றுகூறி, இவ்வஸ்திரத்தைவைத்துஎன்வஸ்திரத்தைக்கொண்டுவாருங்களென்று தாதிகளுக்குக் கட்டளையிட்டாள். தாதிகள் தெய்வயானையை வணங்கி, ஓ அம்மணி! உன்வஸ்திரத்தைச் சன்மிஷ்டை தரித்திருக்கிறாளென்று சொல்ல, அதைக்கேட்டு இந்த வஸ்திரத்தை நான் கையினாலேயும் தொடேனென்று மறுத்தாள். இந்தச்சேதி சன்மிஷ்டைக்குத் தெரிந்து தெய்வயானை யருகில் வந்து, ஓ குருபுத்திரியே! சொற்பமாகிய உன் வஸ்திரத்தை நான் உடுத்து என்னுடைய உயர்ந்த வஸ்திர

த்தைக் கொடுத்தால் ஏன்வெறுக்கிறுயென்று வினவ
தெய்வயானை சன்மிஷ்டையைப் பார்த்து, ஓசன்மிஷ்
டாய்! எப்படி யிருந்தபோதிலும் நீ ராஜபுத்திரிதா
னே: நான் உன்தந்தையின் குருபுத்திரி. மேலும்
நான் பார்ப்பனி. நீயுடுத்திய அழுக்கு வஸ்திரத்தை
நான் உடுத்திக்கொள்வேனு வென்ன, சன்மிஷ்டை
இந்தவசனங்களைக் கேட்டு மிகுந்த சினங்கொண்டு,
ஓகுருபுத்திரியே! கோடிவித்தைகற்றும் உன்தந்தை
என் தந்தையிடத்துவந்து கையேந்திநிற்க, நீ என்
ன இவ்வளவு இறுமாப்படைந்து என்னை அல்பமாக
எண்ணி என்வஸ்திரத்தை இகழ்ந்தாய். உனக்கவ்
வளவு வாயாவென்று கடுகடுத்துச் சீறி, தன் தாதிய
ரோடு தானும் அந்த தெய்வயானையைப் பிடித்து
ஒரு பாழுங்கிணற்றில் வீழ்த்திவிட்டுப் போனூர்கள்.
இங்கே கிணற்றில் விழுந்த தெய்வயானை அக்கிணற்
றினருகில் முளைத்துப் படர்ந்திருக்கும் ஒரு கொடி
யைப் பற்றிக்கொண்டு, பிராணபயமில்லாமல் தப்பி
மிகுந்த பயத்தையடைந்து, உள்ள நடுங்கித் துக்கித்
துக்கொண் டிருந்தாள். அந்தச்சமயத்தில் யயாதிம
ஹாராஜன் வேட்டைக்குவந்து நல்ல ஜலந்தேடி, இந்
தத் தெய்வயானை விழுந்திருக்கிற கிணற்றை எட்டி
ப்பார்த்து, அக்கிணற்றி லிருக்கிற தெய்வயானையைக்
கண்டு திடுக்கிட்டு, ஓ பெண்கள் நாயகமே! நீயார்?
உன்னிருக்கைஎது ? உன்தந்தையாவர்? இக்கிணற்றி
ல்விழுந்திருக்கவேண்டிய காரணமென்னவென்று கே
ட்க, தெய்வயானை அரசனைப்பார்த்து நான் சுக்கிராசா
ரியின்புத்திரியாகிய தெய்வயானையென்றுசொல்லிசன்
மிஷ்டை தன்னைக் கிணற்றில் விழுத்திப்போயினவிரு
த்தாந்தத்தைச் சொல்லாமல் வேருெருவிதத்தைக் கூ
றி என்னைக் கரையேற்றுமென்று வேண்ட, அரசன்
வியப்படைந்து, புயலனைய தன்கரத்தால் தெய்வயா
னையினது மலர்போன்ற கரத்தைப்பற்றி எடுத்துக் க
ரையிற்சேர்த்து, உன்னிருப்பிடத்துக்கு நீசெல்லென்
றுவிடைகொடுத்துவிட்டு நால்வகைச் சேனையோடு க
லந்து தன்னகரம்வந்து சேர்ந்தான்.

இங்கே தெய்வயானை ஒருசோலையில்வந்து தன்
னந்தனியே இருந்து மிகுந்த துன்பத்தை அடைந்
தவளாய், நாம் சந்திர சடாதர சாம்பவ மூர்த்திக்கு
ஒப்பாகிய சுக்கிராசாரியின் புத்திரியாயிருந்தும்,அசே
தனனுகிய ஓரசுரன் மகள் நம்மைக்கிணற்றில் தள்ள
வும் நாம் பூலோகத் தரசர்களில் யாரோ ஒரு மஹா
ராஜனது வலக்கையைப் பற்றி வெளியில் வரவும் ஆ
யிற்றே. நாம் இதுவரைக்கும் ஒரு புருஷனைத் தொ
ட்டறியோம். அப்படி இருந்தும் பூலோகத்தரசன்
நம்மைத் தொட்டான். இனி அந்த அரசனைத்தான்
மணம்புரிய வேண்டும். அவனைவிட்டு மற்றொருவனை
மணம்புரிந்தால் கற்புக்கழிவுவரும். அந்தோ!இதென்
ன?நாம்பிராமணஸ்திரீயாயிருந்தும் நமக்கிவ்வகைப்ப
ட்டவினைவாய்த்தது. இதுவெல்லாம் வியாழபகவானு
டையபுத்திரனுகியகஜனிட்டசாபமேயன்றிவேருெரு
காரணமு மல்லவென்று தீர்மானித்து,பின்புசன்மிஷ்
டைசெய்த செய்கையை நினைத்து கனவருத்தமடை
ந்து ஓர் மரத்தருகி லிருக்கிறுள்.அப்போது, சன்மிஷ்
டையின் தந்தையாகிய விடப்பன்மனுடைய சாரதி
ஏதோ ஒரு காரியார்த்தமாய் அச்சோலையில்வந்து,
இந்தத் தெய்வயானையைக் கண்டு மிகுந்த ஆச்சரிய
மடைந்தவனுய் அவளை வணங்கி, அம்மணி! நீ
எங்களரசனுடைய குருபுத்திரி யல்லவா ? இந்த விட
த்தில் தனியே இருக்கிறகாரண மென்னவென்று வின
வினுன். தெய்வயானை அந்தச் சாரதியைப்பார்த்து,
ஓ சாரதி! உன் அரசன்மகளும் யானும் நீராட இவ்வ
னத்துக்கு வந்தோம். வந்தவிடத்தில் என்சேலையை
உன்னரசன்மகள் உடுத்திக் கொண்டு தன் சேலையை
எனக்குக் கொடுத்தாள். அதையுடுத்திக்கொள்ள மன
ஞ்சகிக்காமல் அச்சேலையை வேண்டாமென்று மறுத்
தேன். அதன்மேல் கோபங்கொண்டு என்னை இந்தக்
கிணற்றில் தள்ளிவிட்டுப் போய்விட்டாள். இந்தச்சே
தியை என்தந்தைக்குமாத்திரம் தெரியப்படுத்துவை
யாகில், இப்போது நானடைந்திருக்கிற துன்பத்தை
நீக்கினபலன் உன்னைச்சேரும். இவ்வளவு உபகாரம்
செய்யென்று சொல்ல,சாரதி சம்மதித்து விடைபெற்
றுச் சுக்கிராசாரியரிடத்துச் சென்றுவணங்கி, தெய்வ
யானை கூறியவற்றை ஆதியோடந்தமாகச்சொல்லித்
தன்னிருப்பிடத்துக்குச் சென்றுன். சுக்கிராசாரி திடு
க்கிட்டு,நமதுபுத்திரியைச் சன்மிஷ்டைகிணற்றில்தள்
ளிவிட்டாளே: ஐயோ! நாம் தவத்தாற் பெற்ற புத்
திரி யாயிற்றே: அவளுக்கு இந்தகதி வந்ததை யோ
சித்தால் இதைவிட ஆச்சரியம்என்னயிருக்கின்றதெ
ன்று வருத்த மடைந்து, அதிவேகமாய் அந்தத் தெ
ய்வயானையிருக்கும் சோலையில்வந்து, புத்திரியைக்
கண்டு மிகுந்த காதலோடுதழுவி, ஓ அம்மணி! உன
க்கும் இவ்வகைப்பட்ட துன்பம் வருமா? நிதம் சன்மி
ஷ்டையோடு விளையாடிவருகிறவளாதலால இன்றை
யதினமு மப்படியே விளையாடி வருவாயென்று எண்
ணி உன்னைத்தேடாம லிருந்துவிட்டேன். என்மேற்சி
னங்கொள்ளவேண்டாம் அம்மாவென்று பிரியவசனங்
கள் பேச, தெய்வயானை தந்தைதாளில்விழுந்து ஓவெ
ன்றுகதறி அழுது சொல்லுகிறுள்; நீசனுகிய அசுரன்
புத்திரி என்வஸ்திரத்தை எடுத்து உடுத்திக்கொண்
டது மன்றி, என்னையும் தூறி என்னுயிர்க்கும் கெடு
திவரக் கிணற்றில் வீழ்த்திப்போயினுள். இனிஎன்ன
நமது பிழைப்பு? சுத்த அல்பரிடத்தும் அருமை
தெரியாதவரிடத்து மிருந்து நித்தம் கோடி கோடி
பொருள்தேடிச் சீவனஞ்செய்வதைவிட, விவேகிகளி
டத்தும் அருமை யறிகின்றவரிடத்தும் சிறுமைபட்
டுக்கொண்டு சொல்ப சீவனம் செய்வது மேலான
நன்மையென்று நூல்களால் அறிந்திருக்கிறேம். ஆத
லால்-இனி மஹாபாதகனுகிய விடப்பன்ம னிடத்தில்

அரைநாழிகையுமிருக்கக்கூடாதுஎன்றுமூறையமிட்டாள். சுக்கிராசாரி தெய்வயானையின் கண்ணீரைத் துடைத்துத் தழுவி, ஓஅம்மா! நீயும் சிறுபெண். சன்மிஷ்டையும் சிறுபெண். ஒருவர்க்கொருவர் சச்சரவு பட்டபோது சன்மிஷ்டை பாலியபுத்தி யாகையால் தெரியாமற் கெடுதியைச் செய்தாள். அதற்காக அந்தச் சன்மிஷ்டையின் தந்தையை வெறுப்பது தகுதியல்ல. இப்போது உன் கருத்தின்படி இந்த இடத்திலேயே சௌக்கியமான இடமாய் ஒன்றைப்பார்த்து இருப்போம் வா என்னம்மணியென்று இனியவசனங்கூறி, இருவரும் ஒரு சோலையிற்சென்று பன்னகசாலையொன்றியற்றி அதிலிருந்தார்கள்.

இப்படி யிரண்டொருதினம் சென்றபின்பு, விடப்பன்மன் தன்சபைக்குச்சுக்கிராசாரியார் வராதிருப்பதை நோக்கி, மந்திரிகளைப் பார்த்து, ஓ அமைச்சர்காள்! நமது குலகுருவாகிய சுக்கிரப்கவான் இரண்டு மூன்று தினமாய் நமது சபைக்கு வரவில்லை. அஃதென்ன விசாரியுங்களென்று கட்டளையிட, மந்திரிகள் தூதுவரை அனுப்பினார்கள். தூதுவர் சுக்கிராசாரியின் மனையிற்சென்று பார்த்துச், சுக்கிராசாரியைக் காணுமல் மீண்டுவந்து மந்திரிகளை வணங்கி, ஓ ஆண்டகையீர்!சுக்கிராசாரியார் வீட்டிலில்லையென்றுபுகல, மந்திரிகள் கேட்டு அரசனுக் கறிக்கையிட, அரசன் திகிலடைந்து. ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம். நமது குரு நம்மையன்றி ஒரு காரியத்தையனுசரியார். அப்படி யிருக்க அவர் எங்குற்றாரென்று ஐயங்கொண்டு மந்திரி முதலானவர்களை நோக்கி, ஓ நண்பர்களே! நமது குரு எங்கிருந்தாலு மறிந்துவந்து ஒரு முகூர்த்தத்திற்குள் எனக்குத் தெரிவிக்கவேண்டு மென்று மஹா உக்கிரத்துடனே கட்டளையிட்டான். மந்திரி முதலானவர்கள் கேட்டுத் திடுக்கிட்டு, எதிர் உத்திரவு கொடுக்காமல் அரசனிட்ட கட்டளைப்படி தேடயத்தனித்தார்கள். அப்பொழுது விடப்பன்மன் ரதசாரதி யறிந்து, அடடா!! வீணாய் மந்திரி முதலானவர்கள் திரிந்தலையச் செல்லுகிறார்கள். இந்த வேளையில் நாம் அறிந்ததைத் தெரிவிக்கா விட்டால் மஹா துரோக மாயிற்றேயென்று மதித்து, சுக்கிராசாரியைத் தேடிச் செல்லுகிற மந்திரிகளைமறித்துச், சுக்கிராசாரி இருக்கிற விடத்தையும் அவர் அரசனுத்திரவின்றிச் சென்றதையும் நான் தெரிவிக்கிறேன் வாருங்களென் றழைத்துக்கொண்டு, அரசன் சபைக்கு வந்து வணங்கிச் சொல்லுகிறான். ஓ ஆண்டவனே! தங்கள் குமாரத்தியும் தங்கள் குருபுத்திரியும் ஒருவனத்திற்சென்று நீராடின தாகவும், அங்கு ஒருசுழற்காற்றுண்டாகி அவர்களுடைய வஸ்திரங்களைக் கலக்கவைத்த தாகவும், அப்போது தங்கள் குமாரத்தி குரு புத்திரியின் வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டதாகவும், அதன்மேல் குருபுத்திரி கோபங்கொண்டு இகழ்ந்த தாகவும், பின்பு தங்கள் குமாரத்தி சினங்கொண்டு குருபுத்திரியைக் கிணற்றில் வீழ்த்தினதாகவும், அப்போது பூலோகத்தரசரிலொருவர் அவ்வனத்தில் வந்து அந்தக் குருபுத்திரியை எடுத்ததாகவும், அந்தக் குருப்புத்திரி என்னுடன் சொல்லி இந்தச் சேதியைத் தன்தந்தைக்கு மாத்திரம் தெரிவிக்கக் கட்டளையிட்டாள். நானக் கட்டளைப்படிவந்து நமது குருவுக்கு அந்தச் சங்கதியைத் தெரிவித்தேன். அவர் புத்திரியிடத்தில் போயிருக்கிறார். இப்போது அவரைத் தேடிப் புறப்பட்டமையால், அந்தக் குருபுத்திரி இருந்தவனத்தைக் காட்டுகிறே னென்றான்.

விடப்பன்மன் கனவருத்தமடைந்து,விரைவிலெழுந்து, அந்தச் சாரதியை அழைத்துக் கொண்டு மந்திரி முதலானவர்களோடு தெய்வயானை இருந்த சோலையில் வந்து, அவ்விடத்தில் தெய்வயானையும் குருவும் இல்லாமையைக்கண்டு, அச்சோலைக் கருகிலிருக்கிறவனங்களில் வந்து பார்த்தான். அங்கொருவனத்தில் பன்னகசாலையொன் றியற்றி, அதில் சுக்கிராசாரி தவஞ்செய் திருத்தலைக் கண்டு சரேலென்று சென்று சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, மிகுந்த பயபத்தியுடனே எதிர்நின்று கைகூப்பி, ஓஐயனே!சிறியோர் செய்த பிழைபொறுப்பது பெரியோர்கள் கடமை. அதிலும் தங்கள் மனதுக்கு வருத்தம் நேரிடும்படி செய்த குற்றவாளி பெண்பால். அப்பெண்பாலும் பாலியவய துடையவள். (பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்.) என்று நூல்களா லறிந்திருந்தும், எல்லாந் தெரிந்த தாங்கள் மனம்வேறுபட்டு என்னைவெறுத்தது மிகுந்த ஆச்சரியமா யிருக்கின்றது. அப்படி தான் என்புத்திரி செய்த செய்கையைக் குற்றமாக வகித்தாலும், எனக்கு அறிவித்தால் நானென்ன தண்டிக்காமல் விட்டுவிடுவேனா? நான்செய்வது அரசல்லவா? அரசுக்குத் தன்மானம் பிறர்மானமென்றுபேதமுண்டா? இதை யோசிக்காமல்தாங்கள் என்னைவெறுத்துவிட்டால் என்னரசு அரைக்கண மிருக்குமா? என் சத்துருக்களாகிய அமரர் என்னை நாசப்படுத்தார்களா? என்னரசும் என்செல்வமும் என்வெற்றியும் தங்களுடைய தல்லவா? ஆண்டவனே! கிருபைகூர்ந்து என்னை இரக்ஷிக்க நகரத்துக் கெழுந்தருளுமையாவென்று பலவாறு வேண்ட, சுக்கிராசாரிமகிழ்ந்து, தன் புத்திரி யனுமதியில் தான் வரவேண்டுமென்றும், அதற்காக அவளைப்பிரார்த்தித்துக் கொள்ளுமென்றும் கண்ணாற் சைகைசெய்தார். விடப்பன்மன் அதை அறிந்து, குருபுத்திரி யாகையால் தெய்வயானையின் பாதத்தில் விழுந்து நமஸ்காரஞ் செய்து, ஓ அம்மணி! என் புத்திரிசெய்த குற்றத்தைப் பொறுக்க வேண்டும். அப்படி பொறுக்காவிட்டால் உமது வாக்கினால் என்னதண்டனை விதிக்கிறீர்களோ, அத்தண்டனையை யென்புத்திரிக்கு நடத்துகிறேன். தங்கள் கருத்தை வெளியிட வேண்டுமென்று பிரார்த்திக்க, தெய்வயானை மிகுந்த சினங்கொண்டு, கண்களில்

நெருப்புப் பொறிபறக்க விடப்பன்மனைப் பார்த்துச் சொல்லுகிறாள். ஓ அசுரேந்திரா! உன்புத்திரி செய்த குற்றத்தினுக்கு எவ்வள வேனும் தாக்ஷண்ய மின்றி உயிர்க்கொலை செய்யவேண்டும். நீ மிகுந்த தவப்பய னாற் பெற்று அருமையாய் வளர்த்து வருகின்றதினா லும், மிகுந்த வணக்கத்துடன் நீ வேண்டிக் கொள்வ தினாலும், நானொரு தண்டனைசெய்யச் சொல்லுகிறே ன். அஃதென்ன வென்றால், உன் புத்திரியும் உன்புத் திரியின் தாதிகளும் எனக்குப் பணிவிடைப் பெண்க ளாகச்செய். அவ்வாறு செய்வையாகில் அதுவே உயி ர்க்கொலைசெய்யுந் தண்டனையைவிட எண்மணங் கதி கமான தண்டனையா யிருக்கும் என்றாள். அதற்கு விடப்பன்மன் ஒத்துக்கொண்டு, அம்மணி! அவ்வாறு என்குமாரத்தியை உங்களுக்குப் பணிவிடைப் பெண் ணுக்கு விக்கிறேன். முன்போல எனதுநகரத்துக்கெ ழுந்தருள வேண்டு மென்று மிகுந்த ஆராமையோடு கூற, தெய்வயானை சம்மதித்துத் தன் தந்தையோடு விடப்பன்மனும் தானும் முன்போல இருப்பிடம்வந் து சேர்ந்தார்கள். விடப்பன்மன் தன்புத்திரியை அ ழைத்து, நீ குருபுத்திரியென் றெண்ணாமல் அந்த அ ம்மனைக் கிணற்றில்விழத்தள்ளினதினால், நீ அந்தவம் மனுக்குப் பணிவிடைப் பெண்ணா யிருவென்று கட் டளையிட்டுத், தெய்வயானையிடத்து அழைத்துவந்து தன் புத்திரியை விட்டுத் திட்டஞ்செய்து போய் விட்டான். அன்றுமுதல் சன்மிஷ்டை தெய்வயானைக் குப் பணிவிடைப் பெண்ணாயிருந்து ஏவற்றொழிலைச் செய்து வந்தாள்.

இப்படி சிலநாட் சென்றபின்பு ஒருநாள் தெய் வயானை யானவள் தன் தாதியாகிய சன்மிஷ்டை யோடு மலர்கொய்து விளையாட ஒரு பூஞ்சோலையிற் சென்று, அங்கிருக்கும் மலர்களைக் கொய்து வேடிக் கையாயிருக்கிற தருணத்தில், யயாதி மஹாராஜன் முன்போல வேடிக்கை யார்த்தமாய் அந்தப் பூங்கா வனத்துக்குவந்து, தென்றலினது சுகத்தையும் புஷ் பங்களின் பரிமள யின்பத்தையும் உணர்ந்து மஹா களிப்புடன் அச்சோலையைச் சுத்திப்பார்த்து வருகிற போது, இந்தத் தெய்வயானையையும் சன்மிஷ்டை யையும் கண்டான். கண்டவுடன் சித்தம் பிரமித்து, ஆ! இவர்கள் பூலோக ஸ்திரீகளோ? அல்லது சொற் கலோக ஸ்திரீகளோ? மற்றயாவரோ அறியவேண்டு மென்று அவர்களை நெருங்கி, முன் கிணற்றிலிருந்து எடுத்த ஸ்திரீயென்று தோன்றாமல் மறந்து, ஓ பெ ண்ணரசிகளே! நீங்கள் யாரென்று வினவினான். முன் னமே தெய்வயானை இந்தராஜனையே விவாகஞ் செய் யக்கருதி உமாமஹேஸ்வரியைத் தியானித்திருக்கிற வளாகையால் விரைவி லெழுந்து, அரசனுக்கு ஓராச னமளித்து அதிலிருக்கச்சொல்லி, பற்பல உபசாரங் களைச் செய்து கூறுகிறாள், ஓ அரசனே! நீரென்ன என்னை அறியீரா? முன்னம் நான்கிணற்றில் விழுந்த போதுகமலம்போன்றஎன்வலக்கரத்தைப் புயலனைய உமது வலக்கரத்தினாற் பற்றிக் கரைசேர்த்தவரல்ல வா? அரசர்க்கு இவ்வளவு மறதியாவென்று மறுபடி யுங் கூறுகிறாள்: ஓ அரசனே! நான் சுக்கிராசாரியார் புத்திரி. இதோ நிற்கிறவள் அசுரர்குலத்தலைவனாகிய விடப்பன்மன் புத்திரி. இவள்தான் முன்னமென்னை க் கிணற்றில்விழ்த்தினவள். அந்தக் குற்றத்துக்காக இப்போது இவள் எனக்குத் தாதியாயிருக்கிறாள். நா ன் முன்புபிழைத்ததும், தேவர்கள் நடுங்கத்தக்க பரா க்கிரமத்தை உடைத்தாகிய விடப்பன்மன் புத்திரியா ன இந்தச் சன்மிஷ்டையை நான் தாதியாகப் பெற் றதும், உமது கிருபை யாதலால், அன்றைய தினம் கிணற்றில் விழுந்திருந்த என்கரத்தைப்பற்றிக் கரை சேர்த்து ஆதரித்ததுபோல, இன்றையதினம் என்னை மணம்புரிந்து இன்பசுகத்தைக் கொடுக்கவேண்டுமெ ன்று வேண்டினாள். அரசன் இந்தவசனங்களைக்கேட் டுத் திடுக்கிட்டுச் சொல்லுகிறான்: ஓ பெண்கள் சிகா மணியே! பிராமணர் மாத்திரம் க்ஷத்திரிய வைசிய சூத்திர ஸ்திரீகளை மணம்புரியலா மென்றும், மற்ற மூவகைப் புருஷரும் பிராமணஸ்திரீயை மணம்புரிய லாகாதென்றும் வேதங்களிற் கூறியிருக்க; உலகாதி பனாய் மநுசாஸ்திரவிதி பிசகாமல் அரசுசெலுத்திவ ருகின்ற நான் உன்னை மணம்புரிவது தகுதியல்லவெ ன்று மறுத்தான். தெய்வயானை இவ்வசனங்களைச் செ வியுறக் கேட்டு, ஓ அரசனே! பிரமன் விதித்த விதிக் கு ஒருமாறுபா டுண்டா? ஆதலால்-என்தந்தை அநு மதியினாலேயே நான் உம்மை விவாகஞ் செய்து கொள்ளுகிறேன். நீர் இனி மறுக்கவேண்டா மென்று கூற, அரசன் - ஓ பெண்கள் நாயகமே! உன்தந்தை நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநாலு கலைக் கியான முதலியவற்றை யுணர்ந்தவர். அவர் சம்மதித் து விவாகஞ்செய்வித்தால் அவர்வாக்கை மறுக்காமல் மணம்புரிவே னென்றுகூற, தெய்வயானை கேட்டுமகி ழ்ந்து, தன்னருகி லிருக்கிற ஒரு தாதியைப் பார்த் துத் தன்தந்தையை அழைத்துவரக் கட்டளையிட் டாள்.

உடனே அத்தாதி சுக்கிராச்சாரி இடத்திற் செ ன்று பணிந்து, ஓ ஸ்வாமி! தங்கள் புத்திரி தங்களை அழைத்து வரக் கட்டளை யிட்டாளென் றறிவிக்க, உடனே சுக்கிராசாரி யெழுந்து மகளிருக்கும் பூங்கா வனத்துக்குவந்தார். தெய்வயானை யெழுந்து எதிர் கொண்டுபோ யழைத்துவந்து, ஓராசனமளித்து இரு க்கச் சொல்லி, சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஓ ஐயனே! முன்னம் நான் கிணற்றில் விழுந்திருந்த போது இதோநிற்கிற மஹாபுருஷன் தான் என்வலக் கரத்தைப்பற்றிக் கரைசேர்த்தவர். இந்தப் புண்ணி யவானையே யான் மணம்புரியவேண்டு மன்றி, மற் றொருவர் என்னை மணம் புரிவது தகுதியல்ல. தா ங்கள் கிருபைகூர்ந்து என்கருத்தின்படி விவாகத்

தை நிலைநிலேற்றுமென்று நிகழ்த்த சுக்கிராசாரி மகிழ்ந்து அரசனை நோக்க, அரசன் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து பயபத்தி யுடனே நின்றான். சுக்கிராசாரி அரசனுக்குப் பல ஆசிகள்வழங்கி, ஓ அரசனே ! இவள் என்புத்திரிதான். இவளை நீ விவாகஞ் செய்துகொள். மறையோர்பெண்ணை மன்னர் விவாகஞ்செய்தல் தகுதியல்ல வாயினும், இவளுக்கு வியாழபகவான் புத்திரனாகிய கஜனால் மறைவர் மணம்புரியாமல் உலகமன்னவர் மணம்புரியும்படி ஓர் சாபநேரிட் டிருந்ததென்று அச்சாபத்தின் வரலாற்றையெடுத்துச்சாற்ற, அரசன் சுக்கிராசாரியார்மொழியை வேதவாக்கியமாகக் கொண்டு தெய்வயானையை மணம்புரியச்சம்மதித்தான். உடனே எல்லாவல்லமையுமுடையசுக்கிராசாரி அந்தவிடத்திலேயே விவாகத்துக்குத் தகுந்த பலவஸ்துக்களையும் அழைப்பித்து, நல்லசுபமுகூர்த்தத்தில் மங்கலாரோஹணம் செய்வித்து, சாஸ்திரவிதி பிசகாமல் ஓமம்வளர்த்தி, எல்லா நலமும்பெறப் பலஆசிகள்வழங்கி, நீங்களிருவருஞ்சுகசீவனர்களாய் வாழ்ந்திருங்களென்று வாழ்த்தி ஒருவசனஞ் சொல்லுகிறார்: ஓ அரசனே ! என்பெண் பார்ப்பினி. அவளைக்கூடி வேறொரு ஸ்திரீயைக்கூடினால் கெடுதிநேரிடு மாதலால், உனக்கு இந்த உறுதியிருப்பதோடு கூட, இதோ யிருக்கிறபெண் அசுரர்குல அரசன் புத்திரி. அவள்பெயர் சன்மிஷ்டை. அவளுக்குப் புருஷபோகம் ஒன்றுதவிர மற்றப்போகமெல்லாவற்றையு முதவி, அவளையும் இந்தத் தாதிகளையும் காப்பாற்றுமென்றுரைத்து, அரசனிடத்துவிடைபெற்றுத் தன்னிருப்பிடத்துக்குச் சென்றார். பின்பு அரசன் தெய்வயானையோடு சன்மிஷ்டையை அழைத்துக்கொண்டு தன்னகரத்துக்கு வந்து, சகல ஜெனங்களும் களிப்புற விருந்து முதலானவைகளை இயற்றி, சன்மிஷ்டைக்கு அந்தப்புரத்தில் ஒரு மாளிகை கொடுத்து அதில் அவளைவைத்துத், தானும் தன்மனைவியாகிய தெய்வயானையும் இரதியுமதனும்போல அரண்மனையிற்சேர்ந்து கூடிக்கலந்து, மஹாகளிப்புடன் இரண்டு புத்திரர்களைப் பெற்று வாழ்ந்திருக்கிற நாளில், ஒருநாள் இராத்திரி அரசன் தன்மனைவியாகிய தெய்வயானையோடு பள்ளியறை சேர்ந்து பஞ்சணையில் சயனித்தான். உடனே தெய்வயானை நித்திரை போய்விட்டாள். அரசனுக்கு நித்திரைவராமல் சற்றுநேரம் சும்மாயிருந்து, நித்திரை வருகிறபரியந்தம் அந்தப்புரத்திலிருக்கிற சோலையில் உலாவி வருவோமென்று எழுந்துவந்தான்.

அச்சோலை - மாதவி - கொன்றை - அசோகு - பலா - சூதம் - ஆல் - அரசு - வேம்பு - வாழை-முதலாகிய மரங்கள் நெருங்கி இருக்கிறதினாலும், மல்லிகை - முல்லை - இருவாக்ஷி - முதலாகியசெடிகள்புஷ்பித்து மிகுந்த பரிமளத்தைக் கொடுப்பதினாலும், இளந்தென்றல் வீசுவதினாலும், சந்திரோதயத்தினாலும், அரசனுக்கு மகிழ்வுண்டாகி, அச்சோலையில்அங்கங்கும் இருக்கிற விநோதங்களைப்பார்வையிட்டுவருகிறான். இப்படி வருகிற தருணத்தில் அச்சோலையின் மத்தியில் சந்திரகாந்தக் கல்லினாற் செய்த மாளிகையில் நல்ல பருவத்தையும் மிகுந்த செல்வத்தையுமடைந்து புருஷனில்லாமலிருக்கிற சன்மிஷ்டை யானவள் தான் தன்னந்தனியே இருக்கிறதைத் தன்மனதில் நினைத்து, நமக்கு எல்லாப் பாக்கியமு மிருந்தும் ஒரு புருஷ னில்லாமையால் தாமரையில்லாத தடாகம்போலவும், சந்திரனில்லாத இரவுபோலவும் பயன்படாமலிருக்கிறோம். இப்படி யிருப்பதற்குக் காரணம் நமது குலகுருவாகிய சுக்கிராசாரியின் புத்திரியைக் கிணற்றில் வீழ்த்தின துற்நடத்தையேயாம். இதற்கு யாரை நொந்துகொள்ளுகிறது. இது நமது தலைவிதியென்று தன்னைத்தானே நொந்துகொண்டு, பள்ளியறையை விட்டு மேலுப்பரிக்கையில் வந்து, சந்திரோதயத்தின் விநோதத்தையும் தென்றல் வீசுகிற திறத்தையும் புஷ்பித்திருக்கிற பூவாடையின் பரிமளபோக சுகத்தையும் உணர்ந்து, ஆ! ஆ! நாம் பெற்ற பருவத்துக்குச்சுகம் இதுதான். ஆனால் புருஷன் மாத்திர மில்லையே: ஐயோ ! இந்தவேளையில் புருஷனிருப்பானாகில், எந்தலோகத்தின் பதத்துக்கும் மேலான இன்பத்தை இவ்விடத்திலேயே அநுபவிக்கலாமே: இதற்கென்னசெய்கிறதென்று மிகுந்த காமவெறிகொண்டு உலாவிவந்தாள். இப்படி உலாவிவருகிற தருணத்தில் அச்சோலையில் ஓர் ஆளரவந்தோற்றக் கண்டு, ஓ! ஓ! இதென்ன ஆச்சரியம். இந்தயிடத்தில் அரசனொருவனன்றி மற்றொருவர்வரக்கூடாது. இந்நேரத்தில் அரசன் வருகிறதற்குக் காரணமென்ன? ஆனால் நாம்கொண்ட கருத்தின் பிரமையோ? உண்மையாக அரசன்தான் தென்றலுக்காக வந்து உலாவுகிறானோ ? நாம் சென்று நோக்கினால் எல்லாந் தெரியுமென்றெண்ணி, உப்பரிகையைவிட்டிறங்கி அரசன் உலாவும் இடத்தில்வந்து பார்த்தாள். பார்த்தவுடன் அரசனாக இருக்கக்கண்டு மிகுந்தமகிழ்ச்சியடைந்து, அவனுக்கு நமஸ்காரஞ் செய்து நின்று, ஓ மன்னவனே! நான் அசுரர்குலத் தலைவன் மகளாயிருந்தும், சுக்கிராசாரிபுத்திரியாகிய உனக்கு மனைவியாயிருக்கிற தெய்வயானைக்கு யான் முன்னஞ்செய்த குற்றத்தினால் தாதியாயிருந்தபோதிலும், உனக்கு நானும மனைவிதான். எப்படியென்றால் - நான்பரம்பரையாகிய தாதியல்ல. காலகதியால் தாதியானேன். உன்மனைவி தெய்வயானை அசுரர்குல குருபுத்திரியா யிருந்தபோதிலும், சிநேகத்தில் இருவரும் ஓருயிரேயன்றி வேறல்ல. ஆதலால் - நானு மனைவியாவதற்குச் சந்தேகமென்ன? கிருபைகூர்ந்து என்மனங் களிப்பெய்த என்னைக் கூடுமென்று வேண்டி மிகுந்தநாணத்தோடு நிற்க, அரசன் சன்மிஷ்டையினதுஅன்புக்கு மகிழ்ந்து, ஓ பெண்கள் நாயகமே ! நீ கூறியபடி உன்னைக் கூடிக்கலந்து வாழ்வதற்குக் கூடாது. ஏனென்றால்-

ஆதியில்தெய்வயானையை மணஞ்செய்துவருகிறபோது சுக்கிராசாரி உன்னை என்கையிற்கொடுக்கு, புருஷபோகம் ஒன்றுதவிர மற்ற உண்டி வஸ்திராபரணமுதலியவற்றைக்கொடுவென்றுகட்டளையிட்டிருக்க, அக்கட்டளையை மீறி உன்னைக் கூடுவது நான் செய்யும் அரசுக்குத் தகுதியல்லவென் றிடைந்தான். சன்மிஷ்டை வருத்தமடைந்து, மறுபடியும் அரசனை மறித்து ஒரு வசனஞ் சொல்லுகிறாள்.

ஓ அரசனே! சொல்லியசொல் பிசகிநடக்கிறது அரசுக்கு உரியதல்லவென்று கூறுகிறீர். அது சரிதான். ஆனால் அந்தக்கட்டுரை வேதியர் முன்னிலைக்கும், பசுமுன்னிலைக்கும், ஒருவருயிர்க்கு இடையூறு வருகிறபோதும், ஆசைப் பெருக்கத்தினால் பெண்களை மணஞ்செய்யுமிடத்தும், அக்கட்டுரைபிசகினால் தோஷமில்லை. மேலும் நீர் உலகாதிபர். சரணென்றடைந்தவர்க்கு ஆதாரமா யிருக்கிறவர். உமதுதிருவடியில் யான்சரணமடைந்து எனக்கு நேரிட்டிருக்கிற சத்துருபயத்தைக் கூறுகிறேன். நீர் ஆதரித்து அச்சத்துருவை நீக்கி என்னை இரட்சியும். எனக்குச் சத்துரு யாரென்றால், இதோவடவானலம்போலச் சொலித்துவருகிற சந்திரனும், கருப்புவில்லைப் பிடித்துப் புஷ்பபாணத்தைத் தொடுத்து உடல்முழுதும் துளைத்து இன்னும் அரைநொடியில் ஆவியைக்கொள்ளைகொள்ள வீரசிங்கம்போலச் சீறி எதிர்த்திருக்கும் மாரனுமாம். இவ்விருவரையும் அடக்கி என்னை யாதரியும் அண்ணலே என்று பணிய, அரசன் ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருக்கக் கண்டு, சன்மிஷ்டை பின்னும் அரசனைப்பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறாள். ஓ அரசனே! நீரேன் மயங்குகிறீர்? உமக்குக்கருத்தில்லாமலிருந்தால் இருக்கட்டும். இப்போது நானொரு வரங் கேட்கிறேன் அவ்வரங்கொடுமென்று வேண்ட, அரசன்-ஓ பெண்கள் நாயகமே! நீகேட்கிறவரமென்னகேள் தருகிறேனென்றான். உடனே சன்மிஷ்டை வணங்கி, ஓ ஸ்வாமி! என் சிநேகியாகிய தெய்வயானை புத்திரசம்பத்தைப் பெற்றிருக்கிறாள். நானும் புத்திரசம்பத்தை யடையவேண்டும். எனக்கொரு புத்திரசந்தான முண்டாகுவதான வரத்தைப் பாலியுமென்றுகேட்க, அரசன் திடுக்கிட்டு, அடா! மோசம்வந்தது. இவள் கேட்டவரத்தைக் கொடாவிட்டால்தருமத்துக்கு விரோதம். இவள் கருத்தின்படி வரத்தைக்கொடுத்தால் சுக்கிராசாரியரால் நமக்குக் கெடுதிவரும். இதற்கென்ன செய்கிறது? எப்போதும் உலகத்தில் மேலோர்களெல்லாம் தம்மையடைந்துகேட்டுக்கொண்டவர்கள் கருத்து மகிழ்வெய்த, அவர்கள்வேண்டியவற்றைக்கொடுத்துக் கீர்த்தியுடன் மகிமைபெற்றிருக்கிறார்கள். ஒருவரிடத்து ஒன்றை இரக்கிறவன் தனக்குண்டாகிய வருத்தத்தினால் வானாபரணமாகிய மானாபரணத்தை நீக்கி, அடங்கி ஒடுங்கி நடுங்கிக் கேட்கிறான். அப்படிக்கேட்டவன் கருத்து நிறைவேறக் கொடாதவன் மஹாபாதகன். அவன் இருந்தென்ன? இறந்தென்ன? அவனால் எவர்க்கும் ஒரு பலனில்லை. நாம் அரசனாக இருந்து நம்மைவந்துவணங்கி இவள் கேட்ட கர்ப்பதான வரத்தைக் கொடுக்காமற் போவோமாகில், சுக்கிராசாரியரால் இனிவருங்கெடுதியைவிட மேலான கெடுதியாமென்று தீர்மானித்து, ஓ பெண்கள் நாயகமே! என்னை இந்த வேளைவந்து வணங்கி நீ கேட்டுக்கொண்ட வரத்தைக் கொடுத்தேன். நீசந்தோஷத்தோடு என்னுடன் கூடவே வாவென்று அழைத்துக்கொண்டு, அச்சோலையி லிருக்கும் சந்திரகாந்தக் கல்லினாலியற்றிய மாளிகையிற்சென்று, குழலுக்கு மலர்சூடி, நெற்றிக்குத் திலதமிட்டு, கண்ணுக்கு மையெழுதி, கனத்த தனத்துக்குச் சந்தனத்தைத் திமிர்ந்து, பஞ்சணை மஞ்சத்தில் வஞ்சியோடு கொஞ்சி அங்கஜனஞ்சித் தியங்கிட இணங்கி, அசுரர்குல சன்மிஷ்டை சிறந்த மதனகலை இன்பத்தைப் பொருந்த மகிழ்வோடு அணைந்து, விரைவினிற் பிரிந்து அரண்மனையில் வந்து தன் மனைவி ஐயப்படாதிருக்கப் படுத்திருந்தான்.

இப்படியே நித்தம் நித்தம் சன்மிஷ்டையினிடத்துச்சென்று சுகத்தை யனுபவித்துக்கொண்டு வந்தான். (அறைவீட்டுச்சேதி அம்பலத்தில்வரும்.) என்கிற பழமொழிபோல, அரசன் களவுப்புணர்ச்சியைவெளிப்படுத்தச் சன்மிஷ்டைகர்ப்பவதியாயினாள். இதையறிந்த அரசன்- அடடா!! இவள் கர்ப்பவதியாயினாளே: நம்மனைவி யறிவாளாகில் என்னகெடுதி நேரிடுமோ? நம்மனைவியின் தந்தையோ அசுரர்குலத்துக்குக் குருவாயிருக்கிறவர். இந்தச்சன்மிஷ்டை கர்ப்பவதியானதைக்கேட்பாராகில் அவரால் என்ன அவஸ்தைவருமோ? ஆண்டவன்செயலெப்படியோவென்று நித்த நித்தம் இதுவே ஏக்கமாயிருந்தான். சன்மிஷ்டை பூர்ண கர்ப்பவதியாகி, நல்ல சுபமுகூர்த்தத்தில் ஒருபுத்திரனைப் பெற்றாள். இந்தச்சேதி தெய்வயானையறிந்து, அப்புத்திரனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து, பின்பு தான் தனியேயிருந்து, நமது தாதியாகிய சன்மிஷ்டைக்குப் புத்திரனுதித்த காரணமென்ன? அவளோ அல்பமானவ ளல்ல. மஹாகற்புடையவள். அதற்குத் தகுதியாகவே அவளிருக்குஞ்சோலை மிகவும் காவலோ டிருக்கின்றது. இது ஆச்சரியம் : ஆச்சரியம் : இதனைநேராய் நாமே போயறியவேண்டுமென்று கருதித் தனதுதாதிமார்களோடு சன்மிஷ்டை இடத்துக்கு வந்தாள். சன்மிஷ்டையோ பட்டத்தரசிக்கு எழுந்து வந்தனைசெய்து பொற்பீடமளித் திருக்கச்சொல்லி வேண்ட, தெய்வயானை அவளிட்ட பொற்பீடத்திலிருந்து, ஓ சன்மிஷ்டாய்! அதிககாவலையுடைய அந்தப்புரத்துச் சோலையில் இருக்கிற நீபுத்திரனை எவ்விதத்திற்பெற்றாய்? அதனை எனக்கு ஒளியாமற்சொல்லவேண்டுமென்ன, சன்மிஷ்டை உண்மையை வெளிப்படுத்தினால் அரச

னுக்குக் கெடுதிவரும் ஆதலால், தன்னைக் கேட்ட
இந்தப் பட்டத்தரசிக்கி ஒருபோக்குக் காட்டவேண்
டுமென்று கருதிக் கூறுகிறாள். ஓ அம்மணி! ஒருநாள்
இரவில் நித்திரைவராமல் மேலுப்பரிக்கையில் நிலவி
லுலாவித் திரிகிறபோது, ஒருமஹாமுனிவர் அந்தரத்
திலிருந்து உப்பரிகையி லிறங்கினார். அவரைக்கண்டு
இவர்யாரோ பெரியவரென்று மதித்துச்சென்று வண
ங்கினேன். அவர் என்னை ஆசீர்வதித்து,உனக்கு என்
னவரம் வேண்டுமென்று கேட்டார். நான் புத்திரசந்
தானம் வேண்டுமென்று கேட்டேன். அவர்மகிழ்ந்து
இதோ யிந்தத் திருநீற்றை உட்கொள், புத்திர சந்
தான முண்டாமென்று சொல்லிப் போயினார். நான்
அத் திருநீற்றை யுட்கொண்டேன். அன்று முதல்
கர்ப்பவதியா யிருந்து இப்புத்திரனைப் பெற்றேனெ
ன, தெய்வயானை ஐயநீங்கி மகிழ்ந்து, தன் புத்திரர்
களைப்போல அப்புத்திரனையும் பாதுகாக்கக்கட்டளை
யிட்டு, அரண்மனையில் வந்து சேர்ந்தாள். அரசன்
அன்றிரவில் சன்மிஷ்டையினிடத்துவந்து, ஓ பெண்
ணே! தெய்வயானை இங்குவந்து உன்னைக் கேட்ட
தென்ன நீ கூறிய மறுமொழி யென்னவென்றுவின
வ, அதற்குச்சன்மிஷ்டை-தெய்வயானைவந்து புத்திர
னைப் பெற்றவாறு எனக்கு உரையென்று கேட்டாள்.
நான் ஒருமுனிவர் வரத்தினாற் பெற்றேனென்று மறு
மொழி கூறினேன்: தெய்வயானை மகிழ்ந்து அரண்ம
னைக்குச் சென்றாளென்றாள். அரசன்மகிழ்ச்சிஅடை
ந்து, முன்போலவே மனைவிக்குத் தெரியாமல் சன்
மிஷ்டையுடன் கூடிக் குலாவி வந்தான். மறுபடியும்
சன்மிஷ்டை இரண்டுபுத்திரர்களைப்பெற்றாள். இதை
யறிந்து தெய்வயானை சன்மிஷ்டையினிடத்துவந்து
புத்திரர்களேதென்றுவினவ, சன்மிஷ்டை முன்போ
லவே முனிவர்வரத்தினாற் பெற்றேனென்றுகூற,தெ
ய்வயானை ஒத்துக்கொண்டு அரண்மனை சேர்ந்தாள்.
இந்தச் சன்மிஷ்டை புத்திரர்கள் மூவரும் வளர்ந்து
வீதிகடோறும் விளையாடித் திரிந்தார்கள். ஒருநாள்
அரசனும்தெய்வயானையும் மேலுப்பரிக்கையில் உலா
வித் திரிகிறபோது, அந்த மூன்றுபுத்திரர்களும் வீதி
யில் விளையாடித் திரிந்தார்கள். தெய்வயானை அப்பு
த்திரர்களின் ரூபசவுந்தரியங்களை நோக்கி, அரசனை
யும் நோக்கினாள். அந்தப் புத்திரர்கள் அரசனுக்கு
ஒப்பாயிருக்கவே ஐயங்கொண்டு, தன்தாதிகளால் வீ
தியி லிருக்கிற மூன்று புத்திரரையும் அழைத்துவரச்
சொல்லி,ஓ சிறுவர்களே! நீங்கள்யார்? உங்களைப்பெற்
றவளுடைய பெயரென்ன? தந்தையார்? இவைகளையெ
னக்குத்தெரியச்சொல்லுங்களென்று கேட்கவும் அப்
புத்திரர்கள் எங்கள் தாய் சன்மிஷ்டை,தந்தையிதோ
யிருக்கிற அரசன்தான், என்று சிறுவர்களாதலால்
உண்மையைக் கூறினார்கள். உடனே அரசன் திகை
த்து ஒன்றுஞ்சொல்லாது நின்றான்.

தெய்வயானை இவ்வசனங்களைக் கேட்டு மிகுந்த
சினங்கொண்டு ஒன்றுஞ்சொல்லாமல் தன் தாதிகளை
அழைத்துச் சிவிகை கொண்டுவரச்சொல்லி, அதிலே
றித் தன்தந்தையாகிய சுக்கிரபகவானிடத்திற்சென்று
கோவென்று அலறி அவர்திருவடியில் விழுந்து அழு
தாள். சுக்கிராசாரி திடுக்கிட்டு,ஓ அம்மணி! உனக்கு
வந்த கெடுதியென்ன கூறென்று வினவ, தெய்வயா
னை- ஓ ஐயனே! என்னைச் சந்திரவமிச அரசனுக்கு
விவாகம் செய்து கொடுத்து,எனக்குத் தாதியாயிரு
க்கிற அசுரர்குலத் தரசன்மகளை என்னுடன் அனுப்
புவிக்குங் காலத்து அவளைக் குறித்து நீர் ஒருகட்ட
ளை அரசனுக்கிட்டிருந்தீரன்றோ?அக்கட்டளையை அர
சன் மீறி, அவளோடு கூடிக் கலந்து மூன்று புத்திர
ரைப் பெற்றான். இனி நான் என்செய்கிறதென்று
முறையிட்டாள். சுக்கிராசாரி மிகுந்த கோபத்துட
னே எழுந்து, அதிவேகமாய் அரசனிடத்து வந்து,
அரசன் செய்த வந்தனைகளை எவ்வளவு மேற்றுக்கொ
ள்ளாமல், அடா யயாதி! நான் இட்ட கட்டளையை
மீறி நடந்தையே. என் கட்டளையை மீறச்செய்தது
உன்வாலிப மல்லவா? இனி யின்றுமுதல் மிகுந்தவார்
த்திபத்தை யடைவது மன்றி, இருமல் முதலாகிய
வியாதி தொந்தரையும் அனுபவிக்கக் கடவையென்று
சபித்தார். அரசன் சுக்கிராசாரிக்குத் தயவுவரும்படி
அநேக விதமாய்த் துதித்து நமஸ்காரஞ்செய்து, ஓ
ஐயனே!உங்கள் கட்டளையை மீறுவதற்கு அவ்வளவு
வல்லமை எனக்கில்லை. அந்த விருத்தாந்தத்தைக் கூ
றுகிறேன் சற்று நிதானித்துக்கேட்டு, அதன் பின்பு
என்னைத் தண்டியும். அஃதென்ன வென்றால், ஒருநா
ள் இரவில் நித்திரை வாராமலிருந்தது. நித்திரைவரு
கிற பரியந்தம் உலாத்துவோமென்று அந்தப் புரத்தி
லிருக்கிற சோலையிற் சென்றேன். அப்போது சன்
மிஷ்டை என்னிடத்துவந்து, தன்னைக் கலந்து கூட
அநேக விதமாய்ப் பிரார்த்தித்தாள். தாங்களிட்ட
கட்டளையை அவளுக்குத் தெரிவித்துப் பின்னிடைந்
தேன். சன்மிஷ்டை மறுபடியும் என்னைமறித்து என
க்கொரு வரங்கொடுமென்று கேட்டுக் கொண்டாள்.
அவ்வரத்தைக் கொடாவிட்டால் அரசுக்கழகல்லவெ
ன்று யோசித்து, நீ கேட்டவரத்தைக்கொடுக்கிறேன்
கேளென்றேன். சன்மிஷ்டை புத்திரசந்தானவரம் பா
லியுமென்று கேட்டாள். வாக்குத்தத்தம் நிறைவேற
அவளைக் கூடிக்கலந்தேன். அதற்காக எனக்குக் கன
வருத்தமான துன்பத்தை யனுபவிக்கும்படி சபித்த
து தகுதியல்லவென்று வேண்ட, சுக்கிராசாரிகொண்
ட கோபந்தணிந்து, அடடா!! மோசம்வந்தது. முன்
பின் யோசிக்காமல் சாபத்தைக் கொடுத்து விட்டோ
மே: அச்சாபம் அனுபவிக்காமல் நீங்காதே: இதற்கெ
ன்ன செய்கிற தென்று யோசித்து அரசனைப் பார்த்
துக் கூறுகிறார்: ஓ அரசனே ! நான்கொடுத்த சாபத்
தை அனுபவிக்கத்தான் வேண்டும். ஆனால் நீர் வேண்
டிக் கொண்டதினால் உமது புத்திரர்கள் வாலிபதசை

யடைகிறபரியந்தம் அனுபவியும். அதன்பின்புஉமது வார்த்திப தசையை அப்புத்திரர்களில் ஒருவனுக்குக் கொடுத்துவிட்டு, உமக்கு இஷ்டமானவைகளை யனுபவித்து, மறுபடியும் எந்தப் புத்திரனிடத்தில் உமது வார்த்திப தசையைக் கொடுத்தீரோ, அப்புத்திரனுக்கே அந்த வாலிப தசையையும் அரசையும் கொடுத்துவிட்டு, வார்த்திப தசையோடு காட்டிற்சென்று தவஞ்செய்து பரமபதம் சேருமென்று மறுசாபங் கொடுத்து புத்திரியைப் பார்த்து, ஓ அம்மணீ! கணவன்தான் பிசகினாலும் அதை மனதிலடக்காமல் எனக்கு வெளிப்படுத்தினாய். அதனால் யோசிக்காமல் சாபத்தைக் கொடுத்துவிட்டேன். இதனாலே உனக்குத்தான் கெடுதி. இனியாகிலும் பொறை யுடைமையையே நிறை உடைமையாகத் தரித்திருவென்று புத்திசொல்லி உடனேசுக்கிராசாரி மகளிடத்து விடைபெற்றுத் தமது இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார்.

இங்கே அரசனுக்குச் சுக்கிராசாரி இட்டசாபம் வந்தடைந்து, உடல்முழுவதும் தளர்ந்து, நரைதிரையுடைத்தாகி, இருமல்வாதிக்கக் குழகுழெனஉமிகிறான். அப்போது வழவழெனஒழுகியகோழைகள்மார்பிலும் வயிற்றிலும் வீழக் கடல்சூழ்ந்தநெடிய உலகத்தை ஒருதோளினிற் றாங்கிய தன்னைசிலர் எடுக்கவும் சிலர் பிடிக்கவுமா யிருந்து, பலவகை இமிசையடைந்து, புத்திரர்கள் வாலிப தசையையே இதற்கு அவுஷதமென்று நினைத்து, அப்புத்திரர்கள் வாலிபதசை எப்போ தடைவார்களென்று கருதி யிருந்தான். இப்படி சிலநாட் சென்றபின்பு தெய்வயானை வயிற்றிற்பிறந்த இரண்டு புத்திரர்களும் சன்மிஷ்டை யிடத்துதித்த மூன்று பிள்ளைகளும் வாலிப தசையை அடைந்தார்கள். அரசன் சொந்த நாயகியாகிய தெய்வயானையின் புத்திரர்களை அழைத்து, அப்பா மக்களே! உங்களில் ஒருவருடைய வாலிப தசையை எனக்குக் கொடுத்து, என்வார்த்திபத்தைக் கைக்கொண்டு வருத்தத்தை நீக்குங்கள். சிலநாட் சென்றபின்பு உங்கள் வாலிப தசையை உங்களுக்குக்கொடுப்பதன்றிஇவ்வரசையுங்கொடுத்து, என்வார்த்திபத்தைவாங்கிக்கொண்டுயான் தவத்துக்குச் செல்கிறேனென்றான். புத்திரர்களிருவரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து, அரசன் படுகிற அவஸ்தையையும் நோக்கி, அரசன் கருத்தின்படி நமது வாலிபத்தைக் கொடுத்து வார்த்திபத்தை நாமேற்றுக் கொண்டு துன்பப் படுகிறதைவிட, அரசனிடம் சாபத்தை யேற்று வருத்தப்படுதல் நன்மை யென்று மதித்துச் சொல்லுகிறார்கள்: ஓ ஐயனே! நீர் எல்லாப் பாக்கியங்களையும் அநுபவித்திருக்கிறீர். நீரே இன்னும் இம்மையின்பத்தைக் கருதி எங்கள் வாலிபத்தைக்கேட்கிறீர். நாங்களோ இன்னும் யாதொரு சுகத்தையும் அறியோம். ஆதலால் கிருபை கூர்ந்து எங்களை மன்னிக்க வேண்டுமென்று கூற, அரசன் மிகுந்த கோபங்கொண்டு, புத்திரருக்குக்கடமை தந்தைவாக்கை நிறைவேற்றல். இத்தருமத்தை யுணராமல் என்வாக்கை மறுத்தீர்கள். அதனாலே நீங்களிருவரும் அரசரிற் பிறந்தும் கிராதர் தன்மையை ஏற்றதனால் மகாபாவிகளாகி, எனது அரசினையுமிழந்து வேடராகக்கடவீர்களென்றுசபித்தான். புத்திரர்கள் அச்சாபத்தை ஏற்றுக் கிராதகராகிக் காட்டிற் சென்று, அங்கிருக்குங் கிராதருக்கெல்லாம் அரசரா யிருந்தார்கள்.

அப்பால் அரசன் அசுரர் குலத் தலைவன்பெற்ற சன்மிஷ்டையினிடத்து உதித்த மூன்று புத்திரர்களையும் அழைப்பித்து, ஓ புத்திரர்களே! உங்களில் ஒருவருடைய வாலிபத்தை எனக்குக்கொடுத்து என் வார்த்திபத்தைக் கைக்கொள்ளுங்களென்று வேண்ட, மூவரிலிருவர் மனமில்லாமல் பின்னிடைந்தார்கள். அவ்விருவர்க்கு மூத்தவனாகிய பூருவென்பவன் பார்த்து, ஆ! ஆ! உலகத்தில் தந்தையின் சொல்வழிநடப்பதே புத்திரர்களுக்குக்கடமையென்று வேதாகமங்கள் முறையிடுகின்றன. நம்மைப்பெற்றுவளர்த்த பிதாவாசைக்கு இந்த உபகாரந்தானா செய்கிறது? இன்னும் அதிகமான உபகாரம் செய்யவேண்டும். இந்த அல்பமான உபகாரத்துக்கு நாம் சம்பந்தப்படாமற் போவோமாகில் நாமெடுத்தயாக்கைக்குப் பயனென்னவென்று யோசித்து, அரசனைப்பார்த்துச்சொல்லுகிறான். ஓ ஐயனே! இப்போது தாங்கள் கேட்ட கருத்தின்படி என்வாலிபத்தைக் கொடுத்தேன். உமது வார்த்திபத்தை எனக்குக்கொடும். என்றுரைக்கவும் அரசன் மகிழ்ந்து தன் வார்த்திபத்தைப் பூருவுக்குக்கொடுத்து அவனதுவாலிபத்தைத் தானேற்று, மற்ற இரண்டுபுத்திரர்களை நோக்கி, ஓ இரக்கமற்ற புத்திரர்களே! தந்தைவழி நிற்றல் மைந்தர்களுடையகடமை. அதைநீக்கி என்னை வெறுத்தபடியால் ஒருவன்மதுவிற்கிறவனாகவும் மற்றொருவன் மச்சம் விற்கிறவனாகவும் போகக்கடவதென்றுசாபமிட்டுத் தன்கருத்துக்கிசைந்தபடி இன்பத்தை யனுபவித்துச், சிலநாள் சென்றபின்பு தனக்கு வாலிபத்தைக் கொடுத்த பூருவை அழைத்து அவன் பெற்றிருந்த வார்த்திபத்தைத் தானேற்று வாலிபத்தை அவனுக்குக்கொடுத்து, மந்திரிமுதலாகியபலரையும் அழைப்பித்து யாவருமறியத் தன்னரசை அப்புத்திரனுக்குக் கொடுத்து மகுடாபிஷேகஞ்செய்து ஆசீர்வதித்து, அப்புத்திரனைப் பார்த்துச் சொல்லுகிறான். அப்பாமகனே! நானிருந்து அரசுசெலுத்தினதுபோல் நீ அரசைச்செலுத்து. இதோ நான் தவஞ்செய்து மறுமைலாபத்தையடைய வனத்துக்குப்போகிறேன். நீசாக்கிரதையா யிருவென்றுகூறிப் புத்திரனிடத்து விடைபெற்று, அவ்விரண்டுஸ்திரீகளையு நீக்கி, மரவுரிதரித்துக் காட்டிற்சென்று முனிவர்களநுக்கிரகத்தினாலே தவநிலைசேர்ந்து, அநேகநாள் ஒற்றைக்காலினின்றும் அநேகநாள் சலத்தில் நின்றும் அநேகநாள் சலபானஞ்செய்யாமலும் தவ

சிரேஷ்டர் யாரும் ஆச்சரியப்படத்தக்கதாகப் பிரமதேவனைக் கருதி ஒரே நிலையாய்த் தவஞ்செய்தான். இப்படி செய்த தவத்துக்குப் பிரமன் வியந்து, அரசனுக்குமுன் பிரசன்னமாகி, ஓ அரசனே! நீ மிகவும் அருமையான தவத்தைச்செய்தா யாதலால் உன் கருத்தென்னவென்று வினவ, அரசன் பிரமனை வணங்கி, அநேகவிதமாய்த் துதித்து, ஆண்டவனே! உமது சத்தியலோக வின்பத்துக்குப் பாத்திரனாகவும், நான் எந்தலோகம்நினைக்கிறேனோ அந்த லோகங்களுக்கெல்லாம் செல்லவும், அங்கிருக்கும் விநோதங்களையறியவும், ஒரு திவ்விய விமானம் உதவவேண்டு மென்று பிரார்த்திக்க; பிரமன் அரசன்கருத்துக் கிசைந்தபடி ஒருதிவ்வியவிமானமும் மற்ற இரண்டுவரமும் கொடுத்துத் தனதிருப்பிடத்திற்குச் சென்றான்.

உடனே அரசன் பிரமன்கொடுத்த திவ்வியவிமானத்திலேறிச் சத்தியலோகஞ்சேர்ந்து, அங்கிருக்கும் இன்பங்களைத்துய்த்து, தனக்கு எந்தலோகம் பார்க்கவிருப்பமோ அந்த லோகங்களிற் சென்று, அவ்விநோதங்களையெல்லாம் நோக்கி இனிதுவீற்றிருக்கிறான். ஒருநாள் அரசன் இந்திரலோகம் பார்க்கக்கருதி விமானத்திலேறித் தேவேந்திர லோகத்துக்குவந்தான். அதை இந்திரனறிந்து, மஹா தவசிரேஷ்டனாகிய அரசன்வருகிறான் நாம் சும்மா யிருக்கலாகாது எழுந்தெதிர்கொள்ள வேண்டுமென்று நினைத்து, அரசனுக்கு முன்வந்து தகுந்த மரியாதையை நடத்தி, தனது சிங்காதனத்துக்கு ஒப்பான சிங்காதனம் ஒன்றழைப்பித்து அதிலிருக்கச்சொல்லி, ஓ யயாதிமகாராஜனே! உன்கருத்துக் கிசைந்தநாள்வரைக்கும் இந்த லோகத்தி லிருக்கலாம் என்று கூறித் தன்னொப்பாக வைத்திருந்தான். இப்படி சிலநாட்சென்றபின்பு ஒருநாள் இந்திரன் அரசனைச் சோதிக்கக்கருதி, ஓ மஹாராஜனே! நீமானுஷதேகியா யிருந்தும், அரசுர் குலகுருவாகிய சுக்கிராசாரிபுத்திரி தெய்வயானையையும் அசுரர்குலத் தலைவன்மகளாகிய சன்மிஷ்டையையும் புணர்ந்து, முடிவில் பிரமதேவன் கிருபையை அடைந்து சத்தியலோக வாழ்வைப்பெற்று மற்ற எல்லாலோகங்களின் இன்பத்தையுமடைந்தாய். உன்னைப்போல கனவான் சொற்கமத்திய பாதாளலோகங்களிலு மில்லை. தவமென்பது உன்னிடத்தில் தான் உதித்தது என்று புகழ்ந்துபுகல, அரசன் இந்திரன்கருத்தறியாமல், ஓ தேவராஜனே! தவத்தி லென்போல் உயர்ந்தவர் மூன்றுலோகங்களிலு முண்டா? அப்படி இருப்பவர்களை ஒருவரைக் காண்பியும் என்றுகளிப்புடன்கூற, இந்திரன் சினங்கொண்டு அரசனைப்பார்த்து, ஓ யயாதி! எப்போதும் ஒருவன் தன்னைத்தானே புகழொணாது. அப்படிப் புகழுவானாகில் அன்றையதினமே அவன் செய்த எல்லாநலமுங் குன்றி, இல்லாமையை மேற்கொண்ட பொல்லாதவன்போல் ஆவானென்று வேதங்கள் முறையிடு கின்றன. அதையுணர்ந்தும் உணராதவர்போல் உன்னை நீயே புகழ்ந்தமையால், இனி யிந்தச் சொற்கலோக வாழ்வைவிட்டுப் பூலோகத்திற்செல்லென்று கட்டளையிட்டுத் தனதருகிலிருக்கிறதூதரைநோக்கினான். உடனேதேவதூதர்கள் அரசனிடத்து நெருங்கினார்கள். அரசன்கண்டுதிகிலடைந்து, ஆ! ஆ! மோசம்போனோம். தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுகிற ஒருவன் தண்ணீரைவார்த்து ஏற்றிய விளக்கைப்போ லாவானென்று நூல்களால் அறிந்திருந்தும், மறந்து நம்மைநாமே புகழ்ந்தோமே: அதனால் இந்திரன் பூலோகத்திற் செல்லக் கட்டளை யிட்டானே: தூதர்களு நெருங்கினார்களே: இனிக்ஷணப்பொழுதும் இந்தலோகத்தில் நம்மைவைக்கார்களென்று ஏக்கங்கொண்டு, இந்திரன் அடிமேல் விழுந்து, ஓதேவராஜனே! நான்செய்த அபசாரத்தைப்பொறுத்து, என்னை பூலோகத்தின்கண் அனுப்பிவிக்காமல் அந்தரத்திலாவதுமற்ற எந்தலோகத்திலாவது போயிருக்கக் கிருபைபுரிகவென்று மிகுந்த ஆராமையோடு பலவாறு பிரார்த்தித்தான்.

அதன்மேல் இந்திரன் மகிழ்ந்து தூதர்களைப் பார்த்துச் சொல்லுகிறான்; ஓ தூதர்களே! (தன்வாய்ச்சிதேவி தன்னையழித்தது.) என்கிற வாக்கியம்போல் தன்வாக்கினால் தனக்குக் கெடுதி தேடிக்கொண்ட இந்த அரசனை சொற்கத்துக்கும் பூலோகத்துக்கு மத்தியிலிராநின்ற அந்தரலோகத்திற் சேர்த்து விடுங்களென்று கட்டளையிட, தூதர்கள் அவ்வாறே அரசனை அந்தரலோகத்தில் விட்டுவிட்டார்கள். அரசன் அந்தர லோகத்திலிருந்து, ஒருநாள் அந்த லோகத்தின் விநோதங்களைப் பார்வையிட்டு வருகிறபோது ஓரிடத்தில் இரண்டுபேர் தோற்றக்கண்டு, அவர்களிடத்திற் சென்று சொல்லுகிறான்: ஓ கனவான்களே! நீங்கள்யார்? நீங்கள் என்னதவஞ்செய்து இந்த அந்தரலோகத்தை அடைந்தீர்கள்? அதை எனக்குத் தெரிவிக்கவேண்டுமென்று வினவினான். அவ்விருவரும் அரசனைப்பார்த்துச் சொல்லுகிறார்கள்: ஓ மஹாத்மாவே! நாங்கள் பூலோகத்தில் குருநாடு என்றொருநாடுண்டு. அந்த நாட்டில் ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் வணங்கச் செங்கோல் நடாத்திய யயாதிமஹாராஜனுடைய புத்திரிவயிற்றிற்பிறந்த புத்திரர்கள். எங்களுக்குத் தபதி குமாரர்களென்றுபெயர். நாங்கள் ஆத்மலாபத்தைக்கருதித் தவஞ்செய்தோம். அதற்கு இந்த லோகங்கிடைத்ததென் றுரைத்தார்கள். அரசன்மகிழ்ந்து, அப்பாமக்களே! அந்த யயாதியென்பவன் நான்தான். என்பேரன்மார்நீங்கள். உங்களைக்காணப்பெற்றது என்தவப்பயன்றானென்று அம்மக்களை வாரித்தழுவி யாதரித்தான். அம்மக்கள் மூதாதையாகிய யயாதியை வணங்கிச் சொல்லுகிறார்கள். ஓ ஐயா! எங்களுக்கு முன்னமே நீர்தவஞ்செய்ய வனத்திற்சென்றவர் இதுவரைக்கும் எந்தலோகத்தி லிருந்தீர்? அந்த விருத்தாந்தத்தைக் கூறுமென்று வேண்ட யயாதி தான்

தவஞ்செய்ததும், சத்தியலோக மடைந்ததும், பின்பு இந்திரனால் அந்தரலோக மடைந்ததும் ஆதியோடந்தமாகச்சொல்ல; தபதிபுத்திரர்கள் கேட்டு ஒருவசனஞ் சொல்லுகிறார்கள். ஓ ஐயா! புண்ணியமெது? பாவமெது? பிரமசாரி- கிரகஸ்தன்- வானப்பிரத்தன்- சன்யாசி-என்கின்ற நால்வர்களின் ஒழுக்க மென்னை? கர்ப்ப உற்பத்தி எவ்வகைப்பட்டது? இவைகளை யாங்கள் உணர அநேகநாள் கருதி யிருந்தோம். இன்றையதினம் எங்கள்கருத்து நிறைவேறக் கிருபைகூர்ந்து, அவற்றை விளங்க வுரைக்கவேண்டு மென்றார்கள். யயாதி மகிழ்ந்து பேரன்மார்களைப் பார்த்துச் சொல்லுகிறான்.

ஓமக்களே! புண்ணிய மென்பது யாதெனில், பொறாமையும்- பேராசையும்-கோபமும்-கடுஞ்சொல்லும்-ஆகிய நான்கினை நீக்கி நிற்றல். அதனுடன் அவரவர்க் கிசைந்தமாத்திரம் தருமத்தைப்புரிந்து, மனம் வாக்குக் காயங்களினாலே உபகாரங்களைச்செய்து, அவ்வுபகாரங்களைத் தான்வகித்துக்கொள்ளாமல் தங்கள் தங்கள் பகவதார்ப்பிதம் பண்ணுவது புண்ணியம். பகவதார்ப்பிதஞ் செய்யாமல் தாமே வகித்துக் கொள்வாராகில், அப்புண்ணியத்தை அனுபவிக்க மறுபடியுஞ் சனிக்கவேண்டும். பாவமென்பது யாதெனில்,மேற்கூறிய பொறாமை-பேராசை - சினம் -கடுஞ்சொல்- இந்நான்கினை வகித்தல். அதனிலும் பிறர்க்குபகாரஞ் செய்யாதிருத்தலும் - தன்னுயிர்போல் பிறவுயிரைக்கருதாமற் கொன்று தின்றலும் - பொய்மை கூறுதலும்- சாதியாசாரங்கெடுதலும் - இவை முதலாயின பெரும்பாவமாம். பிரமசரியத்தின் இயல்பு என்னெனில்-ஐந்துவயதில்வேதவிதிப்படிமுப்புரிநூலணிந்துகுருவைச்சேர்ந்து, குருவின்கட்டளையில் நின்று,வேதாகமமுதலியவற்றைக் கற்றுணர்ந்து, பதினாறு வயதளவும் ஆசாரியர் நிரூபித்தபுசிப்பை அக்குருவமிசபரம்பரையிற் பிச்சையெடுத்துப் புசித்து,எண்ணெய்-தேன்-பரிமளம்-புஷ்பம்-தாம்பூல முதலியவற்றை நீக்கி, மஹாபுத்தியாய்க் காலையிலுமாலையிலும் சூரியனையும் அக்கினியையும் குருவையும்அன்புடன்வணங்கி,காமத்தின் வழியில் கருத்தைச்செலுத்தாமல், ஸ்திரீகளைக் கனவிலும் நினையாம லிருப்பது பிரமசரியம். கிரகத்துவவியல்பு என்னெனில்- பதினாறுவயதின்மேல்ஒருகன்னிகையை வேதாகம விதிப்படி மணந்து, இருவருங் கூடுங் காலமறிந்து கூடித், தருமத்தின்வழியினின்று பொருளைச் சம்பாதித்துப், பிரமசாரி-வானப்பிரத்தன் - சன்யாசி - இம்மூவர்க்கும்- நோய்-பசி- பிணி- முதலிய இடையூறு உறாதிருக்கத் தகுந்த முயற்சியினின்று, அநாதைகளை ஆதரித்து,ஆதுலர்க்குக்களிப்புறக்கொடுத்துத், தன்னிடத்தில்வந் திறந்தவர்க்கு நீர்க்கடன் முதலியவற்றை நடத்தித், தெய்வத்துக்கு நித்தியபூசை திருவிழா முதலியவற்றைச் செய்து, பிதிர்த் தேவதைகளுக்கு யாகாதிக் கிரமங்களாலும் நீர்க்கடனாலும் திர்ப்த்திசெய்வித்து, வந்த விருந்தினரைப் பாதுகாத்து,இனிவரும் விருந்துக்கெதிர்பார்த்துச், சுற்றத்தார்க்கு மகிழ்வுண்டாக வேண்டியவற்றையுதவித், தானும் தன்மனைவியும் ஒருவழிப்பட்டு, நடுவுநிலைமையை அனுசரித்து,அன்புடைமை- அடக்கமுடைமை- ஒழுக்கமுடைமை -பொறையுடைமை- இவையுற்று, பிறர்பொருளிச்சித்தலையும்- புறங்கூறுதலையும் - பயனிலாதனவற்றை அநுசரித்தலையும்-பாவச்செய்கையையும் -கைவிட்டு,உலகநடையினையறிந்து நடந்து, புகழுடம்பினராகி, யாவரிடத்தும் அன்புடையவராய் இனியவசனங்களைவசனித்துப்,புத்திரபாக்கியமுதலியவற்றைப்பெற்று, இம்மையில்தானே அதிக இன்பத்தை யனுபவித்து, மறுமையிலும் தேவரெல்லாம் துதிக்கப் பரமானந்தத்தை அடைவது கிரகத்துவம். வானப்பிரத்தமென்பது என்னெனில்- மனைவியோடாவது அல்லது மனைவியை மைந்தரிடத்தில் வைத்தாவது தான் வனத்திற்சென்று, மெய்- வாய் - கண் - மூக்கு - செவி - வழியாகிய சத்தம்- பரிசம் - ரூபம் - ரசம் - கந்தம் - என்கிற ஐந்து ஆசைகளையும் நாளுக்குநாள் அடக்கி, விரத முதலியவற்றை அநுசரித்து, ஒருயிருக்கும் இடையூறுசெய்யாமல் தவத்தில்நின்று,நல்லமுயற்சியைஅதிகமாக அநுசரித்து, மனதை மிகவும் வருத்தாமல் (சிறுபிள்ளைகளை விநோதமுன்னிலையில் சமாதானஞ்செய்து அணைப்பதுபோல்) நாளுக்குநாளொடுக்கி, மனம் அறிவோடு கலந்து தற்பதத்தை யுணருகிறவரைக்கும் ஆசிரியன் கட்டுரையையும் சாஸ்திரவிதியையும் கைப்பிடித்துக், கோபமுதலியவற்றைஅடக்கிநிற்றல்வானப்பிரத்தம். சன்யாசித்துவம் என்பதென்னெனில்- வானப்பிரத்தத்தினியல்பு முழுவதும் அடைந்து, இயமம்- நியமம் - ஆதனம்- பிராணாயாமம் - பிரத்தியாகாரம்- தாரணை - தியானம் - சமாதி - என்னும் அஷ்டாங்க யோகத்தை வகிக்கவேண்டும்.

இவற்றுள் இமயமென்பது,கொல்லாமை- மெய்மைகூறல் - கள்ளாமை -பிறர்பொருளைஇச்சியாமை- இந்திரியமடக்கலாம். நியமமென்பது,தவம்-தூய்மை- தத்துவநூலோர்தல் - மனங்களித்திருத்தல்- தெய்வத்துக்கு வழிபடலாம். ஆதனமென்பது,சுவத்திகம்- கோமுகம்-பதுமம்-வீரம்- கேசரி பத்திரம்- முத்தம்- மயூரம்-சுகம்-என ஒன்பதுவகையினையுடைத்தாகும். அவற்றுள் - சுவத்திகமென்பது, தொடைக்கும்முழங்காற்கு நடுவே இரண் டுள்ளங்காலையுஞ் செலுத்தி இறுமாந்திருத்தல். கோமுகமென்பது, சகனபக்கத்தில் இருகாற்பரட்டையு மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித்திருத்தல். பதுமமென்பது, இருதொடை மேலும் இரண் டுள்ளங்காலையு மாறித் தோன்றவைத்தல். வீரமென்பது, வலத்தொடையி லிடக்காற்பரட்டைச்சேர்த்து இறுமாப்புற்றிருத்தல். கேசரி யென்பது, பீசத்தின் கீழ்ச் சீவனியிடத்துப்

பரட்டை வைத்து இடமுழங்கையை முழந்தாளில்
வைத்து அங்குலிவிரித்து நாசியைப்பார்த்திருத்தல்.
பத்திரமென்பது,பீசத்தின்கீழ்ச் சீவனியிடத்து இரு
காற்பரட்டையும் வைத்து அவ்விருபதத்தையு மிரு
கையா லிறுகப் பிடித்து அசையாதிருத்தல். முத்த
மென்பது, இடக்காற் பரட்டாற் சீவனியை யழுத்தி
வலக்காற்பரடப்பரட்டின்கீ ழூந்தவிருத்தல். மயூரமெ
ன்பது,முழங்கையிரண்டு மூந்திப்புறத்திலழுந்தப் பு
வியிற் கையூன்றிக் கால்நீட்டித்தலைநிமிர்ந்திருத்தல்.
சுகமென்பது, சுகமுந்திடமு மெவ்வாறிருக்கி னெய்
துமோ வவ்வாறிருத்தலாம். பிராணாயாம மென்பது,
பிராணவாயுவை இரேசகபூரக கும்பகஞ்செய்தலாம்.
பிரத்தியாகாரமென்பது,உபாதியைநீக்கிஉண்ணோக்க
லாம். தாரணை யென்பது, கண்டம் - இதயம் - நெற்
றி - கபாலம் - நாபி-இவற்றிலொன்றிற் சந்ததம் சிந்
தைவைத்தலாம். தியானமென்பது, ஐம்புல மடக்கிச்
சிவயோகஞ் சேர்தலாம். சமாதியென்பது, இந்திரிய
முதலிய தத்துவச் சேட்டைகட் கேதுவாய் யாக்கை
யுணின்று அவற்றோடுகூடினும் அதிற்பற்றின்றியிரு
க்கும் ஆன்மாவாகிய தன்னைத்தான் காண்டலாம்.

தத்துவம் - ௯௬ - அவை, ஆன்ம தத்துவம் -
௨௪. நாடி - ௰. அவத்தை - ௫. மலம் - ௩. குணம்-
௩. மண்டலம்-௩. பிணி-௩. விகாரம் - ௮. ஆதாரம்-
௬. தாது-௭. வாயு-௰. கோசம்—௫. வாயில்-௯.ஆ ௯௬.
இவற்றுள்-ஆன்மதத்துவமான, பூதம்-௫.புலன்-௫.
ஞானேந்திரியம்-௫. கருமேந்திரியம்-௫. கரணம்-௪.
ஆ ௨௪.பூதம்,௫. நிலம் - நீர் - தீ- காற்று - விசும்பு.
புலன், ௫.சத்தம் - பரிசம் - ரூபம் - ரசம் - கந்தம்.
ஞானேந்திரியம், ௫.மெய்- வாய்—கண்- மூக்கு-செவி.
கர்மேந்திரியம், ௫. வாக்கு — பாதம்-பாணி - பாயுரு.
உபஸ்தம். கரணம், ௪. மனம் - புத்தி - அகங்கா
ரம் - சித்தம். நாடி, ௰ - என்பவை,சுழுமுனை-இடை-
பிங்கலை - காந்தாரி- அத்திரி- சிகுவை - அலம்புடை-
புருஷன் - குரு - சங்கினி.இவற்றுள் சுழுமுனை யெ
ன்பது, ஆதாரமாறினும் ஊடுருவி நிற்பது. இடை-
பிங்கலை - என்னும் இரண்டும், கத்திரிகைக் கால்போ
ற் பின்னிற்பன. காந்தாரி யென்பது, நாபியிற் றோ
ன்றிச்சத்தமெழுக்கும்எழுநாடியாய்க்கண்டத்தினிற்
கும். அத்தி-சிகுவை-இரண்டும், பத்துநாடி யுற்றுக்
கண்ணில் நிற்பன. அலம்புடை-புருஷன்-இரண்டும்,
செவியில் நூற்றிருபது நரம்புட னிருப்பன. குருயெ
ன்பது, நாபியுறைந்து குய்யம்பற்றிநிற்பது. சங்கினி
யென்பது, உபஸ்தத்தைப்பற்றியிருக்கும். அவஸ்தை
௫-என்பன, சாக்கிரம் - சொப்பனம் - சுழுத்தி - துரி
யம் - துரியாதீதம். மலம் - ௩ - ஆவன, ஆணவம் -
மாயை - காமியம். குணம்-௩-ஆவன, சாத்துவிகம்-
இராஜதம் - தாமதம். இவற்றுள் - சாத்துவிக மென்
பது, ஞானம் - அருள் - தவம் - பொறுமை - வாய்
மை - மேன்மை - மோனம் - ஐம்பொறியடக்கல்-இ
வையுற் றிருக்கும். இராசத மென்பது, மனவூக்கம்-
ஞானம் - வீரம் - தவம் - தருமம் - தானம் - கல்வி-
கேள்வி - இவையுற் றிருக்கும். தாமதமென்பது, பே
ருண்டி - நெடுந்துயில் - சோம்பு - நீதிவழு - ஒழுக்க
வழு - வஞ்சம் - மறதி - பொய் - கோபம் - காமம்-
கொலை - இவையுற்றிருக்கும். இந்த மூன்றுகுணங்க
ளில் ஒவ்வொன்றுமூன்றையுமேற்றிருக்கும். ஆனால்
எந்தக்குணம் அதிக சம்பந்தப்பட் டிருக்கின்றதோ
அக்குணத்தினியல்பு பெருகி மற்றக் குணங்களின் த
ன்மை குறைந்திருக்கும். மண்டலம் - ௩, அக்கினி
மண்டலம் - ஆதித்த மண்டலம் - சந்திர மண்டலம்,
பிணி - ௩, வாதம் - பித்தம் - சிலேஷ்மம். விகாரம்-
௮, காமம் - குரோதம் - லோபம் - மோகம் - மதம்-
மாச்சரியம் - இடும்பை-அசூயை. ஆதாரம்-௬, மூலா
தாரம் - சுவாதிஷ்டானம் - மணிபூரகம் - [1]அநாகதம்-
விசுத்தி-ஆக்ஞை. இவற்றிற்கிடம் முறையே, குதம்-
குய்யம் - நாபி - இதயம் - அடிநா - நெற்றி. தாது-
௭, இரதம் - இரத்தம் - சுக்கிலம் - மூளை - தசை -
என்பு-தோல். வாயு-௰, பிராணன் - அபானன் - சமா
னன் - உதானன் - வியானன் - நாகன்-கூர்மன்-கிரு
தரன் - தேவதத்தன் - தனஞ்சயன். இவற்றுள்-பிரா
ணன், இதயத்திருக்கும். அபானன், உச்சர்க்கத்த
லத்திடையிருக்கும்.சமானன், தொண்டையின்சந்தி
லிருக்கும். உதானன், நாபியில் நிற்கும். வியானன்,
சரீரமுழுதும் வியாபித்திருக்கும். நாகன், நீட்டலும்
முடக்கலும் கிளர்த்தலுமா யிருக்கும். கூர்மன்,
உரோம புளகத்தைக் கொடுக்கும், கிருதரன். முகத்
திடைநின்று தும்மலுஞ் சினமும் வெம்மையும் விள
க்கும். தேவதத்தன், ஓட்டமு மிளைப்பும் வியர்த்த
லும் கொடுக்கும். தனஞ்சயன், உயிர்போகினும்
போகாது உடலினை வீக்கித் தலைகிழித்தகலும். இனி
கோசம் - ௫, அன்னமயம் - பிராணமயம்-மனோமயம்
விஞ்ஞானமயம் - ஆனந்தமயம். இவற்றுள் - உடல்,
அன்னமயகோசம். கருமேந்திரியமும் - பிராணனும்,
பிராணமய கோசம். கருமேந்திரியமும் - மனமும்,
மனோமயகோசம். ஞானேந்திரியமும்-புத்தியும், விஞ்
ஞானமய கோசம். அவித்தை, ஆனந்தமய கோசம்.
வாசல் - ௯, கண் - காது - மூக்கு-வாய்-குதம்- குய்
யம். ஓ என்னருமைப் பௌத்திரர்களே ! இவற்றை
யுணர்ந்து, தவத்தால் வாய்மையை அடைந்து, வாய்
மையால் தூய்மையையடைந்து, தூய்மையால் அவா
வைப் பற்றறச்செய்து, அதனால் மறுபடியும் சனிக்
காதிருக்கிற இயல்பையுடைய பரத்திற் சேர்ந்து பே
தமற நிற்றலே சன்னாசித்துவம்.

இப்பால்கருவுற்பத்தி எவ்வாறெனில்,மாதர்கள்
கைவிலக்கமாகிநாலாநாள்ஸ்நானஞ்செய்து அன்றை
யதினம் இரவில் புருஷனைக் கூடுகிறது. அன்றுமுத
லேழுநாளில் ஒருநாள் கருத்தரிக்கிறது. அக்கரு உரு
வாகி, அவ்வுருவுக்குத் தாய் உயிரானவாயு கொஞ்சங்

கொஞ்சமாய்ப்பொருந்தி உருவைவளர்த்துவரும், கர்த்தர் விதித்தநாள் நெருங்கினால் தாயினது பிராண வாயுவே அக்கருவுருவை வெளிப்படுத்தும். அவ்வுரு பூமியில் வந்தபின்பு ஐம்பொறியா லடையும் பயனைப் பெறும். என்று சொல்லி வரும்போது தபதி புத்திரர்கள்மிகுந்த மகிழ்ச்சி அடைந்து, ஓ ஐயா! அருமையாயிருக்கிற எவற்றினும் அதிக அருமையா யிருக்கிற இந்தத் துறவறநெறி எங்களுக்குக் கிடைக்குமோ சொல்லுகவென்று வினவ, ஓ பௌத்திரரே! ஒருவர் ஒருகாரியத்தை உட்கொண்டு அதனையடையவேண்டுமென்று உறுதியாய்நம்பி முயற்சிசெய்வாராகில், அக்காரியம் கைகூடுமென்பதற்கு ஐயமில்லை. தாம் கருதியகாரியத்தில் அதிகமுயற்சியாயிருந்து வரவர இலேசாக முயற்சிசெய்வாராகில், அதனாலே சாகத்தகுந்த கெடுதி நேரிடும். ஆதலால் உயிர்க்கொரு தீங்குவந்தபோதிலும் தாம்கருதியகாரியம் நிறைவேறுகிற வரைக்கும் சரீர அவஸ்தையையும் பசிநோயையும் நித்திரையையும் நீக்கி, யார்யார் என்னதீங்கு செய்தபோதிலும் அதனை நினைக்காமல், இது இழிவு இதுசிறப்பு என்று மனதிற் கொள்ளாமல், துணி வுடைமையைப் பூண்டு, மேலான விநோதங்கள் தன்கண்முன் தோன்றின போதிலும் அதன்மேல் கருத்தைச் செலுத்தாமல், மலையைப்போலக் கலங்காநிலைமையி லிருக்கவேண்டும். அப்படி நீங்களும் இருப்பீர்களாகில் பெரும்பய னடைதலுமன்றி, உங்கள்முன்னோர்களும் பெறுதற்கரிய பேறுபெறுவார்க ளென்று பேசித் தனதிருப்பிடத்தில் வந்திருந்தான். அம்மக்கள் அந்தரலோகத்தில் சிலநாள் அருமையான நன்முயற்சியி லிருந்தார்கள்,

இந்திரன் அவர்கள் செய்து வருகிற நன்முயற்சியை அறிந்து, தன்னருகி லிருக்கிற தூதுவர்களைப் பார்த்து, ஓ தூதர்களே! ஒரு திவ்ய விமானத்தைக் கொண்டுபோய் அந்தரலோகத்தி லிருக்கிற சந்திர வமிச தபதி புத்திரர்களை அழைத்துவாருங்களென்று கட்டளையிட்டான். தூதர்கள் தேவ விமானத்தோடு அந்தர லோகத்திற் சென்று, தபதி புத்திரர்களை அழைத்தார்கள். தபதிபுத்திரர்கள் எங்கள் மூதாதை இந்த அந்தரலோகத்தி லிருக்க, நாங்கள் மாத்திரம் சொற்கலோகத்தி லிருக்கிறது தகுதியல்ல. ஆதலால் எங்கள்மூதாதையையும் கொண்டுபோகிறதாயிருந்தால் வருகிறோமென்றார்கள். தூதர்க ளந்தச்சேதியை இந்திரனுக்கு அறிவித்தார்கள், இந்திரன் யோசித்து அப்புத்திரர்களையும் அப்புத்திரர் மூதாதையையும் விமானத்தி லேற்றிவாருங்களென்று தூதர்க்குரைத்தான். தூதர்கள் அக்கட்டளைப்படி மூவரையும் விமானத்தி லேற்றிச் சொர்க்கத்திற் சேர்த்தார்கள். குலத்தி லொருவன் பெரும்பயனடைந்தால் அக்குல முழுதும் பெரும்பயனடையுமென்ற வேதவிதி அந்த யயாதிக்குக் கிடைத்தது என்றுவைசம்பாயனர் சொல்ல ஜெநமேஜெய மஹாராஜன் பேரானந்த மடைந்தவர்போல் மகிழ்ச்சிகொண்டு, வைசம்பாயனரை வணங்கி ஒருவசனஞ்சொல்லுகிறான். ஓஸ்வாமி! யயாதி சரித்திரத்தைக்கேட்டு ஆனந்தத்தை அடைந்தேன். இனி யயாதிமுதலுண்டாகிய சந்திரவமிச அரசாது மாக்ஷிமையையும், அவரவர் மரபினொழுங்கையும் புகலவேண்டுமென்று வினவ, வைசம்பாயனர் மகிழ்ந்துரைக்கின்றார்.

துஷ்டியந்தராஜன் சரித்திரம்.

ஓ அரசனே! யயாதிக்குச் சன்மிஷ்டையினிடமாயுதித்த புரூரவன் நாலு வேதம் ஆறு சாஸ்திரம் அறுபத்துநாலு கலைக்கியானங்களைக் கற்றுணர்ந்து மனுசாஸ்திரவிதி பிசகாமல் அரசுசெலுத்தி வருகிறநாளில், கேகயராஜன் புத்திரியான கவுசலையை மணம்புரிந்து, இரதியு மதனும்போற் கூடிக்கலந்து, ஜெனமேஜெயனென்றொரு புத்திரனைப்பெற்றான். ஜெனமேஜெயன் நந்தையென்னும் கன்னிகையைப் புணர்ந்து, பிரர்ஜினன் என்கிற புத்திரனைப் பெற்றான். பிராஜினன் சத்தியென்கிற கன்னிகையை மணந்து, சய்யாதியைப் பெற்றான். சய்யாதி பானுமதி என்கிற கன்னிகையைச் சேர்ந்து, சார்வபூமனைப்பெற்றான். சார்வபூமன் கேகயன் புத்திரியாகிய சுநந்தையைக் கூடி, ஜெயசேனனைப் பெற்றான். ஜெயசேனன் விதற்பதேசத்தரசன் புத்திரியாகிய சுபத்திரையைக் கைப்பற்றி, நயுதனைப்பெற்றான். நயுதன் வசுமதி வசுபுத்திரியாகிய சுதையை வேட்டு, குரோதனைப் பெற்றான். குரோதன் காந்துவையைக் கலியாணம் புரிந்து, தேவாபியைப்பெற்றான். தேவாபி ஒருகன்னிகையை மணந்து, உருசகனைப்பெற்றான். உருசகன் தேவை யென்னுங் கன்னிகையினால் அரிசகனைப் பெற்றான். அரிசகன் தக்ஷகன் புதல்வியாகிய சுவாலாதேவியைத் தழுவி, மதிவானைப்பெற்றான். மதிவான் கோதானம் - பூதானம் - கன்னிகாதானம் - வஸ்திரதானம் - அன்னதான முதலியவற்றைச் செய்து, அனேக சத்திரயாகங்களை நிறைவேற்றினான். இப்புண்ணியத்தினால் சரஸ்வதியென்னும் நதி ஒரு பெண்ணுருவம் தரித்துவந்து அவன்மேல் மயல்கொண்டு கூடி, அவனுக்குத் திடன் என்னும் ஒரு புத்திரனைப் பெற்று வைத்துப் போய்விட்டாள். திடனென்பவன் காளிந்தியைக் கலந்து, நீலனைப்பெற்றான். நீலன் இரத்தின மாலையைப் பரிணயஞ்செய்து, துஷ்டியந்தனைப் பெற்றான். அந்தத் துஷ்டியந்தன் மஹா பராக்கிரமசாலியாய் விளங்கியிருந்தான். அவனாலே இந்தச் சந்திரவம்சம் மிகவும் சிறப்புற்றது.

அஃதெவ்வாறெனில்-அந்தத் துஷ்டியந்தமஹாராஜன் இளமையிலேயே தன் பூமியில் விளைநிலத்தில் உயர்ந்து பருத்து விளங்கியிருக்கும் பெரிய மலைகளையெல்லாம் பார்த்தவர்கள் திடுக்கிடத் தன் கைகளினா

லெடுத்தெறிந்து, குடிகளுக்கு யாதொருகுறைவும்வராமற்பாதுகாக்குந்தன்மையை யுடையவனாயிருப்பான். மகுடாபிஷேகமாயினபின்பு தன்னுயிர்போல்மன்னுயிரனைத்தையும் இரக்ஷிக்குங்கருத்தையுடையவனாய்,மநுசாஸ்திரவிதிபிசகாமல் செங்கோல் செலுத்திவருகிறநாளில்,ஒருநாள்பதினெண்ணாயிரமந்திரிகளும்-ஆறுலக்ஷத் தறுபத் தாறாயிரம் பட்டவர்த்தனரும்-மூன்றுலக்ஷத்து முப்பத்திராயிர மகுடவர்த்தனரும்-இமையபண்டிதர் இராஜபுரோகிதர் முதலானவர்கள் சூழக்கோடிசூரியப்பிரகாசமானசிங்காதனமேறிவீற்றிருக்கிறான். அத்தருணத்தில் குடிகள் யாவரும் திரண்டு கொலுமுகவாசலில்வந்து,தங்கள்வரவைக் காவலாளிகளால் அரசனுக்குத் தெரிவித்து, அரசனுத்தரவின்மேல் கொலுவிற் சென்று அரசனைவணங்கிநின்றார்கள். அரசன் குடிகளுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச்செய்து யோகக்ஷேமமுங் கேட்டான். குடிகள் கும்பிட்டுச் சொன்னார்கள். ஓ அரசனே! நல்லகுலஸ்திரீகட்குக் கணவன் தெய்வமென்றும், அறிய்வேண்டியவற்றை அறிந்த புத்திரர்க்குத் தெய்வம் தந்தை தாயென்றும், முழுதுந்துறந்த மகத்துக்களுக்கு ஆசிரியன் தெய்வமென்றும்,மற்றவர்களுக்கெல்லாம் அரசனேதெய்வமென்றும் நூல்கள்முறையிடுகின்றன. அவ்வாறே எங்களுக்குயாதொருகுறைவும் வராதிருக்கத் தாங்களே தெய்வமா யிருக்கிறதினால் தாக்ஷியில்லை. ஆனால் நாங்களிடும் பயிர்களைப் பன்றிமுதலிய மிருகங்கள் அதமாக்குகின்றன. அஃதொன்றேயன்றி மற்றொன்றுமில்லை யென்று சொன்னார்கள். அரசன் குடிகள் மகிழ்வடைய நல்லபரிசளித்து, நீங்கள் உங்கள் ஸ்தானத்திற்குச்செல்லுங்கள் மிருக பய மில்லாதிருக்க நான் தகுந்தமுயற்சி செய்கிறேனென்று உத்திரவுகொடுக்க,குடிகள் அரசனைவணங்கி அவரவர்கள் இருப்பிடத்துக்குச்சென்றார்கள்.

பின்பு அரசன் மந்திரி முதலானவர்களைப் பார்த்து, நாம் வேட்டைக்குப் போகவேண்டும். வேடர்-வலைஞர்- முதலியவர்களை வருவியுங்கள். நீங்களும்பிரயாணமாகுங்கள். என்று கட்டளையிட்டு அந்தப்புரத்திற்சென்று, வேட்டை மகுடமணிந்து, பல ஆபரணங்களைத் தரித்து, வில்- அம்பு- வாள்-கதை-முதலியவற்றைத் தாங்கி, நவ மதனன்போல் வாயுகதியோடு கலந்த புரவியின்மேல் ஏறி வெளிப்பட்டான். இதற்குள் மந்திரி முதலானவர்கள் ரதகஜதுரக பதாதிகளையும் வேடர்-வலைஞர்-முதலியவர்களையும் அழைத்துக்கொண்டு,விரைவில்வெளிப்பட்டுஅரசனோடு கலந்தார்கள். அப்பால் யாவரும் ஒருமுகக்கூடி, முரசு-பேரிகை - டங்கா-டமாரம் - சிறுபறை-பெரும்பறை-தம்பட்டம்-மத்தளம்- மிர்தங்கம்-டமரகம்-எக்காளம் காளம்- சின்னம்-துத்தாரி- முதலாகிய வாத்தியங்கள் கடல்போ லொலிக்க, மிகுந்த களிப்புடன் பிரயாணமாய்க்காட்டிற்சென்றார்கள். வேடர்கள் முன்னதாகச் சென்று காடுமுழுவதும்வலைகட்டி, அங்கிருக்கு மிருகங்களெல்லாம் ஒரேமுகமாய் வரும்படிச்செய்தார்கள். அப்படி ஒருமுகமாக வரும்-சிங்கம்-புலி-கரடி-செந்நாய்-மான் - முதலியவற்றை நோக்கித் தங்கள் தங்கள் கையிலிருக்கிற வில்லைவளைத்து நாணியேற்றிக் குணத்தொனிசெய்து, அர்த்த சந்திரபாணம் - முள்ளம்பு - முதலியவற்றைத் தொடுத்து, வருகிறமிருகங்களையெல்லாம் இரண்டிரண்டு துண்டமாகக் கண்டித்து, யானை - வரையாடு - பன்றி-முள்ளம்பன்றி-முதலியவற்றைப்பல்லயங்களினாற் குத்திப் பூமியில்வீழ்த்தி, கண்டபேரண்ட முதலிய பக்ஷிகளையெல்லாம் சரத்தினாற் சிறகையறுத்துத் தள்ளி, இப்படி பலவாறு தங்கள் தங்கள் கருத்துக்குத் தோன்றியபடி வேட்டம் செய்தார்கள். இதில் அரசன் கையினாலிறந்த சிங்கம்-யானை- புலி - கரடி-செந்நாய்-கண்டபேரண்ட முதலாகிய செந்துக்கள் அளவில்லை.

இவ்வாறு வேட்டஞ்செய்து வருகிறபோது ஒரு மானானது சடுதியில் அரசன் பார்வைக்கு அகப்பட்டது. உடனே அரசன் ஒருசரத்தை அதன்மேற் றொடுத்தான். அஃதச்சரத்தைத் தன்னுடலிலேற்றுக் கனவருத்தமடைந்து ஓடிற்று. அதனை அரசன்கண்டு,தானும் தன்மந்திரியும் அந்தமானைத் துரத்தினார்கள். அம்மான் அதிவேகமாய் நெடுந்தூரஞ்சென்று, பாலைநிலத்தைக்கடந்து மறைந்தது. அரசன் பாலைநிலத்தில் வந்தமாத்திரத்தில் அந்நிலத்தின் வெம்மையினால் மெய்முழுதும் வெயர்த்துத் தாகக்களைதாங்கி,பக்கத்தி லிருக்கும் மந்திரியைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ மந்திரி! இதோபார்த்தையா எலிகளுக்குப் பாம்பின்படத்தி னிழலேயன்றி வேறொரு நிழலில்லை. இவ்வகைப்பட்டவனத்தில்வந்துசிக்கிக்கொண்டோம். நமக்கோ தாகவிடாய் அதிகரிக்கின்றது. நமதுசரீரத்திலரும்பும் வியர்வை நீரேயன்றி வேறே ஜலமில்லை. இதற்கென்ன செய்யலாம். என்று வினவ அம்மந்திரி இவ்வார்த்தைகளைக் கேட்டுச் சற்றாலோசித்திருக்கிறதருணத்தில், ஒருபக்கத்திற் குளிர்ச்சியான காற்று வந்தது. அதனை அம்மந்திரியறிந்து,அரசனை அழைத்துக்கொண்டு அக்காற்றுவந்த முகமாகச் சென்றான். அங்கு சகலபாபங்களையும் நீக்கி உலகமாதாவாய் விளங்குகின்ற கங்காநதிதோன்றிற்று. அந்தக்கங்கையைக் கண்டமாத்திரத்தில் இருவினைத்தொடர்பற்றுப் பரமபதத்திற் சென்றவர்கள் கண்ட ஆனந்தத்தைப்போல மகிழ்வடைந்து, அரசனும் மந்திரியும் அக்கங்கையிற்படிந்து தாகவெப்பத்தை நீக்கிக்கொண்டு, அங்கிருக்கும் விருக்ஷத்தி னீழலிற் சற்றிருந் திளைப்பாறி எழுந்து, அங்கிங்கொத் தருகிலிருக்கும் [illegible] விநோதங்களைப் பார்வையிட்டு,அம்மந்திரியோடு தான் அங்குலாவிவருகிறான். இப்படி வருகிறபோது ஒரு சூதவனந்தோன்றிற்று. அவ்வனத்திலிருக்கிற மாவிருக்ஷங்கள் இலக்குமியின் மேனியையொத்த இளந்தளிர்க

ளையும், சரஸ்வதியின் மேனியையனைய சற்றுவெளுத்
ததளிர்களையும், உமைமேனி போன்ற முதிர்ந்த த
ழைகளையும் உடைத்தாகி; அன்னவர் விழிபோன்ற
வடுக்களையும், அன்னவர் தனம்போன்ற காய்களையும்,
அன்னவர் மாதுரிய வசன மொத்த கனிகளையுங் கொ
ண்டு; காமசரங்களை அநேகம் வகித்து மூன்று ஸ்திரீ
கள் நிற்கிறதுபோலத் தோன்றிற்று. அத்தோற்றத்
தை அரசன்கண்டு வியப்படைந்து, அவ்வனத்திலுள்
ள வளப்பங்களைப் பார்வையிட்டு வருகிறபோது எதி
ரிற் சிலமுனிவர்கள் வந்தார்கள். அவர்களுக்கு அர
சன் நமஸ்காரஞ்செய்து, அவர்களால் ஆசிகளேற்று,
ஓ ஸ்வாமிகளே! இந்தவனம் மஹாவிந்தையா யிருக்
கின்றது. இவ்வனம் எவர்களுடையது? அவர்கள் நாம
மென்ன? என்று வினவ முனிவர்கள்-ஓ அரசனே! இ
ந்தவனம் பிரமசாரியாகிய கண்ணுவ மஹாமுனிவரிரு
க்கிற ஆசிரமமென்றனர். அரசன் திடுக்கிட்டு, ஓஸ்வா
மிகளே! நான் சந்திரவமிசராஜன். என்பெயர் துஷ்டி
யந்தன். வேட்டையாட வெளிப்பட்டு வழிதப்பி இம்
மார்க்கமாக வந்துவிட்டேன். முனிவர்களிருக்கிற வனை
த்துக்கு அரசர்கள் வரக்கூடாது. ஒருவேளை இந்தச்
சேதி கண்ணுவருணர்ந்தால் சினங்கொள்வாரோ அ
ல்லது போகட்டுமென்னு மனங்கொள்ளுவாரோவென்
று பயபக்தியுடனே வினவ, முனிவர்கள்-ஓ அரசனே!
அந்தக் கண்ணுவ மஹாமுனிவர் யாவரிடத்தும் நீடிய
சாந்தமும், அரசர்களிடத்தில் ஏகாந்தமும் மிகுந்த
அன்புமுடையவர். மேலும் உம்மிடத்தில் அதிகப் பிரீ
தியுள்ளவர். ஆகையால்-உம்முடையவிஷயத்தில்சினங்
கொள்ளாமல் அகமகிழ்ந்து ஆசீர்வதிப்பார். நீர் சஞ்
சலப்படாமற் சென்று அவரைத் தரிசித்துப் போமெ
ன்று உத்தரவுகொடுத்து, அவர்கள் கங்கா ஸ்நானத்
துக் கெழுந்தருளினார்கள்.

அரசன் தன்னுடன்வந்த மந்திரிகளைநோக்கி, ஓ
அமைச்சர்களே! இது கண்ணுவர் ஆசிரமமாம். நான்
மாத்திரம் சென்றுபார்த்து அவரைத் தரிசித்து வரு
கிறேன். நான்வருகிற பரியந்தம் இவ்விடத்தி லிருங்
களென்று சொல்லி நிறுத்தி, அரசன் அவ்வனத்தினு
ட்சென்றான். மயில்களாடுவனவும்-குயில்கள்பாடுவன
வும் - வண்டுகள் ஒலிப்பனவும் - யாதுபோலிருந்தன
வெனில், அரசனைக்காண அவ்வனதேவதை நட்டு
முட்டு நாடகசாலைப் பெண்க ளோடு எதிர்வருதல்
போலிருந்தது. அதனைக்கண்ட அரசன்மகிழ்ந்துசெல்
லுகிறபோது, புன்னைப்புஷ்பங்கள் உதிர்ந்திருத்தலை
யும - மாந்தளிர்களோடு மாங்கனி தொங்குதலையும்-
அத்தளிர்கள் தென்றலுக் கசைந்திருத்தலையும் - கண்
டான். அது எப்படி யிருந்ததென்றால், அந்த வனப்
பெண் சுன்னமுதலிய பொடிகளைத் தூவிக், காணிக்
கையாகக் கனியை ஒருகையிலேந்தி,ஒருகையினால்வா
ரும் வாரும் அரசனே யென்று பிரியவசனம் பேசிய
ழைப்பதுபோலு மிருந்தது. இந்த வேடிக்கைகளைப்
பார்வையிட்டு வருகிறபோது, அங்கங்கு யாகசாலைக
ளும் - ஓமகுண்டங்களும் - வேதகோஷ்டங்களும்- ம
ஹாமுனிவர்கள் திருக்கூட்டங்களும் தோன்றிற்று.
அவைகளை அரசன் கண்ணுற்றுக் கண்ணுவ மகாமு
னிவரிருக்கிற ஆசிரமத்திற் சென்றான். அங்கே அல்
குலைத் தேராகவும் - இரண்டு தனங்களை யானையா
கவும்-இடையைச் சிங்கமாகவும்-புருவத்தை வில்லாக
வும் - இரண்டுகண்களைச் சரமாகவுங் கொண்ட இரதி
தேவியானவள் வீரகடகம்புனைந்து, மதன்மேல் யுத்
தஞ்செய்ய எதிர்த்து வருவதுபோல் ஒரு கன்னிகை
அரசன் கண்முன் தோன்றினாள். பெண்களுக் கெல்
லாம் சிரோரத்தினம்போல் பிரகாசிக்கின்ற பெருமா
ட்டியை அரசன்கண்டு மையாலாகித் திப்பிரமைகொ
ண்டு, அசைவில்லாமற் சித்திரப்பிரதிமெய்போல் சற்
றுநேரம் நின்று, தன் கல்வியின் திறத்தால் மனதைக்
காமத்தின்வழி செல்லவொட்டாமல் நிறுத்தி, இதுமு
னிவர்களிருக்கிற ஆசிரமம். இந்தக் கன்னிகையைக்க
ண்டு மயங்குவது நமக்குத் தகுதியல்ல. இக்கன்னி
கையை நெருங்கி வாய்மொழியறிந்து, அதன்மேல்நம
துகருத்தை வெளியிடவேண்டு மென்று அக்கன்னி
கையின் அருகிற்குறுகினான். அக்கன்னிகையும் தற்கு
முன்னமேதானே அக்கண்ணுவராலும் அக்கண்ணு
வரிடத்துவரு முனிவர்களாலும் இவ்வரசனது பெரு
மையையும் திருவுருவத் திறத்தினையும் கேட்டிருக்
கின்றவளாதலால் - அதனாலும், பிராரத்துவ சம்பந்த
த்தினாலும், வந்த அரசனை துஷ்டியந்த மஹாராஜ
னென்று தன் புத்தியாலுணர்ந்து, ஆச்சிரமத்தில் திடு
க்கெனப்புகுந்து, ஒரு பொற்பீடமளித் திருக்கச்சொ
ல்லி, நாணத்தோடு தூண்மறைவில் நின்றாள். அர
சன் அவள்கொடுத்தபீடத்திலிருந்து, கண்ணுங்கருத்
தும் அக்கன்னிகையின் அழகாகிய கடலில் ஆழ்ந்தி
ருந்தபோதிலும், பெரியோர்களின் பழக்கவாசனையி
னால் கருத்தைக் காமத்தின்வழியிற் செல்லவொட்டா
மல் அக்கன்னிகையைப் பார்த்து, ஓ தோகைமயிலே!
தொனிக்குங் குயிலே ! இவ்வாசிரமத்துக்குத் தலைவ
ராகிய கண்ணுவமஹாமுனிவர் எங்குற்றாரென்றுவி
னவ, அக்கன்னிகை-ஓமஹாராசாவே! இந்நேரவரையி
ல் இவ்விடத்தில்தானிருந்தார். திவ்யக்கியானஸ்வரூபி
யாகிய சாதனந்தர்வந்து அழைத்துப் போயினார். இ
ன்னும் இரண்டு மூன்று நாழிகையில் வருவாரென்று
கூற, அரசன்-ஓ பெண்கள் நாயகமே! முனிவர்களில்
மிகவுஞ் சிறப்புற்றோங்கியவர் கண்ணுவர். இக்கண்ணு
வருடைய ஆசிரமத்தில் நீ இருக்கவேண்டிய காரண
மென்ன? நீயார்? உன்பெய ரென்னவென்று கேடகக்,
கன்னிகை ஓ அரசனே! நான்கண்ணுவருடைய புத்
திரி. என்பெயர் சகுந்தலை யென்றாள். அரசன்கேட்டு
த்திடுக்கிட்டு, ஆ!பெண்ணரசி! ஆணவம் மாயை காமிய
மென்கிற மும்மலத்தை அடக்கினவரில் மிகவுஞ்சிறப்
புற்றுப் பிரமசாரியத்துவத்தைப் பெற்ற பரிசுத்தம
னத்தையுடைய கண்ணுவமஹரிஷிக்கு நீ புத்திரியான

விருத்தாந்தத்தையும், உனக்கு நாமதேயம் வந்த வ
ரலாற்றையும் விளங்க உரைக்கவேண்டு மென்ன,அச்
சகுந்தலே-ஓ இராசனே! சிலநாளுக்குமுன் இவ்விடத்
துக்குச் சாதானந்தர் வந்தார். நான் அவரைத் தரிசித்
தேன். அவர் என்னைப் பார்த்து இந்தக்கன்னிகையா
ர் என்று கண்ணுவமுனிவரைக் கேட்டார். கண்ணுவ
முனிவர் என்விர்த்தாந்தத்தை யெல்லாம் சாதானந்த
ருக்கு அறிவித்தார். அப்போது அருகிலிருந்து கே
ட்டிருந்தேன். அக்கண்ணுவர் கூறியபடி சொல்ல
எனக்குச் சக்தியில்லாவிட்டாலும், தெரிந்த மாத்தி
ரம் கிஞ்சித் தெடுத்துரைக்கிறே னென்று சொல்லுகி
ன்றுள்.

கேளும் இராஜராஜேஸ்வரா! தேவர்களும் முனி
வர்களும் மற்றுமுண்டான பிரஜைகளும் ஸ்துதிக்கின்
ற சிறப்புற்ற தவசிரேஷ்டனுகிப் பிரம சிருஷ்டிக்குப்
பதில் சிருஷ்டிசெய்த மிகுந்த பராக்கிரம பாக்கிய சி
லாக்கியனுகிய விஸ்வாமித்திரர் இமயமலேச்சாரலில்வந்
து, ஐம்பொறிவழி செல்லும்புலனை ஒருவழிப்படுத்தி,
அறிவைப் பிரமத்தி னிடத்துச் செலுத்தி, அநேககா
லம் அருமையான தவஞ்செய்திருந்தார். அத்தவத்
தில் யெழுந்த அக்கினி திரிலோகங்களையும் தகிக்கத்
தலேப்பட்டது. சொர்க்கலோகத்தி லிருக்கிற இந்திரன்
இந்த அக்கினியினுல் கனவருத்தமடைந்து, முப்பத்
து முக்கோடி தேவர்களையும், நாற்பத் தெண்ணுயிர
முனிவர்களையும், கிம்புருடர் - கருடர் – காந்தருவர்-
சித்தர் - வித்தியாதரர் - முதலாகிய யாவரையும்
அழைப்பித்து, வியாழபகவானுடன் சிங்காதனத்தி
லிருந்து, வந்த பரிசனங்களை நோக்கிச் சொல்லுகிறு
ன். ஓ தேவர்களே! ஓ முனிவர்களே! எக்காலத்திலு
ம் கண்டறியாத இந்த அழற்சி எவ்விடத்திருந் துதி
த்தது. இதனுல் சொற்கலோகமெல்லாம் கருகிப் பொ
ல்லா வருத்தமடைகிறபோது, பூலோகம் எவ்வாறு
அவஸ்தைப்படும். இந்த அழற்சியோ வடவையையும்
வாட்டவல்லதா யிருக்கின்றதே: ஆதலால் விரைவில்
அஃதுண்டானவிதத்தை உணர்ந்து உரையுங்களென்
று வினவ, தேவர்கள் முதலானவர்கள் இந்திரனை வ
ணங்கிக் கூறுகிறுர்கள். ஓ ஆண்டவனே! இமயமலேச்
சாரலில் விஸ்வாமித்திரமுனி அகோரமான தவஞ்செ
ய்கிறுர். இஃது அத்தவத்தி லெழுந்த தாபாக்கினி.
இதைத் தணிக்க யாவராலும் கூடாது. இதற்குத் தா
ங்களே ஒருயுத்தி சொல்லவேண்டும்.என்று கூற இந்
திரன் அதுகேட்டு, இந்த விசுவாமித்திரன் மற்றமு
னிவர்கள்போ லல்ல. பிரமசிருஷ்டிக்குப் பதில்சிருஷ்
டிக்கப் பட்டவன். அவன் தவத்தை யழிக்க யத்தனி
த்து நாமெல்லா மொன்றுகக் கூடித் தடுப்போமாயி
னும் நம்மை பஸ்மீகரப்படுத்துவான். வடவையை யே
னுல் அஞ்சாமல் அதனை யுட்கொள்ளுவான். சப்த
மேகங்களையும் சண்டமாருதத்தையும்விட்டால்அவை
களை அரைநொடியில் தாபாக்கினியால் கொளுத்திப்
போடுவான். இந்த அண்டாண்ட பிர்மாண்டங்களெ
ல்லாம் இடிந்து விழுந்தாலும், பூலோகம்சொற்கலோ
கமாய்சொற்கலோகம்பூலோகமாய்க்கீழ்மேலாலும்,
அஞ்சாத உறுதியான மனத்தையுடையவன். இவன்
தவத்தை யழிக்கிறதற்கு ஸ்திரீகளேயன்றி வேறொ
ரு யத்தனங்களினுல் அழிக்கக்கூடாதென்று தீர்மா
னித்து, மேனகையை அழைத்துவரத் தேவதூதர்க
ளுக்குக் கட்டளையிட்டான். தூதர் மேனகை இடத்
துச் சென்று தேவராஜன் கூறிய வற்றைச் சொல்ல,
மேனகை அது கேட்டு அதிவிரைவில் வந்து இந்திர
னை வணங்கி, ஓ ஸ்வாமி! என்னை அழைப்பித்தகாரண
த்தைத் திருவுளம் பற்றவேண்டுமென்றுள். இந்திரன
ம்மேனகையைப் பார்த்து, ஓ பெண்ணே! இமயமலேச்
சாரலில் விஸ்வாமித்திரன் அகோரமான தவஞ்செய்கி
றுன். அத்தவத்தி லெழுந்த அக்கினி பூலோகத்தா
ரையுஞ் சொற்க லோகத்தி லிருக்கிறவர்களையும் வரு
த்து கின்றது. நீவிரைவாகச்சென்று அந்த விஸ்வாமி
த்திரன் தவத்தை அழித்து வரவேண்டும். என்றுரை
க்க மேனகை கேட்டுத் திடுக்கிட்டு, ஓ ஸ்வாமி! அந்
த விஸ்வாமித்திரருடைய தன்மையையெல்லாந் தேவ
ரீர் அறிந்திருந்தும், புலியிடத்து மானை அனுப்பிவிப்
பதுபோல் என்னை அனுப்பிவிக்க யத்தனிப்பதை
நோக்கினுல், தங்களுக்கு நான் கனமானகுற்றஞ்செய்
ததாகவும், அதற்குப் பயத்திற்செய்யுந் தண்டனைக்
கீடாக நயத்திற் செய்யுந் தண்டனையாக விருக்கின்ற
து. ஓ சுவாமி! என்மனமறியத் தங்களுக்கு ஒருகுற்ற
முஞ் செய்ததில்லேயே: என்று பிரிய வசனம் புகல
இந்திரன் நகைத்து, ஓ பெண்ணே! நீ ஒருகுற்றமுஞ்
செய்யவில்லே. உலகத்துக்கு ஒருகெடுதிவந்தால் அத
னை அரசன் நீக்கி உலகத்தை யாதரிக்கவேண்டும். இ
ப்போது விஸ்வாமித்திரனுல் உலகத்துக்கு வந்த
கெடுதியை நான் நீக்கவேண்டும். இந்தக்கெடுதி என்
னுல் நீக்கப்படுவதல்ல. உன்னுல்நீங்கும். அஃதெப்
படியென்றுல், சினத்திலும் - கொலேயிலும் - சாப
த்திலும் - தவத்திலும் - ஒவ்வொருவர் உயர்ந்திருப்
பார்கள். இந்நான்கும் ஒருவர்க்கே இருந்தாலும், பெ
ண் என்றவிடத்து யெவையுஞ் செல்லா. ஆதலால்-
இந்தவேளையில் நாங்களெல்லாம் சுகப்பட நீ அந்த
விஸ்வாமித்திரனிடத்துச் சென்று, உன்வல்லமையா
ல் அவனை மயக்கித் தவத்தை யழித்து வரவேண்டு
மென்று கூற, மேனகை மகிழ்ந்து இந்திரனை வணங்
கி, ஓ ஸ்வாமி! யாவரேனும் ஐம்புலனையும் அடக்கி
அறிவைப் பரப்பிரமத்தினிடத்துச் செலுத்திச் சித்தி
ரம்போலசைவற்று யோகத்தி லிருந்தாலும், அவர்க
ளை அரைநொடிப்போதில் கைவசப்படுத்த எனக்குத்
தெரியும். இதோ சென்று விஸ்வாமித்திரன் தவத்
தைப் பொன்றுவித்து வருகிறேன்.என்று விடைபெற்
றுத் தன் அரண்மனைக்கு வந்து ஸ்நானஞ்செய்து,
வஸ்திராபரண மணிந்து, குங்குமந் தரித்துப்,மரிமள
வாடைவீச அரண்மனையைவிட்டு வெளிப்பட்டுக்,கண்

டவர்கள் காமவெறிகொண்டு திப்பிரமையுற்றுப் பின் தொடர்ந்துநிற்க இமயமலைச்சாரலில் விஸ்வாமித்திர முனிவர் தவஞ்செய்கிற இடத்தில் வந்து தென்றற் காற்று வாடையில் நின்றாள்.

இப்படி இவள் நின்றமாத்திரத்தில், வசனம்-சூதம்-அசோகு-முல்லை-நீலம்-என்கிற ஐந்து பாணத்துக்குத் தலைவனாகிய மதனராஜன் கவுசிகராஜனாகிய விஸ்வாமித்திரனை எதிர்த்துக் கருப்புச்சிலையை வளைத்து, வண்டூனாணியேற்றிக் குணத்தொனிசெய்து, முன்னம் இச்சையை விளைக்கின்ற தாமரைமலர்க் கணையை எடுத்து அவ்விஸ்வாமித்திரன் மேற் றொடுத்தான். அப்போது விஸ்வாமித்திரன் தவநிலைவிட்டுக் கண்ணை விழித்துப் பார்க்கும்போது, மேனகை யணிந்திருக்கிற சந்தனம் - புழுகு—கஸ்தூரி - கர்ப்பூரம்- சவ்வாது -குங்குமமுதலான பரிமளங்களோடு அளியின மிகுந்த நறுமலர்க்காற்றினை யுணர்ந்தான். அதனை மதனராஜன்கண்டு, இதுதான்சமயமென்றுகருதி, பரபரப்பாகக் காமவெம்மையை யுண்டாக்கும் சூதமலரைத் தொடுத்தான். உடனே விஸ்வாமித்திரன் விருச்சிகங் கொட்டப் பட்டவனைப்போல் தவநிலைவிட் டெழுந்து, அப்பரிமளக் காற்றின்வழிச் சென்றான். அங்கே ஒரு சந்தனமரத் தடியிலிருக்கிற மேனகை (இந்தப் பூனையும் பால்குடிக்குமோ?)என்கிற பழமொழிபோல் கடைக்கணோக்கத்தை விஸ்வாமித்திரன்மேல் வைத்து,மற்றோர் பொருளை நோக்குவது போலப் பராமுகமாகயிருந்தாள், இவளை விஸ்வாமித்திரன்கண்டமாத்திரத்தில் மதனராஜன் கனைத்துச் சிரித்து, மஹா உக்கிரத்தோடு சகிக்கக்கூடாத வருத்தத்தைக் கொடுக்கும் அசோகமலர்க் கணையைத் தொடுத்தான். விஸ்வாமித்திரன் அதனால் மனங்கலங்கி அவளருகிற்சென்று, ஓபெண்ணரசி! முனிவர்க்கு விரோதியாகிய மதனராஜன் என்னைமிகுந்த துன்பத்துக் குள்ளாக்கினான்.அவனைவென்று வெற்றிபெற என்னால் சக்தியில்லாமல்,அவன் பாணத்தினால் அடிபட்டுப் பிடிபட்டு முறிபட்டு வெறிபட்டு ஓடிவந்தேன். தெய்வ கடாட்சத்தினாலே உன்னைக் கண்டேன். நீ முலையாகிய மலையையும்-அல்குலாகிய அகழியையும்- துடை யாகிய பொற்கம்பத்தையு முடைத்தான, நல்லகாவலைச் செய்யாநின்ற கண்களாகிய வாயிலோடும் கூடிய உன்மனக்கோட்டையை என்வசப்படுத்தி, மதனராஜன் பாணத்தால் என்மார்பிற்றோன்றிய புண்ணுக்கும் அதனாலுண்டாகும் சுரத்துக்கும் உன் ஸ்தனவேதுகொடுத்து, இதழ்மருந் தளித்து ஆதரிக்கவேண்டும். என்று இனியவசனங்களால் பலவாறு வேண்ட மேனகை விஸ்வாமித்திரனை வணங்கிச் சொல்லுகிறாள்; ஓ ஸ்வாமி! நீரோ காமம் - வெகுளி - மயக்கம் என்பனவற்றை நீக்கிக், கருத்தைப் பிரமத்தி னிடத்துச் செலுத்தி, சற்று மசைவில்லாமற் றவத்திலிருக்கிறவர். உமக்கு இந்தக் கருத்துண்டானதை நோக்கும்போது மிகுந்த ஆச்சரியமாக இருக்கின்றது. ஆயினும் அபயமென்று வந்தவர்களை யாதரிப்பது முறைமை. அம்முறைமைப்படி தேவரீர் கருத்து மகிழ என்மனக்கோட்டையை உமதுவசமாக்கி, முலைவேதுகொடுத்து, இதழ்மருந் தளித்துக் காமநோயை மாற்றுவேன். ஆனால் ஒரு சந்தேகம். அஃதென்னவென்றால் -முனிவர்களென்ற போதே அவர்களெல்லாம் ஸ்திரீவிரோதிகள். நீரு முனிவரானபடியால் உம்மை ஆதரிப்பதற்கு எனக்குக் கிஞ்சித்து அஞ்சிக்கையுண்டா யிருக்கின்றதென்று கூற விஸ்வாமித்திரன் சிரித்து, ஓ பெண்கள் நாயகமே! நீ சொல்லியது சரிதான். விரோதியாயிருந்தபோதிலும் அவ்விரோதி சகிக்கொணாத துன்பமடைந்துவந்து முறையமிட்டு அபயமென்று விழுந்தால், அவனைக் காப்பாற்றுவது முக்கியமானகடமை. மேலும் உபகாரஞ்செய்கிறதினாலே அவம் வருகிறதேயில்லை. அதுவந்தாலும் உபகாரஞ்செய்யச்சொல்லி நூல்கள் முறையிடுகின்றன. ஆதலால் இந்தவேளையிலென்னை யாதரிக்கவேண்டுமென்று வணங்க மேனகை மகிழ்ந்து, விஸ்வாமித்திரன் களிப்புற மனக்கோட்டையை அவன் வசப்படுத்தி, அம்முனிவரன் கொண்ட காமநோயை மாற்றினாள். விஸ்வாமித்திரன்வீரியவிர்த்தியால் மேனகை யிடமாக நான்பிறந்தேன். மேனகை தெய்வலோகப் பெண்ணாதலால், பிறந்த என்மேல் பிரீதியில்லாமல் ஓரிடத்தில் வைத்துப்போயினாள். விஸ்வாமித்திரர் முழுதுந் துறந்தவராதலால், என்மேல் அன்பு கூராமல் அவர் சிந்தைக் கிசைந்தவிடத்துச் சென்றார்.

பின்பு எனக்கு சூரியச் சுடரினால் துன்பம்வராமற் சகுந்தலைப் பக்ஷிகள் வந்து தமது இறகுபந்தரிட்டுப் பாதுகாத்துவந்தன. அவ்வழியில் முனிசிரேஷ்டராகிய கண்ணுவர் வந்து, நானழுத குரலோசையைக்கேட்டு, அவருடைய சிவந்த கரங்களி லென்னை யேந்தி ஆசிரமத்துக்கு எடுத்துவந்து, சகுந்தலை யென்று பெயரிட்டு மிகுந்த அன்புடன் வளர்த்துவந்தார். இது என்வரன் முறையென்றுசொல்லி ஒருபால் மறைந்து ஒதுங்கி நின்றாள். இவையனைத்தையும் அரசன்கேட்டுப் பிரமானந்தத்தை அடைந்து, இவள் கவுசிகராஜனாகிய விஸ்வாமித்திரனுக்கும், தெய்வலோகப் பெண்ணாகிய மேனகைக்கும் பிறந்தவள். நாம்கொண்ட கருத்தின்படி இவளைப் புணருதல் தகுதிதான் என்று மனதில் நினைத்து சகுந்தலையைப் பார்த்து, ஓ பெண்கள் நாயகமே! நீ கவுசிகராஜனாகிய விஸ்வாமித்திரன் புத்திரியாதலால், தடையின்றி உன்னையான் கூடத்தகும். இனி என்பேரில் கிருபைகூர்ந்து என்னை யாதரிக்கவேண்டுமென்றான். சகுந்தலை மிகுந்த நாணமுற்று முகத்தைக் கோட்டிக் காலால் நிலத்தைக் கீறிப் பூமியைப் பார்த்தவண்ணமாய் ஒருவசனஞ் சொல்லுகிறாள். ஐயா! இது முற்றுந்துறந்த மஹாத்மாக்களில் சிரேஷ்டராகிய கண்ணுவர் ஆசிரமம்.

இதில்வந்தும் விரக்தியைப்பாராட்டாமல்விரகத்தைப்
பாராட்டுவது அரசருக்குத் தகுதியல்ல. அது பாரா
ட்டிக் கூடுவோமென்றாலும், அருமைபாராட்டி வள
ர்த்த என்பிதாவாகிய கண்ணுவர் மனதுக்கு அருவ
ருப்புண்டாகும். உம்மையே நேரிற்கண்டு ஏதேனும்
வினவுவாராயின், அதற்கு மறுமொழி என்ன வெ
ன்று கொடுக்கவல்லீரென்றனள். அதற்கரசன்மகிழ்
ந்து, ஓ பெண்ணரசி! நீயேன் ஐயப்படுகிறாய்? பெண்
மையாகப் பூமியிற் பிறந்தபோதே ஒருபுருஷன் முன்
னமே பிறந்திருப்பான். மேலும் பெண்களைப் பெற்ற
வர்கள் ஒருவருக்கு அப்பெண்ணை விவாகம் செய்வித்
துக் கொடுப்பார்களேயன்றி, மனையில் வைத்திருக்கப்
போகிற தில்லை. கண்ணுவரோ மகா தவசிரேஷ்டர்.
மேலும் பிரமசாரி. அவ்விடத்தில் வருகிறவர்களும்
ஸ்திரீவிரோதிகள். ஆதலால் உன்னை எந்த அரசர்க
ளுக்காவது மணஞ்செய்விக்கவே போகின்றார். (கும்பி
ட்டதெய்வம் குறுக்கே வந்ததுபோல) அரசர்களில்
ஒருவனாகிய நானேவந்துவிட்டேன். நீ கிருபை கூர்ந்
து என்னை யாதரித்து விரகநோயைத் தீர்த்தால்,
கண்ணுவர் களிப்படைவாரேயன்றி விரோதியார். ஆ
தலால் இந்தவேளை என்னை வருத்தும்படி வந்த
ஐங்கணைவேளை முதுகிட் டோடும்படிச் செய்யென்று
வேண்ட, சகுந்தலை அரசன் கூறியவற்றை நிதானித்
து நோக்கி ஒப்புக்கொண்டு, ஒருத்தரவு சொல்லு
கிறாள்.

உலகிலுள்ள பெண்கள் மணஞ்செய்யாமல் ஒரு
புருஷனைக்கூடினால், அப்பெண்ணை உலகத்தார் இகழ்
வாரேயன்றிப் புகழார்கள். ஆதலால் என்தந்தையா
கிய கண்ணுவர் வந்தவுடன் தமது கருத்தின்படி வி
வாகத்தை நிறைவேற்றி, அப்பால் என்னுடைய கை
யைப்பற்றுவது தங்களை யொத்த காவலர்க்குத் தகு
தியென்று புகல அரசன்சிரித்து, ஓ பெண்கள் பெரு
மாளே! நீ கூறியவசனம் எவ்வாறிருக்கின்றதெனில்,
விஷம் தலைக்கேறி மயங்கிப் பூமியில் விழுந்தவனுக்கு,
அவன் சிநேகன் மந்திரங் கற்றுக்கொள்ள மலைவாசிக
ளிடத்துச்சென்று சூரிய கிரகணத்தை நாடியிருக்கிற
துபோலிருக்கின்றது. காமவெறிகொண்டு அவகோல
மாயிருக்கிறஎன்னைப்பார்த்தும்நீமணஞ்செய்துகூடெ
ன்றால், அதுகாறும் நான் எவ்வாறுசகிப்பேன்? என்வி
ரோதியாகியமதன்எவ்வாறுநீங்குவான்? ஆதலால்உன்
கருத்தின் வண்ணமும், உன்தந்தையாகிய கண்ணுவ
முனிவர் கருத்துக்கிசையவும் நானொரு உபாயஞ்சொ
ல்லுகிறேன். அஃதென்னெனில் - உலகத்தில் பெண்
களை விவாகஞ்செய்து கூடுவது தகுதிதான். அந்த
விவாகம் எட்டுவகைப்படும். அவையாவன: பிரமம்-பிர
சாபத்தியம்-ஆரிடம்-தெய்வம் - காந்தருவம்-அசுரம்-
இராக்கதம்-பைசாசம். இவற்றுட் பிரமசாரிக்குக் கன்
னிகையைத் தீமுன்னர்க்கொடுப்பது, பிரமமணம். தலை
மகனினத்தார் வேண்டத் தலைமகளினத்தார் உடப
ட்டு அவளை ஓமத்தீமுன்னர்க்கொடுப்பது, பிரசாபத்
தியமணம். ஒன்றிரண்டு பசுவுமெருதும் வாங்கிக்கொ
ண்டு நங்கையைத் தீமுன்னர்க்கொடுப்பது, ஆரிடமண
ம். வேள்வியால் வந்தபெண்ணை அக்கினி முன்னர்க்
கொடுப்பது, தெய்வமணம். கொடுப்பாருங் கேட்பாரு
மின்றி இருவருந் தனியிடத் தெதிர்ப்பட்டுத் தாமே
கூடுவது, காந்தருவ மணம். பெண்ணுக்குப் பொன்
பூட்டிச் சுற்றத்தாருக்குப்பொன் வேண்டுவனகொடுத்
துக்கொள்வது, அசுரமணம். பெண்ணும் பெண்ணின
த்தாரு முடன்படாமல் வலிதிற்கொள்வது, இராக்கத
மணம். துயின்றாளைச்சென்றுகூடுவது, பைசாசமணம்.
இவற்றுள் - கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவ
ருந் தனித்தவிடத் தெதிர்ப்பட்டுத் தாமே கலத்த
லாகிய இந்தக்காந்தருவமணம் புரிந்து இருவருங்கூ
டுவோமென்று அரசன் கழற, சகுந்தலை மெய்தான்:
இப்போது நீர் பெற்றிருக்கிற காமநோய்க்குத் தகுந்
தபடி இனியவசனஞ்சொல்லிக்கூடிக் காமநோய்தீர்ந்
ர்ந்தபின்பு உன்னையார் கண்டவனென்று மாறுபடப்
பேசி வேறொருஸ்திரீயை மணம் புரிந்தால், நான்
அவமாவது மன்றி என்வயிற்றிற்பிறந்த புத்திரனும்
சுகமாகானே: இதற்கென்ன உத்திரவென்று கேட்க
அரசன் நகைத்து, ஓ பெண்கள் நாயகமே! உலகத்தி
ல் அரசரா யிருக்கிறவர்களுக்கு வெற்றியும் பாக்கிய
மும் கொடுக்கின்றதுவாய்மை. அவ்வாய்மையைமறப்
பார்களாகில், மும்மூர்த்திகளைநோக்கி அநேகமானத
வஞ்செய்து சிலாக்கியமான பாக்கியத்தையும் அநேக
திவ்யாஸ்திரங்களையும்பெற்றிருந்தாலும், அஃதவைக
ளையெல்லாம் நாசப்படுத்திக் குடிக்கக்கஞ்சியுங் கட்ட
வஸ்திரமு மின்றி வருந்தச்செய்விக்கும். நானேவாய்
மையிற்பிறழாமலிருக்கும்அரசருக்கெல்லாம்அரசன்.
நான் சத்தியமறக்கேன். ஆதலால் உனக்கொரு உறு
தியான வாக்கியம் கூறுகிறேன். அஃதென்னெனில்-
நீயே என்மனைவி. உன்வயிற்றி லுதிக்கும் புத்திரனே
என்பட்டத்துக் குரியவன். இதற்குச் சாக்ஷி ஆகாயவா
ணியும் பூமிதேவியுமேயாம். இனிச்சாலஞ்செய்யாமல்
என்னைக்கூடுவது நின்கற்புக்கழகென்றுவற்புறுத்திக்
கூறினான். அப்பால் சகுந்தலை சம்மதித்து மிகமகிழ்
ச்சி அடைந்து, அரசன் மகிழ்வெய்தக் கடைக்கணித்
துக் காமக்குறியைத் தெரிவிக்கின்ற குறுநகைபுரிய,
அரசன் அதுகண்டு ஐந்துவித ஆலிங்கனமும் பதினொ
ருவித அதரபான முதலியவற்றையு முறைமைப்படி
இயற்றி, சுந்தரமிகுந்திடு சகுந்தலைமனங்களி துளங்க
ரதிகேளி விளையாடி மலர்சூடி, ஓ பெண்கள் சிரோம
ணியே! நானே வேட்டை யாடவந்தேன். வந்தவிட
த்தில் உன்னைக்கண்டேன். கருத்து மகிழ்வெய்தப் பு
ணர்ந்தேன். இனி என்சேனைகளோடு கலந்து நகரஞ்
சென்று, மந்திரிகளால் உன்னை அழைத்துக்கொள்ளு
கிறேன். நீ வருத்தப்படாமல் மகிழ்வுடன் விடைகொ
டுவென்று வேண்ட சகுந்தலை கிஞ்சித்து வருத்தம
டைந்து, ஓஅரசனே! புருஷர்சொல்லுக்கு மனைவியர்

மறுத்துக்கூறுவது தகுதியல்ல. ஆதலால்உமதுஇஷ்டப்படி நடவும். ஆனால் என்னைமாத்திரம் மறக்காதிருக்கப் பிரார்த்திக்கிறேனென்று மிகுந்த ஆருமையோடு விடைகொடுக்க அரசன்அவ்விடையைப் பெற்று மீண்டு மந்திரிகளோடு கலந்து, காட்டிற் கலைந்திருந்த சேனைகளெல்லாம் ஒன்றுபடக்கூடித் தன்னைச் சூழ்ந்துவர முன்போல் நகரம்வந்து சேர்ந்து அரசு செய்திருந்தான்.

இங்கே சகுந்தலையானவள் கணவன் பிரிந்த வருத்தத்தோடு திவ்யக் கியானியாகிய கண்ணுவர்க்கு என்ன உத்திரவு சொல்லப் போகிறோம் என்னுங்கவலைக்காட்பட்டவளாய்,ஐயோ!கல்வியறிவில்லாதஸ்திரீஜனங்களுக்கே கலவிக்குறிகள் தெரியுமென்றால்,சகலகலைவல்லவராகி உண்மைக்கியானத்தைப் பெற்றவர்க்குத் தெரியாமற்போகுமா? நாம் என்னகாரியம் செய்துவிட்டோம். காமிகள் யாதுக்குமஞ்சார்களென்கிறது நமக்குத் திருஷ்டாந்தமாயிற்றே: இனி நாம் என்னசெய்யப்போகிறோமென்றேங்கிப் பயந்திருக்கிறதருணத்தில் திரிகாலக்கியானியாகிய கண்ணுவமுனிவர் வந்துவிட்டார். அவர்வரவே கலவியால் வெளுத்த இதழையும், வியர்வையால் நிறைந்த முகத்தையும், வேகத்தினாற் சிவந்தவிழியையும்,பல்லாதிகளாற்பட்ட குறியையும், ஆலிங்கனாதிகளாற் கலைந்த அளகத்தையும், புத்திரனிருக்கும் ஆலிலைபோன்ற வயிற்றையுமுடைத்தாகிய சகுந்தலை திடுக்கென்றெழுந்து, நமது முகக் குறியினாலும் அனுபவத் திறத்தாலும் நாம் முடித்துக்கொண்ட காரியத்தை அறிந்துகொண்டிருப்பாரென நாணமேற்கொண்டு மெல்லென நடந்து, கல்விப்பிரவாகமாகிய கண்ணுவருடைய திவ்யசரணாம்புயத்தில் சாஷ்டாங்கமாகநமஸ்காரஞ்செய்து, சுவாமி! "பேதைமையென்பதுமாதர்க்கணிகலம்" என்பதற்கிணங்க சுவாமிகளுக் கறிக்கையிடாமல் ஓர்நொடிப்போதில் ஊழின்வசத்தினளாகி மயங்கிஎளியாள்செய்த குற்றத்தைப் பொறுத்து இரக்ஷிக்க வேண்டுமென்றிரந்தாள். அதுகேட்டுத் தாம் வெளியிற் சென்றது முதல் அதுகாறுநடந்த காரியங்களைத் தமது ஞான திருஷ்டியாற் கண்டுணர்ந்த கண்ணுவர் அதற்கு மகிழ்ச்சியடைந்து,சகுந்தலையை முற்றும் நோக்கிச் சொல்லுகிறார்: ஓ அம்மணி! உன் உதரத்திலிருக்கிற புத்திரன் இந்த நெடிய கடல் சூழ்ந்த உலகத்தையெல்லாம் ஆளும்படியான வல்லமையையுடையவன். உன்னைக்கூடின அரசனே துஷ்டியந்தமஹாராஜன். நீநல்லகாரியஞ் செய்தாய். அதற்கு உன்மேல் மகிழ்வே யன்றிக் கோபமில்லை. நீ அஞ்சாமல் நடந்த விருத்தாந்தத்தைக் கூறுக வென்று சொல்லினர். சகுந்தலை அரசன் வந்ததையும், தான் அவ்வரசனுக்கு மரியாதை செய்ததையும், அரசன் தன்னையாரென்று கேட்டதற்குச் சொன்ன வரலாற்றையும், அதன்மேல் அரசன் விரகதாபப்பட்டு ஆகாயவாணியைப் பூமிதேவியைச் சாக்ஷிவைத்துக் காந்தருவமணம் புரிந்து கூடிப் பின்பு மந்திரிகளால் அழைத்துக் கொள்ளுகிறேனென்று சொல்லியவற்றையும் விளங்க உரைத்தாள். கண்ணுவர்கேட்டு மகிழ்ச்சியடைந்து, ஓ அம்மணி! உலகத்தில் பெண்கள்பெறும்பேறு என்னவென்றால்-கல்வியையும் வல்லமையையும் அழகினையும் வாலிபத்தையும் செல்வத்தையும் பெற்ற புருஷனையுடைத்தாய், புத்திரபாக்கியத்தையும் பெறுவது மிகுந்த அருமையானபேறு. இந்தப்பேறு எல்லாப் பெண்களுக்கும் கிடைக்காது. நீ தவசிரேஷ்ட சிகாமணியாகிய விஸ்வாமித்திர முனிவருக்கும் மேனகைக்கும் பிறந்தவளாதலால், அவர்கள் வழியால் நீசகலபாக்கியமும் பெற்றாய். இனியுனக்கு ஒருகுறைவுமில்லை. அம்மா சுகமாயிரு என்று வாழ்த்தினார். சகுந்தலை பரமானந்தத்தை யடைந்தவளாய் கண்ணுவரை வணங்கிஅந்தப்புரத்திற் சென்றிருந்தாள். இவ்வாறு சென்றபின்பு முதன்மாதத்தில் வெறுக்கத்தக்க பதார்த்தங்களில் விருப்பமும் குறைவுற்ற பசியும் உணவில் வெறுப்பும் புளி யேப்பமு முடைத்தாகி, இரண்டா மாதத்தில் அடிவயிறு கருக்குழியைச்சார்ந்து ஒட்டியுள்ளடங்கி, மூன்றாமாதத்தில் மார்பின் நரம்புகளெடுத்து, நான்காமாதத்தில் முகம்வெளுத்து முலைகறுத்து மசக்கை என்னும் நோயுற்று, ஐந்தாமாதத்தில் சுளுக்கு நோயும் வயிற்றுப் புரட்டலு முண்டாகி, ஆறாமாதத்தில் கண்களின் அடிநிமைக்கடுத்த நரம்பு பிரகாசமாகவும் கண்களினது நிறம் பேதமாகவும் காணப்பட்டு, ஏழாமாதத்தில் உட்காரும்போதும் எழுந்திருக்கும் போதும் புத்திரக்கருவாதலால் வலதுசையை அடிக்கடி ஊன்றி, எட்டாமாதத்தில் முலையிற் கிஞ்சித்துப் பாலுண்டாகி, ஒன்பதாமாதத்தில் அதிக வருத்தமும் இளைப்பு வலது பக்கத்தில் பிண்ட மிருக்கிற தென்று அறியுந்தன்மையையுமுடைத்தாகி,பத்தாமாதத்தில் கருப்பவேதனைப்பட்டு யாவரும் விருப்பமுறத் தக்கச் சிறப்பினை வகிக்கப்போகிற புத்திரசிகாமணியைப் பெற்றாள்.

அப்புத்திரனுக்குக் கண்ணுவர் பல ஆசிகள்கூறிச் செய்யும் சடங்குகளை எல்லாம் கிரமப்படி நிறைவேற்றிப் பரதனென்று பெயரிட்டு, ஐந்துவயதுக்குமேல் வேதாகமங்கள் அறுபத்துநாலு கலைக்கியானங்கள் முதலியவற்றைப் போதித்து,ஏழாமாண்டுமுதல் வில்வித்தை - அம்புவித்தை-யானையேற்றம்- குதிரையேற்ற முதலியவைகளையும் கற்பித்து, மஹாவிருப்புடன் வளர்த்துவந்தார். அப்புத்திரனுக்குப் பன்னிரண்டு வயதான காலத்தில் கண்ணுவர் சகுந்தலையை அழைப்பித்து, ஓ அம்மணி! இனி நீ உன்கணவனாகிய துஷ்டியந்த மஹாராஜனிடத்துச் சென்று வாழ்ந்திருக்கவேண்டியமுறைமை. உன்னைமந்திரிகளால் அழைப்பிக்கிறேன் என்றுசொல்லிப்போயின அரசன், இதுவரைக்கும் உன்னையழைப்பிக்கவில்லை. இராச்சிய சம்

பத்தினுலே மறந்து விட்டாற போற் சானுகின்றது.
இதோ நமதுசிஷர்களிற் சிலரை அனுப்பிவிக்கிறேன்.
அவர்களைத் துணையாகக்கொண்டு நீ அத்தினபுரத்
திற்குச் செல்லென்று கட்டளையிட்டுச் சிஷர்களை அ
ழைத்து, ஓ சிஷர்களே! இந்தச்சகுந்தலையை அத்தி
னபுரத்தில் விட்டுவாருங்களென்று சொன்னார். சகுந்
தலை கனவருத்த மடைந்து, கண்ணுவருக்குச் சாஷ்
டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஓஸ்வாமி! இது வரை
க்கும் யாதொரு குறைவுவாராமல் என்னைப் பாதுகாத்
தீர்கள். எனக்கு மாதா - பிதா - குரு-தெய்வம்-தாங்க
ளேயன்றி வேறில்லை. எப்போதும் ஸ்திரீசாதிகளுக்
குக் கணவன்வீடு சதமேயன்றித் தாய்வீடு சதமல்ல.
நானும் ஸ்திரீயாதலால் மரபுவழக்கப்படி தங்கள் கட்
டளையை மீருமற் செல்லுகிறேன். இது வரைக்கும்
எப்படி என்மேற் கிருபைவைத்திருந்தீர்களோ, அப்
படியே இனிமேலும் எளியேன்மீது கிருபைகூர வே
ண்டுமென்று இனிய வசனங்களுடன் வணங்கி விடை
பெற்றுச் சிஷரைத் துணையாகக் கொண்டு, புத்திர
னேடுதானும் ஆசிரமத்தைக் கடந்து அத்தினபுரத்
தருகில் வந்து சிஷரை அனுப்பிவிட்டுத் தான் தன்
புத்திரனேடு நகரத்துட்சென்றுள். அப்போது அந்ந
கரத்திலிருப்பவர்கள் இந்தச் சகுந்தலையையும் இராஜ
சிங்கமாகிய பரதனையும் பார்த்து மிகுந்த ஆச்சரியம
டைந்து, ஆ! ஆ! இந்த அம்மனைப்பார்த்தால் ஸ்ரீம
காலட்சுமியைப்போலிருக்கின்றுள். அருகிற்செல்லுகி
றவாலிபனைப்பார்த்தால்மன்மதன்போலிருக்கின்றுன்.
இவ்வளவு சவுந்தரியமுள்ள இவர்கள் பாதசாரியாய்
இந்நகரத்துட் பிரவேசித்த காரணமென்ன வென்று
ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ள சகுந்தலை இரா
ஜன் கொலுமுகவாயலில் வந்து, அங்கிருக்கும் காவலா
ளிகளைக்கொண்டு தன்வரவை அரசனுக்குத் தெரி
வித்து, அரசன் உத்தரவின்மேல் கொலுவிற்சென்று,
கணவனுதலால் புத்திரனேடு தானும் வணங்கி நின்
றுள். அங்கவ்வரசனேடு வீற்றிருக்கும்-௰௮-மந்திரி
களும், ௲௲௲௮ - பட்டவர்த்தனரும், ௩௩௲௮-மகு
டவர்த்தனரும், இமபண்டிதர் - இராஜ புரோகிதர் -
ஆசிரியர்கள் - ௫௲ - தேசாதிபர்கள் முதலானவர்க
ளும் சகுந்தலையையும் பரதனுகிய வாலிபனையும் நோ
க்கி, அவர்கள் அழகுக்காக மிகுந்த மகிழ்ச்சியையும்,
அவர்களவ் விராஜசபைக்கு வரும்படி யார் என்ன
தீங்கு செய்தார்களோ வென்கிற ஏக்கத்தையுங் கொ
ண்டிருந்தார்கள். அரசன் நமஸ்காரஞ் செய்த சகு
ந்தலையையும் புத்திரனையும் உய்த்துநோக்கி, ஆ! ஆ!
நாம் வேட்டையாட வனத்திற் சென்றபோது, கண்
ணுவர் ஆசிரமத்தில் இவளைக்கண்டு பரவசஞ்செ
ய்து, காந்தருவமணம் புரிந்து கலந்து, மந்திரி
களால் அழைத்துக் கொள்ளுகிறே மென்று சொல்லி
வந்துவிட்டு, இதுவரைக்கும் நாம் அழைக்காதிருந்த
தினுல் இவளே வந்து விட்டாள். இனிநாம் இவள்
கருத்துக்கு விரோதம்வராமல் அழைத்துக் கொண்
டோமாகில், இதோயிருக்கிற நமது புத்திரனுக்கு நம
க்குப்பின் நமது மந்திரி முதலானவர்கள் பட்டங்கட்
டுவிக்கமாட்டார்கள். அல்லது நீக்கி விடுவோமாகில்
இவள் மனம் நோகும். அதனுல் நமது அரசுக்குக்கெ
டுதி நேரிடும். இதற்கென்ன செய்கிறதென்று சற்று
நேரம் ஆலோசித்து, இவளை நிராகரிப்போம். அப்
போது நாம் சாக்ஷிவைத்த ஆகாயவாணிவந்து, இந்த
ச்சபையி லிருக்கிறவர்கள் யாவரு மொத்துக்கொள்ள
அக்காலத்தில் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லு
வள். அப்போது அச்சாக்ஷி முன்னிலையில் அழைத்து
க்கொண்டு, நம்மால் அவள் அடைந்த வருத்தத்தை
மாற்றுவோமென்று மனதுக்குள் தீர்மானித்துச் சகுந்
தலையைப் பார்த்துச் சொல்லுகிறுன்.

ஓ பெண்ணே! நீயார்? உன்பெயரென்ன? உன்ன
ருகிலிருக்கிற சிறுவன்யார்? உன்னிருப்பிடம் எது? நீ
இந்த ராஜசபைக்கு வரவேண்டியகாரண மென்ன? எ
ன்று வினவ சகுந்தலை யானவள் மிகவுந் திடுக்கிட்டு,
ஆ! இதென்ன ஆச்சரியம். அரசன் நம்மையாரென்று
வினவுகிறுர். இவர் நம்மைப் பகற்காலத்திற் கூடின
வராயிற்றே குறிப்புதெரியாதா? இவரிப்படி கேட்டது
யாது எண்ணங்கொண்டோ தெரியவில்லையே:ஒருவே
ளை செல்வச் செருக்கினுல் நம்மை அவமானப் படுத்
தக்கருதி இருக்கிறுரோ?அல்லது மறந்துவிட்டாரோ?
என்னமோ எல்லாம் இன்னும் சற்றுநேரத்துக்குள்
தெரியவருகிறது. நாம் உண்மையைக்கூறினுல் தெய்
வம்விட்ட கதியாகுதென்று தனக்குத்தானே யோசி
த்து அரசனைவணங்கி, ஓமஹாராஜனே! நான்உமதும
னைவி. என்பெயர் சகுந்தலை.இதோயிருக்கிற சிறுவன்
உமது புத்திரன். என்னிருப்பிடம் கண்ணுவர் ஆசிர
மம். நான் இவ்விடத்துக்குவந்தகாரணம் முன்னம்நீர்
என்னைக்கூடின காலத்து மந்திரிகளால் அழைத்துக்
கொள்ளுகிறேனென்று சொல்லிவந்து இதுவரைக்கும்
என்னை அழைக்காமல் இருந்துவிட்டதினுல், நானே
உமது இடத்துக்கு வந்துவிட்டே னென்று மறுமொ
ழி வழங்கினுள்.அரசன் அம்மொழியைக்கேட்டுப் புத்
திரனையும் மனைவியையும் பார்த்த மகிழ்வைப் பரியாச
மகிழ்வாற் செய்யுஞ் சிரிப்பாக வெளியிற்காட்டக் கரு
திக் கலகலவென்று நகைத்து, அன்புடன் நோக்கும்
நோக்கைக் கடும் பார்வையாகத் தாக்கி ஒருவசனஞ்
சொல்லுகிறுன். பளா! பளா! மந்திரிகளே! இதென்
ன ஆச்சரியம்.இதோயிருக்கிறபெண்என்மனைவியாம்.
அவள் அருகிலிருக்கிற சிறுவன் என்முடியைத் தாங்
கும் புத்திரனும். இவள் முன்னும் பின்னும் கட்டிப்
பேசுவது மெத்தமேலாயிருக்கின்றது. பொய்யைமெ
ய்போற் காட்டுகிறுள் பாருங்கள். சபாசு! சபாசு! நன்
றுயிருக்கின்றது: என்று எளிதஞ்செய்து சகுந்தலை
யைப் பார்த்துச் சொல்லுகிறுன். ஓ பெண்ணே! நா
னே அரசன். நான் கண்ணுவர் ஆசிரமத்துக்கு என்ன
காரணத்தால் வரப்போகிறேன்? அப்படி வந்தாலும்

தனித்துவருவனா? இதென்ன விந்தை? நானுன்னைக் கூடினதெப்படி? அந்தவரலாற்றை யாவர்க்குந்தெரிய உரையென்றுகூற சகுந்தலை கனவருத்த மடைந்து சொல்லுகிறாள்.

ஓ அரசனே! நீர்வேட்டைக்குவந்தபோது வெளியே யாவரையும் நீக்கி ஒருவராய்த் தனித்துக் கண்ணுவமுனிவர் ஆசிர்மத்துக்குவர, நான்கண்டு எழுந்து மரியாதைசெய்து பொற்பீடமளித் திருக்கச்சொல்ல இருந்து, என் வரலாற்றைக்கேட்டு மையலாகி, பூமிதேவி ஆகாயவாணி இவர்களைச் சாக்ஷிவைத்து, நாம் நடத்திக்கொள்ளப்போகிற காந்தருவ விவாகத்தினாற் பிறக்கும்புத்திரனுக்கு முடிசூட்டுகிறேனென்று உறுதிமொழிபேசி, அக்காந்தருவ விவாகஞ் செய்து என்னைக்கூடி, உடனே மந்திரிகளால் உன்னை வரவழைத்துக்கொள்ளுகிறேனென்று வாக்குத்தத்தஞ் செய்து வந்து அவ்வாக்குத் தத்தத்தை இப்போது மறந்துவிட்டீர். பின்புநான் கருப்பவதியாகி இப் புத்திரனைப்பெற்றேன். கண்ணுவர் இப்புத்திரனுக்குப் பரதனென்று பெயரிட்டு, புத்ரோச்சவ முதலிய சட்கருமமு நடாத்தி, நாலுவேதம்-ஆறுசாஸ்திரம்-அறுபத்துநாலுகலைக்கியான முதலாகிய பல கல்விகளும், அரசர்க்குரிய வில்வித்தை முதலியதுகளும் அப்பியாசஞ் செய்வித்து, என்னையும் இப்புத்திரனையும் உமது நகரத்தில் விட்டுவரச்சொல்லித் தமதுசிஷருக்குக் கட்டளையிட, அச்சிஷர் அவ்வாறு உமது நகரத்திற்கொண்டுவந்துவிட்டுப் போயினர். நான் உமது சபைக்குவந்தேன் என்றாள். அரசன் இவ்வசனங்களைக் கேட்டு, இதெல்லா முண்மையென்று தோற்றப்பட்டும் தன் கருத்து நிறைவேறக்கருதி முகம் வேறுபட்டு, மஹா உக்கிரத்தோடு கடுகடுத்த முகம்போல் தன் முகத்தைக்காட்டி, மின்னாமல் இடியிடித்தா லெப்படியோ அப்படிபோல் அதட்டிச் சொல்லுகிறான்: ஆ!ஆ! பெண்ணே! நானென்ன அரசனல்லவா? நான் வேட்டையாடப் புறப்பட்டால் ஒருவனாகப்புறப்படுவேனா? அல்லது வேட்டையாடுகிற தருணத்தில் ஏதாவதொரு மிருகமீறி ஓடிற்றானால், அப்போது சேனைகளைவிட்டுப்பிரியலாம். அப்படி பிரிந்தகாலத்தும் உயிர்க்குயிராயிருக்கிற மந்திரிகள் பிரிவார்களா? நான் எவ்விடத்துச் சென்றாலும் அவ்விடத்துக்கு யாதொருதடையுமின்றி உடனிருப்பார்களே: நான் தனித்து வருகிறதென்ன? அப்படிதான் தனித்துவந்தாலும், முனிவர் ஆசிர்மத்தில் வரவேண்டிய காரண மென்ன? வழி தப்பி முனிவர் ஆசிர்மத்துக்கு வந்தாலும், அந்த இடத்தில் ஒருஸ்திரீயிருந்தால் மோகிக்கக் கூடுமோ? இதையெல்லாம் யோசித்தால் சுத்தப் பொய்மையாயிருக்கின்றதேயன்றி, உண்மையென்று உன்னருகிலிருக்கிற சிறுவனும் நம்பமாட்டான். இதுவுமன்றி நீ சொல்லுகிறது என்ன வென்றால், ஆகாயவாணி பூமிதேவியறிய என்னைக்காந்தருவமணம் புரிந்தாயென்கிறாய். அது சபைக்குதவுமா? (முழுப்பூசினிக்காயைச் சோற்றோடு மறைத்தவள்.) என்று உலகத்தார்சொல்லக் கேட்டிருந்தேனே யன்றிக் கண்டறியேன். இன்றையதினம் உன்னைக்கண்டேன். உலகாதிபனான என்பேரிலேயே வழக்காடத் துணிந்து வந்த நீ (யானையைச் சுளகால்மறைத்த கதைபோல) இன்னும் சற்று நேரம் இச்சபையில் வைத்திருந்தால் எல்லாம் என்னதென்று கைக்கொள்வாய்போலிருக்கின்றதே: உன்னைப்போல் ஸ்திரீகளைக் கண்டதில்லை. இனி அரைநொடிப்போதாகிலும் இவண் நிற்கவேண்டுவதில்லை. வந்தவழியே நோக்கிச்செல்லுக. என்றிவ்வாறு கடுகடுத்து அரசன் கூறலும் சகுந்தலை யவைகளைக் கேட்டு கனவருத்தமுற்று, ஆ! ஆ! தெய்வமே! ஆதியில் இந்த அரசனைக்கண்டபோது பெண்கள் பெறும்பேறு இன்று பெற்றோமென்று விருப்புற்று, உடனேகூடி மிகுந்தகளிப்படைந் திருந்தேனே: இன்றையதினம் இவ்வரசன்சொல் அளவற்றகளிப்பை அதமாக்கிச் சகிக்கக்கூடாத துன்பத்தைக்கொடுத்ததே: இதற்கென்ன செய்வேன். ஐயோ! இன்னும் சற்றுநேரமிருந்து நடந்த விசேஷங்களை விவரித்துக்கூறுவோமென்றால், ஏவலாளிகளால் தள்ளிவிடுவார் போல் தோற்றுகின்றது. இனிநாம் என்னசெய்யப் போகிறோமென்று தனக்குத்தானே மனதில் நினைத்து அரசனைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

ஓ அரசனே! உலகத்தில் யாராவதொருவர் கொலை-களவு-காமம் - சூது-வாது - முதலான அக்கிரமங்களில் ஒன்றைச் செய்தால், அவர்களை அரசன் தண்டிக்கிறது. அவ்வரசனே அவ்வகை அக்கிரமங்களுக்குப்பாத்தியப்பட்டால், அவனைத் தண்டிப்பவர் யார்? ஒருவருமில்லை. நீர்உலகாதிபன். உமதுவாக்குக்கெதிர் வாக்குண்டா? இல்லை. ஆதலால் (வேலி பயிருக்காதாரம். அவ்வேலிதானே பயிரை மேய்ந்தால் விளையுமாறெப்படி.) மலைபோன்ற புயமுடைய மன்னனே! என்னைக் கண்டபோது சத்திய வாக்குடனும் நிலைபெற்ற அறிவுடனும் இன்சொல்லுரைத்து, என்னைக்கலந்து பிரிந்த பிற்பாடு கல்லைப்போல் மனமும் கரவடமுங் கற்று, இப்போது இப்படிபேசுவீரென்று அப்போது பேதைமையாகிய சிறியேன் அறியாமற் போனேன். மாரிபோற்பொழியுங் கரத்தையுடைய வள்ளலே! உடலும் உயிரும் போலவும், மலரும்மணமும்போலவும், இரத்தினமும் அதனது தேயசும்போலவும், கணவனுடன் ஸ்திரீகள் இங்கிதமாகப் பொருந்தி வாழ்வதல்லாது, அன்னியரைப்போல் ஒருவர்க்கொருவர் பிரிவுற்றுத் துன்பத்தால் வருந்தித் துயரப்படாநின்ற தோகைமார் எப்போதுமுண்டோ? இறைவனே? தனக்கு வழிபடு கடவுள்-தனக்குண்டாகிய இன்பம்-தனக்குள்ள வலிமை-தனக்கிசைந்த அழகு-இன்னுமுள்ள சுபங்களியாவும் தனது நாயகனென்றே வந்தித்துச் சிந்திக்கும் பதிவிரதைகளை மனநோவச் செய்வது விவேக

மோ? நீதியோ? தருமமோ? ஐயோ! அநியாயமும் அசத்தியமும் உம்மிடத்தில் இருக்குமாகில், நியாயமும் சத்தியமுமிருக்கும்இடமெங்கே? இராஜனே! அரசருக்குண்டாகிய பெருமை - கீர்த்தி - இன்பம் - பேறு- யரகம்-வெற்றி முதலிய சகலகருமங்களும் கற்புடையமனைவியைப் படைத்தவர்க்குண்டென்றும், அவர்கட்கே உரிமையென்றும் வேதத்திற் சொல்லியிருப்பதை அறிந்திருந்தும், என்னையும் அருமைமகனையும் அவமதித்துத் தள்ளிவிடுவது ஞாயமோ? அண்ணலே! தனது தலைவராயினோர் வாழ்வைப் பெற்றாலும் தாழ்வைப் பெற்றாலும் இருந்தாலும் இறந்தாலும் கூடப்பொருந்தி அநுபவிப்பவளாகிய குலநாயகியின் மனம் தளரும்படிக்கு, (மேலெழுந்து ரக்கையையாட்டி உள்ளிருக்கு மீனை வெளிப்படுத்தி வீழ்ந்து உறிஞ்சிக்கொண்டு தேகத்திற் ஜலம் ஒட்டாமல் உதறிவிட்டுப் போகின்ற மீன்கொத்திக் குருவியைப்போல்) பசையற்றுப் பற்றற்றுப் போகின்ற புருஷரையடுத்தால் அவர் அவளைக் காப்பரோ? காவலனே! ஒருபுத்திரன்பிறக்கவேண்டுமென்று புத்திரகாமேஷ்டி யாகமும்- பலதருமமும்-விரதமும்- நோன்பும் செய்து, சத்திரம்-சாவடி-மடம்- தடம்-சோலை-சாலை-தெய்வப் பிரார்த்தனை-மந்திரம் - யந்திரம் - சக்கரம் - அவுஷதம் - முதலிய முயற்சிகளை நடத்திப் பிள்ளையைப் பெற்றுக்கொள்வார்கள். திவ்வியமான குமாரனைக் கண்டும் நீயாரோ நானாரோ வென்று வெறுத்த பேர்களை எக்கதையிலுங் கேட்டறியேன். எக்காசினியிலுங்கண்டறியேன். ஓ சந்திரவம்சோத் தாரகனே! இவ்விடத்தில் சந்ததியைக் குறித்துச் சலிக்க உம்மைக்கண்டேன். மேலும் நெருப்பிற் கொளுத்திய தீபமும்-காட்டிய வஸ்துவைக் காட்டும் கண்ணாடி நீழலும்- வெவ்வேறு பெயரைப் பெற்றாலும், பொருளொன்றே யல்லது வேறில்லை. அதுபோல் தந்தையின் ஸ்வரூபமே புத்திர ஸ்வரூபமென்று புராதன மாகிய வேதஞ் சொல்லுவது பொய்யாகுமோ? ஐயா! தங்கள் கான்முளையாகிய இச்சிறுவனை ஆரோவென்று அவமதித்தால், அந்த அவமதிப்பு உம்மதல்லவோ? எனிதை யோசிக்கவில்லை. இறைவனே! நூறுவாவிகள் வெட்டிய பலன்- ஒருதடாகம் வெட்டினு லுண்டாகும். நூறுதடாகம் வெட்டிய பலன் -ஒருயாகஞ் செய்தால் கிடைக்கும். நூறுயாகஞ் செய்தபலன் - ஒருசற்புத்திரனைப் பெற்றாலுண்டாகும். நூறு சற்புத்திரரைப் பெற்றபலன் - சத்தியந்தவறா திருக்கிற் கிடைக்குமென்று சுருதிமுறையிடுகின்ற துணர்ந்தும், சொற்சோர்வு படப்போமா? தோன்றலே! இதன்றியும் உலகாளும் இராஜர்களுக்கு முக்கியமாயிருக்கவேண்டியது குற்றமற்ற இல்லாளும், சொல்லுதற் கருமையான மைந்தனும், சத்தியவாக்கும், நன்னீதியும், நடுவு நிலைமையுமாம். இவைகளை யோசிக்குமிடத்தில் என்னையும் இப்புத்திரனையும் மகிட்சியுடன் சேர்த்துக் கொள்வீராகில், மற்ற சத்திய முதலிய யாவும் உமக்கெளிதி லுண்டாகும். ஓ இராஜசிங்கமே! உம்முடைய புத்திரன் பரந்த [illegible] நினைத்தற்கரிய யாகங்களெல்லாஞ் செய்தபோது, ஆழிசூழ்ந்த அம்புவியனைத்தும் ஒரு குடையில் ஆள்வான் சத்துருசெயமும் படைப்பானென்று ஒரு அசரீரி வாக்கும் பிறந்தது. அப்பேர்ப்பட்ட மகனை ஆதரித்தருள்செயக் கடவை யென்றாள்.

இவ்விதமாகச் சகுந்தலை சொன்ன மொழியனைத்துங் குறைவில்லாமற்கேட்ட துஷ்டியந்த மஹாராஜன், ஓ பிறைபோன்ற நெற்றியையுடைய மின்னே! முன்னே உன்னை இன்னாளென்றறியமாட்டேனே: சும்மாய்ப் பன்னிப்பன்னிப் பேசுகிறாயே: நீ அன்னம்போல் நடந்து முன்னமிருந்த இடம்போய்ச் சேரென்று பொன்னைப்பொற் சாயலையுடைய அணங்குக்குச் சொல்லிப்போட்டு, அரசன் வேறுவேலையிலிருப்பவன் போல் உள்ளமுடைந்து விசனப்பட்டுக்கொண்டிருந்தான். அப்போது சகுந்தலை கண்ணீர் விட்டுத் துன்பக்கடலுளாழ்ந்து, வேலாயுதமுடைய மன்னனை நோக்கி, ஓ அரசனே! நீர் பூர்வத்தில் கண்ணுவரிஷியின் ஆச்சிரமத்திற்குவந்து, சந்தோஷவார்த்தைசொல்லிப் புணர்ந்து, சத்தியம் ஒருநாளுந் தப்பேனென் றுபசரித்து, இருவர்மனமும் ஒன்றுபடக் கலந்து, என்னை இல்லாளாக அநுபவித்ததுண்டு. அப்போது பேசியசொற்களெல்லாம் இப்போது மறந்து சொல்லுகிறீர். இது என்ன மர்மமோ? அல்லது என் கர்மமோ? ஒன்றும் தோன்றவில்லை. ஆலோசிக்குமிடத்தில் உமதுபேரிற் குற்ற மில்லை. என்னுடைய தீவினையாக்கலும். மிகுந்த அறிவிற்சிறந்த தாயுந் தந்தையும் நான் பிறந்தபோதே துறந்து விட்டார்கள். இப்போது என் பட்சத்திற் சிறந்தவ னென்று எண்ணி இருந்த நாயகன் மறந்து விட்டார். என்னைப்போற் பெண்ணாருக் கொண்டவர்களில் மஹாதீய பாவிகள் வேறுண்டோ? விஸ்வாமித்திரருக்கும் மேனகைக்கும் பெண்ணாய்ப் பிறந்தும், கண்ணுவ மகாரிஷியின் கண்ணருளால் வளர்ந்தும், சிங்காசனாதிபதியாகிய சந்திரகுலத்து இராசாதி ராசனுக்கு உரிய மனைவியாய்ச் சிறந்தும், சூரியனைப்போன்ற வீரியனை யீன்றும், பரவசமாகிய துன்ப நீங்கிற்றில்லை. ஆதலால் ஒருவரையும் வெறுக்கத்தக்கதன்று. இது யான்செய்தபாவம். ஆகிலும் இவ்வுலகில் நல்லோர் - புல்லோர் - புருஷாள் - பசு- பக்ஷி- மிருகமுதலிய யெல்லாவற்றிற்கும் காரணனாகிய கடவுள் ஒருவனுண்டாகில், அவன்றான் உள்ளபடி யாவையும்வெளிப்படுத்திக் காக்கவேண்டுங்கடமை. இக்காரியத்தை முடிவு செய்ய மற்றெவராலுமாவதன்று. என்று இளமையாகிய சகுந்தலை இளவரசாகிய தன் பிள்ளையைக் கரத்திற்பற்றித் திரும்புகிறவள், அரசனே! நீர் சுகமாக வாழும். நான் செலவு பெற்றுக்கொள்ளுகிறேன். அப்பால் என்தலைவிதி என்றுசொல்லி மகாதுன்பத்தோடு இராஜசபையை விட்டு இரண்டடி எடுத்துவைத்தாள். இதற்குள் அரசனுக்கு மனங்கலங்கி,

இன்னும் ஆகாய...ணிபூமிதேவி ஏன்வரவில்லை. நாம்
பொய்முதலாகிய குற்றங்களைநீக்கி அரசுசெய்தாலும்,
தற்காலத்தில் இந்தச் சகுந்தலைக்காக இச்சபையறிய
நடந்ததை இல்லையென்றுமறுத்தோமே அதனாற்றான்
வரவில்லையோ? அல்லது இன்னுமென்னநேரிடப்போ
கின்றதோ? கண்ணுவர் சாபாநுக்கிரக சாமர்த்திய ரா
யிற்றே: அவர் இவ்விருத்தாந்தத்தையறிந்தாற் கன
வருத்தம் அடைவரே: ஐயோ ! இதற்கென்ன செய்
வோமென்று பலவாறு மனதில் நினைத்துத் தன்கண்
ணையும் கருத்தையும் சகுந்தலைமீது வைத்து வாடி யி
ருந்தான்.

அத்தருணத்தில் ஆகாய வாணி சபையார்அறிய
அரசனை நோக்கிச் சொல்லுகின்றாள் : ஓ அரசனே! இந்
தச்சகுந்தலை மஹா பதிவிரதை. ஆதியில் இவளைக்
கூடும்பொது என்னைச் சாக்ஷிவைத்துக்கூடினை. இவ
ள் சொல்லியவை யெல்லாம் உண்மைதான். இனித்
தடையின்றி அவளை மனைவியாகக்கொண்டு, அச்சிறு
வனுக்குப் பட்டங்கட்டுக. அச்சிறுவனால் உன்வமிசத்
துக்கெல்லாம் பெருமைகிடைக்கப்போகிறது.விரைவி
ல் சகுந்தலையைக் கலந்து ஆதரிப்பாயாக. என்றுசொ
ல்லவும் அரசன் பேரானந்தத்தை அடைந்து, ஓடோ
டி வந்து சகுந்தலையினது இரண்டு கரத்தையும் பற்றி
அழைத்துவந்து, சிறுவனாகிய பரதனை வாரித் தழுவி
முத்தமிட்டுச் சபையைப்பார்த்துச்சொல்லுகின்றான்:
கேளுங்கள் சபையார்களே! சிலகாலத்துக்குமுன்னம்
வேட்டையாடக் காட்டிற் சென்றபோது ஒருமானைத்
துரத்திச் சென்று,மந்திரியும் யானும் தனித்து ஒரு
சோலையிற்போய் அதிலிருக்கும் தடாகத்திற் சலபா
னஞ்செய்து, களை நீங்க ஓர்மரத்தடியிலிருந்து சற்று
நேரம் சென்றபின்பு தனியே அவ்வன விநோதத்தை
ப் பார்க்கச்சென்றேன். என்கண்ணுக்குக் கண்ணுவர்
ஆசிரமந் தோன்றிற்று. அதிற் சென்றபோது இம்ம
டவரலைக்கண்டு, ஆகாயவாணிமுதலானவர்களைச் சா
க்ஷிவைத்துக் காந்தருவ விவாகஞ்செய்து கூடினது
உண்மைதான். ஆனால் அழைப்பித்துக் கொள்ளுகி
றேனென்று சொல்லிவிட்டு வந்தேனேயன்றிக் கூறி
யபடி அழைப்பித்துக் கொள்ளவில்லை. அதன்மேல் இ
வள் என்சபைக்கு வந்துவிட்டாள், வந்தவளை அங்கீ
கரிப்பேனாகில் எனக்குப் பிற்கால் என் புத்திரனாகிய
இச்சிறுவனுக்குக் கிஞ்சித்து மரியாதைத் தாழ்வு வ
ருமென்று யோசித்து, சாக்ஷிகளாயிருக்கிற ஆகாய
வாணி முதலானவர்களி லொருவர் வாக்கு கொடுக்கி
றவரைக்கும் உண்மையை வெளிப்படுத்தா திருக்க
வேண்டுமென்று தாறுமாறான உத்தரவு கொடு
த்து வந்தேன். அப்பால் எனது கோரிக்கை
முடியவும் - அவள் படுந் துயர் தீரவும் - சபை
யிலுள்ளோர் சந்தேகமாறவும் - யாவருங்கேட்கும்
படியாய் முன்பு எங்களுக்குள் அந்தரங்கமாய் நடந்
த காரியங்க ளனைத்தையும் அசரீரி கூறியபடியால்,
இனி யிப்புத்திரனை எனக்குப் பின்பு என்னைப்போல்
அங்கீகரியுங்கள். நடந்ததெல்லா முண்மைதான். இவ
ளையும் இப்புத்திரனையும் நான் ஒப்புக்கொண்டேன்.
என்றரசன்சொல்லமந்திரிமுதலானவர்கள் திடுக்கென்
றெழுந்து சகுந்தலைக்கு நமஸ்காரஞ்செய்து சொல்
லுகிறார்கள்: ஓலோகமாதாவே! எங்களை யாதரிப்பது
தங்கள் கிருபை. எளியேங்கள் மீது விரோதம் வைக்
காமல் ஆட்கொள்ள வேண்டுமென்று வேண்டிவணங்
கினார்கள். அம்மந்திரி முதலானவர்களைச் சகுந்தலை
யாசீர்வதித்துச் சொல்லுகிறாள். ஓ புனிதர்களே! ஜல
வோட்டத்திற்பட்ட தெப்பமும் அரசன் வழிப்பட்ட
வர்களும் ஒன்றாதலால், அரசன் ஒன்றை இகழ்ந்தால்
அவனையடுத்த அமைச்சராதியோர் ஒக்க இகழவேண்
டியது. ஒன்றைப் புகழ்ந்தால் ஒக்கப்புகழவேண்டும்.
அப்படி இருந்தும் என்னோடு தற்கித்த அரசனோடுங்
கூடி யாதொரு மொழியும் வழங்காமல், உள்ளக்கரு
த்து வள்ளலுக்குத்தெரியுமென்று பாரியவாலோசனை
செய்து சும்மாயிருந்தபோதே நீங்கள் மிகுந்த விவே
கிகளென்பதற்கு ஐயமில்லை. இனி யுங்களுக்கொரு
குறைவில்லை என்று ஆதரித்தாள். பின்பு அரசன் சகு
ந்தலையோடு அந்தப்புரத்திற் சென்று கூடிக்குலாவிச்
சகல இன்பத்தையும் அநுபவித்து வருகிற நாளில்,
ஒருநாள் அரசன் உலக இன்பத்தின்மேல் வெறுப்பு
ற்று, மறுமைப்பயனை யடையவேண்டினவனாய் அம்
மேலாகிய பயனுக்குத் தவம்புரியவேண்டுமென்றுகரு
தித் தன்புத்திரனாகிய பரதனை அழைத்து, வேதவேதி
யர்கள் ஆசிகள்கூற ஐம்பத்தாறுதேசத் தாசர்களும்
மந்திரிகளுங் கொண்டாட மகுடாபிஷேகஞ்செய்வித்
துத் தான் தன்மனைவியோடு காட்டிற்சென்று அரு
மையான தவத்தைச்செய்து, சிலநாளையில் தாங்களி
ருவரும் பரமபதஞ் சேர்ந்தார்கள்.

இங்கே பரதமஹாராஜன் மநுசாஸ்திரவிதி பிச
காமல் செங்கோல்செலுத்தி அநேக யாகங்களைச்செ
ய்து தேவர்களுக்கு மகிழ்வுண்டாக்கித், தருமதே
வதை நாலுபாதத்தில் நடக்கத் தன்னுயிர்போற் பிற
வுயிரையும் பாதுகாத்து, கேகய அரசன் மகளான
சுனந்தையை மணம்புரிந்து பரிந்து வாழ்ந்தான். அ
வன்முதல் சந்திரவமிசத்துக்குப் பரதவமிசமென்றும்
அம்மரபின் அரசர்கதைக்குப் பாரதமென்றும்பெயர்.
இந்தப்பரதனுக்குஞ்சுனந்தைக்கும்பவுமன்பிறந்தான்.
பரதன் அப்பவுமனுக்குத் தன் மகுடாபிஷேகஞ்
செய்துவிட்டு, காட்டிற் சென்று தவத்தைச் செய்து
பரமபத மடைந்தான். அப்பவுமன் தசானவர்த்தன்
மகளான விசையையை மணம்புரிந்துகூடிச் சுகோத்
திரனைப்பெற்றான். சுகோத்திரன் பட்டாபிஷேகனாகி,
வீமராஜன் புதல்வியாகிய கவுசலாதேவியைமணந்து
அஸ்தனைப்பெற்றான். அஸ்தன் சூரகேது மன்னன்
மகளான சந்தனவதிசமேதனாகி, மநுசாஸ்திரவிதிபிச
காமல்அரசுசெலுத்தி,இந்நகரத்தைப் புதுக்கிப் பலவீ
திகளேற்படுத்தினான். அதனால் அஸ்தினபுர மென்று
இந்நகரத்துக்குப் பெயராயிற்று. அஸ்தனுக்கு நிகும்

பன் பிறந்தான். நிகும்பன் பட்டாபிஷேகனுகிச் சுதேவையை மணந்து,அவளிடமாய் அரசர்மீளி என்றெருபுத்திரனைப்பெற்ருன். அரசர்மீளி மகுடாபிஷேகனுகி உருக்காதேவி கவுசலாதேவி விசாலாதேவிஎன்கிறமூவரைமணந்து, நூற்றிருபத்து நாலு புத்திரர்களைப்பெற்ருன். அப்புத்திரர்களில் சவ்வருணனென்பவன் மாத்திரம் அரசுக்கு யோக்கியனு யிருந்தான். அரசர்மீளி சவ்வருணனுக்குப் பட்டங் கட்டித் தான் பரமபத மடைந்தான்.

சவ்வருண ராஜன் சரித்திரம்.

இந்தச் சவ்வருணன் உலகாதிபனுகிஅரசுசெலுத்தி வருகிறகாலத்தில்,ஒருநாள் வேட்டையாட யத்தனித்து மந்திரிகள் வேடர்முதலானவர்கள் புடைசூழ்க் காட்டிற் சென்று, யானை - சிங்கம்- புலி- கரடி -சார்த்தூல முதலாகிய பெரிய மிருகங்களை நாசஞ்செய்தான். அதனுல் அவனுக்குக் களையுண்டாகி ஒருவனத்திற்சென்று, அதிலிருக்குந் தடாகத்திற் சலபானஞ்செய்து களையாறி, ஒருமரத்தின் நிழலிற் சற்றுநேரமிருந்து, அவ்வன விநோதங்களைப் பார்க்க யத்தனித்து உலாவிவருகிருன்.அப்போது சூரியன் மகளான தபதி அங்கிருந்தாள். அவளைச் சவ்வருணன் கண்டு, அவளுடைய அழகுக்கு மகிழ்ந்து மையலாகிஅவளருகிற்சென்று, ஓ பெண்கள்நாயகமே! நீ மஹா ரூபவதியாயிருக்கிருய். எனக்கு உன்மேல் மனமிருக்கிறது. என்னை விவாகம் செய்துகொள். என்று கூற தபதி புன்னகை காட்டி மறைந்தாள். சவ்வருணன் திடுக்கிட்டு, ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்? நமதுகண்முன் தோன்றியமாது எப்படி மறைந்தாள்? அவளைக் காண்பதெவ்வண்ண மென்று அவ்வன முழுதுந்தேடி, மிகுந்த காம வெறி கொண்டு திரிகிருன். அதைத் தபதி கண்டு மனமிரங்கி அவன் கண்முன் தோன்றி, ஓ அரசனே! நீ யேன் வீணுக வருத்தப் படுகிருய்? நான் சூரியன் புதல்வி. என்தந்தையோடு ஒருவார்த்தை சொல்லிவிட்டு என்னை விவாகஞ்செய்து கொள்ளென்று உத்தரவு கொடுத்து மறைந்தாள். சவ்வருணன் இம்மொழியைக்கேட்டு, சூரியனை நாம் காண்பது எவ்வண்ண மென்று கனவருத்த மடைந்து நகரத்துக்கு வந்து, இரவும் பகலும் தபதிமேற் காதலாகி ஏக்கங்கொண்டு தூக்கமின்றி யிருந்தான். இப்படியிருக்கிற நாளிற் சூரியகுல அரசருக்குக் குருவாகிய வசிஷ்டர் இந்தச் சவ்வருணனுக்கும் குருவாதலால், அவனைப் பார்க்க வந்தார். சவ்வருணன் எழுந்து எதிர்கொண்டுபோ யழைத்துவந்து, பொற்பீட மளித்திருக்கச்சொல்லி, சோடச வுபசாரமுஞ் செய்து எதிர் நின்ருன். வசிஷ்டர் சவ்வருணனுக்குப் பல ஆசிகள் வழங்கி, அவனுடைய பிரகாசமான தேஜசோடுங் கூடிய தேகம் இளைத்திரு[illegible]தைக் கண்ணுற்றுத் தமது சி[illegible] திருஷ்டியினுற்பார்த்தார். அதனுல[illegible]ன் குமாரத்தியாகிய தபதியால்நேரிட்ட விரகநோயென்று அறிந்து, நாம் குருவாயிருந்தும் இந்தச் சவ்வருணன் வருத்த மடைகிறதா? இக்கணம் இந்நோயைத்தீர்க்கவேண்டு மென்று கருதித் திடுக்கென் றெழுந்தார். சவ்வருணன் அதனைக்கண்டு திகிலிட்டுப்பயந்து,குருக்கே வந்து நமஸ்காரஞ் செய்து சொல்லுகிருன்: ஓ ஸ்வாமி! அடியேனுக்கு அநேககாலம் தரிசனம் கொடுக்கா மலிருந்து இப்போது தரிசனம் கொடுத்தும், ஒன்றும் வசனியாமல் திடீரென்றெழுந்துசெல்கிறதை நோக்கினுல் எளியேன் மீது தங்கள் சித்தம் வெறுப்புற் றிருக்கின்றதாகத் தோன்றுகின்றது. தங்கள்கருத்தை வெளியிட்டால் தாங்கள் மகிழும்படி நடந்துக் கொள்ளுகிறேன் என்றுவேண்ட வசிஷ்டர் சவ்வருணனைப் பார்த்துச் சொல்லுகிருர்.

ஓ சவ்வருணு! இடம் - பொருள் - ஏவல் - முதலிய வற்றைப் பெற்ற நீ வாடியிருப்பதை என்கியானதிருஷ்டியால் நோக்கும்போது, சூரியன் புதல்வியாகிய தபதியின்மேல் மோகங்கொண்டு அதனுல் நீ வாடி யிருக்கிருயென்கிறதாக எனக்குத்தோற்றப்பட்டது. அதற்காகச் சூரியனிடத்துச் செல்லுகிறேன். நீ அஞ்சாமலிரு.என்று வாழ்த்தி விடைபெற்றுக் கணப் பொழுதுக்கு லக்ஷத் திருபத்தையாயிரம் யோசனை தூரம் போகின்ற சப்தமா வென்னும் பரி பூட்டிய ரதத்திற் செல்லுகிற சூரியனை வந்து கண்டார். சூரியன் அதிக பயபத்தியுடன் அவரை வழிபட்டுச் சொல்லுகிருன்:ஓ ஐயனே! அதிவேகத்தோடுங் கூடிய என் இரதத்துக்குமுன் வந்து நின்ற காரணமென்ன? அதனை எளியேன்மீது கிருபைவைத்துத் திருவுளம்பற்ற வேண்டும். என்று கூற வசிஷ்டர் சூரியனைப் பார்த்து, ஓ ஆதித்தனே! உலகத்தி லிருக்கும் அரசர்களுக்கெல்லாம் சிரேஷ்டனுகிச் சந்திரவமிச திலகனு யென்னைக் குருவாகக் கொண்டிருக்கிற சவ்வருணன், உன் புத்திரியாகிய தபதியின் மேல் காதலாகிக் காமநோயினுல் ஆகமிகநொந்து, அரசின்மேலும் கியாபக மின்றி யிருக்கிருன். நானவனுக்குக் குருவாக யிருந்தும், அவன் வருத்தப்படுவது தகுதியல்ல. ஆதலால்—நீ களிப்புடன் உன் புத்திரியைச் சவ்வருணனுக்கு விவாகஞ்செய்விக்கவேண்டுமென்றுகேட்டார். ஆதித்தன் மிகவு மகிழ்ந்து வசிஷ்டரை வணங்கிச் சொல்லுகிருன்: ஓ ஸ்வாமி! தங்களிடவாக்கினுல் மிகுந்த யோக்கியன் சவ்வருணன் என்றபோதே, அடியேனுக்கு வேறெரு திருஷ்டாந்தம் வேண்டுவ தில்லை. ஆனுல் நான் செய்யும் தொழில் தங்களுக்குத் தெரியுமே: எனக்கு வரக்கூடாது. தாங்களே என் புத்திரியை யழைத்துக்கொண்டுபோய் விவாகத்தை நிறைவேற்று விக்கலாம் என்று சொல்லி வசிஷ்டரைவணங்கிவிடைபெற்றுத் தன்தொழிலைநிறைவேற்றச்சென்ருன். வசிஷ்டர் தபதியிடத்து வந்து அவள்செய்த பு[illegible]யைக் [illegible]கைக்கொண்டு. நடந்த விருத்தாந்தத்

தைச் சொல்லி அழைத்துக்கொண்டு வந்து, ஐம்பத்தாறுதேசத்து அரசர்களும் வேதவேதியர்களும் மற்ற பந்து ஜனங்களுமறிய விவாகத்தை நிறைவேற்றினர். சவ்வருணன் வசிஷ்டருக்குச்சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து,ஓ ஆண்டவனே!நான்கொண்ட கருத்தை வெளிப்படுத்தாததற்கு முன் அதை அறிந்து அவ்வெண்ணத்தை நிறைவேற்றிச் சந்திரவமிசத்தைப்பாதுகாத்த தயாநிதியே! என்று துதிசெய்ய வசிஷ்டர் மகிழ்ந்து பல ஆசிகள்வழங்கி விடைபெற்றுத் தமது ஆசிரமத்துக்கு எழுந்தருளினர். இங்கே சவ்வருணன் தபதியுடனேகூடி ஒரு புத்திரனைப் பெற்று, அப்புத்திரன் குருவாற் கிடைத்தவனாகையால் அவனுக்குக் குருவென்று பெயரிட்டு வளர்த்துவந்தான். அவனால் இந்தச்சந்திரவமிசத்துக்குக் குருகுலமென்று பெயராயிற்று. அப்புத்திரன் மகுடாபிஷேகனாகித் தன் தந்தையிலும் எண்மணங்கதிகமாகத் தருமத்தை நடாத்தி, அநேக யாகங்களைச் செய்து, தன்னுயிரைப் போல மன்னுயிரையுங் காப்பாற்றி, மகததேசாதிபதி புத்திரியாகிய சுவாலையை மணம்புரிந்து கூடி வாழ்ந்திருந்தான். அவன் யாகஞ்செய்த இடத்துக்குக் குருக்ஷேத்திரமென்று பெயராயிற்று. அவ்வளவு பிரபலத்துடனே அரசுசெய்து ஒரு புத்திரனைப் பெற்று, அவனுக்குப் பரிச்சித்தென்று பெயரிட்டுத் தன் மகுடத்தை அவனுக்குச் சூட்டிப் பரமபதம் சேர்ந்தான்.

குருகுலச் சருக்கம் முற்றிற்று.

ஐந்தாவது.

சம்பவச்சருக்கம்.

கண்ணன் துதி.

சித்தசித்தொ டீசனென்று செப்புகின்ற மூவகைத்
தத்துவத்தின் முடிவுகண்ட சதுர்மறைப் புரோகிதன்
கொத்தவிழ்த்த சோலைமன்னு குருகையாதி நெஞ்சிலே
வைத்தமுத்தி நாதனன்றி வானநாடர் முதல்வர்யார்.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே! அப்பரிச்சித்து மகாராஜன் கேகய தேசாதிபதி புத்திரியாகிய சுபத்திரையை மணந்து, பிரத்திபனென்று ஒரு புத்திரனைப்பெற்று, அவனுக்கு முடிசூட்டிப் பரமபத மடைந்தான். பிரத்திபன் வீமராஜன் புதல்வியாகிய சுனந்தையைக்கூடித் தேவாபி-சந்தனு-என்னும் இரண்டு புத்திரர்களைப் பெற்றான். இவ்விருவர்களில் மூத்தோனாகிய தேவாபி காட்டிற் சென்று தவஞ்செய்திருந்தான். இளையோனாகிய சந்தனு மகுடாபிஷேகனாகித், தன்னுயிரைப் போல் மன்னுயிரைக்காப்பாற்றிச்,சில நாளில்மிகவுஞ் சிறப்புற்றுவிளங்கிப்,பாகீரதியை மனைவியாக வைத்துக்கொண்டு,அவளிடமாய் வீஷ்மாசாரியைப்பெற்று, அப்பால் மச்சகந்தியைக்கூடிச், சித்திராங்கன் - விசித்திர வீரியன் - என்று இரண்டு புத்திரர்களைப் பெற்றான். இவர்களிற் சித்திராங்கன் யுத்தகளத்தில் மடிந்தான். விசித்திர வீரியன் மகுடாபிஷேகனாகிக், காசிராஜன் புதல்வியர்களில் இருவரைமணந்து சந்ததி யில்லாமல் இறந்தான். அந்த இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தியை எனக்குக் குருவாகிய வேதவியாச மூர்த்தி கூடித், திருதராட்டிரனையும் பாண்டுராஜனையுந்தந்து, மற்றொரு ஸ்திரீயினிடமாய் விதுரனைப் பாலித்தார். இம் மூவர்களில் மூத்தோனாகிய திருதராட்டிரன் காந்தாரியைக் கூடிச், சுயோதனன் முதலாகிய நூறு புத்திரரைப்பெற்றான். இளையோனாகிய பாண்டுராஜன் குந்தி-மாத்துருவை என்னுமிரண்டு ஸ்திரீகளை மணந்து, குந்தியினி[illegible] ஜன்-வீமன்-அர்ச்சுனன்-என்னும் மூவரையும்,மாத்துருவையி னிடமாய் நகுலன்-சகாதேவன்-என்னும் இருவரையும்பெற்றான். இந்தஐவர்க்கும் பூர்வபுண்ணிய வசத்தாற் பாஞ்சாலி யாகிய திரௌபதை மனைவியாயினள். இந்தப் பாஞ்சாலி தருமராஜனுக்குப் பிரதிவிந்தனையும், வீமனுக்குச் சுருதீசனையும், அருச்சுனனுக்குச் சுரத கீர்த்தியையும், நகுலனுக்குச் சதானிகனையும், சகாதேவனுக்குச் சுதசேனனையும் பெற்றாள். மற்றுந் தருமராஜன் சுயம்வரமூலமாக மாளவதேசாதிபதி புத்திரியாகிய வேதிகையை மணம்புரிந்து, மிகுந்த சாந்தத்தை யுடைய சாதேயனைப் பெற்றான். வீமன் சலதரையென்னுங் கன்னிகையை மணந்து சுகுணனையும், இடும்பி என்னும் அரக்கியை மணந்து மிகுந்த அழகையுடைய கடோர்க்கஜனையும் பெற்றான். அர்ச்சுனன் சுபத்திரையைமணந்து அபிமன்னனையும்,உரகபதி மகளாகிய நாககன்னிகையை மணந்து அரவானையும் பெற்றான். நகுலன் இலகீர்மதி யென்னும் கன்னியை மணந்து, மித்திரனைப் பெற்றான்.சகாதேவன் விஜையையை மணந்து, வேத்திரனைப் பெற்றான். இந்த ஐவர்க்குப் பிறந்த பன்னிரண்டு புத்திரர்களில், அர்ச்சுனன் புத்திரனாகிய அபிமன்னன் விராடன் மகளாகிய உத்தரையைக் கூடி, உன்தந்தையாகிய பரிச்சித்து மஹாராஜனைப் பெற்றான். அப்பரிச்சித்து மாத்திரை யென்னுங் கன்னிகையைக் கூடி, ஜெனமேஜெய னென்னும் [illegible] வகித்த அரசனே! உன்[illegible] பெற்றான். நீகற்புடையஇவ்வபுஷ்டையைக்கூடிச்

சதாநிகனைப் பெற்றாய். சதாநிகன் வைதேகியை மணந்து அஸ்வமேதனைப் பெற்றான். இனி அஸ்வமேதனுக்கு யார்பிறப்பார்களோ தெரியாது. இதுதான் சந்திரவமிச பரம்பரை. சந்திரன் முதல் அஸ்வமேத னீறாக - சஎ - தலைமுறையாயின. ஓ அரசனே! சந்திரகுல அரசர்களின் சரிதைகளைச் சொல்ல யாவரால் முடியும். ஒன்றாகிய பரப்பிரம ஸ்வரூபி ஸ்ரீமந் நாராயணராகிய வேதவியாசரது அநுக்கிரகத்தினாற் கிஞ்சித்துச் சொன்னேனென்று வேதவியாசரைத் தியானித்து அஞ்சலிசெய்தார். இவையனைத்தையுங் கேட்ட ஜெனமேஜெயன் பிரம்மானந்தத்தை யடைந்து, இரண்டு கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் ததும்ப இரண்டு கைகளையும் சிரமேற்கொண்டு வேதவியாசரைத் தானுந் தியானித்து, வைசம்பாயனரை வணங்கி, ஓஸ்வாமி! தாங்கள் கூறியவற்றையெல்லாங் கேட்டு மகிழ்வடைந்தேன். அடியேன் கருத்தில் ஒருவிருப்ப மிருக்கின்றது. அஃதென்ன வென்றால்-சந்தனு மஹாராஜன் பாகீரதியைக்கூடி வீஷ்மாசாரியைப்பெற்றதும், வேதவியாசரால் திருதராட்டிரன் முதலானவர்கள் பிறந்ததும், அவர்களால் நூற்றுவராதியோர் வந்ததும்,இவையெல்லாம் விளங்க உரைக்கவேண்டும். என்றுவேண்ட வைசம்பாயனர் ஜெநமேஜெயமஹாராஜனை நோக்கி, ஓ விவேகத்திற் சிறந்த அரசனே! முன்னம் சந்தனுராஜன் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளென்று சொல்லத் தொடங்கினார்.

சந்தனுராஜன்சரித்திரம்.

அந்தப் பிரத்தீபன் இளையகுமாரனாகிய சந்தனுவென்பவன் இளமையிலேயே நாலுவேதம்-ஆறுசாஸ்திரம்-அறுபத்துநாலு கலைக்கியானம் - முதலாகியவற்றைக் கற்றுணர்ந்து, வில்வித்தையானையேற்ற முதலியவற்றை அப்பியாசஞ்செய்து, சகலகாரியங்களினுஞ் சுகுணசிகாமணியாகி விளங்கினான். இவனது நற்குண நற்செய்கையைக்கண்ட பிரத்தீபன் மனமகிழ்ந்து,தன் பட்டத்தை அவனுக்குக் கொடுக்க நினைத்து, வேத வேதியர்களையும் ஐம்பத்தாறு தேசத் தரசர்களையும் அழைப்பித்து, நல்ல சுபமுகூர்த்தத்தில் அழகிலுயர்ந்த அச்சந்தனுவுக்கு மகுடாபிஷேகஞ்செய்து, தான் ஆத்ம லாபத்தைக்கருதிக் காட்டிற்சென்று அருமையான தவத்தைச்செய்து பரமபத மடைந்தான். அவனவ்வாறாக: அவனரசைக்கையேற்ற சந்தனுமஹாராஜன் அநேகயாகங்களைச்செய்து தேவர்களுக்குத் திருப்தி செய்வித்து, பிரமசரியர் - கிரகஸ்தர் - வானப்பிரத்தர்-சன்யாசிகள்-ஆதாரமற்றுத் துறக்கப்பட்டவர் - ஆதுலர்-தன்னிடத்துவந் திரந்தவர்-விருந்தினர்-சுற்றத்தார்-முதலானவரைப் பாதுகாத்துத்,தன் னுயிர்போல் மன்னுயிரனைத்தையும் கருதி, எவர்க்கும் யாதொருகுறைவு மறாதிருக்கச் செங்கோல்செலுத்திவருகிறான். அந்நாளிலொருநாள் அவன்வேட்டையாடயத்தனித்து,மந்திரிகள்-வேடர்கள்-முதலாகிய தளத்தோடு நகரத்தைவிட்டு வெளிப்பட்டுக் காட்டிற்சென்று வேட்டையாடி, மந்திரிமுதலானவர்களைப்பிரிந்து தனித்து விடாய்ப்பட்டுக் கங்காநதி தீரத்துக்கு வந்தான். அங்கே கங்காநதி முகில்போலக் கறுத்து, சைவலத்தைப்போல் நெருங்கி, கொன்றைக் காயைப்போல் நீண்டு, கருமணலைப்போற் சொலித்து விளங்குகின்ற குழலையும்; பார்ப்பவர் கண்ணைக் கிரகிக்கும் வனப்புடைத்தாகிப் பொன்னிறமாகிய சிந்துரத்திலகமிட்டுச் சிறந்த மூன்றாம்பிறை ஒன்றிருந்தால் அதற்கொப்பாகும்படியான நெற்றியையும், மதன்கைக் கருப்புவிற்போன்ற கரும்புருவத்தையும், வாளை நிகர்த்த கண்களையும், சந்திரபிம்பத்தை யொத்த வதனத்தையும், வள்ளைபோன்ற செவியையும், ஆம்பலனைய இதழையும், முல்லைமலரனைய பல்வரிசையையும்,கமுகையொத்த கழுத்தையும், வேய்புரைதோளையும், பொருப்பனைய இருதனத்தையும், நூலனையமருங்குலையும், அரவப்படம் போன்ற அல்குலையும், கமலமொத்த அடியையு முடைத்தாகிய பூலோகப் பெண்ணுருவந்தரித்து; சந்தனுராஜன் அருகிலிருக்க விருப்புற்றவளாதலால் தன்னந்தனியே இராமல் சந்தனமரத் தருகிலிருந்தாள். அவளைவிடாய்ப்பட்டுக் கங்கையைத்தேடிச் செல்லுகிற சந்தனுமஹாராஜன் கண்டு பிரமைகொண்டு, விடாய்த் தணியும் படியாகக் கங்கை வெள்ளத்திற் படியவந்த கருத்தைவிட்டு இம்மங்கையின் வனப்பென்னுங் கடலிலாழ்ந்து, அக்கடலுட்பூத்த முகமாகிய கமலத்தினிடத்துத் தன்னிருகண்ணாகிய வண்டுகளைப் படியவைத்து, அவ்விடத்துத் தோன்றிய மயலாகிய மதுவைப் பருகித் தாகவிடாய்நீங்கிக் காமவிடாய்கொண்டு, ஆ!இம்மங்கை பூதலமங்கையோ? பூமங்கையோ? திருமங்கையோ? வரமங்கையோ? வான்மங்கையோ? நீர்மங்கையோ? என்று ஐயமுற்று, கண்ணிமைப்பதினாலும் - நிலத்திற் காலூன்றி நிற்றலினாலும்-மாலை வாடுவதினாலும்-வியர்வுண்டா யிருத்தலினாலும் பூதலமங்கையென்று நிச்சயித்து அவளருகிற்சென்று, ஓ பெண்கள் நாயகமே! நீயாருடைய புத்திரி? இந்தவனத்தில் தன்னந்தனியே இருக்கவேண்டியகாரண மென்னவென்று வினவப்பாகீரதிசொல்லுகிறாள்: ஓ அரசனே! நான் திருமால் புத்திரி. பிரமன் சாபத்தால் இங்குவந்தேனென்று ஒருபோக்காக உண்மையை வெளிப்படுத்தினாள். அதைக்கேட்ட சந்தனு மஹாராஜன் அவளைக் கூடவேண்டு மென்கிற விருப்பத்தினால் சாபத்தின் வரலாற்றைக் கேட்க விருப்புறாமற் றுரிதப்பட்டுக் கூறுகிறான்: ஓ பெண்கள் சிரோமணி! பிரமன்சாபத்தினால் இங்குவந்தது உண்மையாயிருக்குமாகில்,இவ்வுலகத்தில் என்னைவிட உயர்ந்தவரில்லை. மேலும் எனக்குப் பட்டத்தரசியில்லை. ஆதலால் நீ என்னை மணஞ்செய்து கொள்ளென்று இனியவசனங்களினால் வேண்டினான். கங்காதேவியவ்வசனங்களைக் கேட்டு நாணங் கொண்டவளாய்ச் சந்தனம்

பொருந்திய தனது தனத்தின் முகத்தை நோக்கிச் சொல்லுகிறாள்.

ஓ சந்திர குலோத் தாரகனான மகாராஜனே! நீர் இப்போ துரைத்த கருத்தின்படி நடக்கிறேன். ஆனால் ஒரு உறுதிகூறுகிறேன். அவ்வுறுதிக்கு எப்போது கெடுதிவருமோ, அப்போதே ஒருவர்க்கொருவர் சம்பந்தமில்லை. அவ்வுறுதியென்னவென்றால்-என் வயிற்றிற் பிறக்கும் சிறுவர்களைப் பார்ப்பவர்கள் குலை நடுங்கும்படி கொடிய கொலைசெய்து விடுவேன். அதற்கு நீர் தடைசொல்லாம லிருக்கிறதுதான். அப்படிக்கு மனமிருந்தாற் கைகொடும் என்று கேட்க, அதைக் கேட்ட அரசன் அதிக காமவெறிகொண்டவனாதலால் அதற்கொத்துக் கொண்டு கைகொடுத்துக், கங்காதேவியை நகரத்திற் கொண்டுவந்து, நகரத்தாரும் மற்ற அரசர்களும் வேதவேதியர்களும் சூழ அக்கினிசாக்ஷியாய் மணம் புரிந்து, இரதியு மதனு மிவ்விருவருந் தாமென்று யாவரும் மகிழ்ந்து புகழக் கூடிக்கலந்து வாழ்ந்து வருகிறான். அக்காலத்தில் பாகீரதி கருப்பந் தரித்து ஒருபுத்திரனைப்பெற்று, உடனே அச்சிசுவைத் தாதிகளுள்ளநடுங்கக் கங்கையிலெறிந்துவிட்டாள். இந்தச்சேதி அரசனுக்குத் தெரிந்து கனவருத்தமடைந்து, முன்கொடுத்த வாக்குத்தத்தத்தைநினைந்து ஒன்றுமறியாதவனைப்போலிருந்துவிட்டான். இப்படியிந்தப் பாகீரதியோ புத்திரனைப்பெறுகிறது, கங்கையிலெறிகிறது. இவ்வாறு எழுபுத்திரர்வரையில் நஷ்டஞ்செய்து வந்து, மறுபடியும் கருப்பவதியாயினாள். இந்தப்பாகீரதி செய்து வருகிற துற்செய்கையைக் கண்டுங்கேட்டு மிருக்கிற பிரசைகள் பலவாறு இகழ்ந்ததன்றி, சத்தியந் தப்பாமல் அரசுசெய்து வருகிற அரசனையும் நிந்தித்தார்கள். இந்தச்சேதி தனக்குத் தெரிந்திருந்தும் அதுகாறுங்கேட்காதிருந்த அரசன், எட்டாவது புத்திரனைப் பாகீரதி எப்போது பெறுவாளென்று மிகுந்த சாக்கிரதையோடு காலம்பார்த் திருந்தான்.

வீஷ்மர் உற்பவம்.

இப்படி யிருக்குந் தருணத்தில் பாகீரதி பத்து மாதமும் நிறைவேறி எட்டாவது புத்திரனைப் பெற்றாள். அங்கிருந்த தாதிகளால் அரசன் கேள்வியுற்று அதிகவிரைவில் அந்தப்புரத்துச் சென்று பிரசவித்த இடத்தில் அச்சமில்லாமற்பிரவேசித்துச் சிசுவைக்கையிலேந்திக்கொண்டு கங்காதேவியின் பாதத்தில் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஓ பாகீரதி! என்னால் சந்திரவமிசம் விர்த்தியாக இச்சிறுவனை யெனக்குத் தானமாகக் கொடு. ஆதியில் உனக்குக்கொடுத்த வாக்குதத்தத்தை மறந்தவனல்ல. பிள்ளைப்பிச்சை கேட்கிறேன். கிருபை கூர்ந்துதருக. என்று வேண்டலும்பாகீரதி கடுகடுத்து, மஹா உக்கிரத்தோடு அரசனை நோக்கிச்சொல்லுகிறாள்: ஓ அரசனே! இவ்வுலகாதிபனான நீ கூறியகட்டுரைமறந்து என்விரதத்துக்குக் கெடுதி நினைத்தபடியால், இன்றுமுதல் உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லையென்று சொல்லிவிட்டு எழுந்துசெல்ல யத்தனித்தாள். அரசன் அதுகண்டு, ஆ! பெண்கள் பெருமாட்டி! உன்னைப்பிரிந்து அரைகொடிப்போதாவது உயிர்தரித்துவாழேன். நீ எங்குற்றாலும் அங்கு வந்து பணிவிடைக்காரனாயாகிலு மிருப்பேன் என்று மறிக்க பாகீரதி நகைத்து, ஓ அரசனே! இனி நீ என்னை நம்பாதே: நான்கொண்டகருத்து நிறைவேறிற்று. நான் வந்ததும் உன்னிடமாய் எட்டுப்புத்திரரைப் பெற்றதும் வினைவசம். நீயும் வினைவசத்தாற் சந்திரவமிச அரசனாகப் பிறந்தாய். என்று சாற்ற அதைக்கேட்ட அரசன் திடுக்கிட்டு, ஓ பெண் ணரசியே! முன்னம் உன்னைக்கண்டு யாரென்று கேட்டபோது, பிரமன்சாபத்தால் இங்குவந்திருக்கிறேனென் றுரைத்தாய்: அந்தவேளையில் நான் காமவெறியால் அச்சாபத்தின் வரலாற்றைக்கேளாமலும், நீ கூறிய உறுதிமொழியைக் கவனிக்காமலும் வாக்குத் தத்தஞ்செய்து உன்னை மணம் புரிந்தேன். இன்றையதினம் அந்தச்சாபத்தின் வரலாற்றையும், என்னிடமா யெட்டுப் புத்திரர்களைப் பெற்றவிதத்தையும், என்பிறப்பையும் விளங்க உரையென்றுகேட்க பாகீரதி அரசனைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

ஓ அரசனே! முன்னம் சத்தியலோகத்திற் பிரமதேவனானவன் இந்திரன் - அக்கினி-இமயன்-நிருதி-வருணன்-வாயு-குபேரன்-ஈசானன் - அஷ்டவசுக்கள் முப்பத்து மூக்கோடி தேவர்கள் - நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள் - கின்னரர் -கிம்புருடர்-கருடர்-காந்தருவர் - சித்தர் - வித்தியாதரர் - முதலானவர்கள் புடைசூழச் சபைகூடியிருக்கிற தருணத்தில், வரநதியாகிய கங்கையும் அச்சபைக்குச் சென்றாள். அங்கே ஒருகாற்றுண்டாகிக் கங்கை அணிந்திருக்கிற வஸ்திரத்தை விலக்கிற்று. அதனாற் கங்கையினது அவயவந் தோன்றிற்று. அப்போது அச்சபையிலிருக்கிற யாவரும் மஹா பதிவிரதையான கங்கைக்கு மானக்கேடு வந்ததேயென்று கனவருத்தமடைந்து, அவரவர்கள் அக்கங்கையினது அவயவத்தை நோக்கொணாதென்றுகருதித் தங்கள் தங்கள் நயனத்தை மூடிக்கொண்டார்கள். அங்குவந்திருக்கிற மேற்றிசைக் காவலாளியாகிய வருணன்மாத்திரம், அக்கங்கையின் அவயவத்தின்மேற் கண்ணைச் செலுத்தினான். பிரமன் அதுகண்டு மிகுந்த சினங்கொண்டு வருணனை அழைத்து, ஓ வருணா! நீ தேவர்களுக்குள் உயர்ந்த பீடத்திலிருந்தும் பூலோக புருஷரைப்போல் அசேதனப் புத்தியை வகித்து, மஹாகற்புடைய கங்கையின் அவயவத்தைக் கண்ணுற்றாய். கண்ணுற்ற போதே காதல் முன்னமே தோன்றிற்று. காதலுற்ற போதே ஜனனமுண்டாயிற்று. ஆதலால் நீ இப்போதிருக்கிற உயர்ந்த பீடத்தை நீங்கிப் பூலோகத்திற் சந்திரவம்ஸ ராஜ

பரம்பரையிற்றோன்றி, நெடுநாள் ராச்சிய சம்பன்னனாய் நீ காதல்கொண்ட கங்கையைமணந்து சில புத்திரரைப்பெற்றுப் பின்னுஞ் சிலகாலமிருந்து, மறுபடியும் முன்போல் உன்பீடத்தைச் சேரக்கடவை.என்று சாபமிட்டபின் கங்கையைநோக்கி, ஓலோகமாதாவே! இத்தேவசபையில் உன்னவயவந்தோற்றின படியால் நீயும் பூலோகத்திற்சென்று மங்கைப்பருவமா யுதித்துச் சந்திரவமிச ராஜனைக்கூடிச் சில புத்திரரைப் பெற்று, முன்போல் நதியுருவமாகென்று சாற்றிவிட்டான். அவ்வருணன் அச்சாபத்தை ஏற்றுச் சந்திரவமிசபரம்பரையிற்றோன்றிக் குருகுலசிகாமணியாயிருக்கும் பிரத்தீபனுக்குப் புத்திரனாகப்பிறந்து, சந்தனுவென்னும் காரணப்பெயர் வகித்தான், அவன்தான் நீ. பின்பு கங்கையாகிய யான் அச்சாபத்தை நிறைவேற்றக்கருதிப் பூலோகத்தை நோக்கிவருகிறபோது,அனலன்-அணிலன்-ஆபச்சைவன்-சோமன்-தரன் - துருவன்-பிரத்தியூசன் - பிரபாசன்-என்கிற அஷ்டவசுக்களும் வாடினமுகத்துட னெதிர்ப்பட்டு, எனக்குநமஸ்காரஞ்செய்து நின்றார்கள். நான் அவர்களை வாழ்த்தி, ஓ அஷ்டவசுக்களே! நான்தான் பிரமன் சாபத்தினாலே பூலோகத்திற் சென்று பெண்ணாகப் பிறக்கப் போகிறேன். அதற்காக என்முகம் வாடவேண்டியது. நீங்களேன் முகம்வாடியிருக்கிறீர்கள் என்றுவினாவினேன். வசுக்கள் எனக்கு மறுபடியும் நமஸ்காரஞ் செய்து, ஓ அம்மணி! (தேடிப்போன மருந்து திருஷ்டிக்ககப்பட்டது.) என்கிறபழமொழிபோல், வசிஷ்டர்சாபத்தினால் பூலோகத்தில் மானிடராய்ப் பிறக்கப்போகிறோம். அதற்காக முகம்வாடிச்செல்கிறபோது உம்மைக் கண்டோம். இனி எங்களுக்கு யாதொரு குறைவுமில்லை. எங்கள் சாபத்தின் வரலாற்றைச் சொல்லுகிறோம் அதனைக் கேட்டு, அவ்வாறெங்களைக் கிருபைகூர்ந்து ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஓ பாகீரதி! முன்னம் தவசிரேஷ்ட சிகாமணியாகிய வசிஷ்டரைத் தரிசிக்கத் தேவர்களெல்லாஞ் சென்றார்கள். அவர்களோடு நாங்களும்போய் வசிஷ்டருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தோம். வசிஷ்டர் வந்தவர்களை யெல்லாம் ஆதரித்து ஆசீர்வாதஞ் செய்து, இன்றையதினம் யாவரும் இங்கன்னம் புசிக்கவேண்டுமென்று கட்டளை யிட்டார். அவர் வாக்குக்கு அழிவுவரக்கூடாதென்று யாவரும் ஒத்துக்கொண்டோம். வசிஷ்டர் காமதேநுவை அழைத்து,இவ்விடத்தில் வந்திருக்கிற யாவருக்கும் அன்னமிடென்றுத்திரவுசெய்தார். அஃதவர் கட்டளைப்படி சிற்றுண்டி - முப்பழம் - பொரிக்கறி - முதலியவற்றோடு அன்னமிட்டு,யாவரும் புசித்தபின்பு - சந்தனம் - புஷ்பம் - தாம்பூல முதலியவற்றைக் குறைவின்றிக் கொடுத்துப்போய்விட்டது. பின்பு- நாங்கள் யாவரும் அவரவ ரிருப்பிடத்துக்குச் சென்றோம்.

இப்பால் எங்களிலொருவராயிருக்கிற பிரபாசன் தன்மனைவியோடு வசிஷ்டரிடத்திற் சென்றதையும், காமதேனு விருந்திட்டதையுஞ்சொன்னனும். அதனைக்கேட்ட இவன்மனைவி அக்காமதேனுவின் மேல் இச்சைகொண்டு, அதனை யெனக்குக் கொண்டுவந்து கொடுத்தால்தான் உன்னோடிணங்குவன். இல்லாவிட்டால் இணங்கேனென்று பிணங்கினளாம். அதற்கு இந்தப் பிரபாசன் மறுத்துக்கூறச் சக்தியில்லாதவனாய், அவள்மேற் கொண்ட காதலினால் அக்காமதேனுவைக் கொண்டுவருகிறேனென்று வாக்குத் தத்தஞ் செய்து, எங்களிடத்துவந்து சங்கதியைத் தெரிவித்து, எங்களையும் துணைப்படச்சொல்லிக் கேட்டுக்கொண்டான். அதற்கு நாங்கள் வசிஷ்டருடைய மகத்துவத்தை எடுத்துக் காட்டி மறுத்தோம். அதன்மேல் இவன் நீங்கள் என்னுடன்கூடத் துணையாகவந்திருங்கள்; அக்காமதேனுவை நான் கொண்டுவந்து விடுகிறேனென்று வேண்டிக் கொண்டான். வினைவழி மனஞ்செல்லுகிறது உண்மையாதலால், மறுத்தநாங்கள் ஒத்துக் கொண்டு வசிஷ்டர் இருப்பிடத்துக்குச்சென்றோம். அப்போதிவன் தனியேசென்று, அக்காமதேனுவைப் பற்றிப் பிடித்து வந்து மனையாள் களிக்க வீட்டிற் சேர்த்தான். பின்பு வழக்கமாகவந்து அக்காமதேநுவினிடத்துத் தருப்பை சமிதை முதலியவற்றைப் பெற்று ஓமஞ்செய்கிற முனிவர்கள்,அன்றுபோய் மறுநாள் உதயத்தில் வந்து காமதேனுவை அழைத்தார்கள். அப்போது காமதேனு வராதிருப்பதைக்கண்டு வசிஷ்ட ரிடத்துச் சென்று வணங்கிக் காமதேனு எங்குற்றதையா வென்று வினவ, வசிஷ்டர் ஆச்சரியப் பட்டு, நமது காமதேனுவை அசுரர்கள் பற்றமாட்டார்கள். இப்பூலோகத்தார் பற்றுவது மஹா துல்லபம். மற்றத் தேவர் முதலானவர்கள் நினைக்கவே மாட்டார்கள். ஆயின் காமதேநு எங்குற்றது? சுபாவத்தில் அக்காமதேநு மிகுந்த பராக்கிரமத்தையுடையதாயிற்றேயென்று பலவாறுநினைத்து, தமது கியானதிருஷ்டியால்நோக்கினார். அக்காலதுபோய்ச் சேர்ந்திருக்கிற இடம் தெரிந்து மிகு சினங்கொண்டு, இந்த அஷ்ட வசுக்கள் அஷ்டதிக்குப் பாலகருக்கிணையானவரா யிருந்தும், நம்மை மதிக்காமல் காமதேநுவைக் களவுசெய்தாரென்று கடுகடுத்து ஒரு மந்திரத்தை யுச்சரித்தார். அந்த மந்திர தேவதைகள் ஓடோடியும்வந்து, எங்களெட்டுப் பெயரையும் பற்றி இழுத்துக்கொண்டுபோய் வசிஷ்டர் பாதத்தில் வீழ்த்தின. நாங்கள் மனங் கலங்கி, அநேக உபசார வழிபாடுகளைச்செய்து, பயபத்தியுடனே நமஸ்கரித்தோம். வசிஷ்டர் எங்களை உய்த்துநோக்கி, அடா! துராத்மாக்களே!என்னைச்சற்றுமெண்ணாமல் என்காமதேனுவைக் களவு செய்தமையால், நீங்கள் பூலோகத்தில் மானிட யோனியிற் பிறவுங்களென்றுசபித்தார். உடனே நாங்கள் மனம்வருந்தித் தீர்க்கதண்டஞ் செய்து, ஓ ஸ்வாமி! நாங்கள் தங்களுடைய காமதேனுவைப்பற்

ற உண்மையான கருத்தைக்கொண்டவர்களல்ல. எங்களிலொருவனாகிய பிரபாசன் மாத்திரமே அக்கருத்தை யுடையவன். அதுதங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கலாம். ஆகவே யாவருக்கும் ஒரே சாபம் கொடுப்பது தகுதியல்ல. ஆதலால் எளியேங்கள்மீது சுவாமிகள் கிருபை கூர்ந்து பாதுகாக்கவேண்டு மென்றார்கள். அதனால் வசிஷ்டர்கொண்ட கோபம் சிறிதுதணிந்து, ஓ அஷ்டவசுக்களே! உங்களில் ஏழுவர் இந்தத் துற்செய்கைக்கு அதிகமாகப் பாத்தியப் படாமையால், அவ்வேழுபேரும் என்சாபப்படி மானிடயோனியிற் பிறந்தாலும், உடனே கங்கையி லெறியப்பட்டிறந்து பழைய தேவரூபம் கொள்ளக்கடவது. அதிகமாகப் பாத்தியப்பட்ட பிரபாசன் மாத்திரம் மானிடயோனியிற் பிறந்து, (௮௮௬) வயதுவரைக்கும் பூலோகத்திலிருக்கக்கடவன். அப்படி யிருந்தாலும் இவன்மனைவி முன்னிலையில் இந்தத் துற்செய்கையைச் செய்தபடியால், பூலோகத்தில் இவனுக்கோர்மனைவியுமின்றி, மற்றப் பூலோக இன்பங்களையும் அதிகபுகழையும் பெறக்கடவனென்று சாபம் கொடுத்தார்.

அச்சாபத்தை யாங்கள் ஏற்றுக்கொண்டு, நம்மைப் பெற்றவுடன் கொலைசெய்பவர்கள் யார்? பூலோகஸ்திரீகள் செய்யமாட்டார்களேயென்று ஏக்கங்கொண்டு வருகிற எங்கள் முன்னே தங்களைக் கண்டோம். எங்கள் குறையையும் விண்டோம். தாங்கள் பிரமன் சாபத்தினால் பூலோகஸ்திரீ ஆகப்போகின்றபடியால், அம்மா! உங்கள்கருப்பத்தில் யாங்கள்ஜனிக்கிறோம். ஜனித்தவுடன் எங்கள்மீதுகிருபைகூர்ந்து சொற்படி கங்கையிலெறிந்து விடும். என்று பிரார்த்திக்க நான் அதற்கொத்துக் கொண்டு, ஓ வசுக்களே! நான் சந்தனு மகாராஜன் மனைவியாகப் போகிறேன். வருஷத்துக் கொருவர்வந்து பிறவுங்களென்று கட்டளையிட்டுக் கங்காநதி யருகில் வந்து, பூலோக ஸ்திரீபோல் உருவம் கொண்டேன். காலகதி இப்படியிருந்தபடியால், உன்னிடத்தில் மர்மமாக வாக்குத் தத்தம் பெற்றுக்கொண்டு இதுவரைக்கும் அவ்வாறு நடந்தேன். இன்றையதினம் நீமறுத்தபடியால், உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை யென்று சாற்ற, அரசன் மிகுந்த ஆச்சரியத்தை அடைந்து, ஆ! பாகீரதி! உனது ஸ்வரூபம் தெரியாமல் பூலோக ஸ்திரீயென்றே இலேசாக நினைத் திருந்தேன். இன்றையதினம் உன்வரலாறு தெரிந்தது மன்றி, என்வரன் முறையும் தெரிந்தேன். இதோ யிருக்கிற சிறுவன் (௮௮௬) வயதளவிருப்பானென்று கூறினையே: இவனால் என்னவிளையுமோ அதனையும் அருள வேண்டுமென்று வேண்ட கங்கை சொல்லுகிறாள். ஓ அரசனே! வசிஷ்டர் சாபப்படி இச்சிறுவன் மனைவியின்றி மற்றப் பூலோக இன்பங்களையெல்லாம் அடைந்து, இராஜராஜர்களெல்லாம் நடுங்கிப்பணியும் பராக்கிரம வியாக்கிரம்போலே இனிதுவீற்றிருந்து, சந்திரகுல மூதாதையாய் விளங்குவன். என்று புகல அரசன் இவ்வசனங்களைக் கேட்டுக் கங்கையை நோக்கிச் சொல்லுகிறான்.

ஓ பாகீரதி! இச்சிறுவன் மனைவியின்றி இருப்பானென்றபோது, இப்புத்திரனோடு சந்திரவமிசம் அதமாகுமே: ஆதலால் இன்னம் சிலகாலம் நீயும் நானும் கூடி வாழ்ந்து ஒருபுத்திரனைப் பெற்று வைத்து, இருவரும் அவரவர்கள் யதாஸ்தானம் போய்ச் சேருவோமென்று வேண்ட பாகீரதி அரசனைப் பார்த்துச் சிரித்துச் சொல்லுகிறாள். ஓ அரசனே! ஸ்திரீகளுக்கு புருஷ இன்பம் ஒன்றேயன்றி மற்றயின்பங்களில் இச்சையில்லை. புருஷருக்கோ வென்றால் ஸ்திரீயின்பத்தோடு பலவித இன்பங்களு முண்டு. அதுபோல நீரும் புருஷனாகையால் உமக்குப் பூலோக இன்பம் வெறுக்கவில்லை. இன்னும் சிலகாலம் நீர் அரசு செலுத்த வேண்டும். அப்போது என்னிலும் எண்மடங் கதிகமான ஒரு மாதை மணம் புரிகிறீர். அவள் வயிற்றில் சந்திரகுல மரபுக்குப் புத்திர ருண்டாகிறார்கள். நீர் வருத்தப்படாமல் எனக்கு உத்தரவுகொடும். மேலும் இப்புத்திரனைப் பாதுகாத்து வளர்ப்பது உமக்கு அதிக வருத்தமாக இருக்கும். என்னிடத்திலொப்புவியும். (௧௬) வயது வரைக்கும் வளர்த்து சகல கலைக்கியானஸ்ரூபியாக்கி, வில்வித்தை முதலாகியவற்றையும் கற்பித்து உம்மிடத்திற் சேர்க்கிறேன். அல்லது கங்கையருகில்வந்தால் அவ்விடத்திலாவது ஒப்புவிக்கிறேன். என்று உணர்த்தி புத்திரனை வாங்கிக்கொண்டு, அரசனை ஒருதரம் முத்தமிட்டு அணைத்தாள். அதற்கு அரசன்மகிழ்ந்தானாயினும் அவளதுபிரிவுக்குச் சகிக்கமாட்டாதவனாய் அதிக மனவருத்தத்தோடு, நல்லது பெண்ணே போய்வா வென்றான். இப்படி யொருகாற்சொல்லியவுடன் கங்கை ஓரடியெடுத்துவைத்துப் பின்பு மாயமாய்ப்போயினாள். அரசனதுகண்டு திகைத்து, அதுமுதல் கங்கைமீது காதல்கொண்டவனாகிப் பலவருத்தமடைந்து, பின்பு சித்திரக்காரரையழைத்து கங்கையினது உருவத்தைப்போல் எழுதச்சொல்லி, அவ்வுருவத்தை பார்த்துக் காலத்தைத் தள்ளி வந்தான். இப்படி சிலகாலஞ்சென்றபின்பு ஒருநாள் கங்கை கூறிய வாக்கியத்தை நினைத்து வருஷத்தைக் கணக்கிடுகிறபோது, (௧௬) வருஷமாயிற்று. உடனே யவன் மந்திரி முதலானவர்களைநோக்கி, நான் வேட்டையாட வேண்டுமாதலால் தகுந்ததளத்தோடு புறப்படுங்களென்றுபேசி, தான் வீட்டிற்சென்று பலவகை பதார்த்தங்களோடு அன்னம் புசித்து, ஆடையாபரணாலங்கிரதனாய் வேட்டைமுடிதரித்து, வில்லம்பு கையிலேந்தி ஒரு திவ்வியப் புரவியிலேறி வெளிப்பட்டான். இதற்குள் அங்கே மந்திரிமுதலானவர்கள் சகலசேனைகளோடு வெளிப்பட்டு அரசனோடு கலந்தார்கள். அரசன் காட்டிற்சென்று, யானை - சிங்கம் - கரடி - புலி- செந்நாய் - காண்டாமிருக முதலிய பலமிருகங்களைக் கண்டதுண்டமாகக் கண்டித்து மிகுதியுங்கொன்றான்.

அவனோடு வந்த மந்திரி முதலானவர்களும் அநேகமிருகங்களை வதைத்தார்கள்.

இப்படி யுவரவர்கள் நாலுதிசையிலுஞ் சென்று மனம்போனபடி வேட்டை யாடுகிறபோது, அரசன் மந்திரி முதலானவர்களைப் பிரிந்து, தனி வேட்டையாடி விடாய்ப்பட்டு, முன்போல கங்காநதியைத் தேடிச்சென்று,இவ்விடத்திற்றானே முன்னம் கங்கையென்னும் பெண்ணைக்கண்டது என்று நிதானித்து, இப்போது முன்போலவே ஒருவேளை வந்திருப்பாள். அப்படிவந்தால் ரூபத்தையாகிலும் பார்க்கலாம். மேலும் நமது புத்திரனையும் காணுகிற தருணமான நாளென்று மனதில்நினைத்து அவளிருக்கும் சோலையை நோக்கினான். அப்போது அச்சோலையில் கங்கையினது தேககாந்தியைப் போலச் சண்பகமலர்களும்,தனத்தைப்போலக் கோங்கமலர்களும், பல்வரிசையைப் போல முல்லைமலர்களும், இடையைப்போல வல்லிக்கொடியசைதலுங்கண்டு கங்கைவந்து நின்றதுபோல் அரசன்கண்ணுக்குத்தோன்ற அதிகமகிழ்வுகொண்டு, நெருங்கி நோக்கும்போது உருவெளித் தோற்றமென்றுணர்ந்து,அந்தவேடிக்கையைப் பார்த்துக்கொண்டே கங்காநதியை ஒருகண்ணினாலும் மதவேள் வருகிற தென்றிசையை ஒருகண்ணினாலும் நோக்கிநின்றான். அப்போது தாமரை-நீலோற்பலம்-ஆம்பல்-சைவலம்-வள்ளை - இவையெல்லாம் அரசன் கண்ணுக்குக் கங்கையினது முகம் - கண் - செவ்வாய்-அளகம்-செவி-இவையாகத் தோன்றிற்று. அதனைக்கண்டு மகிழ்ச்சியடைந்த அரசன் அப்பால் உய்த்து நோக்கும்போது, ஜலநிதியென யாவராலுங் கொண்டாடப்பட்ட கங்காநதியென்றுணர்ந்து வியப்படைந்து, அக்கங்கையை நினைத்துக்கொண்டு நதியருகில் நின்றான். அப்போது அக்கங்கையாற்றின் மத்தியில் ஒருவாலிபன் விற்பிடித்து அம்புதொடுத்துவிளையாடத் தோன்றினான். அரசனவனைக்கண்டு மன்மதன் வந்துவிட்டானோவென்று திடுக்கிட்டுக் கருப்புவில் இல்லாமையைக்கண்டு அவனல்லவென்று தேறி, சாம்பவமூர்த்தி யநுக்கிரகத்தினாற் கங்கையினிடமாய்ப் பிறந்து காங்கேயனென்று பெயரைக்கொண்ட முருகக்கடவுளோ வென்று ஐயுற்று ஆறுமுக மில்லாமல் வேறுமுகங்கொண் டிருப்பதால் அவருமல்ல வென்று தெரிந்து, அப்பால் இவ்வாலிபன்யார் நமது மனைவியாகிய கங்கையின் புத்திரனோ வென்று நினைக்கிறான். இப்படி பலவாறு சிந்தித்து நிற்கிறபோது அச்சிறுவன் அரசனைநோக்கி, ஆ! ஆ! இவரார்? நிதானித்து நோக்கினால் க்ஷத்திரியனைப்போற் காண்கிறது. வேட்டை முடிதரித்திருக்கிறார். வில்லம்புடையவராய் விளங்குகிறார். இவரது சாமர்த்தியத்தை அறிவோமென்று தன்வில்லில் தொடுத்திருக்கிற மோகனாஸ்திரத்தை விட்டான். அவ்வஸ்த்திரம் பிசகாமல் அரசன்மார்பிற்பட்டது. உடனே கங்கைமீது காதல்கொண்டிருக்கிற அரசனுக்கு மோகனாஸ்திரம் படவே மோகமதிகப்பட்டு, தாபசோபத்துடனே ஸ்மரணையற்றுப் பூமியில் விழுந்தான். அரசன் விழுந்த செய்கையைச் சிறுவன்கண்டு திகிலடைந்து, (இளம்பிள்ளை பயமறியாது.) என்பதுபோல் பாலியச்சேஷ்டையால் பயப்படாமல்மோகனாஸ்திரத்தைத் தொடுத்துவிட்டோம். அரசனோ பூமியில் விழுந்தான்.இனியென்னசெய்கிறதென்று அதிகவிசாவில் மாதாவாகிய கங்கையிடத்துச்சென்று,பயக்கிராந்தனாயொன்றுஞ்சொல்லாமல் ஒளித்தான். அக்கங்கை புத்திரனது முகக்குறியைக் கண்டு, நமது புத்திரன் முகமென்ன வேறுபட்டிருக்கின்றது? தினந்தோறும் குறிகற்றுக்கொள்ளச்சென்றால் நெடுநேரமிருந்து வருவான். இன்றையதினம் போயின உடனே திரும்பினதுமன்றிப் பயந்த முகத்துடனே யிருக்கிறா னென்று கருதிக் கியானதிர்ஷ்டியினாற் பார்த்தாள். அதனால் சந்தனுமஹாராஜன் வந்ததும், அவன் தன்மேற் காதல் கொண்டு தன்வரவை எதிர்பார்த் திருந்ததும், அந்தவேளையிற் சிறுவன் மோகனாஸ்திரத்தைத் தொடுத்ததும், அதனா லவ்வரசன் களைத்ததும், அதுகண்டு சிறுவன் பயந்ததுந் தெரிந்துகொண்டு திடுக்கென்றெழுந்து புத்திரனை அழைத்துக்கொண்டு அதிகவேகமாய்க் கங்கையைவிட்டு வெளியில்வந்து அரசன் அடைந்திருக்கிற கதியைக்கண்டு,தான் தேவதையாயிருந்தாலும் தனக்கவன் சிலநாள் கணவனாகயிருந்தமையால் அனலிடு மெழுகுபோல் மனமது உருகி, மிகுந்த ஆருமையோடு அரசனருகில் வந்து அவன் ஸ்மரணைதப்பி யிருப்பதை யறிந்து,அவனை யெடுத்து மடியில் வைத்து அநேக சயித்திய உபசாரங்களைச் செய்தாள்.அதனால் அரசனுக்குச் சொபநீங்கிச் சற்று தெளிந்துவருகிற தருணத்தில், ஓ அரசனே யென்று கங்கை ஒருதரம் அழைத்தாள். கங்கையின் குரலைக் கேட்டவுடன் அரசன் சோகநீங்கி அலறி எழுந்தான். கங்கை முகத்தோடுமுகமழுந்தப் புல்லி ஒரு முத்தமிட்டு, சற்றிடைந்து நின்று அரசனை நோக்கிச்சொல்லுகிறாள்.

ஓ அரசனே ! முன்னம் நான் உமக்குப் பூர்வஜனனவரலாற்றைப் போதித்தும், அதனைத்தெளியாமல் ஜகமாயையிற் சிக்கி வருத்தப்படுகிறீர். இனிவருத்தப்பட்டதினால் நான்மறுபடியும் உம்மைச்சேரக்கூடுமோ? என்மேல் வைத்த விருப்பத்தை வெறுத்து, நான் சொல்லும் சிலவசனங்களைக்கேளும். முன்னம் உமக்குக்கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி உமது புத்திரனைக் கொண்டுவந்தேன். இவனைக் கைக்கொண்டால் சகலதுன்பமும் நீங்கும். ஆனால் ஸ்திரீகளிடத்து அகப்பட்ட சிறுவர் கல்விப்பயிர்ச்சி யுடையவரா யிருத்தலருமை.அப்படி யிச்சிறுவனைக் கருதாதீர். இச்சிறுவனுக்கு வசிஷ்டர் முன்னிலையில் நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்து நாலு கலைக்கியான முதலியவற்றைக் கற்பித்துத் தவசிரேஷ்ட சிகாமணியாகிய பரசுராமமூர்த்தி முன்னிலையில் அரசர்க்குரிய வில்வித்தை முதலியவற்றைப்பயிற்றி, சாம்பவமூர்த்திக் கொப்பா

கிய. சனகாதியோகீஸ்வரர்கள் முன்னிலையிற் கியானோபதேசமுஞ்செய்வித்து ஆண்பிள்ளைகளுக் குரித்தாகிய சகல லக்ஷணங்களில் ஒன்றாகிலும் குறைவில்லாமல் ஓங்கச்செய் திருக்கிறேன். இவனாலே சந்திர குலம் மஹா சிறப்படையும். இனியிவனை நீர்கைப்பற்றிக்கொள்ளும். ஆனால் நானிவனை வளர்த்தமையாற் காங்கேயனென்னப் பெயரிடுமென்று சொல்லி அருகிலிருக்கிற புத்திரனைப் பார்த்து, அப்பாமகனே! இதோ யிருக்கிற அரசன் தான் உன்தந்தை யென்று விளம்பினாள். அச்சிறுவன் முன்னர் தான் மோகனாஸ்திரந்தொடுத்த குற்றத்தை மனதினினைத்து நடுக்குற்று, விரைவில் தந்தைதாளில் வணங்கி, ஓ ஐயனே! அடியேன் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டு மென்று அநேகவிதமாகத் துதித்தான். புத்திரனில்லாமல் வருத்தமடைந்திருக்கிற அரசன் தரித்திரனுக்குத் தனப்புதை கிடைத்தாலெப்படியோ அப்படி மகிழ்ந்து, கங்கைமீது கொண்ட காதலைமறந்து, பாதத்தில் வணங்கிய புத்திரனை வாரித்தழுவி ஆசீர்வதித்து, உச்சிமோந்து உடல் பூரித்து, இந்திரபதவி வாய்க்கக் கிடைத்தவன்போல் மகிழ்வடைந்து புத்திரனை அருகில் வைத்துக் கங்கையை நோக்கினான். கங்கை அரசனைப்பார்த்து, ஓஅரசனே! இனி என்னைநாடி. வருத்தப்படாம லிருமென்று விடைபெற்றுக் கங்காசலத்தில் மறைந்தாள். அரசன் புத்திரனை அழைத்துக்கொண்டு மந்திரி முதலாகிய தளத்தோடு சேர்ந்து, சந்திரனும் புதனும்போல் ஒரு இரதத்தின்மேற் புத்திரனும் தானும் ஏறி அத்தினபுரத்துக்கு வந்து, ஐம்பத்தாறு தேசத் தரசர்களையும் வேத வேதியர்களையும் மற்றக் குடிகளையும் அழைப்பித்து, நல்லசுபமுகூர்த்தத்தில் - கங்கை - யமுனை - சரஸ்வதி - முதலாகிய தீர்த்தங்களினால் புத்திரனுக் கபிஷேகஞ்செய்து, இன்று முதல் இந்தப் புத்திரன் விதித்த விதிப்படி யாவரும் நடக்கிறதென்று இளவரசுபட்டத்துக்குரிய முடிசூட்டிக் கங்கைசொல்லியகருத்தின்படி காங்கேய னென்று பெயரிட்டான். அன்றுமுதல் அச்சிறுவன் காங்கேயனெனப்பெயர்கொண்டு, தந்தையிலும் சதமணங் கதிகமாகப் பிரஜைகளுக்கு நன்மையை விளைத்துத் தன்னுயிர்போல் யாவரையும் பாதுகாத்து வந்தான்.

இப்புத்திரனுடைய குணாதிசயங்களைத் தந்தையாகிய சந்தனுமஹாராஜன் கண்டு சிறந்தமகிழ்வைக்கொர்ண்டு, இன்றுமுதல் உலக சவரக்ஷணையைக் குறித்து நாம் வருத்தப்பட வேண்டியதில்லை யென்றும் எல்லாக் காரியங்களையும் புத்திரனிடத்து ஒப்பித்துவிட்டோம் இனி நமக்கொரு சஞ்சலமில்லையென்றும் மகிழ்ச்சியாய் வாழ்ந்து வருகிறநாளில் ஒருநாள் வேட்டையாட யத்தனித்து, சிற்சில மந்திரியர் தந்திரியர் முதலானவர்கள் புடைசூழ மேற்றிசைக்காட்டிற்சென்று, சிறந்த பலமிருகங்களை வாட்டியும்-சில மிருகங்களையோட்டியும்-சில மிருகங்களை வதைத்தும் வருகிறான். அப்போது அரசன் விடாய்ப்பட்டு, அவ்விடாயைத்தணிக்கத் தானும் தன்சாரதியும் தனித்து யமுனாநதிக்குச்சென்று, தாகவிடாய் தணிய ஜலபானஞ்செய்து, அங்கிருக்கும் விநோதங்களை ஆயாசம் தீரப் பார்த்து வருகிறபோது சிறந்த பரிமள வாடை வீசிற்று. அதனையரசனறிந்து வியப்படைந்து சாரதியைப் பார்த்து, ஓ சாரதி! இவ்வனத்தில் புஷ்பித்திருக்கிற புஷ்பசாதி வாசனையல்லாமல் வேறே ஒரு சிறந்த பரிமளவாடைவீசுகிறது. அதனையறியவேண்டுமாதலால் நமதுரதத்தை மேற்றிசையிற் செலுத்தென்று கட்டளையிட, பாகனரசன் கட்டளைப்படி ரதத்தை உந்தினான். சிலதூரம் சென்றபின்பு யமுனாநதியருகில் பராசரராற் பரிமளகந்தியென்று பெயர்வகித்த மச்சகந்தி யென்னும் பெண் ஒரு மரத்தடியி லிருந்தாள். அரசனவளைக்கண்டு பிரமைகொண்டு அப்பால்சிறிது தெளிந்து, யாமிதுகாறும் இவ்வளவு சுந்தரத்தையுடைய மாதரைக் கண்டதில்லை. இம்மாதோ மற்றொருவருடைய ஸ்வாதீனத்துக் குட்படாதவளா யிருக்கிறாள். என்றுகுறிப்பினாலறிந்து இவளைநாம் மணம் புரியலாமென்று மனதில் நினைத்து, முன்னம் இவள் வரலாற்றைக் கேட்டறிவோமென்று தேரைவிட்டுப் பூமியிலிறங்கி அவளருகிற்சென்று, ஓபெண்கள்நாயகமே! நீயார்? இந்த நதியருகி லிருக்கவேண்டிய தென்ன? என்று வினவப் பரிமளகந்தி அரசனை நோக்கி, ஆ! இவர் யாரோ இராஜ னென்று வியந்து நாணமுற்று பயபக்தியுடனே அஞ்சலி செய்து சொல்லுகிறாள்: ஓ மண்டலேஸ்வரா! நான் நெய்தல்நிலத்துக்குரிய பரதர்வமிச ராஜனாகிய தாசராஜன் புத்திரி. குலாசாரப்படிநான் இந்நதியில் ஓடம்வைத்துக்கொண்டு வருகிறவருக்கெல்லாம் விடுகிறது. நல்ல வெய்யில்வேளையாதலால் இம்மரத்தின் நீழலில் இருக்கிறேன். என்றுபுகல அரசன் இந்த வசனங்களைக் கேட்டு, இவள் தந்தை அனுமதியில்லாமல் நம்மை மணம் புரியாளென்று தீர்மானித்து, தாசராஜனிடத்துச் செல்வோமென்று கருதி இரதத்திலேறிச் சாரதியை அவனது நகரத்துக்குச் செலுத்தச் சொன்னான். சாரதி அவ்வாறு ரதத்தைச்செலுத்தித் தாசராஜன் நகரருகில் நிறுத்த, அரசன் சாரதியால் தன்வரவைத் தாசராஜனுக்குத் தெரிவித்தான். தாசராஜன் அரசன் வரவைக்கேட்டு, மண்டலேஸ்வரனாகிய மஹாராஜன் நம்மை அழைக்கவேண்டிய காரண மென்னவென ஒரு எக்கமும், நம்மை ஒருபொருளா யெண்ணி அழைத்துவரச் சாரதியை விட்டாரே என ஒரு மகிழ்வுமுண்டாகி விரைவில் அரசனுக்குக் காணிக்கைமுதலானவைகளோடு வெளிப்பட்டு அரசனிடத்து வந்து, தான் கொண்டு வந்த காணிக்கையைவைத்துச் சாஷ்டாங்கமாகநமஸ்காரஞ்செய்து பயபக்தியுடனே வாய்பொத்தி, ஓமண்டலேஸ்வரா! எளியேனை ஒரு பொருளா யெண்ணி வரவழைத்த காரணத்தைத் திருவுளம்பற்ற வேண்டு மென்று மிகுந்த வணக்கத்துடனே கேட்க, அரசன்

காணிக்கை முதலியவற்றை யேற்று தாசராஜனைப்பார்த்துச் சாரதியை எச்சரித்தான். சாரதி அச்சைகையை அறிந்து தாசராஜனைப்பார்த்து, ஓ தாசராஜனே! உன்புத்திரியாகிய பரிமளகந்தியை என் னரசனுக்கு மணஞ்செய்துவை; அதற்காகத்தான் இவ்விடம் வந்தது என்றுகூற, தாசராஜன் பரமானந்தத்தையடைந்து, ஓ ஐயா! இப்போது கூறிய வாக்குக் கெதிர்வாக்கில்லை. ஏனென்றால் - அவரோ சாம்பவமூர்த்தியினது திருமுடியிலிருக்கிற சந்திரனுடைய பரம் பரையிற்றோன்றிச் சந்திரகுல அரசனென்று பெயர்வகித்து, என்போலியர்க்கு அரசரா யிருக்கிறவர்க ளெல்லாம் திரைகட்ட அரசுசெலுத்தி வருகிற மஹாராஜன். எங்கள் குலவிழிவை யுணர்ந்தும் என்புத்திரியை மணஞ்செய்யக் காதல்கொண்டால் எனக்கு நலந்தான். ஆனால் ஒரு குறைவுமாத்திர மிருக்கின்றது. அதனைத் தெரிவிக்கிறேன். அதற்கு ஒப்புமை கூறிச் சுகமாக மணஞ்செய்து கொள்ளட்டுமென்றான். பாகன் தாசராஜனைநோக்கி அஃதென்னவென்று வினவ தாசராஜன் சொல்லுகிறான்.

ஓ சாரதி! எங்கள்குலம் இழிகுலம். இவ்விழிகுலத்துப் பெண்ணை அரசன் மணம்புரிந்து அப்பெண்வயிற்றிற் புத்திரர்கள் பிறந்தால், அப்புத்திரர்களுக்கு அரசன் மகுடாபிஷேகஞ் செய்யச் சந்திர வமிசத்தாரும் மற்ற மந்திரி முதலானவர்களும் குடிகளும் ஒப்பமாட்டார்கள். அதன்பின்பு என்புத்திரியும் புத்திரவயிற்றிற் பிறந்த புத்திரரும் அபலமாவார்கள். இதுதான் என் கருத்திலிருக்கிற குறை. இதற்கொரு வகைமானஞ் சொன்னாற் சுகமாக என்மகளை மணம் புரியட்டுமென்று சொல்ல, சாரதி அரசன் முகத்தை நோக்கினான். அரசன் இவ்வசனங்களை யெல்லாம் நிதானித்து, இதற்குத்தரம் நம்மாற்கூறச் சக்தியில்லை. அப்பெண் நமக்கு வாய்க்கப்போகிறதில்லை. இனி விரகாக்கினியால் சரீரம் வாதிக்கப்பட்டு, நாளுக்குநாள் பலஹீனமாய்ப் பூர்வசனனத்தை யடையுங்கால நேரிட்டதென்று தீர்மானித்து, தாசராஜன் கேள்விக்கு உத்தரவுசொல்லாமற் சாரதிமுகத்தை நோக்கி, ஓ சாரதி! நமது நகரத்துக்கு ரதத்தைச் செலுத்து என்று கட்டளையிட்டான். சாரதி அவ்வாறு ரதத்தைச்செலுத்தி நகரத்திற் சேர்த்தான். அரசன் தேரைவிட் டிறங்கி, ஒருவரோடும் வசனியாமல் அந்தப் புரத்திற் சென்று, கந்தர்ப்பன் பாணத்தினாற் சிந்தை நொந்து வருந்தித் தன்னைக் கவளங்கொண்ட காமநோயைச் சகிக்கமாட்டாதவனாய்ப் பஞ்சணை மெத்தையிற் படுத்துப் பரிமள கந்தியின் வனப்பிற் கருத்தைச் செலுத்தினவனாய் ஏக்கங்கொண்டு சிறிதுந்தூக்கமின்றிப் பலவாறு புரண்டுகொண் டிருந்தான். மந்திரிமுதலானவர்கள் அரசன் கொலுமுகத்திற்கு வராதிருப்பதையறிந்து அவனிடத்திற்சென்று வணங்கி, ஓ மண்டலேஸ்வரா! இதுவரைக்கும் யாதொருகுறைவின்றி மகிழ்வுடன் கொலுவீற்றிருந்த தாங்கள், ஏதோ ஒரு மனவியாதியைக்கொண்டு வெளியில் வராமலும் அக்கருத்தை வெளியிடாமலு மிருந்தால் வந்த மனவியாதி எந்தவிதத்தில் நீங்கும். கிருபைகூர்ந்து தங்கள் கருத்தை வெளியிட்டால், அதற்குத் தகுந்த முயற்சிசெய்து நிறைவேற்றுகிறோம். என்றுபுகல அரசன் உண்மையை வெளிப்படுத்தாமல், ஓ மந்திரிமார்களே! ஏன் என்னை வருத்தப் படுத்துகிறீர்கள். ஒருவர்க்குண்டாகும் யவ்வனமானது நீரிற்பிறந்த குமிழியை யொக்கும். ஆக்கையோ அந்நீரிலெழுதும் எழுத்தாகும். செல்வமோவென்றால், அந்நீரி லுண்டாகும் அலையை நிகர்க்கும். இவ்வித அளவையுடைய தேகத்தைக் குறித்துப் பலவிதமாக யோசிக்கவேண்டுவ தென்ன? ஏதோ சரீரக்கூறு நாளுக்குநாள் வாடிவருகிறது. என்று கடுகடுத்துக்கூற மந்திரிகள் மனநடுங்கி ஒன்றுஞ் சொல்லாமல் அரசனைவணங்கி விடைபெற்று, இளவரசுபட்டம் பூண்டு அரசு செலுத்திவரும் காங்கேயராஜனிடத்து வந்து வணங்கி, ஓ அரசிளஞ்சிங்கமே! உமது தந்தை காட்டிற் சென்று வேட்டையாடி வந்தநாள் முதல் ஏதோ ஒரு மனவியாதியுற்றுச் சிந்தைநொந்துவருந்தி வெளிப்படாமல் அந்தப் புரத்திலேயே படுத்திருக்கிறாரென்று விளம்பினர். அதைக்காங்கேயராஜன்கேட்டுத் திடுக்கிட்டு, மந்திரி முதலானவர்களுக்கே கருத்தைவெளிப்படுத்தாத நமதுதந்தை நமக்கு வெளிப்படுத்துவதருமையாதலால் அன்றையத்தினத்தில் நமது தந்தைக்குத் தேரைச்செலுத்தின பாகன்யாரோ அவனையழைத்து வினவினால் அரசன் கருத்து வெளிப்படுமென்று யோசித்துச் சிலதூதரை யனுப்பி அச்சாரதியை அழைப்பித்தான். சாரதி காங்கேயராஜனுக்கு நமஸ்காரஞ்செய்து, ஓ ஆண்டவனே! எளியேனைத் தாங்களழைத்தகாரண மென்னவென்று கேட்டான். அதற்குக் காங்கேயன் சிலதினத்துக்குமுன் என்தந்தை வேட்டையாடக் காட்டிற் சென்றபோது ரதத்தைச் செலுத்தினவன் நீயாதலால், அன்றுமுதல் அரசன் மனவியாதியாயிருக்கிறார். அக்காட்டில் ஏதாவது ஒரு அதிசயத்தைக் கண்டதுண்டா? அப்படிக் கண்டிருந்தால் உனக்குத் தெரியுமல்லவா? தெரிந்திருந்தால் சொல்லென்று வினவ சாரதிவணங்கி வாய்பொத்திப் பயபக்தியுடனே சொல்லுகிறான்.

ஓ ஸ்வாமி! அரசன் மேற்றிசையிற் போய் வேட்டையாடித் தாகக்களைதாங்கி யமுனாநதியிற் சென்றபோது, அங்கே மிகுந்த பரிமளவாடை ஒன்றுண்டாயிருந்தது. அதனை யவர் அறியப் போனபோது, ஓர் மரத்தருகில் ஸ்ரீமஹா லட்சுமியைப்போல் ஒருகன்னிகையிருந்தாள். அரசன் அக்கன்னிகையைக் கண்டு மயக்கங்கொண்டு, நீயார் உன் தந்தையாரென்றுவினவ, அக்கன்னிகை நான் பரதர்குலமடந்தை என்றும் என் தந்தை தாசராஜனென்றுங்கூற, அதையறிந்து தாசராஜனிடத்திற் சென்று அவர் கேட்டதற்கு அப்பெண்

வயிற்றிற்பிறந்த புத்திரனுக்குப் பட்டங்கட்டுகிறதாயிருந்தால் உங்கள்கருத்தின்படி நடக்கிறேனென்று சொன்னான். அதைக்கேட்ட அரசன் ஒன்றுஞ்சொல்லாமல் நகரத்துக்கு வந்துவிட்டார். இதுதான் எனக்குத்தெரியும். என்று சொல்லி வணங்கவும் காங்கேயன் மனச்சஞ்சலநீங்கி இனியென் தந்தைக்குவந்த மனவியாதியை நொடிப்பொழுதில் மாற்றிவிடுகிறேனென்று தீர்மானித்து, மந்திரிமார் - பட்டவர்த்தனர்-மகுடவர்த்தனர் - இரதகஜதுரகபதாதிகள் தன்னைச்சூழ்ந்துவர அச்சாரதியை அழைத்துக்கொண்டு தாசராஜன் நகரத்திற்குச் சென்று அந்தத் தாசராஜனை அழைப்பித்து, ஓ தாசராசனே! உனது குமாரத்தியை என் தந்தைக்த மணஞ்செய்து கொடுப்பதற்கு உன்கருத்திலிருக்கிற குறை என்னவென்றுவினவ தாசராஜன் வணங்கிச் சொல்லுகிறான்; ஓ மஹாராஜனே! எங்கள் குலம் இழிகுலம். உங்கள்குலமோ மகாலட்சிமியுடன் பிறந்த சந்திரகுலம். அக்குலத்தரசர் என்புத்திரியை மணம் புரிவது தகுதியல்ல. அவர்களே இழிவுநோக்காமல் மணம்புரிய யத்தனித்தால் தடை சொல்லுகிறதற்கு யாவரால் முடியும்? ஆகிலுமொரு தடையிருக்கின்றது. அஃதென்னெனில் - அவள் வயிற்றிற் பிறந்தபுத்திரன் பட்டத்துக்குரியவனாவானா? அரசன் தான் பட்டாபிஷேகஞ் செய்தாலும் மற்றவர் சம்மதிப்பார்களா? இதராள் சம்மதித்தாலும் அப்பட்டத்துக்குத் தாங்கள் தலைமையாளியாயிருக்க என்பெண்வயிற்றுப் புத்திரர்களுக்குப் பட்டங்கிடைக்குமா? இதற்கு ஒரு ஒப்புமை கூறி, என்மகளை அரசனுக்கு மணஞ்செய்வியுமென்று புகன்றான். காங்கேயன் இவ்வசனங்களைக் கேட்டுக் கலகலவென்றுநகைத்துத் தாசராஜனை நோக்கிச் சொல்லுகிறான்.

ஓ தாசராஜனே! நீ என்ன அரசனாயிருந்தும் இராஜதருமம் தெரியாதவன்போல் வசனிக்கிறாய். வித்துச் சிலாக்கியமேயன்றி நிலம் சிலாக்கியமல்ல. அதுபோல எக்குலத்து ஸ்திரீயாயிருந்தபோதிலும் அரசனுக்குதித்த புத்திரனாயிருப்பானாகில் அப்புத்திரனுக்குப் பட்டமுதலாகிய எல்லாநலமுமுண்டு. ஆனால் நான் பட்டத்துக் குடையவனாயிருக்கிறபடியால், உன் பெண்வயிற்றுப் புத்திரனுக்குப் பட்டங் கிடைப்பது அருமைதான். என் தந்தை மனவியாதி உன்னால் நீங்கப் போகிறபடியால், என்பட்டத்தை உன்பேரனுக்குக் கட்டுகிறேன். மேலும் எனக்குப்பின் யாதொரு வழக்குமில்லாமற்போக, இன்றுமுதல் ஒரு வைராக்கியவிரதங் கைக்கொள்ளுகிறேன். அதென்னெனில்- நான் ஒரு கன்னிகையை மணம்புரிவனாகில் எனக்குப் பிறக்கும் புத்திரர்கள் என் காலத்துக்குப்பின் வழக்கிடுவார்கள். ஆதலால்- சந்திரர் சூரியர் முப்பத்துமுக்கோடி தேவர்கள் ஆகாயவாணி முதலானவர்களும், ஸ்ரீமன் நாராயணமூர்த்தியுமறிய நான் ஒருஸ்திரீயை மணம்புரிகிறதில்லை. என்று உறுதியாக யாவருங்கேட்கக்கூறி, இவ்வாக்கியத்திற்குப் பழுது தேடுவேனாகில் தாய்தந்தையரைப் போற்றாதவரும், தன்னை நம்பினவருக் கிடையூறு செய்தவரும், ஜலத்தில் ஆடையில்லாம லிறங்கினவரும், பெரியவர்களைமதிக்காம லுட்கார்ந்திருந்தவரும், தருமஞ் செய்பவரைத் தடுப்பவரும், பிச்சையிட்டுப்புசியாதவரும், இவர்களுக்கு வருங்கதி எதுவோ அக்கதியை யடையக்கடவேனென்று சபதஞ்செய்தான். இதைக்கேட்ட மந்திரி முதலானவர்கள் திடுக்கிட்டுக் காங்கேயனை வணங்கிச் சொல்லுகிறார்கள்: ஓ தருமமூர்த்தி! பட்டத்தைத்தான் கொடுத்துவிட்டது தகுதி. மணம்புரிகிறதில்லை யென்று சபதஞ்செய்கிறது தருமமா? புத்திர னில்லாதவர்க்குப் புண்ணியலோக மில்லையென்று வேதமுறையிடுகின்றதே: இதற்கென்ன செய்கிறதென்று வினவ அதற்குக் காங்கேயன், இது தந்தைமூலமாய்வந்ததேகமாதலால் இந்தயாக்கையால் அத்தந்தைமனதுக்கு வருத்தம்நேரிடாமலிருந்தால் அச்செய்கையே புண்ணியலோகத்தைக் கொடுக்குமென்று விடைகொடுத்தான். இப்படி காங்கேயன் கூறியவற்றை அந்தரத்தில் முன்னமே வந்திருக்கிற இந்திரன்- அக்கினி- யமன்-நிருதி-வாயு-குபேரன்-ஈசானன்-என்னும் ஏழுதிக்குப் பாலகரும், அனலன்-அணிலன்-ஆபச்சைவன் - சோமன் - தரன்-துருவன் - பிரத்தியூசன் - என்னும் ஏழுவசுக்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிர முனிவர்களும், கின்னரர்- கிம்புருடர்-கருடர்-காந்தருவர் - முதலானவர்களுங் கேட்டுக் காங்கேயனுடைய மனவுறுதிக்கு மெச்சி மிகுந்த மகிழ்வடைந்து பாரிசாத புஷ்பங்களை வருஷித்து; தேவதுந்துமிமுழங்க அரம்பையூர்வசிமுதலியோர் நடனஞ்செய்ய அப்சர ஸ்திரீகளெல்லா மங்களம்பாட அவ் விந்திரன் முதலானவர்கள் காங்கேயனை வாழ்த்தி அங்குவந்திருக்கும் தளங்களை நோக்கிச் சொல்லுகிறார்கள்.

ஓ பிரஜைகளே! இந்தக் காங்கேயன் தந்தை முன்னிலைக்குப் பட்டாபிஷேகத்தை நிராகரித்ததுமன்றி மனைவியையும் வெறுத்து வீஷ்மஞ்செய்தபடியால், இன்றுமுதல் இவனுக்கு வீஷ்மாசாரி என்று பெயராகுகவெனக் கூறிப் பல ஆசிகள்வழங்கித் தங்கள் இருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள். இங்கே தாசராஜன் முதலானவர்களும் காங்கேயராஜனை அநேகவிதமாகத்துதித்து, தேவர்கள்கூறிய நாமதேயத்தைக் கொண்டு யாவரும் ஒருதரம் கூவி நமஸ்காரஞ்செய்து பேரானந்தம் பெற்றவர்போல் அதிகமகிழ்வை அடைந்தார்கள். வீஷ்மாசாரி தாசராஜனைப் பார்த்துச் சொல்லுகிறார்: ஓ தாசராஜனே! என் தந்தைக்கு உன் புத்திரியை மணம்புரிய இன்னும் தடையென்னவென்று வின்வ, தாசராசன் வீஷ்மாசாரியின் மனவுறுதியை நன்றாகமதித்து, இனித்தாமசஞ் செய்தால் மனதுக்கு விரோதம் வருமென்று கருதிச் சொல்லுகிறான்: ஓ சற்குண நிதியே! என் புத்திரி

ளை அழைத்து வருகிற தடையேயன்றி வேறொரு தடையுமில்லை யென்று வணங்கி விடைபெற்றுத் தன் அரண் மனைக்குச் சென்று, சில தூதுவர்களாற் புத்திரியை அழைப்பித்து ஸ்நானஞ் செய்வித்து, ஆடையாபரணங்கள் அழகுபெற அக்கன்னிகைக்குத் தரிப்பித்து, முத்துச் சிவிகையி லேற்றித் தானும் தன் சுற்றத்தார் முதலானவர்களு மாக வீஷ்மாசாரியிடத்துவந்து வணங்கி நின்றார்கள். வீஷ்மாசாரி பரிமளவாடை வீசுகிறதைக்கண்டு அதிகவியப்படைந்து, தானும் மந்திரி முதலானவர்கள் புடைசூழப் பரிமளகந்தியை அழைத்துக்கொண்டு விரைவில் அத்தினபுரம் வந்துசேர்ந்து, அந்தப் புரத்திற்சென்று தந்தை தாளில் வணங்கிச் சொல்லுகிறார். ஓ அண்ணலே! தற்காலத்தில் தாங்கள் கொண்டிருக்கிற கருத்தை நிறைவேற்றத் தாங்கள் நாடியகன்னிகையைக்கொண்டுவந்தேன். தாங்களெழுந்துவந்து அக்கன்னிகையை மணம் புரிந்து மனவியாதியை நீக்கலாமென்று வேண்ட அரசனவ்வசனங்கேட்டுச் சிறந்தமகிழ்வை அடைந்து, புத்திரனை வாரித்தழுவி உச்சியை முகர்ந்து முத்தமிட்டு,அப்பா புத்திரசிகாமணியே! என்கருத்தில்நாடியபொருள் உனக்கெவ்வாறுதோன்றிற்றோ அதனைக் கூறுகவென்று வினவினான். உடனே வீஷ்மாசாரியவனைவணங்கி, எந்தையே! தங்கள் சாரதியினால் தங்கட்கு நேர்ந்திருக்கு மனவியாகூலத்தை அறிந்து தாசராஜனிடத்துச் சென்று, அவன்கேட்ட கேள்விக்கு ஒப்புமைகூறி அக்கன்னிகையைக் கொண்டுவந்தேனென்றுகூறினர். உடனே அரசன் மந்திரிமுதலானவர்களை அழைத்து அவர்களைப்பார்த்து,ஓமந்திரிமார்களே! தாசராஜன் கேட்ட கேள்வி என்ன? அதற்கு என் புத்திரன் சொன்ன சமாதான மென்ன? அதனை ஒளியாமற் சொல்லுங்களென்று வினவ மந்திரிகள் அரசனை வணங்கிச் சொல்லுகிறார்கள்.

ஓ மண்டலேஸ்வரா! உமது புத்திரனது மன உறுதியை எங்கள் நாவினாற் சொல்ல வசமல்ல. ஆயினும் எங்களால் இயன்றமட்டுங் கூறுகின்றோம் அதனைக் கேட்டருள்க. தாங்கள் மனவியாதி கொண் டிருப்பதைப் புத்திரருக்கறிக்கையிட்டோம். அவர்சாரதியை அழைத்து அவனால் தாங்கள் கொண்டிருக்கிற கருத்தை அறிந்து, உடனே தாசராஜனிடத்துச்சென்று என்தந்தைக்கு உன் கன்னிகையைக் கொடுக்கிறதற்குத் தடை யென்னவென்று வினவ, தாசராஜன் என்புத்திரிவயிற்றுப் புத்திரனுக்குப் பட்டங் கொடுக்கிறதாயிருந்தால் என்கன்னிகையைத் தருகிறேனென்று சாற்ற, நமது புத்திரன் அவ்வார்த்தைக்கு ஒத்துக்கொண்டு, உமது புத்திரி வயிற்றின் புத்திரனுடைய பட்டமே இந்தப் பட்டமென்று வாக்குத்தத்தஞ் செய்து,எனக்குப் பிற்காலத்தும் ஒருவழக்கில்லா திருக்க நானும் விவாகம் செய்துகொள்ளுகிறதில்லை என்று சகல தேவர்களு மறியச் சபதஞ்செய்தார். அதனைக் கேட்டிருந்த தேவர்களெல்லாம் புஷ்பமாரி பொழிந்து,உமதுபுத்திரரைப் புகழ்ந்து இன்றுமுதல் உன்னை வீஷ்மாசாரியென்று யாவருமழைக்கக்கடவரென வேறுபெயர் கொடுத்தார்கள். அதன்பின்பு தாசராஜன் யாதொரு தடையுங் கூறாமல் தனது புத்திரியை அழைத்துக்கொண்டு உமது வாயலில் வந்திருக்கிறானென்று விடைகூற அரசன்கேட்டு ஆச்சரிய மடைந்து, மூத்தகுமாரனாயிருந்தும் பட்டத்துக்குரியவனாதலை நீக்கினானென்று ஒரு விதத்தில் வருத்தத்தையும் தந்தைக்குப் புத்திரர்செய்யுங்கடமைக் கெண்மணங்கதிகமான கடமையை இயற்றினானென்று ஒருவிதத்தில் மகிழ்வையுங் கொண்டு புத்திரனை வாரித்தழுவி, ஓ என்னருமைச் செல்வனே! என் முன்னிலையில் நீ புண்ணியலோகத்துக் கேதுவாகிய மனைவியை நீக்கி நின்றபடியால், நானிரண்டு வரங்கொடுக்கிறேன். அஃதென்னெனில்-புண்ணிய லோகம் உனக்குச் சித்திக்கக் கடவது. மேலும் உனக்கு யமபாதையில்லாமல் நீ எப்போது உயிர்விட நினைக்கின்றையோ, அப்போது உயிர் நீங்கக் கடவது. என்று இரண்டு வரத்தைக் கொடுத்துப் பஞ்சணை மெத்தையைவிட் டெழுந்து, கொலுமுகவாசலில் வந்து மந்திரிகளை நோக்கினான். உடனே மந்திரிகள் பார்வையின் குறிப்புணர்ந்து, ௫௬ - தேசத் தரசர்களுக்கு மண ஓலை போக்கி, வேதவேதியர்களை அழைப்பித்து, நல்ல சுப முகூர்த்தத்திற் பந்தற்கால் நாட்டி, நகரமுழுவதும் அலங்கிரதஞ் செய்யச்சொல்லிக் கட்டளையிட்டுக் கலியாணத்துக்கு வேண்டிய வஸ்துக்களையெல்லாம் சேகரித்தார்கள். இதற்குள் ௫௬ - தேசத்தரசரும், மற்ற பந்து ஜனங்களும் வந்து சேர்ந்தார்கள். வந்தவர்களுக் கெல்லாம் மந்திரிகள் தகுந்த மரியாதையைச் செய்து விடுதி விட்டார்கள். நகரத்தி லிருப்பவர்களு மிகுந்த மகிழ்வை அடைந்து, மாடமாளிகை கூடகோபுரம் வீதி முதலியவற்றை நன்றாக அலங்கரித்து, இலக்குமி சமேதனாகிய நாராயண மூர்த்தியின் நகரத்தை யொப்பாகச் செய்தார்கள். பின்பு மந்திரிகளும் பெரியோர்களும் அரசனிடத்துவந்து வணங்கி, மாரன் இடைவிடாமல் மணக்கோலஞ்செய்து வருத்திவந்த அரசனைத் தாங்கள் மணக்கோலஞ்செய்து அவ்வருத்தத்தைத் தணிக்க யத்தனித்து, கங்கைமுதலிய தீர்த்தங்களால் ஸ்நானஞ் செய்வித்து, ஆடையாபரணங்களினால் அலங்கிரதஞ்செய்து அழைத்துவந்து மணவறையில் வீற்றிருக்கச் செய்து, தாசராஜனிடத்துச் சென்று அவன் புத்திரியாகிய பரிமளகந்தியை அந்தப் புரத்தில் இருக்கும் தாதிகளால் ஸ்நானஞ் செய்வித்து, ஆடை ஆபரணங்களினால் அலங்கிரதஞ் செய்வித்து, நல்ல சுப முகூர்த்தத்தில் அரசனிருக்கு மணவறையில் ஒக்க விருக்கச்செய்தார்கள்.அப்போது வேத வேதியர்களும் மற்றுமுள்ள பெரியோர்களும் கலியாண மண்டபத்தி லெய்தி வேதமந்திரங்களை யுச்சரித்தார்கள். அச்சமயத்தில் தாசராஜன் எழுந்து, மன்னர் மன்னர்களுக்கெல்லாம் தகுந்த மரி

யாதையைச்செய்து அச்சபையில் நின்று சொல்லுகின்றான்.

ஓ ராஜ ராஜர்களே ! இதோ அரச னருகிலிருக்கிற கன்னிகை என் புத்திரியல்ல. இக்கன்னிகையின் வரலாற்றைக் கூறுகிறேன் அதனை யாவருஞ் செவிகொடுத்துக் கேளுங்கள். முன்னம் சூரிய வமிசத்து வசுராஜனென்பவன் கிரியையாகிய தன்மனைவி கருப்பவதியா யிருக்குங்காலத்து, நல்ல மாமிசங் கொண்டுவந்து கொடுக்கக்கருதி வேட்டைக்குச்சென்று, அன்றிரவில் அவ்வனத்தில் நித்திரை செய்யும்போது கிரியைமேற்கொண்ட காதலால் வீரியம்வெளிப்பட்டது. அவ்வீரியத்தை ஒருபக்ஷியினிடத்துக்கொடுத்து கிரியையின் வசஞ்சேர்க்கச்சொல்லிக் கட்டளையிட, அப்பக்ஷி அக்கட்டளைப்படி வரும்போது யமுனாநதி மத்தியில் மற்றொருபக்ஷி எதிர்த்துப் போராடிற்று. அதனால் அவ்வீரியம் அந்நதியில் விழுந்தது. அந்நதியிற் பிரமன் சாபத்தால் மீன்வடிவமாயிருக்கிற அப்சரஸ்திரீ அந்தவீரியத்தை இரண்டுபிரிவாகப் புசித்துக் கருப்பவதியாயினாள். சிலநாள்சென்றபின்பு எனக்குக்கீழ்ப்படிந் திருக்கிற வலைஞர்அந்நதியில் மீன்பிடிக்க வலைவீசுகிறபோது, அப்சரஸ்திரீயாயிருக்கிற மீனம் அகப்பட்டது. அதனை யவர்கள் என்னிடத்தில் ஒப்பிவித்தார்கள். நானந்த மச்சத்தின் வயிற்றைக் கிழித்துப் பார்க்கும்போது இந்தக் கன்னிகையும் ஒரு புத்திரனு மிருந்தார்கள். இவர்களை நோக்கி வியப்புற்றிருக்கும் காலையில், மச்சமாயிருந்த அப்சரஸ்திரீ தன்னுருவைக்கொண்டு அந்தரத்தில் நின்று, தன்வரலாற்றையும் மக்களது வரலாற்றையும் கூறிப் போய்விட்டனள். அதன்மேல் இரண்டு மக்களையும் வசுராஜனிடத்து ஒப்பிவித்தேன். அவ்வரசன் புத்திரனை எடுத்துக்கொண்டு இக்கன்னிகையை எனக்குக் கொடுத்தான். மக்களில்லாத நான் மகளாகப் பாவித்து வளர்த்து வந்தேன். இக்கன்னிகை ராஜபுத்திரியேயாதலால்,காக்கையினாற் பெற்றுவளர்க்கப்பட்டுப் பருவம்வந்தபோது தன்னினத்தைத் தழுவிய குயிலினம்போற் சந்திரவமிச ராஜனுக்கே மனைவியாயினாள். இனியாதொரு தடையுமின்றி மணத்தை நிறைவேற்றுங்களென்று கன்னிகாதானஞ்செய்தான். இதைக்கேட்ட அரசர்களும் வேதவேதியர்களும் வியப்படைந்து,நல்லசுபமுகூர்த்தத்தில் மந்திராக்ஷதை முதலிய பூசைபெற்றிருக்கிற மங்கலத்தை அரசன்கையிற் கொடுத்துப் பரிமளகந்தியின் கழுத்தில் அணிவித்து, வேதாகம விதிப்படி ஓமம் வளர்த்தி, யாதொரு குறைவு மில்லாமற் கலியாணத்தைநிறைவேற்றினார்கள். பின்புவீஷ்மாசாரி மந்திரிமார் முதலானவர்களைக்கொண்டு அநேக தான தருமஞ் செய்வித்து, அங்குவந்துள்ள அரசர்களுக்கெல்லாம் தகுந்த பரிசுகொடுத்து, யாவரும் மகிழ்வுற உண்டிமுதலியவற்றையளித்து உபசரித்தார். அவ்வுபசரிப்பினால் அவ்வவர்கள்மகிழ்ந்துஆனந்தமடைந்தவர்களாய், தாசராஜன் முதலான சகலரும் வீஷ்மாச்சாரியிடத்தில் விடைபெற்று அவரவரிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

இங்கே சந்தனு மஹாராஜன் பரிமளகந்தியோடு கூடிக் கலந்து மதனராஜனால் நேரிட்ட போரை வெற்றிகொண்டு கலவியிற் களித்து வாழ்ந்து வருகிற நாளில், சூரியனைப்போலவும் சந்திரனைப்போலவும் இரண்டு புத்திரர்களைப்பெற்று, சித்திராங்கதன்-சித்திரவீரியன்-என்று இருவர்க்கும் பெயரிட்டுவளர்த்து,நாலுவேதம் - ஆறுசாஸ்திரம்- அறுபத்துநாலு கலைக்கியான முதலியவற்றைப் போதித்து, வில்வித்தை முதலியவற்றையுங் கற்பித்தான். அப்புத்திரர்கள் - ௰௫- ௰௯ - வயதுடையவர்களான காலத்து, சந்தனுமஹாராஜன் பரமபதஞ் சேர்ந்தான். வீஷ்மரும் இவ்விரண்டு புத்திரர்களும் தந்தைக்குச் செய்யவேண்டிய விந்தையான கடமைகளை இயற்றி நீர்க்கடன் முதலியவற்றை நல்கிய பின்பு, வீஷ்மர் முன்கூறிய வாக்குத்தத்தத்தின்படி ஐம்பத்தாறுதேசத் தரசர்களு மறியத் தன் பட்டத்தைச் சித்திராங்கதனுக்குக் கட்டினார். சித்திராங்கதன் பட்டாபிஷேகனாகித் தந்தையிலும் எண்மணங் கதிகமாகத் தானதருமங்களைச் செய்து தன்னுயிரைப்போல் மன்னுயிர்களைப் பாதுகாத்து வருகிறநாளில், அந்தர லோகத்திலிருந்து கந்திருவர்க்கெல்லாம் தலைமையாளியாய் அரசுசெய்து வருகிற சித்திராங்கதனென்பவன் நமது பெயரைத்தரித்துப் பூலோகத்தில் ஒருமானிடன் அரசு செலுத்துகிறதாவென்று பொறாமைகொண்டு, அவனுடனெதிர்த்துப் போர்கொடுத்து வெல்லுவோமென்றால் வீஷ்மனிருக்கிறான். அவன் வில்லெடுத்தால் நமது உயிரைக் கொள்ளை கொள்ளாமல் விடான். என்றஞ்சி அவனோடு நேரிற்சென்று போர்கொடுப்பது தகுதியல்லவாதலால் சமயம் பார்த்து இரவிற் சிரச்சேதஞ்செய்யவேண்டுமென்று யோசித்து, அச்சமயம் எந்நாளில் நேரிடுமென்று எதிர்பார்த்திருந்தான். இங்கே சித்திராங்கதன் ஒருநாள் இரவில் வேடிக்கையார்த்தமாய் ஓரிடத்திற் றனித்து இருந்தான். அந்தச்சமயத்திற் கந்தருவர்க் கரசனான சித்திராங்கதன் இச் சித்திராங்கதனுடைய சிரசைக் கொண்டுபோய்விட்டான். இந்தச் சேதி பரிமளகந்தி யறிந்து, வீஷ்மரிடத்துச் சென்று ஓவென்றழுதாள். வீஷ்மரதுகேட்டு மனவருத்தமடைந்து,தாயே!சித்திராங்கதன் என்னும் கந்தருவன் நேராக வந்து போராடப்பயந்து நமது சீராளனைக் கொன்றான். அவனோடு போர்கொடுப்பது தகுதியல்ல. இதோயிருக்கிற சித்திரவீரியனுக்குப் பட்டங்கட்டுகிறேன். என்று இனியவசனங்களினாற் சிலநீதியெடுத்தோதி, அச்சித்திரவீரியனுக்குப் பட்டங்கட்டினார். அச்சித்திரவீரியன் மநுசாஸ்திரவிதி பிசகாமல் தருமதேவதையை நான்குபாதத்திலேயும் நடக்கச்செய்து செங்கோல் நடாத்திவந்தான். இந்தச் சித்திரவீ

ரியனுக்கு-உல-வயதாயிற்று. பரிமளகந்தி மூத்தகுமாரனாகிய வீஷ்மரிடத்துவந்து, மகனே! நமதுசிறுவனுக்கு மணம்புரியவேண்டுமே அதற்குத் தகுந்த முயற்சி செய்கவென்று கூற, வீஷ்மர் அன்னை வாக்கியத்தை அங்கீகாரஞ்செய்து அவ்வாறே மணஞ்செய்விக்கிறேனென்று உறுதிகூறி, அந்த அம்மனை அந்தப் புரத்துக்குஅனுப்பிவித்துத் தான் தனியே யிருந்து விவாகவிஷயத்தைக்குறித்து யோசித்திருக்கிற தருணத்தில், சிலதூதர்கள் வீஷ்மரிடத்து வந்து வணங்கிப் பயபத்தியுடனே வாய்பொத்தி எதிர் நின்று சொல்லுகிறார்கள்.

ஓஸ்வாமி! காசிதேசத்தரசன் அருமையான தவஞ்செய்து, அம்பா - அம்பிகை - அம்பாலிகை - என்று மூன்றுபுத்திரிகளைப்பெற்று மிகுந்தகாதலோடு வளர்த்து வந்தான். அப்புத்திரிகள் பருவகாலத்தை அடைந்தார்கள். அரசன் அதுகண்டு சுயம்வரஞ் சாட்டி, ஐம்பத்தாறு தேசத் தரசர்களுக்குத் தூதுவர்களால் தெரிவித்தான். தங்களுக்கும் அச்சேதியைத் தெரிவிக்க யாங்கள் வந்தோமென்ன வீஷ்மர் இவ்வசனங்களைக்கேட்டு, நாம் எல்லா வரசர்களுக்கும் தலைவனாக இருக்க அந்தக்காசிராசன் ஏன் நமக்கு முன்னதாகத் தெரிவிக்கவில்லை. தாசராஜனோடு சம்பந்தஞ் செய்ததை மனதில்வைத்தவனா யிருக்கிறான்போலும். நல்லது நாமேசென்று நமது தம்பிக்கு அம்மூன்று கன்னிகையையு மணஞ்செய்விப்போம். யாராவது நிந்தைகூறுவராகில் அவர்களையெல்லாம் யமபுரத்துக்கனுப்பிவிடுவோமென்று மனதில் தீர்மானித்து, தம்பியாகிய சித்திரவீரியனை அழைத்து இவ்வரலாற்றைக் கூறி, அங்குதானே கங்கை முதலிய தீர்த்தங்களினால் ஸ்நானம் ஆட்டி, ஆடையாபரணங்களினால் அலங்கிரதஞ்செய்து திருமணக்கோலஞ் செய்வித்து, மந்திரிமுதலானவர்களை அழைத்து, காசிராஜன் சுயம்வரத்துக்குச் செல்லவேண்டும். ஒருவேளையுத்தமு நேரிடும். நீங்க ளெல்லாம் போர்க்கோலங்கொண்டு நமது சேனைகளோடு வாருங்களென்று கட்டளையிட்டுத் தாமும் போர்க்கோலங்கொண்டு தம்பியைத் தேரின்மேலேற்றி வெளிப்பட்டார். மந்திரி முதலானவர்களும் சேனைகளோடு வந்து கலந்தார்கள். வீஷ்மர் அதிவேகமாக இரதத்தை நடத்தச் சாரதியை எச்சரித்தார். சாரதி அவ்வாறு நடத்திக் கங்காதீரத்தினருகில் வருகிறபோது கங்கை தன்புத்திரனது வரவைப்பார்த்து மகிழ்ச்சியடைந்து வதனத்தைத் தடவிக் கொஞ்சுகிறதுபோலத் தென்றலாலெழும் கங்காநதியினலைகளின் திவலை வீஷ்மர்முகத்திற் படிந்து மிகுந்த குளிர்ச்சியைக் கொடுத்தது. வீஷ்மர் அக்கங்கையருகிற் சற்றுநேர மிருந்து இளைப்பாறி, மீட்டும் ரதமேறிக் காசிநகரத் தருகிற்சென்றார். இந்தச்சேதி தூதுவர்களாற் காசிராஜன் அறிந்து, தனது தளத்தோடு எதிர்கொண்டுவந்து வந்தனை வழிபாடுசெய்து அழைத்துப்போய் மணப் பந்தலில் ஒரு திவ்ய சிங்காதனத்திலிருத்திச், செய்யவேண்டிய மரியாதையைக் குறைவின்றி நிறைவேற்றினான். வீஷ்மர் தமது தம்பி முன்னிருக்கத் தாம் பின்னிருந்தார். வீஷ்மரைக் கண்ட அரசர்கள் முகமெல்லாம் சந்திரனைக்கண்ட தாமரையைப்போல் வாடியிருந்தன. பின்பு காசிராஜன் தாதிகளை அழைத்து, என் புத்திரிகளை அலங்கிரதஞ்செய்துகொண்டு வாருங்களென்று சட்டளையிட்டான். தாதிகள் அவ்வாறு அம்மூன்று புத்திரிகளையும் ஆடை ஆபரணங்களினால் அலங்கிரதஞ்செய்து, மூவர்கையிலும் மூன்று மாலையைக் கொடுத்து அரசர்கள்நிறைந்திருக்கிறமணப்பந்தலில்அழைத்துவந்தார்கள். அங்கே சிலதாதிகள் அம்மூன்று கன்னிகைகளுக்கும் வந்திருக்கிற அரசர்களுடைய பேர் ஊர் குலமுதலியவற்றைக் கூறிக்கொண்டு வந்தார்கள். இவ்வாறு கூறிவருகிறபோது சந்திரகுலமணியாகிய சந்தனு மஹாராஜன் புத்திரன் சித்திரவீரியன் இருக்கிறவிடத்து அம்மூன்று கன்னிகைகளும் வந்து நின்றார்கள். தாதிகள் அவ்வரசனது நாடுநகரமுதலிய சிறப்புகளை எடுத்தோதி, மறுபடியும் இவ்வாறு கூறுவதானார்கள்.

ஓ காசிராஜன் தவத் துதித்த கன்னியர்களே! இவ்வரசன் பரதகுலத்துக் கதிபதியாகுந் தாசராஜன் புத்திரியாகிய பரிமளகந்தியின் குமாரனென்றார்கள். அக்கன்னிகைகள் இவ்வசனங்களை கேட்டும் அந்தச் சித்திர வீரியனுடைய சவுந்தரியத்துக்கு மகிழ்ந்து மாலையிட யத்தனித்தபோது, பக்கத்திலிருக்கிற அரசர்களெல்லாம் இழிகுலத்தானுக்கு மாலையிடுகிறது தகுதியாவென்று கூறத் தொடங்கினார்கள். அந்தச்சத்தம் சிராய்ச் சபையிலிருக்கும் அரசர்கள் செவியிற் படுகிறதற்கு முன், வீஷ்மருடைய கைவில்லின்குணத்தொனி அவ்வவர்கள் செவியிற்பட்டது. உடனே தம்பி சித்திரவீரியனும் அவனோடு சேர்ந்த மந்திரிமுதலானவர்களும் வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்தார்கள். வீஷ்மர்கொண்ட கோபாக்கினிக்கு உருத்திரமூர்த்தியினுடைய நுதலாக்கினியும் ஓர் நிகரன்று. இப்பால் மலையிலிருந்து இரண்டு சிங்கங்கள் குதித்தாற்போல இருவரு மஹா உக்கிரங்கொண்டு சிங்காதனத்தைவிட்டிறங்கி, வந்திருக்கிற அரசர்முகத்தைக் கடுகடுத்துநோக்கிச்சொல்லுகிறார்கள். ஓசிறந்தகுலத்திற்பிறந்தஅரசர்களே! இழிகுலத்திற்பிறந்த எங்களைவெற்றிகொண்டு இக்கன்னிகைகளை மணமாலை இடுங்கள். இத்தக்ஷணம் எங்களோடெதிர்க்கத் தயைசெய்து வாருங்கள் என்றழைத்துச் சாரதிகளைநோக்க, சாரதிகள் அவர்கள் ரதத்தைக் கொண்டுவந்து எதிரில் நிறுத்த, அவ் விரதங்களில் மகாவிரதங்கொண் டிருக்கிற வீஷ்மரும் சித்திரவீரியனும் ஏறித் தங்கள் தங்கள் ஜெயசங்கத்தை வாயில் வைத்துத் தொனித்தார்கள். அரசர்கள் இவ்விருவர் கூறிய வசனங்களைக் கேட்டும் இவர்கள் கொண்ட போர்க்கோலத்

தைக் கண்டும் மானந்தலைக்கொள்ளத் தாங்களும்போர்க்கோலங்கொண்டு, தங்கள் தங்கள் ரதங்களில் ஏறிச் சேனைகளோடு கலந்து, வீராவேசமேற்கொண்டவர்களாய் ஜெய சங்கத்தைச் சப்தித்து வில்லை வளைத்துக் குணத்தொனி செய்தார்கள். வீஷ்மர் தன்சேனைகளை எச்சரித்து ரதத்தை அரசர்கள் மேற் செலுத்தினார். மற்ற அரசர்களும் தங்கள் தங்கள் சேனைகளை எச்சரித்து ஒரேமுகமாக வீஷ்மர்மீது திரும்பினார்கள். அப்போது காலாளோடு காலாள்களும்-குதிரைவீரரோடு குதிரை வீரரும்- யானை வீரரோடு யானைவீரரும்- தேர் வீரரோடு தேர்வீரரும்- வில்லாளிகளோடு வில்லாளிகளும் எதிர்த்து, ஒருவரையொருவர் வெற்றிபெற விருப்பங்கொண்டு, வாள் - கதை - இருப்புலக்கை -பிண்டிபாலம் -வேல்- சக்கரம்- தோமரம் - ஈட்டி - எறிஈட்டி - பாங்கு - கடாரி - குடோரி - பல்லயம் - கத்தி - சுருள்கத்தி - சூலம் - முஷ்டி - முதலாகிய படைகளால், வெட்டியும் குத்தியும் தள்ளியும் மிதித்தும் உதைத்தும் அடித்தும் இவ்வகையாக இருதிறத்தாருடைய சேனைவீரர்களும் போராடுகிறார்கள். அப்போது வீஷ்மரும் சித்திரவீரியனும் தங்கள் வில்லில் அநேகதிவ்வியபாணங்களைச் சோனைமாரிவருஷித்ததுபோல் வருஷித்தார்கள். அதனாற் பகைத்த அரசர்களுடைய சேனைகள் அனைத்தும் சின்னாபின்னமாகி, மரணமடைந்தவர்போக மற்றவர்களில் அவயவம் பழுதுறாதவர்களில்லை. இதனைநோக்கியஅரசர்கள் கனவருத்த மடைந்து, ஆ! ஆ! கடலுடைபட்டதுபோ லிருக்கிற நமது சேனைகளை ஓர்வாவியுடைபட்டதுபோல் மேவியிருக்கிற சேனையையுடைய வீஷ்மன் சின்னாபின்னமாக்கினானென்று சினங்கொண்டு, சகல அரசர்களும் ஏககாலத்தில் ஒன்றாகக்கூடி, வீஷ்மரையும் சித்திரவீரியனையும் சூழ்ந்து அஷ்டதிசையிலும் நிறைந்து யுத்தஞ் செய்தா லன்றி நாம் வெற்றிபெறோமென்று உய்த் துணர்ந்து, மநுசாஸ்திரவிதி தப்பி எல்லா அரசர்களும் ஒன்றாகவந்து சூழ்ந்து, தங்கள் தங்கள் கையில் வளைத்தபடி பிடித்திருக்கிற கார்முகத்திற் போர்முகத்துக் கூரிய கூரிய பாணங்களை ௧-௰-௱-௲-௰௲-கோடி- பத்துகோடியாகத் தொடுத்து வீஷ்மர்சேனைகளைஅதாகதப்படுத்துகிறார்கள். அப்போது வீஷ்மர் கண்களிற் புகையெழநோக்கி, அண்டகடாகங்களும் பொடிப்பட அட்டகாசஞ் செய்து, தாமொருவராகவே எழுந்து கார்முகத்தில் அநேக திவ்ய பாணங்களைத் தொடுத்துத் தம்மீதுந் தம்பிமீதும் சேனைகள் மீதும் வருகின்ற பாணங்களையெல்லாம் கண்டதுண்டமாகக் கண்டித்து, மறுபடியுந்தமதுவில்லில் திவ்ய அர்த்தசந்திரபாணங்களை அளவில்லாமற் றொடுத்துச் சில அரசர்களுடைய ரதத்தை உடைத்துச் சில அரசர்களுடைய சாரதிகளையும் குதிரைகளையுங் குறைத்துச் சில அரசர்களின் அவயவங்களைப் பழுதாக்கிச் சில அரசர்களின் மகுடத்தை உடைத்து மார்பைப்பிளந்து சில அரசர்களின் வில்லை முறித்துக் கவசத்தைப் பொடியாக்கிச் சில அரசர்களினுயிரைக் கொள்ளைகொண்டு, நன்றாகப் புஷ்பித்திருக்கிற தாமரைத் தடாகத்தில் யானைகள்விழுந்து கலக்கினாலெப்படியோ அப்படி போலச் சேனைகள்மீது கவிந்து சகல தளத்தையும் நாசப்படுத்துகிறார். அப்போது உயிர்விட்ட அரசரும் உயிரின்மேலிச்சைவைத்த அரசரும்போக மற்ற அரசர்கள்யாவரும் ஒன்றாகக் கூடி, மறுபடியும் எதிர்த்து வில்லை வளைத்து இந்திராஸ்திரம்-வருணாஸ்திரம்- வாய்வாஸ்திரம் - குபேராஸ்திரம் - சூரியாஸ்திரம் - யமனாஸ்திரம் - முதலாகிய அஸ்திரங்களைத் தொடுத்து மஹா உக்கிரத்துடனே நின்றார்கள். வீஷ்மர் அப்பகைவர் தொடுத்த அஸ்திரங்களை வருகிற குறிப்பினால் ஈதீது இவ்விந்த அஸ்திரங்களென்று உணர்ந்து, ஏககாலத்தில்வருகிற அஸ்திரங்களுக்குத் தனித்தனி அஸ்திரந் தொடுத்தால் அதற்குள் அஸ்திரங்கள் வந்துவிடுமென்று யோசித்து எல்லா அஸ்திரங்களையும் கவுளீகாஞ் செய்யத் தகுந்த காந்தருவாஸ்திரத்தை எடுத்து நிறுத்திப் பூசை நைவேத்தியங்கொடுத்து மந்திரோபதேசஞ் செய்து தொடுத்துவிட்டார். இந்த அஸ்திரம் வில்லைவிட்டு வெளிப்பட்ட மாத்திரத்தில் ஒருபக்கம் மின்னல் ஒருபக்கம்மழை ஒருபக்கம்இடி இவைமுதலியவற்றை வெளிப்படுத்தி, அஷ்டதிக்குப்பாலகரையும் அஷ்டவசுக்களையும் அவரவர்கள் வாகனாயுதங்களோடு உண்டாக்கிற்று. அதனால் எதிரிகள்விட்ட அஸ்திரங்களெல்லாம் நாசமாயின. உடனே வீஷ்மர் தமது சிலையைவளைத்து, அநேக முள்ளம்பையும் பிறைமுக வம்பையும் தொடுத்தார். இவ்வம்புகளினால் அரசர்கள்யாவரு மனநொந்து, இனி வீஷ்மரோடு போராட எண்ணுவது துன்பமென்று தீர்மானித்து, இவனிடத்தினின்றுந் தப்பி எந்தவிதமாய் ஓடிப்போவோமென்று அவ்வவர்கள் வந்ததிசையை நோக்கினார்கள். இந்தக்குறியை வீஷ்மர் கண்டு, உடனே தமது ஜெயசங்கத்தைச் சப்தித்தார். சித்திரவீரியனும் மற்றவர்களும் தங்கள் தங்கள் சங்கத்தைத் தொனித்தார்கள். அவ்வாறு தொனித்தும் ஓரரசரும் தம்மைவந் தெதிர்க்காதிருத்தலையுணர்ந்த வீஷ்மர் தமது தளத்தில் ஜெயபேரிகையை முழக்கக் கட்டளையிட்டு, அம்பா - அம்பிகை - அம்பாலிகை-என்கிற மூன்று கன்னிகைகளையும் முத்துச்சிவிகையி லேற்றிக் கொண்டு தமது நகரத்தைநோக்கிச் சென்றார். அக்கால் அம்பா என்னுங் கன்னிகை தன்தாதியர்களில் ஒருத்தியை அழைத்து, ஓ தாதி! நான் சாளுவராஜன்மீது காமியாயிருக்கிறேனாதலால் இந்தச்சேதியை வீஷ்மாசாரிக்குத் தெரியப்படுத்தென்றுகூற, தாதி வீஷ்மாசாரியிடத்துச்சென்று வணங்கி அம்பை கூறியவற்றைச்சொல்ல, வீஷ்மர் அந்த அம்பா கருத்தின்படி சாளுவராஜனை மணஞ்செய்துகொள்ளச் சொல்லி உத்தரவுகொடுத்து, தமது காவலாளிகளிற் சிலரைக் கூட்டிச் சாளுவ ராஜனிடத்து அவளை விட்டு வரும்படி கட்டளையிட்டு, மற்ற இரண்டு கன்னிகைகளை அழை

த்துவந்து தமது நகரத்தை அலங்கரித்து நல்ல முகூர்த்தத்திற் சித்திரவீரியனால் அவ்விரண்டு கன்னிகைகளுக்கு மங்கலஞ் சூட்டுவித்து, அனேக தானதருமங்கள் செய்து, வேதவேதியர்கள் மகிழச் சொர்ணவருஷம் பொழிந்து, நகரத்திலுள்ளவர்க்கெல்லாம் விருந்துசெய்து மிகுந்த சிறப்புடன் கலியாணத்தை நிறைவேற்றினார்.

பூமிப்பிராட்டி கமலப்பிராட்டி சமேதனாகிய திருமால்போல் சித்திர வீரியன் அம்பாலிகை அம்பிகை என்னு மிரண்டுகன்னிகை சமேதனாகி, இரண்டு ரதியுமதனும்போல மூவருங் கூடிக்கலந்து மகிழ்ந்திருந்தார்கள். வீஷ்மரிடத்து விடைபெற்றுச்சாளுவராஜனை மணம்புரியக் கருதிச்சென்ற அம்பா சாளுவ ராஜனைக் கண்டு வணங்கிச்சொல்லுகிறாள். ஓ ராஜனே! நெடுநாளாக உம்மீது காமியாயிருந்த என்னை நீரே மணம் புரியவேண்டும். ஒருவேளை வீஷ்மர் என்னை அழைத்துப்போனதைக் குறித்து நீர் யோசிக்க வேண்டுவதில்லை. ஏனென்றால் என் கருத்தை நான் வெளியிட்டேன். அதற்கவர் ஒத்துக்கொண்டு உம்மிடத்துக்கனுப்பினார். ஆதலால் என்னை நீர் தடையின்றி மணம்புரிக வென்று வேண்ட சாளுவராஜன் நகைத்து, ஓ பெண்ணே! உன்னை வீஷ்மன் சிறை யெடுத்துப் போயின பின்பு நான் மணம்புரிந்தால் என்னோடொத்த அரசர்கள் நகைப்பார்கள். ஆதலால் உன்னை மணம்புரியேன். வீஷ்மனிடத்திற் சென்று அவனையே மணம் புரியென்று மறுத்து விட்டான். அம்பா நெடுமூச்செறிந்து, கனவருத்தத்தோடு அத்தினாபுரத்துக்குவந்து வீஷ்மரைக்கண்டு வணங்கி, ஓ மஹாநுபாவா! சாளுவராஜனிடத்துச்சென்ற என்னை ஒருவர்கையி லகப்பட்டுப் போயின உன்னை மணம்புரியேனென்று மறுத்துவிட்டான். இனி உமதுபாதமே புகலிடமாக எண்ணிவந்தேன். என்கருத்து மகிழ்வெய்த நீங்களாவது உங்கள் தம்பியாவது மணம் புரியுமென்று நாணம்-மடம்-அச்சம்-பயிர்ப்பு-என்கிற நான்கையும் விட்டுச்சொன்னாள். வீஷ்மர்அதற்குச்சிரித்து அவளை நோக்கிச்சொல்லுகிறார்: ஓ அம்பா! நீஇராஜகுமாரத்தியா விருந்தும் சொல்பஜாதி ஸ்திரீகள் வசனிக்கிறதுபோல் வசனிக்கிறாய். முன்னம் சாளுவராஜன்மீது காமியாயிருக்கிறேனென்று தாதியால் தெரிவித்தாய். அக்காதலை கெடுக்கொணாதென்று உன்னைவிடுத்து மற்றஇரண்டுகன்னிகைகளை என்தம்பிக்கு மணஞ் செய்வித்தேன். இப்போது சாளுவராஜன் மணம்புரியேனென்றால் என்னிடத்து வந்து முறையிடுகிறாய். நானோ மணம்புரிகிறதில்லையென்று தேவர்களறியச் சத்தியஞ்செய்திருக்கிறேன். என்தம்பிக்கோ இரண்டு மனைவியரிருக்கிறார்கள். மேலும் நீ ராஜபுத்திரியாய் ஒருவர்மீது காதலுற்றபோதே அவனே உனக்குக்கணவன். அவனையே எவ்விதத்திலேனுங் களிப்புறச் செய்து மணம்புரிய வேண்டும். அவன் வெறுத்து நீக்கிவிடுவானாகில் வேறொரு புருஷனைத் தேடுவது தகுதியல்ல. ஆகையால் உனக்கு இச்சையான, விடத்திற்றானே நட. என்று கடுகடுத்துக்கூற அம்பா மிகுந்த துன்பத்தையடைந்து, நமதுவாயினால் நமக்கே கெடுதிதேடிக் கொண்டோமேயென்று தனக்குள் தானே நினைத்துக்கொண்டு தன்னகரத்துக்கு வந்து தந்தைதாளில்வணங்கி ஓவென்றலறி, நடந்த விருத்தாந்தத்தை உரைத்தாள். காசிராஜன் இதற்கென்ன செய்கிறதென்று சற்றுநேரம் ஆலோசித்து மகளைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ அம்மா! வீஷ்மன் உன்னை மணம்புரிய என்னாற்கூடியமட்டும் சிலபெரியோர்களைக்கொண்டு தெரிவிக்கிறேன். அதன்மேல் ஒத்துக்கொண்டால் இஷ்டப்படி நீ மணம்புரி. ஒத்துக்கொள்ளா விட்டால் அவன் பலவான். நான் என்னசெய்யப் போகிறேன். அப்பால் உன் தலைவிதி. என்று பிரியவசனஞ்சொல்லிச் சிலபெரியோர்களைவிட்டு வீஷ்மருக்குச் சமாதானங்கூறுவித்தனன். அதனை வீஷ்மர் மறுக்க, அந்தச்சேதியை அப்பெரியோர் காசிராஜனுக்குத் தெரிவிக்க, காசிராஜன் தன்புத்திரிக்கு உரைக்க, புத்திரி அதனைக்கேட்டு மிகுந்த வருத்தமடைந்து சிலபெரியோர்களை அழைப்பித்து வீஷ்மர் இப்பூமண்டலத்தி லிருக்கிறவர்களில் யார்சொல்லைச் சிலாக்கியமா யெடுத்துக்கொள்வாரோ அவர்களைத் தெரிவியுங்களென்று வினவ, அப்பெரியோர்கள் அவ்வீஷ்மருக்குக் குருவாகியும் அதிகஅன்பாகியுமிருக்கிற பரசுராம மூர்த்தி வாக்கைத் தடுக்காரென்று விளம்பினார்கள்.

இப்பால் அம்பா அப்பரசுராம மூர்த்தியிடத்துச்சென்று நமது குறையை நிறைவேற்றிக்கொள்ளுவோமென்றெண்ணி எழுந்து தந்தையிடத்து விடைபெற்றுச் சிலதாதிகள் தன்னைச்சூழ்ந்துவர முத்துச்சிவிகையிலேறிப் பரசுராம மூர்த்தியினுடைய ஆசிர்மத்துக்கு வழிகேட்டுக்கொண்டு செல்கிறபோது,ஒருவனத்தில் ஒருமுனிவர் எதிர்ப்பட்டார். அம்பா அவரைக்கண்டு முத்துச் சிவிகையைவிட்டிறங்கி அவரடியிற்பணிந்து, தன் ஊர் பேர் தந்தைபேர் முதலியன எடுத்துரைத்துத் தன் வரலாற்றையுங் கூறினாள். அம்முனிவர் கேட்டு வியப்படைந்து, அம்மா! நான் உன் தந்தையின் சகோதரியின் புத்திரன். நீ இந்தவழியே சென்றால் இவ்வழி கந்தமாதனத்திற் கொண்டு போய்விடும். அம்மலையிற் பரசுராம மூர்த்தி யிருக்கிறார். அவரைக்கண்டு உன் குறையைக் கூறுவாயாகில் உன்கருத்துநிறைவேறும். மற்றொருவரால்நிறைவேறாதென் றுரைத்துப்போயினர். பின்பு அம்பா முத்துச் சிவிகையிலேறி அவ்வழியே சென்று கந்தமாதனம் வந்து பரசுராம மூர்த்தியினுடைய ஆசிர்மத்தைத் தேடிக்கண்டவளாய், அவ் வாசிர்மத்தின் வாயிற்படியிலிருக்கிற அம்மூர்த்தியின் மாணாக்கருக்கு நமஸ்காரஞ்செய்து சொல்லுகிறாள்: ஓ மஹாத்மாக்களே! நெடுந்தூரத்தி லிருந்து, ஒரு ராஜகுமாரத்தி தங்கள்

224105

பாத தரிசனத்துக்காகக் கடைவாயலில் வந்திருக்கிறாளென்று பரசுராமமூர்த்திக்குத் தெரிவியுங்களென்று கூறினாள். அவ்வாயிலோர் அவ்வாறுசென்று பரசுராமமூர்த்தியை வணங்கிச் சொல்ல, பரசுராமமூர்த்தி வியப்புற்று உள்ளேவரக்கட்டளையிட்டார். வாயிலோர்அம்பாவைக்கண்டு ஆசிர்மத்துக்குவர உத்தரவாயிற்றென்றார்கள். அம்பா ஆசிர்மத்துட்சென்று, சந்திரசடாதர சாம்பவமூர்த்திக்கொப்பாகி விளங்குகின்ற பரசுராமமூர்த்தியைக் கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, பயபத்தியுடனே வாய்பொத்தி எதிர்நின்றாள். பரசுராமர் அம்பாவை ஆசீர்வதித்து, ஓ அம்மணி ! நீ யார்? இவ்விடத்துக்கு வரவேண்டிய காரணமென்ன சொல்லென்றுகேட்க அம்பா சொல்லுகிறாள்.

பரசுராமருக்கும் வீஷ்மருக்கும் போர்.

ஓஸ்வாமி! நான் காசிராஜனுடைய சிரேஷ்டபுத்திரி. நானும் என்சகோதரிகள் இருவரும் பக்குவகாலமடைந்ததை என்தந்தை அறிந்து சுயம்வரஞ்சாட்டினார். அச்சுயம் வரத்திற் சந்திரவமிச சிகாமணியாகிய சந்தனுமஹாராஜன் சிரேஷ்ட புத்திரனாகிய வீஷ்மாசாரி வெற்றிபெற்று எங்கள்மூவரையும் தன்தம்பிக்கு மணம்புரியக் கொண்டுபோகிறபோது, நான் சாளுவராஜன்மீது காதலாகி அக்காதலை வீஷ்மாசாரிக்குத் தெரிவித்தேன். அவர் யென் கருத்தின்படி என்னை விட்டுவிட்டார். சாளுவனிடத்துச்சென்றபோது அச்சாளுவன் ஒருவர்கைக்குள்ளாகிய உன்னை மணம்புரியேனென்று மறுத்தான். மறுபடியும் வீஷ்மாசாரியிடத்துச்சென்று நாண மடம் அச்சம் பயிர்ப்பென்கிற நான்கையும் விட்டு என்னை மணம்புரியுமென்று அநேகவிதமாகவேண்டிக்கொண்டும்,அவர் ஒத்துக்கொள்ளாமல் மறுத்துவிட்டார். தங்களிடத்து முறையிட்டுக்கொண்டால் அவ்வீஷ்மாசாரிக்குச்சொல்லி என்மனக்குறையை முடிப்பீரென்று தங்களை நாடிவந்தேன். இப்பால் தங்களிஷ்டம் என் பாக்கியம் என்று இரங்கினாள். அதற்குப் பரசுராமமூர்த்தி மகிழ்வடைந்து, ஓ அம்பா! உன்கருத்தின்படியே செய்கிறேனென்று பக்கத்திலிருக்கிறஏவலாளிகளைநோக்கி, என்ரதத்தைக் கொண்டுவாருங்களென்றுகட்டளையிட்டார். உடனே ஏவலாளிகள் ஒருநிமைநேரத்திற் சாரதியோடு சகலபடைகளும் நிறைந்திருக்கிற மஹாரதத்தைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். பரசுராமமூர்த்தி அம்பாவோடு தானும் ரதமேறிப் பத்தாநாள் அஸ்தினாபுரத்துக்கு வந்து, தமதுவரவை வீஷ்மாசாரிக்குத் தெரிவித்தார். வீஷ்மாசாரி இவர்வந்தசேதி தெரிந்த உடன் திடுக்கென்றெழுந்து, பூசாதிரவியம் காணிக்கை முதலியவற்றை எடுத்துக்கொண்டு மந்திரிகள் புடைசூழ அதிவேகமாகவந்து, பரசுராம மூர்த்தியைக்கண்டு வலம்வந்து,சோடசோபசாரங்களோடுசாஷ்டாங்கநமஸ்காரமுஞ்செய்து பயபக்தியுடனேவாய்பொத்தி எதிர்நின்று, ஓ குருஸ்வாமி! எங்கள்குலத்தோர்செய்த மாதவமோ? நான்செய்த பூசாபலமோ ! தேவரீர் எளியேன் மீது கிருபைகூர்ந்து இந்நகரத்துக் கெழுந்தருளியது என்று அநேகவிதமாகத் துதித்தார். பரசுராம மூர்த்தி மகிழ்வடைந்து ஆசீர்வதித்து வீஷ்மரை நோக்கிச்சொல்லுகிறார்: அப்பாவீஷ்மா! நீ சந்திரவமிசசிகாமணியாக இருந்தும் விவாகமில்லாமலிருக்கிறது தகுதியல்ல. இதோ யிருக்கிறஅம்பாவை மணம்புரி. அதன்மேல் இம்மையின்ப மடைதலோடு மறுமையின்பமுமடைவாய். என்வாக்கைத் தடுக்காமல் ஏற்றுக்கொள். என்றுகூறவீஷ்மாசாரி இவ்வசனங்களைக்கேட்டமாத்திரத்தில் இரண்டுசெவியிலுங் கரத்தைவைத்துமூடி, நாம்செய்திருக்கிறசபதம் குருஸ்வாமிக்குத்தெரியாததலால் அதனை யறிவித்தாற் பின்பு இவ்விஷயத்தைக்குறித்து வசனியாரென்றுகருதி பரசுராமமூர்த்தியை வணங்கி, தந்தை வியாகூலம் தீரும்பொருட்டுத் தாம்செய்த சபதத்தை ஆதியோடந்தமாகத் தெரிவித்து நான் மணம்புரியேனென்று பரசுராம மூர்த்தியின் வாக்கையுந் தடுத்தார். பரசுராம மூர்த்தி நமதுவாக்கைத் தடுத்தானே என்று சினங்கொண்டு கண்களில் நெருப்பெழ நோக்கி, அடா வீஷ்மா ! என்வாக்கைத் திரிமூர்த்திகளுந் தடுக்கார்கள்.நீயொருராஜன் என் சொல்லைத் தடுத்தாயல்லவா? என் வாக்கின்படி அம்பாவை மணம்புரிந்தாலாச்சு. இல்லாவிட்டால் வில்லெடுத்துப் போர்செய்யவா. உன்றலையை சூரியவமிசராஜர்கள் தலைபோ லுருட்டுகிறேன். என்று வீராவேசங்கொண்டு மஹா உக்கிரத்துடன் அழைக்க, வீஷ்மர்சற்றாலோசித்து, தேவர்களறியக் கூறிய சபதத்தைக் கெடுப்பதைவிட நமது குருமுன்னிலையில் தேகத்தைவிடுதல் சிறப்பும் புகழுமுண்டென்று தீர்மானித்துப் பரசுராமரைவணங்கிச் சொல்லுகிறார்: ஓஸ்வாமி! உமது வில்வணங்கினால் சொற்க மத்திய பாதாளலோகமும் வணங்கும். நான் ஒருவன் வணங்காதிருப்பேனோ? ஆகிலும் நான்கூறிய சபதத்தைமாத்திரம் தடுக்கேன். அது முன்னிலையில் உயிரைக்கொடுப்பேன். இது என் உறுதி. அப்பால் தங்களிஷ்டம் என்றார். பரசுராமமூர்த்தி இவ்வசனங்களைக்கேட்டுக் கடுகடுத்து, வடவாமுகாக்கினியைப்போலக் கோபாக்கினிசொலிப்ப வீஷ்மரை நோக்கிச் சொல்லுகிறார்: அடாவீஷ்மா! (வளர்த்தகடா மார்பிற்பாய்ந்ததுபோல்) கற்றகல்வியெல்லாம் என்னிடத்தில் தானே ஓதவந்தா யல்லவா? நல்லது. இனித்தாமசச்செய்யாமல் போர்க்கோலங்கொண்டுவருக, என்றுபுகல வீஷ்மாசாரி இனியொரு தீர்ப்பில்லை. நமது உயிர்முடிவதே தீர்ப்பு. என்றுநினைத்து நால்வகைச்சேனைகளையும் நீக்கிப் பரசுராமரைப்போலத் தாமும் ஒரு தேர்க்காரராகிப் போர்க்கோலங் கொண்டு யுத்தபூமியில் வந்து நின்றார்.

அப்போது பரசுராமரும் தமது ரதத்தை யுத்தபூமியிற் செலுத்தி வீஷ்மரைநோக்கிச் சொல்லுகிறார்:

அடா வீஷ்மா! இனி என்னதாமசம்? எடுவில்லைதொடு சரத்தை. என்றுபுகல வீஷ்மர் தேரிலிருந்தபடி பரசுராமமூர்த்திக்கு அஞ்சலிசெய்து, ஓ ஸ்வாமி! நான் மிஞ்சிப் பாணந்தொடுக்கிறதுதகுதியல்ல. தாங்களே முன்னம் பாணம் தொடுக்க வேண்டுமென்று வருந்திக்கேட்டனர். அதற்கு பரசுராமமூர்த்தி சினங்கொண்டு கலகலவென்றுநகைத்துக் கண்களில் நெருப்புப்பொறிபறக்கநோக்கி, நல்லதுவீஷ்மா! உன்கருத்தின்படியே இதோ தொடுக்கிறேன் பாணத்தை என்று சொல்லிச் சூரியவமிசத்தை நாசப்படுத்தின கோதண்டத்தை மூதண்டம் பிளக்க வளைத்து நாணியேறிட்டுத் தேவர்கள் செவி செவிடுபடத்தக்கதாகக் குணத்தொனிசெய்து, அண்டங்களிடியச் சங்கத்தொனி காட்டி (ரு) அர்த்தசந்திர பாணங்களைத் தொடுத்துச் சாரதியையும் குதிரைகளையும் இரண்டு பாணத்தினால் நோகச்செய்து, மூன்றுபாணத்தால் வீஷ்மரைக்களைக்கப்படுத்தினர். அவ்வீஷ்மர் அந்த ஐந்து பாணத்தையும் ஏற்றுக்கொண்டு, தமதுபோர்முகத்துக்குரிய கார்முகத்தை வளைத்து நாணி ஏறிட்டுக் குணத்தொனிசெய்தார். அதுகண்டு பரசுராமமூர்த்தி தன்வில்லிற் கழுகிறகு பூண்டு மஹா கூர்மைபொருந்தி மின்னலைப்போற் பளீர் பளீர் என்று ஜொலிக்கும் திவ்யகணைகளில் நூறு கணைகளைத் தூண்டினர். வீஷ்மர் அந்த நூறு கணைகளுந் தன்னிடத்து வருவதற்கு முன் சில கணைகளைவிட்டுக் கண்டித்தார். பரசுராமமூர்த்தி கணைகள் வெட்டுண்டதைநோக்கி வெகுண்டு, மிகுந்த வல்லமையைப் பெற்றிருக்கிற பிறைமுகஅம்பு-முள்ளம்பு- கூரம்பு - முதலியவைகளைக் கோடிகோடியாகச் சோனை வருஷம் சொரிந்தாற்போல் ஓயாமல்தொடுத்தார். வீஷ்மர் எவ்வளவுகணைகள் தன்னிடத்துக்கு வருகின்றனவோ அவ்வளவு கணைகட்கு வெவ்வேறு கணைகளைத்தொடுத்து அறுத்துப் பூமியிற்றள்ளினர். பரசுராமமூர்த்தி வீஷ்மர் கைச்சாதுரியத்தைக்கண்டு கிஞ்சித்து மகிழ்ந்து, இவனோடு ஜாக்கிரதையாயிருந்து போராட வேண்டும்; ஏனென்றால்-விளக்கில் தீவட்டி யுற்பத்தி. இதுயாவர்க்குந் தெரியும் தீவட்டி செய்கையிலுயர்ந்தது. அதுபோல் வீஷ்மன் நமது மாணாக்கனா யிருந்தாலும், நம்மை விட எண்மணங் சதிகமான புத்தியும் சாதுரிய யுக்தியுமுடையவனாயிருக்கிறான். என்று நிதானித்து, க-௰-௱-௲-பதினாயிரம் - நூறாயிரம் - பத்து நூறாயிரம் - கோடி - சதகோடி - சங்கமாக சரங்களைத் தொடுத்து, வீஷ்மருடையரதத்தை அப்படி இப்படி அசைய வொட்டாமற் சரக்கூடம் போட்டார்;

வீஷ்மர் அனேக பாணங்களை விடுத்துத் தன்னிரதத்தைக் கவிந்திருக்கிற பாணங்களைக் கண்டித்து, இனிநாம் சும்மாயிருக்கிறது தகுதியல்லவென்று பரசுராம மூர்த்திக்கும் சாரதிக்கும் குதிரைகளுக்கும் சில பாணங்களைத் தொடுத்து நோவச் செய்து, அவருடைய இரதத்தை அப்பாற் போகவொட்டாமற்றானும் சரக்கூடம் போட்டார். அதனால் பரசுராம மூர்த்திக்கு மிகுந்த கோபாக்கினி மூண்டு கண்களில் நெருப்பெழ நோக்கி, பிரமதண்டம் - காலதண்டம்- சத்தி- முதலியவற்றை விடுத்ததுவுமன்றி திவ்யாஸ்திரங்களையும் தொடுத்துச் சரக்கூட்டை அதஞ்செய்துவிட்டார். வீஷ்மர் தன்மேல் வருகிற காலதண்ட முதலிய வற்றை யெல்லாம் அவ்வவற்றைக்கொண்டு துணித்துப் பரசுராம மூர்த்தியை நோவச் செய்தார். பரசுராமர் கைமிஞ்சிச் சில கணைகளைவிட்டு வீஷ்மர் மார்பைப் பிளந்தார். வீஷ்மர் சற்றுநேரம் மூர்ச்சையா யிருந்து எழுந்து வில்லைவளைத்து, அநேக திவ்ய பாணங்களைத் தொடுத்துக் குதிரைகளை ரத்தமயமாக்கிச் சாரதியைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துப் பரசுராமர் சரீரத்தைச் சக்கை சக்கையாகப் பிளந்தார். பரசுராமர் மனங்கலங்கி மூர்ச்சையடைந்து எழுந்து மறுபடியும் வில்லைவளைத்து, அதிகதீக்ஷணியமான பாணங்களைத் தொடுத்து வீஷ்மர் தன்னைத் துன்பப் படுத்தினதுபோலத் தான் அவ்வீஷ்மரைத் துன்பப் படுத்தினர். அதற்கு வீஷ்மர் அஞ்சாமல் சஞ்சலப் படாமல் எதிர் நின்று திவ்வியாஸ்திரங்களைத் தொடுத்துப் பரசுராம மூர்த்தியை வருத்தப் படுத்தினர். இப்படி ஒருவர்க்கொருவர் விரோதப் பட்டுத் தேவர்களெல்லாம் அஞ்ச திவ்வியாஸ்திரங்களையும் திவ்வியபாணங்களையும் தொடுத்து; அன்னம் தண்ணீர் ஆகார மில்லரமல் பத்துநாள் இரவும் பகலுமாகப் போராடினர்கள். முடிவில் வீஷ்மர் கைமிஞ்சிப் பரசுராமருடைய கைவில்லையொடித்துக் கவசத்தைப் பிளந்து கொடியை அறுத்துக் குதிரைகளைக்கொன்று தேரைச் சிதற் சிதலாய்ப் போர்த்தெறிந்தார். பரசுராம மூர்த்தி இங்கு நின்றோமாகில் மானத்திற்குச் சேதம்வருமென்று யோசித்து, இனி அரசருக்கு வில்வித்தை கற்பிக்கிறதில்லையென்று சபதஞ்செய்து, தேரை விட்டுப் பூமியிற் குதித்துப் பதாதியாக ஓடிப்போயினர். வீஷ்மர் அதுகண்டு ஜெயசங்கத்தைத் தொனித்துத் தேவர்கள் துதிக்கத் தன்னகரத்திற் சென்றார்.

இப்பால் வீஷ்மரை மணம்புரியவந்த அம்பா பரசுராமர்செய்கையைக் கண்ணுற்றுக் கனவருத்தமடைந்து, நமது சகோதரிகளோடு செல்லுகிறபோது மவுனமா யிராமல் நமது கருத்தை வீஷ்மனுக்குத் தெரிவித்ததினாலல்லவா இவ்வளவு அவஸ்தை வந்தது. அதுவுமன்றி நமக்காக இந்தப் பரசுராம மூர்த்தியும் போர்முகத்தில் முதுகிட்டோடினர். இனிநாம் செய்வதென்ன வென்று தனக்குள் தானே யோசித்து, இவ்வளவு வருத்தத்துக்குக் காரணம் வீஷ்மனாதலால் அவனைக் கொல்லாமல் விடுகிறதில்லையென்று தீர்மானித்து; அவனைக் கொல்ல நாமொரு சூரனாகவேண்டுமென்று அதற்குத் தகுந்தபலம் சித்திக்க

நல்ல தவஞ்செய்வோமெனக் கருதி அப்பெண்ணுருவத்தைத் தவவுருவாகக் கொண்டு ஒரு வனத்தில் வந்து தவநிலை இயற்றி, அநேககாலம் பதுமாசனத்திலிருந்தும், அநேககாலம் ஒரே நிலையாய் நின்றும், அநேககாலம் ஒருபாதத்தை யூன்றியும், அநேககாலம் ஒருகாலின்மீது மற்றொருகாலை மடக்கிவைத்தும், அநேககாலம் இரண்டு கரங்களையும் தலைமீதுகுவித்துவைத்துக்கொண்டும், இவ்வாறு விழித்தகண்விழித்தபடி காளியைநோக்கி அருமையான தவஞ்செய்தாள். காளி அம்பாசெய்கிற தவத்துக்குமகிழ்ந்து பிரசன்னமாக எதிரில் வந்து நின்றாள். அம்பா அநேகவிதமாகத்துதித்து, இரண்டு கண்களிலு மானந்தக் கண்ணீர் வடிய நோக்கிச் சொல்லுகிறாள்: எளியேன் செய்த தவத்துக்கு மகிழ்ந்து என்னை யொரு பொருட்டாக எண்ணிவந்ததாயே! உன்கிருபைக்கு என்ன உவமானமிருக்கின்றதென்று புகழ்ந்தாள். காளி அம்பாவை நோக்கி, ஓ அம்பா! உன்கருத்தில் நாடியிருக்கிற பொருளென்ன கேள் தருகிறேனென்று சாற்ற அம்பா வணங்கி; ஓ அம்மா! என்னை யாதொருபலனுமடையாமலிருக்கச்செய்த வீஷ்மனைக் கொல்லவேண்டும் அதுதான் நான் நாடியிருக்கிறேனென்று நவில, காளி அம்பாவை நோக்கிச் சொல்லுகிறாள்: ஓ அம்பா! நீ இந்த ஜென்மத்தில் அந்தவீஷ்மனைக் கொல்லமாட்டாய். இந்த வடிவத்தை நீக்கி யாகசேனனிடத்தில் அலியாகப்பிறந்து; அதன்மேல் அவன் உன்னைப் பிள்ளையென்று பாராட்டி மணமுதலிய வற்றைச் செய்யப் போகிறான். அப்பால் பாரதப் போர்வரும். அப்போருக்கு நீயும் செல்லுகிறாய். அக்காலத்தில் உன்னால் வீஷ்மனிறக்கப் போகிறானென்று விளம்பிக் காளி மறைந்தாள். பின்பு அம்பா ஒரு தீக்குழிவளர்த்தி அதை வலமாகவந்து வணங்கி, நான் வீஷ்மனைக் கொல்லக் கடவேனென்று அத்தீயில் விழுந்து அவ்வுருவத்தை நீக்கி யாகசேனனிடமாய்ப் பிறந்து வளர்கின்றாள்.

இங்கே அம்பிகை அம்பாலிகை என்னுமிரண்டு மனைவிகள்மீது மிகுந்தகாதலாகி இரவும் பகலும் பிரியாமற் கூடிக் காமக்கடலி லாழ்ந்த சித்திரவீரியன் தன் வாயிற்பிறக்கும் சொல்லொன்றினால் உலகமுழுமையும் வசப்படுத்தி, மாறுபட்ட ராஜராஜாக்களையெல்லாம் போரில் வீறிட்டழுது முதுகிட்டோடச்செய்து, எல்லாப் பகைகளையுங் கடிந்து மிகுந்த சிறப்புடன் செங்கோல் நடத்துகிறவனாயிருந்தும்; அகப்பகையாகிய காமப்பகை ஒன்றைமாத்திரம் வகித்திருந்தான். அதனாற் சந்திர வமிசம் விர்த்தி யாவதற்குப் புத்திரபாக்கியம் அற்றுப்போயினதுமன்றி, மற்றப்பாக்கியங்களும் அவ்வாசைப்பெருக்கத்தினாற்புறம்பாகி பல வியாதிகட்குந் தலைமையாகிய பெருவியாதி தோன்றி, இம்பரிலிருக்கும் சகலவைபோகங்களையும் பற்றறச் செய்வித்து உம்பரிலிருக்கும் பரமபதத்துக் காளாக்கி விட்டது. இந்தச்சேதி வீஷ்ம ரறிந்து, இரண்டு கண்ணிலும் நீர் பெருகக் கோவென்றலறி, அன்னை சுற்றத்தார் மந்திரியர் நகரத்தார் முதலானவர்கள் கதறி தம்மை சூழ்ந்து நிற்கத் தாம் அச்சித்திரவீரியனுக்குச் செய்யுங்கடனை நிறைவேற்றி யடக்கஞ் செய்து, பின்பு அன்னைக்குத் தேறுதலை சொல்லித் தன்னந் தனியே யிருந்து; ஆ! தெய்வமே! சந்திர வமிசம் புதன் முதல் சந்தனுமஹாராஜன் வரைக்கும் வாழையடி வாழையாக விர்த்தியாய் வந்து, என்னாளில் விர்த்தி இல்லாமல் என்றலை முறையோடு அற்றுப்போகும்படி நேர்ந்ததே: நானோ தந்தைக்காக மணம்புரியேனென்று தேவர்களறிய வீஷ்மித்துக் கொண்டேனே: தேவர்களும் அப்பெயரை எனக்கு நாட்டினார்களே: இனிநான் என்னசெய்வேனென்று தமக்குள் தாமே நினைத்துத் தாமரையிலைச்சலம்போலத் தத்தளித்து மனவருத்த மடைந்திருந்தார்.

பரிமளகந்திக்கு வீஷ்மர் தரும சந்தான விதியுரைத்தல்.

அதுகாலத்திற் சந்தனு மஹாராஜன் மனைவியாகிய பரிமளகந்தி தன் இரண்டு புத்திரர்கள் பரமபதத்திற் சேர்ந்ததற்கு மிகுந்த வருத்தமடைந் திருப்பதனோடு குலம் விர்த்தியில்லாமற் போயிற்றே என்று கனவருத்தமடைந்து, மனதுக்கு ளொன்றை நினைத்து மூத்தகுமாரனாகிய வீஷ்மரிடத்து வந்தாள். வீஷ்மர் சிற்றன்னையின் சீரடிவணங்கி, ஓ அம்மா! எளியேனிடத்து வந்தகாரண மென்னென்றுவினவத் தன் கருத்தை வெளியிடக்கருதிச் சொல்லுகிறாள்: அப்பா மகனே வீஷ்மா! உலகத்தில் அரசரா யிருக்கிறவர்களுக்குப் புத்திர னில்லா விட்டால் தரும சந்தானம் பெற்றுக்கொள்வது தகுதி. பட்டத்துக்கு யோக்கியனாய் நீ இருக்கிறபோது புத்திரர்களில்லையென்று வருத்தப்படுவது நீதி யல்ல. நீ யொருஸ்திரீயை மணம்புரியாவிட்டாலும், என் புத்திரனுடையமனைவியரைக் கூடிப் புத்திர சந்தான முண்டாக்கலாம். அதனால் தோஷமில்லை. மாதாசொல்லை வேதவாக்கியம் போல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வேதங்கள் முறையிடுகின்றன. நீ என்வார்த்தையைத் தடுக்காமல் ஒத்துக்கொள்ளுக. என்றுரைக்க வீஷ்மர் திடுக்கிட்டு மிகுந்ததுன்ப மடைந்தவராய் இரண்டு செவியில் திரண்ட கரங்களை வைத்து மூடிக் கடவுளைத் துதித்துச் சிற்றன்னைக்கு நமஸ்காரஞ்செய்து, ஓ அம்மணி! என்தந்தையின் மனக்குறை நீங்க தேவர்களுமறிய மணம்புரியேனென்று சபதம் செய்திருக்கிற என்னைப் பார்த்து இந்தவார்த்தை கூறுவது தகுதியல்ல. பட்டத்துக்குப் புத்திரனில்லா விட்டால் தருமசந்தானம் பெற்றுக்கொள்ளுகிறது என்றீர்: அது உண்மைதான். மேலும்வேதவிதியும் அவ்வாறேகூறுகின்றது. அதற்கொப்பாக அநேக அனுபவமும் உண்டு. அவ்

(REGISTERED-COPY-RIGHT.)

(ஆதிபர்வம்-௫௬-வது-பக்கம்.) (కు.చే.సుబ్రమణ్యరాజు [illegible])

வாறு செய்து தருமசந்தானம் பெற்றால், எனக்குமாத்திர மல்ல என்னேடொத்த அரசருக்கும் சம்மதிதான். ஆதலாலந்த விதிப்படியேசெய்க வென்றுவீஷ்மர் பின்னுஞ்சொல்லுகிறார்: ஓ அம்மணி! முற்காலத்தில் பவ்வியரென்று ஒரு முனிவரிருந்தார். அவர் சந்திர சடாதர சாம்பவமூர்த்திக்கு ஒப்பான சாபாநுக்கிரக சாமர்த்தியத்தை யுடையவர். அவர் மமதை என்னும் கன்னிகையைமணந்து, அவள் மிகுந்தகற்பும்பொற்பு முள்ளவளா யிருந்ததினால் அவளைப் பிரியாமல் இருந்தார். சொற்கலோகத்துக்கதிபதியாகிய இந்திரனுக்குக் குருவாகி விளங்கும் வியாழபகவான் அந்த மமதையினது திருவுருவத்தைக் கண்டு மிகுந்த காதலுடையவராகி, இரவும்பகலு மதுவே ஏக்கமாக இருந்து கனவருத்த மடைந்து, நாளுக்குநாள் உடல்வாடி, மமதையின் திருவுருவத்தை மனதில்வைத் துருகித் தனது இருப்பிடத்தைவிட்டு அம்மமதை யிருக்குமிடத்தில் வந்து, கணவன் அவளை நீங்காமலிருக்கிறதைக்கண்டு சமயங்கிடைக்காமற் சஞ்சலப்பட்டுவருவார். இப்படி இருக்கிறகாலத்தில் அந்த மமதை கருப்பவதியாயினாள். ஒருநாள் அந்தமமதைகருப்பயாதனையால் அயர்ந்து மல்லாந்துபடுத்து நித்திரைபோய்விட்டாள். பவ்வியரென்கிற பிராமணர் மனைவி நித்திரைசெய்கிறதறிந்து, இவளெழுந் திருப்பதற்கு முன்னம் ஸ்நானஞ்செய்து வருவோமென்று நினைத்துத் தடாகத்திற்குச் சென்றார். அந்த வேளையில் வியாழபகவான் அந்த மமதையிடத்து வந்து, இவளை நமது சுய உருவத்தோடு புணர்வோமாகில் விழித்துக்கொள்வாள். பின்பு சாபம் நேரிடும். என்று கருதித் தன் ரூபத்தைமாற்றி வேறொருவிதமாய் ரூபங்கொண்டு புணர்ந்தார். அப்படி புணருகிற தருணத்தில் அந்த மமதையின் வயிற்றிலிருக்கிற சிசுவானது பவ்வியருடைய வீரியமாதலால், நல்ல பிரமக்கியான முள்ளதா யிருந்தது. அது இந்த வியாழ பகவான் செய்கிற துர்நடத்தையைக்கண்டு மனம்பொறுக்காமல், கருப்பத்தி லிருந்தபடியே வியாழபகவானைக் கூவிச் சொல்லுகின்றது. ஓ தேவகுருவே! நீரோ தேவராஜனுக்குக்குருவாயிருக்கிறவர். வேதாகமவிதி உம்மால் மூன்று லோகத்திலும் விளங்குகின்றது. அவ்வளவு சிலாக்கியவானாகிய நீர் கீழ்ப்போயின மானிடசாதியிலும் சுத்தமவுடிகராயிருக்கிறவர்களும் நடத்தாத துற்செய்கையை நடத்துகிறீர். இது உமக்குத்தருமமா? என்றுகூற வியாழ பகவான் இவ்வசனங்களைக்கேட்டுத் திடுக்கிட்டு, இச்சத்தம் எங்கிருந்து உற்பத்தி யாயிற்றென்று நாலுதிசையையுநோக்கிப் பின்புகருப்பத்திலிருக்கிற சிசுவென்றுணர்ந்து, அச்சிசுவைப்பாத்து அதிகசினங்கொண்டு சொல்லுகிறார். ஓசிசுவே! அநேகநாளாகக் கொண்டிருந்த என்காதலை நிமைநேரத்தில்நீகெடுத்துஎன்னைப்பங்கப்படுத்தினதினால், உனக்கிரண்டுகண்ணும் தெரியாமற் போகக்கடவதென்று சாபமிட்டுப் போய்விட்டார். அந்தச் சிசு தனக்கிரண்டு கண்ணு மொளியிழந்ததென்றறிந்து வருத்தமுற்று மவுனமாயிருந்துவிட்டது. பின்பு மமதை துயின்றெழுந்து, எப்போதும்போல் தன்கணவனேடு கூடிவாழ்ந்து வருகிறாள். அந்நாளில் பிரசவகாலம் வந்து, நல்ல சுபமுகூர்த்தத்தில் இளஞ்சூரியனைப்போல்பிரகாசிக்கின்ற புத்திரனைப்பெற்றாள். தாய்தந்தையர் அப்புத்திரனுடைய அழகினைநோக்கிப் பிரதானமான கண்ணில்லாமையா யிருக்கிறதை நினைத்துக் கனவருத்தமுற்றவராயிருந்தபோதிலும் அப்புத்திரனை வளர்ப்பதில் அதிகவிருப்பமுடையவர்களாகிப் பாதுகாத்து, அப்புத்திரனுக்குத் தீர்க்கதமனென்று பெயரிட்டு, உபநயன மில்லாமையை நோக்கி அவ்வுபநயன மளிப்பதுபோல் தங்கள் மரபிற்குறிய உபநயனச் சடங்கினைப் பொருந்தச்செய்தார்கள். அச்சிறுவராகிய தீர்க்கதமர் அன்று முதல் தாய்தந்தையர்களின் சுவாதீனத்தி லிருக்காமற் பிரமசரியத்தி னியல்புபெற்று, வீடுகடோறுஞ்சென்று மாதவகவளம் வாங்கிப் புசித்துவருவார். இப்படி வருகிற காலத்தில் ஒருநாள் தீர்க்கதேவரென்னுமுனிவரிருக்குமிடத்துச் சென்றபோது அவர் அச்சிறுவரது சௌந்தரியத்தை முற்றும்நோக்கிக் கண்ணில்லா திருத்தலுக்கு வருத்தமுற்று, இவருக்கு ஞானக்கண் கொடுக்கவேண்டுமென்று கருதி அச்சிறுவரையருகிலழைத்து வரன்முறைகளைக்கேட்டுப் பின்புதன்வல்லமையினால் அச்சிறுவருக்கு நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநாலு கலைக்கியான முதலியவற்றைப் போதித்தார். அச்சிறுவர் சகலகலை வல்லவராகி, ஆசிரியரை அன்போடு வணங்கி விடைபெற்று, முன்போலவே வீடுகடோறும் சென்று மாதவகவளம் வாங்கிப்புசித்து வருகிறார். அந்நாளில் அன்னமென்று வந்தவர்க்கு முன்னஞ்சென்று வந்தனை வழிபாடுசெய்து மிகுந்த காதலோடு அவ்வன்னம் படைத்துவரும்விரதத்தைத் தன்னுயிராகக்கொண்ட ஒருவேதியன் வீட்டிற்குச் சென்று, தான் வந்திருக்கிறதைச் சதாவேதகோஷங்கொண்டிருக்கும்தனது வர்யோசையாற் றெரிவித்தார். அந்த வேளையில் அவ்வேதியன் போசனம் செய்கிற தருணமாயிருந்தும் அந்த ஓசையைக் கேட்டமாத்திரத்தில் விரைந்துவந்து தீர்க்க தமருக்கு உபசாரங்களைச்செய்து அழைத்துப்போய் தன்னேடுகூட வைத்துக்கொண்டு, யாதொருகுறைவும் வராமல் அன்னம் வட்டித்துப் போசனஞ்செய்வித்தான். பின்பு இன்பமுடனிருவரும் வீற்றிருக்கிறபோது தீர்க்கதமர் வேதபாராயணஞ்செய்தார். அதனை யவ்வேதியன்கண்டு, ஆ! ஆ! இச்சிறுவர் கண்ணில்லா திருந்தும் வேதமோதுகிறார். இதனை யுயத்து நோக்கினால் நல்ல தவசிரேஷ்ட சிகாமணியின் புத்திரராக இருக்கின்றதென்று நினைத்துத் தீர்க்கதமரை யழைத்து, அவரது வரலாற்றைக்கேட்டு மிகுந்தகளிப்படைந்து, தன்புத்திரனைப்போலப் பாவித்து வளர்த்து, தன் குமாரத்தியை அவருக்குக் கன்னிகா தானமாகக் கொடுக்கவேண்டு மென்று கருதி, நல்ல சுபமுகூர்த்தத்தில்

தன் குமாரத்தியை அத்தீர்க்கதமருக்கு மணஞ்செய்வித்துச் சிலநாள் வைத்திருந்து, பின்பு மருகராகிய தீர்க்கதமரைநோக்கி, ஐயா! இனி உமதுமனைவியோடு நீர் கருத்துக் கிசைந்த விடத்துச்சென்று நன்மையை அனுபவியுங்களென்று கூறினன். தீர்க்கதமர் சம்மதித்துத் தன்மனைவியை அழைத்துக் கொண்டு, ஒரு திவ்ய க்ஷேத்திரத்திற் பன்னகசாலை யொன்றியற்றி மனைவி பணிவிடைசெய்யத் தான் நல்ல தவம்புரிந்திருந்தார். இப்படி யிருக்கிறநாளில் ஒருநாள் அக்கன்னிகை பிரதோஷகாலத்தில் தன்கணவராகிய தீர்க்கதமரை வணங்கி, ஓமஹாத்மாவே! இன்றையதினம் இந்த வேளையில் என்னைக்கூடிக் கலந்தால் தான் என் மனங்களிப்புறும். இல்லாவிட்டால் அதிகபாவம் உமக்குச்சித்திக்கும். என்றுகூற தீர்க்கதமர் ஆ! ஆ! பெண்ணே! உலகத்திற் பெண்ணாகப் பிறந்தவர்க்குப் புருஷவின்பம் ஒன்றேயன்றி வேறொரு இன்பமில்லை. அது எனக்கு நன்றாகத்தெரியும். ஆகிலும் கலவித்தொழிலுக்குத் தகுதியானகாலமல்லாத பிரதோஷகாலத்தில்வந்து கூடென்றுசொல்வது தகுதியல்ல. அப்படி அல்லவென்றுகூடினால் அதிகபாவம்நேரிடுகிறதுமன்றி, கருப்பந்தரித்தால்அக்கருபிறதோஷத்துக்கெல்லாம்பாத்திரமாயிருக்கும். ஆதலால் இந்தவேளை அக்கருத்தைமறந்தால்மற்றொருவேளையில் உன்மீதெதிர்த்து மலர்க்கணையைத் தொடுத்து வருத்துகின்ற அந்தவேளையென்று, உனக்கு இன்பத்தைப்பெருகுவிக்கிறேனென்றுமறுத்தார். அக்கன்னிகை கணவன்கூறிய வசனங்களை ஆற்றிற் கரைத்த புளிபோலாக்கிக் காமவெறிகொண்டு மேல்விழுந்து, கலவித்தொழிலை இயற்றச்சொல்லிப் பலவிதமாகத் தொந்தரை செய்தாள். உலகத்திற் புருஷர்க்குப் பாலப்பருவமென்றும்-யௌவனப் பருவமென்றும் - குமாரப்பருவமென்றும்-வார்த்திபப்பருவமென்று நால்வகைப்படும். அவற்றுள், ௫ வயதளவும் பாலப்பருவம். ௰௬-வயதளவும் யௌவனப்பருவம். ௪௨-வயதளவும் குமாரப்பருவம். அதற்குமேல் வார்த்திபப்பருவம். குமாரப்பருவம் அடைந்தவர்கள் பலசாஸ்திரங்களை அறிந்து அதன் பயனையுணர்ந்து அந்நெறியைக் கைவிடாது பற்றிநடக்கும் தீர அறிவை யுடையோரா யிருந்தாலும், மனமாகிய பொந்தில் ஒளித்திருக்கும் காமமென்னும் பிசாசினால் அறையுண்டு திப்பிரமைகொண்டு, கல்விகேள்வி முதலியவற்றை மறந்தவராகிக் கார்காலத்து ஜலத்தைப் போலத் தெளிவின்றி அக்காமத்தின்வழி செல்லுதல் அப்பருவதசையின் வல்லமையாதலால்; அந்தயௌவனதசை அடைந்த அந்தத் தீர்க்கதமன் தன்மனைவி மகிழ்வெய்தக்கலந்தான். உடனேயவனுடைய வீரிய விருத்தியினின்றும் அக்கன்னிகை காலபேதத்தினாற் கொடிய கிராதர் தன்மைபூண்ட நூறு புத்திரர்களைப் பெற்றாள். இல்லறத்திலிருந்து சகல பாக்கியத்தையும் சம்பாதித்து இனிது வீற்றிருக்கிற கிரகஸ்தரும் ஒரு புத்திரனை வளர்ப்பதற்கு அதிகவருத்தப் படுவாரென்றால், துறவற ஆசிரமத்திலிருந்து அதிலும் கண்ணில்லாத கணவனைப்பெற்ற அக்கன்னிகை தான் பெற்ற நூறு பிள்ளைகளை வளர்ப்பதற்கு அதிகவருத்தமெடுத்துக்கொள்ளவேண்டுமாதலால் அப்புத்திரரைவளர்ப்பதில் அக்கன்னிகை அதிகசிரத்தை யுடையவளாகிக் கணவன்மீது அன்பில்லாதவளாயிருந்தாள். அதனைத் தீர்க்கதமர்கண்டு மனைவியை அழைத்து, ஓ பெண்ணே! என்ன என்மீது எள்ளளவேனும்உள்ளன்பில்லாதிருக்கிறாயென்று கூறினர். அக்கன்னிகைக்குக்கோபமுண்டாகி, இரவும்பகலும் உமதுபுத்திரரைப்பாதுகாத்து வருகிறதே பெரிய ஊழியமாயிருக்க நீர் இப்படி சொல்வது தகுதியாவென்று கூறி, என்னை நிந்தித்தபடியால் இனி உமக்கும் எனக்கும் சம்பந்தம் வேண்டியதில்லையென்று கடுகடுத்தாள். தீர்க்கதமர் இவ்வசனங்களைக்கேட்டு அதிககோபங்கொண்டு, அவருஞ் சில துர்வசனங்களை வழங்க அதன்மேல் ஒருவர்க்கொருவர் கலகப்பட்டார்கள். இதில் அக்கன்னிகை சினங்கொண்டு முன்பின் யோசிக்காமல் தன் புத்திரர்களை அழைத்து, ஓ புத்திரர்களே! இந்தக் கண்ணில்லாதவனைத் தூரத்தி லழைத்துப்போய் உயிர்க்குச் சேதம்வராமல் நன்றாயடித்து, ஒரு தெப்பமியற்றி அதில் இவனைவைத்து வரிந்து கட்டி ஆற்றில் விட்டுவாருங்களென்று கட்டளை இட்டாள். அன்னையின் ஆதரவி லிருக்கிறவர்களாதலால் எள்ளளவேனுந் தாக்ஷண்ய மில்லாமற் கண்ணில்லாத தந்தையை இழுத்துப்போய் ஒருவனத்தில் நிறுத்தி நன்றாயடித்து, மாதாசொற்படி அந்ததீர்க்கதமரைத் தெப்பத்திலேற்றிக் கங்கையில்விட்டுப் போயினர். தீர்க்கதமர் அதிகதுன்பத்தை அடைந்து ஸ்ரீமந்நாராயண மூர்த்தியை மனதில் நினைத்து, எந்தெந்த காலத்தில் எந்தெந்த வேதனைப் படவேண்டுமோ அந்தந்த வேதனையை அனுபவிக்கத்தான் வேண்டும். இது பூர்வசன்மாந்திர பாவம். என்று நிர்மானித்து எல்லாப் பாவத்துக்கு மருந்தாகி யிருக்கிற வேதத்தையோதிக் கொண்டு கங்கையிற்செல்லுகிறார். அப்போது கங்கை அந்த மஹாபுருஷரது மகிமையை அறிந்து இரக்கமுற்று, அந்தத் தீர்க்கதமருக்கு யாதொருதீங்கும் நேரிடாதிருக்கப் பாதுகாத்து, நல்ல துறையருகில் அத்தெப்பத்தை யொதுக்கினாள். அத்தெப்பம் கரையருகில்வந்தது. அப்போதும் பிறவிக்கடலைக்கடந்த அந்தத் தீர்க்கதமர் வேதபாராயணஞ்செய்வதிற் சோர்வடையாமலிருந்தார். இப்படி இருக்கிற தருணத்தில் இரவிகுல திலகனான பலிச் சக்கிரவர்த்தி தனக்குப் புத்திரசந்தான மில்லாமையாற் கனவருத்தமடைந்து, கொலுவில் வந்திருந்து மந்திரிமார்களை நோக்கி, ஓ புண்ணியவான்களே! நானோ தருமதேவதை நாலுபாதத்தில் நடக்கக் கூடியமட்டும் அநேக தான தருமங்களைச் செய்தும், யாகாதிகளால் தேவர்களுக்குத் திருப்திபண்ணியும், எனக்குப் புத்திர சந்தானமில்லா திருக்கின்றது. உலகத்தில் மானிட

ருக்குப் புத்திரசந்தான மில்லாவிட்டாற் புண்ணிய லோக மில்லையென்று வேத முறையிடுகின்றது. ஆதலால் நான் எல்லாப் பாக்கியத்தைப்பெற்றும் புத்திர பாக்கியத்தைப் பெருதிருக்கிறது எனக்குக் கனவருத்தமா யிருக்கின்றது, அது பற்றிப் புத்திரபாக்கியங் கிடைக்கக் கடவுளைநோக்கி அருமையான தவஞ்செய்யவேண்டும். தவஞ் செய்கிறதினுல் புத்திர சந்தானங் கிடைத்தால் இங்கு வருகிறேன். புத்திர சந்தானம் பெருவிட்டாற் புண்ணிய லோக மடைகிறேன். நீங்கள் நானிருந்து அரசு செலுத்தினதுபோற் குடிகளுக்கு யாதொரு குறைவும் வராமலிருக்கச் செங்கோற் செலுத்துங்கள். என்று தனது முத்திராமோதிரத்தை மந்திரிகள் கையிற் கொடுத்துத் தவவேடங்கொண்டு, நகரத்தை விட்டு வெளிப்பட்டுக் கங்கா நதியருகில் வந்தான்.

அப்படி வந்தபோது தெப்பத்திற் கட்டுபட்டுக் கங்கைக்கரையில் வேதபாராயணஞ் செய்துகொண்டிருக்குந் தீர்க்கதம முனியைக்கண்டு அருகில் வந்து, அவரிருக்கிற அவகோலத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு, ஆ! ஆ! இவர்யாரோ பெரியவர். மேலும் அதிக நயமுடையவரா யிருந்தாலும் நயன மில்லாதவராயிருக்கிருர். எந்தத் துராத்மாவோ இவரைக் கட்டித் தெப்பத்தில்வைத்துக் கங்கையில் விட்டுவிட்டதாகத் தோன்றுகிறது. என்று தீர்மானித்து அவருக்குநமஸ்காரஞ்செய்து தனது பெயரைத் தெரிவித்து, கட்டுப்பட்டிருந்த அந்தத் தீர்க்கதமனைக் கட்டில் நின்றும் நீக்கி வேருேரிடத்தில் தருப்பை யாசனமிட்டு அதிவிருத்தி வந்தனை வழிபாடுசெய்து. ஓ ஸ்வாமி! தங்களுடைய வரலாறென்னவென்று வினவினுன். தீர்க்கதமன் இருவினைக்குட்பட்டுக் கனவருத்தமடைந்தவர் சுகானந்தத்தை யடைந்தால் எவ்வளவு மகிழ்வடைவரோ அவ்வளவுமகிழ்வை அகத்தும் புறத்துமடைந்து அரசனை ஆசீர்வதித்துத், தான் பிறந்ததுமுதல் இக்கால் தெப்பத்திலேறிக் கங்கைக்கரையில் வந்திருந்த மட்டும் எடுத்தோதினுன். அரசன் கனவருத்தமடைந்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து சொல்லுகிருன்: ஓஸ்வாமி! தங்களை யொத்தவர்களின் கிருபையினுல் எல்லாப்பாக்கியத்தையும்பெற்றுச்செங்கோல் செலுத்தி இரவிகுலஞ் சிறப்பெய்த வாழ்ந்துவந்தேன் ஆனுற் புத்திரபாக்கியம் ஒன்றுமாத்திர மில்லை. அதனுற் கனவருத்தமடைந்து, தவம்புரிந்தாவது அல்லது தங்களையொத்த துறவிகளா லாவது அப்புத்திரபாக்கியத்தைப் பெற்று இரவி குலத்தைப் பெருகச்செய்து புண்ணிய லோகத்தை யடையலா மென்று கருதி, என்னரசு முதலியவற்றை மந்திரிமார் வசத்தில் ஒப்புவித்துத் தவவேடங் கொண்டு வந்தேன், வந்தவிடத்தில் தங்களைக் கண்டேன். இனி அந்தச் சஞ்சலமும் நீங்கிற்று. தேவரீர் கிருபைகூர்ந்து என்னரண்மனைக் கெழுந்தருளி, என்மனைவியரிடத்து ஒரு புத்திரனைப் பாலித்தருளுகவென்று மிகுந்த அன்புடன் வேண்டினன். தீர்க்கதமன் அரசன் கருத்துக்கிசைந்து அரண்மனைக்குச் சென்ருன்.

அரசன் தீர்க்கதமனுக்கு நல்ல விடுதி யொன்றுவிட்டு, அறுசுவை முதலானவைகளோடுங் கூடிய அன்னம் உண்பித்துச் சகல பரிமளத் திரவியத்தோடு தாம்பூல மளித்துப் பின்பு அரசன் தன்மனைவியிடத்துச்சென்று, தான் சென்றதும் சென்றவிடத்து ஒரு பெரியவரைக்கண்டதும் அவர் மூலமாகப் புத்திரசந்தானம் பெறக்கருதிய கருத்தையும் வெளியிட்டான். அப்போது மனைவி கிஞ்சித்து ஐயங்கொண்டு, அரசன் கருத்துக்கு விரோதம்வரப்பேசினுள். அதற்கு அரசன் சில நீதியை எடுத்தோதிச் சம்மதிக்கச்செய்து, தீர்க்கதமனிடத்து வந்து வணங்கி, ஓஸ்வாமி! தேவரீர் இதோயிருக்கிற பள்ளியறையிற் சேர்ந்திருமென்று கூறி அழைத்துவந்து சேர்த்துத் தன்மனைவியையும் எச்சரித்துத், தானொரு விடுதியிற்போய்ச் சயனித்திருந்தான். அரசன்மனைவி கிஞ்சித்து நாணமுற்றவளாகித், தன்னையொத்த தாதியை அழைத்துத் தன்னைப்போல் ஆடை ஆபரணங்களினுல் அலங்கிரதஞ் செய்து, தீர்க்கதமனிருக்கும் பள்ளியறைக்கு அனுப்பிவித்தாள். தாதி பள்ளியறைக்குச்சென்று தீர்க்கதமனைத் தழுவினுள். தீர்க்கதமன் வந்தவள் தாதியென்று ஞானக்கண்ணு லறிந்தும், நமக்கேன்? அரசன்மனைவி மனம் வேறுபட்டிருந்தாலும் நம்மை நாடிய அரசன் கருத்துக்கு இசைய நாம் நடக்கவேண்டுமென்று நினைத்து அத்தாதியைத் தழுவிப் புணர்ந்தான். அப்போது தீர்க்க தமனுடைய வீரிய விருத்தியால் தாதியினிடமாகப் பதினொரு புத்திரர்கள் உற்பத்தியாயினுர்கள். இந்தச்சேதி அரசனுக்குத் தெரிந்து கனவருத்தமடைந்து மனைவியிடத்து வந்து, ஓ பெண்ணே! நான் கூறியதென்ன நீ என்னகாரியஞ் செய்தாய்? தாதி இடமாக எத்தனை புத்திரர் பிறந்தாலும் பட்டத்துக்குரியவராவார்களா? நம்மிருவர்க்கும் நீர்க்கடன் முதலியவற்றைக் கொடுப்பதற்கு யோக்கியதையுண்டா? இல்லையே: இனியேனும் அவ்விரண்டு செய்கைக்கும் உரித்தாகும்பொருட்டு நீயே அப்பெரியவரிடத்துச் சென்று கூடென்று பின்னுஞ் சிலதர்மங்களை யெடுத்தோதி, தீர்க்க தமனிடத்து வந்து வணங்கி, ஓஸ்வாமி! அடியேன் செய்த விண்ணப்பத்தின்படி தாங்க ளிசைந்தும் இடம் பேதப்பட்டது. ஆகையால் எளியேன்மீது கிருபைகூர்ந்து என் மனைவியினிடமாக ஒருபுத்திரனைப் பாலியுமென்று மிகுந்த ஆருமையோடு வேண்ட, தீர்க்கதமன் சம்மதித்து உமதுமனைவியை வரச்சொல்லுமென்றுகூற, அரசன் மனைவியை எச்சரித்து முன்போலத் தான் ஒரு விடுதியிற் சயனித்திருந்தான். அரசன்மனைவி ஸ்நானஞ் செய்து நல்ல ஆடை ஆபரணங்களினுல் அலங்கரித்துக்கொண்டு பரிமளத்திரவிய மணிந்து தீர்க்கதம

விருக்கும் பள்ளியறையிற் சென்று அவர்க்கு நமஸ்காரஞ்செய்து, ஓஸ்வாமி! "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்" என்னு நீதிவாக்கியத்திற்கிணங்க முன்னமே நான் வராமல் தாதியை அனுப்பிவித்தகுற்றத்தை மன்னிக்கவேண்டு மென்று பிரார்த்தித்தாள். தீர்க்கதமன் முன்குற்றத்தை மனதில் நினைக்காமல் மகிழ்ந்து அரசன் மனைவியைத் தழுவி, உனக்கு ஒரு புத்திரனுண்டாகக் கடவதென்று மறைந்தான். அப்படியே புத்திர னுண்டானான். இந்தச்சேதி அரசனறிந்து புத்திரன் பிறந்தானென்று மகிழ்வை அடைந்து பள்ளியறைக்குள் வந்து பார்த்தான். அங்ஙனம் பார்க்கும்போது பெரியவ ரில்லாமையைக்கண்டு மனவருத்தமடைந்து. அப்பெரியவர் துறவியாதலால் எவனுற்றாரோ வென்று கருதி அப்பால் ஒருவிதமாகத் தேறி அப்புத்திரனை அதிக காதலோடு வளர்த்து, அங்கராஜனென்று பெயரிட்டுப் பட்டத்துக்கு உரித்தாக்கிக் கொண்டான்.

மேலும் முன்னம் பரசுராம மூர்த்தியாற் சூரிய வமிசம் நாசமடைய அச்சூரியவமிசப்பட்டத்தரசிகள் அக்கினிப் பிரவேசமாக யத்தனித்தபோது அச்செய்கையைக் காசிபருணர்ந்து அவர்களுக்குச் சில நீதிகளையெடுத்தோதிச் சம்மதிக்கச் செய்து, அந்தந்தப் பட்டத்தரசிகள் அவ்வவர்களுடைய ஆசிரியர்களைப்புணர்ந்து புத்திரர்களைப் பெற்றுச் சூரிய குலத்தை விர்த்தி செய்யக் கட்டளையிட்டார். அந்தப் பட்டத்தரசிகள் அவ்வாறே அந்தந்த ஆசிரியர்களைப் புணர்ந்து புத்திரர்களைப் பெற்றுச் சூரிய வமிசத்தைப் பெருகச்செய்தார்கள். இதுவுமன்றி -கன்மாடபாத மஹாராஜன் தனது மனைவியாகிய மதயந்தியைச்சாபத்தினாற் கூடக்கூடாதவனாகிப்பின்பு வசிட்டனைக்கொண்டுபுத்திரபாக்கியத்தை யடைந்தான். வேதமும் சந்தானமில்லாதவர்கள் இவ்வாறு கர்ப்பதானம் பண்ணிக்கொள்ளச் சொல்லி முறையிடுகின்றது. ஆதலால் தாயே! நீ ஐயப்படாமல் எந்தப் பெரியவனைக்கொண்டாவது இப்போது கணவனில்லாதிருக்கிற பட்டத்தரசிகளினிடமாகப் புத்திரனைப்பெற்றால் எனக்குச் சம்மதிதான். அவ்வாறுசெய்யயத்தனஞ்செய். என்று வீஷ்மர் அறையப் பரிமளகந்தி - அப்பா மகனே! நான் பேதைப் பருவ மடைந்திருக்கிற காலத்தில் நான் பிறந்த குலாசாரப்படி யமுனாநதியில் வருகிற பெரியோர்களுக்குப் படவு விட்டிருந்தேன். அந்தக் காலத்தில் தவசிரேஷ்டசிகாமணியாகிய பராசரர் அவ்விடத்துக்கு வந்து என்னைப் படவு விடச்சொன்னார். அப்படியே நான் அவர் ஒருவரைமாத்திரம் படவிலேற்றிச் செல்லுகையில், அவர் வல்லமையைச் சில செய்கைகளாற் கண்டு மிகுந்த பயபத்தியுடனே படவைச் செலுத்துகிறபோது பராசரர்வானத்தைநோக்கி என் முகத்தைப் பார்த்து, ஓ பெண்ணே! நான் நாடிவந்த நக்ஷத்திரம் உச்சியில் வருகிற தருணமாயிற்று. அத்தருணத்தில் ஒரு ஸ்திரீயைக் கூடவேண்டு மென்று விரதங்கொண்டு வந்தேன். நதியால் தடைநேரிட்டது. நீயாகிலும் அவ்விரதத்தைப் பாதுகாப்பையாகிற் சந்திர சூரிய ரிருக்கிறவரையில் உலகத்தில் உன் பெயரிருக்கும். ஆனதால் என்னைக்கூடென்று குறிக்க நான் நாணமுற்று, சுவாமி! நான் மங்கைப்பருவ மடையாதவள். மேலும் மச்சகந்தத்தை யுடையவள். இனிமேல் ஒருவர்க்கு மணமாலை சூடப்பட்டவள். ஆதலால் உமது கருத்துக் கிசைவது எவ்வாறென்று மறுமொழி கூறினேன். உடனே அம்முனிவர் எனக் குண்டாயிருந்த மச்சகந்தத்தை நீக்கிப் பரிமளகந்தத்தைக் கொடுத்து என்னை மங்கைப் பருவமாக்கி, ஓ பெண்ணே! என்னோடு சேர்ந்தாலும் நீ கன்னிகையாக இருக்கக்கடவதென்று ஆசீர்வதித்தார். அதனால் நான் மிகுந்த வியப்பையும் மகிழ்வையுங் கொண்டு, அவர் கருத்தின்படி களிப்பெய்தக் கூடினேன். அவருடைய வீரிய விர்த்தியால் அக்கணம் காவிகாம்பர தண்டு கமண்டல தாரியாய் வேதத்தைக் கையிலேந்தியபடி ஒரு புத்திரன் என்னிடமாகப் பிறந்தான். அப்புத்திரனுக்கு வேதவியாசனென்று பெயர். அப்புத்திரன் என்னைவிட்டுப்பிரியும்போது, தாயே! நீ எப்போது நினைக்கின்றையோ அப்போது நான் வருகிறேனென்று வாக்குத் தத்தஞ்செய்து போயிருக்கிறான். அந்த மஹாத்மாவாலே அம்பிகை அம்பாலிகையிடத்துப் புத்திரனையுண்டாக்கிக் கொள்ளலாமென்று நினைக்கிறேன். அக்கருத்து உனக்குச்சம்மதிதானாவென்றுவினவ வீஷ்மர் அதிக மகிழ்வை யடைந்து அன்னையை வணங்கி, தாயே! அவ்வாறு செய்தால் (பொங்கியும் பால்புறம் போகாதிருந்தது.) என்கிற பழமொழிபோல் அவர் மூத்த குமாரனாக இருக்கிறபடியால் அச்செய்கை எனக்கு மாத்திரமல்ல மற்றையாவருக்கு மொப்புமையாகவே இருக்கும். ஆதலால் அவ்வாறு செய்வதே உத்தமம் என்று உத்திரவு கொடுக்கப் பரிமளகந்தி அந்தப்புரத்திற்சென்று தன் மருமக்கள்மாராகிய அம்பிகை அம்பாலிகையை அழைப்பித்து, ஓ பெண்களே! உங்கள் மூலமாகப் பட்டத்துக்குப் புத்திரன்வேண்டும், அதற்காக வேதவிதிப்படி ஒரு ஆலோசனை செய்திருக்கின்றது. அவ்வாறு நீங்கள் நடந்துகொண்டு குலத்தை விருத்தி யடையச் செய்வீர்கள் என்று அவ்வாலோசனையை வெளிப்படுத்திச் சகல நீதிகளையுந்தெரிவித்து இருவரையுஞ்சம்மதிக்கச்செய்து அவரவர்களை அலங்கிரதமாக இருக்கச் சொல்லி, தான் என்குருவாகிய வேதவியாசனை வரும்படி மனதில் நினைத்தாள்.

திரிதராட்டிரன் பாண்டு இவர்கள் உற்பவம்.

இப்படி நினைத்தமாத்திரத்தில் திவ்யக் கியானசுரூபியாகிய வேதவியாசருணர்ந்து, கணப்பொழுதில் தன்மாதாவாகிய பரிமளகந்தி யிருக்கிற விடத்

தூக்குவந்து, தமதுநெற்றியிலிருக்குந்திருநீற்றுப் பாதத்தைத் துலக்கி, அன்பின் ஆருமையினாலே உண்டாகிய தமதுகண்ணீராற் சுத்திசெய்து, மந்திரபுஷ்பாக்ஷதைகளால் அர்ச்சனை புரிந்து, அஷ்டாங்கபஞ்சாங்காதி நமஸ்காரங்களால் வணங்கி, தாயே! அடியேனை நினைத்தகாரண மென்னவென்று வினவினர். அப்போது பரிமளகந்தி - அப்பா புத்திர சிகாமணியே! உன்னைப் பெற்றதின் பின்பு சந்திரவமிச சிரேஷ்டனான சந்தனு மஹாராஜனுக்கு மனைவியாகி இரண்டு புத்திரரைப் பெற்றேன். அவர்களில் ஒருவன் கந்தருவனா லிறந்தான். மற்றொருவன் அம்பிகை அம்பாலிகை என்னும் இரண்டு ஸ்திரீகளை மணந்து, புத்திரபாக்கியம் ஒன்றுதவிர மற்றப்பாக்கியங்களை அநுபவித்து இறந்தான். புத்திரனில்லாமையாற் கிரமமாக விளங்கிவந்த சந்திரவமிசம் பனிபெய்யும் சம்வச்சரமேகம்போ லாயினது மன்றி, என்புத்திரனோடு அஸ்தமித்தது. ஆகையால் என்மேல் கிருபைகூர்ந்து, எனக்கொரு இழிவுவாராமலிருக்கவும் சந்திரகுலம் விர்த்தியாகவும் உன் சகோதரனாகிய சித்திரவீரியன் மனைவிகளைக் கூடிப் புத்திரசந்தானம்பாலித்தருளென்றுபகர்ந்தாள். மாதாகூறியவாக்கியம் வேதவாக்கிய மாதலால் என்னாண்டவனாகிய வேதவியாசர் அன்னைகூறியதற் கிசைந்து, ஓ அம்மணி! உமதுகருத்தின்படி நடக்கிறேனென் றுரைத்தனர். பரிமளகந்தி அவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் மகிழ்வையடைந்து, உடனே மருமக்கள் மாரிடத்துச் சென்று அவர்களை எச்சரித்து வந்து, புத்திரனாகிய வேதவியாச முனிவரைப்பார்த்து அந்தப்புரத்துக்குச்செல்லக் கட்டளையிட்டாள்.

அது கேட்டு வேதவியாசர் அந்தப்புரத்துக்குச் சென்று அம்பிகையிருக்கும்பள்ளியறையிற்புகுந்தார். அம்பிகை அம்முனிவர்வரவைக்கண்டு எதிர்கொண்டுவந்து வந்தனை வழிபாடுகள்செய்து பஞ்சணையிலிருத்தி, மகரகுண்டல ஆர கேயூர கடக கங்கணமுதலாகிய ஆபரணாலங்கிருதனாகிய தன் கணவனைப் பார்த்து மகிழ்ந்தவள் காவி காம்பர சடாடவி தாரியாகித் தவத்தால் தேகமிளைத்து மீசை தாடி யுடைத்தாய் வேறொருவிதமாக இருக்குமுனிவரை முற்றுநோக்கி நாணமுற்று, இரண்டுநயனத்தையுமூடிக்கொண்டுபஞ்சணையிற் சயனித்தாள். முனிவர் மாதாவாக்கியத்தை நிறைவேற்றவந்தவ ராதலால் அம்பிகை இருக்குங் கோலத்தைக் கண்டும் அவளைப் புணர்ந்து எழுந்து தாயிடத்து வந்து வணங்கி, ஓ அம்மனி! உமது கருத்தின்படிக்குக் கர்ப்பதானஞ் செய்தேன். புணருங்காலத்து அம்பிகை கண்ணைமூடியிருந்ததினாலே, பிறக்கும் புத்திரன் நெடிய கடல்சூழ்ந்த உலகத்திலிருக்கும் அரசர்களெல்லாம் பணிய ஆயிரம் யானை வல்லமையை யுடையவனா யிருந்தாலும் நேத்திரமாத்திரமில்லாதிருப்பானென்று விளம்பினார். பின்னும் பரிமளகந்தி வேதவியாசரைப் பார்த்து, அப்பாமகனே! அரசருக்கு நேத்திர மில்லாவிட்டால் யோக்கியதையல்ல. ஆதலால் அம்பாலிகையைப் புணர்ந்து ஒருபுத்திரனைப் பாலியென் றிரந்தாள். முனிவர் அதற்கும் ஒத்துக்கொண்டு அம்பாலிகை இடத்துச் சென்றார். அம்பாலிகை எழுந்தெதிர்வந்து வணங்கி அழைத்துப் போய்ப் பஞ்சணைமஞ்சத்தி லிருத்தி, அம்முனிவரைக் கண்ணார நோக்கின மாத்திரத்தில் மெய்நடுக்கங் கொண்டு சரீரம் வியர்ப்ப வஸ்திரத்தால் மூடிச் சயனித்தாள். அம்பாலிகை அவ்வா றிருக்குங் கோலத்தைக் கண்டும் வாக்குத்தத்தத்தின்படி முனிவர் அந்த அம்பாலிகையைப் புணர்ந்து எழுந்து தாயிடத்து வந்து வணங்கி, ஓ அம்மணி! அம்பாலிகை என்னைக்கண்டு மெய்நடுக்கங் கொண்டு சரீரம் வியர்த்து விளர்த்தாள். அவளிடமாகப் பிறக்கும் புத்திரன் மன்னர் மன்னனாக இருந்தபோதிலும், வியாதியை யுடையவனாய் வெளுத்திருப்பா னென்று சொல்லி விடைபெற்றுத் தமதிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்.

விதுரனுற்பவம்

இங்கே அம்பிகை ஒரு புத்திரனையும் அம்பாலிகை ஒருபுத்திரனையும் பெற்றார்கள். அம்பிகைபெற்ற புத்திரனுக்குத் திரிதராஷ்டிரன் என்றும் அம்பாலிகைபெற்ற புத்திரனுக்குப் பாண்டு என்றும் பெயரிட்டு மிகுந்த காதலோடு வளர்த்து வருகிற காலத்தில் பரிமளகந்தி அச்சிறுவர்களைக் கண்டு, ஒரு புத்திரன் பகைவர்க்கு அந்தகனா யிருந்த போதிலும் பார்க்கிறவருக்கு அந்தகனாக இருக்கிறான். மற்றொரு புத்திரன் நல்ல விவேக வியாபகனா யிருந்தும் வியாதியை யுடையவனா யிருக்கிறான். ஆ! ஆ! இதென்ன குறைவந்து நேரிட்டது? இதுதகுதியல்ல. இனி ஒரு நல்லபுத்திரனை அடையவேண்டுமென்று யோசித்து அம்பாலிகையை அழைத்து, ஓ பெண்ணே! மற்றுமொருதரம் முன் கூடிய முனிவரை உன்னிடத்துக்கு அனுப்பிவிக்கிறேன், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்னு நான்கினையு நீக்கிக் களங்கமற்றுக் கூடென்று சில நீதி எடுத்தோதிப் பின்பு என் குருவாகிய வேதவியாசரை வரும்படி நினைத்தாள். அம்முனிவர் அக்கணம் வந்து அன்னையை வணங்கி, ஓ அம்மணி! என்னை நினைத்தகாரண மென்னவென்று வினவினர். அன்னை-அப்பாமகனே! முன்னமளித்த இரண்டு புத்திரரும் அரசுரிமைக்குச் சிறப்படையாதவர்களா யிருக்கிறார்கள். முன்போல் மற்றுமொருதரம் அம்பாலிகையைப் புணர்ந்து நல்ல புத்திரனைப் பாலித்தருளென்று பகர்ந்தாள். முனிவர் அதற்கிசைந்து அம்பாலிகை இடத்துச் சென்றார். அம்பாலிகை தனது அன்னையையொத்த ஒரு தாதியை அழைத்து, ஆடை ஆபரணங்களினால் நன்றாயலங்கிரதஞ்செய்து பள்ளியறைக்கு அனுப்பிவித்தாள். அத்தாதி வேத

வியாசருக்கு நமஸ்காரஞ்செய்து அழைத்துப்போய பள்ளியறையிலிருத்தி, தானேமுந்தி மதனகலை விதிப்படி ஆலிங்கன முதலியவற்றைப் புரிந்து, முழுதுந் துறந்த முனிவருள்ளம் பூரிக்கப் புணர்ந்தாள். அம்முனிவரு மகிழ்ந்து அவளை அன்போடு தழுவி யணைந்து எழுந்துவந்து அன்னையைவணங்கி, ஓஅம்மணி! இப்போது பிறக்கும் புத்திரன் தென்றிசைக் கடவுளின் அமிசையில் வருவான். மேலும் சகலகலை வல்லவனாகி, மிகுந்த பராக்கிரமத்தை யுற்றுப் பாக்கிய சிலாக்கிய யோக்கியனுகவும் ஞானவானுகவும் இருப்பான். ஆனல் இடம் பேதப்பட்டது. அதுதான் ஒரு குறையன்றி மற்றொருகுறையுமில்லையென்று தாயை வணங்கி, ஓ அம்மணி! இனி நீ எனக்கு இவ்வகைப் பட்ட வேலையிடாம லிருக்கவேண்டும். இனி என்னிச்சையிற்செல்ல என்க்கு விடைகொடுமென்று விடை பெற்றுத் தமது இருப்பிடம்போய்ச் சேர்ந்தார். இங் கேதாதியானவள் தென்றிசைக் கடவுளாகிய தருமன் அமிசைபெற்ற ஒரு புத்திரனைப் பெற்று, விதுரனென்று அப்புத்திரனுக்குப்பெயரிட்டுவளர்த்துவந்தாள்.

ஆணிமாண்டவியர் சரித்திரம்.

ஜெனமேஜெய மஹாராஜன் வைசம்பாயனரை வணங்கி, ஓ ஸ்வாமி! தென்றிசைக் கடவுளாகிய யமனுடைய அமிசம் பூலோகத்தில் வரவேண்டியகாரணமென்ன? அதனை வெளியிடவேண்டு மென்று வினவ வைசம்பாயனர் சொல்லுகிருர்: கேளும்ஜெனமேஜெயமஹாராஜனே!மாண்டவிய ரென்னும் முனிவர்முன்னம் தீர்த்தயாத்திரை முதலியவற்றைச் செய்து யோகத்திலிருக்க வேண்டு மென்று கருதி, சாளுவதேசத்தருகிலிருந்தஓர்வனத்திற்பன்னகசாலையொன்றியற்றி அதிலிருந்து, சத்தம் - பரிசம் - ரூபம் - ரசம்-கந்தம்-என்னும் ஐம்புலனையுமடக்கி, அறிவைப் பிரமத்தினிடத்திற் செலுத்தி, விழித்தகண் விழித்தபடி யோகத்திலிருந்தார். சிலதிருடர் ஓரிடத்துக்கூடி, இதுவரைக்கும் அல்ப குடும்பிகளிடத்துச் சென்று அவர்களுடைய சொல்ப ஸ்திதியைக் களவுசெய்து வந்தபடியால் நம்மை அடிமையாக்கிக் கொண்டிருக்கும் தரித்திரம் தொலையாம லிருக்கின்றது. உலகத்துக்குத்தலைமையாளியா யிருந்து அரசுசெலுத்திவரும் சாளுவமஹாராஜனுடைய அரண்மனையிற்சென்று பொக்கிஷத்திற் கைவைத்து நல்லகால மிருந்து தப்பிவந்துவிட்டால் நம்மைவருத்தும் தரித்திரம் அதமாகும். அல்லது நமக்கு அகால தசையிருந்து அகப்பட்டுக்கொண்டால், அரசன் ஆக்கினைக் குள்ளாவோம். அப்போது (கூண்டோடு போயிற்று குளிர்காச்சல்.) என்கிற பழமொழிபோல் உயிரோடு தரித்திரமும் போய்விடும். மேலும் (எடுத்தாலும் பங்காருபெட்டி எடுக்கவேண்டும், இருந்தாலுஞ் சிங்காரக்கமுவி லிருக்கவேண்டும்.) என்று யாவரும் சாதாரணமாய்ச் சொல்லுகிருர்கள். ஆகையால் அப்படிசெய்வோம் வாருங்களென்று ஒருவரை ஒருவர் வினவியபோது, அவர்களில் உயிர்மேல் ஆசை யுற்றவரபோக மற்றவர் துணிந்து சாளுவராஜன் அரண்மனையிற் புகுந்து, தங்கள்நேர்ப்பினல் அங்கிருக்குங் காவலாளிகளின் கண்ணுக்குத் தோன்ருமல் மறைந்திருந்து, அன்றிரவு நடுநேரத்தில் அரசன் பொக்கிஷ அறையின் சுவரைப் பிளந்து உட்பிரவேசித்துத் தங்கள் கருத்துக் கிசைந்தமட்டுந் திரவியத்தை எடுத்துச் சிப்பங்கட்டிக் கொண்டு வெளிப்பட்டார்கள். அதற்குள் அரசனுக்கு ஒரு சொப்பனந்தோன்றி திடுக்கென் றெழுந்து அருகில் காவலிருக்குஞ் சேவகரைநோக்கி, நமது பொக்கிஷத்தினருகில் ஆளரவமாகத் தோன்றுகிற படியால் அஃதென்னபோய் யறிந்துவாருங்களென்றுகட்டளையிட்டான்.சேவகர் பொக்கிஷமிருக்கிற அவகோலத்தைக்கண்டு மறுபடியும்அரசனிடத்துச்சென்றுவணங்கி,ஓஸ்வாமி! நமதுபொக்கிஷத்துக்கபாடம்உடைபட்டிருக்கின்றதல்லாமற்களவுபோனதுபோலுந்தோன்றுகின்றதென்ன அரசன் கடுஞ்சினமுற்று ஆ! ஆ! நாம் உலகிலுள்ளகுடிகளுக்குக் கள்ளர்பயமில்லாதிருக்கச் செய்துவருகிறேம். நமது அரண்மனைக்கே கள்ளர் வருகிறதாயிருந்தால் நாம் நடத்திய செங்கோலும் காவலும் நன்ருயிருக்கின்றதென்று தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு, காவலாளிகளாகிய தலையாரிகளைஅழைப்பித்து, ஓ தலையாரிகளே! சிலகள்ளர் நமது பொக்கிஷஅறையின் கபாடத்தை யுடைத்துத் திரவியத்தைக் கொள்ளையிட்டுப்போயினர். அவர்களைப்பிடித்துவந்தால் உங்கள் தலை யறுபடாதிருக்கும். இல்லாவிட்டால் உங்கள் தலை உடனே போய்விடுமென்று மகா உக்கிரமோடுரைத்தான்.

அவ்வாக்கினையைக் கேட்ட தலையாரிகள் குலைநடுங்கி அரசனுக்கு நமஸ்காரஞ்செய்து பொக்கிஷத்தருகிற்சென்று அங்கிருந்து காலடிக்குறியை நோக்கிக்கொண்டு அந்நகரத்தைக் கடந்து, மாண்டவியர் யோகஞ்செய்கிற வனத்தில் வந்தார்கள். கள்ளர்கள் தலையாரிகள் வருகிற அரவத்தைததெரிந்து, அடடா!! மோசம்வந்தது. நம்மைப்பிடிக்கத் தலையாரிகள் வருகிருர்கள். நாம்இரண்டடி எடுத்துஅப்பால் வைப்போமாகிற் பிடித்துக்கொள்வார்கள். இதோயிருக்கிற பன்னகசாலையிற் சற்றுநேரம் ஒளித்திருப்போம். என்று யோசித்து அந்தமாண்டவியரிருக்கு மடத்தில் ஒளித்தார்கள். தலையாரிகள் அடிச்சுவடுநோக்கிக் கொண்டு அப்பன்னக சாலையிடத்துச் சென்று அங்கு விழித்த கண் விழித்தபடி யோகஞ்செய்திருக்கிற மாண்டவியரைநோக்கி, யோகத்தி லிருக்கிருரென் றுணராமல் அவரைவணங்கி, ஓஐயா! இவ்வழியாக யாராவது சென்ருர்களாவென்றுவினவினுர்கள். அவர்சித்திரப்பிரதிமெய்போல் யோகத்திலிருக்கிறவ ராதலால் அவர்கள் கேள்விக்கு உத்தரவு கொடுக்காம லிருந்துவிட்டார்.

தலையாரிகள் பெரியவர் பேசப்போகிறதில்லை. இந்தப் பன்னகசாலையை யாவது சோதிப்போமென்று சில தலையாரிகள் உள்ளே பிரவேசித்துக் கையாற்றடவிப் பார்க்கும் போது, ஒளித்திருந்த கள்ளர்கள் எடுத்து வந்த திரவியத்தோடு தலையாரிகளின் கைக்குள்ளாயினார்கள். உடனே தலையாரிகள் பாபிகளை யமதூதர் பாசக்கயற்றாற்கட்டி இழுத்துப் போவது போலக் கள்ளரைக்கட்டி இழுத்துக்கொண்டு, விழித்தகண் விழித்தபடி யோகத்தி லிருக்கும் மாண்டவிய ரிடத்து வந்து, இவன் வெகுநாளைய திருடனாய்க் கள்ளருக்கெல்லாங் குருவா யிருத்தலால் நாம் கேட்ட கேள்விக்கு விடைகொடுக்காமல் யோகத்தி லிருப்பவனைப் போல வேடங்காட்டி மௌனமாயிருந்தான். இவனையுங்கட்டிப் பிடித்துப் போகவேண்டுமென்று ஒருவர்க்கொருவர் கலந்துபேசி மாண்ட வியரையுங் கட்டிப் பிடித்துப்போய் அரசன்சபையில் விட்டனர். அரசன் அக்கள்ளர்களைச் சிரச்செதஞ் செய்யுங்களென்று கட்டளையிட்டு, மாண்டவியரை முற்றுநோக்கித் தலையாரிகளைப்பார்த்து. ஓ காவலாளிகளே ! இதோ நிற்கிற பெரியவர் யார்? இவரை ஏன் கட்டி வந்தீர்களென்று வினவினன். தலையாரிகள் அரசனைவணங்கி, ஓஸ்வாமி! இவன் திருடர்க்கெல்லா முதற்பாதம். இவனுடைய பன்னகசாலையில் தான் இந்தக் கள்ளருமிருந்தார்கள். முன்னம் நாங்கள் இவனைப் பெரியவரென் றெண்ணி வணங்கி இவ்வழியாக யாராவது போயினாராவென்று வினவினதற்கு, விழித்த கண்ணுட னிருந்த இவன் ஒன்றுஞ்சொல்லாம லிருந்தான். பின்பு பன்னகசாலையைச் சோதனை செய்யும்போது கள்ளரகப்பட்டார்கள். ஆகையால் இவனையுங் கட்டிவந்தோம். இவனை விட்டுவிட்டால் இன்னஞ் ஜதைகூட்டுவா னென்று சாதிக்க, இதைக்கேட்ட அரசன் நீதிதவறாத நிலையிலிருக்கிறவனா யிருந்தும் மாண்டவியருக்கிருக்கிற பிராரத்துவ வினை வல்லமையினால் கருத்துமயங்கி, அப்படியானால் இவனைக் கழுவிலேற்றுங்களென்றுகட்டளையிட்டான். காவலாளிகள் அக்கள்ளர்களைச் சிரச்சேதஞ் செய்து மாண்டவியரைக் கழுவிலேற்றி அரசனுக்குத் தெரிவித்தார்கள்.

அரசன் காவலாளிகளைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ காவலாளிகளே! கள்ளருக்கெல்லாம் குருவாகியிருக்கிறவனென்று நீங்களேகூறியபடியால், அக்கழுமரத்தடியிற் பதிவிருந்து பார்த்துவாருங்கள். கள்ளர்கள் அவனைப் பார்க்கவருவார்கள். அப்படி வருகிற கள்ளரையும் பிடித்து வாருங்களென்று கட்டளையிட்டனுப்பினன். காவலாளிகள் அவ்வாறு கழுமரத்தடியிற் பதி விருந்தார்கள். மாண்டவியர் தமக்கு நேரிட்ட துன்பத்தைக்கருதி, எல்லாங் கடவுள் செயலேயன்றி வேறொரு செயலில்லை யென்று துணிந்து, முன்பு வனத்தில் எவ்வாறு யோகத்தி லிருந்தாரோ அவ்வாறு கழுமரத்தி லகப்பட்டும் யாதொரு துன்பமுமில்லாமல் விழித்தகண் விழித்தபடி யோகத்திலிருந்தார். சிலநாட் சென்றபின்பு பலதேவர்களும் அநேக முனிவர்களும் அவ்வழியாய் அந்தரத் தானத்திற் செல்லும்போது மாண்டவிய ரிருக்கிற கோலத்தைக்கண்டு பூமியிலிறங்கி, அவரைநோக்கிக் கனவருத்தமுற்றவராகிச் சொல்லுகிறார்கள்: ஓ தவசிரேஷ்டசிகாமணி யாகிய மாண்டவியரே ! நீர் முழுதுந் துறந்தவராயிருந்தும் உமக்கு இவ்வகைப்பட்ட துன்பம் நேரிடும்படிவந்த காரணமென்ன ? உலகத்தில் அசேதனராயும் இழிகுலத்தராயு மிருந்தாலும், ஜன்மாந்திர புண்ணிய மேலிட்டுத் தவவுருவம் அமைந்தாற் சகலபாவமும் நிவர்த்தியாம். அத்துடன் அகப்பற்று புறப்பற்றுகள் நீக்கி யிருப்பாராகில், அப்போதே பழவினையென்கிற பெயர் அற்றுப்போம். நீர்விவேகியாகியும், சிறந்த குலத்திற் பிறந்தவராகியும், முழுதுந்துறந்தவராகியு மிருக்கிறவர். உமக்கு இந்தத் துன்பம் வந்ததை நோக்கினால் எங்களுக்கே மிகுந்த ஆச்சரியமாக இருக்கின்றது. ஐயோ ! நீர் இப்போ திருக்கிற இமிசைராஜனால் நேரிட்ட இமிசையாயிருக்கின்றதே: அவ்வரச னென்ன மௌடிகனோ ? உருவத்தைப் பார்க்கும்போதே யோக்கியா யோக்கியதை யறிந்துகொள்ளவேண்டுமே: “கண்ணுக்கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேல், புண்ணென்றுணரப்படும்” என்று நீதிவாக்கியமிருக்க, உமது உருவத்தைக்கண்டும் உம்மை இவ்வளவு இமிசைக் குள்ளாக்கின அரசன் இன்னும் உயிரோடிருக்கிறானோ? தருமதேவதை இல்லையா? கழுவிலேற்றிய போது சுவாமிகள் எப்படி சகித்ததோ? இப்போது என்ன வேதனையைக் கொடுக்கின்றதோ? என்று மிகுந்த ஆற்றாமையோடு பலவாறு வருத்தப்படுகிறதை மாண்டவியருணர்ந்து சொல்லுகிறார்.

ஓ தேவர்களே ! ஓ முனிவர்களே! இந்தச் சாலுவராஜன் மற்ற ராஜாக்களுக்குள் நீதிமான். அவனை வெறுக்கவேண்டுவ தில்லை. பிராரத்துவ சம்பந்த மிருந்தால் யார்தான் என்னசெய்யலா மென்று சொல்லி அவர்களுக்கு விடைகொடுத்து, முன்போல்யாதொரு துன்பமுமின்றி யோகத்திலிருந்தார். இதனைப் பதிவிருந்த தலையாரிகள் கண்டு உள்ளநடுங்கி அரசனிடத்து ஓடிவந்து அவனடியில் அடியற்ற பனைபோல் விழுந்து வணங்கி, ஓ மண்டலேஸ்வரா ! தங்கள் கட்டளைப்படி கழுவி லிருக்கிறவ ரிடத்துப் பதிவிருந்தோம். கழுவி லிருக்கிறவர் கள்ளர்க்குக் குருவல்ல. ஐம்புலக்கள்ளரையும் அதமாக்கித் தங்களையொத்த அரசரும் மற்றவரும் வணங்கத்தக்க மேலானதவசிரேஷ்டசிகாமணி. நாங்கள் பதிவிருக்கும்போது சிலதேவர்களும் முனிவர்களும் அவரிடத்து வந்து, அவரிருக்கிற அவகோலத்தைக் கண்டு துன்பப்பட்டுப் போயினார். இந்தச்சேதியைத் தங்களுக்குத் தெரிவிக்க வந்தோம். என்றுகூற இவ்வசனங்களைக்கேட்ட அரசன் மெய்ம்மறந்து உள்ளம்பயந்து, ஆ! ஆ! உலகாளும் அர

சனுயினேன் தனக்குத் தூதுவர்களா லறிக்கையிடப்பட்ட ஒன்றை உடனே அங்கீகாரஞ்செய்யாமல்,தான் ஒருவித வேடம்பூண்டு தனித்துச்சென்று, அது உண்மையோ பொய்மையோ வென்று ஆராய்ந் துணர்ந்து அதன்மேல் அச்செய்கைக்குச் சம்பந்தப் பட்டவருடைய குணுதிசயத்தை அக்கம் பக்கங்களி லிருப்பவர்களாலறிந்து, அதன்மேல் தீர்க்காலோசனை செய்து ஒரு தீர்ப்புக் கொடுக்க வேண்டும். அதுதான் செங்கோலென்று மநுசாஸ்திரமுறைமையென்று மிருக்க, அதனைமறந்து காவலாளிகள் சொல்லைநம்பிப் பெரியவனைக் கழுவிலேற்றினேம். இக்குற்றம் நமதேயன்றிக் காவலாளிகளால் நேரிட்ட தல்லவென்று தன்னைத் தானே நொந்துகொண்டு, சிங்காதனத்தை விட்டிறங்கி, மந்திரி முதலானவர்கள் பின்வர அதிவேகமாக வந்து, மாண்டவிய ரிருக்கும் கழுமரத்தடியில் விழுந்து ஓவென்றலறி, ஓ ஸ்வாமி! உமது மகிமையை யறியாமற் செய்த குற்றத்தை மன்னித்து என்னைப்பாதுகாக்க வேண்டும். அரசுக்குரியவன் உலகத்தி லுள்ளவர்க்குத் தந்தையும் தெய்வமுமாம். அவ் வரசனுக்குத் தந்தையும் தெய்வமும் தங்களையொத்த மஹாத்மாக்களாதலால், எளியேன்செய்த குற்றத்தை க்ஷமித்து என்னை இரக்ஷிக்க வேண்டுமென்று பலவாறு துதித்துக் கழுமரத்தை மெதுவாய்ப் பூமியிற்சாய்த்து, அவருக்கு வருத்தமுருமல் நெஞ்சி லிருக்கும் சூலத்தைவாங்கயத்தனித்தான். அப்போதுநெஞ்சிலிருக்கிற கழுமுனை வருத்துமாதலால் அதனைக்கண்டு அரசன் சகிக்காமல், அரத்தால் அச்சூலத்தை இருபுறமும் உராவிவிடக் கட்டளையிட்டான். உடனே கம்மியன் உராவிப் போட்டான். அவ்வாறு உராவியும் நெஞ்சிற் கழுவாணி மாத்திரம் நின்று விட்டமையால் அன்று முதல் ஆணி மாண்டவியரென்று அவர்க்குப் பெயர் வந்தது.

பின்பு அரசன் மாண்டவியர்க்குச் சோடச உபசாரஞ்செய்து பலவாறு துதித்தான். அதற்கு மாண்டவியர் மகிழ்ந்து, ஓ அரசனே! நீ நீதிமான். எனக்குவந்ததுன்பம் பிராரத்துவ மாதலால் உன்மேல் எனக்குக் கோபமில்லை. நீ சுகமாக இரு. என்று வாழ்த்தி விடைகொடுத்துக் கழுமரத்தடியை விட்டு நீங்கி, முன்போல் ஒருவனத்தில்வந்து சிலகாலம் யோகத்திலிருந்து, ஒருநாள் தனக்குக் கழுமா நேரிட்டதைக் குறித்து யோசித்து அவ்வகைப்பட்ட ஆக்கினை நமக்கு வரவேண்டியதென்ன? இந்தச்சந்தேகம் உலகிலுள்ள சீவகோடிகளுக்குத் தலைமையா யிருக்கிற நடுவனுகிய யமனிடத்துச்சென்ருல் தீருமென்று தெளிந்து சில முனிவர்களுடனே யமபுரத்திற் சென்ருர். யமபுரத்துக் கதிபதியாகி அறக்கடவு ளென்று பெயர் பெற்ற யமன், எதிர்வந்து வணங்கி அழைத்துப்போய் ஓ ராசனமளித்து இருக்கச்சொன்னுன். முனிவரன் யமனை நோக்கி, ஓ தென்றிசைத் தலைவனே! யான் கழுவால் வருந்தவந்த காரண மென்ன? அதனைக் கூறென்று வினவினர். அவரை யமன்வணங்கி, ஓ ஸ்வாமி! வாலிப்ப்பருவமாக இருக்குங்காலத்தில் தும்பிகளைப்பிடித்து அவற்றின் வால்களில் முட்களைக் குத்தித் தூண்டிவிட்டீர். அவ்வினைதான் உமக்குநேரிட்டதென்ருன். அதைக்கேட்டமாண்டவியர் யமனை நோக்கி, ஓ தென்றிசைத்தேவே! அவ்வகைப்பட்ட பாவம் புரிந்தபோதிலும் பின்பு வேதமோதினேன். வேதவிதிப்படி நடந்து துறவியாகித் தவஞ்செய்தேன். விளக்கொளி பாய்ந்தவிடத்து இருள்மாய்வது போலத் தருமமேலிட்டவிடத்துப் பாவமாய்ந்து போமென்று வேதங்கள் முறையிட்டிருக்க, இதனை நோக்காமற் சகிக்கக் கூடாத இம்சையை ஏனெக்குக் கட்டளையிட்டாயென்று கடுகடுத்துக் கேட்டார். அதற்கு யமன் சொல்லுகிருன்: ஓஸ்சுவாமி! அதிகசெல்வத்தைப் பெற்றவருக்கும் அரசுரிமை பெற்றவருக்கும் மமதை மேற்கொண்டிருக்கும். அதனுல் உயிர்க்குக் கெடுதிநேரிடும். அக்கெடுதி நீங்கச் செல்வவான்களுக்குப் பெரியோர்களும், அரசர்களுக்குப் பெரியோர்களோடு மந்திரிகளும் உடனிருந்து, அவ் விருதிறத்தார் வேதாகமவிதி தப்புங் காலத்துத் தகுந்த புத்திசொல்லல்வேண்டும். இது மநுசாஸ்திரம். பெரியோர்களையும் மந்திரிகளையும் அடையாத செல்வ வான்களும் அரசரும் உலகிலுள்ள உயிர்களுக்கு இடையூறு செய்யுங் கருவியாக இருக்கின்றதுமன்றி, அவ்விருவரும் எல்லாக் கெடுதிக்கும் உள்ளாவார்கள். ஆகையால் கடவுள் எனக்கோரு நியமஞ் செய்திருக்கிருர். அஃதென்னெனில்- பெரியோர்களுக்குப்பதில் மலையையும், மந்திரிகளுக்குப் பதில் அக்கினியாற்றையும்வைத்து, ஓ தருமனே! நீதிவழுவுவையாகில் இம்மலை உன்தலையில்விழும். அப்பால் நீ அக்கினியாற்றிற் பிரவேசிப்பாயென்று பேசியிருக்கிருர். இதோபாரும் ஒருமயிரிற் பெரியமலை தொங்குகின்றது. அதன்கீழ் என் சிங்காதனம் இருக்கின்றது. இச்சிங்காதனத்தின்கீழ் அக்கினியா றிருக்கின்றது. கிஞ்சித்துப் பிசகுவேனுகில் மலையறுந்து என்றலைமேல்விழும். அப்பால் அடியேன் சிங்காதனத்தோடு அக்கினியாற்றிற் பிரவேசமாவேன். தங்களுக்குநேரிட்டதுன்பம் நீதியல்லாமையாயிருந்தால் தாங்கள் என்னைக்காண்பதுவுமுண்டா? நீங்கள் வருமுன்னமே அக்கினியாற்றிற் பிரவேசமாகி இருப்பேனென்ருன். இவையனைத்தையுங் கேட்ட மாண்டவியமுனிவர் அதிக கோபங்கொண்டு, ஓ தென்றிசைத் தலைவனே! பதின்மூன்று வயதுவணாக்குஞ்செய்த பாவ புண்ணியம் பிள்ளைகளுக்கு நிமித்தமில்லை. அதனைப் பாவமென்று யார்சொல்லுகிருர்களோ அவர்களைச் சேரும். ஆதலால் நீ இன்றுமுதல் இப்படி நீதிநடத்தவேண்டியதென்றுநிகழ்த்திப் பதின்மூன்றுவயதுக்குள் செய்ததீங்கை யெனக்கு ஏற்றியபடியால் நீ பூலொகத்திற் சந்திரவமிச ராஜஸ்திரீகளின் தாதிவயிற்றிற் பிறந்து, விதுரனென்று பெயர் கொண்டு, அரசர்துதிக்கச் சிறப்புற்றிருவென்று சபித்

துவிட்டுத் தமக்கிசைந்த விடத்துச் சென்றார். யமன் அச்சாபத்தை ஏற்று, அச்சாபப்படி தாதிவயிற்றிலு தித்தானென்று வைசம்பாயனர்சொல்ல ஜெனமேஜெயன் மகிழ்ந்து உள்ளம் பூரித்து வணங்கி, ஓ ஸ்வாமி! தென்றிசைக்கடவுளுடைய சரித்திரத்தைக்கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன். இனி மூதாதைகளின் சரித்திரத்தைக் கூறுமையா வென்று வேண்ட வைசம்பாயனர் சொல்லுகிறார்.

கேளும் ராஜ ராஜேஸ்வரா! எனது குருவாகிய வேதவியாசர் அநுக்கிரகத்தினால் அம்பிகை யிடமாகப் பிறந்த திரிதராட்டிரனையும், அம்பாலிகை யிடமாகப் பிறந்த பாண்டுவையும், தாதி யிடமாகப் பிறந்த விதுரனையும்,பரிமளகந்தி வீஷ்மாச்சாரி இவ்விருவரு மிகுந்தகரதலோடு எடுத்து வளர்த்தார்கள். இம்மூன்று பிள்ளைகட்கும் இம்மூவகைப் பெயர் யாரால் யாதுகாரணத்தா லிடப்பட்டதெனில், வியாசமுனிவர் கூறிய படி அந்தச் சந்திரவம்சத்தாருக்கு ஆதிக்கம் மூன்று தேசமாதலால், அதுபற்றி அம்பிகையிடத்துப் பிறந்தவனுக்குத் திரிதராஷ்டிரன் என்று பெயரிட்டு, அம்பாலிகை யிடத்துப் பிறந்தவனுக்குப் பண்பு பற்றிப் பாண்டுவென்று பெயரிட்டுத், தாதியிடத்துப் பிறந்தவனுக்கு விவேகத்தைப்பற்றி விதுர னென்று பெயரிட்டு, அரசர்க்குரிய உபநயன முதலாகிய கடனை இயற்றி, நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்து நாலு கலைக்கியான முதலிய வற்றை வீஷ்மர் போதித்து, வில்வித்தை யானை ஏற்றம் குதிரை ஏற்றமுதலியவற்றையுங் கற்பித்து வந்தார். சிறுவர்கள் வாலைப் பருவமடைந்த காலத்திற் பாண்டு ராஜனுக்குப் பட்டங் கட்டவேண்டுமென்று நினைத்த பரிமளகந்தியும் வீஷ்மரும் அவனிடத்துச் சொல்ல, அப்பாண்டு தன்தமையனாகிய திரிதராட்டிரனுக்குப் பட்ட முரிய தென்று தடுத்துவர, ஒரு நாள் வீஷ்மர் சிங்காதனத்தில் வந்திருந்து, மந்திரிமார் சேனைத்தலைவர் யூகத்தலைவர் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் குடித்தனக்காரர் முதலியவர்களை அழைப்பித்து அவர்களை நோக்கி, ஓ புண்ணியவான்களே! இப்போது நான் பெற்றிருக்கிற பட்டத்தை மூன்று குமாரருக்குள் யாருக்குக்கொடுக்கலாம் யோசித்துச் சொல்லுங்களென்றார். மந்திரிமுதலானவர்கள் நிதானித்து, அரசுரிமைக்குப் பெருந்தன்மை வேண்டியது. ஆகையால் மூத்தகுமாரனாகிய திரிதராஷ்டிரமஹாராஜனுக்கு இப்பட்டத்தைக்கொடுக்கலாமென்று யாவருஞ் சொல்ல, அதனைக் கேட்ட வீஷ்மர் அதிக மகிழ்வையடைந்து, நல்ல சுபமுகூர்த்தத்தில் - ௫௬ - தேசத் தரசர்களையும் வரவழைத்துத் திரிதராஷ்டிரன் முதலான மூவர்களையும் கங்கை முதலிய தீர்த்தங்களினால் ஸ்நானஞ் செய்வித்து, ஆடையாபரண அலங்கிரதஞ் செய்து, வேத வேதியர்கள் ஆசிகள்கூறத் திரிதராஷ்டிரனைச் சிங்காதனத்தி லிருத்தி, யாவரு மங்களங்கூறி ஜெயா விஜீபவாவென்று வாழ்த்த மகுடாபிஷேகஞ் செய்தனர். பாண்டு மஹாராஜனுக்கு இளவரசு பட்டங்கட்டி, விதுரனை எல்லாமந்திரிகட்குந் தலைமையான மந்திரியாக்கி, வந்தஜனங்களுக்குச் சந்தனம் புஷ்பம் தாம்பூல முதலியவற்றைக் குறைவுவராமலியற்றி,அநேக தான தருமஞ்செய்து, மந்திரிகள் தவிர மற்றவர்களுக்கு விடைகொடுத்து வீஷ்மர் மிகுந்தமகிழ்வடைந்து இனிதுவீற்றிருந்தார்.

காந்தாரி மணம்.

திரிதராஷ்டிரன் மநுசாஸ்திர விதி பிசகாமல் தானதரும முதலியவற்றைச் செய்து செங்கோல்செலுத்திவந்தான். பாண்டு மஹாராஜன் அரசர்கள்பேரிலெதிர்த்து யுத்தஞ் செய்து சிலதேசங்களைத் தன் தமயன்வசப்படுத்தினன். விதுரன்காலத்துக்குத் தகுந்த யுக்தி முதலியவற்றைச் சொல்லித் தருமம் வழுவாமலிருக்கச் செய்து வந்தான். இப்படி நடந்து வருங்காலத்திற் பரிமளகந்தி வீஷ்மரிடத்துவந்து, சிறுவர்கள் யௌவனதசையை அடைந்திருக்கிறார்கள். விரைவில்விவாகஞ்செய்யவேண்டும். அதற்குத் தகுந்த முயர்ச்சி செய் மகனேயென்று வார்த்தையாடிப் போயினள். வீஷமர் பாண்டுவுக்கும் விதுரனுக்கும் பெண்கிடைக்கும். திரிதராட்டிரனுக்குப்பெண்கிடைப்பதுஅருமை. இதற்கென்ன செய்யலாம்? உலகத்திற் பெண்ணைப் பெற்றவர்கள் அப்பெண்ணை ஒருவர்க்குக் கொடுக்கயத்தனித்த காலத்து, தந்தை கல்வியை நோக்குவன். தாய் செல்வத்தை நோக்குவள். பெண்ணோ (கைநிறைந்த பொன்னை விடக் கண் ணிறைந்த கணவனே யினிது.)என்கிற பழமொழியைப்போல் அழகைநோக்குவள். இம்மூவர்கருத்தில்முற்கூறியஇருவர்கருத்துக்கிசைந்தபடிகல்வித்திறமும்செல்வத்திற மும்நமதுபுத்திரன் பெற்றிருக்கினும், பின்கூறிய பெண் கருத்தின் படி அழகை யமையாமல் அந்தகனா யிருக்கிறான். ஆனால் பெண்கருதிய கருத்து அதமம். ஏனென்றால்- அழகு நிலையல்ல. செல்வமுமப்படியே. தந்தைகருதியகருத்து எப்போதும் நிலைபெற்றிருக்கும். இதனையறிந்தவர் தான் இவனுக்குப்பெண்கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வலியப்போர்செய்து பெண்கொள்ள வேண்டும். என்று யோசித்துச் சிலதூதர்களை அழைத்து, எந்தத் தேசத்து அரசனுக்குப் பெண்ணிருக்கின்றதோ, அந்தத் தேசத்துப் பெயரையும் அரசன் பெயரையும் பெண்ணின் திறத்தையு மறிந்து வந்து சொல்லுங்க ளென்று கட்டளையிட்டார். தூதர்கள் அக்கட்டளையைத் தலைமேற் கொண்டு தேசங்கள் தோறும் போய் ஆராய்ந்து, எங்குங்காணாதவர்களாய் முடிவிற் காந்தார தேசத்துட் சென்று அத்தேயத்தை ஆளும் சுவேத மஹாராஜனுக்கு ஓர் பெண்ணிருப்பதாகக் கேட்டு அப்பெண்ணின் குணநிசயத்தையும் விசாரித்தறிந்து வீஷ்மரிடத்து வந்து சாஷ்டாங்

கமாகத் தெண்டனிட்டு,ஓ மண்டலேஸ்வரா! தாங்கள்
கூறிய கட்டளைப்படி தேசங்கள் தோறுஞ் செல்லும்
போது காந்தார தேசத்துக்குச் சென்றோம். அத்தே
சத்துக்கு அரசன் சுவேத மஹாராஜன். அவனுக்கு
ஒரு புத்திரி உண்டு. அப்புத்திரியோ மஹாலட்சுமி
யைப்போல் ரூபவதியாகி அருந்ததிபோற் கற்புடைத்
தாயிருக்கிறாள். என்றுரைக்க உடனே வீஷ்மர் சாம
பேத தான தண்டமென்னுஞ் சதுர்வித உபாயத்தை
நன்றா யறிந்த சில மந்திரிகளையும் வேதியர் களையும்
அழைத்து அத் தூதுவரோடு கூட்டி, நீங்கள் போய்
சுவேத மஹாராஜனைக்கண்டு பெண்கேட்டு வாருங்க
ளென்று திட்டஞ்செய்து அனுப்பினர். அம்மந்திரிமு
தலானவர்கள் வீஷ்மர் கட்டளையைச் சிரமேற் கொ
ண்டு காந்தார தேசத் தரசனிடத்துச் சென்று தங்
கள் வரவைக் காவலாளிகளால் தெரிவிக்க, அரசன்
அவர்களை அழைத்துத் தகுந்த மரியாதைகள்செய்
திருக்கச் சொல்லி வந்தகாரண மென்னென்று வினவ,
மந்திகள் சொல்லுகிறார்கள்.

ஓ காந்தாரதேசத் தலைவனே! பூமண்டலாதிப
தியா யிருந்த சந்தனு மஹாராஜனுடைய சிரேஷ்ட
புத்திர சிகாமணியான வீஷ்மாச்சாரியார் ஒருகாரியார்
த்தமாக யெங்களைத் தங்களிடத் தனுப்பி வித்தார்.
அஃது என்னகாரிய மென்றால், அந்தமஹா மூர்த்தி
தமது சகோதரரின் மனைவிகளில்அம்பிகைஇடமாகப்
பிறந்து உலகமுழுதையும் ஒருகுடையிற்காத்துவரும்
திரிதராஷ்டிர மஹாராஜனுக்கு மணம் புரியக் கருதி,
உமது குமாரத்தியைக் கேட்டுவரச் சொன்னார். அதற்
காகத்தான் நாங்கள் வந்தோம். அதற்கு உமது கரு
த்தென்னவென்றுவினவினர். அரசன் மிகமகிழ்வடை
ந்து,ஓமந்திரிமார்களே! இதுகாறும்என்பெண்ணைக்குறி
த்து நான் கொண்டிருந்த எண்ணத்திற்கு நீங்கள்
வந்து கேட்டது, பழம் நழுவிப் பாலில் விழுந்தா
லெப்படியோ அப்படிபோ லாயிற்று. எனக்கு மிகுந்
தமகிழ்வுதான்.வீஷ்மர்சுகமாகவந்து என்புத்திரியைத்
திரிதராஷ்டிர மஹாராஜாவுக்கு மணஞ் செய்துகொள்
ளட்டுமென்றான். அதுகேட்டுபக்கத்திலிருக்கிறஅரசர்
களும்மந்திரிகளும்அவனைவணங்கி,ஓராசராஜேஸ்வரா!
தாங்களென்ன யாதொன்றையும் யோசிக்காமல் திரித
ராஷ்டிரனுக்குத் தங்கள் குமாரத்தியைப் பாணிக்கிர
கணஞ் செய்து கொடுக்கிறே னென்று சொல்லுகிறீர்
கள். திரிதராட்டிரன்குணநிசயத்தை அறிவீர்களோ?
என்று வினவ அரசன் அம் மந்திரி முதலானவர்களை
ப்பார்த்து, திரிதராஷ்டிரன் குணநிசயமென்ன வென்
றுகேட்டு, சங்கதி யறிந்து கனவருத்த மடைந்து,
வீஷ்மரிடத்தி லிருந்து வந்த மந்திரிகளை நோக்கிச்
சொல்லுகிறான்: மந்திரிமார்களே! உங்களரசன் வரன்
முறையை நோக்குங்கால் ஒரு விதத்திற் குற்றமாயி
ருக்கின்றது. அக்குற்றத்தை வேதவிதியென்று பரிக
ரித்துக் கூறியவாக்கைப் பாதுகாப்போ மென்றாலும்,
உங்கள் அரசனுக்குக் கண்ணில்லை. மேலும் கன்னி
கைகள் கை நிறைந்த பொன்னைவிடக்கண்ணிறைந்த
கணவனே இனிதென்று சொல்லுவார்கள். ஆதலால்
உமது அரசனுக்குப் பெண் கொடுப்பது தகுதியல்ல
வென்றுதடுத்தான். மந்திரிகள் அரசன்வாக்கியத்தைக்
கேட்டுக் கலகலவென்று நகைத்துச்சொல்லுகிறார்கள்.

ஓ அரசர்சிகாமணியே! உலகத்தில் மேகம்நல்லஜ
லத்தைக் கொடுக்கிறது. அச்சலம் எந்தெந்த நிலத்
திற் படியுமோ அந்தந்த நிலத்தியல் படைந்து வேறு
படுகிறது. அதுபோல் தாங்கள் நீடிய ஆலோசனை
செய்து பெண்ணைக் கொடுக்கிறோமென் றொப்பிக்கொ
ண்டு, மந்திரிகளுடைய துர்ப்போதனையால்இப்போது
மாறுபட்டு முன்சொல்லிய வாக்கை மறுக்கிறீர். அத
னாற் கெடுதிவிளையும். அக்கெடுதி என்ன வென்றால்-
முதலாவது செங்கோல் செலுத்தும் அரசர்கள் ஒன்
றைக் கொடுக்கிறோ மென்று வாக்குத் தத்தஞ்செய்
தால், பின்பு அவ்வாக்குத் தத்தத்திற்கு என்னகெ
டுதி வந்த போதிலும் அக்கெடுதிகளை நீக்கித் தாம்
கூறிய வாக்குத் தத்தத்தை நிறைவேற்றல் வேண்டும்.
அப்படி நிறைவேற்றாமல் விட்டு விட்டால், அரசுரி
மைக்கு யோக்கியதையல்ல. மேலும் ஒருவிஷயம்
சொல்ப காரியமாக இருந்தபோதிலும் அதனைநன்றாய்
நிதானித்து, அதனால் வரும் பலாபலனை அறிந்து
கொண்டு, பெரியோர்க ளோடு யோசித்து, மந்திரிக
ளோடும் உசாவி, அதன்மேல் அக்காரியம் யோக்கிய
தையா யிருந்தால் அங்கீகாரஞ் செய்ய வேண்டும்.
யோக்கியதை யல்லாமையா யிருந்தால் (சட்டிசுட்ட
து கைவிட்டது.)என்கிறபழமொழிக்கிணங்கக் கிணற்
றில் கல்போட்டதுபோல் சும்மா யிருக்க வேண்டும்.
இது அரசர்தருமம். தாங்கள் அவ்விதிமுறையைக்கைவிட்டு,
முன்னம் எங்கள் கருத்துக்கு ஒத்துப் பின்பு வேறுப
ட்டதால் உமது வாக்குக் கழிவுவந்ததுவுமன்றி,இந்த
வார்த்தைகளை எங்கள் தலைவருக்குத் தெரிவிக்கும்
போது அவர்க்கு அதிககோபமுண்டாகி, உமது ஆக்
கத்துக்குங் கெடி திநேரிடப் போர்க்கோலங் கொண்டு
வருவார். அப்பால் ஜெயாபஜெய மெப்படியோ? மே
லும் பிரமனுக்குத் தலைக்குறையுண்டு. திருமாலுக்கு
விஷதோஷத்தாற் கரியநிறமுண்டு. சாம்பவமூர்த்திக்
குவாதக்காலுண்டு. இந்திரனுக்குயோநிமயமான உட
ம்புண்டு. சூரிய னுக்குப் பல்லில்லை. சந்திரனுக்குக்
களங்கமுண்டு. ஆதிசேஷனுக்கு விஷமுண்டு. இப்படி
மும் மூர்த்திகள் முதலான வர்க்கும் பழுதிருக்கின்
றது. பூமண்டலத்திற் பழுதிராமலிருக்கிறவர்களில்லை.
ஆதலால் மந்திரி முதலான வர்களின் துர்ப்போத
னைக் குட்படாமல், முன்கூறியபடி உமது குமாரத்
தியை எங்களரசனுக்கு மணம்புரியப்பாரும். அப்பால்
உமதிஷ்டம். மேல்வருவதை நீர் தான் அனுபவிக்க
வேண்டு மென்று நயபயமாய்ப் பேசினார்கள். அரசன்
மனங்கலங்கிச் சற்றுநேரம் மவுனமாயிருந்து, பின்பு

வந்த மந்திரிகளை நோக்கி, ஓ புண்ணிய வான்களே! வருவதெல்லாம்வரட்டும். திரிதராட்டிர இராஜனுக்கு என்பெண்ணைக்கொடுக்கிறதில்லை. என்று கூறித் தகுந்தமரியாதை செய்து அவர்களை அனுப்பிவிட்டான். மந்திரிகள் வீஷ்மரிடத்துவந்து சுவேத மஹாராஜனிடத்துச் சென்றதையும் அங்கு நடந்த விருத்தாந்தத்தையுங் கூற, வீஷ்மர்கேட்டு மிகுந்த சினங்கொண்டு, சகலசாஸ்திர சிகாமணி யாதலாற் சற்று நிதானித்து, ஆ! ஆ! நமதுகுமாரன் என்ன சாமார்த்தியவழகுடையவனு யிருந்தபோதிலும் சரீரவழகிற்குப் பிரதானமான கண்ணில்லாதவனு யிருக்கிறுன். இவனுக்குப் பெண் கொடுப்பதற்கு யார் தான் சம்மதிப்பார்கள். (முதுகிற் புண்ணிருக்கிறவன் செடியில் நுழைவானு) என்னும் வாக்கியம் பொய்யாகுமா? ஆயினும் இவ்விஷயத்திற் பின்னிட்டு நயத்திற் காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று யோசனை செய்திருந்தனர்.

இங்கே காந்தாரதேசத் தரசன் வீஷ்மரால் என்னகெடுதி நேரிடுமோவென்று பலவாறு யோசித்திருக்கிற தருணத்தில், அந்தப்புரத்தி லிருக்கும் காந்தாரியைச் சிலதாதிகள்கண்டு சொல்லுகிறுர்கள்: ஓ அம்மணி! இன்றையதினம் இராஜசபையில் ஒரு சங்கதி நடந்தது. அஃதென்னவெனில் - அத்தின புரத்துக் கதிபதியான திரிதராஷ்டிர மஹாராஜனுக்கு மணஞ் செய்யவேண்டு மென்று கருதி சில மந்திரிகள் வந்து உமது தந்தையைக் கேட்டபோது, அவர்கள் கருத்துக்குச் சரியாய் உமது தந்தை யொத்துக் கொண்டு, பின்பு அந்தத் திரிதராஷ்டிர மஹாராஜனுக்குக் கண்ணில்லா திருப்பதை மந்திரிகளா லறிந்து, முன்கூறிய வாக்கைமறுத்துப் பெண் கொடுக்கிற தில்லையென்று கூறினர். பெண்கேட்கவந்தவர்கள் சிலநியாயஞ் சொல்லிப் போய்விட்டார்கள். இந்தச்சங்கதி உமக்குத் தெரியப்படுத்தினே மென்றுர்கள். உடனே காந்தாரி அவர்களால் தந்தையைத் தனது இருப்பிடத்துக்கு வரவழைத்து, அவர்க்கு வந்தனை வழிபாடு செய்து ஒரு பொற்பீடத்தி லிருக்கச் சொல்லி, ஓ ஐயா! உமதுவாக்கினுல் எனக்கு ஒருகணவனை நியமித்தபோதே அவர்தான் எனக்குக் கணவர். நீர் நியமித்தபின்பு அவருக்குக் கண்ணில்லை யென்று நீக்குவது தகுதியல்ல. இக்கணம் முன்கூறிய வாக்குதத்தத்தின்படி என்னை அவ்வரசருக்கே மணஞ் செய்வியும். ஒருவேளை கண்ணில்லாதவரென்று ஐயப் படுவீராகில் அதற்கு ஞாயங் கொடுக்கிறேன். உலகிலுள்ள பெண்களின்கருத் தென்னவென்றுல், அவயவப் பழுதில்லாமல் அழகினுயர்ந்தவர்களில் ஒருவரை மணம் புரிய வேண்டுமென்று கருதுவார்கள். அவர்க ளெல்லாம் மத்திம ஸ்திரீகள். உத்தம ஸ்திரீகள் தேகசவுந்தரியத்தை நோக்காமற் குணசவுந்தரியத்தை நோக்குவார்கள். ஆதலால் நான் இராஜஸ்திரீ. இனிவேறுெருபுருஷரை விரும்பேன். முன்பு நீங்கள்குறித்த கருத்தின் படிக்கு நிறைவேற்றும். என்று வேண்ட அரசன் அதிக மகிழ்வடைந்து கொலுவுக்கு வந்து, மந்திரி முதலான வர்களை யழைத்து இதனைக் கூறுவதாயினன்.

ஓ மந்திரிகளே! திரிதராஷ்டிர மஹாராஜனுக்கே நமதுகுமாரத்தியைப் பாணிக் கிரகணஞ் செய்து கொடுக்கப்போகிறேம். நமது ரதகஜதுரக பதாதிகளோடு யாவரும்பிரயாணமாகுங்கள். என்று கட்டளையிட்டு அரண்மனைக்குட் சென்று ஸ்நானஞ் செய்து போசனங்கொண்டு, ஆடையாபரணங்களை யணிந்து, தானெரு ரதமேறி, குமாரத்தியை அலங்கிரதஞ்செய்து முத்துச் சிவிகையி லேற்றித் தனது பரிசனங்களோடும் நகரத்தைவிட்டு வெளிப்பட்டான். இதற்குள் மந்திரி முதலாகிய சேனைகளும் வந்து கலந்தார்கள். இப்பால் யாவரும் ஒன்றுகக் கூடிக் கடலொலிபோல் வாத்தியங்கள் முழங்க அதிகமகிழ்வோடு சென்று அஸ்தினுபுரத்தையடைந்து, தனதுவரவைச்சில தூதர்களால் வீஷ்மருக்குத் தெரிவித்தான். அத்தூதர்கள் கல்யாண விஷயத்தைக் குறித்துப் பலவாறு யோசித்தும் ஒன்றும்புரியாமல் தேனில்விழுந்த ஈயைப்போலமயங்கியிருக்கிறவீஷ்மரைவணங்கி,ஓஸ்வாமி! தங்கள் குமாரசிகாமணிக்கு விவாகஞ்செய்யத் தன்குமாரத்தியோடு காந்தாரதேசத் தலைவனுகிய சுவேத மஹாராஜா வந்தார். இந்தச்சேதியைத் தங்களுக்குத் தெரிவிக்க வந்தோம். என்றுகூறவீஷ்மர் இவ்வசனங்களைக் கேட்டமாத்திரத்தில் இம்மைப்பயன் யாவும் பெற்றவர்போல் மகிழ்வுற்றுச் சிலமந்திரிகளையழைத்து, ஓ மந்திரிகளே! திரிதராஷ்டிரனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுக்கத் தன் குமாரத்தியோடு சுவேதமஹா ராஜன் நமது பட்டணத்தில் வந்திருக்கிறுன். நீங்கள் எதிர்கொண்டு போய்த் தகுந்த மரியாதைசெய்து அழைத்து வாருங்க ளென்று கட்டளையிட்டார். உடனே அம்மந்திரிகள் சுவேத மகாராஜனைக்கண்டு தகுந்த மரியாதைசெய்து அழைத்து வந்தார்கள். சுவேத மஹாராஜன் வீஷ்மரிடத்து வந்து வணங்கி, ஓ மண்டலேஸ்வரா! தாங்களனுப்பி வித்த மந்திரிகள் கூறிய கருத்துக்கு யானிசைந்து பின்பு மாறுபட்டதைக்குறித்துக் குற்றம்பாராட்டுவது தருமமல்ல. இதனைத் தாதியாலுணர்ந்த என்குமாரத்தி என்னை நேரில்வரவழைத்து, தாங்கள் முன்னதாகக் கொடுக்க விசைந்த புருஷரெவரோ அவரே எனக்குக் கணவனென்று கூறியபடியால் நான் வந்தேன். என்னையாதரித்து உமதிஷ்டப்படி என் குமாரத்தியை உமது குமாரனுக்கு விவாகஞ்செய்வியுமென்று கூறினன். வீஷ்மர் சுவேதமஹாராஜனை யாதரித்து ஒரு விடுதியிலிருக்கக் கட்டளை யிட்டுத் தன் மந்திரிகளை நோக்கிக், கல்யாணத்துக்குத் தகுந்த முயற்சிசெய்யுங்களென் றுரைத்தார். மந்திரிகள் அக்கணத்திற் கல்யாணத்துக்குத்தகுந்த வஸ்துக்களைச் சேகரித்து,

நாடுநகரங்களுக் கெல்லாம் மணவோலை போக்கி, அத்தினபுரியைத்தெய்வலோகத்தைப்போல் அலங்கரிக்கக் கட்டளையிட்டு வீஷ்மரிடத்து வந்து வணங்கி, ஓஸ்வாமி! தாங்கள் கட்டளை யிட்டபடி கல்யாணத்துக்குத் தகுந்த முயற்சிகளைச் செய்து வந்தோமென்று விண்ணப்பஞ் செய்தனர். உடனே வீஷ்மர் எழுந்து சிற்றன்னை யிடத்துச்குவந்து வணங்கிப் பெண்கேட்டதுமுதல் பெண்ணைப்பெற்றஅரசன்தன்நகரத்துக்குவந்தவரைக்கும் நடந்தவிர்த்தாந்தத்தைச் சொல்லினர். பரிமளகந்தி மகிழ்வுற்று வீஷ்மரைநோக்கி, அப்பா மகனே! நமதுகுலம் விர்த்தியாக விரைவிற் கல்யாணத்தை நிறைவேற்றுக வென்றாள்.

வீஷ்மர் மந்திரிகளை யழைத்து, நல்ல சுபமுகூர்த்தத்திற் கல்யாண மண்டபஞ் சிங்காரிக்கக் கட்டளையிட்டார். மந்திரிகள் அவ்வாறே கல்யாண மண்டபத்திற் பற்பல விநோத மாக்கினார்கள். இதற்குள் ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் வேதவேதியர்களும் பந்து ஜனங்களும் வந்தார்கள். மந்திரிமார்கள் வந்தவர்களையெல்லாம் தகுந்த மரியாதையுடன் கல்யாண மண்டபத்தி லிருக்கச் செய்தார்கள். உடனே வீஷ்மர் மந்திரிகளுக் கெல்லாந் தலைமை பூண்டிருக்கிற விதுர மஹாராஜனை அழைத்து, உன்தமயனாகிய திரிதராஷ்டிரனை மணக்கோலஞ்செய்து அழைத்து வாவென்று கட்டளையிட்டுச் சுவேதமஹாராஜனை நோக்கிக் கல்யாணப்பெண்ணைச் சகலஅலங்கிரதமுஞ்செய்துகொண்டு வரக் கட்டளையிட்டார். அப்படியே விதுரன் தமயனாகிய திரிதராஷ்டிரனை வணங்கி, வீஷ்மாச் சாரியார் தனக்கு உத்திரவு செய்ததை விளம்பி அழைத்துப் போய் நல்ல கங்கைமுதலிய தீர்த்தங்களினால் ஸ்நானஞ்செய்வித்து ஆடை ஆபரணங்களினால் அலங்கிரதஞ்செய்து, நல்ல சுப முகூர்த்தத்தில் மணவறையிற்கொண்டுவந்து உட்காரவைத்தான். சுவேதமஹாராஜனும் தாதிகளால் தன் குமாரத்தியை ஸ்நானஞ்செய்வித்து, ஆடை ஆபரணங்களினாற் கோலஞ்செய்து, யேதவேதியர்கள் ஆசிகள் கூற மங்கல வோசை கடலொலிபோலொலிக்க பல வாத்தியங்கள் கணகணவென்றுமுழங்க சகலவைபவத்தோடும் அலங்கரித்து மணவறையில் அழைத்துவந்து உட்காரவைத்தான். வீஷ்மர் வேதவேதியர்களை நோக்கி, முகூர்த்தத்தை நடப்பிக்கும் படியாக உத்திரவு செய்தார். உடனே அப் பிர்மக்கியான வேதியர்கள் வேதாகம விதிப்படி மந்திரங்களை உச்சரித்து, மங்கள கரமான முகூர்த்தத்தில் மந்திராக்ஷதைகளாற் பூசைபெற்றிருக்கிற திருமங்கல்யத்தைப் பெரியோர்கள் ஆசிர்வதித்துச் சபை முழுதும் தொட்டுவாழ்த்தத் திரிதராஷ்டிர மஹாராஜன் கையிற் கொடுத்துக் காந்தாரி கண்டத்தில் தேவர்களும் மற்றயாவர்களும் புஷ்பவருஷஞ்சொரிந்து வாழ்த்தும் படியாகத் தரிப்பித்து, இன்னும் செய்யவேண்டிய முறைமைகளையு முடித்தார்கள். பின்பு வீஷ்மர் விதுரமஹாராஜனால் வந்தவர்களுக்கெல்லாம் யாதொரு குறைவும் வராமல் தாம்பூல முதலியவற்றை நடாத்தி, அவரவர்களுக்கு வேண்டிய வஸ்துக்களைக் குறைவறக்கொடுத்து, அன்னதானம் - கோதானம்-பூதானம்-கன்னிகாதான முதலியவற்றைச் செய்து, வந்த அரசர்களுக்கெல்லாந் தகுந்த பரிசுகொடுத்து, அவரவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேரக் கட்டளை யிட்டார். பின்பு திரிதராஷ்டிரனும் காந்தாரியும் அந்தப்புரத்திற்சென்று, இரதியும் மதனனும்போலக் கூடிக்கலந்து வாழ்ந்திருந்தார்கள்.

பாண்டு மஹாராஜன் இளவரசு பட்டம் பூண்டு மநுசாஸ்திரவிதிபிசகாமல் நடந்துவருகிறகாலத்தில், குந்திபோஜர் வம்ச பரம்பரையிற் றோன்றிய சூரசேனன் என்பவனுக்கு ஒரு புத்திரியுண்டு. அவளோ அழகில் இலக்குமியையும்-கல்வியில்வாணியையும்-கற்பில் அருந்ததியையும் ஒத்து யாவருந்தொழப் பிரதை என்று பெயர்பெற்று வாழ்கிறாள். அக்காலத்தில் அசுரர்பரம்பரையிற் றோன்றி, ஜகப்பற்றை எல்லாந் துறந்து,கோபத்தை மாத்திரங்குறையவிடாமல் இருக்கிற தூறுவாசமஹாமுனிவர் அவ்வரசனிடத்திற்கு வந்தார். அரசன் அவரை யெதிர்கொண்டுபோய் அழைத்துவந்து பொற்பீடமளித்து இருக்கச் சொல்லி, சோடச உபசாரமுஞ்செய்து பயபத்தியுடனே வாய் பொத்தி எதிர்நின்று, ஓ ஸ்வாமி! தாங்கள் இந்நகரத்துட் பிரவேசித்து எனக்குத் தரிசனங்கொடுத்ததை நோக்கினால் இன்னகர்செய்த பூசாபலமோ? எங்கள் மேலோர் செய்த புண்ணிய வசமோ? எளியேனுக்கு ஒன்றுந்தோன்றவில்லை என்று இனிய வசனங்களால் அம்முனிவரைக் களிப்புறச் செய்தான். அம்முனிவர் வணங்கிநின்ற அரசனுக்குப்பல ஆசிகள்கூறிச்சொல்லுகிறார். ஓ அரசனே! நாம் சிலநாள் இந்த இடத்திலிருந்து சாதுர்மாத விரதம் அநுஷ்டிக்க வேண்டும். எனக்கு ஊழியஞ்செய்ய ஒருஆள்அமைக்கக்கடவை. என்று கூற அரசன் மகிழ்வடைந்து, ஓ ஸ்வாமி! தங்கள் கருத்தின்படியே இங்கிருக்கலாம். தங்கள் பணிவிடைக்கு யோக்கியதையுள்ள ஆள் என்குமாரத்தி ஒருத்திதான். அவளையே பணிவிடைப் பெண்ணாக வைத்துக் கொள்ளும். என்று சொல்லித் தன் புத்திரியை அழைத்து முனிவரிடத்தில் ஒப்புவித்தான். முனிவர் அந்தக்கன்னிகையைப் பணிவிடைப் பெண்ணாகக் கொண்டு, இரண்டு மூன்றுதினம் ஆத்மலாபத்தைக் கொடுக்கிற சிவபூசை முதலிய வற்றைச் செய்துவந்தார். அக்கன்னிகை பணிவிடைசெய்வதில் மிகுந்த சாக்கிரதையும் அன்பும் உடைத்தாயிருக்கிறதை முனிவர்கண்டு, ஆ! ஆ! உலகத்தில் நமக்கு ஒரு நாழிகை உளம் பொறுத்துப் பணிவிடை செய்பவர் இல்லை. இக்கன்னிகை யாதொரு குறைவும் வராமற் பணிவிடை செய்துவருகிறாள். இவளது குணநிசயத்

(REGISTERED-COPY-RIGHT.)

(ஆதிபர்வம்-சாஎ-வது-பக்கம்.)

தை இன்னும் சிலநா ளிருந்து பார்ப்போம் என்று பின்னும் பலநாளிருந்தார்.

கர்ணனுற்பவம்.

அப்போது இக்கன்னிகை கழங்காடல் நீராடல் பூக்கொய்தல் முதலிய விளையாட்டுத் தொழில்களை விட்டுவிட்டு, அதிக ஜாக்கிரதையாய் நாளுக்கு நாள் விசேஷப்பணிவிடைகளைச் செய்துவந்தாள். அதற்கு முனிவர் அதிகமகிழ்வைஅடைந்து அக்கன்னிகையை அருகில் அழைத்து, ஓ அம்மணி! இவ்வுலகத்தில் எனக்குப் பணிவிடை செய்தவர்கள் சாபத்தை அடைந்தார்களே யன்றி லாபத்தை அடைந்தவரில்லை. இப்போது நீ ஒருத்திதான் என்மன மகிழும்படி பணிவிடைசெய்து வந்தாய். அதனால் உன்மீது எனக்குப்பக்ஷமுண்டாயிற்று. இப்பவும் சிலமந்திரங்கள் சொல்லுகிறேன் அவைகளைக் கற்றுக்கொள். அதன்பெருமை என்னவென்றால்- அந்த மந்திரங்களை உச்சரித்தவுடன் அந்தந்த மந்திரங்களுக்குரிய தேவர்கள் பிரசன்னமாகி உன்னைக்கூடிக்கலந்து, தங்களைப்போன்ற புத்திரசந்தானங் கொடுத்துப்போவார்கள். இதனைப் பத்திரமாக மனதில் வைத்திரு வென்று திட்டஞ்செய்து அவள்செவியில் ஐந்து மந்திரத்தை உபதேசித்து ஆசீர்வதித்துத் தமது தபோ வனத்துக்குச் சென்றார். அக்கன்னிகை அம்மந்திரங்களைக் கவனித்துத் தனது அரண்மனையில் வந்து தனக்குக் கட்டியிருக்கிற கன்னிகா மாடத்திற் களிப்புற்றிருக்கிற நாளில், ஒரு நாள் சந்திரோதய மானவுடனே தன்னந்தனியே அம்மாடத்தின் மிசை உலாவிவருகிற பிரதையானவள் முனிவர்கூறியமந்திரத்தை நினைத்து பெதும்பைப் பருவமாக இருக்கிறோமேயென்று கிஞ்சித்தேனும் யோசிக்காமல் ஒரு மந்திரத்தை உச்சரித்தாள். அந்தமந்திரம் சூரியமந்திர மாதலால் உச்சரித்தவுடனே அதற்குரிய மந்திர தேவதை ஓடிப்போய்ச் சூரியனைப்பற்றிப் பிரதை என்னுங்கன்னிகை உம்மைவருந்தி அழைக்கிறாள்வாருமென்று இழுக்கச் சூரியன்திடுக்கிட்டு, ஆ!இதென்ன ஆச்சரியம்?பூலோகத்து ராஜகன்னிகை நம்மை அழைக்க வேண்டியதென்ன? அவளுக்கு இந்த மந்திரம் ஏது? இதென்ன முழுமோசமா யிருக்கின்றது. என்றுயோசித்துத் தனது கியானதிரிஷ்டியால் நோக்கும் போது கன்னிகை இன்னாளென்றும் அக்கன்னிகைக்கு மந்திரங்கிடைத்தகாரணம் இன்னதென்றும் நன்றாய்விளங்கவே, இது ஊட்டிவைக்கும் வினை, நாமகத்தியம் போகத்தான் வேண்டும். போகா விட்டால் இந்த மந்திரோபதேசஞ் செய்த முனிவருடையசாபம்நேரிடும். என்றஞ்சி நமது ஸ்வரூபத்தைக் காட்டினால் இது காலம் பேதப்படுவதுமன்றி நமதுவரவை யாவருமறிவார்களென்று நினைத்துத் தனது ஸ்வரூபத்தை மாற்றி வேதியர் வேடங்கொண்டு அதிவேகமாக அந்தமந்திர தேவதையோடு கூடக் கன்னிகையிடத்துக்கு வந்தான்.

கன்னிகை வேதியனாகவந்த சூரியனைப் பார்த்துத் திடுக்கிட்டு, உள்ளம் நடுங்கிச் சரீரம் வெயர்த்து, மெய்ம்மயிர்ச்சிலிர்த்துத்தன்னைத்தானேமறந்து, சற்றுநேர மயர்ந்து பின்பு தெளிந்து, ஆ! தெய்வமே! நானிருக்குங் கன்னிகா மாடத்தின்மேல் ஆண் பக்ஷிகளும் பறக்கொணா தென்றால், இதோ கோடி சூரியப் பிரகாசம்போல் ஒளி வீசும் தேகத்தையுடைய ஒருமஹாபுருஷர் கன்னிகா மாடத்துக்கு வருகிறது மன்றி என்னையே பார்த்துவருகிறார். இவர்யாவர்? பூலோகவாசியாகில் நமதுதந்தை வைத்திருக்கிற காவலைக்கடப்பது அருமை. சொற்க வாசியாகிற் பூலோகத்து ஸ்திரீகளை நோக்கக்கூடாது. ஆதலால் வருகிறவர்களாரோவென்று ஐயுற்றுநிற்கிறாள். அப்போது சூரிய பகவான் வந்து நின்று கன்னிகையைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ கன்னிகையே! நான் நெடியகடல் சூழ்ந்த உலகத்திலுள்ள இருளை நீக்கிப் பலபொருளையும் விளங்கவைக்கிற பானு. இரவுக்கு விரோதியாகிய என்னை இந்த இரவில் நீ யழைக்க வேண்டிய காரணமென்ன? என்று வினவ கன்னிகை கரங்குவித்து நமஸ்காரஞ்செய்து, ஓ ஸ்சுவாமி! அடியேன் சிறுவயதாயிருக்குங்காலத்துத் தவ சிகாமணியாகிய தூறுவாச முனிவர் வந்தார். அவர்க்குப் பணிவிடை செய்தேன். அவர்களிகூர்ந்து என்னை யருகிலழைத்து ஐந்து மந்திரத்தையுபதேசித்து, அவைகளின் பெருமைகளையும் எடுத்துக்கூறி ஆசிர்வதித்துப் போயினர். அவைகளிலொருமந்திரத்தை யுச்சரித்துப் பார்த்தேன். தாங்கள் வந்தீர்களென்று பதறிப் ப்யந்துசொன்னாள். சூரியன் கன்னிகையை நோக்கி, ஓபெண்ணே! இந்தமந்திரத்தைப் பெற்றபோதே சொற்கத்தி லிருக்கும் திதி என்கிற ஸ்திரீயின் பெருமை எவ்வளவோ அவ்வளவு பெருமையை வகித்தாய். மேலும் உனக்கு நல்லகாலமாதலால் இப்போது என்னைக் கூடென்றுகூறினன். அதுகேட்ட கன்னிகை திடுக்கிட்டு, ஆ! தெய்வமே! இதென்ன ஆச்சரியம்? நாமோ பெதும்பைப் பருவத்தை யடைந்திருக்கிறோம். இவரோ தேவருள் சிறப்பான சூரியபகவான். நம்மைநோக்கிக்கூடென்றுரைக்கிறார். நாம்மறுத்தாற்சாபம்நேரிடும்போலிருக்கிறது. தூறுவாசமுனிவர் இம்மந்திரத்தாற் புத்திரசந்தானமடைவாயென்று கூறியிருக்கிறார். மந்திரசக்தியால் வந்த இவனைக் கூடாமல் நீக்கி விடுவோ மாகில் அம்முனிவராலும் சாபம்நேரிடும். கூடுவோமாகிற் கற்புடைமைக்கு அழிவுவருதலுமன்றிப் பலபேராற் கன்னிகை பிள்ளை பெற்றனளென்று நிந்திக்க நேரிடும். கற்புடைமையையும் நிந்தனையையும் நீக்கி முனிவர் கூறியபடி கூடுவோமென்றாலும், கலவிக்குரிய மங்கைப் பருவத்தை இன்னும் நாமடைய வில்லை. இதற்கென்ன செய்கிறது? என்றுசிந்தித்துக் காலமல்லாத காலத்தில் மந்திரத்தை யுச்சரித்தபடியால் அதனால்

வரும் நய கஷ்டத்தை நாமே அநுபவிக்க வேண்டியதென்று தீர்மானித்துக்கொண்டு சூரியபகவானை நோக்கி, ஓஸ்வாமி ! இப்போது தாங்கள் கூறியபடி கூடுவதற்கு நானோ பருவகால மடையாதவளாயிருக்கிறேனாதலால் இதற்கு விடையென்னவென்றுவினவினள். அதற்கு பானு - ஓ கன்னிகையே ! கலவிக்குரிய பருவத்தை நாம் கொடுக்கிறோம் நீகூடென்று கூறி, மங்கைப் பருவத்தை அநுக்கிரகஞ் செய்தான். உடனே கன்னிகை மங்கைப்பருவ மடைந்து, தனக்கு வந்த மங்கைப்பருவத்தை நோக்கி வியப்புற்றுச் சூரியனை வணங்கிச் சொல்லுகிறாள்: ஓ ஸ்வாமி ! பெதும்பைப் பருவமாயிருந்த என்னை மங்கைப்பருவ மாக்கினீர்கள். இனிப் புணர்வதற்குத் தடைசொல்லொணாது. தடைகூறாமற் புணர்வேனாகில் உலகிலுள்ளோர் கற்பிழிவானவ ளென்று நிந்தை கூறுவார்கள். ஆதலால் இதற்கென்ன செய்வே னென்றாள். சூரியபகவான் சொல்லுகிறான்: ஓ பெண்ணே ! நீ அதற்கஞ்சாதே. நான் சொல்வதைக்கேள். என்னைக்கூடு. உடனே உனக்கு ஒரு புத்திரனுண்டாவன். அப்புத்திரனை ஒரு பேழையில் வைத்துக் கங்கையில் விட்டுவிடு. கங்கை அச்சிசுவைக் காப்பாற்றிக் கரைசேர்ப்பாள். மேலும் இப்போது கிடைத்திருக்கிற மங்கைப்பருவமும் நீங்கி முன்போலப் பெதும்பைப் பருவத்தை அடைந்திருப்பாய். அஞ்சாமல் என்னைச் சேரொன்றான். பிரதை அதற்குச் சம்மதித்துச் சூரியபகவானை அழைத்துப் பொற்பஞ்சணைமெத்தையி லிருத்தித் தான் உள்ளும்புறம்பும் ஒத்து ஐந்துவித ஆலிங்கன முதலியவைற்றை இயற்றிக் கூடிக்கலந்தாள். உடனே சூரியன் தனது கிருபா நோக்கத்தை அவள்மேற் செலுத்தித் தனதிடத்துக்குச் சென்றான்.

கேளும் இராஜாதிராஜனே ! இங்கே கன்னிகை கருப்பவதியாகி ஒரு முகூர்த்தத்துக்குள் மூன்றுலகமும் புகழத்தகுந்த சிறப்பினைவகித்த ஒருபுத்திரனைப் பெற்று, இப்புத்திரனை வைத்திருப்போமாகிற் சூரியோதயமானவுடனே பலருமறிவார். அதன்மேல் நமக்கும் நமது தந்தையினீதிக்கும் பழுதுநேரிடுமென்று தனக்குள் யோசித்து, ஒருபேழையில் தன்வஸ்திரத்திலொன்றை விரித்து அதில் அச்சிறுவனை வளர்த்திப் பலதேவதைகளைத் துதித்துக் கங்கையில்விட்டு, அக்கங்கையையும் பலமுறை துதிசெய்து வணங்கித் தன் கன்னிகாமாடத்துக்கு வந்தாள். வந்தவுடன் மங்கைப் பருவமும் கருப்ப வுற்பத்திக்குறியு மாறி முன்போற் பெதும்பைப்பருவத்தை அடைந்து, சூரியபகவானை அணைந்ததுமுதல் நடந்தவையெல்லாங் கனவுபோலெண்ணிச் சுகமாக இருந்தாள். இங்கே பிரதையால் விடுத்தபேழைகங்கையிற்செல்லும்போதுகங்கை அதிகமகிழ்வையடைந்து, அச்சிறுவனுக்குயாதொருகுறைவுமுறாதிருக்க அலைகளாகியகையினால் அப்பேழையையேந்தி, அஸ்தினபுரத்துத் துறையருகில் விட்டனள். உதயத்தில் அத்தினபுரத்துக் கரசனாகிய திரிதராஷ்டிரமஹாராஜனுக்குச் சாரதியாகும் ரதையனும் அவன்மனைவி ராதையும் ஸ்நானஞ்செய்யக் கங்கைக்குவந்து அங்குள்ள பற்பல வேடிக்கைகளைப் பார்த்து நிற்கிறபோது பேழையைக்கண்டு, அதிகஆவலைக்கொண்டுகங்கையிலிறங்கி, அப்பேழையைக் கரையிற்கொண்டுவந்து திறந்து, அதிலிருக்கும் சூரியபிரகாசமான புத்திரனைப் பார்த்தவுடன் பெருஞ்செல்வம் பெற்றவர்போலாகிப் புத்திரபாக்கிய மில்லாத ரதையனும் அவன்மனைவியு மனமகிழ்ந்து, அப்புத்திரனை எடுத்து உச்சிமுகந்து, உள்ளங்கால் முத்தமிட்டு, அவனுருக்கும் சுந்தரத்தைநோக்கிப் பூரிப்படைந்து, புத்திரனில்லையென்று வருத்தமுற்றிருந்த நமக்குக் கங்காதேவியே புத்திரனைப் பாலித்தாளென்று அந்த அம்மனைப் பிரார்த்தித்து வந்தனை வழிபாடுசெய்து, புத்திரனையும் பேழையையும் எடுத்துவந்து தன்வீடுசேர்ந்து, தானதருமங்களைச் செய்து, நல்ல சுப முகூர்த்தத்தில் நாமகரண மிடவேண்டுமென்று கருதி என்னபேரிடலாமென்று யோசித்திருக்கிறார்கள். அப்போது சூரியபகவான் ஆகாயவாணியை அழைத்து, ஓ ஆகாயவாணி! என் வீரியவிர்த்தியிலுண்டாகிய சிறுவன் ரதையன்வீட்டி லிருக்கிறான். அச்சிறுவனுக்குப் பெயரிட யோசித்துக்கொண் டிருக்கிறார்கள். சீக்கிரம் நீபோய் அச்சிறுவனுக்குக் கர்னனென்று பெயர் கூறிவாவென்றுஅனுப்பினன். அவ்வாறே ஆகாயவாணி ரதையன்முதலிய சபையோர்கள் செவிக்குக் கேட்கும்படிச் சொல்ல, அதைக்கேட்ட ரதையன் வியப்படைந்து ஆகாயவாணி கூறியபடி கர்னனென்று பேரிட்டு, வேதவேதியர்களுக்கெல்லாந் தானதருமஞ் செய்து, மிகுந்த அன்புடன் அப்புத்திரனை வளர்த்து, நாலுவேதம் - ஆறுசாஸ்திரம் - அறுபத்துநாலு கலைக்கியான முதலியவற்றைக் கற்பித்து, வில்வித்தை யானை ஏற்றம் குதிரை ஏற்றம் முதலியவுங் கற்கச் செய்தான்.

பரசுராமனாற் கர்னன் சாபம்பெற்றது.

திரிதராஷ்டிரன் முதலானவர்களுக்கு வீஷ்மர் வில்வித்தை கற்பித்திருக்கிறதைக் கர்னனுணர்ந்து, பூர்த்தியாக அவ்வில்வித்தையைக்கற்கவெண்ணிப் பரசுராமமூர்த்தியிடத்து வந்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஓ ஸ்வாமி! அநாதையாகிய அடியேன் வில்வித்தையின்மேற் காதல்கொண்டுவந்தேன். என்னாசை நிறைவேறக் கிருபாநோக்கம்புரிந்தருளவேண்டுமென்று பலவாறுதுதித்தான். அவனைப் பரசுராமமூர்த்தி ஆசீர்வதித்து, நீஎன்ன பிராமணனாவென்று கேட்டார். கர்னன் ஆமென்றறைந்தான். பரசுராமர் அவன்கருத்துக்குஒத்துக்கொண்டு, தாங்கற்றிருக்கும் வில்வித்தை முதலியவற்றை யெல்லாங் குறைவில்லாமல் அவனுக்குக் கற்பித்து வருகிறார். அக்காலத்தில் கர்னன் க்ஷத்திரியத் தன்மையை வெளிப்படுத்தாமற்

பிராமணத் தன்மையாகவேயிருந்து வித்தைகளையெல்லாங் கிரகித்து, நெடியகடலைக் கையிலடக்கி உட்கொண்ட அகத்திய முனியைப்போல் அதிக விரிவாகியும் அருமையாகியு மிருக்கின்ற தனுர்வேத சமுத்திரத்தைப் பரசுராம மூர்த்தியால் எளிதிற்கடந்து, திரிமூர்த்திகளும் வியப்புறத்தகுந்த வித்தைகளிற் சிறப்புற்றும் ஒன்று மறியாத அன்பேதையைப்போல் அபினயித்து அந்தப் பரசுராமமூர்த்திக்குப் பயபத்தியோடு பணிவிடை செய்துகொண்டு வந்தான்.

ஒருநாள் பரசுராமமூர்த்தி கர்னனை அழைத்து, அவனது தொடையின்மேற் சிரசை வைத்துச் சயனித்து நித்திரைசெய்தார். அப்போது தெய்வ கதியால் இரத்தவாரியென்கிற ஒரு புழுவந்து கர்னனுடைய தொடைச்சந்தில் நுழைந்து துளைத்தது. அதற்குக் கர்னன் அஞ்சாமல், தொடையை யசைத்தாற் குருவுக்கு நித்திரைபங்கம் வருமென்றுயோசித்து அசையாம லிருந்துவிட்டான். அந்த ரத்தவாரி யென்கிற புழு விடாமற்றுளைக்கவே கர்னன்தொடையிலிருந்து இரத்தவெள்ள முண்டாகிப் பரசுராமர் தேகத்தை நனைத்தது. பரசுராமமூர்த்தி எழுந்து இரத்தவெள்ளத்தைக் கண்ணுற்றுப் பிரமைகொண்டு, அக்கர்னன் தொடையையும் முகத்தையும் நோக்கினார். அப்போதுகர்னன் முகம் அந்தரத்தத்துக்குக் கிஞ்சித்து மஞ்சாம லிருக்கிற குறிப்பைப்பார்த்து ஐயுற்று, ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்? பிராமணனுயிருப்பானுகில் இரத்தத்தைக் கண்டவுடன் உடல் நடுங்கும். இவன்சிறிதும் உதறலு நடுக்கமு மில்லாம லிருக்கிறபடியால். இவன் க்ஷத்திரியனேயன்றிப் பிராமண னல்லவென்று தீர்மானித்து அதிக கோபங்கொண்டு, அடாகர்னு ! நீயார் ? உண்மையை வெளிப்படுத்துக. என்று வினவ் கர்னன் பதிற்சொல்ல நாவெழாமல் மவுனமா யிருக்க பரசுராமர் மிகவுஞ் சினங்கொண்டு, அடாகர்னு ! இந்த இரத்தத்தைக்கண்டு சற்றுமஞ்சாம லிருந்தமையால் நீக்ஷத்திரிய னென்பதற்குச் சந்தேகமில்லை. நானோ வீஷ்மன் முன்னிலையில் க்ஷத்திரியருக்கு வில்வித்தை கற்பிக்கிறதில்லை யென்று சபதஞ்செய்திருந்தேன். அச்சபதத்தைக் கெடுத்து என்னிடத்து வில்வித்தையைக் கற்றுக் கொண்டமையால், நீ யென்னிடத்திற்கற்ற வில்வித்தை நல்ல சமர்முகத்தில் உதவாமற் போகக்கடவதென்றுசாபமிட்டார். கர்னன் அச்சாபத்தை ஏற்று மிகுந்த வருத்தமுற்றுத் தன் னரண்மனை சேர்ந்து வாழ்ந்திருந்தான்.

குந்திதேவி மணம்.

இங்கே குந்திபோஜன் பெற்ற குந்திதேவி யாகிய பிரதை பெதும்பைப் பருவங்கடந்து மங்கைப் பருவமடைந்தாள். இவளை மிகுந்த அன்புடன் வளர்த்து வருகிற சூரசேனன் மங்கைப்பருவ மடைந்த தன் பெண்ணைக் கருதி சுயம்வரஞ் சாட்டி, ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்குந் திருமுக மெழுதித் தூதுவர்கள் கையிற்கொடுத்து அனுப்பி வித்தான். தூதுவர்கள் அந்தந்த அரசர்களுக்குத் திருமுகங் கொண்டு போய்க் கொடுக்க, அத் திருமுகத்தின் கருத்தையுணர்ந்த சகலராஜர்களுந் தங்கள் தங்கள் ரதகஜதுரக பதாதியாகிய நால்வகைச் சேனையோடும் சூர சேனன் நகரத்துக்கு வந்தார்கள். வீஷ்மர் அத்திருமுகத்தையுணர்ந்து, பாண்டுராஜனை அழைத்துக் கங்கைமுதலிய தீர்த்தங்களினுல் ஸ்நானஞ் செய்வித்து, அங்கு தானே மணக்கோலமுஞ்செய்து, இரதகஜதுரக பதாதிகள்சூழப் பாண்டு ராஜனேடு வீஷ்மரும் சூரசேன மஹாராஜன் நகரத்துக்கு வந்தார். சூரசேனமஹாராஜன் வந்த அரசர்களுக் கெல்லாந் தகுந்த மரியாதையைச்செய்து விடுதிவிட்டு, சந்திரபலந் தாராபலங்கூடிய காலவோரையில் தன் மகளாகிய குந்திதேவியைக் கங்கை முதலிய தீர்த்தங்களினுல் ஸ்நானஞ் செய்வித்து, ஆடையாபரணங்களினுல்அலங்கரிப் பித்தபின் அரசர்சபைக்கு வருவித்தான். அங்கு வந்திருக்கிற அரசர்களெல்லாம் குந்திதெவியினது சௌந்தரியத்தைக் கண்டு மிகுந்த ஆவலைக்கொண் டிருந்தார்கள். குந்திதேவிக்குத் தாதிகள் அந்தந்த அரசர்கள் பெயரையும் தேசத்தையும் பெருமையையும் எடுத்தோதிப் பாண்டுமஹாராஜன் அருகில்வந்து. ஓ அம்மணி ! இளஞ்சூரியனைப்போற் பிரகாசிக்கிற இவ்வரசன் சந்திரவமிசத் தலைவன். அத்தினபுரத்துக் கதிபன். பாண்டு வென்னும் பெயரை யுடையவன். அரசருள் இராஜசிங்கம் பொன்றவ னென்றுகூறக் குந்திதேவி பாண்டுமஹாராஜனைத் திருந்தநோக்கிக் கையிலிருக்கும் பூமாலையை அப்பாண்டு மஹாராஜன் தோளில் வீசி வணங்கினுள். உடனே சூரசேனன் வேதவேதியர்களை அழைப்பித்து, மகளையும் மருமகனுகிய பாண்டு ராஜனையும் மணவறையி லிருத்தி, நல்ல சுபமுகூர்த்தத்தில் அங்குவந்துள்ள சகலதேயத்தரசர்களும் வியப்படைய மாங்கல் யத்தைத் தரிப்பித்து, அக்கினிபகவான் திர்பதி அடைய ஓமமுதலிய சடங்குகளையு நிறைவேற்றினுன்.

மத்திராதேவி மணம்.

அப்போது வந்திருந்த அரசருள் மத்திரதேசாதிபதி எழுந்து சூரசேனன் முதலான அரசர்களைநோக்கி, ஓ அரசர்களே! நான்செய்யும் விண்ணப்பத்தை அங்கிகாரஞ் செய்யவேண்டும். அஃதென் னெனில்- மிகவும் அருமையான தவஞ்செய்து பெற்ற என்குமாரத்தியாகிய மத்திராதேவியை இப்பாண்டு மஹாராஜனுக்கு விவாகஞ் செய்து கொடுக்க விருப்ப முடையவனுக இருக்கிறேன். அம்முகூர்த்தம் நிறைவேறுகிறபரியந்தம் யாவரு மிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு தன்குமாரத்தியை அழைப்பித்து, நல்ல

கங்கைமுதலியதீர்த்தங்களினால் ஸ்நானஞ்செய்வித்து, ஆடையாபரணங்களினால் அலங்கிரதஞ்செய்வித்தானவுடன் அழைத்துவந்து வீஷ்மர்முதலானவர்கள் களிப்புற நல்லசுபமுகூர்த்தத்திற் பாண்டுராஜனால் மாங்கல்யந்தரிப்பித்து, வேதவேதியர்கள் மகிழ்வெய்தத் தானதருமங்களைச்செய்து அங்கு வந்த அரசர்களுக்கு விருந்திட்டு அவரவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடம்போய்ச் சேர விடைகொடுத் தனுப்பினான். இவ்வாறு எல்லாக் காரியங்களும் சம்பிரமமாய் நிறைவேறினபின்பு பாண்டுராஜன் குந்திதேவி மத்திராதேவி என்னும் இரண்டுதேவியரை ரதத்திலேற்றி, வீஷ்மருடனே தனது நகரம் வந்துசேர்ந்து பட்டணத்தை வலமாகவந்து, குடி படை முதலியபேர்கள் மகிழ்வெய்த விருந்துடன் வெகுமதிசெய்து, பூமிப்பிராட்டி கமலைப்பிராட்டி சமேதனாகிய திருமால்போற் குந்திதேவி மத்திராதேவி சமேதனாகிய பாண்டுராஜன் இன்பமுடன் வாழ்ந்துவருகின்றான். அக்காலத்தில் ஒருநாள் வேட்டையாட யத்தனித்து, மந்திரிமார்களோடு மற்றநால்வகைச் சேனைகளையும் வில்லியர்வலைஞர் வேடர்களையும் பிரயாணமாகும்படி கட்டளையிட்டுத் தான் அந்தப்புரத்துட்சென்று, ஸ்நானம்பண்ணி போசனஞ் செய்து, வஸ்திரா பரணங்களை யணிந்து, வேட்டைமூடிதரித்து, வில்லம்பு முதலிய படைகளையெடுத்துக்கொண்டு மனைவியரிடத்துச்சென்று, வேட்டையாடக் காட்டிற்செல்கிறேன்விடைகொடுங்களென்று கேட்க மனைவியரிருவரும் அரசனைவணங்கி, ஒஸ்வாமி! எளியேமும் காட்டின் வினோதங்களைப்பார்க்க நெடுநாளாக விருப்பங் கொண்டிருக்கிறோமாதலால் இன்றையதினம் தாங்களே செல்லுகிறபடியால் அடியேங்களும் வருகிறோமென்றனர். அதற்கு அரசன் ஒத்துக்கொண்டு, வீஷ்மர் பரிமளகந்தி இவர்களுத்தரவின்பேரில் இரண்டு மனைவியரையும் அழைத்து ரதத்திலேற்றிக்கொண்டு நகரத்தைவிட்டு வெளிப்பட்டான். அதற்குள் நால்வகைச் சேனைகளோடு மந்திரிகள் வந்து கலந்தார்கள்.

அமுதந்திமுனிவரால் பாண்டு சாபம்பெற்றது.

அப்பால் யாவரும் ஒன்றாகத்திரண்டு சகலவாத்தியங்களும் கடல்போல் முழங்க ஆரவாரத்துடனே காட்டிற்சென்று, யானை-புலி-கரடி - சிங்கம் - காண்டாமிருகம்-மான்-பன்றி-முயல்-முதலியவற்றைக்குத்தியும் வெட்டியும் அடித்தும் கிழித்தும் இப்படி நானாவிதமாக விலங்கினங் கலங்கி உயிர்சோர வேட்டையாடுகிறான். அப்போது ஒரு பெரியகாண்டாமிருகம் அந்த அரசன்கண்ணுக்குத் தோன்றி மறைந்தது. அதை அரசன்கண்டு வதைசெய்யவேண்டுமென்று பின்றொடர்ந்து வருகிறபோது, வழியில் அமுதந்திஎன்னுமுனிவான்தானும்தன்மனைவியுமாகஅநேககாலம் தவத்திலிருந்து, ஒருநாள் காமத்தின்மேல் கருத்தைச்செலுத்தித் தன் மனைவியை அழைத்தார். மனைவி அஃதுறிப் புணர்ந்து, ஓ ஸ்வாமி! அடியேன் கருத்தும் காமத்திற் சென்றிருக்கின்றது. ஆனால் ஒருவிண்ணப்பம். இக்காமமென்பது உலகிலுள்ள எல்லாவுயிர்க்குமுள்ளதுதான். இவ்வுயிர்களில் எவ்வுயிர் அதிககாமத்தையுடையதோ அதையுரைத்தால் அவ்வுருவங்கொண்டு புணரலாம். அப்போது இன்ப மதிகரிக்கிறதுமன்றிப் பகற்காலத்துக்கும் அஞ்ச வேண்டியதில்லையென்று பகர முனிவரன் தனது மனைவி கூறியவற்றிற்கு மகிழ்வடைந்து, ஓ பெண்கள் நாயகமே! எல்லாவுயிர்களிலும் மான்சாதி அதிக காமத்தையுடையதாதலால் அந்த மானுருவமெடுத்துப் புணரலாமென்று வகுக்க, இருவரும் அவ்வுருவுகொண்டு புணர்ந்திருந்தார்கள். அரசன் அஃதுணராமல் மான்தானேயென்று வில்லில் தொடுத்திருக்கிற பாணத்தை விட்டான். அப்பாணம் குறி பிசகாமல் ஆண்மானின் மேற்பட்டுருவிற்று. உடனே முனிவரன் தன்னுருவங்கொண்டு மிகுந்த கோபத்துடன் அரசனை நோக்கி. ஓ அரசனே! நீ சந்திரவமிச தராபதியா யிருந்தும் கெடுதி சம்பாதித்துக் கொண்டாய். வேட்டையாடுகிறபோது எதிர்ப்பட்ட மிருகங்களைக் கொல்லுகிறதென்றுவிதியிருந்தாலும், புணர்ச்சியிலிருக்கும் உயிர்களைக் கொல்லுதல் புண்ணியமல்ல. இவ்வாறு மநுசாஸ்திர முறைத்திருக்க, அதையுணர்ந்தும் சலவியிலிருக்கிற என்னுயிரைப் பாணத்தாற் கொள்ளை கொண்டாய். நீ உன்மனைவியரோடு புணர்ச்சி செய்வையாகில் அக் கணம் உன்னுயிர் நீங்கக் கடவதென்று சாபமிட்டுப் பூமியில் விழுந்து இறந்தார். அவர்மனைவி கணவனிறந்ததைக் கண்டு உடனே தானும் உயிரை விட்டாள். அரசன் இச்செய்கையைநோக்கி, அடடா!! மோசம் வந்தது. நாம் சுபாவமான மானென்று நினைத்துப் பாணத்தை விட்டோம். முனிவராகயிருந்தார். நம்மாலிரண்டுயிர் சேதமாயிற்று. இதற்கென்ன செய்கிறதென் றேங்கிக் கனவருத்த மடைந்து சேனைகளோடு வந்து கலந்து மந்திரிகளை நோக்கிக் கூறுகிறான்: ஓ மந்திரிகளே! இம்மை யின்பங்களில்முக்கியமான இன்பம் காமம். அக்காமத்துக்கு ஒரு முனிவனாலே அபாத்திரனானேனென்று அவ்வரலாற்றைக் கூறி, இனிநான் அரசினுக்குரியவனா யிருந்தும் என்னபயன்? துறவறத்தை அடைந்து தவத்தைச்செய்து நல்லகதியடைகிறேன். நீங்களெல்லாம் நகரத்துக்குச் சென்று, என்முதாதையாகிய வீஷ்மர்முதலியவர்களுக்கு என் விர்த்தாந்தத்தைத் தெரிவியுங்களென்று கட்டளையிட்டான். மந்திரி முதலானவர்கள் அதைக் கேட்டுக் கனவருத்த மடைந்து, நால்வகைச் சேனையோடும் நகரம்வந்து வீஷ்மர்முதலிய அரசர்களைவணங்கி, பாண்டுராஜனுக்கு நேரிட்ட அபாக்கியத்தைச் சொன்னார்கள். வீஷ்மரும் பெரியராஜனும் பரிமளகந்

தியும் மகா துக்கத்தோடு மிக்க வருத்தமடைந்து யாதொன்றுந்தோன்றாம லிருந்து விட்டார்கள்.

இங்கே பாண்டுராஜன் இரண்டு மனைவியரையுமழைத்துத் தனக்கு நேரிட்ட சாபத்தின் வரலாற்றைச் சாற்றி, இனி நான் தவத்துக்குரியவனேயன்றி உங்களிருவர் போகத்திற் குரியவனன்று. உங்கள் தாய்வீடுசேர மனமிருந்தாற் சேரலாம். அல்லது மாமிவீடுசேர மனமிருந்தாற் போய்ச்சேர்ந்திருக்கலாம். ஆதலால் உங்கள் கருத்தென்னவென்று வினவ மனைவியரிருவரும் இவ்வசனங்களைக் கேட்டவுடன் செவியில் நாராசத்தை யேற்றியது போற் கனவருத்தமடைந்து, அடியற்ற கூந்தற்பனைபோல் அரசன் திருவடியில் விழுந்து, ஓ அரசனே! என்னவார்த்தையுரைத்தீர்? கணவனை விட்டு உயிர்வைத்து வாழ்வதைவிட இறப்பது மிகுந்த நலமென்று ஸ்திரீகளுக்கு விதியிருக்க உம்மைவிட்டுப் பிரிந்து நாங்கள் உயிரோடு வாழமாட்டோம். தேவரீர்க்குப் பணிவிடைப் பெண்களாகவேனு மிருப்போமேயல்லது தங்களுக்குப் பிரியமாகிய நாங்கள் ஒருக்காலும் பிரியோமென்று கூறினர். அதுகேட்டஅரசன்அம்மனைவியர்கருத்துக்கிசைந்து,அவ்விருவரையுமழைத்துக்கொண்டு ஒருவனத்திற்சென்று,மணிமகுடத்தைநீக்கிச் சடைமுடி தரித்து, ஆடையாபரணங்களைநீக்கிக் காவிகாம்பர தண்டுகமண்டலதாரியாகித் தவஞ்செய் திருக்கும் பெரியோர்களையடுத்துஉபதேசம்பெற்றுத் தவத்தாலடையும் சிலாக்கியமானபாக்கியமெதுவோ அதனையடைய வாளேந்தியகரத்தால் ஓமத்திரவியங்களையேந்திச் சிலநாள்ஓமத்தைவளர்த்தும்-சிலநாள் ஜலத்தில்நின்றும் - சிலநாள் ஒருகாலூன்றியும் - சிலநாள் பஞ்சாக்கினி மத்தியிற் பொருந்தியும்-இப்படியநேகநாள் தவஞ்செய் திருந்தான். இத்தன்மையாயிருக்கிறகாலத்திற் கருத்தைப்பிரமத்தினிடத்திற் செலுத்தித் தவஞ்செய்து திவ்யக்கியானத்தை யடைந்த மகாமுனிவர்களெல்லாம் வந்து தவஞ்செய்கிற பாண்டு ராஜனது மனவுறுதியைக் கண்டு மிகுந்தமகிழ்வையும் வியப்பையுமடைந்து, அப்பாண்டுராஜனுக்கு வேதத்தி னுட்கருத்தை விளங்கவுரைத்தார்கள். அதனாலும் பாண்டுராஜன் நாளுக்குநாள் தவத்தில் அதிகமுயற்சியை யுடையவனாகித் தவத்தாலடையும் பயனாகிய மனப்பகையை வென்று, அறிவின்மயமாக நின்றான்.

ஒருநாளவன் வடபுறத்திலிருக்கும் சிரிங்கிவனத்துக்குச்செல்லக்கருதி மனைவியரைநிறுத்தித் தனியே சென்று, அவ்வனத்திலிருக்கும் சதானந்தமுனிவர்முதலியபேர்களைக் கண்டு வணங்கி நின்றான். சதானந்தமுனிவரும் இன்னுஞ்சிலமுனிவர்களும் இராஜமுனிவனைக்கண்டு மகிழ்வடைந்து பல ஆசிகள்வழங்கி, அரசனாக விருந்தும் தவசிரேஷ்டனாகிய தன்மையைநோக்கிச் சகலகலைக்கியானதி நுட்பங்களையு மஹாமந்திரங்களின் ரகசியத்தையும் போதித்தார்கள். பாண்டுராஜன் அம்மஹாமுனிவர்கள் கூறியகருத்தை யுட்கொண்டு, மறுபடியுமுன்போலத் தவத்திலிருந்தான். இவ்வாறு சிலநாட்சென்றபின்பு ஒரு நாள் சதானந்தர்-வசிஷ்டர் - வால்மீகர் - விஸ்வாமித்திரர் - முதலானமுனிவர்கள் கைலாயத்தைத் தரிசிக்கக்கருதி வடதிசையை நோக்கிச் செல்லுகின்றவர்கள், பாண்டுராஜன் தவஞ்செய்கிறவனத்துக்குவந்து அப்பாண்டுராஜனைக் கண்டார்கள்.பாண்டுராஜன்திடுக்கென்றெழுந்து வந்தவர்களுக்கு வந்தனை வழிபாடுசெய்து பயபத்தியோடு எதிர் நிற்கிறபோது, முனிவர்கள் பாண்டுராஜனுக்கு ஆசிகள்வழங்கிச் சொல்லுகிறார்கள்: ஓ ராஜமுனியே! நாங்கள் கைலாயத்தைத் தரிசிக்கக் கருதி வடதிசை நோக்கி வந்தோம். உம்மையும் பார்த்துப் போவோமென்றுஇங்கடைந்தோம்.என்றுரைக்கவும் பாண்டுராஜன் முனிவர்களை வணங்கிச் சொல்லுகிறான்: ஓஸ்வாமிகளே! அக்கைலாயத்தை அடியேனுந் தரிசிக்கவேண்டுமென்னும் அபேக்ஷையுள்ளவனா யிருக்கின்றேனாதலால்,நானும் வருகிறேனென்றுபுகன்று அவர்களைப் பின்றொடர்ந்து சென்றான். அம்முனிவர்கள் அதற்கு ஒன்றுஞ்சொல்லாமற்கைலாயத்தருகிற்சென்றுநின்று இராஜனைப்பார்த்து,ஓ ராஜமுனியே! எங்களுடன்இதுவரைக்கும் பின்றொடர்ந்துவரச்செய்தது நீசெய்ததவப்பலன். இனிநீவரக்கூடாது. ஏனென்றால்-உலகத்தில் அளவற்றபுண்ணியத்தைச் செய்தபோதிலும் புத்திரனில்லாதவர்க்குப் புண்ணியலோகமில்லை. ஆதலால் உனக்குப்புத்திரனில்லை. நீகைலாயத்தைத் தரிசிப்பதற்கு யோக்கிய னல்லவென்று மறுத்தனர். அதுகேட்டபாண்டுராஜன்மனங்கலங்கி, அம்முனிவர்களுக்குவந்தனைசெய்துசொல்லுகிறான்:ஓஸ்வாமிகளே! புத்திரனில்லாவிட்டாற்புண்ணியலோகமில்லையென்று கட்டளையிட்டீர்கள். அஃதுண்மைதான். அடியேன் புணர்ச்சிசெய்தால் மரணமடைவதாகச் சாபநேரிட்டிருக்கின்றது. எளியேன்என்னசெய்வேன்? தங்களுடையகிருபையிருந்தால் எல்லாநலத்தையும் ஒருநொடிப்பொழுதிலடையலாம். ஆதலால்அடியேன்மீதுகிருபைவைத்துக் கைலாயத்தைத்தரிசிக்க அருள் புரியவேண்டுமென்று வேண்ட முனிவர்கள் அரசனைநோக்கிப் புன்னகைபுரிந்து சொல்லுகிறார்கள்.

பாண்டுராஜனுக்கு முனிவர்கள் தருமசந்தான விதியுரைத்தல்.

ஓ ராஜமுனிவரே! நாங்களே வேதவிதியை விலக்குவமாகில், உலகிலுள்ளவர்கள் அவ்வேதத்தை மதிப்பார்களா? வல்லமை யிருக்கின்றதென்று மீறிநடப்போமாகில், எளியவர்க் காசைசொல்லிப் பலதரந்தன்னிடத்துக்கு வரும்படிசெய்து பின்பு ஒருதவியுஞ்செய்யாமற்கடிந்து இல்லையென்றுகைவிரிப்பவன் எக்கதியடைவனோ அக்கதி எங்களுக்குவருமாதலால் நாங்கள் கூறுவதைக்கேள்: புணர்ச்சிசெய்தால் மரணம

ண்டைகிறதென்று உனக்குச் சாபமிருக்கிறபடியால், தேவர் அல்லது முனிவர் இவ்விருதிறத்தாரி லொருதிறத்தாரால் புத்திரசந்தானம பெற்றுக் கொள்ளலாம். வேதத்தில் தருமசந்தானம் பெறலாமென்று விதியிருக்கின்றது. இவ்விதிப்படியே முன்னம் பரசுராமரால் நாசமடைந்த சூரியகுலம் முனிவர்களால் உலகில் விர்த்தியாயிற்று. இன்னும் அநேக அநுபவமிருக்கின்றது. அவைகளைக்குறித்து உதாரணங்கொடுக்கவேண்டுவதில்லை. ஏனென்றால் உங்கள்பரம்பரையே போதுமான திருஷ்டாந்தமா யிருக்கின்றது. ஆதலால் நீ போய்ப் புத்திரசந்தானம்பெற்றுக்கொள்ளுகவென்று நிறுத்தி, இன்னுமவன் மனந்தேறும்படி சில அநுபவங்களையும் பற்பல விதிகளையும் தக்கபடி ஓதி உபதேசித்து, அவ்வரசன்பின்றொடராதிருக்கத் தங்கள்சக்தியால் உருவத்தைமறைத்து அந்தரத்தானமாகச் சென்றார்கள். பாண்டுராஜன் மிகவருத்தத்தோடு மீண்டு, முன்பு தவநிலையுற்றிருந்த ஸ்தானத்தையணுகி, அங்குதனித்திருக்கின்ற தன் இரண்டு மனைவியரையும் நோக்கி, ஓ துணைவியர்களே! முனிவர்களெல்லாம் கைலாயத்தைத் தரிசிக்கச்சென்றார்கள். யானும் அவர்களோடுசென்றேன். கைலாயத்தருகிற் போனபோது அம்முனிவர்கள் என்னை நோக்கி உனக்குப் புத்திரனில்லையாதலால் நீ கைலாயத்துக்கு வரக்கூடாது என்றுமறுத்துத் தருமசந்தானமாகிலும் பெற்றுக்கொள்ளென்று உத்திரவு கொடுத்து மறைந்துவிட்டார்கள். நான் இந்தப்பூதலத்திற்பிறந்து என்ன துற்பாக்கியத்தை அடைந்தேன். என்னைப்போற்பாவி உலகிலில்லை. நீங்களிருவரும் என்கருத்தின்படி நடந்தீர்களானால் அப்போது உலகிலுள்ள எல்லாப்பாக்கியத்தையும்பெறுவதுமன்றி, மேலான புண்ணியலோக வாழ்வையும் அடையலாம். அக்கருத்தென்னெனில், கோதானம்-பூதானம் - கன்னிகாதானம் - வஸ்திரதானம் - அன்னதானம்-சொர்னதானமுதலிய தானங்களையும், இரப்போர்க்குக் குறிப்பறிந்தீதல் - நல்லவிரதங்களை நடாத்தல்- அநேகயாகங்களைச்செய்தல்-முதலிய சற்கருமங்களையும் இடைவிடாது செய்துவந்தாலும், ஒருவராலுங் கற்றுக்கொள்ளக்கூடாத மாதுரியத்தை யுடைய மழலைச் சொல்லைப் பொழிந்து மார்பின் மேலும் தோளின்மேலும் ஏறிவிளையாடிப் பிரியமானசொல்லாற் பிறர்மனதையு முருகச்செய்யும் ஒரு புத்திரபாக்கிய மில்லா விட்டால் எல்லாபாக்கியமும் நிறைந்து திருவிளக்கில்லாத வீட்டைநிகர்க்கும். ஆதலால் நீங்கள் மனமகிழ்ந்து யாரையாவது கூடிப் புத்திரனையளித்தால் எனக்கு அதிகநல முண்டாவது மன்றி, உங்களுக்கும் கணவனிருக்க மற்றொருவரைச் சேரச்சொல்லுகிறேனென்பதில் ஐயமும் வருத்தமும் வேண்டுவதில்லை. முன்னம் பரசுராமரால் நாசமடைந்த சூரியவமிசம், அவ்வம்ச பட்டத்தரசிகளுக்கு ஆசிரியராகிய முனிவராற்செய்த கர்ப்பதானத்தினால் விர்த்தியாயிற்று. இஃதன்றிமற்றோரரசனாகிய கன்மாடபாதனென்போன் தன்குருவாகிய வசிஷ்டரால் ஒருபுத்திரனைப்பெற்றுக்கொண்டான், பலிச்சக்கரவர்த்தி தீர்க்கதமனாற்புத்திரபாக்கியத்தை அடைந்தான். கேகயதேசத்து ராஜன் சுரதன் அவன்பத்தினி சுரதசேனை இவ்விருவரும் புத்திரனில்லாமற் பெரியோரைக் கொண்டு மூன்று புத்திரரைப் பெற்றுக் கொண்டார்கள்.

இதன்றியும் உத்கிர்ஷ்டமானபுத்திரர் ஆறுபேர். அவர்கள்யாரெனில், அவுரசன் - க்ஷேத்திரசன் - தத்தன் - குறித்திமன் - கூடசன் - அபவிந்தன் - என்னுமிவர்களாம். இவர்களுள் - பெண்சாதியிடத்திற் பிறந்தவன், அவுரசன். புருஷன் வமிசத்தில் மூத்தவருக்குப் பிறந்தவன், க்ஷேத்திரசன். ஸ்வீகாரம்பெற்றுக் கொண்டவன், தத்தன். தாய்தந்தை யில்லாமல் தன்னாஸ்தியைக்கொடுத்து வளர்த்துக்கொண்டவன், குறித்திமன். தன் பத்தினி தன்வமிசத்தாருடன் சேர்ந்து பெற்றபிள்ளை, கூடசன். தாயுந்தந்தையும் வளர்க்க நிர்வாகமில்லாமற் போட்டுவிட வளர்த்துக் கொண்டவன், அபவிந்தன். இப்படிக்கு ஆறுபிள்ளைகளைப்பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு வழியில்லா விட்டால் நிகிர்ஷ்டமானபிள்ளைகள் ஆறுபேர். அவர்கள் யாரெனில் கரனீனன் -சகோடகன்- பிறித்திமன்- பவனற்பவன் - சுயந்தத்தன் - சவுத்திரன்-என்னுமிவர்களாம். இவர்களுள்-கன்னிகையீன்ற பிள்ளை, கரனீனன். கல்யாணம் பண்ணும்போது கர்ப்பமாயிருந்து பெற்றபிள்ளை, சகோடகன். மாதாபிதா விற்றுப்போட வாங்கி வளர்த்தபிள்ளை, பிறித்திமன், புநர்விவாகம்பண்ணிப் பெற்றபிள்ளை, பவனற்பவன். ஒருவனுக்குப் பிள்ளையென்று வந்து சரணம்புகுந்தவன், சுயந்தத்தன். பெண்வயிற்றிற் பிறந்துசொந்தப் பிள்ளைக்குச் சரியானவன், சவுத்திரன். இந்த ஆறுவித புத்திரசந்தானமாவது பெறவேண்டுமென்று வேத முறையிடுகின்றது. எனக்கு யிவைகளைவிட வேறுவழியில்லை யாதலால் நீங்கள் தடைகூறாமல் எந்த முனிவரையாவதுகூடிப் புத்திரனைப் பெறுங்களென்று வேண்டினான். இவ்வசனங்களைக் கேட்ட இரண்டுமனைவியரும் அனலில் வீழ்ந்த அரவிந்தமலர்போல் வதங்கிக் கணவன் திருவடியில் விழுந்து எழுந்து நின்று, ஓ மஹானுபாவா! நீர் வழங்கியசொற்களை நிதானிக்குமளவில் மானங்கெட்டாற் கெடட்டும் புத்திரனுண்டானாற் போதுமென்று நினைக்கிறதாய்த் தோன்றுகிறது. இஃதுதகுதியா? இவ்வாறு நாங்கள் செய்யலாமா? என்று மறுக்க அரசன் மனைவியரைநோக்கிச்சொல்லுகின்றான்: புண்ணியவதிகளே! எனக்கில்லாத மானமுமீனமும் உங்களுக்கு வந்ததென்ன? கணவனொரு கட்டளையிட்டால் அதுகெடுதியா யிருந்தபோதிலும் அக்கட்டளைக் குட்பட்டு நடத்தல் கற்புடைய மாதர்களி னிலக்கணம். நானோ கெடுதியான கட்டளையை உங்களுக்கு இடவில்லை. தர்மத்தைப் போதித்து நடவுங்களென்றால் ஏன் மறுக்கிறீர்கள்? நான் கூறுவது பழுதல்ல. நானும் என்தமயன் திரிதராஷ்டிரனும் தம்பி விதுரனும் என்

(REGISTERED-COPY-RIGHT.)

ஆதிபர்வம்-எ௱-வது-பக்கம்.)

కు.శి.సుబ్రమణ్యంరాజు.వారుసంకే.

தந்தையாகிய சித்திரவீரியனுடைய புத்திரரல்ல. எங்கள் வரன்முறையைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று வேதவியாசரால் தாங்கள் வந்த வரலாற்றை ஆதியோடந்தமாகச் சொன்னான்.

தருமனுற்பவம்.

அதுகேட்ட குந்திதேவி கணவன்சொல்லை மறுப்பது தகுதியல்லவென்று கருதி, முடித்தாலும் நல்லமலனை முடிக்கவேண்டுமாதலால் யாரைச்சேர்ந்து புத்திரபாக்கியம் பெறலாமென்றுதனக்குள் ஆலோசித்திருக்கிற தருணத்தில், தூறுவாசர் தனக்கு உபதேசித்த திவ்விய மந்திரங்களை நினைத்துக்கொண்டு கணவனைவணங்கி. ஓமஹானுபாவா! எளியேன் ஒருவிண்ணப்பம் செய்கிறேன்; அது தங்கட்கு உத்தமமாயிருந்தால்அவ்வாறுசெய்வோம்.அதாவதுநான்சிறுவயதாயிருந்தகாலத்தில் தூறுவாசருக்குப் பணிவிடைப் பெண்ணாக இருந்தேன். அவர் யான் பயபத்தியுடனே செய்துவரும் பணிவிடைக்கு மகிழ்ந்து சிலமந்திரங்களையுபதேசித்தார். அம்மந்திரங்களின் மாக்ஷிமை யென்னவென்றால், எந்தத் தெய்வத்தை நினைத்து மந்திரத்தை யுச்சரிக்கின்றேனோ அந்தத்தெய்வம் வந்து என்னைக்கூடிப் புத்திரபாக்கியத்தைக் கொடுக்கும். அவ்வாறு செய்வது தங்களுக்குச் சம்மதிதானா? என்றுகேட்கவும் அது கேட்ட பாண்டுராஜன் மகிழ்ந்து சொல்லுகிறான். ஓ! பெண்கள் நாயகமே! இப்போது நீ கூறிய வசன மெவ்வாறிருந்த தென்றால், சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தா லெவ்வளவு இனிப்பைக்கொடுக்குமோ அவ்வளவினிப்பைக் கொடுக்கின்றது. அவ்வாறு செய்வது அதிக உத்தமம். எனக்கு எல்லாவிதத்திலும் இது மிகவுஞ் சம்மதிதான் செய்யென்று கட்டளை யிட்டான். அதற்குக்குந்திதேவி ஒத்துக்கொண்டு பன்னகசாலையிற் சென்று, அரண்மனையி லிருக்கும் பள்ளியறைபோல் புட்பங்களால் அலங்கரித்து, அந்திவேளையில் நல்ல தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஆடை யாபரணங்களை நிரம்பவணிந்து, தூறுவாசரைத் தியானித்து அவர் கூறிய மந்திரத்தில் ஒன்றை யமனைநினைத்து உச்சரித்தாள். அம்மாத்திரத்தில் மந்திர தேவதைகள் ஓடிப்போய் யமனைச் சூழ்ந்து ஒருராஜகன்னிகை உம்மை யழைக்கிறாள் வாருமென்று பற்றி இழுக்க, அந்த யமன மந்திர தேவதைகளைக் கண்டு வியப்புற்றவனாய் அத்தேவதைகளின் கருத்தின்படி பூலோகத்தி லிறங்கி, குந்திதேவி யிருக்கிற பன்னகசாலைக்குட் புகுந்தான். குந்திதேவி அவனை எதிர்கொண்டுவந்து அழைத்துப் போய் மலரணையி லிருத்திச் சோடச உபசாரமுஞ் செய்து, யானை மருப்பையும் கனகப் பொருப்பையும் வென்று வெற்றிபெற்ற முற்றா முலையை யமனது மார்பூடுருவ அழுத்திப் புல்லினாள். அக்கால் யமன் சற்று ஆலோசித்து, ஸ்திரீகள் வலிய அணைய யத்தனித்தால் யாரா யிருந்தபோதிலும் தடை கூறாமற் புணர வேண்டுமென்று வேத முறையிடுகின்றதினால் இனிநாம் தடை சொல்லொணாதெனக் கருதி அதிக மகிழ்வை யடைந்து குந்திதேவியை இறுகத் தழுவி, ஆலிங்கன முதலிய புறத் தொழிலையும் சண்டவேக முதலிய அகத் தொழிலையும் புரிந்தணைந்தான். உடனே யமனது வீரிய விர்த்தியாற் குந்திதேவி வயிற்றிற் கருவுண்டாகிக் குருவாரத்தில் நவக்கிரகங்களும் நல்ல நிலையி லிருக்கிற தருணத்தில் உலகையெல்லாம் ஒருகுடையி லாளத்தகுந்த சிறப்பினை வகித்த ஒருபுத்திரன் பிறந்தான்.

அப்புத்திரன் பிறந்த மாத்திரத்தில் தேவர்களெல்லாம் கற்பகப் பூவைவாரி மாரிபோற் றூவி, துந்துமி வாத்திய முதலியவைகள் முழக்கி, ஜயா விஜீபவாவென்று அக்ஷதைகளை இறைத்துப் பல ஆசிகளுங் கூறினார்கள். அரம்பை ஊர்வசி இருவரும் நடனஞ் செய்ய, மேனகை திலோர்த்தமை முதலியபெண்கள் பாடினார்கள். உலகத்திற் பட்டுப்போன மரங்களெல்லாம் தளிர்த்தன. கங்கைபொங்கிக்களித்தாள். பூர்க்காத மரங்களெல்லாம் புஷ்பித்துத் தேன்மாரிபொழிந்தன. தருமதேவதை அதிகமகிழ்வோடு நாலுபாதத்தினாலேயும் நடந்தனள். மேகங்கள் சப்தித்தன. குளிர்ந்த காற்று வீசிற்று. வேத வேதியர்களுக்கும் தவசிரேஷ்ட சிகாமணிகளாகிய முனிவர்களுக்கும், தங்களுக்குள் தற்செயலாய் மகிழ் வுண்டாகி உள்ளம் பூரித்தவரானார்கள். இவ்வாறான நன்னிமித்த முண்டாகவே சதானந்தர் - வசிஷ்டர் - வான்மீகர் - விஸ்வாமித்திரர் - முதலாகிய முனிவர்கள் இன்னிமித்தத்தைக் கண்டு வியப் படைந்து, நிர்நிமித்தமாக இந்நிமித்தமுண்டானதற்குக்காரண மென்னவென்று தங்களுக்குள் தாங்களே யோசித்துத் தங்கள் தங்கள் ஞான திருஷ்டியால் நோக்கும் போது பாண்டு ராஜனுக்கு யமன் அமிசையாற் புத்திரனுண்டானது தெரிந்து, இனி உலகம் நன்மையை அடைவதுமன்றி நமக்கும் அதிக நலமுண்டா மென்று மகிழ் வடைந்தார்கள். குந்திதேவி புத்திரனை வாரித்தழுவி எடுத்து வந்து கணவன் கரத்திற் கொடுத்தாள். கணவனாகியபாண்டுராஜன் அப்புத்திரனைக் கண்ட மாத்திரத்தில் இருவினைகளாகிய ஆலையி லகப்பட்டு வருத்தமுற்று அவ்வினையை நீங்கிப் பரமபத மடைந்தவர்கள் எவ்வளவு மகிழ்வை அடைவார்களோ அவ்வளவு மகிழ்வை அடைந்து, புத்திரனை வாரியணைத்து உச்சிமுகந்து உள்ளங்கால் முத்தமிட்டுப் பலகாற் கண்ணி லொத்திக் கொண்டு, இப்புத்திரனுக்கு என்னபெயரிடலாமென்று யோசிக்கின்றான். அப்போது ஆகாயவாணி ஓ பாண்டுராஜனே! இந்தப் புத்திரனுக்குத் தருமராஜனெனப் பெயரிடுவென்று விளம்ப பாண்டுராஜன் அந்த அசரீரி வாக்கியப்படி அதிக மகிழ்வோடு தருமராஜனென்று பெயரிட்டு மூன்றுதரம் அழைத்து, அங்கி

ருக்கும் பெரியோர் களுக்கும் மற்றவர்களுக்கும் தன்னாற் கூடியமட்டும் பேருதவியைச் செய்து, கண்ணையுங் கருத்தையும் புத்திரன்மீதுவைத்துப் பாதுகாத்து வந்தான்.

கேட்டீரோ ராஜராஜேஸ்வரனான ஜெனமேஜெய மஹாராஜனே! அங்கே அஸ்தின புரத்தில் நடந்த விர்த்தாந்த மென்ன வென்றால் - எங்கும் வியாபித்து எல்லாச் சமாசாரங்களையு மறிந்து வருகிற நாரதர் பாண்டு ராஜன் புத்திர பாக்கியம் பெற்றதை அறிந்து அஸ்தின புரத்துக்குச் சென்றார். அவரை வீஷ்மர் திரிதராஷ்டிரன் விதுரன் முதலானவர்கள் எதிர்கொண்டுவந் தழைத்துப்போய் பொற்பீடமளித்து, சோடசவுபசாரத் துடன் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, ஓசுவாமி! அடியேங்கள் செய்த மாதவப்பேறல்லவா தங்களைத் தரிசிக்கச் செய்வித்தது என்று பலவாறு புகழ்ந்து நின்றார்கள். நாரதர் அம் மூவருக்கும் ஆசிகள் வழங்கி, ஓ புண்ணிய வான்களே! ஒரு நல்லசங்கதி கேளுங்கள். அஃதென்னெனில் - பாண்டு மஹாராஜன் வேட்டையாடக் காட்டிற்சென்று ஓர் முனிசிரேஷ்டனாற் சாபம்பெற்று, அவ்வியாகூலத்தினாற் பின்பு தவவேடம்பூண்டு தவத்தி லிருந்து சதானந்த முனிவர் முதலிய முனிவரோடு கைலாயத்தைத் தரிசிக்கச்சென்றபோது, முனிவர்கள்பாண்டுராஜனைநோக்கிப் புத்திரனில்லாதவர்கள் புண்ணிய லோகத்தைப் பார்க்கொணா தாதலால் தருமசந்தானமாவது அடைவையாகில் உன்கருத்துமகிழ்வெய்தப் புண்ணியலோகத்தைப் பார்க்கலாமென்றுமறுத்தார்கள். அதன்மேல் பாண்டுராஜன் மனைவியரிடத்து முறையிட, அம்மனைவியரிற் குந்திதேவி தூறுவாச முனிவராற்பெற்ற மந்திரங்களி லொன்றை நினைக்க, அந்த மந்திரத்துக்கு அதிதேவதையான யமன் வந்துகூடி ஒரு புத்திரனை அளித்துப் போயினன். அப்புத்திரன் பிறந்தபோது நன்னிமித்தங்க ளுண்டாயின. உடனே ஆகாயவாணி பாண்டுவை அழைத்து, இச்சிறுவனுக்குத் தருமராஜனெனப் பெயரிடுவென்று கட்டளையிட்டாள். பாண்டுராஜன் அவ்வாக்கின்படி தருமராஜனென்று பெயரிட்டு மஹா களிப்புடன் வளர்த்து வருகிறான். இந்தச் சேதியை உங்களுக்குச் சொல்லவந்தே னென்றார். இதைக்கேட்ட வீஷ்மர் திரிதராஷ்டிரன் விதுரன் மந்திரிகள் பிரதானிகள் முதலியயாவரும் மிகுந்தமகிழ்ச்சியை அடைந்தார்கள். இந்தச் சங்கதியை நிறைந்த கருப்பத்தோடும் அந்தப்புரத்தி லிருக்கிற காந்தாரி கேட்டு மிகுந்த வருத்த மடைந்து, நாம் பட்டத்தரசன் மனைவியாயும் மூத்தவளாயு மிருக்க நமக்குமுன் நமது மைத்துனன்மனைவி புத்திரனைப்பெற்றாளே யென்று பொறாமை கொண்டு, ஒரு குழவிக்கல்லை யெடுத்து அடிவயிற்றுக்கு நேரிற் பிடித்து, இது என்பாவமா? இது என்தோஷமா? நானுண்டா யிருப்பது பிள்ளையா? பேயா? பூதமா? அல்லது பெருவயிறா? ஐயோ என்றீவினைப்பயனிவ்வாறும் இருக்குமாவென்று இடித்துக் கொண்டாள்.

துரியோதனாதியருற்பவம்.

அப்போது காந்தாரி கரு தரித்து முப்பத்தாறுமாத மாயிற்று. கல்லாற் குத்திக் கொள்ளவே அக்கருப்பங் கலங்கி இரத்தம் வெளிப்பட்டது. இதைப் பார்த்த தாதிகள் பரிமளகந்தியிடத்திற் பதறிச்சொன்னார்கள். அதை யவள் அரசர்களுக்குத் தெரிவித்தாள். அரசர்கள் கனவருத்தமடைந்தவர்களாய்அதற்கொரு உபசாரமுஞ் செய்யாமல் முழுது மறந்திருந்தார்கள். அப்போது யோசனைகந்தி தனது முதற்குமாரனாகிய முதல்வனை நினைத்தாள். உடனே திவ்யசக்தியான ஸ்வரூபி யாயும் எனக்குக்குருவாகியும் விளங்குகிற வேதவியாசர் அதி வேகமாகவந்து தாயைப்பணிந்து சங்கதி யறிந்து அந்தப் புறத்திற் சென்று காந்தாரியைத் தூற்றி, அங் கிருப்பவர்களாற் சில பாத்திரங்களை அழைப்பித்து அவற்றுள் பெரிய பதலை யொன்றில் அவ்வுதிரத்தையேந்தி, மிகுந்த உதிரத்தை(௧௱௧) சிறுஜாடியி லடைத்து, சிந்திய உதிரத்தை வாயகன்ற ஓர் பாண்டத்தில் நிரப்பிவைத்துக் காந்தாரியை அழைத்து, ஓ அம்மணி! பாவங்களெல்லாவற்றிலும் மேலான கெடுதியை விளைக்கின்ற பொறாமை யாகிய பொருளை ஏன் வகித்திருக்கிறாய்? அதனால் மஹா பராக்கிரம சாலியாகி இவ்வுலகத்தை யெல்லாம் ஒருகுடையி லாளத் தகுந்த சிறப்பினை வகித்த புத்திரப்பேற்றைக் கெடுத்தனையே: இனிபொறாமையை மேற்கொண்டிராதே: இங்ஙனம் அமைத்த பாண்டங்களிலிருக்கிற நாதங்களின்மேற் கருத்துடையவளாய் இப்பாண்டங்களுக்குக் கருப்பச் சூடுபட அணைத்து, நித்தம் நித்தம் நெய் - பால்-தேன் இம்மூன்றையும் அறுகினால் தோய்த்துப் பதலைகளின் பக்கத்தில் ஈரம் உலராமல் ஒத்திக் கொண்டு வருவையாகில் அதிலுள்ள கருவனைத்தும் உருவாகிப் பெரியபதலையி லிருக்கின்ற கரு முன்னதாக அதனை யுடைத்துக் கொண்டு வெளிப்படும். மற்றச் சாடிகளிலிருக்கிறவைகள் ஒவ்வொரு நாளைக் கொவ்வொன்றாகப் பிறக்கும். அதுவரைக்கும் அதிகஜாக்கிரதையாகப் பாதுகாத்துவா என்று கட்டளையிட்டுச் சிலமந்திரங்களை யுச்சரித்துத் தாயிடத்தில் விடைபெற்றுத் தமதிருப்பிடம்போய்ச் சேர்ந்தார். காந்தாரி வியாசர் கூறியபடி அப்பதலைகளைப் பாதுகாத்து வந்தாள். அவ்வாறு காத்துவருகிற காலத்திற் பெரும் பதலையிலிருந்த உதிரம் உருவாகி, அந்திப் பொழுதில் அசுரவேளையில் பதலையை யுடைத்து முதலையை நிகர்த்த ஒருமதலை வெளிப்பட்டான்.

இப்பால் மற்றச்சாடி களிலிருக்கிற உதிரங்களும் உருவாகி, நாளுக்குநாள் ஒவ்வொன்றாகச் சாடிமூடியைத் திறந்து பிறந்தன. அஸ்தினபுரத்திற் புத்திரர்

REGISTERED-COPY-RIGHT.

(ஆதிபர்வம்-எசு-வது பக்கம்.

கள் பிறந்தவுடனே ஓரியும் நாயும் ஒருங்கே அழு
தன. இரத்தமழை பொழிந்தது. வெள் ளெலும்பும்
சிவந்தமலரும் ஆகாயத்தினின்றும் விழுந்தன. இவ்
வாறு பல துர்நிமித்தங்க ளுண்டாகலும் இந்த நிமித்
தங்களைக்கண்ட வீஷ்மர் முதலானவர்கள் கனவருத்
தமடைந்து, இப்புத்திரர்களால் என்ன விபரீதம் நட
க்கப்போகின்றதோ வென்று மனதுக்குள் நினைத்து,
அப் புத்திரருக்கு அரசருள் நடக்கும் சடங்கினை எல்
லாங் குறைவற நடாத்தி,நல்லபெரியோர்களை அழை
ப்பித்து நாமகரணமிடும்படிகேட்டுக்கொண்டார்கள்.
அப்பெரியோர்கள் இப்பிள்ளைகள் உதிரமாகிப் பதலை
யிலிருந்து பிறந்தமையால், துரியோதனனென்று மு
தற்பிள்ளைக்குப் பெயரிட்டு, மற்றவர்க்கு- துச்சாஸ
னன்-துர்த்தருஷன் - துன்முகன் - சலந்தன் - சகன்
சமன்-விந்தன்-அனுவிந்தன் - துருவாகன் - சுபாகு-
துஷ்பதருஷ்ணன் - துஷ்டந்தன் - சித்திரயோதி- து
ஷ்கிரமன்-விம்சதி-விகருணன் -சலசந்தி - சுலோசன
ன்-சித்திரன்-சித்திராசுவன்-சாருசித்திரன் -சாரசன்-
துன்மருஷ்ணன்-விவிக்ஷன்-விகபசமன்-பூரணநாமன்-
சுநாபன்-நந்தன் - உபநந்தன் - சேநாதிபதி - சுஷே
ணன்-குண்டோதரன் - மகோதரன் - சித்திரத்துவம்
சன்-சித்திரதன்-சித்திரபாகு-அமித்திரசித்து - சித்தி
ரபாணன்-சித்திரவன்மி-சுவன்மி- துருவிமோகன்-சித்
திரசேனன் - சித்திரகண்டன் - சுசித்திரன் - சித்திர
வன்மதான்-அபராசிகன்-பண்டிதன் - விசாலாக்ஷன்-
மார்பரன்-அசிதன்-சயந்தன்-சுவேச்சை- துர்ச்சயன்-
துருடஅஸ்தன் - சுகஸ்தன் - பாதவேகன் - சுவரசே
னன்- ஆதித்தகேதன் - பகாசி - நாகதந்தன் - உக்கிர
சாயி-கவசி-நிஷங்கி-பாசி-தண்டதரன்-தனுக்கிரகன்-
பீமதரன் -பீமவேகன் - பீமவாகு-அலோலகன் - பீம
கருமன்- சுபாகன் - பிவிக்கிராந்தன்-அபயன் - ருடிக
ருமன்-துருடிரதன் அநாதி- ருஷியன்-குண்டபேதி -
விராவி-தீர்க்கலோசனன்-தீர்க்கவசன் - தீர்க்கபுஜன்-
அதீர்க்கன்-தீர்க்கன் - தீர்க்கபாகன் - மகாபாகு - வி
வியூடோரஸ்கன்-கனத்துவசன்-மகரகுண்டன்- குண்
டன்-குண்டசன்-அசுவன்-சித்திரகன் - நுக்கிராயுத
ன்-பாலகீர்த்தி - கந்தாயு - விரோசன் -சகுண்டலன்-
விகடன்-என்று தொண்ணூற்றொன்பது புத்திரர்களு
க்கும்பெயரிட்டார்கள். பின்புமற்றொரு பதலையிலிருந்
த உதிரங்கருவுருவாகி அப்பதலையையுடைத்துக்கொ
ண்டு ஒருபுத்திரிதோன்றினாள். அப்புத்திரிக்கும் அப்
பெரியோர்கள் துர்ச்சலையென்று பெயரிட, வீஷ்மர்
முதலிய யாவரும் அப்பிள்ளைகளையும் பெண்ணையும்
அதிகமகிழ்ச்சியோடு சீராட்டி வளர்த்துவந்தார்கள்.

வீமனுற்பவம்

இந்த நூற்றொருவரில் துரியோதன் உதித்த
அத்தினமே நாரதமுனிவர் சிருங்கிவனத்திற் சென்று
பாண்டுராஜனைக் கண்டு, அவன்செய்த பூசையை ஏற்
றுப்பல ஆசிகள்கூறிச்சொல்லுகிறார்:ஓமஹாத்மாவே!
திரிதராஷ்டிரன் மனைவி உங்களுக்குப் புத்திரன் பிறந்
தானென்பதை அறிந்து தன்வயிற்றில் ஒரு குழவிக்
கல்லாற் குத்திக்கொண்டாள். அதனால் கருப்பங்க
லங்கி உதிரப்பிரவாக முண்டாயிற்று. வியாச ரதனை
யுணர்ந்து அவ்வுதிரங்களை நூற்றொரு பதலைகளிலேவ்
திவைத்தார். அவையனைத்துங் கருவுருவாய்த் திரண்டு
இன்றையதினம் பெரியபதலையை யுடைத்துக் கொண்
டு ஒருபுத்திர னுண்டானான். மற்றப்பதலைகளி லிருக்கி
ற உதிரங்களும் நாளுக்கொவ்வொன்றாக உருவாகிப்
பலபுத்திரர் உதிப்பார்களென்று புகன்றுபோயினர்.
இவையனைத்துங் கேட்ட பாண்டுராஜன் தன்மனைவி
யாகிய குந்திதேவியை அழைத்து, ஓ பெண்கள் நாய
கியே! உன்மூத்தார்மனைவி இன்றொரு புத்திரனைப்பெ
ற்றதல்லாமல், இன்னும்நூறுபுத்திரரைப்பெறப் போ
கின்றாளாமே: நீ ஒருபுத்திரனைப் பெற்றாற் பயனென்
ன? அருமையான தவத்தாலடையும் திவ்ய மந்திரங்க
ள் உனக்கு இலேசிற் கிடைத்திருக்க, நீயேன் அந்த
மந்திரங்களை வீணாக்குகிறாய்? வல்லமையிற் சிறந்த
வாயுபகவானை நினைத்து ஒரு மந்திரத்தைச் செபித்தி
டுக. என்று கட்டளையிடவும் குந்திதேவி கணவன்
சொல்லிய கட்டளைப் படி ஸ்நானஞ் செய்து, பன்னக
சாலையிற் சென்று நல்ல ஆடை யாபரணங்களைஅணிந்
து மலரணையிட்டு, அன்றிரவில் வாயுபகவானை நினை
த்துஒருமந்திரத்தையுச்சரித்தாள். அம்மந்திரதேவதை
கள் ஓடோடியும் சென்று வாயு பகவானைச் சூழ்ந்த
ழைக்க, வாயுபகவான் குந்திதேவி யிருக்கும் பன்ன
சாலைக்கு வந்தான். குந்திதேவி எதிர் கொண்டு போ
யழைத்துவந்து மலரணையி லிருத்திச் சோடச உப
சாரமுஞ்செய்து,தனது இருமுலைகளு மழுந்தப் புல்லி
னாள். வாயுபகவான் அதற்கு மனமகிழ்ந்தவனாய்க் கட்
டியணைந்து புணர்ந்தான். உடனே அவ்வாயு பகவான்
வீரியவிர்த்தியாற் குந்திதேவி கர்ப்பந்தாங்கிக் கரிய
மேகம்போல் நிறத்தை யுடைய ஒரு புத்திரனை நல்ல
சுப முகூர்த்தத்திற் பெற்றாள். அப்புத்திரன் காந்தா
ரியினது பெரும்பதலையிலிருந்து வெளிப்பட்ட புத்
திரனுக்கு ஒருநாள் இளையவனாகியும், அவனோடுமற்
றத் தொண்ணூற்றொன்பது புத்திரர்களின்வல்லமைக்
கு மேலான வல்லமையை யுடையவனாகியு மிருந்தா
ன். இவனைப் பாண்டுராஜன் பார்த்து இப்புத்திரனுக்
கு என்ன பெயரிடலாமென்றுயோசித்திருக்கும்போது
ஆகாயவாணி பாண்டுராஜனை அழைத்து, இப்புத்திர
ன் வல்லமையில் மாருதிக் கொப்பாக இருப்பானாதலா
ல் இவனுக்கு வீமனென்று பெரிடுவென்ன பாண்டுரா
ஜன் அவ்வாறே வீமனென்று பெயரிட்டு மூன்றுதரம்
அழைத்து, தானதருமங்களைச்செய்து மகிழ்திருந்தா
ன். வீமன் பிறக்கும் போது தடாகம் ஏரிமுதலான
வைகளி லிருக்கும் சங்குகள் முழங்கின.

அருச்சுனனுற்பவம்.

இங்கே குந்திதேவி கணவனை வந்து வணங்கி, ஓ ஸ்வாமி! இன்னு மிரண்டுமந்திர மிருக்கிற தென்று சொல்ல பாண்டு ராஜன் இந்திரனை நாடி ஒருமந்திரத்தை யுச்சரியென்றான். குந்திதேவி அவ்வாறு இந்திரனை நினைத்து ஒருமந்திரத்தை யுச்சரித்தாள். இந்திரன் வந்து மனமொத்துப் புணர்ந்தான். உடனே இந்திரன் வீரிய விர்த்தியாற் குந்திதேவிக்குக் கர்ப்பந்தரித்துக் கருவுருவாகப் பங்குனிமாதம் உத்திர நக்ஷத்திரம் பூர்ண சந்திரோதயத்தில் அருமையான நன்னிமித்தங்கள் தோன்றவும் தேவர்கள் கொண்டாவுமாக ஒருபுத்திரனைப் பெற்றாள். அப்புத்திரன் மதன்போல்வடிவும் திருமால்போல் வல்லமையும்பெற்று விளங்கினான். அப்புத்திரனைக் குந்திதேவி வாரித்தழுவி எடுத்துவந்து கணவனிடத்துக் கொடுத்தாள். பாண்டுராஜன் அப்புத்திர னுடைய சுந்தரத்தையும் இராஜ அமிசையையுநோக்கி மகிழ்வையடைந்து இப்புத்திரனுக்கு என்னபெய ரிடலாமென்று நினைத்த மாத்திரத்தில் ஆகாயவாணி பாண்டுவை அழைத்து இப்புத்திரனுக்குப் பற்குன னென்று பெயரிடு வென்றாள். அவ்வாறே பாண்டுராஜன் பற்குனனென்று பெயரிட்டு மூன்றுதரம் அழைத்துத் தான தருமங்களைச் செய்தான். இவ்வாறு மூன்றுபுத்திரர்களும் வளர்ந்து வருகிறகாலத்தில் ஒருநாள் மத்திராதேவி தன் கணவன் தனித்திருக்கிறவேளை யறிந்து வந்து வணங்கி ஒருவசனஞ் சொல்லுகிறாள்.

நகுலசகாதேவருற்பவம்.

ஓ ஸ்வாமி! என் தமக்கையான குந்திதேவிவேறு நான்வேறல்ல. அவள் வயிற்றிற் பிறந்த புத்திரர் என்வயிற்றிற்பிறந்த புத்திரர்தான். ஆகிலும் எனது கருப்பக்குறைதீர என்வயிற்றி னிடமாக இரண்டு புத்திரரைப் பெறவேண்டு மென்று காதல்கொண் டிருக்கிறேன். தங்களுக்கோ சாபம் நேரிட்டிருக்கின்றது. எனதுகாத லெவ்வாறு நிறைவேறும்? என்று வேண்ட பாண்டுராஜன் மத்திராதேவி கொண்டிருக்கிற கருத்தை யுணர்ந்து, ஓ பெண்ணே! உன் கருத்தின்படி இரண்டு புத்திரரைப் பெறும்படி செய்கிறே னென்று சொல்லிக்கொண் டிருக்கையிற் குந்திதேவி வந்துவிட்டாள். பாண்டுராஜன் குந்திதேவியை நோக்கி, ஓ பெண்கள் நாயகமே! உன்தங்கை இரண்டு புத்திரரைத் தன்வயிற்றிற் பெறவேண்டுமென்று காதல்கொண்டு இருக்கிறாள். உன்னிடத்தில் இன்னும் ஒரு மந்திர மிருக்கின்றதே அதை யவளுக்குபதேசித்து, அந்த விதியையுஞ்சொல்லென்று நயிச்சியமாக வுரைத்தான். அதற்குக் குந்திதேவி மகிழ்வடைந்து சொல்லுகிறாள்: ஓ ஸ்வாமி! தாங்கள் இப்போது கூறிய கருத்தின்படி நடக்க முன்னமே என்கருத்தி லுண்டு. அவ்வாறே மந்திரோபதேசம் செய்கிறே னென்று சொல்லித் தன்தங்கையான மத்திராதேவியை வேறொருவிடத்தி லழைத்துப்போய் ஸ்நானஞ்செய்துவரச் சொல்லி, வந்தவுடன் மந்திரோபதேசஞ்செய்து அந்த விதியையுங் காட்டினாள். மத்திராதேவி கணவனிடத்துவந்து வணங்கி, ஓஸ்வாமீ! நானிரண்டு புத்திரர்களைப்பெறவேண்டுமாதலால் தங்கள் உத்திரவெப்படியென்றுவினவ, பாண்டுராஜன் - ஓ பெண்கள்நாயகமே! அஸ்வனிதேவர்களை நாடி மந்திரத்தை யுச்சரித்தால் இரண்டு புத்திர ருண்டாவாரென்றான்.

மத்திராதேவி அன்றிரவில் ஸ்நானஞ் செய்து நல்ல ஆடையாபரணங்களை அணிந்து, பன்னகசாலையைச் சுத்திசெய்து மலரணையிட்டு அஸ்வனி தேவர்களை நாடி அம்மந்திரத்தை யுச்சரித்தாள். உடனே அஸ்வனிதேவர்கள் வந்து அம்மத்திரா தேவியைக் கூடிக் கலந்துபோயினர். அஸ்வனி தேவர்கள் இருவராதலால் மத்திராதேவி கருத்தரித்து முன்னும் பின்னுமாக இரட்டைப்புத்திரரைப் பெற்று, அப்புத்திரர்களை வாரித்தழுவி யெடுத்துவந்து கணவனிடத்துக் கொடுத்தாள். பாண்டுராஜன் அப்புத்திரர்களை உச்சிமுகந்து முகத்தோடு முகஞ்சேர்த்து முத்தமிட்டு மடியில்வைத்து இப்புத்திரர்களுக்கு என்னபெயரிடலாமென்று யோசித்திருக்கும்போது, ஆகாயவாணி பாண்டுராஜனை அழைத்து நகுலனென்றும் சகாதேவனென்றும் பெயரிடுவென்று திருவாக்கருளினாள். பாண்டுராஜன் அவ்வாறு பெயரிட்டு மூன்றுதரம் அழைத்துத் தான தருமங்களைச்செய்தான். தருமராஜன் - வீமன் - பற்குனன் - நகுலன் - சகாதேவன் இவ்வைவரும் பாண்டு மைந்தர்களாதலாற் பஞ்சபாண்டவரென்று பெயர்கொண்டு அங்கங்கு சென்று விளையாடுகிறதும், பெரியோர்களைக் கண்டு வணங்கி அவர்களுடைய ஆசிர்வாதங்களைப் பெற்றுச் சிறப்படைகிறதும், மிகுந்த வணக்கத்துடன் முனிவர்களுக்கு மகிழ்வுண்டாகநடந்து பலவரங்களைப் பெறுகிறதுமாகி யிருந்தார்கள். இவ்வாறு இவர்கள் நடந்துவருகிறநாளில் அவ்வனத்தி லிருக்கும் முனிவர்களும் பெரியோர்களுங்கூடி, இப்புத்திரர்கள் சிறந்த விவேகிகளாக இருக்கிறார்களென்று உபநயனஞ் செய்து நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநாலு கலைக்கியான முதலியவற்றைப் போதித்து, இராஜபுத்திரர்களாதலால் தனுர் சாஸ்திரத்தையும் கற்பித்தார்கள். இப்புத்திரர்கள் விளக்குமுன் காண்பித்த கர்ப்பூரம் எவ்வாறு பற்றுமோ அவ்வாறு முனிவர்கள் கூறியவற்றையெல்லா மனதி லழுத்தியும், சிறுவர்களாதலால் அவர்கள்கருத்துக்கிசைந்தபடி விளையாடி வருவார்கள். அக்காலத்திலேயே இவர்களிற் சிரேஷ்ட குமாரனாகிய தருமன் வேதாகமாதிகளைப் பயின்ற விவேகிகளோடு பழகி அவைகளைக்கற்றான். வீமன் சிங்கம்-புலி-கரடி

யானை - இவற்றை வாலைப்பற்றி இழுத்து, முனிவர்களிருக்கு மிடத்துக்குக் கொணடுவந்து தரையிலுருட்டி, அம்முனிவர்களவன் வல்லமைக்கு மெச்சி விட்டுவிடச்சொல்லி உத்திரவுசெய்ய அவர்கள் உத்திரவின்படி விட்டுவிடுவான். பற்குனன் பற்பல பராக்கிரமத்தோடு திசையனைத்தினுஞ் சென்று, தனுர்வித்தை ஜாலவித்தை முதலிய விநோதங்களைக் காட்டுவான். நகுல சகாதேவர்கள் நாற்றிசையோரு மகிழ்வெய்தக் கலைக்கியான விளையாடல்களைக் கற்பார்கள். பாண்டுராஜன் குந்திதேவி -மத்திராதேவி - இவர்கள் தங்கள் புத்திரர்கள் இவ்வாறு விளையாடி வருவதைக் கண்ணாற்கண்டு பரமானந்தத்தை அடைந்து, தங்கள் கருத்தையும் கண்ணையும் அப்புத்திரர்கள்மேற் செலுத்தி இடைவிடாமற் பாதுகாத்து வருகிறார்கள். அப்போது வசந்தகாலம் வந்தது. அசோகு புன்னை சண்பக முதலிய மரங்களெல்லாம் புஷ்பித்து நறுமணம் வீசத் தென்றல்வந் துலவிற்று. அக்காலத்திற் குந்திதேவி ஸ்நானஞ்செய்ய நதிக்குச்சென்றாள். ஐவரும் அந்தத் தாயைப் பின்தொடர்ந்தார்கள்.

பாண்டு மரணம்.

இங்கே பாண்டுராஜனும் மத்திராதேவியும் தனித்திருந்தார்கள். அந்த வசந்தகாலம் முற்றத்துறந்த முனிவருக்கும் மோகமுண்டாக்கித் தங்கள் மனதை வசந்தப்பச்செய்யுங் காலமாதலாற் பாண்டுவுக்குக் காமமேலிட்டு, (கெடுமதி கண்ணுக்குத் தோற்ருது.) என்கிற பழமொழிபோல் தனக்கு நேரிட்டிருக்கிற சாபத்தைக் காலகதியால் மறந்து அதிக விரகதாபங் கொண்டு, மத்திராதேவியைப் பார்த்துக் கைச்சரசஞ் செய்தான். அந்த மத்திராதேவியும் கணவனுக்கு நேரிட்டிருக்கிற சாபத்தை நினையாமல்மறந்து மதிமயங்கிக் கணவன்கருத்துக் கிசைந்து, மதனசாஸ்திர விதிப்படி ஆலிங்கன முதலியவற்றைச் செய்து புணர்ந்தாள். இரதியு மதனும்போலப் பாண்டுராஜனும் மத்திராதேவியும் கூடிப் புணருகிறபோது, வீரியங் கலிதமாகுந் தருணத்தில் அமுதந்திமுனிவரிட்டசாபப்படி இராஜன் பூமியில் விழுந்து மரணமடைந்தான். மத்திராதேவி கணவன்விழுந்ததை நோக்கி,நெடுநாளாய்ப் புணர்ச்சியில்லா திருந்த படியால் அதிக காமமேலிட்டுச் சோபித்து விழுந்தானென்று அரசனுக்குச் சிலசயித்திய உபசாரத்தைச் செய்தாள். அவ்வாறு செய்தும் அரசன் அசைவற்றிருக்கிறதைக் கண்டு தட்டி எழுப்பினாள். அப்போதும் பேசாதிருந்ததினால் இதென்ன விபரீதமென்று புரட்டிப்பார்த்தாள். அதற்கும் அசையாமல் கட்டைபோல் உடல்முழுதும் விறைத்துப்போகவே மனநடுங்கி, ஓ! ஓ! ஸ்திரீகளைப்புணர்ந்தால் மரணமடைவை யென்று அமுதந்தி முனிவர் சாபமிட் டிருந்தாரோ: அதனை மறந்து அரசன் புணர்ந்தாரோ: அதற்கு நாமும் ஒத்திருந்தோமே: அச்சாபப்படி இறந்துவிட்டார். இனி என்செய்யப் போகிறேனென்று ஓவென்றலறி அரசன்மேல் விழுந்து குயிலினமெல்லாம் நாணக்கதறியழுதாள் அதற்குள் குந்திதேவி ஸ்நானஞ்செய்து பன்னகசாலையருகில் வருகிறவள் அங்கு மத்திராதேவியழுகிற குரலோசையைக் கேட்டுத் திடுக்கிட்டு, ஏன் நமது தங்கை யழுகிறாள்? ஏதோ அரசனுக்குக் கெடுதி நேரிட்டதாக்கும். அதனால்தான் அழுகிறாளென்று மனதில்மதித்து ஐந்து புத்திரர்களும் ஆச்சரியப்பட்டுப்பின்னோடிவரத் தான் முன்னோடிவந்து பன்னகசாலையில் நுழைந்து கணவனிறந்திருக்கிறதை அறிந்து, ஐஐயோ !! ஈதென்ன கொடுமை தெய்வமேயென்று மேல்விழுந்துபுரண்டு, கோவென்று அழத்தொடங்கினாள். அப்போது மத்திராதேவி நடந்தவிருத்தாந்தத்தையுஞ் சொல்லினாள். குந்திதேவி அதனைக்கேட்டு, இது காலகதி என்று தீர்மானித்துப் புலம்புகிறாள். அப்போது பிள்ளைகள் ஐவரும் தாதிமார்முதலானவரும் கோவென்றலறவே இவ்வோசையை அங்கிருக்கின்ற முனிவர்களாகிய பெரியோர்களிற் சதானந்தர் வசிஷ்டர் வால்மீகர்முதலான தவசிரேஷ்ட சிகாமணிகளறிந்து யாவருமொன்ருகத்திரண்டுவந்து, அரசனிருக்கும் அவகோலத்தைக்கண்டு கனவருத்தமடைந்து, குந்திதேவி மத்திராதேவி ஐந்துசிறுவர்கள் தாதியர் முதலானவர்க்குத் தேறுதல் சொல்லிப் பிள்ளைகளாகிய ஐவரைக் கொண்டு நடத்த வேண்டிய கிரியாவிதிகளை யெல்லாங் குறைவற நடாத்திப் பாண்டுராஜனை அடக்கஞ்செய்தார்கள். இதற்குள் மத்திராதேவி குந்திதேவியை வணங்கி, ஓ அம்மணி ! உன்கிருபையினால் நான் இரண்டு புத்திரர்களைப் பெற்றேன். இவர்கள் உன் புத்திரர்களே யன்றி என்புத்திரர்களல்ல. இனி நான் பூமியிலிருந்தாற் கணவனுக்கு நேரிட்டிருக்கிற சாபத்தையறிந்திருந்தும் காமத்தை மேற்கொண்டு கணவனைக் கூடிக் கொன்று விட்டாளென்று உலகம் நிந்திக்கும். ஆகலால் ஒருக்கணம் பூமியி லிருக்கேன். கணவனோடு நானுமிறப்பேனென்று விலாபித்தாள். அப்போது குந்திதேவி சமாதானமுதலிய தேறுதல் கூறினும் பலவாறு கூறியும் மத்திராதேவி அவற்றையெல்லா மறுத்து, நகுலசகாதேவரைக் குந்திதேவியிடத் தொப்புவித்துத் தானும் உயிரைவிட்டாள். குந்திதேவி நகுலசகாதேவரைக் கொண்டு செய்யுங் கடனைச் செய்து மத்திராதேவியை அடக்கம் பண்ணி, ஐந்து புத்திரர்களையுந் தானே வைத்துக்கொண்டு அநாதைபோற் பரதவித் திருக்கிறாள். அத்தருணத்தில் வசிஷ்டர்- வால்மீகர் - விஸ்வாமித்திரர் - சதானந்தர் - இவர்களெல்லா மொன்ருகக் கூடிவந்து, குந்திதேவியைக் கண்டுதேற்றி ஒருவசனஞ் சொல்லுகிறார்கள்.

ஓ அம்மணி ! இச்சிறுவர்கள் ஐவரும் சொர்க்க மத்திய பாதாளமென்னு மூன்றுலோகத்தையும் ஆளத்தகுந்த வல்லமையானவர்கள். அவர்களை வீணாகக் காட்டில் வைத்திருந்து பயனென்ன? உன்நகரத்திற்

போய்ச்சேர்ந்து மூத்தாராகிய திரிதராஷ்டிரனிடமாயிருந்தாற் புத்திரர்கள் சிறப்படைவார்கள். ஆதலால் அத்தின புரத்துக்குச் செல்லென்று கட்டளையிட குந்திதேவி அம்முனிவர்களுக்கு வந்தனஞ்செய்து, ஓ சுவாமிகளே! அத்தினபுரஞ்செல்ல அடியேனுக்கு வழிதெரியாதே நான் என்னசெய்வேனென்று மறுமொழிகூற முனிவர்கள் ஆலோசித்து, நாமேகொண்டுபோய் அத்தினபுரத்தில் விடவேண்டுமென்று கருதி, அம்முனிவர்கள் குந்திதேவியையும் சிறுவர்களையும் அழைத்துப்போய் வீஷ்மர் திரிதராஷ்டிரன் முன்விட்டு, ஓ புண்ணியவான்களே! இந்த ஐவரும் பாண்டுராஜன்புத்திரர். இதோயிருக்கிறவள் குந்திதேவி. பாண்டுராஜன் வேட்டையாடக் காட்டிற் சென்றது முதல் மரணமடைந்தபரியந்தம் நடந்தவிருத்தாந்தம் இதுவிது. என்றெடுத்தோதி, ஓ மஹாராஜாக்களே! இப்புத்திரர்களை அற்பமாயெண்ணப் போகிறீர்கள். இவர்களால் இக்குலமும் இக்குவலயமுமல்லாமல், தேவர்களும் நாங்களும் சுகமும் கீர்த்தியும் அடையப் போகிறோம். இவர்களை மிகுந்த அன்புடன்வளர்த்து அரசுக்குரிய தொழிலையும் கல்வியையுங் கற்பித்துவாருங்களென்று கட்டளையிட்டு அவரவர்கள் செய்த வந்தனையை யேற்றுப் பல ஆசிகள்வழங்கித் தங்கள் தங்களிருப்பிடம்வந்து சேர்ந்தார்கள். வீஷ்மர் திரிதராஷ்டிரன் இவ்விருவரும் குந்திதேவியையும் சிறுவர்களையும் ஆதரித்து, இனியவசனங்களினால் தேறுதல் சொல்லிக் குந்திதேவியை அந்தப்புரத்துக்கு அனுப்பிப் புத்திரர்களை மடியில்வைத்துச் சீராட்டி மிகுந்த காதலோடு வளர்த்து வந்தார்கள். பின்பு வீஷ்மர் திரிதராஷ்டிரன் விதுரன் மூவருங் கூடிப் பாண்டுராஜனதுநிரியானத்தை நமதுசம்பந்திகளுக்குத்தெரிவிக்க வேண்டுமென்று உத்தேசித்துத் திருமுகங்களெழுதி, குந்திதேவியைப் பெற்ற யாதவகுல சூரசேன மகாராஜனுக்கும், குந்திதேவியை வளர்த்த குந்திபோஜனுக்கும், சூரசேனன் குமாரனுகிய வசுதேவனிடமாயப்பிறந்து முன்னம் பூமிதேவிக்குக்கொடுத்தவாக்குத்தத்தத்தை நிறைவேற்றக் கருதியிருக்கிற ஸ்ரீகிருஷ்ணசுவாமிக்கும், மத்திரதேசத்துக் கதிபனான மத்திரராஜனுக்கும், திரிதராஷ்டிரனுக்கு அம்மானாகிய காந்தாரதேசத்துச் சுவேத மஹாராஜனுக்கும், மற்றுமுண்டானநெருங்கியபந்துக்களுக்கு மனுப்பினார்கள். அத்திருமுகத்தை அவரவர்கள்கண்ணுற்று அக்கணம் பிரயாணமாகி அஸ்தின புரத்துக்கு வந்தார்கள்.

இப்படி யாவரும் வந்தசேதி வீஷ்மர் முதலானவர்களறிந்து எதிர்கொண்டுபோய் அவரவர்களுக்குத் தகுந்த மரியாதைகளைச்செய்து அழைத்து வந்து, கொலுமுகக்கூடத்தி லிருக்கிற திவ்யாசனங்களிலிருத்திப் பாண்டுராஜன் மரணவரலாற்றை விளங்கவுணர்த்தார்கள். வந்த அரசர்கள் மனங்கலங்கிக் கனவருத்தமுற்று, இவையனைத்துந் தெய்வகதியென்று ஒருவிதமாகத்தேறி, அந்தப்புரத்திற் சென்று குந்திதேவியைக்கண்டு மினவித் தேறுதல்சொல்லி, மறுபடியும் கொலுமுகக் கூடத்தில் யாவரும் ஒருமிக்கக் கூடி இருக்கிறார்கள். அத்தருணத்தில் திரிதராஷ்டிரன் புத்திரர்களும் பாண்டுராஜன் புத்திரர்களும் வந்து, கொலுமுகக்கூடத்தி லிருக்கும் குந்திபோஜன் முதலான அரசர்களுக்குச் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு நின்றார்கள். வணங்கின புத்திரர்களை அவரவர்கள் வாரித்தழுவி ஆசீர்வதித்துப் பாண்டுராஜன் புத்திரர்களாகிய ஐவரையும் நோக்கி அவர்களிருக்கிற நெறிப்புக்கும் அவர்களது ஒழுக்கத்துக்கு மகிழ்ந்து, அக்கால் பாண்டுராஜனை நினைந்துருகிய குந்திபோஜன் முதலான அரசர்கள் வீஷ்மர் திரிதராஷ்டிரன் விதுரன் முதலானவர்களை நோக்கிச்சொல்லுகிறார்கள். ஓ அரசர்களே! துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பாண்டுராஜன் புத்திரர்களாகிய இந்த ஐவரும் உங்களுக்கொரு கண்ணாயிருக்கிறார்கள். ஒருவேளை காலகதியால் ஒருவரை யொருவர் பிரிவார்களாகில், அப்போது நடந்துகொள்வதான காரியத்திற்கு நாங்கள் பாத்தியஸ்தராகையால் ஒருமொழி கூறுகிறோம். அஃதென்னெனில் திரிதராஷ்டிர மஹாராஜனுக்கு நூறு புத்திரர்கள். பாண்டுராஜனுக்கு ஐந்து புத்திரர்கள். இந்த யிருதிறத்தாருக்கும் இப்போதிருக்கிற சலநிதி பாஷாணம் மாவிடை மரவிடை அசையும் பொருள் அசையாப்பொருள் யாவும் பேர்பாதிபங்கேயன்றிக் குறைவானபங்கு கொடுப்பது தகுதியல்ல. இக்கருத்தை உட்கொண்டிருங்கள். என்றுரைக்க வீஷ்மர் முதலான மூன்றரசர்களும் இது சரிதானென்று சொல்லி ஒத்துக்கொண்டார்கள்.

அதற்குள் அந்தப்புரத்திலிருந்து சில தூதுவர் வந்து, போஜன வேளையாயிற்று எழுந்திருங்களென்று வணங்கினர். வீஷ்மர் முதலான அரசர்களும் வந்த அரசர்களும் எழுந்துபோய் ஸ்நானஞ் செய்து பூசைமுடித்து, உள்ளறையிலிட்டிருக்கிற பொற்பீடத்திலிருந்து, கைத்தல்-புளித்தல்-கார்த்தல்-கூர்த்தல்-துவர்த்தல் - தித்தித்த லென்னும் அறுசுவையோடு கூடிய - உண்டல் - தின்னல் - நக்கல் - பருகல் என்னும் நால்வகை யுண்டியையும் புசித்துக் கைகால்களைச்சுத்திசெய்து, விடாயாற்றிமண்டபத்தில் வந்து சந்தனம் - புழுகு - கஸ்தூரி - கற்பூரம் - சவ்வாது - முதலிய கலவைச்சாந் தணிந்து, பரிமள மலர்மாலைகளைப் புனைந்து, தாம்பூலந் தரித்துச் சற்றுநேரமிளைப்பாறிய பின்பு கொலுமுகக் கூடத்தில் வந்து, யாவருமிக மகிழ்வோடிருந்து, வந்த அரசர்களெல்லாம் வீஷ்மர் முதலியவர்களிடத்து விடை பெற்றுத் தந்தங்கள் தங்கள் நகரம்போய்ச் சேர்ந்தார்கள். இவர்களில் வசுதேவர் புத்திரராகியும்-தருமராஜனுக்கு நல்லம்மானுகியும் - பூமிதேவியினது சுமையைத் தொலைக்கின்றவராகியுமிருக்கிற நீலமேக ஸ்வரூபனாகி விளங்கும்

ஸ்ரீகிருஷ்ணபகவான் தரும ராஜனுக்குப் பதினைந்து நாழிகை இளையவராதலால் அத் தருமராஜனை வணங்கி ஓரிடத்தில் தனியே அழைத்துப்போய், ஓ மண்டலேஸ்வரா! உமக்கு இந்தத் திரிதராஷ்டிரனாலாவது அவன் புத்திரர்களாலாவது இன்னும் மற்றவர்களாலாவது ஒருகெடுதி நேரிடுகிறதா யிருந்தால், அப்போது என்க்குத்தெரிவியும். நான் என்தமயன் தம்பி முதலானவர்களோடு வந்து அந்த இக்கட்டைத் தீர்த்துப் பக்கத்துணையா யிருக்கிறேன். இதனை உறுதியாய் நம்பியிருமென்று ஸ்திரம்பேசி மற்ற நால்வரிடத்திலும் விடைபெற்றுத் தமது நகரத்துக்குச் சென்றார். சுவேத மஹாராஜன் புத்திரர்கள் நூற்றுவரில் யாவர்க்கு மிளையவனாகிய சகுனி துரியோதனனுக்கு நல்லம்மானாதலால், தன் தந்தையோடு சொல்லாமல் அத் துரியோதனனுக்குப் பக்கத்துணையா யிருந்து விட்டான். பரசுராமரிடத்து வில்வித்தை கற்றுத் தேர்ப்பாகன் வீட்டிலிருக்கிற கர்னன் ஒரு நாள் வேடிக்கையார்த்தமாய் வீதியில் வரும்போது துரியோதனன்கண்டு, பிராரத்துவ சம்பந்தத்தால் நிரோதுவாக ஓடி அவனைத் தழுவித் தமயனென்னு முறைகொண்டு சொல்லுகிறான்: ஓ அண்ணா! இன்றுமுதல் நாமிருவரும் பாலுநீரும் போலும்- எள்ளும் எண்ணெயும் போலும்-உடலும்உயிரும்போலும் வேற்றுமையின்றி இருக்க வேண்டும். போஜன முதலியவைகளும் என்னோடொப்புமையாகவிருந்து இங்குதானே புசியும். என்னைவிட்டுப் பிரியாமலிருமென்று உறுதிகூறினான். கர்னன் அதற்கொத்துக்கொண்டு, துரியோதனன்முதலான நூற்றுவரோடும் வேற்றுமையின்றி இருந்தான் கேட்டீரோ ஜெனமேஜெய மஹாராஜனே! இதுவரையில் நூற்றுவர்க்கும் பாண்டவர்க்கும் விரோதமில்லை. அந்தச்சகுனி சேர்ந்ததின் பின்பு நடந்த விர்த்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேளுமென்று கூறுகிறார்.

சம்பவச்சருக்கம் முற்றிற்று.

ஆறவது,

வாரணாவதச் சருக்கம்.

கண்ணன் துதி.

தொழுவார்தம் வினைதீர முற்கோல மாய்வேலை சூழ்பாரெயிற்
றுழுவானை நன்னும மொன்றாகி லுங்கற்றொ ருருவோதினார்
வழுவாத சுரராக நரராக புள்ளாக மாவாகபுன்
புழுவாக வொன்றிற்பி றந்தாலு நரகிற்பு கார்காணுமே.

நூற்றுவரும் பாண்டு மக்கள் ஐவரும் வேற்றுமையின்றி இருகிறத்தாரும் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள் போலக் கலந்து கற்றுணர்ந்த பெரியோர்களுடைய சிநேகம்போற் குற்றம் பாராட்டாமல் நேசித்துப் பந்துகழற்காய் முதலிய சிறுபிள்ளைகளுக்குரிய விளையாட்டல்களைப் பேதமில்லாமல் விளையாடிவருகிற காலத்தில், வீமன் தன் விளையாட்டுத் தொழிலின் அவசரத்தினாற் போகிற போதும்-வருகிற போதும்-ஓடுகிறபோதும் - நடக்கிற போதும்-கைகாற் படுகிற போதும் - துரியோதனன்தவிர மற்றச் சிறுவர்களிற் சிலர் பூமியில் விழுவர். சிலர் கண்சுழன்று வருத்தமுறுவர். சிலர் களைப்பர். சிலர் இளைப்பர். இவர்களை வீமன் நோக்கி, விழுந்தவரை யெடுக்கிறதும், வருத்த முறுபவரை ஆதரிக்கிறதும், களைப்பவரைக் களையாற்று கிறதுமா யிருப்பான். இதனை வீஷ்மர்முதலியபெரிய [illegible]சர்களும் மந்திரி பிரதானி முதலிய சேனைத்தலைவர்களும் பார்த்து வியப்படைந்து வீமனைப்புகழ்ந்து, இவ்வீமன் வலியினாற் கருடனை யொப்பானென்றுங் கல்லைப் போல்பவனென்றும் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுவார்கள். இவ்வார்த்தைகளைத் துரியோதனன் கேட்டுப் பொறாமைகொண்டு மனதில் வருத்தமுற்றிருப்பான். இப்படியிருக்கிற காலத்தில் ஒருநாள் துரியோதனன் கர்னனையும் நல்லம்மானாகிய சகுனியையும் அழைத்துக்கொண்டு தனியே ஒரு சிங்காரவனத்தி லிருந்து சந்திர காந்த மண்டபத்திற் புகுந்து, அங்கோரிடத்திலிருந்து அத்துரியோதனன் சொல்லுகிறான்; ஓ ஆப்தரே! உலகில் அரசர்கள் சிறியபகைகளை வைத்துக் கொள்ளுகிறதில்லை. ஏனென்றால்-கயத்தின் நீரில் தன்சாயல் தோன்றுவதைக் கண்டு மகிழ்வுற்றிருக்கிற யானையின் மனமானது, அல்பவுயிராகிய ஒருதவளை கலக்குமாகில் உடனே தன்னுருவழிந்ததாக வருந்திப்போம். ஆதலால் நான் அத்தினபுரத்துக்குச் சிரேஷ்ட அரசனுடைய புத்திரன். இன்னுஞ் சிலநாட் சென்றால் அப்பட்டம் எனக்குக் கிடைக்கும். அக்காலத்தில் என் சகோதரர்களும் ஐவரும் என்னிடமாகவே இருப்பார்கள். இப்போதே வீமன் பலவானா யிருக்கிறான். எனது சகோதரர்கள் அவன் [illegible]க்கிறவிசையில் அகப்பட்டுக் கொண்டு மிக வருத்தப் படுகிறார்கள். அக்காலத்தில் அவனை ஒருவேளை நான்கடிந்து கொள்[illegible]ல், மற்றத் தருமன்-பற்குனன்- நகுலன் - சகாதேவன் - இவர்கள் சும்மா யிருப்பார்கள். இந்தவீமன் முரடன். உடனே எதிர்த்துக்கொள்ளுவான். அப்போது ஒருவேளை தகுந்த தண்டனை செய்ய யத்தனிப்போமாகில், நம்மையெல்

லாம் அரைநொடியில் யமதண்டனைக் குட்படுத்தி விடுவான். ஆதலால் எவ்வித்தத்தி லாவது அந்த வீமனைக் கொல்ல வேண்டும். அப்படி நாம்கொல்வதிலும் நம்மா லிறந்தானென்று ஒருவர்க்குந் தெரியக்கூடாது. அவ்வண்ணமான ஒரு தந்தரஞ் சொல்லுங்களென்று வினவ சகுனிசொல்லுகிறான்.

வீமனைக் கங்கையில் வீழ்த்தல்.

ஓ மருமானே! நீயேன் கிலேசப்படுகிறாய்? இன்றையதினம் நாமெல்லோரும் இங்ஙனேதானே இருந்து, மற்ற உன்சகோதரர்களையும் அழைத்து வரச்செய்து விளையாடுவோமாகில்அவர்களோடும் ஐவரும் வந்து விளையாடுவார்கள். நாமின்றிரவில் இங்குதானே சயனித்துக்கொண்டால், நம்மோடு ஐவரும் சயனித்துக்கொள்வார்கள். கும்ப கர்னனைப்போல் வீமன் தூங்குவான். நடுராத்திரியில் நாமெழுந்து அவனைக் கட்டித் தூக்கிக்கொண்டுபோய்க் கங்கையிற்போட்டு விட்டால், நீ கொண்டிருக்கிற துன்பத்தை நீக்கிவிடுவாய். இதுதான் யுத்தியென்று சகுனிகூற அதனைக் கர்னனும் சரியென்றுசொல்லத் துரியோதனன் அக்கருதுக்கிசைந்து வெளியில்வந்து அங்கிருக்கும் காவலாளிகளை அழைத்து, என் சகோதரர்களை இங்குவரச் சொல்லுங்களென்று கட்டளையிட்டான். அத்தூதர்கள் ஓடி துர்ச்சாதனன் முதலானவர்களுக்குச்சொல்லவே யாவரும் ஒன்றாகத்திரண்டு சிங்காரவனத்திற்கு வந்தார்கள். யாதொருகளங்கமுமில்லாத ஐவரும் அவர்களோடு கூடிப்போனார்கள். துரிபோதனன் வந்தவர்களைநோக்கி, ஓ சகோதரர்களே! நாமெல்லாம் இங்குதானே விளையாடுவோமென்று கூற அதற்கவர்களொப்பிப் பந்தாடல் முதலிய பல விளையாட்டுகளிற் கருத்தைச் செலுத்தினார்கள். பாண்டுமக்களும் அவாளோடுகூட விளையாடினார்கள். பொழுது அஸ்தமனமாயிற்று. அப்போது யாவரு மொன்றாகக் கூடி இன்றிரவுக்கிங்குதானே யிருப்போமென்று தீர்மானித்துக்கொண்டு, அரண்மனையி லிருந்து போஜனம் வரும்படி தூதர்களுக்கு உத்தரவுசெய்தார்கள். அத்தூதவர்கள் போஜனங் கொண்டுவர நூற்றுவரும் பாண்டுமக்களும் சகுனியும் கர்னனும் புசித்து, அவரவர்களுக்கு இஷ்டமான இடத்திற் சயனித்துக்கொண்டார்கள். அத்தினம் விளையாட்டினால் யாவரும் அயர்ந்து நித்திரை செய்தாலும் துரியோதனன் கர்னன் சகுனி இம்மூவரும் நித்திரைகொள்ளாம லிருந்து, நடுராத்திரியில் எழுந்து வீமன் நித்திரைசெய்கிற விடத்திற்கு வந்து அவன் கொமூச்செறிகிறதைக்கண்டு நாசிக்கு நேராகச்சென்றால் [illegible] நேரிடுமென்று ஒருபக்கமாய் வந்து, [illegible] இலக்குமண மூர்த்தியை நாகபாசத்தாற் கட்டி யுருட்டினது போல ஊனங்கொடியாற் பிணித்து, மந்தரகிரியைத் திருப்பாற்கடலி லிட்டது போல் வீமனை யெடுத்துப்போய் கங்கையிற் போட்டுவிட்டார்கள்.

இப்படி வீமன் கங்கையில் விழவே சில்லென்று தேகத்திற் சலம்பட்டமாத்திரத்தில் துயிலொழிந்து கைகால்களை யுதறிக்கொண் டெழுந்திருக்கப் பார்த்தான். ஊனங்கொடி தன்னைப் பிணித்திருப்பது தெரித்து, ஒருமுறைத்த திமிர்விட்டுக்கூவியெழுந்தான். உடனே கட்டறுந்து, முன்னொருபோது இந்திரனுக்குப் பயந்து கடலி லொளித்திருக்கிற மைநாக பர்வதம் சிறகுகொண் டெழுந்ததுபோலக் கங்கையை விட்டுக் கரையில்வந்து ஈரந்துடைத்து, சற்றுநேரம் சென்றபின்பு, அடடா!! நாமென்ன இங்குவந்து கங்கையில் விழுந்தோம். நம்மை யாராவது கட்டிக்கொண்டுவந்து போட்டார்களோ வென்று கருதுவோமாகில் நமக்குப் பகைவர்யார்? ஒருவருமில்லையே: நாம் தூக்கத்தினாற்புரண்டுவந்து கங்கையில்விழுந்தோமாக்களும். அப்படிபுரண்டுவந்ததினால் நம்மை ஊனங்கொடி சுற்றிக்கொண்டதுபோலும். என்றுதனக்குள் தீர்மானித்துக்கொண்டு, இதை ஒருவரோடு சொல்லினால் வெட்கக்கேடென்று நினைத்து, மீட்டுந் தான் படுத்திருந்த விடத்தில் வந்து படுத்துக்கொண்டான். பொழுதுவிடிந்தது. யாவரும் துயிலொழிந்து எழுந்திருந்தார்கள். எப்போதும்போல் அவரவர்கள் தங்கள் கருத்தின்படி விளையாட யத்தனித்தார்கள். துரியோதனன் வீமன்வந்து விளையாடுகிறதைக்கண்டு அதிக ஆச்சரியத்தையும் மனவருத்தத்தையுமுற்று, சகுனி கர்னனிருவரையும் சைகையாலழைத்துப்போய் வீமனிங்கு விளையாடுகிறதைப்பாருங்களென்றான். அவர்களும் உடனேவந்து நோக்கி, சீ! சீ! நாம் கட்டினகட்டுப் பலமான கட்டல்லவென்று தங்களைத் தாங்கள் நிந்தித்துக்கொண்டு, கிணற்றிற் கல்லைப்போட்டதுபோற் பிறர்க்குத்தெரியாமல் மௌனமா யிருந்தார்கள். இப்பால் முன்போலவே இருதிறத்தாரும் வேற்றுமையின்றி விளையாடி வருகிறபோது, சிலநாட் சென்றபின்பு துரியோதனன் சகுனியையும் கர்னனையும் தம்பிமார்களையும் ஓரிடத்தில் அழைத்துப்போய் உட்காரவைத்துச் சொல்லுகிறான்: ஓ ஆப்தர்களே! முன்னம் வீமசேனனைக் கட்டிக்கொண்டுபோய்க் கங்கையி லழுத்திவந்தோம். அதற்குத் தப்பிப்பிழைத்தான். இனியவனை உயிரோடு வைக்கலாகாது, வைத்தால் நமக்குக் கெடுதி நேரிடும். ஆதலால் அவனைக்கொல்வதற்கு உபாயமென்னவென்று வினவ சகுனி சொல்லுகிறான்.

சர்ப்பத்தால் வீமனைக் கடிப்பித்தல்.

ஓ மண்டலேஸ்வரா! நீயேன் விசாரப்படுகிறாய்? ஒருநிமைப்போதில் அவ்வீமன் உயிரைக் கொள்ளையிடுகிறேன். அதற்கு உபாயமென்னவென்றால் - நமது நகரத்திலிருக்கும் பாம்பாட்டுகிற ஜோகிகளிற்சிலரை இரகசியமாக அழைப்பித்து,அவர்களாற் சர்ப்பங்களை விட்டு வீமனைக் கடிப்பிக்கச் செய்வோமாகில் தக்ஷண

மரண மடைவானென்று கூறினன். துரியோதனன் அக்கருத்துக்கிசைந்து, நகரத்திலிருக்கிற ஜோகிகளிற் சிலரை இரகசியமாக அழைப்பித்துத் தன்கருத்தை அவர்களுக்கு விளங்க வுரைத்து, அவர்களைச் சிங்காரவனத்தில் வந்திருக்கச்செய்து வீமனிடத்துக்குவந்து, ஓ தம்பி! நாமெல்லாம் சிங்காரவனத்திற் சென்று விளையாடுவோம் வாவென்று அழைத்தான். வீமன் அதற்கு ஒத்துக்கொண்டவனாய் அவர்களோடு சென்று, அன்றுபகல் முழுவதும் ஓயாது விளையாடினான். பொழுதுபோகவே துரியோதனன் சிலதூதர்களால் அரண்மனையிலிருந்து போஜனத்தை அழைப்பித்து, வீமனோடு மற்றயாவரையும் வைத்துக்கொண்டு புசித்தானபின்பு வீமனைப் பார்த்துத் துரியோதனன் சொல்லுகிறான்: தம்பி வீமா! நீ தனியாகப் படுக்கிறவனாகையால் இதோ யிருக்கிற அறையிற் படுத்துக்கொள்ளுக வென்று கூறினான். வீமனதற்கொத்துக்கொண்டுபோய்ச் சயனித்தான். துரியோதனன் மற்றத் தம்பிமார்களோடுபோய்ச் சயனிப்பான் போலச் சென்று சயனித்திருந்து, சற்றுநேரஞ் சென்றபின் யெழுந்து போய் முன்னமே வந்திருக்கிற ஜோகிகளை எச்சரித்துவிட்டு முன்போலவே வந்து சயனித்துக்கொண்டான். ஜோகிகள் அவ்வீமன்படுத்திருக்கிற அறைக்குள் வந்து, அவன் பூரண நித்திரையிலிருப்பதை அறிந்து, இதுதான் சமயமென்று நினைத்து உடனே மந்திரத்தை யுச்சரித்தார்கள். மந்திர தேவதைகள் நல்ல காள சர்ப்பங்களையெல்லாம் அழைத்துவந்து விட்டன. ஜோகிகள் அப்பாம்புகளை நோக்கி, ஓ சர்ப்பங்களே! இதோ படுத்திருக்கிற வீமனைக்கடித்து உங்கள் விஷாக்கினியினாலே கொல்லுங்களென்று மந்திரத்தை முடுக்கினார்கள். அந்நாகங்கள் வீமனைக்கடித்து விஷத்தைக் கக்கிவிட்டுப்போயின. ஜோகிகளும் போய்விட்டார்கள். அப்பால் வீமன் திடுக்கென்றுவிழித்து, அடடா!! இந்த அறையில் மற்குணமென்னு மூட்டுப்பூச்சிகள் மிகுதியாயிருக்கின்றனவாதலால் நம்மைக் கடிக்கின்றதென்று தீர்மானித்து, நூற்றுவர் படுத்திருக்கிற அறையுட்சென்று, அவர்களோடு தானும் சயனித்திருந்தான். வீமன் வாயுபகவானுடைய புத்திரனாகையால் விஷம் துன்பப்படுத்தவில்லை. பொழுதும் விடிந்தது. நூற்றுவரும் துயிலொழிந்து எழுந்திருந்தார்கள். அவர்களோடு கூட வீமனும் எழுந்து முன்போலவே ஒன்றாகச்சேர்ந்து விளையாடிவந்தான். துரியோதனன் வீமன்வந்து தங்களோடு விளையாடுகிறதைக் கண்டு அதிகவியப்பை அடைந்து, கர்னன் சகுனி இவர்களுக்குச் சொல்லினான்.

வீமனை வசிநாட்டிக் குதிப்பித்தல்.

அவ் விருவரும் வீமனைக் கண்டு அதிக வியப்படைந்து, இவ்வைவரும் தேவபிண்டமென்று நம்முடைய பெரியோர்கள் கொண்டாடி வருவது சரியாகவேயிருக்கின்றது. இவ்வீமனுக்கு எதிலும்அழிவுவரவில்லை. இனிமற்றொரு தந்திரத்தினாற் கொலைசெய்ய வேண்டும். என்றுகருதி சிலநாட்சென்றபின்பு நகரத்திலிருக்கும் தச்சர்களை இரகசியமாக அழைப்பித்து, கங்கைத் துறையில் எழுக்களினாலும் இரும்பு களினாலும் செம்மரங்களினாலும் வசிகாட்டச்சொல்லி திட்டஞ்செய்து, துரியோதனன் வீமனிடத்துவந்து, தம்பி வீமா! இக்காலம் வெப்பமா யிருக்கின்றதால் கங்கைத்துறைக்குச்சென்று நீர் விளையாடலாம் வருகிறையாவென் றழைத்தான். வீமனதற்கு ஒத்துக்கொண்டு துரியோதனனோடு கங்கைத்துறையருகிற்சென்றான். துரியோதனன் வீமனைநோக்கி, தம்பிவீமா! நீ நீர்விளையாட்டில் திறமையாளனாயிற்றே; இத்துறையிலிருந் தெழும்பி அத்துறையிற் குதிக்கிறையா வென்று வினவினான் கிஞ்சித்தேனும் கபடமில்லாத வீமன் சொல்லுகிறான்: ஓ அண்ணேன்! இக்கங்கைத்துறையில் இங்கிருந்து அங்கு குதிக்கிறதும் அங்கிருந்து இங்கு குதிக்கிறதுமா பெரிது? இதோ குதிக்கிறேன் பாரென்றுசொல்லிக்கங்கைத்துறையைநோக்கினான். தெய்வானுகூலமாக இவன் கண்ணுக்கு அச்சல வோட்டமான கங்கைத்துறையில் வண்டுகள் அசையாமல் உட்கார்ந்திருந்தன. அவைகளை வீமன்கண்டு அதிகவியப்படைந்து, ஆ! ஆ! இதென்ன சலவோட்டமானகங்கைத்துறையில் வண்டுகள் உட்கார்ந் திருக்கின்றனவென்று உய்த்து நோக்கும்போது, சலத்துக்கு மூன்றங்குலங்கீழ் வசிமுனைகள் தோற்றப்பட்டன. அவைகளை வீமன் கண்ணுற்று, நமக்கென்ன? சொன்னவாக்குத் தப்பாமல் வசியைக்கடந்து அப்பாற்குதிப்போம் என்றுகருதி அங்கிருந்து ஒருபாச்சல்பாய்ந்து வசியில்லாத இடத்திற்குதித்து விளையாடி, மற்றொரு துறையாகக் கரையேறினான். துரியோதனன் வீமன் வசியைக்கடந்து குதித்ததற்குமெச்சி, இந்த வசிக்குந் தப்பினானேயென்று கனவருத்தமுற்றுத் தானும் ஒருபுறத்திற் குதிப்பவன்போலக் குதித்து வெளியெவந்து வீமனோடு அரண்மனைசேர்ந்து, சகுனி கர்னன் தம்பிமார் இவர்களோடு கலந்துபேசிக்கொண்டு முன்போலவே பாண்டு மக்களோடு வேற்றுமை தோன்றாதபடி மருவி இருந்தான்.

வீமனுக்கு விஷவிருந்திடல்.

இப்பால் சிலநாட் சென்றபின்பு துரியோதனன் கர்னனையும் - சகுனியையும் - ஓரிடத்தில் தனித்துவரும்படிசெய்து, ஓ ஆப்தர்களே! இந்த வீமனைக்கொல்லப் பலவிததந்திரஞ் செய்தோம். அந்தத் தந்திரங்களுக்கெல்லாந் தப்பிப் பிழைத்தான். இப்போதென்ன யோசிக்கிறீர்கள் சொல்லுங்களென்றான். அப்போது சகுனி சொல்லுகிறான்: ஓ மருமகனே! அந்தவீமனைக் கொல்வது பெரிதா? அதற்காக நீ வருத்தப்படாதே: நமது வேலைக்காரரிற் சிலரை அழைத்துச் சிங்காரவனத்திலும் சமையற் செய்யத் திட்டப்படுத்தி

அன்னத்திலும் பதார்த்தங்களிலும் வசநாபியைக் கலந்து நமக்கு நாபியில்லாமல் வேறே சமைக்கத் திட்டஞ்செய்து, வீமனைமாத்திரம் சாப்பிடக் கூப்பிட்டாற் போஜனப்பிரியனாகையால் வருவான். நாம் எல்லோரும் ஒன்றாகக்கூடி உட்கார்ந்து, நஞ்சிட்ட அன்னமுதலியவற்றை அவனுக்கிட்டு, நல்ல அன்னத்தை நாம்புசிப்போம். வீமன்புசித்துத் தலைமயக்குற்று இறப்பான். என்றுகூற துரியோதனன் அம்மான் கூறியபடி வேலைக்காரர்களை இரகசியமாக அழைத்து சமையற்செய்யவிட்டு வீமனிடத்துக்குவந்து, தம்பிவீமா! இன்றையதினம் நமது சிங்காரவனத்தில் விருந்துநடத்துவோம் நீயும் வருகிறையாவென்று கேட்டான். வீமன் அதற்கு ஒத்துக்கொண்டு அவர்களோடு சிங்காரவனத்திற்சென்று கைகால்களைச் சுத்திசெய்து, பொற்பீடத்தில் தனித்தனி துரியோதனன் சகுனி கர்னன் இவர்களோடுதானும் உட்கார்ந்தான். வேலைக்காரர்கள் நஞ்சிட்ட அமுதத்தை வீமனுக்குப் படைத்து, நஞ்சில்லாத அமுதத்தைத் துரியோதனன் முதலானவர்களுக்குப் படைத்தார்கள். வீமன் அவ்வன்னத்தையும் பதார்த்தையும் விடாமற்புசித்தான். உடனே நாபியின் தீக்ஷண்ணியத்தால் தாகமேலிட்டு, வேலைக்காரனைத் தாகத்துக்குக் கேட்டான். அவன் கேட்டகுறிப்பைத் துரியோதனன் அறிந்து வேலைக்காரனை எச்சரித்து, சீக்கிரத்தில் தாகத்துக்குக் கொண்டுவந்து கொடுங்களென்றுமிகுந்த பரிவோடுசொல்லுகிறவனைப்போலேசொல்ல வேலைக்காரர் அந்தச்சலத்திலும்அதிகமாக விஷத்தைக் கலந்து கொண்டுவந்து கொடுத்தார்கள். வீமன் அந்நீரைவாங்கி அருந்தினான். அருந்த வருத்த மயக்கம் அதிகமாகி ஸ்மரணை தப்பிப் பூமியில் விழுந்தான். வீமன் பூமியில்விழுந்தவுடனே துரியோதனன்முதல் மூவரும் எழுந்துவந்து, நமதெண்ணப்படி இன்றுமுடிந்ததாகையால் இனிஎன்னயோசனை? இவனை யிவ்விடத்தில் வைத்தால் நம்முடைய பெரியோர்களால் நமக்கு ஒருகெடுதி நேரிடும். இவனை ரகசியமாகக் கொண்டுபோய்க் கங்கையிற் போடவேண்டும் என்று யோசித்து மூவருங்கூடி வீமனை வாரி எடுத்துக்கொண்டுபோய்க் கங்கையில் ஒருபக்கமாகப் போட்டுவிட்டு, சிங்காரவனத்துக்குவந்து சஞ்சலமின்றிக் கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு சந்தனம் புனுகு கஸ்தூரி முதலியவற்றைப் பூசிப் புஷ்பமாலைகளையணிந்து ஆடையாபரணாதிகளை அழகா யுடுத்திக்கொண்டு வேடிக்கையாய் மற்றத் தம்பிமார்களையு மழைத்துக் கொண்டு அரண்மனை வந்து சேர்ந்தார்கள்.

வீமன் நாகலோகஞ்சென்றுவிஷாமுத பானஞ் செய்தல்.

இவ்வாறு மகாகளிப்புடன் அரண்மனை வந்து சேர்ந்த யாவரும் திரிதராஷ்டிரனையும் வீஷ்மரையும் வணங்கி, ஓ ஐயமீர்! நாங்கள் பெருநாள்கொண்டாட விருப்புற்றிருக்கிறோம். அந்நாளைக்கொண்டாட உத்தரவு கொடுங்களென்று வினவினர்: அப்பெரிய அரசர்கள் அவர்கள் கருத்துக் கிசைந்து அப்படியே பெருநாளைக் கொண்டாடுங்களென, துரியோதனன் தன் தம்பிமார்களோடும் சினேகிதர்களோடும் மஹாகளிப்புடன் பெருநாளைக் கொண்டாட யத்தனித்தான். இந்தச்சேதி நகரத்தாருக்குத் தெரிந்து, தங்கள் தங்கள் வீடுகள்தோறும் நன்றாய் அலங்காரஞ்செய்து, தோரணங்கள் கட்டி வீதிகளைச் சிங்காரித்தார்கள். துரியோதனன் இந்த விளைபாட்டி விருக்கிறான். அங்கே கங்கையாற்றில் வீமன் விழுந்தவிடம் பிலத்துவாரமாயிருந்தது. வீமன் அந்தப் பிலத்துவாரத்தின் வழியிற்சென்று, அதல விதல சுதல தராதல இரசாதல மஹாதல மென்னும் ஆறுலகங்களையுங் கடந்து பாதல லோகத்திற் போய் விழுந்தான். விழுந்தவுடன் அங்கிருக்கும் நாகவீரர்களாகிய பெரும்பாம்புகள்கண்டு, ஓ! ஓ! பூலோகத்து மனிதன் இவ்வுலகத்துக்கு வந்துவிட்டானென்று சினங்கொண்டு, இவனை உயிரோடு வைக்கலாகாதென்று நினைத்துக் கும்புகும்பாகக்கூடி வீமனைக்கடித்தன. பெரும்பாம்புகள் கடித்தமாத்திரத்தில் நாபியின் கெடுதி அழிந்து, வீமன் துயின் றெழுந்தவர்போல் எழுந்தான். அந்நாகங்கள் வாடாமலெழுந்த வீமனைப்பார்த்து, நீயார்? இங்கே நீவந்த காரியமென்ன? என்று வினவ வீமனுக்குப் பேசச் சக்தியில்லாமற் கைச்சைகையால் தாகத்துக்குக் கேட்டான். நாகங்கள் அதைக்கண்டு தங்கள் அரசனாகிய வாசுகியைவணங்கி, ஓ ஸ்வாமி! யாரோ ஒருமனிதன் பிலத்துவாரத்தின் வழியாய்வந்து விழுந்தான். விழுந்தவனை யாங்கள்கூடி நன்றாய்க் கடித்தோம். அவனிறக்காமல் எழுந்து எங்களைத் தாகத்துக்குக் கேட்கிறானென்று சொல்லினார்கள். அதுகேட்ட வாசுகி வியப்படைந்து, ஓ நாகங்களே! நீங்கள் கடித்து மிறக்காம விருக்கிறானல்லவா? இதோயிருக்கிற விஷாமுர்த கலயங்களைக் கொண்டுபோய்க் கொடுங்கள். எத்தனை கலயங் குடிக்கிறானோ பார்ப்போம். இக்கலயங்களிலிருக்கிற விஷாமுர்தத்தைக்குடித்தும் இறக்காதிருந்தால், அவன் வாயு பகவானுடைய அமிசையாக யிருக்கவேண்டும். ஆகையால் உடனே எனக்குத் தெரிவியுங்களென்றான். அவ்வாறே அந்நாகங்கள் விஷாமுர்த கலயங்களை எடுத்துவந்து வீமனுக்குக் கொடுக்கவே, வீமன் வாங்கி வாங்கி எல்லாக் கலயங்களையும் புசித்துத் தாகந்தணிந்து, முன்னிருந்த பலத்தைவிட அதிக பலவானாகி மஹாரூபத்தோடுவிளங்கினான். இதனை நாகங்கள் கண்டு ஓடி வாசுகிக்குத் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட வாசுகி உடனே எழுந்துவந்து வீமனைப்பார்த்து, நீயார்? இவ்விடத்துக்கு யென்னகாரணமாக வந்தாய்? என்று வினவ, வீமன் வாசுகியை வணங்கிச் சொல்லுகிறான்: ஓ நாகேந்திரா! நான் பூலோகத்துச் சந்திரவமிச சிகாமணியாகிய சந்தனு மஹாராஜனுடைய பேரனாகும் பாண்டு மஹாராஜாவின் மனைவி குந்தி தேவியின்

புத்திரன். என் பெரிய தந்தையின் புத்திரனாகிய துரியோதனன் சிங்காரவனத்தில் விருந்துசெய்தான். அந்த விருந்துக்கு நான் போயிருந்து அன்னம் அருந்தினேன். அதுதான் யானறிவேன். இவ்விடம் வந்தது எனக்குத்தெரியாது. என்று கூற வாசுகி தன்கியானதிருஷ்டியால் நோக்கித் துரியோதனன்செய்த சூதையுணர்ந்து, அதைத் தன்மனதுக்குள் வைத்துக்கொண்டு வீமனைத் தன்னரண்மனைக்கழைத்துப்போய் போஜனமிட்டுக் கலவைச்சாந்தும் புஷ்பமாலையும் தாம்பூல முதலானவைகளு மளித்துத் தனக்கொப்பாக வைத்திருந்தான்.

இங்கே தருமராஜன் - பற்குனன் - நகுலன் - சகாதேவன் - இந்நால்வரும் சகோதரனாகிய வீமனைக்காணாமற் கனவருத்தமுற்று, நாடுநகரமுழுதுந் தேடிக் கண்களில் ஆறுபோல் நீர்சொரியக் கோவென்று புலம்பிப்போய்த் தாயாகிய குந்திதேவியை வணங்கி, ஓ அம்மணி! எங்கள் சகோதரனாகிய வீமன் எங்களைவிட்டுப் பிரிந்தான். எங்கையோ அலுவலாகப் போயிருப்பவன் வருவானென்று இரண்டுமூன்றுநாள் பார்த்தோம். வாரா திருப்பதைக்கண்டு பலவிடங்களில் தேடித்திரிந்தோம். இதுவரையில் அந்த வீமனைக்காணோம். தாங்கள் அவனுக்கு எந்தவேலையாவது இட்டீர்களாவென்று உருகின சிந்தையோடு அழுதகண்ணுடனே வினவினார்கள். இவ்வசனங்களைக்கேட்ட குந்திதேவி சாவுக்குச்சரியான மூர்ச்சையடைந்து எழுந்து, ஆ! மகனே! மகனே! என்று கதறிப் புத்திரர்களைப்பார்த்து, உங்களையல்லாமல் நான் வீமனுக்கு வேலையிடுவனோ? ஒருவேளை உங்கள் மூத்தாதை அல்லது உங்கள்பெரியதந்தை வீமனுக்குவேலையிட்டார்களோ என்னமோ? அவர்களிடத்திற் சென்று வினவுவோம் வாருங்கள். என்றுகூறி நாலுமக்களையும் அழைத்துக்கொண்டு வீஷ்மரிடத்துச்சென்று வணங்கி, என் இளைய குமாரனாகிய வீமன் எங்கேயென்று கேட்டாள். வீஷ்மர் திடுக்கிட்டுச் சற்று ஆலோசித்து, ஓ! ஓ! வீமன் பலவானாதலால் துரியோதனன் பொறாமைகொண்டு என்ன சூதுசெய்து கொன்றுவிட்டானோ என்னமோவென்று ஐயுற்றுக் குந்திதேவியை நோக்கிச் சொல்லுகிறார். ஓ அம்மணி! வீமனை நான்கண்டு வெகுநாளாயிற்று. (பதறாத காரியம் சிதறாது). துரியோதனன் பெருநாட்கொண்டாடுகிற படியால், ஒருவேளை அங்கிருந்தாலு மிருப்பான். ஆரையாவது போய்ப் பார்த்துவரச் சொல்லுகிறேன் சற்றுநிதானி. என்றுகூறிச் சில தூதர்களை அழைத்து, வீமன் பெருநாள்கொண்டாடுகிற இடத்தில் இருக்கிறானா பார்த்துவாருங்களென்று கட்டளையிட்டார். தூதர்சென்று எங்குந்தேடி வீமனைக்காணாமல் ஓடிவந்து வீஷ்மரை வணங்கி, ஸ்வாமி! எங்கும் வீமராஜனைக் காணோமென்றுசொல்லினார்கள். அதுகேட்டு வீஷ்மரும் குந்திதேவியும் தருமராஜன் முதலாகிய நால்வரும் மிகு ஆவேசமுடையவரானார்கள். இவர்களில் வீஷ்மர் குந்திதேவியைநோக்கி, அம்மணி! நீ அஞ்சாதே: வீமன் உயிருடனிருக்கிறதும் இறந்ததும் பார்த்துச் சொல்லுகிறேன். என்று ஒரு துணிவுகூறி சோதிடசாஸ்திரத்தில் வல்லவராகையால் ஜோசியம் பார்த்தார். வீமன் உயிருடனிருக்கிறதாகத் தோற்றப்பட்டது. உடனே குந்திதேவியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

ஓ அம்மணி! உன்புத்திரனுக்கு அழிவில்லை. நாளதுவரையில் உயிருட னிருக்கிறான். இன்றைக்குள் அவன் வருவான் அஞ்சவேண்டாமென்று ஆதரித்து அந்தப் புரத்துக்கு அனுப்பினார். குந்திதேவி அந்தப் புரத்துக்கு வந்து, தெய்வக்குறி - தீபக்குறி - முதலிய வெல்லாவற்றையும் பார்த்து மனநொந் திருந்தாள். தருமராஜன்முதலான நால்வரும் கிழக்கு - தெற்கு - மேற்கு - வடக்கு - என்கிற நாற்றிசைக்கும் நால்வராகச்சென்று, கண்ணொளிக் கெட்டின வளைக்கும் பார்த்து நின்றார்கள். இங்கேயிவர்கள் இப்படி நிற்கிறதருணத்தில் அங்கே வீமன் வாசுகியைநோக்கிச் சொல்லுகிறான்: ஓ நாகேந்திரா! பூவும் மணமும் போலவும் பாலும்நீரும்போலவும் வேற்றுமையின்றிப் பிரியாமலிருந்த என்சகோதரர்களும் என்தாயும் என்னைக்காணாமல் வருந்துவார்களாதலால், நான் பூலோகத்துக்குப் போகவேண்டுமென்று வேண்டினான். அதற்கு வாசுகி வீமனைநோக்கிச் சொல்லுகிறான். ஓ வீமராஜனே! இங்கு வந்ததற்கு பெரிதானலாபம் நீ அடைந்தாய். அஃதென்னவெனில்- நீ தாகங்கேட்டபோது விஷாமுர்தகலயம் - ௯ - எடுத்துக் கொடுத்தனுப்பினேன். அக்கலயங்களையெல்லாம் அருந்திச் செரிப்பித்துக் கொண்டாய். அவைகளால் உனக்கு முன்னமிருந்த பலத்தைவிடப் பதினாயிரங்கஜேந்திர பலமும் கிடைத்தது. இனி உலகத்தில் உன்னைவிட பலவானில்லை. ஆதலால் என்குமாரத்தியை விவாகஞ்செய்துகொண்டு உன்பதிக்குப்போய்ச்சேருக. என்று விளம்ப வீமன்- ஓ நாகேந்திரா! அடியேற்கு அதிக பலங்கிடைத்தது உய்து திருவருளாக்களும். அதற்கு நான் வந்தனஞ்செய்தேன். உமது குமாரத்தியை விவாகஞ்செய்துகொள்ளென்று கட்டளை யிட்டீர். அக்கட்டளைப்படி நடக்க ஒருதடை யிருக்கின்றது. அஃதென்னெனில் எனக்குத் தமயனிருக்கிறார். அவருக்கு இன்னும் விவாகமில்லை. ஆகையால் தாங்கள் கூறிய கட்டளையைத் தள்ளக் கருத்துடையவனாயிருக்கிறேன். அதற்காகத் தாங்கள் கோபிக்காமல் என்னை யாதரித்து, என் சகோதரரைக்காணக் கிருபைசெய்யுமென்றுவேண்டினான். அதுகேட்ட வாசுகி மகிழ்ந்து சில நாககுமாரர்களை அழைத்து, இந்த வீமனை அத்தினபுரத்துக்கருகில் விட்டுவாருங்களென்று கட்டளையிட்டு வீமனுக்கு மகரகுண்டல ஆர கேயூர கடககங்கண முதலாகிய ஆபரணங்களை யளித்து ஆசீர்வதித்து அனுப்புவித்தான். உடனே நாககுமாரர்கள் வீமனை யழைத்துக்கொண்டு பிலத்துவாரத்தின்வழியாய்ச் சென்று, அத்தினபுரத்துக் கருகில்

வந்து வீமனைநோக்கி, ஓ ராஜனே! இதோ அத்தினபுரம் செல்லுமென்று விடுத்து மீட்டுமவர்கள் நாகலோகம்போய்ச் சேர்ந்தார்கள். வீமன் அத்தினபுரத்திற்சென்றான். சென்றவுடன் அந்நகரத்திலிருப்பவர்கள் யாவருங் கண்டு மகிழ்வுகொண்டு கைதட்டி, இதோ வீமராஜன் வந்து விட்டான் வந்து விட்டான் என்று கூறினார்கள். அந்தவோசை அலைகடல் முழக்கம்போலிருந்தது. இந்த ஓசையைக் கேட்ட தருமராஜன் முதலானவர்களும் ஓடிவந்து வீமனைக்கண்டு மிகுந்த ஆருமையோடு கட்டிக்கொண்டு, எங்குற்றாய் வீமாவென்று வினவி அரண்மனைக்கு அழைத்துப் போயினார். வீமனானவன் அங்கிருந்த வீஷ்மர் திருதராஷ்டிரன் முதலான பெரியோர்களுக்கு நமஸ்காரஞ் செய்து, நந்திதேவி முதலாகிய அன்னையர்களையும் வணங்கினான். அவர்களவனை ஆசீர்வதித்து வாரித் தழுவிக் கட்டி முத்தமிட்டு ஆதரணைசெய்தார்கள்.

அவர்களில் வீஷ்மர் வீமனை யழைத்து, அப்பா வீமா! நீ இந் எட்டுநாள் பரியந்தம் எங்கிருந்தாயென்று வினவ வீமன் சொல்லுகிறான்: ஓ ஐயா! என் தமயன் துரியோதனன் சிங்கார வனத்தில் விருந்து செய்து என்னை யழைத்தான். அவ்விருந்துக்குப்போய்ப் புசித்தேன். பின்பு பாதாளலோகத்திற் சென்றிருந்து நாகேந்திரனாகிய வாசுகியின் கிருபையினால் இவண்வந்தேன் என்றுகூறித் தன்னை வினவியவர்களுக்கெல்லாம் இவ்வாறேபுகன்றான். வீஷ்மர் மிகுந்த யுக்திசாலி யாகையால் இவ்வசனங்களைக் கேட்டமாத்திரத்தில், ஓ! ஓ! ஏதோமாறுபாடு நடந்திருக்கிறது என்று தன்கருத்தில் தியானித்து, மூளையில் தானே இவ்வளவு கெடுபுத்தியுடையவனாயிருக்கிற துரியோதனன் வரவர விபரீதமாந்த விளைவிப்பான். இனிநாம் சும்மாயிருப்பது தகுதியல்ல. அரசர்க்குரிய வில்வித்தை முதலியவற்றைக் கற்பிக்கவேண்டும். நாமேகற்பிக்கப்புகுந்தாற் சிறுவர்கள் எல்லாம் நமக்கஞ்சி இருக்கமாட்டார்கள். அவரவர்கள் புத்திக்கும் யுத்திக்கும் தக்கபடியே வித்தையேறும். அனால் பின்னடிக்கு ஒருவர்க்கு நன்றாகச்சொன்னான் ஒருவர்க்கு நன்றாகச் சொல்லவில்லை என்கிற ஒரு குற்றமான பழிச்சொல் நமக்குவரும். அப்பழிக்கும் அஞ்சாமல் வில்வித்தையைக் கற்பிப்போமாகில், நாம் முதாதையாகையாற் சிறுவர்கள் பயமுடன் கற்றுக்கொள்ளார்கள். ஆதலால் வேறொரு வில்லாசிரியனைக்கொண்டே கற்பிக்க வேண்டுமென்று தீர்மானித்த இதற்கு யாரை நேமிக்கலாம்? வில்லாசிரியன் எங்கிருக்கிறான்? என்று தம்மிடத்திலிருக்கும் பெரியோர்களை உசாவியபோது அப்பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

கிருபாசாரி வரலாறு.

ஓ மண்டலேஸ்வரா! முன்னம் பிரமன்போனாகிய சரத்துவந்தமுனிவர் ஒருவனத்திற் சென்று அருமையான தவஞ்செய்தார். அத்தவத்தை யழிக்க இந்திரன் தன்னாடகசாலைப் பெண்களில் அரம்பை என்பவளை அழைத்து, ஓ பெண்ணே! பூலோகத்திற் சரத்துவந்தர் அருமையான தவஞ்செய்கிறார். நீசென்று அத்தவத்தை அழித்துவாவென்று வேண்டினான். அரம்பை அதற்கு ஒத்துக்கொண்டு வீட்டிற்சென்று ஸ்நானஞ்செய்து, நல்ல ஆடையாபரணங்களை அணிந்து, காதமணக்கும் பரிமளத்திரவியங்களைப் பூசி மலர்மாலைசூடி, அவளைக்கண்ட திவ்யக்கியானஸ்வரூபிகளெல்லாம் எப்படி யவளைப் பின்றொடருவார்களோ அப்படியே அவள்சாயலைக்கண்ட மயிலும்-குரலோசையைக்கேட்ட குயிலும் - நடையைப்பார்த்த அன்னமும் - பின்றொடரப் பூலோகத்திலிறங்கி சரத்துவந்தர் தவஞ்செய்யும் வனத்தில்வந்து, அவர்நோக்கம் தன்மேற்பாயும்படியான இடத்தில் நின்றாள். சரத்துவந்தர் கண்விழித்துப் பார்த்து, தனக்கெதிரிலே நிற்கிற அவளைக்கண்டு மிகுந்த விகாரமடைந்து, இவ்வளவு ரூபத்தோடுகூடிய ஸ்திரீகள் பூமியிலிருக்கிறார்களாவென்று நினைத்துத் தன்கருத்தைக் கிஞ்சித்து காமத்தின்வழியிற்செலுத்தினார். உடனே வீரியம்வெளிப்பட்டு, இரண்டு துளியாக அவரிருந்த தருப்பாசனத்தில் விழுந்தன. இந்தச் செய்கையை அரம்பை யறிந்து, இனி நின்றோமாகிற் சாபம் நேரிடுமென்றுகருதி, உடனேமறைந்து சொற்கலோகம் போய்ச் சேர்ந்தாள். சரத்துவந்தர் தமதுவீரியம் வெளிப்பட்டதைக்குறித்து மனவருத்தமடைந்து, மிஞ்சிப்போயினதற்கு வியாகூலப்பட்டாற் பயனென்னவென்று ஒரு விதமாகத்தேறித் தன்கையிலிருந்த வில்லையும் திவ்யாஸ்திரங்களடங்கிய அம்புக்கூடினையும் அந்தத் தருப்பாசனத்தில் வைத்துவிட்டு, மற்றொரு வனத்திற்சென்று நற்றவம் புரிந்திருந்தார். தருப்பாசனத்தில் விழுந்த இரண்டு துளிவீரியமும் மஹா முனிவரது விந்தாதலாற் பழுதுபடாமல், ஒருதுளி பிள்ளையாகவும் மற்றொரு துளி பெண்ணாகவும் தோன்றி அழுதுகொண்டிருந்தன. அப்போது உமது பிதாவானவர் இளவரசுப்பட்டம் நீங்கி மகுடாபிஷேகனாகிச் செங்கோற்செலுத்தி வந்து ஒருநாள் வேட்டையாடக் காதல்கொண்டு, வில்லியர்-வலைஞர்- மந்திரிகள் - பிரதானிகள் - முதலானவர்கள் புடைசூழ நாலுவகைச்சேனையோடுங் காட்டிற்சென்று, அநேகமிருகங்களை அதமாக்கி வனத்தின் வழியாகவருகிறார். அப்போது அச்சிறுவர்களின் அழுகுரலைக் கேட்டு விரைந்துசென்று, அம்மக்களைநோக்கி வியப்புற்று, ஓ!ஓ! இம்மக்களைப்பார்த்தால் மஹா சுந்தரத்தோடுவிளங்கியிருக்கிறார்கள். இவர்களைப்பெற்ற தாய் தந்தையர் எங்கேயாவது அருகிலிருப்பார்கள். வனத்தைச்சுற்றிப் பார்த்துவாவேண்டுமென்று தூதர்களுக்குக் கட்டளையிட்டார். தூதர்கள் வனமுழுதும் பார்த்துவந்து அரசனைவணங்கி, ஓ ஸ்வாமி! இவ்வனமுழுவதும் முனிவர் மயமேயன்றி இக்குழந்தைகளுக்கு

உரியவரைக் காணுமென்றுகூற, அரசன் மந்திரி
களைநோக்கிச் சொல்லுகிருன்:

ஓ மந்திரிமார்களே! பூலோகத்தில் அரசராயிரு
க்கிறவர்கள், உலகிலுள்ளவர்க்கு யாதொரு குறை
வுமுருதிருக்க நடக்கவேண்டும். சத்துருவாயிருந்த
போதிலும் காட்டில்நின்றுதவித்தால் அவர்களை ஆத
ரிக்கவேண்டியது நமதுகடமை. இப்படி மநுநூல்கள்
முறையிடுகின்றதை யுணர்ந்தும், மிகவும் இளமை
[illegible] இப்பக்களது அழுகுரலைக்கேட்டு நாம் [illegible]
துக்குச்செல்வது யோக்கியதையல்ல. நாமெடுத்துப
போய் வளர்த்தால் இச்சிறுவருக்கு உரித்தானவர்கள்
ஒருவேளை நம்மிடத்தில்வர நேரிடும். அப்படிவந்து
கேட்டால் அப்போது தடைசொல்லாமல் அவர்களிட
த்து இச்சிறுவர்களைக்கொடுப்போம். ஆதலால் இச்சி
றுவர்களை இப்போது நாமெடுத்துப்போவோமென்று
அவர்களோடுகூட வைத்திருந்த வில்லையும் - அம்புக்
கூட்டையும் - அச்சிறுவர்களையும் - மந்திரிகளாலே
யெடுப்பித்துக்கொண்டு நகரத்துக்குவந்[illegible]
வர்களை மிகுந்த அன்புடன் [illegible]துவந்தார். சரத்து
வந்தர் ஒருநாள் நமதுவீரியம் எவ்வாருயிற்ரூ பார்
த்துவருவோமென்று [illegible]துவந்து தாமரு
ந்த இடத்தை நோக்கும்போது வில்லும் அம்புக்கூடு
மில்லாமையைக்கண்டு, நமதுவீரியம் உருவாகிச் சிறு
வர்களாக இருக்கவேண்டுமாதலால் அச்சிறுவர்களைக்
கைப்பற்றினவர் அவ்வில்லையும் கைப்பற்றியிருக்கவே
ண்டுமென்று [illegible]த்து அச்சிறுவர்களை [illegible]கொண்டு
போயினர் அறிய வேண்டு[illegible]த தமது கியான திரு
ஷ்டியால்நோக்கி, உமதுபிதாவாகிய சந்தனுமஹாரா
ஜன் எடுத்[illegible]யினதை யுணர்ந்து இந்நகரத்துக்கு
வந்து அரசனைக்கண்டார். அரசன் திடுக்கென்றெழுந்
து சரத்துவந்த முனிவரைப் பொற்பீடத்திலிருத்திச்
சோடச உபசாரமுஞ்செய்து பயபத்தியுடனே எதிர்
நின்று சொல்லுகிருர்: ஓ ஸ்வாமி! எளியேன்மீது கி
ருபைவைத்து இவ்விடமெழுந்தருளியதற்கு யான் எ
ன்ன புண்ணியஞ்செய்தேன்? இம்மனையை நாடிவந்
தகாரியமென்ன? எதாவதிருந்துவெளியிட்டால் தங்
கள்கருத்தின்படி நடக்க விருப்புற்றிருக்கிறேனென்று
வேண்ட சரத்துவந்தமஹாமுனிவர் வணங்கிய அரச
னுக்குப்பல ஆசிகள் வழங்கிச்சொல்லுகிருர்: ஓ மண்
டலேஸ்வரா! நீர்வேட்டையாடி முனிவர்தவஞ்செய்
யும் வனத்தில்வந்தபோது, என் வீரியத்தாலுண்டான
ஒரு பிள்ளையையும் ஒரு பெண்ணையுங்கண்டு எடுத்து
[illegible]தீரே, அக்குழந்தைகளைகான்பார்க்கவேண்டுங்கொ
ண்டுவாருமென்ருர். அரசன் அருகிலிருக்கின்ற மந்திரிக
ளைநோக்கினர். மந்திரிகள் அரசனது குறிப்புணர்ந்
து, அக்குழந்தைகளை எடுத்துவந்து அரசன்கையிற்
கொடுத்தார்கள். அரசன் அக்குழந்தைகளைச் [illegible]த்து
வந்த முனிவரிடத்துக்கொடுத்து, ஓ ஸ்வாமி! தேவ
ரீர்சொத்து தேவரீரைச் சேர்ந்தது என்று வந்தனைத்

தோடு வணங்கின[illegible]
[illegible]ண்டுமக்களையும்
[illegible]ல வைத்தவ[illegible]
பெண்ணுக்குக் க[illegible]
த்திரனுக்கு - நாலு[illegible]
[illegible]நாலு கலைக்கியா[illegible]
[illegible]சாஸ்திரத்தை[illegible]
ன்று உணர்த்தி[illegible]
மேல் விலை[illegible]
ருபாசாரி[illegible]
[illegible]
[illegible]க்கறப்[illegible]
வீஷ்மர் அவரை

து[illegible]

ஓ ஸ்வா[illegible]
புத்திரர்கள்[illegible]
[illegible]
கூரி[illegible]
[illegible]
தற்குரித்து
[illegible]து போர்களை
லி, வில்வித்தை
ளாகிய இ[illegible]
[illegible]
ருண[illegible]
மாதலால் எ[illegible]
கும்படிநேரி[illegible]
வில்வித்தை
கமாகக் க[illegible]
அந்தருண[illegible]
ன்ஞெரு[illegible]
த்திற்செ[illegible]
த்தி, ம[illegible]
த்தனைக் கருதத
செய்துவந்தார்
முனி செய்து
ன்றுகருதி மேன[illegible]
பாரத்துவாசம[illegible]
ருர். அத்த[illegible]
த்தம் நேரி[illegible]
[illegible]
ளையிட[illegible]
[illegible]தமத்தி[illegible]
ரசனுமிரு[illegible]
[illegible]ல மறு[illegible]
வாசர் செ[illegible]
விடைபெ[illegible]
ரியவர்[illegible]

...ங்களினுல் அலங்
...தவசிரேஷ்ட...
...ங்கிக் காம...
...விட்டுப் பூலோ
...ஞ்செய்யும் வனத்தி
...ய மகிமைக்கு வி...
...ந்து தவஞ்செய்கிற
...போகிறேமென்று
...வர்காசி
...ல் தெய்வச்
...மென்று
... இந்தபோ
...யான து...ற்றி
... பாரத்துவாசர்
...ளவாடை ஏதெ
...டியி லிருக்கிற
... கண்டவுடன்
... கருத்தில்
...ரோண
...
...ரிடும். நாம்
... ஒருமாத்தி
...ச் சொற்கம்

...வெளிப
...கிற தருண
...ருவுருவாகி,
...த்தை விரி
...ரத்துவாச
...படைந்து,
...ளர்த்து,
...துரோண
...வுடன்
...ஆறு சாஸ்திரம்
...வற்றோடு தநு
...த்திரனைப் பிர
...திக்க இன்னும்
...வ கருதி பரசு
...துவும் போ
... அப்புத்
...
... மதித்த
...பயோக
... இப்படி
...கதிபதி...
...ல்வித்தை
...து வந்து
... அக்கினி

...திமுனி துரோணாசாரியருக்குக் கற்பிக்கிறது போல் அவனுக்குங் கற்பித்துவந்தார். துரோணாசாரி வில்வித்தையிற் சிறந்தவராதலால் துருபதன் அவரையுமடுத்து, நல்லவார்த்தை சொல்லி வந்தனை வழிபாடுசெய்து வருவான். அதனால் துரோணாசாரியார் மனமகிழ்ந்து, தாம் கற்றிருக்கிற அருமையான வில்வித்தையிற் சிலவித்தையைக் கற்பித்தார். உடனே துருபதன் தந்தையின் அரசுக்குரியவனாகுங்காலம் நேரிட்டது. அக்காலத்தில் துருபதன் துரோணாசாரியை ...ந்து வணங்கி, ஓ ஸ்வாமி! என் தந்தை பட்டணம் வரும்படி கட்டளையிட்டார். நான்போகிறேன். என் தந்தையின் செங்கோல் என் கைவசமாகில் தங்களுக்கு என்தேசத்திற் பாதி பங்கிட்டுக் கொடுப்பேன். இதனை உறுதியாக நம்புமென்று சத்தியமாக உரைத்துத் தன்முதலாசிரியராகிய அக்கினிகோத்திரமுனிவரையுங்கண்டு விடைபெற்றுக் கொண்டு தன்நகரத்துக்குச்சென்றான். அவன் தந்தை சோமகன் மிகவுஞ் சந்தோஷமடைந்து தன் செங்கோலைப் புத்திரன்வசமாக்கித் தவத்துக்குப்போனான். துருபதன் ஏகசக்கிராதிபதிபோல் அரசுசெய்திருந்தான்.

அஸ்வத்தாமர் வரலாறு.

இங்கே துரோணாசாரி வில்வித்தை யெல்லாவற்றையு முணர்ந்து, யாவரும் புகழப் பெயரெடுத்து, இனிதவத்தைச்செய்து சிலாக்கியமாகிய பாக்கியத்தைத ... யக்கருதித் தந்தையிடத்துவந்து வணங்கி, தமது கருத்தை ... விட்டார். தந்தையாகிய பாரத்துவாசர் புத்திரனைப்பார்த்துச் சொல்லுகிறார்: அப்பா மகனே! நீ தவஞ்செய்கிறதற்கு இதுகாலமல்ல. முன்னங் கிரகஸ்தாசிர்மமடைந்து பின்பு துறவற ... வேண்டியது. என்று விளம்பிக் கிருபாசாரி சகோதரியாகிய சௌபாக்கியவதி கிருபையைத் துரோணாசாரியார்க்கு விவாகஞ் செய்வித்தார். துரோணாசாரி கிருபியென்பவளோடு இல்லறத்திற் பொருந்தித் தருமம்வழுவாமல் நடத்திவருங்காலத்தில், நாரதர் கிருபையினது நற்குணநற்செய்கையையும் கற்புடைமையையுங்கண்டு கைலாயத்திற்குச் சென்று நந்திதேவரது விடைபெற்று அக்கைலாயத்தின் மத்தியி விராநின்ற கோடிசூரியப் பிரகாசமாக ஒளிசெய்யு மஹாமண்டபத்து ளெழுந்தருளியிருக்கிற ஸ்ரீசாம்பமூர்த்தியைக் கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்துநின்றார். ஸ்ரீசாம்பமூர்த்தி நாரதரை இருக்கச் சொல்லி, ஓமகதிமுனியே! நீர் உலகமெல்லாம் வியாபித்து எல்லாச்சங்கதிகளையு மறிந்திருக்கிறவராயிற்றே: ஏதாவது அதிசயமிருந்தாற் சொல்லுமென்று வினவ நாரதர் சொல்லுகிறார்: ஓ ஸ்வாமி! பாரத்துவாசர்புத்திரனாகிய துரோணாசாரியின் மனைவி கிருபி என்பவளுடைய கற்புடைமையை என்னென்று சொல்லுவேன். அவளைப்போல் கற்பிற்சிறந்தவர்கள் வேறு

வாரணாவதச் சருக்கம்.

நவர் இல்லை. உலகத்துள்ள பெண்டீர்களில் அவளுக்
கு ஒருவரையுபமானஞ் சொல்லத்தக்கதன்றென்றுகூ
றிவணங்கிவிடைபெற்றுத்தன்கருத்துக்கிசைந்தவிடத்
துக்குச்சென்றார். ஸ்ரீசாம்பவ மூர்த்தி அந்தக்கிருபை
யினது கற்பினிலையையறியவேண்டுமென்று சன்யாசி
வேடம்பூண்டு,கைலாயத்தைவிட்டுத் துரோணாசாரியி
ருக்கிறவனத்துக்கு வந்து, அவருடைய ஆசிரமத்துக்
குட்சென்றார்.துரோணாசாரிசன்யாசியைக்கண்டு எழு
ந்துவணங்கி, பொற்பீடமளித்திருக்கச்சொல்லி,ஸ்வா
மிகளே ! தேவரீர் இவணெழுந்தருளிய காரணமென்
னவென்று வினவ சன்யாசி சொல்லுகிறார்:

ஓ புண்ணியாத்மாவே! எனக்குப்பசியாக இருக்
கின்றதால்அன்னம்படைக்கவேண்டுமென்றார்.துரோ
ணாசாரி மனமகிழ்ந்து, ஐம் பொறிகளின் வழியாகிய
ஐம்புலன்களை அடக்கும் பெரியோர்களுக்கும் அடக்
கக்கூடாமையானது பசிநோய். அப்பசிநோயை நீக்
குவது அப்பெரியோர்களுடையவல்லமைக்கு மேலா
னவல்லமை யென்றும், இல்லறத் தானுக்கு இதைவி
டத்தருமமில்லையென்றும் வேதங்கள் முறையிடுகின்
றன. மேலும் நாம் இல்லறத்தி லிருக்கிறோமாதலால்
நம்மா லிசைந்தமட்டும் அன்னமிட வேண்டுமென்று
மதித்துச் சன்யாசியை வணங்கி, ஓ ஸ்வாமி! தாங்கள்
கூறிய கருத்தின்படி அன்னம் புசித்துப் போகலாம்
என்று இனிய வார்த்தை யுரைத்துத் தன்மனைவியிட
த்துவந்து, ஓபெண்ணே!ஒருபெரியவர்அன்னம்வேண்
டுமென்று நமதிடத்துக்கு வந்தார். நீ அவர்க்குப் பசி
யடங்கி மகிழ்வெய்த அன்னம் படை. நான் ஸ்நான
ஞ்செய்து வருகிறேனென்று சென்றார். உடனேகிரு
பிஸ்நானம்பண்ணி வீட்டில்வந்துசமயற்செய்து சன்
யாசியிடத்து வந்து வணங்கி, ஓஸ்வாமி! நெடுநேரமா
கப் பசிநோயில் வருந்துகிறீர். எளியேன்மீது கிருபை
கூர்ந்து எழுந்து வாருமென் றழைத்தாள். சன்யாசி
எழுந்து உள்ளறையிற் சென்று, அங்கிட்டிருக்கும்
பீடத்திலிருந்தார். கிருபி ஒரு தட்டிற்சில திவ்யபதா
ர்த்தங்களோடு அன்னத்தை எடுத்துவந்தாள். அதை
த்தபசிகண்டு, ஓபுண்ணியவதி! எனக்கன்னம்படைப்
பவள் நிருவாணியாக இருந்து உண்பிக்க வேண்டும்.
அவ்வண்ணமாக அன்னம்படைத்தால்தான்நான்புசிப்
பேன்.இதுயென்விரதம்.இல்லாவிட்டால் நான்புசியே
னென்றார். கிருபி—ஆ! இதென்னவிரதம்? நாம்நிருவா
ணியா யிருந்து அன்னம்படைத்தாற் கற்புக் கழிவுவ
ருமே: அவ்வண்ணஞ் செய்யாவிட்டால் நமது கணவ
ன்கட்டளைக்குக்குறைவுநேருமே. இதிற்கணவன்கட்
டளையைமீறுதிருப்பதே கற்புடைமையாதலால் இ
ஷ்டப்படி இருந்து அன்ன மிடுதலே உத்தம
மதித்து, விட்டிற்சென்றுவஸ்திரத்தைநீக்
ல்முழுதையும்அளகத்தால்மறைத்து அ
த்துவந்தாள்.அதுகண்டுசன்யாசிஅ
குமெச்சி, அவளதுசுந்தரத்தை

போது சன்யாசிக்கு
ருபையின் கரத்தில்
உடனே சன்யாசி மன
விழுந்ததையும் உடனே அ
டு, அந்த அன்னத்தட்டை அ
கொண்டிருந்தாள்.

இதற்குள் ஸ்நானஞ் செய்யச்சென்
ர்வந்தார். கிருபி அவரை வணங்கி நடந்த
தந்தைச் சொன்னாள். துரோணர் சன்யாசித்து
டைந்தவர்க்கு இந்த நினைப்பேது? ஒருவேளை நம
து மனைவியின்மீது கருத்துகொண்டு, இராவணன் சீ
தைமேல் இச்சைவைத்துச் சன்யாசிவேடந் தரித்தது
போல் யாராவது வந்தாரோவென்று தமது கியான
திருஷ்டியால் நோக்கினார். வந்தவர் கைலாசபதியெ
ன்று தெரிந்து மனைவியைநோக்கிச் சொல்லுகிறார்:
ஓ பெண்ணே! சன்யாசியாகவந்தவர் கைலாசபதி. அ
வர்வீரியம்வீணாகக்கூடாது. ஆதலால் நீயே இவ்வன்
னத்தைப்புசித்திடுக. என்றுசொல்ல அக்கிருபி அவ்வ
ன்னத்தைஎடுத்துபோய்த்தான்புசிக்காமல்,துரோணா
சாரியின் வாகனமாகிய பெண்குதிரையிடத்து வைத்
தாள். அக்குதிரை அவ்வன்னத்தைப் புசித்தது. உட
னே அவ்வீரியம் கருவுருவாகி, மூன்றேமுக்கால் நா
ழிகைக்குள் அக்குதிரையின்வயிற்றில்நின்றுநாகரத்தி
னம்போல்ஒருபுத்திரன்பிறந்தான். துரோணாசாரிஅத
னை அறிந்து துரிதமாய்வந்து அச்சிறுவனைப்பொற்றட்
டிலேந்தி ஆசிரமத்தில் வைத்துக்கொண்டு, தானும்
தன்மனைவியும் அச்சிறுவனது சுந்தரத்தை நோக்கி
மிகுந்த வியப்படைந்து; இப்புத்திரனுக்கு என்னபெ
யரிடலாமென்று யோசிக்கிறார். அப்போதுஆகாயவா
ணிதுரோணாசாரியைஅழைத்து, இச்சிறுவனுக்குஅஸ்
வத்தாமனென்று பெயரிடுவென்ன துரோணாசாரி அ
வ்வண்ணமே அஸ்வத்தாமனென்று நாமகரணமிட்டு,
அச்சிறுவன் மீது இருவரும் அதிககாதல் கொண்டு,
அவனை வளர்ப்பதில் மிகவுங்கருத்தைச்செலுத்திப்
ல்லரிசி- பால்- முதலியவற்றால் வளர்ந்து வந்
மேலும் தருமப்பால் வாங்கிவார்த்து
றதா யிருப்பதாற் பால்போதா
துப்போயிற்று. இதை
யைவணங்கி,ஓஸ்
திற் குழக்
நேகப்
த்

னக்குப்பாலியசினே
தையிற்சில அருமை
வனுகியு மிருக்கிறவன்
ச்சென்ருல்வேண்டியபாக்கி
ல்நாமிருவரும் அவனிடத்துச்
றழைத்துக்கொண்டு பாஞ்சால
க் கருகாய்வந்து சிறுவனே மனைவி
டுத்து அவளை அங்கு நிறுத்திப்போட்
தனியே பாஞ்சாலன் சபைக்குள் சென்ருர்.
ஞ்சாலன் அவரைப் பார்த்தவுடன் முன்கொடுத்த
வாக்குத்தத்தத்தைநினைத்துக்கொண்டு, அதைநிறை
வேற்ற மனமில்லாதவனுகிப் பாராதவன்போ லிருந்
துவிட்டான். துரோணுசாரி அரசன் விசாரணையிலிரு
க்கிறதினுல் நம்மைநோக்கவில்லை. இன்னுஞ்சற்றுநே
ரஞ்சென்ருற்பின் புவிசாரிப்பானென்றுன்னி அங்கோ
ரிடத்தி லிருந்தார். அரசன் நீதி விசாரணை செய்துவி
ட்டுக் கொலுநீங்கி, அங்குள்ளவர்களை யெல்லாம் அவ
ரவர்கள் இருப்பிடத்துக்குச் செல்லும்படி உத்திரவு
கொடுத்தான். அந்த வேளையில் துரோணுசாரி அ
ரசனைக் கண்டுகொண்டார். அப்போதும் வந்தனே வ
ழிபாடுசெய்யாமல்,நீர்யார்காணுமையரோ? இங்குஎன்
வந்தீரென்று முகமறியாதவன் பேசுவதுபோற் பேசி
னன். துரோணுசாரி இவ்வசனங்களைக் கேட்டு, நமக்
குமிவனுக்குஞ்சிநேகமாகிநெடுநாளாயிற்றே:அதனுல்
கியாபகமில்லாமல் நம்மையாரென்று கேட்கிருனென
க் கருதிக்கோபங்கொள்ளாமல்,ஓ அரசனே!என்னேய
றியாயா? அக்கினிகோத்திர முனிவரிடத்து நாமிருவ
ரும்வில்வித்தைகற்றுக்கொள்ளவில்லையாவென்று புக
ன்ருர். பாஞ்சாலன் அப்போதாகிலும் வந்தனைவழிபா
டுசெய்யாமல், என்னகாணும் விப்பிரரே! உன்னை அவ்
விடத்தில் நான் ஒருநாளுங் கண்டதேயில்லை. ஏன்
பொய்மை கூறுகிறீரென்று சீறினன். துரோணர்அர
சனைப்பார்த்துச் சொல்லுகிருர்: ஓ அரசனே! நீ என்
ன சுத்தமறவியை யுடைத்தாயிருக்கிருய்? என்னிடத்
திலுள்ளவில்வித்தைகளில் அருமையாயிருக்கிறசிலவி
ளைக்கற்றுக்கொண்டையே அதுகியாபகமில்லை
ட்க அரசன்நகைத்து மந்திரிகளைநோ
! முன்னம் இவ ஒரு ஆசிரிய
ல்வித்தை கற்கவில்லையா
ன்னிடத்தில் வில்
வென்றுசொ
ன்றுக்
சி

ஓ மந்திரிகளே! இந்தப் பிராமணன் சொல்லிய
வற்றைக் கேட்டீர்களா? முன்னம் நாமிருவரும் ஒரு
ஆசிரியனுடைய மாணுக்கரென்ருன். பின்புதன்னிட
த்திற் கற்றவனென்ருன். இப்போது பாதிபூமி உண்
டென்ருன். இதை யோசிக்கும்போது இந்தப் பிராம
ணன் வல்லிடி வழக்கனு யிருக்கிருனென்று தோன்ற
வில்லையா? இன்னுமிந்தப் பிராமணனே என்சபையில்
வைத்திருக்கிறீர்களே என்றுகடுகடுத்தான்.அதுகேட்
டமந்திரிகள் தம்மைச் சேவகர்களாற் சபையைவிட்
டகற்றக் கருதுவதைத் துரோணர் அறிந்து அரசனை
நோக்கி, அடா பாஞ்சாலா! என்னிடத்தில் மாணுக்க
னுயிருந்தும் என்னைப் பரியாசகஞ் செய்தாய். அது
கிடக்கட்டும். நீ வாக்குத்தத்தஞ்செய்தபடி பூமியைக்
கொடாவிட்டாற் போகிறது. எனக்கொரு குழந்தை
யுண்டு. அதற்குப்பாலில்லை.ஆதலால்ஒருபசுவாகிலுங்
கொடுவென்றுகேட்க அரசன்சிரித்து,ஓபிராமணு! மு
ன்னமே நீகேட்டாற்கொடுப்பேன். முன்புசிநேகனெ
ன்று சொல்லிப்பின்பு ஆசிரியனென்றும் பங்காளியெ
ன்றுங்கூறி, இப்போது ஒருபசுவேண்டுமெனச்சொல்
லுகிருய். இவைகளைக்கேட்டபெண்களும்நகைப்பாரெ
னில் இச்சபையார் நகைப்பது அருமையோ? போ
போ பின்புத்தியுடையபிராமணுவென்று சேவகர்களு
க்குச் சைகைசெய்தான். சேவகர்கள் அருகில்வர யத்
தனித்தார்கள். அதைத்துரோணுசாரிகண்டுஅதிகசின
கொண்டு கோபச் சிரிப்பு சிரித்து, அடா பாஞ்சாலா!
இதோ யிருக்கிற வில்லுக்கே உன்னைப்பலியிடுவேன்.
நான் உன்னை எதிர்ப்பது தகுதியல்ல. உன்னுடொ
த்த இராஜபுத்திரருக்கு என்வித்தையைக் கற்பித்து,
அவர்களால் உன் மதத்தையடக்கி, மடலோடு மடல்
விரியத் தேர்க்காலிற்கட்டி என்னிடத் திழுத்துவரச்
செய்து, அங்கிருக்கும் உன்னையொத்த அரசர் முன்
னே பங்கப்படுத்தி உன் ராச்சிய முழுதும் பெருமற்
போவேனுகில் என்கையிலிருக்கிறவில்வில்லல்ல. என்
பெயரும் துரோணனல்ல. நானும் பிராமணனல்ல.
என்று சபதங்கூறிச் சபையைவிட்டு மனைவியிருக்கிற
இடத்தில்வந்து நடந்த விர்த்தாந்தத்தைச் சொல்லிக்
குழந்தையைக் குறித்து வருத்தப்பட்டார். கிருபி
கணவனைவணங்கிச் சொல்லுகிருள்:

ஓ ஸ்வாமி! நீரேன் வருத்தப்படுகிறீர்? என் தம
யன்கிருபாசாரி அஸ்தினபுரத்திற் குருகுலசிகாமணி
களாகியதிரிதராஷ்டிரன்பாண்டுவென்னுமஹாராஜாக்
களுடைய புத்திரர்களுக்குவில்வித்தைகற்பிக்கிருர்.அ
வரிடத்துச்செல்வோம் வாரும். என்றழைக்கத்துரோ
அதற்கு இசைந்து அத்தினபுரியை நோக்கிச்
நகரத்தருகில் வந்தபோது அங்கே குருகுல
றைந்துபேரும் இரண்டு பிரிவாகப் பிரி
யாடினுர்கள். அவ்விளையாட்டில் வீம
விசுறி எறிந்தான், அது துரியோ
ள்கைக்குத் தப்பிக் கிணற்றில்வி

ழுந்தது. அதுகண்டு துரியோதனன் வீமனிடத்து வந்து, வீமா! நீ எறிந்தபந்து கிணற்றில் விழுந்தது. அதனை நீதான் எடுத்துக்கொடுக்க வேண்டும். என்று கேட்க வீமன் - சீ! சீ! நானெறிந்த பந்தை நீங்கள் பிடிக்காதபடியால் அதுகிணற்றில் விழுந்தது. அதை நானெடுக்க வேண்டியதில்லை. என்றுமறுக்க இப்படி இருதிறத்தாரும் பேசிக்கொண்டு கிணற்றைச் சூழ்ந்திருந்தார்கள். துரோணர் இவர்களைக்கண்டு அருகிற்சென்று, நீங்கள் யாருடைய புத்திரர்கள்? இக்கிணற்றை ஏன் சூழ்ந்திருக்கிறீர்கள்? என்றுவினவ இருதிறத்தாரிற் பற்குனன்வந்துவணங்கி, ஓஸ்வாமி! நாங்கள் இந்த நகரத்துக் கதிபராகிய இராஜபுத்திரர். பந்து விளையாடினோம். அந்தப் பந்து கிணற்றில் விழுந்தது. அதற்காக நீயெடு நானெடென்றுவழக்கிட்டுக் கிணற்றைச்சூழ்ந்திருக்கிறோமென்றுகூறினன். அதுகேட்ட துரோணர் சிரித்து, உங்கட்கு வில்வித்தைகற்றுக்கொடுக்கிறவில்லாசிரியர் கிணற்றில்விழுந்த பந்தை எடுக்கக்கற்றுக்கொடுக்கவில்லையாவென்றுசொல்லி தன்வில்லைப்பற்குனன்கையிற்கொடுத்து, ஒரு சுப்பலையெடுத்து ஒருசின்னமந்திரத்தை அவன்செவியிலோதிஅந்தச்சுப்பலை அவ்வில்லிற் றொடுக்கச் சொன்னார். பற்குனன் அப்படியே அந்தச் சுப்பலை வில்லிற் றொடுத்து விட்டான். அந்தச்சுப்பல் பந்தில் தைத்துக்கொண்டது. உடனே துரோணர் மற்றொருசுப்பல் அச்சுப்பலின்மேற்றொடுக்கச்சொல்லிமாட்டி, அவ்வாறேபலசுப்பல்கள் பிரயோகித்துச்சுப்பலிற்சுப்பல் தொடுத்துக்கொள்ளும்படிசெய்யப் பற்குனன் பந்தை எடுத்தான். இதைக்கண்டயாவருமகிழ்ச்சியடைந்து துரோணாசாரியைவணங்கி துதித்தார்கள். துரோணாசாரி அவர்களை ஆசீர்வதித்துக் கிருபாசாரி எங்கிருக்கிறாரென்றுவினவ, சிறுவர்கள் கிருபாசாரி இருக்கும் வீட்டின் குறிப்பைச் சொன்னார்கள். துரோணாசாரி கிருபாசாரி அரண்மனைக்குச்சென்றார். கிருபாசாரி இவர்வரவை அறிந்து எதிர்கொண்டுபோ யழைத்து வந்து வந்தனை வழிபாடு செய்து, தங்கையை ஆதரித்து, மைத்துனர்முறையாதலால் துரோணாசாரியை நோக்கி, ஓ அத்தான்! தாங்கள் இதுமுதல் என்னைவிட்டுப்பிரியாமல் இவ்விடத்திலேயேயிருக்கவேண்டுமென்றுவேண்டினார். துரோணர்அதற்கொத்துக்கொண்டு அவ்விடத்திலேயேதன் பத்தினியோடு மிருந்து, தன் குழந்தைக்கு யாதினுங் குறைவில்லாதபடி பாதுகாத்து வந்தார். இஃதிப்படியிருக்க:

இங்கே - குருகுல மக்கள் வீஷ்மரிடத்து வந்து வணங்கி, ஓ ஐயா! நமது நகரத்துக்கு ஒருவில்லாசிரியர் வந்திருக்கிறார். அவர்திறத்தை எங்களாற்சொல்ல வசமல்ல. நாங்களாடும் பந்து கிணற்றில் விழுந்தது. அதனை நீயெடு நானெடு என்றுவழக்கிட்டிருக்கிறதருணத்தில், அவர் வந்து பற்குனனால் வில்லிற் சுப்பல்களைத் தொடுக்கச்சொல்லிப் பந்தை வெளியி லெடுத்துக்கொடுத்து, இப்போது கிருபாசாரியார் வீட்டிற்குப் போயிருக்கிறார் என்றுகூறினார்கள். வீஷ்மர் அவ்வசனங்களைக் கேட்டுக் கிருபாசாரியை வரும்படிசெய்தார். கிருபாசாரி அதிக விரைவில் வீஷ்மரிடத்துக்கு வந்தார். வீஷ்மர் எழுந்தெதிர்கொண்டுபோ யழைத்து வந்து ஓர் பொற்பீடத்தி லிருத்திச் சோடச உபசாரமுஞ் செய்து வணங்கி, ஓ ஸ்வாமி! உமது அரண்மனைக்குயார்வந்தது என்றுகேட்க கிருபாசாரி-ஓமண்டலேஸ்வரா! பாரத்துவாசர் புத்திரராகியும் என் சகோதரியின் கணவராகியுமிருக்கிறதுரோணாசாரியார்வந்தாரென்று விளம்பினர். வீஷ்மர் அதிக மகிழ்ச்சியை அடைந்து, சில பெரியோர்களை விட்டுத் துரோணாசாரியை அழைத்து வரும்படி உத்திரவுசெய்தார். அப்பெரியோர்கள் சென்று துரோணாசாரியைக் கண்டு வணங்கி, ஓ ஸ்வாமி! மஹாராஜனாகிய வீஷ்மர் தங்களை அழைத்துவரச் சொன்னாரென்று கூறினர். துரோணாசாரியர் அரசராயிருக்கிறவர் அழைத்தால் வரத்தான் வேண்டுமென்று எழுந்து, அந்தப் பெரியோர்களோடு வீஷ்மர் சபைக்குவந்தார். வீஷ்மர் அவர்வருகின்றதை யுணர்ந்தெழுந்து, எதிர்கொண்டுபோய் அழைத்து வந்து பொற்பீடத்திலிருத்திச் சோடச உபசாரங்கள் செய்து அநேகவிதமாகத் துதித்தார். துரோணாசாரி பாஞ்சாலன் சபையிற் கூறியசபதம் எவ்வாறு நிறைவேறப்போகின்றதென்கிற ஏக்கத்தைக்கொண் டிருந்தாலும் வந்தனைவழிபாடுசெய்துநிற்கும் வீஷ்மரை ஆசீர்வதித்து, இருக்கச்சொல்லிகட்டளையிட்டார். வீஷ்மர் அவ்வாறே சிங்காதனத்திலிருந்து துரோணாசாரியின் திருவுருவத்தை நோக்கி வாடின முகத்துட னிருப்பதை உணர்ந்து, ஓ ஸ்வாமி! பிரம்மகுலதிலகராகவும் தவசிரேஷ்டசிகாமணியாகவுமிருந்து கல்வியிலருமையாயிருக்கிற வில்வித்தையிலு மகாமூர்த்தியாகிய உமது முகம் வாடியிருக்கவேண்டியதென்ன? இவ்வுலகத்தில் யாவர்க்கேனும் உள்ளத்திலொரு குறையிருந்தாற் கண்ணாடி தன்வயப்பட்ட பொருளை யெவ்வாறு விளக்குமோ அவ்வாறு அவர்கள் முகம் அக்குறையை விளக்கும். அதுபோலத் தங்கள்முகம் ஏதோ ஒரு குறையைக் காட்டுகின்றது. ஆதலால் நீங்கள் கொண்டிருக்கிற குறையைத் தெரிவிக்க வேண்டுமென்றுகேட்டனர். துரோணாசாரி வீஷ்மருடைய புத்திநுட்பத்துக்கு வியப்படைந்து, குறிப்பறிந்து கேட்கும் கோமகனுக்கு நாம் கொண்டிருக்குங்குறையைச் சொல்லத்தான் வேண்டு மென்று துணிவுகொண்டு சொல்லுகிறார்:

வில்லாசிரிய ரிருவரையும் வீஷ்மர் சன்மானித்தல்.

ஓ மண்டலேஸ்வரா! நான் வில் வித்தையைக் கற்க யத்தனித்து என் தந்தையிடத்தும் பரசுராமரி

டத்துங் கற்று, இன்னும் சாதுரியமானவித்தையைக் கற்கவேண்டுமென்று கருதி, அக்கினிகோத்திர முனிவரிடத்திற் கற்றுவருகிற காலத்தில் அவரிடத்தில் பாஞ்சாலனும்வந்து வில்வித்தை கற்றான். அவன் எனக்கும் வழிபட்டு, என்னிடத்திற் சிலவித்தையைக்கற்று, தனக்கு மகுடாபிஷேகமான காலத்திற் பாதிராச்சியங் கொடுக்கிறேனென்று வாக்குத்தத்தஞ் செய்துபோயினான். அவன்பின்பு மகுடாபிஷேகனா யிருக்கிறகாலத்தில்நான்சென்றேன். என்னையவன் அயலார்போலெண்ணிஏளிதஞ்செய்தான். அதனால்நான்சினங்கொண்டு ஒருசபதஞ்செய்தேன். அதென்னவெனில்- இராஜபுத்திரருக்கு என் வித்தையைக் கற்பித்து அவர்களால் உன்னைப்போரில் வீறிட்டலறச்செய்வதுமன்றி,தேர்க்காலிற்கட்டி என்சபையில் இழுத்துவரச்செய்து பங்கப்படுத்துகிறேனென்று கூறிவந்தேன். அந்தச்சபதம் எப்போது நிறைவேறுமென்கிற ஏக்கந்தானென்றிருக்கின்றது என்றார். வீஷ்மர் துரோணரை வணங்கிச் சொல்லுகிறார்: ஓஸ்வாமி! உலகத்தில் அரசராயிருக்கிறவர் தம்மை யடைந்தவர்க்கு ஒரு குறைவுநேரிட்டால்,தங்களுடம்பின்மேல் இச்சைவைக்காமற் புகழுடம்பைவகிக்கவேண்டுமென்று கருதி,மேல்வரும் லாபத்தைநோக்காமல் அக்குறைதீர மனம் வாக்கு காயங்களினாற் சகாயப்படுவார்கள். இப்போது தாங்கள்கூறிய குறைவுக்கு நானுதவிசெய்வது, எனக்கு நல்ல இலாபமாகத்தானிருக்கின்றது. அதற்கு நான் ஒரு விண்ணப்பம் செய்கிறேன். அதனை யேற்று உமதுகுறையைத் தீர்த்துக்கொள்ளும். அஃதென்னெனில் - குருகுலமக்கள் நூற்றைந்துபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு உமது வில்வித்தை கற்பித்து, உமது குறையை நீக்கிக்கொள்ளும். மேலும் தாங்கள் உயிருள்ளளவும் இந்த ஆதீனத்தைவிட்டுப் போகவேண்டியதில்லை. எங்களொப்பந்தம் மகரகுண்டல ஆர கேயூரகடக கங்கண மதாணிப்பதக்க முதலாகிய இராஜபூஷணங்களையணிந்து, ஆலோசனைக்கர்த்தர்களில் தாங்களும் ஒருவராக இருக்கவேண்டுமென்றுவேண்டிக்கிருபாசாரிக்கும் இவ்வண்ணமாகச் சொல்லி, அப்போதே ஆபரணங்களைக் கொண்டுவரச்செய்து இருவர்க்குங் கொடுத்து அதற்குத்தக்க இடம்பொருள் ஏவலனைத்தையு மீந்தார். அஸ்வத்தாமா வென்னுஞ் சிறுவனும் நாளுக்குநாள் யாதொருகுறைவுமின்றிவீறிவளர்ந்து,நான்குவேதம்-ஆறுசாஸ்திரம் - அறுபத்துநாலு கலைக்கியான முதலியவற்றோடு, வில்வித்தை-மல்வித்தை-அஸ்திரவித்தை- சஸ்திரவித்தை- முதலிய சகலவித்தைகளினு மேதையாயினன்.

குருபுத்திரர் நூற்றைவரும் வில்வித்தை பயிறல்.

இதற்குள் குருகுலமக்கள் (௱௫) பெயரும் வந்தார்கள். வீஷ்மர் அவர்களைநோக்கி, ஓ மக்களே! இதோயிருக்கிற பெரியவரிடத்தில் வில்வித்தையைக் கற்றுக்கொள்ளுங்களென்றுகூறினர். அந்த-(௱௫)பெயரும் துரோணாசாரியை வணங்கித் துதித்தார்கள். துரோணாசாரி அவர்களுக்குப்பல ஆசிகூறினார். வீஷ்மர் அந்த (௱௫) பெயரையும்பிடித்துத் துரோணாசாரியாரிடத்தி லொப்பித்து, உமக்கே சொல்லுகிறதற்கு அக்கரை யிருக்கிறபடியால் நான் தங்களுக்கு விரித்துரைக்க வேண்டியதில்லையென்று வணங்கினார். துரோணாசாரியார் வணங்கிய வீஷ்மருக்குப் பல ஆசிகள்பகர்ந்து விடைபெற்று, வீஷ்மர்விட்ட விடுதியில் வந்து போசனஞ்செய்து இனிது வீற்றிருந்தார். பின்பு துரோணாசாரியார் நல்ல சுபமுகூர்த்தத்தில் நூற்றுவரையும் ஐவரையும் அழைத்துக்கொண்டு சிலம்பக்கூடத்துக்குவந்து தேவாராதனை செய்து, வில்வித்தையை நூற்றைந்துபெயர்களுக்குங் கற்பித்தார். துரோணாசாரியார் பாஞ்சாலன் சபையிற்பேசிய சபதத்தை நிறைவேற்ற விருப்புற்றிருக்கிறவ ராதலால், அப்புத்திரர்களுக்கு வில்வித்தையைக்கற்பிக்கிறதில் அதிகசிரத்தை யுள்ளவராயிருந்து யானையேற்றங் குதிரையேற்ற முதலியவற்றையுங் கற்பித்த தல்லாமல், தேரிலிருந்து யுத்தஞ்செய்யுந் திறமும், தேர்ச்சாரதி ஒருவேளை யில்லாதிருக்கிற காலத்திலும் அவரவர்களே சாரதித்தொழிலைச் செய்துகொண்டு யுத்தஞ்செய்யு மர்மமும், ஒருபாணம்-௰-௱-௲-௰௲-௱௲-௰௱௲-கோடி இப்படி விர்த்தியாகும் பாணமந்திரத்தையும், மற்றுமுள்ள-வாள்-கதை-தோமரம்-சத்தி-சூல முதலிய ஆயுதவித்தைகளுங்கற்பித்து; அஸ்திரப்பிரயோகமும் அவ்வவ் வஸ்திரங்களுக்குத் தகுந்த மந்திரோபதேசமும் பூஜாவிதியும் தெளிவுற உணர்த்திவருகிறார். அக்காலத்தில் இந்தக் குருகுலகுமாரர்கள் நூற்றைவரில் பற்குனன் துரோணாசாரிகற்பித்துவருகிற வில்வித்தைக்குத் தன்மனோதருமத்தினாற் பதின்மணங் கதிகமாக வில்வினோதஞ்செய்துவருவான். துரோணாசாரி இதை அறிந்து, இந்த நூற்றைவர்களில் இப்பற்குனன் வைகுந்தவாசியாகியும் அடியவர்விசுவாசியாகியும் தசரதமூர்த்தியாகியு மிருக்கிற ஸ்ரீராமனை யொப்பானென்று மதித்து அவன்மேல் மிகுந்த அன்புடையவராகி,வில்வித்தையில் அதிகசாதுரியமான வித்தைகளை எல்லாங் கற்பித்து ஒரு நாள் அவனை யழைத்து, அப்பா பற்குனா! இன்றையதினம் ஒரு வில்வித்தையைக் காண்பிக்கிறேன். அது எனக்குமென்குருவாகிய அக்கினிகோத்திர முனிவருக்குமேயன்றி மற்றவருக்குத் தெரியாது. அதனை யுனக்குச் சொல்லுகிறேன். அஃதென்னெனில்-ஒருபாணத்தை எடுத்துத் தூண்டினால் அப்பாணம் நாலாகி நாலு திசைமுகத்தும் பரவுமென்று பாலித்து, அவ்வித்தைக்குரிய மகாமந்திரோபதேசமுஞ் செய்தார். இப்படி யின்னு மகாமகிமையாகிய வில்வினோதங்களைக்கற்பித்துவருவார். மற்றைக் குருபுத்திரர் நூற்று நால்வர்க்கோ வென்றால், பற்குனனுக்கு முன்குறித்த வில்வினோத மொன்றுதவிர, மற்றவித்தைகளையெல்லாம் கற்பித்து வந்தார்.

ஏகலைவன் கதை.

இப்படி கற்பித்து வருகிறகாலத்தில், ஒரு நாள் குருகுமாரர்கள் நூற்றைந்துபேரும் போசனத்துக்குச்சென்றார்கள். துரோணாசாரியார் தனித்திருந்தார். அந்தச் சமயத்திற் குறிஞ்சி நிலத்துக்குரிய வேடராஜன் புத்திரனாகிய ஏகலைவன் வில்வித்தையின் மேற் சிரத்தை யில்லாதவனாகி, வீண்விளையாட்டிற் கருத்தைச் செலுத்தி, வயது வந்தகாலத்தில் அவ்வித்தையில் ஆசையுடையவனாகித் துரோணாசாரியின் பெருமையைக் கேள்விப்பட்டு அவரிடத்துவந்துவணங்கித் தன்கருத்தை வெளியிட்டான். துரோணாசாரி ஏகலைவனை நோக்கி, அப்பா! நான் குருகுமாரர்கள் நூற்றைந்துபேருக்கும் வில்வித்தையைக் கற்பிக்கிறேனாதலால் எனக்கு ஒழிவில்லையென்று மறுமொழி சொன்னார். ஏகலைவன் பின்னுமொருதரம் துரோணாசாரியைப்பணிந்து, ஓ ஸ்வாமி! உம்மால் வில்வித்தையைக் கற்காமற் போனாலும், உம்முடைய அனுக்கிரகத்தினால் இந்த வில்வித்தையைக் கற்றுக்கொள்ளுகிறேன் பாருமென்று தன்னிருப்பிடத்துக்கு வந்து, ஒரு சிலம்பக்கூடங் கட்டித் துரோணாசாரியைப்போல் உருவஞ்செய்து ஒருமேடைமேல் நிறுத்தித் தான் அவ்வுருவின்முன் வந்து நின்று, ஓ ஸ்வாமி! இவ்வாறுதானா விற்பிடிக்கிறது? இப்படித்தானா சரந்தொடுக்கிறது? இந்த அஸ்திரத்துக்குத் தகுந்த மந்திர மிதுதானாவென்று எல்லாந் தானே சொல்லிக்கொண்டு இவ்வண்ணமாக அவ்வில்வித்தையைப் பயின்றுவருகிறான். இவனுக்குத் துரோணாசாரியின்மேற்கொண்டிருக்கிற நம்பிக்கையே குருவாக இருந்து வில்வித்தைகளெல்லாவற்றையும் கற்பித்தது. அதுவுமல்லாமல் துரோணாசாரியினிடத்து இன்னுமிருக்கிற அதிக சாதுரியமான வில்வினோதங்களும் தனக்குத்தானே விளங்கின. இவ்வாறு ஏகலைவன் வில்வித்தையைக் கற்றுவருகிற காலத்தில் குருகுலமக்களாகிய நூற்றைந்துபெயரும் வேட்டையாட யத்தனித்து, வேடர் - வலைஞர் - முதலியவர்களோடு கூடிக் காட்டிற் சென்று அவரவர்கள் தனித்தனி தங்கள் கருத்துக் கிசைந்தபடி யானை - புலி - கரடி - சிங்கம் - பன்றி - மான் - காண்டாமிருக முதலியவற்றை வெட்டிக் குத்திக் கொன்று வேட்டையாடி வருகிறார்கள். அப்போது பற்குனன் ஒருவனத்திற் சென்று மிருகங்களை அதப்படுத்தினான். அந்தப் பற்குனன் மிகுந்த அன்புடன் வளர்த்துவருகிற நாயானது ஒருமிருகத்தைத் துரத்திக்கொண்டுபோய் அம்மிருகம் அதன்கண்ணுக்குத் தோன்றாமல் மறையவே அந்நாயானது தன் எஜமானைத்தேடி ஏகலைவன் சிலம்பக்கூட மிருக்கிற வழியாய் ஓடிவந்து துரோணாசாரியைப்போற் செய்துவைத்திருக்கிற மேடையினிடத்துச் சலவிசர்ச்சனஞ் செய்தது.

அதை ஏகலைவன் பார்த்துச் சினங்கொண்டு, தன்வில்லை வளைத்து அதன்மேல் ஒரு பாணத்தைத் தொடுத்தான். அந்தப்பாணம் நாலாகி நாயின்முகத்தில் நாலுதிசையிலும் பட்டன. உடனே நாய் பற்குனனிடத்துவந்து ஓலமிட்டழுதது. பற்குனன் நாயை நோக்கி முகத்தில் நான்குசரம் பட்டிருப்பதைப் பார்த்து, அடடா!! இவ்வண்ணமாகச் சரந்தொடுப்பதற்குத் துரோணாசாரி- அக்கினிகோத்திர முனிவர்- நாம் இந்தமூவர்க்குத்தானே தெரியும். இந்தச் சுவானத்துக்கு இவ்வண்ணமாகப் பாணம் பிரயோகித்தவர் யார்? அவரை நாம் பார்க்கவேண்டுமென்று நினைத்து அச்சுவானத்தின் பின்சென்றான். சுவானம் ஏகலைவன் சிலம்பக்கூடத்திற்போய் நின்றது. பற்குனன் அச்சிலம்பக் கூடத்திற் சென்றபோது ஏகலைவன் பார்த்துத் திடுக்கிட்டு, ஓ! ஓ! மஹாராஜாவின் புத்திரனாகிய பற்குனன் இங்குவரவேண்டிய தென்னவென்று மனங்கலங்கி, ஓடோடியும்வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து சொல்லுகிறான்: ஓ ஸ்வாமி! தாங்களிவண்வந்தது அடியேன்செய்தமாதவப்பேறோ? அல்லது இவ்வனஞ்செய்த புண்ணிய வசமோ? அல்லது எங்கள் குலஞ்செய்த பூஜாபலமோ? என்று பலவாறு துதித்து நின்றான். பற்குனன் வணங்கிய வேடனை ஆதரித்து, அப்பா! இந்த நாயை எய்தவர் யாரென்று கேட்டான்-ஏகலைவன்-ஓ ஸ்வாமி! தங்களுடைய சுவானமென்று தெரியாது. இந்த யிடத்துவந்து என் குருவினுருவ மிருக்கிற மேடையின்மேல் நீர்விட்டது. அதனைப்பார்த்து மனம்பொறாமல் நாயை எய்தேனென்றான். அதற்குப் பற்குனன். ஓ ஏகலைவனே! உனக்குக் குரு யாரென்றுகேட்டான். ஏகலைவன் வணங்கிய முடியனாகிச் சொல்லுகிறான்: ஓ ஸ்வாமி! நான் வில்வித்தையின்மே லாவல்கொண்டு துரோணாசாரியைக் கண்டு என்கருத்தை வெளியிட்டபோது, துரோணாசாரி எனக்கு மிகுந்த அலுவலிருக்கின்றதால் உனக்கு வில்வித்தை கற்பிக்க ஒழிவில்லை என்று கூறினார். அதன்பின்பு அவருடைய திருவுருவத்தைப்போல் ஒரு உருவுசெய்து, அதனைக்குருவாக வைத்துக்கொண்டு வில்வித்தை கற்றுவருகிறேனென்று சொன்னான்.

பற்குனன் இந்த வசனங்களைக்கேட்டு அதிகவியப்படைந்து, ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்? நமதுகுருவாகிய துரோணாசாரியார் இந்த ஏகலைவனுக்கும் குருவாக இருக்கிறார். நமக்குத் தெரியக்கூடாதென்று இந்த ஏகலைவன் மாறுபாடாகச் சொல்லுகிறான். இவனிருக்கட்டும்- முன்னம் நமக்கு ஒரு வில் வினோதங் கற்பித்து இது ஒருவர்க்குந் தெரியாதென்று சொன்னாரே: இந்த வேடன் அந்த வில் வினோதத்தைச் செய்தானே: எல்லாம் குருவைக்கண்டு அவர் கருத்தைத் தெளியவேண்டுமென்று மனதில் நினைத்து மீட்டுங் காட்டிற்சென்று சிலமிருகங்களை [illegible] த்துப் பின்ப [illegible] தம்பிமா முதலானவர்களோ

டுகூடி நகரத்துக்கு வந்து ஸ்நானம் பண்ணி போஜனஞ்செய்து யாவரோடும் தானும் சிலம்பக்கூடத்துக்கு வந்து வழக்கப்படி வில்வித்தைகளை அப்பியாசஞ்செய்து அரண்மனைக்குப் போம்போது, யாவரும் ஆசிரியருக்கு வழக்கப்படிவணங்கி விடை பெற்றார்கள். இந்தப் பற்குநன் தூரநின்று அஞ்சலிசெய்து போயினான். துரோணாசாரி பற்குநன் நடத்திய மரியாதையைக்கண்டு மனதுக்குள் கனவருத்த மடைந்து, ஓ! ஓ! இவனால் நமதுமனக்குறையை நிறைவேற்ற எண்ணியிருக்கிறோமே: இவன் இன்றையதினம் நம்மேல் வெறுப்புடையவனாய்த் தூரநின்று அஞ்சலிசெய்து போகவேண்டியதென்ன? அதனை யறியவேண்டுமென்றிருந்தார். ஒருநாள் பற்குநனும் துரோணாசாரியரும் தனியேசந்திக்கத் துரோணாசாரியார் பற்குநனை நோக்கி; அப்பா! உனக்கென்மேல் வெறுப்புண்டாக நான் என்னசெய்தேன்? அதனைக் கூறுக. என்றுவினவப் பற்குநன் வணங்கிச் சொல்லுகிறான்: ஓ ஸ்வாமி! முன்னமொரு வில் விநோதத்தை எனக்குக் கற்பித்து. இவ்வித்தை மற்றொருவர்க்குந் தெரியாதென் றுரைத்தீர்கள். நமது மலைச்சாரலிலிருக்கும் ஏகலைவனென்கிறவேடன் அவ்வித்தையைக் கற்றிருக்கிறான். அவனைக்கண்டு உனக்குக் குரு யாரென்று கேட்ட போது தங்களுடைய நாமதேயத்தைச் சொன்னான். அன்றுமுதல் தங்கள்மீது வெறுப்புடையவனாக இருக்கிறேனென்றான். துரோணாசாரி அதிகவியப்படைந்து, நல்லது:பற்குநா! அந்தவேடனை எனக்குக் காண்பிக்கிறையா வென்று கேட்டார். பற்குநன் காண்பிக்கிறேனென்றுகூறப் பின்பு இருவருங் கூடிக்கொண்டு வனத்திற்சென்று, ஏகலைவனிருக்கிற விடத்துக்குப் போயினர்.

ஏகலைவன் இவ்விருவர் வரவையறிந்து பரிந்து வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, சிலம்பக்கூடத்துக் கழைத்துப்போய்ச் சோடச உபசாரமு நடத்திக் கண்களில் ஆனந்த நீர்தளும்ப இரண்டுகாத்த்தையும் சிரமேற்கொண்டு அநேக விதமாகத் துதித்துச் சொல்லுகிறான்: ஓ ஸ்வாமிகளே! எளியேன்மீது கிருபைகூர்ந்து என்னிடத்துக்குவர என்னபாக்கியம் பெற்றேன்? நீங்களிருவரும் இங்குவந்தகாரணம் யாதுகருதியோ அறிகிலன். என்று கூறி வணங்கவும் துரோணாசாரி வணங்கிய ஏகலைவனை ஆசீர்வதித்து, ஓ வேடராஜனே! உனக்கு வில்லாசிரியன் யார்? நீ அதிக அருமையான விலவிநோதங்களைச் செய்கின்றனையாம் அதனைப்பார்க்க வந்தோம் எனக்கூறவும் ஏகலைவன் ஓ ஸ்வாமி! ஆதியில் வில்வித்தைகற்கத் தங்களிடத்துக்கு வந்தபோது எனக் கொழிவில்லையென்று தாங்கள் மறுத்துவிட்டீர். அதன்பின்புநான் இவ்விடம்வந்து ஒருசிலப்பக்கூடங் கட்டி, தங்களைப்போல ஒருதிருவுருவஞ்செய்துவைத்து அதுமுன்னிலையில்வில்வித்தையைக்கற்றேன் இ[illegible]நான் கற்றிருக்கிற வித்தையையுங்காண்பிக்கிறேன். என்றுகூற [illegible]னைக்கமுதவியசாம்பிரதாயப்பிரகாரம் ஆவலுடன்காண்பித்தான். அவனுடைய பக்தி விசுவாசத்துக்குத் துரோணாசாரியார்மெச்சி, ஏகலைவனைவாழ்த்திப்பற்குனனைப் பார்த்துச்சொல்லுகிறார்: அப்பாபற்குனா! குருவிசுவாசம் யாருக்கிருக்கின்றதோ அவர்களுக்குத் தெய்வானுகூல முண்டு. தெய்வானுகூல முண்டான போதே எல்லாத்திறமு முண்டாகும். அதற்குத் திஷ்டாந்தமிந்த ஏகலைவன் தானென்று காண்பித்தார். அதற்குப் பற்குநன் குருவாக்கியத்தை மனதில் மதித்து, அடா! இந்த ஏகலைவன் தனது பக்தி விசுவாசத்தினால் வில்திற முடையவனானான். இதனை யுணராமல் ஆசிரியர்மேல் வெறுப்புற் றிருந்தோம். என்று தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு, துரோணாசாரியாருக்கு அதிக விருப்பமுண்டாக வந்தனை வழிபாடு செய்தான். துரோணாசாரி மீட்டும் ஏகலைவனை நோக்கி, ஓ ஏகலைவா! நீ குருவிசுவாசி ஆகையால், அருமையான வில்வித்தைகளெல்லாம் கைதேர்ந்தாய். எங்களுக்கு விடைகொடு நாங்கள் இருப்பிடத்துக்குச் செல்கிறோ மென்றார். உடனே யவரை ஏகலைவன் வணங்கி, ஓ ஸ்வாமி! நான் எளியவனாயிருந்தாலும் தங்களுடைய திருவுருவத்தியானத்தால் வில்வித்தையைக் கற்றேன். இப்போது தாங்களே நேரில் எழுந்தருளியதால் குருதக்ஷிணை கொடுக்க மனமுடையவனா யிருக்கிறேன். எளியேன் மீது கிருபை கூர்ந்து என்ன வேண்டுமோ அதனைக் கேளுங்களென் றிசைத்தான். அதற்கு ஒன்றும் வேண்டாமென்று துரோணாசாரி மறுத்தார். ஏகலைவன் மறுபடியும் வேண்டினான். அதன்மேல் பற்குனனுக்குத் தம்மேற் பத்தியும் பயமுண்டாகத் துரோணாசாரி அவ்வேடனைப் பார்த்து, ஓ ஏகலைவா! நீ யெனக்குத் தக்ஷிணை கொடுக்க மனதிருந்தால் உன் வலக்கைப் பெருவிரலைக் கொடுவென்று கேட்டார். ஏகலைவன் தக்ஷணம் சூரியெடுத்துத் தன் வலக்கைப் பெருவிரலை அறுத்துத் துரோணாசாரியின் பாதத்தில் வைத்து வணங்கினான். துரோணாசாரி அதிகமகிழ்வை அடைந்து உள்ளம்பூரித்துச் சொல்லுகிறார்: ஓஏகலைவா! முற்காலத்திற் குருபக்தியிற் சிறந்தவன் உதங்கனென்று கேள்வி. இக்காலத்தில் நீதான் குருபக்தியுள்ளவன். இதுவரையில் உனக்கு ஏகலைவனென்று பெயர் வழங்கி வந்தது. குருவிசுவாசத்தினால் வில்வித்தையைக் கற்றபடியால், இனி உனக்கு ஏகவல்லியனென்று பெயர்வழங்கக்கடவது. என்றுகூறி விடைபெற்றுத் துரோணாசாரியும் பற்குநனும் பட்டணம்வந்து சேர்ந்தார்கள். பற்குநன் அன்றுமுதல் குருவின்மேற் குரோதமின்றி, முன்போலவே அன்புடையவனாகி வில்வித்தையைக் கற்றுவந்தான்.

துரியோதனாதியர் ஆசாரிய நிந்தைசெய்தல்.

இப்படி நூற்றுவரும் பாண்டுமக்களும் வில்வித்தையைக் கற்றுவருகிறபோது பாண்டுமக்கள் வில்வி

த்தையிலும் மற்ற ஆயுத வித்தைகளிலும் வல்லவர்களாகி யாவரும் புகழும்படி நாளுக்கு நாள் திறமுடையவர்களாய் வருகிறகாலத்தில் துரியோதனன் கண்டு பொறாமைகொண்டு தன்தாதையிடத்தும் மூதாதையிடத்தும் சென்றுவணங்கி, ஓ ஐயமீர்! வில்லாசிரியர் பாண்டுமக்கள்மீது அன்புடையவராகி அதிகவித்தையைக் கற்பிக்கிறார். எங்கள்மீது ஊக்கமுடையவராயிருக்கவில்லையென்றான். வீஷ்மரும் திரிதராஷ்டிரனும் துரோணாசாரியை அழைத்து, அவர்க்கு வந்தனை செய்து, ஓ ஸ்வாமி! குருமக்களாகிய நூற்றைவரும் உமக்கு ஒருநேத்திரமாகக் கருதல்வேண்டும். அவ்வாறு கருதாமல் ஒருதிறத்தாருக்கு ஒருவிதம் மற்றொருதிறத்தாருக்கு ஒருவிதமாகக் கற்பிக்கிறீர்களாமே: அதுதங்களுக்குத் தகுதியா? என்றுவினவ அதற்குத் துரோணாசாரி கனவருத்தமுற்றுச் சொல்லுகிறார். ஓ மண்டலேஸ்வரர்களே! உங்கள்மக்கள் நூற்றைவரும் எனக்கு ஒருகண்மணியாக எண்ணி வித்தையைக் கற்பித்துவருகிறேன். அவரவர்கள் புத்தி யுத்திக்குத் தக்கதாக வித்தையேறுகின்றது. அதற்கு நான் என் செய்வேன்? என்று கூறி அவர்களிடத்து விடைபெற்று சிலம்பக்கூடத்துக்குவந்து நூற்றைவரையுமழைத்து, ஓ குருபுத்திரர்களே! நாமெல்லாம் கங்கைக்குப் போய் ஸ்நானஞ்செய்து வருவோம் வாருங்களென்று அழைத்தார். குருபுத்திரர் அதற்கு ஒத்துக்கொண்டு, யாவரும் ஒன்றாகத்திரண்டு துரோணாசாரியோடுகூடிக்கங்கைக்குச்செல்வதானார்கள். அவ்வாறுசெல்கிறபோது துரோணாசாரி தன்னிடத்துமிகுந்த அன்புடையவனாயிருக்கிற பற்குனனை நோக்கி, அப்பா பற்குனா! நமது அரண்மனைக்குச்சென்று எண்ணெயு நலங்கும் வாங்கிவா. வருகிறபோது எண்ணெயின் வட்டிலையு நலங்கின்வட்டிலையும் பூமியில்வைக்காமற்கொண்டுவா. என்றுகூற அவ்வாக்கியத்தைச்சிரமேற்கொண்டபற்குனன் அவர் அரண்மனைக்குச்சென்றான். இங்கே துரோணர்மற்ற நூற்றுநால்வரையும் அழைத்துக்கொண்டு கங்கையை நோக்கிப் போகின்றார். போகிறபோது வழியில் ஓர் பெரிய ஆலமரந்தோன்றிற்று. துரோணாசாரி அம்மரத்தடியில் யாவரையு மழைத்துப் போய் துரியோதனனைப்பார்த்து, அப்பா துரியோதனா! இதோயிருக்கிற ஆலமரத்தினிலைகளையெல்லாம் ஒரு பாணத்தினால் துளைசெய்யும் ஒருவில்விநோதம் காண்பிக்கிறேன். அதனைநீகற்றுக்கொள்ளுக. என்றுகூறி அருகிலழைத்துப் பூமியில் ஒருசக்கரமெழுதி, அச்சக்கரத்தில்பீஜாக்ஷரங்களமைத்து, அம்மந்திரத்தையவன்காதிலுபதேசித்து, வில்லைவளைத்துப் பாணந்தொடுவென்றுகட்டளையிட்டார். துரியோதனன்அவ்வாறு வில்லைவளைத்து ஒரு பாணத்தைத் தொடுத்தான். அப்பாணம் சென்று ஆலமரத்தின் இலைகளை யெல்லாம் ஒவ்வொரு ரந்தனமிருக்கும்படி செய்தது. அதைத் துரியோதனன் கண்டு மகிழ்வெய்தி ஆசிரியனைத்துதித்தான். பின்பு துரோணாசாரி அங்கெழுதிய சக்கரத்தைக் கலைக்காமல் யாவரையுமழைத்துக்கொண்டு கங்கைக்குச்சென்றார்.

துரோணர்முதலைவாயிலகப்பட்டது.

இங்கே பற்குனன் குருபத்தினியைக்கண்டு வணங்கி எண்ணெயும் நலங்கும் வாங்கிக்கொண்டு அதிகவேகமாகக் கங்கையை நோக்கி வருகிறபோது வழியில் ஆலமரந்தோன்ற அம்மரத்தடியில் வந்து சற்றேநின்றான். அங்கே குருகுமாரர்கள் அடிக்குறிகள் நெருக்கமாக இருந்தன. அடடா!! இங்கு நமது ஆசிரியர் ஏதோ ஒருவில்விநோதம்செய்தார். அதற்காக நமதுதமயன் தம்பிமார்கள் கும்புகூடிப் பார்த்திருந்தவர்களாகவேண்டும். என்றுகருதி ஆலமரத்தடியைச்சுற்றிப்பார்க்கும்போது அங்கொருசக்கரந்தோன்றிற்று. அந்தச் சக்கரத்தையும்சக்கரத்துக்குள்ளிருந்தபீஜாக்ஷரத்தையும்பார்த்து, அவைகளைமனதிலமூத்திக்கொண்டு மரத்தை நோக்கினான். அம்மரத்திலிருக்கிற இலைகள் துளைக்கப்பட்டிருப்பதையுணர்ந்து, அடடா!! இந்தவித்தையைத்தான் நமது குரு இங்கு கற்பித்தார் என்று நிச்சயித்து அந்தமந்திரத்தை மனனஞ்செய்து, நாம் வில்லெடுத்துப்பாணந்தொடுப்போமென்றால் கைகளில் எண்ணெய்வட்டிலும் நலங்குவட்டிலு மிருக்கின்றன. பூமியில் வைத்தாற் குருவின் கட்டளைக்கு விரோதம்வருகின்றது. ஆகிலும் நாம் இந்த இரண்டுவட்டிலையும் அந்தரத்திலேற்றி அவைவருகிறதற்குள் பாணம் தொடுப்போமென்று வில்லைவளைத்து நாணேற்றிட்டு ஓர் மந்திரக்கணையையுந்தி வட்டில்களை அந்தரத்திலேற்றி, ஆசாரியரைச் சிந்தித்து மற்றொரு அஸ்திரத்தையெடுத்துத் தூபதீப நைவேத்தியஞ்செய்து தூண்டினான். அப்பாணஞ்சென்று இலைக்கொரு துளையுண்டாக்கிற்று. இதற்குள் அந்தரத்திலெறிந்த வட்டில்களும் வந்தன. அவைகளைக் கரத்திலேந்தி மரத்தை நோக்கினான். இலைகளெல்லா மிரண்டு துளைபட்டிருந்தது கண்டு. அதனைக்கண்டு மகிழ்வடைந்து பூமியிலிருந்த சக்கரத்தைக் கலைத்துவிட்டுக் கங்கைக்குவந்து குருவைக்கண்டு வணங்கி, தன்கரங்களினாற் குருவுக்கு எண்ணெய் தேய்த்து நலங்கிட்டுவிட்டுத் தான் தன்தமயர்களும் தம்பியர்களும் விளையாடும் துறையிற்சென்று நீர் விளையாடினான்.

துரோணாசாரி கங்கைத்துறையிலிறங்கி ஸ்நானஞ்செய்கிற போது ஒரு முதலை வந்து அவர் காலைப் பற்றிக்கொண்டது. அதனாலவர் கனவருத்த மடைந்து தன்சக்தியளவு காலையுதறியும் அம்முதலை விடாது பற்ற, அதுகண்டு முற்காலத்தில் தாகத்திற்குச் சலமருந்தக் கயத்திற்சென்று முதலைவாயிற்சிக்கிய கஜேந்திரன் ஆதிமூலமென்றெப்படியழைத்தானோ அப்படியே குருகுலமக்களைக் கூவி அழைத்தார். அந்தச்சத்தம் நீர்விளையாடுகிற குருகுலமக்கள் காதிற் கேட்கவில்லை. பின்பு துரோணாசாரி அவ்வழியில்வருகிற

வர்களோடு தான்படும் அவஸ்தையைச் சொல்லியனுப்பினர். வழிப்போக்கர்கள் குருகுல மக்களிடத்து வந்து, ஓராஜகுமாரர்களே! உங்கள் ஆசிரியனை முதலைபற்றி இழுக்கின்றது. இன்னேரம் பிராணனிருக்கின்றதோ போயிற்றோவென்று புகன்றார்கள். அதுகேட்ட துரியோதனனும் அவன் தம்பிமார்களும் அதிவேகமாகவந்து, கல்லுங்கட்டியு மெடுத்து அடித்தார்கள். அம்முதலை முன்பற்றினதைவிட அதிகமாகப்பற்றிக் கங்கையில்வலிக்க, இதற்குள்பற்குநன் பார்த்து, தன்வில்லைவளைத்து நாணேறிட்டு ஒருபாணத்தையெடுத்துத் தொடுத்து முதலையின் கண்டமும் அதன் உடலும் துண்டமாகப் போகும்படி தூண்டினன். அப்பாணம் ஆதிமூலமென்றழைத்தயானைக்குத் திருமாலேவிய ஆழிபோற்புகுந்து அம்முதலையைக் கண்டித்தது. அந்தக்கஜேந்திரன் எவ்வாறு ஆனந்தத்தையடைந்து கரையேறினனோ அவ்வாறு துரோணுசாரி அதிகமகிழ்வைக்கொண்டு முதலைவாயினின்று வெளிப்பட்டுப் பற்குநனைத்தழுவி, அப்பா பற்குநா! நீயெனக்குப் பிராணுதாரமாயிருந்தாய். உன்னாலுயிர் பெற்றேன். உயிருதவி செய்தவர்க்குச்செய்யு முபகாரம் என்னயிருக்கின்றது? நீயே கஜேந்திரவரதன். என்று பலவாறுபுகழ்ந்து ஆடையாபரணங்களை யணிந்து, யாவரையு மழைத்துக்கொண்டு முன்வந்த வழியாகவந்து, ஆலமரத்தருகிற் சேர்ந்து அம்மரத்தை நோக்கினர். அப்போது அந்தமரத்திலிருக்கிற இலைகளெல்லாம் இரண்டுதுளையாக இருக்கின்றதைப் பார்த்து வியப்படைந்து, ஓகுருகுமாரர்களே! முன்னம் துரியோதனனால் இம்மரத்தினிலைகளை ஒவ்வொரு துளையாகத் துளைத்தோம். இப்போது இரண்டுதுளைகள் இருத்கின்றன. இதையார்செய்தது? என்று வினவப் பற்குநன் வணங்கிச் சொல்லுகிறான்: ஓ ஸ்வாமி! அடியேன் எண்ணெயும் நலங்கும் கொண்டு வருகிறபோது இம்மரத்தடியிற் சக்கரம்போட்டிருந்தது. அந்தச்சக்கரத்தையும் அதிலடக்கி யிருந்த பீஜாக்ஷரத்தையும் என்மனதிலழுத்தி ஆலமரத்தைப்பார்த்தேன். மரத்திலைகளெல்லாம் துளைபட்டிருந்தன. நாமுமவ்வண்ணம் செய்வோமென்று கரத்திலிருந்த எண்ணெய்வட்டிலையும் நலங்குவட்டிலையும் தங்கள் கட்டளைக் கழிவுவராமல் ஆகாயத்திற்போக்கி, அவைகள் வருகிறதற்குள் வில்லை வளைத்து ஒரு பாணத்தைத் தொடுதது வட்டில்களைப் பிடித்துக்கொண்டேன். அந்தப்பாணம் இந்த இலைகளைத் துளைசெய்தது. ஆகையாலிரண்டு துளைபட்டிருக்கின்றதென் றுரைத்தான்.

துரோணுசாரி அதிகமகிழ்வடைந்து, அப்பாபற்குநா! முன் செய்ததுபோல் இப்போது செய்தால்தான் என்மனதுக்குத் திர்ப்தியாயிருக்கும். எதோ செய் பார்ப்போம். என்றிசைக்கப் பற்குநன் வில்லை வளைத்து ஒருகணையினல் இரண்டு வட்டிலையும் அந்தரத்திலெறிந்து ஒருபாணத்தை யெடுத்து மந்திரோபதேசஞ்செய்து தூண்டிவிட்டான். இதற்குள் அந்தரத்திலெறிந்த வட்டில்கள்வர அவைகளைப் பூமியில் விழவொட்டாமற் கைப்பற்றினன். தொடுத்தபாணம் சென்று இலைகளையெல்லாம் துளைத்து விட்டது. துரோணுசாரியும் மற்றுமுள்ள குருகுலமக்களும் ஆச்சரியப்பட்டுப் பற்குநனைப் புகழ்ந்தார்கள். இவர்களில் துரியோதனன் மாத்திரம் பற்குநன்செய்த அருமைக்கு மகிழாமற் பொறாமைகொண்டு, முகம் வேறுபட்டிருந்தான். துரோணுசாரி துரியோதனனை நோக்கி, அப்பா துரியோதனா! பற்குநனது புத்தியையும்யுக்தியையும் பார்த்தையா? அவனுக்குச் சொல்லாததற்கு முன் நிலத்தெழுதியிருந்த சக்கரத்தைக்கண்டு, அதன்மேல் அந்தவித்தையைக் கற்றுக்கொண்டான். நீயென்னிடத்திற் கற்றுக்கொண்டனையே எதோ இப்போதுசெய் பார்போமென்றனர். துரியோதனன்முன் செய்ததைமறந்து ஆலமரத்தோடு தானுமொருவேலமரம்போலிருந்தான். துரோணுசாரி அதுகண்டு, அப்பா துரியோதனா! அவரவர்கள் பூர்வம் செய்த பூஜாபலமெவ்வளவோ அவ்வளவுதான் கிடைக்கும். அதை நோக்காமல் எனக்கு நன்றாகச்சொல்லவில்லை பாண்டு மக்களுக்கு நன்றாகச் சொல்லுகிறேனென்று உங்கள் மூதாதைகளோடு முறையிடுகின்றையே பார்த்தையா? உனக்குச் சொல்லியதை நீமறந்துவிட்டாய்: அந்தப் பாண்டுபுத்திரன் நிலத்திலிருந்ததை மனத்திலிருத்தி அவ்வித்தையைக் கிரகித்தான். இதற்கு யாரை நோகலாம். என்று யாவரையு மழைத்துக் கொண்டு நகரத்துக்குச் சென்று அவரவர்களைப் போஜனஞ் செய்துவரச் சொல்லிக் கட்டளையிட்டுத் தாமும் அரண்மனைக்குப்போனர். குருபுத்திரர் போஜனஞ்செய்து சிலம்பக்கூடத்துக்குவந்து சேர்ந்தார்கள். துரோணுசாரியும் நாளுக்குநாள் வில்வித்தைகளைக் கற்பித்துவந்தார்.

இப்படி சிலநாட் சென்றபின்பு வில் விநோதங்களிலு மற்ற ஆயுதவித்தைகளிலும் பாண்டுமக்கள்சிறப்புற்று யாவராலும் புகழப்பட்டார்கள். அதனைக் கண்டு துரியோதனன் மிகுந்த ஆறாமை கொண்டு, தாய் - தந்தை - மூதாதை-இவர்களிடத்துச் சென்று வணங்கி, ஓ என்னருமைக் குரவர்களே! நாங்களெல்லாரும் துரோணுசாரியிடத்துப் பாண்டு மக்களைப்போல் தநுசாஸ்திரத்தையும் ஆயுதப்பரிக்ஷைகளையும் கற்றுவந்தாலும், துரோணுசாரியார் அவர்கள்பேரில் வைத்திருக்கிற அன்பு எங்கள்மீதில்லை. அவர்களுக்கு ஒருவிதமாகவும் எங்களுக்கு ஒரு விதமாகவும் கற்பிக்கிறார். என்றுமுறையிட வீஷ்மர்-திரிதராஷ்டிரன்-விதுரன் - முதலானவர்கள் சற்றாலோசித்துத் தனுவாசாரியரை அழைத்துக்கேட்கவேண்டுமென்று தீர்மானித்துச் சில தூதுவர்களால் துரோணுசாரியரை வரவழைத்து அவர்க்கு வந்தனை வழிபாடு செய்து

ஒரு பொற்பீடத்திலிருத்தி, ஓ ஸ்வாமி ! குருபுத்திரர் நூற்றைவரையும் ஒன்றாகநினைக்கவேண்டியது என்று முன்னமே ஒருவிசை சொல்லியிருக்கின்றோம். அதைவிட்டு இன்னமும் ஒருத்தரை ஒரு விதமாகவும் மற்றொருத்தரை மற்றொருவிதமாகவும்பார்க்கின்றீராமே: அது தங்களைப்போலொத்த கியானவான்களுக்குத் தகுதியாவென்றுவினவத் துரோணர் அரசர்களைஆசீர்வதித்துச் சொல்லுகிறார்: ஓ அரசர்களே! நமதுகையிலிருக்கிற விரல்கள் ஒன்றுக்கொன்று குறையாமலிருக்கின்றனவா? அதுபோல் மக்களது புத்தியுக்தி எவ்வளவோ அவ்வளவு வித்தையேறுகின்றது. அதைப்பற்றி என்னை வினவுகிறது தங்களைப்போலொத்த மகாமண்டலேஸ்வரர்களுக்குத் தகுதியல்லவென்று மறுத்து உங்கள் புத்திரருடைய புத்தி யுக்தியை நீங்களே யாதேனுமோர் காரியமூலமாகப் பரிக்ஷைசெய்து நான் சொன்னதைஆலோசித்துப்பாருங்களென்றுசொல்லி விடைபெற்றுத் தமதிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

குருபுத்திரர்வினோதப்பரிக்ஷை.

—o—

வீஷ்மருந்திரிதராஷ்டிரனு மந்திரி முதலானவர்களுடன்கூடி குருபுத்திரர் நூற்றைந்துபெயரையுமழைப்பித்துத் திரிதராஷ்டிரன் புத்திரராகிய துரியோதனன் முதலாகிய நூற்றுவர்கையிற் கொஞ்சம் திரவியங்கொடுத்து, நீங்கள் இந்தத் திரவியத்துக்கு வீடு நிறைந்த பதார்த்தம் வாங்கி வைத்திருங்களென்று கூறிப் பாண்டுமக்களையழைத்து அவர்கள்கையில் அவ்வளவு திரவியங்கொடுத்து அவர்களுக்குச் சொன்னபடியே இவர்களுக்குந் திட்டஞ்செய்து அனுப்பினார்கள். நூற்றுவரும் ஓரிடத்திற்கூடி சகுனியையும் கர்னனையுமழைத்து வீடுநிறைந்த பதார்த்தம் வாங்கிவைக்கச்சொல்லிக் கொஞ்சந்திரவியங்கொடுத்த நமதுபெரியோர்கள்மனங்களிக்க என்னபதார்த்தம் வாங்கலாம் சொல்லுங்களென்றுகேட்க, சகுனிகர்னன் முதலானவர்கள் யோசித்துச் சொல்லுகிறார்கள்: ஓ துரியோதன மஹாராஜனே ! நமது பெரியோர்கள் கொடுத்த திரவியமோ கொஞ்சம். அதில் வீடுநிறைந்த பதார்த்தம் வாங்கிவரக் கட்டளையிட்டிருக்கிறார்கள். ஆதலால் வரகுவைக்கோல் வாங்கினால் வீடுநிறைந்திருக்கும். இதைவிட வேறொரு பதார்த்தம் வீடுநிறையாதென்றார்கள். துரியேதனன் - ஆம்: ஆம்: இதுதான்சரி. இந்தயுக்திபாண்டவர்களுக்குத்தெரியாது. என்று வடக்குவீதியிலிருக்கும் ஒருபெரியவீட்டில் தங்கள் கையிலிருக்கிற தொகைக்கு வரகுவைக்கோல் வாங்கி அவ்வீட்டை நிரப்பி, யாராகிலும் பார்த்துப் பாண்டவர்கட்குச் சொல்லப் போகிறார்களென்று கபாடபந்தனஞ்செய்து தெருத்திண்ணையிற் சகுனி கர்னனோடு நூற்றுவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

தருமராஜன் தான்பெற்ற சொல்பத்தொகையை எடுத்துப்போய்த் தெற்குவீதியிலிருக்கும்வீட்டிற்சென்று தன்தம்பிமார் நால்வரையுமழைத்து, நமது பெரியோர்கள் வீடுநிறைந்த பதார்த்தம் வாங்கிவைக்கச் சொல்லிக் கொஞ்சந்திரவியம் கொடுத்தார்களாதலால், ஓ வீமா! நீ ஒருபொன்னை யெடுத்துப்போய் அறுசுவையோடுங்கூடிய பதார்த்தமும் அன்னமும் சமையற்செய்துவை. ஓ பற்குனா! நீ இந்த ஒருபொன்னுக்குத் தாம்பூலம் - புஷ்பம் - கலவைச்சாந்து - பஞ்சவிடையங்கள்-முதலானவைகள் சேகரித்துவை. ஓ! நகுலா! நீ இந்த ஒருபொன்னுக்கு விளக்கு நெய் வாங்கிவந்து வீடெங்கும் திருவிளக்கிடு. ஓ சகாதேவா ! நீ மீதியிருக்கிறபொன்னுக்குத் திண்டு - தலைக்கணை- பட்டுப்பாய்முதலியவற்றைவாங்கிப் போட்டுவையென்று கட்டளையிட்டார். தம்பியர் நால்வரும் அவரவர்களுக்கிட்ட கட்டளைப்படி நடத்தி ஸ்நானஞ்செய்து அலங்காரமாக உடுத்திக்கொண்டு, தமயனாகிய தருமராஜனோடு தலைவாயற்படியில் வந்து பெரியோர்கள் வரவுக் கெதிர்பார்த் திருந்தார்கள்.

வீஷ்மர் திரிதராஷ்டிரன் இவ்விருவரும் குருபுத்திரர் திறமையைப்பார்க்க மந்திரி முதலானவர்களை அழைத்துக்கொண்டு, வடவீதியிலிருக்கிற துரியோதனனிடத்துச் சென்றார்கள். துரியோதனன் எதிர்கொண்டுபோய் நமஸ்காரஞ்செய்து தந்தையையு மூதாதையையு நோக்கி, ஓ ஐயமீர்! உங்கள் கருத்துமகிழ்வெய்த வீடுநிறைந்த பதார்த்தம் வாங்கிவைத்திருக்கிறேனென்று மேன்மை பாராட்டினான். அதற்குத் திரிதராஷ்டிரன் - அப்பாமகனே ! என்னபதார்த்தம் வாங்கினாய் சொல்லென்றுவினவத் துரியோதனன், ஐயா! வீடுநிறைந்த பதார்த்தம் வரகுவைக்கோல் ஒன்று தவிர மற்றப்பதார்த்தத்தால் வீடுநிறையாது. இது பெரியவீடு. அவ்வரகு வைக்கோலை வாங்கிக் கதவு திறப்பதற்குக் கூட இடமில்லாமையாயிருக்க நிறைத்துவைத்தோ மென்றனன். இதைக்கேட்ட திரிதராஷ்டிரன் முதலானவர்கள் உள்ளேபோய்ப்பார்க்க இடமில்லாமையால் வெறுப்படைந்து, அங்கிருந்து தக்ஷணம் பாண்டுமக்களிருக்கிற இடத்துக்குச் சென்றார்கள். தருமராஜன் அஃதுணர்ந்து தம்பியரோடு மெதிர்கொண்டு வந்து வணங்கி அழைத்துப்போய்த் திருவிளக்கிட்டு அலங்காரமாகச் சிங்காரித் திருக்கும் வீட்டி லுட்காரவைத்து இனியவார்த்தை பேசி, ஓ எங்களருமைத் தலைவர்களே ! தாங்கள் இங்கிருந்து போஜனம் அருந்த வேண்டு மென்று வேண்டினர். அதற்குப்பெரிய அரசர்கள் அகமகிழ்ந்து, கைகால்கள் சுத்திசெய்து உள்ளறையிற் சென்று உட்கார்ந்தார்கள். உடனே வீமபாகமாகிய பதார்த்தங்களையும் அன்னத்தையும் வட்டிக்கப் பெரிய அரசர்கள் போஜனஞ்செய்து, பதார்த்தங்களிருந்த இனிமைக்கு மகிழ்ந்து கைவாயலம்பிச் சபையில் வந்து உட்கார்ந்தார்கள். பற்குனன் தாம்பூல சந்தன புஷ்பமாலைகளைக் கொண்டு வந்து வைத்தான். பெரிய அரசர்கள் மிகு

ந்த மகிழ்ச்சியடைந்து தருமராஜன் முதலாகிய ஐவ
ரையும் நோக்கி வீஷ்மர் திரிதராஷ்டிரன் இவ்விருவ
ரும். அப்பா மக்களே ! உங்களை வீடுநிறைந்த பதார்
த்தம் வாங்கிவைக்கச் சொன்னோமே ஏதோ அந்தப்
பதார்த்தமென்று வினவினார்கள். அவர்கள் அவ்விரு
வரையும் வணங்கி, ஓ ஐயமீர் ! வீடுநிறைந்த பதார்த்
தமாவது திருவிளக்கே யன்றி மற்றொன்று மில்லை.
ஆகையால் நாங்கள் திருவிளக்கிட்டோம். வீட்டுக்கு
வருகிறவர் புசியாமற்போவது தகுதியல்ல வென்று
எங்களாற் கூடியமட்டும் சமயற்செய்து வைத்தோ
மென்றார்கள். பெரிய அரசர் மிகக்களிப்புற்று மக்க
ளைத்தழுவி முத்தமிட்டுச் சீராட்டி, மக்கள் நூற்றை
வரையும் அழைத்துக் கொண்டு அரண்மனை வந்து
சேர்ந்தார்கள். பின்பு இந்த இருதிறந்தாரும் முன்
போலவே துரோணாசாரியா ரிடத்துச்சென்று வில்வி
த்தையைக் கற்றுவந்தார்கள். அன்று முதல் திரித
ராஷ்டிரன் வீஷ்மர் இவர்களிருவருந் துரியோதனன்
துரோணாசாரியர் மேற் சொல்லுங் கோளை ஏற்றுக்
கொள்ளுகிறதில்லை.

குருபுத்திரர் விற்பரிக்ஷை.

இவ்வண்ணமாகச் சிலநாள் சென்றபின்பு துரோ
ணாசாரியார் பெரிய அரசர்களிடத்து வந்து, அவர்கள்
செய்த பூசையைக்கொண்டு ஆசிகள் வழங்கிச் சொல்
லுகிறார். ஓ அரசர்களே ! குரு குமாரர்கள் நூற்றைந்
துபேர்களுக்கும் யான் கற்றிருக்கும் வில் வித்தைக
ளெல்லாவற்றையும் கற்பித்திருக்கிறேன். நல்லவேளை
யில் விற்பிடித்த அரசர்கள் முனிவர்கள் எல்லாருமறி
ய அரங்கேற்ற வேண்டுமென்றுகூறி, அரண்மனைக்
குச்சென்றார். பெரிய அரசர்கள் அதற்கிசைந்து,ஒரு
நல்லநாள் நியமித்து, அந்நாளில் விற்பிடித்தவர்கள்
யாராரோ அவர்களெல்லாம் வரவேண்டுமென்று திரு
முகமெழுதித் தூதர்கையிற் கொடுத்தனுப்பினார்கள்.
தூதர்கள் விற்பிடித்த அரசர்க்கும் முனிவர்க்கும் அ
ளித்தார்கள். திருமுகத்தைக்கண்ட தக்ஷணம் அரசரு
முனிவரும் மிகுந்த ஆவல்கொண்டு ஆடை யாபரண
ங்க ளணிந்து, இரதாரூடராய் அத்தினபுரத்துக்குவந்
தார்கள். வந்த அரசர்களுக்கெல்லாம் பெரிய அரசர்க
ளாகிய வீஷ்மர் திரிதராஷ்டிரன் இவர்கள் தகுந்த
மரியாதைசெய்து விடுதிகள் விட்டார்கள். அவரவர்
கள் தங்களுக்குவிட்ட விடுதிகளிற் பொருந்தி, ஸ்நா
னம்பண்ணி போஜனஞ்செய் திருந்தார்கள். வீஷ்மர்
நகர்ப்புறத்தில் விசாலமாக இருக்கிற ஒரு இடத்தில்
விஸ்தீரணமான ஓர் காவணமியற்றி, அதில் வந்தவர்க
ளிருக்க ஆசனமிட்டுத்தாம் திரிதராஷ்டிரன் விதுரன்
மந்திரத்தலைவர் - தண்டத்தலைவர் - மகுடவர்த்தனர்-
பட்டவர்த்தனர் -பெரியோர் - நாட்டி லுள்ள குடிகள்-
முதலானவர்களோடு வேதவேதியர்களெல்லாந் தம்
மைப் புடைசூழ்ந்திருக்கக் கொலு வீற்றிருந்து, அவ
ண்வந்திருக்கிற முனிவர்கள் அரசர்கள் முதலாயி
னோரை வரும்படி அறிக்கையிட்டார். உடனே விற்
பிடித்த அரசரும் தனுர்சாஸ்திரம்படித்த முனிவரும்
மற்றுமுள்ள யாவரும் காவணஞ்சேர்ந்து மரியாதை
களைப் பெற்று, அங்கிருக்கும் சிங்காதனங்களில் தங்
கள் தங்கள் தகுதிக்குத்தக்கபடி இருந்தார்கள். சொ
ர்க்க வாசிகளோடு இந்திரன் முதலாகிய தேவர்கள்
தங்கள் தங்கள் வாகனமேறி அந்தரத்தில் வந்து
நிறைந்தார்கள்.

வீஷ்மர் துரோணாசாரியையும் குருகுமாரர்களை
யும் அழைத்துவரும்படி கட்டளையிட்டார். துரோணா
சாரி அஃதுணர்ந்து, தமது மாணாக்கர் நூற்றைந்து
பெயரையும் அழைத்துக் கொண்டு காவணத்துக்கு
வந்தார். அவரைக் கண்டவுடன் வீஷ்மர் முதலான
அரசர்களெல்லாம் எழுந்து எதிர்கொண்டுபோ யழை
த்து வந்து ஓர் பொற்பீடத்தி லிருத்திச் சோடச
உபசாரமுஞ் செய்து துதித்தார்கள். துரோணாசாரி
யார் அவ்வரசர்கட்கெல்லாம் ஆசிகள்வழங்கி மஹாமு
னிவர்கட் கெல்லாம் வந்தனை வழிப்பாடுகள் செய்து
இது நல்ல சுபமுகூர்த்தகால மாதலால் வில்லரங்கே
ற்றுங்களென்று விளம்பினார். உடனே வீஷ்மர் ஆயுத
சாலைத் தலைவரைநோக்கி ஆயுதப் பெட்டிகளைக் கொ
ண்டுவரக் கட்டளையிட்டார். அத்தலைவர்கள் அப்படி
யே அப்பெட்டிகளைச் சபையிற்கொண்டுவந்து வைத்
தார்கள். வீஷ்மர் துரோணாசாரியரைப் பார்த்து, ஓ
ஸ்வாமி ! ஆயுதப்பேழைகள் இதோ யிருக்கின்றன.
இனித்தாமதப் படுத்தாமல் தங்களுடைய மாணாக்கர்
கற்றிருக்கும் வில்வித்தை முதலியவற்றை இங்குவந்
திருக்கும் படியான சகலரும் வியப்பெய்த விளையா
டச் செய்வீர்களென்று கட்டளையிட்டார். துரோணா
சாரி தமது மாணாக்கரை நோக்கி, ஓ குருபுத்திரர்
களே ! இது சமர்பூமியல்ல பரிக்ஷைக்கூடம்: ஆகை
யால் ஒருவர்க்கொருவர் விரோத மில்லாமற் கற்றவி
த்தைகளை இச்சபை நிறைந்திருக்கிற யாவருங்கண்டு
களிக்கக் காண்பியுங்கள்; அந்த ஆயுதப்பேழைகளைத்
திறந்து அவரவர்களுக்கு இஷ்டமான ஆயுதங்களை
யெடுத்து விளையாடுங்களென்றனர். குருபுத்திரர்கள்
குருவேதுணையென்று முனிவர்களையும் - சபைநிறை
ந்த ராஜர்களையும்-வீஷ்மர் திருதராஷ்டிரன்முதலான
வர்களையும் வணங்கித் தேவாராதனை செய்து, பேழை
யைத்திறந்து அவரவர்களுக் கிஷ்டமான ஆயுதங்க
ளை ஜெயம் ஜெயமென்றெடுத்துச் சபையில் நின்று,
ஒருவர்க்கொருவர் எதிர்த்து வில்-வேல்-வாள்-கதை-
கத்தி-தோமரம்-சூலம் - பிண்டிபாலம் பாங்கு-ஈட்டி-
கடாரி - கண்டகோடாலி - முதலிய ஆயுதங்களினால்
வெட்டியும், தட்டியும், எறிந்தும், குத்தியும், எத்தி
யும், இவ்விதமாக யாவருமகிழ விளையாடினார்கள்.

இவர்களில் துரியோதனனும் வீமனும் எதிர்த்
துப் பல ஆயுதப்பயிர்ச்சியைக் காண்பித்தார்கள். துரி
யோதனன் தன்னோடு வீமன் இளைக்காமல் நின்று

விளையாடுகிறதற்குப் பொறுமைகொண்டு, முன்னமே அவ் வீமன்மீது வஞ்சினங் கொண்டு வயிரம்பற்றிய மனதையுடையவனாகையால் இந்தவேளையில் விளையாட்டுப்போலவே கதையினால் ஒரே அடியாக அடித்து நீட்டிவிட்டால் நமது குறை நீங்கும். மேலும் கொன்றுவிட்டதைக் கண்டு சபையார் கேட்டால் நானென்ன செய்வேன் சாஸ்திரப்படி விளையாடினோம் அவன் ஏமாந்திருந்தான் அதனாற் கைதவறி அடிபட்டதென்று சொல்லிவிடுவோமென்று அதிககோபங்கொண்டு கதையைக் கையி லேந்தினான். வீமனும் கதையைக்கையிலேந்தி எதிர்த்து மனதில் யாதொரு விகற்பமு மில்லாமற் கதாயுத வித்தையைக் காண்பித்துவருகிறபோது துரியோதனன் அதிகசினங்கொண்டு, வீமன் உயிர்நிலையைப்பார்த்து அடித்தான். வீமன் அதையறிந்து, அடடா!! இவனென்னவிளையாடுகிறபோது சத்துருவை அடிக்கிறதுபோல் நம்மையடிக்கிறான். நல்லது நாம் சாக்கிரதையா யிருக்கவேண்டும். என்றுநினைத்துத் துரியோதனனோடு சமமாய் விளையாடி வந்தான். துரியோதனன் வரவர வெகுளி மேற்கொண்டு, அவன் உயிர் நிலையையே பார்த்துப் பார்த்து முகம்வேர்த்து அடிக்கிறான். வீமன்அவ்வடிகளுக்குத் தப்பித்துக்கொண்டு, இவன் ஏதோ ஒருகபடம் மனதில்வைத்து நம்மைக் கொல்லக் கருதியிருக்கிறபோது நாம் சும்மாயிருக்கலாகாதென்று வீராவேசங்கொண்டு, மேகங் கெர்ச்சித்தது போற் கெர்ச்சித்துக் கையிலிருக்கிற கதையை அந்தரத்தி லெறிந்து அது கைக்குவருகிறதற்குள் கையைப்பிசைந்து தோளைத்தட்டிக் கதையைக் கையிற்பற்றி மலை நடந்துவருகிறதுபோல் துரியோதனனை எதிர்த்துக்கொண்டான். துரியோதனனும் முறைக்க ஒருவர்க்கொருவர் குத்தியும் தட்டியும் எத்தியும் போராடுகிறார்கள். இதனைச் சபையிலிருக்கிற பெரிய அரசர் முதலானவர்கள்கண்டு, ஓ! ஓ! மோசம்வந்தது. (விளையாட்டுச் செய்கை வினையாகமுடிந்தது.) என்கிற பழமொழி போல் இவ்விருவரும் ஆயுதப்பயிர்ச்சியைக்காண்பிக்க வந்தவர்கள் ஆவியைக் கொள்ளைகொள்ள யத்தனித்தார்கள். இதற்கு என்னசெய்கிறதென்று மனநடுங்கி ஒருவர்முகத்தை ஒருவர் பார்த்திக்கிறபோது, வில்லாசிரியராகிய துரோணாசாரியர் புத்திரன் அசுவத்தாமா வெழுந்து இருவர்க்கு மத்தியில் வந்து நின்று, ஓ துரியோதனா! ஓ வீமா! நில்லுங்கள்: நில்லுங்கள்: ஒருவர்க்கொருவர் துவேஷங்கொண்டு ஆவியைக்கொள்ளைகொள்ளவா உங்களை ஆயுதப்பயிர்ச்சி செய்யச் சொன்னது? சபாசு! நன்றாயிருக்கின்றது. ஒரு ஆதீனத்துப்புத்திரர் இப்போதுதானே இவ்வளவு வயிரங்கொண்டிருந்தால், இனி வரவர எவ்வாறு இருப்பீர்களென்று இடி இடித்ததுபோற் கூவினான். இடிகேட்ட நாகங்கள் எவ்வாறு நடுங்கிப்போமோ அவ்வாறு துரியோதனன் - வீமன் - இவ்விருவரும் குருபுத்திரன் வாக்கியத்தைக்கேட்டு ஒதுங்கிவிட்டார்கள்.

இப்பால் பற்குனன் துரோணாசாரியர் முதலாகிய பெரியோரைவணங்கித் தன் வில்லைவளைத்து நாணி ஏறிட்டுக் குணத்தொனிசெய்து, முதுகிற்கட்டியிருக்கிற அம்புபெய் புட்டிலிற் கரத்தை வைத்து, ஒரு சரத்தையெடுத்து மானதபூசையாய்த் தூபதீப நைவேத்தியஞ் செய்து மந்திரோப தேசத்தோடு அவ்வில்லிற் றொடுத்துவிட்டான். அச்சரம் வானத்திலெழுந்து மின்னல்-இடி-மழை- இவைகூடிய மேகங்களையும் காற்றையும் பர்வதங்களையும் இன்னுமதிக வியப்படையத்தக்க விநோதங்களையும் காண்பித்தது. பின்னும் பற்குனன் மற்றொரு கணையைத் தொடுத்துத் தூப தீப நைவேத்திய முதலியவற்றைச் செய்து வில்லிற் பூட்டிவிட்டான். அக்கணை யொன்று-௰-௱-௲-௰௲-௱௲-௰௱௲-கோடி-சதகோடி-சங்கம்-மகாசங்கம்-என்னும் கணக்குக்கு அதிகப்பட்டு வானத்தை மூடிற்று. மேலும் பற்குனன் கஜாஸ்திரத்தை எடுத்துவிட்டான். அது அநேகம் யானைமயமாகவே உடனே அக்கஜாஸ்திரத்துக்கு வயிரியாகிய கேசரி யாஸ்திரத்தைவிட்டான். அதனால் மிகவாகிய சிங்கரூபங்கள்வெளிப்படலும் அதனை மறுத்துச் சர்ப்பாஸ்திரத்தை விடுத்து, உடனே அதற்கு வயிரியாகிய கருடாஸ்திரத்தைத் தொடுத்து, அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து, அவ்வஸ்திரத்துக்குப் பிறதியாகிய வருணாஸ்திரத்தை யேவிக்கெடுத்துப் பின்பு இருளாஸ்திரத்தை உய்த்து, அதனைச் சூரியாஸ்திரத்தால் மறைத்து, அசுராஸ்திரத்தை யுந்தி, உடனே அதனைக் கந்தர்வாஸ்திரத்தாற் சிந்தி, இப்படி இன்னும் அநேகமாகிய தேவாஸ்திரங்களையும் அருமையான செய்கைகளையுஞ் செய்தான். இதனைக்கண்ட அரசர்களுமுனிவர்களும் மிகமகிழ்ந்து பற்குனனைப் பலவாறு புகழ்ந்தார்கள்.

கர்னன் வாது.

இவ்வாறு யாவரும் பற்குனனைப் புகழ்ந்துகொண்டாடுவதை ரதையனென்கிற தேர்ப்பாகனிடத்து வளர்ந்தமையாற் சுத்தக்ஷத்திரியனாயிருந்தும் நீறுபூத்தநெருப்புப்போலிருக்கிற கர்னன்கேட்டு, தவசிரேஷ்டசிகாமணியாயும் வில்வித்தையிற் சிறந்தவராயுமிரா நின்ற பரசுராமமூர்த்தியினிடத்து வில்வித்தையைக் கற்ற அதிகமான வன்மையையும் வில்திறத்தன்மையையும் உடையவனாயிருந்தும் அவ்விரண்டையுந்தனக்குள் அடக்கிக்கொண்டிருந்த அடக்கத்தைச் சிதைத்தவனாய் உடனே எழுந்து, சபையாரை வணங்கிச் சொல்லுகிறான்: ஓஅரசர்களே! நீங்களெல்லாம் வில்விநோதத்தின் திறமறியாதவர்கள்போல (ஆலையில்லாவூரில் இலுப்பைபூவேசருக்கரை.) என்கிறபழமொழிக்கிணங்கச் சிறுவனாகிய பற்குனன் செய்த வில்வித்தையைக்கண்டு மிகவும்வியந்துபுகழ்ந்தீர்கள். யான்கற்றவித்தையை காண்பிக்கிறேன். அதனையுங்கிஞ்சித்துரோ

க்குங்களென்றுதன்வில்லைவளைத்து நாணேறிட்டுப்பா
மாசாரிக்கொப்பாகிய பரசுராமமூர்த்தியைத் துதித்து
க்குணத்தொனிகாட்டிச் சிலசரங்களை எடுத்துத்தூப
தீப நைவேத்தியஞ்செய்து வில்விற்பூட்டி மந்திரோ
பதேசத்தோடு தூண்டி இந்திரன் குமாரனாகிய ப
ற்குனன் ஏதேது விநோதஞ்செய்தானோ அதற்கு
அதிகமாக அநேகவல்லமைகளைக் காட்டினான்.அவை
களைச் சபையார்நோக்கிப் பற்குனனைப் புகழ்ந்ததிலு
ம் பதின்மணங்கதிகமாகப் புகழ்ந்தார்கள். துரியோ
தனன் முதலாகிய நூற்றுவரும் அகங்களித்தார்கள்.
பற்குனன்மாத்திரம் கிஞ்சித்து நாணமுடையவனா யி
ருந்தான். அந்தவேளையிற் கர்னன் பற்குனனைநோக்
கி, ஓ விற்குனா! நீகற்ற வில்வித்தையைப் பார்ப்
போம் இங்குவந்திருக்கும் விற்போரிடும் வேந்தர்கள்
நோக்கும்படியாய் வருகிறையா வாவென்றான். அத
ற்குப் பற்குனன் மனம் நெய்யைவிட்ட நெருப்புப்
போ லிருந்தாலும், இவன் தேர்ப்பாகனுக்கு வளர்ப்
புப்பிள்ளையா யிருந்தும் அரசர் புத்திரர்போல் வருத்
தப்பட்டு வில்வித்தையைக் கற்றுக்கொண்டா னென்
கிற அருமையை மதித்துத் தணிவானமனத்துடனே
சொல்லுகிறான்: ஓ கர்னா! நீயழைத்தபடி விற்போர்
செய்ய இசைவேன். ஆனால் ஒருசங்கடமிருக்கின்றது
அஃதென்னெனில் - நீ எங்கள் தேர்பாகனுக்கு அ
பிமானபுத்திரன். நானோ இவ்வுலகாதிபனான இராஜ
புத்திரன். நீயும் நானும் விற்போரிடுவது தகுதியல்ல.
நீவில்வித்தையிற் சிறந்தவன்றான் குறைவில்லை யெ
ன்றான்.

கர்னன் அதிகசினங்கொண்டு, அடா பற்குனா!
என்னசொன்னாய்? இச்சபையார்முன் என்னைப் பங்க
ப்படுத்தாதவன்போற் பங்கப்படுத்த எண்ணி, நீ தேர்
ப்பாகனுடையபுத்திரன் நான் இராஜபுத்திரனென்று
ஜாதிமுன்னிலையில் இழிவுகூறினா யல்லவா? சபாசு!
ஆண்ஜாதி பெண்ஜாதி என்கிற இருவகைச்சாதியேய
ல்லாமல் மற்றொருஜாதியில்லை. உயர்ந்தோராவதுந்தா
ழ்ந்தோராவதும், அவரவர்கள் கன்ம அனுஷ்டிப்பினா
லும்நற்செய்கையினாலுந்தான்.நீசிறுவன். உனக்கென்
னதெரியும். நீ ராஜபுத்திரன்தான். நான் தேர்பாக
ன் புத்திரன்தான். ஏதோபார்ப்போம் நீயும் வில்லெ
டு. நானும் வில்லெடுக்கிறேன். இச்சபையார்கள்மகிழ்
வெய்த என்னைச் சாதியீனனென் றுரைத்த உன்முக
மாகிய கமலத்தை இங்கிமிடத்திற் கொய்து அரங்கு
பூசை செய்கிறேனென்று வில்லைவளைத்து நாணியேறி
ட்டு, அங்கிருந்த அரசர் மனநடுங்க விற்குணம் பண்
ணினான். அதற்குப்பற்குனன் அதிகசினங்கொண்டுக
ர்னனை நோக்கி, அடாகர்னா! என்முகசரோருகத்தை
க்கொய்து அரங்குபூசையா செய்யப்போகிறாய்? நல்
லது: அதுவரைக்கும் நீயிருந்தாலன்றோ செய்வாய்.
இதோ என்கணையால் உன்தலையைப் பூமியி லுருட்டு
கிறேன். ஒருவேளை இச்சபையிலிருக்கிறபெரியோர்க
ளால் இந்தவேளை தடுக்கப்பட்டாலும், இனி எந்த
வேளையிலாவது பலபேரறிய உன்சிரத்தைக்கொய்யா
மல்விடேன். அப்படிச்செய்யாமல் விட்டால் நான்பிடி
த்தது வில்லல்ல, நானும் க்ஷத்திரியனல்ல. என்று ச
பதங்கூறித் தன் வில்லை வளைத்து நாணி ஏறிட்டுத்
தேவரும் அரசரும் முனிவரும் திகைக்கக் குணத்
தொனிகாட்டினான்.

இதனைக்கண்ட வீஷ்மர் முதலான பெரியோர்க
ள், இதென்னவிபரீதம்? இவ்விருவரும் என்னகாரண
த்தாற் கடுஞ்சின முற்று அடுந்தொழிற்குப் பிரவேசி
த்தார்கள்? இதற்கென்ன செய்கிறது. என்று வருத்த
ப்பட்டுக்கொண் டிருக்கிறதருணத்தில் முதிர்ந்த தே
கத்தை யுடையவராயுந் தவசிலாக்கிய முடையவராயு
மிருக்கிற கவுதமர் எழுந்து,காவிகாம்பர சடாடவிகள்
பக்கங்களிற்புரள ஓடோடியும்வந்து இருவர்மத்தியில்
நின்று, அவ்விருவரையுநோக்கி வில்நாணியைத் தளர்
த்தச்சொன்னார். இருவரும் பெரியோர்வாக்கைத் த
டுக்காமல் தங்கள் தங்கள் கையிலிருக்கிற வில்நாணி
யைத் தளர்த்தினார்கள். அந்தவேளையில் வீஷ்மர் கோ
பங்கொண்டு சபையை நோக்கி ஒருவசனஞ் சொல்லு
கிறார்: கேளுங்கள் சபையாரே! துரோணாசாரியார்
தம்மிடத்தில் வில்வித்தையைக்கற்ற குருகுமாரர்கள்
நூற்றைவரையும் அரங்கேற்ற வைத்தால், இந்தத்
தேர்ப்பாகன்புத்திரனாகிய கர்னன் நமக்கென்னவென்
று சும்மாயிருக்காமல், தான்கற்ற வில்வித்தையைக்
காட்டவந்தான். ஆகிலும் வித்தை எல்லார்க்கும் பொ
துவென்று ஒப்புக்கொண்டு வில்வித்தையைக் காட்ட
உத்திரவுசெய்தோம். அப்படியே வில் வித்தையைக்
காட்டினான். இவன் வில்லில் திறவான்தான். அஃதி
ருக்கட்டும். இந்த ஆதீனத்துக்கு உடைய இராஜகு
மாரனாகிய பற்குனனை நோக்கி விற்போரிடுவோம் வா
வென் றெப்படியஞ்சாமல் அழைக்கிறான். அதற்குப்
பற்குனன் நீதேர்ப்பாகனுடைய புத்திரனாதலால் உன்
னுடன் விற்போரிடுவது எனக்குத் தகுதியல்லவென்
றுகூறினால், இவன் அந்தப்பற்குனன் முகமாகிய கம
லத்தைக் கொய்து அரங்குபூசை செய்கிறேனென்று
எப்படி துணிவுற்றுரைக்கிறான். இஃது உங்களுக்குத்
தருமமாக இருக்கின்றதாவென்றனர். அச்சபையிலிரு
ந்த யாவரும் நீரோட்டத்தில் தெப்பம் செல்லுந் தன்
மைபோல் வீஷ்மர்கருத்துக்குவிரோதம்வாரம லவர்க்
கேற்றவசனங்களைப் பேசினார்கள். இதனைக்கேட்டகவு
தமர்சந்ததியாராகியகிருபாசாரியரும்அக்கர்னனைப்பா
ர்த்து, இந்த இராஜசபையிற் கிஞ்சித்துமஞ்சிக்கையில்
லாமல் என்னசொன்னாய் கர்னா?தேர்ப்பாகனுக்குப் பு
த்திரனாகிய நீ, எழுகடல்வளைந்த பூமிக்கதிபனாகிய ம
காராஜாதிராஜனுடைய மைந்தனுடன் நடுக்கமில்லா
மல் இடுக்கமான சபதத்தைச் சொல்லுந்தரமா? மநு
நீதி - இராஜநீதி - வேதநீதி - முதலிய யாவற்றிலுஞ்
சாதியாசாரம் - குலாசாரம் - வரன்முறை-ஆளடிமை
இன்னதென்று விபரித்திருக்க, நீ சின்னபுத்தியினால்

பெரியசக்தியை யுடையவனை இலேசாகப் பேசவந்தாய். இனியிப்படி அத்துமீறிப் பேசாதேயென்று கடுகடுத்துரைத்தார். இப்படி வீஷ்மரும் கிருபரும் கடுகேடுத்துக்கூறிய வார்த்தையைக் கேட்டுச் சபையிலுள்ளோர் பலரும் நடுங்கினார்கள். அக்காலையிற் கவுதமர் வெகுண்டெழுந்து, அங்குள்ள அரசர் முதலானவர்களுடைய மனம் நடுங்கும்படியாக முன்னம் வீஷ்மரைப்பார்த்து இவை பேசத்தொடங்கினர்.

கர்னன்மகுடாபிஷேகம்பெறல்.

அடா வீஷ்மா! என்ன சொன்னாய்? கர்னன் தேர்ப்பாகனுடைய புத்திரனென்றும், பற்குனன் இந்த ஆதீனத்துக்குரிய புத்திர னென்றும் கண்டவன் போலக்கூறிக் கர்னனை இழிகுலத்தா னென்று இந்த இராஜசபையறியச் சொன்னாயல்லவா? சபாசு! சபாசு! நன்றாயிருக்கின்றது. உலகத்தில் ஜாதி யாசார முறை விசாரணைசெய்தால்(அத்திப்பழத்தைப்பிளக்க அத்தனையுஞ்சொத்தை.) என்கிறதறியாயா? ஐயோ! அது நிறையப் புழுவென்று குறியாயா? இந்த அண்டமும் அப்படித்தானல்லவா? ஆத்மகோடிக ளத்தனையுங் குற்றமே. நீசாஸ்திர விசாரணை செய்ததும் அனர்த்தமே. நல்லது - வீஷ்மா! திருமால் கருங்கற்றூணிற் பிறந்தான். சிவன் மூங்கிலிற் பிந்தான். நெடிய கடல்நீரைக் குடித்த அகத்தியமுனியும், இதோயிருக்கிற துரோணாச்சாரியும் கும்பத்திற் பிறந்தவர்கள். முருகக்கடவுள் கங்கையிற் பிறந்தவர். இந்தக் கிருபன் தருப்பைப் புல்லிற் பிறந்தவன், ஐயா வீஷ்மரே! தாங்களெங்கே பிறந்தீர்கள்? தேவாளுற்பத்தி ஸ்தானம் தேவாளுக்குத் தெரியாமலிருக்க,ஒருவரை இழிவுகூறுவது எப்படி? இவ்வாறு பிறந்தவர்களெல்லாம் உலகத்திற் சிறப்படைந்தார்களே யன்றிப் பிறந்தவிடத்தா லிழிவடையவில்லை. ஆதலாற் கல்வியிற்கைதேர்ந்தவர்களுக்கும், கன்னிகாஸ்திரீகளுக்கும், கொடையிலுயர்ந்தவர்களுக்கும், அதிக வீரத்தை யுடையவர்களுக்கும், அஷ்டலட்சுமிசமேதராகிய அரசர்களுக்கும், குற்றமற்ற ஞானிகளுக்கும், ஜாதிபேத நோக்குவதில்லை. அஃதிருக்கட்டும். உலகத்தில் வல்லமையடைந்தவனெவனோ,அவன் தானுலகாதிபன். அவனைத்தான் நல்லகுலத்திற்பிறந்தோரும் வணங்குவார்கள். ஆதலாற் சிறந்தகுலத்திற் பிறந்தும் சிறப்பில்லாதிருந்தால், அவர்கள் சிறந்தகுலத்தாரல்லர். கீழானகுலத்திற்பிறந்து கீழானசெய்கையை நீங்கி நின்றால், அவர்கள் கீழானவர்களல்ல. ஓ கிருபனே! நீ பெரியோர்களிலொருவனாயிருந்தும், இந்தக் கர்னனைக்குறித்துப் பேசியது தகுதியல்ல. நானேதோ தாறுமாறாய்ப்பேசினேனென்று மனஸ்தாபம்வேண்டாம். ஓ வீஷ்மரே! இக்கணம் இக்கர்னனை உன்மனமகிழ அரசனாக்கினால் என்மனம் மகிழும். என்றுகூறவும் வீஷ்மர் கவுதமருடைய வசனங்களைக்கேட்டுத் திடுகென்றெழுந்துவணங்கி,ஓசுவாமி! தங்கள்கருத்துமாத்திரமல்ல. இங்கிருக்கும் எல்லாருடைய கருத்துங் களிக்கும்படியாக இக்கணம் இக்கர்னனை அரசனாக்குகிறேனென்றுசொல்லி அப்போதே அரசில்லாதிருந்த அங்கதேசத்துக்கு அரசனாக்கி, அச்சபையாரறிய மகுடாபிஷேகஞ்செய்து செங்கோல் ஆழி முதலியவற்றைக் கொடுத்து இரத கஜ துரக பதாதிகளிலுஞ்சிலதுகொடுத்தார். இதனைப் பற்பலருங் கண்டு பிரமானந்த மடைந்தவர் போல் மகிழ்வெய்தினார்கள். மற்றப் பாண்டுமக்களும் புகழ்ந்தார்கள். சபையிலிருந்த அரசரும் - முனிவரும் - பெரிய அரசர்களிடத்தில் விடைபெற்றுத் தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். அந்தரத்தில் வந்து வேடிக்கை பார்த்திருந்த தேவர்களும் தங்கள் தங்கள் யாதாஸ்தானம்போய்ச் சேர்ந்தார்கள். இங்கே வீஷ்மர் முதலிய அரசர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்விப்பயிற்சியைக் குறித்துத் துரோணாசாரியை அநேகவிதமாகத் துதித்து, அவரவர்கள் புத்திர மித்திரர்களோடு தங்கள் தங்கள் அரண்மனைக்குப்போனார்கள்.

பாஞ்சாலனோடு கௌரவபுத்திரர் உயுத்தம்.

கேளும் மஹாராஜனே! துரியோதனனும் கர்னனும் சாம்பவமூர்த்தியும் குபேரனும்போல் நேசித்துப் பாண்டுமக்கள் திடுக்கிட உலகமுழுவதும் தமதென்று கைக்கொண்டு வாழ்ந்துவருகிற காலத்தில், துரோணாசாரியார் பாஞ்சாலனுடைய சபையிற்கூறியசபதத்தை மனத்தில் நினைத்து, அடடா!! நாம்புகன்ற சபதம் நிறைவேறாவிட்டால் நமக்கென்னபெருமை? நமது மாணாக்கர்கள் ஆயுதத்திறத்திலும், இரத கஜ துரக மிவைகளிலும், அதிக திறம்பெற்று வல்லமையாளரா யிருக்கிறார்கள். இவர்களைக்கொண்டு சபதத்தைநிறைவேற்றவேண்டும். என்றுகருதிகுருபுத்திரர்களைவரவழைத்துப் பல ஆசிகள்வழங்கி, ஓகுருபுத்திரர்களே! என்னிடத்தில் வில்வித்தையைக்கற்றதற்கும்,முன்னம்சகல அரசர்களுமறிய நீங்கள்வில்லரங்கேற்றியதற்கும், எனக்கு இன்னுஞ்சிலதினத்திற்குருதக்ஷணைகொடுக்கப்போகின்றீர்கள். அஃதெனக்குத்தெரியும். அப்படிவேண்டாம், எனக்கொருகுறைவில்லாமல் உங்கள் பெரியோ ராதரித்து வருகிறார்கள். ஆதலால் எனக்குக் கொடுக்கும்தக்ஷணையை நான்கேட்டுக்கொள்ளுகிற அவ்வாறு செய்வீர்களாகில், அது தான் தக்ஷணை யென்று சொன்னார். ஓ குருசுவாமி! அஃதென்னவென்று குருபுத்திரர்கள் வணங்கி வினவ, துரோணாசாரியார் - ஓ மாணாக்கர்களே! பாஞ்சாலன் என்னிடத்து வில்வித்தை கற்கிறபோது, பாதிராஜ்யங் கொடுக்கிறேனென்றுசொல்லிப்பின்பு இல்லையென்று வாக்குத்தத்தம் பிசகிப்பேசினதுமன்றித் தன்சபையிலிருந்தவர்கள் நகைக்க என்னைப் பங்கப்படுத்தினான்.

அப்போது நான் சினங்கொண்டு, என்மாணுக்கரால் உன்னைப்புறங்கண்டு, மடலோடுமடல்விரியத் தேர்க்காலிற்கட்டி இழுத்துவரச்செய்து, என்சபையில்உன்னைப் பங்கப்படுத்துகிறே னென்று சபதம் பண்ணினேன். என்வாக்கின்படி அந்தப்பாஞ்சாலனோடு போராடி அவனைத் தேர்க்காலிற் கட்டிக்கொண்டுவெந்தால் அச்செய்கைதான் எனக்கு மேலான நன்மையுங் குருதக்ஷணையும் என்றுகூறினர். இதனைக்கேட்ட குருபுத்திரர்கள் நூற்றைவரில் துரியோதனன் முதலாகிய பேர்களெழுந்து துரோணுசாரியைவணங்கி,ஓஸ்வாமி! எளியேங்களுக்கு விடைகொடும். அந்தப் பாஞ்சாலனைக் கட்டிக்கொண்டு வருகிறோம். என்றுசொல்லி ஆசாரியர்முதலிய பெரியோர்கள் விடைதரப்பெற்றுத் தங்கள் தங்கள் இரதங்களிலேறி, இரதகஜதுரக பதாதிகள் புடைசூழப் பாஞ்சால தேசத்துக்குச் சென்று துருபதேயனிருக்கும் கோட்டையைச் சூழ்ந்து, வில்லைவளைத்து நாணியேறிட்டுப் பாணங்களைத் தொடுத்துச் சிங்கநாதமும் அட்டகாசமுஞ் செய்தார்கள்.

அப்போது கோட்டைக் காவலாளிகள் பயந்து ஓடிவந்து பாஞ்சாலனை வணங்கி, ஓஸ்வாமி : யாரோ அத்தினபுரத்து அரசரின் புத்திரர்களாம். நூறுபெயர் இரதகஜதுரக பதாதிகளோடு வந்து நமதுகோட்டை நாற்றிசையிலும் வளைந்து, வில்லைவளைத்துப் பாணங்களைத் தொடுத்து சிங்கநாதத்துடன் அட்டகாசஞ் செய்கிறார்களென்று சொன்னார்கள். பாஞ்சாலன்-ஆ! இதென்ன ஆச்சரியம்? திரிமூர்த்திகளும் நமது நகரத்தின்மேல் யுத்தஞ்செய்யக் கிஞ்சித்தஞ்சுவார்களாகில், இந்த அத்தினபுரத் ததிபதிகள் எதிர்ப்பார்களோ? ஒருவேளை வீஷ்மர் எதிர்த்தால் எதிர்க்கலாம் அவர்நீதிக்குமாறுபடமாட்டார். நாமொரு குற்றமுஞ் செய்யவில்லை. அப்படியிருக்க: இப்போதுவந்தவர்யார்? இன்னாரென்று அறியாமற்போராடுவது தகுதியல்ல வென்று சிலதூதர்களை அனுப்பி விசாரித்து வரச்சொன்னான். அத்தூதர்கள் துரியோதனன் சேனுசமுத்திரத்தினுட்புகுந்து, அவர்கள்படையெடுத்து வந்தகாரணத்தை அங்கிருக்கும் சில பெயர்களாலறிந்து வந்து பாஞ்சாலனை வணங்கி, ஓ இராஜமார்த்தாண்டா! முன்னம் துரோணுச்சாரி கூறிய சபதப்படிக்குத் தங்களைக் கட்டிக்கொண்டு போகத் திரிதராஷ்டிரன் புத்திரர்களாகிய துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் வந்திருக்கிறார்களென்று கூறினார்கள். அதுகேட்ட பாஞ்சாலன் கோபச்சிரிப்பு சிரித்துப் பக்கத்திலிருக்கும் அநேகயுத்தத்திற் கைதேர்ந்து சிறப்புற்றிருக்கிற சோமகேயாதிகளை நோக்கிச் சொல்லுகிறான்: ஓ சோமகேயாதிகளே! சிலநாளுக்குமுன் நமது சபையில் ஒருபிராமணன் வந்து சபதமிட்டான். அந்தச் சபதத்தை நிறைவேற்ற இன்று அத்தினபுரத்துக் கதிபதியாகிய திரிதராஷ்டிரன் புத்திரர்கள் துரியோதனன் முதலாகிய நூற்றுவர்வந்து, நமது கோட்டையை வளைந்து சிங்கநாதம் செய்கிறார்களாம். நீங்கள்சென்று அச்சிறுவர்களை நமது தேசத்தைவிட் டோட்டி வாருங்களென்று செப்பினான். சோமகேயாதிகள் தக்ஷணம் தங்கள் தங்கள் இரதத்திலேறி நால்வகைச் சேனையோடுஞ் சென்று குருகுல புத்திரர் திறத்தைப் பார்த்து, இவர்கள் வில்லாளிகளல்ல வென்று தீர்மானித்து ஒருதரம் வில்லை வளைத்து நாணேறிட்டுச் சில பாணங்களைத் தொடுத்துக் குருகுல மக்களோடு வந்த நால்வகைச் சேனைகளையும் சிதற அடித்து, அம்மக்கள் நூற்றுவரையும் வளைத்துக்கொண்டு அநேக பாணங்களைத் தொடுத்து, வில்லை முறித்து நாணியறுத்துத் தேரையுடைத்துக் குதிரைகளைக்கொன்றுசாரதியைவெட்டி மகுடத்தைப் பொடித்துக் கவசத்தைக் கிழித்து உடல்முழுவதும் இரத்தமயமாக்கிச் சிங்கநாதஞ் செய்தார்கள். அதனால் துர்யோதனன் முதலானபேர்கள் சமர்முகம் கண்டறியாதவராயும் அறியாதவர்களாகியு மிருந்தமையால் இரத்தப் பிரவாகத்தைக் கண்டு மனநடுங்கி, உயிர் பிழைத்தாற் போதுமென்று நினைத்துப் பாதசாரியாய்ப் புறங்கால் புட்டத்திற்பட ஓடி அத்தினபுரியின் மத்தியில் வந்து திரும்பிப்பார்த்தார்கள்.

பாஞ்சாலனோடு பாண்டுபுத்திரர் உயுத்தம்.

இந்தச்சேதி துரோணுசாரி அறிந்து கனவருத்தமடைந்து மிகுந்த ஆறுமையோடு பாண்டு மக்களை நோக்கித் தமதுகுறையைச்சொன்னார். அதனைக்கேட்டபாண்டவரிற் பற்குனன் எழுந்து பாதத்தில் விழுந்து, ஓ ஸ்வாமி ! நீங்களேன் வருத்தப் படுகிறீர்கள்? என்பெரிய பிதாவின் புத்திரர்கள் வெற்றிபெறுகிறாமென்று சென்றமையால், நான் சும்மாயிருந்தேன். இதோ நானொருவனும் போய் அந்தப் பாஞ்சாலனைக் கொண்டுவருகிறே னென்றான். துரோணுசாரி பற்குனனைவாழ்த்தி, அப்பா சுகுணபூஷணு! எவ்விதத்திலேனும் என்னெண்ணத்தின்படி வெற்றிபெற்று வருவையாகில், என்றும் நன்றிகுன்றுதிருப்பே னென்று ஆசிர்வதித்தனுப்பினார். பற்குனன் குருவைவணங்கிவிடைபெற்றுத் தன்மூதாதை யாகிய வீஷ்மரை வணங்கி அவருடைய ஆசீர்வாதத்தையும் இரதத்தையும்வாங்கிக்கொண்டு, தன்தம்பியாகிய நகுலனைச் சாரதியாக அமைத்து இரதகஜதுரக பதாதிகளோடு அத்தேரிலேறிச்சென்றான். இதற்குள் தருமராஜன் வீமராஜனை அழைத்து,தம்பிவீமா! பற்குனன் தனியேபோகிறானதலால் நீ படைத்துணைசெல்லென்று பகர, வீமன் விதுரனைவணங்கி அவனிரதத்தைவாங்கிக்கொண்டு அதிலேறிச் சிலசேனையோடுசென்று பற்குனனுடன் கலந்தான். வடவாமுகாக்கினியும் ஊழிக்காற்றும் ஒன்றாகக்கூடின லெப்படியோ அப்படிபற்குனனும் வீமனுங்கூடிப் பாஞ்சாலதெசத்துச் சென்று பாஞ்பாலன் கோட்டையை அணுகி, மேற்புறத்திற் பற்குனனும்-கீழ்ப்புறத்தில் வீமனும் சூழ்ந்து வில்லைவளைத்து நா

ணியேறிட்டு நகரிலுள்ளவர்கள் திடுக்கிட்டலறிப் பதறக் குணத்தொனி செய்து சிங்கநாதத்துடன் அட்டகாச முதலானவைகளைப் பண்ணினார்கள். காவலாளிகள் கடுகியோடிவந்து பாஞ்சாலனை வணங்கி, ஓ ஸ்வாமி ! இந்திர நீலம்போல் தேககாந்தியையுடைய ஒருவர் மேற்கு வாசலிலும் காத்திரமான தேகத்தை யுடைய யமனைப்போல் ஒருதிவ்யபுருஷன் கிழக்குவாசலிலும் வந்துவளைந்து சிங்கநாத அட்டகாசஞ் செய்கிறார்களென்று சாற்றப் பாஞ்சாலன் நகைத்து, தன்னருகிலிருக்கிற சோமகேயாதிகளை நோக்கி, ஓ சோமகேயாதிகளே! முன்னம் வந்தவர் திரிதராஷ்டிரன் புத்திரர். இப்போது வந்தவர் பாண்டு புத்திரர். பாண்டு புத்திரர்கள் தேவபிண்டம். ஆதலால் மிகுந்த எச்சரிக்கையோடு யுத்தஞ்செய்யவேண்டும். முன்னம் மேல் வாசலில் வந்திருக்கிற பற்குனனோடு நீங்கள் சென்று யுத்தஞ் செய்யுங்கள். பின்புயான்வருகிறேன். என்று கட்டளையிட்டு மந்திரி முதலானவர்களை நோக்கி, ஓ மந்திரிமார்களே ! நீங்கள் நமது சேனையோடும் கீழ் வாசலிற் சென்று அங்கு வந்திருக்கிற வீமனோடு யுத்தஞ்செய்யுங்களென்று அனுப்பிவிட்டுத் தான் அரண்மனைக்குச் சென்று, ஸ்நான சந்திமுதலிய பூசைகளை முடித்துப் போஜனஞ்செய்து மகரகுண்டல ஆரகேயூர கடககங்கண முதலாகிய ஆபரணாலங்கிரதனாகி முதுகில் அம்புபெய் புட்டிற் கட்டி வில்லெடுத்துக் கொண்டு வெளியில் வந்தான். அதற்குள் சாரதிரதத்தைத் திட்டமாகக்கொண்டுவந்து நிறுத்தினான். அதிற்பாஞ்சாலனேறி மேலைவாயிலை நோக்கிவருகிறான்.

இங்கே முன்னே புறப்பட்ட சோமகேயாதிகள் அரசன் கட்டளைப்படி இரதாருடராய் மேலைவாசலுக்குவந்து, அங்குநிற்கும் பற்குனனை நோக்கி, அவன் தேக காந்தியையும் சுந்தரத்தையும் நிற்கிற திறத்தையுங்கண்டு வியப்புற்று, தங்கள்தங்கள் வில்லைவளைத்து நாணி யேறிட்டு விற்குணத்தொனி செய்து, திவ்விய பாணங்களைத் தொடுத்து சிங்கநாதஞ் செய்தார்கள். பற்குனன் அவர்கள் தொடுத்து விட்ட பாணங்களையெல்லாம் அறுத்துவிட்டு, அநேக பாணங்களை விடுத்து அவர்களை நோகச்செய்தான். சோமகேயாதிகள் கனவருத்த மடைந்து, அடடா !! இவனோ சிறுவன். நாமோ அநேகயுத்தத்திற்கைதேர்ந்து பெருமையுற்று எவற்றிலும் பெரியோரென்று பெயர்பெற் றிருக்கிறோம். இச்சிறுவன் பாண மெடுக்கிறதும் தொடுக்கிறதும் தெரியவில்லை. அதிக சாதுரியமாகப் பாணங்களைப் பிரயோகிக்கிறான். [illegible] சாக்கிரதையாகவே இருந்து போராட வேண்டு மென்று சோனைமாரி பெய்வதுபோற் பாணமாரி பொழிந்தார்கள். அம்மாத்திரத்திற் பற்குனன் தனது ஒருபாணத்தால் அச்சரங்களை யெல்லாம் நடுவதுபாதியிற் கண்டதுண்டமாகச் செய்து. ஓர் நொடிப்போதில் க - ம-ா-சூ - மத - ாத - மாத — கோடி -சதகோடி—சங்கம்-மஹாசங்கம் - என்னும் அளவுக்கதிகப்படும் பாணங்களை எடுத்துத்தொடுத்து, தேரைச் சக்கைச் சக்கையாகப் பேர்த்தெறிந்து கொடியை யறுத்துக் குடையை முறித்துக் குதிரைகளைக் கொன்று சாரதிகளை வெட்டி வில்லைநறுக்கி நாணியை யறுத்துக் கவசத்தைப் பொடியாக்கி மார்பைப்பிளந்து உடல் முழுதும் இரத்தமயமாக அளைந்து இரதகஜதுரக பதாதிகளைக் களைந்து, மேலுமேலும் சரங்களைப் பொழிந்து யாவரையுங் கண்டதுண்ட மாக்கினான். சோமகேயாதிகள் ஸ்மரணைதப்பி, வில்லின்மேலும் மற்ற ஆயுதங்களின் மேலுஞ் செல்லுங் கருத்தைவிட்டு அவசமடைந்தார்கள். பலர் பின்னிட்டோடினார்கள். சிலர் வெந்நிட்டாடினார்கள். பலர் தத்திக்கெட்டுத் தடுமாறிச்சென்றார்கள். சிலர் விக்கிக்கக்கித் தங்கள் அரசனைநோக்கிநின்றார்கள். இதற்குள் பாஞ்சாலனும் வந்துவிட்டான்.

பற்குனன் பாஞ்சாலனைக் கண்டு, அடடா !! இவன் குருத்துரோகி. இவனைச் சித்திரவதைசெய்து சொல்லவேண்டும். நமது குரு இவனைக்கொல்லாமற் கட்டிவரக் கட்டளையிட் டிருக்கிறதினால், மரணாவஸ்தைக்குச் சரியான வருத்தத்தை இவனுக்குண்டாக்கவேண்டும். ஒருவேளை ஓடிப்போனாலும் போவான். இவனை விடக்கூடாதென்று கருமணலைவாரி இறைத்தாற்போற் பாணங்களைத்தொடுத்துத் தேரை அசையவொட்டாமற் றடுத்துச் சரக்கூடம் போட்டான். இதனை அக்கினிகோத்திரமுனிவரிடத்தும் துரோணாசாரியிடத்தும் வில்வித்தையைக் கற்று மிகுந்த திறமுடைத்தாகி அநேகயுத்தத்திற் கைதேர்ந்து சிறப்புற்றிருக்கிற பாஞ்சாலன் கண்டு அதிக சினங்கொண்டு, போர்முகத்துக்குரிய கார்முகத்தை வளைத்து நாணியேறிட்டுக் குணத்தொனிசெய்து, பிறைமுகப்பாணங்களிற் சில பாணங்களைத் தொடுத்து தன் தேரைமூடியிருக்கிற அஸ்திரங்களை அறுத்து, அமோகமான பாணங்களைப் பற்குனன்மீது தூண்டினான். பற்குனன் அந்தப் பாணங்களில் ஒன்றையாகிலும் விடாமல் ஒடித்து, வேறேசில திவ்யபாணங்களை யெடுத்துத் தொடுத்தான். அப்பாணங்கள் வெளிப்பட்டுவந்து பாஞ்சாலனைநோகச்செய்தன. அதனால் அவன் உடல்வருந்தி உக்கிரங்கொண்டு, மீட்டும் அளவற்றகணைகளைத்தொடுத்தான். இக்கணைகளால் இந்திரன் குமாரனாகியவிஜயன் மிக வருத்த மடைவானென்று யாவரும் பேசிக்கொண்டிருக்கையில்பற்குனன் அப்பாணங்களையெல்லாம் நடுவது பாதியிற் [illegible] இவனோடு இங்கே ராம்வணாக்குமா போராடுகிறதென்று மூலாக்கினியை மூட்டிக [illegible] கணைகளையாட்டி அவன் வில்லையொடித்து, சில பாணங்களால் தேரைக் குடையைக் கொடியைக் குதிரையைச் சாரதியை இன்னு முள்ளவைகளை யெல்லாம் அறுத்துத்தள்ளிப்பின்னும் அநேகங்கணைகளைப் பிரயோகித்து மயிர்க்காலுக்கு மயிர்க்கால் தைக்கும்படிசெய்து அவனணிந்திரநின்ற மகர

குண்டல ஆரகேயூர கடககங்கண முதலாகிய ஆபரணங்களையும் கவசத்தையும் பொடியாக்கினான்.

பாஞ்சாலன் பற்குனனாற் கட்டுப்படல்.

இதனாற் பாஞ்சாலன் பிரமை கொண்டு ஒன்றுந் தோன்றாமல் மனங்கலங்கிச் சித்திரம்போல் அசைவற்றிருக்கிற தருணத்தில், பற்குனன் தன்தேரை அவனருகினடத்திப் பாஞ்சாலன் தேரிற்குதித்து, தனது விஜயவில் நாணியால் அவனை மடலோடுமடல் விரியக் கட்டித் தன்தேர்க்காலிற் சேர்த்துச் சிங்கநாதஞ்செய்தான். இதனைக்கண்ட சோமகேயாதிகள் பற்குனன்மேல்விழுந்து அநேக பாணங்களழுந்தத் தொடுத்தார்கள். பார்த்தன் அக்கணைகளைக் கண்டதுண்டமாக்கி அவர்களையும் ஓடும்படி அடித்துத் தன்ஜயத்தைச் சங்கத்தாற் கிழக்குவாசலி லிருக்கும் வீமனுக்குத் தெரிவித்தான். வீமன் தன்னோடு வந்தெதிர்த்த வீரரையெல்லாம் புறங்கண்டு, வென்றிகொண்ட சங்கத்தொனி கேட்ட தக்ஷணம் அர்ச்சுனனிடத்து வந்தான். பின்பு இருவரும் கூடிக்கொண்டு கட்டின கட்டோடு பாஞ்சாலனை அத்தினபுரத்துக்குக் கொணர்ந்தார்கள். இந்தச்சேதி துரோணரறிந்து, வீஷ்மர் - திரிதராஷ்டிரன் - கிருபாசாரி - மந்திரிகள் - பிரதானிகள் - வேதவேதியர்கள் - நாட்டில் நகரிலுள்ளவர்கள் யாவரையு மழைத்து வந்து, சிலம்பக்கூடத்திற் சபைகூட்டிப் பற்குனன்வரவுக் கெதிர்பார்த்துக்கொண் டிருக்கின்றார். அப்போதவன் விற்குணத் தொனியுடன் இரதத்தை அதிவேகமாகச் செலுத்தித் துரோணாசாரியின் அரண்மனையின் அருகில் வந்து தேர்விட்டிறங்கிப் பாஞ்சாலனைக் கட்டினகட்டோடு கொணர்ந்து துரோணாசாரியை வணங்கச்செய்து, தானும் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்தான். சபையி லிருக்கிற பெரிய அரசர்களும் மற்றவர்களும் பாஞ்சாலனைக்கட்டிக்கொண்டுவந்த பற்குனனைப் பார்த்து மகிழ்ந்து புகழ்ந்தார்கள். துரோணாசாரி நமஸ்காரஞ்செய்த பற்குனனை வாரித்தழுவி மடிமீதிருத்திப் பல ஆசிகள்கூறிச் சொல்லுகிறார். அப்பா பற்குனா! அன்று முதலைவாயிற்சிக்கி வருத்த மடைந்தபோது கஜேந்திர வரதன்போல் வந்து அம்முதலையைக் கொன்று என்னைப் பிழைக்கச்செய்தாய். இன்று எனக்கொப்பாகிய வன்மையையுடைய பாஞ்சாலனைக் கட்டிவந்து என் சபதத்தை நிறைவேற்றினாய். உனக்கு நீயே ஒப்பன்றி வேறு ஒப்பானவர்கள் எவ்வுலகத்திலு மில்லை. என்று பலவாறு கொண்டாடிக் கட்டோடு நிற்கிற பாஞ்சாலனை நோக்கிச் சொல்லுகிறார்.

அடா பாஞ்சாலா! ஆதியில் அக்கினிகோத்திர முனிவரிடத்து வில்வித்தை கற்கிறபோது என்னிடத்துஞ் சில வித்தைகளைக்கற்று மகுடாபிஷேகம் பெற்று நான் வாழுங்காலத்திற் பாதிபூமி கொடுக்கிறேனென்று சொன்னசொற்றப்பி நானேவந்துகேட்கும்போதும் என்னோடு அன்புடன் வசனிக்காமல் கடுஞ்சொல் வழங்கினதுமன்றி வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற மனமில்லாதவனாய் ஏளனஞ்செய்தாயல்லவா? அன்று நான் சினங்கொண்டு என் மாணாக்கரால் உன்னைத் தேர்க்காலிற் கட்டி என்சபையில் இட்டுவரச்செய்து பங்கப்படுத்துகிறேனென்று ஒருசபதம்செய்திருந்தேனே: அச்சபதம் இன்று நிறைவேறிற்று. நீ செய்த வாக்குத்தத்தத்தின்படி எனக்குக்கொடுக்கவேண்டிய பூமிபாதியும், உன்விகித பூமியும், இன்று எனக்குச் சுவாதீனமாயிற்று. இனி அப்பூமிக்கும் உனக்கும் சம்பந்தமில்லை. இப்போதும் நான் உன்மீது கிருபையுற்று, எனக்கு ஸ்வாதீனமாகிய பாஞ்சால் தேசமுழுமையில் என்பங்கு பாதிபோக மற்றப் பூமியைத் தயா தர்மத்திற்கு உனக்குக் கொடுக்கிறேன். அதுவுமன்றி உன்னுயிரும்வாழ உதவினேன். நீ இவற்றைக் கைக்கொண்டு முன்போலவே அரசுசெலுத்தி என்பாதிபூமிக்குக் கப்பங் கட்டிவாவென்று கூறிப் பற்குனனைநோக்கி, அப்பாகுழந்தாய்! இப்பாஞ்சாலன்செய்த குருத்துரோகத்திற்குத் தண்டனை இம்மட்டிற் போதும். இனி யிவனைக் கட்டியிருக்கிற கட்டை அவிழ்த்து விட்டுவிடென்று கட்டளை யிட்டார். பற்குனன் உடனே அன்போடு அவிழ்த்துவிட்டான். பாஞ்சாலன் கைகால்களையுதறி, இராஜசபையையும் துரோணாசாரியையும் பார்க்க வெட்கமுற்று நாணியிருந்தான். அக்குறிப்பை வீஷ்மரறிந்து, ஓ பாஞ்சால தேசாதிபதி! க்ஷத்திரியராய்ப் பிறந்தவர்கள் ஒருவர்கையி லொருவர் இழிவடைந்தால், வந்த இழிவைநோக்கி வருத்தப்படாமல் இழிவுசெய்தவனை வெற்றிபெறுகிற காரியம் எதுவோ அதனைநாடி யோசிக்கத்தக்கது. ஆதலால் - நாம் சிறுவனால் கட்டுப்பட்டோமே யென்று மனவருத்தமுறாமல், இனி நடக்கவேண்டிய முயற்சி எதுவோ அதன்மேற் கருத்தைச் செலுத்தென்றார். பாஞ்சாலன் திடுக்கென் றெழுந்து சபையிலிருக்கிற பெரியோர்களையும் மற்றவர்களையும் நோக்கி, கேளுங்கள் சபையாரே! இந்தத் துரோணர் துறவறத்தை அடைந்தும் சிறுவனாகிய யான்செய்த குற்றத்தை மன்னிக்காமல் இராஜசபையில் என்னை அவமானப்படுத்தினாரல்லவா? இவரைக்குறித்து நானொருசபதம் செய்கிறேன். அஃதென்னெனில் - என்னை இவ்வாறு கண்ட இத்துரோணருயிரைவாங்க ஒருபுத்திரனையும் என்னுடன் சார்பாக்கி வளர்த்துப் போர்முகத்திலெதிர்த்து யுத்தஞ்செய்து வெற்றி பெற்றுவந்த சிறுவனுக்கு ஒரு பெண்ணையும் பெறுகிறேனென்று சபையாரறியச் சபதங்கூறி, மலைபோன்ற தேரிலேறி, இராகுவிழுங்கியுமிழ்ந்த மதியம் போல் தனது நகரத்தினை நோக்கிச் சென்றான்.

(REGISTERED-COPY-RIGHT-)

(ஆதிபர்வம்-௧௬௪-வது-பக்கம்.)

பாஞ்சாலன் புத்திரகாமேஷ்டி. யாகஞ்செய்தல்.

இங்கே குருகுலசிகாமணிகளாகிய நூற்றுவரும் பாண்டுமக்களும் பெரிய அரசர்கள் முதலாகிய பேரும் துரோணரை வணங்கித் தங்கள்தங்க ளிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள். அங்கே பாஞ்சாலன் தன்னகரத்திற்சென்று மந்திரிமுதலானவரை அழைத்துத் தன்முத்திரைமோதிரத்தை அவர்கள்கையிற் கொடுத்து, ஓ மந்திரிமார்களே! நானும் என்மனைவியும் வனத்திற்குச் செல்கிறோம். நீங்கள் நானிருந்து எவ்வண்ணங் காத்துவந்தேனோ அவ்வாறு பிரஜைகளைக் காப்பாத்தி வாருங்கள். என்றுகட்டளையிட்டு மனைவியை அழைத்துக்கொண்டு காட்டிற்சென்று பற்பல பெரியோர்களை யடுத்துச் சில மந்திரோபதேசங்களைப்பெற்றுத் தவஞ்செய்து, இன்னுமேலான முனிபுங்கவர்களுடைய தரிசன மாகவேண்டுமென்று வனங்கடோறும் திரிந்து வருகிறான். அப்போது ஒருவனத்தில் அழிவில்லாத தவசிரேஷடர்களாயும் திவ்யக்கியானிகளாயுமிருக்கிற உபையாசன்-யாசன்-என்று இரண்டுமுனிவர்க ளிருந்தார்கள். அவர்களிடத்துப் பாஞ்சாலனும் அவன் மனைவியுஞ்சென்று வணங்கினார்கள். அவ்விருவரும் நீங்கள்யார்? இவ்வனத்தில்வந்த காரணமென்ன? என்று வினவப் பாஞ்சாலன் தன்னூர் பெயர் முதலியவற்றை யெடுத்தோதித் துரோணாசாரியரால் தனக்குநேரிட்ட துன்பத்தைச்சொல்லி, ஓசுவாமிகளே! அந்தத் துரோணாசாரியைக் கொல்ல ஒருபுத்திரனும், அந்தத் துரோணாசாரி சபதத்தை நிறைவேற்ற என்னோடெதிர்த்து யுத்தஞ்செய்த வாலிபன் தோளுக் கியைய ஒரு புத்திரியும் பெறவேண்டுமென்று கருதிப் பெரியோர்களுடைய தரிசனஞ்செய்து வருகிறோம். அக்கருத்தை நிறைவேற்றத் தங்களால்தான் முடியுமென்று உண்மையாய் நம்பி வணங்கினோ மென்றான். அதுகேட்ட இரண்டு முனிவரும் பாஞ்சாலன் கூறியவற்றிற் கிசைந்து, ஓ பாஞ்சாலதேசாதிபதி! நீ கருதியிருக்கிற புத்திரபாக்கியம் புத்திரகாமேஷ்டி யாகம் செய்தால்தா னிறைவேறுமென்ன, அரசன் அதற்கிசைந்து சில தூதர்களைப் புத்திரகாமேஷ்டி யாகத்துக்குரிய திரவியங்களை அனுப்புவிக்கச்சொல்லி மந்திரிகட் கறிக்கையிட ஏவினான். அப்படியே தூதர்கள் மந்திரிகளுக் கறிக்கையிட, மந்திரிகள் புத்திரகாமேஷ்டி யாகத்துக்குரிய திரவியங்களைச் சேகரித்துக்கொண்டு தாங்களும் வந்து அரசனைக்கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தார்கள். அரசன் வணங்கிய மந்திரிகளை ஆதரித்து வந்த யாகதிரவியங்களைக் கண்ணுற்று முனிவரிடத்துச்சென்று நமஸ்காரஞ்செய்து, ஓஸ்வாமிகளே! புத்திரகாமேஷ்டி யாகத்துக்குரிய திரவியங்கள் வந்திருக்கின்றன. இனி தாங்கள் எழுந்து அந்த யாகத்துக்குத் தகுந்த முயற்சிசெய்யவேண்டுமென்று வணங்கினான். உடனே முனிவர்கள் எழுந்து விசாலமான ஒருஇடத்தைப் பார்த்து அவ்விடத்துநின்று, அரசனுடைய மனிதர்களால் யாககுண்டம் வெட்டிவித்து அருகில் வேதிகைபோட்டு வேதவிதிப்படி யாகசாலையைப் புதுக்கி, நல்லசுபமுகூர்த்தத்திற் பாஞ்சாலனையும் அவன் மனைவியையும் ஸ்நானஞ்செய்வித்து யாகசாலையில் உட்காரவைத்து யாகதீக்ஷைசெய்து, வேதவிதிப்படி யாகத்தைத் தொடங்கி மந்திரத்தை யுச்சரித்து அக்கினியை யுண்டாக்கி ஓமம்வளர்த்தி, அரசனால் நெய்யைச்சொரிவித்து, தூபதீபநைவேத்தியத்துடன் சாங்கமாக யாகத்தை நடத்திவருகிறார்கள். அப்போது அந்த ஓமகுண்டத்தின் அக்கினிச் சுவாலையிற் பிண்டத்தோடு ஒரு பொற்றட்டுதோன்றிற்று. அவ்வாறு தோன்றிய யாகபிண்டத்தை இரண்டுமுனிவரும் எடுத்து அரசன் மனைவியை அழைத்து, அவள்கையிற் கொடுக்கிற தருணத்தில் பூப்பாயினள்.

துஷ்டத்தூய்மன் திரௌபதி இவர்களுற்பவம்.

அதுகண்ட அரசன் - அடடா! இதென்ன விபரீதம்? பிண்டம் புசிக்குந் தருணத்தில் மனைவி பூப்பாயினாளென்று கனவருத்த முற்றான். முனிவரிருவரும் அரசனைநோக்கி, ஓ அரசனே! நீ அஞ்சாதே. இப்பிண்டம் பழுதாகாது. இதோ இருக்கிற ஓமகுண்டத்திற் போடுவோம். அதிற்றானே உன் கருத்தின்படி ஒருபுத்திரனும் ஒரு புத்திரியும் தோன்றுவார்களென்று மற்றொரு மந்திரத்தைச்செபித்து அப்பிண்டத்தை ஓமகுண்டத்திற் போட்டனர். போட்டவுடன் அதில்நின்று மகரகுண்டல ஆரகேயூர கடக்கங்கண முதலாகிய ஆபரணாலங்கிரதனாகி, விற்பிடித்த கரமும்-முடிபொறுத்த சிரமும்-வயிரக்கவசத்தை யணிந்த மார்பும் விளங்க சொர்ன நிறமாகிய இரதத்திற் சிங்கக்குட்டியைப்போல ஒரு சிறுவனுதித்தான். இச்சிறுவனுதித்தவுடன் ஒற்றைச்சக்கரத்தையுடைய இரதத்திலேறி உதயகிரியிற்றோன்றும் ஆதித்தனை நோக்கிய தாமரைகள் எவ்வாறு நன்னிறங்கொண்டு மலருமோ, அவ்வாறு அங்குள்ளவர்கள் மனதில் மகிழ்வுற்று இமைக்கா நேத்திரத்தைப் பெற்றவராகிப் பார்த்திருந்தார்கள். புத்திரன் தேரோடும் வெளியில் வந்தான். பாஞ்சாலன் தன்னருகிலிருக்கிற மந்திரிகளை நோக்கி, ஓ மந்திரிமார்களே! அனேககாளாகப் புத்திரபாக்கியமில்லாமல் வருத்தமடைந் திருந்ததுவுமன்றி, என்னைப்பங்கப்படுத்தின துரோணரை வதைக்கக்கருதி அதற்காகவும் ஒருவருத்தங்கொண் டிருந்தேன். இவ்விரண்டு வருத்தமும் நீங்கப் புத்திர னுதித்தான். இனி நீங்கள் நமது நகரத்துக்குத் தெரியப்படுத்திப் பட்டணத்தை அலங்கரிக்கச்செய்து யாவ

ரையும் பெருநாள் கொண்டாடும்படி செய்வீர்களென்று கட்டளையிட, மந்திரிகள் தூதுவர்களால் நகரத்தாருக்குத் தெரியப்படுத்தினார்கள். நகரத்தார் பெருமகிழ்வுற்றுத் தெருக்களில் தோரணங்கள்தூக்கி அலங்கரித்து, நகரிலுள்ளவரும் அந்நகரத்துக் குட்பட்ட நாட்டுகளிலுள்ளவரும் களித்துப் பெரும்பண்டிகை கொண்டாடினார்கள்.

இங்கே உபையாசன் யாசனென்கிற இருவரும் மற்றொரு பிண்டத்தை ஓமகுண்டத்தி லிட்டார்கள். இட்டவுடன்மின்னைப்பழிக்கு மருங்குலையும், வேயைப்பழிக்குந் தோள்களையும், பொன்னைப்பழிக்கு மேனியையும், பூவைப்பழிக்கும் பதத்தினையும் உடைத்தாய்க் கோகனகத்திலுதித்த ஸ்ரீமஹாலட்சுமியைப்போல் ஒருபெண் பிறந்தாள். உடனே ஒருவில்லும் பிறந்தது. இப்பெண் பிறந்தபோதே ஆகாயத்தி லிருந்து, "மண்மேலொருத்தியரக்கர்குல மாளப்பிறந்தாள் வாமனுதற், கண்மேலின்றுமிவள்பிறந்தாள் கழற்காவலர் தங்குலமுடிப்பா, ளெண்மேலென்கொலினி' என்றொரு சொல்லும்பிறந்தது, அதென்னெனில்- முற்காலத்தில் இராக்ஷதர்குலத்தை அதமாக்கச் சீதையென்று ஒருபெண்பிறந்தாள். இன்று சாம்பவமூர்த்தியின்நெற்றிகண்ணினை யொத்த ஓமத்தீயில் இவள்பிறந்தாள். இக்கன்னிகை வீரகண்டாமணியைத் தரித்து ஜெயவீரசிங்கம்போல் விளங்கும் அரசர்களையெல்லாம் அதமாக்குவளென்பதாம். இதுவன்றிப் புத்திரனுக்குத் துஷ்டத்தூய்மனென்றும், புத்திரிக்குத் திரௌபதை என்றும் பெயரிடுங்களென்று ஒருவாக்கியமுமுண்டாயிற்று. பாஞ்சாலன் முன்பிறந்த புத்திரனது புஜபல பராக்கிரமத்தையும் பின்புதோன்றிய புத்திரியினது ரூப சவுந்தரியத்தையுங் கண்ணுற்று, நமது எண்ணத்துக்குத் தகுதியானவர்கள் தானென்று மனதில் மதித்து, நம்மைப்போற் புண்ணியவான்க ளில்லையென்னுஞ் சந்தோஷத்தி லழுந்திப் புத்திர பாக்கியத்தையளித்த முனிவரிருவரையும் வணங்கி அவர்கள் மகிழ்வெய்தத் துதித்து, அவர்கள்கூறிய ஆசீர்வசனத்துடன் விடைதரப்பெற்றுப் புத்திரியையும் புத்திரனையும் மனைவி மந்திரிமார் முதலானவர்களையும் அழைத்துக்கொண்டு தன்னகரஞ்சேர்ந்து, இராஜவீதியைவலமாகவந்து தனது அரண்மனையில் சேர்ந்தான்.

துஷ்டத்தூய்மன் துரோணரையடுத்து வில்வித்தை பயிறல்.

துஷ்டத்தூய்மன் நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநாலு கலைக்கியான முதலியவற்றை யோதியுணர்ந்து, தன்குல வித்தையாகிய தநுர் வேதத்தையும் வில்லின் அப்பியாசத்தையும் கற்கவிரும்பித் தந்தையிடத்துவந்துவணங்கிச் சொல்லுகிறான்: ஓஐயா? எனக்கு வில்வித்தையைக் கற்றுக்கொடுப்பதற்குத் துரோணாசாரியரோ யல்லாமல் மற்றொருவரில்லை. ஆதலால் அவரிடத்துச்சென்று வில்வித்தையைக் கற்றுவருகிறேன் விடைகொடு மென்று வேண்டப்பாஞ்சாலன் நகைத்துச்சொல்லுகிறான்: அப்பா மகனே? அந்தத் துரோணாசாரியரைக் கொல்லுவதற்காகவே உன்னைப்பெற்றேன். நீ அவரிடத்திலேயேசென்று வில்வித்தையைக் கற்கப்போகிறேனென்றது வெகுநேர்த்தி! வெகுநேர்த்தி! நீ அவரிடத்துஞ் செல்லலாமா? சென்றாலும் அவர் வித்தையைக் கற்பிப்பாரா வென்றான். அதற்குத் துஷ்டத்தூய்மன் தந்தையை வணங்கி, ஓஐயா! நீர்தளர்வுறுதீர். எனக்குவிரைவில் விடைகொடும். நான்சென்று என்மேல் அவருக்குமனம்வரும்படி பணிவிடைசெய்து வில்வித்தையைக் கற்று வருகிறேனென்று வேண்ட பாஞ்சாலன் சம்மதித்து விடைகொடுத்தான். துஷ்டத்தூய்மன்விடைபெற்றுஅத்தினபுரத்துக்குவந்து துரோணாசாரியைக்கண்டு வணங்கித் தன்பெயரையும் தந்தைபெயரையும் சொல்லித் தான் நாடிவந்த கருத்தையும் நவின்றான். துரோணாசாரிநகைத்து,அடடா!!இச்சிறுவன் பாஞ்சாலன் புத்திரன். பாஞ்சாலன் நம்மைக் கொல்லப் புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து இப்புத்திரனைப் பெற்றான். இப்புத்திரன் நம்மிடத்தில் தானே வில்வித்தையைக்கற்க நாடிவந்தான். இவனுக்கு நாம் கற்பிக்காமற் போனோமேயாகில்,இச்சிறுவனுக்குப் பயந்து துரோணர் வில்வித்தையைக் கற்பிக்க மனமில்லாதிருந்தாரென்று ஒரு அபவாதம் கிடைக்கும். ஆதலால் - தெய்வகதியை ஒருவரால் தடுக்கக்கூடாது. நாமுண்மையாக வஞ்சனையின்றி வில்வித்தையைக் கற்பிக்கத்தான் வேண்டுமென்று மனதில் மதித்து, வணங்கியிருந்த துஷ்டத்தூய்மனை ஆதரித்து ஆசீர்வதித்து, அப்பா துஷ்டத்தூய்மா! உன்கருத்தின்படியே வில்வித்தையைக் கற்றுக்கொள்ளென்று தநுர்வேதவிதி பிசகாமல் எல்லா வித்தையும் பூரணமாய்க் கற்பித்தார். துஷ்டத்தூய்மன் அவையனைத்தையும்ஐயந்திரிபு அறியாமையறக்கற்றுக் குருவாகி துரோணாசாரியின் கிருபையைப்பெற்றுத் தன்னகரம்வந்துசேர்ந்து இராஜகாரியங்களைப் பார்வையிட்டுச் சுகமாக வாழ்ந்துவருகின்றான்.

பரிமளகந்தி பரமபதமடைதல்.

இங்கே திரிதராஷ்டிரன் புத்திரர்களாகிய நூற்றுவரும் பாண்டுமக்களாகிய ஐவரும் அரசர்களெல்லா மதிக்கத்தகுந்த திறத்தினையுடையவராகி வளர்ந்துவருகிற காலத்தில் என்குருவாகியும் இந்தப்பாரதமாகிய ஐந்தாம்வெதத்தை முந்திச் செய்தவராகியு மிருக்கிற வேதவியாசர் திரிகால வர்த்தமானங்களையுமுணர்ந்த திவ்யக்கியானியாகையால் குருகுலமக்களாலினிமேல் நேரிடும் கெடுதியை யுணர்ந்து, இனிநாம் சும்மாயிருப்பது தகுதியல்ல. திரிதராஷ்டிரன் புத்திரரும் பாண்டுபுத்திரரும் விரோதப்படுவார்கள். அவ்

வேளையில் நமது தாயாகிய பரிமளகந்தி ஏதாவது ஒன்று சொல்லுவாள். அவ்விருதிறத்தாரில் துரியோதனன் முதலானவர்கள் அச் சொல்லின்படி நடக்கப்போகிறதில்லை. அதனால் நமது தாய்க்கு இழிவுவருகிறதுமன்றி அவர்களோ டிருந்தாற் சம்பந்த தோஷத்துக் குள்ளாவள். நம்மை யீன்றமாதா குற்றமுடையவளாதல் நன்கல்ல. என்று மதித்து அத்தினபுரத்துக்குவந்து பரிமளகந்தி யிருக்கும் அந்தப்புரத்துட்சென்று தாயைக்கண்டு சாஷ்டாங்கமாக வணங்கி, ஓ அம்மணி! இவ்வுலகத்தில் அளவற்றகால மிருந்தாலும் காயவின்ப மொன்றேயன்றி ஆத்மலாபமில்லை. ஆதலால்-பெரியோர்கள் தேகாபிமானத்தை மேற்கொள்ளாமல் ஆன்மலாபத்தை அபிமானித்து, உலக வியாபாரத்திற் சென்றபோதும் சோரநாயகியின் மனம்போலவும் திந்திருணியோடுபோலவும் தங்கள் மனதை அவ்வாத்மலாபத்துக் கேதுவாகிய சைதன்னியத்தினிடத்துச் செலுத்துவர். காயமோ நிலையல்ல. ஞாயமோபலமல்ல. தாயே! இனிநீர் இவ்வுலகவாழ்க்கையைவிட்டுத் தவவேடம் கொள்ளத்தக்கதே. திரிதராஷ்டிரன் புத்திரரும் பாண்டுமக்களும் விரோதப்பட்டுக் கடும்போரிடப் போகிறார்கள். அதனைத் தாங்கள் பார்வையிடுவது தகுதியல்ல. சந்திரவமிசம் யயாதிமுதற் சந்தனுவரைக்கும் மநுநீதிக்கு வழுவில்லாமல் நடந்துவந்தது. இனி மநுசாஸ்திரம் துரியோதனனுடைய க்ஷாத்திரத்துக்கு முன்னிற்காது. ஆதலால் தாயே! விரைவில் ஆத்ம லாபத்தைத் தேடிக்கொள்ளும். என்று வணங்கி வருந்தப் பரிமளகந்தி வணங்கிய மகனைத் தழுவி ஆசீர்வதித்துப் புத்திரனுரைத்ததற் கிசைந்தாள். வியாசர் அன்னைக்கு மறுமைலாபம் கிடைக்கச் சிலமந்திரங்களை யுபதேசித்துத் தவத்துக்குச் செல்லுந்தாயே யென்றுவணங்கி விடைபெற்றுத் தமதிருப்பிடம்போய்ச் சேர்ந்தார். பரிமளகந்தி தன்மருமக்கள்மாராகிய அம்பிகை அம்பாலிகை என்னு மிருவரையுமழைத்து, இயான் தவஞ்செய்து மறுமைலாப மடைய வனத்திற்குச் செல்கிறேன் உங்கள் கருத்தென்னவென்று கேட்டாள். உடனேயவ்விருவரும் வணங்கி, ஓ அத்தாய்! கணவனிறந்தபோதே இக்காயத்தை விரும்பாம லிருந்தோம். தங்களால் இதுவரைக்கும் இக்காயத்தைச் சுமந்தோம். தாங்கள் தவத்துக்குச் செல்கிறபோது எங்களுக்கு இவ்விடத்தில் வேலையென்ன? நாங்களும் கூட வருகிறோமென்றார்கள். பரிமளகந்தி மருமக்கள் மார்களையு மழைத்துக்கொண்டு வீஷ்மர் முதலானவர்க ளிடத்து விடைபெற்று, அவர்கள் கண்ணும் கருத்தும் தங்களுக்குத் துணையாகவரக் காட்டிற் சென்று அருமையான தவத்தைச்செய்து, மூவரும் பஞ்சாக்கினி மத்தியி லிருந்து தங்கள் தேகத்தை நீங்கி எக்காலத்தும் அழிவில்லாத பேரின்பத்தைக் கொடுக்கும் பரமபதத்தை அடைந்தார்கள்.

தருமனுக்கு இளவரசுபட்டங்கட்டுதல்.

அஸ்தினபுரத்திற் குருகுலமக்கள் நூற்றைவரும் பிறை வளர்வதுபோல் வளர்ந்து வருகிற காலத்தில், தருமராஜன் அன்புடைமை-ஒழுக்கமுடைமை-இனியவைகூறல் - நடுவுநிலைமை- பொறையுடைமை-வாய்மை -அருளுடைமை-அறிவுடைமை-முதலியவற்றைப்பெற்று, அழுக்காறு-கடுஞ்சொல்-சினம்-பேராசை-பொய்மை - முதலியவற்றை நீங்கிப் பெரியோர்கள் புகழ்ந்துரைக்கும் நன்னெறிக்கணின்று, உலகம் துதிக்கச் சிறப்புற்று விளங்கினன். வீஷ்மர் தருமராஜனுடைய நன்னெறியினைக் கேட்டுங் கண்ணுற்றும் மிகுந்த மகிழ்வை அடைந்து, தருமராஜனுக்கே இளவரசு பட்டங் கொடுக்கவேண்டுமென்று மனதில் நினைத்து, நாமே பட்டங்கட்டினாற் பொறாமையே உருவாகத் திரண்டுவந்த துரியோதனன் முதலாகிய நூற்றுவருக்கு மனதொப்பா தாகையாற் சபைகூட்டி அச்சபையார் கட்டளைப்படி நடக்கவேண்டு மென்று திரிதராஷ்டிரன் முதலானவர்க்கு ஒரு சபைகூட்டும்படி ஆக்கியாபித்தார். வீஷ்மர் ஆக்கினைப்படி திரிதராஷ்டிரன் கொலுவிருந்து சபை கூட்டுவித்தான். அச்சபையில் வந்திருக்கிற ஆறுலக்ஷத்து அறுபத்தாறாயிரம் பட்டவர்த்தனரையும் - மூன்றுலக்ஷத்து முப்பத்திராயிர மகுடவர்த்தனரையும் - பதினெண்ணாயிர மந்திரிகளையும் - ஐம்பத்தாறு தேசத் தரசர்களையும்-பதினெட்டு மண்டலாதி பதிகளையும் - குடிகளையும் - வேதவேதியர் களையும் - பந்துக்களையும் - வில்லாசிரியர்களையும்-வீஷ்மர் நோக்கி, ஓ சபையார்களே! திரிதராஷ்டிர மஹாராஜனுக்கு உதவியாக இளவரசுபட்டம் ஒருவர்க்குக் கொடுக்கவேண்டும். அதற்குத்திரிதராஷ்டிரன் புத்திரர் நூறுபெயர். பாண்டுபுத்திரர் ஐவர். இவர்களில் யாருக்கு இளவரசு பட்டங்கொடுக்கலாம் விளம்புங்களென்று வினவச் சபையார் யாவரும் ஓர் மனமாகச் சொல்லுகிறார்கள்: ஓ மண்டலேஸ்வரா! இதுகாறும் யயாதிமுதல் திரிதராஷ்டிரமஹாராஜன் வரையில் குணத்தி லெப்படி யிருந்தபோதிலும் வயதினுயர்ந்தவருக்கே பட்டங்கொடுத்துவந் திருக்கிறது. இப்போது பாண்டுமக்க ளிவரில் தருமராஜன் தான் தற்காலத்திற் செங்கோல் செலுத்தும் திரிதராஷ்டிர மஹாராஜன் புத்திரர் நூற்றுவருக்கும் வயதினுயர்ந்திருப்பதுவு மன்றி, அரசுக்குரிய தன்மையையும் பெற்றிருக்கிறான். அப்புத்திரனுக்கே இளவரசுபட்டம் கொடுப்பது யாவர்க்கும் சம்மதி யென்றார்கள். திரிதராஷ்டிரனோடு விதுரன் முதலானவர்கள் இவ்வசனங்களைக் கேட்டு மகிழ்வுற்றார்கள்.

இவர்களில் திரிதராஷ்டிரன் சபையை நோக்கிச் சொல்லுகிறான்:ஓசபையார்களே! நான் பட்டத்துக்கு மாத்திர முரியவனாகிப் பட்டம் பெற்றனே யன்றிப்

பட்டத்துக்குரிய செய்கைகளை யான் செய்தறியேன். என்சகோதரனாகிய பாண்டுராஜன் அரசுக்குரிய செய்கைகளைச் செய்து, அநேகதேசத்தையும் என் கைவசமாக்கிவைத்தான். ஆதலால் - இந்தப் பாக்கியமனைத்தும் பாண்டுராஜனாலாயது. அப்படியிருக்கப் பாண்டு புத்திரனாகிய தருமராஜனுக்கு இளவரசுபட்டம் கொடுப்பதற்கு யாதோ ராக்ஷேபனையுமில்லை, இப்போது தானே யாவருமறிய இளவரசு பட்டங் கட்டுங்களென்று பரிவுடன் விளம்பினான். அதை வீஷ்மர் முதலானவர்கள் கேட்டுக் களிப்படைந்து தக்ஷணம் தருமராஜனை அழைப்பித்து, ஜெயப்பிரதானமான முகூர்த்தத்திற் கங்கை - யமுனை - துங்கபத்திரி - கோதாவிரி - காவேரி - முதலாகிய திவ்யதீர்த்தங்களால் ஸ்நானஞ் செய்வித்து, மகரகுண்டல ஆரகேயூர கடககங்கண முதலாகிய ஆபரணங்களினாலும் சரிகை வஸ்திரங்களினாலும் அலங்கிரதஞ் செய்து, சந்தனம் - புழுகு - கஸ்தூரி - கற்பூரம் - சவ்வாது - முதலாகிய கலவைச் சாந்தணிந்து, நவமணிக ளழுத்தி யிருக்கிற சிங்காதனத்தி லிருத்தி, வேதவேதியர்கள் ஜெயாவிஜீபவாவென்று மந்திராக்ஷதைகொடுத்துப் பல ஆசிகள் வழங்க, முரசு - எக்காளம் - தோற்கருவி - துளைக்கருவி - நரம்புக்கருவி - முதலாகிய வாத்தியங்கள் கடலொலிபோல் முழங்க, மாங்கில்யஸ்திரீகள் மங்களம்பாட, ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் தங்கள் தங்கள் கரகமலத்தைச் சிரமேற்குவித்துத் துதிக்க இவ்வாறு சகலவித சம்பிரமத்தோடு சற்குணவானாகிய தருமராஜனுக்கு மகுடாபிஷேகஞ் செய்தார்கள். அந்தரத்தில் வந்திருந்த இந்திரன் முதலான தேவர்கள் கற்பகப் பூமாரி பெய்தார்கள். அந்தர துந்துமியுடனே மேனகையும் அரம்பையும் ஆடினார்கள். திலோத்தமையும் ஊர்வசியும் பாடினார்கள். இனி உலகத்தில் தருமதேவதை நாலு பாதத்தினாலேயும் நடப்பாளென்று தேவர்கள் ஆனந்தத்தை மேற்கொண்டு புகழ்ந்து சுவர்க்கஞ் சேர்ந்தார்கள்.

இங்கே வீஷ்மர் சபையில் வந்திருந்த யாவருக்கும் அவரவர்க்குத்தக்கபடி மரியாதைகளைச் செய்து வேதவேதியர்களுள்ளம் பூரிக்கத் தான தருமங்களை நடாத்திவர, திரிதராஷ்டிரன் தனது முத்திரை மோதிரத்தைத் தருமராஜன் கரத்திற் கொடுத்துச் சபையிலுள்ளோரை நோக்கி, ஓ சபையார்களே! இன்று முதல் இந்தத் தருமராஜன் கட்டளைக் குட்பட்டு நடந்து கொள்ளுங்களென்று உறுதிபெற மொழிந்து விடைகொடுத்தான். வந்த மன்னவர்முதல் யாவரும் வீஷ்மர் முதலானவரை வணங்கி, இளவரசுபட்டத்தைப்பெற்ற தருமராஜனைத் தொழுது, பழுதுபடா மொழி பெற்றுப் பட்டினம் போய்ச் சேர்ந்தார்கள். அன்றுமுதல் தருமராஜன் பெரியபிதாவாகிய திரிதராஷ்டிரன் பரித்தபூமியைத் தான் பரித்துத் துரியோதனன் முதலாகிய நூற்றுவரையும் தன் சகோதரர்போற் பாவித்ததன்றி, அத்துரியோதனனைத் தனது சிங்காதனத்தில் வைத்துக்கொண்டு எல்லாக்காரியங்களையும் அவனால் நடப்பித்துச் செங்கோல் செலுத்தி வருகிறார். அக்காலத்தில் கள்ளர்பயம் - விஷபயம் - நோய்பயம் - சத்துருபயம் - முதலியவை நீங்கி மாதமும்மாரிபெய்து, உலகமெல்லாம் வசுராஜன்காலத்து எவ்வளவு வளமையுற்றதோ அவ்வளவுவளமையுற்றுக் குடிகளெல்லாம் சீர்பெற்றார்கள். பெரியோர்கள் தருமராஜன் நடாத்திவரும் செங்கோல் முறைமைக்கு வியப்படைந்து, யாவரும் புகழத் தலைப்பட்டார்கள். பெரிய அரசர்களாகிய வீஷ்மர் திரிதராஷ்டிரன் - மந்திரிகள் முதலாகிய பேர்கட்கெல்லாம் தலைமையாயிருக்கிற விதுரன் - இவர்கள் மிகமகிழ்வடைந்து, தருமராஜன் புத்திரனா யிருந்தபோதிலும் அவன் வாயிலிருந்து வெளிப்படுஞ் சொல்லைக் குருவாக்கியம்போல் தலைமேற் கொண்டு, சொற்பழு தாறமல் நடந்து வருகிறார்கள்.

துரியோதனன் துராலோசனை.

இவ்வாறு பெரிய அரசர்களே முதலிய யாவரும் தருமராசன் வாக்கியத்தைச் சிலாக்கியமாகப் பேணி நடந்து வருவதைத் துரியோதனன்கண்டு பொறாமை கொண்டு, ஒருநாளிரவில் தனியே ஓரிடத்துச்சென்று கர்னன் - சகுனி - துச்சாதனன் - இவர்களை அழைப்பித்துச் சொல்லுகிறான்: ஓ உயிருக் குயிராயிருக்கிற ஆப்தர்களே! நெடுநாளாக என் கருத்திலொன்றை வைத்திருக்கிறேன். உங்களைவிட அன்பர்களெனக்கில்லையாதலால் ஒளியாமல் அதனைவெளியிடுகிறேன். அதனை நீங்கள்கேட்டு, இதுதகுதி இது தகுதியல்லவென் றுரைப்பீர்களாகில் அவ்வாறு நடக்கக் காத்திருக்கிறேன். அஃதென்னெனில் - என்பிதாவின் சகோதரனாகிய பாண்டுராஜன் உயிரோடிருக்குங் காலத்தில் வேட்டையாட வனத்திற்சென்று மானை எய்தபோது, அம்மானுருவமாயிருந்த அமுதந்திமுனிவரானவர் இன்றுமுதல் நீ ஸ்திரீயைப் புணர்ந்தால் மரணமடைவை யென்று சாபமிட அச்சாபத்தை யேற்று அக்கணம் அரசுரிமையைநீக்கித் தவவேடங்கொண்டு இறந்துபோனான். அவனது பத்தினியர்களிற் குந்திதேவியாற்பெற்ற புத்திரனாகிய தருமராஜன் இளவரசு பட்டம் பெற்றிருக்கிறதும், அவன் உயிரோடிருக்கும் போதும் அவன் இறந்தபின்பும் செங்கோல் செலுத்திவந்த பெரியராஜன் புத்திரனாகிய நான் அத்தருமனுக்குக் கீழ்ப்படிந்து அவனிடும் ஏவலைச் செய்கிறதும், உங்கள் கருத்துக்குத் தகுதியாயிருக்கின்றதாவென்று துக்கித்தான். அதற்குச் சகுனி சொல்லுகிறான்: அப்பா மருமகனே! உன் தந்தைக்கு நேத்திரமில்லாதிருந்தாலும் பல சாத்திரங்களை மூத்தோர்களாற் கேள்வியுற்று நாற்றிசையுந் தோத்திரஞ்செய்ய நீதி செலுத்தி யிருந்தானென்று மதித்திருந்தேன். இப்போது ஐவர்மேற் பக்ஷமுள்ள வீஷ்மர் முதலானவர்கள் கருத்தின்படி உன்பிதா புத்திமயங்கினார். மே

லும் மந்திரிகளுக்கெல்லாம் தலைமையான மந்திரியாகிய விதுரனும் வில்லாசிரியராகிய கிருபாசாரியரும் துரோணாசாரியரும் அந்த ஐவர்மேற் பக்ஷமுள்ளவர்களாதலால, வீஷ்மர்கருத்துக் கிசைந்து தருமனுக்கு இளவரசுபட்டங் கொடுத்தார்கள். அதனால் தருமராஜன் சிறப்புற்று உலகமுழுமையும் தன்னொருகுடைநீழலிற் காத்துவருகிறான். இனி அதைக்குறித்து ஒரு பேச்சும் பேசவேண்டிய தில்லையென்று கடுஞ்சினத்துடனுரைத்துப் பின்னுஞ் சொல்லுகிறான்:

ஓ மந்தரகிரிக் கிணையந்த புயாசலத்தை யுடைய துரியோதன மஹாராஜனே! உலகத்தில் ஒரேகருப்பத்திற்பிறந்த அண்ணன் தம்பிமார்களே காலவித்தியசத்தால் ஜன்மப்பகையாளிக ளாகிறார்கள். நியாயமாக நீயும் தருமராஜனும் பங்காளிகள். உனக்குச் சத்துரு அவன் அவனுக்குச் சத்துரு நீ. நீயே சத்துருவாகிய தருமனுக்கு வழிப்பட்டு வருவையாகில், இனி என்ன இருக்கின்றது. உலகத்திற் புத்தியில்லாதவர்க்கு வலியுடைமை - பொருளுடைமை - வீரம் - முயற்சி மேன்மை - நீதி - சுற்றம் - சிநேகம் - இவையெல்லா மிருந்தாலும் பயன்படாது. அதற்குத் திருஷ்டாந்திரம் நீயேயன்றி வேறொருவ ரில்லை. என்றுகூற அதற்குள் துச்சாதனன் எழுந்து துரியோதனனை வணங்கி, அண்ணா! இப்போது தாங்கள்கூறிய வசனம் தகுதியென் றுரைப்பதற்கு எனக்கு மனம்வரவில்லை. ஏனென்றால் - மஹாவீரத்தன்மையை யுடையவரென்று ஐவர்க்கும் நமது பிதா பூமி முழுமைக்கும் இளவரசுபட்டங் கட்டிவைத்தார். இனிநாம் இப்பூமியின்கணிருந் தென்னபயன்? பெரியராஜாவின் புத்திரனாகிய உம்முடன் பிறந்த எனக்கும் என்சகோதரருக்கும் மேலானலாபந்தான். ஒருகுறைவுமில்லை. மேலும் உடம்பிற் புரைக்குழ லுண்டானால் உடம்பிற் பிறந்ததென்று நோக்காமல் உடனே அறுத்தெறிந்துவிடுவது தகுதி. அதுபோல் நமக்கு நலமல்லாமையாயிருக்கிற ஐவரைப் போரிட்டு வீறிட்டோடும்படி செய்யவேண்டும். உம்மைப்போல் விவேகிகள் உலகத்தில் யார்? (பனங்காயையும் பங்காளியையும் பதம்பார்த்து வெட்டவேண்டும்.) என்னும் பழமொழிகேட்டிருந்தும், நீங்களே முன்பின் யோசனை செய்கிறதா யிருந்தால் நாங்க ளென்ன செய்கிறதென்றான்.

அதற்குள் கர்னமஹாராஜன் துரியோதனனை நோக்கி, தம்பி துரியோதனா! நீ என்ன முன்பின் ஆலோசனை செய்கிறாய்? மானிடஜென்ம மெடுத்தால் இம்மை மறுமை இன்பங்களை அடைய வேண்டும். அதுதான் யாக்கையெடுப்பதற்குப் பயன். உலகத்தில் இன்பமடைய வேணுமானால் சாமம் - பேதம் - தானம் - தண்டம் - என்னும் சதுர்வித உபாயாகங்களுண்டு. அவற்றுள் அவரவர்களுக்குத் தகுதியான உபாயமெதுவோ அதனைச்செய்து, எதிரிகளைக் கைவசப்படுத்திப் பொருளை யடையவேண்டும். உனக்கும் அந்தஐவருக்கும் இந்த அத்தினபுரம் சுவாதீனமா யிருந்தாலும், நீ பெரிய ராஜாவின் புத்திரனாகையால் இவ்வரசு உனக்கே சுதந்தரமாகும். இதை நோக்காமற் பெரிய அரசர்கள் தருமனுக்கு இளவரசு பட்டங் கொடுத்தார்கள். அதனால் அவ்வைவர்கள் மீறிப் போயினர். இப்போது அவர்களுக்குப் பட்டந் தகாதென்று வழக்கிட்டால், தாங்களே அப்பட்டத்தை விட்டுவிடவேண்டும். விடாமல் ஐவர் மீறுவார்களாகில், அப்போது நடத்தவேண்டியகாரியத்திற்கு எனக்கு உத்திரவுகொடு. ஒருமுகூர்த்தத்துக்குள் அவ்வைவரையுங்கொட்டாவி கொள்ளும்படி வெற்றிகொண்டு உனக்குப்பட்டாபிஷேகஞ்செய்து வைக்கிறேன். என்வல்லமையை அன்று வில்லரங் கேற்றுஞ் சபையில் அறிந்திருக்கிறா யல்லவா? அப்படிப்பட்ட மிகுந்த திறத்தையும் பலத்தையும் பெற்றிருந் தென்னபலன்? காட்டுக் கெரித்த நிலவைப்போலவும் ஆற்றிற்கரைத்த புளியைப்போலவும் பயன்படாம லிருக்கிறேனென்றான். அச்சொல்லைக்கேட்ட துரியோதனன், அண்ணா! தாங்கள் கூறியபடி நேரிட்டு அந்த ஐவரையும் போரிட்டு அப்போரில் யாவரும் வீறிட்டழுது முதுகுகாட்டி யோடும்படிசெய்து நமது பூமியை நாம் கைவசப் படுத்திக்கொள்ளலாம். அதற்கொரு சங்கடமிருக்கின்றது. அஃதென்னெனில்-நமக்குப் பெரியோர்க ளிருக்கிறார்கள். அவர்களிருக்கும்போது நாம் யாதொன்றும் செய்யக்கூடாது. ஆதலால்- தந்திரத்தினால் அந்த ஐவரை நீக்கவேண்டும். அதற்கொரு யுக்திமாத்திரம் சொல்லுங்களென்று துரியாதனன் கேட்கச் சகுனி சொல்லுகிறான்:

அப்பா மருமகனே! நீ யேன் கிலேசப்படுகிறாய்? கர்னமஹாராஜனிருக்கும்போது ஐவரையும் வெற்றிகொள்ளுவது நமக்கு அருமையல்ல. ஆயினும் தத்காலத்தில் ஐவர்மேற் போருக்கெழுவதுந் தகுதியல்ல. ஏதாவதொரு தந்திரத்தினால் ஐவரையும் இந்நகரத்தைவிட்டு வெளிப்படுத்துவோமானால், உன் கட்டளைக்கு உலகமுட்படும். அதன்பின்பு ஐவர்க்கு ஒன்றுஞ் செல்லாது. அதற்கொருதந்திரஞ்சொல்லுகிறேன். அதென்னெனில்-வேதத்தில் கூறிய யாகங்களனைத்தையுஞ்செய்வதற்கும், பிதுர்கருமஞ் செய்வதற்கும், இன்னும் கருத்தில் நினைத்தபொருளை யடைவதற்கும், ஆன்ம லாபத்திற்குரிய மேலான தவத்தைச் செய்வதற்கும் யோக்கியமாக விளங்கியிருப்பது கங்காநதியருகி லிருக்கிற வாரணாவதம். அந்த வாரணாவதத்திற்கு அந்த ஐவரும் போகும்படி உன்பிதாவைக்கொண்டு செய்வையாகில்,ஐவரும அந்த நகரத்துக்குச் செல்லுவார்கள். அதன்பின்பு உன்மனதின்படி யிருக்கலாம். ஒருவேளை ஐவர் மீறுவாராகில், அக்காலத்தில் தகுந்த தந்திரஞ் செய்தாவது அல்லது போரிட்டாவது ஐவரையும் வெற்றி கொள்ளலாமென்றான். துரியோதனன் அதற்கிசைந்து, மாமனாகிய சகுனியையும் தமய

ஞகிய கர்னனையும் தம்பியாகிய துச்சாதனனையும் நோக்கி, இப்போது நாம்செய்த ஆலோசனையின்கருத்துப் பிறருக்குத் தெரியக்கூடாதென்று சொல்லி உடனே நால்வருமெழுந்து தங்கள் தங்களிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். சிலநாட் சென்றவுடன் துரியோதனன் தன்பிதாவாகிய திரிதராஷ்டிரமஹாராஜன் தனியாயிருக்கிற வேளையறிந்துசென்று, பிதாவுக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்தான். நமஸ்காரஞ்செய்த அரவங்கேட்ட கண்ணில்லாத திரிதராஷ்டிரன் யாரென்றுகேட்க, உன்மூத்தகுமாரனுகிய துரியோதனன் யானென்று சொல்ல, திரிதராஷ்டிரன் புத்திரனை வாரித்தழுவி, அப்பா மகனே! நீ தருமராஜனுேடு கொலுவிருக்கிறவனுயிற்றே என்னைக்காண வந்தது என்னகாரணமென்ன துரியோதனன் சொல்லுகிறுன்:

ஓ ஐயா! எனக்கொரு குறை இருக்கின்றது அதனைத் தங்களுக்குத் தெரியப்படுத்த வந்தேனென்றுன். அதற்குத் திரிதராஷ்டிரன் சொல்லுகிறுன்: அப்பா துரியோதனு! (நிசூ) தேசம் (டிஅ) மண்டலம் இவையெல்லாம் உன் சுவாதீனமாயிருக்க உனக்குக் குறையென்ன? உன்கருத்திற் குடிகொண் டிருக்கிறதை வெளியிடென்றுகூறத் துரியோதனன்வணங்கிய முடியனுகிச் சொல்லுகிறுன்: ஓ மன்னர் மன்னுக விளங்கும் என்பிதாவே! (காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு.) அதுபோல் கொடிய பாவியாகிய புத்திரனைப் பெற்றவரும் அவனைப்பாவியென்றிகழாமல் ஆதரணை செய்துவருவார்கள். நீங்கள் அக்கருத்தையுடையவராயிருக்கவில்லை. மேலும் புத்திரருக்குத் தந்தையே தெய்வமென்று வேதவாக்கியங்களுணர்த்தியிருந்தும், எங்கள்மீது உமக்குக் கிஞ்சித்தும் அன்பில்லாமல் எங்களை இழிவாக்கி, எங்களுக்குப் பகைவராகிய ஐவர்மீது அன்பு வைத்து தருமராஜனுக்கு இளவரசுபட்டங்கட்டிவைத்தீர். இந்த அநியாயத்தைத்தான் தங்களிடத்துச் சொல்ல வந்தேனென்றுன். இதனைக் கேள்வியுற்ற திரிதராஷ்டிரன் மனநடுக்கமுற்று, இருசெவியிலும் கையைவைத்து மூடிக்கொண்டு வருத்தமடைந்து, ஓ! ஓ! மோசம்வந்தது. யயாதிமஹாராஜன் முதல் இதுவரைக்கும் சத்தியத்துக்குக் கெடுதிவராமற் செங்கோல் நடந்து வந்தது. இனி நமது புத்திரர்களாற் சத்தியங்கெடுவதுமன்றி, நமதுவமிசமும் இழிவடையும்படி நேரிட்டிருக்கின்றது. தருமராஜன் இளவரசுபட்டம்பெற்றதற்கு நமதுபுத்திரன் பொறுமைகொண்டபோதே இனி என்னயிருக்கின்றது? இயற்கையிலேயே நமது புத்திரன் அறிவிலுயர்ந்தவனல்லன். இவனுேடுசெயற்கையானவரும்திறமையாளிகளல்லர். அவர்களாலோசனையினுல்தான் இப்புத்திநமது புத்திரனுக் குண்டாயிற்று. என்று மனதில் மதித்துப் புத்திரனை நோக்கிச் சொல்லுகிறுன்.

திரிதராட்டிரன் துரியோனனுக்கு அறிவுறுத்தல்.

அப்பா மகனே! நான் தருமராஜனுக்கு இளவரசுபட்டங் கொடுத்தது தகுதிதான். எவ்வாறெனில் — இந்தச் சந்திரவமிசக் தோன்றினதுமுதல் இதுவரைக்கும் வயதிலுயர்ந்தவன் யாரோ அவனெவ்வாறிருந்தபோதிலும் அவனுக்கே அரசுரிமை கொடுத்து வந்தார்கள். அதற்குத் திருஷ்டாந்தம் என்தம்பியாகிய பாண்டுராஜன் அநேக தேசாதிபதிகளை வென்று புகழ்பெற்று விளங்கியிருந்தும், கண்ணில்லாதநான்தான் அரசனுயிருந்தேன். மேலும் இப்போதிருக்கிற பாக்கியங்களெல்லாம் பாண்டுராஜன் சம்பாதனையேயன்றி, என் சம்பாதனை ஒன்றுமில்லை. ஆதலால் - பாண்டுராஜன் கண்ணில்லாத எனக்குமுடிசூட்டி எல்லாக்காரியங்களையும் என்னுல் நடப்பித்துக்கொண்டு வந்தது போல், உன்தமயனுகிய தருமராஜனுடனிருந்து எல்லாக்காரியங்களையும் அவன் முன்னிலையில் நடத்திவரவேண்டியது உன் கடமையாதலால் வீணுய்நீதிக்குவிரோதந்தேடிப் பலபேர்களால் இழிவடையாதே. அந்தத்தருமராஜனும் இளவரசுபட்டம் பெற்றபின்பு உன்னையல்லாமற் கொலுவிருக்கிறதில்லை. எந்தக்காரியத்தையும் உனக்குத்தெரிவித்து, உன்மனச்சம்மதியின்படி நடத்திவருகிறுன். அவனைப்போற் குணத்திலும் ஒழுக்கத்திலும் உயர்ந்தவர்கள் நமது தலைமுறையில் யாருமில்லை. மகனே துரியோதனு! இராஜசமுகத்திற் பலபேர் பலவிதமாக வசனிப்பார்கள். அவ்வசனங்களைப் புத்திமான்கள் கேள்வியுற்று, நல்லதை நல்லதாகவும் கெட்டதைக் கெட்டதாகவும் மனதில்மதித்துக் கொள்ளவேண்டுமேயன்றி நல்லதைச் சொல்லியவரைப்புகழ்ந்து கெட்டதைக்கூறியவரையிகழ்ந்துவெறுக்கவுங்கூடாது. அதனுல்விரோதம்நேரிடும். விரோதம்நேரிட்டால் இராஜரகசியம்பிறருக்குத்தெரியவரும் பிறருக்குத் தெரிந்தால் அரசுக்கு மோசம்வரும். ஆதலால்-இராஜனுனவன்தன்மனதுக்குள்ளே அவரவர்திறத்தையறிந்துகொண்டு, நீதிக்கு விரோதப்படாமல் காரியத்தை நடப்பிக்கவேண்டும். வெண்காக்கையைக் கண்டோமென்றும், தாயைக்கொலைசெய்தல் தகுதியென்றும் சொல்லுவர். அவர்களெல்லாம் தங்கள் கல்வித்திறத்தால்(தாஅநாட்டித் தனுதுநிறுப்பே.) என்னுஞ்சூத்திரவிதிப்படித் தானொரு பொருளையெடுத்து நாட்டி அதனை வருமிடந்தோறும் நிறுத்தி மதத்தாலழிவார்கள். மறுத்துக் கேட்டால் செயற்கையால் இப்படி நேரிடுமென்று கட்டுரை கூறுவார்கள். ஆதலால் நீ மரபுக்கும் நீதிக்கும் வழுவுருமல் நடப்பதைக் கருத்திற்கடமையாய்க்கொள்வையேயன்றி, துர்மந்திரிகளுடைய துராலோசனைப்பேச்சையுட்கொள்ளாதேயென்று உண்மையாய்ப் பேசினுன் திரிதராஷ்டிரமகாராஜன். அதற்குத் துரியோதனன் - ஐயா! பரத

ராஜன் முதலாக அனேகந் தலைமுறை பரியந்தம் தத்
தம் புத்திரருக்கே மகுடாபிஷேகஞ் செய்திருக்கத்
தாங்கள் ஐவர் மீது பக்ஷம் வைத்திருக்கிற விதுரன்
வில்லாசிரியர் -வீஷ்மர் - முதலானவர்கள் புத்தியைக்
கேட்டுத் தருமராஜனுக்கு இளவரசுபட்டம் நாட்டி
விட்டீர். அப்படி கொடுக்கலாமாவென்று யான்கேட்
டால்,எல்லாம் தருமராஜன் தந்தையினுடைய பாக்கி
யமேயன்றி, என்பாக்கிய மொன்று மில்லை யென்று
கைசோர விடுகிறீர். இதனால் அடியேனுக்கும் அடி
யேனுடன் பிறந்திருக்கிற சகோதரர்களுக்கும் இங்கு
என்னவேலை யிருக்கின்றது? தாங்கள் உத்திரவுகொடு
த்தால் தேசப் பிரஷ்டத்துவமாய் வனத்திற்சென்று
தவம்புரிந்து, இனியொரு ஜன்மத்திற்காவது இம்மை
யின்பம் அனுபவிக்கப் பெறுகிறோ மென்று கண்கலு
ழ்ந்தான். இதைக்கேட்ட திரிதராஷ்டிர மஹாராஜன்
மனம்வேறுகி, காலகதியாற் புத்திரனாகிய துரியோத
னன் கருத்துக் கிசைந்து சொல்லுகிறான்:

திரிதராட்டிரன் துரியோதனன் கருத்துக் குடம்படல்.

அப்பா துரியோதனா ! ஐம்பத்தாறு தேசாதிபதி
களும் பதினெட்டு மண்டலத்தரசரும் வணங்கச் சிங்
காதனத்தி லிருந்து அரசுசெலுத்திச் சக்ரேஸ்பரனெ
ன்று பெயர் பெற்றதுவுமன்றி, நீதிபரனென்றும் பெ
யரொடுத் திருந்தேன். இப்போது தருமராஜனுக்குச்
சூட்டிய இளவரசுபட்டத்தை உனக்குக்கொடுத்தால்
அந்தணரரசர் முதலானவர்கள் எளனஞ் செய்வது
மன்றி, நீதிபரனென்கிறபெயர்க்குக்கெடுதிவருகிறது.
என்வாய்மைக் கழிவும் எனக்கொரு இழிவும் வராம
லிருக்கிறதாக ஒரு தந்திரஞ் சொன்னால், அவ்வாறு
நடப்பிக்கிறே னென்று மகனுடன் ஆலோசித்தான்.
துரியோதனன்மகிழ்வுற்றுச் சொல்லுகிறான்: ஓ ஐயா!
நீர்வருத்தப்படாதீர். நான் கருதியிருக்கிற தந்திரப்
படி நடப்பித்தால், உமக்கும் உமது வாய்மைக்கும்
இழிவுவாராது அப்படி ...ச்செக்கிறே னென்று கை
கொடுத்தால், அதன்பின் என்கருத்தை வெளியிடுகி
றேனென்றுசொன்னான். திரிதராஷ்டிரன் அப்படியே
கைபோட்டுக் கொடுத்தான். அப்பால் துரியோதனன
சொல்லுகிறான்: ஓ ஐயா! பாண்டுமஹாராஜன் இறந்
துபோனநாள் சமீபவிக்கும்போது தருமராஜனை அ
ழைத்து, உன்தந்தைக்குத் திதிவருகிறதாதலால் கங்
காநதியருகிற் பிதுர் கருமத்திற்கும் மற்றவைகட்கும்
மிகுந்த யோக்கியதையாயுள்ள வாரணாவத நகரத்திற்
குச் சென்று பிண்டமுதலிய தானங்களைச் செய்துவ
ந்தால், சாபத்தாலிறந்த என்தம்பி கதிபெறுவானெ
ன்று தாங்கள் கூறவேண்டியது. அவ்வாறு கூறினால்
தருமராஜன் ஒத்துக்கொண்டு, தம்பிமாருடனும் தா
யாருடனும் அந்நகரத்துக்குச் செல்லுவான். பின்பு
நீங்கள் (சட்டிசுட்டதுகைவிட்டது.) என்கிறபழமொ
ழிபோல் இங்கு மீட்டும் அவர்களை வரவழைக்காது
சும்மா யிருந்துவிட்டால், அவர்கள் இங்கு வரமாட்
டார்கள். நானிவ்விடத்தில் இளவரசுபட்டம் பொறு
த்து, என் புத்தி சாதுரியத்தினால் உலக மெல்லாம்
என்னைவணங்கச் செய்துகொள்ளுகிறேன். ஒருவேளை
விதுரன்-வீஷ்மர்-துரோணாசாரி-கிருபாசாரி-அசுவத்
தாமா - இவர்கள் பாண்டு புத்திரர்பால் செல்லுவா
ரென்று கருதுவீர்க ளாகில், அந்த ஐயம் உமக்குவே
ண்டுவதில்லை- வீஷ்மர் இந்த ஆதினத்தைவிட்டு நீங்
கார். விதுரன் அந்த வீஷ்மரையும் உம்மையும்விட்டு
நீங்கான். கிருபாசாரி வீஷ்மரைப்பிரியார். துரோணா
சாரி மைத்துனனாகிய கிருபாசாரியைவிட் டகலார்.
தந்தையைவிட்டு அஸ்வத்தாமா பிரியார். ஆகையால்
நீங்கள் தருமராஜனை அழைப்பித்துக் கட்டளையிடு
மென்று விளம்பினான்.

திரிதராஷ்டிர மகாராஜன் புத்திரன் கூறிய தந்தி
ரத்துக்கு மகிழ்ந்து, அப்பா புத்திர சிகாமணியே !
உன் கருத்தின்படியே தருமராஜனை வாரணாவதத்திற்
கனுப்பி விக்கிறேன்: நீ அஞ்சாதே. இங்கே நடந்த
விருத்தாந்தத்தை வெளிப்படுத்தாதே. என்றுதிட்டம்
செய்து மகனை யனுப்பிவிட்டான். துரியோதனன்
நமதெண்ண முடிந்ததென்று அதிகமகிழ்வை அடை
ந்து, சகுனி கர்னன் முதலானவர்களோடுகூடித் தன்
னெண்ணம் நிறைவேறினதைச் சொல்லிச் சந்தோஷ
கரமா யிருந்தான். இப்படி சிலநாள் சென்றபின்பு
மண்டலேஸ்வரனாகிய திரிதராஷ்டிர மகாராஜன் கொ
லுமுகச் சாலைக்கு வந்தான். இராஜன் வரவைக் கா
ணவே சபையிலே யிருந்தமந்திரிகள் பட்டவர்த்தனர்
மகுடவர்த்தனர் மற்றுமுள்ள குடிகள் யாவரு மெழு
ந்து, வந்தனை வழிபாடு செய்தார்கள். இளவரசு பட்
டந்தாங்கி, இராஜசிங்கம்போல் விளங்கும் தருமரா
ஜன் தம்பிமார் நால்வரோடும் வந்து வணங்கினா.
திரிதராஷ்டிரன் பெரியவராகிய வீஷ்மரையும் கிருபா
சாரி துரோணாசாரியரையுந் தொழுது, ...ம்சைய
மாகிய சிங்காதனத்தில் வீற்றிருந்து, சட்டதிட்ட
முதலானவைகளோடு லோகவிசாரணையுநடாத்தி அவ்
...ள்ள நட்பா நட்புங்களை யறிந்துகொண்டு,
சபையிலிலுள்ள யாவருங்கேட்க வீஷ்மரையும்துரோ
ணாசாரி - கிருபாசாரி - விதுரன் - இவர்களையும் அரு
கில் அழைத்துச் சொல்லுகிறான். ஓ! சற்குண ஸ்ரே
ஷ்டர்களே ! பிர்ம்ம - க்ஷத்திரிய - வைசிய - சூத்திரர்
என்னும் நாற்குலத்திலும் என்னைப்போற் பாக்கிய
சாலியில்லை. எவ்வாறென்னில் - நானோ கண்ணில்லா
தவன். என்னுடன் பிறந்த தம்பியாகிய பாண்டுவோ
அவயவ ஈனம் இல்லாதவனா யிருந்ததுவுமன்றிச் சக
லகலை வல்லவனாகியும், அதிக சாமர்த்திய முடையவ
னாகியும் விளங்கினான். அவ்வகைப்பட்ட சிறப்பினை
யுடைய என்தம்பி கண்ணில்லாத என்னைச் சிங்காச
னாதிபதியாக்கி, ஐம்பத்தாறுதேசத் தரசர்களும் பதி

னெட்டு மண்டலாதிபதிகளும் வணங்கச்செய்து, இந்திரலோகத்துக் கொப்பாகிய போகத்தி லென்னை வைத்துத் தான் ஒரு சேவகனைப்போல் எனக்குப்பணிவிடை செய்துவர அவ்வளவு சிலாக்கிய சகோதரனைப் பெற்றிருந்தேன். இனி அவனைப்போற் சகோதரனைக் காணப்போகின்றேனு? என்று தனதிரண்டு கண்ணினும் நீர்சோரத் துக்கப்பட்டழுதான்.

இந்தத் திரிதராஷ்டிரன் மனதில் வைத்திருக்கிற கபடத்தை அறியாமல் உண்மையாக அழுகிறுனென்று வீஷ்மர் முதலானவர்கள் இனிய வசனங்களாற் றேற்றிச் சொல்லுகிறுர்கள். ஓ மண்டலேஸ்வரா! கபடநாடக சூத்திரதாரியாகித் திருப்பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் திரு விளையாடலா லமைந்தது இவ்வுலகம். ஆனுல் இவ்வுலகம் அழிகிறவஸ்துவே. அழியும்போது இவ்வுலகிலுள்ள உயர்திணை - அஃறிணை-என்னு மிவைகளழியாதிருக்குமோ? இறப்பும்-பிறப்பும்- தயின்றெழுவதுபோலாம். ஆதலால் இறந்தசகோதரனுக்காகத் துயரப்படுதல் தகுதியல்லவென்று சில திருஷ்டாந்தமெடுத்துக் காட்டினர்கள். அப்பால் திரிதராஷ்டிரன் அழுதலை நிறுத்தித் தருமராஜனைநோக்கிச்சொல்லுகிறுன்: அப்பா தருமநந்தனு! உன்தந்தை உலககாரிய மனைத்தையும் தானே சுமந்து என்னைச்சுகமாக வைத்திருந்ததுபோல், நீயும் உலககாரிய மனைத்தையும் சுமந்து என்னைச் சுகத்தில் வைத்தாய். உன்னுல் என்சகோதரனுகிய பாண்டு இறந்ததுன்பத்தை மறந்திருக்கிறேன். ஆனுல் அப்பாண்டுவுக்கு நற்கதிகிடைக்கும்படி தகுந்த புத்திரர்கள் தான் பிறந்தீர்கள். இறந்துபோன உன்தந்தைக்கு இன்னும் அதிக நலமுண்டாகும்படியான ஒரு எண்ணம் என்கருத்தி லிருக்கின்றது. அதனை வெளியிடுகிறேன். அவ்வாறு நீ நடத்துவது உனதுகடமை. அஃதென்னெனில்-உலகத்திற் பிதுர்க்கருமஞ் செய்தலே நமக்கு முக்கியம். பிதுர்த்[illegible]களிலும் மற்றப் புண்ணியகாலங்களிலும் கங்காநதி தீரத்திலிருக்கிற திவ்யக்ஷேத்திரங்களில் சங்கல்ப தர்ப்பண யாகமுதலியவற்றைச் செய்தால், அதிக நல மென்றும் மிகுதி பலனென்றும் வேத முறையிடுகி[illegible]னைத்தப்ப என் தம்பி பாண்டுவுக்குச் சுபமுண்டாக கங்காநதியருகிலிருக்கின்ற நமதுவாரணுவத நகரத்திற்சென்று உன் பிதுர்க் கருமத்தைச் செய்தால், எனக்குமிகுந்த மகிழ்வாயிருக்கும். அது உன்கருத்துக் கொப்புமையாயிருக்கின்றதோ இல்லையோ சொல்லுக வென்றுன். அதற்குத் தருமராஜன் வணங்கிக்கூறுகிறுர்:

ஓ ஐயா! உலகத்திலிருப்பவர்கள் புண்ணியலோகத்தையடையச்சுருதி, அருமையான தவத்தைச்செய்தேனும் ஒரு புத்திரனைப்பெறுவது. அஃதெனக்குத் தெரிந்திருந்தும், இதுவரையிற் பிதாவுரிகுரிய கடன்களிற் கருத்தைச் செலுத்தாமல் உலக வியாபாரத்திலிருந்து விட்டேன். இன்று தங்களாற் பிதாவுக்குரிய கடனைச் செய்யுங் கருத்துண்டாயிற்று. இனி அரைமாத்திரைப் போதாவது இவணிருக்காமல் தாங்கள் சொற்ற வண்ணம் வாரணுவதமென்னும் பதிக்குச்சென்று, அங்கிருக்கும் திவ்யநதியில் நீர்க்கடன் முதலியவற்றைச்செய்து, என்பிதாவுக்கு நலத்தையுண்டாக்க விடைகொடுக்க வேண்டுமென்று மிகுந்த பக்தியோடு கேட்டார். திரிதராஷ்டிரன்-அப்பாமகனே! இந்த அத்தினபுரத்திருந்து செலுத்திய இளவரசு பட்டத்தை அந்த வாரணுவதத்திற் செலுத்தலாம். அவ்வாரணுவதம் எவ்வகைப்பட்ட தென்றுல்-உன்தந்தைக்கு விருப்பமான இடம். வேதாகம கோஷ்டங்களும் சிவாலயங்களு மிருக்கப்பட்டது. திவ்வியகங்காநதியை வஸ்திரமாகத் தரித்திருக்கின்றது. வேதாகமந்தேர்ந்தபெரியோர்களுக்கெல்லாம் அந்நகரத்தைத் தாயென்றெண்ணத்தக்கது. பிர்ம்மா-விஷ்ணு - உருத்திரனென்னு மூவரும் தன்னை எக்காலத்தும் விட்டு நீங்காதிருக்கச் சிறப்புற் றிருக்கின்றது. இதல்லாமல் மாடமாளிகை கூடகோபுரங்களை யுடைத்தாகி அரசுக்குயோக்கியமாயிருக்கிறது. என்று சொல்லி மந்திரிகளிற் சிறப்புற்றிருக்கிற புரோசனனென்பவனை அழைத்து, ஓபுரோசனு! இந்த அருமையான குணத்தையுடைய தருமராஜனுக்கு மந்திரியாயிருந்து, மற்றச்சகோதரர்களுக்கும் யாதொருகுறைவும் வராமல் இடம்பொருளேவல்க ளனைத்தையும் சேகரித்துக் கொடுத்து, நமது கெடிஸ்தல வதிகாரஞ் செல்லவேண்டிய முறைமைப்படி கிள்ளாக்கு செலுத்துக. அன்றியும் தருமராஜன் உருவும் நீ நிழலும்போல அவனை விட்டுப் பிரியாமலிருக்கக்கடவை. என்று கட்டளையிட்டுத் தருமராஜனுக்கும் பல ஆசிகள்கூறி விடைகொடுத்தான்.

பாண்டவர் வாரணுவதஞ்சேர்தல்.

தருமராஜன் தனது அன்னையாகிய குந்திதேவியையும் சகோதரராகிய - வீமன் - பற்குனன் - நகுல சகாதேவர்களையும் அழைத்துக்கொண்டு, மந்திரியாகிய புரோசனன் பின்றொடர்ந்[illegible]த் துரோணுசாரி-கிருபாசாரி - [illegible]ஸ்வத்தாமன் - வீஷ்மர் - விதுரன் - முதலாகிய பெரியோர்களைப் பணிந்து விடைபெற்று [illegible]மனைவிட்டு வெளிப்பட்டார். இவ்வைவருங்வெளிப்பட்ட மாத்திரத்தில் அந்நகரத்திற் குடிகொண்டிருக்கும் செல்வவான்களும் பெரியோர்களாகிய வீஷ்மர் - வில்லாசிரியர் முதலியவர்களும் இதுதுர்யோதனுல் நேரிட்டதென்று பலவாறுநினைந் துருகினும், விதுரன்-வீஷ்மர் - துரோணுசாரி - கிருபாசாரி இவர்கள் இத்தருமராஜன் இந்நகரத்தைவிட்டு நீங்குகிறதாயிருந்தால் இச்செய்கை திரிதராஷ்டிரன் புத்திரனுகிய துரியோதனன் முதலாகியபேர் இம்மண்ணுலக வாழ்க்கையை விட்டு விண்ணுலக வாழ்க்கையை அடைவதற்கு நெருங்கியகாலம் சமீபித்தலைக் காட்டுகின்றதென்று தங்களுக்குள் தாங்களே கருதித்

தருமராஜனை ஒருவாறு தேற்றிவாழ்த்தி விடைகொடுத்துத் திரும்பினார்கள். மற்றச்சனங்களோவென்றால்— தருமராஜனைப்போலே இனியெந்த அரசனைக் காணப்போகிறோமென்றும், இந்த நகரத்துக்கினி வரப்போகிற துன்டோ வென்றும் பலவாறு நினைத்து; ஐயோ! திருமால்போற்கிருபையும் உருத்திரமூர்த்திபோற் பாராக்கிரமமும் பெற்று விளங்கும் இவர்கள் இவ்விடம் விட்டு நீங்குவது என்ன காரணம்? பாவியாகிய துரியோதனன்செய்த வஞ்சனையோ? அல்லது அஷ்டமச்சனியனோ இவர்களுக்கிந்த இமிசை விளைத்தது. ஆ! ஆ! இஃதென்ன ஆச்சரியம்? பட்டத்துக்குரிய புத்திரன் செல்ல, கூடவந்த பெரிய அரசர்கள் ஒன்றும்பேசாமல், திரிதராஷ்டிரமஹாராஜன் உத்திரவின்படிக்குத் தாங்களும் விடைகொடுத்து நகரத்துக் கேகுகிறார்களே: என்று மிகுந்த ஆறாமைகொண்டு கண்ணையும் கருத்தையும் ஐவர்மீது வைத்துச் சித்திரப் பிரதிமெய்போற் சற்றுமசைவின்றி நின்றுவிட்டார்கள்.

துரியோதனன்தருமராஜனைவணங்கி, ஓஅண்ணா! நான் பாவியரிலும் பாவி. ஏனென்றால் - என் பிதா உங்கள்மீது வைத்திருக்கிற அன்பைப்போல் என்னிடத்தில் வைக்கவில்லை. அஃதெப்படி தெரிகிறதென்றால்-எத்தனை காலம் உலகத்தில் வாழ்ந்தாலும் அதுவெல்லாம் வாழ்வல்ல. திவ்யநதிகளில் ஸ்நானம் செய்கிறதும், திவ்யக்ஷேத்திரங்களில் வாசஞ்செய்கிறதும், சிவபூசைமுதலிய தேவதார்ச்சனை செய்தலுமே மேலானவாழ்வு. அப்பேர்ப்பட்ட வாழ்வினை அடைய உமக்கு உத்திரவு கொடுத்தாரே யன்றி, எனக்கு உத்திரவு கொடுக்கவில்லை. எனக்குங் கட்டளை இட்டால் இப்போதே உங்களுடன்கூட வருவேன். எவ்வாறு உங்களைவிட்டுத் தனித்திருக்கப் போகிறேனென்று கண்கலங்கி உபசரித்தான். அதற்குக் கிஞ்சித்தேனும் கபடில்லாத தருமராஜன்சொல்லுகிறார்: அப்பா துரியோதனா! நீயேன்கிலேசப்படுகிறாய்? தந்தைவாக்கியம் வேதவாக்கியமாதலால், தந்தையின்கட்டளைப்படி என்தந்தைக்கு நலமுண்டாகத் திவ்விய க்ஷேத்திரத்துக்குச் செல்லுகிறேன். நீதந்தைசொற்படி நின்று லோகவிசாரணை செய்துவரவேண்டியது. நானும் போய் நீயும் வந்துவிட்டால் அரசு எவ்வாறுநடக்கும். கண்ணில்லாத வயோதிகத்தந்தை யெப்படி சகிப்பார். ஆதலால் நீ யிங்கேதானே யிருவென்றுகூறி விடைபெற்று நடந்தார். துரியேரதனன் மிகவும் அன்புடையவனைப்போல் வேடங்காட்டிப் புரோசனனென்கிற மந்திரியைத் தனியே அழைத்து, ஓ புரோசனா! நீ நெடுநாளாக இந்தச் சமஸ்தானத்திற் காத்திருந்து இலவுகாத்த கிளிபோற் பயன்பெறாதிருந்தனை. இப்போது இந்தப்பாண்டுமக்களோடு அதிகதனதாயிருந்து நான் கட்டளையிடுகிற பிரகாரம் நடத்துவையாகில் ஐவரென்கிற பெயர் அதமாகிறதுமன்றி, உன்னைப் பற்றியிருக்கிற தரித்திரமு மதமாகும்படிசெய்விக்கிறேன். அப்படி நடக்க உனக் கிஷ்டமுண்டாவென்று கேட்டான். புரோசனன் இனிநமக்கு நல்லகாலமென்றுன்னி, அப்படியேநடத்துகிறேனென்றான். அதுகேட்டதுரியோதனன் மகிழ்ந்து, ஓபுரோசனா! நீஐவர்மீது அதிகபக்ஷ மிருப்பவன்போல் ஏவல்முதலியவற்றைச் செய்து, அவர்கள் நம்பும்படி நடந்துகொண்டு, அரக்கு - பஞ்சு - மெழுக்கு - குங்கிலியம் - அழிஞ்சில்மரம் - எண்ணெய் - இவற்றால் பெரியகோட்டையொன்றியற்றி, அதில் அவர்களை வந்திருக்கும்படி செய்து, நித்திரை செய்யும்போது நெருப்பிட்டுக்கொல்லுவையா? தயிரிய மிருக்கிறதா? எதோசொல் பார்ப்போமென்றான். பேராசைக்காரனுக்குப் புத்திமட்டாதலால், பிறவித் தரித்திரனாகிய புரோசனன் துரியோதனன் கருத்துக் கிசைந்து சொல்லுகிறான்: ஓ மண்டலேஸ்வரா! தாங்கள் எந்தெந்தக் காலத்தில் என்னென்ன கட்டளை இடுவீர்களோ, அக்கட்டளைப்படி நடக்கிறேனென்று விடைபெற்றுத் தருமராஜனோடு வந்து கலந்தான். துரியோதனனும் மற்றுமுள்ள ஜனங்களும் நகரம்வந்து சேர்ந்திருந்தார்கள். விதுரமஹாராஜனானவன் துரியோதனன் புரோசனனைத் தனியே அழைத்துப் பெசினதைக் கண்டு, அடடா!! இப்பாவி என்னமோ கெடுதிசெய்யக்கருதியிருக்கிறானென்று நினைத்துத் தருமராஜனிடத்து வந்து, அப்பா தருமநந்தனா! துரியோதனன் என்னமோ மோசஞ்செய்யக் காத்திருக்கிறான். புரோசனனை நம்பாமற் சாக்கிரதையா யிருங்களென்று சொல்லிப்போனான். தருமராஜன் தம்பிமார் - அன்னை - மந்திரியாகிய புரோசனன் - இவர்களை அழைத்துக்கொண்டு நகரத்தைவிட்டுக் காடுமலைகளையெல்லாங் கடந்து, வாரணாவதமென்னும் நகரத்துக்கருகில் வருகிறார்கள். இவர்கள் வருகிறசேதி அந்நகரத்துக் குடிகள் கேள்விப்பட்டு அதிக மகிழ்வைக்கொண்டு, சங்கீதவாத்தியத்துடன் எதிர்கொண்டுவந்து தருமராஜனைக்கண்டு வணங்கி அழைத்துப் போயினார்கள். புரோசனன் இவ்வைவரும் அந்நகரத்தில் தற்காலத்திலிருக்கும்படியாய்ச் சந்திரவம்சத்தாருடைய பழய அரண்மனையில் எல்லாப் பதார்த்தங்களையும் சேகரித்துவைத்து, இவர்களையும் அழைத்துப்போய் அவ்வரண்மனையி லிருக்கச்செய்தான்.

துரியோதனன் அரக்குமாளிகை கட்டுதல்.

கேளும் ஜெனமேஜெயமகாராஜனே! பாண்டுராஜனிறக்கும்போது தருமராஜனுக்கு ஒன்பதுவருஷம், மற்றத் தம்பிமார்கள் ஒவ்வொரு வருஷம் குறைந்தவர்கள். அத்தினபுரத்திலிருந்து வாரணாவதத்திற்குப் போனபோது, தருமராஜனுக்கு வயது பதின்மூன்

று. இதற்குமேல் நடந்த தென்னெனில் - துரியோ
தனனுனவன் - சகுனி - கர்னன் - துச்சாதனன் -
இவர்களோடு ஆலோசித்து, அரக்குமாளிகை கட்டத்
திர்மானித்து, சொற்கலொகத்தி லிருக்கு மயனென்
னும் தெய்வதச்சனுக்கு ஒப்பாகிக் கனகனென்னும்
பெயர்கொண்டு தன்னுதீனத்தி லிருக்கும் சிற்பசாஸ்
திரியை அழைத்து, அரக்குமாளிகை ஒன்றியற்றும்
படி நல்லவார்த்தைகளா லிசையச்செய்து அவனை
வாரணுவதத்துக் கனுப்பி, அதற்குவேண்டிய சாமா
ன்களை இரகசியமாகச் செலுத்தி வெளிப்படையிற்
பெரிய அரண்மனை கட்டுவதற்காக அனுப்பப் படுவ
தென்று யாவரு நினைக்கும்படியாகக் கல் - மரம் -
சுண்ணமுதலிய சாமான்களை விடுத்து புரோசனுக்கு
மகிழ்வுண்டாக அடிக்கடி அனேக திரவியாபரணங்க
ளைக்கொடுத்து விரைவில்முடிக்கும்படியாக அச்சிற்
பிக்கும் நல்லவார்த்தைசொல்லி யனுப்புவான். புரோ
சனன் துரியோதனன னுப்பவந்த கனகனென்கிற சிற்
பசாஸ்திரியைக்கொண்டு வாரணுவத நகரத்துக்குப்
பக்கத்திலுள்ள விஸ்தாரமான ஒருஇடத்திற் குங்கிலி
யம்-அழிஞ்சில்-எண்ணெய்-பஞ்சு-அரக்கு -மெழுக்கு-
இவற்ருற் கடைக்காலெழுப்பி முன்னம் சுற்றுமதி
லைச் சீர்திருத்திக் கட்டிக்கொண்டு, பின்னர் சொர்க்க
மத்திய பாதாளலோகங்களி லிருக்கிறவர்களெல்லாம்
இந்த மாளிகையைப்போற் கண்டதில்லையென்றுமதிக்
கத்தக்கதாக உட்புறத்திற்சமயற்கட்டு-படுக்கைவீடு-
சபாமண்டபம்- தென்றற்சாலை- போஜனச்சாலை- திரு
மஞ்சனச்சாலை - ஆடரங்கு - வித்வசபை- வேற்றரசர்
சபை - சிங்காரமண்டபம் - உலாவியல்மண்டபம் -
இவை முதலியவற்றைப் புதுக்கிப் பொன்மயமாகவும்
முத்து பவளம் பச்சை முதலிய நவமணிமயமாகவும்
அங்கங்கு விசித்திரவேலை செய்து, மூன்றேமுக்கால்
நாழிகைக்குள் வளைந்தமதில் முதலிய உட்புறமனைத்
தும் வெந்து நீருதும்படி அம்மாளிகைக்கு அக்கினி
மூலையில் சரவத்திவைத்து, நாற்புறமுங் குபீலென்று
பற்ற மருந்துகணிறைத்து, எல்லாவேலையையும் நிறை
வேற்றி இன்னும் கிஞ்சித்து வேலை செய்யவேண்டி
யிருக்கிறபோது கனகனென்னும் அச்சிற்பசாஸ்திரி
ஐவர்கண்மீது விசேஷ அன்புவைத்திருக்கின்றவ ஞ
தலால் அவ்வைவரும் குந்திதேவியும் உயிர்ச்சேதமி
ன்றி தப்பிப் பிழைத்துப்போக வீமன் பள்ளியறைக்
கருகில் ஐந்துகால் மண்டபமொன் றியற்றி, அம்ம
ண்டபத்தின் நடுக்காலை அந்தரமாகவும்பார்ப்பவர்க்கு
நாலுகாலின்மேற் பளுவிருக்கிறதாகவும் அமைத்து,
அக்காலின்கீழ் இடும்பாவனம் வரைக்கும் சுரங்கமுண்
டாக்கி மற்றெல்லா வேலையையும் தீர்த்துவிட்டு அத்
தினபுரத்துக்கு வந்து துரியோதனனுக்கு மாளிகை
கட்டிய சேதியைத் தெரிவித்துத் தன்னரண்மனையை
நோக்கிவருகிருன்.

அப்படி வருகிறபோது அவனை விதுரமஹாரா
ஜன் கண்டழைத்து, அப்பா கனகா! வாரணுவதத்தி
லென்னவேலை செய்கிருய் அதை ஒளியாமல் எனக்
குச் சொல்லுகவென்று கேட்டார். அவரப்படி கேட்
டலும் கனகன் சற்ருலோசித்து, இவர் சத்தியவிர
தர். அன்றியும் ஆஸ்தானபதி. இவர்க்கு நாம்செய்த
வேலையை ஒளித்தோமாகில் துரோகமாகிறது. ஒரு
காலங்களில் வெளிப்பட்டால் தலைபோவதுமல்லாமல்,
குடும்பத்துடன் வேர்களைந்து போடுவார்கள். இதன்
றித் துரியோதனன் தான்செய்வித்தவேலையை வெளி
ப்படுத்தாதிருக்கக் கட்டளையிட் டிருக்கிருன். அர
சன் கட்டளைப்படி நடந்தால் அதனுல் வருப்பாவம்
அவ்வரசனைச் சேருமென்று துணிந்து கெடுதியான
வேலைக்குப் பாத்தியப் பட்டோம். புத்திகெட்டோம்.
மேலும் பாண்டவர்கள் நல்லவர்கள். அவர்கள் பொரு
ட்டில் உண்மையைப் பேசாவிட்டால் நமக்குப் பாவம்
நேரிடும். என்று கருதித்தன்னைக்கொண்டு செய்வித்த
வேலையின் மர்மங்களையெல்லாஞ் சாற்றினுன். அத
னை விதுரன்கேட்டுத் திடுக்கிட்டு மெய்சோர்ந்து ஒன்
றுந் தோன்ருமல் திப்பிரமைகொண்டு கைகால்கள்
அசைவின்றி நின்று சற்றுநேரஞ்சென்று தன்னறிவு
தோன்றி, தெய்வமே! சந்திரவமிசத்தைப் பற்பல
பேர் நகைக்கலாயிற்றே. ஐஐயோ!! பாண்டு மக்கள்
இளவயதிலே பிதாவைப்பறிகொடுத்து இவ்விடத்தில்
வந்து இளவரசுபட்டம் பொறுத்து, பின்பு துரியோ
தனனுடைய துராலோசனையினுல் அதனையுமிழந்து
வாரணுவதஞ் சேர்ந்தும் அங்கும் உயிர்க்குத் தீங்கு
வருமபடி நேரிட்டதே: இதென்ன தீவினை? ஆ! தெய்
வமே! தெய்வமே! என்று கனவருத்தமுற்று கனகன்
காலைப்பிடித்து வேண்டிக் கொள்வதற்குப் பதிலாக
அவனிரண்டு கரங்களையும் பற்றி இறுகத் தழுவி பல
பல உபசாரவார்த்தைகளைச் சொல்லி, அப்பா கனகா!
உலகத்தில் இன்பமாகப் பெற்ருேன் - இடர்தனைத்
தீர்த்தோன் - அன்புடன் அன்னமளித் திரக்ஷித்
தோன் - நூல் கற்பித்தோன் - உபதேசித்தோன் -
இவ்வைவரும் பிதாக்கள். நீ பாண்டவர்களைவருக்கும்
உயிர்ச்சேதம் வராமலும், அரசனுகிய துரியோதனன்
கட்டளைக் கழிவுவராமலும் ஒரு தந்திரஞ் செய்வை
யாகில்; அந்தப் பாண்டவர்களுக்கு நாங்களெல்லாம்
பிதாக்களல்ல. இறந்துபோன பாண்டுமஹாராஜன்
நீயே. இனி யுனக்குச் சொல்லவேண்டிய தென்னை
யென்று மிகுந்த ஆருமையோடு அணைத்து முத்தமி
ட்டான். கனகன் ஜாதியிற் கம்மியனுயிருந்தாலும் பதி
னெட்டுச் சிற்பிகளில் இவனும் ஒருவனுகியும், யாவர்க்
கும் அதிகமான கல்விமானுகியும், பாண்டவர்கள்மீது
அதிக பிரீதியுடையவனுகியும் இருப்பவனுதலால்; மன
ங்கனிந்து ஒருவசனஞ் சொல்லுகிருன்:

(10.) (வீமன்சுரங்கம்புகுதல்.) (REGISTERED-COPY-RIGHT.)

(ஆதிபர்வம்-௧௧௨ வது பக்கம்.)

பாண்டவர் அரக்குமாளிகையிற் குடிபுகுதல்.

ஓ ஸ்வாமி! தாங்கள் அஞ்சவேண்டாம். வஞ்ச
னைக்குக் கொள்கலனாகிய துரியோதனன் கட்டளைப்
படி அரக்குமாளிகை செய்தேன். அப்படிசெய்தாலும்
பாண்டவர்கள் ஐவரும் குந்திதேவியும் உயிர்ச்சேத
மின்றி தப்பிப் பிழைத்துப்போக அம்மாளிகையில்
வீமன் பள்ளியறைக்கருகில் ஐந்துகாலால் ஒரு மண்
டபமியற்றி, அம்மண்டபத்தை நான்குகாலில் நிற்க
வைத்து, நடுக்காலின்கீழ் மனிதர் சஞ்சார மில்லாத
இடும்பாவனம் வரையிற் செல்லும்படியாய் ஒருசுரங்
கம் வைத்திருக்கிறேன். அந்த அரக்குமாளிகை தீப்
படுகிறதினத்தில் வீமனுக்கு இந்த சூக்ஷந் தெரிந்திரு
ந்தால், அவனால் மற்ற ஐவரும் தப்பித்துக் கொள்ளு
வார்கள். இந்தக்கருத்தை வீமசேனனுக்கு நானே
சொல்லிவிடுகிறே னென்றான். இவ்வசனங்களைக் கே
ட்ட மாத்திரத்தில் உலகத்தில் ஒருவன் கல்விமானாகி
யும் நன்றியறியுந் தன்மையை யுடையவனாகியும் மண்
டலேஸ்வரனாகியுமிருந்து ஏதோ ஒருமுகாந்தரத்தால்
தன் பரிவாரங்களை விட்டுத் தனியே காட்டிற்சென்று
வீடாய்ப்பட்டு நாவும் நாபியும் வறண்டு களைதாங்கிச்
சோர்வுற்ற காலத்தில் புல்லரிசிக்கஞ்சி கிடைத்தால்
அதற்கு அவன் எவ்வளவு மகிழ்வடைவானோ அவ்வ
ளவு மகிழ்வை விதுரமகாராஜன் அடைந்து அந்தக்
கனகனுக்கு வேண்டிய வெகுமானங் கொடுத்து பற்
பல உபசாரங்களைச் சொல்லி, அப்பாகனகா! இந்த
விருத்தாந்தம் எங்கும் வெளிப்படாம லிருக்கவேண்டு
மென்று சொல்லித் திட்டஞ்செய்து அனுப்பிவித்
தான். உடனே அக்கனகனும் நல்லது ஐயாவென்று
நமஸ்கரித்துத் தன் வீட்டிற்குப் போனான். இங்கே
புரோசனன் தருமராஜனிடத்துப் பொய்யன்பு காட்டி
மஹா உபகாரிபோல் நடந்து வருகிறான். தரும
ராஜன் இந்தப் புரோசனனைப் பிதாவினால் அனுப்பி
விக்கப்பட்டபடியால் அவனைப் பிதாவைப்போற் பா
வித்து, அவன்கருத்தின்படி தான்நடக்கிறதுமன்றித்
தன் தம்பிமார்களையும் அவ்வாறு நடந்து கொள்ளும்
படி செய்துவருவார். இப்படி யிருக்கிற காலத்தில்
ஒருநாள் புரோசனன் தருமராஜனிடத்துவந்து சொ
ல்லுகிறான்: ஓ மண்டலேஸ்வரா! பெரியவரசனுத்தர
வின்படிக்குத் தங்களுக்கு மஹா விநோதமுள்ள ஒரு
மாளிகை ஏற்படுத்திவைத்தே னாதலால், அதில் நல்
லதினத்திற் பிரவேசிக்க வேண்டு மென்று அபிநயித்
தான். தருமராஜன் தன் சபையிலிருக்கும் வேத வே
தியர்களை நோக்கி, ஓ ஸ்வாமிகளே! கிரகப்பிரவேசத்
துக்கு ஒருதினம் நியமகஞ் செய்யவேண்டு மென்று
நமஸ்கரிக்க, வேதியர்கள் நல்லசுபமுகூர்த்தமொன்று
நியமகஞ்செய்தார்கள். அந்தமுகூர்த்தத்தில் ஐவரும்
குந்திதேவியும் ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து காசி
விஸ்வநாத மூர்த்தியைத் தரிசித்துப் புதியமாளிகை
யைப் புண்ணியாவாசனஞ்செய்து, வேதியர்களுக்கும்
மற்றயாவர்க்கும் வேண்டியவற்றை யுதவி ஐவரும்
குந்திதேவியும் குடிவந்தார்கள். தருமராஜன் அம்மா
ளிகையின் உன்னத விநோதங்களைப் பார்வையிட்டு
அதிகமகிழ்வடைந்து புரோசனனைப் புகழ்ந்துகொண்
டாடி, அன்றுமுதற் பாண்டவர்கள் அம்மாளிகையி
லேயே விருந்து முதலியவும் உண்டிருந்தார்கள்.

இப்பால் பாண்டவர்கள் அம்மாளிகையிற் குடி
வந் திருப்பதைத் துரியோதனனுக்குப் புரோசனன்
தெரிவித்தான். துரியோதனன் கனகனென்கிற சிற்பி
யையும், சகுனி - கர்னன் - இவர்களையும் ஒரு அறை
யி லழைத்துப்போய், ஓ ஆப்தர்களே! ஐவரும் அரக்கு
மாளிகையிற் குடிபுகுந்தார்களாம். இனி அக்கினிமூ
ட்டுதற்குத் தாமிசமென்ன? இப்போது வருகிற கிரு
ஷ்ணபக்ஷம் சதுர்த்தசி இராத்திரி பதினைந்து நாழி
கைக்கு அனலிட்டு விடுவோமென்றான். அவர்களும்
அதற்கிசைந்தார்கள். உடனே துரியோதனன் புரோ
சனனுக்குத் தெரிவித்தான். புரோசனன் அந்தச்
சதுர்த்தசியை எதிர்பார்த் திருந்தான். சிற்பிசாஸ்திரி
களில் அதிக சிறப்புவாய்ந்த அக்கனகனானவன் ஒரு
நாளிரவில் தனதுருவத்தை மறைத்து யாசகர்வேடம்
பூண்டு வாரணாவதத்துக்கு வந்து, வீமனைக் கண்டு
சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து பணிந்தான். அப்
படி வணங்கினவனை வீமன்நோக்கி, அப்பா! நீயார்?
என்னை வணங்கவேண்டிய தென்ன! என்று வினவ
கனகனெழுந்து கைகட்டிச் சொல்லுகிறான். ஓ ஐய
னே! நானிந்த மாளிகையைக் கட்டிய சிற்பி. உங்க
ளுக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள வந்தேன்.
அதாவது—இம்மாளிகை அரக்கு - பஞ்சு - அழிஞ்சில்
மரம் - எண்ணெய் - மெழுக்கு - இவற்றால் முடிந்தி
ருக்கின்றது. இது உங்களைக் கொல்லும்படி துரியோ
தனன் செய்த கபடம். இந்த மாளிகையில் நீங்கள்
நித்திரை செய்யும்போது, அக்கினிமூலையில் வைத்தி
ருக்கும் சரவத்தியில் நெருப்பிடக் கிருஷ்ண பக்ஷம்
சதுர்த்தசி இரவில் (௰௫) நாழிகைக்கு நல்லவேளை
பார்த்திருக்கின்றது: நான் உங்கள்மீது அன்புள்ளவ
னாதலால் உங்கட்கு யாதொரு தீங்குமின்றித் தப்பித்
துக்கொள்ளும் படிக்கும், துரியோதனன் கட்டளைக்
கழிவுவாராமற்படிக்கும், ஒரு தந்திரஞ்செய்து வைத்
தேன். அதனைத் தாங்கள் மனதில்வைத்து, சதுர்த்த
சியினன்றைக்கு மாளிகை நான்குபுறமுந் தீமூட்டிப்
பற்று முன்னமே நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்க
ளென்று கூறித் தான்செய்து வைத்திருக்குந் தந்திர
த்தைச் சொல்லுகிறான்.

ஐயா வீமராஜனே! உமதுபள்ளியறைக்கு அரு
கில் ஐந்துகால் மண்டபங் கட்டியிருக்கிறேன். அதின
டுக்கால் அந்தரமாயிருக்கும். அந்த அந்தரக்காலை மந்
தரகிரிபோன்ற உமது புயத்தாற் பெயர்த்து அந்தக்
கம்பமிருந்த பாறையைப் புரட்டினால். அதில் சுரங்க

வழிதோன்றும். அவ்வழியி லிறங்கிப்போய் இடும்பா
வனஞ் சேரலாம் என்றுரைத்து எனக்கு விடைகொ
டுத்தருளும் விரைவில் விதுரமஹாராஜனுக்கு இச்செ
ய்தியை விளம்பிப் போகவேண்டு மென்று வேண்டி
னன்.வீமன் துரியோதனனெண்ணிய எண்ணத்தைக்
குறித்து வருந்தித் தாங்களாறுபேரும் அழியாமற்
பிழைக்கும்படிக்கு உபாயஞ்சொல்லிய கனகனைத்தழு
விக்கொண்டு புகழ்ந்து மகிழ்ந்து, அப்பா சிற்பி! அன
று பாண்டுராஜன் வயிற்றிற்பிறந்தோம். இன்று உன்
வயிற்றிற் பிறந்தோம். உன்னுளவினாற் சிறந்த எங்க
ட்கு உயிருதவிசெய்தாய். உத்தமனே ! உனக்குநான்
செய்யு முபகார மென்னவிருக்கின்றது? இதோ நான்
பூண்டிருக்கும் பணிகளெல்லாங்கொடுத்தேன். இவை
களை அங்கீகரித்துக் கொள்ளுக. என்று பிரியவசனஞ்
சொல்லி விடைகொடுத்து விட்டு மாளிகையிற் பிர
வேசித்துக் கனகனுரைத்த சூக்ஷியையெல்லாம் இரக
சியமாகப் பார்வையிட்டுத் தமயன் தம்பிமார்களோ
டும் சொல்லாமல் தன்மனதில் வைத்துக்கொண்டு,
புரோசனன் பேரில் லக்ஷியமா யிருந்தான். சதுர்த்த
சியும் வந்தது. அன்றையதினம் புரோசனன் உதயத்
திலெழுந்து ஐவரிடத்துவந்து, மிகுந்த அன்புடைய
வனைப்போல் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து,
வாய்பொத்தி எதிர்நின்று, ஓஸ்வாமி தருமநந்தன ?
ஏதாவது அடியேற்குக் கட்டளையிடவேண்டியிருந்தா
லிடுங்களென்று வினவினன். அதற்குத் தருமராஜன்
காலகதியாற் சொல்லுகிறார்: ஓ புரோசன ! நாமிந்ந
கரத்துக்கு வந்தது முதல் நாட்டைப் பார்த்தோமே
யன்றிக் காட்டைப் பார்க்கவில்லை. ஆதலால் காட்டிற்
சென்று நாம்வேட்டையாடவேண்டுமென்றுகூறினர்.
புரோசனன் அக்கணமே வேட்டைக்குத் தகுந்த மு
யற்சிசெய்தான். ஐவரும் காட்டிற்சென்று பெரிய
மிருகங்களெல்லாம் அதமாக வேட்டையாடி நகரத்து
க்குவந்து அரக்குமாளிகைசேர்ந்து, ஸ்நானம்பண்ணி
போசனஞ்செய்தபின்பு தாங்கள் புரோசனனை அழை
த்து, அப்பா புரோசன ! நாங்கள் வேட்டையாடித்
தேகம் அலண்டிருக்கிறோம். நீ இங்கிருந்து காவலைச்
செய்திரு நாங்கள் நித்திரைபண்ணச் செல்கிறோம்.
என்று ஐவரும் படுக்கையறையிற் சென்று மஞ்சத்
திற் சயனித்துக்கொண்டு நித்திரைபோயினர்கள்.

அரக்குமாளிகையைத் தீயிடுதல்.

இவர்களில் வீமன்மாத்திரம் கனக னென்கிற
சிற்பி கூறியவற்றை மனதில் மதித்து, இன்றையதி
னம் இந்தமாளிகை தீப்படுமாதலால் நாம்சாக்கிரதை
யாக யிருக்கவேண்டுமென்று நினைத்துக் கண்டுயிலா
திருந்தான். அக்கினி இடுகிறதற்குக் குறித்த முகூர்
த்தம் நெருங்கிற்று. அந்தவேளையில் வீமன் எழுந்து
புரோசனனிருக்கிற விடத்தில்வந்து பார்க்கும்போது
புரோசனனுக்கு இப்பூமியின் சம்பந்தம் நீங்கிய படி
யால் இருந்தவிடத்திலே தானே துயின்றுவிட்டான்.
அதனை வீமன்பார்த்து, இந்தப்பாவி உள்ளனுங்கள்
ளனுமா யிருந்து நம்மைக்கொல்ல நினைத்தான். தெ
ய்வமிவனைப் பெருந்தூக்கத்திற் சேர்த்தது. இவனிப்
படியே தூங்கட்டும். நாமே சரவத்திக்கு அனலிட்டு
விடுவோம். அதன்மேல் தூங்குகிறவன் தூங்கிப்போ
வான் எனக்கருதிச் சமையற்கட்டினுட்சென்று, ஒரு
கொள்ளிக் கட்டையை எடுத்துக்கொண்டு அக்கினி
மூலையில் வைத்திருக்கும் சரவத்திக்கு நெருப்பிட்டு,
ஓடோடியும் வந்து தருமராஜனை ஒருபுஜத்திலும்-குந்
திதேவியை முதுகிலும் -மற்றொருபுஜத்திற் பற்குன
னையும் - இரண்டு தம்பியரை இரண்டுகையிலும் ஏந்
திக்கொண்டு, ஐந்துகால் மண்டபத்தி னடுக்காலை
யுதைத்துத்தள்ளி அதனடியி லிருக்கும் பாறையை
எடுத்து உட்புகுந்து முன்போல் அப்பாறையை மூடி
விட்டு, அதிவேகமாக அச்சுரங்கத்திற்சென்று இடும்
பாவனத்தில்வந்து, அங்குமூடியிருக்கும் பாறையைத்
தலையால் முட்டிக்கிளப்பி, அஞ்சுதலைநாகம் அஞ்சுதல்
நீங்கி ஆறுதலையுடன் வெளிப்பட்டா லெப்படியோ
அவ்வாறு ஐவரையுந்தாங்கி வெளியில்வந்து, அவ்வி
டத்தில் ஓர் சமமானபூமியில் தழைகளைப்பரப்பி ஐவ
ரையு நித்திரைபங்கமில்லாமற்படுக்கவைத்து, அங்கு
மிருகஜெந்துக்கள் அதிகமாகையால் தான் நித்திரை
செய்யாமற் காவலிருந்தான். குந்திதேவி தருமராஜன்
பற்குனன் - நகுலன் - சகாதேவன் - இவர்களுக்கு
அதிக நித்திரை மயக்கத்தால் வீமனெடுத்து வந்தது
கனவுபோலிருந்தது.

இங்கே சரவத்தியில் அனலிட்ட மாத்திரத்தில்
குபீரென்று தணல் அதிகரித்தெழும்பிச் சுற்றுமதிலை
வளைந்து உள்ளிருந்த மாளிகையை முற்றும் நீறுக்கி
விட்டதுமன்றி, மறந்து தூங்கிவிட்ட புரோசனனை
யும்-துரியோதனன் கட்டளைப்படி விஷங்கலந்த தே
னைக்கொடுக்க அம்மாளிகையில்வந்திருந்த ஐந்துவே
டரையும் - அவ்வேடர்களின் தாயையும் சாம்பராக்கி
விட்டது. வாரணாவதபுரியி லிருக்கிறவர்கள் யாவரு
மெழுந்து அரக்குமாளிகை எரிவதைக்கண்டு மனநடு
ங்கி, ஐஐயோ !! பிர்ம்மா - விஷ்ணு-உருத்திரன்-முத
லானவர்கள் மதிக்கத் தகுந்த சிறப்பினைவகித்த சந்
திரவமிச சிகாமணிகளான ஐவருந் தாயும் வெந்து நீ
றுகி விட்டார்களே: இனி நாமென்ன செய்யப்போகி
றோம்? ஹரி ஹரி !! தெய்வமே ! தெய்வமே ! என்
றலறி வயிற்றி லறைந்துகொண்டார்கள். சிலர் தரை
யில்விழுந்து புரண்டு புரண்டு அழுதார்கள். சிலர் பிர
மைகொண்டு நின்றூர்கள். இவ்வாறு யாவரும் வருத்
தமடைந்து, உதயமானவுடன் அத்தின புரத்துக்கு
இச்சேதியைத் தெரிவிக்கத்தூதரை அனுப்பினர்கள்.
அந்தத்தூதர் கடுகிவந்து, வீஷ்மர் - துரோணர் -கிரு
பர் - அஸ்வத்தாமா - கர்னன் - சகுனி - விதுரன் -
மந்திரிகள் - பட்டவர்த்தனர் - மகுட வர்த்தனர் - மு

தலானவர்கள் புடைசூழக் கொலுவிருக்கும் துரியோதனன் காலில்விழுந்து ஓவென்றலறிச் சொல்லுகிறுர்கள். ஓ மண்டலேஸ்வரா ! வாரணுவதத்தில் வந்து இளவரசுபட்டத்தைச் செலுத்திவந்த ஐவருந் தாயும் நூதனமாக இயற்றிய மாளிகையில் நித்திரை செய்திருக்கிறபோது அம்மாளிகை தீப்பட்டுக் கரிந்து போயிற்றென்றுர்கள். அச்சபையிலிருக்கிற யாவர்களுமிவ்வசனத்தைக் கேட்டமாத்திரத்திற் சாவுக்குச் சரியான மூர்ச்சை யடைந்து, சற்றுநேரம் சென்றவுடன் மூர்ச்சைதெளிந்து ஒவ்வொருவராக எழுந்து ஏங்கி விழுந்து மனநடுங்கிச் சரீரந்துடித்து வாய்குழறி நாவறண்டு ஓவென்றழத் தொடங்கினுர்கள். இவர்களோடு துரியோதனனும் சகுனியும் கர்னனும் உள்ளேமகிழ்வுற் றிருந்தாலும், உலகத்துக்கு மெய்படப் புரண்டழுவார்களோடு தாங்களும் எதிர்சென்று நின்றுமருண்டழத் தொடங்கினுர்கள். இந்தச்சேதி திரிதராஷ்டிரனும் அந்தப்புரத்தி லிருப்பவர்களும் கேள்வியுற்று ஓவென்றலறத் தலைப்பட்டார்கள். அத்தினபுரத்து ஆஸ்தானத்திலெழுந்த அழுகையொலியானது கடலொலிபோ லிருந்தது.

இப்படி யாவரும் சிலநேர மழுதுபுலம்பிப் பின்பு ஒருவாறுய் மனந்தேற, துரோணர் - கிருபர் - இவர்கள் ஆ ! ஆ ! இதென்ன ஆச்சரியம் ? வீமன் வாயுபகவானுடைய புத்திரனுயிற்றே: அவனிருக்கும்போது அவ்வாயுவுக்கு நண்பனுகிய அக்கினிபகவான் தன்கிரணத்தைத் தாக்குவானு? ஐயோ! இவ்வுலகிலுள்ள சுத்தவீரர்களிற்சிறந்த பராக்கிரமனுகியும் அதிகயுக்தியையுடையவனுகியுமிருக்கிற பற்குனன் மெய்மறந்தானு? வில்லில் தேவாஸ்திரங்களி லொன்றுகிய வருணுஸ்திரமிருக்கிறதே: அதனைத் தொடுத்துவிட்டால் அரைமாத்திரையில் அக்கினியை அவித்துவிடுமே: அல்லது வில்லெடுக்க நேரமில்லாவிட்டாலும் ஒரு துரும்பையெடுத்து வருணேஸ்ர மந்திரத்தை யுச்சரித்துவிடலாகாதா? என்னவித்தைகற்றுலும் காலம் நெருங்கினுல் ஒன்றுந்தோன்றுமா் ... ஆன்றோர்க ளுரைக்கிருக்கின்றது ஐவரிடத்துத் திருஷ்டாந்த மாயிற்றேயென்று பலவாறு நினைந் துருகினுர்கள். வீஷ்மர் பாவியாகிய துரியோதனன்செய்தசூதினுல் பஞ்சகர்த்தாவைப் போல் விளங்கும் பாண்டவரைப் பறிகொடுத்தோம். இனி வருத்தப் பட்டதினுற் பயனில்லையென்று திடசித்தத்துடன்தேறினுர். இவர்க ளொப்பந்தம் விதுரராஜனும் தேம்பித்தேம்பி விசனப்பட்டுக் கனகனென்கிற சிற்பிசொல்லிய வாக்குதத்தத்தை நினைத்துத் தைரியங்கொண்டிருந்தான். திரிதராஷ்டிரன் முதலானவர்கள் (ஆடு நனைகிறதற்குக் கோணுயழுவது போல்) அழுதார்கள்.

பின்பு யாவருமொன்றுகக்கூடிவாரணுவதம்வந்து அரக்குமாளிகையைச் சோதித்துப் பார்க்கும்போது, ஐந்துவேடரெலும்பும்அவ்வேடர்களின்தாயெலும்பும் தோன்றிற்று. அதனைப்பார்த்து யாவரும் கனவருத்தமடைந்தார்கள். விதுரன் அவ்வெலும்டைக் கண்ணுற்று முன்கொண்ட தைரியத்தை யிழந்து, இது ஐவருடைய எலும்பென்று தீர்மானித்துச் சாவுக்குச்சரியான மூர்ச்சையடைந்து வீழ்ந்து மீட்டுந் தெளிந்தெழுந்து, ஐயோ ! மக்களே ! ஐயோ ! மக்களே! என்று ஓவென்றலறிமதிமருண்டு சோபமென்கிறவாயுமோதலிற்பட்டுப் பெருமூச்செறிந்து, சரீரமுழுவதுங்காந்தி விழிகளில் நீர்ப்பசுமையற்றுப் பிராணனிலைபெறும லலைந்து உதிரம்பெருகவெயர்த்து நடுநடுங்கிப் பதைபதைத்து நிலத்தில் வீழ்ந்து புரண்டு, ஓ மதக்களிற்றனை யொத்த மைந்தர்களே! எதிர்த்துவந்த சத்துருக்களுக்கு யமனைப்போன்றவர்களே! மதித்து வந்தோர்களை மகா விஷ்ணுவைப்போற்காக்குந் தீரர்களே! மகமேரு கிரியையொத்துப் பிரகாசிக்குங் கீர்த்திப் பிரதாபர்களே ! சத்தியமே நித்தியமாகவுடைய உங்கட்கும் இத்தீங்குநேர்ந்ததல்லவா? இந்தச் சந்திரகுலத்தை ஆலமரத்தின் கீழ் விழுதுபோல் அந்தியத்தில் நீங்கள்தான் ஆதரிப்பீர்களென் றெண்ணியிருந்தேன்: அந்த எண்ணமெல்லாந் தற்காலத்தில் ஆற்றிற்கலக்கவிட்ட ஆவின்பாலுக் கொப்பாய் விட்டதே: சர்வலோக ரக்ஷகனுகிய அரிவாசுதேவன் நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்களைப்பக்கத்துணையாயிருந்து பாதுகாப்பாரென் றெண்ணியிருந்தேனே: அவருக்கும் உங்கள்மேற் கிஞ்சித்துங் கிருபையில்லாமற் போய்விட்டதா ? முன்னம் நீங்கள் தந்தைவார்த்தையைத் தருமவார்த்தையென் றெண்ணி வாரணுவதத்திற்குச் செல்லும்போது எங்களோடு பிரிவாற்றுமையாற் பரிதாபிப்பவன்போல் வழிவிட வந்த வஞ்சகப்பாவியாகிய துரியன் புரோசனனைத் தனியேயழைத்து இரகசியம் பேசியனுப்பியபோதே எனக்குச் சந்தேகமுண்டாகி, நானு முங்கட்கு இரகசியமாய்ப் புரோசனனை நம்பவேண்டாம் சாக்கிரதையாயிருங்களென்று எச்சரிக்கைசெய்து வந்தேனே; அதனை மறந்தீர்களோ ? அப்பால் இவ்வாரணுவதத்தில் நடக்கிற வஞ்சகத்... யெல்லாங் கனகனென்னுஞ் சிற்பியாற் கேட்டறிந்தபோது ... எனக்குண்டான மனவருத்தமாற அவன் சொல்லிய வார்த்தை... ஒருவன் தன்னுயிர்போன்ற பொருளைவைத்துக்காணுமல் துக்கித்து மீட்டுமப் பொருளைக்கண்டால் எவ்வித பூரிப்பையடைவானே, ஒருவன் தன் தேகத்தைவிட்டு நீங்கிப்போன உயிரானது மீளவுமத் தேகத்திற்றுனே வந்து பிரவேசித்தால் எவ்வளவு மகிழ்ச்சியை யடைவானே, ஒருவன் மானிடனுய்ப் பிறந்தும் மோக்ஷம் பெறவேண்டிய முயர்ச்சி யில்லாமலிருந்து இறந்தவுடன் அம்மோக்ஷம் தற்செயலாய்க்கிடைக்குமாகில்அப்போது அவன் எவ்வகைத்தான பிர்ம்மானந்தத்தை யடைவானே, அவ்வகைத்தான பூரிப்பும்-மகிழ்ச்சியும் பிர்ம்மானந்தமு முண்டாக்கத் தக்கதா யிருந்ததே: அஃதிப்போது அழலிற்பட்ட பஞ்சாய்விட்டதென்ன

காரணமோ? ஐயா தருமநந்தனா! சத்தியமென்பதெங்கெங்குள்ளதோ அவைகளெல்லாம் உன்னுடைய அகண்ட சத்தியத்தின் அம்சமென்று சொல்லும்படியாக உருக்கொண்டுவந்த உனக்கும் இவ்வித ஆபத்து நேர்ந்ததா? அப்பாவீமசேனா! பிரசண்டமாருதத்திற்கொப்பான வேகத்தையும், ஆலகாலத்திற்கொப்பான கோபத்தையும், வடவைக்கனலுக் கொப்பான வீரத்தையும், பெரும்புறக்கடலுக்கொப்பான தயையையும், சர்வசங்கார உருத்திரமூர்த்திக்கொப்பானதிடதைரிய பராக்கிரமத்தையும் எங்கிருத்திப்போயினையோ? தம்பீ அர்ச்சுனா! வில்லாசிரியராகிய துரோணாசாரிக்கு முதலையால் நேரிட்ட ஆபத்தை நீக்கி அவர்பொன்போன்றவாயினாற் கஜேந்திரவரதா வென்று துதிக்கும்படியான மேன்மைபெற்றதல்லாமல், அவர்பாஞ்சாலனிடத்திற் பேசிவந்த சபதத்தைநிறைவேற்ற எத்தனை பேர்சென்று எதிர்த்தும் ஆகாமற் பின்புதனியே சென்று வென்று அவனைத் தேர்க்காலிற்கட்டிக்கொண்டு வந்து ஆசாரியரெதிரில் விட்டு அவர் சபதத்தையும் நிறைவேற்றினாயன்றோ? அது காலையில் அப்பாஞ்சாலன் அவ் வாசாரியருக்கு மறுசபதங்கூறித் தன்னை வெற்றிகொண்ட உன்தோளுக்கியைய ஒருபுத்திரியைப்பெற்றுத் தரக்கடவேனென்று உறுதி செய்து கொண்டுபோய்ப் புத்திரகாமேஷ்டி யாகத்தால் திரிலோகமு மெச்சத்தக்க புத்திரியைப்பெற்று வைத்திருக்கின்றானே! அவனெண்ணம் மண்ணாயதே: மகனே நகுலா! குழந்தாய் சகாதேவா! முற்றத்துறந்தமுனிவர்களும் உங்கள் முகாரவிந்தத்தைநோக்கும்போது இப்படிப்பட்ட புத்திரபாக்கியமே முத்திக்குவித்தென்று இச்சை கொள்ளுவார்களே: அப்படிப்பட்ட உருவும் உணர்வும் - உண்மையும்-உபகாரமுமாகிய எல்லாநன்மைகளும்வாய்ந்த உங்களையும் அக்கினிதேவன்சிறிதுமிரக்கமின்றித் தகித்துவிட்டானல்லவா? ஆனதினாற் றான் அவன்யாவராலுஞ் (சேர்ந்தார்க்கொல்லி)என்று அழைக்கப்படுகிறான். ஆ! ஆ! மைந்தர்களே! நீங்களைவரும் எனக்கெய்ப்பில் வைப்பானவர்களென்று எண்ணியிருந்தேனே: அவ்வெண்ணமும் இன்று உங்களைத்தீய்த்த அனலிற் றீய்ந்ததுபோ லாயதே; ஐயோ! அரண்மனையில் வெவ்வேறுதனித்து நித்திரைசெய்யு நீங்களைவரும் தாயும் ஓரேவிடத்தில் வந்து எரிந்து என்பாய்ப்போ யிருப்பதைப்பார்த்தால், அனற்பட்டவுடன் வெளியில் வரலாமென்று ஓடி வந்தீர்களோ? அப்படி ஓடிவந்தும் உங்கள் தலைவிதி வசத்தால் வாசற்படியி லகப்பட்டு மடிந்தீர்களோ? அந்தோ! தெய்வமே! தெய்வமே! என்று பலவாறு தனக்குள் தானே அழுதுபுலம்பினான். துரியோதனனும் அவனைச்சேர்ந்த மற்ற மூன்றுதுராலோசனைக் காரரும் நாம் கருதியிருந்தவேலை இன்றுமுடிந்தது. இனி நமக்குச் சல்லியமில்லையென்று உள்ளங்களித்து வெளிக்குக்காட்டாம லழுதார்கள். இப்பால் ஐவருக்கும் ஐவரையீன்ற மாதாவுக்கும் நீர்க்கடன் முதலியவற்றைச் செய்துவிட்டு, யாவரும் அத்தினபுரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். துரியோதனன் முன்கொண்டிருந்த ஏக்கத்தைநீக்கிப் பராக்கிரமத்துடன் ஆக்கத்தைப் பெற்றோமென்று மனவூக்கத்தைக்கொண்டு அரசு செலுத்திவந்தான். ஓ ஜெனமேஜெய மகாராஜனே! துரியோதனன் தனக்கு இனிமேல்நேரிடும் பேரிடிக்கொப்பாகிய பெருந்துன்பங்கள் பலவாய்வருகிறதை யுணராமல் (கழுத்துமேல் வெட்டு விழுவதை யறியாமல் தனக்குக் கொடுக்கிற தூபதீபத்தையும் தழையையுங்கண்டு மகிழும் பலியாட்டைப்போல்) மகிழ்வடைந்து இனிது வாழ்ந்திருந்தான். இனி அங்கே இடும்பாவனத்தி லிருந்த பாண்டுமக்கள் கதையைச் சொல்லுகிறேன் கேளுமென்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

வாரணாவதச்சருக்கம் முற்றிற்று.

வேத்திரகீயச் சருக்கம்.

கண்ணன்துதி.

சீதநாண்மலர்க் கோயின்மேவுசெங் திருவினாயகன் றேவநாயகன்
வேதநாயகன் பூதநாயகன் விரதநாயகன் விபுதநாயகன்
போதகாதிபன் முதலைவாயிடைப் பொறைதளர்ந்துமூன் பொதுவிலேநினைங்
தாதிமூலமே யென்னமுன்வரு மாதிநாயக னடிவணங்குவாம்.

கேளும் ஜெனமேஜெய மஹாராஜனே! வீமன் தன்தமயன்தம்பிமார் அன்னை இவ்வைவரும்நித்திரை செய்யத் தான் காவலா யிருக்கும்போது அவ்வனம் இடும்பனென்கிற அரக்கனும் அவன் தங்கை இடும்பியும் வாழுமிடமாதலால், இடும்பன் இவர்கள் வந்திருக்கிறதைக்காற்றுவாடையால் உணர்ந்து நமதுபசிக்கு இரையகப்பட்டாற்போ லிருக்கின்றதென்று திடுக்கென்றெழுந்து வெளிப்பட்டான். இடும்பி அதிவேகமாக வெளிப்பட்ட தமயனை வணங்கி, எங்குசெல்லுகிறாய் அண்ணாவென்று வினவினாள். அதற்கவன் சொல்லுகிறான்: ஓ தங்காய்! நமக்குநெடுநாளாக நரமாம்சம் அகப்படாம லிருந்தது. இன்றையதினம் நரஜீவன் நமது

(REGISTERED-COPY-RIGHT.)

(ஆதிபர்வம்-ககள-வது-பக்கம்.)

வனத்தில் வந்திருக்கிறதாய்க் காற்றுவாடை காட்டுகிறதால், நான் அவ்விடத்துக்குப் போகிறேனென்றான். இடும்பி தமயனை வணங்கி, ஓ அண்ணா! நானு நரமாமிசம் புசித்து நெடுநாளாயிற்று. எனக்கு விடை கொடுத்தால் நானே சென்று வந்தநரரை என்பசியாறத்தின்று, தங்களுக்குங் கொண்டுவருகிறேனென்று புகன்றாள். இடும்பன் அவள்கருத்துக் கிசைந்து, நல்லது அப்படியே நீபோய் புசித்து எனக்குங் கொண்டுவாவென்றுசொல்லி அவன்நின்றுவிட்டான். இடும்பி சாதியில் அரக்கியாயிருந்தாலும் வடிவில் மஹாலட்சுமியையொத்து விளங்குவாள். அதனாற் கமலக்கன்னியென்றும் பெயருடையவள். அவ்விடும்பிவிரைவாக நடந்து வந்து வீமனைப் பார்த்தாள். அவனது தேககாத்திரத்தையும் அழகையும் வலியுடைமையையு மதித்து, இவர் நரனாயிருந்தபோதிலும் திணிவுடைமைமுதலியவற்றால் நமதினமாயிருக்கிறார். மேலும் அழகிலுயர்ந்தவர். இப்படிப் பட்டவரை நாம் கணவனாகக் கொள்ளவேண்டுமென்று கருதி, கொல்லவும்-அடிக்கவும்-பிச்சவும்-பிடுங்கவும்-மெல்லவும்-விழுங்கவும்வந்த கருத்தைவிட்டு, நாணம்-மடம்-அச்சம்-பயிர்ப்பு-என்னும் நான்கையு நீங்கி, அடங்கியொடுங்கி அருகில் வந்துநின்று, ஓ நரேந்திரா! நீர்யார்? உமதுபெயரென்ன? உமது இருப்பிடம் எது? இவ்விடம் வந்த காரணமென்னவென்று வினவினாள்.

இடும்பாசுரன்வதை.

வீமன் இடும்பியைநோக்கி, அடி பெண்ணே! நீ யார்? உன்பெயரென்ன? இந்த நள்ளிருளிலிங்குவந்த காரண மென்ன வென்றுகேட்க இடும்பி-அடடா!! இவர் மஹாபலவான். நம்மைப்பார்த்த நராளெல்லாம் விடவிடத்துத் துடிதுடித்துப் பதைபதைத்து நடுநடுங்கி உயிரொடுங்குவார்கள். நாம் அவர்களை வாழைப்பழம்போல் விழுங்கிப் போடுவோம். அப்படியிருக்க- இவர் நாம்கேட்ட கேள்விக்கு உத்தரவுகொடுக்காமல் நம்மை எதிருத்தரங் கேட்கிறார். நமக்குக் காரியமுடிகிறதே பெரிது. வீரியத்தைக் காட்டுவதற்கு வெளிப்பட்டால், நமது கருத்திற்கொண்டகோரிக்கைநிறைவேறாது. ஆதலால் நாமே விடைகொடுப்போமென்று நிதானித்து மதித்து வீமனைநோக்கிச் சொல்லுகிறாள்: ஓ திடகாத்திர வீர சவுந்தர்ய நரேந்திரா! இவ்வனம் இராவணேஸ்வரன் வல்லமைக் கொப்பாகிய இடும்பாசுரனுக்கு நிவாசஸ்தலம். நான் அவன் தங்கை. என் பெயரும் இடும்பிதான். நீர் இங்கேவந்ததைக் காற்றுவாடையி லுணர்ந்த என் தமயனாகிய இடும்பாசுரன், உம்மைப் புசிக்க எழுந்து அதிவேகமாக வந்தான். அவனை நிற்கவைத்து நானும்மைத் தின்னவந்தேன். வந்தவிடத்தில் உமது வடிவத்தைப் பார்த்தவுடன் அதிக மயலாகி நின்றேன். இப்போது என்னைக்கூடி மனங்களிப்பெய்தச்செய்தால், என்தமயனாலும் இன்னும் யாவராலும் உமக்குக் கெடுதி வராமற் காப்பதுமன்றி, சொற்க மத்திய பாதாளலோக விநோதங்களைப் பார்க்க விருப்பங் கொண்டாலும், அவ்விடங்களிலுள்ள பொருள்களின்மேல் ஆசை யிருந்தாலும், அரைநொடியிற் கொண்டுபோய் விடுப்பேன். அவ்வஸ்துக்களையுங் கொண்டுவந்துகொடுப்பேன். ஆதலால் என்மீது அன்புவைத்து என்னையாண்டருளுமென்று இனிய வசனங்களால் வேண்டினாள்.

வீமன் அவளைப் பார்த்துச் சிரித்து, அடிபெண்ணே! உன் வல்லமையை நீயேதான் சொல்ல வேண்டும். மற்றொருவர் யார் புகழப்போகிறார்கள். அஃதிருக்கட்டும். உன் தமயன் இராவணன் வல்லமைக்கொப்பானவனென்றும், என்னை விவாகம் செய்துகொள்ளென்றுங் கூறினாய். இது நன்றாயிருக்கின்றது: இராவணனோ ஒருமானிடனாலிறந்தான். உன்தமயன் அவனுக் கொப்பானவனென்றால், அதிலென்ன பெருமை? எவராலும் ஒருவன் இறக்காததல்லவோ பெருமை. இல்லை இராவணனுக்கொப்பானவனே எனில், யாராவதொருத்தர் கொன்று காலைவாரி யிழுத்துப் போடுவார்கள். அவனைக் குறித்துச் சிறப்பாகச் சொல்லவேண்டுவதில்லை. என்னைக்கூடென்று யோசியாமல் எதிர்நின்று புகன்றனையே: நான் மானிடன். நீ அரக்கி. உனக்கும் எனக்கும் கணப்பொருத்தம் பொருந்தாது ஆதலால் இக்கணம் இந்தவிடத்தைவிட்டுப்போய்விடு. அப்படிக்கல்லவென்றால் உன்சமர்த்தைக்காட்டு. உன்னால் முடியா விட்டால் உன்தமயனை வரச்சொல்லென்று கடுகடுத்துக்கூறினான். இடும்பி வீமன்கொடுத்த உத்தரவைக் கேட்டு, அதிக அன்பைவைத் திருக்கிறவளாதலால் தன் வன்மையை விட்டு மனந்தளர்ந்து, இந்த நரேந்திரன் நமது கருத்துக் கெவ்வண்ண மிசையப் போகிறார் என்று நினைத்து நாலுதிசையையு நோக்கினாள். அப்போதொருதிசையில் தருமன்முதல் ஐவர் படுத்து நித்திரைசெய்வதையறிந்து, ஓ!ஓ! இவரொருவரொன் றிருந்தோம். அதோ ஐந்துபேர் படுத்திருக்கிறார்கள். இந்த மஹாபுருஷர் பலவானாதலால் இவரைக்காவல்வைத்து நித்திரைசெய்கிறார்கள். அவர்களைக் கொண்டாவது நமது எண்ணத்தை முடித்துக் கொள்ள வேண்டும். என்று கருதி யிருக்கிறபோது இடும்பன் வெகுநேரமாய்த் தங்கை வாராதிருப்பதைக் கண்டு, அடடா!! நமது தங்கை நரமாமிசம் புசிக்கப் போனவள் ஏன் இன்னும் வரவில்லையென்று அதிவேகமாக ஓடிவந்தான். அக்கால் இடும்பி நாணமுற்று ஒதுங்கி இருக்கிறதையும், வீமன் மதங்கொண்ட யானையைப்போல் இறுமாப்புட னிருப்பதையுங் கண்டு, இந்தமானிடன் நமது தங்கையைமயக்கிக் கைவசப்படுத்த எண்ணியிருக்கிறான் என்று நினைத்துச் சினங்கொண்டு வீமனிடத்துவந்து, அடா நரனே! நீ என்ன? உன்வல்லமை என்ன? என் தங்கையைக் கைவசப்படுத்திக்கொள்ளவா பார்க்கிறாய்? சபாசு! நீ எங்களுக்

குப் பலியாகிறது போய் கலியாணகாரியமா நாடியிருக்கிறாய்? உனக்கு இக்கருத்துவந்தது என்னகாரணம்? உன்விதி கிழிந்தது. இதோ உன்னை யமபுரத்துக்கு அனுப்பி உன்தசைகளைப்புசிக்கிறேம் பாரடாவென்று தன் பலங்கொண்டமட்டும் ஓங்கி யடிக்கவந்தான்.

வீமன் புன்னகைகொண்டு, அடடா !! நாம் சும்மாயிருக்க நம்மேல் வீண்வழக்கிட்டுப் போருக்கெழுந்தான். இவனை விடக்கூடாது. என்றெழுந்து தன் பலங்கொண்டமட்டும் இரண்டுகரத்தாலுங் கன்னத்தில்குத்தினான். அக்குத்தினாலிடும்பனுக்கு வாயிலுள்ள பல்லெல்லாம் பலபலவென்று விழுந்து, தொண்டை நெரிந்து, மண்டைகலங்கிற்று. இடும்பாசுரன் சற்று நிதானித்து, அப்பா ! நாம் எப்போதும் இப்போது பட்ட தெப்பல் பட்டதில்லை. இக்காட்டி லிருந்து அநேக நரசன்மங்களைப் புசித்தோம். நம்மைக்கண்ட நரரெல்லாம் கடகடத்து விலவிலத்து உயிர்சோர்வார்கள். இந்நரன் நமது உக்கிரத்தைக்கண்டும் அதராமற் பெதராமற் சஞ்சலப்படாமல் தைரியத்துடன் எதிர் நின்றதுமன்றி, நம்மையும் பல்லுதிரப் புடைத்தான். இனி யிவனுக்குத் திரிமூர்த்திகள் துணைவந்தபோதிலும் இவனைக்கொல்லாமல்விடலாகாது. என்று மனதில் நினைத்து வடவானலத்தைத் தனது நேத்திரத்திற்காட்டிப் பர்வதம் கால்கொண்டுநடந்துவருவதுபோல் வீமனுக்கு எதிர்வந்து நின்று, தன்கையால் ஓரடி அறைந்தான். வீமன் அவ்வடியைத்தட்டி உடனே யவனைப்பிடித்து ஆகாயத்தில் எறிந்தான். இப்படி ஒருவரை யொருவர் வாரியெறிகிறதும் மோதுகிறதுமாக இருக்கும்போது நித்திரைசெய்கிற ஐவரும் விழித்துக்கொண்டு பார்த்தார்கள். நகரத்திற்படுத்திருந்த கியாபகமே அதிகமாகக் கொண்டிருக்கிறவ ராதலால் நாலுதிசையையும் பார்த்துத் திடுக்கிட்டு மனநடுங்கி, ஆ ! ஆ! கொடியவனத்தில் வரவேண்டிய காரியமென்ன? வந்தவிடத்து வீமனுடன் யமனைப்போற் காத்திரமான யாரோ ஒருவீரன் யுத்தஞ்செய்கிறான். இதென்ன ஆச்சரியம். என்று நொந்து பலவாறுநினைத்து வருத்தப்பட் டிருக்கையில், இங்கே வீமனும் இடும்பனும் ஒருவரை யொருவர் வெற்றிபெறவேண்டுமென்கிற ஆசையினால் குத்தியும், தட்டியும், உதைத்தும், மிதித்தும், தூக்கியும், தாக்கியும், அடித்தும், கடித்தும், இந்தவகையாக ஒரு முகூர்த்தம் வரையிற் போராடியு முடிவில் வீமன் அதிக உக்கிரங்கொண்டு இந்த ராக்ஷதப் பயலோடு இன்னேரவரையில் யுத்தஞ்செய்கிறதா வென்று நினைத்துக் கோபத்தீஜொலிக்க எழும்பி, இடும்பனைப் பிடித்துத் தூக்கிப் பூமியில் மோதி, காலைப்பற்றி இருபிளவாகக் கிழித்தெறிந்து, மஹாவிக்கிரமத்தோடு இன்னும் அரக்கர்கள் இருக்கிறார்களா வென்று கற்சனையிட்டான்.

வீமன் இடும்பியை மணத்தல்.

இடும்பி தமய னிறந்ததை நோக்கிக் கிஞ்சித்து வருத்த மடைந்தவளா யிருந்தாலும் வீமன் வல்லமைக்கு அதிக மகிட்சியுடையவளாகி முன்னிருந்த அன்பைவிட எண்மணங் கதிகமான ஆசைவைத்து, தன்னெண்ணம் எவ்வாறு நிறைவேறப்போகின்றதென்னு மேக்கத்தைக்கொண்டு இருந்தவள் குந்திதேவியின் பாதத்திற்போய் விழுந்து வணங்கினாள். குந்திதேவி வணங்கிய அரக்கியைப்பார்த்து,அம்மா! நீயார்? என்னை வணங்கவேண்டிய காரண மென்னவென்று வினவினாள். இடும்பி வீமன்மேற் கொண்டிருக்கிற காதலைத் தெரிவித்துப் பின்னுங் கூறுகிறாள். ஓ மாமி! இவ்வனத்தில் நெடுநாளாக இருக்கிறேன். என்கருத்துக்கிசைந்த கணவன் வரவில்லை. இன்று என்கண்ணுக்கினிய கணவன் உமதுபுத்திரனே யல்லாமல் வேறொருவரில்லை. என்னை அந்த மஹாபுருஷன் ஏற்றுக்கொள்ளும்படி நீர்கிருபைபுரிய வேண்டும். அப்படிக் கருள்செய்யா விட்டால் உங்கள் முன்னிலையில் என் பிராணனை விட்டுவிடுகிறே னென்றாள். குந்திதேவி மனங்கலங்கித் தருமராஜனைநோக்கி, அப்பா தருமநந்தனா ! இதோ நிற்கிறமாது நமது வீமன்மீது மையலாகி அதிக வருத்தப்பட்டு, தன்னை ஏற்றுக்கொண்டால் நலமென்றும் இல்லாமற்போனால் தன் பிராணனை விட்டு விடுகிறேனென்றும் காலில்விழுந்து முறையிடுகிறாள்: வலியவருகிற சீதேவியை ஏன் காலாலுதைத்துத்தள்ளவேண்டும்? அவளெண்ணப்படி இசைவிப்பது நன்மை யென்றாள். தருமராஜன் இடும்பியைப் பார்த்து, ஓபெண்பாவாய்! நீயோ அசுரச்சாதி. இவனோ நரன். உங்களிருவருக்கும் பொருத்த மிருக்காதே இதற்கென்ன செய்கிறதென்றுகேட்க இடும்பி சொல்லுகிறாள்: ஓ புண்ணியமூர்த்தி ! அசுரச் சாதிக்கும் மானிடச்சாதிக்கும் தேகபேதம் ஒன்றுதவிர சுக்கில சுரோணித பேதமில்லை. முன்னம் விடப்பன்மனென்கிற அசுரன் புத்திரி சன்மிஷ்டையை யயாதி மஹாராஜன் காந்தருவ மணம்புரிந்து சிங்காரவனத்திற் கூடினான். அவள்வயிற்றிற் பிறந்த பூருவென்பவனுடைய கால்வழிதானே சந்திரவமிசம்.

ஓ தருமாத்மாவே ! நானே என்வல்லமையைத் தெரிவிக்கக் கூடாது. ஒருவன் தன் ஆற்றலை யறியாதாரிடத்துக் கூறவேண்டுமென்று விதியிருக்கிற படியால் இரண்டொரு சொல்லில் என்திறமையைத் தெரிவிக்கிறேன். இந்த மூன்றுலோகத்தும் அரைநொடியிலோடிவருவேன். அவனுற்ற பொருள்களைக் கேட்டால், அதனையுங் கொணர்ந்து வந்து கொடுப்பேன். இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமாகிய மூன்றுஞ்சொல்லுவேன். ஆதலால் என்னை அங்கீகாரஞ்செய்யும்படியாய் அந்த மஹாபுருஷருக்குத் தெரிவியுங்க

ளென்று செப்பினாள். தருமன் இடும்பியை நோக்கி, ஓ பெண்ணே! இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலங் கண்டு முன்னுதாய்ச் சொல்லுவேனென் றுரைத்தையே: எங்கட்கு முன்னடந்ததும் உதயத்தில் நடக்கப்போகிறதுஞ் சொல்லென்றார். இடும்பி - ஓ ஐயனே! உமக்குத் திரிதராஷ்டிரன் இளவரசு பட்டங் கொடுத்ததற்காகத் துரியோதனன் பொறாமைகொண்டு, தந்தையிடத்து முறையிட்டு உம்மை வாரணாவதத்துக் கனுப்பிவைக்கச்செய்து, நீரவ்விடத்தில்வந்தபின்பு மிக உருக்கமுள்ளவனைப்போற் கனகனென்கிற சிற்பி-புரோசனன் என்கிற மந்திரி-இவர்களைக் கொண்டு பஞ்சு - எண்ணெய் - அரக்கு - மெழுக்கு - அழிஞ்சில்மரம் - இவற்றால் ஒருமாளிகை இயற்றி, அதற்கு அக்கினிமூலையிற் சரவத்தி வைத்து உங்களைச்சாம்பராக்க ஒருநாள் நியமித்தான். கனகனென்கிற சிற்பியை உங்கள் சிறியதந்தை விதுரன்கண்டு, வாரணாவதத்தில் என்னவேலை செய்கிறாயென்று கேட்டறிந்து மிகவருத்தமடைந்து, அத்தீங்கினின்றுந் தப்பி வெளிப்படுவதற்காக வைத்த சுரங்கத்தை உங்களுக்குச் சொல்லச்சொல்லி விடுத்தார். அந்தக்கனகன் அரக்குமாளிகையின் சூட்சியை இதோயிருக்கிற மஹாபுருஷருக் குணர்த்த, இந்தக்கனவான் துரியோதனன் நியமித்த முகூர்த்தத்திற் சரவத்திக்கு நெருப்புவைத்து உங்களை யெடுத்துக்கொண்டு சுரங்கத்தின்வழியாகவந்து, இக்காட்டில் உங்களுக்குநித்திரைபங்கம்வாராமற் காவலிருந்தார். இவ்வனத்தில் நெடுநாளாக எதிரில்லாமல் வாழ்ந்த நான்வந்து இந்தச் சௌந்தரியன்மேல் மயலாகினேன். என்கருத்தை இடும்பனறிந்து இவரை யெதிர்க்க, இந்தவச்சிரதேகன் அவனைவெற்றிகொண்டார். இதுவெல்லாம்காலகதி. இதற்காக நீங்கள் வருத்தப்படாதீர்கள். இந்த மணவாளனுக்குச் சங்கதி தெரிந்திருந்தும் உங்களுடன் சொல்லாதிருந்ததற்குக் காரண மென்னெனில், உயிருதவி செய்த கனகன் உங்களுடன் சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொண்டான். அவனுக்குத்தான்கொடுத்த வாக்கின்படி சொல்லா திருந்தார். இனி உதயத்தில் திவ்யக்கியான ஸ்வரூபியாகிய வேதவியாசரைக் கண்டு தரிசிப்பீர்க ளென்றாள்.

இவைகளை யெல்லாந் தருமராஜன் கேட்டு ஆச்சரியப்பட்டு, வேதவியாசரைக் காண்பீர்களென்று இடும்பி சொன்னதைச் சோதிக்க வேண்டுமென்று நினைத்தார். அக்கால் இதுவரையிலும் நரமாமிசத்தைத்தின்று கொழுப்பேறியிருந்த இடும்பாசுரன் மாமிசத்தை விலங்கினம் பறவை முதலியவை புசிக்கத் திருவிளக்கிட்டதுபோற் சூரிய னுதயமாயினான். இடும்பி தருமராஜனைநோக்கிக் கூறுகிறாள்: ஓமூத்தவரே! ஸ்திரீகளென்றால் எல்லாரும் ஸ்திரீகளல்ல. கற்புடைமை பெற்று விளங்குகிறமாது எவளோ அவளைத்தான் ஸ்திரீயெனப்படும். என்னை அரக்கியென்று இலேசாய் நினைக்கவேண்டிய தில்லை. என்மன வுறுதியும், கன்னிலையும், அனுபோகத்தில் விளங்குமென்று கூறினாள். தருமராஜன் வீமனையழைத்து, ஓதம்பி வீமா! இதோயிருக்கிற கன்னிகை குலத்தில்மாத்திரமரக்கியல்லது, மற்றக்குணாதிசயத்திற் கமலையை நிகர்த்தவள். சேற்றிற் செங்கழுநீரு மலரும். நிலத்திற் பொன்முதலியவையு முதிக்கின்றன. அவைகளை நிந்தித்துநீக்காமல் அங்கீகாரஞ்செய்வதுபோல், என்வாக்கைத்தள்ளாமல் இந்தக் கன்னிகையை ஆதரித்துக்கொள்ளுகவென்று ஆசீர்வதித்தார். மற்ற மூன்று தம்பிமார்களும் தருமராஜன் வாக்கியம்போற் சந்தோஷஞ் சொன்னார்கள். வீமன் தமயன் வாக்கியத்தை வேதவாக்கியமாகக் கொண்டு, தம்பிமாருந் தாயுங் களிக்க அவளை அங்கீகாரஞ்செய்தான்.

பாண்டவர் வேதவியாசரால் மந்திரோபதேசம் பெறல்.

உடனே ஐவரும் குந்தியும் எழுந்து நித்தியக்கடன் முடிக்கச் சலத்தைத் தேடிப் புறப்பட்டார்கள். அங்கு ஒரு திவ்விய நதி தோன்றிற்று. அந்நதியைக் கண்டு யாவரும் அதிலிறங்கினார்கள். அந்நதி வியாசரால் நியமிக்கப்பட்ட நதியாகையால், அந்நதியில் யார் வந்து கால்வைத்த போதிலும் அவர்களுக்கு வேதவியாசர் தரிசனமாகிறது. அந்நதியிற் பாண்டவர்கள் கால்வைத்த மாத்திரத்தில் அவர்களுக்கு இடும்பி சொற்படி வேதவியாசர் தோன்றினார். உடனே ஐவரும் எதிர்கொண்டுபோய் வணங்கி, ஓரிடத்திற் கொன்றைத்தழை முதலியவற்றால் ஆசனமமைத்து எழுந்தருளச் செய்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் புரிந்து நின்றார்கள். வேதவியாசர் ஐவர்க்கும் பல ஆசிகூறி, குந்திதேவியை ஆதரணை செய்து, தருமராஜனை நோக்கிச் சொல்லுகிறார்: அப்பா தருமநந்தனா! நீங்கள் சஞ்சலமின்றி அதோயிருக்கிற சாலிகோத்திர மஹாமுனிவனத்திற் சிலநா ளிருங்கள். இதோ நிற்கிறவள் இடும்பனுடன்பிறந்த இடும்பி. இவள் மிகுந்த கற்புடையவள். மேலும் ஒருநாள் இந்நதியில் விடாய்பட்டுச் சலமருந்தி ஸ்நானஞ் செய்தாள். இந்நதி என்னாலுண்டாக்கப்பட்ட தாகையால், இதில் யார் வந்து ஸ்நானஞ்செய்த போதிலும் அவர்களுக்கு அதிக வல்லமையையும் இஷ்டகாமியத்தையும் கொடுக்கிறோமென்று வாக்குத்தத்தஞ் செய்திருக்தேன். இவள் ஸ்நானஞ்செய்யவே யான் தரிசன மாயினேன். இவள் நமஸ்கரித்து நின்றாள். இவளுக்கு யான் அதிக வல்லமையைக் கொடுத்ததுவுமன்றி, இஷ்டகாமியத்தையும் நீ யடையக் கடவதென்று வரங்கொடுத்திருக்கிறேன். இவள் இடும்பனுக்கும் அதிக வல்லமையை யுடையவள். இவள் காலகதியால் வீமனை மோகித்தாள். நீங்கள் இவளுக்கு விரோதந்தேடாமற் காந்தருவமணம் புரிந்து, அதோயிருக்கிற சாலிகோத்திர வனத்திற்

சில நாளிருந்து ஏகச்சக்கரவனத்தி லிருக்கும் வேத்திரகீயத்திற் போயிருங்க ளென்று கட்டளை யிட்டு, இதோ நானொரு மந்திரோபதேசம் செய்கிறேன். அதனை உச்சரிப்பீர்களாகில் உங்களுக்கு வேதியருருவம்வரும். எந்தவேளையில் அவ்வுருவம் நீங்கவேண்டுமோ அந்த வேளையில் அவ்வுருவு நீங்கு மென்று மந்திரத்தை உபதேசித்து அந்தரத் தானமாகி மறைந்தார். அதனைப் பெற்றுக்கொண்ட ஐவரும் குந்திதேவியும் வீமனை வாழ்த்தி இடும்பியையும் வீமனையும் இணங்கச் செய்து சாலிகோத்திரமுனி வனத்திற் சென்று, அங்கொருவிடத்திற் பன்னகசாலையியற்றி அதிலிருந்தார்கள்.

கடோர்க்கஜ னுற்பவம்.

அக்காலையில் வீமன் கமலக்கன்னியுடன் கூடிக் காட்டிற் சென்று, தேன் - கனி - கிழங்கு - முதலியவற்றைக் கொண்டுவந்து தமயனுக்கும் தம்பிமார்களுக்கும் அன்னைக்குங் கொடுத்து, இரவில் மிகுந்த சாக்கிரதையோடு காவலிருந்து காத்து வருகிறான். அக்காலத்திற் குந்திதேவி வீமனை அழைத்து, அப்பா மகனே ! இரவும்பகலும் எங்களுழியத்தி லிருக்கிறையே: உன்மே லிச்சைகொண்டுவந்த கமலக்கன்னியின் கருத்து மகிழ்வெய்துகிற தெக்காலம் ? நீ இன்று முதல் இரவில்மாத்திரம் காவலைச்செய். மற்றவேளையில் நீ யவளுடன் சுகித்திருவென்று சொன்னாள். பெற்றாள் சொற்படி அன்றுமுதல் வீமன் கமலக்கன்னியோடு கூடிக் குலாவிக்கொண்டு, அன்னை - தம்பி - தமயன் - இவர்களையும் பாதுகாத்து வந்தான். இப்படி சிலநாள் சென்றபின்பு வீமன் வீரியவிர்த்தியாற் கமலக்கன்னி கருப்பந்தரித்துக் கால அளவையிற் கருவுருவாகி, உடனே ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்புத்திரன் பிறந்தவுடன் ஆகாயவாணி கடோர்க்கஜனென்று பெயரிடுகவென்ன அவ்வாறு பெயரிட்டு அப்புத்திரனை ஆதரித்தார்கள். அப்புத்திரன் பிறந்தவுடன் தாயையும் ஐந்து பிதாக்களையும் குந்திதேவியையும் வணங்கி, ஓ என்னருமைப் பெரியோரே! எனக்கும் என் தாயாருக்கும் விடைகொடுத் தருளுங்கள். அம்மான்காணி பாழடைந் திருக்கின்றது. அங்குசென்று அரசுசெலுத்தி வருகிறேன். தாங்கள் எப்போது நினைக்கின்றீர்களோ அப்போது வந்து ஒத்துக்கொள்ளுகிறே னென்று வினவினான். ஐவரும் அப்புத்திரன் கருத்துக் கிசைந்து விடைகொடுத்தார்கள். புத்திரனும் தாயும் அப்பிரியமானவர்களைப் பிரிய மனமில்லாமல் அரிதிற்பிரிந்து, விசனத்துடன் அம்மானிருந்த விடத்துக்கு வந்து அந்த ஆதீனத்தைத் தன்வசமாக்கிக்கொண்டு சுகமாக வாழ்ந்திருந்தான். பிறந்த சிசுப் பேசுமாவென்றாற் சொல்லுகிறேன் கேளும். ஓ ஜெனமே ஜெய மஹாராஜனே ! இராக்ஷசகுலம் உற்பத்தியானகாலத்திற் பிறக்கிறசிசுவும் பேசும்படித் திசைமுகன் வரங்கொடுத்திருக்கிறார். அதனால் தான் நாளையவரையில் இராக்ஷசக்குழந்தைகள் பிறந்தபோதே பேசிவருகிறது என்று பின்னுஞ் சொல்லுகிறார்:

பாண்டவர் வேத்திரகீயமடைதல்.

கேளும் மஹாராஜனே ! பாண்டவர்கள் சாலிகோத்திரமுனிவர்வனத்திற் பன்னசாலை ஒன்றியற்றி, அவ்வனத்தி லிருக்கும் சாலிகோத்திர முனிவரைக் கண்டு வணங்கித் துதித்தார்கள். சாலிகோத்திரமுனிவர் ஐவரையும் குந்திதேவியையும் ஆதரணை செய்து பல ஆசிகள்கூறினார். ஐவரும் அவரிடத்தி லிருந்து நன்னெறிக் கேதுவாகிய சில மந்திரங்களையும் வேதமர்மங்களையும் கேட்டுக்கொண்டு அவ்விடத்திற் சில நாளிருந்து, அப்பால் அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வேதவியாசர் கூறிய மந்திரத்தை யுச்சரித்துத் தாங்களும் குந்திதேவியும் பிராமண அதிதிவேட முடையவராய் வேத்திரகீயத்தைச் சேர்ந்தார்கள். அவ்வேத்திரகீயத்தில் முந்நூற்றுமங்கல மென்னுங் கிராமத்திலுள்ள அக்ராரத்தி லிருக்கிற வேதியர்கள் அதிதிகளைக் கண்டால் ஒப்பற்ற கடவுளைக் கண்டதுபோல மிகுந்த அன்புட னெதிர்வந்து மரியாதைகளுடன் ஆதரணை செய்தல் வழக்கமாதலால், இவர்களைக் கண்டமாத்திரத்தில் மிகுந்தகாதலோடு அழைத்துப்போய் அவரவர்கள் கருத்தின்படி விருந்திட்டார்கள். அப்பிராமணர்களில் முதிர்ந்த வயதுடையவராகியும், மிகுந்த பாக்கியத்தை யுடையவராகியும், வேதாகமங்களில் தேர்ந்தவராகியும், ஒரேபுத்திரனை யுடையவராகியு மிருக்கிற தர்மமுனி என்கிற ஒரு வயோதிகப்பிராமணர் இந்த ஐவரையும்குந்திதேவியையு மழைத்துப்போய்த் தன்வீட்டில் வைத்துக்கொண்டு; அவர்களுக்குத் தேன் - கனி - பலகாரம் - அறுசுவையையுடைய உண்டி - முதலியவற்றை யுதவிப் பிதாவைப் போற் பாதுகாத்து வந்தார். இந்த ஐவரும் அந்தவேதியனைப் பிதாவைப்போ லெண்ணி மிகுந்த பத்தியோடு நடந்து வந்தார்கள். இப்படி வருகிற காலத்தில் அந்நகரத்து வேதியர்க ளெல்லாம் ஏகசக்கரவனத்தி லிருக்கும் பகாசுரனுக்கு ஐம்பது ஏர்கட்டிய வண்டில் நிறைய அன்னமும், அதற்குத் தகுந்த கறி காய்களும், நெய் - தயிர்-பலகார வகைகளுமிட்டு அதனுடன் ஒரு மனிதனையு மனுப்புவிக்கிறது வழக்கம். பகாசுரன் அவ்வண்டில் அன்னத்தையும் நரனையும் புசித்துவிடுகிறது.

இப்படி வீடுகளின் விகிதப்படி பகாசுரனுக்கு விருந்திட்டு வருகிற முறை இந்த ஐவரையும் பரிவுடன் காத்துவரும் வேதியருக்கு வந்தது. அந்த வேதியருக்கு ஓரே புத்திரன்தா னிருக்கிறான். அவ்வேதியன் மனைவி இன்று நமது புத்திரனைப் பகாசுரனுக்கிரையாக அனுப்பிவைக்கப்போகிறோமே: ஐஐயோ!!

தெய்வமே! நமக்கு வேருதரவுமில்லையே: என்னசெய்
வேன்? அனுப்பாமலிருந்தாற் பாதகனுகிய பகாசுரன்
நகரத்துக்குள் பிரவேசித்து அக்ராரத்தி லுள்ளவரை
யெல்லாம் கொன்றுவிடுவானே: என்று உள்ளறையி
லுட்கார்ந்து தலைவிரிகோலமாக அழுதிருந்தாள். குந்
திதேவி அந்தப் பார்ப்பனியிடத்தில் மிகுந்த அன்பு
டையவளாதலால் அவளைக் கண்டு வார்த்தைசொல்
லி வருவோமென்று வந்து உட்புறத்துச் சென்று அ
ந்தப்பார்ப்பனி நொந்தழுவதை நோக்கித் திடுக்கி
ட்டு, அருகிற்சென்று அந்த அம்மனைப் பார்த்து, ஓ
அம்மணி! நாங்க ளிவ்விடத்திற்கு வந்தநாள் முதல்
இதுவரைக்கு மிவ்வகையான வருத்தத்தைக் காதினு
லும் கேட்டதில்லை. என்னிருகண்ணினுலும் பார்க்க
வில்லை. இன்று நீங்கள் வருத்தப்படுவதா யிருந்தால்,
என்மனங்கல்லா? அன்புடையவர் வருத்தப்படுவதைக்
கண்டால் அவர்களைப் போன்றவர்க்கு அதிகவருத்தம்
நேரிடுமென்று நூல்கள் முறையிடுகின்றன. தங்கள்
மீ தன்புடைமைவைத்த நான் எவ்வாறு சகிப்பேன்?
தங்கள்கருத்திற் குடிகொண் டிருக்கும் துயரத்தைத்
தெரிவிக்கவேண்டுமென்று பலவாறு மிகுந்தஆருமை
யோடு வினவினள். உடனே பார்ப்பனி அழுதலைநிறு
த்திக் குந்திதேவியை நோக்கிச் சொல்லுகிருள். ஓ
அம்மணி! நான் துயரப்படுகிற காரணத்தைச் சொ
ல்லுகிறேன் கேள். இந்நகரம் ஏகசக்கிர வனத்தைச்
சேர்ந்தது. இதனைச் சீர்திருத்திப் பெரிய அக்கிரார
மாக்கி இதில் வேதியர்கள் குடிவந்திருந்தார்கள். இப்
படியிருக்கிற காலத்தில் இந்த ஏகசக்கிர வனத்திற்
பகாசுரனென்று பெயர்வகித்த ஒரு அசுரன் வந்து
சேர்ந்து, இந்த அக்கிராரத்தைக் கண்டு பிடித்து
தினம்தினம்பிரவேசித்து, ஆடு மாடுமுதலியவற்றைப்
பிடுங்கித்தின்பதும் போதாமல் வேதியரையும் புசி
க்க ஆரம்பித்துக்கொண்டான்.

அதுகண்டு வேதியர்களெல்லாம் மெய் நடுங்கிக்
கலங்கி, அந்தப்பகாசுரன் அடிமேல் விழுந்து முறை
யிட்டு ஒருவாக்குத் தத்தங் கேட்டார்கள். அஃதென்
னெனில் - ஓ அசுரேந்திரா! தினந்தோறும் வந்து
எங்களைப் புசித்துப்போவதில் உனக்கு லாபமென்ன?
நீ எங்களை வருத்தப்படுத்தாமலிருந்தால் உன்னையே
குலதெய்வமாகப் பாவித்து, இந்த அக்கிராரத்திலிரு
க்கிற (நடாகூய) தலைக்கட்டும் தினம்தினம் உன்பசி
யாற அன்னமும் ஒரு நரபலியுங்கொடுக்கிறோம். இத
ற்கொத்துக்கொள்ள வேண்டும், என்று பலவாறுவே
ண்ட அந்தப் பகாசுரன் அதற்கிசைந்தான். அன்று
முதல் இவ்வேதியர்கள் அந்தப் பகாசுரனுக்கு முன்
னஞ்சொல்லியவண்ணம் அன்னமும் நரபலியும் அனு
ப்பிவிக்கிறது. இன்று அந்தமுறை எனக்குவந்தது.
என்கணவனே தளர்ந்தவயதையுடையவர். புத்திரனே
ஒருவன். அப்புத்திரனை அருமையான தவஞ்செய்து
பெற்றேன். அப்புத்திரனைப் பகாசுரனுக்குப் பலியா
க்கிவிக்கிறதென்றால் என்மனம் தாளவில்லை. பெற்ற
வயிறு பற்றி எரிகின்றது. நான் சும்மாயிருந்தாலும்
என்னுடல் பதைக்கின்றது. இதை நினைத்தால் நெ
ஞ்சுலர்ந்து நா வரண்டுவிடுகிறது. உயிருடன்பறிகொ
டுக்கச் சகலமுந்துறந்த சந்நியாசிகளுஞ் சகிப்பார்க
ளோ? அதற்காகத்தான் நான் துயரப்படுகிறேனென்
றலறினுள். இதனைக்கேட்ட குந்திதேவி இருசெவியி
லுங் கரத்தைவைத்து மூடி, ஹரிஹரி! நாராயணு!
பக்தரக்ஷகா! பரமதயாளா! ஓஸ்வாமி! இது வரைக்
கும் இந்தப்பார்ப்பனி சொல்லியதுபோன்ற துயரங்
கேட்டதில்லையே: இன்றையதினம் கேட்கும்படி நேரி
ட்டதே: இனி நானென்ன செய்யப்போகிறேன்? உல
கத்தில் வருத்தப்படுவோரைக் கண்டால் அவ்வருத்
தம் நீங்கத் தன்னுற் கூடியமட்டும் உதவிசெய்யவே
ண்டுமென்று வேதமுறையிடுகின்றதே: நான் காதி
னுற்கேட்டேனே: இதற்கொரு உபகாரஞ் செய்யா
விட்டாற் பாவம் நேரிடுகிறதே: என்று கடவுளை நினை
த்துக் கனவருத்தமுற்று, பின்பொருவாறுகத்தேறித்
துணிவுகொண்டு அந்தப்பார்ப்பனியருகி லுட்கார்ந்து
அவள் கண்ணீரைத் துடைத்து, தாயே! நீ வருத்தப்
படாதே: எனக்கு ஐந்துபுத்திரர்க ளிருக்கின்றார்கள்.
அவர்களி லொருவனை அனுப்பிவிக்கிறேன். நீ சஞ்ச
லப்படாமல் அந்தப் பகாசுரனுக்கு மாமூற் பிரகாரம்
அன்னம்-கறி-காய்-முதலியவற்றைச் சேகரிக்கத்தக்க
தென்றாள்.

அந்தப் பிராமண ஸ்திரீயானவள் இவ்வசனங்கே
ட்டமாத்திரத்தில் முன்கொண்ட வருத்தத்தைவிட
எண்மடங் கதிகமான வருத்தமுடையவளாய் குந்தி
தேவியை நோக்கிச் சொல்லுகிருள்: ஓ தருமசீலி! நீ
யிப்போது வழங்கியசொல் என்னை வருத்துகின்ற
தே: உன்புத்திரனை எவ்வாறு அனுப்பிவிக்கத் துணி
வேன். ஏனென்றால் - உலகத்தில் எவ்வளவு பொரு
ளைச் சம்பாதித்தபோதிலும் பொருள்மேற் பொருள்
தேடக் கருத்துண்டாகும். அதுபோல் எத்தனை புத்தி
ரனைப் பெற்றாலும் இன்னும் புத்திரனைப் பெறவே
ண்டுமென்று விருப்பங்கொள்வது மல்லாமல் ஒருபுத்
திரனுக்கு யாதாமொரு கெடுதியாவது உயிர்ச்சேத
மாவது நேரிட்டால் அக்காலத்து நமக்குப் பலபிள்
ளைக ளிருக்கின்றனவே அதில் ஒரு பிள்ளைபோனுற்
போகட்டும் என்று சும்மாயிருப்பார்களா? ஒரு புத்
திரனைப் பெற்றவர்களுக்குப் புத்திர அபேக்ஷைமட்டு.
பல பிள்ளைகளைப் பெற்றவர்களுக்குப் புத்திராபே
க்ஷை அதிகம். அதிலும் அன்னியராகிய எனக்காக நீ
பாத்தியப்பட்டு உன் புத்திரனை உயிருடன் பறிகொ
டுக்கத் துணிவுகொண்டாலும் உன் வயிறு குழம்பும்.
மனநடுக்கமு முண்டாம். ஓ புண்ணியசீலி! பொன்ன
ல்ல. பொருளல்ல. பூமியல்ல? வஸ்திரமல்ல. இன்னு
முண்டான மற்றவஸ்துக்களல்ல. பத்துமாதஞ்சுமந்
து மெத்தவருந்தியும் நொந்தும் பெற்றெடுத்தபுத்திர
னை நீயனுப்புகிறேனென்றால் யார் தான் சம்மதிப்பா

ர்கள்? நீ சொன்னபோதே போதும் போபோ பிச்சியென்று மறுத்தாள். அதுகேட்ட குந்திதேவி மனந்தளர்ந்து, ஆ! ஆ! இந்தப் பார்ப்பனியம்மன் கருத்து என்ன பரிசுத்தமா யிருக்கின்றது. அகத்திய மிந்த அம்மன் மனங்களிக்கச் செய்யவேண்டுமென்று நினைத்து, ஓ தருமமுதல்வி! நீயேன் சந்தேகப் படுகிறாய்? என் புத்திரர் ஐவரிற் கறுத்ததேகத்தோடுங் கூடிய சிறுவனை அனுப்பிவிக்கிறேன். அவனால் அந்தப் பகாசுரன் அதமாவான். அதற்கு யாதொரு சந்தேகமில்லை. அப்படி யல்லவென்று ஒருவேளை அந்தப்பகாசுரன் கையிலகப்பட்டு இறந்து விடுவானாகில், காலகதியென்றும் நான் அந்தப் பிள்ளையைப் பெறவில்லை யென்றும் தீர்மானித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் தடுத்தும் நானுங்களைக் கேட்டுக்கொள்ளுகிறதற்குக் காரணமென்னவென்றால், வருத்தப்படுகிறவரைக் கண்டும் அவர்கள் துன்பத்தைக்கேட்டுஞ் சும்மாயிருக்கலாகாது. ஆதலால் என் கருத்தின்படி நடத்துங்களென்று தொழுதாள்.

பார்ப்பனி குந்திதேவின் மனவுறுதியை முகக்குறிப்பினாலறிந்து, இந்த அம்மன் சொல்லுகிற தயிரியத்தையும் உறுதியையும் நோக்கினால் நமக்கு ஏதோகிஞ்சித்து நலம் வருகிறதாகத்தான் தோன்றுகிறது என்று தீர்மானித்துக் குந்திதேவியின் எண்ணத்துக் கிசைந்து சொல்லுகிறாள்: ஓ அன்னையே! நல்லது-இனி ஆகவேண்டிய காரியங்கட்கு யத்தனப்படுகிறேன். உன்னிஷ்டப்படியே உன்பிள்ளையை அனுப்புக. என்றொப்புக்கொண்டு சமையல் செய்வதற்குத் தனது சுற்றத்தாரை அழைத்தனுப்பினாள். இதற்குள் ஸ்நானத்துக்குச் சென்ற தன் கணவனும் வந்தார். பார்ப்பனி எதிர்கொண்டுபோய்க் கணவனுக்கு நமஸ்காரஞ்செய்து, தான் வருத்தப் பட்டதுமுகற் குந்திதேவி புத்திரனை அனுப்பிவிக்கிறேனென்று டன்பட்டவரைக்கும் சொன்னாள். வேதியனாகிய தர்ம முனிவர் ஒருவாறாக மனமிசைந்து, நல்லது நீ சமயற்செய்யென்று கட்டளையிட்டார். பார்ப்பனி வந்த சுற்றத்தாரை வைத்துக்கொண்டு காய்வகைக் கறிகளும் - கனிவகைக்கறிகளும் - மூலவகைக் கறிகளும் - முளைவகைக்கறிகளும் - மரவகைக்கறிகளும்- மதுவகைக்கறிகளும் - தயிர்வகைக்கறிகளும் - தாள்வகைக்கறிகளும் — பால்வகைக்கறிகளும் - பலவகைக்கறிகளும் - இன்னுமுண்டான பஞ்சபக்ஷண பரமானங்களுடன் மலைபோல் அன்னத்தை வடித்துக்கொட்டி, அதற்குத்தகுந்த பருப்பு - நெய் - பணியாரம்- தயிர் - முதலானவைகளைச் சேகரித்துச் சாக்கிரதையாயிருந்தாள்.

பகாசுரன் வதை.

இப்பால் குந்திதேவி பார்ப்பினியிடத்து விடைபெற்றுத் தனது மக்கள்பாற்சென்று தருமராஜனை நோக்கி, ஓ மைந்தனே! நம்மை ஆதாரணை செய்து வருகிற வேதியர் வீட்டிற்குட் சென்றேன். அவ்வேதியர்மனைவி வேஷ்டையோடழுதாள். நீயேன் வருத்தப்படுகிறாயென்று கேட்டேன். அந்தப் பார்ப்பனி என்னைப்பார்த்து, ஓ இரக்கமுள்ள மாதாவே! இந்த மூந்நூற்று மங்கலத்தில் ஒரு அசுரன் பிரவேசித்து வேதியரை யெல்லாங் கொன்றுதின்று வந்தான். அவனுக்கு இந்நகரத்தார் வந்தனைசெய்து நாள்தோறும் ஒரு நரபலியும் விருந்துமிடுகிறோமென்று ஒப்பாசாரம் பண்ணிக் கொண்டார்களாம். இன்றையதினம் எங்கள் முறையாதலால் அந்த அசுரனுக்கு விருந்திடப்போகிறோம். அவனுக்கு நரபலியாக என்னொருபிள்ளையை அனுப்பிவிக்கவேணும். அதற்காகத் துயரப்படுகிறேனென்றாள். அம்மொழியைக் கேட்டவுடன் எனக்கு மனந்தாளாமல், நமது வீமனை அனுப்பிவைக்கிறேனென்று வாக்குவிறையஞ் செய்துவந்தேன். என்வாக்குப் பழுதாமல் வீமனை அனுப்பிக்கவேண்டுமென்று மெத்தவும் நைந்துபுகன்றாள். அதைக்கேட்டதருமராஜன் தாயைவணங்கி, அன்னையே! துயரமுற்றோரைக் கண்டால் அத்துயரம் நீங்கத் தன்னாற் கூடியமட்டும் உபகாரஞ்செய்யவேண்டுமென்று நீங்கள் வாக்குத்தத்தங் கொடுத்துவந்தது தகுதிதான். அதற்கு வீமனை அனுப்பிவையென்று கட்டளையிடுகிறது எனக்கு மனமொத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால் வாரணாவதநகரத்தில் நூதனமாகப்புதுக்கிய அரக்குமாளிகையிலேயே நாமெல்லாம் இறந்துபோக நேரிட்டது. அந்த இக்கட்டைத் தப்புவித்துக் காட்டிற்கொண்டுவந்துவிட்டான். வந்தவிடத்தில் யமனைப்போல் ஒரு அசுரன்வந்து நம்மைப் புசிக்கவந்தான். அப்போது இந்தவீமன் அவனைக்கொன்று வெற்றிபெற்று நம்மைக் காப்பாற்றினான். உயிருதவிசெய்த உபகார புருஷனை அனுப்பிவிட்டு நாமென்ன செய்வது? என்மனம் ஒப்பவில்லையென்று உருகினார்.

அதற்குக் குந்திதேவி சிரித்து, அப்பா தருமநந்தனா! நீயேன் வருத்தப்படுகிறாய்? வீமன்பலத்தை நீ அறியமாட்டாய். பிள்ளையின் திறம் பெற்ற எனக்குத் தெரியும். எப்படியென்றால்-நீ ஒன்றரைவருஷத்தியகுழந்தை. வீமன் ஐந்துமாதத்துப் பிள்ளை. அக்காலத்தில் உங்கள் தந்தையோடு நாங்களும் ஒரு பெரியமலைமேலேறி வேடிக்கைபார்த்தோம். அங்கே ஒரு சிங்கம் அதிக உக்கிரங்கொண்டு கெற்சனையிட்டு வந்தது. அதுகண்டு உன்தந்தையும் யாங்களும் பயந்தோடினோம். அத்தருணத்தில் எனக்கு அதிக நடுக்கங்கண்டு, கையிலிருந்த வீமனைப் போட்டுவிட்டேன். விழுந்தவிடம் பாறைக்கல்லா யிருந்தும், அவன் பாரத்தைப் பொறுக்காமற் பாறைபிளந்து நொய்யாய் நொறுங்கியது. அவன் விழுந்த சப்தத்தினால் மதர்த்துவந்த சிங்கம் பயந்து பொறிகலங்கி யோடிப்போயிற்று. நானும் உன்சிறியதாயாரும் கையை நெறித்

(REGISTERED COPY-RIGHT.)

(ஆதிபர்வம்-கஉஉ-வது-பக்கம்.)

துப் பிள்ளை யிறந்தானென் றெண்ணி ஓடிவந்து பார்த்தோம். வீமன் தொட்டிலில் விளையாடுவதைப்போற் கையைக்காலை யசைத்துக்கொண் டிருந்தான். உடனே வாரி அணைத் தெடுத்து முத்தமிட்டோம். ஆதலால் உன் தம்பி அதிகபலவான். இடும்பாசுரனுக்கு நடந்த கதியைப் பார்த்தும் இன்னமேன் யோசிக்கிறாய்? அப்பனே ! நீ சஞ்சலப்படாமல் வீமனை அனுப்பு. அந்தப்பகாசுரனை அவனேகொன்று இவ்வூரிலுள்ளோரெல்லாம் நெடுநாட் சஞ்சலம் இன்றோடு நீங்கியதென்று கொண்டாடும்படியாக வருவானென்றனள். தருமர்ராஜன் மனந்தேறி வீமனைப் பார்த்தார். வீமன் எப்போ யெப்போவென்று முன்சாக்கிரதையா எழுந்து, தமயன் வாக்கிலிருந்துவரும் உத்திரவுக்கு எதிர்பார்த்திருந்தவனாதலால் விரைவில்வந்து தமயனை வணங்கி நின்றான். தருமன் வீமனைநோக்கி, எனருமைத்தம்பியாகியவீமா! நீ சென்று அந்தப் பகாசுரனைக்கொன்று வெற்றி கொண்டுவாவென்று வாழ்த்தி விடைகொடுத்தார். அம்மாத்திரத்தில் வீமனனவன் அன்னை தமயன் தம்பிமார்கள் கையில் விடைபெற்று வேதியனிடத்து வந்து வணங்கி, ஓ ஸ்வாமி! பகாசுரனுக்கு விருந்திடுகிறது இன்றுதானே: இன்னும் தாமிசமென்ன? விரைவில் எனக்குச் சோறுபோட்டு என்னை அனுப்பிவியுங்களென்று வேண்டினான். அதுகேட்ட வேதியன் வீமன்கேட்கிற உதட்டிலையக்கண்டு இந்தக் கரியபிராமணன் அந்தப்பகாசுரனுக்கு யமனாவானென்று எண்ணி வீமனை ஆசீர்வதித்து ஸ்நானஞ்செய்வித்து, சிகப்புப்பூ அக்ஷதை சந்தனம் பூமாலை முதலியவைகளோடு நல்ல வஸ்திராபரணாலங்கிரதஞ் செய்து திர்ப்தியாய் போஜனமிட்டு, புனுகு கஸ்தூரி கற்பூர சவ்வாது குங்கும முதலியவைகளைப்பூசி வாசத்தாம்பூலங் கொடுத்து, (௫௰) ஏர் எருமைக்கடாக்களைப்பூட்டுஞ் சகடாவண்டியிலே இழுத்துவந்து அவ்வண்டியிற் கயிலைமலைபோல் அன்னத்தைக் குவித்து, சமைத்த பதார்த்தத்தை யெல்லாம் அதிற் பொருத்திவைத்து, நெய்க்குடம் தயிர்க்குடமுதலியவற்றை ஏர்க்காலிற் கட்டி, எருமைக் கடாக்களையும் வண்டியிற்பூட்டி, வீமனை அதிலேற்றி, சுற்றத்தாரோடும் சிறுபறை முழக்கோடும் நகரப்புறம் வரையிற் கொண்டுவந்து விட்டு தெய்வகடாக்ஷத்தால் ஒரு தீங்கு மில்லாது க்ஷேமகரமாய் வரக்கடவாயென்று பலரும்வாழ்த்தி ஆசிகள்தூற்றித் திரும்பி வந்து விட்டார்கள்.

வீமன் (௫௰) ஏர் எருமைக்கடாக்களையு மதட்டியோட்டிக்கொண்டு அதிவேகமாக ஒரு மலையடிவாரத்தருகில்வந்து, அங்குவருகிற கான்யாற்றின்காலைக்கண்டு சலம் நன்றா யிருப்பதைப் பார்த்து, அடடா !! இந்நீர் நன்னீராயிருக்கின்றது. நமக்கோ பசிமேலிடுகிறது. வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கழ வேண்டிய காரணமென்ன? உதவியற்ற இராக்ஷதப்பயலுக்கு நாமா சோறுகொண்டுபோய் போடுகிறது? அவன் கெட்டான். இவ்வண்டிற் சாதமும் மற்றவைகளும் தேவாமுதம்போல் நன்றாயிருக்கும். இதனை இங்கேதானே புசித்து ஏப்பம்விடுவோம். அந்தப்பகாசுரன் எங்கிருக்கிறானோ பார்ப்போமென்று அவ்வண்டில் முனையிலேறி நிமிர்ந்து பார்த்தான். ஒருயோசனை தூரத்திற் பகாசுரன் தோன்றினான். அவனைப் பார்த்த மாத்திரத்தில் வீமன் தோள்தட்டி நகைத்து, இவன்கேட்டான் நமக்கெவ்வளவு இந்த இராக்ஷதப் பயலென்று அவமதித்தவனாய் வண்டியடியில் வந்து, (௫௰) ஏர் எருமைக்கடாக்களையும் அவிழ்த்து நீங்கள் எங்காகிலும் போய்ப் பிழைத்துப் போங்களென்று துறத்திவிட்டு, அவ்வண்டியை ஆற்றங்கா லோரமாக இழுத்து வைத்துக்கொண்டு பின்பக்கம் வாயை விரித்து வைத்து, இரண்டு கைகளினாலும் உள்ள அன்னத்தை யெல்லாம் அணைத்துத் தள்ளிக்கொண்டு விழுங்கி அப்பாற் கறிமுதலியவைகளை ஒன்றாகத் திரட்டி மூன்றுண்டையாக்கி, இரண்டுண்டையைத் தின்றுவிட்டு மூன்றாம் உண்டையைக் கையிலேந்தினான்.

அக்கால் சாதம் வருமென்று வழிபார்த்திருந்த பகாசுரன் இன்னும் அன்னம் ஏன் வரவில்லையென்று சந்தேகித்து வண்டில்வரும் வழியை நோக்கி வருகிறபோது வண்டிலைக் கண்டான். அப்போதவ் வண்டிலிலொன்றுமில்லாதிருப்பதை அவனுணர்ந்து,அடடா!! நமக்குச்சாதங்கொண்டுவந்த வணடில்தானிது. இதில் உண்டியில்லா திருக்கவேண்டிய காரணமென்னவென்று நாலுதிசையையும் நோக்கிப் பார்த்தான். அப்போது ஒருதிசையிற் கால்வாயருகி லிருந்து மொத்தையடிக்கிற வீமனைப்பார்த்து, அடா ! யாம் நெடுநாளாக இவ்வனத்திலிருந்து வேதியரால் அனுப்பப்படும் உண்டியைப் புசித்துவந்தோம். நமதுபெயரைக் கேட்டால் யமனும் அஞ்சுவான். அப்படியிருக்க இந்தப் பிராமணப்பயல் நமக்குக்கொண்டுவந்த உண்டியைப் புசிக்கிறான். ஆ ! ஆ ! இதென்ன ஆச்சரியம்? இந்தப்பிராமணப்பயலுக்கு விதிகிழிந்தது. ஐஐயோ!! நாமிவனைப் பார்க்கப்பார்க்க நமது உண்டியை யெல்லாம் புசித்து விடுகிறானே: என்று மஹா உக்கிரங்கொண்டு அதிவேகமாக அதட்டிக்கொண்டோடிவந்து வீமன் புஜத்தின்மேல் ஒரு குத்து குத்தினான்.

வீமன் அக்குத்தைப்பட்டும் தன்கையிலிருக்கிற சாதத்தைச் சிந்தாமற் புசித்துவிட்டு, அவன் குத்தக் குத்தத் தன் முதுகையுந் தோளையு மாறிமாறிக் காட்டித் தாகமருந்தி, அவனுக்கு மேலுமேலுங் கோபமுண்டாகும் படியாய்ச் சாவதானமாகக் கைகாற் சுத்திசெய்து, மிகுந்த இறுமாப்புடன் ஏப்பமிட்டுக் கருக்கோடிவரு மிசையை முறுக்கி மலைநிமிர்ந்து நிற்பதுபோல எதிரேவந்து நின்றான். பகாசுரன் கர்வித்து நிற்கும் வீமனைப் பார்த்து, இவன் பிராமணப்பயலல்ல. பிராமணப்பயலாயிருப்பானாகில் அடிக்கு அஞ்சுவான். நாம் அடித்தும் கிஞ்சித்தேனும் லக்ஷிய

மில்லாமல், சம்ஹாரகால உருத்திரன்போல் நிற்கி
ருன். இவனை உயிரோடு விடக்கூடாது. இக்கணம்
இந்தவிடத்திலேயேகொன்று கசகசவென்று மென்று
தின்றுவிட வேண்டுமென்று தீர்மானித்து வீமனைப்
பார்த்து, அடா பிராமணப்பயலே! புலிக்குரிய உண
வைப் பூனைபுசிக்குமா? புசித்தாலும் அதற்குச் செரிக்
குமா? அதுபோல் எனக்குவந்த உணவை நீபுசிக்கலா
மா? புசித்தா லுனக்குப் பொறுக்குமா? என்னை மதிக்
காமல் எனக்குவந்த உணவைப் புசித்தாயே: உன்னை
அரைமாத்திரையில் அடித்துக்கொன்று நீதின்ற உண
வோடு உன்மாமிசத்தையும் புசிக்கிறேன் பாரென்று
அதிகசினங்கொண்டு, புஜத்தோடு புஜத்தைத்தட்டிக்
கெற்சித்தான். அதற்குவீமன் ஏப்பமிட்டுச் சிரித்துச்
சொல்லுகிறான்:

அடா பகாசுரா! என்வல்லமை உனக்குத்தெரி
யாது. அதைப்பற்றி யொன்று சொல்லுகிறேன் கேள்.
இடும்பனென்று ஒரு அசுரனுண்டு. அவன் வல்லமை
நீயுமறிந்திருப்பாய். அவனை ஒரு முகூர்த்தத்தில் வெ
ற்றி கொண்டேன். அத்தகைய எனக்கு நீ எவ்வளவு?
இவன் நரன் நாம் அசுரனென்று என்னை அலக்ஷிய
மாக எண்ணாதே. உனக்குவந்த உணவை யெல்லாம்
நானொருவன்தானே புசித்தேன். இதனாலேயே நான்
பலவானென்று உனக்குத் தோன்றவில்லையா? இப்ப
வும் ஒரு தர்மநீதி சொல்லுகிறேன். அஃதியாதெனில்
இன்றுமுதல் பிராமண உண்டிக் கெதிர்பார்க்காமலும்
இவ்வனத்தி லிருக்காமலும் எங்கேயாவது ஓடிப் பி
ழைத்துப்போ. இல்லா விட்டால் உன்வல்லமையைக்
காட்டி யமலோகம் போவென்றான். இவையனைத்துங்
கேட்ட பகாசுரன் கோபசிரிப்புச் சிரித்துத் திக்குத்தி
சைகள் நடுங்கக் கெற்சித்துச் சொல்லுகிறான்: அடா
கறுப்புப் பார்ப்பாரப்பயலே! என்னசொன்னாய்? இவ்
வனத்தைவிட்டு ஓடிப்பிழைக்கவா சொன்னாய்? பளா!
நன்றாயிருக்கின்றது: என்று தனதிரண்டுபுஜத்தையுந்
தட்டி உட்கார்ந்தெழும்பி மகாவுக்கிரங்கொண்டு வீம
னைக்குத்தினான். வீமன் அக்குத்தைக்கையினால் தட்டி
அவன் கன்னத்தில் ஓரறை அறைந்தான். அந்த அ
றைபட்டமாத்திரத்திற் பகாசுரனுக்குப் பொறிகலங்கி
அதிக சினங்கொண்டுபோய் ஓர் மரத்தைப் பிடுங்கி
வந்து வீமனை அடித்தான். வீமன் விரைவில் தா
னும் ஒருமரத்தைப் பிடுங்கித் தன்மேல் வந்த அடி
யைத்தட்டிப் பகாசுரனை அடித்தான். பகாசுரன் அந்த
அடியைத்தட்டி வீமனைப் புடைத்தான். இவ்வாறு
ஒருத்தரை யொருத்தர் வெற்றிபெற வேண்டுமென்
கிற விருப்பத்தினால் இருவராலும் ஒடிந்த மரங்கள்
அளவில்லை. பின்னும் இருவரும் பலமலைகளையும்பிடுங்கி
ஒருவர்மீது ஒருவரெறிந்தார்கள். அம்மலைக ளொன்
றோடொன்று பட்டுப் பொடிப்பொடியாகப் பூமியிலு
திர்ந்தன. தப்பிவந்து மேல்விழுமாகில் அம்மலைகள்
பொடியாகிறதேயன்றி அதனால் இருவர்க்கும் ஒருவ
ருத்தமு நேரிடுகிறதில்லை. இவ்வாறு சிலநேரம் மரயு
த்தமும் மலையுத்தமுஞ்செய்து பின்னு மல்யுத்தமு
ஞ்செய்ய ஆரம்பித்து ஒருவரை ஒருவர் பூமியில் தள்
ளுகிறதும், அந்தரத் தெறிகிறதும், வாரி அடிக்கிற
தும், இந்தப்பிரகாரம் சிலநேரம் போர்செய்து; பின்
னும் ஒருவர்க்கொருவ ரிளைக்காமல் தொந்தயுத்தஞ்
செய்யத் தலைப்பட்டார்கள். தலையோடுதலையும், நுத
லோடுநுதலும், மூக்கோடுமூக்கும், பல்லோடுபல்லும்,
தோளோடு தோளும், மார்போடு மார்பும், தாளோடு
தாளுந்தாக்கி; இடசாரிவலசாரி வலசாரியிடசாரியாக
வும், முன்சாரி பின்சாரியாகவும் வந்து தாங்கள்கற்ற
வித் தைகளை யெல்லாங் காட்டிப் போராடினார்கள்.

இவ் விருதிறத்தாரும் போராடுகிறதினால் அவ்
வனமெல்லாம் தூளிப்படலமாயிற்று. இப்படி ஒருஜா
மபரியந்தம் போராடி முடிவில் வீமன் அதிகவேகங்
கொண்டு ஒரு உதை உதைத்தான். அவ்வுதை அவ்வ
சுரன் விலாவிற்பட்டு விலாவெலும்பு முறிந்தது. உட
னே மற்றொரு உதை உதைத்தான். அவ்வுதை தோ
ளிற்பட்டு தோள்முறிந்தது. பகாசுரன் வீமன்பலத்
துக்குச் சரியானவனாகையால் இவ்வுதைகளைப்பட்டுக்
கொண்டும் சும்மாயிருந்தவ னல்ல. தன்வல்லமைகொ
ண்டமட்டும் குத்தியும், அடித்தும், உதைத்தும், இடி
த்தும், மிதித்தும், முட்டியும், தட்டியும், தூக்கியும்,
தாக்கியும், இவ்வாறு சிலநேரம் போராடுகிறான். அப்
போது பகாசுரனுக்கு முடிவுகாலம் சமீபித்தபடியால்
வரவரப் பலங்குறைந்து வருவதுமன்றி பசிவேதனை
யாலும் மெய்தளர்ந்து வந்தது. அதனாற் பகாசுரன்
திகைத்து மனங்கலங்கி நெஞ்சுலர்ந்து, ஆ! ஆ!
இதென்ன விபரீதம்? நெடுநாளாக இந்த வனத்திலிரு
ந்து இவ்வகைப்பட்ட மனிதர் அநேகம்பெயரை நம
துகையினாற்குத்தி இரத்தங்குடித்துத் தின்றிருக்கி
றோம். இன்றையதினம் இந்தப்பிராமணப் பையலிடத்
துச்சிக்கிக்கொண்டுபூனைவாய்ப்பட்ட எலியைப்போல்
துன்பப்படநேரிட்டது. இனியென்ன செய்கிறது?
ஓடிப்போவோமென்றாலும் காலோய்ந்து போகிறது.
நின்று யுத்தஞ்செய்வமென்றால் பசிதாகத்தால் மெய்
சோர்ந்து விடுகின்றது. இனி தீராது. காலகதிப்படி
முடிகிறதென்று அங்ஙனே பெரியவியாக்கிரமம்போல்
ஓர்பாய்ச்சற்பாய்ந்து, அதிக ஆக்கிரமங்கொண்டு வீம
னைக் குத்தினான். அக்குத்து கோடைகாலத்து இடி
யிடித்தாலெப்படியோ அப்படியிருந்தது. வீமனுக்கு
ஜெயகாலம் நேரிட்டிருக்கின்றதினாலும் நாகலோகத்
தாரால் அதிகபலம் வந்திருக்கிறதினாலும் கிஞ்சித்து
வருத்தமடைந்தவனாகி உடனே அதிக சினங்கொண்
டெழும்பித் தேவருமஞ்சக் கெற்சித்துப் பகாசுரன்
மேல்விழுந்து அவனைப்பிடித்து உடலையொடித்துத்
தலையைத்திருகித் தூரத்தி லெறிந்து, உடலத்தை
அங்கிருக்கும் வண்டியின்மீதேற்றி அவ்வண்டியை மசா
னபூமியிலிழுத்துவந்து, அவ்வண்டியையும் சில உலர்
ந்தமரங்களையும் காஷ்டமாக்கிக் கவந்தத்தை யதிற்கி

டத்தி நெருப்பிட்டு நீறுகிற பரியந்தம் அவ்விடத்திலிருந்து, பின்பு ஒரு குளத்தில் வந்து ஸ்நானஞ் செய்து நியமநிஷ்டைகளையு முடித்துக்கொண்டு நகரத்தை நோக்கி வருகின்றான்.

இங்கே வேதியரிருக்கிற அகரத்துக்கு(டுய) ஏர் எருமைக்கடாக்களும் முன்னமே வந்தன. அவைகளை வேதியர்கண்டு, ஓ! ஓ! மோசம் வந்தது. நாம் அனுப்புவித்த பிராமணன் பகாசுரனிடத்துச் செல்லவேயில்லை. சென்றால் எருமைக்கடாக்கள் வரமாட்டா. அவன் எங்கேயோ தூங்குகிறான். அல்லது அந்தப் பகாசுரனைப்பார்த்துப் பயந்து மாட்டை அவிழ்த்துவிட்டு வண்டியைக் காட்டில் நிறுத்தி ஓடிப்போய்விட்டதாகக் காண்கிறது. என்று தீர்மானித்து இனி நம்மால் இவ்வூருக்குக் கெடுதிநேரிட்டுவிட்டது. அரைக்கணத்திற் பகாசுரன் வருவான். யார்யாரைக் கொல்லுவானோ தெரியாது. என்று கைநெரித்து வருத்தமடைந்து, சுற்றத்தாருடன் கலந்து இவ்வசனங்களைப்பேசிப் பயந்து, ஐஐயோ !! (கூலிப்படை குத்துமா ? தாலிப்படை தாங்குமா?) என்பதுபோலாயிற்றே: நாம் சுகப்படத்தானே நரப்லி கொடுக்கிறது. அதற்கு அன்னிய மனிதனை அனுப்பிவைத்தால் அவனுக்கென்ன அக்கறை? ஆர்தான் உயிர்கொடுக்கத் துணிவார்கள்? இனி நாமென்னசெய்வோம்? இதோ பகாசுரன்வந்து நம்மை அதமாக்குவானே: இன்றோடே வேத்திரகீயம் பாழாகப் போமே: என்று பலபேர் பலவாறாகக்கூறி மனங்கலங்கிக் கடலொலிபோல், ஒரு கோஷ்டமிட்டழுதார்கள். பிராமணரெல்லாருங் கூடியழுத பெருங் கோஷ்டத்தை அவ்வேதியன் வீட்டிலிருந்த குந்திதேவி தருமராஜன் முதலானவர்கள் கேள்விப்பட்டு வெளியேவந்து, என்ன என்னவென்றுவினவினார்கள். அந்நகரத்து வேதியர் முகவாட்டமுடையவர்களாய், ஓ அதிதிகளே ! பகாசுரனுக்குப் பலியிடுகிறதற்காக உங்களிலொருவனை அனுப்பி வைத்தோமே. அவன் அப்பகாசுரனைப் பார்ப்பதற்கு அஞ்சியோ ? அல்லது அவனிடத்திற்குப் போவ தெற்றினுக்கென்று நினைத்தோ ? வண்டியிற்பூட்டிய எருமைக்கடாக்களை அவிழ்த்து ஓட்டிவிட்டு ஓடிப்போனதாகத் தோன்றுகிறது. இதுவரையில் நாமனுப்பும் வஸ்துக்களில் ஒன்றுந் திரும்பிவந்ததில்லை. இன்றைக்கு எருமைகள் வந்துவிட்டன. அதைக்கண்டு இவ்வளவு கலவரப்படுகின்றோமென்றார்கள். தருமன் முதலானவர்கள் அவ்வேதியரை நமஸ்கரித்து, ஓ ஐயமீர்! அவசரப்படாதீர்கள். நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். பலிக்காகச் சென்ற மனிதன் லேசானவனல்ல. பகாசுரனுக்கு அவன் மிர்த்தியு தேவதையென்று நம்புங்கள். நீங்கள் வருத்தப்படாதிருங்கள். அந்தமனிதன் பகாசுரனைக் கொன்றுபோட்டு எருமைகளை அவிழ்த்து விட்டவனாயிருக்கின்றது. அதனால் எருமைகள் வீட்டுக்கு வந்தன. எல்லாம் இன்னும் சற்றுநேரத்துக்குள்தெரியும் வாருங்களென்று யாவரையும் அழைத்துக்கொண்டு வீமன் வரும்வழியை எதிர்பார்த்திருந்தார்கள்.

வீமன் பகாசுரனை வெற்றிபெற்ற மனக்களிப்பினால் மிகுந்த இறுமாப்புடன் பர்வதம் கால்கொண்டு நடந்துவந்தாலெப்படியோ அப்படி எதிர்வந்தான். அவனைப் பிராமணர்களெல்லாரும் பார்த்து ஐயுற்று நிற்கிறபோது வீமன் குந்திதேவியையுந் தமயனையும் வணங்கிப் பின்பு எதிர்வந்த வேதியரைத் தொழுது, தம்பிமார்களையும் ஆலிங்கனம் செய்துகொண்டான். இதற்குள் இந்த ஐவரையும் பாதுகாத்துவருகிற வேதியன் வீமனைநோக்கி, அப்பா பிராமணோத்தமா ! நீ பகாசுரனுக்குப் பலியாகச் சென்றவனாயிற்றே எது திரும்பி வந்ததென்றுகேட்க வீமன் வணங்கிச்சொல்லுகிறான். ஓ ஸ்வாமி ! உங்களுடைய ஆசீர்வாத வல்லமையினால் அந்தப் பகாசுரனை யமபுரத்துக்கு அனுப்பி அவன் கவந்தத்தை அன்னங்கொண்டு போயின வண்டியினால் நீறாக்கி விட்டு ஸ்நானஞ்செய்து வந்தேனென்றான். இதனைக்கேட்ட வேதியர்களனைவரும் முன்னம் எவ்வளவு வருத்தப் பட்டார்களோ அதற்குப் பதின்மணங்கான மகிழ்வைக் கொண்டு பூரித்து, அங்கிருந்தபடி நகரத்தை அலங்கரிக்கத் திட்டஞ்செய்து பூரணகும்ப முதலானவைகளையும் வரவழைத்து மாங்கல்ய ஸ்திரீகளெல்லாம் மங்களம்பாட வேத வேதியர்கள் மந்திராக்ஷதைகளிறைக்க நகரத்தைத் திருவலம்வந்து, அந்த ஐவரையும் அவரவர்கள் வீட்டுக்கு அழைத்துப்போய் மரியாதைகளைச்செய்து இருப்பிடத்திற் கொண்டுவந்துவிட்டு, வீமனையும் தருமன் முதலானவர்களையும் ஆதரனைசெய்து வராநின்ற வேதியரையும் அவர் மனைவியாரையும் நோக்கிச் சொல்லுகின்றார்கள். ஓ புண்ணியவான்களே ! இந்த ஒரு மஹா புருஷனால் இவ்வகாரத்திலிருக்கும் நாங்களெல்லாம் உயிர்பெற்றது மன்றிப் பெருவாழ்வு மடைந்தோம். அவனையும் அவனைச்சேர்ந்த மற்றைவரையும் பாதுகாத்துவரும் நீங்கள் சந்திர சூர்யருள்ளளவும் பெயருங் கீர்த்தியும் பெரும்பயனும் படைத்தீர்கள். என்று பலவாறு புகழ்ந்து அன்றுமுதல் அதிதிகளாகிய ஐவருக்கும் அவர்கள் தாய்க்கும் யாதொரு குறைவில்லாமல் விருந்துபோசன முதலிய வைபவங்களைச்செய்து தெய்வத்தைப்போல் எண்ணிப் பயபக்தியாய்ப் பணிந்து வந்தார்கள். இந்த ஐவரும் மிகுந்த வணக்கமுடன் அவர்கள் களிப்பெய்துமாறு சகலவித உபசாரத்தோடு வேண்டிய உபகாரங்களனைத்தையுஞ் செய்துகொண்டு, அவர்களை மாறாமற்றொழுதிருந்தார்கள்.

வேத்திரகீயச் சருக்கம்

முற்றிற்று.

எட்டாவது.

சுயம்வரச் சருக்கம்

கண்ணன் துதி.

காயமும் புலனுமந்தக் கரணமுமாகி யெல்லாத்
தேயமும் பரந்துநின்று மீளவுஞ் சித்துஞ்சுத்த
மாயமு மாகிநீங்கி வருபெரு ஞானனந்த
மாயவெம் பெருமானென்னை யாண்டரு ளாழியானே.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இவர்கள்சரித மிவ்வாறாக அத்தினபுரத்தில் துரியோதனன் முதலானவர்கள் ஐவர்க ளிறந்தாரென்கிற கருத்தை உட்கொண்டு, மனவூக்கத்தோடு சிலாக்கியமான போகபாக்கியத்தை அனுபவித்து வந்தார்கள். அதற்குமேல் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேளும். துரோணாசாரியைக் கொல்ல ஒரு புத்திரனையும் குருவின் வாக்கியப்படி தன்னைக்கட்டிக்கொண்டுபோயின பற்குனன் தோளுக்கியைய ஒரு புத்திரியையும் பெற்ற பாஞ்சாலன் ஐவர் அரக்குமாளிகையிலிறந்துவிட்டாரென்கிற சேதியைப் பல பெயர்களாற் கேள்விப்பட்டு அதிக துன்பமடைந்து கொலுக்கூடத்தில் வந்து, அங்கு நிறைந்திருக்கிற மந்திரிகள் - பிரதானிகள் - பட்டவர்த்தனர் - மகுடவர்த்தனர் - முதலானவர்களைநோக்கி, ஓ சபையாரே! ஆதியில்துரோணாசாரி என்சபைக்குவந்தபோது அவரை அலக்ஷியப்படுத்தினதற்காகச் சினங்கொண்டு, என்மாணாக்கரால் உன்னைக் கட்டிவரும்படி செய்து நானிருக்குஞ்சபையிற் பங்கப்படுத்துகிறேனென்று சபதம்பண்ணி யிருந்தாரே: அவ்வாறு குருகுல மக்களிற் பற்குனனால் என்னைக் கட்டிப்போய்ச் சபையிற்பங்கப்படுத்தினர். அன்று சபையாரறிய நானொரு சபதங்கூறினேன். அஃதென்னெனில்- என்னைப் பங்கப்படுத்தின துரோணரைக்கொல்ல ஒரு புத்திரனையும் என்னைவெற்றிபெற்ற பற்குனன் தோளுக்கியைய ஒரு புத்திரியையும் பெறுகிறேனென்று உறுதியாகச் சொல்லி, அந்தப்படி எனக்குக் கைகூடுமாறு அநேகம் பெரியோர்களை அடுத்து, முடிவில் உபையாசன்-யாசன் என்னும் பெயர்வகித்த இரண்டு பெரியோர்களாற் புத்திர காமேஷ்டியாகஞ் செய்து அந்த யாகத்தீயில் மக்களைப் பெற்று மகிழ்வடைந்திருந்தேன். இப்போது என்புத்திரிக்கு நியமித்தகணவனாகிய பற்குனன் தன் தமயன் தம்பிமார் அன்னை இவர்களோடு அரக்குமாளிகையில் வெந்து நீறாகி விட்டதாக உலகப் பிரசித்தமா யாவரும் சொல்லுகிறார்கள். எப்போதும் நீங்காமல் என்னுள்ளத்திற் குடிகொண்டிருந்த மகிழ்வுக்கு அழிவு தோன்றிற்று. இனிநான் என்னசெய்யப்போகிறேன்! புத்திரியோ மங்கைப்பருவ மடைந்திருக்கிறாள், அவளைக் கன்னியாமாடத்தில் வைத்து எவ்வாறு பார்ப்பேன்? அல்லது மற்றயாருக்காவது மணம் புரியலாமென்றால் என்வாக்குக் கழிவுவருகிறதுமன்றி, ஒருவனுக்கு நியமித்தபெண்ணை மற்றொருவனுக்கு மணம் புரிவித்தானென்கிற அபவாதமும் நேரிடும். இதற்கென்ன செய்வேனென்று வருந்திக் கூறினன். இப்படி வருந்தி ஆறாமைப் படுகின்ற அரசனைவணங்கி மந்திரிகள் சொல்லுகிறார்கள்.

ஓ மண்டலேஸ்வரா! உமதுவாக்குக் கழிவுவாராது. ஏனென்றால் - குருகுலமக்களிற் பாண்டுபுத்திரர்கள் ஐவரும் தெய்வானுகூலத்தினாற் பிறந்தவரென்று பெரியோர்களாற் கேள்விப்பட்டிருக்கிறோம். தங்கள் புத்திரியும் மந்திரானுகூலத்தினாற் பிறந்திருக்கிறாள்- ஐவர்கள் அரக்கு மாளிகையி லிறக்கார்கள். அப்படி அவர்க ளிறப்பார்களாகில் தெய்வ மகத்துவம் என்ன இருக்கின்றது? அப்பால் வேதநிர்ணய மென்னத்திற்காம்? பாண்டவர்களோ மெத்த மாக்ஷிமை யுடையவர்கள். அவர்களுள் வீமன் வாயுபகவானுடைய புத்திரன். அவனை மாருத சகாயனாகிய அக்கினிபகவான் தோடவே மாட்டான். சுடவுமாட்டான். அவனைப்பற்றி மற்ற நால்வரும் பிழைத்திருப்பார்கள்: பிழைத்திருந்தாற் சேதி தெரியலாமே யென்றாலோ, ஏதோ ஒருகாலகதியா லுருமறைந்து பேழையிற்பாம்படங்கி இருப்பதுபோல் இருப்பார்களே அன்றி இறக்கவில்லையென்று உறுதியோடுரைத்தார்கள். பாஞ்சாலன் மந்திரிகள்சொல்லும் இவ்வார்த்தையைக்கேட்டு, ஓ மந்திரிகளே! நீங்கள் என்னைச் சுத்தப் பயித்தியக்காரனாகத் தீர்மானிக்கின்றீர்கள். நானென்ன இலேசா விசாரித்திருப்பேனோ? துரியோதனன் குந்திமுதலிய அறுவர்களின் அஸ்திகளைப் பொறுக்கிவைத்து நீர்க்கடன் முதலியவற்றையுஞ் செய்தானாம். இன்னும் (குட்டிச் சுவற்றில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா?) எங்கேயாவது சாவுசமாச்சாரம் பொய்யாகுமாவென்று துயரப்பட்டான். மந்திரிகள் துயரப்படுகிற அரசனை நோக்கி, ஓமண்டலேஸ்வரா! தாங்கள் வருத்தப்பட வேண்டியதில்லை: நாம் சோதிடசாஸ்திரிகளை அழைத்துக் கேட்டால் உள்ளது உள்ளபடி விளம்புவார்கள். தாங்கள் சஞ்சலப்படா திருங்கள். என்று விசனத்தை மாற்றி ஜோதிட சாஸ்திரத்தில் வல்லமையாளரா யிருக்கிறவர்கள் இக்கண மிராஜசமுகத்துக்கு வருகிற

தென்று தேசமுழுதும் பறையறை வித்தார்கள். அப்
பறை யோசையைக் கேள்விப்பட்டு அநேக சோதி
டசாஸ்திரிகள் இராஜசபைக்கு வந்தார்கள். வந்தவர்
களுக்கெல்லாம் தகுந்த மரியாதைகளைச்செய்து பொ
ற்பீடத்தி லிருக்கச்சொல்லிப் பாஞ்சாலனும் மந்திரி
மார்களும் சொல்லுகிறார்கள்.

பாஞ்சாலன் அசரீரியால் பாண்டவ ரிருக்கையறிதல்.

ஓ சோதிட சாஸ்திரிகளே! குருகுல மக்களிற்
பாண்டுபுத்திரர்கள் உயிரோடிருக்கின்றார்களா ? அல்
லது அரக்குமாளிகையில் வெந்துநீறாயினார்களா?இத
னை நன்றாகவாய்ந்து எங்கட்குச் சொல்லுங்க ளென்
றனர். அதுகேட்ட சோதிடர் உடனே சோதிடநூல்
களைச் சோதித்துப்பார்த்து அரசனை நோக்கி, ஓ மண்
டலேஸ்வரா! பஞ்சவர் எஞ்சவில்லை. மஹாகனவான்
கள். அவர்க ளிறந்து விட்டதாய் லோகப்பிரசித்த
மாக வழங்கின போதிலும், சோதிட சாஸ்திரத்தை
ஆராய்ந்து பார்க்கு மளவில் அவர்க ளிறந்ததாகக்
காணப்படவில்லை, ஐவரும் பஞ்சகர்த்தர்களைப்போல்
மேன்பாடான இடத்தில் இருக்கிறார்கள். இதற்கொ
ருசந்தேகமுமில்லை யென்றார்கள். அதைக்கேட்ட பா
ஞ்சாலன் ஆச்சரியப்பட்டு, நல்லது எல்லாம் அறிந்து
கொள்ளுவோம். நமது குருவாகிய உலூகமஹாமுனி
யை அழைத்து வாருங்களென்று மந்திரிகளுக்குக்
கட்டளையிட்டான். உடனே மந்திரிகள் ஒரு முத்துச்
சிவிகையை யெடுப்பித்துக் கொண்டுபோய் உலூகம
ஹாமுனியை வணங்கி, ஓ ஸ்வாமி! தங்களை அரசன்
அழைத்து வரச்சொல்லி எங்களுக்குக் கட்டளை யிட்
டாரென்று விண்ணப்பஞ்செய்தனர். உடனே உலூக
மஹாமுனி விரைந்தெழுந்து முத்துச்சிவிகையிலேறி
இராஜன் சமூகத்துக்கு வந்தார். அரசன் குருவருவ
தை யறிந்து எதிர்கொண்டுபோய் அழைத்துவந்து
பொற்பீடத்திலிருத்திச் சோடச உபசாரமுஞ்செய்து
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து கைகூப்பி நின்
றான். உலூகமஹாமுனி வணங்கிய அரசனுக்கு ஆசி
கள் புகன்று அருட்பார்வையுடன் நோக்கி அவன்முக
ம்வாடி இருப்பதை அறிந்து, அடடா!! அரசன் ஏ
தோ ஓர் துயரத்தை மனதில்வைத் திருக்கிறானென்
று தீர்மானித்துச் சொல்லுகிறார்: ஓராஜராஜேஸ்வரா!
சூரிய உதயத்தில் மலர்ந்திருக்கும் கமலமலர்போலிரு
க்கிற உன்முகம் சந்திரனைக்கண்ட தாமரைபோ லிரு
க்கவேண்டிய காரணமென்னவென்றார். அதற்கரசன்
ஐயனே! உலகாளும்வேந்தருக்குத் தாய்-தந்தை-தம
யன்-தம்பி-மைத்துனன்-மாமன்-அன்பன்-மந்திரி-இவ
ர்முதலானவர்களெல்லாம் ஒவ்வொருகாரியங்களிற் கு
ருவாகின்றார்கள். ஆதலால் அவர்களிடத்தில் அரசனு
யினன எந்தெந்தக் காலத்தில் [illegible] க்கவே
ண்டுமோ, அந்தந்தக்காலத்தில் அவ்வாறு வசனிக்க

வேண்டிய முறைமை. தற்காலத்தில் தாங்கள் அவர்
களனைவருமாய் ஓருருக்கொண் டெழுந்தருளியதால்
இனி அடியேற்கென்னகுறை?என்று சொல்லி இரண்
டுகண்களிலும் நீர்சோரக் கரங்களைக்கூப்பிச் சிரசின்
மேல் வைத்துக்கொண்டு, ஓ திரிகாலக்கியான சம்பன்
னரே?எளியேன் வமிசத்துக்குக்குருவாகிவிளங்கி எங்
கள் முன்னோர்களுக்கு யாதொரு குறைவந்தபோதி
லும் அதனைத்தங்களுடைதாகப் பாவித்து அக்குறை
யைத்தீர்த்துக்காத்து இரக்ஷிக்கும் ஆண்டவர்நீரேயன்
றோ? இன்று என்னை விழுங்கப்பிடித்த துன்பமென்
னு முதலையைத் தங்கள் கிருபையாகிய சக்கரத்தை
யேவி அறுத்து என்னை யாளவேண்டும். இதுதான்
அடியேன் செய்துகொள்ளும் விண்ணப்பமென்று பல
வாறு துதித்துப் பின்னுஞ் சொல்லுகிறான்:

ஓ ஸ்வாமி! ஆதியில் துரோணரைக் கொல்ல ஒ
ருபுத்திரனையும், என்னை வெற்றிகொண்ட பற்குனன்
தோளுக்கிணங்க ஒருபுத்திரியையும், தங்கள் கிருபா
கடாக்ஷத்தினாலும், உபையாசன்-யாசனென்னும் பெ
ரியோர்களாலும், புத்திரகாமேஷ்டி யாகத்தீயிற் பெ
ற்றுக்கொண்டேனே: அப்புத்திரிக்கு மங்கைப் பரு
வம் வந்தது. அவளுக்கு நியமகஞ் செய்திருந்த பற்
குனன் அரக்குமாளிகையில் தமயன் அன்னை தம்பி
மாரோடு மிறந்துவிட்டதாக லோகம் சொல்லிக் கொ
ள்ளுகிறது. ஆதலால் இதற்குத் தங்கள் திருவடியே
கதியென்று குப்புற விழுந்து கும்பிட்டான். உலூ
கமஹாமுனி அரசனை ஆதரித்தெடுத்து இனிய வச
னங்களால் விசனத்தைமாற்றிச் சிங்காதனத்திலிருத்
தித் தாமும் அவனருகிலுட்கார்ந்து, அப்பா இராஜசி
காமணியே! நீயேன்கிலேசப்படுகிறாய்? வருத்தப்படா
தே. நான் புகல்வதைக்கேள். உலகத்தில் யாராவது
புத்திரனில்லாமல் வருத்தமுற்றுப் பெரியோரைப்
போயடுத்தால், அவர்கள் முன்பின் யோசித்துத் தங்
தள் கியானதிருஷ்டியால் திரிகாலத்தையு முணர்ந்து
யாதொரு தடையும் வராதிருப்பதா யிருந்தால்தான்
யாகஞ்செய்ய யத்தனிப்பார்கள். இயாதாமொருதடை
வருகிறதாயிருந்தால் யாகஞ்செய்யப்பாத்தியப்படார்
கள். உனக்குப் புத்திரகாமேஷ்டியாகஞ் செய்தவர்க
ள் மஹாமூர்த்திகள். அவர்கள் திரிகாலப் பிரமாணங்
கண்டுதான் செய்தார்கள். உன்புத்திரி பற்குனனுக்கு
மாலையிடாமற் போகிறதாயிருந்தால் யாகத்தீயில் அக்
கினிபகவான் அப்புத்திரியை ஏந்திவருவானா? எந்த
விதத்திலாவது உன்புத்திரி பற்குனனை மாலைபுனைவா
ள். அந்த உபையாசன் - யாசன் என்னும் பெயர்வகி
த்த பெரியோர்கள் திறங்களை என்னாற் சொல்லக்
கூடாமையா யிருந்தபோதிலும், ஒருவித திருஷ்டாந்
தத்திலேயே அவர்கள் வல்லமையாளரென்று தோன்
றுகின்றது. அஃதெப்படியென்னில் - புத்திரகாமே
ஷ்டியாகத்தில்வந்த பிண்டத்தைக்கொடுக்கும்போது
உன்மனைவி தீண்டாதவளாயினாள். அக்காலத்தில் தங்
[illegible] யக்குண்டத்திற்றானே அப்பிண்டத்

தை இட்டு, வேறொருமந்திரத்தை யுச்சரித்துப் புத்திரனையும் புத்திரியையும் வரும்படிசெய்தார்கள். இந்த உலகத்தில் வெகுபெயர் அனேக யாகஞ்செய்தார்கள். இவ்வாறு செய்தவர்களுமுண்டோ? அவ்வளவு வல்லமையாளர்செய்த வேலைக்கொரு தீங்குநேரிடுமோ? நேரிடாது. பஞ்சவர்கள் அரக்குமாளிகையி லிறந்துவிட்டதாகக் கேள்விப்பட் டிருக்கிறோமே யென்றாலோ, அரக்குமாளிகை எரிந்தது உண்மைதான். அதிலவர்களிறந்தா ரேன்பது அபத்தம். ஏனென்றால் - பற்குனனென்ன சாமானியனா? அநேககாலந் தவஞ்செய்தாலும் பெறக்கூடாத தநுசாஸ்திரவித்தைக ளனைத்தையும் அங்கை நெல்லிக்கனிபோலத் தன்னை அடைந்திருக்கப்பெற்று விளங்குகிறவன். வில்விநோதன். மாளிகை அனற்பட்டபோது அவனே அம்மாளிகையி லிருப்பானாகில், வில்லெடுத்து வருணாஸ்திரத்தைத் தொடுக்க நேரமில்லாமற்போனாலும் வருணேஸ்வரமென்கிற தெய்வீகமந்திரத்தை யறிந்த அவன் அம்மந்திரத்தை யுச்சரித்தால் உடனே அனலவிந்துபோம். ஒருவேளை அனலைக்கண்டு அஞ்சி மெய்மறந்தானென்று சொல்வோமாகில், சமயத்தில் யுக்திதோன்றுதல் அவனுக்குச் சுவாதீனமாதலாற் சும்மாயிருக்கமாட்டான். ஆதலால் நீ கவலைப்பட வேண்டாமென்று கழறினர்.

இவை யனைத்தையுங்கேட்ட அரசன் கிஞ்சித்து ஐயந்தீர்ந்து, குருவைநோக்கித் தங்கள்வாக்கின் உறுதியால் நம்பவேண்டியதா யிருக்கிறதேயன்றி என் மனவுறுதியால் நம்பக்கூடவில்லை. ஆனாலும் அடியேன் ஒருவிண்ணப்பம் பண்ணுகிறேன். அவ்விண்ணப்பத்தை அங்கிகாரஞ்செய்து அருள் புரிவீர்களாகில் அப்போது என்சந்தேகம் நீங்குமென்றான். உஜூகமஹாமுனி அஃதென்னையென, ஓ ஸ்வாமி! தங்களுக்கு அசரீரிவசியமாதலால் பூசைமுகத்தில் அவ்வசரீரியை வினவி எனக்குச் சொல்லவேண்டுமென்று தொழுதான். உஜூகமாமுனி அக்கருத்துக்கிசைந்து, அரசனிடத்து விடைபெற்றுத் தன்னாசிரமத்திற்குச் சென்று ஸ்நானஞ்செய்து அசரீரியை வரத் தியானித்தார். உடனே அசரீரி தோன்றினள். அந்த அம்மனை முனிவர் வணங்குமுறையுடனே வணங்கி, ஓ அம்மணி! பாண்டுபுத்திரர் அரக்குமாளிகையில் எரிந்து நீறாகிவிட்டார்களா? அல்லது உயிர்ச்சேதமின்றி யிருக்கிறார்களா? என்றுவினவ அசரீரி சொல்லுகிறாள்: ஓ உஜூகமஹாமுனியே! நீரேன் வருத்தப்படுகிறீர்? அப்பாண்டு புத்திரர் உயிருடனே இருக்கின்றார்கள். இதை உறுதியாக நம்புமென்றுசொல்லி மறைந்துவிட்டாள். உடனே உஜூகமஹாமுனி பூசையைப் பூர்த்திசெய்து அரசனிடத்துவந்து, ஓ எனது அன்பனே! பூசைமுகத்திற் பாண்டுபுத்திரர் பிராணனோடிருக்கிறார்க ளென்று அசரீரி யுரைத்து மறைந்தனள். இதைக்குறித்து யோசிக்கவும் [illegible] யும்

வேண்டியிருக்கிறபடியால், வேதவியாசர் வரவேண்டும். அவர்வந்தால் எல்லாம் நிறைவேறும். அவர்விரைவில் வரும்படி உமதுமனதில் தியானியுமென்றார். அரசன் குருவாக்கியத்தைச் சிரமேற்கொண்டு வேதவியாசரை மனதில் நினைத்துப் பலவாறு துதித்தான். திவ்யக்கியான ஸ்வரூபியாகியும் பாண்டவர்கள்மீது அதிகசிரத்தை யுள்ளவருமாகிய வேதவியாசர் பாஞ்சாலன் நினைத்த க்ஷணம் கொலுமுகவாசலைக் குறுகினர். அரசன் திடுக்கென்றெழுந்து எதிர்வந்து மகிழ்வடைந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்தழைத்துப்போய் திவ்வியாதனத்தி லிருத்திச் சோடசஉபசாரமுஞ்செய்து சொல்லுகிறான்:

ஓ ஸ்வாமி! கொடிய வெய்யலிலகப்பட்டுத் துடிக்கும் புழுவுக்கு அகஸ்மாத்தாய் நிழலுண்டானதுபோலத் துன்பமாகிய வெய்யலிலகப்பட்டு வருந்தித் தளரும் எளியேனுக்குத் தாங்கள்வந்து முன்னின்றீர்கள். இனி எனக்கொரு குறையுமில்லை. இன்று நான் புனிதனானேன். என் மனக்குறையும் நிறைவேறிற்று. என்று பலவாறுபுகழ்ந்து, ஓ வேதநாதனே! பாண்டுமக்கள் அரக்குமாளிகையி லிறந்துவிட்டதாக லோகவதந்தி யுண்டாயிருப்பதை யான்கேட்டுக் கனவருத்தமுற்று என் குருவைக்கொண்டு பரிசோதித்தேன். அவர் அசரீரியாற் பாண்டவர்கள் உயிர்ச்சேதமின்றி யிருக்கிறார்களென்று தெரிந்துவந்து எனக்குரைத்தார். ஆனாலவர்கள் இன்னவிடத்தில் இன்னவுருவோடு விளங்குகிறார்க ளென்று தெரியவில்லை. என் புத்திரியோ மங்கைப்பருவ மடைந்தாள். அவளை ஐவரிற் பச்சைநிறத்தையுடையவனாகித் திறத்தில் உருத்திரனைப்போல் விளங்கிப் பங்குனிமாதத்திற் பிறந்தமையாற் பற்குனனென்றும், வெற்றியால் விஜயனென்றும், நிறத்தால் அருச்சுனனென்றும்பெயர்பெற்று விளங்குகிற கனவானுக்கு மணஞ்செய்யவேண்டுமென்று கருதி யிருக்கிறேன். அக்கருத்து நிறைவேறவும், அந்த அருச்சுனனைக் கண்ணாற்கண்டுமகிழவும், ஒரு தந்திரஞ்சொல்லவேண்டுஞ் சுவாமியென்றான். வியாசர் அரசனுக்குப் பலஆசிகள்வழங்கி, ஓபாஞ்சாலா! நீ பெற்றபுத்திரியென்ன இலேசாகப்பெற்ற புத்திரியா? அருமையான தவத்தைச்செய்து சாம்பவமூர்த்திக் கொப்பாகிய உபையாசன் யாசனென்னும் பெரியோர்களுடைய வேதமந்திர அநுக்கிரகத்தினாற் பெற்ற கன்னிகையன்றோ? அவள் அருச்சுனனுக்கு மனைவியாகாமற்போவாளா? நீவருத்தப்படாதே. நானொரு உபாயஞ் சொல்லுகிறேன். அவ்வாறு நீ செய்தாற் பாண்டவர்கள் எந்தவிடத்தில் எந்த உருவத்தோடிருந்தாலும் அந்த உருவத்தோடும் வந்து உன்குமாரத்தியை [illegible]புரிவதும்பாவாரகளென்று சொல்லி அவ்வுபாயத்தையுஞ் சொல்லுவதானார்.

வியாசரனுக்ஞையாற் பாஞ்சாலனிலக்ஷயக் குறியோடு சுயவரஞ்சாட்டடல்.

ஓ அரசனே! வில்லில் வல்லவராகி யிருக்கிற அரசர்களெல்லாம் கண்டவுடனஞ்சித் தெண்டனிட்டு மெய்நடுங்கப் பர்வதாகாரமாகயிருக்கிற ஒருவில்லும் தேவாஸ்திர முதலியவை நிறைந்த ஒரு அம்புப்புட்டிலும் வைத்து, வெளியில் (௭௰) அடி உயரமுள்ளதாயுள்ள இரண்டு கம்பங்களை (௭௰) அடி நீளப்பரப்பில் நாட்டி, (௭௰) அடி விட்டம்பூட்டி, அதற்குமேல் இரட்டித்து (௭௰) அடிக்கம்பம் நாட்டி, அதன்மேல் இடைவிடாமற் சுழலும் சக்கரத்தைவைத்து, அந்தச் சக்கரமத்தியில் மச்சக்குறியைப்பூட்டி, அதிற்போட்டவிட்டத்துக்கு மும்மூன்று துளையுண்டாக்கி, பூமியிற் பெரிய ஒரு வெள்ளிக் கடாரம் வைத்து, அதில் மஞ்சள் நீரை நிறைத்து, அவ்விட்டத்தின் துளைகள் அந்நீரில்தோன்றவும் உபாயமில்லாமற் பார்ப்பவர்கள் சாயல் அத்துளையை மறைக்கவும் நேர்படவைத்து, அந்தவில்லைவளைத்து நாணியேறிட்டு மஞ்சள்நீரிற்றோன்றும் துளைக்குறியின் வழியாக மூன்றுகணைகளைத் தொடுத்து மேற்சுழலும் சக்கரத்தின் முனைவழியிற் கணைகளைப்போக்கி மச்சக்குறியை முன்னுதாய் விழுத்தி உடனே அம்மச்சம் அச்சக்கரத்துக்குச் சரியாக வருகிறதற்குள் சக்கரத்தை விழுத்தி மச்சத்தையும் சக்கரத்தையும் பூமியில் விழுமுன் கணைதொடுத்து அவ்விரண்டையுங் கரத்திலேந்தினவர் எவரோ; அவர் துரோபதையை மாலையிடுவதற் குரியவர். ஆதலாலிதனை யாவருமறிய விளம்பரஞ் செய்வையாகில் இச்செய்கை அந்த அருச்சுனன் ஒருவனுக்கே யன்றி மற்றவருக்கு அசாத்தியமாக இருக்கும். உலகத்தில் வல்லமையான அரசர்கள் அநேகம்பெய ரிருப்பார்களே அவர்களுக்கு இந்தவில் வளையாதிருக்குமாவென்று நீ நினைப்பாய்: அதற்குயாம் ஒருநிர்ணயம் செய்கிறோம். அஃதியாதெனில் - அருச்சுனனுக்கு மாத்திரம் வில்வளையவும், மற்றவர்களுக்கு அந்தவில்வளையாதிருக்கவும், அதில் தருமதேவதையை ஆவாகனஞ் செய்து வைக்கிறோம். நீ உன்புத்திரியின் வடிவத்தைப் படத்தில் எழுதி, அப்படத்தில் இந்தலக்ஷயத்தை விளங்கக்காட்டி, ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்து, அதற்குப் பதினோராநாள் வில்லைவளைக்கிறதென்றும் அதற்கேழாநாள் மணம் புரிதலென்றும் நாளைக்குறித்து மணவோலை யனுப்பிவிடு. ஐவரெங்கிருந்த போதிலும் வருவார்கள். அவருள் அந்த அருச்சுனன் உன்புத்திரியை மணம்புரிவானென்று வாழ்த்தி அரசன் மனதைத் தேற்றினார்.

அதனால் அரசன் அதிகமகிழ்வையடைந்து, தன்னருகிலிருக்கிற மந்திரிகளைநோக்கிப் புரோகிதரையும் சித்திரக்காரரையும் அழைப்பியுங்களென்று உத்தரவுபண்ணினான். மந்திரிகள் தக்ஷணம் அவ்விருவகையாளரையு மழைப்பித்து அரசன்முன் விடுத்தார்கள். அரசன் சித்திரக்காரரைநோக்கி, ஓ ஓவியரே! நீங்கள் என்புத்திரியைப்போற் படமெழுதி வாருங்களென்று கட்டளையிட்டு அவர்கட்கு நடத்தவேண்டிய மரியாதைகளனைத்து நடத்தி அனுப்பிவிட்டுப் புரோகிதரைநோக்கி, ஓ ஸ்வாமிகளே! என்புத்திரிக்கு மணம்புரிய யத்தனித் திருக்கிறேன். அதற்குத் தம்பப்பிரதிஷ்டைக்கு நாளும், அந்த நாளுக்குப் பதினோராம்நாள் வில்வளைக்கிற நாளும், அதற்கு ஏழாம் நாள் மணம்புரிவதற்கான நாளும் சந்திரபலம் தாராபலம் நிறைந்திருக்கிறதாக ஒரு திவ்ய லக்கினம் பார்த்துச் சொல்லுங்களென்று கேட்டான். அப்புரோகிதர்கள் அரசனினைத்தபடி பரிசோதித்து நன்னாளை நியமிக்க, அரசன் அத்தினத்தில் நகரத்துக்குள் விசாலமான விடத்தில் அரசர்களுக்கும் வேதியர்களுக்கும் தகுந்த சிங்காதனத்தோடு கல்யாணமண்டப மியற்றி, (௰௧-ம்)கால்நாட்டி இலக்ஷயக்குறியைவைத்து, வியாசரால் தருமதேவதையை வில்லில் ஆவாகனஞ் செய்வித்து, அவ்வில்லையும் அம்புப்புட்டிலையும் வைத்துச் சுயம்வரஞ் சாட்டினான். சித்திரக்காரர் அரசன் கட்டளையைச் சிரமேற்கொண்டு ஒருவர் முகத்தை ஒருவர்பார்த்து, உலகத்தில் யோனிவாய்ப்பட்டு உதிக்கின்ற மாதர்களை எழுதுவதற்கே நமக்குக் கனவருத்தமாயிருக்கின்றது. அப்படி யிருக்கப் புத்திரகாமேஷ்டி யாகத்தீயி லுற்பத்தியாகி, சொற்கமத்திய பாதாள லோகங்களி லிருக்கும் அழகிலுயர்ந்த மாதர்களெல்லா மயங்கித் தொழும்படியான சௌந்தர உருவத்தினைக்கொண்ட திரௌபதையை எவ்வாறெழுதப்போகிறோம்? எழுதாமல் விடலாமென்றால் நாமெடுத்த பெயர்க்கு இழிவு வருகிறதுமன்றி, அரசனால் தலைக்கும் தீங்குவருகின்றது. இனிநாமென்னசெய்யப்போகின்றோம்? இது விஷயத்தில் தெய்வச்செய லெப்படியோ அறியோம். ஆயினும் வீணாய்க் கவலித்திருப்பது காரியமன்று. அந்தப்புரத்தில் நமது குடித்தெய்வமாய்க் குலாவி யிருக்கும் திரௌபதியம்மனைக் கண்டு, நமது குலதேவதையையும் இஷ்ட தேவதையையும் தியானித்து எழுதுவோம். அதன்பின்பு தெய்வம் விட்டகதியாகுதென்று தெய்வத்தின்மேற் பாரம் வைத்து அந்தப்புரத்திற் சென்று, தோழியர்களுக்கு அரசனிட்ட கட்டளையைத் தெரிவித்தார்கள்.

தோழியர்கள் அதை அம்மனுக்கு அறிவித்து ஒரு கூடத்திற் புகைபோல் திரையிட்டு, அம்மனை அழைத்துவந்து அதில் நிறுத்தினார்கள். சித்திரக்காரர் அந்த அம்மனது திருவுருவத்தைத் திரைமத்தியிற்கண்டு ஒருவாறாகத் தெளிந்து பாதாதிகேசம் வரைக்கும் அவயவங்களை எழுதி, எந்தெந்த விடங்களில் எந்தெந்த வர்ணம் வைக்கவேண்டுமோ அவ்வவ் வர்ணங்களைவைத்துக்கூடியமட்டும் குறைவில்லாது முடித்தார்கள். ஆனால் அந்த அம்மனுருவம் சித்திரக்

காருக்கு மேல்வரிக்குறியாக இருந்ததேயன்றிச் சாத்தியமாக இருக்கவில்லை. அம்மன் அந்தப்புரத்துக்குட்சென்றாள். சித்திரக்காரர் எழுதியபடத்தை எடுத்துவந்து அரசனிடத்து வைத்து மிகுந்த பயத்தோடு நமஸ்காரஞ் செய்தார்கள். அரசன் அப்படத்தை நோக்கிக் கிஞ்சித்து வியப்படைந்து தகுந்த பரிசு கொடுத்துச் சித்திரக்காரரை அனுப்பிவிட்டான். சித்திரக்காரர் பரிசு பெற்றதற்காக மகிழ்வுறாமல், அரசனால் ஒருகெடுதியும் வராமற் காப்பாற்றின தங்கள் தங்கள் குலதேவதைகளையும் இஷ்ட தேவதைகளையும் நினைத்து வாழ்த்தி அதிகமகிழ்வை அடைந்து அவரவர்க ளிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள். அரசன் மந்திரிகளை நோக்கி, ஓ மந்திரிகளே ! இப்படத்தின் பின்புறத்தில் இலக்ஷயக்குறியை விளங்க எழுதி, மணவோலையையும் தூதுவர்கள்கையிற் கொடுத்து, இவ்வுலகத்துள்ள மன்னர்கட்கெல்லாந் தெரிவியுங்களென்று கட்டளையிட்டான். மந்திரிகள் அரசன் கட்டளைப்படி இலக்ஷயக்குறி முதலியவற்றை எழுதி தூதுவர்கையிற் கொடுத்து, தேசாதிபதிகளாகிய மன்னர் மன்னர்களுக்கு அனுப்பி வித்தார்கள். தூதுவர்கள் படத்தையும் மணவோலையையும் எடுத்துக் கொண்டு கடுங்காற்றினும் அதிவேகமாகச் சென்றார்கள். இங்கே வேதவியாசர் அரசனுக்குப் பல ஆசிகள் வழங்கி மணத்துக்கு வருகிறேமென்று விடைபெற்றுச் சென்றார். தூதுவர்கள் அங்கம்-அருணம்-அவந்தி-ஆந்திரம் இலாடம்-இவனம்-ஒட்டியம்-கருசம்-கலிங்கம- கன்னடம் - கன்னடம் - காசம்-காஸ்மீரம்-காந்தாரம் -காம்போசம் - கிராடம்- குரு-குடகம் - குருகு-குந்தளம்-குலிந்தம்-கூர்ச்சரம்-கேகயம்- கேரளம்-கொங்கணம்-கொல்லம் - கோசலம்-சகம்-சவ்வரம்-சாலவம்-சிங்களம்-சிந்து-சீனம்-சூரசேனம் - சோழம் - சோனகம்-திராவிடம் - துளுவம்-தெங்கணம்-நிடதம்-நேபாளம்-பாஞ்சாலம்-பப்பரம்-பல்லவம்- பாண்டியம்-புலிந்தம்-போடம் மகதம்-மச்சம் - மராடம் - மலையாளம்-மாளவம்-யுகந்தரம்-வங்கம்-வங்காளம் -விதற்பம்-என்னும்-ருசு - தேசத்திற் பாஞ்சாலந்தவிர - ருடு - தேசத்துஞ்சென்று, அவ்வவ் வரசர்களுக்குப் படத்தையும் மணவோலையையுங் காண்பித்து, இன்னும் குறுநில மன்னருக்கும் வேதியருக்கும் தெரிவித்து வந்துவிட்டார்கள்.

இப்படத்தைப் பார்வையிட்ட அரசர்கள் யாவரும் அதிகமகிழ்வெய்தி, அப்படத்தின் பின்புறத்திலெழுதியிருக்கிற இலக்ஷயக்குறியை நோக்கிக் கனவருத்தப்பட்டு, இந்தக்கன்னிகையை நாமெப்படி விரும்புகிறது ? அப்பா ! நமக்கு இசைந்த பொருளல்ல. என்று கைவிட்டு இந்த லக்ஷயப்படிசெய்பவர் நெடிய கடல் சூழ்ந்த உலகத்தி லொருவருமில்லை. ஆனால்- கல்வியொருவர் பங்கல்ல. எங்காவது அதிகவல்லமையாள ரிருப்பார்கள். இந்த லக்ஷயப்படி செய்வார்கள். அப்படிப்பட்ட கனவான்களைக் கண்ணார வாகிலும் கண்டு வருவோமென்று கருதி சில அரசர்கள்வந்தார்கள். சிலவரசர் அந்தலக்ஷயத்தையுங்கன்னிகையையும் பார்க்கிறதற்குக் கருத்தைக்கொண்டு வந்தார்கள். துரியோதனன் முதலாகிய நூற்றுவரோடு கர்னனுஞ் சகுனியும் நாமென்ன வில்லாளிகளல்லவா ? நாமே அந்த லக்ஷயத்தை நிறைவேற்றி மஹா ரூபவதியாகிய கன்னியை மணம் புரிவோமென்று கருதிப் புறப்பட்டார்கள். இந்தச்சேதியை யுணர்ந்த துரோணர் கிருபர் இவர்கள் அதிகமகிழ்வை அடைந்து, இந்த லக்ஷயத்தை நிறைவேற்றுவோர் ஒருவருமில்லை. அர்ச்சுனனொருவன்றான் நிறைவேற்றுவான். இது முன்னிலையில் அந்த அர்ச்சுனனைக் காணலாம். என்கிறகருத்தைக்கொண்டு அவ்விருவரும் குருகுல மக்களோடு கூடிவந்தார்கள். மற்ற அரசர்களும் வேதியர்களும் பாற்கடல் புரண்டு பாஞ்சால தேசத்தின்மேல் வந்தாற்போல் அந்தப் பிர்ம்ம க்ஷத்திரிய குலமடங்கலும் நகர்ப்புறத்து வந்து சேர்ந்தார்கள். வில்வளைக்க நியமித்த நாள் பதினொன்றில் ஒன்பது நாள்சென்றன. அதுவரைக்கும் மலைச்சார்பான வேத்திரகியத்தி லிருக்கும் ஐவருக்கு இந்தச்சேதி தெரியாது.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பஞ்சவர்க்குச் சுயம்வரச்சேதி யறிவித்தல்.

——(:o:)——

இப்படியிருக்கப் பத்தாநாள் பல்லாயிரங்கோடி அண்டங்களையும் தன்வயிற்றினிடமாக வைத்து வடபத்திரத்திற் சயனித்திருக்குஞ் சிறிய குழந்தையாகியும், இப்பாரதத்தை நடாத்திப் பூமிதேவிக்குச்சுமை நீக்குங் கருத்தை யுடையவராகியும், தேவகி தேவியிடமாகப் பிறந்து ஆயர்பாடியில் நந்தன்வீட்டில் வளர்ந்து வெண்ணெய் - தயிர் - பால் - இவற்றைத்திருடி ஆச்சியராற் கட்டுண் டடிபட்டவராகியும், ஐவருக்கு அம்மான்புத்திரனாகி அன்பு வைத்தவராகியும், கபட நாடக சூத்திராவதாரியாகியும் விளங்கும் ஸ்ரீகிருஷ்ணபகவான் இஃதுணர்ந்து; பாஞ்சாலன் அருமையான யாகஞ்செய்து பெற்றபெண்ணை அர்ச்சுனனுக்கே நியமித்திருந்தால் இப்போ தனுப்பிய மணவோலையும் படமும் ஐவருக்கேன் சேரவில்லை ? வனச்சார்பான இடமாதலால் தெரியாமற் றவறிப்போயிற்று. இனிச்சேதியை நாமேசென்று தெரிவிக்கவேண்டுமென்று தக்ஷணம் தமதுருவத்தை மறைத்து அதிக வார்த்திபமாகிய பிராமணரூபத்தைக்கொண்டு, தண்டு கமண்டலம் குடையுடனே தத்தடியிட்டு நடந்து வேத்திரகியத்துக்குவந்து ஐவரிருக்கும் மாளிகையிற் சென்றார்.

இவரது வரவைக்கண்ட ஐவரும் குந்திதேவியும் எதிர்வந்து அழைத்துப்போய் ஒருபீடமளித் திருக்கச்சொல்லி நமஸ்காரஞ்செய்து, ஓ ஸ்வாமி ! தாங்க

ளிருக்குமிடம் யாது? இந்த வேத்திரகியத்துக்கு வந்தகாரணமென்ன? என்று வினவக் கிழவேதியர் கிருபைகூர்ந்து ஐவரையும் பார்த்து, ஓ புண்ணியவான்களே! இயான் அதிதி. கங்கைமுதலிய நதியில் ஸ்நானஞ்செய்து திவ்ய க்ஷேத்திரங்களைத் தரிசித்துப் பூப்பிரதக்ஷணம் புரிவேன். இஃதல்லாமலும் மன்னவர்வாழும் பட்டணங்களிலுஞ் சென்று தருமசத்திரங்களிற் போசனமுண்டு அங்கு நடக்கும் அதிசயங்களையும் பார்த்துவருகிறதுண்டு. தற்காலத்தில் மேற்றிசையிற்சென்று அங்கிருக்கும் கோகர்ன முதலிய திவ்வியஸ்தலங்களைத் தரிசிக்கவும் திவ்யநதிகளில் ஸ்நானஞ்செய்யவுங் கருதி வந்தேன். வந்தவிடத்தில் வழிதப்பிப் பெருங்காட்டிற் போய்விட்டேன். அக்காட்டைக் கடந்து வருகிற போது இந்த நகரத்தைக் கண்டேன். இங்கு சற்றிளைப்பாறிப் போவோமென்று இவண்வந்தேனென்றார்.

அந்த அதிதிபேச்சை ஐவருநம்பி அவர்க்கு அதிந உபசாரஞ்செய்து, ஓ ஸ்வாமி! தாங்கள் மன்னர்கள் வாழுமிடங்களிற் சென்று அங்கு நடக்கும் அதிசயத்தைப்பார்த்து வருபவரென்று புகன்றமையால், அரசர்களுடைய நாட்டில் ஏதாவது அதிசயமுண்டாயிருந்தாற் சொல்லவேண்டுமென்ன வேதியர் சொல்லுகிறார்: ஓ விப்பிரர்களே! தற்காலத்தில் யாதொரு அதிசயமுமில்லை. ஆனால் (௫௬) தேசத்திலும் வளப்பங்களிற் சிறந்த பாஞ்சாலதேசத்தரசனாகிய துருபதன் அக்கினி வைசியரிடத்தில் வில்வித்தை கற்கிறநாளில், பாரத்துவாசர் புத்திரனாகிய துரோணாசாரியும் அந்த அக்கினி வைசியரிடத்தில் வில்வித்தை கற்றுக்கொண்டிருந்தாராம். அவரிடத்தில் இந்தத்துருபதன் அருமையாயிருக்கிற சிலவித்தைகளைக் கற்றுக்கொண்டு, தனக்குப்பட்டாபிஷேகமானகாலத்துப் பாதிராச்சியங் கொடுக்கிறேனென்று வாக்குத்தத்தஞ்செய்துபோனானாம். பின்பு அந்தத் துரோணாசாரி அவனிடத்திற் சென்றகாலத்து அவ்வரசன்கூறிய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற மனமில்லாமல் அயலானைப்போல எண்ணி மரியாதை செய்யாம விருந்ததின் பேரில், துரோணர் சினங்கொள்ளாமல் ஆதியில்நடந்த வாக்குத்தத்தத்தைச் சொல்ல அதை அரசன் மதிக்காமலிருக்க துரோணர் ஒரு பசுவாகிலுங் கொடென்று கேட்க அரசன் அதுவுங் கொடாமல் ஏளனஞ் செய்தானாம். அதன்மேல் துரோணர் சினங்கொண்டு, அடா பாஞ்சாலா! என்மாணாக்கரால் உன்னைக் கட்டிவரச்செய்து பங்கப்படுத்துகிறேனென்று சபதங்கூறி அத்தினபுரத்துக் கதிபதியாகிய திரிதராஷ்டிரன் சகோதரன் பாண்டுராஜன் புத்திரர்களில் அர்ச்சுனனாற் கட்டிவரச்செய்து, தன்சபையிற் பாஞ்சாலனைப் பங்கப்படுத்தினாராம். அதன்மேற் பாஞ்சாலன் கோபித்து தன்னைச் சபையில் அவமானப்படுத்தின துரோணரைக்கொல்ல ஒருபுத்திரனையும், தன்னை வெற்றிபெற்ற அர்ச்சுனன் தோளுக்கிசைய ஒரு புத்திரியையும் பெறுகிறேனென்று சபதங்கூறி, உபையாசன்-யாசனென்னும் பெரியோர்களையடுத்துப் புத்திர காமேஷ்டியாகஞ் செய்து ஒரு புத்திரனையும் புத்திரியையும் பெற்றானாம்.

அப்புத்திரி மங்கைபருவ மடைகிற காலத்தில், (கூண்டோடுபோயிற்று குளிருங்காய்ச்சலும்.) என்கிற பழமொழிபோற் பாண்டுபுத்திரரைவரும் அவர்களை யீன்றவளும் அரக்குமாளிகையோடும் வெந்து நீறாயினார்களாம். இந்தச்சேதி பாஞ்சாலனறிந்து சகிக்கக்கூடாத வருத்தமுற்று, அதன்மேல் இனியென்ன செய்கிறதென்று யோசித்து ஒருலக்ஷயம் வைத்துச் சுயம்வரஞ்சாட்டியிருக்கிறான். அந்த லக்ஷயத்தைக் காதினாற் கேட்கும்போதே மிகுந்த பயத்தைக் கொடுக்குமென்றால், அதைக்கண்ணாற் காணத்தகுந்த அரசர்கள்யார்? ஒருவருமில்லை. அந்த லக்ஷயமென்னெனில் - வில்லில் வல்லவராயிருக்கிற அரசர்களெல்லாம் கண்டவுடன் அஞ்சி மெய்நடுங்கப் பர்வதாகாரமாக இருக்கிற ஒருவில்லும், தேவதாஸ்திரமுதலியவை நிறைந்த ஓர் அம்புப்புட்டிலும் வைத்திருக்கின்றான். வெளியில் (௭௰) அடி தோன்றத்தக்கதாக இரண்டுஸ்தம்பம் (௭௰) அடி பரப்பில் நாட்டி, (௭௰) அடிவிட்டம் மேற்பூட்டி, அதற்குமேல் (௭௰) அடிக்கம்பம் நாட்டி விட்டம்பூட்டி, அதன்மேலும் (௭௰) அடிக்கம்பம் நாட்டிவிட்டம்பூட்டி, அதன்மேல் இடைவிடாமற் சுழலும் சக்கரத்தை வைத்து, அதன்மேல் மச்சக்குறியைவைத்து, அந்த மூன்று விட்டத்துக்கும் மும்மூன்று துளையுண்டாக்கி, பூமியிற் பெரிய வெள்ளிக்கடாரம் வைத்து, அதில் மஞ்சள் நீரை நிறைத்து, அத்துளைகள் அந்நீரிற்றோன்றவும் உபாயமில்லாமற் பார்ப்பவர்கள் சாயல் அத்துளையை மறைக்கவும் நேர்படவைத்து, முன்சொன்ன அந்த வில்லை வளைத்து நாணி ஏறிட்டு மஞ்சள்நீரிற்றோன்றும் துளைக்குறியின்வழியாக மூன்றுகணைகளைத் தொடுத்து மேற்சுழலும் சக்கரத்தின் முனை வழியிற் கணைகளைப்போக்கி மச்சக்குறியை முன்னம்விழுத்தி உடனே அம்மச்சம் சக்கரத்துக்குச் சரியாக வருகிறதற்குள் சக்கரத்தைவிழுத்திச் சக்கரமும் மச்சமும் வெளிப்பட்டுப் பூமியில்விழுமுன்கணைதொடுத்து அவ்விரண்டையுங் கரத்திலேந்தவேண்டுமாம். இது தான் லக்ஷயம். இந்தலக்ஷயம்வைத்து இன்றைக்குப் பத்துநாளாயிற்று. நாளைப் பதினோராநாள் உதயத்தில் வில்வளைக்கிறது. இந்த லக்ஷயத்தை நிறைவேற்றுபவன் எந்தப்புண்ணியவானோ? அக்கன்னிகையின் போகம் யாருக்கு லபிக்கின்றதோ? எனக்கொன்றுந் தோன்றவில்லை. என்புத்தியால் எவரையுமறியேன். ஆ! ஆ! அக்கன்னிகையினழகை என்னென்று சொல்லுவேன். ஆகிலும் என்னாற்கூடியமட்டும் அவள்வனப்பின் வளத்தைச் சிறிதுமாத்திரஞ் சொல்லுகிறேன் கேண்மின்களென்று சொல்லுவதாயினார்.

மேகமானது ஓலமிட்டு அந்தரத்துச் செல்லவும், கமுகமாமானது வனத்திலடங்கவும், கருமணலானது நதிகளில்வீழவும், இருளானது குகைக்கு ளொளிக்கவும், பாசியானது கடலுளிருக்கவும், இரவியினொளிமழுங்கவும், ஆகாயத்தின்கண் கறுத்தெழுந்த ஊழ் மாலைப்பொழு தஞ்சவும் விளங்கும் அளகத்தினையும்; பார்ப்பவர்கண்களைத் தன்வயப்படுத்திப் பொன்னிறமாகிய சிந்தூரத்திலதமிட்டுச் சிறந்த ஒரு பிறை மேகத்தின் மத்தியிற் றோன்றியதுபோற் பிரகாசிக்குந் திலதத்தை யணிந்த நெற்றியையும்; இரதியுமதனும் தங்கள்கரத்திலிருக்கும் கருப்புவில் லிரண்டையும் தங்கள் குடையாகிய சந்திரனிடத்து வைத்தாற்போல் திகழும் புருவத்தையும்; கலங்கலிற் கடலையும்- திரிதலிற் சேலையும்- ஊடுருவப் பாய்தலில் வேலையும்- மருட்சியில் மானையும் - வெட்டுந்தொழிலில் வாளையும் இழிவுறச்செய்து, செவ்வரி கருவரிபரந்து, காதளவு நீண்டகன்று, ருழையைக்கிழித்துச் சந்திரனைக் கண்டுமகிழும் நீலோற்பலம்போன்ற விழியையும்; குமிழம்பூவினையும் எள்மலரையும் குறைத்துக் கண்களாகியகடலிரண்டுங் கலவாதிருக்க நடுவண் கரையிட்டதென்ன விளங்கி நாகரத்தினத்தையணிந்த நாசியையும்; வீழியின் கனியையும்-கோவையின் கனியையும்- முருக்கின்மலரையும்-முள்ளிலவின் மலரையும்- வெண்ணிறமென இகழ்ந்து, ஆழியிற்பிறந்த அமுதத்தை முகந்த பவளக்கிண்ணத்தையொத்த இதழையும்; வெண்முத்தையும்-முல்லையரும்பையும்-மயிலிறகடியையும்-வெற்றிபெற்று, மின்னலைப்போலொளிருந்தபந்தியையும்; வள்ளையினிலையை அழகிலையெனவுரைத்து, நவமணிகளையழுத்திய குழையைப்பொறுத்துப் பார்ப்பவருள்ள மூசலாடுதற்கிசைந்த ஊஞ்சலொத்த செவியையும்; இரவியைக்காணாத காலத்தும் வாடாதிருக்கிற கமலமும், தேய்வும் வளர்வும் மாசுமின்றி இருக்கு மதியுமிருந்தால் அவைகளும் நாணத்தகுந்த சிறப்பினைவகித்த முகத்தையும்; தேவர்கள் பணியு மாண்பினையுடைய திருமால் கரத்திலிருக்கும் சங்கும் நாணப் பலவிரேகைகளையுடைய அழகிய கழுத்தையும்; கமலமலரையும்-காந்தள் மலரையும்-உவமானமாகக்கூறினு மமையாத அகங்கையையும்; பவளத்துண்டும்-கிள்ளையின் நாசியும் - உவமானமாகக்கூறினுஞ்சரிப்படாத விரல்களையும்; கிளியின் வாயினையொத்துச்சிவந்து பிரகாசிக்கின்ற அவ்விரல்களினது நகங்களையும்; மலையென்றாற் புளகமில்லை, இளநீரென்றாற் சந்தனம் புழுகு கஸ்தூரி கற்பூர சவ்வாது குங்குமங்களை யணியாது, கமலமொக்கென்றால் அழகிய தேமலை ஏற்காது, சக்கரவாகப் புள்ளென்றால் பறக்குந்தொழிலை யுடையது, மேலும் - ஆபரணங்களைத் தரிக்காது, கோங்கரும்பென்றால் முகங்கறுத்திராது, மாரன் மகுடமென்றால் தண்ணென்றும் வெச்சென்றுமிராது, ஆதலால் - தானே தனக்குச் சரியாகித் திரண்டு பரந்து நிமிர்ந்து வளர்ந்து செறிந்து ததும்பி சுணங்கு படர்ந்து கனத்துக்கண் கறுத்துப்பொன்மலைக்கொத்திங் கிதத்தைக்கொண் டினிதாய்ப் புளகித்துப் பூரித்துப் பாரித்த பயோதரத்தையும்; உலகினை அளந்த நெடியமால் ஆலிலைமேற் சயனித்தல்போலும் ஒரு கரியநாகம் மலையிலிருந்து அடிவாரத்திருக்குங் குகையி லடங்கச்செல்வதுபோலும் விளங்கி, ஆலிலைபோன்ற வயிற்றினிடத்திருக்கு மயிரொருங்கினையும்; கொடியைப்போல் அசைந்து நூலைவிடச் சிறுத்துப் பூரித்த பயோதரத்தின் கனத்தைப் பொறுக்காது தேய்ந்தது உவமையில்லாத சிற்றிடையென்று உலகின்மாதருக் குரைப்பர், பிரமன் இந்த மாதுக்கு எல்லா அவயவங்களையு மிகவுஞ் சீர்பெறச் செய்தமையால் திருஷ்டி பரிகாரத்துக் காக இடையைச் செய்யாமல் விட்டானோ? அல்லது மறந்தானோ? இருக்கின்றதோ? இல்லையோ? இனிமேல் விடையெய்துமோ? என்று ஐயப்படத்தக்கதான மருங்குலையும்; நீர்ச்சுழியையொத்த உந்தியையும்; மாரன் பொக்கிஷமென்றும், மாரன் தேரென்றும், அரசருக் கெல்லாம் ஒன்பதாமிடத்திலிருந்து நல்லின்பத்தைக் கொடுக்கின்ற இராகுவென்கிறபாம்பென்றும் ஐயுறத்தகுந்த அல்குலையும்; வாழையையும் யானைத்துதிக்கையையும்வென்ற தொடையையும்; சிறந்த அழகினையுடைய இரண்டு வரால்மீன்கள் கண்களாகிய சேல்களின்மேற் பகைகொண்டுபாயும்பொருட்டுப் பாய்ச்சல்கொள்ளச் சுழலுவதையொத்த கணைக்கால்களையும்; மதனசாஸ்திரத்தை எழுதுவதற்குச் சேர்த்த புத்தகத்தையொத்த பாதத்தையும்; சண்பகத்தையும் - மின்னையும்-பொன்னையும்பழிக்கும் தேககாந்தியையும்; கடலைவெறுக்கும் கிருபையையும்; கரும்பைமருட்டுஞ் சொல்லையும்; குயிலைவெருட்டும் தொனியையும்; மயிலைநாணுறச்செய்யும் சாயலையும்; அம்சங்கள் வெட்கித் தலைவணங்க நடக்கும் நடையையுமுடையாள். கல்வியாற் கலைமகளையும், அவயவ லக்ஷணத்தால் இலக்குமியையும், பொறையாற் பூமிதேவியையும், கற்பால் அருந்ததியையும், தருமத்தாற் பார்வதியையும் ஒத்தவள். அழகுக்கழகுற அக்கினியிலுதித்த அந்தமாது அருச்சுனனுக்கே உரியவளென்று கருதியிருந்த பாஞ்சாலன் அந்த அருச்சுனன் அன்னை தமயன் தம்பியரோடு அரக்குமாளிகையி லிறந்துவிட்டானென்கிறதாகக் கேள்வியுற்றுப் பெரியோர்களை அநுசரித்து அவர்களால் ஐவர் உயிரோ டிருக்கிறாரென்று தெரிந்து, அவர்களைவருவிக்க அப்பெரியோர்கள் கூறிய சூட்சியின்படி லக்ஷயம்வைத்துத் தேசதேசாதிபர்களுக்கு மணவோலையும் பாஞ்சாலிபோலெழுதிய படத்தையும் அனுப்புவித்திருக்கிறான். இதுதான் நான்கண்ட அதிசயம். நான் மேற்றிசைக்குச்சென்று அங்கிருக்கும் திவ்விய நதிகளில் ஸ்நானஞ்செய்து ஸ்தலங்களைத்தரிசிக்க விருப்புற்றிருக்கிறேன். அவ்விருப்பம் நிறைவேற யான் செல்லுகிறேன். என்று சொல்லி ஐவர்செய்த வந்தனையேற்றுப் பல ஆசிகள்கூறி நக

ரத்தைக்கடந்து, அவ்வுருவைநீக்கித் தமது சுய ஸ்வரூபத்தைத் தரித்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் தமதிருப்பிடஞ் சேர்ந்தார்.

பாண்டவர் வேதவியாசரைத் தரிசித்துப் பாஞ்சாலதேசத்திற்குச் செல்லுதல்.

இங்கே தருமராஜனுனவர் வீமன் அருச்சுனன் முதலானவர்களை நோக்கி, ஓ தம்பிமார்களே! ஆதியிற் பாஞ்சாலன் நம்மிலொருவனுகிய அருச்சுனனுக்கு ஒரு பெண்ணையும் நம தாசிரியனுகிய துரோணரைக்கொல்ல ஒரு புத்திரனையும் பெறுகிறேனென்று சபதங்கூறி, அவ்வாறு புத்திர காமேஷ்டியாகஞ்செய்து மக்களைப் பெற்றுக்கொண்டான். அது உண்மை. இதனை உலகமெல்லா மறியும். இப்போது அந்தப்பாஞ்சாலன் நாமெல்லாம் அரக்குமாளிகையி லிறந்துவிட்டதாகக் கேள்வியுற்றுப் பெரியோர்களை யடுத்து, நாமுயிரோடிருக்கிறதாக அறிந்து, நம்மைக்காணும் பொருட்டு ஒருலக்ஷயம் வைத்திருக்கிரு னென்று தீர்த்தவாசிவேதியராற் கேள்விப்பட்டோம். ஆகையால் - நாளைய உதயத்தில் வில்வளைக்கிறதாக இருக்கிறதினுலே, நாமிங்கிருந் தென்ன பயன்? நாமெல்லாம் நாளையுதயத்துக்குள் அவ்விடத்துக்குச் செல்ல வேண்டும். இப்போதே போவோம் வாருங்களென்றழைத்தார். தம்பிமார்களும் அன்னையுமிசைந்து, உடனே பிரயாணப்பட்டார்கள். இவர்கள் பிரயாணமானதை அந்நகரத்திலிருக்கும் வேதியர்க ளறிந்து, பூரிகொடுக்கும் பொருண்மேல் விருப்புற்றுப் புறப்பட்டார்கள். ஐவரும் நகரத்தைவிட்டு வெளிப்பட்டுக் காட்டைக் கடந்துவரவே, சந்திர னுதயமானதுபோலிருந்தது. இவர்களைச் சூரியன்கண்டு, இனி நாமிருப்பது தகுதியல்லவென்று கருதி நீங்குவதுபோல், சந்திரன் அரசுக்குரிய இராக்காலத்தை ஐவர்பாலில் விடுத்துத் தான்மேற்றிசைக்கடலி லாழ்ந்தான். வேதியர்கள் மாலைப்பொழுதைக் கண்டமாத்திரத்தில் அதிவேகமாகச்சென்றுர்கள். அதைப் பாண்டவர்கள் கண்டு, நல்லது நீங்கள் முன்னுதாகச் செல்லுங்களென்று உத்தரவுகொடுத்து, அன்னையை அழைத்துக்கொண்டு மெதுவாகச்செல்லுகிறுர்கள். அப்போது என்குருவாகிய வேதவியாசர் அவ்விடத்துக்குவந்து, தருமராஜனைத் தனிமையி லழைத்[illegible]நந்தனு! நீ [illegible] தம்பிமாரோடு அதி[illegible]க இரவுக்கு [illegible] பாஞ்சாலநகரம் சேரு நடந்து சூரிய உதயத்துக்குள் பாஞ்சாலநகரம் சேருவீர்களாகில், அருச்சுனன் வில்லைவளைத்து இலக்ஷயத்தைக்கொய்து பாஞ்சாலியின்மாலைக் குரியவனுவான். அந்தப் பாஞ்சாலி வினைவசத்தால் உங்களைவருக்குமுரியவளாகுகிறுள். அதற்கு நீ இசைந்திரு. அந்தக் காலத்தில் நான்வந்து பாஞ்சாலன் சபையில் விளங்க உரைக்கிறேன். இக்கருத்தை வெளியிடாதேயென்று சொல்லி இரவிற்றுனே விரைவில் நடவுங்களென்று கட்டளையிட்டு மறைந்துபோய்விட்டார். இவ்வாறு வேதவியாசர் மறைதலும் தருமராஜன் தம்பிமாரோடு கல[illegible]து சந்தியாநுஷ்டானஞ் செய்யவேண்டி நதியை நாடிச்சென்றுர். சிலதூரம் போனவுடன் கங்காநதி தோன்றிற்று. அங்கே ஐவருங் காலக்கடனை முடித்துக்கொண்டார்கள். இருளுமூடிக்கொண்டது. அருச்சுனன் தமயன் தம்பிமார்களை நாற்சவுக்கமாகப் பிரித்து மத்தியில் அன்னையை வரச்சொல்லி, அங்குகிடக்கிற கோராங்குச்சிகளில் ஒருகத்தையெடுத்துத் தலைப்பில் நறுக்கிக் கல்லோடுகல்தாக்கி நெருப்புண்டாக்கி, அந்நெருப்பிலக்கத்தையைப் பற்றவைத்துத் தீவட்டியாகக் கையிலேந்தித் தான் முன்னேநடந்துவழிகாட்டி, அந்நாட்டுவெழியை விட்டுக் காட்டுவழியைத் தொட்டு கங்கையோரமாகவே செல்வோமென்று கருதிநடந்தான். ஐவரும் பின்றுெடர்ந்துவந்தார்கள். இவ்வாறு கங்கைக்கரையோரமாக நெடுந்தூரம் நடந்து போகிறபோது, அங்கே ஒரு அதிசயநடந்தது. அதைச்சொல்லுகிறேன் கேளுமென்று வைசம்பாயனசொல்லுவதானுர்.

பாண்டவரைக் காந்தருவராஜனுகிய சித்திராங்கதன் சிநேகித்தல்.

ஓ ஜெனமேஜெய மஹாராஜனே! அந்தரவாசிகளாகிய-தேவர்-முனிவர்-கிம்புருடர்-கருடர் - காந்தருவர்-வித்தியாதரர்-என்னும் தேவவகுப்பிற் காந்தருவகுலத்தி லுதித்தவனுகியும் அந்தரலோகவாசியாகியுமிருந்து, சொற்க மத்திய பாதாள மென்கிற மூன்றுலகங்களிலும் வெற்றியால் தன்பெய[illegible]ட்டி, விற்பிடித்தவர்களையெல்லாம் தன்னுண்மையினுல் ஒரு திரணமாக எண்ணி, அஷ்டதிக்குந் துதிக்க வெற்றிபெறுந்திறத்தி லுயர்ந்து மாரனென்ன விளங்கி வீற்றிருக்கும் சித்திராங்கதனென்னும் ஓர் அரசனுளன். அவ்வரசன் தன்தேவிமாரோடு கேளிவிலாசமாயிருக்கவும் ஜலக்கிரீடைசெய்யவும் காதலித்து, கங்காநதியருகில் ஒரு சிங்காரவனம் வைத்து, கங்கைக்கரை[illegible]யும் வளைத்து வேலியிட்டு, தினந்தினம் [illegible]வனத்தில் வந்திறங்கி ஜலக்கிரீடை விளையாடிக்கொண்டிருந்து தன்னூருக்குப் போய்விடு[illegible]ன். இந்தச் சித்திராங்கதன் வில்லாளியாதலால், உலகிலுள்ள அரசர்களும் ம[illegible]களும் அவ்வனத்தின் திசையைக் கண்ணுற்பார்க்க [illegible]ர்கள். அப்பேர்ப்பட்ட வனத்தின் வழியாகப் பாண்[illegible] ஐவருஞ் சென்றுர்கள். குறுக்கே வேலியொன்று தோன்றிற்று. முன்னேபோகிற அர்ச்சுனன் அவ்வேலியைப் [illegible]ர்த்து, அடடா!! இவ்வேலியைக் கடந்துபோனுல் தரும[illegible] விரோதம். வேலியைத் தாண்டாமல் மற்றொருவழிய[illegible] வோமென்றுல் இவ்வேலிக்கு ஆதியுமந்தமும் தோன்றவில்லை. மேலும் தண்ணீர்ப்பந்தல் - சத்திரம் -

ஆலயம் - திருக்குளம் - மதி - இவையெல்லாம் ஒருவர் ஆதீனமல்ல. இது நதிதீரம். இந்த நதியைச் சேர்த்து வேலியிட்டிருக்கின்றது. இது நீதிக்கு விரோதம். இயாரோ மமதையினால் வேலிபோட்டிருக்கிறார்கள். இதனைக் கடந்துபோவதிற் குற்றமில்லையென்று தனக்குள் தீர்மானித்து, அர்ச்சுனன் அவ்வேலியைத்தாண்டி நடந்தான். மற்ற ஐவரும் அர்ச்சுனனைப்போலவே கடந்துபோனார்கள்.

அந்தவேளையிற் சித்திராங்கதன் தன் தேவிமாரோடு ஜலக்கிரீடை செய்திருந்தான். அவன் தேவிமார்கள் இந்த அறுவரையுங்கண்டு திடுக்கிட்டெழுந்தோடித் தங்கள் தங்கள் வஸ்திரங்களை யுடுத்திக்கொண்டார்கள். சித்திராங்கதன் ஆள்வரவைக்கண்டு மிகுந்த சினங்கொண்டு கரையேறி ஆடையாபரணங்களை யணிந்து, அம்புப் புட்டிலை முதுகிற்றூங்கிப் போர்க்கோலங்கொண்டு தேரிலேறி வில்லெடுத்துக் குணத்தொனிசெய்து டங்காரவோசையெழுப்பி, சற்றும்பயமில்லாமல்|என் வனத்தில்நடக்கிறவன் ஆரடா? ஆரடா? என்றதட்டி அதிவேகமாக இரதத்தைச் செலுத்தி முன்னம் செல்லுகிற அர்ச்சுனனை வளைத்து, ஓ பஞ்சைப் பிராமணா! நீயும் உன்பின் வருகிறவர்களும் யார்? எங்குசெல்லுகிறீர்கள்? இவ்வனத்திலேன் வந்தீர்கள்? என்பெயர் உங்களுக்குத் தெரியாதா? சித்திராங்கதனென்றால் திரிபுவனங்களிலுள்ள அரசர்களும் நடுங்கித் தலைகவிழ்ந்து படுத்துக் கொள்வார்களே: பார்ப்பாராகிய நீங்கள் இவ்வனத்துக்கு வரக்கூடுமா? நீங்களென்ன செய்வீர்கள்? உங்கள் தலைவிதி கிழிந்தமையால் இந்த வனத்துக்கு வந்தீர்கள். ஏன் ஓடுகிறீர்கள்? நில்லுங்கள் நில்லுங்கள். உங்களுக்காகப் பிரமன் திருமால் உருத்திரனென்னு மூவர் துணைவந்தபோதிலும் உங்களை என்பாணத்துக் கிரையாக்காமல் விடுகிறதில்லையென்று விசரம்பம் பண்ணினான். தருமன் முதலானவர்கள் அவன் வார்த்தையைக்கேட்டு, முன்செல்லுகிறவன் அர்ச்சுனனாதலால் அவனையன்றி நாம் விடைகொடுப்பது தகுதியல்ல. அப்படியல்லவென்று பேசினால் அர்ச்சுனன் கோபிப்பானென்று வாய்பேசாமல் அர்ச்சுனனை நாடி நடந்தார்கள். சித்திராங்கதன் அதிக சினங்கொண்டு, என்னடா பார்ப்பாரப்பயலே! நான் கேட்டகேள்விக்கு விடை கொடுக்காமலும், என்னைக்கண்டு அஞ்சாமலும் நடக்கிறாய். நில்லடாநில்லு. என்றெதிராவந்து மறுத்தான்.

அர்ச்சுனன் அதிக சினங்கொண்டு, அடா சித்திராங்கதா! உன்வனத்தில் வந்தோமென்று சொல்லுகிறாய். உன் வனத்துக்கு வரவேண்டுமென்கிற கருத்தைக்கொண்டு வரவில்லை. நாங்கள் பாஞ்சால நகரத்துக்குச் செல்லக்கருதிக் கங்கைக்கரை யோரமாக வருகிறோம். நீ அகங்காரங்கொண்டு நம்மைக் கேட்பவரில்லையென்று இறுமாப்படைந்து, கங்கைக்கரை யாவருக்கும் பொதுவென் றுணராமல் தருமசாஸ்திரத்துக்கு விரோதமாக வேலியிட்டாய். உன்னிடத்திற் கனமானகுற்றமிருக்கக் கங்கைக்கரை மீதே செல்லுகிற எங்களை மறித்து வாயில்வந்தபடி உளறுகிறாய். கங்கைக்கரையை வளைத்து வேலியிட்டதற்கு உன்னைத் தண்டிக்கவேண்டியது. தெரியாமையாக நீ வேலியிட்டமையால் மனம்பொறுத்தேன். இனி நீ இவ்விடத்தில் நிற்கவேண்டாம். உன்னிருப்பிடத்துக்குப் போ. இல்லாவிட்டால உன் வில்லின்திறத்தைக்காட்டு. இங்குநின்றுகொண்டு வாயில் வந்தபடி பிதற்றாதே போபோ வென்றான். இவைகளைக்கேட்ட சித்திராங்கதன் காலாக்கினிருத்திரனைப்போலக்கோபித்து, திக்குத்திசைகள் நடுங்க அட்டகாசஞ்செய்து, ஆமடா பிராமணப்பயலே! நீயா என்னைத் தண்டிக்கிறவன்? சபாசு! நன்றாயிருக்கின்றது. இதோ உன்னையும் உன்பின் வருபவரையும் யமலோகத்துக்கு அனுப்பிவிக்கிறேன் பாரடாவென்று கைவில்லில் அநேக பாணங்களைத் தொடுத்து, இந்திரன் கட்டளைப்படி ஆயர்பாடியில் வந்துபொழிந்த சோனைமாரிபோல் தூவினான். இதனைக்கண்ட தருமராஜன் முதலானவர்கள் ஆயுதமில்லாதவர்களாகையால், ஐயோ! இதென்ன விபரீதம்? கிணறு வெட்டப்போய் பூதம் புறப்பட்டது.) என்கிற பழமொழிபோல் நாம் திரௌபதை மணத்துக்கு வெளிப்பட்டு யுத்தத்துக் காளானோம். நமக்கா ஆயுதமில்லை. நாமெல்லாம் ஒருமித்து இவன்மேலெதிர்ப்போமென்றால் முன்னமிருக்கிறவன் அர்ச்சுனன். அவன் நானிருக்க நீங்களேன் வந்தீர்களென்று கோபிப்பான். வருகிற கணைகளோ அளவில்லை. இதற்கென்ன செய்கிறதென்று ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்து நிற்கிறார்கள்.

அர்ச்சுனன் சித்திராங்கதன் விடுத்த கணைகளையெல்லாம் தன்கையி லிருக்கும் கொள்ளிக்கட்டையால் தட்டிவிட்டுச் சித்திராங்கதனைநோக்கி, அடா! சித்திராங்கதா! நீதான் வில்லாளி. நல்லதீரன். உன்னைப்போல் வில்லாளி உலகத்திலில்லை. ஏனென்றால்-வில் முதலிய ஆயுதமில்லாதிருக்கிறவர்கள்பேரில் எதிர்க்கக்கூடாது. அப்படியல்லவென் றெதிர்த்தாலும் எதிரி எவ்வண்ணமாக இருக்கிறானோ தானும் அவ்வண்ணமாக இருந்து மல்யுத்தம் அல்லதுவில்யுத்தம் செய்யவேண்டியது. அந்த நீதியைத்தள்ளி நீதேரிலிருந்து வில்லைவளைத்து அநேகங் கணைகளைத் தொடுத்தாய். ஆ! ஆ! வீரனுடைய லக்ஷண மிதுதான். இருக்கட்டும். எ... பார்ப்போம் உன்வில்திறத்தைக் காட்டென்று சொல்லி மலைபோ லெதிர்நின்றான். சித்திராங்கதன் உக்கிரங்கொண்டு, ஓரிலைவேல் முகக்கணை - ஈரிலைவேல் முகக்கணை - மூவிலைவேல் முகக்கணை - என்னு - மிவைகளோடு மகாதேஜசோடுங் கூடியதாகிய பிறைமுகக்கணை-கமல முகக்கணை-முதலியவற்றையும்க-ம-ா-சூ-ம த-ா த-மா த-கோடி-பத்துகோடி சங்கம்-மஹாசங்கமாகத் தொடுத்து விட்டான். அக்கணைகளொன்றோடொன்று உராய்ந்து வடவா முகாக்

கினிபோல் அனலைக்கக்கி இடி முழக்கத்தோடும் வந்தன. அவைகளை அர்ச்சுனன் கண்டு புன்சிரிப்புகொண்டு, இனிநாம் சும்மாயிருந்தால் இக்கணைகளில் ஒன்றுபடுமாகிற் கனவருத்த முண்டாகுமென்று தக்ஷணம் தன்கையிலிருக்கிற கொள்ளிக் கத்தையை யெடுத்து நிறுத்தி அக்கினியாஸ்திரத்துக்குரிய மந்திரத்தை யுச்சரித்து மானதபூசைசெய்து, ஓகொள்ளிக்காட்டமே! நீ இச்சித்திராங்கதன் விடுகின்ற எல்லாக் கணைகளையும் கவளீகரஞ்செய்து தேரை அழித்து வில்லை முறித்துச் சித்திராங்கதனையும் பிடித்து எரிக்கக்கடவை யென்று எறிந்தான். அது கோராங்குச்சியாயிருந்தாலும் அதில் ஆவாகனஞ் செய்திருக்கிறது அக்கினியாஸ்திரமந்திரமாதலால் அக்கினிபகவான் அக்கொள்ளிக்குச்சியின் முனையினின்று, சித்திராங்கதன்விட்ட கணைகளையும் அவன் தேரையும் நீறாக்கிக் கொடியை அறுத்து வில்லை யொடித்து அம்புபெய் புட்டிலைப் பூமியிற்றள்ளி அவனையும்பற்றி எரிக்கத் தலைப்பட்டது.

அக்கால் சித்திராங்கதன் கடுகடுத்துக் கருகருத்துச் சகிக்கமாட்டாமற் பூமியில் விழுந்து, கடகடவென்று புரண்டுருண்டு அரண்டு வெருண்டு பேச்சுமூச்சுவிட்டு மூர்ச்சையாயினான். உடனே அர்ச்சுனன் அவன் சிகையைப்பற்றி இழுத்துவந்து தன் தமயனாகிய தருமராஜன் பாதத்திற் போட்டான். தருமராஜன் தம்பியைவியந்து சித்திராங்கதன் அடங்கியொடுங்கிக் கிடப்பதைப் பார்த்திருக்கும்போது அவன் தேவிமார் இஃதுணர்ந்து ஓடிவந்து குந்திதேவி காலில்விழுந்து தங்கள் தங்கள் முன்தானையையேந்தி மாங்கலியப்பிச்சை கேட்டார்கள். குந்திதேவி தருமன் முகத்தை நோக்கினாள். தருமன் அக்குறிப் புணர்ந்து தம்பியைப் பார்த்துச் சொல்லுகிறார். தம்பி அர்ச்சுனா! இந்தச் சித்திராங்கதன் தெரியாமைத் தனமாக நம்மை எதிர்த்து ஏதோசில வாய்வம்புபேசினான். அதற்குப் பிராயச்சித்தமாயிற்று. இனி இவனைச் சுகப்படச் செய்க, என்று சொல்ல அர்ச்சுனன் தமயன்சொல்லை மறுக்காதவனாதலால் உடனே அந்த அக்கினியாஸ்திரம் தணியும்படிக்கு மந்திரத்தை யுச்சரித்து அனலாற்கருகிய சித்திராங்கதனைக் குளிரவைத்தான். சித்திராங்கதன் அனல்வேகந் தீர்ந்து நித்[illegible]செய்தெழுந்தவன்போ லெழுந்திருந்து ஐவரையும் குந்திதேவியையும் நோக்கி, ஆ! ஆ! இவர்கள் பஞ்சகர்த்தாக்களைப்போல் ஐந்து புருஷரும், பராசத்தியைப்போல் ஒரு அம்மனுமா யிருக்கிறாள். இவர்கள்தேகக்குறியையும் செய்கையையும் யோசிக்கும்போது பார்ப்பதற்குப் பிராமணராயிருந்தாலும் செய்கையில்க்ஷத்திரியராக இருக்கிறார்கள். இவ்வுலகத்திற் சந்திரவமிசதிலகனாகிய அரச்சுனன் ஒருவன் தவிர, மற்ற அரசர்கள் நமது பெயரை நினைக்கப் பயப்படுவார்கள். ஆதலால் இவ்வைவரும் பாண்டவர்களாக இருக்கவேண்டும். அதோயிருக்கிற அம்மன் குந்திதேவி யாக்கணும். என்றுபடிகநிறம்போலிருக்கிற உதிட்டிரமஹாராஜனாகிய வேதியன் பாதத்தில் வணங்கி, ஓ ஸ்வாமி! நீங்கள் பிராமணரல்ல. அத்தினபுரத்துக் கதிபதியாகிய பாண்டுராஜன் புத்திரராகத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் என்னை வெற்றிபெறமாட்டீர்கள். அர்ச்சுனன் ஒருவன் தான் என்னை வெற்றிகொள்ளத் தக்கவன். இந்த வண்ணம் ஆதியில் வில்லரங்கேற்றும்போதே எனக்கு ஒரு வாக்குண்டு. ஆதலால் ஒளியாமல் உங்கள் வரலாற்றைச் சொல்லவேண்டுமென்று வினயத்துடன் கேட்டான்.

தருமராஜன்தாங்கள் இளவரசுபட்டம் பொறுத்துக் காசிக்கு வந்ததுமுதற் பாஞ்சால நகரத்தை நாடி வந்தது பரியந்தம் சொன்னார். அதனைக்கேட்ட சித்திராங்கதன் மகிழ்ந்து, ஓ ஸ்லாமி! என்னை வெற்றிபெற்ற அக்கினியாஸ்திர மந்திரத்தை யுபதேசிக்கும்படி உமக் கிளையவனாகிய அர்ச்சுனனுக்குக் கட்டளையிடும் என்று பிரார்த்தித்தான். தருமராஜன் அர்ச்சுனனை நோக்கினார். அர்ச்சுனன் சித்திராங்கதனை யருகிலழைத்து அம்மந்திரத்தை யுபதேசிக்கச் சித்திராங்கதன் அம்மந்திரத்தைப்பெற்றுத் தருமராஜனைவணங்கி, ஓ ஸ்வாமி! அடியேன் குருதக்ஷிணையாகக் காந்தர்வப் புரவியில்-நா-கொடுக்கிறேன். அதனை அங்கீகாரஞ் செய்யவேண்டும். என்று வேண்ட தருமராஜன்-ஓசித்திராங்கதா! நீ கொடுக்கிறேனென்கிற குதிரை உன்னிடத்தில் தானே யிருக்கட்டும். நாங்கள் எப்போது ஊர்போய்ச் சேருகிறோமோ அப்போது கொடுவென்றார். சித்திராங்கதன் மறுபடியும் வணங்கிக் கூறுகிறான்: ஓ ஸ்வாமி! தாங்கள் பாஞ்சாலநகரத்துக்குச் செல்லவேண்டி இருக்கிறதினால் இன்னும் வெகுதூரம் போகவேண்டும். நீங்களோ உதயமாகிற தற்துள் செல்லவேண்டு மென்கிறீர்கள். கால் நடையாய் இவ்வழியாகச் சென்றால் மூன்றுநாள் செல்லும் என்னிடத்தில் தெய்வ விமான[illegible]வேண்டியவாகனமு மிருக்கின்றன. அவைகளில் தங்கடங்கட் கிஷ்டமான ஊர்திகளி லேறிச் செல்லுங்களென்று வேண்டினான். தருமராஜன் எங்கட்கு யாதொன்றும் வேண்டிய தில்லையென்று மறுத்தார். சித்திராங்கதன் மற்றுமொருதரம் வணங்கிச் சொல்லுகிறான்: ஓ ஸ்வாமி! தேவரீருக்கு வாகனமேறச் சம்மதியில்லா விட்டால் [illegible]யேன் கூடவந்து நேரானவழியாக அழைத்துப் போய்ப் [illegible]ல நகரத்தருகில் விட்டுவருகிறேன் வாருங்களென்று அழைத்த[illegible] தருமராஜன் முதலானவர்கள் அதற் கிசைந்து நடக்கச் சித்திராங்கதன் நேரானவழியி லழைத்துப் போகிறபோது தான் தருமராஜனையும் மற்றவர்களையும் பார்த்துச் சொல்லுகிறான்:

ஓ கனவான்களே! உலகத்திற் பெறுதற்கருமையாயிருக்கின்றவை அறிவுடைமை-அன்புடைமை அருளுடைமை- அடக்கமுடைமை-ஊக்கமுடைமை-பொருளுடைமை-ஒழுக்கமுடைமை-ஆகியஇவைகளா

ம்.இவைகளை யெல்லாங் குறைவறப்பெற்றுப் பொருமை - ஆலிசு - கடுஞ்சொல் - சினம் - புறங்கூறல் - முதலியவற்றை நீக்கிநின்றாலும், இயாதேனும் ஓர்காரியங் கைகூடவேண்டுமானல் ஒரு ஆசாரியர்வேண்டும். குருவில்லாவிடில் ஒருகாலத்தில் மேற்கூறிய பண்புகளெல்லாமிருந்தும் பயன்படாமற்போய்விடும். குருவிருந்தால் எக்காலத்து மழிவில்லாமல் நாளுக்குநாள் பிரபலப்பட்டு வாழலாம். இதற்குத் திருஷ்டாந்தம் புறம்பிற் காட்டவேண்டுவ தில்லை. உங்கள் வமிசத்தில் தானே இருக்கின்றது. அதாவது - உங்கள் முன்னோர்களி லொருவனுகிய சவ்வருணன் பெறுதற் கருமையாகிய அவ்வறிவுடைமை முதலியவற்றைப்பெற்றுப் பொருமைமுதலிய துர்க்குணங்களைநீக்கித் தருமதேவதை நாலுபாதத்தினுல் நடக்கவும் எல்லா அரசர்களும் தன்னைவணங்கவும் செங்கோல்நடாத்திய பராக்கிரமசாலி. அவன் ஒருநாள் காட்டிற் சென்று வேட்டையாடி தாகவிடாய்தணிய ஒருதடாகத்துக்கு வந்தபோது, அங்கு சூரியன் புத்திரியாகிய தபதி தன் தாதிமார்களோடு ஜலக்கிரீடை செய்யவந்தாள். அவளை அரசன் நோக்கி அதிக மயல்கொண்டான். அத்தபதியும் அரசனழகைக் கண்டு மயலாகினுள். ஆனல் அக்கன்னிகை சூரியன் புதல்வியாதலால் தந்தையின் அநுமதியிற் கூடவேண்டுமென்று கருதிச் சவ்வருணனைநோக்கி, ஓ அரசனே! உன்னை மணம்புரிய எனக்குக் கருத்திருந்தாலும், என்தந்தை உத்தரவின்மேல் மணம்புரியவேண்டும். ஆதலால் - என்தந்தையின் உத்தரவுகிடைக்கு முயற்சியை அதிகவிரைவிற் றேடென்றுகூறி மறைந்தாள். சவ்வருணன் அதிக பராக்கிரமசாலியா யிருந்தும், ஒரு நொடிக்குள் லக்ஷத்திருபத்தையாயிரம் யோசனைதூரஞ் செல்லும் வேகத்தையுடைய இரதத்தை நடாத்துகின்ற சூரியமேூ பேச வல்லமையற்றவனுகிக் கனவருத்தமடைந்து, நாளுக்குநாள் ... வருநதி, தனதுவடிவு மனவூக்கம் குணமுதலியவற்றை இழந்தான். அக்காலத்தில் வசிஷ்டர்வந்து அரசன் தேகக்குறியைக்கண்டு, அவன் மனதிற் குடிகொண்டிருக்கும் குறையைக் கியானதிரிஷ்டியா லுணர்ந்து, தக்ஷணம் சூரியனிடத்துச் சென்றுபேசி தபதியைக்கொண்டுவந்து சவ்வருணனுக்கு மணம்புரிவித்தார். அந்தத் தபதிவயிற்றி லுதித்தவன் தான் குரு மகாராஜன். அவனுல் உங்கள்குலத்துக்குக் குருகுலமென்று பெயராயிற்று. ...கயால் ஆசாரியரொருவ ரிருக்கவேண்டுமென றுரைத்தான். இவ்வாறு சவ்வருண மகாராஜன் சரித்திரத்தைச் சாங்கோ பாங்கமாகக் கேட்ட தருமராஜன் முதலானவர்கள் அக்கருத்துக் கிசைந்தவராகி மகுந்த மகிழ்வை அடைந்தார்கள். இவர்களில் அருச்சுனன் சித்திராங்கதனைநோக்கிச் சொல்லுகிறுன். ஐயா காந்தருவசிகாமணியே! எங்கள் மூதாதையர்க்கு உபகாரியாகிய வசிஷ்டர்கதை நன்றாயிருக்கின்றது. இன்னும் அவர்விஷயமாகிய கதைகளைக்கேட்க விருப்பங்கொண்டிருக்கிறேன். நீர் அக்கதைகளை வரன்முறையாக விளம்புவீராகில் வழிநடக்கிற சிரமம் தோன்றுமலிருக்குமென்றுகேட்க சித்திராங்கதன் அதற்கிசைந்து அவ்வசிஷ்டமுனிவர் சரித்திரத்தை வரன்முறையாகச் சொல்லுகிறுன்.

பாண்டவர் காந்தருவராஜனுல் வசிஷ்டர் சரித்திரங்கேட்டு வழிநடத்தல்.

கேளுங்கள் புண்ணிய வான்களே! முன்னம் காதிமைந்தனுகிய கவுசிக மஹாராஜன் மண்டலேஸ்வரனுகவிளங்கி அரசு செலுத்திவருங் காலத்தில், ஒருநாள் தன்புத்திரர் மித்திரர்கள் - மற்றுமுள்ள மந்திரிமார்கள் - தண்டத்தலைவர்கள் - யூகத் தலைவர்கள் - படைத்தலைவர்கள் - அணித்தலைவர்கள்-முதலானவர்களோடு காட்டிற்சென்று வேட்டையாடி வரும்போது அக்கவுசிகராஜன்கண்முன் ஒருகலைமான்தோன்றிற்று. அரசன் அதனை எய்யக்கருதி,மந்திரிமா ரிருபுறமும் சூழ்ந்துவர அம்மானைப் பின்தொடர்ந்தான். அந்த மான் சூரியன் இரதத்திற் பூட்டிய குதிரையைவிட அதிகவேகமாக எழும்பித் தன்னையும் சூரியனையுந் தூளிகளால் மறைக்கப் புறங்காலாற் பூமியை உதைத்தோடிற்று. அரசனும் மற்றவர்களும் அதை விடாமல்தங்கள் தங்கள்வாகனங்களைமுடுக்கிச்சென்றும் அம்மானை எய்வதற்குச் சக்தியற்றவர்களாய் மெய்சோர்ந்து, மானுருவத்தைக் காணுமல் அதிகவருத்தமுற்றுத் திரும்பினுர்கள். அப்போது சூரியனும் உச்சியில் வந்தான். அந்தச்சூரிய வழற்சியால் அரசன் முதலானவர்களும் விடாய்ப்பட்டு கனவருத்தமுற்று, தண்ணீரையும் நிழலையும் எப்போது காண்போமென்கிற ஏக்கத்தைக்கொண்டு வருகிறார்கள். அப்படிவருகிறமார்க்கத்திற் குளிர்ந்த நிழலைக்கொடுத்து மாரன் படைவீடுபோல் விளங்கும் நெருங்கிய மரங்களையுடைய ஒரு மாஞ்சோலையைக்கண்டு, இவ்வனம் தோன்றியது நாம் பூர்வஞ்செய்த பூஜாபலந்தா னென்று தீர்மானித்து அச்சோலையில்வந்து, அங்கிருக்கும் தடாகத்திலிறங்கி ... ஞ்செய்து நீருந்தி ... கவிடாய்தணிந்து அங்கிருக்கு மாத்தின்நிழலிற் சற்று இளைப்பாறி இருந்தார்கள்.

அவ்விடத்திற் சிலமுனிவர்கள் வரக்கண்டு அரசன்திடுக்கிட்டு, இவ்வனம் முனிவர் வாசஞ்செய்யத் தக்கதாகையால் முனிவர்கள் வருகிறார்களென்று நினைத்து அவர்களை எதிர்கொண்டுபோய் நமஸ்காரஞ்செய்து, ஓ தவசிரேஷ்டர்களே! இவ்வனம் எந்தமஹாத்மாவுக் குரியதென்றான். அம்முனிவர்கள் பலஆசிகள்கூறி, ஓ அரசனே? இவ்வனம் பிர்மரிஷியாகிய வசிஷ்டருக்குரிய வனமென்று தெரிவித்தார்கள். அரசன் அக்கணம் வசிஷ்டரைத் தரிசிக்கவேண்டுமென்று அவருடைய ஆசிர்மத்தைக்கண்டு உட்சென்று,

சூரிய குல குருவைச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து, ஓ ஸ்வாமி! முனிவருடைய வனங்களுக்கு அரசர்வரக்கூடாது. நான் காட்டிற்புகுந்து வேட்டையாடி ஒருமானைக்கண்டு அதனை எய்யப் பின்றொடர, அம்மான்மறைந்துபோக, இயானும் என்னைச் சூழ்ந்துவந்த சேனையும் அதிக களையடைந்து நிழலையும் ஜலத்தையும் தேடிவருகிறபோது இவ்வனந்தோன்றிற்று. இதில் யாவரோடும்வந்து களைதீர ஸ்நானஞ் செய்து, தண்ணீர்குடித்து விடாய்தணிந்து மரநிழலிலிருந்தேன். அப்போது அங்குசில முனிவரைக்கண்டு, அவர்களால் இவ்வனந் தங்களுடையதென்று தெரிந்துகொண்டு தங்களைக்காணவந்தேன். ஆதலால் தாங்கள் கோபிக்காமல் என்னை யாதரிக்கவேண்டு மென்று வேண்டினான். இப்படிவேண்டிய அரசனுக்கு வசிஷ்டர் பல ஆசிகள்வழங்கி முகமலர்ந்து, அவன் மனங் களிப்பெய்தும் படியாகச் சில இனியவசனங்களையெடுத்துச் சொல்லுகிறார்: ஓ கவுசிகமஹாராஜனே! நீ வனத்துக்கு வந்ததினால் எனக்கொரு குறைவுமில்லை. என்வனந்தேடிவந்த உனக்கு என்னாற்கூடிய மட்டும் விருந்திட எண்ணங்கொண்டேன். அந்த எண்ணத்தை நீ நிறைவேற்ற வேண்டியது. அதுதானொரு குறைவு. அக்குறைவு நீங்கும் படியாக விருந்துக்கொத்துக்கொண்டால் எனக்கொரு குறைவுமில்லையென்று ஆசான் செல்ல அரசன் சற்றாலோசித்து, ஓ ஸ்வாமி! தாங்கள் விருந்திடுகிறோமென்கிறீர்கள். உங்கள்வாக்குக் கழிவுவராமல் நானிசைந்து விருந்துண்டு போவேனாகில், என்னுடன்வந்த புத்திரர்-மித்திரர்-மந்திரிகள்-முதலானவர்க்கும் விருந்திடாவிட்டால் வருத்தம் நேரிடுவதுமன்றி, நீதிக்குக் கெடுதியாகவு மிருக்கின்றது. ஆதலால் இதற்கென்செய்வதென்றான். அதற்கு வசிஷ்டர் புன்சிரிப்புகொண்டு சொல்லுகிறார்.

ஓ அரசனே! உனக்கும் உன்பின்வந்த யாவர்க்கும் என்னாலியைந்த கந்தமூலபலாதிகள் கொடுக்கத்தான் விருப்புற்றிருக்கிறேன். என்னாலுதவப்பட்டது இராஜபோசனமாக இராதிருந்தாலும், அதனை அங்கீகாரஞ்செய்வது உனதுகடமை. நீயும் உன்பின்வந்தவரும் ஸ்நானமுதலிய நித்தியவிதியை முடித்துக்கொள்ளுங்களென்றார். கவுசிகராஜன் அதற்கிசைந்து முன்னிருந்தவிடத்துக்கு வந்து தன் மந்திரிமுதலானவர்களை யழைத்து தான் வசிஷ்டரிடத்துச் சென்றதையும் விருந்துக்கிசைந்து வந்ததையும் புகன்று, இயாவரையும் ஸ்நானஞ்செய் திருங்களென்று கட்டளையிட்டான். அரசனேவலின்படி யாவரும் ஸ்நானஞ்செய்து வசிஷ்டர் உத்தரவுக் கெதிர்பார்த் திருந்தார்கள். வசிஷ்டர் தன்னருகி லிருக்குங் காமதேனுவை நோக்கி, நமது வனத்தில் வந்திருக்கிற யாவரு மனமகிழ விருந்திட்டு உபசரித்துவாவென்று ஆக்ஞாபித்தார். காமதேனு அவர்வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு அநேக மாதர்கூட்டங்களாகி இயார்யார் எங்கெந்தவிடங்களி லிருந்தார்களோ அவ்வவ்விடங்களில் இலைபோட்டு, அவ்விலைகளிற் கைத்தல்-புளித்தல் - கார்த்தல் - கூர்த்தல் - துவர்த்தல் - தித்தித்தல் - என்னும் அறுசுவையோடுங் கூடிய கறிவகைகளுடன் அன்னத்தையும் வட்டித்து, நெய் - தயிர் - வடை - பாயசமுதலியவற்றையும் குறைவில்லாமற் படைத்து, அவரவர்கள் கருத்து மகிழ்வெய்திய வஸ்துக்களைக்கொடுத்து, இன்றைய போஜனத்தைப்போல் நாம் என்றும் புசித்ததில்லை யென்று யாவரு மதித்துத் துதித்துப் புசித்துப் பசித்துவந்த களைதணிந்து கைகால்கள் சுத்திசெய்துகொண்டார்கள். உடனே சந்தனம்-புழுகு-கஸ்தூரி-கற்பூரம்-சவ்வாது முதலியவைகளோடு குங்குமக்குழம்பும்-பூமாலையும்-தாம்பூலமும் குறைவின்றிவைத்து, யானை-குதிரை - வேட்டைநாய் - புறா - வல்லூர்ப்பக்ஷி, முதலாகிய இவைகளுக்கும் தகுந்த உணவையளித்து காமதேனு யதாப்பிரகாரந் தன்னுருவந்தாங்கிப் போயிற்று.

அக்கால் கவுசிகராஜன் காமதேனுசெய்த அற்புதத்தைக்கண்டு வியப்படைந்து, நாம் அநேகம் பசுமந்தைகளை வைத்திருக்கிறோம். முனிவர்களிடத்துஞ் சில பசு மந்தைகளைக் கண்டிருக்கிறோம். அவைகளெல்லாம் முலைவழியாகத் தாராளமாய்ப் பாலைச் சொரிகின்றனவே யன்றி, இப்பசுசெய்த அற்புதம்போற்செய்யத் தகுந்தவைகளல்ல. இந்தக்காமதேனு நமக்கிருந்தால் அரசென்னத்திற்கு. எவ்விதத்திலாவது இப்பசுவை நமக்குரியதாகக் கொள்ளவேண்டுமென் றெண்ணிச் சில மனிதரோடு வசிஷ்டரிடத்துச் சென்று சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஓ ஆண்டவனே! தற்காலத்தில் நாங்களடைந்த களைநீங்க எங்கள் கருத்தறிந்து போஜனம்படைத்த பசு உங்களிடத்தில் இருந்து பயனென்ன? என்னிடத்தி லிருந்தால் உலகாதிபனாதலால் என்னைக்காண அளவற்ற பிரஜைகள் வருவார்கள். மஹா முனிவர்களும் பிராமணர்களுஞ் சேர்வார்கள். அவர்கள்மனங்களிக்க இப்பசுவால் உண்டிமுதலியவற்றை உதவுவேன். அதனால் தங்களுக்கும் அப்பசுவுக்கும் எனக்கும் புண்ணியமும் பெருமையுங் கிடைக்கும். ஆதலால் எளியேன்மீது கிருபைகூர்ந்து நான்செய்யும் பிரதியுபகாரம் சொல்பமாயிருந்தாலும் அதனைச் சமமாக எண்ணி அப்பசுவைக் கொடும். இக்கணம் நான் இந்த ஒருபசுவுக்கு லக்ஷம் பசு கொடுக்கிறேனென்றான். அதற்கு வசிஷ்டர் புன்சிரிப்புகொண்டு, ஓ சூரியகுலதிலகனே! ஆரியருக்கும் முனிவருக்குந்தான் இப்பசு இருக்கவேண்டும். ஏனென்றால் - உன்போல் வீரியர் அல்லது மற்றையர்கள் யாராவது தங்க ளிருப்பிடத்தைவிட்டுக் காட்டுக்குச் சென்று விடாய்ப்பட்டு வழிதப்பி இவ்வனத்துக்கு வந்துவிட்டால், அவர்கள்விடாய்தணிய யான் உண்டிமுதலியவற்றை யுதவவேண்டும். இந்தவிருந்தோம்புதலை வேதம் சிறப்பாகக்கூறுகின்றது. காட்டிலிருக்கிற

வர்கள் விட்டிலுள்ள பதார்த்தத்தைக் கொண்டு யதார்த்தமான மனதோடு விருந்திடுவார்கள். முழுதுந் துறந்து காட்டிலிருக்கிற நான் என்ன செய்கிறது? இப்பசு இருந்தமையால் உனக்கும் உன்பின் வந்தவர்க்கும் களைதீர உண்டியுதவினேம். மேலும் இப்பசு உலகிலுள்ள பசுப்போலல்ல, இது திருப்பாற்கடல் கடைகிறபோது அவ்விடத்திற் பிறந்தது. ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் கட்டளைப்படி தேவராஜனிடத்திருப்பது. அதனை உனக்குக் கொடுக்க எனக்குப் பாத்தியமில்லை. நீ இப்பசுவின்மேற் கொண்ட காதலைவெறுத்து உன்னகரம்போய்ச் சேரென்றார்.

அரசன் வசிஷ்டரை வணங்கி, ஓ ஸ்வாமி! இப்பசு தங்களுடையதென்று எண்ணியிருந்தேன். தேவராஜன் பசுவென்றால் அப்பசுவைப் பிடித்துப் போகிறேன். தேவேந்திரன்வந் தெதிர்த்தால் என்வல்லமையாற்பங்கப்படுத்தி இப்பசுவை எனக்குரியதாகக் கொள்ளுகிறேனென்று விரைவில் திரும்பித் தன்சேனைகளையேவிக் காமதேனு எங்கிருந்தாலும் பிடித்துக்கட்டிக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டான். அக்கட்டளையின்படி சேனைகள் யாவும்-தும்பு-தாம்பு கைக்கோல் - முதலியவற்றைக் கொண்டு வனத்தை வளைந்து தேடிப் பசுவைக் கண்டு, அதன் அருகிற்சென்று பிடிக்க யத்தனித்தார்கள். அதுகண்ட காமதேனு அவர்களை நிதானித்துப் பார்த்து, ஓ! ஓ! நம்மைக் கண்டவர்க ளெல்லாம் வந்தனை செய்வார்களென்றால் இவர்களென்ன நம்மைக் கட்ட யத்தனித்தார்கள்? இதென்னகாரணம்? நம்மை இவர்கள் கட்டயத்தனித்தால் உடனே இவர்களையெல்லாம் நாம் யமன் பாசத்திற் கட்டுபடச் செய்விக்க வேண்டியதே முறைமை. ஆனால் மஹாரிஷியாகிய வசிஷ்டர் நம்மை இந்த அரசனுக்குக் கொடுத்தாரோ? அல்லது துராக்கிர்தமாக நம்மைப் பற்றவந்தானோ? இதனை முன்னமறிந்து அதன்மேல் நமதெண்ணப்படி நடக்கலாமென்றுகருதி தக்ஷணம் வசிஷ்டரிடத்து வந்து வணங்கி, ஓஸ்வாமி! என்னைக்கவுசிக ராஜன்பிடிக்கத் தன்சேனைகளையேவி இருக்கிறான். தங்கள் உத்தரவினாற் பிடிக்கவந்தானோ? அல்லது தனது சுயேச்சையாற் பிடிக்க வந்தானோ? என்று வினவிற்று. அதற்கு வசிஷ்டர் சொல்லுகிறார்: ஓ காமதேனுவே! நான் உன்னைப்பிடித்துக்கொண்டுபோக உத்தரவு கொடுக்கவில்லை. தன்னிச்சையால் துராக்கிருதமாய்ப் பிடிக்க யத்தனித்தான். ஆதலால் ஆண்மையாற் பிடிக்கவந்த அரசனிடத்து உன்னாண்மையைக் காட்டுதல் தகுதிதான். நீபோய் அவர்களை விரைவில் வென்றுவாவென்று மொழிந்தார்.

இந்த உத்தரவைப்பெற்ற காமதேனு அவரை வணங்கி விடைபெற்று காற்றிற்கு அதிவேகமாகவந்து, திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் தேவனை வருத்திய விஷத்தைப்போற் கவுசிகராஜன் சேனையிற்பாய்ந்து கலந்தது. கலந்த தக்ஷணம் அவ்வரசனுடைய சுத்தவீரர்கள் அம்பு தாம்பு கைக்கோல் முதலியவற்றைக் கழுத்திலும் உடம்பிலும் கொம்பிலும்போட்டு வலித்தார்கள். அத்தும்பு முதலியதைக்கண்டறியாத காமதேனு கிஞ்சித்து வருத்தமடைந்து காலாக்கினி ருத்திரனைப் போலச் சீறி, இரண்டு கண்களிலும் அக்கினிப் பொறிபறக்க அங்ஙனே ஒருபாய்ச்சல்பாய்ந்து தன்னைக் கட்டவந்த அளவற்ற வீரரையும் ஹதாஹதப்படுத்தித் திக்குகளதிரவுங் கண்டவர்கள் மூர்ச்சையடையவும் அரசன் சேனையிற் புகுந்து, கூர்மையாகிய கொம்புகளினாலும்-நான்குகாலினாலும்-நீண்டுவெண்சாமரைபோல் நுனியில் மயிர்க்குச்சையுடைய வாலினாலும் - குத்தியும், உதைத்தும், அடித்தும் கொல்லத் தலைப்பட்டது. அதை அரசன் கண்டு, ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்? பார்த்தாற் பசுவாயிருக்கின்றது. செய்கையை நோக்கினால் யமனாயிருக்கின்றது. இனி நாம் சும்மாயிருந்தாற் சேனைகள் அபாய மடையுமேயன்றிப் பயனடையாதென்று நினைத்துத் தன் புத்திரர் மித்திரர் மந்திரிமார்கள்யாவரையும் ஏவித் தானும் எதிர்த்துப் பாணங்களைத் தொடுத்தான். காமதேனு அதுகண்டு அதிகவேகங்கொண்டு யானைக்கூட்டங்களிலும் குதிரைக் கூட்டங்களிலும் சென்று பாய்ந்து, தன்கொம்பினாற் குத்தியும்-காலினால் உதைத்தும்-வாலினாலடித்தும்-யானைகளையும் குதிரைகளையும் பூமியில் வீழ்த்தித் தேப்த்துத் தேரையுடைத்து, வில்லைப்பிடித்தவர்களையும் வாளைப் பிடித்தவர்களையும் சுழற்காற்றிற் சுழலுகின்ற மயிலிறகுபோற் சென்றவிடந் தெரியாதிருக்கச் சிதைத்து அவ்வனத்தைப் பிணமலைமயமாய்க்குவித்தது. இயாவரும் தலைவிரிகோலமாக ஓடத் தலைப்பட்டார்கள். அப்படியோடுகிறவர்கள்பேரில் அங்குகிடக்கிற சிறுகற்களைப் பின்னங்காலால் எத்தியது. அக்கற்கள் வந்து பட்டமாத்திரத்தில் முடிபோனவர் சிலர், தலைபோனவர்சிலர், தோள்போனவர்சிலர், துடைபோனவர்சிலர், இடையொடிந்தவர்சிலர், கொடியொடிந்தவர்சிலர், குடையிழந்தவர் சிலர், குறலொடிந்தவர்சிலர், வில்லற்றவர்சிலர், சொல்லற்றவர்சிலர், கண்போனவர்சிலர், கைபோனவர்சிலர், மூக்குபோனவர்சிலர், நாக்குபோனவர்சிலர், காதுபோனவர்சிலர், போதுபோனவர்சிலராக இவ்வாறு பின்னப்பட்டு; ஒருவர் போனவழி ஒருவர் போகாம லோடினார்கள். அப்படி ஓடுகிறவர்களைக் காமதேநு கண்டு, இளைத்தவரைத் துரத்துதல் தகுதியல்லவென்று கோபந்தணிந்து வசிஷ்டரிடத்துவந்து, தன்னாற் சேனைகள் அதமானதைச் செப்பி விடைபெற்றுச் சொர்கலோகம்போய்ச் சேர்ந்தது.

அந்தக் காமதேனு வசிஷ்டரிடத்துச்சென்றதையும் அவருத்தரவு பெற்றுப் போனதையும் கவுசிகராஜன் புத்திரர்கள் கண்டு, வசிஷ்டர் காமதேனுவைவிட்டு நமது சேனையை நாசப்படுத்தினார். ஆதலால்-

நாமவரை இமிசைப்படுத்த வேண்டுமென் றெண்ணி வசிஷ்டரிடத்துச்சென்று வில்லைவளைத்து நாணி ஏறிட்டு டங்கார ஓசை எழுப்பி, ஓரிலைவேல்-ஈரிலைவேல்-மூவிலைவேல் - இவைகளைத் தொடுத்து விட்டார்கள். இக்கணைகள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்பைக் கக்கிக்கொண்டு ஆலம்போற் சீறிவந்தன. வசிஷ்டர் அக்கணைகளும் அக்கணைகளைத் தொடுத்தவர்களும் சாம்பவ மூர்த்தியின்மேல் எதிர்த்துக் கணைதொடுத்த மதன்போலாக உறுத்து நோக்கினார். அந்த நோக்கத்தால் அப்புத்திரர்கள் ஊக்கமழிந்து சாம்பரானார்கள். கவுசிகராஜன் தனது புத்திரர் சாம்பரானதைக் கண்டு சிறிதும் அஞ்சாமற் சினங் கொண்டு அதிவேகமாக வந்து, தன் வில்லை வளைத்து நாணி ஏறிட்டுக் குணத்தொனிசெய்து, முன்பின் யோசிக்காமல் தேவாஸ்திரங்களைப் பிரயோகித்துச் சிங்கம்போற் கெற்சித்து நின்றான். அந்த அஸ்திரங்கள் மஹா மகிமையோடும் அனல்களைக் கக்கிக்கொண்டு வந்தன. அவைகளை வசிஷ்டர் கண்டு, அந்தோ ! இவனென்ன சுத்தமூடனாயிருக்கிறான் ? நாம் வில்லாளியாக இருந்தால் வில்லெடுத்துப் போர் செய்ய வேண்டும். நாம் வில்லும் மற்ற ஆயுதமு மில்லாமல் தபசியா இருக்கிறோம். இவனோ அஸ்திரங்களைத் தொடுக்கிறான். சற்றுநேரம் சும்மா இருந்தாற் கொத்துக்கொத்தாய் மேல் விழும். அதனாற் கிஞ்சித்து வருத்தம் நேரிடும். இந்த வேளை நாம் சும்மா இருக்கலாகா தென்று தக்ஷணம் ஒரு தண்டாயுதத்தை எடுத்து முன்னம் நிறுத்தி, அரசன் விடுங் கணைகளையெல்லாம் கவளீகாஞ் செய்யென்று கட்டளை யிட்டார். அத்தண்டமானது அரசன் விடும் அஸ்திரங்களையும் மற்ற ஆயுதவகைகளையும் கவளீகரஞ் செய்தது.

அதை அரசன் கண்டு திடுக்கிட்டுத் திப்பிரமை கொண்டவனாய் சற்றுநேர மயர்ந்திருந்து, பின்பு சிறிது தெளிந்து, அடடா !! நமது வீரம்-அரசு-வல்லமை முதலானவைகளெல்லாம் இந்த வசிஷ்ட மஹா முனிவருக்கு முன் அணுவாயிற்றல்லவா ? ஆ! ஆ! தவப்பொருளே பொருள். மற்றவையெல்லாம் அவப்பொருள். தவமொன் றிருந்தால் இவ்வரசைப் போல அநேகவரசு பெறுதலுமன்றி பிரமனாதி மூவர்களும் மதிக்கச் சிறப்புற் றிருக்கலாம். மேலும் நமது புத்திரரோ மாண்டார்கள். சேனைகளு மிறந்தன. இனி நகரத்திற் சென்று அரசு செய்வதிற் பயனென்ன? தவத்தைப் புரிந்து தவப் பொருளடைதலே பெருமையென்று நினைத்து மந்திரிகளை யழைத்துத் தனது முத்திரை மோதிரத்தைக் கொடுத்து, நீங்கள் நகரத்திற் சென்று என்னரசைச் செலுத்துங்களென்று கட்டளையிட்டுத் தான் இமயமலைச்சாரலிற்சென்று சிலகாலம் ஒரே நிலையாய் ஒருபாதத்தையூன்றி ஜலத்தினின்றும், சிலகாலம் ஒரேநிலையாய் மற்றொருபாதத்தையூன்றிப் பஞ்சாக்கினி மத்தியினின்றும், தவசிரேஷ்டர்களெல்லாரும் வியப்படைய அருமையான தவத்தைச்செய்து வருகிறான். அக்காலத்தில் பிரமன் பிரசன்னமாகிக் கவுசிகன் செய்யும் வந்தனையை யேற்று, ஓ கவுசிகராஜனே ! நீ பிரமரிஷி யாகவேண்டுமென்று கருதி நெடுநாள் அருமையான தவஞ்செய்கிறாய். நீ மக்கள் யாக்கையிற் புக்கினவனாதலால் தவத்தாற் பிரமரிஷியையொப்பாயென்று கூறி மறைந்தான். கவுசிகன் அங்கனே மகிழ்ந்து இறுமாப்படைந்து தவநிலைவிட் டெழுந்து, மான்தோல் காவிகாம்பர தண்டுகமண்டலதாரியாகிய வசிஷ்டமஹாமுனி யிடத்துவந்து வந்தனைவழிபாடின்றி அவருக்கெதிரில் மான்தோலாசனமிட்டு முறப்பாக வீற்றிருந்தான். அவ்வசிஷ்டர் கவுசிகனுடைய உட்குறிப்பையறிந்து, அடா!இவன் தவத்தினுயர்ந்தோமென்று இறுமாப் படைந்திருக்கிறானல்லவா? எனமதித்து அக்கவுசிகனை நோக்கிச் சொல்லுகிறார்: ஓ கவுசிகராஜனே ! உன்னரசு சிறந்துவருகின்றதா? குடிகள் உன்வயப்பட்டுநடக்கின்றார்களா? உன்புத்திரரும் நீயும் சுகமாவென்றுகேட்டார். கவுசிகன் வெகுளிமேற்கொண்டு, நமதுபுத்திரரை எரித்துவிட்டுப் புத்திரர் சுகமாவென்று வினவின இந்த வசிஷ்டன் புத்திரசோபத்திலாழ இவனுடைய புத்திரரைக் கொல்லுகிறேனென்று மனதிலெண்ணி வசிஷ்டரை நோக்கிச் சொல்லுகிறான்: ஆங்காணும் வசிஷ்டரே ! என்புத்திரரை நீரெரித்துவிட்டும் உன்புத்திரர் சுகமாவென்றுவினவினீர். இஃதகந்தை யல்லவா? இந்த அகந்தையை யடக்குகிறேன் பாரென்று சொல்லி அவ்விடத்தினின்று நீங்கி அப்பால் வந்துவிட்டான்.

கேளுங்கள் புண்ணியவான்களே! இப்பாற் கவுசிகனானவன் வசிஷ்டர் புத்திரருளொருவராகிய சத்தியென்பவர் தவஞ்செய்கிற வனத்தில்வந்து வசிஷ்டருடைய நூறுபுத்திரரையுங் கொல்லக்கருதி இதற்கு என்னதந்திரம் செய்கிறதென்று யோசித்திருக்கிறதருணத்தில் மிகுந்தசிறப்பினையடைந்த சூரியவமிச அரசர்களில் மித்திரசதனென்னும் பெயரைவகித்த ஒருமன்னன் இருந்தான். அவன் தயாத்துமாக்களுக்குத் தாயகமாகிய அயோத்திமாநகரத்தி லிருந்து அரசுசெலுத்துகிற காலத்தில், ஒருநாள்வேட்டையாடக் காட்டிற்சென்றான். அங்கிரண்டு ராக்ஷதர் வந்தெதித்தார்கள். அரசன் அவ்வரக்கர்களில் மூத்தவனை ஒருபாணத்தினாற் கொன்றுவிட்டான்.அவன்தம்பி தன்தமய னிறந்ததைப்பார்த்து, நமதுதமயனைக்கொன்ற இந்தவரசனைக்கொல்ல நம்மால்முடியாது. சூதுசெய்து இவ்வரசனைக் கெடுக்க வேண்டுமென்று தக்ஷணம் தன்னுருவத்தைமாற்றி மானிடரூபந்தரித்து அரசன்பாதத்தில் வந்துவிழுந்து முறையிட்டான். அரசன் அவனைநோக்கி, நீயார் ? இங்குவந்து முறையிடுகிறகாரண மென்னவென்றுவினவினன்.அரக்கன் ஓஸ்வாமி! அடியேன் இந்தவனத்தி லிருக்கிறவன். சமயல்வேலை எனக்குநன்றாகத்தெரியும்.சீவனமில்லா

மல் அலைந்துதிரிகிறேன். ஆதலால் எளியேனை ஆதரிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான். அரசன் உண்மையான மானிடன்தானென்றுநம்பி, என்மடைப்பள்ளி வேலைக்காரருக்குத் தலைமையான அலுவலை உனக்குக்கொடுத்தேன். நீயந்தவேலையைப்பார். என்றவனை அழைத்துக்கொண்டு நகரஞ்சேர்ந்திருக்கிறநாளில் ஒருநாள் தன்குலகுருவாகியவசிஷ்டர் அங்குவந்தார். குருவைக்கண்ட அரசனெழுந்து எதிர்கொண்டுபோயழைத்துவந்துபொற்பீடத்திலிருக்கச்சொல்லி சோடசோபசாரமுஞ்செய்துவணங்கி எதிர்நின்று, ஓஸ்வாமி! தேவரீர் இவண்வந்தது என்னகாரணம்? அடியேனை நாடி வந்தகருத்தை வெளியிடவேண்டுமென்றான். அதுகேட்ட அரசனுக்குப் பல ஆசிகள்கூறிவசிஷ்டர்சொல்லுகிறார்: ஓமண்டலேஸ்வரா! நெடுநாளாக என்கருத்தில் ஒருவிருப்பமிருக்கின்றது. அவ்விருப்பத்தை நிறைவேற்ற இவண்வந்தேன். அஃதென்னெனில்- மாமிச வர்க்கத்தோடு போஜனஞ்செய்யவேண்டிபது தான் என்கருத்து. இதனை நீ நிறைவேற்றவேண்டுமென்றார்.

அரசன் அக்கருத்துக்கிசைந்து தக்ஷணமெழுந்து அந்தப்புரத்துச்சென்றான். மனைவியாகிய மதயந்தி எதிர்வந்துவணங்கினாள். அந்த அம்மன் நற்குணநற்செய்கையோடு அதிகசுந்தரத்தையு முடையவளாதலால் தான் அவளோடு பலகால் பரிவுற்றணைந்துளோனாயினும் அவளைக் கண்டவுடன் விதிவசத்தால் தானினைத்து வந்த கருத்தைமறந்து, காமத்தின்வயப்பட்டுச் சரசஞ்செய் திருந்துவிட்டான். சூரியனும் அஸ்தமித்தான். இந்த அரசன் சூரியகுல திலகனாக இருந்து தேவர்களுக்கு நன்மைகளைவிளைத்து அஞ்ஞானவிருள்கெட விளங்கினவன். அப்படிக்கிருந்தும் காலகதியால் மதிமயங்கி மனைவியோடு விளையாடுகிறபோது, இன்னும் அரைநாழிகையில் வசிஷ்டரால் அசுரர்குலாம்சையைக் கொள்ளப் போகிறபடியால் அவ்வசுரர்கள் திரண்டுவந்து அரசனைக் காணவந்தது போல் இருள் வந்து மூடிற்று. அவ்விருள் நள்ளிருளான காலத்து அரசன் தான் நாடிவந்த கருத்தை நினைத்து திடுக்கிட் டெழுந்து அதிவேகமாக மடைப்பள்ளிக்கு வந்தான். வேலைக்காரரெல்லாம் நித்திரைபோய் விட்டார்கள். அரசனைக் கெடுக்கநினைத்து மடைப்பள்ளி வேலைக்காரனாக இருக்கிற அரக்கன் மாத்திரம் விழித்திருந்தான். அவனை அரசன்கண்டு, ஓ சுவானக்காரா! என் குருவானவர் மாமிசத்தோடு உண்டி புசிக்கவந்தார். அவர் கொலுக்கூடத்திலிருக்கிறார். இந்தவேளை எவ்விதத்திலாவது மாமிசத்தோடு உண்டிசமைத்து அளிப்பாயாகில் உன்மனமகிழத் தகுந்த பரிசுகொடுப்பேனென்று சொன்னான். அரக்கன் தன்னெண்ணம் நிறைவேறுங்காலமிதுதானென்றுகருதி அதிகமகிழ்வையடைந்து அரசனை வணங்கி, ஓ ஸ்வாமி! தங்கள்சித்தப்படி மாமிசத்தோடு அமுதுபடைக்கிறேனென்று சொல்லி மடைப்பள்ளியிற் சென்று வேலைக்காரரை எழுப்பிச் சமயல் செய்யச் சொல்லிப் போட்டு அரண்மனையை விட்டு வெளிவந்து, நித்திரைசெய்த ஒரு குழந்தையை வதைத்து அம்மாமிசத்தைப் பாகத்தால் உணவுக்குரிய பாகம்போற் பக்குவப்படுத்தி அரசனுக்குத் தெரிவித்தான்.

அரசன் உண்டி முதலியவற்றை யெடுப்பித்துக்கொண்டு கொலுமுகக் கூடத்தி லிருக்கும் வசிஷ்டரிடத்துக்கு அதிவேகமாகவந்து நமஸ்காரஞ் செய்து, ஓ ஸ்வாமி! எளியேனால் இது பரியந்தம் பசியோடிருந்தீர். இனி கிருபைகூர்ந்து போசனஞ் செய்யுங்களென்று வேண்டினன். உடனே வசிஷ்டர் எழுந்து போசனச்சாலையில் வந்து உட்கார்ந்தார். சுவானக்காரர் இலைபோட்டு சமைத்த மாமிசத்தையும் அன்னத்தையும் வட்டித்தார்கள். வசிஷ்டர் யதார்த்தமான மாமிசமென்று அவாக்கொண்டு முதலில் மாமிசத்திற் கிஞ்சித்தெடுத்து வாயிற் போட்டுக்கொண்டார். அது நரமாமிசமாதலால் ஒரு விதமாக இருந்தது. அதனாலது நரமாமிசமென்றுணர்ந்து அதிக சினங்கொண்டு அரசனை நோக்கி, அடாபாபி! நீநல்ல மிருகமாம்சத்தோடு அன்னம் படைப்பாயென்று நாடிவந்த எனக்கு நரமாமிசமிட்டபடியால், நீநரமாமிசத்தைப் புசிக்கின்ற அசுரனாகக் கடவதென்று சபித்தார். அரசன் திடுக்கிட்டு நடுங்கி நமஸ்காரஞ் செய்து மீட்டும் எழுந்து நின்று, ஓ ஸ்வாமி! இக்குற்றம் என்னால் வந்ததல்ல. வேலைக்காரரால் நேரிட்டதாக இருக்கின்றது. இதனை யோசிக்காமல் எனக்குச் சாபமிடலாமா வென்று சொல்லினன். உடனே வசிஷ்டர் கியானதிருஷ்டியால் நோக்கி, இச்செய்கை அவ்வரசனைக் கெடுக்க மடைப்பள்ளியிலிருக்கிற அரக்கனால் நேரிட்டதென்று தெரிந்து கனவருத்தமடைந்து அரசனைப்பார்த்துச் சொல்லுகிறார்: ஓ மண்டலேஸ்வரா! இக்குற்றம் உன்னால் நேரிட்டதல்ல. முன்பின்யோசிக்காமற் கோபத்தினாற்சாபமிட்டேன். இந்தச்சாபம் அனுபவியாமல்தீராது. பன்னிரண்டு வருஷ மிருக்கும்: அதன் பின்பு உன் சுயகுணத்தை யடைவாயென் றுரைத்தார்.

அதைக்கேட்ட அரசன் சினங்கொண்டு, எள்ளுந்தண்ணீருங் கரத்திலேந்திச்சொல்லுகிறான்: ஓஸ்வாமி! நீங்கள் தவத்தி லுயர்ந்தோமென்றும், சாபத்தில் மிகுந்தோமென்றும், அவசரப்பட்டு என்னைச்சபித்தீர்கள். இதோநான் உம்மைச் சபிக்கிறேன் ஏற்றுக்கொள்ளுமென்றான். இந்தச்சேதி மதயந்தி யுணர்ந்து விரைந்துவந்து கணவன் காலில் விழுந்து நமஸ்காரஞ் செய்து, அரசன் கரத்தைப் பற்றிக்கொண்டு சொல்லுகிறாள்: ஓ பிராணநாதா! இதென்னவிபரீதம்! இதுவரைக்கு நமது குலத்திற் குருவைச் சபித்தவர்களுண்டா? அல்லது மற்ற எந்தக் குலத்திலாவது ஆசானைச் சபித்தவரைக் கேள்விப்பட்டதுண்டா? எங்கும் நடக்காத காரியத்தைச் செய்யத்துணி

வுகொள்வது தகுதியா? இப்படிச் சபிக்காதீரென்று மறுத்தாள். அரசனும் மனைவிவாக்குக் கெதிர்வாக்கு கொடாமற் கரத்திலிருக்கிற எள்ளையும் தண்ணீரையும் தன்வலப்பாதத்தில் விட்டுக்கொண்டான். அந்தச்சலம் பட்டமாத்திரத்தில் அப்பாதங்கள் கரியநிறமாயின. அன்றுமுதல் மித்திரசதனென்கிற நாமத்துடன் கல்மாஷ்பாதனென்கிற பெயரோடும் விளங்கினான். வசிஷ்டர் தமதிருப்பிடத்துக்குச் சென்றார். சூரியனு முதயமாயினான். அரசன் உதயத்தில் எழுந்து நித்தியக்கடனை முடித்து மகரகுண்டல ஆரகேயூர கடக கங்கண முதலாகிய ஆபரணங்களைத் தரித்துக் கொலுமுகவாசலில் வந்து, மந்திரி முதலானவர்களை நோக்கிக் காட்டில் வேட்டையாடவேண்டும் பிரயாணமாகுங்களென்று வில்லம்பு முதலியவற்றை யெடுத்துக்கொண்டு புறப்பட்டான். மந்திரி முதலானவர்களும்வந்து சேர்ந்தார்கள். அரசன் அவர்களோடு காட்டிற்சென்று சற்றுநேரம் வேட்டையாடித் தன்னோடுவந்த சேனைகளையும் மந்திரிகளையு நீங்கித் தனியாக ஒருவனத்தில் வந்தான். வசிஷ்டருடைய சாபம்வந்து அரசனையடைந்தது. அரசன்தன் சுயாமிசையை நீங்கி அரக்கரமிசையைக்கொண்டு குணம்வேறுபட்டு மனம்போனபடிக்குச் சென்று, நெடுந்தூரங் கடந்து பெரிய ஒரு ஆரண்ணியத்தில் வந்துவிட்டான். மந்திரி முதலானவர்கள் அரசனை இரண்டு மூன்றுநாள் பரியந்தம் தேடியுங்காணாமற் கனவருத்தமுற்று நகரத்திற்சேர்ந்தார்கள்.

அங்கரசன் தன் கண்ணிற்பட்ட பல மிருகங்களையும் பக்ஷிகளையும் நரரையும் புசித்துக்கொண்டு, சகல உயிர்களும் யமனைக்கண்டு நடுங்குவதுபோல் நடுங்கச் சஞ்சரித்து வருகிறான். அக்காலத்தில் தவசிரேஷ்டபாக்கியவானாகிய ஒரு முனிவருடைய புத்திரன் மற்றொரு முனிவருடைய புத்திரியை மணம் புரிந்து, மனைவியோடு தான் தன்னிருப்பிடம் செல்லக்கருதினவனாய் இக்கல்மாஷ்பாதன் சஞ்சரிக்கிற காட்டின்வழியாகவந்தான். கல்மாஷ்பாதன் அவனைப்பார்த்து, ஓ பிராமணா! ஓ பிராமணா! என்று அழைத்தான். பிராமணமுனிவன் அவனைப்பார்த்து, யாரோ அரசன் அழைக்கிறான். போகத்தான்வேண்டுமென்று அருகில் வந்தான். அவனை அரசன்கட்டி இறுக்கிப் பிடித்துக் கொலைசெய்ய யத்தனித்தான். அவ்வேதியன் மெய்நடுங்கிக் கைகாலுதறலெடுத்து வாய்குழறலோடு மூச்சுந்திணறிச் சொல்லுகிறான்; ஓ மண்டலேஸ்வரா! நீ அரசனாயிருக்கிறாய். நீ என்னைப்பிடித்துப்புசிக்க யத்தனித்தாய். இஃதெனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருக்கின்றது. மேலும் இத்தொழில் அரக்கர்க் குரியதேயன்றி அரசர்க்குரியதல்ல. இதென்னவிபரீதம்? என்னை விடும்விடும். என்று பலநீதிகளை எடுத்தோதியும் அரசன் அவனை விடாமற்பற்றி இறுக்கினான். அப்படியிறுக்குவதைக் கண்ட வேதியன் - ஹரிஹரி! கோவிந்தா! மாதவா! பரந்தாமா! பக்தசகாயா! பரமத்யாளா! ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா! அகண்டிதா லங்கிருத கிருபாசமுத்திர நேத்திர கபடநாடக சூத்திராவதாரியாகிய ஸ்ரீமந்நாராயணா! என்று பலவாறு பகவஸ்மரணைசெய்தான். அவன் பகவஸ்மரணை செய்த ஓசையையும் அவன் இடுக்கத்தையும் அவ்வேதியன் மனைவிகண்டு, ஓ வென்று ஓலமிட்டு அரசனிடத்து வந்து, முன்தானையைக் கையிலேந்தி எதிர் நின்று, இரண்டுகண்ணிலும் அருவிபோல் நீர் சொரியச் சொல்லுகிறாள். ஓ ராஜாதிராஜனே! ஓ தரும நீதி தவறாத சத்தியசந்தனா! ஓ மஹாமண்டலேஸ்வரா! ஓ சூரியகுலோத்துங்கா! ஓ மஹாபதிவிரதையாகிய மதயந்தியினுடைய முலைக்குவட்டின் சுவடுதோய்ந்த புயாசலா! தமியேன் இவ்வேதியனை மணந்து இரண்டு மூன்று நாள்தானாயிற்று. வேதியனைக் கொன்றுவிடுவையாகில் என்னுயிர் தரியாது. ஓ ஆண்டவனே! நீ அரசன். அரசரானவர்கள் உலகிலுள்ளவர்க்குக் கடவுள். ஆதலால்-மனமகிழ்ந்து மாங்கிலியப் பிக்ஷை கொடுக்க வேண்டுமென்று பலநீதிகளை யெடுத்தோதிப் பரிதாபமுற்றுப் பின்னுஞ் சொல்லுகிறாள்:

ஓ அரசனே! நீ மிருகமாமிசம் புசிப்பவன். ஒருவேளை காலகதியால் நரமாமிசம் புசிக்கத் தலைப்பட்டாலும், இந்தப் பிராமணனை மாத்திரம் விட்டுவிடவேண்டும். ஏனென்றால்-இன்று இந்த நரனை நீபுசித்தால், நாளைக்குப் பசியெடுக்காதிருக்கப் போகிறதா? எப்படியும் பசியெடுக்கும். நாளைக்கும் நரன் அகப்படுவானா? அகப்படான். ஆகவே உனக்கெடுத்தபசிக்கு மிருங்களைத்தான்புசிப்பாய். ஆகையால்-இன்றைக்கு நமக்கு நரன் அகப்படவில்லையென் றெண்ணி இந்த நரனை மன்னியும். மற்ற மிருகங்களைப் புசியும். இந்த நரனால் நானின்ப மடையவேண்டும். இவனிறந்தால் நானெடுத்த யாக்கை காட்டிலெரித்த நிலவைப்போலும், என்னழகு கானலுக்குப் பேய்ந்த மழையைப்போலும் ஆகுமென்று கண்கலங்கினாள். பார்ப்பனி இவ்வளவு சொல்லியும் அரசன் இரக்கமில்லாமல் அவ்வேதியனைக்கொன்று, இரத்தமாம்சங்களைப் புசித்து, எலும்புகளையெல்லாம் உமிழ்ந்துவிட்டுப் போயினான். அவ்வேதியன் மனைவி பலவாறு துக்கித்து அவ்வெலும்புகளை எடுத்து மடியிற்கட்டி, அக்காட்டிலிருக்கும் கட்டைமுட்டைகளைப் பொறுக்கி ஒன்றாக அடுக்கிக் கல்லோடு கல்தாக்கி நெருப்புண்டாக்கி, அந்நெருப்பைக் கட்டை முட்டைகளிற் பற்றவைத்து தான் ஸ்நானஞ் செய்து அத்தீயை வலம்வந்து சொல்லுகிறாள்: ஓ ஆகாயவாணி முதலாகிய தேவதைகளே! என்மனமெரிய என்புருஷனைக்கொன்ற பாவியாகிய கல்மாஷ்பாதன் அவன் மனைவியோடு புணருவானாகில் அவன் தலைவெடித்துச் சாகக்கடவதென்று சபித்து அக்கினியில் விழுந்திறந்தாள். இந்தச் சேதியை ஆகாயவாணி மாஹாபதிவிரதையாகிய மதயந்தி

க்குத் தெரிவித்தாள். மதயந்தி கனவருத்த முற்றிருந்தாள்.

இங்கே கல்மாஷ்பாதன் காடுமலை முதலியவற்றிற் சஞ்சரித்துக் கண்டதுபுசித்து யமனைப்போல் திரிகிறபோது, வசிஷ்டர் புத்திரர் நூற்றுவரில் யாவர்க்கும் மூத்த சத்தி என்னும் பெயரைவகித்த முனிவனிருக்கும் வனத்தில்வந்து தவசிலை யோரமாகச் சென்றான். அப்போது கம்பத்தில் நின்று தவஞ்செய்கிற சத்தியானவன் பூமியிலிறங்கி ஸ்நானஞ்செய்ய வந்தான். அப்படி வருகிறபோது ஒருவர்க்கொருவர் சந்தித்தார்கள். கல்மாஷ்பாதன் பித்தம்பிடித்தவர் தன்மைபோல் ஒருவேளை நல்லகுணம் மற்றொருவேளை அரக்கர்குணங் கொள்பவனாதலாற் சத்தி என்பவனைக்கண்டு, அடா! பிராமணப்பயலே! நான்வருகிறேனென்றிடையாமல் என்னெதிராக வருகிறையா? இது ஞாயமா! நானென்ன உலகாதிபனல்லவாவென்று கேட்டான். சத்தி என்பவன் சொல்லுகிறான்: ஓ அரசனே! நாங்கள் தவசிகள். எங்கள்வனத்துக்கு அரசரானவர்கள் வரக்கூடாது. வந்தாலும் அவர்கள் தான் ஒதுங்கிப் போய்விடவேண்டியது. மேலும் நான் உன் குலகுருவினுடைய புத்திரனென்றான். அரசன் அவன் சொல்லியவற்றில் ஒன்றையும் யோசித்துப் பாராமற் கோபங்கொண்டு கையிலிருக்கும் கதையினால் மோதினான். அதற்குச் சத்தி என்பவன் சீறி, ஓ அரசனே! நீ அரக்கனைப்போலிரக்கமின்றி என்னைக்கதையா லடித்தமையால், நீ அரக்கனாகக் கடவையென்று சபித்தான். அப்போது கல்மாஷ்பாதனுக்குக் கிஞ்சித்துத் தன்னறிவுவந்து திடுக்கிட்டுச் சத்தியைவணங்கி அநேகமாகத்துதித்து, ஓ ஸ்வாமி! என்புத்தி மயங்கி இருந்தமையால் அந்தவேளையில் தங்களை மதிக்காமல் இகழ்ச்சிசெய்து அடித்தேன். அக்குற்றத்தைப் பொறுத்துச் சாபவிமோசனங் கொடுமையாவென்று மிகவும் பிரார்த்தித்தான். அச்சமயத்தில் தன்பிள்ளைகளைக் கொன்ற வசிஷ்டரிடத்திற் பழிக்குப் பழிவாங்கக் காத்திருக்கும் விஸ்வாமித்திரன் அதனைக் கண்டு, ஆ! ஆ! இந்தக் கல்மாஷ்பாதனால் வசிஷ்டர்பெற்ற நூறு புத்திரரையும் கொல்லவேண்டு மென்று கருதி அச்சத்தி என்பவனுக்குத் தெரியாமற் சைகைசெய்து கல்மாஷ்பாதனைத் தன் அருகிலழைத்து, ஓ அரசனே! நீ ஏன் அந்தச் சத்தியை வணங்கிக் கெஞ்சுகிறாய்? அவன் சாபமிடுவானே அன்றி சாபவிமோசனஞ்செய்யான். சத்தியையும் அவனுடன் பிறந்த தொண்ணூற்றொன்பது பெயரையும் கொன்று தின்றையாகில் அதன்பின்பு இந்த நூற்றுவர்க்கும் தந்தையாகிய வசிஷ்டராற் சாபம் நீங்குமென்று பலவிதமாகப் போதித்து அக்காட்டில் திரிகிற கிங்கராவேசத்தை அரசன்மே லேவினான். அவ்வாவேசம் அரசனையடையவே அவன்குணம் பின்னும் வேறுபட்டு மீட்டும் அதிகவெறிகொண்டு சத்தி என்பவனைக் குத்திக் கொன்றுதின்று, அச்சத்தியோடு பிறந்த (௯௯) சிறுவர்களு மிருக்கிற இடத்தை விஸ்வாமித்திரனு ணர்ந்து யாவரையும்விடாமற்பற்றிக்கொன்று தின்றுவிட்டான். இந்தச்சேதியை வசிஷ்டரறிந்து, ஐஐயோ!! தெய்வமே! ஒரு புத்திரனல்ல நூறு புத்திரர்களு மிறந்தார்களாமே: இனிநாம் என்னசெய்கிறது? என்று ஏக்கங்கொண்டு பூமியில் விழுந்து புரண்டு அழுது, புத்திரசோபத்தாற் பேச்சற்று மூர்ச்சையடைந்தார். இதனை அவ்வனத்திலிருக்கிற முனிவர்க ளுணர்ந்து ஓடிவந்து, வசிஷ்டரை வாரியெடுத்து உபசாரஞ் செய்து தேற்றினார்கள்.

வசிஷ்டர் அவ்வுபசாரத்தாற் கிஞ்சித்துச்சாந்தமடைந்து எழுந்து புத்திரசோப மேற்கொண்டு, இனி அரைமாத்திரைப் போதாவது உயிரோடு வாழேனென்று உயிர்விடத் துணிந்து கடலில் விழுந்தார். அதைக் கடற்றலைவனாகிய வருணன் கண்டு நடுங்கி, நீராற் பிராணச்சேதம்வாராமல் ஏந்திக் கரையில்விடுத்து உபசரித்தான். பின்னும் வசிஷ்டர் தமது புத்திரசோபம் ஆறுதவராய் எவ்விதத்திலேனு மாள்வதே சரியென்று துணிந்து ஒரு பெரிய மலையின்மேலேறி அங்கிருந்து பூமியில்விழுந்தார். பூமிதேவி அஞ்சி தன்கைகளால் வசிஷ்டரை யேந்தி ஒரு துன்பமும் நேரிடாமற் காப்பாற்றினாள். பின்னும் வசிஷ்டர் உயிர்விடத்துணிந்து வடவைத்தீயிற்போய் விழுந்தார். அத்தீ நல்லஜலம்போற் குளிர்ந்திருந்தது. பின்னும்வசிஷ்டர் உயிர்விடக்கருதி விஷத்தை அருந்தினார். அவ்விஷமும் அமுதம்போலாயிற்று. அப்பால் வசிஷ்டர் கனவருத்த முற்று, நாம் எத்தனை விதத்தா லுயிர் விடக்கருதியும் உயிர்நீங்கவில்லை. ஆதலால் இனி எவ்வாறு இந்தப் புத்திரசோபத்தைச் சகிக்கப்போகிறோமென்று வருந்தி இருக்கிறபோது சத்தியின் மனைவியாகிய துச்சந்தை என்பவள் கருப்பந்தாங்கி இருக்கிறாளென்றும் அக்கருப்பம் பன்னிரண்டுவருஷமாகின்றதென்றும் கேள்வியுற்று, புத்திரர்களின் கால்வழி இருக்கிறதல்லவாவென்று அப்புத்திர சோபத்தை ஒருவாறு நீக்கியிருக்கிறார். அந்தக்காலத்தில் இந்தக் கல்மாஷ்பாதனாகிய அரக்கன் அந்தச் சத்தி மனைவியின் வயிற்றிலிருக்கும் கருவை விஸ்வாமித்திரராலுணர்ந்து, அவளையுங்கொல்லத் தேடிவந்து கண்டு கொலைசெய்யத் தொடர்ந்தான். அவன்வரவைச் சத்தியின் மனைவிகண்டு பயந்து அம்மானாகிய வசிஷ்டரிடத்து ஓலமிட்டுச்சென்றாள். வசிஷ்டர் அஃதுணர்ந்து அஞ்சாமல் வருகிற அரக்கனைக்கண்டு, தக்ஷணம் தமது கமண்டலத்தி லிருக்கிற ஜலத்தைவாரி அவ்வரக்கன் முகத்தி லிறைத்தார். அந்நீர் பட்டமாத்திரத்தில் விஸ்வாமித்திரனா லேவப்பட்ட கிங்கராவேசமும், சத்தியாலிடப்பட்ட சாபமும், முன் வசிஷ்டரால் நேரிட்ட சாபமும் உடனே நீங்கின.

இப்பால் அரக்கனாயிருந்த அரசன் தன் சுயாமிசையைக்கொண்டு வசிஷ்டருடைய திருவடியிற் பணி

ந்து, அநேக விதமாகத் துதித்துச் சொல்லுகிறான்: ஓ ஸ்வாமி! எளியேன் பலவாற்றாலுங் கொடியசாபத்தை ஏற்றதினால் தங்களுடைய புத்திரர்களை யெல்லாம் புசித்தேன். தேவரீர் சினங்கொள்ளாமல் என்னைக் காக்கவேண்டு மென்று பல்முறைவணங்கினான். வசிஷ்டர் அஞ்சிநிற்கிற அரசனை ஆதரித்துப் பல ஆசிகள்கூறிப் புலவர்களால் துதிக்கப்பட்ட அவ்வரசனை அயோத்திமா நகரத்துக் கழைத்துவந்து, மன்னர் மண்டலீகர்களறிய நல்ல சுபமுகூர்த்தத்தில் மகுடாபிஷேகஞ் செய்து தமதிருப்பிடத்துக்கு வந்தார். அதுமுதல் அரசன் கொலுவிருந்து சகல விசாரணையுஞ் செய்து மனைவிமேல் அதிக காதல்கொண்டு அந்தப் புரத்துக்குச் சென்றான். மனைவியாகிய மதயந்தி எதிர்வந்துவணங்கி, ஓ அரசனே! தேவரீர் இப்போது என்னைக் காதல்கொண்டு வந்தீர். அஃதெனக்குத்தெரிந்தது. நீர் முன்னம் அரக்கனா யிருக்கிறபோது ஒரு பிராமணனைக் கொன்று தின்றுவிட்டீர். அவ்வேதியன் மனைவி வயிறெரிந்து நீர் பத்தினியோடு புணருங்காலத்தில் இறக்கக் கடவதென்று சாபமிட் டிறந்தாள். ஆதலால் நீர் என்னைப் புணர்ந்தால் மரண மடைவீரென்று மறுத்தாள். அதுகேட்ட அரசன் திடுக்கிட்டு அஞ்சி, ஆ! ஆ! உலகத்திற் பிறப்பது இவ்வொரு யின்ப மடையத்தானே: இவ்வின்பத்தை யடையாத காலத்து எடுத்ததேகம் என்னத்திற்கு? நாம் பிராமண கன்னிகையின் சாபத்துக் குள்ளானோம். நமது குலம் விளங்குகிறதற்கும் ஏதுவில்லை. இனியிதற் கென்ன செய்கிறது? என்றேங்கி வசிஷ்டரிடத்துச் சென்று வணங்கித் தன்குறையைச் சொல்லி அழுது, பின்னுந்தன் பிழைகளையெடுத்துச்சொல்லுகிறான்.

ஓஸ்வாமி! நான்கொடியசாபத்தை ஏற்று அரிய காட்டிற் சஞ்சரித்திருக்கிறபோது ஒருபிராமணனைக் கொன்று தின்று விட்டேனாம். அதனைக்கண்ட அவ்வேதியன் பத்தினி நீ மனைவியோடு புணர்ந்தா லிறக்கக்கடவதென்று எனக்குச் சாபமிட் டிறந்துவிட்டாளாம். எனக்கோ புத்திரனில்லை. புத்திர னில்லாவிட்டாலும் இருக்கிறபரியந்தம் உலக இன்பமாகிய ஸ்திரீபோகத்தை அநுபவிக்கலா மென்றால், அதற்குஞ் சாபம் நேரிட்டிருக்கின்றது. ஆதலால் எளியேன்மீது கிருபைகூர்ந்து சகல பாவங்களையுந் தீர்த்து ஸ்திரீபோகத்தை அநுபவிக்கவும் என்கால்வழி மாறாமலிருக்கத் தங்களால் என்மனைவி ஒரு புத்திரனைப் பெறவும் நாடிவந்தே னென்றனன். வசிஷ்டர் அக்கருத்துக்கிசைந்து அரசனோடு அயோத்திமா நகரத்திற் செல்ல, அரசன் அநுமதியில் மதயந்தி வசிஷ்டரிடத்து வந்துவணங்க, வசிஷ்டர் மதயந்தியைக்கூடி ஒரு புத்திரனைப் பாலித்து அரசனைநோக்கிச் சொல்லுகிறார்: ஓ மண்டலேஸ்வரா! மஹா பதிவிரதையாகிய பார்ப்பனியிட்ட சாபம் நீங்க நாமொருதந்திரம் சொல்லுகிறோம். அஃதென்னெனில் - மஹாபாதகங்களை நீக்குகின்ற தீர்த்தயாத்திரை செய்து தேவஸ்தலங்களைத் தரிசித்தால் அச்சாபம் நீங்குமென்று வழிகாட்டித் தமதிருப்பிடம் சேர்ந்தார். அரசன் மந்திரிமார்களை யழைத்துத் தன் செங்கோலை அவர்கள் கையிற் கொடுத்துச் சொல்லுகிறான். ஓ மந்திரிகளே! நான் தீர்த்தயாத்திரை செய்யச் செல்லுகிறேன். சென்றவிடத்தில் எனதெண்ணம் நிறைவேறிற்றானால் வருகிறேன். இல்லாவிட்டால் வரமாட்டேன். நீங்கள் என் புத்திரனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து அவனை என்னைப்போற் பாவித்து அரசு செலுத்திவாருங்களென்றறைந்து, அரசன் தீர்த்தயாத்திரை சென்று அநேக நதிகளில் ஸ்நானஞ்செய்து திவ்யஸ்தலங்களில் வாசம் பண்ணி மேற்றிசைவழியாகச் சென்றான். அவ்வாறு செல்லும்போது வழியிற் கவுதமமுனிவரைக் கண்டு வணங்கி, அவராற் சிவராத்திரியின் மகிமையை யுணர்ந்து கோகர்னஞ் சென்று சாம்பவமூர்த்தியை அர்ச்சித்து, அவரது கிருபையினாற் சாப நீங்கி நகரம்வந்து முன்போ லரசுசெலுத்தி வந்தான்.

இங்கேவசிஷ்டர் தன்மக்களில் மூத்தகுமாரனாகிய சத்திமுனிவனுடையமனைவியின்கருப்பத்தின்மேற் கண்ணுண்டாகி, எக்காலம் புத்திரனைப் பெறுவாளோவென்று பார்த்திருந்தார். இப்படி இருக்கிற காலத்திற் சத்தியின் மனைவியாகிய துச்சந்தையாள் தேவாதிதேவர்களு மகிழ்வெய்த யானைக்கன்றுபோற் பராசரைப் பெற்றாள். வசிஷ்டரும் - அருந்ததியும்- இன்னும் இவ்வனங்களோடு மற்ற இனங்களில் தவஞ்செய்திருக்கும் முனிவர்களும்-முனிவர் பத்தினிமார்களும் பேரானந்தத்தை மேற்கொண்டு வந்து புத்திரனைக்கண்டு அதிகமகிழ்வையடைந்து, அப்பிள்ளை பிறந்தது முதல் ஐந்துவயது வரைக்கும் செய்யவேண்டிய சடங்குகளை எல்லாங் கிரமப்படி இயற்றி, ஐந்தாம்வயதில் உபநயனமும் வேதாப்பியாசமும் செய்வித்தார்கள். அப்பராசரும் நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநாலு கலைக்கியான முதலியவற்றை யுணர்ந்து, நன்னிலைக்கணின்று தவநிலைசேர்ந்து, அநேக காலம் தவஞ்செய்து, தவத்தாலடையும்பயனாகிய ஞானத்தைப்பெற்று வசிஷ்டரிடத்திருக்கின்றார். அக்காலத்தில் தனது பிதாக்களை அரக்கன் கொன்றுதின்றான் என்கிற சேதியைப் பலபேர்களாலுந் தான்கேள்வியுற்று அதிககோபங்கொண்டு மூதாதையிடத்து வந்து வணங்கி, ஓ ஸ்வாமி! என்தந்தையை அரக்கன்கொன்று தின்றானதலால் அவ்வரக்கன் மாத்திரமல்ல, அவ்வரக்கர் குலத்தையும் இவ்வுலகத்தையும் தகிக்க நான் தவஞ்செய்ய வேண்டும். விரைவில் எனக்கு விடைகொடுமென்று வேண்டினான். வசிஷ்டர் பேரப்பிள்ளை வந்த உக்கிரத்தைக்கண்டு, அடடா!! இவன் பிதாவைக்கொன்ற பழிக்கு உலகங்களையெல்லாம் நசிப்பிக்க எண்ணங்கொண்டு, தவஞ்செய்வதற்காக நம்மை உத்தரவு கேட்கிறான். இதற்குத் தன்மைகூற

வேண்டுமென்று கருதி, பேரப்பிள்ளையை வாரி மார்போடணைந்து மடியில்வைத்தவண்ணம் உச்சிமோர்ந்துள்ளம் பூரித்துச் சொல்லுகிறார்.

அப்பா பௌத்திரா! பூர்வம் இவ்வாறு நடந்திருக்கின்ற ஓர் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேள். முன்னம் கிருதவீரியனென்று பெயர் வகித்து தருமதேவதை நாலுபாதத்தில் நடக்கவும்-மன்னர் மன்னர்களெல்லாம் வந்து வணங்கவும் செங்கோல் நடாத்தியவன் வேதமோதுதலாகிய பிரமயாகத்தையும் ஓமம்வளர்த்தலாகிய தெய்வயாகத்தையும் பலிகொடுத்தலாகிய பூதயாகத்தையும் தருப்பணமுடித்தலாகிய பிதுர்யாகத்தையும் இரப்போர்க் குணவுமுதலியவற்றை ஈதலாகிய மானுடயாகத்தையும் வேதாகமங்களாற்சொல்லப்பட்டு அருமையாமிருக்கிற அக்கினிஷ்டோமம்-அத்தி அக்கினிஷ்டோமம் - உத்தியம்-சோக்ஷீ - வாசபேயம்-அதிராத்தம்-அப்தொரியாமம்- அக்கினியாதேயம்-அக்கினிகோத்திரம்-தரிசபூரணமாசம்-சாதுர்மாசியம்-நிரூடபசுபந்தம்-ஆக்கிரயணம் -சௌத்திராமணி-அஷ்டகை-பராவணம்-சிரார்த்தம்-சிராவணி - அக்கிராயணி-சைத்திரி-ஆசுவயுசி-என்னும் இருபத்தொருயாகத்தையுஞ் செய்யக்கருதி, திவ்யநதிக்கரையிற் பெரிய ஒரு யாகசாலைசமைத்துப்பிருகுமுனியைக் குருவாகக்கொண்டு, அவரால் மேற்கூறிய யாகங்களைநிறைவேற்றி அநேக தான தருமங்களைச்செய்து அம்முனிவருக்கும் அவர் புத்திர பவுத்திரர்களுக்கும் அதிக திரவியங்கொடுத்து நெடுங்காலம் அரசுசெய்து பரமபதமடைந்தான். பின்பு அவன் புத்திரர்கள் மகுடாபிஷேகராகி அரசுசெலுத்தினார்கள். ஆனால் அவர்கள் தேவபக்தியில்லாதவர்களாய்ச் சுற்றம் நட்பு இவைகளைப் பாராட்டாமல் தாங்கள் புசித்தலையும் சுகித்தலையுமே பெருமையாகக்கொணடு பொருளாசைவைத்து, ஒரு காசை ஒருகோடிப் பொன்னைப்போற் கருதுங் கருத்தையுடையவர்களாய் தங்கள் காலத்தில் வந்த வரும்படியைக் கணக்கிட்டு நமது தந்தைகாலத்தும் இவ்வளவு தொகைவந்திருக்கவேண்டுமே: பொங்கிஷத்திற் பிதுரார்ச்சனை யொன்றுமில்லையே: இவ்விதவருமானம் போனவழி யென்னவென்று நினைத்துத் தந்தையின் மந்திரிகளை அழைத்துத் தக்கபடி விசாரணை செய்தார்கள். அம்மந்திரிகள் கைகுவித்து, ஓ இராஜபுத்திரர்களே! உங்கள் தந்தை யாகஞ்செய்யக் கருதி பிருகுமுனியைக் குருவாக்கொண்டு திரவியங்களை அநேகம் பெயர்களுக்கு அபாரபாரமாகத் தானங்கொடுத்தார். அவர்களிற் பிருகு முனிவருக்கும் அவர்புத்திரர்களுக்கும் அளவற்றதிரவியத்தைக்குவித்தார். அதற்கு நாங்கள் என்னசெய்வோம். என்று மறுமொழி கொடுக்கவும் இராஜகுமாரர்கள் அவசரப்பட்டுப் பிருகுமுனியின் புத்திரர்கள் யாவரையும் அழைத்துவாக் கட்டளையிட்டுத் துடிப்போடிருந்தார்கள்.

அக்கட்டளைப்படி மந்திரிமார்கள் தூதுவர்களையனுப்ப, தூதுவர் பிருகுமுனி புத்திரர்களிடத்துச் சென்று இச்சேதியைத் தெரிவிக்க, அவர்கள் தக்ஷணம் பிரயாணப்பட்டு வந்து இராஜ புத்திரர்களைக் கண்டார்கள். அப்புத்திரர்கள் குருபுத்திரர்களை நோக்கி, ஓ மஹாத்துமாக்களே! நீங்கள் மும்மலச்சேட்டையையடக்கிவேதநெறிநின்று நல்வழியிற்செல்பவர்கள் உங்களுக்குப் பொருளென்னத்திற்கு? எங்கள் தாதை அளவற்ற திரவியத்தை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். அத்திரவியம் நல்வழியில் வந்ததல்ல. நீங்கள் அதனைவைத்திருப்பதிற் பாபம் நேரிடுமேயன்றிப் புண்ணியநேரிடாது. ஆதலால் அத்திரவியத்தை யெல்லாம் கொண்டுவந்து வைத்துவிடுங்களென்றுகூறினர். அதுகேட்ட பிருகுமுனிபுத்திரர்கள் அரசன் புத்திரர்களை நோக்கி, ஓ ராஜபுத்திரர்களே! பாபப்பொருள் புண்ணியப்பொருள் என்னும் இவற்றுள் எதுவாயிருந்தபோதிலும் பிராமணருக்குத் தத்தமான பொருளை நீங்கள் கேட்பது தகுதியல்ல. நாங்களும் கொடோமென்று மறுத்தார்கள். அரசன் புத்திரர்கள் அதிக கோபங்கொண்டு, ஆங்காணும் பிராமணர்களே! என் தந்தையை ஏமாற்றி யாகத்துக்கென்றும்-யாகபாகத்துக்கென்றும்-எங்கள் திரவியத்தை யெல்லாம் கிரகித்துக்கொண்டு, நாங்கள் கேட்டால் கொடுக்கிறதில்லையென்றும் அஞ்சாமற் பேசுகிறீர்களா? அப்படியா! என்றெழுந்து தங்கள் கையிலிருக்கிற வாளால் அவர்கள் தலைகளைவெட்டி ஆசிரமத்துக்குட்சென்று பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு, பின்னும் அந்தப்பிருகுமுனி புத்திரர்களையெல்லாம் தேடித்தேடிக் கொலைசெய்யத் தலைப்பட்டார்கள். இப்படி கொலைசெய்து வருகிறபோது பிருகுமுனிவர் புத்திரருள் ஒருவருடைய மனைவி கருப்பவதியாயிருந்தாள். அவள் இந்த ராஜபுத்திரர்கள் தன்கணவன் முதலானவர்களை எல்லாம் வெட்டி எறிகிறதைக்கண்டு,நாம்கருப்பவதியாயிருப்பதைக் கண்டால் நம்மையுங் கொலைசெய்வாரென்றஞ்சி நடுங்கி மகமேருச் சாரலிற்போய் ஒளித்திருந்தாள். இராஜபுத்திரர் பிருகுமுனி வமிசத்தை நாசப்படுத்தி நகரத்திற் சென்று மனக்களிப்புடன் அரசுசெலுத்தி வருகிறார்கள்.

இங்கே பிருகுமுனி புத்திரன் மனைவி நம்மைத்தேடிவந்து எங்கே கொலைசெய்கிறார்களோ வென்று பயந்து,வயிற்றிலிருக்கிறகருவைத் தன்வல்லமையாற் சிலகாலம் தொடையில்வைத்திருந்து நூறுவருஷம் சென்றபின்பு பெற்றாள். அப்புத்திரன் பிறந்ததை அங்கிருக்கும் தவசிரேஷ்டசிகாமணிகள் வந்து பார்த்து மகிழ்வடைந்து, அப்புத்திரனைப்பெற்ற அம்மனைப் பலவாறு புகழ்ந்து, அந்தப் புத்திரனுக்குப் பகனென்று நாமகரண மிட்டு, பிறந்ததுமுதல் அஞ்சு வயதளவும் செய்யும் பிராமணச்சடங்குகளை நிறைவேற்றி உபநயன முடித்து வேத மோதுவித்து தவத்துக்கு

யோக்கியதை யாகிய மந்திர முதலியவற்றையும் உப
தேசித்தார்கள். அப்புத்திரன் வேதாகமங்களிலும்
மனுக்கியான முதலியவற்றிலும் வல்லவனுகி, சிவத்
தைப் பேணும் படியான சிறந்த தவத்துக்கு யோக்கி
யதை ஆயினுன். அக்காலத்தில் தன் மூதாதை முத
லியவர்கள் கிருதவீரியன் புத்திரர்களால் இறந்ததைத்
தாயினுலறிந்து, அப்புத்திரர்களை நீருக்கி விப்பது
மன்றி இந்த அனியாயத்தைக் கேட்காம லிருந்த
இந்த உலகத்தையும் வேருக்கிச் சொற்கத்தையும்
எரிக்கின்றேனென்று மஹா உக்கிரத்தோடு தவநிலை
சேர்ந்து,தவசிரோஷ்டரெல்லாம் வியப்படைய அருமை
யான தவஞ்செய்தான். அத்தவத்திணுலெழுந்த அக்
கினியானது கிருவீரியன் வமிசத்தாரைப் பற்றி எரிக்
கத்தலைப்பட்டது. அந்தக் கிருதவீரியன் வமிசஸ்திரீ
கள் ஏக்கங் கொண்டு நடுங்கி ஒடுங்கிப் பகனையீன்ற
அன்னை இடத்துவந்து முறையிட்டுப் பாதத்தில்
விழுந்து தங்களுக்குண்டான குறையைச் சொல்லி,
எங்களைக் காக்கவேண்டுமென்று பலவாறு துதித்தா
ர்கள். அந்த அம்மன் ஒருவர் முறையிட்டு அழுகிற
தைக் கா்திணுலும் கேட்டறியாதவ ளாகையால் மிகு
ந்த தயாள குணத்தை யுடையவளாய்த் தன் கண
வன் முதலானவர்க ளிறந்துபோயின துயரத்தையு
நினைக்காமல் தக்ஷணம் மனமிளகி அவர்களை ஆதரி
த்து, ஓ ராஜஸ்திரீகளே ! அஞ்சாதிருங்கள்: இந்தத்
தாபாக்கினி தேவர்களால் நீங்கும். நீங்கள் உங்களிரு
ப்பிடத்துக்குச் செல்லுங்க ளென்று கட்டளையிட்ட
னுப்பினுள்.

இங்கே பகன்செய்கிற அருமையான தவத்திலு
ண்டான அக்கினியானது சொற்க மத்திய பாதாள
மென்னும் மூன்று ஸ்தலங்களிலும் பற்றியெரிக்கத்
தலைப்பட்டது. இதனைத் தேவர்கோமானுகிய இந்தி
ரன் அறிந்து, சிலதேவர்களோடு பகனது பிதுர்க்களி
டத்துச்சென்று அப்பிதுர்க்களை அநேகவிதமாகத்துதி
த்து, ஓ ஐயமார்களே ! உங்கள் வமிசத்தி லுற்பத்தி
யான பகன் உங்களைக் கொலைசெய்த கிருதவீரியன்
வமிசத்தை நாசப்படுத்தத் தவஞ்செய்கிறுன். அந்தத்
தவத்திணு லெழுந்த அக்கினி அவர்களை நாசப்படுத்து
வதுமன்றி, சொற்காதி புவனங்களையும் பொரியாக்
குகிறது. நீங்கள் விரைவிற் சென்று தவஞ்செய்தலை
நிறுத்தி வாருங்க ளென்று பலவாறு வேண்டினன்.
பிதுர்க்கள் தக்ஷணம் தெய்வவிமானத்திலேறிப் பகன்
தவஞ்செய்கிற விடத்துக்குச் சரியாக அந்தரத்தில்
வந்து நின்று அவனை யழைத்து, அப்பா பௌத்திர
சிகாமணியே ! உன்னுல் நாங்கள் அளவற்றகீர்த்தியை
வகித்தோம். இப்போது எங்கள் வசனத்தைக் கேட்டு
அவ்வழி நடவென்று பணிந்தார்கள். பகன் பிதுர்க்
களின் வரவைக் கண்டு எழுந்து பலவித உபசாரத்
தோடு நமஸ்காரஞ் செய்து, ஓ ஐயமீர் ! ஆ ! ஆ !
என்ன மேலானதவம் யான் செய்தது. ஏககாலத்தில்
உங்களை யெல்லாம் என் கண்ணுரத் தரிசிக்கும் பாக்
கியத்தையும் பெற்றேன். தற்செயலாய் எளியேன்
மேல் கிருபை கூர்ந்து தாங்களனைவரும் கூடி இவண்
வந்த காரணமென்ன? நீங்கள் இப்போது சொல்லும்
வசன மென்னவென்று வினவினுன். பிதுர்க்கள் பேர
னுக்கு ஆசிகள் கூறி, அப்பா பௌத்திரா ! நாங்கள்
கிருதவீரியன் புத்திரர்களால் அதமானுே மென்கிற
சேதியை யுணர்ந்து, அவர்களை நீருக்கக்கருதித் த
வஞ்செய்கிருய். அத்தவத்தை இனிவிட்டுவிடு. ஏனெ
ன்ருல் - உலகத்திற் பிறந்து மும்மலப் பேயிடத்து
அகப்பட்டு விம்மலாகிய வருத்தத்தை அடைந்திருந்த
எங்களைப் புண்ணியலோகஞ் சேர்த்த கனவான்களை
நீருக்குவது தகுதியல்ல. இக்காயவேதனை நீங்கி எக்
காலம் புண்ணியலோக மடையப் போகிறுே மென்று
வருத்தப் பட்டிருந்த எங்களை யெல்லாம், ஏககாலத்
திற் சுவர்கத்துக் கனுப்பிவித்த தருமவான்களைக்கொ
ல்லுவது நியாயமோ? எங்கள் வினைப்பயன் அப்படிக்
காகவேண்டி யிருக்க, மற்றவர்களை விரோதித்து நீ
மனம் நோவதிற் பயனென்ன? இனியேனும் அக்குரூ
ரத்தை விட்டுவிடென்று விளம்பினுர்கள். பகன் பிதுர்
வாக்கியத்தைத் தடுக்கக் கூடாமையால் தவஞ்செய்
தலை நிறுத்தி, ஓ ஐயமீர்! என் தவத்தா லெழுந்த அக்
கினிக்கு வழிகாட்டுவீர்களாகில் இம்மட்டில் தவத்தை
நிறுத்துகிறே னென்றுன். அதற்குப் பிதுரர் சொல்லு
கிறுர்கள்: அப்பா பௌத்திரா ! உன் தவத்திலெழுந்த
அக்கினியைக் கடற்புறத்தில் வைப்பாயாகில், அது
கடலிற் சுரக்கும் நீரைப் பானஞ் செய்து கொண்டு
அங்குதானே யிருக்குமென்றறைந்து அப்பகனுக்குப்
பல ஆசிகள் வழங்கிப் புண்ணியலோகம்போய்ச் சேர்
ந்தார்கள். பகன் பிதுர்க்களிட்ட கட்டளைப்படித் த
பாக்கினியைக் கடற்புறத்திற் கனுப்பிவிட்டுத் தாயி
டஞ் சென்று வாழ்ந்திருந்தான். அந்தத் தபாக்கினி
கடற்புறத்துச் சென்று கடலிற் சுரக்கும் நீரையுண்டு,
அங்குதானே வடவைக்கன லென்னும் பெயரால்
விளங்கி இருந்து விட்டது

அப்பா பௌவுத்திரா ! அந்தப் பகமுனிக்கோப்
பானவன் நீ: ஆகையா லம்மூனியைப்போல மூன்று
லகத்தையும் தகிக்கக் கருதாமல், உன் தந்தைகளைக்
கொன்றவர் அரக்கர்வம்ச மாதலால் அவ்வரக்கர் குல
த்தை மாத்திரம் நாசப்படுத்துக வென்று அருளுடன்
விடைகொடுத் தனுப்பினுர். பராசர் மூதாதையின்
கட்டளைப்படி அருமையான தவஞ்செய்தார். அத்த
வத்தால் அக்கினியுண்டாகி உலகிற்பரவி, அரக்கர் கு
லங்களைப்பற்றி எரிக்கத்தலைப்பட்டது. அரக்கர் இந்த
த் தபாக்கினியைக்கண்டவுடன் திடுக்கிட்டு அஞ்சிநடு
ங்கி ஒடுங்கிச் சத்தியலோகஞ் சென்று, பிரமதேவனை
க்கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து, ஓ ஸ்
வாமி ! நாங்கள் வசிஷ்டருடைய புத்திரரைக் கொன்
றுேமென்றுகருதி அவருடைய பௌத்திரராகிய பரா
சர் எங்களைநாசமாக்கத் தவஞ்செய்கிறுர்.ஆதலால் தே
வரீர் அத்தவத்தை நிறுத்தி எங்களை ஆதரிக்கவேண்டு

மென்றுவேண்டப் பிரமன் தக்ஷணந்தனது அன்னவாகனத்திலெழுந்தருளி தவஞ்செய்கிற பராசர்கண்முன்றோன்றி, ஓ பராசரே! உமதுமனவுறுதியையும் தவத்தினருமையையும் கண்டு வியப்படைந்தோம். இனித் தவஞ்செய்தலை விட்டு நீங்கவேண்டும். என்று புகலப் பராசர் பக்திவிசுவாசத்தோடு நமஸ்காரஞ்செய்து, ஓ சிருஷ்டிகர்த்தாவே! தமியேன் தந்தைகளைக்கொன்ற பாவியாகிய அரக்கனது வமிசத்தை நாசப்படுத்தினால் தங்களுக்கு வருத்தமென்ன சொல்லுங்க ளென்று கேட்டார்: ஓ பராசரே! உமது தந்தைகளைக்கொன்றவன் அரக்கனல்ல. சூரியவமிசத்தரசன் முன்வினைப்பகுதியால் அரக்கனாயினன். உமது தந்தைகளுக்கு அந்தத்துன்ப நேரிட்டது சுயமாகிய அரக்கரால் நேரிட்டதல்ல. ஆதலால் - நீர் தவஞ்செய்தலை விட்டு விடுமென்றார். அதற்குப்பராசர் சொல்லுகிறார்: ஓ சதுமுகனே! தாங்கள் கொடுத்த விடையைநோக்கினால் அரக்கர்பேரிற் குற்றமில்லாமையா யிருக்கின்றது. ஆயினும் இப்போது நான்செய்த தவத்திலுண்டான அக்கினிக்குப் போக்கிடமெங்கேயென்றுவினவப் பிரமன் மகிழ்ந்து, ஓ பராசரே! உமது தவத்திலெழுந்த தபாக்கினியை மேற்றிசையி லிருக்கும் பாலைவனத்தில் வையுமென்று உத்தரவுசெய்து மங்களாசனங் கூறித் தமதிருப்பிடஞ்சேர்ந்தார். பராசர் பிரமன் திருவாய்மலர்ந்தபடி தபாக்கினியை மேற்றிசையி லிருக்கிற பாலைவனத்தில் வைத்து, மூதாதையாகிய வசிஷ்டரிடத்துச் சென்று வணங்கி, தாம் தவஞ்செய்ததும் அங்கு பிரமன் வந்ததும் அப்பிரமன்வேண்டுகோளினால் அத்தவத்தணலை மேற்றிசையில் வைத்ததும் சொல்லிச் சுகமாயிருந்தார்.

பாண்டவர் தவுமியமுனிவரை ஆசிரியராக நியமித்துக் கொள்ளுதல்.

ஓ பாண்டு புத்திரர்களே! இந்த வசிஷ்டமஹாமுனியினது பெருமையை இரண்டாயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷனாலும் சொல்லக்கூடாதென்றால், என்னொரு நாவினாற் சொல்ல வசமா வென்று பேசினான் சித்திராங்கதன். அப்போது அருச்சுனன் முதலான ஐவரும் மிகுந்த ஆனந்தத்தை அடைந்தவர்களாய் அவர்களில் தருமராஜன் சித்திராங்கதனை நோக்கி, ஓ காந்தருவ சிகாமணியே! குருவில்லாவிடில் அரசு பெருமையடையாதென்று முன்ன மொழிந்தீர். எங்களுக்குத் தகுதியான அந்தணன்யார்? அவரையும் உமது வாக்கினாற் சொல்லுமென்று வேண்டச் சித்திராங்கதன் - ஓ தருமநந்தனா! இவ்வழியே சென்றால் இவ்வழிக்கருகில் உற்கயமென்று ஒரு நதியிருக்கின்றது. அந்நதிக்கரையில் தவுமியரென்னு மஹாத்துமா இருக்கிறார். அவர்சிறந்த உத்தமர். காமம்-குரோதம்-உலோபம்-மோகம்-மதம்-மாற்சரியம் - ஆகிய அறுவகைக் குற்றங்களையுங் கடந்தவர். வேதாகம சாஸ்திரங்களைக் கரைகண்டவர். சாட்குண்யமூர்த்தியாகிய சிவனுக்கன்பர். அவரைக்கண்டு வணங்கிக்குருவாகக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் நகரஞ்சேர்ந்து மகுடாபிஷேகங் கொண்டவுடனே, உங்களுக்கு நான் வாக்குத்தத்தஞ் செய்தபடிக்கு அந்த ஐஞ்ஞூறு புரவியையும் அனுப்பிவிக்கிறேனென்று விடைபெற்றுச் சித்திராங்கதன் தன்னுலகஞ் சேர்ந்தான். தருமன் முதலான ஐவரும் குந்திதேவியும் சித்திராங்கதன் காட்டியவழியே போகிறபோது உற்கயமென்கிற நதி தோன்றிற்று. அந்நதியின் நாற்றிசைக்கரையும் போய்த் தேடித் தவுமியர் ஆசிர்மத்தைக் கண்டுபிடித்து அவரைத்தொழுது பலவாறு துதித்துத் தங்கள் ஊர் பெயராதிய வரலாற்றை எடுத்தோதி, ஓஸ்வாமி! அடியேங்களுக்குத் தாங்கள் குருவாயிருக்கப் பிரார்த்திக்கிறோம். அக்கருத்துக்கு இசையவேண்டும். என்று வேண்டத் தவுமியர் ஐவர்கருத்திற் கிசைந்து தக்ஷணம் பிரயாணப்பட்டு நடந்தார். ஐவரும் குருவாகிய தவுமியரை அழைத்துக்கொண்டு சூரியன் உதயமாக இரண்டு நாழிகை யிருக்கும்போது பாலசூரியர்களைப் போல் முகமலர்ந்து பாஞ்சாலதேசம்போய்ச் சேர்ந்தார்கள்.

சுயம்வரச்சருக்கம் முற்றிற்று.

ஒன்பதாவது,

திரௌபதி மாலையிட்ட சருக்கம்.

கண்ணன்துதி.

வேதமும்வேதம் விளம்புமெய்ப்பொருளு மப்பொருள்விதங்களும்பஞ்ச
பூதமும்புலனும் புலன்களின்பயனு மப்பயன்பொலிவுறநுகரு
ஞாதமுமுலகம் படைத்தளித்தழித்து ஞானமாயகிலமுநிறைவுற்
றாதியுநடுவு முடிவுமாய்நின்ற வாதியானடியிணைபணிவாம்.

கேளும் ஜெனமேஜெய மஹாராஜனே? பிருதிவு அப்பு - தேயு - வாயு - ஆகாய மென்னும் இப்பஞ்சபூதம்போல் விளங்குகின்ற ஐவரும், அப்பஞ்சபூதங்களையும் பெற்ற பராசத்திபோன்ற குந்தி தேவியு

ம், சதாசிவன்போல விளங்கும் தவுமியரும் பாஞ்சா
லநாட்டுக்கு வந்தவுடன் அந்நாட்டவர்களுக்குப் பா
ண்டுபுத்திரர்களாகிய ஐவரும் வந்தார்களென்று ப
றைசாற்றுவிப்பதுபோலச் சேவல்கள் ஒலிசெய்யச்
சூரியனுதயமானான். சூரியனுதயமாகவே பாண்டுபுத்
திரரைக் காணப்போகின்றோமாவென்கிற மயக்கத்தை
க்கொண்டிருந்த பாஞ்சாலன் இனிமேல் ஐவரைக்கண்
ட மாத்திரத்தில் அவனுக்குணடாகிய மயக்கம் எவ்
வாறுநீங்குமோ; அவ்வாறு இருள்நீங்கிற்று. அவன்மு
கம் எப்படிமலருமோ, அப்படிதாமரைமலர்கள் மலர்
ந்தன. அவன்கண்ணிலெவ்விதஆனந்தநீ ரரும்புமோ,
அவ்விதமாகத் தேன்துளித்தது. அந்நகரம் எத்தன்
மைமகிழ்ந்தொலிக்குமோ, அத்தன்மை பக்ஷிகளும் வி
லங்குகளும் மகிழ்வடைந் தொலித்தன. அருச்சுனன்
அழகைக்கண்ட கற்புடையமாதர் தங்கள்தங்கள் கண
வனைத் தழீஇக் களிகூர்வதுபோலச். சேவலும்பேடும்
சேர்ந்துமகிழ்ந்தன. இனித் திரௌபதை மாலையிட்
டவுடன் அரசர்சீறி போருக் கெழுந்தகாலத்து அ
ருச்சுனனொருவனே யெதிர்த்து வெற்றிபெற்று முழ
க்கும் சங்கத்தொனிபோலச் சங்கினம் சப்தித்தன. ஐ
வரும் காடுமலை முதலியவற்றில் இரவுமுழுதும் பாத
சாரியாக நடந்துவந்த வருத்தத்தை நீக்கும்பொருட்
டு வனதேவதை உபசாரஞ்செய்வதுபோல், சோலைக
ளெல்லாம் தளிர்களாகிய கையாலழைத்துக் கனிகளை
க்கொடுத்துத் தென்றற்காற்றை வீசி யுபசரித்தன.

நெய்தநிலத்துக்குரிய விளரிப்பாட்டை மருதநி
லத்துத் தடாகத்திலிருக்கும் தாமரைமலரில் வண்டி
னம்பாட, அப்பாடலைக்கேட்ட நெய்தநிலமாதர் எட்
டி அந்தத்தடாகத்தை நோக்க, இம்மாதர்களின் மு
கச்சந்திரனைக்கண்டு தாமரைமலர் முகிழ்ப்ப, அம்மா
தர் கோபித்துத் தங்கள்பாடலைத் திருடிவந்த வண்
டினத்தைச் சிறைச்சாலையிற்போட்டதுபோல் அவை
கள் குவிந்ததாமரைமலர்க்குளகப்பட்டுப் பாடாமலொ
டுங்க, மாதர்கள் வண்டினம்பாடக் காணுமென்று கா
துகொடுத்து நன்றாய்க்கேட்க, அவர்கள் காதணியாகி
ய சூரியனைக்கண்டுமுன்போல் தாமரைமலரெல்லாமல
ர, அதிலகப்பட்ட வண்டினங்களின்பேரில் அம்மாதர்
கிருபைவைத்துச் சிறைநீக்கிவிட்டதுபோல அவைக
ள்வெளிப்பட்டு ரீங்காரவோசைகாட்ட இந்த வேடிக்
கையையும்; நமது நாட்டிற் பிறந்த திரௌபதை நெடு
நாள் கன்னியாமாடத்தி லிருக்கிறாளாதலால் அவளுக்
கு முன்னமே நியமித்திருக்கிற அருச்சுனன்வந்து வி
வாவில் மணம்புரியவேண்டுமென்று வனதேவதை வ
யலிலிருக்கும் பங்கயமாகிய ஓமகுண்டத்தில் மாங்கனி
ரசமாகிய நெய்யைச்சொரிந்து புன்னைப்பூ வென்னும்
பொரியைச் சிந்திக் கிள்ளைகள் நல்ல வேதமந்திர
ங்களைச்சொல்ல, யாசகர்கள் கையேந்தி நிற்பதுபோ
ற் காந்தள்மல ரெதிரிற்றோன்ற, அவர்களுக்குச் சொர்
ணமாரி பொழிவதுபோற் கொன்றைகள் மலரைச்சொ
ரிய, இப்படி யாகஞ்செய்வதுபோற் றோன்றும் இந்த
வேடிக்கையையும் கண்டு வியப்படைந்தார்கள்.

ஒருதடாகத்தில் ஒருதாமரைமலர் மலர்ந்திருப்
பதைக்கண்டு அநேகம்வண்டுகள் அதனதுதேனை அ
ருந்தத் தாவி நெருங்கியபோது, ஒருவண்டு பறந்
தோடிவந்து அவ்வண்டுகளையெல்லாம் சிறகாலடித்
துத் துரத்தி அம்மலரின் தேனை அருந்தி மகிழ்வதை
ஐவருங்கண்டு, சுயம்வரத்திற்கு வந்த அரசர்களெல்
லாரும் ஏங்க நாமே அத்திரௌபதையை மணம்புரி
வோமென்பதற்கு இது நன்னிமித்தமென்று எண்ணி
நடந்தார்கள். அங்கொருகுளத்திற் பெரிய ஒரு மா
ங்கனிவிழ, அம்மாங்கனியை அந்தக்குளத்திலிருந்த ம
ச்சங்களெல்லாம் இச்சைகொண்டுசுற்ற, அதைக்கண்
ட ஒருவாளைமீன் பாய்ந்து அம்மச்சங்களை அடித்துத்
துரத்திவிட்டு அம்மாங்கனியைக் கவ்விக்கொண்டுபோ
யிற்று. அதனை ஐவர்கண்டு மகிழ்வடைந்து, நமது க
ருத்துக்கிசைந்த கன்னியைப் பெறுதற்கு இதுவுமோ
ர் நன்னிமித்தமென் றெண்ணி நடந்தார்கள். பரிமள
மிகுந்த நறுமலரணிந்து அளியினமூரன்று உறைதரு
சுகந்த அளகபாரத்தையுடைய பாஞ்சாலியின் மண
த்திற்கு உலகிலுள்ள அரசர்களும் வேதியர்களும் வ
ந்தனர்கள் நீங்களும் விரைவில் வாருங்களென்று தங்
களை அழைப்பதுபோற் குயிலினங்கூவ, நமது நாட்டு
க்குத் தலைமைபூண்ட பாஞ்சாலன் குமாரியாகிய தி
ரௌபதை அவன் கருத்தின்படி அருச்சுனனையே ம
ணம்புரிவள் வந்த அரசர்கள் நாணமுற்று ஒருவர்போ
னவழி ஒருவர்போகாமல் தனித்தனிப் பிரிந்தோடு
வர் இது உண்மையென்று வள்ளைப்பாட்டிற்சேர்த்து
க் கிள்ளைகள்பாட, மகரயாழ்போல் வண்டினமொலி
க்க, மிர்தங்கத்தைப்போல் மேகமுழங்க, மையலால்
மகிழ்ந்து மயில்வந்தாட, பூங்கொத்துகள்தோறும்பொ
றியளிகள் சப்திக்க, ஜலங்களிற் பக்ஷிகளொலிக்க, ஆ
ண்மிருகமும் பெண்மிருகமும் ஆலித்துக் காதலிக்க,
கற்பக விருக்ஷத்தில் வல்லிசாதக்கொடி படர்ந்திருப்
பதுபோல் மரங்கடோறும் பலவித புஷ்பக்கொடி ப
டர்ந்திருப்ப, இவைகளை யெல்லாங்கண்டு நயந்து சி
ங்கத்துக்கொப்பாகிய பராக்கிரமத்தையுடைய ஐவரு
ஞ் சிந்தைவியந்து பூஞ்சோலைகளைக் கடந்து பலிச்
சக்கிரவர்த்திக்கு முன் திருமால்கொண்ட வடிவைப்
போல அந்தரமட்டு மளாவிக் கோடிசூரியப்பிரகாசம்
போல் விளங்கும் இரத்தினசிகர கோபுரங்களோடு கூ
டி அண்டப் புறச்சுவர்போல விளங்குகின்ற மதில்க
ளையுடைய பாஞ்சாலநகரத்தைக் கண்டார்கள்.

அந்நகரில் மங்கலத்துக்குரிய மிர்தங்கமுதலா
கிய பலவாத்தியங்கள் முழக்கமும், இரதகஜதுரக ப
தாதி சேனைகளும், மன்னர் - மண்டலீகர் - பட்டவ
ர்த்தனர் - மகுடவர்த்தனர் - அர்த்தரதர் - மஹார
தர் முதலாகிய இராஜகூட்டங்களும், பிராமணர் - க்ஷ
த்திரியர் - வைசியர் - சூத்திரர் - முதலான ஈட்டங்

களும், மற்றமரபினரு முனிவர்களு நெருங்கியிருக்கிற வைபவங்களைக்கண்டு அதனுட்சென்றார்கள். அந்நகரமெப்படியிருந்ததென்றால்-யுகாந்தகாலத்தில் உயிர்களனைத்தையும் தனது கெற்பத்தில் வைத்துத் திருப்பாற்கடலில் ஆதிசேஷ சயனத்திற் பள்ளி கொண்டு யோகநித்திரைசெய்யும் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை ஒத்திருந்தது. அப்படிப்பட்ட பாஞ்சால நகரத்திற் பாண்டவரைவரும் வீதியிற் செல்லும்போது காதளவு பாய்ந்த விழியினையும், முல்லை மலரையொத்த முறுவலையும், கோவைக்கனிபோன்ற இதழையும், சந்திரனுக்கிணையான முகத்தையும், ஆரமுதலிய ஆபரணங்களையணிந்த பயோதரத்தையுமுடைய பாஞ்சாலிக்கு இன்றைய தினந்தான் மாலையிடுகிறது விரைவில் வாருங்கள் வாருங்களென்று அழைப்பதுபோல் தெருக்கடோறும் கட்டியிருக்கிற கொடியாடைகள் ஆடின. இவ்விநோதங்களோடு வீதிகடோறும் போட்டிருக்கிற விதானங்களையும் - அதின் சோபானங்களையும்-பூரணகும்பம் அமைத்திருக்கிற நிதானங்களையு நோக்கி மகிழ்ந்து, கடைவீதிகளைக் கண்டு வியப்படைந்து, அங்கங்கிருக்கும் பிரஜைகளையும் கண்ணுற்று நடந்தார்கள். இவ்வைவரும் எந்தவீதியிற்சென்று நோக்கினும் அங்கங்கு பிரஜைகள் நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் யிருக்க இடந்தேடி அந்நகர் முழுவதுஞ் சுற்றிப்பார்த்தார்கள். அப்போது பார்க்கவனென்கிற ஒருகுயவன் இந்த ஐவரையு நோக்கி, ஓ ஐயமீர்! நமஸ்காரம். என்வீட்டிலொரு சின்ன அறையிருக்கின்றது. அது உங்களுக்குப் போதுமானதா யிருந்தால் இருங்களென்றிசைத்தான். உடனே தருமராஜன் அவ்வீட்டைநோக்கிப்போதுமென்றுசொல்ல, குயவன் அதிலிருக்கிறசாமான்களை வெளியி லெடுத்துக்கொண்டு அவ்வீட்டைச் சுத்திசெய்து கொடுத்தான். ஐவரும் குந்திதேவியை அவ்வீட்டிலிருக்கச்சொல்லி, அத்தாயைப்பணிந்து விடைபெற்றுத் தவமுயரோடு இராஜசபைக்குவந்து, பிராமணருக்குச் செய்திருக்கிற சிங்கார மண்டபங்களில் வேதியரோடு தாங்களும் கலந்திருந்தார்கள்.

இப்பால் திரௌபதியின் செயல்களைச் சொல்லுகிறேன் கேளும் மகாராஜனே. இப்பாஞ்சாலதேசத் தரசனாகிய துருபத மகாராஜன் துரோணாச் சாரியைச் சபையிற் பங்கப்படுத்தினதையும், துரோணாசாரி அருச்சுனனால் துருபதனைப் பிடித்துவந்து தன் சபையில் அவமானஞ் செய்ததையும், அதன் மேல் துருபதன் துரோணரைக்கொல்ல ஒரு ஆணும் தன்னைவெற்றிகொண்ட அருச்சுனன் கருத்துமகிழ ஒரு பெண்ணும் பெறுகிறேனென்று சபதம் செய்ததையும், அச்சபதப்படி பெரியோர்களை அடுத்து மக்களைப்பெற்றதையும் தாதியரால் திரௌபதை கேள்விப்பட்டு உள்ளம்பூரித்து அருச்சுனனுடைய வல்லமை அழகு குணமுதலியவற்றைக் கேட்டறிந்து மகிழ்ச்சியாகிய அமுர்தத்தைப் பானஞ் செய்து நாளொருமேனி பொழுதொருவண்ணமாக வளர்ந்து வருகிறகாலத்தில் ; ஐவர் அரக்குமாளிகை யிலிறந்துவிட்டார்களென்கிற சேதி உலகப்பிரசித்தமாகச் சொல்லிக்கொள்வதை உயிர்ப்பாங்கிகளாலறிந்து துக்கசாகரத்தில் மூழ்கி வருத்தப்பட்டு, தன்தந்தையாகிய துருபதன் ஜோசியர்-உலூகமாமுனி-வேதவியாசர்-இவர்களால் ஐவருமுயிரோடிருக்கிறாரென்று தெளிந்ததைப் பின்புணர்ந்து, ஆதியில் நியமித்த புருஷன் நமக்குச்சித்திப்பான் இதற்கொரு சந்தேகமில்லை யென்கிற தீர்மானத்தை உள்ளத்திற்கொண்டிருந்தாலும் நமக்குநியமித்த புருஷனைக் கண்ணுற்காண்ப தெக்காலமென்கிற ஏக்கத்தைக்கொண்டு அல்லும் பகலும் அதுவேநினைப்பாக உணவுமுதலியவற்றிற் சிரத்தை இல்லாதவளாயிருந்தாள். ஊழியஞ்செய்கிற தாதியர்களாலும் அன்னையர்களாலும் கிஞ்சித்து மனச்சஞ்சலந்தீர்ந்து அடிக்கடி அர்ச்சுனனுடைய பராக்கிரமத்தையும் அழகையும் கேட்டு மற்றச்சஞ்சலத்தையும் நீக்கினாள்.

அப்போது தன்தந்தை சுயம்வரஞ் சாட்டி இலக்ஷியக்குறியைவைத்து ஐம்பத்தாறுதேசத் தரசர்களுக்கும் மணவோலை அனுப்பிவைத்ததைக் கேள்வியுற்று அருச்சுனன் வருவானென்கிற களிப்பையும், இந்தமணவோலை ஐவர்க்குச் சேருமோ சேராதோ என்கிற சந்தேகத்தினை உடையவளாய் நல்லது அந்தவோலையைப் பார்வையிட்ட அவ்வைவர்கள் ஒருவேளை நம்மைலக்ஷியப்படுத்தாமல் எங்கேவராதிருக்கிறார்களோ? அல்லது லக்ஷியப்படுத்தியும் நாம் வருந்துவது போற் காட்டில் ஒருஸ்திரீயைக் கொண்டுபோய் வருத்துவது தகுதியல்லவென்று நினைத்து வாரா திருக்கின்றார்களோ? அப்படி வாராமற்போனால் இந்தக் கல்யாண மண்டபம் என்னபாடுபடுமென்கிற வருத்தத்தையும் உட்கொண்டு தாமரையிலையிற் சலம்போல் தத்தளித்திருக்கிற வேளையில்; துருபதராஜன் தாதிகளை அழைத்து என்புத்திரியை ஸ்நானஞ் செய்வித்து அலங்கரித்து அழைத்து வாருங்களென்று கட்டளையிட்டான். சேடியர் உடனே திரௌபதியம்ம னிடத்துக்கு ஓடிவந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஓ பொறுமைசாலி! உமது தந்தையாகிய மஹாராஜன் உங்களுக்கு ஸ்நானஞ்செய்வித்தலங்கரித்து அழைத்துவரக் கட்டளை யிட்டார். தாங்கள் திருமஞ்சனச்சாலைக் கெழுந்தருள வேண்டுமென்று செப்பினார்கள். அம்மன் தாதிகளைக் கண்ணுற்று, ஓ தாதியரே ! என்கருத்தைச்சொல்லுகிறேன் கேளுங்கள். நான் பாண்டுபுத்திரனுக்கு மாலையிடுவேனேயன்றி, மற்றை அரசர்களுக்கு மாலையிடேன். ஐவர் வாராதிருந்தால் நான் மற்றை அரசர்களை விரும்பாமல், எனக்குத் தாயாகிய அக்கினிதேவி இடத்துப் புகுவேன். இதுவே சத்தியம். இதைவிட்டு நீங்களாவது அல்லது என்தந்

தையாவது வேறொரு நினைப்பைக்கொண்டால், எனக்குச்சம்மதமாக இராது. ஆகையால் நீங்கள் செய்யவேண்டிய வேலையெதுவோ, அந்தவேலையிற் சாக்கிரதையாக இருந்தால் வருகிறேனென்றாள்.

திரௌபதி சுயம்வரமண்டபமடைதல்.

அதற்குத் தாதியர்வணங்கி, ஓ எங்கள் குலதெய்வமே! ஏதோ சிலகாரியம் இருக்கிறதாகவும், அதன்மேல் தங்கள்கருத்துக்கு இழிவுவரப்போகின்றதென்றும் எண்ணங்கொண்டு எங்களுக்குப் புத்திசொல்லுகிறீர். நீங்கள் அப்படிச் சொல்லவேண்டாம். உங்கள் கருத்துக்கிசைந்த கணவனுக்கு மாலையிடுகிறதென்கிற தீர்மானத்தை யுட்கொண்டிருக்கிறீர். இராஜன்கருத் தஃதல்ல. யாவர்க்கும் அசாத்தியமா யிருக்கிற வில்லம்புடன் இலக்ஷயக்குறிவைத்து, அந்தவில்வளைத்து அம்பைத்தொடுத்துஇலக்ஷயத்தைவிழச்செய்தவன்எவனோ? அவனுக்கு என்மகள் மாலையிடுவ ளென்று தெரிவித்திருக்கிறார். ஆனால் - அந்தவில்முதலியவை அருச்சுனனுக்குச் சாத்திய மாகியும், மற்றையர்க்கு அசாத்தியமாகியு மிருக்கின்றன. ஆகையால் - ஐவர் எவ்வுருவங்கொண் டிருந்தாலும் அவ்வுருவத்தோடு சபைக்கு வருவார்கள். அவர்களில் அருச்சுனன் வில்லைவளைத்து அம்புதொடுத்து இலக்ஷயத்தை விழச்செய்து உமது கைமாலைக் குரியவனுவான். ஆதலால் தாங்கள் சஞ்சலப்படாமல் எழுந்துவாரும் என்றுகூற அம்மன் மகிழ்வடைந்து எழுந்து மஞ்சனச்சாலைக்கு வர யத்தனித்தாள். வருகிறபோது நன்னிமித்தங்கள் தோன்றினதுமன்றி இடத்தோளும் இடக்கண்ணும் துடித்தன. இக்குறி நற்குறியென் றுணர்ந்து மகா சந்தோஷத்துடன் அம்மஞ்சனச் சாலைக்கு வந்தாள். உடனேதாதியர் சிரோரத்தினங்களால் இழைத்திருக்கின்ற ஓராதனத்தி லெழச்செய்து, அங்கு வந்திருக்கின்ற இராஜமரபைச் சேர்ந்த மாங்கலியஸ்திரீகளுக்கெல்லாம் வெவ்வேறு கனிவர்க்கங்களையும் வெள்ளடைப் பாகுகளையும் தங்கள் கைமிதப்பத்தந்து, அவர்கள்யாவரும் புடைசூழ்ந்து மங்கலவாழ்த்துகூறி உபசரித்து நலங்கிட்டானபின்பு திருமஞ்சனமாட்டயத்தனித்தவர்களாய் "புழுகுசட்டங் கோட்டமா ரியக்கோட்டநாகப்-பூமுத்தக்காசுசயி லேகம்விலாமிச்சம், பழுதிலிரு வேரிமலை யிருவேரி மாஞ்சில் - பச்சிலைகச் சோலமதி மதுரந்தக்கோலம், வழைமலர்நன் னரிதீம் பூவெண்ணெய்கண்டில்- வகுளப்பூத் தாவரிசியேலஞ்சாதிக்காய், தழைசரளமிலவங்க நாகணமஞ்சட்டி - சண்பகமொட் டரத்தைநறும் பிசின்றகரங்குக்குல். கூறியவோமலிகையெண் ணன்கொடுகத்தூரி-குங்குமங்கர்ப்பூரமகில் சந்தனமைவிளையும்,வீறியபான்மாநான்கு திரிபலைமாநாவன்-மிக்ககருங்காலியெனுந்துவர்பத்து நல்லோர், தேறுவெள்ளி லோத்திரப்பூம் பொருக்கனைத்த சாந்துஞ் - சேர்த்தநறு நெய்பூசித் திமிர்ந்தருவிபோல, வூறியமா மதக்களிற்றுப்பிடரின்வருகங்கை - யுவந்தாட்டித் திருமேனி யொற்றுடைபுரிந்தார்" என்கிற சாத்திரவிதிப்படி புழுகுசட்டம் - கோட்டம் - ஆரியக்கோட்டம் - நாகப்பூ - முத்தக்காசு-சயிலேகம்-விலாமிச்சம்-இருவேரி-மாஞ்சில்- மலையிருவேரி - பச்சிலை - கச்சோலம் - அதிமதுரம் - தக்கோலம் - வாழைப்பூ - நன்னாரிப்பூ - கண்டில்-வெண்ணெய்-மகிழம்பூ - தாவரிசி - ஏவம் - சாதிக்காய் - வெண்குங்கிலியம் - இலவங்கம் - நாகணம்-மஞ்சட்டி-சண்பகமொக்கு - அரத்தை - சாம்பிராணி-தகரம் - கருங்குங்கிலியம் - வெட்டிவேர்-என்கிறமுப்பத்திரண்டு பொருள்களோடு, கஸ்தூரி - குங்குமம் - கர்ப்பூரம் - அகில்- சந்தனம்-என்கிற ஐவகைவாசனைத்திரவியங்களும், நாவல் - கடுக்காய் - நெல்லிக்காய் - தான்றிக்காய்-ஆல் - அரசு-அத்தி - இத்தி-கோளைக்கிழங்கு - மாந்தளிர் - என்கிற பத்துவகைத்துவர்ப்புச் சரக்குகளையுஞ் சேர்த்து, வெள்ளிலோத்திரப் பட்டையையும் அரைத்த சந்தன வண்டிலையுங் கலந்து, மிக்க பக்குவத்தோடு காய்ச்சப்பட்டிருக்கின்ற பரிமளமிகுந்த தயிலத்தைக் கூந்தலிற்றிமிர்ந்து, பின்னல்களை மெல்லெனச் சிக்கறுத்து, யானையின் பிடரியிற் கொணர்ந்து வந்த பலகங்காஜலத்தினாலும்-வேதவேதியர்களால் மந்திராவாகனஞ்செய்யப்பட்டு வாசனையூட்டியிருக்கின்ற பூரணகலச கங்காஜலத்தினாலும் திருமஞ்சனமாட்டி, பனியைப்போன்ற மெல்லிய ஒற்றுடையினால் ஈரம்புலர்த்தி, இழையாயிரம்பொன்பெற்ற இந்திரவர்ணப் பட்டாடையணிந்து, அலங்காரமண்டபத்தி லழைத்து வந்து பொற்பீடத்தி லிருத்தி, அளகத்தி லீரமில்லாதிருக்கச் சாம்பிராணிப்புகையோடு அகிற்புகையும்புகட்டி,இருதோளிலு மதன்துவசமெழுதி, கூர்வேல்விழிக்கு மையிட்டு, இருபுருவங்களையுந் திருத்தி, தனத்துக்கு மேலுங் கழுத்துக்குக் கிழுமான விடத்தில் ஐந்துகணைகளையும் நாட்டினபடி மதன்வில்லெழுதி, தனத்திற்குச் சந்தனம்-புழுகு-கஸ்தூரி-கர்பூரம்-சவ்வாது-குங்குமம் - இவைகளணிந்து, கூந்தலுக்கு சம்பங்கிநெய்யிட்டுச் சிப்பினால்வாரி, மேகத்தின்மத்தியில் மீன்தோன்றினதுபோற் பாவட்டையெடுத்து, உயர்ந்த ரத்தினங்களையழுத்திய சடைப்பில்லையும் பிறைப்பில்லையும்வைத்துப்பின்னிய ஜடைக்குக் குச்சுகுப்பியணிந்து,கிளியைப்போலவும்-மயிலைப்போலவும் - அன்னத்தைப்போலவும் - புறாவைப்போலவும்-தாழம்பூவைப்போலவும்-பசும்பொன்னாற்செய்து இரத்தினங்களையழுத்திய பலபூஷணங்களைப் பின்குழலில் முடித்து, சந்திரப்பிரபை - சூரியப்பிரபை - முன்கொண்டைப்பூ-சிரபூஷணம்-துராய்-முதலியதுந் தலைக்கணிந்து, சுட்டி - முகவீரபட்டம் - மூக்குப்பொட்டு-மூக்குத்தொங்கட்டம் - நத்து - முதலாகிய பணியை நெற்றிலும் நாசியிலு மாட்டி, குண்டலம் - கத்திரிப்பூ-கன்னப்பூ-ஒன்னப்பூ - கொப்பு - முருகு - நாளைமுட்டையையொத்த நீரோட்ட நிறைந்த ஆணிமுத்

துச்கோவையாலாகிய மயிர்மாட்டி—இவைமுதலிய அணிகளைச் செவியிலணிந்து, உட்கழுத்தின்மணி-உயந்த முத்துமாலை-மோகனமாலை-பஞ்சரத்தினமாலை-நவரத்தினமாலை-பிறைவடம் - கடலைமணித்தாழ்வடம்-மின்னூல் - கண்டசரம் — உத்தரசஞ்சம் - இவைமுதலானவைகளைக் கச்சணிந்த குயாசலத்தை மறைக்க மார்பிலணிந்து, வாகுவலயம்-கேயூரம்-கடகம்-கங்கணம்-அங்குலிக முதலிய பூஷணங்களைத் தோளிலும்-முன்கையிலும் - அகங்கையிலும் - விரல்களிலுந்திருத்தி, இடைக்கு (ங்கூ) மணிக்கோவையையுடைய மேகலாபரணங்கட்டி, மூகப்பில் மாணிக்கம்பதித்த ஒட்டியாணத்தைப்பூட்டி, பாதகடகம்- தண்டை—நூபுரம்-பாதசர முதலிய காலணிநிறைத்து, கால்விரல்களுக்கு மீன்போலு மயில்போலும் உருவஞ்செய்திருக்கிற பீலியென்னுமோதிரங்களைஇட்டு, கூந்தற்சலடக்குமல்லிகை-முல்லை-சண்பகம்-சம்பங்கிமுதலியபரிமளமிகுந்த நறுமலர்மாலைகளையணிந்து, பாதத்துக்குச் செம்பஞ்சூட்டி, இவ்வாறுசலக அலங்காரங்களுஞ் செய்தான பின்பு தெய்வத்தை வாழ்த்தித் திருநீட்டுத் திரிஷ்டி கழிய நீராஞ்சனமுதலிய ஆர்த்தியெடுத்து அரசன் உத்தரவுக் கெதிர்பார்த்துக்கொண்டு அம்மனை அலங்காரமண்டபத்தில் வைத்திருந்தார்கள்.

அரசன் வேதவேதியர்கள் நியமித்திருக்கிற முகூர்த்தவேளையிற் சிலதாதிகளை அனுப்பித் திரௌபதி அம்மனை அழைத்துவரக் கட்டளையிட்டான். அத்தாதியர்கள் வந்து தாய் மாருக்கும் அவ்வம்மனுக்கும் தெரிவித்தார்கள். உடனே அத்தாய்மார்கள் புடைசூழத் திரௌபதியம்மன் எழுந்து, முரசு - பேரிகை - டமாரம் - நாகசுரம் - காகளம் - பெய்க்காளம்-துத்தாரி - சின்னம் - பேரியாழ் - சகோடயாழ் - செங்கோட்டியாழ் - மகரயாழ்- முதலிய வாச்சியமுழங்க, விர்த்தவேதியர் பூரணகலச மெடுத்துச்செல்ல, மங்கலஸ்திரீகள் மங்களம்பாட, கிளி - நாகணவாய்ப்பக்ஷி - கழங்கு-அம்மனை - பலவிதப் பிரதிமெய்-வெள்ளிலை - அடைக்காய் - மான் - புழுகுபூனை - சவ்வாதுபூனை - சவுரிமிருகம் - அன்னம் - மயில் - குயில்-சிறுமணிக்குன்று-ஆடற்கருவிகள் முதலியவற்றைத் தாதியரெடுத்துப் புடைசூழ்ந்துவர, முத்துக்குடை சுற்றிலுநெருங்க, ஆலவட்டம்போட, வெண்சாமரை வீச, அமரர்களோடு பல அரசர்மனங்களும் பின்செல்ல, அவ்வவர்கள் கண்களாகிய வண்டுகள் ஸ்திரீகள்முகமாகிய கமலத்தில்மொய்க்க, அனிச்சமலரும் அன்னத்தின்றூவியும் பரப்பியவழியில் நடந்துவருகின்றாள். அப்போது பாஞ்சாலிக்குரிய கணவன்சபையில்வந்திருக்கிறான் நீங்களேன்இலவுகாத்தகிளிபோல் காத்திருக்கின்றீர்கள் உங்கள்நகரத்துக்குச் செல்லுங்களென்று பூமிதேவிவாய்விட்டுச்சொல்லுவதுபோலக் காலிலணிந்த நூபுரங்கள் கலீர்கலீரென்று சப்திக்கவும், பாண்டுபுத்திரரை இந்தச்சுயம்வரச் சபையிற் காணலாமென்று கருதிச் சந்திரன்வந்தாற்போல் திருமுகமண்டலம் பிரகாசிக்கவும், காமனரசும் காவலர் பரிசும் சிறப்புற்றோங்கவும், அரசர்களாகிய மச்சங்கள் தன்கண்வலையிலகப்பட வீசிச் சுயம்வரமண்டபத்தில் மகிழ்வோடு வந்துதோன்றி இரத்தினங்களிழைத்தியற்றிய பொற்பீடத்தில் இனிதுவீற்றிருந்தாள்.

இவ்வாறு திரௌபதி அம்மன் அச்சுவயம்வா மண்டபத்திற் கொலுவீற்றிருந்த தோற்றம் எவ்வாறிருந்ததென்னில் - ஓமத்தீயிற் பிறந்தவளென்றெவ்வளவேனும் கருதாமற் காதல்கொண்டு காமத்தீயினல்வருத்துமவர்களின்னும்பாவத்தீயினுல்வருந்திக் கனவருத்தப்பட அவ்வோமத்தீயக்குப் பின்னும்விறகிட்டுவிர்த்திசெய்வதுபோலிருந்தது.அன்றியும்- மேகத்தின்மத்தியிற்றோன்றிய சூரியனைப்போல் ஒளிமழுங்கிய பாண்டுபுத்திரரைவரும் வேதியரோடு வேதியராக அச்சுயம்வர மண்டபத்தில் இருந்தபடியால்,அவ்வம்மனுக்குப் பிராரத்துவ சம்பந்தத்தால் தனக்குத்தானே இருதயகமலமலர்ந்ததுமன்றிக் கண்ணாகிய கமலமு- முகமாகியகமலமுமலர்ந்து சபையை ஒருதரம் முற்றும் உய்த்துநோக்கினாள். அதுகாலையிற் பாஞ்சாலன் தன்புத்திரனாகிய துஷ்டத்தூய்மனை அழைத்து, அப்பாமகனே! நமதுதிரௌபதிக்காக அநேகவரசர்கள் வந்து காத்திருக்கிறார்கள்.நீசென்று அவர்கட்கெல்லாம் இலக்ஷயத்தின் இலக்கணத்தைப் புலப்படப் புகன்றுவாவென்று விடுத்தான். துஷ்டத்தூய்மன் அக்கட்டளையின்படி. சகலவேதியர்களும் புடைசூழக் கொலுவீற்றிருக்கும் அத்திரௌபதியம்மன் அவைக்கணின்று, சகல அரசர்களுங்கேழ்க்கும்படி யாகஇதனைச்சொல்லுகிறான் "சிலையிதுசிலீமுகங்க ளிவைகடுந் திரிகைவேகத், திலைமுகத்துழலுகின்ற வெந்திரத் திகிரிநாப்ப, ணிலையிலாவிலக்குமஃதே நெஞ்சுற யாவனெய்தான், கலைவலீரவற்கேயந்தக் கன்னியுமுரியளாமால்" என்றால் - ஓ சகலகலைகளிலும் வல்ல அரசர்களே! இதோயிருக்கிற வில்லைவளைத்து இந்த அம்புப்புட்டிலைத் தாங்கிக் கிடாரசலத்திற் றோன்றும் மூன்றுதுளைக் குறியைப்பார்த்து அந்தரத்திற்சுழலும் சக்கரத்தின் முனைவழியிற் கணைகளைப்போக்கி முன்னம் மச்சத்தை யறுத்துப் பின்பு சக்கரத்தைக்கொய்து இரண்டையும் பூமியில்விழாமற் கணைகளால் எத்தி அவைகளைக் கைக்கொண்டு வருபவர்யாரோ? அவர்களுக்கு என்தங்கையாகிய இக்கன்னிகை மாலையிடுவளென்று வசனித்தான்.

இச்சொல்லைக்கேட்ட அரசர்கள் இடியைக்கேட்டநாகம் எவ்வாறு நடுங்குமோ அவ்வாறு நடுக்கங்கொண்டு பெருமூச்செறிந்தவர்களாய், அவருள் அதிக காதல்கொண்டுவந்த அரசர்களிற்சிலர் சித்திரப்பாவைபோற்சற்றுமசைவில்லாமற் பிரமைகொண்டிருந்தார்கள். பலர் அடடா!! பாஞ்சாலியின் கரும்புருவமாகிய வில்லையும் கண்ணாகிய அம்பையுங்கொண்டு மா

(REGISTERED-COPY-RIGHT.)

(ஆதிபாவம்-கருக-வது-பக்கம்.)

ருமல் நம்மோடெதிர்த்துப் போரிட்டுவருகிற மாரப்பயலும் மச்சக்கொடியும் இலச்சைகெட்டுவிழயுக்தஞ்செய்து வெற்றியடையலாமென் றெண்ணிவந்த நம்மைப்பார்த்து, இந்தத் துஷ்டத்துய்மன் வேறொரு வில்லையும் அம்புப்புட்டிலையும் காண்பித்து மாறுபட்ட மச்சத்தைக்காட்டி விழச்செய்யுங்களென்றனே: அவன்சொற்படி வில்லை வளைத்து நாணி ஏறிட்டுக் கணையைத் தொடுத்தாலும் அந்தமச்சக்குறியை எய்வதற்கு நம்மால் முடியாதே: இதற்கென்ன செய்கிறதென்று ஏங்கி நாணினார்கள். சிலர்வில்லைப்பார்த்து நடுங்கினார்கள். பலர்பல்லைக்காட்டி யொடுங்கினார்கள். சிலர் இவ்வில்லைவளைப்பதற்கு நம்மால் முடியா தென்றார்கள். பலர் சக்கரம்சுழலும் நேர்ப்பைக்கண்டு, நமதெண்ணம் நிறைவேறுவ தில்லையென்று தீர்மானித்தார்கள். சிலர் நிராசைகொண்டு இந்த வில்லைவளைத்து மச்சத்தை விழச்செய்யும் அரசன் எவனோ அவனைக்காண்போமென்று கருதி யிருந்தார்கள். இவ்வாறு வந்த அரசர்களெல்லாம் தேனில்விழுந்த ஈயைப்போல் மயங்கி ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்திருக்கிற தருணத்தில், திரௌபதை அம்மனுக்குச் சுயம்வரமண்டபத்தில் வந்திருக்கிற அரசர்களின்பெயரை யெடுத்துச்சொல்லத் தாதிகள் யத்தனித்துச் சொல்லுவதானார்கள்.

திரௌபதிக்குத்தாதிகள் அவ்வவ்வரசர்கள் ஊர் பெயர்முதலிய சிறப்புகளைக் கூறிக்காண்பித்தல்.

ஓ-வண்டினம் தொடர்ந்ததுபோன்றும்-கருமைகொண் டிழைத்ததுபோன்றும் - மேகங்கள் கண்படுத்திருப்பனபோன்றும் - பசிய சைவலத்தைப் பொன்றுமிருந்து, கண்டவர்கள் வியப்பெய்த நீண்டு - பரிமளித்து - நெய்த்து - இருண்டு - தாழ்ந்து - பூங்கொத்துக்களைப் பொருந்தி விளங்குகின்ற கூந்தலினையுடைய கோதாய்! இதோ நவரத்தினங்களையழுத்திய சிங்காதனத்தில் வீற்றிருக்கும் இவ்வரசன் சந்திரவமிசசிகாமணி. திரிதராஷ்டிரனுக்குச் சிரேஷ்டபுத்திரர். எல்லா அரசர்களும் பணியவிளங்கும் மஹாமண்டலேஸ்வர மகுடாதிபர். சத்துருக்களுடைய கீர்த்தியையும் பிராணனையும் தனது கதாயுத மென்னுஞ்சர்பத்துக்கு இரையாக்கி வீரலட்மிக்குச் சிங்காசனமாக விளங்கும் புஜங்களையுயைவர். தனது தேசத்துள்ள குடிபடைகளின்கூட்டமாகிய உத்தியானவனத்தைக்காக்கும் வித்தியாக்ஞான விதரணர். ஒன்றுபத்தாகப் பொருளை வளர்விக்குந் தனரேகை, பாக்கியமுடையவர். இவரது அழகையும் லக்ஷணங்களையும் உன்கண்களே உனக்கு அறிவிக்கின்றன. இவர்தான் துரியோதனனென்கிற பெயரினால் விளங்கிக்கொண்டிருக்கின்ற துரைராஜ ரம்மா.

ஓ-நவக்கிரக சக்கரரேகை - சிமந்தரேகை-வடித்தெடுத்த முத்தலைச் சூலரேகை- முதலியவைகள் வாய்ந்து, மூவிர லகலமாய் அர்த்தசந்திர வடிவங்கொண்டு பிரகாசிக்கின்ற நுதலினையுடைய நங்காய்! இந்தத் துரியோதனமகாராஜனுடைய பக்கத்திலே பலிச்சக்கிரவர்த்திக் கருகிலிருக்கும் அசுரர்களைப்போல வீற்றிருக்கின்ற தொண்ணூற் றொன்பதுபேரும் தம்பிமார்கள். உருவத்தினாலுங் குணங்களினாலும் அந்தத் துரியோதன மஹாராஜருக்கே சமமானவர்கள். மஹாவீரர். அண்ணனுடைய சொற்படி நடப்பவர்களம்மா.

ஓ-வள்ளைத்தண்டினைப்போல நீட்சியுற்று, மலரிதழினையொத்து, நற்சுழிகளை யுடையனவாய், கண்டவர்கள் உள்ளங் களித்து விளையாடப் பெறுகின்ற பொன்னூசலென்றுசொல்லும்படியாக விளங்குஞ்செவிகளையுடைய செல்வி! இவர்களுள் அம்மஹாராஜனுக்கு அருகில் வீற்றிருந்து வணங்கிக்கொண்டிருக்கிறவர் துரியொதனராஜனுக்கு இளவரசாகியதம்பி. துச்சாதன னென்று பேர்பெற்றவர். கொடுமையிலும் வஞ்சனையிலும் அவ்வண்ணனுக்கு அண்ண னம்மா.

ஓ-இரதிதேவியாலும் மன்மதனாலும் சந்திரனாகிய குடையின்கண்ணே வைத்த அவர்கள்வில்லிணையையொத்து விளங்கும் இரு புருவங்களையுடைய பொன்னே! இதோ துரியோதனனுக்குப் பக்கத்தி லிருந்து பார்க்கிறவர் காந்தாரதேசத்து மன்னவனாகிய சௌபலமஹாராஜாவின் குமாரர். சகுனியென்றுபெயருடையவர். இத்துரியோதனனுக்கு நல்லம்மான். வஞ்சனைச்சூதாடுவதில் இவர்க்கிணையாய் எவர்களையுஞ்சொல்லப்படா தம்மா.

ஓ-தெளிந்த நீலமணிபோலச் சிறப்புறக்கறுத்து வெண்மையொளி கொண்டு, கடையிற் செவ்வரிபரந்து, நெருங்கிய கருமைவாய்ந்த மெல்லிய ரோமங்களைப்பொருந்தி விளங்குகின்ற நீண்டவிழிகளையுடைய நல்லாய்! இவர்பக்கத்தில் துரியோதனனுக்கு எதிரிற் சீரிய சிங்கம்போற் கம்பீரவீரியமாக நிமிர்ந்து நோக்குகின்றாரோ: அவர் கர்னனென்றுபேர்பெற்றவர். காளபிருட்டமென்கிற வில்லைக்கைக்கொண்டு சரமாரிபோழியுங் காளமேகம் போன்றவர், கொடியவறுமையால் வருந்துவோர்க்குக் கற்பகத்தருவனையவர். சவுரியத்திலுஞ் சரசத்திலும் இணையில்லாதவர். பரசுராமரிடத்தில் அஸ்திரவித்தை கற்றவர். சத்திய சந்தனர். மஹாதேஜசுடையவர். தேகத்தோடு பிறந்த கவசகுண்டலங்களுடையவர். இவர் சூதகுமாரரென்று சொல்லப்படுகிறார். ஆகிலும் பெரியோர்கள் சூரியவரப்பிரசாதரென்று இரகசியமாய்ச் சொல்லிக்கொள்ளுகிறார்களம்மா.

ஓ-வசந்தகாலத்திற் குரிய மன்மதனானவன் தன்னழகு நோக்குதற்கு நான்முகனால் உண்டாக்கப்பட்ட கண்ணாடிகளோ, அல்லது கண்களாகியவாள்களை

த் தீட்டுதற்பொருட்டுத் தங்கிய சாணைக் கற்களின் படிவமோ, என்று சொல்லத்தக்கதாய் விளங்குங் கபோலங்களையுடைய காந்தா ! இவருக்கருகில் ஒறுத்த தேகமும் நரைத்தசிரசுமாக யாகவேதிகையில் அக்கினிபோலே விளங்காநின்ற மகாபுருஷர் துரோணாசாரியரென்று மூவுலகுமேறிய நாமதேய முடையவர். சாதியைப்பற்றிய பிராமணத் தன்மையினாலும், தொழிலைப்பற்றிய க்ஷத்திரியத்தன்மையினாலும், நரசிங்கம் போல விசித்திரமான தேகத்தை யுடையவர். சாங்கோபாங்கமாக வேதங்களுலாவும் பூம்பொழில் போன்றவர். அஸ்திரவித்தியாமகிமையே இவ்வுருவங்கொண்டவதரித்ததென் றுரைக்கத்தக்கவர். தபோபலக் கடலாகியவர். பரத்துவாசகோத்திர சிகாமணி. கவுரவருக்கும்பாண்டவருக்கும் தனுர்வேத ஆசாரியரம்மா.

ஓ-துளைகள் சிறுத்து, இருபக்கங்களுஞ் சற்றுயர்ந்து, எள்ளின் மலரையொத்து, இரண்டு மூன்றுதரம் அதிசயமுற மெல்லெனத் தும்மலன்றிக் கல்லெனப் பலகாற்றும்முதலில்லாத நாசியினையுடைய நாரீ! இதோ இவர்பக்கத்தில் அலங்காரமாக விளங்கிக்கொண்டிருக்கிறவர் இவருடைய குமாரர், அஸ்வத்தாமரென்னும் பெயருடையவர். சாக்ஷாத்பரமசிவனுடைய அம்சத்தினாற் பிறந்தவர். மகாபல பராக்கிரமசாலி. சகல சாஸ்திரங்களுங்கற்றவர். அஸ்திர சாமர்த்தியத்திற் பிதாவுக்குக் குறையாதவரம்மா.

ஓ-மயிலிறகினடிகளையும்-வெளுத்த தாளங்களையும் ஒத்து, முத்துக்களைப் பவளக் கிண்ணத்தினுள்ளே கோத்தல் செய்து சேர்க்கப்பட்ட கோவையைப் போன்ற தந்த பந்திகளையுடைய தையால் ! அதோ கறுத்தபட்டுடுத்து வெளுத்த திருமேனியுடனே இருண்ட கானகத்தா லிடையிற்சூழப்பட்ட கைலாசபர்வதம்போல் விளங்கிக்கொண் டிருக்கிற மகானுபாவர் யதுகுலமாகிய கடலுக்குப் பூரணசந்திரன் போன்றவர். பலராமனென்கிற திருநாம முடையவர். வசுதேவனென்னும் மகாராஜனுக்கும் உரோகணிதேவியாருக்கும் உற்பவித்தவர். வடிவுகொண்டபராக்கிரமமென்று சொல்லத்தகுந்தவர். யமுனை என்னு மகாநதியைக் கலப்பையினால் தன்னருகிலிழுத்த வலிமையுள்ளவர். பிரலம்பாசுரனென்னும் பஞ்சுக்குச் சுழற்காற்றுடன் கூடிய நெருப்பானவர். மகாவிஷ்ணுவினுடைய சங்கிர்ஷணம் சத்தால் அவதரித்தவர். ஆதிசேஷாம்சனென்றும் சில மஹாத்துமாக்க ளுரைக்கின்றார்கள். ஜராசந்தனென்னு மகாவீரனை யுத்தத்தில் உயிரோடுபிடித்துத் தயையினாலே மறுபடியும் விட்டு விட்டவர். வருணதேவனால் அனுப்பப்பட்ட வாருணீதேவியானவள் இவருக்கு வேண்டியபோது மதுவைப் பெருக்கிக்கொண் டிருக்கிறாள். இவருடைய சரித்திரமும் மகிமையும் பரிசுத்தமும் விசேஷமாகிய தம்மா.

ஓ-மத்தியில் ரேகையாழாது, மதரறக்கருகாது, இடைவிட்டிராது, மேலுங்கீழுமொத்து, சிவந்த அல்லிமலரையும் பவளத் துண்டையும் வெற்றிகொண்டு சிறப்பினையடைந்த வாயினையுடைய வஞ்சி! இவரோடுகூட ஓராசனத்தில் வீற்றிருக்கும் நீலமணியினுண்ணிறத்தைக் கொள்ளைகொண்ட திருமேனியும், காலையில் மலர்ந்த செந்தாமரையைக் காய்ந்துவிளங்கிய கரதலமும், சிறந்த செவ்வரிகள்மலிந்த சுந்திர நேத்திரமுமுடைய அப்புருஷசிகாமணியானவர் இவருக்குத் தம்பி. ஸ்ரீகிருஷ்ணனென்று திருநாமஞ்சூடியவர். தேவகிதேவியின் வயிறாகிய சிப்பிக்குக் கருவாகிய முத்தோடொத்தவர். ஸ்ரீ நாராயணனுடைய அவதாரமாகியவர். அசுரப்பெண்கள் மாங்கல்யக்கொடியின் வேரைக்களையும் சுவாலமாலைகளைப்புனைந்தசக்கிராயுதமேந்தியவர். யோகிகள்தியானிக்கும் பரமபுருஷர். பூதனைமுதலிய அனேக அசுரரைச் சிறுமைப்பருவ விளையாட்டினாற் கொன்றவர். கோவர்த்தனமென்னும் குன்றேந்தி, இந்திரன்பொழிந்த கன்மாரிதடுத்துக் கோவலரைக் காத்தவர். கோவலர் நித்திரை பண்ணும்போது காட்டுத்தீ மூடியகாலத்துத் துன்பமில்லாமல் அத்தீயை விழுங்கினவர். கஞ்சனைக் காய்ந்த கடோற்புய பலமுடையவர். தேவ கன்னியர்களினும் அதிசயமுடைய கோபாலக் கன்னிகைகள் காதலிக்குஞ் சிங்கார வடிவினர். பரிசுத்தக் கள்ளர். சவுரிய தயிரிய சாதுரிய காம்பீரிய முதலிய நற்குணமணிக்குக் கடலாயிருப்பவர். நச்சினார்க்குச் சிந்தாமணி. இவரது பெருமையை ஆதிசேடனாலும்பேசத் திறமில்லை. இவருடைய நல்லத்தையின் மைந்தராவார் பாண்டவர்கள். அவருள் அருச்சுனன் இவர்சாயலைப்போ லிருப்பவர். இவர் அவரிடத்தில் அதிக பக்ஷமுள்ளவரம்மா.

ஓ-சிறந்த பவளத்துண்டுபோற்றிரண்டு இருபக்கமுங் குவிந்து அழகியரேகை யொன்று பொருந்திப் பிரகாசிக்கின்ற கீழதரத்தோடு, அதற்குமேற் சற்றுயர்ந்து வனப்புவாய்ந் திருக்கின்ற மேலதரத்தையுடைய மெல்லி! இக்கண்ணனருகிலிருக்கும் வீரர் இக்கண்ணனுக்குத் தம்பி சாத்தியகியென்னும் நாமமுடையவர். வில்வித்தையில் அருச்சுன ராஜனுக்குச் சிஷர். பராக்கிரமத்தில் அவ்வருச்சுனனுக்குச் சமானமானவர். இவரைச்சூழ்ந்திருக்கிறபேரெல்லாம் அந்தயாதவகுலத்துதித்த புண்ணிய புருஷர்களம்மா.

ஓ-இருபகுப்பாதல் -பள்ளமிசைதல்-நீண்டுவளைதல் முதலியவின்றி, இருவிரலளவில் வட்டமாய்த் தசையை யுடைத்தாய் எழில்கொண்டு இன்பந்தருவனவாகிய மோவாயினையுடைய முத்தே! இவருக்கு நேரிலே பேராசனத்தில் விளங்கும் வீரர் இக்கண்ணனுக்குரிய ஒரு அத்தையின்பிள்ளை. சேதிதேசத்தைக் காக்குந் திறல்மேவுந் தோளுடையவர். சிசுபாலனென்று பேர்பெற்றவர். முன்னே குண்டின நகரியில் தனக்கு மாலைசூடும்படி நிச்சயப்படுத்தி யிருந்த உருக்குமணிதேவியை வலிமையினால் இந்தக்கண்ணன் கொண்டுபோய் விவாகஞ்செய்து கொண்டதினா

லே இக்கண்ணனிடத்தில் இவர் பகைநாட்டி இருக்கிறாரம்மா.

ஓ - தாமரைப்பூவில் வாசஞ்செய்கின்ற பிரமன் சோடசகலைகளாலு நிறைந்த சந்திரனிடத்து நிரம்பிய உயர்வாகிய சாரத்தைத் தன்கையால்மொண்டுபடைத்தானென்று சொல்லும்படியாக விளங்கு முகாரவிந்தத்தினையுடைய வனிதா! அவர் பக்கத்தில் ஆதனம் நிறைந்து விளங்கிக்கொண் டிருக்கிறவர் அவ்வுருக்குமணியினுடன் பிறந்தவர். விதர்ப்பதேசத்தை யாள்பவர். உருக்குமியென்கிறபேருடையவர். மஹாவீரர். இவரும் உருக்குமணியைக் கொண்டுபோகும் போது அபஜயம் பட்டபடியாற் கிருஷ்ணனிடத்திற் சிசுபாலன்போல் துவேஷம்வைத்தவரம்மா.

ஓ-குறுகல் - நீளல்-பருத்தல் - முதலியன வகன்று, கமுகமரத்தினை நாணச்செய்து, நான்கு அங்குலத்தோடு மூன்று நல்லரேகைகளைப் பொருந்தி அழகு நிறைந்திருக்கின்ற கண்டத்தினையுடைய கண்ணே! அதோ மணிமஞ்சத்தின்பேரில் உட்கார்ந்து மதத்தயானைபோல் இறுமாந்து பார்த்துக்கொண்டிருக்கிற மஹாராஜன் மலைக்கோட்டை சூழ்ந்துயர்ந்த மகததேசத்தின் மன்னவர். ஜராசந்தனென்று பேருடையவர். சொன்னசொற்றவறாதவர். இரண்டு தாய்வயிற்றிற்பிறந்தவர். பிரதாபக்களஞ்சியமா யிருக்கிறவர். இவருடன் பதினெட்டுத்தரம் போர்செய்து தோல்வியடைந்த பயத்தினாலே கிருஷ்ணன் மதுராபுரியைவிட்டு நடுக்கடலில்தன தாக்கினையினாலே விசுவகர்மாநிமித்த துவாரகையென்னு நகரத்தையடைந்தாரம்மா.

ஓ-கவிகை - கூர்மம்-வலம்புரிச்சங்கம்- நவக்கிரக சக்கரம் - துலாக்கோல் - வச்சிராயுதம் - நேமி - முதலியவைகளைப்போன்ற சிறந்தரேகைகளைப்பொருந்தி, முயல்வயிற்றினுமிருதுவாகிச் செவ்வாம்பன் மலரைப்போற்பிரகாசிக்கின்றஅகங்கையினையுடைய அன்னே! அதோ இருக்கிறவர் மத்திரதேசத்து மன்னவர். சல்லியராஜனென்று பெயருடையவர். சத்தியவாதி. சவுரியங்குடி யிருக்கத் திரண்டுருண்டு நீண்டுவிளங்கிய பாகுவுடையவர். நகுலசகாதேவர்கட்கு நல்லம்மானம்மா.

ஓ-புடைபரந்து மேலெழுந்து நீலமணிசேர்த்ததத்கொப்பான சிலீமுகம்வாய்ந்து இடை தோன்றாமல் நெருங்கிப் பெருமைபொருந்திய மார்பினிடமுழுவது நிறைந்து தடையில்லாமற் பருத்துப் பூரித்துத் தம்முளிரண்டு மொத்து இடையினை வருத்தி நிமிர்ந்திருக்கின்ற குசங்களையுடைய கோடியே! அவர்பக்கத்திலிருப்பவர் பகதத்த னென்று பெயரையுடைய மகாவீரர். சமுத்திர நடுவிலிருக்கும் மாகிஷ்மதீ நகருக்கு அரசர். நரகாசுரனுடையகுமாரர், சுப்பிரதீப
கமென்னும் யானையை வாகனமாகவுடையவரம்மா.

ஓ-பயோதரமென்னும பங்கய முகைகளைத் தேடிவரும் வண்டு வரிசையையும், மேகலா பரணத்திற் பதித்த நீலமணியினது சுடரையும், இடையொடியாதிருக்க மன்மதனாற் சேர்க்கப்பட்ட சலாகையையும் ஒத்த வயிற்றுமயிரொழுங்கினையுடைய மணியே! இங்கிருப்பவர் வாசனை பொருந்திய மலரையும்-சிறு பெண்கள் இழைத்த சிற்றில்களையும்-பொன்னையும்-மணியையும்-அகிற்றுண்டங்களையும் வாரிக்கொண்டு, அலைகளைமடக்குகின்ற தெள்ளியநீரையுடைய காவிரிசூழ்ந்த சோணாட்டையாளும் அரசரம்மா.

ஓ-சிருட்டிகாலத்து நான்முகக் கடவுளானவன் தன்கையினால் இடையைப் பிடித்தவளவிலே அவன் கைவிரல்களானவை அழுந்திய வரையென்று சொல்லும்படியாய் விளங்கி, மங்கைப் பருவமாகிய பெண் ஊன்றி ஏறுதற் கமைத்த சோபானங்கள் போன்ற வயிற்றுமடிப்புக்களையுடைய வாழ்வே! இவரோ தமிழமுதம் பெருகவைத்த பாண்டி நாட் டரசர். இவரது தேசத்தில் தாம்பிரபரணியென்கிற நதியானது பாய்ந்து கடலில்விழுந்து உயர்ந்தமுத்துக்கள் அகப்படுகிறபடியினாலே, முத்தணிமேனியரா யிருக்கின்றாரம்மா.

ஓ-ஓரளவாகிய சரங்களையுடைய இரத்தின ஹாரங்களைப் பூண்ட இரண்டு தனங்களையுஞ் சுமத்தலால் வளைந்து நாடோறுந் தேய்ந்ததோ? அழகென்னுங்கடலு ளாழ்ந்ததோ? மன்மதனுடைய கண்ணேறுபட்டுக் கழிந்ததோ? அல்லது அங்கமில்லாதவனாகிய அம்மன்மதனேயோ வென்று யாவருஞ் சந்தேகப் படும்படியான இடையினையுடைய இறைவி! இதோ பசியபொன்னாற்செய்த ஆசனத்தின் மத்தியிலே சூரியன்போல் விளங்குகின்ற அரசன், பாட்டுகளையுடைய வண்டுகள் பேட்டினோடும் பெரிய அரும்புகளை விரித்துத் தேனைக் கொள்ளைகொள்ளும் தாமரைத் தடாகங்களையுடைய கொற்கையம்பதிக் கரசனாகிய சேரமானம்மா.

ஓ-மன்மதனுடைய பச்சைக்கிளிகள்பூட்டிய ரதத்திற்குப் பிரமனால் வகுக்கப்பட்ட சக்கரத்தையும் பொற்றட்டையு மொத்துக் காளையரது அவாவினதளவாய் வளர்ந்து பரந்திருக்கின்ற ஓரளவின் பரப்பினையுடைய அல்குலைத் தாங்கும் அமுதே! இங்கேயிருத்தலைப்பெற்ற அரசனானவர் உம்முடைய கண்ணைப்போன்ற அழகியகுவளைமலர்கள் பூத்திருக்கின்ற வளப்பம் பொருந்திய மருதநிலத்தையுடைய காசிதேசத் ததிபதி யம்மா.

ஓ-பெண் யானையினது செழிய துதிக்கரத்தைத்தூரத்திப் பஞ்சினு மெல்லிய குணத்தையுடையனவாகி நவமணிகளா லாகிய மேகலையைப் போர்த்துக் கன்னியரம்பையின் குலங்கள் யாவையும் வருத்தமில்லாமல்வென்ற துடைகளையுடைய தோகாய்! அதோயிருக்கின்ற குரிசில் அலைகளால் ஒதுக்கிய முத்துக்கள் உம்முடைய பல்வரிசையைக் காண்பிக்கின்ற அமைவினையும் பரிமளத்தையுமுடைய துறைகள் சூழ்

ந்த தெளிவுபொருந்திய நீரையுடைய கங்கை நாட்டினைக் கடவுளருமெச்சக் களிந்தாளுவோ ரம்மா.

ஓ-அழகிய கருப்புவில்லே வளைக்கின்ற வசந்தகாலத்திற் குரிய மன்மதனது பூவம்புகளால் நிறைந்த பொன்மயமாகிய அம்புக்கூடானது கண்டவுடன் நாணிப் புறங்கொடுக்குங் கணைக்கால்களையுடைய அம்மணீ ! இதோ வீற்றிருக்கின்ற கோமான் மெல்லியதாமரைமலரையுடைய தடாகத்தினுள்ளே நீரைக்கலக்கி மேகங்களினுடைய வயிற்றை நோக்கி வாளைமீன்கள் தாவுகின்ற அகன்ற வயல்களையுடைய குருதேசத்தினர்க்குச் சிங்கவேற்றை யொத்தவ ரம்மா.

ஓ-பருத்திடலுஞ் சுருங்குதலு மில்லாமல் மிருதுவாகி,அனிச்சமலரின்மேல் வைப்பினுங் குழைந்து, கொடிரேகை - மச்சரேகை-முதலிய பலரேகைகளைப் பொருந்தி அழகிய செந்தாமரை மலரைவென்று சிவந்திருக்கின்ற பாதங்களையுடைய திரௌபதா! அதோ ஆணிப்பொற்றகடுவேய்ந்து நவமணிகள் இழைத்த திவ்விய மஞ்சங்களிலே சிங்கங்கள்போற் சிறப்புடையவரா யிருப்பவர்கள், அங்க - வங்க-கலிங்க-காஸ்மீர முதலிய பலதேசத்தரசர்க ளம்மா.

அருச்சுனன் வில்வளைத்தல்

ஓ பாஞ்சால நாட்டரசன் பாவாய் ! இதுகாற் சொல்லி வந்த பலதேயத்து இராஜர்களெல்லாம் மங்கையர்க்கு அரசாகிய உமது பொருட்டே வந்திருக்கின்றனர். ஆயினும் இக்குறியை யடித்து உமது கைப்பிடிக்கும் மகானுபாவர்களுக்கே மாலேயிடக் கடவீர். என்று தாதிகள்சொல்லித் திரௌபதியினுடைய இதயகலக்கத்தினைப் போக்கி உல்லாசப்படுத்திக்கொண் டிருந்தார்கள். இப்படியிருக்க- துஷ்டத்துய்மன மகாராஜனெழுந்து அரசர்களையெல்லாம் பார்த்து, ஓ இராஜாதிராஜர்களே! ஓ வீராதிவீரர்களே ! ஓ தீராதிதீரர்களே ! ஓ சூராதிசூரர்களே ! சும்மாயிருப்பதேன் ? வீண்காலம் போக்கவேண்டாம். தத்தம் சாமர்த்திய மகிமையாகிய தங்கத்தை இந்த வில்லாகிய உரைக்கல்மீ துரைத்துக்காட்டுங்கள். நமக்கு வேண்டிய பதினுயிரமாற்றுத் தங்கத்துக்கு எங்கள் கற்பகவல்லி விலேயாக்கப்பட் டிருக்கிறுளென் றுரைத்தான். அப்போது அங்கிருந்த மன்னவரெல்லாம் யான்முன்னே நான் முன்னேயென்று சிங்காதனங்களை விட்டெழுந்து அவ்வவர்கள் பட்டபாட்டையுஞ் சிறிது சொல்லுகிறேன் கேளும் சீதளசந்திர குலோத்துங்கதீரனுகிய ஜெனமேஜெய மகாராஜனே ! சிலரோடிவந்து தனுசைப்பார்த்துத் தளர்ந்தனர். சிலருகிற்சென்று வில்லேப்பரிசித்து ஊக்கமிழந்தனர். சிலரசைத்து மனமுடைந்தனர். சிலரெடுத்து நாண்பூட்டுவதை யொழித்துத் தைரியமிழந்தனர். இப்படியெல்லாம் பலவரசர்கள் அக்குறியடிக்குந் திறன் குறைந்திருப்பதையும், அப்பெண்ணினதுருவம் தங்கள்தங்கள் மனதைக்கவருந் திறன் உயர்ந்திருப்பதையும் நினைத்துப் பதைபதைத்து, முன்போல் ஆசனங்களிற் சென்றிருந்தார்கள். இப்பால் சல்லியமகாராஜன் வல்லியம்போலெழுந்துபோய் வில்லேயசைத்து எடுத்துப் பாதிவரைக்கும் நாண்பூட்டி, அப்பால் தனக்கு நிர்வாகமில்லாத புல்லிய தன்மையினுற் றயங்கி அயர்ந்து ஆசனத்திலுட்கார்ந்துவிட்டான். அதைக்கண்ட ஜராசந்தமகாராஜனனவன் நகைத்தெழுந்திருந்து வில்லேயெடுத்து நிறுத்தித் தன் முழுப்பலத்தினுலும் வளைத்து நாணியைமாட்டி ஒருசாண்குறைவாகக்காட்டி, அப்பாற் சக்தியில்லாமற் சல்லியன் முகத்தாமரை மலரும்படியாகத் தனது முகத்தாமரையைக் குவித்துக்கொண்டு வந்துவிட்டான்.

பின்பு துரியோதன மகாராஜன் உச்சாகத்துடனெழுந்திருந்து வீரகர்ஜனையுடனே வில்லே இலேசாக யெடுத்துவளைத்து நாணியைமாட்டிப் பூட்டுவதற்கு நான்குவிரற்கடை குறைவாயிருந்து, அதன் பிகுவினுலே அவ்வில்லுடன் கூட ஆகாயத்திலெழும்பித் தரையில்விழுந்து உடம்பெல்லாங்காயமடைந்து தலேயிறக்கமா யுட்கார்ந்துகொண்டான். அதற்குப்பின்பு அந்தத் துரியோதனனுக்கு உயிர்த்தோழனுகிய கர்னன் எழுந்துபோய் ஒருகையினுலே வில்லேயெடுத்து நாணே ஒருகையினுலெடுத்து விற்குதையில் மாட்டி மறுகுதைக்கு ஒருமயிரிழைகுறைவாக இழுத்து அப்பாற்கூடாமையினுலே அப்படியேநிற்க, அதுகண்டு சபையிலிருந்தோரெல்லாம் கர்னன் வளைத்தான் வளைத்தானென்று ஒருவரோ டொருவர் பேசுதலினுலுண்டான கோஷத்தைக் கேட்ட பாஞ்சாலராஜன் மகள் வேர்த்து அவன் முகத்தைப் பார்த்து இவன்ருனே அருச்சுனன் ஆகிலும் இவனும் மகாதேஜசுடனே விளங்குகின்றுன் என்று நினைத்துக்கொண்டேயிருக்க, அக்கர்னனும் அந்த தனுசின் வலிமையினுல் தவறிவிழுந்தவனுய்த் தலேயிலிருந்த கிரீடத்தை யிழந்து தன்னுதனத்தை அடைந்து நின்றுன். இவனேக்கண்ட மற்ற அரசர்களெல்லாம், ஓ! ஓ! இந்தக் கர்னன் முதலிய வீரரே இப்பாடுபடுவார்களாகில் நமக்கிந்த முயர்ச்சி தகாது. நாணே யேறிடுவதற்குப் போனுல் அது நமக்கு நாணமேறிடச்செய்து நமது தலேயை வணக்குவிக்கிறதென்று சோர்ந்து, இருந்தவிடத்தினின்று மெழாமற் சும்மாயிருந்தார்கள். இப்படி ஒருநாழிகைவரைக்கும் சபையானது அலேயற்றகடல் போலிருக்குஞ் சமயத்தில், அந்தவில்லேவளைத்தற் கெழுந்திருக்க நினைத்த பலதேவனைக் கண்ணன் கையமர்த்தி நிறுத்தி அருச்சுனனுக்குக் கண்சைகைகாட்ட, அதையறிந்த அவரும் மற்ற யாதவப்பிரபுக்களும் குந்திபோஜரும் தாமிருந்த யிடத்தைவிட் டெழாமலிருந்தார்கள். சிலர் இப்பெண்ணுக்கொருகுப்பிடு, இப்பெண்ணேடுதித்த இப்பெருவில்லுக் கொருகும்பிடென்று சொல்லிப்போனுர்கள்.

(REGISTERED-COPY-RIGHT.)

2

(ஆதிபர்வம்-க௫௬-வது-பக்கம்.)

இவர்க ளிவ்வாறாகப் பிராமணர்கூட்டத்திற் பிரமசாரிவேஷமாய் நீறுபூத்த நெருப்புப்போ லிருக்கும் அருச்சுன னெழுந்து உச்சாகத்துடனே துஷ்டத்துய்ம்னன் முதலாயினோரைநோக்கி, ஓ மகாராஜர்களே! இரண்டாவது வருணத்தி லுதித்தோரோ இக்கன்னிகையை மணஞ்செய்ய வேண்டுமோ? அல்லது நீங்களேர்ப்படுத்திய வீரியலக்ஷயத்திற் கணை தொடுத்தபேர் மற்ற எந்தவருணத் துதித்தோராயினும் அவர்களே மணஞ்செய்யலாமா? இதை நமக் கறிவியுங்களென்று கம்பீரமாகக் கேட்டான். அவ்வாறுகேட்ட மாத்திரத்தில் அச்சபையிலிருந்த பலரும் கலகலவென்று சிரித்தார்கள். சிலர் இந்தப்புருஷன் மிகவும் கெம்பீரமும் ஒளியையு முடைய வச்சிரதேகம் உள்ளவனாகி உச்சிதமாகிய வாக்கும் இவனிடத்திற் காணப்படுகிறபடியால், இவன்கேட்கிறபடி வில்லைவளைத்து நாணேறிட்டுக் குறியை அடித்துத் திரௌபதியைக் கைப்பிடித்துக்கொள்ளுவான்போற் றோற்றுகிறதென்று பேசக்கொண்டார்கள். சிலர் இவனுக்கேதோ ஒரு தேவதையின் அனுக்கிரகம் நேரிட்டிருக்கும். ஆதலால் இவ்வளவு தைரியமாகப் பேசுகிறான்: எந்தப்புற்றில் எந்தப்பாம்பிருக்குமோ யார்கண்டதென்று சம்பாஷித்துக்கொண்டார்கள். சிலர் பின்புத்திக்காரராகிய பார்ப்பாரக்குலத்தின னாகையாலும், இதுவரையிற் பிரமசரியத்திலிருந்தவ னாகையாலும், ஒருவேளை பெண்பைத்தியம் பிடித்திருக்கலாமென்று சொல்லினார்கள். சிலர் இவன் சிறுபிள்ளையாகையால் இந்தராஜகன்னிகையி னிடத்தில் ஆசைவைத்துப் பேய்போற் பிதற்றுகிறா னென்றார்கள். இவ்வாறு பலபலவிதமாய் ஊகித்து யாவரும் உரையாடிக்கொண்டிருக்கையில், பாஞ்சாலராஜன் குமாரனாகிய துஷ்டத்துய்ம்னன் அந்தணன்கேட்ட வினாவையும் அதற்கு அரசர்கள் ஊகித்துரைக்குங் கனாவையும் யோசித்துணர்ந்து, இந்தப் பிராமண னிடத்தில் அப்படிப்பட்ட சக்தி இருந்தாலு மிருக்கலாம். இதற்கு திருஷ்டாந்தம் முற்காலத்திற் பரசுராமரும், இக்காலத்தில் இதோ இருக்கிற துரோணாசாரியர் - கிருபாசாரியர் - அசுவத்தாமா இவர்களும் அசாத்தியமான காரியங்களையெல்லா முடிக்கவில்லையா? ஆகையால் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் இந்தச்சபையில் இவ்வளவு தைரியமாகப் பேசமாட்டான். நல்லது இந்தராஜர்களில் இன்னானுக்குச் சக்தியிருக்கிறது இன்னானுக்குச் சக்தியில்லையென்று யோசித்தா வில்வளைக்கச்சொன்னோம்? ஆகையால் நம்முடையஜாதிக்கு மேலானஜாதியாகிய இந்தப்புருஷனும்போய் ஒருகை பார்க்கவேண்டியதுதான். என்று தந்தையுடன் கலந்து வார்த்தை பகர்ந்து, அந்த அருச்சுனனாகிய பார்ப்பாரப்பிள்ளையைப் பார்த்துக் கைகூப்பி இதனைச்சொல்லுகிறான்.

ஐயா! இந்தவீரியத்திற்கு க்ஷத்திரிய னென்றும் பிராமணனென்றும் நியமமில்லை. உமக்குச்சாமர்த்தியமிருந்தாற் சுகமாய் நீர்போய் ஒருகை பார்க்கலாமென்று அச்சபையிலுள்ள சகலஅரசர்களும் முனிவர்களுமறிய உரைத்தான். அந்தவார்த்தையைக் கேட்டுவந்த வேதிய குமாரன் முகமலர்ச்சியுடனே புன்சிரிப்புகாட்டி, மதயானைக்குட்டிபோல் நடந்துபோய் முன்னொருகாலத்திற் பரமசிவனேந்திய மேருகிரி யென்னும் வில்லைப்போல அவ்வில்லை மஹாசாகசத்தோடும் ஓர் கையாற் றாக்கிப்பிடித்தான். அதைத் திரௌபதை பார்த்து, இப்போதுவந்த மகாபுருஷன் இந்தவில்லைக் கையிலேந்திச் சொலிப்பது இந்திரதனுசுடன்கூடின காளமேகம்போற் காணப்படுகிறான். எனது மனதின் தாபத்தைப் போக்கும்படியான சந்தோஷமழையைப் பொழிவான்போலு மிருக்கிறதென்று சிந்தித்தாள். அப்படியே அந்த அருச்சுனப் பிராமணனும் அந்தவில்லைவளைத்து நாணிபூட்டி ஓசைகாட்டி அம்பையெடுத்துச் சந்தானம்பண்ணிக் காதளவுமிழுத்து, இயந்திரஸ்தம்பத்தின் அடிவாரத்தில் ஒரு கடாரநிறையவைத்திருக்கும் மஞ்சள்நீரில் அக்குறிநிழலைப்பார்த்துக்கொண்டே ஆகாயத்தில் அம்பைத்தொடுத்து அந்தமச்சியயந்திரத்தை அறுத்து விட்டான். அந்த யந்திரம் மகாஇரைச்சலோடு எல்லாவரசர்களுடைய மனமுஞ் சுழலும்படி சுழன்றுகொண்டு, அவ்வவர்கள் கீர்த்தி யனைத்துங்கலங்கிக் கீழேவிழுந்தன்மைபோல் வீழ்ந்தது. உடனே அம்மாதுசிரோமணியாகிய இராஜகன்னிகையின் சிங்கார இரசப்பெருக்கினாற் குளிர்ச்சிபொருந்திய கண்களின்வீழ்ச்சியாகிய கருநெய்தற் பூமாலையும், அக்கன்னிகையின் கைத்தாமரையிற் பற்றியிருந்த சுயம்வரமாலையும், தேவர்கள் வருஷித்த கற்பகப்பூமாலையோடு இப்புருஷசிகாமணி புயத்தின்பேரில்வீழ்ந்தன. அப்போது அந்த யந்திரம் சுழன்று சப்தித்ததைப்பார்த்த பார்ப்பனக்கும்புகளெழுந்து ஆர்ப்பாடனம் பண்ணினார்கள். இவ்வாறாக அக்கன்னிகை அவ்வீரசூடாமணிக்கு மாலைசூடியவுடனே இராஜசேவகருடைய ஜய ஜயவென்னுங் கோஷமும், இராஜபந்துக்களுடைய எக்களிப்பும், வேதியருடைய ஆசீர்மவாதமுழக்கமும், ஜனங்கள் ஆச்சரியப்படுகின்ற தொனியும், மங்களவாத்தியங்களுடைய ஆரவாரமும், அந்தஅருச்சுனகுமாரன் கண்டத்தில் விளங்காநின்ற மாலையின்மதுவைப் பானஞ்செய்து சுழன்றுகொண்டிருக்கிற வண்டுகளின் றீங்காரமும் ஒன்றாய்க்கூடித் திக்குகள்தோறு முள்ள சகலபிராணிகட்கும் செவிடுபடச் செய்தன.

அதுகாலையில் அந்தச்சபையிலிருக்கும் வேந்தர்களில் நற்குணமுடையசிலர் இவனாரோ மகத்வபுருஷன். வீராதி வீரன். சூராதி சூரன். இவனுக்கு இப்பெண் மாலைசூடுவது நியாயந்தான் என்று சந்தோஷித்தே யிருந்தார்கள். சிலர் பொறாமைகொண் டிருந்தார்கள். திரௌபதை இந்தப்புருஷன் அருச்சுனனாகவே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் நம்முடன்

கூடப்பிறந்த வில்லை வளைக்கத்தகுந்த திறமை மற்
றையர்க்கிராது. மேலும் தேவவாக்குப் பொய்யாக
மாட்டாது. அன்றியும் நாம் அருச்சுனனுடைய ரூப
த்தைக் கேட்டிருந்தபடி. இந்தப் புருஷனுடைய உரு
வமும் அளவும் அழகும் சரியாகத் தோற்றுகிறது. ஆ
தலால் இவனே அவன் அவனே இவன் என்பதற்கு
யாதொருசந்தேகமு மில்லையென்று மனதில்நிச்சயித்
துக்கொண்டு சந்தோஷத்துடனே யிருந்தாள். அக்கா
ல் அருச்சுனன் துஷ்டத்துய்ம்னனை நோக்கி, ஓய்
மஹாராஜகுமாரனே ! உம்முடைய நிச்சயத்தின்படி
அந்த யந்திரக்குறியை இதோ கையிலேந்தி நிற்கிறே
ன். ஆகையால் உம்முடைய உடன்பிறந்தாளையும் கை
ப்பிடிக்கிறேன் என்று அந்தப்பெண்ணினுடைய கை
யைப்பிடித்தான். அந்தத்தோகையு மகா ஓகையுடன்
புன்னகையா லொளிராநின்ற முகமதியைக்கொஞ்சம்
வணக்கிக்கொண்டு, ஆனந்தக்கண்ணீர்ததும்பத் தேக
த்திற்புளகமுற்றுக் கடைக்கண்ணினால் தன்கணவனை
நோக்கிக்கொண்டிருந்தாள். இவ்வாறாகிய பொற்கொ
டியைக் கையிற்பிடித்துக்கொண்ட அருச்சுனன் தன்
அண்ணன் தம்பியர்களாலும் வேத வேதியர்களாலு
ம் சூழப்பட்டு மங்களகோஷத்துடனே நல்ல சகுன
ங்களையுங் கண்டுகளித்துத் தன்னிடத்துக்குப் போ
கப் புறப்பட்டான். அதைத் துரியோதனன் பார்த்து
மிகவும் பொறாமைகொண்டு, மற்றை அரசர்களைநோ
க்கி இதனைச் சொல்லுவதானான்.

துரியோதனன் கலகப்போர் விளைத்தல்.

ஓ இராஜகுலத்துதித்த இறைவர்களே! உங்களு
க்கு ஆண்மையில்லையோ? நமதுகுலப்பெண்ணைப் பார்
ப்பான் கொண்டுபோகப் பார்க்கலாமோ ? இவ்வுலகத்
துள்ள பொருள்களிற் சிறந்த இரத்தினப் பொருள்க
ளாயுள்ளனவற்றை அரசர்களடையவேண்டியது. அப்
படிக்கிருக்க இந்தத் துருபதமகாராஜன் வீணாய் ஒரு
வீரியலக்ஷயத்தை ஏற்படுத்தி, மகாராஜர்களையெல்
லாம் அவமதித்துப் பிட்சைக்காரப் பார்ப்பானுக்குத்
தனது பெண்ணிரத்தினத்தைக் கொடுத்தானே; இது
நியாயமோ? அந்தப் பார்ப்பாரப்பயலும் என்னமோ
மந்திரபலத்தினால் அந்த வில்லைவளைத்துக் குறியடித்
தான். அதினாலே அவன் பராக்கிரமசாலி யாவானோ?
முன்பு வசிஷ்டர் தம்முடையபிரம்மதண்டத்தினாலே
விசுவாமித்திரனுடைய அஸ்திரங்களையெல்லாம் தகி
த்துவிட்டார். ஆனாலவர் சவுரியமுள்ளவரோ? அந்த
விஸ்வாமித்திரனே மற்றொருபோது அனேகஜெந்துக்
களைச் சிருஷ்டித்து நக்ஷத்திரங்களைத் தெற்குவடக்கா
க மாற்றிப்போட்டு வேறே தேவேந்திரனையுஞ் சிரு
ஷ்டிக்கிறேனென்று யத்தனப்பட்டான். அதனால்
அவன் பிரமதேவனாவானோ? ஆதலால் - அவ்வவனும்
தத்தம் புஜபலபராக்கிரமத்தினாலே காட்டுஞ் சவுரிய
மன்றோ சவுரியம்? ஏதோ இந்தப்பார்ப்பானை நாமெ
ல்லாங்கூடி எதிர்ப்போம் வாருங்கள். ஆண்மையுண்
டானாற் சண்டையில் நம்மைச்சயித்துப் பெண்ணைக்
கொண்டுபோகட்டும். இல்லாவிட்டால் நம்மில்யாராவ
து அந்தப்பெண்ணை யனுபவிக்கட்டும். இந்தத் துரு
பதனும் சைனியத்துடனே எதிர்த்தாலும் எதிர்க்க
ட்டும். நாமெல்லாம் ஒருமித்துப்போவோம் வாருங்க
ள். இல்லாவிட்டால் நமக்கு அபகீர்த்தி நேரிடுமென்
று மிகவும் ஆக்குரோஷத்துடனே அரசர்களைச் சேர்
த்து ஆயுதங்களையுஞ் சேனைகளையும் சன்னகப்படு
த்திக்கொண்டு அந்த மணவாளனை எதிர்த்து யுத்த
த்துக்குப் போனான்.

அப்போது அருச்சுனனும் அந்தக்கன்னிகையை
த் தமயனாரிடத்தில்விட்டுத் தன்கையில் தனுசை எ
டுத்துக்கொண்டு, ஓ மகாரராஜாக்களே! என் கும்பலா
கவந்தீர்கள்? இந்தலோகத்தின்க ணனுபவித்த போ
கத்தில் விரக்திபிறந்ததோ? அதனாற் சுவர்க்கலோக
போகத்தில் மோகங்கொண்டு வந்தீர்களோ? வாருங்
கள். யாவருங் கிடைத்தற்கரிய நற்கதியைச் சேருங்
கள். இந்தாருங்கள் விரைவில் மோக்ஷந் தருகிறேன்.
என்று புன்னகையுடனே தானும் யுத்தத்துக்கு ஆய
த்தப்பட் டிருக்கக்கண்ட இராஜாக்களெல்லாம் வியந்
து, அடா பார்ப்பாரப்பயலே! என்வீணாய்க் கர்வித்
துப்பேசுகிறாய்? கெட்டுப்போகாதே. இதோ பார் ஒரு
நிமிஷத்துக்குள்ளே உன்னையும் உனக்குப் பெண்கொ
டுக்கவிசைந்த இராஜனையும் உயிரோடுபிடித்துக் கா
வலிற்போட்டு, இந்தக்கன்னிகையை எங்களிலொரு
வனுக்கு விவாகம் செய்விக்கிறோம். இதில் உன்னு
டைய மந்திரபலமொன்றுமுதவாது. தப்பிப்பிழைக்க
மனமிருந்தாற் பெண்ணைவிட் டோடிப்போ. தைரிய
மிருந்தால்நில்லடாவென்று வீரவாதஞ் செய்தார்கள்.
அதுகேட்ட பூசுரரெல்லாம் எழுந்து; ஓ இராஜப்
பயல்களே ! முன்னொருபோது அரசர்குலத்துக்கெ
ல்லாம் பரசுராமனால் நேரிட்ட வாபத்து உங்களுக்கி
ப்போது நேரிட்டிருக்கிறதென்று குடுமிகளைத் தட்
டிமுடிந்து வேஷ்டிகளை இழுத்துக்கட்டிப் பூணூல்
களைக் காதிற்சுற்றி, சிலர் தர்ப்பாசனத்தையும் -
சிலர் வியாக்கிரா சனத்தையும் - சிலர் கிருஷ்ணா
சனத்தையும் - சிலர் புத்தகங்களையும் - சிலர் ப
ஞ்சாங்கங்களையும் - சிலர் பலாசத் தண்டங்களையும்-
சிலர் சமித்துக் கட்டுகளையும் - சிலர் தர்ப்பைக்
கட்டுகளையும் - சில கிழவர் தடிகளையும் எடுத்
துக்கொண்டு, ஜாதியபிமானத்தால் யாவரும் நான் மு
ன்னே நான்முன்னே என்று வாயினால் வந்தமட்டும்
வைது, மாட்டுமாட்டு அவளம்மையை யோழியென்று
ஆக்கிரமித்துக்கொண்டு சண்டைக்குப் புறப்பட்டார்
கள். அந்த இந்திரகுமாரனான அருச்சுனன், ஓ சுவா
மிகாள் ! உங்களுக்கு இவ்வளவுவருத்தம்வேண்டாம்.
இந்தப் பஞ்சைகளைச்செயிக்க உங்களாசீர்வாத பலம்
பெற்றிருக்கிற நான் ஒருவன் போதாதோ? ஆதலால்
சிறுமைப்படாதீர்கள். அடியேனிடத்திற் கிருபை செ

ய்து சும்மாயிருங்களென்று அவ்வேதியனைநிறுத்தித் தானொருவனே வில்வளைத்து நாண்பூட்டி நாணோசைகொண்டு பாணங்களைச் சந்தானம்பண்ணிச் சத்துருக்கள் மீதிற் சரமாரிபொழிந்தான். அதினாலே மிகவுங்கோபங்கொண்ட கர்னனானவன் தானும்வில்லைவளைத்துப் பாணங்களைவருஷித்தான். அவைகளையெல்லாம் அருச்சுனன்தடுத்துத் தீக்ஷண்ணியமாகிய ஓரம்பை விடுத்துக் கர்னனுடைய மார்பிலுருவும்படிசெய்தான். அதனாலே கர்னன் அறிவழிந்து மூர்ச்சையினாலே கீழேவிழுந்தான். அதுகண்ட சல்லியன் மிகவும் பராக்கிரமத்துடனே தனுசை எடுத்து யுத்தத்திற்கு ஆரம்பிக்கும்போது வீமசேனன் நாமிப்போது சும்மாயிருக்கக் கூடாதென்று சுபம்வரப் பந்தலின் ஸ்தம்பத்தைப் பிடிங்கிக்கொண் டெழும்பிவந்து, அந்தச் சல்லியன்போடுகிற அம்புகளை யெல்லா நொறுக்கித்தள்ளிச் சல்லியன்மார்பில் தன்னுடைய கையினால் ஒருகுத்துக் குத்தினான். அந்தக்குத்தினாலே மத்திரராஜனும் பதைபதைத்துப் பிரமித்து மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்.

இதற்குள்ளே சூரியகுமாரன் மூர்ச்சை தெளிந்தெழுந்து அகங்காரத்துடனே அர்ச்சுனனைநோக்கிப் புலிபோற் பாய்ந்து வந்து நான்கு சரங்களைத் தொடுத்துவிட்டான். அந்தச் சரங்களும் கோபமுள்ள கிருஷ்ண சர்ப்பங்கள்போலே சீறிக்கொண்டு வரக்கண்டு பற்குனன் சீக்கிரத்தில் நான்கு மறுசரங்களாலே அவைகளைத் துண்டித்து, மறுபடியும் காளகூட விஷத்துக்குச் சமமாகிய ஒரு பாணத்தைத் தொடுத்து அவன்பேரிற் பிரயோகித்தான். அந்தப் பாணமானது மார்பின்மேல் விழுந்த மாத்திரத்திலே கர்னன் கைகால்கள் விலவிலத்து நடுக்கமுற்று ஒன்றுந் தோற்றாமல் விழுந்துவிட்டான். இதற்குள்ளே சல்லியமகாராஜனும் எழுந்து தன்னைக்குத்திய வீமனைக் குறித்துச் சிங்கம்போற் பாய்ந்து அவன் மாற்பிற்குத்த வாரம்பிக்கும்போது, வீமனும் லாகவத்தினாலே அவனுடைய இரண்டு கால்களையும் பற்றிக் கறகற வென்று சுற்றி நிலத்தின்பேரிலே வீசினான். அதனாலே சல்லியன் உடம்புமுறிந்து வேதனைபொறுக்கமாட்டாமல் தானும் கர்னனும் தலைவிரிகோலமாய் ஒருவர் போன வழி யொருவர்போகாமல் ஓடிப்போனார்கள். இச்சம்பவங்களைக்கண்ட மற்ற மன்னவர்களெல்லாந் திப்பிரமைகொண்டு, மிகவும் சமர்த்தரான இவர்களே நிற்கமாட்டாமல் ஓடினார்களே: ஆ! ஆ! என்னகாலம்? ஆ! ஆ! என்ன ஆச்சரியம்? இந்தப் பார்ப்பாருடைய பராக்கிரமத்தைப் பார்த்தீர்களா வென்று சொல்லிக்கொண்டு தாங்களும் ஓட வழிபார்த்தார்கள். துரியோதனன் மாத்திரம் கோபத்தினாலும் - மானத்தினாலும் - பொறாமையினாலும் - வெட்கத்தினாலும் - மனதில் கலக்கமுற்று, இப்போது நாமிந்தப் பூசுரனை வெல்லாமற் போவதைக் காட்டிலும் பிராணனை விடுவது மேலானதென்று பிடிவாதத்துடனே ஓடிப்போகிற வேந்தர்களையெல்லா மடக்கித் திரும்பிப் போரிடுவதற்குத் தகுந்த ஆலோசனைகள் செய்துகொண்டு சித்தமாயிருக்கின்றான். அப்போது ஸ்ரீகிருஷ்ணசுவாமியானவர் ஒரு பிராமணன்போலே வேஷங்கொண்டு துரியோதன னிடத்துக்கு வந்து ஆசீர்வதித்து இதனைச் சொல்லுவதானார்.

ஓய் இராஜாதிராஜனே! நீர் ஏன் வீண்பிரயாசைப் படுகிறீர்? நாங்களுமிவ்வளவுகாலம் ஏன் வருத்தப்பட்டோம். கடைசியில் விசாரிக்கிறபோது அவர்கள்பிராமண ரல்லர்; க்ஷத்திரியர்தான். அந்தவில்லை வளைத்தவன் அருச்சுனனும். சல்லியனைக் குத்தியவன் வீமசேனனும். இது நீரறியும். வெளிவிடாதேயும். என்று சொல்லிக் கும்பலில்மறைந்துவிட்டார். அதுகேட்டுத் துரியோதனன் ஆச்சரியமடைந்து மற்றராஜாக்களுக்கு மிதைத்தெரிவித்து யுத்தப் பிரயத்தினத்தை நிறுத்தி, முன்னே பாண்டவர்களை நாம் அரக்குமாளிகையிற் கொளுத்தி அவர் எலும்பையும் சாம்பலையும் கங்கையிற் கரைத்துப்போட்டுவிட்டோமே: மறுபடியும் பாண்டவர்கள் வந்தவிதமென்ன? இது மகா அதிசயமாயிருக்கிறதே: எனக்கும் அவர்களுடையரூபத்தைப் பார்த்தால் அப்படியே தோற்றுகிறதே: காரியத்தை நிதானிக்குமிடத்திற் சந்தேகப்பட வேண்டியதில்லை. என்றுசொல்ல மற்றவரும் சரிதானிதுவென்று பேசிக்கொள்ள இன்னும் இதை நன்றாயறியவேண்டுமென்று எல்லாருமா யோசித்துத் தங்கள் நகரம்போய்ச் சேர்ந்தார்கள். பின்பு அருச்சுனன் தனது அண்ணன் தம்பிமார்களுடனே சேர்ந்து சூழ்ந்துவருகிற பிராமணரைப் பார்த்து, சுவாமிகளே! எங்களுடைய தாயார் இங்கோரிடத்தி லிருக்கிறாள். அவளைநாங்கள் அழைத்துக்கொண்டு வருகிறோம். நீங்கள் உங்களுடைய இடங்களுக்குப்போங்கள். என்றனுப்பிவிட்டுத் தங்களுடைய புரோகிதராகிய தவுமியமுனிவருடனே சிறிதுநேரம் தனித்துப்பேசி அவரையும் போகவிடுத்துப் பார்க்கவனென்கிற குயவன் வீட்டுக்குட் சென்றார்கள். அப்போது பாஞ்சாலராஜன் அருச்சுனனுக்காகப் பெண்பெற்ற சரித்திரம் தமது தாயாகிய குந்திதேவியாருக்குத் தெரியுமென்கிற நிச்சயத்தினாலே உள்ளே போகிறதற்குமுன்னமே அம்மாநாங்களொரு கனிகொண்டு வந்தோமென்று விளம்பினார்கள்.

அதுகேட்ட குந்திதேவி வெளியில்வந்து பாராமலே அந்தக்கனியைத் தேவாமிர்தம்போல் ஐவரும் புசியுங்களென் றுரைத்து உடனே வெளியில் வந்து பார்த்து அருச்சுனன் பக்கத்தில் இரதிதேவிபோல் ஒருகன்னிகை நிற்பதைக்கண்டு, ஓ! ஓ! நமதுமக்கள் சொல்லியது இந்தக்கன்னிகைதான். நாம்கனியென்று யோசித்துப் பதறி ஐவரும் புசியுங்களென்று சொல்லிப்போட்டோம். இவர்களோ தாய்சொற்றவறாச் சத்திய சீலர்களாயிருக்கின்றவர்களாச்சேயென்று சிந்

தாக்கிராந்தையாய்நின்றாள். அதுகண்ட ஐவரும்-அம்மா! நீயேன் கவலைப்படுகிறாய்? எம்மில் அருச்சுனனொருவனால் இக்கன்னி கிடைத்தாளாயினும், தாய் எவ்வாறு ஆக்ஞாபிப்பளோ அவ்வாறு நடந்துகொள்ளுவோமென்று நாடிச்சொன்னோமென்றார்கள். அம்மொழி கேட்ட தாய் ஒருத்தியை ஐவர் விவாகஞ்செய்வது தகாதேயென்று சிந்தித்தாள். உதிஷ்டிரர் தாயினது முகக்குறியைப் பார்த்து, அம்மா! நீசிந்திக்கவேண்டாம். விதியின்பயன் உன்வாக்கினால் இப்படிச்சொல்விவைத்தது. இதற்குக்காரணமேதோ இருக்கிறது. இதன்றியும் இந்தக்கன்னிகையினிடத்தில் எங்களைவர்க்கும் மனஞ்சென்றது. கூடாதவிஷயத்தில் அப்படி மனஞ்செல்லாது. ஆதலால் இப்போததைக்குறித்து நாம் பலவாறாக விவரிப்போமாகில் அருச்சுனனுக்கு மனக்கவலை யுண்டாகுமேயென்று பின்னும் பலதருமங்களைச் சொல்லித் தாயார் பாதத்திலே வணங்கினார். அந்தத் துருபதமகாராஜன் மகளும் மாமியின் பாதங்களில் தண்டனிட்டு நின்றாள். அந்தக் குந்திதேவி மக்களுக்கும் மருமகளுக்கும் நெடுங்காலநின்று நன்றுவாழக்கடவீரென்று வாழ்த்திச் சுயம்வரமண்டபத்தில் நடந்த சரித்திரங்களைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்திலே ஸ்ரீ கிருஷ்ண சுவாமியானவர் பலராமன் முதலாகிய தம்மினத்தினரை நோக்கி, கேட்டீர்களோ? இந்தச்சபையில் வில்வளைத்த பிராமணன் அருச்சுனனும். சல்லியனோடு போர் செய்தவன் வீமசேனனும். இவர்களோடு பிறியாம லிருந்த மற்ற மூன்றுபேரும் உதிஷ்டிரன் - நகுலன்- சகாதேவனும். நம்முடைய அத்தை குந்திதேவியும் இவர்களும் மேலண்டைத் தெருவில் ஒரு குயவன்வீட்டி லிருக்கிறார்களாம். இப்போ நாம்வருகிறபோது எனக்கு ஒருபெரிய பிராமணன் வந்துசொன்னான். ஆகையால்-அவர்கள் அரக்குமாளிகையி னின்றும் எப்படியோ தப்புவித்துக்கொண்டதாய்க் காண்கிறது. அவர்களை நானும் அண்ணாவும் விசாரித்துவருகிறோமென்று சொல்லிப் புறப்பட்டு அந்தக்குலாலன் கிரகத்துக்குவந்து, மொட்டைப் பாப்பாத்திபோ லிருக்கிற தங்களத்தையைக் கண்டு பரிவுடனே தண்டனிட்டுக் கொண்டு மைத்துனர்களோடுந் தக்கபடி யுபசரித்து வார்த்தையாடினார்கள். பின்பு கண்ணனும் பலராமனும்- அம்மா அத்தாய்! உங்களுக்கும் என்னகஷ்டகாலம் வந்தது : ஆ! ஆ! எப்படி தப்பினீர்கள்? தெய்வாதீனம் உங்களைத்தொடர்ந்த சனிதொலைந்தது. இனிமேன்மேலும் உங்களுக்கு க்ஷேமந்தானென்று காணாது கண்டதுபோற் கண்ணீர்ததும்பக்குழைந்து பேசினார்கள். அப்படியே குந்திதேவியும் பாண்டவர்களும்-ஓ சற்குணவான்களே! மறுபடியும் உங்களைப் பார்க்கப் பாக்கியமிருந்தது. நீங்கள் யாவரும் க்ஷேமமா யிருக்கிறீர்களாவென்று கண்ணீர்மல்க ஆதரத்துடனே பரிந்து பரிந்து பேசினார்கள். இப்படி யொருவரை யொருவர் க்ஷேமவிசாரணை பண்ணிக்கொண்டு சற்றே சும்மாயிருந்தபின் கண்ணன் பாண்டவர்களைப் பார்த்து அந்த அரக்குமாளிகையினின்றும் எவ்வாறு தப்பினீர்கள் அதைச் சொல்லுங்களென்று கேட்க, அந்தச் சரித்திரத்தை யெல்லாம் ஆதிமுதல் நன்றாய் விவரித்துச் சொன்னார்கள்.

பின்பு கண்ணனுக்குச் சந்தோஷம் பிறந்து, இந்தப்பெண் நேரிட்டது சத்துருக்களுடைய நாசத்திற்கும் இனி உங்களுக்கு இராச்சியலக்ஷுமி விலாசத்திற்கும் இடமாக இருக்கிறது. இனி அஞ்சவேண்டாம். கலியாணம் நடக்கிறவரையில் உங்கள் சுயரூபத்தைக் காட்டாம லிருங்களென்று சொல்லித் தாங்கள் போவதற்கு விடைபெற்றுக் கொண்டு யாதவதிலகரிருவரும் தங்கள் பரிவாரங்களுடனே பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். இப்படியிருக்க அந்தப் பாஞ்சாலதேசத் தரசனாகிய துருபதமாஹாராஜன் மெத்தவும் நைந்து, நாம்நினைத்தநினைவு வீணாச்சுதே: பெரியோர்கள் வாக்கும் பொய்த்துப் போகுமோ? ஒருக்காலும் போகாதே: என்றுமனதிற் சற்றேசஞ்சலித்துத் தன் புத்திரனைக் கூவி, ஓ குழந்தாய்! நம்முடைய பெண்ணைக் கைக்கொண்டவன் அருச்சுனனென்று ஒரு வதந்தி யுண்டாயிருக்கிறது. அப்படியே யிருக்கலாம். தெய்வத்தின் சங்கல்பம் வீணாகிறதில்லை. வேதமுதலியவைகளை யுணர்ந்த பெரியவாள் பேச்சுப் பொய்க்கிறதில்லை. ஆகையால் நீ அவர்களிறங்கி யிருக்கிற விடத்துக்கு வேறுவேஷத்தோடுபோய் அறிந்துவாவென்று சொல்லினான். உடனே பிதாவின் வசனத்தைத் துஷ்டத்துய்மன் சிரசில்தரித்துக்கொண்டு ஒருபரதேசிபோலே வேடம்பூண்டு அந்தக்குலாலன் வீட்டுக்குப் போய் அங்கே இந்த ஐந்துபேர்களுடைய அளவு-ரூபம்-இல்க்ஷணம் - தொனிமுதலானவைகளை நன்றாய் நிதானித்து, அவர்களுடைய வார்த்தையையும்- நடக்கையையும்-ஈன்றாளிருக்குஞ் செயற்கையையும்பார்த்துத் தன்பிதாவினிடத்தில் வந்து, அப்பா! அவர்கள் அடையாளங்களையெல்லாம் நன்றாய் நிதானித்துப் பார்த்தாற் பாண்டவாள் போற் காண்கிறது. அவர்களுடைய தாயாரொருத்தியிருக்கிறாள். அவள் குந்திதேவி போலே தோன்றுகிறது. சந்தேகமில்லை: இங்கே வில்வளைத்த காளையும் அரசர் சண்டைக்கு வந்தால் பந்தற்காலைப் பிடுங்கிக்கொண்டு பாய்ந்த கெண்டுப்பார்ப்பானும், விப்பிரர் வீதியிற்சென்று பிக்ஷையெடுத்துவந்து தாயினிடத்திற் கொடுத்தார்கள். அதை அவள் இரண்டு பங்காக்கி, ஒருபங்கை அக்கெண்டுப்பார்ப்பானுக்குக் கொடுத்து மற்றொன்றை நான்குபங்காக்கி மற்ற நால்வருக்குங் கொடுத்துத் துணியி லொட்டிய சோற்றைச் சிதறாமலெடுத்து இரண்டுண்டை யாக்கி அவைகளை நமது குலக்கொடியாகிய மருமகளுக்குமிட்டுத் தானும் புசித்தாள். ஆனால் நம்முடைய பெண் மகாசுகத்தை யனுபவித்தவள். ஆயினும் ஏதோ வறு

மையாளராகிய அவர்களுடனே மனங்கொளுமல் இசைந்திருக்கிறுள். என்று சொல்லக்கேட்ட துருபத மஹாராஜன் மிகவும் சந்தோஷமடைந்து, அவர்கள் பாண்டவர்களேயாகில் நம்முடைய்யமகள் மஹாபாக்கியமுடையவள்தான். தரித்திரமிருந்தா லிருக்கட்டும். அதை லக்ஷியஞ்செய்யத் தக்கதன்று. நமதுமகளும் அக்குறிப்பறிந்தே சந்தோஷத்துடனே அவ்வறுமையைப் பொறுப்பதாய்க் காண்கிறது. ஆகையால் இந்தச்சங்கதியை நன்ருய் விசாரிக்கவேண்டுமென் றெண்ணி ஓருபாயஞ்செய்வதானுன்.

அஃதென்னவென்றுல் - வேதியர்க்குள் மிகவுஞ் சமர்த்தரான ஒருவரை அழைத்து நீர்போய் அவர்கள் பாண்டவர்களா வேறுமதம் பூண்டவர்களா அதை விசாரித்து வரவேண்டுமென்ன, அந்தப் பிராமணோத்தமனும் அங்குசென்று அவர்களால் நமஸ்கரிக்கப்பட்டு தானுந்தக்கபடி மரியாதைபண்ணி, மகானுபாவராயிருக்கின்ற நீங்கள்யார் ? உங்களுடைய சவுரியமும் - புத்தியும் - சாமார்த்தியமும்- நிகரில்லாதவைகளா யிருக்கின்றன. ஆகையால் உங்களையோசித்தாற் பிராமணுளல்லவென்றும், க்ஷத்திரியர்கள் தானென்றும் தோற்றுகிறது. உங்கள்ரூபத்தைப் பார்த்தாற் பாண்டவாளுடைய ரூபம்போலிருக்கிறது. மஹாராஜாவும் இப்படியேசங்கித்து உங்களுடைய குலத்தை அறியவேண்டுமென்று நினைத்திருக்கிறுர். எனக்கும் அதையறிவதிற் குதூஹலமிருக்கிறது. ஆதலால் - என்னுடைய மனதுக்குத் திருப்திசெய்ய வேண்டுமென்று கேட்டான்: அதற்குத் .தருமபுத்திரன்- சுவாமி! கொண்டு குலம்பேசப்போமா? கொடுத்துக் குறைகேட்கலாமா? மஹாராஜாவுக்கு எங்கள் குலகோத்திரங்களை விசாரிக்கவேண்டிய காரியமில்லை. அவர் மகாபுத்திமானுச்சுதே: அப்படியேன்நினைக்கிறுர் ? மகாபுத்திசாலியும் யோகிகளுமாகிய நீங்கள் எங்களை இப்படிக்குக் கேட்கலாமாவென்று சிலேஷையாக உத்தரஞ் சொல்லினுர். அதுகேட்ட அந்தப்பூசுரர் சரிதானென்று இராஜனிடத்திற்குவந்து, இந்தச்சங்கதியனைத்தையுந் தெரியப்படுத்தினுர். அந்தவார்த்தையை மஹாராஜாகேட்டு, இம்மொழியினுலே அவர்கள் பாண்டவர்களென்றே சித்தமாய்த் தோன்றுகின்றது. ஆகிலும் இன்னு நன்ருய்ப் பரிசோதிப்போமென்று தன்னுடைய மந்திரிகளை அழைத்து, ஓ அமைச்சர்களே ! இந்த க்ஷணம் நீங்கள் நமதுகாவலிலுள்ள தேர்-குதிரை-யானை-பல்லக்கு-முதலான வாகனங்களையும்,வில்-வேல்-கத்தி-தடி-வ்வாள்-கதை- இவைமுதலாகிய ஆயுதங்களையும், பலவிதஆபரணங்களையும் நல்ல நல்லதுஸ்திரமான வஸ்திரங்களையும் அறுசுவைபோசனபதார்த்தங்களையும் எடுப்பித்துக்கொண்டு; நமதுகுமாரனுடனேபோய் இவைகளையெல்லாம் நான்வரிசையனுப்பியதாகச்சொல்லி அவர்களதை யங்கீகரித்து அணிந்துகொண்டு வாகனங்களின் மீதிலேறித் தாயாருடனே நம்முடையமாளிகைக்கு ஒருதரம்வந்து என்னைப் புனிதனுக்கவேண்டுமென்று நான் சொன்னதாய்த் தெரிவித்து அழைத்து வாருங்களென்று அனுப்பி வைத்தான்.

அப்படியே அந்த ராஜகுமாரனும் மந்திரிகளும் அவ்வரிசைகளை யெல்லாம் சகலமங்கள வாத்தியங்களுடனே கொண்டுபோய் மிகுந்த மரியாதையுடனே பாண்டவர்களைப் பார்த்து; ஓ ஐயமீர்! எங்கள் தகப்பனுர் தங்களுக்கு வரிசை அனுப்பிவைத்தார். இவைகளைத் தயைசெய்து அங்கீகரித்துத் தகுந்த ஆபரணங்களுந் தரித்து வாகனங்களிலேறிக்கொண்டு தங்கள் தாயுடனே எங்கள் கிரகத்துக்கு வரும்படி பிரார்த்திக்கிறுர். நீங்கள் அப்படியே தயைசெய்யவேண்டும். என்று கைகூப்பிச்சொல்லத் தருமநந்தனன் நல்லது பாக்கியமாச்சுதென்று அரசர்க்குரிய ஆடையாபரணங்களையும் ஆயுதங்களையும் தரித்துத் தேர்களின்மீது ஏறித் தாயாரையும் இராஜகன்னிகையையும் அலங்கரித்துச் சிவிகையில் ஏற்றிக்கொண்டு சகலபரிவாரங்களுஞ் சூழச்சென்று அரண்மனையிற் பிரவேசிக்கிறுர். அப்போது துருபதமகாராஜன் அவர்களை எதிர்கொண்டு மகா உபசாரத்துடனே தனது கொலுச்சபைக்கு அழைத்துப்போய் ஆதனங்களி லிருக்கவேண்டுமென்றுசொல்ல, அவர்களும் அவனிட்ட ஆதனங்களிலே உட்கார்ந்தார்கள். இராஜ பத்தினியாகிய கோகிலாதேவியும் பந்துவர்க்கத்தாரும் எதிர்வந்து, தன்மகளையும் குந்தியையும் அந்தப்புரத்துக் கழைத்துக்கொண்டுபோய் மரியாதையுடன் உபசரித்தார்கள். மகாராஜாவானவன் இவ்ர்களுடையசெய்கைகளினுலே பாண்டவாளென்றே மனதில் நிச்சயித்து அவர்களைப் பார்த்து, நான் நெடுநாட்செய்த தவத்தினுலே இப்படிப்பட்ட உத்தமர்களுடைய சம்பந்த மெனக்குக் கிடைத்தது. தன்னியனுனேன். இதற்கு மிஞ்சிய பாக்கிய மற்றென்றுமில்லை. ஆனுல் இந்தப்பெண்ணை இந்த அருச்சுனனுக்குக் கொடுக்கவேண்டுமென்று அக்கினியின் அனுக்கிரகத்தாற் பெற்றேன். உங்களுக்கு அரக்குமாளிகையின் மூலமாய்விபத்துவந்ததென்று கேள்வியுற்றுச் சஞ்சலப்பட்டுக்கொண் டிருக்கும்போது, அசரீரிவாக்கினுலே நீங்கள் பிழைத் திருக்கிறீர்களென்று தெரிந்து வேதவியாசராற் கடினமான இந்த லக்ஷயத்தை ஏற்படுத்திச் சுயம்வரத்துக்குச் சகலராஜாக்களையும், வருவித்தேன். ஒருவராலும் ஆகாமற்போன அந்தயந்திரபேதத்தை உங்களில் இவர் நிர்வாகஞ் செய்ததினுலே ஆச்சரியத்தை அடைந்து, உடனே தெய்வத்தின் வாக்கு சத்தியமென்று நம்பி நீங்களே பாண்டவர்களாக யிருக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டேன். ஆகிலும் ஸ்திரமாய்த் தெரியாமையாலே சித்தங்கலங்கி இருக்கின்றது. நீங்கள் தயைசெய்து இந்தச்சந்தேகத்தை நீக்கினுல் தெய்வத்தின் மெய்ம்மையையும் பொய்மையையும் நிச்சயம்பண்ணிக் கொள்ளுவேன் என்று கேட்டான்.

இவ்வாறு சொல்லிக் கேட்ட பாஞ்சாலனுடைய வார்த்தையின் நயிச்சியத்திற்குஞ் சாதுரியத்திற்கும் பாண்டவர்கள் மெச்சிச் சந்தோஷித்து, உதிட்டிரர்புன்சிரிப்புடனே சொல்லுவார்: வாரீர் மகாராஜனே! புத்திமானுகியும் சத்தியசந்தனுகியும் மிருக்கின்ற உம்முடைய எண்ணம் வீணுகுமோ? தெய்வத்தின் அருள் பழுதாகுமோ? உமக்கேன் மனதிற்கவலை? இனி அக்கவலையைவிட்டுவிடுமென்றார். அதுகேட்டபாஞ்சாலன் அரியபேறு பெற்றதுபோல் ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்து, விழிகளில் ஆனந்தபாஷ்பம் பெருக்கி, உடலில் ஆனந்தமாய் மயிர்க்குச்செறிய அவர்களைக்கட்டிக்கொண்டு ஒருக்ஷணநேர பரியந்தம் ஒன்றும் பேசாமற் பிரம்மானந்தமயமாய் ஸ்தம்பித்துநின்று, ஓ என்பிராணனேடொத்த இராஜகுமாரர்களே! உங்களுடைய நிஜமானவடிவைக் காண்பிக்க வேண்டுமென்று துரிதப்படுகிறேன். கோபிக்காமல் என்மீது தயைசெய்யுங்களென்று கைகூப்பிப் பிரார்த்தித்தான். அவர்களும் வியாசமுனியை மனதிற்சிந்தித்து மந்திரத்தை யுச்சரித்தமாத்திரத்திலே சத்தியமான ரூபங்கள்வந்து விளங்கினர்கள். எதார்த்தமாக அப்பாண்டவர்களைக்கண்ட அந்தப்பாஞ்சாலனும் அவனுடையபுத்திரன் முதலானவர்களும்மகாசந்தோஷத்தோடு நேத்திரோற்சவ மடைந்தார்கள். அப்பாற் பாஞ்சாலன் தருமபுத்திரனைநோக்கி, இனி விளம்பனம் வேண்டாம். உம்முடைய தம்பிக்குக் கலியாணத்தைக்குறித்துச் செலவுகொடுக்கவேண்டும். என்றுகேட்கவும் உதிஷ்டிரர்- ஓய் மகாராஜனே! உம்முடைய பெண்ணை நாங்களைவரும் விவாகஞ்செய்யும்படி தெய்வகாரணத்தினுல் எங்கள் மாதாவின்வாக் குண்டாயது. அது தவறக்கூடாதென்றார். அதுகேட்டபாஞ்சாலன் அலகைபிடித்தவன்போலாகி, இஃதென்ன ஆச்சரியம்? சகலதருமங்களும் அறிந்தவரோ இப்படிச்சொல்லுகின்றீர், உலகத்தில் இல்லாதகாரியமா யிருக்கிறதை நாமெப்படி நடத்தலாம்? என்று மறுபடியும் வியாகுலத்துடனே துருபதேயன் ஏங்கியிருந்தான்.

வியாசர் பாஞ்சாலனுக்குத் திரௌபதி பூர்வசனன வரலாறுரைத்தல்.

அப்போது சகல மஹா ரிஷிகளுக்கும் சிரபூஷணமாகிய வியாசபகவான் கருக்கொண்ட மேகம்போன்ற திருமேனியும், செந்நிறமுள்ள சடாமுடியும், பொன்னிறமானதேஜசும், வெண்ணிறமுள்ள விபூதி தூளிதமும், புள்ளிநிறமுள்ள மான்தோலாடையுமாய்; சூரியகிரண மேற்றிசையிற்பரவியிருக்கக் கீழ்த்திசையிலிருக்கும் உதயகிரிபானுவைப்போலும்விளங்கி தபோமகிமையாற் பிரகாசித்து தண்டுகமண்டல மிதியடியுடனே அந்தபாஞ்சாலனுடையசபையிலெழுந்தருளினர். அவர் எழுந்தருளியதைப்பார்த்த பாஞ்சாலராஜனும் பாண்டவர்களும் எழுந்து அவர் பாதங்களில்விழுந்து அவராலாசீர்வதிக்கப்பட்டு அவரையழைத்துப்போய் ஆசனத்தி லுட்காரவைத்து அவரனுமதியினுலே தாங்களும் உட்கார்ந்தார்கள். பின்பு வியாசபகவான் ஓர்க்ஷணகாலம் க்ஷேம விசாரணைசெய்து, ஓய் பாஞ்சாலராஜனே! உம்முடைய மனதிற் சந்தேகப்பட வேண்டியதென்ன? திரௌபதிக்கு ஐந்துபுருஷர்கள்தான் நேமிக்கப்பட்டிருக்கிறார்கள். குந்திதேவியின் வாக்கிலும் அப்படியே வந்திருக்கின்றது. இந்தப் பாஞ்சாலிக்கும் இவ்வைந்துபேரிடத்திலும் மனதுண்டு. இவர்களுக்கு மவ்வாறே சம்மதி. ஆனுல் அது இந்தச் சனனத்தைப் பற்றியதல்ல முற்சனனத்தைப் பற்றியதாகையால் அதுசங்கதி உமக்குக்கேட்க மனதிருந்தால் விளம்புவேனென்று அரசனைத் தனியே அழைத்துப்போய் அந்தச்சங்கதியைச் சொல்லத்தொடங்கினர்.

ஓ அரசனே! முற்செனனத்தில் இத்திரௌபதி நளராஜனுடைய மகளாகப்பிறந்து, நளாயினி எனப் பெயருடையவளாகச் சிறந்து, மிகவும் சவுந்தரியத்துடனே பருவமடைந்திருந்தாள். அவளைவெகு ராஜாக்கள்வந்து விவாகத்துக்காகக்கேட்டதற்கு அந்தப்பெண் தனக்குப் புருஷன்வேணுமென்கிறபோது நான் அவளைக் கலியாணம்பண்ணிக் கொடுப்பேனே யல்லது அதற்குமுன்னே கொடுக்கமாட்டேன்என்று சொல்லிப்போட்டான். இப்படியிருக்க-அந்தப்பெண் ஒருநாள் எனக்குக்கலியாணஞ் செய்யவேணுமென்று பிதாவுடனேசொல்ல பிதாவும் அதற்கு யத்தினமாயிருக்கையில் ஒருதினம் மவுத்கல்யரென்கிற மஹாமுனி இராஜனிடத்துக்குவந்து, ஓ மன்னவனே! நானொரு காரியமாய் வந்தேன். அதை நீ நிறைவேற்றவேணுமென்றார். அந்த ராஜாவும் இவருடைய தபோமகிமைக்கு அஞ்சி மறுத்துச்சொல்லமாட்டாமல், அப்படியே ஆகட்டுமென்று ஒப்பினர். இந்தரிஷி உன் மகளை எனக்குக் கன்னிகாதானம் செய்யவேண்டுமென்று கேட்க, அந்தராஜா இவருடைய முதிர்ந்த வயதையும் கோரரூபத்தையும் கண்டு, தன் மகளுடைய மங்கைப் பருவத்தையும் நல்ல சௌந்தரியத்தையும் நிதானித்து, சுவாமி! அப்படியே செய்கிறேன். ஆனுல்-அந்தப்புரத்துக்குப்போய் என்மகளைச் சம்மதிசெய்து, அதற்கு அடையாளமாக அவள் முத்திரைமோதிரத்தை வாங்கிவந்தால் உடனே தத்தம் பண்ணுகிறேனென்று சொன்னுன்.

அதுகேட்ட அந்த முனிவரும் ஆகட்டுமென்று அந்தப்புரத்துக்குப் போகும்போது மன்மதனை நினைத்தார். அம்மாத்திரத்தில் அவன் அவருக்கெதிரில் வந்துநின்றான். உடனேமுனிவர் அவனுடைய வயதையும் அழகையும் வாங்கிக்கொண்டு, தன் வயதையும் ரூபத்தையும் அவனுக்குக்கொடுத்து, அப்பா! சற்றுநேரத்திலே உன்சொத்தைச் சேர்த்துவிடுகிறேனென்று அவனுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டுத் தாம் அந்

தப்புரம்போய் அங்கிருந்த ராஜகன்னிகையைப்பார்த்தார். அவள் இவருடைய ரூபத்தைக் கண்டமாத்திரத்திலே மோகித்து, இவரைப்பின்னும் ஏறநோக்கி உற்றுப்பார்த்து, நீரார்? எங்கேவந்தீர்? என்றுவினவினாள். அவரும் தமக்கு அவளிடத்தி லிருக்கிற ஆசைவெளிப்பட, ஓ பொற்கொடியே! உன்னை விவாகஞ்செய்ய வேண்டுமென்று வந்தேன். உன்பிதா நீ சம்மதித்தால் அப்படியே செய்கிறேன் என்றான். ஆகையால் உனக்கு என்னிடத்தில் ஆசையிருந்தால், உன் மனங் குவிந்ததற்கு அடையாளமாக நீ தரித்திருக்கிற முத்திலா மோதிரத்தை என்கையிற்கொடு. அதை உன்தகப்பனுக்குக் காட்டி உன்னை யான் விவாகம் செய்துகொள்ளுகிறேன் என்றுசொன்னார்: அந்தப் பெண்ணரசியும் புன்சிரிப்புடனே மௌனமாய்த் தன் மோதிரத்தைக் கழற்றித் தபோதனர் கையிற் கொடுத்தாள். அவர் அதை வாங்கிக்கொண்டு மிகவும் சந்தோஷத்துடனே வரும்போது மன்மதனை யழைத்து அவன்ரூபத்தை அவனுக்குக் கொடுத்து விட்டுத் தம்முடைய யதா ரூபத்தோடே அரசனிடத்திற்சென்று, அவன்கையில் அம்மோதிரத்தைக் கொடுத்தார். அரசனும் அதைப்பார்த்துத் தன்மகளை அழைப்பித்து, மகளே! இதோ நீ இஷ்டமாய் நினைத்த புருஷன். இவருக்கே உன்னைக் கன்னிகாதானம் பண்ணுகிறேன். என்றுசொல்ல அந்த சுந்தரி அந்தப்புருஷனைப் பார்த்து நான் இச்சித்த புருஷன் இவரல்லவென்று சொல்ல, மஹாராஜன் இவர் தான் உன் சம்மதிக்கு அடையாளமாக மோதிரங்கொண்டு வந்து என்கையிற் கொடுத்தார். இனிப் பேசியபேச்சு புரளக்கூடாதென்றான்.

அந்தப்பெண் திடுக்கிட்டு, நமக்கு அமைப்பு இதுதானென்று நினைத்துக்கொண்டு, ஐயா! ஆனால் அப்படியே செய்யுமென்று சொன்னாள். அப்பால் அந்த ராஜாவானவன் அந்த மவுத்கலியருக்கே நளாயனி என்னும் தன்மகளைக் கன்னிகாதானஞ் செய்து, சிறப்புடனே விவாகத்தையு நடாத்தினான். விவாகம் நடந்தபின்பு அந்தமுனிவர் இந்தப் பெண்பிள்ளையைப் பார்த்து, பெண்ணே! நீ என்னுடன் கூடியிருக்க மனமுடையவளா? அல்லது உன்தகப்பனாரிடத்தில் விளையாடி யிருக்கும் இனமுடையவளா? என்று கேட்க அந்தப்பெண் கற்புடையவ ளாகையால், சுவாமி! இனித்தகப்பனாலெனக்கென்னபயன்? இப்பருவம் புருஷனோ டிருக்கத்தக்க தாதலால் தேவரீருடன் கூட வருவதற்கே மனமுடையவளென்று சொல்லினள். அப்படியானால் நான்கடினமாகிய அரணியத்திலிருந்து தவஞ்செய்யப் போகிறேன். அங்கே நல்ல உணவு கிடைக்காது, காய்கிழங்கு தின்னவேண்டும். மெத்தென்னுஞ் சயனமில்லை, கல்லிலும் முள்ளிலும் காட்டிலும் படுக்கவேண்டும் - திவ்வியமான வாத்திய கோஷ்டமில்லை, பயங்கரமான மிருகங்களின் கர்ச்சிப்பைக்கேட்கவேண்டும். உயர்ந்தவஸ்திரமில்லை, மரவுரியுடுக்கவேண்டும். மாடமாளிகைகளில்லை, தழைகளாற் கட்டப்பட்ட குடிசைகளிலிருக்கவேண்டும். உனக்குக் காலங்களில் அன்ன பானாதிகள் கிடைக்க மாட்டா, மத்தியானத்துக்கு மேற் கொஞ்சம் புல்லரிசிக் கஞ்சி கிடைக்கும். இராத்திரியிற் போசனங் கிடைக்காது. அன்றியும் விடியற்கால மெழுந்ததுமுதல் நமக்கு ஸ்நானம்—தேவபூசை - அக்கினிஹோத்திரம் - ஜாகாரமுதலான வைதிகங்களுக்கும், ஆகாரமுதலான லௌகிகங்களுக்கும், நீசெய்யவேண்டிய காரியங்களால் மிகவு மெய்வருந்தவேண்டும். நித்திரையற்றிருக்கவேண்டும். மேலும் நான்கிழவன். தவத்தில்நிற்பவன். ஒருவேளை சாப்பிடுகிறவன். உனக்குக் காமசுகம் பெரும்பாலும் நேரிடாது. இதுவு மல்லாமல் நினைத்தபோது எங்கே போகவேண்டுமோ அங்கே போய்விடுவேன். அனேக தினங்கள் ஆகாரமே யில்லாமல் தவத்தில் நின்றுவிடுவேன். அப்போதெல்லாம் நீ ஒருத்தியாய் ஆகாரநித்திரைகளில்லாம லிருக்கவேண்டும். இப்படிக்கு அதிக துக்கத்திற்கே காரணமாகியது வனவாசம்.

ஓ பெண்ணே! அந்தப்புர வாசலிற் சகல சுகத்தோடும் சந்திர மண்டலம்போலே விளங்காநின்ற மாளிகைமீதில் யானைத்தந்தங்களினாற் செய்து நவமணியிழைத்த மஞ்சங்களிலே இலவம் பஞ்சிட்டுப் பட்டினால் தைத்த சுகுமாரமாகிய படுக்கையில் தூங்கி, திவ்ய ஆசனங்களி லிருந்து, அனேகவித உபசாரங்களுடனே தகுந்த வேலைக்காரிகள் கொண்டு வந்து கொடுக்கும் தேவாமிருதத்திற்கு நிகராகிய அறுசுவையுண்டிகளை விளையாட்டாற் புசித்து, ஏழிசை கூடிய வேணு வீணைமுதலாகிய வாத்தியங்களின் மதுரமான ஒலியைக்கேட்டு, அம்மானை கழங்கு பந்து முதலியவைகளை விளையாடி, உன்னிச்சையின்படி எல்லா விநோதங்களையுஞ் செய்துகொண்டிருக்கிற நீ; என்னுடன் வருவதற் கிசையமாட்டுவையோ? என்று அம்மகாமுனி சொல்லக்கேட்ட அந்த ஸ்திரீயானவள்சொல்லுகிறாள்: ஓ ஸ்வாமி! என்ன கஷ்ட நேரிட்டாலும், புருஷன் எப்படிப் பட்டவனானாலும், பதிவிரதையாயிருக்கிற ஸ்திரீகளுக்கு அப்புருஷனுடன் கூடயிருந்து கணவனுக்குச் சிசுருஷை செய்வதே சகலசாஸ்திரங்களுடையவிதி. இதனாலேதான் அவளுக் கிம்மையில் நற்கதியும் நல்லின்பமும் உண்டாவதோடு, பிறந்தகுலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் புகழும் நடந்து, உலகத்திலுள்ள சகலமான பேர்களாலு மகிழ்ப்படுவள். அப்பெண்மையே பெண்மை. சவுக்கியமுதலிய மற்றவை சுகமல்ல. பிறந்தவீட்டில் எத்தனைசெல்வ மிருந்தாலும் அதனாற் பெண்ணுக்குக் கிஞ்சித்தும் பெருமையில்லை. புகுந்தயிடத்திற் குடிப்பது கூழாயினும் அருமையான பெருமைதான். அன்றியும் வருத்தத்துடனாவது கணவனோடுகூட இருக்கிறதே சுவர்க்கபதவி. அதை விடுத்துத் தன்னிச்சை போல நடந்து

சுவர்க்கம் புகுந்தாலும் நரகயாதனை ஆகையால் முன்னம் இராமன்பின்னே ஜனகன்மகள் போனாள். நளனுடனே தமயந்திசென்றாள். சுகன்னி யென்பவளும் பார்க்கவச்சியவன ரோடு ஆரணியவாசஞ் செய்தாள். அரிச்சந்திரனைச் சந்திரமதி அனுசரித்தாள். இப்படி அனேகம் பதிவிரதைகள் பதிசுசுரூஷை என்னுங் கல்பத்தை அனுஷ்டித்து, என்றும் நாசமுறுத கீர்த்தியுடைமையைப் பெற்று விளங்குகின்றார்கள். இதெல்லாம் அறிந்தயான் எப்பாடு பட்டாவது தேவரீரை அனுசரித்திருப்பேனே யல்லது, பிதாவின்வீட்டுப் புசிப்பாகிய எச்சிலுக்கு இச்சிக்கமாட்டேன். என்று சொலக்கேட்ட மவுத்கலிய முனிவர் மிகவியந்து, ஆனால் இவ்வாடை யாபரணங்களை விட்டு என்போல மரவுரியுடுத்திக் கொள்ளென்று கூற அவளும் அப்படியே செய்தாள். அதுகண்ட அந்தமவுத்கல்ய ரிஷியானவர் நளாயினியை அழைத்துக்கொண்டு கங்காநதி தீரமாகிய ஒரு புண்ணிய க்ஷேத்திரத்திற் போய்த் தம திச்சையின்படி தவஞ்செய்ய வாரம்பித்தார்.

அவளும் அவருக்கு வேண்டிய உபசாரஞ் செய்துகொண்டு வருகையில் அந்தரிஷி அவளுடைய கற்பை இன்னம் நன்றாகச் சோதிக்க வேண்டுமென்று கருதி, ஒருநாளாவது காமவின்பத்தைக்கொடாமற்போனது மன்றித் தம்முடைய கிழத்தன்மையால் விகாரமுற்ற தேகத்திற் பெரு வியாதியையும் வருவித்துக் கொண்டார். அதனால் அவர்தேகமானது அந்தக் கொடிய வியாதியினால் அழுகிக் குளுகுளுத்துப் புண்கள் வெடித்துச் சீழ்வடிந்து, ஓர் புறத்திற் புழுக்கள் மொய்த்துத் துர்க்கந்தம் வீசி மகாகோரமான ஸ்திதியில் வந்தது. அப்பொழுதும் அவள் அருவருக்காமல் உடம்பைத் தேய்த்துக் குளிப்பாட்டுகிறதும், புழுக்களையெல்லாம் எடுத்து அப்பாற்போட்டு அந்தச்சீழ் முதலியவற்றைத் தன் வஸ்திரத்தினால் துடைக்கிறதும், அவர்போஜனம் பண்ணின பாத்திரத்தி லிருக்கும் சேஷங்களுடனே தானுண்கிறதும், அவருடைய பாதமுதலிய அங்கங்களை வருத்தந்தீரப் பிடிக்கிறதுமாகப் பணிவிடை செய்து வந்தாள். ஒருநாள் அவர் உண்கலத்திலே தமது பெருவிரல் அற்றுவீழச் செய்தார். அன்றைக்கும் புழுக்களோடு சீழுஞ் சிலைநீருங்கலந்து நாற்றமாய்க் கிடக்கிற அவ்விரலை எடுத்துப்போட்டு, மிகுந்த அன்னபானாதிகளை அன்போடு புசித்தாள். அம்முனிவர் இதுகளையெல்லாம் பார்த்து மனதில் மிகுந்த ஆனந்தத்தை அடைந்திருந்தாலும் இன்னமும் பார்ப்போமென்று வெளிக்கு அவளைத் திட்டுகிறதும், கோபித்துக் கொள்ளுகிறதும், உதைக்கிறதும், அடிக்கிறதுமாகவே இருந்தார். அப்படிக் கிருந்தும் அந்தமாது மனங்கோணாமல் நடந்தாள்.

இப்படி நடந்து வருநாளில் ஒருநாள் அந்த வைதிகரானவர் தம் மனைவியை நோக்கி, அடிபெண்ணே! நான் உன்னைக் கலியாணம் பண்ணுகிற தற்கு முன்னே ஒருவியாதியு மில்லாமற் சுகமாயிருந்தேன். துற்பாக்கியவதியான உன்னைக் கலியாணஞ் செய்த பின்பு இக்கொடியவியாதியினால் வருந்துகிறதுமன்றி, நினைத்தபோது தீர்த்தங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் போகக்கூடாமல் இங்கேயே கிடக்கவேண்டியதாயிற்று. என்ன செய்வேன்? இது என் தலைவிதி. அடீபாபிஷ்டி! உன்னைத்தெரியாமலன்றோ விவாகஞ்செய்தேன் என்று கண்ணீருதிர்த்துக் கொண்டு விசனப்பட்டார். அதைக்கேட்ட அக்கற்புடைய மாதுசிரோமணியானவள்-ஓ சுவாமி! நீர் ஏன் விசனப்படுகிறீர். நான் மகா பாபிஷ்டி தான். இந்த வியாதிக்குமாத்திரம் நானொன்றுஞ் செய்யமாட்டாமற் போனாலும், மற்றென்னாலாகிய பணிவிடைகளுக்கு ஒன்றுங்குறைவில்லை. ஆகையால்-தயைசெய்து தேவரீருக்கு எவ்விடத்துக்குப் போக மனமிருக்கிறதோ அதை அடியாளுக்குத் தெரிவித்தால், அவ்விடத்திற்றங்களைக் கொண்டு போய் விடுகிறேன். தேவரீருக் குதவாத என்தேகமும் பிராணனும் இவ்வுலகத் திருந்தென்ன லாபம்? சுவாமி! தங்கள் கருத்துக்கிசைய நான் நடந்துகொள்ளவேண்டிய பணிசட்டுக் கட்டளை இடவேண்டுமென்று வணங்கிக் கும்பிட்டுக்கேட்டாள். அதற்கந்தமுனிவர் - அடிபெண்ணே! என்னைத் தீர்த்தங்கள் தோறும் கொண்டுபோய் ஸ்நானம்பண்ணிவைக்கவேண்டுமென்றுரைத்தார். அப்படியே அந்த ஸ்திரீயானவள் அவரை ஒரு கூடையிலெடுத்துத் தலைமீது வைத்துக்கொண்டு தீர்த்த யாத்திரை போகின்றாள். அப்போது ஒரு பட்டணத்திற் போய் அம்முனிவரை இறக்கினாள்.

அவ்விடத்தி லிறங்கிய முனியானவர் - ஓ பெண்ணே! நான் ஒருவஸ்துவி னிடத்திலே ஆசைப்பட்டேன். அது எனக்கு இலேசிற் கிடைக்கமாட்டாதே என்னசெய்வேனென்று விசனப்பட்டார். அதைக்கேட்ட அவள்-சுவாமி! அது என்னவஸ்து? அவ்வஸ்து எவ்வகைப்பட்டதாயினும் எனக்குச் சொன்னால் என்னாற் கூடியவரையிற் பிரயாசைப்பட்டுக்கொண்டுவந்துகொடுக்கிறேனென்று சொல்லினள். அந்தத்தபசி அதையுனக்குச்சொல்லுவேனாகில் உன்மனதிற்கு மிகவும்வருத்தத்தை யுண்டாக்கும். முடிவில் நிறைவேறமாட்டாது. வீணாகச்சொல்லி என்வாக்கைவிறுதாவாக்கமாட்டேனென்றார். அந்தராஜபுத்திரி-சுவாமி! உம்முடைய மனதுக்கு இஷ்டமாயிருப்பது என்மனதுக்கு விரோதமாயிருக்கமாட்டாது. ஆதலால் அதைத் தயைசெய்துசொல்லுவீராகில் அஃது எவ்வாறதாயினும் அதை முடிக்கிறேனென்று சொன்னாள். பின்பந்தமுனிவர் - ஆனாற்கேள்: இந்தப் பட்டணத்திற் கீழ்ப்புற வீதியில் ஒருவேசி இருக்கிறாள். அவள் அரம்பையோ? ஊர்வசியோ? இரதியோ? என்று சந்தேகப்படத் தக்கவளா யிருக்கிறாள். அவளைப் பார்த்ததுமுதல் யான் மிகுந்த மோகமாயினேன். மையல்தலைக்கேறிற்று. எனக்கு அன்னபானங்கள் கூட வெறுப்பா யிருக்கிற

து. விசாரிக்குமளவில் அவள் ஒரு இராத்திரிக்கு நூறு பொன் வாங்குகிறவளாம், எனக்குப் பொன்னுமில்லை. அப்பொன் னிருந்தாலும் அவளைப் போகிக்கும்படியான தேகமுமில்லை. அப்படிப்பட்ட காரியம் எவ்விதமாக முடியுமென்று மவுத்கலியர் சொன்னார்.

அந்தப் பதிவிரதை தீர்க்காலோசனை செய்து, நல்லதென்றுமனதில் ஒருநிச்சயத்தையடைந்து, அந்த வேசியின் வீட்டுவாசலை விடியற்காலையிலேபோய் நன்றாய்மெழுகி விசித்திரமாகக் கோலமிட்டு அவர்களெழுந்திருக்கிறதற்கு முன்னமே வந்துவிடுவள். இப்படியாகச் சிலநாள் செய்து வரும்போது அவ்வீட்டு வேலைக்காரிகள் தங்களுடைய வேலையை ஆரோ செய்துபோகிறார்களென்று ஆச்சரியப்பட்டு தாசிக்கு அறிவித்தார்கள். அவளும்பார்த்து மிகவும் வியப்படைந்து, ஆ! ஆ! நமது வீட்டிற்குவந்து யாரிப்படி செய்கிறார்கள்? அவர்களை எவ்விதத்திலேனும் காணவேண்டுமென்றிருக்கின்றாள். அப்போது ஒருநாள் அவள் வேலைக்காரிகள் பதுங்கியிருந்து, விடியும்போதே மெழுகிக்கோலமிடுகிற இந்தப் பெண்பிள்ளையைக்கண்டு உடனே தங்கள் யசமானிக்குத் தெரிவிக்க, அவள் ஓடிவந்து இந்த முனிமனைவியைப் பார்த்து, அம்மா! மஹாலட்சுமியைப்போ லிருக்கின்றீர். நீர்யார்? என்வீட்டுக்கு நீர்பணிசெய்வதேன்? உமக்குத்தகுமா? தேவஸ்திரீகளும் பணிவிடைசெய்யத்தகுந்த மஹாதேஜசுடனே விளங்குகிற நீர், என்னபயனைக்குறித்து எனக்கு ஏவல்செய்யப் புகுந்தீர்? என்ன வெண்ணங்கொண்டு அடியாளுடைய வீட்டைப் புனிதமாக்கவந்தீர்? அதனைத் தயைசெய்து சொல்லம்மாவென்று நமஸ்கரித்துக் கேட்டனள். அதற்கு அந்த வைதிகன்மனைவி மகிழ்ந்து, இப்படி நீ என்னிடத்திற் கருத்தூன்றி அன்புவைத்தபடியே என்னிஷ்டத்தையும் நிறைவேற்றுகிறதானால் யான்சொல்லுவே னென்றாள். அதுகேட்ட அந்தவிலைமாது-அம்மா! என்னாற்செய்யத்தகு மூழியத்திற்குத் தடையொன்றுமில்லை. ஆதலால் ஐயமில்லாமற் பேசலாமென்றனள். முனிமனையாள்-அம்மா! என்கணவன் மகானுபாவர். சகலகலைகளுமறிந்தவர். தபோமகிமை விளங்கியவர். அவருக்குச் சிலகாலமாய் நான்புரிந்த தீவினையாலே குஷ்டவியாதிசம்பவித்தது. அவர் தீர்த்தயாத்திரையாய் இவ்வூருக்கு வந்தவிடத்தில் உன்னைக்கண்டு, மன்மதன் போருக்கு வாணனைக் கொடுத்து விட்டு மயங்கி இருக்கின்றார். அவரது மயக்கத்தை உன் முகவிலாசத்தினால் தீர்த்துக் கப்பாற்றித் தரவேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொண்டாள். அவ்விலைமாது அவையனைத்தையும் யோசித்து, இதென்னமோ காரணந் தெரியவில்லை. நல்லது உமது பாக்கியம் எனக்குமாகட்டும் அழைத்துக்கொண்டு வாருமென்றாள்.

அதுகேட்ட நளாயினி சந்தோஷத்துடன் விரைவிற்போய் இச்செய்தியைத் தன் புருஷனுக்குத் தெரிவித்து, அவரைக் கூடையிலே வைத்துக்கொண்டுவந்து அத்தாசி வீட்டின் தலைக்கடையில் விட்டாள். அவர்-பெண்ணே! நீதெருவிலிரு:நான்கூப்பிடும்போது ஓடிவா. என்று சொல்லித் தெருக்கதவை மூடிக்கொண்டு மன்மதனை நினைத்து, ஒருக்ஷணநேரத்திலே அவனழகைப்பூண்டு உள்ளேபோனார். அந்தத்தாசியும் மன்மதன்போல் விளங்கு மிவரைப் பார்த்த மாத்திரத்திற் பிரமித்து மோகித்துத் தன்மனதில் ஒன்றுந்தோன்றாமற் சிறிதுநேரம் ஸ்தம்பித்து நின்று யோசித்து, அப்பாற்சந்தோஷித்து ஓடிவந்து ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு சகலவித உபசாரங்களுஞ்செய்து, தேவேந்திரனுடைய சபையைப்போல் அலங்கரிக்கப்பட்டிருக்கிற தன்படுக்கையறைக்குள் அழைத்துக்கொண்டுபோய்க் காமனுடைய பூஞ்சோலையொத்திருக்கிற ஹம்சதூளிகா மஞ்சத்தின்மீது இருத்தி நானாவித காமோபசாரஞ்செய்து அவருடைய சரீரத்தை இறுகக்கட்டி முத்தமிட்டு, என்சாமி! உம்மை உம்முடைய மனையாள் ஏன் குஷ்டவியாதி பிடித்தவரென்று உரைத்தாள்? பரிஹாசமாகச் சொன்னாளோ? தாங்கள் என்னை யொருபொருளா யிச்சித்து இங்குவர நானென்ன தவஞ்செய்தேன்? இப்படிப்பட்ட பாக்கியத்தை யானெளிதிற் பெறச்செய்த அந்தப்பாக்கியவதி யாரோ? வலுவில்வந்து எனக்குக் கற்கண்டையும் சர்க்கரைப்பாகையு மூட்டினாளே: தன்னுயிரையும் பாக்கியத்தையும் கொடுத்தவளுக்கு நானென்ன பிரதியுபகாரஞ் செய்யமாட்டுவேன்? என்கண்ணே! உம்மைக் குற்றமுடையவராகச்சொல்ல அவளுடைய நாவெப்படி துணிந்ததோ என்று ஆலிங்கனஞ்செய்து காமக்கலை தாங்கினாள். இக்கபடமன்மதன் - ஓ தாசிகுலமணியே! யானொருகாரணத்தினால் அவள் கண்ணுக்கு வியாதியுடையவன்போல் தோற்றுவேன். ஆதலால் அவள் அவ்வாறுரைத்தனள். இந்த ரகசியத்தை நீ வெளியிட வேண்டாம். வெளியிடுவையானால் உன்சிரசு வெடிக்கும் என்று உரைத்தார். ஸ்வாமி! அப்படியே யாகட்டும். உம்முடைய கருத்துக்கு மாறுபட்டு நடக்கமாட்டேனென்று சொல்லிச் சிலநேரம்வரையில் அவருடன் மதனசாம்பிராச்சியவைபவ ஐசுவரியத்தை அனுபவித்துவந்தாள். பின்பு அவர் அவளை வேண்டி விடைபெற்றுக்கொண்டு நடையில்வந்து, மன்மதனுக்கு அவன் ரூபத்தைக் கொடுத்துத் தன்கொடியவியாதியை மீட்டு மடைந்து கதவைத்திறந்து, பெண்ணே யென்று மெலிந்த குரலுடனே கூப்பிட்டார். அம்மாத்திரத்திலே இந்தப்பதிவிரதை யானவள் சுவாமியென்று ஓடிவந்து கூடையில் உட்காரவைத்துத் தூக்கிக்கொண்டு வருகிறாள்.

இப்படியவள் வழிநடந்துகொண்டிருக்கும்போது கிருஷ்ணபக்ஷத்திராக்காலமாகையாலும்- ஆகாயத்தில் மேகங்கள் கம்மிக்கொண்டு இடிமுழக்கத்துடனே தூறலைச் சொரிந்திருந்த படியினாலும் - வழிதெரியாமல்

அலைந்து, இராஜாவின் ஆக்கினையினாலே கழுவிலேற்றப்பட்டிருக்கிற மாண்டவியரென்னு மகாமுனிவரிருக்குமிடத்தே சேர்ந்து, அவர்பாதம் கூடையிற் படச்சென்றாள். அப்படிப் பட்டமாத்திரத்திலே அவருக்கு நோய் அதிகமாகித்திடுக்கிட்டு, ஜாடையில் இவள்பெண்பிள்ளையென்று அறிந்து, பொழுது விடிந்தவுடனே உனதுமாங்கிலியம் அறக்கடவதென்றுசபித்தார். இச்சாபத்தினைக்கேட்ட ரிஷிபத்தினியானவள் இவர் யாரோ ஒருபெரியவர். இதற்கு என்னசெய்யலாம்! என்றுநினைத்துப் பொழுதுவிடியாமற் போகக்கடவதென்று சொன்னாள். இப்படி இவளுடைய பதிவிரதா தருமத்தினாலே எட்டுநாள் வரையில் பொழுதுவிடியாம லிருந்தது. அதினாலே உலகமெல்லாம் தொந்திரவடைந்து நிற்கத்தேவர்கள் இச்செயலுண்டானதற்குக்காரண மின்னதென் றறிந்துகொண்டு மாண்டவிய மகாமுனியிடத் தடைந்து, சுவாமி! இதென்னகாரணமோ உலகம் அலைகிறதே: பொழுதுவிடியும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அம்முனிவர் என்னாலொரு விரோதமுமில்லை. ஒருபதிவிரதையினுடைய மகிமையால் இப்படிநேரிட்டது. ஆகையால் அவளைக்கேளுங்களென்று சொன்னார்.

அதுகேட்டு தேவர்கள் இப்பதிவிரதையைக்கண்டு, தாயே! உலகம் வருந்துதே: அவ்வருத்தந்தீர அனுக்கிரகஞ்செய்யவேண்டும். இப்போது உம்மையல்லது வேறுகதியில்லை ஆதலால் உயிர்களின்மீது இரக்கம்வைத்துக் காப்பாற்றுமென்று பிரார்த்தித்தனர். அந்தபதிவிரதை - ஓ தேவர்களே! நீங்கள் சொல்வது சரிதான். என்மாங்கிலியத்தை யிழக்க நானேமுயல்வதுநியாயமா சொல்லுங்களென்றுகேட்டாள். அதற்குத்தேவர்கள்- ஓ அம்மணி! இவ்வுலகத்துள் உத்தமராயினோர் தாமெவ்வித வருத்தமடைந்தாவது பலருக்கும் நன்மைசெய்வதே நன்று. இது உமக்குத் தெரியாத தன்று. என்றுசொல்ல அவள் மெய்தான். ஆகிலும் எதை இழந்தாலு மிழக்கலாம். புருஷனை இழப்பது ஸ்திரீகட்கு நலமல்லவே யென்றாள். அப்பால் அத்தேவர்கள் அவள்கணவனாகிய மவுத்கலியரைப் பிரார்த்திக்க, அவர் அவளாலேயே அது தீரவேண்டுமென்று சொல்லிவிட்டார். உடனே அவளைவேண்டி மாண்டவிய ரிடத்துக்கு அழைத்துக் கொண்டு சென்று, சுவாமி! இவ்விலக்குமி மாங்கிலியமிழக்காதிருக்கும்படி அனுக்கிரகம் செய்யுமென்று வேண்டினார்கள். அவர் அப்படியே பிரதிசாபமளித்தார். பின்பு இவளும் பொழுது விடியும்படிசொன்னாள். உடனேபொழுதுவிடிந்து, உலகமெல்லாம்பூசை- நைவேத்தியம் - ஸ்நானம் - சந்தி - செபம் - தபமுதலிய யாகங்களுடனே மங்களகரமாயிருந்தன.

இப்படிப்பட்ட இவளுடைய பதிவிரதத் தன்மையை இந்த மவுத்கலியரானவர் பார்த்துச் சந்தோஷித்து, பெண்ணே! இவ்வளவுகாலம் நீ வருந்தியும் கற்பில்வழுவினவளல்ல. ஆதலால் - மிகவும் உன்னிடத்தில் அனுக்கிரகம்வந்தது. நான் இப்போது காணப்படுகிறபடிக்குக் குரூபனல்ல. குஷ்டனல்ல. மூப்பனுமல்ல. உன்னை நான் எப்படி கிரீடை செய்து சந்தோஷிப்பிக்க வேண்டுமோ அப்படிப்பட்ட வரங்கேளென்றுசொன்னார். அதற்கு அவள்-சுவாமி! அடியாளிடத்தில் அனுக்கிரகம்வந்து கட்டளையிடுகிறபடியினாலே விண்ணப்பஞ் செய்கிறேன். அதாவது - தேவரீரே ஐந்துருடமா யிருந்துகொண்டு என்னைப் போகிக்கவேண்டும். மறுசனனத்திலு நீரே என்னை விவாகஞ்செய்து அநுபவிக்கவேண்டும். இதுதான் எனக்குவேண்டியவரமென்றுகேட்டாள். அதற்கந்த முனியானவர் உன்மனதின்படியே பின்னால் நடக்குமென்றுசொல்லி, இத்தனை காலத்து வருத்தமும் ஒருநாளையசுகத்துக்கு ஈடாகாதென்று சொல்லும்படிச் சிலகால் அவளைப் போகித்திருந்து அம்முனிதிலகர் சுவர்க்கலோகமடைந்தனர். இந்தப் பதிவிரதையும் அநுமரணஞ் செய்து பதியுடன்போய்ச் சேர்ந்தாள்.

பின்பு அவள் இந்திரசேனை யென்னும் பேருடையவளாகித் தன் புருஷனாகிய அம்முனிவருடனே மேருவின் சிகரங்களிலும்-நந்தனவனங்களிலும் - சூரியலோகத்திலும் - சந்திரலோகத்திலும் - இன்னும் அனேக போகஸ்தானங்களிலும் - காமரூபியாகிய தன் கணவனுக்கு எந்தவேளையில் எந்த வடிவெடுத்துக்கொண்டு கூடவேண்டுமோ அந்தவேளையில் அந்தப்படியே கூடி, நெடுங்காலம் வெகு போகங்களெல்லாம் அனுபவித்துக்கொண் டிருக்கின்றாள். அப்படிக்கிருக்கையில் அந்தப்புருஷன்-பெண்ணே! இனியெனக்குப் போகத்தில் வெறுப்புண்டாயிற்று. ஆதலால் மேலாகிய பரப்பிரமயோகத்திற் பிரவேசிக்க மனதுண்டாயிருக்கிறது. யான் கானகம் சேருகிறேனென்று சொன்னார். அப்போதந்தப் பெண்-ஓ என்னுயிர்போன்ற நாயகனே! உம்மைவிட்டு ஒரு நிமிஷமும் பிரிந்து உய்வேனோ?பூவையர்க்குப் புருஷனல்லாது வேறுகதியுண்டோ ? ஆதலால்-நான் உம்மை விடமாட்டேனென்று மோகத்தாற் றடுத்தனள். அந்த மஹாமுனிவர் கோபங்கொண்டு,அடி நீ என் தவத்திற்குவிக்கினஞ்செய்கிறாய். ஆனபடியினாலே நீ மனுஷிய யோனியிற்பிறந்து, ஐந்துபேரை விவாகம் செய்யக்கடவாய் என்று சொல்லிவிட்டுத் தவத்திற்குச் சென்றார். இந்தப் பெண்பிள்ளையும் அன்னபானாதிகளிழந்து, வெயில்காற்று மழை முதலிய துன்பங்களை யெல்லாம் சகித்துக்கொண்டு பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்தாள்.

இப்படி சிலகால் மிவள் தவம் செய்துகொண் டிருக்கும்போது அந்த உருத்திரமூர்த்தி பாலசந்திரனும் கங்கையும்புனைந்த செஞ்சடாமுடியும், திருநீற்றாலலங்கரிக்கப்பட்ட திருமேனியும், அக்கினிபோலொளிரும் நெற்றிக்கண்ணும், மான்-மழு-சூலம்-அபயவரதம்-இவைகள் தரித்த நான்கு திருக்கைகளும், மரகத

ப்பாவைபோல் விளங்கும் ஈஸ்வரியுடனே வெள்ளிமலைபோன்ற நந்தியின்மீதேறிச் சிவகணங்களெல்லாம் சத்திரசாமராதிகள் போடச் சிவயோகிகளெல்லாம் உருத்திரங் கோஷித்துத் துதிக்க மகாவிபவத்துடனே தவஞ்செய்யும் இப்பெண்ணுக்கு முன்வந்து நின்றார். அம்மாத்திரத்தில் இவள் காணாதகாட்சியைக் கண்டவள்போல் பேரானந்தக்கடலில் மூழ்கி எழுந்து அனேக பிரதக்ஷணங்களோடு சாஷ்டாங்க நமஸ்காரங்களுஞ்செய்து நின்று, ஓ ஸ்வாமி! ஓ சங்கரனே! ஓ சகலலோகநாயகனே! ஓ எல்லாம் படைத்தளித் தழிக்குங் காரணப்பொருளே! ஓ வேதங்கள் துதிக்கும் அரியவித்தகனே! ஓ எட்டுத்திருமேனியாய் விளங்குகிறவனே! ஓ மகாதேவனே! ஓ ஞானானந்தமயவடிவினனே! ஓ மலைமகள் பங்கனே! ஓ பத்தர் பெருமானே! ஓ கருணைக்கடலே! ஓ எனது முற்பவத்துத் தவப்பயனே! உமது திருவடித் தாமரைகளுக்குச் சரணம்: சரணம்: இவ்வுலகத்தில் யாதொரு கதியுமற்ற அடியாள்பெற்றபேறுயார் பெறுவார்கள்? ஆ! ஆ! என்னபாக்கியஞ் செய்தேன்? இன்றல்லவோ என்னின் மிக்காரில்லாத தன்மையை யாயினேன். என் பஞ்சேந்திரியத்திற்கும் பயன்கள்பலித்தன. ஓ பரஞ்சோதியே! ஓ சிருட்டி திதி சங்கார திரோபவானுக்கிரக மூர்த்தியே! என்று இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பித் துதித்துப் பிரார்த்திக்கப் பரமசிவனு மந்த ஹாசத்தினாலே அமுதந்தங்கிய பவளக்கிண்ணம்போன்ற தமது திருவாயை மலர்த்தி, ஓ பெண்ணே! நின் தவத்தினாலே மிகவுங்களித்தேன். உனக்கென்ன வேண்டும் கேளென்று அருளிச்செய்தார்.

உடனே இந்திரசேனை மகிழ்ந்து, சுவாமி! தேவரீரைத் தரிசித்ததினாலே சகலபாக்கியங்களும் பெற்றேன். இதைவிட யாதெனக்குக்குறைவு? தேவரீரைக் காணும்பொருட்டே யன்றோ யோகிகளெல்லாம் மெய்வருந்திப் பலகாலம் தவஞ்செய்கின்றனர். ஆதலா லிப்படிப்பட்ட அரியகாட்சி எளிதினி லெனக்குக் கிடைத்ததேபோதும். ஆயினும் சுவாமிகள் தயைசெய்து வேறுவரமளிக்கத் திருவுள்ளமுடையவராயிருந்தால் (எனக்குப் புருஷபாக்கியமொன்றேதரவேண்டுமென்னும்பொருள்பட) ஐந்துதரம் "பதிந்தேகி" என்று பிரிதியுத்தரஞ்சொன்னாள். சுவாமியும்அதுகேட்டு, குழந்தாய்! அப்படியே உனக்குமனுஷியலோகத்தில் உத்தமமான பிறப்புகிடைக்கும். அப்பிறப்பிலே தேவராஜனது மகிமையையுடைய ஐந்துமகாபுருஷர் உனக்குக்கணவராவார்கள். அவர்களைச்சேர்ந்து நீ தேவர்களுக்கு மிகவு மனுகூலமாகியகாரியம் செய்வாய். என்று வரமளிக்க தவப்பெண்ணாகிய இந்திரசேனை அச்சிவனைப்பார்த்து, சுவாமி! நான் ஒருகணவனையன்றோ வரித்தது. அப்படியிருக்க அடியாளொருத்திக்கு ஐந்து பர்த்தாக்கள் எப்படி உண்டாவார்களென்றுகேட்டனள். சிவபிரான்-பெண்ணே! நீ ஐந்துதரம் என்னைப் (பதிந்தேகி) என்றுகேட்டபடியினாலே அப்படியே உண்டாகும்படி யனுக்கிரஞ்செய்தேன் என்று சொன்னார்.

அதற்கு இந்திரசேனை சொல்லுகிறாள்: எனது கடவுளே! முன்னம் சாஸ்திரங்களிலே பெண்பிள்ளைகள் ஒரு புருஷனையே விவாகஞ்செய்ய வேண்டியதென்றும், ஆண்பிள்ளைகள் அனேகம் பெண்களை விவாகஞ்செய்யலாமென்றும், அந்தப்பெண்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து உபசாரஞ்செய்து வரவேண்டுமென்றும், இப்படியெல்லாம் தருமநிச்சயஞ் செய்திருக்கிறார்கள். அன்றியும் ஒருஸ்திரீயானவள் சென்மாந்தரவினையினால் நேரிடும் ஆபத்துக்களில் நியோகமென்னும் ஓர் விதியினாலல்லது இரண்டாவது புருஷனைச்சேர்ந்தால் உபாயப் பிராயச்சித்தமும் மூன்றாவது புருஷனைச் சேர்ந்தால் மகா பிராயச்சித்தமும் விதித்துச் சேர்த்துக்கொள்ளலாமென்றும், நான்காவது புருஷனைச் சேர்ந்தால் அவள் பதிதையாதலால் அவளுக்குப் பிராயச்சித்தஞ்செய்து சேர்த்துக் கொள்ளக்கூடாதென்றும், ஐந்தாவது புருஷனைச்சேர்ந்தால் அவள் பந்தகி என்று சொல்லப்படுதலால் அவட்கெந்தப் பிராயச்சித்தமு மில்லை அவள் வேசிக்குச் சமானமாகியவளென்று காலத்தைப்பற்றியும்-சாதியைப்பற்றியும்-தக்கபடி பிராயச்சித்தங்களை விதித்திருக்கிறார்களே: அதுபோல் உலகின்கண் பலபுருஷரை மகளீர் தழுவுதலைக் காட்டிலும் இழிந்தசெய்கை வேறு கூறப்பட வில்லையே: இப்படியிருக்கத் தேவரீருடைய கிருபை யென்னும் ஊன்றுகோலைப் பெற்ற நான் அந்தக்கொடிய துஷ்டசெய்கை யென்னுங் குழியில் வீழலாமோ? ஆதலால் அப்படிப்பட்ட சங்கடம் நேரிடாம லிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாள். சுவாமியானவர் - பெண்ணே! நம்முடையவாக்கில் வந்ததற்கு இரண்டாவதில்லை. நீயும் அஞ்சவேண்டாம். நீ ஐவரைவிவாகஞ்செய்துகொள்வதை உலகத்தில் யாரும் நிந்திக்க மாட்டார்களென்று அருளிச்செய்தார். மறுபடியும் அவள்- சுவாமி! அப்படியானால் அந்த ஐந்துபுருஷர்களுக்கும் என்னுடைய சங்கம் காலந்தோறும் கௌமாரவயதே யிருக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள்.

அதுசேட்ட பரமேஸ்வரன் - ஓ குணவதி! நல்லது அப்படியே நீ சென்மாந்திரத்தில் விசேஷமான ரூபமும்-குணமும்-மேன்மையும்-போகமும்- அடைந்து மகானுபாவை யாவாய். அதோ அந்தக்கங்காநதியிற்போய் மூழ்கி எழுந்து, எந்தப்புருஷனைக் காண்கிறாயோ அவனை என்னிடத்திற்கு அழைத்துக் கொண்டுவாவென்று கட்டளையிட்டார். அந்தக்கட்டளையைச்சிரசில் வகித்துக்கொண்டு சுவாமியைப் பிரதக்ஷணம்வந்து தெண்டனிட்டு அருகிலிருக்கிற கங்கையில் மூழ்கினாள். அப்போது சுவாமி மறைந்துவிட்டார். இம்மைப்போகத்தைவிரும்பிய பூங்குழலாள் நதியின்மூழ்கி எழுந்து சுவாமியைப் பார்த்தாள். அப்பொழுது

அவரைக் காணுமையாலே திகைத்துக் கோவென்று
கதறி அழுதுகொண் டிருந்தாள். அவளழுத கண்
ணீர்த் துளி கங்கையில் விழுந்து, விசித்திரமாகிய
பொற்றாமரை மலராகப் பூத்திருந்தது. அந்தக்காலம்
தேவர்கள் நைமிசாரணியத்தில் ஒரு யாகம் பண்ணிக்
கொண்டிருந்தார்கள். அந்த யாகத்துக்கு இயமன்
சாமித்திர மென்னும் ஆர்த்து விச்சியத்தைச் செய்து
கொண்டிருந்தான். அதனுலே பூமியில் மனிதர்கள்
பெருகி விர்த்தியாய் ஒருவரை யொருவர் மதிக்காமலி
ருந்தார்கள். அதுகண்ட இந்திரன் -வருணன்-குபேர
ன் முதலாகிய சிலதேவர் பிரமதேவனிடஞ் சென்று,
சுவாமி! இதென்ன தேவர்களுக்கெல்லாம் அபாயகால
ம் நேரிட்டதேயென்று முறையிட்டுக் கொண்டனர்.
அந்தப்பிரமன் அவர்களைப்பார்த்து என்னபயம் உங்க
ளுக்கென்று கேட்க, சாதலையுடைய மனிதரெல்லாம்
சாகாததேவர்களோடு சமானராகித் தேவர்களை லக்ஷி
யஞ்செய்யாம லிருக்கிறார்கள். இதுதான் எங்களுக்கு
ண்டாகிய பயமென்றுசொன்னூர்கள். அதுகேட்ட பங்க
யன்,ஓதேவர்களே!இதற்குப்பயப்படவேண்டாம். இய
மன் சாமித்திரத்திலிருக்கிறபடியினலே இப்போ மனி
தர்கள் ஆயுசுவளர்ந்திருக்கிறார்கள்.அதுமுடிந்தவுடனே
அவர்களெல்லாம் நசிப்பார்கள். அன்றியும் அந்த யம
தேவனுடையதேகமே உங்களுடையசக்தியோடு கூடி
அவர்களுக் கெல்லாம் நாசகாரணமாகப் போகிறது.
ஆதலால் நீங்கள் வேறுசிந்தனை கொள்ளாமற் போக
லாமென்று பிரமதேவன் சொன்னுன்.

அதுகேட்ட இந்திரன் முதலிய தேவர்கள் மறு
படியுந் திரும்பி, மற்றத்தேவர்கள் யாகஞ்செய்கிற வி
டத்துவந்துஓரிடத்திலுட்கார்ந்திருந்தார்கள். அப்போ
து அவ்விந்திரன் முதலாயினேர் அந்தக் கங்கையிலி
ருக்கும் விசித்திரமான தாமரைமலரைக்கண்டார்கள்.
அதைக்கண்டு ஆச்சரியமடைந்த அத்தேவருள் இந்தி
ரனனவன் கங்கைக் கரையில்வந்து பார்த்தவுடனே
அங்கே அழுதுகொண் டிருக்கிற இந்திரசேனையைக்
கண்டு, அவளுடைய கண்ணீர்த்துளிகங்கைநீரில்விழு
ந்து பொற்றாமரை யாகிறதையுநோக்கி மிகவும்விய்ப்ப
டைந்து, ஓ மின்னலுக் கொப்பாகிய பாவாய் ! நீயார்?
இங்கு ஏன்வந்தாய் ? எதுக்குக் கண்ணீர் சொரிகிறாய்?
இதையெல்லாந் தெரியச் சொல்லுக. என்றுகேட்க
அவள் நான்யாரோ: எந்தக்காரியத்திற்கு இவ்விடம்வ
ந்தேனே: இதுகளை நீரே விவரமா யறிந்துகொள்ள
லாம் என்பிறகே வாருமென்று அப்பெண்பிள்ளை சொ
ல்லினள். இந்திரனும் அவ்வாறே அவள்பின்போய் அ
ங்கொருமலையின்மீதில் ஞாயிறுபோலே விளங்கிக்கொ
ண்டிருக்கும் ஒருமகாபுருஷனைக்கண்டான். அந்த ம
ஹாபுருஷன் அந்த அம்மனுக்கொப்பாகிய ஒரு ஸ்திரீ
யுடனே அந்தமலையின்மீதிற் சிம்மாசனத்தி லுட்கார்ந்
து பாச்சிகையாடிக்கொண்டிருக்கத் தேவேந்திரனை
வன் மூன்று லோகங்களுக்கும் இராஜனுகிய தன்னைக்
கண்டு அவன்மரியாதை செய்யவில்லையென்று கோப
ங்கொண்டு, ஆரடா நீ? நான் திரிலோகநாதனயிருக்க
என்னைக்கண்டவுடன் மரியாதைசெய்யாமல் நீ என்ன
கர்வப்பட்டிருக்கிறாயென்றுசொல்லினன். அந்த மகா
புருஷன் சிரித்து, தனதுகடைக்கண்ணுல் இந்திரனை
நோக்கினர். அவரால் நோக்கப்பட்டமாத்திரத்திலே
இந்திரன்ஸ்தம்பித்து நின்றான். அந்தப்பெரியோர்கள்
அந்தப் பாச்சிகை யாட்டம் முடிந்தவுடனே அழுகிற
பெண்ணை நோக்கி அவனை இங்கு அழைத்துவாவென்
றுசொல்ல,அவளும் அவனைத்தொட்டமாத்திரத்திலே
அவன் அங்கங்கள் தளர்ந்து கீழேவிழுந்துபணிந்தான்.

அப்படிபணிந்த அவனைப் பரமசிவனுகிய அந்த
ப்புருஷனனவர்-ஓ இந்திரனே! இனிமேலிப்படி செ
ருக்கடைந்து பேசாதே: அடாமூடா! இதோ இந்த
க்குன்றைப்புரட்டு அதில் உன்பெருமையைக் காட்டு
கிறனென்றனர். அந்தவானவர்கோனும் அந்தப்புரு
ஷன் சாக்ஷாத் ஈஸ்வரனும் அந்த அம்மன் பார்வதிதே
வியுமென்று அறிந்து தன்முறுக்கழிந்து,அவர்சொற்ப
டி அக்குன்றைப் புரட்டினன். சிவன்-அடா இந்திரா!
இந்தப்பிலத்தைப்பார் என்றுசொல்லினர். அவனும் அ
ந்தப்பிலத்தில் மகாதேஜசுடைய நான்கு இந்திரரைக்
கண்டு, ஓ! ஓ! நமக்குக்கூட இப்படிப்பட்ட கதிவந்
து நேரிட்டதோ என்று விசனப்பட்டான். பின்பு ஸ்
வாமியானவர்-அப்பா தேவர்கோனே! நீ மதத்தினு
லே என்னை அவமதித்தாய். ஆகையால் இவர்களு
டனே நீயும் இந்தக் குகையிற் பிரவேசியென்று கட்
டளையிட்டார். அதுகேட்ட இந்திரன் பயமடைந்து,
காற்றினுற் குலுக்கப்பட்ட அரசஞ்சருகுகள் போற்
குலுங்கி விடவிடத்த அங்கத்துடனே கைகளைக் கூப்
பிக்கொண்டு, ஓ ஸ்வாமி! அடியேனுக்கு இவ்வளவு
தண்டனையேபோதும் இனிச்சிக்ஷை வேண்டாம். எ
ன்று வேண்டிக்கொள்ள அதற்கு உருத்திரதேவன் -
அதுகூடாது. உன்னைப்போலே இவராலும் சில காரி
யம் நடத்தவேண்டி யிருக்கிறபடியினலே இந்தக்கு
கையிற்புகுந் திருக்கின்றனர். ஆதலால் நீயுமிவரோடு
கூடச்சேருக. இந்தப்பெண் உங்களைவர்க்கும் பாரியை
யாகிறாள். நீங்களெல்லாரும் மானிடச் சனன மடை
யுங்கள். அப்படியாகச் சென்மித்துத்தேவராலுஞ் சா
திக்கக்கூடாத சிலகாரியங்களைமுடித்து, அனேகரைச்
சம்ஹாரஞ்செய்து மிகவுங் கீர்த்திபெற்றுப் பின்னர்
வானவராலுங்கொண்டாடப்பட்டவர்களாய் மறுபடி
யுஞ் சுவர்க்கலோகஞ் சேருவீர்கள். இப்படி நடக்க
வேண்டியது அவசியமா யிருக்கிறபடியால் நம்மாலே
இவ்வாறு உரைக்கப்பட்டது என்றுசொன்னர்.

அப்போது முன்னிந்திரர்கள் ஈசனைநோக்கி, ஓ
சுவாமி! எதினுலே எங்களுக்கு இச்சிறைவிடுமோ அ
ந்தச்சனனம் நாங்களடைகிறோம். ஆனல் தருமராஜ
னும்-வாயுவும்-இந்திரனும்-அச்சுவினி தேவர்களும்-ம
னிதயோனியை அடையும்போது, நாங்களும் அவர்க
ளிற் சேருகிறோ மென்றார்கள். இந்திரனும் தேவகா

ரியத்திற்காக என்னுடைய அம்சத்தினாலே ஒரு புருஷனை இந்த ஐவரி லொருவனாகத் தருகிறேன் என்றான். மகாதேவன் அவர்களிஷ்டத்தின் படியே செலவுகொடுத்து, இவர்களுக்கு நாயகியாயிருக்கச் சப்பத்தென்னும் லக்ஷுமியைப் பூமியிற் பிறக்கும்படி செய்தார். அவள் இவர்களோடுகூடவே வாக்குக்கு மனதுக்கும் எட்டாத மகிமையையுடைய நாராயணமூர்த்தியினிடத்திற்குச் சென்று இச்செய்தியெல்லாஞ்சொல்ல, அவரும் அப்படியே அங்கீகரித்துத் தம்மிடத்திலிருக்கிற நரனென்பவரை இவர்களிலொருவராகும்படி கட்டளை யிட்டார். அவர்களெல்லாம் அப்படியே பூமியிற்பிறந்தார்கள். அந்த விஷ்ணுவானவர் தமது திருமேனியிலுள்ள வெளுத்தகேசமொன்றையும் கறுத்த கேசமொன்றையும் எடுத்துப் பூமியிற் போக்கினார். அவைதான் யதுகுலத்துதித்த வசுதேவருடைய பாரியைகளாகிய உரோகணிகர்ப்பத்தி லொன்றும், தேவகிகர்ப்பத்தி லொன்றுமாகப் பிரவேசித்துப் பலராமனாகியும் கிருஷ்ணனாகியும் அவதரித்தன. இப்படி முந்திய இந்திரரெல்லாம் இயமன்முதலான தேவர்களுடைய ஸ்வரூபத்திற்கலந்து பாண்டவர்களாகப் பிறந்தார்கள். பிந்திய இந்திரனுடைய அம்சமாகியபுருஷன் தான் அருச்சுனன். அவனிடத்திலேதான் நரனுடைய அம்சங்கலந்தது. அந்த லக்ஷுமிதான் முந்திய இந்திர சேனையிற் கலந்து அவர்களுக்குப் பாரியையாகத் திரௌபதையாயினாள்.

அப்படி லக்ஷுமியின் அம்சம் இல்லாவிட்டால் யாகத்தின்முடிவில் அக்கினிவேதியினின்றும் புறப்படுவாளா? சூரியசந்திரரோடொத்தபிரகாசமிருக்குமா? இப்படிப்பட்ட பாக்கியங் கைகூடுமோ? சற்குண மிருக்குமா? சண்பகப்பூவாசனை இவளங்கத்தினின்றும் ஒருகோசுதூரம் வீசுமா? ஓ துருபதமகாராஜனே! உன்னிடத்தி லிருக்கும் பிரீதியினாலே ஞானநேத்திரத்தைத்தருகிறேன். முன் தேகத்தோடுகூடிய இந்தப் பாண்டவர்களையும் திரௌபதையையும் பாரென்று சொல்லித் தம்முடைய தபோமகிமையினாலே அந்த ராஜாவுக்குக் கியானநேத்திரங் கொடுத்தார். அந்தப் பாஞ்சாலராஜன் வியாசரருளினாலே இவ்வைந்து பேரையும் தேவதேகங்களோடு தேவர்க்குரிய காந்தியடைந்து பிரகாசமுள்ள பொற்கிரீடங்கள் தாங்கி சூரியன்போல்விளங்கிப் பொற்றாமரை மாலைதரித்து உயர்ந்தும் பருத்துமிருக்கிற தேகமுள்ளவர்களாய்த் தேவலோகப் பட்டுடுத்திக்கொண்டு இந்திரரூபமாய் விளங்குகிறவர்களாகக் கண்டான். அந்தப் பெண்ணையும் அப்படியே இலக்ஷுமியைப்போ லிருக்கக்கண்டான். இப்படிப் பார்த்தமாத்திரத்திலே அதிகவியப்புஞ் சந்தோஷமும் ஆனந்தமுங் குடிகொண்டு, அங்கேநிற்கிற மகானுபாவரான வியாசமகா முனியினது திருவடித் தாமரைகளிலே கிரீடகாந்தி சேர்ந்துகுலவக் கீழ்விழுந்தெழுந்து கைகூப்பிநின்று, சுவாமி! தேவரீரிடத்தில் இது ஒரு அதிசயமன்று. தேவரீருடைய மகிமைக்கடலிற் சகலவிசித்திரமும் விளங்கிக்கொண்டிருக்கின்றதென்று மதித்துத் துதித்தான். அந்த மகாரிஷியும் அனுக்கிரகத்துடனே பின்னும் அந்தராஜனைப்பார்த்து, ஓ இராஜனே! இதுபோன்ற சிலசரித்திரங்களையும் சொல்லுகிறேன் கொஞ்சம் கேளும்.

வியாசர்பௌமாசுவீமுதலியபெண்களின் சரித்திரங்கூறிப் பாஞ்சாலனைத் தேற்றுதல்.

முற்காலத்தில் நிதந்து என்று ஒருமகானுபாவனாகிய இராஜரிஷியிருந்தார். அவருக்கு மகாபலசாலிகளாகிய ஐந்துகுமாரர்கள் பிறந்தார்கள். அவர்களுடைய நாமதேயங்கள் சால்வேயன்- சூரசேனன் - சுருதசேனன் - திந்துசாரன் - அதிசாரன். இவரெல்லாரும் தருமநிலையுடையவர்கள். ஆதலால் ஒருவருடனொருவர் நட்புகொண்டு அதிக்கிரமிக்காம லிருந்தார்கள். இப்படியிருக்க உசீநரதேசத்துச் சக்கிரவர்த்தியாகிய சிபி என்னுமகாராஜன் தன்மகளாகியபௌமாசுவீ என்பவளுக்குச் சுயம்வரம் ஏற்படுத்தினான். அதற்கு எல்லாதேசத் தரசர்களோடு இந்த நிதந்துராஜன் மக்களும் வந்தார்கள். அந்தச்சுயம்வர மண்டபத்திலே சிபிராஜ குமாரியானவள் இவ்வைந்து குமாரர்களையும் இச்சித்தாள். அப்படியே அந்த ஐவரும் விவாகம் செய்துகொண்டார்கள். அவளுக்கு ஐவரானும் ஐந்து மைந்தர்கள் பிறந்து விளங்கினார்கள். அதனாலே உலகத்தில் சால்வேயாளென்றும் - சூரசேனாளென்றும் - சுருதசேனாளென்றும் - திந்துசாராளென்றும் - அதிசாராளென்றும் - ஐந்து க்ஷத்திரிய வம்சஸ்தர்கள் பிறந்து, அப்பெயரையுடைய தேசங்களை ஆண்டுவருகிறார்கள். இப்படி ஒருத்தி ஐவருக்குப் பெண்சாதியாகி, மகாதருமநிலையிலிருந்து கீர்த்திபெற்றாள். ஆகையால் உன்மகளும் பாண்டவர்களை விவாகஞ்செய்து பதிவிரதா மகத்துவத்துடனே விளங்கட்டும். உன்மனதிற் சந்தேகம் வேண்டாமென்றுசொல்லி மறுபடியுஞ் சொல்லுகிறார்:

கவுதமகுலத்திற் பிறந்த ஜடிலரென்னும் ஒருவருடைய மகள் மஹாதருமநிலையுடையவள். அவள் மஹானுபாவர்களாகிய எழுரிஷிகளை விவாகம் செய்துகொண்டாள். இன்னும் தக்ஷருடையபெண் மாரிஷையென்பவள் பிரசேதர் என்கிற பெயரையுடைய சகோதரர்களாகிய பத்துரிஷிகளை விவாகம் செய்துகொண்டாள். மற்றும் ஓர் காரணங்கேள்: முன்னே தபோவனத்தில் ஒருரிஷியினுடைய மகள் உருபவதியாய் மங்கைப்பருவத்தை யடைந்திருந்தாள். அவள் தனக்குத் தகுந்தபுருஷன் வேண்டுமென்று ஐந்துமுகத்தையுடைய சதாசிவமூர்த்தியைக் குறித்துத் தவ

ஞ்செய்யும்போது அவர் பிரத்தியக்ஷமாகி உனக்கு
என்னவேண்டுமென்று கேட்க, அவள் மிகவும் யோக்
கியனுகிய புருஷனைத் தரல்வேண்டுமென்று இரந்தா
ள். அதற்கவர் உன் மனதுக்குத் தக்கவராகிய ஐந்து
புருஷர்க ளுண்டாவார்களென்றுசொன்னுர். அவள் -
சுவாமீ சங்கரனே! நான் ஒருநாயகனையாசிக்க ஐவ
ரைத் தந்தவித மென்னவென்று கேட்டாள். நீ எம
து ஐந்துமுகத்தையுங் காதலித்தமையால், அப்படி
யே ஐந்துபுருஷரைக்கொடுத்தேனென்றுசொன்னுர்.
ஓ துருபதமகாராஜனே! அந்தப்பெண் உன்மகளைப்
போல்தவஞ்செய்தபாக்கியவதி. அவளுஞ்சுவர்க்கலோ
க ஐஸ்வரிய லக்ஷுமிதான். மேலும் துரோணரைக்
கொல்ல ஒருபுத்திரனும் பாண்டவரைச்சேர ஒருபெ
ண்ணும் வேண்டுமென்று நீதானே தவஞ்செய்து இ
ப்படிபிறந்தாள். இவளைக்குறித்து இந்திரசேனையிட
த்திற் பிரவேசிக்கும்படி ஈஸ்வரன் சொல்லியகருத்தை
நீ நன்ருக யோசித்துப்பார். தெய்வசங்கல்பம் இவ
ளுக்கு ஐந்துபுருஷர் கிடைக்கவேண்டியதா யிருக்கி
றது. ஆதலாற் புத்தியை விசாலப்படுத்திப் பாரென்
று புகன்றனர். இப்படிசொல்லிய வியாசபகவானைத்
துருபதமகாராஜன் கும்பிட்டு, சுவாமி! தேவரீர் வா
ர்த்தையைக் கேட்பதற்கு முன்னமே பாண்டவர்க
ளைவர்க்கும் என்பெண்ணை விவாகஞ்செய்விக்க வேண்
டுமென்று சித்தமாயிருந்தேன்.தேவரீர்வாக்கினுலே ச
கலபந்துக்களும் யானும் அவள் தற்பூர்வஜனன முண
ர்ந்து சமூசயம் நீங்கினேம். தெய்வ சங்கல்பத்தைக்
கடக்க யார்திறம்? அவரவர் கருமத்தினுல் நேரிடுவத
ற்கு எதிருண்டோ? இதற்காக எத்தனையோ கார
ணங்கள் தேவர்களால் ஏற்படுத்தபட்டடிருக்கின்றன.
இது தருமமானுலும் அதருமமானுலும் தெய்வத்தி
ன் மூலமாய் வந்ததை மனுஷியன் செய்தே தீரவே
ண்டும். ஆதலால்-குந்திபுத்திர ரைவரும் என்மகளைப்
பாணிக்கிரகணஞ் செய்யட்டுமென்று சொல்லிப்போ
ட்டு அந்தவியாசமுனிவருடன் கூட தனதுசபாமண்
டபத்திற்கு வந்தான்.

இப்பால் அந்தச்சபையிலிருந்த குந்தி தேவி-பா
ண்டவர்கள் - துஷ்டதுயும்னன் - முதலான பேர்க
ளெல்லாம் தாங்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொ
ண்டிருந்தபேச்சை நிறுத்திப்போட்டு யாவரும் பய
பக்தியுடனேகைகட்டிநிற்க,அம்முனிவர் எல்லாரையு
ம் உட்காரும்படி நியமித்துத் தருமபுத்திரனை நோ
க்கி, குழந்தாய்! நீங்க ளைவரும் இந்த ராஜகுமா
ரியைக் கலியாணம் செய்ய வேண்டியதாய்த் தேவ
நிபந்தனை யேர்ப்பட்டது, உங்கள் மாதாவாகிய கு
ந்தி தேவியின் வாக்கும் அப்படி வந்தது. ஆகை
யால் இனித் தாமசம் வேண்டிய தில்லை. இப்போ
து சந்திரன் உரோகணி நட்சத்திரத்தோடே கூடுகி
ருன். திவ்யமான நாளிலே உங்கள் புரோகிதரை
முன்னிட்டுக்கொண்டு க்ஷத்திரிய தர்மத்தை யனுசரி
த்து சாஸ்திர விதியின்படியே நீங்களைவரும் திரௌ
பதையை விவாகம் பண்ணிக்கொள்ளுங்களென்று நிய
மித்தருளினர். அந்தத் தபோநிதி சொல்லிய வார்த்
தையைக்கேட்ட சபையிலிருந்தசகலமானபேரும் சந்
தோஷம் சந்தோஷம் என்றும், எங்கள் கண்களுக்குத்
திருவிழா நேரிட்டதென்றும், எங்கள் சிந்தைக்குக்
களிப்புண்டாச்சுதென்றும் சொல்லி ஆரவாரித்தார்
கள். அந்தக் குந்திமக்களுள் மூத்த தருமராஜனும்
வியாசமஹாமுனிக்குக் கைகூப்பி, அப்படியே சுவாமி
பாக்கியம் ஆகுகவென்று தொழுது, எங்களுக்குத்
தர்மாதர்மங்களை நியமித்தருளுங் குலகுருவானவர்
தேவரீரன்றோ? எங்களைவர்க்கும் மனதில் இப்படி
யே தோற்றி யிருந்தும், எங்கள் மாதாவின் அருள்
வாக்கும் அவ்வாறே கிடைத்தும், மனதிற் கொஞ்சம்
கவலை யிருந்தது. அக்கவலை இருள் தேவரீருடை
ய திருவாய்மொழியென்னும் பெரிய தீபத்தினுலே து
றத்தப்பட்டது. பெரியோர்களுக்குச் சம்மதியாகியது
எதுவோ அதுவே பெரியதர்மம். அவர்கட்குச் சம்மதி
யில்லாதது யாதாயினும் தர்மமன்று. இதுவன்றோ
சாஸ்திரங்களின் திரண்டகருத்து? ஆதலாற் பரசுரா
மன் தன்பிதாவாகிய பிருகுமகாமுனியின் சொற்கேட்
டுத் தாயைக்கொன்றுன். இராகவனும் விசுவாமித்திர
ன்சொல்லுறுதியினுல் தாடகையைக்கொன்றுன். இனி
ச்சந்தேகமில்லை. சுவாமிகளிட்டருளியகட்டளையின்ப
டிநிறைவேற்ற இதோகாத்திருக்கிறேனென்றுசொன்
னுர்.அதுகேட்டவியாசமகாமுனியானவர்பாஞ்சாலரா
ஜனைப்பார்த்து, இராஜனே! கலியாணத்திற்கு வேண்டி
யதெல்லாம் சீக்கிரம் ஜாக்கிரதையாய்ச் சேகரியுமெ
ன்றுசெப்ப அவனும் - சுவாமி! அடியேனுல் எவ்வள
வும் தடையில்லை. முன்னமே விவாகத்திற்காக எல்
லாம் சித்தப்படுத்தி யிருக்கிறேன். இன்னு மேதாவ
து சேகரிக்கவேண்டியதும் ஒருநிமிஷத்திலே தருவி
க்கிறேன். என்றுசொல்லித் தன்குமாரனை அழைத்து,
நம்முடைய பெண்ணுக்கு மங்களஸ்நான முதலியவை
களையும் வேதிகாலங்கிரத முதலியவைகளையும் சீக்கிர
த்தில் நடத்தவேண்டுமென்று கட்டளையிட்டு, வியாச
ரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சபையைவிட் டெ
ழுந்திருந்தான். அந்தப் பராசர் புத்திரரும் பாண்ட
வர்களுக்கு விடைகொடுத்து எழுந்தருளினுர். உட
னே சபையிலிருந்தவர்களும் எழுந்தார்கள்.

திரௌபதி மாலையிட்ட சருக்கம்

முற்றிற்று.

(REGISTERED-COPY-RIGHT)

(ஆதிபர்வம்-169-வது-பக்கம்.)

[illegible]

பத்தாவது.

திருக்கலியாணச் சருக்கம்

கண்ணன் துதி.

சேயபங்கயச் சிறுவிரலங்கையிற் றிரட்டியநறுவெண்ணெ
யாயர்மங்கைய ரிடவிட வமுதுசெய் தாடியதிருக்கூத்து
நேயமுங்குறு முறுவலும்புரிந்துபார்த் தருளியநெடுங்கண்ணு
மாயவன்றிரு வடிவமுமழகுமென் மனத்தைவிட்டகலாவே.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இவ்வாறு வேதவியாசர் தெருட்டி ஆக்யாபித்த பிரகாரம் விரைவில் நடத்தவேண்டுமென்று பாஞ்சாலராஜன் தனது குமாரனுக்கும் அமைச்சர்கட்கும் அறிவித்தமாத்திரத்தில், அவர்கள் தமது பட்டணத்திலும் இதரதேசத்திலுமுள்ள சகலமரணபந்துக்களுக்கும்-சிநேகிதர்களுக்கும் -பிராமண உத்தமர்களுக்கும்-நானாசாதிப்பெரியமனிதர்களுக்கும் - கலியாண சமாசாரந் தெரிவித்தார்கள். அவரவர்கள் விநோதமாகிய வஸ்திராபரணங்களைத் தரித்துக்கொண்டு சந்தோஷத்துடனே அந்தப் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அப்போது அநேகங் குதிரைகள் - யானைகள் - தேர்கள்- சிவிகைகள் - முதலான வாகனங்களாலும் அந்தந்த தேசங்களிருந்து வரும் வரிசைகளாலும் இலக்கமற்ற ஜனங்களாலும் பட்டணத்திற்குப் புறத்திலிருந்தும் சகலவிடங்களும் நிறைந்து,பேரோசைகளினாலே சமுத்திரம்போலவும் சகலபோக பாக்கியங்களினாலே தேவலோகம் குபேரலோகம் போலவும் விளங்கிற்று அப்பாஞ்சால நகரம். மேலும் நானாவிதமாக அலங்கரிக்கப் பட்டு மங்களவாத்தியங்கள் முழங்க விளங்கும் அந்தப்பணமானது தனது நாயகனாகிய துருபத மகாராஜனுக்கு மகளா யிருக்கப் பட்டவள் தனக்கும் மகளாகையாலே, அவளுடைய விவாகத்துக்காகத் தானே அலங்கரித்துக்கொண்டு கலியாணத்திற்கு வருகிற பேர்களைச் சந்தோஷத்துடனே எதிர்கண்டு உபசரிப்பதுபோ லிருந்தது. சகலஜனங்களும் பாண்டவர்களுக்கும் திரௌபதிக்கும் நடக்கும் திருக்கலியாணம் தங்கள் வீட்டுக் கலியாணமாகவே நினைத்து உச்சாகத்துடன் மனக்களிப் படைந்து, இலக்கினத்தை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். இப்படி பட்டணமெல்லாம் அலங்கரித்தவுட்னே மறுபடியும் இராஜகிரகத்தையும் - கலியாண மண்டபத்தையும் - விசித்திர மான வஸ்திரங்களாலும், கண்ணாடிகளாலும், பூமாலைகளாலும், அகிற் புகையினாலும், பொற்றோரணங்களாலும் புதுக்கினார்கள். அந்தந்தச் சிறப்புகளும் நாம் இந்த மகாகலியாணத்திற் கிடமாயினோமேயென்று சந்தோஷ மடைந்தது போற் பிரகாசித்தன. அம்மண்டபத்தி னடுவிலே விவாகவேதிகை செய்து பொற்றகட்டினாலலங்கரித்து,சுருக்கு-சுருவம் சங்குபாத்திரம் - தர்ப்பைகள் - பொரிகள் அக்ஷதைகள் முதலான சுபவஸ்துக்களாலே நிறைத்துப் புரோகிதர்கள் சிறந்த வேதியர் கூட்டத்தோடு நிறைந்திருந்தார்கள். பாண்டவரும் தமது புரோகிதரை அழைப்பிவித்துச் சமாவர்த்தனஞ் செய்துகொண்டு, அநேகவஸ்திரங்கள் - பசுக்கள் - சுவர்னங்கள் - முதலியவைகளை வேதியருக்கு வழங்கி மக்களஸ்நானஞ்செய்து, நவரத்தினங்க ளிழைத்த குண்டலமுதலிய ஆபரணங்களையும் - விலையுயர்ந்த பட்டுவஸ்திரங்களையும் அணிந்து, பரிமளமிகுந்த கந்தமாதிகளைப்பூசிக்கொண்டு, புஷ்பச்சரங்களும் புனைந்து மணவாளக் கோலத்துடனே விளங்கினார்கள். அப்போது திரௌபதிக்குக் கோகிலாதேவி முதலானவர்கள் வேதியரைக்கொண்டு மங்கள ஸ்நானமும் சாந்தியுஞ் செய்வித்து, அவர்கட்குப் போசனங்களாலும் தக்ஷணைகளாலும் திருப்தியுண்டாக்கி, அவர்களுடைய ஆசீர்வாதத்தினாற் சிறந்து விளங்கும் படியான அப்பெண்மணிக்குக் கேசமுதற் பாதவரைக்கும் இரத்னாபரணங்களினாலே அலங்கரித்தனர்.

அந்தக் கலியாணப் பெண்ணானவள் ஒரு பொற்கொடியானது இரத்தினமயமான பூங்கொத்துக்களினால் வளங்கெழுமியதுபோல விளங்கினாள்.அன்றியும் பௌர்னமையி னிராத்திரியானது தீபங்களினால் ஒளிர்வதுபோலு மிருந்தனள். கனகசித்திரஞ்செய்து மினுமினுக்கிட்ட வெண்பட்டுவஸ்திரத்தை இவளுக்குடுத்தியது எவ்வாறிருந்ததெனில், பொற்சிறகினையுடைய அன்னங்கள் சூழ்ந்து விளங்கிய கங்காநதியானது ஆசாரவீனர்களாற் றனக்கு நேரிட்ட அசுசியை நீக்கிக்கொள்ளும்பொருட்டு மகா பரிசுத்தையாகிய இவள் தேகத்தைக் கட்டிக்கொண்டது போல விருந்தது. கஸ்தூரிமுதலிய வாசனைத் திரவியங்கள் இவள் சரீரத்திலுண்டான சுபாவ வாசனைக்குத் தோற்றதினாலேயோ? மற்றயாதுகாரணத்தினாலேயோ? அவைகளை நைய அறைக்கப்பட்டுத் தனது திருமேனிமுழுவதும் பூசப் பிரகாசித்தாள். பரிமளமிகுந்த மெல்லியபுஷ்பங்கள் பலவும் இவளியற்கை வாசனையோடுங் கூடிய சரீரமென்மைக்குத் தோற்றன வென்று புலவர்கள் மதிக்கும்படியாக, அம்மலர்களை நாரினாலிறுகக்கட்டி அவள் முடியிலுங் கழுத்திலுஞ் சூட்டிச் சிறைசெய்தார்கள். இப்படிக்கெல்லாம் சிங்காரிக்கப்பட்ட பாஞ்சால கன்னிகையைப் புரோகித பத்தினி முதலாகிய பிராமணப்பெண்களுடனே கோகிலாதேவி முதலிய

க்ஷத்திரிய சுமங்கலிகள் கந்தபுஷ்ப தாம்பூலமுதலிய மங்கல வஸ்துக்களுள்ள பொற்பாத்திரங்களை ஏந்திக்கொண்டு அழகிய கலியாணப் பாடல்களைப் பாடி, சகல தேவஸ்திரீகளும் இலட்சுமிதேவியைச் சூழ்வதுபோற் சூழ்ந்து வாத்தியங்களும் சங்கீதங்களும் முழங்க மெள்ள மெள்ள அந்தப்புரத்தினின்றும் கலியாண மண்டபத்திற்கு அழைத்து வந்தனர். இப்படி திரௌபதியை அனேகஞ் சுமங்கலிகள் சூழ்ந்துவருந் தோற்ற மெவ்வாறிருந்ததெனில் - ஆகாயத்தின் கணிறைந்த மின்னல்களானவை இவளுடைய தேககாந்திக்குத் தாங்கள் தாழ்ந்தமையாலே விசேஷசமயத்திலே இவளிடத்திற் சேவகம் பண்ணியேனும் அனுக்கிரகம் பெறவேண்டுமென்று பூமியிலிறங்கி வந்து சஞ்சலத் தன்மையை விட்டு இவளைச் சூழ்ந்தது போலிருந்தது. அன்றியும்-அளவற்றஸ்திரீஜனங்களால் மலிந்த அந்தக் கலியாண மண்டபமானது அப்சரசுகள்விளங்கிய இந்திரன் சபைக்கு நிகராயிருந்தது.

இவ்வாறு கலியாணப்பெண்ணை விவாகச்சபைக்கு அழைத்துக்கொண்டுவந்து நிறுத்தின உடனே தவுமியர் முதலாகிய அனேகமகாமுனிவர்களும் ஸ்ரீகிருஷ்ணன் முதலிய அளவற்ற பந்து மித்திரர்களும் புடைசூழ விட்டிருக்கிற பாண்டவர்களைத் துருபதமகாராஜன் தன் சுற்றத்தாருடனேயும் - பிராமணர்களுடனேயும்-சகலவித நாதகீத பரதநாட்டிய ஸ்திரீகளுடனே அவர்களிருக்கும் இடத்திற்குப் போய்த் தகுந்த மரியாதைகள் செய்து, பின்புறத்திற் சுவஸ்திவாசனங்களும் முன்புறத்திற் பலவாத்தியங்களும் கோஷிக்க வெகு சிறப்பாயழைத்துக்கொண்டு வந்து சபையி லமர்த்தினான். இப்படி இஷ்டசனங்களாலும் பந்து சனங்களாலும் நிறைந்து தாமரைகளும் கருநெய்தல்களும் இறைக்கப்பட்டு நட்சத்திரங்களும் மற்றக்கிரகங்களும் பொருந்திய நிர்மலமாகிய ஆகாசம் போலே விளங்கும் அச்சபையில் இவர்களெல்லாஞ் சேர்ந்த மாத்திரத்திலெ, பேரி-காகளம் - சங்கு-மிருதங்கம்-முதலியவாத்தியங்கள் ஏககாலத்தில் எங்குங் கணகணவென்று முழங்கின. இந்த வாத்திய கோஷமானது திரிபுவனமுங் கேட்காநின்ற மேகத் தொனி போலிருந்தது. இவ்விதமான வாத்தியங்களும்- சங்கீதங்களும்-ஜயசப்தங்களும்-முழங்கிக்கொண்டிருக்கிற அந்தச் சபாமண்டபத்திலே வேதிகையைச்சுற்றிச் சகலகலைவல்லவரான பிராமணர்களும்,அவர்களைச்சுற்றி இரண்டுவகையான சூரியகுலசந்திரகுல அரசர்களும், அவர்களைச்சுற்றி அவ்வவ்வரசர்களின் பந்துவர்க்கங்களான பலபார்த்திபர்களும், அவர்களைச்சுற்றி மந்திரிகள்-சேனாதிபதியர் - முதலான பிரமுகாளும், அவ்வவர்கட்குத்தக்கபடி யமைத்திருக்கின்ற ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். பின்புபாண்டவர்களுக்குப் புரோகிதராகிய தவுமியமுனிவர்-ஓ துருபதமகாராஜனே! இலக்கினம் வந்து விட்டது. விவாகத்துக்குச் செலவு கொடுக்கவேண்டும். என்று கேட்க அவ்வரசன் இனி அடியேனாற் செய்யவேண்டியகாரியங்கட்கெதிர்பார்த்திருக்கின்றேனாதலால் தேவரீர் சங்கற்பாதி சற்கிரியா நியதிகளோடு விவாசகாரியத்தை விபவமாய் நிறைவேற்றுங்களென்று உத்தரவு செய்தான்.

அதுகேட்ட முனிவர் தருமபுத்திரனை அழைத்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சபைக்குப் பூசையும் சங்கல்பமும் செய்வித்து அங்குரார்ப்பணமும் பிரதிசரங்களும் நடத்தித் திரௌபதையின் பாணிக்கிரகணம் செய்வித்துப் பெரியோர்களால் ஆசிர்வாதம் சொல்லிவைத்துப் பின்பவ்வேதிகையில் அக்கினியின் உபசமாதானஞ்செய்து விதிப்படியே ஹோமம் வளர்த்தி தருமபுத்திரர் கையினால் அந்த ராஜகுமாரிக்கு மங்கல சூத்திரம் தரிப்பித்து, வேதியருடைய ஆசிர்வாதமும் வேதவாத்தியமு முழக்குவித்தார். பின்பு புரோகிதருடைய ஆக்கினையினாலே தருமபுத்திரர் அந்தக்கன்னிகையினுடைய கையைப் பிடித்துக்கொண்டு அக்கினி வேதிகையைப் பிரதக்ஷணமாக வந்து மந்திரத்துடனே அம்மிமிதித்து அருந்ததி தரிசித்து சாயாதேவியுடனே சூரியன் மேருபருவதத்தைப் பிரதக்ஷிணம் வருவதுபோல் அஷ்டமங்கலத்துடன் பிரதக்ஷணம் செய்து உட்கார்ந்துகொண்டு, அப்பெண்ணுக்குச் சுமங்கலியத்தன்மை வளரும்பொருட்டுப் புரோகிதருடைய அனுமதியின்படி மந்திரங்களையுச்சரித்துக்கொண்டு பொரிகளைக்கைகளால்வாரியிறைத்து அக்கினியில்ஹோமஞ்செய்தார். அப்பெண்ணரசியினது கைகளினின்றும் அக்கினியிற் பொரிகள்சொரியும்போது செழித்ததாமரைகளிலிருந்து முத்துக்கள் வீழ்வதுபோ லிருந்தது. இப்படிக்கு ராஜஹோமமும் சப்தபதியும் ஆனவுடனே புரோகிதர் இந்தப் பிள்ளையையும் பெண்ணையும் கோலமணையில் உட்காரவைத்து மகாசபைக்குச் சந்தனம்-புஷ்பம் முதலியவைகளாற் பூசைசெய்து மங்கல அக்ஷதைகளைப் பெரியோர்கள் கையிற் கொடுத்து வேதவாக்கியங்களாலே ஆசீர்வாதம் செய்வித்தார். சுமங்கலிகளும் மங்கல கீதங்கள் பாடிக்கொண்டு ஆலத்திமுதலானவைகளைச் சுற்றினார்கள்.

இப்படி விவாகமகோற்சவம் நடந்தவுடனே துருபதமகாராஜன் பிராமணர்களுக்கு வஸ்திரங்களும்-ஆபரணங்களும் - பசுக்களும் - பூமிகளும் - வீடுகளும் இன்னும் அனேக திரவியங்களும் - தக்ஷணையாகக் கொடுத்து, பந்துக்களையும் - ஆப்தர்களையும் - தகுந்தபடி மரியாதையுடனே விசுவாசித்தான். அவன் மனைவியானவள் இராஜஸ்திரீகளுக்கும் பிராமணஸ்திரீகளுக்கும் ஆபரணங்களும் - வஸ்திராதிகளுங்கொடுத்துப் பூசித்துச் சம்பந்திகளையும் உபசரித்தாள். இஃதானவுடனே அரசனானவன் சட்சுவை பதார்த்தங்களோடு சித்திரான்னங்கள் - திருக்கண்ணனமுது- பாயசம்- இவைமுதலானவைகளும், பேணி-இலட்டு-அதி

ரசம்-தேன்குழல் முதலிய பலகாரவர்க்கங்களும், வாழைக்கனி-மாங்கனி-பலாக்கனி முதலிய பழவர்க்கங்களு மமைத்த போஜனத்தினாற் பிராமணர்கட்குத் திருப்தி யாகும்படி சமாராதனை செய்து; பின்பு சகல சம்பந்திகள் - பந்துக்கள்-சினேகிதர்கள்- முதலானபரிவாரங்களுடனே தான்விசித்திரமாகியகதைகளைச்சொல்லிச்சிரித்துக்கொண்டு இராஜபோஜனம் செய்து எல்லோருக்கும் சகல சுகந்தமிட்டிருக்கிற சந்தனதாம்பூலங்கள் கொடுப்பித்துச் சபையில் நிறைந்த அனேகம் பெரியோர்களுடனே சம்பாஷித்துக்கொண் டிருந்தான். சூரியன் அஸ்தமித்தவுடனே புரோகிதர் வந்து பிரவேச ஹோமமும் செய்வித்தார். இப்படியே அடுத்த மறுநாட்களிலே முறையே - வீமசேனன் - அருச்சுனன் - நகுலன் - சகாதேவன் - என்கிறநால்வருக்கும் திரௌபதியை விவாகஞ்செய்வித்துத் தினந்தோறும் அனுஷ்டிக்கவேண்டிய அவுபாசனாதிகளையும் - மற்றுமுள்ள சேஷ ஹோமங்களையும் - நடத்திவைத்தார்கள். இப்படி சிரப்பாக நடந்த விவாக மகோற்சவத்துக்குவந்த ஆண்பெண் ணென்னும் இருவகைப்பாலராகிய சகலஜனங்களும் அங்கமைக்கப்பட்டிருந்த அன்னத்தினால் அமிர்தத்தையும், தானத்தினாற் கற்பத்தருக்களையும், நிர்த்தகீத வாத்தியாதிகளாற் போகங்களையும், அழகிய ரூபலாவண்ணியத்தாற் கந்தருவர் - அப்சரசுகள் - முதலானவர்களையும், வித்துவத்தினால் தேவகுரு முதலானவர்களையும், ஆசிர்மசிரேஷ்டத்தினால் நாரதர் முதலிய ரிஷிகளையும் வித்தியாசமின்றி ஒத்திருப்பதைக்கண்டு; சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்கள் இவைகளின்மிக்க மகிமை யாண்டுளதென்று கூறி வியந்து ஆரவாரித்தார்கள்.

யாகசேனமஹாராஜன் ஸ்ரீதனவரிசை கொடுத்தல்.

அந்தயாகசேன மஹாராஜன் தன்மருகமாருக்கு வரிசைகொடுக்க யத்தனித்தவனாய் மிகவும் உயர்ந்த நான்கு குதிரைகள் கட்டிச் சிம்மலலாட மமைத்துப் பொன்மாலைகள் தொங்கவிட்டுச் சித்திரங்கள் ஏற்படுத்தி அழகாய்ச்செய்து மேருபருவதத்திற் கொப்பாயிராநின்ற நூறுதேர்களும், பத்திரம் - மந்திரம் - மிருகம் - என்று சொல்லப்பட்ட சாதியிற் பிறந்தவைகளாய் ஏழிடங்களில் மதப்பெருக்கோடுகூடியனவாய்த் தந்தங்களில் நவரத்தினங்களிழைத்த கிம்புரிகளோடு சுவர்ன கவசம் வீக்கிய கும்பமத்தகங்களை வகித்து அனேக இரத்ன ஆபரணங்களாலும் - முத்துமாலைகளாலும் - பட்டுகளாலும் - அம்பாரிகளாலும் அலங்கரிக்கப்பட்டு இருபுறத்திலும் மணிகள்சத்திக்க அசைந்து நடந்துவரும் பருவதங்கள் போன்ற நூறுயானைகளும், காம்போசம்- ஆரட்டம் - பாக்கிலிகம் - வனாயுசம் - சிந்து முதலாகிய தேசங்களிற் பிறந்தவைகளாய்த் தேவமணி - கண்டாபரணம் - முதலாகிய நற்சுழிகளோடு காற்றுங் கற்க முயலும்படியான அதிவேகத்தை வாய்ந்து பொன்னாலும் முத்துக்களாலும் நவரத்தினங்களாலும் பவழங்களினாலும் செய்த சேணிகளைப் போர்த்து விளங்கும் ஆயிரங் குதிரைகளும், நல்லரூபமும் பருவமு முடையவர்கள் தரிக்கச் சிறந்த அளவற்ற வஸ்திரங்களும், சிரோரத்னாதிகளாற்செய்த அனேக பூஷணங்களும், பலதொழில்களைக்கற்றுச் சாதுரியமும் ஜாக்கிரதையுமுடைய யோக்கியர்களாகிய அனேக வேலைக்காரர்களும், அவ்வாறே பழகிய அளவற்ற அடிமைப்பெண்களும், முத்துத் தோரணங்கட்டிப் பொற்சரிகைச் சின்னங்களுள்ள பட்டு மேற்கட்டியோடு பவளங்களாலுந்தந்தங்களாலும் பொன் வெள்ளிகளாலுஞ் செய்த அநேகங்கட்டில்களும், உயர்ந்த மணிகளிழைத்து மிகவும் மிருதுவாகிய பரிசுத்தமுள்ள தோற்களாற் பண்ணப்பட்ட பெரிய ஆசனங்களும், பொன்வெள்ளியினால் வார்ப்பித்த படிக்கங்களும், தந்தம் இரத்தினம் இவைகளாலியற்றிய பலவிதபாத்திரங்களும், ஆச்சரியப்படத்தக்க நிர்மாணமுடைய பெட்டிபேழைகளும், பொன்மாலைகளும், பொற்சங்கிலிகளும், கொம்புக்குப் பூண்களிட்டு அலங்கரிக்கப்பட் டிருக்கின்ற அளவற்ற பெரும்பசுக்களும், பொற்கட்டுகளோடு பொன்னுறைகளுமுடைய போர்முகக்கத்திகளும், பொற்கேடயங்களும், கதாயுதம் வில் - தூணீரம் - முதலாகிய கருவிகளும், இந்திரதனுவைப்போற் பிரகாசிக்கும் நாநாவித ஆபரணங்களும், பொற்சரிகைகளாற்கரைகட்டிய மேன்மையும பளபளப்புமுள்ள சகலவித வஸ்திரங்களுமாகிய அனேகவஸ்துக்களைப் பாண்டவர்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அளித்து ரொக்கப் பொக்கிஷப் பணங்களும் வெவ்வேறு கொடுத்தான்.

அன்றியும் - கலியாணத்துக்கு வந்த சகலமான பேர்களுக்கும் அவரவர்களுக்குத் தகுந்தபடி வஸ்திராபரணாதிகளை வெகுமதிசெய்து அனுப்புவித்தான். அவ்வரசன் மகளாகிய திரௌபதியானவள் விவாகமானபின்பு தன்மாமியாருக்குத் தீர்க்க தெண்டனிட்டாள். அந்தக்குந்தியானவள் மிகுந்த சந்தோஷத்துடனே மருமகளைப்பார்த்துக் கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம்பெருக, ஓ என்னருமை மருமகளே ! ஓ நிகரில்லாப் பேரழகையுடைய பெண்பாவாய்! ஓ குருவமிசத்தைப் பரிபாலிக்கவந்த கொடிவிளக்கே! தேவேந்திரனிடத்தில் இந்திராணிபோலவும், அக்கினிபகவானிடத்தில் சுவாஹாதேவிபோலவும், சந்திரனிடத்தில் உரோகிணி போலவும், நளமகாராஜனிடத்தில் தமயந்தி போலவும், குபேரனிடத்தில் பத்திராதேவி போலவும், வசிஷ்டமஹாமுனி யிடத்தில் அருந்துதிபோலவும். ஸ்ரீமந் நாராயணனிடத்தில் லக்ஷுமியைப்போலவும், நீ உன்கணவர்க ளிடத்திற் சிறந்த கற்புடனே அன்புமுடையவளாகி நற்கு

ணங்களையும் வீரத்தன்மையுமுடைய புத்திரரைப் பெறக்கடவாய். மகாபாக்கியங்களையும் போகங்களையும் அடையக்கடவாய். பத்தினியென்னுஞ் சொற்குத் தகுந்தபடி அனேகயாகசம்பந்த மனுபவிக்கக்கடவாய். அதிதிகளையும் - பெரியோர்களையும் - யோகிகளையும்- ஆசாரியர்களையும்- சிறுவர்களையும்- பர்த்தாக்களையும்- அந்தந்தச் சமயங்களில் தகுந்தபடி உபசாரஞ் செய்து, புண்ணிய காரியங்களாலேயே காலங்கழிக்கக்கடவாய். குருஜாங்கலம் முதலாகிய தேசங்களிலேயும், அந்தந்தப் பட்டணங்களிலேயும் தருமநிலை தவறாத அரசர்களுக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைக்கக்கடவாய். உன்புருஷர்களாலே ஜயிக்கப்பட்ட சகல சம்பத்து நிறைந்த பூமிகளை அசுவமேத மென்னும் பெரியயாகத்திலே யோக்கியராகிய பிராமணர்களுக்குத் தானங்கொடுத்துக்களிக்கக்கடவாய். தீர்க்கசுமங்கலியாயும் தீர்க்காயுசாயும் உன்கணவர்களுடனேகூடிச் சுகமாக வாழக்கடவாய் என்று ஆசிர்வாதம் செய்தாள்.

இவ்வாறே தன்னைப்பணிந்த மக்களுக்கும் மங்களாசனஞ் சொன்னாள். அப்பொழுது கண்ணன் பாண்டவர்களுக்கு வேண்டிய வரிசைகள் அனுப்பிவித்தார். அந்தவரிசைகளை யெல்லாம் தருமபுத்திரர்கண்ணோட்டமிட்டு வந்தவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி நடத்தி மரியாதையுடனே அங்கீகரித்தார். இஃதன்றி அளவற்ற இராஜவர்க்கத்தாரால் மொய்யெழுதிவைத்த தனங்களையெல்லாம் மொத்தமாக்கி, அந்த நகரத்திற்றானே சுவர்க்கலோக போகத்திலும் மேற்பட்டபோகங்களை அனுபவித்துக் கொண்டு, தாயாகிய குந்திதேவியின் திருவுளப்பாங்கின்படி நடந்து, பாஞ்சாலியோடு மற்ற சகோதரர் நால்வரையும் பாராட்டிக்கொண்டு ஒருவருஷகாலம்வரைக்கும் மாமன் வீட்டிற்றானே சகலசம்பிரமத்துடன் யாவருங்கொண்டாடச் சந்தோஷித்திருந்தார். இவ்வாறு அங்கிருந்தகாலத்தில் அந்தச்சோமக புத்திரனாகிய துருபதராஜனும் அவனுடைய பத்தினியும் தமக்கு இந்தப் பாண்டவர்கள் மாப்பிள்ளைகளாய் வாய்த்தமையினாலே தேவர்களாலும் அசுரர்களாலும் கிஞ்சித்தேனும் பயமில்லாதவர்களாகி, இவர்களைத் தினந்தோறும் புதியவர்போலவே சகலவைபவ சாம்பிராச்சியங்களினாலே பூசித்துக்கொண்டு வந்தார்கள். அவனுடைய புத்திரர் முதலானபேரும் ஒரு நிமிஷகாலமும் பாண்டவர்களைவிட்டுப் பிரியாமற் பெருமையோடு அனுவிர்த்தி செய்து வந்தார்கள். சகல நீதிகட்குந் தாயகமான நாயகனை அடைந்த திரௌபதியை அந்தப்புரத்து ஸ்திரீகளெல்லாம் மிகவுங்கொண்டாடிப் பெருமைபாராட்டி வந்தார்கள். அப்பாஞ்சாலராஜ புத்திரியும் தனக்குக்கிடைத்த புருஷபாக்கியத்தினாலே அதிக காந்தியுடையவளாகி யிருந்தாள். அக்குந்தி குமாரர்களும் பாரியையுடனே கூடி ஒரு வல்லிக் கொடியுடன் சேர்ந்த ஐந்து கற்பகத்தருக்கள்போல் விளங்கினார்கள்.

பின்பு சகலராஜாக்களும் சாரணர்களாலே திரௌபதியைப் பாண்டவர்கள் விவாகம் செய்தார்களென்றும், வில்லைவளைத்து லக்ஷயத்தை அடித்தவன் அருச்சுனனென்றும், சல்லியனோடு யுத்தம் செய்தவன் வீமசேனனென்றும், சும்மாயிருந்த ராஜாக்களைக்கூட்டிக்கொண்டு யுத்தத்திற்குவந்த துரியோதனன் - கர்னன்-சல்லியன் - முதலானவர்களை எதிர்த்து முறியவடித்து ஓட்டியது இவ்வைவரே யென்றும் நன்றாகத் தெரிந்துகொண்டு; சிலர் சந்தோஷத்தையும், சிலர் துக்கத்தையும், சிலர் ஆச்சரியத்தையும், சிலர் நிந்தையையும், சிலர் விந்தையையும் அடைந்தார்கள். இன்னுஞ் சிலர் இதென்ன கருமம் ? தருமமே பெரிது. இந்தப்பாண்டவர்கள் நல்லொழுக்கமும் நற்குணமும் உடையவர்களாதலாலே யன்றோ அரக்குமாளிகையினின்றும் தப்பினார்கள். துரியோதனனுடைய எண்ணம் வீணாயிற்று. குந்தி மிகவும் பாக்கியமுடையவள். ஆனதினாலல்லவா அக்கால் அந்தப்பிள்ளைகளுடனே அக்கினிக்கு இரையாகாமல் தப்பி எங்கேயோ எப்படியோ இவ்வளவுகாலம் பிழைத்துச் சிறந்த மருமகளையும் வகித்து விளங்குகின்றாள். வீஷ்மாசாரியார் அந்தக்குலத்துக்குப் பெரியவராகிச் சகல தருமங்களும் அறிந்திருந்தும்,இப்படிப்பட்டமகாகொடியசெய்கைகளைச்செய்தபேரன்மார்களைவிசுவாசித்திருக்கின்றாரே இவருடைய அறிவையும் வயதையும் என்னசொல்ல வேணும்? இவரையல்லாமல் ஓர் குருடன் எல்லாக்காரியங்கட்கு நாயகமாய்க் கண்களைச் சிமிட்டிக்கொண்டு கோட்டான்போலிருக்கிறானே: அவனாவது தன்சகோதரனுடைய மைந்தரிடத்தில் இக்கொடியசெய்கை செய்யக்குறித்த துரியோதனனாதியரைக் கண்டிக்கலாகாதா ? அவனும் அனுகூல சத்திராதியாய்ச் சம்மதித்திருக்கிறானே: இவர்களெல்லாம் ஏங்கியழும்படியாகவெளிப்பட்டு, யாவராலுமறுத்தற்கரிய மச்சேந்திரத்தையறுத்து, எதிர்த்துவந்த இராஜர்களையெல்லாம் இமைப்பொழுதில் வாட்டி, அந்தரலோக ஸ்திரீகளும் அடிபணியத்தக்க ரூபலாவண்ணியத்தையும் கற்புடைமையையும் பொருந்திய பெண்ணரசியை விவாகமும் செய்துகொண்டார்களே: இனிச் சரத்துள்ளவர்களா யிருந்தால் அவரெல்லாம் இப்பொழுது நாக்கைப்பிடுங்கிக்கொண்டு சாகவேண்டாமோ? மறுபடி பாண்டவர்கள் முகத்திலும் நம்முடைய முகத்திலும் எப்படி விழிப்பார்கள் அப்பாதகரென்று பேசிக்கொண்டார்கள்.

துரியோதனன் முதலாயினோர் ஆலோசனை.

திரிதராஷ்டிரன் பிள்ளைகளும் இந்தச் செய்தியைக் களங்கமறத் தெரிந்து கொண்ட மாத்திரத்திலே துக்காக்கினியில் வீழ்ந்து தவித்துப் பதைபதைத்துத் துடிதுடித்துப் பெருமூச்சுவிட்டுப் பெதறி ஒன்றுந்தோன்றாமல் நின்று, பின்புகர்னன்-சகுனி-முத

லானவர்க ளுடனே ஆலோசிக்க வாரம்பித்தார்கள்.
அந்தக்கூட்டத்தில் துரியோதனன் - ஓ எனது மித்தி
ரர்களே! கேளுங்கள்: பாலியமுதற் பாண்டவர்கள்
நம்மை அலக்ஷியஞ்செய்துவந்தபடியினுலேயும், இரா
ச்சிய பட்டத்தை ஆள முயன்றபடியினுலேயும், நாம்
அவர்களை வேரோடுங் கெல்லவேண்டுமென்று வெகு
சமயங்களில் யத்தனப்பட்டும் உபயோக மில்லாமற்
போயிற்று. பின்பு அவர்களைவாரணுவதத்திற்கு அனு
ப்பி அரக்குமாளிகையில் அக்கினிக்கு இரையாகும்படி
செய்தோம். அதினின்றும் அவர்கள் எப்படியோ தப்பி
வந்து விட்டார்கள். நாமோ பாண்டவர்கள் பரிஷ்கார
மாய் மடிந்தார்களென்று சித்தமாக நினைத்து அந்த
அரக்குமாளிகைத்தியில் அகப்பட்ட ஆறுதேகங்களு
டைய எலும்புகளை அவர்களுடைய எலும்பென்றும்
அந்தச் சாம்பலை அவர்களுடைய சாம்பலென்றும் எடு
த்துவந்து கங்கையிற் போட்டுவிட்டு, பாண்டவர்கள்
இறந்து போனுர்களென்று சகலமானபேருக்கும் தெரி
வித்ததுமன்றிச் சிரார்த்தங்களையுஞ் செய்து சத்துரு
பயமில்லாமல் ராச்சியத்தை ஆண்டுவந்தோம். இப்
போது இதென்ன ஆச்சரியம்? எப்படி தப்புவித்துக்
கொண்டார்கள்? புரோசனன் எவ்விதம் புத்திகெட்
டான்? எவ்விதம் இவர்களை விட்டான்? எப்படி எரிந்
துபட்டான்? ஐயோ! அந்தப் பாண்டவர்கள் லோ
காந்தரத்தி லிருந்து மறுபடியும் பிழைத்து வந்தார்க
ளோ? அப்படி நடக்குமா? இவர்கள் பாண்டவர்கள்
தானே? அல்லவோ? இவர்கள் அவர்களே என்பதற்கு
எவ்வளவேனுஞ் சந்தேக மில்லையே: பாண்டவர்கள்
பிழைத்தது மன்றி இவ்வளவு ராஜாக்களையும் அவமா
னம் பண்ணிப் பெண்களுக் கெல்லாம் சிரோமணி
போன்ற பாஞ்சாலன் மகளைக் கலியாணம் செய்துக்
கொண்டது நமது கண்ணி லுண்டாகிய புண்ணிற்
கோலிட்டதுபோ லாச்சுதே: நாம் பிழைத்த பிழைப்
புப் போச்சுதே: நம்முடைய வீரத்தன்மை என்னத்
திற்கு? இனி அவர்கள் மாமனுடைய பலத்தினுலே
மிகுந்த சேனைகளோடு வந்து நம்மைச்செயித்து, நம்
முடைய கண்களுக்கெதிரே சிறப்பாக அரசாட்சிசெய்
வார்களே: சும்மா யிருந்தாலும் அபகீர்த்தி. ஒருவ
ரோடு சொன்னுலும் அபகீர்த்தி. ஐ ஐயோ!! இனி
அவர்களுக்கு நம்மிடத்தில் மிகுந்த பகையுண்டாயிற்
றே: என்ன செய்யலாம்? வினைப்பயனை வெல்லப்ப
டாது. தெய்வபலமே பலமன்றி மனுஷியபலம் ஒன்
றுக்கு முதவாது. ஆதலால் நாம் எவ்விதத்தில் க்ஷே
மம் பெறலாமோ அதை நீங்கள் யோசித்துச் சொல்ல
வேண்டு மென்றுன்.

அதுகேட்ட சகுனியானவன் சொல்லுகிறுன்:
ஓ மகாராஜனே! உலகத்திலே ஒருவனுக்குப் பலசத்து
ருக்க ளிருப்பார்கள். அவர்களிற் சிலரை இளைக்கச்செ
ய்யவேண்டும். சிலரை உபத்திரவப் படுத்தவேண்டும்.
சிலரைக் கொல்லவேண்டும். சிலரைவெல்லவேண்டும்.
அப்படிக்கு நீதிசாஸ்திர மிருக்கிறது. அந்தப் பாண்
டவரோ நமக்குக் கொல்லவேண்டிய சத்துருக்கள்.
அன்றியும் அப்பாண்டவர்கள் எல்லாராஜாக்களுக்கும்
அவமான முண்டாக்கி யிருக்கிறுர்கள். ஆதலால் இப்
போது மற்றைராஜர்களையுங்கூட்டிக்கொண்டு நாமும்
அவர்களும் ஒரு விதமான ஏற்பாடுசெய்து, இப்போ
து அவர்க ளடைந்திருக்கிற ஜய நிமித்தமாகப் போர்
புரியவேண்டியது அகத்தியமென்று எனக்குத் தோற்
றுகிறது. இப்படி எல்லாரும் ஒருமித்து ஒரு ஏற்பாடு
செய்துகொள்ளாமற் போனுல், அப்பால் பச்சாத்தா
பப் படவேண்டியதாகவரும். இந்தக்காலமும் இந்தத்
தேசமுந்தான் பாண்டவர்களை நாம் வேருடன் களைவ
தற்கு யோக்கிய மாகியவைகள். ஏனென்றுல் அவர்
கள் துர்ப்பலமடைந்து தனித்திருக்கிறுர்கள். நீங்கள்
இப்போது வெல்லாமற்போனுல் உலகத்தில் எல்லா
ராலேயும் பரிஹாசம் பண்ணப் படுவீர்கள். பாண்ட
வர்கள் எந்தப் பிடிப்பினுலே போகத்தை அடைந்து
இனி ராச்சியத்தைச் சாதிக்க நினைத்திருக்கிறுர்களோ
தெரியவில்லை. அந்தப் பாஞ்சாலராஜன் அற்பமாகிய
சேனையும் பலமு முடையவனுதலாலே அவனை நான்
லக்ஷியமாக நினைக்கவில்லை. விருஷ்ணி வமிசத்தாரிர
ண்டுபே ரிருக்கிறுர்கள். இராமனென்றும் - கிருஷ்ண
னென்றும் சொல்லுகின்ற அவர்களுடைய உதவி
இவர்களுக்கு விசேஷந்தான். அவர்கள் இச்செய்தி
கேட்டு இவர்களுக்கு உபபலம்பண்ணுகிறதற்கு முன்
னுதாய்ச் சகல சேனைகளோடும் நாம்போய்ச் சூழ்ந்து
கொள்ள வேண்டும். இப்படிக் கல்லாமல் யதுகுலத்
தோரும் மற்றுஞ் சிலர்ராஜர்களும் துருபதனோடு ஒன்
றுகிப் பாண்டவர்களுக்குச் சகாயம் பண்ணினுல், அப்
போது கொஞ்சமேனும் ஜயிக்கக்கூடாதவராவார்கள்.
முன்னமே பாம்பின்வாயிற் புகுந்து தப்பியதுபோல
அரக்குமாளிகையி னின்றுந் தப்பியதே நமக்குக்கு
றைவு. இப்போதும் நாம் யுத்தத்திற்குப் போனவிட
த்திலே தப்பிப் போவார்களேயாகில், அப்பாலிப் பூமி
யில் நாமிருக்கவேண்டிய காரணமில்லை. அன்றியும்
அந்த யாதவர்களும் இவர்களுடன் கூடிப் பட்டணம்
வந்து சேர்ந்தால், சண்டைசெய்யும் இரண்டு கடாக்
கள் நடுவில் நரிநின்று நசுங்கியதுபோல் நேரிடுவது
மன்றி மேலாகிய கொடிய துன்பத்தையும் தரும்.
ஆதலால் பலதேவனுடைய மகா வீரியமுள்ள சேனை
கள் நம்முடைய சேனைகளாகிய குருவிகள் மீதில் டே
கைபோல் விழாமலிருப்பதற்கு முன்னமே நாம் எதிர்
த்து, அந்தப் பாஞ்சால நகரத்தை அழிக்க ஆரம்பிப்
போம். இதுவே இக்காலத்திற் கேற்ற உசிதமென்ன
எனக்குத் தோற்றுகிறதென்று சொல்லி முடித்தான்.

இவ்வாறு யுக்தியில்லாமற் பேசிய சகுனியினு
டைய பேச்சைக்கேட்ட சோமதத்தனுடைய குமார
னுகிய பூரிச்சிரவஸனவன் சமயோச்சிதமாகச் சொல்

லத்தொடங்கினான். கேட்டீர்களோ சபையார்களே! புத்தியுள்ள புருஷனானவன் தனதுராஜன்-மந்திரி-மித்திரன் - பொக்கிசம் - தேசம் - துர்க்கம்-சேனை-என்கிற ஏழுபிரகிருதிகளையும், பிறனுடைய ஏழுபிரகிருதிகளையும் நன்றாக அறியவேண்டும். காலதேசங்களைக் கண்டறியவேண்டும். அன்றியும் சந்தி-யுத்தம்-சேனையுடன் செல்கை-சும்மாயிருத்தல்- விரோதஞ்செய்தல் பற்றுதல் - என்னும் ஆறு குணங்களையும் நன்றாக அறிந்து, எதைச் செய்யலாமோ அதைச் செய்யவேண்டும். அல்லாமலும் விருத்தி- சமானமா யிருத்தல்- குறைவுபட் டிருத்தல் - என்னும் மூன்று சித்திகள் இருக்கு மிடத்தையும் மித்திரபலத்தையும் பராக்கிரமத்தையும் நன்றாகச் சோதித்தறிந்து, பின்பு தன்னிற்றானே சற்று நிதானித்து, சித்தசமுன்னதி - அருத்தலோபம் - காமம் - வைடம்மியம் -அசனப்பிரியம்- கோபம் - அனுட்டணம் - என்று செல்லப்படுகின்ற அகங்காரம்-உலோபம் - விரகம்-பகை-போசனப் பிரியம் - காய்தல் - சோம்பல்-என்னும் இந்த ஏழுவகை விசனங்களுள், எவ்வித விசனத்திற் பகைவர் அழுந்தி இருக்கின்றார்களோ அதையுங் கண்டு எதிர்க்கவேண்டும். அப்படிக் கில்லாமற் சாகசமாய் எதிர்த்தால் தொந்தரவு கிடைக்குமென்பதிற் சந்தேகமில்லை. இப்பொழுது நான் நினைக்கிறேன் பாண்டவர்கள் மித்திர குலத்தோடும், பராக்கிரம பலத்தோடும், சேனாபலத்தோடுங் கூடியவர்கள். அவர்களுடைய நற்செய்கைகளாலே மந்திரிமுதலானபேர்களும், இராச்சியத்துக்கு உரியோர்களும், அவர்களிடத்தில் அன்புசெய்து வருகிறார்கள். அவர்களுக்குள் அர்ச்சுனன் மிகவும் சிறந்தவன். அவன்சொல் அயோக்கியமாயும், சம்பந்த மற்றதாயும், பொய்யாயும், எப்போதும் இருக்கமாட்டாது. மேலும் கேட்போர் செவிக்கு இனிப்பாகவே யிருக்கும். அவன் தனது அழகினாலும், சாதுரியத்தினாலும் செய்கையினாலும், எல்லோருடைய கண்களுக்கும்-மனதுக்கும்-இனிப்பாக விருக்கிறான். ஜனங்களெல்லாம் அவர்களைத் தங்கள் பிள்ளைகளைப்போல நினைத்திருக்கிறதுமன்றித் தெய்வமும் அவர்களைக் காப்பதிற் கண் விழித்துக்கொண் டிருக்கிறது. அந்த அர்ச்சுனனும் வீமன் முதலாயினோரும் ரூபத்தினால் உயர்ந்திருப்பதற்குச் சரியாகப் பராக்கிரமத்திலுஞ் சிறந்திருக் கின்றார்கள். இப்படி சகல லக்ஷணங்களு முடையவர்களாகிய அவர்களைச் செயிக்க நாம் யத்தினப்படுவது தகாததா யிருக்கிறது. ஏனென்றால் — இப்படிப்பட்ட சவுரியமுடையவர்கள் நமக்குள்ளே யாரிருக்கிறார்கள்? அவர்களிடத்திற் பிரபுசக்தியும் - மந்திரசக்தியும் - தந்திரசக்தியும்-உச்சாக சக்தியும் -நிறைந்திருக்கின்றன. இவை யெல்லாம் அர்ச்சுனனிடத்தில் விசேஷமாக்களும். தருமபுத்திரரோ மூலமந்திர பலங்களைக் காலமறிந்து விடத்தகுந்த சாதுரியமுள்ளவர். அல்லாமலும் சாம தான பேதமென்னு மிம்மூன்று உபாயங்களினாலேயே பகைவரைவெல்லுஞ் சாமார்த்தியமுள்ளவர். அவரிடத்தி லிருக்கிற சாமர்த்தியம் மிகவும் அதிசயப்பட்டது. எப்படியென்றால் - அபலாருடைய பொருள்களைக் கொண்டே தம்முடைய மித்திரரையும்-சேனைகளையும் -மூலஸ்தானத்தையும் - உறுதிப்படுத்திக்கொண்டு சத்துருக்களைச் செயிக்கவல்லவர். இதுவு மல்லாமல் அப்பாண்டவர்களை நாம் ஜயிக்கக் கூடாதென்பதற்குவேறுகாரணமொன்றிருக்கின்றது. அதாவது - யதுகுலத்து அண்ணன்றம்பிக ளிருவரும் இவர்களுடைய காரியத்திற்கு வீரியராயிருக்கிறார்கள். இப்படி எல்லாவழியிலும் உயர்ந்திருப்பதைப் பற்றி நாம் அவர்களுடனே ஒரு சந்திபண்ணிக்கொண்டு வந்தவழியைப் பார்த்துப் போவதுதான் எனக்கு நல்லதென்று தோற்றுகிறது. நான் சொல்லுகிறவார்த்தை உங்களுக்கு இஷ்டமா யிருந்தால் இன்னுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்.

அந்தத் துருபதன் பட்டணத்தைச் சூழ்ந்துகொண்டு இடிப்போம் - அடிப்போம்-கொல்லுவோம்- வெல்லுவோம் - என்று நினைக்கிறீர்களே, அதுவும் கூடாததா யிருக்கின்றது. ஏனென்றால் - அந்தராஜாவானவன் முன்னமே நாம் ஜயிக்கக்கூடாதவனா யிருந்தான். இப்போதோ பாண்டவர்களுடனே கூடிப் பெருமையடைந் திருக்கிறான். அவனுடைய பிள்ளைகளாகிய துஷ்டத் துயும்னன் சிகண்டி முதலாயினோர்கள் மிகவும் சூரர்கள். அஸ்திரவித்தையிற் சக்தியானுசாரம் பயிற்சியுள்ளவர்கள். நல்ல புத்தியும் யுக்தியும் உடையவர்கள். இந்த ராச்சியத்துக்குள்ள ராஜநீதிகளை நன்றாக அறிந்து, தங்கள் பிரபுத்துவத்தில் மாறாத அபிமானமுள்ள மந்திரி முதலாகிய அங்கங்களிருக்கின்றவர்கள். அந்தந்தக் காலங்களில் அரசன் செய்வதான சன்மானங்களாலும், அவனது அரசாட்சியின் சீர்மையினாலும், அவன் தேசத்திலும் பட்டணத்திலுமுள்ள ஜனங்களெல்லாம் மிகுந்த களிப்புடனே இராஜகாரியங்களில் ஐக்கியப்பட் டிருக்கிறார்கள். பலத்தமதில்களாலும், அகழிகளாலும், கோட்டை வாசல்களாலும், புறச்சுவர்களினாலும், அதைச்சுற்றிலும் போட்டிருக்கிற மேட்டுகளினாலும், பிளக்கக்கூடாத கதவுகளினாலும், ஏமாறாத காவலாளிகளாலும், அந்த நகரமானது சதாகாலமும் காக்கப்பட்டு வருகின்றது. அதில் அயலவர் திகைத்துப்போகும்படியான அநேக இயந்திரங்களும், ஆயுதச்சாலைகளும், விஸ்தாரமாகிய வைத்திய சாலைகளும் நிறைந்திருக்கின்றன. நெடுங்காலத்திற்கு உதவத்தக்க தானியமுதலிய உணவுகளும், மற்றும் வேண்டிய உமி - கெந்தகம் - நீர் - நெருப்பு - வெடியுப்பு-முதலிய வஸ்துக்களும் கோட்டைச் சுவர்க்கூட்டிற் பலமாக ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. பெரிய பீரங்கிகளும் அநேகமிருக்கின்றன. நைஷ்டிகன் - தாரவன் - விப்பிரன் - மானுஷன் -என்கிற பிராகார சில்பிகளாலே மிகவுங் கொண்டாடப்பட்ட நிர்மாணமுள்ளது. வெகுசேனைகள் நிறைந்துள்

ள வயிற்றினையுடையது. இப்படிக்கெல்லா மிருக்கிறப
டியினுலே அந்த நகரம் எவ்வளவேனும் பேதிக்கக்
கூடாத நிலையுள்ளதா யிருக்கிறது. ஆதலால் யுத்தத்
தின் பிரயத்தினத்தைவிட்டுச் சந்திக்காகச் சிந்திக்க
வேண்டும். மேலும் நாம் யுத்தத்திற்காகச் சித்தமாகி
வந்தவுடனே இச்செய்தி துவாரகைக்கு அனுப்பப்
படும். உடனே யமதூதருக்கொப்பாகிய சேனுசனங்
களைக் கூட்டிக்கொண்டு கண்ணன் ஓடிவருவர். ஆத
லால் இது எவ்வளவேனும் எதிர்க்குங்காலமாகத் தோ
ற்றவில்லை. நேசமாகப்போவதே நமக்கும் மற்றையர
சர்கட்கும் நன்மைக்குக்காரணமாயிருக்கின்றது. இது
தான் என்றனக்குத் தோற்றியகருத்து. அவசியம் இ
ப்படியே நீங்கள்செய்யக் கோருகிறேன். அப்பால் உ
ங்கள் மனதென்றுசொல்லி முடித்தான் பூரிச்சிரவன்.

இப்படிசொல்லிய சோமதத்த புத்திரன் புத்தி
யைக் கேட்ட கர்னன் சொல்லத் தொடங்கினுன். ஐ
யா பூரிச்சிரவனே ! நீர் சொல்லிய வார்த்தை நீதியுட
னே முரணுமலும், பிரயோசனமுள்ளதாகவும், கேட்
போருக்கு இதமாகவு மிருக்கின்றது. அதற்கு நான்
குற்றம் பேசவில்லை. எனக்குத் தோற்றுகிறபடியே
நானும் ஒருவார்த்தை சொல்லுகிறேன் கேட்கவே
ண்டும். எந்தக்காரியத்திலும் எல்லோரும் மனதொரு
மித்துச் செய்தாலே அதுகூடி வரும். இல்லாவிட்டால்
கேடுவரும். ஆனபடியினுலே நாமெல்லாம் வெவ்வேறு
கருத்துகொண் டிருப்பது நியாயமல்ல. இந்தக்காலம்
எதிர்ப்பதற்கு நல்ல தருணமா யிருக்கிறது. சும்மா
யிருப்பதினுற்பயனென்றுமில்லை. நீங்களெல்லோரும்
பாகுபல மிகுந்தவர்கள். ஆயுதபலமுள்ளவர்கள். புத்
திபல முள்ளவர்கள். உற்சாகமுடையவர்கள். ஆத
லாற் சந்திசெய்வது நன்றுயிராது. நாம் திடீலென்று
போய்ச் சூழ்ந்துகொள்ள வேண்டும். யாதவர்களுக்கு
இச்செய்திதெரிந்து அவர்களிவ்விடம்வந்து சேருகிற
தற்கு முன்னமே உல்லோலகல்லோலமாக்கிப் போட
வேண்டும். இப்போது நாம் பண்ணுகிறமுயற்சி இன்
னதென்று ஒருவருக்குந்தெரியாமல் இரகசியமா யிரு
க்கவேண்டும். காமசுகத்தி லழுந்தியவனும், சிறுவனுயி
ருப்பவனும், மூப்பினனுயிருப்பவனும், யுத்தஞ்செய்ய
மனமில்லாத பயங்காளியும், நம்முடைய படையிற்
சேரவேண்டாம். நமது சேனையிலிருக்கிற பேர்களுக்
கு யானைகளை யழித்தவனுக்குப் பதினுயிரம் பொன் -
குதிரைகளைக் கொன்றவனுக்கு ஐயாயிரம் பொன்-கா
லாள்களைக் களைந்தவனுக்கு ஆயிரம்பொன் கொடுக்
கிறோமென்று பறைசாற்றித் தெரிவிக்கவேண்டியது.
ஒருவனும் கட்டளையில்லாமற் போகக்கூடாது. இப்
படிக்கெல்லாம் நம்முடைய சேனைகளைச் சித்தப்படு
த்திக்கொண்டு ஏககாலத்திலே நாற்புறமும் மதிலை
யிடிக்கும்படி செய்யவேண்டும். மேடுகளைப் பள்ளங்க
ளாகவும் பள்ளங்களை மேடாகவுமாக்க வேண்டும். மர
ங்கள் முதலியவைகளை வெட்டி அகழியிற்போட்டு
அதைத் தூர்க்கவேண்டும். அந்தப்பட்டணத்தி லிரு
ப்போரெல்லாம் கலங்கித் திகைத்துநிற்கச்செய்து உட்
புகுந்து, கொஞ்சமும்யோசிக்காமல் வெட்டிச்சுட்டுக்
கோட்டைபுகுந்து கொள்ளையிடவேண்டும். இப்படிசெ
ய்தால் நம்முடையபேருக்குத் தகுந்தகீர்த்திகிடைக்கு
ம். அதற்கு இதுவேசமயம். அவர்களெல்லாம் இப்போ
து சுகத்தினுலேமதத்து அசாக்கிரதையா யிருக்கிருர்
கள். ஆகையால் என்வார்த்தையை மனதில்யோசித்து
க்கொண்டு சீக்கிரம்புறப்படுங்கள்போவோம். நமக்குச்
செயமுண்டாகும். அனுகூலமாகக் காற்றும் வீசுகின்ற
து. மனம் தெளிவாயிருக்கிறது. வாகனங்களும் ஆயுத
ங்களும் மகாகளையோடுகிரித்துக்கொண்டிருக்கின்றன.
என்று சொன்னுன் கர்னமகாராஜன்.

கௌரவர்க்கும் பாஞ்சாலர்க்கும் யுத்தம்.

இந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலே
திரிதராஷ்டிரன் புத்திரருக்கு வேண்டியபேரெல்
லாம் பூமி அதிரும்படி உச்சாகத்தோடே புறப்பட்
டார்கள். அவர்கள் ஐம்புலன்களிலும் சற்றேனும் ஆ
சையில்லாமல் தைரியத்தையே முன்னிட்டுக்கொண்டு
யுத்தத்திற்குச் சித்தமானுர்கள். அப்போது பெரிய
கோஷத்தோடு துரியோதனன் சேனையாகிய சமுத்தி
ரம்புறப்பட்டது. அது கர்னனென்னுங் கீழ்க்காற்றினு
ற் பொங்கிக் கரைபுரண்டு சைந்தவனென்னும் பெரி
ய அலையோடுகூடித் துச்சாதனனென்னும் திமிங்கி
ல மீனுள்ளதாய்த் துரியோதனனென்னும் பயங்கர
மாகிய முதலையையுடைத்தாய் விளங்கிக்கொண்டு, அந்
த நகரியை மிக வேகத்தோடு அப்பிரதட்சணமாகக்
கவ்விக்கொண்டது. பின்பு ஆயுதங்களாகிய அக்கினிச்
சுவாலைகளினுலே விளங்கிக்கொண்டிருக்கிற அந்தப்ப
டை தமதுபட்டணத்தைச்சுற்றிக்கொண்டு அதம்பண்
ணுகிறசெய்தி தெரிந்த மாத்திரத்திலே பாஞ்சாலரா
ஜன் பிள்ளைகளாகிய துஷ்டத்துயும்னன்-சிகண்டி - சு
மித்திரன் - பிரியதரிசனன் - சித்திரகேது - சுகேது -
துவசசேனன் - என்பவர்கள் வெகு கோபாவேசம
டைந்து, மேகம்போற் கர்ச்சனைசெய்துகொண்டு தே
ர்களின்மீ தாரோகணித்து மகாவீரியமுள்ள படைக
ளோடும் -ஆயுதங்களோடும் - ஆரவாரத்தினுலேயே ச
த்துருக்களெல்லாம் நடுங்கும்படி நகரியினின்றும் பு
றப்பட்டார்கள். துருபத மகாராஜனும் வெள்ளைக்கு
திரைகள் கட்டி வெள்ளைக்கொடி போட்டிருக்கிற தே
ரின்மேலேறி, வெண்சாமரம் வெள்ளைக்குடை முத
லியவைகளால் விளங்கினவனுய்ச் சிங்கம்போல் வீர
வாதஞ் செய்துகொண்டு பிள்ளைகள் நடுவில் நின்று
ன். அது நட்சத்திரங்களின் நடுவிற் சந்திரன் இருந்
ததுபோலிருந்தது. இவ்விதமாகப் பாஞ்சாலசேனை
வரக்கண்ட கவுரவசேனையானது வெள்ளம்போற் புர
ண்டு இந்தச்சேனையின்மேல்வந்துவிழுந்தது. அப்போ
தவ்விரண்டு சைனியங்கட்கும் கொடிய யுத்தம் நே

ரிட்டது. அது திரண்ட இரண்டாற்று வெள்ளங்களொன்றோடொன்று மோதிக்கொண்டது போற் காணப்பட்டது. அல்லாமலும் மூலைக்கு மூலை சிதறிய யானை - குதிரை - தேர் - முதலானதுகளினாலே அந்தச்சைனியம் நாற்புறத்திலும் நட்சத்திரங்கள் சிதறியிருக்கிற வானம்போல் விளங்கிற்று.

இவ்வாறு பேரியாதிகளின்முழக்கத்துடனே பெரியசண்டை நேரிட்டதைக் கேட்ட பாண்டவர்கள் கவச குண்டலாதிகளை அணிந்து கொண்டு முகங்களிற் கோபாக்கினி சொலிக்க ஆயுதங்களோடு புறப்பட்டு வந்தார்கள். அப்போது பலவித ஆயுதங்களைக் கையில் தரித்துக்கொண்டு இரதங்களேறிவருகின்றபாண்டவர்களைப் பார்த்த மாத்திரத்திலே சகலராஜாக்களுக்கும் மனதிலும் தேகத்திலும் நடுக்கமுண்டாயிற்று. பாஞ்சாலசைனியமோ வென்றால் பூரணசந்திரனைக் கண்ட கடல்போல் மிளிர்ந்து, வெகுசவுரியமாய்த் துரியோதனன் சைனியத்தைச் சின்னபின்னங்களாகத் துரத்தி யடித்தது. இப்படி யொரு முகூர்த்தகாலம் இரண்டுபடைகளுக்கும் சங்குலயுத்தம் நடந்தது. அதன் பின்பு இரட்டை இரட்டையாகப் படைத்தலைவர்கட்கும் மகாகோரமான சண்டையுண்டாயிற்று. அந்தச் சண்டையிற் சைந்தவனும் - கர்னனும் - அர்ச்சுனன் பார்த்துக் கொண்டே இருக்கச் சே சுமித்திர னென்கிறவனையும் பிரியதரிசன னென்கிறவனையும் நிமிஷத்தி லடித்துத் தள்ளினார்கள். இதைப்பார்த்து அர்ச்சுனன் பொறுக்காமல் ஜயத்திரதனுடைய குமாரனையும் கர்னனுடைய குமாரனையும் எதிர்த்து வளைத்துக்கொண்டு, அவர்கள் தகப்பன்மாருடைய முன்னிலையிலேயே மரணமடைந்து இரதத்தினின்றுங் கீழேவிழச் செய்தான். மகாசூரராகிய இரண்டு ராஜகுமாரரையும் அர்ச்சுனன்கொன்றதைப்பார்த்த அவர்களின் தந்தையராகிய சைந்தவனும் கர்னனும் கோபாக்கினியாலே முகமெல்லாம் படபடத்துநிற்கச் சிங்கங்கள்போலெழும்பி ஆரவாரஞ்செய்துகொண்டு, கிஞ்சித்தும் பயப்படாமல் இந்திரகுமாரனுடைய தேரைநோக்கி ஓடிவந்தார்கள். இவர்களிலொருவருக்கொருவர் ஒத்தாசையாக இருந்துகொண்டு அர்ச்சுனனோடு சண்டைசெய்யத் தொடங்கினார்கள், அந்த யுத்தமானது விருத்திராசுரன் - சம்பராசுரன்-இவ்விருவரோடும் தேவேந்திரனுக்கு நேரிட்ட யுத்தத்திற்கு ஒப்பாக நினைக்கப்பட்டது.

இப்படி அவ்விருவரும் ஏமாறாமல் எதிர்த்து அர்ச்சுனனுடைய தேரிற் கட்டியிருந்த குதிரைகளில் மூன்றைக் கொன்று விட்டார்கள். பின்பு அர்ச்சுனனுடைய குதிரைகள் கீழேவிழவே கவுரவருக்கெல்லாம் சந்தோஷத்தினாலே கிலகிலவென்று ஒருகோஷமுண்டாயிற்று. சமீபத்திலிருந்த வீமசேனனானவன் அர்ச்சுனனுக்கு நேரிட்ட குறைவையும் கவுரவர்களுடைய கோலாகலத்தையும் பார்த்துச் சகிக்காமல், ஒருநிமிஷத்தில் வேறுகுதிரைகளைக் கொண்டு வந்து அந்த ரதத்திற்கட்டினான். இப்படி அர்ச்சுனனுடைய குதிரைகள் விழுந்தன வென்று தாங்களொருவரோடொருவர் சொல்லிக் கொள்ளுஞ் சொல் முடிவதற்கு முன்னமே முன்போலோடிவருகிற அந்த ரதத்தைப் பார்த்த துரியோதினன்- சகுனி - பூரிச்சிரவன் - இந்தமூவரும்மேற்சொன்ன சயிந்தவனோடும் கர்னனோடும் கலந்து அந்தரதத்தை வளைத்துக்கொண்டார்கள். இந்த ஐந்து மகாவீரருடனே அந்தத் தேவேந்திரபுத்திரனானவன் ஒருயோகீஸ்வரன் ஐம்பொறிகளுடனே எதிர்த்துப் போர்செய்கிறதுபோல் தைரியமாய் எதிர்த்துப் போர்செய்தான். அந்த யுத்தத்தில் ஐந்துமகாவீரர் ஏககாலத்தில் தம்பியைச் சுற்றிக்கொண்டிருப்பதைப்பார்த்த வீமசேனனானவன் கொஞ்சமும் பயப்படாமல் ஐந்து மதயானைகளைக்கண்ட சிங்கம்போல் உச்சாகத்தை அடைந்து, தானுந் தனதுதேரைச் செலுத்திக்கொண்டு அவர்கள் நடுவிற் பிரவேசித்தான். அப்போது அவ்வைந்து சூரரும் தனித்தனியே ஒவ்வொருபாணம்போட்டு ஐந்து பாணங்களினாலே வீமசேனனுடைய குதிரைகள் நான்கையும் சாரதியையும் யமலோகஞ்செரும்படி செய்தார்கள். அந்த வாயுவின்மகன் உடனே குதிரைகளுஞ் சாரதியுமில்லாத தேரினின்றுங் கீழேகுதித்துக் கையிற் கத்தியை எடுத்துக்கொண்டு நானாவிதமாகிய யுத்தவழிகளை யெல்லாம் நடத்தினான். இவ்வாறு நடத்திக்கொண்டே சர்ப்பங்களைக்கண்ட கருடன்போலக் குதிரைகளின் கழுத்துகளிலேயும், தேர்களின் உருளைகளிலேயும், நுகத்தடிகளிலேயும், இருசுகளிலேயும் ஏறியேறிச் சத்துருக்களைக் கண்டங்கண்டமாக வெட்டினான்.

இப்படி வெட்டிக்கொண் டிருக்கிற வீமனுடைய கவசத்தையும் ஆயுதத்தையும் கர்னன் துண்டித்துத்தள்ளினான். அதைச்சற்றும் லட்சியம்பண்ணாமல் வீராவேசத்துடனே மான்கூட்டத்திற் புலிபுகுந்தது போற் கவுரவசேனையிற் புகுந்து நாசம் செய்துகொண்டிருக்கிற வீமனைப்பார்த்த அர்ச்சுனன், ஓ! ஓ! கவசமு மில்லாமல் தேருமில்லாமல் இவர்சேனைகளினடுவில் அகப்பட்டுக் கொண்டானென்று திருஷ்டத்துயும்னன் - சிகண்டி - இரட்டைப்பிள்ளைகள் - இவர்கள் நால்வரையும் கூட அழைத்துக் கொண்டு அதிசிக்கிரத்தில் ஓடிவந்தான். பின்பு பத்து மகாரதர்களுக்குங் கடினமான யுத்தநடக்க வாரம்பித்தது. அந்தச் சண்டையில் அவர்கள் விடுத்த பல அம்புகளினாலே அந்த ரதங்களின் கொடிகள் குதிரைகள் முதலாகிய யாவும் மறைந்துவிட்டன. தூளிகளெல்லாங் கிளம்பி அந்த இரண்டு சேனைகளையும் இருள்போற் கம்மிக் கொண்டன. இந்தப் படிக்கு நெடுநேரம் சரியான யுத்தம் நடந்துகொண் டிருக்கும்போது கர்னன் அர்ச்சுனனை மிகவும் பராக்கிரமித்து எதிர்த்துத் தன்னுடைய வில்லைவளைத்து நாணி ஏறிட்டுப்

பாணத்தைத் தொடுத்துக் காதளவுமிழுத்து மேகம் மழை பொழிவதுபோற் பொழிந்து அர்ச்சுனனுடைய தேர் ஸ்தம்பித்துப் போகும்படி செய்தான். இப்படி செய்ததினலே அர்ச்சுனனவன் தனது தேர்க்குதிரைகள் நின்றவிடத்தில் நின்றும் ஓரடிகூட எடுத்து வைக்கமாட்டாமல் தத்தளிக்கக் கண்டு, மிகவும் கோபத்தினலே கண்களெல்லாம் சிவந்து சுழலிடப் பிரளயகாலத்து யமன்போல் அதி உக்கிரரூபங்கொண்டு, இக்கர்னனைக் கொல்லவேண்டு மென்று வச்சிராயுதத்திற்குங் காலதண்டத்திற்குமொப்பாகிய மூன்று அம்புகளைச் சந்தானஞ்செய்து அவன்மீதிற் பிரயொகித்தான். அந்த மூன்றம்புகளும் தைத்த மாத்திரத்திலே அச்சூரிய புத்திரன் நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடித்து மூர்ச்சித்துத் தனதுதேரி லிருக்கிற கொடிக்கம்பத்தைக் கைகளாலெ பிடித்துக்கொண்டு ஒன்றுந்தோன்றுதவனய் விழுந்தான்.

இப்படி விழவே அவனுடைய சாரதியானவன் தனது எஜமானனைக்காக்கவேண்டுமென்று விரைவில் தேரைப் பின்னுக்குச் செலுத்தினன். அது கண்ட பாஞ்சால வர்க்கத்தோரெல்லாம் சிரித்து அட்டகாசஞ் செய்தார்கள். அப்போது துரியோதனனை நாணமும் பயமும் பிடித்துக் கொண்டதினலே அவன் பிரமை பிடித்தவன்போல் வெருள வெருள விழித்துக் கொண்டு, பகற்காலத்து விளக்குப்போலிருக்கிற முகத்துடனே நின்றன். அதுகண்ட சேனைகளெல்லாம் அந்த வீமார்ச்சுனர்களுடைய சவுரியத்திற்கு நிற்கமாட்டாமையினலேயும், தங்கள் ராஜனும் ஓய்ந்து போனபடியினலேயும், கதியொன்று மில்லாமல் திக்குகள்தோறும் ஓடவாரம்பித்தன. இப்படி பெருங்காற்றி லகப்பட்ட சருகுகள்போற் சிதறிநிற்கிற கவுரவசைனியங்களை யெல்லாம் பார்த்த சகுனியானவன் ஓடி, எல்லாரையும் சமாதானப்படுத்தி மறுபடியும் கும்பலாகக் கூட்டினன்: அப்பால் துரியோதனன் தன் தம்பிமார்கள் முதலானவர்களுடனே மறுபடியும் சேனையைக் கூட்டிக்கொண்டு யுத்தத்துக்கு ஆரம்பஞ் செய்தான். இப்படிச் சன்னைகப்பட்டுவருகிற துரியோதனனை வீமன்கண்டு அரக்குமாளிகையை நினைத்துக் கொண்டு, காலாக்கினி ருத்திரன்போல் துரத்தி வந்தான். வரும்போது அந்த யுத்தபூமிக்குச் சமீபத்திலே அனேகங்கிளைகளோடு கூடிய பெரியமரமொன்றைக்கண்டு அதைவேரோடே பிடுங்கிக்கொண்டு, வச்சிராயுதத்தைக்கையிலேந்திக்கொண்டு அசுரரைக்குறித்து இந்திரன் வருவதுபோற் பகைவர்பேரிற் பாய்ந்தான். இப்படியாகப்பாய்ந்து ஓர்பெருங்காற்று வானத்தி லிருக்கும் மேகங்களைச் சிதற அடிப்பதுபோல் துரியோதனன் சேனையைச் சிதற அடிக்கவே, முன்னமே அர்ச்சுனனுடைய பாணங்களினலே துளைக்கப்பட்ட தேகங்களையுடைய சகல ராஜாக்களும் நின்று எதிர்க்க மாட்டாமல் தங்கள் தங்கள் கூடாரங்களிற் போய்ச் சேர்ந்தார்கள். பாஞ்சாலரும் சந்தோஷத்தோடே பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள்.

இப்படி தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நெரிட்டதுபோல் நேரிட்ட யுத்தத்திலே பாண்டவர்கள் வெற்றிபெறவே யாவரும் திரௌபதியையும் பாஞ்சாலனையும் நல்ல பாக்கியமுள்ளவர்க ளென்று சொல்லினர்கள். எதிர்த்த அரசர்களிலும் அனேகர் பாண்டவர்களிடத்தில் வைரம்விட்டு மகாயோக்கியர்களென்று கொண்டாடினர்கள். ஆனல் சகுனி - சைந்தவன்-கர்னன் - துரியோதனன்-துச்சாசனன் -முதலாகிய சிலருக்குமாத்திரம் மிகவும் துக்கமாயிருந்தது. ஆகிலும் அவர்களும் மனதிலேயே வெந்துகொண் டிருந்தார்களே யல்லது வாயினலே ஒன்றுஞ் சொல்லவில்லை. பின்பு சகலராஜாக்களும் தங்கள் தங்கள் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். திரிதராஷ்டிரன் புத்திரரும் அத்தினகரியை அடைந்தார்கள். பாண்டவர்களும் ஜயலட்சுமியை விவாகம் செய்துகொண்டு, ஜயபேரிகள் சிறப்போடு முழங்க வந்திகளெல்லாம் கட்டியங் கூறிப்புகழ்த் திருஷ்டத்துய்மனன் முதலான பந்துக்களெல்லாம் புடைசூழ்ந்துவரச் சேனதிபதிகளும் மந்திரிகளும் ஜய ஜயவென்று சொல்லி மரியாதை கொண்டாடப் படைவீரரெல்லாம் குதிரைகளையும் யானைகளையும் விளையாட்டினல் தாராகதிமுதலிய நடைகளுடனே திருப்பி நடத்தி ஆயுதங்களைப் பள பளவென்று சுழற்றினவர்களாய்ச் சூழ்ந்து நடக்க இவ்விதமான வைபவத்துடனே திவ்விய ரதங்களின்மீதிலேறிக்கொண்டு, சத்திர சாமராதிகளுடனே நீர் தெளித்துத் தோரணங்கட்டிக் கொடிகளேற்றி மலர்கள் தூவிப் பொரிகளிறைத்து அலங்கரிக்கப்பட்ட வீதிகளையுடைய பாஞ்சால நகரத்திலே பிரவேசித்துப் பட்டணத்தி லிருக்கும் பருவப்பெண்டீர்களெல்லாம் தங்கள் கடைக்கண் பார்வையாகிய கருநெய்தல் மாலைகளை எறியச் சிறுவர்முதற் கிழவர்வரையிற் கும்பற் கும்பலாகக்கூடி வேடிக்கைபார்க்க அரண்மனையிற்சென்று, இராஜோபசாரங்களுடனே திரௌபதியின் கண்களாகிய குவளைமலர்களுக்குப் பூரணசந்திரன்போல் விளங்கிக்கொண்டு நவரத்தினமயமாய்ச் சொலிக்கின்ற சபையிற்சென்று மணியாசனங்களில்வீற்றிருந்தார்கள்.

இந்தக் காரியங்களெல்லாம் நடப்பதற்கு முன்னமேதானே துவாரகாபுரிக்குத் தூதரைப் பாண்டவரனுப்பி யிருந்தார்கள். அத்தூதர் கிருஷ்ணன் பலராமன் இவர்களிடத்திற்குப்போய் பாண்டவர்கள் க்ஷேமமாக இருக்கிறதாகவும் எதிரிகள் எதிர்க்கப்போகிறதாகவும் சொல்லவே, அவர்கள் அந்தநிமிஷத்திற் சதுரங்கமாகிய சைனியத்தைக் கூட்டிக்கொண்டு பாஞ்சாலநகரத்துக்கு வந்துவிட்டார்கள். இங்கவர்கள் வரும்போது யுத்தம் ஓய்ந்திருந்ததைக்கண்டு சந்தோஷத்துடனே பாண்டவர்களைக்கட்டிக்கொண்டு குந்தியையும் உபசரித்து திரௌபதிக்கு உயர்ந்த ஆபரணங்களையும்

வஸ்திரங்களையும் கொடுத்துக் கொண்டாடினார்கள். துருபதமகாராஜனும் துவாரகா நகரியின் மன்னவர்களாகிய இவர்களைத் தேவோபசாரங்களாலே பூசித்தான். இப்படிபூசிக்கப்பட்டுப் பாண்டவர்களுடன்கூட யாதவர்களும் சந்தோஷமாய் வாசம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். துரியோதனன் அசுவத்தாமாவுடனேயும் கர்னனுடனேயும் பாண்டவர்க்குப் பெருமைவந்தினால் தனக்குண்டாகிய துக்கத்தைப்பேசிக்கொண்டு துர்ச்சாசனனை நோக்கி, சீ ! சீ ! என்ன நம்முடைய பராக்கிரமம்? நம்முடைய ஆண்மையைச் சுடவேண்டும். நாம்செய்த பிரயத்தினத்திற் பாண்டவர் மறுபடி தப்பினார்களே: புரோசனன் மிகவும் மூடனாகையால் வீணாகத் தன்னுயிரை மாத்திரம் விட்டான். இந்த அர்ச்சுனன் பார்ப்பார வேடத்தோடு இராம விருப்பானேயாகில், அந்தப் பாஞ்சாலன் மகளை அடையவொட்டாமற் செய்யலாம். நம்முடையவர்களித்தனைபேரில் ஒருவனும் இது தெரிந்துகொள்ள மாட்டாமற் போனானே: இந்தப் பாண்டவர்கள் பிட்சைக்காரப் பார்ப்பாராக விருந்தகாலத்திலே எளிதில் இவர்களை நாசஞ்செய்து போடலாம். தெரியாமற் போயிற்று. மனிதனுடைய முயற்சி ஒன்றுக்கும் உதவாது. தெய்வபலமே பலமன்றி வேறில்லை. என்று சொல்லித் தலையைத் தொங்கப் போட்டுப் பாண்டவர்களுக்கு வந்த சிறப்பை நினைத்து நினைத்துப் பெருமூச்செறிந்துகொண்டு, துஷ்டத்துயுட்னன் - சிகண்டி - முதலானவர்களுடைய சவுரிய மாதி தயிரியங்களை நினைத்துத் திகிலடைந்து ஒன்றுந்தோற்றாமல், நூதனமாக மாங்கிலிய மிழந்தவள்போல் ஒருவருக்கும் தெரியாமல் வீட்டுக்குள்ளே வந்து சேர்ந்தான். விதுரனானவன் பாண்டவர்கள் திரௌபதியை விவாகஞ்செய்து வெகு சம்பத்தையும் ஜயத்தையும் அடைந்து பெருமை பெற்றதையும் துரியோதனாதிகள் அபஜயத்தை அடைந்து உறங்கி யிருப்பதையுமறிந்து மனதிலே மிகுந்த சந்தோஷமடைந்து திரிதராஷ்டிரனிடத்திற்குவந்து, ஐயா ! குருவமிசத்துப் பிள்ளைகள் தெய்வச்செயலால் திரௌபதியை அடைந்து வெற்றிபெற்றார்கள் என்று சொன்னான்.

இதுகேட்ட அந்தகனும் நல்லபாக்கியம் நல்லபாக்கியமென்று கொண்டாடி, மிகுந்த களிப்புடனே அந்தத்திரௌபதி நமதுதுரியோதனனுக்குப் பாரியை ஆயினாளென்று நினைத்து, விதுரா! நம்முடைய பொக்கிசத்திலிருக்கிற உயர்ந்த ஆபரணங்களைத் திரௌபதிக்குக் கொடுத்து அலங்காரஞ்செய்வித்து அவளுடனே துரியோதனனை என்னிடத்திற்குச் சீக்கிரம் அழைத்துக்கொண்டு வாவென்றான். அதுகேட்ட விதுரன் கொஞ்சஞ்சிரித்துக்கொண்டு, துரியோதனனுக்கு அல்ல பாண்டவர்களுக்குப் பாஞ்சால கன்னிகை பெண்டாட்டி ஆயினாள் என்றுசொன்னான். அதுகேட்டு மனதிலே பொறாமையிருந்தாலும் வெளிக்கு விதுரனைப் பார்த்து, தம்பீ! மிகவும் சந்தோஷமாயிற்று. எனக்கு என்பிள்ளைகளெப்படியோ அப்படியே பாண்டுபுத்திரரும். ஆதலால் நல்லகாரியம். நம்முடைய குலத்தார் இவ்வளவுகீர்த்தியைப்பெற்றது நமக்குப்பெருமை அன்றோ? தெய்வானுகூலத்தாற் பாண்டவர்கள் நெருப்பில் நின்றுந் தப்பிப்பிழைத்துச் சகலராஜாக்களுக்குமுன்னே யந்திரத்தை அடித்து இராஜகன்னிகையை அடைந்து பாஞ்சாலனுடைய பலம்பெற்று விளங்குகிறார்கள். மிகுந்த பராக்கிரமங்களை யுடைய துருபதமகாராஜனை அடைந்ததால் க்ஷேமத்தையடைதற்குத் தடையில்லை. என்று பேசிக்கொண்டிருக்கிற திரிதராஷ்டிரனை விதுரன்பார்த்து, மகாராஜனே! உமக்கு இப்படிப்பட்ட புத்தி பல்லாண்டு பல்லாண்டாய் ஸ்திரமாக இருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன் என்று சொல்லிவிட்டுத் தனது மாளிகைக்குச்சென்று மகாகளிப்புட னிருந்தான்.

திருக்கலியாணச் சருக்கம் - முற்றிற்று.

பதினோராவது,

திருமுடிபுனைந்த சருக்கம்.

கண்ணன்துதி.

அராவணை துறந்துபோந்தன் றசோதைகண் களிப்பநீடு
தராதலம் விளங்கவெண்ணெய்த் தாழிசூழ் தாநின்றாடிக்
குராமணங் கமழுங்கூந்தற் கோவியர் குரவைகொண்ட
புராதனன் றனையே யேத்தும் புனிதர்தாள் போற்றிசெய்வாம்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே ! இந்த வார்த்தைகளை அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த துரியோதனனும் கர்னனும் அக்குருட்டு ராஜாவினிடத்திற்குவந்து நமஸ்காரஞ் செய்து தங்களை அறிவித்து நின்றார்கள். பின்பு அவனுத்தரவினால் ஆசனத்திலுட்கார்ந்து கொண்டு தகப்பனாரைப் பார்த்துத் துரியோதனன் சொல்லுகிறான்: ஐயா ! விதுரனிருக்கும்போது இந்தவார்த்தை சொல்ல அஞ்சினேன். இப்போது ஏகாந்தமாக இருக்கிறபடியாற் சொல்லுகிறேன். என்னகாரியம் செய்கிறீர்? சத்துருக்களுடைய

மேன்மையைத் தனதுமேன்மையாகவெண்ணிப் பேசுகிறீரோ: விதுரனுக்கெதிரே பாண்டவர்களைத் துதிக்கிறீரோ: இது என்ன அநியாயம்? நீர் செய்யவேண்டிய காரியத்துக்கு விரோதமானகாரியம் செய்வது நியாயமோ? அவர்களுக்குச் சகலவிதத்திலும் பலங்குறையச்செய்தாலன்றோ நாம்பிழைக்கலாம். ஆகையால் நாம் தற்காலத்தில் ஒரு உபாயம் சிந்திக்கவேண்டும். அப்படி ஏதாகிலும் ஒருகாரியம் செய்யாமற்போனால், அவர்கள் நம்மை நம்முடைய வர்க்கத்துடனே விழுங்கிப்போடுவார்கள் என்றுசொன்னான். இந்தச் சொல்லைக்கேட்ட திரிதராஷ்டிரன் - ஓ குழந்தைகளே! உங்களுக்கிருக்கிற அபிப்பிராயம் போலேதான் எனக்கும் அபிப்பிராய மிருக்கிறது. இரவும்பகலும் இந்தச் சிந்தைதான் என்மனதிற் குடிகொண்டிருக்கிறது. ஆகிலும் விதுரனுக்கு முன்பாக என்கருத்தை வெளிப்படுத்துவது நியாயமாக இருக்கவில்லை. ஆதலால் அவனுடைய கருத்துக்குத் தக்கபடி அவனுக்கு எதிரே பேசிக்கொண் டிருந்தேன். அப்படி பேசிக்கொண்டு அவர்களுடைய குணங்களையெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண் டிருக்கின்ற படியினாலேதான் என்னை உங்களிடத்திற் பட்சபாதமில்லாமற் சமமாகவிருக்கிறவனாக நினைக்கிறான். வேறுவிதமாக அவன் என்னைத் தெரிந்துகொண்டால் வீணாகத் தூஷணைசெய்வான். ஆகையால் தான் இப்படி நானிருக்கிறேன். இப்போது நடக்கவேண்டியதற்கு நீ உபாயமென்ன சிந்தித்திருக்கிறாய்? கர்னனென்ன சிந்தித்திருக்கிறான்? நீங்கள் அதுகளைச்சொல்லுங்கள் என்றுசொல்லவே துரியோதனன் சொல்லத் தொடங்கினான்.

திரிதராஷ்டிரனோடு துரியோதனனுங்கர்னனும் துராலோசனைசெய்தல்.

ஐயா! கேளும்: இரகசியமாகத் தந்திரங்களிலே சமர்த்தராகியும் நமக்கு இதமான காரியஞ்செய்யத் தகுந்தவர்களுமாகிய பிராமணர்களுக்கு வேண்டிய திரவியங்களைக்கொடுத்துச் சந்தோஷம் வரச்செய்து, அவர்களைக்கொண்டு குந்தியின்மக்களையும் மாத்திரியின்மக்களையும் வேறுபடுத்துவோம். அல்லது துருபதமகாராஜனையு மவனுடைய பிள்ளைகளையும் பொருளைக்கொண்டு பேதிக்கச்செய்து ஒருவரோடொருவர் சேரவொட்டாமலும் பாண்டவர்களுக்கு மவர்களுக்கும் ஒருவருக்கொருவர் வேற்றுமை வரும்படியாகவும் செய்வோம். அல்லதந்த ராஜாவினுடைய மந்திரிகளை வேறுபடுத்தி நம்முடையபக்ஷத்திற் சேர்த்துக்கொள்ளுவோம். அல்ல தம்மந்திரிகள் உதிஷ்டிரனிடத்திற் பக்ஷமில்லாம லிருக்கும்படி செய்விப்போம். இல்லாவிட்டால் மெள்ள அந்தமந்திரிகளைக் கொண்டாவது இன்னும் யாரைக்கொண்டாவது பாண்டவர்களுக்கு இந்த அஸ்தினாநகரில் வாசஞ்செய்வதினால் தொந்தரவும் அங்கேயே வாசஞ்செய்வதில் சவுக்கியமும் இருப்பதாகத் தெரிவித்து, அவர்களை இங்கேவர மனதில்லாமல் இருக்கிறவர்களாகச் செய்வோம். அல்லது அதிக சாதுரியமுடைய புத்திமான்களைக் கொண்டு பாண்டவர்களை ஒருத்தருக்கொருத்தர் ஆகவொட்டாமற் செய்வோம். அல்லது திரௌபதிக்குப் புருஷர்கள் ஐந்து பேராகையால், அவளைச்சிலரிடத்தில் இஷ்டமுடையவளாகவும் சிலரிடத்தில் வெறுப்புள்ளவளாகவும் செய்வோம். அந்த ஐவரையாவது அவளிடத்திற் பேதப்பட்டு நிற்கும்படி செய்வோம். இவைகளி லொன்றுமாகாமற்போனாலும் வீமசேனனை யாவது இரகசியமாகக் கொலைசெய்ய வேண்டியது. அவனல்லவோ அவர்களுக்குள் மகாபலசாலி. அவனுடைய பலத்தாலே யல்லவோ பாண்டவர்கள் நம்மைமதிக்காம லிருக்கிறார்கள். ஆபத்துகளில் அவனாலே அவர்கள் சகலவிதத்திலும் தப்பித்துக் கொள்ளுகிறார்கள்.

மேலும் அர்ச்சுனன் சம்பாதித்த பெண்ணை மற்றவரும் விவாகஞ்செய்து கொண்டதினாலே, அவனுக்கும் அவர்களுக்குமாவது விரோதம் வரச்செய்வோம். முன்னம் யாவற்றினும் துணிவுள்ள வீமனையே கொன்றுவிட்டால் மற்றவர்கள் இறகொடிந்த பக்ஷிபோற் பலமற்று ராச்சியச்சிந்தையே இல்லாமற்போவார்கள். இந்த வீமசேனன் பக்கபலமா யிருந்தால் தான் அர்ச்சுனனைச் செயிக்கக்கூடாது. இல்லாவிட்டால் அர்ச்சுனனை எளிதிற் செயித்துப் போடலாம். இப்படி ஒருவரோ டொருவரைப் பேதித்தால் ஐயிக்கியமில்லாமற் கலங்கி, ஒருவரையொருவர் நாசஞ்செய்ய நினைப்பார்கள். அப்போது நாம் அந்தப்பக்ஷத்திற்சேர்ந்து சண்டப்பிரசண்டமாய் அடித்து யாவரையும் வசப்படுத்திக்கொள்ளலாம், ஸ்திரீநிமித்தமாகக் கலகமுண்டாக்கினாற் பாண்டவர்கள் நமக்கு அதிசீக்கிரத்தில் ஸ்வாதீனப் படுவார்கள். வீமசேனனைக் கொன்றுவிட்டால் அவர்கள் பலமற்றுத் தேசமிழந்துபோய் நம்மைப் பலசாலிகளாக நினைத்துப் பாதங்களில்விழுவார்கள். அப்படி விழுந்தால் அவர்களுக்குச் சில ஏவற்றொழில் நியமித்து நாம் சுகமாக இராச்சியத்தை ஆளலாம். அல்லது சில தைரியசாலிகளைக் கொண்டு பாண்டவர்கள் கர்வித்திருக்கிறதைத் துருபதனுடைய புத்திரருக்குத் தெரிவித்து அகங்கார முண்டாக்கி விரோதம்வரச்செய்வோம். அல்லது நல்ல அழகுள்ள ஸ்திரீகளைக்கொண்டு பாண்டவர்களைத் தனித்தனியே மோகிக்கச் செய்து திரௌபதிக்கு விரோதம்வர நடத்தினால், அதினாலே பாஞ்சாலர்கட்கும் அவர்கட்கும் பிரிவினையுண்டாகும். அல்ல தொருவரை பாண்டவர்கள் இந்தப் பட்டணத்துக்கு வரும்படி சொல்லி அனுப்புவித்து, நடுவழியில் அவர்கள் பராக்கா யிருக்குங்காலத்திற் சுறுசுறுப்புள்ள தலையாரிகளாலே கொலைசெய் விப்போம். இப்படி அனேகவித உபாயங்களிலே எது உமக்கு யுக்தமாகத் தோற்றுகிறதோ அதைச் சீக்கிரத்திற்

செய்யவேண்டும். துருபதமகாராஜனிடத்திலே அவர்கள் ஊர்ச்சிதப் படுகிறதற்கு முன்னமே ஏதாகிலும் தந்திரம் செய்தால் நம்முடைய இஷ்டம் கூடிவருமேயல்லது, அப்பாற் கூடிவரமாட்டாது. இதுதான் எனக்குப் பாண்டவர்களுடைய நாசகாரியத்தைக் குறித்துத் தோற்றுகிற ஆலோசனை. இது நல்லதோ கெட்டதோ நீங்கள் யோசியுங்கள். அண்ணா கர்ணா! நீ இதைக்குறித்து என்ன நினைக்கிறாய் சொல்லென்று பேசி முடித்தான் துரியோதனன்.

பின்பு துரியோதனனை நோக்கிக் கர்னன் சொல்லுகிறான்: ஓஎன்னருமைத்தம்பி! உன்னுடையகருத்து எனக்கு நன்றாகத்தோற்றவில்லை. ஏனென்றால்-பாண்டவர்கள் உபாயத்தினாலே வெல்லப்பட மாட்டார்கள். முன்னமே நீ அனேகவித தந்திரங்களாலே அவர்களைச் செயிக்க முயற்சிசெய்திருக்கிறாய். அதிலேதாவது கூடிவந்ததா? குழந்தைகளாய் இறகு முளைக்காமல் இங்கேயிருக்கையிலேயே தந்திரங்களினாலேவெல்லக்கூடாதவர்களை இப்பொழுது இறகு முளைத்து வேறுதேசத்தி லிருந்துகொண்டு நன்றாய்ப் பெரிய ஒத்தாசைகளினாலும் பலசாமர்த்தியங்களினாலும் உயர்ந்திருக்கும் போது, தந்திரங்களுக்கு உட்படுவார்களா? இது வீணாகிய எண்ணமல்லவா? ஸ்திரீமுதலாகிய ஏழுவிசனங்களினுடைய குற்றமறிந்த அவர்கள் அவைகட் குட்படமாட்டார்களே. அவர்கள் தங்கள் தகப்பன் பாட்டன் முறையில் வந்த அரசாட்சியைப் பெற்றுக்கொள்ளத் தக்க முயற்சியோடு கூடியிருப்பார்களேயல்லது வேறில்லை. அவர்கள் மிகவும் குணசாலிகளும் புத்திசாலிகளு மாகையாலே ஒருவரோடொருவர் பேதிப்பதும் அசாத்தியந்தான். அவரெல்லோரும் ஒரு ஸ்திரீயினிடத்திலே அயிக்கப்பட்டுச் சிநேகித்திருக்கிறார்கள். ஆதலால் அவளுக்கும் அவர்களுக்கும் விரோதம்வரச் செய்வதும் அசாத்தியமான காரியம். பிக்ஷைக்காரராகக் காணப்பட்டபோதே அவர்களைக் காதலித்த அந்தத் திரௌபதி, சம்பத்தடைந்துவிளங்குந்தசையில் எப்படி பேதிக்கப் படுவாள்? அன்றியும் லோகத்தில் ஸ்திரீகளுக்கு வெகு புருஷரைப் போகிக்க வேண்டுமென்கிற கருத்து இயல்பாயிருக்கின்றது. அப்படி இருக்க - நியாயவழியால் அச்செயல் அவளுக்குக் கிடைத்திருக்குங்கால் அவளை எப்படி பேதிக்கலாம்? அந்தப்பாஞ்சாலனும் நியாயஸ்தன். சத்தியசந்தன். குணசாலி. வெகுநாளாகப் பாண்டவர்களுடைய உறவை விரும்பி இருந்தவன். அவனுடைய குமாரர்களும் அப்படிப் பட்டவர்கள். சூரர்கள். தங்களையொத்த சூரரைச் சேர்த்துக்கொள்ள மிகவிருப்ப முடையவர்கள். ஆதலால் நாம் என்ன கொடுத்தாலும், என்ன கெடுத்தாலும், என்ன உபாயஞ்செய்தாலும், பாண்டவர்களை ஒருக்காலும் விடமாட்டார்கள். அவர்களுடைய மந்திரி முதலானவர்களும் தங்கள் யஜமானிடத்திலே அதிக பக்ஷமுடையவர்களாதலால் அவர்களையும் பேதிக்கக் கூடாது. இன்னும் அந்த ராச்சியத்திலும் மற்ற விடங்களிலும் இருக்கிற சகலமான பேர்களும் பாண்டவர்களிடத்தில் அன்புவைத் திருக்கிறார்கள். ஆதலாற் சகலவிதங்களில் யோசித்தாலும் அவர்களுக்குக் கெடுதியாகிய வேறுபாட்டை உண்டாக்குவது அசாத்தியந்தான். அன்றியும் அவர்கள் எப்போதும் பராக்காயிராமற் சாக்கிரதையாகவே இருப்பார்கள். ஆதலால் மோசஞ்செய்து கொல்லவாவது, பேதித்துக் கீழ்ப்படுத்தவாவது பிர்மாவுக்கும் சாத்தியமன்று. நீ சொன்ன உபாயங்களில் ஒன்றும் எனக்கு யுக்தமென்றுதோற்றவில்லை. ஆனால் அவர்களைச்செயிப்பதற்கு யுத்தந்தவிர வேறு உபாயம் இல்லை. என்கருத்து இதுதான். முடிவில் இதுதான் கூடிவரும். ஆனால் அது இப்போதேதான் செய்யவேண்டும். ஏனென்றால் - அந்தப்பாண்டவர்கள் இன்னும் பலத்த வேருடையவர்களாக ஆகவில்லை. திரண்டசேனைகளும் பணங்களு மில்லாதவர்களா யிருக்கிறார்கள்.

அன்றியும் நம்முடைய பக்ஷம் இப்போது அதிகப்பட் டிருக்கின்றது. பாஞ்சாலருடைய பக்ஷம் மிகவும் குறைந்திருக்கின்றது. இந்தநிலை மாறுபடுகிற தற்கு முன்னமே சண்டைக்கு யத்தினப் படுவது நல்லது. இப்பொழுது நமக்கு மித்திரர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். வாகனங்களு முற்சாகமுடையவைகளா யிருக்கின்றன. அவர்களுக்கோ அப்படி இருக்கவில்லை. நாம் சாவகாசப் பட்டால் அவர்களும் சாக்கிரதைப் பட்டு மித்திரசம்பத்தைத் தேடிக்கொள்ளுவார்கள். அன்றியும் துருபத மகாராஜனிடத்தில் நாம் பகைக்கு ஏதுவாகிய காரியஞ்செய் திருக்கிறோம். ஆதலாலே அவன்நம்மைச்செயிக்கவேண்டுமென்று வேண்டிய உபபலங்களைச் சம்பாதித்துக் கொள்ளுவான். அப்படி அவன் சகல சம்பத்துக்களுடனே கூடி விருத்தி யடைவதற்கு முன்னமே நாம் பராக்கிரமத்தைச் செலுத்தக்கடவோம். மேலும் தேவகியின் மகனாகிய கிருஷ்ணன் அவர்களுக்குப் பலமாகச் சதுரங்கமாகிய விஸ்தாரசேனைகளுடனே எதுவனாயில் வாராமலிருக்கிறானே அதற்குள்ளாவே பராக்கிரமத்தை நிறைவேற்றவேண்டும். சாவகாசமானாற் கிஞ்சித்தும் கூடிவர மாட்டாது. அந்தக்கண்ணனுக்குப் பாண்டவர் நிமித்தமாகப் பணங்கள்,அல்லது போகம், அல்லது ராச்சியம், அல்லது பிராணன் முதலாகிய எதைவிடவேண்டு மானாலும் விடச்சம்மதி யுண்டாயிருக்கிறது. உலகத்தில் பராக்கிரமத்துக்கு ஈடானது ஒன்று மில்லை. முன் பரதசக்கிரவர்த்தி யானவர் இந்தப் பராக்கிரமத்தினாலே தான் பூமியைச்செயித்தார். தேவேந்திரனும் பராக்கிரமத்தினாலே தான் மூன்றுலோகங்களையும் செயித்தான். ஆதலால் க்ஷத்திரியனுக்குப் பராக்கிரமமே புகழத்தக்கது. பராக்கிரமத்தினாலே கீர்த்தியும் பிரதிஷ்டையு முண்டாயிருக்கிறது. ஆகை

யால் உன்மனதிற் பராக்கிரமமே இனிப்பாக வேண்டியது. அல்லாமலும் பாண்டவர்கள் சாம தான பேதங்களென்னும் மூன்று உபாயங்களினாலும் சாத்தியப் படமாட்டார்கள். தண்டமென்னும் ஓர் உபாயத்திற்குத் தான் சாத்தியப் படலாம். ஆதலால் நீ பராக்கிரமத்தினாலே அவர்களைச்செயித்து இந்தப் பூமிமுழுவதையும் ஆண்டுவரலாம். இதுதான் எனக்கு இக்காலத்திற்கேற்ற உசிதமாகத் தோற்றுகிறதே யல்லது வேறு தோற்றவில்லை என்று சொன்னான் கர்னன்.

வீஷ்மராதியோர் திரிதராஷ்டிரனாதியோர்க் கறிவுறுத்தல்.

இவையனைத்துங் கேட்டிருந்த திரிதராஷ்டிரமஹாராஜன் சிறிதுநேர மாலோசித்தவனாய் அங்கதேசாதிபனைத்தழுவி, ஓ கர்னா! நீ மஹா பராக்கிரமங்களுடன் அஸ்திரவித்தியா சாமர்த்தியமும், தைரியமும், புத்தியுமுடையவனாகையால் இப்படிசொன்னாய். இது தகும்தகும்: நன்றாயிருக்கின்றது. ஆனால் இந்தக்கருத்தை வீஷ்மர் - துரோணர்-விதுரன் - இவர்களுக்குத்தெரிவித்து நிறைவேற்றினால் நல்லதென்றுசொல்லி இந்த மூன்றுபேரையும் சபைக்கு அழைபித்துத் தான்கேட்டவைகளை யெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்தான். அதுகேட்டு முதலில் வீஷ்மாசாரியர் சொல்லத்தொடங்கினார். ஓ சற்புத்திரர்களே! பாண்டவர்களுடனே யுத்தஞ்செய்வது யுக்தமாகத் தோற்றவில்லை. எனக்குத் திரிதராஷ்டிரனெப்படியோ அப்படியே பாண்டுமஹாராஜனும். காந்தாரியினுடைய மக்கள்போலவே குந்தியினுடைய மக்களும். இதிற் சந்தேகமில்லை. அந்தப்பாண்டுபுத்திரர்கள் என்னை எப்படி இரச்சிக்க வேண்டியவர்களோ அப்படியே திரிதராஷ்டிரனையு மிரட்சிக்க வேண்டியவர்கள். பாண்டவர்கள் விஷயத்தில் எனக்கும் திரிதராட்டிரராஜாவுக்கும் எப்படியோ அப்படியே துரியோதனனுக்கும் மற்றுமுண்டான குருவமிசக் குருத்துக்களுக்கும் அன்னியர்களுக்கும் இருக்கவேண்டியது. ஆனதால்- அவர்களோடு போர்செய்ய வேண்டியதென்கிற நினைப்பு எப்படிகூடும்? ஓ குழந்தாய் துரியோதனா! நீ அவர்களுடன் சந்தியை விரும்பிப் பாதிராச்சியங் கொடுக்கவேண்டும். இந்த ராச்சியம் அவர்களுக்கு மூன்றாம் பாட்டன்முதல் தகப்பனார்வரைக்கும் முறையேவந்தது. நீ இந்த ராச்சியத்தை நம்முடைய பிதுரார்ச்சிதமாக வந்ததென்று அபிமானித்து விரும்புகிறதுபோல், அவர்கட்கும் அப்படிப்பட்ட அபிமானத்தினால் விருப்பமிருக்கின்றது. அவர்களுக்கு இந்த ராச்சியம் கிடையாமற் போகும்போது உனக்குத் தான் ஏது? அவர்கள் இந்தராச்சியத்தை முன்னமே நியாயமாக அடைந்தார்கள். நீ அதருமத்தினால்மேற்போர்வையாகப் போர்த்திருக்கிறாய். இப்படி யிருக்கிறபடியினாலே, அவர்களுக்குநல்லவார்த்தைசொல்லி அழைத்துவந்து பாதிராச்சியம் கொடுக்கவேண்டும். இப்படி செய்வதுதான் நம்மெல்லோருக்கும் இதமாய் இருக்கும். மாறுபடச்செய்தால் சந்தேகமில்லாமற் கேடு நேரிடும். உன்னையும் அபகீர்த்தியானது கெட்டியாய்க் கட்டிக்கொள்ளும். இனியேனும் கீர்த்தியை நிறுத்திக்கொள்ளப்பார். கீர்த்தியென்பதே மனிதனுக்குச் சம்பத்து. கீர்த்தி அழிந்த மனிதன் உயிரோடு பிழைத்திருப்பது ஓர் பிழைப்பன்று. கீர்த்தி யுள்ளவனுக்குப் பூதவுடம்பு இறக்கினும் புகழுடம்பு என்று நிலைத்திருக்கும். ஆதலால் தருமமாகியும் கீர்த்தியாகியு மிருக்கிற காரியத்தில் நீ பிரவேசிக்கவேண்டும். இது உனக்கும் எங்களுக்கும் இந்தக்குலத்துக்கும் நன்மையாயிருக்கும். ஏதோ தெய்வச்செயலாலே அந்தவீரர்களும் அந்தக்குந்தியும் பிழைத்திருக்கிறார்கள். கொடியபாவியாகியபுரோசனன் உன்னிஷ்டத்தைநிறைவேற்றச்சென்றுகஷ்டப்பட்டு அழிந்துபோய்விட்டான். அந்த நற்குலப்பிறப்புநன்னடக்கையுமுள்ள குந்தி தன் மக்களுடன் வெந்து போனதாக என்று கேள்வியுற்றேனே, அதுமுதல் இவ்வுலகத்தில் ஒருபிராணியையும் பார்க்கச் சகிக்காம லிருந்தேன். ஓ துரியோதனா! உலகவதந்தியை நீ யோசித்துப்பார். அந்த விஷயத்தில் உன்னை எப்படி தூஷிக்கிறார்களோ அப்படி புரோசனனைத் தூஷிக்கவில்லை. உன்னாலேயேயக்கொடியசெய்கை நடத்தப்பட்டதாக யாவரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட மஹாபாதகத்திற்கு நீ ஆளானது, எனக்குமிகவும் வியசனமா யிருக்கிறது. தெய்வாதீனம் இப்போது அவர்கள் தப்பிப்பிழைத்ததினாலே, உனக்கு அந்தப்பாவமும் அபவாதமும் நீங்குகிறதற்குக் காரணமாயிற்று. இனி அவர்களோடு நீ சந்தி செய்துகொள்வது கீர்த்திக்கும் நன்மைக்கும் காரணமாகும். அந்தமஹாவீரர் பிழைத்திருக்கையில் அவர்களுடைய பிதுரார்ச்சிதமாய் வந்த பாகத்தை இந்திரன்கூட எடுத்துக்கொள்ளச் சமர்த்தனாகமாட்டான். அவர்கள் ஐவரும் தருமமுடையவர்கள். மேலும் அவர்கள் இந்தராச்சியத்திற் பாத்தியமுள்ளவர்கள். இப்படிப்பட்டவர்களை நீ அநியாயமாய்த் துரத்திவிட்டாய். ஆதலால் தருமமாகியகாரியஞ் செய்ய மனமும் - என்னிஷ்டப்படி நடக்க அன்பும் - பட்சபாதமில்லாதிருக்கக் கருத்தும் உனக்கிருந்தால், அவர்களுக்குப் பாதிராச்சியம் கொடுத்துவிட்டு நீ பாதிராச்சியத்தை வைத்துக் கொண்டு க்ஷேமமாயிருவென்று சொன்னார் வீஷ்மாசாரியார்.

உடனே துரோணாசாரியார் திரிதராஷ்டிரனைப் பார்த்து, ஓ மஹாராஜனே! ஒருவனால் ஒருவன் ஆலோசனைக்கு அழைக்கப்பட்டால் அவன் இதமாகிய புருஷ தருமத்திற்கு விரோதப்படாமலும், நன்மைக்குங் கீர்த்திக்கும் அனுகூலமாகியும் பேசவேண்டுமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆத

லால் உம்முடைய மனதிற்கு எப்படி இருந்தாலும்
நமக்குத் தோற்றியதைச் சொல்லுகிறோம். வீஷ்மா
சாரியாருடையகருத்து எதுவோ, அதுவே எனக்குச்
சம்மதி. பாண்டவர்களுக்குப் பங்குகொடுத்துச் சமா
தானஞ்செய்வது இராஜதர்மத்தை யநுசரித்தவர்களு
டைய முறையில்வந்த நெறியாகும். ஆதலாற் சீக்கிர
த்தில் யோக்கியனுகவும் நன்றாய்ப் பேசத்தக்கவனுகவு
முள்ள ஒருமனுஷனைப்பாண்டவர்களுக்காக வெகுமா
னங்களுடன் துருபதமஹாராஜனிடத்திற்கு அனுப்
பிவிக்கவேண்டியது. அந்தமனுஷன்போய் ஒருவருக்
கொருவர் நடந்த சரித்திரிங்களையெல்லாம் நன்றாய்
விபரித்துச் சொல்லி, துருபதனுடைய சம்பந்தத்தி
னுலே பாண்டவர்களுக்கு மிகுந்த க்ஷேமம் கிடைத்த
தையும் புகழ்ந்து, பாண்டவர்களிடத்திலேயும் துருப
தனிடத்திலேயும் துரியோதனுதியர் பிரீதியுடைய
வர்களாக விருக்கிறதாய்ச் சொல்லவேண்டும். துருப
தனும் அவன்மகனும் நமக்குச் சம்பந்தியானது தகு
ந்ததென்றும், இஷ்டமானதென்றும், விசேஷமாக
எடுத்துப் பேசவேண்டும். குந்திமைந்தர்களையு மாத்
திரைமக்களையு நல்வார்த்தைகளினுலேயே நயமுண்
டாக்கவேண்டும். அன்றியும்-நீர் உத்தரவுசெய்ததாகத்
திரௌபதிக்கு அனேக ஆபரணங்களைக் கொடுப்பிக்
கவேண்டும். பாண்டவர்களுக்கு அனேக வஸ்திராபர
ணங்கள் முதலிய வெகுமதிகள் அனுப்ப வேண்டும்.
சம்பந்திகளுக்கும் தகுந்தபடி தனித்தனியே உயர்ந்
தவெகுமதிகள் செய்யவேண்டும். குந்தியும் பாண்ட
வர்களும் முன் அனுபவித்துக்கொண்டிருந்த வஸ்துக்
களையெல்லாம் கொடுத்துவிடவேண்டும். இப்படிநாம்
குற்றமற்ற செய்கைகளினுலே அவர்களையெல்லா மி
கவும் சம்மதிப்படுத்தி, அவர்களிஷ்டப்படி இப்பட்ட
ணத்திற்கு இட்டுக்கொண்டு வரவேண்டும். அப்படி
யே அவர்களவரச் சம்மதிப்பட்டபின், நம்முடைய
துச்சாதனன் - விகர்னன் - முதலாகியபேர்கள் சேனை
களோடு எதிர்சென்று அழைத்துவரவேண்டும். அவ்
விடம் விட்டு இவ்விடம் அவர்கள்வந்தால் நீர் சிநேக
த்துடனே சிந்தைகளித்துப் பேசி வஞ்சமில்லாமல்
இங்கே இருக்கச்செய்வீராகில், அவர்களும் உம்மிடத்
தில் தகப்பன் மரியாதையிலும் சதமணங் கதிகமாய்
வாழ்ந்து மகிழ்ந்திருப்பார்கள். நீரும் உம்முடைய பி
ள்ளைகளைப்போல் அவர்களைப் பாவித்துப் பேதமற்
றுச் சந்தோஷித் திருக்கக்கடவீர், ஓ மஹாராஜனே!
இவ்விதமாகச் செய்வது இம்மையிலும் மறுமையிலும்
நன்மைக்குக் காரணமாகும். ஆதலால் வீஷ்மர்சொற்
படி செய்வதுதான் கற்பும் சத்தியமுமுடைய மனை
வாழ்க்கைக்குரிய கருமமென்றார் துரோணுசாரியார்.

இவ்வாறு வீஷ்மாசாரியார் துரோணுசாரியார்
சொல்லியவனைத்துங் கேட்டிருந்தகர்னன் விரைந்தெ
ழுந்து, ஓ ராஜாதிராஜனே! பொருளுக்கும் மானத்
திற்கும் நம்முடன் ஒத்தவர்களாயிருக்கிற இவ்விருவ
ருமே உமக்கு நன்மைவருப்படி யோசனை சொல்லா
மற் போவதைக்காட்டிலும், வேறு ஆச்சரியம் உலகத்
தில் உண்டோ? தனது உருவை மறைத்துக்கொண்டு
கெட்ட நினைப்புடனே க்ஷேமத்தைப் பேசுகிறதென்
பது,பெரியோர்களுடையநடையா யிருக்கமாட்டாது.
காரியங்களில் வருத்தம் நேரிடுங்காலத்து, நன்மைக்
காவது துன்மைக்காவது மித்திராலே ஒன்றும் கூடி
வருகிறதில்லை. மற்றென்னவெனில்- எல்லோருக்கும்
முந்திய வினையினுலேயே சுகமாவது துக்கமாவது
நேரிடுகிறது. இது சத்தியமென்று நினைத்து நீர் நம்
பும். விவேகமுடையவனுனுலும், மூடனுனுலும், சிறு
பிள்ளையானுலும், கிழவனுனுலும், சகாய முள்ளவனு
னுலும், சகாய மில்லாதவனுனுலும், எவனும் எந்தவி
ஷயத்திலேயும் தான் பெறவேண்டியதை அவசியம்
பெறுகிறுன். இதற்குத் திருஷ்டாந்தமாக வேதத்தி
லொருகதை யிருக்கின்றது கேளும். முற்காலத்தில்
மகததேசத்தரசர்களில் விநிந்தன் என்கிறவன் இருந்
தான். அவனுக்கு ஞானேந்திரியங்களும் - கருமேந்
திரியங்களும்- குறைவுபட்டு, இளைப்புடன் பெருமூச்
சுவாங்குகிற நோயுமிருந்தது. அப்பொழுதவன் இரா
ஜகாரியங்களைக் குறித்து மந்திரிகளையே நம்பி நட
த்திக்கொண்டு வந்தான். அவனுடைய மந்திரிகளும்
கட்டுப்பாடாக விருந்தார்கள். அவர்களில் மஹாகர்
னன் என்கிற ஒருமந்திரி ஆளுகை செய்கிறவனுகவிரு
ந்தான். அவன் நால்வகைச்சேனை முதலியவைகளைத்
தன் வசமாக்கி, மற்றமந்திரிமார்களை யடக்கி, அந்த
ராஜாவையும் லட்சியஞ் செய்யாமல் தன்னிஷ்டப்படி
நடந்து, இராஜாவினுடையசகலசம்பத்துக்களையும் ஸ்
திரீகளையும் கவர்ந்துகொண்டான். இப்படி யவன் சக
லசிறப்பையும் எடுத்துக்கொண்டு மறுபடி லாபம் வர
வர விசேஷலோபத்தை யடைந்து, அவ்வரசனிராச்சி
யத்தையும் தன்சுதாவில் ஆளுகைசெய்யத் தலைப்பட்
டான். ஆனுல் அதுமாத்திரம் அவனுக்குக் கைகூடா
மற் போயிற்று. இங்கே மந்திரிகளுடைய நற்குணத்
துற்குணங்களையும் அவரவர்களுடைய விதிகளையும்
யோசித்துப்பாரும். அவன் அவ்வளவு சம்பத்தைக்
கவர்ந்து விபவங்களை அனுபவித்துக்கொண் டிருக்
கையிலும், இந்தராச்சியம் நமக்குச்சொந்தமில்லாமற்
போயதேயென்னும் ஒருவியசனம் அவனுக்கு மேலிட்
டிருந்தது. அதனுல் மிகவும் வல்லமை குறைந்தது.
அப்பால் பூர்வராஜனுக்கே பிரதிஷ்டையாக ஆளுகை
சென்று வந்தது. ஆதலால் யாவும் வினைப்படி நடக்
குமேயல்லது வேறில்லை. ஓ மகாராஜனே! உமக்கு
இராச்சியம் நிலைபெற்றிருக்க விதியிருந்தால் அப்படி
நடக்கிறது. அப்படிக்கில்லாவிடில் நீர் என்னசாக்கி
ரதையோடு இருந்தாலும் நிற்கப்போகிறதில்லை. ஆம்
போது ஆகும். போம்போது போகும். இதனைநீர்
நிச்சியமாக மனதில் நம்பிக்கொண்டு, மந்திரிகள் சொ
ல்லுகிற வார்த்தை அன்புடனே சொல்லுகிற வார்த்
தையோ அல்லது கபடத்துடனே சொல்லுகிற வார்

த்தையோ, அதைத் தெரிந்துகொண்டு யுக்தப்படிக்கு நடக்கவேண்டும் என்றான் கர்னமகாராஜன்.

இவ்விதமாகச் சொல்லிய கர்னனுடைய சொல்லைக்கேட்ட துரோணாசாரியர், அடா கர்ணா! உன்னையறிவோமப்பா. எதற்காகக் கொடியகருத்தினால் இப்படி பேசுகிறையோ, அது நன்றாய்த் தெரிந்தது. நீயோ பாண்டவர்கள் விஷயத்தில் மிகவும் துஷ்டனாயிருக்கிறாய். ஆகையால் உன்குற்றத்தை அயலார்மேல் ஏற்றிக்காட்டுகிறாய். நான் இந்தக்குருவமிசம் தழைக்கப்பிறந்த இந்த ராஜனுக்கு இதமே சொல்லுகிறேன். நீ இதைத் தீமையாக நினைத்தால் உனக்கு இதம் எதுவோ அதனைச்சொல்லு. நான் வேண்டாமென்று தடுக்கவில்லை. ஆனால் ஒன்றுமாத்திரம் சொல்லுகிறேன்கேள். நான் சொன்னபடி செய்யாமல் வேறுவிதமாகச் செய்தால் இக்குருவமிசத்தார் அதிக விரைவில் அழிந்து போவார்கள். இதற்குச் சந்தேகமில்லை. அப்பால் என்தேகமும், உன்தேகமும், மற்ற எவர்கள்தேகமு மில்லையென்று சொல்லினார். அப்போதிவையனைத்துங் கேட்டிருந்த விதுரன் சில சொல்லத் தொடங்கினான். ஓ ராஜனே! இப்போது யதார்த்தத்தைக்கேட்க நினைத்திருக்கின்றீ ராகையால், இஷ்ட பந்துக்கள் உம்து நன்மைக்கு ஏதுவாகிய வார்த்தைகளையே சொல்லவேண்டும். ஆகையாலே தான் நம்முடைய குலத்துக்குள் சிரேஷ்டராயிருக்கிறவீஷ்மாசாரியார் உமக்கு இதமாகச் சொன்னார். அப்பேச்சை நீர் அங்கிகரிக்காமற் போகிறீர். அவ்வாறே ஆசாரியராகிய துரோணரும் விசேஷமாகியநன்மையைச்சொன்னார். இவைகளை எல்லாம் ராதையின் மகனாகிய கர்னன் இதமல்லவென்று நினைக்கிறான். அவ்விருவர் சொல்லிய வார்த்தைகளையும், கர்னன் கூறிய கட்டளையையும், நன்றாயோசித்துப் பாரும். எவ்வளவு யோசித்துப் பார்த்தாலும், இவ்விருவரைக் காட்டிலும் உமக்கு இதஞ்சொல்லத் தக்கவர்களைக் காணேன். இவர்களோ வயதினாலும், அறிவினாலும், கல்வியினாலு முதிர்ந்தவர்கள். அன்றியும் உம்மிடத்திலும் அந்தப்பாண்டுகுமாரர்களிடத்திலும் பட்சபாதமின்றி இருக்கின்றவர்கள். அல்லாமலும் தருமமாய் நடப்பதிலும், சத்தியந் தவிராம விருப்பதிலும், பரசுராமன் - இரகுராமன்-கயன் இவர்களைப்பார்க்கிலும் குறைந்தவர்களல்ல. நீர்விரும்பிக் கேட்காம லிருக்கும்போது ஒரு வார்த்தையுஞ் சொல்லவில்லை. இதுவரையில் உமக்கு ஏதாகிலும் அபகாரஞ் செய்ததாகவுந் தோற்றவில்லை. இப்படிப் பட்டவர்களுடைய ஆலோசனை உமக்கு நன்மைசெய்யாமற் போகுமா? அவர்கள் யுத்தியே பழுதுபடும்போது, இந்தக் கர்னனுடைய புத்தியும் சவுரியமுமா உதவப்போகின்றன. ஓ சந்திரகுல திலகனே! மனிதர்க்குள் அறிவினாற் சிறந்தோராகிய இவர்கள் உம்மிடவிஷயத்திற்கொஞ்சமும் நெஞ்சில்வஞ்சனையாகப்பேச மாட்டார்கள். என்றென்றைக்குஞ் சரியாயிருப்பவர்களென்று எனக்கு நிச்சயமிருக்கின்றது. நீரும் நெடுகாளாய் இவர்களுடைய சகவாசத்தினாலே வெகுதருமங்களை அறிந்திருக்கிறீர். இவ்விருவரும் பொருளுக்காகவும் பிரக்யாதைக்காகவும் பேசுகிறவர்களல்ல. இருதிறவருக்கும் அபிவிருத்தி யுண்டாகும்படியாய்ச் சமபக்ஷமாய்ப் பேசுகிறவர்களென்று உறுதியாய் நம்பும். இதுதான் உமதுமிகுந்த நன்மைக்குக் காரணமாகும். துர்யோதனன் முதலாகியவர்கள் இந்தராச்சியத்தைக் குறித்துத் தமக்குச் சொந்தமென்று எப்படி நம்பியிருக்கிறார்களோ, அப்படியே பாண்டு குமாரர்களும் உரியவர்களாக யிருக்கிறார்கள். ஆதலாலே அந்தப் பாண்டவர்கள் விஷயத்தில் யார் நன்மையைச் சிந்திக்கவில்லையோ, அவர்கள் புத்தியீனர். அப்படிப் பட்ட மந்திரிகள் உமக்கு இதஞ்செய்கிறவர்க ளல்ல. அல்லது உம்முடைய மனதிற் சொந்தப் பிள்ளைகளைக்குறித்து விசேஷ அபிமான மிருப்பதையறிந்து அதற்குத் தக்கபடி முடிக்கும்படியான காரியத்தை வெளியிடுவார்களேயாகில், அப்போதும் அவர்கள் உமக்கு இதஞ்செய்யும் மந்திரிகளல்ல. ஆகையாலேதான் நல்ல சுபாவ முடையவர்களும், மிகுந்த பராக்கிரம முடையவர்களுமாகிய இவ்விருவரும் உம்முடைய உட்கருத்தை வெளிக்குக் கொண்டுவராமலே பேசிவந்தார்கள். இதை நீர் நன்றாய்ச் சிந்திக்கவேண்டும். ஆகிலும் பாண்டவர்களை வெல்லக் கூடாதென்பதை மாத்திரம் வெளியிட்டுச்சொல்லினார்கள். அதுசரியே: நீர்வேறாக நினைக்க வேண்டாம். நீர்தானே நன்றா யோசித்துப் பாரும். இரண்டுகைகளாலும் அம்புகளைவிடுகிற திறமையுள்ள அர்ச்சுனனை யுத்தத்தில் இந்திரனேதான் ஜயிக்க மாட்டுவானா? பதினாயிரம் யானை பலமுள்ள வீமசேனனைத் தேவர்களெல்லாம் ஒன்றாகக் கூடினாலும் ஜயிக்கக்கூடுமா? சகலவித யுத்தத்திலும் மிகுந்த வல்லமையுடைய இரட்டைப் பிள்ளைகளை எவன்ஜயிக்க மனதுகொண்டு எதிர்க்க மாட்டுவான்? ஒருக்காலும் மாறாத தைரியத்தையும்-பொறுமையையும்-தயையையும் - சத்தியத்தையும்-பராக்கிரமத்தையும் உடையவனாகிய உதிட்டிரனைச் சயிக்கத்தகுந்த புருஷன், யாராவது உம்முடையமனதில் தோற்றுகிறானா? அன்றியும் எவர்களுடைய பட்சத்தில் யதுகுலதிலகராகிய பலராமனும் கிருஷ்ணனும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றார்களோ, அவர்களுக்கு எதுதான் கைகூடிவரமாட்டாது. அல்லாமலும் சாத்யகியும்-துருபதனும் இவன் புத்திரராகிய துஷ்டத்துய்ம்னன் முதலான பேர்களும்-அவர்களுக்கு உபபலமாக இருக்கும்போது அவர்களுடனே போர்செய்ய வேண்டுமென்கிற நினைப்பு எந்தப் புத்திமானுக்கு உண்டாகும்? இப்படிக் கெல்லா மிருக்கிறபடியினாலே நீர் எந்த உபாயத்தினாலும் பாண்டவர்களை வெல்லக்கூடாது. ஆதலால் இதனை நன்றாயோசிப்பதோடு இந்த ராச்சியத்தில் அவர்களுக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தையும் தீர்க்காலோசனைசெய்து, தருமத்திற்கு அழிவில்லாமல் அவர்

களுக்குத் தகுந்த நன்மைசெய்யக் கடவீராக. ஓ மகாராஜனே! உமக்குப் புரோசனன் முதலிய பேர்களால் நடத்திவிட்ட காரியத்தினால் வந்திருக்கிற அபகீர்த்தியாகிய அழுக்கு இருக்கின்றதே, அதைப் பாண்டவர்களுக்கு நன்மைசெய்வதாகியநீராலே கழுவிப்போடும். இப்படி செய்வதே நற்பிழைப்பு, நல்லசுபம், க்ஷத்திரியத்தன்மைக்கு மேம்பாடு. அன்றியும் இதிலிருக்கிற குணங்களையும், உமது பிள்ளையோடு சேர்ந்த மற்றையர்சொல்லுங் கட்டுரைகளி லிருக்கின்ற குற்றங்களையு மனதில் நிதானித்துப்பாரும். துருபத மகாராஜனுக்கும் நமக்கும் நெடுநாளாய்ப் பகையுண்டாயிருக்கின்றதல்லவா? இப்போது பாண்டவர்களுக்கு நன்மை செய்வதினாலே அந்தத் துருபதனை நாம் மித்திரனாக்கொள்ளுகிறோம். இப்படிசெய்வதினாலே நம்முடைய இராச்சியமானது பலத்தை அடைகிறது. அன்றியும் கிருஷ்ணன் எந்தப்பட்சத்தி லிருக்கிறானோ அந்தப் பட்சத்திற்கே ஜயமென்று நம்பவேண்டும். இப்படிப்பட்ட பலமடைந்த நம்மை வெல்லுகிறபேர்கள் யார்? மேலும் சதுர்வித உபாயங்களுள் ஒன்றுக் கொன்று தாழ்ந்தது. ஆகையினாற் சமாதானத்தினாலேயே சாதிக்கவேண்டிய காரியத்தை, யுத்தத்தினாலே சாதிக்கப் புறப்படுகிறவன் யோக்கியனல்லன். இப்பொழுது நம்முடைய ராச்சியமிருக்கிற ஸ்திதியைப்பாரும். பட்டணத்துக் குடிகளும் தேசத்துக் குடிகளும் பாண்டவர்கள் பிழைத்திருக்கிற செய்திகேட்டு, அவர்களைப் பார்க்கவேண்டு மென்று மிகவும் விருப்பமுடையவர்களாகச் சிலரிருக்கிறார்கள். பலர் பிரயாணப்பட்டுப் பாஞ்சாலதேசம் போய்விட்டார்கள். நமது சபையிலிருப்பவர்கட்கும் ஆசையுண்டு. ஆனால் அந்தவிருப்பத்தை வெளியிடாம லிருக்கிறார்கள். இப்படி சகலராலும் விரும்பிக் கொண்டாடத்தக்க அப்பேர்ப்பட்டவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றாமற்போவது இராச்சியத்திற்குப் பலக்குறைவாகும். மேலும் நமது ராச்சியக் குடிகளுக்கேயன்றி இதராச்சியக் குடிகளுக்கும் பாண்டவர்கட்கு இதம் செய்து வைக்கவேண்டு மென்பதே இஷ்டம். துரியோதனனும் - கர்னனும் - சகுனியும்-தருமநிலைதெரியாதவர்க ளாதலால், அவர்கட்கு அகிதம் செய்துவைக்கவேண்டு மென்பதே இஷ்டம். அவர்களுடைய வார்த்தையின்படி நீர் நடக்கவேண்டாம். நீர் தற்காலத்தில் யுக்தமானவற்றைக் கேட்டீரென்று இந்தக்காரியத்தை உமக்குச் சொல்லினேன். துரியோதனன் சொற்படி நீர் நடப்பீராகில், நமக்கும் அனேக ஜனங்களுக்கும் கேடும் விரோதமும் கேட்காமல் வருமென்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை. இதை உமக்குத் தெரியச் சொன்னேன். அப்பால் உம்முடைய இஷ்டமென்றுசொல்லி நின்றான் விதுரமகாராஜன்.

பாண்டவர்களை அஸ்தினாபுரத்திற்கு வரவழைத்தல்,

இவையனைத்துங் கேட்ட திரிதராஷ்டிர மகாராஜன்விதுரனைநோக்கி, தம்பீ! பீஷ்மாசாரியரும் துரோணாசாரியரும் சகலமு மறிந்தவர்கள். நமக்கும் வேண்டியவர்கள். அவர்கள் சொல்லிய சொல்லோ மிகவும் நல்லது. நீயும் அப்படியே தருமமானதாயும், சத்தியமானதாயும் பேசினை. சந்தோஷமாயிற்று. அந்தக்குந்திகுமாரர்களாகிய வீரர்கள் பாண்டுமகாராஜாவுக்கு எப்படி பிள்ளைகளோ, அப்படியே எனக்கும் பிள்ளைகள். இதிற் சந்தேகமில்லை. இந்தராச்சியம் என்பிள்ளைகளுக்கு எப்படி சொந்தமோ, அப்படியே பாண்டவர்களுக்குஞ் சொந்தமாகவே இருக்கின்றது. ஆகையினாலே ஓ விதுரனே! நீபோய் அவர்கட்கு மரியாதைசெய்து, அவர்களைக் குந்தியுடனேயும் தேவலோகத்துப்பெண் போன்ற என்மருமகள் திரௌபதியுடனேயும் இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுவா. ஏதோ தெய்வாதீனத்தினால் அந்தப்பாண்டவர்களும் குந்தியும் பிழைத்திருக்கிறார்கள். துருபதக் கன்னிகையையும் விவாகஞ் செய்துகொண்டார்கள். இதனால் நமக்கெல்லாம் பெருந்துக்கமு நீங்கிற்று. என்று சந்தோஷமாகச் சொன்னமாத்திரத்திலே விதுரன் பாண்டவர்களிடத்திற்குப்போக உடம்பட்டு அனேக வஸ்திராபரணங்களையும் திரவியங்களையும் எடுத்துக்கொண்டு, தான் சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தருமங்களை யறிந்தவனாகையாலே, முதலிற் றான்போகவேண்டிய மரியாதையின்படிக்குப் பாஞ்சாலனிடத்திற்குச் சென்றான். அந்தத் துருபதராஜனும் தான்செய்யவேண்டிய மரியாதையின்படி உபசாரத்துடன் விதுரனைத் தன்னிடத்திற்கு வரவழைத்துக் கொண்டான். பின்பு ஒருவரையொருவர் தழுவி க்ஷேமம்விசாரித்துக்கொண்டு வரும்போது விதுரன் அவ்விடத்திற் பாண்டவர்களையும் கிருஷ்ணனையும் கண்டு, மிகுந்த ஆனந்தத்தோடு ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு குலாவினார்கள். அவர்களும் இவனைமிகுந்த சந்தோஷத்தோடும் பூசித்துச் சகலமான பேர்களுடைய சுபக்ஷேமங்களை அடிக்கடி கேட்டார்கள். அவனும் பொதுவாக யோகக்ஷேமங்களைச் சொல்லிப் பாண்டவர்களுக்கு நேரிட்ட ஆபத்தையும் அதில் நின்று நீங்கி உயிருடன் பிழைத்திருப்பதையும் பேசி, நினைத்து நினைத்து ஆச்சரியமும் சந்தோஷமும் அன்புமாகிய கடல்மூன்றும் பொங்கி, திரிதராஷ்டிரனுடைய சொற்படி இவர்களுக்கும்-குந்திக்கும் - திரௌபதிக்கும் - துருபதனுக்கும் - அவன் புத்திரர் முதலானவர்களுக்கும் - அனேக வஸ்திராபரணங்களுடன் திரவியங்களையும் கொடுத்து, மிகுந்த வின்பத்துடனே தான் வந்தகாரியத்தைச் சொல்லத் தொடங்கினான்.

ஓ துருபதமகாராஜனே! நானிப்போது சொல்லுகிறவார்த்தையை நீர் உம்முடைய மந்திரிகளோடும் புத்திரர்களோடும் தயைசெய்து கேட்க வேண்டுகிறேன். எங்களண்ணனாகிய திரிதராஷ்டிரமகாராஜனும், அவர்புத்திரர்களும், மந்திரிகளும், பந்துக்களும், உம்முடைய க்ஷேமாதிசயங்களைக் கேட்க மிகவிருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். உம்முடைய சம்பந்தங்கிடைத்ததினாலே மகாராஜாவானவர் ஆனந்த சாகரத்தில் அழுந்தியிருக்கிறார். உங்களுடைய நன்மையைக் குறித்தும், சம்பந்தம் நடந்த பெருமையைக் குறித்தும் அடிக்கடிக்கு விசாரிக்கிறார். அப்படியே மகானுபாவராகிய சந்தனுகுமாரரும் உம்முடைய க்ஷேமங்களைக் கேட்கிறார். பிரியமுள்ள துரோணாசாரியரும் உம்மை அனந்தமுறை ஆலிங்கனம் செய்ததாகச் சொல்லச் சொன்னார். உங்களோடு சம்பந்தஞ்செய்துகொண்டதினால் எமது சுற்றத்தாராகிய சகலரும் தங்களைப் புண்ணியசாலிகளாக நினைத்து பெறாதபேறு பெற்றவர்களைப்போல் மகிழ்ச்சி யடைகிறார்கள். இதுகளையெல்லாம் நீங்கள் நன்றாக ஆலோசித்துப் பாண்டவர்களையும் அவர்கட்குரிய பத்தினியையும் அனுப்பிவிக்கவேண்டும். அஸ்தினாபுரியிலிருக்கும் சகல ஜனங்களும் பாண்டவர்களையும் குந்தியையும் காணப் பட்சமுள்ளவர்களா யிருக்கிறார்கள். அன்றியும் கன்னிகா ரத்னமாகிய திரௌபதியை இராஜகுல மங்கையரெல்லாம் எப்போது கண்டுகளிப்போமென் றெதிர்பார்த்திருக்கிறார்கள். அந்தத் தேசமுழுவதும் இந்தப் பாண்டவர்கள் சுகமாக விருக்கும் செய்திகேட்டுச் சந்தோஷத்துடனே இவர்களது வரவுக்கு வழிபார்க்கிறார்கள். ஆகையாற் சாவகாசஞ் செய்யாமல் துரிதமாக அனுப்பிவைக்க வேண்டுகிறேன். இதை முக்கியமாய்த் தெரிந்துகொண்டு, என்னண்ணனாகிய திரிதராஷ்டிர மகாராஜனிடத்திற்கு இச்செய்தி தெரிவிக்கும்படி முன்னதாகத் தூதனை அனுப்பிவிட்டுப் பிற்பாடு இவர்களை அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று சொன்னான். அதுகேட்ட பாஞ்சாலராஜன் மகா சந்தோஷத்தோடு சொல்லுகிறான்.

ஐயா விதுரரே! தாங்கள்சொல்லிய வினைத்துங் கேட்க மிகுந்த சந்தோஷமாயிற்று. முற்செனனத்திற்செய்த நல்வினையால் எனக்குக் குருவமிசத்துச் சம்பந்தங் கிடைத்தது. இதைகுறித்துப் புகழ்வதற்கு என்னால் வல்லமையில்லை. என்னுடைய குறைகளெல்லாம் நீங்கிப்போயின. பாண்டவர்கள் தங்கள்மாளிகை சேர்ந்து வாழ்வது எனக்கு அதிக ஆனந்தந்தான். ஆனால்-அவர்களை உங்கள் ஐயா அவர்களோடு ஊருக்குபோங்களென்று ஆக்கினைசெய்ய நான் யோக்கியனல்லாதவனா யிருக்கிறேன். இப்படிக்கு நான் சொல்வதினால் நேரிடுங் குற்றங்களைச் சாதுசங்கப் பழக்கமறிந்த நீரறியீரோ? பாண்டவகுல திலகராகிய தருமபுத்திரர் எப்படி நினைக்கிறாரோ, அப்படியே என் கருத்தும். அதற்கு மாறுவேறில்லை. அவருக்கும் அவர் தம்பிமாருக்கும் அவர்களுயிர்த்தோழராகிய இராமகிருஷ்ணனுக்கும் எந்த வேளையிற் போகவேண்டுமென்று நினைப்புண்டாகுமோ, அந்தவேளையில் என்மகளைக் கூட்டியனுப்பச் சித்தமா யிருக்கிறேன். ஒருபட்சம் யோசிக்குமிடத்துத் திரௌபதியை என்னிடத்தில் வைத்திருப்பதற்கும் அவர்களோடு [illegible] தற்கும் எனக்கு அதிகாரமில்லை. எப்போ தாராதத்தம் பண்ணிப் போட்டேனோ அப்போதே சொத்து அவர்களுடையது. அவர்களிஷ்டப்படி நடத்திக்கொள்ளலாம். இவ்விஷயத்தைக்குறித்து நீர் என்னைக்கேட்கவேண்டியதொன்றுமில்லை. என்று சொல்ல இச்சொல்லைக்கேட்ட உதிஷ்டிரர் மாமனாரைப் பார்த்து, ஐயா மகாராஜாவே! நீர் எவ்வாறு கட்டளை இடுகிறீரோ அவ்வாறுநடக்கக் காத்திருக்கின்றோமென்றுசொல்லினார். கண்ணனும் பாண்டவர்கள் அஸ்தினாபுரத்திற்குப் போவது எனக்கு இஷ்டமாயிருக்கிறது. ஆனால் மகாராஜாவின் கருத்து எப்படியோ தெரியவில்லை என்று சொல்லத் துருபதன் சொல்லுகிறான்: நந்தநந்தனனாகிய வாசுதேவன் காலத்திற்கேற்ற கோலமா யோசித்து நிச்சயஞ்செய் தருளியது என்ன எதுவோ, அதுவே என்கருத்தாகும். எனக்குப் பாண்டவர்களிடத்தில் எப்படி பக்ஷமிருக்கிறதோ, அப்படியே ஸ்ரீகிருஷ்ணனுக்கும் அவர்களிடத்திற் பட்சமிருக்கிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றெரியவருகின்றது. அன்றியும் ஸ்ரீகிருஷ்ணன் இந்தப்பாண்டவர்களுடைய நன்மையைக் குறித்து எப்படி எப்போதும் எச்சரிக்கையாய் ஆலோசித்துக்கொண்டிருக்கிறாரோ, அப்படிக்கு மிகவும் புத்திசாலியாகிய தருமபுத்திரரும் சிந்திக்காம லிருக்கமாட்டார். ஆகையால்-அவருடைய கருத்தின்படியே எல்லோரும் நடக்க வேண்டுவது என்று துருபதன் சொன்ன வார்த்தையைக்கேட்ட யாவரும் ஒத்துக்கொண்டு, அஸ்தினாபுரத்திற்குப்போக மனமுள்ளவர்களா யிருந்தார்கள். அப்போது விதுரனானவன் பாண்டவாதியர்வருதலைத் திரிதராஷ்டிரனுக் கறிவிக்கும்படித் தூதனுப்பிவிட்டு, உடனே குந்திதேவியினிடத்திற்குச் சென்று அவளுடைய பாதங்களிலே சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டெழுந்து, இருகண்களினுஞ் சிறிது நீரரும்பக் கைகளைக் கூப்பிக்கொண்டு எதிரில்நின்றான்.

அந்தக்குந்தியும் மைத்துனனைக் கண்ட மாத்திரத்திலே தான்பட்ட துக்கங்களை நினைத்துக் கொஞ்சநேரம் விசனப்பட்டுப் பின்பு அவனை நோக்கிச் சொல்லுகிறாள்: ஓ மைத்துனரே! அரக்குமாளிகையிலகப்பட்டுக்கொண்ட பாண்டுராஜனுடைய குழந்தைகள் உமது அனுக்கிரகத்தினாலே மறுபடியும் பிழைத்துவந்தார்கள். ஆமையானது தானெங்கே யிருந்தாலும் தன் சினைகளை நினைத்துக்கொண் டிருந்தால் அதனாலே அவைகளெல்லாம் உருவாய் வளர்கின்றன

வென்று சொல்லுகிறார்கள். அப்படிக்கு நீர் எங்கேயிருந்தாலும் உம்முடைய நினைப்பினாலே இவர்கள் வளருகிறார்கள். காக்கையானது குயில் முட்டைகளைத் தன் முட்டையென்று பெற்று வளர்த்துக் காப்பாற்றுவதுபோல், உம்முடைய பிள்ளைகளைக் காகம்போன்ற நான் காப்பாற்றினேனே யல்லது வேறில்லை. முன்பு நாங்களனைவரும் கரையில்லாத துக்கசாகரங்களில் முழுகினோம் [illegible]ருடைய ஆசீர்வாதத்தினால் கரையேறினோம். இனி நடக்கவேண்டியது எதுவோ அதனை நீர் சிந்திக்கவேண்டும் என்று சொன்னாள். இவையனைத்துங் கேட்ட விதுரன் பின்னும் வியாகூலசித்தனா யிருந்து அப்பாற் சிறிது தேறி, இயாவரும் அஸ்தினாபுரிக்குப் போகவேண்டியதற்காக ஆலோசித்த ஆலோசனையைத் தெரிவித்தான். குந்தியும் அப்படியே அங்கீகரித்தாள். பின்பு பாஞ்சாலராஜனுடைய அனுமதியினாலே யாவரும் பிரயாணத்திற்குச் சித்தமானார்கள். அப்போது பாஞ்சாலன் பொன்னாலாகிய கழுத்துச்சங்கிலிகள் - காற்சங்கிலிகள் - தந்தக்கட்டுகள் - முதலியவைகளோடு முத்துத் தோரணங்கட்டி அலங்கரித்த அம்பாரிகளைக் கொண்டு மிகவும் வல்லவராகியபாகராலே நடத்தப்படுகிற யானைகளாயிரமும், இலேசாய் ஓடத்தக்கவைகளாகியும் உறுதியாயுமிராநின்ற விசித்திரமாகியதேர்களாயிரமும், பொற்சீனிகள் போட்டு அழகாகச் சிங்காரித்திருக்கிற உயர்ந்தசாதிக்குதிரைகள் ஐப்பதினாயிரமும், பணிவிடைசெய்யும் பெண்களையாயிரமும், ஆண்மையிற் சிறந்த ஆண்பிள்ளைகள் ஆறாயிரமும், விற்பிடித்துப் போர்செய்ய வல்லவர்களாகிய சேவகர்கள் பன்னீராயிரமும், மற்றும் பொன் - வெள்ளி - இரத்தினங்கள் - படிகக்கற்கள்-யானைத்தந்தங்கள்-இப்படிப்பட்டவைகளாற் செய்யப்பட்ட பலவிதமாகிய மஞ்சங்கள்-ஆசனங்கள் - பாத்திரங்கள் - முதலாகிய வஸ்துக்களனேகமும், அனேகமாயிரம் பசுமாடுகளும், அனேகமாயிரம் வஸ்திராபரணங்களும், இன்னும் இப்படி ஆயிரமாயிரமாக அனேக விதமான இராஜசம்பத்துக்குரிய வஸ்துக்களையெல்லாம் பாண்டவர்களுக்குத் தனித் தனியே பரிசு கொடுத்தான். அப்பாண்டவர்கள் முன்னம் பெற்றிருக்கிற ஸ்ரீதன வஸ்துக்களோடு இவைகளையும் பெற்றுக் கொண்டு, சகலவித வாத்தியத்துடனே பாஞ்சால நகரம் விட்டுப் புறப்பட்டு, வழிகளில் நல்லவிடங்க ளெங்கெங்கே யிருக்கின்றனவோ அங்கங்கேயிறங்கி, வேடிக்கையாக எல்லோரும் ஸ்நானபூசை போஜனாதிகளைச் செய்து, வேண்டியபடி விளையாடிக்கொண்டு சகலபரிசனங்களும் புடைசூழ்ந்துவர அதிக சந்தோஷமாகச் சென்றார்கள்.

இப்படி யிருக்க - முன்னமே விதுரர் அனுப்பிவித்த தூதர்களாற் கண்ணில்லா மன்னவன் பாண்டவர்கள் அஸ்தினாபுரத்திற்குப் புறப்பட்டுவருகிற செய்தி கேட்டு உடனேயவர்களை எதிர்கொண்டு அழைத்து வரும்படியாகத் தன்குமாரர்களாகிய விகர்ணன்-சித்திரசேனன் - என்பவர்களையும், துரோணாசாரி-கிருபாசாரியர்களையும், மற்று மனேகம் பிராமணாள் முதலானவர்களையும், தாசிகளையும், சதுரங்க சேனைகளையும், வாத்தியங்களையும் அனுப்பித் தன்பட்டணத்தை அலங்கரிக்க இராஜபறைசாற்றித் தெரிவிக்கும்படித் தூதர்களுக்குக் கட்டளையிட்டான் - உடனே அத்தூதர்கள் வள்ளுவரைக்கொண்டு முரசறைவித்த மாத்திரத்தில் பட்டணத்துச் சனங்களெல்லாம் பாண்டுகுமாரர்கள் வருகிறசேதியைக் கேட்டு சுவர்க்கபோகங் கிடைக்கப்பெறுவோர் அடையும் பேரானந்தக்களிப்பை அன்றே யடைந்தவர்களாய் வீடுகள்தோறும் பந்தற்போட்டு, வர்ணச் சேலைகளும் கொடிகளும் கட்டி பொன்மாலைகளாலும் பூமாலைகளாலும் பலவிசித்திரங்கள் செய்து, பலவிதப் பிரதிமைகள் நிறுத்தி எங்கும் அகிற்றூமங்கள் கமழச்செய்து முத்துத்தோரணங்கட்டி, வீணை - வேணு - மிருதங்கம்-முதலான வாத்தியங்களையும் வாசித்துக்கொண்டிருந்தார்கள். அப்படியே வீதிகளில் சந்தனம்-குங்குமம்-பன்னீர்-முதலிய வாசனைகள்சேர்த்த நீர்களைத் தூளி யடங்கத் தெளித்துத் தளிர்களையும் புஷ்பங்களையு மிறைத்துச் சுபசூசகமாகிய மங்களவஸ்துக்களையும் பரப்பி, அங்கங்கே பரிமளமிகுந்த சாம்பிராணிப்புகை சந்தனப்புகைமுதலிய பலவகைப் புகைகளைக் கமழச்செய்து, மகரதோரணங்கள் கட்டி, அடிக்கொரு சாலைகள் மேடைகள் ஏற்படுத்தி, அதிற் பலவித உணவுகளும் - பானங்களும் - பழங்களும்-பூசிக்கொள்ளும் படியாகிய சுகந்தவஸ்துக்களும்- தகுந்த பூமாலைகளும் - ஏலக்காய்முதலிய விடையங்களோடுகூடிய தாம்பூலங்களும் நிறைத்து, சங்கீதத்திலும் நாட்டியத்திலும் திறமைபெற்று அழகினாலும் சாதுரியத்தினாலும் மேன்மையுற்று அபிநயகுணவிலாசமுள்ள ஸ்திரீகளை பலவித அலங்காரங்களோடும் - வாத்தியங்களோடும் - பரத நாட்டியத்திற்கு நிறுத்தி, அகசியஞ் செய்வதிலும் புகழ்வதிலும் அதிக கீர்த்திபெற்றபேர்களை ஆங்காங்கு இருத்தித் திருத்தினார்கள். அன்றியும் ஸ்திரீகளும் புருஷர்களும் நல்ல பணிகள் பூண்டு பட்டாடைகளுடுத்திச் சந்தன புஷ்பங்களைத் தரித்துச் சகல கோலாகலத்துடனேயும் எதிர்பார்த்திருந்தார்கள். இராஜக்கிரகங்களிலும் சபைகளையெல்லாம் திறந்து அலங்கரித்துத் தீபமாலிகைகளை வைத்து மிகவும் பரிஷ்காரஞ்செய்தார்கள். யானை - குதிரை - முதலிய வாகனங்களையும் தகுந்தபடி சிங்காரித்து ஆசாரவாசலில் நிறுத்தி, மாவுத்தர்முதலிய போர்ச் சேவகரெல்லாம் ஆயுத பாணிகளாக நின்றிருந்தார்கள். இப்படிக்கு அலங்கரிக்கப்பட்ட அந்தப்பட்டணத்தைப் பார்த்தாற் சனங்களுடைய விருப்பமே இவ்வடிவுகொண்டு வந்ததென்று சொல்லும் படியாகவும், இராச்சிய லட்சுமியானவள் பாண்டவர்களைச் சேரவேண்டு மென்று அலங்கரித்

துக்கொண்டிருப்பதுபோலவுமிருந்தது. அப்பட்டணத்து மாளிகைமீது கட்டியிருக்கிற கொடிச்சீலையானது ஆகாயத்திலசைந்துகொண்டிருப்பதைப் பார்த்தால், இராஜதானியென்னும் பெண்ணானவள் தன்னிடத்திற்குப் பாண்டவாள்வருகிற செய்தியைச் சந்தோஷத்தினால் தேவர்களுக்குத் தெரிவித்து அரசர்களைக் கைநீட்டிக்காட்டி அழைக்கிறதுபோலுமிருந்தது. பரிமள வாசனைப்புகைகள் மேலெழும்பிச் சூழ்ந்ததை நோக்கிற் பூமிதேவியார் பாபம் போககிப் புண்ணியமுண்டாக்கித் தன்னைப் பாண்டவர்கள் ஆளப் போகிறதை நினைத்துச் சந்தோஷத்தினாலே பூரித்தெழுந்ததுபோலிருந்தது.

இவ்வாறு அஸ்தினபுரமானது சகல அலங்காரங்களோடு நிறைந்திருக்கப் பாண்டவர்கள் வழியனைத்துங்கடந்து பட்டணத்திற்கு அருகிலிருக்கின்ற ஓர் உத்தியானத்திலிறங்கியிருக்கும்போது, துரோணாச்சாரியர் முதலானபேர்களெல்லாம் முன்னதாக வந்து கண்டார்கள். அவர்களைக் கண்டமாத்திரத்திற் பாண்டவர்கள் எழுந்திருந்து வந்தனஞ் செய்யவேண்டிய பேர்களுக்கு வந்தனஞ் செய்து ஆலிங்கனஞ் செய்யவேண்டியபேர்களை ஆலிங்கனஞ்செய்து, ஒருவரோடொருவர் க்ஷேமாதி சயங்களை விசாரித்து அவரவர்களுக்குத் தகுந்த ஆசனங்களிலுட்கார்ந்தார்கள். பட்டணத்திலிருந்துவந்த இராஜாதிகாரர்கள் பாண்டவர்களை வந்தனஞ்செய்து, அவர்களாற் குசலத்தை வினவப்பட்டவர்களாய்க் கைகட்டி வாய்பொத்தி நின்றார்கள். பின்பு சித்திரசேனனும் விகர்னனும் ஆசாரியர்களுடைய அனுமதியினாலே பாண்டவர்களைப் பார்த்து, ஓதமயன்மார்களே! ஏன் சாவகாசம் பண்ணுகிறீர்கள்? நம்முடைய தகப்பனார் முதலான யாவரும் உங்களைப் பார்க்க வேண்டுமென்று துரிதப்படுகிறார்கள். ஆகையால் அவர்களுடைய கண்களையு மனதையும் ஆனந்த வெள்ளத்தில் விளையாடச்செய்வீர்களாக. என்று வணங்கிச்சொல்ல பாண்டவர்களும் தம்பிமார்களைத் தழுவி, அப்பா! பாலிற் பழநழுவி விழுந்தாற்போலாச்சுதென்று சொல்லித் துரோணாச்சாரிமுதலிய ஆசாரியர்களுடைய முகத்தை நோக்கினார்கள். அப்போது ஆசாரியர்கள் குந்திகுமாரரைப்பார்த்து, ஓ குழந்தைகளே! சுவாமியினுடைய கிருபையினாலே நீங்கள் பல தத்துகளினின்றுந் தப்பிப்பிழைத்து மேன்மை தழைத்துவந்த செய்தி கேட்டதுமுதல், நமது தேசமுழுவதும் உங்களைக் காணவேண்டுமென்கிற பரவசத்தினாலே அலைதிரண்டு கரைபுரண்டு வந்த கடல்போல் நிற்கிறது. மகாராஜாவோ எப்போது வருவீர்களென்று எதிர்ப்பார்த்திருக்கிறார். ஆதலால் இவ்விராஜகுமாரரிருவரும் சொல்லுகிறபடி சீக்கிரம் புறப்படுங்கள் என்று சொல்லினர். அதுகேட்ட பாண்டவர்கள், சுவாமிகளே! பாக்கியமாயிற்று. இதோ புறப்படுகிறோம். என்று கூறித் தங்களுடைய ஊழியக்காரர்களைப் பார்த்தார்கள். அந்தச் சைகையறிந்த அவர்கள் உடனே வாகனங்களைக் கொண்டுவந்தார்கள். சித்திரசேனன் முதலானவர்களும் தங்களோடுவந்த பரிவாரங்களையெல்லாம் பிரயாணசன்னாகப் படுத்தினார்கள்.

உடனே பாண்டவர்கள் திவ்ய இரதங்களின்மீதிலேறிக்கொண்டு ஆசாரியர்களும் சித்திரசேனன் முதலானவர்களும் சகல பரிவாரங்களோடு தம்மைப் புடைசூழ்ந்துவரப் பேரிகைகள் - காகளங்கள் - டக்கைகள் மிர்தங்கங்கள் - நாகசுரங்கள் - குழல்கள்- முதலாகிய சகலவாத்திய கோஷங்களுடனே பிரயாணமாகிப் பட்டணத்திற் பிரவேசித்து வீதிகளிற் செல்லும்போது, பட்டணத்துச் சனங்களெல்லாம் மெத்தைகள்மீதிலும் மேடைகள்மீதிலும் - பிராகாரங்கள் மீதிலும் - கோபுரங்கள் மீதிலும் - கும்பற் கும்பலாகக் கூடிக்கொண்டு பாண்டவர்களைப்பார்த்த சந்தோஷத்தினாற் பேரானந்த மடைந்தவர்களாகி, அந்தப்பாண்டவர்கள் கேட்கப் பலவிதமாகப் புகழ்ந்து பேசிக்கொண்டார்கள். அவருட் சிலர் இதோவருகிறார் நம்மையெல்லாம் தன் பிள்ளைகளைப்போற் காப்பாற்றிய தருமபுத்திரராகிய மகாபுருஷனென்றார்கள். சிலர் அவரருகில் தனித்தனி தேரூர்ந்துவருகிறவர்கள் அண்ணன்சொற் றவறாமற் குடிகளுக்கு மேன்மைக்கிடமாகிய காரியங்களையே செய்ய முயல்பவராகிய தம்பிமார்களென்றார்கள். சிலர் நமக்கினி குறையொன்றுமில்லை சகலசம்பத்துக்களையும் அடைந்தோமென்றார்கள். சிலர் - ஓ சனங்களே! என்னபேச்சுப் பேசுகிறீர்கள்? பாண்டுமகாராஜனே நம்மைக்காக்கவேண்டுமென்று காட்டைவிட்டு மறுபடியும் நாட்டுக்கு வருகிறார் சந்தேகமில்லையென்று சொன்னார்கள். சிலர் நம்முடைய பிள்ளைகள் வருகிறார்களாதலால் இனியிம்மை மறுமைப்பயன் யாவும் நமக்குக் கிடைத்தனவென்றார்கள். சிலர் நீங்களெல்லாம் என்னபிதற்றுகிறீர்கள், இந்திரலோகத்திலிருந்து ஐந்துகற்பகத் தருக்கள் வருகின்றன, இனி யாம் ஒரு காரியமும் செய்யமாட்டோம், அப்போதைக் கப்போது வேண்டியவைகளை அந்தத் தருக்களிலே பெருக்கமாகப் பறித்துக்கொள்ளுவோம் என்றார்கள். சிலர் தருமதேவதை ஐந்து வடிவுகொண்டு வருகின்றது, ஆகையால் இவர்களை நோக்குவதும் சிந்திப்பதும் துதிப்பதுந் தவிர வேறுகருமத்தை நாம் செய்யமாட்டோமென்றார்கள். சிலர்-ஐயோ மூடர்களே! உங்களுக்கு என்ன அஞ்ஞானம், கண்ணனுடைய ஐந்தாயுதங்களும் நமக்கு க்ஷேமத்தைச் செய்யும்பொருட்டு இந்த நகரியில் இவ்வுருவங்கொண்டு வருகின்றனவென்றார்கள். சிலர் பாண்டவர்கள் இறந்தது மெய்தான், ஏனென்றால் - இறந்து சுவர்க்கலோகத்திற்குட்போய் நம்மிடத்தில்வைத்த தயையினாலே மறுபடியும் இவணிறங்கி வருகிறார்களென்று சொன்னார்கள். சிலர் அப்படி இல்லாவிட்டால் இப்படிப்பட்ட கம்பீரத்தன்

மையும் காந்தியும் இருக்கமாட்டாது, முன்னே நாம் இவர்களைப் பார்த்தபோது இந்தத்தேஜசு இல்லையே என்றார்கள். சிலர்-ஆ! நாமெல்லாம் உச்சிவிக்கும்படியாக இவர்கள் மீட்டும் இந்தப்பட்டணத்திற்கு வந்தது என்ன சிலாக்கியம் என்றார்கள். சிலர் என்னபாக்கியம். ஓ! ஓ! இந்தப்பெண்ணைப் பார்த்தீர்களா? இவள் இலட்சுமியோ? இரதிதேவியோ? பார்வதியோ? சரசுவதியோ? அல்லது காமன் சிருஷ்டித்தமாயையோ? இவள் மனிதலோகத்துப் பெண்ணல்ல, தேவலோகத்துப் பெண்ணுமல்ல, மனிதலோகத்துப் பெண்ணாகில் இவ்வளவு அழகுங் காந்தியும் இருக்கமாட்டாது, தேவலோகத்துப் பெண்ணாகில் இமைகொட்டுதல் இருக்கமாட்டாது. நாகலோக கன்னிகையோ வென்றால் பாதங்களி லிந்த அழகு இருக்கமாட்டாது என்றார்கள். சிலர் ஆ! ஆ! குந்தி யென்ன பாக்கியம் பெற்றாள், இப்படிப்பட்ட மருமகள் தன்னை வணங்கவுற்றாளே, ஒன்றுக்கொன்று தகுதியில்லாமற் கூட்டுகிறதென்று தெய்வத்தைப்பழிப்பது அனியாயம், இந்தப் பாண்டவர்களுக்குத் தக்கபடி இந்தப்பெண்ணை இதோ அமைத்திருக்கிறதே என்றார்கள். சிலர் அந்தத் துருபதன் மகா பாக்கியஞ்செய்தான். ஆனதினாலல்லவா இப்படிப்பட்ட மகளும் கிடைத்து, இவட்குத்தகுந்த மருமகர்களையும் படைத்தான், அவன்செய்ததல்லவோ தவம், நாமிவர்களைக் காண்பதற்கு என்னபாக்கியஞ்செய்தோமோ என்றார்கள். சிலர் யார்செய்த புண்ணியமோ இந்தப் பாண்டவர்கள் கொடிய ஆபத்துகளில் நின்றும் தப்பி மறுபடியும் நம்மைப் பார்க்கவந்தார்கள், இவர்களுக்குக் கொடுமைசெய்ய நினைத்த பாவிகள் இப்போது என்னபண்ணுவார்கள் என்றார்கள். சிலர் நாமெல்லாம் புண்ணியஞ்செய்திருந்தால் இவர்கள் நிலைபெற்று இங்கேயே இருக்கக்கடவர்கள் என்றார்கள். இவ்வாறு பற்பலவிதமாகப் பேசிக்கொண்டு கண்களை மலர்த்திப் பார்த்து வருகிற ஜனங்களைப் பாண்டவர்கள் குளிர்ந்த தாமரையிதழ் தேன்களைவீசுந் தன்மைபோற் கடாக்ஷவீக்ஷணியங்களினாலே நோக்கிப் புரஜனங்களைப் பூரிக்கச்செய்து, அங்கங்கே யிருக்கிற வினோதங்களை யெல்லாம் பார்த்து இராஜகிரகத்திற்குச் சமீபத்திற்போயிறங்கி விகர்ணனுஞ் சித்திரசேனனும் முன்னடக்கக் கண்ணனைக் கைபிடித்துக்கொண்டு அரண்மனைக்குட்சென்று, முறையே விஷ்மாச்சாரியார் திரிதராஷ்டிர மகாராஜன் முதலாகிய பெரியோர்கள் பாதங்களில் வணங்கிக் கும்பிட்டார்கள்.

பின்பு சிறியோர்கள் தங்களைவணங்க அவர்களுக்குப் பல ஆசிகளுரைத்து மாளிகையுட் சென்றார்கள். அங்கேபானுமதியான துரியோதனனுடையமனைவியானவள் தன் ஓரகத்தியுடனே கூடிக்கொண்டு, திரௌபதியைப் பார்த்துத் தன்மாளிகைக்கு வந்த மஹாலக்ஷ்மிதேவிபோற் பாவனைசெய்து அவளுக்குச் சகல உபசாரங்களையும்பண்ணி அந்தப்புரத்திற் கழைத்துக் கொண்டுபோனாள். அவ்விடத்திலே குந்திதேவியும் திரௌபதியும் காந்தாரியைக்கண்டு வணங்க அவள் இருவர்க்கும் ஆசீர்வாதங்களைச் சொல்லித் திரௌபதியை ஆலிங்கனம் செய்துகொண்டு, மனதில் இவள் நம்முடைய மக்களைக்கொல்லவந்த மிருத்துதேவதையேயென்று நினைத்துப் பொறாமையுற்ற மனத்தோடு பொறுத்தற்கரிய வஞ்சகமும் தன்னைப் புடைசூழக் கூடியிருந்தாள். பின்பு அந்தக் காந்தாரியானவள் கொஞ்சம் ஆலோசித்துக் குந்தியும் அவள்மருமகளும் தன்னிடத்தி லிருப்பதைவிடப் புறத்தி லிருப்பதில் தன் மனதிற் கிஞ்சித்துத் திருப்தி என்று நினைத்து அதற்காக விதுரனைநோக்கி, இவர்களிடத்திற் பக்ஷமுள்ளவள்போலவும்- இவர்கள்பொருட்டுப் பரிவுடன் பேசுகின்றவள்போலவும் காட்டி, ஐயா விதுரரே! இன்றைக்குத் திதியும் நட்சத்திரமும் நன்றாயிருக்கிறபடியாற் குந்தியையும் அவள் மருமகளையும் பாண்டுமகாராஜனுடைய மனைக்கு இட்டுக்கொண்டுபோய்க் கிரகப்பிரவேசஞ்செய்வியும். சாதாரணமானவர்கள்போல் அவர்கள் தங்கள் வீடுவிட்டுப் புறத்தியி லிருப்பது நன்றாயிருக்கவில்லை. ஆனால் உமக்கும் இப்படி சம்மதியாயிருந்தாற் செய்யலாம். எனக்கோ அப்படிசெய்வது உத்தமமென்று தோற்றுகிறது. அன்றியும் அவர்களுக்கு வேண்டிய இராஜ பூசிதமான சகல வஸ்துக்களையும் முன்னதாய் அவ்விடத்திற் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கவேண்டுமென்று சொல்லினாள். விதுரனும் அப்படியே செய்கிறேனென்று பாண்டுமஹாராஜனுடைய மாளிகையைச் சுத்தி செய்து அலங்கரித்துப் புரோகிதர்களையும் பிராமணர்களையும் அழைப்பித்துச் சுவஸ்திவாசனஞ் செய்வித்து, வாத்தியகோஷ முதலான சகலவிபவங்களையு நடத்திப் பாண்டவர்களுடனே பாஞ்சாலியைக் கிரகப்பிரவேசஞ்செய்வித்தான். அப்போது பட்டணத்திலிருக்கும் சகலமானபந்துக்களும் - பெரியமனிதர்களும் - பெரியவர்த்தகர்களும்- இராஜசேவகர்களும்-நாட்டிலிருக்கும் உழவர்கள் முதலிய சகலசெனங்களும் கூட்டங்கூட்டமாகப் பாண்டவர்க ளிடத்துச்சென்று, அவ்வவர்களுக்கும் தகுந்த மரியாதையுடன் தனித்தனி அளவற்ற கையுறைகளோடும்வந்துகண்டு, காணாதுகண்ட காட்சிக்கொப்பாக மிகக் களிப்படைந்து சரீரமெல்லாம் புளகமுற்று இருவிழிகளிலும் ஆனந்தபாஷ்பம்பெருக யோகக்ஷேமங்களைக்குறித்து அடிக்கடி பேசிக்கொண் டிருந்தார்கள்.

இப்பால் வீஷ்மாசாரியர் - துரோணாசாரியர் - கிருபாசாரியர் - முதலான பேர்கள் முறையே தினந்தினம் ஒவ்வொருவராய்ப் பாண்டவர்களுக்கு விருந்துசெய்து வந்தார்கள். இப்படிக்கப் பாண்டவர்கள் சகலமானபேர்களும் கொண்டாடக் கிருஷ்ணனோடுகூட விருந்துபுசித்துக்கொண்டு வேடிக்கையா யிருக்குமளவில் விதுரன்,திரிதராஷ்டிரமகாராஜனுடைய ஆக்கினையி

(14)

ராமன்யுவராஜபட்டாபிஷேகம்.)

(REGISTERED-COPY-RIGHT.)



(அ) ஸ்ரீபர்வம்-௧அ௯-வது-பக்கம்.)

னாலே பாண்டவர்களுக்கு வேண்டிய சகலகாரியங்களையும் நடத்திவந்தான். இவ்வாறு சிலகாலங்கழித்தவுடனே கண்ணில்லா மன்னவன் வீஷ்மாசாரியுடனேயோசித்துப் பாண்டவர்களைத் தன்னிடத்திற்கு அழைத்துவரும்படி கட்டளையிட்டான். அவர் அதனை அவர்க்களுக்குத்தெரிவிக்க உடனேஅவர்களும் அக்கட்டளையின்படி பெரிய தகப்பனாரிடஞ் சென்று தொழுது, அவன் உத்தரவினாலே அவனருகிலிருக்கும் ஆசனத்தில் உட்கார்ந்தார்கள். மஹாராஜன் அவர்களை நோக்கி வீஷ்மர்முன்னிலையாக ஒருவார்த்தை சொல்லத் துவக்கினான். ஓ குழந்தாய் தருமபுத்திரா! நீயும் உன்தம்பிமார்களும் இப்போது நான்சொல்லுகிற வார்த்தையைக் கேட்கவேண்டும். அதாவது- முன்பு உங்கள்பிதாவாகிய பாண்டுமகாராஜன் எனது கட்டளையை மீறாமல், இந்தராச்சியத்தைப் பரிபாலனஞ் செய்து விருத்தியாக்கினான். என்தம்பி மகாபலசாலியும் பராக்கிரமமு முடையவ னாகையாலே, கண்டபேர்கள் வியக்கும்படி. தன்தேசத்தைக் காப்பதிலும் - பிறர்தேசத்தைக் கவர்தலிலும் - சாதுரியமாகிய காரியங்களையெல்லாஞ் செய்துவந்தான். ஆதலால் நீயும் எனதுகட்டளையை மீறாமல் நடக்கவேண்டும். என்னுடைய பிள்ளைகளெல்லாம் கொடியசிந்தை யுடையவர்கள். பொறாமையும் - அகங்காரமு முடையவர்கள். அவர்கள் என்சொற்படி கொஞ்சமும் நடப்பதில்லை. தாங்கள் மாத்திரம் மேன்மைப்படவேண்டுமென்று அறியாமையாலும் - செருக்கினாலும் - வஞ்சனையான பிரயத்தின முள்ளவர்களா யிருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் இவ்விடத்திலேயே இருப்பதினாலே மறுபடியும் அவர்களுக்கும் உங்களுக்கும் கலகம் நேரிடும். அப்படிக்கு நேரிடுவதினாலே அனேகங்குற்றங்கள் விளைகின்றன. ஆதலாற் சரசமாகவே இப்போது நீ உன்தம்பிமார்களுடனேயும், தாயார் திரௌபதி - முதலானவர்களுடனேயும், காண்டவப் பிரஸ்தத்திற்குச் சென்று இராச்சியபரிபாலனஞ் செய்துவருவாயாகில் நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது. இதுவே நமக்குப் பெரியோர்களாகியும் உத்தமர்களாகியும் இராநின்ற வீஷ்மாசாரியார் - துரோணாச்சாரியார் - முதலானவர்களுடைய கருத்து. நம்முடைய இராச்சியத்திற் பாதி துரியோதனனுக்கும் பாதி உனக்குமாகப் பங்கிட்டுக் கொடுக்கிறேன். அதை நீ காண்டவப்பிரஸ்தத்திலிருந்து பரிபாலனஞ் செய்துகொண்டு வரவேண்டியது. அருச்சுனனிருக்கும்போது நீங்கள் எவ்விடத்திலிருந்தாலும் யார்தான் உங்களை அசைக்கமாட்டுவார்கள். இது உனக்கு யுக்தமென்று தோன்றுகிறதோ அல்லது அயுக்தமென்றுதோன்றுகிறதோ எனக்கொன்றுந் தெரியவில்லை. நீ கண்ணனுடனே யோசித்து அவருக்குஞ்சம்மதியாயிருந்தால் அந்தப்படி நீ அவசியம் நடக்கலாம் என்றான். தருமபுத்திரன் கண்ணனுடன் கலந்துபேசினார். அவரும் அப்படியே செய்வது நன்றென்றுசொல்ல தருமன் தகப்பனாரிடத்திற்குவந்து, உம்முடைய உத்தரவின்பிரகாரமே நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேனென்று வணங்கினார்.

தருமராஜனுக்குப் பாதிராச்சிய பட்டாபிஷேகம்.

உடனே திரிதராஷ்டிரன் விதுரனையழைத்து, நம்முடைய தருமபுத்திரனுக்குப் பாதிராச்சிய பட்டாபிஷேகஞ்செய்து பார்க்கவேண்டுமென்கிற ஆசையெனக்குண்டாயிருப்பதால் அதற்காகவேண்டிய வஸ்துக்களைச் சீக்கிரத்திற் சேகரிப்பாயாக. இந்த வேளையே சுப முகூர்த்தமாக இருக்கிற படியால் இப்போதே பட்டாபிஷேகத்தைப் பண்ணுகிறேன். ஆதலாற் பிராமணர்களை அழைப்பித்து ஸ்வஸ்திவாசன முதலிய காரியங்களை விரைவில் நடத்தவேண்டும். நமது குலத்திற்குரிய பெரியோர்களும்- நமது நகரத்திற்குரிய நாகரிகர்களும் - வணிகருட்சிறந்தோரும், சமீபத்திலிருக்கும் நாடுமுதலியதேசத்தார்களும் - சீக்கிரமிங்கு வரவேண்டும். நம்முடையகுழந்தை தருமபுத்திரனுக்குப் புண்ணியாவாசன முதலியவைகளைச் செய்து கங்கணங்கட்டவேண்டும். வந்தவேதியர்கட்கெல்லாம் கோதானமும் - பூதானமும் - வஸ்திரதானமும் - சுவர்னதானமும் - செய்யவேண்டும். முன்னதாக ஆயிரத்தெட்டு மறையோர்கள் சென்று யானைகளின் மீது கங்காசலத்தைக் கொண்டுவரவேண்டும். வந்தபேருக்கெல்லாம் அறுசுவைகளுடனே வேண்டிய மட்டும் அன்னம் பரிமாறவேண்டும். நம்முடைய பட்டணமெல்லாம் அலங்கரிக்கவேண்டும். சபாமண்டபத்தையும் விசித்திரமாகச் சிங்காரிக்கவேண்டும். நமது பொக்கசத்திலிருக்கிற உயர்ந்த வயிரங்களும் பச்சைகளுமிழைத்துத் தகத்தகாயமானங்களா யிருக்கிற தோள்வளைகளையும்,முத்துக்களு மாணிக்கங்களுமிழைத்துக் கோடிசூரியப் பிரகாசமாக விளங்காநின்ற கிரீடத்தையும், நவரத்தினங்களிழைத்து மின்னலை உமிழ்கின்ற கடகங்களையும், நிலவைவீசுகின்ற ஆணிமுத்துக்களாலாக்கப்பட்ட உயர்ந்த ஆரங்களையும், பச்சைமணிகளாலும் முத்துக்களாலும் தொங்கிட்ட மிடப்பட்டு இந்திரவில்லின் எழிலைக்காட்டுகிற பலவிதபதக்கங்களையும், இரத்தினங்களிழைத்த முகப்பினையுடைய பத்தரைமாற்றுத்தங்க அரைஞாணையும், நவமணிகளுமிழைத்துத் தேசோமயமாய் விளங்காநின்ற உதர பந்தனத்தையும் எடுத்து தருமபுத்திரனுக்குக்கொடுத்து அலங்காரஞ் செய்யச்சொல்லுக. இப்படிப்பட்ட உயர்ந்த ஆபரணங்களை அணிந்துகொண்டு அபிஷேக தீர்த்தத்துளிகள் தேகங்களில்விளங்கப் பட்டத்து யானையின்மீதேறி இருபுறத்திலும் மாணிக்கங்களைப்பதித்த பொற்பூண்களையுடைய வெண்சாமரங்கள் வீச, முத்துக்கோர்வையின் கொத்துகளினாற் சுற்றிலும் அலங்கரிக்கப்பட்ட வெண்பட்டுக்குடைபிடிக்க, ஜயாவிஜயபவா என்று வேதியர்கள் ஆசீர்வதிக்க, மற்றைப்பெயர்கள்

துதிக்க, பலவாத்தியங்கள் முழங்க, கட்டியங்கள் கூற, தாசிகளாட, பாடகர் பாட, குதிரைகளும் யானைகளும் அலங்காரத்துடனே முன்னும் பின்னுஞ் சூழ்ந்துவர, இவ்வாறு பற்பலவித விபவங்களோடு தருமபுத்திரன் ஊர்க்கோலம் வரக்கண்டு; ஜனங்களெல்லாம் தங்கள் இஷ்டம் நிறைவேறியதென்று மனமகிழ்ந்து கொண்டாடித் துதிக்கட்டும். என்னையு மதிக்கட்டும். என்று திரிதராஷ்டிர மஹாராஜன் விதுரனை நோக்கிச் சொன்னமாத்திரத்திலே விதுரன்மகிழ்ந்து, அந்தமுயற்சிகளில் அந்தத்திரிதராட்டிரன் சொல்லியதினும் பதின்மணங் கதிகமாக விருந்தான். வீஷ்மர் - துரோணர்-முதலாகியவர்களெல்லாம் இராஜாவை மிகவும் புகழ்ந்தார்கள். அப்போது யதுகுலசிகாமணியாகிய பகவானும், ஓய்மகாராஜனே! உம்முடைய மனதின் உதாரத்துவத்தை நான் என்னவென்று சொல்லுவேன். நீர் பக்ஷபாதமின்றித் தம்பிமக்களுக்கு இராச்சியமளித்தது உம்முடைய குலப்பெருமைக்கும், கற்றவர் நடைக்கும், மற்றவர் நியாயத்திற்கும், ஒத்திருக்கின்றது. இந்த முடிசூட்டுந் திருவிழாவைச் சிறப்பாக நடத்தமுயல்வது உமது பெருந்தன்மையை மிகவும் மேலாக விளக்குகின்றது. இது எல்லாருடைய மனதிற்கும்-கண்களுக்கும்-காதுகளுக்கும் - திருப்திகரமான காரியம். நீர் இப்படிப்பட்ட மனதுடனே எக்காலமும் வாழ்ந்துகொண் டிருக்கவேண்டு மென்று வாழ்த்தி அந்தந்த வேலைகளை விரைவில் நடத்தித் தருமபுத்திரருக்குத் தாமே அலங்காரமுதலாகிய காரியங்களைச் செய்வித்துப் பட்டாபிஷேக மண்டபத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார்.

அந்தச் சமயத்திலே வியாசமகாமுனிவர் அவ்விடத்திற்கு எழுந்தருள, அவரை எல்லோரும் பூசித்துத் தாழ்ந்துநிற்க, அம்முனிவர் அவர்களால் தருமபுத்திரருக்குப் பட்டாபிஷேகமாகிற செய்திகேட்டுச் சந்தோஷித்துத் தாமே சிங்காசனத்தில் தருமபுத்திரனை நிறுத்தி மங்களாசனஞ்சொல்லிப் பிராமணர்களுடனே தாமும் முதலிற் கிரீடத்தை யெடுத்து வேதமந்திர ஆசீர்வாதத்தினாலே அவர் சிரசிற் சூட்டினர். பின்பு முறையே க்ஷத்திரியர்களாலேயும் - வைசியர்களாலேயும்-மந்திரிகள் முதலான பிரமுகாளாலேயும் — கன்னிகைகளினாலேயும் - திருமுடிப்பட்டஞ் சூட்டிவித்து, ஔஷதிரசங்களுஞ் சுகந்த வஸ்துக்களுஞ் சேர்த்துத் தவப்பெருமையுள்ள பெரியோர்களாலே வேதமந்திரங்கள் செபித்துச் சாந்திசெய்யப்பட் டிருக்கிற புனிதமாகிய பலதீர்த்தங்களினாலே அபிஷேகஞ்செய்வித்தார். அந்தக் காலத்திற் பஞ்சகருவிகளாலாகிய வாத்திய ஒலிகளும், பிராமணர்களுடைய ஆசீர்வாத ஒலிகளும், மந்திரிகள் முதலாயினோருடைய ஜயஜய ஒலிகளும், திக்குகளைச் செவிடுபடச்செய்தன. இவ்வாறு சிறப்பாகப் பட்டாபிஷேகம் நடக்குங் காலத்திலே காண்டவப்பிரஸ்தத்தின் மகாராஜாவாகிய தருமபுத்திரர் அனேகம்பொன்மாரிபொழிந்து, தரித்திரர்களுடைய கண்மாரியான கலக்கத்தைப்போக்கினார். அப்போது இரண்டு கன்னிகைகள் தங்கள் இரண்டிரண்டு கைகளிலுள்ள வளைகள் கலகலவென்று ஒலிக்கும்படி ஆகாசகங்கையின் பிரவாகங்கள் இரண்டு புறத்திலுந் திரண்டு வீழ்வதுபோல் வெண்சாமரங்கள்வீசவும், மற்றொருத்தி முகவழகைக் கவர வந்திருக்கும் பூரணசந்திரன்போன்ற வெள்ளைக்குடைபிடிக்கவும், நவமணியிழைத்துக் கிண்கிணிகள்கட்டி விளங்காநின்ற திவ்வியசிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தருமபுத்திரரை வியாசர்முதலிய மறையோரெல்லாம் ஆனந்தபரவசத்தோடும் நோக்கி, ஓ காண்டவப் பிரஸ்த மகாராஜனே! இனி நீர் பூமண்டலம் முழுதையும் ஜயித்துச் சகலராஜாக்களையும் பணியும்படி செய்து மிகுந்த தட்சணைகளுடன் கூடிய இராஜசூய முதலிய அனேக யாகங்களையுநடத்தி, இஷ்டர்களுடனே பலகாலம் வாழ்ந்துகொண் டிருக்கக் கடவீர் என்று ஆசீர்வதித்து, பூனைமுறியாது - கறுப்புறாது-நொறுங்குதலில்லாது-நொய்யாகாது-உமிநெல்லுடன் உறவாகாது-நல்ல நிறம்பெற்று விளங்குகின்ற மஞ்சள்திமிர்ந்த அரிசி அட்சதைகளையும், பொன்னினாலும் - பூவினாலும்-மணியினாலும்-ஆகிய பலவிதவினோத அட்சதைகளையும் தருமராஜன் முடிமேல் இறைத்தார்கள். அப்பால் அனேகராஜாக்கள் வந்து துதித்து நின்றார்கள். இப்படிபட்டாபிஷேகம் நிறைவேறியபின்பு தருமபுத்திரர் வேதியர்களுக்கு வேண்டிய அன்னங்கள் அறுசுவை பதார்த்தங்களோடும் அளவற்ற பலகாரவகைகளோடும் பரிமாறி, அவர்கள் புசித்தபிறகு மற்றவர்களுக்கும் அவ்வாறே அன்னமளித்துத் தானும் இஷ்டர்களுடனே புசித்துத் திவ்விய கந்த புஷ்ப தாம்பூலங்களினாலே எல்லோரையும்பூசித்துப் பட்டத்துயானையின்மீதேறிச் சகலவித வைடவத்தோடு அந்த அஸ்தின நகரத்தை வலம்வந்து தன்மாளிகையில் இறங்கி ஸ்ரீகிருஷ்ணர் முதலாகிய இஷ்டர்களுடனே சரசசல்லாபஞ் செய்துகொண்டிருந்தார். இந்த மகோற்சவத்தினால் இராஜராஜர்கள் வேதப்பிராமணர்கள் முதலிய எல்லோரும் சந்தோஷித்து மனமுவந் திருந்தார்கள். குருடன் மக்களும் அவரிஷ்டர்களுமாத்திரம் சிறிதுங்கண்ணெடுத்துப்பார்க்கச் சகியாமல் மனம்வெந்திருந்தார்கள்.

திருமுடிபுனைந்த சருக்கம்.

முற்றிற்று.

(இந்திரபிரஸ்தம்.)

(REGISTERED-COPY-RIGHT.)

(ஆதிபர்வம்-ககை-வது-பக்கம்.)

பன்னிரண்டாவது,

இந்திரப்பிரஸ்தச் சருக்கம்.

கண்ணன் துதி,

அரிய கங்குலி னன்னைதன் வடிவுகொண் டலகையா கியநங்கை
பரிவு பொங்கவந் தெடுத்தணைத் துவக்குளம் பரிந்துடன் பாராட்ட
வுருகு மாமுலைப் பாலுட னவளுயி ருண்டமு முருகார்மெய்
கரிய கோவலன் செய்யதாண் மலர்களென் கருத்தைவிட் டகலாவே.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே! இவ்வாறுகப் பெருமை அடைந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்துச் சகிக்கமாட்டாம லிருக்கிற தன் புத்திரருடைய கருத்தறிந்த திரிதராஷ்டிரனானவன் கிருஷ்ணனுக்கு முன்னிலையில் தருமபுத்திரரைப் பார்த்து, அப்பா தருமநந்தனா! நீ வணக்கம் ஒடுக்கமுதலிய நற்குணங்களுடையவனாதலால் உனக்கு இராச்சிய பட்டாபிஷேகங் கிடைத்தது. அப்படி இல்லாதவர்களுக்குக் கிடைப்பதரிது. ஆதலால் நீ சகல பாக்கியங்களினாலேயுஞ் சிறப்பை அடைந்தாய். இனிச்சாவகாசமாகாமல் இப்பொழுதே காண்டவப்பிரஸ்தத்திற்குப்போவது நன்று. ஆனால் தகாதவிடத்திற்கு நானுன்னைப் போகச்சொன்னதாக நீ நினைக்கவேண்டாம். அந்தக் காண்டவப்பிரஸ்தமானது முன்னே கவுரவனென்னும் நமது பெரியோருடைய இராஜதானியா யிருந்தது. நம்முடைய குலத்திற்குக் கூடஸ்தராகிய இளிபிளனென்னும் மகாராஜனுக்கு முனிவரெல்லாம் கூடி அவ்விடத்திலே இராஜதானி ஏற்படுத்தினார்கள். அப்பால் ஆயுஸ் - புரூரவஸ் - நகுஷன் - யயாதி - என்கிற மகாராஜாக்களெல்லாம் அதிலிருந்து அதிகாரஞ் செலுத்தி வந்தார்கள். பிற்பாடு அத்திகனென்பவனால் இந்த அஸ்தினாபட்டணம் ஏற்படுத்தப் பட்டது. அங்கே நீ போனால் உன்னிடத்தில் பிராமணர் - க்ஷத்திரியர் - வைசியர் - சூத்திரர் - என்னும் நான்கு வருணத்தாரினின்றும் அனேகம்பெரியோர்கள் வந்து சேருவார்கள். மிருகங்கள் கூட விசுவாசத்துடன் ஒன்றுக்கொன்று வாசஞ்செய்யும். அந்த இராச்சியமானது இதைக்காட்டிலும் தனந்தானிய முதலியவைகளாலே நிறைந்திருக்கின்றது. நீர்வளமும் நிலவளமுமுள்ளது. தேகத்திற்கும் மனதிற்கும் மிகவும் நன்மை யுண்டாக்கத் தக்கது. அவ்விடத்திலே ஒருகுறைவுமில்லை. நீ அங்கே போய் ஏற்படுத்துகிற பட்டணமானது மிகவிசேஷமாக இருக்கும். என்னப்பனே! நீஅங்குசென்று உன் தம்பிமார்களுடனே செங்கோல்செலுத்தி உங்கோனாகவிருவென்று சொல்லினன். அதுகேட்ட தருமபுத்திரர் உடனே அங்கேபோவதை நிச்சயித்துத் தானுந் தன் தம்பிமார்களும் தகப்பனைக் கும்பிட்டு, ஐயா! அப்படியே தங்கள் ஆக்ஞையைச் சிரசில் வகிக்கின்றோம். உம்முடைய பாதத்தின் கீழிருந்து பணிவிடை செய்யப் பாக்கியம் பெற்றிலோமென்று சொல்லி அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, அனேகமாகிய இரதங்கள் - கஜங்கள் - அசுவங்கள் - பதாதிகள் - என்கிற சதுரங்க சேனைகளுடன் மகா சந்தோஷத்தோடும் புறப்பட்டார்கள்.

கண்ணன் இந்திரனாற் காண்டவவனத்தைப் புதுப்பித்தது.

அப்பொழுது அந்தப் பாண்டவர்களுடன் கூடச் செல்லவேண்டுமென்று அஸ்தினாபுரத்தி லிருக்கும் அனேகர் விருப்பங்கொண் டிருந்தும் துரியோதனனுடைய ஆக்கினைக்கஞ்சி அங்ஙனே நின்றுவிட்டார்கள். பாண்டு குமாரர்கள் பெருங்காடு மூடிய காண்டவப்பிரஸ்தத்திற்குச் சென்று மிகவிரைவிற் காடுகளை வெட்டிச் சீர்திருத்திப் பட்டண மேற்பாடுசெய்ய ஆரம்பிக்கும்போது, ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் இந்திரனைச் சிந்தித்தார். இந்திரன் சுவாமியைவணங்கிநின்று அவரிட்ட கட்டளையின்படி நிறைவேற்ற விசுவகர்மாவை அனுப்பிவித்தான். அந்த விஸ்வகர்மாவும் ஸ்ரீ வாசுதேவரது பாதங்களைத் தொழுது அடியேனுக்கென்ன கட்டளையென்று கேட்க, ஸ்ரீ கிருஷ்ணதேவர் - ஓ சிற்பங்களி னுட்பங்களை யெல்லாம் நன்குணர்ந்த விசுவகர்மாவே! இந்திரனானவன் பாண்டவர்களுக்காக உம்மை யழைப்பித்து இக்காண்டவப் பிரஸ்தத்தைச் செம்மை செய்யும்படி கட்டளை யிட்டபடியால், இன்றுமுதல் இக்காண்டவப் பிரஸ்தம் இந்திரப் பிரஸ்தமென்று நாமதேயமடைந்து உலகத்தில் வழங்கும். ஆதலால் - இங்கு நீர் பாண்டவர்களுக்கு இராஜதானியை உண்டாக்க வேண்டுமென்று ஆக்கியாபித்தனர். அப்படியே விசுவகர்மாவும் நந்தினி என்கிற நதியினருகிற் சுவர்க்கத்திற்கு நிகராகிய இந்திரப் பிரஸ்தமென்கிற மகாநகரத்தை நிருமித்தான். அஃதெப்படி யென்றால். அண்டச் சுவர்க்குச் சமானமாக ஆகாசத்தை அளாவிநிற்கிற மதில்களையும், அதைச் சுற்றிலும் கடல்களுக்கு நிகராகிய அகழிகளையும், கைலாச பருவதம்போன்ற சிறந்த மாளிகைகளையும், சூரிய சந்திராதி மண்டலங்களைத் தழுவும்படியான கோபுரங்களையும், கருடன் தனது இரண்டு சிறகுகளை விரித்தாற்போலிரா நின்ற கதவுகளையும், அதிகசாக்கிரதையுள்ள

காவற்காரரையும், பலவித ஆயுத யந்திரங்களமைத்த அரணங்களேயும் உண்டாக்கி; அகன்றும் - நீண்டும்-சமமாயும் - கோணலின்றியு மிராநின்ற வீதிகளும், மண்டபங்களும், சாலேகளும், சந்திகளும், தேவாலயங்களும், நந்தனவனங்களும், உத்தியானங்களும் ஏற்படுத்தி; அமிர்தத்திற்கொப்பாகிய தண்ணீர்மலிந்த தடாகங்களும், சகலவஸ்துக்களும் நிறைந்த பலவித கடைத்தெருக்களும், உரமும் - சுறுசுறுப்பும் - இலட்சணங்களு முடைய யானேகுதிரை முதலிய வாகனங்களும், சித்திரச்சாலேகளும், வித்தியாசாலேகளும், ஆயுதச்சாலேகளும், ஆங்காங்கு கிரமப்படி சமைத்துத்தர: அப்பட்டணமானது மன்மதனுக் கொப்பாகிய ஆடவரையும் இரதிதேவிக் கொப்பாகிய மங்கையரையும் அடைந்து மூன்று லோகங்களிலிருக்கிற எல்லாப் பட்டணங்களேயும் பரிகாசஞ்செய்து நகைக்கிறதென்று சொல்லும் படியான பிரகாசத்தோடும் விளங்கிக் கொண்டிருந்தது.

அதில் அரண்மனே யொன்று கட்டப்பட்டது. அந்த அரண்மனே யானது அப்பட்டணத்தி னருகிற் கேசரமலேகளுக்கு மத்தியில் மேருபர்வதம்போற் சூரியனது தேரோடும் படியான வழியை அடைந்து, ஆணிப்பொற் றகட்டினல் மூடப்பட்டு, நவமணிகளு மிலங்குகிற ஸ்தம்பங்களும் படிகட்டுகளுமியற்றி ஏழு விதக்கட்டுகளோடு மூன்றுவித மேல்மெத்தைகள் முதலாகியதும் பூமியின்கீழ் வீடுகளுமுள்ளதாய் அங்கங்கும் விசாலமாகிய சபாமண்டபங்களும் - திசைமயக்கம் வரும்படியான சிலவீடுகளும் - விளேயாடுகிறதற்கு யோக்கியமாகிய சிலசாலேகளும் செய்யப்பட்டுக் கண்ணுடிபோ லிராநின்ற சுவர்களாலுந் தளவரிசைகளாலும் விளங்காநின்ற அறைகளில் முத்துக்கொத்துகளும் பவழக் கொத்துகளுந் தொங்காநின்ற இரத்தினக் கொடுங்கைகளுள்ளதாகிய பலவித ஆசனங்கள் போட்டு, இது ஒரு தேவபூமியென்று சொல்லும்படியாகிய கொலுமண்டபத்தினேடும் விளங்கிக்கொண்டிருந்தது. அதனருகில் அவ்விஸ்வ கன்மனுனவன் எக்காலமும் பூப்பதுங் காய்ப்பதுந் தளிர்ப்பதுமாகிய விசேஷமாகிய வாசனேயும் ருசியும் சீதளமும் பொருந்தி இராநின்ற பலாமரம் - மாமரம் - மாதுளேமரம்-எலுமிச்சைமரம் - நாரத்தைமரம் - பேரீச்சமரம்- தென்னேமரம் - பனேமரம் - சண்பகமரம் - பாதிரிமரம் - புன்னேமரம் - குருக்கத்திமரம் - கடம்புமரம் - மகிழமரம் - அத்திமரம் - அசோகுமரம் - அரசமரம் - ஆச்சாமரம் - பச்சிலேமரம் - பாலேமரம் - முன்னே மரம்-கொன்றைமரம் - சந்தனமரம் - விளாமரம் - வில்வமரம் - முதலாகிய பற்பல விருக்ஷவகைகளும், மல்லிகை - முல்லே - இருவாக்ஷி - முதலிய பல பூஞ்செடிகளும், தாமரை - செங்கழுநீர் - நெய்தல் - முதலியவைகளால் நிறைந்து அன்னம்- சக்கிரவாகம்-முதலிய பறவைகளொலியாநின்ற திவ்வியத் தண்ணீருள்ள பலவாவிகளும், அவற்றின்கரைகளில்விசாலமாயும் அழகாயுமிராநின்ற பளிங்கினலாகிய மேடைகளும், மயில்கள்குயில்கள்-கிளிகள்-மு தலாகியபலவிதப்பட்சிகள் சப்தித்துக்கொண்டு வண்டுக ளிசைபாடவிளங்கும் இடங்களு முண்டாக்கினன்.

பாண்டவர் குடிபுகுதல்.

இப்பால் ஆதிசேஷனுலுஞ் சொல்லக்கூடாத மகிமை பொருந்திய அந்த நகரத்தைச் சுற்றிப்பார்த்த பாண்டவர்கள் மிகவும் ஆனந்தமடைந்து கண்ணனேக் கட்டிக்கொண்டு துதித்து, வியாசமகாமுனி - தவுமிய மகாமுனி - இவ்விருவ ரனுமதியின்படி நன்முகூர்த்தத்தில் வாஸ்துசாந்தி செய்து, கோபூஜை - பிராமணபூஜை-முதலானவைகளே நடாத்தி, அவ்வியாச தவுமியர்களே முன்னிட்டுக்கொண்டு வாசுதேவனேடு யானேயின்மீதேறிப் பரிஜனங்களெல்லாம் சகலவாத்தியங்களு முழக்கி ஜயகோஷ்டமிட மிகச்சிறப்பாய் நகரத்தை வலம்வந்து, முப்பத்திரண்டு நிலேகளுடனே விளங்காநின்ற பிரதானகோபுர வாசலாலே உள்ளேநுழைந்து, முறை முறையே வீதிகளேச் சுற்றிக்கொண்டு அரண்மனேக்குட் பிரவேசித்துப் பிராமணர்களுக்குத் திரவியதானங்களும் மற்றையர்க்கு அன்னதானங்களும் வழங்கி, அந்தராச்சியத்தை அளகாபுரியினு மேலானதாக வெண்ணி ஆண்டுகொண் டிருந்தார்கள். இப்படி யிருக்கிறநாளிலே அந்தப் பட்டணத்திற்கு வேத முதலாகிய பதினன்கு வித்தைகளேயும் நன்றாயுணர்ந்து நல்லொழுக்கமும் ஞானமு முடையவர்களாகிய அனேக வேதியரும், நானதேசங்களி லிருந்துவந்த பலபண்டங்களேயுங் கொண்டு வாணிபஞ்செய்யுந் திறமையும் புத்தியும் தருமநடையுமுள்ள அனேகவணிகரும், சகல சாஸ்திரங்களேயுங்கற்று விசித்திர நிருமாணங்கள் பலவும் செய்யத் தகுந்தவர்களாகிய அனேக சிற்பிகளும், இன்னும் நாலுவிதமாகிய அளவற்ற ஜனங்களும் வந்து குடியேறினர்கள்.

இவ்வாருகத் தினந்தோறும் நானதேசங்களில் நின்றும் வருகிற ஜனங்களாலேயும் பண்டங்களினலேயும் யானே - குதிரை - ஒட்டகம் - எருது - பசு முதலிய மிருகங்களினலேயும் அங்நகரமானது நிறைந்து, இடைவெளி யில்லாமற் கடல் போலச் சகலரத்தினங்களு முள்ளதாய் அல்லும் பகலும் வேதவொசையினலும் - வியாபாரவிர்த்தியினலும் -விவகாரச்சிறப்பினலும்-இடைவிடாமற் கோஷித்துக்கொண்டிருந்தது. பாண்டவகுலதிலகனுன தருமராஜன் ஜனங்களுக்கெல்லாம் விசேஷ சவுக்கியத்திற்கு ஏதுவாய்ச் சகலகிராமங்களுக்கும் நீர்வளமுண்டாகும்படி ஏரிகளும்-வாய்க்கால்களும்-தடாகங்களும் - ஏற்படுத்தி, அங்கங்கு தண்டசபைகளும்-விவகாரசபைகளும் - அமைத்து, அவ்வவற்றில் தகுந்த அதிகாரிகளேயு நியமித்து, தேவாலயங்களுக்கெல்லாம் வேண்டிய சிறப்புக்

கள் யேற்படுத்தி, தருமநூலின்படி செங்கோற் செலுத்தி வந்தமையாலே இராச்சியமானது நாளுக்கு நாள் பயிர்களாலும்-பசுக்களினுலும்- விருத்தியடைந்து திங்கள்மும்மாரிபெய்து விளங்கிற்று. மறையோர்களும்-தவசிகளும்- அக்கினிகோத்திரமுதலாகிய வைதிக கருமங்களையும், தவங்களையும், வழுவாது அநுஷ்டித்துக்கொண்டு வந்தனர். குடிகளெல்லாம் ஆரோக்கியமும் - மக்கட்பேறும் - தனதானியங்களும் அடைந்து களித்திருந்தார்கள். நித்திய சுபமங்களகரமாய்ச் செழித்திருக்குந் தனது இராச்சியத்தைப் பார்த்துத் தருமபுத்திரர் மிகுந்த சந்தோஷமடைந்திருந்தார். வீமசேனன்முதலாகியநால்வரும் மூத்தவராகிய தருமராஜன் கட்டளையின்படி சகல அதிகாரங்களையுங் கிரமப்படி நடாத்திவந்தார்கள்.

இவ்வாறு பஞ்சபாண்டவர்கள் அந்த இந்திரப்பிரஸ்தத்தில் இருப்பதினுலே துரியோதனன் - துச்சாதனன் - சகுனி-கர்னன்-என்கிற துட்ட சதுஷ்டாளுடைய தொந்தரையில்லாம லிருந்தது. அந்த ராச்சியமானது தருமத்தினுலும், கல்வியினுலும், திறமையினுலும், குடிகளாலும், தசாங்கங்களாலும், செழிப்பினுலும், ஒருவருக்கும் வெல்லக்கூடாத மேன்மையோடிருந்தது. நீதிவழுவாது சிலதினங்கள் கழித்தவுடனே தருமபுத்திரர் விசுவகர்மாவையும் வியாசமுனிவரையும் பூசித்து அனுப்பிவிட்டுத் தமது நகரத்திற்குச் செல்லவேண்டு மென்கிற நினைப்புள்ளவ ராகிய கண்ணனை மிகுந்த வினயத்துடனேபார்த்து, ஓ யதுகுல சிகாமணியாகிய எங்களுயிர்த்தோழரே! உமதனுக்கிரகத்தினு லன்றோ இவ்விராச்சியம் எங்கட்குக்கிடைத்தது. அன்றியும் - அண்டக்கூடாத காடாய்க்கிடந்த இவ்விடம் குபேரனுடைய நகரைப்பார்க்கிலும் விசேஷமான கோலத்தோடும் விளங்குகிறது. இன்னும் உம்முடைய பலத்தினுலேயே நாங்களிந்த இராச்சியத்தி னுறுதிபெற்றிருக்கிறோம். எங்களுக்கு நீரல்லாது கதிவேறில்லை. எப்போதெப்போது என்னென்ன செய்யவேண்டியதோ அவைகளை நீரே உமது பேரறிவினுலே அறிந்து செய்யவேண்டுமென்று கோருகிறேன். உமதுமகிமையையும்வல்லமையையும் என்னுற்சொல்லக் கூடுமோ? நீர் எனக்கு எவ்வாறுகட்டளை இடுகின்றீரோ அக்கட்டளைப்படிநடக்கக் காத்திருக்கிறேன் என்று சொன்னுர். இதுகேட்ட பகவான் சொல்லுகிறுர்: ஓ மகாராஜனே! உமது தருமகுணத்தினுலே இராச்சியம் கிடைத்ததேயன்றி வேறில்லை. உமக்குக்குலக்கிரமமாய்வரும் இராச்சியத்தைத்தடைசெய்ய யார்வல்லவர்கள்? துராத்மாக்களாகிய குருடன் மைந்தராகுந் திருடர்கள் இனி யுங்களை என்ன செய்யமாட்டுவார்கள்? நீர் விசாரப்படாமற் சுகமாய்க் குடிகளைக்காத்து ரட்சியும். உங்களுக்கு ஒருகுறைவும் வராது. சுருக்கமாக உமக்கோர் தருமத்தையுபதேசிக்கிறேன் கேளும். வேதியரை அன்போடு பூசிப்பதைவிட வேறுதருமமில்லை. மகா பெருமைபொருந்திய நாரதரென்கிற தேவமுனி உம்மிடத்திற்கு எழுந்தருளுவார். அவரைப் பயபக்தியுடனே பூசித்துப்போற்றும். இதைப்பார்க்கிலும் உமக்கு நான் சொல்லவேண்டிதொன்றுமில்லை. என்றுசொல்லிவிட்டுக் குந்தியினிடத்திற்குப்போய்த் தண்டனிட்டு மிருதுவாகிய சொல்லாலே, ஓ அத்தாய்! நான் ஊருக்குப் போகிறேன் விடைகொடுக்க வேண்டுமென்றுகேட்டார். அதற்குக் குந்தியானவள் - அப்பா என்கண்போன்ற கமலக்கண்ணு! அரக்குமாளிகையில் நாங்கள் பட்டபாடு நீ அறியாய். எங்களையன் குந்திபோஜனு மறியார். அப்படியிருந்தும் அவ்விபத்தைக் கேட்டமாத்திரத்தில் எங்களைக்குறித்து நீங்களும் மிகுந்தவிசனத்தை அனுபவித்தீர்கள். இப்படி மிகுந்த வல்லமையும் அரசாட்சியுமுடையவர்களுக்கே அடிக்கடி துக்கங்கள் நேரிடும்போது, அனுதர்களா யிருக்கிற தரித்திரர்களுக்குக் கேட்கவேண்டிய தென்னவிருக்கின்றது? இப்பொழுது உன்னைக் கண்டபடியினுலே என்னுடைய துக்கமெல்லாம் நீங்கிற்று. நீ எம்மைச்சிந்தித்துக்கொண்டிருந்தாற் போதும். உன்னுடைய கிருபாசிந்தனையாற் பாண்டவர்கள் யாதொரு குறைவுமின்றி அபிவிர்த்தியாவார்கள். ஆதலால் தயைசெய்து நீ சமயங்களிற் பாண்டவர்களை நினைக்கவேண்டும். இது தான் எனக்கு உன்னுற்கிடைக்கவேண்டிய வரம் என்று சொன்னுள். கண்ணன் உமதாணையைச் சிரத்திற்றுங்கினேனென்று சொல்லிக் கும்பிட்டு விடைபெற்றுத் தமது பரிவாரங்களோடு புறப்பட்டுத் துவாரகாபுரத்திற்குச் சென்றுர். பாண்டவர்களும் கிருஷ்ணனையே நினைத்துக்கொண்டு இந்திரப்பிரஸ்தத்தில் அரசாட்சிசெலுத்தி வந்தார்கள். என்று சொல்லிவருகிற வைசம்பாயனமுனியை ஜெனமேஜெயமஹாராஜன்வினுவுகிறுன்: சுவாமி! என்மூன்றும் பாட்டர்களாகிய பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் இராச்சியத்தை அடைந்தபின் என்செய்தார்கள்? தருமநிலை தவறுத பதிவிரதையாகிய திரௌபதி தன்கணவர்களைவரையும் எப்படி அனுசரித்துவந்தாள்? அந்த ஐவர்களும் ஒருவருக்கொருவர் விரோதமில்லாமல் ஒரு ஸ்திரீயினிடத்திலே எப்படியிருந்தார்கள்? இந்தச் சரித்திரத்தைப் பிரகாசிக்கச் சொல்லவேண்டும். இதைக்கேட்க மிக விருப்பமுற் றிருக்கிறேன் தயைசெய்தருளும் என்று கேட்க வைசம்பாயன மஹாமுனியானவர் மகாசந்தோஷத்தோடுஅவ்வரசனைப்பார்த்துச்சொல்லுகிறுர்.

நாரதமுனிவர் பாண்டவர்கட்குச் சில கட்டுப்பாடுரைத்தல்.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே! இந்தப்படி திரிதராஷ்டிர மஹாராஜாவினுடைய அனுமதியினுலே பாதிராச்சியத்தை அடைந்த உமது பெரியோர்களா

கிய பாண்டவர்கள் சத்தியசந்தர்களாகியும் - கபடமற்றவர்களாகியும், தயைமுதலிய நற்குணங்களோடு கூடியவர்களாகியும், நீதியோடு சகலஜனங்களையும் காப்பாற்றிக் கொண்டு இந்திரப்பிரஸ்தத்திலே சுகமாயிருந்தார்கள். இப்படியிருக்க - இவர்கள் ஒருநாள் சபையிலிருந்து பட்டணத்துக் குடிகளுடைய காரியங்களை விசாரணைசெய்துவரும் காலத்தில், நான்கு வேதங்களையும் - முப்பத்திரண்டு உபநிடதங்களையும்- பதினெண்புராணங்களையும்-மற்ற இதிகாசங்களையும்- நன்றாய்க் கற்றுணர்ந்தவரும், உயிரெழுத்து - மெய்யெழுத்து - தளை - மாத்திரை - பிரயத்தினமுதலிய இலக்கணவிதி தப்பாமற் சரியாய் உச்சரிக்க வல்லவரும், வேதசுரங்களை இடமறிந்து மெலித்து வலித்து உச்சரிக்கவல்லவரும், பகுதி - விகுதி-அறிந்து பிரகரணத்திற்குத் தகுந்தபடி சொற்களைப் பிரயோகிக்கத்தக்கவரும், மந்திரங்களை யந்திரதேவதா கல்பங்களுடன் அறிந்தவரும்,வைதிகலௌகிகவாக்கியங்களை ஓசைகுன்றாம லிணைக்கத் தகுந்தவரும், காவியநாடகங்கள் செய்யுந் திறமையுடையவரும்,மொழிகளுக்கு இடமறிந்து பொருள்கூறத்தக்கவரும், சொற்களுக்கெல்லாம் செம்பொருள் ஆக்கப்பொருளாதிகளை நிச்சயிக்கவல்லவரும், நிஷாதமுதலாகிய சப்தசுரங்களையும் சப்ததாளங்களையும் அறிந்து மந்திரம் - மத்திமம் தாரம் - என்கிற மூவகையாலும் இராகங்கள் பொருந்தத் தாளவரிசைமுதலிய சங்கீதங்களைப் பாடவல்லவரும், சகலவேதாகம புராணங்களுடைய பொருளை நிச்சயித்துச் சொல்லத்தகுந்தவரும், தருமசாஸ்திரமெல்லாம் அறிந்து தருமசூக்குமத்தை அதிற்சந்தேகம் வராதபடி தெருட்டவல்லவரும், சுக்கிராசாரியார் முதலாகியவர்கள் செய்த நீதிநூலையறிந்து பிரயோகிக்கத் தக்கவரும், சிற்பசாஸ்திரம் - வியாகரண சாஸ்திரம் - வைத்தியசாஸ்திர முதலாகிய பலசாஸ்திரங்களின் பொருளைச் சம்பூர்ணமாக அறிந்தவரும், சந்தோவிசிதியென்னும் நூலின்படி சந்தங்களிற் பாடல்களிசைக்க வல்லவரும், மூன்று ஸ்கந்தங்களாக வகுக்கப்பட்டிருக்கிற சோதிடநூலை நன்றாயறிந்து பூகோளம் - ஆகாயகோளம் - நக்ஷத்திரங்கள் - கிரகங்கள் - இவைகளின் ஓட்டமுதலியவைகள் - கிரகணங்கள்-திதிவாராதி காலங்கள் - இவைகளை அறிந்தவரும், இவைகளாற் சாதகபலன்களையும் - உற்பாதாதியோகங்களையும் பலகால வர்த்தமானங்களையு மறிந்து நன்றாய்ச்சொல்லுந் திறமையுடையவரும், கல்பசூத்திரங்களையெல்லாம் முற்றுமறிந்து பிரயோகஞ்செய்யத் தகுந்தவரும், மீமாம்சையென்னுஞ் சாத்திரத்தின் அதிகரணங்களில் வல்லவரும், நியாயநூலின்படிப் பிரசங்கிக்கத் தகுந்தவரும், சமயோசிதமாய்ப் பேசுந்திறமை யுடையவரும், கணிதங்களில் அதிகசாமர்த்தியமுள்ளவரும், இங்கிதங்கலாலேயே மனதை அறியவல்லவரும், வேதாந்தமெல்லாமறிந்து சகல தத்துவநிச்சயமுள்ளவரும், பரமாத்துமாவை வேறாகவு மொன்றாகவும் பாவனைசெய்பவரும், யோகநூல்-சாங்கிய நூல்-இவைகளின்படி சமாதிகளெல்லாம் செய்யத்தகுந்தவரும், நிஷ்காமமாகிய தவத்தினாலே மகாதேஜசுபொருந்தி யிருப்பவரும், விதிவழுவாமல் அனுஷ்டானஞ் செய்பவரும், தயை-பொறுமை-சத்தியம்-முதலான எண்குணங்களுக் கிடமாகியவரும், எப்பொழுதுங் கடவுளைத் தியானிப்பதும் - துதிப்பதும்-தொழுவதுமே கருமமாகக்கொண் டிருப்பவரும், இயல்பாகக்காமாதி விகாரங்க ளற்றவரும், தேவதா நிச்சயமுள்ளவரும், சகலமுனிவராலும் - வித்துவான்களாலும்-பூசிக்கப்பட்டவரும், தருமங்களுக்கு எல்லை ஏற்படும்படி பலநூல்களைச் செய்தவரும், பிரமனுடைய குமாரராகியவரும், அனேக யாகங்கள் செய்து சோமபானஞ் செய்தவரும், சம்சாரிகள்போல உலகநடையறிந்தவரும், திரிகாலமுணர்ந்தவரும், மூன்றுலோகங்களுங் கண்டவரும், இன்னும் பலவிதமாகிய சொல்லுந் திறமில்லாத பெருமை யுடையவருமாகிய நாரதபகவான்; பூரணசந்திர மண்டலம்போல் வெளுத்த நெடிய திருமேனி யுடையவராய்த் தேவேந்திரன் கொடுத்த மேன்மையாகியும் - நாணய முடையதாகியும் - பளபளப் புள்ளதாகியுமிருக்கிற இரண்டுவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, பதினாறு மாற்றுத் தங்கத்தினாற்செய்து ஒருவகைப்பட்டகாராவின் முகம்போன்ற உருவுடையவையாயும் அக்கினிச்சுடர்போன்ற ஒளியுடையவையாயும் இருக்கிற இரண்டுகுண்டலங்களையணிந்துகொண்டு,சிவந்த சடாடவியுடையவராயிருப்பதினால் வெண்மையாகிய மேகங்களாற் சூழப்பட்டுப் பொன்னிற முடைய கொடிப்புதரினால் மூடப்பட்டது போன்ற முடியுடையவராய் பவுத்தமதசித்தாந்தப்படி இரண்டு சூரியபிம்பங்கள் இருபுறங்களிலுந் தோற்ற விளங்காநின்ற ஒரு வெள்ளைமலைக்குச் சமானமாகிக் கணுக்கையில் விளங்காநின்ற படிகசெபமாலையுடனே காற்றின் விசையினால் தானே விசித்திரமாக இசைபாடாநின்ற மகதீ என்கிற வீணையையொருகையிலேந்தி மற்றொருகையால் வெள்ளிக்குடை பிடித்துக்கொண்டு, மேற்புறத்திற் சந்திரமண்டல முலாவுங்காற் கீழிராநின்ற கைலாயமலைக்கு நிகராய்ப் பிரமதேஜசு இவ்வுருவங்கொண்டதோவென்று சங்கிக்கும்படி சாச்சுவலியமான ரூபமுடையவராய் ஆகாயத்தின் வழியே அனேகரிஷிகளும் தேவர்களும் போற்றிப் பூமியி லிருப்போரெல்லாம் இதென்ன வானத்தினின்றும் ஓரொளிக்கூட்ட மிறங்கிவருகின்றது என்றேற்றி இது சூரியனோ சந்திரனோ அக்கினியோ என்றுயாவரும் பயமும் ஆச்சரியமுமாக நோக்கிநிற்கச் சாம வேத கீதவொலியினாலே கேட்போர்செவிக்கு அமுதத்தையும் மனதிற்குப் பரிசுத்தத்தையுமளித்துக் கொண்டு பாண்டவர்களுடைய அரண்மனைச் சபாமண்டபத்தினருகில் இறங்கினார்.

இம்மகாமுனி எழுந்தருளக்கண்ட பாண்டுகுமாரர்கள் மிகப்பரபரப்புடனே ஆசனங்களி னின்றும் எ

ழூந்து எதிர்கொண்டு சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு இருகரங்களேயுஞ் சிரமேற் கூப்பிநின்று, ஓ சுவாமீ! ஓமகாநுபாவா! தேவர்களே முதலியவர்களுங் கண்டமாத்திரத்தில் யாங்கள் செய்த தவப்பயனேயென்று சொல்லும்படியாகிய முனிவர்நாயகனே! தேவரீர் இவ்வாசனத்திலுட்காரவேண்டுமென்று பிரார்த்தித்துக் கிருஷ்ணசன மேற்போர்த்த சிம்மாசனமொன்றமைத்தார்கள். அதிலம்முனிவர் உட்கார்ந்தருளிசகலபுணிய தீர்த்தங்களாலே நிறைக்கப்பட்ட தமது கமண்டல தீர்த்தத்தை எடுத்து வணங்கியிராநின்ற பாண்டவர் சிரங்களிற் புரோட்சித்து ஆசீர்வதித்தார். பாண்டவரும் பரிசுத்தமாகிய சுவர்னபாத்திரத்திலே தருப்பை நுனிகளும்-மலர்களும்-சுகந்த வஸ்துக்களும் போட்ட தண்ணீரினல் அருக்கியங் கொடுத்து, அழகிய பொற்றட்டிலே அம்முனியினது பாததாமரைகளேவைத்து, விதிப்படி அபிஷேகித்த பரிசுத்தஜலமாகிய பாதோதகஞ்சேர்க்க;அவருளதைத்தருமர் தமது சிரத்திலும் தம்பிகள் சிரத்திலும் புரோக்ஷித்துத் தம்பிகளுடனே அத்தீர்த்தத்தை உட்கொண்டு, திவ்வியமாகிய கோமது பர்க்கத்தை அம்முனிவருக்கு நிவேதனம் பண்ணி, சுவாமி ! இந்த ராச்சியமும் நாங்களும் தேவரீ ரடைக்கலம். அடியேங்களே அன்புகூர்ந்து ஆட்கொள்ள வேண்டும். இத்தினந்தான் எங்கள் பிறவி பயன்பட்டது. அருமையாகிய தேவரீர் தரிசனங் கிடைக்கும்படி. நாங்கள் என்னதவஞ் செய்தோமோ தெரியவில்லே. எளியராகிய அடியேங்களுக்குக் காட்சி கொடுத்த தேவரீருடைய பேருருளேத் துதிக்க யாம்வல்லமோ ? ஆ ! ஆ ! என்ன பாக்கியம் நாங்களின் றடைந்த இச்சிலாக்கியபோக்கியமென மிகவானந்தத்தினலே கண்களில் நீர்பெருகத் தேகமெல்லாம் புளகமுற்று நிற்கின்றூர். இப்படி நிற்குமளவில் அந்நாரதமகாமுனிவர் தருமபுத்திரரை நோக்கி, நீர் செய்த பூசையால் நமக்குச் சந்தோஷமாயிற்றுதலால் நீரும்முடைய தம்பிமார்களுடனே ஆசனங்களி லுட்காரவேண்டு மென்று கட்டளேயிட்டார். தருமபுத்திரரும் அப்படியே உட்கார்ந்து திரௌபதியை வரவழைத்தார். அந்தப்பாஞ்சாலியும் பரிசுத்தையாகி மிகுந்த பயபத்தியுடனே சபையில் வந்து அந்தத் தேவமுனியினது திருவடித் தாமரைகளேத் தொழுது வணக்கத்துடன் கைகூப்பி நின்றுள். அம்முனியரசு அவளுக்கும் பலவாக ஆசிகள்கூறி, பெண்ணே! நீ அந்தப் புரத்திற்குப் போவென்று நியமித்தருளினூர். அவளும் அப்படியே போனவுடனே சபையிலிருக்கும் மற்றவர்களேயும் போகச்செய்து ஏகாந்தத்திலே பாண்டவர்களேப் பார்த்து நாரதமுனி சொல்லுகிறூர்.

ஓ பாண்டு குமாரர்களே ! நீங்கள் தருமந்தவறுதவர்க ளாகையாலே உங்களுக்கு நேரிட்ட இடர்களெல்லாம் நீங்கிப்போயின. உருவத்திலுங்குணத்திலும் ஒப்பில்லாதவளாகிய துருபதராஜன்மகளே விவாகஞ்செய்து கொண்டீர்கள். கண்ணனுடைய அநுக்கிரகத்திலே இந்தத் திவ்விய ராச்சியத்தை அடைந்து செங்கோற்செலுத்தி வருகிறீர்கள், ஆனல் உங்களுக்கொன்று சொல்லுகிறேன் உற்றுக்கேளுங்கள். உலகத்திலே எவர்களுக்குங் கட்டுப்பாட்டினலேயே சகல மேன்மைகளு முண்டாகின்றன. அந்தக் கட்டுப்பாட்டைக் கெடுப்பதற்குக் காரணம் ஒருபொருளேப் பலர் விரும்பி இருப்பதேயாம். அப்பொருள்களி லெல்லாம் பெண்ணென்பது பொன்னேப்பார்க்கிலும் விசேஷமாகியது. பெரும்பாலும் அப்பெண்ணே உலகத்தாருக்கு நன்மைக்குந்தீமைக்கும் காரணமாம். ஆதலாலே நீங்கள் ஐவரும் இந்தப்பாஞ்சாலியொருத்தியை அநுபவித்து வருகிறீர்கள். ஆனல் அந்தப் பெண்ணும் நல்ல சுபாவமுடையவள் தான். நீங்களும் அப்படிப் பட்டவர்கள் தான். ஆகிலும் இந்தமூலமாய் உங்களுக்குள் ஒரு விரோதமும் வராதிருக்கும்படி ஓரேற்பாட்டைச் செய்யவேண்டும். இப்படி தான் முற்காலத்திற் சுந்தனென்றும் - உபசுந்தனென்றும்-இருவர் அண்ணன் தம்பிக ளிருந்தார்கள். அவ்விருவருக்கும் திலோத்தமை என்பவள் நிமித்தியமாகப் பகையுண்டாகி ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு மாண்டார்கள். ஆதலால் நீங்கள் இந்த ஸ்நேகத்தைக் காப்பாற்றுவதற்கு ஒரு நிபந்தனஞ் செய்துகொள்ள வேண்டியது அகத்தியமா யிருக்கிறதென்று சொல்லினர். அதைக்கேட்ட தருமபுத்திரர் - ஓ முனிநாதா ! சுந்தோபசுந்தர்க ளென்பவர்கள் யார் ? அவர்கள் ஆருடைய பிள்ளைகள் ? அந்தத் திலோத்தமை என்பவள் அவ்விருவருக்கும் வேற்றுமை எவ்வாறு நேரிடச் செய்தாள். இந்தச் சரித்திரத்தை விவரமாய்க் கேட்க அடியேங்கட்கு அபேட்சை யிருக்கிறபடியால், அதனேச் சுவாமிகள் தயைசெய்து திருவாய் மலர்ந்தருளவேண்டு மென்ன நாரதர் சொல்லலுற்றூர்.

சுந்தோபசுந்தரர் சரித்திரம்.

கேளுங்கள் பாண்டவர்களே ! முற்காலத்தில் இரணியகசிபு என்று பெயருடைய மகா அசுரனிருந்தான். அவனுடைய குலத்தில் நிகும்பனென்று ஓரசுரன் பிறந்தான். அவனுடைய புத்திரர் இப்போது நான் சொல்லப்போகிற சுந்தோப சுந்தர்கள். அவர்களுடைய வீரியமும்-தைரியமும்-ஒப்புவமையற்றது. சவுரியமென்பது அவர்களிடத்திலேயே குடியிருக்கிறது. அவர்களுடைய இறுமாப்பைப் பார்க்கும் போதே யாவரும் பயமடையும்படி இருக்கும். அவர்களுடைய மனவாக்குக்காயம் என்கிற மூன்று கரணங்களும் கொடுமை என்னுங் குணத்திலே வளரப்பட்டனவாம். அவ்விருவரும் ஒரேமனதாயிருந்து வேற்றுமையின்றி ஒரு காரியத்திற் புகுவார்கள். இன்பதுன்பங்களிலும் பங்காளிகளாக விருப்பார்கள்; ஒருவனுக்கு இஷ்டமானபடியே மற்றெருவனும் செய்

கிறதும் பேசுகிறதுமன்றி மாறுபடுகிறதில்லை. அவர்
கள் உண்—தும்-உறங்குவதும்-இருப்பதும்-போவதும்
கூடவேயன்றி ஒருபோதும் தனித்ததில்லை. அப்படி
அவர்களிருப்பதினாலே யாவரும் ஓ ரான்மாவே இர
ண்டு தேகமெடுத்தது என்று சொல்லும்படிக் கிருந்
தது. அவ்விருவரும் இவ்வாறு ஒருமையாக வளர்
ந்து தேவர்களையெல்லாம் ஜயித்து மூவுலகங்களையுங்
கைவசப் படுத்திக் கொள்ளவேணு மென்கிற கருத்த
டைந்து, விந்தியமென்கிற மலையில் தீக்ஷையோடு
உக்கிரமாகிய தவஞ்செய்யவாரம்பித்தார்கள். அத்தவ
விதத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அரையில்
மரவுரியும் முடியிற் சடைமுடியும் தரித்துக்கொண்டு,
பசிதாகங்களையும் வெம்மை தண்மைகளையும் சகித்
துக் காமக்குரோத முதலியவைகளை அடக்கித் தேக
ங்களில் மட்புழுதிகளும் பட்சிகளுடைய மலமூத்திர
ங்களும் படிந்து விகாரமுண்டாயிருக்க இரண்டு கை
களையும் தலைக்குமேல் தூக்கிக் கூப்பிக்கொண்டு காற்
பெருவிரலினுனியினாலே பூமியில் நின்று, சிலகாலம்
வாயுபட்சணம் செய்துகொண்டும் - சிலகாலம் வரு
ணபக்ஷணம் செய்துகொண்டும்- தங்கள் தசைகளை அக்
கினியில் ஓமம்பண்ணி, இவ்வாறு நெடுங்காலம் வழு
வில்லாத தவத்தைச் செய்துவந்தார்கள்.

அவர்களுடைய தவமென்னும் அனலினாலே அந்த
விந்திய கிரியானது புகைசூழ்ந்து மேகங்களாற் கவிக்
கப்பட்டதுபோல் ஒரு ஆச்சரியமாகவிருந்தது. இவர்
கள் செய்யுந் தவத்தைக்கண்ட தேவர்கள் மிகவும்
பயமடைந்து, இத்தவத்தை அழிப்பதற்காகக் கோடி
சூரியப் பிரகாசங்களாகிய திவ்விய இரத்தினாபரணங்
களையும் நிகரில்லாப் பேரழகையுமுடைய மங்கையர்
களாலே அவர்கள் மனதைக் கலைக்கப்பார்த்தார்கள்.
இவைகளாலேயும் மற்றெவைக ளாலேயும் அவர்கள்
மனவுறுதி நீங்காமல் தவத்திற்கு வசப்பட் டிருந்த
மைகண்டு தேவர்கள் அவ்வசுரவீரர்களுடைய தாய்-
தந்தை-பெண்டீர்-மக்கள்-உடன்பிறந்தார் -முதலாகிய
சுற்றத்தார்போல் வந்து பலமாயைகளை யுண்டாக்கி
னார்கள். அந்தமாயையா லுண்டாகிய சுற்றத்தாரெல்
லாம் ஓரிராட்சதனாலே துரத்தி யடிக்கப் பட்டவர்
போலாகித் தேகமெல்லாம் நடுக்கமுற வேர்த்துத்
தலைமயிர் அவிழ்ந்து விரிந்தாட வஸ்திரங்கள் வீழ்ந்து
புரளக் கோவென்று கதறிக்கொண்டு அவ்வசுரப் பிள்
ளைகளி னருகில்வந்து கண்ணீர் பெருகப் புலம்புவ
தானார்கள். அதுகண்டும் அவர்கள் தவத்தினின்று
மீளாம லிருந்தார்கள். அதனால் அந்தமாயாபந்துக்கள்
உடனே பயந்து மறைந்துபோயினர்.

இந்நிலையிற் கடினமாகிய தவம் செய்துகொண்
டிருக்கும் அவ்வசுரப்பிள்ளைக ளிடத்திற்குப் பிரமதே
வன் வந்து, ஓ அசுரகுமாரர்களே ! உங்களுக்கு வர
ங்கொடுக்க வந்தேன் கேளுங்களென்ன அவர்களும்
எழுந்து பிரமதேவனைத் தண்டனிட்டுக் கைகூப்பி
நின்று, சுவாமி! எங்கள்தவத்தினாலே தேவரீர் சந்தோ
ஷமடைந்து எழுந்தருளியபடியால் தேவரீருடைய
கிருபையினாலே நாங்கள் சகலமாயைகளை அறிந்தவர்
களாகவும், சகல அஸ்திரங்களைத் தெரிந்தவர்க ளாக
வும், மகாபலசாலிகளாகவும், வேண்டியபடி காமரூப
ங்கொள்ளவும், எக்காலத்தும மரணமில்லாம லிருக்க
வும் வரம் வேண்டிய தென்றார்கள். திசைமுகனானவ
ன் - ஓ அசுரர்களே. உங்களுக்கு மரணமில்லாமையை த
விர மற்றவைகளெல்லாம் உண்டாகும். ஏனென்றால்-
நீங்கள் தேவர்களோடு சண்டைசெய்து மூன்றுலோ
கங்களையுங் கைவசப்படுத்தவேண்டுமென்கிற கருத்தி
னாலே இந்தத்தவத்திற் பிரவேசித்தீர்கள். ஆகையால்
அப்படிப்பட்ட கெட்டகாரியத்திற்கு அனுகூலமாகிய
வரத்தை நாம் கொடுப்பதில்லை என்று சொல்லினன்.
அவ்வசுரர் - சுவாமி ! அப்படி தேவரீருக்குத் திரு
வுள மில்லாவிட்டால் மற்றொருவிதமாக வரங்கேட்கி
றோம் அதனைத் தரல்வேண்டும். அதாவது - இந்தத்
திரிலோகங்களிலு முள்ள எந்த சராசரங்களினாலும்,
மற்றெந்த வஸ்துக்களாலும், எங்களுக்கு ஒருவிதபய
மும் உண்டாகாம லிருக்கவேண்டும். ஆனால் எங்களு
க்கு ஏதாகிலும் ஒருகேடு வருகிறதா யிருந்தால், எங்
களில் ஒருத்தருக் கொருத்தராலேயே உண்டாகவே
ண்டியது. இந்த வரத்தையாகிலும் அளித்து எங்க
ளைக் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்திக்கப் பிரம
தேவனானவன் அப்படியே உங்களுக்கு வரங்கொடுத்
தே னென்றுசொல்லித் தன்னுடைய லோகத்திற்குப்
போயினான். அந்தச் சுந்தோபசுந்தரும் இவ்விதமா
கச் சிறந்தவரம் பெற்றுக்கொண்டு, மிகுந்த சந்தோ
ஷத்துடனே அசுரரெல்லாங் கொண்டாடத் தங்களி
டம்போய்ச் சேர்ந்தார்கள்.

அப்பால் இவர்களுக்கு மிகுந்த பெருமை யுண்
டாகித் தங்களுடைய பலத்தினாலே கொஞ்சமேனும்
அச்சமில்லாமல் இஷ்டமானபடி உண்கிறதும்- குடிக்
கிறதும் - நற்நடத்தை நடக்கிறதும் - படுக்கிறதும்-
விளையாடுகிறதும் - பாடுகிறதும்—ஆடுகிறதும் - தேடு
கிறதும் - கொடுக்கிறதும்-வாங்குகிறதுமாக வீடுகள்
தோறும் திருவிழாப்போ லிருந்தது. இவ்வசுர வீர
ரும் சடைகளைப் பிரித்து இரத்தின கிரீடஞ் சூடிக்
கேயூர முதலான சகல ஆபரணங்களையுந் தரித்துத்
திவ்வியமாகிய வஸ்திரங்களையும் உடுத்தி, பச்சைக்கர்
ப்பூரம் - குங்குமப்பூ—கஸ்தூரி - முதலாகியவைசேர்
த்த சந்தனம்பூசி மாறுதநிறமும் வாசனையும் பொரு
ந்திய பூமாலைகளுந்தரித்து, அசுரரை யெல்லாம் கூப்பி
ட்டுத் தேவலோகத்தின்மேல் தண்டெடுக்க வேண்டு
மென்று நிச்சயம் பண்ணிக் குடை - கொடி-சாமரம்—
முதலான சின்னங்களுடனேயும் பேரிகை முதலாகிய
வாத்திய கோஷத்துடனேயும் சமுத்திரம் போன்ற
சேனைகளைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். இ
வர்கள் சண்டைக்கு வருவதைப்பார்த்துத் தேவத்

தலைவரெல்லாம் பிரமலோகம்போய்ச் சேர்ந்தார்கள். அவ்வசுரர்களோ-தேவர்-இயக்கர் - கருடர் - காந்தருவர் - முதலாகிய பேர்களைச் சயித்துத் தேவலோகத்தைச் சுவாதீனம் பண்ணிக் கொண்டு பாதாளலோகத்திற்குப்போய் அங்கிருக்கிற நாகங்களையுஞ்சயித்து அந்த லோகத்தையும் சுவாதீனம் செய்துகொண்டு, சமுத்திரத்தில் வாசம்பண்ணுகிற மிலேச்சர்களையும் ஜயித்துப் பின்பு பூமியைக் கைவசப்படுத்த வேண்டுமென்று யத்தினப்பட்டார்கள்.

பிற்பாடு தங்களுடைய சேனைத் தலைவர்களைப் பார்த்து, கேளுங்கள் அசுரர்களே! இருடிகளெல்லாம் செய்துவருகிற யக்கியங்களினாலும், மற்றப்பிராமணர்கள் கொடுத்துவருகிற அவியகவியங்களினாலும், தேவர்களுக்குப் பலமும் - தேஜசும் - சம்பத்தும் - விருத்தியாகின்றன. ஆதலால் இவர்களெல்லாம் நமக்குச் சத்துருக்களானார்கள். ஆனதுபற்றி நாமெல்லாம் ஒன்றாயிருந்து அஞ்சாமல் அந்த முனிவர்களையும் மறையோர்களையும் கண்டவிடத்திற் பிடித்து அடித்துக் கொல்லவேண்டும். அவர்கள் செய்கிற யாகங்களையும், மற்றும் வைதிககாரியங்களையும்,நிறைவேறவொட்டாமல் தடுத்துப்போடவேண்டும். ஆதலால் இந்தக்காரியத்தில் நீங்கள் ஏமாறாமல் இருங்களென்று கட்டளையிட்டுக்கீழ்ச்சமுத்திரக்கரைக்குவந்துசேர்ந்துஅங்கே தண்டுகளை இறக்கிக் கொடிய சிந்தையினாலே எங்கே வேதியர்கள் வேள்விசெய்கின்றார்களோ அவ்விடங்களிலேசென்று அவர்களையெல்லாம்பிடித்துக்கட்டியடித்து வேள்விக்குரிய கருவிகளையெல்லாம்வாரி நீரிலெறிந்து ஆசிரமங்களிற் பிரவேசித்து,சிலரிஷிகளைப்பற்றித் தாடிகளையும் சடைகளையும் பிடித்து இழுத்துப் பற்களையுதிர்த்தும், சிலரைக்கைகால்களையொடித்துக் கழுத்தை முறித்துத் தொந்தரவு செய்துகொண்டும் வந்தார்கள். இப்படி யிவர்களால் தொந்தரவு செய்யப்படலுமற்ற ரிஷிகள்முதலானபேர்கள் எல்லாவற்றையும்விட்டு ஓடிப்போய் மலைகளிலும் குகைகளிலும் ஒளித்துப் பிராணனைக்காப்பாற்றமுயன்றிருந்தார்கள். ஆச்சிரமங்களெல்லாம் உடைந்துபாழாய்ப்போயினகரகங்களினாலேயும், ஒடிந்த சுருவமுதலான பாத்திரங்களினாலேயும், முறிக்கப்பட்ட மரங்களினாலேயும், பெருஞ் செல்வத்தி லிருந்தவர் மிகுந்த வறுமையினால் அடியுண்டு இடியுண்டு மிகுந்த சோர்வினையடைந்து உறங்கியிருப்பதுபோ லிருந்தன. இவ்வுலகமெல்லாம் வேதகோஷ்டமும் வைதிகக்கிரியைகளும் இல்லாமற் பிரமரிஷிகள் இராஜரிஷிகள் முதலாகிய சத்துக்கள் எங்கணுங்காணமல் யிருந்தபடியால், எல்லா வளமுங் குன்றிப் பாழ்பட்டதுபோ லிருந்தது.

இப்படி லோகத்தையெல்லாம் இரசாபாசம் பண்ணிக்கொண்டு வருவதல்லாமல் ஓடிப்போன ரிஷிகளையுங் கண்டுபிடித்துக் கொல்லவேண்டுமென்று அவ்வசுரரிருவரும் சிலவிடங்களில் மதயானைகளாகியும்,சிலவிடங்களிற் சிங்கங்களாகியும்,சிலவிடங்களிற் புலிகளாகியும், இப்படியனேக ரூபங்களைத்தாங்கி ஒளித்திருக்கும் முனிவர் முதலாகியபேர்களைப் பிடித்து யமலோகத்திற்கு அனுப்பிவிட்டார்கள். இவ்வாறே ராஜாக்களையும் துரத்தி யடித்துக் கொன்று, அவர்கள் பூமியைச் சுவாதீனஞ்செய்துகொண்டார்கள். இப்படி யாசவே கருடனைக்கண்டபாம்புகள்போற் சகலஜனங்களும் வீடுமாடு முதலியவைகளைவிட்டுச்சிதறிப்போய் அனேக வருத்தங்களை அனுபவித்து வந்தார்கள். பூமியெங்கும் பயிரிடுதல்முதலான ஒருதொழில்களும் இல்லாமற் பஞ்சமடைந்திருந்தது. இருடிகளினுஞ் சாபங்களெல்லாம் கல்லின்மேல் விட்ட அம்புகள்போல் இவர்கள்மேல் ஏறாமற்போயிற்று. சமுத்திரம் வளைந்த பூலோகத்தை மயானம்போல் எலும்புகளும்-மண்டை ஓடுகளும் - கழுக்களும் - கூளிகளும் - பேய்களும் - நாய்களும் - நரிகளும் - நிறைந்ததாகவும் சுபமாகிய ஓர்காரியமு மில்லாததாகவுஞ்செய்து,தாங்களிருவரும் மிகுந்த சந்தோஷத்துடனே குருக்ஷேத்திரத்திற் சைனியங்களோடு மிறங்கி வாசஞ்செய்து கொண்டிருந்தார்கள்.

இப்படியாகவே சகலமாகிய தேவரிஷிகளும் பிரமரிஷிகளும் மிகுந்த வியசனமடைந்து லோககர்த்தாவாகிய பிரமதேவருடைய திருமாளிகைக்குச் சென்று,அவ்விடத்திலே எல்லாத்தேவர்களும்புடைசூழ்ந்திருக்கச்சநகர்-சநந்தனர்-சநற்குமாரர்முதலாகிய சித்தயோகிகள் ஓர் பாரிசுவத்தி லிருக்க நான்முகங்களில் நான்குவேதங்களும் ஒலிக்கக் கோடிசூரியப் பிரகாசமாக எழுந்தருளியிருக்கிற பிரமதேவரைக்கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, சுந்தோப சுந்தர்களால் நேரிட்ட தொந்தரவைச் சம்பூர்ணமாகச் சொன்னார்கள். அதுகேட்டு அந்தச்சபையிலிருக்கும் - அக்கினி - வாயு - சந்திரசூரியர் - இயமன் - இந்திரன்- முதலாகிய பல தேவர்களும் வைகானசர் - வாலகிலியர் - சோமபர்-மரீசிபர் - அஜர் - விமூடர் தேசோகருப்பர் - என்கிற பலரிஷிகளும், இந்தச் சங்கதியைக் குறித்துப் பிரமதேவருக்குவிண்ணப்பஞ்செய்தார்கள். பின்பு அப்பிரமதேவர் இந்தச் சரித்திரத்தைக் கேட்டு ஒரு முகூர்த்தகாலம் ஆலோசித்து, அவர்களுடைய விநாசத்துக்காகச் செய்யவேண்டிய உபாயமொன்று மனதில் நிச்சயஞ்செய்துகொண்டு விசுவகர்மாவை அழைத்து, நீ நிகரற்ற ரூபலாவணிய சவுந்தரியங்களுடனே கூடிய ஒருபெண்ணைச் சீக்கிரத்தில் உண்டாக்கவேண்டுமென்று கட்டளை யிட்டார். அந்த விசுவகர்மாவும் பிரமாவைக்கும்பிட்டு அப்படியே ஒரு பெண்ணை மிகுந்த முயற்சியினாலே சிருஷ்டித்தான். அந்தப்பெண்ணின் சிறப்பைச் சிறிது சொல்லுகிறேன் கேளும்.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே ! அந்தவிசுவகர்மாவானவன் உலகங்களிலுண்டான உத்தமவஸ்துக்க

ளினுடைய சாராம்சங்களையெல்லாமெடுத்துத் தனது
முழுவல்லமையும் அமையும் படிக்கு நெடுநாள் வருந்
திச் சிறந்த முயற்சிகளால் அவளுடைய அங்கங்க
ளைப் படைத்தான். விலையுயர்ந்த ரத்தினங்களையே
தேகத்தி லழுத்தின னென்னும்படி மிகுந்த பளப
ளப்பினால் விளங்காநின்ற இந்தமாதுசிரோமணிக்குச்
சிறந்தவஸ்துக்க ளெல்லாவற்றிலும் எள்ளளவெள்ளள
வாக அழகை ஆராய்ந்தெடுத்துப் படைத்தது பற்றி
ப் பிரமதேவன் திலோத்தமை என்கிற காரணப்பெ
யரிட்டருளினான். அவளுடைய அழகை எடுத்துச்சொ
ல்ல ஆதிசேஷனுக்கும் திறமை குறைவா யிருக்குமா
கில் நம்மாலாகுமோ. ஆனாலும் கொஞ்சஞ்சொல்லுகி
றோம். கறுத்தும்-நீண்டும்-மெல்லிதாகியும்-செறிவாகி
யுமிராநின்ற அவ்வணங்கினதுகூந்தல் இந்திரநீலரத்
தினங்களுடைய நுட்பமாகிய நிறத்தினா லாக்கப்பட்
டவையோ வென்றும், முகமாகிய சந்திரனுக்குப் பய
ந்து பின்னிடைந்து நிற்கும் இருள்களோ வென்றும்,
கண்ணுக்குத் தோற்றுப்போன கவரிமான்கள் தங்க
ளது சிறந்த பொருள்களாகிய கவரிகளை அக்கண்க
ளுக்கு உலுப்பையாகக் கொடுக்க அவைகள் அவைக
ளை அலட்சியஞ்செய்து பின்புறத்தில் தள்ளிவிட்டன
வோவென்றும், அக்கூந்தல்களோடு மயிர்றேகைகள்
போர்செய்து அர்த்தசந்திரபாணங்களால் அடிக்கப்
பட்டு அந்தவடுக்களுடனே ஓடிப்போய் இவளுக்குப்
பின்புறத்தில் மறைந்துகொண் டிருக்கின்றனவோ
வென்றும், யமுனாநதியோ காளிந்தி நதியோ வென்
றும், காமனுடைய வில்லினது சிறந்த நாரியோ வெ
ன்றும், குருவிந்த மணிகளிழைத்த சுட்டியினது கா
ந்தி பிளந்துகொண்டு ஓடினதினாலே வகிரென் னும்இ
ரேகையேற்பட்டுப் பிரிந்து நிற்கின்றனவோ வென்
றும், மற்றும் பலவிதரத்தின ஆபரணங்களினாலும் ம
லர்களாலும் அலங்கரிக்கப்பட் டிருக்குங்கால் தமக்
கோ ராபரணமாகிய சந்திர னிங்குவந் திருக்கின்றா
னென்று தேடிக்கொண்டுவந்த கிரகங்களினாலும் நட்
சத்திரங்களினாலும் விளங்கும் ஆகாசமோவென்றும்,
அல்லது அச்சந்திரனைக் கவரக் கவிந்த இராகுவோ
வென்றும் கற்றுணர்ந்த கவீச்சுரா ளனைவரும் புகழ்
ந்து குறிக்கும்படி இருந்தது.

முகத்திற்குத் திரிஷ்டிதோஷம் வாராமலிருப்ப
தற்காகக் கஸ்தூரித் திலகந்தீட்டி விளங்காநின்ற
நெற்றியானது, தான் அளகத்தின்கீ ழிருத்தலாலே
அபரபட்சத்து அஷ்டமியில் இருள் மேலெழும்ப உ
தயமாகும் அர்த்த சந்திரன்போல் விளங்கிற்று. அ
வளது முகமண்டலகாந்தியைப் பெறுவதற்குச் சந்தி
ரனானவன் மாதந்தோறும் சூரியனாகிய அக்கினிகுண்
டத்தை வலம்வந்து அதிற்குதித்துத் தேகத்தை
விட்டு மறுபடி ஓர் தேகத்தையடைந்து இவ்வாறாக
வே நெடுநாளாகக் கடினமாகிய தவஞ்செய்து வருகி
றானென்றும், அல்லது அந்தச்சந்திரன் இராகுவுக்
குப் பயந்து ஆகாசத்தைவிட்டு இவள் முகரூபமாகி
ஒளித்துக்கொண் டிருக்கிறா னென்றும், களங்கமுந்
தேய்தலுமுடைய அச்சந்திர பிம்பத்தை மறுவற்று
நித்தியமும் பூரணமாக விளங்கிக்கொண் டிருக்கும்
இவள் வதனத்திற்குச் சமமாகச் சொல்வது நியாய
மல்லவென்றும், அச்சந்திரனாற் குவியப்படும் தாமரை
மலரை இவள் முகத்திற்குவமையாக்குவது அறிவின்
மையன்றோ வென்றும், அவள் முகத்தினேர்மை த
னக்கில்லை என்கிற துக்காக்கினியினால் இருதயம் கன்
றிப்போனபடியா லன்றோ அத்திங்களின் மத்தியிற்
களங்கமுண்டா யிருக்கிறதென்றும், சந்திரன் இவள்
முகவுருக் கொண்டமையால் அதற்கேற்ப நட்சத்திர
ங்களு முகவட்டமுதலாகிய அணிகளில்தொங்குகின்
ற ஆணிமுத்துக்களினுருவையடைந்து அவளைச்சூழ்
ந்து நிற்கின்றனவென்றும், சந்திரனென்னு மொழிக்
குக் களிக்கச் செய்பவனென்று பொருளாதலால் அத்
தன்மை இம்முகத்திற்கே உரித்தாயிருக்கின்ற படி
யால் இதுவே சந்திரனன்றி வானத்திலிருக்கும் திங்
கள் சந்திரனல்லவென்றும், இவ்வாறு புலவர் பல
வாறுகப் பேசும்படியா யிருந்தது.

அவ்வனிதையினுடைய புருவங்களோ மதனு
மிரதியும் தங்களுக்கு மித்திரனாகிய சந்திரனிடத்தில்
வைத்திருக்கும் வில்லுகளாக நினைக்கப்பட்டன. அவ
ளுடைய கண்கள் லாலனையினாற் சந்திரன் மடிதனி
லேறி விளங்கா நின்ற குவளைகளோ? அல்லது அச்
சந்திரன் மடியிற் படுத்துக்கொண்டிருக்கிற மானின
து விழிகளோ? அவளது முகமாகிய தாமரைப் பூவில்
மொய்த்துக்கொண் டிருக்கும் வண்டுகளோ? அம்மு
கத்தின் காந்தியாகிய பிரவாகத்தி லிருக்கிற மீன்க
ளோ? அங்கு விளையாடிக்கொண் டிருக்கிற மதனுமி
ரதியுமுடைய கூர்மைபொருந்திய வாட்களோ? எ
ன்று சந்தேகிக்கும் படியாய் இவைகளுக்கு அஞ்சி
யே கலைமான்களெல்லாம் காடுபுகுந்தன வென்றும், இ
வைகட்குத்தோற்றேதாமரைகளுங்கருநெய்தல்களும்
வாவிபுகுந்தனவென்றும், இவைகளின் பயத்தினாலே
யே மீன்கள் நீரினின்றுமெடுக்கப்படும்போதே துடிக்
கின்றனவென்றும் எண்ணும்படியாய் விளங்கி; மத
த்தினால் மிளிர்ந்து நோக்குங்காலத்துக் காமனுடைய
பூசைக்காக வெண்டாமரைமாலைகளையுஞ் செந்தாமரை
மாலைகளையுங் கருநெய்தல் மாலைகளையுந் தந்துகொ
ண்டு தன்னை யுடையவளுக்குத் தீங்குவருமென்று
நினைத்துத்தான் காதுகளிற் பாய்ந்து போகாமல், மை
யிடப்பட்டபோது யமனையும்விஷத்தையுங் கொடுமை
யில்லாதவர்களாக்கி மிகுந்த உறுதியையுடைய முனி
வர் மனங்களையுஞ் சின்னபின்ன மாக்குந் திறமுள்ள
கடைப்பார்வையுடையவைகளாகிப் பிரகாசித்துக்கொ
ண் டிருந்தன.

கபோலங்கள் மதனவேளினது இரத்தினக் க
ண்ணாடிகளோ டொத்துச் சிரிக்கிறவேளையில் ஆட

வருடைய மனங்க ளழுந்தும்படியாகிய சிறுகுழிகளுடையவைபாக விருந்தன. அவளது நாசிகையோ மதனனுடைய தூணீரமானபடியினாலே அதின் காற்றிற் பரிமளமுண்டா யிருக்கின்றது என்று எண்ணப்பட்டுக் குமிழமலரைக் காட்டிற்றூரத்திச் சண்பகமலரை மரத்திற்றாக்கி முகமாகிய தாமரைமலரில் ஓ ரன்னப்பேடிட்ட முட்டை யென்று குறிக்கும் படியாகிய ஆணிமுத்தை அணிந்து யாவராலும் இது முத்தமிடத் தக்கதுதா னென்று புகழப்பட் டிருந்தது. மொழியாகிய தேன்சுரக்கும் பவளச்செப்பெனச்சொல்லத் தக்கதாக விருந்த அவளுடைய வாயிலிராநின்ற பல்வரிசைகள் சரசுவதிதேவி வாசஞ்செய்கிற இவளுடைய வாயாகிய சிம்மாசனத்துக்கு அலங்காரமாகக் கட்டிய முத்துச் சரங்களா யிருக்கலாமென்று நினைக்கப்பட்டு, தாம்பூலத்தாற் செந்நிற முடைத்தா யிருக்கு மளவில் மாதுளங்கனியினது சிவந்த விதைகளின் அகங்காரத்தை யடக்கிச் சிறந்தன.

சிலர் இவளிதழை இவளது மிடற்றோசை கேட்டுக் குயில்கூவுதென்று மனதில்நினைத்து அதற்காதாரமாகச் சமீபத்திற் கொடுவந்துவைத்த செந்தளிரோ? கிளியென்று நினைத்துச் சிலர்வைத்த கொவ்வைக்கனியோ? அல்லது பதுமராக மணியைத்துளைத்து அமுதத்தை நிறைத்து அதற்கு மேன்மையு முண்டாக்கி விசித்திரமாகச் செய்யப்பட்டதோ? மற்றியாதோ வறிகிலோமென்றும், சிலர் கடினமாகியும் இரதமற்று மிருக்கிற பவளத்தையும் - மிகவிளைவில் நிறம் மாறுபடுகிற தளிரையும் - இதற்கு உவமையாக்குதல் சான்றோர் செய்கை யன்றென்றும், சிலர் கொவ்வைக்கனி இதன் காந்தியை நினைக்கும்போது தான்மிகத் தளர்ந்து சிந்துகின்றது என்றும், சிலர் கவிகளால் உலகத்தில் மங்கையரைச் சிறப்பிக்கும்போது துவரிதழின ளென்கிறார்களே : தித்தித்த விதழினளா இப்படி சொல்வது தகாதென்று நினைத்திருந்தோம். அது இப்பொழுதுதான் சரியென்று தோற்றிற்று. எப்படியென்றால்-இவ்வதரருசியைச் சிந்திக்குங்கால் மற்றை மாதர்களின் அதரருசி துவர்ப்புடையதென்றும், சிலர் ஓ! ஓ! இதென்ன ஆச்சரியம்? இவ்வமுதக் கனியை நோக்குவோற்கு மனதிற் காமரசஞ் சுரக்கின்றதே என்றும், சிலர் முகச்சந்திரனது நிலாவே அப்படியிருக்கலாம். ஆதலாலேதான் காமரச சமுத்திரம் பொங்குகின்றது என்றும், சிலர் அது இவளது நாவில் வீற்றிருக்குங் கலைமகளுடைய வெய்யொளியோ? இல்லாவிட்டால் இவள் சொற்களுக்கு முதற்காரணமாகிய அமுதப் பெருக் கேதென்றும் இவ்வாறுயாவராலும் சங்கிக்கக்கூடுமான புன்னகையோடுங்கூடி நிலவுபரவிய செவ்வல்லிமலரையும்-அம்மலரோடுகூடிய தளிரையும் - திக்காரஞ்செய்து விளங்கிற்று.

வள்ளையிலையை நினைப்பிக்குங் காதுகளானவை ஆடவருடைய மனங்களோடுகூட நவமணிகளிழைத்த வணிகளும் ஊசலாடுகிறதற்கான டோலிகைகள் போலிருந்தன. அவள்கழுத்தோ இரத்தினப்பணிகளாற் பக்கத்தில் வீற்றிருக்கிற சீதேவியாருடைய கண்களின் காந்திபொருந்தி விசித்திரமாக விளங்குந் திருமாலுடைய பாஞ்சசன்னியத்தை நேசித்திருந்தது. அன்றியும்-சங்குகளெல்லாம் இவள் மிடற்றோடு யுத்தஞ்செய்து இதனால் துரத்தி அடிக்கப்பட்டுப் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று கடலிற் புகுந்திருக்கின்றனவென்று சொல்லும்படியாகவும் விளங்கியது. மஹாமேரு பருவதத்தில் முளைத்த தங்கக்கொடி மென்மையும் சுகந்தமும் பொருந்தியிருந்தால் இவைகளுக்கு நிகராகுமென்று சொல்லும்படி சிறந்து நீண்டு திரண்டு விளங்கு மவளுடைய கைகள், கணுக்கையிலணிந்திருக்கிற மணிக்கங்கணக்கதிர்களினாலே வடுகர் வழக்கத்தின்படி கஸ்தூரி - குங்குமம் - கர்ப்பூரங்களால் ரேகைக ளெழுதப்பட்டவைபோற் பிரகாசங்கொண்டிருந்தன. தோள்களோ கழைகளின் ரூபத்தைக் கவர்ந்துகொண் டிருந்தன. யாழினழகு மிடற்றில் மாத்திரமல்ல முன்கைகளிலும் விளையாடிக்கொண் டிருந்தது. அவளுடைய அகங்கைகளுக்கு அடிமைத்தொழில் செய்வதற்குங் காந்தள் தகுந்ததன்றென்று மூடனுக்குஞ் சொல்ல வெளிதா யிருந்தது. அப்பெண்ணரசியினது நகங்களைக் கண்டாற் கிளிகளின் வாய்களை யொருவனும் சிறப்பிக்க மாட்டானென்று சொல்வதற்கு ஒருவாற்றானுந் தடையின்றியிருந்தது.

அவளது மார்பெல்லாம் படர்ந்து - உயர்ந்து - பருத்து - நிமிர்ந்து - இடைவெளி யில்லாதவைகளாகி வட்டம்போல் வடிவுளவாய்க் கல்லினுங் கடினமாகி மலரினும் மிருதுவாகி அழுந்தி - கறுத்து - சிறுத்த- கண்களையுடைய மூலைகள், இம்மங்கையாகிய பொற்கொடியினது பூங்கொத்துகளோ? காமன் இரதியோடுகூடி விளையாடுகிறதற்கு மணிக்கோட்டுடன் தங்கத்தினா லமைந்த பொற்குன்றங்களோ? பருவமென்னுந் தோழனை நோக்கவருங் காமனுக்கு மிரதிக்கும் பூசைக்காக வைத்திருக்கும் பூரணப் பொற்குடங்களோ? தேகத்தினொளியாகிய நதியின் வெள்ளத்தில் தவழும் சக்கிரவாகப் புட்களோ? இவளது தேகத்திலே யுலாவுங் காமவேளினது வாகனமாகிய யானையின் பொற்சிலை போர்த்த கும்பத் தலங்களோ? காமுகருடைய இதயங்களைச் சுழற்றுகிறதற்காகக் காமனேற்படுத்திய சக்கரங்களோ? மதனவேளைக் காண்பதற்குப் பருவமாகிய மங்கை சம்பாதித்து வைத்துக்கொண்டிருக்கிற பெரிய வெலுமிச்சம்பழங்களோ என்று காண்போரெல்லா மயங்கும்படியாய்; முத்துமாலைகள் மேற்புறத்திற் புறளுங்காற் பிரமலோகத்திலிருந்து விழுந்த கங்கையின் வெள்ளத்தோடு கூடிய மேருவையொத்து அம்மேரு இதன்பெருமை கேட்கையில உண்டாகிய வியசனத்தினா லசைவற்றுநின்

றுவிட்ட தென்றும், இரவிற்பிரிந்துநிற்கும் சக்கரவா
கப் புட்களும் - கறடுகட்டியிருக்கிற மலைகளும் - வி
ரைவில் விரியுந்தன்மையையுடைய தாமரைமுகிழ்களு
ம் - இவைகட்குச் சரியல்லனவென்றும், தாளம்-செப்
பு - சிமிழ் - யானைக்கோடு - முதலானவை யெல்
லாம் ஒவ்வொரு சிறப்பேயுடையனவாகையாற் பலசி
றப்போடுங்கூடிய இவைகட்கு எவ்வளவேனும் பொ
ருந்தாவென்றும், இம்மூலைகளைத் தனக்குச்சரியாய்நி
னைத்துச் செருக்கடைந்தபடியாற் பயந்து யாவராலும
டிக்கப்படுகிற தென்றும், இவ்வாறு செருக்கடைந்த
து பற்றியே யானையின் கும்பத்தலங்களும் மாவட்
டியாற் குத்தப் படுகின்றனவென்றும் சொல்லும்படி
மேன்மை பொருந்தி யிருந்தன.

மிகவும் பாரத்தைச் சுமப்பதினாலே நுண்ணி
தாகிய இடை ஒடிந்துபோகா திருக்கும் பொருட்டுக்
கீழங்கத்துக்கும் மேலங்கத்துக்கும் போட்ட இந்திர
நீலமணிச் சலாகையின்சாயையோ? அல்குலாகிய மா
ளிகையி லிருந்து மன்மத மஹாராஜன் தனதுவேடி
க்கை மலையாகிய மூலைமீது போவதற்கமைத்த நீலக்
கல்வழியோ ? மார்பிலணிந்திருக்கிற இரத்தினப்பதக்
கத்தைச் சூரியனென்று மயங்கி விழுங்கிறதற்காக
இடையாகிய ஆகாயத்தினின்றும்வருகிறஇராகுவோ?
அல்லது-அப்பதக்கத்தைத் தனது தந்தையாகிய சூ
ரியனென்று நினைத்துவந்த யமுனாநதியோ? அல்ல
து-இவளது ஸ்தனங்களைத் தாமரை முகிழ்களாக
வெண்ணியோடும் வண்டுகளின் வரிசையோ என்று
கருதப்பட்ட உரோமரேகையை யடைந்த வயிறான
து ஆதிகாலத்தில் நாராயணன் பள்ளிகொண் டிருந்
த ஆலிலைபோல் விளங்கிற்று. மேலுங்கீழும் அவயவங்
க ளிருத்தலாலே இரண்டும் பொருந்தும்படி நடுவி
லோ ரவயவ மிருக்கவேண்டுமென்று ஊகிக்கப்பட்டி
ருக்கிற அம்மங்கையின் கொங்கையைச்சுமந்த இடை
தன்னோடொத்த பூமியானது இரத்தினாகரமாகியமேக
லையை அணிந்திருக்கின்றதே; நாமும் அப்படியாக
வேண்டுமென இவ்வுருவங்கொண்டு சகல ரத்தினங்க
ளுக்கு மிருப்பிடமாகிய மேகலாபரணத்தைத் தரித்
திருக்கிறதென்று சிந்திக்கப்பட்டுப் பரமசிவனுடை
ய நெற்றிக்கண்ணா லெரிக்கப்பட்டு நசித்த காமனு
டைய தேகத்தை மறுபடி யுண்டாக்குவதற்கு முதற்
காரணமாகிய பரமாணுவைப்போலிருந்தது. அவளது
வயிற்றிற்பொருந்திவிளங்கு மடிப்புக்களின்வரையோ
இவ்வணங்கின் தேகத்தினுளிவாகிய ஆற்றின்திரைக
ளையும், மதனன்விளையாடும் உந்தியென்னும்வாவிக்கு
க்கட்டப்பட்ட பொற்படிகளையும்போன் றிருந்தன. அ
ன்றியும்-அவளுந்தியானது காமுகர்மனங்களை அவளி
டத்தில் ஆழ்ந்துபோகும்படி செய்வதற்காக அக்கா
மனால் ஒருவாறு கனிவுகொண் டேற்படுத்தியிருக்கிற
ஓர் சுழிபந்திரம்போலுந் தோன்றிற்று.

அவ்வணங்கினது அல்குலின் அழகை நினைக்கு
ம்போதெல்லாம் பாம்புகள் படங்களைக் குவித்துக்
கொண்டு புற்றில் ஒளித்துக் கொள்ளுகின்றன. அன்
றியும் - அப்பாம்புகளே அதற்கு நிகரென்று உலகத்
தார் சொல்வதை நம்பியன்றோ விஷ்ணுவானவர் சே
ஷன் படத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கின்றார். காமவே
ள் விளையாடுகிற மணற்குன்றுபோ லிராநின்ற அவ்
வல்குலுக்கு நிகர் அவ்வரவின்படமே யானாலும் அர
சிலையென்பதும் ஒக்கும். கருப்புவில்லியினது தேரி
னுருளைபோன்ற அம்மாதின் நிதம்பமானது காமுக
ருடைய மனங்களைச் சூரணஞ்செய்ய வேற்படுத்திய
குண்டுக்கல்லெனத் தோன்றிற்று. அவளரையிலிருந்
து பாதமளவும் வியாபித்திருக்கும் வெண்பட்டானது
இத்தேவகன்னியைக் கங்கையானவள் தனது தாயா
கிய இலக்குமியென்று மயங்கித் தனக்கிஷ்டத்தைக்
கொடுக்கவேண்டுமென்று குழந்தைபோற் கட்டிக்
கொண்டதாகச் சங்கிக்கப்பட் டிருந்தது. அவளுடை
யதொடைகளுக்கே நிகராகாத அரம்பையைஅவளுக்
கு நிகராக யார்தான் பேசுவார்கள். சொரசொரப் பு
டையதாகிய யானைத் துதிக்கையையும் அதற்கிணை
யாக நினைக்கலாமோவென்றால், விக்கினேஸ்வரர் அத்
தொடையினாலுண்டாகிய இச்சையைத் தீர்த்துக்கொ
ள்ள வன்றோ அத்தொடைக்கு நிகராகத் துதிக்கை
யைப்பெற்றிருக்கிறார். நல்லதங்கத்தினால் உருட்சியா
க ஒருஸ்தம்பஞ் செய்து, மெருகினா லதற்குப் பள
பளப் புண்டாக்கி, அதில் மென்மையையுங் குளிர்ச்சி
யையும் பொருத்தினால் அதையத்தொடைக்குச் சமா
னமென்று ஒருவாறு ஏற்றுக்கொள்ளலாமே யன்றி
வேறொன்றை ஒப்பிடுதல் சிறப்பன்று. அவளது முழ
ங்கால்களின் தோற்றத்தைப் பொன்னுலகிலிருக்கும்
கனகசெண்டுகள் பொருந்தி யிருந்தன. அவளது
கணைக் கால்களுக்குப் பொன்மயமாகிய இளவரால்க
ளையும், புறவடிகளுக்குப் பொன்னாமைகளையும், பாடு
களுக்குப் பொற்றராசையுமன்றி வேறு உவமானங் கி
டைக்கவில்லை. கால்விரல்கள் பவளத்தாலும் நகங்கள்
தாளத்தாலும் செய்யப்படாமற்போனால் அப்படிப் ப
ட்ட தோற்றத்தை உடையவையாக விரா. அவள் பாத
ங்களுக்குச் சரியாக வேண்டுமென்று தான் தாமரை
மலர்கள் நீரி லிருந்துகொண்டு சூரியனுக்கு எதிராக
ஆங்காங்கு தவஞ்செய்கின்றனவோ வென்றும், ஆசை
யாற்சிவந்த ஆடவருடையமனதிலுறைந்தமையாற்றா
ன் அவைசெவந்தனவோ வென்றும் சொல்லத்தக்கதா
யிருந்தன. அவளடிகள் சுபாவமா யிருக்கும்போதே
அவ்வடிகளுக்குச் சரியாகாம லிருக்கிற அனிச்சமலர்
கள் செம்பஞ்சூட்டி யிருக்குங்கால் களை நோக்கி உ
யிரைவிடவேண்டுமென்று நினைக்கும்.

அக்கால்களின் மணிச்சிலம்பில் அன்னத்தின் மி
டற்றோசை தோற்றுகையாலே இதுகளைத் தாமரைக
ளாகத்தான் சொல்லலாமென்று எண்ணும்படியா யி

ருந்தது. இவளுடைய மேனிக்கு மின்னலானது இ
டைவிட் டொளிதலில்லாத தன்மையோடுங் கூடியி
ருந்தால் உவமையாகச்சொல்லலாமென்றும்,இவளது
தேகத்தைச் சாம்பூனதநதியினதுசேற்றிற்போட்டிழு
த்தாரோவென்றும், இல்லாவிட்டால் அந்தந்த உறுப்பு
க்களுடைய ஒட்டிடங்களிலே கொஞ்சமாகிலும்விகற்
பங்காணப்படுமே யென்றும், இவளுடைய தேகத்தி
லே காந்தியென்னுமிரசத்தை நிரப்பியிருக்கின்ருரோ
வென்றும்,இவளுடைய அங்கத்தின்காந்தியைப்பார்த்
தால் முத்தினிடத்திற்-காந்தியில்லையென்றும், மென்
மையை நோக்கினுற் காட்டுவாழை மலர்களில் மென்
மை யில்லை யென்றும், நிறத்தைக் கண்டால் தங்கத்
தில் நிறமில்லை யென்றும், குளிர்ச்சியைச் சிந்தித்தால்
நிலவிற் குளிர்ச்சி யில்லையென்றும், வாசனையைநினை
த்தால் மலரில் வாசனை யில்லையென்றும் கவிராஜர்கள்
புகழ்ந்துகொண் டிருப்பார்கள்.

இவ்வாருக உலகத்துக்கு ஒரு மோகனுஸ்திரம்
போற் சிருஷ்டிக்கப்பட்ட அந்தத்திலோத்தமை யெ
ன்னும் அப்சரசானவள் அச்சபையெல்லாம் ஓரொளி
யை அடையும்படிவந்து நான்முகக்கடவுளைத் தொ
ழுது நின்று,சுவாமி! அடியாளுக் கனுக்கிரகஞ்செய்ய
வேண்டு மென்று கேட்டனள். அந்தத்தேவசிரேஷ்ட
னும் இவளைக் கண்டமாத்திரத்திலே மிகுந்த களிப்
பை யடைந்து, பெண்ணே! உனது தேகமானது யா
வரும் மோகிக்கும்படியான காந்திபொருந்தி வாழக்க
டவதென்று வரமளித்தனன். இந்தவர மகிமையாலும்
விசுவ கர்மாவினது சிருஷ்டித் தொழிலின் திறமை
யாலும் க்ஷணத்துக்கு க்ஷணம் அழகினுற் சிறந்த தி
லோத்தமையானவள் யாவருடைய கண்களையும் மன
ங்களையும் கவர்ந்து கொண்டவ ளாகிப் பிரமதேவனை
நோக்கிக் கைகூப்பிக் கொண்டு, எனது கடவுளே!
இனி அடியாள் செய்ய வேண்டிய பணிவிடையாதெ
ன்று வினவினள். அக்கடவுள் அடி பொற்கொடியே!
பூமியிற் சுந்தனென்றும்-உபசுந்தனென்றும் இருவரி
ருக்கிருர்கள். அவர்கள் நம்மிடத்தில் வரம்பெற்றுக்
கர்வமடைந்து லோகங்களையெல்லாம் அழித்துத் தே
வர்களையுந்துரத்தி உபத்திரவம்பண்ணிக்கொண்டிருக்
கிருர்கள். அவர்களுக்கு அவர்களாலேயே சாவாகை
யால் நீ அவ்விடம் சென்று, சிறந்த உனது வடிவத்தி
னுல் அவர்களை மயக்கி, ஒருவருக் கொருவர் விரோ
தம் வரும்படி செய்ய வேண்டும் என்று கட்டளை
யிட்டான்.

அந்தக் கட்டளையைச் சிரசில்வகித்த அப்பெண்
மணியானவள் நான்முகத்தேவனைத் துதித்துப் பிர
தக்ஷணம் பண்ணி நமஸ்காரஞ் செய்து விடைபெற்
றுக்கொண்டு பூமியை நோக்கிப் புறப்படும்போது, இ
வளுடைய உல்லாசத்தையும் நடையழகையும் வடிவ
ழகையும் பார்த்துச் சகலமாகிய தேவர்களும் ரிஷிக
ளும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்து, ஓ! ஓ! இவளுடை
ய ரூபத்தைக்கண்டு நாமே மோகிக்கும்படியா யிருக்
கிறதே: அந்த மதம்பிடித்த அசுரர் இவளைமோகித்
து வசப்படக் கேட்கவேண்டுமோ: ஆகையால் அவ்வ
சுரருடைய தொந்தரவு நமக்குநீங்கி சவுக்கியப்படும்ப
டியாகியகாலம் நேரிட்டது. இதற்குச் சந்தேகமில்லை
என்று ஒருவரோடொருவர் சந்தோஷமாகப் பேசிக்
கொண்டு அவள் பூமிக்கு இறங்கிப் போவதையே பா
ர்த்துக்கொண் டிருந்தார்கள்.

இப்படியிருக்க அந்தச் சுந்தோபசுந்த ரிருவரும்
மூன்றுலோகங்களையுஞ் செயித்துப் பல ஆபரணங்
கள் - வஸ்திரங்கள் - வாகனங்கள் - ஆசனங்கள் - மு
தலாகிய பொருள்களைத் திரளாய்க் கொள்ளையடித்
து, எந்தவேளையில் எந்த வஸ்துவின்பேரில் இஷ்ட
மோ எந்தஸ்திரீயின்பேரில் இஷ்டமோ அந்தவேளையி
ல் அந்த வஸ்துக்களையும் அந்த ஸ்திரீகளையுங் கொ
ண்டுவந்து மனதிற்கு இசைந்தபடி அனுபவித்துக்
கொண்டு, மஹா கர்வம் பொருந்தி அங்கங்கே சஞ்ச
ரித்துக்கொண் டிருக்கிருர்கள். அந்நாளில் ஒருநாள்
விந்தியமென்று பேர்பெற்ற பெரிய பருவதத்தைக்
கண்டு தங்கள் சேனைகளோடு அந்த மலையின்பேரிற்
சென்று நான்கு பக்கங்களிலுஞ் சுற்றிப்பார்த்து,
அதிலோரிடத்திலே பூத்தும் - காய்த்தும் - பழுத்
தும் - தளிர்த்தும் - தழைத்தும்-விரிந்து மிராநின்ற
மாமரம் - பலாமரம் - கோங்குமரம்-மருதாணிமரம் -
வாழைமரம்-தென்னைமரம்-புன்னைமரம்-கொன்றைம
ரம்-மருதமரம்-சண்பகமரம்-பாதிரிமாமுதலிய பலமர
ங்களையும் மல்லிக்கொடி - முல்லைக்கொடி - ஏலக்கொ
டி-முதலாகிய பலகொடிகளையும் உடைத்தாய் மயில்
உலாவவும்-குயில்கூவவும்-கிளிகொஞ்சவும் தேன்மிஞ்
சவும் விளங்காநின்ற ஓர் சோலையையும் அதினடுவில்
மேடுபள்ள மின்றிச் சமமாய் நிகநிகத்தும் வழவழத்
து மிராநின்ற பாறையொன்றையுங் கண்டு மனமகிழ்
ந்து தமதுமந்திரிமுதலான பேர்களைக் கூப்பிட்டு, நா
ங்களிங்கே வேடிக்கையாகச் சிலகாலம் வாசஞ்செ
ய்ய விரும்புகிருே மாகையாற் சேனையை யெல்லாந்
தூரத்தில் நிறுத்திவையுங்களென்று சொல்லி அந்தப்
பாறையினிடத்தில் வந்து சோலையிலுண்டாகிய சிங்
காரத்தையெல்லாங் கண்டு, வசந்தகாலத்தினு லுண்
டாகிற சுகந்தத்தையும் குளிர்ச்சியையும் பொருந்தி
மெதுவாய் வீசும் தென்றல் விலாசத்தையும் பார்த்து
அதன்மேலுட்கார்ந்து, மகாருசியுள்ள கனிகளைப்புசி
த்துக் கள்ளைக்குடித்து அதனுல் விசேஷ வெறியை
யும் வெகுவான மதத்தையு மடைந்து, மின்னற்கொ
டிக் கொப்பாகிய அனேகமங்கையர்கள் வந்து சிலர்
வீணைவாசிக்கவும்-சிலர் புள்ளாங்குழ லூதவும்-சிலர்
மத்தள முழக்கவும்-சிலர்தாளங்கொட்டவும்-சிலர் யா
ழ்வாசிக்கவும்-சிலர் பாடவும்-சிலராடவும்-சிலர் புகழ
வும்-சிலர் நிகழவும்-சிலர் புழுகு கஸ்தூரி குங்குமம்-
முதலாகிய வஸ்துக்களைத் தேகத்திற்பூசவும் சிலர்

பூச்செண்டு பன்னீர் பரிமளப்பொடி முதலியவஸ்துக்
களை ஆகாயத்தில்வீசவும்-சிலர் பேசவும்-சிலர்ஏசவும்-
சிலர் பூமாலைகளைச்சூட்டவும்-சிலர்கண்ணாடிகளைக்கா
ட்டவும்-சிலர்தாம்பூலமடித்துக்கொடுக்கவும்-சிலர் ஜா
திக்கா யெடுத்து அளிக்கவும்-பலர் ஆலிங்கனஞ்செய்
யவும்-பலர் ஆனந்தம் பெய்யவுமாக மகா வேடிக்கை
யோடு சரசசல்லாபமாய் விளையாடிக்கொண் டிருந்
தார்கள்.

அக்காலத்திலே அந்தத்திலோர்த்தமையானவள்
ஆகாசத்தினின்றும் அவ்விந்தமலையின் சமீபத்திலோ
டுகிற ஓராற்றின்கரையி லிறங்கித் தன்னவயவங்கள்
குறிப்பாய்த் தோற்றும்படி மெல்லிதாகிய குசும்பாவ
ஸ்திரத்தைத்தரித்துக்கொண்டு,தனுக்கும்-மினுக்கும்-
குலுக்கும்- பலுக்குமாகப் புன்சிரிப்புடனே கடைக்க
ண்ணால் இவர்களிருக்கும் இடத்தையே பார்த்துக்
கொண்டு புட்பங்களைக்கொய்து அன்னம்போல் ஒ
ய்யாரமாக நடந்துவருகிறாள்.அதனைக்கண்ட அவ்வசு
ரவீரரிருவரு மனந்தளர்ந்து காமவெறிகொண்டு அவ்
விடத்தினின்றுந் திடீலென்றெழும்பிக்குதித்தோடிவந்
து, மூத்தவன் அவளுடைய வலதுகையையும்-இளை
யவன் அவளுடைய இடதுகையையுமாகப் பிடித்துக்
கொண்டு, அந்தப் பெண்ணினுடைய ரூபத்தையும்
காந்தியையும் கண்ட களிப்பினாலேயும்-அவளுடைய
தேகத்தைப் பரிசித்ததினாலேயும் - மிகுந்த காமவி
காரமடைந்து, கண்களில் ஆனந்தக் கண்ணீர் த
தும்பத் தேகமெல்லாம் மயிர்க்குச்சடைய ஒன்றுந்
தெரியாமற் பரவசமடைந்து, சுந்தனானவன் தம்பி
யைநோக்கி இவள் உனதண்ணனுடைய பெண்சாதி
யாகையால் உனக்குத் தாய்க்குச்சமானமாகியவள் எ
ன்றான். உபசுந்தன் அண்ணனைநோக்கி இவள் உன்த
ம்பியினுடைய பெண்சாதியாகையால் உனக்கு மரும
களுக்குச் சமானமாகியவள் என்றான். இப்படியே நெ
டுநேரம் ஒருவரோடொருவர் வாதித்துக்கொண்டு இ
ருகண்களுஞ் சிவந்து சுழலமிடப் புருவங்கள் நெறி
த்துத் தாண்டவமாட உதடுதுடிக்க உள்ளங்கலங்
கக் கடினமாகப்பேசி மிகவும் பகைகொண்டு, ஒருவ
ரோடொருவர் சண்டைக்கு ஆரம்பித்தார்கள்.

இப்படியாக அந்தச் சுந்தோபசுந்தரர் பலத்தி
னாலும் - செல்வத்தினாலும்-குடியினாலும் - மதமடை
ந்து, காமத்தினால்மயங்கி, நன்மைதீமைகளைச் சிந்திக்
காமல் இயல்பாயிருந்த நேசத்தை நொடியில் மறந்
து,பயங்கரமான கதாயுதங்களைக்கையிலெடுத்துப் பு
ஜங்களைத்தட்டி அட்டகாசஞ்செய்து இருவரும் நீநா
னென்று வீரவாதம்பேசிச் சிங்கங்கள்போல் ஒருவர்
மேலொருவர் பாய்ந்து,தங்கள் கதாயுதங்களைக் கரகர
வென்று சுழற்றி அடிக்கவருகிறதும் அதைத் தப்பி
த்துக்கொண்டு ஆகாசத்திலெழும்பி மறுபடி பூமியிற்
குதித்துப் பிடிக்கவருகிறதும் பின்பு சமயம்பார்த்து
ஒருவனை யொருவன் தூக்கி அம்மனை யாடுவதைப்
போல் ஆகாசத்தி லெறிகிறது மாகப் பூமியெல்லாம்
கிடுகிடென்று நடுங்க அண்டமெல்லாம் படபடென்று
வெடிக்க மலைகளெல்லாம் எதிரிரைச்சல் போடப் பய
ங்கரமாகக் கெர்ச்சித்து ஒரு முகூர்த்த காலம் யுத்
தஞ்செய்து, கடைசியில் அந்தக் கதாயுதங்களாலே
யே ஒருவரையொருவர் அடித்துத் தங்கள் தேகமெல்
லாம் பிளந்து இரத்தம் தாரை தாரையாகப் பெருகி
யோட ஆயுதங்கள் பிடித்திருக்குங் கைகால்களு முறி
ந்து நடுங்கியாட அவ்விரண்டுபேரும் இரண்டு சூரியர்
விழுந்தாற்போற் பூமியில் விழுந்து மடிந்தார்கள்.

இப்படிக்கு இவ்வசுரர் நாசமாகப்போவதை மு
ன்னமே ஆகாசத்தில் வந்து பார்த்துக்கொண்டிருந்த
பிரமதேவரானவர் தேவர் - கருடர் - கந்திருவர் -கின்
னரர் - கிம்புருடர் - சித்தர் - சாத்தியர் - இயக்கர் -
விச்சாதரர் - முனிவர் - முதலாகிய சகலபரிவாரங்க
ளுடனே அந்தத் திலோத்தமையினிடத்திற்கு வந்து,
பெண்ணே ! நீ மகாபாக்கியசாலி. உன்னாலல்லவோ
இப்பேர்க்கொத்த பாவிகளாகிய அசுரர் மாண்டார்
கள். மூன்றுலோகமும் சவுக்கியப் பட்டது. யாவரு
க்கும் உபகாரஞ் செய்யும் பாக்கியம் முன்பிறப்பில்
மிக அருமையாகியதவஞ்செய்த உனக்கல்லாது மற்ற
யாருக்குக்கிடைக்கும் ? உன்கீர்த்தி உலகங்களிலெல்
லாங் காலமுள்ள வரைக்கும் விளங்கிக்கொண் டிருக்
கும். நீசெய்த சகாயத்திற்குக் கைமாறு யார்செய்ய
மாட்டுவார்கள் ? அடி கண்மணியே! நான் உன்னிடத்
தில் மிகவுஞ் சந்தோஷமடைந்தேன். உனக்கு வேண்
டிய வரத்தைக்கேள். என்று சொல்ல அந்தப் பெண்
ணும் - சுவாமி ! அடியாளுக்கு என்னமகிமையுண்டு?
தேவரீருடைய கிருபையைப் பெற்றதினால் இவ்வித
பாக்கியங் கிடைத்ததேயல்லது வேறில்லை. இப்படிப்
பட்ட தேவரீருடைய கிருபையொன்றே போதுமான
வரமென்று சொல்லிப் பணிந்தாள். அப்படிசொன்ன
போதிலும் அவளுக்குப் பிரமதேவர் மிகுந்த சந்தோ
ஷத்தினாலே தாமே பலவந்தமாய் வரங்கொடுக்கக்
கருதி, ஓ பெண்ணரசீ ! நீ நினைத்த விடமெல்லாந்
தடையின்றி சஞ்சரிக்கக் கடவாய். உன்னைப் பலவந்த
மாய்ப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று எவன் வந்
தாலும் அவனெல்லாம் உன்தேஜோமய மகிமையைக்
கண்டு அஞ்சிஓடிப்போகக் கடவனென்று வரங்கொ
டுத்துச் சகல பரிவாரங்களோடுந் தமது சத்தியலோ
கத்தினுக்குப்போய்ச் சேர்ந்தார்.

அந்தத் திலோத்தமையும் தேவர்கள்ரிஷிகள் மு
தலானபேர்களை யெல்லாம் பிரதக்ஷண நமஸ்காரங்கள்
செய்து அவர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு
தனக்கிஷ்டமாகிய விடம்போய்ச் சேர்ந்தாள். இந்தி
ரன் முதலாகிய தேவரும் பொன்னுலகம் புகுந்து ச
ந்தோஷத்துடனே தங்கள்தங்கள் அதிகாரகங்களைச்செ
லுத்திவந்தார்கள். சகலரிஷிகளும் பிராமணரும் வை
திககாரியங்களைக் குறைவின்றிச் செய்து தருமத்தை
விருத்திசெய்துவந்தனர். இராஜாக்களு மிராச்சியங்க

ளைப் பரிபாலனஞ்செய்து தருமநீதிகளை நடாத்திவந்தார்கள். இப்படியாக லோகங்களெல்லாம் புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்டாற்போல் விளங்கின. கேளும் தருமபுத்திரரே! ஒருபெண் நிமித்தம் அப்படிப்பட்ட மகாவீரர் நீரும் பாலும்போலிருந்த இயல்பான நேசத்தைத் தள்ளி வீணாய் மடிந்தார்கள். ஆகையால் நீங்களிப்போது திரௌபதிக்காக ஒரு ஏற்பாட்டைச் செய்துகொள்ளவேண்டும். அதை என் முன்னிலையிலேயே நிறைவேற்றிவந்தால் உங்களுக்கு யாதொரு தீங்குங் கிடையாமலிருக்கும். இதை உங்களிடத்தில் விசுவாசத்தினாற் சொல்லுகிறேன். என்னுடைய இஷ்டத்திற்காகவாவது நீங்கள் ஒரு நிபந்தனஞ் செய்துகொள்ளுங்கள் என்று நாரத மஹாமுனி சொல்லப் பாண்டவர்கள் ஒருவரோ டொருவர் சமாதானப்பட்டு அந்த நாரத மஹாமுனியைக் கும்பிட்டு, சுவாமி! தேவரீருடைய உத்தரவின்படி எங்களுக்கு இதமாகிய ஒரு நிபந்தனை தேவரீரே ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நாரதர் அதற்கு மனமகிழ்ந்து, ஓ புண்ணியசீலர்களே! திரௌபதியை இதுமுதல் நீங்கள் ஐவரும் ஒவ்வொருத்தர் ஒவ்வொரு வருஷமாக முறையே சேர்ந்திருக்க வேண்டியது. அப்படி ஒருவரோடு அவளிருக்குங் காலத்தில் மற்றொருவன் எவ்விதத்தினா லாகிலும் அவ்விடம் வந்து பார்ப்பானாகில், அவன் ஒருவருஷம் விரதத்தோடு தீர்த்த யாத்திரையாய் நாட்டிற் போகவேண்டியது. இந்த நிபந்தனையின்படி நீங்களைவரும் நடந்துகொண்டு வருவீர்களானால் உங்கட்கு எக்காலத்தும் எக்குறைவுமில்லா திருக்குமென்று ஒருறுதி ஏற்படுத்தினர். அவ்வுறுதிக்கு அந்தப் பாண்டவர்கள் ஒத்துக்கொண்டு நாரதபகவானைப் பணிந்தார்கள். அவர் மிகவுஞ் சந்தோஷமடைந்து ஆசீர்வதித்துத் தம்முடைய லோகத்திற்குப் போயினர்.

உபபஞ்சபாண்டவ ருற்பவம்.

இப்பால் நாரத மஹாரிஷியினுடைய ஆக்கினையின்படி பாண்டவர்கள் ஐவரும் தங்களுக்குள்ளே தாங்கள் மாறுபடாமலிருக்கத்திரௌபதியானவள்முறையே கருப்பந்தரித்துத் தருமபுத்திரருக்குப் பிரதிவிந்திய னென்பவனையும் - வீமசேனனுக்குச் சுருதசோம னென்பவனையும் - அர்ச்சுனனுக்குச் சுருதகீர்த்தி யென்பவனையும் - நகுலனுக்குச் சதானீக னென்பவனையும் - சகாதேவனுக்குச் சுருதசேன னென்பவனையும் பெற்றாள். இப்பெயர்க ளிவர்களுக்கு வந்த காரணம் யாதென்றால் - தருமராஜன்போல் மிகவுஞ் சாந்தியடைந்து சத்துருக்களை வெல்லவுஞ் சக்தியுடையவனாகையால் அவர்பிள்ளைக்குப்பிரதிவிந்தியனென்கிற பெயரிட்டார்கள். அனேகங்கோடி சந்திரன் போற் பிரகாசமா யிருந்தபடியினாலே வீமசேனன் மகனுக்குச் சுருதசோமனென்று பெயரிட்டார்கள். அர்ச்சுனன் பகைவரை வென்றானென்னுங்கீர்த்தி கேட்கு மளவிற் பிறந்த படியினாலே அவன் புத்திரனுக்குச் சுருதகீர்த்தி யென்கிற பெயரிடப்பட்டது. அந்தப் பரத வமிசத்திலே முன்னிருந்த சதாநீகன் என்கிற இராஜன்போல் மஹா சக்தியுடையவனென்று நகுலன் குமாரனுக்குச் சதாநீகனென்கிற நாமதேயந்தரித்தார்கள். கிருத்திகாநட்சத்திரத்திற்பிறந்தவனாகையாற் சகாதேவன் மைந்தனுக்குச் சுருதசேனனென்கிற நாமமிடப்பட்டது. இப்படிக்குப் பெயரடைந்த அவ்வைந்து குமாரரும் அப்பெயர்களுக்குத் தக்கபடியே மிகவு மகிமைகளையடைந்து, பஞ்சாக்கினிக ளென்னும்படி வளர்ந்து, சகலகலைகளுமோதி, அர்ச்சுனனிடத்திலேயே வில்வேதங் கற்றுச் சகலவித யுத்தங்களிலும் மிகவும்வல்லவரானார்கள். அன்றியும் ஐயப்படாமை - விருப்பின்மை-வெறுப்பின்மை-மயக்கமின்மை-பழியைநீக்கல்- அழிந்தோரைநிறுத்தல்-அறம்விளக்கல்-பேரன்புடைமை-ஆகிய அறுத்துறைப்புக்களையுமநுசரித்தார்கள். திரௌபதியின் குமாரராகிய இந்த உபபாண்டவர்கள் பிறந்த செய்தியைப் பாஞ்சாலர்கேட்டு வந்து, குழந்தைகளுக்கும், தங்கள் பெண்ணுக்கும் செய்யவேண்டிய வரிசைகளையெல்லாஞ் செய்து, பாண்டவர்களால் வெகுமானங்களைப் பெற்றுத் தங்கள் நகரம்போய்ச் சேர்ந்தார்கள்.

இந்திரப்பிரஸ்தச் சருக்கம் முற்றிற்று.

பதின்மூன்றவது.

அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்

கண்ணன் துதி.

குன்றெடுத் தாயர்மாதர் குரவைகொண் டொருவிளாவிற்
கன்றெடுத் தெறிந்துவெய்ய காளியற் கிருதாணல்கி
யன்றெடுத் திறுத்தவில்லே யனையவில் விழவுகாண்பான்
சென்றெடுத் திறுத்துநின்ற செங்கண்மா லெங்கள்கோவே.

ஓ சந்திரகுல சிகாமணியாகிய ஜெனமேஜெய மஹாராஜனே! பாண்டவர்கள் இவ்வாறு இந்திரப்பிரஸ்தத்தில் யாதொருகுறைவுமின்றி அரசாக்ஷிசெய்து வருங்காலத்தில் ஒருநாள் அந்த ஊரிலிருக்கும் ஓர்

பிராமணனது மாட்டுமந்தையிற் கள்ளர்புகுந்து மா
டுகளையெல்லாம் பிடித்து ஓட்டிக்கொண்டு போகவே
அந்தப்பிராமணன் மிகுந்த பரிதாபத்தை அடைந்து,
உடனே ஓடிவந்து அரண்மனை வாசலில் நின்று கோ
வென்னும் பெருங்கூச்சலுடனே-ஐயா ராஜாக்களே!
அனேகந் துஷ்டர்களாகிய திருடர்வந்து என்மாடுக
ளைக் கொள்ளை யடித்துக்கொண்டு போகிறார்களே:
இதென்ன அநியாயம்? நான் ஏழைப் பிராமணனுச்சு
தே: கேள்வியில்லையோ? உங்களுக்கு ஆறிலொரு கட
மையுங் கொடுத்துச் சொத்துக்களைத் திருடருக்குங்
கொடுக்கிறதா? நீங்கள் தருமமறிந்தவர்க ளல்லவா?
எந்தராஜாவானவன் குடிகளிடத்திற் கடமை தண்டி
க்கொண்டு செவ்வையாய்க் காப்பாற்றாமற் போகிறா
னோ அவன் யாவருடைய பாதகங்களையும் ஏற்றுக்
கொள்ளுகிறவ னாகிறான். அதிலும் பிராமணனுடைய
சொத்தைத் திருடர் கொண்டுபோக இராஜாபராமரிக்
கையாயிருந்தால், அதைக் காட்டிலும் அன்னியாயம்
வேறென்ன? ஓ தருமப் பிரபுக்களாகிய பாண்டவர்க
ளே! என்சொத்தைக் கைக்கொண்ட திருடர் அ
தோ ஓடுகிறார்கள். சீக்கிரத்தில் ஆயுதத்தைக் கையி
ல் எடுத்துக்கொண்டுபோய்ப்பிடித்து என்சொத்தை
எனக்குக்கொடுத்து அந்தப்பாவிகளையுந் தண்டனை
செய்யுங்கள். சாவகாசப் படுத்த வேண்டாமென்று மி
கவுந்துக்கமாக விக்கினான்.

அவ்வரண்மனை வாசலிற் கஸ்து சுற்றிவந்த அர்
ச்சுனன் அதுகேட்டுத் தன்னுடைய ஆயுத மிருக்கிற
விடத்திலேபோக யத்தனப்பட அப்போது திரௌ
பதியோடு தருமபுத்திர ரிருக்கு முறையாதலால் அ
வர் அவ்விடத்தில் அத்திரௌபதியோடு வசனித்தி
ருப்பதையறிந்து அங்கேபோகக் கொஞ்சமஞ்சிச் சற்
றே ஆலோசித்து, ஓ! ஓ! இதென்ன தருமச்சங்கடம்
நேரிட்டது. இந்தப் பிராமணரோ சொத்தைப் பறி
கொடுத்துவிட்டுவந்து இங்குமுறையிடுகிறார். நாம் சீ
க்கிரமாக ஓடி அந்தக் கள்ளரைச் சம்ஹாரஞ்செய்து
பிராமணன் சொத்தைத் திருப்பிக் கொடாமற் போ
னால் தருமத்துக்குக் கேடுவருகின்றது. அதற்காக ஆ
யுதமெடுக்கப்போனால் நிபந்தனத்திற்கு விரோதமா
கையாலே ஸ்தலவாசம் பண்ணவேண்டி வருகிறது.
ஆனாலும் தருமத்தைக் காப்பாற்ற வேண்டியதே மு
க்கியம். வனவாசம் நேரிட்டாலும் நேரிடட்டும். ஆ
னால் நாம் சிங்காரவனத்தின்வழியாகச்செல்லுவோமெ
ன்று வந்தான். அந்தயிடத்தில் தருமராஜனுந் தி
ரௌபதியும் சந்திரகாந்தக் கன்மேடையிற் சரசசல்
லாபமா யிருக்கக்கண்டு அரிகரியென்று காதைமூடி
அண்ணனைப் பணிந்துசென்று அவசரமாய் ஆயுதங்
களை யெடுத்துக்கொண்டு வந்து, ஓய் பிராமணா! சீக்
கிரம் வாரும். அந்தத்திருடர்போன வழிபாரும். தூ
ரமாக ஓடிப்போகிறதற்குமுன்னமே அவர்களைப்போ
ய்ப் பிடிப்போம். என்று தேரின்மேலேறி அந்தப்பி
ராமணனையுங் கூட வைத்துக்கொண்டு அவன்காட்டு
கிற வழியேபோய்த் திருடர்களைக் கண்டுபிடித்து,
உடனே வில்லையெடுத்து நாணேற்றிட்டுக் கூர்மையா
கிய அம்புக ளனேகந்தொடுத்து அவர்கள்மேற் பிர
யோகித்து அவர்களையெல்லாம் கைவேறு - கால்வே
று - தலைவேறாகத் துண்டந் துண்டமாய் ஒரு நிமிஷ
த்துக்குள்ளே அறுத்துத்தள்ளி நாசம்பண்ணிப் பசு
மாடுகளை யெல்லாந் திருப்பிக்கொடுத்து அவனை வீட்
டிற் கொண்டுவந்து விடுத்துக் கும்பிட்டு அவனிடத்
தில் ஆசீர்வாதம்பெற்று இந்திரப்பிரஸ்தம் வந்துசேர்
ந்தான்.

பொழுதுவிடிந்தவுடன் அர்ச்சுனனானவன் தன்
மூத்த தமயனாரிடத்துக்குவந்து தண்டனிட்டு நட
ந்தசெய்தியைச் சொல்லி. அண்ணா! தேவரீர் திரௌப
தியோடு வார்த்தை யாடிக்கொண் டிருக்கும்போது
நான்பார்த்தபடியால் நாரதபகவான் ஏற்படுத்திய நிப
ந்தனையின்படி நான் தீர்த்தயாத்திரை போகவேண்டி
யதல்லவா? ஆகையால் அதற்கு விடைகொடுக்க வே
ண்டுமென்று கேட்டான். தருமராஜன் தம்பியைவிட்
டுப்பிரிய மனமில்லாமல் தழைந்தமனத்தோடு அவ்வ
ருச்சுனனைத் தழுவியணைத்து, ஓ எனதருமைத்தம்பீ!
என்வார்த்தையிலே நம்பிக்கை வைத்துக்கேள். நீ நா
னிருக்கு மிடத்திற்கு வந்ததினாலே என்மனதிற்கொ
ஞ்சமும் விகற்பமில்லை. அது எனக்கு இஷ்டந்தான்.
நீ குழந்தைக்குச் சமானமாகையால் அப்படிசெய்ததி
னாலே தோஷமில்லை. நான் நீயிருக்கு மிடத்திற்கு வ
ந்தால் அதுமாத்திரம் குற்றம். மேலும் நீ வேணுமெ
ன்று வந்தவனல்ல. பிராமண காரியமாய் வந்தாய். ஆ
பத்துக்குப் பாபமில்லை. ஆகையால் நான் சொல்லுவ
தை நம்பி நீ யாத்திரை போகாமலிரு. இதனாலே
உனக்குத் தருமத்தாக்ஷிவராது. என்றுசொல்ல அர்ச்
சுனன் - அண்ணா! சகலமுந் தெரிந்தவராயிருந்தும்
நீர் என்னிடத்தில் அன்பினாலே இப்படி சொல்லுகி
றீரே தவிர வேறில்லை. நானோ கபடமாக எந்தத்தரு
மத்தையும் அனுஷ்டிக்கக் கூடாதென்று பெரியோர்
கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனதால் யாத்
திரை போவதற்கு அஞ்சி ஏதாவது ஒரு சமாதான
ஞ்சொல்லித் தருமத்துக்கு விரோதந் தேடமாட்
டேன். மெய்யாகவே இந்த ஆயுதத்தின் பேரில் ஆ
ணையிட்டுச் சொல்லுகிறேனென்றான். அப்பால் தரும
ராஜன் மனவருத்தத்தோடு விடைகொடுக்கப்பெற்ற
அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை விரதத்திற்குரிய வே
ஷத்தை யடைந்து புறப்பட்டான். இப்படி புறப்பட்
டபோது அவனுடன்கூடச் சகலவேதங்கள் தெரிந்த
பிராமணர்களும் - சாஸ்திரிகளும் - வித்துவான்களும்-
வேதாந்த யோகிகளும்-புராணீகர்களும் வந்து பொ
ருந்த, அருச்சுனனானவன் அவர்களோடு கூடிக்கொ
ண்டு வெகுசந்தோஷமாய் அனேகம் புண்ணியதீர்த்
தங்களுக்குப்போய் காசியென்னுந் தலத்தில் மஹா
பரிசுத்தமாகிய கங்காநதியி னிடத்திற்கு வந்தான்.

(REGISTERED-COPY-RIGHT.)

(ஆதிபர்வம்-௨௬-வது-பக்கம்.)

அருச்சுனன் நாககன்னிகையை மணத்தல்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! அர்ச்சுனனோடேவந்த சகலமான பிராமணர்களும் அந்தக்கங்காநதியில் வந்து ஸ்நானஞ்செய்து பரிசுத்த வான்களாய் அக்கினிவளர்த்து ஓமஞ் செய்துகொண் டிருக்க, அர்ச்சுனனும் சங்கற்பமுதலிய தர்ப்பணங்கள் பண்ணி ஓமஞ்செய்வதற்காகக் கரையேறவேண்டுமென்றிருக்குமளவில் அந்தச் சலத்துக்குள்ளே விளையாடிக்கொண்டிருந்த உலூபியென்கிற நாககன்னியானவள் அந்த அர்ச்சுனனுடைய ரூபத்துக்கு மோகித்து அவனைப் பாதாள லோகத்துக்குக் கொண்டுபோய் விட்டாள். இவ்விதமாக நாகராஜன் மகளாலே கொண்டுபோய்ப் பாதாள லோகத்திற் கவுரவியன் என்கிற நாகராஜனுடைய மாளிகையில் விடப்பட்ட அர்ச்சுனன் அவ்விடத்தில் ஓமத்துக்கு உதவும்படியான அக்கினி வளர்த்து வைத்திருப்பதைக்கண்டு, மனதிற் கொஞ்சமேனும் சங்கைப்படாமல் ஓமகாரியத்தை முடித்து அக்கினி பகவானுக்குச் சந்தோஷம் வரச்செய்து அந்த நாககன்னிகையைப் பார்த்துச் சிரித்து, அடி பெண்ணே! நீயார் ? ஆ!என்ன சாகசமான காரியஞ்செய்தாய். இந்தவிடம் யாருடையதோ தெரியவில்லையேயென்று சொன்னான். அந்த உலூபியும்-ஓ என்னிஷ்டமாகிய புருஷனே ! கேளும்: மகாநாகராஜர்களுக்குள்ளாக ஐராவதன் என்கிற ஒருபெரியவருண்டு.அவருடையவமிசத்திற் கவுரவிய ரென்கிற ஒரு நாகராஜனிருக்கிறார். நான் அவருடைய மகள். உலூபி என்கிற பெயருடையவள். நீர் கங்கையில் இறங்கியபோது உம்மைக்கண்ட ஆசையாலே காமவேதனையடைந்தேன். நீரு மோகமுற்று இவணடைந்தீர். உம்மை நம்பி விசுவாசித்திருக்கிற என்னிடத்தில் தயைவைத்து, என்மனதைச் சந்தோஷப் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அர்ச்சுனன்-பாக்கியமுடைய பெண்ணே! நீ சொன்னபேச்சு சரிதான். ஆனால் என்னுடைய தமயனாகிய தருமராஜன் பனிரண்டுமாதம் விரதமிருக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அது தவரக்கூடாது. நீயோ என்னை விசுவாசித்தவ ளானபடியினாலே உனக்கும் இஷ்டத்தைத் தரவேண்டியதா யிருக்கிறது. நானோ பொய்யாய் நடக்கிறவனல்ல. என்னுடைய விரதத்துக்குங் குறைவுவாராம லிருக்கவேண்டும். உனது இஷ்டமும் நிறைவேறவேண்டும். இப்படியிரண்டுக்கும் விரோதமில்லாமல் எப்படி நடக்கலாம் சொல்லென்று கேட்க அந்நாக கன்னிகை இதனைச் சொல்லுவதானாள்.

இராவா னுற்பவம்.

ஓ பாண்டுகுமாரனே ! நீர் இப்போது பூமிசஞ்சாரம் பண்ணுகிற செய்தி இன்ன காரணத்திற்காகவென்று எனக்கு நன்றாய்த்தெரியும். உமக்கு உம்முடைய தமயனார் விரதம் கட்டளையிட்டதும் தெரியும். இதெல்லாம் திரௌபதி நிமித்தம் நாரதமுனிவருடைய முன்னிலையில் ஏற்பட்டதன்றோ ? அந்தத் தருமத்துக்கு ஒரு குறைவும் வரமாட்டாது. ஏனென்றால் - தொந்தரவடைந்து சரணம் பற்றுகிறபேர்களைக் காப்பாற்றுகிறது எல்லாத் தருமங்களிலும் முதன்மையாகிய தல்லவா ? ஆகையால் மன்மதனாலே மிகவும் வேதனைப்படுகிற என்னைக் காப்பாற்றினால் உம்முடைய விரதமானது பூரணமேயாகின்றது. அன்றியும் ஒருவேளை உம்முடைய விரதத்துக்கு ஏதாகிலுங் கொஞ்சம் குறைவுபாடு நேரிட் டிருந்தால் அதுவுங்கூட இந்தப்புண்ணியத்தினால் நீங்கும். சந்தேகமில்லை: ஆதலால் நீரே கதியென்று நம்பிய என்னைக் காப்பாற்ற வேண்டும். இது சகலசாஸ்திரங்களையறிந்தவர்களும் ஒத்துக்கொள்ளத் தகுந்த தருமமாகும்.அப்படியல்லாமல் நீர் உமது விரதத்தையே பெரிதாக எண்ணி என்னிஷ்டத்தை நிறைவேற்றாமற் போனால், உடனே மரணமடைவேன். உமக்குப்பெண்பாவம் வந்து நேரிடுமென்று நிச்சயமாய் நினையும். ஆகையால் ஒருவருக்கு உயிரைக்கொடுப்பதைக்காட்டிலும் உயர்ந்த தருமமுண்டோ ? உமக்குத்தெரியாததோ ? உம்மைச் சரணமென்று அடைந்த அநேகம் ஏழைகளையெல்லாம் காக்கின்றீர்,என்னிடத்தி லிவ்வளவு கிருபைசெய்யலாகாதோ?ஐயனே! உம்மிடநிமித்தம் காமனாலே மிகுந்த துன்பத்தை யனுபவிக்கிறேன். எவ்விதத்திலும் என்னைக் கைவிடாமற் காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். என்று மிகவும் பரிதாபமாக உலூபி என்பவள் சொல்லக்கேட்ட அர்ச்சுனன் மனதிரங்கி, அவளுடையயிஷ்டத்தை நிறைவேற்றுகிறது பெரிதானபுண்ணியமென்றுநினைத்து அந்நாககன்னிகையைப் பார்த்து, அடியென் கண்மணியே! உன்னிஷ்டப்படி நடக்கிறேன் மனதிற் சஞ்சலங்கொள்ளாதேயென்று சொல்லினன்.அந்தப்பெண்ணானவள் வெகு சந்தோஷத்தையடைந்து உடனே தனது தாய்தந்தையர்க்குச் சொல்லி அவர்களனுமதியின்பேரில் இவனுக்குநல்லபோஜனமிட்டு, சந்தனம்-புஷ்பம்-தாம்பூலம்-முதலான போகத்துக்குரிய வஸ்துக்களையெல்லாங் கொடுத்து உபசாரஞ் செய்து, நவரத்தின மயமாகிய தன்பள்ளியறையி லழைத்துக்கொண்டுபோய் அன்றிராத்திரி யெல்லாம் மிகவு மன்புடனே காமபோகங்களை யனுபவித்தாள். அர்ச்சுனனும் இராத்திரியெல்லாம் அந்த நாககன்னிகையோடு கூடியிருந்து அவள் வயிற்றில் ஒரு பிள்ளையை யுண்டாக்கி, விடியற்காலத்தி லெழுந்து தன்னைப்பிரிய மனமில்லாத அவளைக் கட்டி முத்தமிட்டுக்கொண்டு, பெண்ணே ! நான்போய்வருகிறேன் அதயிரியப்படாதேயென்று சொல்லி மெள்ளச்செலவுபெற்றுக் கொண்டு அவளுடைய உதவியினாலே அவ்விடத்தினின்றுங் கங்கைக்கரைவந்து சேர்ந்தான். பின்னரவள்

அர்ச்சுனனுக்குச் சமானமாகிய திட்வீரகாத்ரபராக்கிரமமுள்ள இராவான் என்கிற ஒரு பிள்ளையைப் பெற்றாள்.

அருச்சுனன் சித்திராங்கதையை மணத்தல்.

அப்பால் அருச்சுனனானவன் தன்னோடும் வந்த சகலபிராமணர்களுடன் கூடி நாகலோகத்தில் நடந்த செய்தியெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்து அங்கிருந்து அவர்களையு மழைத்துக்கொண்டு இமயமலையினிடத்திற்குவந்து அவ்விடத்தில் அகஸ்தியவனமென்கிற ஒரு புண்ணிய ஸ்தலத்தைக்கண்டு தரிசித்து, கவிஷ்டபருவதத்திற்குப் போய் பிருகுதுங்கமென்கிற புண்ணிய க்ஷேத்திரத்திற் பிராயச்சித்தஞ் செய்துகொண்டு அனேக கோதானங்கள் பண்ணி யாகங்களுக்காக தக்ஷிணைகளுங் கொடுத்து வெகு நிலங்களையும் பிராமணாளுக்குத் தானஞ்செய்து, இரணியபிந்து என்கிற தீர்த்தத்திற்கு வந்து அதிலும் ஸ்நானம்பண்ணி, திருச்சாளக்கிராமம் முதலாகிய பரிசுத்த பர்வதங்களுக்குப் போய் அங்கங்குள்ள புண்ணிய ஸ்தலங்களையெல்லாங்கண்டு தரிசனஞ்செய்து, கிழக்குத்திக்கிற் போய் உத்பலினி யென்கிற நதியையும் நைமிசாரண்ணிய க்ஷேத்திரத்தையும் நந்தை - அவரநந்தை - கவுசிகி-என்கிற நதிகளையும் கயையென்கிற புண்ணியத் தலத்தையும் அங்கங்கிருக்கும் புண்ணிய ஆச்சிரமங்களையும் கண்டு அங்கங்கே ஸ்நானம்-தர்ப்பணம் - தானம் - முதலாகிய சத்காரியங்களைச் செய்து, இன்னும் அந்தத்திக்கிலுள்ள அங்கம்-வங்கம்-கலிங்கம் - முதலாகிய தேசங்களிற்போய் அவ்விடங்களிலிருக்கிற தீர்த்த க்ஷேத்திரங்களையுங் கண்டு தரிசனஞ்செய்து, கலிங்கராச்சியத்தின்முகனையில் வருங்காலத்திலே அனேகம் பிராமணர்கள் தன்னிடத்தில் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

பின்பு அர்ச்சுனன் சிலசகாயத்தோடுங்கூடிக் கலிங்கராச்சியத்தை விட்டுத் தெற்கேதிரும்பிப் பரிசுத்தமாயும் அழகாயுமிராநின்ற அனேகவிடங்களைப் பார்த்துக்கொண்டே கிருச்சிராகரமென்கிற தீர்த்தத்திற்கு வந்து ஸ்நானம்பண்ணி, சமுத்திர சமீபத்திலிருக்கிற மகேந்திர பருவதத்தைப் பார்த்து கோதவரீ - கிருஷ்ணை - முதலான நதிகளிலேயும் ஸ்நானஞ்செய்து, அங்கிருந்து சேஷாசலமென்று பேர்பெற்று விளங்காநின்ற திருப்பதிமலைக்குவந்து அதிலிருக்கும் சக்கிரதீர்த்தம் - வராகதீர்த்தம்-முதலான தீர்த்தங்களில் மூழ்கி ஸ்ரீநிவாச மூர்த்தியாகிய திருவேங்கட முடையானைச் சேவித்து, அந்தப் பருவதத்தினின்று மிறங்கித் திருக்காளத்தியென்கிற மகாஸ்தலத்துக்கு வந்து சுவர்னமுகிநதியில்நீராடித் திருக்காளத்தியப்பனைத் தரிசனம்பண்ணி, அத்தெலுங்குநாட்டைவிட்டுத் தொண்டை நாட்டுக்குத் திரும்பித் திருத்தணிகைக்குச்சென்று வள்ளிதெய்வானையுடன் விளங்காநின்ற சுப்பிரமணியக் கடவுளைத் தரிசித்துக்கொண்டு, திருக்கடிகாசலத்துக்குப் போய் அங்கு எழுந்தருளியிருக்கும் நரசிங்க சுவாமியையும் நான்கு புயங்களோடு விளங்கும் அனுமாரையும் சேவித்துப் பின்பு முத்திக்ஷேத்திரமாகிய ஸ்ரீகாஞ்சீபுரமடைந்து பஞ்சாக்ஷரப் பொருளாகிய ஏகம்பநாதரையும் - அஷ்டாக்ஷரப்பொருளாய் விளங்காநின்ற வரதராஜப்பெருமாளையுங் கண்டுதெண்டனிட்டு, விரிஞ்சிபுரம்போய்த் தரிசித்துக்கொண்டு வரும்போது நடுநாடுசென்று திருவண்ணாமலையில் அடிமுடி காணவொண்ணாப் பெருஞ்சுடராகி விளங்கும் அருணாசலேசுவரர் பொற்பாதங்களில் தெண்டனிட்டுப் பூசித்து, திருக்கோவலூருக்குப்போய் அந்தகாசுரனைச் சங்காரஞ் செய்தருளிய வீரட்டேஸ்வரரையும் மூவடிகளால் உலகளந்த முதல்வனாகிய திருவிக்கிரம கோபாலமூர்த்தியையும் நமஸ்கரித்து, திருவெண்ணெய் நல்லூருக்குப் போய்ப் பெண்ணையென்கிற மகாநதியில் ஸ்நானஞ்செய்து அங்கிருக்கும் பரமேஸ்வரரையும் பணிந்து துதித்து, இந்நடு நாட்டிலும் அத்தொண்டை நாட்டிலும் இருக்கின்ற சகல புண்ணிய தீர்த்தங்களிலுமாடி மற்றுமுள்ள ஸ்தலங்களையும் தரிசனஞ்செய்து அங்கிருந்து சோழநாட்டிற் பிரவேசித்து மிகவுஞ்சிறப்புள்ள தில்லையில் விளங்காநின்ற சிற்றம்பலவரையும் கோவிந்த ராஜரையும் பணிந்து காவேரியில் ஸ்நானஞ் செய்து புனிதனானேனென்று மனமகிழ்ந்து, கும்பகோணமுதலாகிய புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டே வந்து திருவானைக்காவலி லெழுந்தருளி யிருக்கின்ற சம்புகேஸ்வரரைத் தரிசித்துச் சிரகிரியை யடைந்து தாயுமான தயாபரமூர்த்தியைத் திரிகரணங்களாலும் வந்தித்து அடுத்திருக்கின்ற ஸ்ரீரங்கம் சேர்ந்து சந்திரபுஷ்கரணியில் மூழ்கி ஸ்ரீரங்க நாதனையுஞ் சேவித்து நெஞ்சுருகித் தோத்திரஞ்செய்து, பின்பு காவேரி சங்கமத்திற்குப்போய் ஸ்நானமுதலிய தானங்கள் புரிந்து, அங்கிருந்து பாண்டியநாட்டுக்குப்போய் மதுரையென்று சொல்லுகிற விச்சாபுரமடைந்து அழகென்னும் பொருளே இவ்வடிவெடுத்து வந்ததென்னும்படியாகிய மீனாக்ஷி யம்மனையும் அவ்வம்மனுக்கேற்ற சொக்கலிங்க நாதரையுங் கும்பிட்டு, அங்கிருந்து மணலூர்ப் பட்டணத்துக்குப் போனான்.

அங்கே சித்திரவாகனனென்கிற பாண்டியன் மகளாகிய சித்திராங்கதை யென்பவள் வேடிக்கையாய் வனத்தில் உலாவும்போது அர்ச்சுனன் அவளைப் பார்த்து மையலாகி, அவள் இராஜ குமாரியென்று கேட்டறிந்து அதற்காக அந்தராஜனைக் காணவேண்டுமென்று கருதிக்கொண்டு தான்வந்திருக்கிற செய்தியை அந்தச்சித்திரவாகன மஹாராஜாவுக்குத் தெரிவிக்க அவனும் தகுந்த மரியாதையுடனே எதிர்கொண்டுவர அர்ச்சுனன் அவ்வரசனுடனே அரண்மனை

க்குப் போனான். அவ்விடத்தில் அந்த ராஜாவானவன் அர்ச்சுனனுக்குச் சகல உபசாரங்களும் பண்ணி யோகக்ஷேமம் கேட்க, இவனும் தன் யோகக்ஷேமங்களைச் சொல்லி அவனுடைய யோகக்ஷேமங்களையுங் கேட்டானவுடனே தனக்கிருக்குங்கருத்தை அவனுக்கு அறிவித்தான். அதுகேட்ட அந்தப் பாண்டியராஜனானவன் அர்ச்சுனனைப் பார்த்து, ஓய் இந்திரகுமாரனே ! கேளும்: எங்கள்குலத்தில் ஆதியிற் பிரபாகரனென்கிற ஒரு ராஜாயிருந்தார். அவருக்குப் பிள்ளையில்லாமற்போகவே அவர் பரமசிவனைக்குறித்து மிகுந்த தவஞ்செய்ய அச்சிவன் பிரசன்னராகி, ஓய் ராஜனே ! நீ சந்தானத்திற்காகத் தவஞ் செய்கிறாயன்றோ ? ஆகையால் உனக்கு ஒருகுமாரன் உண்டாவான். அப்படியே உன் குலத்திலே முறையே ஒவ்வொரு பிள்ளைகளே உண்டாகிக்கொண்டு வருவாகள் என்று அனுக்கிரகஞ் செய்தார். அப்படியே எங்கள் குலத்தில் ஒவ்வொரு சந்ததியே உண்டாகிக் கொண்டு வந்தது. அந்தப்படி எனக்கு மிப்போது இந்தப்பெண் ஒன்றுதான் பிறந்திருக்கிறது. ஆகையால் இந்தப் பெண்ணையே நான் பிள்ளையாக நினைத்து இவளைப் புத்திரிகா புத்திர விதியின்படி யோக்கியனாகிய ஒருவனுக்குக் கொடுத்து, அவள் வயிற்றில் முதற்பிறக்கும் பிள்ளையை என்சந்ததிக்கு உரியவனாக்கவேண்டுமென்று நினைத்திருக்கிறேன். ஆனபடியினாலே இந்தப்படி உமக்குச் சம்மதியானால் என் மகளை விவாகஞ் செய்து கொள்ளுமென்றான். அர்ச்சுனன் அப்படியே யாகுகவென்று சம்மதிப்பட்டான். அந்தச் சித்திரவாகனன் நல்லதினத்தில் முகூர்த்தங்கொண்டு மிகவுஞ்சிறப்பாய்த் தன்மகளை அவனுக்கு விவாகஞ்செய்வித்தான். இவ்விதமாய் மகாசவுந்தரியமுடையவளாகியும் பதின்மூன்றாம் வயதுடையவளாகியு மிராநின்ற அந்தச் சித்திராங்கதையை விவாகஞ் செய்து, அவிடத்திலேயே மூன்றுமாதம் வரைக்கும் அவளோடு சகலவித போகங்களையு மனுபவித்துக்கொண் டிருந்து, பின்பு அவிடத்திற்குச் சமீபமாகிய தீர்த்தங்களுக்குப் போய்வருவோமென்று நினைத்து உடனே அச்சித்திராங்கதையின் அந்தப்புரம் விட்டுப் புறப்பட்டான் விஜயகாண்டீப னென்னும் அருச்சுனன்.

நாரீதீர்த்த வரலாறு.

அங்கிருந்து புறப்பட்ட அர்ச்சுனனானவன் தென் சமுத்திரத்தைச் சேர்ந்த தீர்த்தங்களை யெல்லாம் பார்க்க நினைத்து அனேக தீர்த்தங்களுக்குப் போய் நீராடி, மற்றோரிடத்தில் வெவ்வேறு ஐந்து தீர்த்தங்க ளிருக்கப் பார்த்து அவைகள் நெடுநாளாய் ஜனங்களாற் பரிசிக்கப்படாமையால் மிகவும் அழகாய் விளங்கிக்கொண் டிருப்பதையுங்கண்டு அவைகளில் ஸ்நானம் பண்ண வேண்டு மென்று உத்தேசித்திருக்கின்றான். அக்கால் அங்கிருக்குந் தபசிகளெல்லாம் அர்ச்சுனனைப் பார்த்து, ஓய் மஹாராஜனே! இந்தத் தீர்த்தங்களி லிறங்கவேண்டாமென்று சொன்னார்கள். அதுகேட்ட அர்ச்சுனனானவன் கைகூப்பிக்கொண்டு அந்தத் தபசிகளைப்பார்த்து, சுவாமிகளே! ஏன் இதுகளி லிறங்கக்கூடாது? இதுகளினுடைய விபரம் எனக்குத் தயைசெய்து சொல்லவேண்டுமென்று கேட்க அந்தத் தபசிகளெல்லாரும் அவனைப்பார்த்து, ஓய் பாண்டுகுமாரனே ! இந்தத் தீர்த்தங்கள் பரிசுத்தங்க ளல்லவென்று நினைக்க வேண்டாம். சுருக்கமாகச் சொல்லுகிறோம் கேளும். இதோ யிருக்கிற தீர்த்தத்திற்கு அகஸ்திய தீர்த்தமென்று பேர். இதில் முழுகினால் மஹாபாதகங்களெல்லாந்தீரும். இது சவுபத்திர தீர்த்தமென்று பேர்பெற்றுச் சகல க்ஷேமங்களையுங் கொடுக்கத் திறமையுடையது. இது பவுலோமமென்று சொல்லப்பட்டது. இதனாலே தீராத பாவமொன்று மில்லை. இது காரந்தம தீர்த்தமென்று பெயருடையது. இதில் ஸ்நானஞ் செய்த பேர்களுக்கு மனதிலிருக்குங் கவலையெல்லாந் தீரும். இதைப் பரத்துவாச தீர்த்தமென்று சொல்லுகிறார்கள். இதில் நீராடுவதினால் அசுவமேத யாகஞ் செய்தபலன் கிடைக்கும். இவையெல்லாம் மஹா பரிசுத்தங்கள்தான். இவைகளில் மிகவும் பொல்லாதமுதலைக ளிருக்கின்றன. அவைகள் நீரிலிறங்கிய அனேக முனிவர்களைப் பிடித்துக்கொண்டு போய்விட்டதுகள். ஆனதுபற்றி யாவரும் இவைகளில் ஸ்நானஞ்செய்கிறதை விட்டுவிட்டார்கள். அதனாற்றான் உம்மையுமதிலிறங்கவேண்டாமென்றதென்றார்கள். அர்ச்சுனனதுகேட்டு, ஆனாலுமிதில் நான் ஸ்நானம்பண்ணுகிறேனென்று சொல்லினான். பெரியோர்களியாவரும் வேண்டாம் வேண்டாமென்று தடைசெய்தும் மிகுந்த வ்ரமும் தீரமுமுடையவனாகையாலே அந்தத் தடையை லக்ஷியஞ் செய்யாமற்போய் சவுபத்திரமென்கிற தீர்த்தத்தில் இறங்கி ஸ்நானஞ் செய்யுமளவில், அதிலிருக்கும் முதலையானது இவன் கால்களைக் கவ்விக்கொண்டது. பின்பு அர்ச்சுனன் தன்கால்களைக் கவ்விக்கொண்டு ஜலத்திலேயே இழுக்கும் முயற்சியையுடைய அந்த முதலையைத் தன் வலிமையினாலே தூக்கிக்கொண்டு எழும்பிக் கரையிற் குதிக்கும்போது, அந்த நீர் மிருகமானது தன் ரூபம் நீங்கிப் பல ஆபரண அலங்காரத்தோடு அழகிய வடிவமுமுடைய ஓர் பெண்ணாய் நின்றது. அதுகண்ட அர்ச்சுனன் ஆச்சரியப்பட்டு அன்புடனே அந்தப் பெண்ணைப் பார்த்து, அடிபெண்ணே ! நீயார் ? இப்படிப்பட்ட துஷ்டஜெந்துவாகப் பிறக்கும்படி என்ன பாதகஞ் செய்தாய் ? உன்வரலாற்றைச் சொல்லுக. என்று கேட்க அந்தப் பெண் சொல்லத் தொடங்கினாள்.

கேளுமையா மஹானுபாவா ! நான் ஒருதெய்வப்பெண். தேவாரணியத்தி லிருக்கிறவள். வந்தையென்று பெயருடையவள். எனக்கு நாலு தோழிமார்களுண்டு. அவர்களோடு கூட ஒருநாள் நான் தேவே

ந்திரனுடைய உத்யானவனத்துக்குப் போனேன். அ
வ்விடத்தில் ஒரு பிராமண மகானுபாவர் சூரியன்
போல் தேஜோராசியாய் விளங்கி அந்த உத்தியான
வனமெல்லாம் வெயிற்பட்டதுபோற்பிரகாசிக்கும்படி
நின்றுகொண்டு, தாமொருவராய்மகாநியமத்தோடுவீ
தவேத மோதிக்கொண்டிருந்தார். அப்படிப்பட்ட அ
வரையும்- அவருடைய ரூபத்தையும்-பருவத்தையும்-
நான்கண்டு காதல்கொண்டு, நானும் என்தோழிகளா
கிய சவுரபேயி - சமீசி - வக்தை - இலலிதை - என்கி
றவர்களும் அவரைமயக்கிக் கைவசப்படுத்த வேண்டு
மென்று அவரருகிற்போய் பாடுகிறதும் - ஆடுகிறது
ம்-சிரிக்கிறதும் - பரிகாசஞ்செய்கிறதும் - கண்ணைக்
காட்டுகிறதும் - தனத்தைக் காட்கிறதுமாகப் பல
வித விலாசங்களோடு சூழ்ந்து உலாவிக்கொண்டிருந்
தோம். அவர் கிஞ்சித்தாகிலும் மனங்கலங்காமல் த
னது நெறியிலேயே இருந்து தான்புரியுந் தவத்திற்
கு இடையூறு செய்யு மெங்களைப் பார்த்துக் கோ
பங்கொண்டு, ஓ பாவிப் பெண்காள் ! நீங்கள் என்
விஷயத்திற் செய்யுங் கெட்ட தொழில்க ளாலே
நூறு வருஷகாலம் முதலைகளாய்ச் சலத்தி னுள்
ளே வாசம்பண்ணக் கடவீர்க ளென்று சபித்தார்.
அச்சாபங் கேட்ட மாத்திரத்திலே நாங்களெல்லாம்
இடிமுழக்கங் கேட்ட அன்னப் பேடுகள் போல் நடுந
டுங்கித் துயரமுற்று அந்த மஹானுபாவருடைய பா
தங்களில் விழுந்து, சுவாமி ! நாங்கள் அறியாத பிள்
ளைகள். தேவரீருடைய மகிமை தெரியாமல் ரூபத்தை
யும் பருவத்தையுங் கண்டு காமனால் துளைக்கப்பட்ட
தேகமுடையவர்களாய் அயோக்கியமாகிய காரியங்க
ளைச்செய்தோம். ஆனாலும் சிறியோர்செய்த பிழை
பொறுப்பது பெரியோர் கடமையல்லவா ? அன்றி
யும் பெண்வதை ஆகாதென்பது தருமநூல்கற்ற தே
வரீருக்குந் தெரியுமே: இப்படியிருக்க எங்களுக்கு இ
வ்வித சாபங்கொடுக்கத்தகுமா ? எங்களையனே ! இ
தைக்காட்டிலும் எங்களைக் கொலைசெய்யும்விதம் வே
றில்லை. ஆகையால் எங்களைக் காத்தருள வேண்டும்.
அல்லாமலும் பிராமணனானவன் யாவரிடத்திலும் த
யையா யிருக்கவேண்டியவ னல்லவோ ? ஓமஹானு
பாவா ! அந்த நிலையை எங்களுக்காக விடாமலிருக்க
வேண்டும். தேவரீர் திருவடித் தாமரைகளல்லாமல்
எளியேங்களுக்கு வேறு தஞ்சமில்லாமையாற் பெரி
யோர்களுடைய ஒழுக்கத்தின்படி சரணமடைந்தவெ
ங்களைக் காப்பாற்றி யருளவேண்டுமென்று கண்களி
னின்றும் தாரை தாரையாய் நீர்பெருகக் கோவென்று
கதறி வேண்டிக் கொண்டார்கள். அவ்வளவில் அவர்
மனமிரங்கி,பெண்களே! பயப்படாதீர்கள். நான் நூறு
வருஷகாலமென்று சொன்னதில் நூறு என்கிறசொல்
அளவற்ற தொகையல்ல. இச்சாபம் சீக்கிரத்திலேயே
உங்களுக்குத் தீர்ந்து போய்விடும். அது தீருவது எப்
போதென்றால் - நீங்கள் முதலைகளாய் நீரிலிருந்து
அதிலிறங்குகிற பேர்களையெல்லாம் பிடித்துத் துன்
பப்படுத்து மளவில், ஒருவன் உங்களை நீரினின்றுந்
தூக்கிக் கரையில் விடுவான். அப்போது இந்தச் சா
பந்தீரும். நான் ஒரு போதும் பொய்பேசாதவனாகை
யால் முன்சொன்னதும் தவறாது. பின்சொன்னதும்
பிசகாது. நீங்கள் வாசமா யிருக்குந் தீர்த்தங்களுக்கு
நாரீதீர்த்தங்க ளென்று இதுமுதற் பேருண்டாகும்
போங்களென்று சொன்னார்.

அதுகேட்ட நாங்கள் அவரைப் பிரதக்ஷண நம
ஸ்காரங்கள் செய்து, அப்பால் மிகுந்த துக்கத்தோடு
வந்து எவ்விடம்போ யிருந்தால் நமது சாபந்தீர்க்
கும் புருஷனைச் சீக்கிரத்திற் காணலா மென்று சிந்தி
த்துக்கொண் டிருந்தோம். அந்த வேளையில் நாரத
மஹாமுனிவர் அங்கே எழுந்தருளினார். அவரைக்க
ண்ட மாத்திரத்திலே நாங்கள் கொஞ்சம் சந்தோஷ
மடைந்து அவர் பாதங்களில் தெண்டனிட்டு, வெட்
கத்தினால் தலைவணங்கி நின்றோம். அம்மஹாமுனிவர்
பகற்காலத்து விளக்கொளிபோல் மழுங்கியிருக்கும்
எங்கள் முகங்களைப் பார்த்து, உங்களுக்குத் துக்கம்
வந்த காரண மென்ன வென்று கேட்டார். நாங்களும்
நடந்த செய்தியை விண்ணப்பஞ் செய்தோம். அதை
க்கேட்ட அவர் தென்சமுத்திரக் கரையில் ஐந்து தீர்
த்தங்க ளிருக்கின்றன. அவைகளில் நீங்களிருந்தாற்
சீக்கிரத்திற் பாண்டுமஹா ராஜனுடைய குமாரனாகிய
அர்ச்சுனனென்கிற ஒருமஹாபுருஷன் தீர்த்தயாத்தி
ரையாய் அவ்விடம் வந்து உங்களை இந்தச் சாபத்தி
னின்றும் நீக்கிவிடுவா னென்று சொல்லி மறைந்து
போய்விட்டார். அது கேட்டு இவ்விடம் வந்த நாங்
களும் ஒரு முகூர்த்தத்துக் குள்ளாகவே அந்தக்
கோரரூப மடைந்து இவைகளிற் பிரவேசித்தோம்.
ஓய் மஹாபுருஷனே ! அப்பெரியோர்களுடைய வாக்
கின்படி நான் உம்மாலே இந்த நரகத்தினின்றும் வி
டுபட்டேன். என் தோழிகளாகிய மற்றை நாலுபேர்
களும் மற்ற மடுக்களில் விழுந்து கிடக்கிறார்கள். த
யைசெய்து நீர் அவர்களையும் புனிதராக்கவேண்டுமெ
ன்று சொல்லினள். அச்சொல்லைக்கேட்ட அந்தத் தே
வேந்திர குமாரன் முன்போலவே மற்றைத் தீர்த்தங்
களிலு முழுகிக் கால்களைக் கவ்விக்கொள்ளு முதலைக
ளைத் தூக்கிக்கொண்டு எழும்பிக் கரையிற் குதிக்க,
அம்மாத்திரத்திலே அவர்களு முதலைரூபம் விட்டு மு
ன்போலவே தெய்வப் பெண்களாகி மிகவு முபசாரத்
தோடு துதிக்க, அர்ச்சுனன் அவர்களுக்கு விடைகொ
டுத்து அனுப்பி விட்டான். பின்பு அங்கிருந்த தவசி
களெல்லாம் அர்ச்சுனனை மிகவுங் கொண்டாடி அவை
களை நாரீதீர்த்த மென்று வழங்க வைத்து, அன்றுமு
தல் அத்தீர்த்தங்களை ஸ்நான தர்ப்பணங்களுக்கு உரி
யபெருமையாகச் செய்து வந்தார்கள்.

REGISTERED-COPY-RIGHT.

1886

ஆதிபர்வம்-உஙக-வது-பக்கம்.

பப்புருவாகன னுற்பவம்.

இவ்விதமாக அந்த அர்ச்சுனனானவன் தக்ஷணசமுத்திரக் கரையிலிருக்குந் தீர்த்தங்களை யெல்லாம் கண்டு கொண்டு கன்னியாகுமரியாடி, தன்காதலியாகிய சித்திராங்கதையைப்பார்க்கவேண்டுமென்று மறுபடி மணலூர்ப் புரத்திற்கு வந்தான். அப்போது சித்திராங்கதை பப்புருவாகனனென்று பேர்பெற்ற குமாரனைப்பெற்றிருந்தாள். அருச்சுனனானவன் அப்பிள்ளையைப் பார்த்துச் சந்தோஷித்துத் தன் மாமனாராகிய சித்திரவாகன மஹாராஜாவைப்பார்த்து, ஓய் மஹாராஜனே ! என் வாக்குதத்தத்தின்படி இதோ இப்பிள்ளையை வாங்கிக்கொள்ளுமென்று தன்மகனை அந்தராஜாவுக்குக்கொடுத்துத் தன் மனைவியாகிய சித்திராங்கதையையழைத்து, என் பொற்கொடியே! நான் ஊருக்குப் போகச் செலவுகொடுக்கவேண்டும். நீ இங்கேயே குழந்தையை வளர்த்துக்கொண்டிரு. நான் போய்ச் சேர்ந்தவுடனே சகலசுப சந்தோஷங்களுநடக்கும். அதற்கு உன் தகப்பனார் சகல பரிவாரங்களோடு எங்கள் பட்டணத்துக்கு வருவார். அப்போது நீயும் கூடவந்து எங்கள் தாயாகிய குந்தியையும், எனதண்ணன்மாராகிய தருமபுத்திரர்-வீமசேனன்- என்பவர்களையும், என் தம்பிமாராகிய நகுலசகாதேவர்களையும், மற்றும் என்னுடைய சகலவித பந்துக்களையும் கண்டு அவரவர்களுக்குத் தகுந்தபடி நடந்துகொண்டு அவர்களெல்லா மிகவும்கொண்டாடச்சகல பாக்கியங்களையும் பெற்று வாழ்ந்துகொண்டிருக்கலாம். குழந்தையைப் பத்திரமாய் பார்த்துக் கொள்ளுகவென்று சொல்லி விடைகேட்டான்.

அது கேட்ட சித்திராங்கதையானவள் தேகமெல்லாந் துவண்டு கண்ணீர்மல்கிப் பெருமூச்செறிந்து தலையை வணக்கித் தரையைக் கால்விரலாலே கீறிக்கொண்டு நிற்க, அவளைப் பார்த்த அர்ச்சுனனானவன் போவதற்குக் காலெழாமல் மனதில் வருத்தமடைந்து எவ்விதத்திலும் போகவேண்டியது ஆவசியகமானதாலே மீட்டும் சித்திராங்கதையைப் பார்த்து, என் பிராணநாயகியே! நீவியசனப்படாதே: ஐயோ! வீணாய் உன்கண்கள் கலங்கிப்போகின்றன. உன்முகத்தாமரை வாடுகின்றது. பெருமூச்சுபட்டுக் கொங்கைகள் கன்றிப் போகின்றன. வேண்டாம்: குழந்தையின் முகத்தைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிரு. சிந்தைப்படாதே: மிகவும் விரைவில் உன்னைப் பார்ப்பேன். என்றுசொல்லித் தனது உத்தரீயத்தினால் அவள் கண்ணீர்களைத்துடைத்து முகத்தைக்கட்டி முத்தமிட்டுக் குழந்தையையும் பார்த்து எடுத்து முத்தமிட்டு உச்சிமோர்ந்து பிறிதலாற்றாத வருத்தத்தின்மேல் அவளிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு, தன்மாமனார் முதலாகிய பேர்களையும் கும்பிட்டு விடைபெற்று அப்பாண்டியன் மகளைவிட்டு நீங்கமாட்டாத தனது ஐம்பொறிகளுக்கும் சமாதானஞ்சொல்லி அந்த நகரியைவிட்டுப் புறப்பட்டு, இராமேச்சுவர மென்கிற ஸ்தலத்துக்குப் போய் சகல பாவங்களையும் பஞ்சுப்பொதிகளை நெருப்புப்பொறி எரிப்பதுபோல் எரிக்கத்தகுந்த மகத்துவமுள்ள சேதுவைக்கண்டு ஸ்நானஞ்செய்து அங்கே கோதான பூதான கன்னிதான முதலாகிய சோடச மகாதானங்களு நடாத்தி, தென்கடற்கரை வழியாகவேபோய் மலைநாடுசென்று அங்கு அனந்தபத்மநாபசுவாமியைத் தரிசித்து, பொதியைமலையின்மே லேறித் தவங்களாலாகு மகிமைகளுக் கெல்லாமிருப்பிடமாகிய அகத்தியமஹாமுனிவரைத்தரிசித்து, அவிடம்விட்டுச் சகியமென்கிறமலைமேலேறி அவ்விடத்துப் புண்ணிய தீர்த்தங்களிலாடி, மேற்கடலோரமாய் உடுப்பை சுப்பிரமணியமென்கிற ஸ்தலத்தினுக்குப் போய்த் தொழுது, மற்றும் புண்ணிய தீர்த்தக்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு கோகர்ணமென்கிற மகா சிவக்ஷேத்திரஞ் சென்று அவ்விடத்துத் தீர்த்தத்தில் ஸ்நானதானஜபதப தர்ப்பணாதிபுண்ணிய கார்யங்களை முடித்து பார்வதிபரமசிவ னிருவரையும் தரிசனம் பண்ணிப் பிரபாச மென்கிற தீர்த்தத்துக்கு மகா சந்தோஷத்துடனே பிரயாணமாகிப்போனான்.

அருச்சுனனுக்குச் சுபத்திரைக்காட்சி.

இவ்வாறாக மேற்கடலருகிலிருக்கின்ற பலதீர்த்தக்ஷேத்திரங்களை யெல்லாம் கண்டு பணிந்து முறையே பிரபாசதீர்த்தம் வந்து சேர்ந்து அதில் ஸ்நானதானாதிகளைச் செய்து பிராமணரை யெல்லாம் பூசித்து அனுப்பிவிட்டு, அன்றிராத்திரி படுத்திருக்குங்கால் தனக்கு யாதவகுலத்தானாகியகதனென்கிறவன் முன்னொருக்கால் சுபத்திரை யென்பவளுடைய ரூபலாவண்யமுதலானவைகளைக் குறித்துச் சொன்ன கதைகளையெல்லாம் நினைத்து நினைத்து அவளைப் பார்க்கவேண்டுமென்று கருத்துட்கொண்டு, அப்படிசெய்வதற்கு எது உபாயமென்று யோசித்து, காலத்திற்குத்தகுந்த கோலமாய்ச் சந்நியாசிவேஷம் போட்டுக்கொண்டு யாதவர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்குந்தெரியாமற் பிக்ஷைசெய்து போவோமாகில் எவ்விதத்தி[illegible]லும் சுபத்திரையைக் [illegible] கண்டபின்பு கிருஷ்ணனுடைய கருத்தை யறிந்து அவர்சகாயத்தினாற் செய்யவேண்டியதைச் செய்யலாம் என்று மனதில் நிச்சயித்துத் திரிதண்டமும்-காஷாயமும் - கமண்டலமும் - ஜெபமாலையுமாகச் சந்நியாசிவேஷம் தரித்து யோகிபோலானான். இப்படியிருக்குங்காலத்திலே மேகங்கள் ஆகாயமெல்லாம்படர்ந்து, ஸ்ரீகிருஷ்ணன் திருமேனிபோற் கறுத்து, அவர்கையில் விளங்கும் சக்கரத்தின் ஒளிபோலமின்னி, அவருடைய சங்கத்தொனிபோற் கிடுகிடுவென்றிடித்து, அவருடைய சாரங்கமென்கிற வில்லிலிருந்து புறப்படுகிற பாணங்களின்கூட்டம்போல்மழைபெய்தது.

அம்மழையால் அவருடைய கிருபை யென்னும் பேரருட் பிரவாகம் போலப் பூமியெங்கும் ஜலப்பிரவாகம் உண்டாகி நிறைந்தோடவும், அருச்சுனனுடையமனது காமத்திலமிழ்ந்தது போலத் தாமரைகளெல்லாம் நீரில் அமிழ்ந்து போகவும், முன்னம் அழகினாலே தன்னைவெற்றிகொண்ட அர்ச்சுனனைக் காமன்இப்போது சுபத்திரை யென்கிற ஒரு அஸ்திரத்தினாலே வெற்றிகொள்ளப்போகிறானென்கிற மகிழ்ச்சியினால் அவன் கொடியாகியமீன்கள்துள்ளவும், தங்களுக்கிணையாகிய சுபத்திராதேவிக்கு அர்ச்சுனன் வாய்க்கப்போகிறானென்கிற சந்தோஷத்தினாலே மயில்களெல்லாம் நர்த்தனஞ் செய்யவும், செந்தாழைகளும் - குடமல்லிகைகளும்-மலர்ந்து வண்டுகளுக்கு விருந்திடவும், ஆறுகளெல்லாம் பூரண வெள்ளங்களுடனே கூடிச் சமுத்திரநீர்களைத் தங்கள் வடிவமாக்கவும், நாயகரும் நாயகிகளும் அகிற்புகைகமழும் பள்ளியறைகளிற் கட்டிய ணைந்து படுத்திருக்கவும், பயிர்களெல்லாஞ் சந்தோஷத்துடனே கதிர்களின் பாரத்தினால் முடிவளைத்து தங்கள் சிவனைக் காப்பாற்றும் மேகங்களை வணங்கிக் கும்பிடுவதுபோ லிருக்கவுமாயின. இவ்விதமாக மாரிக்கால மானது விளங்குமளவில் சன்னியாசிவேடம் பூண்ட அருச்சுனனானவன் சுபத்திரையை நினைத்து மனதிற் பாவித்துக் கொண் டிருக்கையாலே பொறிகள் வேறு வழி செல்லமாட்டாமையாலும், தேகம் செய்கையற்றிருப்பதினாலும், தானெடுத்தவேடத்துக்குத் தக்கபடி அமைந்து ஓர்ஆலமரத்தின் பொந்தில் உட்கார்ந்து கண்ணனை நினைத்தான். இவன் நினைத்தமாத்திரத்திலே அந்தக் கண்ணனும் சத்திய பாமையோடு மஞ்சத்தின்மீதிற் பள்ளிகொண் டிருந்தவர் திடீலென்று எழுந்து, அந்தச் சத்தியபாமை காணும்படியாக விழுந்து விழுந்து சிரித்தார். சத்தியபாமையானவள் இதென்ன அகாரணமாகச் சிரிக்கிறீர்? இதற்குக்காரணம் சொல்லலாமாகிற் கேட்க விருப்பமுற்றிருக்கிறே னென்றாள். கண்ணன் மறுபடியுஞ் சந்தோஷத்தினாலே அடிக்கடி சிரித்துச் சத்தியபாமையைப்பார்த்து, ஓ பெண்ணரசே ! உனக்குச் சொல்லத்தகாதது மிருக்கிறதோ? என் மனது அறியாததெதுவோ அதுதான் நீ யறியக்கூடாதது. ஆகையால் நானதற்குக் காரணஞ் சொல்லுகிறேன் கேள். என்னுடைய நல்லத்தையின் மகனும் வீமசேனனுக்குத் தம்பியுமாகிய அர்ச்சுனன் திரௌபதியின் நிமித்தமாகத் தீர்த்தயாத்திரை புறப்பட்டு வந்தான். அப்படிவந்தவன் அளவற்ற தீர்த்தங்களாடி, திவ்விய க்ஷேத்திரங்களையும் தரிசித்துக்கொண்டு, பிரபாச தீர்த்தத்திற்கு வந்து சேர்ந்த போது நமது சுபத்திரையினழகை நினைத்து, அவளைக் காண்பதற்காகச் சன்னியாசி வேடம்பூண்டு, அந்தத் துவாரகைக்குச் சமீபத்தில் ஓராலமரத்தின் கீழ் மழையில் நனைந்து மனவருத்தப் பட்டுக்கொண்டு என்னை நினைக்கிறான். அதற்காகத்தான் சிரித்தேன். பெண்ணே ! நீ உன்னண்ணனாகிய அர்ச்சுனனைப் பார்க்க வேண்டாமா? என்னுடன்கூடவா காண்பிக்கிறேனென்று சொல்லிச் சத்தியபாமையை அழைத்துக்கொண்டு அவனிருக்கு மரத்தினிடத்தில் வந்து, இதோபார் சன்னியாசி வேடத்துடன் வருந்துகிறான் நம்முடைய அர்ச்சுனன் என்று அவளுக்குக் காண்பித்தார்.

அந்த அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையாகப் பிரபாசமென்கிற விடத்துக்கு வந்திருக்கின்றான் என்று முன்னமே சாரணர்கள் சொல்லக் கேட்டிருந்த ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் ஒன்றுந் தெரியாதவர்போல் ஏதுக்கு நீ தீர்த்தயாத்திரை வந்ததென்று வினவ, அவனும் ஆதிமுதல் நடந்த சரித்திரங்களையெல்லாஞ் சொல்ல, இருவரும் சிலநாழிகை வேடிக்கையாய் விளையாடிக்கொண்டிருந்து அங்கிருந்து புறப்பட்டு மனோரம்மியமாகிய காடுகளும்- பாறைகளும் - அருவிகளும் - மடுக்களும் - பொருந்திப் பல வித மிருகங்களும் பக்ஷிகளும் வாசஞ்செய்யு மிடமாய் விளங்காநின்ற ரைவதமென்று பேர்பெற்ற பருவதத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்திலே முன்னமே ஸ்ரீகிருஷ்ண சுவாமியினுடைய கட்டளைப்படிக்கு ஊழியக்காரர் ஓரிடத்தைச் செவ்வையாய் அலங்காரஞ்செய்து, வேண்டிய போஜனவஸ்துக்களைக் கொண்டுவந்து வைத்தார்கள். அந்த உணவுகளை எல்லாம் அவ்விந்திரகுமாரன் கண்ணனோடுகூடப் புசித்துச் சிலநேரம் தங்களைக் காணவந்தவர்களாகிய அங்குள்ள கணிகையர்களாற் செய்யப்படும் ஆடல்பாடல்களைப் பார்த்திருந்து, பின்பு அவர்களை யனுப்பிவிட்டுத் திவ்வியமாகிய படுக்கையிற் சயனித்துக்கொண்டு தீர்த்தயாத்திரையிற் கண்ட மூர்த்தண்ய க்ஷேத்திரங்களுடைய சரித்திரங்களையெல்லாஞ் சொல்லிக்கொண்டே யிருந்து நித்திரை போய்விட்டான்.

பிறகு விடியற்காலத்தில் யதுகுல மன்னருக்கு முழங்கும் வீணை வேணுமுதலிய வாத்தியங்களைக் கேட்டு எழுந்திருந்து நித்திய கர்மானுஷ்டானஞ் செய்து நிற்கக் கண்ணன் அவனுக்குக் காலங்களில் தகுந்த போஜனங்களைக் கொடுத்து வரும்படியாகச் சிலரை நியமித்துத் தாம் அர்ச்சுனனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, பொற்றகட்டினாலலங்கரிக்கப்பட்ட இரதத்தின்பேரி லேறிச் சத்தியபாமை சமேதராய்த் துவாரகைக்கு வந்துவிட்டார். அர்ச்சுனனும் கண்ண னுத்தரவின்படி அந்தமலையிலேயே இருந்தான். இப்படிக்கிருக்க - அந்த ரைவத பருவதத்திலே வருஷந்தோறுஞ் செய்கிறபடியே யாதவர்களுக்கு ஒருதிருவிழா நேரிட்டது. அந்தத் திருவிழாவில் அந்தமலையைச் சுற்றிலும் அங்கங்கே செய்யப்பட்டிருக்கிற அழகான வீடுகளினாலேயும், கிளைகளுடன்கூடிய பெரியமரங்கள்போல் வைத்திருக்கிற விளக்குவரிசைகளினாலேயும், இன்னும் பல அலங்காரங்களினாலேயும் கோடிசூரியப்பிரகாசமாய் விளங்கும் அம்ம

லையிலே; விருஷ்ணி - அந்தகர்-போஜர் - என்கிற பலபிரிவாயிராநின்ற அந்த யதுவமிசத்துக் குமாரர்களெல்லாம் மங்களஸ்நானஞ்செய்து நல்ல ஆடையாபரணங்களைத் தரித்துப் பிராமணர்களுக்குப் பலதானங்களும் வழங்கித் திவ்விய போஜனங்களைப் புசித்துச் சந்தன புஷ்ப தாம்பூல முதலானவைகளுடனே வேடிக்கையாய் வாகனங்களி லேறிக்கொண்டு, அனேகம் பட்டணத்துச் சனங்களுடனே பலவாத்தியகோஷங்களோடும் - சங்கீதங்களோடும் - நாட்டியங்களோடும் - நான்கு புறங்களிலும் சுற்றிவர, பலராமர் ரேவதிதேவியென்கிற தன் மனைவியுடனே மதுபானஞ்செய்து மதத்தினாற் கண்கள்சிவந்து சுழலமிடும்படி பலபேர்களோடு கூடி யாடிவர, யதுவமிசத்து மகாராஜாவாகிய உக்கிரசேனன் என்கிறவரும் அனேகஸ்திரீகளோடும் பாடுகிறபேர்களோடும் சூழ்ந்துவர, இன்னு மிப்படியே பிரத்துய்ம்னன் - சாம்பன்- முதலாகிய பேரும் வேடிக்கையா யிருக்க, இவ்வாறாகக் கோலாஹலமா யிருக்குஞ் சமயத்திலே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தாமும் செய்யவேண்டிய தானம் முதலாகிய காரியங்களைச் செய்து அதில் ஓரிடத்திலிருக்கும் அர்ச்சுன சந்நியாசியைக் கண்டு யாவரும் பார்க்கும்படியாய் அதிகவிசுவாச பயபக்தியுடன் நமஸ்காரம் பண்ணிக்கொண் டிருந்தார். அதைக்கண்ட எல்லாரும் விழுந்து கும்பிட்டார்கள்.

அக்காலத்தில் திருவிழாவுக்காக மிகவுஞ் சிங்காரித்துக்கொண்டு வந்த சுபத்திரை யானவள் தோழிமார்களுடனேகூட அந்தமலையிற்சஞ்சரிக்க, அதுகண்ட அர்ச்சுனனானவன் காமவிகாரமடையவே கிருஷ்ணன் அக்குறிப்பையறிந்து புன்சிரிப்போடும் அந்தத்திரிதண்ட சந்நியாசியைத் தனியே யழைத்துக்கொண்டு சென்று காட்டிற் சஞ்சாரஞ்செய்யுந் தவசியாகிய உனதுமனம் நாட்டிற் சமுசாரமுதலிய காமத்தில் மயங்குகிறதுபோல் தோற்றுகிறது. இந்தப் பெண்ணைப் பார்த்ததினாலே உனக்கு மோகப்பேய் பிடித்ததோ? ஓ ஜெகஜாலத்தவசியே! இவளாரென்றால் - என்னுடைய தங்கை சுபத்திரையென்று பெயருடையவள். எங்கள் தகப்பனாருக்கு இந்தப் பெண்ணின்பேரில் மிகவும் விசுவாசம். ஆகையால் உனக்குயிந்தப் பெண்ணிடத்திலே கருத்திருந்தால் அஞ்சாமற் சொல்லு. நானே எங்கள் தகப்பனாருக்குத் தெரிவிக்கிறேன். என்றுசொல்ல அர்ச்சுனனானவன் - ஓ கிருஷ்ணா! நீரென்ன பரிகாசஞ்செய்கிறீர்? நான்வந்த காரியமே இது வாயிற்றே. வசுதேவருக்கு மகளாகியும் தேவரீர்க்குத் தங்கையாகியு மிருப்பதோடு மகாரூபலாவணிய சவுந்தரியங்களு முடையவளா யிராநின்ற இந்தப்பெண்மணியைப் பார்த்து மகாதீரமுடைய தபசிகளும் மயங்குவார்களே: நான் மயங்குவதரிதோ? நீர் சும்மா வேடிக்கைப் பேச்சு பேசவேண்டாம். அவள் எனக்கு மனைவியானாளேயானாற் சகல மங்களங்களும் வந்தாற்போலே யாம். ஆகையால் என்னிடத்திற் பரிபூர்ண கடாட்சம் வைத்து அவளை நான் கலியாணம் பண்ணும்படி யாகிய வகையைச் சொல்லவேண்டுமென்று கேட்டான். அதுகேட்ட கிருஷ்ணன் மகாவிருப்பத்தோடும் இதனைச்சொல்லுகிறார்.

அர்ச்சுனா! நீசொல்லுகிறது சரிதான். அதற்கு உபாய மென்னவென்றால்- க்ஷத்திரியர்களுக்குச்சுயம்வரமென்பது ஒன்றுண்டன்றோ? அந்தப்படிசெய்விக்கலாம். ஆனால் அது நல்ல உபாய மாகமாட்டா. மேலும் பெண்ணி னிஷ்டப்படியேயன்றி புருஷனிஷ்டப்படி நடக்கவேலாது. ஆதலால் இன்னோருபாயமிருக்கின்றது. அதுயாதென்றால்- இராஜாக்கள் பெண்களை வலிமையினாலே கொண்டுபோகிறதுண்டு. இதுதான் நல்ல உபாயம். இதுபெரியோர்களாலும் ஒத்துக்கொள்ளப் பட்டது. ஆனபடியினாலே - அர்ச்சுனா! நீ என்தங்கையை இப்படியே வலிமையினாலே எடுத்துக்கொண்டு போய்விடு. அதற்குச் சமயமிருக்கிறது சொல்லுகிறேன். இப்படி நாம் செய்திருக்கிற நிச்சயத்தை யாரறியப் போகிறார்கள். பிற்பாடு பார்த்துக் கொள்ளுவோம். என்று கிருஷ்ணமூர்த்தி சொல்ல அர்ச்சுனனும் சரிதான் என்று சம்மதிக்க இருவரும் இவ்விதமாக நிச்சயஞ்செய்து, இந்தச்சேதியைத் தருமராஜனுக்குத் தெரிவிக்கிற நிமித்தம் அந்தரங்கமாய்ச் சிலமனிதரை யனுப்புவிக்கத் தருமராஜன் முதலானவர்கள் இச்செய்திகேட்டு நல்லகாரியம் அப்படியே நடக்கட்டுமென்று சொல்லி யநுப்பிவிட்டார்கள். இந்தப்படி செய்தபின்பு ஸ்ரீகிருஷ்ணதேவர் அர்ச்சுனனை அவ்விடத்திலேயே யிருக்கச்சொல்லி நியமித்துப்போட்டுத் தாம் முன்போல் எல்லாருடனேயும் கூடிக்கொண்டு, திருவிழா கழித்தவுடனே துவாரகா பட்டணம் போய்ச் சேர்ந்தார். பற்குனன் கிருஷ்ணன் தங்கையைக் கண்டதுமுதற் காமவேதனைகொண்டு, அழகாகிய சோலை சூழ்ந்திருக்கிற ஒருகற்பாறைமீது உட்கார்ந்து சுபத்திரையைச் சதாகாலமுந் தியானஞ்செய்துகொண் டிருந்தான்.

கண்ணன் அருச்சுனனைத் துவாரகைக்கு அழைத்துக்கொண்டு போகுதல்.

இப்படி யிருக்குங் காலத்தில் ஒருநாள் கிருஷ்ணன் வேட்டைக்குப்போயிருக்கப் பலராமர் - கிருதவர்மா-சாய்பன் - சாரணன் - பிரத்துய்ம்னன் கதன்- சாருதேஷ்ணன் - விரேதன் - பானு - நிசிதன் - விபுருது - பிருது-முதலாகிய சிலயாதவவீரர்கள் வேடிக்கையாய் அந்தப் பருவதத்திற்குப் போயிருக்குமளவில் அவ்விடத்திலிருக்கும் அர்ச்சுன சந்நியாசியைக் கண்டு சந்தோஷப்பட்டு அவன்பக்கத்திற்போய் மிகவும் வினயத்துடனே பணிந்து நிற்க, அந்தசந்நியாசியும் ஆசிர்வதித்து உட்காருங்களென்று சொல்ல, அ

வர்கள் அங்கிருக்கும பாறைகளின்மீதில் உட்கார்ந்துகொண்டு இவர்யாரோ மகானுபாவர் மிகவும் சாந்த மூர்த்தி என்று மனதில் எண்ணிக்கொண்டிருந்தனர். அப்போது அர்ச்சுனசந்நியாசி அவர்களைப் பார்த்து, ஓ யாதவவீரர்களே! நீங்கள்யாவரும் க்ஷேமமாவென்று கேட்டான். பலராமர் சுவாமியினுடைய அனுக்கிரகத்தினாலேக்ஷேமந்தான். தேவரீர்யாரோ? எவ்விடத்தினின்று ஏதுக்காக இங்கே எழுந்தருளிற்றோ தெரியவில்லை. ஆகையால் அதை அருளிச்செய்ய வேண்டுமென்றார். சந்நியாசியானவன்-நமக்கோ ரிடமென்றுண்டோ? பூமியெல்லாம் நம்முடைய விடந்தான். நான் சிலகாலமாய் தீர்த்தக்ஷேத்திரங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு, மழையாகையால் இவ்விடம் வந்திருக்கிறேனென்று சொல்லினான். அதுகேட்ட பலராமர். ஆனால்-சுவாமி! தேவரீர் இவ்விடம் எழுந்தருளியது அடியேங்கள் செய்த தவந்தான். தேவரீர் அனேக புண்ணிய தீர்த்தங்களையும் ஸ்தலங்களையும் கண்டவராகையால் அவைகளின்சரித்திரம் சொல்லியருளவேண்டுமென்ன சந்நியாசி அந்தச்சரித்திரங்களையும்-மற்றும் தருமத்திற்கடுத்த கதைகளையும் - தெய்வபக்திக்கடுத்தகாரியங்களையும் -எடுத்துப் பிரசங்கிக்க இவையெல்லாங் கேட்ட பலராமர் இவர் மகாபெரியவரென்று நினைத்து எழுந்து வந்தனம் பண்ணிப் பின்பு யாவரும் ஒன்றாகக்கூடி மகா பத்தி விசுவாசத்துடன் இதனை யோசிப்பதானார்கள்.

ஓ அன்பர்களே! இவர் மகா சந்நியாசி. வெகு யோக்கியர். நாம்செய்துள்ள புண்ணிய வசத்தினாலே தான் நமதுதேசத்துக்கு வந்தார். ஆகையால் இவர் இந்தமழைக்காலமெல்லாஞ்சவுக்கியமாயிருக்கும்படியாய் நாம் எந்தவிடத்திலே இருக்கச் செய்யலாம்? என்று யோசித்துக்கொண் டிருக்கு மளவிலே வேட்டைக்குப் போயிருந்த கிருஷ்ணன் அவ்விடத்திற்கு வந்தார். பலராமர் அவரைக்கண்டு, குழந்தாய் கிருஷ்ணா! இங்ஙனம் ஒருசந்நியாசிவந்திருக்கிறார். அவர் மழையினாலே இவ்விடத்தில் மிகவும் வருந்துகிறார். ஆகையால் இவரை நமது பட்டணத்துள் எவ்விடத்திலிருக்கச் செய்யலாம் சொல்லென்றுகேட்டனர். அதற்குக் கண்ணன்-அண்ணா! எல்லாயோசனைக்கும் நீரிருக்க நான் சொல்வதெப்படி? உமக்கு எவ்விடத்தில் வைக்க இஷ்டமோ அவ்விடத்தில் வைக்கலாம். என்றுசொல்லவும் பலராமர் தம்பிசொன்ன விநயவாக்கியத்துக்குச் சந்தோஷப்பட்டு சற்றேயோசித்து, அப்பா கிருஷ்ணா! எனக்குத்தோற்றுகிறதைச் சொல்லுகிறேன் கேள். இவர்நமது சுபத்திரையினுடைய கன்னியாமாடத்திற் போஜனம் பண்ணிக்கொண்டு, நம்முடைய தோட்டத்திலே கொடிகளினாற் கட்டியிருக்கும் அறைகளிலே இந்தமழைக்காலம் கழிகிறவரைக்கும் வாசஞ் செய்துகொண் டிருக்கட்டும். உனக்கென்ன தோற்றுகிறது? இவணிருக்கும் யாதவர்களெல்லாம் உன்சம்மதியை எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்லினர். அதற்குக் கண்ணனானவர்-அண்ணா! உம்முடைய சம்மதிக்கும் உத்தரவுக்கும் எதிரில்லை. நீரோ எல்லாமறிந்தவர். மகாபுத்தியுள்ளவர். எங்களுக்குப் பெரியவர். ஆகையால் நானொன்றும் மறுத்துச் சொல்லக் கூடவில்லை. ஆகிலும்- இப்படி செய்வதில் ஒருகுறைவும் வாராமலிருப்பதைக்குறித்துக் கொஞ்சம் யோசிக்கவேண்டியதாய்த் தோற்றுகிறது என்றுசொன்னார்.

அதனைக்கேட்ட பலதேவர் சரிதான் நீ சொல்லுகிறது. ஆனால் இந்தச் சந்நியாசி வெகுவாய்ப் படித்தவராயும், வெகுயோக்கியராயும் சாந்தமூர்த்தியாயுங் காணப்படுகிறார். உள்ளமெப்படி யிருக்கிறதோ யாருக்குத் தெரியும்? ஆகையால் - கண்ணா! நீ இவரை யழைத்துக்கொண்டுபோய் கன்னியாமாடத்தில் விட்டு, நான் உத்தரவு பண்ணினதாய் சுபத்திரைக்குச்சொல்லி, அன்னபானங்கள் முதலான உபசாரங்கள் செய்துவரும்படி திட்டம்பண்ணுக வென்று சொல்லினர். அதுகேட்ட கிருஷ்ணன் ஆனலப்படியே செய்கிறேனென்றெழுந்து, அந்தக்கபடசந்நியாசியைக்கும்பிட்டு அழைத்துக்கொண்டு வழியில் ஒருவரோடொருவர் வேடிக்கையாய்ப்பேசிச் சிரித்துக்கொண்டே காரியமெல்லாம்சித்தமாய்ப் பயன்படுமென்று சந்தோஷப் பட்டவர்களாய் பட்டணத்துக்குட் சென்று, முன்னதாய் அருச்சுனனை தமதுவீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் தன்மனைவிகளாகிய உருக்குமணி சத்தியபாமைகளைக் கூப்பிட்டு, நாணமுற்றுத் தலை வணங்கி நகைத்துக் கொண்டு நிற்கிற அர்ச்சுனனைக் காட்டித் தானும் நகைத்துக்கொண்டு, ஓ பெண்களே! இவரைப் பார்த்தீர்களா! இவர் மஹாபெரிய சந்நியாசி. மேலே தரித்துக்கொண்டிருக்கிற காஷாயத்திற்குச்சரியானரூபம் உள்ளத்திலேயுமுண்டு. மகானுபாவர். சமயத்துக்குத் தகுந்தபடியிருப்பர். இவரிடத்திற் கபடம் லேசமேனுங்கிடையாது. இவரின்னாரென்று இதுவரைக்கு மொருவருக்குந்தெரியாது. இவர் மெய்யான தனஞ்செயன் சந்தேகமில்லை. இவருக்கு நீங்கள் மருமகனுக்குச் செய்யத்தக்க உபசாரங்களைச் செய்யவேண்டும். அண்ணாவின் உத்தரவின்படி சுபத்திரையினது கன்னியாமாடத்தில் இவரை யிருக்கச்செய்து, சுபத்திரையைப்பணிவிடைசெய்யும்படி நியமிக்கப் போகிறேன் என்றுசொன்னார். அவையனைத்துங்கேட்ட அந்த உருக்குமணி முதலானபேர்களெல்லாம் கொங்கைகுலுங்கச் சிரித்துக்கொண்டு, ஆம் ஆம்; பார்க்கும்போதே தெரிகிறது. வெகுபெரியவர்தான். இப்படிப்பட்டவர் இனிகிடைக்கமாட்டார். சுபத்திரை நல்லபாக்கியம் செய்திருக்கிறாள். சந்தேகமில்லை. இவரெப்படி யிருந்தாலு மிருக்கலாம்போ லிருக்கிறது. தற்காலத்திற்கொண்ட இச்சந்நியாசத்திற்குப் பலன் கிடைத்தால் மறுபடி இல்லறத்தானாய் விடலாம். ஐயா த்றவியே! வாரும். உட்காரும். தாம்பூலம் போட்டுக்கொண்டு வெகுநாளாயிருக்குமே: இப்போ

து தாம்பூலம் போட்டுக்கொள்ளுகிறீரா? இனிப்பர வாயில்லை. வந்தகாரியம் பலிக்கும். காஷாயத்தைக் களைந்து நல்லவஸ்திரம் உடுத்திக்கொள்ளும்.நாங்கள் வெளிப்படுத்துகிறதில்லை. மறுபடி போகும்போது காஷாயங் கட்டிக்கொள்ளலாம். எங்கள் வீட்டிலே தான் முதல் மருவுண்ணவேண்டும். ஆகையாற் சாப்பிடும். பிக்ஷை இன்றைக்கு வேண்டாம். எப்போதும் நீர் உயர்ந்த வேஷம்போட்டால் உடனேபெண்கிடைக்கிறது. எப்படி யென்றால் - பிராமணவேஷம் போட்டபோது நாககன்னியும் பாண்டியகன்னியும் கிடைத்தார்கள். அப்படியே இந்தச் சன்னியாசிவேஷத்துக்கும் பயன்கிடைக்குமென்று பரிகாசமாய்ப்பேசினார்கள். இவையனைத்துங்கேட்ட அர்ச்சுனன் மெய்தான். உங்கள் நாயகருடைய ஸ்நேஹபலத்தினாலேதான் எனக்கு இப்படிப்பட்ட சாமர்த்தியமே தவிர வேறில்லை. என்று தானும் பலவிதமாகப் பரிகாசப் பேச்சுகளைப்பேச அந்தக் கண்ணனுடைய மனைவிகள் கேட்டு, அர்ச்சுனா! நெடுநாளாய் உன்னை எங்கள் வீட்டில்வரக் காணவேண்டுமென்று ஆசைகொண் டிருந்தோம். இன்றைக்குத்தான் அது பலித்தது. என்று மிகவும் அன்புடனே கூடிய பலவார்த்தைகளைக் கூறிப் போஜனமுதலான உபசாரங்களைச் செய்தார்கள்.

அருச்சுன சந்நியாசி சுபத்திரா கன்னிகா மாடஞ் சேர்ந்திருத்தல்.

பின்பு கண்ணன் அர்ச்சுனனைக் கன்னியாமாடத்திற்கு அழைத்துக்கொண்டு போய்த் தன் தங்கையை யழைத்து, என்னம்மணி! இவர் மஹாபெரியவர். நமது தேசத்திற்கு அதிதியாய் வந்தவர். இவரை நீ உன்மாளிகையில் வைத்துப் பூசித்தால் மிகவும் நல்லது. உனக்கு நல்ல பலன்கிடைக்கும். இப்படிதான் முற்காலங்களில் நமது கன்னியா மாடங்களிலே வெகுபெரியோர்கள் வந்து தவஞ்செய்துகொண் டிருந்தார்கள். அவர்களையெல்லாம் நமது சந்ததியிற் பிறந்த அனேகம் பெண்கள் பூசித்து வெகுநன்மைகளைப் பெற்றார்கள். ஆகையால் - குழந்தாய்! இந்தச் சந்நியாசியை நீ வெகு பயபக்திகளுடனே பூசித்து வரவேண்டியதாய் நம்முடைய அண்ணா நியமித்திருக்கிறார். இந்தப் பெரியவர் எந்தவேளையில் என்ன சொல்லுகின்றாரோ அதை நீ தவறாமல் நடந்துகொண்டு, தகுந்தபடி போஜன முதலானவைகளால் உபசாரஞ் செய்து வரவேண்டும். இவருக்குத் தவஞ்செய்ய நமது தோட்டத்திலிருக்குங் கொடிகளாற் கட்டிய வீடு தகுந்ததாயிருக்கிற படியினாலே, அங்கேயே வாசம்பண்ணிக்கொண் டிருக்கட்டுமென்றார். இப்படி சொல்லியதைக்கேட்ட சுபத்திரையும்-அண்ணா! அப்படியே செய்து இவர் சந்தோஷப்படும்படி நடந்து கொள்ளுகிறேனென்று சொன்னாள். அப்போது யாதவகுலதிலகராகிய கிருஷ்ணமூர்த்தியானவர் அந்தக் கபடசந்நியாசியைத் தோட்டத்திற்கு அழைத்துப்போய் இருக்கவேண்டிய விடங்களையுங் காண்பித்துச் சுபத்திரையையும் பணிவிடைக்கு அவரிடத்தில் ஒப்புவித்துச் சந்நியாசியினிடத்தில் உத்தரவு பெற்றுத் திரும்பி, இச்செய்தியைத் தமயனாருக்கு அறிவித்தார்.

அந்த அர்ச்சுனனானவன் தினந்தோறும் விடியற்காலமுதல் இராத்திரிக்குச் சயனித்துக்கொள்ளுகிறவரையில் சுபத்திரையினாலே வேண்டிய உபசாரங்கள் செய்யப்பட்டு வருங்காலத்தில், இடைவிடாமற் சுபத்திரையைப் பார்த்துக்கொண் டிருப்பதினாலும் அவளோடு பேசுகிறதினாலும் அவளுடைய நடை. புன்சிரிப்பு முதலாகிய செய்கைகளைக் காண்பதினாலும் முன்னிருந்ததைவிட அதிகமாகக் காமத்தீயானது எழும்பி உள்ளும் புறம்பும் எரிக்கவே நாழிகைக்கு நாழிகை தேகமானது இளைத்து வெளிர்த்துத் துவண்டு பரவசமாய்ப் போயிற்று. இவ்வாறாகக் காமநோயினாலே மிகவும் அவன் வருத்தமடைந்து மிகுந்த தாபத்தைச் சகிக்கமாட்டாமற் பெருமூச்சுவிட்டு நீரிலமிழ்த்திய சுரைக்காயைப்போல் எவ்வளவு அடக்கினாலும் அடங்காமல் தனது கபடம் மேலிட்டு வழிந்து வெளிக்குவர அதையெல்லாம் வெவ்வேறு பாவனையினால் மறைத்துக்கொண்டு, தன் வேஷத்திற்குத் தகுந்தபடி ஸ்ரீஹரீ - மாதவா-கோவிந்தா-என்று கிருஷ்ணனையே கூவிக்கொண்டிருந்தான். அந்தச்சுபத்திரையும் மனதிலே அர்ச்சுனன் பேரிலேயே நெடுநாளாய்க் காதல்கொண் டிருந்தாள். அதேனென்றால் - வசுதேவருடைய குமாரர்களில் ஒருவனாகிய கதன் என்பவன் முன்னொருக்காற் பாண்டவர்கள் பிறந்த கதையையும், அர்ச்சுனனுடைய ரூபம்-சாமர்த்தியம் - பெருமை-முதலானவைகளையும், சுபத்திரைக்கு நன்றாய்ச் சொல்லி யிருக்கின்றான். அன்றியும் - அந்த யாதவர்களுக்குள்ளே ஒருவரோடொருவர் வீரவாதம் பேசுங்காலத்திலே அந்த அர்ச்சுனனே எனக்கு நிகரல்லவே நீ எவ்வள வென்றும், வில்வித்தை கற்குங்காலத்தில் நான்அர்ச்சுனனுக்கு அதிகமாகிறேன் பாரென்றும், எவனாகிலும் சவுரியத்தினாற் கர்வமடைந்தால் அப்போது அவனைப்பார்த்து நீ யென்னடா அர்ச்சுனனாக நினைத்துக் கொண்டாயோ வென்றும், வில்வித்தைகற்கிற பிள்ளைகளை ஆசிர்வதிக்குங்கால் அர்ச்சுனனுக்குச் சமானமாகக் கடவாய் என்றும் அவ்விடத்திற் பேசுவார்கள். அதுகளையெல்லாம் சுபத்திரை பலதரம் கேட்டிருக்கிறவளாகையாற் புருஷர்களுள் அர்ச்சுனனே உயர்ந்தவனென்று எண்ணி,அவனையே விவாகம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று நினைத்திருந்தாள்.அதனாலேகுருதேசத்தினின்றுயாராகிலும் வந்தால் அவர்களை யுபசரித்து, அர்ச்சுனனுடைய சரித்திரங்களைச் சொல்லச் சொல்லிக் கேட்டு, அவர்கள் சொல்லுமளவில் மனதில் மிகவும் களிப்படைவாள்.

அன்றியும் வெண்மையான வஸ்துவைக்குறித்து யாராகிலும் அர்ச்சுன மென்கிற சொல்லைச் சொல்லும்போது அதையுற்றுக் கேட்பாள். இன்னும் யாராகிலும் தவசிகள்-சோதிடர்-குறிசொல்வோர்- முதலான பேர்கள் வந்தால் அவர்களுக்கு உபசாரஞ் செய்து, நான் நினைத்திருக்கிற காரியம் கூடிவருமா வாராதாவென்று கேட்டு அவர்கள் கூடிவருமென்று சொல்லுமளவில் அர்ச்சுனனை விவாகம் செய்து கொண்டது போலவே களித்திருப்பாள்.

இப்படிக்கெல்லாம் சாக்கிரத்திலும் சொப்பனத்திலும் அரச்சுனனைப் பாவனையினாலே கண்டு அவனிடத்திலேயே மனமழுந்திச் சதாகாலமும் விரகதாபப்பட்டுக்கொண் டிருப்பவள் ஆனபடியினாலும், தினந்தோறும் கபட சன்னியாசியை உற்றுப்பார்க்குமளவில் தான்கேட்டிருக்கிரபடிக்கும் சொப்பனத்திற்காண்கிறபடிக்கும் இவனுடையரூபமிருப்பதினாலும்,கைகளில் நாணுரைச்சலா லுண்டாகிய காய்ப்புக்காணப்படுகிற படியினாலும், அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையாய்ப் பிரபாசம் வரைக்கும் வந்திருக்கிறானென்று முன்னமே கேட்டிருப்பதினாலும், அந்த யாதவப்பெண்ணின் மனதிற் சந்தேகமுண்டாயிற்று. அப்படியிருக்க-ஒருநாள் இந்தச்சன்னியாசியானவன் காலையில் ஸ்நானஞ் செய்து ஆசனத்தி லுட்கார்ந்து கொண்டு செபஞ்செய் திருக்குந் தருணத்திலே வசுதேவருடைய மகளாகிய அந்தச் சுபத்திரைபோய் நமஸ்காரஞ்செய்து, சுவாமி! தேவரீர் வெகுதேசங்களையும்-நதிகளையும்- மற்று மனேக திவ்விய க்ஷேத்திரங்களையுங் கண்டவரானபடியினாலே, அவைகளின் சரித்திரங்களைச்சொல்லவேண்டு மென்று கேட்டாள். அர்ச்சுனனு மிகவும் சந்தோஷித்து, காமப்பார்வைமுதலாகிய விலாசங்களுடனே அனேகங் கதைகளையெல்லாஞ் சொல்லிவந்தான். நடுவிற் குருதேசத்துச்சங்கதி வருமளவிற் சுபத்திரையானவள் - சுவாமி! அவ்விடத்தில் முன் காண்டவப் பிரஸ்தமென்றும் இப்போது இந்திரப் பிரஸ்தமென்றும் பெயருடைய பட்டணத்தில் எங்கள் நல்லத்தை குந்திதேவி யென்பவளைக் கண்டீரா ? அவளும் அவளுடைய குமாரர்களும் க்ஷேமமாயிருக்கிறார்களா ? அவர்களில் திரௌபதிக்காக ஏற்பட்ட நிபந்தனையின்படி அர்ச்சுனராஜனுக்குத் தீர்த்தயாத்திரை நேரிட்டதாமே: மஹாசவுக்கியமாயிருந்த அந்த மஹாபுருஷர் நெடுநாளாய் வனாந்தரங்களில் திரிந்து கஷ்டப் பட்டுக் கொண்டு இந்த மழைக் காலத்திலே எங்கேயிருக்கிறாரோ ? தேவரீரும் தீர்த்தயாத்திரை வந்தவராகையால் அவரை எங்கேயாகிலுங் கண்டதுண்டோ ? அல்லது கேட்டதுண்டோ? இதுகளையெல்லாம் தயைசெய்துசொல்லவேண்டுமென்றுகேட்டாள். அப்போது அர்ச்சுனன் அவளதுகேள்விக்குறிப்பினாலே தன்னிடத்திலவளுக்கு ஆசையிருப்பதையறிந்து, மிகுந்தகாமவெழுச்சியினால் உடம்பெல்லாம் பொங்கிக் கிறுகிறுத்து நடுக்கமுறத் தொனித்து, சிறுநகைப்புடனே இதனைச்சொல்லுகிறான்.

அருச்சுனன் சுபத்திரைக்குத்தன்னை வெளிப்படுத்துதல்.

ஓ யதுகுலத்தோர் தவத்தினாலுதித்த மின்னரசே ! உங்க ளத்தையாகிய குந்தியைக் கண்டேன் க்ஷேமமா யிருக்கிறாள். அவள் புத்திரர் முதலானபேர்களும் க்ஷேமமாயிருக்கிறார்கள். அந்த அர்ச்சுனனோ தீர்த்தயாத்திரை முடிந்தும் இன்னும் தன் தேசம் போய்ச் சேரவில்லை. ஆனால் எங்கே யிருக்கிறானென்றால் - இப்போது துவாரகா பட்டணத்திலேயே சன்னியாசிவேஷம் பூண்டு ஒருவருக்குந் தெரியாமல் வாசஞ் செய்துகொண் டிருக்கிறான். ஓபொற்கொடியே! நீ தினந்தினம் பார்த்துக்கொண்டிருக்கச்சேயும் அவனை நீயறியாம லிருக்கிறாய். என்று சொல்லக் கேட்ட சுபத்திரை திடுக்கிட்டாற்போலப் பெருமூச்செறிந்து, முகத்தை வணக்கித் தரையைக் காலாற் கீறிநின்றாள். இப்படி நிற்குமவளைக்கண்ட அர்ச்சுனன்மிகவன்புடனே, அடி பூங்குழலே ! நான் தான் அர்ச்சுனன்.உனக்கெப்படி என்னிடத்திற் கருத்திருக்கிறதோ அப்படியே யெனக்கும் உன்னிடத்திற் பதின்மடங் கதிகமாகக் கருத்தமைந்திருக்கிறது. உனதுபணிவிடைக்குங் காத்திருக்கிறேன். ஓபூரண சந்திரனையொத்த முகமுடையவளே ! நல்லநாளிலே தருமவிதிப்படி சாவித்திரியென்பவளைச் சத்தியவா னெப்படி விவாகஞ்செய்து கொண்டானோ, அப்படியுன்னைநான்விவாகஞ்செய்துகொண்டு உன்னுடன்கூடி வாழ்வேனென்று சொல்லிக் கொடிகளாற் கட்டிய அரைக்குள்ளே பிரவேசித்தான். பின்பு சுபத்திரையானவள் மிகவு மதிகலங்கி மெய்துவண்டு தனது பள்ளியறைக் குள்ளே போய்க் கட்டிலின்மீது சயனித்துக் கொண்டு மூர்ச்சை யடைந்தவள் போல் ஒன்றுந் தெரியாம லிருந்தாள். இப்படி யிருக்க-ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் இச்செய்தியை யெல்லாம் தமது பேரறிவினால் அறிந்து சுபத்திரைக்கும் அர்ச்சுனனுக்கும் போஜன மிடும்படி உருக்குமணிதேவியையனுப்ப, அவளுமிவ்விருவருக்கும் போஜனத்தைக் கொணர்ந்து பரிமாறி இவ்விருவருடைய மனோவியாதியை முற்று மறிந்து போனாள். அர்ச்சுனனும் அந்தக் கொடியறையிலேயே யிருந்துகொண்டு உன்மாதம்பிடித்தவன்போல் ஒன்றுந்தோன்றாமற் காமவிகாரத்தி லிருந்தான்.

இப்படி யிருக்குமளவிற் சூரியன் அஸ்தமானத்தை யடையவே அர்ச்சுனனையும்-சுபத்திரையையும்-மோகமென்பது கவ்விக்கொண்டதுபோல் இருளானது பூமியைக் கௌவிக்கொண்டது. அதைப் பார்த்தால் ஒருவன் மிகுந்த புண்ணியஞ்செய்து சுவர்க்கலோகமடைந்து மகா போகங்களை யெல்லா மனுபவித்து

அந்தப் புண்ணியம் நீங்குமளவில் மறுபடியும் அவனைப் பிறவிப்பாவம் சூழ்வதுபோலிருந்தது. உடனே ஆகாசத்தில் நட்சத்திரங்கள் புறப்பட்டன. அதைப் பார்க்குமளவிற் சுபத்திரையின் தேகத்து வெப்பம் வீசி ஆகாயத்திற் கொப்புளங்கள் புறப்பட்டன போலத் தோன்றிற்று. அப்போது குளிர்ச்சியும் வெண்மையு முடைய கிரணங்களைவீசி இருளைத்துரத்தியடித்துக்கொண்டு சந்திரன் உதயமாகியதைப் பார்த்தால், முகத்தினழகினாலே தன்னைச்செயித்தவளாகிய சுபத்திரையைத் தன்றோழனாகிய மன்மதன் மிகவும் வருத்துகிறானே: இத்தருணத்தில் நாமும்போய் வருத்தி அவள் முகத்தை வாடச்செய்ய வேண்டுமென்று வந்ததுபோல் தோற்றிற்று. இவ்வாறாகச் சந்திரன் உதித்து நிலவு விளங்குமளவில், அந்த யதுகுலப் பெண்ணானவள் மன்மதன் பிரயோகிக்கிற புஷ்பபாணங்களினாலே தேகமெல்லாம் துளைக்கப்பட்டுச் சகிக்கமாட்டாமல், தான் சயனித்திருக்கிற புஷ்பசயனமெல்லாங் கருகிப் போகும்படியாகிய தாபத்தை யடைந்து, மூக்கினுனியில் அணிந்திருக்கிற ஆணிமுத்தும் நீலமணிபோலாகும்படியாகப் பெருமூச்சு விட்டு, தன்னைத் தொந்தரவுசெய்கிற மன்மதனையும்-அவனுடைய தோழனாகிய சந்திரனையும் - அவனுடைய பரிவாரங்களாகிய குயில்-மலயமாருதம் - சோலை-வண்டு இவைகளையும் தூஷித்து மெய்சோர்ந்து மூர்ச்சித்துக் கிடக்கிறாள். அக்குறிப்பறிந்த இவளுடைய தோழிமார்களெல்லாம் வியசனமடைந்து தேவகிதேவிக்கு அறிவிக்க அந்த அம்மனும் ஓடிவந்துமகளைப்பார்த்து, பெண்ணே! நீயேன் மிகுந்த துயரத்துடனே இப்படி வருந்துகிறாய்? உனக்குண்டாகிய வியாதிக்குத் தகுந்த சிகிச்சை செய்விக்கிறேன் தைரியத்தை யடைந்திரு. நீ இப்போ திருக்கிறபடி இன்னுஞ் சிலநேரம் இருப்பாயேயாகில் நாங்களெல்லாம் பெண்ணை யிழப்பதுமன்றி உயிரையு மிழப்போம். ஆதலால்-மகளே! கொஞ்சம் தைரியமடைந்து உயிரைக் காப்பாற்று. உன் கருத்தை உன தண்ணன்மார்களுக்கும் தகப்பனார் முதலான பேர்களுக்கும் தெரிவித்து அப்படியே நடத்துகிறேன். வீணாய் அயரப்படாதே: என்று சொல்லி வசுதேவரிடத்திற்கு வந்து, ஏகாந்தத்தில் அவரைப்பார்த்து, கேட்டீரோ! நமது தோட்டத்தில் வந்திருக்கிற சன்னாசி அர்ச்சுனனென்று தெரியவருகிறது. அதினாலே நம்முடைய சுபத்திரை அவனிடத்திற் காதலாலே மிகுந்தவருத்தமடைந்திருக்கிறாள். ஆகையாலே இதற்குத் தகுந்த யோசனை செய்யவேண்டுமென்று மகாவேட்கையோடுஞ் சொல்லினாள்.

வசுதேவர் அதை அக்குரூரன் - ஆகுகன் - கிருஷ்ணன் முதலாகிய பேர்களுக்குத் தெரிவித்தார். அது கேட்ட அவ்வக்குரூரன் - உக்கிரசேனன்-சத்தியகன் - கதன் - சினி - கிருஷ்ணன் - பிருது-சிரவன் தேவகி - உரோகணி - உருக்மணி - சத்தியபாமை - இவர்களெல்லாங்கூடி நன்றா யோசித்து, இரகசியமாகப் புரோகிதரை யழைப்பித்து இதை அவருக்கும் அறிவித்து அவர் யோசனையையுங் கேட்டுக்கொண்டு பன்னிரண்டாவது நாளில் முகூர்த்தம் வைத்துக் கொண்டார்கள். பின்பு கிருஷ்ணன் இந்தப்பெண்ணை அர்ச்சுனனுக்குக் கொடுக்கப் பலராமர் உத்தவர் முதலானபேர்களுக்குச் சம்மதி யில்லாமையால் அவர்கள் இச்செய்தி யறியாதிருக்க வேண்டியதற்காக யோசித்து ஒரு விளம்பரஞ்செய்து பறைசாற்றுவித்தார், அவ்விளம்பரம் என்னவென்றால் - நம்முடைய சுபத்திரைக்குத் தேகத்திலென்னமோ தெய்விகமாய் உபத்திரவம் உண்டாயிருக்கிற படியினாலே, சமுத்திரத்தின் நடுவிலிருக்கிற தீவிற் சிவனுக்கு முப்பத்துநாலுநாள் மகா உச்சவம் நடக்கப் போகிறது அதற்காக இன்றைக்கு நாலாநாளே யாதவர்முதலான யாவரும் தங்கள் குடும்பங்களுடனேயும் இரத கஜதுரக பதாதிகளுடனேயும் அந்தத் தீவுபோய்ச் சேரவேண்டியது என்பது தான். அதில் யாதவர்களும் தங்கள்தங்கள் சேனைகளுடனேபோய்ச் சேரவேண்டிய தென்பதைக் கேட்ட பலராமர் முதலாகிய சகல யாதவர்களும் பட்டணத்தி லிருக்கும் சகல ஜனங்களும் வஸ்திராபரணங்களைப் பூண்டு, அழகாகிய சீலைகளைக்கட்டிய கொடிமரங்களுடனே நல்ல யந்திரங்களுடைத்தாய் உட்காரவும் படுக்கவும் விளையாடவும் உபயோகமா யிராநின்ற விடங்களையுடைய கப்பல்களின்மேலேறி, மகா சந்தோஷ வைபவ விநோத விளையாட்டுடன் அந்தத் தீவுபோய்ச் சேர்ந்தார்கள். இப்படியிருக்கச் சுபத்திரையானவள் கண்ணனிடத்திற்கு வந்து, அண்ணா! நம்முடைய தோட்டத்தி லிருக்கிற சன்னியாசி இன்னும் பன்னிரண்டுதினங்க ளிவ்விடத்திலேயே இருக்கப் போகின்றாராமே. அவருக்குச் சிசுரூஷை யார்செய்வார்களென்றாள். அதற்குக் கண்ணன்- அம்மணீ! உன்னையல்லாது யார் செய்வார்கள்? நீயேசெய்யவேண்டும். என்று சொல்லிப் பேரிகைமுதலாகிய வாத்தியங்களுடனே [illegible], ஏழுயோஜனை அகலமும் பத்துயோஜனை நிகளமுமுள்ள அந்தத் தீவையடைந்து எல்லாருடனே கூடி அவ்விடத்துத் திருவிழாவை நடத்தினார். அப்போது சகலமானபேர்களும் தான தர்மங்களைச் செய்து, வேடிக்கையாய்த் தோட்டங்கள்-அணைகள்-குளங்கள்- குட்டைகள்-மண்டபங்கள் - மணிக்குன்றுகள் முதலான விடங்களிலே வாசஞ்செய்து, அங்கு நடந்தேறிவரும் திருவிழாவைப் பார்த்துச் சகலமானபேரும் ஆனந்த பரவசத்தராய்ச் சந்தோஷ மடைந்துகொண் டிருந்தார்கள்.

சுபத்திரைமணம்.

இவ்வாறாக முப்பத்து நாலுநாள் அங்கே உச்சவம் நடந்துகொண் டிருந்தது. இப்படியிருக்க - அர்ச்சுனனானவன் காரியம் சித்தமாயிற்றென்று மனதிற்

சந்தோஷமடைந்து சுபத்திரையைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறான்: அடி தேன்மொழியே! இப்பொழுது உன்தகப்பனார் முதலிய யாவரும் திருநாள் பார்க்கப் போயிருக்கிறார்கள். இந்தச் சமயத்திலே தான் நாம் விவாகஞ்செய்துகொள்ளுவது யுக்தம். ஆனால் விவாகங்களைப் பெரியோர்கள் எட்டு விதமாகப் பேசியிருக்கிறார்கள். என்னுடைய பந்துக்களோ தேசாந்தரத்தி லிருக்கிறார்கள். உன்னுடைய பந்துக்களுமிப்போது தேசாந்தரத்தி லிருக்கிறார்கள். ஆகையால் அந்த எட்டுவித விவாகங்க ளுள்ளும் சிறந்த தாகிய காந்தருவமென்பதுதான் நமக்கு இப்போது இசைந்ததாகக் காண்கிறது. அன்றியும்-கன்னிகையை ஒருவனுக்குக் கொடுப்பதற்கு முறையே தகப்பன்-உடன்பிறந்தான் - தாயார் - அம்மான் - தகப்பனுடன் கூடப்பிறந்தவன் - ஆசாரியன் - இவர்களெல்லாம் அதிகாரிகளாயிருக்கிறார்கள். அல்லாமலும் பெரியோர்கள் விவாகமுறைமையைக் குறித்துச் சொல்லியதைக் கொஞ்சஞ்சொல்லுகிறேன் கேள். பெண்ணைப்பெற்றவன் யோக்கியனானவனை யழைத்து விதிப்படி கன்னிகையைக் கொடுத்தால், அந்தக்கன்னிகை பத்தினியென்கிற பெயருடையவ ளாகிறாள். ஒரு பெண்சாதி மரித்தபின் தன்னையும் தன்னை அடுத்தபேர்களையும் காப்பாற்றுகிற நிமித்தம் தானே யொரு பெண்ணைத்தேடிக் கலியாணஞ் செய்துகொண்டால், அந்தப்பெண் பார்ரியையென்று பெயருடையவ ளாகிறாள். பிள்ளைக்குத தகப்பனானவன் குலம் முதலான யோக்கியதையுள்ள கன்னிகையைத்தேடி விவாகஞ் செய்வித்தால், அந்தக் கன்னிகை தாரம் என்று பேருடையவ ளாகிறாள். சந்ததி நிமித்தமாக ஒருவன் ஒருபெண்ணை விவாகஞ் செய்துகொண்டால், அவள் வசியை என்று பெயருடையவ ளாகிறாள். அன்றியும் அவளுக்கு ஜாயை என்கிற பேருமுண்டு. இப்படி யிருக்கிறபடியினாலே ஆசையுள்ள பெண்ணை ஆசையுள்ள புருஷன் இரகசியமாய்ச் சேருகிறது முன்சொன்ன எல்லாவற்றிலு மேலான உருவாயிருக்கிறது. அடி மான்விழியே! இப்போது நான்சொல்லுகிற காந்தருவ விவாகமானது அக்கினி முன்பாகச் சடங்குகள் நடத்திச் செய்துக்கொள்ளத்தக்க தாகாமற்போனாலும், நீ தயைசெய்து அதை அங்கீகரிக்கவேண்டும். ஏனென்றால் - உச்சவத்திற்குப் போயிருக்கிற பேர்களெல்லாம் வராமலிருப்பதற்கு முன்னமே நல்ல நாள் இன்றைக்குத் தான் அமைந்திருக்கின்றது. எப்படி யென்றால், உத்தராயனம் - வைகாசமாசம் - சுக்கிலபக்ஷம் - ஹஸ்தநக்ஷத்திரம் - திரிதியை திதி-மகரலக்கினம் - பவகரணம் - சித்தயோகம்-இவைகளெல்லாம் கலியாணத்திற்கு எடுத்தவைகள். இவையெல்லாம் இன்றிராத்திரிக்கி இசைந் திருக்கின்றன. சூரியபகவானும் அஸ்தமனத்துக்குச் சமீபித்திருக்கிறார். ஆகையால் நீ மனதைப் பெரிதுபண்ணவேண்டும். ஸ்ரீகிருஷ்ணனோ சர்வமு மறிந்தவர்தான். ஆனால் இந்த விஷயத்தை யறிந்திருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. ஆனதாற் காமனால் வருத்தப்பட்டுப் புலம்பாநின்ற என்னைக் காப்பாற்ற என்னயோசிக்கிறாயோ சொல்லடி என்கண்ணே என்றான். இப்படி அர்ச்சுனன் சொன்ன சொல்லைக்கேட்ட சுபத்திரை கண்ணனை மனதில் நினைத்து, ஒன்றுஞ் சொல்லாமற் கண்ணீர்மல்க நின்றுகொண் டிருந்தாள். அர்ச்சுனனும் பரிதாபத்துடனே கொடிவீடு சென்று, தன்பிதாவாகிய தேவேந்திரனை நினைத்தான்.

இப்படி அர்ச்சுனன் நினைத்த மாத்திரத்திலே தேவேந்திரனானவன் இயமன் - வருணன் - குபேரன் - அக்கினி - வாயு - சூரியன் - சந்திரன் - அஷ்டவசுக்கள் - ஏகாதசருத்திரர் - சித்தர் - சாத்தியர்-கின்னரர் - கிம்புருடர் - முதலாகிய சகல தேவர்களோடும், நாரதர் - வசிட்டர் - முதலாகிய தேவரிஷிகளோடும், சசிதேவிமுதலாகிய தேவஸ்திரீகளோடும், ஐராவதத்தின் மீதி லேறிக் கொண்டு தன்மகனிருக்கு மிடம் வந்து சேர்ந்தான். கிருஷ்ணனும் சுபத்திரை நினைவை யறிந்து, அக்ரூரன்- ஆருகன்- கதன் - வசுதேவன் - தேவகி-உரோகிணி-உருக்குமணி-சத்தியபாமை-முதலானவர்களையெல்லா மழைத்துக் கொண்டு பலராமர் முதலானபேர்கள் தூங்கிக்கொண் டிருக்குந் தருணத்திலே புறப்பட்டு இவ்விடம் வந்து சேர்ந்து தேவேந்திரன் முதலான பேர்களைக்கண்டு நமஸ்காரஞ்செய்து நல்வரவுகேட்டார். அந்தத்தேவராஜன் முதலானவர்களும் க்ஷேமவிடைகொடுத்துக் கிருஷ்ணனைப்பார்த்து, நல்லது: ஏன்சாவகாசம் பண்ணுகிறீர்? சீக்கிரத்திற் காரியத்துக்கு யத்தினப்படவேண்டும். என்று சொல்லவே கிருஷ்ணனும் தம்முடையவர்களைக் கொண்டு கலியாணத்திற்குவேண்டிய சகல சாமக்கிரியைகளைச் சித்தப்படுத்தித் தேவர்களுக்கு விண்ணப்பஞ்செய்தனர். தேவராஜன் தன் மகனுக்கு மங்களஸ்நானஞ் செய்வித்து, நவமணிகளுமிழைத்துப் பளபளென விளங்குங் கிரீடம் - தோள்வளை - ஆபரணங்கள் - கவசங்கள் - முதலான பல வாபரணங்களினாலும் திவ்விய பீதாம்பரங்களாலும் அலங்காரஞ்செய்து, நாரதர் - வசிட்டர் - முதலான மஹாமுனிவர்களைக் கொண்டு சுபச்சடங்குகளைச்செய்வித்தான். கிருஷ்ணனும் தன்தங்கைக்கு நல்ல அலங்காரஞ்செய்வித்துச் சித்தம்பண்ணினர். உடனே சகல வாத்திய முழக்கத்துடனே பெண்ணையும் பிள்ளையையும் கலியாண மண்டபத்து நடுவே இரத்தினங்க ளழுத்திய பொற்பீடத்தி லுட்காரவைத்து, காசிபமஹாமுனிவர் விதிப்படி அக்கினி வளர்த்தி ஓமஞ்செய்ய வசிஷ்டர்முதலாகிய ரிஷிகளெல்லாம் மந்திரங்களைக்கோஷிக்கநாரதர்முதலாகியபெரியோரெல்லாஞ்சபையாய் வேதிகையைச் சூழ்ந்து உட்கார்ந்திருக்க அருந்ததி முதலாகிய ரிஷிபத்தினிகளும் இந்திராணிமுதலாகிய தேவ பத்தினிகளும் தேவகி - உருக்குமணி - சத்திய

டர்மை - சாம்பவதி - முதலாகிய யாதவ பத்தினிகளும் பாலிகைகளில் விதைகளை விதைத்துப் பால்கலக்த நீரிடவும் சிலர்பூரணகும்பங்களும் தீபங்களுமேந்தி மங்கலப்பாடல்களுடனே சூழவுமிருந்தார்கள்.

தேவதுந்துபி முதலாகிய பதினெட்டு வாத்தியங்களுமுழங்க, அரம்பை முதலாகிய தேவஸ்திரீகளெல்லாம் நர்த்தனஞ்செய்ய, தும்புருவர் முதலான பேர்களெல்லாம் கானம்பாட, மகா விபவமாகக் கலியாணத்தை இந்திரன் கிருஷ்ணன் முதலாகிய பேர்கள் இருந்து நடத்தினார்கள். புரோகிதர் சொற்படியே கிருஷ்ணனும் உருக்குமணியுமாகத் தாரைவார்த்து கன்னிகாதானஞ்செய்த சுபத்திரையை அர்ச்சுனன் கைப்பிடித்துக்கொண்டு அக்கினியையும் வேதிகையையும் அந்தணர்களையும் வலம்வந்துட்கார்ந்து மங்கிலியங்கட்டி, அம்மிமிதித்துப் பொரியிட்டு மற்று முண்டான எல்லாச் சடங்குகளையுங் குறைவின்றிநிறைவேற்றிச் சந்தோஷத்துடனே விவாகஞ்செய்து கொண்டான். உடனே ஸ்ரீகிருஷ்ணரானவர் நாரதர் காசிபர் வசிஷ்டர் முதலாகிய மஹாரிஷிகளையும் அருந்ததிமுதலாகிய அவர்கள் பத்தினிகளையும்பூசித்துப் பலதானங்களும் வழங்கி, இந்திரன் முதலாகிய தேவர்களும் இந்திராணி முதலாகிய தேவஸ்திரீகளு மாகிய சம்பந்திகளுக்குச்சகலவுபசாரமுஞ்செய்து பூசித்துச் சகலருக்கும் விருந்து செய்தனர். அர்ச்சுனன் தன் பெண்சாதியுடனே இருடிகளையும் அவர்களுடையமனைவிகளையும் நமஸ்கரித்து அவர்களால் ஆசீர்வாதம் பெற்றுப் பின்பு இந்திரன் முதலாகிய தேவர்களையும் அவர்கள் மனைவிகளையும் நமஸ்காரஞ்செய்ய, அவர்களெல்லாம் பெண்ணுக்குத் தகுந்த பிள்ளையும் பிள்ளைக்குத் தகுந்த பெண்ணுமாய் இப்படி யமைந்தது அதிசயமாகையால் ஒருகுறைவுமின்றி இவ்விருவரும் நன்மக்களைப் பெற்று நற்செல்வங்க ளடைந்து நல்லோர்களுக் குதவிசெய்து கொண்டு நெடுநாள் வாழ்கவென்று ஆசீர்வாதஞ்செய்து, மணக்கோலத்துடன் விளங்காநின்ற மகனையும் மருமகளையுமெடுத்து முத்தமிட்டு உச்சிமோர்ந்து மருமகளுக்குப் பற்பலபணிகள் வழங்கினார்கள். பின்பு அர்ச்சுனனும் சுபத்திரையும் வசுதேவர் தேவகி முதலானவர்களை நமஸ்கரித்து, அவர்களாலும் பல ஆசிகள் கூறப்பட்டு மணவிருந்துமிடப்பட்டார்கள். இப்படிக்குக் கலியாணம்நிறைவேறிய பின்பு இந்திரன் முதலானபேர்களெல்லாம் யாதவர்களிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் பதிபோய்ச்சேர்ந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணதேவர் அர்ச்சுனனைக் கூப்பிட்டு நீ கலியாணத்தைச்சேர்ந்த மற்றத் தீக்ஷையை நிறைவேற்றிப்போட்டு இன்னும் இருபத்திரண்டு தினத்திற் குள்ளாகவே நீ சுபத்திரையை அழைத்துக் கொண்டு நமது தேரின்பேரி லேறி இந்திரப் பிரஸ்தம்போய்ச் சேர்ந்துவிடு. இவ்விடத்தில் நீயிருக்கிறவரைக்கும் சன்னியாசி வேஷத்தோடே யிருக்கவேண்டும். நாங்கள் பலபத்திரர் நித்திரைவிட்டு எழுந்திருக்கு முன்னமே அவ்விடம் போகவேண்டு மாகையால் செலவுகொடு. என்றுசொல்லிச் சுபத்திரைக்குந்திட்டஞ்செய்து சகல யாதவர்களோடும் புறப்பட்டு அந்தத்திவுபோய்ச் சேர்ந்துவிட்டார்.

அருச்சுனன் சுபத்திரையை அஸ்தினபுரங் கொண்டு போதல்.

பின்பு அர்ச்சுனன் சுவர்க்கராச்சிய மடைந்தவன் போல் மஹாசந்தோஷத்துடனே சுபத்திரையோடு கூடிப் பலபோகங்களையு மனுபவித்துக்கொண்டு மகா காந்தியடைந்து, இருபத்தொரு நாள் கழித்தவுடனே தன்மனைவியாகிய சுபத்திரையை யழைத்து, அடியென் பிராணநாயகி! இனிநாம் கிருஷ்ணனுடைய உத்தரவின்படி இந்திரப் பிரஸ்தம்போய்ச் சேரவேண்டு மாகையால் நீ இன்றையதினம் வேதியர்முதலானபேர்களுக்கு விரத முடிவுநாளென்று சொல்லி அன்னதான முதலாகிய பலதானங்களையுஞ்செய்து, நீயும் உன் தோழிமார்களுடனே நல்ல பூஷணமுதலானவைகளால் அலங்கரித்துக்கொண்டு வேடிக்கையாய்ப்புசித்து, அதன்பின் நகரியைப் பிரதக்ஷணம்வரவேண்டுமென்றுசொல்லிச் சகல ஆயுதவர்க்கங்களோடுங்கூடிய திவ்வியமான ஓரிரதத்தைச் சித்தப்படுத்திக்கொண்டு வாவென்று சொல்லினன். அந்தப்பூக்கொடியும் அப்படியே யோக்கியாளாகிற பிராமணரை யழைப்பித்து அவர்களுக்கு அன்ன வஸ்திர தட்சணை தாம்பூல முதலானதுகளை யெல்லாங் கொடுத்துப் பூசித்து அவர்களாற் பல ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, பின்பு தன்பந்துக்கள் தோழிமார்கள் முதலானபேர்களோடு சரசசலலாபங்களுடன் போஜனஞ்செய்து அவர்களுக்கும் சில பரிசுகொடுத்து, இராஜாவினூழியக்காரரை யழைத்து நமதிரதத்தைச் சகல ஆயுதவர்க்கங்களோடு நன்ருய் அலங்கரித்துக் கொண்டு வாருங்களென்று கட்டளை யிட்டாள். அவர்களும் அப்படியே அலங்கரித்துக்கொண்டுவர அதில் தன் வஸ்திரம் முதலானவைகளை தாதிகளைக் கொண்டு ஏற்றுவித்து அர்ச்சுனனிடத்திற்கு வந்து, என்பிராண நாயகனே! உமதுத்தர வின்படி இரதத்தைச் சித்தப் படுத்தினேனென்று சொல்லினள். அர்ச்சுனன் மிகவும் சந்தோஷத்துடனே அவளைக்கட்டி முத்த மிட்டுக்கொண்டு போவோம் வாவென்றழைக்க, அப்போதவள் தனது நாயகனைநோக்கி, என்னுயிராகிய புருஷசிங்கமே! அடியாள் செய்துகொள்ளும் விண்ணப்பத்தைக்கேட்டங்கீகரிக்க வேண்டும். அதாவது-குதிரையின் கடிவாளம் பிடித்துத் தேர்நடத்துவதில் எனக்குச்சமான மொருவரு மிப்பூமண்டலத்தி லில்லையென்பார்கள். ஆதலால் நான் சாரத்தியஞ் செய்கிறேன். அதை அங்கீகரிக்க வேண்டுமென்றனள். அதற்கப்பாண்டவவீரன் அடிபெண்ணரசே! எனக்குமிகச் சந்தோஷமாயிற் றுதலால் நீ முன்னமேபோ யேறுகவென்று சொல்லித்

தான் காஷாயங்களைக் களைந்து திவ்விய வஸ்திரந் தரித்துக் கவசகுண்டல கேயூரங்களையு மணிந்து, கத்தி- கேடயம் - முதலாகிய ஆயுதங்களுங் கட்டித் தூணிகளைத் தோட்களில் தாங்கிக் கையில் விற்பிடித்துக் கண்டோர்யாருந் திப்ரமைகொள்ளும்படியாகக் கோடி சூரியப்பிரகாசமாய் விளங்கித் தனது கட்டளைப் [illegible] ப்பிடித்து பிற்குஞ் சுபத்திரையினுல் விளங்கா நின்ற தேரிலேறினுன்.

இவனேறிய மாத்திரத்திலே சுபத்திரை குதிரைகளைச்சவுக்கினுலடிக்க அந்த உத்தம அசுவங்கள் கருடனுங் காற்றுந் தோற்றுப் போகும்படி தேரையிழுத்துக்கொண்டு போகுமளவில் மாரிக்காலத்தில் வானத்திலே மேகங்கள்முழங்கினு லெப்படி யிருக்குமோ அப்படி போலே கிடுகிடென்று இரதம் கோஷித்துக்கொண்டு செல்லச் சுபத்திரையின் பாங்கிகள் அவளைப் பார்த்து, எம தன்புடைய தோழீ! உனக்குத் தகுந்த புருஷன் கிடைத்ததற் காகவும் நீ அவனுேடுகூட வாழ்வதற்காகவும் சுவாமியைத் தோத்திரஞ்செய்கிறோம். நீ ஜெயவீரப் பிரதாப திவ்விடதேசோமயனுன நல்ல மகனைப்பெற்று உனக்கொருவர் நிகரின்றி மஹாராஜியாய் வாழுங்கால் நாங்களுன்னைப் பார்க்கும்படி நீ தயைசெய்யவேண்டு மென்று சொல்லி வழிவிட்டுத் திரும்பினுர்கள். அரண்மனையிலும் பட்டணத்திலு முள்ள அனேகர் இரத விரைச்சலைக் கேட்டு ஓடிவந்து பார்த்து நமது சுபத்திரையை யாரோ எடுத்துக்கொண்டு போகிருனென்று ஓவென்று கூச்சல்போட, உடனே யாவரும் கும்புகூடி இவன் யாரடா நாமெல்லாமிருக்க அரண்மனையிற் புகுந்து பெண்ணை யெடுத்துக்கொண்டு போகிருன் என்றுர்கள். சிலரிவன்அரண்மனைத்தோட்டத்திலிருந்தசன்யாசியாமென்றுர்கள். சிலர்ஆம்: ஆம்: முன்னமே அந்தச்சன்னியாசியைப் பார்க்கும்போதே சந்தேகமுண்டாயிருந்தது அதுசரியாய்முடிந்ததென்றுர்கள். சிலரிவன் பாண்டவரில் ஒருவனுகிய அர்ச்சுனனு மென்றுர்கள். பின்னர்யாவரும் சரிதான் அவனுய்த்தான் காண்கிறது என்றுபேசிக்கொண்டே ஆயுதங்கள் வீசிப் பின்ருெடர்ந்தோட அர்ச்சுனனும் அவர்க ளாயுதங்களைத் தடுத்துக்கொண்டேபோக, இரதம் ரைவதக்கிரிக்குச் சமீபத்திற் போகும்போது அர்ச்சுனன் தானிருந்த குகையைத் தன்காதலிக்குக் காண்பிக்க, அவளு மிது மகா நல்லகுகையாதலால் அதைநான் நமஸ்கரிக்கவேண்டுமென்றுசொல்லிக் கொங்கைகுலுங்கச் சிரித்துக்கொண்டே நமஸ்கரித்து விரைவாய்த் தேரையோட்டினுள்.

அருச்சுனனை விபிருது வழிமறித்துப் போர்செய்தல்.

இப்படி யிருக்கப் பட்டணத்தைக் காக்கிறநிமித்தம் இரைவத பருவதத்தினருகில் வைக்கப்பட்டிருக்கிற விபிருது எனபவன் இந்தத் தேரிரைச்சலையும் பட்டணத்தா ரிரைச்சலையுங் கேட்டு ஓடிவந்து பார்த்தான். அப்போது சனங்களெல்லாம்! ஐஐயோ!! அர்ச்சுனன் சன்னியாசி வேஷம்போட்டு மோசஞ்செய்து நமதுகுலத்துக்கு இலக்குமிபோலிருந்த சுபத்திரையைத்தூக்கித் தேர்மேல்வைத்துக்கொண் டோடிப் போகிறுனே என்று கூவுதலைக் கேட்டுச் சுபத்திரை தேரோட்டுகிறதையும் பார்த்து, முன்னம் கண்ணன் சொன்ன சங்கதியை யறிந்திருந்தவனுனுலும் வெளிக்குக் காட்டக்கூடாதென்று மிகவிரைவாய்த் தன் சேனைகளைச் சன்னுகப்படுத்தித் தனதுவில்லிற் சரமாரி பொழிந்துகொண்டே அத்தேர்க்குப் பின்ருெடர்ந்தான். இவ்வாருகப் பின்னுெடர்ந்து வருவதைக்கண்ட சுபத்திரையானவள் தன் கணவனைநோக்கி, அதோ நால்வகைச் சேனைகளுடனே விபிருது துரத்திக்கொண்டு வருகிருன். அவர்களுடனே உமக்கு யுத்தம் நேரிடுங்கால் நெடுநாளாய் என்மனதிலிருந்த கோரிக்கை ஈடேறுமென்று சந்தோஷப்படுகிறேன். அஃதென்ன கோரிக்கையென்ருல்—மஹாபல பராக்கிரமங்களுடைய அர்ச்சுனனுக்கு நாம் யுத்தத்திலே சாரதியாகி நமதுசாமர்த்தியங்களையெல்லாம் உபயோகப் படுத்தவேண்டுமென்கிறது தான் என்றுசொன்னுள். அர்ச்சுனனும் - பெண்ணே! மிகவும் சந்தோஷமாயிற்று. இப்படிப்பட்ட சாரதியை யடைந்த வீரனுகிய என் புஜ பராக்கிரமத்தைப் பார்த்து நீ சந்தோஷப்படக் கடவை. சேனைகள் வரட்டும் தேரையோட்டுக என்று சொல்லவே அவளும் தேரைத்துரிதமாக ஓட்டினுள். இப்படிக்குத் தேர் பட்டணத்தைவிட்டு வெகுவேகமாகப் போவதைக் கண்ட விபிருதுவானவன் வில்லை வளைத்து நாணேற்றிட்டு வரிசை வரிசையாய் அளவற்ற அம்புகளை நாற்புறத்தும் பாயும்படியாகத் தொடுத்துவிட, அர்ச்சுனனும் தன்வில்லில் நாண்பூட்டிப் பாணங்களைச் சந்தானஞ்செய்து தன்பேரில்விட்ட பாணங்களை யெல்லாம் அறுத்துத்தள்ளினுன்.

உடனே விபிருது கோபங்கொண்டு மறுபடியும் மஹா கூர்மை பொருந்திய சிலபாணங்களைத் தொடுத்துவிட, அவைகளையுந் துண்டந் துண்டமாய் அறுத்து எதிரியைக் கண்விழித்துப் பார்க்கவொட்டாமல் அருச்சுனன் அளவற்ற சரங்களை ஆமோகமாகப்பொழியவே சேனைகளெல்லாம் ஒரேமுகமாய்த் திரும்பிச் சூழ்ந்துகொண்டு கோடைகாலத்திடிபோற் கர்ச்சித்துக் கத்திகள் - ஈட்டிகள் - சூலங்கள் - குண்டாந்தடிகள் முதலான பலவாயுதங்களைச்சுழற்றி யெறிந்தார்கள். யானைகள் உலக்கைகளைத் துதிக்கைகளாற் பற்றிச்சுழற்றித் தேரின்பேரில்மோதின. குதிரைகள் தங்கள்பேரிலிருக்கிற வீரர்களைத் தூக்கிக்கொண்டு பாய்ந்து தேர்க்குதிரைகள்மேல் வீழ்ந்தன. இரதங்களிலிருக்கும் வீரரெல்லாம் வில்லுகளை வளைத்து அம்புகளைத் தொடுத்துச் சரமாரி பொழிந்தார்கள். அந்தச்

சேனைகளுக்குத் தலைவனாகிய யாதவவீரன் சங்கையெடுத்துப் பூரித்துச் சிங்கநாதஞ் செய்து மிக லாகவத்துடனே வில்லில் அம்புகளைப் பூட்டி மலையின்பேரில் மேகங்கள் சூழ்ந்து மழையைப் பொழிவதுபோல் அத்தேரின்பேரில் பாணவருஷங்களை வருஷித்து எவ்வளவுஞ் சந்துதெரியாமல் மறைத்துவிட்டான். அதுகண்ட அர்ச்சுனன் மிகவு மாக்குரோஷத்துடனே தனது ஜெயசங்கமெடுத்தூதி வீரகெர்ச்சித்தஞ் செய்து, பர்வதங்களை மூடிக்கொண்டிருக்கும் பனிகளைச் சூரியன் தனதுகிரணங்களினாலே ஒரு நிமிஷத்தில் நீக்குவது போல் அந்தப் பாணங்களின் கூட்டத்தைத் தனது அம்புகளினாலே துணித்து நீக்கித் தன்னைச் சூழ்ந்திருக்கிற சேனையிலிருக்கும் யானைகள் - குதிரைகள் - முதலாகியவைகளை விரட்டோடவடித்து, அவற்றின் வீரர்களெல்லாங் கவச கிரீடகுண்டல ஆயுதங்களில்லாதவர்களாகிப் பதைபதைக்கச் செய்து, தேர்களின் சக்கரம் நுகத்தடி இருசு முதலானவைகளைத் துளைத்துப் பொடியாக்கித் தொம்சப்படுத்தித் தலைவனாகிய யாதவ வீரனைநோக்கி, ஓய் வீரனே! ஓடாதே: அருச்சுனனுடைய வலிமையைக்கண்டு போகலாம். என்றுசொல்லி அட்டகாசஞ் செய்து சில சரங்களைப் பிரயோகித்து அவன் தேர் குதிரைகளுடைய கழுத்தையும் சாரதியின் கழுத்தையும் அறுத்துத் துவசத்தைத் துணித்துக் கவசத்தைப் பிளந்து வில்லை யொடித்துச் சின்னபின்னமாக்கித் தன் மனைவிக்கு உன்சேனை படும்பாட்டைப் பாரென்று காண்பித்தனன். அவளும் சந்தோஷப்பட்டுத் தேரையோட்டவாரம்பிக்க விபிருது வானவன் திக்குதோறுந் தலைவிரி கோலமாய் ஓடுகிற தன்சேனைகளையெல்லாம் நிற்கும்படிகையமர்த்தித் தான் இரதத்தினின்று திடீலென்று குதித்து, ஓ அர்ச்சுனா! நிற்கவேண்டும்: ஓ குழந்தை சுபத்திரா! நில்லுநில்லு: என்று கூவிக்கொண்டுபோய் அர்ச்சுனனை வழிகட்டிக்கொண்டு இதனைச்சொல்லுகிறான்.

ஓ அர்ச்சுனா! எனக்கிப்போது மிகவுஞ் சந்தோஷமாயிற்று. ஏனென்றால் - நீ நமது மருமகனாகவந்தாயே என்பதினாற்றான். நீ இவிடத்திற் சன்னியாசிவேஷத்துடனே மறைந்திருந்த சங்கதி கிருஷ்ணனால் நானறிந்திருக்கிறேன். மேலும் எப்படியாவது உனக்குச் சுபத்திரையைப் பாரியை யாக்கக் கிருஷ்ணனுக்கு மனதிருந்தது. அவரன்றோ குணாகுணங்களை நிச்சயிக்க வல்லவர். ஆகையாலே உன் விஷயத்திலே நடந்த சரித்திர மெல்லாம் எனக்குத் தெரியும். இப்போது நீ சுபத்திரையுடனே இந்திரப்பிரஸ்தத்திற்குப் போகவேண்டியதுந் தெரியும். ஆனாலும் சனங்களுடைய கோஷத்துக்காக உன்னோடு யுத்தஞ்செய்யவந்தேன். அர்ச்சுனா! நான்சொல்லவேண்டிய வார்த்தையொன் றிருக்கிறது. அதென்னவென்றால் - இந்திரன் சசிதேவியைக் கலியாணஞ் செய்து கொண்டது போல் நீ யெங்கள் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டு விளங்குகிறாய். ஆகையால் இனி எங்கள் பெண்முகங்கோணாமல் நடக்கவேண்டுமென்றுகோருகிறேன். நீ சுகமாய்ப் பட்டணம்போய்ச் சேர்ந்து, உன்னண்ணன் தம்பிமார் முதலாகிய யாவரும் சந்தோஷப்படும்படிவாழக்கடவாய். என்றுசொல்லிச் சுபத்திரையையும் பார்த்து, ஓ குழந்தாய்! நீ நல்ல புருஷனை யடைந்தாய். மிகவும்பாக்கியசாலி. நீமாமியார்முதலாகியபந்துக்களும் புருஷனும் உவக்கும்படியாக நற்செய்கைசெய்து வாழக்கடவாய். ஸ்ரீகிருஷ்ணன் இவிடம்வந்தவுடனே சகல வரிசைகளும் இந்திரப்பிரஸ்தத்திற்குவந்துசேரும். ஆகையாற்சுகமாய்ப்போங்கள். என்று சொல்லவே அர்ச்சுனன் விபிருதுவை நமஸ்கரித்து விடைபெற்று அத்திவ்விய ரதத்தி லேறிக்கொண்டு முன்போலவே புறப்பட்டுப்போனான்.

அருச்சுனனோடு பகைத்தெழுந்த யாதவ வீரர்களை ஸ்ரீகிருஷ்ணதேவர்சமாதானப்படுத்துதல்.

இப்படிபோகும்போது சகல சைன்னியங்களும் இது மிகவும் அன்னியாயம். ஊரிலொருவரு மில்லாதிருக்கும் போது பெண்ணைத்திருடிக்கொண்டு போகலாமா? இதுதானா ராஜகுமாரனுக்கு லட்சணம்? இந்தச்சேனாதிபதி கையிலாகாதவர். தன்னந்தனியாயிருக்கு மொருவனைத் தனது சேனையோ டெதிர்த்துப் பிடிக்கமாட்டாமற் போனாரே என்றுகூவிக்கொண்டு திரும்பித் துவாரகாபுரிக்கு வந்து, சுதர்மை யென்னுஞ்சபைக்கு அதிகாரியா யுள்ளோனிடத்தில் அதனைத் தெரிவிக்கவும் அந்தச் சபை யதிகாரியும் உடனே மிகுந்து ஒலிக்கத்தகுந்த பெரியபேரிகையை அடிக்க உத்தரவுபண்ணினான். அப்படியே ஆபத்காலத்துக்கடையாளமாகிய அந்தப் பேரிகையை அடிக்கவே அந்தச் சத்தங்கேட்ட மாத்திரத்தில் தீவினடுவிலிருந்த யாதவர்கள் யாவரும் மிகவுங் கலக்கமுற்று ஒருகாரியமும் தோற்றாமல் எவனெவன் எந்தவேலைச் செய்துகொண்டிருந்தானோ அந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு, ஆசனங்கள் - பாத்திரங்கள் - வஸ்திரங்கள் - ஆபரணங்கள் - முதலான சகல சாமக்கிரியைகளும் போட்டுவிட்டு ஒருவரோடொருவர் பேசாமல், அங்கிருந்து ஒரு நிமிஷத்துக்குள்ளாக மேற்படி சபையை வந்தடைந்தார்கள். அந்தச்சபை யதிகாரி இவர்களுக்கு அர்ச்சுனன் பெண்ணைக் கொண்டுபோனதும, விபுருது தாத்தி பங்கப்பட்டதுந் தெரிவித்தான். அதுகேட்ட யாதவர் யாவரும் மிகுந்த கோபமடைந்து கண்கள் சிவக்க உதடுகளைக் கடித்துக் கொண்டு ஆசனத்திற் பொருந்தாமல் எழும்பி எழும்பி, ஓய் சேனாபதிகளே! ஏன்சும்மா யிருக்கிறீர்கள்? சீக்கிரம் ரதங்கள் - யானைகள் - குதிரைகள் - காலாட்கள் - என்கிற நால்வகைச் சேனைகளையும் சித்தப் படுத்துங்கள்.

வேல் - வல்லயம் - கட்டாரி - வில் - தூணி முதலியவைகளையு மெடுத்துக் கட்டிக்கொள்ளுங்கள். என்று ஆக்கிரமித்துக் கூவவே சேனைகளைச் சேனைத்தலைவர்கள் சித்தப்படுத்தினார்கள். சிலவீரர்கள் தாங்களே யெழுந்திருந்து தங்கள் தங்கள் வாகனங்களைச் சித்தப்படுத்திக் கவசகுண்டலங்களாதி ஆபரணங்களோடு ஆயுத முதலானவைகளுடனே மகா வுக்ரகோபாவேசமாய்ச் சன்னத்தப்பட்டு வந்தார்கள்.

இப்படிக்குச் சேனைகளும் வீரர்களும் சூழ்ந்து நிற்க, சங்குகள் - காளங்கள் - பேரிகள் - கரிகளின் பீஷ்காரங்கள் - பரிகளின் கனைத்தல்கள்-வீரருடைய சிங்கநாதங்கள் - இரதங்களுடைய கோஷங்கள் - இவையாவுமெழும்பித் திக்குகளைச் செவிடுபடச்செய்ய, மதுபானஞ்செய்து மதத்திராநின்ற பலராமர் யாதவ வீரர்களைநோக்கி-ஓய்வீரர்களே! என்ன நீங்கள் அறியாதவர்கள்போற் குதிக்கிறீர்கள்? கிருஷ்ணன் சும்மாயிருக்க உங்களுக்கெனிந்தயோசனை? முன்னம் இவன் கருத்தறிந்து பின்பு இந்த முயற்சிகளைச் செய்யவேண்டும். சகல காரியங்களினு மகாபுத்திமானாகிய கிருஷ்ணன் தன்கருத்தைவெளியிடட்டும். பின்பு அவன் கருத்துக்கிசைந்தபடி நடப்போம். என்று பலதேவர் சொல்ல அதுகேட்ட யாவரும் நல்லது அப்படியே செய்வோமென்று அங்கீகரித்து முன்போல யுத்தத்திற்காகக் களளவென்று இரையாமல் ஆசனங்களிலுட்கார்ந்தார்கள். பின்பு பலதேவர் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைப்பார்த்து, ஓ மூன்றுலோகங்களுக்கும் கர்த்தாவாகியும், மூன்றுகாலமு மறிந்தவனாகியு மிராநின்ற கிருஷ்ணா! இந்த ஜனங்கள் இரையு மிரைச்சலையும் நடந்த காரியத்தையும் அறிந்திருந்தும் என்னசும்மாவிருக்கிறாய்? அர்ச்சுனனுக்கு உன்னைப்பற்றி மரியாதை செய்தோமேயல்லது வேறில்லை. அந்த மடையன் நமக்கு மரியாதைபண்ணத் தக்கவனா? அவனோ கெட்ட நினைப்பும் நடக்கையு முடையவன். குலத்தைக்கெடுக்கப்பிறந்தவன். இல்லாவிட்டால் எவனாகிலும் உண்ட வீட்டுக்கு இரண்டு நினைக்கிறவனுண்டா? தான் நற்குலத்திற் பிறந்தவனாயிருக்க ஆபத்துக்களிலுபகாரிகளாகிய நமக்கு இப்படிப்பட்ட அபகாரஞ்செய்யலாமா? மேலும் இவர்களுக்கும் நமக்கும் பெரியவர்கள் நாள் முதல் சம்பந்தம் நடந்து வருகிறது. இதுவரையில் இவன்போல் யாராகிலும் இப்படிப்பட்ட சாகசகாரியஞ் செய்திருப்பார்களா? இவனிப்படிக்குச் செய்யலாமா? நல்லது; அந்ததுஷ்டன் என்னையும் உன்னையுங்கூட எள்ளளவேனும் மதியாமல் வீட்டுக்குள்ளே புகுந்து, திருடன்போலே பெண்ணை யெடுத்துக்கொண்டு போனதை நாம் எப்படிச்சகித்திருக்கலாம்? அந்தப் பஞ்சைமனிதன் என் மானத்தைப் போக்கினால் நான் பொறுப்பேனா? ஆகையால் இப்பொழுதே போய் இந்தப்பூமியிற் கவுரவவமிசமே யில்லாமற் செய்துவிடுகிறேன். நீ சும்மாயிரு கிருஷ்ணா! அவன்செய்த அக்கிரமத்தைக் கொஞ்சமும் பொறுக்க மாட்டேன். என்றுமிகவும் ஆக்குரோஷத்துடனே பிரளய காலமேகம்போற் கர்ச்சியாநின்ற பலராமனை யாதவர்களெல்லாம் அனுசரித்துத் தாங்களும் அப்படிசெய்வதுதான் நன்றென்று கூடவே இரைந்துபேச, ஸ்ரீ கிருஷ்ணசுவாமியானவர் யாவரையும் பார்த்துச் சொல்லுகிறார்:

ஓ வீரர்களே! சற்றேநில்லுங்கள். எனக்குத் தோன்றினதைச் சொல்லுகிறேன் அதை நீங்கள் ஞாபகமாய்க் கேளுங்கள். ஏனென்றால்-முன்னம் நானாய் ஒன்றுஞ் சொல்லக்கூடாதென் றிருந்தேன். இப்போது அண்ணாவே என்னிஷ்டத்தைச்சொல்லச்சொல்லி நியமித்தா ராகையாற் சொல்லுகிறேன். அதாவது-ஆதியில் அந்தக் கபடசன்னியாசியைக்குறித்து நீங்களெல்லாங் கேட்டபோதே எனக்குச் சந்தேகமாயிருந்தது. அந்தப்புரத்திலே கொண்டுவந்து வைக்கவேண்டாமென்று சொன்னேன். அதை நீங்கள் கேளாமல் உங்களிஷ்டப்படி செய்து போட்டீர்கள். அதனாலே இப்போது இவ்வளவுவருத்தம் நேரிட்டது. போனதுபோயிற்று; இனியென்ன அந்தயோசனை? வேறு யோசனை செய்யவேண்டும். எப்படியும் சுபத்திரை அர்ச்சுனனுக்கு அம்மான்மகள். கலியாணத்துக்கு முறைதான். அவனும் - குலம் - வித்தை—சாமார்த்தியம் - முதலான குணங்களிலே தகுந்தவன்தான். ஆனாலவன் மோசமான காரியஞ் செய்ததற்காக நாம் கோபிக்க வேண்டியதா யிருக்கிறது. ஆகிலும் பதறாமல் எதையுஞ் செய்யவேண்டும். இப்படி அர்ச்சுனன் செய்த காரியத்தினாலே நமதுகுலத்துக்குப் பெருமையே யல்லது சிறுமை எவ்வளவுமில்லை. எப்படியென்றால்-அர்ச்சுனனோ மிகுந்தபலசாலி. அவன் நம்மோடெதிர்த்தே இந்தப் பெண்ணைக் கொண்டுபோகலாம். அப்படியிருக்க ரகசியமாய்க் கொண்டு போனதினாலே நாம் மகாவீரரென்று பெருமையே யாகிறது. அன்றியும்-அவன் நாமெல்லாம் பணத்திலே மதிப்பு வைத்துக் கன்னிகையை விற்கப்புகுபவர்களென்று நினைத்து, அவ்வளவுபொருள் கொடுக்கமாட்டாமல் க்ஷத்திரிய தருமத்திற் கேற்றபடிக்குக் கன்னிகையைப் பலவந்தமாய் எடுத்துக்கொண்டுபோனதாய்க் காணப்படுகிறது. இனி நாமெல்லாஞ் சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தத்துக்குத்தான் போனோம் அவனைச் செயிக்கப்போகிற தில்லை. இப்போ திருக்கிறபடிக்கிருந்தால் அவனுக்குநாணம், நமக்குக்கவுரவம். சண்டைக்குப்போய்த் தோற்று வந்தால் அதைவிடத்தாழ்வு நமக்கு வேறில்லை. போனது போயிற்று. நமது பெண் தகுந்த க்ஷேத்திரத்திற் சேர்ந்ததே யன்றி வேறில்லை. ஆகையால் அமைவுடனே நாமுமந்தக் காரியத்திற்குச் சம்மதித்தவர் போல நடத்தவேண்டியதை நடத்தினால் நல்லது. இதுதான் எனக்குத் தோற்றுகிறயோசனை. இஃது உமக்குயுக்தமாயிருந்தால் கவசங்களைத் தரியுங்கள். கத்தி - கேடயம் - ஈட்டி -

அங்கீகாரஞ்செய்யுங்கள். இல்லாவிட்டால் உங்களிஷ்டப்படி நடவுங்கள். என்று பகவான் பரிவுடன்சொல்லப்பலராமர் முதலாகிய யாதவவீரர்களுக்குக் கிருஷ்ணன் சொல்லுவது யுக்தியோடு கூடியதாயிருக்கிறதென்று தெரிந்தும் பேரிகை யடித்துக்கொண்டு மீளவும் யுத்தத்திற்காகவே,சித்தப்பட்டார்கள்.

இப்படி யிந்த ரணபேரிகை சப்தத்தைக் கேட்டமாத்திரத்தில் அர்ச்சுனன் சுபத்திரையைப் பார்த்து, அடிபெண்ணே! உனது பந்துக்களெல்லாம் யுத்தத்திற்காக வருகிறதுபோற் காண்கின்றது. யுத்தபேரிகையின் சத்தங்கேட்கிறது. ஆகையால் திருப்புரதத்தை.குடியரும் மடையருமாகிய அவர்களை யெல்லாந் தொமிசம் பண்ணிப் போடுகிறேன். மூடர்களாகையால் தங்களுடைய யோக்கியதையையும் எதிரியினுடைய யோக்கியதையையும் அறியாமல், விளக்கைக் கண்ட விட்டிற் பூச்சிகள்போல் ஓடிவருகிறார்கள். என்று கோபத்துடனே பேசியதைக் கேட்ட சுபத்திரை மனங்கலங்கி முகம்வாடித் தன்கணவனுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு, ஓ என்னுயிராகிய நாயகனே! இப்போதென்பேரில் தயைவைத்து என் வார்த்தையின்படி நடக்க வேண்டும். அஃதென்னவென்றால்-யாதவர்களை நீர் சங்கரிக்கப் புறப்படுவீராகில் யாதவர் குலத்துக்கு மிர்த்தியு சுபத்திரையென்று எனக்கு மிகுந்த நிந்தைவந்துவிடும். சந்தேகமில்லை. அப்படி நான்குலத்துக்கெல்லாம் நாசகாரியாகிநிந்தைபெற்று உலகத்தில் பிழைத்திருக்கலாமோ? ஆகையால் மனதைப் பெரிதுபண்ணி இந்திரப்பிரஸ்தப் பட்டணத்திற்கேதிரும்பும். என்றுவேண்டிக்கொள்ளவே அர்ச்சுனன் மிகவும் இதங்கி அவளைக்கட்டிக்கொண்டு முத்தமிட்டு அடி மின்னிடையே! பயப்படாதே: உன் வார்த்தைக்குக் குறுக்கில்லை. இனி உன்னிஷ்டப்படி நமதுபட்டணத்திற்கு இரதத்தை நடத்துகவென்று கட்டளையிட்டான். அக்கால் யாதவர்கள் புறப்பட்டுப் பட்டணத்தைத் தாண்டி வரும்போது மெத்தைகளிலும் - மேடைகளிலும் - பிராகாரங்களிலும் - கோபுரங்களிலும் - சர்ப்பங்கள்போல் விழுந்திருக்கிற அர்ச்சுனனுடைய அம்புகளைக்கண்டு ஆச்சரியமடைந்து, கிருஷ்ணன்சொன்னவார்த்தை மெய்தானென்று எண்ணிக்கொண்டு, இரைவத பருவதத்தின் பக்கத்தில் வந்து அங்கிருக்கிற சேனாதிபதியாகிய விபருது என்கிறவனால் முன்னம் தான் யுத்தஞ்செய்து தோற்றுப்போனதையும் அர்ச்சுனனுடைய பராக்கிரமத்தின் விசேஷத்தையுஞ்சொல்லக் கேள்விப்பட்டு, ஆகிலும் அர்ச்சுனனைச் சன்மானித்தற் பொருட்டேனும் அவனை நாமனைவரும் பின்தொடர வேண்டுமென்று நினைத்து அப்பால் அவன் மிகவுந் தூரமாகச் சென்றானென்று நிராசை செய்து திரும்புகிறவர்கள் சிறிது நிதானித்து, நமது பெண்ணுக்கேனும் மனோதிர்த்தியாகும்படி நமது பந்துவர்க்கச் சேனைகளிற் சிலவையனுப்பவேண்டுமென்று கருதினவர்களாய்த் தகுதியான யாதவகுல வீரர்களையும் சில சேனைகளையுங் கூட்டிச் சில யானைகுதிரைமுதலிய பரிவாரங்களையுங்கொடுத்து நீங்கள் விரைவிற்போய் வழியில் நமது சுபத்திரையைக் கலந்துகொண்டு அஸ்தினாபுரம்போ யிருங்கள் நாங்களும் பின்னால்வந்து சேருகிறோமென்று அனுப்பிவிட்டு மற்றயாவரும் ஒருவாறாசமாதானத்தோடு துவாரகாபுரிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அருச்சுனன் சுபத்திராதேவியோடு இந்திரப்பிரஸ்தம் சேர்தல்.

இப்பால் அர்ச்சுனன் துவாரகையைச் சேர்ந்த உத்தியான வனங்களையும்-கிரிவிருசம் என்கிற பட்டணத்தையும் - அனேக மலைச்செறிவுகளையும் - உச்சயனியென்கிற நகரத்தையும்-பற்பலவிதமான காடுகளையும் - தேனுமதி யென்கிற தீர்த்தத்தையும் - அஸ்வரோகித மென்கிற தடாகத்தையும் - உத்விருத்த மென்கிற மலையையும் -அற்புதமென்கிற பர்வதத்தையுங் கடந்துபோய் புரோச்சிருங்க மென்கிற விடத்தி லிருந்து கவுரவதீ யென்கிற ஆற்றைத்தாண்டி சாளவதேசம்போய் அங்கிருந்து, நிஷததேசத்துக்குச் சென்று அங்கிருக்கிற தேவாபிருதமென்கிற பட்டணத்தைப் பார்த்துக்கொண்டே. தேவாரணியம் போய்ச் சேர்ந்தான். அந்தத் தேவாரணியத்தி லிருக்கும் முனிவர்கள் அர்ச்சுனனைக் கண்டமாத்திரத்தில் மிகவுமுபசாரஞ்செய்ய, அவ்வுபசாரங்களைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டுக் குருதேசம்போய்ச் சேர்ந்து தன்னண்ணன் தம்பிமாராகிய சிங்கங்கள் வாசஞ்செய்யுங் குகைபோன்ற தன்பட்டணத்தைத் தூரத்திற்கண்டு களிப்படைந்தான். பின்பு அந்த இந்திரப்பிரஸ்தபுரிக்குச் சமீபத்தி லிருக்கும் ஓர் இடைச்சேரியி லிறங்கிப் போஜன முதலானவைகளைச் செய்து சுபத்திரையை நோக்கி, அடி யதுகுலத்து மின்னரசே! இனி நாம் சேரவேண்டியது இந்திரப்பிரஸ்த புரிதான். ஆகையால் நான்சொல்லு மொருவார்த்தையை நீ யங்கீகரிக்கவேண்டும். அதாவது - நீ இடைச்சிபோல வேடம் போட்டுக்கொண்டு நமது நகரத்திற்குச் செல்லவேண்டும். ஏனென்றால்-என்னுடன்கூட நீ மெய்யானரூபத்துடன் வருவாயாகில், ஒருவேளை திரௌபதி மனநொந்து ஏதாகிலுங் கடோரமாகிய வார்த்தைசொல்லுவாள். நீ தனியே வேறுரூபத்துடன் போய் அவளைப் பணிவாயே யாகில், நல்லவார்த்தை சொல்லுவாள். அவள் முதலிற்சொன்னவார்த்தைக்கு வேறாக நடக்கமாட்டாள். ஆனதால் நீ மாறுவேஷத்துடனே வரவேண்டுமென்றான். அச்சொல்லைக்கேட்ட சுபத்திரை அருச்சுனனைநோக்கி, என்கணவனே! உமது உத்தரவுக்குத் தடங்கல் செய்வதுண்டோ? எப்படி நியமித்தால் அப்படி நடக்கிறேனென்றனள். அர்ச்சுனன்

மிகவுஞ் சந்தோஷப் பட்டு அவ்விடைச்சேரியி லிருக்கும் இடையனைக் கூப்பிட்டு, இச்சுபத்திரையோடு இடைச்சிகள் யாவரும் நமது நகரத்திற்குச் செல்ல வேண்டுமென்று ஆக்கியாபித்தான். இடையரெல்லாம் ஒரு நிமிஷத்துக்குள்ளே தங்கள் தங்கள் ஸ்திரீகளைச் சகல அலங்காரங்களோடுஞ் சித்தப்படுத்தினார்கள்.

அப்பால் அர்ச்சுனன் தன்மனைவிக்குத் தானே ஆய்ச்சிவேஷம் போட்டு, முன்னிருந்த அவ்வுருவத்திலும் இவ்வுருவ மிகவழகுடன் விலாசம் பொருந்தி விளங்குவதைக் கண்டு அவளைப் பலமுறை கட்டியணைத்து முத்தமிட்டு, ஆய்ச்சிய ரெல்லாருடனேயுங் கூட்டி அனுப்பிவிட்டான். அவளும் அப்படியே இந்திரப்பிரஸ்தம்போய் அரண்மனைக்குட்சென்று தனது அத்தையாகிய குந்திதேவியை நமஸ்காரஞ் செய்து அவளாலே ஆசீர்வதிக்கப்பட்டு, பின்பு திரௌபதியின் பாதங்களில் தெண்டனிட்டு நானுனது பணிவிடை செய்பவளென்றாள். அந்தப் பாஞ்சாலி யாதவகன்னியினுடைய ரூபத்தைக்கண்டு வியப்படைந்து மிகவுஞ் சந்தோஷ நினைப்புடனே அவளைப்பார்த்து, அடி பெண்ணே! நீ உனக்குத் தகுந்த உத்தம புருஷனோடு கூடி நன்மைகளைப் பெற்றுச் சக்களத்தியின் விரோதமின்றி வாழக்கடவையென்று ஆசீர்வாதஞ்செய்தாள். அதைக் கேட்ட சுபத்திரையானவள் நீர் சொன்னவாக்கு சரியாயிருக்கவேண்டுமென்றுசொல்லினள். அதுகேட்ட திரௌபதி அப்படியே யாகட்டுமென்று அவளை வாரியெடுத்துத் தன்மடியின்மீதி லுட்காரவைத்து உற்றுப்பார்த்து இவள் சுபத்திரையென்றறிந்து, மனதிற் கோபமில்லாமல் ஆலிங்கனஞ்செய்து மேகவண்ணக் கண்ணனை நினைத்து நல்லகாரியஞ்செய்தார் ஸ்ரீ கிருஷ்ணன் என்று மிகவுங்கொண்டாடிக்கொண்டிருந்தாள். இப்படியிருக்க-அர்ச்சுனனானவன் அந்தயிடைச்சேரி விட்டுப் புறப்பட்டுப் பட்டணம்பிரவேசிக்கும்போது, சுபத்திராதேவிக்குத் துணையாக முன்னம்யாதவத்தலைவர்களா லனுப்பப்பட்ட வீரர்களுஞ் சேனைகளுங் கடல்போலிரைந்துகொண்டு பின்னோடே வந்துவிட்டன. அர்ச்சுனன் அந்தச் சேனைகளோடுகூடிப் பட்டணத்திற் பிரவேசிக்கவும் பட்டணத்திலிருப்போரெல்லாம் அர்ச்சுனனைக்கண்டு நெடுநாளானபடியினாலே சந்தோஷப்பட அர்ச்சுன னதுகண்டு களித்துத் தனது பட்டணத்தைப் பார்த்துக் கொண்டே அரண்மனைவாசலில் தேர்விட்டிறங்கிப் புரோகிதராகிய தவுமியரையும் - தமயராகிய தருமபுத்திரர் வீமசேனனையும்- தாயாகிய குந்தியையு நமஸ்காரஞ்செய்து, தம்பிமார்களாகிய நகுலசகாதேவர்களாலே நமஸ்கரிக்கப்பட்டு அவர்களுக்குப்பல ஆசிகள்வழங்கி,பின்புதன்மனைவியாகிய சுபத்திரையையும் அவளுக்காகவந்த யானை-குதிரை-ஒட்டை-முதலானவைகளையு மஹாராஜாவாகிய தன் அண்ணனிடத்தில் ஒப்பிவித்தான். அந்த யாதவ சேனைவீரர்களும் மஹாராஜாவுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச்செய்ய, அவர் இவர்களுக்குத்தக்கபடி சன்மானங்கள்செய்து சபையிலுட்காரவைத்துத் தன் தம்பிமார்களுடனே தானுமிருந்து, சுபத்திரையைத் தங்கள் மனைக்குவந்த இலட்சுமிதேவியேயென்று சந்தோஷித்து அந்தப் புரத்திற் கனுப்பிவிட்டார். இவ்வாறாகத் தருமபுத்திரர் முதலானவர்க்கும்-குந்தி திரௌபதி முதலானவர்க்கும்-சுபத்திரையொரு கண்போல் மிகவு மிஷ்டமா யிருந்தாள்.

சுபத்திரைக்குக்கிருஷ்ணன் வரிசை கொண்டுவருதல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மஹாராஜனே! இவ்வாறாக அர்ச்சுனன் சுபத்திரையை யெடுத்துக்கொண்டு யாதவ சேனைகளை ஜயித்துப் போட்டுத் தன்னகரம் வந்து சேர முன்னர் பலராமர் கிருஷ்ணன் முதலானவர்கள் தீவிலிருந்து துவாரகைக்குவந்து இச்செய்தி கேட்டு மிகக் கோபமடைந்து உடனே அருச்சுனன் பேரில் தண்டெடுக்க யெத்தினப்பட்டுக் கிருஷ்ணனுடைய யோசனையினாலேயும்- அவரால் அர்ச்சுனனுடையபராக்கிரமத்தின்பெருமையைக் கேட்டதினாலேயும்-அப்பிரயத்தனத்தை விட்டுச்சும்மாயிருந்தார்களன்றோ? இப்படியிருக்க துவாரகாபுரியிற்சகலமான பேரும் அர்ச்சுனன் சுபத்திரையைக்கொண்டுபோனதற்குக் கிருஷ்ணன் உளவுயில்லாவிட்டால் இப்படி நடக்காது என்றும் அக்கிருஷ்ணன் தன் தங்கையை அர்ச்சுனனுக்குக் கொடுக்கவேண்டுமென்று இப்படிப்பட்ட காரியஞ் செய்வித்தாரென்றும் சொல்லிக்கொள்வதானார்கள். அது கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் யாவரும் இப்படி சொல்லும் போது நானில்லை யென்றால் ஒக்குமாவென்று சமாதானஞ் சொல்லித் தமது தமயனாரிடத்திற்கு வந்து, அண்ணா! அருச்சுனன் செய்துபோன காரியத்திற்கு யாவரும் என்பேரில் அபவாதஞ்சொல்லுகிறார்கள். சொல்லட்டும்: இனியார்தான்செய்யவேண்டுவதென்ன? காரிய மிஞ்சிப்போயிற்று. ஆதலால் நான் பாண்டவர்களுடைய பட்டணத்திற்குப் போய்ச் சுபத்திரையைக்குறித்து நடப்பிக்க வேண்டியதுகளை நடப்பித்துவருகிறேனென்று விடைகேட்டனர். அதற்கு அவர்-தம்பீ கிருஷ்ணா! எனக்கும் அதுகடமையாகையால் நானும் வருகிறேன் வா போவோமென்றனர். பின்னர் இருவரும் உக்கிரசேனன் முதலானபேர்களுடனே இச்சேதி சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு நால்வகைச் சேனைகளையும் ஆயத்தப்படுத்திப் பல ஆபரண முதலானவைகளை யெடுத்துக்கெண்டு, சர்வவாத்தியங்களும் முழங்கப் புறப்பட்டார்கள். அப்போது சில அடையாளங்களினாலேயும், சுபத்திரையின் தோழிகள் சொன்ன ஜாடைகளினாலேயும், இந்திரன் முதலானவர்கள் வந்து அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் விவாகத்தை நடப்பித்தார்களென்று தெரிந்த யாதவர்க ளெல்லாம் மிகவுஞ் சந்தோஷமடைந்தார்கள்.

20. (REGISTERED COPY-RIGHT.)

(ஆதிபர்வம்-௨௨௧-வது-பக்கம்.)

இப்படியாக மகாசந்தோஷத்துடனே அக்ரூரன்-கிருதவர்ம்மா - உத்தவன் - சத்யகன் - சாத்தியகி - பிரத்யும்னன் - சாம்பன் - நிசிதன்-சங்கு-சாருதேஷணன் - சுதேஷணன் - சல்லி - விபுருது - காரணன் - கதன்-முதலாகிய யாதவர்களெல்லாம் பலராமகிருஷ்ணர்களுடனே மகாசேனைகளைக் கூட்டிக்கொண்டு வெகுசீக்கிரத்தில் இந்திரப்பிரஸ்தத்திற்கு வந்தார்கள். இவ்வண்ணமாக இவர்கள் வருகிற சேதிகேட்ட தருமபுத்திரமகாராஜன் மிகவும் பரபரப்பாய்ப் புரோகிதர் பிராமணர் முதலாகிய பேர்களுடனேகிருஷ்ணனை யெதிர்கொள்ள நகுலசகாதேவர்களை யனுப்பித் தான் வீமசேனனுடனே பலதேவரையெதிர்கொண்டார். இவ்வாறாகப் பாண்டவர்கள் எதிர்கொள்ள ஒருவரை யொருவர் கண்டுமகிழ்ந்து க்ஷேமங்களை விசாரித்துக் கொண்டு மூத்தவர்களைச் தண்டனிட்டு இளையவர்களை ஆசீர்வதித்து உடனே பட்டணத்திற்குப்போய் அரண்மனையைச் சேர்ந்தார்கள். பின்பு தருமபுத்திரர் சகலயாதவர்களுக்கும் அவரவர்களுக்குத் தகுந்தபடி உபசாரஞ்செய்து விருந்து நடாத்தினர். பலராம கிருஷ்ணர்கள் வந்ததினாலே குந்திக்கும் திரௌபதிக்கும் உண்டாகிய சந்தோஷத்திற்கு அளவில்லை. பாண்டவர்களுக்கும் இவ்விருவரைக் கண்டதினாற் பேரானந்தமடைந் திருந்தார்கள். மற்றயாதவர்கள் பாண்டவர்களால் மரியாதை செய்யப்பட்டு மகளாகிய சுபத்திரையைக்கண்டு சந்தோஷப்பட்டு வாழ்த்தினார்கள். ஸ்ரீகிருஷ்ணன் தன் தங்கைக்கு நவரத்தினங்களிழைத்த சகல ஆபரணங்களும், விசித்திரமாகிய வஸ்திரங்களும், அனேக பொற்பாத்திரங்களும். அனேக ரத்னபாத்திரங்களும், குதிரைகள்-யானைகள் - ஒட்டகங்கள் - தேர்கள் - பசுமாடுகள் — பல்லக்குகள் - கட்டில்கள் - பெட்டிகள் - முதலானவைகளும் ஸ்ரீதனங் கொடுத்தார். மருமகனாகிய அர்ச்சுனனுக்கும் பலபூஷணங்கள் - ஆசனங்கள் - வேலைக்காரர் முதலான உளுப்பைகளைக்கொடுத்தார். பலராமர் விசேஷமாக அர்ச்சுனனுக்கு ஒரு பாதபீடங்கொடுத்தார். இப்படியெல்லாம் வரிசைகொடுத்துத் தங்கையைக் கட்டியணைத்து முத்தமிட்டுத் திரௌபதியினிடத்திற்கு அவளையழைத்துக்கொண்டுபோய், அம்மாபாஞ்சாலி! இவள் உன்னுடைய அடைக்கலம். நீ தான் இவளைக் காப்பாற்றவேண்டும். என்று சொல்லிக் குந்தியையுங் கண்டுபேசி, இப்படி சிலகாலம் அவ்விடத்திலே பாண்டவாளோடு கூட மகிழ்ந்துகொண்டு மிகவினோதமாயிருந்தார்கள். பின்னர் சகல யாதவர்களும் பாண்டவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்களூருக்குப் புறப்படுமளவில், அர்ச்சுனனும் சுபத்திரை முதலானபேர்களும் கிருஷ்ணனை இருக்கச்சொல்லிப் பலவந்தம்பண்ணினார்கள். கிருஷ்ணனும் அப்படியே யிருக்க மனதாயிருந்த படியினாலே யாதவர்கள் அவரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு துவாரகாபுரிக்குப்போய்ச் சேர்ந்தார்கள். கிருஷ்ணன் அர்ச்சுனனுடன்கூட ஆற்றின்கரைய[illegible] தோறும் போய் விளையாடிக்கொண்டு வேடிக்கை[illegible] யிருந்துவருவார்.

அபிமன்யு உற்பவம்.

இவ்வாறிருக்கிற நாளிலே அந்த அர்ச்சுனனானவன் சுபத்திரையோடு உடலுடனுயிர்போலவும் - மலருடன்வாசனைபோலவும் - மணியுடனொளிபோலவும் - கண்ணுடன் பார்வைபோலவும் - இரவுபக லறுபது நாழிகையும் பிரியாமற் சரசசல்லாப விநோத காம போகமென்கிற அமுதக்கடலி லாழ்ந்து, பேரின்பமும் இதற்குநிகராகாதென்னும்படி பலவித சிங்காரவிநோதசுகங்களை யனுபவித்துக்கொண்டு, அவள் ஒன்றைச்சொல்வதற்குத் தடையேயன்றிச் சொல்வதன் முன்னே அவளுக்கு இஷ்டமான படிக்கெல்லாம் நடந்துகொண்டிருந்தான். இப்படியிருக்கு நாளிற் சுபத்திரை கருத்தரித்தாள். அப்போது அவள் முன்னையழகிலும் அதிகவொளிவடைந்துநிற்க, அர்ச்சுனனும் கிருஷ்ணனும் மிகவுஞ் சந்தோஷமடைந் திருந்தார்கள். இங்ஙனம் பத்துமாதங்களு நிறைந்தபின்பு இந்திராணி ஜயந்தனென்கிறவனைப் பெற்றதுபோல் மகாபல பராக்கிரமசாலியும் மிகப்பிரகாசமும் பொருந்திய ஓர் குழந்தையைப் பெற்றாள். அர்ச்சுனனானவன் தன்னிலுமேலான ரூப லக்ஷணமும் - பல லக்ஷணமும் - குணலக்ஷணமும் வாய்ந்த புத்திரன் பிறந்ததைக்கண்டு, மிகவும் சந்தோஷத்தினாலேசாதகருமஞ்செய்வித்து, பதினாயிரம் கோதானம் - பூதானம் - வஸ்திரதானம் - சுவர்னதான முதலாகிய பற்பலதானங்களும் வழங்கினான். அப்பாற் பனிரண்டாவதுநாளிற் புரோகிதர் முதலாகிய அனேகம் பெரியோர்கள்வந்து அக்குழந்தையைப் பார்த்து, இவனுக்கு அபிமன்னியுவென்று பெயரிடவேண்டும். ஏனெனில்? அபி - என்றால், இவன் ஒன்றுக்கும் பயப்படமாட்டான். மன்னியு - என்றால், சத்துருக்கள் விஷயத்தில் மகா கோபம் பொருந்தியவன். ஆகையால் - இவனுக்கிப்பெயரே சரியென்று நக்ஷத்திரத்திற் கிணங்க அப்பெயரிட்டார்கள். அப்பாற் பாண்டவர்கள் அக்குழந்தைக்குக் காப்பிட்டுத் தொட்டிலிட்டு மிகவு மன்புடனே வளர்க்க, அவன்சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல் தினந்தோறும் விசேஷமாக வளர்ந்துவந்தான். ஐந்தாம் வயது வந்தவுடனே வித்தியாப்பியாசஞ் செய்யப்பட்டுப் பனிரண்டுவய தானவுடனே உபநயனமும் செய்யப்பட்டு, ஆசிரியர்களால் வேத சாஸ்திரங்களையும் - அர்ச்சுனனால் வில்வித்தையையும் -சாங்கமாகக்கற்று எல்லாரிலும் விசேஷமாகப் பாண்டவர்களும் யாதவர்களுமேயன்றி மற்றச் சகலகலா பண்டிதர்களும் பரிசனங்களும் புகழும்படியாகக் கல்வியிலும் - ரூபத்திலும்-குணங்களிலும் - சாமர்த்தியத்திலும்-உயர்ந்திருந்தான். இந்த அபிமன்னியு பிறந்தசெய்தியைத் துவாரகாபுரியிலிருக்கிற யாதவவீரர்க ளனைவருங்கேட்டு

...ற்று வந்து, அக்குழந்தைக்குஞ் சுபத்தி...ஞ் செய்யவேண்டிய வரிசைகளையெல்லாஞ் செ...து, பாண்டவர்களாற் பலவெகுமான சன்மானங்களைப்பெற்றுத் தங்கள்நகரம்போய்ச் சேர்ந்தார்கள். ஓ ஜெனமேஜெயமகாராஜனே! இப்பால் அபிமன்னியு சிறுவனாயிருக்குங்காலத்திலேயே நடந்த சரித்திரங்களையினிச்சொல்லுகிறோம், அந்தவினோதங்களையுங்கேளுமென்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம் முற்றிற்று.

பதினான்காவது,

காண்டவதகனச் சருக்கம்.

கண்ணன் துதி.

ஞான மாகிய பரம்பர வமிழ்தமாய் நவிரறு மயக்காகி
வான மாயுடன் வாயுவாய்த் தேயுவாய் வனமுமாய் மண்ணாகித்
தான மாமறை முறைமையிற் பற்பல சராசரங் களுமாகி
யேன மாயிவை யனைத்தையு மருப்பினா லேந்தினா னெனையாண்டோன்.

இப்படியாகப் பாண்டவர்கள் பலவாறாகச் சந்தான சம்பத்தை யடைந்து திரிதராட்டிர மஹாராஜனுடைய கட்டளைப்படிக்கும், வீஷ்மருடைய கட்டளைப்படிக்கும்- தருமநீதிகளைத்தவறாவிநடக்கும் அரசர்களைத்தாங்கியும் வழுவி நடக்கும் அரசர்களைத் தண்டித்தும் இப்படியாவரும் நல்வழி நடக்கும்படி செய்து பெரும்புகழ்பெற்று வாழ்ந்துகொண்டிருக்கு நாளில், இளவேனிலென்று சொல்லப்பட்ட வசந்த காலமானதுண்டாகி சோலைகளிலிருக்கு மரங்களெல்லாந் தளிர்ப்பதும் - பூப்பதும் - காய்ப்பதும் - பழுப்பதுமாகத் தழைந்துநிற்கக் குயில்களெல்லாம் சந்தோஷ மடைந்து கூவ வண்டுகளெல்லா மதுவுண்டு களித்துப்பாடத் தென்றற் காற்றானது முகிழ்களைமலர்த்திச் சோலையையசைத்து மெள்ளவீசத் தடாகங்க ளெல்லாஞ் செந்தாமரை-வெண்டாமரை—செங்கழுநீர் - கருநெய்தல் முதலாகிய மலர்களால் அலங்காரமடைய அவற்றிற் சக்கிரவாகம் - சாரசம் - அன்ன முதலான நீர்ப்பறவைகள் சூழ்ந்து விளங்கிக்கொண்டிருக்க அதுகண்ட அர்ச்சுனனானவன்மிகவுஞ்சந்தோஷமடைந்து ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்து, ஓ கிருஷ்ணா ! இந்தவசந்தகாலத்தில் நாமும் நம்முடைய பிராணநாயகிகளுங் காடுகளிற்போய் விளையாடிச் சலக்கிரீடைசெய்து வேடிக்கையாய்ச் சாயங்காலம் மறுபடி வந்துசேருவோம். இது உமது மனதிற்கு இஷ்டமா யிருந்தாற் போவோம் வாருமென்றான். அதுகேட்ட ஸ்ரீகிருஷ்ணனும்- அர்ச்சுனா ! எனக்கும் அப்படிதான் ஆசையாயிருக்கிறது. அதை நான் உன்னோடு சொல்லுகிறதற்கு இருந்தேன். முன்னுதாய் நீயே சொல்லிப்போட்டாய். மிகவுஞ் சந்தோஷமாயிற்று நீவா போவோமென்றுசொன்னார்.

கிருஷ்ணார்ச்சுனரை அக்கினிதேவன்கண்டு ஆகாரங்கேட்குதல்.

இவ்வாறு கிருஷ்ணமூர்த்தி யானவர் சம்மதச் சொல் கூறியமாத்திரத்தில் அருச்சுனன் பிரயாணமாகிர, இவ்விருவரும் தருமபுத்திரரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்கள்நாயகிகளுடனே வாகனங்களிலேறி வேண்டிய பரிவாரத்துடனே யமுனாநதிக் கரைக்கு வந்து, அங்கங்கேமணற்குன்றுகளும் - அவைகளிற்பட்சிகள் ஒன்றோடொன்றுமருவிநின்று விளையாடுவதும்- சலங்களிற் றாமரைகளில் வண்டுகள்மொய்த்திருப்பதும் - ஆகிய யிவைமுதலான வேடிக்கைகளையெய்லாம் பார்த்துக் கொண்டே காண்டவவன மென்கிற ஒரு பெரிய வனத்தினுள்ளே புகுந்து, அதிற் சிவிங்கிகள்- புலிகள் - கரடிகள் - சிங்கங்கள் - யானைகள் - பன்றிகள் - முதலாகிய துஷ்டமிருகங்களும் அசுரர்- இராக்கதர்-முதலாகிய துஷ்டஜனங்களும் பாம்பு முதலாகிய துஷ்டஜெந்துக்களு நிறைந்து மிகவுங் கொடுமை பொருந்திபயங்கரமாகிய ஓரிடத்தைகண்டு, கண்ணன் இவ்வனத்தை நாம் நாசஞ்செய்யவேண்டுமென்று மனதில்நினைத்தார். இப்படிநினைத்த கிருஷ்ணன் அவ்விடத்தை அர்ச்சுனனுக்குங் காண்பித்து, பின்பு இருவரும் ஸ்திரீகளோடுகூட அவ்வனத்தில் மற்றோரிடஞ்சென்று அவ்விடத்துச் சிங்காரங்களைப்பார்த்துவிளையாட ஆரம்பித்தார்கள். அந்த ஸ்திரீகளு மகா உல்லாசத்துடனே புஷ்பங்கள் பறிப்பதும், ஒருத்திமேலொருத்தி எறிகிறதும், நாயகர்மேல் வீசுகிறதும், அவர்களைப் புஷ்பச்செண்டுகளால் அடிக்கிறதுமாக நெடுநேரம் விளையாடிப் பின்பு பலவிதக் கனிகள் கிழங்குகள் முதலானவைகளைத் தின்று மதுபானம் செய்து மதமடைந்து, ஒருவரை யொருவர்அடிக்கிறதும், ஒருவர்மே லொருவர் விழ்கிறதும்,பாடுகிறதும், ஆடுகிறதும், சிரிக்கிறதும், பரிகாசஞ் செய்கிறதும், அழுகிறதும், குதிக்கிறதுமாகத் தடாகங்களிலிறங்கி ஜலக்கிரீடைசெய்து கரையேறி, அவரவர்க ளிஷ்டப்படி யமுனாநதியின் கரைகளிலிருக்கும் வனங்களிற்போய்ப் படுத்துக்கொண்டார்கள். கிருஷ்ணனும் அர்ச்சுனனும் தனியே தூரத்தில் யமுனையின் கரையில் ஓரிடத்திலேபோய்ப் படுத்துக்கொண்டார்கள்.

(REGISTERED COPY RIGHT.)

(ஆதிபர்வம்-௨௨௪-வது-பக்கம்.)

இப்படி யிருக்குந்தருணத்திலே உருக்கின தங்கம்போன்ற நெடியதேகமும், பொன்னிறத்த கண்களும், செம்பொன் னிறமுள்ள தாடி மீசைளோடு சடையு முடையவனாகி கறுத்த வஸ்திரமுடுத்திக் கோடிசூரியப் பிரகாசமாய் விளங்காநின்ற ஒருபிராமணன் இந்தக் கிருஷ்ணார்ச்சுனர்க ளிருக்குமிடத்திற்கு வந்தான். அவன்வரவைக்கண்ட அவ்விருவரும் பயபக்தியுடனே எழுந்து பணிந்து, சுவாமி! நீரார்? இவண்வந்தகாரிய மென்ன சொல்லவேண்டு மென்றார்கள். அந்தப்பிராமணனும் - ஓய்மகாராஜசிங்கங்களே! நானொரு பிராமணன், எனக்கு அதிக பசி. அதை யாற்றும்படியாகிய சாப்பாடுபோட யாருக்குஞ் சக்தியில்லை. நீங்களிருவரும் மகானுபாவர்களாகையால் எனக்கு வேண்டியபோஜனம் நீங்கள் கொடுக்க மாட்டுவீர்க ளென்று உங்களிடத்திற்கு யாசிக்க வந்தேனென்று சொல்லினன். அதுகேட்ட அர்ச்சுனன்-அப்படியா? சுவாமி! மகா சந்தோஷமாயிற்று. என்னபோஜனம் உமக்குவேண்டுமோ அதனைத் தடையின்றித் தருகிறேன் தயைசெய்து சொல்லுமென்றுகேட்டான். அந்தப்பிராமணனவன் - ஓய் இராஜர்களே! இனி நான் மெய்யாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்: நான் அக்கினிபகவான். அனேக துஷ்டஜெந்துக்கள் வாசஞ்செய்கிற இந்தக் காண்டாவனத்தை நான்புசிக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் அது இந்திரனுடைய ஆதீனத்தி லிருக்கிறது. அதில் தட்சகன் காவல் காத்துக்கொண்டிருக்கிறான். அதினாலே நான் அதின் அருகிற்போகக் கூடுகிறதில்லை. ஒருவேளை எப்படியாகிலும் அதில் நான் பிரவேசித்தால் இந்திரன் மேகங்களை மழை பொழியும்படி செய்து என்னைத் தூரத்திவிடுகிறான். ஆதலால் அதில் நெடுநாளாய் நான் செய்யுமுயர்ச்சி வீணாப் போகிறது. நீங்கள் மகாபக பராக்கிரமசாலிகள். அந்த இந்திரன் முதலானவர்லளுடைய சாமர்த்தியத்தைத் தடுத்து அவ்வனத்தை எனக்கு ஆகாரமாக்குவீர்கள். நீங்கள்சொன்னவாக்கு தவறாமல் இவ்வனத்தைக் கொடுத்து என்பசியாற்ற வேண்டுமென்று அக்கினிபகவான் சொல்லினான்.

அக்கினிபகவான் கிருஷ்ணார்ச்சுனர்களுக்குத் தேர்-குதிரை-வில் அம்புப்புட்டில் முதலியவை கொடுத்தல்.

அதுகேட்ட அர்ச்சுனனானவன் ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து ஸ்ரீ கிருஷ்ணன் முகத்தைப் பார்க்க, ஸ்ரீகிருஷ்ணனுங் கண்காட்ட, அதுகண்ட அர்ச்சுனன் அந்த அக்கினி தேவனைப் பார்த்துக் கைகூப்பிக்கொண்டு, சுவாமி அக்கினிதேவனே! உமது இஷ்டப்படியே இவ்வனத்தை நீர் பட்சிக்கும்படி செய்வேன். இந்த கிருஷ்ணனும் நானும் சேர்ந்தால் எந்தக் காரியந்தான் முடியாது? ஆனால் இப்போது நாங்கள் ஆயுதமும் இரதமும் இல்லாதவர்களா யிருக்கிறோம். இந்திரன் ஆயுத முதலானவைகளோடு வந்தெதிர்த்தால் நாங்கள் ஆயுதங்களில்லாமல் எப்படி யுத்தம் பண்ணலாம். ஆகையாலே நீர் கிருபைசெய்து ஆயுதமும் இரதமும் கொடுக்கவேண்டுமென்றுசொன்னான். அதுகேட்ட அக்கினிதேவன் வருணனை நினைத்தான். நினைத்த மாத்திரத்திலே வருணனும் அக்கினியிருக்குமிடத்திற்கு வந்தான். அப்போது அக்கினி வருணனைப் பார்த்து, ஓவருணா! முன்னே சோமதேவனாலே உனக்குக் கொடுக்கப்பட்ட வில் - தூணி - தேர் - குதிரை-சக்கரம்-கெதை - முதலானவைகளைக்கொண்டு வந்து இந்த மகானுபாவ ரிருவருக்கும் கொடு. இவர்களாலே நமக்கு வெகுகாரியங்க ளாகவேண்டி யிருக்கின்றனவென்றுசொல்லினன். அதுகேட்ட வருணன் அப்படியே தருகிறேனென்று சொல்லி மகாசந்தோஷத்தோடு முன்னம் வில்லையெடுத்துக் கொடுத்தான்.

அந்த வில்லானது தேவர்களும் அசுரர்களும் ஒன்றாய் நெருங்கினாலும் வெல்லக்கூடததாகியும், மிகவும் ஆச்சரியப் படத்தக்க பிரமாணமுடைத்தாகியும், கையில் ஏந்து வோருக்குத் தேஜசையும் புகழையுங் கொடுக்கத் தக்தாகியும், இது ஒன்றானாலும் பதினாயிரம் போன்றதாகியும் விளங்கிற்று. பின்பு இரண்டு அம்புப்புட்டில்களைக் கொடுத்தான். அவை எத்தனை நாள் எத்தனைவகை அம்புக்களை யெடுத்தாலும் மறுபடி நிறைந்தேயிருக்கும். ஒருதிவ்விய இரதங்கொடுத்தான். அதானது உருக்கிவிட்ட வெள்ளிபோன்ற நிறத்தையுடையதாகி, தேவமணி - கண்டாபரணம்-முதலான சகலலட்சணங்க ளுடையவைகளாகியும் வாயு-கருடன்-மனது - இவைகளைக் காட்டிலும் அதிகவேகங்க ளுடையவைகளாகியுமிராநின்ற நான்கு குதிரைகள் கட்டி, சிங்கத்தின் வால்போன்ற வாலையுடைய வானர சிங்கமானது சத்துருக்க ளெல்லாம் பயந்தோடும்படி நுனியில் விளங்காநின்ற பொன்னாலாகிய தடியிற்கட்டிய விசித்திரக் கொடியோடுங் கூடி, பிரளய கால மேகத்தின் முழக்கம்போற் கிடுகிடென்று பூமியதிரும்படி யொலிக்கத் தக்கதுமாய் அனேக சாமக்கிரியைகளை வாய்ந்து யாவராலும் வெல்லக்கூடாத சிறப்படைந்து விளங்கிற்று. அந்தரதத்தை முற்காலத்திற் பவனனென்கிற பிரசாபதியானவர் உண்டாக்கிச் சோமனென்கிற தேவனுக்குக் கொடுக்க, அதின் பேரில் அச்சோமனேறிக்கொண்டு அசுரரையெல்லாம் ஜெயித்தான். அப்படிப்பட்ட திவ்விய ரதத்தை அர்ச்சுனன் பார்த்துப் பிரதட்சணஞ் செய்து, அக்கினி தேவனையும் வருணதேவனையும் நமஸ்காரஞ்செய்து, அதிலேறிக் கவசகுண்டலாதிகளையெல்லாந்தரித்துக் கையிற்காண்டீபமென்கிற அவ்வில்லைப்பிடித்துக்கோடிசூரியப்பிரகாசமாய்விளங்கினான். பின்பு அக்கினிபகவான் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு ஒரு சக்கராயுதங் கொ

டுத்தான். அந்தச்சக்கரமானது சுற்றிலும் ஆயிரம் அரங்களோடுகூடி ஆயிரங் கிரணங்களோடுதிக்கும் சூரியன்போற் பார்ப்பதற்குங் கூடாத மஹா பிரகாசம் பொருந்தி, அனேககோடி அண்டங்கள் ஒன்ருய்த் திரண்டு வந்தாலும் பொடிப்பொடியாகக் குவிக்கும்படியான சக்தியுள்ளதாய் ஸ்ரீ கிருஷ்ணனுக்கே இது உரித்தென்று சொல்லும்படி யிருந்தது. அன்றியும் அவருக்கு ஒரு கெதாயுதமுங் கொடுத்தான். அது சுவர்ணமயமாய், மேருபருவதத்திற்கு நிகரானதாய், அசுரருடைய பிராண வாயுக்களைப் புசிக்கும் மஹாசர்ப்பமென்று சொல்லத்தக்கதாய் விளங்கிற்று. இப்படிக்கு வந்த இவ்வாயுதங்க ளெல்லாம் முன்னம் பிர்ம்மாவினுல் நிருமிக்கப்பட்டன. அன்றியும் அக்கினியானவன் இவ்விருவருக்கும் திவ்வியமாகிய ஆக்கினேயாஸ்திரங் கொடுத்தான். உடனே கிருஷ்ணனும் அந்த ரதத்தின்மேலேறி மகாதேஜசுடைய கவசகுண்டலாதிகள் தரித்து அர்ச்சுனனுடன் கூட விளங்கினுர்.

இப்படிக்குச் சகல உபகரணங்களையும் பெற்று விளங்காநின்ற கிருஷ்ணுர்சுனர்களை அக்கினி தேவன் பார்த்து, ஓய் மகானுபாவர்களே ! இனி இவ்வுலகத்தில் உங்களுக்கு யார் சமானமாவார்கள்? கிருஷ்ணனுடைய ஆயுதத்தைப் பிரயோகிக்கத்தக்க இலக்கே கிடையாது. அர்ச்சுனனுடைய அம்புக்கு நிற்கும்படியான வீரனுங் கிடையான். ஆகையால் நீங்களிருவரும் இனி எனக்குப் புசிக்கச் செலவுகொடுக்கவேண்டுமென்றுசொல்லினன். அம்மாத்திரத்தில் அர்ச்சுனன் மிகவுஞ் சந்தோஷத்துடனே கையிற் காண்டீபமென்னும் அந்த வில்லை யெடுத்து நாண்பூட்டி நாணேசை கொண்டுநிற்க, அந்த நாணேசை கேட்டமாத்திரத்திலே அந்தக் காண்டாவனத்தி லிருக்கும் அசுரர் இராக்கதர் முதலாகிய பேர்கள் இதென்ன பிரளயகாலம் போ லிருக்கிறதென்று நடுநடுங்கிப் போனுர்கள். இவ்வாருக அருச்சுனன் ஆயுதசன்னகம் பண்ணிக்கொண்டு அக்கினியைப்பார்த்து, ஓசெஞ்சுடர்த்தேவனே! இனி யெங்களுக்குக் கூடாதகாரிய மொன்றுமில்லை. இந்திரன் அல்லது இன்னும் யார்தாஞகட்டுந் தெரியாமையாலே எங்களோடு யுத்தத்திற்கு வருவார்களேயாகில், அதுதான் அவர்களுக்கு முடிவுகால மென்று நினையும். அன்றியும் தேவர்களுடைய தேகங்களைக் கவசகுண்டலங்க ளற்று மூண்டங்களாய் அறுந்து வீழ்ந்திருக்கப் பார்க்குங் காலமாகும், என்றுசொல்லி ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகத்தை நோக்கிக் குறிப்பறிந்து மீட்டும் அக்கினி பகவானைப் பார்த்து, ஓ வன்னித்தேவே! இனி நீர் வனத்திற் பிரவேசித்து உமது அலுவல்களையெல்லாந்தீரப்பாருமென்று சொல்லினுன்.

அந்தத் தேவனும் வெகு ஆனந்த மடைந்து இவ்விருவரிடத்திலும் விடைபெற்று அவ்வுருவைவிட்டுத் தேஜோமயமாய் அண்டக் கூடாத உட்டணமுள்ள ரூபமடைந்து பாய்ந்து அவ்வனத்திற் பிரவேசித்து, க்ஷணகாலத்திலே அவ்வனமுழுவதுஞ்சூழ்ந்துகொண்டு படபடா வென்று மூங்கில்கள் முதலாகிய மரங்கள் வெடிக்கவும், அனேக மரங்கள் பொரிந்து கரிகரியாய்வீழவும், இராட்சதர் ஆகாசத்தில் நாக்கை நீட்டியது போற் சுவாலைகள் நாலுபக்கங்களிலும் விளங்கவும், அனேக ஜெந்துக்கள் மகாபரிதாபப்பட்டு ஓடமாட்டாமலு மிருக்கமாட்டாமலும் பொரிந்து கரிந்து சாம்பராய்க்குவியவும், சிங்கம் புலி யானை முதலாகிய மிருகங்களெல்லாம் விறிட்டு மூலை மூலைக்கும் ஓடி எங்குந் தீச்சூழ்ந்துகொண் டிருக்கிறபடியினுலே சுருண்டுவிழவும், அனேக ஜெந்துக்கள் வேகும்போது அவைகளுடைய தேகங்கள் வெடித்து அதிலிருக்கும் நீர் தெறிக்கவும், அதை சில ஜெந்துக்கள் தாகம் பொறுக்கமாட்டாமல் நாக்கையேந்திக் குடிக்கவும், அப்போது அந்தத் தேகங்களும் முடிவில் தீய்க்கு இரையாய்விழவும் இவ்வாருகப் பிரளயகாலம் போல் அவ்வனம் எரிந்து நாசமாய்ப் போக; அவ்வன முழுவதுஞ் சுற்றிக்கொண்ட தீயானது கனக நிறமாய் விளங்கும் மேரு பருவதம் போல் விளங்கிப் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

சுவேதகிராஜன் சரித்திரம்.

இப்படி சொல்லிக்கொண்டு வரும் வைசம்பாயன மகாமுனியை நோக்கி ஜெனமேஜெய மகாராஜன் சொல்லுகிருன்: ஓ சுவாமி! அக்கினிபகவான் இந்தக் காண்டவவனத்தைத் தகிக்கக் கருதியதற்குக் காரணமென்ன ? அதை யோசித்தால் எவ்வளவேனும் என் மனதிற் ருேன்றவில்லை. ஆகையால் அதற்குக் காரணம் யாதோ அதைத் தேவரீர் கிருபை செய்து அருளிச் செய்யவேண்டுமென்று வணங்கினுன். அது கேட்ட வைசம்பாயன முனிவர் - ஓ ராஜனே! அப்படியா சந்தோஷமாயிற்று. அதற்குக் காரணஞ்சொல்லுகிறேன் கேளும்: முற்காலத்திற் சுவேதகி யென்று ஒரு மகாராஜன் இருந்தான். அவன் மகாதருமநிலையுள்ளவன், எப்போதும் யாகஞ் செய்கிறதும், தானஞ் செய்கிறதுமே தொழிலாயிருந்தான். இப்படியிருக்க-அவனுக்கு ஒருகால் நூறு வருஷம்வரையில் ஓய்வில்லாமல் யாகம் பண்ணவேண்டுமென்கிற மனமுண்டாயிற்று. அதற்காக அந்தராஜா நெடுநாளாய் யாகஞ்செய்விக்கும் பிராமணனைத் தேடி எவர்களைப் பிரார்த்தித்தாலும் ஒருவரும் அங்கீகரிக்காமற்போக, அப்போது அந்தராஜா மிகவும் விசனமடைந்து ஆச்சிரமங்களிற் போய் அங்கிருக்கும் முனிவர்களைக் கண்டு, சுவாமிகளே ! அடியே னென்ன பாவியா ? பெரியோர்களுக்குப் பணிவிடை செய்யத் தகாதவனு ? அல்லது உலோபியா? எந்தக் காரணத்தினுல் என்னிஷ்டப்படி நீங்கள் யாகஞ் செய்கிறதில்லை யென்கிறீர்கள் ? நான் அயொக்கியனென்று தோற்றுமாகில் என்னைச் சாதிக்குப் புறம்பாக்கி விடுங்கள். யோக்கியனென்று தோற்

றுமாகில் யாகஞ்செய்வியுங்களென்றான். இவ்வாறவன் சொல்லியதைக் கேட்ட அந்தமுனிவரெல்லாம் - ஓய் இராஜனே! ஒருக்காலும் நீபாவியல்ல. பெரியோர்களை யாதரிக்காதவனுமல்ல. உலோபியுமல்ல. யோக்கியன் தான். ஆனால் உன்னிஷ்டப்படி யாகஞ் செய்விக்காமற் போவதற்குக் காரணம் யாதெனில், நூறு வருஷகாலம் நித்திரை முதலானவைகளைத் துறந்து வருத்தப்படமாட்டாமையால் தான். நாங்களெல்லாம் தவங்களினாலே வதங்கி யிருக்கிறோம். ஆகையால் இந்த வருத்தத்தையுஞ் சகிக்கமாட்டோமென்று சொல்லினர். அரசன் அதுகேட்டு, ஆனால் நான் நினைத்த யாகத்தை விட்டுவிடுகிறதா? உங்களை யான் பலவாறு கேட்டுக் கொண்டும் உள்ளமிரங்கா விட்டால் நான் இப்படி அன்னியாயமாய்ப் போகலாமா என்று கூவினான். அந்தரிஷிகள் ஏதிவன் பிடிவாதக்காரனாயிருக்கிறானென்று அவனைப் பார்த்து, ஓய் ராஜனே! நீயென்ன சொன்னாலுஞ்சரி எங்களாலாகாது. அப்படி உனக்கு அகத்தியமாய் அந்தயாகஞ் செய்யவேண்டுமென்றிருந்தால் சிவனைப் பணிந்துகேள். அவர் உன்னிஷ்டத்தை நிறைவேற்றுவாரென்று நிகழ்த்தினர். அந்த வேந்தனுஞ் சீக்கிரமாய்க் கைலாச பருவதத்திற்குப்போய் மகாநியமத்தோடு சிலகாலம் பன்னிரண்டுநாளுக் கொருதரம் போஜனஞ் செய்கிறதும் சிலகாலம் பதினாறுதினங்களுக் கொருதரம் போஜனஞ் செய்கிறதுமாகி ஆகாரத்திலுங் காய் கிழங்குகளே யல்லது வேறில்லாமல், முக்காலங் களிலும் ஸ்நானஞ்செய்து இரவுபகலறுபது நாழிகையும் கைலாசபதியாகிய சிவ பெருமானைக் குறித்துத் தவம்பண்ணிவந்தான்.

இப்படிக்கு ஆறுமாதந் தவஞ்செய்யவே உருத்திரமூர்த்தி பிரசன்னராகி வந்து அந்தராஜாவைப் பார்த்து, ஓ அரசனே! உன்தவத்தினாலே சந்தோஷப்பட்டேன். உனக்கென்ன வேண்டுங் கேளென்றனர். அதற்கவ்வரசன் யானினைத்தயாகம் நிறைவேற்றவேண்டியதற்கான காரியமாக வேண்டுமென்று சொல்லினன். அதற்குப் பரமசிவன் கொஞ்சம் புன்னகைகொண்டு, ஓஅரசனே! உனக்கு யாகஞ்செய்விக்கிறதைக் குறித்து ஆலோசிக்கவேண்டிய தில்லை. நீ மிகவும் நம்மைக்குறித்துத் தவஞ்செய்தாயாகையால் எப்படியாகிலும் யாகத்தை நிறைவேற்றுகிறேன். அதற்கு ஒருகாரியம் நீ செய்யவேண்டும். அதாவது - பன்னிரண்டு வருஷங்கள் நீ சகலநியமங்களோடுங் கூடி மகா பரிசுத்தனாகி யானையின் துதிக்கை யளவாகிய நெய்யின் தாரையாலே ஓய்வில்லாமல் அக்கினியைத் திருப்தி பண்ணவேண்டும். இப்படி செய்தபின் உன்னிஷ்டஞ் சரியாய் நிறைவேற்றப்படு மென்றனர். அந்த அரசனும் அப்படியே பன்னிரண்டு வருஷங்கள் மகாவிரதத்தோடு நெய்யினால் அக்கினியில் ஆகுதி செய்து வந்தான். பரமசிவனானவர் மீட்டும் அவனிடத்து வந்து சந்தோஷப் பட்டு, ஓ ராஜனே! நீ மகா யோக்கியன். நான் நேரில் யாகம் செய்விக்கக் கூடாது. ஆனால் நம்முடைய அமிசத்தினாற் பிறந்த தூர்வாசர் என்கிற ஒருமகாரிஷி யிருக்கிறார். அவர் உனக்கு யாகஞ்செய்விப்பா ரென்று சொல்லித் தூர்வாசரையழைத்து, ஓய்முனிவனே! நீர் இந்த ராஜாவின் இஷ்டப்படி யாகஞ்செய்வியுமென்று கட்டளை யிட்டனர். அந்தரிஷியும் அப்படியே செய்கிறே னென்று இராஜாவினிடத்தில் வந்து, வேண்டியவைகளைச் சீக்கிரத்திற் சம்பாதியுமென்று சொல்லிப்போய்த் தகுந்தபிராமணர்களை யழைத்துவந்தார். இராஜாவும் சகல சாமக்கிரியைகளையுஞ் சித்தம் பண்ணிக் கொண்டு தீக்ஷையடைந்து, அந்த ரிஷியைக்கொண்டு யாகத்தை நிறைவேற்றி, அவர்களுக் கெல்லாம் தகுந்த தட்சணை கொடுத்துப் பூசித்து அனுப்பிவிட்டான். அதினாலே அக்கினிபகவான்மந்தப்பட்டு அற்பமாகிய தேஜசுடையவனாகி, வலிமை யில்லாமல் நோய்பிடித்துப் பிர்மாவின் சபைக்குப்போய் அவரைத் தண்டனிட்டு, சுவாமி! அடியேனுக்கு ஏனிப்படி தேஜசும் பலமுங் குறைந்து போயின? இதற்கு நா னென்னசெய்ய வேண்டியது? எப்படியாகிலும் நான்முன்போல ஆகும்படி அனுக்கிரகஞ் செய்ய வேண்டு மென்று [illegible] அதற்குப் பிரமன் சிறுநகை புரிந்து, ஓ செஞ்சுடர்த் தேவே! நீ பன்னிரண்டு வருஷகாலம் ஓய்வில்லாமல் நெய்யுண்டபடியினாலே, உனக்கு அக்கினி மந்தப்பட்டு இப்படிப் பட்ட நோய் சம்பவித்தது. அதற்குப் பரிகார மென்னவென்றால் - முன்னாலே நீ சாம்பலாக்கிப் போட்ட காண்டவவனமானது மிகவுஞ் செழிப்பாய் வளர்ந்தது, அநேகந்துஷ்டஜெந்துக்களுக்கு இருப்பிடமாயிருக்கிறது. அதை மறுபடியும் நீ புசிப்பது தான் இந்தநோய்க்குப் பரிகாரம். ஆகையால் விரைவில் அவ்வனத்தைப் புசித்துவிடென்று கட்டளையிட்டான். அதுகேட்ட அக்கினி மிகவுஞ் சீக்கிரமாய்ப் பூமிக்குவந்து, அந்தவனத்தை நாற்புறத்துங் கவிந்து சூழ்ந்துகொண்டான்.

இப்படி சூழ்ந்து கொள்ளவே அந்தவனத்திலிருந்த யானைகளெல்லாந் துதிக்கைகளாலே நீரைக்கொண்டு சொரிந்தும் - அநேகந் தலைகளுள்ள நாகங்கள் வாய்களால் ஜலங்களைமொண்டு பொழிந்தும் - மற்றுமதிலிருந்த அனேகம் ஜெந்துக்களும் இவ்வாறு நாநாவித உபாயங்களைக்கொண்டு அக்கினியை அணைக்கும்படியான பிரயத்தினம் செய்ததினாலே அக்கினிதேவன் அவ்வனத்தை யெரிக்கமாட்டாமல் வெகு பிரயாசப்பட்டு மீட்டுமவன் மிகுந்த சுவாலைகளோடுங் கூடியெரிக்கவாரம்பிக்க, அந்தஜெந்துக்களும் அணைக்கவாரம்பிக்க, இவ்விதமாய் ஏழுதரம் அக்கினியானவன் யத்தினப்பட்டும் உடனுக்குடனே அணைக்கப்பட்டபடியாலே அக்கினி வியசனத்தையும் வாட்டத்தையுமடைந்து பிரமாவினிடத்திற்குப் போய் நடந்ததையெல்லாம் விண்ணப்பஞ் செய்தான். அதுகேட்ட பிர்மா ஒரு முகூர்த்த காலம் ஆலோசித்து அக்கினி

தேவனைப்பார்த்து, நீ காண்டவவனத்திற் பிரவேசிப்பதற்குத் தகுந்த உபாயமொன்று இப்போதுதான் எனக்குத்தோற்றிற்று. அதென்னவென்றால்-நரநாராயணர்களிருவருந் தேவகாரியத்திற்காகப் பூலோகத்தில் அர்ச்சுனனாகவும்-கிருஷ்ணனாகவும்- அவதரித்திருக்கிறார்களல்லவா? அவர்களிப்போது காண்டவவனத்தின் சமீபத்தில்வந்திருக்கிறார்கள். அவர்களை உன்க்குச் சகாயஞ் செய்யும்படி பிரார்த்தித்து ஏற்படுத்திக்கொண்டாயேயானால் எளிதில் அவ்வனத்தை எரிக்கலாம். அவ்விருவருந் தேவரெல்லாந் திரளாய்வந்தெதிர்த்தாலும்வெல்லத்தக்க வல்லமை யுள்ளவர்கள். சீக்கிரமாக நீபோய் அவர்களை யாசியென்றுசொன்னான். அதைக்கேட்டபடியாற்றான் அக்கினிதேவன் வந்து அவர்களை யாசித்ததும், அதற்கவர்கள் ஒத்துக்கொண்டு அவனை ஆயுத முதலியவைகள் கேட்டதும் அவன் அவ்வாறே கொடுத்ததும், பின்பு அவனை ஏவியதும், அவன் போயெரித்ததுமென்று வைசம்பாயனர் சொல்லி முடித்து அதற்குமேல் நடந்த சரித்திரத்தைச் சொல்லத்தொடங்கினார்.

இவ்வாறாக அக்கினியானவன் வனத்தைச் சூழ்ந்துகொண்டு எரிக்கக் கிருஷ்ணனும் அர்ச்சுனனும் தேரின்மேலேறி நாலுதிக்குகளிலுஞ்சுற்றிக்கொண்டு, அவ்வனத்திலிருக்கும் ஜெந்துக்கள் அப்பாலு மிப்பாலும் ஓடிப்போகவொட்டாமல் துரத்தி அடித்து அவ்வனத்திலேயே போகச்செய்து அக்கினிக்குமிகவுஞ் சகாயஞ்செய்து வந்தார்கள். அதனாலே அக்கினியானவன் பயமற்றவனாய் உச்சாகத்துடனே வனமுழுவதையுந் தகித்தான். அவ்வனத்திலிருக்கும் ஜெந்துக்களிலும்-மர முதலானவைகளிலும்- சாம்பலாகியவை சில. தேம்பலாயினவைசில. கரிந்து போயினவைசில. பொரிந்துபோயினவை சில. எரிந்துபோயினவைசில. விரிந்து போயினவைசில. பாதி யெரிந்து முறிந்தவை சில. மோதிவிழுந்து எரிந்தவைசில. சிதறிப்போயினவைசில. பதறிப்போயினவைசில. இப்படியாகவேசில ஜெந்துக்கள் குட்டிகளைக் கட்டிக்கொண்டும், சிலஜெந்துக்கள் தாய்களிடம் ஒட்டிக்கொண்டும், சிலஜெந்துக்கள் தந்தையைப் பற்றிக்கொண்டும், சில ஜெந்துக்கள் வெந்ததைச் சுற்றிக்கொண்டும், சிலஜெந்துக்கள் ஓடவிடமில்லாமற் கதறியழுதுகொண்டும், சிலஜெந்துக்கள் நாடவிடமில்லாமற்பெதறி உதறிகொண்டும், சிலஜெந்துக்கள் மொத்தை மொத்தையாய் வெந்துகொண்டும், சிலஜெந்துக்கள் பத்தல்பத்தலாய் நொந்துகொண்டும், சிலஜெந்துக்கள் பரிதாபமாகப் பற்களைத் திறந்துகொண்டும், சிலஜெந்துக்கள் பயப்பீதியினால் நாக்குகளை நீட்டிக்கொண்டும், சில ஜெந்துக்கள் உயரவெழும்ப அவ்வனத்தின்மேற் கொழுந்துவிட்டிராநின்ற அக்கினிச்சுவாலைகளாலே கொளுத்தப்பட்டு அதில்விழுந் திறந்ததுகள். சிலஜெந்துக்கள் சிறகெரிந்து பறந்து போக மாட்டாமல் அவ்விடத்திலேயே புறண்டழிந்ததுகள். அவ்வனத்திலிருக்குந் தடாகத்து நீர்களெல்லாங் கொதித்துப் போகவே மீன்-ஆமை-முதலான நீர்வாழு முயிரெல்லாஞ் சமைந்துப்போனதுகள். அவ்வனத்திலிருக்கும் புதர்களெல்லாம் பஸ்மீகரித்துப் போகவே அவற்றிலுள்ள நாகம்-தேள்-முதலான மண்வாழு முயிரெல்லாங் குமைந்து போனதுகள். இவ்வாறு ஊழிக்காலத் துண்டாகும் வடவையைப்போல் நாற்றிக்குகளையும் வளைத்து எரிக்கின்ற அக்கினியானது எந்தெந்த ஜெந்துக்கள் தன்னிடத்தில் மடிகின்றனவோ அந்தச் செந்துக்களின் ரூபங்கொண்டு விளங்கியது மஹாபலமுள்ள சிலசீவன்கள் வெகுவேகத்தோடு ஆகாசத்தில் எழும்ப, அர்ச்சுனன் அவைகளையெல்லாம் அம்புகளாற்றாழ்த்திக் கனலிலே வீழ்த்தினான்.

தேவர்கட்கும் அருச்சுனனுக்கும் நடந்த உயுத்தம்.

இந்தப்படிக்கு ஆகாசத்திலும் பூமியிலு மிருக்கும் வஸ்துக்களெல்லாம் பொரிந்துபோகும்படியாக அனலானது அவ்வனத்தைச் சூழ்ந்து நாசஞ்செய்யவே தேவர்களெல்லாஞ் சகிக்கமாட்டாமல் இந்திரனிடத்திற்சென்று, ஓய் தேவேந்திரனே! உமதுகாவலிலிருக்கின்ற காண்டவவனத்தை அக்கினியானவன் அதிலிருக்குஞ் சகலசராசரங்களோடு கூடச் சாம்பராக்குகிறான். ஐயோ! இதென்னபிரளயகாலம்? மூன்றுலோகமும் வெந்து போகத்தக்கதா யிருக்கிறதே யென்று முறையிட்டார்கள். அதுகேட்ட தேவராஜன் ஓடிவந்து பார்த்து மிகுந்தவியசனத்தையுங்கோபத்தையுமடைந்து, அவ்வனத்திற்குநேர்ந்த ஆபத்தை நீக்கவேண்டுமென்று மேகங்களையெல்லாங் கூப்பிட்டு ஆகாசத்தைக் கவிந்து நாற்றிசையிலும் பெரிதாகிய தாரைகளாக வருஷிக்கும்படி கட்டளை யிட்டான். அவைகள் பெய்யு மழைகளெல்லாம் அவ்வனலின் உக்கிரத்தினாலே நெய்யாகுதி கொடுக்குந் தன்மைபோல உறியப்படவும் அதுகண்ட இந்திரன் மீட்டும் பிரளயகால மேகங்களைக் கொண்டு பெருமழை பொழியச்செய்ய, அந்தமழைநீர்களாலே அவ்வக்கினி யொருபக்கத்திலணைய, அதனாலே பெரும்புகை யெழும்பிச் சூழ அப்புகையினாற் சிற்சில ஜெந்துக்க ளிறந்தன. இவ்விதமாக இந்திரன் மழைபொழிந்து அனலையவிப்பதைக்கண்ட அர்ச்சுனனானவன் கோபாக்கினியோடு சரமாரிபொழிந்து, அவ்வனத்தில் ஈ- கொசுகு - முதல் உள்ளேநுழையாதிருக்கும் படிக்கும் உள்ளேயிருக்கிற உயிர்ப்பிராணிகள் வெளிப்படா திருக்கும்படிக்கும் அவ்வனத்திற்குச் சரக்கூடங் கட்டி விட்டான். தேவர்களும் ரிஷிகளும் ஆச்சரிய மடைந்தார்கள். அப்போது அவ்வனத்தி லிருக்கும் தக்ஷகனென்னும் நாகராஜன் குருக்ஷேத்திரத்திற்குப் போயிருக்க அதனுடைய குமாரனாகிய அசுவசேன னென்பவன் சி

றுவனாகையால்தவித்துத்தாயைப்போய்க் கட்டிக்கொள்ள அந்தநாககன்னி தனதுவாயினால் அவன்தலையை முன்னாதாக விழுங்கிக்கொண்டு வெளியிற்போகப் புறப்படுமளவில், அர்ச்சுனன் தீக்ஷண்யமாகிய ஓரம்பினாலே அப்பெண் பாம்பினுடையதலையை யறுத்துப் போட்டான். அப்போது அந்த அசுவசேனனென்கிற பாம்புக்குட்டியானது அந்தரத்தில்தவிக்க அதுகண்ட இந்திரன் பெருங்காற்றோடுங்கூடிய மழையொன்று உண்டாக்கி அர்ச்சுனனுக்குத் திப்பிரமையுண்டாகச்செய்து, தன்தோழன்பிள்ளையாகிய அசுவசேனனைத் தப்புவித்துக்கொள்ளும்படி காப்பாற்றினான்.

பின்பு அர்ச்சுனனானவன் இந்திரன்செய்த மாயத்தைக்கண்டு மிகவுங் கோபமடைந்து, ஆகாசத்திலெழும்பும் பட்சி முதலானவைகளை அர்த்தசந்திர பாணங்களாலே இரண்டுமூன்றுதுண்டுகளாகத் துண்டித்து, தனது இலக்குக்குத்தப்பிப்போன பாம்புக்குட்டியை மிகவுங் கோணலாகச் சஞ்சரிக்கும்படி சபித்தான். கிருஷ்ணனும் அக்கினியைப்பார்த்து, நீ அக்கொடியபாம்பை விட்டுவிட்டபடியால் ஓரிடத்திலும் நிலையில்லாதவனாகக்கடவாய் என்று சபித்தார். அப்போது அர்ச்சுனனானவன் ஆகாசத்தி லிராநின்ற இந்திரனைநோக்கி அவன் பாம்புக்காகச் செய்த வஞ்சனையால் மிகுந்த கோபத்துடனே அவன்பேரில் அம்புகளைத் தொடுத்துவிட்டான். இந்திரனும் மகாகோபமடைந்து திவ்வியமாகிய ஒரு அஸ்திரத்தைப் பிரயோகிக்க, அந்த அஸ்திரமகிமையினாலே ஊழிக்காலத்தின்காற்றுக்குச் சமமாகிய பெருங்காற்றும் - வானமிடிந்து விழுகின்றதென்று சொல்லும்படியாகப் பயங்கரமாகிய குமுறலும் - ஜனங்களுடைய கண்கள் சிதறிப்போகும்படியாகப் பிரகாச வேகமுடைய மின்னல்களும் - கறுத்தமலைகள்போன்ற மேகங்களும் உண்டாகி ஆகாசமெல்லாங் கம்மிக்கொண்டு ஒரு நிமிஷத்திற் பூலோகம் நீரிலமிழ்ந்து போகத்தக்கதாகிய பெருமழைபொழிய, அதனாலே அக்கினியானவன் சுவாலைகளடங்கிப் புகைசூழ்ந்து பரிதாபப்பட்டுநிற்க, அதுகண்ட அர்ச்சுனன் மிகவும் ஆக்குரோஷத்துடனே வாய்வாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்ய, அந்த வாய்வாஸ்திரத்தின் வேகத்தினாலே மேகங்களெல்லாம் மூலைக்குமூலை சிதற அடிக்கப்பட்டு மழை நீரெல்லாம் வற்றிப்போய்ச் சுபாவமாய் அந்தந்த வஸ்துக்களிலிருக்கும் ஈரங்களுமுலர்ந்து ஆகாசம் நிர்மலமாகி மகா உக்கிரமாகச் சூரியன் பிரகாசித்தான். அக்கால் அக்கினிபகவான் மிகவுஞ் சந்தோஷத்துடனே வளர்ந்து, மிருகங்கள் - பக்ஷிகள் - அசுரர்கள் - முதலாகிய ஜெந்துக்களுடைய தேகங்களினின்றும் ஒழுகாநின்ற சிலைத்தண்ணீர் முதலான ரசங்களாகிய நெய்களால் ஆகுதியடைந்து, ஒரு நிமிஷநேரத்தில் முன்போல் வனமுழுவதுஞ் சூழ்ந்தெரித்தான்.

இப்படி கிருஷ்ணார்ச்சுனருடைய பலத்தினால் அக்கினி தேவன் இவ்வனத்தை நாசஞ்செய்துகொண்டிருக்க, அதிலிருந்த நாகர்-கருடர் - முதலாகியவர்களெல்லாம் இவ்விரண்டு வீரரையுங் கொல்லவேண்டுமென்று பயங்கரமாகிய ரூபங்களோடு எழும்பி ஆகாசத்தில்வர, அதுகண்ட அர்ச்சுனன் கூர்மையாகிய அம்புகளினாலே துண்டு துண்டா யறுத்து அந்த அனலிலேயே ஆகுதிசெய்ய, அதுணர்ந்த தேவர்களும் கந்திருவர் - கின்னரர் - இயக்கர்-முதலாகிய பேர்களும் மிகவெகுண்டு, கத்தி - கேடயம்-தண்டு-வில்-சக்கரம்-சூலம்-முதலாகிய சகல ஆயுதங்களுமேந்தி, முடிவுகாலத்துக் கடலொலிபோற் சிங்கநாதஞ் செய்துகொண்டுவந்து வானமெல்லாம் நிறையநின்றார்கள். பின்பு அவர்களெல்லாம் ஒருங்கே தங்கள் தங்கள் வல்லமைக்குத் தக்கபடி ஒருகணப்பொழுதில் அவ்விரண்டுவீரரு மிருக்குமிடங்கூடத் தெரியவொட்டாமல் ஆயுதங்களை வீசி நிரப்ப, அந்தக் கிருஷ்ணார்ச்சுனர்களிருவரும் தங்களுடைய சாமர்த்தியத்தினாலே அவைகளையெல்லாம் நீக்கிக்கொண்டு அர்ச்சுனன் அத்தேவர்கள் முதலானவர்களையும் கிருஷ்ணன் அசுரர் முதலானவர்களையும் அம்புகளினாலும் சக்கரத்தினாலும் கைவேறு-கால்வேறு - தலைவேறு - உடல்வேறாகச் சின்ன பின்னமாயறுத்துச் சிலதுண்டங்கள் ஆகாசத்திலெழும்பி விழவும் சில துண்டங்கள் பூமியில் விழுந்து சிதறவுமாகநாசஞ்செய்தார்கள். அக்கால் தேவாசுர சைனியங்களெல்லாம் எழும்பிவருஞ் சமுத்திரங்கள் பெருமலைபோன்ற கரைகளால் தடுக்கப்பட்டு வேகமோய்ந்து பின்னிடுவது போல் ஒன்றுஞ் செய்யமாட்டாமற் பதைபதைத்துப் புறமுதுகிட்டு ஸ்தம்பமாய் நிற்கவே, இந்திரன் அதுகண்டு, வெள்ளிமலைக்கு நிகராகிய அயிராவதமென்னும் யானைமேலேறி, வச்சிராயுதத்தைக் கைலேந்தித் தன் சேனையைப் பார்த்து நீங்கள் ஏன் பின்னிடுகிறீர்கள் ? பயப்படாதேயுங்கள்; மனிதருக்கு நாம்பயப்படுகிறதா? வாருங்கள் அவர்களைப் பிடித்துச்சிதைத்துப் போடுவோம் என்றுசொல்லி ஆகாசத்திலுலவுஞ் சிங்கம்போற் பாய்ந்துவந்தான்.

இவ்வாறு தேவேந்திரன் வச்சிராயுதமெடுத்துப் பாய்வதைக்கண்டு உச்சாகமடைந்த இயமன் காலதண்டத்தையும், குபேரன் சிவிகையென்னும் ஓர்விதக் கத்தியையும், வருணன் பாசத்தையும், அச்சுவனிதேவர்கள் எரிந்துகொண்டிருக்கும் ஓஷதிகளையும், தாதா என்பவன் தநுசையும், ஜயனென்பவன் உலக்கையையும், துவஸ்டா என்கிறவன் பருவதத்தையும், மிருத்தியு என்கிறவன் கண்டகோடாலியையும், மித்திரன் என்பவன் சக்கரத்தையும், பூஷா என்பவன் வில்லையும், பகன் என்பவனும்-சவிதா என்பவனும் கத்திகளையும், தாத்துரு-சக்கரன்-அரியமன்- மித்திரன் - வருணன் - அஞ்சுமான் - இரணியன் - பகவான்-திவச்சுவான் - பூடன் - சவித்திரு - துவட்டன் என்னும் பன்னிருசூரி

யர்தத்தம் ஆயுதங்களையும், பின்னும் அஷ்டவசுக்கள்- சப்தமருத்துக்கள் - விசுவதேவர் - சாத்தியர்- தத்தம் தேஜோ மயமாகிய படைகளையும் எடுத்துக்கொண்டு கிருஷ்ணார்ச்சுனர்களைக் கொல்லவேண்டுமென்று துர த்திக்கொண்டு வந்தார்கள். இவ்விதமாகத் தேவரெல் லாம் ஒன்றாய் வரக்கண்டும் அவ்விரண்டு வீரரும் அ ஞ்சாமல், தைரியத்துடனே வில்லுகளை யெடுத்து வ ளைத்து நாண்பூட்டி நாணோசை கொண்டு விசித்திர மாகிய அம்புகளைத் தொடுத்து ஆயிரம் பதினாயிரமா க வருஷித்துத் திரண்டுவரும் வெள்ளத்தை அணை போட்டுத் தடுப்பது போல அந்தத்தேவர் சேனையைக் கைகாலசைக்க வொட்டாமலும் அவர்கள் விடும் ஆயு தங்களை அவர்கண் மேலேயே விழும்படி யாகவும் அ டித்து வந்தார்கள். அதை ஆகாசத்தில் வந்திருக்கும் முனிவர்கள் பார்த்து, இதென்ன ஆச்சரியம்? தேவர் களை அலட்சியமாய் எதிர்த்து வெற்றிபெறும் வீர ரைப் பூமியில் நாமெப்பொழுதுங் கண்டதில்லை. ஆ னவர்கள் சாக்ஷாத் நரநாராயணர்க ளாகையால், இ ப்படிப்பட்ட சக்திகள் இவர்களுக் குண்டா யிருக்கிற து. இனி யிவர்களோடு தேவர்கள் யுத்தம்பண்ணுவது வீணென்று ஒருவரோ டொருவர் பேசிக் கொண் டார்கள்.

இப்படியிருக்க-இந்திரனானவன் தேவர்கள் கிரு ஷ்ணார்ச்சுனர்களுடைய பாணங்களுக்கு எதிர்நிற்க மா ட்டாமற் பயந்து தன்னிடத்திலேயேவந்து சேரக்க ண்டு, இவ்விருவர்களுடைய சாமர்த்தியத்திற்கு மிகவு மாச்சரியப்பட்டு, மறுபடியு மிவர்களுடைய நிர்வாக த்தை முற்று மறிவோமென்று எல்லாத் தேவர்களை யுங் கூட்டிக் கொண்டு வந்து மிகவு மதிகமாகிய கல் மாரி பொழிந்தான். அதுகண்ட அர்ச்சுனன் உக்கிர மாகிய அனேக பாணங்களைத் தொடுத்துவிட்டு அந்த க் கல்மாரியைத் தடுத்துக் கற்களைப்பொடியாக்கித் தி க்குகள் தோறும் வீழ்ந்து பரவும்படியாகப் பறக்கவ டித்தான். அப்போது தேவராஜன் தன்முயற்சி வீணா ய்ப்போனதைக்கண்டு மறுபடியும் மலைமலையாய்க் கல் மழை பொழிவித்தான். பின்னும் அர்ச்சுனன் அனே கமாயிரம் பாணங்களைவிட்டு அந்தமலைகளைத் துண்டி த்துத்தள்ளினான். அந்த மலைத் துண்டங்க ளானவை ஆகாசமிடிந்தால் அதின் துண்டங்கள் சூரிய சந்திர நக்ஷத்திரங்களுடனே கூடிக்கொண்டு விழுந்தா லெப் படி யிருக்குமோ அப்படி பலவர்னமும் பளபளப்பு முள்ள கல் முதலானவைகளோடு கூட அந்தக் கா ண்டவ வனத்திலேயேவிழ, அதுகளினாலே அவ்வன த்திலிருக்கும் அசுரர்கள்-இராக்கதர்கள் - இயக்கர்கள்- பிசாசர்கள் -பூதர்கள் - நாகர்கள்-சிவிங்கிகள்-கரடிகள்- புலிகள் - யானைகள் - சிங்கங்கள் - எருமைக் கிடாக் கள் - இடபங்கள் முதலாகிய ஜெந்துக்க ளெல்லாம் நசுங்கி நாக்கைக் கடித்தவை சில, கண்பிதுங்கினவை சில, மண்டையுடைந்தவைசில, தொண்டை யடைந் தவை சில, காலொடிந்தவை சில, கையறுந்தவை சில, கழுத்தறுந்தவைசில, குடல் பிதுங்கினவைசில, உட லற்றவைசில, இப்படியாக விநாசமடைந்து கதறிக் கூவித் தீப்பட் டெரிந்துபோயின. சில ஜெந்துக்கள் எழும்பி அவ்வனத்தையெரிக்கும் அக்கினியினுடைய படபடாத்கார வோசையைக்காட்டிலு மதிகமாய் ஆ காச மிடியும்படியாகக் கூச்சலிட்டுக் கையிலாயுதங்க ளுடனே வனமெரிந்துகொண் டிருப்பதைச் சந்தோ ஷமாய்ப் பார்த்துக்கொண் டிராநின்ற கிருஷ்ணார்ச்சு னர்கள்மேற்பாய, கிருஷ்ணமூர்த்தியானவர் தேஜோ மயமாய் விளங்காநின்ற தமது சக்கராயுதத்தைப் பிர யோகஞ்செய்ய, அந்தச் சக்கராயுதமானது அசுரர் - இராக்ஷதர் - பிசாசங்கள் முதலாகியவைகளின் தேக ங்களைச்சிதைத்து நெருப்பில்தள்ளி மறுபடியுங் கிரு ஷ்ணனுடையகையில்வந் தேறிக்கொள்ள, இப்படியே அவ்வனத்தில் நின்றுந் துஷ்டப்பிராணிகள் எழும்புந் தோறும் அந்தச் சக்கராயுதமானது கிருஷ்ணனால் வி டப்பட்டு அவைகளைநாசஞ்செய்து அவ்வுதிரங்களினா ற் பூசப்பட்ட நிறத்துடன் தன்னையேந்துவோன் கை யிற் பொருந்திக் கொண் டிருந்தது.

இவ்வாறாகப் பிரளயகால உருத்திரன்போல் விள ங்குங் கிருஷ்ணனையும் அர்ச்சுனனையும் பார்த்த தே வர்களும் அசுரர்களும் பயந்து நடுநடுங்கி நாவுலர்ந் து மெய்சோர்ந்து மிரளமிரள விழித்துக்கொண்டு, அசேதனப் பிராணிகள்போல் அசைவற்று நின்றார்க ளேயன்றி ஒருவனாகிலும் இவ்விருவருடைய எதிரில் வந்து நிற்கமாட்டாமற் போனார்கள். இவ்விதமாக அ க்கினியை யவித்து அவ்வனத்தைக் காக்கும் முயற்சி யெவ்வளவுசெய்தும் பயன்படாமல் அடிபட்டு வேத னையடைந்த அத்தேவர்கள் முதலானோர் திரும்பியோ டினார்கள். தேவேந்திரன் கிருஷ்ணார்ச்சுன ரிருவரை யும் பார்த்து ஒருபக்கத்தில் ஆச்சரியமும் - ஒருபக் கத்திற் கோபமும் - ஒருபக்கத்தில் துக்கமும்- ஒருப க்கத்தில் அவமானமுமாக மயங்கி நிற்குமளவில், ஆ காசத்தில் அசரீரிதோன்றி அந்தத் தேவராஜனைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லிற்று. ஓ தேவராஜ னே! நீ உனது சினேகிதனாகிய தட்சகனைக்குறித் து மிகவும் விசாரப்படுகிறாய். அப்படி விசாரப்படவே ண்டாம். இவ்வனம் தீப்படுங்காலத்தில் அவன் குரு க்ஷேத்திரம்போ யிருந்தானாகையால் இத்தீயினால் அ வன் சாகவில்லை. அன்றியும் மனிதராலே நமக்கு அவ மானம் வந்ததென்று விசாரப்படுகிறாய். அதையும் வி ட்டுவிடு. இதோ நீலமேகம்போற் கறுத்த திருமேனி யும், மின்னற்கொடிபோல் விளங்கும் பீதாம்பரமும், பரந்துயர்ந்த மார்பிற் சூரியன்போன்ற இரத்தின ப ரணமும், நீலத் தூண்கள்போல் முழங்காலளவு நீ ண்டுதிரண்ட திருக்கைகளும், அன்றுபூத்த செந்தா மரை மலர்களுக் கொப்பாகிய திருக்கண்களுமாய்க் கையிற் சுவாலைகளாகிய மாலைகளால் விளங்காநின்ற சக்கரமேந்தி நிற்கிறவர்யாரென்றால்; இவ்வுலகங்களை

யெல்லாம் படைத்து அளித்து அழிக்குங் காரணப் பரம்பொருளாகிய ஸ்ரீ நாராயணமூர்த்தி. அவர்பக்கத்தில் ரூபத்திலும் பலத்திலும் அவரோடொத்துக் கையிற் காண்டீபமென்னும் பெரியவில்லையேந்தித் தட்சனுடைய யாகத்தை யழிக்குங்காற் பினாகமென்னுந் தனுசையேந்தி உக்கிர ரூபமாயிருந்த வீரபத்திரர் போற் கோபாவேசங் கொண்டிருக்கிறவர், அவருடைய அமிசம்பெற்ற சிஷனாகிய நரனென்பவர்தான். இவ்விருவரோடும் சண்டைசெய்து வெற்றிபெற யார் வல்லவ ராவார்கள்? வீணாக ஏன் எதிர்க்கிறாய்? ஒருபோதும் இவர்களுடைய எண்ணத்தைத் தடுக்கக்கூடாது. இவர்களுடைய ஸ்வரூபமும் - பலமும்-பராக்கிரமமும் - உனக்கு நன்றாகத் தெரிந்திருக்க, ஏது நீ தெரியாதவன்போல் யுத்தஞ்செய்ய வந்தாய்? துஷ்டநிக்கிரகமுஞ் சிஷ்டபரிபாலனமுஞ் செய்வதற்காக அவதரித்த இந்த மகாநுபாவர்களைப் பூசிப்பதே நன்மையல்லாது, எதிர்ப்பது நன்மையன்று. உன்னதாகிய இவ்வனம் அழிந்துபோகிறதென்று வியசனப்படவேண்டாம். இவ்வனமும் இதிலுள்ள ஜெந்துக்களும் அழியவேண்டிய விதியை யோசித்துப் பார்த்துச் சுகமாய்ச் சுவர்க்கம்போய்ச் சேருக. என்று அசரீரிசொல்ல, அதுகேட்ட இந்திரன் யோசித்துப் பார்த்துச் சரிதானென்று நினைந்து கோபத்தையும் மானத்தையும் விட்டுத் தனது ஐராவதமென்னும் யானையின் மேலேறிச் சுவர்க்க லோகத்திற்குத் திரும்பினான். இப்படி இந்திரனே திரும்பினதைக்கண்ட மற்ற தேவர்கள் முதலிய யாவரும் மிகவுஞ் சந்தோஷத்துடனே அவன் கூடவே சூழ்ந்துகொண்டு தங்களிடம் போய்ச் சேர்ந்தார்கள். இப்படியாக இந்திரனும் தேவர்களும் சண்டையைவிட்டு ஓடியதைக்கண்ட கிருஷ்ணார்ச்சுனர்கள் மிருந்த சந்தோஷத்துடனே சங்கநாதஞ்செய்தார்கள். பின்பு இவர்கள் யாதொருசங்கையு மற்றவர்களாய் அக்கினியைக் கூவி அவ்வனமடங்கலும் புசிக்கச்செய்ய, அக்கானகத்தி லிருக்குஞ் சீவஜெந்துக்கள் அப்பாலிப்பா லசையாமல் அவ்வக்கினிக்கேயிரையாயின. அர்ச்சுனனும் ஓரம்பினால் நூறு ஜெந்துக்களையும், நூறு அம்புகளால் ஒரு ஜெந்துவையும், அவ்வவற்றிற்குத் தக்கபடி பாணப்பிரயோகஞ்செய்து அக்கினியில் வீழ்த்திக்கொண் டிருந்தான்.

இப்படியாக அக்கினிபகவான் சஞ்சீவி முதலிய ஓஷதிகளைத்தின்று சகல ஜெந்துக்களுடைய மாமிசங்களைச் சாப்பிட்டு அவைகளின் உதிரம் சிலைத்தண்ணீர் முதலாகிய ரசங்களைக் குடித்து மதமடைந்து அண்டச்சுவர் வெடிக்கும்படி சப்தித்துக் கொண்டு சுவாலைகளைப் பரப்பி வளர்ந்து, ஆகாசத்துக்கும் பூமிக்கு மொன்றாகச் சல்லகியென்கிற மரம் தளிர்த்திருப்பதுபோலும் பவளக் குன்றம் பருத்தோங்கியது போலும் நிற்பதினாலே, தேவலோகம் பிதுருலோக முதலான விடங்களிலுஞ் சகிக்கக்கூடாத தாபமுண்டாகி யாவரும் தவித்துநின்றார்கள். இவ்வாறாகக் கிருஷ்ணனும் அர்ச்சுனனும் செய்த துஷ்டருடைய தேகங்களாகிய ஆகுதிகளாலும் விருட்சங்கள் கொடிகள் முதலாகிய சமித்துக்களாலும் அக்கினிபகவான் திருப்தியடைந்து அவ்வனத்தை முக்காலேமூன்றுவீசமும்பட்சித்து வருமளவில் அதிலிருந்த மயனென்கிற அசுரனானவன் தட்சகனுடைய வீட்டிலிருந்து சந்துபார்த்து ஓடிப்போகச் சித்தப்பட்டிருக்க, அக்கினியுந் தனது சுவாலையாகிய நாவைநீட்டி அவனைப் பட்சிக்க யத்தினப்பட்டுக் கண்ணனைப் பிரார்த்திக்க, அவருங் கையிற்சக்கரத்தை யெடுத்துக்கொண்டு மயனைக் கொல்லவர, அதைக்கண்ட அவ்வரானவன்- ஓ அர்ச்சுனா! அடியேன் உன்னடைக்கலமென்று சரணம் புகுந்தான். அர்ச்சுனனும் அப்படிசொல்லாநின்ற அவ்வசுரனை நோக்கிப் பயப்படாதே யென்று சொல்லி அவனை வரவழைக்க, கிருஷ்ணனும் அவனிடத்தி லிரங்கிக் கொல்லவேண்டு மென்கிற கருத்தை விட்டுவிட்டார். அக்கினியும் அவனைப்புசிக்கவேண்டுமென்கிற விருப்பங்கொள்ளாதிருந்தான். கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! இவ்விதமாய் அந்தக் காண்டவவனத்தை அக்கினியெரித்துச் சாம்பராக்கியதில், ஆறுபேர் தப்பினார்கள். அவர்கள் யாரென்றால்- முன் சொன்ன தக்ஷகனுடைய குமாரனாகிய அசுவசேனனென்கிறவன் ஒருவன். இப்போதுசொன்ன மயனென்கிற அசுரனொருவன். சார்ங்ககர் என்னு நால்வர். ஆக இவ்வறு வருந்தான் தப்பிப்போயின பேரென்று சொல்லினார்.

சார்ங்ககர் என்னும் பக்ஷிகள் கதை.

இவ்வாறுசொல்லியவைசம்பாயனமுனிவியை ஜெனமேஜெய மகாராஜன் நோக்கி, ஓ தேவமுனியே! அசுவசேன னென்பவனும் மயனென்பவனும், தீயிலகப்படாமல் தப்பிப் போனதற்குக் காரணஞ் சொன்னீர்கள். சார்ங்ககர் தப்பியதற்கு ஒன்றுஞ் சொல்லவில்லை. ஆகையால் எந்தவிதியால் சார்ங்ககர் மரிக்காதபடி அக்கினிதகிக்காமற்போனாரோ அதையெமக்கு அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்: ஓ ராஜனே! கேளும்: வேதங்களும் புராணங்களும் அறிந்தவர்கட்குள் சிரேஷ்டராகியும், சகலதருமங்களும் அறிந்தவராகியும், பதினோரிந்திரியங்களையுஞ் செயித்து நிலைதவறாமல் தவஞ் செய்பவராகியும் இராநின்ற மந்தபாலனென்கிற மகாமுனியொருவர் அந்தக் காண்டவ வனத்தில் வாசஞ் செய்துகொண் டிருந்தார். அவர் உலகவாழ்க்கையை வெறுத்துப் பெண்முகம் பாராமற் பிரமசரிய விரதமநுஷ்டித்து, நெடுங்கால மாகியபின் அச்சரீரத்தை விட்டுத் தமதுதவமகிமையாற் சுயேச்சையாய்ப் பிதுருலோகம் போய்ப் பார்த்தார். அவ்விடத்தில் தாம் செய்த தவத்தினாலே அடைய வேண்டிய பலன் ஒன்றையுங் காணாமல், அங்கிருந்து இந்திரலோகம் - வரு

ணலோகம் - ஆதித்தலோகம் - முதலாகிய சகலலோ
கங்களுக்கும் போய் ஓரிடத்திலுந் தமது தவத்தின்
பயனைக் காணுமையால் மறுபடி யமதருமராஜனிடத்
திற்குவந்து அவனருகிலிருக்குந் தேவர்களைப் பார்த்
து, ஓ தேவர்களே! நான் வெகு தவங்களும் புண்ணி
யங்களுஞ் செய்தேன். அப்படியிருக்க எனக்கு ஏன்
ஒருபயனுங் கிடைக்கவில்லை? எங்கேபோனுலும் ஏன்
எனக்கொன்றுந் திறக்கப்படவில்லை? நானெக்கரும
ஞ்செய்யாமையாலே இந்தலோகங்கள்மூடப்பட்டன?
அதைத்தயைசெய்து சொல்லுவீர்களாகில்அக்கருமத்
தையுஞ் செய்துவருகிறேனென்று கேட்கத் தேவர்கள்
சொல்லுகிருர்கள்: ஓய் மந்தபாலமுனியே ! கேளும்:
உலகத்தில் யாவரும் பிறக்கும்போதே மூன்றுபேரு
க்குக் கடனாளியாகப் பிறக்கிருர்கள். யார்யாருக்கென்
ருல் - தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், பிதுர்தேவர்
களுக்குந்தான். இக்கடன்கள்தீருகிறவிதமெப்படியெ
ன்ருல் - யாகங்கள் செய்து தேவர்கடன் தீர்க்கவேண்
டும். வேதமோதி ரிஷிகள்கடன் தீர்க்கவேண்டும். பி
ள்ளைகளைப்பெற்றுப் பிதுர்க்கடன்தீர்க்கவேண்டும். நீ
ரோ யாகங்கள் செய்தபடியினுலும், வேதங்களோதி
யபடியினுலும், இரண்டுகடன்களைத் தீர்த்துவிட்டீர்.
சந்ததி யில்லாமையிலே ஒருகடனைத் தீர்க்கவில்லை.
அந்தக்கடன் தீராமற்போவது பாவ மாகையால் இந்
தலோகங்களில் உமக்குப் பயன் கிடைக்கவில்லை. ஆ
கையால் நீர் சந்திக்காக யத்தினப்படுக. என்று சொ
ல்ல அதுகேட்ட அந்த முனியானவர் இக்கானகம்வந்
து விரைவாகவும்-வெகுவாகவும்-எந்தயோனியிற்பிள்
ளைகள் பிறக்குமென்று யோசித்திருக்கையிற் சார்ங்
கமென்னும் ஆண்பக்ஷி யிறந்து ஜரிதையென்னும்
பெண்பட்சி பறந்து பறந்து விழுந்தழுவதைக் சண்டு
அந்தப்பட்சி யிறந்துபோன கூண்டிற் பிரவேசித்து
அப்பேடுடன்கூடி நான்கு முட்டைகளை யுண்டாக்கி,
அப்பால் லபிதை யென்கிற மற்ருெருசார்ங்கபேட்
டைச் சேர்ந்து முன்தான் கூடிய ஜரிதை யெனனும்
பட்சியையும் அதுபெற்ற முட்டையையும் அந்த வன
த்திலேயே விட்டுவிட்டு இவர் போய்விட்டார். பின்பு
அந்தப் பெண்பறவையானது அந்த முட்டைசளைக்
காத்துக்கொண்டு அவ்வனத்தி லிருந்து, குஞ்சுகள்
வெளியிற் புறப்பட்டவுடனே அவைகட்குப் பிரமதே
ஜசு ஜொலிக்கக்கண்டு மகிழ்ச்சியுடனே ஆகாரங்களைக்
கொண்டு வந்து கொடுத்து வளர்த்து வந்தது.

இஃதிப்படியிருக்க - அந்த மந்தபால ரிஷியான
வர் லபிதையோடுகூடப் போகுமளவில் வழியிலே கா
ண்டவவனத்தைத் தகிக்கக் கருத்துகொண்டு வராநி
ன்ற அக்கினி தேவனைக்கண்டு அவன் எண்ணத்தை
யறிந்து அவனைப் பிரதட்சண நமஸ்காரஞ் செய்து
கைகூப்பி, ஓய் அக்கினிபகவானே ! நீர் தேவர்களுக்
கு முகமாயிருந்து சகல ஆகுதிகளையும் பெற்று அந்
தந்தத் தேவருக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறவராகை
யால், நீர் மகாசிரோஷ்டர். எல்லாத்தேகங்களி னுள்
ளும் அந்த ராத்துமாவைப்போல் வாசஞ்செய்கிறவர்.
பெரியோர்சள் உம்மையொருவராயும் மூவராயுஞ்சொ
ல்லுகிருர்கள். அன்றியும் உம்மை யெட்டுவிதமாக்கி
யாகங்களை யேர்ப்படுத்தினுர்கள். இவ்வுலகங்களுக்
கெல்லாம் நீர் சிருஷ்டிகாரணரென்று யாவருஞ்சொல்
லுகிருர்கள். சங்காரமும் உம்மாற் பண்ணப்படுகிறதெ
ன்று வழுத்துகிருர்கள். நீர் எல்லாவற்றையும் வயிற்
றிலிருந்து காப்பாற்றுகிறவர். நீர் இல்லாமற்போனுல்
ஒருநிமிஷமும் உலகம் பிழையாது. வேதியரெல்லாம்
உமக்குத் தினந்தோறும் தோத்திரம் - நமஸ்காரம்-மு
தலானவைசெய்து, தங்களுடைய கருமத்தை நிறை
வேற்றிக் கொள்ளுகிருர்கள். நீர் தான் உலகம்பிழைப்
பதற்காக மின்னல்களோடுகூடிய மேகங்களாகி மழை
பொழிகிறீர். உம்மாலேதான் ஆண்டுகளும் - மாதங்
களும் - நாட்களு முண்டாகி, உலகத்தினுடைய ஆயு
ளைக் கவர்கின்றன. ஆதலால் உலகங்களைச் சிருஷ்டித்
துக் காத்து அழிப்பதற்குக் காரணம் நீரே யென்று
வேதங்கள் புகழ்கின்றன. இம்மை மறுமைப் பயன்க
ளில் எதைப் பெறவேண்டுவ தானுலும், வேதவிதிப்
படி உமது முன்னிலையிற் பெறவேண்டும். அன்றியும்
யாவையும்விளக்குகின்ற ஒளிநீரே: நீரில்லாவிடில் இரு
ளினின்றும் ஒன்றும் வெளிப்படமாட்டாது. ஆகாயத்
தில் தோற்றுங் கிரகங்களும் - நட்சத்திரங்களும் - உ
மது சுரூபங்களே யல்லாது வேறில்லை. எவ்வுலகிலும்
நீரே நிறைந்திருக்கிறீர். தேவர்களுக்கு அமுதும் உம்
மாலேயே உண்டாக்கப் படுகிறது. எவ்விதத்திலும் நீ
ரே தேவர்களில் உயர்ந்தவர். ஆகையால் - அக்கினிப
கவானே! உலகங்களில் வேதியருக்கு நீரேமுக்கியதே
வனுனதுபற்றி என்னிடத்தில்தயைவைத்து அநுக்கிர
கஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார். அக்கினி
யானவன் அந்தமந்தபாலமுனியைநோக்கி, ஓய் முனி
வரே ! நீர் செய்த தோத்திரத்தினுலே மிகவுஞ் சந்
தோஷப்பட்டேன். உமக்கு என்ன லாகவேண்டுவ
தைக் கேளும். என்றுசொல்ல அம்முனிவர் கைகூப்
பி, ஓ செஞ்சுடர்த்தேவே! நீர் காண்டவ வனத்தை
யெரித் தழிக்குங் காலத்தில் அவ்வனத்தி லிருக்கும்
என் பார்ப்பினங்களை யெரிக்காமற் காத்தருள வேண்
டுமென்றனர். அத்தேவனும் அப்படியே யாகட்டுமெ
ன்று வரங்கொடுத்து வந்துவிட்டான். ஆகையாலே
தான் அச்சார்ங்ககர்களை யெரிக்கவில்லை.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே ! இவ்வித
மாகவந்த அக்கினியானவன் அவ்வனத்தைச் சூழ்ந்
து தகித்துக் கொண்டு வருமளவில் அதிலிருந்த ஜரி
தையென்கிற பெண்பட்சியானது கதியொன்றுங் கா
ணுமல் மிகவுஞ் சிறிய தன் குஞ்சுகளைப்பார்த்து மெ
த்தவியாகூலமடைந்து பரிதாபமாய் அழத்தொடங்கி,
ஐயோ ! மகா துர்ப்பாக்கியையான எனது வயிற்றில்
இவைகளேன் பிறந்தன? தெய்வமே ! அற்பமாகியும்

ஆதரவற்று மிருக்கிற என்னிடத்தில் தானே உன்சவுரியத்தைக்காட்டவேண்டும். இரங்கலாகாதோ? நான் மகாநுபாவருக்கு மனைவியானேனென்று மகிழ்ந்திருந்தேனே: அப்படி மகிழலாகாதென்று தெய்வம் இவ்வண்ணமாக்கிப் போட்டதே: என்னசெய்வேன்? ஓ என்குஞ்சுகாள்! இப்போதான் முளைக்கும் உங்கள் அவயவங்கள் நெருப்பில்விழுந்து கரியப் பார்க்குங்காலம் நேரிட்டதே: இதோ நெருப்பு வந்துவிட்டதே: என்னுடைய வல்லுயிர் முன்னேபோமோ? அப்படிப்போகுமாகில் உங்களுடைய பரிதாபத்தையாகிலுங் கண்ணாலே பாராமற் போவேனே? ஐயோ! அக்கினி பகவானே! உன்னைக் கும்பிடுகிறேன். நீ என்னிடத்தில் அன்புபாராட்டி என்குழந்தைகளை யெரிப்பதற்குமுன்னமே என்னை யெரித்துவிடு. இவ்வளவு சகாயமாகிலும் செய்யக்கூடாதா? ஓபிள்ளைகளே! இறகுமுளையாத உங்களையும்-பேதையாகிய என்னையும் - இவ்வனத்தில் விட்டுப்போட்டு, உங்கள் தகப்பனார் லபிதையுடனே கூடிக்கொண்டு சுகித்து வாழ்ந்திருக்கப் போனாரே: உங்களை நான் எவ்வாறு காப்பேன்? எப்படி விட்டுப்போவேன்? என்னசெய்வேன்? உங்களுடன்கூடவே உயிரைவிடுவேன். என்று வியசனப்படக்கண்ட அக்குஞ்சுகள் தாயைநோக்கி, அம்மா! நீ எங்களை விட்டுப்போட்டு ஆகாசத்திலெழும்பி எப்படியாகிலும் உன்புருஷனிடத்திற்போய்ச் சேரவேண்டியதேயன்றி, எங்களுக்காகக் காத்திருந்து நீயுங் கூட இறந்துபோகவேண்டாம். ஏனென்றால் - நாங்கள் போய்விட்டாலும் நீ யிருப்பையேயாகில் எங்களைப்போ லின்னும் மக்களைப்பெறலாம். நீபோய்விட்டால் எங்கள் குலமே போய்விடுமல்லவோ? சந்ததிக்காகத் தானே எங்கள்பிதா உன்னைச்சேர்ந்தார். எங்களைக்காப்பாற்றச் சக்தியில்லாமல் நீயும் இத்தீய்க்கு இரையாய் வீடுதலினாலே ஒருபயனுமில்லை. என்று சார்ங்ககங்கள்சொன்ன பேச்சைக்கேட்ட ஜரிதை மிகவும்மனநொந்து மக்களைப்பார்த்து, ஓ எனதுபாலர்களே! எனக்கு ஒருயுக்திதோன்றுகிறது. அதை நீங்கள் கேளுங்கள். இதோ ஒரு எலிப்பாழி யிருக்கிறது. இதில் நீங்கள் புகுங்கள். அதின்வாயை நான் மண்ணினாலே மூடிப்போடுகிறேன். அனல் அவிந்தபின்வந்து அதைத்திறந்துவிடுகிறேனென்றது. அதைக்கேட்ட அந்தமுனிகுமாரர், அம்மா! நீ இப்பிலத்திற் பிரவேசிக்கச்சொல்லுகிறாயே: அதிலிருக்கும் எலியானது சிறகில்லாமல் மாமிசபிண்டமா யிராநின்ற எங்களை இலேசாய் விழுங்கிவிடுமே: ஆகையால் அதில்நாங்களெப்படி பிரவேசிப்போமென்றுசொல்லின.மறுபடியும்தாய்-குழந்தைகளே! இதிலிருந்த எலியானது வெளியில் வரக்கண்டு ஒருபருந்துகாலாலுராய்ஞ்சுதூக்கிக்கொண்டுபோயிற்று.என்று சொல்லக் குஞ்சுகள்-அம்மா! எலியைப் பருந்து உராய்ஞ்சிக் கொண்டு போயிற்றென்பதை நாமென்னமாய் அறிவோம்? இந்தப்பிலத்தில் வேறு எலியுமிருக்கலாம். அதில் நாங்கள் புகுந்தாற் சித்தமாய் மரணமடைவோம். இங்கிருந்தாலும் ஒருவேளை அக்கினி நாமிருக்குமிடத்தைத் தகிக்காமல் விட்டுவிடுவன். அதிற்போய் எலியின்வாயில்விழுந்து சாவதைவிட இங்கிருந்து நெருப்பில் விழுந்தால் நல்லது. என்று சொன்னதைக்கேட்ட தாய் - குஞ்சுகளே! பாழியின் சமீபத்திற் பருந்து வந்திருக்கவும், அதிலிருந்த எலி வெளியில்வரவும், அந்த எலியை அப்பருந்துகொத்திக் காலினால் தூக்கிக்கொண்டுபோகவும் கண்டேன். இவ்வாறாக எலியையெடுத்துப் போன பருந்தை நானும் வேகமாய்ப் பின்தொடர்ந்துபோய் அப்பருந்துக்கு ஆசிகள் வழங்கி,எங்களுடைய சத்துருவாகிய எலியைக் கொண்டுபோகிறபடியினாலே நீ ஆகாயத்தில் விரோதமின்றி சஞ்சரித்துக்கொண்டு வாழக்கடவாய் என்று சொல்லிக்கொண்டிருக்ருக்கையில் அந்த எலியைப் பருந்து பட்சித்துப்போட்டது. நானும் அப்பருந்தினிடத்திலே விடைபெற்றுக்கொண்டு வந்துவிட்டேன். ஆகையாலே உங்களுக்குப் பயமில்லையென்று சொல்லிற்று.

அதற்குச் சார்ங்ககங்கள் - அம்மா ! நீஎங்களைச் சந்தேகமுள்ளவிடத்துக்கு அனுப்புவதைவிட, இவ்விடத்திலேயே இருத்துவது நன்று. ஏனென்றால்- இந்தக்குகைக்குட் புகுவதனால் எங்களுக்குச் சாவுநிச்சயம். அப்படி சாவதிலும் எலிவாயி லகப்பட்டுப் போவதிற் பாவமுண்டு. நெருப்பில் விழுந்து வெந்துபோனாலும் புண்ணியமுண்டு. அன்றியும் நீ எங்களைக்காத்து எங்களுடன் கூட வுயிரைவிடுவதில் எங்கள் பிதாவின் அபிப்பிராயம் வீணாய்ப் போகின்றது. மேலும் எங்களைக் காக்கவேண்டியது உன்கடமையன்று. எங்களால் உனக்கென்னஉபகாரங் கிடைக்கப்போகிறது? ஒன்று மில்லை. நாங்கள்யாரோ ? எப்படிப் பட்டவர்களோ ? அதெல்லாம் உனக்குத்தெரியாது. எங்களை அக்கினி தகியாமல் விட்டுவிட்டாலும் விடலாம். தகித்துவிட்டாலும் நல்லகதியடையலாம். நீயோ நல்லமங்கைப்பருவ முடையவளா யிருக்கிறாய். உன்னுடைய விதிப்படி கணவனைச்சேர்ந்து வேறுபிள்ளைகளைப்பெறலாம். ஆகையால் நீ எவ்விதமாகிலும் தப்புவித்துக்கொண்டுபோய் நெருப்பு அவிந்தபின் வந்தால், அப்போது நாங்களும் பிழைத்திருந்தாற் பார்த்துக்கொள்ளலாம். என்று சொன்னவற்றைக்கேட்ட தாய் சற்றே யோசித்து, இவர்கள் மஹாநுபாவராவரென்று முன்பு தனக்கு ரிஷிசொல்லியிருந்த வார்த்தையை நினைத்து,குஞ்சுகளை வனத்தில்விட்டு எழும்பி ஆகாசத்திற் பறந்துபோய்விட்டது. இப்படி தாய் போனவுடனே தீக்ஷண்யமாகிய சுவாலைகளுடனே அவ்வனத்திற் பிரவேசித்த அக்கினியானவன் சமீபத்தில்வர, அதுகண்ட அந்தச்சார்ங்ககக்குஞ்சுகள் நடுங்கி மிகவுந்துக்கமடைந்து ஆபத்தினாலாகிய பயத்தினாலே மிகவுமிரக்கமுறத் தக்கதாய்க் கூவிச் சிலபேச்சுகள் பேசிக்கொண்டதுகள். அம்முனி குமாரர்களாகிய பட்சிக

னுள் முதற்குமாரனாகிய ஜரிதாரியென்பவன் தன்தம்பிகளைநோக்கி, உலகத்திலே புத்திமானாகிய புருஷன் தனக்கு ஆபத்துக்காலம் நேரிடுவதற்கு முன்னமே ஜாக்கிரதைப் படவேண்டியது. அப்படி செய்பவன்தான் ஆபத்து நேரிட்டபோதும் அதனாலே துன்பப்படமாட்டான். அப்படி யின்றி ஒருவன் தனக்கு நல்லகாலம் நேரிட்டிருக்கும் போது இப்படியே நமக்கு நல்லகால மிருக்குமேயன்றி கெட்டகால மெப்போதும் வாராதென்று நம்பியிருப்பானேயானால், அவன் பின்னுக்கு மிகுந்ததுன்பத்தை யனுபவிப்பான். ஆகையால் நமக்கு முன்னமே ஆபத்துவரப் போகிறதென்று நிச்சயப்பட்டிருக்கிறது. அதனால் நாம் விசனப்பட வேண்டுவதில்லை. என்றுசொல்ல அதுகேட்ட இரண்டாஞ் சகோதரன் சாரிசிருஷ்டன் அண்ணனை நோக்கி, ஓ அண்ணலே! நீர்மிகவும் புத்திமானாகவும் தயிரிய சாலியாகவும் இருக்கிறபடியால் இப்போது நமக்கு நேரிட்டிருக்கிற பிராண ஆபத்தை யெப்படியாகிலும் தீர்க்கயோசிக்கவேண்டும். உம்மைக்கும்பிடுகிறேன். ஏனெனில்-ஒருகுலத்தில் ஒருவனே வியாபகனா யிருப்பானென்று சொன்னான். பின்பு மூன்றாஞ் சகோதரனாகிய ஸ்தம்பமித்திர னென்கிறவன் அவ்வண்ணனை நோக்கி, தகப்பனாரில்லாதவர்களுக்கு மூத்தவனன்றோ தகப்பன். ஆதலால் - ஆபத்தினின்றும் மற்றவரைக்காக்கவெண்டியகடமை அவனுக்கேயிருக்கின்றது. அப்படியிருக்க மூத்தவனுக்கே உபாயமொன்றுந் தோற்றாமற்போனால் இளையவன் என்னசெய்யமாட்டுவானென்று சொன்னான். பின்பு கடைப்பிள்ளையாகிய துரோணனென்கிறவனும், ஓ! ஓ! இதோ நாமிருக்குமிடத்திற் சுவாலைகளாகிய நாவுகளை நீட்டி யாவையும் புசிக்குந்திறனைக்காட்டி வருகிறார் மிகவொளிவுபெற்று யாகங்களிற் சொரியும் அவிகளைப் புசிக்கும் மகானுபாவராகிய அக்கினிதேவரென்றுசொல்லினன். இதுகளையெல்லாங் கேட்ட மூத்தவனாகிய ஜரிதாரியானவன் அவ்வக்கினியைப் பார்த்துக் கைகூப்பி வணங்கித் தோத்திரஞ்செய்ய வாரம்பித்தான்.

ஓ அக்கினிதேவனே! நீதான் வாயுவுக்கு ஆத்துமாவா யிருக்கிறாய். சஞ்சீவிமுதலிய புற்பூடுகளுக்குத் தேகமாயிருக்கிறாய். தண்ணீர்களுக்குப் பிறப்பிடமா யிருக்கிறாய். சலத்துடன் பிறந்தவனாயு மிருக்கிறாய். மற்றும் பூமியாகவுமிருக்கிறாய். அன்றியுமுனது விசுவரூபத்தையும் ஏழு சுவாலைகளாகிய நாவையுங் கொண்டு எங்களைக் காத்தருளவேண்டும். ஓ அக்கினி பகவானே! நீயன்றி எங்களுக்கு வேறுகதியில்லை. உன்னையே சரணமடைந்தோம். நீதான் சூரியனாகவிருந்து உலகங்களை விழிக்கச்செய்கிறாய். உன்னையன்றிப் பிரகாசம் பொருந்தியவஸ்து வேறில்லை. நீயே தயைசெய்து எங்களை ரட்சிக்கவேண்டுமென்று ஆக்கினேய மந்திரத்தைத் தோத்திரஞ்செய்தான். பின்பு சாரிசிருஷ்டன் - ஓ தேஜோமயமாகிய கடவுளே! நீயே உலகத்திற் காதாரமா யிருக்கிறபடியினாலே இவ்வுலகங்களியாவும் உன்வசத்தாய் விளங்குகின்றன. ஆதலால் நீயே காத்தருள வேண்டுமென்று வேதத்தாற் போற்றினான். பின்பு ஸ்தம்பமித்திரன்-ஓ அனற்கடவுளே! நீயே அவிகளாகியும் அவைகளைப் புசிப்பவனாகியுமிருக்கிறாய். பெரியோர்கள் உன்னை ஒருவனாகவும் பலராகவும் பாவித்து யாகஞ்செய்கிறார்கள். நீயே சிருஷ்டித்தும் பிரளயகாலத்தில் அழித்துப் போடுகிறாய். நீயே ஆதேயமும் ஆதாரமுமாகவிருக்கிறாய். ஆதலால் எங்களை ரட்சிக்க வேண்டுமென்று ஏத்தினான். அதன்பின்பு துரோணன் - ஓ உலகத்திற்குக் காரணயாகிய தேவனே! நீ யெல்லாருடைய வயிற்றிலுமிருந்து அவர்புசிக்கும் ஆகாரங்களையெல்லாஞ்சீரணமாக்கி வளர்க்கிறாய். சூரியனாக இருந்து பூமியிலுள்ள ரசங்களையெல்லாங் கவர்ந்து மறுபடியும் மேகமாகி அவ்விரசங்களை வருஷித்து உலகத்தைக்காக்கிறாய். ஓஷதிகளும்-குளங்களும் ஆறுகளும் - சமுத்திரங்களும் - உன்னால் உற்பவிக்கின்றன. அதனாலன்றோ வருணதேவனும் ஆக்ஷிபெற்று மாக்ஷிமையுடன் இக்கடலில்வாசஞ்செய்கிறான். பொன்னிறமாகிய கண்களும் செவந்த கழுத்தும் கறுத்தசிகையு முடையவனாய் விளங்கா நின்ற தேவனே! நீ எங்கள் விஷயத்தில் மிகவும்பக்ஷமுடையவனாகி எங்களுக்குப் பிராணபயமில்லாம லிருக்கிற வரத்தைத் தந்தருளவேண்டும். உனக்கு அனேகந்தெண்டனிடுகிறேனென்று வாழ்த்தினான். இவ்விதமாகச் செய்யுந்தோத்திரங்களை அக்கினிபகவான்கேட்டுச் சந்தோஷப்பட்டு, ஞானத்தினாற் சிறந்தவனாகிய துரோணனைநோக்கி, ஓய் த்ரோணரே! நீர் மகாரிஷியாதலால் உமதுவாக்கில் வேதமணம் வருகின்றன. உங்களுக்குப் பயமில்லை. முன்னமே உங்களைவிட்டு விடும்படியாக உங்கள் தகப்பனாருக்கு வாக்குத்தத்தம் பண்ணி யிருக்கிறேன். உங்களை நான் எரிப்பதில்லை. நீங்கள் என்னைத் துதித்ததற்காக நான் என்னசெய்ய வேண்டுஞ் சொல்லுங்களென்று கேட்டான். துரோணன்-சுவாமி! இங்கே மிகவுங் கொடுமையுள்ள சில பூனைகளிருக்கின்றன. அவை தினந்தோறும் எங்களைப்பார்த்து உறுமி உபத்திரவப் படுத்து கின்றதுகள். அவைகளை நீர் சீக்கிரத்திற் புசித்துவிட வேண்டுமென்றனன், அது கேட்ட அக்கினிதேவன் அப்படியே அப்பூனைகளில் ஒரு சிறுகுட்டியைக் கூட விடாமல் எரித்து முன்போலச் சென்று காண்டவவனத்தை நோக்கி அழற்றுவதானான்.

இஃதிப்படி யிருக்க அந்த மந்தபாலமுனிவர் பிள்ளைகளைநினைந்து,தான் அக்கினியினிடத்தில் வரம் பெற்றிருந்த போதிலும் புத்திர வாஞ்சையினால் என்ன ஆகுமோவென்று விசனமுற்று லபிதையைப் பார்த்து, அடிபெண்ணே! என் பிள்ளைகள் மிகவுஞ் சிறுவராதலால் அவ்வனத்தில் அக்கினிப்பிரவேசிக்குமளவில் எழும்பிப்போகமாட்டாமல் இருக்கவும் இட-

மில்லாமல் தவித்துக்கொண்டு என்செய்கின்றனரோ?
அல்லது அந்த ஜரிதையானவள் யாது செய்யமாட்டு
வாள் ? குஞ்சுகளை வைத்துக் கொண்டு அவளெப்படி
தவிக்கின்றாளோ ? ஐயோ ! நான் தவஞ்செய்துபெற்
ற பிள்ளைகள் சாம்பராகிப் போயினரோ ? எரிந்து
கொண்டிருக்கின்றனரோ? அவ் வியசனத்தைச் சகிக்
கமாட்டாமல் என்பத்தினியுந் தீயில் விழுந்து போயி
னளோ ? என்னதுயரப் படுகிறார்களோ ? ஏன் நான
வர்களை விட்டு வந்தேன் ? மறுபடிகாண்பேனோகாண
மாட்டேனோ ஒன்றுந் தெரியவில்லையே:என்றுசொல்
லி, ஓ ஜரிதாரி ! ஓ ஜாரிசிருஷ்டா ! ஓ ஸ்தம்பமித்தி
ரா ! ஓ மகாநுபாவனாகிய துரோணா ! நீங்கள் எனக்
குப் புத்திரராகி இந்தக்கதியடைந்தீர்களே: உங்கள்
மனம் எப்படி துடிக்கிறதோ ? உங்களுடல் எவ்விதம்
பதைக்கிறதோ? என்று புலம்ப அதை லபிதைகேட்டு
மனதிற்பொறாமையோடுதன்கணவனைப்பார்த்து,ஓய்
முனியே ! நீர் பிள்ளைகளுக்காக மனஸ்தாபப் படவி
ல்லை. முன்னமே அவர்கள் ரிஷிகளென்றும் மகாநுபா
வர்களென்றுஞ் சொல்லியிருகிறீர் அன்றியும் அக்கி
னியைத்துதித்துப் பிள்ளைகளுக்கு யாதொரு தீங்கும்
நேரிடாம லிருக்கும்படி வரமும் பெற்றிருக்கிறீர். அ
ந்தத் தேவனும் சொன்ன வாக்குத் தவரமாட்டான்.
உமது பிள்ளைகளுக்கு அக்கினிபயங் கொஞ்சமேனு
மில்லை. இதெல்லா முமக்கு நன்றாய்த் தெரிந்திரு
க்கிறபடியினாலே நீர் பிள்ளைகளைக் குறித்து விசனப்
படக் காரணமில்லை. ஆனாலென்னைவிட்டு ஜரிதையிட
த்திற்குப் போக வேண்டு மென்பது கருதிப் பிள்ளைக
ளுக்காகப் புலம்புகிறவர்போல் மாயம்பண்ணுகிறீர்.
உமது வித்திலுதித்த ஞானவான்களாகிய பிள்ளைக
ள் தங்கள் தாயைக்காக்காம லிருப்பார்களோ ? இது
வெல்லாமல்ல. என்சக்களத்தியாகிய ஜரிதையைநினை
த்துக்கொண் டிப்படி புலம்புகிறீரே யல்லது வேறில்
லை. எனக்கு நன்றாய்த் தெரிகிறது. அவளிடத்தில்
எவ்வளவு ஸ்நேகமிருக்கிறதோ அதிற் பத்திலொரு
பங்கு என்னிடத்தி லில்லை. ஐயோ ! உம்முடைய ஆ
சையை நான்கெடுப்பானேன்? இப்படி மேலுக்கு உற
வாடுகிற புருஷனுடன்சேர்ந்து அனுபவிப்பதைவிடச்
சும்மாயிருப்பதே பெண்களுக்கு நல்லது. ஆதலால்—
நீர் உமது பிரியநாயகியாகிய ஜரிதையினிடத்திற்கே
போய்ச் சேரும். இனி யென்னைத் தீண்டவேண்டா
ம். நான் திக்கற்றவள்போல் எங்கேயாகிலு மிருக்கி
றேன். என்றுசொல்ல,அதைக்கேட்ட மந்தபாலமுனி
யானவர் - அடி லபிதாய் ! நீயென்னைக் காமமிகுதியி
னாற் பெண்களை மருவுகிறவனாக நினைக்கிறாய். அப்ப
டி நினையாதே: சந்ததிக்காக யிருக்கிறேனே யல்லது
வேறில்லை. அடி மூடத்தன முள்ளவளே ! பிள்ளைக
ளுக்குத் தொந்தரவு நேரிடுங்காலத்தில் நான் உன்
னுடனே சரசமாடிக்கொண் டிருக்கலாமோ ? கையி
லிருக்குங் கனியையெறிந்து மரத்திலிருக்குங்கனியை
த் தாவுவதுபோற் பெற்றபிள்ளைகளை நெருப்பிலிட்
டு வேறுபிள்ளையைப்பெற யத்தனிப்பேனோ ? அப்ப
டிசெய்வேனாகில் என்னைப்பார்க்கிலும் ஞானசூனியன்
இவ்வுலகத்தில் யாருமிருக்கமாட்டார்கள். உலகநிந்த
னையும்பெறுவேன். பரலோகவாசமு மிழப்பேன். இம்
மைச்சுகமுந்துறப்பேன். இவ்வாறுநான்கெட்டுப்போ
கவல்லவோநீசொல்லுகிறது.ஓகுரூரமனமுடையகோ
தாய்! அக்கினி தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிரு
ந்தாலும் அப்பெரியவனம் பற்றியெரியுமளவிற் சிறகு
முளையாத அக்குஞ்சுகளை அதில்விட்டுச் சும்மாயிரு
க்க மனந்துணியுமோ? சுவாலைவீசினாலும் போதுமே:
ஆதலால் நீ யென்னசொன்னாலுஞ்சரி நான் அவ்விட
ம்போவேன். உன்னிஷ்டம் என்னுடன் கூடவந்தால்
வா. அல்லது எங்கேயாவது போனாற் போ. என்று
சொல்லி அம்முனி காண்டவவனத்திற்கு வந்தார்.

இதற்குள்ளாக அக்கினியானவன் வனமுழுதுந்
தகித்துச் சாம்பராக்கியபின் ஜரிதையும் அவ்விடத்
துக்கு வந்து தன் குஞ்சுகள் பிழைத் திருப்பதைக் க
ண்டு மிகவும் பரிவுடனே ஓடிக் குஞ்சுகளையணைத்துக்
கண்ணீருகுத்து ஸ்தம்பித்து நிற்குமளவில், அந்த
மந்தபாலமுனியும் அவ்விடம்வந்து தனது மனைவியு
மக்களும் பிழைத்திருப்பதை நோக்கிப் பரிவினாற்ற
ளர்ந்து ஆச்சரியத்தாற் கிளர்ந்து நிற்கின்றார். அப்
போது அந்நான்கு குமாரரும் பிதாவைக்கண்டு, ஐயா!
தேவரீர் திருவடிகட்கு நமஸ்காரஞ்செய்கிறோமென்று
கூறித் தங்களுக்கு முளைத்திருக்கிற சிற்றிறகுகளுக்கு
ஞ் சிறு கால்களுக்குந் தக்கபடி யோடிவந்து நமஸ்கா
ரஞ்செய்தார்கள். இவ்வாறு வணங்கிய புத்திரரைக்க
ண்ட மந்தபால முனியானவர் மிகவுஞ்சந்தோஷப்பட்
டு, புத்திரப்பேற்றைவேண்டி உலகவின்பத்தையடை
ந்தவராதலால் அவர்களை ஆலிங்கனஞ்செய்து தடவிச்
சீராட்டி உச்சிமோர்ந்து தன்மனைவியாகிய ஜரிதையை
நோக்கிச் சில வார்த்தை பேச அவள் ஒன்றும் பதிற்
பேசாமலிருக்க மறுபடி யவளைப் பார்த்துச் சொல்லு
கிறார்: அடி என்காதலி ! இந்த மக்களுள் மூத்தவன்
எவன் ? இரண்டாவது எவன் ? மூன்றாவது எவன் ?
நான்காவது எவன் ? நான் மிகவும் அன்புடனேயும்
துக்கத்துடனேயுங் கேட்கிறேன். மறுமொழி யொன்
றுஞ் சொல்லாதிருக்கிறாய். அப்படி நீ யிருப்பதினா
லே என்மனம் மிகவும் பரிதாபமுறுகின்றது. என்னி
டத்தில் விசுவாசம் பாராட்டிப் பேசவேண்டு மென்று
அவளைப் பரிசித்தார். அந்த ஜரிதையானவள் - ஓய்
முனிவரே ! உமக்கு மூத்தபிள்ளை யாரானாலென்ன?
இரண்டாவது பிள்ளை யாரானா லென்ன ? மூன்றா
வது பிள்ளை யாரானா லென்ன ? நான்காவது பிள்
ளை யாரானா லென்ன ? இவர்களைப்பற்றி உமக்காக
வேண்டிய தொன்றுமில்லை. அப்படி யேதாகிலும் பி
ரயோசனமிருந்தாற் பேதையாயுஞ் சிறகுமுளையாக்
குஞ்சுகளை யுடையவளாயு மிராநின்றவென்னை ஒன்றி
யாய் இக்கானகத்தில் தனியேவிட்டுப்போய்ப் பயங்கர

மாகிய காலத்திலும் இப்படிப் பார்க்காம விருப்பி ரோ? முன்னம் எவளிடத்தில் மோகத்தினாலே இவ் வா றென்னை விட்டுப்போனீரோ அவளிடத்திற்கே இப்போதும் போகலாம். நான் அவளைப்போல் அழகும் சொருசுமுடையவளோ? அவளே உம்முடைய மனதிற்கு இனியவளென்று ஒறுத்தாள். அதுகேட்ட அம்முனிவர் - அடிபெண்ணே! நான் சந்ததிக்காகப் பெண்களை மருவவந்தவ னாகையாலும், நீ பிள்ளைகளைப் பெற்றிருந்த படியினாலும், அவளுடனிருந்தேன். அன்றியும் பெண்களுக்குக் குழந்தைகளைப் பார்ப்பதைவிடச் சந்தோஷம் வேறில்லை. ஆதலால் உன்னை விட்டுப் போனேன். நீயோ மகா பதிவிரதை யாயிற்றே: நீ யெல்லா மறிந்திருந்தும் புருஷன் விஷயத்திலிப்படி சந்தேகப்படலாமோ? இப்படித்தான் பூர்வத்தில் அருந்ததியானவள் சப்தரிஷிகள் நடுவில் விளங்கிக்கொண்டு மிகவும் பரிசுத்தமான கருத்துள்ளவராகிய வசிஷ்டரிடத்திலுஞ் சங்கைப்பட்டு, அதன்குறிப்பை யாவருக்குங் காண்பித்தாள். அதனாலே அவ்வசிஷ்டமுனிவர் கோபங்கொண்டு சபித்தார். அச்சாபத்தினாலேதான் இப்போதுங் கருநிறங்கலந்த செந்நிறமுள்ளவளாய், ஜனங்களுடைய கண்களுக்குத் தெரிந்துந் தெரியாமல் ஆகாசத்தில் நட்சத்திரமா யிருக்கிறாள். ஆதலால் நீமகாபதிவிரதையா யிருந்து, புருஷனுடைய கருத்தறியாமல் என்பேரிற்சங்கிப்பது நியாயமல்ல. மேலும் நான் பெண்போகம் விரும்பியவனல்லன். சந்ததியை மாத்திரம் விரும்பியவன். அன்றியும் பெண்டாட்டியினிடத்தில் விசுவாசம் வைப்பது தப்பு. ஏனெனில்-பிள்ளைபிறந்தாற் புருஷனை லட்சியஞ் செய்கிறதில்லை. அடி ஜரிதாய்! நீ நற்கதியடையும்பொருட்டு என்சொற்படி கேட்டுக்கொண்டு என்னுடன் கூடவேயிரு. என்றுசொல்லவே அப்பெண்மயில்போல்பவள் திடுக்கிட்டு நமது நாயகர்கருத்தை அறியாமற் சொன்னோமேயென்று நடுநடுங்கி நின்றனள். அக்கால் பிள்ளைகள் நால்வருந் தகப்பனாரைச் சரணஞ்செய்து, தாங்கள் தாயினிடத்திற் கோபிக்க வேண்டா மென்றார்கள். அம்முனிவரானவர் தமது பிள்ளைகளுடைய சத்குணங்களுக்குச் சந்தோஷித்து, என்னுடைய தவப்பயனாகிய பிள்ளைகளே! உங்களை யிவ்வாபத்துக் காலத்திற் காக்காமல் விட்டுப்போனேனென்று நீங்கள் நினைக்கவேண்டாம். ஏனென்றால்- இவ்வனத்தைக் கொளுத்த வரும்போதே அக்கினிபகவானை நான்கண்டு துதித்து உங்களைக் காக்கும்படி வேண்டிக்கொண்டேன். அதற்கு அப்படியேயாகட்டுமென்று ஒப்புக்கொண்டார். அந்தத்தேவன் வாக்குத் தவிரமாட்டாரென்றும், உங்கள் தாயார் மகாபதிவிரதை யாகையால் அவளாலே அக்கினி ஜெயிக்கப்படுமென்றும், நீங்கள் என்தவப்பய னபடியினாலே வேதவாக்கியங்களைக் கொண்டு துதிசெய்து தப்பித்துக் கொள்ளுவீர்களென்றும் நிச்சயம்பண்ணி நானிவ்விடம் வராமலிருந்தேன். ஆனதுபற்றி என்னிடத்தில் நீங்கள் இந்த விஷயத்தில் யாதொரு விகற்பமொன்றும் நினைக்கவேண்டாம். இனி யிவ்விடத்தில் நாமிருக்கக் கூடாது. அப்பாற்போவோம் வாருங்களென்று சொல்லிப் பெண்சாதி பிள்ளைகளை யழைத்துக்கொண்டு மந்தபாலமுனிவர் வேறிடம்போய்ச் சேர்ந்தார்.

கிருஷ்ணார்ச்சுனர் தேவேந்திரனிடத்தில் வரம்பெற்று மீளுதல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இவ் விதமாகச் சார்ங்கர் - மயன் - அசுவசேனன் - என்னு மிவர்களைத்தவிர மற்றெல்லாச் செந்துக்களையும் செடி - கொடி - மரம் - புல் - கல் - முதலான தாவரங்களையும் அக்கினிதேவன் நன்றாய்ப் பட்சித்து, உதிரம் - ஊனீர் - முதலானவைகளைக் குடித்துத் திருப்தியடைந்து, மகா சந்தோஷத்துடனே கிருஷ்ணார்ச்சுனர்களுக்கு முன்வந்து, ஓ மகாநுபாவர்களே! உங்களுடைய சகாயத்தினாலே எனதிஷ்டம் நிறைவேறிற்று. என்று புகழ்ந்துகொண்டிருக்கிறான். அத்தருணத்தில் தேவேந்திரனானவன் சகல தேவகணங்களோடுங்கூட வானத்தினின்றும் இறங்கிவந்து, ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியையும் அர்ச்சுனனையும் பார்த்து, ஓ புருஷசிங்கங்களே! நீங்கள் லோகோபகாரார்த்தமாக அவதரித்தவர்க ளாகையாற் சகலமான தேவாசுரர்களையும் வென்று லோகத்துக்கு மிகவும் விரோதமாயிருந்த இவ்வனத்தை அக்கினியைக்கொண் டழித்தீர்கள். ஆகையால் உங்களுடைய பலபராக்கிரமங்களுக்கும் - தைரிய சாமர்த்தியங்களுக்கும் - தரும நிலைக்கும் - மிகவும் சந்தோஷப்பட்டேன். உங்களுடைய இப்படிப்பட்ட நற்குணங்களைக் காண்பதற்காகவே நான் யுத்தஞ்செய்தேன். இப்போது உங்களுக்கு நல்லவரங்கள் கொடுக்கவேண்டுமென்று கருத்துகொண்டிருக்கிறே னாகையால், இஷ்டமாகிய வரங்களைக் கேளுங்களென்று சொல்லினன். அர்ச்சுனனானவன் வெகு பயபக்திகளுடனே வணங்கிக் கைகூப்பிக்கொண்டு, ஓ ஐயனே! ஓ என்பிதாவாகிய தேவராஜனே! என்னிடத்தில் இவ்வளவு பரிவுடனே நீர் வரமளிக்க வந்தமையால் மிகவுந்தன்னியனானேன். தேவரீர் திருவாய்மலர்ந் தருளியபடி எனக்குப் பாசுபதாஸ்திரத்தையும், மற்றும் சிரேஷ்டமாகிய அஸ்திரங்களையுங் கொடுத்தருள வேண்டுமென்று கேட்டான். இந்திரனானவன். ஓ என்மகனே அர்ச்சுனா! நானுனக்கு ஐந்திராஸ்திர முதலானவை கொடுப்பேன். பாசுபத அஸ்திரத்தையோ உனக்குச் சிவன்கொடுப்பார். எப்போது பகவானாகிய உருத்திரமூர்த்தியானவர் உன்னிடத்திற் கிருபைசெய்து தமது அஸ்திரத்தைக் கொடுப்பாரோ அப்போது தான் நானு முனக்கு ஆக்கினேய அஸ்திரங்கள் - வாய்விய அஸ்திரங்கள் - ஐந்திர அஸ்திரங்கள் - முதலிய எல்லா அஸ்திரங்களையுங் கொடுப்

பேன். ஏனெனில்-அப்போது தான் நீ இவ்வஸ்திரங்களை ஏற்றுக்கொள்ளத்தக்க தவப்பெருமை யுடையவனாகிறாய். அந்தக்காலம் எனக்குத் தெரியும். ஆகையால் நானே யுன்னை அழைப்பித்துக் கொடுப்பேனென்று சொன்னான். பின்பு கிருஷ்ணமூர்த்தி யானவர் இந்திரனைப் பார்த்து, ஓ இந்திரதேவனே! எனக்கு மற்றொருவரமும் வேண்டுவதில்லை. இந்த அர்ச்சுனனுடைய நேசம் நிலைபெற்றிருக்கும்படியான வரமொன்று கொடுத்தாற் போதும் என்றுசொல்ல இந்திரனும் அப்படியே யாகக் கடவதென்று சொல்லி அக்கினியினிடத்திற்கு வந்து, ஓ அக்கினிதேவனே! நீ நல்ல ஆஸ்ரயம்பெற்றபடியால் உன்னிஷ்டம் நிறைவேறிற்று. நீசெய்தகாரியம் நல்லதாகையால் எனக்குன்னிடத்தில் மனஸ்தாபமில்லை. என்றுசொல்லிமறுபடியுந் தனதிடமாகிய பொன்னுலகம்போய்ச் சேர்ந்தான்.

இவ்வாறு இருபத்தொருநாட்களிலே அக்காண்டவ வனத்தைத் தகித்த அக்கினிதேவனானவன் அர்ச்சுனனைப் பார்த்து, ஓ சற்குணத்திற் கிசைந்த பற்குனா! இந்தக் காண்டீவமென்னுந் தனுசினாலேயும்-அட்சயமாகிய தூணிகளினாலேயும்-வானரத்துவசமுடைய இந்தரதத்தினாலேயும்-சகலசத்துருக்களையும் நாசஞ்செய்து வாழப்போகிறாய். இனியெனக்கு விடைகொடுக்கவேண்டும். என்றுசொல்லிவிடைபெற்று அப்படியே ஸ்ரீகிருஷ்ணனையுந் துதித்து விடைபெற்றுச் சுவர்க்கலோகம்போய்ச் சேர்ந்தான். பின்பு அக்கினியினிடத்தில் விடைபெற்ற கிருஷ்ணார்ச்சுன ரிருவரும் மயனையுங் கூட்டிக் கொண்டு வேடிக்கையாய் சஞ்சரித்துக் கொண்டு வந்தவர்கள்: "மனிதர் வெங்கோடைதீர்க்கும் வசந்தமென்காலும் வேறு-துனித விரிளேங்கால்வேண்டுஞ் சோலையுஞ்சோலைவேண்டும்-புனிதநீர்த் தடமும்வேறோர் புதுமல ரோடைவேண்டும் - பனிதருமதியும் வேறோர் பான்மதி வேண்டுங் காலம்" என்று சொல்லும்படி யானதும், இன்றுணையாகிய கணவரைப்பிரிந்த மாதர்கள் துன்பத்தையடைய விவாகநாள்தொட்டு இடைவிடாது கணவரைத் தழுவிச் சரச சல்லாபத்தோடிருக்கு மாதர்கள் இன்பத்தை யடையும்படியானதும், ஆகாயமளவுமுயர்ந்த சோலைகடோறும் ஆண் வண்டுகளும் பெண்வண்டுகளும் ஊடல்நீங்கித் தேன்விருந்துண்டு ஆரவாரித்தலைக்கண்ட அழகிய கூந்தலையுடைய மங்கையர்யாருந் தங்கள் புருஷர்களிடத்தி லுண்டான ஊடல்களையு நீக்கிக்கொண்டு இன்புறத்தழுவும்படி யெண்ணினவர்களாய் மன்மதனுக்கு எங்குந்திருவிழாக்களைச் செய்யும்படி யானதும், தென்றிசைப் பெண்ணானவள் இருளைக்கெடுக்குந் தனது நாயகனாகிய சூரியனானவன் இதுவரையிற் றன்பாற் றழுவியிருந்து, இப்போது வடதிசைப் பெண்ணைத் தழுவினானென்று மயங்கிப் பெருமூச்சுவிடுந்தன்மைபோல் மலயமாருதம் வீசும்படியானதும், மேகங்கள் கவிந்து நித்திரைசெய்யும்படியாக உயர்ந்து தழைத்துத்தளிர்த்திருக்கின்ற மாமரங்களிலுள்ள குயில்களா லழைப்பவருகின்ற அனங்கராஜனது சேனைகளி னின்றெழும்பும் புழுதியைப்போலச் சோலைகள்தோறுமுள்ள வாசனை கமழ்கின்ற புஷ்பங்களில் வண்டுகள் பண்பாடிக்கொண் டிறங்கி மூக்கினாலுழுந்தோறும் அவ்வவற்றிலுள்ளமகரந்தங்களனைத்து மெழும்பும்படி யானதும், நெருப்பையொத்த இரத்தினாபரணங்களினொளிபாயும்படியான குசகும்பங்களையுடைய மங்கையரது கரியகூந்தலி னின்றும் வண்டினங்கள் படிந்து கிண்டுந்தோறும் வீழ்கின்ற பசியமலர்களைப்போலச் சோலைகடோறுமுள்ள பூஞ்செடிகளின் கிளைகடோறுமிறங்கிக் கோகிலங்கள் கூத்தாடுதலினால் வீழ்கின்ற புஷ்பங்களான் மூடப்பட்ட பூமியானது பொற் சீலைகள் விரித்த சயனங்களையொத் திருக்கும்படியானதும், கிளைகளிற் புஷ்பித்திருக்கு மலர்களினது குளிர்ச்சியும் வாசனையும்பொருந்திய மகரந்தப்பொடியி லாடிவருகின்ற ஆண்குயில்களைப்பார்த்த பெண்குயில்கள் புதுமணஞ் செய்து வந்தனவென்றாடி இளவாழையினது குருத்திற் சென்றொளிக்கும்படியானதும் ஆகிய இளவேனிற்காலமென்னும் வசந்தகாலத்தி னுல்லாசத்தை யநுபவிக்க வேண்டி வந்தவராகையால்; தங்களுடைய தேககாந்தி யுறைந்தமையால் நீலவண்ண முடையதுபோ லிராநின்றதாய், வெண்டாமரை - செந்தாமரை-வெண்குவளை - கருங்குவளை வெள்ளாம்பல்-செவ்வாம்பல்-முதலிய நீர்ப்பூவகைகள் எங்கணுநிறைந்துள்ளதாய், நாரை-அன்றில்-புறா-உள்ளான்-அன்னம்-நீர்க்கோழி-நீர்க்காக்கை - சக்கரவாகம்-கின்னரம்-கொக்கு-சுணலயம் -இவைமுதலாகிய பலவகைப்பறவைகள் எங்கணுநிறைந்திருக்கின்றனவாய், யானைகள் பொழிகின்ற கன்னமத முதலாகிய மூன்று வகைப்பட்ட மதங்களும்-குதிரைகளின் வாயிலிருந்து ஒழுகுகின்ற விலாழிகளுங் கலந்ததாய், தேவரம்பையர் வந்து ஸ்நானஞ் செய்யுந்தோறு மிறைந்துகிடக்கின்ற குங்குமாதிகள் கலந்த வாசனைப்பொடிகளும் - அவர்கள் எடுத்துத் தரிக்குந்தோறுங் கீழேவிழுந்து கிடக்கின்ற சந்தனம் கஸ்தூரி-செம்பஞ்சின் குழம்பு-கற்பகமலர்- முதலாகிய வஸ்துக்களும் எங்கு நிறைந்ததாய், நீல முதலாகிய ரத்னங்களும் முத்துக்களுங் கரையின் மேலுஞ் சலத்திற் றுள்ளும் [illegible] பிரகாசிப்பது-பாற சமுத்திர முதலாகிய பலசமுத்திரங்களும் ஒன்றாய்க் கலந்து பெருகிவந்ததுபோ லிருப்பதாய், பாலை-நெய்தல் - குறிஞ்சி - மருதம் - முல்லை - என்னு மைந்திணைப் பொருள்களும் ஆங்காங்கு தலைமயக்குற்றிருப்பதாய், சிருஷ்டிதிதிசங்காரங்களுக்குக் காரணமாகிய முக்குணங்களுந் தோற்றாநின்ற உருத்திரமூர்த்திக்குகந்தவராகிய மகாவிஷ்ணுவினுடைய மேனிபோன்றதாய், பலவிதமலர்களா லலங்கரிக்கப்பட்ட பூமிதேவியின் மயிர்ப்பின்னல் போன்றதாய், அன்னங்களுடைய சிறகுகளாற் பாதி மறைக்கப்படும் பிரவாகமுடைத்தா யிருக்கிற படியினாலே பாமசிவனுடைய

மேனியோடுகலந்தபார்வதியின் தேகம்போன்றதாய் விளங்காநின்ற இயமுனையாற்றினது கரையில்வந்து; அதன் சலத்தினுள்ளே தோன்றிய தாமரைவளையங்களானவை தேவலோகத்திலுள்ள ஐராவதமென்னும் யானைகளின் கொம்புகளைப்போலிருப்பதையும், அதன் சலத்தினுள்ளேதோன்றிய குதிரைகளின் சாயல்களானவை தேவேந்திரனுடைய உச்சை சிரவமென்னுங் குதிரைகளைப்போன் றிருப்பதையும், அதன் சலத்தினுள்ளே தோன்றிய வெண்டாமரைகளானவை ஆகாசத்திற்பிரகாசிக்குங் களங்கமற்ற பூரணசந்திரர்களை யொத்திருப்பதையும், அதன் சலத்தினுள்ளே தோன்றிய செங்குவளையரும்புகளானவை பவளக்குருத்துக்களையொத் திருப்பதையும், அதன் சலத்தினுள்ளே தோன்றிய நீலோற்பல மலர்களோடுங் கலந்து மலர்ந்த வெண்டாமரை மலர்கள் களங்கத்தோடு முதித்த சந்திரனைப்போன் றிருப்பதையும், அதன் சலத்தினுள்ளே விளங்குங் கொடிப்பாசிகளானவை வடவா முகாக்கினியின் புகையைப்போன் றிருப்பதையும், அதன் சலத்தினுள்ளே தோன்றிய தருக்களின் நீழல்களானவை மைநாகமுதலிய பலமலைகளையொத் திருப்பதையுங் கண்டவர்களாய்; அவ்வாற்றில் முன்னர் தம்மோடு ஜலக்கிரீடைசெய்து சென்ற அம்மங்கையர்களுடைய முலைத்தடங்களின் கற்பூரங்களெல்லாம் அவ்வாற்றி னலைகளினாற் கரைத்து ஒதுக்கப்பட்டனவோவென்று சொல்லத் தக்கவையாய் நுண்மையாயும் வெண்மையாயும் இராநின்ற மணற்பரப்புகளை நோக்கி வியந்து, அதில் விளையாடிய அந்தஸ்திரீகளுடைய மெய்யுறவினாற் பரிமளம் பொருந்தி விளங்காநின்ற சிறு மேடுகளிலே உட்கார்ந்துகொண்டு, அருகிலிருக்குஞ்சோலைகளில் உலவாநின்ற மந்தமாருதத்தினால் அதன் தோழனாகிய அக்கினிக்கு இவர்கள் பசிதீர்த்ததைப்பற்றிச் சந்தோஷித்து இவர்கள் கொண்டிருக்கும்விடாய் தீர்ப்பதற்காகத் தேன்றுளிகளையும் மலர்களையுந் தளிர்களையும் வீசப்பெற்றும், அச்சோலைகளாகிய மங்கையர்கள் கோங்கரும்புகளாகிய இளமுலைகளைச் சுமந்து பூங்கொடியாகிய இடையானது அசைய மாமரங்களிலுள்ள குயில்களின் தொனியாகிய இசையினால் வம்மின்களென்று இன்சொற்கூறிப் புன்னை மலர்களாகிய பொறிகளைச்சிதறி மெல்லிய தளிர்களாகிய கைகளினாற் கனிகளைத்தந்து உபசரிக்கப்பெற்றும் இருந்து; இவர்கள் பராக்கிரமமனைத்தையும் விளங்க உரைப்பதுபோலக் குயில்கள் கூவவும், அவற்றைக்கேட்குந்தோறுஞ் சிரக்கம்பிதஞ் செய்வதுபோலச் சோலைகளசையவும், அதிசயித்தார்ப்பதுபோல அன்றில்கள் சத்திக்கவுங்கண்டு வியந்து; கிரவுஞ்சம்-சக்கிரவாகம்-சாரசம்-இராஜஹம்சம்-முதலாகிய நீர்ப்பறவைகளெல்லா மிவர்கள்தேகநிறத்தை யவ்வாற்றின் வெள்ளமென்று கருதிக் களித்தொலித்துக்கொண் டனுசரித்துநிற்க, அதுகண்டு அவர்கள் நகைக்கும் நகையொளிகளைத் தாமரைகளினடிக்கொடிகளெனப்பிரமித்து அன்னங்கள் மூக்கினாற் கோத்தழயல, அருகிலிருக்கு மஞ்ஞைகளெல்லா மேனிகளைக் காளமேகங்களென்று நினைத்துச் சிறகுவிரித்தாட, அதுகண்டு அவ்வன்னங்களெழும்பிப் பறந்தோட, அதனாலாகாசமெல்லாம் வெண்டாமரை பூத்ததென்ன விளங்கவுங்கண்டு வெகுசந்தோஷத்துடனே விளையாடிக்கொண் டிருந்தார்கள். அப்படி சில நேரம் விளையாடியபின் மயனுடன்கூடப் புறப்பட்டு, அக்கினி தேவனாற் கொடுக்கப்பெற்ற தேரின்மீதேறி, பந்துக்கள் - சகோதரர்கள் - நகரத்தினர் முதலாகிய சகலஜனங்களும் எதிர்கொண்டுவரத் தமரகம்-முரசு-சங்கம் - மிருதங்கம் - முதலிய பலவித வாத்தியகோஷத்தோடு இந்திரப்பிரஸ்தம் போய்ச் சேர்ந்து, தருமபுத்திரர் முதலானோரைத் தண்டனிட்டு, தாங்கள் விலாசமாக யமுனையாற்றின்கரையிற்சென்றதும், அங்கே அக்கினிவந்து யாசித்ததும், அவனிஷ்டப்படி அக்காண்டாவனத்தை அவனுக்கு ஆகாரமாக்கியதும், தேவர்களை வெற்றிபெற்றதும், அவ்வக்கினிதேவனிடத்தினின்று தாங்கள் பரிசுபெற்றதும், மயனைக் காப்பாற்றியதும், இவைமுதலாகிய சரித்திரங்களையெல்லாஞ் சொல்லிக் களித்திருந்தார்கள்.

காண்டவதகனச் சருக்கத்தோடு,

ஆதிபர்வம் - முற்றிற்று.

ஸ்ரீருக்மணீ சத்தியபாமா சமேத ஸ்ரீவேணுகோபால பரப்பிரம்மணேநம:

ஸ்ரீமஹாபாரதம்

இரண்டாவது.

சபாபர்வம்.

கண்ணன்துதி.

பாண்டவர்கள் புரிந்ததவப் பயனாகி யவதரித்துப் பகைத்துமேன்மேன்
மூண்டவினை முழுவதுவு முனைதோறு முரண்முருக்கி மூகில்புகாமற்
காண்டவமுங் கனல்வயிற்றுக் கனறணிய நுகருவித்துக் காக்குமாறே
பூண்டருளெம் பெருமானைப் போற்றுவா ரெழுபிறப்பு மாற்றுவாரே.

சூதபுராணிகர் வாக்கியம்.

[ஓ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு ஆதிபஞ்சகத்தின் முதற்பாகமாகிய ஆதிபர்வத்தைச் சாங்கோபாங்கமாகக் கூறிய வைசம்பாயன முனிவரை ஜெனமேஜெய மஹாராஜன் பணிந்தெழுந்து, சுவாமி! பிரபஞ்சோற்பத்திமுதல் பூமிதேவி பிரஜாபாரந்தீரப்பெற்ற வரம் நிறைவேறத் திரிமூர்த்திகளாதிய தேவாசுரர்கள் பாரதவீரர்களா யுற்பவிக்கும் வரையிற் சூரியசந்திரவம்சத் தரசர்களுக்குநேர்ந்த விருத்தியழிவும், பின்னிச் சந்திரவம்சம் வேதவியாச ரனுக்கிரகத்தினாற் குருகுல வரசர்களாகப் பிறந்து அஸ்தினாபுரத்தி லரசியற்றிய திரிதராஷ்டிரன் - பாண்டு இவர்களால் விருத்தியடைந்ததும், அக்கால் இளவரசுபட்டம் பெற்றிருந்த பாண்டு சாபத்தாலிறந்ததும், அப்போது இவர்கட்கிருந்த பிள்ளைகள் நூற்றைவரிற் பாண்டுவின் பிள்ளைகளாகிய ஐவரைத் திரிதராஷ்டிரன் பிள்ளைகளாகிய நூற்றுவர் அந்தரங்கமாய்ச் சில தீங்கிழைக்கத் தெய்வச்செயலால் அவர்கள் அத்தீங்குகளி னின்றும் விடுபட்டு யாவரும் தனுர் வேதாதிகள் பயின்றதும், பின்பு கங்காபுத்திரனாகிய வீஷ்மருடைய பிரேரபணையினால் அப்புத்திரர் நூற்றைவரிற் சிரேஷ்டனாகிய தருமராஜனுக்கு இளவரசுபட்டங்கொடுத்த திரிதராஷ்டிரன் தனது புத்திரர் போதனையினால் அப்பாண்டவர்களை வாரணாவதத்தில் நிறுத்தியதும், அப்பால் துரியோதனன் அரக்குமாளிகை சமைத்து அவ்வைவரை அதிலிருத்தித் தீயிட அவர்க ளதினின்றுந் தப்பி வேத்திரகியத்தில் வேதியர் வடிவாகச் சென்று பராக்கிரமத்தோடு பாஞ்சாலன் புத்திரியாகிய திரௌபதியைத் திருமணஞ்செய்ததும், பின்பு இராஜ பட்டாபிஷேகத்தோடு இந்திரப்பிரஸ்தத்திற் குடிபுகுந்த அவ்வைவரும் நாரதமுனிவரிட்ட ஏற்பாட்டின்படி திரௌபதியைக்கூடி உபபாண்டவ ரைவரைப் பெற்றதும், அம்முனிவ ரேற்பாட்டை அனிச்சாசங்கற்பத்தினாற் கடந்த விஜயன் தீர்த்தயாத்திரைசென்று ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி யநுகூலத்தாற் சுபத்திராதேவியை மணந்து அபிமன்யுவென்னும் இராஜகண்டீரவத்தைப் பயந்ததும், இதுபோலவே வீமார்ச்சுனரிருவரும் இன்னும் சில உபபத்தினிமார்களைக்கூடி வெவ்வேறு புத்திரர்களை யீன்றதும், கிருஷ்ணார்ச்சுன ரிருவரும் அக்கினிதேவனுக்குக் காண்டவவனத்தை இரையாக்கியதும், அவ்வக்கினிதேவனாலும் தேவேந்திரனாலும் அர்ச்சுனன் பலவரங்களும் படைகளும் பெற்றதும் ஆகிய இச்சரித்திரங்களையெல்லாம் அவ்வவற்றிற்குரிய உபசரித்திரங்களோடுங் கேட்டு ஆனந்தபரவசத்தனாயினேன்: இப்பால் இரண்டாம் பர்வமாகிய சபாபர்வத்தையுந் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று ஜெனமேஜெயமஹாராஜன் அன்போடுங்கேட்க, வைசம்பாயனமுனிவர் சொல்லத்தொடங்கினார்.]

தேடிய வகலியை சாபந் தீர்த்ததாள், நீடிய வுலகெலா மளந்து நீண்டதாள்
ஓடிய சகடிற வுதைத்துப் பாம்பின்மே, லாடியுஞ் சிவந்ததா ளென்னை யாண்டதாள்.

முதலாவது,

இராஜசூயச் சருக்கம்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இப்படிக்குஉலோகோபகாரமாகியும் அதிசயங்களாகியுமிராநின்ற செய்கைகளையுடைய பாண்டவர்களும் கண்ணனும் கண்முதலாகிய இந்திரியங்களும் மனதும்போற் கலந்து களித்திருக்கு மளவில், காண்டவவன தகனத்தினின்றுந் தப்பிய அந்தமயனானவன் ஸ்ரீகிருஷ்ணன் முன்னிலையில் அர்ச்சுனனைப் பார்த்துக் கைகூப்பி வாய்புதைத்து ஒருவார்த்தைசொல்லத் துவக்கினான். ஓ மகானுபாவனாகிய பாண்டுகுமாரனே! நான்செய்த தீவினையினாலே அனற்சூழ்ந்த காண்டாவனத்தி லகப்பட்டு நடுநடுங்கி எவ்விதத்தினாலாகிலும் தப்பிப் போகவேண்டு மென்று முயற்சி செய்யும்போது, என்னைவிட்டுவிட மனதில்லாமல் அக்கினியானவன் கிருஷ்ணனைக் கண்காட்ட அவர் சக்கிராயுதத்தையேந்தி என்பேரிற் பாய்ந்து வரும்போது நீரன்றோ எனக்கு உயிர்தந்தீர்? இப்படிக்கு உயிரைக்கொடுத்த உமக்கு நானென்ன பிரதியுபகாரஞ்செய்யமாட்டுவேன்? ஆகிலும் ஏதேனு மொரு மரியாதையை என்னிடத்திற் பெற்று என்னைப் புனிதனாக்கவேண்டு மென்று சொல்லக்கேட்ட அர்ச்சுனனானவன், ஐயா மயனே! உமது சிநேகத்தினாலேயே நான் சகல மரியாதையையும் பெற்றதுபோலாயினேன். இனி எனக்குவேறுகைமாறுவேண்டாம். இப்போ திருப்பதுபோல் எப்பொழுதும் எங்களிடத்தில் அன்புவைத்திருக்க வேண்டியதேமுக்கியம். ஆதலால் நீர்சுகமாய் உமது இடத்தைப்போய்ச் சேருமென்றுசொல்ல, மயன் மறுபடியுஞ் சொல்லுகிறான்: ஓ மகாபுருஷனே! இவ்வாறுசொல்வது உமதுபெருமைக்குத் தக்கதேயானாலும், தேவர்களுக்கு விசுவகர்மாவென்பவன்போல் அசுரர்களுக்கு நான் சிற்பியாகிச் சகல சிற்பங்களிலும் வல்லவனாயிருப்பவனாதலால், உங்களிடத்தி லுண்டாகிய அன்பினால் ஒருவாசஸ்தானஞ்செய்யவேண்டுமென்று கருத்துகொண்டிருக்கிறேன். அதற்கு உங்களிஷ்டம் யாதோ அதனைச் சொல்லவேண்டுமென்று கேட்க, அர்ச்சுனனானவன்-ஐயனே! நீரெப்படி என்னாலே பிராணசங்கடத்தினின்றும் விடுபட்டதாய் நினைக்கிறீரோ, அப்படியே நான் உம்மை யொருவேலையுஞ் செய்விக்கலாகாதென்று நினைக்கிறேன். ஆகிலும் உமது சங்கல்பத்தை வீணாக்க மனமில்லாதவனாகியு மிருக்கிறேன். ஆதலால் ஸ்ரீகிருஷ்ணனுக்கு இஷ்டமாகியதில் எதையாகிலுஞ்செய்தால் அதுவே எனக்குமிகுந்த சந்தோஷத்திற்குக் காரணமாகுமென்ன, மயனானவன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து, சுவாமி கிருஷ்ணா! நான் தேவர் அசுரர் - இயக்கர் - கின்னரர் - கந்திருவர்- நாகர் - முதலாகிய யாவருக்கும் அசாத்தியமாகிய சிற்பங்களில் வல்லவன். ஆனதுபற்றி சிற்பிகளெல்லாம், அம்மா! இதென்னசிற்பம்? எந்தவுலகத்திலும் இச்சிற்பம்போல் யாம் கண்டதில்லையென்று ஆச்சரியப்படும்படியான சபாமண்டபமொன்று செய்துகொடுக்கவேண்டு மென்று கருத்துகொண் டிருக்கிறேன். ஆதலால் என்கருத்து நிறைவேறத் தங்கள் திருவுளத்திற் கிஷ்டமானதைக் கேட்கவேண்டுமென்ன, ஸ்ரீகிருஷ்ணனானவர் மயனைப்பார்த்துச் சொல்லுகின்றார்:

பாண்டவர்களுக்கு மயன் சபாமண்டபஞ் சமைத்துத்தரல்.

ஓ சிற்பிகளுக்கெல்லாம் தலைவனாகிய மயனே! என்னிஷ்டப்படி செய்யவேண்டுமென்று உமக்குமனதிருக்கிறபடியினாலே சொல்லுகிறேன்கேளும்: நமது தருமராஜனுக்கு நீர் சொல்லிய வண்ணம் ஒரு சபாமண்டபத்தை நிருமிக்கவேண்டும். அது எல்லாவுலகங்களின் சபைகளைக் காட்டிலும் அதிசயமா யிருக்கவேண்டும். தேவராவது அசுரராவது அதைப்போற் செய்ய நினைத்தால் அது கூடாததா யிருக்கவேண்டும். அதில் தேவமாயா விசித்திரங்களும் அசுரமாயா விசித்திரங்களும் காணப்படவேண்டும். இப்படி சொல்லத் தரமில்லாத விசித்திரங்களோடு கூடிய சபையை நிருமியுமெனவே அந்தமயனானவன் மிகுந்த சந்தோஷத்துடனே அப்படியே செய்கிறேனென்று அங்கீகரிக்க, இச்செய்தியை உதிஷ்டிரருக்குச் சொல்லி இந்தமயனையுங்காட்ட, அவரு மயனைமிகவுங்கொண்டாடிச் சபையை நிருமிக்கும்படி கட்டளையிட்டார். அவர் மொழியைக்கேட்ட அந்த அசுரத்தச்சன்சொல்லுகிறான்: முற்காலத்தில் விருஷபருவனென ஒரு அசுரராஜனிருந்தான்! அவன் தனதுதோள்வலியினாலே சகலமானபேர்களையும் ஜயித்துக் கப்பமாகக்கொணர்ந்த நட்சத்திரம்போ லொளிவீசாநின்ற பலமணிக்கூட்டங்கள் விந்துவென்னுந் தடாகத்திற் கிடக்கின்றன. அவையாவும் இச்சபைக்கு உபயோக மாகவேண்டுமென்று சொல்லி மலைகளைக்காட்டிலு முறுதியுள்ள தோள்களுடைய மல்லர்கள் அனேகரைக்கொண்டு அந்தநவரத்தினங்களைக் கொண்டுவரச்செய்து, பெரியோர்களியற்றிய ஜோதிடப்பிரகாரம் நல்லமுகூர்த்

 (இந்திரபிரஸ்தத்தில்தருமராஜன்கொலுச்சபை) (REGISTERED-COPY-RIGHT.)

(சபாபர்வம்-உ-வது-பக்கம்.)

தத்திலே சபாமண்டபம் நிருமிக்க ஆரம்பித்தான். அச்சபை நிருமித்தவிதமும் அதின்சிறப்பும் ஆதிசேஷனுக்குஞ் சொல்வ தரிதாயிருக்கும். ஆனாலும் கொஞ்சம் சொல்லுகிறேன் கேளும்.

பசும்பொன்னினாற் சுவர்கள்செய்து, அவைகளின்பேரில் ஏழடுக்குமெத்தைகள்கட்டி, மரகதரத்தினங்களால் தூண்கள்செய்து வரிசையாய்நிறுத்தி, சிறந்தபவழத்தினா லுத்திரங்கள் பரப்பி, மாணிக்கங்களினாற் கொடுங்கைகள்புரிந்து, வைரங்களினாற்சிகரங்களமைத்து, நீலகோமேதக புஷ்யராகங்களினாற் கதவுகளும் வாசற்படிகளும் நிருமித்து, நவமணிகளாற் சுவர்களை விசித்திரமாக இழைத்து, வைடூரியங்களினாலே சாளரங்கள்செய்து,தேவவிமானம்போலே ஆகாயத்தை யளாவி நிற்கும்படியாகவும் தேவேந்திரனுடைய சபையாகிய சுதர்மையிலு மிதுவேமுதன்மையென்று சொல்லும்படியாகவும் பலசிறப்புகளமைத்துப் படிகங்களினாலே தளவரிசைகள்திருத்தி, அதில் நீரில்லாவிடமெல்லாம் நீரோடுவதுபோலவும் -நீர்தங்குமிடமெல்லாம் நீரில்லாதனபோலவும் பலவிசித்திரங்க ளேற்படுத்தி, பலவாசல்களும் - பலமண்டபங்களும்-பல சாலைகளும் - பலசோலைகளும்-பலதடாகங்களும் - பலவாசஸ்தானங்களும் - பலவறைகளுஞ்செய்து, அவைகளிலெதிற்பிரவேசித்தாலும் பிரமைவரும்படியாகவும் - போனவழி வந்தவழிதெரியாமற் போகும்படியாகவும் - சிலவிடங்களில் மேடுகள் பள்ளமாகவும்- சிலவிடங்களிற் பள்ளங்கள் மேடாகவுந் தோற்றுமாறியற்றி, சிலவிடங்களிற் பகலிரவாகவும் - சிலவிடங்களில் இரவுபகலாகவும் - சிலவிடங்களிற் கார்காலம் கோடைகாலமாகவும் சிலவிடங்களிற் கோடைகாலம் கார்காலமாகவும் காலப்பிரமைவரும்படி யமைத்து, சிலவிடங்களில் உயரத்திலிருப்பவர்க்குத் தாழவிருப்பதுபோலவும்- சிலவிடங்களில் தாழவிருப்பவர்க்கு உயரத்தி லிருப்பது போலவும் தோற்றச்செய்து, சோலைகளில்லாவிடம் சோலைபோலவும் -சோலையிருக்குமிட மஃதில்லாததுபோலவும் - பலருங்கண்டு அதிசயிக்கத்தக்க இவ்விதவிசித்திரநிருமாணங்களுடனேசெய்த அச்சபாமண்டபமானது கோடிசூரியப்பிரகாசமாய் ஆயிரங்கண்களுடைய தேவேந்திரனுக்குங் கண்கள் போதாதென்னுங் குறைவுண்டாக்கும்படியான சீர்மைபொருந்திச் சகலசவுக்கியங்களுக்குங் காரணமாய் மகாலட்சுமி விலாசமண்டபம்போல் விளங்கிற்று.

இப்படியாக மனோநிருமாணத்தினாலும், வேதமந்திர மகிமையினாலும், பிரமதேவனுடைய சிருஷ்டிசாதுரியத்தினாலும், பலகோடி தினங்கள் நிருமித்தாலும் முடியாத பேரழகும் - உயர்வும் - சிறப்பும் - தகுதியும் உடையதாய்ப் பதினாயிரமுழம் அளவுள்ளதாய்க் கொடிகள் முதலாகிய சகலவலங்காரமும் பொருந்தியதுமாகிய அப்பெரிய சபாமண்டபத்தைப் [illegible] நிருமித்து ஸ்ரீகிருஷ்ண தேவருக்கும் பாண்டவருக்குங் காண்பிக்க, அவர்கள் அளவில்லா வானந்தக்கடலி லாழ்ந்துநிற்க, மயனானவன் வீமசேனனுக்கு மகாசிறப்புப்பொருந்திய ஒரு தண்டாயுதமும் அர்ச்சுனனுக்கு வெண்மையாகிய சங்குங்கொடுத்தான். பின்பு உதிஷ்டிரர்முதலாகிய பாண்டவர்கள் திரௌபதியுடன்கூட ஸ்ரீகிருஷ்ணன்சொற்படி நல்ல முகூர்த்தத்திற் பிரயாணமாகி சகலகலைகளுங் கற்று வல்லவராகிய அனேகம்பிராமணர்கள் சொஸ்திவாசனஞ் சொல்லிக்கொண்டு சூழ்ந்து வரவும், பலவாத்தியங்கள் கணகண வென்று முழங்கவும், கணிகைமாதர் தாம்தாமென்று நாட்டியமாடவும், சேவகரனைவரும் ஜயஜய வென்னவும், சதுரங்கச் சேனைகளுடனே நகர்வலம்வந்து, அச்சபா மண்டபத்திற் பிரவேசித்துப் பிராமணருக்குப் பல தானங்கள் வழங்கி, அவர்களால் ஆசீர்வாதங்களைப் பெற்று, இஷ்ட தேவதைகளைப் பூசித்து, யாவருக்கும் விருந்திட்டு மயனுக்கும் வெகுமானங்கள் பலசெய்து வாழ்ந்துகொண் டிருந்தார்கள்.

இப்படிசிலநாள் போயினபின் கிருஷ்ணன்காண்டவப் பிரஸ்தத்திற்கு வந்து நெடுநா ளானபடியினாலே தமது தகப்பனாரைப் பார்க்க வாஞ்சைகொண்டவராய்த் துவாரகாபுரிக்குப் போகநினைத்து உதிஷ்டிரரோடு இச்சேதிசொல்லிப் பின்புதமது நல்லத்தையாகிய குந்திதேவியி னிடத்துக்குவந்து நமஸ்காரஞ்செய்து செலவு பெற்றுக்கொண்டு, தன் தங்கையாகிய சுபத்திரையி னிடத்துக்குவந்து அவளால் நமஸ்காரஞ் செய்யப்பட்டு அவளுக்கு நன்மையும் இனிமையுந் தரத்தக்க சிலவார்த்தைகளைச் சொல்லிச் சமாதானப்படுத்தி, அந்தச் சுபத்திரை பரிவுடன் சொன்ன வார்த்தைகளையுங்கேட்டு சந்தோஷித்துப் பின்பு திரௌபதியி னிடத்துக்குவந்து அவளாலும் நமஸ்காரஞ் செய்யப்பட்டு அவளிடத்திலும் நல்ல வார்த்தைசொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு, பாண்டவர்களின் புரோகிதராகிய தவுமிய முனியைக் கண்டு நமஸ்காரஞ்செய்து விடைபெற்றுப் பாண்டவரையுங்கண்டு வெகுசமாதானங்கள்சொல்லி விடைபெற்று மகா யோக்கியர்களாகிய அனேகம் வேதியர்களுக்குப் பலதானம்வழங்கிப் பூசித்து, கந்த புஷ்பாக்ஷதைகள் முதலாகிய சுப வஸ்துக்களோடுங்கூட அரண்மனையி னின்றும் வெளியில்வந்து, சைனியம்-சுக்ரீவம்-மேகபுஷ்பம் - வலாகம் - என்னும் நான்கு குதிரைகள்கட்டிக் கருடக்கொடியுடனே மகாப்பிரகாசமாய்விளங்காநின்ற திவ்வியரதத்தின்பேரி லேறினார். அப்பொழுது கிருஷ்ண னுடைய பிரிவாற்றாமையினாலே பாண்டவர்கள் சோர்ந்து தயங்கிநிற்க, கிருஷ்ணன் அவர்களுக்கு வெகுசமாதானஞ் சொல்லியுங் கேளாமல் இராஜராஜேஸ்வரரான உதிஷ்டிரர் கிருஷ்ணனுடைய தேரின்பேரி லேறித் தாருகனென்னுஞ் சாரதியைக் கீழிறங்கச் செய்து தாம் அங்குட்கார்ந்து

குதிரைகளின் கடிவாளத்தைத் [illegible] யுங் கையெடுத்துச் சாரத்தியஞ் செய்தார். அர்ச்சுனனும் தேரிலேறிப் பின்புறத்தில் நின்றுகொண்டு, பொற்காம்பு பூண்டிருக்கிற இரண்டு வெண்சாமரங்களை இருகையினுமேந்தி வீசினன். வீமசேனனும் நகுலசகாதேவர்களும் இரதத்தின் பின்புறத்திற் சென்றார்கள்.

இவ்வாறாகப் பாண்டவர்களு மற்றுஞ் சிலருஞ் சூழ்ந்துவர ஸ்ரீகிருஷ்ணன் அரைக்காதவழி தூரஞ் சென்று தேரினின்றுமிறங்கி உதிஷ்டிரரையும் வீமசேனனையும் தெண்டனிட்டு, அர்ச்சுனனை ஆலிங்கனஞ்செய்து நகுல சகாதேவர்களால் நமஸ்காரஞ் செய்யப்பட்டுப் போய் வருகின்றேனென்ன, உதிஷ்டிரர் கண்களில்நீர் ததும்பக் கண்ணனை ஆலிங்கனஞ்செய்து மறக்கவேண்டாம் கிருஷ்ணவென்று சொல்லி வருத்தப்பட்டு விடைகொடுத்தார். வீமசேனனும் அப்படியே விடைகொடுத்தான். அர்ச்சுனன் பின்னுஞ் சில தூரஞ்சென்று,கிருஷ்ண! உமது ஆதரவினலேதான் நான் உயிரைவைத்துக்கொண் டிருக்கிறேன். இதை விட வேறேநான் என்னசொல்ல மாட்டுவேனென்று கண்ணீர் சொரியும்படிநிற்க, ஸ்ரீகிருஷ்ணனும் - அர்ச்சுன! பயப்படாதே. நான் எங்கேயிருந்தாலும் சமையத்தில் வந்துசேருவேன். நீ எனக்குச் செலவுகொடு வென்றுசொல்லி அவனிடத்திலும் இரட்டைப் பிள்ளைகளிடத்திலும் செலவு பெற்றுக்கொண்டு, வெகு வேகமுள்ள ரதத்தோடுந் துவாரகா பட்டணஞ் சேர்ந்து, தாய் - தகப்பன் - அண்ணன் - முதலான பேர்களை நமஸ்காரஞ்செய்து, தம்பிகள் பிள்ளைகள்- முதலானபேர்களை யாசீர்வதித்து, யாவராலும் புகழப்பட்டுச் சுகமாயிருந்தார். பாண்டவர்களும் கிருஷ்ணன் தேர் தெரிகிறவரையிற் பார்த்திருந்துமறைந்த மாத்திரத்திலே திரும்பித் தங்கள் நகரஞ்சென்று க்ஷேமமா யிருந்தார்கள். மயனும் மகாவிசேஷமாகிய சபையை நிர்மாணம் பண்ணிப் பாண்டவர்களாலே மிகவும் பூசிக்கப்பட்டு, அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தனது யதாஸ்தானம் போய்ச் சேர்ந்தான்.

நாரதமுனிவர் தருமராஜன் சபைக்கு வருதல்.

இப்படிக்கிருக்க.ஒருநாள் அந்தச் சபாமண்டபத்திலே தருமராஜன் தம்பிமார்களுடனே கூடிச் சிங்காதனத்தி லிருந்து ராஜகாரியம் பார்த்து வரும்போது, அச்சபையில் அசிதன் - தேவலன் - சத்தியன்- சர்ப்பமாலி-ஆர்ச்சிகன் - சுமித்திரன் - மைத்திரேயன் - வியாசன் - சுகன் -முதலிய பல முனிவர்களும், அங்கம் - வங்கம்-கலிங்கம் - காம்போசம் - கரூசம்- முதலிய ஐம்பத்தாறு தேசத்தரசர்களும், மற்றுமனேகம் பிராமணர்களும், மந்திரிமுதலானபேர்களும், சங்கீதம் - பரதம் - இவைகளில் வல்லவராகிய பலரும், பாசாலி [illegible] ஜனங்களும் சூழவிருந்தார்கள். இவ்வாறு கோலாகலத்துடனேயும் மகா விபவத்துடனேயும் சபாமண்டபத்திற் கொலுவீற்றிராநின்ற மகாராஜராஜேஸ்வரராகியும் - சகலதருமங்களையு மறிந்தவராகியும் - சத்தியந் தவறாதவராகியும் - நீதிபொருந்திய நடக்கையுடையவராகியுமிராநின்ற தருமராஜனைக் காண வேண்டுமென்று முற்றுமறிந்த முழுஞானியாகிய நாரதமகாமுனிவர் ஆகாயத்தினின்றும் இறங்கி அந்தச் சபாமண்டபத்துக்கு நேரில்வர, அதனைக்கண்ட உதிஷ்டிரர் சகலபரிவாரங்களோடும் எழுந்து எதிர்கொண்டு சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து சபைக்கு அழைத்துவந்து திவ்யாசனத்தில் உட்காரவைத்து, அர்க்கியபாத்தியங்கள் முதலாகிய சகலவுபசாரங்களு நடாத்திப் பாததீர்த்தஞ் சேர்த்துப் புரோட்சணமுஞ் செய்துகொண்டு அம்முனிவர்க்கெதிரே வணக்கத்துடனிருந்தார்.

இவ்வாறாகப் பூசிக்கப்பட்ட நாரதமுனியானவர் வெகுசந்தோஷத்தோடும் பாண்டவரைப் பார்த்து, ஓ பாண்டுபுத்திரரே! உமக்கு இராச்சியம் முதலாகிய காரியங்களிலே க்ஷேமமா? ஒரு குறைவுமின்றி தருமம் நிறைவேறி வருகிறதா? என்று கேட்க உதிஷ்டிரரானவர் - சுவாமி! அடியேனிடத்தில் தேவரீருக்குப் பரிபூரணமாய் அனுக்கிரக மிருக்கிறபோது எந்தவிஷயத்தில்தான் குறைவுநேரிடும்? ஆதலால் எனக்கு சகலவிஷயத்திலும் க்ஷேமமேயன்றி வேறில்லை. மேலும் எனக்கு மகத்தாகிய நன்மைக்குக் காரணமன்றோ தேவரீ ரிவ்விடம் எழுந்தருளியது. வீணையினது இசையினலே மிகச் சிறப்புப்பொருந்திய இனிமையென்னு மமுதத்தையுண்டாக்கிக் கடலிற்பிறந்த அமுதத்தினிடத்திலே தேவர்கட்கு வெறுப்புவரச்செய்து, மானேந்தி விளங்காநின்ற திருக்கரமும் சந்திர னுலவாநின்ற சடாடவியும்பெற்றுத் திருகூத்து புரியாநின்ற பரமசிவனுடைய நாட்டியத்துக்குச் சரியாக இசைபாடாநின்ற தத்துவக்கியானியாகிய நாரதமுனிவரே! தேவரீர்வந்தமையாற் பிரமதேவன் அனுக்கிரகம் செய்யும்படியான தவத்தை என்போல் இவ்வுலகில் யார்தான் பெற்றிருக்கிறார்கள்? ஓதேவமுனித்தலைவனே! இன்றுதான் அடியேன் பிறவி பயன்பட்டதென்று கண்களி லானந்தபாஷ்பமும் தேகத்தில் மயிர்க்குச்சுமாக் கைகூப்பிச்சொல்லினர். அதுகேட்ட நாரதர் உதிஷ்டிரர் முதலானேரைப் பார்த்து இதனைச் சொல்லுவதானர்:

ஓ மகா ராஜகுமாரர்களே! நீங்கள் வெகு தருமவான்களும்-நீதிமான்களும்-சாக்ஷாத் நாராயணமூர்த்தியாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய அனுக்கிரகம்பெற்றவர்களு மானதால், உங்களுக்கு யாதொருகுறைவு நேரிடமாட்டாது. மிகுந்தமேன்மையுங் கீர்த்தியுமடைவீர்கள். என்றுசொல்லக்கேட்ட உதிஷ்டிரர்-சுவாமி!

சந்தோஷமாச்சுது. தேவரீர் பூலோகம் முதலாகிய மேலேழு லோகங்களையும் அதலலோக முதலாகிய கீழேழுலோகங்களையும் நன்றாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற மகானுபாவராகையால், இந்தச்சபைக்குச்சரியாகிய சபையை அல்லது உயர்ந்தசபையை எங்கேயாகிலுங் கண்டதுண்டா? அப்படிக்கிருக்கும் பக்ஷத்தில் தேவரீர் அதை அடியேனிடத்திற் கிருபைசெய்து சொல்லவேண்டுமென்ன அம்முனிவரும் - ஓ தருமராஜனே! ஆம் நான்சகல லோகங்களிலுஞ் சஞ்சரித்து எல்லாச்சபைகளையுங் கண்டிருக்கிறேன். ஆனால்மனிதருடைய சபைகளில் இப்படிப்பட்ட சபையை நானெங்குங் கண்டதில்லை. தேவலோகங்களில் இந்திரன் - இயமன் - வருணன் - குபேரன்-முதலான பேர்களுடைய சபைகளிருக்கின்றன. அன்றியும் பிரமதேவனுடையசபையுமிருக்கின்றது. இவைகளையெல்லாங் கேட்க அபிப்பிராயமிருந்தாற் சொல்லுகிறேனென்ன தருமபுத்திரர்-சுவாமி ! அவசியம் அருளிச்செய்ய வேண்டும். அடியேனுக்கும் இச்சபைதனி லிராநின்ற யாவருக்கும் அவற்றைக்கேட்க மிகவிருப்ப மிருக்கின்றதென்று சொல்லவே, நாரதர் அச்சபைகளின் சிறப்பைச்சொல்ல வாரம்பித்தார்.

இந்திரன் சபைச் சிறப்பு.

ஓ தருமபுத்திரனே ! கேளும்: தேவலோகத்தில் தேவேந்திரனுடைய சபையொன்றுண்டு. அதற்குச் சுதர்மையென்றுபேர். அது நூறுயோசனை யகலமும், நூற்றைம்பதுயோசனை நிகளமும், ஐந்துயோசனை உயரமும் உள்ளதாய், ஆயிரங்கிரணங்கள் பரப்பிக்கொண்டிராநின்ற சூரியன்போற் பேரொளிபெற்று விளங்கிக்கொண்டிருக்கிறது. அது இந்திரனுக்கு வேண்டுமிடத்துக்குப் போகும்படி ஆகாசத்திற் சஞ்சரிக்குந் திறமுடையது. மிகுந்த புண்ணியஞ் செய்தவர்களுக்கேயன்றி பாவிகளுக்கு எவ்வளவும் கிடைக்கத்தகுந்ததன்று. அதை இந்திரன் தன்சுதாவிலே நிருமித்தான். அதிற் பலவினோதங்களுமுண்டு. அவைகளை இப்படிப் பட்டனவென்று சொல்லக்கூடா. அதில் அனேகம் ஆசனங்கள் போட்டு நடுவில் ஓர்சிங்காசன மமைத்திருக்கின்றது. அதில் தேவேந்திரன் சசிதேவியுடனே கொலுவிருப்பான். அப்படி யவன் கொலுவிருக்குங்காலத்திற் சப்தமருத்துக்கள் - ஏகாதசருத்திரர் - துவாதசாதித்தர் - விசுவதேவர் - அசுவனிதேவர்கள் - சப்தரிஷிகள் - பிரகஸ்பதிதேவர்-சுக்கிராசாரியார்-முதலாகிய சகலபரிசனங்களும், கருடர் - கந்திருவர் - சித்தர் - சாத்தியர் - கின்னரர் - கிம்புருடர் - விச்சாதரர் முதலாகிய சகல தேவகணங்களும், பராசர் -பருவதர் - சாவர்ணி - காலவர்-சங்கர்-லிகிதர் - கவுரமுகர்-துர்வாசர் - தீர்க்கதபர்-யாக்ஞியவற்கியர் - உத்தாலகர் - சுவேதகேது - தாண்டியர்-பாண்டாயனி- அவிஷ்மான் - கவிஷ்டன் - சாண்டலியர் - கக்ஷிவான் - கவுதமர் - வைசுவானரர் - சம்வர்த்தர் - தேவஹோத்திரர் - வான்மீகர் - இவர்கள்முதலாகிய அனேகரிஷிகளும், இன்னுமனேகசுகர்மஞ்செய்த பேர்களோடு அரிச்சந்திரமகாராஜனும் சூழ்ந்திருக்க, ஒருபுறத்தில் - அரம்பை -ஊர்வசி-மேனகை-திலோத்தமை-முதலாகிய அப்சரஸ்திரீகள் நடனஞ்செய்ய, மற்றொருபுறத்தில் விசுவாவசு - சித்திரசேனன் - முதலாகிய கந்திருவர் யாழிசைத்துப்பாட, ஒருபாரிசத்தில் முனிவர்செய்யும் ஆசீர்வாத கோஷங்கள் முழங்க,மற்றொருபாரிசத்தில் அனேகர் அகசியஞ்செய்ய, ஒருபக்கத்தில் யோகிகளிருந்து வேதவேதாந்தங்களின் தாற்பரியங்களைப் பிரசங்கிக்க, மற்றொருபக்கத்திற் சப்தமேகங்களுமொன்றாய்க்கூடியிருந்து முழக்கமிட, ஒருபால் சிரத்தை - மேதை- என்னுந் தேவதைகள்போற்ற, மற்றொருபால் அனேகம் கன்மதேவர்கள்சூழ்ந்து ஏற்ற, அச்சபையானது மிகவுமனோரம்மியமாய் விளங்கும். அன்றியும் அச்சபையிலிருப்பவர்களுக்கு - மூப்பு - சோபம் - மோகம்-முதலாகிய துன்பங்களி லொன்றேனு மிராது. யாவரும் மிகவும் சிறந்த மணிகளிழைத்த திவ்வியாபரண வஸ்திரங்களினா லலங்காரம்பெற்று, திவ்வியகந்தம் திவ்வியமாலைகளை யணிந்து, மகாவினோதமாக இருப்பார்கள். இவ்வாறாக இந்திரன் சபையானது பூலோகத்திலிருக்கிறயாவரும் பலதவங்கள்செய்து, மறுமைப்பயனிதுவேயென்று கோரிவரும்படியாகிய சிறப்புடனே விளங்கிக்கொண்டிருக்கின்றது.

இயமன் சபைச் சிறப்பு.

ஓ தருமராஜனே! இந்திரசபையின் சிறப்புகேட்டீரன்றோ? இனி யமன் சபையின்சிறப்புச் சொல்லுகிறேன்கேளும். அந்த யமதர்மராஜனுடைய சபையானது நூறுயோசனை நிகளமும் அதற்குத்தக்க அகலமும் உயரமு முடையதாய்,தேசோமயமாய் நாற்புறங்களிலும் பரவாநின்ற ஒளியுடையதாய், மிகுந்த குளிர்மையுமில்லாமல் உயர்ந்த உட்டிணமு மில்லாமற் சமகுணமுடையதாய், விசுவ கர்மாவினாலே நிருமிக்கப்பட்டிருக்கின்றது. அச்சபையில் இருப்பவர்களுக்குப் பசி- தாகம்-மூப்பு -வியாதி - முதலான ஓர்துன்பமு முண்டாகிறதில்லை. எப்பொழுதும் சந்தோஷமுண்டாயிருக்கும். சகல பாக்கியங்களு மதிற்கிடைக்கும். அச்சபையில் யமதர்மராஜன் கொலு விருக்குமளவில், யயாதி-நகுஷன்-பூரு-மாந்தாதா-சோமகன்-திரசதச்யு - உரகன் - கிருதவீரியன் - சுருதசிரவன்-அரிட்டநேமி - சிம்மன் - கிருதவேகன் - கிருமி-நிமி-பிரதர்தனன் -சிபி - மச்சியன் - புருதுலாக்ஷன் - பிரகத்திரதன் - பார்த்தன் - மருத்தன் - சாங்காசியன் - சங்கருதி - துபருவன் - சதுராசுவன் - சதசுவன் - ஊர்மி-கார்த்த வீரியன் - பரதன் - சுரதன் - தபோரதன் - சுதன் - நிஷதன் - நளன் - திவோதாசன் -

அம்பரீஷன் - பகீரதன் · வியசுவன் - வக்கிரன் - பிருதுவேகன் - லோமபாதன் - அநரணியன்-லோஹிதன்-உத்தவன் - பிரிஷக்கு - விருஷசேனன் - க்ஷுபன்-வசுமனன் - புருகுச்சன் - ஆட்டுசேணன்- திலீபன்-புண்டரீகன் - சர்யாதி - சரபன் - அரிட்டன்-வேணு-துச்சந்தன் - சிருஞ்சயன் - சயன் - வாகஸ்வரி-விரேதன் - சுரந்தமன் - பாகிலிகன் - பிரத்தும்னன் - பிருது - கபோதரோமன் - சகதேவன் - அர்ச்சுனன் - ஸ்ரீராமன் - லட்சுமணன் - அளர்க்கன்-கட்சசேனன்-பரசுராமன் - நாபாகன் - சகரன் - பூரித்தும்னன் - பிருதாக்கியன் - சனகன் - புருசித்து - ஜெனமேஜெயன் - பிரமதத்தன் - திரிகர்த்தன்-உபரிசரன்-வீமன்-சாநு - காரபிருட்டன் - நயன் - பத்துமன் - முசுகுந்தன் - இந்திரத்தியும்னன் - பிரசேனசித்து - அஷ்டகன் - முதலாகிய அநேகம் ராஜரிஷிகளும், மச்யராஜர்களில் நூற்றுவரும், நீபரில் நூற்றுவரும், திரிதராஷ்டரில் நூற்றொருபேரும், எண்பது ஜெனமேஜெயரும், நூறு பிருமதத்தரும், நூறுவரியரும், நூறு வீஷ்மரும், நூறு வீமர்களும், நூறு பிரதிவிந்தியர்களும், நூறுநாகரும், நூறு அயரும், நூறுபராசரும், நூறு இரசகுசரும் சூழ்ந்துகொண் டிருக்கிறார்கள். அன்றியும் சந்தனு-உங்கள் தகப்பனாராகிய பாண்டு - உஷதத்கன் - சயத்திரதன் - இவர்களும் ஓர் புறத்திலிருந்தார்கள். இதுவுமல்லாமல் பிருஷ்தசுவனென்கிறராஜன் தனது மந்திரிகளுடன்கூட உட்கார்ந்து உபாசித்துக்கொண் டிருந்தான். அன்றியும் அனேக அசுவமேதங்கள் செய்த சதபிந்துவின் குமாரர்களாகிய அநேகரும் அந்த யமதர்மராஜனை உபாசித்துக் கொண் டிருக்கிறார்கள். இவருமன்றி, அகஸ்தியர்-மதங்கர் - காலன்-மிருத்தியு- முதலாகியபேர்களோர் புறத்திலும், யாகஞ்செய்தவரோர்புறத்திலும், தானசீலரோர்புறத்திலும், நீதிமான்களோர்புறத்திலும், தரும விருப்பமுள்ளவரோர்புறத்திலும், சத்யசந்தரோர்புறத்திலும், ஆபத்திற் காத்தவரோர்புறத்திலும், கோயில் - குளம் - சத்திரம் - சாலை - முதலிய தருமஞ்செய்தவரோர்புறத்திலும் வீற்றிருந்து புகழ்ந்துகொண் டிருக்கிறார்கள். மேலும் - சித்த புருஷரும் - யோகபுருஷம் - பிதுர்க்கணங்களும் - சோமபரும் - அக்கினிகளும் - காலசக்கிரரும் - ஓர்புறத்தில் துதித்துக்கொண் டிருப்பார்கள். தக்ஷணாயனம் - உத்தராயனம் - மிருத்தியு முதலிய காலசோதனை பண்ணும் கிங்கரர்கள் அளவற்றபேர் ஒருபக்கத்திலிருந்து துதிசெய்துகொண் டிருப்பார்கள். அச்சபையிலிருப்போர்களைக் கணக்கிலெண்ண முடியாது. இவ்வளவுபேர்களுக்கும் வெகுவிசாலமாகியவிடத்தைக்கொடுத்துக்கொண்டு விளங்காநின்ற அந்தச்சபையினருகில் நாகரத்தினங்களிழைத்து, மரகதத்தூண்கள் நாட்டி, வயிரங்களினுத்திரமும் கொடுங்கைகளுமமைத்து, பூரண சந்திரனுடைய சீதளகிரணங்களுக் கொப்பாகிய காந்திகளை வீசாநின்ற முத்துப்பந்தலின் கீழே சிங்காசனத்தின்பேரில் யமதருமராஜன்வீற்றிருந்து, ஆடல்பாடல் முதலிய விநோதங்களினாலே வெகு சந்தோஷமடைந்து, ஓர்கரத்திற் பாசமும் - ஓர்கரத்திற்கெதாயுதமுமேந்தி, பயங்கரமாகியரூபத்தைக்காட்டிப் பாதகரை நரகத்திற் றள்ளவும் - புண்ணியவான்களைத் தனது சபையிலிருத்தவும் - எதிரிற்கைகூப்பிநிற்குங்கிங்கரருக்குக்கட்டளையிட்டுக்கொண்டு, தருமதேவதை - சித்திரகுப்தன்-முதலானோர் புடைசூழ்ந்திருக்கத் தனதாளுகையைக் கிரமமாய்த் திரிலோகங்களிலும் செலுத்திவருகிறான்.

வருணன் சபைச்சிறப்பு.

கேளும் தருமபுத்திரா! வருணனுடைய சபையும் இயமனுடைய சபைக்குச் சமானமாகிய அளவுடையதாய், வெகு அழகாகியும் உயரமாகியுமிராநின்ற மதில்களினாலுங்கோபுரங்களினாலுஞ் சூழப்பட்டு, நவரத்தினங்களிழைத்து, எப்பொழுதும் வெயில் பரப்பி விளங்கிக்கொண்டிருக்கும். அது நீர்களுக்குள்ளே வெகு விநோதமாய் விசுவகர்மாவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதைச் சுற்றிலும் ஜீவரத்தினமயங்களாய் எக்காலமும் பூப்பதும் - காய்ப்பதும் - பழுப்பதுமாயிராநின்ற பலவகைப்பட்ட மரங்களையுடையசோலைகளிருக்கின்றன. அன்றியும் அச்சோலைகளில் மிகவினிப்பாயொலிக்காநின்ற பொற்சிறகுடைய பலவகைப் பட்சிகளும் களிப்புடனே சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. அச்சபையில்மற்றொருவிசித்திரமிருக்கின்றது. அஃதென்னவெனில் - அதினிடம் ரத்தினமயமாயிருந்தாலும், தொடும்பொழுது மலர் போல் மெதுவாகியும் குளிர்மையாகியுமிருக்கின்றது. இவ்வாறாகிய அச் சபைநடுவில் திவ்விய சிங்காசனத்தில் வருணதேவன் வீற்றிருந்து, கையிற்பாசமேந்தி, விலைமதிக்கக்கூடாத தரளங்களாற் செய்யப்பட்ட கிரீடகுண்டல கவசமுதலாகிய திவ்விய ஆபரணங்களைத்தரித்து, வெண்பட்டுடுத்தி, வெண்மையாகிய பூமாலைசூடி, வெள்ளைச் சாந்துபூசி, வெள்ளைக் குடைகளும் வெள்ளைச் சாமரங்களும் கையிலேந்திய அரம்பையர் சூழ்ந்திருக்கக் கொலுவிருப்பான். அப்போது அனேகந்தேவர்கள் நல்லவஸ்திர ஆபரணங்களையும்-திவ்வியசந்தன மாலை முதலானவைகளையும் தரித்து, மிகுந்த பிரகாசத்துடனே அச்சபையிலிருந்து வருணனையுபாசித்துக்கொண்டிருப்பர். அன்றியும், தக்ஷகன் - வாசுகி - அயிராவதன் - கிருஷ்ணன் - லோகிதன் - பதுமன் - சித்திரன் - கம்பலன் - அசுவதரன்-திரிதராஷ்டிரன் - வலாககன் - மணிமான் - குண்டதாரன்-காரகோடகன் - தனஞ்செயன் - ஏணாதன் - குண்டகன்-பிரகிலாதன்- மூஷிகாதன் - ஜெனமேஜெயன் - இவர்கள் முதலாகிய அனேக நாகராஜர்கள் நாற்புறங்களிலும் சுடர்களைக் கக்காநின்ற மகாரத்தினச் சூட்டுப்பொருந்திய விசாலமாகிய வெகு படங்களை

யுடையவராய்ப் பலவன்னங்கள் பொருந்திய பளபளப்பாகிய தேகங்களுடனே கூடி அச்சபையிற் சூழவிருப்பார்கள். இதுவுமன்றி, பலிச்சக்கிரவர்த்தி - நரகாசுரன் - பிரகலாதன் - விப்பிரசித்தி - காலகேயர் - சுமனன் - துர்முகன் - சங்கன் - சுரூபன் - சுமதி - சுவனன் - கடோரதன் - மகாபாரிசுவன் - விரூபன் - மகாசிரன் - தசக்கிரீவன் வாலி - திரிதசாம்பரன் - உடெட்டபன் - விகடாபன் - சந்திரதாபனன் - இவர்முதலாகிய தைத்திரியர் - தானவர் - என்னும் பிரிவினையுடைய அசுரர்களும் பலவலங்காரங்களோடுசிறப்பாய் அச்சபையிலிருந்து வருணனை யுபாசித்துக்கொண்டிருப்பார்கள், நான்கு சமுத்திரங்கள், கங்கைமுதலாகிய சகலநதிகள், மற்றும் தடாகங்கள், குட்டைகள், கிணறுகள், முதலாகிய புண்ணிய தீர்த்தங்களெல்லாம் திவ்விய தேகங்களுடனே விளங்கி வருணபகவானைத் துதித்துக்கொண்டிருக்கின்றன. மேலும் எட்டுத் திசைகளும் - பூமியும் - மலைகளும் - ஒவ்வொரு உருவமாய்த் தேகங்களெடுத்துக்கொண்டு சூழ்ந்திருக்கின்றன. இப்படிப்பட்டசபையினருடனே கூடிக் கந்திருவர்வீணுகானஞ்செய்ய,அப்சரஸ்திரீகள்நாட்டியமாட மிகவினோதத் துடனே வருணதேவன் சுநாபனென்கிற மந்திரியுடனேயும் தன்குமாரர்களுடனேயும் கதைகளைப் பேசிக்கொண்டு, வாருணீதேவியுடன் கூட அச்சபையில் விளங்கிக்கொண்டிருப்பன்.

குபேரன் சபைச் சிறப்பு.

குபேரன் சபையானது நூறுயோசனை நிகளமும் எழுபதுயோசனை யகலமுமுள்ளதாய் மிகவுன்னதம்பொருந்தி, ஆகாசத்தில் தனியே விளங்கும் ஓர்சுடர்போன்று நாற்புறங்களிலு நிலவுவீசிக்கொண்டு, மகாரத்தினமயமாய் அனேகங்குகியகர் என்பவராற்சுமக்கப்பட்டு விளங்காநின்றது. அதுகுபேரனால் மகாதவப் பெருமை கொண்டு சிருஷ்டிக்கப்பட்டது. அதைச் சூழ்வர்விருக்கும் பத்தரைமாற்றுத் தங்கமயமாகிய மரங்கள் மணிமயமாகிய கிளைகளோடும்-பவளமயமாகிய அரும்புகளோடும்-மரகதமயமாகியதளிர்களோடுங் கூடி, நித்தியவாசனை யுடைய புட்பங்களையு மதுரமாகியபழங்களையு முண்டாக்கிக்கொண்டு வினோதமாகிய பலபக்ஷிகளுக்கு மிருப்பிடமாய் விளங்காநின்றன. அச்சபையிற் சுகத்தை யடையத்தக்க பலவிடங்களும்-அவரவர்களுக்குத் தகுந்தபல ஆசனங்களும்-மற்றும்வேண்டியவஸ்துக்களும் சித்தமாயிருக்கின்றன. இவ்விதமான ஆச்சரியப்படத்தக்க சிறப்பினையுடையதாய், ஆகாயத்தில்தவழ்கிறதுபோற் பிரகாசிக்கின்றது. அந்தமகாசபையிற் குபேரன் விசித்திரமாகிய வஸ்திராபரணங்கள் தரித்து, அனேக மாதர்களுடன்கூடி, சூரியன்போல் வெயிலெறிப்பனவாயும் மிருதுவாயுமிராநின்ற இரண்டு ஆதனங்களில் கால்களைவைத்துக் கொண்டு,சிங்காதனத்தில் வீற்றிருப்பான். அச்சபையினருகில் மந்தாரச்சோலையினது பரிமளங்களையும், செங்கழுநீர் மலர்களுடைய பரிமளங்களையும், தாமரைமலர்களினது பரிமளங்களையும், சந்தனக்காட்டினது பரிமளங்களையும் வீசிக்கொண்டு வாயுவானவன் குபேரனைச் சந்தோஷப்படுத்துவான். அனேகங் தேவர்முதலானபேர்கள் மிகவினோதமாய்க் குபேரனுடனே சம்பாஷித்துக்கொண்டிருப்பார்கள். அன்றியும், மிசிரகேசி - அரம்பை - சித்திரசேனை - கிருதாசி - மேனகை - புஞ்சி -கர்த்தலை-விசுவாசி - சகசன்னி- பிரமலோசை - ஊருவசி-இளை - இவர்முதலனேக அப்சரஸ்திரீகள் திவ்வியதாளங்கொட்டிக்கொண்டு, வேணு-வீணை-மிருதங்கம்-இதுமுதலிய வாத்தியங்களை வாசித்துக்கொண்டு நர்த்தனஞ் செய்து, குபேரனை யுபாசிக்கிறார்கள். கின்னரரென்று நரரென்றுஞ் சொல்லப்பட்ட கந்திருவரும், மாணிபத்திரன் - சுவேதபத்திரன் - காசாரகன் - கண்டகன்- பிரத்தியோதன் -முதலாகிய இயக்கரும், விசுவாவசு- தும்புரு - விசாலகன் - வராககர்னன் - தாமிரொஷ்டன் - பலபக்ஷன் - பலோதரன் - அங்காரூடன் - சிகாவர்த்தன் - ஹேமநேத்திரன் - விபூஷணன் - பூருவானனன் - பிங்களகன் - சோணிதாதன் - பிரவாயகன் - விருக்ஷவாசனி - கேதன் - பிரவாசன் - இவர்முதலாகிய காயகரும், அச்சபையிலிருந்து சங்கீதம் பாடுவார்கள். உலோகமாதாவாகிய ஸ்ரீமகாலட்சுமியும் அங்கு பிரசன்னையாயிருப்பாள். அக்குபேரனுடைய குமாரனாகிய நளகூபரனென்கிறவன், சில யக்ஷகந்திருவர்களோடு கூடி ஓர் புறத்தில் வீற்றிருப்பான். நானும், என்போன்ற அனேகதேவரிஷிகளும், பிர்ம்மரிஷிகளும் அச்சபையிலிருந்து ஆசீர்வதித்துக்கொண்டிருப்போம். மேலும் அனேகம் ராக்ஷதர்களும், பிசாசர்களும், பயபக்தியுடன் உபாசித் திருப்பார்கள். அச்சபையினோர்புறத்தில் உமாபதியாகியும் - பசுபதியாகியும் - முக்குணனாகியுமிராநின்ற உருத்திரமூர்த்தியானவர்கையிற்சூலமேந்தி, அனேகபூதகணங்களும், வாமனர்கள் - விகடர்கள் - கூனர்கள் - ஆகிய சிவகணங்களும் சூழ்ந்து போற்றுநிற்க, நந்திமுதலாகிய அந்தரங்கபத்தர் உபசாரங்கள்செய்ய வீற்றிருந்து விளங்குவர். அனேகங் கிங்கரர்கள் பலவாயுதங்களைத்தரித்து, அச்சபையைச் சுற்றிக் காத்திருப்பார்கள். ஆகா-ஊகூ என்னுங் கந்திருவர் முதலாகிய வைணிகர், குபேரனருகிலிருந்து பாடுவார்கள். இமயம் - பாரியாத்திரம் - விந்தியம் - கைலாசம் - மந்தரம் - இவைமுதலாகிய பருவதங்களும் தேகங்களுடன் சேவித்துக்கொண்டிருக்கின்றன. விபீடணனென்னும் ராக்ஷசராஜன் தன்பரிவாரத்துடனே அண்ணனாகிய குபேரனை யுபாசித்துக்கொண்டிருப்பான். நவநிதிகள் இருபுறங்களிலும் விளங்கிக்கொண்டிருக்கும். இவ்வாறாகிய பரிவாரவிபவங்கள் பொருந்திய யக்ஷராஜனாகிய குபேரன் நித்தமும் அச்சபைக்குவந்து, மகாதேவனாகிய சிவனை சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து வி

டைபெற்றுப் பின்புகொலுவிருப்பான். அந்தச்சிவனும் குபேரனிடத்தில் வாச்சல்யத்தினால் அங்கேயேயிருந்து அநுக்கிரகஞ் செய்துகொண் டிருப்பார். இவ்வுலகில் ஆதுலர்க்குப் பலதானங்கள் வழங்கினபேர்கள், அச்சபையில் திவ்விய தேகபோகங்களுடனேவாழ்ந்துகொண் டிருப்பார்கள். இப்படிப் பட்ட அந்தச் சபையானது ஆனந்தமே வடிவுகொண்டது போல் விளங்கிக்கொண் டிருக்கின்றது.

பிரமன் சபைச் சிறப்பு.

பிரமதேவனுடைய சபையானது ஒருவராலு மிப்படிப்பட்டதென்று சொல்லக்கூடாது. அந்தச்சபையானது மனதினாலே சிருஷ்டிக்கப்பட்டது. முற்காலத்திற் சூரியபகவான் இப்பூலோகத்துக்கு வந்தபோது, அச்சபையின்மகிமையை விஸ்தாரமாகச்சொன்னார். ஆகிலும் அவ்வளவுஞ் சொல்ல எனக்குத் திறமில்லை. ஆனால் அந்தச்சூரியபகவானை நோக்கி, சுவாமி! அப்படிப்பட்ட பிரமசபையை நான் பார்க்கவேண்டுமென்று நினைக்கிறேன். அதனைக் காண்பதற்காகிய உபாயமென்ன? அதை அருளிச் செய்யவேண்டுமென்றுநான்கேட்க, அந்தச்சூரியபகவானானவர் எனக்கு ஒருவிரத முபதேசித்தார். அதாவது - ஆயிரம் வருஷ காலம் வரையில் இந்திரிய நிக்கிரகத்துடனே பிரமதேவனைக்குறித்துத் தவஞ்செய்வதுதான். அப்படியே நான் இமயமலையின் சாரலி லுட்கார்ந்துக்கொண்டு தவஞ்செய்தேன். அப்போது அந்தத் தபோமகிமையாற் பிரமதேவன் தனதுசபைக்கு என்னைவருவித்தார். அக்காலத்தில் அந்தச்சபையை யான்பார்த்து, ஒன்றுந்தெரியாமல் ஸ்தம்பித்துப் பிரமித்துநின்றேன். ஆதலால் அதினுடைய ரூபம் இப்படிப்பட்டதென்றும், அதினளவு இவ்வளவென்றும், நான்சொல்லமாட்டேன். ஓர் உபமானத்தைக்காட்டிச் சொல்லுவோமென்றாலும், அதற்குநிகரானவஸ்து ஒன்றுமில்லை. ஆனாலும் அதிற்கண்ட சிலவிஷயங்களை மாத்திரஞ் சொல்லுகிறேன் கேளும்.

அந்தச்சபையிற் சீதளமென்பது மில்லை. உட்டிணமென்பது மில்லை. சீதோட்டிணங்கள் வேண்டுங் காலங்களிலும் சவுக்கிய ஹேதுவாகவே யிருக்கின்றது. பசியென்பதுமில்லை. தாகமென்பதுமில்லை. நல்ல உணவுகளையும் பானவஸ்துக்களையும் சாப்பிட்டாலு மேற்றுக்கொள்ளுகின்றது. எவ்வளவு வருத்தப்பட்டாலும் வருத்தமுண்டாகிறதில்லை. சூரியன்முதலாகிய பேர்களுடைய கிரணங்க ளங்கே பரவுகிறதில்லை. நித்தியம் பிரகாசமாகவே யிருக்கின்றது. அதிலிருக்கிற ஸ்தம்பங்கள் - சுவர்கள் - கதவுகள் - மெத்தைகள் - மேடைகள் - முதலிய வெல்லாவஸ்துக்களும் மகா காந்திபொருந்திய நவரத்தினமயங்களாகத் தோன்றினாலும், தேசோமயமாய்க் காணப்படுகின்றன.

இன்னும் அதன் விசித்திரத்தை யென்னசொல்வேன்? கம்பங்கள் முதலானதுகளினாற் தாங்கப்பட்டதுபோலிருந்தும், அந்தச்சபை ஒன்றினாலும் தாங்கப்படாததுபோலவே காணப்படுகிறது. அது பார்க்கும்பொழுது ஒருவிதமாய்க் காணப்படாமல், ஒருவேளையில் ஒருருவுமின்றி வெறுஞ்சுடர் போலவும், ஒருவேளையில் ஸ்தம்பம் கவாட முதலிய வுருக்களோடு கூடியதுபோலவும், ஒருவேளை வெறும்வெளிபோலவும், ஒருவேளை முழுதும் ஆவரிக்கப் பட்டதுபோலவும், ஒருவேளை ஆதாரமில்லாதது, போலவும், ஒருவேளை யாதார முடையதுபோலவும், இன்னவண்ணமாகியதென்று சொல்லொணாத் தன்மையுடன் விளங்குகின்றது.

அப்படிப்பட்ட மகாசபையில் ஸ்ரீநாராயணமூர்த்தியினுடைய நாபிக்கமலத்தி லுதித்த நான்முகக் கடவுளானவர், தேவர்-மனிதர் - திரியக்கு - தாவரம்- என்கிற நான்குவித உலகங்களைச் சிருஷ்டித்துக் கொண்டிருப்பார். அப்போது தக்ஷகர் - பிரசேதர்- புலஹர் - மரீசி - கசியபர்-பிருகு - அத்திரி - வசிட்டர் - கவுதமர் - அங்கிரசு - புலஸ்தியர்-கிருது - பிரகலாதர் - கர்த்தமர் - என்கிற உபப்பிரமாக்களும், அதர்வாங்கிரசுக்கள் - வாலகிலியர் - மரீசிபர் - என்கிற மகாரிஷிகளும், மனம் - அந்தரிக்ஷம் - வித்தை - வாயு - தேயசு - பலம் - பூமி - முதலானவைகளும், சத்தம் - பரிசம் - ரூபம் - ரசம் - கந்தம் - என்கிற விஷயங்களும், பிரகிருதி - விகிருதி - முதலாகிய காரணப்பொருள்களும், அகஸ்தியர் - மார்க்கண்டேயர் - ஜமதக்கினி - சம்வர்த்தர் - சியவனர் - இரிசியசிருங்கர்-சனகர் - சனந்தர்—சனத்குமாரர் - சனத்சுசாதர் - முதலாகிய யோகிகளோடு வியாசரும், அசிதர்-தேவலர்- ஜைகிஷவியர் - இருக்குவரியர் - சிதசத்துரு - மணி- என்னும் தவசிகளும், எட்டங்கங்களுடைய ஆயுர்வேதமென்கிற வைத்தியநூலும், காந்தர்வவேதமென்கிற சங்கீதநூலும், தநுர்வேதமென்கிற ஆயுதநூலும், அர்த்ததந்திர மென்கிற நீதிநூலும், நான்குவேதங்கள் - வேதாந்தங்கள் - பதினெண்புராணங்கள் - தருமநூல்கள் - இவைமுதலாகிய தேவரூபங்கொண்டிராநின்ற பலநூல்களும், சூரியன் - சந்திரன் - முதலாகிய கிரகங்களும், நக்ஷத்திரங்களும், சகலதேவகணங்களும், பிதுர்க்கணங்களும், மகத்துவமிகுத்த யாகங்களும், க்ஷணம் - முகூர்த்தம் - இரவு - பகல் - பக்ஷம் - மாதம்-இருது - வருஷம் - யுகம் - முதலாகிய காலங்களும், காலசக்கிரம்-தருமசக்கிரங்களும், தேவமாதர்களும், அசுரமாதர்களும், நாகமாதர்களும், சகல லோகபாலகரும், மநுமுதலாகியமகாராஜர்களும், அந்தப் பிரமதேவனைச் சுற்றிலுமிருந்து பயபக்திகளுடனே துதித்துக்கொண் டிருப்பார்கள். அன்றியும் கந்திருவர் - விச்சாதரர் - கின்னரர் - கிம்புருடர்- அப்சரசுகள் - முதலானபேர்களிருந்து, சங்கீதநாட்

டியத்துடன் சகல வினோதங்களுஞ் செய்வார்கள். மேலும் பூலோகத்தில் மகா உக்கிரமாகியவிரதத்துடனே வேத மோதியவர்களும், தவஞ் செய்தவர்களும், விசேஷமாகிய புண்ணியஞ் செய்தவர்களும், மகாதேய சுபொருந்தி அச்சபையில் வாழ்வார்கள். இவ்விதமாகிய சபையார் சூழ்ந்திருக்கச் சந்தியை - சாவித்திரி- காயத்திரி - சரஸ்வதி - என்கிற தேவிமார்களுடனே பிரதேவர் திவ்விய சிங்காதனத்திற் கொலுவிருக்குமளவில், அந்தச் சபையானது வேதகோஷ மயமாகவும் பிரமதேசோ மயமாகவும் விளங்கும்.

அரிச்சந்திரன் இந்திரசபைக்குரியனான காரண முரைத்தல்.

கேட்டீரோ தருமபுத்திரரே! இவ்வாறாகத் தேவர்களுடைய பலசபைகளையும் பார்த்திருக்கிறேன். ஆனால் மனிதலோகத்தில் இச்சபைக்குச் சரியாகியசபை எந்தவிடத்திலும் எக்காலத்திலு மில்லை. இதுமிகவும் மேலாகியது. இதனால் உங்களுக்கு மகாவிசேஷங்களுண்டாகும். என்றுசொல்லிய நாரத மகாமுனிவரை நோக்கித் தெண்டனிட்டுத் தருமராஜன் சொல்லுகிறார்: ஓ சுவாமி! தேவரீர் தேவலோகங்களி லுள்ள இந்திராதிகளுடைய சபைகளையெல்லா மருளிச்செய்தீர். அவைகளில் தேவேந்திரனுடைய சபையின் சீர்மையைச் சொன்னபோது, அதில் முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிர முனிவர்களும், இன்னு மளவற்ற பரிசனங்களோடு சகல வைபவங்களும் அமைந்திருப்பதாக அருளிச்செய்தீர். ஆனால் இராஜர்களுக் குள்ளே அரிச்சந்திரன் என்கிற ஒருமகாராஜனும் அதிலிருக்கிறானென்று சொன்னீர். அந்த அரிச்சந்திரமகாராஜன் எந்தப்புண்ணிய விபாகத்தினாலே இந்திரசபையில்வாசமாயிருக்கிறான்? அவன்செய்த புண்ணியங்களின் சிறப்பு எப்படிப்பட்டது? எந்தெந்த நியமங்களையவன் அநுட்டித்தான்? எந்தப் புண்ணியப் பிரபாவத்தினாலே இந்திரனுடன்கூட எக்காலமும் வாசஞ்செய்யும் படியான பதவிகிடைத்தது? அவைகளையுந் தயைசெய்து திருவாய்மலர்ந் தருளவேண்டும். அன்றியும் இயமசபைக்குத் தேவரீர் எழுந்தருளியபோது, அங்கிருக்கின்ற என்பிதாவாகிய பாண்டு மகாராஜனைக் கண்டீரோ: அவருடன் பேசினீரா? அப்போது அவர்சொன்ன தென்ன? அதையும் அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டும். தேவரீர் இறந்தகாலம் - நிகழ்காலம் - எதிர்காலம்- என்னும் முக்காலங்களில் நடக்குஞ் சரித்திர மெல்லாமறிந்த மகாஞானியாகையினாலே, தேவரீரிடத்திற் சகல ரகசியங்களையுங் கேட்கவேண்டுமென்று கோருகிறேன். என்றுசொல்லிய தருமபுத்திரரை நோக்கி நாரதமகாமுனிவர் சொல்லத்துவக்கினார்.

கேளுமையா தருமபுத்திரரே! நீர் அரிச்சந்திரனுடைய எந்தப்புண்ணிய விபாகத்தைக்குறித்துச்சந்தோஷத்துடனே கேட்கிறீரோ! அந்தப் புண்ணியங்களையும் அவனுடையபெருமையையும் சொல்லுகிறேன் கேளும். இட்சுவாகுகுலத்தில் திரிசங்குவென்று மகா தருமநிலையுள்ள ஒரு ராஜனிருந்தான். அவன் கேகய ராஜனுடைய மகளாகிய சத்தியவதியென்கிற பெண்ணைமணந்து, அரிச்சந்திரனென்கிற ஒருபுத்திரனையுண்டாக்கினான். அந்த அரிச்சந்திரன் மகாவீரனாகியும், மகாசூரனாகியும், மகா தீரனாகியும், வெகுபுத்திசாலியாகியும், வெகு உதாரனாகியுமிருந்தான். அவனது ஆணையைச் சகலராஜர்களும் சிரத்தின்மீதிற் கொண்டு, அவன் பாத தாமரைகளில் வணங்கி வந்தார்கள். அவன் தானொருவனாகியே தன் புஜவலிமையினாலே நெடிய கடல்சூழ்ந்த புவிமுழுதும் ஜயித்துச் சத்துருவென்கிற பெயரையழித்து, மிகவு மேன்மைபொருந்திய யாகங்களின் முதன்மையென்று சொல்லத்தக்க இராஜசூயயாகஞ் செய்தான். அந்தயாகத்திற்குச் சகலதேசராஜர்களும் வந்து வெகு காணிக்கைகள் கொடுத்து வணங்கிப் போஜனஞ்செய்யும் வேதியருக்குப் பரிமாறுந்தொழிலி லிருந்தார்கள். சிலராஜர்கள் பலவிதபரிசாரகத்தொழில் செய்துவந்தார்கள். இவ்வாறாக அவ்வரிச்சந்திரன் இராஜசூய மென்கிற மகாயாகத்தை நிறைவேற்றி, எல்லாவரசர்களும் எல்லாவேதியரும் கூடி முடிசூட்டச் சாம்பிராச்சிய பட்டாபிஷேகத்தையடைந்துவிளங்கினான். அப்போதுயாகஞ்செய்வித்த இருத்விக்குகளுக்கும், மற்ற மகானுபாவராகிய பிராமணர்களுக்கும், அனேகம் ரத்தினாபரணங்கள்- திவ்விய வஸ்திரங்கள் - நானாவிதவாகனங்கள் - முதலியவைகளோடு, நவமணிகள்பதித்து நல்லிலக்கணங்களுள்ள நான்குகுதிரைகள் கட்டிய பலகோடிதேர்களையும்; சுவர்ணமயமாகிய சீனிகள்கட்டி, நவரத்தினங்களிழைத்த முகப்பட்டயங்களும் கடிவாளங்களும் அணிந்து, நாலுகால்களிலும் தங்கக்கடகங்களும் சலங்கைகளும் போட்டுக் கழுத்துமயிரில் ரத்தினமிழைத்த குச்சுகள் கட்டி, நெற்றியிற் பொன்மயமாகிய சந்திரப் பிறையணிந்து, காதுகளுக்கு நடுவில் முத்துக்களாற் செய்யப்பட்ட துராய்கள்கட்டி, கழுத்திற் பலமுத்தாரங்களும் போட்டு அலங்காரஞ்செய்திருக்கின்ற அனேககோடிகுதிரைகளையும்; உத்தமஜாதியிற் பிறந்தவைகளும் மிகுந்த வேகமுடையவைகளும், பெரிய பருவதங்களுக்குச் சரியான தேகங்களுள்ளவைகளும், சகல அலங்காரங் களணிந்தவைகளு மாகிய அனேகலக்ஷம் யானைகளையுங்கொடுத்தான். மேலும்அந்தயாகம் ஆரம்பமாகியதுமுதல் ஒருவருஷம் வரைக்கும், வந்த பேருக் கெல்லாம் தேவாமிர்தத்திலும் அதிசயித்த பாயசமுதலாகிய அன்னங்களை வழங்கினான். இவ்விதமாகப் பலதானங்கள் வழங்கிப் பூசித்த அந்த அரிச்சந்திர மகாராஜனுக்கு வேதியரெல்லாம் மனமகிழ்ந்து, சகல சம்பத்துகளு முண்டாகக்கடவனவென்றும், கீர்த்தி உலகமெங்கும் பரவக்கடவதென்றும், ஒருவராலும் ஜயிக்கக்கூடாத தேஜசு உண்டாகக் கடவதென்

றும், எல்லோரிலும் மேன்மையுண்டாகக் கடவதென்றும் ஆசீர்வாதஞ் செய்தார்கள். இப்படியாக வெகுசிறப்பாய் இராஜசூயயாகஞ் செய்தபடியினலே, அரிச்சந்திரமகாராஜன் தேவேந்திரனுடைய சபையை அடைந்து இந்திரனலே பூசிக்கப்பட்டு மகிழ்ந்திருக்கிருன். கேளுமையா தருமபுத்திரரே! இவ்விதமாக யார் யார் இராஜசூயஞ் செய்வார்களோ? அவர்களெல்லாம் இந்திரசபை யடைந்து இந்திரனலே பூசிக்கப்படுவார்கள். அன்றியும் யுத்தகளத்திற் சென்று முன்வைத்த காலைப் பின்வைக்காமல் யுத்தஞ்செய்து மனதிற் கிஞ்சித்தேனும்பயமின்றி உயிரைவிடுகிறவர்களும், உக்கிரமாகிய தவங்கள்செய்து அத்தவங்களிலே தேகத்தை விடுகிறவர்களும், அந்த இந்திர சபைக்குச் சென்று அளவற்ற சிறப்போடும் வாழ்வார்கள்.

இயமசபையிற்கண்ட பாண்டுவின் கருத்துரைத்தல்.

ஓ தருமபுத்திர மகாராஜனே! அரிச்சந்திரனுக்கு இந்திரசபை கிடைத்த காரணம் இது. இயமலோகத்திற் சென்றவிடத்தில் உமது பிதாவாகிய பாண்டு மகாராஜன் உம்முடன் சொல்லச்சொல்லி யொருவார்த்தை சொன்னர். அதைச் சொல்லுகிறேன் கேளும். அந்த அரிச்சந்திர மகாராஜனைப்போலே தானும் இந்திரன்சபையில் விளங்கவேண்டுமென்கிற ஆசையினலே நீர் அந்த இராஜசூயயாகஞ் செய்யவேண்டுமென்றும், அப்படிக்குப் புத்திரனகிய நீர் அந்த மகாயாகத்தைச் செய்தால் அந்தப்பதவி தனக்குக் கிடைக்குமென்றும் சொன்னர். ஆகையால்-ஓ தருமபுத்திரரே! அரிச்சந்திரனுடைய சம்பத்தையும் மேன்மையையும் பார்த்துத் தானும் அப்படி யாகவேண்டுமென்று மனதிற் கவலைகொண்டிருக்கிற உமது பிதாவினுடைய கோரிக்கையை நீர் நிறைவேற்றவேண்டும். மேலுமவர்-பூமியெல்லாம் ஜயித்துச் சகலராஜாக்களையுங் கீழ்ப்படுத்தியன்றே அந்தயாகத்தைச் செய்யவேண்டும் அப்படிப்பட்ட சக்தி எனக்கில்லையே என்னசெய்வேனென்று விசாரப்பட்டாலோ, அப்படி விசாரப்படவேண்டாம். ஏனென்றல் - தனக்கு நான்கு திக்குப் பாலகர்போன்ற நான்கு தம்பிமா ரிருக்கிருர்கள். அவர்கள் தனதாக்கினையைச் சிரத்தில் வகிக்கிறவர்கள். அவர்களைக்கொண்டு சகலபூமண்டலத்தையும் கைவசப்படுத்திக்கொள்ளலாமென்றுஞ் சொல்லச்சொன்னர். ஆதலால் நீர் அதைக்குறித்து யத்தனப்படவேண்டும். ஆனல் அந்தயாகத்தை நிறைவேற்றுவது வெகுபிரயாசத்தா லாகவேண்டியதா யிருக்கின்றது. ஏனெனில் - மிகவும் பெரியயாகமாகையினலே பல இடையூறுகள் சம்பவிக்கும். அன்றியும் பிரமராக்ஷதர் அதில்யாதேனும் குற்றம் நேரிடுவதையே எதிர்பார்த்துக்கொண் டிருப்பார்கள். ஆதலால் மிகவுஞ் சாவதானமாயிருந்து நிறைவேற்றவேண்டும். ஓ தருமபுத்திரனே! நீர் கேட்டவைகளை யெல்லாஞ் சொன்னேன். இவைகளை நன்றுயோசித்து எப்படியுக்தமோ அப்படி நடந்துகொள்ளும். இன்னமொன்று சொல்லுகிறேன் கேளும். நீர் எப்போதும் ஏமாருமல் அந்தணர் முதலிய நான்கு வருணத்தோரையும்-பிரமசாரிய முதலிய நான்கு ஆச்சிரமத்தோரையும் தத்தம்விதிகளில்வழுவாமல் நடக்கும்படியாகவும், யாவருக்கும் திருடர் - கள்ளர் - வெறியர் - காமிகள் - முதலான பேர்களா லொருதீங்கும் நேரிடாம லிருக்கும்படியாகவும், தருமநீதி வழுவாமல் அரசாட்சி செய்துகொண்டு; பொய்மை - பொருமை - வஞ்சகம் - முதலாகிய துர்க்குணங்களுக்குக் கனவிலு மிடங்கொடாம லடித்துக்கொண்டு, ஜனங்களிடத்திலும் - இனங்களிடத்திலும்-அன்பும் - ஆதரவும்வைத்து, தெய்வத்தினிடத்திலும் - பெரியோர்களிடத்திலும் பயமும் - பக்தியுமாக நடந்துகொண்டு, சத்துருக்களை யெல்லாம் ஜயித்து, யாசகருக்கு வேண்டியமட்டும் கொடுத்து, மகானுபாவனுய் யாவரும்புகழச் சந்தோஷத்துடனே வாழ்ந்துகொண்டிரும். இனி நான் துவாரகாபுரிக்குப் போகவேண்டும். ஆதலால் செலவுபெற்றுக் கொள்ளுகிறேனென்று நாரதமகாமுனிவர் சொல்லி, அனேக ரிஷிகளுடனேகூடத் துவாரகாபுரிக்குப் போயினர்.

பின்பு தருமராஜாவானவர் நாரதர்சொல்லிய இராஜசூயமென்னும் யாகத்தைக்குறித்து மனதில் நெடுநேரம் யோசித்து, ஓ! ஓ! இந்தயாகத்தை நாம் எப்படி சாதிக்கப் போகிருேம்? முற்காலத்திலும் இக்காலத்திலும் மேன்மையோடு விளங்கிய மகாதீரராகிய அரசர்க ளெல்லாம் இந்தயாகத்தைச் சாதிக்கமாட்டாமற் போனர்களே: (யானைகளெல்லாம் சுழன்றேடும்படியாகிய காற்றிலே மசகங்களைக் குறித்துக் கேட்கவேண்டுமோ?) என்கிற பழமொழிக்குச் சரியாய், அப்படிப் பட்டவர்களாலேயும் செய்ய அசாத்தியமாகிய யாகத்தை நாமோ சாதிக்க மாட்டுவோம்? என்ன செய்யலாம்? பிதாவின் மனேபீஷ்டத்தை நிறைவேற்ற மாட்டாத புத்திரனிருந்து பயனென்ன? அந்தயாகமோ பூமண்டலத்தி லிருக்கும் சகலராஜர்களும் வந்து வணங்கும் படியாகியபெருமை பெற்றவனுக்குச் செய்ய வெளிதாகும். நாமெப்படி அரசர்களை யெல்லாம் ஜயிக்கப் போகிருேமென்று மிகுந்த சிந்தையால் வருத்தமுற்றுப் பெருமூச் செறிந்துகொண்டு, உன்மத்தம் பிடித்தவன்போல் ஒருவரோடும் மனமகிழ்ந்து பேசாமல், இராச்சியத்திற்கு இதமாகியகாரியங்களையே செய்ய மனமுடையவராய்ப் பலதருமங்களையும் குறைவின்றி நடாத்திக்கொண்டு, யாசகராகிய பிராமணர்களுக்கு எந்தவேளையிலும் குறைவின்றி வேண்டிய அன்ன பானங்களையும் வஸ்திராபரணதிகளையும் கொடுக்கும்படி கட்டளையிட்டு நடத்திவந்தார். இவ்விதமாக நடத்திவருகிற தருமபுத்திரரை நோக்கிப் பிராமணர்முதலிய யாவரும் அருகில்வந்து, ஓ ம

காராஜனே! நீரோ இந்தப் பூமண்டலத்தை நெடுங்காலம் அரசாக்ஷி செய்யவேண்டும். உமக்குச் சகலசம்பத்துகளு முண்டாகவேண்டும். உம்முடைய மனதிலிருக்கும் எண்ணத்தைப் பகவான் நிறைவேற்றவேண்டும். உம்முடைய பகைவரெல்லாம் வணங்கி உமதாக்கினையை முடியில் தரிக்கவேண்டுமென்று சொன்னார்கள்.

இப்படியாவராலும் தருமராஜன் ஆசீர்வதிக்கப்பட்டு அரசாட்சி செலுத்துமளவில், ஒருவருக்கும் அக்காலத்தில் மிருத்தியுபயமுண்டாகவில்லை. யாவருக்கும் தங்கள்பிதாவினிடத்திலு மில்லாத அன்பு இவரிடத்திலிருந்தது. மாதம் மும்மாரிபெய்துகொண்டிருந்தது. அவருக்கும் பெரும்பாலும் பகைவரில்லாமற் போனபடியினாலே அஜாதசத்துரு வென்று பேருண்டாயிற்று. வீமசேனனும் அர்ச்சுனனும் பகைவரோடு யுத்தஞ்செய்து வெற்றி கொள்ளுவதினாலும், நகுலன் சகலசேனைகளுக்கும் மற்றவர்களுக்கும் காலங்களில் தப்பாமல் சம்பளம் முதலானதுகளைக் கொடுத்து விசாரித்து வருவதினாலும், சகாதேவன் ஜனங்களுக்கு நடக்கவேண்டிய நியாயங்களையும் மேன்மைகளையும் வழுவின்றி நடத்துவதினாலும், தருமராஜன் அன்பு-பொறை-சத்தியம் - தயை-முதலாகிய நற்குணங்களோடு கூட உலகத்தில் நன்மையைச் செய்து வருவதினாலும், யாவருமித்திரராகவே யிருந்தபடியால் அப்பெயர் அவருக்குப் பொருந்தி யிருந்தது. அன்றியும் பூமியில் அதிவிருஷ்டி என்கிற மழை யில்லாமையும், அக்கினிபயமும், துஷ்டஜெந்துக்கள்பயமும், கள்ளர் முதலானோருடைய தொந்தரவும் உண்டாகாமலே போயிற்று. இவரிடத்துக்குச் செனங்கள் சுபசந்தோஷம் சொல்லவும்- ஆசீர்வதிக்கவும்-பார்க்கவும்- பேசவும் - ஆறிலொரு கடமை செலுத்தவும் வந்தார்களேயல்லது, ஒரு தீங்குநேரிட்டதென்று சொல்லவந்ததேயில்லை. ஏனெனில் - ஒருசங்கடமு முண்டாகாமற் போனபடியினாலேதான். இந்தமகாராஜன் குடிகளிடத்தில் ஆறிலொருகடமை வாங்கிவந்தாலும், விஸ்தாரமாய்த் திரவியங்களைத் தருமங்களாற்சிலவுசெய்துவந்தாலும், பொக்கிசமானது இவருடைய தருமமகிமையினாலே ஒரு போதும் குறைவின்றி நிறைந்தேயிருந்தது.

இவ்வண்ணமாக நாளுக்குநாள் மேன்மைபொருந்திவிளங்காநின்ற தரும புத்திரரானவர் ஒரு நாள் சபையில் தனியேயிருந்து, தனது தம்பிமார்களுக்கும் மந்திரிமார்களுக்கும் நாரதர்இராஜசூய யாகத்தைக்குறித்துச் சொல்லியசெய்தி தெரிவித்து ஆலோசித்தார். அப்போது மந்திரிகள் மகாராஜனைப் பார்த்துச் சொன்னதாவது-சுவாமீ ராஜாதிராஜனே! எவனுக்கு நான்குகடல்களுஞ் சூழ்ந்தபூமி கைவசப்பட்டிருக்கிறதோ? எவன்சாந்திமுதலாகிய ஆறுகுணங்களு முடையவனோ? எவன் இன்ப துன்பங்களை லட்சியஞ்செய்யாமற் சகிக்கத்தகுந்தவனோ? எவன் சகலவேதசாஸ்திரங்களையுங்கற்று விதிப்படி வழுவில்லாமல் நடப்பவனோ? எவன் மகாயோக்கியதை பொருந்திய நற்குலத்திற் பிறந்தவனோ? எவன் பெரியோர்கள் சம்மதிக்கத்தகுந்தவனோ? அப்படிப்பட்டமகாராஜனுக்கு இராஜசூய யாகஞ்செய்யத் தகுதியுண்டு. அந்த புருஷன்தான் சோமபான னென்று பேர்பெறுவன். இப்படிப்பட்டபுருஷர்களில் நீர்மிகவும் உத்கம ரானபடியினாலே, அந்தயாகத்தை நீரல்லாது மற்ற யார் நிறைவேற்றத் தகுந்தவர்! ஆதலால் நீர் அவசியம் அந்தயாகத்தைச் செய்ய வாரம்பிக்க வேண்டும். அதற்கிதுதான் நல்லசமயம். ஏனெனில்- சகலலோகங்களையும் சுவாதீனம் பண்ணும்படியாகிய சகோதரரும்-நாங்களும் -மற்றும் சேனைத்தலைவர் முதலாகிய பேர்களும் - உமது ஆக்கினைக்கு உள்ளடங்கி, உம்முடைய கருத்தைச் சீராய் நிறைவேற்ற எதிர்பார்த் திருக்கிறோம். நீரோ? சகல நற்குணங்களுடனே விளங்கி யாவரும் புகழ நடத்திக்கொண் டிருக்கிறீர். எவ்வளவு பொருள்வேண்டி யிருந்தாலும் விசாரப்பட வேண்டியதில்லை. எந்தராஜாவினிடத்தில் எந்தவஸ்து இருக்கிறதோ அதெல்லாம் உமதுகையிலிருப்பதுபோலவே நினைக்கவேண்டும். ஆதலால் - சுவாமீ தருமபுத்திர மகாராஜனே!நீர் எவ்வளவும் யோசிக்காமல் இராஜசூயத்திற்கு யத்தனஞ்செய்யவேண்டுமென்று மந்திரிகள் சொல்ல, அது கேட்டுத் தருமபுத்திரர் மனமகிழ்ந்து, யாகத்தை நிறைவேற்றுவதே முக்கியமென்று கருதி, மறுபடியுமொருநாள் ஆஸ்தானத்தில் தம்பிகள் நால்வரும், உபபாண்டவர் ஐவரும், விராடமகாராஜன் - துருபதேயமகாராஜன்-யாதவச் சிரேஷ்டராகிய சத்தியகமகாராஜன் - முதலாகிய சிலராஜாக்களும், வியாசர் - தவுமியர் - முதலாகிய ரிஷிகளும், ரித்துவிக்குகளும், வேதசாஸ்திரங்களில் வல்லவராகிய பிராமணரும், மற்றும் மந்திரிகளும், சேனாதிபதிகளும் இருக்குமளவில்; யாகத்தைக் குறித்து ஆலோசிக்க வேண்டுமெமென்று அவர்களையெல்லாம் நோக்கி, ஓ மகானுபாவராகிய ரிஷிகளே! ஓ பிராமணர்களே! ஓ க்ஷத்திரியர்களே! ஓ என் தம்பிமார்களே!ஓ மந்திரிகளே! நீங்கள்யாவரும் என்வார்த்தையைக் கேட்டு எனக்குப் பதிற்சொல்லவேண்டும். அஃதென்னவென்றால் - சகலயாகங்களுக்கும் சிரோன்மணிபோன்ற இராஜசூயமென்னும் யாகத்தைச் செய்யவேண்டுமென்று எனக்கு ஆசையிருக்கின்றது. அதைக்குறித்து என்க்கு யோக்கியதையுண்டா? நிறைவேறுமா? இதைநீங்கள் நன்றாய் யோசித்துத் தெளிவுபெறச் சொல்லவேண்டுமென்று சொன்னார்.

தருமன் கண்ணனையழைப்பித்து இராஜசூய யாகத்தைக்குறித்து ஆலோசித்தல்.

அதைக்கேட்ட யாவரும்-ஓமகாராஜனே! இராஜசூயத்தைக்குறித்து உமக்கே யோக்கிதை யில்லா

மற்போனால், இனி யாருக்குத்தான் யோக்கியதையுண்டு? நீர்நினைத்தகாரியங்கள் யாவும் எளிதில் நிறைவேறும். உமதுபுத்தியும் - யுக்தியும் - தருமமும் - ஒழுக்கமும்-யாருக்குண்டு? ஆதலால் நீரே இராஜசூயத்திற்குத் தக்கவர். என்று சொல்லக்கேட்டு களிப்புற்று இந்த மகாயாகத்தை நிறைவேற்ற ஸ்ரீகிருஷ்ணன்வரவேண்டும் அவரில்லாமல் ஒன்றுநிறைவேறமாட்டாதென்று சகல புவன கர்த்தாவாகியும் - வாக்கிற்கு மனதிற்கு மெட்டாத பெருமை யுடையவனாகியும் கருணைக்கடலாகியும்-அடுத்தவரைக் காக்குந்தன்மையுடையவனாகியும் விளங்காநின்ற அந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை மனதில் தியானித்துப் பின்பு இந்திசேனனென்கிறவனைத் துவாரகைக்கு அனுப்புவித்தார். அவனும் தேர்மேலேறி விரைவிலே துவாரகாபுரியை யடைந்து ஸ்ரீகிருஷ்ணனுடைய மாளிகைக்குட்சென்று அவரைத்தெண்டனிட்டு நின்று, சுவாமீ! யாதவகுலதிலகரே! தருமபுத்திர மஹாராஜன் இராஜசூயஞ்செய்ய யோசித்து, உம்மைக்கொண்டு அதை நிறைவேற்றிக்கொள்ளவேண்டுமென்று இந்திரப்பிரஸ்தத்திற்கு அழைத்துவரும்படி என்னை அனுப்பிவித்தார். தேவரீர்வரவைவெகுவாய்ப் பிரார்த்தித்திருக்கிறே னென்றும், அவசியம்வந்து இக்காரியத்தை நிறைவேற்றித் தம்மைப்புனிதனாக்கி ரட்சிக்கவேண்டுமென்றும், தனக்கு நடக்கவேண்டிய சகலகாரியங்களுக்கும் நீரே கதியல்லாமல் வேறுகதி யில்லையென்றுஞ் சொல்லச்சொன்னார் என்றான். இப்படி தூதன் சொல்லிய வார்த்தையைக் கேட்ட கண்ணன் அத்தக்ஷணம் பாண்டவரிடத்திற்குச் செல்ல மனமுடையவராய், தமதுபிதாவாகிய வசுதேவரிடத்திலும் அண்ணனாகிய பலதேவரிடத்திலும் விடைபெற்றுத் தேரிலேறி இந்திரப்பிரஸ்த மடைந்து பாண்டவர்களைக் கண்டு, நமஸ்காரஞ் செய்யவேண்டியவர்களுக்கு நமஸ்காரஞ் செய்து ஆசீர்வதிக்க வேண்டியவர்களுக்கு ஆசீர்வதித்துப் பாண்டவரால் மிகவும் பரிவுடனே கொண்டாடிப் பூசிக்கப்பட்டு விருந்துண்டு இளைப்பாறி இருக்குமளவில்; தருமராஜன் அருகில் வந்து உட்கார்ந்து தமதுகருத்தைத் தெரிவிக்க வாரம்பித்தார்.

ஓ ஸ்ரீகிருஷ்ணா! இராஜசூயமென்கிற மகாயாகத்தைச் சம்ராட் என்கிற பெயரைப்பெறவேண்டுமென்று நினைத்து ஆப்தராகிய யாவரையுங் கேட்டதற்கு, அவரெல்லாம் அவசியம் செய்யலாமென்று சொன்னார்கள். ஆனாலும் எனக்கு அதிமித்திரனும் - மகாபுத்திசாலியும்-எல்லாவற்றிலும் வல்லவனுமாகிய உம்முடன் யோசித்துத் தெளியவேண்டுமென்று நினைத்து, உம்மை இவ்விடத்திற்கு வரச்செய்தேன். ஆதலால் இந்தயாகம் எவ்விதமாய் நிறைவேறுமோ? அதற்குரிய உபாயமென்னமோ? அவைகளை நீரேயோசித்துநடத்தி, எனக்குச்சம்ராட்டென்கிறபேர் வரச்செய்யவேண்டும். நீர்தவிர மற்றயாவரும் எனக்கு இதத்தையே முக்கியமாய் நினைத்து, இந்தயாகத்திலிருக்குங் குணதோஷங்களைச் சொல்லாமல் தங்கள் பிரயோசனத்துக்காகவும் முகமாட்டத்திற்காகவும் செய்யலாம் செய்யலாமென்று இச்சகமாய்ப் பேசுகிறார்கள். அந்தவார்த்தையில் எனக்கு மனத்திருப்தியுண்டாக வில்லை. ஆதலால் உமக்கிதைத் தெரிவித்தேன். நீர் மற்றவர்களுக்குக் காமமுதலாகிய குற்றங்களில்லாமல் இதத்தையே சிந்திக்கிறவ ரல்லவோ? ஆனதுபற்றி என்மனந் திருப்தியடையும்படி அந்தயாகத்தின் விஷயத்தில் நேரிடும் குணதோஷங்களைக் காட்டிச்செய்யலாம் செய்யக்கூடாதென்பதையும் அதுசெய்யத்தகுந்த உபாய மின்னதென்றும் தெரிவித்து, நடத்தவேண்டிய காரியங்களை நீரே முன்னின்று நடத்தவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். என்று தருமபுத்திரர் சொல்லிய வார்த்தையைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்ல வாரம்பித்தார்.

ஓ தருமபுத்திர மகாராஜனே! நீர் சகலகாரியங்களும் அறிந்தவர். சகல சாஸ்திரங்களுங் கற்றவர். பெரியோர்களிடத்திலே வெகுகேள்வி கேட்டவர். ஆகையால் உமக்குத் தெரியாத தொன்றுமில்லை. அன்றியும் வெகுமகாத்துமாக்களையும் புத்திசாலிகளையும் இந்த விஷயமாக நீர்வினவியபோது, அவர்களெல்லாம் யுக்தங்களை யோசித்துத்தான் உத்தரம் சொல்லி யிருப்பார்கள். ஆனாலும் என்னிடத்திலிருக்கும் அன்பினாலே என்னையுங் கேட்கிறீர். நான்தெரிந்தமட்டும் சொல்லுகிறேன்கேளும். இந்த இராஜசூயயாகத்தைச்செய்வதற்குத் தகுந்த - குலம் - குணம் - ஒழுக்கம் - முதலாகியவை உமக்கிருக்கின்றனவென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் அவசியம்செய்யலாம். ஆகிலும் அதைக்குறித்து முக்கியமாய் நடத்தவேண்டியதைச் சொல்லுகிறேன். இந்தயாகம் வெகு கடினமானது. ஏனெனில் சகலமாகிய அரசர்களையும்வெற்றிகொண்டு வெகுபொருளைக் கொணர்ந்து இதுசெய்யவேண்டும். அப்போது எல்லாமன்னவரும் நீர் சொல்லும் பணிவிடைகளைத் தடையின்றிச் செய்யவேண்டும். அவ்வளவு சுவாதீனத்தில் அரசர்களைக்கொண்டு வருவது எளிதல்ல. முற்காலத்திற் பூமியெங்கும் ராஜகுடும்பமாகவே யிருந்தது. அப்போது பரசுராமன் மிகுந்த கோபங்கொண்டு அந்த ராஜகுடும்பமெல்லாம் வேரற்றுப் போகும்படி நாசஞ்செய்தார். அதில் தப்பிப்பிழைத்த ஒருவராலே இக்காலத்தில் அரசர்குலங்களுண்டாயின. ஆனபடியினாலே முற்காலம்போல் இக்காலத்தில் அரசர்கள் அதிகமாயில்லை. ஆனாலும் இவர்களைத்தான் வெல்வது எளிதாகுமோ? அரசர்களையெல்லாம் வென்று சுவாதீனமாக்குவது பிரயாசமானபடியினாலேதான், முற்காலத்திலும் இந்தயாகத்தைச் செய்தவர் அதிகமில்லை. அரிச்சந்திரமகாராஜன் முதலில் இதைச்செய்ய வாரம்பித்து நிறைவேற்றினான்.

உங்கள் குடும்பத்திற் புரூரவசு என்கிற மகாராஜன் இதையாரம்பித்து நிறைவேற்ற மாட்டாமற் போயினான். இவ்வாறே அனேகரும் இந்தயாகத்தை நிறைவேற்றமாட்டாமற் போனார்கள். ஆனாலும் உமது தம்பிமார்களுடைய சாமர்த்தியத்தினாலே உமக்கு நிறைவேற்றக் கூடுமானதாய்த் தோன்றுகிறது. இன்னமொருவார்த்தைசொல்லுகிறேன். நீரிப்போது இராஜசூயத்திற் காகச்செய்த சங்கல்பத்தை இராஜநாசத்திற் காகச் செய்த சங்கல்பமாக நினைக்கவேண்டும். ஏனெனில்-மகாபல பராக்கிரமசாலிகளாகிய ராஜாக்கள் வெகுபேரிருக்கிறார்கள். அவர்கள் கொஞ்சத்திற் சுவாதீனப்படமாட்டார்கள். அதற்காக அனேக அக்ஷோகினி சேனைகளுடனே யுத்தஞ் செய்யவேண்டும். அதனாலே வெகுஜனங்கள் நாசமடைவார்களல்லவோ? ஆனாலாகட்டும். இக்காலத்தில் உம்மைப்போல் யாவரையும் வெல்லும்படியாகிய சாமர்த்தியமுள்ள ராஜாக்களதிகமாயில்லாவிட்டாலும், ஜராசந்தனென்று ஒரு ராஜனிருக்கிறான். அவனுடைய பெருமையைச் சொல்லுறேன் கேளும்.

ஜராசந்தன் சரித்திரம்.

ஐம்பத்தாறு தேசங்களிலே மகததேசமென்றொரு தேசமிருக்கிறது. அது நீர்வளம் - நிலவளம் - குடிவளம் - இவைகளால் மிக மேன்மைபெற்றிருக்கின்றது. அதில் கிருவிருஜமென்றொரு பட்டணமுண்டு. அதுசுற்றிலும் உயர்ந்தமலைகளாற் சூழப்பட்டு நீருகோட்டைபோ லிருக்கிறது. அந்தப்பட்டணத்தில் ஜராசந்தனென்கிற ராஜன் வாசம்பண்ணிக்கொண்டு, அந்தமகததேச முழுவதையும் ஒருவனாகவே தரும நீதிகள் வழுவாமற் பரிபாலனம் பண்ணிவருகிறான். அவன்வெகு தருமநிட்டையுடையவன். மிகுந்த உதாரத்வகுணமுள்ளவன். மகாபல பராக்கிரமங்களுடையவன். தகுந்த சேனாபலமும் ஆயுதபலமு முண்டானவன். அவனுடன் சேர்ந்தவர்கள் யாரானென்றால் - சேதிதேசத்து ராஜனும், எனக்கு உம்மைப்போல அத்தையின்குமாரனுமாகிய சிசுபாலனென்பவன். அவன் மகாபராக்கிரமசாலி. அவன் அந்த ஜராசந்தனுக்குச் சேனாதிபதியாகி, அவனுத்தரவைச் சிரசில்வகித்து நடந்துவருகிறான். அந்த ஜராசந்தனுடைய சிநேகம் தனக்கிருக்கிறபடியினாலே, தனக்குச் சமானம் யாருமில்லையென்று மகாகர்வங்கொண்டு மற்றவர்களை அலக்ஷியஞ்செய்கிறான். இவனுமன்றி கரூசதேசத்து ராஜனாகிய தந்தவக்கிரனென்பவனும் அந்த ஜராசந்தனைக்கூடி, அவனுக்கு ஊழியனாகி யிருக்கிறான். இவனும் சிசுபாலனோடு சமானமாகியவீரத்தன்மையுடையவன். வெகு மாயைகளைக் கற்றவன். அம்சன்-டிபிகன் - என்கிற இருவர் வெகுபலசாலிகள். மிகுந்த மாயாவாதிகள். அப்படிப்பட்ட இருவரும் அந்த மகதராஜனுடைய நேசம் தங்களுக்கிருந்தாற் போதுமெ[illegible], அவனுடைய சேவகராயிருக்கின்றார்கள். மேகவாகனனென்று ஒரு ராஜனுண்டு, அவனுக்குத் தலைமேலொரு இரத்தினமுண்டு. அதனாலவனுக்கு அற்புதமணியென்றும்பேருண்டாயிற்று. அவன் ஒப்பற்ற புசபலமுடையவன். காலயவனனென்றொருவன் யவனதேசமென்கிற துருக்கர் தேசத்திற்கு ராஜனாயிருந்தான். அவன்மகாசூரன். முரனென்று ஒரு அசுரனிருக்கிறான். அவனுடைய மாயைகளையும் தந்திரங்களையும் ஒருவரும் கண்டுபிடிக்க மாட்டார்கள். இந்த முரனைச்சேனாதிபதியாகவைத்துக்கொண்டிருக்கும் நரகாசுரனென்றொருவன் மேற்குச்சமுத்திர நடுவில் மாகிஷ்மதியென்கிறபட்டணத்திலிருக்கிறான். அவன்வெகு சூரனும் தீரனுமாய், அஸ்திரபலம்-ஆயுதபலம்- வரபலம்—வாகனபலம் - இவைகளுடையவன். வெகுகம்பீரன். அவனுடைய குமாரன் பகதத்தனென்பவன். தகப்பனுக்கு விசேஷப்பட்டவன். அவனும் மற்றனேகரும், மேற்சொல்லியயாவரும் அந்தஜராசந்தனையடுத்துப் பிதாவினிடத்திற் புத்திரனெவ்வா றிருப்பானோ? குருவினிடத்திற் சிஷனெவ்வா றிருப்பானோ? அரசனிடத்திற் சேவகனெவ்வா றிருப்பானோ? அவ்வாறு மிகுந்த பயத்தோடும் அன்போடும் காத்திருக்கின்றார்கள்.

அன்றியும் பவுண்டரகனென்று மகாதுஷ்டனொருவ னிருக்கிறான். அவன் என்னிடத்தில் மிகுந்த பொறாமைகொண்டு என்னைப்போலே வாசுதேவனென்று பெயரைவகித்துத் தன்மாயாபலத்தினாலே நான் குகைகளையு முடையவனாய் ஆகாசத்திற் பறக்கும்படியாகிய கருடனொன்று செய்வித்து, எஃகினாலே சக்கரம் முதலாகிய பஞ்சாயுதமு முண்டாக்கி அவைகளுக்கு சுதரிசனம் - பாஞ்சசன்னியம் - கவுமோதகீ- நந்தகம் - சார்ங்கம்-என்கிற நாமங்களையிட்டு, அவைகளுடனே அந்தக் கருடன்மீதேறிச் சஞ்சரித்துக் கொண்டு இந்திரபோகங்களை அனுபவித்து வருகிறான். அவனும் வெகுபலவான். அவனுடைய தம்பி இரிதியென்பவ னிருக்கிறான். வெகுபல பராக்கிரமசாலி. என்னுடைய மாமனாகிய வீஷ்மக னென்பவனும்-அவன்மகன் உருக்குமி யென்பவனு மிருக்கிறார்கள். "அவர்களுடைய சாமர்த்திய முமக்கே நன்றாய்த் தெரிந்ததல்லவா? அவ்விருவரும், அந்தப்பவுண்டரகனிருவரும், ஜராசந்தனுடனே மிகவுநேசமாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களெல்லாம் ஒரேகுடும்பம்போற் சேர்ந்துகொண்டு, ஒருவருக்கு நேரிடுகிற சுகதுக்கங்களை யாவரும்பங்கிட்டு அனுபவிக்கிறார்கள். என்மாமன் மைத்துனனென்னுமவ்விருவரையும் நான் எவ்வளவு அனுசரித்துவந்தாலும், அவர்கள் அந்தப்பக்ஷத்திலேயே நேசமுடையவர்களன்றி என்னிடத்தில் எவ்வளவும் நேசிக்கிறதில்லை. இப்படி மகாபலவான்களெல்லாம் அந்த ஜராசந்தனுடனே சேர்ந்திருக்கிறார்கள். இவ்வளவு பெருமைபெற்ற ஜராசந்தனுடைய உபத்தி

ரவத்தைச் சகிக்கமாட்டாமல் வடதேசத் தரசர்களாகிய பதினெட்டுயூதரும், சூரசேனதேசத்தாரும், பத்திரமுகர் என்கிறவர்களும், சாள்வதேசத்தாரும், படச்சர ரென்பவரும், குளிந்த ரென்பவரும், குந்திதேசத்தரும், மச்சதேசத்தரும், தக்ஷணபாஞ்சால தேசத்தரும், மாளவதேசத்தரும், தேசங்களைவிட்டு ஓடிப்போய்க் காடுகளில் ஒளித்துத் திரிகிறார்கள். இவர்களிலனேகர் நம்முடைய துவாரகா நகரத்திற்குச் சமீபத்தில், மேற் சமுத்திரக் கரைக்காடுகளில் வாசமாயிருக்கிறார்கள்.

அன்றியும் பாஞ்சாலரனேகர் அந்த மகததேசாதிபதியாகிய ஜராசந்தனையேசேர்ந்திருக்கிறார்கள். உத்திரபாஞ்சாலர் அவனிடத்திற் பயத்தினாலே ஒடுங்கியிருக்கிறார்கள். ஆகையாலே இப்போதிருக்கிற ராஜாக்களிற் பலவான்களெல்லாம் அவனுக்கு மித்திரராகி, அவன் ஆக்கினையை யநுசரித்துக்கொண் டிருக்கிறார்கள். மற்றவரெல்லாம் ஓடி ஒளித்திருக்கிறார்கள். ஆனால் போஜவமிசத்தனாகியும் உமக்கு அம்மானாகியுமிராநின்ற புருஜித்து என்பவன், தென்னாட்டையுமேனாட்டையும் பரிபாலனஞ் செய்துவருகிறான். மகாபலவான். அவனொருவன் மாத்திரம் உம்முடைய பக்ஷத்திற் சேர்ந்திருக்கிறான். இதையெல்லாம் யோசிக்கும்போது, சகலமாகிய ராஜாக்களுக்கும் சிரோன்மணிபோல் மிகவும் சிரேஷ்டனாகிய மகாராஜன் ஜராசந்தனாகவே தோன்றுகிறது. அப்படிப்பட்டவ னிருக்க உமக்கு இராஜசூய மெப்படி நடக்கும். அதுபற்றிமற்றராஜாக்களுங்கூட சுவாதீனமாகமாட்டார்கள். ஏனெனில்-அவன் சகலராஜாக்களுக்கும்வேராயிருக்கிறான். இந்தச்சமயத்தில் அற்பபலமுடையவரும் அவன்பக்ஷத்திலேயே சேருவார்கள். ஆனால் உமக்குவெகு சம்பத்தும்-சேனைகளும்-சூரராகிய தம்பிமார்களு மிருக்கின்றார்கள். ஆகிலும் யாகத்தை ஆரம்பித்தபின் கலகங்கள் எவ்வளவு நடக்கவொட்டாமல் ஜாக்கிரதை செய்யவேண்டியது முக்கியமானதால், இப்போதே தகுந்த பத்திரஞ்செய்துகொள்ள வேண்டும். அந்தஜராசந்தனுடைய சவுரியபராக்கிரமங்கள் ஒப்பற்றிருக்கின்றன. அவைகளை நினைக்குந்தோறும் என்மனம் நடுநடுங்கிப்போகிறது. அவனாலே நான் பட்டபாட்டைச் சொல்லுகிறேன் கேளும்.

உக்கிரசேனனுடைய குமாரனாகிய கம்சனிருந்தானே: அவன் இந்த ஜராசந்தனுடைய பெண்களிருவரைக் கலியாணஞ்செய்து, தனக்கு மகாமேன்மை பொருந்திய மாமனிருக்கிறா னென்று அதிக செருக்கடைந்து, தன்பிதாவைக் காவலில்வைத்து, இராச்சியத்தைத் தானே சுதந்திரமாய் ஆள வாரம்பித்து, தனக்கு விரோதிகளாகிய விருஷ்ணி - அந்தகர் - போஜர் - குகுரர் - தாசார்கர் - சாத்துவதர் - மாதவர் - முதலாகிய பந்துக்களையெல்லாம் மிகவு நிர்ப்பந்தமாகிய ஸ்திதியில் வைத்துத் தொந்தரவுசெய்து வந்தடியினாலே, அவர்களெல்லாம் இவன்கீழிருந்து தாளமாட்டாமலும், இவனை வெல்ல மாட்டாமலும். இன்னவிடமென் றில்லாமல் தேசந் தேசமாய் ஓடி ஒளித்துக் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தார்கள். தருமபுத்திரரே! அவனாலே எங்கள் மாதாபிதாக்கள் வருத்தமடைந்ததெல்லாம் நீர் கேள்விப்பட் டிருப்பீரல்லவா? இப்படி யாதவரெல்லாம் பட்டபாடுகளையும், மற்றும் வேதியர் முதலாகிய பேரெல்லாம் பட்டபாடுகளையும் நான்கண்டுங் கேட்டும், என்னைக்குறித்து அவன்செய்த வஞ்சனைகளை நினைத்தும், ஆயர்சேரியைவிட்டு மதுரைக்கு வந்தபோது அந்தக்கம்சனைக்கொன்றேன். என்தமையனாகிய பலராமர் அவன்சகோதரனாகிய சுதர்மாவைக்கொன்றார். இவ்வாறு கம்சன் நாசமடையும்போது அவனுடைய பெண்டிரிருவரும் மங்கிலியமிழந்த துக்கத்தினாலே பிதாவினிடத்தில் வந்து மாரடித்துக்கொள்ள, அந்த ஜராசந்தன் அதை நோக்கிச் சகிக்கமாட்டாமற் கோபமும் விசனமும் கலந்தமனத்தோடே கடல்பொங்கி வந்ததுபோ விராநின்ற சேனைகளைக்கூட்டிக்கொண்டு, என்னோடு யுத்தம்பண்ண வேண்டுமென்று மதுராபுரியைவந்து சூழ்ந்துகொண்டான். அப்போது நான் மந்திரி முதலானோருடனே ஆலோசித்துப் பட்டணத்திற்குச் செய்யவேண்டிய பத்திரத்தைச் செய்து பலராமருடனேயும் இன்னுஞ்சில யாதவருடனேயும் வெளியிற் புறப்பட்டு, அந்தவீரனோடு யுத்தஞ்செய்ய வாரம்பித்து, அவனுடைய சேனைகளையெல்லாம் சின்னபின்னமாக்கி நாசஞ்செய்தேன். அவன்மறுபடியும் மிகுந்த சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தத்துக்குவந்தான். அந்தச்சேனையையும் நானும் பலராமருமாகத் துமிசஞ்செய்து விட்டோம். இவ்வாறுநாங்கள் சேனைகளை அழிக்க அழிக்க, அவன் மீட்டுமீட்டும் சேனைகளைக்கூட்டிக்கொண்டுவந்து சண்டைசெய்ய வாரம்பித்தான்.

இப்படி பதினெட்டுத்தரம் அவனுக்கும் எங்களுக்கும் மகத்தான யுத்தம்நடந்து, அதில் அவனுடைய சேனைகளெல்லாம் பாழாகிப்போய் அவனும் பலதடவையில் பங்கமடைந்தான். அவனுடைய சினேகிதரில் அனேகர் தனித்தனியே சேனைகளைக் கூட்டிக்கொண்டு என்னோடே யுத்தத்திற்கு வந்தார்கள். அவர்களிற் காலயவன னென்பவனைத் தந்திரமாய்ச் சங்கரித்தேன். அம்சடிபிகரையும் அப்படியே நாசஞ்செய்தேன். இந்த யுத்தங்களெல்லாம் அன்னாகார மில்லாமலும்-நித்திரையில்லாமலும்-இராப்பகலோய்வில்லாமல் மூன்றுவருஷ காலம் நடந்தன. இந்த மூன்றுவருஷங்களும் நாங்கள் பெரும்பாலும் நகரத்திற்குப் புறத்திலேயேயிருந்து கஷ்டப்பட்டோம். பின்பு இனியுத்தமில்லையென்று கொஞ்சம் தைரியத்துடனே நகரியிற்சென்று சமயா விளைப்பாற்றிக்கொண் டிருக்கையில், எங்களை ஜயிக்கவேண்டிய காரியத்தில் நிராசையடைந்து பட்டணம்போய்ச் சேர்ந்து இளைப்பாற்றிக்

கொண்டிருந்த ஜராசந்தனை அவனுடைய மகளீரிருவரு மறுபடியும் என்னோடே யுத்தஞ்செய்யும்படி தூண்டவே அவர்கள் பேச்சைக்கேட்டு ஜராசந்தன் யுத்திற்காகச் சேனைகளைக் கூட்டுகிறானென்கிறசேதி சாரணராலே நானறிந்து, எத்தனைநாளிவனோடே போராடுகிறது? பொழுதுவிடிந்தால் சண்டையே தொழிலாயிற்றே: என்னசெய்வோ மென்றுவிசனமடைந்து சிந்தித்து, இனி இந்தப் பட்டணத்திலிருந்தால் அவன் நம்மைப் பிழைக்கவொட்டானென்று விசுவகர்மாவைக்கொண்டு மேற்குச் சமுத்திரநடுவில் ஒரு பட்டண முண்டாக்கிக்கொண்டு ஒருவருக்குக் தெரியாமல் என்பந்துக்கள் யாவரையும் அதிற் பிரவேசிப்பித்து மதுரையில் மனம்வெறுத்து நானுமவ்விடத்திற்போய் வாசஞ்செய்கிறேன். இப்படி நடுச் சமுத்திரத்திற் சென்றும் அவனுடைய பயத்தினாலே மூன்றுயோசனையள்வாய் ஒரு அரண்மனை கட்டி,அதற்கொரே வாசல் வைத்து, அம்மனைக்குப் பதினெட்டு இடங்களில் தகுந்த காவல்களை யேற்படுத்தி, மகாசூரர்களாகிய யாதவர்களைச் சுற்றிலும் வாசஞ்செய்யும்படி செய்வித்து, மகாபலபராக்கிரமசாலிகளாகிய உக்கிரசெனன் புத்திரர்கள் நூற்றுவரையும் நடுவில்ஸ்தாபித்து, சத்தியபாமாகுமாரனாகிய சாருதேஷணியன் முதலானோரையும் ஓரிடத்தில் ஏமாறாமலிருக்கச்செய்து, சாத்துவிகி - கிருதவர்ம்மா-அனுதிருஷ்டி - சோமன்-சமிதி-சயந்தன் - பிரத்தியும்னன் - அநிருத்தன் - பாநு-அக்குரூரன் - சாரணன் - நிசடன் - சாம்பன் - இவர்களுடனேயும், விகத்துரு - உத்தவன் - சல்லி- விரோதன்-வசுதேவன் - உக்கிரசேனன் - பிரசேனன் - என்கிற மகா மந்திரிகளுடனேயும் நானும் பலபத்திரருமாய் எப்பொழுதும் காவற்காரர்போற் காத்திருக்கிறோம். அன்றியும் சங்கடங்கள் நேரிட்டால் மகா பலசாலிகளாகிய நீங்களிருக்கிறீர்களே: சமயத்திற் கைகொடுத்துக் காப்பாற்றுவீர்க ளென்கிற தைரியமுமடைந்திருக்கிறோம். ஓ தருமராஜனே ! அந்தமகததேசராஜனுடைய சுரூபத்தை நன்றாயறிந்து குட்டுப்பட்டிருப்பதினாலே சொன்னேன். இதைச்சொல்லி யும்மைப் பயமுறுத்துகிறேனென்று நினைக்கவேண்டாம். அவனிருக்கும்போது யாகம் ஆரம்பித்தால் இடையூறின்றி எவ்வளவு நிறைவேறமாட்டாதென்று சொல்கிறேனேதவிர வேறில்லை.உமக்குமகாசூரராகிய தம்பிமாரிருக்கிறார்கள். இந்தச்சமயத்தில் உங்களாலே யாவது அந்தச் சத்துருவினுடைய பயத்தினின்றும் விடுபட்டுச் சுகப்படலாமென்று நினைக்கிறேன். எது எப்படியாவது ஆகட்டும்.அவனையுயிரோடுவைத்து இராஜசூயமாரம்பஞ்செய்வது நன்மையன்று. நீர்எனக்கு ஆப்தராகையினாலேயும், என்னை முக்கியமாய் நாடிக்கேட்டபடியினாலேயும்,எனக்குத் தெரிந்தமட்டுஞ் சொன்னேன். என்றுசொல்லி க்ஷணகாலம் யோசித்துத்தருமராஜனைநோக்கி மறுபடியும் சொல்ல ஆரம்பித்தார்.

ஓ தருமராஜனே!இவ்வாறு மிகப்பெருமைபெற்றுவிளங்காநின்ற ஜராசந்தனிருக்கையில், யாகம் எவ்வளவும் நிறைவேற மாட்டாதென்று தோற்றுகிறது. ஏனென்றால்- நம்முடையவர்களிலேயே -வீஷ்மர் - துரோணர்-கிருபர்-அசுவத்தாமா-துரியோதனன் -கர்னன்-முதலிய வீரரிருக்கிறார்கள். மேலும் - ஏகலைவன்-சகுனி - சிசுபாலன் - வீஷ்மகன்-உருக்குமி - முதலாகியபேர்களு மிருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் ஜயிக்காமல் யாக மாரம்பிக்கலாமோ?ஒருவேளை வீஷ்மர் - துரோணர் - கிருபர் - அசுவத்தாமா - இவர்கள் உம்மிடத்தில் தயையினாலேயும் பக்ஷபாதத்தினாலேயும் சும்மாவிருந்தாலும், கர்னனும் துரியோதனனும் சும்மா விருப்பார்களா? அவசியமாய் யுத்தத்திற்கு வருவார்கள். அப்போது யாகத்திற்கு இடையூறுநேரிடாமற் போகுமோ? அந்தக் கர்னனென்ன எளிதில் வெல்லக் கூடுமோனவனா? மகாபராக்கிரமசாலியும் அஸ்திரபலசாலியு மல்லவோ? இவ்வாறு பூமியில் மகாவீரர்களுடைய பலமிருக்க, எவ்வளவும் ஆலோசிக்காமல் யாகத்தைத் துவக்கலாகாது. எல்லா வரசர்களையும் வெல்வதற்குமுன், ஜராசந்தனை வெல்லவேண்டும். இன்னும் அவன்செய்கையைச் சொல்லுகிறேன்கேளும். அவன் பூமியில் வெகுதூரம் ஜயயாத்திரையாகப்போய் வெகுராஜாக்களைத் தனது புஜபலத்தினாலே ஜயித்துப் பிடித்துக்கொண்டுவந்து, தனது நகரிக்கு மதில்போலிராநின்ற மலையிலோர்புறத்துக் குகையிற் சிறைவைத்திருக்கிறான். இனி அவர்களையெல்லாம் சிரச்சேதஞ்செய்துபலியாக்கி, ஒருயாகஞ்செய்ய யத்தினப்பட்டிருக்கிறான். அதுசெய்தால் அவனைவெல்வது தேவர்களுக்கும் அசாத்தியமாகும். ஆதலால் - அவன் அப்படி செய்வதற்குமுன் அவனோடு சண்டைசெய்து அவனைக்கொன்று, சிறையில் வைக்கப்பட்ட அரசர்களை விடுவித்தால் அவர்களெல்லாம் நமக்கு இயல்பாகவேவணங்கி வேண்டிய ஒத்தாசைசெய்வார்கள். மகாபுண்ணியமும் சித்திக்கும். அப்பால் மற்ற மன்னவர்களைக் கொஞ்சம் எளிதில் ஜயிக்கலாம். இப்படிக்கு யாவரையும் கீழ்ப்படுத்தினால்தான் உமதுகருத்திற் குடிகொண்டிருக்கிற யாகத்தைச்செய்யலாம். இல்லாவிட்டாற் செய்யக்கூடாது. இதுதான் எனக்குத் தோற்றுகிற அபிப்பிராயம்.உமக்கு எப்படி தோற்றுகிறதோ தெரியாது. இனி உமது மனதின்படி எனக்கு இடுங்கட்டளையைச் செலுத்தக் காத்திருக்கிறேன் என்று பேசி முடித்தார்.

இவையனைத்தையுங்கேட்ட தருமராஜன் கண்ணனைநோக்கி யொருவார்த்தைசொல்ல வாரம்பித்தார். ஓகிருஷ்ணா! இப்போது நீர் சொன்னவார்த்தை மிகவு நியாயமானதாயும் இதமானதாயுமிருக்கிறது. அதனாலே அதிகமாகச் சந்தோஷப்படுகிறேன். மகா புத்திமானாகிய உம்மைத்தவிர யார்தான்இப்படிபேசத் தகுந்தவரிருக்கிறார்கள். ஆனபடியினாலேதான் இந்தச்சங்கதியை உம்முடனே யோசிக்கவேண்டுமென்று

நான்நினைத்தது. உலகத்திலே வெகுராஜாக்களிருக்கின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் சம்ராட் என்கிறபேரை யடையவேண்டுமென்றுதான் நினைத்திருப்பார்கள். ஆனால் அது அசாத்தியமென்று விட்டிருப்பார்களே யல்லது, ஆசையில்லாமையாலே விட்டிருக்கமாட்டார்கள். இப்படியிருக்க - நாமாத்திரம் எப்படி துணிவாய் அப்பெயரைச் சம்பாதிக்க யத்தனப்படலாம்? நீர் சொல்லுகிறபடி பலத்தினாலேயும், குணத்தினாலேயும், விவேகத்தினாலேயும், ஒழுக்கத்தினாலேயும், யாவன் ராஜாக்களையும் உலகத்தாரையும் சுவாதீனப்படுத்துகிறவனோ? அவன்தான் அப்படியாவதற்கு யோக்கியன். முற்காலத்திலும் இப்படிப்பட்ட சீர்மையுள்ள ஐந்தாறுபேர்கள்தான் இராஜசூயயாகஞ் செய்து, சம்ராட் என்கிறபெயரை வகித்தவர்கள். அவர்கள் யாரென்றால்-மாந்தாதா என்கிற மஹாராஜனொருவனிருந்தானன்றோ? அவன் மகாபலசாலி. குணசாலி. உலகமெங்கும்பரவிய புகழுடையவன். அவன் தன்சாமார்த்தியத்தினாலே யாவரையுங் கீழ்ப்படுத்தி, அவர்களிடத்தில் வருடந்தோறும் கப்பம்வாங்கி வந்தான். அந்தப்படியே யாவரும் கப்பங்கட்டிவருகையிற் சிலநாட்கள் கழித்தபின்னர் அந்த மாந்தாதா அரசர்களைப்பார்த்து, இனி நீங்கள் எனக்குக் கப்பங்கட்டவேண்டுவதில்லை. அந்தப்பொருள்களை யெல்லாம் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். நான்மிகுந்த சந்தோஷமாய்ச் சம்மதிக்கிறேன். என்று சொல்ல அதுகேட்ட அந்த அரசர்களெல்லாம் இந்தமாந்தாதாவின் உதாரகம்பீர குணங்களுக்குச் சந்தோஷித்து வலுவில் ஒருநாள் அவனைநோக்கி, ஓ மகாராஜனே! நீர் மகா குணசாலியாதலால் அரசர்களெல்லாரிலும் மேன்மையாகச் சம்ராட் என்னும் பட்டத்தையாளத் தகுந்தவராயிருக்கிறீர். ஆதலால் நீர் இராஜசூயஞ்செய்ய வாரம்பம்பண்ணும். நாங்களெல்லாம் ஓரிடையூறுமின்றி நடத்துகிறோமென்று சொன்னார்கள். அப்படியே குடிகளும் அவனுடைய ஆளுகையின் சீர்மைக்குச் சந்தோஷித்து, இராஜசூயஞ் செய்யச்சொல்லி வேண்டிக்கொண்டார்கள்.

இவ்விதமாகயாவரும் அன்புவைத்துநடத்த, அந்தவேந்தன் யாகத்தை நிறைவேற்றிச் சம்ராட் என்கிற பெயரை வகித்து விளங்கினான். கார்த்தவீரியார்ச்சுனனென்று ஒருமகாராஜ னிருந்தானே: அவன் ஒப்பற்ற சாமர்த்திய முடையவன். தத்தாத்திரேயரென்கிற மகாயோகியை நெடுநாள்பூசித்து, அவருடைய அனுக்கிரகத்தினாலே மகாபலபராக்கிரமங்களை யடைந்து, பூமண்டலமெல்லாம் ஜயங்கொண்டு, தனக்கெதிரில் ஒருவனும் வில்லெடுக்காம லிருக்கும்படி செய்து, அந்தமகாயாகத்தை நிறைவேற்றிச் சாம்பிராச்சிய பட்டாபிஷேகம்பெற்று மேன்மை யடைந்தான். அப்படியே துச்சந்தனுடைய குமாரனாகிய பரதமகாராஜனும், தன்தோள்வலிமையினாலும் புத்தியின் கூர்மையினாலும் யாவரையுங்கீழ்ப்படுத்திச் சாம்பிராச்சியம்பெற்றான். மருத்தனென்று ஒருராஜனிருந்தான். அவன் வெகுசிறந்தவன். அவன்செய்த யாகங்களுக்கும், அதுகளில்கொடுத்த தட்சணைகளுக்கும் கணக்கில்லை. அவன்வெகு தருமகுண முடையவன். ஆனபடியினாலே அவன் விவேகத்திற்காக அரசரெல்லாம் கீழ்ப்படிந்துவந்தார்கள். அதுபற்றி அவனும் அப்பெரியவேள்வியை நிறைவேற்றிச் சம்ராட்டாக ஆனான். அரிச்சந்திரன் மகாசத்தியசந்தன். அவன் பெருமை யாவருக்குத் தெரிந்ததன்றோ? அவனொருவன் அச்சாம்பிராச்சிய மடைந்தவன். இப்படிக்கெல்லாமிருக்க, நமக்கு எந்தயோக்கியதை யிருக்கிறதென்று நாம் அந்தப்பெயருக் காசைப்படலாம்? ஆகிலும் இராஜாவா யிருப்பவன் மேன்மையாகியகாரியத்தைக் குறித்து முயலாம லிருக்கக் கூடாது. அப்படியிருந்தாற் செல்லுகளினாலே தினந்தோறும் வளர்க்கப்படாத ஓர்புற்றைப்போலழிந்துபோவான் என்று சாஸ்திரமிருக்கிறபடியினாலே, நான் அந்த விஷயமாக ஆப்தா யிருக்கிற பேர்களுடன் யோசிக்கிறேனேயல்லது, வேறில்லை. என்று தருமபுத்திரர் சொல்லிக்கொண்டிருக்கையில் வீமசேனன் ஒருவார்த்தை சொல்லத் துவக்கினான்.

அண்ணா! இராஜசூயத்தைக்குறித்து நீர் மனதில் நினைத்து, இப்போது அந்தநினைப்பை யொழிப்பது உம்மைப்போலொத்த மகாராஜனுக்குத் தகுந்ததன்று. உமக்கென்னகுறை யிருக்கிறது? மகானுபாவனாகிய ஸ்ரீகிருஷ்ணன் நமக்குச் சகலவிதசகாயமுஞ் செய்யவிருக்க, நானும் அருச்சுனனும் காலாலிட்ட கட்டளையைத் தலையாற்செய்யக் காத்திருக்க, உமக்கெந்தக் காரியந்தான் முடியாது? ஜராசந்தனாகட்டும், இன்னும் அவனுக்கு மேற்பட்டவன்தானாகட்டும், ஸ்ரீகிருஷ்ணனுடைய புத்தியின்படி நடந்தால் அவனைக் கொல்வது வருத்தமன்று. இப்போது நீர் அந்த ஜராசந்தனைக் கொன்றுவரும்படி நியமித்தால், நானும் அருச்சுனனும் கிருஷ்ணனும்போய் ஒருநொடியிற் கொன்றுவருகிறோம். இதற்காக யோசிக்கவேண்டியதில்லை. என்றுசொல்லிக் கண்ணனைநோக்கி, ஓகிருஷ்ணமூர்த்தி! எங்களண்ணனாகிய தருமபுத்திரர் இந்தயாகத்தைக்குறித்து ஏன் விசாரப்படுகிறார்? எங்களுடைய சகல பாரங்களையுந் தாங்கி ரட்சிக்கத்தக்க மகானுபாவனாகிய நீரிருக்கையில், அவர் இவ்வாறு அதைரியங்கொள்ள லாகுமோ? உமது சகாயமிருக்கையில் ஜராசந்தனைக்கொல்ல யெங்களுக்குப் பிரயாசமோ? ஆதலால் வேண்டியமுயற்சிகள் செய்து யாகத்தை நிறைவேற்ற வேண்டியதே முக்கியமென்று சொன்னான். இப்படி வீமசேனன்சொல்லிய வார்த்தையைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் தருமராஜனை நோக்கிச் சொல்லுகிறார்: ஓ உதிஷ்டிரமகாராஜனே! உலகத்திலே ஒருவனுக்கு ஒருபொருளில் அபேக்ஷையிருந்தால், அந்த அபேக்ஷையின் வலிமையினாலே அந்தப் பொருளி

விருக்கும் குற்றத்தையும் குணத்தையும் கண்டறிய
மாட்டான். அப்படிக்குநாமும் சாம்பிராச்சியத்தில்
ஆசைகொண்டிருக்கிருேமாதலால், எதிரிகளுடைய
பலாபலம்தெரியாமல் துணிகிறதாய் யோசிக்கவேண்
டாம். ஜராசந்தனுடைய பலம் நமக்குநன்ருய்த்தெரிந்
திருக்கிறது. இன்னும் அவனுடைய கருத்தைச்சொல்
லுகிறேன்கேளும். தான்ஜயயாத்திரைபோனபோதுத
ன்னுடன்மகாவீரராகிய சிலர்எதிர்க்க, அவர்களையெல்
லாம் வில்லைப் பூமியிற்போட்டு ஓடிப்போகும்படி செ
ய்து மடக்கிப்பிடித்து, அவர்களில் முன்னர் எண்ப
த்தாறுபேர்களையும் - பின்னர் பதினுலுபேர்களையும் -
கொணர்ந்து சிறைச்சாலையிற் போட்டிருக்கிருன். அ
ப்படியே இன்னுஞ் சிலரைக் கொணர்ந்து, அவர்களை
யெல்லாந் தன்குலதேவதையாகிய ஜரைஎன்கிற பிசா
சுக்குப் பலியிட்டு, வேண்டியவரம்பெற்றுப் பின்பு இ
ராஜசூயஞ்செய்து சம்ராட் ஆகவேண்டுமென்று நினை
த்திருக்கிருன். அது அவனுக்கு எளிதிலேமுடியும்.
ஆனபடியினுலேதான் இப்போது தனக்குவேண்டிய
பொருள் நிறைந்திருக்கச்சேயும், மகா பலவான்களா
கிய இராஜாக்கள் சுவாதீனமாயிருக்கச்சேயும், அந்தக்
காரியத்திற்கு யத்தினப்படவில்லை. ஆதலாலே சாம்
பிராச்சியம் பெறக்காத்திருக்கிற அந்த ஜராசந்தனை,
வீமசேனன் சொல்லுகிறபடி நாங்கள் மூன்றுபேரும்
போய்க் கொன்றுவருகிருேம். நீர் தயைசெய்து கட்ட
ளையிடவேண்டும். நாமே அவனேடெதிர்க்கப் பயந்
தோமாகில், மற்றையார்தான் எதிர்க்கப்போகிருர்கள்?
எப்படியும் க்ஷத்திரியனு யிருப்பவனுக்குத் தைரியப
லம் வேண்டுமன்ருே? அதைக்கொண்டு பகைவரோடு
யுத்தத்திற்குப் போகுமளவில் ஜயம் நேரிட்டாலும்
நன்மைதான். மரணம் நேரிட்டாலும் நன்மைதான்.
அதனுல் இவ்வுலகிலும்புகழுண்டு. மேலுலகிலும் கதி
யுண்டு. அப்படிக்குச் செய்யாமல் அஞ்சிக்கொண்டிரு
ந்தால், இங்கும் அபகீர்த்தி. மறுமையிலும் நற்கதிகி
டைக்காது. ஆதலால் எங்களை ஜராசந்தனேடு யுத்
தத்திற்குப்போய் வரும்படி செலவுகொடுக்கவேண்டு
மென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொல்லியதைக் கேட்ட
தருமராஜன், அவரைப்பார்த்துச் சொல்லுகிருர்.

ஓ ஸ்ரீகிருஷ்ணு ! நான்மூடத்தனத்தாலே காரி
யத்தி லிருக்கும் குணதோஷங்களையோசிக்காமற் சம்
ராட் என்னும் விருதை அடைய வாசைப்பட்டாலும்,
நீர் அதைக்குறித்துச் சம்மதிப்படாமலிருக்க, உங்க
ளையெப்படி நான்யுத்தத்திற்கு அனுப்பத்துணிவேன்?
எனக்கு வீமனும் - அர்ச்சுனனும் - கண்களானபடி
யினுலும், நீர்மனம் ஆனபடியினுலும், கண்களையும்
மனத்தையும்விட்டு நானெப்படி யிருப்பேன்? ஓ கண்
ணனே ! நீர் ஜராசந்தனுடைய சரித்திரத்தைச் சொ
ல்லக் கேட்கும்போதே மனது நடுநடுங்குகின்றது.
அப்படியிருக்க - அந்த மிருத்துவினிடத்திற்கு உங்க
ளைப் போங்களென்றுசொல்ல என்மனஞ் சம்மதிப்ப
டுமோ? அல்லது துணிந்து போகச்சொன்னுலும்,
அந்தச்சூரனேடு சண்டைசெய்வதில் உங்களுக்குமிகு
ந்த ஆயாசங்கிடைக்குமென்று தோற்றுகிறது: ஆயா
சந்தான் கிடைத்தாலும், அவனைக்கொன்று வருவீர்க
ளென்று எவ்வளவும் நான் நம்பவில்லை. ஆகையால்-
இப்படிப்பட்ட சாகசகாரியத்திலே உங்களைநான் ஏவ
மாட்டேன். இப்போது ஒரு வார்த்தை சொல்லுகி
றேன் கேளுங்கள்: இதுமுதல் இராஜசூயமென்கிற
நினைப்பை இழந்து இத்தனைநாள்போலச் சும்மாவிரு
ந்தோமேயானுல், மனதிற்கும் வருத்தமில்லை. தேகத்
திற்கும் உபாதியில்லை. வாழ்வுக்கும் குறைவில்லை.
அப்படி செய்யாமல் வீணுயதை நினைத்துக்கொண்டி
ருப்பதில், நம்மாலது முடியமாட்டாதாகையால், விரு
தாவாய் மனதிற்கொரு துக்கம் வளர்ந்துகொண்டே
வரும். ஆனபடியினுலே சும்மாவிருப்பதே நல்லகாரி
யமென்று எனக்குத்தோற்றுகிறது. என்று சொல்லக்
கேட்ட அர்ச்சுனன் இதனைச் சொல்லுகிருன்.

ஓ மகாராஜனே ! இப்போது நீர்பேசியபேச்செ
ல்லாம் உயர்ந்த குலத்திற்பிறந்து, சகலமுமறிந்து,
மகாபலசாலியாசவு மிருப்பவனுக்குத் தக்கதன்று.
அப்படியிருக்க உமக்கேது இவ்வளவு அதைரியமாகிய
பேச் சுண்டாயிற்று? உமக்கென்னகுறைவு? காண்டீப
மென்னும் வில்லேந்தி, அக்ஷயமாகிய தூணீரங்களைத்
தோளிற்றூங்கி, ஒருவராலும் வெல்லப்படாத குதிரை
கள் சத்துருக்கள் மனமுடைந்துபோகும்படி நடன
ஞ்செய்ய வானரத்துவசம் கட்டிவிளங்காநின்ற தேர்
மேலேறிச் சகலபுவன கர்த்தாவாகிய ஸ்ரீ கிருஷ்ண
மூர்த்தியினுடைய சகாயத்தைப்பெற்று யாவரையும்
வெல்லும் படியாகிய வல்லபத்தோடு விளங்காநின்ற
நான்: உமதுகாலாலிடும் பணிவிடையை முடியாற்செ
ய்யக் காத்திருக்கிறேன். இப்படியிருக்கிறபடியினுலே
இந்திரராச்சியத்தை இப்போதே விரும்பினுலும் உம
க்குக் கிடைக்கும்படியாய்க்கொடுக்க நானிருக்க, இரா
ஜசூயத்தினு லாகவேண்டிய சாம்பிராச்சியந்தானே
கிடையாது? இதை யோசிக்காமல் என்னபேச்சைச்
சொன்னீர்? அண்ணேன் ! உலகத்திலே பலசாலியாக
ஒருவனும், தருமசாலியாக ஒருவனுமிருந்தால், அவ்
விருவருக்குள் பலசாலியே சிறந்தவன். ஏனென்ருல்
பலசாலியாயிருப்பவன் சகலசத்துருக்களையும் செயித்
துப் பெருஞ்செல்வம் பெறுவன். செல்வம்பெற்றபின்
சகலதருமங்களும் தனக்குத்தானே கிடைக்கும். அப்
படியல்லாமல் தருமங்களை மாத்திரம் அனுட்டித்து
வருபவனுக்கு, ஒரு காரியமுங் கூடிவரமாட்டாது.
ஏனென்ருல்-பலமில்லாமையினுலே எதிலேபிரவேசிப்
பதற்கும் அச்சமுண்டா யிருக்கும். பிரவேசித்தாலும்
பல இடையூறுகள் சம்பவிக்கும். ஆதலாற் குணதோ
ஷங்களையும் தருமா தருமங்களையும் விசாரிப்பதைப்
பார்க்கிலும், துணிவுடனே சவுரியத்தைச்செலுத்துவ
தே நன்மை. அப்படிசெய்தால் எல்லாக்காரியங்களுங்

கூடிவரும். இல்லையென்று அஞ்சினால், தொட்ட விடமெல்லாந் தொந்தரவுதான்வரும். ஆனதுபற்றி இப்போது ஒருயோசனையும் செய்யாமல், ஜராசந்தனை எதிர்த்து யுத்தஞ்செய்து கொல்வதே உத்தமமான காரியம். ஜயத்திற்குக் காரணம் சவுரியமேயல்லது, மற்றொன்றுமன்று. க்ஷத்திரியனுக்கு அச்சமென்பது பெருங்குற்றமல்லவோ ? பலசாலியினிடத்துவணங்கி நடக்கவொண்ணாது. ஆனபடியினாலே நாமிப்போது ஜராசந்தனையெதிர்த்துச்சம்ஹாரஞ்செய்து, அவனால் சிறைவைக்கப்பட்ட ராஜாக்களையெல்லாம் விடுவித்து இராஜசூயயாக மாரம்பித்துச் செல்வத்தையும்-பெருமையையும்-கீர்த்தியையும் - பெறவேண்டுமே யல்லது சும்மாவிருப்பது நல்லதன்று. (காற்றுள்ளபோது தூற்றிக்கொள்.) என்கிறபடியே நமக்குச் சகலபலங்களும் அமைந்திருக்கிறபோது, பெருமையைக்குறித்து முயலாமல் அஞ்சியிருக்கலாமோ? இருக்கக்கூடாதே: ஆகையினாலே நானும்வீமசேனரும் கிருஷ்ணருமாகிய நாங்கள் மூன்றுபேரும் ஜராசந்தனுடைய சம்ஹாரத்துக்காகப் போகும்படி, அநுக்கிரகத்துடனே கட்டளையிட்டு அனுப்பவேண்டும். என்று அர்ச்சுனன் சொல்லி நிறுத்தியபின்பு, ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லுகிறார்.

ஓ மகாராஜனே ! இப்போது அர்ச்சுனன் சொல்லியவார்த்தை மிகவும் நன்றாயிருக்கிறது. எப்படி யென்றால் - பரதவமிசதிலகராகிய உமக்குத் தம்பியாய்க் காண்டீப மென்னும் தநுசையும் -என்றுங்குறையாத அம்புப் புட்டிலையும் - வானரத்துவசத்தோடு கூடிய திவ்விய ரதத்தையும் அடைந்து, பரிவாரத்துடனே எதிர்த்துவந்த தேவேந்திரனைவெற்றிகொண்டு, அக்கினிபகவானுக்குக் காண்டவ வனத்தைக் கொடுத்துப் பசியாற்றிய திறமைக்குத் தகுந்ததாகப் பேசினான். ஆனாற் பராக்கிரமத்தையே விசேஷமாய்ப் பேசியதென்னவென்றால், மனிதனுக்குப் பிறக்கும்போதே சாவும்-வாழ்வும்- நிச்சயமாயிருக்கிறது. அது இன்னகாலத்தில் வருமென்று யாருமறியார்கள். எப்போதாகிலும் அவசியம் வரவேண்டியதாகிய அந்த மரணத்திற்கு அஞ்சி, மேன்மைக்குக்காரணமாகிய காரியங்களில் இறங்காம லிருக்கக் கூடாதென்கிற கருத்தைக்கொண்டு பேசியிருக்கிறான். ஆனால் எங்கேயுங் குணதோஷங்களை ஆராய்ந்தறியாமலே சத்துருக்களோடு சண்டைக்குப்போகலாமாவென்றால், போகக்கூடாது. நன்றாயோசித்துத் தகுந்தபடி உபாயத்தோடு போகவேண்டியதேமுக்கியம். சாகசமாய்ச்செய்வதினாற் குற்றமுண்டு. அற்ப பலமுடையவனும் உபாயத்தோடெதிர்ப்பானே யானால், பலசாலியா யிருப்பவனைக் கூட வெல்லமாட்டுவான். அப்படியிருக்க நாங்கள் உபாயத்தோடெதிர்த்து ஜராசந்தனைக் கொல்வதிற் சந்தேகப்படவேண்டாம். நீங்கள் பலசாலிகளாச்சுதே உங்களுக்கும் உபாயந்தேடவேண்டுமோ வென்றால், எவனுக்கும் உபாயம் வெகுசகாயஞ் செய்யும். நகத்தாலே கிள்ளத் தகுந்ததைக் கோடாலியாலே வெட்டும்படியாக்குவது மூடனுடைய செய்கையன்றோ? அதுபோல் உபாயமாய்ப் போனால் ஜராசந்தனைக் கொல்வதெளிதாயிருக்கும். உபாயமின்றிப் போவதி லென்னபயன்? மேலும் சமான பலசாலிக ளிருவர் ஒருத்தரோடொருத்தர் சண்டைசெய்தால், அவரில் ஒருவன் வெற்றிபெறுவனே யல்லது இருவரும் வெற்றிபெறக் கூடாதல்லவா ? ஆதலால் எவ்விதமாய் வெற்றிபெறலாமோ அவ்விதமாய்த் தன் குறைவுபாடுகளைச் சத்துருவுக்குத் தெரிவிக்காமலும், அவன் குறைவுபாடுகளைத் தான் நன்றாய் அறிந்தும், தந்திரமாகவே யுத்தஞ்செய்வதுநன்று. அன்றியும் ஒருகாரியஞ்செய்யவேண்டியதாய் நிச்சயித்தால், அதைவிரைவில் நடத்தவேண்டும். இல்லாவிட்டாற் பலவிரோதங்கள் நேரிடும். (ஆலஸ்யம் அமிர்தம் விஷம்.) என்பதுபோலாம். ஆகையால் நாங்கள் மூவரும் சென்று அந்தவீரனைச் செயித்துவருகிறோம். நீர்மனதிற் கவலைவைக்காமல் விரைவில் விடை தர வேண்டு மென்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லிய சொல்லைக்கேட்டுத் தருமராஜன் வினவுகிறார்:

ஓ யதுகுலசிகாமணியே! இதுவரையில் யாவனுடைய சவுரிய தைரிய முதலான குணங்களைப்பற்றி நாம்பேசி வருகிறோமோ ? அந்த ஜராசந்தன் யாருடைய குமாரன் ? எப்படி பிறந்தான்? இப்படிப்பட்ட மேன்மை அவனுக்கு எப்படி கிடைத்தது ? அவனுடைய பராக்கிரமத்திற்கு யாவரும் அஞ்சும்படி இருப்பதற்குக் காரணமென்ன? உம்முடையபராக்கிரமமாகிய தீயில் விளக்கில்விழும் விட்டிற் பூச்சிபோற் சாகாமல், அவன் உம்மிடத்திலும் தப்பித்துக்கொண்டு விளங்குகிறது வெகு ஆச்சரியமன்றோ? ஆதலால் அனேகராஜாக்களைவென்று சிறையில்வைத்து, எல்லா வரசர்களிலும் மேலாய் விளங்கும்படியாகிய பலபராக்கிரமங்களுள்ள அந்த ஜராசந்தனுடைய சரித்திரத்தை நன்றாய்ச் சொல்லவேண்டும். என்றுவினவிய தருமபூபதிக்கு ஸ்ரீ கிருஷ்ணன் பதிலுத்தரஞ்சொல்ல வாரம்பித்தவராய், கேளும் உதிஷ்டிர மகாராஜனே ! மகததேசத்திற் பிரகத்திரதனென்று அழகு-செல்வம்-கல்வி-வல்லமை-முதலான நற்குணங்களுக்குக் கடலாகிய ஒருராஜனிருந்தான். அவன் காசிராஜாவினுடைய இரட்டையாய்ப் பிறந்த இரண்டுபெண்களைக் கலியாணஞ்செய்து, அவர்கட்குத் தான் எந்தவஸ்துவைக் கொடுத்தாலும் - என்னலாலனை செய்தாலும் - இருவருக்குஞ் சமமாகவே செய்வேனென்று பிரதிக்கினை செய்து கொடுத்து, அவர்களுடனேகூடி வெகு போகபாக்கியங்களை யனுபவித்துக் கொண்டு, தயை தாக்ஷிணியம் முதலாகிய நற்குணங்கள் பொருந்தி, நீதி வழுவாமற் செங்கோல் செலுத்திவந்தான். அவனுக்கு நெடுங்கால வரையிலுஞ் சந்ததியுண்டாகாமற்போனபடியினாலே, சந்ததிக்காக வெகுதானங்கள் - தருமங்கள் - யாகங்கள் - தவங்கள் - இவைகளைச்செய்தும்

பிரயோசன [illegible] ப்முந்த விசனத்தையடைந்து, யாவையும் வெறுத்து இராச்சியத்தை மந்திரிகள்வசத்தி லொப்புவித்துத் தன்பெண்டீர்களுடனே வனவாசம்போனான். அவனிடத்தில் வைத்திருந்த அன்பினாலே அனேகர் கூடப்போனார்கள்.

இப்படி ராஜன் வனத்தி லிருக்குமளவிற் கூடப்போனஜனங்கள் ராஜாவைப்பார்த்து ஒருவார்த்தை சொன்னார்கள். ஓ பிருகத்திரத மகாராஜனே ? இவ்வனத்திற் கவுதமகுலத்திற் பிறந்தவராகிய கக்ஷவானென்கிறவருடையகுமாரர், சண்ட கவுசிகரென்கிற மகாரிஷி யொருவரிருக்கிறார். அவர் மகானுபாவர். அவருடைய ஆச்சிரமம் அருகிலிருக்கிறது. நீர் இவ்வனத்தி லிருக்கிற வரைக்கும் தினந்தோறு மொருதரம் அவரிடத்திற் சென்று நமஸ்காரஞ்செய்து அநுவர்த்திசெய்துகொண் டிருந்தால், உமக்கு அவசியம் நன்மை கிடைக்கும். என்றுசொல்லியவசனத்தை கேட்ட அந்தராஜன் இது நல்லதுதானென்று நினைத்துத் தினந்தோறும் அந்த மகாமுனியை யடைந்து பூசித்துக்கொண்டு ஒருமாமரத்தின்கீழிருப்பான். இப்படியிருக்க-ஒருநாள் அந்தரிஷியானவர்வந்து ராஜாவைப்பார்த்து, ஓராஜனே! நீர்இவ்வனத்திற்குவந்தகாரணமென்னவென்றுகேட்க, அந்தராஜன்-சுவாமி! அதைச்சொல்லுவதிற்பயனில்லாமற்போனாலும், தேவரீர்கேட்கிறபடியினாலேசொல்லுகிறேன். எனக்குஇராச்சியத்தில் மந்திரிமுதலியபேர்களாலாவது, சத்துருக்களா லாவது, ஒருகுறைவும்நேரிடவில்லை. மற்றின்னுமேதாவதாகியதுன்பமும் நேரிடவில்லை. ஆனாலும் நானே இராச்சியமுதலானதுகளை வெறுத்து வனவாசம் வந்துவிட்டேன். ஏனெனில்-எனக்குயவ்வனமெல்லாங்கழிந்து மூப்புவந்து மூடிக்கொண்டது. இதுவரையிலும் சந்ததி யுண்டாகாமையாலும், இனியுண்டாக மாட்டாதாகையாலும், நமக்கு மறுமையிலும் நற்கதியில்லை. இம்மையில் இராச்சிய முதலானவைகளினாலே தான் பயனென்னவென்றுவெறுப்புண்டாகி, இனிவனத்துக்குப்போய்த் தவமுதலாகிய நற்காரியங்களைச் செய்தும், தேவரீரைப் போலொத்த பெரியோர்களுக்குப் பணிவிடைசெய்தும், நற்கதியைப் பெறுவோமென்று இவ்விடம் வந்தேன்.

அப்படியே அடியேனுடைய பாக்கியத்தினாலே, தேவரீருடைய பணிவிடையுங் கிடைத்தது. அதனாற் புனிதனானேன். என்று அரசன்சொல்லிய வார்த்தையைக்கேட்டரிஷியானவர் அவ்வரசனிடத்தில்மிகவுமிரங்கி, ஐயோ! இவன்பிள்ளை யில்லாமையால் [illegible] விசனத்தை அனுபவிக்கிறான். இவன்கவலையைத் [illegible] க்கவேண்டும். என்றுநினைத்து இவனிருக்கிற [illegible] மரத்தின்கீழே உட்கார்ந்து சுவாமியைத் [illegible] தியானித்துக்கொண்டிருக்கையில், அம்மா [illegible] னின்றும் ஒருபழமானது அவர்மடியில் வீழ்ந்தது. பின்பு இந்தச் சண்டகவுசிகமுனியானவர் [illegible] பழத்தையெடுத்து மகதராஜன்கையிற் கொடுத்து, ஓராஜனே! உமது குறை நீங்கும்பொருட்டுச் சுவாமியே இந்தப்பழத்தை அநுக்கிரகஞ் செய்தார். இதை நீர் உமதுபத்தினிக்குக் கொடும். நல்லபுத்திரன் பிறப்பான். சந்தேகப் படவேண்டாம். பழையபடி ராச்சியத்திற்குச் சென்று நீதிவழுவாமல் அரசாக்ஷிசெய்யும். மனச்சந்துஷ்டியாய் உமது அரண்மனைக்குப்போம்-என்றுரிஷிசொல்லக்கேட்ட மகதராஜன் வெகுசந்தோஷ மடைந்து, அம்முனிவரைப்போற்றிப் பணிந்து விடைபெற்றுத் தன் பெண்டீர்களுடனேயும் ராச்சியத்துச் சேனங்களுடனேயும் கிரிவிரசமென்கிற தன்பட்டணத்தை யடைந்து, அந்தமாம்பழத்தைத் தான் முன்பிரதிக்கினை செய்த படிக்குத் தன்னிரண்டு பாரியைகளுக்குஞ் சரியாய்ப்பகிர்ந்து கொடுத்தான். அவ்விருவருக்கும் தெய்வசங்கற்பத்தினாலும், அம்முனிவருடையதபோ பலத்தினாலும், உடனேகருத்தரித்தார்கள். அப்போது தன் மனவியரைக்கண்ட அந்தமன்னவன், நமக்கு ரிஷி ஒரு புத்திரனுண்டாகும்படி யனுக்கிரகஞ்செய்துகொடுத்த ஒரு மாங்கனியை நமதுபுத்தியால் இருவருக்குங்கொடுக்க, இருவரும் கருத்தரித்தனரன்றோ ? ஆதலால் நமக்கு இரண்டுபுத்திரர் பிறப்பார்களேயென்று வெகுசந்தோஷப்பட்டுக்கொண் டிருக்கையில், அம்மாதரிருவரும் பிரசவித்தார்கள். அவ்விரண்டுபிரசவங்களையும் பார்க்கும்போது ஒருதேகத்தை நீட்டத்திற் பாதியாகப் பிளந்ததுபோல் ஒவ்வொருகால்-ஒவ்வொருகை - ஒவ்வொருகண் - ஒவ்வொருமூக்கு-ஒவ்வொருகாது - இப்படிக்கு ஒருபாரிசமாத்திரமே யுடையவைகளாய்ப் பிரேதசரீரங்களாகக் காணப்பட்டன.

அதுகளைக்கண்டு அந்தப்புரத்தி லிருப்பவர் மிகுந்த விசனமடைந்து ஒருவரோடொருவர் பேசவுங்கூட அசங்கிய முடையவர்களாகிச் சும்மாவிருக்க, அந்தராஜஸ்திரீக ளிருவரும் - ஐயோ ! என்னபாவஞ் செய்தோம்? நமக்குசுபாவத்திற் பிள்ளையில்லாமற்போனதினாலே எல்லாவற்றையும் வெறுத்து காட்டுக்குப் போகியும், அங்கேவலுவில் ஒருமுனியநுக்கிரகஞ்செய்தும், கைக்கெட்டினசோறு வாய்க்கெட்டாமற்போச்சுதென்கிறதுபோற் கடைசியில் நமது துர்ப்பாக்கியத்தினால் இப்படியாச்சுதே:(சங்கட்டம்பிடித்தவள்சந்தைக்குப் போனாலும், அங்கட்டுமவளுக்கு அகமுடையான் கிடையான்.) என்பதுபோல் நமக்குப்பெரியவர் அனுக்கிரகஞ்செய்தும் வீ[illegible] போ[illegible]ட்டது. [illegible] க்கலா[illegible] யமனறு மிகுந்ததுக்[illegible]யும் -வெட்கத்தோடும்-புலம்பிக் கொண்டிருக்கத் தாதிமார்கள் அவ்விரண்டு உடற்பாதிகளையுங் கொண்டுபோய் ஓர்வீதியின் பக்கத்துச்சந்தில் எறிந்துவிட்டு, பிள்ளை யெப்போது பிறக்கப் போகிறதென்று மேகத்தைக்குறித்துச் சாதகபக்ஷி காத்திருப்பதுபோல் வாயைத்திறந்துகொண்டு காத்திருக்கும் அரசனுக்கு இச்சேதிதெரிவிக்க, அவ்வரசன் அது

கேட்டவுடனே இடியோசைகேட்ட அன்னம்போல்
உறங்கித்தலையைத்தொங்கவிட்டுக்கொண்டு, ஒன்றுந்
தோற்றுமற் கைகால்களெல்லாந்தளர்ந்து சோர இரு
ந்தவிடத்தே யழுந்தி, ஐ ஐயோ !! இதென்னபிள்ளை
யார்பிடிக்கக் குரங்காய் முடிந்தது? இரண்டுபிள்ளைக
ட்காசைப்பட்டநமக்குஒருபிள்ளைபிறப்பதும்போயிற்
றே: கோடையில் வறண்டுபோகாநின்றபயிருக்குத் த
ற்செயலாய் ஒருமேகம்வந்து மழைபொழிந்து தரிக்க
ச்செய்ததுபோல்,புத்திரனில்லாமல் துக்கித்துக் கொ
ண்டிருந்தநமக்கு ஒருமகாமுனிவர்தெய்வச்செயலால்
வந்து அனுக்கிரகஞ்செய்தாரோ: இனிநமக்குக் குறை
வில்லை நல்ல சந்தானமுண்டாகி வாழ்வோமென் றெ
ண்ணியிருந்தேனே: சாயங்காலத்திற்குவியாநின்றதா
மரைப்பூவிலகப்பட்ட வண்டானது இன்னுஞ்சில நே
ரத்தில் இராத்திரியைப் போக்கிப் பொழுது விடிந்து
சூரியன் புறப்பட்டு இத்தாமரை முன்போல் மலரப்
போகிறது அப்போது நாம் இதினின்றும் வெளிப்புற
ப்பட்டு மலர்த்தேன்களை யுண்டு களிக்கப் போகிறோ
மென்று எண்ணிக் கொண்டிருக்க அத்தாமரையை ஒ
ருகாட்டானைவந்து பிடுங்கிக் காலால் துவைத்தெறிந்
தகதைபோல் முடிந்ததே: என்று விசனப்பட்டுக்கொ
ண்டிருந்தான்.

இப்படி நடந்தசெய்திகள் இவர்களைத்தவிர ப
ட்டணத்தி லிருக்கும் மற்றொருவருக்குந் தெரியாது.
இஃதிப்படியிருக்க - அந்தப்பட்டணத்தை நெடுநா
ளாய்க் காத்துவரும்ஜரையென்னும் பிசாச தேவதை
யானது இராக்காலமாதலால் தான் பட்டணத்தைச்
சுற்றி வீதிகளிற் சஞ்சரிக்கும்போது ஓர் புறத்திற்கி
டக்கும் அந்தச்சிசுவின் உடற்பாதிகளைக் கண்டு, இ
தென்னமோ மாமிசம்போற்காணுகிறதால் இதைப்பு
சிப்போமென்று அதனருகிற்சென்று அவ்வுருக்களை
யெடுத்துப்பார்த்து, ஓ ! ஓ ! இதென்ன ஆச்சரியம்
ஒருசிசுவின்தேக் மிரண்டுபிளப்பாய்க் கிடக்கிறது. ஆ
கிலும் உயிரோ டிருக்கிறது. இந்தத்தேஜசையும்வடி
வையும்பார்த்தால்மகாபுருஷனென்று தோற்றுகிறது.
ஆனாலும் இது நமது நகரத்தின் ராஜனுக்குண்டான
பிண்டங்களென் றறிந்துகொண்டு, தெய்வச்செயலாய்
அதைப்புசிக்கநினையாமல்இரண்டுபாதிகளையும்ஒன்று
க்கூட்ட,அவ்விரண்டுபாதிகளும்ஒன்றுயிசைந்து,நன்
[illegible]து மகா சுந்தரமாய் விளங்காநின்ற அந்தக்
குழந்தை [illegible] வாயில்வைத்துக்
கொண்டு மேகத்தொ[illegible] குரல்விட்டழ,
[illegible]ச் சனங்கள் இதென்ன் பாதி[illegible]பிற்
குழந்தைக்குரல்போல ஒரு உரத்த அழுகைக்குரல்கே
ட்கிறது? இதெங்கேயோ தெரியவில்லையென்றுபரபர
ப்புடனே குரல்கேட்டதிசைநோக்கிவர, அதுகண்டந்
தஜரையானவள் அந்தக் குழந்தையைக் கையிலெடுத்
துக்கொண்டு மனுஷிய ஸ்திரீரூபமாகி ராஜனிடத்திற்
குவந்து, புத்திரசோகத்தினாலே நித்திரையில்லாமல்
விசனப்பட்டுத் தனித்திராநின்ற ராஜாவைப் பார்த்
து, ஓய் ராஜனே! நீர் இப்போது சோகப்படுகிற கார
ணந்தெரியும். அதைத்தீர்க்கும்பொருட்டு இந்தக்குழ
ந்தையைக்கொணர்ந்தேன். நீர் இருடிசொல்லிய வாக்
குக்குவிரோதமாய் அந்தமாங்கனியை இரண்டாகப்ப
கிர்ந்துகொடுத்தபடியினாலே, இரண்டுகர்ப்பங்களிலிர
ண்டுபாகங்கள்பிறந்தன. அவைகளைவீதியிலெறிந்திரு
க்க நான்கண்டெடுத்து, உம்மிடத்தில்வைத்ததையி
னால் ஒன்றாகக்கூட்டினேன். கூட்டவே அதுதெய்வ
சங்கற்பத்தினாலும்-ரிஷியின் அனுக்கிரகபலத்தினாலு
ம்-பிழைத்துவிளங்கிற்று. இது உமது குழந்தைதான்.
சந்தேகப் படவேண்டாம். உமது கருத்துக்கு மகிழ்
வெய்த வாங்கிக்கொள்ளும். என்று சொல்லக்கேட்ட
அவ்வரசன் பாலைநிலத்தில் அகப்பட்டுத் தவிக்குமனி
தன் மேகம் மழைபொழியக்கண்டு களிப்பதுபோற்
களிப்புற்று, மிகவுஞ் சுந்தரமாகிய வடிவுடன் விளங்
காநின்ற அந்த ஜராதேவியை நோக்கி, அம்மே! நீ
தேவதாஸ்திரீயோ? நாக கன்னிகையோ? அசுரகன்னி
கையோ? இயக்கர் குலமகளோ? அல்லது என்பாக்கி
யமோ? நீயாரோ அறிகிலேன். என்குழந்தையைப் பி
ழைப்பித்து வலுவி லெனக்குத்தந்த மகா உதாரகுண
ம்பொருந்திய உனக்கு, நானென்னகைமாறுசெய்யப்
போகிறேன்? நெடுநாளாய் மிகுந்த தரித்திரத்தால் வ
ருத்தப்பட்டுக்கொண்டு, வலுவிலொருவன் கொடுத்த
பொருளையுங் கைசோரவிட்டுப் பலவிதத்தாலுந் துக்
கங்கொண்டு வேதனைப்படுமோர் துர்ப்பாக்கியனுக்கு
த் தற்செயலா யோர் பெருநிதியைக் கொணர்ந்துவந்
தளித்ததுபோலளித்தாயே: இவ்வுபகாரத்திற்கு உன்
பாதங்களைக் கும்பிடுவதைவிட, மற்றொன்றுஞ் செய்
ய அடியேன் திறமுள்ளவ னல்லேன். அடியேனிடத்
திற் கிருபாகடாக்ஷம்வைத்து உன்வரலாற்றைச் சொ
ல்லவேண்டுமென்று பிரார்த்தித்தான்.ஜரையானவள்-
கேளாய் பிருகத்திருத மகாராஜனே! நான் உன்பட்ட
ணத்துத் தேவதை. ஜராதேவியென்னும் பெயரையு
டையவள். நீ யென்னை வெகுசிறப்பாய் உற்சவாதி
உபசாரங்களாலே நெடுநாளாய்ப் பூசித்துவந்தாயல்ல
வோ? அதற்குப் பதிலுபகாரஞ்செய்யவேண்டுமென்
று சமயமெதிர்பார்த்திருந்தேன். இன்றைக்கு அது
வாய்த்தபடியினாலே, இரண்டு பிளப்பாயிருந்த உன்
புத்திரனை யொன்றாக்கி யுனக்குத்தந்தேன். ஆகையா
ல் நீசந்தோஷமாய்ப்புத்திரனைவைத்துக்கொண்டு வா
ழென்று சொல்லிப் பார்த்துக்கொண்டே யிருக்கை
யில் மறைந்து போய்விட்டாள்.

கேட்டீரோ உதிஷ்டிர மகாராஜனே! அந்தப்பி
[illegible]தேவதை மறைந்துபோன மாத்திரத்திலே அர்
த மகத[illegible]ராஜன் குழந்தையைச் சந்தோஷமா
ய் அந்தப்புரத்துக[illegible] எடுத்துக்கொண்டு போய் இச்
செய்தியை மனைவிகளுக்குத் தெரிவித்துத் தமதுபு
ரோகிதரையும் மற்றுமனேகம் பிராமணர்களையுமழை
ப்பித்துப்பிள்ளைக்குஜாதக[illegible]மும்-ஜரையினாலே

கூட்டப்பட்ட படியால் ஜராசந்தனென்று நாமகரணமுஞ்செய்து, அனேகமான கோதானம்-பூதானம்-அன்னதானம் - வஸ்திரதானம்-[illegible] ங்கள்வழங்கி, மந்திரிமுதலான பேர்களுக்கு வெகுமதிகள் செய்து, பின்பு அந்த ஜராதேவிக்குரிய ஆலயமுதலாகிய திருப்பணிகளைச் சிறக்கச்செய்து, அந்த அம்மைக்குப் பஞ்சாமிர்த அபிஷேகஞ் செய்வித்துத் திவ்விய வஸ்திராபரணாதிகளினாலேயும்-கெந்தபுஷ்பங்களினாலேயும் - அலங்காரஞ்செய்வித்துப் பலவகைப் பணியாரங்களையும் - பழங்களையும்-பாயச முதலாகியவைகளையும்-நைவேத்தியஞ் செய்து, நிருத்தகீத வாத்தியங்களினாலும் உபசரித்து மிகவும் விசேஷமாய்த் திருவிழாநடத்தி, இவ்வாறாகவே எக்காலமும் நித்தியோற்சவம்-பக்ஷோற்சவம்-மாசோற்சவம்-வருஷோற்சவமுதலியவைகள் நடக்கும்படி திட்டஞ்செய்தான். அந்த ஜராசந்தனும் நாளுக்குநாள் ஒளியினாலும்-பலத்தினாலும்-புத்தியினாலும்-சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல் வளர்ந்துவர அதனாலே அவன்பிதாவாகிய மகதபதியானவன் அளவில்லாத ஆனந்தமடைந்து வாழுங்காலத்தில், ஒருநாள் அந்தச் சண்டகவுசிக ரென்கிற மகாமுனியானவர் தற்செயலாய் அந்த ராஜதானிக்கு வரக்கண்டு, அந்தராஜன் வெகுபயபக்திக ளுடனே பரிவாரங்களைக் கூட்டிக்கொண்டு எதிர் கொண்டு போய்ச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அவரால் ஆசிர்வதிக்கப்பட்டு, அவரை யழைத்துவந்து ஆசனத்திலுட்காரவைத்து அர்க்கியபாத்திய முதலாகிய உபசாரங்கள்செய்து, ஓசுவாமீ ரிஷிகுலதிலகரே! அடியேனுக்குக் குலதெய்வமாகிய தேவரீரை இப்போது தற்செயலாய்த் தரிசனஞ் செய்யும்படியாகிய புண்ணியத்தொழில்கள் யாதுசெய்தேனோ அறிகிலேன். இன்றல்லவோ என் பிறவி பயன் பட்டது. தேவரீருக்குத் தவமுதலாகிய சகலதருமங்களும் இடையூறின்றி நிறைவேறி வருகின்றனவா? ஆச்சிரமங்களைத் துஷ்டர்கள்வந்து ஏதாகிலும் தொந்தரவு செய்யாம லிருக்கிறார்களா? அடியேன்செய்த பாக்கியத்தினால் அடியேனைச் சகுடும்பமாக அனுக்கிரகஞ் செய்யத் தேவரீர் எழுந்தருளியதன்றி, இன்னுமேதாகிலும் அடியேனுக்குக் கட்டளையிட வேண்டியதற்காக எழுந்தருளியதானால் அதை அருளிச்செய்யப் பிரார்த்திக்கின்றேன். என்றுசொல்லிக் கைகூப்பி எதிரில்நின்று கொண்டு, தன்மனைவிகளையும் புத்திரனையும் அழைப்பித்து அவர்பாதங்களைப்பணியச்செய்தான். அந்தமகாமுனியானவர் தன்பாதங்களைத் தொழாநின்ற இராஜஸ்திரீகளுக்கும் இராஜகுமாரனுக்கும் ஆசிகள்கூறி அந்த வேந்தனை நோக்கி, ஓய் மகாராஜனே! நீர் புத்திரனில்லாமல் விசனப்பட்டுக்கொண் டிருக்கக்கண்டு இரக்கத்தினா லொருபழத்தை யனுக்கிரகித்துத் தந்தேன். அதைநீர் அவிவேகத்தினாலே பகிர்ந்தளித்தீர். அதனாற் பிள்ளை இரண்டுபாதியாப் பிறந்தது. தெய்வாதீனமாய் அதுகள் ஜராதேவியாற் கூட்டப்பட்டுக் குமாரனாயினான். இதெல்லாம் நான் யோகதிருஷ்டியினாலே அறிந்தேன். எப்படியாகிலும் தெய்வ சங்கற்பத்தினால் உமக்குப் பிள்ளை யுண்டானது பெரியகாரியம். இந்தக்குமாரன் மகாபல பராக்கிரமசாலியாகி, எல்லா மன்னவர்களின் முடியின்மீதுவிளங்குவன். சகலராஜாக்களும் இவனையனுசரித்து மேன்மை யடைவார்கள். இவன் அண்டினபேர்களுக்கு [illegible] யும் பகைத்தவர்களுக்கு மிருத்தியுவாகியும் இருந்து, மிகுந்தசெல்வத்தைப்பெற்று, வெகுதான தருமங்கள்செய்து மகா கீர்த்தியடைவன். மேலும் அனேகராஜாக்களைவென்று அனேக தேசங்களைக் கைவசப்படுத்தித் தருமநீதிகள் வழாமற் காத்துவருவன். இவனாலே உமதுசந்ததியானது நீடித்துவாழும். மேகங்கள் எவ்வளவுமழைகளைப் பொழிந்தாலும் அதனால் மலைக்கு ஒருகுறைவு மில்லாததுபோல், மனிதர்-தேவர்-அசுரர்-முதலிய யாராகிலும் இவன்பேரில் ஆயுதமழை பொழிந்தாலும், இவனுக்கு ஒருகுறைவும் வரமாட்டாது. இவன்பாக்கியவான். தவஞ்செய்து சிவனருள்பெற்று வேண்டிய வரங்களுமடைவன். இன்னும் பேசப்பேச இவன் பெருமை விஸ்தாரமா யிருக்குமென்று சொல்லித் தாம் போகவேண்டிய விடத்துக்குப் போயினர். பின்புஜராசந்தன் அந்த ரிஷிசொல்லிய வாக்கின்படி சகலவித்தைகளுங் கற்று மகாவிவேகியாகி ஆயுதப் பயிர்ச்சியிலு மொப்பற்றவனாய் வெகுசவுரிய முடையவனாகி யாவருக்கும் மதிக்கத்தக்கவனாகிய காலத்தில் அவன் தந்தையானவன் கண்டு, அவனுக்கு யுவராச்சிய பட்டாபிஷேகஞ் செய்து, சகல ராச்சியபாரங்களையும் அவன் தலைமேல்வைத்துத் தான் தவம்-தேவபூசை-முதலாகிய சத்காரியங்களைச் செய்துகொண்டு சுகமாயிருந்து, பின்னுங்கொஞ்சகாலமானபின் தபோவனத்துக்குப் போய்விட்டான். அந்தஜராசந்தன் பட்டாபிஷேகமாகியபின் நெய்யினால் ஓமஞ்செய்ய அக்கினி எப்படி விளங்குமோ அப்படி மகாப்பிரகாசத்தோடுவிளங்கித் தன் புசபலத்தினாலும்-சேனாபலத்தினாலும்-எல்லாவரசர்களையுங் கைவசப்படுத்தி, மேன்மையுடனே ராச்சியபரிபாலனஞ் செய்துவந்தான். பிருகத்திருத ராஜன் தன்மனைவிகளுடனே இவ்வுலக வாழ்க்கையைவிட்டுச் சுவர்க்கலோக வாழ்க்கைக்குப் போய்விட்டான்.

கேட்டீரோ தருமராஜனே! இவ்வாறு வெகுமகிமைகள் பெற்ற ஜராசந்தனைக் கண்ட பலவான்களாகிய ராஜாக்களெல்லாம் அவனோடுநேசித்து, அவன்சொற்படி நடந்துகொண்டு வருகிறார்கள். அவனுடைய நேசர்களாகிய ராஜாக்களுள், அம்சன் -டிபிகன்-என்கிற இருவரையும் நான் வெகுதந்திரமாய் நாசஞ்செய்தேன். அப்படியே [illegible] மாளவைத்தேன். அவன் மருமகனாகிய கம்சனை நான்கொன்றதுமுதல் என்பேரிலவனுக்கு மிகுந்த பகையுண்டாகிப் பதினெட்டு தரம் யுத்தஞ்செய்து, அவனுபத்திரவம் பொறுக்கமாட்டாமல் நடுக்கடலிலே குடிப்போனேன்.

ஒருக்கால் கம்சன் மனைவிகளாகிய அ... களீரிருவரும் பார்த்துரு சோகத்தினாலே பக்கத்தில் ...ன்று கொண்டு அழக்கண்டு, அவன்சகிக்கமாட்டாமல்வெகு கோபத்தினாற்பொங்கி, அங்கிருந்து ஓர்கதாயுதத்தைச்சுழற்றி மதுரையின்பேரிற் பிரயோகித்தான். ஐயா! அதன் விக்கிரமத்தைக்கேளும்: அந்தககாயு... அவ்வளவு தூரமங்காண்டி வந்துவிழுந்து, மதுராபுரியைச்சேர்ந்த பாதிவிடத்தை நாசஞ்செய்து விட்டது. அப்பால்தான் அப்பட்டணத்தி லிருப்பது மிகவும் அபாயமென்று யாவரையும் துவாரகாபுரிக்குக்கொண்டு போய்ச்சேர்த்தேன். அந்த ஜராசந்தனுடைய சாமர்த்தியங்கள் உமக்கு நன்றாய்த் தெரிந்தன வல்லவோ? காலயவனன் - அம்சன் - டிபகன் - கம்சன்-சுதர்மா-என்கிற வீரரைச் சம்ஹாரஞ்செய்துப் போட்டேன். ஆனாலும் இன்னும் அனேகவீரர் அவனுடனே சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் விஸ்தாரமெல்லாம் நாசமாய்ப்போனாலும், இன்னுமனேகம் இருப்புச்சேனைகளுமிருக்கின்றன. ஆனால் முன்னுக்கிப்போது அவனைக் கொல்வது எளிதுதான். ஆனபோதிலும் உபாயமாய்க் கொல்லவேண்டுமே யல்லது, வேறுவிதத்தாற்கொல்வதுகஷ்டம். அதாவது - சேனைகளுடனே யுத்தத்துக்கு வாவென்று அவனை அழைத்தால், அவனைச் செயிக்கத் தேவர்களுக்கும் அசாத்தியமாகும். ஆதலால் அவனோடு பாகுயுத்தஞ்செய்து வெல்லல் வேண்டும். அந்தப்பாகு யுத்தத்தில் வீமசேனன் மிகவும் சாமர்த்திய முடையவனாதலால், அவனே அவனோடு யுத்தஞ் செய்யவேண்டும். நானும் அர்ச்சுனனும் அவனுக்குப் பக்கபலமாய் இருந்து காக்கிறோம். இப்படி நானும் அர்ச்சுனனும் உபபலமாயிருக்க, வீமசேனனுடனே சண்டைசெய்து அவன் ஜயிக்கமாட்டான். ஆனபடியினாலே நாங்கள் மூன்றுபேரும் போகவேண்டியதாயிருக்கிறது. நீர் ஐயப்படவேண்டாம். நான் ஆபத்துகள் வரவொட்டாமற் காப்பதினாலும், உமது ஆசீர்வாதத்தினாலும், வீமன் அவசியம் அவனைஜயிப்பன். ஒரு கெடுதியும்வாராது. உமக்கு என்பேச்சில் நம்பிக்கையிருக்குமேயாகில், ஆலோசிக்காமல் இப்போதே வீமார்ச்சுனர்களை என்னுடன் அனுப்பவேண்டும். என்றுசொல்லிய ஸ்ரீகிருஷ்ணன் பேச்சைக்கேட்டுத் தருமபுத்திரர் சற்றாலோசித்து இதனைச்சொல்லுகிறார்:

ஓ யதுவம்ச சிரோமணியே! நீர் “என்பேச்சில் நம்பிக்கையிருந்தால்” என்று சொல்லவொண்ணாது. ஏனெனில்-பாண்டவர் ஐவருக்கும் கிருஷ்ணன் தான் நாதனென்றும், சேர்விடமென்றும், இரக்ஷகனென்றும் லோகப்பிரசித்தமா யிருக்கிறதுமன்றி; ஆபத்துசம்பத்துகளில் உமது வார்த்தையைக் கொண்டே சகலத்தையும் நாங்கள் நடத்திவர இப்போது அப்படிசொல்வதுநியாயமோ? லோகநாதனாயிருக்கிற நீர் இருக்குமளவில் ஏதாகிலும் குறைவுநேரிடுமோ? அல்லது எந்தக்காரியந்தான் அசாத்தியமாகும்? எல்லாம் நிறைவேறும். இப்படிப்பட்ட நம்பிக்கை என்மனதில் பூரணமாயிருக்கிறது. ஆனபடியினாலே இப்போதே ஜராசந்தன் ... சிறையிலகப்பட்ட இராஜாக்களெல்லாம் விடுபட்டார்களென்றும், பூமண்டலமெல்லாம் சுவாதீன மாயிற்றென்றும், இராஜசூயம் ...றவேறிற்றென்றும், நான் சாம்பிராச்சிய பட்டாபிஷேகத்தை அடைந்தே னென்றும் எண்ணுகிறேன். உம்மிடத்தில் ஐயப்படவேண்டியகாரணமில்லை. ஏனெனில்-புத்தியீனனோடும், நல்லொழுக்க மில்லாதவனோடும், அயோக்கியனோடும் ஒருகாரியத்தைக் குறித்து யோசித்தால்; அப்படிப்பட்ட காரியத்தை நடத்துவதிற் சந்தேகப்படவேண்டும். மகாவிவேகியும்- மகாசமர்த்தனும் - வெகுசீலவானும் - யோக்கியனுமாகிய உம்முடனே யோசித்து அந்தக் காரியத்தில் மறுபடி சங்கைப்படுவது யாருக்குத்தான் தகும்? நீர் பார்த்து வலுவில் இந்தக்காரியத்தை நடத்தவேண்டுமென்று சொல்லுகையில் அதைநடத்தாமல் அலக்ஷியஞ் செய்பவன் யாரென்றால், எவனுக்கு நன்மைகளும் பாக்கியங்களும் கிடைக்கப் பிராப்தியில்லையோ அவன்தானே தவிர வேறொருவனும் அப்படி செய்யமாட்டான். ஆதலால் என்னை இந்தக்காரியங்களைக் குறித்துக் கேட்கவேண்டிய தெவ்வளவு மில்லை. உமதுசித்தத்தின்படி எதை யெப்படி செய்யவேண்டுமோ அப்படி செய்து எனக்கு மேன்மைவரச் செய்யவேண்டியது. இதோ வீமார்ச்சுனரிருவருமிருக்கிறார்கள். இவர்களைச் சுகமாயழைத்துக்கொண்டு போம். இவர்களைக் காப்பதைக்குறித்து யான்சொல்லவேண்டுவதில்லை யென்றுசொல்லித் தன்தம்பியாகிய வீமசேனனையும் அர்ச்சுனனையும் ஸ்ரீகிருஷ்ணன்கையிற் பிடித்து ஒப்புவித்து மறுபடியும் கிருஷ்ணனைப்பார்த்து, ஓ கிருஷ்ணா! ஒருவன்தன்சீவகாலவரையிலும் யாதொருநற்காரியமுஞ்செய்யாமல் மரணகாலம் நேரிட்டவளவில்நரகத்தை நினைத்து எவ்வாறு பரிதவிப்பானோ அவ்வாறு உங்களைப் பிரிந்திருக்க மாட்டாமல் நான் பரிதவிக்கிறேனேயல்லது வேறில்லை. ஆதலாற் போகிறகாரியத்தைச் சாதித்துக்கொண்டு சீக்கிரம்வந்து சேரவேண்டும். இனி ஒரு க்ஷணமும் எனக்கு ஒரு யுகமா யிருக்கும். தெய்வானுகூலத்தினால் நீங்கள்சகலஜெயமும்பெற்றுவரவேண்டும். என்றுசொல்லி ஆசீர்வதித்தனுப்பதம்பிகள் அந்தத்தருமபுத்திரர் பாதங்களைப் பணிந்து, தேவரீர் அஞ்சவேண்டாம். நாங்கள்போய்க் காரியத்தைச் சாதித்துச் சீக்கிரமே வருகிறோமென்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணனோடு பிரயாணமாகிப் புறப்பட்டார்கள்.

கிருஷ்ணமூர்த்தி-வீமசேனன்-அருச்சுனன் இம்மூவரும் ஜராசந்தனிடம் போதல்.

ஸ்ரீகிருஷ்ணசுவாமி தருமபுத்திரரைப் பார்த்து, ஓ மகாராஜனே! உமது உத்தரவின்படி உமது தம்பிகளைக் காக்கிறேன் ஐயப்படாமல் அன்போடு விடை

கொடுக்க வேண்டுமென்று கேட்க அந்தத் தருமபுத்திரர், நல்லதுபோய்வாரும். ஆனால்நீங்கள்பிரமசரியவிரதத்தை முடித்துக்கன்னிகாதானத்திற்குக் காத்திருக்கும் ஸ்நாதகர்போல் வெடங்கொண்டுபோனால் அவனுடைய அரண்மனைக்குள் எளிதிற்பிரவேசிக்கலாம். ஆதலால் அப்படியே போங்கள். என்றுசொல்ல அந்த மூவரும் அவ்வேஷங்கொண்டு முச்சுடர்கள்போல் விளங்கி, இந்திரப்பிரஸ்தத்தினின்றும் புறப்பட்டுக் கிரிவிரச பட்டணத்தைநோக்கிக் காலால் நடந்துபோனார்கள். இவ்வாறு மிகவுல்லாசமாகிமூவரும் குருஜாங்கலம் என்கிற தேசத்தின் எல்லைதாண்டிப் பதுமசரசுயென்கிற ஓரோடையையும் கடந்து காளிகூடமென்னு மிடஞ்சேர்ந்து, அங்கிருந்து சரயூநதியைத் தாண்டிப் பூருவ கோசல தேசத்தைச்சேர்ந்து அயோத்தியா நகரத்தை நோக்கிக்கொண்டேபோய்க் கண்டகீநதியைத் தாண்டி மிதிலாநகரஞ்சென்று, அங்கங்கேயிருந்து போசனம் சயனமுதலாகிய காரியங்களை நிறைவேற்றிக்கொண்டு கங்காநதியையும் சோணமென்னும் நகரத்தையுங்கடந்து கிழக்குமுகமாய்ப் போய்க் கிரிவிரசமென்கிற நகரத்தைக் கண்டார்கள். அப்போது இவர்கள் அந்தப்பட்டணத்து மாடுகள் மேய்கிறவிடத்தில் நின்றுகொண்டு, கிருஷ்ணனானவர் வீமார்ச்சுனரிருவருக்கும் அந்தப் பட்டணத்தைக்காட்டி, ஓ பாண்டவச்சிரேஷ்டரே! இதுதான்கிரிவிரசமென்கிற பட்டணம். இது குபேரன் பட்டணம் போல் வெகு செல்வத்திற்கு இருப்பிடமாகியது. நீர்வளம் நிலவளமுள்ளபடியால் மகாசவுக்கியத்திற்கு ஏதுவாயிருக்கும். இதைச்சுற்றிலுமிருக்கிற விடங்களைப் பாருங்கள் வெகு அழகாயிருக்கின்றன. இந்தவிடத்தில் வாசஞ் செய்பவருக்குப் பெரும்பாலும் ஒருவியாதியுமுண்டாகிறதில்லை. இதைச்சுற்றிலும்சோலைகளிருக்கின்றன பாருங்கள். இவையெப்பொழுதும் தளிர்த்தும் பூத்தும் விளங்கும். இங்கேகாற்று குளுமையுடன் வீசுவதினால் வெகுசுகமாயிருக்கும். இதோ இந்தநகரத்தைச் சுற்றி ஐந்துமலைகள் சூழ்ந்திருக்கின்றனவே இவைகளுக்கு முறையே - வைகாரம் - விபுலம் - வராகம் - விருஷபம் - சைத்தியகம் - என்றுபெயர். இவைகளின் நடுவிலிருக்கிறபடியினாலேதான் இந்தப் பட்டணத்துக்குக் கிரிவிரசமென்றுபேர். இந்தப்பருவதங்களில் அடர்ந்த மரக்காடுகள் நிறைந்திருக்கின்றன. அந்தநிழலினாலே இப்பட்டணமெங்கும் குளிர்ந்து சௌக்கியமாயிருக்கும். இவைகளின்அடிவாரத்தில் முன்னம்ஓர் கதை நடந்திருக்கிறது. அந்தவேடிக்கையான கதையைச்சொல்லுகிறேன் கேளுங்களென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் சொல்லத் துவக்கினர்.

தீர்க்கதமன் சரித்திரம்.

முற்காலத்தில் பிரகஸ்பதிக்குத்தமய்னாகிய உசத்தியரென்கிறவர் இம்மலையடிவாரத்திலோர் ஆச்சிரமத்தி லிருந்தார். அவருடையமனைவிநிறைந்தகருவுற்றிருந்தாள். எக்காலத்திலும் எப்படிப்பட்டவர்க்காகிலும் தீயசெய்கை விடுவதில்லையென்பது மாயாமயமாகிய உலகத்தினியற்கை யாகையினாலேயும், காமமென்பது கொடிய தீயகுண மாகையினாலேயும், பிரகஸ்பதியானவர் தீவினையின் வலிமையினாற் கொடியகாமமடைந்து, அதனாற் செய்வினை தவிர்வினை யொன்றுந் தோற்றாமல், கருவுற்றிருந்த மூத்தவன்மனைவியோடு சம்போகிக்க முயன்றார். அக்கருப்பத்திலிருந்த சிசுவானது அவரைப்பார்த்து, ஐயனே! தேவரீர்மகாபுருஷன். மகானுபாவன். நீர்இப்பேர்ப்பட்ட அக்கிரமவேலைக் குடன்படலாமா? மேலும் உமதுவீரியம் வீணாய்ப்போவதல்ல. எவ்விதத்திலும் ஒரு பிள்ளையுண்டுபண்ணும். நானொருவனாகவே இந்தக்கருப்பத்தி லிருந்து வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில், மற்றொரு பிள்ளையும் இதிலுண்டானால் எனக்கு மிகுந்த அவஸ்தை யுண்டாகுமல்லவோ? நான்வெளியிலே வந்துவிடுவோமென்றால் இன்னும் காலமாகவில்லை. ஆதலாலே தயைசெய்து இப்போது என்தாயுடன்புணராமற் போகவேண்டுமென்றுசொல்லிற்று. அதுகேட்ட பிரகஸ்பதியானவர் காமாவேசம் போல் மிகுந்த கோபாவேசங்கொண்டு, அடாபிள்ளாய்! காமவேதனை தீர்த்துக்கொள்ளவந்த என்னை நீ வயிற்றி லிருந்துகொண்டு தடுக்கிறபடியினாலே, நீ பிறவிக்குருடனாய்ப் பிறக்கக்கடவாயென்றுசபித்தனர். அந்தரிஷிகுமாரர் அப்படியே பிறவிக்குருடனாய்ப் பிறந்து, தீர்க்கதமன் என்கிற பெயர்பெற்றுச் சகலவேத சாஸ்திரங்களில் வல்லவராய் மகாஞானியாகி, இங்கேயாவருங் கொண்டாடும்படியாக ஓராச்சிரமத்தில் இருந்தார்.

இப்படி இருக்குமிவருக்கு ஒருரிஷி கன்னிகாதானம் பண்ணினர். அந்தத்தீர்க்கதமர் அப்பெண்ணை மணஞ்செய்து, அவ்வாச்சிரமத்திலே அவள்பணிசெய்யத் தவஞ்செய்துவந்தார். அவருக்குச் சிலபுத்திரர் பிறந்தனர். இவ்வாறு நெடுங்காலமானபின் அந்தத் தீர்க்கதமரிஷியினுடைய மனைவியானவள் அவரிடத்திற் போகவிச்சை கொள்ளாதிருந்தாள். அந்தரிஷிக்குக் காமமும் மோகமுமிகுந்து, ஒருநாள்தன்பத்தினியிடத்திற்குப் போனர். அந்த அம்மாள் அப்போது சரசமாய்க்கலந்து பேசாமலிருக்கக்கண்டு, ஓ எனது மனோரம்யமாதுர்யவசனாமிர்த மின்னே! என்ன உன்னுடையகருத்து? ஏன் சந்தோஷமா யிருக்கவில்லை? என்றுரிஷிகேட்கவும் அந்தப்புண்ணியசாலி விசனப்பட்டு, உம்மைக்கலியாணம் பண்ணிக்கொண்ட அன்னுண்முத லின்னாள்வரையிலும் உம்முடைய ஊழியத்திலே நின்று அயர்ந்து ஓடானேனன்றி, வெறுபோகபாக்கியங்களை யனுபவித்தவளல்ல. ஆகையால் நீர் இன்றுமுதல் என்தொந்தபந்த சம்பந்தங்களை விலக்கி என்றலைவாயிலை விட்டு நீங்கிப்போவது உத்தமமென்று துணிந்து சொன்னாள். அவள்சொற்றமொழியைக்

காதிற்கேட்ட முனியானவர் வெகுகோப முடையவ
ராகி, ஸ்திரீகளுடையபடுக்கையுறவு இவ்வளவுதானோ
வென்று நினைத்து ஒருவார்த்தை சொல்லத் துடங்கி
னார்: ஓ பெண்பாவாய்! மாற்றுயர்ந்த தங்கமும்! நவர
த்தினங்களும் - குலமும் - குணமும்-நல்ல இளமை
ப்பருவமும் பொருந்தி யிருந்தாலும், அதற்குரியநாய
கன் நீங்கிப்போனபிற்பாடு அவைகள் என்னபயன்
பெறும்? ஆதலால் நானேபோகிறபோது நான்கட்டிய
தாலி உன்கழுத்தி லிருக்கலாமோ? என்முத்திரையை
அறுத் தெறிந்துபோடு நானெடுத்துக் கொண்டு போ
கிறேனென்றார். விதரணையுடைய தீர்க்கதம ரானவர்
சொன்னவார்த்தை வடவாமுகாக்கினிபோலும்-ஆலா
லவிடத்தைப்போலும்-காதில்நுழையவே அந்தப்புண்
ணியவதி கோபித்துத் தன்பிள்ளைகளைப்பார்த்து, இந்
தக்கிழவனைக் கொண்டுபோய் எங்கேயாகிலும் வருந்
தும்படி வைத்துவாருங்களென்றாள். உடனே அந்தப்
பிள்ளைகள் காட்டுமரங்களினால் தெப்பங்கட்டி, அந்
தத்தெப்பத்தின்மேல் அவரையேற்றிக்கொண்டுபோய்
ஆற்றில் விட்டுவிட்டார்கள்.

இவ்விதமாக அப்பாதகரெல்லாருங் கொடியசெ
ய்கைசெய்து தண்ணீரில் விட்டுவிடவே, அந்தத் தீர்க்
கதமரென்கிற மகாமுனியானவர் மிக்வுங் கோபங்
கொண்டு மனதில் ஆலோசித்து, ஓ! ஓ! உலகத்தில்
இதுவரையிலும் ஸ்திரீகள்யாவருக்கும் பொது வென்
றும், விவாகஞ்செய்தவன் அதிபதிமாத்திரமே யென்
றும், ஸ்திரீகள் யாருடன்சேர்ந்தாலும் தோஷமில்லை
யென்று மிருக்கிறபடியினாலே யல்லவோ இப்படிப்
பட்ட கொடுஞ்செய்கைக்கு இடமுண்டாயிருக்கிறது.
ஆதலால்-இதுமுதல் ஒருத்தி கலியாணஞ்செய்த புரு
ஷன் ரூபவானாயிருந்தாலும், குரூபியாயிருந்தாலும்,
தனவானாயிருந்தாலும், தரித்திரனா யிருந்தாலும், அ
ந்தஸ்திரீ அவனைவிட்டுப் பிரியக்கூடாது. இகழவுங்
கூடாது. அப்படி செய்தலுக்கு நரகம் வரக்கடவதெ
ன்று சபித்தார். கேட்டீர்களோ வீமார்ச்சுனர்களே!
அதுமுதல்தான் உலகத்தில் இந்தநல்ல ஏற்பாடு உண்
டாயிற்று. இவ்வாறுசபித்த அந்தத் தீர்க்கதம முனி
வர் கங்கையின் ஓட்டத்திற்கு வசமாகிப்போகாநின்ற
தெப்பத்திற் போய்க்கொண் டிருக்குமளவில் அவ்வா
ற்றின் கரையில் வந்திருந்த உசீநரனென்கிற இராஜா
பார்த்துத் தன்சேவகரைக்கொண்டு அந்தத் தெப்ப
த்தைக் கரையின்கணிழுத்துவிட்டு அதிலிருந்த ரிஷி
யை? நமஸ்காரஞ்செய்து, சுவாமி! தேவரீர்யார்? இப்ப
டிவரவேண்டியதென்ன? என்றுகேட்க அந்தரிஷி
தன்குலம் - பேர்-முதலானவைகளையும், தன்மனைவி
யால் தனக்கு இவ்வாறு நடந்ததையும் சொல்லினர்.
அதைக்கேட்ட இராஜாவானவன்மகா ஆச்சரியமடை
ந்து, அவரைத் தன்தேரின்மே லேற்றிக்கொண்டு
தன் பட்டணஞ்சென்று அரண்மனையிலே வைத்துச்
சகல உபசாரங்களுடனே பூசித்துவந்தான்.

இப்படி பூசித்துக்கொண்டு வருகையில் ராஜாவா
னவன் ஒருநாளவரைத் தெண்டனிட்டு, ஓமகாமுனி
வரே! நீர்மகானுபாவர். மகா தபோமகிமையுள்ளவர்.
அடியேனிடத்திற் கிருபைசெய்து ஒருகுறை நீக்க
வேண்டும். அதாவது-நெடுநாளாகியும் எனக்குப் புத்
திரனுண்டாகவில்லை. ஆதலால் என்மனைவிக்குக் கர்ப்
பதானங் கொடுத்து ஒருபுத்திரனை யுண்டாக்கவேண்
டுமென்று பிரார்த்திக்க அம்முனிவர் மனதிரங்கி ஆக
ட்டுமென்று ஒப்புக்கொள்ள அரசன் தன்மனைவியை
க்கூப்பிட்டு, மங்களஸ்நானஞ்செய்து சகல அலங்கா
ரங்களு மணிந்துகொண்டு அம்முனிவரோடு சேரச்
சொல்லிக் கட்டளையிட்டான். அதைக்கேட்ட அந்த
ராஜஸ்திரீயானவள் வெகுசுந்தரமும் சொகுசுமுடை
யவளானபடியினாலேயும் தனக்குத்தக்க புருஷனோடு
புணர்ந்து இன்பரசங்கண்டவ ளாகையாலும், கணவ
ன்சொல்லிய வார்த்தையை லட்சியஞ்செய்யாமல்,
ஓ!ஓ! இந்தப்புருஷன் பிராமணன். மேலும் கிழவன்.
அதிலுங்குருடன். இவனோடுநாம் எப்படி புணருகி
றது? பிள்ளையில்லாமற்போனாலும் போகட்டும் என்
றுமனதில்நினைத்துஇராஜாவின் நிர்ப்பந்தத்திற்காகத்
தன்தாதிகளில் ஒருத்திக்குத் தன்பணிகளைப் பூட்டி
அம்முனிவரிடத்திற் கனுப்பிவித்தாள். அவர் அந்தத்
தாதியுடன்சேர அவளிடத்தினின்றும் நூறுபிள்ளை
கள் பிறந்தார்கள். அந்தப்பிள்ளைகளை இராஜாதன்பிள்
ளைகளென்று நினைத்துச் சாதகாதிகருமங்களைச் செ
ய்யவாரம்பிக்கும்போது. அந்தரிஷியானவர், இராஜா
வைப்பார்த்து, ஓய் அரசனே! இந்தப்பிள்ளைகள் உம
துபிள்ளைகளல்ல. எனக்குச்சூத்திரஸ்திரீயினிடத்திற்
பிறந்தவர்கள். அப்படியானாலும் என்பிரபாவத்தினா
லே இவர்கள் பிராமண தேஜசையடைந்து மேன்மை
பெறுவார்கள். நீர் விசனப்படவேண்டாம். உமக்கும்
பிள்ளையுண்டாக்குகிறேன். ஆனால் நான் அசங்கிய
மான ரூபத்தையுடையவனென்று உம்முடைய மனை
விஎன்னுடன்சேரச் சம்மதிக்கவில்லை. ஆனாலும் ஒரு
தரம் என்கிட்டவரும்படி சொன்னீரேயாகில், நான்
தொட்டு மந்திரிக்கிறேன். அதனாலேபிள்ளைபிறக்கும்,
என்றுசொல்ல அதுகேட்டராஜா சந்தோஷத்துட
னே தன்மனைவியைமுனிவரிடத்துக்கு அழைத்துவர,
அம்முனிவர் அவள் தேகத்தைப் பரிச்சித்து மந்திரத்
தைச்செபிக்கவே அவ்வரச மாது கருவுற்று ஒருபிள்
ளையைப்பெற்றாள். அங்கத்தைப்பரிசித்து பிறந்ததுபற்
றி அந்தப்பிள்ளைக்கு அங்கன்என்றுபெயரிட்டார்கள்.
அவனுண்ட தேசத்துக்கு அங்கதேசமென்றுபேருண்
டாயிற்று. அந்தவமிசத்தாரெல்லாம் அங்கர்என்றுசொ
ல்லப்படுகிறார்கள். அதிலே சிலர் பிரிந்து வங்கர் என்
று பேருடையவர்க ளானார்கள். அவ்விருதிறத்தாரும்
அம்முனிவரைக் குலமுறையே பூசித்துத் தங்களிஷ்
டகாமியார்த்தங்களைப் பெற்று வந்தார்கள்.

வீமார்ச்சுனருங் கிருஷ்ணனும் ஜராசந் தனைக்கண்டு அறைகூவல்.

இவ்விதமாகிய மகாமகிமையோடு கூடிய அந்தத்
தீர்க்கதமரென்கிற மகாரிஷி இங்கேதான் ஆச்சிரமங்க
ட்டிக்கொண் டிருந்தாரென்று வீமசேனனுக்கும் அ
ர்ச்சுனனுக்கும் சொல்லி, அவ்விடத்தைக் காட்டிக்
கொண்டே ஸ்ரீகிருஷ்ணன் கிரிவிரிசமென்னும் பெரிய
நகரத்திற்குச்சென்றார். இவ்வாறாகக் கிருஷ்ணனும்வீ
மார்ச்சுனர்களும் பாதிராத்திரியில் அழகுஞ் செல்வ
மும் பொருந்திவிளங்கும் அந்நகரத்திற் பகிரங்கமாகி
ய வாசலினாலே பிரவேசிக்காமல் வேறுவழியாற் பிர
வேசித்து, அதினண்டையி லிருக்குமோர் பருவதத்
தின்மேலேறி, அங்குகட்டியிருக்கிற அழகாகிய ஒரு
உப்பரிகையைக் கண்டு அதன்பேரிலுமேறி, முன்னே
விருஷப வேஷமாகி அவ்விடத்தில்வந்து தொந்தரவு
செய்துகொண் டிருந்த ஓர் மாம்சாதனென்கிற அசுர
னைப் பிருகத்திருத மகாராஜன் கொன்று அவன்தோ
லினாலே செய்துவைத்த மூன்று பேரிகைகளையும் ஏ
ககாலத்திலே அடித்துக் கிழித்து, அந்த உப்பரிகை
யையும் இடித்துப்போட்டு ராஜமார்க்கத்தில் வந்தார்
கள். இப்படியிருக்க - ஆபத்துக்காலத்திலே அடிக்கு
ம்படி நியமித்திருந்தபேரிகை அகாரணமாக ஒலிக்க
க்கேட்ட ஜராசந்த மகாராஜனும் அவன் மந்திரி முத
லானபேர்களும் திடுக்கிட்டு எழுந்திருந்து, நூறுயோ
சனையளவுங்கேட்கும்படி ஒலிக்கும் பேரிகைகள்வைத்
திருந்த விடத்தில் வந்து பார்க்குமளவில் ஒருவரும்
தென்படாமல் பேரிகைகள் கிழிந்திருப்பதையும் உப்
பரிகை இடிந்திருப்பதையுங்கண்டு இதென்ன உற்பா
தம்போ விருக்கிறதென்று நினைத்து, அப்பொழுதே
புரோகிதரையு மற்றும் பிராமணர்களையும் அழைப்
பித்துச் சுவஸ்திவாசனமுதலிய சாந்திச்சடங்குகளைச்
செய்வித்துக்கொண்டிருந்தார்கள். கிருஷ்ணன் முத
லாகிய மூவரும் கிரீடகவசாதிகளும் ஆயுதங்களுமில்
லாமற் பிராமணர்போல் அரையிலோ ராடைகட்டி
மேலுத்தரீயம் போட்டுக்கொண்டு, மதயானைக் கன்
றுகள்போல் ஒருவருடனொருவர் விளையாடிக் கடைத்
தெருவழியாற் சென்று, அங்கோர் கடையிலிருந்த
நல்லபூமாலைகளையும் கஸ்தூரி - புழுகு - முதலிய ந
ற்சாந்துகளையுங் கொள்ளையிட்டு அவைகளால் அ
லங்காரஞ் செய்துகொண்டு, அங்கிருந்து மிகுந்த வீ
ச்சுடனேயும் இறுமாப்புடனேயும் அரண்மனை யருகி
ற்சென்று மான்கூட்டத்தைக் கண்டு சிங்கங்களெப்ப
டி பயப்படாவோ அப்படியவ்வரண்மனைவாசலிலிருக்
குஞ் சனங்களுக்குக் கொஞ்சமு மஞ்சாமல் உட்பு
குந்து வாசல்வழியாகச் செல்லாமல் மதிலேறிக்குதி
த்து, மூன்றுகட்டுகளைக் கடந்து, நாலாவதுகட்டில்
மங்கலச்செய்கைகளுடன் விளங்காநின்ற ஜராசந்தனை
நோக்கிக் களித்து அங்கோர்திரையின் மறைவில் நி
ன்று கொண்டு, ஓமகாரரஜனே! நாங்கள் மூன்றுபேர்
அதிதிகள் உம்மைத்தேடி வந்தோம் என்று மகாகம்
பீரமாகச் சொன்னார்கள்.

அதைக்கேட்ட ஜராசந்தனென்வன் எந்தவேளை
யிலாகிலும் எந்த ஆச்சிரமமுடையபிராமணராகிலும்
வந்தால் அவர்களைப் பூசித்து அவர்களுடைய மன
தைத் திருப்திசெய்கிற விரதமுடையவ னாகையால்
வெகு பரபரப்புடனே ஆசனத்தினின்று மெழுந்து
அர்க்கிய பாத்தியாதிகளினாலும் மதுபர்க்கத்தினாலும்
பூசித்து ஆசனங்களைக்காட்டி, ஓசுவாமிகளே! நீங்கள்
தயவுசெய்து உட்காருங்களென்றான். அம்மூவரும்
அரசன்செய்தபூசையை அலட்சியஞ்செய்து உட்கார,
அதைக்கண்ட அரசன் கிருஷ்ணன் முதலானோரை
உற்றுநோக்கி ஆலோசித்து ஒருவார்த்தை சொல்லு
கின்றான்: ஓ அதிதிகளே! நீங்கள்யார்? உங்களைப்பார்
த்தால்பிராமணரொன்றுதோற்றவில்லை. உங்களுடைய
ரூபமும் செய்கையும், உங்களுடைய மனதிலிருக்
கும் மோசத்தை நன்றாய் விளக்குகின்றன. எப்படி
யென்றால்-ஸ்நாதகப் பிராமணர்போ லிருக்கிறீர்கள்.
புஷ்பங்களுஞ் சந்தனங்களும் நிறையத்தரித்திருக்கி
றீர்கள்.அன்றியும் உங்கள்மார்பைப்பார்த்தாற் பரந்து
உயர்ந்து கடினமாகி, கவசமணிந்த வடுக்களோடு கா
ணப்படுகின்றது. அப்படியே கைகள் மதயானைத் து
திக்கைகள்போலும் உழல்தடிகள்போலும் திரண்டு-
உருண்டு-நீண்டு மிகவும் வலியவைகளாகி, நாணியினா
ற் காய்ப்பையடைந்து விளங்குகின்றன. இதுவுமன்றி
நீங்கள் வருகையிற் கடைத்தெருவிற் கொள்ளையடித்
து நமதுமனைக்கு வாசலினாற் புகாமல் மதிலேறிக்கு
தித்து வந்தீர்கள். யோசிக்குமளவில் பேரிகைகளை அ
காலத்திலடித்துக் கிழித்தவரும், உப்பரிகையை இடி
த்தவரும் நீங்களாகவே தோற்றுகிறது. இவைகளை
யெல்லாம் பார்த்தால் நீங்கள் பிராமணரல்ல. க்ஷத்தி
ரியர் தானென்று நினைக்கிறேன். பிராமணர் இப்படி
உங்களைப்போல் தகாதவைகளைத் தரிக்கிறதும், வலிய
செய்கைகளைச் செய்கிறதும், ஆகிய கெட்ட நடக்
கையை ஒருபோதும் பொருந்தமாட்டார்கள். அவர்
கள் வெகுயோக்கியர். அவர்களுக்கு இப்படிப்பட்ட
துற்செய்கைகளா லாகவேண்டிய தென்ன? ஆகை
யால் நீங்களாரோ துஷ்டராஜாக்கள். மோசமாய் வந்
திருக்கிறீர்கள். வெகு அயோக்கியர்களாகக் காண்கிற
து. நல்ல பிராமணராகில் நான்செய்த பூசையை யே
ற்றுக்கொள்ளாம லிருப்பீர்களா? ஓ வஞ்சகரே! நீங்
களார்? உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் க்ஷத்தி
ரியவமிசத்திற் பிறந்தவர்களாகிற் பொய்சொல்லாமல்
மெய்சொல்ல வேண்டும். ஆணையிடுகிறேன். இவ்வித
மாறுருவமாய் என்னகாரியத்திற்காக இவ்விடத்திற்
கு வந்தீர்கள் என்றுகேட்க ஸ்ரீ கிருஷ்ணபகவான்
புன்சிரிப்போடுஞ் சொல்லுகிறார்.

ஓய் மகாராஜனே! நீர் எல்லாந் தெரிந்தவர் போ
லே பேசுகிறீர். சாஸ்திரத்தினது நுண்மை யுமக்குத்
தெரியவில்லை. நாலுவருணங்களிலும் ஸ்நாதகன் ஒ
ரேவிதமாகிய வேஷத்தோடு கூடியிருக்கலாம். வேறு
பட்டிருந்தாலு மிருக்கலாம். புஷ்பம் - சந்தனம் - இ
வைகளைத்தரிப்பதிற் குற்றமில்லை. அன்றியும் அவை
களைத் தரிப்பதினால் மங்களத்தையும் மேன்மையை
யும் அடைவார்கள். அப்படி யாவருமிருந்தால் அரச
னுக்கு மங்களங்க ளுண்டாகும். ஆனதுபற்றி நாங்க
ளும் சந்தனபுஷ்பங்களைத் தரித்துவந்தோம். இதை
யறியாமல் எங்களை மிகவுமிகழ்ந்து பேசினீர். இப்படி
வாயாலே பேசுவதினால் என்னபயன் ? நாங்கள் க்ஷத்
திரியரென்று உமக்குத்தோன்றிற்றேயாகில், உமதுபு
ஜபலத்தைக் காட்டி எங்கள் பலத்தையு மறியவேண்
டும். மித்திரருடைய கிரகத்துக்குவந்தால் வாசலினால்
வர வேண்டும். சத்துருவின் கிரகத்துக்கு வந்தால்
வேறுவிதமாகவேவரவேண்டும். ஆகையால் உன்வீட்
டுக்கு நாங்கள் மதிலேறிக் குதித்துவந்தோம். வந்த
காரியத்தைப் பார்க்கவேண்டுமே யன்றி உன்பூசையி
னாலெங்களுக்குப் பிரயோசன மென்னவென்று உன்
பூசையை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. என்றுசொல்லி
ய பகவானுடைய வார்த்தையைக் கேட்ட ஜராசந்தன்
சொல்லுகிறான்: ஓ வேதியரே ! உங்களுக்கு மெனக்கு
மொரு காலத்திலும் வைரமிருக்கிறதாகத் தோற்றவி
ல்லையே: அப்படியிருக்க ஏன் இப்படி வைரமாய்ப்
பேசுகிறீர்கள்? உங்களை நான் அறியாமலிருக்க எனக்
கும் அவ்வைர மெப்படியுண்டாகும்? நீங்கள் ரூபத்தி
ற் பிராமணராகத் தோற்றிப் பேச்சில் க்ஷத்திரியரா
கத் தோன்றுகிறீர்கள்: அன்னியாயமா யெவனையாகி
லும் தன்பலச்செருக்கினால் விரோதியாக நினைத்துத்
தொந்தரவு செய்தால் இம்மையிலும் மறுமையிலும்
இழிவே யுண்டாவதுமன்றி, மனதிற்கு மகா வருத்த
முண்டாகும். ஆதலால் காரணமில்லாம லென்னைச்ச
த்துருவாக நினைத்துப் பேசுகிறீர்கள். என்றுசொல்லி
யதைக்கேட்ட பகவான் சொல்லுகிறார்:

ஓ ராஜனே ! திரிலோகசக்ரேஸ்வரனாகிய இந்திர
னுங் கொண்டாடத்தக்க பெருங்கீர்த்தியினையும் பரா
க்கிரமத்தினையுமுடைய மகாபுண்ணிய மூர்த்தியாகிய
தருமபுத்திரர் பூமண்டலத்துக் கெல்லாம் அதிபதியா
கித் தருமநீதிகள் வழுவாமல் அரசாட்சிசெய்து வரு
வதும், அவருடைய பெருமையும் யாவருக்குந் தெரி
ந்திருக்கின்ற தன்றோ? ஆதலால் இக்காலத்தில் ஒரு
வனும் அதிக்கிரமஞ்செய்யக்கூடாது. அப்படிக்கிருக்
க-நீமிகுந்த அதிக்கிரமஞ் செய்கிறபடியால் உன்னைத்
தண்டிக்கும்படி அந்தமகாராஜன் எங்களை அனுப்பி
வித்தார். நான் என்ன அதிக்கிரமஞ் செய்தேனென்கி
றாயா? கேள்: பூமியிலிருக்கிற ராஜாக்களையெல்லாம்பி
டித்துக் கொணர்ந்து கடுங்காவலிற் போட்டிருக்கிறா
ய். இது தருமமாகுமா? மகாயோக்கியராயிருக்கிறபே
ர்களை இவ்விதமாக நோகச்செய்வது யோக்கியன் செ
ய்கையென்று கண்டதுமில்லை கேட்டதுமில்லை. நல்ல
து: இனிநீசெய்யப்போகிற செய்கையைச் சிந்தித்தால்
மனம் பதைக்கிறதே: அதாவது - இத்தனை பேரையு
ம் ஒரு தேவதைக்குப் பலிகொடுக்கிறதாயல்லவோசி
த்தம்பண்ணி யிருக்கிறாய்? ஓ! ஓ! என்ன உன்மனதின்
கொடுமை ? இப்படி செய்வதைக் காட்டிலும் பாதக
ம்வேறுண்டோ? ஐயோ ! நீ இம்மையிற் சிலபிரயோ
சனங்களையடைவதற்காக உனக்குச் சமானமாகிய அ
னேகம் ராஜாக்களைக் கொலை செய்யலாமா? இதற்கா
க உனக்குமகத்தாகிய நரகம் கிடைக்கும். நீவீரனாயிரு
க்கிறவன் யுத்தஞ்செய்து வென்றாலல்லவோ உனக்கு
ப்பெருமை. அதைவிட்டு தெய்வவழிபாடு செய்து அ
தனாலேவெல்வதிற் பாவமும்பழியுமேயல்லது வேறில்
லை. இந்தப் பாவத்தினின்றும் உன்னை விடுவிக்க உன்
னுடன் யுத்தஞ்செய்து சம்ஹாரம்பண்ண வந்தோம்.
வேறுவிதமாகிய பிராயச்சித்தம் உனக்கொன்று மில்
லாமையினாலே, நீயுத்தத்தில் தேகத்தைவிட்டே புனி
தனாகி நற்கதியடைய வேண்டும். சேனையும்பலமு மி
ருக்கிறதென்று கருவமடைந்து துஷ்டர்களைச்சேர்த்
துத்துராலோசனை செய்து, உலகத்தை உபத்திரவிக்
க வாரம்பித் திருக்கிறாய். அற்ப பலசாலிகளுடனே
சண்டைசெய்து உபத்திரவிப்பது நல்லதல்ல. சமான
பலசாலிகளோடு யுத்தஞ்செய்து ஜயிக்க வேண்டும்.
ஆகையாலே இப்போது எங்களுடன் நீயுத்தஞ்செய்ய
வேண்டும். உனக்கு பராக்கிரமமும் ரோஷமுமிருந்தா
ல் எங்களோடு யுத்தஞ்செய்ய எழுந்திரு. இல்லாவிட்
டால் தோற்றேனென்று வணங்கு. நானே சிறந்தவ
னென்று எவன் கருவப்படுகிறானோ அவன் எப்படியும்
கெடுதியையும் கருவபங்கத்தையுமடைவன். இப்படி
தான் முற்காலத்திலே தம்போற்பவ னென்கிறவன்
மகா கருவமடைந்திருந்து, கடைசியில் ஸ்ரீ நர நாரா
யணர்களாலே கர்பங்கமானான். கார்த்த வீரியார்ச்சு
னனும் பரசுராமனாலே செருக்கழிந்தான். நீபட்டாபி
ஷேகமாகியது முதல் இதுவரையிற் செய்துவந்த அ
க்கிரமங்களினாலே சீக்கிரத்தில் யமலோகஞ் சேர்ந்து
சகல பந்துக்களோடு கூடும்படியாகிய்காலம் நேரிட்ட
து. இப்போதாகிலும் நல்ல நினைப்பை யடைந்தாயே
யாகில், இம்மைமறுமைகளில்நன்மைகிடைக்கும். சொ
ன்னேன்: சம்மதியாயிருந்தாற்கேள் இல்லாவிட்டாற்கெ
ட்டுப்போ. நன்மைவேண்டுமாகிற் காவலிற் போட்டி
ருக்கிற ராஜாக்களை விட்டுப்போட்டு, எங்களைவந்துவ
ணங்கு. இல்லையாகில் சண்டைக்குவந்து யமலோகத்
திற்குப் போய்ச்சேரு. நாங்கள் உன்னிடத்தில் யாசி
க்கவந்த பிராமணரல்ல. க்ஷத்திரியர்தான். நான் கிரு
ஷ்ணன். இவர் வீமசேனன். இவர் அர்ச்சுனன். யதா
ர்த்தத்தைச் சொன்னோம். ஆதலால் இனி உன் னிஷ்
டப்படி நடக்கலாமென்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லிய
சொற்களைக்கேட்ட ஜராசந்தன்கோபாக்கினியாற்பொ
ங்காநின்ற சித்தத்தோடும்-சிவந்து சுழலாநின்ற கண்

களோடும் - துடியாநின்ற உதட்டோடும் - கிருஷ்ண தேவனைப்பார்த்துச் சொல்லுகிறான்:

அடா கிருஷ்ணா ! நீயா ? தெரிந்தது: நீ மோசக்காரனென்கிறது சரியாயிற்று. நீ என்ன வாய்க்குவந்தபடி யெல்லாம் பிதற்றுகிறாய் ? என்னை யாரென்று நினைக்கிறாய் ? என்னை எவ்வாறுமதிக்கிறாய்?உன்மோசத்துக்கு உட்பட்ட க்ஷத்திரியப் பூச்சிகளிலொன்றாய் நினைக்கிறாயோ? அப்படிக்கு நினையாதே. சகலராஜாக்களுடைய முடியின்மீதேறி விளங்காநின்ற ஜராசந்தனென்றுநினை. நான் கம்சன்-பிரலம்பன்-பாணன்-முஷ்டிகன் - சாணூரன் - இந்திரதபனன் - கேசி-பூதனை-சாலயவனன் - இவர்களு ளொருவனென்று பிரமியாதே. கொக்கையும் - கோழியையும் - பாம்பையும்- பல்லியையும் - கழுதையையும் - நாயையும்- நரியையும் கொன்றோமென்று கருவப்படுகிறாய், அந்தக்கருவமிங்கே உதவமாட்டாது. நீயாயென்னைச் சயிக்கிறவன்? பதினெட்டுதரம் என்னால்முறிய அடிக்கப்பட்டுப் பட்டணத்தை விட்டு நடுக்கடலிற் குடிப்போனதை மறந்தாயோ?நல்லது என்னோடு சண்டையென்கிற பேச்சை யெடுப்பதற்காவது ராஜகுலத்திற் பிறந்தவனன்றோ தக்கவன்?நீகம்சனுடைய மாடுகளை மேய்க்கும் நந்தகோபனுடைய மகனாச்சுதே. அடா! இடைப்பயலே!அதை மறந்தென்ன அட்டகாசஞ் செய்கிறாய்? இடையனுக்குத் தக்க முறையோடிராமல், வீணேயென் மதப்பட்டுத்திரிகிறாய்: உயரவுயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பரந்தாகுமே? நீ யோடிப் போனாயென்று அலக்ஷியமா யிருந்தேன். தெய்வாதீனமாய்க் கண்ணிலகப்பட்டாய். இப்போ துன்னைக்கொன்று என்மருமகனாகிய கம்சனுடையகடனைத் தீர்த்துக்கொள்ளுகிறேன். இந்தச் சிறுவரிருவரும் அற்பர். திரணத்துக்குச் சமானமாகியவர். ஆதலால் அவர்களிடத்தில் எனக்குலட்சியமில்லை. ஆகிலும் உன்னைச் சேர்ந்து உன்னைப்போல் மதம் பிடித்தவராகையால், உன்னைக் கொன்றபின் சிங்கமானது மான்களை முறிப்பதுபோல் இவர்களையுமுறித்துவிடுவேன் என்றுகெர்ச்சித்தான். அதைக்கேட்ட யாவரு நடுங்கிப் போனார்கள். இம்மூவரும் அதிசயப்பட்டு, வீமார்ச்சுன ளிருவரும இவனைக் குறித்து இக்கிருஷ்ண மூர்த்தி சொன்னதனைத்தும் உண்மையேயென்று சந்தோஷித்தார்கள்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் இப்படி சொல்லிய ஜராசந்தனைப் பார்த்து, அடா ஜராசந்தா! ஏன்வீணாய் கூவுகிறாய்? இதனாலென்னபயன்? உனக்கு வல்லமை யிருந்தாற் கையாற் காட்டவேண்டும். உன்னைச்சம்ஹாரம் பண்ணவேண்டு மென்றே சித்தமாய் வந்திருக்கிறேன். உன்னைக்கொல்ல நான் வேண்டுவதில்லை. இந்தச்சிறுவரி லொருவனைக்கொண்டே உன்னை யமன்சமீபத்திற்கு அனுப்புகிறேன். பதறாதே: விரைவில் எழுந்து வா. என்றுசொல்ல ஜராசந்தன்-நல்லதடா இடையா! நீ அழைத்தபடி யுத்தத்திற்கு வருகிறேன். உங்களுக்குச் சேனைகள் - வாகனங்கள் - ஆயுதங்கள் - வேண்டுமானால் தருகிறேன். அல்லது சும்மா யுத்தஞ்செய்யவேண்டுமானாலும் செய்கிறேன். அதிலும் உங்களில் ஒருவனோடு, அல்லது இருவரோடு, அல்லது மூவரோடும் நானொருவனாகவேயுத்தஞ்செய்ய வேண்டுமானாலும் செய்கிறேன்.உங்களுக்குச் சம்மதியானபடிக்கே ஆகட்டுமென்றுசொல்லி மனதில் இந்த மூன்றுமிர்த்துக்களோடு சண்டைசெய்து நாம்தேறுவது அசாத்தியமென்று நினைத்துத் தன்னுடைய முக்கியமந்திரிகளாகிய கவுசிகன்-சித்திரசேனன்- என்கிற இருவரையும் அழைத்துத் தன்குமரனாகிய சகதேவனுக்குச் சீக்கிரம் பட்டாபிஷேகஞ் செய்யுங்களென்றுகட்டளையிட்டு யுத்தத்திற்குச் சித்தமா யிருந்தான்.

ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி சரித்திரம்.

இப்படிச் சொல்லிக்கொண்டுவருகிற வைசம்பாயனமுனிவரை ஜெனமேஜெய மகாராஜன் பார்த்துச் சொல்லுகிறான்: சுவாமி! கம்சன்என்கிறவன் யார்? அவனுக்கும் கிருஷ்ணனுக்கும் ஏன் விரோதம் வந்தது? அந்தக் கம்சனைக் கொன்றதினா லல்லவோ கிருஷ்ணனுக்கும் ஜராசந்தனுக்கும் விரோதம்வந்தது? இந்தச் சரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்: கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! அந்தச்சரித்திரம் விஸ்தாரமாகியது. ஆகிலுஞ்சுருக்கிக் கொஞ்சஞ் சொல்லுகிறேன். யாதவவமிசத்திலே உக்கிரசேனனென் றொருவருளர். அவர் விருஷ்ணி - அந்தகர்-போஜர் - முதலாகிய கூட்டங்களுக்கெல்லாம் ராஜாவா யிருந்தார். அந்த உக்கிரசேனனுக்கு நூறுபிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவன் கம்சனென்கிறவன். அவன் சவுரியபராக்கிரமங்களில் அதிகப்பட்டவனாகி, ஜராசந்த னுடைய பெண்க ளிருவரைக் கலியாணஞ் செய்து வாழ்ந்துகொண் டிருந்தான். இப்படியிருக்க- அந்த உக்கிரசேனனுக்கு வசுதேவனென்று ஒருயாதவன் மந்திரியா யிருந்தான். அவன்மிகவும் யோக்கியனானபடியினாலே உக்கிரசேனன் தேவகி என்கிற தன்பெண்ணைக்கலியாணஞ் செய்வித்து யானைகள் குதிரைகள் முதலாகிய சகல பரிவாரங்களுடனே புருஷன் வீட்டுக்கு அனுப்ப,கம்சன் தங்கையினிடத்திலுற்ற பரிவினாலே வசுதேவனையும் தேவகியையும் ஒருதிவ்வியரதத்திலேற்றிக் கொண்டு தானே குதிரைகளின் கடிவாளம்பிடித்துச் சாரத்தியஞ்செய்து வெகு சந்தோஷத்துடனே வீதிவலம் வருகிறான். அப்போது ஆகாசத்தில் அசரீரியானது கம்சனைப்பார்த்து, அடா கம்சா! இப்போது நீயெவளை வெகு உல்லாசத்துடனே தேரிலேற்றிக்கொண்டு போகிறையோ அவள்வயிற்றிற் பிறக்கும் எட்டாவது பிள்ளை உன்னைக் கொல்லப்போகிறான் என்று சொல்லி அடங்கியது.

அதைக்கேட்ட கம்ஸன் உடனேதிடுக்கிட்டு மனதிலுண்டாகிய சந்தோஷமெல்லா மழிந்து முகங்கறுத்துச் சற்றே ஆலோசித்து, இவளைக் கொன்றுபோட்டால் நமக்கு அப்பாற் பயமில்லையென்று நினைத்துத் தமோகுணம் மிஞ்சினவனாகையாற் கத்தியைக்கையிலுருவிக்கொண்டு தேவகியைக்கொல்லவர அதைவசுதேவன்கண்டு, ஓ!ஓ! மோசம்வந்ததே: என்ன செய்வோம்? தற்காலம் வந்த ஆபத்தைநீக்கினாற் பிற்காலம் பார்த்துக்கொள்ளுவோ மென்று யோசித்து மிகவும் கடினமாகிய வெகுளியோ டிருக்குங் கம்சனைப்பார்த்து முகமலர்ச்சியுடன் புன்னகை புரிந்து, அப்பா கம்சா! நீமகாபுத்திமானாச்சுதே: ஏதிப்போகொஞ்ச மாலோசிக்காம லிக்காரியத்திற்பிரவர்த்திக்கிறாய்? அசரீரியின் சொற்படி இவளாலுனக் கேதாகிலும் அபகாரமுண்டா? இவளுடைய பிள்ளைகளாலன்றோ உனக்கு அபாயம் நேரிடுமென்று சொல்லிற்று. அப்படியிருக்கப் பேதையாகிய உன் தங்கையைக் கொலைசெய்வது நியாயமோ? நீ பந்துக்களையெல்லாங் காப்பாற்றுகிற நற்குணமுடையவனாகி, இந்தப் போஜகுலத்துக்குச் சந்திரன்போல் விளங்குகிறவனாச்சுதே: ஆதலால் இவளைக்கொல்வது நன்மையாகயிருக்கின்றதா? அப்பா போஜகுலதிலகனே! (தன்னைப்போக்கித் தருமமா?)என்றும்- (தன்னைக் கொல்லவந்த பசுவையுங் கொல்லலாம்.)என்றும்- சொல்லுகிறபழமொழிப்படி, தன்பிராணனைக் காக்கவேண்டியதும்- அதற்குவிரோதமாயிருப்பதை நாசஞ்செய்யவேண்டியதும் - முக்கியந்தான். ஆனால் அதற்கு நானொரு உபாயஞ்சொல்லுகிறேன்கேள். இவளுக்குண்டாகும் பிள்ளைகளையெல்லாம் பிறக்கும்போதே கொன்றுவிடு. கருப்பத்திலிருந்து சிசு கீழேவிழுந்தவுடனே நான்கொணர்ந்து உன்கையிற் கொடுக்கிறேன். இப்படிசெய்வது உன்பெருந்தன்மைக்குத் தக்கதாயிருக்குமென்று சொல்லக்கேட்ட கம்சன் இது சரிதானென்று ஒப்புக்கொண்டு அக்கொடிய செய்கையினின்றுந் திரும்பினான்.

பின்பு வசுதேவன் தன்மனையாளுடன் மனைக்குச்சென்று வாழ்ந்துகொண்டிருக்க, அப்போது தேவகி கருப்பந்தரித்துப் பிரசவிக்க, அந்தக் குழந்தையை வுசுதேவன் தான் முன்சொன்னபடி கம்சனுக்குக் கொணர்ந்து கொடுக்க, அவனிதனால் எனக்கொரு தீங்குமில்லை. எட்டாவதுபிள்ளை எனக்கு விரோதியாகையால் இதைக் கொண்டுபோமென்று திருப்பிவிட்டான். இப்படியிருக்க-ஒருநாள் நாரதமகாமுனிவந்து இவர்களெல்லாருடைய உற்பத்திக்கிரமங்களையறிவித்ததனாற் கம்சன தன்சுபாவத்தை நினைத்துக்கொண்டு யாதவரெல்லாரிடத்திலும் விரோதத்தை எண்ணி, வசுதேவனிடத்தில்திருப்பிவிட்ட அக்குழந்தையை மறுபடியும் அழைபித்துக் கொன்றுபோட்டு தனது நடக்கைக்குட்படாத யாதவரெல்லாரையும் சிதற அடித்துத் தன்பிதாவைத் தள்ளித் தானே சிங்காதனமேறி அரசாட்சி கைக்கொண்டு, வசுதேவனையும் தேவகியையும் விலங்கிட்டுக் காவலில்வைத்து நல்லோருக்கெல்லாந் தீங்குசெய்துவந்தான். பின்பு தேவகி முறையே ஆறுபிள்ளைகளைப்பெற, அவைகளையும் பிறக்கும்போதே எடுத்துவரவாக்யாபித்து உயரவெறிந்து கத்தியின்மீதேந்திக்கொன்றான். இவன் இப்படியிருக்க - பாபிகளாகிய துஷ்டர் அதிகப்பட்டபடியாற் பூமிதேவி பாரஞ்சகிக்க மாட்டாமற் பிரமதேவரிடத்திற்குப்போய் முறையிட, அவர் எல்லாத்தேவரையுங் கூட்டிக்கொண்டு பாற்கடலிற்சென்று ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைத் தரிசித்துத் துதித்து இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய, அவர்தேவர்களுக்குச் சமாதானஞ்சொல்லி யனுப்பிவிட்டுத் தமது மாயையை யழைத்துத் தன்பாயலாகிய ஆதிசேஷனுடைய அம்சமும்- தமது சம்கிர்ஷணரூபத்தின் அம்சமும்-கலந்து தேவகியிடத்தில் ஏழாவது கருப்பமாகிய ரூபத்தையெடுத்து நந்தகோகுலத்தி லிருக்கும் வசுதேவன் மூத்தமனைவியாகிய ரோகிணியென்பவள் வயிற்றிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு நீ நந்தன்மனையாட்டியாகிய அசோதையின் வயிற்றில் உற்பவிக்கில் உனக்குமேன்மைகிடைக்குமென்று கட்டளையிட, அந்தமாயை அப்படியேசெய்துவிட்டது. அப்போது தேவகியின் ஏழாவதுகருப்பம் காற்றாய்ப்போயிற்றென்று வதந்தியுண்டாயிற்று. அத்தருணத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் தேவகியின்வயிற்றிற் பிரவேசிக்க,தேவகி எட்டாவது கருப்பந் தரித்தாளென்கிற செய்திகேட்ட கம்சன் உடனே வெகுகாவல்களை ஏற்படுத்திப் பயத்தினால் எங்கேபார்த்தாலும் விஷ்ணுரூபந் தோற்றப் பித்தம் பிடித்தவன்போலாகி, எப்போதேவகிக்குக் குழந்தை பிறக்கப்போகிறதென்று காத்திருந்தான்.

இப்படியிருக்கச் சுவாமி ஓரிருட்காலத்துப்பாதிராத்திரியில் அவதரித்துத் தம்மை நந்தகோபாலன் மனையாளிடத்தில் விட்டுவரும்படி கட்டளையிட, அப்படியே வசுதேவன் குழந்தையை யெடுத்துக்கொண்டு காவற்காரரும் மற்றவரும் மாயையின் வலிமையினால் மயங்கி நின்றபடியால் எல்லாக் காவல்களையுந் தாண்டி ஒரு தடையுமில்லாமற் கோகுலஞ்சென்று அங்குயாவருந் தியங்கிநின்றபடியினால் அவ்வாண்குழந்தையை அசோதையினிடத்தில் விட்டு அவள் அப்போது பெற்ற பெண்குழந்தையை யெடுத்துக்கொண்டுவந்து தேவகியினிடத்தில்விட்டு முன்போல் விலங்குகளை மாட்டிக்கொண் டிருந்தார். உடனே அப்பெண்குழந்தை குவாகுவாவென் றழவே யாவரும் விழித்துக்கொண்டு கம்சனுக்குச் சேதிதெரிவிக்க, படுத்துக்கொண்டிருந்த அவனும் திடுக்கிட்டெழுந்திருந்து தலைவிரி கோலமாய் ஓடிவந்து அந்தப் பெண்குழந்தையையெடுத்து வெட்டத்துணிய,உடனேயது ஆகாசத்தி லெழும்பி உன்னைக் கொல்லவந்தவன் வேறேயிருக்கிறானென்று சொல்லிப் போட்டு

மாயமாய்ப்போய்விட்டது. அதுகேட்டகம்சன் வெகு
சந்தேகமும் துக்கமுமடைந்து, ஆகாயத்திலெழும்பிய
குழந்தையைக் கண்டு பிடிக்கும்படி வெகுபேர்களை
யேவினன். இஃதிப்படியிருக்க -கோகுலத்தில் உரோ
கணியின் வயிற்றிற்பிறந்த பலராமனும் - அசோதை
யின் மகனென்று எண்ணப்பட்ட கிருஷ்ணனும் -
வெகுசிறப்பாய் வளர்ந்துகொண்டு வருமளவில், கம்ச
னால் ஏவப்பட்ட பூதனை - சகடாசுரன் - திருணாவர்
த்தன் - தேனுகாசுரன் - வச்சாசுரன் - அகாசுரன் -
பகாசுரன் - பிரலம்பன் - கேசி - முதலாகியபேர்கள்
தந்திரமாய்வந்து கிருஷ்ணனைக் கொல்லப்பார்க்க, எல்
லாவற்றி னுள்ளுமிருந்து இயாவற்றையு மறிந்திருக்
கிற பகவானுகையால் அந்தந்தத் தந்திரங்களுக்குத்
தக்கபடி அவர்களை மாளவைத்து, மருதமரங்களா
யிருந்த நளகூபர மணிக்கிரீவ ரென்கிறவர்களுக்கு
இயக்கருடைய சாபந்தீர்த்துக் காளியனென்னும்
சர்ப்பராஜனுடைய செருக்கழித்துக் கோவலரை
யெரிக்கவந்த காட்டுத்தீயை விழுங்கிப் பிரமன் பசு
வின் கன்றுகளையும் கன்றுமேய்க்குஞ் சிறுவரையும்
ஒளிக்க அவைகளுக்குப் பதிலாகத் தாமே அவ்வளவு
ரூபங்கொண்டு பிரமதேவனை ஆச்சரியப் படுத்திக்
கோவர்த்தன மலையாயிருந்து பொங்கலிட்ட சோற்
றை வாங்கிப்புசித்து அந்தமலையைக் குடையாக வெ
டுத்து இந்திரன் பொழிந்த கன்மாரிதடுத்துக் கரும
மே முக்கியமென்று அகங்கொண்டிருந்த வைதிகருக்
கு ஞானம்வருவித்து அழகினாலும் விளையாட்டினா
லும் யாவரையும் தன் வசப்படுத்திக் கோபிகை
களோடு யமுனாநதியின் மணற் குன்றுகளிலும் சோ
லைகளிலும் கிரீடித்துக்கொண்டிருந்தார்.

இப்படியிருக்கக் கம்சன் இராப்பகல் தூக்கமில்
லாமல் கிருஷ்ணனே தனக்குச் சத்துருவென்று சில
குறிப்புகளினால் அறிந்து இவனை எந்தவிதத்தினலா
கிலுங் கொல்லவேண்டுமென்று முயன்று வில்வே
ள்வியென்று ஒரு யாகஞ்செய்ய ஆரம்பித்து அந்த
யாகத்தைக்கொண்டு இவரைத் தன்னுடையமனைக்கு
அக்குரூா னென்பவனால் அழைப்பிக்க, அப்படியே
ஸ்ரீகிருஷ்ணன் பலராமனுடன் மதுராபுரிக்கு வந்து
அந்த வில்லைமுறித்து அவன் காவற்காரரை யடித்
துக் குவலயாபீடமென்கிற மதயானையின் கொம்பை
ப்பிடுங்கிக் குத்தித்தள்ளி நாசஞ்செய்து அதன் பா
கனையுங்கொன்று, முட்டிகன் - சாணூரன் - என்கிற
மல்லரைப் போர்செய்து முடித்து, இச்செய்கைகளி
னாலே கோபங்கொண்டு பார்ந்த கம்சனைத் தொம்சஞ்
செய்து அவன் தம்பிமார்களையும நாசஞ்செய்து, அவ
னால் தொந்தரவுபட்ட யாதவர்களையும் தன் மாதா
பிதாக்களையுஞ் சமாதானப் படுத்தித் தன் மாதாமக
னாகிய உக்கிரசேனனை முன்போற் சிங்காதனத்திலே
ற்றி உலகத்திற்குநன்மைசெய்தார். பின்புகம்சன்மனை
விகள் பிதாவினிடத்திற் சென்று மாரடித்துக்கொண்
டதைப்பற்றி ஜராசந்தனுக்கும் கிருஷ்ணனுக்கும்
பதினெட்டுத்தரம் சண்டையாயிற்று. இதுதான் கம்
சனுக்கும் கிருஷ்ணனுக்கும் விரோதம்வந்தகாரணம்.
ஓ ஜெனமேஜெய மகாராஜனே! நீர்கேட்டசரித்திரத்
தைச் சொன்னேன். மேல் நடந்தகதையைச்சொல்லு
கிறேன் .கேளுமென்று வைசம்பாயனர் சொல்லத்
துவக்கினர்.

ஜராசந்தன் வதை.

முன் சொன்னபடி ஜராசந்தனனவன் தன் மக
னுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்துத் தான்கச்சுக்
கட்டி யுத்தத்திற்குச் சித்தமாயிருக்க, அதைக்கண்
டஸ்ரீகிருஷ்ணன்-அடா ஜராசந்தா! எப்படி யுத்தஞ்செ
ய்ய மனதென்று கேட்டாயன்றோ? எங்களுக்குச் சே
னையும்வேண்டாம். ஆயுதமும்வேண்டாம். நீயொருவ
னாக இவ்விருவரி லொருவரோடு கைசண்டை செய்
யவேண்டும். ஆரோடுசெய்கிறாய் சொல். என்றுகே
ட்க அவன் அர்ச்சுனனைச் சிறுபிள்ளையென்று அலட்
சியஞ்செய்து வீமசேனனோடு யுத்தஞ்செய்கிறே
னென்றான். அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணன் வீமசேனனை
யுத்தஞ்செய்யும்படி கட்டளையிட, வீமசேனனும் கச்
சுக்கட்டி யுத்தத்திற்குச்சித்தமாயினன். இவ்வாறிரு
வரும் யுத்தசன்னுத்தராகிக் கைகளாகிய கதாயுதங
ளோடு விளங்கி வெளிப்புறப்பட்டு யுத்தபூமிக்கு வந்
தார்கள். அப்போதுவீமசேனனை ஜராசந்தன்நோக்கி,
அடா வீமசேனா! நான் தருமத்தை முன்னிட்டு உன்
னோடு யுத்தத்திற்கு வந்தேனுகையால் ஜாக்கிரதை
யா யுத்தஞ்செய்யென்று சொல்ல, வீமசேனன் நானு
மப்படியே தருமராஜனைக் கும்பிட்டுவந்தே னுகை
யால் நீதான் ஜாக்கிரதையா யிருக்க வேண்டுமென்
றுசொன்னான். இவ்வாறு இருவரும் ஒருவரையொ
ருவர் திக்கரித்து மங்கலச் சடங்குகள் செய்துகொ
ண்டு, ஒருவர்மே லொருவர் பாய்ந்து மதயானைகள்
போல இடமாகவும் வலமாகவுஞ் சுற்றி ஒருவனை
யொருவன் பிடித்துத் தள்ளுகிறதும் - எழும்பி யடிக்
கிறதும்-கீழேவிழுகிறதும் - உயரவெறிகிறதும் - கை
யைப்பற்றி யிழுத்துச்சுற்றிச் சுழற்றுகிறதும் - கை
களாற் குத்துகிறதும் - கால்களா லுதைக்கிறதுமாக
நெடுநேரம் யுத்தஞ்செய்யவே இவர்களுடைய கால்
களாற் புடையுண்ட பூமியினின்றும் எழும்பிய தூளி
யானது அந்தகாரம்போலே சூழ்ந்துகொள்ள, இவர்
களுடைய அட்டகாசத் தொனிகளினால் எதிரொலிச்
சற் பேடாநின்ற மலைகளிலிருக்கும் சிங்க முதலிய
மிருகங்கள் பயந்து வீறிட, ஆகாசங்களதிர்ந்து பிரள
யகால ஸ்திதிபோலிருக்க, முன் தேவேந்திரனுக்கும்
விருத்திராசுரனுக்கும் நடந்த யுத்தத்தைக்காட்டிலு
மிது விசேஷமாகிய [illegible] ஆகாசத்தில் தேவர் -
சித்தர் - சாரணர் - முதலாகியவர் வியந்து பார்த்துக
கொண்டிருந்தார்கள்.

இவ்விதமாக யாவரும் ஆச்சரியப் படும்படியாய்
வீமசேனனும் ஜராசந்தனும் கார்த்திகை மாசத்திற்

கிருஷ்ணபக்ஷத்துப் பிரதமையினன்று யுத்தத்திற்கு ஆரம்பித்துப் பதினேந்துநாள் வரையில் ஓயாமல் யுத்தஞ்செய்து கொண்டு வருகையில், ஒருநாள் யுத்தத்திலே ஜராசந்தன் வீமசேனனைச் சமயம்பார்த்துச் சுழற்றித்தள்ளிக் கோடைகாலத்து இடிக்குச்சமானமாக அவன் மார்பிலொரு குத்து குத்தவே அந்தவீமன் பதைபதைத்து, க்ஷணகாலம் சோர்ந்து மீட்டு மனதில் தைரியத்தை முன்னிட்டுக்கொண்டு மிகுந்த ஆக்குரோஷத்துட னெழும்பி ஜராசந்தன்மேல் விழுந்து லாகவத்தினுல் அவனைக் கீழேதள்ளி மார்பிலொரு குத்துக்குத்த, அக்குத்தினுல் வச்சிராயுதத்தினு லடிக்கப்பட்ட பருவதம்போல் ஜராசந்தன் சிதைப்புண்டு க்ஷணகாலம் மூர்ச்சையடைந்து மீட்டும் பெருமூச்சுவிட் டெழுந்து கர்ச்சித்து, ஆகட்டுமடா வீமசேனு! இந்த நிமிஷத்தி லுன்னை நாசஞ்செய்கிறேன் சற்றேநில்லென்று சொல்லிச் சந்துபார்த்து வீமசேனனைக் காலைப்பற்றித் தூக்கிச் சுழற்றியெறிய அந்த வீமனும் ஆகாசமார்க்கத்திற் சுழன்று லாகவமாய் அவன்தலைக்குச் சரியாய்வந்து மயிரைப் பிடித்து இழுத்துக்கீழே தள்ளிக்கொண்டே தானும் பூமியிற் குதித்து அச்சத்துருவை யப்படியே பறபறவென்றிழுத்துக் காகரவென்று சுழற்றியெறிய, அவன் சமீபத்திலிருந்த மலைகளிலும் தடங்களிலுமோத்துண்டு காயமடைந்து தேகமெல்லாம் உதிரம் பெருக ஓடிவந்து புலிபோற்பாய்ந்து வீமனுடைய மிடறைப்பற்றி நெட்டித்தள்ள. அவன் நாலைந்து குட்டிக்கரணம் போட்டுக்கொண்டு விழுந்து கைகால்களிலறைப்பட்டும் லக்ஷியஞ்செய்யாமல் எழுந்து நல்லது நல்லது ஜராசந்தா! நீ வெகுசாமார்த்தியவான்போற் சண்டைசெய்கிருய். உன்னைப் பிதுரு லோகத்திற்கு அனுப்புகிறேன் பயப்படாதே யென்று வீரவாதஞ் செய்தான். இவ்வாறே தினந்தோறும் தங்கள் சாமர்த்தியங்களையும் பலபராக்கிரமங்களையும் காட்டி ஒருவனையொருவன் கொல்வதற்குத் தருணந்தேடிக்கொண்டு இராப்பகல்களில் ஒரு கணப்பொழுது மோய்வில்லாமல் யுத்தஞ்செய்து வந்தார்கள்.

இப்படி பதினேந்துதினங்கள் யுத்தஞ்செய்தும் தோற்பு கெலிப்புகள் காணுமலிருப்பதைக் கண்ட வீமசேனன் அலுத்துக் கண்ணனைப்பார்க்க, யாவுமறிந்த அந்தப்பகவான் - வீமசேனு! இதுதான் நல்லசமயம். அவன்மிகவும் பலமொடுங்கி ஓய்ந்துநிற்கிருன். நீ இப்போது பால்மாருமல் தைரியத்தை முன்னிட்டு யுத்தஞ்செய்யவேண்டும். உன்னுலேயன்றி மற்றொருவனு லிவன்சாகமாட்டான் - ஒன்றுமல் - முன் இவனுக்கும் எங்களுக்கும் யுத்தம் நடந்தபோது நானும் எனதமயனுகிய பலராமனும் கோமந்தபருவதத்தின்மேலேறக்கண்டு, இவன் அம்மலையைக் கொளுத்திவிட்டான். அப்போது நாங்களிருவரும் இவனுடைய சேனையினடுவே குதித்துச் சேனைகளையெல்லாம் நாசஞ்செய்யவே, அதனுல் வெகுகோபத்துடன் எங்கள்மேற்பாயந்தான். அதுகண்டு பலராமன் மகா கோபாவேசங்கொண்டு, கலப்பையை இவன்கழுத்தில் மாட்டி யிழுத்துத்தள்ளி உலக்கையாலடிக்க யத்தினப்படுகையில் ஆகாசத்தில் அசரீரிவந்து, ஓபலராமா! நீரிவனைக் கொல்லவேண்டாம். இவனுக்கு வீமசேனுற் சாவென்று சொல்லிற்று. அதனுலேயவர் கொல்லாமல் விட்டுவிட்டார். அதுபற்றிச்சித்தமாய் உன்னுலேயே இவன் சாகப்போகிருன். நீயஞ்சாமல் யுத்தஞ்செய். உன்பிதாவாகிய வாயுபகவானை மனதில் நினைத்துக்கொள். அதனுலே உனக்கு இளைப்பெல்லாம்போய்ப் பலம்வளர்ந்து தைரியம்வரும். ஆனபடியினுலே வாயுபகவானை மனதில்நினைத்துத் துதித்துக்கொண்டு யுத்தஞ்செய்யென்று குறிப்பாய்ச் சொல்லக்கேட்ட வீமசேனன் தையிரியங்கொண்டு வாயுவை மனதில் நினைத்துத் தியானம்பண்ணி, ஸ்ரீகிருஷ்ணனையுந் தியானித்துத் தன் தமயனையும் நினைந்து பலமும் உற்சாகமு மதிகப்பட்டவனுகி, தோள்தட்டிச் சிங்கநாதஞ்செய்து பாய்ந்து வருகையிற் காலங் குறுகியபடியால் ஜராசந்தன்பயந்து சவுரியமழிந்து நின்ருன். அப்படியிராநின்றஜராசந்தனைவீமசேனன் லாகவத்தினுற் கால்களைப்பிடித்துக் காகரவென்று பத்துச்சுற்றுச்சுற்றித்தன்முழங்காலில்வைத்துமுறித்துக் காலாலுதைத்துத் துவைத்துக் கிழித்தான்.

இவ்விதமாக இரண்டுமூன்றுதடவை வீமசேனுற் கிழித்தெறிந்தும் அவனுடல் மீட்டும் ஒன்ருய்ச் சேர்ந்து வந்து பலமாகிய யுத்தஞ் செய்யவே, வீமசேனன்களைத்து இளைத்துக் கண்ணனைப்பார்த்தான். அர்ச்சுனனும் அண்ணனுக்கு அபாயம் வருவதா யிருக்கிற தென்று ஸ்ரீகிருஷ்ணபகவானுடன் சொல்லிமுறையிட்டுக்கொண்டான். அந்தவேளையிற் பகவான் பார்த்தனுடன் கலந்துபேசி, ஒருதுரும்பையெடுத்து இரண்டாகக் கிழித்துத் தலைமாற்றிப் போட்டுக் காட்டினுர். அந்தச்சயிக்கினையைக் கதாயுதனறிந்து ஜராசந்தனைமாட்டிப் பம்பரம்போலாட்டிக்கிழித்துத் தலைமாற்றி யெறிந்து சிங்கநாதஞ் செய்தான். அப்படி செய்யவே ஜராசந்தன் மூச்சுத்திணறி வாயாலும் மூக்காலும் உதிரத்தைக் கக்கிக்கொண்டு கோவென்று கதறித்துடித்து உயிரைவிட்டான். வீமசேனுற் கிழிக்கப்பட்டுப் பிராணனைவிடும்போது ஜராசந்தன் கதறிய வோசையினுலும் - அக்காலத்தில் வீமசேனன்செய்த சிங்கநாத வோசையினுலும் - பிரளயகாலத்து மேகத்தின் முழக்கக்கா லெப்படி அண்டங்க ளதிர்ந்து செவிபெடுமோ அப்படியே பிண்டங்களெல்லாம் நிலைகலங்கினவாய் அதிர்ந்து செவிடுபட்டன.

பின்பு வீமன் பிரேதமாய்ப்போன ஜராசந்தனையிழுத்துக்கொண்டுவந்து அரண்மனைவாசலிற் போட்டு, வெகுகம்பீரமாகிய நடையுடனே அரண்மனைக்கு

ட்சென்று, தேர்ச்சாலையி னிடத்திற்குப்போய் ஜராசந்தனுடைய தேரைக் கொண்டுவரச்சொல்லி அதன் மீதில்கிருஷ்ணர்ச்சுனருடன்கூடத் தானுமேறிக்கொண்டு வெளிப்புறப்பட்டு சிறைச்சாலையினிடத்திற்குவந்திழிந்து, அதில்வைத்திருந்த ராஜாக்களையெல்லாம் ஸ்ரீகிருஷ்ணனுடையஅநுமதியினால்விடுவித்துஅவர்களுக்குச் சமாதானஞ் சொல்ல அவர்க ளெல்லாம் ஸ்ரீகிருஷ்ணன் முதலானோரைமிகவும் பூசித்தார்கள். இப்படியவர்களால் பூசிக்கப்பட்டுத் தங்களைப் புடைசூழ்ந்துவர நவமணிகளிழைத்த பொற்பட்டங்க ளணிந்தும், முத்துச்சரங்களா லலங்கரிக்கப்பட்ட வாயுவேக மனோவேகங்களாகிய நான்கு குதிரைகள் கட்டியும், ஆகாயத்தை யளாவி நிற்கும் துவசநாட்டியும், வெகு விசித்திரப்பதுமைகள் விதவிதமாயமைத்தும், மேருபர்வதம்போ லிராநின்ற அந்தரதத்தின் மீதில் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் வீமார்ச்சுனர்களுடன் ஏறி ராஜவீதியில் வருமளவில்; அந்நகரத்திலிருக்கும் ஜனங்களெல்லாம் மும்மூர்த்திகளைப் போன்ற இம்மூவரையுங்கண்டு இவர்களைப்போல் சுந்தரத்தன்மையும்- வீரத்தன்மையும் - கம்பீரத்தன்மையும்- எங்கேயுங் கண்டதில்லை. இவர்கள் மகாபுருஷாள். இவர்களுடன் நேசித்திருந்தால் நமது ஜாராசந்தமகாராஜன் வெகு மேன்மைகளை யடைவர். காலங்குறுகிய படியினால் அவருக்கு இவர்களுடன் பகைவந்தது. இவர்கள் வெகுதருமசிலர் என்று பேசிக்கொண்டு வியப்புடனேயும் சந்தோஷத்துடனேயும் பார்க்கச் சென்றார்கள். அந்தத்தேரின் துவசநுனியிற் கருடனைவசிக்கும்படி கிருஷ்ணன் கட்டளை யிட்டபடியினாலே கருடன் அதில் வந்து மகாசிறப்பாய் விளங்கினான். அப்போது அந்தரதமானது தேவலோகத்தில் உபேந்திரருடைய ரதம்போற் பிரகாசித்தது. அந்தரதம்வந்தவரலாறு எப்படியென்றால் சொல்லுகிறேன்கேளும்.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே ! முற்காலத்தில் ஜராசந்தனுடைய குலத்தில் வசு என்று ஒரு மகாராஜனிருந்தான். அவன் ஒருகாலவிசேஷத்திலே இந்திரனுக்குச் சகாயஞ்செய்தபடியினாலே இந்திரன் மிகுந்தவிசுவாசத்துடன் தனதுரதம்போல ஒருரதம் நிருமித்துக்கொடுத்தான். அதில் உபரிசரவசுவென்கிற மகாபுருஷன் ஏறிக்கொண்டிருந்தார் அவருக்குப் பிற்காலத்தில் அந்தக் குலமுறையாகவே யெல்லோரும் அதிலேறிவந்தார்கள். முடிவில் ஜராசந்தன் இதன்பேரிலேறிக்கொண்டு சகலராஜாக்களையுஞ் செயித்தான். அந்தரதம் வெகு பிரபாவ முடையது. அதைவெல்வது வருத்தம். வெகு பலமும் காந்தியுமுடையது. இப்படிப்பட்ட திவ்விய ரதத்தின்மீ தேறிக்கொண்டு மூவரும் ராஜவீதியாய்வந்து ஒருவிசாலமாகிய இடத்தில் நின்றார்கள். அப்போது நகரத்திலிருக்கிற பேர்கள் காணிக்கைகளுடன்வந்துகண்டார்கள். சிறையிலிருந்து விடுபட்டபேர்கள் இவர்களைப் பார்த்து, ஓ மகானுபாவர்களே! நீங்கள் லோகத்திலே துட்டநிக்கிரகம் சிட்டபரிபாலனம் செய்வதற்காக அவதரித்த மகாபுருஷரானபடியினாலேதான், மீளாச்சிறையிலகப்பட்டு முடிவுக்குச் சமீபமாயிருந்த எங்களை விடுவித்து ரக்ஷித்தீர்கள். இது சாதாரணமான பேர்களினாலே ஆகத்தகுந்ததோ ? ஜராசந்தனைச் செயிப்பது இந்திரன் - இயமன்-முதலானோருக்குங்கூட அசாத்தியமாச்சுதே: உங்கள்பெருமையை நாங்கள்சொல்லி முடியுமோ ? சாக்ஷாத் பகவானாகிய கிருஷ்ணனும், தேவாம்சரான வீமார்ச்சுனருமாகிய நீங்கள்மூன்றுபேரும், இவ்வுலகத்திற்குப் பிராணனும் நேத்திரமும்போல விருக்கிறீர்கள். நீங்கள்செய்த வுபகாரத்திற்குப் பதிலுபகாரஞ்செய்ய யார்தரம்? ஆகிலும் எங்களுக்கியன்றமாத்திரம் ஏதாகிலுமொரு நன்மை செய்யாவிட்டால், எங்கள் மனதுக்குத் திருப்திவரமாட்டாது. ஆனதுபற்றி எங்களாற் சொற்பப் பிரயோசனம் பெற்றுக்கொள்ளப் பிரார்த்திக்கிறோமென்று சொல்லக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லுகிறார்:

ஓ ராஜர்களே ! எங்களுக்கு நீங்கள் ஒன்றுஞ்செய்யவேண்டுவதில்லை. இப்போது அன்பினாற் சொன்னவார்த்தையினாலேயே சகல நன்மைகளுஞ் செய்ததுபோலாயிற்று. ஆகிலும் உங்களுடைய மனதிருப்திக்காக ஒருவார்த்தை சொல்லுகிறேன் கேளுங்கள். மகாதருமசீலரும்-குணமேருவும்-விவேகியுமாகியஉதிட்டிரமகாராஜன், இராஜசூய யாகஞ்செய்ய யத்தினப்பட்டிருக்கிறார். ஆனால் அவருடைய தம்பிமார்கள் மகாசூரர். எல்லாவற்றையுஞ்செயிக்கமாட்டுவார்கள். ஆகிலும் நீங்களும் கூடவிருந்து அந்தயாகத்தை யெவ்விதமாக நிறைவேற்றவேண்டுமோ அவ்விதமாக வேண்டிய சகாயஞ்செய்து நிறைவேற்றத் தக்கதென்று கோருகிறோம். இந்த நன்மையைத்தான் உங்களாலே பெறக் காத்திருந்தோமென்று சொல்லக்கேட்ட ராஜாக்களெல்லாம் மகாபாக்கியம் அப்படியே செய்வோமென்று வணக்கத்தோடு சொன்னார்கள். இப்படியிருக்க - ஜராசந்தனுடைய குமாரனாகிய சகதேவமகாராஜன் அனேக நவரத்னாபரணங்கள் முதலாகிய உலுப்பைகளை யெடுத்துக்கொண்டு, மந்திரிகள் - சேனாபதிகள் - புரோகிதர் - முதலாகிய பரிவாரங்களோடு ஸ்ரீகிருஷ்ணன் முதலானோ ரிருக்கிறவிடத்துக்குவந்து பணிந்து ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்து, சுவாமி! தேவரீர் லோகரக்ஷணைக்காக அவதரித்த பகவானென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட தேவரீர் நினைத்தால் எந்தக்காரியம் நிறைவேறாது? தேவரீருடைய செய்கைக்குச் சகாயமாகப் பிறந்திருக்கிற மகாபுருஷரானபடியினாலே பாண்டவர்களிடத்தில் தேவரீருக்கு மிகுந்த விசுவாசமுண்டாயிருக்கிறது. உதிஷ்டிரர்மகாதருமவான். அவருடைய காரியங்களையெல்லாம் நிறைவேற்றி அவருக்குமேன்மையை வருவிக்கவேண்டியது அகத்தியந்தான். இந்

த விமர்ச்சுனரும் மகாபராக்கிரமசாலிகள். வெகுதருமிஷ்டிகள். ஆனதுபற்றி நீங்கள் என்பிதாவின்விஷயத்திற் செய்ததைக் குறித்து எனக்கு மனஸ்தாபமெவ்வளவுமில்லை. அப்படியே நீங்களும் என்பிதாவினிடத்திலிருந்த குரோதத்தைவிட்டு, அடைக்கலம் புகுந்த என்னைத் தயையினாலே காத்துவரவேண்டும். இதுதான் என்னுடைய முக்கியமாகிய பிரார்த்தனை. இனிமேல் என்பிதாவுக்குக் கருமம்பண்ணும்படி கட்டளையிட வேண்டுமென்று சொல்லினான்.

அதுகேட்ட ஸ்ரீகிருஷ்ணபகவான் அந்தச் சகதேவனை நோக்கி, ஓ சகதேவா! உன்னிடத்தில் எங்களுக்குச் சந்தோஷமேயல்லது எவ்வளவும் கோபமில்லை. உன்னிஷ்டப்படி உன்னோடு ஸ்நேகஞ்செய்தோம். உன்பிதாவுக்கு நடக்கவேண்டிய கருமங்களை நன்றாய் நடத்துக.என்றுசொல்ல அந்தச்சகதேவன் மனத்திருப்தியுடனே போய்த் தன்பிதாவாகிய ஜராசந்தனைத் தூக்கிப் புழுதி முதலானவைகள் போக்கி ஸ்நானஞ் செய்வித்து, கவசகிரீட குண்டலமுதலாகிய சகல ஆபரணங்களையும் பூட்டி திவ்விய வஸ்திரம் போர்த்துச் சந்தனபுஷ்பாதிகளா லலங்கரித்து முத்துமாலைகளாற் கொத்துக்குச்சு விடப்பட்ட பொற்சிவிகையில் மெதுவாகிய சயனத்தின்மேல் வளர்த்தி, மந்திரிகள் - சேனாபதிகள் - சேனைகள் - முதலாகிய பந்துஜன பரிவாரங்களெல்லாஞ் சூழ்ந்து பொன்மலர்களையும் - பொரிகளையும் - கெந்தபொடிகளையும் - இறைத்துக்கொண்டு கண்ணீருடன்செல்ல சகலவாத்தியங்களு முழங்க வெண்குடை வெண்சாமரம் முதலாகிய உபசாரங்கள்விளங்க புரோகிதர் அக்கினியையும் - யாகபாத்திரங்களையும் - எடுத்துக்கொண்டு பின்செல்ல ஸ்திரீகள் தலைவிரிகோலமாய் அழுதுகொண்டுவர ஓர்திவ்விய உத்தியானவனத்துக்கு எடுத்துக்கொண்டுபோய் சந்தனக்கட்டைகள் - அகிற்கட்டைகள் - தேவதாருக்கட்டைகள் - இவைகளினாற் சிதையடுக்கி, அதன்மேல் நெய்யில்நனைத்த மெத்தைபோட்டுக் கற்பூரக்கட்டிகளைப் பரப்பி கிருஷ்ணாசனம் விரித்து இராஜாவைவைத்து, அவன்தேகங்களில் யாக பாத்திரங்களை நிறைத்து யசுர்வேத விதிப்படிச் சடங்குகள் நடத்தி அனேகம் பிராமணர் வேதமோத யாகாக்கினியாற் சமஸ்காரஞ்செய்து,மறுநாள் பரிசுத்தமாகிய பசுவின்பாலினாற் சஞ்சயனநடத்தி அஸ்திகளைக்கங்கையிலிட்டுச்சகலசிரார்த்தங்களையும்விதிப்படி நடத்தி வேதியர்கட்கு கோதான பூதான சுவர்னதான வஸ்திரதான அன்னதானமுதலாகிய சகலதானங்களும் வழங்கி கிரியைகளையெல்லாங் கிரமப்படி முடித்து, அனேகம் யானைகள் - குதிரைகள் - தேர்கள்-இரத்தினங்கள் - ஆபரணங்கள் - இவைகளை யெடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணன்முதலானோரிருக்குமிடத்திற்குவந்து அவர்களைப்பார்த்து, ஓ மகாபுருஷர்களே! எனக்கியைந்தமாத்திர மிந்தத் திரவியங்களைக் கொண்டுவந்தேன் மனம் பெரிது பண்ணி இவைகளைவாங்கிக்கொண்டு உதிட்டிரமகாராசனுடையயாகத்துக்கு உபயோகப்படுத்தவேண்டுமென்றுபிரார்த்தித்தான். அதுகேட்டு மகிழ்ச்சியுடனே ஸ்ரீகிருஷ்ணன் முதலாகிய மூவரும் அவைகளைக் கைக்கொண்டு ஜராசந்தன் குமாரனை அரண்மனைக்குச் செல்லும்படி நியமித்துக் காவலினின்று விடுபட்ட ராஜாக்களைப் பார்த்து, ஓராஜாக்களே! நீங்கள் உங்கள் தேசங்களுக்குப் போய் பின்பு இராஜசூயயாகத்துக்குவாருங்களென்று சொல்ல அந்தராஜாக்கள் நாங்களிப்போதே உங்களுடன் கூடவந்து உதிட்டிர மகாராஜாவைக்கண்டு பணிந்து தேசங்களுக்குப் போகிறோமென்றார்கள். ஸ்ரீகிருஷ்ணன் முதலானோர் ஆனால் அப்படியே யாகட்டுமென்று அவர்களுடனே கூடவே கோலாகலமாக இந்திரப்பிரஸ்தத்தை நோக்கிப் புறப்பட்டு நகரம் சேர்ந்து, உதிட்டிரரைக்கண்டு நமஸ்காரஞ்செய்து நின்றார்கள்.

இப்படி நமஸ்காரஞ்செய்து நிற்கிற அம்மூவருக்கும் உதிட்டிரர் பல ஆசிகள்கூறித் தழுவியணைந்து சந்தோஷப்பட்டார். பின்பு ஸ்ரீகிருஷ்ணன் உதிட்டிரரைப்பார்த்து, ஓ மகாராஜனே! உமது அனுக்கிரக பலத்தினாலே வீமசெனன் ஜராசந்தனைச் சங்காரஞ்செய்து, சிறையிலிருந்த ராஜாக்களை விடுவித்து வெகு திரவியங்களைக் கொண்டுவந்தான். உமது ஆக்கினையின்படி நானும் அர்ச்சுனனும் கூடப்போயிருந்து ஒருதீங்கும் வரவொட்டாமற் காத்துவந்தோம் என்று சொல்ல அதுகேட்ட உதிஷ்டிரர், ஸ்ரீகிருஷ்ணா! உம்முடைய பரிபூரணகிருபையை நாங்கள் பெற்றிருக்குமளவில் ஒருகுறைவும் நேரிடாது. சகலகாரியங்களும் நிறைவேறும். ஆனபடியினாலே ஜராசந்தன் முடிந்தது அதிசயமோ? வீமசேனனாலேயும்அர்ச்சுனனாலேயும் என்னாகும்?எல்லாம் உமதுதேசோமய பலமேயன்றி வேறில்லை. இயல்பாக அடுத்தவரைக் காப்பவராகிய உமதுபெருமை என்னாற் புகழத்தக்கதோ? சகல மேன்மைகளும் எனக்குக் கிடைத்தன. இதைக்குறித்து என்னாலுமக்குச் செய்யத்தக்கது யாதுண்டு? இப்படியே எல்லாவற்றையும் நிறைவேற்றிக் காத்தருள்வேண்டு மென்று சொல்லி எழுந்து கட்டிக்கொண்டு கண்களி லானந்தபாஷ்பம்பெருகநின்றார். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் கூடவந்த ராஜாக்களையெல்லாம் அழைத்து உதிஷ்டிரருக்குக் காட்ட, அந்தராஜாக்கள் உதிஷ்டிரரைப் பணிந்து துதிக்க தருமபுத்திரர் அவர்களுக்குத் தகுந்தபடி மரியாதைசெய்து நாடுகளுக்குச்செல்ல விடைகொடுக்கஅவர்களும் அவரைப் பூசித்துக் கிருஷ்ணன் முதலானோரிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் பட்டணங்களுக்குச்சென்றார்கள். பின்புஜராசந்தன்குமாரனாகிய சகதேவன் கொடுத்த பரிசுகளைக் கொணர்ந்து காட்டக்கண்ட தருமராஜனானவர் சந்தோஷப்பட்டு, அந்தஜராசந்தனுடைய மேன்மைபெற்ற இரதத்தை ஸ்ரீகிருஷ்ண

னுக்கு வெகுமதிசெய்தார். அந்தத்தேரைக் கண்ணன் வாங்கிக்கொண்டு, பாண்டவரைவரையும் குந்தி - திரௌபதை -சுபத்திரை-முதலானோரையும் தகுந்தபடியுபசரித்துச் செலவுபெற்றுக்கொண்டு, யாவரும்புகழ அத்தேர்மீதிலேறித் துவாரகைக்குச் சென்றார். வீமசேனன் முதலாகிய நால்வரும் சிலதூரம் கிருஷ்ணனுடனேபோய் வழிவிடுத்து, அவரிடத்தில் விடைபெற்றுத் தங்கள் நகரத்துக்குவந்து வெகுமேன்மையுடனே வாழ்ந்துகொண் டிருந்தார்கள்.

அருச்சுனன் உத்தரதிக்கு விஜயம்.

ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகைக்குப் போனபின்பு ஒருநாள் சபையில் மந்திரிகளும் தம்பிமார்களும் வியாசர் முதலாகிய அனேகரிஷிகளும் கூடியிருக்கையில், தருமபுத்திரர் நாரதர் சொல்லிப்போன இராஜசூயத்தைக்குறித்து யோசித்து ஓ! ஓ! அந்த மகாயாகம் நம்மாலெப்படிகிரமமாய்நிறைவேறப்போகிறதென்று மனதிலே மிகவும் வியாகூலத்துட னிருப்பதைக்கண்ட அருச்சுனன் தமயனைப் பார்த்து, அண்ணா! நீரேன் வியாகூலப்படுகிறீர்? ஜராசந்தன் மாண்டதினாலே சத்துருக்களுடைய வேரறுக்கப் பட்டது. இனி ராஜாக்களைச் செயிப்பது மிக வெளிதா யிருக்கும். நான் அக்கினியின் அனுக்கிரகத்தினாலே ஒருவராலும் வெல்லக்கூடாத தேரையும், அப்படிப்பட்ட காண்டீவமென்னும் வில்லையும், அட்சயதூணியையும், வானரத் துவசத்தையும் பெற்றிருக்கிறேன். ஆனபடியினாலே நானேபோய் அரசர்களைச் செயித்து வெகு பொருள்களைக் கொணர்ந்து பொக்கஷத்தை நிரம்பச்செய்கிறேன். அப்பால் அப்பெரும் வேள்வியைச் செய்து மேன்மையையுங் கீர்த்தியையும்பெறலாம். அதன்பின் நானும்- வீமசேனனோடு நகுல சகாதேவராகிய அவர்கள்மூவரும் உமது பாதாரவிந்தத்தருகிற் காத்திருக்கக் குறைவென்னவிருக்கிறது? ஆதலால் இனிநாங்கள் ஜயயாத்திரைக்குப்போக ஆக்கியாபிக்க வேண்டுமென்று பரிவோடு கேட்க உதிட்டிரர் மனதிற் சந்தோஷங்கொண் டிருந்தார். இப்படி கம்பீரமாகச்சொல்லிய அர்ச்சுனனை வியாசமுனிவர்பார்த்து,குழந்தாய் அர்ச்சுனா! உன்குலத்துப் பெருமைக்கும், நீ கற்றிருக்கிற வில்வித்தையி னருமைக்கும், தருமபுத்திரருடைய யோக்கியதைக்கும், தகுந்த பேச்சைச் சொன்னாய். உன்னாலேயாவும் ஜெயிக்கப்படு மென்பதற்குச் சந்தேகமில்லை. உன்பயத்தினாலும், கிருஷ்ணனுடைய நயத்தினாலும், தனது தருமத்தினாலும், உதிஷ்டிரர் வெகுமேன்மையாகிய செல்வத்தை யடைந்து விளங்குவர். இப்போது நீ வடதிசைக்குச்சென்று அரசரையெல்லாம் வென்றுவரக் கடவை. வடதிசையில் தேசங்கள் வெகுவா யிருக்கின்றன. பலமுஞ்செல்வமும் பொருந்திய ராஜாக்களும் வெகுபே ரிருக்கிறார்கள். ஆதலால் நீயே அத்திசைக்குப்போகல்வேண்டும். கீழ்த்திசைக்கு வீமசேனன் போகட்டும். மேற்றிசைக்கு நகுலன் செல்லட்டும். தென்றிசைக்குச் சகாதேவன் நடக்கட்டும். இவ்வாறு நீங்கள்போய் ஜெயித்து வந்தவுடனே யாகத்தை நிறைவேற்றலாம். என்றுசொல்லக்கேட்டு அப்படியே செயிக்கிறோ மென்று அந்த நான்குபேரும் அவர்வார்த்தையைச் சிரசின்மேற்கொண்டு, அவரையும் தவுமியரையும் தமயனையும் பணிந்து திக்கு விஜயஞ் செய்வதற்குச் சித்தமானார்கள். அப்போது உதிஷ்டிர மகாராஜன் நல்ல பிராமணரையழைப்பித்து மங்கலச்சடங்குகள் செய்வித்து வெகு தானங்கள்வழங்கி, அவர்களால் ஆசீர்வாதம் பெறுவித்துத் தம்பிமாரை நோக்கித் தானு மங்களாசனஞ் சொல்லி, நல்ல முகூர்த்தத்திலே பிரயாணம் பண்ணியனுப்பிவித்தார். அந்தப் பாண்டவர்கள் நால்வரும் சதுரங்கச் சேனைகளோடு புறப்பட்டு, தத்தமக்குக் குறித்த திசைகளைநோக்கிச் சென்றார்கள்.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே! அவர்களுடைய திக்குவிஜயத்தைச் சிறக்கச்சொல்லுகிறேன் கேளும். கடலானது கரைபுரண்டுவருவதுபோலிராநின்ற சதுரங்க சேனைகளுடனே அர்ச்சுனன் வடதிசையிற் பிரவேசிக்க, அங்கேயிருந்தவெகுராஜாக்கள் அதுகண்டு கும்பலாய்க் கூடிக்கொண்டுவந் தெதிர்த்தார்கள். அர்ச்சுனன் அவர்கள்மீதில் மிகுந்தகோபங்கொண்டு வில்லைவளைத்துப் பாணங்களைச் சந்தானம் பண்ணி வருஷிக்க, அந்தப்பாணவருஷத்தைச் சிலநேரம்வரையில் தடுத்துஞ் சிலநேரம் வரையிற் சகித்தும் அப்பால் சகிக்கக்கூடாமற் போனபடியினாலே சிலர் ஓடிப்போனார்கள். சிலர் தங்களுக்குள்ள பொருள்களைக் காணிக்கையாக வைத்து அர்ச்சுனன் பாதத்திற் பணிந்தார்கள். இவ்வாறு பனிமண்டலத்தைச் சூரியன் சிதறவடிப்பதுபோல் அர்ச்சுன னந்த ராஜமண்டலத்தைக் கதற அடித்து வெகுதிரவியங்களை வாங்கிக்கொண்டு குளிந்த தேசத்திற்சென்று, அத்தேசத்து அரசரை நிமிஷத்துக்குள்ளாகச் செயித்து அவர்கள்கொண்டுவந்த பொருளை வாங்கிக்கொண்டு அவர்களையுங் கூடவரச்செய்து, சாள்வதேசத்து ராஜதானிக்குப்போய் அச்சாள்வராஜனோடு யுத்தம்பண்ண அந்த ராஜனும் நெடுநேரம் அர்ச்சுனனோடு யுத்தம்பண்ணி அவன் பல பராக்கிரமங்களைப் பார்த்து அப்பா! இவனோடு போராட நம்மால் முடியாதென்று மனதில் நினைத்து, அர்ச்சுனனோடு சினேகம் பண்ணும்படியான அபிப்பிராயத்தைக் காண்பிக்க அர்ச்சுனனும் அப்படியே அவனுடன் சினேகஞ்செய்து வெகு பரிசுகள்பெற்று, காசி தேசத்திற்குப் போய் அத்தேசத்து ராஜனாகியும் மகா பாபாத்துமாவாகியு மிராநின்ற சுனாப னென்கிறவனை யெதிர்த்து யுத்தஞ்செய்து அவனைத் தனக்குச்சேவகனாக்கி அவனரண் மனையைக் கொள்ளையடித்து அவனுக்குட்பட்ட சிலதீவுகளி லிருந்தவர்களையுஞ் செயித்து அவர்களில் முக்கியனாகி

ய பிரதிவிந்தியனென்கிற ராஜாவையும் அவனுக்கு அ
மைச்சராயுள்ளபேர்களையும் மற்றவர்களையுங்கீழ்ப்படு
த்தி, அங்கிருந்து சகரரால்வெட்டப்பட்ட சாகரங்க
ளினடுவே வடபக்கத்திலேயுண்டாகிய ஏழுதீவுகளுக்
கும்போய் அவ்விடத்து ராஜாக்களைச் சுவாதீனஞ்
செய்து வெகு திரவியங்களைச் சம்பாதித்து ஈசானிய
பக்கத்திற் சென்று, அங்கே ஒரு கூட்டமா யிருந்து
கொண்டு நாடுகளைக் கொள்ளை யடித்துவரும் திருட
ர்களோடு யுத்தஞ்செய்து சின்ன பின்னமாய் வெட்
டிமடித்து அனேகங்கோடி பொருளைக் கைக்கொண்
டு, காம்போச மென்னும் தேசத்து ராஜாவையும் - இ
ருஷிக மென்னுந் தேசத்து ராஜாவையும் வெற்றிகொ
ண்டு நடுச் சமுத்திரத்தி லிராநின்ற பிராக்சோதிஷ
மென்கிற பெருநகருக்குப் போனான்.

அந்தப் பிராக்சோதிஷ நகரத்தி லிருக்கிற நரகா
சுரனுடைய குமாரனாகிய பகதத்தனென்கிறவன் ஓர்
வெள்ளை யானையின்மீதி லேறிக்கொண்டு வெகுசே
னைகள் புடை சூழ அர்ச்சுனனோடு யுத்தத்திற்கு வந்
தான். அப்போது இருவருக்குங் கொடிய யுத்த மு
ண்டாயிற்று. அந்த யுத்தம் எட்டுநா ளோயாமல் நட
ந்தது. இரண்டு சேனைகளிலும் அனேகயானைகள் ம
லைபோற் குவிந்து விழுந்திறக்கவும், அங்கிருந்து அ
ருவிகள்போல உதிரவாறுகள் பெருகவும், அவைகளில்
துண்டித்தகைகால்கள் முதலான அவயவங்களும் -
கத்திமுதலான ஆயுதங்களும்-மீன்கள்போல ஓடவும்,
மண்டை யோடுகள் ஆமைகள்போ லசையவும், குதி
ரைகளுடைய தேகங்கள் உடைந்த கப்பல்கள்போலக்
காணவும், மனிதர் தேகங்கள் தோணிகள் போல மி
தக்கவும், இயமனுடைய மகிமைகளைத் துதிப்பது
போற் கூளிகள் கழுக்கள் முதலிய கொடும் பறவைக
ள் கூவவும், அந்த ரத்த ஆறுகளிற் பேய்கள் கும்பு
கூடி விளையாடவும், அந்தத் துர்கந்தத்தை யெடு
த்துக்கொண்டு கொடிய காற்றுவீசவும், அந்த யுத்தபூ
மி வெகுபயங்கரமாகவும் யாவரும் அருவருக்கத் தக்
கதாகவு மிருந்தது. அந்தப் பகதத்தனுக்குச் சகாய
மாகக் கிராத தேசத்தாரும் - சீனதேசத்தாரும் - இ
ன்னுமனேகந் தீவுகளி லிருக்கின்ற பேர்களும் யுத்த
ஞ்செய்தார்கள். அவர்களை யெல்லாம் அர்ச்சுனன் ச
ரமாரி பொழிந்து, கைவேறு - கால்வேறு - தலைவே
று - உடல்வேறாகக் கண்டங்கண்டமாய்த் துண்டிக்க
வே, பெருங்காற்றி லகப்பட்ட மேகம்போல் அவர்க
ளெல்லோரும் அவனுடைய பராக்கிரமத்தைச் சகிக்
கமாட்டாமல் தலைவிரிகோலமா யொருவரையொருவர்
வெறுத்துக்கொண்டு திசைதோறு மோடினார்கள்.

இவ்வாறு சேனைகளெல்லாம் ஓடக்கண்ட பகத
த்தன் வெகு கோபமடைந்து, தன்யானையை அர்ச்சு
னன் தேருக்குச் சமீபத்தில் விரைவிற் செலுத்தி வி
ல்லைவளைத்து நாணியேற்றி நாணோசை கொண்டு, அ
ம்புகளைத் தொடுத்துப் பிரளயகால மேகமானது ம
லையுந் துளைபடும்படி மழைபொழிவது போல் அர்ச்சு
னனுடைய தேர் குதிரை முதலானவைக ளெல்லா
ந் துளைபட்டுச் சிதறிப் பறந்தோடும் படியாய் அ
டித்தான். அச்செய்கையால் அர்ச்சுனன் காலாக்கினி
ருத்திரன்போல் வெகுண்டு ஓரம்பினால் அந்தப்பக
தத்தனுடைய வில்லைமுறித்து ஓரம்பினால் கவசத்
தைக்கிழித்து ஈரம்புகளால் அவனுடைய சுப்பிரதீப
மென்னும் யானையின் துதிக்கையிலடிக்க, அந்தயானை
பதை பதைத்து வீறிட்டுக்கொண்டு பின்னேதிரும்பி
யோட, அதுகண்ட விஜயன் சங்கம்பூரித்துச் சிங்கநா
தஞ்செய்ய, அதனாலே பகதத்தன் மிகவு நாணி அ
ர்ச்சுனனுடைய பல பராக்கிரமங்களைச் சகிக்க நம்மா
லாகாதென்று மனதில் நினைத்து அவனுக்குச் சமீபத்
தில்வந்து புன்னகையுடனே அவனைப் பார்த்து, ஓ
அர்ச்சுனா! இக்காலவரையில் என்னோடுநின்று போர்
செய்தவன் யாருமில்லை. உன்னை யொருவனைத்தான்
கண்டேன். உன்னுடையபலமும், பராக்கிரமமும், லா
கவமும், சாமார்த்தியமும், தைரியமும், மிகவுங்கொ
ண்டாடத் தக்கதா யிருக்கின்றன. இப்படிப்பட்ட உ
ன்னோடு எனக்குப் போர்செய்யும்படி நேரிட்டதற்கு
வெகுசந்தோஷப் படுகிறேன். பாண்டு மகாராஜன் ம
காபாக்கியவான். உன்குலம் இன்றுதான்சீர்பெற்றது.
எட்டுநாள் ஓயாமல் யுத்தஞ்செய்தும் இளைப்பில்லா
மலிருக்கிற மகாவீரனாகிய உன்னுடனே இனிப்போர்
செய்ய எனக்குச் சம்மதியில்லை. இதற்கு முக்கியகார
ண மென்னவென்றால், உனக்குப் பிதாவாகிய தேவே
ந்திரனுக்கு நான் சினேகிதன். எனக்கு மவனுக்கும்
பிராதாவென்கிற முறையுண்டு. ஆனபடியினாலே இந்
திர புத்திரனாகிய நீ எனக்கும் புத்திர னாகவேண்டும்.
புத்திர னிடத்திலே வாற்சலியம் பிதாக்களுக்கு இய
ல்பாதலாலும், அப்புத்திரனும் பிதாவும் போர்செய்
வது தருமவிரோத மாதலாலும், உன்னோடு இனி யுத்
தஞ்செய்ய என்மனம் ஒப்பவில்லை.

ஆனால் இதுவரையில் யுத்தம்பண்ண வேண்டிய
தென்னவென்றால், நீ வெகு தயிரியத்துடனே எ
திர்த்துவரக்கண்டு உன்சாமர்த்தியந் தெரிந்துகொள்
ளவேண்டு மென்று யுத்தஞ்செய்தேன். உன்சாமர்த்
திய மறிந்தேன். இந்திரனுடைய பராக்கிரமத்தை ய
திசயித்திருக்கின்ற நானும், உன்னெதிரேநிற்க வெரு
வும்படியிருக்கிறது. சந்தோஷப்பட்டேன். நீ வந்த
காரியமென்னசொல்லு. அதனை யானடத்துகிறேனெ
ன்றான், அதுகேட்ட அர்ச்சுனன் ஆயுதத்தைக் கீ
ழேவைத்துக் கைகூப்பிக் கொண்டு, ஐயா மகாராஜ
னே! என்பிதாவின் சினேகிதராகிய நீர் சந்தோஷப்
படும்படிநேரிட்டது என்பாக்கியவசந்தான். நான் வந்
தகாரியம் யாதென்றால்-என் தமயனாகிய தருமபுத்திர
மகாராஜன் இராஜசூய யாகஞ்செய்து, சம்ராட்டென்
னும் பெரையடைய யத்தனித்திருக்கிறார். அதற்காக
வடதிசையி லிருக்கும் ராஜாக்களைச் செயித்துக் கப்

பம் வாங்குகிறதற்காக நான் யுத்தயாத்திரை வந்தே
ன். நீர் இந்திரசகாய னென்று சொல்லுகிற படியினு
லே உம்மைக் கப்பங்கொடுக்க வேண்டுமென்று ஆக்
கியாபிக்க வல்லவனல்லேன். இக்காரியத்தை நீர்நிறை
வேற்றவேண்டுமெனயாசிக்கிறேன். என்றுசொல்லப்
பகதத்தன் ஓ குழந்தாய்! தருமபுத்திரருடைய காரி
யத்தை நிறைவேற்ற வேண்டிய பொருப்பு உனக்கு
மாத்திரமன்று. அது எனக்கு மவசியந்தான். என்று
சொல்லி அர்ச்சுனனைத் தன்மனைக்கு அழைத்துக்
கொண்டு போய் விருந்து செய்து கொண்டாட அர்ச்
சுனன் ஒரு மாதவரையில் அவ்விடத்திலேயே இருந்
து அந்த ஈசானியதிசையிலிருக்கும் அனேகந் தீவுக
ளையெல்லாஞ் செயித்து வெகுதிரவியங்கள் சம்பாதி
த்துப் பகதத்தன் வசத்தில் வைத்து, அந்தப் பிராக்
சோதிஷ மென்னும் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்
டுக் கர்மபுரமென்கிற விடஞ்சென்று அந்தராஜாவை
யும் வசப்படுத்தி இமயமலையை யடைந்து அதன்
சார்பு மலையாகிய புவனகிரியென்னும் பர்வதத்தையு
மடைந்து, அங்கே அநாவிலனென்கிற இராஜனோடு
யுத்தஞ்செய்து வெற்றிகொண்டு அவனாற் கொடு
க்கப்பட்ட பொருள்களை யங்கேயே வைத்துப் பின்
னும் வடதிசையைநோக்கிப் புறப்பட்டான்.

அங்கே அசந்தரமென்னுந் தேசத்திற்போய் அ
த்தேசத்தார் வலுவிற்கொணர்ந்து கொடுத்த பொ
ன்வெள்ளி ரத்தினங்க ளிவையாவையும் வாங்கிக்கொ
ண்டு, அங்கிருந்தே பகிர்க்கிரி - உபரிகிரி - என்கிற ப
ர்வதங்களிலிருக்கிற வேடராஜாக்களைச் செயித்துக் க
ப்பம் வாங்கிக்கொண்டு அவர்களையுங் கூடவேவரச்
செய்து குலூதமென்னுந் தேசத்திற்குப் போனான்.
அந்தத்தேசாதிபதியாகிய பிருகந்த னென்கிறவன் ம
கா சவுரியமுள்ளவன். அவன் கடல்போன்ற சேனைக
ளுடனே தன் ராச்சியத்தை அர்ச்சுனன் சூழக்கண்டு
மிகுந்த ஆக்குரோஷ மடைந்து, தனது சகலசேனைக
ளையுஞ் சன்னாகப்படுத்திப் பூமியதிரும்படி பட்டண
த்திற்கு வெளியில்வந்து யுத்தபேரிகை யடித்தான்.
அவ்வோசைகேட்டமாத்திரத்தில் அர்ச்சுனனும் தன்
சேனைகளைச் சன்னாகப்படுத்தி, யுத்தத்திற்குச் சித்த
மாகிவந்தான். உடனே இவ்விருவருக்கும் மகாயுத்த
முண்டாயிற்று. அப்போது இரண்டு சேனைகளுக்கும்
சிலநேரம் கலப்பாய்ச் சண்டை நடந்த பின்பு, யா
னைகளோடு யானைகள் - குதிரைகளோடு குதிரைகள்-
தேர்களோடு தேர்கள் - காலாள்களோடு காலாள்க
ளாக யுத்தமாகி, அதன்பின்பு வில்லாளிகளோடு வில்
லாளிகள் - கத்திக்காரரோடு கத்திக்காரர்கள் - கதா
யுதரோடு கதாயுதராகத் துவந்துவ யுத்தமுண்டாகி,
பூர்வத்தில் தேவருக்கும் அசுரருக்கும் நடந்தயுத்த
ம்போ லிருந்தது. அந்த யுத்தத்திலே பிருகந்தனு
டைய சேனைகள் அர்ச்சுனன் சேனையினாலே அடிபட்
டுத் தாவரிக்க மாட்டாமற் பெருங்காற்றி லகப்பட்ட
செத்தைகள் போல் திக்குதிக்காயப் பறந்தோடப்
பிருக்கந்தனென்பவன் வில்லைவளைத்துப் பாணங்களை
வருஷித்துப் பாண்டவச் சேனையை வெல வெலக்கச்
செய்து தன் சேனைகளுக்குச் சமாதானஞ் சொல்லிச்
சங்காதஞ் செய்ய, அர்ச்சுனன் கோபித்துப் பாண
வருஷத்தினால் அக்குலூதராஜனுடைய தேர்க் குதி
ரைகளையுஞ் சாரதியையுங் கொன்று வில்நாணியையு
மறுத்து வேகத்தோடு வந்த ரதத்தை ஸ்தம்பிக்கச்
செய்ய, அதனாலே அந்தராஜன் மிகவும் பயந்து இனி
இவனோடு யுத்தத்தைவிட்டு வணங்குவதே நன்மை
யென்று நினைத்து வேறுகுதிரைமீ தேறிக்கொண்டு
பட்டணத்திற் சென்று, வெகு தநாபரணாதிகளை யெ
டுத்துக்கொண்டு வந்து அர்ச்சுனனுக்குப் பாதகாணி
க்கை வைத்துப் பணிந்தான்.

அதுகண்ட பாண்டவவீரன் அவனிடத்தில் தய
வாகி எங்கள் தமயனார் செய்யப்போகிற இராஜசூய
யாகத்திற்கு வந்து நடத்திக்க வேண்டுமென்று சொ
ல்ல, அவ்வரசன் அப்படியே யாகட்டுமென்று தன்
தேசத்துமலைகளிற்பிறந்த உயரமும் பலமுமுள்ள யா
னைகளில் அனேகமும் மகா வேகம்பொருந்திய தன்
தேசத்துக் குதிரைகளில் அனேகமும் கொடுத்தான்.
அவைகளை அர்ச்சுனன் அங்கீகரித்து, நான் போகும்
போது கொண்டுபோகிறேன் அதுவரைக்கு மிவை
யெல்லா மிங்கேயே யிருக்கட்டுமென்று வைத்துப்
போட்டு அந்தக் குலூததேசத்துராஜனாகிய பிருகந்
தனையுங் கூட்டிக்கொண்டு சேனாபிந்து வென்னும்
ராஜனுடைய தேசஞ்சென்று, அந்தராஜன் வணங்கா
மல் எதிர்த்தபடியால் அவனைப் பரிவாரத்தோடு தேச
ம்விட்டுத்துரத்தி அந்நகரத்திற்புகுந்து அரண்மனை
யிலிருந்த சம்பத்தை யெல்லாஞ் சுவாதீனஞ்செய்து
கொண்டு அத்தேசத்திற்குத் தகுந்த அதிகாரியை
நியமித்து, அங்கிருந்து வாமதேவமென்னுந் தேசத்
தையும்-சுநாமாவென்னும் பருவதத்தையும் தாண்டிப்
போய் உத்தரகுலூத தேசங்களை யடைந்து அவ்வி
டத்து ராஜாக்களை வென்று கப்பங்கள் வாங்கி, அந்த
ராஜாக்களையுங் கூடவே அழைத்துக்கொண்டு அத
ற்குச்சமீபத்தி லிருக்கும் அப்பிரசித்தங்களாகிய ஐந்
து தேசங்களுக்குத் தூதரையனுப்பிக் கப்பங்க ள
ழைப்பித்துக் கொண்டு, துவீபப் பிரஸ்தமென்னுந்
தேசத்திற்குப்போய் அங்கொருசேனாபிந்துவென்கிற
ராஜாவினுடைய பட்டணத்திலே தன்சேனைகளை இ
ளைப்பாறவிட்டுத் தானும் இளைப்பாறி அந்தவேந்தனா
ல்மிகவும்பூசிக்கப்பட்டு, அங்கிருந்துவிஸ்வகஸ்வனென்
கிறராஜாவினிடத்திற்குப்போய் அவனோடுயுத்தஞ்செ
ய்து வெற்றிகொண்டு அவனைத்துரத்தி அவன் நகர
த்தைக் கொள்ளையடித்துப் பர்வத தேசத்தானாகிய
ஒருவனை அவ்விடத்திற்கு ராஜாவாக்கி, உச்சவசங்கே
தர் என்றேழுகூட்டமா யிருக்கிற க்ஷத்திரியரைச்செ
யித்துக் காஸ்மீர தேசஞ்சென்று அத்தேசத்துராஜா

க்களாகிய காஸ்மீரகர்களென்கிற பத்துக்கூட்டத்தாரையும் வெற்றிகொண்டு உலகமெங்கும் புகழப்பட்ட அத்தேசத்து வஸ்துக்களை விஸ்தாரம் பெற்று, திரிகர்த்ததேசம் - கொங்கணதேசம் - இவைகளைச் செயித்து அனேகம் உயர்ந்த முத்துக்களைக் கப்பம்வாங்கி, அபிசார தேசத்தைச் செயித்துக் கருசதேசத்திற்குப்போய் அவ்விடத்து ராஜனாகிய உரோசமானனைச்செயித்து, சிங்கபுரத்திற்குப் போய் சித்திராயுதனென்கிற ராஜாவோடு யுத்தம்பண்ணி அவனைச் சிரச்சேதப்படுத்தி அவன் புத்திரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து வெகு பரிசுகள்பெற்று, வங்கதேசத்தையடைந்து தன்னைக்கண்ட மாத்திரத்திலே அந்தவங்கதேசத்து ராஜன் வெகு மரியாதையோடு கொணர்ந்து கொடுத்த கப்பத்தை யங்கீகரித்துப் பாக்லீக தேசம்போய் அவ்விடத்து ராஜனுடனே யுத்தத்திற்கு ஆரம்பிக்க, அவனும் மகா பலவானாகையாலே சைனியங்களைக் கூட்டிக்கொண்டுவந்து மகா பராக்கிரமத்தோடும் எதிர்த்து யுத்தஞ்செய்தான்.

அந்த ராஜனுக்கும் அர்ச்சுனனுக்கும் இரட்டைத்தேர்ச் சண்டைநேரிட இவன் பாணங்களை அவன் தடுக்கிறதும்- அவன் பாணங்களை இவன் தடுக்கிறதும்- சமயம் பார்த்து இவன்தேரை அவன்பின்னோடச் செய்கிறதும் - அவன்தேரை இவன்பின்னோடச்செய்கிறதும் - வில்லை வளைக்கிறதும் - நாணி யேறிடுகிறதும் - அம்பெடுக்கிறதும் - தொடுக்கிறதும் - எய்கிறதும்- இவையெல்லாம் எப்போதும் அப்படியப்படியே இருப்பதுபோலக் காணப்படும்படி விசித்திரமாகச் சிலநேரம் விற்சண்டை செய்து, முறையே கத்திச்சண்டை ஈட்டிச்சண்டைகளுஞ்செய்து, இவ்விதமாக நெடுநேரம் யுத்தம்புரிந்தும் வெற்றிகாணாமலிருக்கப் பற்குனன் பிரளயகாலத்து அக்கினிபோல் வெகு கோபாவேசமடைந்து தன் சவுரிய முழுமையும் வருவித்துச் சரமாரி பொழிந்து பாக்லீகதேசத்து ராஜனை வெலவெலக்கச் செய்தான். இவ்விதமாக வெகுபிரயாசத்தினாலே அந்தராஜனை வெற்றிகொள்ளவே அவன் இவனுடைய வீரத்தன்மைக்குச் சந்தோஷித்து யுத்தத்தை நிறுத்தித் தன்மாளிகைக்கு அர்ச்சுனனை அழைத்துக் கொண்டுபோய் மரியாதை செய்து வெகு திரவியங்களைக் கொடுக்க, அவைகளை வாங்கிக் கொண்டு அர்ச்சுனன் வெகு சந்தோஷத்துடனே அந்தராஜாவைச் சேனைகளோடு அழைத்துக் கொண்டு தரததேசத்தார் - சிங்கதேசத்தார்-காமதேசத்தார் - இவர்களையெல்லாஞ் செயித்து வெகு திரவியங்களைச் சம்பாதித்துக்கொண்டு அனேகம் வகுப்பாய்ப் பிரிந்திருக்கிற துருக்கர் தேசங்களுக்குப் போனான்.

அந்தத் துருக்கர் தேசத்தில் வெண்மையாகிய வன்னமும் - தோற்சட்டையும்-தாடிகளுமுடைய ராஜாக்கள் யாவரும் அர்ச்சுனனுடைய பராக்கிரமத்தைக் கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே பயந்து தங்களுக்குண்டாகிய திரவியங்களை யெடுத்துக்கொண்டுவந்துபணிய அர்ச்சுனன் அவைகளை வாங்கிக்கொண்டு தங்கள்தங்கள் ராச்சியத்திலேயேயிருந்து செவ்வையாய் அரசாட்சி செய்துவரும்படி திட்டஞ்செய்து, அதற்குச் சமீபமான கிராததேசத்திற் சென்று, அவ்விடத்திய ராஜாக்கள் கர்வத்தினாலும் அகங்காரத்தினாலும் எதிர்த்து யுத்தஞ்செய்தபடியால் அவர்களையும் அவர்களுடைய சேனாபரிவாரங்களையும் தலையறுத்து அவர்கள் பொக்கசத்தையெல்லாங் கொள்ளையிட்டு, அங்கிருந்து சமுத்திர வோரத்திலிருக்கும் ஓர்மிலேச்சதேசத்திற்குச்சென்றான். அவ்விடத்திய ராஜாவாகிய ரிஷீகனென்கிறவன் வெகுசேனைகளோடுங்கூடி யுத்தத்திற்குவர, அருச்சுனனும் தன்சேனைகளைச் சித்தம் பண்ணிக் கொண்டு பயங்கரமான யுத்தஞ்செய்தான். இவ்வாறு இருவருக்கும் நெடுநேரம் யுத்தம் நடக்கவே ரிஷீகனுடைய சேனைகள் வெகுவாய் மடிந்துபோயின. அதுகண்ட அந்தமிலேச்சராஜன் மனந்தளர்ந்து, சினேகம்பண்ண மனதைக்காட்ட அர்ச்சுனன் அப்படியே யங்கீகரித்து, அவனாற் கொடுக்கப்பட்ட கிளியின் வயிறுபோற் பச்சைநிறமுள்ள குதிரைகளையும் - மயில்வன்னமுள்ள சிலகுதிரைகளையுங் கைக்கொண்டு, இமயமலையின் சமீபத்திற்குவந்து, தன்சேனைகளை அவ்விடத்தில் நிறுத்தி, அதுவரைக்கும் சம்பாதித்த திரவியங்களை அவர்களுடைய காவலில்வைத்துச் சிலசேனைகளைக் கூட்டிக்கொண்டு சுவேத பர்வதத்திற்குப் போய் அவ்விடத்திலிருந்த துஷ்டராஜாக்களை வெற்றி கொண்டு இமயமலை தாண்டிக் கிம்புருஷ பர்வதஞ்சென்று அப்பர்வதத்திலிருந்த இட்சுவாகுவமிசத்து ராஜனோடு கொடியபோர்செய்து அவனைச்செயித்து அவன்கொடுத்த பொருள்களை அவனிடத்திலேயே வைத்து, அங்கிருந்து ஹாடகமென்னுந் தேசத்திற்குப் போய் அவ்விடத்திற் குகியகர் என்கிற தேவசாதியாரோடு நெடுநேரம் போர்செய்து பின்பு நல்ல வார்த்தைகளாலே அவர்களைச் சுவாதீனம்பண்ணிவெகுபொருள்களைக் கப்பம்வாங்கிக் கொண்டு, மானசமென்கிற தேவமடுவினருகிற்சென்று ரிஷிகுலியரென்றும் ஹாடகரென்றும் பேர்பெற்ற சாதியாரிடத்திலுங் கப்பம்வாங்கிக் கொண்டு, கெந்தர்வருக்குந் தேசத்திற்குப் போய் அவர்களோடு வெகுசண்டைசெய்து செயித்து அநேகந்திரவியங்களையும் - தித்திரி என்கிற பட்சியின் வன்னத்தையுடைய சிலகுதிரைகளையும் - தவளையின்கண் போன்ற கண்ணையுடைய சில குதிரைகளையும் - மற்றுமனேக வஸ்துக்களையும் பெற்று, ஹேமகூட பருவதத்திற்குப் போய்ச் சேனைகளை யிறக்கி இளைப்பாறி ஹரிவருஷமடைந்து அதில் வெகு சவுக்கியத்திற்கு ஏதுவாகியும் ஆச்சரியப்படத் தக்கதாகியும் அழகாகியுமிராநின்ற - மடுக்கள்- ஆறுகள்-மலைகள் - தோப்புகள் - முதலானவைகளைக் கண்டுகளித்து சவுந்திரியமுள்ள ஸ்திரீகளையும் புருஷர்களையும்பார்த்து ஆச்சரி

யப்பட்டு, நயபயங்களாலே யவர்களைச்சுவாதீனம்பண்ணி, அநேகந்திரவியங்களையுங் கிரகித்து மகாசந்தோஷத்தோடு இளாவிருதவருஷத்திற்குப் போனான்.

அவ்விடத்தில் தேவர்களுடைய வீடுமுதலானவைகளைக்கண்டு ஆச்சரியத்தையும் பயத்தையுமடைந்து அவர்களை மிகவும் வணக்கத்துடனேநோக்கி, ஓ மகானுபாவர்களாகிய புருஷர்களே! என் தமயனாராகிய உதிஷ்டிரமகாராஜன் இராஜசூயயாகஞ்செய்ய யத்தினப்பட்டிருக்கிறார். அதனாலே நான் வடதிசையிலுள்ள ராஜாக்களைச்செயித்துக் கப்பம்வாங்கிக்கொண்டு வந்தேன். நீங்களும் தயைசெய்து ஏதாகிலுங் கப்பம் போற்கொடுத்து அக்காரியத்தை நிறைவேற்றவேண்டும். என்றுகேட்க அவர்கள் இவனிடத்திற் பிரீதிசெய்து பூலோகத்திற் கிடையாத உத்தம ரத்தினாபரணங்கள் - வஸ்திரங்கள் - முதலானவைகளைக் கொடுக்க வாங்கிக்கொண்டு, மேருவுக்குப் பிரதக்ஷணமாய் வடக்கேபோகவேண்டுமென்று புறப்பட்டு அவ்விளாவிருத கண்டத்தின் அழகைப் பார்த்து ஆனந்தப்பட்டுக்கொண்டே சுத்தப் பொன்மயமாகிப் பலரத்தினங்கள் நிறைந்த தாழ்வரைகளோடுகூடி வெகு அழகாகியசோலைகள்சூழ்ந்து அக்கினிபோல் வெகுபிரகாசம் பொருந்திப் புண்ணியவான்களுக்கேயன்றி மற்றவர்களாற் பார்ப்பதற்கு மரிதாகிய பெருமையுள்ளதாய், இவ்விதமாகியதென்று நிதானிக்கக் கூடாமற் பலமும் - மகிமையும் - அழகும்-காந்தியும் - பொருந்திய பலவகைப் பட்சிகளுக்கும் மிருகங்களுக்கும் இருப்பிடமாய், மிருகசஞ்சீவினி - விசல்லியகரணி - முதலாகிய ஓஷதிகளால்விளங்கித் தேவர் - கருடர் -கந்திருவர்-முதலானோருக்குப் போகஸ்தானமாகி, அவர்கள் செய்யாநின்ற நாட்டியம் - கீதம் - போசனம் - போகம் - இவைகளாற் பஞ்சேந்திரியங்களையுங் கவர்ந்துகொள்ளத் தக்கதாகிய சுவர்ன மயமாய்விளங்கு மகாமேருவென்கிற பருப்பதத்தைக் கண்டான்.

அம்மாத்திரத்தில் அர்ச்சுனன் ஆனந்தசாகரத்தில் மூழ்கிப் பிரமித்து ஸ்தம்பித்து, அந்த மகாபருவதத்தினின்றும் பெருகாநின்ற ஜம்பூநதியையும் - அதின்கரையிலிருக்கும் உத்தியானவனங்களையும் - அதில்வாசம் பண்ணாநின்ற சித்தபுருஷரையும் கண்டு அவர்களுக்குத் தான்வந்தசேதியை வணக்கத்தோடு தெரிவித்து, அவர்கள் தயைசெய்துகொடுத்த இரத்தினம் முதலானவைகளை வாங்கிக்கொண்டு, கந்தமாதன பர்வதத்தைக்கடந்து மறுபடி இளாவிருத கண்டத்திற்குவந்து, மேருபர்வதத்தினுனியிலிருக்கிற நாவல்மரத்தின் பழங்கள் கீழேவிழ்ந்துநசுங்கி அவைகளின் இரசம் ஜம்பூநதி என்கிறபேரோடு பெருகிவருவதையும், அந்தரசம்பட்ட பூமியெல்லாம் ஒப்பற்ற தங்கமாகிறதையும், அத்தங்கத்தினாலாகிய பணிகளைச் சித்தபுருஷரும் சித்தஸ்திரீகளும் தரித்துக் கோடிசூரியப் பிரகாசமாய் விளங்கி அவ்வாற்றின் நீரைக்குடிப்பதினால் தேகத்தில் இளைப்பு - மூப்பு-தளர்ச்சி - வேர்வை - முதலிய துன்பங்களில்லாமற் காந்தியும் - சுகந்தமும் - பொருந்தியிருப்பதையும், அந்தநாவல்மரத்தினிழலிலே அநேகமாயிரம் முனிவர் சஞ்சலமின்றித் தவஞ்செய்துகொண்டிருப்பதையும், நிர்மலமாகிய அவ்வாற்றின் ஜலத்திற் பொற்றாமரைகள் மலர்ந்திருக்க-அவைகளின் தேனைக்குடித்துக் களித்து ஒலித்துக்கொண்டு சுழன்றுவராநின்ற வண்டுகளைக்கண்டு பயந்து மிகவுமசையாநின்ற கண்களோடு கணவருடன் பிணக்குற்ற மாதர்கள் வலுவிற் கணவரைத்தழுவ-அதனாலவர் பேரானந்தமுற்று அவ்வண்டினத்தைத் துதிப்பதையும், சுவர்ணமயமாகி வெகு விசித்திரமாகத் தளிர்த்துப் பூத்துப் பழுத்துப் பரந்துவிளங்காநின்ற சோலையின் ஓர்புறத்தில் - மரத்தினிழலில் மாதர்மடிமேல் ஆடவர்படுத்துக்கொண்டு கிளைகளிலிருந்து கொஞ்சாநின்ற கிள்ளைகளின் மொழிகளைக்கேட்டுச் சந்தோஷப்பட்டு நகைத்துக்கொண்டிருப்பதையும், மற்றோர்புறத்தில் ஊடலுற்ற நாயகிகளைப் பலவிதங்களினால் நாயகர் சமாதானப்படுத்திக் கெஞ்சுவதையும், இன்னுமோர்புறத்தில் தேவர்கள்சபைசேர்ந்து கந்திருவர்பாட அப்சரமாதராட வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருப்பதையும், பின்னுமோரிடத்தில் தேவகணங்கள் கள்ளுண்டு களித்து ஒருவரோடொருவர் போர்செய்துவைது அழுதுபிதற்றிக் குதித்து நிற்பதையும், ஒருபக்கத்தில் மகாதபசிகள் சொல்லு முபதேசங்களைப் பத்தியுடன் சிலர் கேட்டுக்கொண்டிருப்பதையும், மற்றொருபக்கத்திற் கொடிகளுஞ் செடிகளும் படர்ந்த மண்டபங்களிற் புகுந்து காமநூலிற்சொல்லியபடி பலவிதகரணங்கள் செய்து ஸ்திரீகளும் புருஷரும் போகித்துக்கொண்டிருப்பதையும், விசித்திரமாகப் பக்ஷிகள் கூவுகிறதையும், இத்தகைய பல வேடிக்கைகளையெல்லாம் பார்த்துக்கொண்டே மந்தரபருவதத்தினிடத்துக்குவந்து அதனருகிற் பெருகாநின்ற சைலோதை என்கிற நதியின் கரையிலிருக்கும் மூங்கிற்காட்டைக்கண்டு, அவ்விடத்திலிருந்த - காஷர் - சாஷர் - நத்யோதர் - பிரவதசர்-தீர்க்கவேணுகர் - பசுபர் - குளிந்தர் - டங்கர் - பரடங்கணர் - என்கிற மகாவீரராகிய ஜாதியாரை வெற்றிகொண்டு வெகுபொருள்களைச் சம்பாதித்து, மாலியவத் பருவதம் - நீலபருவதம் - சுவேதபருவதம் முதலாகிய விடங்களுக்குப் போய் அவ்விடத்தினரையுஞ் செயித்துக் கப்பங்களை வாங்கிக்கொண்டு, சிருங்கியென்கிற பருவதத்தைத் தாண்டிக் குருவருஷத்திற் பிரவேசித்து அங்கிருந்த கந்திருவர் - கின்னரர் - முதலிய பேர்களிடத்திற் சுவர்ண மயமாகிய மான்தோல்முதலான வெகுபொருள்களைப் பெற்றுக்கொண்டு அப்பாலும் போகவேண்டுமென்னு மனமுடையவனாக விருந்தான்.

இக்கருத்தை யவ்விடத்திற் சுவர்க்கத்துக்குப்
போகும்வழியி லிராநின்ற காவற்காரரறிந்து அவனை
நோக்கிக் கொஞ்சங் கோபத்துடனே சொல்லியதாவ
து - ஓய் அர்ச்சுனமகாராஜனே! இதோநாங்கள் காவ
ல்கொண்டிருக்கின்ற இந்தத்தேசம் உத்தரகுருவென்
று சொல்லப்படும். இதில் மனுஷியாள் பிரவேசிக்கக்
கூடாது. இதுவரையில் நீவந்ததே அதிசயம். இனிமே
ற்போக யத்தினப்படுவது தகாது. அசாத்தியமாகிய
காரியத்தை யத்தனித்து அவமானப்படாதே. எது
வரையில் மனிதர்ருக்கிறூர்களோ அதுவரைக்குந்தா
ன் மனிஷியலோகம். அதற்கப்பால் மனுஷியகந்திரு
வர் முதலானோ ரிருக்குமிடமும் அத்துடன் சேர்ந்த
துதான். அப்பால் தேவபூமி. ஆகிலும் நீ மகானுபாவ
னுகையால் இதுவரையில் வந்தாய். இனி உத்தரகுரு
வில் எங்கள்வார்த்தையைக் கேட்காமற் பிரவேசிப்பா
யேயாகில், அவ்விடத்தில் ஒருவரையுங் காணமாட்டா
ய். உன்கண்களுக்குப் பாழாகத்தோற்றும். அன்றியும்
நீ மறுபடி திரும்பிப்போவது வருத்தமாகும். ஆகை
யால் நீயேன் பிரயாசைப்படுகிறுய்? இவ்வளவு நீஜயித்
துவந்ததற்காக மிகவுஞ் சந்தோஷப்படுகிறேும். உன்
னிடத்தில் எங்களுக்கு ஒருவித ஆசையுண்டாயிருக்கி
றபடியினுலே, நீவந்த காரியத்தைச் சொன்னுல் அ
தைநிறைவேற்றுகிறேுமென்றூர்கள். அதுகேட்ட அர்
ச்சுனன் கைகூப்பி அந்தத் துவாரபாலகரைப் பார்த்
து, ஓ துவாரபாலகரே! நான் தேவர்களினுடைய க
ட்டளையைமீறி நடப்பவனல்லேன். நீங்கள் இவ்வளவு
சொல்லியதினுல் மிகவும் சந்தோஷமாயிற்று. நான்வ
ந்தகாரிய மென்னவென்றூல்-என் தமயனுராகிய உதி
ஷ்டிரர் இராஜசூயயாகத்திற்கு ஆரம்பஞ்செய்திருக்கி
றூர். அதற்காகத்தான் இவ்வளவுதூரம் ஜெயயாத்தி
ரைவந்தேன். நீங்களும் தயைசெய்து ஏதாகிலுங்
கொஞ்சந் திரவியங் கொடுக்கவேண்டுமென்று சொல்
ல அவர்கள் பலவிதப் பொருள்களைக் கொடுத்தார்க
ள். அர்ச்சுனன் அருமையாகிய அப்பொருள்களைக்
கைக்கொண்டு சந்தோஷத்துடனே தெற்கேதிரும்
பி அந்தத் தேவபூமியெல்லாந் தாண்டி முன்னே ஜ
யிக்காம லிருந்த புளிந்தர் - புல்க்கசர் - ஊணர்-ஆபீ
ரர் - கஷர் - மகாயவனர் - மிலேச்சர் - முதலாகிய ப
லரையும் கொடியயுத்தஞ்செய்து ஜயித்து வெகுதிர
வியங்களைக் கப்பமாகப்பெற்று இப்படியே வருடந்
தோறுங் கப்பங்கட்டி வரும்படி யவர்களுக்குத் திட்
டஞ்செய்து, முன்ஜயித்த அனேகம் பூபாலருக்கும்
அவ்வாறுகவே கப்பங்கட்டிவரும்படி. துள்ளுச்சீட்ட
னுப்பி, இமயமலையின் சமீபத்தில்வைத்திருந்த சகல
சேனைகளையுங் கூட்டிக்கொண்டு, கப்பமாகவும் பரி
சாகவும்பெற்ற யானைகுதிரை முதலானவைகளையும்-
சுவர்ணம் இரத்தினம் முதலானவைகளையும்-சாயவை
த்துக்கொண்டு, தனதிஷ்டரும் சேனைகளும் சூழ
ஜயபேரிகளும் - கட்டியங்களும் - பலவித வாத்தியங்
களு முழங்க ஜயக்கொடிகள் ஆகாசத்திற் பறக்கப்
பட்டணத்துச் சனங்களெல்லா மெதிர்கொண்டுவந்து
கொண்டாட இந்திரப் பிரஸ்தம் வந்து சேர்ந்தான்
ஜெயவிஜய காண்டீபனுகிய அருச்சுன மகாராஜன்.

வீமன் இந்திரதிக்கு விஜயம்.

கேளும் ஜெனமேஜெயமகாராஜனே! அர்ச்சுனன்
வடதிசைக்கு எப்போது புறப்பட்டானே அப்போ
தே வீமசேனனும் ஓரக்ஷோகிணி சேனையுடனே கிழ
க்குத்திக்கைக் குறித்துப் புறப்பட்டு, வழியில் அனே
கங்காடுகள்-மலைகள்-நதிகள்-இவைகளைத் தாண்டி, அ
வ்விடத்து ராஜாவாகிய உரோசமானனென்கிறவனைச்
செயித்துக் கப்பம் வாங்கிக்கொண்டு பாஞ்சாலதேச
ஞ்சென்று மாமனுராகிய பாஞ்சாலராஜனைக் கண்டுப
ணிந்து வந்தகாரியத்தைச் சொல்ல, அவன் அப்படி
யே கப்பங்கொடுக்கச் சம்மதித்தாலும் அக்குடும்பத்
தைச் சேர்ந்தபலரும் அதற்குச் சம்மதிக்காமையினு
லே அவர்களுக்கு வெகு சமாதானங்கள் சாற்ற, அ
தனுலுஞ் சிலர் ஒத்துக்கொள்ளாம லிருக்கக்கண்ட
வீமன் தன் துபராக்கிரமவலிமையினுல்நயபயமுறுத்த,
அந்நயபயங்களாலே பாஞ்சாலர் யாவருஞ் சம்மதிப்
பட உடனே கப்பம்வாங்கி அந்தப்பொருள்களை யவ்வி
டத்திலேயேவைத்துச் சிலபாஞ்சாலரையுங் கூட்டிக்
கொண்டுவிதேகதேசஞ்சென்று மிதுலையென்கிற மகா
நகரத்திற் பிரவேசித்து யுத்தபேரிகையடிக்க, அது
கண்ட அந்தவிதேகராஜன் வந்து வீமனோடு சிநேக
ஞ்செய்து வெகுபரிசுள் கொடுக்க அவைகளையு மங்
கேதானே வைத்துப்போட்டு தசார்ண தேசத்துக்கு
ப் போனுன். அந்தத்தேசத்தில் என்றும் வற்றுத ந
திகளோடு ஏரிகள் முதலாகிய பத்துவித சலாதாரங்
க ளிருப்பதினுலே அத்தேசத்திற்குத் தசார்ணமெ
ன்று பேருண்டாயிற்று. அத்தேசம் இப்படிப்பட்ட
நீர்வளப்பத்தினுற் கொஞ்சம் நிலங்கூடப் பாழில்லாம
ற் பலவிதப் பயிர்களேறிச் செழித்திருக்கும். அன்றி
யும் இருண்டசோலைகள் பலவுஞ்சூழ்ந்து இசையாய்
க்கூவுகின்ற பட்சிகள் பொருந்தித் தேசமெங்கும் பி
ர்மோச்சவம்போற் பிரகாசித்திருக்கும். அத்தேசத்
துச் சனங்கள் சகலபோக பாக்கியங்கள் பெற்று ஒரு
குறைவுமின்றிச் சந்தோஷத்துடன் சதாகாலமும்
விளங்கிக்கொண் டிருப்பார்கள்.

இப்படிக்குச் சகலவிதச் சிறப்புக்களாலு மேன்
மைபெற்று விளங்காநின்ற தசார்ணதேசஞ்சென்று
அதின்வளத்தைப் பார்த்துக் கொண்டே தசார்ணந
தியின்கரையில் வெள்ளிமலைகள்போன்ற மெத்தைவீ
டுகளின் வரிசைகளாலும்- இருபுறங்களு மலங்காரம்
பொருந்த ஒழுங்காக வைத்திருக்கும் பூஞ்சோலைக
ளாலும் - அழகியசாலைகளாலும் பிரகாசித்து மேடுப
ள்ளங்க ளில்லாமல் மெதுவாகியும்-அழுத்தமாகியும் -
மணல்களோடுங் கூடி நீண்டும் பரந்துமராநின்ற பல
வீதிகளுள்ளதாய் அழகிலும் - செல்வத்திலும் - சா

துரியத்திலும் - கல்வியிலும் - அதிகப்பட்ட ஸ்திரீக
ளும் புருஷர்களும் நித்தியமகிழ்ச்சியுடன் ஒருவரோ
டொருவர் இடைவிடாத அன்புகூர்ந்து விநோதமாய்
விளையாடிக்கொண் டிருக்கப்பெற்றுக் கடல்போற்
சகலபதார்த்தங்களுஞ் சம்பூர்ணமாய் விற்கிற கடை
த்தெருக்களோடுங் கூடி மேலாகிய சவுக்கியங்களுக்
கெல்லா மிடமாயிருக்கிற மதுமதீ என்கிற பட்டண
த்தைக் கண்டுகளித்து தன்சேனைகளை யவ்விடத்தி
லே இறக்கி வியூகங்கட்டியுத்த சன்னுகப்படுத்திரண
பேரிகை யடிக்கவே, முன்னே கங்கை பின்தொடர்ந்
துவரப் பகீரதன் வருவதுபோற் சைனிய வெள்ளம்
புரண்டுவர வீமசேனன் வருகிறானென்பதைக் கேட்
ட அப்பட்டணத்து ராஜனுகிய சுவர்மாவென்கிறவன்
அந்தரணபேரியின் சத்தமுங் கேட்ட மாத்திரத்தில்
தன் சேனைகளைச் சித்தப்படுத்திப் பட்டணம் விட்டு
வெளியில்வந்து வீமனையும் அவன் சைனியத்தையுங்
கண்டு உச்சாகத்துடனே யுத்தஞ் செய்யும் அபிப்பி
ராயத்தைக்காட்ட, அம்மாத்திரத்தில் இருவருக்கும்
பலமான உயுத்த முண்டாயிற்று.

அந்த யுத்தத்திற் பாண்டவச் சேனுதிபதியாகிய
வொருவன் தசார்ணசேனையிற் பிரவேசித்துக் கலக்கி
யடிக்க, அந்தச்சைனியம் அல்லோல கல்லோலமாய்
அலைவதைக் கண்ட தசார்ணசேனுபதி வெகு கோப
ங்கொண்டு பொங்கிவருஞ் சமுத்திரத்தை யணைபோ
ட்டுத் தடுத்தாற் போல் தன்புஜபல சாமார்த்தியத்தி
னுற் றடுத்துச் சிங்கநாதஞ் செய்தான். அதைப் பொ
ருமற் பாண்டவச் சேனுதிபதி யெதிர்க்க, அவ்விருவ
ருக்கும் இரண்டு மதயானைகளுக்கு நேரிட்ட யுத்தம்
போற் கொடியயுத்தம் நேரிட்டது. அப்போது இ
ருதிறச் சேனைகளுந் தங்கள் தங்கள் சேனுதிபதிக
ளைச் சூழ்ந்து நின்று தைரியமாக யுத்தஞ் செய்தார்
கள். அந்த யுத்தத்தினுலே தசார்ணசேனையில் வெகு
வாய்ச் சேதம் நேரிட்டது. அதனுலே தசார்ண சேனு
பதி மிகுந்த பொருமையுற்று நெருங்கியிருந்த மரங்
களைப் பெருங்காற்றுப்பிரவேசித்து முறித்துத்தள்ளி
வெட்டவெளி யாக்குவதுபோற் பாண்டவச் சே
னைகளை முறித்துத் தள்ளி முடுக்கப் பார்த்தான். அ
ப்போது பாண்டவச் சேனுதிபன் தன்னிரதத்தை வி
ரைவில் நடத்திச் சங்கம்பூரித்துச் சிங்கநாதஞ்செய்து
வில்லை வளைத்து நாணேறிட்டு நாணேசை கொண்டு
பத்தம்புகளைத் தொடுத்து ஓரம்பினுல் நாணையறுத்
து, ஈரம்புகளினுற் சாரதியையடித்து,மூன்றம்புகளி
னுற் குதிரைகளைத் துளைத்து, நான்கம்புகளினுல்
ரதிகனையும் மார்பிற்பொத்தினுன். இப்படி செய்யவே
தன்சாரதிவிடவிடத்து மூர்ச்சையடையக்கண்ட அந்
தாதிகன் தன்ரதத்தைப் பின்னே போக்கிச் சாா
திக்கு மூர்ச்சைதெளிவித்து, வேறுநாணியை வில்லிற்
கட்டி மறுபடியும்வந்து வில்லைவளைத்துப் பாணங்க
ளைத் தொடுத்துப் பாண்டவச் சேனுதிபதியின் கு
திரைகளைக் கழுத்தறுத்துச் சாரதியையும் மார்பைப்
பிளந்து வில்லையொடித்து அட்டகாசஞ்செய்யும்போ
து; பாண்வச் சேனையில் ஒரு ஹாரபாரமும் - தசார்
ணச் சேனையில் ஒரு கோலாஹலமு முண்டாயிற்று.

அதனுலே அந்தப்பாண்டவச் சேனுபதி மனம்
பொருமல் தேரைவிட்டுக் குதித்து, சத்தியைக் கையி
லேந்திக் கொண்டு தசார்ண சேனுபதியின்தேரின்மீதி
ற் பாய்ந்து, சாரதியையுங் குதிரைகளையும் வெட்டித்
தேரின் சிகரங்களையுந் துணிகளையுந் துணித்துவில்லை
யொடித்து ரதிகன்பேரிற் பாயவருகிறுன். அப்போத
ச்சேனுபதியின் உதவித்தலைவர் ஒரு கொடியில்வே
றுரதங் கொணர்ந்து அவனை யத்தேரின்மே லேற்
றித் தாங்கள் சூழநின்று பாண்டவச் சேனுபதியை
வளைத்துக் கொண்டு அவன்கத்தியைப் பிடுங்கிப் பத்
திரமாய் அவனையுங் கைப்பிடியாகப் பிடித்துக்கொள்
ள யத்தனப்படுகையில்,அச்சேனுபதி மனந்தளராமல்
அங்கே விழுந்திருந்த ஓர் தேரினிரிசியை யெடுத்துச்
சுழற்றிச் சூழவிருந்தபேர்களைத்துரத்தினுன், இதை
த்தூரத்திலிருந்துபார்த்த வீமசேனன் - ஓ! ஓ! ந
மது சேனுபதி அபாயத்தி லகப்பட்டுக்கொண்டானெ
ன்று நினைத்து நான்குவீரரை விரைவிலனுப்ப; அவர்
கள் ஓடோடிவந்து சரமாரிபொழிந்து, சூரியன் மேக
ங்களைக் காய்வதுபோற் காய்ந்து சேனைத்தலைவனை
மற்றொரு தேரிலேற்ற; மறுபடியும் இருபக்கத்து வீ
ரர்களுக்குங் கொடிய யுத்தமுண்டாகி அங்கங்களும்
ஆயுதங்களு மிதக்கச் சில உதிரவாறுகளுண்டாயின.
அந்தக்கொடிய சண்டையில் தசார்ண சேனுதிபன்
சண்ட மாருதம்போற் பராக்கிரமித்துக் கணைகளைப்
பொழிந்து சேனைகள் விலகி யோடும்படி யடித்து,
உதவியாகவந்த நான்குவீரர்கள் தலையையறுத்து அ
ப்பாண்டவசேனு நாயகனது தேரின் குதிரைகளையும்
பாகனையுங் கொன்று இருபது பாணங்களை யவன்மார்
பிற்பிரயோகித்து மூர்ச்சிக்கச்செய்தான். அச்சேனுப
தி ஒரு முகூர்த்தகாலம் மூர்ச்சையோடிருந்து தெளி
ந்து கத்தியைக் கையிலேந்தித் தசார்ண சேனுநாய
கன் தேரையும் குதிரைகளையும் சாரதிகளையுஞ் சூர
ணஞ்செய்து அவனையும் ஆயுதசூனியனுக்கிக் கவசத்
தைப் பிளந்து சிங்கநாதஞ் செய்தான்.

அதுகண்ட அந்தச்சேனுபதியும் கீழேகுதித்துக்
கத்தியைப் பிடித்துக்கொண்டு வர இருவரும் சில
நேரம் கத்திகளாற் சண்டைசெய்யு மளவில், சமயம்
பார்த்துப் பாண்டவச் சேனுபதி எதிரியின் சேனு
பதியைப் பிடித்துக் கீழேதள்ளித் தன் கத்தியினுல்
ஆட்டைக் கழுத் தறுப்பது போல் அறுத்தான். அத
னுலே தசார்ணசேனைகள் துக்கப் படுவதையும்-பாண்
டவச்சேனை களித்திருப்பதையும்-அந்தத்தசார்ண தே
சாபதியாகிய சுவர்ம்ம மகாராஜன்பார்த்து தன்சே
னுபதி இறந்ததைக்குறித்து மனதில் துக்கமும் கோ
பமும் மிகுந்துவளர வீமசேனனேடு செய்துகொண்

டிருந்த யுத்தத்தைவிட்டுத் தந்திரமாய் அவனதுசேனாபதிமேற் பாய்ந்து தன்சேனையை நாசஞ்செய்தவிடத்திற்குவந்து நின்று பத்து பாணங்களைப் பிரயோகித்து அவனை வெறுங்கையனாகத் தரையில் நிறுத்த, அந்தச்சேனாபதி ஓர் கதாயுதத்தை யேந்திவர, தசார்ணராஜன் அந்தக் கதாயுதத்தோடு அவன்கையைத் துணிக்க, அவன்மற்றொருகையாலந்தக் கதாயுதத்தை யெடுத்து வெகுதீரத் தனமாக எதிர்க்க அந்தக்கையையு மவ்வரசன் துணிக்கவே அச்சேனாபதி கீழே விழுந்துவிட்டான்.

வீமசேனன் அதுகண்டு அவன்செய்த தந்திரத்தினாலே வெகுகோபமும் பொறாமையுங் கொண்டு வேறுசேனாபதியை நியமித்துத் தன்சேனைகளை நடத்திக்கொண்டு சத்துருவிருக்கிற விடம்வந்து கைகளறுந்துவீழ்ந்த தன்சேனாபதியைத்தூக்கி மூர்ச்சை தெளிவித்து அவனுக்குக் காயங்கட்டும்படி கூடாரத்துக்கு அனுப்பிவிட்டு, வில்லைவளைத்துப் பாணங்களைவருஷித்துச் சத்துருவின் சேனையாகிய பெருங்கடலைக்கலக்கித் தசார்ணராஜனை யெதிர்த்தான். அப்போது இரண்டுராஜாக்களுக்கும் துவந்துவ யுத்தமுண்டாயிற்று. அப்படி நெடுநேரம் யுத்தமாகும்போது இருவரும் இளைக்காமலும் பயப்படாமலுமே யுத்தஞ்செய்தார்கள். இப்படியிருக்க அவ்விருராஜாக்களும் ஒருவர்க்கொருவர் தேர் - குதிரை - சாரதி-முதலானவைகளை நாசஞ்செய்துகொண்டு கதாயுத்தஞ் செய்யக்கருதித் தரையிற்குதித்து யுத்தஞ் செய்ய யத்தனப்பட்டார்கள். அப்போது வெகுகாலம் யுத்தம் நடந்தும் ஜயாபஜயங்கள் காணப்படாம லிருக்கவே வீமசேனன்சத்துருவின் பராக்கிரமத்தையும் சாமர்த்தியத்தையுங் கண்டு மனதில் மிகவும் மதிப்புகொண்டு பின்னிடாமலே யுத்தஞ்செய்து வந்தான். இப்படியிருக்கையில் அந்தச்சுவர்மன் தண்டாயுதத்தைச் சுழற்றிக்கொண்டடிக்கவர, வீமன் லாகவத்தினால்தன் தண்டாயுதத்தினாலே அவனைக் கீழேவிழச்செய்ய, அவன்பின்னிடைந்து மற்றொரு தேரின்பேரிலேற, அவ்வளவுக்குள்ளே வீமன் தன்கதாயுதத்தினாலே எதிரிசேனையையெல்லாம் இருந்தவிடந் தெரியாமல் நாசஞ்செய்ய, அதுகண்டவன் சினந்துவந்து ரதாரூடனாக எதிர்க்கவே வீமனும் வேறுரதத்தி லேறிவந்தான்.

இப்படி சிலநேரம் சண்டைநடந்தபின்பு அந்தச்சுவர்மனானவன் வீமசேனனது பராக்கிரமத்தை இனிச்சகிப்பது வருத்தமென்றுநினைத்து அவ்வீமசேனனைப்பார்த்து, ஓய் ராஜனே! நீர் மகாசூரனாகையால் உம்மோடு சிநேகிக்க மனமுள்ளவனா யிருக்கிறேனென்றான். வீமசேனனும் அப்படியே யங்கீகரித்து யுத்தத்தைநிறுத்திச் சிநேகஞ்செய்துகொண்டு மதுமதீ பட்டணத்திற்குப் போய் அந்தராஜாவினாலே கொண்டாடப்பட்டு, அவன்கொடுத்த கப்பங்களையும் வாங்கிக்கொண்டு அவனைத் தன்சேனைகளுக்குத் தலைவனாகவிருக்கும்படிசெய்து, அவனுடனே புறப்பட்டுப் பின்னுங்கிழக்கேசென்றான். அவிடத்தில் அபரரோசமானனென்கிற ராஜாவை யெளிதில்வென்று, புளிந்த நகரத்தி லிராநின்ற சுகுமாரன்-சுமித்திரன் என்கிற இருவரையும் போர்செய்து வெற்றிபெற்று சேதிதேசஞ்சென்று, அவ்விடத்து ராஜனாகியும் தனக்குச்சிறியதாயார் மகனாகியுமிராநின்ற சிசுபாலன் பட்டணத்திற்குப்போனான். அந்தச்சிசுபாலன் வீமசேனன்வருகிறசேதிதெரிந்து மந்திரிமுதலான பேர்களுடன் எதிர்கொண்டுவந்து வீமசேனனைக்கண்டு சந்தோஷித்து ஏதிப்படி வந்தகாரியஞ்சொல்லவேண்டுமென்றுகேட்க, வீமசேனன் தருமபுத்திரமகாராஜன் இராஜசூயஞ்செய்ய ஆரம்பித்து ராஜாக்களைச் செயித்துக் கப்பங்களை வாங்கிவரும்படி தம்பிமார் நால்வரையும் நாலுதிக்குகளிலும் அனுப்பியிருக்கிற சங்கதியை யவனுக்குத்தெரிவிக்க, அதுகேட்டுச் சிசுபாலன் மிகவுஞ் சந்தோஷமாயிற்றென்று சொல்லி வீமசேனனைத் தன்பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டு போய் வெகுவிநோதமாய் விருந்துசெய்து பலவிதரத்தினாபரணங்கள்முதலாகிய வஸ்துக்களைக்கொடுக்க, வீமனவைகளை வாங்கிக்கொண்டு அவ்விடத்திலேயே ஒருமாதமிருந்து பின்பு அவனிடத்தில் விடைபெற்றுக் குளிந்த நகரத்திற்குப் போனான்.

அந்தக் குளிந்தநகர்க்குரிய சிரேணிமானென்கிற அரசனிடத்திலுங் கப்பம் வாங்கிக்கொண்டு கோசலதேசமடைந்து, தக்ஷணகோசலாதிபதியாகிய கௌசலிய னென்கிறவனோடும் - உத்தரகோசல தேசத்தில் அயோத்தியா நகரத்திலிருந்த தீர்க்கப்பிரக்கியனென்கிறவனோடும்-வெகுயுத்தங்கள் செய்து அவர்களைச் சுவாதீனப்படுத்திக் கோபாலனென்கிற அரசனையும் மல்லராஜனையுஞ்செயித்து இமயமலையின் கீழ்ப்புறத்தில்மலைச்சாரல்களிலிருந்த மகாசூரர்களையும் வென்று கப்பங்கள்வாங்கி, குந்தள தேசத்திற்குப் போய் குக்ஷிமானென்கிறபருவதத்தில் வாசஞ்செய்துகொண்டிருந்த சிலவீரரைச் செயித்துக் குந்தளராஜனையுங் கீழ்ப்படுத்திக் கப்பங்களை வாங்கிக்கொண்டு, சமீபத்திலிருந்த மகாசூரனாகிய சுபந்து வென்கிறவன் வணங்காமையாலே அவனோடு யுத்தத்திற்கு ஆரம்பித்து அவன் சேனைகளைத் தொம்சஞ்செய்து அவ்வரசனைக் கைப்பிடியிற் பிடித்து அனேகம் பொருள்களை யவனிடத்திற் கப்பமாகப் பெற்றுக்கொண்டு, சுபாரிசுவமென்கிற பருவதத்திற்குச் சென்று அதிலிருந்த குதனென்கிறவனைச் செயித்து அவனுக்குட்பட்டிருந்த அனேவரசரையும் வென்று வெகுதிரவியங்களைக் கவர்ந்து மச்சியதேசம்போய் அவர்களையும் வெற்றிகொண்டு, பின்பு மாளவராஜாவையும் - கயாராஜாவையும் - பெரிய ஆரணியத்திலிருந்த கிராதராஜாவையும் - பிருங்கனென்கிற வேடராஜாவையும்-மணிமாலனென்கிற அரணிய தேசத்து ராஜாவை

யுங் கீழ்ப்படுத்தித் திரண்ட பொருள்களைப் பற்றிக்கொண்டு, அத்தக்ஷணம் மல்லர் - சருமகர்-வருமகர்-என்கிற க்ஷத்திரியரைப் போரில் தோற்கச்செய்து, சமீபத்தில் ஏழுவகுப்பாயிருந்த கிராததேசங்களுக்குத் தூதரையனுப்பிக் கப்பங்களை வருவித்துக்கொண்டு, சிம்மம் - பிரசிம்மம் - சமக்ஷம் - என்கிற மூன்று தேசங்களிற் புகுந்து அவ்விடத் தரசர்களினின்றும் வெகுதனங்களைச் சம்பாதித்து, மகததேசத்திற்குப் போய் அத்தேசத்தின் எல்லையிலிருந்த தண்டன் - விதண்டன்-என்கிற இருவரையுந் தனதுபராக்கிரமத்தினாலேயே கீழ்ப்படுத்தி உடனே கிரிவிரச நகருக்குப் போய் ஜராசந்தன்புத்திரனாகிய சகதேவன் எதிர்கொண்டுவந்து அழைத்துப்போய்ச் செய்த உபசாரங்களையும்-வெகுமதிகளையும் - சந்தோஷத்துடன் அங்கீகரித்து, அவனிடத்திற் செலவுவாங்கிக்கொண்டு அங்கதேசத்திற்குப்போய் அதற்கு அதிபதியாகிய கர்னனுக்குத் தான்வந்தசேதி தெரிவித்தான்.

அதுகேட்ட அக்கர்னன் கப்பங்கட்ட மனமில்லாமற் சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தத்திற்கு வர, வீமனும் யுத்தத்திற்கு முனைந்தான். அவ்விருவருக்கு மப்போது பயங்கரமாகிய யுத்தம் நடந்தது. பூர்வகாலத்தில் வலனென்பவனுக்கும் - இந்திரனுக்கும் - நடந்த யுத்தமும் இதற்கு நிகரல்லவென்று தேவர் - தானவர் - கருடர் - காந்திருவர் - கின்னரர்-முதலாகியயாவருந் தங்கள் மனைவிகளுடனே விமானங்களிலேறிக்கொண்டு வேடிக்கை பார்க்க, அரம்பையரெல்லாம் இந்தயுத்தத்தில் நமக்குநல்லவீரராகியகணவர் கிடைப்பார்களென்று சந்தோஷமாய்க் கையில் மந்தாரமாலைகளை வைத்துக்கொண்டு காத்திருக்க, நாரதமகாமுனிவர் நமது கண்களுக்கு இன்றுதான் பூரணமாகிய உச்சவம் நேரிட்டதென்று மிகவானந்தமுற்றுவீணையைமீட்டிக்கொண்டு வைத்திருக்க, சூரியனும் வாயுவும் - தத்தம் - மக்களைக்குறித்து ஆசீர்வாதஞ் செய்துகொண்டிருக்க, கர்னனும் - வீமனும் - ஒருவனையொருவர் திக்கரித்துப் பேசுதலும் அட்டகாசஞ் செய்தலுமாகித் தாங்கள் கற்ற கல்வித்திற முழுமையும் மறந்துபோயிற்றோ இல்லையோவென்று பரீக்ஷை செய்கிறவர்போல் வில் - கத்தி - தண்டு - முதலாகிய ஆயுதங்களினாலே சகலவித யுத்தங்களையுஞ் செய்தார்கள். அவ்விருவருடைய சேனைகள் கடல் கலந்ததுபோல் ஒன்றோடொன்று கைகலந்து யுத்தஞ்செய்து முடிவில் தத்தமரசர் பக்கத்தில் நின்றுகொண்டு இடம் மாறாமல் யுத்தஞ்செய்ய, அவ்வீர ரிருவரும் நெடுநேரம் போராடியும் அலுப்பிளைப்புக ளில்லாமல் விளையாடுகிறவர்போ லிருந்தார்கள். அந்தச்சண்டையில் வாயுகுமாரன் வாயுபோலவே பராக்கிரமித்து, எதிரிசேனைகளிற் பதினாயிரம் யானைகளையும் - இருபதினாயிரங் குதிரைகளையும் - நாலாயிரம் ரதங்களையும் இலக்ஷம்சனங்களையும்-மூன்றுதினங்களில்மடித்தான். சூரியகுமாரன் சூரியன்போலவே விளங்கி வெவ்விதாகிய அம்புகளினாலே எதிரிசேனையில் அனேகங்களைத் தவித்துச்சோரும்படி செய்தான். ஆகிலும் வீமசேனனுடைய மொறட்டுத்தனமான புஜபலத்தினாலும்-கதாபலத்தினாலும்-கர்னனுடைய சேனைக்கே மிகுந்த சேதமுண்டாயிற்று.

இவ்வாறாகத் தன்சேனைக்கு நேரிட்ட சேதத்தைப்பார்த்துக் கர்னன் கோபங்கொண்டு, தனது காளபிருட்டமென்கிற தனுசிற் பலவகைப்பட்ட பாணங்களை அனேகமாயிரமாகத் தொடுத்து, வீமன் தேர் குதிரை - சாரதி - அதிபதி - ஒன்றுந் தெரிய ஒட்டாமற் சரக்கூடமாக நிறைத்தான். பாண்டவ வீரனும் அந்தப்பாணங்களை யெல்லாந் தன் பாணங்களினால் துணித்துத்தள்ளிச் சூரியன் தன் கிரணங்களினாற் கடலைப் பிளந்துகொண்டு சப்தமாப் பூட்டிய ரதத்தோடு வெளிப்புறப்படுவதுபோற் பளிச்சென்று புறப்படவே தாமரைமலர்கள்போல் அப்பாண்டவ வீரனுடைய சேனாஜனங்களின் முகங்களெல்லாஞ் சந்தோஷத்தினால் மலர்ந்தன. இவ்வாறாக வீமன் சரக்கூட்டினின்றும் நீங்கியதைக்கண்டகர்னன் மறுபடிஅனேகமாயிரம் அம்புகளைத் தொடுத்துப் பிரளயகால மேகம்போல் வருஷித்தான். அந்தப் பாணவருஷத்தினாலே சேனைகளெல்லாம் பொத்தப்பட்டுக் கண்தெரியாமலும்-மூச்சுவிடமாட்டாமலும்-பதைபதைப் புடனே பிரமித்துநிற்க, தேர்க்குதிரைகளும் பின்னுக்குப்போக, அதுகண்ட வாயுபுத்திரன் கதையைக்கையிலெடுத்துக்கொண்டு ரதத்தினின்றுங்குதித்து அங்கராஜனுடைய தேரின்கீழ்ச்சென்று, தனது கதையை யந்தத் தேரின் இரிசியிற்கொடுத்துச் செண்டுபோல தூக்கியெறிந்தான். அத்தேரானது மலைகட்குச் சிறகிருக்குங்காலத்தில் உயரப் பறந்தெழுந் தன்மைபோல் ஆகாசத்திற்கிளம்பி இதென்ன விசித்திரமென்று பூமியிலுள்ளோரும் வானத்திலுள்ளோரும் ஆச்சரியங்கொள்ளவும் சிலர்பயப்படவுமாக, அத்தேர் விறுவிறென்று சுழன்றுபோவதினால் அதிலிழைத்திருக்கிற பொற்பட்டங்கள் - இரத்தினங்களுடைய காந்திகள்யாவும் சுற்றும் வீசுவதைக்கண்டு பாதாளத்தி லிருக்கிற அக்கினிதான் பூமியைப் பிளந்துகொண்டு வருகிறதோவென்று சாரணர்கள் சங்கிக்க, அத்தேரிலிருந்து கீழேவிழுகிற சிவப்புக்கொடிகளை ஆகாயத்தினின்றுங் குறைக்கொள்ளிகள் விழுவதாகவெண்ணி யானைகள் வீறிட்டோட, மனிதர் இது அவசகுனமாதலால் யாருக்குப்பொல்லாதகாலமோவென்று சங்கையுற்றுநிற்க, தேவர்கள் பயத்தினால் ஓடும்போது விமானங்களோடு விமானங்கள்முட்டி உடைந்து ஆகாசமெங்கும் அல்லோலகல்லோலமாகி ஏககாலத்தில் அனேகமாயிரம் பட்சிகள் கூவிக்கொண்டு மூலைக்குமூலை யோடுவதுபோல் அவ்விமானங்கள் பறப்பதினால் வானமெங்குமிடைவெளியில்லாம லிருக்க, சேனைகளெல்லாம் ம

மைக்காலத்திற் பெருங்காற் றெடுத்தால் அதனாலே பல ஆறுகளிற் பெருவெள்ளங்கள் உடைப்பெடுத்துக் கொண்டு மூலைக்குமூலை சிதறியோடுவதுபோற் பிச்சுக்கொண்டோட இப்படிக் கெல்லாம் பிரமாதமாய் விபரீதகாலம்போலிருந்தது.

இவ்வாறு ஆகாயத்தில் ரதமெழும்பும் போதே கர்னன் தன் சாமர்த்தியத்தினாற் கிரீடமொரு பக்கத்திலும்-உத்தரீயமொரு பக்கத்திலும் - ஆயுதமொரு பக்கத்திலும் - விழும்படியாகவே ஒருவருக்குந் தெரியாமல் மெள்ளக்குதித்து அக்கிரீட முதலானவைகளை முன்போலவே தரித்துக்கொண்டு தைரியசாலி போல வீமனுந்த முன்னின்றான். இந்த மருமமறிந்த வீமசேனன்-ஓ கர்னா! நீவெகு சாமர்த்தியவான் தானென்று சொல்லிநகைத்தான்: அதனாலே கர்னன்கொஞ்சம் லர்ஜையடைந்து சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஆகாசத்திலெறிந்த அந்தரதமானது சாரதியென்றும் - குதிரையென்றும்-உருளையென்றும்- இரிசென்றும் - நுகத்தடியென்றும் — கொடியென்றும் - உருத்தெரியாமற் பொடிப்பொடியாக விழுந்தது. அப்போது வீமசேனன் தோள்தட்டிச் சங்கம்பூரித்துச் சிங்கநாதஞ்செய்தான். இவ்வள வானபின் இரண்டு சைனியத்தாரும் இது வீமசேனனுடைய செய்கையென்றறிந்து, சிலர் ஆச்சரியப்படவும் சிலர் சந்தோஷப்படவும் சிலர்பொறாமைப்படவும் சிலர் வியசனப்படவுமாக இருந்தார்கள். அத்தருணத்திற் குருசேனையிற் கோலாகல சத்தமும், அங்கசேனையில் அலங்கோலசத்தமு முண்டாயிற்று. இதையெல்லாம் பார்த்தகர்னன் தனக்குள் ஒன்றுந்தோன்றாதவனாய், அப்பா! இப்படிப்பட்ட பலவானோடு போராடுகிறதுவருத்தம். இந்த முறட்டுத்தனத்திற்கு அஸ்திரலாகவம் ஓர்துட்டுக்குமுதவாது, என்றுநினைத்து மற்றொருரதத்தின் பேரிலேறிக்கொண்டு திரும்பவே தேவர்கள் புஷ்பவருஷம் வருஷித்தார்கள். அப்போது கர்னன் ஒன்றுஞ் சொல்லாமல் அனேகமாயிரம் பொன்களைக் கப்பமாகக் கொடுக்க, அவைகளை வீமசேனன் வாங்கிக்கொண்டு வெகு சந்தோஷத்துடனே வந்தியர்களெல்லாம் புகழ் ஜயபேரி கோஷத்துடனே சகல சேனைகளோடு கூட அங்கதேசம்விட்டுப் புறப்பட்டுச் சமீபத்திலிருக்குமோர் மகாபர்வதத்திற்குப் போனான்.

அந்தப் பர்வதத்திலிருக்கும் சிலவீரரையும் அவர்களுடைய ராஜாவாகிய மகோஜசு என்கிறவனையும் போரிற் சிரச்சேதஞ்செய்து அவன் சம்பத்துக்களைக் கொள்ளையடித்துப் பவுண்டாரக தேசத்திற்குப்போக, அவ்விடத்திலே அந்ததேசத்துராஜனாகிய பவுண்டாரக வாசுதேவனென்பவன் இயல்பாய் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலும் அவனையாசிரித்தவரிடத்திலும் வெகுபகைகொண்டவனானபடியினாலே, வீமசேனன் ஜயயாத்திரையைச் சகிக்கமாட்டாமல் மனங்கொதித்து, ஒரு அக்ஷோகிணி சேனையைக் கூட்டிக்கொண்டு சண்டைக்குவந்தான். வீமசேனனு மவனோடெதிர்த்து அவன்சேனைகளை நாசஞ்செய்து அவன்தேரையுமுடைத்துக் குதிரைகளையுஞ் சாரதிகளையுங் கழுத்தறுத்துப் பதாதியாக நிறுத்தினான். அதனாலே மிகவும் ஆக்ரோஷப்பட்ட அப்பவுண்டரகன் வேறு தேரிலேறிக்கொண்டு தனது வில்லினின்று பொழியுஞ் சரமாரியால் வீமன்சேனையைப் பிளக்க, அச்சேனை தாவரிக்கமாட்டாமல் தடுமாறுவதைக் கண்ட வீமன் தன்சேனைகளுக்கு முன்னின்று கொண்டு பவுண்டரகன் எடுத்த வில்லை முறித்தான். அவன் வேறுவில்லை எடுத்தான். அதையும் முறித்தான். இவ்வாறாக அவன் எத்தனைவில் லெடுத்தாலும் அத்தனையையும் ஒடிக்கவே அந்தப் பவுண்டரகன் வெகுகோபங்கொண்டு, சத்தி யென்னுமோ ராயுதத்தையுங் கதாயுதத்தையுமெடுத்து வெகு லாகவமாய்ச் சுழற்றியெறிந்தான். அந்த சத்தி வீமசேனன் சாரதியின்மார்பி லுருகியபடியினாலே அவன் இறந்தான். அந்தக் கதாயுதங் குதிரைகளின் தேகங்களின்மேல் விழுந்தபடியினாலெ குதிரைகள் எலும்புமுறிந்து செத்ததுகள். இப்படியாகவே வீமன் வெகுக்ரோதத்தோடு மலையின் குகையினின்றுசிங்க மெழும்புவதுபோல் அந்தத் தேரினின்று மெழும்பிக் கர்ச்சித்துக்கொண்டே பவுண்டரகன் தேரிற் பாய்ந்து, அந்தத் தேரிலிருந்த வெகு கூர்மையும் வலிமையுமுள்ள சத்தியென்கிற வேலாயுதத்தையெடுத்துச் சத்துருவின் மார்பிற் குத்தவே அந்தப் பவுண்டரகன் அவ்வேலின் குத்தினால் வெலுவெலுத்தும் பதைபதைத்தும் அந்தத் தேரின் தட்டிலேயே விழுந்து மூர்ச்சித்தான். அதுகண்ட அவனுடைய சாரதியானவன் தேரைப் பின்னுக்குக் கொண்டுபோய் ராஜனுக்குச் சீதோபசாரஞ் செய்தான். அதுகண்டு வீமன் சங்கம் பூரித்தான்.

அந்தப் பவுண்டரகன் ஒருமுகூர்த்த காலத்திற்குப்பின் மூர்ச்சைதெளிந்து எழுந்து, இன்றைக்கு நமக்கு புனர்ச்செனன மென்று நினைத்து, அனேக வஸ்திரங்கள்-கம்பளங்கள்-ஆபரணங்கள் - முதலாகிய வஸ்துக்களை வீமனுக்குக் கப்பமாகக் கொணர்ந்து கட்டி மகா சந்தோஷத்தோடும் அவனிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு போனான். வீமசேனனும் பவுண்டரகன்கொடுத்த பொருள்களை வாங்கிக்கொண்டு. அத்தேசம்விட்டுக் கீழ்ச் சமுத்திரக்கரையிலிருக்கும் பவுண்டரகனுடைய மித்திரனாகிய கவுசிகனென்னும் ராஜனைச்செயித்து, முறையாக வங்கதேசத்து ராஜனையுங் கலிங்கதேசத்து ராஜனையுங் கீழ்ப்படுத்திச் சிங்களதீபத்திற்குப்போய் அவ்விடத்து ராஜனையும் இன்னுங் கீழ்ச்சமுத்திரத்திலிருந்த பதினெட்டு மிலேச்சசாதியாரையுங்கொன்று காலில் விழுந்த சிலரைமாத்திரம் விட்டுப்போட்டு வெகுபணங்களைக் கொள்ளையடித்துப் பின்பு புருஷாதர் என்கிற இராக்கதரிருக்குந் தேசத்திற்குச்சென்று அனேககோடி பேர்களை

வெட்டி, அவர்களி லுட்பிரிவாகிய கர்ணப் பிராவரணர் - காமுகர் - திரணமூலர்-ஒஷ்டக்கர்ணகர் - என்கிற பலசாதியாரையுஞ் சிதைத்து அவர்களுக்குள் ளிருந்த அதிசய வஸ்துக்களைப் பெற்றுக்கொண்டு, லோகத்திய மென்னுந் தேசத்திற்குப்போய் அதின்ராஜாவாகிய ஒருமிலேச்ச சாதியானுக்குத் தான் வந்த சேதி தெரிவித்து அவன் மரியாதையோடு எதிர்கொண்டுவந்து கொடுத்த அனந்தம் பொன் வெள்ளிகளையும், பச்சைக்கற்பூரம் குங்குமப்பூ முதலிய அவ்விடத்துவஸ்துக்களையும் வாங்கிக்கொண்டு, மற்றும் அந்தப்பக்கத்திலிருந்த யாவரையுங் கீழ்ப்படுத்தி அளவற்ற பொருள்களை யெடுத்துக் கொண்டு வருடந்தோறுங் கப்பங்கட்டி வரும்படி யாவருக்குந் திட்டஞ்செய்து திரும்பி வெகுவிலாச உல்லாசங்களோடு இந்திரப் பிரஸ்தத்திற்கு வந்து உதிட்டிரரைப் பணிந்து நடந்த சேதியெல்லாம் விண்ணப்பஞ் செய்தான்.

சகாதேவன் தக்ஷணதிக்கு விஜயம்.

கேளுமையா ஜெனமேஜெய மகாராஜனே! அளவற்ற சேனைகளைக் கூட்டிக்கொண்டு தென்திசையிற் சென்ற சகாதேவன் சூரசேன தேசத்திற்குப்போய் அவ்விடத்து ராஜாக்களைச் செயித்து, மகத தேசத்தையுஞ் செயித்துக் கருசதேசத்திற் பிரவேசித்து அதற்கு அதிபதியாகிய தந்தவக்கிர னென்கிற சுத்தவீரனோடு நெடுநேரம் யுத்தஞ்செய்து ஜயித்து, வெகுதனங்களை வாங்கிக்கொண்டு, அபரமச்சியமென்கிற தேசஞ்சென்று அவ்விடத்திலிருக்கும் படச்சரர் என்கிற சாதியாரையும் அவர்களின் தலைவனாகிய துர்ப்பர னென்கிறவனையுஞ் செயித்துக் கப்பம்வாங்கி, அப்பால் ஒரு வேடதேசஞ்சென்று அவ்விடத்தியாரையுஞ் சுவாதீனமாக்கிக் கோசிருங்க மென்னும் பருவதத்தின் ராஜாவையும் நவராஷ்டிர தேசத்து ராஜாவையும் வணங்கச்செய்து குந்திபோஜ னுடைய தேசத்திற்குப் போனான். அந்தக் குந்திபோஜன் சகாதேவன்வந்த சேதிகேட்டு மிகவும் பரிவுடனே தன் தவுகித்திரனாகிய அந்தச்சகாதேவனைமனைக்கு அழைத்துப்போனான். சகாதேவனும் பாட்டன் - மாமன் - முதலானோரை நமஸ்கரித்து ஆசீர்வதிக்கப் பட்டு அனேகநாள்சவுக்கியமாக அங்கேயேயிருந்து அவர்கள் கொடுத்த கப்பங்களை வாங்கிக்கொண்டு புறப்பட்டுச் சர்மண்வதி யென்கிற நதியின் கரையிலிருந்த ஜம்பகனென்கிற ராஜாவின் மகனைக்கண்டு யுத்தத்தினாலவனை வசமாக்கித் தெற்கேசென்று, மோகம் - பரமமோகம்-என்கிற தேசங்களுக்குப் போய் அத்தேசத்தாரையுங் கப்பங்கட்டச்செய்து அவர்களைக் கூடவழைத்துக்கொண்டு நருமதையென்கிற நதியினருகில் அவந்திதேசத்து மன்னவராகிய விந்தன் - அநுவிந்தன்-என்கிற இருவரையும் யுத்தத்திற்கழைக்க மகாபலசாலிகளாகிய அவ்விருவரும் சதுரங்க பலங்களைக் கூட்டிக்கொண்டு சண்டைக்கு வந்தார்கள்.

அப்போது அவ்விரண்டு சுத்தவீரரோடு சகாதேவ னொருவனாய்ச்செய்த சண்டையின்விசித்திரஞ் சொல்ல முடியுமோ? எதிரிக ளிருவரும் பலத்தினாலும் சவுரியத்தினாலும் சாமார்த்தியத்தினாலும் மிகவும் புகழ்ப் பெற்றவர்கள். அப்படிப்பட்டவர்களே பிரமித்துப் போகும்படியாகப் பாணங்களை யெடுக்கிறதும், வில்லில் தொடுக்கிறதும்,பிரயோகிக்கிறதும்,இன்னபடியென்று காணாமற் பாண்டவச் சிறுவன் யுத்தஞ்செய்யும் போது ; ஆகாசத்தில் வேடிக்கை பார்க்கவந்திருந்த தேவர்கள் ஆச்சரியப்பட்டுப்புஷ்பவருஷம்வருஷித்தார்கள். சகாதேவன்தொடுக்கிற அம்புகளினால் ஆகாயமெல்லாம் மறைந்து சூரியன் தெரியாமற்போகவே, பூமியி லுள்ளோர்கள் இதென்ன ஆச்சரியம் இவ்வளவு சீக்கிரத்தில் மாலைப்பொழுது வந்ததென்னென்று சொல்லிக் கொண்டார்கள். இவ்வாறு சகாதேவன் பொழிந்த பாணங்களை விந்தாநுவிந்தர் தங்களுடைய கதாயுதங்களினாலே சூரணஞ் செய்து வெகு வேகமாய்த் தண்டாயுதத்தைச்சுழற்றியெறிய, அதின்வலிமையினாலே சகாதேவனுடைய ரதமானது நெட்டித் தள்ளப்பட்டதுபோற் பின்னே வெகுதூரமிடைந்து தடுமாறிக் கவிழ்ந்து வீழ்ந்தது. அதனாலே குதிரைகளுக்குஞ் சாரதிக்குங் கைகால்கள் முறிந்து ரதமும் உடைந்துபோக சகாதேவன் முன்னமே அதிலிருந்துகுதித்துக் கோபாக்கினியின்வெந்தழல்களோவென்று சங்கை யுறும்படி இரண்டு கண்களுஞ்சிவந்து சுழலமிட உதடு படபடவென்று துடிக்க விந்தாநுவிந்தரைப் பார்த்து, ஓ அவந்தி ராஜாக்களே! உங்களுக்கு முடிவுகாலம்நேரிட்டது. பிதுருலோகத்திலிருக்கு முங்கள் பந்துக்களைச் சீக்கிரங் காண்பீர்கள். பயப்பட வேண்டாம். பயம் வீரருக்குத் தகுதியன்று. தைரியமாய் நில்லுங்கள். இதோ உங்களைப் பிதுருலோகத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும்படியாகிய தூதரை அனுப்புகிறேனென்று வீரவாதஞ்செய்து இயமனுடைய பற்களுக்குச் சமானமாகிய மகாதீக்ஷண்யமுங் கொடுமையுமுள்ள முப்பத்திரண்டு பாணங்களைத் தனுசிற் சந்தானஞ்செய்து பிரயோகித்தான்.

அந்தப்பாணங்கள் வெகு வேகமாய் இரைந்துகொண்டு கிருஷ்ண சர்ப்பங்கள்போல்வந்து விழுந்து அவந்தி ராஜர்களுடைய — தேர் - குதிரை - சாரதி-துவசம் - ஆயுதம் - எல்லாவற்றையுஞ் சின்னபின்னமாக்கி, அவர்களையும் மூர்ச்சிக்கச் செய்தன. அத்தருணத்திற் பாண்டவசேனை வெகு பராக்கிரமத்தையும் தைரியத்தையும் அடைந்து அவந்திசேனையிற் போய் விழுந்து யானைக்கூட்டத்திற் சிங்கக்கூட்டம் புகுந்ததுபோல் நாசஞ்செய்துவிட்டது. இப்படியிருக்க அவ்வரசர்களிருவரும் மூர்ச்சைதெளிந்து கைகால்கள் வெலுவெலுத்து மெள்ளக் கண்களைத்திறந்து சே

னைகள் நாசமடைந்ததையும் பாண்டவன் பராக்கிரமித்ததையும் பார்த்துச் சிந்தித்து, இப்போநாம் மறுபடியும் யுத்தஞ்செய்வோமா? கப்பங்கட்டிப் போடுவோமா? இன்னுஞ்சிலநேரம் யுத்தஞ் செய்தாலும் இத்தருணத்தில் நாம் ஜயிப்பது அரிது. ஏனென்றால்- தருமபுத்திரருடைய தரும பலத்தினாலும் ஸ்ரீகிருஷ்ணனுடைய சகாயத்தினாலும் இந்தச் சகாதேவனுக்குப் பலமும் பராக்கிரமமும் விருத்தி யடைந்திருக்கின்றன. ஆனபடியினாலே இப்போதுசும்மாயிருப்பதே நன்மையென்று ஒருவரோ டொருவர் ஆலோசித்துக்கொண்டு வேறு ரதத்தின்மேலேறிச் சிலபாணங்களையெய்து சேனைகள் சிதறும்படி கொய்து சங்கத்தொனிசெய்து ரதத்தைக் கிட்டிக்கொணர்ந்து புன்சிரிப் புடனே சகாதேவனைப் பார்த்து, ஓ சகாதேவமகாராஜனே! நீர் மகாவீரன். சந்தேகமில்லை. அதனாலெங்களுக்கு மகாசந்தோஷமாயிற்று. மேலும் தருமமே ஒருருக்கொண் டவதரித்ததென்று சொல்லத் தக்கவராகிய தருமபுத்திர மகாராஜன் விஷயத்திற் பாடுபடவெண்டிய கடமை யுங்களுக்கு மாத்திரமேயன்று. எங்களுக்கு மக்கடமை யிருக்கிறபடியினாலே நீரேன்வீணா யுத்தம்பண்ணுகிறீர்? நிறுத்தும். சிலதிரவியங்கள் கொடுக்கிறோம். வாங்கிக்கொண்டுபோம். என்றுசொல்லிச் சமாதானப்படுத்தி அனேகதனங்களைக்கொடுக்க அவைகளைச் சகாதேவன் வாங்கிக்கொண்டு விடைபெற்று வெகு உல்லாசத்துடனே சகலசேனைகளோடு அந்தத்தேசம்விட்டு விதற்பதேசத்திற் பிரவேசித்துப் போசகடமென்னும் நகரத்துக்குப் போனான்.

அந்தப்பட்டணத்திலிருந்த உருக்குமி யென்கிறவன் சகாதேவன்வந்த சேதிகேட்டு வெகுபொறாமைகொண்டு பெருவெள்ளம் போன்ற சேனைகளோடு வெளிப்புறப்பட்டு சகாதேவனோடு யுத்தஞ் செய்யவாரம்பித்தான். சகாதேவனும் தன்சேனைகளைச் சன்னாகப்படுத்தித் தைரியமாயும் பலமாயும் யுத்தஞ் செய்ய வாரபிக்கும்போது ஒன்றோடொன்று கலந்த அவ்விருசேனைகளினால் உண்டாகப்பட்ட தூளானது ஆகாசத்திலெழும்பி கம்மிக்கொள்ள, இந்தயுத்தத்தைப் பார்க்கவருவதுபோல்வந்த சூரியன் இதென்ன ஆச்சரியம்? நாம் பிரகாசித்துக்கொண் டிருக்க எங்கிருந் திருள்வந்து கம்மிக்கொண்டது? என்று மயங்கி இரணக்களத்திலிருக்கும் வீரருடையவேல்-கத்தி-முதலாகிய ஆயுதங்களின் காந்திகள் மின்னல்போலவிளங்கக்கண்டு நம்மைமறைத்தது மேகமன்றி அந்தகாரமன்றென்று நினைத்துத் தன்பக்கத்திலிருக்கும் வாயுவுக்குத்தெரிவிக்க, அவன் தன்வீசுதலினாலே அதைத்துரத்த, அத்தூள்களின் கூட்டம் நீங்கி இரணக்களம்விளங்கவே, அங்குள்ள வீரர்கள்முன்னம் ஒருவருக்கொருவர் முகந்தெரியாமையாலே தன்னுடையவன் பிறருடையவனென் றறியாமல் அடித்ததினாலுண்டாகிய காயங்களைப்பார்த்து ஒருவருக்கொருவர் சமாதானஞ் சொல்லிக்கொண்டார்கள். இப்படிக்குச் சில நேரம் யுத்தம் நடந்தபின் சேனாபதிகள் வகுப்புவகுப்பாய்ப் பிரிந்து யுத்தஞ் செய்யும்போது பாண்டவச்சேனாபதியும் அவனுக்கு உதவியாயிருந்த பனிரண்டுரதிகரும் கொலைசெய்யப் பட்டார்கள். சேனாநாயகரில்லாமற் போனபடியினாலே பாண்டவச்சேனைகள் முறையின்றி யுத்தஞ்செய்து எதிரிகளுடைய சேனைகளாலே முறிய அடிக்கப்பட்டுக் கைபோனதும் - கால்போனதும் - கவசம்பிளந்ததும் - வில்லொடிந்ததுமாகி நிற்கமாட்டாமல் திசைதோறு மோட, ஒருரதிகனாகவே நின்ற சகாதேவனை உருக்குமிபார்த்து, அடா பாண்டவப்பயலே! நீயேன்வீணாய் உயிரை விடுகிறாய்? விரைவில் ஓடிப்போ. என்று சொல்லி நகைத்து ஆரவாரஞ்செய்து வில்லில் மிகவுக்கிரமாகிய கணைகளைத்தொடுத்து, மூச்சைவிடவொட்டாமற் பிரளயகால மேகம்போல் வருஷித்துச் சகாதேவனை வாகனங்களு மாயுதங்களுமில்லாமல் வறியனாக்கிப் பூமியில் நிறுத்தினான்.

அப்போ சகாதேவன் ஊக்கத்தைவிடாமற் சமீபத்திற்கிடந்த ஒருகத்தியை யெடுத்துக்கொண்டு வஸ்திரத்தைவீசித் தன்சேனைகளைக் கூப்பிட, அவைகள் ராஜா ஒருத்தனாய் நிற்பதைக்கண்டு, ஓ!ஓ! இன்றைக்குப் பஞ்சபாண்டவர் சதுஷ்பாண்டவ ராகவேண்டியகாலம் வந்ததென்று துக்கித்துக் கொண்டே திரும்பிவர முயன்றாலும் எதிரிகளுடைய ஆயுதவேகத்தினால் வரக்கூடாமல் தடுமாறி நிற்பதைக்கண்ட சகாதேவன் மனதினால் ஸ்ரீகிருஷ்ணபகவானைப் பணிந்து தன்தமயனாருடைய பாதங்களையும் நினைத்துக் கோடைகாலத்துக் கொண்டல்போற் கர்ப்பநிர்ப்பேதமாகும்படி கர்ச்சித்து உருக்குமியைப் பார்த்து, அடா மூடா! முன்னம் நீயெவனாலே தேர்க்காலிற் கட்டப்பட்டும் ஐந்துகுடுமிவைத்து முண்டனஞ்செய்யப் பட்டும் ஓடிவந்து குண்டின பட்டணம்போக வெட்கத்தினாலே இப்பட்டணத்தை யுண்டாக்கி வாசம்பண்ணுகிறாயோ? அந்தமகானுபாவனாகிய ஸ்ரீகிருஷ்ணன் இங்கேயில்லையென்று நினையாதே. இதோ என்மனதிலிருக்கிறார். வீணாய்த் துள்ளாதே. என்றுசொல்லி ஒரு எழும்பெழும்பி அவனருகிற்குதித்துக் குதிரை சாரதிகளை வெட்டிச் சண்டப்பிரசண்டமாகப் பந்துபோற்குதித்துக்கொண்டுவந்து உருக்குமியின் வில்லைத்துணித்து அவன் ரதத்திலிருந்து ஒருகுண்டாந்தடியெடுத்துக்கொண்டு இரண்டுகையிலு மிரண்டாயுதங்களோடு சேனைகளினடுவிற் புகுந்து மர்த்தித்துப் பிணப்போர்களைக் குவித்து யாவரையுந் திகைத்துநிற்கச்செய்து சிங்கநாதம்பண்ணவே, பூமியுமாகாசமுங் கிடுகிடென்று நடுங்கிற்று. இப்படி யிருக்கும்போது சேனைகளும் உடனேவந்துகூடி முன்போல் வாகனாயுதங்களைச் சித்தம்பண்ணினமையால் சகாதேவன் தி

வ்வியமாகிய மற்றொருரதத்தின்மே லேறிக்கொண்டு
உருக்குமியைப்பார்த்து, இப்போதென்ன நினைக்கிறா
ய்? இஃதிருக்கட்டும். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யெப்படி
உன்னைக்கொல்ல மனமில்லாதவராய் மன்னித்துவிட்
டாரோ? அப்படியேநானும் ஸ்ரீருக்குமணி தேவியி
ன் தாக்ஷண்யத்தினால் உன்னைக்கொல்ல மனமில்லா
தவனாக விருக்கிறேன். பயப்படாதே: இப்போதாகி
லும் வணங்கிக் கப்பங்கட்டிப் பிழைக்கும்வகைதேடி
க்கொள் என்றுசொன்னான்.

அதுகேட்ட போசகடாதிபதியானவன் ஆகுதி
பண்ணப்பட்ட அக்கினிபோற் சொலித்து வேறுரத
த்திலேறிக்கொண்டு மறுபடியுத்தஞ்செய்ய, சகாதே
வன் ஒருநிமிஷத்தில் அவனை வாகனமுமாயுதமு மில்
லாதவனாக்கிச்சங்கம்பூரிக்க, அந்த உருக்குமி தேரினி
ன்றுங்குதித்து வேறுரத மேறுவதற்குள்ளாகப் புலி
போல் ஒருபாய்ச்சல்பாய்ந்து பிடித்துக்கொண்டான்.
அப்போது உருக்குமி இவனுக்கு வெகுகப்பங்களைக்
கட்டித் தன்னை விடுவித்துக்கொண்டான். சகாதேவ
னும் அவன்கொடுத்த கப்பங்களை வாங்கிக்கொண்டு
தன்சேனையிற் குறைந்து போன ஜனங்களுக்குப் பதி
லாய் அவன்சேனைகளிற் சிலஜனங்களையுங் கூட்டிக்
கொண்டு, குண்டின பட்டணம் போய் ஸ்ரீகிருஷ்ண
னுடைய மாமனாராகிய பீஷ்மகமகாராஜனிடத்திலுங்
கப்பம்வாங்கிப் பிராக்கேடகமென்கிற தேசத்தையு
ஞ்செயித்து, அங்கிருந்து பாலகயர் - ஐரம்பர் - தை
த்திரர் - அர்த்தவாலர்-சம்பரர் - என்கிற ஜாதியாரை
வென்று வெகு பொன் சம்பாதித்துக் கரந்தமனென்
கிற ராஜாவைக் கீழ்ப்படுத்திப் பத்தன மென்னுங்
தேசத்து ராஜனோடு யுத்தஞ்செய்து ஜயித்து, அங்
கிருந்து புறப்பட்டுக் காடுகளையும் பர்வதங்களையும்
பார்த்துச் சந்தோஷித்துக்கொண்டே ரிசியமூகமெங்
கிற பருவதத்தி னிடத்திற்கு வந்து அவ்விடத்திற்
பெருகாநின்ற பம்பாநதியைக்கண்டு, முன்ன மவ்விட
த்திலே நடந்த ஸ்ரீராமசரித்திரங்களை நினைத்து மன
தில் மிகவுமானந்தப்பட்டுத் தோத்திரஞ்செய்து சமீ
பத்திலிருக்கிற கிஷ்கிந்தையென்கிற நகரத்துக்கு
வந்து பட்டணத்தைச்சுற்றிச் சேனையையிறக்கினான்.

இந்தச்சேதி தெரிந்தவுடனே அந்தப் பட்டண
த்தில் அதிகாரஞ் செய்துகொண்டிருந்த மைந்தன்-
துவிந்தன் - என்கிற வானரராஜரிருவரும் மலைகளி
லுங் காடுகளிலுமிருந்த தங்கள் சேனைகளை யெல்லா
மொருநிமிஷத்தில் அழைப்பித்து, மரங்களுங் கல்
லுகளுமாகிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு யுத்த
த்திற்குவந்தார்கள். அப்போது சகாதேவன் அந்த
வானரச் சேனைகளையும் அவர்களுடைய தேகத்தின்
பலம் - லாகவம் - முதலானதுகளையும் பார்த்து ஆச்
சரியமடைந்து, முற்காலத்தில் இராவணன்முதலானோ
ர் இவர்களாலே அழிந்தார்களன்றோ? அப்பொது அ
வர்களுக்குச் சகாயமிருந்த சுவாமி நமக்குஞ் சகாய
மிருக்கிறா ரானபடியினாலே நாமிப்போது தருமகாரி
யத்தைக் குறித்துத் தைரியத்துடனே முயலலாகு
மென்று நினைத்துத் தன்சேனைகளை ஜாக்கிரதையா
யுத்தஞ்செய்யும்படி கட்டளையிட்டுத் தானும் ரதத்
தின்மீதேறி மனதினால் ஸ்ரீகிருஷ்ணன் பாதாரவிந்த
ங்களையும் - தருமபுத்திரரையும்- தனுர்வேத ஆசாரிய
ரையும் நினைந்து பணிந்து பின்பு சிங்கம்போற் கர்ச்சி
த்து வில்லில் நாணைப்பூட்டி அம்புகளைத்தொடுத்து,
சித்திர விசித்திரமாகிய விதங்களை யெல்லாங் காட்டி
எதிரிகள்சேனைகளைக் கண்விழிக்கவொட்டாமற் செய்
தான். அப்போது அந்தவானரங்கள் மலைகளையுங் க
ல்லுகளையு மரங்களையும் வருஷித்து முன்பிராவண
னோ டெதிர்த்ததைக் காட்டிலும் அதிகமாக எதிர்த்
தாலும் ஒருபயனுமில்லாமற் போனதையும் சகாதே
வன் பாணப்பிரயோகஞ்செய்கிற சாமர்த்தியத்தையு
ம் பார்த்து வானரராஜரிருவரும் ஆச்சரியப்பட்டு, இ
தெல்லாங் காலபலத்தினாலும் தருமபுத்திர ருடைய
தருமபலத்தினாலும் நடக்கிறபடியினாலே நம்முடை
ய பராக்கிரமத்தினால் ஒரு பிரயோசனமு மில்லை. ஆ
தலாற் சும்மாயிருப்பதே கவுரவமென்று நினைத்துச்
சகாதேவனுக்கு எதிரேவந்து, ஓ இராஜனே! நீர்யாது
காரியத்திற்காகயுத்தஞ்செய்கிறீரென்றுகேட்டார்கள்.
சகாதேவனும் அதற்கு விடைகொடுக்கக்கேட்டு வா
னராதிபர் - ஓ! ஓ! இந்தக்காரியத்திக்காக நீர் யுத்
தஞ்செய்ய வேண்டுவதென்ன? எப்படியும் மனிதரை
க்காட்டிலும் மிருகங்கள் தாழ்ந்தவைகளே யன்றோ?
அந்த மிருகங்களுக்கு எவ்விதப்பராக்கிரமங்க ளிருந்
தாலும் உபயோகமில்லை. ஆகையால் எங்களுக்கியன்
றவைகளைத் தருகிறோம் வாங்கிக்கொண்டு போங்க
ளென்றுசொல்லி அனேகம் பொருள்கள் - மதுரமு
ள்ள கனிகள்-பலபல தேன்கள்- நேர்த்தியான மான்
தோல்கள் - வர்னமான புலித்தோல்கள் - புலிநகங்க
ள் - யானைத்தந்தங்கள் - முதலிய வஸ்துக்களைக் க
ப்பமாகக்கொடுக்க, அவைகளை வாங்கிக்கொண்ட சகா
தேவன் வெகுசந்தோஷமாய்க் கிஷ்கிந்தையைவிட்டு
ப் புறப்பட்டுக் காடுமலைகளைத்தாண்டி எல்லாச்செல்
வங்களுக்கும் விளையாடுமிடமாயிராநின்ற மாகிஷ்மதி
யென்னும் பட்டணத்திற்குப் போனான்.

அந்தமாகிஷ்மதி ராஜனாகிய நீலனென்பவன் மா
ரிக்காலத்து வெள்ளம்போல மிகவும் ஆரவாரத்துடன்
வராநின்ற பாண்டவசேனைகளையும் அதின் தலைவனா
கச் சிங்கம்போற் கம்பீரமாக நோக்கிக்கொண்டு வரு
ம் சகாதேவனையும் பார்த்துத் தன்கருத்தி லிதுதா
னென்று லேசாகநினைத்து எண்ணிறந்த சதுரங்க
பலங்களைக் கூட்டிக்கொண்டு யுத்தத்திற்குவர, இரு
வருக்கும் மட்டில்லாத சண்டை யுண்டாயிற்று. அதி
லவ் வீரரிருவரும் ஒருவர்சேனையை யொருவர் முன்
னின்று நாசஞ்செய்ய வேண்டுமென்கிற கருத்தினாற்

கையோயாமற் சரமாரிபொழிந்தார்கள். ஆகிலும்தலைவருடைய காத்தலினாலே சேனைகளிரண்டும் ஒருகுறைவு மடையவில்லை. இப்படி யிருக்கச் சகாதேவன் கோபாவேசங் கொண்டு நீலனைப் பாணப்பிரயோகஞ் செய்யவொட்டாமற் றடுத்து அவன்சேனைகளையும் அங்கங்கு பஞ்சுபோற் பறக்கடித்தான். நீலன் அதனால் நிலைநிற்கமாட்டாமற் கதறித் தன்சேனைகளுக்குச் சமாதானஞ் சொல்லி நிறுத்தி வெகு தைரியங்கொண்டு வில்லில் அம்புகளைத் தொடுத்துப் பிரயோகித்தது மன்றியில் அக்கினிபகவானையும்நினைத்தான். நினைத்தமாத்திரத்தில் அக்கினி தனது ஏழுசுவாலைகளோடுங்கூடிப் பாண்டவசேனையிற் பிரவேசிக்கச் சேனையெல்லாங் காடுபோற் பற்றிக்கொள்ளத் தலைப்பட்டது. அப்போது பாண்டவ சைனியமானது மிகவும் ஹாஹாகார மடைந்து கரிந்து பொரிந்துஐயோ! ஐயோ ! என்றுகூவிக்கொண்டு தடுமாறிற்று. தீப்பட்டதருணத்தில் இரதங்களெல்லாந் தளிர்த்த சல்லகியென்கிற மரங்கள்போல விருந்தன. யானைகளுக்குத் துதிக்கைக ளறுந்தபோதிலும் அத்துதிக்கைகளினடியினின்று மொழுகாநின்ற உதிரநீர்களினாற் கால்களிற் பற்றிக்கொண்ட அக்கினிச்சுவாலையணைந்து ரேகையாய்ப் புகைகள்பம்பியதுபற்றி அவ்வானைகள் துதிக்கையோடு கூடியதுகள் போலவே காணப்பட்டன. குதிரைகள் வால்களிலுங் கொய்யுளைகளிலுந் தீப்பற்றிக்கொண்டு சொலிப்பதினால் ஒருவித அலங்காரஞ் செய்யப்பட்டன போல விருந்தன. பதாதிகளுடைய மூக்குமுதலாகிய அவயவங்கள் அற்றுப்போய் விகாரப்பட்டு நிற்க, இவைகளைப்பார்த்துச் சிலர்பிணந்தின்னவந்த பிசாசங்களாகநினைத்துத் திக்காலொருவராய்ச் சிதைந்து பயந்தோடினார்கள்.

இப்படிக்குச் சொல்லத் திறமில்லாத விபத்தையடைந்து ஒருமுகூர்த்த காலத்திற்குள்ளே தங்கள் தங்கள் பந்துக்களை நினைத்து அழுது ராஜாவைநிந்தித்து மூர்ச்சித்து எரிந்து கரிந்து சேனையிலுள்ளோரெல்லாம் நாசமாய்ப் போனார்கள். இதைப்பார்த்த பாண்டவகுமாரன் தைரியமிழந்து பெருமூச்சுவிட்டுக்கொண்டு கடலெல்லாந் தாண்டி குளப்படியில்வீழலாயிற்றேயென்று மிகவும்விசனப்பட்டு கிருஷ்ணனுடைய திருவடிகளைச் சிந்தித்து வருணாஸ்திரம் பிரயோகித்து அக்கனலையவிக்க யத்தினப்பட, அவ்வஸ்திரத்தினால் அவ்வக்கினிகொஞ்சமவிந்தும் புகைசூழ்வதினால் முன்னைக்காட்டிலுமதிகமாய்ச் சேனைகளைவதைத்து மறுபடியும்பற்றிக்கொண்டது. பின்பும் அவிக்க அவிக்க மறுபடியும் பற்றிக்கொண்டேயிருந்தது. இப்படி சகாதேவனுடைய முயற்சியெல்லாம் வீணாகிப்போய்ப் [illegible]யெல்லாந் தவிக்க, சகாதேவன் ஒன்றுந்தோற்றாமற் சித்தமழிந்து மரம்போல நின்றுவிட்டான். என்றுசொல்லிய வைசம்பாயனரை ஜெனமேஜெயன்பணிந்தெழுந்து, சுவாமி அக்கினிபகவான் பாண்டவராலே உபகாரம் பெற்றவரன்றோ? அப்படிப்பட்டவர் தருமகாரியத்திற்காகப் புறப்பட்ட சகாதேவனுக்கு விரோதஞ்செய்யலாகுமா? அஃதிருக்கட்டும்: இவனுக்கு விரோதஞ்செய்து நீலனுக்குச் சகாயஞ்செய்யவேண்டிய கடமை அக்கினிக்கு யேனுண்டாயிற்று? இந்தப் பெரிதாகிய சந்தேகத்தை நிவிர்த்திசெய்ய வேண்டுமென்றுகேட்க வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

கேளுமையா மகாராஜனே! அந்த மாகிஷ்மதீ ராஜனாகிய நீலனென்கிறவன் வெகுதரும சிந்தையுள்ளவன். வேதங்கள் விதித்த யாகங்களை இடைவிடாமற் செய்துகொண்டிருந்தான். அவனுக்குச் சுதரிசனையென்கிற பெண்ணொருத்தி யிருந்தாள். அவளுடைய அழகு நம்மால் வருணித்துமுடியாது. தேவதாஸ்திரீகள் - கந்தருவஸ்திரீகள் - இயக்கஸ்திரீகள் - நாககன்னிகைகள்- இவர்கள்யாரும் அவளழகுக்கு நிகராகமாட்டார்கள். அப்படிப்பட்ட சவுந்தரிய ரூபலாவண்யங்களுள்ள பெண்ணை அக்கினிதேவன் கலியாணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்டான். அதனாலே அந்தராஜன் காலை மாலைகளில் அக்கினிஹோத்திரஞ் செய்வதற்காக எவ்வளவுசொலிக்கச்செய்தாலுஞ் சொலிக்கிறதில்லை. அந்தப் பெண்வந்து சொலிக்கச் செய்தால் சொலிக்கிறது. தன்சுவாலைகளாகிய கைகளாற் குளிர்ந்திருக்கும்படி அவளைப்பரிசிக்கிறது. இப்படிப்பட்ட சேட்டைகளை அந்தராஜன் கண்டுகோபங்கொண்டு அக்கினியைச்சபிக்கயத்தினப்படுகையில், அந்தக்குறிப்புத்தெரிந்த அந்தத்தேவன் பிராமண வேடங்கொண்டு அந்தராஜாவின் முன்னிலையில்வந்து கையெடுத்து ஆசீர்வாதஞ் செய்து, ஓமகாராஜனே! உமது பெண்ணாகிய சுதரிசனையினிடத்திலே அக்கினிதேவன் மிகவு மையல்கொண்டிருக்கிறான். அதுபற்றியவளிடத்திற் சிலசேஷ்டைகள்செய்கிறான். நீர் அதுநிமித்தம் அத்தேவனை யேன்வீணாய்ச்சபிக்க யத்தனிக்கிறீர்? அதனாலுமக்குப் பயனென்ன? பெண்ணை யாருக்காகிலுங் கொடுக்கவேண்டியது அகத்தியந்தானே: அந்தத்தேவனோ மகானுபாவன். அவனைக்காட்டிலும் உமக்கு வரன் வேறுகிடைக்கமாட்டான். ஆகையால் உமது கன்னிகையை அவனுக்குக் கொடுத்துக் கலியாணஞ் செய்வியு மென்று சொல்லி மறைந்துபோனான்.

இராஜன் வந்தவர் அக்கினிபகவானென்று மறுபடி யவனைநினைக்க, அவனும் முன்போல உருக்கொண்டுவர,தன்மகளை அந்த மகாதேவனுக்குக் கலியாணஞ்செய்துகொடுத்தான். அதனாலக்கினி மிகவுஞ் சந்தோஷமாகி ராஜாவைப் பார்த்து உமக்குவேண்டிய வரங்களைத் தருகிறேன் கேளுமென்று சொல்ல, அதுகேட்டநீலன்- ஓ தேவனே! நீரென்பட்டணத்தி லிருந்துகொண்டு சத்துருக்களை இதில்வரவொட்டாமல் எனக்குச் சகாயஞ்செய்ய வேண்டுமென்று

கேட்க, அப்படியே யாகட்டுமென்று வரங்கொடுத்தான். அதுமுதல் அந்தப்பட்டணத்திலே வாசஞ்செய்கிறான். இந்தச்சேதிதெரிந்து அனேகராஜாக்கள் அவன் பட்டணத்திற்குப் போகிறதில்லை. இந்தச்சகாதேவன் அந்தரகசியந்தெரியாமல் எதிர்க்கவே, அக்கினியானவன் அந்த நீலனுக்கு முன்புவரங்கொடுத்தபடி சேனையையெரித்து நாசஞ்செய்தான். இப்பால் சகாதேவன் தன்சேனைகள் தீயில் மடிவதைக்கண்டு, இஃதக்கினியின்செய்கையென்றறிந்து, திடீலென்று போய்க் கால் கை முகங்களைச் சுத்திசெய்துகொண்டு அக்கினிபகவானை மனதில்நினைத்து, சுவாமீ அக்கினி பகவானே! நீர் மகானுபாவன். உம்மைவேதங்கள்வெகுவிதமாய்த் துதிக்கின்றன. சகலமானயாகங்களும் உம்முடையதேஜசிலன்றோ நிறைவேறவேண்டியவைகளா யிருக்கின்றன. ஆனபடியினாலே யாகங்களெல்லாம் உமதுசரீரங்களாயின. அதனாலே நீர்யக்ஞமூர்த்தியென்னும் பேரைவகிக்கிறீர். எல்லாத் தேவர்களுக்கும் உம்மிடத்திலேயே அவிகளையாகுதிசெய்யவேண்டியதா யிருக்கிறபடியினாலே தேவர்களுக்கு முகமென்றும், அந்த அவிசுகளை அவரவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கிறபடியினாலே அவியவாஹ னென்றும் நாமங்களை வகிக்கிறீர். எல்லாவஸ்துக்களையும் பரிசுத்தஞ்செய்கிற தன்மை யுடையவராகையால், பாவகனென்கிற நாமதேயம் பெற்றிருக்கிறீர். உமக்குப்பூசையாகச் சகல யாகங்களையும் விதிக்க வேதங்களுண்டானபடியினாலே, ஜாதவேதனென்கிற பெயரைத் தரிக்கிறீர். இப்படிக்குப் பரிசுத்தமாகிய பலநாமங்களுடைய உம்மை நமஸ்காரஞ் செய்கிறேன். உம்மைவிட உலகங்களுக்கு முக்கியவாதாரம் வேறில்லை. சுவாமீ! உமது பூசையாகிய யாகத்திற்காகத் திக்குவிஜயஞ்செய்யவந்த எனக்கு நீரேவிரோதம்புரிவது நியாயமன்று. அதருமத்திற்காக நான் யத்தினப்படவில்லை. அப்படியிருக்க எனக்கு வேண்டிய சகாயஞ் செய்யாமல் என்சேனைகளை நாசஞ்செய்தீர். இனியாகிலும் அடியேனிடத்தில் தயைசெய்து ரக்ஷிக்கவேண்டும். உமக்கு அனேகமாயிரம் நமஸ்காரங்கள் செய்கிறேனென்று நமஸ்கரித்துத் துதித்து தர்ப்பைகளைப்பரப்பி சுரவஸ்திரத்துடனே பிராயோபவேஷமாகப்படுத்துக்கொண்டான்.

இவ்விதமாகக் கடினவிரதஞ்செய்யவே அக்கினி பகவான் சேனைகளைவிட்டு நீங்கி, நல்லரூபத்தோடு சகாதேவனுக்கு முன்புவந்து, ஓ ராஜனே! நீயேனிப்படிப் பிராயோபவேஷமாகப் படுத்துக் கொண்டாய்? நான் அந்தநீலனென்கிற ராஜனுக்கு வரங்கொடுத்தபடி நிறைவேற்ற வேண்டிய தகத்தியமாகையால் அப்படிசெய்தேன். ஆனால் தருமபுத்திரருக்குச் சகலவிதத்திலுஞ் சகாயஞ்செய்ய வேண்டியதுதான். மேலும் அவர் யத்தினப்பட்டிருக்கிற காரியம் தேவகாரியம். நானதற்குவிரோதஞ்செய்யத்தகாது. ஆனாலுமந்தராஜாவுக்கு வாக்குத் தப்பாம லிருக்கவேண்டியதற்காகவும், உன்மனவுறுதியைச் சோதிக்கவேண்டியதற்காகவும் சேனைகளைத் தகித்தேன். இப்போது நீ என்னைக் குறித்துச்செய்த தவத்தினாலும் - தோத்திரத்தினாலும்-மிகவுஞ் சந்தோஷப்பட்டேன். இனி உன்சேனையைத் தகிப்பதில்லை. பயப்படாதே: உலகங்களுக்கெல்லாம் காரணக்கடவுளாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தருமபுத்திரருக்கு இராஜசூயத்தை நிறைவேற்றிச் சாம்பிராச்சியம் வருவிக்கப் பூர்ணமாகிய அபிப்பிராயங் கொண்டிருக்கிற படியினால், எல்லாக்காரியங்களுங் குறைவின்றி நிறைவேறும். என்றுசொல்லிஅக்கினிதேவன் மறைந்துபோகவே சகாதேவன் வெகுசந்தோஷமடைந்து, சேனைகளுக்குச் சமாதானஞ்செய்து முன்போலச் சித்தப்படுத்தினான். இந்தச்செய்தி அக்கினிதேவனால்தெரிந்துகொண்ட நீலன் சகாதேவனுக்குச் சகலவுபசாரங்களும் பண்ணிசமாதானஞ்செய்துகொண்டு கப்பங்களைக் கொடுத்தான்.

அவைகளைவாங்கிக்கொண்டசகாதேவன் அந்தப் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுத் தெற்கேசென்று, திரைபுரமென்கிற பட்டணத்துக்குவந்து, அமிதோசனனென்கிறராஜனைச் சயித்து, போதனராஜனையும் - கைசிகராஜனையும் - சுராஷ்டிரராஜனையும் - இராஜதபருவதத்தின் ராஜாவாகிய திமிங்கில னென்பவனையும் - சமுத்திர நடுத்தீவிலிருந்த ஒற்றைக்காலரையும் - ஒட்டைமுகரையும் - சஞ்சயந்திராஜனையும் - விபுண்டரகரவாடமென்னுந் தெசத்தாரையும் - பாரசவர் - குலதர் - அசுமகர் - தர்த்தரர் - மூலகர் - முதலாகியபேர்களையுஞ் செயித்து வெகுதிரவியங்களைப் பெற்றுக்கொண்டு, ஒட்டிரதேசம் - தெலுங்குதேசம் - தக்ஷண மகாராஷ்டிரதேசம் - கர்னாடதேசம் - முதலாகிய தேசங்களுக்குப்போய் அவ்விடத்து ராஜாக்களை யுத்தத்தினாற்செயித்து வெகுகப்பங்களை வாங்கிக்கொண்டு, அங்கிருந்து தெற்கேதிரும்பித் தொண்டை நாட்டிற்குப்போய் அந்தராஜாவைச் செயித்து, தக்ஷண கொங்கணமென்கிற கொங்குநாட்டைச்செயித்துச் சோழதேசம் புகுந்து, அங்கு பலவிதச்சோலை சூழ்ந்து இருகரைகளு மிகவுந்தெளிவாகிய நீரும் - பலவகைப் பக்ஷிகளும்-தாமரை அல்லிமுதலாகிய புஷ்பங்களும்பொருந்திக் கண்களுக்கு மிகவினோதமாகவும் சந்தோஷகரமாகவு மிராநின்ற காவேரியென்கிற மகாநதியைக் கண்டு, நாடோறும் அதில்ஸ்நானஞ்செய்து கரையில் ஜபதபாதிகள்முடித்து வேதசாஸ்திரமோதிக்கொண் டிருக்கிற பிராமணரையுங்கண்டு சந்தோஷத்தையடைந்து சேனையைக்காவேரிக்கரையில் இறக்கி அந்த வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். அக்கால் அத்தேசத்தா ரெல்லாருஞ் சகாதேவன் வந்திருக்கிறானென்று கேட்டமாத்திரத்திலே, இவனைப் பார்க்கவேண்டுமென்று மிகவும் ஆசையினாலே வந்துபார்த்துக் களித்துச் சரசமாகப்பேசிக்கொண் டிருந்தார்கள்.

அந்தச் சோழதேசத்து ராஜன் சகாதேவனனுப்பிய தூதனாலே சகலமுந் தெரிந்துகொண்டு, வெகு திரவியங்கள்-ஆபரணங்கள்-முதலாகியவைகளை யெடுத்துக்கொண்டு வந்து சகாதேவனைக் கண்டு மரியாதையுடனே கப்பமாகக் கொடுத்தான். அவைகளைச் சகாதேவன் ஆதரவுட னங்கீகரித்து, அந்தத்தேசத்தின் வளத்தையும்-அழகையும்-காவேரியின்வினோதத்தையும் பார்த்து ஆச்சரியப்பட்டு, மந்திரிகளை நோக்கி, ஓ மந்திரிகளே! இந்நதியின் அழகும் பரிசுத்தமுங் கங்கைக்கு நிகராயிருக்கின்றன. ஆனபடியினாலே இவ்விடத்திற் பத்துநாள் வாசமாயிருந்து போவோமென்று சொல்ல அவர்களும் அப்படியே ஆகட்டுமென்று சம்மதித்தபடியினாலே அங்கே பத்துத் தினங்கள் வேடிக்கையாய் வாசஞ்செய்து, அவ்விடம்விட்டுப் புறப்பட்டு பாண்டி நாட்டிற்குப்போய் சேதுவைக்கண்டு சந்தோஷித்து மணலூர்ப் பட்டணத்திற்குப்போனான். இவன்வந்த சேதிகேட்ட சித்திரவாகனனென்கிற மலயத்துவச பாண்டியன் பரிவாரங்களோடு எதிர்கொண்டுவந்து அழைத்துப்போய், வெகுப் பிரீதியுடனே சகலவுபசாரங்களுடன் விருந்துசெய்தான். சகாதேவன் அந்தப்பாண்டியனோடு வெகுபரிவுடனேபேசிப் பின்பு தன்தமயன் மனையாட்டியாகிய சித்திராங்கதையைக்கண்டு நமஸ்கரித்து க்ஷேமங்களைவினவி,அவளாலும்வெகு உபசாரங்கள்செய்யப்பட்டுப் பேசிக்கொண்டிருக்கையில் அவள்குமாரனாகிய பப்புருவாகன னென்கிறவன் வந்து நமஸ்காரஞ்செய்ய அவனையெடுத்துத் தழுவி உச்சிமோந்து கண்களி லானந்தபாஷ்பத்துடனே அவனுக்குப் பல பூஷணங்கள் கொடுத்து அலங்கரித்து, அச்சித்திராங்கதைக்கும் பலபூஷணாதிகள் கொடுத்து, சிலநாள் அவ்விடத்திலேயே சுகமாயிருந்து, அந்தப்பாண்டியனால் வெகுமதியாகவும் கப்பமாகவுங் கொடுக்கப்பட்ட மிகவுஞ்சிறந்த முத்துசரங்களையும் மற்றுமனேகம் திரவியங்களையும் பெற்று, அந்த ராஜனிடத்திலும் சித்திராங்கதை - பப்புருவாகனன்- முதலானோரிடத்திலுஞ் செலவு பெற்றுக்கொண்டு தென்மதுரைக்குப் போனான். அங்கிருந்து கேரளமென்கிற மலையாளதேசஞ்சென்று அவ்விடத்துராஜாவைச்செயித்துக் கப்பம் வாங்கிக்கொண்டு தென்சமுத்திரக்கரையில் வந்திறங்கி, அந்தப் பூமியிருக்குமழகையுங் கடலிருக்குமழகையும் பார்த்துப்புகழ்ந்து மந்திரிகளோடு யோசனைசெய்து கடோர்கஜனை நினைத்தான். நினைத்தமாத்திரத்திலே அந்தக் கடோர்கஜன் அதிக வொளியைப் பரப்பாநின்ற கிரீட கவசகுண்டலாதிகளைத் தரித்து முடியிற் சூரியனும் இருபுறங்களில் வியாழமும் வெள்ளியும் உதயமாயிருக்கச் சுவர்ணதாதுக்கள் பரவி விளங்காநின்ற நீலமலைபோல் விளங்குந் தேகத்தையுடையவனாய் பயங்கரமான வடிவுடனே தனது சிறியதகப்பன் எதிரில்வந்து நமஸ்காரஞ்செய்து, என்னைவருவித்தகாரியங் கட்டளையிடவேண்டுமென்று வினயத்தோடு கேட்க சகாதேவன் அவனுக்கு ஆசீர்வாதஞ்செய்து சொல்லுகிறான்.

அடா குழந்தாய்! நம்முடைய அண்ணலாகிய தருமபுத்திர மகாராஜன் இராஜசூயயாகஞ் செய்து சம்ராட்டென்னும் பேரைப்பெற யத்தினப்பட்டிருக்கிறார். அதனாலே திக்குவிஜயஞ் செய்வதற்கு நாங்கள் நால்வரும் நாற்றிசைகளுக்கும் புறப்பட்டோம். அதில்நான் இத்தென்றிசையிலுள்ள யாவரையுஞ் செயித்துக் கப்பங்களை வாங்கிவந்தேன். ஆனால் இலங்கையிலிருக்கும் விபீஷணரிடத்திற்போக வெங்களுக்கு அசாத்தியமான படியினாலே நீபோய் இச்சேதியைச்சொல்லி, இதுவெல்லாம் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய பலம்பெற்று நடந்துவருகிறதென்றுந்தெரிவித்து, அவர் கொடுக்கிற கப்பங்களை வாங்கிக்கொண்டு வாவென்று கட்டளையிட்டான்.அதையந்த இடும்பிமகன் சிரமேற்கொண்டு நமஸ்காரஞ்செய்து புறப்பட்டு, முன்பனுமானெழும்பிப் பாய்ந்ததுபோல வெழும்பிப் பாய்ந்து கடலைத்தாண்டி இலங்கையிற் பிரவேசித்து, அங்கிருந்த மகாபலசாலிகளாகிய ராக்ஷதர் ஆயுதபாணிகளாய்க் கூட்டங்கூட்டமா யிருக்கையிலுங் கிஞ்சித்தும் அஞ்சிக்கையில்லாமல் உட்புகுந்து, அரண்மனை வாசலிலிருந்த காவற்காரரோடு குருவமிசத்திலுதித்த தருமபுத்திர மகாராஜனுடைய தூதன் உம்மைக்காண வேண்டி வந்திருக்கிறானென்று உங்கள் ராஜனுக்குத் தெரிவியுங்களென்று சொன்னான். அவர்களுமிச்சேதியை விபீஷணருக்குத் தெரிவிக்க, அவர் உள்ளேவரும்படி கட்டளையிட்டதினாலே அவ்விராக்ஷதர் வழிகாட்ட, நடுவிலிருக்கும் வேடிக்கைகளையும் அளவற்ற செல்வங்களையும் பார்த்து அதிசயப் பட்டுக்கொண்டேபோய் மகாசபையில் நவரத்தினமயமாகிய திவ்வியமண்டபத்திற் பரிசனங்கள் சத்திரசமாராதி உபசாரங்களைசெய்ய - மந்திரிகள் புடைசூழ்ந் திருக்க - சேனாநாயகர் மகாசேனைகளோடு வாய்புதைத்துக் கட்டளைகளைக் கேட்டுக்கொண்டிருக்க - தேவர்கள் சபையிற் பிரமதேவன் விளங்குவதுபோல் திவ்வியசிங்காதனத்தில் உட்கார்ந்து விளங்காநின்ற தருமவடிவமாகிய விபீஷணரைக்கண்டு நமஸ்காரஞ்செய்து,சுவாமி! அடியேன் உதிஷ்டிர மகாராஜனுடைய தூதன். கடோர்கஜனென்கிற நாமமுடையவன். அவராலனுப்பப்பட்டுத் தேவரீரிடத்திற்கு ஒருசங்கதி சொல்லவந்தேன்.கட்டளையிட்டால் சொல்லுகிறேன்.என்றுசொல்லக்கேட்ட விபீஷணர் இவனுடைய தேஜசையும்-வடிவையும் - புத்தியையும் - தைரியத்தையும் - வணக்கத்தையும்பார்த்துச் சந்தோஷித்து, அப்பா! நீயார்? அந்த உதிஷ்டிரர்யார்? அவருக்கு நீ தூதனாகியதெப்படி? நீ வந்தகாரியமென்ன? அதனைச் சவிஸ்தாரமாகச் சொல்லுகவென்றுசொல்லவே கடோர்கஜன் சொல்லத் துவக்கினான்.

சுவாமி இராக்ஷசராஜனே! பூமியில் மகாபெருமை பொருந்திய சந்திரவமிசத்து ராஜாக்களிற் சிரோமணியாகிய பாண்டுவென்னு மகாராஜனுடைய மூத்த குமாரர் உதிஷ்டிரனென்றுசொல்லப்படுவோர். அவர் தருமமே உருவாயவதரித்ததென்றுசொல்லத்தக்கவர். பொறுமையிற் பூமியையும் - தைரியத்தில் மேருவையும் - நீதியில் யமனையும் - யுத்தியிற் பிரகஸ்பதியையும் - சத்தியத்தில் அரிச்சந்திரனையும் - தேஜசில் சூரியனையும் நிகர்த்தவர். மகானுபாவர். குருநாட்டுக் கிராஜனாயிருந்து, எல்லாவரசர்களுஞ் சிரசின்மேற்கொள்ளும்படியாகிய செங்கோற் சீர்மையுள்ளவர். அவருடைய தம்பி வீமசேனனென்று பேருடையவர். அவருக்குச்சமானமாகிய பலசாலி மூவுலகத்திலுமில்லை. அவர் பதினாயிரம் யானைபலமுடையவர். கதாயுதத்தை யெடுத்துக்கொண்டு யுத்தத்திற்குப் புகுந்தால், காலதண்டந்தரித்த யமனுக்கு நிகராகத் தோற்றுவர். அவருக்கு இடும்பனென்கிற ராக்ஷசன் தங்கையாகிய இடும்பி யென்கிறவளிடத்திற் பிறந்தவன் யான். அவருக்கு நேரிளையவர் அர்ச்சுனனென்கிற நாமதேயமுடையவர். வில்லாளிகளுக்குச் சிரோமணியாகியவர். அவருடைய சவுரியதைரிய பராக்கிரமங்களுக்கு உவமானமே கிடையாது. ஸ்ரீநாராயணாவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு மிகுந்தநேசர். அவருடைய உடன்பிறந்தவளாகிய சுபத்திரையைக் கலியாணஞ் செய்துகொண்டவர். ரூபத்தில் மன்மதனுக்குச் சமானமானவர். அவருடைய தம்பிமார்கள் நகுலனென்றும் சகாதேவனென்றும் பெயரையுடையவர்கள் இருவருளர். அவர்கள் இரட்டைப்பிள்ளைகள். அண்ணன்மார்களுடைய பலத்திற்குத் தாழ்ந்தவரல்லர். இவ்வைவரும் பஞ்சபாண்டவர்களென்று சகலலோகங்களிலும் பிரசித்தமாகியவர்கள். இந்த மகானுபாவர்களுடைய புகழ்பெற்ற சரித்திரங்கள் பலவுண்டு. எல்லோரும் மகாதருமிஷ்டர். மகாசூரர். மகாநீதிமான்கள். மகாசாமர்த்தியவான்கள். இவர்கள் தங்களுடைய பலபரம்பரையாய்வந்த ராஜதானியாகிய அஸ்தின நகரத்தையும் - அதைச்சேர்ந்த சகலராச்சிய சம்பத்துக்களையும் - தங்கள் பெரியதகப்பனாராகிய திருதராஷ்டிர மகாராஜனுக்குக் கொடுத்துவிட்டுத் தாங்கள் காடாய்க்கிடந்த ஒருவிடத்திலே இந்திரப்பிரஸ்தமென்றொரு நகரத்தை யுண்டாக்கிக்கொண்டு செங்கோற் செலுத்தி வருகிறார்கள். இவர்களுக்கு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சகலசகாயஞ்செய்யச்சித்தமாயிருக்கிறார். அதனாலேதான் முன்னம் அர்ச்சுனனென்கிறவர் இந்திரன் முதலாகிய தேவர்களைச்செயித்துக் காண்டவவனத்தை அக்கினிக்காகாரமாகக்கொடுத்துச் சத்துருக்களால் வெல்லக் கூடாத நான்கு குதிரைகள் கட்டி வானரத்துவசமுடைய இரதத்தையும், காண்டீப மென்னும் வில்லையும், அக்ஷய தூணீரங்களையும் பெற்றார்.

அப்படிப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணனுடைய பலத்தைக்கொண்டு ஜராசந்தனை எங்கள் தகப்பனார் ஜயித்தார். இப்போதுமூத்தவராகிய உதிஷ்டிரர் இராஜசூயஞ்செய்யவேண்டுமென்று யத்தினப்பட்டு, எல்லாவரசரிடத்திலுங் கப்பம் வாங்கிவரும்படி தமது தம்பிமார் நால்வருக்குங் கட்டளை யிட்டதினாலே, நால்வரும் நான்குதிசைகளுக்குப் புறப்பட்டார்கள். அவர்களிற் சகாதேவனென்கிறவர் தென்றிசைக்குவந்துயாவரையுஞ்செயித்துக் கப்பங்களை வாங்கிக் கொண்டு, சமுத்திரக்கரையில் இதொரு சமுத்திர மென்னும்படியாகிய சேனைகளுடனே வந்திறங்கித் தேவரீரிடத்திற்குப்போய் இச்சேதி தெரிவித்துவரும்படி அடியேனுக்குக் கட்டளையிட்டபடியினாலே அடியேனிவடம் வந்து தேவரீரைப் பணிந்து இச்சேதிகளெல்லாவற்றையும்விண்ணப்பஞ்செய்தேனென்று சொல்லினான். கடோற்கசன் வார்த்தையைக்கேட்ட விபீஷணர் சந்தோஷித்து, அப்பா கடோற்கஜா! நீ நம்முடையவனானபடியினாலும், அவர்கள் மகாதருமவான்களென்கிறபடியினாலும், ஆரம்பித்தகாரியம் வெகுமேன்மையாகிய தருமகாரியமானபடியினாலும், ஸ்ரீகிருஷ்ணபகவான் அவர்களுக்குத் துணையாயிருப்பதினாலும், நான் கப்பங்கொடுக்கச் சம்மதித்தேனென்று சொல்லி, அருமையாகிய அனேகம் பொன் வெள்ளி ரத்தினங்களாற்செய்த பூஷணங்கள் - பாத்திரங்கள் - ஆசனங்கள் - சயனங்கள் - இன்னும் யானைத் தந்தங்களாலாகிய வஸ்துக்கள் - வஸ்திரங்கள் - கம்பளங்கள் - தோல்கள் - முதலானவைகளையும், பதினான்கு பொற்பனை மரங்களையுங்கொடுத்து இவைகளைக் கொண்டுபோய் சேர்ப்பதற்காக எண்பத்துநான்குராக்ஷதரையனுப்பிவித்தார். கடோற்கசன் அவைகளை யெல்லாம் அந்தராக்ஷசர்தலைமே லேற்றிக்கொண்டு, விபீஷணரைத் தெண்டனிட்டு விடைபெற்றுப் புறப்பட்டு, ஒருமுகூர்த்தத்தில் அப்பெருங்கடலைக் கடந்து, சகாதேவனுடைய சமீபத்திலிறங்கி நமஸ்கரித்துத் தான் போய்வந்த சேதிகளைச் சவிஸ்தாரமாகச் சொன்னான். இந்தக்கடோற்கசன் ராக்ஷசரோடுகூட ஆகாசத்தினின்றும் இறங்கும்போது இவர்களுடைய ரூபத்தைப் பார்த்துப் பயந்து சேனையிலிருப்போரெல்லாம் ஓட, அதுகண்ட சகாதேவன் யாவரையுங் கூப்பிட்டுப் பயப்படாதேயுங்களென்று சமாதானஞ்சொல்லி, நமதுகுமாரன் கடோற்கஜன் இலங்கையிலிருந்து ராக்ஷதர்களோடு திரவியங்கள் கொண்டுவருகிறானென்றுகூறி அவர்களை நிலைநிறுத்தினான்.

இப்படிக்குக் கடோற்கசன் கொணர்ந்த பொருள்களையெல்லாம் பார்த்துச் சந்தோஷித்த சகாதேவன் அங்கிருந்து மலையமென்கிற பொதியமாமலைக்குப்போய், அதிலிருக்கும் மகானுபாவரும் - மகாதபோநிதியும் - சகலவேதசாஸ்திரங்களு மறிந்தவருமாகிய அகத்தியமாமுனியைக் கண்டு பணிந்து அவரால் ஆசிர்

வதிக்கப்பட்டு விடைபெற்றுச் சகியபர்வதம்போய் அவ்விடங்களின் விசித்திரங்களை யெல்லாங் கண்டு, அங்கேயிருந்த வேடராஜரைச்செயித்து யாவரையும் வருடந்தோறுங் கப்பங்கட்டும்படி நியமித்துத் திரும்பி அனேகயானைகளின்மீதிலும்-ஒட்டகங்களின்மீதிலும் - தான் சம்பாதித்த பொருள்களை யெல்லாம் நிறைத்துக்கொண்டு, தன்னுடன்கூடவிருந்த தமிழரை யெல்லாம் வெகுமானஞ்செய் தனுப்பிவிட்டுத் தன் சேனைகளுடனே பேரிகைகள் - படகங்கள் - காகளங்கள் - முதலாகிய பல வீரவாத்தியங்கள் முழங்கப் புறப்பட்டு, வந்தியரெல்லாரும் விருதுசொல்லிக் கட்டியங்கூற வெகு வேடிக்கையாய் நெடுந்தூரமாகிய வழியைத்தாண்டி இந்திரப்பிரஸ்தஞ்சேர்ந்து யாவராலுங் கொண்டாடப்பட்டு, மகாராஜாவைக் கண்டு பணிந்து சேதியெல்லாஞ்சொல்லித் தான்கொணர்ந்தபொருள்களையும் விசேஷமாய் விபீஷணர்கொடுத்த பொற்பனைமரங்கள்முதலானவைகளையுங்காட்டினன். அவைகளையெல்லாம் உதிஷ்டிரர் பார்த்து வெகு சந்தோஷமடைந்து, சகாதேவனை இருகையினாலுங்கட்டிக்கொண்டு கண்களில் ஆனந்தபாஷ்பம் விட்டார்.

நகுலன் வாருணதிக்கு விஜயம்.

இவ்விதமாகவே அளவற்ற படைகளோடு நகுலன் மேற்றிசைக்குச்சென்று, அங்கே சுப்பிரமணியருக்கு மிகவுமிஷ்ட ஸ்தானமாயிருக்கிற ரோகிதக் கிரமமென்கிற தேசம்போய் அத்தேசத்தாராகிய மயூரகர் என்கிற ஒருவித க்ஷத்திரியரோடு சொல்லத் தரமில்லாதபோர்செய்துசெயித்துக்கப்பங்களைப்பெற்று, அங்கிருந்து மரு என்றும் - தானியகமென்றும்-பேர்பெற்ற தேசங்களுக்குப் போய் சைரிஷிகர் என்கிற பேர்களையும் - வைரமகர் என்கிறபேர்களையும் - யுத்தத்தில் வெகு வருத்தப்படுத்திச் செயித்து, அங்கிருந்துபோய் லீலந்தரர் - வடதானர்—என்கிற வனவாசிகளோடு தேவாசுர யுத்தத்திற்குச் சமானமாகிய யுத்தஞ்செய்து அவர்களில் அனேகரை வெட்டிமடித்து அவர்கள் புதைத்து வைத்திருந்த பொருள்களைக் கொள்ளையடித்துப் புறப்பட்டு, ஐந்துகூட்டத்தாராகிய சிபிதேசத்தார் — திரிகர்த்த தேசத்தார் - அம்பஷ்ட தேசத்தார் - மாளவதேசத்தார் - கர்ப்பட தேசத்தார் - இவர்களோடு மத்திய நிகாய ரென்கிறவர்கள்-அவுபவிருத ரென்கிறவர்கள்—இப்படிப்பட்ட பலவிதராஜாக்களோடும் புஷ்பகராரணியமென்னுமிடத்திலிருந்த சில வேடராஜாக்களோடும் ஓய்வில்லா மற்சண்டைசெய்து,சிலரைக்கழுத்தறுத்துச் சிலரைக் கைகால்களற்றவர்களாக்கிச் சிலரைப் புறங்காட்டியோடும்படி செய்து யானைப் பிணங்களும்—குதிரைப் பிணங்களும் - மனிதப் பிணங்களும் மலைமலையாய்க் குவித்து உதிரவாறுகள் பலவோடச்செய்து அந்தப் பூமிகளைச் சுடுக்காடுகள்போலாக்கிப் பூதங்களுக்கும்-பேய்களுக்கும் - கழுகுகளுக்கும் - நரிகளுக்கும்-நாய்களுக்கும்- மகா விருந்து செய்வித்து அங்கங்குள்ள வெகு பொருள்களைக் கவர்ந்துகொண்டு, காலில் விழுந்த சிலரை உயிர்களோடும் பொருள்களோடும் விட்டுரட்சித்து ஜயஸ்தம்பம் நாட்டினன்.

பின்பு அவிடம்விட்டுப் புறப்பட்டுச் சிந்துவென்னும் நதியின் கரைக்குவந்து சிந்துதேசத்து ராஜனிடத்திற் கப்பம்வாக்கிக்கொண்டு, குற்சர தேசத்துக்குப்போய் அவ்விடத்தியாரோடும் போர்செய்து வெற்றிபெற்று, மற்றும் அந்தப்பக்கங்களிலிருக்கிற தேசங்களைச்செயித்து சரஸ்வதீ நதியின் கரைக்குவந்து அங்கே கூட்டங் கூட்டமாயிருந்த சூத்திரர் - ஆபீரர் - பார்வதேயர் - என்கிறபேர்களைக் கப்பங்கட்டச்செய்து பஞ்சநதம் - மித்திரபோகம் - சிம்மநதம்-அபரபத்தனம் என்கிற விடங்களைச் சுவாதீனஞ்செய்துகொண்டான். பின்பு அவ்விடம்விட்டுப் புறப்பட்டு உத்தரச் சுயோதிஷமென்கிற விடஞ்சென்று அதின் ராஜனைக் கீழ்ப்படுத்தி மிகுந்த திரவியங்களை வாங்கிக்கொண்டு இரமணரென்கிற க்ஷத்திரியரை வென்று, சமுத்திர நடுவிலிருந்த சில மிலேச்சதேசங்களுக்குப்போய் அவர்க்ள் தான் வருஞ்செய்தி கேட்ட மாத்திரத்திலேயே எதிர்கொண்டு வந்து கொடுத்த பலவிதப் பொருள்களையும் வாங்கிக்கொண்டு அப்பாலிரா நின்ற ஊணதேசத்துக்குப் போனான். அங்கிருந்த ஊணர் மிகுந்த ஆக்ரோஷத்துடனே வெகுசேனைகளைக் கூட்டிக்கொண்டு சண்டைக்கு வந்தார்கள். அப்போது நகுலனுடைய சேனைகளுக்கும் ஊணசேனைகளுக்கும் ஒருமுகூர்த்தகாலம் யுத்த முண்டாயிற்று. அந்த யுத்தத்தில் ஊணசேனை அதிகமாய் மடிந்ததைக்கண்ட அதின் பிரபுக்கள் எதிரே வராமல் தந்திரமாய்ப் பாண்டவச் சேனையை மடிக்கத் தலைப்பட, அதுகண்ட நகுலன் கோபங்கொண்டு பாணவருஷம் வருஷித்துத் தோலாடைகளுங் கம்பள வாடைகளுந் தரித்திருக்கு மவர்களுடைய தேகங்களைத் துண்டந் துண்டமாகச் சிதைத்துக் கோட்டைகளையு மிடித்து நாசஞ்செய்தான்.

இப்படி வெகுவாய் மடிந்தபின் மிகுந்த சிலவூணப் பிரபுக்கள் ஓடிவந்து நகுலன் பாதங்களில் விழுந்து வெகுவான காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அதனாலே நகுலமகாராஜன் அவர்களைத் தயைசெய்து விட்டுப் போட்டு அந்தப் பக்கங்களிலுள்ள சில தீவுகளிலிருக்கிறவர்களிடத்தில் தூதரை யனுப்பிக் கப்பங்களை வருவித்துக்கொண்டு மறுபடி சமுத்திரக் கரைக்குவந்து ஆனர்த்த தேசத்திலிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனுடைய அதிகாரிகளோடு பேசித் துவாரகைக்குத் தூதரை யனுப்புவித்தான். அந்தத்தூதர் துவாரகைக்குச்சென்று நகுலமகாராஜன் வந்திருக்குஞ் செய்தியை ஸ்ரீகிருஷ்ணனுக்கு விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்ட மாத்திரத்திலே கண்ணன் தன் தமய

ஞராகிய பலராமருக்கும் -உக்கிரசேனன் முதலாகிய
மற்றை யாதவருக்கும் இச்சேதிசொல்லிப் பாண்டவர்
களுடைய பராக்கிர மத்தையுஞ் சாமார்த்தியத்தை
யும் புகழ்ந்துபேசி கப்பங்கட்ட வேண்டியதாகச் சம்
மதிப்படுத்தி, திரள்திரளான பொன்-வெள்ளி - ரத்தி
னங்கள் - வஸ்திரங்கள்-வாகனங்கள்-இவைகளையெல்
லாம் எடுப்பித்துக் கொண்டு தாமே பரிவாரத்தோடு
வந்து நகுலனைக்கண்டு சந்தோஷத்துடன் கொடுத்
தார். நகுலன் கிருஷ்ணனைக்கண்ட மாத்திரத்திலே
யெழுந்து நமஸ்காரஞ் செய்து ஆசனங்கொடுத்து,
அவர் உட்கார்ந்தபின் தான் உட்கார்ந்து தான் திக்
குவிஜையத்திற்குப் புறப்பட்டு வெற்றிபெற்ற விதங்
களை யெல்லாஞ் சொன்னான்.

அப்போது கண்ணன் நகுலனைப் பார்த்து, ஓ
பாண்டவவீரனே ! நீங்கள் வெகுபல பராக்கிரமங்க
ளும் அஸ்திரவித்தியா சார்மர்த்தியங்களு முடையபே
ர்கள். ஆனதினாலே உங்களுக்கு எங்கும் ஜயம்வருமே
யல்லது வேறில்லை. அந்தமகானுபாவராகிய தருமபு
த்திரரைத்தவிர மற்றையார் இராஜசூயஞ்செய்ய வல்
லவரிருக்கிறார்கள்? இப்படிப்பட்ட தம்பிமார்களையுடை
ய அவருக்கே இந்தபாகந் தகுமன்றி மற்றவருக்குத்
தகாது நான் ஏதோ கொஞ்சம் பொருள்கொடுத்
தேன். இதைப் பெரிதா யெண்ணும்படி தருமபுத்தி
ரருக்குச் சொல்லவேண்டுமென்றுசொல்லக்கேட்ட ந
குலன் கைகூப்பி, ஓ கிருஷ்ணமூர்த்தி ! நீர் எங்களை
ப் பரிகாசஞ் செய்கிறீர். ஏனென்றால்-அளவற்ற மகி
மை பொருந்திய உமது கிருபாடாக்ஷ மில்லாமற்
போனால் எங்களுக்குப் பலமேது ? சவுரியமேது! சா
மர்த்தியமேது? ஜயமேது ? புகழேது ? ஒன்றுங்கிடை
க்கமாட்டாது. உமது சகாயபலத்தைக் கொண்டு த
ருமபுத்திர மகாராஜா இந்தக் காரியத்தை யாரம்பித்
தாரே யல்லது வேறில்லை. நாங்களடைகிற மேன்மை
கள் யாவும் உம்முடைய கிருபாதிசயமே: இல்லாவிட்
டால் உம்முடைய புஜபலத்தைப் பெற்ற இந்தத் தி
சையை நான் வெல்லமாட்டுவேனா ? ஆதலால் எல்
லாப் பொருள்களும் நீர்கொடுத்தவையே: இனியாகம்
நிறைவேற வேண்டியதும் உம்மாலேயே: ஆயினும்
தேவரீர் இந்திரப் பிரஸ்தத்திற்குச் சீக்கிரம் வரவே
ண்டுமென்று சொல்ல ஸ்ரீகிருஷ்ணன் நல்லதென்று
வெகுசந்தோஷமாய் நகுலனைக் கட்டிக்கொண்டு இ
ன்னுஞ் செயிக்கவேண்டியசிலராஜாக்களையுஞ் சீக்கிர
த்திற் செயித்து நகர்போய்ச்சேரென்று சொன்னார்.

அதுகேட்ட நகுலன் வெகுப் பிரீதியோடு அவ
ர்கொடுத்த வஸ்துக்களை வாங்கிக்கொண்டு விடைபெ
ற்றுப்புறப்பட்டு மத்திர தேசஞ்சென்று தன் நல்ல
ம்மானாகிய சல்லியமகாராஜனைக் கண்டுபணிந்து தா
ன்வந்த சேதிசொல்ல, அந்த மத்திரராஜன் கேட்டு
வெகுசந்தோஷப்பட்டு வெகு பொருள்களைக் கொடு
க்க நகுலன் அவைகளை வாங்கிக்கொண்டு சிலநாள்
அங்கேயேயிளைப்பாறிப் பின்சல்லியனிடத்திற்செலவு
பெற்றுப் புறப்பட்டுக் காந்தாரதேசஞ் சென்று திரு
தராஷ்டிர மகாராஜன் மாமனாராகிய சுபலமகாரா
ஜனைக்கண்டு பணிந்து வந்தசெய்திசொல்ல, அந்தச்
சுபல மகாராஜன் கேட்டு நகுலனுக்கு வெகுமரியா
தையோடு விருந்திட்டுப் பலவிதப் பொருள்களைக்
கொடுக்க அவைகளை வாங்கிக்கொண்டு அவ்விடம் வி
ட்டு உல்லாசத்தோடு திரும்பி சமுத்திரப் பிராந்திய
த்திலிருந்த - சாக்குவர் - பப்பரர் - என்கிற ஜாதியா
ரிடத்திற்குத் தூதரை யனுப்பி அபரிமிதமாகிய க
ப்பங்களை வருவித்துக் கொண்டு லாடதேசம் - கவுட
தேசம் - இவைகளுக்குப்போய் மகாவீரராகிய அந்த
ராஜாக்களுடனே வெகுகாலம் யுத்தஞ்செய்து பின்பு
அத்தேசத்தார் இவனுடைய பராக்கிரமத்தைப் பார்
த்து ஆச்சரியப்பட்டு சினேகிக்கும்படி அபிப்பிராயத்
தைக்காட்ட அவ்வாறே அவர்களோடு நேசஞ்செ
ய்து வெகு திரவியங்களைப் பெற்றுக் கொண்டு மிகு
ந்தகளிப்பு மிறுமாப்புமுள்ள சகல சேனைகளுஞ்சூழ-
பலவாத்தியங்களு முழங்க - வெகு பெருமை யோடு
இந்திரப் பிரஸ்தம் வந்துசேர்ந்து தருமபுத்திரரைத்
தண்டனிட்டுத் தான்போய் வந்தசெய்திகளைச் சொல்
லி அனேகங் கோவேறுகழுதைகளின்மீதிலும் ஒட்
டகங்களின் மீதிலும் வந்த சகல சம்பத்துக்களையுங்
காட்டினன். தருமபுத்திரர் வெகு சந்தோஷப்பட்டு
நகுலனை மகா ஆனந்தத்தோடுங் கட்டிக்கொண்டு
முத்தமிட்டு வெகு ஆசீர்வாதங்கள் கூறினார்.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி இந்திரப்பிரஸ்தத்திற்கெழுந்தருளல்.

கேளுமையா ஜெனமேஜெய மகாராஜனே ! இவ்
விதமாகத் தருமபுத்திர மகாராஜன் தம்பிமார் நால்
வரும் நான்கு திக்குகளைச் செயித்துக் கொணர்ந்த
திரவியங்களும் - குதிரைமுதலான வாகனங்களும் அ
பரிமிதமாகி அவ்வளவுங் கணக்கி லடங்காம லிருப்ப
தையும் - அனேகபொக்கிஷவீடுகள் பிடியாமலிருப்ப
தையும் - உலகமெங்கும் புகழப் பிரகாசிப்பதையும்பா
ர்த்து மட்டில்லா வானந்தமடைந்து, திக்குவிசயத்தி
ற்காகப் போயிருந்த சேனா ஜனங்களுக்குஞ் சேனாநா
யகர்களுக்கும் அளவற்ற வெகுமதிகளும் - மற்றும
னேக தான தருமங்களுஞ்செய்து மன்னுயிரெல்லாந்
தன்னுயிராய்நினைத்து நீதிவழுவாமல் அரசாட்சிசெ
ய்து வருகையில்; தேசமெங்கும் மாத மும்மாரிபெய்
து அதிவிருஷ்டி முதலாகிய ஈதிபாதைக ளொன்று
மில்லாமல் அக்கினிபயம் - வாயுபயம் - சோரபயம் -
வியாதிபயம் - இவைகளொன்று நாடாமல் பூமியிற்
சகலபயிர்களும் விருத்தியடைந்து சுபக்ஷேமமாயிருந்
தன. ஜனங்களெல்லாந் தங்கள் தங்கள் வருணாச்சிரம
முறை பிறழாமலும் மரியாதைகளைக் கடவாமலும்

தருமங்களை யனுஷ்டித்துக்கொண்டு இராஜாவைப் பிதாவைப்போலவும் புத்திரனைப்போலவும் பாவித்து வெகுவிசுவாசமா யிருந்தார்கள். அப்போது மூடனும், தரித்திரனும், துஷ்டனும், கிடையாமற் போனார்கள். சிவாலயங்களுக்கும் மற்றவாலயங்களுக்கும் ஒருகுறைவு மின்றிச் சகலசிறப்பு நடந்துவந்தன.

இவ்விதமாகக் கிருதயுகத்திலு நடவாத தருமராச்சியஞ்செய்து யாவரும்புகழ விளங்காநின்ற தருமபுத்திரமகாராஜனை ஒருநாள் மந்திரிகளும் பந்துக்களுஞ் சேர்ந்து, ஓ மகாராஜனே! நீர் நெடு நாளாய் நினைத்துக்கொண்டிருக்கிற மகாயாகத்தை நிறைவேற்றும்படியான காலம் இதுதான், சகலராஜாக்களும் வசப்பட்டிருக்கிறார்கள். இராச்சியம் சுபக்ஷேமமாயிருக்கிறது. குபேரனுடையபொக்கிஷத்திலு மதிசயிக்கத்தக்கபொக்கிஷங்கள் சேர்ந்திருக்கின்றன. இப்படி இடம்-பொருள்-ஏவல்-மூன்று மமைந்திருக்கின்றபடியினாலே யாகத்தைஆரம்பஞ்செய்யலாம்.என்றுசொல்லக்கேட்டதருமபுத்திரர் சரிதானென்றொப்புக்கொண்டு, யாகத்திற்கு யத்தினப்பட்டார். அந்தத் தருணத்தில் உலகங்களையெல்லாம் படைத்தளித் தழிப்பதற்குக்காரணனானவனும், தத்துவஞானிகளின் உள்ளத்தில் இடைவிடாம லிருப்பவனும், முக்காலத்துப்பொருள்களுக்கு மதிபதியாகியவனும், ஆதியும் அந்தமுமில்லாப் பெருஞ்சோதியாய் விளங்குபவனும், நான்மறைகளாலுஞ்சொல்லொணாப் பெருமையுடையவனும், சகல தேவர்களுக்குந் தலைவனுமாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தன்னை யாசிரித்தவரிடத்தி லிருக்கும் பேரன்பினாலே தாமே சகல பரிவாரங்க ளோடு கூடி வெகு ரத்தினங்கள் - பொன்கள்-வஸ்திரங்கள்-முதலாகிய எல்லாவற்றையும் வரிசையாகக்கொண்டு இந்திரப்பிரஸ்தத்திற்குவர; இச்சேதிகேட்ட பாண்டவர்கள் நகரத்தையும் அந்த நகரத்திலுள்ள மாடமாளிகைகளையும் அலங்கரிக்கக் கட்டளையிட்டு வெகு விபவங்களுடனே தாங்களவரை எதிர்கொண்டு தக்கபடி யுபசாரஞ்செய்து அழைத்து வருவதானார்கள்.

அப்போது அந்நகரத்துச்சனங்களால் வாசனை கட்டிய தண்ணீர் தெளித்து மலர்களுந் தளிர்களுந் தூவித் தோரணங்கட்டி வீடுகடோறும் பதாகைகளுயர்த்தி தீபவரிசைகளேற்றி இன்னு மிவ்விதமான அலங்காரஞ் செய்யப்பட்டு விளங்காநின்ற இந்திரப்பிரஸ்த நகரியின் வீதிகளில் ஸ்ரீகிருஷ்ணன் பாண்டவர்கள் சமேதராய் வருமளவில் ஸ்திரீகளும் புருஷரும் மஞ்சனமாடிக்கொண்டிருந்தவர் மஞ்சனமாடியபடியே: அலங்காரஞ் செய்துகொண்டிருந்தவர் அலங்காரஞ்செய்தபடியே: போசனம் பண்ணிக்கொண்டிருந்தவர் போசனம் பண்ணிய படியே ஆவலோடோடிவந்து வாசற்றிண்ணைப் புறத்திற் சிலரும்-உப்பரிகைகளின்மீதிற்சிலரும்-பதாகைகளினருகிற்சிலரும் கொடுங்கைகளின்மேற்சிலரும்-சுவர்கண்மீதிற்சிலரும்-மரங்களின்மீதிற்சிலரும் - வீதிகளிற் பலருமாகி ஸ்திரீகளென்றும் புருஷரென்றும் பாராமல் ஒருவர்மேலொருவர் விழுந்து நெருக்கிக்கொண்டு வஸ்திரங்கள் ஆபரணவிதங்கள் முதலானவை விழுந்துபோனதுந் தெரியாமற் பூரணசந்திரன்போன்ற வதனமும்-நிலவின்தோற்றம் போன்ற புன்னகையும் - அன்றுபூத்த செந்தாமரை மலர்போன்ற கண்களும்-பவழக்கடிகை போன்ற அதரமும்-நீலப்பலகைபோன்ற மார்பும்-யானைத்துதிக்கை போன்ற கைகளும் பொருந்தி திவ்விய ரத்னாபரணங்களா லலங்கரிக்கப்பட்ட மரகதக் குன்றுபோ லிராநின்ற திருமேனியுடனே பீதாம்பரமும் - வனமாலையும்-கவுஸ்துவமும்-சங்குச்சக்கரமுதலிய பஞ்சாயுதங்களுந் தரித்து கோடிமன்மத சுந்தரனாய் விளங்காநின்ற ஸ்ரீகிருஷ்ணனைப்பார்த்து கண்களி லானந்த பாஷ்பந் ததும்பவுந் தேக மயிர்க்குச்சடையவு மோகித்து சிலர் கட்டிக்கொள்வதுபோலவும், சிலர் முத்தமிட்டுக்கொள்வதுபோலவும், சிலர்சரச சல்லாபஞ்செய்வதுபோலவும், சிலர் திருவடிவருடுவதுபோலவும், சிலர் உபசரிப்பதுபோலவும், சிலர் உடனிருந்து விளையாடுவதுபோலவும், யாருக்கு எப்படிமனோரதமோ அப்படிக்கெல்லாம் பாவித்து ஆனந்தக்கடலிலாழ்ந்தார்கள். மாதர்களெல்லாம் மன்மத பாணங்களுக்கிலக்காகி மனந்தளர்ந்து மெய்சோர்ந்து, கஞ்சுகங்கிழிந் தமுலைகள்விம்மவும்-அரையில் ஆடையவிழ்ந்து வீழவும் - பெருமூச்சுகளுண்டாகவும் - கொண்டையின் சொருகவிழுந்து மலர்சொரியவும் -உடம்பெல்லாம் வியர்வைவிட்டு நடுக்கமுறவும் பரவசப்பட்டு, ஸ்ரீகிருஷ்ணனோடு சரசமாடும் பாவனைகளாலே பக்கத்திலிருப்போரைத் தழுவுவது முதலாகிய செய்கைகளைச் செய்து பைத்தியம் பிடித்தவர்போலுங் கள்ளுண்டவர்போலு மானார்கள்.

இவ்விதமாகக் கண்ணன் சகலஜெனங்கள்நெருங்கிய வீதிகளிற் பிரவேசித்துப்பாண்டவர் புடைசூழவருவதைப் பெரியோர்கள்கண்டு ஆசீர்வதிக்க முதுமைபொருந்திய மாதர்கள் பொரிகளிறைத்து வாழ்த்த மெள்ள மெள்ள அரண்மனைக்குட்சென்று, குந்திதேவி -திரௌபதி-சுபத்திரை-முதலானோரையுங் கண்டு, தகுந்தபடி உபசாரத்துடனே யோகக்ஷேமங்களை வினவி அவர்களால் மிகவுங்கொண்டாடப்பட்டுச்சந்தோஷமாயிருந்தார். அந்தக் கிருஷ்ணன்வந்தபோது அப்பட்டணத்தார் நெடுநாள் வெய்யலினால் வறண்டபயிர்கள் மேகம் வருஷிக்கக் கண்டா லெப்படியோ? அளவற்ற நாள் இருண்ட குகையி லிருந்தவர்கள் சூரியனைக் கண்டா லெப்படியோ? அப்படிச் சந்தோஷப் பட்டார்கள். பின்பு தரும புத்திர மகாராஜன் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஓ கிருஷ்ணா! நீர் எங்களிடத்திற் பரிபூரண கிருபைவைத்துச் செய்த சகாயத்தினாலே சகலராஜாக்களுங் கீழ்ப்பட்டார்கள். பூமியெல்லாம நமது சுவாதீ

(இராஜசூயயாகம்)

(REGISTERED-COPY-RIGHT.)

(சபாபர்வம்-௫௫-வது-பக்கம்)

னத்தி லிருக்கிறது. தனங்கள் அளவற்றதுகளா யிருக்கின்றன. யாவரும் வியக்கத்தகுந்த மேன்மையும் புகழுமுண்டாயிருக்கின்றன. ஒரு குறைவுமில்லை. ஆனபடியினாலே இந்த ரத்னமுதலிய தனங்களையெல்லாம் பிராமணர்விஷயத்திலும் - அக்கினி விஷயத்திலும் - உபயோகித்துக் கிருதார்த்தனாகவேண்டுமென்று நினைக்கிறேன். இதற்கு நீர்கட்டளையிட்டுக் கூடவேயிருந்து சகலகாரியங்களையும் நிறைவேற்றவேண்டும். எக்காலத்திலும் எக்காரியங்களுக்கும் எங்களுக்கு உம்மைவிட கதிவேறில்லை. ஆகையால் எனக்கு இராஜசூயயாகத்திற்காகக் கட்டளையிட்டு என்தம்பிமார்களைக் கூடவைத்துக்கொண்டு ஆகவேண்டியகாரியங்களை அமைதிபெறச்செய்து ரக்ஷிக்கவேண்டுமென்று விநயத்தோடு தருமபுத்திரர் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு தருமபுத்திரர் சொல்லியவார்த்தையைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் சொல்லுகிறார்: ஓ மகாராஜனே! உமது நன்னெறியினாற் சகலமுங் கூடிவரும். அந்தச்சாம்பிராச்சியத்திற்கு நீரே தகுந்தவரன்றி மற்றையார்தான் தகுவார்? ஆதலாலே அவசியம் நீர் இப்போது யாகத்திற் பிரவேசிக்கவேண்டும். ஒருகுறைவும் நேரிடாது. நீர் எந்தக் கட்டளையிட்டாலும் சிரத்தில்வகித்து நடத்தக் காத்திருக்கிறேன். உமக்குவரும் மேன்மைதான்எங்களுடையமேன்மை. உமக்கு இந்தக்காரியம் நிறைவேறினபின்புதான் நாங்களெல்லாங் கிருதார்த்தராவோம். ஆனபடியினாலே விசாரப்படாமல் யாகத்தை யாரம்பித்து நடத்தவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணன் சொல்லியதைக்கேட்ட உதிஷ்டிரர் வெகுசந்தோஷப்பட்டு, ஸ்ரீகிருஷ்ணனைப்பார்த்து, ஓ கிருஷ்ணா! எங்களிடத்தில் மிகுந்தகிருபையினாலே நீர்சொல்லிய வார்த்தைகளைக் கேட்க மிகவு மானந்தமாயிற்று. அந்தப்பிரகாரமே சகல பாரங்களையும் வகித்து யாகத்தை நிறைவேற்றுமென்று சொல்லித் தம்பிமாரை யழைத்து யாகத்துக்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்தும்படி கட்டளையிட்டார். அப்போது தமயனிட்ட கட்டளையின்படி சகாதேவனானவன் யாகத்துக்குவரும் பிராமணர்முதலிய நான்கு சாதியாருக்கும் வேண்டிய சகலபதார்த்தங்களைச் சித்தம்பண்ணும்படிக்கும் யாகஞ்செய்கிறபேர்களைத்தக்கபடி விசாரிக்கும்படிக்கும் தங்கள்சாரதிகளுக்குத் திட்டஞ்செய்து, தான் தவுமிய மகாமுனியின் சொற்படி நல்லபூமியில் வெகு விசாலமாகவும்-அழகாகவும்-பலமாகவும்-சாஸ்திரவிதிக்கு ஒத்ததாகவும்-யாகசாலையை நிருமித்தான். அன்றியும் வருஞ்சனங்களுக்கு வாசஸ்தலமாக ஸ்நானமண்டபம்-பூஜா மண்டபம் - அலங்காரமண்டபம் - ஆரோக்கியமண்டபம்- போஜனச்சாலை-ஆபரணச்சாலை - அமளிச்சாலை-அருந்தவச்சாலை-முதலிய வெகுமண்டபங்களுஞ் சாலைகளும் அளவற்றசித்திரவிசித்திரங்களோடு கண்டவர்கள் யாரும் களிக்கும்படியாக நிருமாணஞ்செய்வித்தான்.

வேதவியாசர்முன்னிலையில் தருமராஜன் யாகதீக்ஷைபெறுதல்.

இப்படி யாகத்துக்கு வேண்டிய காரியங்கள் நடத்திக்கொண்டிருக்கையிலே, ஸ்ரீ வேதவியாச மகாமுனி அவ்விடம் எழுந்தருளினார். அவரைஉதிஷ்டிரர் நமஸ்காரஞ்செய்து, ஓ எங்கள் குலகுருவாகிய சுவாமீ! தேவரீர் முன்னம் ஆக்கியாபித் திருந்தபடிக்கு ஸ்ரீகிருஷ்ணனுடைய சகாயத்தினாலே சகலராஜாக்களையுஞ் செயித்து, வெகு திரவியங்கள் கொணர்ந்து இராஜசூயயாகத்துக்கு ஆரம்பஞ்செய்திருக்கிறேன். தேவரீர் அதை எப்படி நடத்தவேண்டுமோ அப்படி நடத்தும்படி தயைசெய்யக் கோருகிறேனென்றார். அதுகேட்ட வியாசர் அப்படியே யென்று அங்கீகரித்து, யாகத்துக்கு வேண்டிய ரித்துவிக்குகளை யேற்படுத்தினார். யார்யாரை எவ்வெப்படி யேர்ப்படுத்தினாரென்றால - சுசர்மா என்கிற மகாமுனிவரை உத்காதாவாகவும், பைலவ முனிவ ரென்கிறவரையும் தௌமியமுனிவ ரென்கிறவரையும் ஹோதாக்களாகவும், யாக்கியவல்கிய முனிவரை அத்துவரியுவாகவும், சைப்பியமுனிவ ரென்கிறவரைப் பிரமாவாகவும் நியமித்துத் தாமும் பிரமாவாகவிருக்க வொப்புக்கொண்டார். இந்தரிஷிகளுடைய் புத்திரர்-பவுத்திரர்-இவரெல்லாம் அந்த நாலு ரித்துவிக்குகளுக்குக் கணமாக நியமிக்கப் பட்டார்கள். இவ்விதமாக வேதவியாசர் சிஷ்ய பரம்பரையோடுங்கூட வைதிகச் சடங்குகளை நடத்தச் சித்தமாயிருந்தார். பின்புமகாராஜாவினுடைய ஆக்கினையினாலே சகாதேவன் சகலதேசத்துராஜாக்களையும் அழைத்து வரும்படி யோக்கியராகிய தூதரையனுப்பிவித்தான். அன்றியும் தங்கள்தேசத்திலும் மற்றுமுள்ள ஆச்சிரமங்களிலு மிருக்கிற பிராமணர்-க்ஷத்திரியர் - முதலிய யாவரையும் அழைத்துவரத் தகுந்தபேரை யேவினான்.

இப்படி செய்யவேண்டிய சகலகாரியங்களையுஞ் சாக்கிரதைசெய்து, தமயனாரிடத்திற்சென்று தங்கள் கட்டளையின்படி எல்லாஞ்சித்தமாயிற்றென்றுசொல்ல உதிஷ்டிரர் திருப்தியடைந்து, தவுமியமகாமுனிவரையும் வியாசர் முதலாகிய பேர்களையும பார்த்துக் கைகூப்பிக்கொண்டு, சுவாமிகளே! யாகத்துக்கு வேண்டிய காரியங்களெல்லாஞ் சித்தமாயின. இனி அடியேனுக்குச் செய்யவேண்டிய வேதவிதியைக்கட்டளையிடவெண்டுமென்று சொல்லினர். வேதங்களே மூர்த்திகரித்து வந்தனவென்று சொல்லத்தக்க முனிவர்கள் அதுகேட்டு,புண்ணியாஹ வாசனஞ்செய்து, யாகசாலையைச் சுத்திபண்ணி வேதிகைகள்போட்டு இராஜவைப்பார்த்து, இனி நீர்தீக்ஷையிற்பிரவேசிக்கலாமென்றனர். உடனேயுதிஷ்டிரர்நகுலனையழைத்து,நீஅத்தினாபுரத்திற்குப் போய் வீஷ்மர் முதலாகிய பேர்களை

அழைத்துக்கொண்டு வாவென்று கட்டளையிட்டு ரிஷிகளைப்பார்த்துச் சித்தமாயிருக்கிறேனென்றுசொல்ல; அந்த மகாரிஷிகள் கேட்டை நட்சத்திரத்தின் நாலாம்பாதத்தோடு கூடிய நன் முகூர்த்தத்திலே உதிஷ்டிர மகாராஜனுக்குப் பூரணமாகிய கிருஷ்ணசனம் போர்த்து, மான்கொம்பைக்கையிற்கட்டி விதிப்படிதீக்ஷைசெய்வித்தார்கள். அந்தமகாராஜனும் அவர்களால் தீக்ஷைவகித்து, மகாநுபாவராகிய வெகுபிராமணர் சொஸ்திவாசனஞ் சொல்லிச் சூழ்ந்துவர யாகசாலையிற் பிரவேசித்தார். அப்போது வீமார்ச்சுனர்கள் மந்திரிகளோடுங்கூடி யாகசாலைக்கு வந்து வெகுவாகப் பூரிகொடுத்தார்கள்.

இப்படி யிருக்க நாநாதேசங்களிலிருந்து பிராமணர் முதலாகிய பேர்கள் வரத் தலைப்பட்டார்கள். அஸ்தினுபுரியிலிருந்து துரியோதனராஜனனவன் துச்சாதனன் முதலிய தம்பிமார்களுடனே வெகுகாணிக்கைகள் கொண்டுவந்தான். வீஷ்மர் - விதுரர்- துரோணர் - கிருபர் - அஸ்வத்தாமா - பாக்லிகன் - சோமதத்தன்-பூரி - பூரிசிரவன் - முதலானோர்களும் உசிதமாக அனேகந் தனங்களைக்கொண்டுவந்தார்கள். இவர்களை யெல்லாம் வீமார்ச்சுனுதியர்கள் கிருஷ்ணன் முதலானேரோடு எதிர்கொண்டழைத்துவந்து தகுந்தபடி மரியாதைசெய்ய, அவர்களும் ராஜாவைக்கண்டு சர்வசுதந்தரமாய் யாகத்திற்கு வேண்டிய சன்ஸ்ரீகங்களிலிருந்தார்கள். இவர்களுமன்றி கர்னன்-சல்லியன் - சகுனி - பலராமன்-துருபதன் - முதலாகிய சகல ராஜாக்களும் புத்திரமித்திரகளத்திராதிகளுடனே வந்தார்கள். பாண்டியமகாராஜன் தன்மகளையும் பேரனையும் அழைத்துக்கொணடுவந்தான். இவ்வாறு வந்த ராஜாக்களுக்கெல்லாஞ் சகாதேவன் தனித்தனியே விடுதிகளைச் சித்தப்படுத்தி வேண்டிய உபசாரங்கள் செய்தான். அப்போது அந்த இந்திரப் பிரஸ்தநகரமானது ரதகஜதுரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளால் நிறைந்து கடல்போல் இரைச்சலடைந்து, இது வேறொரு உலகமென்னும்படி விளங்கிற்று. வந்தராஜாக்களெல்லோரும் அனேகரத்தினங்கள்முதலாகிய காணிக்கைகளைக்கொண்டுவந்து கொடுத்து, மகாராஜாவைப் பார்த்துச் சந்தோஷ மடைந்தார்கள். அந்த உதிஷ்டிரர் யாவராலுஞ் சூழப்பட்டு, ஆகாசத்திற் சகலகிரகங்களு மொய்த்துக்கொண்டிருக்க ஒருசந்திரன் நடுவிலிருந்தாலெப்படியோ அப்படி விளங்கினர். அந்தயாகசபையில் ஒருபக்கத்தில் வேதகோஷ்டமும், ஒருபக்கத்தில் வித்துவான்களுடைய பிரசங்ககோஷ்டமும், ஒருபாரிசத்தில் வந்திகள் விருதோதுங் கோஷ்டமும், ஒரு பாரிசத்தில் வாத்தியகோஷ்டமுமாகி; நாதகோஷ்டமனைத்து மொன்ருய் வியாபித்ததுபோலுமிருந்தது.

இப்படிப்பட்ட யாகசாலையிலே யாகம்நடக்க ஆரம்பமாயிற்று, அப்போது தருமபுத்திரர் விதுரனைப்பார்த்து, ஐயா! தேவரீர் சகல மங்கலவஸ்துக்களும் ரசவர்க்கங்களும் எடுத்து யாவருக்குங் கொடுத்து வாருமென்று சொல்லியும், அஸ்வத்தாமாவையுஞ் சஞ்சயனையும் வந்தபிராமணரைவிசாரிக்கச்சொல்லியும், உயுச்சு என்கிறவனையும்-வீமசேனனையும் - சாத்தகியையும்-மடைப்பள்ளியிற்சமையல்விசாரிக்கச்சொல்லியும் திட்டஞ்செய்து; வீஷ்மத் துரோணுதிகளை எல்லாவற்றையும் மேல்விசாரணை செய்யும்படிக்கும், துச்சாதனனைப் பந்திவிசாரிக்கும்படிக்கும்,துரியோதனனை அவரவர்களுக்குச் செய்யவேண்டுவதான வெகுமானவஸ்துக்களைச் சித்தப்படுத்தும்படிக்கும், கிருபாசாரியரை வரிசைவருகிற தினுசுகளுடனே வஸ்திராதிதிரவியங்களை வாங்கிவைக்கும்படிக்கும், சகுனியை யாகதிரவியங்களையும் - நெய்முதலியவற்றையும்- வேண்டும்போது கொடுத்துவரும்படிக்கும், இப்படியே அந்தந்தக் காரியங்களிலே அவரவர்களை நியமித்தார். அப்படியே யாவருந் தங்கள் தங்களுக்கிட்ட பணிவிடையை ஜாக்கிரதையாய் நடத்திவந்தார்கள். குந்தி - சுபத்திரை - முதலாகிய ஸ்திரீகள் யாகத்திற்குவந்த பிராமண-க்ஷத்திரிய-ஸ்திரீகளுக்குச் சகலவுபசாரமுஞ் செய்து பூசிப்பதிற் சித்தமாயிருந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் வேதியர்க்குப் பாதப்பிரக்ஷாளனஞ்செய்கிற காரியம் என்னதென்றதா யேற்றுக்கொண்டு, மிகவும் அன்போடு அந்த நற்செய்கையைச்செய்துவந்தார். நகுலன் சந்தனபுஷ்ப தாம்பூலங்கள்கொடுத்துவந்தான். இவைகளினலே வந்தவர்களெல்லாம் மிகுந்த திருப்தியடைந்து, இப்படியொருகாலத்திலும் ஓரிடத்திலும் போஜன முதலாகியவைகளின் விசாரணை நடந்ததில்லை. இவ்வித சட்ருசியுமிருந்ததில்லை. இத்தன்மைத்தான மேலானசெல்வமுங் கண்டதில்லையென்று புகழ்ந்தார்கள். அன்றியும் அந்தப் போசனச்சாலையிற் கொடுங்கள் கொடுங்களென்றும், புசியுங்கள்புசியுங்களென்றும் பாண்டவர்களுடைய ஜனங்கள்சொல்ல; வந்தபேர்கள் போதும் போதுமென்றும், திருப்தி திருப்தி யென்றும் மறுமொழிசொல்ல; பெருங் கடலோசைபோற் கூச்சலுண்டாயிற்று.

இப்படிக்கு ஒருகுறைவுமின்றி அந்த இராஜசூயம் நடந்துவருகையில், ரித்துவிக்குகள் விதிப்படியே காருகபத்தியம் - ஆகவநீயம் - தக்ஷணக்கினி - ஸப்பியாக்கினி - ஆவசதாக்கினி - தாக்ஷயாக்கினி என்கிற ஆறு அக்கினிகளையும் வளர்த்திப் பூசைகள்செய்து, அனேக சமித்துக்களாலும் நெய்முதலாகியவைகளாலும் ஆகுதிசெய்தார்கள். வேதியர்கள் நான்கு வேதங்களையும் பாராயணஞ்செய்து வந்தார்கள். இந்த யாகத்தில் வானத்திலிருக்குந் தேவர்களும்- பூமியிலிருக்குந் தேவர்களும் -பூரணத்திருப்தியடைந்து மதித்துவாழ்த்தினர்கள். இப்படியிருக்கச்சுத்தியையென்கிற ஒருவிதியாகச்சடங்கு செய்யவேண்டிய நாள்வந்தது. அன்றைக்கு மகா சபைக்குப் பூசைசெய்யத்தக்க

தானபடியினுலே நாரதர் முதலாகிய தேவரிஷிகள், வியாசர் முதலாகிய பிரமரிஷிகள், கௌசிகர் முதலாகிய ராஜரிஷிகள், இன்னு மிகவும் யோக்கியராகிய எல்லாவருணத்துப் பெரியோர்களுஞ் சபையில் நிறைந்திருந்தார்கள். அப்படிப்பட்ட சபையையும், அதில் வந்திருக்கிற மகாபுருஷர்களேயும், பூமியின்பாரத்தைத்தீர்ப்பதற்காக அவதரித்திருக்கிற ஸ்ரீகிருஷ்ணனேயும் நாரதமகாமுனிபார்த்து; இப்படிப்பட்ட சபையை நாம் பிரமலோகத்திலுங் கண்டதில்லையென்று மனதில் வெகு ஆச்சரிய சந்தோஷங்களே யடைந்து, இக்கிருஷ்ணமூர்த்தி எனின்னம் துஷ்டசங்காரஞ் செய்யவில்லையென்று நினைத்தார். இந்த நினைப்பைச் சுவாமியறிந்து சிரித்துக்கொண்டிருக்க, யாகம்பார்க்கவந்த பேர்களெல்லாம் அந்தச்சபைக்கொரு நாயகமணி போல்விளங்கி நடுவில் ஒரு பொற்பீடத்தில் நீலமலே போன்ற திருமேனியும் - கிருபாரசம் பொழியாநின்ற தாமரை மலரோடொத்த கண்களும் - கவுத்துவம்-வனமாலே - சங்குசக்கர முதலியவைகளுமாய்க் கோடி சூரியப் பிரகாசம்பொருந்தி உட்கார்ந்திருக்கிற அவரைப் பார்த்து சிலர் அவருடை வடிவழகுக்கும், சிலர் அவருடைய மகிமைக்கும், சிலர் சாமார்த்தியத்திற்கும், சிலர் அடுத்தவரைக்காப்பாற்றுந்தன்மைக்கும், சிலர் அவருடைய திவ்வியகுணங்களுக்கும், சிலர்அவருடைய கடவுட்டன்மைக்கும் வசப்பட்டுப் பலவாறுகத் துதித்து மனமகிழ்ந் திருந்தார்கள். தருமபுத்திரரும் அந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சபையிலிருக்கு முல்லாசத்தைக்கண்டு, நம்முடைய சகல பிரயோசனங்களும் நிறைவேறினவென்று நினைத்து ஆனந்தப்பெருங்கடலி லாழ்ந்திருந்தார். ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியும் அவரவர்நினைப்புக்குத்தக்கபடி அவரவர்களேக் கடைக்கண்ணுற் பார்த்துக்கொண் டிருந்தார்.

அக்கிரபூசைகொண்ட கிருஷ்ணமூர்த்தியைச் சிசுபாலன் தூஷித்தல்.

இப்படிக்குத்தேசோமயமாய் விளங்கிக்கொண்டிருக்குஞ்சபையிலே அந்தச் சுத்தியாஹமென்னும் நாளிலே பிராதச்சவனம் - மாத்தியந்தினச் சவனம்- என்கிற இரண்டுகாலச் சடங்குகளுமானபின், சாயம் சவனமென்கிறசடங்குக் காரம்பமாகும்போது வீஷ்மர் தீக்ஷதராயிராநின்ற தருமபுத்திரரைப்பார்த்து, அப்பா தருமபுத்திரா! இப்போது, முன்னர் சபைக்குப் பூசிக்கவேண்டிய தானபடியினுலே அந்தந்த வருணத்தாரையுந் தனித்தனியே பூசைசெய்யவெண்டும். அதற்காக அர்க்கிய பாத்தியாதிகள் கொண்டுவந்து நடத்தென்று சொல்லினர். அவருமப்படியே பூஜாவஸ்துக்களே யழைப்பித்து கோஷ்டியில் நின்றுக்கொண்டு வீஷ்மரைப்பார்த்து, சுவாமீ குருகுல்பிதாமகரே! யாருக்கு முதற் பூசை செய்யவேண்டியதோ அதைக் கட்டளே யிடவேண்டுமென்று கேட்க வீஷ்மர் சொல்லுகிறுர். இந்தச் சபையிலிருக்கும் யாவருக்குநடுவில் அனேககோடி நட்சத்திரங்களுக்கு மத்தியிற் சந்திரன் போலவும் நவக்கிரகங்களின் நடுவிற் சூரியன் போலவும் யார்சிரேஷ்டராய் விளங்குகிறுரோ? பலம் - சவுரியம் - சாமர்த்தியம் - புத்தி - தைரியம்- தேஜசு - கம்பீரத்தன்மை - தயை - பொறுமை - அறிவு - விநயம் - இப்படிப்பட்ட சகல நற்குணங்களும் யாரிடத்திற் குடியிருக்கின்றனவோ? எவருடைய மகிமை சொல்லத் தரமில்லாததோ ?, எவருடைய தேஜோபலத்தைப் பற்றி இந்தயாகம் நிறைவேறிற்றே? அந்தப்பகவானே அதற்குத்தக்கவர். அவரை யன்றி அந்த அக்கிரபூசைக்கு யார் தகுவார்? ஆதலால் அவரையே பூசிக்கவேண்டியதென்று சொல்ல சரிதானென்று ஸ்ரீவேதவியாசரும் ஒப்புக்கொள்ள அப்போதே சகாதேவனே அர்க்கிய முதலியவைகளே யெடுத்துக்கொண்டுவரச்சொல்லி ஸ்ரீகிருஷ்ணன் சமீபத்திற்சென்று நமஸ்காரஞ்செய்து, அவருடைய திருவடித்தாமரைகளே ரத்தினமயமாகிய பீடத்தில் வைத்து திவ்விய பரிமளங்கள் சேர்த்த தண்ணீரினுற் சுத்திசெய்து கந்தபுஷ்ப தூபதீபாதி சோடசோபசாரங்களாலும் பூசித்து அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தைச் சிரத்தின்மேற் புரோக்ஷித்துக்கொண்டு புனிதனுனேனென்று கண்களி லானந்தபாஷ்டம் பெருகத் தேகம் புளகமுற்றுக் களித்து நின்றுர்.

இவ்விதமாக ஸ்ரீகிருஷ்ணனுக்கு முதற் பூசீன நடத்துவதைக்கண்ட தேவரிஷிகள் - பிர்மரிஷிகள்-ராஜரிஷிகள் யாவரும் தகும் தகுமென்றுசொல்லி வீஷ்மரையும் தருமபுத்திரரையுங் கொண்டாடினுர்கள். க்ஷத்திரியரிற் சிலர் பொறுமைகொண்டு உள்ளம்வெந்து சகிக்கமாட்டாமற் பெருமூச்சு விட்டுகொண்டு, ஒன்றுஞ்சொல்லத் தைரியமில்லாமல் நாலுபக்கங்களேயுஞ் சும்மாபார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்தக் குறிப்பை யறிந்த சகாதேவன் ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பூசை நடத்துவதற்காக ஒருவரும் பொறுமைப் படாதீர்களென்றுன். அதுகாலேயிற் சேதிதேசத்து ராஜனுகிய சிசுபாலன் பிறந்ததுமுதல்கிருஷ்ணனிடத்திற் கொடியபகை கொண்டவனுனபடியினுலே மனங்கன்றி முகங்கறுத்துக் கண்சிவந்து, உதடுதுடிக்கச் சபையைப்பார்த்துச்சிலவார்த்தைகள்சொன்னுன். ஓராஜாக்களே!இந்தசபையிற் சகலராஜாக்களுக்கும் அவமானமும் இடையனுக்குப் பூசனேயுங் கிடைத்தது சரிதான். இச்சபையில் அனேகம் பெரியோர்கள் வந்திருக்கிறுர்களே குறைவுண்டா வென்கிறீர்களோ? உண்டு. எப்படியென்றுல் - இந்தயாகத்தை நல்லசற்குலத்திற் பிறந்த க்ஷத்திரியன் செய்யத்தகும். இந்த உதிஷ்டிரனே பாண்டுமகா ராஜனுடைய பெண்சாதியாகியகுந்திதேவிக்கு விபசாரத்தாற்பிறந்தவன். முதலிற்றுனே யாககர்த்தாவின் செய்தி இப்படியாயிற்று. இவனுக்குத் தரும் முபதேசித்தானே அவன்

எப்படிப்பட்டவனென்றால் - குலதருமமா யிருக்கிற இராச்சியாதிபத்தியத்தைத் துறந்து பிரமசாரியாகித் துரியோதனன்கீழ் சோற்றுக்குக் காத்திருக்கிறவன். அன்றியுங் காசிராஜன்மகளை வாழவொட்டாமற் கெடுத்த மகாபாவி. குருவாகிய பரசுராமன் சொல்லைக்கேளாமல் அவரோடெதிர்த்து யுத்தஞ்செய்தவன். குருத்துரோகி. இவனுடையதாயோ? க்ஷத்திரிய கன்னிகையல்லள். சாபத்தினாற் பிறந்தவள். பிள்ளைகளைக்கொன்றவள். இவன் தகப்பனோ? அவள் சிசுஹத்திசெய்தாலுஞ் செய்யட்டும் நமக்குப் போகத்துக்கு உரியவளாக இருந்தாற் போதுமென்று ஒப்புக்கொண்டிருந்த மகாகாமி. இவனோ? வேஷம்போட்டுக்கொண்ட ஆசாமி. இதுசரிதானென்று ஒத்துக்கொண்டவன் மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த யோக்கியன். அக்ரபூசனையை யடைந்தவன் யாரெனில் - ஜாரசோரசிகாமணியாகிய இடையன். இப்படிப்பட்ட யோக்கியர் கூடியசபையில் க்ஷத்திரியர்களுக்குப் பூசனையெப்படி கிடைக்கும்? கிடைக்காது. என்று கூறிப் பின்னும் வீஷ்மரைப்பார்த்துச் சொல்லுகிறான்:

ஓ வீஷ்மா! நீ க்ஷத்திரியனென்றும் வெகுபுத்திமானென்றும் பேர்பெற்றுப் பூசனைக்கு யோக்கியனைக் கண்டுபிடித்து நன்றாய்த் தெரிவித்தாய். இவ்வளவு நாளும் நீ விவேகியென்று நினைந்திருநதேன். உன்னைப்போலறியாதவனை நான் கண்டதில்லை. ஆனாற் கிழத்தனம் வந்தபடியினாலே புத்திமாறிப்போய் இருக்கும். இப்படிக்கு வாய்த்தது கோபாலனுடைய அதிர்ஷ்டவசந்தான். நல்லதிருக்கட்டும். நீ தான் மதிமயங்கிச் சொன்னாலும், இச்சபையிலிருந்த புத்திசாலிகளுங்கூட ஊமைகள்போலிருந்தார்களே: அவர்களுக்கும் புத்திமயங்கிற்றோ? அல்லது அந்தமாயாவியாகிய கோபாலன் அறிவை மயக்கிவிட்டானோ? என்று சொல்லித் தருமபுத்திரரைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ தருமபுத்திரா! நீ இந்தச்சபையை உற்றுநோக்கவில்லையென்று தோற்றுகிறது. நோக்கியிருப்பாயேயாகில் முக்குலத்தரசர் முதலியோரைப் பார்த்திருப்பாயே: பார்த்திருந்தால் இந்த இடையனைப் பூசிப்பாயோ? மகாபுத்திமான்களெல்லாமிருக்க ஒருமூடக்கிழவன் பேச்சைக்கேட்டு இவ்வளவு ராஜாக்களையும் அவமானம்பண்ணாயே: இது உனக்குத் தகுமா? நீ விவேகியென்று பேர்பெற்றது யுக்தமன்று. நல்லது: நீ பூசிக்கத் தொடங்கினவன் குலத்திலுயர்ந்தவனா? செல்வத்திலுயர்ந்தவனா? புத்தியிலுயர்ந்தவனா? நடக்கையிலுயர்ந்தவனா? ஒருவிதத்திலுமுயர்வில்லாத ஒரு அற்பனிடத்தில் உனக்கு மதிப்புண்டாகியது காலபலந்தான். ஆ! ஆ! என்ன ஆச்சரியம்? மகாமண்டலாதிபதிகளெல்லாமிருக்க இராச்சியபட்டாபிஷேகமின்றித் திரிகிறவனுக்கு வெகுமானம்வந்ததே: ஓ! ஓ! வயதினாற் பெருமையைநோக்கினால், அவனுடையபிதா வசுதேவனிருக்கிறான். ஆப்தபந்துத் தன்மையை நோக்கினால், துருபத மகாராஜனிருக்கிறான். ஆசாரியனென்றால், தனுர்வேதமே மூர்த்திகரித்தது போலத் துரோணாசாரியரிருக்கிறார். மகாத்துமாவென்றால் சாக்ஷாத் நாரதமுனிவர் எழுந்தருளியிருக்கிறார். குலவிருத்தன் என்றால், வீஷ்மனிருக்கிறான். சௌரியத்தைப்பற்றியென்றால் ஆசாரிய புத்திரராகிய அசுவத்தாமா விருக்கிறார். அன்றியும் கிம்புருடருக்கெல்லா மாசாரியனாகிய மகா பராக்கிரமசாலியென்னுந் துருமனிருக்கிறார்.

இன்னுஞ் சவுரியத்திலும் பராக்கிரமத்திலும் மிகுந்தவரை நோக்கினால அர்ச்சுனனோடு சமானனாகிய ஏகலவியனென்னும் வேடனிருக்கிறான். பகதத்தனிருக்கிறான். ஜயச்சேனனிருக்கிறான். பிருகத்பலனிருக்கிறான். இவர்களை யெல்லாம்விட்டு இந்தக் கறுப்பனை என்னகாரணத்தினாற் பூசித்தாய்? இன்னும் பக்துக்களிற் பாண்டியராஜன் வந்திருக்கிறார். சல்லியனிருக்கிறார். பாக்லிகனிருக்கிறார். இவர்களை யெல்லாம் அவமானம் பண்ணத்தகாது. அன்றியும் பரசுராமர் சிஷ்யனாய்த் தனுர்வேத பாரங்கதனாகிய கர்னனையும் லக்ஷியஞ் செய்யாமற் போனதற்குக் காரணமென்ன? எனக்கு அவனிடத்திலேதான் இஷ்டமானதா லவனையேபூசிப்பேனென்கிறாயாகில் அதற்கு இப்படியாக யிருக்கிற மகாராஜாக்களை யாகத்திற்கு வரவழைக்கவேண்டியதென்ன? அல்லது உன்வீட்டிலே அவனுக்கு வேண்டியபடி பூசைசெய்யாமல் மண்டலாதிபதிகள் முன்னே சேவகனுக்குச் சமானமாகிய அவனைப் பூசிப்பது உனக்குத்தகுமா? நீ உனக்கு யாவரும் பயந்து கப்பங்கட்டிய தாகக் கர்வித்திருக்கிறாய். அப்படிக்கு நினையாதே. நீ தருமசீலனா யிருப்பதைப்பற்றிக் கொடுத்தார்கள். இல்லா விட்டால் இங்கே வந்திருக்கிற வீரருக்கு நீ எவ்வளவு? ஒரு மூடக்காகத்தைப் பற்றி அன்னங்களோடு பகைப்பதுபோல் கிருஷ்ணனைப்பற்றி மகாராஜாக்களோடு பகைக்கிறாய். இப்படி செய்வதுனக்கு வெகுசீக்கிரத்தில் தீமையைக்கொண்டுவந்து கொடுக்கும். உன்குலத்திற்கேற்ற புத்தி உனக்குண்டாயிற்று. ஒருகுணமு மில்லாத அற்பனைப் பூசித்ததற்குப்பயன் சீக்கிரத்திலேயே கிடைக்குமென்றுசொல்லி ஸ்ரீகிருஷ்ணனைநோக்கிச் சொல்லுகிறான்:

அடாகிருஷ்ணா! அவர்கள்தான் தெரியாமற்பூசித்தாலும் நீ இவ்வளவு மகா புருஷருடைய சபையில் அச்சமில்லாமலும்-உன்குலம் உன்னடத்தை முதலியவற்றை யோசிக்காமலும் - அப்பூசனையை யேற்றுக்கொள்ளலாகுமா? பெரியொர்களுக்காகச் சமைத்து வைத்த சோற்றை நாய்தின்னக்கூடுமா? அந்தப்பூசையையேற்றுக்கொள்ள வெட்கமாயிருக்கவில்லையா? உலகத்திலே ஒருவன் தனக்குத் தகாதனவற்றை யடைவதினால் அவமானமே யல்லது வெகுமானஞ் சம்பவிக்கமாட்டாது. அடா பயித்தியக்காரா! அடா மூடா! நீ பூசனைபெறுவது நகைப்புக் கிடமென்றறி

யாமற் போனாயே: துரியோதனாதிகள் சிரிக்கிறார்களே: ஆனால் இந்தச்சபையிற் பாண்டவர்களும் வீஷ்மனும் நீயுந்தான் இருக்க யோக்கியமேயல்லது, மற்றொருவரும் யோக்கியரல்லர். என்றுசொல்லிமற்றை ராஜாக்களைப்பார்த்து, நீங்களிந்தச் சபையிலிருப்பது நன்றாயிருக்கவில்லை. ஆதலால் விரைவில் எழுந்திருங்களென்று அழைத்துத் தான் சரோலென்று ஆசனத்தைவிட்டு எழுந்து சபைக்குப் புறம்பாகப்போனான். அப்போது தருமபுத்திரர் பின்னாலேயோடி, அவனையணைத்துப் பிடித்துக்கொண்டு ஒரு வார்த்தை சொல்லுகிறார். அப்பா சிசுபாலா! நீ கோபித்தல் யுக்தமன்று. பொறாமையாலும்-அறியாமையாலும்- கருவத்தினாலும்-வாயில்வந்தபடி பேசுவது புத்திமானுக்கு லக்ஷணமா? நீ நிந்தித்ததுபோல் இவ்வளவுகாலத்தில் வீஷ்மரை - வேதவியாசரை - ஒருவனும் நிந்தித்ததில்லை. அவர்களை அறிவில்லாதவர்களென்று எவனுஞ் சொல்லத்துணியமாட்டான். நீயிந்தச்சபையில் ஆராரைப் பெரியோர்களென்றும் விவேகிகளென்றும் நினைத்துச் சொன்னாயோ அவர்களெல்லாம் வீஷ்மர் சொல்லியது சரியென்றுங் கிருஷ்ணனை பூசிக்கத்தக்கவனென்றும் ஒப்புக்கொண்டு சந்தோஷத்துடனிருக்க, உனக்குமாத்திரமேன் வீணாய்க்கோபமுண்டாயிற்று? முற்றுமறிந்த பெரியோர்கள் சொல்வதை நாம் பெருமைபோடங்கீகரிக்க வேண்டும். நமது புத்திக்கு அது சரியாகத்தோற்றவில்லையென்று அவர்களை நாம் நிந்திப்பது நியாயமன்று. வீஷ்மரோ மகானுபாவர். எல்லாமறிந்தவர். அவர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய மகிமையைச் சரியாயறிந்திருப்பவர். நீயறியமாட்டாய். அன்றியும் இச்சபையிலிருக்குந் தேவரிஷிகள்-பிரமரிஷிகள் - ராஜரிஷிகள்-யாவரும் வீஷ்மர் சொல்லிய வார்த்தையைக்கேட்டு, இவர் மகாவிவேகியாதலாற் சரியாய்ச் சொன்னாரென்று சந்தோஷித்துக் கொண்டாடினார்கள். அப்படியிருக்க உனக்குமாத்திரம் ஏன் வீணான ஆக்கிரஷம் வருகிறது? வேண்டாம்: அந்தக் கோபத்தைவிட்டுவிடு. பெரியோரை நிந்தித்துப் பெரும்பாவியாகாமல் நற்குண நற்செய்கைகளோடுகூடி யாகம் முற்றுமாகிறவரையி லிருந்து சந்தோஷமாகப் போ. என்றுசொல்லிக்கொண்டிருக்கையில் வீஷ்மர் தருமபுத்திரரைப்பார்த்துச் சொல்லத் துவக்கினார்.

அப்பாதருமபுத்திரா! இந்தத் துராத்துமாவுக்கு நல்லவார்த்தை சொல்லலாமோ? சொல்லியும் பிரயோசனப் படமாட்டாது. இவனுடைய துர்ப்புத்தியைப் பார். லோக நாதனாகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்த பூசையைச் சகிக்காமல் அகங்காரப்படுகிறான். இப்படிப்பட்ட துஷ்டன்வேறொருவனுமில்லை. லோகத்தில் க்ஷத்திரியருக்குள் ஒரு தருமமுண்டு. அதென்ன வென்றால் - யுத்தத்தில் எவனையெவன் ஜயித்துப் பிராணனோடு விடுகிறானோ? அவனுக்கு அவன் குருவென்பதுதான் தருமம். நெடிய கடல்சூழ்ந்த இப்பூமண்டலத்தில் ஸ்ரீகிருஷ்ணனாலே ஜயிக்கப்படாதவர்யார்? இந்தச் சிசுபாலனும் உருக்குமணிவிவாகத்தின்போது ஜயிக்கப்பட்டவன்தானல்லவா? அப்படியிருக்க அதைக்கூட நினையாமற் குதிக்கிற இந்த மூடனுக்கு நல்வார்த்தை உதவாது. இவன் குருத்துரோகியாகிறான். எப்படிக்காயினும் இந்த ராஜமண்டலத்தைச் சோதிக்குமளவில், ஸ்ரீகிருஷ்ணனுக்கேயாவருந் தாழ்ந்தவராகக் காணப்படுகிறார்கள். இதுவே தகுந்ததென்றுதான் இச்சபையில் இருக்கும் பெரியோர்கள் சம்மதித்திருக்கிறார்கள். இந்த மூடனுக்குச் சம்மதியில்லாமற்போனால் கெடுதியென்ன? இப்போது ஸ்ரீகிருஷ்ணன் இச்சபையிலிருக்குமவர்களுக்குட் சிறந்தவனென்று சாதாரணமாய்ச் சொன்னேன். யதார்த்தமாய் அவர் மகிமையைச் சொல்லத்துவக்கினால், ஆதிசேடனுக்கும் அசாத்தியமாய் விடும். அவர் இந்த பூலோகத்தில் மாத்திரமே பூசிக்கத்தக்கவரன்றி வேறுலகிற்பூசிக்கத்தக்கவரோவெனில்சகலலோகங்களிலும் பூசிக்கத்தகுந்தவர். அவருடைய சரீரத்திலே சகல சராசரங்களுநிறைந்திருக்கின்றன. அவரிடத்தி லிருந்து தான் யாவுமுண்டாயின. இனியொடுங்குவதுமவரிடத்திலேயே; எல்லாவஸ்துக்களுடையசக்தியும் அதிசயமும் அவருடையவைகளே. அவரது கிருபையினாலே உலகங்களுக்குச் சகல மேன்மைகளுமுண்டாயின.

இப்படி எல்லாவற்றிற்குங் காரணமும் ஈஸ்வரனுமாகிய ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பூசைசெய்யாமல், மற்றயாருக்குப் பூசைசெய்வது? இந்தச் சிசுபாலனைக்காட்டிலும், வயதிலும் - பராக்கிரமத்திலும் - புத்தியிலும் - மேன்மையிலும்- சிறந்தவரனேகர் இச்சபையிலிருக்கிறார்கள். அவரெல்லாஞ் சந்தோஷித் திருக்க, இந்தப் பாவிக்கேன் இவ்வளவு கெர்வமும் - அகங்காரமும் - உண்டாயின? இவன் பெரியோர் நடந்தவழி நடப்போமென்று நினைக்காமல், நிலத்தில் வீழ்ந்த நெல்லிக்காய்போல் ஏன்குதிக்கிறான்? இப்படியிருக்க இந்தப்பாவிக்குச் சமாதானஞ் சொல்லலாமோ? தகுந்தசிக்ஷைசெய்தாலல்லவோ புத்திவரும். நான் வெகு ஞானிகளுக்குப் பணிவிடைசெய்திருக்கிறேன். அவர்கள் என்னிடத்தில் அனுக்கிரகம்வைத்து தத்துவஞானம் போதிக்குமளவில் அப்பொருள் இவர்தானென்றும், இவர் அவதாரமானதுமுதற் றான்செய்தமகா சரித்திரங்கள் இவையென்றுஞ் சொல்லி யிருக்கிறார்கள். அவைகளைக்கேட்டிருந்தவனானபடியினாலே அக்கிரபூசை யவருக்குச் செய்யச்சொன்னேனல்லது, தாக்ஷணியம்-பயம்-சிநேகம்-பிரயோசனம் - இப்படிப்பட்ட காரணங்களாலே செய்யச்சொல்லவில்லை. இதுகளிருக்கட்டும், லோகரீதியாய்ப் பார்த்தாலும் ஸ்ரீகிருஷ்ணனே உத்தமன். எப்படியென்றால - வேதியர்க்குள்ஞானமெவனுக்கு அதிகமோ? அவன்பெரியவன். க்ஷத்திரியருக்குள் பலமெவனுக்கு அதிகமோ? அவன்பெரியவன். இந்தகிருஷ்ணனிடத்தில் மேலாகியனு,

னமும் பலமு மிருப்பதுபோல, மற்றை யாரிடத்திலிருக்கின்றன? யாவரிலுஞ்சிறந்தவனென்னும்புகழ் யாடரித் திருக்கின்றது? இவையெல்லாம் உலகத்தை நன்ருய்ப் பரிசோதித்தால் தெரியும். அப்படியின்றிக்கிணற்றிலிருக்கும் ஆமைபோ லிருப்பவனுக்குத் தெரியுமோ? நல்லதாகட்டும். வேதவேதாந்த ஞானங்களிலும், தனுர்வேத ரகசியங்களிலும், இச்சபையி லிருப்போரைப் பரீக்ஷித்தால் அப்போதுதெரியும். சவுரியம்-புத்தி-பொறை-முதலாகிய சத்குணங்களும் அப்படியே பரீக்ஷைசெய்தறியலாம்.

இப்படிக்குச் சகலவிதத்திலும்பெருமையுடையவராய்ப் பிரமன் முதலாகிய தேவர்களாலும் பூசிக்கத்தக்கவரா யிராநின்ற ஸ்ரீகிருஷ்ணனை, நியாயமாகவும் தருமமாகவும் நாம் பூசித்திருக்க; இந்தத்துஷ்டன், இவனென்ன ஆசாரியனு- ஞானியா - குலகுருவா - இஷ்டபந்துவாவென்று கேட்டானன்ருே? ஆம் எல்லாமவர்தான். இதற்குச் சந்தேகமில்லை. இப்போதென்ன சொல்லுகிருன்? (கலசத்திற்குத்தெரியுமோ கர்பூரவாசனை.) என்பதுபோல், மகாபுருஷர் மகிமை பிறவிக்குருடனுக்குத் தெரியுமோ? இனியாவது இந்த மூடன் தெரிந்துகொள்ளட்டும். பிருதிவி முதலாகிய பூதங்கள்-தன்மாத்திரைகள் - பிரகிருதி - மகத்து - அகங்காரம் - இந்திரியங்கள் - அந்தக் கரணங்கள் - இவையாவும் ஸ்ரீகிருஷ்ணனுலேதான் சிருஷ்டிக்கப்பட்டு, அளிக்கப்பட்டு அழிக்கப் படுகின்றன. சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமனும் சங்கார கர்த்தாவாகிய சிவனும் இந்திரன்-அக்கினி-இயமன் - வருணன் வாயு-சூரியன்- சந்திரன்-இவரெல்லாம் இந்த ஸ்ரீகிருஷ்ணதேவனே. சகல ஆத்துமகோடிகளும் பல அண்டங்களும் பல அதிசயங்களுமா யிருக்கின்ற யாவும் இவரே. இவரல்லாதுதெய்வமில்லை. லோகத்தாரை அநுக்கிரகிக்கவேண்டு மென்று மனிதருக்குள் மனிதனுய் அவதரித்திருக்கிருர். வேதவேதாந்தங்களெல்லாம் இவர்பெருமையைப் பேசுகின்றன, யோகிகளும் தேவர்களும் இவரையே தொழுகின்றனர். வேதியரெல்லாம் இவரைத்தியானித்தே வேள்விசெய்கின்றனர். சுருக்கமாகயாவுஞ்சொன்னேன். இந்தப்பேதையாகிய சிசுபாலன் இவையெல்லாமறியாதவனுனபடியினுலே, அவரிடத்தில் மிகவும் அபசாரப்பட்டான். இப்போதாகிலும் மெய்யையறிந்து அவரைத் தொழுது வேண்டிக் கொண்டாற் கடைத்தேறுவான். இல்லாவிடிற் சீக்கிரத்திற் கெட்டுப்போவான். நாம்சகலலோகநாதனுகிய கிருஷ்ணனுக்குச் செய்தபூசை அநியாயமென்று இந்தமடையனுக்குத் தோற்றினுல், நாமென்னசெய்யலாம்? இப்போது இவன் யெல்லாரைப்போலும் நியாயத்தைநினைத்து இந்தச்சபையிலிருக்கமனமுண்டானு லிருக்கட்டும். சம்மதி யில்லாவிட்டாற் போகட்டும். அல்லது இன்னும் என்னசெய்ய வல்லமையிருக்கிறதோ அதைச்செய்யட்டும். இவனைநீர்சமாதானஞ் செய்யவேண்டாம். வாரும் தருமநந்தனுவென்று வீஷ்மர் சொல்லக்கேட்ட சிசுபாலன், காற்றினுலெழும்பப்பட்ட கனல்போற் கோபத்தினுற் சொலித்தான். அப்போது அவனைப்பார்த்துச் சகாதேவன் ஒருவார்த்தை சொல்லுகிருன்:

ஓ சிசுபாலா! நீ குணங்களையுந் தோஷங்களையும் எவ்வளவும் விசாரிக்காமல், வீணுய்க்கோபித்துக் கொள்வதிற்பயனென்ன? எல்லாவரசரும்-ரிஷிகளும்-பெரியோரும்-ஒத்துக்கொள்ளும்படிக்கும், உனக்கும் எனக்கும் மற்றவருக்கும் நன்மையுண்டாகும் படிக்கும், ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பூசைசெய்யலாயிற்று. இவ்விஷயத்தில் நீஅறியாமையாலும்-பொருமையினுலும்-பெரியோரை நிந்திப்பது மிகவும் இழிவாகிய செய்கை. நீ கிருஷ்ணனுடைய மகிமையை யாழ்ந்து நோக்காமற் போனுலும், உலகத்திலிருக்கு மரசர்க்கெல்லாம் அதிகமாகிய பலபராக்கிரமங்களுடையவரென்பதை என் நினைக்கவில்லை? நானிப்போதொன்று சொல்லுகிறேன் கேள். இந்தக் கண்ணனுக்கு முதற்பூசனை நடந்ததைக்குறித்து யார் பொருமைப்படுகிருர்களோ? அவர்கள் வில்லேந்தி யென்னுடன் போர்செய்யவரட்டும். அவர்களின் தலைமேல் இதோ இந்த இடதுகாலை வைக்கிறேனென்று சொல்லித்தூக்கினுன். இவ்வாறு சகாதேவன்யாவருங்கேட்கும்படி சொல்லிக்காலைத் தூக்கிக்காட்டவே, ஒருவருமொன்றுஞ்சொல்லாமற்சிலர்சந்தோஷத்தையும்-சிலர் மனவருத்தத்தையும்- அடைந்தார்கள். தேவர்கள் புஷ்பவருஷம் வருஷித்தார்கள். இவைகளை யெல்லாம்பார்த்த சிசுபாலனுக்குக் கோபமானது ஆகுதிசெய்யப்பட்ட அக்கினிபோற் ஜொலித்து கண்கள் ரத்தக்குமிழிகள்போலச் சிவந்து சுழலமிட, உதடு படபடவென்று துடிக்க, தேகமெல்லாம் வியர்வையரும்பி நடுக்கமுறப் பிரளயகாலத்து உருத்திரன்போல விருந்தான். அப்போது வீஷ்மர் சிசுபாலனையும் மற்றைப்பேர்களையும் பார்த்து, யாவரும் இந்தவார்த்தையைக் கேளுங்கள். என்னவென்ருல்- சகாதேவன் இப்போது சொல்லியவார்த்தை மெய்யாயும் நியாயமாயுமிருக்கிறது. இதன்மேல்யாருக்காவது ஏதாகிலுங் குற்றஞ்சொல்லத் துணிவிருந்தாற்சொல்லலாம். அல்லதுவலிமையைக்காட்டத் திறமிருந்தாற் காட்டலாமென்ருர். அதற்குப்பெரியோர்களெல்லாம், சரிதான்: சரிதான்: ஒருகுற்றமுமில்லையென்று கொண்டாடினுர்கள். இதுகளை யெல்லாங்கேட்ட தருமபுத்திரர் மனக்களிப்புடனே வீஷ்மரைப்பார்த்துக்கை கூப்பிக்கொண்டு ஒருவார்த்தை சொல்லுகிருர்: ஐயா குருகுலபிதாமகரே! நீர்யாவுமறிந்த மகானுபாவரன்ருே? அன்றியும் ஸ்ரீகிருஷ்ணனுடைய சரித்திரமும் மகிமையும் பலவுண்டென்றுசொன்னீர். அவைகளைச் சவிஸ்தாரமாகக்கேட்க ஆசைகொண்டிருக்கிறேன். ஆதலால் இங்கிருப்பவர்கள் யாவருமறியத்தயைசெய்து நன்ருய்ச்சொல்லவேண்டும். என்று தருமபுத்திரர்

அன்போடுகேட்க, காங்காபுத்திரர் அவ்வாறே அங்கிருப்போர்யாவரும் மனமொருமித்துச் சிரவணானந்தமாகக் கேட்கும்படி சொல்லத் தொடங்கினர்.

ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியினுடைய சற்கிருத்தியமகிமை.

ஓ தருமபுத்திர மகாராஜனே! இந்தப்பகவானுகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய அவதாரமகிமைகள் நீகேட்கிறபடியால் நானுஞ்சொல்லவிருப்புற்றிருக்கிறேன். அச்சரித்திரமகிமைகளை இச்சபையிலிருக்கும் பெரியோர் பலருமறிவர். அறியாச் சிலமாந்தருக்கும் "நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால்வழியோடிப் புல்லுக்குமாங்கே புசியுமாய்" என்கிறபடி இது கேள்வியாகிச் சென்மசாபல்யமுண்டாகட்டும். இதோ அருள்சுரக்கு நோக்கத்தோடு காளமேகம்போற் சபைக்கொரு நாயகமாய் விளங்காநின்ற மஹாபுருஷன்தான் சகலவேத வேதாந்தங்களினுலே அவியக்தமென்றும், அக்ஷரமென்றும், பராபரமென்றும், பிரமமென்றும், காரணமென்றும், காரியமென்றும், காரணுதீதமென்றும், சத்தென்றும், அசத்தென்றுஞ் சொல்லப்பட்ட பொருள். அவருடையசொரூபமும்-செய்கையும்-மகிமையும் - வாக்குக்கு மனதிற்கு மெட்டாதது. இன்னபடியென்று யாரும் நிச்சயிக்கவல்லவரல்லர். ஆகிலும் ஆதிகாலத்திற் சிரங்களாயிரம் - கரங்களாயிரம்-கால்களாயிரம் - கண்களாயிரம் - இப்படிப்பட்ட சொரூபத்தையடைந்து, சகலப்பிரமாண்டங்களும் மயிர்க்கால்களி லுழலும்படி அனேககோடிசூரியப்பிரகாசமாய் அளவற்ற சொரூபத்தோடு விளங்கினர். அக்கடவுளுடைய ரூபமும் ஒருபோதிருந்தபடி மறுபோதிராது. பலவிசித்திரமாயிருக்கும். அவருக்கு ஆதியுமந்தமுமில்லை. எல்லாவற்றிற்கு மவரேயாதியாயிருப்பார். பிரகிருதியென்றும் மாயையென்றுஞ் சொல்லப்பட்ட வஸ்துவுக்கு மேற்பட்டவர். அந்தவஸ்துவும் அவரிடத்திலேயே யிருக்கும். ஆனலும் அதிற்பற்றற்றவர். அவர் உலகங்களைச் சிருஷ்டிக்க நினைத்து முன்னே நீரையுண்டாக்கி, அதன்மேல் தான்கண்வளர்ந்துகொண்டிருந்தார். அதனுலே யவருக்கு நாராயணனென்னு நாமமுண்டாயிற்று. இவ்வாறு யோகநித்திரையிலிருந்து பிரமனையுண்டாக்கி, அவனைக்கொண்டு மற்றவுலகங்களை யெல்லாம் படைப்பித்துக் காத்துப் பிரளயகாலத்திற் படைக்கப்பட்டயாவையுமூட்கொண்டு தா மொருவராகவே ஒரே ரூபமாகியிருந்தார். அப்போதவர் விசுவரூபியென்று சொல்லப்பட்டார். ஏனெனில்-உலகங்களெல்லாம்அவருடையரூபமாய்க்காணப்படுமளவில் மேலாகிய சுவர்க்கம் அவருக்குச் சிரமாகவும், ஆகாசம் நாபியாகவும், பூமிபாதமாகவும், அசுவனிதேவர் செவிகளாகவும், சூரியசந்திரர் கண்களாகவும், இந்திராக்கினிகள் முகமாகவும், ஒவ்வொருதேவர்கள் ஒவ்வோருறுப்பாகவும், மற்றைச் சராசரங்களெல்லாம் அங்கமாகவு மிருந்தார்.

இவ்வாறு தாமேயாவுமாகி, யெல்லாவற்றினுள்ளு முறைபவருமாகி, நாராயணனென்று திருநாமம் பெற்றும்; முற்றும் அந்தகாரமாகவே யிருப்பதைக்கண்டு தாமேபிரமரூபியாகி அண்டத்தை யுண்டுபண்ணி, தமது சங்கல்பத்தினுலேயே எல்லாவுலகங்களையும் அவைகளின் வரன்முறைகளையும் படைத்து அகண்டாதிபதி[illegible] இந்திரனுதி[illegible]ர்களும், சனகர்முதலிய யோகிகளும், மற்றையரும் அவராலே சிருஷ்டிக்கப்பட்டார்கள். அன்றியும் தக்ஷர் முதலிய பிரசாபதிகளையும் படைத்தார். அவர்கள் அனேகரைச்சிருஷ்டிசெய்து உலகங்களைப்பெருக்கிப் பகவானுடைய லீலையை நிறைவேற்றினர்கள். இவ்வாருக எத்தனை தரமோ பிரபஞ்ச சிருஷ்டி வெவ்வேறு விதமாய் அவராற்செய்யப்பட்டது. எத்தனையோ பிரளயங்களுமாயின. சக்கரஞ் சுழல்வதுபோற் சிருஷ்டிப்பிரளயங்கள் ஓய்வில்லாமல் மாறிமாறி வந்துக்கொண்டேயிருக்கும். ஆனற் காரணனுகிய இந்நாரணன்மாத்திரம் என்றும் ஒரேவிதமாயிருப்பார். முன்னுரைத்தபடியே தனது அமிசத்தினுலே பிரமதேவனைப்படைத்து அண்டாதிபதியாகித் தாம் அவைகளைக்காக்கும்பொருட்டுத் திருப்பாற்கடலிற் பள்ளிகொண்டு, அங்கு யோகநித்திரையிலிருந்து அனுக்கிரகஞ்செய்துவந்தார். பிரளயத்தில் உருத்திரமூர்த்தியைக்கொண்டு யாவையும் அழிக்கச்செய்தார். இப்படியே மறுபடியும் பிரமனுயிருந்து சிருஷ்டித்து, வெகுகாலம் யாவுஞ் சுகாதிகளை யனுபவிக்கும்படி ரட்சித்துக் காலாக்கினி உருத்திரரூபியுமாகியழித்தார். அப்படியழித்தது பற்றி ஹரியென்கிற திருநாமமடைந்தார். அந்தத்தேவன் எந்தவேளையில் எப்படி யென்னசெய்யவேண்டுமென்று நினைப்பாரோ? அதற்குத் தடையொன்றுமிராது. தனதிச்சையின்படி யனேக ரூபங்களைக்கொண்டு செகத்தையழிப்பார். அப்படிப்பட்ட அவதாரங்களிதுவரையில் எத்தனையோ ஆயின. இனியெத்தனையோ ஆகும். இவைகளை முற்றுமறியயாரால்தரம். யான் பெரியோர்சொல்லினு லறிந்தமட்டுஞ் சிலவற்றைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்கேள்.

முன்னம் நீரையுண்டாக்கி அதிலண்டத்தைச் சிருஷ்டித்தாரே, அது கோழிமுட்டைபோல் நீரில்மிதந்து நீரினுல் நிறைந்திருந்தது. அதில் தான் பிரவேசித்து ஆலிலையிற் பள்ளிகொண்டு, தமது நாபியிலொரு தாமரைப்பூவையும் அதிற் பிரமனையும் படைத்து, அவனில் தாம் அனுப்பிரவேசித்துப் பதினுறு பிரசாபதிகளையும்-சப்தரிஷிகளையும்-கபிலமாமுனியையும்-ஏகாதசருத்திரரையும் - துவாதசாதித்தரையும் - பதினுலுமனுக்களையும்-சனகர்முதலியயோகிகளையும்-சப்தமருத்துக்களையும்- அஷ்டவசுக்களையும் - இந்திராதிகளையும் -மற்றுந்தேவரையுஞ் சிருஷ்டித்தார். அன்றி

யும் பிரகிருதியின்கல்மிஷாமிசத்தினாலே, காதுகளினின்றும் மதுகைடவனென்கிற இரண்டசுரரைச் சிருஷ்டித்தார். அவர்கள் பலபராக்கிரமங்களின் மிகுதியினாற் செருக்கடைந்து, வேதங்களைக் கவர்ந்து போனார்கள். அப்போது அந்தப்பகவான் நெடுநாள் அவ்வசுரரோடு போர்செய்து சங்கரித்து, அவர்கள் கேட்ட வரத்தின்படி யவர்களுடைய தேகங்களிலிருந்து பெருகித் தோய்ந்த மேதஸ் என்கிற கொழுப்பினாலே மேதினி என்கிற பேரோடுங்கூடிய இப்பூமியை யுண்டாக்கி, மறுபடியும் பிரமனுக்கு வேதங்களை யுபதேசித்தார். இவ்வாறாக அந்தந்தத் தேவர்முதலிய பேர்களிடத்திலுந் தான் அந்தந்த அமிசத்தினால் பிரவேசித்துச் சிருஷ்டி திதி சங்காரங்களென்னு முத்தொழில்களை நடாத்தினார். இவ்வவதாரத்திற்குப் பவுஷ்கரப் பிராதுர்ப் பாவமென்றுபேர்.

ஸ்ரீவராக அவதாரமகிமை.

பின் பொருகாலத்தில் இந்தப்பூமியானது ஜலத்திலே முழுகிப்போகக்கண்டு, தேஜசும் - பலமும்-மகிமையும் - பொருந்திய வோர்பெரிய பன்றியாகித் தன் கோட்டினாற் பூமியைத் தூக்கிவந்து நிறுத்தினார். அதற்கு யக்கிய வராகாவதாரமென்றுபேர். ஏனெனில் யக்கியங்களே அவருக்கு வடிவாயிருந்தன. எப்படியெனில் - நான்குவேதங்களும் நான்குபாதங்களாகவும், யூபஸ்தம்பங்களேதந்தங்களாகவும், அக்கினிப்பிரதிஷ்டை செய்கிறகுண்டமே முகமாகவும், அவ்வக்கினியே நாவாகவும், குசைகளே உரோமங்களாகவும், உபநிடதமே சிரசாகவும், இராப்பகல்களேகண்களாகவும், நெய்யின்தாரையே மூக்காகவும், சுருவையென்பதே வாயாகவும், சாமவேதகானமே சத்தமாகவும், சத்தியமும் - தருமமும் - சொரூபங்களாகவும், யாக மந்திரங்களே யெலும்புகளாகவும், பசுக்களே மூழந் தாள்களாகவும், யாகசாலையே தேகமாகவும், தக்ஷிணை இருதயமாகவும், இப்படியே யாகத்தினுறுப்புக்களெல்லாம் அவருக்கு உறுப்பாயிருந்தன. இப்படிக்கு மார்க்கண்டேயர் பார்த்து ஆச்சரியப்படும்படிக்கு மகாவராகரூபமெடுத்து, பூமியைக் கோட்டினாலேந்திப் பிறைதாங்கிய நீலமலைபோல் விளங்காநின்ற அந்தநாராயணமூர்த்தியைத் தேவர்களும் முனிவருந் துதித்தார்கள். பெரியோர்கள் முறைபிறழாமல் யாகங்களைச்செய்து பூசித்தார்கள். சுவாமி வராகாவதாரஞ்செய்து பூமியை நிலைநாட்டிப் பிரமனையோரிடறுமின்றிச் சிருஷ்டிக்கச்செய்தபடியால், இக்காலத்திற்கு வராககல்பமென்று பேராயிற்று. இந்த வராககல்பத்திற்கு முன்னாகியது பாத்மகல்பம். இவைகள்போல் ஆதியில் எத்தனையோகல்பங்களாயின.

ஸ்ரீ நரசிம்மாவதாரமகிமை.

நரசிம்மாவதாரத்தைச் சொல்லுகிறேன்கேள். இரணியகசிபு என்று ஒரு அசுரனிருந்தான். அவன் பலத்திலும் வீரியத்திலும்-சவுரியத்திலும-சிறந்தவன். அவன் ஒருகாலத்தில் மகாரணியத்திற் சென்று, ஆகார நித்திரைக ளில்லாமலும், வெயில் - காற்று-மழை - பனி - இவைகளைச் சகித்துக்கொண்டும், பதினாயிரத் தைஞ்ஞூறுவருஷம் பிரமதேவனைக்குறித்துத் தவஞ்செய்தான். அந்தத்தவத்தினாலே மிகுந்த சந்தோஷமடைந்த பிரமதேவன் சகல தேவர்களுஞ் சகலமுனிவர்களுஞ் சூழ்ந்துவர அவ்வனத்திற் சென்று, மலைபோலசைவற்றும்-உபவாசமுதலிய விரதங்களினாலே மெலிந்துலர்ந்தும் - பக்ஷிகள் முதலாகிய செந்துக்களின்மலங்களினாலுமண்டுேள்களினாலும் நிறைந்து விகாரப்பட்ட தேகத்தோடுங்கூடித் தபோநிட்டையி லுறுதியா யிராநின்ற அவ்வசுரனைப்பார்த்து, ஓ அசுரகுல சிகாமணியே! உன் தவத்தினாற் சந்தோஷித்தேன். என்னவரம் வேண்டுமோ அதைக் கேள் தருகிறேன். என்று சொல்ல அதைக்கேட்ட இரணியகசிபு தவத்தைநிறுத்திப் பிரமதேவனை வலம் வந்து பணிந்து, கைகூப்பி முடியின்மீதுவைத்துக் கொண்டு, ஓ சுவாமி! ஓ சகலலோக பிதாமகரே! என்னிடத்திற் கிருபைவைத்து வரந்தர வந்தபடியினாலே கேட்கிறேன். தப்பாமல் தரவேண்டும். அவ்வரமென்னவென்றால் - தேவர்களாலும், கருடகந்திருவ சித்தசாத்திய வித்தியாதர யக்ஷ கின்னர கிம்புருஷ குகியகர் முதலிய சகல தேவர்மக்களாலும், அசுரர் தானவர் - தைத்தியர் - ராக்ஷதர் - நாகர் - முதலான பேர்களாலும், மனிதராலும், முனிவருடைய சாபங்களினாலும், சிங்கம் - புலி - கரடி - யானை முதலான மிருகங்களினாலும், பக்ஷிகளினாலும், இன்னும் பலவிதமாகிய மரஙகள் - கொடிகள் - செடிகள் - கல்லுகள் - முதலாகிய ஸ்தாவரங்களினாலும், பூதப்பிரேத பிசாசங்களாலும், அபிசாரங்களினாலும், இராப்பகல்களாலும், எல்லா வாயுதங்களினாலும், சகலவிதப் பூச்சிகளாலும், எனக்குச் சாவில்லாமலிருக்கும்படி வரந்தரவேண்டுமென்று கேட்டான். பிரமதேவன்-அப்பா அசுரராஜனே! நீகேட்டவரம் மிகவுங் கடினமானது. ஆகிலுந் தந்தேனென்றுசொல்ல, இரணியகசிபுவெகு சந்தோஷத்தோடு அந்தத் தேவனை நமஸ்காரஞ்செய்து விடைபெற்றுத் தன் பதிபுகுந்தான். நான்முகக் கடவுள் சகல தேவரோடும் முனிவரோடுந் தமது லோகம்போய்ச் சேர்ந்தார்.

அப்போது தேவரெல்லாம் பிரமதேவனைப் பார்த்து, சுவாமி! சுபாவத்திலே தானே தேவர்களைத் தொந்தரை செய்பவனாகி வெகு பராக்கிரமங்களுடையவனாகிய அசுரனுக்கு ஒருவிதத்திலுஞ் சாவில்லா வரங்கொடுத்து விட்டீரே: இனி யவன் செய்யு முபத்

திரவங்களை யெப்படி யனுபவிப்போம்? எங்களுக்குக் கதி யென்ன? என்று சொல்ல அவர் அது கேட்டு, ஓ தேவர்களே! நாமென்னசெய்யலாம்? தவத்திற்குத் தக்கபயன் கொடுக்கவேண்டிய தியல் பாதலால் வரங்கொடுத்தேன். ஆகிலும்பகவான் அதற்குமோருபாய மேற்படுத்துவா ரென்று சொல்லத் தேவர்கள் சமாதானப்பட்டார்கள். இந்த இரணியகசிபனனவன் தனக்குச் சாவில்லாவரங்கிடைத்ததனாலே வெகுகெர்வமடைந்து பூலோகத்தி லிருக்கும் ராஜாக்களையுந் தவஞ்செய்யுமுனிவரையும் உபத்திரவப்படுத்திப் பின் புதேவர்-தானவர் - இயக்கர் - நாகர் - முதலாகியவர்களும் வருத்தப்படும்படியாக்கி, யாவுந்தனக்குச் சுவாதீனமாகவே இனித்தானே தேவனாயிருக்க வேண்டுமென்று நினைத்து, அஷ்டதிக்குப் பாலகர்களையும்-மற்றுமுள்ள தேவர்களையும்-அந்தந்த அதிகாரங்களினின்று நீக்கித் தானே அனேக வுருவங்களெடுத்து, அவ்வவ்விடங்களிலுந் தானேயிருந்து அதிகாரஞ்செலுத்த ஆயன்று யாவருந் தன்னையே கும்பிடவேண்டுமென்றும்-தன்னைக்குறித்தேவேள்வி முதலியவற்றைச் செய்யவேண்டு மென்றும்-அவிர்ப்பாகங்களை அசுரரே வாங்கவேண்டுமென்றும்-தேவர்களுக்குயாதொரு சிறப்புங் கூடாதென்றும் - அவர்களைக் கண்டவிடத்திற் கொல்லவேண்டியதென்றும்-இவ்வாக்கினையைக் கடந்துபார்நடக்கிறார்களோ அவர்களைச்சித்திரவதை செய்வேனென்றும் விளம்பரப்படுத்தி, வைதிகச்சடங்குகள்யாவையுமறுத்து, தேவர்களுக்கும்-முனிவர்களுக்கும் - பலவிதமான தீமைகளைச் செய்தான். இந்த நிற்பந்தத்தைச் சகிக்கமாட்டாமல் தேவர் முதலானோர் திகருத்திக்காயோடவும், எந்தத்திக்கிலோடினாலும் அசுரர்பின்றொடர்ந்து பிடித்துக் கொலைசெய்யவுமாகி, சகலலோகங்களும் இவனுடைய பயபீதியினால் மிகவும் பரிதாபத்தையடைந்தன.

இவ்வாறு மூன்று லோகங்களிலுந் தேவர்கள் தாவரிக்கமாட்டாமற் பிரமலோகஞ்சேர்ந்துமுறையிட்டுக்கொள்ள, அவரும் பொறுங்கள் காலம்வருகிறதென்று சமாதானஞ் செய்தார். இப்படிக்குத் தேவரெல்லா மோடிப்போய் மற்றயாவருந் தன் கட்டளையைமீறாமல் தனக்கே தேவோபசார பூசை முதலியவைகளைச் செய்துவர அவன்மூவுலகவாட்சியுமேற்று எதிரீடில்லாமல் மகாமகிமையோடு ஐந்துகோடி அறுபத்தொருலக்ஷத் தறுபதினாயிரம் வருஷம் வாழ்ந்து கொண்டிருந்தான். இவ்வாறு தேவர்முனிவர் முதலானவர்களைப் போலவே தருமம் சத்தியம் முதலானவை மிகச்சிறுமையடைந்து, அசுரர் தைத்தியர் முதலானோரைப்போலவே, அதருமம் அசத்தியம் முதலானவை பெருமையடைந்து இருந்தகாலத்தில்; சகல தேவர்களும் பிரமாவை முன்னிட்டுக்கொண்டு திருப்பாற்கடலினிடத்திற்குப்போய், அவ்விடத்தில் அநேககோடி சந்திரமண்டல காந்திபொருந்தி நாற்றிசைகளிலும் வெயில் பரப்பாநின்ற மணிச்சூட்டுகளோடு கூடிய ஆயிரஞ் சிரங்களை யுடைத்தாய், சூரியரைத் தாங்கு மாயிரங்கோடி முடிகளையுடைய வெள்ளிமலையோடொத்து விளங்காநின்ற ஆதிசேடனாகிய சிறந்த பாயலின்மீது, லோகரக்ஷணைக்காக யோகநித்திரை பொருந்தி, அப்பாற்கடலினகடெல்லாங் கருநெய்தற் காடுபூத்த தென்னும்படி பரவாநின்ற திருமேனிகாந்தியடைந்து, கருணாரச நிறைந்து, குளிர்ச்சிபொருந்திய கடைக்கண் பார்வைகளென்னு நீர்த்தாரைகளைப் பொழிந்து, சனகாதி மகாயோகிகளாகிய சாதகப்புட்களின் மனங்களைத் திர்ப்தி யடைவித்துக் கொண்டு இலக்குமியாகிய அழிவில்லா மின்னற் கொடியோடு கூடி, சார்ங்கமென்கிற விசித்திரமாகிய வில்லைத்தரித்து விளங்காநின்ற லோகநாயகனாகிய காளமேகத்தைக்கண்டுகளித்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரங்கள் செய்து கைகூப்பித் தலைமேல்வைத்து நின்றுகொண்டு, ஓ சகலபுவன கர்த்தாவே! ஓ முதலு முடிவுமில்லாப்பொருளே! ஓ வேதங்களாலுங் காணக்கூடாத பெருமையுடைய குணக்குன்றே! ஓ நச்சினார்க்குக்கற்பகமே! ஓ நண்ணார்க்குக்காஞ்சிரமே! ஓ கருணாகரக் கடவுளே! ஓ மகானுபாவா! ஓதாமரைக்கண்ணா! ஓ காயாம்பூவண்ணா! ஓ சக்கராயுதபாணீ! ஓ நாராயணமூர்த்தீ! உமதுதிருவடித்தாமரையிணையைச் சரணம்புகுந்த வெளியேங்களைக் கடாக்ஷம் வைத்துக் காத்தருளவேண்டும் என்று துதித்துப் பிரார்த்திக்க; பகவான் – ஓ தேவர்களே! நீங்கள் இரணியாசுரனுடையவாதை சகிக்கமாட்டாமல் வந்தீர்கள். தெரியும் பயப்படவேண்டாம். அந்த அசுரனைச் சங்கரிக்கிறேன். உங்களுக்கினி யொருகுறைவுமில்லை. என்றருளிச்செய்யக்கேட்ட யாவரும் பேராநந்தமடைந்து கீழேவிழுந்து விழுந்து நமஸ்காரஞ்செய்யப் பிரமனும்நமஸ்கரித்து, சுவாமி! நெடுநாளாய்ப் பதியிழந்து சுகமிழந்து வாதைப்படுகிற இத்தேவர்களிடத்திலும் அடியேனிடத்திலுங் கிருபைவைத்துத் துரிதமாக அவ்வசுரனைச் சங்கரிக்கவேண்டுமென்று வேண்ட; சுவாமியானவர் அப்படியே செய்கிறேன் போங்களெனக் கேட்டுத் தேவர்கள் பகவானைப் பற்பல விதங்களாகத் துதித்துத் திரும்பி வந்துவிட்டார்கள்.

இப்படியிருக்க அந்த இரணியனுக்குப் பிரகலாதனென்னு மகானுபாவனாகிய ஒருபுத்திரன் பிறந்தான். அவன் பிறந்ததுமுதற் பகவானுடைய திருவடிகளையே துதிப்பதும் பூசிப்பது மியல்பாகிய செய்கையாகக் கொண்டிருந்தான். அவனுக்குச் சகலகலைகளையுங் கற்பிக்கும்படி உபாத்தியாரிடத்திலொப்புவிக்க, அந்த உபாத்தியாயரும் அவ்வசுரராஜனுடைய கட்டளையின்படி அவ்விரணியனையே தெய்வமென்றும் மனோவாக்குக்காயமென்கிற திரிகரணங்களாலுஞ் செய்யவேண்டிய பூசனைகளெல்லாம் அவனுக்குத்தான்செய்யவேண்டு மென்றும் உபதேசிக்கக்கேட்டு, மகாஞா

னியாகியபிரகலாதன் அவ்வசனங்களையெல்லாங் கண்
டித்து, வேதாந்தங்கள் சொல்லுகிறபடி ஸ்ரீநாராயண
மூர்த்தியே கடவுளென்றும் - திரிகரணங்களாலுமவ
னையே பூசிக்கவேண்டியதென்றுஞ் சொல்லிப் பள்ளி
யிலோதும் பிள்ளைகளுக்கெல்லாமும் போதிக்க, இச்
செய்தியை அவ்வுபாத்தியார் அசுரராஜனுக்குத் தெரி
விக்க, அம்மாத்திரத்திலே மிகவுங்கோபித்துத் தன்
மகனைக் கொலைசெய்யும்படி கட்டளையிட, உடனே
அவ்வசுரனுடைய சேவகர்கள் பலவாயுதங்களினால்
வதைத்தும்- தீயிற்கொளுத்தியும் - மலைமேலிருந்துரு
ட்டியும் - கடலிலமிழ்த்தியும் - இன்னும் பலவிதச்செ
ய்கைகள் செய்தும் அக்குமாரன் சாகாமைகண்டு ஆச்
சரியத்துடன் இச்செய்தியை இரணியனுக்குத் தெரி
விக்க, அவன் நேரில் மகனைவருவித்து -அடா பிதுர்த்
துரோகி! பிஞ்சிற்பழுத்து யாரோவொருவ னிருக்கிற
தாய்ப் பிதற்றுகிறாயே: அவனெங்கேயிருக்கிறானென்
றுகேட்க, அதற்கு அந்தமகானுபாவன் அவனிருக்கு
மிடமின்னதென்றில்லை தூணிலு மிருப்பன் துரும்பி
லுமிருப்பனென்று சொல்லக்கேட்டு, ஆனால் இத்தூ
ணிற்காட்டு பார்ப்போமென்று கோபாக்கினிசொலிக்க
வெகு வேகத்துடனே எழுந்து, அருகிலிருந்த தூ
ணைக் காலினாலுதைத்தான். உதைக்கவே அத்தூணி
னின்றும் அடியாரைக்காக்குங்கடமையுடைய பகவா
ன் முகத்திற் சிங்கரூபமுந் தேகத்தில் மனிதரூபமு
மாகி நரசிங்காவதாரஞ் செய்து, பிறைபோன்றதந்தங்
களும் - பேழைபோன்றவாயும்-பரந்தமுகமும்- அன
லைக்கக்கும் விழிகளுமாக மிகவும் பயங்கரமாகிய வுரு
வத்தோடு, திகைத்துநிற்கு மசுரனைக் கோபத்தோ
டும்பார்த்து, துதித்துக்கொண்டு நிற்கு மவன்புத்திர
னைக் கருணையோடும் பார்க்க, இவ்வாறு இருவகைப்
பார்வையாற் பார்த்துக்கொண்டு வரக்கண்ட அசுரன்
கத்திகேடயங்களோடு யுத்தத்திற்கு யத்தனப்பட,
அப்படியே கொஞ்சநேரம் யுத்தஞ்செய்து காலமா
யிற்றென்று மனதில் நினைத்துச் சரேலென்று அந்த
இரணியனைப் பிடித்துப் பறபறவென்றிழுத்துக் கொ
ண்டுபோய்ப் பகலுக்கு மிரவுக்கும் நடுவாகிய சாயங்
காலத்தில் வீட்டிற்கும் வெளிக்கு நடுவாகிய வாசற்
படியில் நின்றுகொண்டு அவனைத்தொடைமேல் வை
த்துத் தமது நகங்களினாலே வயிற்றைப் பீறிக் கொ
ன்று, பிரகலாதனுக்கு அவ்வசுர ராச்சியத்தை யளி
த்து நன்மையோடிருப்பாயென் றனுக்கிரகஞ்செய்து
தேவர்களுக்கும் அவரவர்பதிகளைக்கொடுத்துச் சகல
லோகபயத்தையுந் தீர்த்துத் தருமத்தை நிலைநாட்டி
னார். இவ்விதமாய் இந்தக்கண்ணன் முன்பு நரசிங்
காவதாரமெடுத்துத் துஷ்டசங்காரஞ் செய்தார்.

ஸ்ரீவாமன அவதாரமகிமை.

கேளப்பா தருமபுத்திரா! முன்பு திரேதாயுகத்
திற் பலியென்று ஒரு அசுரராஜனிருந்தான். அவன்
யாரென்றால்-இப்போதுரைத்த பிரகலாதனுடைய மக
னாகிய விரோசனனென்கிறவனுக்குப் புத்திரன். வெ
குபல பராக்கிரமங்களுடையவன். மகாசூரன். கற்பக
மும் நிகராகாத கொடையாளி. அப்படிப்பட்ட அந்த
அசுரன் சகல அசுரரோடுங் கூடிக்கொண்டு சுவர்க்க
லோகம்போய் இந்திரனையும் மற்றத் தேவர்களையும்
யுத்தத்திற்செயித்து, அவர்களையெல்லாம் இராச்சியத்
தினின்றுந் துரத்திவிட்டான். இவ்வாறு தேவர்களெ
ல்லாம் அந்தப் பலியென்பவனாலே மிகவு முபத்திர
வத்தையடைந்து பிரமனைமுன்னிட்டுக்கொண்டுபாற்
கடற்சென்று சுவாமியைத்துதிக்க, அவர் தாம் கா
சிபருக்குப் புத்திரரா யவதரித்துக் காக்கிறே னென்
றுசொல்ல, அதைக்கேட்ட தேவர்கள் யாவருஞ் சந்
தோஷத்துடன் வந்துவிட்டார்கள். சுவாமியானவர்
உடனே காசிபப் பிரசாபதிக்கு அதிதி யென்கிறவள்
வயிற்றிற் பிள்ளையாய்ப் பிறந்து, இந்திரனுக்குத் தம்
பியாகி, விஷ்ணுவென்றும் உபேந்திரனென்றுந் திரு
நாமங்களைத் தரித்து விளங்கிக்கொண் டிருக்கையில்;
அந்தப்பலியென்னும் அசுரராசன் மூன்றுலோகங்
களையுஞ் செயித்து மகாசக்கிரவர்த்தியென்று பேர்
பெற்று அசுவமேதஞ் செய்யவேண்டுமென்று நினை
த்து அந்த யாகத்தைச் செய்கிறான். அந்தத் தரு
ணத்திலே உபேந்திரர் குள்ளனாகிய பிராமணப் பிர
மசாரி ரூபமெடுத்து வெள்ளிக்கம்பிபோன்ற பூப்பு
ரிநூல் மார்பிலிலங்க முண்டனஞ் செய்யப்பட்ட சிர
த்திற் கறுத்த குடிமிவிளங்க அரையிற் கௌபீனமும்
முஞ்சியும் பிரகாசிக்கக் கையிற் பலாசதண்டம் பிடி
த்து, வேதத்தை வாயினா லுருச்சொல்லிக்கொண்டு
பிரமதேஜசே இவ்வடிவெடுத்ததோவென்று ஐயமு
றும்படி அந்தப் பலிச்சக்கிரவர்த்தியின் யாகசாலைக்
குட் பிரவேசித்து ஆசீர்வதித்தார். அதுகண்ட சக்
கிரவர்த்தி எழுந்துவந்து அர்க்கியபாத்திய முதலிய
வைகொடுத்துப் பூசித்து சுவாமி எழுந்தருளிய காரி
யத்தைத் திருவாய்மலரவேண்டுமென்று கேட்க, வா
மனப் பிரமசாரியானவர் - ஓ அசுர மகாராஜனே! நீர்
மகா தாதாவென்றுகேள்வியுற்று ஒருபொருள்யாசிக்
கவந்தேன் தரவேண்டுமென்ன, அவன் அப்படியே
தருகிறேனென்ன, வாமனர் எனக்கு மற்றொன்றும்
வேண்டாம் உட்கார்ந்து ஜபஞ்செய்வதற்கு என்னடி
யால் மூன்றடிநிலம் வேண்டுமென்ன, அதுகேட்ட
அப்பலிச்சக்கிரவர்த்தி- ஐயோ! வெகுவாய்க்கேட்கக்
கூடாதா? இவரென்ன பயித்தியக்காரர் அற்பத்தைக்
கேட்டாரென்று அசமாதானத்துடனே வெகு நிலங்
கொடுக்கிறேனென்ன, அவர் எனக்கு அதிகம்வேண்
டாம் சுவாதீனமாக உட்கார மூவடிநிலந்தான்வேண்
டும் அதுவேயெனக்கு மூன்றுலோகமாகுங் கொடு
மென்ன, அசுரராசன் புன்னகையுடனே உமதடியா
லே மூவடி நிலந்தந்தேனென்று தாராதத்தஞ்செய்தா
ன். இப்படிதானஞ்செய்தபின் வாமனர் ஒருநொடியிற்
பிரமாண்டம்போல் வளர்ந்து மேலுலகங்கீழுலகங்களை

மூன்றடிகளாற் கவர்ந்துகொள்ள, பலிச்சக்கிரவர்த்தி மிகவும்நாணி வியப்படைந்து நிற்க, அவனுடைய மந்திரிகளாகிய விப்பிரசித்தி முதலான அசுரர் சூரியசந்திரர்தமதுமார்பிற்குச்சரியாய்வரும்படிக்கும் மலைகள் முழந்தாள்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கும்படிக்கும் வளர்ந்த ரூபத்தைக்கண்டு இவன் வெகு மாயாவி இவனைக் கொலைசெய்ய வேண்டுமென்று பருவத சமானமாகிய தேகங்களோடுங்கூடிய அவர்கள் கைகளிலாயுதங்களை யெடுத்துக்கொண்டு ஆகாசத்திலெழும்பிச் சுவாமியினுடைய தேகத்திற் பிரயோகிக்க, அவர் அவ்வசுரர்களைத் தமது மூச்சுக்காற்றினாலேயே சின்னபின்னமாகச் சிதறவடிக்க, அதுகண்ட பலிச்சக்கிரவர்த்தி இவர் தேவனென்றெண்ணித் துதிக்க, சுவாமி அவனைப் பாதாளத்திலோரிடத்திலிருக்கச் செய்து சுவர்க்க முதலாகிய லோகங்களை இந்திரன் முதலானோருக்குக் கொடுத்தார். அந்தச் சுவாமியின் மேலெதிர்த்த அசுரர் எப்படிப் பட்டவர்களென்றால்-கடலைக்குடிக்கவும், பூமியைச்சுருட்டவும், மலைகளைச்செண்டாடவும், கனலைவிழுங்கவும், கிரக நக்ஷத்திரங்களைப் பெயர்க்கவும், நினைத்த ரூபங்களெடுக்கவும் வல்லமையுள்ளவர்கள், அப்படிப்பட்ட பேர்களே மூச்சுக்காற்றிற்பட்டு அங்கங்கள்சிந்தப்பறக்கும்போது, அவர் வல்லமையை யார் சொல்லமாட்டுவார்? இவ்விதமாக வளர்ந்து மேலொரு திருவடியைத் தூக்குமளவில் அதனால் அண்டச் சுவர் பிளந்து, அதைச் சூழ்ந்திருந்த நீர் அப்பிளப்பின் வழியாய்க் கீழே சத்தியலோகத்தில்விழப் பிரமதேவன்முதலானோர் அதைப் பாததீர்த்தமாகக் கொள்ளப் பின்னுங்கீழாகப் பெருகிச் சந்திரமண்டல முதலாகிய விடங்களில் வியாபித்துத் தேவர்-கின்னரர்- முதலானோருந்துதித்துப் பூசிக்க மந்தாகினியென்கிற பெயர்வகித்துச் சுவர்க்கலோகத்திற் றங்கியது. அதனாலே அதற்கு ஆகாசகங்கையென்றும் சுவர்க்கலோக நதி யென்றும் பேர்களுண்டாயின. பின்பு லோகத்தாருடைய பாக்கிய வசத்தினாலே பூமியில்வந்து கங்காநதியென்று பேர்பெற்றுச் சகல பாபங்களையும் போக்கிக்கொண்டு விளங்குகின்றது. இவ்விதமாக இந்தப்பகவான் முன்னம் வாமனாவதாரஞ்செய்து வளர்ந்து மூவடிகளா லுலகத்தைக் கவர்ந்த படியினாலே, சகல தேவர்களாலுந் திருவிக்கிரமனென்னுந் திருநாமத்தைச் சொல்லப்பெற்றார்.

ஸ்ரீ பரசுராம அவதாரமகிமை.

பின்பொருகாலத்தில் வேதங்கள் - வைதிகக்கிரியைகள் - யாகங்கள் - சத்தியங்கள்- தயைகள் - பொறுமைகள் – தானங்கள் - தவங்கள் - முதலாகியசகல தர்மங்களு முழுகிப்போக, அதர்மங்கள் தலையெடுக்க, அதனாலே லோகம் நாசமடைந்திருக்கக்கண்ட இந்தச்சுவாமி அத்திரியென்கிற மகாமுனிக்குப் புத்திரராகித் தத்தாத்திரேயரென்று பேர்பெற்று, முழுகிப்போயிருந்த வேதவைதிக தருமங்களை முன்போல் விளங்கச்செய்து, உலகத்திற்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணினார். இந்த தத்தாத்திரேயரை ஹேஹயதேசத்து ராஜனாகிய கார்த்த வீரியார்ச்சுனன் குருவாகப்பற்றி நெடுநாள் பணிவிடை செய்ததினாலே அந்த முனிவர் வெகு சந்தோஷமடைந்து உனக்கு என்ன வேண்டுமென்றுகேட்க, அவன் எனக்கு ஆயிரங்கைகளுண்டாக வேண்டுமென்றும், மனிதர் - விலங்குகள் மரங்கள் - முதலாகிய யாவும் என்னாக்கினைக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டுமென்றும், தேவர்கள் - ரிஷிகள் பிதுர்த் தெய்வங்கள் - பிராமணர் - இவர்களுக்குத் திர்ப்திவரும்படி நான் யாகங்கள் செய்ய வேண்டுமென்றும், மூவுலகங்களிலும் எவனுக்குச் சமானமாக வொருவனுங் கிடைக்க மாட்டானோ? அப்படிப்பட்ட புருஷனாலே எனக்குமரணம் வரவேண்டியதென்றும், இந்நான்கு வரங்களைக் கேட்டான். அம்முனிவர் அப்படியே கொடுத்தார். அந்தக் கார்த்த வீரியன் வரங்கள்பெற்று வெகுபிரபாவ மடைந்து ஏழுதீவுகளோடுகூடிய பூமியைச்செயித்து, ஒருவருந் தருமத்தைக் கடக்கவொட்டாமல் ஜாக்கிரதை செய்து நான்குதேகங்களெடுத்துக்கொண்டு, ஒரு தேகத்தினால் அரசாட்சிசெய்தும் மற்றொருதேகத்தினாற் சேனைகளைக்காத்துச் சத்துருக்களைத் தும்சஞ்செய்தும் மூன்றாவது தேகத்தினால் யாகமுதலாகிய வைதிகக்கிரியைகளைப் புரிந்து நான்காவது தேகத்தினாலே அந்தப்புரத்திலிருந்து போகங்களை யனுபவித்துவந்தான். அவனரசாட்சிசெய்யுங் காலத்தில் திருடர்பயம் - வியாதிபயம் - முதலாகிய சகலபயங்களும், அதர்மசிந்தையும் கிஞ்சித்துமில்லாமற்போயின. அவனுடையபிரபாவம் விஸ்தாரமுண்டு. அதிலொன்று சொல்லுகிறேன்கேள். அவன் சமுத்திரத்திலிறங்கி நடப்பான். அப்போது சமுத்திரம் அவனுக்குப் பயப்பட்டு எவ்வளவு தூரம் அவன் போனாலும், அவன்வஸ்திரம் நனையாமல் அதற்குக்கீழாகவே போய்விடும். இவ்வாறாகப் பலமகிமைகளையுந் தத்தாத்திரேயமகாமுனியினுடைய அனுக்கிரகத்தினாற் பெற்றுப் பத்துலக்ஷம் வருஷம் மாகிஷ்மதியென்கிற பட்டணத்திலிருந்தான்.

இவனிப்படியிருக்க - ஸ்ரீமகா விஷ்ணுவானவர் பிருகுவமிசத்திற் பிறந்த ஜமதக்கினியென்கிற மகாமுனிக்குப் புத்திரராய், இராமரென்கிறபேரோடவதரித்தார். அவர்வெகுபல பராக்கிரமமும் - அஸ்திரவித்தியாசாமர்த்தியமு முடையவரானார். பரசு என்கிற கோடரியைக் கையிலேந்தியபடியாற் பரசுராமரென்று பேர் பெற்றார். அன்றியும் வேதசாஸ்திரங்களையும் நன்றாய்க்கற்றுப் பிதாவுக்குப் பணிவிடையும் வைதிக தருமங்களையுஞ் செய்து கொண்டு வந்தார். அந்த ஜமதக்கினிக்கு ஒரு காமதேனுவுண்டு. அது வசிஷ்டருடைய காமதேனுவைப்போல் வேண்டியவைகளைக் கொடுக்கும். அந்தப்பசுவினால் தம்மிடம்வருகிறபேர்க

ளுக்கு நன்றாய் விருந்து செய்வித்துக்கொண் டிருப்பார். இப்படியிருக்க அந்தக் கார்த்தவிரியன் வேட்டைக்கு வந்தவிடத்திற் சேனைகளை வெகுதூரத்தில் நிறுத்திப் போட்டு, ஜமதக்கினியின் ஆச்சிரமத்திற்குவந்து அம்மகாமுனியைத் தோழ, அவர் இன்றைக்கு நீ சேனைகளுடனே நமதாச்சிரமத்தில் விருந்துண்டு போகவேண்டுமெனக் கேட்க, அவன் அப்படியே யங்கிகரிக்க, அம்முனிவர்காமதேனுவைக்கொண்டு அரசனுக்குஞ் சேனைகளுக்குந் தேவருக்கு மரிதாகிய விருந்துசெய்வித்தார். அதைக்கணடு அவ்வரசன் ஆச்சரியமடைந்து அம்முனியை நமஸ்காரஞ்செய்து, இக்காமதேனுவை யெனக்குத்தரல்வேண்டுமென்று வெகுவாய்க்கேட்டான். அதற்கு அவர்சம்மதிப் படாமைப்பாலே மனதில் விசனமாய்ப்போனான். இதையெல்லாம் அந்தராஜாவின் புத்திரர் அறிந்து, ஒருநாள் பரசுராமனில்லாத வேளையில் அவ்வாச்சிரமத்திற் புகுந்து, ஜமதக்கினியை நிராகரித்து அக்காமதேனுவை யோட்டிக்கொண்டு போய்விட்டார்கள். அதற்கு ஜமதக்னி வருந்திச் சும்மாயிருக்க, அப்போதவருடைய மாணாக்கன் மனஞ் சகிக்காமற் சமித்துக் காகக் காட்டிற்குப்போய்வந்த பரசுராமனுக்கு இச்செய்திகளைத் தெரிவிக்க, அவர் கோபாக்கினியே மூர்த்திகரித்ததுபோலாகிக் கையிலாயுதத்தை யெடுத்துக்கொண்டு மாகிஷ்மதிபட்டணத்திற்குப் போக, அந்தக் கார்த்தவீரியன் இவர்வருகிற வேகத்தைப்பார்த்து இவர் சமாதானத்துக்கு உட்படமாட்டாரென்றறிந்து தானுந்தன்புத்திரரும் மந்திரிகள் முதலாகிய பேர்களோடு எண்பதக்ஷோகிணி சேனைகளுடனே சமுத்திரங் கரைபுரண்டுவருகிறதோவென்று சொல்லும்படி யுத்தத்திற்குச் சன்னத்தனாகி வந்தான். அப்போது இருவருக்கும் பலமானசண்டைநடந்தது. அந்தச்சண்டையிற் பரசுராமர் மிகுந்த கோபாவேசமடைந்து, தமது குடாரத்தினாலே அவ்வளவு சேனைகளையும் வெட்டிமடித்துக் கார்த்தவீரியனுடைய ஆயிரங்கைகளையும் துணித்துத் தேர் - குதிரை - பாதகை - வில் - கவசம் - கிரீடம் - முதலானவைகளையுஞ் சூரணஞ்செய்து, முடிவிற் சிரத்தையும் அறுத்துத் தள்ளினார். இப்படிக்கு அரசன்மடியக்கண்ட அவன்புத்திரரிற் சிலர் ரணக்களத்திற் கிரையாகாமற் போனவிடந் தெரியாமல் ஓடிப்போய் விட்டார்கள். அந்தப்பரசுராமர் சத்துருசங்காரஞ்செய்து வெற்றிபெற்றுத் தமது தகப்பனாருக்குத் தண்டனிட்டுச் சுகமாகவிருந்தார்.

இப்படியிருக்க - அந்தக் கார்த்தவிரியனுடைய புத்திரர் ஒருநாள் அவ்விராமர் ஆச்சிரமத்திலில்லாத வேளையிலோடிவந்து, தவஞ்செய்துகொண் டிருந்த ஜமதக்கினியின் தலையை வெட்டி விட்டோடிப் போனார்கள். அவரிறந்ததினாலே அவருடைய பிரியமாகிய மனைவி வெகுதுக்கத்தை யடைந்து, கோவென்று கதறிக்கொண்டு தலைவிரிகோலமாயோடிவந்து காட்டிற் சமித் தொடித்துக்கொண் டிருக்கும் பரசுராமரைப் பார்த்துக்கூவி இச்சேதியைச்சொல்லி, இரண்டு கைகளாலும் தன்வயிற்றி லிருபத்தொருதர மடித்துக் கொண்டாள். அதைக்கண்ட பரசுராமர் அளவற்ற துக்கமுங் கோபமு மடைந்து, இருபத்தொரு தலைமுறை இப்பூமியில் க்ஷத்திரியரைக் கொல்லுவேனென்று அங்கேயே சபதஞ்செய்து, அதுமுதல் வீராவேசத்தோடு க்ஷத்திரியப்பூண்டு பூமியில் தரிக்கவொட்டாமல் நாசஞ்செய்ய வாரம்பித்து அனேகமாயிரம் வீரரை மடித்தார். அப்பால் க்ஷத்திரியர் யாவருந் தரிக்கமாட்டாமல் திக்குத் திக்காய் ஓடியொளித்தாலும், உடனே பின்றொடர்ந்துபிடித்து வெட்டலால் க்ஷத்திரிய வமிசங்கள் பெரும்பாலு மற்றுப் போயின. இவ்வாறு நாற்கடல்சூழ்ந்த பூமிமுழுவதையுஞ் சுவாதீனமாக்கி, அனேக அசுவமேதங்களையும் நரமேதங்களையுஞ் செய்துவந்து, தம்மையாசித்த காசிபருக்குப் பூமிமுழுவதையுந் தத்தஞ் செய்தார். அப்போது காசிபர் என்பூமியில் நீரிருக்கவேண்டாமென்றுசொல்ல, அதைக்கேட்டு அப்படியே நல்லதென்று மேற்கடலின் கரைக்குப்போய்ச் சமுத்திரத்தில் தம்முடைய ஆயுதமாகிய குடாரத்தையெறிந்து, அக்குடாரம் வீழ்ந்தமட்டுஞ் சமுத்திரத்தை யொதுங்கிப்போகும்படி கட்டளையிட்டு அப்பூமியில் நாளதுவரையிற் சிரஞ்சீவியாய்த் தவஞ்செய்துகொண் டிருக்கிறார்.

ஸ்ரீ இராமாவதாரமகிமை.

பின்பு இந்தப்பகவான் ஸ்ரீராமாவதாரஞ் செய்ததைச் சொல்லுகிறேன் கேள். இந்தவைவச்சுத மனுவந்திரத்திலே இருபத்து நாலாவது சதுர்யுகத்தில இட்சுவாகுவமிசத்தனாகிய தசரதனென்றொரு மகாராசனிருந்தான். அவனுக்கு வெகுநாள் வரையிற் புத்திரருண்டாகம லிருக்க, அந்தராஜன் புத்திரர்நிமித்தம் அசுவமேதயாகஞ் செய்தான். அப்போது நான்முகன்முதலாகிய தேவர்கள் நாராயணனைப் பணிந்து, சுவாமி பகவானே ! பூமியில் இராவணனென்று ஒருராக்ஷஸனிருக்கிறான். அவன் வெகு சாமார்த்தியபலங்களும் வரபலங்களு முடையவன். அதனாலேயவன் செருக்கடைந்து தேவர்களையும் ரிஷிகளையும் வாதைப் படுத்துகிறான். அதைச்சொல்ல எங்களுக்குவல்லமையில்லை. அவனைத் தேவரீர் சங்கரித்து எங்களைக் காத்தருளவேண்டும் என்று பிரார்த்திக்க சுவாமியானவர் - ஓ தேவர்களே ! நீங்களஞ்சவேண்டாம். நான் மனுஷியாவதாரஞ்செய்து அவனைச் சங்கரிக்கிறேன். என்றுசொல்லத் தேவர்கள் அதைக்கேட்டு மனக்களிப் படைந்தார்கள். சுவாமி தாம்சொல்லிய வாக்கின்படி நான்குரூபமாகித் தசரதனுக்குப் புத்திரரா யவதரித்தார். எப்படியென்றால். அந்தத் தசரதனுடைய மூத்தமனைவியாகிய கவுசலைக்கு இராமனென்று திருநாமமுடைய வொரு குமாரனாகவும்,

மூன்ருவது மனைவியாகிய கைகயியென்கிறவளுக்குப்
பரதனென்னுந் திருநாமமுடைய வொரு குமாரனுக
வும், இரண்டாவது மனைவியாகிய சுமித்திரை யென்
பவளுக்கு இலட்சுமணன் - சத்துருக்கன் - என்கிற
இரண்டுகுமாரர்களாகவும் அவதரித்தார்.

இவ்வாறு நான்குபுத்திரர் பிறந்தமையால் தசர
தராஜன் வெகு சந்தோஷத்தை யடைந்திருந்தான்
அந்தக்குமாரர் நால்வருஞ் சகலகலைகளிலும் வல்லா
ராகி வளர்ந்துகொண் டிருக்குங் காலத்திலே,விசுவா
மித்திரமகாமுநிவர் வந்து தசரதமகாராஜனைக்கண்டு,
தமது யாகத்திற்கு இராக்கதர் வந்து தொந்தரவு
செய்யாம லிருக்கும்படி காப்பதற்காக இராமலட்சும
ணரை யனுப்பவேண்டுமென்று கேட்க, அவருமனுப்
பிவிக்க, அவ்விரண்டு ராஜகுமாரரையும் அழைத்துக்
கொண்டுபோய் யாகத்தை யாரம்பஞ் செய்யுமளவில்,
சுபாகு - மாரீசன் - தாடகை - முதலிய அனேகராட்
சதப்பிரஜைகள் வந்து தொந்தரைசெய்தார்கள். அப்
போது இராமலட்சுமணர்கள் சுபாகு -தாடகை-முத
லானவர்களைக் கொன்று, மாரீசனைக் கடலில் விழச்
செய்து யாகத்தைக் காத்தார்கள். அதனுலே விசுவா
மித்திரமுனி சந்தோஷமடைந்து, ஸ்ரீராமமூர்த்திக்கு
அனேக அஸ்திரங்களைக் கொடுத்து மிதிலாபுரிக்கு
அழைத்துக்கொண்டு போனுர். அந்த ஸ்ரீராமர் அவ்
விடத்தில் ஜனகமகாராஜன் சுல்கமாக வைத்திருக்
கும் வில்லைவளைத்தொடிக்கவே, அவ்வரசன் தன் மக
ளாகிய சீதாதேவியை அவருக்குக் கன்னிகாதானஞ்
செய்யும்படி நிச்சயஞ்செய்தான். பின் விசுவாமித்திர
ருடைய வார்த்தையினுலே இலட்சுமணருக்கு ஊர்
மளையென்பவளையும், பரத சத்துருக்கனருக்குத் தன்
தம்பியின் பெண்களாகிய மாண்டவீ - சுருதிகீர்த்தி-
யென்கிறவர்களையும் கன்னிகாதானஞ் செய்யும் படி
க்கு ஜனகமகாராசன் நிச்சயஞ்செய்து தசரதனுக்குச்
சொல்லி யனுப்பிவிக்க, அந்தராசன் பிள்ளைகளையழை
த்துக்கொண்டு வந்துசேர, நல்ல முகூர்த்தத்தில்
நால்வருக்கும் விவாகம் நடந்தது.

இவ்வாறு ஸ்ரீராமசுவாமி தானுந் தம்பிமார்களு
மாய் விவாகஞ் செய்து கொண்டு, அயோத்திக்குப்
போய்ச் சிலகாலஞ்சுகமாயிருந்து, பின்பு கைகயினு
டைய வாக்காகிய கயிற்ருற் கட்டுண்ட பிதாவின்
சொற்படி சகல போகத்தையுமிழந்து, மரையுரியுடுத்
துப் பாதசாரியாய்ச் சீதையுடனேயும் லட்சுமணருட
னேயுங் காட்டுக்குச் சென்று, சிருங்கிபேரபுரத்திற்
குகனென்பவனேடு நேசித்துச் சித்திரகூட பருவதத்
தைச்சேர்ந்து சிலநாளிருந்து, இராச்சியத்திற்குத்தி
ரும்பி வரும்படி பிரார்த்தித்த பரதனுக்குத் தனது
பாதுகைகளையளித்துத் தண்டகாரணியஞ் சென்று
விராதனென்பவனைச் சங்காரஞ்செய்து, அங்கிருந்த
ரிஷிகள் பிரார்த்தித்தபடி ராக்ஷதரைச்சங்காரஞ்செய்
கிறேனென்று பிரதிக்கினைசெய்து பஞ்சவடி யென்னு
மிடத்திலிருந்தார். அப்போது இராவணனுடைய தங்
கையாகிய சூர்ப்பனகியென்னு மிராட்சதிவந்து, கோ
டி மன்மத சுந்தரராயிராநின்ற ஸ்ரீராமரைப் பார்த்து
மயலடைந்து, சீதையிருந்தால் தன்னைச்சேரமாட்டா
ரென்று நினைத்து அவளை விழுங்கப்போக அதை
இலக்குமணர்கண்டு ஓடிவந்து கத்தியினுல் அவள்மூக்
கையுங் காதையு மரிந்துவிட்டார். அதனுலே அவள்
மிகுந்த துயரமுடையவளாகி ஜனஸ்தான மென்னு
மிடத்திலிருக்குந் தன்னுடன்பிறந்தவனுகிய கரனென்
பவனேடு முறையிட, அவன்பதினுலாயிரம் ராக்ஷச
சேனையுடனே சண்டைக்குவர, ஸ்ரீராமர் தாமொரு
வராகவே அவ்வளவு சேனைகளையும் அதின் றலைவரா
கிய கரன்-தூஷணன்-திரிசிரன் - என்கிற பேர்களையு
மொரு முகூர்த்தகாலத்திற் சங்கரித்து வெற்றிமாலை
சூட, அதுகண்ட சூர்ப்பனகி கோபம் - விசனம்-பொ
ருமை - இவைகளாற் கலங்கிய வுள்ளத்தோடு இலங்
கைக்கோடி இராவணனுக்கு இச்சேதியெல்லாஞ்சொ
ல்லிப் புலம்ப, அவன் மாரீசனென்பவனை மானுய்
விளையாடும்படி கட்டளையிட, அந்தமாரீசன்விசித்திர
மாகிய மானுகிச் சீதையிருக்குமிடத்தில் வந்து விளை
யாட, அதுகண்ட சீதை அதைத்தனக்குப் பிடித்துக்
கொடுக்கவேண்டுமென்று கேட்க, ஸ்ரீராமர் வில்லெ
டுத்துக்கொண்டு அந்தமானின் பின்ருெடர, அந்த
மான் கையிலகப்படாமல் நெடுந்தூர மிவரை யிழுத்
துக்கொண்டு போயிற்று.

அந்தத்தருணத்தில் இராவணன் சன்னுசியாக
வந்து சீதையைத் தூக்கித் தேர்மேல் வைத்துக்கொ
ண்டுபோய் இலங்கையிற்றனது உத்தியானவனத்திற்
சிறைவைத்தான். பின்பு இராமர்சீதையைக்காணுமல்
தம்பியுடன் புலம்பிக்கொண்டே தேடிப் போகும்
போது வழியிலிருந்த கபந்தனென்பவனைக் கொன்று,
அவன்சொற்படி பம்பையென்னு மாற்றின் கரையிற்
போய் அனுமான்மூகாந்தரமாய் ரிசியமூகத்திலிருந்த
சுக்கிரீவனேடு சினேகித்து, அவன் தமயனுகிய வாலி
யை யோரம்பினுல் மடித்து வானர ராச்சியத்தைச்
சுக்கிரீவனுக்குக் கொடுத்தார். அந்தச் சுக்கிரீவனு
டைய கட்டளையினுலே அனேகவானரர் சீதையைத்
தேடும்பொருட்டுத் திக்குத்திக்காய்ச் சென்று ஓரிடத்
திலுங் காணுமல்வர, அனுமா னென்னும் வானரன்
கடலைத்தாண்டி இலங்கையிற் சீதையைக்கண்டு அச்
செய்தி இராமருக்குத் தெரிவிக்க, அனேகமாயிரம்
வானரப் படைகளோடு புறப்பட்டுச் சமுத்திரத்தி
லணைகட்டி இலங்கையிற்புகுந்து இராவணனுடைய
சகல சேனைகளையும் - சேனுபதிகளையும் - மந்திரிகளை
யும் - புத்திரரையும் - தம்பியாகிய கும்பகர்ணனையும்
அந்தராவணனையுஞ் சங்கரித்துத் தேவரும் முனிவ
ரும்புகழ விபீஷணனுக்கு இலங்காராச்சியத்திற் பட்
டாபிஷேகஞ்செய்வித்துச் சீதையோடு புஷ்பகவிமா
னத்தின்மேற் சகல பரிவாரங்களுஞ்சூழ ஏறி அயோ

த்தியா நகரத்தில் வந்து பட்டாபிஷேகம்பெற்றுத் தேசங்களிலுள்ள ஜனங்களுக்கு ஒரு தீங்குமில்லாமல் தருமம் நான்குபாதங்களினாலும் வளரும்படிக்கு இராச்சியபரிபாலனஞ்செய்துவந்தார். இவ்விதமாய் அந்த ஸ்ரீராமமூர்த்தி தேவர்களுக்கும் -ரிஷிகளுக்கும்- சகல உலகங்களுக்கும் - சவுக்கியத்திற்காகப் பதினாலுவருஷந் தண்டகாரணியத்தி லிருந்து, ராக்ஷசர் முதலானவரைச் சங்காரஞ்செய்து, அப்படியே பட்டாபிஷேகமானபின் இலவணாசுரன் முதலானபேர்களைத் தம்பிமாரைக்கொண்டு கொல்வித்து, அனேக அசுவமேதங்களைச் செய்து தருமத்தை நிலைநாட்டினார். இப்படியவர்செய்த சரித்திரங்க ளெத்தனையோ விருக்கின்றன. அவதாரங்களு மனந்தமா யிருக்கின்றன.

ஸ்ரீ கிருஷ்ணாவதார மகிமை.

அப்பா உதிஷ்டிரா ! இந்தபபகவானுடைய மற்றொரு மனுஷ்யாவதாரமகிமை சொல்லுகிறேன்கேள். இதோ எழுந்தருளியிருக்கும் அவதாரந்தான் ஸ்ரீகிருஷ்ணாவதாரமென்று சொல்லப்படும். இவ்வவதாரத்திற்குக்காரணமென்னவெனில்-முன்புகிருதயுகத்திலே விரோசனன் - மயன் - தாரன் - வராகன்-சுவேதன்-லம்பன் - கிசோரன் - சுவர்ப்பானு - அரிஷ்டன்- க்ஷரன் - விப்பிரசித்தி - பிரலம்பன் - விருத்திரன் - சம்பன் - வலன்-நமுசி - காலநேமி-முதலாகிய அசுரருக்கும், இந்திரன் - அக்கினி - யமன்-வருணன்- வாயு ஏகாதசருத்திரர் - துவாதசாதித்தர் - சப்தமருத்துக்கள் - விசுவதேவர் - அசுவனிதேவர்கள் - சாத்தியர் முதலாகிய தேவர்களுக்கும் யுத்தமுண்டாயிற்று. அது தாரகாம்யமென்றுசொல்லப்பட்டுச் சகலலோகங்களிலுஞ் சகல சாஸ்திரங்களிலும் பிரசித்தமானது. அதற்குச் சமானமாகிய யுத்தம் மூன்றுலகங்களிலுங்கிடையாது. பார்த்த பேர்களுக்கு மாத்திரமேயல்லது, கேட்டபேர்களுக்கும் மனநடுக்கமுண்டாகும். அந்த மகாயுத்தத்தில் இரண்டுகக்ஷியிலும் அனேகமாயிரம்பேர் கத்தியினால்வெட்டுண்டவரும், ஈட்டியினாற்குத்துண்டவரும், குடாரங்களினாற் பிளப்புண்டவரும், அம்பினால் துளைப்புண்டவரும், காலற்றவர்— கையற்றவர்-மார்புபிளந்தவர்-தோள்கள் சரிந்தவர்-தலையறுந்தவர் - ஆயுதமொடிந்தவர் - வாகனமற்றவர் - இப்படியாக ரணக்களமெல்லாம் மலைமலையாய்ப் பிணங்கள் குவிந்திருக்கவும், உதிரவாறுகளோடவும், மகாபயங்கரமாயிருந்தது.

இவ்வாறு யுத்தம் நடக்கையில் அசுரராலே தேவரெல்லாம் முறிய அடிக்கப்பட்டு ஓடிப்போய் ஸ்ரீநாராயணனைத் தியானித்தார்கள். இவர்கள் தியானித்தமாத்திரத்திலே கருணைக்கடலாகிய அக்கடவுள் சங்கு - சக்கரம் - தண்டு - வாள் - வில் - என்னு மைந்தாயுதங்களுடனே கருடன்மேலேறித் தேவர்களுக்கு முன் தோற்றக்கண்டு, தேவரெல்லாம் பணிந்து வெகுசந்தோஷமடைந்து அசுரரை லக்ஷியஞ்செய்யாமல் மீட்டு மவ்வசுரரோடு போரிடத் தொடங்கினார்கள். அதுகண்ட அசுரர் இவர்களெல்லா மிவனுடைய பலத்தாலன்றோ மறுபடி யுத்தத்திற்கு வந்தார்கள். ஆனபடியினாலே இவனைத்தான் முன்னே கொல்லவேண்டுமென்று வெகு ஆக்குரோஷத்துடனே யெதிர்த்து விஷ்ணுவின்பேரில் வெகு ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். அப்போது இந்திரன்முதலாகிய திக்குப்பாலகர் வெகு உச்சாகமடைந்து, எதித்துவந்த அசுரரைப் பறந்தோடும்படி யடித்தார்கள். அதனாலே அவர்கள் தேவருக்கு முன்னிற்கமாட்டாம லோடுவதைக் காலநேமியென்னு மசுரத்தலைவன்கண்டு, ஓ அசுரரே ! இதென்ன இப்படி யோடுகிறீர்கள் ? இந்தத் தேவப் பூச்சிகளுக்குப் பயந்தால் இவ்வளவுநாளாய் நீங்கள் சம்பாதித்திருந்த கீர்த்தியும் பெருமையும் வீணாய்ப்போகுமே: திரும்பிவாருங்கள். நானொருவனே இவர்களையும் இவர்களுக்குப் பலஞ்செய்ய வந்தவனையும் ஒருநொடியில் இருந்தவிடந் தெரியாம லடித்துப் போடுகிறேன். என்சாமார்த்தியத்தைச் சற்றிருந்து பாருங்களென்று கூவியழைத்து, மறுபடியுஞ் சேனைகளைக் கூட்டிக்கொண்டு சண்டைக்குச் சித்தனாகி மகாவிஷ்ணுவுக்கு எதிரில்வந்து நின்றான்.

அவனெப்படிப் பட்டவனென்றால் - இரும்புமலையு மொருதாக்கிற் பொடியாய்ப் போகத்தகுந்த வலிமையும், அஞ்சனபருவதம் போன்ற தேகமும், சூரியமண்டலம்போன்ற கிரீடங்களைத்தரித்த நூறுசிரங்களும், அனல்பொழியுங் கண்களும், பிறைகள்போன்ற தந்தங்களும், அக்கினிச் சுவாலைபோன்ற நாவும், வெவ்வேறு ஆயுதங்களையேந்திச் சவுரியலட்சுமிக்குச் சிங்காதனங்களாகி ஆச்சாமரங்கள் போல விளங்காநின்ற இருநூறுகைகளும், செந்நிறமாய் முள்ளுகள் போலிராநின்ற மீசை தாடிகளோடுங் கூடிப் பயங்கரமானவடிவுடையவன். காலினுதையினாற்பூமியையும், தலையின்தாக்குதலினாலே சுவர்க்கத்தையு முடைக்கத்தக்கவன். சூரியசந்திராதிகளைக் கையினாற்பற்றி யெறியத்தக்கவன். பராக்கிரமமே மூர்த்திகரித்ததென்று சொல்லத் தக்கவன். அப்படிப்பட்ட அவன் வெகு கோபத்தினாற் கண்கள் ரத்தக் குமிழிகள்போ லாகிப் பிரளயகால மிருத்துவைப்போலவோடிவந்து, பெருங்காற்றானது செத்தைகளைத் தூக்கியெறிவதுபோல் இந்திராதி சகல தேவர்களையும் விளையாட்டாய்த் தூக்கி யெறிந்து திக்குத்திக்காகப் பறக்கச்செய்து, தோள்தட்டிச் சிங்கம்போலார்த்து, விஷ்ணுவெங்கேயிருக்கிறானென்று ஆரவாரித்துக் கொண்டே யோடிவந்து, அந்நாராயணமூர்த்தியோடு யுத்தஞ்செய்யவாரம்பித்துத் தனது இருநூறுகைகளிலிருக்கு மாயுதங்களினாலே தன் பலமுள்ளமட்டு மடித்தான். அப்போதே விப்பிரசித்தி முதலாகிய சகல அசுரத்தலைவருந் தங்

கள்தங்கள் சக்தியுள்ளமட்டு மாயுதங்களினலடித்தார்
கள். இவ்வாறடிபட்டும் விஷ்ணுவானவர் ஒருமகாப
ருவதமானது மேகங்க ளெவ்வளவு மழைபொழிந்தா
லு மதனுலொரு தீங்குமடையாததுபோல் ஒருவுபத்
திரவமுமின்றிச் சிரித்துக்கொண்டே நிற்க, அதுகண்
ட காலநேமி வெகு அகங்காரமடைந்து பொற்பட்ட
ங்கள்கட்டி மேருபருவதத்திற்குச் சமானமாகிய பல
மும் ரூபமுமுள்ள ஓர் கதாயுதத்தை இருநூறுகைக
ளினு லும்பற்றிச்சுழற்றிக் கருடன்மார்பிலும் விஷ்ணு
வின் மார்பிலும் அடித்தான்.

அவ்வடியானது மலையின்மேல் மற்றொரு மலை
வீழ்ந்தது போலும், கோடைகாலத்தி லிடிவிழுவது
போலும், யாவருடைய மனங்களும் நடுநடுங்கும்படி
கிடுகிடென் றிரைச்சலோடும் வீழ்ந்தது. இதனுலும்
அந்தத்தேவன் எவ்வளவேனு முவத்திரவமடையாமல்
அசைவற்று நின்றூர். ஆனல் அந்த அடியினலே கரு
டனுக்குக் கொஞ்சம் வருத்தமுண்டாக, அதை அவர்
நோக்கி வெகு கோபமடைந்து, பிரளயகால சூரியன்
போற் பிரகாசித்துக் கொண்டு ஆயிரம் அரங்களோடு
கூடி யிராநின்ற சுதரிசன மென்னுந் தமது சக்கரத்
தைப் பிரயோகஞ் செய்து, அந்தக் காலநேமியினு
டைய இருநூறுகைகளையும்-நூறுதலைகளையும் - அவ
னேடு கூடவந்த அசுரருடைய தலைகளையும் அறுத்
துத் தள்ளிப்போட்டார். ஆனல் அப்போது தலைய
றுப்புண்ணுதவர்கள்மூவரே:அவர்யாரென்றூல்-விரோ
சனன் - மயன் - சுவர்ப்பானு - இம்மூவர்தான். இப்
படி இவர்சத்துருக்களைத்தொம்சஞ்செய்து, தேவர்க
ளை முன்போல் அவரவர் பதிகளிலேயே நிலைநிறுத்திச்
சகல லோகங்களுக்கும் க்ஷேமத்தை யுண்டுபண்ணி,
யாவரும் பூசிக்கப் பிரமலோக மெழுந்தருளித் தமது
கோயிற் புகுந்து, பாம்பணைமேற் கண்வளர்ந்து கொ
ண்டிருந்தார். இப்படி கிருதயுக ஆதியிற் படுத்துக்
கொண்டவர், துவாபர யுகத்தின் கடைசியில் தேவர்
களும் - யோகிகளும் - திருப்பள்ளி யெழுப்ப வெழுந்
திருந்தார். அதுவரையிலும் ஆகிய வருஷங்கள் முப்
பத்தாறு லக்ஷங்களாயின.

இவ்வாறு நித்திரையில் நின்று மெழுந்திருந்து
மகாமேருபருவதத்தி லிராநின்ற வொரு தேவலோக
த்திற்கு எழுந்தருளி, லோகக்ஷேமத்தை விசாரிக்கிற
நிமித்தம் அங்குள்ள தேவசபைக்குவந்தார். மற்றும்
பிரமன் முதலாகிய தேவர்களும் அச்சபைக்கு வந்து
சேர்ந்தார்கள். இப்படி யிருக்குமளவிற் பூமிதேவியா
னவள் கண்களில் தாரைதாரையாய் நீர்வடிய அந்தச்
சபைக்குவந்து, தேவர்களையும் அத்தேவர் நடுவில்
மகாவிஷ்ணுவையுங் கண்டுபணிந்து, சுவாமீ லோகநா
தா ! பூமியில் அசுரரெல்லாம் ராசாக்களாய்ப் பிறந்து,
அனேகஞ் சேனைகளைக் கூட்டிக் கொண்டு தருமவி
ரோதிகளாய் நிறைந்திருக்கிறூர்கள். அதனலே என
க்கும் பாரமதிகமாகி மிகவும் வருத்தமுண்டா யிருக்
கின்றது. ஆதலால்அவர்களைச் சங்காரஞ்செய்து என்
வருத்தத்தைத் தீர்க்கவேண்டுமென்று சொல்ல, அது
கேட்ட பகவானனவர் தாம் பூமியில் மனிதனய்
அவதரிக்கவேண்டுமென்று நினைத்து அப்படியே யவ
தரித்தார். முன்னிவராற் கொல்லப்பட்ட காலநேமி
முதலானபேர்கள்தான் கம்சன் முதலான பேர்களாய்
ப்பிறந்தார்கள். இவர்களைச்சங்கரிக்கிறதற்காக இந்தக்
கிருஷ்ணவதார மெடுத்தார். அதன்படி துஷ்டரைச்
சங்கரித்துப் பூமிபாரம் நீக்கிவருகிறூர். இதற்கப்பால்
கல்கியென்று ஒரு அவதாரஞ் செய்யப்போகிறூர். எ
ன்று சொல்லிய வார்த்தைகளைக்கேட்ட தருமபுத்திர
ர் வீஷ்மரைப்பார்த்து, சுவாமி! இந்த அவதாரத்தி
ற்செய்த புண்ணிய சரித்திரங்களை ஆதிமுதல் சவிஸ்
தாரமாகச் சொல்லவேண்டு மென்று கேட்க வீஷ்மர்
மறுபடியுஞ் சொல்லுகிறூர்.

கேளப்பா தருமபுத்திரா ! அந்த லோகநாத
ராகிய நாராயணமூர்த்தி தாம் நினைத்தபடியே நல்ல
காலத்தில் சகலதேவர்களும் ஆகாசத்தில் கீதவாத்தி
யங்கள் முழக்கிப் புஷ்பவருஷம் வருஷித்துத் து
திக்க யயாதிவமிச திலகனகிய வசுதேவனுக்குத்
தேவகி தேவியின் வயிற்றில் அவதரித்தார். முன்ன
மே இவருடைய கட்டளையினலே சகலதேவர்களும்
அப்சரசுகளும் யாதவாளாகவும் கோபாலாளாகவும்
பிறந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த மாத்திரத்தில்
நந்தகோபனுடைய மனையை யடைந்து வெகு சிறப்
பாய் வளருங்காலத்திலே, ஒருநாள் அசோதை ஸ்ரீகி
ருஷ்ணனைத் தொட்டிலில்விட்டு வேறுகாரியத்தி லி
ருந்தாள். அப்போது அந்தத் தொட்டிலின் சமீப
த்தில் ஒருசகடமிருந்தது. அதில் ஓரசுரன் பிரவே
சித்து, ஸ்ரீகிருஷ்ணனைக் கொல்லச் சமயம்பார்த்துக்
கொண்டிருந்தான். அதுதெரிந்த பகவான் கால்களை
யுதைத்துக்கொண் டழும்போது அந்தத் திருவடி
தாக்கி அச்சகடமுடைய, அதிற் பிரவேசித்திருந்த
அசுரன் சொரூபத்தோடு மரித்துப் பூமியில் விழுந்தி
ருக்கக்கண்டு யாவரு மாச்சரியப்பட்டார்கள். மற்றொ
ருநாள் பூதனை யென்னுமொரு ராக்ஷசி தாய்வடிவ
மாய்வந்து கிருஷ்ணனைப் பரிவோடு முலைகொடுக்க
வெடுக்கின்றவள் போலெடுக்க, அக்கருத்தறிந்த கண்
ணன் முலைப்பாலோடு அவளுயிரினையு முண்ண, அ
வள் மரித்துத் தனது நிசரூபத்தோடு பிசாசுபோல்
பூமியில் விழக்கண்டு அசோதை முதலானபேர்கள்
ஆச்சரியமடைந்து கிருஷ்ணனை யெடுத்துக் காப்பிட்
டார்கள். இன்னுஞ்சிலகாலத்திற்குப்பின் ஸ்ரீகிருஷ்ண
னும் பலராமனுங்கூடித் தவழ்ந்து கொண்டே ஆய்ச்
சியர் தயிர் கடையு மிடங்களுக்குப்போய்த் தயிர்பால்
முதலானதுகளை வாங்கிப்புசிக்கிறதும், கன்றுகள்பசு
க்கள் இவைகளின்பின்னே லோடுகிறதுமாகப் பலவித
குழந்தைச் செய்கைகளைச் செய்து, யாவருக்கும் பர
மானந்தத்தை யுண்டாக்கிவந்தார்கள். ஒருநாள் கிரு

ஷ்ணன் ஒரு ஆய்ச்சி மனைக்குட் சென்று அவளில்
லாமலிருக்க அங்கிருந்த தயிர் வெண்ணெகளைத் திரு
டித்தின்று மிகுந்தவையைப் பூனைக்குங்குரங்குக்குங்
கொடுத்துக்கொண் டிருக்கையில், அந்தக்கோபிகை
கண்டு அச்சேதி அசோதைக்குச் சொல்ல தினமிவ்
வாறுகவே கோபியரிடும் முறைகளைக்கேட்கச் சகியா
மற் கண்ணனைப் பிடித்து ஒருரலிற் கயிற்றினுற்கட்
டித் தான்வேறுகாரியத்திலிருக்க, கண்ணன் அந்த
உரலை யிழுத்துக்கொண்டே வாசலிலிராநின்ற இரட்
டை மருதமரங்களினடுவே நுழைய, அம்மரங்களிரண்
டும் முறிந்து நளகூபர மணிக்கிரீவனென்கிற இயக்க
ராகிக் கண்ணனைத் துதித்துப்பணிந்துசெல்ல, அதைப்
பார்த்துக் கோபாலர் முதலாகிய பேர்களெல்லாம்
வெகு வியப்பீடைந்தார்கள்.

இப்படிக்குப் பாலலீலைகள் எத்தனையோஉண்டு.
ஒவ்வொன்றும் மிகவற்புதமாயிருக்கும். பின்புகன்று
மேய்க்கும் வயது வந்தவுடனே அனேகம் ஆயர்மக்க
ளோடுங் கன்றுகளை யோட்டிக்கொண்டுபோய் மேய்
த்துத் தண்ணீர் குடிப்பித்துச் சாயங்காலத்திலே
வீடுகொணர்ந்துசேர்த்துக்கொண்டிருப்பார். ஒருநாள்
அப்படியே காகபக்ஷங்கள் தலையி னிருபுறங்களிலும்
விளங்க, நெற்றியிற் கஸ்தூரிதிலகம்பிரகாசிக்க, மயி
ற்றோகையினுற் கட்டப்பட்ட செண்டுகள் சிரத்திலு
ங் காதிலுமிலங்க, அரையிற் பீதாம்பரமும் - கையிற்
பிள்ளாங்குழலும் பிரம்பும் - தோளில் தயிர்ச்சோற்
றின் சிக்கமும் விளங்கத் தோழரோடுகூட விநோத
மாய் விளையாடிக்கொண்டு யமுனையாற்றின் கரைக்கு
ப்போய்க் கன்றுகளை மடக்கி மேயவிட்டுப் பிள்ளைக
ளோடுகூட சிலநேரம் ஆடுகிறதும் - சிலநேரம் பாடு
கிறதும் - சிலநேரம் படுத்துக்கொள்ளுகிறதும் - சில
நேரம் உலாத்துகிறதுமாகப் பல லீலைகளையுஞ்செய்
து, அவ்வாற்றின் கரையிலிராநின்ற பாண்டீரமென்
னுமோ ராலமரத்தினிழலில் விளையாட நினைத்து, அங்
கேபோய் சில பிள்ளைகள்பாட - சிலராட - சிலர் தா
ளங்கொட்ட - சில ருபசாரஞ் செய்ய - தான் ராஜா
வைப்போலிருந்து விளையாடினுர். இப்படியே தினந்
தோறும் விளையாடிக்கொண் டிருக்கையில், ஒருநாள்
நீபவனமென்னு மிடத்தில் விளையாடிக்கொண் டிருந்
து, அந்தயமுனையினுடைய ஓர்மடுவில காளியனென்
கிற ஓர் கொடியசர்ப்ப மிருப்பதினுலே அம்மடுவின்
நீர் யாவருக்கும் உபயோகமில்லாமற் போனதுந்தவிர
உபத்திரவகரமா யிருப்பதைக் கண்டு அந்தப்பாம்
பைத் துரத்தவேண்டுமென்று மனதில்நினைத்து, அதி
ற்குதித்து அப்பாம்பைப்பிடித்து அதின்தலைமேற்கூ
த்தாடி அந்த நாகராசனுடைய பத்தினிகள் துதித்
ததினுலே அவனை உயிரோடுவிட்டு, அவனை அவ்வாற்
றைவிட்டு அப்பாற்போகும்படிகட்டளையிட்டு நீரைப்
பரிசுத்தமாக்கினுர்.

ஒருநாள் கன்றுபோல்வந்த ஓரசுரனைப் பிடித்
து விளாமரத்திற்சாடி, உதிர்ந்தவிளாவின் கனிகளைத்
தோழரொடுகூடப் புசித்தார். ஒரு பனங்காட்டிற் க
ழுதைவடிவங் கொண்டிருந்த தேனுகனென்னு மசு
ரனையும் அவன் பரிவாரங்களையும் எளிதிற்கொன்று,
மிகவும் ருசியுள்ள பனம்பழங்களைத் தனது தோழரு
க்குக்கொடுத்து மனத்திருப்தி செய்வித்துத் தானும்
புசித்தார். இதுவுமன்றி விளையாட்டில் நடத்திய வே
டிக்கைகளெத்தனையொ விசித்திரமா யிருக்கின்றன.
என்னுற் சொல்லத்தரமில்லை. கொஞ்சங்கொஞ்சஞ் சு
ருக்கமாகச் சொன்னேன். இன்னுஞ் சொல்லுகிறேன்
கேள். ஒருநாள் கோபாலரெல்லாம் வழக்கப்படி இந்
திரனைக்குறித்துச் செய்யும் பூசனைக்கு யத்தினப்பட,
அதைத் தடுத்துக் கோவர்த்தன மலைக்குச் செய்யும்
படி போதித்து, அந்தப்படி யவர்கள் செய்யும்போ
து தாம் தமது சுற்றத்தாரோடுங்கூட இருந்துகொ
ண்டே பருவதத்திலும் ஒருதேவ ரூபியாகிக் கோ
வலர்படைக்கும் அன்னங்களை வாங்கிப்புசித்து அவர்
களுக்குத் தான்சொன்னபேச்சில் நம்பிக்கைவரச்செய்
தார். இப்படியிருக்க இந்திரன் தனக்குப் பூசைகி
டையாமையால்மிகுந்தகோபமடைந்து சப்தமேகங்க
ளையுங்கொண்டு பெருங்காற்றோடுஞ் சிலைகளோடுங்கூ
டிய மழைபொழிவித்து ஆயர்சேரியை யல்லோல கல்
லோலமாக்க, பசுக்களும்ஆயர்களும்பயந்து மனங்கலங்
கி உடல்சிதைந்து நிற்கவிட மில்லாமல் தத்தளித்துக்
கோவென்று கதறிக்கொண்டு, ஓ கிருஷ்ணு ! நீயேகா
க்கவேண்டுமென்றுசரணமடைய, அதுகண்ட அடியார்
க்கெளியனுகிய சுவாமி அந்தக்கோவர்ந்தன பருவத
த்தை யொருகையா லெடுத்துக் குடைபோற்றாங்கி
அதின்கீழ் கோக்களையுங் கோபாலரையும் இருக்கச்
செய்து ஓர் குறைவின்றி காத்தருளினுர். இவ்வாறு
ஏழுநாள் வருஷித்துங் கிருஷ்ணன் மலைக்குடையின்
கீழ் வைத்தளித்தபடியினுலே அவ்விடையருக்கு ஒ
ருகுறைவு மில்லாமைகண்ட இந்திரன் ஸ்ரீகிருஷ்ண
னுடைய மகிமைக்குப் பயப்பட்டு, பூமியி லிறங்கிவந்
து அவர்பாதங்களைத் தொழுது, தன்பிழைபொறுக்
கவேண்டுமென்று பிரார்த்தித்துச் சகல கோக்களுக்
கும் நாயகனுனபடியினுலே கோவிந்தனென்னும் தி
ருநாமத்தைச் சாத்தி விடைபெற்றுத் தன்பதியாகிய
அமராவதி லோகம்போய் சேர்ந்தான்.

பின்பு விருஷபரூபமாய்வந்த ஓரசுரனையும், கு
திரைரூபமாய்வந்த கேசியென்னு மசுரனையும், கணப்
பொழுதிலே சங்கரித்துப் போட்டார். இவைகளையெ
ல்லாங் கேள்வியுற்ற கம்சன் பலராமனையுங் கிருஷ்ண
னையு மழைத்துக்கொண்டு வரும்படி அக்குரூர னெ
ன்பவனையனுப்ப, அவனுேடு கிருஷ்ணன் தமயனுட
ன்கூடித் தேர்மேலேறி மதுரைக்குவந்து நல்ல வஸ்
திரம் - மாலை - சந்தனம் - இவைகளைத் தரித்து வில்
லைமுறித்துக் கம்சனுல் வாசலில் தந்திரமாய் வைக்கப்

பட்டிருந்த குவலயாபீட மென்கிற யானையின் தந்தத்
தைப்பிடுங்கி அதனாலதனைச் சாகச்செய்து, அதின்
பாகனையுங்கொன்று, சபையிற்சென்று முட்டிகன்-
சாணூரன் - என்னு மல்லரைக் கைப்போரினால் முடி
த்து, அந்தக் கஞ்சனையும் அவன் தம்பிமார்களையும்
எளிதிலே தானே சங்கரித்து, உக்கிர சேனனுக்குப்
பட்டாபிஷேகஞ் செய்வித்துத் தமதுதாய்தந்தையரை
ப் பணிந்து உபநயன முதலாகியவைகளைப் பெற்று
யாதவரெல்லாம் போற்ற விளங்கினார். பின்புஅவந்தி
தேசத்திற்சென்று, சாந்தீபினியென்னு மாசாரியரிட
த்தில் அறுபத்து நான்கு வித்தைகளையும் நன்றாய்க்
கற்று முடிவிற் குருவைப்பணிந்து தக்ஷிணை யாது
வேண்டு மென்ன, அவ்வாசாரியன் வெகுகாலத்திற்கு
முன் கடலில் விழுந்திறந்துபோன தனதுபுத்திரனைக்
கொணர்ந்து தரவேண்டு மென்று சொல்லக்கேட்டு,
அப்படியே அந்தப் புத்திரனைக்கொணர்ந்து கொடுக்க
அவர் இவரைத்தெய்வமென்றெண்ணி அளவிலாவாந
ந்தமடைந்தார். கேட்டாயோ தருமபுத்திரா! கால
நேமியினுடைய அம்சத்தினாற்பிறந்துஅரசரெல்லாம்
நடுங்கும்படியாகிய பராக்கிரமத்தோடு கூடி வெகு
சேனாபல முடையவனாகிய கம்சனையும் மற்றுமனே
கரையுஞ் சங்காரஞ்செய்து உலகங்களுக்கு நன்மை
புரிந்துவருமளவில் ஜராசந்தனோடுயுத்தம்நேரிட்டது.
அந்தயுத்தத்தில அவன்சேனைகளை வெகுவாய்மடித்து
அவனையும் அவமானஞ் செய்து, ஒருகாரணத்தால்
மதுராபுரியைவிட்டுத்துவாரகாபுரியில்வாசஞ்செய்து,
அவ்விடத்திலும் வெகு அற்புதச் செய்கைகளும்
துஷ்டசங்காரமு நடத்திக்கொண்டிருக்கிறார். அதில்
முக்கியமானவைகளைச் சொல்லுகிறேன் கேள்.

நரகாசுரன்வதை.

சமுத்திர மத்தியில் பிராக்சோதிட மென்றொரு
பட்டணத்தில் நரகாசுனென்றுஒரு அசுரனிருந்தான்.
அவன் யாரென்றால் - பூர்வத்தி லிந்த மகாவிஷ்ணு
வராகாவதாரஞ் செய்தபோது பூமிதேவியி னிடத்
திற் பிறந்தவன். ஒப்பற்ற சௌரிய தயிரியங்களுடை
யவன். அளவற்ற சேனைக ளுடையவன். அவனுடை
ய சாமார்த்தியம் நாமெல்லாஞ் சொல்லி முடியாது.
அவனுக்கு அயக்கிரீவன் - பஞ்சசனன் - நிசும்பன்-
முரன் - என்று நான்கு மந்திரிகளிருந்தார்கள். அவர்
கள் ஒவ்வொருத்த னாகவே லோகங்களை விழுங்கத்
தக்கவர்கள். இப்படிப்பட்ட பலங்க ளுடை யவனாகி
உலகத்தில் முனிவர்களைப் பிடித்து அடிக்கிறதும்,
அக்கினிக் குண்டங்களை இடிக்கிறதும், யாகங்களைக்
கெடுக்கிறதும், சொலித்துக்கொண் டிருக்கிற ஓமாக்கி
னியை யவிக்கிறதும், இவ்வாறு வெகு உபத்திரவங்க
ளைச்செய்துகொண்டிருந்தான். அன்றியும் சுவர்க்க
லோகத்தில் துவஷ்டா வென்பவனுக்குக் கசேருவெ
ன்றொரு பெண் மிகவழகுடையவளா யிருந்தாள்.
அவளை யிவன் மதயானை ரூபத்தோடுபோய் தூக்கிக்
கொண்டுவந்து, அவளுக்கு மூவுலகங்களிலுமிருக்கும்
உத்தம வஸ்துக்களைக் கொணர்ந்து தருகிறே னெ
ன்று பிரதிக்கினைசெய்து கலியாணஞ் செய்துகொண்
டான். அதற்காகச் சகல லோகங்களையுங் கொள்ளைய
டித்துத் தொம்சஞ் செய்தான். அல்லாமலும் அனே
கராசகன்னிகைகள் - தேவகன்னிகைகள் - யக்ஷகன்
னிகைகள் - வித்தியாதர கன்னிகைகள் - நாககன்னி
கைகள் - இப்படி பதினாறாயிரத் தொருநூறு கன்னி
கைகளைப் பிடித்துக் கொண்டுவந்து, இந்திரனுடைய
கிரீடாபருவத மாகிய மணிகூட மென்கிற ரத்தின
பருவதத்தை வலுவிற்கவர்ந்து அதிற் சிறைவைத்து,
தன் மந்திரியாகிய முரனென்பவ னுடைய குமாரர்
பதின்மரையுங் காவலாகவைத்தான்.

இதுவுமல்லாமல் ஒருகாலத்திற்சுவர்க்கத்திற்கு
ப்போய் இந்திரனுடைய தாயாராகிய அதிதி யென்
பவளுடைய காதிலணிந்திருந்த திவ்விய குண்டலங்
களைப் பிடுங்கிக்கொண்டு வந்தான். இப்படிப்பட்ட
அக்கிரமங்களைச் சகிக்கமாட்டாமல் தேவந்திரன் நார
தரோடுசொல்லியனுப்ப, அதுகேட்ட இக்கண்ணன்
ஆம் இவனைச்சங்கரிக்க வேண்டுமென்று நினைத்துப்
பலராமன் முதலாகிய யாதவர்களைப் பின்னாலே வரச்
சொல்லிப் போட்டு தாம் முன்னே கருடன் மேற்சத்
தியபாமையுடனேறி அந்த நகரத்திற்குச் சமீபத்திற்
செல்ல, அங்கே பட்டணத்தைச்சுற்றி முரனென்ப
வன் சூரிக்கத்திபோன்ற முனைகளையுடைய சக்கரங்க
ளாலே நிறைந்திருக்கிற ஆயிரம்பாசங்களைவலைபோற்
சுற்றிவைத்திருப்பக் கண்டு, தமது சக்கரத்தினால்
அவைகளையறுத்துஉள்ளேபிரவேசித்து, வெகுசேனை
களுடனெதிர்த்த முரனையுஞ் சக்கரத்தினாலே சமூல
த்தொம்சஞ்செய்து, அப்பாலிருந்த மலைக்கோட்டையி
னிடத்திற் சென்று தனது கவுமோதகி யென்னுங்
கதையினாலே அதை யிடித்துப் பொடிசெய்து, அதி
லிருந்த நிசும்பனென்கிறவனையும் அவன்சேனைகளை
யுஞ் சாம்பராக்கிப் பின்பு பஞ்சசனன்-அயக்கிரீவன்-
விரூபாக்ஷன்-என்னும் வீரரோடு வெகுவாக யுத்தஞ்
செய்துசங்கரித்து, அப்பாற் பாதாளத்திற்சென்று சூரி
யன்போல் ஒளிபொருந்திய நரகாசுரனைக்கண்டு யுத்த
த்திற்கு ஆரம்பித்து, அவனுடன் கூடிவந்த மகாபல
பராக்கிரமசாலிகளான எட்டுலக்ஷம் அசுரரையும் ஒரு
வனுடைய தாக்குதலால் மற்றொருவன் அங்கஞ்சி
தைந்து மடியும்படியாய்ச் சார்ங்கமென்னும் வில்லில்
அம்புகளைத்தொடுத்து எய்து நாசம்பண்ணி, மூர்த்தீ
கரித்த கோபாக்கினிபோற் சொலிக்காநின்ற நரக
னோடு நெடுநேரஞ் சண்டைசெய்து முடிவிற் சக்கர
த்தைப் பிரயோகித்து அவன் தலையைச் சகலருந்து
திக்கும்படியாகத் துணித்துத்தள்ளினார்.

இவ்வாறு செகத்திற்குக் கண்டகனாகிய நரகாசு
ரனைச் சங்கரிக்கவே தேவர்கள் புஷ்பவருஷம் வருஷி

த்துத் துந்துபிவாத்தியங்க ளடித்தார்கள். பூமிதேவி யானவள் உடனே அதிதியினுடைய அந்தக் குண்டலங்களைக் கைக்கொண்டுவந்துகிருஷ்ணனைப்பணிந்து, சுவாமி ! தேவரீர் அனுக்கிரகத்தினாலே பிறந்தவனைத் தேவரீரே சங்கரித்தது எனக்கு துக்கத்திற் கேதுவா யிருக்கிறதென்று சொல்லக்கேட்டு, ஓ பூமிதேவி ! நீ துஷ்டராலே எனக்குமிகுந்த பாரமுண்டா யிருக்கிறதென்று சொல்லி இப்போதிப்படி சொல்லுகிறது மிகவுமாச்சரியமா யிருக்கிறது. இந்தநரகனே உலகங்களுக் கெல்லாம் உயிர்க்கழுவாயிருந்தான். அதனாலே அவனைச் சங்கரித்தேனென்று சாமாதானஞ் சொல்லி நிற்குமளவில் ஆகாசத்தி லிருந்து இந்திரன் சகல தேவ பரிசனங்களுடனே இறங்கிவந்து ஸ்ரீகிருஷ்ணனைக்கண்டு வெகுவாய்த்துதித்துக் கொண்டாட, ஸ்ரீ கிருஷ்ணன் அந்தக்குண்டலங்களை இந்திரன் கையிற் கொடுத்து அதிதிக்குக் கொடுக்கும்படிசொல்ல, இந்திரன் வெகு சந்தோஷத்தை யடைந்து அந்த நரகனுடைய மாளிகையைப்பார்க்க ஸ்ரீ கிருஷ்ணனுடனே கூடப்போனான். கண்ணன் அந்த வீட்டில் நுழைந்து பார்க்குமளவில் நவரத்தின ராசிகள் முதலான அளவற்ற சம்பத்துக்களைக்கண்டு வெகுவியப்படைந்தார். ஏனென்றால் - அப்படிப்பட்ட சம்பத்து குபேரனிடத்திலு மில்லை. மூவுலகங்களுக்கு மதிபதியாகிய தேவராஜனிடத்திலுமில்லை. அவைகள் அங்கங்கே யிருந்த உத்தம வஸ்துக்களாகக் கொண்டுவந்து சேர்த்ததன்றோ? அவைகளைப்பார்த்த இந்திரன் கிருஷ்ணனோடு சொல்லுகிறான்.

ஓ ஸ்ரீகிருஷ்ணா ! நீர் பகவானாகையால் இந்த நரகாசுரனைச் சங்கரித்தீரோ யல்லது, மற்றொருவருக்குச் சாத்தியமன்று. இதோபாரும் இவ்விடத்தில் எங்குமிராத விலையில்லா மாணிக்கங்களாற் செய்யப்பட்ட திவ்வியாபரணங்க ளெத்தனைவித மிருக்கின்றன. திவ்வியமாகிய கட்டில்கள் மெத்தைகளோடு வச்சிரவைடூரிய கோமேதக புஷ்பராகங்களினாலியற்றிய திவ்விய ஹாரங்களும் பாத்திரங்களு மிருக்கின்றன. இன்னும் ஆசனங்களிருக்கின்றன. மேலும் திவ்விய வஸ்திரங்கள்-வெகு மழமழப்பும் பளபளப்புமுள்ளகம்பளங்கள்- ஆயுதங்கள்- இஷ்டமான படிக்குப் பாடத்தக்க வைகளும் பேசத்தக்கவைகளுமாய் விசித்திரமாகிய வன்னங்களோடு கூடிய பலவிதப்பக்ஷிகள் விநோதமாயிரா நின்ற மான்முதலிய சிலமிருகங்கள் - இன்னுமனேக வஸ்துக்களு மிருக்கின்றனவே: இவை யெல்லாம் உமக்கேதகும். ஆதலால் இவைகளைத் துவாரகைக்கு அனுப்பிவிக்கிறேன் அங்கீகரிக்க வேண்டுமென்று சொல்லிப் பிரார்த்தித்து அவைகளையெல்லா மனுப்பிக் கருடன்மீதில் அந்தமணிகூடமென்னும் பருவதத்தையும் ஏற்றினான். கேளப்பா தருமநந்தனா ! அந்தக் கருடன்மேல் அம்மணிகூட மடங்கியதுமன்றி, ஸ்ரீ கிருஷ்ணன்சத்தியபாமையுடனே உட்காருவதற்கான விசாலமாகிய இடமுமுண்டா யிருந்தது. அப்படிப்பட்ட மகாசத்தி சாமர்த்தியங்களுடைய கருடன் இவருக்கு வாகனமாயிருந்தால், இவர் நாராயணமூர்த்தி யென்பதற்குச் சந்தேகமென்ன?

இவ்விதமாய்ச் சகல சம்பத்துக்களையுங் கருடன் மீதி லேற்றிக்கொண்டு தாமு மூட்கார்ந்து சத்தியபாமையை மடியில் வைத்துக்கொண்டு கந்திருவர் பாட - அரம்பையராட - தேவசித்த சாரணாதியர்கள் ஜயஜயவென்று துதிக்க-வெகு விபவத்தோடுந் துவாரகைக்குவந்து, அந்தச்செல்வங்களையெல்லாம் உக்கிரசேனனுக்கு ஒப்புவித்து, விந்தையான மணிகூட பருவதத்தை உருக்குமணியின் மனையிற் கொண்டுபோய் வைக்கும்படி கருடனுக்குக் கட்டளையிட்டுப் பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அந்தப் புரத்திற்கு வந்து பருவதத்தைப்பார்த்து,அதில் உருக்குமணியோடுகூட ஏறினார். அந்தப் பருவத மெப்படியிருந்ததென்றால் - தங்கத்தினாலும் வெள்ளியினாலுஞ் செய்த சில தாழ்வாரங்களோடுகூடியதாய் மகா அற்புதமாய் கற்பகங்களுக்கு நிகராய் வெகுகாந்திகள் பொருந்திய சோலைகளுடைத்தாய் நவரத்தின மயமான அனேகம் வீடுகளும் பவழங்களா லியற்றிய படிக்கட்டுவரிசைகளு முள்ளதாய்ச் சொல்லத் தரமில்லாத வேடிக்கைகளோடுங் கூடி அனேககோடி சூரியப்பிரகாசம்பொருந்தி யிருந்தது. அதைக்கண்டு வெகு சந்தோஷத்தோடு அதன் மேலேறிச் சுற்றிப்பார்த்தார். அப்போது அதிற்சிறையாய் வைக்கப்பட்டிருந்த கன்னிகைக ளெல்லாங் கோடிமன்மத சுந்தரனாய் விளங்காநின்ற ஸ்ரீகிருஷ்ணனைப் பார்க்க அந்த மாளிகைகளி லிருந்து வெளியிலே வந்து, இவ்வளவுநாள் வருத்தப்பட்ட படியினாலே மெலிந்திருந்த மேனியெல்லாம் பருத்து விளங்கவும்- தனங்கள் பூரிக்கவும் - புளகமரும்பவும் - காவித்துகில்களைக் களைந்து வெண்பட்டுடைகளை யுடுத்திக்கொண்டு, காளமேகம்போற் கறுத்த திருமேனியையுடைய கண்ணனைக் கைகூப்பிக் கும்பிட்டு இதனைப் பேசுவதாயினர்.

சுவாமி! எங்களுடைய மகாபாக்கியத்தினால் தேவரீர் அவதரித்து மீளாச்சிறை மீட்டருளினீர். நாங்கள்செய்த பெருந்தவத்தினாலே கண்களிக்கத் தேவரீர் திருமேனி தரிசனங்கிடைத்தது. முன்னமே நாரத மகாமுனி எங்களுக்குச் சொல்லி யிருந்தார். அதென்னவென்றால் - அந்தமகாமுனியை நாங்கள் தண்டனிட்டு, ஓமுனிவரே!எங்களுக்கு இச்சிறை எப்போதுநீங்குமோ அதையருளிச்செய்யவேண்டுமென்றுகேட்க அதற்கவர்- ஓ பெண்களே ! ஸ்ரீ நாராயணன் அம்சமாகிய கிருஷ்ணமூர்த்தி முரன் - அயக்கிரீவன்-முதலானோரைச் சம்ஹாரஞ்செய்து உங்கள் சிறையை மீட்டு, உங்களைக் கலியாணஞ் செய்யப்போகிறார் என்று அவர்சொன்னபடி எதிர்பார்த்துக் கொண்டிருந்த எங்களுடைய கோரிக்கை இன்றுதான் நிறைவேறிற்று. ஆ

தலால் அடியேங்களிடத்திற்கிருபைசெய்து எங்களை
மணஞ்செய்து ரக்ஷியு மென்றார்கள். அதுகேட்ட
சுவாமியானவர் வெகு சந்தோஷமடைந்து, அப்படி
யேயென்று அங்கீகரித்து மணஞ்செய்துகொண்டார்.
இப்படி சொல்லாநின்ற வீஷ்மரைத் தருமபுத்திரர்
பார்த்து, சுவாமி பிதாமகரே ! இந்த ஸ்ரீகிருஷ்ணபக
வான் அந்த ஸ்திரீகளை யேன்கொணர்ந்தார்? அந்தக்
கருடன்மீதில் யானை குதிரை முதலானதுகளையும்
இந்த ஸ்திரீகளையும் ஏற்றலாமோ ? இதுகளுக்கெல்
லாம் சமாதானஞ் சொல்லவேண்டுமென்று கேட்க
வீஷ்மர் சொல்லுகிறார்: கேளப்பா தருமபுத்திரா !
அனேகமான திவ்ய வஸ்துக்களை யெல்லாம் யானை
குதிரை ஒட்டகங்களின் மீதி லேற்றி அவைகளைக்
காலாட் சேனைகளின் வசமாகத் துவாரகைக்கு அனு
ப்பிவித்து, பின்பு மணிகூட பருவதத்தைப் பார்க்க
ஏறுமளவில் அதில் நரகாசுரன் தான் கலியாணஞ்
செய்து கொள்ள வேண்டுமென்று கொண்டு வந்து
சிறையில்வைக்கப்பட்டிருந்த பெண்களெல்லாங் கிரு
ஷ்ணனைப் பார்த்தாவாகும்படி கோரியபடியினாலே பக்
தபராதீனராகிய அவர் அப்படியே வாக்குத்தத்தஞ்
செய்தார். ஆனபடியினாலே அந்தப்பெண்களைப் பக
வானுடைய பத்தினிகளென்று கருடன் சுமந்தார்.
நல்லது நரகாசுரன் அவர்களை இதுவரையில் கலியா
ணஞ்செய்யா திருந்த காரண மென்னவென்று கேட்
டால், அவன் இவர்கள் மனஞ்சம்மதிக்கக் காத்திருந்
தான். அவர்களோ நாரதர்சொல்லிய உறுதியினால்
ஸ்ரீகிருஷ்ணன் வருங்காலத்தை எதிர் பார்த்துக்கொ
ண்டு சம்மதிக்காம லிருந்தார்கள். அதனாலே தான்
அந்த ஸ்திரீகளைக் கிருஷ்ணன் விவாகஞ் செய்துகொ
ண்டார். இப்படிக்கு அந்தஸ்திரீகளோடு மணிகூடத்
தைக் கருடன்மே லேற்றிக்கொண்டு சுவர்க்கலோகம்
போய் அதிதியைப்பணிய அவள்வெகு ஆசிகள்கூறி,
தனியே சத்தியபாமைக்கு நீயென்றும் மூப்படை
யாமலிருக்கக்கடவையென் றாசிகூறினாள். இந்திராணி
யும் சத்தியபாமையை அழைப்பித்து வெகு பூஷண
வஸ்திர முதலானவைகளைக் கொடுத்தாள்.

துவாரகாபுரிச் சிறப்பு.

இந்தப்படி தேவலோகத்தில் ஸ்ரீகிருஷ்ணனான
வர் தானும் சத்தியபாமையுமாய் வெகு சிறப்புபெற்
றுத் துவாரகாபுரியைச் சுற்றிப்பார்த்து, அதின் சீர்
மையைக்கண்டு தானேவெகு ஆச்சரியமும் சந்தோ
ஷமுமடைந்தார். அந்தப்பட்டணம் அப்படிப்பட்ட
அழகாகிய தன்மையோ டிருந்தது. அஃதெப்படி
யெனில், கைலாச பருவதம்போ லிராநின்ற உன்னத
மாகிய மாளிகைகளால் வரிசைவரிசையாய் அலங்கரிக்
கப்பட்டு, வெகு அழகாகியும் விசாலமாகியுமிராநின்ற
வீதிகளோடு உயர்ந்தமதில்களாற்சூழப்பட்டு, மிகுந்த
ஆழமுள்ள அகழிகளாலும் வளைக்கப்பட்டு, கடல்
சூழ்ந்த பூலோகம்போல விளங்குகிறது. அன்றியும்
அது தூரத்திலிருந்து பார்க்கும்போது ஆகாசத்தில்
ஒருதேவவிமானஞ் சஞ்சரிப்பதுபோ லிருக்கும். ஒரு
புறத்திற் பொன்னிறமுள்ள மாளிகைகளும்- ஒருபுற
த்திற் கருநிறமுள்ள மாளிகைகளும்-ஒருபுறத்திற்செ
ன்னிறமுள்ள மாளிகைகளும் - ஒருபுறத்தில் வெண்
ணிறமுள்ள மாளிகைகளும் விளங்கியிருப்பதால், பல
வண்ணமுடைய மேகவரிசைகள் சூழ்ந்த ஆகாசம்
போலிருந்தது. வீடுகள்தோறும் வரிசையாய்த் தோ
ரணங்களும் பதாகைகளுங்கட்டி, விசித்திரமான பது
மைகளாலும் அலங்காரஞ்செய்யப்பட்டிருந்தது. எல்
லாவீடுகளும் ஐந்தாறு கட்டுகளும், ஆறேழு கட்டுக
ளும், பாதாள வறைகளு முடையவைகளாயிருக்கின்
றன. இவையுமன்றி சோலைகளும்வாவிகளுமுள்ளவை
களாய், இன்பமாகக் கூவாநின்ற பறவைகளோடு
கூடிய புழைக்கடைக ளுடையனவா யிருக்கின்றன.
சாதிவகுப்பின்படி வீதிகளும் மரியாதைகளுஞ் செல்
வங்களு மிருக்கின்றன.

அரசருடைய மாளிகைகளோ அனேகங்கள்பொ
ன்னினாலும் வெள்ளியினாலுஞ் செய்யப்பட்டு,மிகவும்
பளபளவென்று விளங்காநின்ற சிகரங்க ளுள்ளவைக
ளாய் முத்துச்சரங்கள் சுற்றிலுங்கட்டிப் பொற்படங்
களால் மேல்விரிகட்டி நல்லதூபங் கமழ்கின்ற பல
மண்டபங்களோடு கூடியவைகளாய், மரகத மாணிக்
கங்களாற் செய்யப்பட்ட அனேகம் இடங்களுள்ள
வைகளாய், பவழங்களாற் கோர்க்கப்பட்ட படிக்கட்டு
கள் பொருந்தி சொல்லத்தரமில்லாத பேரழகுடன்
விளங்கியிருக்கின்றன. விசுவகருமாவினுடைய நிர்மா
ணமாகிய அதின் விசித்திரத் தன்மையும் அழகும்
செல்வமும், மகாகவிகளுடைய எல்லாக்கற்பனைகளு
க்கும் அமைந்திருக்கும். ஆதலால் நானெவ்வளவு
சொல்லப்போகிறேன்? அந்தநகரியைச் சுற்றிலும் பல
உத்தியானவனங்க ளிருக்கின்றன. அவைகளிற் பிர
தானமாய் நான்குதிசைகளிலுஞ் சுவர்க்கத்தைச்சுற்றி
நந்தனம் - மிச்ரகம்-சைத்திரரதம்-வைப்பிராசம்-என்
கிற தேவோத்தியானங்க ளிருப்பதுபோல் நான்கு
உத்தியானங்க ளிருக்கின்றன. அவைகளிற் பலமரங்
களும் - பலகொடிகளும் - பலசெடிகளும்-நிறைந்து,
என்றும் பூப்பதும் - காய்ப்பதும்-பழுப்பதும்- தளிர்
ப்பதும் - தழைப்பதுமா யிருக்கும். செந்தாமரை -
வெண்டாமரை - செங்குவளை - கருங்குவளை முதலிய
புஷ்பங்களா லலங்காரம்பொருந்தி, சக்கிரவாகம் அன்
னங்கள் முதலிய நீர்ப்பறவைகள் மனோரஞ்சிதமாய்ச்
சப்திக்கப்பெற்றுப் படிகங்களாலுஞ் சந்திரகாந்தங்க
ளாலும் படித்துறைகள் கட்டிய வாவிகள்பொருந்தி
யிருக்கின்றன. அந்தத்தோட்டங்களி லில்லாத வஸ்
துக்கள் எவ்வுலகத்திலுமில்லை:

இப்படியே நாற்புறங்களிலும் நான்கு மடுக்களி
ருக்கின்றன. குதிரைச் சாலைகள் - யானைச் சாலைகள்-

தேர்ச்சாலைகள் - ஆயுதச்சாலைகள் - நர்த்தனச் சாலைகள் - போஜனச்சாலைகள் - சபாமண்டபங்கள் - பசுக்கூடங்கள்-முதலானவை எத்தனையோ இருக்கின்றன. இவையுமன்றி அந்தப் பட்டணத்தி னிருபுறங்களிலு மிக விசாலங்களாகவும் - மேடுபள்ளங்க ளில்லாததாகவும் - எங்கும் ஒரேசமமாகவும் -நான்குவரிசையாகச் சேனைகள் போகும் படியாகவும் இராநின்ற எட்டு ராஜவீதிகளும், சகலவஸ்துக்களும் நிறைந்த எட்டுக் கடைத்தெருக்களுமிருக்கின்றன. உன்னதமாகியகோபுரங்களோடு விசாலமாய் விளங்காநின்ற நான்குகோட்டை வாசல்களும், வெகு சூரராகிய சேனைகளாற் காக்கப்பட்டிருக்கு மதில்களும், மதிலினிருபுறங்களிலிருக்கும் அலங்கங்களில் வெகுதீக்ஷண்யமாகிய ஆயுதயந்திரங்களும்பீரங்கிகளும் வைக்கப்பட் டிருக்கும். அன்றியும் வாசல்களிலெல்லாம் விசித்ரமாகிய இருப்புச்சக்கரங்கள் வைக்கப்பட் டிருந்தன. அவைகளைத் திருப்பிவிட்டால் எப்படிப் பட்டவருங் கிட்ட நாடக்கூடாமலிருக்கும். அதின் தந்திரமோ மற்றொருவராலு மறியப்படமாட்டாது. இவ்வளவு மல்லாமல் மதில் மேலே சுற்றிச் சகலவாயுத பரிபூர்ணமாகிய ரதங்கள் மகாசூரருடன் கூட வைக்கப்பட் டிருக்கும். வெளிப்புறங்களிலும் பலவிடங்களிலும் வீரங்களோடு பலவிதச்சேனைகள் கூட்டங் கூட்டமாய் ஆயுத வர்க்கங்களோடு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்.

அந்தப் பட்டணத்தின் நீளம் பன்னிரண்டுகாதமாகவும், அகலம் எட்டுக்காதமாகவு மிருக்கின்றது. ஆதலால் சுற்றளவு நாற்பது காதமாயிற்று. இதுவுமன்றி - பட்டணத்துக்கு நாற் புறங்களிலும் இருபத்துநாலு காதம்வரைக்கும் இடைவிடாமல் ஜனங்கள் வீடுகளுந் தோட்டங்களு முண்டாக்கி வாசஞ்செய்து வருகிறார்கள். ஆதலால் சமுத்திரத்தின் மத்தியில் இந்த ஒரு பட்டணமே பெரிய ஒரு பூலோகம் போற் காணப்பட்டது. அல்லாமலும் அந்தநகரிக்கு ஏழு வியூகங்க ளிருக்கின்றன. அவை என் னென்ன வியூகங்களென்றால்-பத்மவியூகம் - சகடவியூகம்-சியேனவியூகம் - சூசிவியூகம் - காருடவியூகம் - சக்கரவியூகம் - வச்சிரவியூகம்-என்பவைகளாம். இந்தவியூகங்களுக் கெல்லாம் எட்டிடங்களிலே வழிகளும், பதினாறிடங்களிலே பிலங்களும், சேனைநடக்க எட்டுவீதிகளும். மற்றவர்நடக்க ஏழுவீதிகளுமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதில்கிருஷ்ணனுடைய திருமாளிகைமாத்திரம் ஒரு காதவழி சுற்றளவாய் மேருபருவதம்போலிருக்கும். அதைச்சூழ்ந்து சிற்றகழியொன்றிருக்கின்றது. அதன்கரையில் ஒரு தோட்டமுண்டு. அதிலொரு சிறுமலையும் அதினின்றுமொரு சிற்றாறுமுண்டாகி யிருக்கின்றது. ஸ்ரீகிருஷ்ணனுடைய சபாமண்டபமொன்று நடுவிலிருக்கிறது. அது நாலுநாழிகைவழி சுற்றளவுள்ளதாய் ஆறுபனை யுயரத்தோடு கூடி, பார்ப்பவர் கண்களைப் பறிக்குந் திறமையுடன் விளங்குகின்றது.

இப்படிப்பட்ட அனேகவண்மையுற்று விளங்காநின்ற அந்தத் துவாரகாபுரிக்குச் சுவர்க்கலோகமும் நிகரென்று சொல்லத்தகாது. அதின் சமீபத்தில் ரைவதகமென்றொரு பருவதமிருக்கிறது. அது மிகுந்த அழகுடையது. இவ்விதமாகிய பட்டணத்தை ஸ்ரீகிருஷ்ணன்பார்த்து, இந்தயுண்டுபண்ணின விசுவகருமாவை மிகவும்புகழ்ந்து, கூடவந்த தேவேந்திரன் முதலானோரை வெகுவாய்ப் பூசித்து விடைகொடுக்க அவர்கள் யாதவசபைக்குவந்து யாவரையுநோக்கி, ஸ்ரீகிருஷ்ணன் பகவானென்பதையும் அவர் அவதரித்த காரணங்களையுஞ் சொல்லித் துதித்துப் போய்த் தங்கள் தங்கள் பதவிகளிற் சேர்ந்தார்கள். அப்பால் ஸ்ரீகிருஷ்ணன் அந்த பதினாயிரத்தொருநூறு கன்னிகைகளை விவாகஞ்செய்து, அவர்களுக்கெல்லாந் தனித்தனியே வீடுமுதலானவைகளை யேற்படுத்தி, வெகு சிறப்பாய்ப் பாராட்டிவந்தார். இப்படி யிருக்குமளவில் நரகாசுரனுடைய பட்டணத்தி லிருந்து கொண்டுவந்த விசித்திரவஸ்துக்களைப் பார்க்கவேண்டுமென்று பட்டணத்திலுள்ள அந்தணர் க்ஷத்திரியர் முதலான பேரும், பிர்ந்தாவனத்தி லிருந்த நந்தகோபர் அசோதை முதலானபேரும் ஒருநாள் சபைக்குவந்தார்கள். அப்போது பலராமனுங் கிருஷ்ணனும் நந்தன் அசோதை இவ்விருவரையும் பாதவந்தனஞ்செய்ய, அவர்களும் வெகுசந்தோஷத்துடன் கட்டியணைத்து மடியில் வைத்து முத்தமிட்டுக்கொண்டு, கண்களா லானந்த பாஷ்பம் விட்டார்கள். அசோதையின் மகளாகிய ஏகாநங்கை யென்பவளைக்கண்ட இராமனும் - கிருஷ்ணனும் - மிகவும் பரிவுடன் கைப்பிடித்து எடுத்து மடியின்மீதுவைத்துக் குலாவி, தங்கள் சிங்காதனத்தினடுவிலிருத்தி இருபுறங்களிலுந்தாமு ட்கார்ந்தார்கள். அதனால் அப்பெண்ணரசி இரண்டு மதயானைகள் நடுவில் மகாலட்சுமியிருந்தா லெப்படியோ அப்படி விளங்கினாள். இவ்வாறுவிளங்காநின்ற அப்பெண்ணினழகைப்பார்த்து யாவரும் ஆச்சரியப் பட்டார்கள். ஸ்ரீகிருஷ்ணன் தங்கைக்கு வெகு வஸ்திராபரணங்கள் கொடுத்து, தாய்மாரையும் மற்றுமனேகரையும் பணிந்து விடைபெற்றார். அப்பால் ஒரு நாள் சுவர்க்கலோகத்திற்குப் போய் இந்திரனுடைய நந்தனவனத்திலிருந்து பாரிசாதமரத்தைப் பிடுங்கிக் கொண்டு தேவரையெல்லாஞ் செயித்து வந்து சத்தியபாமையின் உத்தியானத்தில் ஸ்தாபித்தார். இந்தமகாபுருஷன்செய்கை ஒவ்வொன்றுமிகவாச்சரியமாகவிருக்கும்.

பாணாசுரன் வதை.

அப்பா தருமநந்தனா! நரகாசுரன் விஜயங்கேட்டாயே: பாணாசுரன்விஜயமுஞ் சொல்லுகிறேன்கேள். பலிச்சக்கிரவர்த்தியினுடைய மகன் பாணாசுரனென்றொருவனிருந்தான். அவன் உருத்திரதேவனை மிகவும் பூசித்து அவருடைய அனுக்கிரகத்தினால் வெ

கு பாக்கிரமங்களையும் ஆயிரந்தோள்களையும் பெற்றுத் தேவரையெல்லாஞ்செயித்து, அந்தச் சிவனைப் பரிவாரத்தோடு தன்பட்டணத்திற்குக் காவலாக இருக்கும்படி பிரார்த்தித்து, அக்கினியைத் தன்கோட்டையைச் சூழ்ந்திருக்கும்படிவைத்து, இவர்களுடையசகாயத்தினலே ஒருபயமுமின்றி இறுமாப்புடன் அசுரராச்சியத்தை யாண்டுவந்தான். அவனுக்கு உஷை யென்றெரு பெண்ணிருந்தாள். அவள் ஒருகாலத்தில் இந்தக் கிருஷ்ணனுடைய மகனாகிய பிரத்துய்ம்னனுடைய புத்திரனாகிய அனிருத்த னென்பவனைக் கனவிற்கண்டு தனக்கு நாயகனாக எண்ணி விழித்துக் கொண்டு அவனைக் காணமையாலே மிகுந்த துக்கத்தை யுடையவளாய் அன்னபானங்களும் நித்திரையுமில்லாமற் பிரமைகொண்டு மெய்மெலிந்திருக்க, அவளுடைய உயிர்ப்பாங்கியாகிய சித்திரலேகையென்பவளொருத்தி அவளைவினவ, அவளுந் தன் மனோவியாதியின் காரணத்தைச் சொல்ல, அதன்பின் பூலோகமுதலான சகலலோகங்களி லிருக்கும் யவ்வனபுருஷரைப் படத்தி லெழுதிக்கொணர்ந்து அந்தச் சித்திரலேகை உஷைக்குக்காட்ட, அவள் அதில் துவாரகாபுரியிலிருக்கும் அனிருத்தனைக் காட்டி கனவிற்கண்டசீமானிவர்தானென்று தெரிவிக்க, அந்தச் சித்திரலேகை மகா மபாவதியாகையால் ஒருநாள் அந்தப்புரத்திற் கட்டிலின்மீதில் தூங்கிக்கொண்டிருந்த அவ்வனிருத்தனை ஒருவருக்குந் தெரியாமற் கட்டிலோடு தூக்கிக்கொண்டுபோய் உஷையினிடத்தில்விட, அவள் அந்தச் சுந்தரபுருஷனைக்கண்டு பேரானந்தமடைந்து இரகசியமாய்த் தனது மாளிகைக்குள்ளேயே வைத்து அவனுடன் சரசகாமபோகங்களை யனுபவித்துக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க அந்த உஷைக்குக் கருவுண்டாயிற்று. அது மேன்மேலும் வளர்ந்துவரும்போது பாணாசுரன் அச்சேதி யறிந்து அந்தப்புரத்தைச்சோதிக்க, அங்குகேளிவிலாசமாயிருக்கும் யாதவதிலகனைக் கண்டு வெகு கோபமடைந்து அவனைப்பிடித்து வருணபாசங்களினற் கட்டிக் காவலிற் போட்டுவிட்டான். இச்செய்தியையெல்லாம் நாரதர் சொல்லக்கெட்ட ஸ்ரீகிருஷ்ணன் பலராமரோடும்-பிரத்துய்ம்னன்முதலானரோடும் - வெகு சேனைகளோடும் - பாணாசுரனேடு யுத்தத்திற்காகப் புறப்பட்டுக் கருடன்மீதிமேலறி, அந்தப்பாணனுடைய இராசதானியாகிய சோணிதபுரத்திற்குச்சென்று, கோட்டைமதில்போற் சுற்றிக்கொண்டிருந்த அக்கினியைச் சின்னபின்னமா யடித்துத்துரத்தி, பின்பு பாணனுக்கு உபபலமாய்வந்த உருத்திரர் சுப்பிரமணியர் விநாயகர்-நந்தி முதலானேரைச் சார்ங்கவில்லினின்றுங் கிளம்பாநின்ற அம்புகளினலே புறங்காட்டி யோடும்படி செய்ய, உருத்திரமூர்த்தி மிகுந்த கோபாவேசங் கொண்டு தமது பக்தனைக் காக்கவேண்டிய கடமையாற் பிரளயகாலத்தி லெடுப்பதுபோல் உக்கிரமாகிய சங்காரரூபத்தை யெடுத்துக் கண்கள்மூன்றும் அனலைச்சொரிய உலகத்தின் உயிர்களைக் கொள்ளையடித்த திரிசூலத்தையும் பினகமென்னும் வில்லையுங் கையிலேந்தி யெதிர்த்துவர, ஸ்ரீ கிருஷ்ணனுக்குஞ் சிவனுக்கும் மகா பயங்கரமாகிய யுத்தமுண்டாயிற்று. அந்தயுத்தத்தில் அவ்விருவரும் வில்லைவளைத்து நாணேற்றி நாணேசைகொண்டு அம்புகளையும் - சிறு கத்திகளையும் - வேல்களையும் - மற்றுமனேக ஆயுதங்களையும் - பல அஸ்திரங்களையும் - ஒருவர்மேலொருவர் பிரயோகிக்கிறதும், ஒருவரையொருவர் ஸ்தம்பிக்கச்செய்கிறதும், ஒருவரையொருவர் இகழ்கிறதும், ஒருவரையொருவர் தடுக்கிறதுமாகப் பலவிதமாகிய போர்முறைகளை ஈடுக்கீடாக நடாத்திவந்தார்கள்.

இப்படியிருக்கையில் அன்பர்க்கெளியனான அந்தச் சங்காரமூர்த்தியானவர் தமதுசக்திமுழுவதையுங் கொண்டு யுத்தஞ்செய்தும் அக்கிருஷ்ணனும் நிரந்தரபக்தனாதலால் அவனுக்கு ஒருகுறைவு மில்லாமற் போனதுமன்றி, அவனுடைய ஆயுத வேகத்தினல் வெகு உபத்திரவத்தையடைந்து சகிக்கமாட்டாதவர் போற் பின்னிட்டுப்போக அவருடைய சகலசேனைகளும் ஓட ஆரம்பித்தன. அதுகண்டயாதவசேனை துரத்த உருத்திரசேனை திக்குத்திக்காய் மிரண்டோட, உடனே பாணாசுரன் வெகுமனஸ்தாபமுங் கோபமுமடைந்து யுத்தத்திற்கு வந்தான். கிருஷ்ணன் பாஞ்சசன்னிய மென்னுஞ் சங்கத்தைப் பூரித்து அட்டகாசஞ்செய்து அவன்வருகிற வேகத்தைத் தடுக்கவே, அவனுக்குக்கோபமிரட்டித்துச்சரங்களைச்சரஞ்சரமாய்த்தொடுத்து மூச்சுவிடவொட்டாம லடித்தான். அதனலே கிருஷ்ணன் எவ்வளவும் வேதனையடையாமல் அவன்விட்ட சரங்களைப் பொடியாக்கிச் சக்கராயுதத்தைப் பிரயோகித்து, அவன் கைகளை இந்திரன்வச்சிராயுதத்தினல் மலைகளின்சிறகுகளைச் சரித்ததுபோற் சரித்துத்தள்ளவே அவ்வசுரராசன் பதைபதைத்துக் கீழேவிழுந்து மூர்ச்சித்து மகாவேதனையடைந்தான். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் தமயனார் முதலானேருடன் அவனரண்மனைக்குட் பிரவேசித்துத் தனது பேரனைக் காவலினின்றும் விடுவித்து அவனுடைய மனைவியாகிய உஷையையும் அழைத்துக்கொண்டு, அவன்சம்பாதித்த சகலசம்பத்துகளையுங்கொள்ளையாடி கருடன்மேலேறி ஜயகோஷத்துடன் பட்டணத்துக்கு வெளியில்வந்து, சேனைகள் சந்தோஷத்துடன் சூழ்ந்து வரவும், தேவர்கள் மலர்களைச் சொரிந்து கொண்டாடவுமாகத் துவாரகா புரிக்குவந்து யாதவர்களுக்கெல்லாமொருசந்திரனாகவிளங்கினர்.

இப்படிக்குத் தேவராலும் வெல்லக்கூடாத பாணாசுரனை இரண்டுகைகளோடு சாதாரணமாக நிறுத்திச் சிவன் முதலானேரையுஞ்செயித்தவர் நாராயணனல்லாமல் வேறு ஆரைச்சொல்லலாம்? இன்னுமெத்

தனையோவீரர்களைச்செயித்திருக்கிறார். அவர்கள்யார்
யாரென்றால் சைப்பியன் - சத்தனுவா -இந்திரத்தும்
னன் - கசேருமானென்கிற யவனராசன் - சவும்பரா
ஜனுகிய சால்வன் - கிருத்தனுவா - வெகுபருவததுர்
க்கங்களுடையவனு யிருந்த தியுமச்சேனன் - வருண
னுடைய சேவகர்களாகிய கோபதி தாலகேதுக்கள்-
ஹேமந்த பர்வதவாசிகளாகிய மகாசூரர் - சுராஷ்டிர
தேசத்து ராஜரிருவர் - இவர்களெல்லாம் வெகு பிர
சித்தப் பட்டவர்கள். துர்க்கபலம் - ஆயுதபலம் - சே
னுபலம் - புஜபலம் - வரத்தின்பலம் - இவைகளாற்சி
றந்தவர்கள். ஒவ்வொருத்தருந் தேவர்களையே அல
க்ஷியஞ்செய்து வெகுசெல்வங்களுடனே நெடுங்காலம்
இராச்யபரிபாலனஞ்செய்தவர்கள். இப்படிப்பட்டவர்
களை யெல்லாம் இக்கிருஷ்ணன் எளிதிற் கொன்
றார். வச்சிராயுதத்தாலும் பிளக்கக்கூடாத பர்வத
துர்க்கங்களைச் சக்கிரத்தினுற் பொடிப் பொடியாகச்
சிதைத்தார். இதுவுமன்றிகாசிராசன் தன்விஷயத்தில்
அபராதஞ் செய்ததற்காக அந்தக் காசிப்பட்டணத்
தைச் சுட்டெரித்து, அந்தராஜனையுஞ் சமூலமாகநா
சஞ்செய்தார். இந்திரனுடைய சுதர்மை யென்னுஞ்
சபையைப் பூமிக்குக்கொணர்ந்து துவாரகையில்ஸ்தா
பித்தார்.காந்தாரதேசத்துராஜன்மகளைக் கலியாணஞ்
செய்வதற்காக நூற்றொரு மகாராஜவீரரைச் சிரச்சே
தஞ் செய்து, அப்பெண்ணைச் சகல வைபவத்தோடுங்
கலியாணஞ் செய்துகொண்டார்.

இவையெல்லாமிருக்கட்டும். உருக்குமணிதேவி
யைத் தமது பலத்தினுலே பகிரங்கமாய் வந்து எடுத்
துத் தேர்மேலேற்றிக்கொண்டு போகும்போது, சக
லமான அரசர்களும் பல்லைத்திறந்து சும்மா நின்றார்க
ளே யல்லாமல் யாராகிலுங் கண்ணெடுத்துப் பார்க்
கச் சக்திவான்களாக விருந்தார்களா ? அவர்களிருக்
கட்டும். இந்தச்சிசுபாலன் உருக்குமணியைக் கலியா
ணஞ் செய்துகொள்ள வேண்டிப் பிரமசாரிவிரதங் க
லைவதற்காக க்ஷவரஞ் செய்வித்துக்கொண்டு மணக்
கோலத்துடனிருந்தானே: இவன் தனக்காக நியமி
த்திருந்தகன்னிகையை கிருஷ்ணன் தூக்கிக்கொண்டு
போகிறபோது மானத்திறகாகவாவது கொஞ்சம்முய
ன்றானு? கையால் வில்லையெடுத்தால் இயமன் தன்னை
யடுப்பனென்றஞ்சிக் குறும்பாடு போல் தலையை வ
ணங்கிக்கொண்டு வெறும்பொறாமையால் இதயங்கன்
றினனேயல்லது வேறில்லை. இப்படிப்பட்ட பஞ்சை
க்கு இப்போது கேடுகாலங்கிட்டினபடியால் தாறுமா
றாகப் பிதற்றுகிறான். இந்தமசகமெவ்வளவு? இதிருக்
கட்டும். மகாவீரனென்று கீர்த்திபெற்ற இந்த அர்ச்
சுனனும் - துரோணுச்சாரியரும் - அசுவத்தாமனும்-
கர்னனும் - வீமசேனனும் - துரியோதனனும்- ஒரு
காலத்தில் பலாபலம் பார்க்கவேண்டுமென்று, கிருஷ்
ணனை வேடிக்கையாய்ச்சண்டைக்கு அழைத்தார்கள்.
பகவான் அக்கருத்தறிந்து அப்படியே அவர்களோடு
விளையாட்டுச் சண்டைசெய்து, குந்திதேவியின் கண்
ணெதிரிலேயே அவர்களெல்லாரும் வெலு வெலுத்
தோடும்படி யடித்துச் செயித்தார்.

இப்படிப்பட்ட இவருடையமகிமைகளைக்கண்டுங்
கேட்டுமுள்ள மன்னவரெல்லாம் இவர் பேரெடுத்துக்
கூறினுற் சிங்கத்தைக்கண்ட யானைகள்போல்நடுநடுங்
கிக்கொண்டிருப்பார்கள். இந்தப்பாவியுமப்படி நடுங்கி
னவன்தான்.இன்றுகேடுகாலங்கிட்டி இப்படி துள்ளுகி
றான்.இந்தக்கிருஷ்ணன் இனிமேலும் இம்மூடனுகிய
சிசுபாலன் முதலான வெகுதுட்டரைச் சங்காரஞ்செ
ய்து, தாமவதரித்த காரியத்தையு நிறைவேற்றி, முடி
வில் துவாரகாபுரியைக் கடலுக் கிரையாக்கித் தமது
லோகத்திற்கு எழுந்தருளப் போகிறார். துவாரகை
யைக் கடலடித்துக்கொண்டுபோகும்படி செய்வானே
னென்றால்-பரமாத்துமாவாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி
யெழுந்தருளியிருக்கிற நிமித்தமாய் விசுவகருமா சு
வர்க்கலோகத்திற்கும் அருமையாகியசிறப்புக்களுடன்
இந்நகரியை நிருமித்தான். இவர் மகிமையால் அது
வெகுசெல்வமுஞ் சிறப்பும்பெற்று விளங்குகின்றது.
இப்படிப்பட்ட நகரத்தில் மற்றொருவன் வாசஞ்செய்
யத் தகாதாகையால் அதையழிக்கப்போகிறார். ஓ தரு
மநந்தனு! இவருடைய மகிமைகளும் செய்கைகளும்-
முற்றுஞ்சொல்லத்தரமில்லாமையாற் கொஞ்சங்கொ
ஞ்சமேசொன்னேன். முடிவானவார்த்தையைக்கேள்.
இந்த ஸ்ரீகிருஷ்ணன் உலகங்களையெல்லாம் படைத்து
அளித்து அழிக்குங் காரணப்பொருளாகிய ஸ்ரீநாராய
ணன். துஷ்டரைச் சங்காரஞ்செய்து சிஷ்டரைப் பரி
பாலனஞ்செய்ய அவதரித்திருக்கிறார். அவதார காரி
யங்களிற் சிலவற்றை முடித்தார். சிலவற்றை முடிக்
கப்போகிறார். என்று யாவருங் கேழ்க்கும்படியாகப்
பலபல விதத்திலுஞ்சொல்லிப் பின்பு வீஷ்மர் வாயை
மூடிக்கொண்டார்.

சிசுபாலன் வீஷ்மரைத் தூஷித்தல்.

இவ்வாறு வீஷ்மர் சொல்லிய வார்த்தையைக்கே
ட்டு அந்தச்சபையிலிருந்தயாவருஞ் சந்தோஷித்தார்
கள். சகாதேவனென்பவன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய மகி
மையைக் கேட்டமாத்திரத்தில் அதிக ஆனந்தமடை
ந்து யாவரையும்நோக்கி, ஓ மகாமுனிவர்களே! ஓமகா
ராஜாக்களே! இப்போது குருகுலபிதாமகராகிய வீஷ்
மர் சொல்லியது யாவருக்குந் தெரிந்ததன்றோ? இந்த
ஸ்ரீ கிருஷ்ணன் பகவானெனபடியினுலும், சவுரியம் -
சீலம் - செய்கை - மேன்மை - நற்குணங்கள்-இவை
களாற் சிறந்தவ ராகையாலும், இவரே பிதா - மாதா-
குரு - பந்து-தெய்வம் - இராசா - மற்றயாவருமென்
றெண்ணி முதற்பூசை செய்தோம். அதுபெரியோர்
களுக்கெல்லாஞ் சம்மதியா யிருக்கிறது. இதிற் சம்
மதியில்லாமற் பொறாமைகொண்டவனெவனே? அவ

ன் ஆண்மை யுள்ளவனுகிற கையி லாயுதமெடுத்துச்
சண்டைக்குப் புறப்படட்டும். எவனப்படி புறப்படுகி
ருனே ? அவன் தலையை நான் மிதிக்கிறேன் பாருங்க
ளென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். அப்படிக்
கிருந்தும் இன்னுமவனேடு பேச்சென்னவென்று சொ
ல்லி முடித்தான். இவ்வாறு சகாதேவராஜன்சொன்ன
வார்த்தையைக் கேட்ட மகாமுனிவரும் - ராஜரிஷி
களும்-தேவர்களும் - வெகு சந்தோஷமடைந்து கொ
ண்டாடினர்கள். நாரதமாமுனிவர் இந்தச் சிசுபாலனு
க்கு முடிவு காலங் கிட்டித்தென்று வீணைமீட்டிக்
கோலாகலஞ் செய்துக்கொண் டிருந்தார். அந்தச் சிசு
பாலன் வீஷ்மர் பேச்சையுஞ் சகாதேவன்பேச்சையுங்
கேட்டு யுகாந்த காலாக்கினிபோல் மிகுந்த கோபத்
தையடைந்து முகம் படபடத்து நிற்க, அவனைச்சார்
ந்த அரசர்களெல்லா முகங்குன்றி ஒருவர்முகத்தை
யொருவர் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

இப்படிப்பட்ட அரசர்களை நோக்கிச் சிசுபாலன்
யுத்தஞ் செய்யவேண்டிய சம்மதியைக்காட்ட, யாவ
ருங் கிருஷ்ணனேடு யுத்தஞ்செய்ய அயர்வுபட்டார்
கள். அதையறிந்த பகவான் சும்மாயிருந்தார். அ
ந்தச்சகாதேவன் பின்பு முறையே பிராமணர் க்ஷத்தி
ரியர் முதலாகிய யாவரையுந் தகுந்தபடி பூசித்து
அந்தயாகச்சடங்கை நிறைவேற்றிவந்தான். அதைக்
கண்ட சிசுபாலன் வெகுபொருமைகொண்டு, தன்னே
டிணங்கிய அரசரை நோக்கி, ஓ ராஜாக்களே ! நீங்க
ளேன் அஞ்சுகிறீர்கள் ? நீங்களோ வெகுசாமார்த்திய
முள்ளவர்கள். நான் உங்களுக்குத் தகுந்த சேனுப
தியா யிருக்கிறேன். ஆனபடியினுலே நம்மையெல்லா
ம் அவமானஞ்செய்த பாண்டவர்களையும் - அவர்க
ளைச் சார்ந்தவர்களையும்-வீஷ்மன் முதலான துஷ்ட
ரையும் - இங்கேதானே கொன்று கீழேதள்ளிப் போ
ட்டு யாகத்தையுங் கெடுத்து விடுவோம் என்றுசொல்
ல, அதைக்கேட்ட துஷ்டவரசர்கலெல்லாஞ்சண்டை
க்கு யத்தினப்பட்டு ஆரவாரஞ்செய்ய, தருமபுத்திரர்
தமது யாகத்திற்கு இடையூறு நேரிட்டதென்று ம
னங்கலங்கி மிகுந்த பயத்துடனே வீஷ்மாசாரியைப்
பார்த்து, ஓ பிதாமகரே ! இப்போது ராஜமண்டல
ம் மிகவுங் கோபித்து யுத்தத்திற்கு ஆயத்தமா யிரு
க்கிறது. இதனுலே வெகுபேர்கள் வீணுய் நசிக்கிறது
மன்றி, நம்முடைய யாகத்திற்கும் விரோதம்வருகிற
துபோற் காண்கிறது. ஆதலால் இப்படிக்கெல்லாம்
நேரிடாம லிருக்கும்படி நான் செய்யவேண்டிய உபா
யம் யாதோ ? அதனைநீர் உரைக்கவேண்டுமென்றுகே
ட்க அந்தக் குருகுல பிதாமகர் சொல்லுகிருர்.

ஓ தருமபுத்திரா ! நீயொன்றுக்கும் அஞ்சவே
ண்டாம். ஸ்ரீகிருஷ்ணனென்னுஞ் சிங்கம் அதோயிரு
க்கிறதுபார். அச்சிங்கம் இவ்வளவு ராசகோலாகலத்தி
லும் ஏதாகிலுஞ் சற்றஞ்சிக் கண்ணெடுத்துப் பார்க்
கின்றதா ? அலக்ஷியமாகவே நினைத்துப் புன்னகை
கொண்டு விளங்குகின்றது. இந்த நாய்க்கூட்டங்கட்
குக் காலங்கிட்டியபடியால் வீணுய்க் குலைக்கின்றது.
சுகமாய்க் குலைக்கட்டும். அதனுல் யாருக் கென்ன?
கிருஷ்ணன் இந்தப்பாவிகளையெல்லாம் ஒருநொடியிற்
சங்கரிக்கப்போகிருர். ஆனபடியால் நீர் யோசிக்கவே
ண்டாம். எனறு சொல்லக்கேட்ட தருமபுத்திரர் சமா
தானமாயிருக்கச் சிசுபாலன் அவ்வீஷ்மரைப்பார்த்து,
அடா கிழவா ? உனக்கேது புத்தி இப்படிகெட்டது?
இத்தனைநாளும் நீ வெகுவிவேக முள்ளவ னென்று
நினைத் திருந்தேன். இப்போது நீ சொல்லியபேச்
சைக்கேட்டாற் சிறுபிள்ளைக்குங் கீழ்ப்பட்டவனுகத்
தோற்றுகிறது. அல்லது உனக்கு பயித்தியந்தான்
பிடித்ததோ ? அல்லது காலங் குறுகியபடியால் தா
றுமாருகப் பிதற்றுகின்றனையோ ? அடாபாவி - உன
க்குக் கொஞ்சமுங் குலாபிமானமுஞ் சூராபிமானமு
மில்லை. தைரியசாலிகளாகிய ராஜாக்களையுங் கூடப்
பொய்சொல்லி யேன் பயமுறுத்துகிருய் ? இதில் உ
னக்கு வெட்கமுண்டாகாமற்போனதற்கு யான் ஆச்
சரியப்படுகிறேன். நீ இழிகுலப் பிறப்புடையவ னுத
லால் அற்பனுகியும் அயோக்கியனுகியு மிருக்கு மொ
ரு இடையனைப் புகழ்ந்தாய். ஐயோ ! ஏனிப்படி உன்
பிழைப்பு வீணுய்ப்போச்சுது ? இப்படிப்பட்ட மகா
மூடனுகிய உன்னிடத்தில் தருமோபதேசங் கேழ்க்
கவந்த பாண்டவர்களுக்கும் அதுதகுதிதான். இல்
லாவிட்டால் அந்தக்கடைக்குட்டிப்பயல் காலைத் தலை
மேல் வைக்கிறே னென்று பிதற்றுவானு ? அவன் அ
ற்பனென்று அலக்ஷியஞ்செய்தேன். இல்லாவிட்டால்
நீதான் எனக்கெவ்வளவு? இந்தப் பாண்டவர்கள்தான்
எவ்வளவு ? மற்றவர்தானெவ்வளவு ? ஆகிலும் பாம்பு
க்குட்டிகளைக் கண்டவிடத்தில் தலையை நசுக்கவே
ண்டுமென்று பேரியோர் சொல்வதுபோல், உங்களை
யெல்லாந் தலையெடுக்கவொட்டாமல் அடிக்கவேண்டி
யது அவசியந்தான். அதற்கு இத்தனைநாளுங் காலம்
நேரிடாமற் போயிற்று. இப்போது நேரிட்டபடியால்
அப்படியே செய்கிறேன். இதெல்லா மிருக்கட்டும்,.
நீ எவனைப்புகழ்ந்தாயோ ? அதைக்கேட்டு இந்தக்
குண்டகர் எவனைப் பூசித்தார்களோ ? அவன் அற்ப
னென்றும், மோசக்காரனென்றும், துடுக்கனென்றும்
யாவரும் அறிவார்கள். நீயும் அறிவாய். அறிந்திருந்
துங் கெடுமதியினுலேயோ ? கெருவத்தினுலேயோ?
மயக்கத்தினுலேயோ ? சிறப்பித்துச் சொன்னுய். நீ
சொல்லிய சரித்திரங்களிற் பெரும் பாலும் வெறும்
பொய்தான். ஆகிலும் அவைகளாலும் இவனுக்கு
மிகுந்த பெருமையைக் காணேன். இவனைத் தெய்வ
மாகச்சொன்னுய். இவனுடைய துஷ்ட நடக்கைகளிற்
சிலசொல்லுகிறேன் கேளென்று சிசுபாலன் சொல்லு
கிருன்.

அடா கிழப்பிணமே! இவன் வெண்ணெய்க்கும்-
பாலுக்கும்-தயிருக்கும்- ஆய்ச்சியர்மத்தினுல்மொத்து
ண்டதும், திருடியகப்பட்டுக்கட்டுண்டதும், கோவல

ருங்கோவியரும் இட்டபணிசெய்து [illegible] இரந்துண்டதும், பிறர் மனைவியராகிய கோபிகைகளோடு கூசாமற் காமசுகங்களைப் புணர்ந்ததும், சேசித்த அவர்கள் வஸ்திரங்களை யெடுத்து மரத்தின் மீது வைத்துக்கொண்டு அவர்களை நிர்வாணமாகவரும்படி செய்ததும், விளையாடல்களில் தோற்று இடையப் பயல்களைச் சுமந்ததும், பலவிதமோசஞ் செய்ததும், இப்படிப்பட்ட பலசெய்கைகளினாலுந் தெய்வத்தன்மை நன்றாய் விளங்குகின்றது. அடா மடயா! ஒரு பொத்தல்வண்டிலைக்காலாலுதைத்து ஒடித்ததையும், சொத்தை மருதமரங்களை முறித்ததையும், நத்தைதின்னும் பாம்பை நசுக்கியதையும், பீத்தையாகிய கொக்கின் வாயைப் பிளந்ததையும், கழுதையைக் கொன்றதையும், கன்றைக் கொன்றதையும், எருதைக் குதிரையை இன்னும் பலமிருகபக்ஷிகளைக் கொன்றதையும், பல அரசர்களும் அறிவார்கள். இவைகளையொரு பெருமையாக நினைக்கிறாயோ? ஒருக்காலும் பெருமையாகமாட்டாது. ஏனெனில்-அந்தச்சகடம் ஏதோ வேறுகாரணத்தாற் கீழே விழுந்து உடைந்தது. காகதாளீயமாய் இவன்காலுமதிற்பட்டிருக்கும். மரங்களுமப்படியேதான் முறிந்திருக்கும். மற்றைப் பக்ஷிமிருகங்களைக் கொன்றது சாதாரணமாகிய வேடனுக்கும் எளிதான செய்கையே யல்லது வேறன்று. அன்றியும் பசுவின் கன்றைக் கொன்றதும், எருதைக்கொன்றதும், கோவதை யாயிற்று. இதுசண்டாளனுடையசெய்கையேயல்லது மற்றொருவன் செய்கையன்று. இதை நீ மறக்காமல் எடுத்துச் சொல்லிப் போட்டாயே; ஐயோ! அது அவன் தலையை வணக்குகின்றதே;

இதுவுமன்றி இவன்செய்துவந்த பாவச்செய்கை ஒன்றாயிரண்டா? ஒருகோடியுண்டு. தாய்வடிவாகவந்து முலைகொடுத்தவளைக் கொன்றானே; இதைக்காட்டிலுங் கொடியசெய்கை வேறுண்டோ? தன் குடும்பத்துக்கெல்லாம் அன்னமிட்டுக் காப்பாற்றிய அம்மானாகிய கஞ்சனைக்கொலைசெய்ததைச் சண்டாளனாகிலுமங்கீகாரஞ் செய்வானா? அதுநிமித்தம் ஜராசந்தனாலே துரத்தப்பட்டு ஓடியொளித்தது எத்தனையோ தரமுண்டு. காடுகளிலும்-மலைகளிலும்- ஏதேது ரகசியமானவிடங்களுண்டோ? அவைகளெல்லாமிவனுக்கு நன்றாய்த் தெரியும். ஐஐயோ!! நற்குலத்திற் பிறந்த மகாராஜனாலே துரத்தப்பட்டோடியது, இவனுக்குப் பெருமையேயல்லது வேறல்ல. ஒரு மிலேச்சனாற்றுரத்தப்பட்டு நெடுந்தூர மோடினானே, இவனா பராக்கிரமசாலியும்-வீரனும்-மானியுமாவன். மிலேச்சனுக்குத் தோற்றவன் மறுபடி ராஜமண்டலத்தில் வரத்தான் தகுமோ? வெட்கமில்லாதவனாகையால் வருகிறான். இவனைப் பெரியவனென்று நீ சொல்லியது சரியே. ஏனென்றால் வெட்கங்கெட்டவன் ஊருக்குப் பெரியவனென்று உலகத்திலொருவதந்தியிருக்கின்றதன்றோ? இவன் பிறந்ததெங்கே? வளர்ந்ததெங்கே? என்ன [illegible]! ஓ! ஓ! ஓ! சகல வேதங்களும் முறையிடுகிறபடி இந்திரனுக்குச்செய்யும் பூசையைத் தடுத்து மலைக்கிடும்படி செய்தானென்றா யல்லவோ? அதனாலிவன் தெய்வத்துரோகியும் - வேதத்துரோகியும்-குலத்துரோகியுமானான். இப்படிப்பட்ட பாவிமுகத்தைப் பார்ப்பதும் மகாபாதகமாகும். நல்லது இவன் பூமியிலொருரூபத்துடனிருந்து, மலையிலொருரூபத்துடன் சோற்றைத் தின்றானென்றாய். அதனால் மாயாவியென்றுஞ் சோற்றுக்குவெஃகிய பஞ்சையென்றும் விளங்கிற்று. கோவர்த்தனமென்பது மாடுகள் மேயும்படியான ஓர் சிறுமேடு. அதை யெடுத்ததினால் ஒருமகிமையுண்டோ?

இதெல்லா மிருக்கட்டும். மகாசூரனாகிய ஜராசந்தனிடத்திற் கடும்பகைவைத்துத் தன்கையிலாகாமல் இப்பாண்டவச் சிறுவ ரிருவரைக்கொண்டு கொல்வித்தானன்றோ? அதில் நடந்த சூதுகள் அளவற்றதுகள். எப்படியென்றால் - முன்னமே தமது இயல்பாகிய வேடத்தைவிட்டுப் பிச்சைக்காரப் பார்ப்பார் வேடங்கொண்டதொன்று. பகிரங்கமாகிய வாசலிற் போகாமல் மதிளேறிக் குதித்ததொன்று. பின்பு அவன் தருமநினைப்பினாற் செய்த பூசையைத் திரஸ்காரஞ் செய்ததொன்று. யுத்த மிருவருக்கும் நடக்கும்போது அந்த மகாவீரனால் அடிபட்டுச் சோர்ந்து போன பாண்டவனுக்கு, இரகசியமாகக்குறிப்பித்ததொன்று. இப்படிப்பட்ட மோசங்கள் நற்குலத்திற் பிறந்து சூரத்தன்மையும் விவேகமும் பொருந்திய மகாராஜனொருவனுஞ் செய்யமாட்டான். இவனோ? இழிகுலத்தானும் பலமில்லாதவனும் மூடனுமாகையாற் செய்தான். அந்தப் பாண்டவரும் எப்படியாவது காரியங் கைகூடுவ தொன்றென்று, இவன்யுக்திப்படிநடந்தார்கள். இல்லாவிட்டால் அந்தவீரனுடைய புஜபலத்திற்கும் இப்பாண்டவர் ஒருவிஷயமாவார்களோ? இப்படித்தா னிவன்செய்தகாரியங்களெல்லாம் மோசமேயல்லது ஒன்றும் நியாயமன்று. இவ்விதமாக வஞ்சகனும் - சுவாமித்துரோகியும் - தெய்வத்துரோகியும்-குலத்துரோகியும் - வேதப் பிரட்டனும் - கள்வனும்-பிறர்மாதரைப் புணர்பவனும் - மானயீன மில்லாதவனும் - பொய்யனும் - இழிகுலத்தோனு மாகிய இவனைப்புகழ்ந்த நீயும் மகாபாவிதான். உன்முகத்தையும் பார்க்கக்கூடாது. நீ தருமமறிந்தவ னென்று பேர்மாத்திரந்தான் பெற்றாய். அதிலொன்றுந் தெரியாது. நரையும் உனக்கு வீணாகவேயிருக்கிறது. அப்படியின்றி நீ தருமமறிந்தவனாகில் பாவியைத்துதித்து மகானுபாவரை யவமானஞ் செய்வாயோ?

அன்னப்பக்ஷி முதலானவைகள்கதை.

அடா விருத்தவிலங்கே! முன்னே ஒருகிழ அன்னம் சமுத்திரக் கரையி லிருந்தது. அது சிலபட்சிகளையுந் தங்களினங்களையுங் கூவி ஒருவனையும் வஞ்

சிக்கலாகாது. பொய்சொல்லலாகாது. கொலைசெய்யலாகாது. என்று தருமங்களை யுபதேசித்துக்கொண்டிருந்தது. எல்லாப்பட்சிகளும் அவ்வுபதேசத்தை மெய்யென்றுகேட்டு, அதனிடத்திற் குருவென்கிற அபிமானத்தையும்-துரோகஞ்செய்ய மாட்டாதென்கிற நம்பிக்கையையும்-வைத்திருந்ததுகள். மேலும் அந்த அன்னத்திற்குத் தினந்தோறும் இரைகொண்டுவந்து கொடுத்து, அதையெங்கேயுஞ் சஞ்சரிக்க வொட்டாமற் செய்ததுகள். இப்படியிருக்க வொருநாள் எல்லாப்பட்சிகளுந் தங்கள்முட்டைகளை அவ்வன்னத்தினிடத்திலேயே வைத்துப்போட்டு, இரை சம்பாதிக்கப் போச்சுதுகள். அந்த அன்னம் அந்த முட்டைகளைக் காப்பாற்றி அந்தப் பட்சிகளெல்லாம் வந்தவுடனே கொடுக்கவே, அப்பறவைகள் இது மிகவுந் தருமநடத்தை யுடைய தென்று சந்தோஷித்துத் தினந்தோறும் தமது முட்டைகளை அதன் வசத்திலேயே வைத்துக் காப்பாற்றும் படிக்குச் சொல்லிப் போய்க்கொண்டிருந்ததுகள். அவ்வன்னமோஅந்தமுட்டைகளில் தனக்குவேண்டியமட்டும் உடைத்துக் குடித்துக் கொண்டேயிருந்தது. அதனாலே தினந்தோறும் முட்டைகள் குறைவுபடக்கண்டு, ஒருபறவைசந்தேகப்பட்டு பறவைகளெல்லாவற்றோடும் இரைக்குப் போகிறதுபோற் காட்டி ஓரிடத்தில்மறைந்திருந்தது. அந்த அன்னம்வழக்கம்போலே சிலமுட்டைகளையுடைத்துத் தின்னக்கண்டு, எல்லாப் பறவைகளுக்கு மிச்சேதி தெரிவிக்க; அவைகளெல்லாம் மிகவுங்கோபங்கொண்டு அந்த மொசக்காரப்பக்ஷியை அடித்துத் துரத்திக் கொன்று விட்டதுகள்.

அப்படிக்கு நீயுந்தருமத்தை யுபதேசிக்கிறவன். வயது சென்றவன். சத்தியசந்தனென்று சொல்லும்படி அபினயித்து இப்போது எல்லாவரசரையுங்கெடுக்கநினைத்தாய். ஆகையால் உன்னைக் கொல்ல வேண்டும். நல்லது நீ பிரமசரிய விரதத்தைப் பூண்டது தான் தரும சிந்தையினாலேயோ ? அன்று. மற்றெதனாலென்றால் - நபும்சகத் தன்மையினாலேதான். நீ இவ்விரதத்தை யங்கீகரிக்காமற் போனால் உலகத்தில் மிகவும் பரியாசஞ் செய்யப்படுவாய். நீ பாவிகளோடுசம்பந்தப்படுதல் மகாபாவமென்று அன்னியருக்கு உபதேசித்து வந்து நீ இப்போது அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதைப்பார்த்தால், ஓர் குலிங்கப்பக்ஷியானது ஓர்மரத்தின் கிளையிலுட்கார்ந்து சிங்கம்-புலி-முதலாகிய மகாமிருகங்களுக்கெதிரிற் சாகசஞ்செய்யாதீர். சாக்சஞ் செய்யாதீர். என்று சொல்லிக் கொண்டு தான் அந்த மகாமிருகங்கள் கொட்டாவி முதலாகிய நிமித்தங்களினால் வாயைத் திறக்குமளவிற் பற்களிற்பற்றியிராநின்ற மாமிசங்களைக்கொத்தித் தின்னும்படியான கொடுஞ்செய்கைபோ லிருக்கின்றது. ஐஐயோ !! என்னடா வீஷ்மா உனக்கிப்படி புத்தி விபரீதப்பட்டது ? நான் முன்னுரைத்த படிக்கும் அன்னப்பக்ஷி குலிங்கப்பக்ஷிகளின் கதைகளின் படிக்கும் சகலபாவச் செய்கைகளுக்கு மிருப்பிடமாகிய ஒரு இடையனைத் தெய்வமென்று மூடருக்குச் சொல்லிமோசஞ்செய்வதுபோல், என்னையும்மோசஞ் செய்யநினைத்தாயே: அதுசாயுமா ? அந்த இடையன் காருடவித்தை கற்றவன். அதனாலே சில அற்புதங்களைக்காட்டியிருப்பான். அவைகளைக்கண்டுநீநன்றாய் மயங்கினாய். நாம் மயங்க மாட்டோம். தெய்வமாகிற் பேரறிவு - பெருந்திறம் - பரிசுத்தநடத்தை - பெருந்தன்மை - இப்படிப்பட்ட மகாகுணங்களெல்லா மிருக்கவேண்டுமே: இவைகளி லொன்றேனு மில்லாமல் மாயப்பொடி போட்டு மயக்குகிற இவனைத் தேவனென்று புகழ உனக்குவாயெழுந்ததே: இதுமெத்த ஆச்சரியம். இவன்ஜாலத்தால்மயங்கினது நீமாத்திரமோ? சில பெரியோர்களும் மயங்கியிருக்கிறார்கள். ஏனெனில்-அவர்கள் கபடற்றவர்களான படியினாலே இந்தக்கபடச் சேட்டைகளை மெய்யென்றே நம்பினார்கள். அடா கிழவா ! யாவரையுஞ் அவமானம் செய்வதற்கு மூலகாரணமாகியவனும், இப்பாவியைப் புகழ்ந்தவனும் நீ யாதலால் இப்போது முன்னம் உன்னைக்கொன்று, பின்பு மற்றவரைக் கொல்வேனென்று சிசுபாலன்வெகு ஆக்கிரகத்துடனே பேசியெழுந்திருந்தான்.

அதைக்கண்ட வீமசேனன் வெகு கோபாவேசமடைந்து சுபாவமாய்ச் சிவந்திருக்குங்கண்களிரட்டிப்பாய்ச்சிவக்கக் கையிற்கதாயுதத்தை யெடுத்துக் கொண்டு யமன்போற் சிசுபாலனைச் சங்கரிக்கிறேனென்று ஆசனத்தை விட்டுச் சரேலென்றெழுந்து புறப்பட்டான். அப்போது வீஷ்மர்தாமே எழுந்தோடி அந்த வீமசேனனை யிரண்டு கைகளாலு மணைத்துப்பிடித்துக்கொண்டு, அப்பா வீமசேனா!நீயேன்வீணாய் அவனைக்குறித்துக் கோபிக்கிறாய் ? அவனுக்குமுடிவுகாலமாகையால் அவன்வாயில் தாறுமாறான சொற்கள் புறப்படு கின்றன. எல்லாத்திற்கும்பகவானிருக்கிறார். நீ சும்மாயிருவென்று இவ்வாறுபலசமாதானஞ்சொல்லவே வீமசேனன் அவர்பேச்சிற் குருத்துவம் வைத்தவனானபடியினாலே உடனே அந்தக்கோபத்தைவிட்டு தன்னாசனத்திற் போய் உட்கார்ந்தான். அதைப்பார்த்த சிசுபாலன் ஆஹா!ஆஹா ! என்று சிரித்து வீஷ்மரைப்பார்த்து, அடா வீஷ்மா ! மகாசூரன்புறப்பட்டானே இனி உலகம் அழிந்துபோகுமென்று அவனைத்தடுத்தாயோ ? நீ தடுக்கவேண்டாம். சும்மா அவன் குதித்துச் செய்யவேண்டியதைச் செய்யட்டும். அவனாலென்னாகும்?மாடுமேய்க்கிறவன்போற்கையிற்பெரியதடியைவைத்துக்கொண்டு, ஆள்உயரமும்பருமனுமாக இருக்கிறானேயென்று மலைக்கிறாயோ?அதற்காக நாம் அஞ்சோம். நீ தடுத்து அவன் சும்மாவிருந்தாய் ஒருபெருமை வேண்டாம். சாமர்த்தியமுண்டானால் வந்து பார்க்கட்டும். உலகத்திலே (யதார்த்தவாதி வெகுசன விரோதி.) என்கிற பழமொழிப்படிநான்

உன்னுடைய சுபாவத்தையும்-கிருஷ்ணனுடைய சுபாவத்தையும்-எடுத்துச் சொன்னபடியினலன்றே அவன் கோபத்திற்குப் பாத்திரனேன் ? ஆனலென்ன ஒருகுறைவு மில்லை. நீயும் அவனுக்கு உபபலமாகச் சண்டைக்கு வந்தாலும் வா. நான்சாவச் சித்தமாயிருக்கிறேனென்று சொன்னன்.

வீஷ்மர் சிசுபாலன் வரலாறுரைத்தல்.

:0:

அப்போது வீஷ்மர் தருமபுத்திரனையும் வீமனையும்பார்த்து, வாரீர் பாண்டவச் சிரேஷ்டர்களே! இந்தச் சிசுபாலன் எந்தத் தைரியத்தினலே அஞ்சாமல் இப்படி பேசுவதும் - யுத்தத்திற் கழைப்பதும்- உங்கட்குத் தெரியுமா ? அதன்காரணத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். சேதிதேசத்து ராஜனுகிய தமகோஷ னென்பவனுக்கு மூன்றுகண்களும் நான்கு கைகளுமாய் ஒரு புத்திரன் பிறந்தான். அப்படிவேற்றுருபத்தோடு பிறந்த சிசுவைப்பார்த்த அந்த மகாராஜனும் - அவன் மந்திரிகளும் - இது இராச்சியத்திற்கு அனிஷ்டகாரண மானபடியினலே இதையெங்கேயாகிலும் எறிந்துவிட வேண்டுமென்று யோசித்துக்கொண் டிருக்கையில், ஆகாசத்தில் அசரீரிவந்து ஒருவார்தை சொல்லிற்று. அஃதென்னவென்றல்- ஓ தமகோஷ ராஜனே ! இந்தச் சிசுவை நீங்கள் எறிய வேண்டாம். இதுதான் உன்வமிசத்திற்கு முளை. வெகுபல பராக்கிரமங்களோடு கூடி மேன்மை யடையப் போகிறது. இந்தப்பிள்ளைக்கே நீ பட்டங்கட்டலாம், என்று சொல்லியதைக் கேட்ட அரசன் வெகுசந்தோஷமடைந்திருந்தான். இப்படியிருக்க அவன் மனைவியாகிய சாத்வதி யென்பவள் எந்த அசரீரிதேவதை இப்போது இவ்வாறு சொல்லிற்றே ? அந்த தேவதையை நான் சாஷ்டாங்கமாகக் கும்பிடுகிறேன். என் மீதில் அந்ததேவதை தயைவைத்து, இந்தப்புத்திரனைக் குறித்து மறுபடியுஞ் சொல்லவேண்டு மெனக் கேட்டுவந்தித்தனள். அந்ததேவதை - ஓ சாத்வதி! இந்தப்பிள்ளை எவன்மடியிலிருக்கும்போது அதிகமாகிய ஒருகண்ணும் இரண்டுகைகளும் மறைந்துபோகுமோ ? அவன்தான் இவனுக்குமிருத்து. மற்றொருவனுலு மிவனுக்குப் பயமில்லையென்று சொல்லிப் போயிற்று. அதைக்கேட்ட அந்தச்சாத்வதி மிகுந்தசந்தோஷ மடைந்திருந்தாள்.

இப்படியிருக்கத்தமகோஷனுக்கு மூன்றுகண்களோடும் நான்கு கைகளோடும் பிள்ளை பிறந்ததென்றுகேள்விப்பட்டு இந்த ஆச்சரியத்தைப்பார்க்கச்சகல தேசங்களிலு மிருந்து ராஜாக்கள் முதலாகிய யாவரும் வந்து வரிசைமுதலியதுந் தந்தார்கள். அவர்களைத் தமகோஷன் பூசித்து, அவரவர்களின்மடிகளிற் குழந்தையை உட்காரவைத்தான். அதனலே அக்குழந்தையின்விகாரரூபம்மாறவில்லை. பின்புயாதவராஜர்கள் மடியின்மீதில் உட்காரவைத்துக்கொண்டே வரும்போது, கிருஷ்ணன் மடியில் உட்காரவைத்த மாத்திரத்திலே அதிகமானகண்ணும்-அதிகமாயிருந்தகைகளும்-மறைந்து போய்விட்டதுகள். அதைப்பார்த்து அந்தச் சாத்வதியானவள் கிருஷ்ணனிடத்திற்கு வந்து மிகவுந் தோத்திரஞ்செய்து நீ யொரு வரந்தரவேண்டுமென்றுகேட்டாள். ஸ்ரீகிருஷ்ணன் அவளைப் பார்த்து, அத்தாய்! நீயேன் இவ்வளவு தோத்திரஞ் செய்கிறுய்? என்னுலாகவேண்டியதற்குத் தடையில்லையென்றுசொல்ல அதைக்கேட்ட அந்தச்சாத்வதி- அப்பா கிருஷ்ணு ! என்மகனுக்கு நீ மிருத்து வாகத் தெய்வ சங்கற்பத்தினுலாகி யிருக்கிறுய். ஆனபடியினுலே நீ என்மகன்செய்யும் அபராதங்களில் நூறு அபராதங்களைப் பொறுக்கவேண்டும். இது தான் நான் வேண்டும் வரமென்று சொன்னுள். அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணனுனவர் - அத்தாய் ! அப்படியே உன்மகன் செய்யும்பிழைகளில் நூறுபிழைகளைப் பொறுப்பேன். சந்தேகப்படாதே. அஞ்சாதே. என்று வரங்கொடுத்தார். இப்படிப்பட்ட சங்கதியினுலே இந்தச் சிசுபாலன்யார்சண்டைக்குவந்தாலுமென்னபயமில்லையென்று தைரியங்கொண்டிருக்கிறுன். ஆனபடியினுலேநம்மிலொருவரும் அவனேடு சண்டைக்குப் போகவேண்டாம். அவனுக்குவைரி சுவாமி யிருக்கிறுர். என்று வீஷ்மர் சொல்லியசொல்லைக்கேட்ட பாண்டவர்மனக்கலக்கந் தீர்ந்தவர்களா யிருக்கும்போது, அந்தப்பாண்டவர்களைப் பார்த்து வீஷ்மர்மறுபடியும் ஒருவார்த்தை சொல்லுகிறுர்.

ஓ பாண்டவர்களே ! இந்தச்சிசுபாலனுக்கு ஆயுள் நெடுநாளிருக்கிறதென்று நினையாதேயுங்கள். இன்னும் ஒரு முகூர்த்தத்திற் கதிகமில்லை. அதற்கு அடையாளமென்னவென்றல் - கண்ணனுலே தனக்குச்சாவென்று தெரிந்திருக்கையிலும் அவரையே தூஷித்துச் சண்டைக்கு அழைக்கிறுனன்றே ?காலபாசங் கழுத்தில் விழாவிட்டால் இப்படித் தன்னைத்தான்மறப்பானே ? ஆதலால் ஒரு முகூர்த்தத்திற்குள் இவன் யமலோகத்திற்குப் போகப்போகிறுன். என்று சொல்லக்கேட்ட சிசுபாலன் வீஷ்மரைப் பார்த்து, முன்போலவே அனேக தூஷணங்களைச் சொல்லி, அடா வீஷ்மா ! நீ எவரையேனும் வந்தியர்போல் துதிக்கவேண்டுமென்று இச்சித்தாயேயாகில், ஐயோ ! மிகவும் வறியனுந் துஷ்டனுமாகிய இடையனையா துதிக்கவேண்டும்? இச்சபையில் சூரரும், தீரரும்,கெம்பீரரும், பெருஞ்செல்வம் - பெரும்புகழ் - பெருந்தன்மை - யுடையவர்களுமாகிய மகாராஜாக்கள் எத்தனைபேரோ இருக்கிறுர்களே: அப்படிப்பட்ட பேர்களையெல்லாம் விட்டு, ஒரு மூடனைத் துதித்து வாயையேன் கெடுத்துக்கொண்டாய் ? அடா மூடா! நீ இவ்வளவாக எங்களையெல்லாம் அவமானஞ்செய்து நிந்தித்த பிழைக்கு நாங்கள் பொறுத்துக்கொண் டிருக்

கிறபடியினாலே நீ பிழைத்திருக்கின்றாயே யல்லது, ஏதோ உன்சாமர்த்தியத்தினாற் பிழைத்திருக்கிறதாய் நினையாதே. என்று சொல்ல அச்சொல்லைக்கேட்ட அக்குருகுலபிதாமகர் புன்னகைகொண்டு யாவரையும் பார்த்து, ஓராஜாக்களே! உண்மையானபேச்சொன்று சொல்லுகிறேன் கேளுங்கள். இந்தச் சபையி லிருக்கிறபேர்களில் யார் மகாசூரொன்று தங்களைத் தாங்கள் நினைத்துக்கொண் டிருக்கிறார்களோ? அவர்களை நான் ஒரு திரணமென்று நினைக்கிறேன். ஆனபடியினாலே இந்த நிமிஷத்திலேயே இவனையும் இவனைச் சார்ந்த யாவரையும் யமலோகத்திற்கு அனுப்புவேன். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் அந்தக் காரியத்தில் முனைந்திருக்கிறபடியால், அவர்கருத் தெவ்வாறோ வென்று சும்மா விருக்கிறேனென்று சொன்னார்.

இந்த வார்த்தையைக் கேட்டுச் சிலர் நன்று நன்றென்று புகழ்ந்தார்கள். சிலர் மனதுவெகுண்டுவெப்பங்கொண்டு சும்மாவிருந்தார்கள். சிலர் மனக்களிப்புடனே வாயைத்திறக்காம லிருந்தார்கள். சிலர் ஓ! ஓ! ஓ! இந்தக்கிழவனுக்கு இவ்வளவு வயதாயுஞ் சாந்தகுணம் பிறக்கவில்லை. இச்சிசுபாலனோ சுபாவத்தில் துஷ்டன். வெகு கெருவமுள்ளவன். இவனுக்கும் பொறுமை யெவ்வளவேனுமில்லை. ஆதலால் இவனைக் கொல்லவேவேண்டும். அதனாலேதோஷமில்லை என்று சொன்னார்கள். இவைகளைக்கேட்ட வீஷ்மர் - ஓ ராஜாக்களே! நீங்களேன் என்னை நிந்தனையாகப் பேசுகிறீர்கள்? உங்களை நான் லட்சியஞ் செய்யமாட்டேன். ஆனாலென்ன செய்கிறேனென்றால் - உங்கள் பலத்தைப்பார்த்து உங்கள்தலைமே லிரண்டு கால்களையும் வைக்கிறேன். நீங்களுஞ் சிசுபாலனோடுகூட யமலோகம்போகச் சித்தமா யிருக்கிறீர்கள். ஆதலால் அதற்குக் காரணமாகிய ஸ்ரீகிருஷ்ணனைச்சண்டைக்கு அழைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

உடனே சேதிதேசத் தரசனாகிய சிசுபாலன் கோபமென்னும் அனலானது திகுதிகென்று சொலிக்கக் கண்ணனைப்பார்த்து, அப்பனோடுபிறந்த அத்தையைப்புணர்ந்தபாவி நீயல்லவா? அடா குடிகேடனே இடையா! இந்நிமிஷத்தி லெழுந்து என்னோடு சண்டைக்குவா. வரும்போது உன்னை மகாசிரேஷ்டனென்று துதிசெய்கிற இந்தக் கிழவனையும் அந்தப் பாண்டவர்களையுங் கூட்டிக்கொண்டுவா. சீக்கிரத்தில் உன்னையும் பாண்டவரையுஞ் சங்கரித்து, இந்த வீஷ்மனையுங்கொன்று, இங்கு வந்திருக்கிற அரசர்மனங்களைத் திருப்திசெய்கிறேன். என்று சொல்லிய சொல்லைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ண பகவான் கொஞ்சம் புன்னகைகொண்டு தாருகனென்னுஞ் சாரதியைத் தேர்கொண்டு வரும்படி நியமிக்க, அவன் சைனியம் - சுக்ரீவம்-மேகபுஷ்பம் - வலாகம் - என்கிற நான்கு குதிரைகள் கட்டிக் கருடத்துவசம் நாட்டி, வெகுப் பிரகாசமாய் விளங்காநின்ற ரதத்தைக் கொண்டுவந்து சித்தப்படுத்த, மகா சந்தோஷத்துடனே சுவாமிபார்த்து பெரியோர்க ளெல்லாந் துதிக்கப் பாண்டவர் ஜயஜயவென்று கூற வீஷ்மர் கைலாகு கொடுக்கச் சபையைவிட்டுவந்து அத்திவ்விய ரதத்தின்மேலேறினார். சிசுபாலனும் ரதத்திலேறித் தன் பரிவாரத்துடனே சபையைவிட்டு யுத்தம் பண்ணும்படி யாகிய விடத்திற்கு வந்தான். ஸ்ரீகிருஷ்ணனும் சகல அரசர்களோடு அவ்விடம் வந்துசேர்ந்தார்.

கண்ணன் சிசுபாலனோடு யுத்தத்திற்குச் சன்னத்தராகுதல்.

இவ்வாறாக அந்த யுத்தபூமியில் உதயபருவதத்தின் சிகரத்திற் சூரியன் உதித்தாலெப்படியோ? அப்படிக்குத் திவ்வியரதத்திலேறி விளங்காநின்ற ஸ்ரீகிருஷ்ணனைப்பார்த்த சகலமானபேரும் அவர்தேயசுக்கு அஞ்சி, இவர்சாக்ஷாத் நாராயணமூர்த்திதான் சந்தேகமில்லை யென்றும், இந்தச் சிசுபாலன் இனி பிழைக்கமாட்டானென்றும் நினைத்துச் சுவாமியைக் கும்பிட்டார்கள். சத்துருக்களும் அந்தப் பிரகாசத்தை நோக்கி மனங்கலங்கினார்கள். அப்போது பாண்டவர்களும் மற்றுமனேக யோக்கிய ராஜாக்களுஞ் சுவாமியைச் சூழ்ந்துநிற்க, அவர்களைக் கண்ணன் பார்த்து, ஓமகாராசர்களே! நீங்கள் இடைந்திருந்து யுத்தவேடிக்கையைப் பாருங்கள். நெருங்க வேண்டாம். இந்தச்சிசுபாலன் சுபாவத்தில எனக்குவிரோதியாகி, நமக்கு இதமாகியபேர்களை எல்லாம் வீணாய் உபத்திரவஞ் செய்யவந்தான். நான் நரகாசுரனைச் சங்கரிக்கப் போனபோது, இவன் சேனைகளோடு சூழ்ந்து கொண்டு துவாரகையைச் சுற்றிலும் நெருப்பைவைத்துக் கொளுத்தினான். ரைவதகபருவதத்தில் யாதவர்கள் வேடிக்கையாய் இருக்குங் காலத்தில், அங்கேபோய் அவர்களைப்பிடித்து அடித்துக் கயிறுகளாலேகட்டித்தனது நகருக்குக் கொண்டுபோய்க் காவலிற் போட்டுவிட்டான். என்பிதாவாகியவசுதேவர் அசுவமேதஞ்செய்ய ஆரம்பித்துத் தகுந்த காவலாளிகளோடு குதிரையை விட்டிருக்க, யாகத்தைக் கெடுக்கவேண்டு மென்று நினைத்து அந்தக்குதிரையைப் பிடித்துக் கட்டினான். சவ்வீரமென்னும் நாட்டிலேயிருந்த பப்புருவென்னும் யாதவனுடைய மகா பதிவிரதையாகிய மனைவியை, வலுவில் தூக்கிக்கொண்டு போய்விட்டான். அன்றியும் - கம்சனையன்றி எனக்கு மற்றொரு அம்மானுண்டு. அவன் பாரியாளையுந் தந்தவக்கிரனென்பவனுக்காக மாயையினால் மறைந்தெடுத்துக் கொண்டுபோய் விட்டான். இதுவுமன்றி என் பிதாவாகிய வசுதேவர் தாம்கலியாணஞ் செய்துகொள்ளும்படியாக விசாலனென்னு மரசன்மகளை நேமித்திருந்தார். அவளையும் இந்தத்துஷ்டன் வலிமைசெய்து கொண்டுபோய் விட்டான். இன்னும் இவன் நாமில்லாதவேளைகளிலே நம்முடையவர்களாகிய - விருஷ்ணீகர்-அந்தகர்-குகுரர்_

தாசாரகர் - சாத்துவதர் - யாதவர் - முதலாகிய பேர்களிருக்கு மிடங்களிற் பிரவெசித்து, எத்தனை பேர்களையோ வெட்டிப்போட்டான். எத்தனை ஸ்திரீகளையோ கொண்டுபோய் விட்டான். எவ்வளவு பொருள்களையோ கொள்ளையடித்தான்.

இப்படிக்கு இவன் ஜராசந்தனோடு சேர்ந்துகொண்டு நேராக என்விஷயத்திலேயே செய்த அபராதங்கள் எத்தனையோ உண்டு. இவைகளி லொவ்வொன்றும் இவனைக்கொல்வதற்குக் காரண மாகியதுதான். ஆனாலும் என் அத்தைக்கு நான்கொடுத்திருந்த வரத்தைப் பரிபாலனம்பண்ணுவதற்காக இவ்வளவும் பொறுத்திருந்தேன். அப்படிக்கு நான் பொறுத்த குற்றங்கள் நூற்றுக்கதிகமாய் விட்டதுகள். ஆகையால் இனி யிவனைக் கொல்லாம லிருக்கமாட்டேன். ஆனால் இவன் என்னைத் தூஷித்ததுகளையும் - என்னைக் குறித்துச்செய்த அபராதங்களையும் - நான் லக்ஷியஞ்செய்து கணக்கிடவேயில்லை. மற்றெவையென்றால் - தருமவிரோதமாய் உலகத்திற்குச்செய்த அபகாரங்களையும், விசேஷமாக என்னைச் சேர்ந்தவர்களுக்குச் செய்த தீங்குகளையுந்தான் கணக்கிட்டேன். அவைகளும் எத்தனையோ ஆச்சுதுகள். இனி நான் க்ஷமிக்கலாமோ? இதுகளெல்லாமிருக்கட்டும். இப்போது இவன்செய்த அனேகவிரோதங்களில், இரண்டுமாத்திரங் கொஞ்சமும் பொறுக்கத் தக்கவையன்று. அவை என்னவெனில் - அருமையான இந்தயாகத்திற்கு இடையூறுசெய்ய முயன்றது ஒன்று. வீஷ்மனையும் பாண்டவர்களையுந் தூஷித்ததொன்று. இவ்விரண்டைப்பற்றியே இவனை இந்த நிமிஷத்திற் சங்கரிக்க நினைக்கிறேன். என்று ஸ்ரீகிருஷ்ணன் சொல்லியதைக்கேட்ட சிசுபாலனோடு சூழ்ந்திருந்த அனேக அரசர்கள் நடுநடுங்கி, ஒவ்வொருவராய்நழுவினார்கள். அதைப் பார்த்துஞ் சிசுபாலன் லட்சியஞ்செய்யாமல், சகல ஆயுதங்களினாலும் நிறைந்த மகா ரதத்தின்மீதிலிருந்து, வானமிடிப்பதுபோற் கர்ச்சித்து அட்டகாசம் பண்ணினான். இவ்விதமாக இருவரும் யுத்தத்திற்கு முனைந்திருக்க, உதிஷ்டிரர் நாரதமகாமுனிவரை வணங்கி, ஓ சுவாமி! ராஜாக்களுக்கு விநாசகாலத்திற் பூமியிலும் ஆகாசத்திலும் என்னென்ன சகுனக்குறிகள் காணுமோ? அவைகளை அடியேனுக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்க அவர் சொல்லுகின்றார்.

நாரதமுனிவர் உதிஷ்டிரராஜனுக்கு உற்பாதக்குறி லக்ஷணங்களுரைத்தல்.

ஓ உதிஷ்டிரமகாராசனே! கேளும்: அரசர்கள் யுத்தத்திற்குப் புறப்படும்போது சூரியன் முதலியகிரகங்களுடைய கிரமத்தையும், வழியையும், சம்பூதத்தையும், சத்துருமித்துரு பாவத்தையும், உச்ச நீசங்களையும், ஒளிவோடிருப்பதையும், ஒளியிழந் திருப்பதையும், உதயத்தையும், அஸ்தமனத்தையும், சோர்வையும், இறுமாப்பையும், ஸ்தானபீடையையும், காட்சிக்குப்புலப்படுவதையும், புலப்படாமற்போவதையும் சந்தோஷ விசனங்களையும், ஸ்தான பலத்தையும், இவைகளையெல்லாஞ் சோதிடசாஸ்திர மறிந்தவர்களைக்கொண்டு அறிந்து; நன்மைதீமைகளை நிச்சயித்துக்கொள்ளவேண்டும். அந்தக்கிரகங்களுடைய வக்கிர முதலான கதியினால் உத்பாதங்க ளுண்டாகின்றன. அவைகளிற் பூமியி லுண்டாகும் உத்பாதக்குறிகள் எவையென்றால்-வெய்யலில் நடக்குஞ்சனங்களுடைய நிழலும், மரங்களுடைய நிழலும், கீழேகாணாமற்போய்விடும். தேவாலயங்களிலும்-நதிக்கரைகளிலும்-வைக்கப்பட்டிருக்கிற அரசுமுதலிய பரிசுத்த மரங்களெல்லாம், இருந்தாற்போ லிருந்து பட்டுப்போம். எரிந்துபோம். முறிந்துபோம். இலை யுதிர்ந்துபோம். அன்றியும் நாட்டி யுள்ள மரங்கள் - கொடிகள்-செடிகள் - இவைகளுக்குள் எதிலாகிலும் பூமேற்பூ பூத்தாலும், காயோடுகாய் ஒட்டிக்கொண்டு காய்த்தாலும், தத்தம் பருவகாலங்களிற் பூர்க்காமலுங் காய்க்காமலுமிருந்து அகாலத்திற் பூத்தாலும், காய்த்தாலும், இவைகளெல்லாம் அந்தராஜனுக்குக்கேட்டைச்சூசிப்பிக்கும். அல்லாமலும் அந்த ராச்சியம் அக்கினியினாலாகிலும், வாயுவினாலாகிலும், நாசமடையும்.

இதுவுமன்றித் தேவர்களுக்கு உற்சவம்செய்யும்போது விக்கிரகங்கள் தவறிக் கீழேவிழுந்தாலும், கொடிகள்-குடைகள்-முதலியவைமுறிந்து பூமியில் விழுந்தாலும், மண்டபங்கள்-இரதங்கள்- இவைகள் காரணமின்றி நாசமடைந்தாலும், ராஜாவுக்கு அவமானம் நேரிடும். மலைகள் நடுங்கினாலும், பிரதிமெய்கள் சிரித்தாலும், அழுதாலும், அவைகளுக்கு வெயர்வையுண்டானாலும், தேவாலயத்திலாகிலும் - ராஜகிரகத்திலாகிலும் - ஆயுதச் சாலையிலாகிலும் - வாகனச்சாலையிலாகிலும் - பொக்கசவறையிலாகிலும் - ஆஸ்தான மண்டபத்தி லாகிலும் - தேன் கூடுகட்டினாலும், கனிகளைக்கொடுக்கும் மரங்களினின்று உதிரம் பெருகினாலும், யானைத் தந்தங்கள் - மாட்டின் கொம்புகள் - இவைகளினின்று உதிரங் கண்டாலும், அரசனுக்கு நாசம்நேரிடும். அரசனுக்குப் பிடிக்குங் கவிகை முதலானவைகள் முறிந்து விழுந்தாலும், தவறிப்போனாலும், அவ்வரசனுக்கு மரணம்வரும். தேவரினங்கள் தேசாந்தரத்திலிருந்து வந்து ஒருபுறத்தி லொளிந்திருந்தால், அந்த ராச்சியம் ஆறுமாதங்களுக்குமேல் நாசமடையும், பூமிகாரணமின்றி இரண்டாய்ப் பிளந்தாலும், அதில் ஓசையுண்டானாலும், கம்பித்தாலும், தவளைகள் பாம்புகளை விழுங்கினாலும், ஒரு சாமப்பொழுது வெந்துஞ் சோறுபதமாகாமற் போனாலும், கிணற்று நீர் பொங்கினாலும், கால் - கை - கண்- இவைகள் விகாரவிதமா யிராநின்ற பிள்ளைகளை ஸ்திரீகள் பெற்றாலும், யானைகள் ஒட்டகங்களை

யும் - எருமைகள் கழுதைகளையும் - பசுக்கள் பன்றிகளையும் - பெற்றாலும் அப்போதுதான் அவ்வரசனுக்கு மிருந்த கேடுவரும்.

ஆகாசத்தி லுற்பாதங்களெவையென்றால் - இராவில் வானவில்லுண்டாம். பகலில் நக்ஷத்திரந் தெரியும். அகாலத்திற்கிரகணமுண்டாகும். சூரியன்ஒளியிழந்திருப்பன். இப்படிப்பட்ட கெடுகுறிகளைச் சோதிடத்தின்படி கோட்களுடைய நடையா லறியவேண்டும். இவ்வளவு உற்பாதங்களுக்குங் கிருஷ்ணனே மூலகாரணமா யிருக்கிறார். எப்படியென்றால்-யாவருக்கும் மேன்மையை யாகிலும்- தாழ்மையையாகிலும் அவர் தமது சித்தத்தின்படி யுண்டாக்குகிறார். ஆதலால் இந்தக்கிரகங்களுக்கும் அவரே காரணம். நன்மை தீமைகளுக்குக் குறியாய் அந்த உற்பாதங்களையுண்டாக்கி அந்தக்கிரகங்களுடைய சாரத்தினால் முன்னதா யவைகளை யறியச்செய்திருக்கிறார். ஆனபடியினாலே தமது அன்பருக்கு நன்மையையும் பகைவருக்குத் தீமையையுமுண்டாக்குகிறநிமித்தம்அங்கங்கே நற்குறிகளையும்- தீக்குறிகளையும்-உண்டாக்குவார் என்றுசொல்லி நாரதர் சும்மாவிருந்தார். ஓ ஜெனமேஜெயனே! உயுத்தபூமியில் நிற்குஞ் சிசுபாலனுக்குச் சில அபசகுனங்க ளுண்டாயின. அவைகளைச்சொல்லுகிறேன்கேளும்- கொள்ளிவாய்நரிகள் அவனைச்சுற்றி ஊளையிட்டன. பூமிநடுங்கிற்று. எதிர் முகமாகப் பெருங்காற்று வீசிற்று. வெறுவானத்தினின்றும்இடிகள்விழுந்தன. குறைக் கொள்ளிகள் விழுந்தன. பூமியிற் பயங்கரமாகிய ஓசையொன்று உண்டாயிற்று. பர்வகாலமில்லாம லிருக்கப் பகலிலேயேஇராகுசந்திரனை மறைத்தது. அவனதேரிற் கட்டியிருக்கிற கொடியினது நுனியிற்கழுகுவந்துட்கார்ந்தது. இன்னும் மாமிசந்தின்னும் பலவகைக் கொடும்பறவைகளும் அவன்தேரைச் சுற்றிச் சஞ்சரித்தன.

சிசுபாலன்வதை.

இவ்விதமாக அனேக உற்பாதங்கள் உண்டாகப்பார்த்துஞ்சிசுபாலன் லக்ஷியஞ்செய்யாமற் கவசமுதலானவைகளைப்பூண்டு, கையில் வில்லெடுத்துக்கொண்டுகெர்ச்சனைசெய்து நின்றான். வீஷ்மர்-பாண்டவர் முதலியபேர்கள் இவ்வுற்பாதங்களைக்கண்டு வெகுசந்தோஷப் பட்டார்கள். மற்றுஞ் சிலர் பயப்பட்டார்கள். இப்படியிருக்கச் சிசுபாலனனவன் உதடுதுடிக்கக் கிருஷ்ணனை நோக்கிச் சொல்லியதாவது - அடாகிருஷ்ணா! எனக்கு நீ யொருவன் தான் முக்கியசத்துரு. உன்னைக் கொன்று நாற்கடல்சூழ்ந்த இப்பூமியைச்சத்துருவின் உபத்திரவமில்லாமல் ஆளுகிறேன். வெகுநாளாய் இந்த அபிப்பிராய மிருந்தது. அதற்கு இன்றைக்குத்தான் தெய்வாதீனமாய் நல்லகாலம் உண்டாயிற்று. இப்போ எங்கேயும் ஓடாமல்நில்லு. சீக்கிரத்தில் உன்னைச் சங்காரஞ்செய்து அப்பால் இந்தக் [illegible] பாவியையும் ஐம்பாண்டவர்களை [illegible] திருப்தி யடைந்து, அரசர்களின் அபகீர்த்தியைப் போக்கடிக்கிறேன். என்றுசொல்லி கையிலிருக்கும்வில்லைவளைத்து நாணேற்றி நாணோசைகொண்டு, கூர்மை யுடையவைகளும் கணுக்குறுகியவைகளும்-பொற்பட்டங் கட்டியவைகளும்-வெகு பள பளப்போடுங்கூடியவைகளுமா யிராநின்ற அனேகபாணங்களைச் சந்தானஞ்செய்து அம்பெடுக்கிறதும் - வில்லில்தொடுக்கிறதும் - விடுக்கிறதும் - ஒருவருங்காணக் கூடாமலிருக்கும்படியாகிய வேகமாய்க் கண்ணன்மீதில் கோடைமழை சொரிவது போற் சொரிந்தான். ஸ்ரீகிருஷ்ணன் அவைகளை யங்கீகரித்துத்தமதுசார்ங்கவில்லில் அனேகபாணங்களைத் தொடுத்துச் சிசுபாலனை நோக்கி, அடா சிசுபாலா! நீ இத்தனை நாழிகை சரங்களை வருஷித்தாயே; இப்போது நானுன்பேரிற் சிலசரங்களைப் போடுகிறேன்: அவைகளின் திறத்தைப் பாரென்றுசொல்லிப் பத்து-இருபது - நூறு - இப்படிக்குக் கூட்டங்கூட்டமாய்ப் பிரயோகித்தார்.

அந்தப் பாணங்கள் இடிவிழுந்தாற்போல் தன் மார்பின் பேரில்விழவே அந்தச்சேதிராஜன்ஒருமுகூர்த்தகாலம் நெருப்பில்வீழ்ந்த புழுப்போற் றுடித்து மறுபடியும் மனவலிமையோடு உதட்டைக் கடித்துக்கொண்டு குரூரமாகிய பாணங்களை வருஷித்தான். கிருஷ்ணன் அவைகளையெல்லாந் துண்டித்து, அவன் மீதில்மறுபடியும் நூறுபாணங்களைப் பிரயோகித்தார். அவைகளைச் சிசுபாலன் கிட்டவரவொட்டாமற் றடுத்துத்தள்ளி, ஆறு பாணங்களைப் பிரயோகித்தான். அவ்வாறு பாணங்கள் மேலேவிழுந்த மாத்திரத்திலே கண்ணன் வெகுகோபமடைந்து, ஆக்கினேயம்-பார்சன்னியம்- வாயவியம்-முதலாகிய சில அஸ்திரங்களை விடுத்தார். சேதிராஜன் அந்த அஸ்திரங்களையெல்லாம் பதிலஸ்திரங்களினாலே தடுத்துக் கிருஷ்ணனுடைய தேர் -குதிரை - கொடி- சாரதி - சக்கரம்- இவைகளிலொன்றுந் தெரியாம லிருக்கும்படி அம்புகளைச் சொரிந்து சிங்கநாதஞ்செய்து கண்ணனைக்கூவி, அடா கிருஷ்ணா! இதோபார் ஒருபாணத்தை யெய்கிறேன். இதுதான் உன்னை யமலோகத்திற்கு அனுப்பப்போகிறது. மார்புபிளந்துநீகிழேவிழ, இந்தவீஷ்மனும் பாண்டவர் முதலியயாவருந்துக்கித்து, உடனே நீபோகுமிடத்திற்கு வரப்போகிறார்கள். இப்படி நான் செய்து கம்சன்-ஜராசந்தன்-நரகன்- முதலாகியபோர்களுக்கு மித்திரனாயிருந்த கடனைத் தீர்த்துக்கொள்ளுகிறேன். என்றுசொல்லி தீக்ஷணமாகிய ஒருநாராசபாணத்தைப் பிரயோகித்து, இந்திர சித்துவைப் போல் மாயாபலத்தினாலே தேரோடுகூட ஆகாயத்தில்மறைந்திருந்து ஓயாமற் சரமாரி பொழிந்தான். யாதவசிரோமணி அந்த மாயாசரபாணத்தையும் மற்றுமவன் விட்டபாணங்களையும் - பொடிப்பொடியாகச் சிதைத்துத்தள்ளிச் சிசுபாலனைக்கூவி, அடாசேதி பதிகளில்

அழியனுகியம்பதாம் ; ஓடாமல் நின்று உன் ஆண்மைத்தைக்காட்டு. நீ வெகு குணசாலியான படியினாலே தான் ஜராசந்தன் முதலாகிய சினேகிதருக்குக் கடன் தீர்க்கிறேனென்று புறப்பட்டாய். நீ அஞ்சாதே. இப்படிக் கடன் தீர்ப்பதைக் காட்டிலும் அவர்களோடு கூடச்சேருவது நன்மையாதலால், ஒருநிமிஷத்தில் அப்படியே உன்னையனுப்புகிறேன். என்றுசொல்லித் தாமும் அவனைப்போலவே மாயையில் மறைந்து நின்று, அனேக அஸ்திரங்களை விடுத்தார். அவைகளை அவன் பிரதி அஸ்திரங்களாலே தடுத்தான்.

இவ்விதமாக இருவரும்மாயையால் ஆகாசத்தில் மறைந்து, இரண்டு சிங்கங்கள் ஒன்றோடொன்று யுத்தஞ்செய்வதுபோல் யுத்தஞ் செய்துகொண்டிருக்க, பூமியி லிருக்கிறபேர்களெல்லாம் வீரரைக்காணுமல் அம்புகள்மாத்திரங்கீழேவிழக்கண்டு ஆச்சரியப்பட்டு, ஜயாபஜயம் ஒன்றுந் தெரியாமையாலே திகைத்து, மனதில் தங்கள் தங்கள் பக்ஷத்திற்கு நன்மைகூறிக் கொண்டிருந்தார்கள். அப்படியே ஆகாசத்தில் தேவர் முதலிய பேர்களெல்லாம், ஓ! ஓ! இப்படிப்பட்ட அதிசயயுத்தத்தை நாமிதுவரையிற் கண்டதில்லை. கெலிப்புந் தோர்ப்பும் இருக்கட்டும். சண்டையைப்பார்க்கவிந்த நமக்கு அது கூடவன்றோ கிடைப்பது அரிதாயிற்று. என்றுசொல்லித் தாங்களும் மாயையினால்அந்த மாயாயுத்தத்தைக் காண முயன்றார்கள். இப்படியிருக்கச் சிசுபாலன் மூன்று நாராசபாணங்களினாலே கிருஷ்ணனையடித்தான். அவரும் மூன்று நாராசங்களினாலே அவைகளைத் துண்டித்து, வேறிரண்டு நாராசங்களாலே அவன்மார்பில் அடித்தார். அப்படி அடிக்கப்பட்டுஞ் சிசுபாலன் கண்ணனை ஏழுபாணங்களாலே ஒருதரமடித்து, மற்றொரு நாராசத்தினாலேமார்பைத்துளைத்து, வேறு நாலு பாணங்களாலே நான்கு குதிரைகளையும்—ஐந்து பாணங்களினாலே சாரதியையும் - அடித்து அட்டகாசஞ்செய்தான். இப்படியிருவரும் நெடுநேரம்போர் செய்கையில், ஸ்ரீகிருஷ்ணன் அனேக அம்புகளைப் பொழிந்து சிசுபாலனுடைய தேர்-குதிரை - சாரதி - முதலானவைகள் மறைந்து போகும்படியாகவும் அவன் மெய் சோரும்படியாகவும் அடித்துக் கெர்ச்சனைசெய்யவே; அந்தத் தமகோஷ புத்திரன் மிகுந்த ரோஷமும் பொறுமையுங் கொண்டு, இனிபாணங்களினால்நாம்சண்டைசெய்யத் தரமில்லையென்று நினைத்து மகா தீக்ஷண்யமாகிய ஓரம்பில் ஆக்கினேய அஸ்திரத்தைத் தொடுத்தான். அதைக் கண்ணன் வருணஸ்திரத்தினாலே தடுத்தார். அவன் குபேராஸ்திரப் பிரயோகம் பண்ணினான். அதையும் அவர்மற்றொரு குபேராஸ்திரத்தால் தடுத்தார். யமாஸ்திரப்பிரயோகஞ் செய்தான். அதையமாஸ்திரத்தினாலேயே கெடுத்தார். அவன்காந்திருவாஸ்திரம்பிரயோகித்தான். அதையவ்வஸ்திரத்தினாலேயே போக்கடித்தார். மறுபடி அவன்மானவாஸ்திரம்விட அவர் அதையும் அதனாலேமறுக்க, வாயுவாஸ்திரத்தைவிடுக்க அதையும் வாயுவாஸ்திரத்தினால் நிறுத்த, பின்பு அவன் உருத்திராஸ்திரம் விடுத்தான். அதை மற்றொரு உருத்திராஸ்திரத்தால் மடித்தார். உடனே அவன் இந்திராஸ்திரத்தைவிட, அவ்விந்திராஸ்திரத்தை இந்திராஸ்திரத்தினாலேயே யழித்துப் பின்பு அவன் வைணவாஸ்திரம் பிரயோகிக்க அதையும் மற்றொரு வைணவாஸ்திரத்தாற் குறைத்தார்.

இவ்வாறு சிசுபாலனுங் கிருஷ்ணனும் பிரயோகாஸ்திரங்கள் ஐஞ்ஞூறும்-உப சம்ஹாராஸ்திரங்கள் ஐஞ்ஞூறும் - பிரயோகிக்கவே, அவ்வஸ்திரங்களெல்லாம் ஒன்றையொன்று அழிக்கிற நிமித்தம் வியாபித்தலினாலே உலகமெல்லாந் தீமூட்டப் பட்டதுபோல் தவித்து நின்றது. அப்போது சிசுபாலன் தான்பிரயோகஞ்செய்த அஸ்திரங்களெல்லாங் கிருஷ்ணனுடைய அஸ்திரங்களாலே நாசமடையக்கண்டு, ஒரு மாயையை விடுத்தான். அந்தமாயையினாலே கதாயுதங்கள் — குண்டாந்தடிகள் - கத்திகள் - சுருட் கத்திகள் - சிறுகத்திகள் - பட்டாக் கத்திகள் - ஈட்டிகள் - எறியீட்டிகள் - வல்லயங்கள்- வேலாயுதங்கள்-சூலங்கள்-முதலாகிய சகல ஆயுதங்களும் நாலுபக்கங்களிலுமிருந்து பலசாலிகளாகிய வீரரால் எறியப்பட்டாலெப்படியோ? அப்படிக்கு ஓய்வில்லாமற் கிருஷ்ணன்மீதில் வந்துவீழ்ந்தன. அப்போது பூமியிலுள்ளோரும் வானத்தி லுள்ளோருங் கிருஷ்ணனுக்கு அபாயம் நேரிட்டதென் றஞ்சினார்கள். அந்தப்பகவானோ? அவ்வளவு ஆயுதங்களையுந் தன்மீதில் விழவொட்டாமல் அம்புகளினால்தடுத்துத் துண்டந் துண்டமாகத் துண்டித்துப் பூமியிற்றள்ளினார். பின்பு சேதிராஜன் மற்றொருமாயையைப் பிரயோகித்தான். அதனாலே வெகுஉயரத்திலிருந்து அளவற்ற பெரியபாராங்கல்லுகள் வெகுவேகமாய்க் கண்ணன் தேர்மீதில் வந்துவீழ்ந்தன. அவைகளையுங் கிருஷ்ணன் வச்சிராஸ்திரப் பிரயோகம் பண்ணிச் சூரணமாக்கிப் போட்டார். இப்படிக்கு அதுவும் வீணாய்ப்போகவே அவன்மறுபடியு மொருமாயையைவிடுத்து, ஊழிகாலத்திலெப்படி பெய்யுமோ? அப்படிக்கு அவரது ரதத்தின் மேல் மழைபொழியச் செய்தான். அதை யவர் வாயுவாஸ்திரத்தினாற் சிதற அடித்தார்.

இவ்வண்ணமாகக் கிருஷ்ண மூர்த்தியானவர் சிசுபாலனுடைய சகல மாயைகளையும் வீணாக்கிச் சிங்கம்போல ஆரவாரஞ்செய்தார். அப்போது கிரகணம் விட்ட சந்திரனைக்கண்டாலெப்படியோ? அப்படிக்குத் தேவர்கள் கண்ணனைக்கண்டு களித்து மலர்களைச் சொரிந்தார்கள். கிருஷ்ணன் கெர்ச்சித்ததைக் கேட்டும் - தன்முயற்சிகள் யாவும் வீணாய்ப் போனதைப்பார்த்தும் - சிசுபாலன் பொறுமைமிகுந்து, மறுபடியும் மாயையில்லாமல் விளக்கமாகவே வில்லெடுத்துக்கொண்டு சண்டைக்கு வந்தான். யாதவசிகாம

ணியும் அப்படியே வில்லெடுத்து ஒரு முகூர்த்தகாலஞ் சண்டைசெய்தார். பின்பு சிசுபாலன் அளவில்லாமல் வெகுண்டு கிருஷ்ணனைநோக்கி, அடா இடையா! அடா மூடா! அடா திருடா! அடா மோசக்காரா! அடா வறியா! அடா அற்பா! நீ இனிமேல் இவ்வுலகத்தைவிட்டு லோகாந்தரமடைந்துபுண்ணிய புருஷர் அனுபவிக்கும் மேன்மைகளையும், பாவச்செய்கைகளுக்கிடாக உனக்குக்கிடைக்கும் பயன்களையும் பார்த்து, வயிறெரிந்து நெஞ்சுழன்று மெய்சோரப் பலதுன்பங்களையும் அனுபவி. என்றுஉதடுதுடிக்கவும் முகம் படபடக்கவும்பேசி, பலவித அம்புகளையும் வில்விற்றொடுத்து விடுத்தான். அந்த அம்புகளினாலே கண்ணனுடைய திருமேனியெல்லாஞ் சல்லடைக்கண்கள்போல் துளைபட்டுப்புண்ணாகி உதிரம்பெருக, மறுபடியும் அப்புண்களிலேயே மேன்மேலும் அம்புகளேற, அக்கண்ணனுக்குக் கண்திறக்கக்கூடாமலும் மூச்சுவிடக்கூடாமலும் போனதுமன்றி, தேரென்றுங் குதிரையென்றும் ஒன்றுந் தெரியாமல் முழுவதும் அம்புகளாகவே காணப்பட்டன. அதனாலே சுவாமி சோர்ந்து, தேர்த்தட்டின் மீதிற் கம்பத்தைக் கைகளாற் பிடித்துக்கொண்டு மெய்பதைக்க விருந்தார். இதைக்கண்ட சிசுபாலன் அட்டகாசஞ்செய்து, கிருஷ்ணா போய்விட்டாயாவென்று சொன்னான். இதையெல்லாம்பார்த்த யாவரும், ஐஐயோ!! என்ன அனியாயம்? என்று கண்களினின்றும் நீர் வடியக் கதறினார்கள்.

இப்படியாக அன்பர் கதறுவதையும் - பகைவன் களித்துப் பேசுவதையும் - சுவாமி சோர்ந்திருப்பதையும் பார்த்த அவருடைய சாரதியாகிய தாருகன் அவரைநோக்கி, சுவாமி! தேவரீர் மகாமகா சூரர்கள் எத்தனை பேர்களோடேயோ யுத்தஞ்செய்யப் பார்த்திருக்கிறேன். ஒரு யுத்தத்திலுந் தேவரீர் இப்படிக்குச் சோர்ந்து போனதில்லை. இப்படிப்பட்ட யுத்தமும் பார்த்ததில்லை. இந்தப்பாவியோ யாவரிலும் அதிசயித்திருக்கிறான். இதென்ன ஆச்சரியம்? இப்போது நானும் - குதிரைகளும் - தேவரீருடைய மகிமையினாலே உயிர்வைத்துக்கொண் டிருக்கிறோமே யல்லது, எங்களுடைய சக்தியினாலில்லை. இனிமேல் உயிர்நிற்பதும் வருத்தமாயிருக்கிறது. தேவரீருடைய அன்பர் யாவருங் கதறுகிறார்கள். ஏனிப்படி யுபேக்ஷைசெய்கிறீர். தேவரீருடைய பிரபாவத்திற்கு இவனொரு பொருளோ? இப்படிக்குச் செய்வதை நோக்கினால் ஒரு லீலையென்று காண்கிறது. உபேக்ஷைக்கு இது சமயமன்று. ஆதலால் இந்தப்பாவியை இப்போதே சங்கரித்து விளங்கவேண்டும் என்றுசொன்னான். அதுகேட்ட ஸ்ரீகிருஷ்ணன் சாரதியைப் பார்த்து, அடா தாருகா! நானிப்போது உபேக்ஷை செய்யவில்லை. மற்றென்னவென்றால் - அவனுக்கு ஆயுளின் முடிவாகிய முகூர்த்தத்தை எதிர்பார்க்கிறேன். இவன் யாரென்றால்-முன்னங் கிருதயுகத்திலே எவன் இரணிய கசிபுவாகியிருந்து, நரசிங்கரூபியாகிய என்னாலே கொல்லப்பட்டுப் பின்பு திரேதாயுகத்தில் இராவணனாயிருந்து, ஸ்ரீராமரூபியாகிய என்னாலேயேகொல்லப்பட்டானோ? அவன்தான் இவன். ஆனபடியினாலே தான் இவனுக்கு இவ்வளவு சவுரியமும் - பலமும் - செருக்கும்- இருக்கின்றன. இவன் வைகுந்தத்திலிருக்குந் துவாரபாலகரிலொருவன். துர்வாச மகாமுனியின் சாபத்தினாற் பூமியிற்பிறக்கவேண்டி, எனக்கு மித்திரனாயிருந்து வெகுகாலம் பூமியி லிருப்பதைக்காட்டிலுஞ் சத்துருவாயிருந்து கொல்லப்பட்டாற் சீக்கிரத்தில் திவ்வியலோகஞ் சேரலாமென்று சத்துருவாகப்பிறக்கும்படி ஒப்புக்கொண்டு, மூன்றுசெனனங்களுஞ்சத்துருவாகவந்து பிறந்தான். இந்த முகூர்த்தத்திலே அந்தச்சாபம் விமோசனமாகி, நற்கதியடையப் போகிறான். யாவரும் பார்க்கப்போகிறீர்கள். ஆகையால் இதோ அவனைச் சங்கரிக்கிறேன் அஞ்சாதேயென்று சொல்லி, உறங்கிக்கொண்டிருந்த சிங்கம் விழித்தவுடன் எவ்வாறு பிடரிமயிர்களைச் சிலிர்த்து நிமிர்ந்து கெர்ச்சிக்குமோ? அவ்வாறு இரதத்தின் தட்டில் இறுமாப்புடனுட்கார்ந்து அட்டகாசஞ்செய்து சங்கத்தையெடுத்து ஆகாசமுந் திசைகளும் பிளந்துபோகும்படித் துவனிசெய்யவே; யாவரு மனக்களிப்படைந்து ஸ்ரீகிருஷ்ணா ஜயம் ஜயமென்று கூறினார்கள்.

அந்த மங்களகோஷத்தைக் கண்ணன் கேட்டு, வெகு சந்தோஷத்தோடு சுதரிசனமென்னுஞ் சக்கரத்தைக் கையிலெடுத்துப் பிரயோகித்தார். பிரயோகிக்கவே அந்தச் சக்கரமானது அனேககோடி சூரியர் உதித்ததுபோற் சொல்லக்கூடாத பிரகாசம் பொருந்தித் தனது ஆயிரம் அரங்களிலிருந்து ஆயிரஞ் சுவாலைகள் எழும்பித் திசைகளனைத்தையு மூடிவிழுங்கிக்கொண்டிருக்கும் ஊழித் துவாந்தத்தைத் துறத்தப் புறப்பட்ட பிரளயகால உருத்திரன் அனேகம் வாய்களைத்திறந்து நாக்குகளை நீட்டிக்கொண்டு வருவதுபோற் பயங்கரரூபத்தொடு சொலித்துக்கொண்டு தேவர்களும் முனிவர்களும் போற்றப்புறப்பட, அதைக் கண்ட சிசுபாலன் தைரியத்தைவிடாமல் தன்வலிமை முழுவதையுங்கொண்டு இன்னதென்றில்லாமற் சகல ஆயுதங்களையும் கூட்டங்கூட்டமாய் வருஷித்தான். அவைகளை யெல்லாம் அந்தச் சக்கரம் விழுங்கிக்கொண்டே சமீபத்தில் வருகையிலுஞ் சிசுபாலன் மற்றுமனேக விதமாகிய ஆயுதராசிகளைப் பொழிய, அவைகளுங் காய்ந்த இரும்பில் தோய்ந்த நீர்த்துளிகள் போல் அச்சக்கராயுதத்திற் சுவறிப்போக, அதைக் கண்டயாவரும் இனிச்சிசுபாலன் பிழைப்பதில்லை யென்று கோலாகலமாகப்பேச, அப்பேச்சுகளைக்கேட்டுச் சிசுபாலன் அந்தச் சக்கரத்தின் மீதில் வெகுபொறாமை கொண்டவனாகிக் கடுச்சொற்படியாகிய பிரயத்தனஞ் செய்துகொண் டிருக்கையிலேயே அந்தத் திவ்வியாயுதமானது சிசுபாலனுடைய சிரத்தையறுத்துக்கீழே

தள்ளிவிட்டது. வச்சிராயுதத்தினால் வெட்டப் பட்ட பெரியமலையின் சிகரம்போல் அந்தத்தலை கிரீடகுண்டலங்களோடுகீழேவிழுந்தபோது, மற்றச்சத்துருக்களுடையகண்ணீர்த்துளிகளுங்கீழேவிழுந்தன. உடனே ஸ்ரீகிருஷ்ணன்மீதில்எல்லாருடையபார்வையாகியமலர்களோடு தேவர்கள்சொரிந்தகற்பகமலர்களும் விழ்ந்தன. இவ்வாறு உலகங்களுக்கெல்லாம் மார்பிலடித்தஆணிபோலிருந்த சிசுபாலனைச் சங்கரித்தது கண்ட தேவர்களும் - முனிவர்களும் - அரசர்களும் - ஸ்ரீகிருஷ்ணனைத் தோத்திரஞ்செய்தார்கள். தேவதுந்துமி முதலிய வாத்தியங்கள் முழங்கின. அப்சரமாதர்கள ஆடினார்கள். கந்திருவர்பாடினார்கள். பாண்டவர்முதலாகிய இஷ்டர்கள்வந்து ஆலிங்கனஞ் செய்தார்கள். பகைவர்பற்கடித்துக் கையடித்துப் பெருமூச்சுவிட்டுத் தீயவிழித்து நோக்கினார்கள்.

இப்படிக்கு அல்லோலமா யிருக்குங் காலத்தில் அந்தச் சிசுபாலனுடைய தேகத்தினின்றும் ஒருசோதியானது யாவரும் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே கிளம்பி, ஸ்ரீகிருஷ்ணனை வலமாகவந்து அவர்திருவடியிற் கலந்துமறைந்தது. அதைக்கண்ட சகலமானபேரும் ஆச்சரியப்பட்டு திப்பிரமைகொண்டு, இதென்ன அதிசயம்? இவ்விதக்காட்சியை எங்கும்-எக்காலத்திலும்- எவருங்கண்டதில்லை. வீஷ்மாசாரியர் சொல்லியதனைத்துஞ் சரியே: இக்கண்ணன் சகலசராசரங்களையும் படைத்து அளித்து அழிக்குங் காரணப் பொருளே: என்றுயாவரு நினைத்து, மனோவாக்குகாயங்களினாலே சுவாமியைவணங்கி, வீஷ்மர்முதலானோரையுந் துதித்தார்கள். அன்றியும் யோகிகளும்-முனிவர்களும் - வேதங்களினாலே தோத்திரஞ் செய்தார்கள். கின்னரர்-கிம்புருடர் - கந்திருவர் - முதலானோர் யாழிசைத்துப் பாடினார்கள். சித்தர் - சாரணர் - முதலியோர் விருதுகூறினார்கள். இப்படியிருக்கத் தருமபுத்திரர் ஸ்ரீகிருஷ்ணனைக்கண்டு, ஆனந்த பாஷ்பத்துடனே துதித்து, அவர்முகக் குறிப்பினாலே தன்தம்பியாகிய சகாதேவனை நோக்கி, சிசுபாலனுக்குச் செய்யவேண்டிய பிரேதக்கிரியைகளைச் செவ்வையாக நடத்தும்படி ஆக்கியாபித்தார். அப்படியே அந்தச் சகாதேவனும், வீமார்ச்சுன நகுலரும், அந்தச்சிசுபாலனுக்கு அவன் புத்திரனாகிய திருஷ்டகேது என்பவனைக்கொண்டு சரமக்கிரியைகளை வெகுசிறப்பாய் நடாத்தினார்கள். பின்புஸ்ரீகிருஷ்ணனும்-பாண்டவர்களும்-அந்தத் திருஷ்டகேதுவுக்குச் சேதிராச்சியப் பட்டாபிஷேகஞ் செய்வித்தார்கள்.

யாகசமாப்தம்.

இவ்விதமாகச சத்து[illegible] மானவுடனே தருமபுத்திரர் சகல முனிவர்கள்-மறையோர்கள் - அரசர்கள் - முதலாகிய பேர்களுடனே கூட யாகத்தை நிறைவேற்றி, ஸ்ரீகிருஷ்ணனுக்கு முதற்பூசை செய்தபின் முறையே நாரதர் - பருவதர் - வியாசர் - தவுமியர் - பைலவர் - சுமந்து - சைமுனி - முதலான பெரியோர்களோடு எனக்கும், பாகிலிகன் - சோமதத்தன் - முதலாகிய அரசர்களுக்கும், வைசியர்களுக்கும், சூத்திரருக்குந் தகுந்தபடி பூசைசெய்து, பல தானங்களுந் தக்ஷணைகளுங் கொடுத்து, யாவருக்கும் அறுசுவைகளோடு கூடிய சிறந்த அன்ன முதலியவற்றை இடுவித்தார். அந்தயாகத்தில் அன்னங்களும்-கறிகளும் - பலகாராதிகளும் - மலை மலையாகக் காணப்பட்டன. நெய் - தயிர் - பால் - முதலானவைகள் மடுமடுவாகத் தேங்கின. வந்த ஜனங்களெல்லாந் தருமவான்களும், கல்வி யுடையவர்களும், நல்லொழுக்க முடையவர்களுமாகவே யிருந்தார்கள். வேதியரெல்லாம் நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும், சகல சாஸ்திரங்களையுங் கற்றவராகவே யிருந்தார்கள். மேலும் அவ்வேதியர் முதலானோர் நன்றாய்ப்புசித்து, மனக்களிப்புடனே ஒருவரோடொருவர் சாஸ்திரங்களிற் கக்ஷிசொல்லிப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். அந்த யாகத்தில் லக்ஷம்பிராமணர் புசித்தால் அதற்கடையாளமாகச்சங்கத்தை ஒருதரம் ஊதுகிறதுண்டு. அப்படிக்குச் சங்கமூதியதற்குக் கணக்கில்லாம லிருந்தது.

அன்றியும் - மகாராஜாக்க ளெல்லாம் பெருமையும் நாணமும் விட்டுத் தாங்கள்தானே மனக்களிப்புடன் புசிப்போர்க்கு அன்ன முதலாகியவைகளைப் பரிமாறுவதும் உபசரிப்பதுமாக இருந்தார்கள். யாகத்திற்குவந்த யாவருந் தத்தமக்கு இஷ்டமா னவைகளைப் பெற்று, வெகுசந்தோஷத்துடன் நல்ல பூஷணங்களினாலும்- வஸ்திரங்களினாலும்- அலங்காரம் பொருந்தி, ஒவ்வொருவரும் தேவர்கள்போல் விளங்கினமையால் அந்தயாகசாலை சுவர்க்கலோகத்தோடொத்திருந்தது. அவ்விடத்திற் சகல காரியங்களுக்கும் வெள்ளிப்பாத்திரங்களும் பொற்பாத்திரங்களுமே உபயோகப் பட்டுக்கொண் டிருந்தன. யூபஸ்தம்பங்களும்-வேதிகைகளும்-அதின் சாமான்களும் - யாவுஞ் சுவர்ன மயங்களாகவும், இரத்தின மயங்களாகவு மிருந்தன. அந்தயாகசாலையைச்சுற்றி இலங்கையிலிருந்து கொண்டுவந்த பொற்பனைகளை நாட்டி, அவைகளில் முத்துத் தோரணங்களும் பவளத் தோரணங்களுங் கட்டப்பட் டிருந்தன. தானத்திற்காகக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருந்த காமதேனுவுக் கொப்பாகிய அனேகம் பசுக்கூட்டங்களும், திரவியங்களின் குப்பைகளும், மற்றும் வஸ்திரபூஷணங்களின் ராசிகளும், அந்த யாகசாலைக்கு ஆபரணம்போ லிருந்தன. இப்படிப்பட்ட பல சிறப்புடனே அந்தமகாயாகத்தை ரிக்குவிக்குகள் [illegible] ஒருகுறைவுமின்றி ஐந்துதினங்களிலே நிறைவேற்றினார்கள். பின்பு தருமபுத்திரர் முன்போலவே ஸ்ரீ கிருஷ்ணன் முத

லாக யாவருக்கும் பூசைசெய்து, பதினெண்வாத்தியங்கள் முழங்க,கந்திருவர்முதலானோர்வீணைபாட, அப்சரமாதர்கள் நடனஞ்செய்ய, வந்திகள்புகழ, வேதியர்கள் சொஸ்திவாசனஞ் சொல்லிச் சூழ்ந்துவர, அரசர்களெல்லாஞ் சத்திரம் - சாமரம் - முதலாகிய பணிவிடைகள்செய்துவர, ஸ்திரீகளும்-புருஷரும்-மங்கல வஸ்துக்களைக் கையிலேந்திக் கோலாகலத்துடன் வர, நால்வகைச்சேனைகளுந் துவசபதாகைகளுடன் சுற்றிக்கொண்டுவர தமதுபத்தினியுடனேயாகசாலையினின்றும் புறப்பட்டுப் பரிசுத்தமாகிய நதியில் அவபிரதஸ்நானஞ்செய்து வெகு தானங்கள் வழங்கி யாவரும் சம்ராட்டென்று புகழும்படி விளங்கினார்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே ! இவ்விதமாக அந்த இராஜசூயயாகமென்னும் பெருங்கடலைக் கண்ணனென்னுங் கப்பலினாலேகடந்து, தருமமும் புகழுமாகிய பொருள்களைத்தேடி வெகுசிறப்புப்பொருந்தி விளங்காநின்ற தருமபுத்திரமகாராஜன் யாவரையும்நோக்கி, உங்களாலே நான் இப்பெருமை பெற்றேனென்று உபசாரமாகச்சொல்லி, அவரவருக்குத் தக்கபடி பரிசுகொடுத்தனுப்பினார். பின்பு வீஷ்மாசாரியர் - துரோணாசாரியர் - கிருபாசாரியர் - அசுவத்தாமா - பாகிலிகன் - சோமதத்தன் - பூரிச்சிரவன்-சல்லியன் - துரியோதனன் - அவன் தம்பிமார்கள்-திரிதராஷ்டிரன் - விதுரன் - சகுனி - கர்னன் - முதலான பேர்களுக்கெல்லாம் வெகுசிறப்பாகப் பூசைசெய்து கொண்டாடி உபசரித்து,அனேகம்யானைகள்-குதிரைகள் - ஆடைகள் - ஆபரணங்கள் - முதலாகிய பரிசுகள்கொடுத்து அனுப்பிவித்தார். அப்படியே பலராமர் - வசுதேவர் - அக்குரூரர் - பிரத்தியும்னன் - அனிருத்தன் - சாம்பன் - கதன் - சாருலேஷ்ணன் முதலானயாதவர்களுக்கும் பூசைசெய்து பரிசுகொடுத் தனுப்பிவித்தார். மேலுந் துருபதன் - பீஷ்மகன் - பாண்டியன் - பகதத்தன் - விராடன்-சகதேவன் - திருஷ்டகேது-முதலானோருக்கும் பரிசளித்தனுப்பினார். அன்றியுந் தமது தம்பிமார்கள் நால்வரையும், சாத்தகி - திருஷ்டத் துய்ம்னன் - முதலான பேர்களையும், தங்கள் தேசங்களுக்குப்போகின்ற அரசருக்கு வழிவிட்டு உபசரித்துவரும்படி கட்டளையிட்டார். அதின்படியே அவர்களும் அவ்வரசர்களோடுங்கூடி வெகுதூரம்போய் வழிவிட்டு உபசரித்து, அவர்களிடத்தில் விடைபெற்று வந்தார்கள். அன்றியும் நாரதர்-பருவதர்-தவுமியர்- முதலாகிய மகாமுனிவர்களுக்குத் தேவோபசாரஞ் செய்து, தாமே கூடப்போய் உபசரித்து வழிவிட்டுவந்தார்.

இவ்வண்ணமாகச்சகலதேசங்களையும் ஜெயித்துக் கொணர்ந்தவைகளும் - யாகத்திற்கு உலுப்பையாக வந்தவைகளும் - பொக்கிஷத்தி லிருந்தவைகளுமாகிய எல்லாப்பொருள்களையும் யாகத்திற்காகச்செலவு செய்து, அந்தயாகத்தைக் குறித்து வந்திருந்த யாவரையும் அனுப்பிவிட்டு, ஸ்ரீகிருஷ்ணனோடு தேரின் மேலேறி நகர்ப்புறத்தையடைந்து, வீதியைவலமாக வந்து மாளிகைசேர்ந்து களித்திருந்தார் தருமபுத்திரர். இப்படியிருக்கையிற் கிருஷ்ணனவரைப்பார்த்து, ஓய் ராஜாதிராஜனே ! நீர் மகானுபாவ ரானபடியினாலே இந்தப்பெரியயாகத்தை நிறைவேற்றிச்சத்துருக்களில்லாமல் அகண்ட மண்டலாதிபராய் உமது பிதாவின் குறைவையும் நீக்கி விளங்குகிறீர். நானும் இவிடம் வந்து நெடுளாயிற்று. உற்சவங்களை யெல்லாங் கண் களிக்கப் பார்த்தேன்: துவாரகைக்குச் செல்ல விடை தரல்வேண்டுமென்று சொல்ல, தருமபுத்திரர் கிருஷ்ணா ! நான் கேவலம் அசேதனத்தோடொத்தவன். எனக்கு, அல்லது என்தம்பிமார்களுக்கு, அல்லது மற்றெவருக்குந்தான் மகிமையேது? உமது கிருபாகடாக்ஷம் பெற்ற மகிமையொன் றிருந்தபடியினாலே மேன்மைகளெல்லாம் வந்தன. உம்மைப் பூசிப்பதற்கும், துதிப்பதற்கும், உமது பெருமையைப் புகழ்வதற்கும் நான் வல்லவனோ ? ஓ கிருபா சமுத்திரமே ! உம்மைவிட்டுப் பிரிந்து நானிருக்கமாட்டேன். ஆனாலும் உம்முடைய அபிப்பிராயத்தைத் தடுக்கவுமாட்டேன்: என்றுசொல்லிக் கண்களில் நீர்தளும்ப எழுந்து ஆலிங்கனஞ்செய்து, உடல் புளகமுறும்படி ஸ்தம்பம்போல் நின்றார். ஸ்ரீகிருஷ்ணன் அவருடன் கூடக் குந்தியினிடத்திற்குப்போய்த் தெண்டனிட்டு, அத்தாய் ! நீ புத்திரரால் வெகுசிறப்புப் பெற்றாய். இனிநான் போய்வருகிறேன். என்றுசொல்லி அவளிடத்தில் ஆசீர்வாதத்தோடு விடையும் பெற்று, மற்ற பந்துக்களிடத்திலும் விடை பெற்று, கிருதவர்மன்-சாத்தகி - முதலிய யாதவர்களுடனே பாண்டவருஞ் சூழ்ந்துவரத் தேர்மேலேறிப் புறப்பட்டுச் சிலதூரம் போனபின் தருமபுத்திரரைப்பார்த்து, ஓய் மகாராஜாவே ! இராச்சியத்தைச் செவ்வையாய் ஆண்டு, யாவரும் புகழும்படியாயிருமென்றுபுத்திசொல்லித் துவாரகாபுரிபோய்ச் சேர்ந்தார். தருமபுத்திரர் தம்பிமாருடனேயும்-மற்ற பரிசனங்களுடனேயும்-பட்டணத்திற்குத் திரும்பி வந்துவிட்டார்,

தருமராஜனுக்குவேதவியாசமுனிவர் பின்வரு முற்பாதங்களை எடுத்தோதல்.

அப்பால் ஒருநாள் தருமபுத்திர மகாராஜன் சபையிலிருக்கும்போது ஸ்ரீவேதவியாச மகாமுனிவர் மாணாக்கரோடு எழுந்தருளக்கண்டு, தம்பிமார்களுந் தானும் எதிர்கொண்டு வழிபாடுசெய்து ஆசனத்தில் உட்காரவைத்து, அவருடைய அனுமதியினாலே தானும் ஆசனத்திலுட்கார்ந்தார். பின்பு வியாசமகாமுனியானவர் தருமபுத்திரரைப்பார்த்து, ஓ குருவமிசதிலகனே ! தெய்வாதீனமாய் இராஜசூயயாகம் நிறைவேறிற்று. பகைவரெல்லாம் மாண்டார்கள். சகலமானபே

ருங் கொண்டாடும்படியாகச் சம்ராட்டென்னும் பேர் பெற்றீர். இப்படிப்பட்ட விபவத்துடனிராநின்ற உம்மைக் கண்ணாலேகண்டேன். சந்தோஷங் கொண்டேன். உம்மாலே வெகுவாகப் பூசிக்கப்பட்டேன். இனி நான் போகிறேன் செலவுகொடுமென்று கேட்க், தருமபுத்திரர் அவரை நமஸ்கரித்துச் சொல்லுகிறார்: ஓ சுவாமி! ஓ எங்கள் பிதா மகராகிய வியாசரே! அடியேன்மனதில் ஒருசந்தேக மிருக்கிறது. அதாவது- நாரதமுனிவர் பூமியிலும்- ஆகாசத்திலும் - சில வுற்பாதங்க ளுண்டாகுமென்றும், அவைகளுக்குப் பலன் இன்னதென்றுஞ் சொன்னார். அப்படியே இப்போது உண்டாகிய உற்பாதங்களுக்குச் சிசுபாலன் மரித்ததே பலனா? இன்னும் வேறுண்டா? அதனைச் சொல்ல வேண்டுமென்று வினவ வியாசர் அருளிச்செய்கிறார்.

கேளும் தருமபுத்திரரே! இப்போது கண்ட உற்பாதங்களின் பயன் இவ்வளவோடு போகவில்லை. இன்றுமுதற் பதினாலு வருஷமளவு மிருக்கிறது. பூமியிலிருக்கிற சகலராஜாக்களுந் தங்கள் பரிவாரத்தோடு நாசமடையப்போகிறார்கள். அதற்குங் காரணம் நீர்தான். உம்முடைய தம்பிமார்களின் கைகளினாலேயே பெரும்பாலும் மடியப்போகிறார்கள். இவ்வளவுக்கும் முதற்காரணம் துரியோதனனுடைய கெடு நினைவுதான். அப்படிக்குக்ஷத்திரியவினாசம்வருகிறதற்குமுன்னே, நீர் ஒருசொப்பனங்காணுவீர். அதென்ன சொப்பனமென்றால்-சிவன் விருஷபத்தின் மீதேறிப் பூதப்பிரேத பிசாசங்களுடனே தென்றிசைநோக்கிப் போவதாகக்காண்பீர். அப்போதே க்ஷத்திரியருக்கு மிகுந்த கேடுவந்ததென்று நினையும். ஆனால் இதுகளுக்கெல்லாம் நாம் காரணமாயினோமே என்று விசனப்படவேண்டாம். அப்படிக்குக் காரண மிருந்தே அமைகிறது. இதெல்லாம் நடக்கவேண்டிய வினைதான். ஆனபடியினாலே நீர் சந்தோஷமாய்இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருமென்று சொல்லிச் சீஷருடனே கூடத் தவத்திற்குப் போய்விட்டார். பின்பு தருமபுத்திரர் வியாசர்சொல்லிய வார்த்தையைக்கேட்டு மனதிற் கலக்கத்துடனே இராச்சியத்தைத் தரும வழுவின்றிப் பரிபாலனஞ் செய்துவந்தார். மேலும் அவர் வெகுபயபக்திகளோடு வேதசாஸ்திரங்களையும்-உலக இயற்கைகளையும் - நீதிநெறிகளையும் - நன்றாய்க் கற்றறிந்து சரியாய் நடக்கத்தக்க வேதியர்களைத் தமது சபையில் நிரந்தரமாக இருக்கச்செய்து, அவர்களின்அனுமதிப்படியே குடிகளுடைய யோகக்ஷேமங்களை நடத்திவந்தார். இப்படி யிருக்கும்போது அந்தந்தக் காலங்களில் தப்பாமல் மழைபெய்துவந்தபடியாற் பூமியெல்லாம் பயிர்நிரம்பி, யாவருங் குறைவற்ற செல்வமடைந்து தத்தமது நெறிகளில் வழுவாது நடந்து வந்தார்கள். இப்படிக்குக் கிருதயுக மென்னும்படி தருமத்தைப் பூரணமாக நடத்திச் சொல்லத் தரமில்லாத செல்வச்சிறப்போடு தருமபுத்திரர் தமது அரசாக்ஷியைச் செய்துவந்தார்.

இராஜசூயச் சருக்கம் - முற்றிற்று.

இரண்டாவது.

சூதுபோர்ச் சருக்கம்.

கண்ணன் துதி.

அங்கையி னேமி சங்குவா டண்டோ டடற்சரா சனந்தரித் தருள்வோன்
சங்கையின் மறைக ளாயிரங் களுக்குஞ் சாற்றுதற் கரியதத் துவத்தோன்
கங்கையி னறலுங் காளியன் முடியுங் காளிந்திக் கரையுமே கமழும்
பங்கய மலர்க ளிரவுநன் பகலும் பணிந்து பாடுது மவன் புகழே.

ஓ ஜெனமேஜெயமஹாராஜனே! "முன்குலத்தவர்க்கு முனிகுலத்தவர்க்கு மும்மதக்கைம்மதக்களிற்று, மன்குலத்தவர்க்கும் வான்குலத்தவர்க்கும் வரம்பிலாவகைக்கலைதெரியு, நன்குலத்தவர்க்கும் பொருளெலாநல்கி நாடொறும்புகழ்மிகவளர்வான், றன்குலக்கதிர்போற் றேய்ந்தொளிசிறந்தான் றண்ணளித்தருமனுமரசன்" இப்படியிருக்க - துரியோதனனவன் அத்தருமபுத்திரருடைய இராஜசூயயாகங் கழித்தவுடனே ஒருநாள் அவருடைய சபையைப்பார்க்கச் சகுனியோடு கூட வந்து, தான் தனியேசென்று அதினுடைய உயர்வையும்-சிறப்பையும்-பிரகாசத்தையும்-நவமணிமயமாகிய வேலைப் பாடுகளையும் - விசித்திரமாகிய விலாசத்தையுங்கண்டு ஆச்சரியப்பட்டு, அதின் ஓர்புறத்திற் படிகக்கல்லாற்செய்த ஒரு தாமரைத்தடாகமிருக்க, அதுநீர்போற்காணாமல் நிலம்போற்காணப்பட்டபடியினாலே அவ்விடத்திற் சாதாரணமாக நடந்து அந்தநீரில் அமிழ்ந்துபோனான். அதைக்கண்ட அந்தச்சபையின் காவற்காராகிய மயனால் ஏற்படுத்தப்பட்டபேர்கள் சிரித்து மகாராஜாவுக்குத் தெரிவிக்க, அந்தத் தருமபுத்திரர்வந்து அவனை யெடுத்து உலர்ந்த வஸ்திரத்தைக்கொடுத்து கட்டிக்கொள்ளச்சொன்னார். அவனும் ஈரவாடையை அவிழ்த்துப் போட்டு உலர்ந்த வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு போகுமளவில், அச்சபையிலிருந்த திரௌபதியும்-

வீமசேனனும் - அர்ச்சுனனும் - இரட்டைப் பிள்ளைகளும் - மற்றும் அனேகரும் நகைத்தார்கள். மறுபடியுந் துரியோதனன் வேறுவழியாய்ப் போகுமளவில், அங்கொருபடிகக்கல் பூமியிலிருந்தது. அது நீருள்ள தடாகம்போல் தோற்றினபடியினாலே வஸ்திரத்தைத் தூக்கிக்கொண்டுசெல்ல, அதைக்கண்டு வீமார்ச்சுன திரௌபதி முதலானோர் சிரித்தார்கள். துரியோதனன் மறுபடியும் போகும்போது விசித்திரமாக சிற்சில ஸ்தம்பங்களிருந்தும் இல்லாதவையாகக் காணப்பட்டபடியால், தெரியாமல் அவைகளி லிடித்துக்கொண்டான். அப்போதும் யாவருங் கல்லென்று சிரித்தார்கள். பின்பு சபையின் உட்புறமென் றெண்ணி ஓரிடத்திற்குச்சென்றான். அது சபைக்குப் புறம்பான விடமாயிருந்தது. அங்கேபோய்த் தயங்கிநிற்கக்கண்டயாவரும் நகைத்தார்கள். மறுபடி துரியோதனன் சபைக்குள்வந்து, அதில் ஏறுகிற படிவரிசையைச் சாதாரண விடமாக நினைத்து நடந்துபோமளவில், அதிற்றடுக்கி விழக்கண்டு யாவருஞ் சிரித்தார்கள். இப்படிக்குத் தட்டிகெட்டுத் தடுமாறி அந்தச்சபைக்கு ஏறிவந்து யாவரையுங்கண்டு, போய்வருகிறேனென்றுசொல்லிவிடைபெற்று, மனதிற்கோபமும்-பொறாமையும்-பூரணமாகிநிற்கச் சகுனியுடனேகூடி அத்தினாபுரத்திற்குச்சென்று, தருமபுத்திரருடைய செல்வத்தையும்-சிறப்பையும் - மேன்மையையும்- பிரபுத்தன்மையையும் - நினைத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, உன்மத்தம் பிடித்தவன்போல் ஒருவரோடு பேசுவதையும் விட்டு விசனத்தினால் தவித்துக்கொண்டிருந்தான். இந்தப்படிக்கிருக்கிற துரியோதனனைப் பார்த்துச் சகுனியானவன் சொல்லுகிறான்: ஓ துரியோதனா ! நீ என்னகாரணத்தினாலே ஒருவரோடு பெசாமலும் - களித்திராமலும்-எதையோ சிந்தித்து விசனப்பட்டுக்கொண் டிருக்கிறாய் ? அதை யெனக்குச்சொல்லு. நீ விருதாவாய் மனதில்மாத்திரம் வைத்து அழுந்திப் போக வேண்டாம். என்று நல்லம்மான் சொல்லியதைக்கேட்ட துரியோதனனானவன் சொல்லுகிறான்.

துரியோதனன் பாண்டவர்செல்வத்தைக் கண்டுபொறாது சகுனியோடு முறையிடுதல்.

ஓ மாமா ! என்னுடைய விசனத்தின் காரணத்தை என்னவென்று சொல்லுவேன் ? ஒரு அருச்சுனனாலே பூமிமுழுவதுஞ்செயிக்கப்பட்டுச் சகலராஜாக்களுஞ் சுவாதீனமாகிக் கப்பங்கட்டத் தருமபுத்திரன் ஏகசக்கிராதிபதியாய் அரசாள்வதும், அவனுடைய சபையிலே தேவர்கள் – தேவரிஷிகள் - யக்ஷர் - கின்னரர் - கந்திருவர்-முதலானோரெல்லாம் வருகிறதும், யாவருந் தருமபுத்திரனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதும், கிருஷ்ணன் அவர்களிடத்திற் சேர்ந்து அவர்களுக்கு வேண்டிய காரியங்களை நிறைவேற்றுகிறதும், பூமியிலிருப்போரெல்லாம் பாண்டவர்களுக்கு மங்களம் உண்டாக வேண்டுமென்று வழ்த்துகிறதும், யாவரும் அவர்களுக்கே அன்புடன் அடங்கியிருக்கிறதும், சக்லசம்பத்துகள் அளவற்றுக்கிடக்கிறதும், இவைகளையெல்லாங் கண்களினாலே பார்த்து நானெப்படி சகிப்பேன் ? இதுகளெல்லா மிருக்கட்டு. யானை குதிரைகளை விற்கவந்தபேர்களுங்கூட அவர்களிடத்திற்கேபோய் நானழைத்தாலும் வராமலிருந்த வயிற்றெரிச்சலை என்ன சொல்லுவேன் ? இப்படியே இரத்தின முதலாகியவஸ்துக்களை விற்கவந்தவர்களும் என்னை லட்சியஞ்செய்யாமற் போனார்களே: நான் வாங்கத்தகாதவனென் றன்றோ சிந்தித்தார்கள் ? இந்தக் குருவமிசத்தில் நானும் பிறந்தேன். அவரும்பிறந்தார். மேலும்-நான் மூத்தவருடைய புத்திரன். ஆனபடியினாலே நியாயப்படி சிறப்பு எனக்கு வரவேண்டியது. வராமற்போனாலுஞ் சரியாயாவது வரக்கூடாதா? அல்லதுகொஞ்சங்குறைவாயாகிலுமிருக்கக்கூடாதா ? நானின்னும் எதற்கெதற்குத்தான் வயிறெரியுவேன் ? பேர்பெற்ற சகல மகாராஜாக்களும் இந்திரப்பிரஸ்த நகரத்தின் வாசலிற் காணிக்கைகளை வைத்துக்கொண்டு, மகாராஜாவினுடைய தரிசனங் கிடைக்குஞ்சமய மெதுவென்று விசாரித்துக்கொண்டு காத்திருக்கிறார்களே: அந்தநகரத்தில் எப்போதுந் தேசாந்தரங்களிலிருந்து வருகிற ராஜாக்களுடைய குதிரைகளும்-யானைகளும்-நிறைந்திருக்கின்றனவே: எந்த தேசத்திலும் பண்டவர்களின்புகழே வியாபித்திருக்கிறதே: மண்டலங்களெல்லாம் அவர்களுடைய ஆக்கினைக் குட்பட்டிருக்கின்றனவே: அவர் யாகத்திற் செலவுசெய்த பொருள்களை ஆதிசேடனுங் கணக்கிட மாட்டானே: அப்படிசெய்தும் மாளாத தனம் வந்து குவிந்திருக்கின்றதே: அதை நினைக்கும்போது என் வயிறு பகீரென்று பற்றிக்கொள்ளுகிறதே:

ஓ மாமா ! ஆதரவற்றுச்சென்ற அவர்களுக்கே இவ்வாண்மையுண்டாயிருந்தால், நமக்கெல்லாம் இனி ஆண்மை யெங்கேயிருக்கின்றது?ஏனென்றால் - நானிருக்க, நீரிருக்க, அங்கதேசாதிபராகிய அண்ணா கர்ணனிருக்க, மற்றுமனேக வீரரிருக்க, யாவருக்கும் எதிரிலேயே நம்முடைய நேசனாகிய சிசுபாலனைக் கண்ணன் அலட்சியஞ்செய்து சங்கரித்தானே: ஆண்மையிருந்தால் யாராவது எழுந்திரார்களா ? அப்படிப்பட்ட கண்ணன் அவர்களுக்கு வேலைக்காரன்போற் காத்திருக்கிறானே: இதுகளையெல்லாங் கண்களினாலே பார்த்து நானெப்படி சகித்திருப்பேன் ? ஒரு குலத்திற் பிறந்த இருதிறவரில் ஒருதிறவர் அவ்வகைப்பட்ட சிறப்படைய, மற்றொருதிறவர் அஃதின்றி உயிரை வைத்துக்கொண்டு பிழைத்திருப்பதினால் என்ன சவுக்கியம்? அதனா லென்ன சந்தோஷம்? நானுங் குருவமிசத்தானென்று வெளியில்வர வெட்கமாயிருக்கிற

தே: நான் யாரோடே என்னபேசவேண்டுவது? ஆதலால் தீயிற் குதித்தாகிலும், பாராங்கல்லைக் கட்டிக்கொண்டு தண்ணீரில்விழுந்தாகிலும், விஷத்தைக்குடித்தாகிலும் இறந்தா லெப்போதுதான் சித்தங்குளிர்ந்து சவுக்கியமாயிருப்பேனேயல்லது வேறில்லை. நானிப்போது பிழைத்திருக்கிறதாய் நினையாதேயும். அந்தச்செல்வத்தைப்பார்த்து அவருக்குச்சரியா யிருக்கிற எவன்தான் உயிர்வைத்துக்கொண் டிருப்பான்? நானிப்போதிருக்கும் நிலையைச்சொல்லுகிறேன்கேளும்: ஒருவிதத்தாலும் நான் பிழைத்திருக்கிறவனு மல்லேன். மரித்தவனுமல்லேன். மனிதனுமல்லேன். மிருகமுமல்லேன். சரமுமல்லேன. அசரமுமல்லேன். இவைகட்கெல்லாம் நான் வேறாவே யிருக்கிறேன். இவ்வளவுதானோ எனது வயிற்றெரிச்சலுக்குக் காரணம்? மற்றும் அனேகமுண்டு. அவைகளையுங் கேளும்: என்தம்பிகள்முதலிய எம்மையும் உம்மையும் ஊழியக்காரரைப்போல் யாகத்தில் வேலைசொய்யச்சென்னானே: அதுவுமன்றி நீருங்கூட வருகையிற் சபையில் நான் நீரை நிலமாகவும், நிலத்தை நீராவுங்கண்டு மயங்கினதன்றி, இன்னும் பலவாற்றால் மயங்கி வீழ்ந்ததற்குக் காவற்காரர்முதல் யாவருஞ்சிரித்தது தெரியுமே: அது ஒன்றுக்கே நானுயிரை விடவேண்டாமோ? அப்படிப்பட்டசபை தேவர்களுக்கு மில்லையே: இப்படிக்கெல்லா மிருக்கிறபடியினாலே நானினி உயிரை வைத்திருக்கமாட்டேன். மரணத்திற்கே சித்தமாயிருக்கிறேன். நீரும் அனுமதிசெய்யும். திரிதராஷ்டிரமகாராஜாவுக்கு மிச்சேதி தெரிவியுமென்றுசொல்லி வாயை மூடிக்கொண்டான். இந்தவார்த்தையைச் சகுனிகேட்டு அவனைப்பார்த்துச் சொல்லுகிறான்:

அடா குழந்தாய்! நீ தருமபுத்திரனுடைய சம்பத்தைப்பார்த்து வீணாய் ஏன்பொறாமைப்படுகிறாய்? அவர்கள்செய்த புண்ணியத்திற்கீடாக அவ்வளவு செல்வம் அவர்கட்கு வந்தது. உன் புண்ணியத்திற்கீடாக இவ்வுலகமெல்லாம் உனக்கு வந்திருக்கிறது. இப்படியே ஒவ்வொருவருந் தன்தன் நல்வினைப் பயனுக்குத்தக்க பலனை யனுபவிக்கின்றார்கள். இது இயல்பென்றறிந்தும் வீணாயேன் மனஸ்தாபப்படுகிறாய்? நீயும் ஆதிமுதல் அவர்களையடக்கி மேலாகவேண்டுமென்று வேண்டிய முயற்சிகளைச் செய்தாய். அவை பயன்படாமற்போயின. அவர்கள் எந்தெந்த ஏதுக்களினாலே பெருமை யடைந்தார்களோ? அந்தந்த ஏதுக்களைக் குறித்து நீயும் யத்தினப்பட்டாய். அவையொன்றும் பலிக்கவில்லை. அதற்கென்ன செய்யலாம்? நீ திரௌபதியை மணஞ்செய்ய முயன்றாயே: அது சித்திக்காமற்போனது தெய்வத்தின் யத்தினந்தானே. அவர்கள் விவாகஞ் செய்ததினாலே துருபதன் முதலாகிய அனேகர் அவர்களுக்குச் சகாயமானார்கள். கிருஷ்ணனோ? அம்மான்பிள்ளை யானதினால் அவர்கள் அனுசரிப்பினாலும் - அடக்கமுடைமையினாலும் - சகாயமானான். அவனோ? வெகுபுத்தியும் - யுக்தியும் - பராக்கிரமமும் -புகழும் - சாமர்த்தியமு முள்ளவன். தேவர்-தானவர்-முதலானோரையும் ஜயிக்கவல்லவன். ஒருவனாலும் வெல்லப்படாதவன். அவனுடைய துணையைப்பற்றி அவர்களுக்குச் சகல மேன்மைகளும் வருகின்றன. இதற்கு நாமென்னசெய்யலாம்? அநியாயமாய் அவர்கள் ஒருவருடைய ராச்சியத்தை அடித்துப்பறிக்கவில்லை. நியாயமாய் தகப்பனாருக்குண்டான பங்கையே அடைந்தார்கள். ஆளுகைசெய்கையிலும் ஒரு அநியாயமுஞ் செய்யவில்லை. யாவருக்கும் நன்மையாகவே நடக்கிறார்கள். காண்டவவனத்தை இந்திரன்முதலான பேர்களைவென்று அக்கினிபகவானுக்குக்கொடுத்தபடியால், அர்ச்சுனன் அற்புதமாகிய தேர்-குதிரை - வில் - முதலானவைகளைப் பெற்று, அதனாலே உலகமெல்லாஞ் செயித்தான். அக்காட்டுத்தீயினின்று மயனை விமோசனஞ்செய்ததுபற்றி, அவனாற் கற்பனையாகிய உற்பனச்சபையொன்று கண்டான். இதுவெல்லாம் அதிருஷ்டத்தாலே நேரிட்டதுகள். நமக்கப்படிப்பட்ட அதிருஷ்டமில்லை. உனக்கும் வீஷ்மர்-துரோணர் - கிருபர் - அசுவத்தாமன் - கர்னன் - முதலான வீரர் சகாயமாயிருக்கிறார்கள். இருந்துந் தெய்வபலமில்லாமையினாலே ஒன்றும் பலிக்கவில்லை. ஆனபடியினாலே வீணாய்ப் பொறாமைப்பட்டு மனம் வருந்துவதைவிட, கிடைத்திருக்கிறமட்டிற் சந்தோஷத்தோடிருப்பது நன்மை. அல்லாமல் அந்தச் செல்வத்தையே பெறவேண்டுவாயாகில், அவர்களை எவ்விததந்திரத்தினாலேனும் வெல்லல்வேண்டும். அதற்கு வீஷ்மதுரோணாதிகளாகிய வீரர் உனக்குச் சகாயமா யிருக்கிறார்கள். ஆகையால் அவர்களைக்கொண்டு ஜயிக்கயத்தினப்படலாம். ஆகிலும் இப்போது அவர்களைப் போர்முகத்தில் வெல்வது அசாத்தியமென்று தோற்றுகிறது. அப்படி யிருந்தாலும் நான் ஒருவகையில் அவர்களுடைய சகல சம்பத்துக்களையுங் கவரமாட்டுவேன். அவ்வித நடத்தையில் உனக்கு மனமிருந்தாற் செய்கிறேன். நீயேன் விசனப்படுகிறாய்? என்றுபேசிய சகுனியின் பேச்சைக்கேட்டுத் துரியோதனன் சிறிது மனந்தேறிச் சொல்லுகிறான்:

வாரீர் மாமாவே! பாண்டவர்களை எளிதிற் ஜயித்து அவர்களுடைய செல்வங்களை யெல்லாம் அபகரிப்பேனென்று சொன்னீரோ: அப்படிக்கு நம்முடையவர்களி லொருவனுக்கும் உபத்திரவ மில்லாமல் அவர்களை எளிதில்வெல்லும் உபாயம்யாது? அதைச்சொல்லவேண்டுமெனத் துரியோதனன் கேட்க, உடனே சகுனியானவன் அவனைப்பார்த்து, கேளப்பா துரியோதனா! தருமபுத்திரனுக்குச் சூதாடுவதில் மிகவும் பிரியமுண்டு. அதை நன்றாயாடுதற்கோ தெரியாது. எனக்கோ? அதில் ஒப்பற்ற சாமர்த்தியமுண்டு. அவரோ? சூதாடுதற் கழைத்தால் வராமலிருக்கமாட்டார். அந்த ஆட்டத்தில் மெத்தப் பிரமையுடையவர். ஆன

படியினாலே நான்அவருடைய சகல சம்பத்துக்களையுஞ் சூதினால்ஜயித்துஉனக்குக்கொடுக்கிறேன். ஆனால் அதைக்குறித்து உன்பிதாவாகிய திரிதராஷ்டிர மகாராஜாவின் சம்மதிவேண்டும். ஆனதால் நீயிதையவருடனேசொல்லி அனுமதி செய்வித்தாயேயாகிற் சந்தேகமில்லாமல் அச்செல்வங்களை யுனக்குத்தருகிறேனென்றுசொல்ல, அதைக்கேட்ட துரியோதனன்-ஓய் மாமாவே! நீரே இச்செய்தி அவருக்குத் தெரிவியுமென்று சொன்னான்.

துரியோதனனுஞ் சகுனியும் திரிதராட்டிரனிடஞ்சென்று ஆலோசித்தல்

தருமத்தில் வழுவாது நடப்பவராகிய தருமபுத்திர மகாராஜருடைய செல்வங்களைக்கண்டு பொறாமைகொண்டு மனம்விண்டு துக்கத்திற்புரண்டுகிடந்த துரியோதனனுக்குச் சமாதானமாகப்பேசிய சகுனியானவன், தன்மனதிற் சூதினாலல்லது வேறுவகையிலவர்களை வெல்லக்கூடாதாகையாற் சொக்கட்டானாட்டத்திற் பந்தயமாய்ச் சகலசெல்வங்களையும்வைக்கச்செய்து கவர்ந்து துரியோதனனுக்குக் கொடுக்கவேண்டுமென்று உறுதியாகிய நிச்சயமடைந்து புறப்பட்டுத் திரிதராஷ்டிர மகாராஜாவின் மனைக்குட்சென்றான். அஃது-இனிபூமியிலுள்ளசகலராஜாக்களுங் கவுரவவமிசத்தாரும் எல்லாப்பரிவாரங்களோடு நாசமடையும்படியாகிய ஏதுவைச் சொல்லப்போனதாக நினைக்கப்பட்டது. அப்படியவன்மனைக்குட்சென்று ராஜாவின் சமீபத்திற்போய்த் தன்னையறிவித்து நமஸ்கரித்து, பக்கத்திலிருந்த ஓர் ஆசனத்தி லுட்கார்ந்து மகாரகசியமாய் மெள்ள இதனை மொழிய லாயினான். ஐயா மகாராஜாவே! உமது மூத்தபிள்ளையாகிய துரியோதனன் சிலநாளாய் மனதிற் பெரிய விசனங்கொண்டு, ஆகார நித்திரைகளுமில்லாமல் உடம்புமெலிந்து, நாளுக்குநாள் அபாயத்திற் கிடமாகிய நிலையில்வருகிறான். இப்படியிருக்க-நீர் அதைவிசாரித்து அவன் மனோவியாதியைப் போக்காமலிருப்பது உமக்கு நியாயமா? மூத்தமகனாகவும் இளவரசாகவு மிருக்குமவனை உபேக்ஷைசெய்யலாமா?என்று சொல்லியதைக்கேட்ட குருடனாகிய ராஜன் மகனை யழைப்பித்து மிகவும் பரிவுடனே சொல்லுகிறான்:

குழந்தாய் துரியோதனா! நீ மிகுந்த துயரத்தையடைந்து மெய்மெலிந்து சோருகிறதாகத் தெரிகிறது அதற்குக் காரணமோ ஒன்றுந் தெரியவில்லை. உனக்கென்ன குறை? எனக்குண்டாகியராச்சியமுழுதும் உன்வசத்திலேயே இருக்கிறது. வெகுராஜாக்கள் உனக்குக் கீழ்ப்படிந் திருக்கிறார்கள். நீயே அரசாட்சிசெய்கிறாய். உன்தம்பிமாரெல்லாம் உன்வசத்திலிருக்கின்றார்கள்.மகாவீரர்களெல்லாரும்உன்சொற்படிகேட்டுக்கொண் டிருக்கிறார்கள். ஆடைகளும் - ஆபரணங்களும்- பொருள்களும்-மற்று மனேகவித வஸ்துக்களும் - நல்லகுதிரைகளும் - யானைகளும் - வாகனங்களும் - சேனைகளும் - விஸ்தாரமிருக்கின்றன. தேவஸ்திரீகளுக் கொப்பாகிய வெகுமங்கையர்களும் இருக்கிறார்கள்: இப்படி உனக்குச் செல்வத்திலும்-போகத்திலும் - ஒரு குறைவுங் காணப்படவில்லை. நானும் உன்தாயாரும் நீகொடுத்த அன்னவஸ்திரங்களைப்பெற்றுக்கொண்டு சுகமாயிக்கிறோம். மற்றுமுன் பந்துக்கள் யாவரும் உனக்கடங்கியே யிருக்கிறார்கள். உனதாக்கினையை மறுப்பா ரொருவருமில்லை. அன்றியும் நீ எட்டு வியாகரணங்களையும்-மற்றுமனேகங் கல்விகளையும்- நன்றாய் ஓதியுணர்ந்து, எல்லா வித்துவான்களாலும் புகழப்பட்டிருக்கிறாய். குடிகளையுஞ் செவ்வையாய்க்காத்து,அவர்கள் துதிக்கும்படியிருக்கிறாய். துரோணாசாரியர் - கிருபாசாரியர் - பலராமர் - இவர்களிடத்தில் அஸ்திரவித்தை நன்றாய்க் கற்றுமிருக்கிறாய். இவ்வாறாக எல்லாப் போகபாக்கியங்களும்-பெருஞ்செல்வமும் - புகழும் பெற்றுத் தேவேந்திரன் போல் விளங்காநின்ற உனக்கு, இப்படிப்பட்ட விசனம் வருதற்குக் காரணம்யாதோ தெரியவில்லை. ஆகையால் அதைநீ எனக்கு இப்போது நன்றாய்த்தெரிவிக்கவேண்டும். என்று பிதா சொல்லக்கேட்ட துரியோதனன் மிகுந்த சோர்வும் அலக்ஷியமுமுள்ள சில வார்த்தை சொல்லுவ தாயினான்.

ஐயனே! உண்ணுவதும் - உடுப்பதும் - பூணுவதும்-யாருக்குத்தான் கிடைக்காது? இவையெல்லாம் ஒரு சந்தோஷத்திற் கேதுவா? ஆனால் இவையெல்லாம் அற்பருக்குச் சந்தோஷ ஹேதுக்கள்தான். நீர் சொல்லியபடி இராச்சியசம்பத்து முதலானவை இருந்தும், எனக்கு அந்த அற்பருக்கிருக்கிற அவ்வளவு சந்தோஷமுமில்லை. சந்தோஷமில்லாமை மாத்திரமேயன்று, அதற்குத்துணையாய் அளவற்றதுக்கமுமுண்டாயிருக்கிறது. ஏனென்றால் - பாண்டவர்களுடைய சம்பத்தையும்-பெருமையையும்-புகழையும் - பார்க்குமளவில், எனக்குமிகுந்தபொறாமையுண்டாகி, அதனாலே மனந்தகிக்கப்பட்டு,மகாவியாதி பிடித்தவன் போலும் - பயித்தியம் பிடித்தவன் போலும் - வருத்தப்பட்டுத் தடுமாறிக்கொண் டிருக்கிறேன். அந்தச்சம்பத்தைப் பார்த்தபின்பு, நீர் முன்சொல்லிய ராச்சியமுதலியவைகளை யெல்லாஞ் சம்பத்தெனச் சொல்லத்தகாதென்று நினைக்கிறேன். அவர்களின் சேவகர்கள் உண்டுமிழ்ந்ததற் கொப்பாகவும் இருக்கவில்லை. எதிரியைக்காட்டிலும் மிகுந்தமேன்மை பெறவேண்டுகிறவன், எதிரிக்குச் சொல்லக்கூடாதபெருமை நேரிட்டிருப்பதைப்பார்த்து என்னமாய்ச்சகிப்பான்? பொறுமையும் - தயையும்-சாந்தமும் - சம்பத்தைக்கோரியிராநின்ற அரசனுக்குத்தகுமோ? இவையெல்லாம் புருஷனுடையசம்பத்தை நாசஞ்செய்யும். துறவிக்கு இக்குணங்க ளிருக்கவேண்டுமே யல்லது, மற்றவருக்

குக்கூடுமோ? எவனுடைய செல்வத்தைக்கண்டு எவனுக்குப் பொறாமையுண்டாகுதோ? அவன் அவனே உடனேகொன்று அதைப் பறிக்கவேண்டுவதுதான் க்ஷத்திரியனும் - புத்திசாலியும் - ஆண்மையுள்ளவனுமா யிருப்பவனுக்குத்தகுதி. அப்படிக்கில்லாமல் எதிரியின் பாக்கியத்தைப் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்கிறவன், மூடர்களில் உயர்ந்தவனாக எண்ணப்படுவன். அதைக் கவரச் சக்தியில்லாதவன் மரித்தவன்தான். நானுமப்படியே காலகதியைப்பார்த்துச் சகித்துக்கொண் டிருக்கிறேன். ஆனபடியினாலே நான் செத்துப்போனவனே: வல்லுயிர் போகாமையாலேதான் இப்படிக்குத் தினந்தோறும் விசனமென்னும் அக்கினியில்வீழ்ந்து தவித்துக்கொண் டிருக்கிறேன். இனி என்னை மரிக்கத்துணிந்தவனென்றே யோசியும். அவர்களுடைய சம்பத்தென்ன அவ்வளவு சிறந்ததென்கிறீரா? கொஞ்சஞ் சொல்லுகிறேன் கேளும்:

என்னருமைத் தந்தையே! "இந்திரன் முதலாவுள்ள விமையவர் சிறப்புச்செய்யச், சுந்தரப்பொற்றோள்வேந்தர் தொழில்புரிந் தேவல்செய்ய, மந்திர முனிவர்வேள்வி மறைநெறிமுறையிற்செய்யத், தந்திரவெள்ளச்சேனைத் தருமனே தலைவனானன்." மேலும்-அத்தருமன் இப்போது ஒருவராலும் நிறைவேற்றக்கூடாத இராஜசூயமென்னும் மகாயாகஞ்செய்தானே: அதில் வந்தகாணிக்கைகள் எண்ணக்கூடுமானவையோ? தினந்தோறும் அவன் எண்பத்தெண்ணாயிரம் மகாப்பிராமண குடும்பங்களுக்கும், பதினாயிரஞ் சன்னியாசிகளுக்கும், பஞ்சபக்ஷபரமான்னங்களோடு போசனமிட்டு வருகிறான். அதனாலே அவனுக்குண்டாயிருக்கிற சிறப்பொன்றே போதுமானதாயிருக்கிறது. அந்தக்குடும்பங்களிலே ஒவ்வொன்றிற்கும் முப்பதுபேர் பரிசாரக ரிருக்கிறார்கள். அன்றியுங் காம்போஜ தேசாதிபதியாகிய சுதக்ஷணமகாராஜன் பற்பல வண்ணங்களாய் விசித்திரமாகிய மேன்மையும் பளபளப்புமுடைய ஆச்சரியப்படத்தக்கவையா இராங்கின்ற மான்தோல்களில் அனேகமாயிரமும், அப்படிப்பட்ட கம்பளங்களில் அனேக மாயிரமுங் கொணர்ந்துகொடுத்தான். அன்றியும் பொற்பணியணிந்த நான்கு குதிரைகள் கட்டிய ரதங்களிற் பதினாயிரமும், அப்போது கன்றுபோட்டதுகளுங் குடம்பால்கறக்கத் தகுந்ததுகளுமாகிய பதினாலாயிரம் பசுமாடுகளும், சிந்து-சவுராஷ்டிரமுதலாகிய தேசங்களிற் பிறந்து மகாவேகத்தோடுகூடிய பதினாயிரங் குதிரைகளும், அழகும் சாதுரியமு முள்ளவர்களாகிய மங்கைப்பருவமுள்ள பதினாலாயிரங் கன்னிகைகளும், அனேகலக்ஷம் ஒட்டகங்களின்மீதிற் பலவித ரத்தினங்கள் - ஆபரணங்கள் - முதலாகியவைகளுங் கொடுத்தான். இவ்வாறாகவே சகலராஜாக்களும்வந்து காணிக்கைகளைக்கொடுத்துப் பணிந்துபோனார்கள். அந்த யாகத்தில் வந்தபொருள்கள் எவ்வளவோ? அவ்வளவு பொருள்கள் குபேரனிடத்திலுங் கிடையாது. இந்தவிஷயத்திற் சந்தேகமிருந்தால் உமது மந்திரியாகிய சஞ்சயனைக்கேளும்.

அந்த யாகத்திற்குவந்த பிராமண ரெல்லாம் வேண்டிய இரத்தினங்கள் - வஸ்திரங்கள் - பொருள்கள் - பசுக்கள் - இன்னும்பலவற்றையும் பெற்றுக் களித்துப்போனார்கள். தேவலோகத்திலுங்கூட இவனைப்போல் யாகஞ்செய்தபேர்களும் பலபலமேன்மையடைந்தவர்களு மில்லையென்று, நாரதர் முதலாகிய பெரியோர்களும் மிகப்புகழ்ந்தார்கள். அன்றியுந் திரைகருவாளென்று சில அரசருண்டு. அவர்கள் வெகு ஒட்டகங்களின்மேற் பொருட்பொதிகளைப் போட்டுக்கொண்டு உதிட்டிரனைக் காணச் சமயங்கிடையாமல், அரண்மனைவாசலில் நெடுநேரங் காத்திருந்து வெகுபேர்களைக்கொண்டு தெரியப்படுத்தி, பின்பு அவனைக்கண்டு பணிந்து பலவிதப் பொருள்களையும் - பொற்கலசங்கள்முதலாகிய அனேக பாத்திரங்களையும் - பாற்கடலிற் பிறந்த வெண் பொன்னினாற் செய்யப்பட்டு கோடி சூரியப்பிரகாசம் பொருந்தி இந்திரனுக்கு அப்சரஸ்திரீகள் காமதேனுவின் பாலைக்கொடுக்கும்படியாகிய திவ்யபாத்திரங்கள் போன்ற பலவற்றையும் பாதகாணிக்கை வைத்தார்கள். அவைகளை யெல்லாம் பார்த்த எனக்கு உண்டாகிய வயிற்றெரிச்சலையுந் துக்கத்தையுஞ் சொல்லமுடியாது. அன்றியும் உதிட்டிரனுக்குச் சாம்பிராச்சிய பட்டாபிஷேகஞ் செய்கிறநிமித்தஞ் சமுத்திரங்களினின்று தீர்த்தம் வரவேண்டுமென்று புரோகிதர் சொன்னமாத்திரத்திலே, இராக்ஷசராஜாராகிய சிலவீரர் நவரத்தினங்களிழைத்த குடங்களை யெடுத்துக்கொண்டு ஆகாசமார்க்கத்திலெழும்பி ஒருகணப்பொழுதில் எல்லாக்கடல்களினீரையுங் கொணர்ந்தார்கள். இப்படிக்கு மற்றொருவனுக்கு நடக்குமா? மனிதரைத்தின்னும்படியாகிய ராக்ஷசர் அடிமைபோல காத்திருக்கிறார்களே: இவ்விதமாய் அவர்களுக்கு நடக்குஞ் சிறப்பைச்சொல்ல என்னாலாகுமோ? ஐயா! எல்லாவற்றிலும் பெரிதாகிப் இன்னுமோர் வயிற்றெரிச்சலைக் கேளும்.

அவர்களுக்கு மயனென்பவன் ஒருசபை நிருமித்திருக்கிறான். அது தங்கத்தினாலும் மணிகளானுஞ் செய்திருப்பதுமன்றி, சொல்லத்தரமில்லாத விசித்திரங்களுக் கிருப்பிடமா யிருக்கின்றது. அதில் நானொருக்கால் போகும்போது, ஓர்புறத்திற் படிகத்தினாற் செய்து தாமரைபூத்த தடாகம்போற் காணப்பட்டபடியினாலேயும், தாமரைத்தடாகம்வெறுந்தரையாகத் தோற்றினபடியினாலேயும், நீரில்லாவிடத்தில் துணியைத் தூக்கிக்கொண்டும், நீருள்ளவிடத்தில் துணியை விட்டுக்கொண்டும்போய்த் தடுமாறினேன். அப்போதென்னைப் பார்த்துக் காவற்காரரெல்லாஞ் சிரித்தார்கள். அதுகண்டெனக்கு உலர்ந்தவஸ்திரங்களை உதிஷ்டிரன் கொடுத்தான். அவைகளை யுடுத்திக்கொ

ண்டேன். அதனலே நான் செத்தவனே யல்லது பிழைத்திருக்கிறவனல்லேன். பின்பு மற்ெருருவிடத்திற் கம்பங்களிருந்தும் இல்லாதவைபோ லிருந்தன. வாசலில்லாமல் இருந்ததுபோ லிருந்தது. இவ்விடங்களி லெல்லாம்போய் முட்டிக்கொண்டு காயங்களையடைந்தேன். இப்படிக்குப் பலவிதமாக மயங்கி வழிதுறைதெரியாமல் தடுமாறிக்கொண் டிருக்குமளவில் வீமசேனன் பார்த்து நகைத்து, இதோவழி இதோவழி என்றும், இப்படிவரலாம் இப்படி வரலாமென்றுங் கூப்பிட்டான். அச்சொல் என்கழுத்தை யறுப்பதுபோ லிருந்தது. எனக்குச் சக்தியிருக்குமாகில் அக்கணத்திலேயே அவனைக் கொல்லுவேன். இல்லாமையாலே பிணம்போலே சும்மா யிருந்தேன். அப்போதெல்லாந் திரௌபதியும் மற்றுமனேக ஸ்திரீகளும் என்னைப்பார்த்து, இவர்தந்தைக்குங்கண்ணில்லை யிவருக்குங் கண்ணில்லையோவென்று நகைத்தார்கள். இன்னுங் கம்பங்களில்லா விடங்களிற் கம்பங்களிருப்பதாகவெண்ணி யொதுங்கிச் சபை யேறுவதற்கான படிவரிசை தெரியாமல் அவர்களுடைய மனிதர்வந்து வழிகாட்டி யழைத்துக்கொண்டு போக அதிற்போய், பின்பு தலையிறங்கிக்கொண்டே சிலநேர மிருந்து விடைபெற்று வந்துவிட்டேன்.

இப்படிக்கெல்லா மிருக்க எனக்கு சுகமேது ? சிறப்பேது? நான்செத்தா லன்றி வயிற்றெரிச்சலாறுமோ ? சவரணையாயிருக்கும் பங்காளிகளுக்கு முன்னே சாவலியப்பட்டு நிற்பதைவிடச் சாதலேநன்மை. அப்படி அவமானப்பட்டபோதே உயிரை விட்டுவிட வேண்டும். ஆனல் உம்மையுந் தாயையுமே நினைத்து, வலுவிலுயிர்விடுதல்பாவமென்றெண்ணி அப்படி செய்யாமற் போனேன். ஆகிலும் அந்தத்துக்கம் பொறுக்கக் கூடாமைபற்றி, உயிர் விடுவதற்கே இப்போதுந் துணிந்திருக்கிறேன். இன்னமொரு அதிசயங் கேட்டீரோ ? அந்தமகா யாகசாலையில் ஒருசங்கிருந்தது. அது நூருயிரம் பிராமணர் புசித்தாலொருதர மொலிக்கும். அப்படிப்பட்ட மகாசங்கம் ஒவ்வொரு நாட்களிலும் அனேகந்தர மொலிக்கக் கேட்டிருக்கிறேன். இவ்வாறு அளவில்லாமற் பிராமணர் புசித்துச்சந்தோஷப்படுமளவில் எனக்கும் புளகமுண்டாயிற்று. அந்தப் பிராமணர்கள் புசிக்கும் போது பெருநில மன்னராகிய ராஜாதி ராஜர்களும் பெருமையும் நாணமும் விட்டுப் பரிசாரகர் போலப் பரிமாறி யுபசரித்தார்கள். நாம் கேட்டுமறியாத தேசத்து மன்னரெல்லாம் வந்து காத்திருந்தார்கள். அவர்கள் கண்டு சந்தோஷிக்கும்படியாக ஒவ்வொருவரும் பற்பல ஏவற்பணிசெய்து வந்தார்கள். தேவர்கள் - தேவரிஷிகள் - கந்திருவர் - முதலானவரும் வந்திருந்தார்கள். இவர்களெல்லாம் அவர்களையும் அவர்கள் செய்யும் யாகாதிகாரியங்களையும் வெகுவாய்ப் புகழ்ந்தார்கள். நான் அவர்களிலொருவனுக இருந்தேனே யல்லது வேறில்லை. ஆதலால் என்னுயி ரிருக்குமளவில் அவர்களோ டெதிர்த்துப் போர்செய்கிறேன். ஜயித்தால் அந்தச் செல்வத்தை யனுபவிக்கிறேன். இல்லாவிட்டால் பிராணனை மாய்க்கிறேன். இவ்விரண்டுமின்றிச் சும்மாயிருந்தால் என்துக்கந் தீரமாட்டாதென்று சொன்னன்.

இப்படி சொல்லிய துரியோதனனைப் பார்த்துச் சகுனி சொல்லுகிறுன். கேளப்பா துரியோதன ! பாண்டவர்கள் வெகுபராக்கிரம சாலிகளாகித் தங்கள் புஜபலத்தினல் இப்படிப்பட்ட ஐசுவரிய மடைந்தார்கள். அதைக்கண்டு நீ வீணய்ப் பொருமைப் படுவதும், யுத்தத்தினலே அதைக்கைவசப்படுத்த நினைப்பதும், கொஞ்சமும் நன்ரு யிருக்கவில்லை. எட்டாத பெரியமரத்தி னுனியிலிருக்கும் பழத்தை எட்டமுயலுங் குள்ளன்போல், வீணமுயற்சியை நீயோசிக்கிருய். இப்போது தேவர்களெல்லாம் ஒன்ருய்க்கூடி வந்தாலும், அந்தப் பாண்டவர்களை வெல்வது அசாத்தியமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனபடியினலே, நீ சொல்வது சரியல்ல. ஆனலதைக் கவருகிறதற்கு ஒரு உபாயமுமில்லையோ வென்ருல்-உண்டு. அதென்னவெனில், சொக்கட்டா னுடுவதில் எனக்கு மிகுந்த பாண்டித்திய மிருக்கிறது. ஏனெனில்-அக்ஷ இருதயமென்னும் வித்தை கற்றிருக்கிறேன். அதனலே எந்தச் சமயத்தில் எந்தப்பந்தயம் வேண்டுமோ ? அது விழச்செய்வேன். காய்களை நடுவதிலும் மிகுந்த சாதுரியமுள்ளவனு யிருக்கிறேன். ஆகையால் எனக்குச் சமானமாக அவ்வித்தை தெரிந்தவன் பூலோகத்திலொருவனுமில்லை. தருமபுத்திரனுக்கோ ? இவ்விதத் திறமைகள் ஒன்றுமில்லாதிருந்தாலும், இந்த ஆட்டத்தில் மாத்திரம் மிகுந்தவிருப்பமுண்டு. பந்தயம் பாடவுந் தெரியாது. ஆடவுந்தெரியாது. ஆட அழைத்தால் வரமாட்டேனென்று ஓடவுந் தெரியாது. ஆதலால் அவ்வாட்டத்திற்கு அவனையழைத்துச் சகலசம்பத்துக்களையும் பந்தயமாக வைக்கச்செய்து, அவைகளையெல்லாம் எளிதிலேயே கிரிகிக்க மாட்டுவேன். அப்படிக்குக் கிரிகித்து உனக்குத் தருகிறேன். சிந்தைப்படாதே. சம்மதியாகில் அதற்கு யத்தினப்படு. என்று திரிதராஷ்டிர மகாராஜாவின் முன்னிலையிற் சகுனியானவன் சகலராஜாக்களின் விநாசமாகிய மரத்திற்கு விதைபோ லிராநின்ற பேச்சைச்சொன்னன்.

அப்போது துரியோதனன் பிதாவை நோக்கி, ஐயா ! மாமாவாகிய சகுனிசொல்லியதைக் கேட்டீரன்ரோ ? அந்தப்படி இவனைக்கொண்டு தருமபுத்திரனைச் சூதாடச் செய்து, அவன் செல்வமெல்லாங் கவருகிறேன். அப்படிக்கு நீர் அனுமதி பண்ணல் வேண்டுமென்று சொல்லக்கேட்ட திரிதராஷ்டிரன் தன் மகனைப்பார்த்துச் சொல்லுகிருன்: கேளடா குழந்தாய்! நீசொன்ன காரியத்தை யோசித்துச்செய்யவேண்டும். அதற்காக விதுரனை யழைப்பித்து, அவனேடுசாவி, காரியத்தின் குணகுணங்களைநன்ருய்ஆராய்ந்துசொல்

லுகிறேன். அவன் வெகுபுத்திசாலி. சகல தருமங்களையு மறிந்தவன். வெகுயோக்கியன். பாண்டவர்களுக்கும் - உங்களுக்கும் - பக்ஷபாதமில்லாமல் நன்மையைச்சிந்திப்பவன். ஆனபடியினாலே அவனோடிதைப் பேசவேண்டுமென்றான். அதைக்கேட்டவுடன் துரியோதனன் மனம்பொங்கி, கேளும்பிதாவே! நீர் விதுரரோடு இந்தச்சங்கதியைச்சொன்னால் அவர்சம்மதிக்கப்போகிறதில்லை. மற்றென்ன சொல்லுவவொன்றால்- சொக்கட்டான் முதலாகிய சூதுகளை யாடுதல் நல்ல காரியமன்றென்றும், பாண்டவர்களுடைய ராச்சியத்தை அபகரிப்பது நியாயமன்றென்றுஞ் சொல்லுவர். அதுவே உமக்கு யுக்தமாகத்தோன்றும். அதுகேட்டவுடனே நான் உயிரைவிடுவேன். இவ்வாறாக நானிறந்தபின் நீரும் விதுரருமாகச் சுகமாயிருங்கள். நானொருவன் போவதினால் உங்களுக் கென்னகுறை? ஆகையாலே நான் உயிரைவிடுவதே நன்மையென்று பிதாவின் பக்கத்திலிருந்து மிகவுந் துக்கப்பட்டான்.

திரிதராஷ்டிரன் விதுரனோடு ஆலோசித்துத் துரியோதனனுக்கு அறிவுறுத்தல்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! இப்படி. சகுனியின் போதனையினாலே ஆகாத்தியஞ் செய்யாநின்ற மகனைப்பார்த்துத் திரிதராஷ்டிர மகாராஜன் மனதிற் கிஞ்சித்து இரக்கமுற்று, மந்திரிகளை நோக்கித் துரியோதனனுக்குப் பிரியமாகும்படி ஒரு வார்த்தைசொல்லுகிறான். ஓமந்திரிகளே! நீங்கள் இப்போதே சுவர்னங்களும் ரத்தினங்களும் பதித்து, திவ்வியமாகிய ஒரு சபாமண்டபத்தைக் கட்டிவையுங்கள். அது ஆகாசத்தையளாவி, சந்திரனுடைய காந்திக்கு நிகராகிய காந்தியை யுடையதாய், யாவருங்கைலாசமோ? மேருவோ? என்று மயங்கத்தக்கதாக யிருக்கவேண்டும். அனேகம்ஸ்தம்பங்களும்-சுவாக்ஷங்களும்-உடைத்தா யிருக்கவேண்டும். மேலும் அது வெகுவினோதமாயும் அருமையாயு மிருப்பதல்லாமல் அதில் அனேக தாமரைத் தடாகங்களும்-வாவிகளும்-சலசூத்திரக் கூட்டங்களும் உடைத்தாகிய சபா மண்டபமொன்று நிருமித்து, அச்சேதி யெனக்குச் சொல்லுங்களென்று ஆக்கியாபித்து யாவரையும் அனுப்பிவிட்டு, விதுரனை அழைத்துக் கொண்டுவரும்படி தூதரை அனுப்பினான். ஏனென்றால் - புத்திரனிடத்தில் வாச்சலியமொருபக்கத்தில்போராடுகிறதன்றிச் சூதாடுகிறது தருமத்திற்கு வழுவென்று ஒரு புத்தியுந்தோற்றி மனங்கலங்கிய படியினாலே, அவ்விவேகத்திற் சிறந்த விதுரனுடனே யோசிக்கும் பொருட்டு அழைத்துக்கொண்டு வரும்படி உத்திரவு செய்தான். அந்தத் தூதர்போய்த் தெரிவித்தவுடனே விதுரன் தன்னை அழைப்பதற்குக் காரண மறிந்துகொண்டு, இனி இந்தவமிசத்தாருக்கும்- பூமியிலுள்ள அரசருக்கும்-விநாசகாலங் கிட்டித்தென்று நினைத்துச் சீக்கிரமாக அரண்மனைக்குவந்து ராஜாவைக் கண்டு தெண்டனிட்டு, அவனுக்கிணையினால் உட்கார்ந்து இதனைச் சொல்லுகின்றான்.

வாரீர் மகாராஜாவே! உம்முடைய மனதிலிருக்கும் அபிப்பிராயத்தைச் சிந்தித்துப்பார்த்தேன். அது மிகவும் நன்றாயிராமையாலே சந்தோஷப்படாமலிருக்கிறேன். எப்படிப் பட்டவனுக்குஞ் சூதாடுதல் இழிவாகிய செய்கை. மேலும் அது கலகமென்னுஞ்செடிக்குக் கிழங்காயிருக்கின்றது. அப்படிக்குச் சூதாடுவதினாற் பாண்டவர்களுக்கும் நமக்கும் மிகுந்த விரோதமுண்டாகி, யாவருக்குந் தீங்குநேரிடும். என்றுசொல்லக்கேட்ட குருட்டு ராஜாவானவன்சொல்லுகிறான்: ஓவிவேகத்திற்சிறந்த விதுரா! நியாயமாய்ச் சூதாடினாற் கலகம் வரவேண்டுவதென்ன? மேலும் நானும் வீஷ்மரும் பக்கத்திலிருக்க கலகம்வருமா? ஒருக்காலும்வராது. அப்படிநேரிடாம லிருக்கும்படி தகுந்த முயற்சிசெய்வோம். தேவர்களும் அனுக்கிரகஞ்செய்வார்கள். அப்படியுங் கலகம் வரவேண்டியிருந்தால், அது நாம் தடுத்து நிற்குமா? வந்து தானேதீரவேண்டும். ஆனபடியினாலே இந்த விஷயத்தில் நீ என்பேச்சை மறுத்துப் பேசாதே. இந்நிமிடத்திற்போய் உதிஷ்டிரனை யழைத்துக்கொண்டு வாவென்று பிடிவாதமாய்ப் பேசுவதைக்கண்ட விதுரனானவன், ஓ மகாராஜனே! உம்முடைய சித்தத்தின்படியே நடக்க என்னைக்கேட்க வேண்டுவதில்லையே: நீ ரென்னசெய்வீர்? சீக்கிரத்திற் புத்திரரையும் - பந்துக்களையும் - செல்வத்தையும் - இழந்து துயரப்படவேண்டிய காலம் உமக்கு நேரிட்டிருக்கையில், ஒருவருடைய பேச்சும் இதமாய்த்தோற்றாது, ஆதலால் தெய்வச்செயலின்படி யாவும் நடக்குமென்று சொல்லிப்போட்டுச் சரேலென்றெழுந்து வீஷ்மருடைய மனைக்குச்சென்றான். அங்கே வீஷ்மர் விதுரனைப்பார்த்து வந்தகாரியமென்னென்றுகேட்க, விதுரன் திரிதராஷ்டிரன் கருத்தைச் சவிஸ்தாரமாய் அவருக்குத் தெரிவித்துக்கொண் டிருந்தான்.

இங்கே திரிதராஷ்டிர மகாராஜனானவன் சூதாடுதற்கு விதுரன் சம்மதிப்படாமற் போகவே மனந்திருப்தியடையாமல், ஏகாந்தத்தி லுட்கார்ந்து துரியோதனனைப் பார்த்துச் சொல்லுகிறான்: அடா துரியோதனா! நீ சிறுவனானபடியினாலே யோசிக்காமற் பிடிவாதம் பேசுகிறாய். என்பேச்சைக்கேள். எப்போதும் மனிதன் நன்மைகட்கு ஏதுவாகிய காரியமே செய்யவேண்டும். சொக்கட்டானாடுகிறவிஷயம்விதுரனுக்கு எவ்வளவும் சம்மதியில்லை. அதனாலே வெகு தீங்குகள் வருமென்றும், இம்மைமறுமைகளிற்கேடு வருமென்றுஞ்சொல்லுகிறான். அவனோ? மகாதீர்க்கதரிசி. சகலமுந் தெரிந்தவன். அவனுக்குச் சமானமாகிய புத்திமான் கிடையாது. தேவராஜாவாகிய இந்திர

னுக்குப் பிரகஸ்பதி உபதேசித்த நீதிகள்ாயவுந்தெரிந்தவன். யாதவர்களுக்கு உத்தவன் எப்படி நன்மையைச்சிந்தித்துக்கொண்டிருக்கிறனே? அப்படி நமக்குநன்மையைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறவன். அவன்பேச்சுக்குப் பலதிருஷ்டாந்தங்களைக் கண்டிருக்கிறேன். ஆதலால் அவன்சம்மதியை மீறிநடப்பது நன்மையாகத்தோற்றவில்லை. நீயோபிடிவாதம்பிடித்துச் சோகப்படுகிருய். அப்படிசொகப்படவேண்டாம்.உனக்கென்னகுறையிருக்கிறது. நம்முடையபூர்வீகர் எந்தராச்சியத்தை யாண்டார்களோ? அந்தராச்சியத்தை நீயுமாளுகிருய். அவர்களுக்கெல்லாங் கிடைத்திலாத செல்வமும்,கெடிஸ்தலாதிபதிப்பட்டமும்உனக்கிருக்கிறது.சகலபோகபாக்கியங்களுநிறைந்திருக்கின்றன. சகலாலைகளு மோதியிருக்கிருய். உனக்குச் சமானமானவன் மற்றொருவனுமில்லை. வீணய் மனத்திற்கு ஒரு அசந்துஷ்டியை வைத்துக்கொண்டு தவிக்கிருய். அதைவிட்டு உனக்கிருக்கிற போக பாக்கியங்களை அனுபவித்துச் சுகமாயிரு. இந்த விஷயத்தில் நீயே விதுரனைக்கேள். அவன் உனக்கு இதத்தைச்சொல்லுவன். அதின்படி நடந்தாயேயாகில் மேன்மேலுங் க்ஷேமங்கிடைக்கும். என்று பிதா சொல்லியதைக் கேட்ட துரியோதனன் பெருமூச்சுவிட்டுச் சொல்லுகிறன்.

துரியோதனன் திரிதராடிஷ்ரனுக்கு இராஜசூயம் நடந்த சிறப்புகூறல்.

கேளும் என்தந்தையே! எப்படியாகிலும் வயிறு வளர்த்தாற் போதுமென் றெண்ணுகிறவனுக் கன்ரே சோறுந்துணியுங் கிடைத்தாற்பெருமை. அவ்விதமாய் நாயும் வயிறு வளர்க்கிறது. அப்படி இழிவாக வயிறு வளர்ப்பதைக் காட்டிலும் பிராணனை விடுவது உத்தமம். எதிரிக் கிளைக்காமற் பிழைப்பதன்றோ பிழைப்பு. அதிலுஞ் சூரனுகவும் மானியாகவு மிருப்பவன் சத்துரு பெருமையடையப் பார்த்திருப்பது நியாயமா? நீர் எனக்கு வெகுசெல்வங்களைக் கொடுத்திருக்கிறீர். ஆகிலும் அவைகளெல்லாம் பாண்டவர்களுடைய செல்வங்களுக்கு முன் அற்பமாகத் தோற்றுகிறபடியால் சந்தோஷகரமா யிருக்கவில்லை. அவர்களுடைய சம்பத்துகளின் அதிசயத்தை இன்னமுஞ் சொல்லுகிறேன் கேளும், இராஜசூய யாகத்தில் வருகிற காணிக்கைகளையும்- மற்று மிருக்கிற பொருள்களையும் - விசாரித்து வாங்கிவைக்கும்படி எனக்குப் பொக்கசத்தில் அதிகாரங்கொடுத்தார்கள். அதனுலே நான் பூரணமாய்க் கண்டிருக்கிறேன். என்கண்கள் எவ்வளவுதூரம் பரவியதுகளோ? அவ்வளவுதூரமும் பொருட் கூட்டங்களாகவே காணப்பட்டதுகள். வரவுக்குஞ் செலவுக்குங் கணக்குவைக்கக்கூடாமற்போயிற்று. பொக்கசத்துக்காகப் பலவீடுகள் விஸ்தாரங்களாய் நிருமிக்கப்பட்டிருந்தும், அவைகளி லடங்காமல் அதின் புறங்களி லெல்லாம் மழைபெய்தபோது ஆலாங்கட்டிகள்விழுந்திருந்தாலெப்படியோ? அப்படிக்கு இரத்தினங்களும் - பொன்களும் - மற்றுமுண்டான அளவற்ற பொருள்களும் இறைந்திருந்தன.

இப்படி கொள்ளாமலிருக்கச்சேயும், ஓய்விலாமல் நாலுதிக்குகளிலுமிருந்து அளவற்றபொருள்கள் ஆற்றின்வெள்ளம்போல் வந்துகொண்டே யிருந்தன. அதுகளைப்பார்க்குமளவில் யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள? தேவேந்திரன்-குபேரன் - முதலானபேர்களும் பொறாமைப்படாமலிரார்கள். வேலைக்காரர்களுக்கும் எனக்கும் வந்தவஸ்துக்களை வாங்கிவைத்துக் கைகள் சோர்ந்தன. இன்னவிடத்தில் இன்னதைவையுங்களென்று சொல்லிச்சொல்லி என்வாயுஞ் சலித்தது. அந்தச் சம்பத்துகளுக்குமுன் நமதுராச்சியசமபத்துக்களெல்லாம் ஏகதேசமாகுமா? சபாமண்டபத்திற்குப்போய் நான் தடுமாறினேனே: அந்தப் படிகக்குளம் விந்துசரசென்னும் தேவதடாகத்திலிருந்த இரத்தினங்களினுற் செய்யப்பட்ட படியினலே,மெய்யாகிய தாமரைப் பூக்கள்போலவும் - மீன்கள்போலவும் - மற்றும் நீர்ப்பறவைகள்போலவும் - தெளிந்து அசைந்துகொண்டிருக்குந் தண்ணீர்போலவுங் காணப்பட்டது. இவ்வாறுகச் சொல்லத்தரமில்லாத அநேகமாயிரம் விசித்திரங்களுண்டு. இதுகள்தவிர யானை-குதிரை-பசுக்கள் முதலானவைகளும், ஆசனங்கள்-சயனங்கள்-முதலியவைகளும் அளவற்றுவந்தன. வந்தராஜாக்கள் யாவரும் வெகுகாணிக்கைகளைக் கொணர்ந்தார்கள். ஆனுல் அவைகளை விவரமாகச்சொல்ல எனக்குத் தெரியாது ஆகிலுஞ் சிலவற்றை ஞாபகமுள்ளவரையிற் சொல்லுகிறேன் கேளும்.

காம்போஜராஜனும்-திரைகருவரும்-கொணர்ந்த பொருள்களை, முன்னங் கூடியவரையிற் சொன்னேனல்லவா? மற்றொரு வசாதிகளென்னப் பட்டவர்கள் தித்திரியென்னும் பக்ஷிபோற் பஞ்சவர்ணங்களுடைத்தாகிய தேகமுங் கிளிமூக்கு வன்னமாகிய முகமுமுள்ள அனேகங்குதிரைகளையும், சுமைகளை நன்ருய்ச்சுமக்கத்தக்க பல்லாயிரம் ஒட்டகங்களையும், பலவகைப்பட்ட வஸ்திராதிகளையுங் கொணர்ந்து; இராஜதரிசனமில்லாமல்வெகுகாலங் காத்திருந்தார்கள். இமயமலையிலிருந்து ஒருவேதியன் சங்கமொன்று கொண்டுவந்துகொடுத்தான். அதுபெரியவுருவத்தோடுங் கூடி நல்ல லக்ஷணங்களுள்ளதாய்ச் சந்திரமண்டலத்தை யொத்துப் பொன்னுலலங்கரிக்கப்பட்டிருந்தது. அதை உதிஷ்டிரன் அருச்சுனனுக்குக்கொடுத்தான். அவனதைவாங்கிஊதினுன். அந்த ஓசையைக் கேட்டராஜாக்கள் யாவரு மூர்ச்சையடைந்தார்கள். பாண்டவர் ஐவரும்-திருஷ்டத்துய்மனும் - கிருஷ்ணனும்- சாத்தகியும் இந்த எட்டுப்பேர்கள்மாத்திரம் மூர்ச்சையடையவில்லை நானும் மூர்ச்சையடையக்கண்டு,வீமனும்அர்ச்சுனனும்நகைத்தார்கள். நான்மானமில்லாதவனுனபடியினுலே அவர்களைக்கொல்லமாட்

டாமற் போனதுமன்றி, பிழைத்துமிருக்கிறேன். அந்தப்பிராமணனுக்குத் தருமபுத்திரன் சிரேஷ்டமாகிய ஐஞ்னூறு விருஷபங்களையும், வெகு பணங்களையும் வெகுமதிசெய்தான்.

சுமுகனென்பவனும் - குளிந்தனென்பவனும்— நாணயமாய்ப் பொற்சரிகை போட்டிருக்கிற அனேகவகை ஆடைகளையும், பொற்குடங்களில் நிறைத்த அருமையாகிய தேன்களையும், பல பூஷணங்களையும், பணங்களையுங்கொணர்ந்து; வாசற்காப்பாளரால் தடைபட்டுப் பின்புகண்டு பணிந்தார்கள். யவனதேசத்து ராஜாக்கள் பருவததேசத்துக் குதிரைகளிற் பலவற்றையும், மழமழப்பும்-நிகநிகப்பும்-பொருந்தி மெலிதாயிராநின்ற விலையுயர்ந்த கம்பளங்களையும் பலவகைப் பட்டுவஸ்திரங்களையுங் கொணர்ந்தார்கள். கலிங்கதேசாதிபதியாகிய சுருதாயு என்பவன் விலையுயர்ந்தமணிகளையும், திவ்யாலங்காரம்பொருந்திச் சுந்தரிகளாகிய பல மங்கையரையுங்கொணர்ந்து காத்திருந்து கொடுத்தான். வங்கதேசாதிபதி நவரத்தினங்களிழைத்த கட்டில்கள் - ஆசனங்கள் - பல்லக்குகள் - முதலியவை கொணர்ந்தான். பாண்டியராஜன் நல்லசந்தனக்கட்டைகளில் தொண்ணூற்றாறுபாரமும், அவ்வளவு நற்சங்குகளும், சந்திரகிரணம்போன்ற முத்துமாலைகள் பலவுங்கொணர்ந்து சமயம்பார்த்திருந்து கொடுத்துப்பணிந்தான். சோழதேசத்து ராஜனும் - கேரளமென்கிற மலையாளதேசத்து ராஜனும் அகிற்கட்டைகளில் அனேகபாரங்களும், ஹரிச்யாமமென்கிற ஸ்ரீகந்தக் கட்டைகளில் அனேகபாரங்களும், யானைத்தந்தங்களில் அனேகபாரங்களுங் கொடுத்தார்கள். அச்மகனென்பவன் கொம்பு குளம்புகளுக்குப் பொற்பணிபூண்டு, கழுத்தில் நல்லஹாரங்களணிந்து, பார்க்க வெகுஅழகாய் ஒருகுடம்பால் கறக்கத்தக்க தலையீற்றுப்பசுக்களிற் பதினாயிரங்கொடுத்தான். சிந்துதேசத்தரசன் பிறந்து மூன்றுவருஷங்களானவைகளும், சுபலக்ஷணங்களுள்ளவைகளும், முத்துச் சாலர்கள் கட்டிப் பொற்சரிகைகளினாலும் உயர்ந்தபட்டினாலுஞ்செய்த சீனிகள்போட்ட இருபத்தையாயிரங்குதிரைக்குட்டிகளைக்கொணர்ந்துவந்து கொடுக்கச் சமயங்கிடையாமல்; வாசலிற்றானே வெகுநேரந் தடுமாறிக்கொண்டிருந்தான்.

சவ்வீரதேசத்தரசன் நான்குயானைக்குட்டிகள் கட்டியதாய், முழுவதும் பொற்பட்டங்களணிந்து, நவரத்தினங்களு மிழைத்து, முத்துச்சரங்களும் பவழச்சரங்களும் - பொற்சலங்கைகளுஞ் சுற்றிக்கட்டி, திவ்யமாகிய குடைமுதலாயுள்ள பதாகைகளிட்டுச் சூரியமண்டலம்போல் விளங்காநின்ற முப்பதுதேர்களைக்கொணர்ந்து நெடுநேரங் காத்திருந்தான், அவந்திராஜன் விலையுயர்ந்த பற்பல மணிகளாற் செய்த விநோதமாகிய கிரீட கவச குண்டல கேயூரமுதலிய பணிகளையும், அநேகந்தாசிகளையும் வருந்திக்கொடுத்தான். தசார்ணதேசாதிபன் - செதிதேசாதிபன்-சூரசேன தேசாதிபன் - இம்மூவரும் பணப்பொதிகளைக் கொணர்ந்து காத்திருந்தார்கள். காசிராஜன் எண்பதினாயிரம் பசுக்களையும், பதினாயிரங் குதிரைகளையும், எண்ணூறு யானைகளையும், பலவன்னப் பட்டுகளையுங் கொண்டுவந்தான். விதேகராஜனாகியகிருதக்ஷணனும் கோசலராஜனாகிய பிருகத்பலனும்-கூத்தாடும்படியாகிய பதினாயிரங் குதிரைகளும், ஒரு பாரந்தங்கமுங் கொடுத்துக் காத்திருந்தார்கள். கப்பியனென்பவன் பொற்சரிகையினால் நெய்து, தலைப்புகளில் முத்துச்சரங்களும்- இரத்தினச்சரங்களும்-தொங்கவிட்டவஸ்திரங்களில் அனேகங் கொடுத்தான். திரிகர்த்தராஜன் அழகும்பலமும்பொருந்திய காளைகள்கட்டிய பொற்பட்ட மணிந்த தேர்களில் ஆயிரமும், பலபொருளுங் கொடுத்தான். பாருகச்சனென்பவன் உயர்ந்த முத்துமாலைகளும், இரத்தினமாலைகளும், சந்திரஹாரமுதலியவைகளும், பருத்திக்காட்டிற் பிறந்து நல்லயவ்வனமும் - நீண்டதேகமும் - நெடிய கூந்தல்களுமுள்ள அனேகமாயிரந் தாசிகளையுங் கொணர்ந்து, வாசலில் அலைந்துகொண் டிருந்தான்.

தென்மேற்கிலுள்ள சில வேடராஜர்கள் பார்ப்பாருக்கு உபயோகமாகிய ஆட்டுமயிர்களினால் நெய்த கம்பளங்களும், இரத்தினக் கம்பளங்களும், அனேகமாயிரங்குடந் தேன்களும், நெய்களும், உருசியுள்ள மீன்சுமைகளும், அனேக ஒட்டகங்களுங் கொணர்ந்து காத்திருந்தார்கள். காசியாளென்போரும் அப்படியே காத்திருந்தார்கள், மற்றொருவேடராஜன் மேற்கடலினடுவிலுந் தென்கடலினடுவிலு மிருக்கு மலைகளிற் பிறந்த பவழங்களிற் பல கொணர்ந்தான். விரேதன் வைடூரியக்கட்டிகளும், மரகதக்கட்டிகளும், பல கொணர்ந்தான். பகதத்தன் உயர்ந்த யானைகள் - குதிரைகள் - முதலிய வாகனங்களோடு, கத்திகள்-ஈட்டிகள் முதலான ஆயுதவகைகளும், இன்னும் பலதிரவியங்கள் கொடுத்துச் சேவகன்போல் காத்துக்கொண்டிருந்தான். ஒற்றைக்கண்ணர் - ஒற்றைக்கையர்-ஒற்றைக்காலர் - முக்கண்ணர் - முக்கையர் - முக்காலர்- முதலான இராக்ஷசர்களில், உட்டிணீசர் - அபயர் - பிரபாகுகர் - என்று சொல்லப்படுவோர், யானைத்தந்தங்கள் - மான் கொம்புகள் - கட்கங்கள் - புலி நகங்கள் - சாமரங்கள் - காட்டுக்குதிரைகள்-காட்டுயானைகள் - காட்டெருமைகள் - காட்டெருதுகள் - பலவகை மான்கள் - விசித்திரமாகிய அனேகமிருகங்கள் பட்சிகள் - இவைகளைக் கொண்டு வந்தார்கள். சிங்களத்தரசன் கோசீர்ஷகமென்றும் - பத்துமமென்றும் - அரிசியாமமென்றுஞ் சொல்லப்பட்ட பலவகைச் சந்தனங்களும், மற்றும் வாசனை வஸ்துக்களுங் கொடுததான். மற்றொருதீவின் அரசன் இலவங்கம்- ஏலக்காய் - சாதிப்பூ - சாதிக்காய் - இன்னும் பலவித வஸ்துக்களோடு, சிலவகை இரத்தினக் கட்டிகளுங்

கொடுத்தான். புண்டரீகரும், தாமலிப்தரும், பச்சைக்கர்ப்பூரம் - குங்குமப்பூ - கோரோசனம்-அகில் - தக்கோலம் - இலவங்கம் - சாதிக்காய் - முதலானதுகளைக் கொண்டுவந்தார்கள்.

சீனர்-ஹூணர் - கஷர் - காசர் - இவர்களெல்லாங் கடலிலகப்படத்தக்க பலவிசித்திர வஸ்துக்களையும், மலையிலுள்ள விசித்திர வஸ்துக்களையும், ஆடும்படியாகவும் - பாடும்படியாகவும் - வாத்தியங் கொட்டும்படியாகவுஞ் செய்த அனேகம் பிரதிமெய்களையும், விசித்திரமாகிய கண்ணாடிகளையும், அழகாய் வேலைசெய்த தோற்களிற் பலவற்றையுங் கொண்டுவந்து; வாசலில் நிற்கக்கூட இடமில்லாமல் தடுமாறினார்கள். காஸ்மீராஜன் உயர்ந்த வஸ்திரங்கள் - கம்பளங்கள் - கஸ்தூரி முதலிய வாசனை வஸ்துக்கள் - பலவகைமான்கள் - இவைகளோடு, இன்னும் வெகு பணங்களுங் கொண்டுவந்து கொடுத்தான். மாளவராசன் பல்லாயிரங் கலங் கோதுமைகள் - கடலைகள் - தானியங்கள் - இன்னும் போசனத்திற்கு வேண்டிய பல வஸ்துக்கள் - இவைகளைக் கொடுத்தான். சுராட்டிராசன் இருபதினாயிரங்குடம் நல்லெண்ணையும், ஆயிரம் வண்டி வெள்ளைவெல்லமும், சர்க்கரை - கற்கண்டு - இதுகளையெல்லாங் கொண்டுவந்து கொடுத்தான். இப்படியே சகலராஜாக்களுங் கொண்டுவந்த பொருள்களுக் களவில்லை. இத்தனைபேரும் அரண்மனை வாசலில் வெகுபோது காத்திருந்துஞ் சமயங் கிடைக்காமற் போய், மறுபடியும் வந்து நான் முன்னே நீ முன்னேயென்று மேல்விழுந்து தருமபுத்திரனைக் கண்டு வந்தனம் பண்ணினார்கள். அப்போதுவந்த குதிரைகளை பொருகணக்கிட்டேன். அப்படி கணக்கிட்டதிற் கோடியிருக்கலாமென்று தோன்றிற்று, மற்றவைகளையெண்ணக் கூடவில்லை. இப்படிக்கு மகாபெருமை பெற்றுத் தருமபுத்திரன் விளங்க, நான் அவனுடைய சேவகரில் ஒருவன்போல் அங்கே அலைந்து திரிந்துகொண்டிருந்தேன். இளாவிரத கண்டத்தி லிருப்போரும், உத்தரகுருவி லிருப்போருந் தவிர; மற்றையாவருங் காத்துக்கிடந்தார்கள்.

ஐயா ! இன்னமுங் கேளும்: சித்திராங்கதன் முதலாகிய கந்திருவர் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஜாம்பூனதமென்கிற பொற்கட்டிகளையும், தேவலோகத்து இரத்தினங்களிற் பலவற்றையும், சங்குகளிலனேகங்களையும், பற்பலவிசித்திரமான வஸ்திரங்களையும், சிறகுள்ளவையான பஞ்சவர்னக் குதிரைகளில் நூறும், பச்சைக்குதிரைகளில் நூறுங் கொண்டுவந்து கொடுத்தார்கள். அப்படியே சில இயக்கர் முதலானபேர்கள் பலபணிகளையும், சுகந்தமுள்ள பொற்றாமரைமாலைகளையும், வாடாத செங்கழுநீர் மாலைகளையும், மற்றுமனேகம் பூமாலைகளையுங் கொடுத்தார்கள். இன்னு மிந்தப் பூமண்டலத்தி லுள்ள நவகண்டங்களிலும் - மற்றுமனேக வருஷங்களிலும் - தீவுகளிலும்-மலைகளிலும்-காடுகளிலுமிருக்கிற இராஜாக்கள் மிலேச்சர் - பில்லர் - வேடர்-கிராதர் - ஹூணர் - புற்கசர் - தேவசாதியர் - இவர்முதற் பலருந் தங்கள் தங்களுக்கிருந்த சிறப்புப் பொருள்களைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். சிலசாதியார் வெள்ளையானைக்கன்றுகளில் ஆயிரங்கொடுத்தார்கள். சிலவேடர் எப்போதும் அழுகாதவைகளாயும், இரசமற்றுப் போகாதவைகளாயும், சுகந்தமும் ருசியும் விசேஷப் பட்டவைகளாயு மிராநின்ற பழங்களையுங் கிழங்குகளையுங் கொண்டுவந்து கொடுத்தார்கள். இன்னுஞ்சிலவேடர் அருமையான மாமிசங்களையும், பானங்களையுங் கொண்டுவந்தார்கள். அனேகர் உலோகங்களிற் பலவற்றையும், ஓஷதிகளிற் பலவற்றையுங் கொணர்ந்தார்கள்.

இப்படிப்பட்ட காணிக்கை கொண்டுவந்த யாவரும் வாசலிற்காத்து, காவற்காரருக்குப் பற்பலபொருள்களை யீந்து நல்லவார்த்தைசொல்லி உட்புகுந்து, மகாராஜாவைக் கண்டு பணிந்து காணிக்கைவைத்தார்கள். அங்குவந்த திரவியமாத்திரம் நூறுகோடிக்கதிகமிருக்குமென்றெண்ணுகிறேன். அத்தருமனோ? அவ்வளவு பொருளையும் லக்ஷியஞ்செய்யாமல், நல்ல பிராமணருக்கு அவையனைத்தையுந் தானஞ்செய்துவிட்டான். அந்தயாகத்திற்கு வந்தவர்களி லொவ்வொருவனும், இந்திரன் - குபேரன்-முதலானோரைக் கூட மதியாம லிருக்கும்படி யானார்கள். அவ்விடத்திலே யான் ஒருவனுக்கும் லக்ஷியமின்றி யிருந்தேன். இதைக்காட்டிலு மென்றனுக்குத் துக்கம் வேறுளதோ ? நானோ இராசவமிசத்திற் சிறந்ததாகிய குருகுலத்திற் பிறந்து, இந்தராச்சியத்திற்கு முதன்மையாகிய ராஜாவாயிராநின்றவுமக்குப்புத்திரனாகிச் சகலவிதங்களிலும் உயர்ந்தவனா யிருக்கிறேன். இப்படிப்பட்டவன் அப்பிரயோஜகன்போலிருக்க - இராச்சியத்திற்கு உரியராஜாவாகாமல் உமக்குத் தம்பியானதுபற்றிச் சிறப்படைந்த பாண்டுவின் குமாரராய்க்காட்டிற் பிறந்து திரிந்தலைந்து பிச்சையெடுத்த அவர்கள் அகண்ட சாம்பிராச்சிய சம்பத்தை யனுபவிக்க நேரிற்பார்த்து, மானமுள்ள நான் உயிர்வைத்திருக்கலாமா ? இதுதலைகீழாயன்றோ யிருக்கிறது. இப்படிக்குப் பெருஞ்செல்வ மிகுந்தபடியினாலே உத்தமருக்குப் பலதானங்கள் செய்தான். அதனாலே அவர்கள் இவர்கட்குச்சத்துருக்கள்நாச மடைந்துசம்பத்துகள் மேன்மேலும் வளருகவென்று ஆசீர்வதித் திருக்கிறார்கள். அவர்க ளாசீர்வாதத்தால் தேயசு - மேன்மை - சுகம் - தருமம் - நற்கதி - புகழ் - இவைமுதலானவும் அவர்களுக் குண்டாகின்றன. ஆனபடியினாலே எல்லாவற்றிற்கு முதற்காரணஞ் செல்வமேயாகின்றது. அஃதில்லாதஎனக்குஎன்ன தான்கிடைக்கும்?

எந்தையே ! அவ்விடத்தில் நடந்த மற்றொருசிறப்பைக்கேட்டீரா ? யாகமுடிந்து அவப்பிரதமானவுடனே, நாரதர் - பருவதர் - வசிட்டர் - பராசர் - வி

யாசர் - தவுமியர் - முதலான மகாரிஷிகளும், வேத சாஸ்திரங்களை முற்றுங்கற்று - அஸ்திர பாண்டித்தியத்தாற் சிறந்து - விவேக குணங்களினு லுயர்ந்து- அனேகம் யாகங்களைச்செய்து பேர்பெற்று - நல்லொழுக்க முடையோராகிய பலபாராக்கிரமங்களில் ஒப்பில்லாத மகாராஜாக்கள் பலருங்கூடி, தருமபுத்திரனுக்குச் சாம்பிரரச்சிய பட்டாபிஷேகஞ் செய்ய முயன்று, கிழக்கு - தெற்கு - மேற்கு என்னும் இம்முத்திசைக் கடலினின்றும் ஐஞ்ஞூறுமகாநதிகளினின்றுந் தீர்த்தங்களை வருவித்து, திவ்விய ஔஷதிரசஞ் சேர்த்து அபிமந்திரித்து, திவ்விய சிங்காதனத்தி லுட்காரவைத்து, பதினெண் வாத்தியங்கள் முழங்க - நாற்பத்தெண்ணுயிர முனிவர் சுவஸ்தி வாசனஞ்சொல்ல அபிஷேகஞ் செய்தார்கள். அப்போது கட்டுவதற்குங் கறப்பதற்குமான வெள்ளியினலாகிய அனேகயின்ருடும்-பொன்பாத்திரங்களோடும்-பத்துலக்ஷம் பசுக்களும், மற்றும் வெகு பொருள்களுந் தானம்பண்ணினுன் தருமபுத்திரன். பின்பு வீதிவலம் வரும்போருட்டுப் பாக்லிகராஜன் வாகனச்சாலையிலிருந்து தானே நவரத்தினகசிதமான தேரைக் கொண்டுவந்தான். சுதக்ஷணமகாராஜன் அந்தத்தேரில் நான்கு குதிரைகளைக் கட்டினுன். சுனீதராஜன் அத்தேரின் மேலேற உதிஷ்டிரனுக்குக் கைலாகு கொடுத்துவந்தான். சேதிராஜன் துவஜங்கொண்டு வந்தான். தக்ஷிணிராஜன் திவ்வியகவசத்தை அவன்தேகத்திற்பூட்டினுன். மகதராஜன் மகாகிரீடத்தை அவன்முடியி லலங்கரித்துப் பூமாலைகளையுஞ் சூட்டினுன். வசுதானராஜன் பட்டத்துயானையை அலங்கரித்துக் கையிற் பிடித்துக்கொண் டிருந்தான். விராடராஜன் குதிரையைச் சீனிவைத்து அலங்கரித்துப் பிடித்துக்கொண் டிருந்தான். ஏகலைவன் மணிகளிழைத்த பாதுகைகளைக் கொண்டுவந்து அவன்பாதங்களிற் பூட்டினுன. அவந்திராஜன் பூரணகலச மெடுத்துக்கொண்டு வந்தான். சேகிதானன் அம்புப்புட்டிகளைக் கொணர்ந்து வைத்தான். காசிராஜன் வில்லெடுத்துக்கொண்டு வந்தான். சல்லியராஜன் மணிமயமாகிய பிடிபோட்ட கத்தியை எடுத்துக்கொண்டுவந்து வைத்தான்.

இப்படிச் யாவரும் பலவந்தமாய் மேல்விழுந்து ஒவ்வோருழியஞ் செய்தார்கள் இதையோசித்தால் அடித்துக்கொண்டுவந்து தேரிற் கட்டவேண்டிய குதிரைகள், தாமே ஓடிவந்து நுகத்தடியைக் கழுத்திற் பூட்டிக்கொண்டதுபோ லிருந்தது. பின்பு அந்த திவ்வியரதத்திலேறி விளங்கிய தருமபுத்திரனுக்கு சாத்தகி வெண்குடை பிடித்தான். அர்ச்சுனன் விசித்திரமாகிய வெண்சாமரை வீசினுன். வீமசேனன் வாசனைபாயாநின்ற சிற் லவட்டம வீசினுன். நகுலசகாதேவர் பின்புறத்திலின்று சாமரம்போட்டார்கள். முன்னம் ஒரு பிராமணன் மகாசங்கமொன்று கொண்டுவந்து கொடுத்தானென்று சொன்னேனே: அந்தச்சங்கத்தை அர்ச்சுனன் ஊதினுன். அந்தச்சங்கத்தின் வரலாற்றைக்கேளும்: பூர்வம் பிரமலோகத்திலிருந்தது. அதைப் பிரமதேவன் இந்திரனுக்குக் கொடுத்தான் அவன் வருணனிடத்தில் வைத்திருந்தான். தருமபுத்திரனுக்குச் சாம்பிராச்சிய பட்டாபிஷேக மாகிறபோது இந்திரன் வருணனிடத்தி லிருந்துவாங்கி, வெகு ரத்தினங்களோடு உலுப்பையாகக் கொடுத்தனுப்பினுன். அச்சிறப்பைஉதிஷ்டிரனறிந்து அர்ச்சுனனுக்குக்கொடுத்தான். இவ்வண்ணமாக அவனுக்குச் சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் நடந்தது. மனு - மந்தாதா - அரிச்சந்திரன் -பிருது - முதலாகியபேர்களுக்கும் இப்படிப்பட்ட சிறப்பு நடக்கவில்லையென்று பெரியோர்களெல்லாம் பேசிக் கொண்டார்கள். அதனுற் பூலோக தேவேந்திரனென்று சொல்லும்படி விளங்கினுன். இதையெல்லாம் பார்த்து என் வயிறுங் குடலும் மண்டி எரிகிறது. மனந்தவிக்கிறது. ஆகார நித்திரைகள் இல்லை. இந்தத் துக்கத்தை உம்முடனே சொல்லவேண்டுமென்று வந்தேன். சொன்னேன். இனி உயிர்வைத்திருக்க எனக்கு மனமில்லை, என்று மகன்சொல்லிய வசனங்களைக்கேட்ட திரிதராஷ்டிர மகாராஜன் மகாவருத்தத்தோடு அவனைப் பார்த்துச் சொல்லுகிறுன்:

திரிதராஷ்டிரன் துரியோதனன்கருத்தைக்கடிய அவனதைக் கேளாது வாதித்தல்.

அடா துரியோதன ! உன் யோக்கியதையையும் உன்கருத்தையும் நோக்கினுல் ஒன்றிற்கொன்று மாறுபட்டிருக்கின்றது. நீ எல்லா நூல்களையுங் குறைவறக்கற்றவன். அவைகளின் உட்கருத்தையு நன்றுயுணர்ந்தவன். உலகநீதிகளையும் நன்றுயறிந்தவன். நற்குணங்களு முடையவன் இப்படி எல்லா வகைகளினுலும் வெகு சிரேஷ்டனுகயிருந்தும். உனக்குப் பிதாக்களாயும், தருமநிஷ்டை யுடையவர்களாயும், வணக்கமொடுக்கமுதலிய நற்குணங்களுள்ளவர்களாயும், பலபராக்கிரமங்களுடையவர்களயும், உன்னிடத்தில் அன்புள்ளவர்களாயு மிருக்கிற பாண்டவர்களுடைய செல்வத்தைப்பார்த்துப் பொருமைப் படுகிறது தகாததன்ருே? பொருமையினுலேயே அவர்களை நபகைக்கிருயல்லது, வேறுகாரண மொன்று மில்லையே: அவர்களைப் பகைப்பது வெகு அனியாயமல்லவோ ? இதைநீயேன் உணராம லிருக்கிருய் ! நல்லதாகட்டும். இப்போது நிரோதவாய் நீ கொண்டிருக்கும் பகையினுலே பயனேதாகிலுமுண்டோ? அதனுல் உனக்குவருவதான சுகம் யாதேனுமிருக்கிறதா ? இல்லையே: இப்படி நீ கொண்டிருக்கிற எண்ணத்தால் மரணந்தமாகிய பொல்லாங்குதா னுண்டாகும். அறியாமையாலே அவர்களின் பகையை நிசம்பாதபதினுல், இப்போதி

ருக்கிற செல்வத்தையுஞ் சுகத்தையும் இழந்துபோவாய் வேண்டாம். எப்போதும் நல்வழியிற் செல்லநினை. அப்போது செல்வந்தனக்குத்தானே வளரும். உன்னுடைய அபிவிர்த்தியை உள்ளநாள் வரைக்கும் உயரக்கோருபவனாகிய என் புத்தியைக்கேள். அவர்கள் யாகமொன்று செய்தார்களே யென்றால், நீயும் ஒருயாகஞ்செய். அவர்களுக்கு அரசர் கப்பங்கட்டினார்களேயென்றால், அவர்களிடத்திற் பயத்தினாற் கொடுத்தால் உன்னிடத்திற் பிரீதியினாற் கொடுப்பார்கள். சந்தேகமில்லை. சபைவேண்டு மென்றால் - அதையும் வெகு விசித்திரமாய் நிருமிக்கச்சொன்னேன்.

அடாகுழந்தாய்! இந்தப்பூமி அரசருக்கெல்லாம் பாரியை. இதை வீரியமில்லாதவன் அனுபவிக்கமாட்டான். கூரியபுத்தியுடைய வீரியசாலிக்கு நல்லபெண்டீரைப்போல் இனிப்பாயிருக்கும். நீயோவெகு வீரியமுடையவன். உனக்குப் பூமி வெகுபலன்களைக்கொடுக்கும். மேலும் உனக்கு வெகுவீரர் சகாயமாயிருக்கிறார்கள். மிகுந்த சேனைகளிருக்கின்றன. ஆனபடியினாலே இந்தப்பூமிமுழுவதும் உனக்குச்சுவாதீனமானதுதான். உன்பூமியைத்தான் சகலராஜாக்களும் ஆளுகிறார்கள். ஆகையால் உனக்குக் கப்பங்கொடாமற் போகமாட்டார்கள். உனக்கென்னகுறையிருக்கிறது? ஆனதுபற்றி நீ எல்லாவிஷயத்திலுஞ் சந்தோஷப்பட வேண்டுவதுதான். பாண்டவர்களைப்போல நீயும் உன்புஜபலத்தினாற் பூமியினின்று வெகுதனங்களைச் சம்பாதித்து, இஷ்டப்படி செலவுசெய்ய வேண்டாமென்று யார்சொல்லுகிறார்கள்? அப்படிக் கல்லாமல் அய்லாருடைய சம்பத்தைப் பார்த்துப் பொறாமைகொண்டு, அதையபகரிக்க பெத்தனப் படுவதினால்; இம்மையில் அபகீர்த்தியும்-அசவுக்கியமும் - அடைவதன்றி, மறுமையில் இழிவும் நரகமுங்கிடைக்கும். அப்பா துரியோதனா! நானுனக்கு நன்மையைச்சொல்லுவேனே யல்லது வேறு சொல்லமாட்டேன். நீயிதை நன்றாயுணர்ந்து, அயலார் செல்வத்திற் பொறாமையைத் துறந்து, உனக்குள்ளதை வளர்த்துக்கொண்டு, ஜனங்களை நியாயமாய்ப் பரிபாலனம் பண்ணி, சகல போகங்களோடு ஸ்திரீகளை யனுபவித்துக்கொண்டிரு. நீ ராஜகாரியங்களிற் செய்யவேண்டியதை விதுரன் முதலான மந்திரிகளின் யோசனைப்படி நடந்து, புஜபலத்தினால் வேண்டிய சம்பத்தைப்பெற்று, யாகமுதலாகிய தருமங்களைச் செய்து, அதில் அப்பொருள்களைச் சிலவழி. நல்லோர்களைப் பகையாதே. இப்படிசெய்வது உனக்கு மிகவும் நன்மையென்று தன் பிதாவாகிய திரிதராஷ்டிரன் சொன்னதைக் கேட்ட துரியோதனன் கொஞ்சமுஞ் சமாதானப்படாமல், அவனைநோக்கி நிந்தையோடு கூடிய பேச்சைச் சொல்ல வாரம்பித்தான்.

ஓ ராஜனே! நீர்சொல்லிய பேச்சுக்களெல்லாம் படித்தவன் விவேகமிழந்து சொல்லுஞ் சொற்களைப் போலிருக்கின்றன. இப்படிப்பட்ட பேச்சுகளை நீர் சொல்வதற்குக்காரணம் அவிவேகமோ? எங்களைமோகிப்பிக்க வேண்டுமென்னுங் கருத்தோ? எனக்கொன்றுந் தெரியவில்லை. இவ்வாறு நீர் உபதேசிக்க ஆரம்பித்ததினால், இனி நாங்களெல்லாம் நாசமடையுங்காலம் நேரிடுமென்று நினைக்கிறேன். நீர் இனிவரப்போகிறதை எவ்வளவுஞ் சிந்திக்காமலேபேசுகிறீர். உமக்குச் சுயமானபுத்தியில்லை. அன்னியருடைய் புத்தியைக்கேட்கவேண்டுகிறீர். அந்த அன்னியனோ சத்துருபக்ஷத்தி லிருக்கும் விதுரன். அவன் பேச்சைக்கேட்டு நீர் எனக்குப் புத்திசொல்லத்துணிந்தால், நாங்களெப்படி. மின்னுக்குவருவோம்? ஆனால் நான் என்ன சுத்தமூடனா, தருமங்க ளறியாதவனா, என்கிறீரா! இல்லை நீர் புத்திமான்தான். ஆனால் உம்முடைய வார்த்தை தருமவிருத்தத்தை யனுசரித்ததும், இராஜவிருத்தத்தை விரோதித்ததுமாக விருக்கிறது. பிரகஸ்பதிசெய்த நூலைப்பாரும். தருமவிருத்த மென்றும் ராஜவிருத்தமென்றும் - இரண்டு வகைப்பட்ட சரித்திரஞ் சொல்லப்பட் டிருக்கிறது. அதில் தருமவிருத்தம் வேதியர் முதலானோருக்கே யன்றி, அரசருக்கு முக்கியமல்ல. ராஜவிருத்தமே அரசருக்கு முக்கியம். ஆனபடியினாற் சத்துருவின் செல்வத்தைக்கவருவது நியாயமானாலும் அனியாயமானாலுந் தருமந்தான். எப்போ எவனைக் கொல்லவேண்டுமோ? அப்போதவனை எவ்விதத்தினாலாகிலுங் கொல்லவேண்டும். அப்படி செய்யாமற்போவது பெருங்குற்றம். சத்துருவளர்ந்து வருவதைப் பார்த்து உபேக்ஷை செய்பவன், தன்தேகத்தில் வியாதி வளர்ந்துவருவதை உபேக்ஷிப்பவன்போலாகிறான். அரசனுக்குச் சத்துருவென்பவன் யாரென்றால் - எவன் தனக்குச் சரியாயிருப்பவனோ? எவன்தனக்கு அதிகப்பட்டிருப்பவனோ? அவன்தான் சத்துரு.

இதுவன்றி அபகாரஞ்செய்தவனென்பது லோகவிருத்தமாகும். ஏனென்றால் - எல்லாரிலும் மேலாயிருப்பதைக் கோரவேண்டுவது அரசர்களின் தன்மை. அதற்கு அவ்விருவரும் விரோதிகளா யிருப்பவராதலாற் சத்துரு வென்னப்படுகிறார்கள். ஆகையினாலே அப்படிப் பட்டவர்களை எவ்வகையினாலாகிலுங் கீழ்ப்படுத்தி, அவர்செல்வங்களையாக்கிரமித்து அனுபவிக்கவேண்டும். அதுவே ராஜதருமமன்றி அதில் நியாயாநியாயங்களைச் சிந்திப்பதுதப்பிதம். எப்போதும் அரசன் செல்வத்தில் இவ்வளவு போதுமென்று திருப்தியடையக் கூடாது. மேன்மேலும் விருப்பமுடையவனாகவே இருக்கவேண்டும். சத்துருவைச் சயிப்பதில் உயுத்தமே உபாயமன்று. வஞ்சனையும் உபாயந்தான். முன்னம் இந்திரன் பிரகஸ்பதியின் நீதிகளைக்கேட்காமல் தருமப்படி நடந்து வந்தான். அப்போதவன் இராச்சியத்தை நமுசியென்னும் அசுரன் அக்கிரமித்தான். அதன்பின் பிரகஸ்பதியின் நீதியைக்கேட்டு அவ்வசுரனோடு சிலகாலம் நேசித்துச் சமாதானமாயிருந்து, பின்பு அவனைச் சமயம்பார்த்துக்கொன்று

போட்டான். இப்படி தேவேந்திரனே அரசர் நடக்க வேண்டிய நடையைத் தான் நடந்து காட்டியிருக்க, அதற்கு மாறுபாடாய் நடப்பது தருமமாகாமற் போவதுமன்றி வறுமையையுங்கொடுக்கும். சத்துரு அற்பபல முள்ளவனு யிருந்தாலும் உபேக்ஷை செய்யவொண்ணுது. அந்த உபேக்ஷயானது மரத்தின் வேரில்வைத்த புற்றைப்போல் நாசத்திற்குக் காரணமாகும். முன்னிருந்தராஜாக்களுடைய சரித்திரங்களை நன்ருய்ச் சிந்தித்துப்பாரும். எல்லாவற்றையுமறிந்தவுமக்கு இப்படிப்பட்ட புத்தியுண்டானது எங்களுடைய துர்ப்பாக்கியந்தான். எனக்கு எல்லா விதத்திலுஞ் சத்துருக்களாகிய பாண்டவர்களின் செல்வம் வளர்கிறதைப்பாாத்து, நெருப்பைமிதித்தா லெப்படியோ அப்படி துடித்துக்கொண்டு, எவ்விதமாய் அதை அபகரிப்போமென்று நீர் முயலாமல், எங்களைக் கெடுக்கத்தகுந்த பேச்சைச்சொன்னீரோ: இதுநியாயமா? இப்போதொன்று சொல்லுகிறேன் கேளும்: எதிரிகளுடைய சம்பத்தையபகரித்து அனுபவித்துக்கொண்டிருக்க வேண்டும். இல்லையாகில் அவர்களாற் கொல்லப்பட்டுச் சாகவேண்டும். இந்த இரண்டுமில்லாமல் அவர்களின் மேன்மையைச் சும்மா பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன். இது நிச்சயமென்று பிடிவாதமாய்ச் சொன்னுன்.

அப்போது சகுனி துரியோதனனைப் பார்த்து, முன் சொன்னதுபோல் மறுபடி சொல்லுகிருன்: கேளப்பா துரியோதனு! நான் சூதினுல் அவர்களுடைய செல்வத்தை யெல்லாங் கவர்ந்து கொடுக்கிறேனென்றதை நீ நம்பு. அதிலெவ்வளவுஞ் சந்தேகமில்லை. இதைவிட்டு வீணு யுத்தம்பண்ணித் தேகமெல்லாங் காயமடைய வேண்டியதில்லை. பொருள்களும் படைகளும் அழிந்து நையவேண்டுவதில்லை. சுலபமாய்ச் சூதாகிய உபாயத்தினுற் செயிக்கிற வீரன் நானிருக்கிறேன். சொக்கட்டானுட்டத்தில் ஏர்ப்படுத்துகிற பந்தயமே வில். பாச்சிகைகளை யுருட்டுவதெ அம்புகள். அக்ஷ இருதயத்தை யறிந்திருப்பதுவேசாரி. அந்தக் காய்களை வைப்பதற்காகப் பூமியில் பரப்பப்பட்டிருக்கும் ஓர் பலகையே இரதம். இதுகளை எல்லாமுடைய நானொருவீரன் யாவையுஞ் செயித்துத்தருகிறே னென்று உரைக்கக் கேட்டும், நீ வீணை ஆலோசனை யெல்லாம் ஏன் செய்கிருய்? என்று சகுனிசொல்லியதைக்கேட்ட துரியோதனன் பிதாவைப் பார்த்து, ஐயா! இந்தமாமாசகுனி சூதாடுவதில் வெகுவல்லமை யுடையவ ராதலால், அதைக் கொண்டு அவர்களைச் செயிப்பர். அப்படி செய்யும்படிக்கு நீர் அனுமதி செய்யவேண்டுமே யல்லது. மற்றென்றும் யொசிக்க வேண்டாம். ஐயோ! ஒருவனுக்கு எவனாலுனும் மேன்மை கிடைக்கிறவழி யொன்றிருந்தால், அதையங்கீகரிக்காம லிருக்கலாமா? இதை ஏன் சிறிதும் நீர்யோசிக்கவில்லையென்று சொல்லக்கேட்ட திரிதராஷ்டிரன் சொல்லுகிருன்: அடா துரியோதனு! நீ யெனக்கு மூத்தபிள்ளை. மேலும் எனக்கு எல்லாரிலும் நீமகா பிரியமாகியவன். ஆனபடியினுலே உனக்கு நன்மையைச் சிந்திப்பேனே யல்லது, விரோதத்தைச் சிந்திக்கமாட்டேன். அன்றியும் நான் ஒருவர் பேச்சையுங்கேளேன். ஆனுல் விதுரனுடைய பேச்சை மாத்திரம் முக்கியமாய்க் கேட்பேன். ஏனென்ருல்-அவன் எனக்குத்தம்பி. சகலதருமங்களுந் தெரிந்தவன். தருமவிருத்தம் - லோகவிருத்தம் - ராஜவிருத்தம் - என்கிறயாவும் அவனுக்கேதெரியும். பக்ஷபாத மில்லாமற் பேசுகிறவன். உள்ளும் புறமுமொத்து நடக்கிறவன். ஆனபடியினுலே என்னகாரியமிருந்தாலும் அவனேடுசொல்லுவேன். அதற்கவன் எப்படிசொல்லுவனே? அப்படியே நடப்பேன். அவன் வார்த்தைக்குமாறுபாடாய் நடக்கமாட்டேன். நீ யிப்போது சொல்லுகிற இந்தக் காரியத்தைக்குறித்து அவன் சொல்லுகிறபடியே நடக்கவேண்டுமே யல்லது, உன் சொற்படி நடக்க எனக்கிஷ்டமில்லையென்று சொல்ல, அதைக் கேட்ட முடிவில்லாத அசூயையையுடைய துரியோதனன் சொல்லுகிருன்:

வாரீர் மகாராஜாவே! ஸ்ரீவேதவியாசரைப்போலவும், ஸ்ரீகிருஷ்ணனைப்போலவும், விதுரரும் புத்திமான்தான். ஆனுலும் இந்தச்சங்கதியை அவரோடு நீர் சொல்லுவீரேயாகில், அவர் ஒரு போதுஞ் சம்மதிப்படப் போகிறதில்லை. தருமத்திற்கிசைந்த பேச்சையே சொல்லுவார். அதுராஜதந்திரத்திற் கிசையாது. ஆனதுபற்றி நீர் சொந்த ஆலோசனையினுல் இந்தக் காரியத்தை நடத்தவேண்டுமே யல்லது, ஒருவருடைய யோசனையைக்கேட்டு நடத்தக் கூடாது. நமது மனதின்படி இசையத்தக்கவனெருவனிருந்தால்அவனேடு சொல்லலாம். விதுரர் நம்மிஷ்டப்படிக்கு இசையமாட்டார். லோகத்தில் ஒருவன் சித்தம்போல் மற்றொருவனுக் கிராது. அன்றியும் விதுரருக்குப் பாண்டவர்களிடத்திற் பிரீதி அதிகமா யிருக்கிறது. எங்களிடத்தி லப்படிக்கு இல்லை. ஆனபடியினுல் இதற்கவர் சம்மதிக்கப் போகிறதில்லை. நிச்சயந்தான். ஒருபுருஷனுக்கு நன்மை எந்த உபாயத்தினுல் வருமோ? அதைக்குறித்து விரோதஞ் செய்பவனிடத்தில் ஆலோசிக்கவுங்கூடாது. அவனுக்குத் தெரிவிக்கவுங்கூடாது. அப்படியன்றி ஒருவன் சம்மதிவேண்டுமென்று காத்திருந்தால், அதற்குள்ளாக வியாதியும்-இயமனும்-மேலிட்டுவந்து, இவனை இழுத்துக்கொண்டு போகும்படியான காலம் நேரிட்டுவிடும். ஆகையாற் சம்பாதித் தனுபவிக்கவேண்டும் பொருள்களைச் சமயம்வாய்த்தபோது பால்மாருமற் சம்பாதித் தனுபவிப்பவனே புத்திசாலி. நீர் விதுரருடைய சம்மதியை எதிர்பார்த்தால், அதற்குள்ளே நம்முடைய வாழ்நாள் வீணே வழுவி விடும்போ லிருக்குதென்று சொன்னுன். அவையனைத்தையுங்கேட்ட பிதாவானவன் புத்திரனைப்பார்த்துச்சொல்லுகிருன்: அப்பா மகனே! உனக்கு பலவான்களாகிய பிராதாக்களோடு

ஒருநாளும் விரோதம் வேண்டாமடா. அது மிகுந்த
கேட்டுக்குக் காரணமாகுமடா. அப்படிப்பட்ட தீமை
யாகிய காரியத்தை நீநல்லதாக நினைக்கிறாயே: விஷம்
பார்வைக்குச் சலம்போற் குளிர்ந்திருக்கும். அது
ஒன்றைப் பற்றிக்கொள்ளுமானாற் பிரமாதத்திற்கிடம்
பண்ணுமே: தீர்க்க ஆலோசனைசெய்து பாராடாமக
னே! நீ செய்கிற அனர்த்தம் வெகுபேர்களைக் கெடுக்
கும்போ லிருக்கிறதே: கடைசியில் அது ஆயுதங்களு
க்குப் பிராணனை இரையாகக்கொடுக்குமே: ஆனபடி
யினாலே அந்தக்கருத்தை அகத்திற்கொள்ளாது விட்
டுவிடடா என்னருமைச்செல்வனே: என்று சொன்ன
தந்தையை மறுத்துப் பின்னுமவன் மனஞ்சம்மதிக்
கும்படி துரியோதனன் சொல்லுகிறான்:

கேளீர் பிதாவே! உமக்கு ஏன் மிகுந்த பயம்பி
டித்திருக்கிறது? சூதாடவேண்டுமென்றால் நீ ரதற்
கேன் விரோதஞ் சொல்லுகிறீர்? லோகத்திற் சூதெ
ன்பது ஏன் உண்டாயிருக்கிறது?நம்போலிகள்வேடிக்
கையாய்ப் பொழுதைப் போக்குகிறதற்கன்றோ பெரி
யோர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்? அதை மு
ன்னோர்களில் வெகுபேர்கள் ஆடினார்களே: அதனா
லே யாருக்கென்ன கேடுவந்தது? இக்காலத்திலும்
அனேகராடுகின்றார்கள். அவர்களுக்குள்ளே தான் ஏ
தாகிலும் விரோதமிருக்கிறதா? அதுவென்ன ஆயு
தங்களைக்கையிலெடுத்துக்கொண்டு சண்டைபோடுகி
றவியாபாரமா?வேடிக்கையான ஆட்டம். ஆனால்அதி
ற் சிலருக்குப் பொருட்சேதம்வரும். சிலருக்குப்பொ
ருள்விருத்தியாகும். அப்படி நமக்குப்பொருள் கொ
ஞ்சம்போனால்தானென்ன லக்ஷியமா? சாதாரணமா
கிய பேர்களுக்கன்றோ அது லக்ஷயம். அப்படிக்கு எ
னக்கு ஒருக்காலுந் தோற்புவராது. ஏனென்றால் எ
ன்னுடைய அம்மானாகிய இச்சகுனியின் உதவியிருக்
கிறது. இவருடைய சாமர்த்திய மெப்படிப் பட்ட
தென்றால் - எதைமனதி லுத்தேசித்துப் பாச்சிகை
யை யுருட்டுகிறாரோ? அந்தப் பந்தயம்விழும். ஆன
படியினாலே பாண்டவர்களை இராச்சியத்தைப் பந்தய
மாய்வைக்கச்செய்து உபாயமாய் அபகரிக்கிறேன்.
இதுவேயன்றி சண்டைபோடுகிறதில்லை. அண்ணலே!
வினாவில் என்னபிப்பிராயப்படிசெய்ய அனுமதி பண்
ணுமென்று சொல்லியமகனைப்பார்த்து வெகுவெறுப்
புடனே திரிதராஷ்டிரன் சொல்லுகிறான்: மகனே!
உனக்குச் சுயபுத்தியுமில்லை. ஒருவர் சொன்னாலுங்
கேட்கிறதில்லை. ஒரேபிடிவாதஞ் செய்கிறாய். இதன்
பிரயோசனம் உனக்குப் பிற்காலத்தில் தெரியப்போ
கிறது. அப்போ தவிக்கப்போகிறாய். உன்னாலே இப்
படிப்பட்ட அனர்த்தம் விளையுமென்று தீர்க்க தரிசி
யாகிய விதுரன் வெகுநாட்களுக்கு முன்னே சொல்
லியிருக்கிறான், அதுசரியாய் வந்தது. போ: போ:
உன்னிஷ்டம். என்னசொல்லியும் உன் துர்க்குணத்
தைச் சிறிதும்விடாவிட்டால் அதற்குநான்யாதுசெய்
வேன்?தெய்வச்செயல் யாராலேதடுக்கக்கூடுமோனது?
நடக்கவேண்டியது நடந்தேதீருமென்று நினைத்து வி
சனமடைந்து, சபையைச் செவ்வையாய் நிருமாணம்
பண்ணும்படிக்குத் திட்டஞ்செய்து, விதுரனை அழை
த்துவரும்படி தூதரை யனுப்பினான். மந்திரிகள் சிற்
பிகள் இவர்களெல்லாஞ் சபையை நன்றாய்நிருமித்து
அச்சேதி தெரிவித்தார்கள். அந்த விதுரனுந் தூதன்
பேச்சைக் கேட்டவுடனே அரண்மனைக்குவந்து, இ
ராஜாவைப்பணிந்து உட்கார்ந்தான். அவனைப்பார்த்
துக் குருட்டரசன் சொல்லுகிறான்.

திரிதராஷ்டிரன் விதுரனைக்கொண்டு பாண்டவரை யழைப்பித்தல்.

தம்பீ! இப்போதே இந்திரப் பிரஸ்தத்திற்குப்
போய் இந்நகரியில் நாம் புதியசபையொன்று நிருமா
ணம் பண்ணியிருக்கிறோமே இதைப் பார்ப்பதற்கும்,
இதிற் பிராதாக்களாகிய துரியோதனாதிகளோடு வி
ளையாடுகிறதற்கும், சகலபரிவாரங்களுடனே இவ்வி
டத்திற்குவரும்படி நான்சொல்லியதாகச் சொல்லிப்
பாண்டவர்களைச்சீக்கிரம் அழைத்துக்கொண்டுவாவெ
ன்று திருமுகமெழுதிக் கொடுத்தான். அதுகேட்ட
விதுரன் சொல்லுகிறான்: ஓ மகாராஜாவே! இவ்வுலக
த்தில் ஒருவனுக்குப் பின்னே கேடுவருவதா யிருந்
தால் முன்னே புத்தி கெடுமென்று பெரியோர்கள்
சொல்லியிருக்கிற வாக்கியப்படி, இப்போதுஉமக்குப்
புத்திகெட்டிருக்கின்றது. அதனாலேதான் இப்படிக்
குச் சொன்னீர். உமதுவார்த்தையைக் கேட்டதினால்
எனக்கு மிகுந்த விசன முண்டாகிறது. அவர்களை
நீர் மனமறிய மோசஞ்செய்வதற்கன்றோ அழைத்து
வரச் சொல்லுகிறீர்? இதை உமதுமனம் ஒப்புக்கொ
ண்டதற்கு ஆச்சரியப்படுகிறேன். இப்படி நீர் வஞ்ச
னைசெய்வதினால் அவர்களுக் கொருகுறைவுமுண்டா
கிறதில்லை, உமக்குத்தான் குலநாசம்வரப்போகிறது.
இதற்கு எள்ளத்தனையுஞ் சந்தேகமில்லை. ஏனென்
றால் - அவர்களுடைய செல்வத்தைப்பார்த்துப் பொ
றாமைகொண்ட உமதுபுத்திரன் அச்செல்வங்களையெ
ல்லாம் அபகரிக்கிறதற்காக மோசமாய்ச் சூதாட யத்
தினப்பட்டிருக்கிறான். ஆனபடியினாலேஅவர்களுக்கு
ம் உமது புத்திரருக்கும் வெகுவிரோதம்உண்டாகும்.
அவர்கள் பலவான்க ளானபடியினாலே பலஹீனரான
உம்முடைய பிள்ளைகளைப் பரிஷ்காரமாய்க் கொல்லு
வார்கள். இது இப்போதில்லாவிட்டாலுங் கொஞ்சங்
காலங்கழித்தாவது நடக்கும். அப்பால் நீர் புத்திர
சோகத்தில் விழ்ந்து தவிப்பீர். ஆகையாலே இந்த
யோசனையைவிட்டுவிடும்க்ஷேமப்படலாம். என்றுசொ
ல்லியதைத் திரிதராஷ்டிரன்கேட்டுச்சொல்லுகிறான்:

ஓ என்தம்பீ விதுரா! நாம்சூதாடும்படி நியமிக்
கின்றோமேயன்றி, யுத்தஞ்செய்ய நியமிக்கவில்லை. அப்

படியிருக்கக் கலகமெப்படிவரும் ? நாமும் வீஷ்மர் முதலானபேர்களும் பக்கத்திலேயே இருப்போமன்றோ ? ஆனபடியினாலே வித்தியாசம் ஒன்றும் வாராமற் பார்த்துக்கொள்ளுவோமே யல்லது கலகம் வரப்பார்ப்போமா ? தெய்வம் நமக்கு அனுகூலமா யிருக்கிறபக்ஷத்தில், ஒருகேடும் வரப்போகிறதில்லை. அது பிரதிகூலமா யிருக்கிற பக்ஷத்தில், வரவேண்டியகேட்டை மறுக்கக் கூடுமோ ? பிரமன்முதற் பிபீலிகை வரையிலுள்ள சகல ஜீவாத்மாக்களுக்கும் உண்டான சுகதுக்காதிகளனைத்துந் தெய்வத்தின் வசத்தி லிருக்கிறதே யல்லது நமது சுதந்தரமல்லவே: ஆனபடியினாலே என்பேச்சை மறுக்காமற்போய், உதிஷ்டிரனை அழைத்துவாவென்றுசொன்னான்கண்ணில்லாவரசன் இப்படிசொல்லியதைக்கேட்ட விதுரன் தெய்வத்தின் செயலைத் தடுப்பது கூடாதென்றுநினைத்து, மனதிற் சந்துஷ்டியில்லாமல் ரதமேறிக் கொண்டு, இந்திரப்பிரஸ்தத்திற்குப்போய் அவ்விடத்தி லிருக்கிற பேர்களாலே தகுந்தபடி பூசிக்கப்பட்டு, குபேரனுடைய மனைக்குச் சமானமாகிய உதிஷ்டிரருடைய அரண்மனைக்குச் சென்றான். இவன்வந்தசேதி தெரிந்தமாத்திரத்திலே உதிஷ்டிரர் எதிர்கொண்டுவந்து அழைத்துப்போய் தகுந்தமரியாதை செய்து, அர்க்கியபாத்திய ஆசமனீய மதுபர்க்கங்கள் கொடுத்து வினவுகிறார்: ஐயா விதுரரே ! உம்மைப்பார்க்குமளவில் விசனமுற்றவரைப்போற் காணப்படுகிறது. அப்படி காணப்படுவதற்கு முகாந்தரம் என்னகாரணமோ தெரியவில்லை. மூப்பராகிய நமதுபிதாவும் அவருடைய புத்திரரும் க்ஷேமமா யிருக்கிறார்களா ? அவர்களெல்லாம் பிதாவுக்கு அனுகூலமாயிருக்கிறார்களா ? நீர் அவர்களால் தீங்கில்லாமல் வந்தீரா ? ஆயினும் நீர் சந்தோஷமாயிராதகாரணஞ் சொல்ல வேண்டுமென்று கேட்க, விதுரன் சொல்லுகிறான்:

கேளும் உதிஷ்டிரமகாராஜனே ! உமது பிதாவாகியும் ஞானக்கண்ணை யுடையவராகியு மிராநின்ற திரிதராஷ்டிர மகாராஜாவும், அவருடைய சகலபந்துக்களும் க்ஷேமமாயிருக்கிறார்கள். அவருடைய குமாரர்களும் அவருக்குப் பணிவிடைசெய்து வருகிறார்கள். அந்தமூப்பராகிய ராஜா உம்முடைய க்ஷேமத்தை விசாரிக்கும்படியாகவும், தாம் உமதுசபைக்கு நிகராய் நிருமித்திருக்கிற புதியசபையை நீங்கள்கண்ணினாற் பார்த்துக் களித்து அதில் இஷ்டர்களோடு சூதாடவேண்டுவதற்காகவும், உம்மை அழைத்து வரும்படியாக எனக்குநியமித்தார். மேலும் அப்படிக்கு நீர் வருறற்போது, தம்பிமார்களோடும் - பாரியைகளோடும் - மற்றுஞ் சகல பந்துக்களோடும் - அச்சபைக்கு வரவேண்டுமென்று தமக்கு வெகுஆசையிருக்கிறதென்றுஞ் சொல்லச்சொன்னார். இப்போது அந்தச்சபையிலே சகலமானபேரும் வந்திருக்கிறார்கள். சூதாடுகிற அனேகருஞ் சித்தமா யிருக்கிறார்கள். நீர் வரவேண்டுவ தொன்றுதான்குறை. இந்தப் படிக்கு அவர்சொல்லி ஆக்கியபித்த வண்ணஞ் சொன்னேன். அப்பால் உமது சித்தப்படியே நடவும். என்று கூறக்கேட்ட உதிஷ்டிரர் சொல்லுகிறார்: ஓ விதுரரே ! சூதாடுவதற்காக என்னை ராஜாவரும்படி கட்டளையிட்டாரே, அப்படியே நான் அவிடம்வந்து சூதாடுவேனாகில் நமக்கும் அவர்களுக்கும் மிகுந்தகலகம் நேரிடுமன்றோ ? ஆனபடியினாலே அப்படிப்பட்ட காரியத்தை நானெப்படியங்கீகரிப்பேன் ? நல்லது உமக்குச் சம்மதியாகில் அப்படி செய்கிறேன், எப்போதும் நீர் சொல்வதைக்கேட்டு நடக்க எனக்கு மனத்திருப்தியா யிருக்கின்றது. ஆனபடியினாலே நீர் சொல்லுமென்ன அதற்கு விதுரன் கூறுகிறான்.

ஓ உதிஷ்டிரரே !. சூது எல்லாப் பொல்லாங்குகளுக்கும் மூலகாரணமென்று யோசித்துத்தான், இம்முயற்சி வெண்டாமென்று நான் மகாராஜாவுக்கு வெகுவாய்ச்சொன்னேன். அவர்கேளாமல் உம்மையழைத்துவரும்படி. கட்டளையிட்டார். நீர் சகலமுந்தெரிந்தவரானபடியினாலே எப்படி நடப்பது நன்மையோ அப்படி நடக்கலாமென்று கூறியதைக்கேட்டு, உதிஷ்டிரர்- ஓவிதுரரே!அச்சபையிற் சூதாட்டத்தில்வல்லமையுடையவர்கள் யாராரிருக்கிறார்கள் ? என்னோடு கூட யாவராடப்போகிறார்கள்? இந்தச்சங்கதிசொல்ல வேண்டுமென்னவே விதுரன்சொல்லுகிறான்: அந்தச்சபையிற் காந்தாரதேசத்துராஜனாகிய சகுனியிருக்கிறான். அவனோ? தனக்குவேண்டிய விருத்தம் போட வல்லவன். அவனுக்குச்சரியாய்ச்சூதாட வல்லவர் ஒருவருமில்லை. இவன்தான் தலைவன். அன்றியும் விவிம்சதி - சித்திரசேனன் - சத்தியவிருதன்—புருமித்திரன் ஜயன்-இவ்வைவருமிருக்கிறார்கள். இவர்களுஞ்சூதில் வல்லவர்கள். இவ்வறுவரையன்றி மற்றெல்லோரும் வேடிக்கை பார்க்கவந்திருக்கிறவர்கள். என்றுகூறக்கேட்ட உதிஷ்டிரர் விதுரனைப்பார்த்து, ஐயா!அவர்களெல்லாம் வெகுமாயாவிகள். கபடமாய்ச்சூதாடிமோசஞ் செய்கிறவர்கள். அவர்களுடனே சூதாடல்மிகவும் அயோக்கியமாகியகாரியம். ஆனாலும்அதைக்குறித்து எனக்குத் தோற்றுகிற தென்னவென்றால் - திரிதராஷ்டிரமகாராஜா பெரியபிதாவாகையால் எனக்குக்கேட்டை நினைக்கமாட்டாரன்றோ ? அவரே யிச்சூதாடும்படி இட்டகட்டளையை மீறிநடப்பது நன்மையல்லவே: ஆனபடியினால்வருகிறேன். சூதுமாடுகிறேன். ஆனாற் சகுனியோடேயாடச் சம்மதியில்லை. ஆகிலும் ஆடவென்றழைத்தால் மாட்டேனென்றுசொல்லவல்லவனல்லேன். அப்படி யெனக்கு விரதம். வரவேண்டியது வழியிற்றடைபடாதாகையால் அதனாலென்ன வந்தாலுஞ் சரிதானென்றுசொல்லித் தமது சேவகர்களைநோக்கி, அஸ்தினாபுரிக்குப் போக வேண்டுவதற்காக வாகனங்களும் - சேனைகளும்-சன்னாகப்படுத்துங்களென்று கட்டளையிட்டார். அவர்களும் - அப்படி

யே சகலசேனா பரிவாரங்களைச் சன்னாகப்படுத்தி, இரதங்களையுங் கொண்டுவந்து நிறுத்தித் தருமராஜாவுக்குத் தெரிவித்தார்கள்.

பாண்டவர் அஸ்தினாபுரம்வருதல்.

பின்பு தருமபுத்திரர் புரோகிதனை முன்னிட்டு வேதியர்களைப்பணிந்து ஆசீர்வதிக்கப்பெற்று, திவ்வியமாகிய கவசகிரீடகுண்டல கேயூரஹார முதலாகிய ஆபரணங்களைப் பூண்டு புறப்பட்டு, அரண்மனை வாசலில்வந்து, இராஜசூயத்திற் பாக்லிகதேச ராஜாகொடுத்த ஒப்பற்ற அனேகவித அலங்காரங்களாலே விளங்காநின்ற இரதத்தின்மேலேறி, கங்கையின்பிரவாகம் போன்ற வெண்சாமரை யிருபுறங்களில் வீசவும், எதிரிற் பதினெண்வாத்தியங்கள் முழங்கவும், ஆலவட்டங்கள்-பதாகைகள்-மகரதோரணங்கள்- முதலான விருதுகள் முன்னும்பின்னும் விளங்கவும், வந்தியர் துதிக்கவும், வானவர் விருதுகூறவும், நால்வகைச்சேனைகள் படைசூழ்ந்துவரவும், அனேகவீரர் ஆயுதங்களையேந்திச் சுற்றிலுங்காத்துவரவும், முன்புறத் தேரின்மீதில் வீமசேனனும் பின்புறத்தேரின்மீதில் அர்ச்சுனனும் இருபார்சுவங்களிலுள்ள இரண்டுதேரின்மீதில் நகுலசகாதேவர்களுமாகவிருந்து நாற்புறத்துங் காப்பாய்வரவும், இவ்வகையாய் மகாவிபத்துடனே புறப்பட்டார். திரௌபதி முதலாகிய மாதர்கள் சிவிகைகளிலேறி, அனேகங் குதிரைவீரர்கள் சூழ்ந்துவரப் புறப்பட்டார்கள். இப்படி தேவேந்திரன் சகலதேவர்களாலுஞ் சூழப்பட்டு ஐராவதத்திலேறிப் புறப்படுவதுபோற் பாண்டவராஜன் சகலபரிவாரங்களோடும் புறப்பட்டு, வழிகளிலுள்ள நதிகளையுங் காடுகளையும் மலைகளையுந்தாண்டி அஸ்தினாபுரிக்குச் சமீபத்தில்வந்து சமபூமியாய் ஜலசவுக்கியமுதலிய சகலவளங்களுமமைந்த வோரிடத்திற் சேனைகளை யிறக்கி, அன்று அங்கேயேவாசஞ்செய்தார். அப்போது விதுரன் இவருடைய சற்குணங்களை நினைத்துவெகு ஆனந்தமடைந்து, ஐயோ! இப்படிக்குக் கபடில்லாமற் பிதாவின் ஆணையென்று வராநின்ற சுகுணநிதியாகிய இவரைவஞ்சிக்கக் குருட்டரசன் அழைக்கின்றானே: இது என்ன அனியாயமென்று மனஸ்தாபப்பட்டு, உதிஷ்டிரரோடு துரியோதனன் பொறாமைப்பட்டதும், திரிதராஷ்டிரன் அவனுக்காகச் சகுனியைக்கொண்டு சூதாடுவித்துச் செல்வங்களைக் கவர யத்தினப்பட்டிருக்கிறதும், ஆகிய எல்லாச் சங்கதிகளையு நன்றாய்ச் சொன்னான்.

அதுகேட்ட தருமபுத்திரர் விசனங்களை யடக்கிக்கொண்டு விதுரனைநோக்கி, ஐயாவிதுரரே! இவ்வளவு கபடத்தை மனதில்வைத்து இராஜா யென்னை அழைப்பித்தாரன்றோ? ஆனாலும் நான் விசனப்படவில்லை: ஏனென்றால்-லோகத்திலே அவனவன் கருத்து வெவ்வேறாக இருக்கிறது. அதற்குத்தக்கபடி யவனவன் செய்கிறான். நமக்குத்தோற்றினபடி நாமுஞ் செய்யலாமே: நம்மை இராஜா வரவேண்டுமென்று அழைக்கமாட்டுவரோ யன்றி, வலிமையிலொன்றுஞ் செய்யமாட்டாரோ: அவரழைத்தபடி நான்வாராமற்போனாலும், வந்து சூதாடாமற்போனாலும், அவர்களுடைய எண்ணம் வீணாகுமன்றோ? இவ்வளவுதானே யிருக்கிறது. ஆகையால் இது ஒருயோசனையா? ஆனால் ஒன்றிருக்கிறது. சூதாட வழைத்தால் வரமாட்டேனென்று சொல்லக்கூடாத விரதமொன்று எனக்கிருக்கிறது. அதனாலேதான் வந்தேன். இல்லாவிட்டால் தீமையை விளைவிக்கும்படியாகிய சூதாடுதற்கு நான் வரமாட்டேன். இனி யாடித்தான் தீரவேண்டும். அதில் நன்மைவந்தாலும் - சரி: தீமைவந்தாலும் - சரி: தெய்வச்செயலன்றோ பெரிது? நாம்செய்வதென்ன? ஆனால் ஜனங்களுக்கும்-பிராமணருக்கும்-கோக்களுக்கும் - மங்களமுண்டாக வேண்டுமென்பது மாத்திரந்தான் நம்மால் கோரத்தக்கது. என்றுசொல்லி மறுநாட்காலையிற் சேனாசன்னாகங்களுடனே புறப்பட்டுப் போகையில் விதுரனைப்பார்த்து, ஐயா! சூரியன் தன்னைப் பார்ப்பவர்களின் கண்ணைப் பழுதுறச்செய்வதுபோல், தெய்வமானது சங்கடம்வரவேண்டிய காலத்தில் மனிதனுடைய புத்தியையழிக்கும். யாவும் எல்லாவகைகளினாலுந் தெய்வத்தின் வசத்தி லிருக்கின்றனவே யன்றி, நம்முடைய வசத்திலும் நம்முடைய சுதந்திரத்திலும் ஒன்றுமில்லை.

ஆனபடியினாலே இப்போதெனக்குச் சூதாடும்படி நேரிட்டது தெய்வச்செயலென் றெண்ணுகிறேன். ஏனென்றால்-சூதாடலினால் வருவது கேடென்றறிந்திருந்தும் அதை விலக்குவோமென்றால், தந்தைசொல்லைத் தடுப்பது அதினும் பெருங்கேடா யிருக்கின்றது. நானென்னசெய்வேன்? வருவதை யனுபவிக்கிறேனென்று சொல்லிக்கொண்டே யாவருஞ் சூழ்ந்துவர நகரத்திற்சென்று, அரண்மனைக்குட்போய் திரிதராஷ்டிரன்- வீஷ்மர் - துரோணர் - கிருபர் - அசுவத்தாமா - சோமதத்தன் - காந்தாரி - முதலியபெரியோர்களைக்கண்டு தண்டனிட்டு, அவர்களாலாசீர்வதிக்கப்பட்டு, துரியோதனன் முதலானோரையுங்கண்டு யோகக்ஷேமங்களை விசாரித்து, மற்ற யாரையாரை யெப்படி மரியாதை செய்யவேண்டுமோ? அப்படி மரியாதை செய்து, அவரவர்களாலுந் தக்கபடி பூசிக்கப்பட்டார். வீமசேனன் முதலாயினோரும் அப்படியே பெரியோர்களைப்பணிந்து ஆசீர்வதிக்கப்பட்டு, மற்றப்பேர்களையுந் தகுந்தபடி யுபசரித்தார்கள். திரௌபதியும் மாமனார்மாமியார் முதலானோரைப் பணிந்து ஆசீர்வாதம் பெற்றுத் துரியோதனன் முதலானோருடைய மனைவிகளைக்கண்டு குசலத்தை வினவினாள். அவர்கள் இவளுடைய செல்வப்பெருக்கைப்பார்த்துப் பொறாமைப்பட்டார்கள். பின்பு பாண்டவர்கள் தமது பத்தினிக

ளோடுகூட திவ்வியமாகிய ஒரு மனையிற்சென்று, இராஜாவின் அனுமதிப்படிக்கு ஸ்நான முதலானவை நிறைவேற்றி, எல்லாப் பந்துக்களோடுங்கூட விநோதமாகிய அன்னத்தைப்புசித்து, சந்தனமுதலிய சுகந்தங்களைப்பூசி வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்து இராத்திரியில் வீணைமுதலான வெகு இனியவாத்தியங்கள் பாடக்கேட்டுக்களித்துச் சயனித்திருந்தார்கள்.

தருமராஜனோடு துரியோதனனும் சகுனியும் சூதாட்டவாலோசித்தல்.

உதிஷ்டிரர் தம்பிமாரோடு பொழுதுவிடிந்தவுடனே எழுந்திருந்து, நித்தியானுஷ்டானங்களை யெல்லாம் நிறைவேற்றித் திரிதராஷ்டிரனைவந்துபணிந்து, அவனுடைய உத்தரவின்படி. சபைக்குப் போனார். அங்கே மோசஞ்செய்வதற்காகச் சகுனியுடன்சித்தமாயிருக்குந் துரியோதனனனவன் உதிஷ்டிரரைப்பார்த்துச் சொல்லுகிறான். ஓ அண்ணா உதிஷ்டிரமகாராஜனே! இச்சபையைப்பாரும். இதில் நம்முடைய இஷ்டர்களெல்லாரும் வந்து சேர்ந்திருக்கிறார்கள். நீரும் வந்து சேர்ந்தீர். இனியொரு குறைவுமில்லை. ஆனால் எனக்கொரு கருத்திருக்கிறது. அதென்னவென்றால் இஷ்டர்களெல்லாஞ் சேர்ந்திருக்கிறபடியினாலே நாம் போஜனத்திற்குப் போகுமளவும் போதுபோகவேண்டியதாகையால், கள்ளங்கபடு சூதுவாதுகளி லொன்றுமறியாத மனத்தினையுடைய எனது மாமனும் நீருமாகச் சொக்கட்டானாடவேண்டு மென்பது தான். இதை நீர் நிறைவேற்றவேண்டும். ஆனால் அதிலொன்றிருக்கிறது. அதாவது - ஆடவேண்டிய ஆட்டம் இன்ன யின்னபடிக்கென்றும் அவ்வாட்டத்திற் பந்தயம் வைப்பது இன்னயின்னதை என்றும், ஓர்கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கவேண்டும். ஆகையால் இதைக் குறித்து நீர் சொல்லுமென்று சொல்லியதைக்கேட்ட உதிஷ்டிரர் சொல்லுகிறார்: கேளுந்தம்பி துரியோதனா! சூதாடுவதேகுற்றம். அதிலும் வஞ்சனையா யாடுவது பெருங்குற்றம். க்ஷத்திரியர் ஒருவரையொருவர்வெல்லுவது பராக்கிரமத்தாலே யன்றிச் சூதினால் வெல்லுவது தருமமன்று. இராஜநீதியுஞ் சூதை விலக்கியிருக்கின்றது. இப்படிக்கு எல்லாச் சாஸ்திரங்களாலும் விளக்கப்பட்டு பாவத்திற்கும் பழிக்குங் காரணமாகிய அச்சூதாடலை விருதாவாய் துதிக்கிறாய். பெரியோர்கள் எவ்வளவுஞ் சம்மதிக்கமாட்டார்கள். ஆனபடியினாலே. எனக்குஞ் சம்மதியில்லை. நல்லது சும்மா வேடிக்கையா யாடுவோமென்றால், நீங்கள் வஞ்சனையாயாடுகிறபேர்கள். அப்படிக்கு என்னை வஞ்சிப்பது உங்களுக்கு நியாயமன்று. என்று சொல்லியதைக்கேட்ட சகுனியானவன் தருமராஜனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ உதிஷ்டிரரே! லோகத்திற் சிநேகிதனால் லாபம் நேரிட்டாலும் - நஷ்டம் நேரிட்டாலும் - சினேகத்தைப் பரிபாலனஞ் செய்யவேண்டுமேயல்லது, லாபநஷ்டங்களைப் பார்க்கலாகாது. அப்படிப்பட்ட நேசமுடையவர்கள் தான் ஒருத்தரோ டொருத்தர் சூதாடலாம். இப்போது நீருரைப்பதைப் பார்த்தால் எங்களை மோசக்காரரென்று நினைத்து, இவர்களோடு ஆடினால் நாம் ஏமாறுவோம்: அதனாற் பொருள் சில வழிந்து போகும். என்று பயப்படுகிறதாய்க் காண்கிறது. அப்படிப்பயமிருந்தால் நீ ராடவேண்டாம். ஆடவந்தால் சரியாய் ஆடித்தீரவேண்டும். அதிற் பந்தயம் வைக்காமற் சும்மா ஆடுவது நன்மையல்ல. ஆடுமளவில் தோற்பும்-ஜெயிப்பும்-ஒருவன்பங்கல்ல. இருவருக்கு மிரண்டும் நேரிடும். அதில் உமக்குத் தயிரியமிருந்தால் ஆடவாரும். இல்லாவிட்டால் வேண்டாமென்று சொன்னான். அதுகேட்ட தருமபுத்திரர் - ஓ சகுனிராஜனே! உனக்கொன்று சொல்லுகிறேன் கேள்: முன்பு அசிதரும் - தேவலரும் சொல்லியிருக்கிற தென்னவென்றால், க்ஷத்திரியனுக்குச் சுவர்க்கத்தில் ஒருவாசலுண்டு. அஃதெதுவெனில், தருமமாய் யுத்தம் பண்ணிச் சம்பாதித்து ராச்சியத்தைச் சத்தியத்துடன் ஆள்வதுதான். அப்படியே நரகத்திலும் ஒரு வாசலுண்டு. அதாவது, வஞ்சனைசெய்து எதிரியின் ராச்சியத்தை அபகரித்துத் தருமவிரோதமாய் அதையாள்வதுதான். அன்றியும் க்ஷத்திரியன் தருமயுத்தஞ் செய்து ஜயித்தாற் சுகமுண்டு. செத்தாலுஞ் சுவர்க்கமுண்டு. கபடத்தினால் யுத்தஞ்செய்து ஜயித்தாற் பழியுண்டாவதன்றிச் செத்தாலும் நரகம். சூதாடுவது மிகவுங் கெட்டசெய்கை. அதனால் நரகமுண்டு. என்றிப்படி அந்தப்பெரியோர்கள்சொல்லியிருக்கிறார்கள். ஆனபடியினாலே நமக்குள்ளமட்டும் ராச்சியத்தைத் தருமமாய்ப் பரிபாலனஞ்செய்து பிராமணரைக் காக்கவேண்டும். இவ்வளவுதான் என்னிஷ்டம். இதுவேயன்றி அநியாயமாய் ஒரு லாபத்தையும் நானிச்சிக்கமாட்டேன். இப்படிப்பட்ட என்னோடு நீ வஞ்சனையாய்ச் சூதாடவேண்டாம். எனக்கு வஞ்சனையாயாடத் தெரியாது. அப்படி வஞ்சனையாய்ச் சூதாடி எதிரியின் இராச்சியசம்பத்து முதலானதுகளைக் கிரகிக்க எனக்கு மனதில்லை. என்றுரைத்ததைக்கேட்ட சகுனியானவன் சொல்லுகிறான்.

ஓய் ராஜாவே! உலகத்தில் யோக்கியன் அயோக்கியனோடு விவாதஞ்செய்ய வில்லையா? வித்துவான் மூடனோடு தருக்கிக்கவில்லையா? அப்படியே நன்றாய்ச் சூதாடத்தெரிந்தவன் ஆடத் தெரியாதவனோடும் ஆடுவான். பந்தயங்களையுஞ் செயிப்பான். சந்தோஷமும் படுவான். அதை வஞ்சனையென்று சொல்லலாமா? இருவர்சேர்ந்து ஒருகாரியஞ் செய்யுமளவில், ஒருவன் சமர்த்தனாயிருப்பான். ஒருவன் கொஞ்சந்தாழ்ந்தவனாயிருப்பான். அதனாலே ஒருவனையொருவன் வஞ்சனை செய்தானென்று யார்சொல்லுவார்கள்? அப்படித்தான் நீரும் நானுஞ் சூதாடினால் அதில்வஞ்ச

தர்மர்சூதாடல்.

REGISTERED-COPY-RIGHT.

சபாபர்வம் - ௧௦௬ - வது - பக்கம்.

ளையுண்டென்று எப்படிசொல்லலாம்? ஆனால் நீர்பயப்படுகிற படியினாலேயும், பொருள் போய் விடுமென்னும் பீதி உமக்கிருக்கிறபடியினாலேயும், நானறிந்த மட்டும் நீர்வெகுநாளைய உலோபியானபடியினாலேயும், என்னோடு நீர் ஆடவேண்டாம் போம்: என்று கடுகடுத்துக்கூறினான். அப்படிசொல்லியதைக்கேட்ட தருமபுத்திரர் சொல்லுகிறார்: ஐயா சகுனிராஜனே ! உலகத்தில் யாருக்காயினுஞ் சூதாடுதல் சுகமன்றென்று பொதுவாகச் சொன்னால் உனக்கென்ன அதில் மனஸ்தாபம்? நானா உலோபி? நானா பயமும் பீதியுமுடையவன்? அப்படி ஒருக்காலும் நினைக்கவேண்டாம். யாராயினும் ஒருகாரியார்த்தமாய் என்னைவேண்டி அழைப்பார்களாகில், அக்காரியம் எனக்குப் பழுதினைத் தருமாயினும் உடம்படாம லிருக்கமாட்டேன். அது எனதுவிரதம். ஆனபடியினாலே உன்சொற்படி இப்போது ஆடுகிறேன். அதனாலே என்ன வருமோ அதையும் அனுபவிக்கிறேன். தெய்வமிருக்கிறது. அது தீத்தொழிலென்று சொல்லியுங் கேளாவிட்டால், நானென்ன செய்யமாட்டுவேன்? ஆனால் இவ்விடத்தில் யாரோடே யாராட வேண்டுவது? யார் பந்தயம் வைக்கவேண்டுவது ? இதைச்சொல்லென்று சொல்லிய தருமபுத்திரரை நோக்கித் துரியோதனன் சொல்லுகிறான்: ஓ அண்ணா ! தனங்களிலும், இரத்தினங்களிலும், ஏதேது வேண்டுமோ? அதையெல்லாம் பந்தயம் நான் வைக்கிறேன். எனக்காகச் சகுனி உம்மோடு சூதாடுவார். ஆதலால் நீங்களிருவரும் மனஸ்தாபமில்லாம லாடுங்களென்று சொன்னதைக்கேட்ட தருமபுத்திரர், அப்பா துரியோதனா ! ஒருவன் பந்தயம்வைக்கிறதும்-ஒருவன் ஆடுகிறதும்-நன்றாயிருக்கவில்லை. ஒருவனுக்காக மற்றொருவ னாடக்கூடாது. நீயேபந்தயம் வை. நீயே ஆடு. என்றுரைக்கக்கேட்ட துரியோதனன் - ஓ அண்ணா ! எனக்கு வேடிக்கைகளைப்பார்க்க இச்சையேயன்றி. ஆட்டத்திற் பிரவேசிக்க எனக்கு இச்சை யில்லை யென்றான்.

தருமராஜனும் சகுனியும் சூதாடுதல்.

இவ்வாறு ஒருவர்க்கொருவர் வார்த்தை சொல்லிக்கொண்டு சொக்கட்டானாடச் சித்தமாயிருக்குந்தருணத்தில், திரிதராஷ்டிரன் - விதுரன் - வீஷ்மர் - துரோணர் - கிருபர் - முதலாகிய பேர்கள் மனதிற் சந்தோஷ மில்லாமல் அச்சபைக்குவந்து, வெவ்வேறு ஆசனங்களி லுட்கார்ந்தார்கள். அச்சபையோ வேத சாஸ்திரங்களை முற்றுங்கற்ற அனேகமகாபுருஷர் சேர்ந்தபடியினாலே, தேவசபைபோல் விளங்கிற்று. இவ்வாறு யாவருஞ்சேர்ந்தபின்பு தருமபுத்திரர் ஒருவார்த்தை சொல்லுகிறார்: கேளாய் துரியோதனா ! எனக்கு அனேக நவரத்தின ராசிகளும் பணங்களுடைய ராசிகளுங் கணக்கில்லாம லிருக்கின்றன. அவைகளை நான் பந்தயமாகவைக்கிறேன். நீயெதை வைக்கிறாய் சொல்லென்று சொல்லியதற்குப் பதில் துரியோதனன் சொல்லுகிறான்: கேளும் அண்ணா ! எனக்கும் வெகு பொருட்கூட்டங்க ளிருக்கின்றன. ரத்தினக் குப்பைகளு மிருக்கின்றன. பொருட்செல்வ முடையவர்களுக்குள் நானே சிறந்தவன். அவைகளையெல்லாம்பந்தயமாய்வைக்கிறேன். என்று சொல்லக்கேட்டுத் தருமபுத்திரர் சரிதானென்று ஒப்புக்கொண்டார். இப்படி இருவரும் பந்தயம்வைத்தபின்பு, சகுனியானவன் கையில் பாச்சிகளை எடுத்துக்கொண்டு சபையிலிருக்கும் பெரியோர்களே ! நீங்கள் யாவரும் என் பேச்சைக்கேளுங்கள். துரியோதனனுக்காக நானாடுகிறேன். என்னோடு தருமபுத்திர ராடுகிறார். இருவராலுஞ் சிலபந்தயங்கள் வைக்கப்பட் டிருக்கின்றன. என்கையி லிருக்கும் பாச்சிகைகளை எந்தவிருத்தம் வேண்டுமென்று உருட்டுகிறேனோ ? அந்த விருத்தமே விழுந்து நா னாடுவேனேயாகில், நான் ஜயித்தவன். இல்லாவிட்டால் தோற்றவன். தோற்றவன் வைத்திருக்கும் பந்தயங்களைச் செயித்தவன் எடுத்துக் கொள்ளவேண்டியது. இந்த ஏற்பாட்டை யாவரும் அறிந்திருங்களென்று சொல்லிக் கையிலிருக்கும் பாச்சிகைகளை யுருட்டினான். இவன் எந்தெந்த விருத்தத்தைப் போடுகிறேனென்று வாயாற்சொல்லி யுருட்டினானோ? அந்தந்த விருத்தங்களே அந்தப் பாச்சிகைகளில் விழுந்தன.

இப்படியாடி ஜயித்துத் தருமபுத்திரரை நோக்கி, ஓய் ராஜனே ! உமது பந்தயத்தை எடுத்துக்கொண்டே னென்றான். தருமபுத்திரர் அதுகேட்டு, ஓ சகுனி! சரிதான். நான் இப்போது வைத்த பந்தயத்தை நீ ஜயித்து எடுத்துக்கொண்டாய். அதுபோனாலும் அனேகம் பொற்பாத்திரங்கள் - வெள்ளிப் பாத்திரங்கள் - இரத்தினப் பாத்திரங்கள் - ஆபரணங்கள் - இவைகளையெல்லாஞ் சேர்த்து ஒரு பந்தயம் வைக்கிறேனென்று சொல்லிவைத்தார். சகுனியும் முன்போல் பாச்சிகை போட்டுச் செயித்தான். பின்பு தருமபுத்திரர் சிரித்து, தேசத்திற் பிறந்த மகாவேகமுள்ள எவ்வெட்டு குதிரைகள்கட்டி, பொற்றகடுகளினாலும் பொற் சலங்கைகளாலும் அலங்கரித்து, புலித்தோல்களா லாசனம்போட்டு, யுத்தங்களுக்கு யோக்கியமாய் வெகுசிறப்பாக விளங்காநின்ற ஆயிரந்தேர்கள் என்னிடத்தி லிருக்கின்றன. அவைகளைப் பந்தயம் வைக்கிறேனென்றார். சகுனியும் பாச்சிகையைக் கையாலுருட்டி ஜயித்தேனென்றான். பின்பு தருமபுத்திரர் மலைகளுக்குச் சமானங்களாய், எப்படிப்பட்ட ஆயுதங்கள் தாக்கினாலும் லக்ஷயஞ்செய்யாதனவாய், நுகத்தடிகள் போன்ற தந்தங்க ளுள்ளவைகளாய், அருவிசலம்போல் மதப்பெருக்கோடு கூடியவைகளாய், மகா வீரதீரர் ஏறத் தகுந்தவைகளாய், பொற்பணிகளா லலங்கரிக்கப்பட்டனவாய், உயர்ந்த

பட்டிஞலாகிய மேல்விரிபோர்த்தவைகளுமாகிய ஆயிரம் ஆண்யானைகளும் ஆயிரம் பெண்யானைகளு மிருக்கின்றன. அவ்விரண்டாயிரம் யானைகளையும் பந்தயம் வைக்கிறேனென்ருர். வெகு சூதனுகிய அந்தச் சகுனியும் முன்போலவே பாச்சிகையாற் சொன்னவிருத்தம்போட்டு ஜயித்தேன் என்ருன்.

அதன்பின் தருமபுத்திரர் பொல்லாத விதிவசத்தாற் பேய்பிடித்தவர்போல் அச்சூதில் ஓர் ஆவேசங்கொண்டு, ஐயாசகுனிராஜனே! என்னிடத்தில் லக்ஷந்தாசிகளிருக்கிருர்கள். அவர்களெல்லாரும் பதிஞறுவயதுள்ள மங்கைப்பருவ மூடையவர்கள். ரூபலாவணிய சவுந்தரியங்களில் மிகவுஞ் சிறந்தவர்கள். நற்குணங்களிஞலுங் கீர்த்திபெற்றவர்கள். மெருகிட்ட தங்கம்போன்ற மேனியுடையவர்கள். உயர்ந்தபணிகளும் வஸ்திரங்களுந் தரித்திருக்கிறவர்கள். சுகந்தமுடைய தேகமுள்ளவர்கள். சங்கீதத்திலும் - பரதத்திலும் - வெகுசாமர்த்தியமுடையவர்கள். எனக்கும்என்ஞேடு கூடப் போசனம்பண்ணுகிற பேர்களுக்குஞ் சகலவித சட்வர்க்கங்களைப் பரிமாறுகிறவர்கள். அப்படிப்பட்ட அந்தலக்ஷந் தாசிகளையும் பந்தயம் வைத்தேனென்னக்கேட்டுச் சகுனியும் பாச்சிகையாடி, ஒருநொடியில் ஜயித்தேனென்ருன். உதிஷ்டிரர் மறுபடியும் - ஓ சகுனிராஜனே! இந்தத்தாசிகளையெல்லாஞ் செயித்தாயே: நல்லது என்னிடத்தில் மூன்சொல்லிய தாசிகளைப்போல ஆடவருக் கிருக்கவேண்டிய சகலசுகுணங்களையுமுடையவராய், ஆண்டையினிடத்தில்விசுவாசத்தோடு பணிசெய்யத் தக்கவர்களுமாக இராநின்ற லக்ஷந்தாசர்களிருக்கின்ருர்கள். அவர்களைப்பந்தயமாக்குகிறேனென்னக் காந்தாரராஜன்மனக்களிப்புடனே பாச்சிகையுருட்டி ஜயித்தேனென்ருன்.

பின்பு உதிட்டிரர் யுத்தத்திற் குபயோகமானவைகளாய்ச் சகலவித அலங்காரங்களையும் பெற்றுவிளங்கு நல்ல குதிரைக்குட்டிகளில் நன்ஞன்குகட்டப்பட்டு மலைகள்போ லிராநின்ற தேர்கள் லக்ஷமிருக்கின்றன. அத்தேர்களின் சாரதிகள் வெகுசூரர். வெகுயோக்கியர்கள். அவர்களில் ஒவ்வொருவனுக்கு வருஷத்தில் ஆயிரம்பொன் சம்பளங்கொடுத்து வருகிறேன். அப்படிப்பட்ட பாகர்களோடுகூடிய அந்தலக்ஷந் தேர்களையும் பந்தயம் வைத்தேனென்ருர். அதுகேட்ட சகுனி-வாரீர் உதிஷ்டிரரே! இதோபாரும் அந்தத் தேர்களெல்லாம் என்னுடைய வாயினவென்று சொல்லி ஆடிச்செயித்தான். மறுபடியுந் தருமராஜஞனவர் முன்பு சித்திராங்கதனென்னுங் கந்திருவராஜன் அர்ச்சுனனுக்கு உலுப்பையாகக்கொடுத்த தித்திரிப்பக்ஷிபோற் பலவிதநிறமுள்ள நூறுகுதிரைகளைப் பந்தயமாக்கிஞர். அவைகளையுஞ் சகுனி அட்டகாசத்துடனே ஜயித்தான். மறுபடியும் பாண்டவராஜாவானவர் தமக்கிருக்கிற தேர்கள் - சகடுகள் - சிவிகைகள் - முதலாகிய சகலவாகனங்களையும் ஒருபந்தயமாகவும், நானூறு கடாரங்களில் நிரம்பவைத்திருக்கிற பொருள்களை யொருபந்தயமாகவும் வைக்க; அவைகளையுஞ் சகுனி இரண்டுதரம் பாச்சிகையையுருட்டிச் செயித்தான்.

திரிதராஷ்டிரஞேடு விதுரன் வெறுத்துரைத்தல்.

இவ்விதமாய்ப் பாண்டவராஜன் வெகுசெல்வங்களைப் பந்தயமாகவைத்துத் தோற்கவும், சகுனி அவைகளைக் கபடமாய்ப் பாச்சிகையாடி மனதிலெவ்வளவு மிரக்கமில்லாமல் ஜயிக்கவு மிருக்கக்கண்ட விதுரன் மனம்பொருமல், திரிதராஷ்டிரனைப் பார்த்துச் சொல்லுகிருன்: ஓராஜாவே! நாஞெருவார்த்தை சொல்லுகிறேன்: அதை நீர் ஏற்றுக்கொள்வது வருத்தந்தான். ஏனென்ருல் - வியாதிமுதிர்ந்து சாகப்போகிறவனுக்கு நல்லமருந்தைக் கொடுத்தால் அவன் ஏற்றுக்கொள்ள மாட்டானன்ருே? வலுவில் வாயிற் போட்டாலும் உமிழ்ந்துவிடுவான். அதுபோல் நான் சொல்லும்பேச்சு உம்முடைய மனதில் உறைப்பது வருத்தமாயிருக்கும். ஆஞலும் உம்மிடத்திலிருக்கும் பரிவிஞலே அதைச்சொல்லாம லிருக்கக்கூடவில்லை. நீர் என்னிடத்தில் தயைசெய்து அங்கீகரிக்க வேண்டும். அதென்ன வென்ருல் - உம்முடைய குமாரஞகிய துரியோதனன் பிறந்தபோது நரி போற் கூவிஞனே: அதஞலே அவனை யப்போதே கொண்டுபோய்க் காட்டிலெறிந்து வரவேண்டுமென்றும், அவனிருந்தாற் சகலகலகங்களுஞ் சகல அனர்த்தங்களுங் குலத்திற்குண்டாகி, உடனே கேடுவரு மென்றுஞ் சொன்னேன்; அதைக்கேட்காமற் போனீர். பின்பு அவனை இராச்சியத்திற் சுதந்தர ஞக்க வேண்டாமென்று சொன்னேன்; அதையும் யோகிக்காமற்போனீர். பின்பு சூதாடவேண்டாமென்று சொன்னேன், அதுவும் உமக்கு அரோசிகமாகப் போயிற்று. நீர் துரியோதனனைப் புத்திரனென்று நினைக்கிறீர். அப்படிநினைக்கக் கூடாது. கொள்ளிவாய் நரியென்று நினைக்கவேண்டும். அவனிருக்கிறவிடஞ்சுடுகாடாய்ப் போவதற்குச் சந்தேகமில்லை. அவனை ராச்சியத்தில் வைத்ததிஞற் சுகமுண்டென்று நினையாதேயும். பெருங்கேடுதான் வரப்போகிறது. நீர் விவேகியா யிருந்தும் அவன் பேச்சைக் கேட்கிறீர். அதஞலே அதருமமும் அபகீர்த்தியும் வாராமற் போகமாட்டாது.

ஓ மகாராஜனே! ஒருவரும்போகக்கூடாத மலைச்சிகரத்தில் தேன் கூடுகட்டியிருப்பதைப் பார்த்த ஒருவன் அதன்ருசியை நினைத்து, முள்ளிலுங் கல்லிலும் விழுந்து, காயமுங் கிலேசமும்பட்டுப் போயும்; அத்தேனை யுண்ணுமல் தவறிவீழ்ந்து புலிக்கிரையாஞ லெப்படியோ? அப்படியே இந்தத்துரியோதனனும் பாண்டவர்களின் ராச்சியத்தை யபகரிக்கப்ப

ழிக்கேதுவாகிய காரியங்களில் முயன்று, முடிவில் அதைச் செவ்வையாய் அனுபவிக்காமல் நசிக்கப்போகிறான். இராஜநீதியிலுந் தருமசாத்திரத்திலுஞ் சொல்லியபடி, பராக்கிரமத்தைக் கொண்டு ஜயித்தால் நியாயம். மோசஞ்செய்வதினால் அபகீர்த்தியும் நரகமுங் கிடைக்கும். ஆகையாலே-ஓ அண்ணாவே! இப்படிப்பட்ட முயர்ச்சிகளை விட்டுவிடும். நன்மைக்குக் காரணமாகிய வழியில் நடவும். உமது புத்திரனை நம்பாதேயும். அவன் மகா பழிகாரன். சவுரிய மில்லாதவன். அகந்தையும் பொறாமையுங் குடிகொண்டவன். இவன் பாண்டவ ராச்சியத்தைக் கவர நினைத்தாற் கொடுப்பார்களா? தலையை வெட்டிப் போடுவார்கள். இப்படிப்பட்ட துட்டன்பேச்சுக்கு நீர் சிறிதும் இடங் கொடாமல், யாதவர்கள் தங்கள் குலத்திற்கு விரோதியாகிய கம்சனை ஸ்ரீகிருஷ்ணனைக்கொண்டு கொல்வித்துத் தற்காலத்தில் யாவரும் அவ்வவர்களுடைய புத்திரமித்திராதி வர்க்கங்களோடு எவ்வாறு சுகமாயிருக்கின்றார்களோ? அவ்வாறு நாமுந் துரியோதனனை அர்ச்சுனனைக்கொண்டுநிக்கிரகஞ்செய்துசுகமாயிருப்போம். உலகத்திலிப்படியுஞ் செய்வதுண்டாவென்கிறீரா? அதற்கு நியாயஞ்சொல்லுகிறேன்கேளும்: ஒருவனாலே ஒருகுலத்திற்குக் கேடுவருமாகில் அவனைத் துறக்கலாம். கொல்ல வேண்டுவதானாலுங் கொல்லலாம். பாவமுமில்லை பழியுமில்லை. ஒரு குடும்பத்தினாலே ஒருகிராமத்திற்குக்கேடுவருமாகில், அக்குடும்பத்தையுந் துரத்தலாம். ஒருகிராமத்தினால் ஓர் நாட்டுக்கே கேடுவருமாகில், அக்கிராமத்தையுமழிக்கலாம். தன்மத்துக்காகப்பூமிமுழுதையுமிழக்கலாம். என்றிப்படிசுக்கிராசாரியர் அசுரருக்கு நீதிசொல்லி யிருக்கிறார்.

ஆனபடியினாலே நீர் இந்தத் துரியோதனனைத் துறந்துபாண்டவரைச் சேர்ந்து க்ஷேமத்தையடையும். வீணானசிந்தைசெய்யவேண்டாம். காக்கையைத் துரத்தி மயிலைக்கொணர்ந்து போஷியும். சுகப்படுவீர். பிணம்பிடுங்கித் தின்னும்படியாகிய நரியைத்துரத்திச் சிங்கத்தை வீட்டிற்சேரும். நான் சொல்லுகிறவிஷயத்திற் சந்தேகப்படவேண்டாம். புத்திரனென்கிற வாச்சலியத்தையே முக்கியமாகவெண்ணி அதருமத்திற் குட்பட்டீராகில், மிகுந்த மனஸ்தாபத்தையடைவீர். பூமாலைக்காரன் பூஞ்செடிகளைப் போஷிப்பதுபோல், பாண்டவர்களைப் போஷித்துக் கொண்டிரும். அப்படியின்றிக் கரிவேண்டியவன் அந்தப் பூஞ்செடிகளைச் சுட்டெரிப்பதுபோற் செய்யாதேயும். (தானாடாவிட்டாலுந் தன்சதையாடும்.) என்று சொல்லுவதுபோல், நான்கூடப்பிறந்தகடமைக்கு இதத்தைச் சொன்னேன். நானுமக்குச் சிறியவனாயினும் இக்காரியத்தில் என்னைப் பெரியவனாக மதித்து, (அடிமைப் பேச்சு அம்பலத்திற் கேறுமோ?) என்று சொல்லுஞ் சொல்லைப்போல விறுதாவாகப் போகாமல், நான்சொல்வதனைத்தையும் நன்றாகக் கேட்டு ஆலோசியும். ஏமாறவேண்டாம். ஆனாற் பாண்டவர்களுடையசெல்வத்தைப் பெறவேண்டுவதற்காக யுத்தஞ் செய்வோமென்கிறீரா? செய்யலாம். அது நியாயமாகிய உபாயந்தான். ஆனாலும் நீர் பயனடைவது வருத்தம். ஏனென்றாற் பாண்டவர்களை இந்திரன்முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும் ஒருங்கேவந்து எதிர்த்தாலும் ஜயிக்கப்படமாட்டார்கள். ஆனபடியினாலே ராஜநீதியிற் சொல்லியபடி பலவான்களைப் பகைக்காமல் நேசித்து ஒருகுறைவுமின்றி க்ஷேமமாயிரும் என்று சொல்லி விதுரன் மறுபடியுஞ்சொல்லத்துவக்கினான்.

ஓ திரிதராஷ்டிர மகாராஜனே! இன்னுங் கேளும்: இப்போது துரியோதனன்செய்கிற அனியாயத்தினாலே அவன்மாத்திரங் கெட்டுப்போவானென்பதில்லை. இச்சபையிலிருக்குங் கவுரவ வமிசத்தாரெல்லாரும் நசிப்பார்கள். துரியோதனன் இப்போசெய்யுஞ் செய்கை எப்படி யிருக்கிறதென்றால்-ஒரு விருஷபம் மதத்தினாலே தன் கொம்பொடிந்து போகுமென்பதைச்சிந்திக்காமல், மலையைத்தன் கொம்பால்முட்டுவதுபோலிருக்கிறது. விவேகமில்லாமல் துட்டனுடையபுத்தியைக்கேட்டு நடப்பவன், பேதையாகிய ஓடக்காரனோடு ஓடத்திலேறிப்போகிறவனுக் கொப்பாயிருக்கிறான். அப்படியே நீர்செய்கிறீர் வெகுவிசனத்தை யனுபவிக்கப்போகிறீர். இப்போது மகன் வஞ்சனையாய்ச் சூதாடி வெகுசெல்வங்களைத்தேடுகிறானென்று சந்தோஷப் படுகிறீர். அப்படி சந்தோஷப்படவேண்டாம். அவன்தேடுகிற பொருளெல்லாம் பொருளன்று.விசனங்களுக்குவித்து. இனியிதனாலே மகாகலகம் நேரிட்டு, உமதுமக்கள் ஒருவனொருவனாய்மரிக்குஞ் சேதிகேட்டு விசனப்படவேண்டி வரும். என் பேச்சை வீஷ்மர்-துரோணர் - கிருபர்-அசுவத்தாமா-விவிம்சதி - பாக்லிகன் - சோமதத்தன் - பூரி-பூரிச்சிரவன் - இவர்கள் யாவருங் கேட்கட்டும். உலகத்திற் சொலியாநின்ற தீயில் உளமறியப்போய் வீழ்பவருமுண்டோ? இந்த அஜாதசத்துருக்களாகியஉதிஷ்டிரர்-வீமசேனன்-அர்ச்சுனன் - நகுலன்-சகாதேவன்-இவ்வைவரும், பஞ்சாக்கினிகளென்று நினைக்கவேண்டும். அவர்களுக்குத் துரோகஞ்செய்கிறவர் ஒரு போதும் முன்னுக்கு வரமாட்டார்கள்.

ஆகையால்-ஓ மகாராஜனே! வீணாய் கலகத்தை வளர்க்கவேண்டாம். உமக்கென்ன பொருளில்லையா? உமது அனுக்கிரகம் பெற்றவனெல்லாம் மகாராஜாவாகிறானே: அப்படிப்பட்ட உமக்குப் பொருளின் மேல் இவ்வளவு ஆசையென்னத்திற்கு? உமக்கிருக்கிறசெல்வத்தைப் பூரணமாய் அனுபவிக்க ஆயுசுண்டா? ஆனபடியினாலே இருக்கிறமட்டில் நியாயமாய் உண்டாயிருக்கிற செல்வத்தை யனுபவித்துக்கொண்டு க்ஷேமமாயிரும். அதிக ஆசைவேண்டாம். அந்தப்பொருள் உமக்கொரு விஷயமா? அந்தப்பொருளைத் தேடிவைப்பதினாலே உமக்கு நன்மையில்லை. பாண்டவர்களா

கிய பொருள்களைத் தேடிவைப்பீரேயாகில், நன்மையும் - மேன்மையும்-சவுக்கியமூங் கிடைக்கும். இந்தச் சகுனி சூதில் வல்லவனாயிருந்து ஜயிக்கிறானென்று நினைக்கிறீரன்றோ ? இதெல்லா மிங்கே உதவாது. காசிராஜனொருவ னிருக்கின்றான். பர்வதராஜ னொருவனிருக்கிறான்-இவர்கள் சூதாட்டத்தில்வல்லவர்.அவர்களோடுகூட ஆடிஜயிப்பானேயாகில், அப்போ தான் இவன் சாமார்த்தியவான். அவ்வாட்டந் தெரியாதவரோடு ஆடுவதிற் பயனென்ன? சமானனோடெதிர்த்துச்செயிப்பவன் தான் சுத்தவீரன். அவனேதான் புத்திமான். அப்படி யின்றி வழியடித்துப்பறிப்பவர்போல மோசஞ்செய்வதை நீரொரு சாமார்த்திய மென்று நினைக்கவேண்டாம். என்றிப்படி திரிதராஷ்டிரனோடு விதுரன் சொல்லியவார்த்தைகளைக் கேட்ட துரியோதனனானவன், அவனைப்பார்த்து மிகுந்த கோபத்தை யடைந்தவனாகிக் கண்கள் சிவக்க உதடுதுடிக்க இதனைப்பேசுவ தாயினான்.

துரியோதனனுக்கும் விதுரனுக்கும் வாது.

ஓய் விதுரரே ! அன்னியருடைய கீர்த்தியைப் புகழ்ந்து நம்மைத் தூஷிக்கிறதே உமது தன்மையாயிருக்கின்றது. எப்போதும் எம்மைப் பார்ப்பதற்கு உமக்கு இஷ்டமில்லை. நீர் நமக்கு நித்திய சத்துருவாயிருக்கிறீர். ஆனபடியினாலேதான் எம்மைப் பாலகனைப்போல வெண்ணி இகழ்ச்சியாய்ப் பேசுகிறீர். நாம் பலதாமும் பொறுத்துக் கொண்டோம். இப்போது சபையிலே பயமில்லாமல் எம்மை அலக்ஷியஞ்செய்து பேசினீர். உம்மைச் சொல்லவேண்டுவ தில்லை. ஒருவன் தனக்கெதிரியின் பக்ஷத்தி லிருக்கிறவனென்றறிந்தும், அவனைச்சேர்த்து அவன் பேச்சைக் கேட்கிறானே; அப்படிப்பட்டவனை நிந்திக்கவேண்டும். இப்படிக்கு யாரேனுஞ் சத்துருபக்ஷத்தி லிருப்பவனுடைய குணங்களை யறியாமல் அவனைச் சேர்ப்பதினால் மிகுந்த இடறுகள் நேரிடும். இதுகளுக்கு நீரே திருஷ்டாந்தம். எப்போதும் இவ்விதமான அனேகம் பேச்சுக்களாலே என்னையும் என்தந்தை முதலானோரையு மயக்கி, என்பக்ஷத்துக்குவருஞ் சீரையெல்லாங் கெடுத்து வருகிறீரன்றோ ? உம்மாலே எங்களுக்கு ஒருக்காலும் க்ஷேமமில்லை. அறியாமையினாலே ஒருவன் தன்மடியில் சர்ப்பத்தையெடுத்து வைத்துக்கொண்டதுபோல், உமது ரூபத்தைப்பார்த்து நல்லவனொன்றெண்ணிச் சேர்ந்ததற்குப் பயன் எனக்கும் என்னைச்சேர்ந்தோர்க்கும் நன்றாய்க் கிடைத்தது.

ஓய் விதுரரே ! இன்னமும் கேளும்: பூனையை வீட்டில் வளர்த்தால் அந்தப்பூனை அவ்வீட்டிலிருக்கிறபேர்களெல்லாம் எப்போது கண்மூடுவார்கள் பால்தயிர் முதலானதுகளைப் பயமின்றி என்றைக்குக்குடிப்போமென் றெண்ணுவதுபோல்,நீர்அன்னங்கொடுத்துக்காப்பவர்களை நாசமடையும்படி கோருகிறீர். ஆனபடியினாலே நீர் சுவாமித் துரோகியானீர். உமதுசுபாவம் இவ்விதமா யிருக்கின்றது. இப்படிப்பட்ட உமது துர்குணங்களை யறியாமல் உலகர் உம்மை நல்லவனென்று நினைத்திருக்கிறார்கள். அந்தத் தைரியத்தினாலேதான் வாயில் வந்தபடியெல்லாம் பிதற்றுகிறீர். நீர் பேதையென்று ராஜா உபேக்ஷைசெய்து வருகிறபடியினாலே அவரிடத்திற்பேச நிர்ப்பயமா யிக்கிறீர். அந்தமட்டும் நீர் செய்த உபகாரம் போதும். இனியொன்றுஞ் சொல்ல வேண்டாம். பாண்டவர்களை நாங்கள் ஜயித்ததும், அவர்களுடைய் சொத்துக்களைச் சம்பாதித்ததும், இவ்விரண்டும் க்ஷத்திரிய நியாயந்தான். நீரேன் அனியாயமென்று சொல்லுகிறீர்? என்ன அனியாயத்தைக் கண்டீர் ? உம்முடைய பேச்சைக்கேட்க எனக்கு ருசியில்லை. வாயைமூடிக்கொள்ளும். சத்துருபக்ஷத்திற்கு இதமாய்ப் பேசவேண்டுமென்று உமக்குமனமிருக்கிறதே, அதைஅன்னியருக்குத் தெரியாமலாகிலும் பேசுகிறீரா ? மூடருக்குந் தெரியும்ப்டியாகத்தானே பேசுகிறீர். இப்படிப்பட்ட உம்மைப் புத்திசாலியென்று எப்படிச் சொல்லலாம்? நம்மை யடுத்தவனாயிற்றே யென்று நான் சும்மா யிருக்கயிருக்க நீர்கர்வத்தை யடைந்து, எல்லாஞ் சுயசக்தியாலே நடக்கிறதாய் நினைக்கிறீர். நீர் சுத்தமாய்ப் புத்தியில்லாதவர். பெரியோரையடுத்துப் புத்திகேட்டுக் கொண்டுவாரும்.

ஓய் விதுரரே ! இத்தனைநாள் அரசனிடத்திற் சேவித்துப் பெற்ற கொஞ்சங்கீர்த்தியையும் போக்கிக் கொள்ளாதேயும். புத்திமான் நானொருவன் தானென்று செருக்கடைந் திருக்கிறீர். அதைவிட்டு விடும். அனியாயஞ் செய்ய வேண்டாம். செவ்வையாய்ப் பிழையும். இனிநான் உம்மைக் குணதோஷங்கள் கேட்பதுமில்லை. நீர் ஒருபேச்சுஞ் சொல்லவும்வேண்டாம். யாவருக்கும் புத்தியை ஈஸ்வரனே இயல்பா யுண்டாக்கினார். எனக்கு மப்படியே புத்திகொடுத் திருக்கிறார். அந்த ஈஸ்வரன் விதித்தலின்படி யன்றி வேறு நடவாது. நீர் சொல்லக்கேட்டா நான் முன்னுக்கு வரப்போகிறேன்? வயிற்றிலிருக்குஞ் சிசுவுக்குப் பால் முதலியவைகளைக் குடிக்கும்படி புத்தி நீராகொடுத்தீர்? ஆனபடியினாலே தெய்வம் அவனவனுக்குக் கொடுத்த புத்தியைக்கொண்டு அவனவன்பிழைக்கையில், நீரேன் வீணாய்க் கத்துகிறீர்? வெகுதூரம் பொறுத்தேன். இன்மேலு மிப்படிபேசவேண்டாமென்று துரியோதனன் சொன்னதைக்கேட்ட விதுரன்பொறுமையோடு மறுபடி சொல்லுகிறான்.

அப்பா துரியோதனா! நீ சொன்ன பேச்சுக்களெல்லாம் பெரும்பாலும் யதார்த்தந்தான். எனக்கொருவனும் புத்திசொல்லவேண்டாமென்றாய். அதுசரியே: லோகத்திலே ஒருவன் மலையைத் தலையிலே முட்டித்தள்ள முயலுகிறான். மற்றொருவன் கைநகத்தாலே

பூமியைப்பறிக்க நினைக்கிறான். இவ்விருவருக்கும் புத்தி மற்றொருவராலுஞ் சொல்லத்தகாது. அவர்களொருத்தருக் கொருத்தரே சொல்லிக்கொள்ளவேண்டும். இவர்களுக்குப் புத்திசொல்லமுயலுகிறவன்மூடனே யாவான். பகைவனுமாவான். நீ பூமியை நகத்தினாற் பறிக்கிறவன். சகுனி மலையைத் தலையால் முட்டுகிறவன். உங்களுக்குப் புத்திசொல்லவந்த நான் மூடனுஞ் சத்துருவுமானேன். ஆனாலும் நீமாத்திரம் என்னைச் சத்துருவாக நினைத்தாயே யல்லது, நானுன்னை யப்படி நினைக்கவில்லை. நீ க்ஷேமப் படவேண்டுமென்றே இதத்தைச் சொன்னேன். என்று சொல்லக்கேட்ட துரியோதனன் மறுபடியும் மிகுந்தகோபத்தோடு அவனைப்பார்த்துச் சொல்லுகிறான்: ஓய் விதுரரே ! நீர் இத்தனை நாள் காரியங்களிலே விரோதஞ் செய்தாலும் மேலுக்கு இதமாக இருந்தீர். இப்போது வெளிப்படையாய்ச் சத்துருப்போல் நின்றுபேசத் தலைப்பட்டபடியினாலே, இனி யிவ்விடத்திலிருக்க யோக்கியரல்லீர். விபசாரஞ் செய்யும் பெண்ணுக்குப் பந்துக்கள் எவ்வளவு நாள் புத்திசொல்லி யடக்குவார்களென்றால் - வெளிப்படையாகிற வரைக்குந்தான். பின்பு துரத்தவேண்டுவதுதான். ஆனபடியினாலே நீர் இப்போதுதானே இவ்விடம்விட்டு உமக்கிஷ்டமான விடத்திற்குப் போய்ச்சேரும் என்றான். அதுகேட்டு விதுரன் சொல்லுகிறான்:

அடா துரியோதனா ! நீ என்னைத் திரஸ்காரமாய்ப்பேசி போகச் சொல்லியபடி நான்போகிறேன். அதிருக்கட்டும். லோகத்திலே ஒருவன் இதத்தைச் சொல்லுவனே யாகில், அவனை யெல்லாவகையாலும் பூசிக்கவேண்டும். அதுதான் கைமாறாகும். நீயோ அப்படி செய்யாமற் போனதுமன்றி, கோபித்துத் துரத்த யத்தினப்பட்டாய். வெகுயோக்கியன். இப்படிப்பட்ட உன் சகவாசமில்லாம லிருப்பது எனக்கு நன்மைதான். அன்றியும் உத்தமராஜாக்களுங் கூட ஒருவனிடத்திலும் பிரீதியை ஸ்திரமாய் வைக்கமாட்டார்கள். வாயினால் மெதுவாய்ப் பேசிக்கொண்டேயிருப்பார்கள். சமயத்தில்தலையையும் வெட்டிவிடுவார்கள். அது அவர்களுடைய இயற்கை. இப்படியிருக்க நீ துர்க்குணங்க ளெல்லாம் வாசஞ்செய்கிற புல்லரசன். ஆனபடியினாலே உன்சினேகத்தை விடுவதே நன்மை. என்னை இத்தனைநாளும் யோக்கியனென்று கொண்டாடி வைத்திருந்து, இப்போது அயோக்கியனென்றும் புத்தியில்லாதவ னென்றுஞ் சொல்வதினாலே; நீயே புத்தியில்லாதவனாகிறாய். எப்படியென்றால் - அரசன் தன்னிடத்திற் சேர்க்கத்தக்கவர்களை நன்றாய் ஆராய்ந்து, அவர்களுடைய குணாகுணங்களை யறிந்து சேர்க்கவேண்டு மன்றோ?

அடா துரியோதனா! நீ அரசுபுரிந்து வெகுசெல்வங்களை யனுபவிக்க வேண்டுமென்று மிகுந்த அபிலாஷையுள்ளவனா யிருக்கிறாயே: ஐயோ ! இதையெல்லாம் அனுபவிக்காமற் சீக்கிரத்தில் நசிக்கப்போகிறாயே: என்று பரிதாபத்தினாலே உனக்குப் புத்திசொன்னேனேயல்லது வேறில்லை, இந்தநற்புத்தி உனக்கினிக்கவில்லை. விபசாரிக்குப் பதிவிரதா தருமங்கேட்க ருசியிராது. உனக்குமாத்திரமன்று. உன்பிதாவுக்கும் அது ருசிக்கவில்லை. ஏனென்றால் - நீங்களெல்லாம் நசிக்கவும், அக்காலத்தில் அவர் பெருந்துயரனுபவிக்கவும் வேண்டிய கருமங்கள் காத்திருக்கின்றன. சாகப்போகிறவனுக்கு நல்ல அவுஷதம் வேண்டியிராது. நான்சொன்ன பேச்சுக்களெல்லாங் குமரியைப்பார்த்துக் கிழவனைப் புணரச்சொன்னா லெப்படியோ அப்படி உங்களுக்கு இன்பப்படாமற் போயினவன்றோ? இதெல்லாம் தெய்வத்தின் செயல்தான். என்னை இதனல்லவென்று நினைத்தாய். மடைமையுள்ள மாதரையும் - பாலகரையும் - பேதைகளையுங் கேட்பாயேயாகில், நான் இதனோ? அகிதனோ? அதை அவர்களுனக்குச் சொல்லுவார்கள். உலகத்தில் முகஸ்துதியாகச் செவிக்கினிப்பாய்ப் பேசுகிறவர்கள் வெகுபேர்கள் கிடைப்பார்கள். அந்தப் பேச்சுகள் இம்மை மறுமைகளில் நற்பயனைத்தாராமற் போவதுமன்றி, கேட்டையுந்தரும். சிலர் உரிமையோடுகலந்து செவிக்கினியாத சொல்லைச் சொல்லுவார்கள். அச்சொல்லோ இரண்டிடங்களிலும் நன்மையைப்பயக்கும். (சிரிக்கச்சொல்வார் சிறியர். அழச்சொல்வார் அறிஞர்.) என்று பெண்டீர்களுஞ் சொல்லுகிறார்களல்லவா? ஆனால் இப்படிசொல்லுகிறவர்கள் கிடைப்பது அருமை. இதைக் கவனிப்போடு கேட்பவன் கிடைப்பது மிகவுமருமை.

அடா துரியோதனா! இன்னுஞ் சொல்லுகிறேன் கேள். எவன் முகஸ்துதியாய்ப் பேசாமலும், நியாயத்தைப்பேசினால் மனதுக்கு இதமாயிராதே அதனாலே நம்மிடத்திற் பிரீதிகுறைந்துபோமே. நமது பிரயோசனமுங் கெட்டுப்போமே என்றுநினைத்துச் சும்மாயிராமலும் இதமேசொல்லுகிறானோ? அவன் தான் உலகாளும் ராஜனுக்கு மித்திரன். அவன்தான் பந்து. அவன்தான் குரு. அவன்தான் தெய்வம். அப்படிப்பட்ட மந்திரியினுடைய பேச்சைத் தடையின்றிக் கேட்பவனே புத்திசாலி. நன்மைக்கும் பாத்திரன். எல்லாவிதத்திலுங் குணசாலி. அப்படி யல்லாதவன் மூடனென்பதற்குச் சந்தேகமில்லை. உலகத்தில் யாவருக்கும் ஆப்தருடையபேச்சு எப்படி யிருக்குமென்றால் - முதலில் கசப்புந் துர்க்கந்தமு முடையதாய், முடிவில் வியாதியினால்வரு முபத்திரவத்தைப்போக்கித் தேகத்திற்குப் பலத்தையும் - தேஜசையும்-பயக்காநின்ற திவ்விய அவுஷதம்போ லிருக்கும். புத்திமான் அந்த அவுஷதத்தைச் சாப்பிடவேண்டும். அது நாவுக்கு ருசியில்லையென்று மறுப்பானாகில் மரணத்தையடைவன். அதைப்போற் கேள்விக்கு நன்றாயிராமலும், தருமத்திற்கும் - கீர்த்திக்கும் - வாழ்வுக்கும்-ஏதுவாகியுமிராநின்ற ஆப்தருடைய பேச்சைக்கேட்டு

கோபதாபங்களில்லாமற் பொறுமையோடு நடந்தால், ஓர் ஆபத்தையு மடையாமற் சுகத்தை யடையலாம். ஆப்தனைத் திரஸ்காரஞ்செய்வது நன்மையன்று. உன் வாழ்வைக்குறித்தே இவ்வளவும் நான்சொன்னேன். வேண்டா மென்னச்சேயும் வலுவிற்சொல்லுவா னேனென்றால் - மகாராஜா வாகிய திரிதராஷ்டிரருக்கு ஒரு துன்பமும் நேரிடாம லிருக்கவேண்டு மென்கிற அபிப்பிராயத்தினாலே தான். தமயனாரும் ரக்ஷகருமாகிய அவருக்கு வருங்குறைவு என்னுடைய தானபடியினாலே, நீ திரஸ்காரஞ்செய்து கேட்காமற் போனாலுஞ் சண்டையிட்டுச் சொன்னேன். பின்னும்பின்னு நூறுதரஞ் சொன்னேன். அப்படியில்லாமற்போனால் எனக்கென்ன வந்தது? ஆர்கெட்டா லென்ன? ஆர் வாழ்ந்தா லென்ன? என்று விதுரராஜன் சொல்லக் கேட்ட துர்ப்புத்தியும் அகந்தையுமுள்ள துரியோதனன் அதைலக்ஷியஞ் செய்யாமல், மறுபடியுஞ் சூதாட வாரம்பித்தான்.

தருமனுக்கும் சகுனிக்கும் நடந்த இரண்டாவதாட்டம்.

அப்போது சகுனியானவன் உதிஷ்டிரரைப் பார்த்து, ஓய் ராஜாதிராஜனே! இதுவரையிலும் பந்தயம் வைத்துத்தோற்றீரே: இவ்வளவுதானோ உம்முடைய செல்வங்கள்? தம்பிமாரைக்கொண்டு பூமியெல்லாஞ் ஜெயித்து வெகுதிரவியங்களைச் சம்பாதித்தீரென்றும் இராஜசூய யாகத்தில் உளுப்பையாய் வெகு திரவியங்கள் வந்தனவென்றும் புகழுண்டா யிருக்கிறதே: அதெல்லாம் இவ்வளவுதானோ? அல்லது தோற்கப் போகிறோமென்கிற பயத்தினால் சூதாட மனமில்லையோ? அப்படிபயமிருந்தால் ஆடவேண்டாம். தோற்றதுபோதும். நீர் பணம்போகிறதை லக்ஷியஞ் செய்யமாட்டீரோ. இப்போது ஏது அப்படிப்பட்ட லோப குணம் உமக்கு உண்டாயிற்று. என்றிப்படி வஞ்சனையாகவும் - எளிதமாகவும் - பேசக்கேட்ட உதிஷ்டிரர் காலகதியினாலே மறுபடி யாடும்படி நினைத்துச் சகுனியை நோக்கி, அப்பா சகுனி! என் செல்வங்களுக்குக் கணக்கிட்டுப் போகாது. என்னிடத்தி லிருக்கும் பொருள்களின் கணக்கு எனக்குத் தெரியாது. ஆனாலும் லக்ஷம் - கோடி- பத்துகோடி - அற்புதம் - நிற்புதம் - பரார்த்தம்-என்று கணக்கிடப்பட்ட பொருள்களிருக்கின்றன. அவைகளை யெல்லாம் பந்தயமாய் வைக்கிறேன் ஆடென்றார்.

அதுகேட்ட சகுனி வெகுகர்வத்தோடு, இதோ: இதோ: ஜயித்தேன் பாருமென்று பாச்சிகையைப் போட்டான். அதுகண்ட உதிஷ்டிரர் - ஓ சகுனிராஜனே! எனக்கு அளவற்ற பசுக்களும் - ஆடுகளும்-யானைகளும் - குதிரைகளும் - காடுகளு மிருக்கின்றன. அவைகளைப் பந்தயமாக்கினேன். என்னவே அவன் அவைகளையுஞ் ஜெயித்தேனென்றான். மறுபடி தருமபுத்திரர் எனக்கு வெகு கிராமங்களும் - பட்டணங்களும் - ஆங்காங்கு பல அரண்மனைகளு மிருக்கின்றன. அவைகளில் தேவதாயம் பிரமதாயந்தவிர, மற்றயாவையும் அவற்றிலுள்ள பொருள்களோடு கூடப் பந்தயம் வைக்கிறேனென்றார். அதைக்கேட்டுக் காந்தாரராஜன் மோசத்தையாசரித்து, இதோபாருமையா நான் வாயாற்சொன்ன விருத்தம் போட்டேனென்று சொல்லி ஜயித்தான். பின்பு தருமபுத்திரர்-ஆ! ஆ! சகுனி! மகாராஜகுமாரர்கள் அணியத்தக்கவையாகிய குண்டலங்கள் - தோள்வளைகள்- பதக்கங்கள் - மணிமாலைகள் - முத்துமாலைகள் - கடகங்கள் - மோதிரங்கள் - இப்படிப்பட்ட சகல ஆபரணங்களும் பந்தயமாக வைக்கப்பட்டனவென்றார். சகுனியும் பாச்சிகையை யுருட்டிச் செயித்தேனென்றான். இவ்விதமாய் இவர் பந்தயம் வைக்கவைக்க, அவன் அக்ஷதத்துவமென்னும் வித்தையறிந்தவனாகையாலே தனக்கிஷ்டமான விருத்தந் தனக்கு விழும்படியாகவும், அவரிஷ்டப்படி அவருக்கு விழாம லிருக்கும்படி யாகவும் மோசஞ்செய்து ஜயிக்கவே, தருமபுத்திரரானவர்மறுபடி பந்தயம்வைக்க ஒருசொத்து மில்லாமைகண்டு, கிராமங்கள் பூமிகள் பட்டணங்கள் முதலானசகலசம்பத்துக்களையுந் தோற்றோமே: இதுவரையில் என்ன தருமமிருந்தது? இனிநாமும் தம்பிமாருந்தானேமிஞ்சினோம். போனதுபோச்சு. இன்னமும் பார்ப்போமென்று மனதில் நினைத்துச் சகுனியைப் பார்த்து இதனைச் சொல்லுகிறார்.

ஓ காந்தார தேசாதிபதி! இதோபார் என்னுடைய கடைபடுதம்பி சகாதேவனென்கிறவ னிருக்கிறானே: இவன் எப்போதுந் தருமபரிபாலனஞ் செய்கிறவன். வெகுஞானவான். எனக்கு மிகவும் பிரியமானவன். இவனையொரு பந்தயமாகவும், இவனுக்குமூத்தவனாகிய நகுலன் மகாசமர்த்தன். குணங்களில் அதிகப்பட்டவன். இவனையொரு பந்தயமாகவும் வைத்து ஆடுகிறேனென்று சொல்லக்கேட்டு, சகுனி அப்படியா? சந்தோஷம். என்றுசொல்லிப் பாச்சிகையையெடுத்தாடி உதிஷ்டிரரைநோக்கி, ஓய் பாண்டவராஜனே! நீர் பந்தயம்வைத்த தம்பிமா ரிருவரையுஞ் ஜெயித்தேன். இனிமேல் உமக்கொன்றுமில்லை. மற்றிருவர் தம்பிமா ரிருக்கிறார்களே யென்றால் -அவர்கள் மகாபலசாலிகள். சுத்தவீரர்கள். உமக்குச் சுவாதீனருமல்லர். இவர்களோ? மாற்றாந்தாயின் மக்களானது பற்றியும், உம்மைவிட வேறே கதியில்லாதவர்களானதுபற்றியும், நீர் பந்தயம்வைக்க இசைந்தார்கள். அப்படிக்கு அவர்கள் இசைவார்களா? மேலும் உமக்கு அவர்களிடத்திலிருக்கிற அன்புபோல் இவர்களிடத்திலிருக்கமாட்டாது.ஆகையால் இனிநீர் எதைவைத்து ஆடப்போகிறீரென்று சொன்னான். அதுகேட்ட தருமபுத்திரர் - அடாசகுனி! நீயேன் மித்திரபேதமான பேச்சைப்பேசுகிறாய்? இதனாலே ஒன்றும்பயனில்லை.

நீகற்ற வஞ்சனைவித்தையைத் தயையின்றி முற்றுஞ் செலுத்தென்று தருமர்சொல்ல, அதற்குச் சகுனி - அப்பா தருமபூபதி! மூடன் நீரில்விழுந்தால் முழுகிப் போவன். சமர்த்தன் கரையேறுவன். வாயாலே பேசுவதிற் பயனென்ன? நீர் பெரியவர்தான். ஓர் மனிதன் சொப்பனத்திற் காணும்பொருளை நித்திரையின் முடிவிற் காணாமற்போகுமென்று நினைக்கிறனே? இல்லையே: அப்படி நீர்செய்கிறகாரியங்களில் நிச்சயப்புத்தியில்லாதவரா யிருக்கிறீர். நல்லது உமக்குநமஸ்காரம். மேலே நடக்கவேண்டுவ தென்னவென்றான்.

உதிஷ்டிரர் அதுகேட்டு, ஓ எனது சத்துருக்களிற்சிறந்தசகுனிராஜனே!எந்தத்தம்பி எங்களைவெகு ஆபத்துகளிற் கரையேற்றத் தக்கவனே? எவன் சகலசத்துருக்களையும் ஜெயிக்கவல்லவனே? எவன் உத்தர குருவரையிற்போய் யாவரையுஞ் செயித்து வேண்டிய தனங்களைக் கொண்டுவந்தவனே? எவன் தனஞ்செயனென்கிற பெயரைப்பெற்றவனே? எவன் வலதுகையினாலும் இடதுகையினாலும் பாணப்பிரயோகஞ்செய்து ஸவ்யஸாசி என்கிறபேரைப் பெற்றவனே? அப்படிப்பட்ட அர்ச்சுனனைப் பந்தயம்வைக்கிறேனென்றார். சகுனி அவனையுஞ் ஜெயித்தேனென்றான். அதற்குப்பின்பு தருமபுத்திரர் இதோ யிருக்கிறானே எனக்கு நேரிளையவன், இவன் ஒப்பற்ற பலமும் - தைரியமும்-பராக்கிரமமும்பெற்று, கதாயுத்தத்திலே யாவருக்குஞ் சிரேஷ்டன். மதயானைக் கன்றுபோற் கம்பீரமான ரூபமுடையவன். யுத்தமென்றால் அலக்ஷியஞ்செய்து முன்னே புறப்படுகிறவன். ரூபத்தினாலேயே சத்துருக்களுடைய மனத்தை நடுங்கச்செய்யத்தக்கவன். ஆதலால் இந்த வீமசேனனையும் பந்தயம்வைத் தாடுகிறேனென்னக்கேட்டு, சகுனியானவன் மிகுந்த இறுமாப்புடனே பாச்சிகையை யாடிச் செயித்து, அங்குள்ள யாவரையும்நோக்கி, ஓ சபையாரே! பாருங்கள்: இப்போ உதிஷ்டிரருடைய ராச்சிய முதலான செல்வங்களையல்லாமல், லோகப்பிரசித்தராகிய அவர் தம்பிமாரையும் ஜெயித்தேன். என்றுசொல்லி மீட்டும் உதிஷ்டிரரைப் பார்த்துச் செருக்குடையவனாய்ச் சொல்லுகிறான்:

ஓய் ராஜாவே! இராச்சியமுதலாய்ச் சகலசொத்துக்களையும் ஒப்பற்ற தம்பிமாரையும் பந்தயம்வைத்தாடித் தோற்றீர். இனி உமக்கென்ன இருக்கிறது? இன்ன மேதாகிலும் ஆஸ்திவைத்திருந்தால் அதையும் வைத்தாடும் ஒருவேளை ஜயிப்பீர். என்று செருக்கோடுகூடிய பேச்சுகளைப் பேசக்கேட்டு, உதிஷ்டிரர் நல்லதாகட்டும். இன்னமும் உன்மோச மெவ்வளவோ? அவ்வளவையுங் காட்டு. யாவரும் விரும்பும்படியாகிய என்னையே பந்தயமாக வைக்கிறேனென்று சொன்னார். அப்போது சகுனி பாச்சிகையை யெடுத்தாடி இதோ ஜயித்தேன் பாரும் உதிஷ்டிரரேயென்றுசொல்லிச் சபையாரைப்பார்த்து, கேளுங்கள் சபையாரே! பாண்டவர் ஐவரும் என்னால் ஜயிக்கப்பட்டார்கள். இனி எங்களுக்குப் பணிவிடை செய்யவேண்டிய முறியானார்கள். இதை நீங்கள் யாவரும் அறிந்திருங்கள். என்று மனதிற் சந்தோஷம் பொங்க உரக்கச் சொல்லிப் பின்பு தருமராஜனைப் பார்த்துச்சொல்லுகிறான்: ஓய் பயித்தியக்கார அரசனே! எல்லாப்பொருளையுந் தோற்றபின்பன்றோ உம்மை பந்தயம்வைக்கவேண்டும். அப்படியில்லாமல் முன்ன மே நீரேன் முறியாயினீர்? உமக்குப் பந்தயம்வைக்க இ னுமோர் சொத்திருக்கிறதே: அதை ஏன் பத்திரமாய் வைத்துவிட்டீர்? அது யாதென்று கேட்கிறீரோ? பாஞ்சாலராஜனுடைய மகளாகிய திரௌபதி இருக்கிறாளே: அவளைவைத் தாடக்கூடாதா? மறந்துபோனீராக்கலும். போகட்டும். இப்போதாகிலும் அவளைவைத்தாடும். அவளாலேயாகிலும் ஜயத்தை யடையலாமென்று துரியோதனாதிகளெல்லாம் புன்னகைகொண்டிருக்கப் பரிகாசமாகப் பேசினான்.

அதுகேட்ட மகாபுத்திமானாகிய உதிஷ்டிரரும் ஊழினாற் பேதையாக்கப்பட்டு, செய்வினை தவிர்வினை தோற்றாமற் சகுனியைப்பார்த்து, ஓ சகுனிராசனே! அப்படியேயாகட்டும். இரதிபோற் கொஞ்சங் கருநிறமுள்ளவளும், மிகவும் உயரமுங் குள்ளமுமில்லாதவளும், சகல லக்ஷணங்களமைந்து வெகுசுந்தரமாகிய தேகமுடையவளாகிய திரௌபதியைப் பந்தயம் வைத்தே னென்னவே: அச்சபையிலிருந்தபேர்களெல்லாம் சீ! சீ! இந்த உதிஷ்டிரருக்கு என்ன இப்படி புத்திகெட்டுப்போயிற்று? ஐயோ! மிகவு மூடராயிருப்போருங்கூட இப்படிப் பந்தயம் வைக்கமாட்டார்களே என்றார்கள். சிலர் இதென்னவிதி இவருக்கென்றார்கள். சிலர் சகுனி செய்யும் வஞ்சனை மிகக்கொடியதென்றார்கள். வீஷ்மர் - துரோணர்-முதலானோர்கள் மிகுந்த மனவேஷ்டையை யடைந்து, தேகமெல்லாம் வேர்வைவிட நின்றார்கள். விதுரர் மகாதுக்கத்தோடு தலையை வணங்கிநின்றார். கர்னன் அட்டகாசஞ்செய்துகொண் டிருந்தான். துரியோதனன் சந்தோஷமிகுதியினால் ஆசனத்திற் பொருந்தாமல் துள்ளிக்கொண்டிருந்தான், துச்சாதனன்மனக்களிப்போடு கர்ச்சித்துக்கொண்டிருந்தான். திரிதராஷ்டிரன்-குழந்தாய்துரியோதனா! என்னென்னஜயித்தாயென்றுகேட்டுச் சந்தோஷமாய் வினவிக்கொண்டிருந்தான்.இப்படிக்கு அச்சபை துக்கத்தையுஞ் சந்தோஷத்தையும் பொருந்தி இருகூறாயிருக்கச் சகுனியானவன் பாச்சிகையைக்கையிலெடுத்து, ஓய் உதிஷ்டிரரே! இது தான் முடிவான ஜயம் பாருமென்று ஆடித் திரௌபதியையுஞ் செயித்தேனென்று யாவருங்கேட்கச்சொன்னான். அக்கால் துரியோதனன்முதலானோர் திரௌபதி ஜெயிக்கப்பட்டாளென்று கைதட்டிக் காக்கைபோற் கதறிச் சொன்னார்கள். மற்றவரெல்லாம் விசனக்கடலிலாழ்ந்து நின்றார்கள்.

விதுரன் துரியோதனனைக் கண்டித்தல்.

கேளும் ஜெனமேஜெயமகாராஜனே! மகாபாவியாகிய துரியோதன் பாண்டவர்களுடைய சகலசம்பத்துக்களும்-அவர்களும்- திரௌபதியும்-செயிக்கப்பட்டுப்போகவே மதமிகுந்து அட்டகாசஞ்செய்து, சபையிலிருக்கிற யாவரும் இதென்ன விபரீதமென்று தத்தளித்துக்கொண் டிருக்கையில் விதுரனைநோக்கி, ஓவிதுரரே! பாண்டவர்களுக்கு இஷ்டநாயகியாகிய திரௌபதி நமக்கு முறியாளுள். ஆகையால் அவளை இப்போதே இவ்விடத்திற்கு இட்டுக்கொண்டுவாரும். அவள் நமது அரண்மனையில் மற்றுமுள்ள வெள்ளாட்டிகளோடு வீட்டைத் துடைப்பத்தால் விளக்குவது முதலாகிய பணிவிடைகளைச் செய்வது நமக்கு மிகவும் இஷ்டம். என்றுசொல்லக்கேட்ட அந்தவிதுரனுனவன் வெகு விசனத்தையுங் கோபத்தையுமடைந்து துரியோதனனைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினுன்: அடா துரியோதனு! நீ இதுவரையில் எப்படிப்பட்ட கொடுமையுள்ளவருஞ் செய்யாதசெய்கையைச்செய்ய முயலுகிறுய். அதைக்குறித்து உனக்கு எவ்வளவும் மனங்கூசவில்லை. ஆ! ஆ! என்ன ஆச்சரியம்? இயமனுடைய பாசம் கழுத்திற் சுற்றிக்கொண்டபடியினுலே உனக்குப் புத்தி விபரீதப் பட்டது. இவ்விதமான பாவச்செய்கையினுல் உடனே நரகக்குழியில்விழுகிற உன்னுத்துமாவைக்காக்கச் சற்றேனும் உனக்கு அறிவில்லை.

மேலும் ஒரு அற்பமிருகமானது தனக்குவரும் அபாயந்தெரியாமல் தூங்கிக்கொண்டிருக்குஞ் சிங்கத்தைதக்கிட்டிச் சேட்டைசெய்வதுபோல், நீ பாண்டவர்கள் விஷயத்திற் செய்கிறுய். பாண்டவர்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா? கோபமாகிய விஷமும், பாணங்களாகிய தீக்ஷண்யமானபற்களுமுடைய கொடியசர்ப்பங்களென்று நினை. சர்ப்பங்களைக் கோபிக்கச்செய்தால் மரணம் உடனேவரும். வேண்டாம். கொடியசெய்கை செய்யாதே. உயிரை இழக்காதே. நரகில்விழாதே. திரௌபதி உனக்குத் தாசியாகவில்லை, எப்படி யென்கிறுயா? முன்னம் உதிஷ்டிரர் தன்னைத் தோற்றுப் பின்னுலே திரௌபதியைப் பந்தயம்வைத்தார். அப்படிசெய்ய அவருக்கு அதிகாரமில்லை. இந்தத் திரிதராஷ்டிர மகாராஜாவானவர் அனியாயம் நடப்பதை விலக்காமல் உபேக்ஷைசெய்கிறுர். மூங்கிற்காடு ஒன்றோடொன்று இழைந்து தீபற்றிக்கொண்டு நாசமடைவதுபோல், இந்தக் கவுரவ குலமெல்லாம் ஒன்றோடொன்று கலகப்பட்டு அழியும்படியாகக் காலம்நேரிட்டது. இந்தத் திரிதராஷ்டிரராஜன் மகாபாவி. ஏனென்றுல்-தன்மகன் அதருமத்தை நடத்தச் சம்மதித் திருக்கிறுனன்றோ? ஆதலால் அவனுக்கு மிகுந்த விசன மனுபவிக்கும்படியாகிய விதியிருக்கிறது. உலகத்தில் எவனும் எப்படிப்பட்டவனையுங் குரூரமாகிய சொல்லினுல் வையக்கூடாது. அம்பிலெய்ததைக் காட்டிலுஞ் சொல்லினு லெய்வது வெகுகொடுமை. அம்பு மார்பிலேதைக்கும். சொல் இதயத்திலே தைக்கும். சொல்லம்பினுலாகிய மனப்புண் ஆருது. ஆகையாலே நீ பாண்டவர்களுக்குச் சகிக்கக்கூடாத கொடுமையுள்ள சொல்லைச் சொல்லாதே. உனக்குத் தகாது. அதனுல் இம்மையுமன்றி மறுமையுங்கெடும். பாண்டவரோ மகாபுருஷர். அவர் எங்கு எப்படியிருந்தாலும் மேன்மையுள்ளவர்கள். நீறுபூத்த நெருப்பினைப்போன்றவர்கள். அவர்களிலும் உதிஷ்டிரர் மகானுபாவர். நல்லொழுக்க முடையவர். அப்படிப்பட்டவருடைய மனங்கொதிக்கும்படி செய்யாதே. அவர்களைப்பார்த்து இகழ்ச்சியாகிய பேச்சுகளைப் பேசுவது மலையைப்பார்த்து நாய்குலைப்பதுபோ லிருக்கிறது.

அடா துரியோதன! நீ இப்படி செய்வதெல்லாம் பெருமையென்று நினைக்கிறுய். அப்படியல்ல. இயமகிங்கரர் வெகு நரகங்களைச் சீர்படுத்தி வாசலைத்தடையின்றித் திறந்து, நீ புத்திரர் - மித்திரர்- பந்துக்கள்-முதலானபேர்களோடு எப்போதுவருவாயென்று எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறுர்கள். அது உனக்குத் தெரியவில்லை. உனக்குத் துணைப்பட்ட பேர்களும் உன்னோடுகூடவே வருவார்கள். அடா மூடா! வீணேயேன் கெட்டுப்போகிறுய்? கர்வப்படாதே. எப்படியும் அவர்கள் சீர்படுவார்கள். நீ தான் கெடுவாய். ஆனுல் இப்போது சுரக்காய் மிதக்கிறது. கல் அமிழ்ந்துபோகிறது. தூண்டிலினுனியிலிருக்கும் மாமிசத்திற்கு ஆசைப்பட்டு மீன் உயிரையிழப்பதுபோல், நீ பாண்டவருடைய செல்வத்திற் காசைப்பட்டு நாசமடையப்போகிறுய். எத்தனை சொன்னுலும் உனக்கு ருசியாததுபோல் உன்பிதாவுக்கும் ருசிக்கவில்லை. அவரைப்பற்றி இந்தவம்சம் நாசமடையப்போகிறது. ஐயோ! மகாபெருமையுள்ள இந்தக்குலத்துக்கு இப்படிப்பட்ட கேடுவரலாமாவென்று அல்லும்பகலும் விசனத்தீயில் விழுந்து தவிக்கிறேன். என்பேச்சைக் கேட்பாரொருவரையுங்காணேன். என்னசெய்வேன்? வரவேண்டுவது வந்தேதீரும் யாரென்ன செய்யலாமென்றுசொல்லி வாயைமூடிக்கொண்டான். அதுகேட்ட துரியோதனன் கோபதாபத்தினுல் தேகமெல்லாம் புழுங்கி, சீ! சீ! சீ! இந்தவிதுரன் என்றைக்கும் நமக்குச் சத்துரு. வெகுதுஷ்டன். இவன் பிழைப்பைச்சுடவேண்டும். நமக்குண்டாகுஞ் செல்வத்தைச் சகிக்கமாட்டான். இவன் கெட்டான். இவன்முகத்திலும் விழிக்கலாகாது. என்றுசொல்லிப் பின்பு தன்சாரதியாகிய பிரதிகாமியென்பவனைப் பார்த்து, அடா பிரதிகாமீ! நீபோய்த் திரௌபதியை இச்சபைக்கு அழைத்துக்கொண்டுவா. பாண்டவர்களுக்குப் பயப்படாதே. விதுரன் வெகுதுஷ்டன். நமக்கு விரோதி. அவனுக்கு அவர்களிடத்திற் பக்ஷபாதமுண்டு. ஆதலால் நீ சீக்கிரம்போய் அழைத்துக்கொண்டு வா

வென்றான். அந்தச்சாரதி அப்பேச்சைக்கேட்டு, மனதில் மகாதுயரத்தோடு திரௌபதி யிருக்கு மிடத்திற்குச்சென்றான். கேளும் ஜனமேஜெய மகாராஜனே! மகா பராக்கிரமசாலிகள் அந்தப்பாண்டவர்கள். அந்தத் துரியோதனன் முதலானோருடைய கொடிய செய்கையையும், தங்களுக்கு நேரிட்ட வியசனத்தையும், திரௌபதிக்கு வந்த ஆபத்தையும், அவர்கள் அக்காலத்தி லெப்படி அநுபவித்தார்களோ தெரியாது. எனக்குச்சொல்ல வாபெழவில்லை. ஆகிலும் முக்கியமாய் நடந்ததைச் சொல்லுகிறேன் கேளும்: என்று வைசம்பாயனர் சொல்லி மேல்நடந்த சரித்திரஞ் சொல்ல வாரம்பித்தார்.

திரௌபதிதுரியோதனன்சபைக்குவருதல்.

ஓ அரசனே! அந்தப் பிரதிகாமி யென்னுஞ் சாரதி திரௌபதி இருக்குமிடஞ் சென்று திரௌபதியைப்பார்த்து, அம்மா! உமதுகணவராகிய உதிஷ்டிர மகாராஜன் சூதாடத்தொடங்கி அதிலாசை தலைமண்டைகொண்டு, இராச்சிய முதலாய்ச் சகல சொத்துக்களையும் பந்தயம்வைத்துத் தோற்று, மறுபடியுமொழியாமல் முறையே தம்பிமார் நால்வரையுந் தம்மையுந் தோற்றுப் பின்பு உம்மையும் வைத்துத் தோற்றார். யாவரையுந் துரியோதனன் ஜெயித்தான். நீரும் அவனாலே ஜயிக்கப்பட்ட படியினாலே, சபைக்கு உம்மை யழைத்துவரும்படி என்னை யனுப்பினான். நான் சுதந்திரனாகாமையாலே கட்டளையை மீறமாட்டாமல் வந்தேனென்று சொல்லியதைக் கேட்ட திரௌபதியானவள், அப்பா பிரதிகாமி! நீசொன்ன வார்த்தைகளைக் கேட்டேன். லோகத்திலே யாராகிலும் பெண்டாட்டியைப் பந்தயம்வைத் தாடுவார்களுண்டா? மகாபுத்திமானாகிய உதிஷ்டிரர் என்னைவைத்தாடியது மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது. இருக்கட்டும். அவர் யாதொன்றினாலேனு மதித்து உடம்புதெரியாமல் என்னைப் பந்தயம் வைத்தாரா? இல்லையென்று துரியோதனாதிகள் ஏதாகிலும் மோசஞ் செய்தார்களா? அதை எனக்குத் தெரியச்சொல்வாயென்று கூற, அச்சாரதி - கேளம்மா பாஞ்சாலராஜன் புத்திரியே! அதிகமாய் அவர்கள் வஞ்சனை செய்யவில்லை, இவரே ஆவேசங்கொண்டு யாவரையுந் தோற்று உம்மையுந் தோற்றாரென்று சொன்னான். அதுகேட்ட திரௌபதி அவனைப்பார்க்க ... ... பாதி! நம்பரை உம்மைப் பந்தயம் வைத்துத் தோற்றபின் என்னைப் பந்தயம் வைத்தீரா? அல்லது என்னை முன்னாலே பந்தயம்வைத்துத் தோற்றீரா? என்று அந்த உதிஷ்டிரனைக் கேட்டறிந்து வந்துசொல். பின்பு என்னை யழைத்துக்கொண்டு போகலாமென்று சொல்ல, அந்தச்சாரதி சபைக்குவந்து தருமபுத்திரனைப் பார்த்துத் திரௌபதி சொன்னதைச் சொல்ல, அவர்வெட்கமும் விசனமு மிருந்து ஒன்றுஞ் சொல்ல மாட்டாமல் தலையை வணங்கிக்கொண் டிருந்தார்.

அப்போது துரியோதனன் சாரதியைப்பார்த்து, அடா பிரதிகாமி! இன்னமும் அவளுக்கு அந்தப் புரமோ? இங்கேவந்து யாவருமறியச் சொல்லவேண்டுவதைச் சொல்லிக் கேட்கவேண்டுவதைக் கேட்கட்டும். சீக்கிரம் அழைத்துக்கொண்டு வாவென்ன, சாரதிகேட்டு மறுபடியுந் திரௌபதியி னிடத்திற்கு வந்து, விசனத்தினால் வாயெழாமல் அவளைப்பார்த்து அம்மா! நானென்ன சொல்லுவேன்? உன்பர்த்தா செய்தகாரியம் அப்படிப்பட்டதா யிருந்தது. எது கேட்கவேண்டு மானாலுஞ் சபையில் வந்து கேட்கட்டும் அழைத்துக்கொண்டு வாவென்று துரியோதனன் சொன்னான். உன்பர்த்தா ஒன்றுஞ்சொல்லாமல் தலையை வணங்கிக்கொண் டிருக்கிறார். அந்தத் துரியோதனன் சகல பந்துக்களோடும் நாசமடைவனே யல்லது, இனி செல்வத்தை யனுபவிக்க மாட்டானென்று தோற்றுகிறது. கேடுகாலங்கிட்டினபடியினாலே தான் இப்படிப்பட்ட துர்ப்புத்தி யவனுக் குண்டாயிற்று. என்று சொன்னதைக்கேட்ட பாஞ்சாலபுத்திரியானவள், சூதென்பதொன்று தெய்வத்தினால் சிருஷ்டிசெய்யப்பட்டது. அதுயிருக்கட்டும்: அதை ஆடினால் தான் என்ன? அதிலுந் தருமாதருமங்க ளிரண்டில்லையோ? அவ்விரண்டில் எவன் தருமத்தைவிடாமற் காத்து வருகிறானோ? அவன் என்னைக்காப்பன். இதிற் சந்தேகமில்லை. ஒருவன்பேரிலுங் குற்றமில்லை. என்பொல்லாத விதி அப்படியிருந்தது. நான் பாவத்தைப் பண்ணிப் பெண்ணாய்ப் பிறந்தேன். வந்ததையெல்லாம் அநுபவிக்கவேண்டுமேயல்லது வேண்டாமென்றாற் போகுமோ? அப்பா சாரதி! சகலராஜாக்களும் பெரியோர்களு மிருக்கிற சபையில் நான் எப்படி வருவேனென்று சொல்லி, மிகுந்தவிசனத்தினால் முகங்கன்றிக் கண்களில் நீர்ததும்ப நிற்குமளவில், உதிஷ்டிரர் திரௌபதியைச் சபைக்குவரும்படி இஷ்டனாகியவொருதூதனோடுசொல்லியனுப்பினார். அவன் வந்து திரௌபதிக்கு அச்சேதி தெரிவித்த மாத்திரத்திலே, திரௌபதி விசனசாகரத்தி லாழ்ந்து, மெய்யெல்லாம் வேர்த்து நடுக்கமுற்று, தலைமேற் கையை வைத்துப் பெருமூச்சுவிட்டு, ஐயோ! இதென்னகாலம்? தருமம் இப்படியுமிருக்கிறதா? ஆகிலும் பர்த்தா வார்த்தையைப் பரிகரிக்க லாகாதென்று சொல்லி அப்போது புஷ்பிணியாயிருப்பதுபற்றித் தரித்திருக்க ஒரு வஸ்திரத்தோடேயே நாணத்தினால் அங்கமெல்லாங்கூச அழுதுகொண்டு, மாமனாராகிய திரிதராஷ்டிரன் முதலானோ ரிருக்குமிடத்தில் வந்து நின்றாள்.

துச்சாதனன் திரௌபதியின் கூந்தலைப் பற்றி இழுத்துவருதல்.

இப்படிக்குக் கண்களினின்றும் முத்துக்கள்போல் நீர்வடிய வெட்கத்தினால் முகத்தை மூடிக்கொண்டு திரௌபதி சபைக்குவரவே யாவரும் உள்ளநொந்து

துரியோதனனை மனதினு லிகழ்ந்தார்கள். பாண்டவர்கள் ஒன்றுந்தோற்ருமல் தலையிறங்கிக்கொண் டிருந்தார்கள். அவளை ஒருவரும் கண்திறந்து பார்க்கவில்லை. துரியோதனன் முதலான நான்கு துஷ்டர்களும் பார்த்துச் சிரித்துப் பரிகாசஞ் செய்துகொண்டிருந்தார்கள். இப்படி இருக்கிற துரியோதனன் பிரதிகாமியைப் பார்த்து, அடாசாரதி! அவள் அங்கே ஒதுங்கி நிற்பானேன்? என்னிடத்திற்கு அழைத்துக்கொண்டு வா. அவள் வினவவேண்டுவதை யாவரும் அறிய வினவட்டும். உதிஷ்டிரரும் இங்குவந்தே அதற்கு விடைதரட்டும். அவ்விருவரும் பேசுவதை யாவரும் பார்க்கட்டும். ஆனபடியினலே இவ்விடத்திற்கு வரச்சொல் லென்ருன். அதுகேட்ட அந்தப் பிராதிகாமி மனதில் வெகுதுக்கத்தையடைந்து, அவள்சபிப்பாள் என்றுபயந்து, இந்த வீஷ்மர் முதலான மூப்பரும் பார்த்துக்கொண்டிருக்கிருர்களே: ஐயோ! இதென்ன அனியாயமென்று மனதிற் சொல்லிக்கொண்டு சும்மாவிருந்தான். அதுகண்ட துரியோதனன் தன் தம்பியாகிய துச்சாதனனை நோக்கி, தம்பி துச்சாதன! இந்தச் சாரதி வீமசேனனுக்காகப் பயந்து அவளை யழைத்துவரமாட்டாம லிருக்கிறுன். நீயோ அவர்களுக்குப் பயப்படாதவ னல்லவா? பராதீனராகிய அவர்கள் நம்மை என்ன செய்வார்கள்? நீயோ வெகுதீரன். ஆனபடியினலே அவளையிங்கே இழுத்துக்கொண்டு வாவென்று சொல்லவே மகாபாவியாகிய அந்தச் துச்சாதனன் அப்படியே செய்கிறேன் அண்ணவென்று சொல்லி எழுந்திருந்து, துரோபதியினிடத்திற்குப்போய் சற்றுமஞ்சாமல் அவளைப்பார்த்துச் சொல்லுகிருன்.

அடிதிரௌபதி! என்ன தலைகுனிந்துநிற்கிருய்? உனக்கு மானமோ? என்னைக்கண்டு வெட்கப்படவேண்டாம். நீ எங்களாலே ஜயிக்கப்பட்ட படியினலே எங்களுக்குத் தாசியானுய். துரியோதன மகாராஜாவை வந்துகண்டு பணி. அவர் உன்னைத் தமது சமீபத்தில் வரவழைக்கிருர். இந்தக் கவுரவர்களுக்குள் யாரிடத்தி லிஷ்டமோ அவர்களைச்சேரலாம். என்று சொல்லிச்சிரித்துக்கையினுற்பிடித்து இழுக்கத்தொடங்கினுன். அந்தத் திரௌபதியானவள் மனம்பொருமற் [illegible] அழுதுகொண்டு கைகளினுல் முகத்தை மூடினவளாய், மாமிமாமுதலான பேர்களிருக்கு [illegible] பாவி பின்றொடர்ந்து, அடி ஐவரைப்புணரும் அவிசாரீ! உனக்கு மானமென்ன? ஈனமென்ன? வெட்கமென்ன? ஏன் என்பேச்சைத் தள்ளிப்போட்டு ஓடுகிருய்? ஓடாதே. எங்கள் வெள்ளாட்டியாகிய உன்னை இழுத்துக்கொண்டு போவோம். இஷ்டமானபடி செய்வோம். என்று பல கடுஞ்சொற்களைச் சொல்லி இரைந்து கொண்டே போய், கருமுகில்போற் கறுத்து - மயிற்றோகைபோல் நீண்டு-கடலினலைபோன்ற காந்தியையுடையதாய்ப் படிப்படியாக வளைந்து விளங்காநின்ற அவளுடைய கூந்தலினைப் பற்றி இழுத்தான். இராஜசூயமாகி சாம்பிராச்சிய பட்டாபிஷேகஞ் செய்யும்போது சகல புண்ணிய தீர்த்தங்களினின்றுங் கொண்டுவந்து திவ்விய ஒஷதிரசங்களோடு சேர்த்து அபிமந்திரிக்கப்பட்ட மகா தீர்த்தங்களைப் பெரியோர்கள் எந்தக்கூந்தலின்மீதிற் புரோக்ஷித்தார்களோ? அப்படிப்பட்ட கூந்தலை அந்தக்கொடும்பாவி கைகூசாமற்பற்றி இழுக்குமளவில், சகலஸ்திரீகளும் ஆ! ஆ! வென்று கையைப் பிசைந்துகொண்டு மார் மேலடித்து, இது அனியாயம்: இது அனியாயம்: என்று கூவினுர்கள். வீஷ்மராதியோர் மனம்பதைக்க முகங்கறுக்க - மூக்கின்மீதில் விரலைவைத்துத் திகைத்து, இதென்ன விபரீதகாலம்? இதென்னகொடுமை? என்று சொல்லித் தங்களுக் குள்ளாகவே தாங்கள் அடக்கற்கரியதான அளவற்ற வருத்தங்கொண்டிருந்தார்கள்.

திரௌபதிசபையாரைநோக்கிச் சொல்லுதல்.

இவ்விதமாய்ச் செல்வமும்- ஆயுளும்-நாசமடையும் படியாகிய துச்சாதனன் சகலவிதத்தாலும் பூசிக்கத்தக்க மகாராஜ பத்தினியாகிய பாஞ்சாலியை இழுக்க, அவள் வஸ்திரம் ஒருபுறம் அவிழ்ந்து அங்கங்கள் வெளிப்பட, உடனே அவள் நாணத்தினுல் மெய்குன்றிக் கைகளினுல் அவயவத்தை மறைத்துக்கொண்டு, கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகக் கோவென்று கூவியழுது அவனைப்பார்த்து, அடாபாவி! என்னை இழுக்காதே. நான் இப்போது புஷ்பிணி. ஒற்றைவஸ்திரந் தரித்திருக்கிறேன். அனியாயஞ் செய்யவேண்டாம். காலமுள்ளமட்டும் நரகம் அனுபவிக்க வேண்டும். லோகநாதராகிய எனது நாயகரை இப்படி அலக்ஷியஞ்செய்து என்னைச் சபையினடுவி லிழுப்பது உனக்கு நன்மையன்று. உனக்குக் குலமானமாகிலுமில்லையா? என்று சொல்லக்கேட்ட அந்தப் பாதகன், அடிதுட்டச்சிறுமீ! ஏது கொஞ்சமும் பயமில்லாமற் பேசுகிருய்? நீ ஐவரைப்புணரும் வேசி. உனக்குமானமென்ன? நாணமென்ன? நீ வெகு கொழுத்தவளல்லவா? பத்திரம் பிதற்ருதே. எங்களுக்குத் தாசியாயினுய். எசமான ருத்தரவின்படி நடக்காமற் போனுற் சிக்ஷைகிடைக்கும். பதருதே: வெள்ளாட்டியைப் புஷ் [illegible] பார்ப்பது முண்டோ? நீ ஒற்றை வஸ்திரத்தோ டிருந்தாலென்ன? வஸதிர மில்லாமல்தானிருந்தாலென்ன? அடிவேசி! நாங்கள் ராஜாக்கள். எப்படி வேண்டுமோ அப்படிச்செய்வோம். எங்களைத் தடுப்பவர் யாரிருக்கிருர்கள்? இப்போது கிருஷ்ணனையும்-வியாசனையும்-வீமார்ச்சுனர் முதலானோர்களையுங் கூவியழைத்துக்காக்கச்சொல்லடி. தாசியாகிய நீ துரியோதனமகாராஜன் அழைக்கையில் வந்து அவர்பேச்சைக்கேட்டு அவரிஷ்டப்படிநடக்கவேண்டும். உன்னை நிருவாணமாய்நிறுத்திப்பார்க்க அவருக்குமனமிருக்கு

மாகில் நீயப்படியே இருக்கவேண்டும். அதோபாரடி
வெள்ளாட்டி உன்புருஷர் குறும்பாடுகள்போல் தலை
யைக் குனிந்துகொண் டிருக்கிறார்கள். அவர்களும்
எங்கள் காலாலிட்டவேலையைத் தலையால் நிறைவேற்
றவேண்டிய மறிகளானார்கள். இன்னுமுனக்கென்ன
இறுமாப்பு? என்றிப்படி மனம்போனபடி பிதற்றியி
ழுக்கவே, அவள் நடுநடுங்கி யொன்றுந் தோற்றாமல்
வியசனத்தில் மூழ்கிப்போய், அவிழாநின்ற கூந்தலைக்
கையாலணைத்துக்கொண்டு, காந்தாரியாகியமாமியைக்
கூவித் தொண்டையும்வரண்டு, அந்தச் சபையிலிரு
ப்பவர்களையெல்லா நோக்கி மெள்ள ஒருவார்த்தை
சொல்லுவதாயினாள்.

ஐயோ! இந்தச்சபையி லிருக்கிறவர்க ளெல்லா
ம் வேதசாஸ்திரங்களை நன்றாய்ப் படித்தவர்கள். யாவ
ருந் தருமவான்கள். மகாசூரர். இப்படிப்பட்டவர்கள்
முன்னிலையில் இந்தப்பாதகன் என்னை யிப்படி அனி
யாயஞ்செய்து இழுக்கிறானே: இந்தக்காலத்தில். இவ்
விதமாய்ப் பெரியோர்களிடத்தில் நான் வரலாகுமா?
இக்கொடிய செய்கையை யொருவருந் தடுப்பாரில்லை
யோ? இது வீணாய்ப்போகாது. இவனுக்குத் தேவேந்
திரன் சகாயமாய் வந்தாலும் பாண்டவரிடத்தி னின்
றும் இவன் தப்பமாட்டான். அவர்களின் ஆயுதத்தி
ற்கு இரையாகப் போகிறான். சந்தேகமில்லை. இப்
போதவர்கள் தருமமென்னுங் கயிற்றினாற் கட்டுண்டு
சும்மாவிருக்கிறார்கள். தருமத்தின் சூக்ஷமம் அவர்க
ளறிந்தவொன்பது பெரியோர்களுக்கேதெரியும். இவ
ர்கள் சும்மா யிருந்தாலுந் தெய்வஞ் சும்மா யிராது.
இப்படிப்பட்ட கஷ்டத்தை நானடைவதற்குக் கார
ணம் என்பொல்லாதவிதியேயன்றி வேறன்று. ஒருவர்
மீதிலும் பழியில்லை. இல்லாவிட்டால் .அசகாயசூரரா
கிய பாண்டவர்களின் இஷ்டபத்தினியாகிய என்னை
ஒரு அற்பன் சபைநடுவே விழுக்கும்படி யிருக்குமா?
இந்தத் துராத்துமாவினுடைய பலத்தை யார்புகழ்
வார்கள் ? சீ ! சீ ! இவனையும் இவனை ஏவி இப்படி
செய்யச் சொன்னவனையுஞ் சுடவேண்டாமோ ? பர
தகுலத்தில் நிலைபெற் றிருந்த தருமம் இன்றுதான்
நாசமடைந்தது. இராஜதருமமும் பாழாயிற்று. குல
தருமமென்னுங் கடலுங் கரையைக் கடந்தது. இப்ப
டிக்கில்லாமற்போனால் மகானுபாவராகிய வீஷ்மரும்
துரோணரும் - சத்தியம்பேசாம லிருப்பார்களா? திரி
தராஷ்டிரருஞ் சும்மாவிருப்பாரா ? ஓ ! ஓ ! இச்சபை
யில் தருமமறிந்தவர்கள் ஒருவருமே யில்லையென்று
நினைக்கவேண்டுவதா யிருக்கிறது. இருந்தால் இவ்வ
னியாயத்தை உபேக்ஷை செய்வார்களா? அவர்களாய்ச்
சொல்ல மனமில்லாத வர்களா யிருந்தாலும் யானே
ஒன்று வினவுகிறேன்: அதற்கு விடையாகிலுஞ்
சொல்லவேண்டும். என்று பிரலாபித்துப் பின்னுஞ்
சபையாரைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

ஓ சபையிலிருக்கும் பெரியோர்களே ! ஓ ஆசாரி
யர்களே ! ஓதருமவான்களே ! ஓ ஞானவான்களே!
இவர்களால் நான் ஜயிக்கப் பட்டேனா ? ஜயிக்கப்பட
வில்லையா ? இதைத் தருமத்திற்கு ஒத்தப்படி சொல்
லுங்கள். என்றுசொல்லி வியசனாக்கினியிலு மிரட்டி
த்த கோபாக்கினியைப் பொருந்தி யிருக்குந் தன்கண
வரை வெகு தீக்ஷண்யமாகிய கடைக்கண்ணினாலே
நோக்கினாள். அந்நோக்கம் பட்ட மாத்திரத்திலே
பாண்டவர்களுக்கு இராச்சிய முதலாகிய செல்வங்க
ளைப் போக்கடித்த போதும் உண்டாகாத மகாதுக்க
மொன்று பொங்கிப்பாயவே, நெய்யாகுதி செய்யப்
பட்டது போற் கோபாக்கினியானது திகுதிகென்று
சொலித்தது. அப்போது துச்சாதனன் இவள்நோக்கிய
குறிப்பும் அவர்கள்வெகுண்டநெறிப்புமறிந்து, திரௌ
பதியைச்-சீ!வாடிவெள்ளாட்டி. தருமமும் - சத்திய
மும் - உனக்கேது ? என்னமோ மயக்குகிறாய். வாடி
யிங்கே என்றுபிடித்திழுத்துக் கல்லென்றுசிரித்தான்.
அப்போது கர்ணன்—அடா துச்சாதனா ! சரி: சரி:
நன்றாய்ச் செய்தா யென்றான். சகுனியானவன் இவ
னுக்குச் சமான மாகிய தைரியசாலி கிடையாது.
இவனே புத்திசாலி யென்றான். துரியோதனன் - துச்
சாதனா ! இப்போதுதான் நீ எனக்குத் தம்பியென்று
மெச்சினேனென்றான்: குருடன் முகமலர்ச்சியோடு
புன்னகை கொண்டிருந்தான். மற்றையரெல்லாரும்
விசனக்கடலி லாழ்ந்துபோனார்கள். இப்படியிருக்கை
யில் வீஷ்மர் துரோபதியைப் பார்த்து, அம்மா சௌ
பாக்கியவதியாகிய பெண்ணரசே ! நாங்கள் ஒன்றுஞ்
சொல்லமாட்டாதவர்களா யிருக்கிறோம். இப்போது
நீ கேட்டவினாவுக்குத் தருமசூக்குமத்தை நோக்கி
ஒன்றுஞ் சொல்லக்கூடவில்லை. அதென்னவென்றால்-
ஸ்திரியா யிருக்கிறவள் தற்சுதந்தரை யாகாமற் பர்த்
தாவுக்குச் சொத்தா யிருக்கிறாள். அந்தப் பர்த்தா
ஜெயிக்கப்பட்டபோதே அவளுஞ் ஜெயிக்கப் பட்ட
வள்தான். உதிஷ்டிரனோ ? எதைத்துறந்தாலுந் தரு
மத்தைத் துறக்காதவன். அவனை நான் ஜெயிக்கப்
பட்டே னென்கிற போதே நீயும் ஜயிக்கப்பட்டவள்
தான். ஆகிலும் இன்னமுமதில் ஓர் சூக்ஷமமிருக்கி
றது. அஃதெனக்கு இப்போது தோற்றவில்லை. ஆன
படியினாலேதான் ஒன்றுஞ் சொல்லாம லிருக்கிறேன்
என்று சொன்னார். அப்படி சொல்லக்கேட்ட திரௌ
பதி சொல்லுகிறாள்:

கேளுங்கள் சபையி லிருக்கும் பெரியோர்களே!
உதிஷ்டிரமகாராஜா வலுவில்வந்து சூதாடவில்லை. அ
வர்பாட்டுக் கவர் இராச்சியத்தி லிருந்து தருமபரிபா
லனம் பண்ணிக்கொண் டிருக்கையில், அவருடைய
செல்வங்களைக் கவரவேண்டு மென்று துஷ்டரும்-
வஞ்சகரும் - அசத்திய வான்களுமாகிய இவர்களெல்
லாந் துராலோசனை செய்து, மந்திரியைக் கொண்டு
அழைப்பித்து, சூதாடுவதில் இஷ்ட மில்லாதவரும்
அதிற் சாமர்த்திய மில்லாதவருமாகிய அந்தத் தரும
ராஜாவை வலுவிலாடவைத்து, மோசத்தினாற் சகல
த்தையும் அபகரித்து, மனமறிய அன்னியாயஞ் செய்

தார்கள். அவருக்கோ ? சூதாட நன்றாய்த்தெரியாது. இப்பாவிகளோ ? அதில் வல்லவர்கள். அவரோ ? கபடில்லாதவர். இவர்களோ ? கபட்டின் அவதாரங்கள். அவரோ? சத்தியசந்தர். இவர்களோ ? பொய் பேசுகிறவர்கள். அவரோ ? அவ்வாட்டத்தில் விருப்பமில்லாதவர். இவர்களோ ? அவ்விருப்ப முள்ளவர்கள். இப்படி ஒரு தன்மையாலும் பொருத்த மில்லாமலிருக்க, அவரோடு இவர்கள் சூதாடியது நியாயமா? இப்படிப்பட்ட நியாயத்தை உலகம் ஒப்புக்கொள்ளுமா? தருமந்தானேற்குமா ? போகட்டும். பொருள்களையும் ராச்சியத்தையும் பறித்ததுபோதாமல் அப்பொருள் முதலியவற்றை வைத்தாடிய அவரையும் ஆடி வேற்றிகொண்டோமென்று சொல்லி இப்படிப் பட்டகொடிய அனியாயஞ் செய்கிறார்களே: இதுவுந் தருமந்தானா ? இது மனிதரொருவரு மில்லாத காடல்லவே: சகலதருமங்களையும் நியாயங்களையு மறிந்த பெரியோர்களின் சபையல்லவோ ? இத்தன்மையான சபையில் தருமாதருமமும் - நியாயா நியாயமும்- தேறாமற்போனால், மற்றெங்கேதான் தேறும் ? இங்கே இருக்கிற பேர்களெல்லாம் மக்களைப் பெற்றுப் பெண்டிரோடு கூடி எல்லாச் சுகதுக்கங்களையும் அறிந்தவர்களேயன்றி, ஒன்றுந் தெரியாதவர்களல்லவே: இப்படிக் கிருக்கிறபடியினாலே என்கேள்விக்கு உத்தரவு கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் இச்சபையாருக்குப் பெரும்பாவம் வரும். இவ்விஷயத்திற் பெரியோர்கள் சொல்லிய சாஸ்திரத்தைக் கேளுங்கள். எந்தச்சபையில் அறிவினால் முதிர்ந்தவர்களில்லையோ? அது சபையன்று. எவர்கள் தருமத்தைச் சொல்லாமலிருப்பார்களோ ? அவர்கள் அறிவினால் முதிர்ந்தவர்களல்லர். எதிற் சத்தியமென்பதில்லையோ? அது தருமமன்று, எது மோசத்தோடு கூடியதோ ? அது சத்தியமல்ல. இந்த வசனத்தின்படி யான்கேட்ட தரும விசாரணைக்கு மறுமொழி சொல்லாமற் போனால், இது சபையுமல்ல. இவர்கள் பெரியோர்களுமல்ல. நடந்தசரித்திரந் தருமமுஞ் சத்தியமு முள்ளதல்ல. ஆதலாற் காரணத்தை நன்றாய்ச் சோதித்து, தாக்ஷணியப் படாமலும் - பயப்படாமலும்-தருமத்தையுஞ் சத்தியத்தையுநோக்கி உத்தரஞ்சொல்லுங்கள். என்று பாஞ்சாலி சொல்லிக்கொண்டே மீட்டுங் கடைக்கண்ணினாற் கணவனை நோக்கினாள்.

வீமசேனன் தருமராஜனை வெறுக்க அருச்சுனன் தேற்றுதல்.

இஃதிப்படியிருக்க நாசமடையப் போகிறவனாகிய துச்சாதனன் யாவருஞ் செவிகளை மூடிக்கொள்ளத் தக்கதான கொடுஞ்சொற்களைச் சொன்னான். இழுக்கிறதும் அடிக்கிறதுமாக வெகு தொந்தரவுகளையுஞ் செய்தான். இப்படிக்கு வெகுவிதமாய் அவமானப்படாநின்ற திரௌபதியைப்பார்த்த வீமசேனனானவன் மனஞ்சகிக்காமல், அண்டபடாத விசனத்தையுங்கோபத்தையுமடைந்து, சமீபத்திலிருக்குந் தமயனைப் பார்த்துப் பெருமூச்செறிந்து, உதடுதுடிக்கச் சொல்லுகிறான்: ஓ அண்ணா ! நீர் எல்லாந்தெரிந்தவராயிருந்தும் மூடருடன்கூடி செய்யாதசெய்கைகளைச்செய்தீர். லோகத்திலே சூதாடுகிறவர் வெகுபேர்களுண்டு. அவர்களெல்லாம் பொருள் - இரத்தினம் - வாகனம்- முதலானவைகளைவைத் தாடுவார்களே யல்லது, தங்களுடைய தாசிதாசர்களைக்கூட வைத்தாடமாட்டார்கள். அவர்களுக்கு அடுத்தவர்களாகிய தாசிதாசரிடத்திலிருக்கிற அவ்வளவு மானமுந் தயையும், பாணிக்கிரகணஞ்செய்த பத்தினியினிடத்தில் உமக்கில்லாமற் போச்சுது. கொண்ட பெண்டாட்டியைப் பந்தயம் வைத்தாடியதைக் கண்ணினாற் பார்த்ததுமில்லை. காதினாற் கேட்டதுமில்லை. நாம் திக்குவிஜயஞ் செய்து சேகரித்து வந்த பொருட்குவைகளையும், பல வரசர் காணிக்கையாய்க் கொடுத்த திரவியங்கள் - ரத்தினங்கள் - வஸ்திரங்கள் - உபகரணங்கள் - வாகனங்கள் - முதலானவைகளையும், கோட்டை- வீடு-வாசல் தோட்டம் சபை முதலியவைகளையும் பந்தயம் வைத்துத் தோற்றீர். அதனாலே எனக்கு எவ்வளவும் விசனமில்லை. ஏனென்றால் - இப்படி அனேகம் பொருள்களை நினைத்தபோதே சம்பாதிக்கலாம். எங்களைத் தோற்றதனாலுந் துக்கமில்லை. நாங்களோ ? சூரர். இராஜாதிராஜராகிய உம்மைத் தோற்றதற்குக் கிஞ்சித்து விசனப்படவேண்டுவதா யிருக்கிறது.

இவையெல்லாமிருக்கட்டும்-திரௌபதியானவள் ஸ்திரீசாதி. மகாராஜகுமாரி. நம்மைக்கைபிடித்தவள். நம்மையே நம்பினவள். அப்படிப் பட்டவளை இந்தப் பாதகர்கையி லொப்புவித்தீரோ: இதைக்குறித்து உமக்குக் காலபலத்தினாற் புத்திகெட்டதென்று நினைக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் நமது உயிரினுஞ் சிறந்தவளாகிய பாஞ்சாலியை வேண்டியபடி மானபங்கஞ்செய்யவும், நாம் எதிரிற் சும்மா பார்த்திருக்கவும், பெரியோர்களெல்லாம் வருந்தி எதுவும் பேசாமற் சும்மாயிருக்க நேரிட்டதைக் காட்டிலும்; நமக்குவேறு துக்கமுண்டோ? நீர்மகாராஜா. சகலத்திற்குஞ்சுதந்தரர். எந்தச்சொத்தை எப்படி செய்யவேண்டுமானாலுந் தடுப்பார் யாருமில்லை. ஆகிலும் நெடுநாளாய் வேள்விக்கு உபயோகப்பட வைத்திருந்த நல்ல பசுவைக் கோவதைசெய்யுஞ் சண்டாளர்கையிலொப்புவித்ததுபோல், இவளை அவர்களிடத்தில் ஒப்புவித்தது மிகுந்த அதருமம். நீர் இப்போதுசெய்த காரியமெல்லாம் பாவத்திற்குக் காரணமாகிய் காரியமேயன்றி நற்செய்கையன்று. நீர் தரும மறிந்தவருமன்று. திரௌபதியைக் கண்ணெடுத்துப் பார்த்த நிமிஷத்திலேயே அந்தப்பாதகரைக் கையிலேந்திய கதாயுதத்தினாலே இருந்தவிடந் தெரியாமற் போகும்படி செய்வேன். என்னைப் பராதீனனாக்கிவிட்டீர். என்கோபத்

தையும் - பராக்ரமத்தையும்-இந்தச்சபையி லுபயோக மாகாதபடி பாழாக்கினீர். ஆகிலுஞ் சகிக்கக்கூடவில்லை. இப்போ தென்னசெய்யவேண்டுமென்றால், நீர் எந்தக் கையினாலே பாச்சிகை யாடினீரோ? அந்தக் கையைத் தீயிற் கொளுத்திச் சாம்பராக்க வேண்டுமென்றுசொல்லிக் கோபாவேசங் கொண்டு சகாதேவனை நோக்கி, ஓசகாதேவா! நீ இப்போதே போய் நெருப்பு கொண்டுவா. இந்தக்கெட்டக்கையைக் கொளுத்திப் போடுகிறே னென்று திரஸ்காரமாய்ச் சொன்னான்.

அதுகேட்ட அர்ச்சுனன் வீமசேனனைப்பார்த்து அண்ணா! நீயேன் கொஞ்சமும்யோசிக்காமல் மகாராஜாவாயும் - நமக்கு மூத்தவாாயும் -மகா தருமசீலராகியு மிருக்கிற உதிஷ்டிரரைக்குறித்துக் கொடுமையாய்ப் பேசுகிறாய்? ஒருபோதும் நீ இப்படி சொன்னதில்லையே: இப்போதும் உன்மீதிற்குற்றமில்லை. நமக்குள்ளே ஒருவருக்கொருவர் பகையாக வேண்டுமென்று சத்துருக்கள் உனக்கிப்படிப்பட்ட கோபம்வரும்படி செய்ததினாலே, நீயதின்படி நிறைவேற்ற முயன்றாய்: ஏதேது வரவேண்டுமோ அதெல்லாம் வந்துதானே தீரும். ஆகிலும் நீபதறிச் சத்துருக்களின் எண்ணத்தை நிறைவேற்றாதே. தருமத்தின்மீதில் திரிஷ்டிவைத்து இனியாகிலும் வாயைமூடு. இதைக்கேட்டால் நமதுபகைவர் நகைப்பார்கள். மகானுபாவராகிய தமயனைத் திரஸ்காரஞ் செய்யாதே. இந்தத் துஷ்டர் வெகு தருமசீலருஞ் சத்திய சந்தருமாகிய நமது தமயனை வலுவிற் சூதாடவழைத்து மோசஞ்செய்து, எல்லாவற்றையும் பறித்துக் கொண்டார்கள். இதனாலே நமக்கு அவமானமில்லை. கையிலாகாமற் பறிகொடுத்தால் அது தான் அவமானமாகும். இவர் தருமத்தையுஞ் சத்தியத்தையும் பெரிதாயெண்ணிச் சகலத்தையும் பொறுத்துக்கொண் டிருக்கிறார். இஃதிவருக்கு மகாமகிமைக்கு இடமாகியது. நாமும் அப்படியே அவரை அனுவர்த்தித் திருக்கவேண்டுமேயல்லது, மீறலாகாது என்று சொன்னான். பின்பு வீமன் அர்ச்சுனனைப்பார்த்து, நீசொல்லிய தெல்லாஞ் சரிதான்: எனக்குந்தெரியும். ஆனாலுந் திரௌபதையைப் பந்தயம்வைத்தாடியகைகள் சுடத்தக்கவையேயல்லது, பூசிக்கத்தக்கவையல்லவென்கிற கருத்தைக் கொண்டு இப்படிச்சொன்னேன் என்று சொன்னான்.

திரௌபதிக்காக விகர்ணன்பேசக் கர்னன் சிதைத்தல்.

இஃதிப்படி யிருக்குமளவிற் சபையைநோக்கித் தருமத்தை வினவுந் திரௌபதியை நீசனாகிய துச்சாதனன் கொடுமையாய்ப்பற்றி யிழுத்துக்கொண்டுபோகிறதும், சபையார் ஒன்றுஞ்சொல்லாமலிருக்கிறதும் பார்த்து; திரிதாஷ்டிரன் புத்திரரில் ஒருவனாகிய விகர்னனென்பவன் வெகு கோபங்கொண்டு, சபையிலிருக்கும் வீஷ்மர் முதலாகிய பெரியோர்களைப்பார்த்து மிகவும் பரிதாபத்தோடு இதனைச் சொல்லுகிறான்: ஓ சபையாரே! நீங்கள் திரௌபதிசொல்லிய பேச்சைக் கேட்டு ஏன்பிரதியுத்தரஞ் சொல்லாமலிருக்கிறீர்கள்? அவிவேகத்தினால் நீங்களுஞ் சொல்லாமல் உங்களைப் பார்த்து நாங்களுஞ்சொல்லாமலிருந்தால், யாவருக்குமிப்போதே நரகம் வருமன்றோ? வீஷ்மரும் - திரிதராஷ்டிரரும் - புத்திமான்களுட் சிறந்தவராகிய விதுரரும் - மற்றக்கவுரவரும் - ஒன்றுஞ்சொல்லாம லிருக்கிற காரணமென்ன? இவர்களிருக்கட்டும், பிராமணோத்தமரும் ஆசாரியருமாகிய துரோணரும் - கிருபரும் - எந்தத் தாக்ஷணியத்தினால் வாயைமூடிக்கொண் டிருக்கிறார்கள்? இவர்களு மிருக்கட்டும். பலதேசத்தரசர்களும் ஏன்வாயை மூடிக்கொண் டிருக்கிறார்கள்? இத்தனை நாழிகை சும்மாவிருந்தது போதும். இனியாவரும் அச்சம் - அபிமானம் - தாக்ஷணியம் - குரோதம் - முதலியவைகளை விட்டுத் தங்கள்தங்கள் புத்தி யுள்ளவரைக்கும் யோசித்து, தத்தமது கருத்தை வெளியிடுங்கள். என்றிப்படி பலதரம் விகர்னன் சொல்லியும், ஒருவரும் பேசாம லிருந்தார்கள். அது கண்டு அதிக கோபங்கொண்ட அந்த விகர்னன் ஒருகைமேல் மற்றொருகையைவைத் தறைந்து, சபையைப் பார்த்து மறுபடி சொல்லுகிறான்:

"முறையோ வென்றென் றவனிதல முழுதுமுடையான்முடித்தேவி, நிறையோடழிந்து வினவவுநீர் நினைவுற்றிருந்தீர் நினைவற்றோ, விறையோன் முனியு மெனநினைந்தோ விருந்தாலுறுதி யெடுத்தியம்பல், குறையோ கண்கண்டதுநாளுங் குலத்துப்பிறந்தோர் கூறுரோ. தன்னேரில்லா நெறித்தருமன் றனைதென்றுரைக்கத் தக்கதெல்லா, முன்னேதோற்றுத் தங்களையு முறையேதோற்று முடிவுற்றான், சொன்னேருரைக்குத் தான்பிறர்க்குத் தொண்டாய் விட்டுச் சுரிகுழலைப், பின்னேதோற்க வுரிமையினாற்பெறுமோ வென்று பேசிரோ" ஓ சபையாரே! நான் இப்போது தருமத்தைக் கேட்டால் நீங்கள் சும்மாவிருக்கிறீர்கள். நீங்களிருந்தா லிருங்கள். எனக்குத் தோற்றியதை நான் சொல்லுகிறேன் அதைக் கேட்பீர்களாக. உலகத்தில் அரசருக்கு நான்கு பெருங்குற்றங்களுண்டு. அவையாவன - ஓயாமற் கட்குடித்தல். ஓயாமல் வேட்டையாடல். ஓயாமற் சூதாடல். ஓயாமல் மங்கையரைப் புணர்தல். இவைகளுக் குட்பட்டவன் தருமாதருமங்களை யறியான். அனியாயத்திற்கே உடன்படுவன். உலகத்தாரும் அதைப் பார்த்துக்கொண்டுதானிருக்கிறார்கள். இந்தச் சகுனியோ? எப்போதுஞ் சூதாடுந் தொழிலுடையவன். அவனுக்கு வேறுகாரியமொன்றுமில்லை. ஆனதுபற்றி அவன் தருமத்தைக் கொஞ்சமுமறியான். இப்போது அப்படியே பாண்டவர்களை வலுவிற் சூதாட அழைத்து மோசஞ்செய்து எல்லாச் செல்வங்களையுங் கவர்ந்துகொண்டு, அவர்க

ளையுஞ் ஜெயித்ததாக வெற்படுத்திவிட்டான். இந்த ஏற்பாடு மோசச்செய்கையா லுண்டானதே யன்றி, நியாயப்படி யுண்டானதல்ல. ஈதிப்படியிருக்க-இவ்வளவோடே நிற்காமல், பாஞ்சாலியை வைத்து ஆடச்சொல்லி அவருக்குப் போதித்து, அவளையுஞ் செயித்ததாய்ப் பராக்கிரமித்தான். அவரோ அச்சூதில் வெறிபிடித்து, அவன்மோசத்திற் குட்பட்டுத் தருமமாயாடினார். மற்றவையெல்லா மிருக்கட்டும். திரௌபதியைப் பந்தயம்வைக்க அவருக்கு அதிகாரமில்லை. அவர் முன்னமே தம்மைத் தோற்றார். ஆகையால் அவளைச் செயித்தேனென்றது சத்தியமன்று. இச்சபையில் ஒற்றையாடையோ டிருக்கிற அவளை அன்னியாயமா யிழுத்துவந்தது தருமமன்று. என்று சொல்லிச் சும்மா விருந்தான்.

அதுகேட்டுச் சபையி லிருப்பவர்கள் விகர்னன் சொல்லியது சரிதான் என்று அவனைத் துதித்துச் சகுனியைத் தூஷித்தார்கள். அப்போது சிலநேரஞ் சபையானது ஒலிவடிவா யிருந்தது. அந்தக்கோஷ மோய்ந்தபின் கர்னன் விகர்னனை நோக்கிச் சொல்லுகிறான்: அடா விகர்னா! உனக்கெப்போதும் இப்படிப் பட்ட வெறிகுண முள்ளதுதானே: இன்றைக்குப்புதி தல்லவே: தேகத்தி லிருக்கும் நோயானது அந்தத் தேகத்தின்க ணுள்ள ஆத்துமாவுக்குந் துக்கமுண்டாகும்படி செய்வது போல், நீ கூடப்பிறந்தவனாகிய துரியோதனனுக்குக் கேடுவரும்படி யத்தனிக்கிறாய். மேலும் அந்தவியாதி தேகத்தினின்றுமே பிறந்து அதை யழிப்பது போலவும், அரணியத்தி னின்றும் பிறந்தவனல் அவ்வரணியத்தை யழிப்பது போலவும், நீ திரிதராஷ்டிராருக்குப் புத்திரனாயிருந்து அவரைத் துக்கக்கடலி லமிழ்த்த முயலுகிறாய். உனது கெட்ட சுபாவத்தையே காட்டுகிறாய். வீஷ்மர் - துரோணர் - கிருபர் - அஸ்வத்தாமா - பாகிலிகர் - சோமதத்தர் - பூரிச்சிரவர் - பூரி - விதுரர் - திரிதராஷ்டிரர்-காந்தாரி முதலாகிய தருமவான்க ளனேகர் இச்சபையி லிருக்கிறார்கள். அவர்களெல்லா மறியாத தருமத்தையா நீ யறிந்திருக்கிறாய்: அவர்களுக்கெல்லா மில்லாத நற்குண முனக்கிருக்கிறதா? அவர்களை யன்றோ திரௌபதி வினவினாள்? அவர்களே விடைதரா மிருக்க, நீயேன் சொல்லப் புறப்பட்டாய்? அவர்களெல்லாந் திரௌபதி தருமமாய்ச் ஜெயிக்கப் பட்டாளென்று சொல்லியுமிருக்க, நீ வேறாய்ச் சொன்னாயே உனக்கென்ன தெரியும்? நீ சிறுவன். ஆனபடியினாலேதான் பெரியோர்களுக்கு முன் கூச்சமின்றித் தருமத்தை அதருமமென்று சொல்லுகிறாய்.

அன்றியும் உதிஷ்டிரர் மனமொப்பி வைத்த பந்தயங்கள் யாவையுஞ் செயித்தது போலவே இந்தத் திரௌபதியையுஞ் சகுனிசெயித்தான். யாவரும் பார்த்துக்கொண்டுதானே யிருக்கிறார்கள். பாண்டவர்களும் ஒப்புக்கொண்டுதானே யிருந்தார்கள். இப்படியிருக்க உனக்குமாத்திரம் அவள் ஜயிக்கப்பட வில்லையென்றும், அது அனியாயமென்றும், எப்படி தோன்றிற்று? ஒற்றையாடையோ டிருப்பவளைச் சபையில் இழுத்து அவமானஞ்செய்வது அனியாய மென்றாய். அதைக்குறித்துச் சொல்லுகிறேன்கேள். கடவுளானவர் பெண்களுக்குப் பர்த்தாவே தெய்வமென்று நிருமித்து, ஒருத்திக்கு ஒருபர்த்தாவா யிருக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். அதின்படி உலகத்திற் சகலபெண்களும் ஒரு புருஷனையே யடைந்திருக்கிறார்கள்: மற்றொருவனைக் கண்ணினாற் பார்த்தாலும் விபசார தோஷ முண்டு. அப்படியிருக்க - இந்தத் திரௌபதி ஐவரைப் புணருகிறாள். இப்பேர்ப் பட்டவளுக்குத் தருமமெங்கே யிருக்கிறது? வேசிபோலாகி வருடத்திற்கொரு வைப்பாளனோடு இருக்கப்பட்டவள் ஐவரைச் சேர்ந்தாலென்ன? ஐம்பதுபேரைப் புணர்ந்தாலென்ன? எப்படியும் இவள் பொதுமாதுதான். இவளைச் சபையில் வரவழைப்பது குற்றமன்று. மேலும் இவளுடைய பர்த்தாக்களும் நம்மால் ஜயிக்கப்பட்டார்கள். அதனாலேயே இவளும் அயிக்கப்பட்டாள். தனியாகவும் நமக்கடிமையானாள். இந்த வெள்ளாட்டியைக்குறித்துத் தருமாதருமங்களை விசாரிப்பதுண்டோ? இவள் ஒருவஸ்திரந் தரித்திருந்தாலுஞ் சரிதான்: நிருவாணமா யிருந்தாலுஞ் சரிதான்: இவளை யெதுவேண்டுமோ அது செய்யலாம். இதி லெவ்வளவேனும்பாவமில்லை: என்றுசொல்லித் துர்ச்சாதனனை நோக்கி, அப்பா துச்சாதனா! இந்த விகர்னன் என்றைக்கும் இப்படிதான் பிதற்றுவன். இவன்பேச்சைக் கேட்பாரில்லை. இப்போது நீ பாண்டவர் தரித்திருக்கும் வஸ்திரத்தையும், திரௌபதி தரித்திருக்கும் வஸ்திரத்தையும் உரியென்றான்:

துச்சாதனன் திரௌபதியின் துகிலுரிதல்.

ஓ ஜெனமெஜெய மகாராஜனே! அதைக்கேட்ட மாத்திரத்திலே அத்துச்சாதன னென்னு மகாபாதகன் செய்யப்புகுந்த கொடுமைகளைச் சொல்ல வெனக்கு நாவெழவில்லை. ஆகிலுஞ்சொல்லவெடுத்த சரித்திரத்தைச் சோர்வுபடாமற் கூறவேண்டிய நியதியைப்பற்றி, மகாபதிவிரதையின் மகத்துவத்தையும் - ஸ்ரீ வேதவியாச மூர்த்தியினுடைய திருவடியையும்-சிந்தித்துச்சொல்லுகிறேன்கேளும். பாண்டவர்கள் கர்னன் கூறியனுப்பிய வார்த்தையையும், அதற்குத் தக்கபடி துரியோதனுதியரிற் சிலதுஷ்டர்கள் கொண்டிருக்கிற கருத்தையும் அறிந்துகொண்டவர்களாய், உடனே தாங்க ளுடுத்திக்கொண்டிருந்த வஸ்திரங்களைக் களைந்து எறிந்துவிட்டார்கள். இப்பால் நிகிஷ்ட சிரோமணியாகிய துச்சாதனன் அஞ்சாமல், திரௌபதியின் துகிலையுரிய வாரம்பித்தான். அப்போதந்தத் திரௌபதி தனதுகையாற் கலையைப்பற்றிக்கொண்டு, அளவற்ற விசனத்தையடைந்து கண்ணீர் சொரிந்து, தன்

மனதைத் தானே தேற்றிக்கொண்டு ஒன்று சொன்னாள். ஓ மனமே! முன்னே வசிஷ்டர்சொல்லிய வாக்கிய மொன்றைப் பெரியோரிடத்திற் கேட்டிருக்கிறேன். அஃதென்னவெனில்-மனுக்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்துகள் நேரிட்டாலும், பகவானுகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவைச் சிந்தித்தால் அவ்வாபத்தை நீக்கிக் காப்பாற்றுவர், மற்றொருவராலு மாகாதென்பதுதான். அஃதிப்போ தெனது நினைவுக்கு வந்தது. ஆதலாலே அப்படியே செய்கிறேன். மற்றப்படி இப்பந்துக்கள் பர்த்தாக்கள் முதலானோரால் இனி நடக்கப்போகிற தருமம் ஒன்றுமில்லை. என்றுசொல்லி அந்தத் திருமகள் கேள்வனுகிய ஸ்ரீகிருஷ்ணனுடைய திருவடித் தாமரைகளை நினைத்துத் துதிப்பதாயினுள்.

ஓ ஸ்ரீகிருஷ்ணு! ஓ கோவிந்தா! ஓ நாராயணு! ஓ ஆபத்தென்று வந்து சரணம் புகுந்தோருக்கு அபயங்கொடுப்பவனே! ஓ சகலலோகங்களுக்குஞ்சிருட்டி கர்த்தாவாகிய சதுர்முகன் றந்தையே! ஓ சர்வேஸ்வரா! செந்தாமரைக்கண்ணு! இப்போது என்பர்த்தாக்களும், வீஷ்மர் - துரோணர் முதலானோர்களும், மற்றுமெவர்களும் என்மானங்காக்கச் சக்தியில்லாதவர்களா யிருக்கிறுர்கள். யாவையுந் துறந்தேன். உம்மையே சரண்புகுந்தேன். நீரல்லாது வேறுகதியில்லை. யாவருக்கும் நீரே ரக்ஷகர். உமது திருவடிகளைப்பற்றினோர்க்கு விரோதஞ்செய்கிற பேர்களைத் துணிப்பேனென்று தீக்ஷைவகித்து, சங்கம் - சக்கரம் - கதை - முதலாகிய ஆயுதங்களோடு துவாரகாபுரியி லெழுந்தருளி யிருக்குங் கடவுள் நீரன்றே? ஓ என்று மழிவில்லாத மகாநுபாவா! ஓ பிரமன் முதலானோர்களுக்கும் ஆபத்து வந்தபொழுது அசுரரைக்காய்ந்து வேத முதலாகியவைகளை நிலைநிறுத்திக் காத்த பகவானே! ஓ மெய்க்கடவுளே! உமது திருவடிகளையே நம்பிய அடியாளைக் காத்தருளும். ஐயோ! இந்தக்கொடிய பாவியினுல் மானபங்கஞ்செய்யப்படுகிறேன். ஓசுவாமி! ஓ துவாரகையைப் பதியாய்க்கொண்ட கருணைக்கடலே! ஓ யாதவகுல சிகாமணி! தேவரீர் எங்கே யிருக்கிறீர்? நின்னடியாளாகிய யான் இப்படிப்பட்ட அவஸ்தையில் துயரப்படவிட்டு உபேக்ஷைசெய்வது நியாயமோ? இராஜசிங்கம்போன்ற நீர் எனக்கு நாதனுயிருக்க, என்னை நாதனற்றவளாக வெண்ணி இந்தப்பாதகன் கவுரவர் முதலானோருக்கு முன்னிலையில் என் வஸ்திரத்தை யிழுக்கிறுனே; இவ்வாபத்தினின்று மென்னைக் காத்தருள வேண்டாமோ? ஓ கிருஷ்ணு! என்று அப்பகவானை சகஸ்த்ர நாமங்களாலும் மனோவாக்குக்காயங்க ளொருமித்துத் துதித்துப் பணிந்து கூவினுள்.

அப்போது தமதடியாளுக்கு நேரிட்ட துயரத்தை நீக்கவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணபகவான் தமது கருணையென்னுங் கடலி னலைகள்போன்ற திவ்வியவஸ்திரங்களை அவளிடையில் நிருமாணஞ் செய்தருளினுர். அதுதெரிந்தவுடனே திரௌபதியானவள் வஸ்திரத்தைப் பிடித்திருந்த கையையுந் தேகாபிமானத்தையும் விட்டு, ஸ்ரீகிருஷ்ணனையே துதித்துக்கொண்டிருந்தாள். அதுகண்ட துச்சாதனன் இனிசுலபமாய் இவள் துகிலையுரியலாமென்று நினைத்து, விவேகிகளாயினோர் தங்கள் வல்வினைகள் நீங்கிச் சுவர்க்காதிபோகங்களடையவேண்டித் தேவாலயத்தை எவ்வாறு பலமுறை சுற்றிச்சுற்றி வலம்வருவார்களோ? அவ்வாறு இம்மகாபாதகனுந் தனது நல்வினைகள் நீங்கி நரகாதி சோகங்களை யடையவேண்டித் திரௌபதா தேவியை வலம் வருவதுபோற் சுற்றிச்சுற்றி மகா அட்டகாசத்தோடு துகிலையுரிவதானுன். அவ்வா றுரியவுரிய அவ்வஸ்திரத்திலுள்ளே மற்றோர் வஸ்திரங்காண அதையுங்களைய, மறுபடியு மொன்றுதோன்ற, இதுவுமொரு லாபந்தானென்று நினைத்துச் சந்தோஷத்தோடு அதையுமவிழ்க்க, இப்படிக்கு அவிழ்க்குந்தோறும் பற்பலவண்ணமாய் - ஒருவரும் ஒருநாளுங்கண்டறியாததாய் - தேவஸ்திரீக ளுடுத்திக்கொள்ளத் தக்கவைபாய் - அங்கிருந்த யாவராலும் ஆச்சரியப்படத்தக்கதானதா யிராநின்ற பலவஸ்திரங்கள் அவளிடையிற் றெடுக்கப்பட்டுக்கொண்டிருந்தன. இவ்விதமாய் ஓய்வில்லாமல்உண்டாகிய வஸ்திரங்களையெல்லாந் துன்மார்க்க சிரோமணியாகிய துச்சாதனன் உரிந்துரிந்து, மலைமலையாய்க் குவித்துக் கைசோர்ந்து பெருமூச்சுவிட்டு, வெட்கப்பட்டு முகங்கன்றிச் சும்மாநின்றுவிட்டான். அப்போதுசபையிலிருந்த வீஷ்மர்-துரோணர்-முதலிய பெரியோர்களும், ஆசாரியர்களும், பின்னுமுண்டான விதுராஜன் முதலிய சில மன்னவருஞ் சரீரமெல்லா நடுக்குற்று நாவறண்டு, கண்களில் நீர்சோர இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பிக்கொண்டு, ஓ! ஓ! துரியோதனன் செய்வது மிகுந்த அனியாயம்! அனியாயம்! ஐஐயோ!! திரிலோகத்திலுங் கற்பென்று சொல்லும்படியான மேலான பொருளுக்கும், இக்குருவமிசத்திற்கும், இநதப் பதிவிரதா சிரோமணியே தெய்வம். இதற்கு எவ்வளவுஞ் சந்தேகமில்லை. சீ! சீ! இப்பாவிகட்கு ஏதோ பழுதுபடுங்காலஞ் சம்பவித்திருக்கின்றதென்று சொல்லி வருத்தப்பட்டார்கள். இவ்வற்புதத்தை அந்தரத்தி னின்றுங் கண்டுகொண்டிருந்த தேவர்களெல்லாம் ஆகாயதுந்துமி-வலம்புரிச்சங்கு-முதலியவைகளை முழக்கிக் கற்பகத்தினளாகிய இத்திரௌபதியின்மீது கற்பகத்தினது மலர்களை வாரிவாரி இறைத்தார்கள். அப்போது அச்சபையில் ஒரு பெருங்கூச்ச லுண்டாகத் தலைப்பட்டது.

விதுரராஜன் விரோசனனுக்கும் சுதனுவாவுக்கும் நடந்த சம்வாதங் கூறல்.

இப்படியிருக்க விதுரனுனவன் யாவரையுங் கூச்சற்போடவொட்டாமல்நிறுத்திஒன்றுசொல்லுகிறுன்.

ஓ சபையிலிருக்கும் புண்ணிய புருஷர்களே ! நமக்
கெல்லாங் கட்டளையிடத் தக்கவளாகிய திரௌபதி
சில யோக்கியர் இச்சபையி லிருக்கிறார்க ளென்றும்,
தருமங்களை யறிவார்களென்றும், பக்ஷபாத மின்றி
நடுவுநிலை சொல்லுவார்க ளென்றும் நினைத்து ; ஒரு
பிரசனங் கேட்டாளே: அந்தக் கேள்வி ஜொலித்துக்
கொண் டிருக்கும் அக்கினியென்றுநினைக்கத்தக்கது.
அது உங்கள்மீதில் விழுந்திருக்கிறது. அதை யவிக்கா
மற்போனாற் சமூலமாய்த் தொம்சம் பண்ணும். அ
தைச் சத்தியவாக்கென்னுந் தண்ணீராலன்றோ அவி
க்கவேண்டும் ? அப்படி செய்யாமற் சும்மாவிருக்கின்
றீர்களே: நீங்களெப்படி தருமவான்க ளாவீர்கள் ?
மனு சொல்லியபடிக்குத் தருமமறிந்த பெரியோர்களை
யொருவன் தருமசந்தேகங் கேட்டு அதற்கவர் விடை
தராம லிருந்தால், பொய்சொல்லுவோனுக் குண்டா
கும் பாவத்திற் பாதிபெறுவார்கள். யதார்த்தஞ் சொ
ல்லாமற் போவார்களே யாகில், முழுப்பாவத்தையும்
பெறுவார்கள். இதைப்பற்றியே விகர்னன் தன்புத்தி
க்குத் தோற்றியபடி சத்தியத்தைச் சொன்னான்.
அப்படிக்கு நீங்களுந்தருமத்தைச் சொல்லவேண்டும்,
சத்தியத்தை அனுசரிக்கவேண்டும். ஒரு வகையாலும்
பக்ஷபாதஞ் செய்யக்கூடாது. இவ்விஷயமாய் முற்
காலத்திற் பிரகலாதபுத்திரனாகிய விரோசனனுக்கும்-
சுதனுவா வென்பவனுக்கும் - நடந்த சம்வாதத்தைப்
பற்றிய சரித்திரமொன்று நடந்திருக்கிறதென்று பெரி
யோர்க ளிடத்திற் கேட்டிருக்கிறேன். அதைச்சொல்
லுகிறேன் கேளுங்களென்று சபையாரை நோக்கிச்
சொல்லலுற்றான் விதுரமகாராஜன்.

ஓ சபையார்களே ! பிரகலாதன் புத்திரனாகிய
விரோசனனும் - சுதனுவாவென்னும் பிராமணனும் -
ஒருஸ்திரீயினிமித்தம் நீபெரியவனா? நான்பெரியவனா?
என்று விவாதப்பட்டு, நமக்குள்யார்பெரியவனோ அவ
னுக்கு மற்றொருவன் தன்னுயிரைக் கொடுத்துவிட
வேண்டுவ தென்று பந்தயம் போட்டுக் கொண்டு,
இதைக்குறித்து யாரை வினவுவோ மென்றார்கள்.
அதற்குச் சுதனுவாவானவன் பிரகலாதரையே வின
வுவோம். அவர் சத்தியசந்தர். அவர் சொல்லுவதே
நம்மிருவருக்கு மொப்பென்றான். அதைவிரோசனன்
ஒப்புக்கொண்ட படியினாலே இருவரும் பிரகலாத
னிடத்திற்குப்போய், வாரீர் பிரகலாதரே ! எங்களிரு
வரில் யார்பெரியவன் ? அதை நீர்சொல்லவேண்டுமெ
ன்றார்கள். அதைக்கேட்ட பிரகலாதன் பயத்தைய
டைந்து, சுதனுவாவின் முகத்தைச் சும்மா பார்த்துக்
கொண்டிருந்தார். அப்போது அந்தப் பிரகலாதனைச்
சுதனுவாவென்பவன் பார்த்து, ஓய் பிரகலாதரே ! நீர்
இப்போது பக்ஷபாதஞ்சொன்னாலும், ஒன்றுஞ்சொல்
லாமற் சும்மாவிருந்தாலும், உமது சிரம் ஆயிரஞ்சுக்
கலாய் வெடிக்கும் என்றான். அவன் இதையெல்லாங்
கேட்டுப் பெருங்காற்றில் ஆடும் அரசிலைபோல் தேக
மெல்லாம் நடுக்கமுற்று, இவ்விஷயத்தைக்குறித்துக்
கசியபப் பிரஜாபதியைக் கேட்கவேண்டுமென்று அவ
ரிடத்திற்குப்போய் அவரைப்பார்த்துச் சொல்லுகி
றான்; சுவாமி காசிபரே ! தேவரீர் சகலமான பேரு
க்குங் குருவாயிருக்கிறீர். எல்லாத் தருமங்களையும்
அறிந்தவர். ஆகையாலே தேவரீரை அடியேன் ஒருசந்
தேகங்கேட்கிறேன். ஒருவன்கேட்டவினாவிற்கு மெய்
யாய் விடைதராமற்போவதினால் எந்த உலகங்கிடைக்
கும் ? விடைதராது சும்மாவிருந்தால். எந்தவுலகங்கி
டைக்கும் ? அதை அடியேனுக்குத் தெரியச்சொல்ல
வேண்டு மென்று வினவியதைக்கேட்ட காசியபப்பிர
ஜாபதியானவர் சொல்லுகிறார்.

வாரீர் பிரகலாதரே.! சபையிலானாலும் மற்றொ
ருவிடத்திலானாலுந் தருமந்தெரிந்திருக்க எவன் கே
ட்டவனுக்குத் தருமஞ்சொல்லாமலிருக்கிறானோ?அவ
ன்வருணபாசங்களில் ஆயிரம்வருஷங்களால் தன்னாத்
துமாவைக் கட்டுண்ணச் செய்கிறான். பயம் - பக்ஷபா
தம் - முதலிய எந்தக்காரணங்களினாலாகிலுஞ் சரியே
அந்தப் பாசங்களினாற் கட்டுண்டே தீரவேண்டும். ஆ
னால் அவைகளை நிவர்த்திசெய்துகொள்ள நினைப்பவ
னுக்குச் சாஸ்திரஞானிகள் ஒரு பிராயச்சித்த மேற்ப
டுத்தி யிருக்கிறார்கள். அதென்னவென்றால்-கோகர்
ணசிதிலம் என்றொரு விரதமுண்டு, அதையொருவ
ருட மனுட்டித்தால் அந்தப் பாசங்களி லொன்றுநீங்
கும். ஆகையாலே அவ்விரதத்தை ஆயிரம் வருஷம்
அனுட்டிக்கவேண்டும். சத்தியத்தைச் சொல்லாமற்
போனால் இதிவிரட்டிப்பாய்ப் பாவங் கிடைக்கும்: ஆ
னதுபற்றித் தருமத்தைக் கேட்டாற் சத்தியமாய்ச்
சொல்லவேண்டும். அப்படிக்குச் சொல்லாதபோது
அந்தப்பாவத்திற்பாதி அரசனையும், காற்கூறு சபை
யாரையும், காற்கூறு செய்தவனையுஞ் சேரும். அந்த
நியாயா நியாயங்களையுந் தருமா தருமங்களையுங் கண்
டுபிடித்து, அனியாயஞ் செய்தவனுக்குத் தகுந்த சி
க்ஷைசெய்தால் சபையாருக்கும் அரசனுக்கும் பாவ
மில்லை. அன்றியுஞ் சத்தியமாய்த் தருமஞ்சொல்லாம
ற் போகிறவனுக்கு அசுவமேதமுதலியயாகங்களையும்
தேவாலம் - அக்கிராரம் - தடாகம் - முதலாகிய தரு
மகாரியங்களையுங் கெடுத்தவனுக்கு எந்தப் பாவமு
ண்டோ?அந்தப்பாவம் வருமென்று வேதத்திலிருக்கி
ன்றது. அப்படிப்பட்டவன் தனக்கு முன்னேழுதலை
முறைகளையும் பின்னேழுதலைமுறைகளையும் முடிவிற்
றன்னையும் நரகத்தி லமிழ்த்தத் தக்கவனாகிறான்.

அன்றியும் அப்படி அனியாயத்தைச் சொல்லிய
வன் சகல சொத்துக்களைப் பறிகொடுத்தவனுக்கும்,
மூத்தமகனைச் சாகக்கொடுத்தவனுக்கும், பகைவர்கை
யிலகப்பட்டவனுக்கும், அனியாயமாய்க்காவலிற்போ
டப்பட்டவனுக்கும், நல்லபருவத்திற் கணவனை யிழ
ந்தவளுக்கும், வழக்காடிப் பொய்சாக்ஷி பலத்தினால்
நியாய மிழந்தவனுக்கும் உண்டாகுந் துக்கமெது

வோ ? அத்துக்கத்தைத் தடையின்றி யடைவன். என்று காசிபர் சொல்லக்கெட்ட பிரகலாதன் விரோசனனுஞ் சுதனுவாவு மிருக்கு மிடத்தில் வந்து, தனதுமகனுகிய விரோசனனைப் பார்த்து, அப்பாமகனே! உன்னைக்காட்டிலுஞ் சுதனுவாவே உயர்ந்தவன். என்னைக்காட்டிலும் அவன்பிதா உயர்ந்தவர். உன்தாயைக்காட்டிலுஞ் சுதனுவாவினுடைய தாய் உயர்ந்தவள். இதுசத்தியம். ஆகையாலே உன்னுடைய உயிர்சுதனுவாவினுடையதுதான் என்று சொன்னுன். இப்படிச் குப் புத்திரனென்கிற பக்ஷபாத மில்லாமற் சத்தியத்தைச் சொல்லக்கேட்ட சுதனுவாவானவன் வெகுசந்தோஷமடைந்து பிரகலாதனைப் பார்த்து, ஐயா! நீர் பக்ஷபாதமின்றி சத்தியத்தைச் சொல்லிய படியால், உமக்கு உமதுபுத்திரனைக்கொடுத்தேனென்று சொல்லிப்போனுன். ஆகையால் - கேட்டீர்களோ சபையார்களே ! இப்போது நீங்களுந் திரௌபதி கேட்ட வினுவுக்குத் தருமத்தை யோசித்து விடைகொடுங்கள். இல்லாவிட்டால் வருணபாசமென்பஃவ ஒருவரையும் ஒருக்காலும்விடாது. என்றுவிதுரன்சொல்லியும், அச்சபையிலிருந்தபேர்களெல்லாஞ் சும்மாவிருந்தார்கள்.

திரௌபதி சபையாரைப் பணிந்துகேட்ட சிலவற்றிற்கு வீஷ்மர் விடைதரல்.

இப்படியிருக்கக் கர்னன் துச்சாதனனைப்பார்த்து, தாசியாகிய இந்தத் திரௌபதியை மனைக்கு அழைத்துக்கொண்டு போவெனறுன். அதுகேட்ட அவன் சபைநடுவிற் பிடித்திழுத்தான். அப்படி யிழுக்கும்போது திரௌபதியானவள், ஓசபையிலிருக்கும்பெரியோர்களே ! இவன் என்னை இழுத்துத் தொந்தரைசெய்தபடியினுலே இங்கேவரும்போது செய்யவேண்டுவதாகிய பெரியோர்களின் திருவடி வந்தனத்தைச் செய்யாமலிருந்தேன். அதை இப்போது செய்கிறேன் அங்கீகரிக்க வேண்டுமென்றுசொல்லி வந்தனஞ்செய்தாள். அதைப்பார்த்த யாவருந் துயரப்பட்டார்கள். அப்பாவியோ ? அப்போதும் அவளையிழுத்து உபத்திரவித்தான். அவள் அப்போது ஒன்று சொல்லுகிறுள்: கேளுங்கள் இச்சபையிலிருக்குங் கவுரவகுலாதிபரும் - மற்ற இதரதேச ராஜாக்களுமா யிருக்கின்ற பிரமுகாளே ! என்னை யாவரும் பகிரங்கமாய்க் கண்டதெப்போ தென்றுல் - சுயம்வர மண்டபத்தில் வந்தபோது கண்டார்கள். அதற்கு முன்னுமில்லை; பின்னுமில்லை. இப்போது யாவருங்காணச் சபையில் நிற்கும்படிநேரிட்டது. இது நான்செய்த தீவினையேயல்லது ஒருவர் மீதுங் குற்றமில்லை. அந்தப்புரத்தி லிருக்கையிற் சூரியனும் வாயுவுங்கூடக் கண்டறியாதவளாகிய என்னைச் சேவர்களுஞ் சாதாரணமாய்ப் பார்க்கும்படி நேரிட்டது. அதை என்பர்த்தாக்களும் வீஷ்மர் முதலானேரும்பார்த்துச் சும்மாவிருப்பது வெகு ஆச்சரியமாயிருக்கின்றது. இதுவும் ஏதோவொரு காலகதிதான்: இல்லாவிட்டால் மருமகளாகிய நான் இப்படி கிலேசப்படப்பார்த்து உபேக்ஷை செய்வார்களா ? நான்கேட்ட கேள்விக்கு ஒன்றுஞ் சொல்லாமலிருப்பார்களா ? அந்தப்புரத்தி லிருக்கத்தக்க ஸ்திரீயைச் சபையிலிழுத்தபின் அரசருக்குத் தருமமென்பதெங்கிருக்கின்றது ! சிறிதேனும் யில்லையென்பது நிச்சயமாயிற்று. எப்போதருமமில்லையோ ? இனி ... தருமத்தாற சபையும் அழியவேண்டும்.

ஓ கண்ணியவான்களே! வீஷ்மர் முதலானேருக்கு மருமகளும், சத்தியசந்தனராகியபாண்டவர்களுக்கு மனையாளும், துருபதனுக்குமகளும், ஸ்ரீகிருஷ்ணனுடைய அன்பியும், அக்கினியிற் பிறந்தவளுமாகிய யான் இவ்விதமாய்ச் சபையில்வர நேரிட்டபோது; உலகமரியாதை யென்றுங் குலமரியாதை யென்றுஞ் சொல்லப் படுகிற இவ்விரண்டும் நாசமடைந்தன. நான் பேதை என்ன சொல்லமாட்டுவேன் ? இராஜசூய யாகஞ்செய்து சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெற்ற மகாராஜாவின் பத்தினியாகிய என்னைத்தேர்ப்பாகர் குலத்தில் வளர்ந்த இந்தக்கர்னன் அடிச்சடிவெள்ளாட்டி வெள்ளாட்டி என்றுன். இது நியாயந்தானு ? இவன் முதுகிலிருக்கும் புண்ணை இவனறியாமல் மற்றவாளை இகழ்ச்சியாய்ப் பேசுவது தகுமா? நான் வெள்ளாட்டியோ? அல்லவோ ? இதையாகிலும் நீங்கள் தயைசெய்துசொன்னுல் வெள்ளாட்டியாகில் அதற்குரிய பணிசெய்கிறேன். அல்லேனுகில் அதற்கேற்றபடி நடக்கிறேன். என்று சொல்லியதைக்கேட்ட வீஷ்மா சொலலுகுறுா: ஆ ! [illegible] ! நீ கேட்டகேள்விக்கு முன்னமேநான்சொன்னேனே: தருமசூக்ஷ்மம் அறியக்கூடாதது. இந்தச்சபையிலிருக்கிற பேர்களில் ஒருவரும் நீ கேட்ட கேள்விக்கு உத்தரஞ்சொல்லச் சக்தியில்லாதவர்களா யிருக்கிறுர்கள். நானும் அதிநுட்பந் தெரியாமற் சும்மாவிருக்கிறேன். அடி அம்மா பாக்கியவதீ ? எப்போதும் உனக்கொரு குறைவில்லை. இவர்களில் ஒருவர் தப்பாமல் நாசமடையப் போகிறுர்கள். நீ பதிவிரதையென்னும் புகழ் பெற்றுய். ஆனுல் நீ எங்களைக்கேட்ட விஷயத்தை உன்பர்த்தாவாகிய உதிஷ்டிரரைக்கேட்டால், அவரேயதற்கு உத்தரஞ் சொல்லத் தக்கவர் என்று வீஷ்மாசாரியர் சொல்லி முடித்தார்.

துரியோதனன் தனதுதொடையைக் காட்டித் திரௌபதியை அழைத்தல்.

அப்போது யாவராலுந் துடைகாலனென்று துதிக்கும்படியாகிய துரியோதனனனவன் மிகவும் புலம்பாநின்ற பாஞ்சாலியை நோக்கிச் சிரித்துக்கொண்டு, அடி திரௌபதி ! முன்னமே நீ சபையாரைக் கே

ள்விகேட்டதற்கு ஒருவரும் ஒன்றுஞ் சொல்லமாட்டாமற் போனார்களே; மறுபடியும் அவர்களை யேன் கேட்கிறாய்? உன்பர்த்தாக்களாகிய வீமார்ச்சுன நகுலசகாதேவர்களைக் கேள். அல்லது உதிஷ்டிரரைக் கேள். அவர்கள் நீ தாசியல்லவென்று சொல்லுவார்களாகில் சும்மாவிரு. இல்லாவிடில் பணிவிடைசெய். சபையாரேன் சொல்லவில்லையென்றால் - பாண்டவர்க் [illegible] கஷ்டம் நேரிட்டதோ: நாம் இவ்விஷயத்திலேது சொன்னாலும் அவர்களுக்கு தங்காகுமென்று வாயை மூடிக்கொண் டிருக்கிறார்கள். என்று வணங்காமுடியோன் சொல்லக் கேட்ட ராஜாக்களெல்லாஞ் சிறிது முகவாட்ட நீங்கினவர்களாகி, உதிஷ்டிரர் என்னசொல்லப் போகிறாரோவென்று எதிர்பார்த்துக் கொண் டிருந்தார்கள். இப்படிக்கிருக்க வீமசேனானவன் எழுந்து, கேளுங்கள் பெரியோர்களே! இந்த மகாராஜாவாகிய தருமபுத்திரர் எங்களுடை தேகங்களுக்கும் - பிராணன் களுக்கும் - யசமானரானபடியினாலே, அவர் - தாமே ஜெயிக்கப்பட்டோமென்று ஒப்புக்கொண்ட போதே, நாங்களும் ஜெயிக்கப் பட்டவர்களாயினோம். இல்லாவிட்டால் இவர்கள் செய்யும் அனியாயத்தைப் பொறுப்போமா? திரௌபதியின் கூந்தலைக் கையினாற் பரிசித்தவன் இவ்வளவு நேரம் பிழைத் திருக்கும்படி பார்ப்போமா? கதாயுதங்கள் போன்ற எனதுபுஜங்களினடுவிலகப்பட்டவன் தேவேந்திரனானாலும் உயிரோடு பிழைப்பானா? நான் தருமமென்னுங் கயிற்றாற் கட்டுண்டிருக்கிறபடியினாலும், உதிஷ்டிரரிடத்து நாங்கள் வைத்திருக்குங் குருத்துவத்தினாலும், அடிக்கடி அ[illegible]செய்கிற சமாதானத்தினாலும், இந்த மகாவிசனத்தையும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறினான்.

அப்போது அந்த வீமசேனனுடைய கோபத்தைப்பார்த்தும், அவன்பேச்சைக் கேட்டும், வீஷ்மர்-துரோணர் - முதலானோர்கள் சமாதானஞ் செய்ய அவன் கோபத்தையடக்கிக்கொண்டான். அப்போது திரௌபதியை நோக்கிக் கர்னன் சொல்லுகிறான். கேளடி திரௌபதீ! உலகத்திற் சுதந்திரராகாதவர் மூவருண்டு. அவர்கள் யாராரென்றால் - முறியானவர்கள். மாணாக்கர். பெண்பிள்ளைகள். இவர்களில் முறிகளுக்கு எந்தச் சொத்திருந்தாலும் அவர்களின் யஜமானர்களுடையதே யல்லது, அவர்களுடைய தாகமாட்டாது. இப்போது பாண்டவர்களெல்லாம் எங்களுக்கு முறியானார்களாகையால், அவர்களுடையசொத்தாகிய நீ எங்களுடைசொத்தானாய். ஆனதுபற்றி நீ தாசியானதிற் சந்தேகமில்லை. அடிபெண்ணே! உனக்கு நன்மை சொல்லுகிறேன் கேள். எங்களிடத்தில் வெகுபெயர் தாசரிருக்கிறார்கள். அவர்களில் யாரிஷ்டமோ? அல்லது கவுரவரில் யாரிஷ்டமோ? அவரைக் கணவராக ஏற்படுத்திக்கொள். ஆனால் இப்போது பாண்டவர்களைக் கலியாணஞ்செய்துகொண்டதினாலே வெள்ளாட்டி யானாயே; அப்படியாகம லிருக்கும்படி சேர். உன்னைப் பந்தயம் வைத்தாடித் தோற்றபோதே உதிஷ்டிரர் உனக்குப்பர்த்தாவுமல்லர். நீயவருக்குப் பாரியையுமல்லை. இப்படிப்பட்ட காரியஞ் செய்தவருக்கு இன்னமும் ஆண்மை யிருக்கிறதோ? பெண்ணே! நீயேன் சும்மாநிற்கிறாய்? துரியோதன மகாராஜாவின் அரண்மனையிற் சென்று பணிவிடைசெய்யென்று சொன்னான்.

அதைக்கேட்ட வீமசேனன் கோபாக்கினியினாற் கர்னனை எரிக்கிறவன்போற் பார்த்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு, உதிஷ்டிரரைக் கண்ணுற்று, அண்ணா! என்னகாரியஞ் செய்தீர்? அற்பரெல்லாம் இப்படி இகழ்ச்சியாய்ப் பேசவும், நாம் அதைக்கேட்டுக் கொண்டு சும்மாவிருக்கவுஞ் செய்தீரே: உம்மைவைத்தாடாம லிருந்தால் ஒன்று மில்லையே: என்று விசனத்தோடு சொன்னான். அப்போது துரியோதனன்சொல்லியதாவது-ஓ தருமபுத்திரரே! பாரும்: உம்முடைய தம்பிமார்நால்வரும் உமதாக்கினைக்குட்பட்டுநின்றார்கள். உமதுமனைவியாகிய இவள்மாத்திரம் மீறிநடக்கிறாள். அவளுக்குத் தெரியச்சொல்லும். நீர் அவளை வைத்தாடித் தோற்றதுண்டா? இல்லையா? என்று சொல்லிக்கொண் டிருக்கும்போது விதுரனவனைப்பார்த்து, அப்பா துரியோதனா! உனக்கு அவர் உத்தரஞ் சொல்லும்படியா யில்லை. வீணாய்ப் பழியைச்சுமந்துகொள்ளாதே. இனியாகிலும் விட்டுவிடு. என்று சொல்லக்கேட்ட துரியோதனன் - கேளும் விதுரரே அவரில்லாவிட்டாலும் வீமசேனன்முதலாகிய நால்வருஞ்சொன்னால், திரௌபதி வெள்ளாட்டியாக வேண்டாமென்று சொன்னான். அது கேட்டு அர்ச்சுனன் சொல்லுகிறான். கேளுங்கள் பெரியோர்களே! எங்களெல்லாருக்குந் தருமபுத்திரர் யஜமான ரென்பதற்குச் சந்தேகமில்லை. அவர் எங்களைப் பந்தயம்வைத்தாடியது நியாயந்தான். ஒப்புக்கொண்டோம். ஆனால் அவர் தம்மைத் தோற்றுப் பராதீன ரானபின்பு மற்றொருவரை வைத்தாட யோக்கியதை யுடையவரா? அதை நீங்கள் சொல்லுங்கள் என்றான். அர்ச்சுனன் சொல்லியதைக் கேட்ட கர்னன் துர்ச்சாதனனை நோக்கி, ஓ துர்ச்சாதனா! நாம் சூதாடினோம். ஜயித்தோம். பாண்டவருந் திரௌபதியும் முறியானார்கள். இவர்களோடும் நாம் வழக்கிட வேண்டுவதென்ன? இவளை இழுத்துக் கொண்டுபோய் அரண்மனையில் வேலைசெய்யச் சொல்லென்றான்.

அதுகேட்ட துச்சாதனன்-ஓ கர்னா! நீசொன்ன பேச்சுக்குச் சந்தோஷப்பட்டேன் என்றுசொல்லித் திரௌபதியை வாடிவெள்ளாட்டியென் றிழுத்தான். இழுக்கவே அவள் கதறிக்கூவி, அங்கிருக்குங் காங்கேயன்முதலிய பெரியோர்களைப்பார்த்து, ஓ பாண்டவருக்குங் கவுரவருக்கும்பாட்டனாராகிய வீஷ்மரே! ஓ ஆசாரியராகிய துரோணரே! ஓ கிருபரே! ஓ சகல த

ருமங்களையுமறிந்த விதுரரே! ஓ மாமனாராகிய திரிதராஷ்டிரரே! ஓ மாமியாராகிய காந்தாரிதேவி! ஓகுந்திதேவீ! இவ்விதமாய் துயரப்படாநின்ற உங்கள் மருமகளாகிய என்னை யாராகிலுங் காக்கக்கூடாதா? ஓ தருமராஜனே! ஓவாயுபகவானே! ஓ தேவராஜனே! அசுவினித் தேவர்களே! நீங்களாகிலும் என்னைக் காப்பாற்றுங்கள். ஐயோ! என்னசெய்வேன்? என்றிப்படி பலவிதமாகப் புலம்பினாள். அதுகண்டவிதுரன் ஆற்றமாட்டாத வியசனத்தை யுடையவனாய், அம்மா பதிவிரதாசிகாமணியே! நானென்ன செய்வேன்? என்பேச்சை இந்தத் துரியோதனன் அல்லது திரிதராஷ்டிரன் ஒருவருங் கேட்கவில்லையே: நீகேட்டகேள்விக்கு உன்கணவர்களும் ஒன்றுஞ்சொல்ல வில்லையே: ஆகையினாலே கொஞ்சநேரம் நீதுக்கத்தைப்பொறுத்திரு. பகவான் உன்னைக்காப்பார். அனியாயஞ்செய்தவரைத் தண்டிப்பார். என்றுசொல்லித் துரியோதனனைப்பார்த்து, அப்பா துரியோதனா! அனியாயஞ்செய்ததுபோதும். இனியாகிலும் அதையொழித்து நன்மையாய்நட. வீணாய்க் கெடவேண்டாம். மிகவுமதிகமாய்ப் பாவஞ்செய்தாற் சீக்கிரத்திற்பலிக்கும். முன்னமும் ஒருவிசை சொல்லியிருக்கிறேன். இப்பவுஞ் சொன்னேன். ஆகையால் தீயசெய்கையை விட்டுவிடு. என்றுரைத்துத் திரிதராஷ்டிரனைப்பார்த்து, ஓய்ராஜாவே! நீர் உமது பிள்ளைகளோடுசேர்ந்து பாவங்களைச் செய்கிறீர்: இதனால் வெகுதுக்கங்களை யனுபவிப்பீர். நல்ல சிந்தையோடிரும். பிள்ளைகளைத் தண்டியும். இந்தக்குலத்தைக் கெடுக்காதேயும். இவளைச் சமாதானப்படுத்துங் கொஞ்சநாளாகிலும் வாழலாமென்று கூறினான். இப்படிசொல்லக்கேட்டுங் குருடன் ஊமையாயிருந்தான். துரியோதனனோ? அத்திரௌபதியைப்பார்த்து, அடிபாஞ்சாலி! அங்கேயேன் அலர்த்துகிறாய்? இதோ யானைத்துதிக்கைபோ லிராநின்ற எனது தொடையிருக்கிறதே: இதில் எல்லாருயிரையுங் கொள்ளைகொண்டுண்ணும்படியான யமனுடைய அம்சங்கொண்ட உனது சிரேஷ்டபர்த்தாவைப்போல் இன்னொருபர்த்தாயிருக்கின்றார். ஆதலால் அவரும் உனக்கு இந்த ஐவரோடு அறுவராயிருக்கவேண்டி ஆசையிருந்தால், இவ்விடத்தில்வந் துட்கார். சவுக்கியப்படுவாய். என் றடிக்கடி தனக்குங்குள்ள மிர்த்யுவைத் தானே காட்டுவான்போல வஸ்திரத்தை மடக்கித் தொடையைக் காட்டிக்கொண் டிருந்தான்.

திரௌபதி சபதம்.

அப்போது திரௌபதியானவள் வெகுவாய்மனக்கொதிப்பை யடைந்து, அடாபாதகா! கொஞ்சமாகிலும் பயமில்லாமல் எந்தத்தொடையக் காட்டி என்னை உட்காரச் சொன்னாயோ? அந்தத் தொடையில் உன்வாக்கின்படியே உனக்கு மிர்த்யு உண்டாகும். இதுவல்லாமல்- "அரசவையி லென்னையேற்றி யஞ்சாமற்றுகிறீண்டி யளகந்தீண்டி, வினைசெயளியினம்படிதார் வேந்தரொதிர்தகாதனவே விளம்புவோரைப், பொருசமரின் முடிதுணித்துப் புலான்றுவெங்குருதிபொழியவெற்றி, முரசறையும்பொழுதல்லால் விரித்தகுழலினியெடுத்து முடியேன்கண்டீர்." ஓசபையார்களே! அளவற்ற பெரியோர்களும் - ஆசாரியர்களும்-மகாராஜாக்களும்-இன்னுமுண்டானபலபிரமுகாளிருக்கின்ற இந்த மகாசபையில் என்னைக் குலப்பெண்ணென்று சற்றும் யோசிக்காமலும், தன்மானம் பிறமான மென்பதில்லாமலும், தருமா தருமத்தை நோக்காமலும், இந்தப்பொல்லாத் துஷ்டப்பாதகனாகிய துச்சாதனனால் மகா அக்கிரமத்தோடு மென்னை யழைப்பித்து, மகாராஜ புத்திரியென்று சிறிதுமதிக்காமல், அஞ்சிக்கையென்பது மனுவேனு மில்லாமல், அனியாயமாயெனது அளகத்தையுந் துகிலையும் பலவாறலைய விழுத்துக்களைந்து, தகாத வார்த்தைகளெல்லாம் பேசி, பஞ்சகர்த்தாக்களுக் கொப்பாகிய எனது பர்த்தாக்களெதிரில் ஆக்கிரமித்து அக்கிரமஞ்செய்யத் தலைப்பட்ட அற்பர்கள் யார்யாரோ? அவர்களையும், அதனைக் கூடவிருந்து உபேக்ஷைசெய்த பேர்களையும்; நான் கேட்ட கேள்விக்கு உத்தரவு கொடுக்காமலும், அக்கிரமத்திற் குடம்பட்ட துஷ்டர்களை அடக்கிவைக்காமலும், ஊமைபோ லொன்றும்பேசாமற் சும்மாயிருந்த பாவிகளையும்; இனி நடக்கப்போகின்ற உயுத்தகளத்தில் அவ்வவர்களுடைய முடிகளெல்லா மறுபட்டுச் சிதறி நாற்றிசையினும் உதிரவாறுகள் பெருகும்படியான அக்காலத்திற் பாண்டவர்களுடைவ ஜயமுரசைக்கேட்ட அப்பொழுது இக்கூந்தலைவாரி முடிப்பேனே யல்லது, இந்திராதிகளே முதலிய தேவர்களெல்லாங் கூடிவந்து எவ்வித சமாதானஞ் செய்தாலும் ஒருக்காலும் இதனடுவில் நான் முடியேன். இதைச் சத்தியசபதமாக இங்குள்ள சகலமானபேருங் கெட்டியாய்நம்பக்கடவீர்கள் என்று சொன்னாள்.

வீமசேனன்சபதம்.

அதுசேட்ட வீமசேனன் தானும் உடனே வெகுண்டவனாய், அச்சபை நடுங்கும்படியொன்று சொல்லுகிறான. "வண்டாருங் குழல்பிடித்துத் துகிலுரிந்தோனுடற்குருதி வாரியள்ளி, யுண்டாகங்குளிர்வதன்முன்னிக்கரத்தாற் புனலுண்ணே னொருகா லென்கைத், தண்டால்வெம் புனலெற்றி மீதெழுந்து விழுந்திவலை தண்ணீராகக், கொண்டாவி புரந்திடுவ னிதுவிரதமெனக்கறிமின் கோட்டியுள்ளீர்" இதுவரையிலும் இனிமேலும் ஒருவருஞ்சொல்லாமலுஞ்செய்யாமலுமிருக்கும்படியாகிய பேச்சொன்றுசொல்லுகிறேன். சொல்லியபடி நிறை வேற்றுவேன். இந்தத் துராத்துமாவாகிய துச்சாதனன், கொஞ்சமாகிலும் மானம் - வெட்கம் - பயம் - இரக்கம்-ஒன்றுமில்லாமல், திரௌபதியைச் சபையினடுவி லிழுத்துப் பலவிதமாக உபத்திர

வித்தானல்லவோ? ஆகையாலே நான்யுத்தத்தில் என் கதையினால் அவன்மார்பைப் பிளந்து, அந்தவழியிற் பெருகும் உதிரத்தைக் குடிப்பேன். அதுவரையில் ஜலத்தைக் கையிலெடேன். ஒருக்கால் தாகமேலிட்டால், இதோ என்கையிலிருக்குந்தண்டாயுதத்தினால் ஜலத்தையடித்து, அப்போது மேலெழும்புந்துளிகளை அங்காந்து எனது நாவால் உட்கொண்டு உயிரைக் காத்திருப்பேன். இது சத்தியமானபிரதிக்கினை. அன்றியும் இந்தத் துரியோதனன் எந்தத் தொடையைக் காட்டித் திரௌபதியை யுட்காரச்சொன்னானோ? அந்தத் தொடையை யுத்தத்திற் கதாயுதத்தினாற் சின்ன பின்னமாய்ப் பிளக்கக்கடவேன். அப்படிக்குச் செய்யாமற் போவேனாகில், இக்குருகுலத்தோர் சேர்ந்த புண்ணிய லோகஞ் சேராமல் நரகில்விழக் கடவேன். என்றுசொல்லி முகத்திற் கோபாக்கினிச் சுவாலைகளெழும்பும்படி நின்றான். அப்போது சபையி லிருப்போரிற் சிலர் வீமனைப்பார்த்து, ஓ மாருதிகுமாரா! நன்றாய்ச் சொன்னாய்: தகும். தகும். என்று சொல்லித் துரியோதனனையும் துச்சாதனனையும், சீ! சீ! என்று இகழ்ந்தார்கள். உடனே விதுரன் வீமனைக் காட்டிச் சபையாரைப்பார்த்துச் சொல்லுகிறான்: கேளீர் கனவான்களே! முன்னம் பலிச்சக்கிரவர்த்திக்கு விஷ்ணுவின் ஆக்கினையால் வருணபாசக்கட்டு நேரிட்டது போல், இந்த வீமசேனனாலேயே உங்களுக்கெல்லாம் யமபாசக்கட்டு நேரிட்டதென்று நினையுங்கள். இவ்வளவு காலத்திலும் இந்தக் குலத்தில் அனியாயமுண்டானதில்லை. இப்போது பாவச்செய்கையில் உங்களுக்குப் புத்திவந்து, சூதாடயத்தனப்பட்டு, ஸ்திரீயைச் சபையிலிழுத்து அனியாயம் பண்ணினீர்களன்றோ? இதனாலே உங்களுக்குச் சகலசவுக்கியங்களும் அழிந்தன. நீங்களெல்லாந் திரௌபதியைச் செயித்ததாய் நினைத்திருக்கிறதெப்படி யிருக்கிறதென்னில்? கனவிற்கண்டபொருளை யொருபேதை தனதென்று நம்பிக் களிப்பதுபோ லிருக்கிறது. ஏனென்றால் - தருமபுத்திரர் தம்மைத் தோற்றுப் பராதீனராகிய பின், திரௌபதியை வைத்தாட யோக்கியதையில்லாதவராயிருக்கிறார். அப்படிப்பட்டவர் பந்தயம் வைத்தாடினதினால், அவளை நீங்கள் செயித்தேனென்பது சத்தியமன்று. இவையெல்லாஞ் சகுனிசெய்தமோசம். இனி அவைகளைக் குறித்துப் பேசுவதில் என்னலாபம்? கௌரவகுலத்திற்குக் கெடுதி கேளாமலே சம்பவித்துவிட்டது. அரசமரத்தைப் பிடித்தசனி அதின்கீழுள்ள ஐயனார் முதலிய அனைவரையும் பிடித்தது.) என்கிற பழமொழிபோ லாச்சுது இப்போது திரௌபதியும் வீமசேனனுஞ் செய்துகொண்ட சபதமென்று சொன்னான்.

அருச்சுனன் சபதம்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இவ்விருவர் சபத மிவ்வாறாக "பகலவன்றன் மதலையுயிர் பகைப்புலத்துக் கவர்வனெனப் பார்த்தன் சொன்னான், நகுலனுமற் றென்கரத்தாற் சௌபலநாயகனுயிர்க்கு நாசமென்றான், சகுனிதனை யிமைப்பொழுதிற் சகாதேவன் துணித்திடுவேன் சமரிலென்றான், னிகனிருபரிவர்மொழிகேட் டெளிதோவிக் கொடும்பழி யென்றேங்கினரோ." அஃதெப்படியென்றால்-திரௌபதியும் வீமசேனனும் - சபதஞ்செய்து முடித்த அப்போது, அர்ச்சுனன் கெம்பீரமாய் வீமனைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறான். வாராய்வீமசேனா! இவர்களில் ஒருத்தருந் தப்பிப் பிழைக்கப்போகிறதில்லை. உன்னுடைய கோபத்திற்கு இலக்கானபோதே நசித்தார்களென்று நினைக்கவேண்டும். இவர்களெல்லாம் யுத்தத்தின்பெருமை யறியாதவர்கள். வீட்டிலிருந்து கறிகளையும் - சோற்றையும் - மற்றுமுண்டான உணவுகளையும்-உருசிபார்த்துத் தின்றுக்கொண்டு வேடிக்கையாய்ப்பேசி விளையாடுகிறவர்கள். அதனாலே தான் நீ பிரதிக்கினைசெய்ததைப் பார்த்திருந்தும் அஞ்சாமலிருக்கிறார்கள். இவர்களுடைய காயத்திலுள்ள உதிரத்தைப் பூமிதேவி கொஞ்சக்காலத்திற் பானம்பண்ணுவள். இன்னுஞ்சொல்லுகிறேன் கேளுமண்ணாவென்று பின்னுஞ் சொல்லுகிறான்: இப்போது நீ பிரதிக்கினை செய்தபடி, மிகவுந்துஷ்டனாகியும் அகங்காரம் பிடித்தவனுமாகிய கர்னனையும் அவனைச் சேர்ந்தவர்களையுஞ் சங்கரிப்பேன். இந்தத் துரியோதனனுக்கு உபபலமாய் வருகிறபேர்களெல்லாரையு முடிப்பேன். இமாலயபருவதம் அசைந்தாலும் அசையும், சூரியன் ஒளிமழுங்கிப்போனாலும் போவன், சந்திரன் குளுமையைத் துறந்தாலுந் துறப்பன், நான் சொல்லிய பேச்சோ? ஒருநாளும் வீணாய்ப்போகாது. என்று இராஜகண்டீரவம்போற் கர்ஜித்து நின்றான்.

நகுலசகாதேவர் சபதம்.

உடனே நகுலன் சொல்லுகிறான்: கேளுங்கள் சபையாரே! திரௌபதியைக் கிஞ்சித்து மஞ்சாமல் வாய்க்கு வந்தபடி கடுஞ்சொற்களைப் பேசியவர்களாகிய துரியோதனனுடைய தம்பிமார்களையும், இந்தச் சூதாடும் வஞ்சகனுடைய புத்திரனாகிய உலூகனையுஞ் சங்கரிக்காமற் போகமாட்டேன். போவேனாகில், எனக்கு மூத்தவர்களுடையகதி கிடைக்காமற்போகட்டும் என்று சொல்லியபின் சகாதேவன் சொல்லுகிறான்: யாவருங் கேளுங்கள் - இந்தப் பாவியிருக்கின்றானே சகுனி, இவன்வேசியானவள் தனவான்களுக்குத் தனது ஸ்தனமுதலாகியவைகளைக்காட்டி மயக்கியுட்படுத்திப் பணம்பறிப்பதுபோல், சூதாட்டத்தினால்மயக்கிப் பறிக்கிறவன். இவன் திருடருக்குச் சமானமானவன். இவனுக்குப் பாச்சிகையைக் கையிலெடுத்துக் கர்ஜிக்கத்தெரியும். அம்பென்றால் அதுவம்பென்றோடுவன். இப்படிப்பட்ட வஞ்சகனைச் சமரிலே கூர்மையுள்ள அம்புகளினாலே தூக்கி நரகக்குழியிற் போடுவேன்.

அப்படி செய்யாமற்போனால் வீரருடைய லோகத்தையடையாமற் போகக்கடவேன் என்றுபிரதிக்கினை செய்து ஓய்ந்தான். அப்போது ஆகாசத்திலிருந்து புஷ்பவருஷம் விழுந்தது. அதைப்பார்த்து யாவரும் ஆச்சரியப்பட்டுத் திரௌபதியையும் பாண்டவர்களையுந் துதித்தார்கள். துரியோதனாதிகளை வெகுவாய்க் கண்டவர் கண்டபடி நிந்தித்தார்கள்.

தருமராஜன் அருச்சுனன் கோபமடங்கச் சமாதானஞ்சொல்லுதல்.

இப்படியிருக்க அர்ச்சுனன் மீட்டும் வெகுண்டு சொல்லுகிறான். கேளுங்கள் சபையாரே! துரியோதனன் எவனுடையபலத்தைப்பற்றி அதிககெருவத்தையடைந்து சகல அனியாயங்களையுஞ் செய்கிறானோ? அப்படிப்பட்ட கர்ன்னனையும்- அவன்மக்களையும்-நேசனையும்-விசுவாசரையும்-இப்போதே கொல்லுவேன். இப்போதெனக்கு அண்டுபடாத கோபமுண்டாகின்றது. இக்கோபமாகிய அக்கினியாஸ்திரத்தை இங்கிருக்கிற மகா துஷ்டர்மேல் இப்போதேவிடுவேன். யாவரையும் நாசம்பண்ணிப் போடுவேன். மகாதயாளுவாகிய இந்த மகாராஜாவினால் அதற்குத் தடையுண்டாயிருக்கிறது. இல்லாவிட்டால் இதுவரையிலும் உயிரோடிருக்கமாட்டார்கள். என்றுசொல்லிக் கோபமென்னு மக்கினிச் சுவாலைகள் முகத்திற் பிரகாசிக்கக் கண்கள் சுழல உதடுதுடிக்க, கண்ணினாலே யாவரையுந்தகிப்பதுபோல் வீஷ்மர் முதற் சகலமானபேரையும் பார்த்துக்கொண் டிருந்தான். அப்போது சபையிலிருப்பவர்களெல்லாம் நடுநடுங்கி, ஒன்றும் பேசாமலிருந்து விட்டார்கள். அந்த அர்ச்சுனன் அதிகமாய் வெகுண்டு பெருமூச்செறிந்து அடிக்கடி சபையாரைப் பார்க்கிறதும், வில்லைப்பார்க்கிறதும், உறுமுகிறதும், தமயனாரைப்பார்க்கிறதுமாக இருந்தான். அப்போதவனை தக்ஷகப்பிரசாபதியின்யாகத்தை நாசம்பண்ணும்படியாகிய உருத்திரமூர்த்திக்குச் சமானமாக நினைத்து, யாவரும் நடுநடுங்கி, இனி என்னமாய்முடியுமோ? உதிட்டிரர் ஒருவேளை சங்கரிக்கும்படி அனுமதிப்பண்ணுவரோ? அர்ச்சுனனால் நாமெல்லாம் பிராணனையிழப்போமோ? என்னமோவென்றுநினைத்துப் பிணங்களைப்போற் கைகால்களை யசைக்கமாட்டாமலிருந்தார்கள். பூமியும்நடுங்கிற்று. ஆகாசத்திற்சஞ்சரிக்கிற பேர்களும் ஸ்தம்பித்துப் போனார்கள். சூரியனும் பிரகாசிக்கமாட்டாமற் போனான், காற்றும் வீசமாட்டாமற் போயிற்று.

இவ்வண்ணமாய் உலகமெல்லாம் நடுங்கும் படி காலாந்தகன்போல் நிற்கிற அர்ச்சுனனைப்பார்த்தவீமசேனன், தானுங் கோபாவேசங்கொண்டு யுத்தசன்னத்தையடைந்தான். இவ்விருவரும் இவ்வாறாகியதைக்கண்ட பாஞ்சாலி மனதிற் களிப்பை யடைந்தாள். இப்படிக்கு பிரளயகாலாக்கினியைப்போற் கோபத்தினாலே சொலிக்காநின்ற அர்ச்சுனனைப்பார்த்து உதிஷ்டிரர் சொல்லுகிறார்: குழந்தாய் அர்ச்சுனா! உன்னைப்போன்று ஒருவரும் இப்படி சகாயஞ்செய்யமாட்டார்களே: நீயேன் கீர்த்தியை வீணாக்கிறாய்? எல்லாந்தெரிந்த நீயே பாலகன்போற் கோபத்திற் கிடங்கொடுக்கலாமா? நான் நினைத்தால் இந்தப்பாவிகளை யொருநொடியில் நாசஞ்செய்யமாட்டேனா? தெய்வச் செயலாய் அவர்களுக்கு விநாசம் வரட்டுமென்று பொறுத்துக்கொண் டிருக்கிறேன். அப்படி நீயும் பொறுத்திருக்கவேண்டும் என்று சொல்லக்கேட்டு, அர்ச்சுனன் சாந்தமாயிருந்தான். அதுகண்டு சபையிலிருக்கிறவர்களெல்லாஞ் சந்தோஷமா யிருந்தார்கள். வீமசேனன் மாத்திரஞ் சத்துருக்களை இப்போதே நாசஞ்செய்யக் கூடாமற்போயிற்றே யென்று விசனப்பட்டான்.

திரிதராஷ்டிரன் திரௌபதிக்கு வரங்கொடுத்தல்.

இங்கே இப்படியிருக்க-திரிதராஷ்டிர னுடைய அக்கினிச் சாலையிலே நரிகள் வந்து ஊளையிட்டதுகள். கழுதைகள்கதறிக்கூவின. இன்னும்வெகு அபசகுனங்கள் காணப்பட்டன. இவைகளை விதுரனுங் காந்தாரியுங்கண்டு சொல்லத்தெரிந்த வீஷ்மர் முதலானோர்கள் ஒடுங்கிப் போனார்கள். இச்சேதியைத் திரிதராஷ்டிரனுங் கேட்டு வெகு ப[illegible]தை யடைந்து, துரியோதனனைப் பார்த்து, அ[illegible]மகனே! உனக்குக் கேடுகாலங் கிட்டித்தான் பா[illegible]வர்களுடைய பத்தினியைச் சபையிலிழுத்து [illegible]மானஞ் செய்தாய். பாண்டவர்களுடைய பாரி[illegible] ஓர் சாதாரண மானவளானாலும், இப்படி செ[illegible]தகாது. இந்தத் திரௌபதியோ? சகலகுணங்கள[illegible]ஞ் சிறந்தவள். அக்கினியிற் பிறந்தவள். மகாமகிமை பெற்றவள். இப்படிப்பட்டவளை அஞ்சாமல் அவமானஞ் செய்தபோதே நீங்கள் மரித்தவர்க ளென்றே நினைக்கிறேன். இனியாகிலுஞ் சும்மாவிருவென்றுசொல்லித் திரௌபதியை நோக்கி, அம்மா எனது குலபாக்கியமே! நீ எனக்கு மூந்தியமருமகள். குலதருமத்திற்கு முக்கிய ஆதாரமானவள். எல்லா வித்த்திலுஞ் சிறந்தவள். இப்படிப்பட்ட உன்னை மூடர்தெரியாமல் அவமானஞ்செய்தார்கள். ஆகிலும் என்னாலே கொண்டாடத்தக்கவளா யிருக்கிறாய். ஆகையினாலே உனக்கொரு வரந்தருகிறேன் கேளென்று சொன்னான்.

அப்படி சொல்லக்கேட்ட திரௌபதியானவள்- ஐயா என்மாமனாராகிய மகாராஜனே! உமக்கு வரங்கொடுக்கத் திருவுளமானால், சகலராஜாக்களுக்குஞ்சிரோபூஷணமாகியும் - சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெற்றவராகியும் - சகலகுணங்களையுடையவருமாகிய உதிஷ்டிர மகாராஜாவை நாய்க்குங் கடையாகியபேர்

கள் முறியென்று சொல்லுகிறார்களே: அவருடைய குமாரனும் ஒப்பற்றவனுமாகிய பிரதி விந்தியனைத் தாசி புத்திரன் என்று சொல்லுகிறார்களே: இவ்விரண்டு சொற்களு மில்லாம லிருக்கும்படி வரந்தரவேண்டுமென்றாள். அதற்கு அந்தராஜனும் அப்படியே யாகட்டும். உனக்கு இவ்வொரு வரமாத்திரங் கொடுப்பது போதாது. மற்றொருவரமுந் தருகிறேன் கேளென்றான். மறுபடியும் பாஞ்சாலி யானவள் - ஐயா! அங்ஙனந் திருவுளமாகில், வீமசேனன் முதலிய நால்வரும் அவர்களுடைய குமாரரும் முறித்தன்மையினின்றும் விடுபட்டு, வாகனங்களோடும் ஆயுதங்களோடுஞ் சுதந்திராகவேண்டும் என்று வேண்டினாள். அவ்வரசனும் அப்படியே யாகட்டும் இன்னொரு வரமுந் தருகிறேன் கேளென்று சொல்ல, அந்தப் பாண்டவர் தலைவி சொல்லுகின்றாள்: ஐயா ! எவர்க்கும் அதிக ஆசையாகாது. அது வெகு கேடுகளைப் பயக்கும். தனக்குத் தருமானமட்டும் விரும்பலாகுமே யல்லது, கரும்பு ருசியா யிருக்கிறதென்று வேரோடு கெல்லலாகாது. உமது சித்தத்தின்படி இரண்டு வரங்களைப் பெற்றேன். என்கணவர்களின் முறிதீர்ந்ததே போதும், இனியவர்கள் உலகமெல்லாம் வெல்ல வல்லவர்களே. மேலும் வைசியர் ஒருவரத்தை வேண்டலாம். அரசர் இரண்டு வரங்களை வேண்டலாம். வேதியர் நூறுவரங்களை வேண்டலாம். ஆனதுபற்றி அடியாள் மூன்றுவது வரம் வேண்டுவது தகுதியன்று. என்று சொல்ல அதுகேட்டு யாவருஞ் சந்தோஷித்தார்கள்.

அருச்சுனன் வீமசேனன் கோபமடங்கச் சமாதானஞ்சொல்லுதல்.

அப்போது கர்னன் துரியோதனனைப் பார்த்துச் சொல்லுகிறான்; கேட்டாயோ துரியோதன மகாராஜனே ! உலகத்தி லனேகம் ரூபவதிகளான மகளிருண்டு. அவர்களுடைய திறமைகளைப் பார்த்துமிருக்கிறோம். கேட்டு மிருக்கிறோம். ஆகிலும் இவளைப்போலே திறமை யொருவருக்குமில்லை. பாண்டவர் நம்மாலவமானம் பண்ணப்பட்டுக்கொண் டிருந்த போது வெகு பொறுமையா யிருந்து, இப்போது எப்படியோ மாயாவிசெய்து மயக்கிக் கிழவரிடத்தில் வரம் பெற்றுத் துக்கமென்னுங் கடலிலாழ்ந்த தன்பர்த்தாக்களுக்கு ஓடம்போலானாள். இவ்வளவு சாமர்த்தியமுள்ள பெண்டாட்டியை யடைந்தபடியால் அவர்களும் அவ்வாபத்தினின்றுங் கரையேறினார்கள். என்றுசொல்லக்கேட்ட வீமன் அர்ச்சுனனைநோக்கி, அர்ச்சுனா ! கேட்டாயோ ? இந்தத் தேர்ப்பாகன் நமக்குப் பெண்டாட்டியே ஓர் கதியாயினாளென்று பிதற்றினனே: இவன்நாவை யறுக்கவேண்டும். ஆகிலும் உனக்கு என்னசிக்ஷை செய்யலா மென்று தோற்றுகிறது சொல். அப்படியேசெய்கிறேன். மனிதனுக்கு மூன்று பவுருஷங்க ளிருக்கவேண்டும். எவையென்றால்-போரில் முன்வைத்தகாலைப் பின்வைக்காம லிருப்பதும், ஒருவீரன் சண்டைக்கு அழைத்தவுடனே சந்தோஷமாய்ப் போவதும், தன்பாரியையை அயலான்தொட்டால் அவனைத் தண்டிப்பதுமாம். இம்மூன்றிலுங் கடைபடுபவுருஷம் அற்பருக்குஞ்சகசமானது. அதையும் நாம் செலுத்தக்கூடாம லிருக்கும்படி நம்முடைய மகாராஜா நம்மை அஸ்வாதீன ராக்கினார். ஆகிலும் என்னசெய்யலாஞ் சொல்லென்ன, அதைக்கேட்ட அர்ச்சுனன் வீமனைப்பார்த்துச் சொல்லுகிறான்:

அண்ணலே ! நீ சொல்லியது சத்தியந்தான். உலகத்தில் ஒருவனுக்கொருவன் சத்துருவா யிருந்தால் அனேகவிதமாய்ச்சொல்லுவதுஞ்சகசந்தான். மேலும் அந்தக் கர்னன் இயல்பாய் துஷ்டன். உள்ளிப்பூண்டுக்கு எத்தனைவாசனை கட்டினாலுந் துர்க்கந்தத்தையே வீசும். எதிரிகள் பலத்தினாற்செயிக்க, நாம்கையிலாகாமல் அவமானப் பட்டுக்கொண் டிருந்தால் அப்போது நமக்கு இகட்சி. மேலும் அவர்கள் மாத்திரம் நம்மைச் சத்துருக்களென்றுநினைக்கிறார்கள். நாமோ அப்படி நினைக்கக்கூடாது. ஏனென்றால்-நமக்கு மிகவுந் தாழ்ந்தவர்களை உபேக்ஷிக்க வேண்டுவதே நியாயமல்லவோ ? துஷ்டப்பூச்சிகள் கடிக்கிறபோது அவைகளை நசுக்க எவ்வளவு நேரம்பிடிக்கும் ? ஆகிலும் நமது மகாராஜாவின் கருத்தை யனுசரித்து நாம் துயரின்றி யிருக்கவேண்டுமென்று சொன்னான். அதற்குவீமசேனன்சொல்லுகிறான்: அர்ச்சுனா! இந்தப்பாவிகள் விஷயத்தில் நியாயா நியாயங்கள்கூட விசாரிக்க வேண்டுமா? ஆயுதத்தையெடுத்து நிமிஷத்தில் நாசஞ்செய்துப் போடுவேம். அதனாற்பாவம்வராது. வீணாய்க் கிலேசத்தை யனுபவிப்பதேன் ? இவர்களைப் பரிவாரங்களோடு நாசஞ்செய்து இராச்சியத்தை மகாராஜாவுக்குக் கொடுத்துவிடுவோம். என்றுசொல்லித் தம்பிமார்களுடனே தன் கதாயுதத்தைக் கையிலெடுக்க முயன்றான். அதுகண்ட அர்ச்சுனன் இந்தச்சமயத்தில் இவனைத் தகையாமற் போவோமாகில், யாவரையும் இந்நிமிஷத்தில் இங்குதானே நாசஞ்செய்து போடுவனென்று வெகுவிதமாய்ச் சமாதானஞ் செய்தான். ஆகிலும் அவ்வீமசேனன் அடங்காமல், முகத்திற் சுவாலைகள் எழும்ப, தேகமெல்லாம் வேர்த்து நடுங்க, உதடு துடிக்கப் பெருமூச் செறிந்துகொண் டிருந்தான்.

திரிதராஷ்டிரன் தருமனைச்சமாதானப் படுத்தி மீட்டுமரசுகொடுத் தனுப்புதல்.

இப்படியிருக்க உதிஷ்டிரரும் வீமனுக்குக் கோபஞ் சாந்தமாகும்படி வெகுவாய்ச் சமாதானங்களைச் சொல்லி, திரிதராஷ்டிர னிருக்கு மிடத்திற்குவந்து கைகூப்பிநின்றார். அந்தத் திரிதராஷ்டிரன் இவரு

டைய வணக்க முதலான குணங்களைக் கண்டு, இவர் விஷயத்திற்செய்த தீங்குக்காக நாணமும் விசனமு முற்றுச் சும்மாவிருக்க; அவர் மீட்டும் அப்பெரிய தகப்பனரை நோக்கி, ஐயா மகாராஜாவே! உமது கட்டளையின்படி அடியேன் இவ்விடம் வந்து செய்ய வேண்டியவைகளைச் செய்தேன். இன்னுமேதாகிலுஞ் செய்யவேண்டுமோகிற் சுகமாய்க்கட்டளையிடலாமென் றுரைத்தார். அது கேட்ட குருட்டரசன் - ஓ குழந் தாய் அஜாதசத்துருவே! உனக்கு எல்லா நன்மைகளு முண்டாகும். நீசூதினுல் தோற்ற இராச்சிய முதலியவைகளை மறுபடியு முனக்குத்தந்தேன். ஆனபடியினுலே நீ தம்பிகளோடும்-பத்தினியோடும்-இரதகஜதுரக பதாதிகள்சூழ இராச்சியத்திற்குப்போய் தருமபரிபாலனஞ் செய்துகொண்டிரு. இப்போது நானெருபேச்சு சொல்லுகிறேன். அதைக்கேட்டு அப்படியே நீ நடக்கவேண்டும். அதனுலே உனக்கு மேன்மேலும் நன்மையுண்டாகும். உனக்குத் தெரியாததல்ல. நீ சகல தருமங்களையு மறிந்தவன். வெகு பெரியோர்களிடத்திற் பணிவிடைசெய்து தருமசூக்குமங்களைக் கேட்டவன். வணக்கமொடுக்க முதலான சகல நற்குணங்க ளமைந்தவன். ஆனபடியினுலே உனக்குச் சொல்லவேண்டுவ தில்லை. ஆகிலுஞ் சொல்லுகிறேன்கேள். நீ வீமன்முதலான தம்பிமாரிடத்தில் எப்படி அன்புடையவனு யிருக்கிருயோ? அப்படியே துரியோதனன் முதலானேரிடத்திலு மிருக்கவேண்டும். கொஞ்சமுங் கோபஞ் செய்யாமலிருக்கக் கோருகிறேன். லோகத்திலே ஒருவன் அபகாரஞ்செய்தால் அவன்மீதிற் கோபமுண்டாகாமற் போகமாட்டாது. ஆனுலும் அதைப் பாத்திரா பாத்திரமறிந்து விடவேண்டும். அவனேபுத்திமான். அவனே தருமசீலன்.

மேலுங் கோடாலியானது எதின்மீதி லெறியப்பட்டாலும் அதைப்பிளக்கும். ஆனுலுங்கல்லின்மீதிற் போட்டாற்கைகளுக்குவெகுசிரமமுண்டாவதுமன்றி, கல்லும் பிளவாது. கோடாலியுங் கூர்மழுங்கிப்போம். அப்படிப்போலவே கோபமென்னுங் கோடாலியைப் பந்துக்களென்னுங் கல்லின்மீது போட்டாற் பின்பு வெகு விசனத்திற்கு இடமுண்டாவதேயன்றி, அவர்களுக்கு அதினுல் அபாயம் நேரிடாது. ஏனென்ருல்- இந்தக்கோபமாகிய கோடாலி அவர்கள்மீதில் எறியப்படும்போதே கூர்மழுங்கிப் போகின்றது. அல்லது ஒருவேளை மழுங்காமல் அபாயத்தைத்தான் உண்டாக்கினுலும், இவனுக்கு அதனுல் தீராதபழியும் பாவமும் வராமலிருக்கமாட்டாது. மேலும் பெரியோர்கள் அபகாரியினிடத்திலும் நன்மையே சிந்திப்பார்க ளல்லவோ? என்புத்திரர் வெகுமூடர். அகங்காரம் பிடித்தவர். ஆனதுபற்றி உன்விஷயத்திற் செய்யத்தகாத பொல்லாங்கைச் செய்தார்கள். அதை எவ்வளவுஞ்சிந்திக்கவேண்டாம். அந்தகனும் மூப்பனுயு மிருக்கிற என்னையுங் காந்தாரியையும் பார்த்து, எத்தனை யபராதங்க ளிருந்தாலும் பொறுக்கவேண்டும். நாங்களிருவரும் உங்களுக்கு நன்மையைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறபேர்கள். இப்படிக்கு இதிற் கலகம் நேரிடுமென்று தெரிந்திருந்தால், இக்காரியத்தை யாரம்பிக்கமாட்டேன். புதியசபை யொன்று விசித்திரமாய்க் கட்டினேமே: அதில் நமது குழந்தைகள் வேடிக்கையாய் விளையாடட்டுமென்றுநினைத்து உங்களையழைப்பித்தேன். யாருக்கும் வரவேண்டுவது வழியிற்றங்காது. இவன் உங்கள் விஷயத்திற் செய்த பிழையினுலே வீமசேனனுடைய கோபத்திற்கு யாவரும் இப்போதே இலக்காவார்கள். ஆனுல் நீ யிருந்தபடியினுலே அப்படியாகவில்லை.

மேலும் எப்போதும் எனக்குக்குறைவில்லையென்றெண்ணிக்கொண் டிருக்கிறேன், ஏனென்ருல்-என் பிள்ளைகள் துஷ்டரானுலும் அவர்களுக்கு ஒரு தீங்குமில்லாமற் காப்பாற்றவும், குடிகளுக்குக் கொஞ்சமுங் குறைவில்லாமல் இராச்சியபரிபாலனஞ்செய்யவும் நீயிருக்கிருய். நன்மைதீமைகளையறிவிக்க விதுரனிருக்கிருன். நீயோ தருமசீலன். உன் தம்பிகள் வெகுபராக்கிரமமுடையவர்கள். இரட்டைப்பிள்ளைகளோ? வணக்கமுதலிய சுகுணங்க ளுடையவர்கள். ஆனது பற்றி உனக்கு எப்போதும் எல்லா நன்மைகளும் உண்டாகும். அப்பா உதிஷ்டிரா! நீ சகல க்ஷேமசந்தோஷத்தோடு உன் பட்டணத்துக்குப்போய்வா. என்றுபிதாசொல்லியதைக்கேட்ட உதிஷ்டிரர் பிதாவைப் பார்த்து, ஐயா! உமது கட்டளையை மீறி நடப்பவனல்லேன். என்றுசொல்லி நமஸ்காரஞ்செய்து சகலபரிவாரங்களோடும் இந்திரப் பிரஸ்தத்துக்குப் போகப் பிரயாணமானுர். இப்படிக்குச் சொல்லிவரா நின்ற வைசம்பாயன முனிவரைநோக்கி ஜெனமேஜெயமகாராஜன் வினவுகிருன். சுவாமிவைசம்பாயனமகாமுனிவரே! திரிதராஷ்டிரமகாராஜன் கபடமாய் பாண்டவரை யழைப்பித்துத் தன் பிள்ளைகள் முதலாயினேரைக் கொண்டு சூதாடுவித்து எல்லாப் பொருள்களையும் பறித்துத் திரௌபதியையும் வேண்டியபடிக்கு அவமானஞ் செய்தவன், பின்பு அவர்களுடைய மகிமையைக் கண்டும் அபசகுனங்களைப் பார்த்தும் பயந்து, மறுபடியுஞ் சகல சம்பத்துக்களோடு இராச்சியத்துக்குப் போகும்படி செய்தானே: அப்போது துரியோதனன் முதலானேருடைய சித்த மெப்படியிருந்தது? என்னசெய்தார்கள்? இவைகளை யருளிச்செய்யவேண்டுமென்று கேட்க வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினுர்.

துரியேதனன் திரிதராஷ்டிரனிடஞ்சென்று முறையிடல்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! திரிதராஷ்டிரன் பாண்டவருக்கு யாவையுங் கொடுத்து அனுப்பியதைக்கண்ட துர்ச்சாதனன் முகங்கன்றி அண்ண

னிடத்திற்குவந்து, அண்ணு! கிழவனுகிய நமதுபிதா செய்ததைப்பார்த்தீரா? நமக்குக் கனவிலுஞ் செயித்தற்கரிதாகிய பாண்டவர்களின் செல்வத்தை எவ்வளவோ தந்திரஞ்செய்து சம்பாதித்தோமே: அவர்களுடைய ஒப்பில்லாத பராக்கிரமத்தைப் பயன்படவொட்டாமல் தருமமானவழியென்றொரு எல்லை ஏர்ப்படுத்தி அவர்களே இராச்சியத்தை யெல்லாம் விட்டுத் தங்களுடம்புகள் மாத்திரஞ் சுவாதீனங்களானற் போதுமென்று நம்மைவேண்டிக்கொள்ளும்படிசெய்தோமே: (குயவனுக்குப் பலநாள்வேலை தடிக்காரனுக்கு ஒருநொடி வேலை.) என்கிறபடி அத்தனை வருத்தத்தையும் பாழாக்கி, மறுபடியும் அவர்களுக்கு இராச்சியத்தைக் கொடுத்தனுப்பினர். இனி நாம் பிழைப்பதேது? நாளைக்கேவந்து புகுந்து கொல்லுவார்களே: அப்போது நாமெல்லாம் என்னசெய்வோமென்று சொன்னன். அதுகேட்ட துரியோதனனனவன், கர்னன் - சகுனி - அத்துச்சாதனன் - என்கிற மூவருடன் யோசித்துத் தந்தையினிடத்துக்குவந்து, ஐயா! என்னகாரியஞ் செய்தீர்? சத்துருக்களுக்கு மேன்மையுண்டாகப் பார்க்கலாமா? நீர் மகாராசாதான். ஆகிலும் ராஜநீதி எவ்வளவுமறியீர். சாமதானபேத தண்டமென்னு நான்குபாயங்களில், எதினலாகிலுஞ் சத்துருவைத் தாழ்த்த வேண்டுவது அரசருடைய கடைமையென்று பிரகஸ்பதி சொல்லியிருக்கிறதை நீருணரவில்லை. எவ்வகையால் தேடினல்தா னென்ன செல்வஞ் செல்வமாகாமற்போகுமா? அல்லது சுகத்தை யுண்டாக்காதா? எப்படியாவது பாண்டவர்களின் இராச்சியத்தை அபகரித்து, அரசரையெல்லாஞ் சுவாதீனராக்கிப் பூமிமுழுவதையும் ஏகசக்கிராதிபதியாய் ஆளலாமென்றெண்ணிச்செய்து கூடிவந்த காரியத்தைக் கெடுத்தீரோ: தன் மக்களுக்குக் கேடுநினைப்பாருமுண்டா? அச்செல்வமெப்படியாகிலு மிருக்கட்டும். நாளைக்கு இவ்விரோதங்களை யெல்லாம் உள்ளத்திற்றனே வைத்துக்கொண்டிருந்து வந்து, எங்களை வேரோடுங் கெல்லி யெறிந்து விடுவார்களே: ஐயோ! இனி இதற்கென்ன செய்கிறது? என்று துக்கித்துப் பின்னுஞ் சொல்லுகிறன்.

ஓ என்பிதாவே! சுபாவமாய் அவர்கள் நமக்குச் சத்துருக்கள், மேலும் வெகுவாய் அபகாரஞ்செய்யப்பட்டார்கள். ஆனபடியினலே எங்களை யுயிரோடுவைக்கார்கள். ஆனல் உம்மையொன்றுஞ் செய்யார்கள். அதனலே நீர்அவர்களை ஆதரணைசெய்தீர். கொடுவிஷமுள்ள பாம்பைப்பிடித்து மீட்டும் விடலாகாது. விட்டால் வெகுதீங்குகள் நேரிடும். பிடித்தவுடனே நசுக்கிப்போட வேண்டும். நீர் உமதுமக்களைக் கடித்துக் கொல்லுவேனென்றுநினைத்திருக்கிற குரூரமாகிய சர்ப்பத்தைப் பால்புகட்டி வளர்க்கிறீர். இப்படிப்பட்ட செய்கையைப் பயித்தியக்காரனுஞ் செய்யான். அவர்களில் நால்வர்சும்மாவிருந்தாலு மிருப்பார்கள், அர்ச்சுனன் சும்மாவிருக்க மாட்டான். அவன் சுபாவத்திற் பாகுபல முள்ளவன். சவுரியமுள்ளவன். ஆயுதவித்தையில் வல்லவன். அவனுக்குயாராலும் வெல்லக்கூடாத - தேர்-குதிரை - கொடி - வில்-அம்புப்புட்டில்- முதலான சாதனங்களுமிருக்கின்றன. ஆயிரங்கைகள் படைத்த கார்த்தவீரியார்ச்சுனன் செய்யுஞ் செய்கையை, இவன் இரண்டு கைகளினலே செய்கிறன். நம்மிடத்தி லிருக்கிற வீஷ்மர் - துரோணர் - கிருபர்-அசுவத்தாமா - கர்னன் - சகுனி-சோமதத்தன் - முதலாகிய வீரரெல்லாம் ஒருமித்துச் சண்டைசெய்தாலும் அவனல் வெல்லப்படுவார்களேயன்றி, அவனைக் கொல்ல மாட்டார்கள். அவனுடைய சாமர்த்தியம் நிகரில்லாதது. அப்படிப்பட்ட பெருந்தீயில் எங்களை விழச்செய்தீர். என்னசெய்வோம்? என்று மிகவும் விசனத்துடனே சொல்லாநின்ற மகனுடைய பேச்சைக்கேட்ட திரிதராஷ்டிரன் அம்மகனைப்பார்த்துச் சொல்லுகிறன்.

கார்த்தவீரியார்ச்சுனன் சரித்திரம்.

ஓ என்னருமை மகனே! ஆயிரங் கைகளோடுங் கூடிய கார்த்தவீரியார்ச்சுனனென்கிறவன் யார்? அவன் எத்தன்மையானவன்? அதைச் சொல்லென்று கேட்டான். அப்போ துரியோதனன் சொல்லுகிறன்: ஐயா! மகாவிஷ்ணுவின் உந்தித்தாமரை மலரினிடத்திலுதித்த நான்முகத் தேவனுக்கு அத்திரிமகாரிஷியென்கிற புத்திரரொருவ ருண்டானர். அவரிடத்தினின்றுஞ் சந்திரனுண்டானன், அவன்மகன் புதன், அவன்மகன் புரூரவன். அவனுக்கு ஆயுவென்னும்புத்திரன் பிறந்தான். அவன்புத்திரன் நகுஷன். அவன் புத்திரன் யயாதி. அவனுக்கு மூத்தகுமாரன் யதுமஹாராஜன். அவன்குமாரன் சகசிரோகன். அவன்புதல்வன் சக்கிரதாசன். அவனிடத்தினின்றும் ஹேஹயன். அவனிடத்தினின்றுந்தருமன். அவனுக்குக்கார்த்தன். அவன்புத்திரன் கிருதவீரியன். அவனுடைய குமாரன் அர்ச்சுனன். இவனே கார்த்தவீரியார்ச்சுனன். இவன் தத்தாத்திரேய ரென்கிற மகாயோகியை நோக்கிப் பதினையிரத் தைஞ்ஞூறு வருஷமளவும் உக்கிரமாகிய தவஞ்செய்து, அவருடைய அனுக்கிரகத்தினலே ஆயிரங்கைகளையும் மற்றுஞ் சிலவரங்களையுமடைந்து, பூமியெல்லாஞ் சுவாதீனமாக்கி நிகரில்லாமல் ஆளுகைசெய்தான். இப்படியிருக்க - ஒருகாலத்தில் அந்தராஜன் நருமதாநதியில் ஸ்திரீகளோடு ஜலக்கிரீடை செய்யப்போய், ஆற்றிலிருக்கிற ஜலம் போதாமையால் ஐஞ்ஞூறுகைகளால் ஆற்றினீரை யோடவொட்டாமல் மறித்து, மற்ற ஐஞ்ஞூறுகைகளால் ஸ்திரீகளுடைய குயாசலங்களைத் தழுவி விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்போது இலங்கைக்கு அரசனகிய இராவணன் இவனைச் செயிக்கவேண்டுமென்று யுத்தத்திற்குவந்து, இவனிருக்கிற கோலாகலத்தைக்கண்டு, நல்லது இவன் சலக்கிரீடைசெய்துவரட்டும். நாம் அதற்குள்

ளாகச் சிவபூசைபண்ணிக்கொள்ளுவோமென்று ஸ்நானஞ்செய்து, மிர்த்திகைலிங்கம் பிடித்துப் பற்பலபுஷ்பங்களைச் சாத்திப் பூசித்துத் தத்தோத்தியானத்திலிருக்க; அப்போது கார்த்தவீரியன் விளையாட்டு முடிந்து, நீரைத்தடுத்திருந்த கையை யெடுத்துவிட்டு ஸ்திரீகளுடன் பட்டணம் போய்ச் சேர்ந்தான். அவன்கைகளால் அடைபட்டிருந்த ஜலமானது பெருவெள்ளம் வருவதுபோல் இருகரையு மொருகரையாய்ப் புரண்டுவந்து, இராவணனையும் அவன் பூசித்த மணலிலிங்கத்தையும் வாரிக்கொண்டு போய்ச் சமுத்திரத்திற் போட்டுவிட்டது. அதனால் இராவணன் மெத்தவும் வருத்தப்பட்டுவெட்கமுற்று, இன்று பிழைத்தோமென்று இலங்கைக்குப்போய்ச் சேர்ந்தான். அப்பாலொருநாள் அந்தராவணன் எவ்விதத்திலேனும் இக்கார்த்தவீரியனை வெல்லவேண்டு மென்று ஆலோசித்தவனாய், உடனே அவனிடத்து வந்து சண்டைசெய்யவழைக்க, கார்த்தவீரியன்மிகவும் வெகுண்டு, அந்தராவணனோடு யுத்தஞ்செய்து அவனைத் தன்வில்நாரியினாற் கட்டிக் காவலிற்போட்டான். அர்ச்சேதியைச் சாரணராற் கேள்வியுற்ற அந்த இராவணனுடைய பாட்டனாகிய புலஸ்தியர் கார்த்தவீரியனிடத்திற்கு வந்து வேண்டிக்கொண்டு தன்பேரனை விடுவித்தார்.

இத்தன்மையாகிய சவுரியமுடைய கார்த்தவீரியன் மற்றொருகாலத்திற் சமுத்திரத்தின்மேற் சரமாரிபொழியவே, அச்சமுத்திரராஜன் புருஷரூபமாய் வந்து, அப்பா மஹாராஜாவே! நானுனக்கு ஒரு அபராதமுஞ் செய்யாமலிருக்க, நீயேன் வீணாய் என்னையுபத்திரவப் படுத்துகிறாயென்றுசொல்லினன். அதைக்கேட்ட அவ்வர்ச்சுனனனவன் நீ யென்னோடு போர் செய்ய வரவேண்டும். அல்லது என்னுடன் போர்செய்யத்தகுந்தவனின்னானென் றுரைக்கவேண்டு மென்றான். என்றபோது சமுத்திரராஜன் நான் சாமர்த்திய மில்லாதவன். உன்னோடு யுத்தஞ் செய்யமாட்டேன். ஜமதக்கினி யென்பருடைய குமாரர் பரசுராமரென்கிறவரிருக்கிறார். மஹாசவுரியசாலி. ஆனதால் அவரோடு நீயுத்தஞ்செய்யலாமென்று சொன்னான். அதுகேட்ட கார்த்தவீரியன் உடனே அவராச்சிரமத்திற்கு வந்து, அவருக்குக் கோபம்வரும்படி செய்து அமோகமான யுத்தஞ்செய்யுமளவில்; அவரால் அவன் கொலை செய்யப்பட்டான். அவன் ஆயிரங்கைகளினாலும் ஐஞ்ஞூறு விற்களைப்பிடித்து எத்தனையம்புகளையெய்வனோ? அத்தனையம்புகளை இந்தவிஜயன்இரண்டுகைகளால் ஒருவிற்பிடித்து எய்கிறான். இன்னுமிந்த அர்ச்சுனனுடைய சாமர்த்தியங்களைச் சொல்லுகிறேன் ஞாபகமாய்க் கேளும்.

ஆதியிற் குருதக்ஷணைக்காகப் பாஞ்சாலராஜனை யுத்தத்தில் ஜயித்துக் கைப்பிடியாகப்பிடித்துத் தேரிற்கட்டிக் கொணர்ந்தான். பின்பு திரௌபதி சுயம்வரத்திற் சல்லியன்-ஜராசந்தன் - நான்-கர்னன்- முதலானோரும் வளைக்கமாட்டாமற் போனவில்லை விளையாட்டால் வளைத்து நாணேற்றி, வெகுபிரயாசமும் அசாத்தியமுமாயிருந்த குறியையுமடித்துத் திரௌபதியால் மாலைசூட்டப்பட்டான். அப்போது நானுங் கர்னன் முதலானோரும் எதிர்த்தோம். லக்ஷியஞ்செய்யாமல் துரத்தியடித்துக் கர்னனைப் புறங்காட்டியோடச்செய்தான். எங்களோடுகூட வந்த அனேகராஜாக்களை வெகுவாய்ப் பங்கப்படுத்தினான். பின்பு தீர்த்தயாத்திரை செய்தபோது துவாரகையில் வந்து கிருஷ்ணனுடைய தங்கையாகிய சுபத்திரையை ஏகாந்தத்திற்கலியாணஞ்செய்து, அதற்காக எதிர்த்த சாம்பன் சாருதேஷ்ணியன் - முதலான யாதவவீரரையும் அம்புகளினாற் கண்விழிக்கவொட்டாமலடித்துச்செயித்தான். இப்படிக்கு அவன்செய்த காரியங்கள் எத்தனையோ உண்டு. இவையெல்லாமிருக்கட்டும். சாக்ஷாத் தேவேந்திரனுடைய காண்டவவனத்தைக் கிருஷ்ணனுடைய சகாயத்தினாலே அக்கினிதேவனுக்கு எரிக்கும்படிகொடுத்து, அதினிமித்தம் சண்டைக்குவந்த இந்திரன் - வருணன்-முதலாகிய சகல தேவர்களையுஞ் சொல்லாமலோடும்படி யடித்தான். எல்லாத்தேவர்களும் ஓடியபின் இந்திரன் தனித்து வெகுவாய் யுத்தம் பண்ணி அனேக மலைகளையுங் கல்லுகளையும் வருஷிக்க அவைகளை யெல்லாம் ஒருநொடிப்போதிற் சூர்ணமாக்கிப்போட்டான்.

அன்றியும் அவ்வனலை யவிக்கும்பொருட்டுச் சப்தமேகங்களும் பொழிந்தமழையில் ஒருதுளியும் அதில் விழவொட்டாமற் சரக்கூடு கட்டினான். அதைக்கண்டு தேவர்கள் வெகு சந்தோஷ மடைந்தார்கள். இவ்விதமாய்த் தேவர்களைச் செயித்து, துஷ்டமிருகங்கள் - பக்ஷிகள் - அசுரர் - பிசாசர் - இராக்கதர் - முதலானோரை யவ்வனலிற்றள்ளியெரித்தான். இவ்வாறு அக்கினிக்குத் திருப்தி செய்த படியினாலே அவன் திவ்விய ரதமுதலானவைகளைக்கொடுக்கப் பெற்றான். மேலும் மயனென்பவனை யவ்வாபத்தினின்றுங் காப்பாற்றிய படியினாலே சிறந்த வொருசபையையுண்டாக்கிக்கொண்டான். பின்பு திக்குவிசயஞ் செய்யும்பொருட்டு வடதிசையிற் சென்றபோது, இந்தப் பாரதவருஷமேயன்றிக் கிம்புருடவருஷம்-பத்திராச்சுவவருஷம் - கேதுமாலவருஷம் - இரமியகவருஷம்- ஹரிவருஷம் - குருவருஷம்- இளாவிருதவருஷம் - இவைகளுக்குப்போய், அங்கிருந்தவரையெல்லாம்ஜயித்துக் கப்பம் வாங்கிவந்தான். இவ்விதமாகிய மகாபலபராக்கிரமங்க ளுடையவனாகிய அர்ச்சுனனை நினைத்தால், என் இதயம்நடுங்குகிறது. இரவில் தூக்கத்திலுங் காண்டிவமென்னும் வில்லுடனே கூட அவனைக் காண்கிறேன். அந்தவில்லுடனே அவனைக் காணும்போது பாசத்தோடு கூடிய இயமனைப்போ லிருக்கிறது. அவனில்லாம லிருக்கையிலும் எத்திசையிலும் அவனிருக்கிறதாகவே தோற்றுகிறது. அகரத்தை முத

லெழுத்தாயுடைய நாமங்களைக்கேட்கும்போதெல்லாம் அவன்நினைப்பே யுண்டாகிறது. ஆகையாலே இனி நாங்கள் பிழைப்பதில்லை.நீரேசுகமாய் அரசாளலாம். என்று சொல்லி விசனப்படக்கேட்ட திரிதராஷ்டிரன் சொல்லுகிறான்.

அடா துரியோதனா! நீயே இப்படி அர்ச்சுனனுடைய சக்தியை அறிவாயல்லவா? ஆனபடியினாலே அவனோடு பகைக்காதே. இதுவரைக்கும் அவர்களுக்கு நீசெய்த தீங்குக்காக, அவர்கள் உன்னை ஒன்றுஞ் செய்யாம லிருக்கும்படி நான் செய்கிறேன். பயப்படாதே. இனி யவர்களோடு பகையாதே. அப்பா! நீ யிதுவரையில் அவனுடைய பராக்கிரமத்தையும்மற்றவர்களுடைய சாமர்த்தியங்களையும் அறியாமலேபோராடுகிறாயென் றிருந்தேன். இப்போது நீ சகலமும் அறிந்தவனா யிருக்கும்போது அவனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் விகற்பமில்லாமல் நேசித்திருக்க வேண்டுமல்லவோ? அப்படியிருக்க நீ யவர்கள் விஷயத்தில் அபகாரங்களைச்செய்யநினைப்பதும் நியாயமா? இனியாகிலும் அவர்களை விரோதிக்காமற் சும்மாவிரு என்று கூறக்கேட்ட துரியோதனன் பிதாவைப்பார்த்துச் சொல்லுகிறான்: ஐயா! நாம் அவர்களுக்கு வெகுவாய் அபகாரங்களைச் செய்திருக்கிறோமாகையால், நமக்கும் அவர்களுக்குஞ் சினேகமுண்டாகமாட்டாது. மறுபடியும் வஞ்சனைசெய்து அவர்களின் செல்வத்தை யெல்லாம் பறிக்கவேண்டுமே யல்லது, சும்மாவிருக்கக் கூடாதென்று சொல்ல; பிதாவானவன் - அடாகுழந்தாய்! உனக்கேன் இந்தத் துர்புத்தி யுண்டாகிறது? இனி அதைவிட்டுவிடு. நீங்கள்செய்த பிழைகளை அவர்கள் மனதில் எவ்வளவும் நினைக்கவில்லை. தருமத்தையே பெரிதாயெண்ணி உங்களுக்கும் நன்மையைத்தான் சிந்திக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நீங்கள் விரோதிப்பது பாவத்திற்கிடமாகும் சகலபந்துக்களோடும் இன்னுஞ் சிலகாலம் பூமியில் வாழவேண்டு மென்கிற கருத்திருந்தாற் பாண்டவர்களை நேசித்திருங்கள். ஒருகுறைவும் நேரிடாமற் சுகமா யிருக்கலாமென்று சொன்னான்.

திரிதராஷ்டிரன் மறுசூதாடத் தருமனை வரவழைத்தல்.

அதுகேட்ட துரியோதனன் சம்மதி இல்லாமல் மீட்டுந் தன்தந்தைக்கு மனந் திரும்பும்படியானபிரையத்தனத் துடனேதொழுதெழுந்து,முன்போல அவர்களுடைய பராக்கிரமத்தையும்- அதனால் தங்களுக்கு ஆபத்துவருமென்பதையும் - எவ்வகையினாலாகிலும் பகைவரை யடக்கவேண்டுவதே ராஜநீதியின் கருத்தென்பதையுஞ் சொல்லி; ஆனாலிப்போதென்னசெய்யவேண்டுவ தென்றால் - முன்போலவே வஞ்சனையாய்ச் சூதாட அழைத்து, அதில் முன்ன மொருவிசை தோற்றுத் தங்களாற்பெற்றுக்கொண்ட இராச்சியமுதலாகிய சகலசப்பத்துக்களை மீட்டும் பந்தயமாகவைக்கச் சொல்லுவோம். மறுபடி தோற்றால் அவைகளை அவர்கட்கு ஒப்புவிக்க-மாவுரி மான்றோல் தரித்துப் பனிரண்டுவருஷம் வனவாசமும்,ஒருவருஷம் அக்ஞாதவாசமுஞ் செய்யவேண்டுவதென் றேற்படுத்தித் தந்திரமாய்த் துரத்திவிடுவோம். இதில் அவர்கட்கும் மற்றையர்க்கும் நம்மேற் சொல்லவேண்டிய தோஷம் ஒன்றுமில்லாமற்போம். இப்படி ஒருயேற்பாடுசெய்து தற்காலத்தில் விடவேண்டுமேயல்லது,சும்மாவிருக்கக் கூடாது. நானோ? சகுனியின் சகாயத்தினால் தோற்கமாட்டேன். ஒருவேளை அந்தப் பதின்மூன்றுவருஷங்களுங் கழித்துவந்தால், அப்போது யுத்தஞ்செய்வோம். அக்கா லவர்கள் நெடுநாள் காட்டிலிருந்தபடியால் அன்னமுதலானசவுக்கியக்குறைவினாலேயும், சேனை முதலான பலங்க ளில்லாமையினாலேயும், சுலபமாய் ஜயிக்கப் படுவார்கள். நாம் அதற்குள்ளே யாவருக்குமேலாகி உறுதியா யிருப்போம். அப்படி செய்ய நீர் எவ்விதத்திலேனும் மனது பெரிதுபண்ணி அனுமதி செய்யவேண்டுமென்று சொன்னான். அது கேட்ட அப்பிறவிக்குருடன் சம்மதித்து, தருமபுத்ரர் பாதிவழி போயிருந்தாலும் அழைத்துக்கொண்டு வரும்படி பிரதிகாமியென்னுந்தூதனை யேவினான்.

அப்போது வீஷ்மர் - துரோணர் - சோமதத்தன்-முதலானபேர்க ளெல்லோரும் மறுபடி யப்படிப்பட்ட காரியம் வேண்டாமென்று வெகுவாய்த் தடுத்துச் சொல்லியும், அந்தத் திரிதராஷ்டிரன் கேளாமல் வாயை மூடிக்கொண்டிருந்தான். துரியோதனன் வீஷ்மர் முதலாயினோரை நோக்கி, நீங்கள் இதற்கு விரோதமாய் ஒன்றும் பேசவேண்டாம். நான் உங்களை ஒன்றும்வினவவில்லை. உங்கள்காரியத்தைப் பார்த்துக்கொண்டு சும்மாவிருங்கள் என்று சொன்னான். அக்கால் திரிதராஷ்டிரன் அக்கொடுஞ் செய்கைக்குச் சம்மதித்துப் பாண்டவரைச் சீக்கிரத்தி லழைத்து வரும்படி மிகவிரைவாய்த் தூதனுக்குக் கட்டளையிடக் கண்ட காந்தாரியானவள் தன்கணவனை நோக்கி யுரைக்கிறாள்: ஓ மகாராஜாவே! இந்தத் துரியோதனன் பிறந்தபோது கொள்ளிவாய் நரிபோற் கூவியதைக் கண்ட மகாபுத்திமானாகிய விதுரர், இவன் இந்தக்குலத்தை நாசஞ்செய்யத் தக்கவனென்றும் - இவனை யுயிரோடு வைத்திருக்க லாகாதென்றும் - அப்போதே நமக்குச் சொல்லி இருக்கின்றார். அவர்பேச்சைக் கேளாமற் போனோம். அஃதிருக்கட்டும்.இப்போதுஅந்தத்துஷ்டன் பேச்சைக்கேட்டு நீர் பழிப்புக் கிடமாகிய சொக்கட்டானாட்டத்தை நடத்தி வெகு அனர்த்தங்களை யுண்டாக்கினீர். இவ்வளவுபோதாதா? மறுபடியும் அப்படிப்பட்ட காரியத்திற் கேன் முயலுகிறீர்? வீஷ்மர் முதலாகிய பெரியோர்களுடைய பேச்சைக் கேளும். இக்குலம் நசிப்பதற்கு நீரே காரணமாகவேண்டாம். கெடுதியை விட்டுவிடும்.

மேலும் இப்போது தான் அவர்கள் பலர்முன்னிலையிலும் அவமானப்பட்டு உம்மால் அடங்கிச் செல்கிறார்கள். அப்படி அடங்கியிருக்கிற அக்கினியையேன் மறுபடியும் ஊதிப்பற்றும்படி விடுகிறீர்? நீரே இக்கொடுமைக்குக் காரணமென்று தெரிந்தும் அப்பாண்டவர்கள் பொறுத்துக்கொண் டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பேர்களுக்குத் துரோகஞ்செய்வதைக்காட்டிலும் வேறுபாதகமில்லை. நீரோ? சகலகலைகளையுமோதியுணர்ந்தவர். பெரியோர்களிடத்தில் வெகுகேள்விகேட்டவர். வயதில் முதிர்ந்தவர். தருமவான்களுடைய குலத்திற் பிறந்தவர். அனியாயத்தை நடத்துகிறவர்களைத்தண்டிக்கத்தக்கவர். இப்படிப்பட்ட நீரே வஞ்சனைக்கு ஆரம்பித்தால் உமக்கு யார் புத்திசொலத்தக்கவ ரிருக்கிறார்கள்? இவ்விடத்தில் நீர் ஒருவனுடைய தண்டனைக்கு உட்படாமற்போனாலும், இயமனுடைய தண்டனை விடாது. சகலமுந்தெரிந்த உமக்கு நானென்ன சொல்லப்போகிறேன்? உமது புத்திரனென்றும் பாண்டு புத்திரனென்றும் பேதமெண்ணிப் பக்ஷபாதஞ் செய்யவேண்டாம். நான் சொல்லுவதற்குக் கோபிக்கவேண்டாம். இதுவரையிலுந் துரியோதனனைக் கொடுமை யுள்ளவனென்று சொன்னார்கள். இனிமேல் அந்தச்சொல் உம்மையே தொடரும். ஏதோ எனக்குத் தெரிந்ததைச்சொன்னேன். எப்படியாகிலும் பாண்டவர் விஷயத்தில் வஞ்சனைசெய்யவேண்டாம். என்று காந்தாரி சொல்லியதைக் கேட்ட திரிதராஷ்டிரன் சொல்லுகிறான். கேளடி காந்தாரி! நீசொல்லியது சரிதான். நானென்னசெய்வேன்? உன் மகன் வெகுவாய் நிர்ப்பந்தஞ்செய்கிறான். இதனாலே பாவம் வந்தாலுஞ் சரி. புண்ணியம் வந்தாலுஞ் சரி. குலம் நசித்தாலுஞ்சரி. குலம்வளர்ந்தாலுஞ்சரி. யார் செத்தாலுஞ்சரி. யார்பிழைத்தாலுஞ்சரி. இவன் ஒரே பிடிவாதமாய்ச் சூதாடவேண்டு மென்பதை நான் வேண்டாமென்று சொல்லமாட்டேன். தெய்வச்செயலால் வரவேண்டுவதெல்லாம் வரட்டும். என்று சொல்லி வாயை மூடிக்கொண்டான்.

தருமராஜன் மீட்டும் அத்தினாபுரம் வந்து சூதாடுதல்.

இப்படி யிருக்க திரிதராஷ்டிரனால் அனுப்பப்பட்ட தூதனாகிய பிரதிகாமியானவன் இந்திரப் பிரஸ்தத்தின் வழியிற் சென்றுகொண்டிருக்கிற பாண்டவர்களைக்கண்டு திரிதராஷ்டிரன் சொல்லியபடி உதிஷ்டிரரோடு சொல்ல, உதிஷ்டிரர் அதைக்கேட்டு, காலகதியினால் நடக்கவேண்டியிருப்பதை நாம் தடுக்கக்கூடுமோ? இச்சூது கெட்டதென்பதும், இதனால் நமக்கு வரப்போகிற கெதி இவ்வகைப்பட்டதென்பதும், சகுனியின் வஞ்சனையும்—துரியோதனனுடைய பொறாமையும்-திரிதராஷ்டிரனுடைய கபடமும்-இவ்வகைப் பட்டதுகளென்று தெரிந்திருக்கின்றன. ஆகிலும் நாமென்ன செய்யலாம்? வரத்தக்க நன்மைதீமைகளை யனுபவித்தே தீரவேண்டும். யாரென்னசொன்னாலும் என்பிதாவாகிய திரிதராஷ்டிர மகாராஜாவின் வார்த்தையைத் தாண்டமாட்டேன். அவரோ மீட்டு மழைக்கிற் போயேதான் தீருவேனென்றுசொல்லித் தம்பிமார் முதலான பேர்களோடு திரும்பி, அத்தினாபுரிக்கு வந்து சபையிற் பிரவேசித்தார். அப்போது அவரைக்கண்ட விதுரர் முதலான பேர்கள் மிகவும் விசனப்பட்டார்கள். சபையிலிருந்தவர் லொருவரும் ஒன்றுஞ்சொல்லவில்லை. இவ்வாறு இராஜசபை ஓசையற்று நிற்குமளவில், சகல ராஜகுடும்பங்களுக்கும் - துரியோதனாதிகளுக்கும் - தனக்கும் நாசத்தை யுண்டுபண்ணத் தலைப்பட்டவனாகிய சகுனியானவன் தருமபுத்திரரைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறான்.

கேளும் உதிஷ்டிர மகாராஜனே! முன்னே நான் உம்மோடே சூதாடிச்செயித்த சகல சம்பத்துக்களையும் திரிதராஷ்டிர மகாராஜாவின் மனதின்படி உமக்குக் கொடுத்துவிட்டார். ஆனபடியினாலே நான்ஜயித்ததற் கென்னபயன்? மறுபடி உம்மோடாடிச் சில செல்வங்களைச் சம்பாதித்தாலும் அவைகளையும் ராஜா வுமக்குக் கொடுத்துவிடுவார். மேலுந் தரித்திரனுக்குச் சிலபொருள் வந்தாற் சந்தோஷ முண்டாகும். சில பொருள்போனால் துக்கமுண்டாகும். நமக்கோ? வந்தாலும் போனாலும் அது ஒரு விஷயமல்ல. ஆனபடியினாலே நாம் இனிமேல் இப்படிப்பட்ட பந்தயங்களை வைக்கக்கூடாது. மற்றென்ன வென்றால்-தோற்றவன் இராச்சியத்தை விட்டுத் தவசிபோல் மரவுரி மான்றோல்களைத் தரித்துக் கொண்டு, பன்னிரண்டு வருஷமளவும் வனவாசஞ்செய்து, பின்பொருவருஷம் இன்னவிடத்தில் இன்னபடி யிருக்கிறார்க ளென்பது தெரியாமல் அக்ஞாதவாசஞ் செய்யவேண்டும். இது தான் பந்தயமா யிருக்கட்டும். உமக்குச்சம்மதியாகில் என்னோடு மறுபடியும் ஆடுமென்று சொல்லக்கேட்ட தருமபுத்திர ரானவர் சகுனியைப் பார்த்து, ஓ காந்தாரராஜனே! நீசொன்னதுசரிதான், நானோ? சூதாட அழைத்தால் வருவேன் என்கிற விரதமுடையவனாகையால், இப்போது பின்னிடையாமல் அப்படியேயாடுகிறேன். நீ பின்னாலே நாசத்தையடையாமல் க்ஷேமப்படவேண்டுமே: அதை யோசித்துக்கொண்டு ஆடென்று சொன்னார். அதுகண்ட சபையார் உதிஷ்டிரர் நன்மைக்கும் சகுனியின் கொடுமைக்கும் விசனப்பட்டார்கள். அப்போது துரோணாசாரியரானவர் அரசனது கருத்தை யறிந்தவராய் உதிஷ்டிரரைப் பார்த்துச் சொல்லுகிறார்.

கேளும் தருமராஜனே! இப்போது சகுனிசொல்லிய பிரகாரம் நீர் மறுபடியும் ஆடித்தோற்பீராகில் நீங்க ளைவ்ரும் திரௌபதியும் பனிரண்டு வருஷம் வனவாசமும் ஒருவருஷம் அக்ஞாதவாசமுஞ் செய்ய வேண்டு மென்றும், அந்த அக்ஞாதவாசத்தில் ஒரு

வர்கண்ணுக்கும் அகப்படாம லிருக்கவேண்டுவதென்றும், அப்படி அகப்பட்டால் மறுபடியும் இப்படி பதின்மூன்று வருஷம் வனவாசஞ்செய்யும்படி அனுப்பப்படவேண்டிய தென்றுந் துரியோதனராஜன்சொல்ல, அதற்குத் திரிதராஷ்டிர மகாராஜன் சம்மதியினுல் மறுபடி உம்மையாட அழைத்ததேயன்றி வேறில்லை. ஆகையால் இவ்வாட்டத்தில் ஒருவேளை நீர் தோற்றுலும், இப்போது அவரெண்ணப்படியே வனம்போய் வந்து,பிறகு உங்களிராச்சியத்தை நீங்களடையலாம். முன்னம் ஸ்ரீராமமூர்த்தியானவர் வனவாசஞ்செய்து, பிறகு அயோத்திமாநகரை யாளவில்லையா? அதுபோல நீங்களும் வனம்போய்வருவதே உத்தமமென்ருர். அப்போது திரௌபதை யானவள் சொல்லுகிருள். ஐயாதுரோணரே! நாங்களடிமைப்பட்டு வனம்போவது தகுதியன்று. ஆதலால் இந்த அடிமைத்தனந்தீரவே இன்னமொருதரஞ் சூதாடுத லுத்தமமென்று சொன்னுள். இவ்வாறு திரௌபதி சொன்னசொல்லைத் தருமராஜன் கேட்டுச் சொல்லுகிருர்: அடிமைப்பட்ட நாங்கள் வனம்போய்வந்து எங்களிராச்சியத்தைக்கேட்டால், அடிமைப்பட்டவர்களுக்கு இராச்சியமேதென்று வழக்குசொல்ல வேண்டிவரும். ஆகையால் அடிமைத்தனந்தீர இன்ன மொருதரஞ் சூதாடவேண்டுமென்றுசொன்னுர். அச்சபையிலிருந்த வீஷ்மர் துரோணர் முதலிய சகலருஞ்சரிதானென்று வொப்புக்கொண்டார்கள். அப்போது அதைச்சகுனியானவன்கேட்டுக் கலகலவென்று நகைத்து, ஓ தருமராஜனே! அடிமைத்தனந்தீர இப்போது நீரென்ன பந்தயம்வைத் தாடப்போகிறீர் சொல்லுமென்றுன்: அதைக்கேட்ட தருமராஜன் சொல்லுகிருர்: ஓ சகுனிராஜனே! நான்செய்த புண்ணியங்களைப் பந்தயமாகவைக்கிறேன். நீகெலித்தால் புண்ணியமெல்லாம் உன்னது. நான் கெலித்தால் எங்களடிமைத்தனம் நீங்கிவிட்டது. என்றுசொல்ல அதற்குச் சபையாருஞ் சகுனியும் ஒப்புக்கொள்ள, இருவரும் விருத்தங்களைப் போட அவ்விருத்தங்களில் தருமர் கெலித்தார். அம்மாத்திரத்தில் முன்சொன்னபடிக்குத் தருமர் அடிமைச்செயலை யகல்வித்துக் கொண்டவராய் உடனே வனத்திற்குப்போகச் சித்தமாக யிருந்தார். துரியோதனுதிகளுந் திரிதராஷ்டிரனுங் கைகொட்டிச் சிரித்தார்கள். மற்றயாவருங் கண்ணீருகுத்தார்கள்.

துச்சாதனனுதியர் செருக்கு.

இப்பால் பாண்டவர்கள் தாங்கள் தரித்திருந்த கவசகிரீட குண்டலாதிகளை வாங்கிப்போட்டு மரவுரி முதலானவைதரித்து வனத்திற் கேகும்படி மனதில் நிச்சயங்கொண்டு நிற்குமளவில், துச்சாதனுனவன் மிகவும் இறுமாப்புடனே சொல்லுகிருன்: ஆரடா இங்கேயிருக்கிற சேவகன்! ஓடிவா. பாண்டவருடைய கவசகிரீடாதிகளையும் நல்லவஸ்திரங்களையும் வாங்கு. மற்றொரு சேவகனுரடா! இவர்களுக்கு மரவுரிகளும் கிருஷ்ணு ஜனங்களும் விரைவிற் கொணர்ந்துகொடு. கேளுங்கள் சபையாரே! இன்றுதான் பாண்டவர்கள் சகலசம்பத்துக்களையுஞ் சுகங்களையும் பெருமைகளையுமிழந்தார்கள். இன்றுதான் துரியோதன மகாராஜன் ஏகச்சக்கிராதிபதியானுர். அன்றியும் மூத்தவர்குமாரர் சிரேஷ்டராகவும், இளையவர் குமாரர் நிகிருஷ்டராகவும் ஆனதால், இப்போதுதான் நியாயமென்பது உலகத்திற்பயன்பட்டது. இனிப்பாண்டவர் நெடுநாள்துக்கத்தையனுபவித்து நசிக்கப்போகிருர்கள். அவர்களாலே பயத்தை யடைந்தவரெல்லாம் இனிச் சந்தோஷத்தை யனுபவிப்பார்கள். வெகுநாளாய் வளர்ந்த சத்துருவென்னும் பூண்டை வேரோடுங்களைந்து எறிந்தோம். சூதாடிக் குலதருமத்தை யிழந்துபொனதால் அவர்களுக்கு இம்மைமறுமை இரண்டுங் கெட்டது. அரசர்களுக்குள் துருபதமகாராஜன் மிகவும் அகங்காரமுள்ளவன். அவன் இந்தப்பேதைகளை வெகுசூரரென்றெண்ணி அருமையாய்ப்பெற்ற தன் மகளைக் கொடுத்தான். அப்படிப்பட்டவளை இந்தச் சபையிலிழுத்து அவமானஞ்செய்தோமே: அதையாவரும் பார்த்துக்கொண்டுதானே இருந்தீர்கள். வெகு மானிகளென்றுஞ் சூரரென்றுங் கெருவத்தை யடைந்திருந்த இந்த ஐவரும் பார்த்துக்கொண்டு தானே யிருந்தார்கள். இதைக்குலமுறையி லடிமையா யிருக்கிறவனும் பார்த்துச் சகிக்கமாட்டான். இவர்கள் வீரியமில்லாதவர்க ளானதுபற்றிச் சும்மா விருந்தார்களென்று சொல்லிப் பின்னுந் திரௌபதியைப்பார்த்து அத்துஷ்டசிகாமணியாகிய துச்சாதனன் சொல்லுகிருன்.

அடி திரௌபதி! உன் பர்த்தாக்கள் ஐந்துபேரும் உள்ளுக்கு நபும்சகராயிருந்தும் வெளிக்கு ஆட்வர்போல அட்டகாசஞ் செய்துகொண்டிருப்பது எத்தன்மையா யிருக்கிறதென்றுல், தயிலச்சத்தற்றபொக்கெள்ளும் நல்லெள்ளை யொப்பக் காணப்படுகிறதுபோ லிருக்கிறது. அவர்கட்குச் சவுரிய தைரிய வீரியங்களென்ப தெவ்வளவுமில்லை. இருந்தால் அவர்கள் பிரியமுள்ள இல்லாளாகிய உன்னை நாங்கள் சபையிற் பலவகையால் அவமானஞ்செய்ததைப் பார்த்துச் சும்மாயிருப்பார்களா? ஆடுகளைப்போல் தலையைவளைத்துக்கொண்டு தானே நின்றுர்கள். ஆகையாலே- அடி பேதாய்! உனக்கு நன்மையொன்று சொல்லுகிறேன் கேள். இந்த அலிகளைச்சேர்ந்து கானக மேகுவதில் மிகுந்த துக்கத்தை யனுபவிக்கவேண்டும். துரியோதனமகாராஜாவைச் சேருவையேயாகில் உனக்கொருசிறு குறைவுமில்லை. மேன்மையையுஞ்சுகத்தையும் அடையலாம்: அல்லது கர்னனையாகிலுங் கலியாணஞ்செய்துகொள். இன்னும் யாரையாகிலுஞ் சேர். யாரைச்சேர்ந்தாலும் பாண்டவர்களைச் சேர்ந்ததுபோலே துக்கத்திற் கிடமாகமாட்டாது. ஆண்பொம்மைகளைப்

போவிராநின்ற இப்பாண்டவருக்கு வஸ்திரங் கூட இல்லை. அன்னமுமில்லை. மரவுரியுடுத்திக்கொண்டு காய்கிழங்குகளைத் தின்னப் போகின்றார்கள். அவர்கள் காகங்கள்போல் ஒருமித்துச் சேர்ந்திருந்தாலுஞ் சமயத்திலுபயோகமில்லை. ஆனபடியினாலே நீ சவுக்கியப்படும்படியான வழிதேடென்று சொல்லி மகாகெர்வங்கொண்டு சபையிலிருப்போர்களிற் சிலர் சபாசென்று மெச்சவும் சிலர் சிச்சீயென்றுதுச்சவும் பிதற்றினான். அதுகேட்ட விமசேனனானவன் பொறுமையுங் கோபமுமடைந்து, சகுனியையும் துச்சாதனனையும் அதட்டிச் சொல்லுகிறான்.

வீமனாதியர் விக்கிரமம்

அடா துராத்துமாவே! சூதாடி மோசஞ் செய்த மாத்திரத்திலே வெகுசமர்த்தனாக நினைத்து ஏன் கத்துகிறாய்? இதனாலே சூரனாவாயோ? நாங்கள் தருமத்திற் கட்டுப்பட்டிருக்கிறதே உனக்குச்சவுரிய ஏதுவாக இருக்கிறது. உன்னைப்போலே இப்போது நான்வாயினாலே சொல்லமாட்டேன். ஆனால் யுத்தத்தில் உன்னைக் கொல்லும்போது நீ சொன்ன சொற்களையும் செய்தசெய்கைகளையுஞ் சொல்லிக்காட்டிச் சிக்ஷை செய்வேன். உன்னைமாத்திரமல்ல:உன்னையடுத்துக் கெர்ஜிக்கிற பேர்களையெல்லாம் உன்னோடுகூடவே யமலோகத்திற் கனுப்புவேன். இதுவரையில் நீங்கள் நடத்தி வந்த துரோகங்களில் ஒன்றேனும் வீணாகப் போகுமென்று நினைக்கவேண்டாம். என்றுவீமசேனன் சொல்வதைக்கேட்ட துச்சாதனனானவன் லக்ஷியஞ் செய்யாமல், அவனுக்கெதிரிலே அவன் சொன்ன பேச்சுகளைச் சொல்லிச்சொல்லிப் பரிகாசஞ்செய்து கூத்தாடித் துரியோதனனைப்பார்த்து, ஓ அண்ணா! இதோ ஒருமாமிசமலை நிற்கிறதே: இதுவுள்ளே சாரமற்றது. இதற்கு வீமசேனனென்று பேர் சொல்ல வொண்ணாது. இரண்டுகால் மாடென்று சொல்ல வேண்டியதென்றான். அதுகேட்ட வீமன் அக்கினிபோற்சொலித்து அத்துச்சாதனனை நோக்கி, அடாமனிதப்பதரே! உனக்கு மோசஞ் செய்யவும் வாயாற்பிதற்றவுந் தெரியுமேயல்லது, மற்றொன்றுந் தெரியாது. ஆயுத சங்கதியும்-யுத்தசங்கதியும்-சுத்தமாயறியாய். மெய்யாய்ச் சூரனாயிருக்கிறவன் வாயினாலொன்றுஞ் சொல்லான். ஆகிலும் நான் சொல்லுஞ் சொல் வீணாகாது. முன்பிரதிக்கினைசெய்தபடி உன்மார்பின் உதிரத்தைக் குடியாமற் போகமாட்டேன். உன்சகோதரரையும் இக்கதையினாலே பரலோகஞ் சேர்க்காம[illegible]கமாட்டேன். உன்னோடுபேசுவதி லென்னபயனென்று சொல்லித் திரும்பினான்.

உடனே துரியோதனன் பரிகாசமாய் ஒரு பேச்சைச் சொல்லுகிறான்: அடவீமா! நீ மிகவுஞ்சூரனே சந்தேகமில்லை. கொண்டபெண்டாட்டியைச்சபையில் மானபங்கஞ் செய்யுமளவில் உன்சவுரியம் வெளிக்குவந்தது. யாவருக்குந்தெரியும். இன்னமேன் பவுருஷம் பேசுகிறாய்? நீசொல்லியபேச்சு நடக்கமாட்டாது. மற்றெது நடக்குமென்றால் - உன்சகோதரரை நான்கொன்று, உன்னையந்தத்துக்கானுபவத்தோடு தவிக்கும்படி செய்ய நினைத்திருக்கிறேனே: இதுதான் சந்தேகமின்றி நிறைவேறும். போடா பயித்தியக்காராவென்று துரியோதனன் சொல்ல அதை வீமசேனன் கேட்டு ஆகுதிசெய்த அக்கினிபோற் சொலியாநின்ற கோபத்தினால்விளங்கு முகத்தையுடையவனாய் நிற்க அதுகண்ட அர்ச்சுனன்-நகுலசகாதேவர்-இம்மூவருந் திரௌபதியும் அடக்கிக்கொள்ளக் கூடாத குரோதத்தையுடையவர்களாய், ஒவ்வொருவருந் தாங்கள் முன்புசெய்துகொண்ட சபதங்களையெல்லாம் மீட்டுஞ் சபைக்குமுன்னிலையிற்சொல்லி, ஆ! ஆ! என்னமமதை? ஓ தந்தைமுதலிய பெரியோர்களே! முன்னாட்டத்திற்செய்த அக்கிரமங்களாலுண்டாகிய எங்கள் சபதங்களனைத்தும் இவ்வாட்டத்திற்செய்த ஒருவித ஏற்பாட்டினாற் போய்விட்டதென்று நினைக்கவேண்டாம். சூரியசந்திராதிகளுடைய நிலை ஒருக்கால்மாறினாலும், எங்கள் சபதங்களி லுண்டாகிய சொற்களிலுள்ள எழுத்துக்களில் ஓரெழுத்தேனுந் திரிமூர்த்திகளே முதலிய பலமூர்த்திகள்வந்து மாறச்செயினும் மாறாது. இது உறுதிமொழியாய் நம்பக்கடவீரென்று சொன்னார்கள். பின்பு உதிஷ்டிரர் மகாகோபத்தோடிருக்கின்ற அத்தம்பிமாரோடு பெரிய தகப்பனாரிடத்திற்கு வந்து, ஐயா மகாராஜாவே! உமது கட்டளையின்படி வனவாசஞ் செய்யச் சித்தனாயிருக்கிறேன் ஆகையால் அனுமதி செய்யவேண்டுமென்று கேட்டு, முறையே வீஷ்மர்- துரோணர்-கிருபர்- அசுவத்தாமா பாகிலிகன் - சோமதத்தன் - பூரி - பூரிச்சிரவன்-விதுரன்-சஞ்சயன் - உயுச்சு-காந்தாரி முதலானோரிடத்திலும் விடைபெற்றுப் பிரயாணத்திற்குச் சித்தமாயினார். அப்போது இவர்களில் ஒருவரும் ஒன்றுஞ்சொல்லமாட்டாமல் மனதினாலே மாத்திரம் அவர்களுக்குச் சுபமுண்டாக வேண்டுமென்று கோரினார்கள். ஆனால் விதுரன்மாத்திரம் ஒருவார்த்தைசொன்னான். ஓ உதிஷ்டிரரே! நீர் தருமநிஷ்டரானபடியினாலே உமது பிராதாக்களோடுஞ் சுகுணபத்தினியோடும் வனத்துக்குப் போகவேண்டுவது நியாயந்தான். இந்தக்குந்தி மூப்புடையவள். பிறந்ததுமுதல் வெகுசுகுமாரமா யிருந்தவள். இவளும் அவ்வனத்தில் வந்து கஷ்டப்படவேண்டுவதென்ன? வேண்டாம். இம்மனையிற் சுகமாயிருக்கட்டும். நான் வேண்டுமுபசாரங்களைச்செய்கிறேன். நீங்கள் இந்தப் பதின்மூன்றுவருஷங்களுங் கழித்தவுடனே சுகமாய் வந்து மேன்மையடைவீர்கள் என்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான்.

கேளும் உதிஷ்டிரரே! நீர் தருமரகசியங்களையறிவீர். சத்துரு சங்காரஞ்செய்யு முபாயத்தை வீமசேனன் அறிந்தவன். உயுத்தத்தின் நுட்பங்களை

அர்ச்சுன னறிந்தவன். பொருளைத்தேடு முபாயத்தை நகுலனறிந்தவன். தத்துவநிச்சயத்தைச் சகாதேவன் நன்றாயறிந்தவன். புரோகிதராகிய தவுமியர் எல்லாவற்றையும்நன்றாய்த்தெரிந்தவர். பாரியையாகிய திரௌபதி மகாபுத்திசாலி. சகலகுணங்களு முடையவள். இப்படிக்கிருக்கிற படியினாலே உங்களுக்கொருகுறையும் நேரிடாது. எல்லாநன்மைகளுந் தானேவரும். இப்படிப்பட்ட சன்மார்க்கங்களோ டிருக்கிற உம்மை இந்திரனுஞ் செயிக்க மாட்டான். இமாசலத்தில் மேருசாவர்ணி யென்பவர் உமக்கு வெகு தருமங்களையும் நீதிகளையும் உபதேசித்திருக்கிறார். வாரணாவதத்திலே வ்யாசர் வெகுதருமங்களை உமக்குச்சொன்னார். பிருபுச் சந்தமென்னுமிடத்திலே பாசுராமர் உமக்கு அனேக தரும சூக்ஷமங்களை யறிவித்தார். திருஷத்துவதியின் கரையிலே சிவன் சகலதருமங்களையு முபதேசித்திருக்கிறார். அசிதருஞ் சில தருமங்களை உபதேசித்தார். இப்படிக்கு அனேகம் பெரியோர்கள் உபதேசித்தவைகளை யுணர்ந்தவருக்கு என்னகுறைவுவரும் ? மேலும் நாரதமகாமுனி யிடத்திலும் பற்பல தருமங்களைக் கேட்டிருக்கிறீர். ஆதலால் நீர் ஒன்றுக்கும் விசனப்பட வேண்டுவதில்லை. இந்தப்பூமி முழுவதும் உமக்கு நினைத்த மாத்திரத்தில் வரும். இப்படியுணர்ந்த உமக்கு எதிலேசுகம் ? எதிலே துக்கம்? புத்தி-சத்தி-தருமநிட்டை-இந்திரியஜயம் - கொடை - ஆளுகைத்திறம் - பொறுமை முதலாகிய சகலநற்குணங்களினால் யாவரிலும் மேலாயிருக்கிறீர். ஆனபடியினாலே அஞ்சாமற் சுகமாய்ப் போய்வாருமென்று விதுரன் சொல்லியதைக்கேட்டு உதிஷ்டிரர் சந்தோஷித்துப் புறப்பட்டார்.

தருமனுதியர் வனவாசக்கோலத்தோடு வெளிப்புறப்படும்போது பட்டினத்தார் பிரலாபம்.

அப்போது நகரியிலிருக்கிறவர்களெல்லாம் பாண்டவரைப்பார்க்க வெகு அபேக்ஷ யுடையவர்களாய், ஒருவேளை அவர்கள் சொல்லாமல் ரகசியமாய்ப் போவார்களோ என்னமோ வென்று சந்தேகமுற்று வீடுகள் மீதிலும் - மதில்கள் மீதிலும் - கோபுரங்கள் மீதிலும் - சுவர்கள் மீதிலும் - வீதிகளிலும்- விளிம்புகளிலும் - கூட்டங் கூட்டமாய் வந்து நின்றார்கள். அப்போது பாண்டவர்கள் ஒரு பூஷணமு மில்லாமல் இடையில் மரவுரிகளைத் தரித்து, மேலே மான்றோலுத்தரீயங்களைப் போர்த்துக்கொண்டு வறிஞர் போற் காலாலேநடந்து வீதியில்வந்தார்கள். அதைக்கண்ட ஜனங்களெல்லாஞ் சோகத்தையும் - மோகத்தையும் - அடைந்து சொல்லுகிறார்கள். ஓ ! ஓ ! என்னகாலம்? எந்த உதிஷ்டிரனை இரத கஜ துரக பதாதிகளும் - மந்திரிகளும் - சேனாநாயகரும் - விருதுகூறுவோரும் - வாத்திய முழக்குவோரும் - சூழ்ந்துவருவார்களோ ? அப்படிப்பட்ட மகாராஜாவாகிய உதிஷ்டிரர் தம்பிமார்நால்வரோடு புரோகிதர்மாத்திரம் பின்றொடர, வெண்குடை- வெண்சாமரை-முதலானவையில்லாமலும் பூஷணமுங் கவசகிரீடாதிகளு மில்லாமலும், நல்லவஸ்திரங்களில்லாமலும், ஏழைகளாய் வீதியில்வருகிறாரோ: ஐயோ ! எவனை ஆகாசசஞ்சாரிகளுங் கண்டிருக்க மாட்டார்களோ ? அப்படிப்பட்ட திரௌபதீதேவி யாவருங்காண சாதாரணமாய் வரும்படியாச்சுதே: மகாமேன்மையுஞ் சுகந்தமு முள்ள சாந்துபூசி நாணயமாகிய வஸ்திராபரணங்களை யணிந்து பஞ்சணையிலும் மலரணையிலும் படுக்குமளவிற் கன்றும்படியாகிய இம்மங்கையரசின்மேனி வெய்யிலிலுங் காற்றிலுமடிபட்டு முள்ளிலுங்கல்லிலு முராய்ந்து, தூளிகள்படிந்து வாடி யொளிமழுங்கும்படி நேரிட்டதே: இது மிகவுமாச்சரியம்.

மேலும் இப்படிப்பட்ட மகாவீரரைப்பெற்று ஒப்பற்ற மருமகளைப் படைத்த குந்திதேவியானவள் வெகு தைரியசாலியாயினாள். இல்லாவிடில் இவர்சளிவ்வாறு செல்கையிற்கண்டு மனதுடைந்து மார்புபிளந்து மரிக்கமாட்டாளோ? அவளிருக்கட்டும். நாமெல்லாம் மகாபாவிகள். ஆகையாலே தான் உலகத்துக்குத் தந்தைபோலவும் - தாய்போலவும் - மக்கள் போலவும் - பலவகையினும் நன்மையைப் பயக்கும் மகாராஜர் இவ்வண்ணஞ் செல்லப்பார்த்து உயிர்வைத்துக்கொண் டிருக்கிறோம். ஐஐயோ !! என்னசெய்வோம் ? இந்தத்துயரத்தை எப்படிச் சகிப்போம் ? அருள் - பொறை - நன்றியறிதல் - பெரியோர்க்கு வழிபடுதல் - கல்வி - அறிவு - சவுரியம் - சத்தியம் முதலிய நற்குணங்களால் அலங்கார முடையோராகிய இந்த மகானுபாவரை வஞ்சித்துப் பலவகையினுந் துன்பப்படுத்திக் காட்டுக்குப்போகும்படி திரிதராஷ்டிரன் முதலாகிய பாதகர் செய்தபடியினாலன்றோ? நாமெல்லாஞ் சுகமிழந்து பெருந்துயரென்னுங் கடலில் ஆழும்படியாயிற்று. ஆதலால் இக்கொடிய செங்கோல் மன்னனது நாட்டில் நாமிருப்பது தகுதியன்று . ஓர் மரம் வேரற்றபின் அதிலுள்ள கிளைகளும் - இலைகளும்-மலர்களும் வாடாமலிருக்குமோ? இந்த உலகமென்னு மரத்திற்கு உதிஷ்டிரமகாராஜர் வேர். நாமெல்லாங் கிளைமுதலானவை: அன்றியும் இவ்வுலகமாகியமடுவுக்குத் தண்ணீர்போன்றவர்பாண்டவர். நாம் அம்மடுவிலுறையு மீன்கள். நீர்வற்றியபின் மீன்களெப்படிபிழைக்கும்? ஆதலாற் பாண்டவர்போகுமிடத்திற்கே நாமும்போகவேண்டும். அப்படிசெய்யாமல் இப்பாவியினது நாட்டில் இருப்போமேயானால் சுகங்கெடுவது மாத்திரமன்றி, நரகமுங் கிடைக்கும்.

அன்றியும் இப்பாவிப் பட்டணத்தில் நமக்கு வீடுகளும் வேண்டாம். நிலங்களும் வேண்டாம். செல்வங்களும்வேண்டாம். வாகனங்களும் வேண்டாம். இப்படி

பாண்டவர்வனம்புகுதல்.

REGISTERED-COPY-RIGHT.

சபாபர்வ[illegible]-கஅ[illegible]வது-பக்கம்.

కు. జె. సుబ్రమణ్యంరాజు

மைந்தரோடும் மனைவிகளோடும் பாண்டவரைப் பின்
தொடருவோம். பாண்டவர் வாசஞ்செய்யுங் கானகம்
நாடாகட்டும். இந்நகரங் காடாகட்டும். நாமெல்லாம்
விட்டு நீங்குவதினாலே இங்குள்ள எல்லாவீடுகளும்
பாழ்த்து, வைதிகஹோமங்களும் மங்கலச்சடங்குகளு
மில்லாமல், மயானம்போற் காகங்களுங் கழுகுகளும்
கூட்டமிட, நாய்களும்-நரிகளும்-பேய்களும்-தெருக்க
ளிலுலாவ, இப்பட்டணம் ஒளியற்று நாசமடையட்
டும். என்று பலவகையாய் ஜனங்கள் பேசுகிறதைக்
கேட்டுக்கொண்டே பாண்டவர்கள் போகுமளவில்,
நால்வகைச் சாதியாருஞ் சகுடும்பமாகப் பின்றொ
டர்ந்தார்கள். அப்போது ஸ்திரீகளெல்லாந் திரௌபதி
ஒற்றையாடையோடு கூந்தல் விரிந்து பின்புறத்திற்
புரளக் காலால் நடந்துபோவதைக்கண்டு, ஹா! ஹா!
என்றுகூவி மார்பிலடித்துக்கொண்டு, துரியோதனுதி
களை வைதார்கள். அதுகாலையில் அரண்மனையிலும்
அழுகைக்கூச்சலுண்டாயிற்று. இவ்வகையாய் யாவ
ரும் வருந்தும்படி கானகத்திற்குப் புறப்பட்ட பாண்
டவர்களோடு பெரியோர்களை யெல்லாம் வந்தனஞ்
செய்து விடைபெற்று வீதியில்வராநின்ற திரௌபதி
யைக் குந்திதேவிநோக்கிக் கண்ணீர்வடியக் கூவிட்
டழுதுகொண்டு, அடிபாவாய்! அடி என்கண்மணி
யே! உன்னைப் பிரிந்திருக்குங்காலம் நேரிட்டதே:
என்னசெய்வேன்? ஆகிலும் இன்றியமையாது வருவ
னவற்றிற் புத்தியுடையோர் சோரலாகாது. நீயோ?
சகல தருமங்களு முணர்ந்தவள். மகாபுத்தியுடைய
வள். நன்னடையுடையவள். உனக்கு உபதேசிக்க
வேண்டுவ தொன்றுமில்லை. ஆயினும் உனது மனக்
குறைதீரச் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேளடீ
என்செல்வச் செழுந்திருவே என்று சொல்லுகிறாள்.

ஓ எனதருமை மருமகளே! நீ பர்த்தாக்களையே
தெய்வமாக வெண்ணி, அவர்களோடுகூட இருந்து
பணிவிடை செய்வதே தருமமென்றுஞ் சுகமென்றும்
நினைத்து, வனவாசஞ் செய்வதில் துக்கப்படாமலிரு.
உனக்கொரு குறைவும்வராது. உன்குணத்தினால் இர
ண்டுதலங்களும் விளக்கமுற்றிருக்கின்றன. நீ வெகு
பொறுமையுள்ளவள். இல்லாவிட்டால் அந்தத் துரா
த்துமாக்கள் உன்னை யவமானஞ் செய்தபோதே சாப
த்தினாற் சாம்பராக்கி இருப்பாய். நீ பொறுத்ததே
நன்மை.(பொறுத்தவர் பூமியாள்வார்.)என்றுபெரியோர்
சொல்லுவார்கள். மற்றொன்று சொல்லுகிறேன்கேள்.
சகாதேவன் என்னால் மிகவுமன்பாய் வளர்க்கப்பட்ட
வன். பாலகன். அவனை நீ வெகுபரிவாய்ப் போஷிக்க
... என்னையவன் நினைக்காமலிருக்கும்படி நீ
...வேண்டும். உனக் கென்னபாக்கியங் குறைவு?
இப்போது குறைநேரிட்டதாய்நினையாதே. விரைவிற்
சுபங்களையடைவாய். ஆனதாற் சுகமாய்ப் போய்வா
வென்றுசொல்லி மருமகளைக் கட்டிக்கொண்டு கண்
ணீருகுத்தாள். அந்தத் திரௌபதியும் வெகுவாய்க்
கண்ணீருகுத்துத் துக்கித்து மாமியாரை வலம்வந்து
அடிதொழுது விடைபெற்றுப் போக, அந்தக் குந்தி
யுஞ் சிலதூரம் பின்றொடர்ந்து வந்து தன்புதல்வரைக்
கண்டு அளவில்லாத துக்கத்தினால் இப்படி சொல்லு
கிறாள்.

ஆ! ஆ! இதென்ன காலத்தின் விபரீதம்? தரு
மந்தவறாமல் நடக்குங் குணவான்களாகிய என்புத்தி
ரர் இப்படி தாழ்ந்துபோகவும், தருமத்தைப் பகைக்
குந் துஷ்டர் மேன்மையடையவு மாச்சுதே. இது
அவர்களின் விதியுமல்ல. தெய்வத்தின் கொடுமையு
மல்ல. மற்றென்னவென்றால் - நான் செய்த தீவினை
யேதான். இந்தக்கதி வருமென்று தெரிந்திருந்தால்,
ஆதியிலேயே காட்டிலிருந்து இவ்விடம் வரமாட்
டேன். அங்கேயே யிருந்தால் இப்பேர்ப்பட்ட துயரப்
பட வேண்டுவதில்லையே: இந்தத்துக்கங்களை யெல்லா
மனுபவிக்காமல் மக்களுண்டானொன்கிறகளிப்போடு
அந்தப் பாண்டுமகாராஜன் சுவர்க்கமடைந்தார். மாத்
திரையானவள் மகாஞானவதி. வருவதையறிந்துதான்
பதியுடன் சஹகமனஞ்செய்து சுகப்பட்டுப்போனாள்.
ஆனால் அதையெனக்குச் சொல்லாமல் வஞ்சித்தாள்.
நான் துக்கப்படவே பெண்பிறந்தேன். ஓ குழந்தை
களே! உங்களைப்பிரிந்து நானெப்படி யிருப்பேன்?
இந்தத் துக்காக்கினியினாற் சிறிதும் பிளவாமலிருப்
பதுபற்றி என்னெஞ்சு கல்லினும்வலிது. நானுங்கூட
வருகிறேன். அல்லது சகாதேவனாவது இவ்விடத்தி
லிருக்கட்டும். நீங்கள் வனத்திற்செய்யுந் தவப்பயன்
அவன் இங்கிருந்து எனக்குப்பணிவிடைசெய்வதினாற்
கிடைக்காமற் போகாது. என்றிப்படி வெகுவாய் அ
லர்த்தியழுது மூர்ச்சித்த தாயைக்கண்டு, பாண்டவர்
மகா துக்கத்தோடு எடுத்துக் கட்டிக்கொண்டழுது,
பலபல விதமாய்ச் சமாதானஞ் சொன்னார்கள்.

இப்படியிருக்க விதுரன் அவர்களருகில் வந்து,
பாண்டவருக்குங் குந்திக்கும் அனேகதிடஞ்சொல்லி,
குந்தியை மிகவு முபசாரத்துடனே வீட்டுக் கனுப்பி
வித்தான். அப்போது அந்தப்புரத்தில் ஸ்திரீகளெல்
லாம் வாய்விட் டழுதார்கள். வீதிகளில் ஜனங்களு
மழுதார்கள். அவ்விரண்டு கோஷமும் ஆகாயமெல்
லாம் பரவிற்று. இந்த கோஷத்தைக் கேட்டுக்கொண்
டே பாண்டவர் தலைகுனிந்து செல்லுமளவில், ஸ்திரீ
கள் ஒருபிரிவாயும்-புருஷர் ஒரு பிரிவாயும்-கோவென
றழுதுகொண்டு சூழ்ந்து சென்றார்கள். அந்தச்சனங்
களை யெல்லாம் பார்த்த உதிஷ்டிரர் மிகவும் விசனப்
பட்டு, அவர்களைத் திரும்பிப்போகும்படி வெகுவித
தருமங்களைச்சொல்லியும் அவர்கள் திரும்பாமற் சூழ்
ந்துவர, அவர்களோடு வர்த்தமானமென்று சொல்லப்
பட்ட பட்டணத்தின் வாசலினிடத்திற்குப் போனார்.
அவ்விடத்திலும் ஜனங்கள் தொடர்ந்து வரக்கண்ட
உதிஷ்டிரர் சற்றுநின்று அவர்களைநோக்கி மகாவனைக்
கமாய் அவரவ ரிடத்திற்குப்போய்ச் சேரும்படி சொ
ல்லியும், அவர்கள் கேளாமற்சூழ்ந்து யாவருஞ் சங்

கேதமாய் நாம் இவரைவிட்டுப் பிரியாமலிருக்கக்கடவோமென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு மிகவும் விசனப்பட்டார்கள்.

மேலும் - சிலர் தருமராஜனுடைய நற்குணங்களையும், சிலர் வீமசேனனுடைய பராக்கிரமத்தையும், சிலர் அர்ச்சுனனுடைய சாமர்த்தியத்தையும், சிலர் நகுலனுடைய நற்புத்தியையும், சிலர் சகாதேவனுடைய விவேகத்தையும், சிலர் திரௌபதியினது கற்பையும் புகழ்ந்தெடுத்துப்பேசி; இவர்களை நாமெப்படிப் பிரிந்திருப்போமென்று அழுதார்கள். இவ்வாறாய் விசனப்படாநின்ற ஜனங்களை உதிஷ்டிரர் பார்த்து, ஒருவார்த்தை சொல்லுகிறார்: ஓ ஜனங்களே ! நீங்களெல்லாம் எனக்கு வெகு பிரியமானவர்கள். எனக்கு நன்மையைச் சிந்திப்பவர்கள். ஆதலாலே என்பேச்சைக் கேட்டுத் திரும்புங்கள். லோகத்திலே மனிதனுக்குத் தருமமேபெரிது. அதைப் பரிபாலனஞ் செய்யவேண்டும். என்பிதாவாகிய திரிதராஷ்டிர மகாராஜா கட்டளையிட்டதை நான் மீறலாகாது. அவர் என்னிடத்தில் மிகுந்தபரிவுடையவர். எப்போதும் இதத்தையே செய்கிறவர். ஆனதுபற்றி அவர்கட்டளையின்படி பன்னிரண்டுவருஷம் வனவாசமும், ஒருவருஷம் அக்ஞாத வாசமுஞ்செய்து, புனிதனாய் இவ்விடம் வந்து உங்களைக் காண்கிறேன். விசனப்படவேண்டாம். எங்களுக்கு நன்மையுண்டாக வேண்டுமென்று சிந்தித்துப் பரிவுடனே விடைகொடுத்து எங்களைவலமாய்ச்சுற்றிக்கொண்டு அவரவர்களிடம்போய்ச் சேருங்கள். என்று வெகுவிநயமாய்ச் சமாதானஞ் சொன்னார்.

அந்நகரத்து வேதியர் திரிதராஷ்டிரனுதியரைத்தூஷித்துத் தருமனிடஞ்செல்ல அவர்சமாதானங்கூறியனுப்புதல்.

இவ்விதமாய்ச் செனங்கள் சூழ்ந்து விசனப்பட்டுக்கொண்டிருப்பதையும், குந்திமுதலானோர் துக்கப்படுவதையும், பாண்டவர் மகா எழ்மையோடு செல்வதையும், துரியோதனாதிகளாகிய பகைவர் வேடிக்கையாய்ப் பார்த்து நகைத்துக்கொண்டிருந்தார்கள். அதைக்கண்ட வீஷ்மர் - துரோணர் - முதலானோர் தாக்ஷண்யத்தினால் ஒன்றுஞ் சொல்லமாட்டாமற் பாண்டவர்களுக்காக விசனப்பட்டுக்கொண்டிருந்தார்கள். சில பிராமணர்கள் மாத்திரம் அஞ்சாமல் துரியோதனாதிகளுடைய துற்குணங்களையெடுத்துரைக்கத் தலைப்பட்டார்கள். வாரீர் மகாபெரியோர்களும் - ஆசாரியர்களும் - செங்கோல் மன்னவருமாகிய பிரமுகாளே ! யாவருங் கேளுங்கள். இந்தத் துரியோதனாதியர் மிகவும் பொல்லாதவர்கள். மனமறியப் பாண்டவர்களை மோசமாய் அழைப்பித்துச் சூதாடி யாவையும் பறித்துக்கொண்டதுமன்றி பலவகையிலும் அவமானஞ்செய்து, சபையிலே ஸ்திரீயைக் கொணர்ந்து மானபங்கம் புரிந்து, அதுவும்போதாமல் மறுபடியுஞ் சூதாடிக் காட்டுக்குத் துரத்திவிட்டார்களன்றோ? இவர்கள் நெடுநாள் வாழமாட்டார்கள். சீக்கிரத்தில் [illegible] மரித்து நரகமடைவார்கள். இவ்வகையாகிய கொடு[illegible] துஷ்டப்பிள்ளைகளின் மனதின்படியே வயதுமுதிர்ந்த திரிதராஷ்டிரனும் நடக்கத்தலைப்பட்டானல்லவோ ? அவனுக்குப் பெருந்துயரனுபவிக்கவேண்டிய காலம் நேரிட்டபடியினாலே தான் இப்படிப்பட்ட துர்ப்புத்தியுண்டாயிற்று. பாலகனுக்குங் கூட இப்படிப்பட்ட மடமையிராது. தமோகுணமே இவ்வுருக்கொண்டு பிறந்தது. வெளியில் எப்படி குருடனோ? அப்படியே உள்ளுங் குருடன். இந்தப் பாவியொருவன் பிறந்ததனாலே இக்குலமும் - அரசரும் - மற்று மனைகருங் கெடும்படியாயிற்று.

மேலும் - கல்விகளைக் கற்றுணர்ந்து வயதுமுதிர்ந்து பெரியோர்களோடுபழகி அரசாட்சிசெய்யாநின்ற இக்குருடன், அறிவில்லாமை-பொறாமை-கொடுமை-முதலிய சகல துர்க்குணங்களும் பொருந்திய தன்பிள்ளைகளுடைய பேச்சைக்கேட்டுத் துராத்துமாவாகிய சகுனியினுடைய வஞ்சனைக்கு நற்குணக் கடலாகிய உதிஷ்டிரரை யுட்படுத்திக் காட்டுக்குத்துரத்தினனே: இப்படிப்பட்ட அனியாயத்தை யார்செய்வார்கள் ? இவனிருக்கட்டும். ஆதியிலே தன் பிள்ளைகளைப்[illegible]லே ஜனங்களைக்காத்துப் பின்புதம்பியாகிய விசித்[illegible] வீரியனைக்கொண்டு காக்கச்செய்து தருமமே பிரதான[illegible]மாயிருந்த இந்த வீஷ்மரும், பிராமணகுலத்திற் பிறந்து சகலகலைகளையு மோதியுணர்ந்து இருதிறப் பிள்ளைகட்கும் வில்லாசிரியராயிருந்தவர்களாகிய துரோணரும், கிருபரும், தருமம் வழுவாமல் நடக்கிறவனாகிய சோமதத்தன் முதலாயினோரும், இந்த அனியாயத்தைப்பார்த்துத் தடுக்காமற் சும்மாவிருந்தார்களல்லவோ ? இவர்கள் எல்லாவகைகளினாலுந் தடுக்க வல்லமையுள்ளவர். இப்படியிருந்தும், அக்கொடுங்குணவரசர் கஷ்டங்கண்டளிக்குஞ் சோற்றையுஞ்சோமனையுமே பெரிதாயெண்ணித் தாட்சணியப்பட்டு அதருமத்திற்கு உள்ளாகினார்கள். அதனாலே இவர்களும்பாபத்தைப்பங்கிட்டுக்கொண்டார்கள். இவர்களுக்கும் விநாசகாலம் நேரிட்டபடியினாலே தான் விபரீதபுத்தியுண்டாயிற்று. ஓ! ஓ!ஓ! இதென்னமோ காலக்கொடுமை. இந்தமகாபாவியாகிய திரிதராஷ்டிரன துராச்சியத்தில் நாமினியிருப்பது நல்ல தன்று. பாண்டவர்களோடு காட்டுக்கே போவோம். அவர்களோடு கூடவேயிருப்போம். என்றுசொல்லி நிந்தித்துக்கொண்டே வந்து உதிஷ்டிரரோடு கலந்தார்கள். அதுகண்ட உ[illegible] அவர்களைப்பார்த்து இதனைச்சொல்லுகிறார். [illegible]ணுத்தமர்களே ! நீங்கள் என்னிடத்திற் ப[illegible]வர்கள். ஆனாலும் என்பேச்சைக் கேட்கவேண்டும். இவ்விடத்தினின்றும் நீங்கள்குடும்பங்களோடுதிரும்பி மனைகட்குச்சென்று எனக்கு நன்மையைப்பிரார்த்தித்துக்கொண்டிருக்கவேண்டும். இந்தப் பதின்மூன்று

நஷங்களுங் கழித்தவுடனே உங்களைக்கண்டு சந்தோஷிப்பேன். என்றுசொல்லி யாவரையுஞ் சமாதானஞ்செய்தனுப்பிக்காட்டைநோக்கிப்புறப்பட்டார்.

திரிதராஷ்டிரனுக்கு விதுரன்பாண்டவராதியர் கருத்துணர்த்த நாரதர் அது நிச்சயமென்றுசொல்லி மறைதல்.

இவ்வண்ணமாய் உதிஷ்டிர மகாராஜன் காட்டுக்குச்செல்ல, சகலமானஜனங்களும் பந்துக்களும் ஊழியக்காரரும்-அரசரும் - முன்பு ஸ்ரீராமர் அயோத்தியைவிட்டுக் காட்டிற்குப் போகுமளவில் அந்தநகரத்தாரெல்லாம் எப்படி விசனப்பட்டார்களோ? அப்படி ஆறாதவிசனத்தினுற் கண்ணீர்பெருகப் பெருமூச்சுவிட்டு, வாய்விட்டழுதுகொண்டே சிலதூரம் பின்றொடர்ந்துபோய், அக்கால் அயோத்தியா நகரத்துச்சனங்கள் கைகேசியை நிந்தித்ததுபோல் திரிதராஷ்டிரனை நிந்தித்து, உயிரிழந்தவர்போல் ஒளியிழந்து திரும்பினார்கள். அப்படியிருக்க- திரிதராஷ்டிரமகாராஜன் பாண்டவர்களின்மகிமையையும் அவர்கள் பிரதிக்கினை செய்ததையும் யோசித்து, மனதிற்பயமுண்டாகித்திகிலடைந்து பரதவித்து விதுரனை யழைப்பிக்க, அவன் வந்து பக்கத்திலுட்கார, அவனைப் பார்த்து வினவுகிறான்: அப்பா விதுரா? நம்முடைய பாண்டவர்கள் வனத்துக்குப் போகின்றார்களே: அவர்களுந் திரௌபதியுந் தவுமியரும் எப்படிபோனார்கள்? என்னசொன்னார்கள்? என்னநினைத்துக்கொண்டு செல்கிறார்கள்? இவைகளை நன்றாய்ச்சொல் கேட்கவேண்டுமென்றுகூறக்கேட்ட விதுரன்சொல்லத்தொடங்கினான். கேளுமையாமகாராஜாவே! உதிஷ்டிரர் கிருஷ்ணாஜனத்தினால் முகத்தை மூடிக்கொண்டு வெகு சந்தோஷத்தோடு போனார். ஏனென்றால் - உமது துஷ்டப்பிள்ளைகள் பலவகையில் அபராதஞ் செய்திருக்கச்சேயும் அதை யெவ்வளவும் மனதில் நினைக்காமல், அப்படியிருந்தாலுந் தரும நோக்குள்ள கண்களால் அவர்களைப் பார்த்தால் அவர்கள் எரிந்து போவார்களானபடியினாலே முகத்தை மறைத்துக்கொண்டு போனார்.

இப்பால் வீமசேனனோ? தனது மிகுந்த வீரமும் அழகும் பொருந்திய கைகளைத் தொங்கவிட்டுப் பார்த்துக்கொண்டே போனான். அதேதென்றால் - இந்தக்கைகளினாலே. தருமபுத்திரருக்கு விரோதிகளைச் சீக்கிரத்திற் சங்கரிக்க வேண்டுமென்னுங் கருத்தினாலவ்வாறு போனான். அர்ச்சுனன் கால்களால் மணல்களையிறைத்துக்கொண்டுபோனான். அதற்குக்காரணம் யாதென்றால் - இந்தக்காலினால் மணலை யிறைக்குமளவில் இது எப்படி சிதறி நாற்புறமும் வியாபிக்கிறதோ? அப்படியே திரிதராஷ்டிர சேனையிற் சரங்களை யிறைப்பேனென்கிற கருத்தேயாம். நகுலன்தன் னுடம்பெல்லாம் புழுதிபடிந்து மாறுபட்டிருக்கும்படிபோனான். அதன்கருத்தியாதென்றால் - நமது வடிவை மங்கைபர்கண்டு மயங்குவார்கள். அப்படியாகவேண்டா மென்பதேயாம். சகாதேவன் கைகளாலே முகத்தை மூடிக்கொண்டு போனான். அதற்கு ஏதுவென்னவென்றால் - முகத்தி லுதியாநின்ற கோபாக்கினி வெளியிற் பரவவேண்டாமென்கிற எண்ணமேயாம். பாஞ்சாலி புஷ்பிணியாக ஒற்றையாடையோடு தலைமயிரை விரித்துக்கொண்டு சென்றாள். அவள்கருத்தென்னவெனில் - இப்போது நானெப்படிப் போகிறேனோ? அவ்விதமாகவே இதற்குப் பதினான்காவது வருஷத்திலே துரியோதனாதிகளின் மனைவிகள் தங்கள் கணவரும் மக்களும் யுத்தத்தில் மடிய, அவர்மீதில் வீழ்ந்தழுது அவ்வுதிரங்க ளாடைகளிற் பட்டுத் தலைமயிரை விரித்துக்கொண்டு துயரப்படுவார்களென்பதுதான். புரோகிதராகிய தவுமியர் தருப்பைகளைக் கையிலேந்தி, யமசாமத்தை யுச்சரித்துக்கொண்டு, இதற்குப் பதினான்காவ தாண்டிலே மடிந்த அரசர்களுக்கு மிகுந்திருப்பவர் கிரியை செய்வார்களென்று எண்ணிக்கொண்டே போனார்.

அன்றியும் அந்தப்புரோகிதர் பதினாலாம் வருஷத்திற் குருடன் சந்ததியற்றுப் போவானென்றும் உரைத்தார். என்றுசொல்லவே இந்தவார்த்தைகளைக் கேட்ட திரிதராஷ்டிரன் அஞ்சி, விதுரா! ஜனங்களென்ன சொன்னார்களென்று வினவ, விதுரன் மறுபடியுஞ் சொல்லுகிறான்: ஓ மகாராஜாவே! ஜனங்களெல்லாம் பாண்டவர் வனம்போக மனம்பொறாமற் குடும்பத்தோடு வெகுதூரங் கூடவேபோய், அவர்களாற் பலவகையாற் சமாதானஞ் செய்யப்பட்டு, கன்றுகளைவிட்டுப் பிரிந்த பசுக்கள்போற் கதறிக்கொண்டே தங்கள் மனைகளைச் சேர்ந்து, உம்முடையவும் உமது புத்திரர் முதலானோருடையவுமாகிய பலதுர்க்குணங்களை யெடுத்துப் பழிப்பதும், பாண்டவர்களின் நற்குணங்களை யெடுத்துப் புகழ்வதுமாக மிகுந்த விசனத்தை யனுபவித்துக் கொண்டு, அன்னாகார மில்லாமல் இவ்விராச்சியத்தி லிருக்க மனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். பலவகை அபசகுனங்க ளாகின்றன. மேகங்கள் உதிரத்தைப் பொழிகின்றன. வானத்தினின்றுங் குறைக்கொள்ளிகள் வீழ்கின்றன. வீதிகளில் நரிகள்வந்து ஊளையிடுகின்றன. கழுகுகளும் பருந்துகளும் வட்டமிடுகின்றன. இவ்வகையாய் இப்போதித நகரமானது ஸ்ரீராமர் வனவாசம் போகும்போது திருவயோத்தி மாநகர் எப்படி யிருந்ததோ? அப்படியிருக்கின்றது. என்று சொல்லி வாயை மூடிக்கொண்டான். இப்படி யிருக்க - நாரத மகாமுனியானவர் அனேக முனிவர்குழாங்கள் சூழத் திரிதராஷ்டிரனிடத்திற்குவந்து, அவனா லுபசரிக்கப்பட்டபின் அவனைப் பார்த்து, ஓ அரசனே! உனது துராலோசனையினாலும்- உன் புத்திரருடைய கொடுஞ் செய்கைகளினாலும்-

பதினுன்காவதாண்டிலே உன்வமிசம் நாசமாய்ப்போமென்று சொல்லி மறைந்து விட்டார்.

துரியோதனன் துரோணரை அடைக்கலம் புகுதல்.

இவ்விதமாய் விதுரனும் - நாரதரும் - சொல்லக்கேட்ட திரிதராஷ்டிரனும் மற்ற யாவரும் பயமடைந்து யோசித்து, ஒன்றுந் தோற்ருமலிருந்தார்கள். துரியோதனனுனவன் துச்சாதனன் - கர்னன் - சகுனி - இவர்களோடு துரோணுசாரியரிடத்திற்கு வந்து நமஸ்காரஞ்செய்து, ஐயா ஆசாரியரே! அடியேனையும் இவ்விராச்சியத்தையுந் தேவரீர் திருவடிகளில் சமர்ப்பித்தேன். இவ்விரண்டும் பகைவர்கையிலகப்படாவண்ணங் காத்தருளவேண்டுமென்று கைகூப்பிப் பிரார்த்தித்தான். அதுகேட்ட துரோணர் - கேளப்பா துரியோதனு! பாண்டவர் ஒருவராலுஞ் சங்கரிக்கப்பட மாட்டார்கள். ஆதலால் அவர்களை ஜெயிக்க என்னுலாகாது. ஆனுலும் நீ என்னைச் சரணமாக வந்தடைந்ததுபற்றி உன்னையுங் காக்கவேண்டும். அதற்காக ஒன்று சொல்லுகிறேன்கேள். என்னுயிரிருக்கிறவரையில் உன்னைச் சத்துருக்கள்கையிலகப்படவொட்டாமற் காப்பாற்றுவேன். எனக்கோ முன்னமே மிர்த்துண்டாயிருக்கிறது, அஃதுயாதென்றுல் - துருபத மகாராஜன் என்னிடத்தில் உண்டான விரோதத்தினுல் யாஜோபயாஜரை யனுசரித்து, அர்ச்சுனனுக்குக்கொடுக்க ஒருபெண்ணையும் என்னைக்கொல்ல ஒருபிள்ளையையும் பெற்ருன். அந்தப்பெண் திரௌபதி. அந்தப்பிள்ளைதிருஷ்டத்துய்ம்னன். அவன் கவசகுண்டலங்களோடும் வில்லோடும் அக்கினியினின்றுதித்தான். அவனை நினைத்தால் என்மனம் பதைக்கின்றது. அவனே பாண்டவர்களின் பக்ஷத்திலிருக்கிருன். ஆனபடியினுலே அவனுல் நான் கொல்லப்படுவேன். உங்களுக்குங் காலங்குறுகிற்று.

அன்றியும் இந்தப் பதின்மூன்று வருஷங்களையும் ஒரு கணப்பொழுதாய்ப்போக்கிப் பாண்டவர் உங்களிடத்திற்கு வந்து இராச்சியத்தைக் கேட்பார்கள். நீங்கள் துர்ப்புத்தியினுற் கொடுக்கப் போகிறதில்லை. அதனுலே உயுத்தமுண்டாகும். அதில் அவர்கள் பிரதிக்கினை செய்தபடி நிறைவேற்றுவார்கள். சந்தேகமில்லை. விதிவசத்தை யார்தடுக்கமாட்டுவார்கள்? பாண்டவர்களது செல்வம் உங்கட்குச்சதமன்று. ஆதலால் அச்செல்வங் கைவிட்டுப்போகாமுன்னமே மறுமைக்குவேண்டிய தருமங்களைச் செய்யுங்கள், நீங்களிதுவரையில் வெகுபாவங்களைச்செய்திருக்கிறீர்கள். அவைகளைத் தருமஞ்செய்து போக்கடித்துக் கொள்ளுங்களென்று சொன்னுர். அதைக்கேட்ட திரிதராஷ்டிரன் மிகுந்த விசனமடைந்து புத்திரனைப் பார்த்து, அடா துரியோதனு! ஆ! ஆ! என்ன விபரீதங்களையுண்

டாக்கி விட்டாய்? ஐயோ! இனியேனும் அ
ணங்களை யெல்லாம் விட்டு, பாண்டவர் கோப
க்குக்கேட்டிற்கு ஏதுவென்று சொல்லுகிறப
லே நீ இப்போதே விதுரனையனுப்பிப் பாண்
வனம்போகாமல் வரும்படிசொல். அப்படி ய
திரும்பாவிடில் அனேக இரதகஜ துரகபதாதிக
இரத்தினங்களையும் - தனங்களையுங் கொண்டு
கொடுத்திச் சமாதானம் பண்ணியாகிலும் வரச்
லென்று சொன்னுன். இப்படியாகச்சொல்லி
நிலைபெருமல் திரிதராஷ்டிரன் தவித்துக்கொ
க்க, சஞ்சயன் அவ்வரசனிடத்திற்கு வந்துப
தன்னையறிவித்து, அவனனுமதிப்படி யுட்கா
அவனைப்பார்த்து இதனைச் சொல்லுகிருன்.

திரிதராஷ்டிரன் சஞ்சயன் கடிவதை கேட்டு பரிதாபித்தல்.

ஓ மகாராஜாவே! நீரே உமது பிள்ளைகளின்
லோசனைக் குட்பட்டு, பாண்டவரை வஞ்சனை
சூதாடச்செய்து, பலவிதமாய் அவமானப்ப
அவர்கள் செல்வங்கள் யாவையும் பறித்துக்கொ
மரவுரி மான்ருேல்களோடு காட்டில்துரத்திவிட்
மனதிலிருந்த கோரிக்கை நிறைவேறிற்றே:
மேன் விசனப்படுகிறீர்? என்ன அவர்களிடத்
றும் பறித்துக்கொள்ள வேண்டிய பொருள்க
றைவுபட்டதென்று பரதவிக்கிறீர்? உமது
திற்கும் உமதுபிள்ளைகள் அபிப்பிராயத்திற்
னகுறை வுண்டாகியதென்று பெருமூச்செ
இன்னுமென்ன செய்யவேண்டும்? என்று ச
சொல்ல, அதற்கு அவ்வரசன் - ஓ சஞ்சயனே
ரும், வெல்லப்படாதவரும், யுத்தத்தில் வல்ல
தருமவான்களும், வெகுசகாய சம்பத்தோடு கூ
ருமாகிய பாண்டவரோடு பேதைகளாகிய என்ம
க்குப் பகைநேரிட்டிருக்க; எப்படி சிந்தைப்ப
லும் விசனப்படாமலு மிருப்பேன்? என்று
கேட்ட சஞ்சயன் - ஓய் ராஜாவே! நீர் மனமறிய
யாயத்தைச்செய்து பாண்டவர்களோடு பகைசப
த்துக்கொண்டு இப்போதேன் விசனப்படுகிறீர்?
னப்பட வேண்டுவதாகிய காலம் இனியிருக்கி
அப்போது விசனப்படலாம். புஷ்பிணியாயிருந்
ஞ்சாலியைச் சபையிலிழுத்துக்கொண்டுவரச்
உமது மூத்தமகன் ஏவ, இளையவனப்படி இ
துகிலுரிய, வீஷ்மர் துரோணர் முதலானோர்
டாமென்று சொன்னதையுங் கேளாமல்
துச் சும்மாவிருந்தீரே: அதற்குப்பயனுய்
ச்சாதனன் மார்பை வீமன் கதாயுதத்தினு
உதிரபானஞ்செய்யக் கேட்கப் போகின்
போது வேண்டுமானமட்டும் விசனப்பட
டு புத்திரர் விரோத மாகாதென்றுமக்கு
ருந்தால், அன்று விதுரர்சொல்லிய

லானோர் சொல்லிய பேச்சையுங் கேட்டீரா.
ப்போதேன் சிந்தைப்படுகிறீ ரென்றான்.

ுகேட்ட குருட்டரசன் - ஓசஞ்சயனே !
எவனைக்கெடுக்க நினைக்கிறதோ? அவன்வி
த முன்னமே பறித்துவிடுகிறது. யாரைவிரு
ய நினைக்கிறதோ? அவனைக் குணசாலியாக்
லமும் புத்தியைக்கெடுத்து நசிக்கச் செய்கிற
லது, ஆயுதத்தை யெடுத்துக் கொல்லுகிற
அப்படிதான் எனக்கும் நேரிட்டதென்று
க்கேட்ட சஞ்சயனனவன் - ஓய் ராஜாவே !
ட்டதுபயம். இனி செய்யத்தக்க தொன்று
இல்லாவிட்டால் உம்முடைய குமாரர் கர்ன
சகுனியோடுங் கூடிக்கொண்டு, கற்புடைய
யர்க்குச் சிரோமணியாகிய திரௌபதியைச்
லாதுஞ்சொல்லிச் செய்யாதுஞ்செய்து அவமா
த்துவார்களா? இராஜாதிராஜராகிய பாண்டவ
டிமைகளென்றும் நபும்சகரென்றும் பலவாறு
ரஷிப்பார்களா? இப்படிசெய்திருக்கவும், அவர்
நமத்திற் கட்டுப்பட்டு உமது கட்டளையைமீறு
ட்டிற் சென்றார்களே: அந்தப்பொறுமையென்
ய பகைவரைச்சுடும். என்றுசொல்லக்கேட்ட
ஷ்டிரன் அச்சஞ்சயனோடு பின்னுஞ் சிலபேச்
சொல்லி பரதவிக்கிறான்.

சஞ்சயா! துஷ்டப்பிள்ளைகள் என்பேச்சைக்
ல்லை. சூது வேண்டாமென்று தடுத்தேன்.
ரௌபதியைச் சபையிலிழுக்கும்போது காந்
லானோர் மிகவும் விசனப்பட்டு என்னோடு

டு,
இந்
அப்ப
துருப
நமக்கு
நானென்
ராஜனும்,
துரோண
முதலான
கர் - போச
தவர் - மூத
க்கொப்பாகி
நானேசை
டம்போன்ற
னே: இவர்க
கள்? நானு
யாகாதென்று
அரசர்க்குள் பல
ந்தான். இதுகளை
னான். அதைக்
த்தைக் கொண்
திரிதராஷ்டிரன்
விசனப்பட்டா
மேஜெயமகாரா

சூதுபோர்ச்சருக்கத்தே

467

சபாபர்வம் - முற்றிற்று.